விவேக சிந்தாமணி
1898.

Vol. VII – Nos. 1 to 12

Vol. VIII – " 1 to 12

ல்காலும் இரைந்துவிசைத் தொல்லையெழத்
தாடும்வருணன் தாவலையின் ஆர்ப்பரிக்க
ம் அச்சுறுத்தி விசும்பெங்குங் கறுத்ததுகண்
ளா வளவினவர் ஆனனமுங் கறுத்தனவால்

ரமரக்க லஞ்சுழற்றி வருகாலுந் தணியாமல்
வரவரக்கார் இருள்மூண்டு மாலையும்வந் தணுகவிதிற்
பரபரப்பி னொடுமிறங்கிப் படைவீரர் முடுகிவருஞ்
சரசரவென் றிடுமோசை சமீபித்துக் கேட்டதுவே.

9. "முடுக்கிவிடு வீர்! விடுவீர்!" முத்தநகை மான்கரைவாள்
"இடுக்கணுற நவைவளைத்திங் கிகல்வானம் வளியெழுப்பிப்
படுக்கவரி னுந்தடுக்கும் பரிசுண்டு மாலுமியீர்!
தடுக்கரிது நெருக்கிவருந் தந்தைசின மதுவென்றே."

10. புயல்படுக்குங் கரைதாண்டிப் போந்ததால் படகெனினுங்
கயல்படுக்குங் கண்ணெதிரிற் கதறிமறி திரைக்கடலை
யயல்படுக்கு மாறுண்டோ? அந்தோ! இம் மயிக்தையும்
செயல்படுக்கும் பெறுங்காற்றுச் சீறியெதிர் வீ... ...பாவ.

11. உதறிவரு முயலையைப் பொருட்படுத்தா தூக்கமொடு
சிதறிவரு நாவாயைச் செலுத்தியிவர் செலும்போதில்
பதறிவரும் அலின்ப்ரபுவும் படகையுற் றுன்சினம்போய்க்
கதறிவருந் துறலானன் காரிகையின் கதிநினைந்தே.

12. காற்றாலும் இருளாலுங் கண்கலக்கம் மிகவெய்தி
யாற்றாது தளிர்க்கரமொன் றபயமென மேலெடுத்து
மாற்றாத மணாளனைமற் றொருகரத்தால் வளைத்தெதுவுந்
தோற்றாது மாழ்குறுந்தன் சுடர்க்கொடியைக் கண்ணுற்றான்.

13. கண்மணியே! வருகஉயர் கற்பகமே! கரைவருக.
விண்மறியும் புனல்கடந்து விரைவாகக் கரைவருக.
உண்மகிழ்மே னாட்டிறையை யுன்றனக்கே யீங்களிப்பன்
பெண்மணியே! வருக"வெனப் பெரிதுமழு தாற்றினனால்.

14. எழுங்கொடிய திரைதாக்கி யெழுதலிற்றிண் கரைதனக்கு
மழுங்குமிவர் வரவறியார் மற்றபயந் தரக்காணார்
அழுங்குகையி லலைதாவி யாயிழையை விழுங்கியதால்
செழுங்கிளியைப் பறிகொடுத்துத் தெருமந்தா னலின்ப்ரபுவே.

பி. ஆர். கிருஷ்ணமாசாரி.

# *அலின்பிரபுவின் புத்தி

கொச்சகக்கலிப்பா.

1. விடுவீர்! நீர் மாலுமியீர்! தாழ்க்காது விரைந்தினிநீர்
விடுவீர்! மறுகரைக்கு விரைந்திந்த நாவாயை
விடுவீரே லுந்தயக்கு விலைபெறுமோர் பவுன்றருவன்
விடுவீர்! எனவுரைத்தான் மேனாடு† போமொருவன்.

2. ஓயாம லலைத்துருமும் ஓதநீர் லாக்கயிலை ‡
நீயாவன் கடப்பதற்கு நினைந்தாயிப் புயலிலென
"ஏ! யானும் அல்வாவென் றிசைபெறுதீவுக்கிறைவன்
வேயாருந் தோளியிவள் வேந்தல்லி னரும்பெறு.

3. "ஓட்டலா... இவள்தந்தை யுறவினர்க்குந் தெரியாமல்
ஊட்டமலா மதாருமூன்று தினத்திலிவண் உற்றனம்யாம்
தேட்டத்திற் பின்வருவார் தெரிவரேல் எம்முதிரம்
காட்டிலுள புன்செடியைக் கறைப்படுக்கும் ஆறுமே.

4. "வாய்பரியின் அதிவேக மாயருகு வருவீரர்
மேம்படுமிப் புனையுயிரை விழியெதிர்காண் குவரேலித்
தேம்படுநன் மொழிகாந்தன் றிண்ணமுயிர் விடுதல்பின்னர்க்
காம்படுமென் றோளியோடு களிக்குமண மகனெவனே."

5. என இவையல் வாநாட்டின் இறையியம்பத் திண்சிலையின்
மணவலிகொள் மேனாட்டான்§ மன்னவனை முகநோக்கி
"புனல்கடத்திப் போகின்றேன் ஆயத்த மாகவுள்ளேன்
நினதுவட்டப் பொற்கல்ல நேரிழையைக் குறித்தேகாண்.

6. "சத்தியமிக் கிஞ்சுகவாய்த் தையலிவள் மிகுந்திங்கின்
மத்தியிற்சும் மாவிருத்தல் மாற்றமதன் றுகையினன்
மெத்தவும்வெண் டிரையெழுப்பி வீசுமழல் காலெனினும்
உத்திகொடு படகுந்திச் சேர்ப்பானுமை" யென்றுரைத்தான்.

---

* A Translation of the English piece entitled "Lord Ullin's Daughter"

† மேனாடு=Highlands ‡ Lochgyle. § திண்சிலையின் மணவலி கொள்மேனாட்டான்=The ha[rdy]
Highland Wight.





...ய ஸ்ரீகண்
...றுமிடத்து
...சலுத்தித் தன்னு
...ம தன்மையைச் சிலா
...வேண்டுமோ? இவ்வுல
...பெரும்பாலாரைப்போலன்றி
...லகச்சொல்லுக்குக் கட்டுப்பட்
...அபிப்பிராயத்தை இயன்ற அளவில்
...மது அரசுரிமைகளை நடத்திவந்தனர்.
...மாகத் தமது செய்கைகளைப்பற்றிப் பிற
...ரு அவதூறுவாராமல் காத்துக்கொள்வதில்
...வலையுள்ளவர். ஜனங்கள் தம்மை இகழும்ப
...தம்மிடத்தே யாதேனும் ஒரு தோஷம் ஆரோபிக்
...ப்பட்டால், தாம் தோஷாகிதர் என்பதை அவர்க
ளுக்கு விளங்கக்காட்டி அவ்வபவாதத்தைத் தீர்த்துக்
கொள்ளும் வரையிலும் அவர் கண்துயில்தானும்கொ
ள்ளமாட்டார் தாம், சத்ராஜித்தின் சமந்தகமணி
யை வஞ்சனையாற் கவர்ந்துகொண்டதாக உண்டான
அபவாதத்தை நீக்கிக்கொள்ள எண்ணிய எண்ண
மும், அது போனவகையைக் கண்டுபிடிக்க அவர்
செய்த பலகார பிரயத்தனங்களும், அதனை வனசரரா
ஜன் ஒருவனிடத்திலின்று திரும்பக் கொள்ளுமாறு
செய்த பயங்கரமான யுத்தமும், அதனை அதற்குரிய
வனுக்கு மீண்டும் கொடுக்கக்கொண்ட ஆவலும், இ
வையெல்லாம், தாம் ஒருக்கால் உண்மையாகவே அம்
மணியைக் கவர்ந்து கொள்ளினும் தம்மை அதற்கா
கத் தண்டிக்க வல்லவர் ஒருவரும் இல்லையென்று
தாம் உணர்ந்திருந்தும், லோகாபவாதத்தை நீக்கிக்
கொள்ளும் விஷயத்தில் எவ்வளவு கருத்துடையவரா
யிருந்தனரென்பதை ஆயிரம் நாவால் முறையிட்டுக்
கூறுகின்றனவன்றோ?

ஸ்ரீ கண்ணபிரானுக்கு அக்காலத்து அரசரிடத்தி
ருந்த செல்வாக்குக்கோ, அளவில்லை. தமது வலி
மையைத் தீநெறியிற் செலுத்திய கொடுங்கோன் மன்னர்
கண்ணனென்றால் உடனே உண்ணடுங்கி உடல்வி
திர்ப்பார்கள். கண்ணன் தமக்குண்டாகும் தீங்குக
ளைப் பொருள்பண்ணாமல், அக்கிரமச் செய்கையுள்ள
அடங்காப் பேராசைபிடித்த கொடியோர்களால் கொ
ரமாகச் சிறைப்படுத்தப்பட்ட அநேக ஆதரவற்ற
எளியஜனங்களைப் பலமுறையும் விடுவித்திருக்கின்
றனர். அக்காலத்து நடந்த ராஜசம்பந்தமான பெரி
யகாரியங்கள் ஒன்றேனும் யதுகுல சிகாமணியாகிய
இவரது பிரவேசமின்றி இனிமையாக நடந்தேறிய
தில்லை. ஆயினும், அதர்மம் மேலிட்டுத் தர்மம் குன்
றி வலியிழக்கவந்தபோது மாத்திரமே, தாம் தர்மசிந்
தையுள்ளவர்களைப் பரிபாலிக்கும் பொருட்டே இவ்வு
லகில் அவதரித்தனரென்பது தோன்ற, வலியச்சென்
று பிறரது காரியங்களில் தலையிட்டுக்கொண்டதாகக்
காண்கின்றோமே யன்றி, மற்றவிஷயங்கள் ஒவ்வொன்
றிலும், ஆராய்ந்து துணிந்த தீர்க்காலோசனையும்,
முதிர்ந்து சிறந்த பேரறிவும் புலப்படுத்தியிருக்கின்
றனர். அவர் முன்னதாக யூகித்து ஆராயாமல் ஒன்
றையும் தொடங்குவதில்லை. அவ்வாறு தொடங்கிய
பின் தாம் மேற்கொண்ட கருமத்தை நிறைவேற்றும்
விஷயத்தில் எவ்வளவேனும் தளர்ந்து பின்வாங்குவ
துமில்லை. சுயநன்மையையாவது, காலதேசாவஸ்தை
களையாவது சிந்தித்துத்தளர்வடைந்து தாம்கொண்ட
உறுதியை ஒருபோதும் கைநெகிழ விடுப்பதுமில்லை.
தமக்குக் கடைமையாகக் கொண்டதோர்காரியத்தை
லாபலோபங்களைச் சிந்தியாமல் செய்து முடிப்பத
னால் உண்டாகும் அழிவற்ற பேர், புகழ்க்கு முன்
மற்ற உலகவாழ்வையும் சுகங்களையும் பொருள் பண்
ணுவதுமில்லை. ஒருவேளை கோபாதிகத்தினாலாவது,
பத்தரது பராதீனத்தையும் அவர்க்கு நேரிட்ட அநீ
தங்களையும் கண்டு பரிதபித்தலினாலாவது, முன்னம்
தாம் கொண்ட கொள்கைக்குமாறாக ஒன்றைச்செய்
யத்துணிகினும் அங்ஙனம் செய்வது தமக்கு முறை
மையன்றென்று எடுத்துக்காட்டப்பட்டால் உடனே
அத்துணிவைத் துறந்து பின்வாங்கிவிடுவார்.

இவ்வாறு, அதர்மத்தைக்கண்டிக்கவந்தபொழுதன்
றி, வேறு பிறரது காரியங்களில் பிரவேசியாத நடத்
தையும், தர்மத்தைக்கைவிடாது காக்கும் விசுவாச
மும், உரவினர் பகைவர் முதலான அனைவரிடத்தும்
ஒருபோலவே உற்ற குற்றங்களை வெளிப்படுத்தி
விலக்குவதற்கஞ்சாத கபடமற்ற சுபாவமும், ஆபத்தி
லும் சம்பத்திலும் ஒருபோலவே சலனமடையாத
மனோபாவமும், திக்கற்ற எளிய ஜனங்களது வேண்
டுகோளுக்கிரங்கி யிசையும் இசைவும், எடுத்த காரி
யங்களை விக்கினமின்றிச் செய்து முடிக்கும் சாமர்த்
தியமும், மிக்க விநயமான சுபாவமும், இவை யாவும்
ஸ்ரீமஹாபாரதத்தில் கண்ணன் இயற்றியருளியசெய்
கைகளை ஆராய்பவர் கருத்தில் பசுமரத்தில் அறைந்த
வயிரவாணிபோலப்பதியுமன்றோ?

(இன்னும் வரும்.)

எஸ். முத்து ஐயர்

விரும்பினரென்று கருதும்படி அவ்வளவு நன்றாகத்
தாமும் அவர்களைக் காதலித்து வந்தனர். அவர்க
ளில் ஒருவராயினும் கண்ணன் தம்மை நேசிக்கும்
விஷயத்தில் எள்ளளவேனும் சந்தேகம் கொள்ளா
மையினால், அவரது விருப்பத்துக்கு மாறாக ஒரு
வார்த்தையேனும் சொல்லியவர் அல்லர். எவர், தம்
மைநேசிப்பார்களோ அவர்களைத் தாமும் நேசிப்பார்
என்று அம்மனைவியர் ஒவ்வொருவரும் நன்குணர்ந்தி
ருந்தனராதலின், அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு
தம் நாயகனை ,மிகவும் மகிழ்விக்கலாமென்றும், எவ்
வாறு அவருக்கிதமாக நடந்துகொள்ளலாமென்றும்,
இவ்வொரு எண்ணமே தம்முள்ளத்திற் குடிகொண்
டவரானார்கள். கண்ணபிரானும் தமது மனைவியர்க்
குள் சற்றும் சச்சரவேனும் பொறாமையேனும் பகை
யேனும் உண்டாகாமல் ஒருவரையொருவர் நேசித்து
வரும்படிச் செய்துகொண்டனர். அன்றியும், அவர்
களுக்குள் உள்ள சிநேகபந்தமானது நெருங்கித் திண்
மையுறும்படி அவர்களைத் தினம்தோறும் உத்யானத்
திற் கழைத்துச்சென்று, அவர்களோடும் விநோதவி
ளையாட்டுக்களில் இன்பமாகப் பொழுதுபோக்குவார்.
அவர்களுக்குள் பரஸ்பரம் இருந்த சகோதர நேசமா
னது தாமே அவர்கள் ஒவ்வொருவரிடத்தும் காட்
டிய நேசத்தால் மேன்மேலும் வளர்ந்து நிலைபெறு
மாறு செய்தனர், தாம் தத்துவஞானியும் பேதாபேத
மின்றி அனைவரையும் ஒரேதன்மையாக நேசிப்பவ
ரும் ஆதலின் தம்மனைவியரும் பலாபேக்ஷையில்லா
மல் பிறரைநேசித்துத் தமக்குரிய கடைமைகளை
நிறைவேற்றுதலால் பெறத்தக்க பெருமையைத் தம்
போல் உணரும்படி அவர்களுக்கு எப்போதும் வற்பு
றுத்துவார். பிறரது சுகத்தை அபிவிருத்திபண்ணும்
பொருட்டுத் தம் சுகத்தைக்கருதாது கைவிடுதலாகிய
நற்குணத்தை அவர்களுக்குப் போதித்து, பிறருக்கி
தம் புரிவதே தமக்கிதமாகக் காணும்படிச் செய்தனர்,
எப்பொழுதேனும் ஒருவேளை, தம் செய்கையினால்
அவர்களுக்கு அதிருப்தி யுண்டாகும்படி நடத்தல்
போலப்பாவிக்கின், அஃது அவர்களது மனோநிலையை
யும் அன்பையும் பரிசோதித்து அவர்களது துர்க்கு
ணங்களை நீக்குவதற்குத்தக்க அவகாசங்களை ஏற்ப
டுத்திக் கொள்ளுவதற்கேயன்றி வேறின்று.

பலமனைவியர்களை மணம்புரிந்த காலத்திலும்,
அவர்களுக்குள், பகை, பொறாமை, மாற்சரியம்
இன்றி ஒருவர்க்கொருவர் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தி
ருக்கும்படிச் செய்த ஸ்ரீகண்ணபிரானது குடும்ப பரி
பாலனம் இத்தகையாயிருந்தது. இதுநிற்க ஸ்ரீகண்ண

பிரான்,
களைப்போ...
ரையும் மாத்திர...
ரல்லர். அவரது சிநே...
சனர்களிலும் வறுமை...
டவராயினும், அவரால் நே...
அப்பந்துமித்திரர்கள் தங்களது...
வருந்துதற்கு ஒருபோதும் இடம...
வேண்டு மென்பது அவருடைய முக...
க்கை, உயர்ப்பிறப்பும் செல்வமும்
என்றும், அவ்வேறுபாடுகள் அனைவரிடத்...
தன்மையாக அன்பைச் செலுத்தும் தன்...
தம்மால் பாராட்டத்தக்கவையல்ல வென்றும்
கருத்து. வறுமையினால் மெலிந்து மதிப்பார...
ஏழைகளால் தாம்நேசிக்கப் பெற்றது, தமக்கோரரு
பெற்றப் பேறாக எண்ணியிருந்தனர். ...து பால்யசு
நேகிதரில் எவரேனும் தம்மை எப்பொ...தாவது
வந்து தரிசிப்பாராயின் அஃது அவரது நட...க்கும்
நற்குணத்துக்கும் அடையாளமாமென்று நினைத்து...
மகிழ்ச்சியடைவார். குசேலமுனிவரது சரித்திரத்
தைப் படிப்போர் ஒவ்வொருவருக்கும் கண்ணனது
இவ்வருங் குணமானது நன்கு புலப்படும். கொடிய
வறுமையினால் கண்ணனைப் போய்க்காண வேண்டும்
என்னும். அவர் ஒருபுறம் பிடர் பிடித்துந்த, அரசர்
பெருமானாகிய அவரைத்தரிசித்தல் தமக்குக்கைகூடு
மோ கூடாதோ என்னும் ஐயுறவு ... பிடித்திழுக்க
அவ்வேதியர் பட்ட மனோசஞ்சலமும்; கண்ணன்தம்
மைக்காணவந்த அக்குசேலர்க்குக் காட்டிய அன்பும்
ஆதரவும்; இருவரும் குருகுலவாசம் செய்தகாலத்தில்
நடந்தவிருத்தாந்தங்களை மகிழ்ந்து நினைந்து ஒவ்வொ
ன்றாக எடுத்துக்கூறிய இனியசம்பாஷணமும்; முனி
வரது எண்ணமும் உத்தேசமும் இன்னதென்று எம்
பெருமான் சொல்லாமலே அற்புதமாக அறிந்தவித
மும்; அவர்தம்மைக் கேட்காமலும் அவருக்குத்தாம்
ஒன்றும்உணர்த்தாமலும்அவருக்குவேண்டியசெல்வங்
களை அளவின்றி நிரப்பியவாறும்; கண்ணன்தமது
குடித்தன யோகக்ஷேமங்களைப்பற்றி வினவாததற்கு
குசேலர்கருதியகாரணமும் ஆகிய இவ்விஷயங்களெல்
லாம் கற்றவல்லவர் வாக்கால் நூல்களின் வாயிலா
கப் பெற்றறிவதன்றி எம்மாலெடுத்துரைக்க இயன்ற
வையாமோ?

இவ்வாறு, கிரகஸ்த தர்மங்களிலேயே இவ்வளவு
கருத்துள்ளவராய் அதிதிகளை ஆதரித்து பந்துவர்க்கங்
களைப் போஷித்து சிநேகிதர்விஷயத்தில் விசேஷ



"அவன் கெட்டான் மூடன். இனி, விதிப்
படி யாகத்தைமுடிக்க என்னஉபாயம் செய்வா
னோ பார்ப்போம். இன்னமும் அவன்சண்டைக்
கு வராவிட்டால் நாமேசென்று அவன்யாகத்
தைக் கலைத்துவிடுவோம். ஆனால் இப்போது
சண்டைக்குக் காலமன்று. இதிலேயே அநே
கம் சுத்தவீரர்களை யிழந்துவிட்டோம். இம்மு
றை இவ்வளவியற்றியது போதும். பின்னும்
புத்தி வராவிட்டால் பார்த்துக்கொள்வோம்.
இப்பொழுது வசந்தகாலம் வந்துவிட்டதால்
அந்தப்புரத்தில் நம்தேவிகள் நமதுவரவை யெ
திர்பார்த்துக்கொண்டிருப்பார்கள். நாம் வசந்த
மாடிச் சந்தோஷித்துச் சுகித்திருப்போம்.
சம்பார் நகருக்குப்போய்வருகையில் நமது 'ஜங்
கள்' தேசத்துக்காடுகளில் நல்லவேட்டை யகப்
படும். வேட்டைநாய்களெல்லாம் தயாராகவி
ருக்குமல்லவோ?" என்று அரசன் கூற,

சத்தோடு மிகவும் அ... ...ட்டியா! அதற்
ல செய்வது சகஜம். அப்பொழுது ...
தங்கள் குதிரைகளை வாயுவேக மனோவேக
மாகவிட்டுக் காடுமலைமேடுபள்ளம் புல்புதர் வே
லியென்று ஒன்றையும் பாராமல் மான்கன்று
தாவுவதுபோல் தாவிக் காட்டுமிருகங்களைத்
துரத்தி வேட்டையாடுவது பார்க்க மிகப்பயங்
கரமாகவிருக்கும். சண்டைபூமியில் பட்டால்
ஸ்வர்க்கம் என்பதுபோல் வேட்டையில் தைரி
யபராக்கிரமத்தோடிறந்தவனுக்கும் நல்லபத
வி கிடைக்குமென்பது அவர்களுடைய உறுதி
யான நம்பிக்கை.

ஹோலிப்பண்டிகையின் முடிவு நெருங்கவே
கேலி விளையாட்டுக்களும் விநோதங்களும் அதிக
ரிக்கும். எங்குப்பார்த்தாலும்செஞ்சுண்ணத்தூ
வுவாரும் மஞ்சள் நீராடுவாரும் வாயில் வந்த
வார்த்தைகளைச் சொல்லிப் பரிகாசஞ்செய்வா
ரும் கண்டகண்ட பாட்டுகளைப் பாடுவாருமாக
இப்படிக் கும்மாளம் அதிகரிக்கும். அப்பொழு
து உயர்ந்தவன் தாழ்ந்தவன் வலியவன் எளிய
வன் அரசன் பிரஜையென்கிற வித்தியாசம்கூட
இல்லாமல் எல்லாம் ஒரேகுதிப்பும் கூத்தாட்

யே குப
நாம் நமக்கவ
பற்றி விசாரிப்

# THE LIFE AND TEA

OF

# Sree Krishna.

## ஸ்ரீ கண்ணபிரான் திவ்ய சரித்திரமு

## மெய்யுபதேசமும்.

இனி நாம் ஸ்ரீ கண்ணபிரானது திவ்ய சரித்திரத்
தின் மூன்றாம்பாகத்தை ஆராய்வோமாக. இக்கால
தில் எம்பெருமானுக்குற்ற இடையூற்றுக்கும் ...
டைஞ்சலுக்கும் அளவில்லை. மதுரை நகரத்தைச்
செயித்து... ... அவன்...
... ...யுய பாத்திர...
'கண்டா' ஆயுதமும் கொடையாக அளித்து
வீட்டுக்கு அனுப்புவது வழக்கம். இதன்கருத்
து, வசந்தகாலம் வந்துவிட்டபடியால் கத்தியை
உறையிலிட்டுப் பிரஜாநஷ்ட முண்டுபண்ணும்
போரைநிறுத்தி, பிரஜாவிருத்திசெய்யும் வேலை
யைப் பார்க்கவேண்டுமென்பதாம்.

இப்படிப்பட்ட ஹோலிப்பண்டிகை காலத்
தில் ஒருநாள் கங்கைக்கும் யமுனைக்கும் இடை
யேயுள்ள 'அந்தர்வேதி' என்னும் புண்ணிய
பூமியில் காளிந்திநதிக்கரையோரமாகக் குதிரை
வீரர்கள் ஒருகூட்டத்தார் வெகு உல்லாசமாகப்
பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் மேற்
கு நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.
இவர்கள் குதிரைகளைவிட்டுக்கொண்டு போவ
தில் காட்டும் குதூஹல நடை நொடி பாவனை
களையும், மலர்ந்து விரிந்து ஆயாசந்தீர விளங்
கும் இவர்களது முகவிலாசத்தையும், ஒருவ
ரோடொருவர்பேசிக்கொண்டுபோவதில் தோற்
றும் வேடிக்கை விளையாட்டுகளையும் காணும்
ஒருவன், இவர்கள் ஏதோ ஒரு துணிகரமா

விரும்பிச ... படி பயர்பூண்
தார ... காதச ...னது பெரும்
கண் ... மதுரைமேற் ப
...ளா ...தனும், அதுதான்
வர ...சிறந்த படைகளோடு
னு ...வது முறை படையெடுத்
பா... புறப்பட்டான். அப்போது
அவ்வரது வலிமையை உணர்ந்து,
...னதிரர்களையும் நகரமாக்கள் அனைவ
...ரினின்றும் நீக்கி மேற்குக கடலோரத்
...கட்டுவித்த திருநகராகிய துவாரகைக்குப்
...ாகக்கொண்டுபோய்ச் சேர்த்து, அதனை அன்
...தல் தமக்கு இராஜதானியாகச்செய்து கொண்
...ர். நகரில் ஒருவரும் இல்லாமல் அனைவரையும்
...றியபின் தாம் வெளியேவந்து, பகைவரோடு
...ருதற்காகத்துப்புப்பார்ப்பவர்போல மெல்லமெல்
...வனர்க் கெதிரில் செல்ல, உடனே அவலோடு
...பார்த்துக்கொண்டிருந்த அக் காலயவனன் கண்
...னக்கண்டதும் சீறிச்சினந்து பொருதற்கு மேல்
...ந்து பாய்ந்தனன். அதுகண்டு, கண்ணன் பயந்
...ந்து பாய்ந்தனன் ... இருந்த ... ம் எ

தானியாக அமைத்துக்கொண்டவல்லமையும், இவை யெல்லாம்அவரது அரசுரிமையையும் ஆக்ஞையையும் அக்காலத்து முடிமன்னர் அனைவராலும் யாதோர் ஆக்ஷேபமுமின்றி ஒப்புக்கொள்ளச் செய்தது. அந்நாளில்,விதர்ப்பராஜன் புத்திரியாராக அவதரித்திருந்த ருக்மணிதேவியார் தமதுபந்துஜனங்களின் விருப்பத்திற்குமாறாக அவர்கள் தம்மைத் தடுத்துக்கூறியும் கேளாமல், வலியிற்சிறந்தகோவேந்தர் பலரதுவரங்களையும் லக்ஷியம் செய்யாமல், ஸ்ரீகண்ணபிரானுக்குத்தானே தாம் மாலையிடுவதாகச் சொல்லி, அவர் தம்மைவந்து மணம்புரியும்படித் தூதுபோக்கி வேண்டிக்கொண்டனர் கண்ணபிரானும் அவரது காதல்விண்ணப்பத்தை மிக்க ஆதரவோடு ஏற்றுக்கொண்டு குண்டினபுரத்திற் கெழுந்தருளி ஸ்ரீருக்மணிதேவியின் சுயம்வரத்திற்கு முமியிருந்த அநேக ராஜகுமாரர்கள் கண்முன்னே தேவியார் குதூகலிக்கும்படி அவரது மலர்க்கரத்தைப் பற்றி, அங்குள்ளவர்களிற் சிலர் தம்மை மகிழ்ச்சியோடு மெச்சித் துதிக்கவும், சிலர் ஆசாபங்கப்பட்டு இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்து நிற்கவும் சரேலென்று அக்கன்னிகாமணியைத் தேரில் ஏற்றிவைத்துக்கொண்டு தம் நகருக்கு மீண்டருளினார். பல அபேக்ஷையின்றித் தம்மிடத்து நிர்மலமான ...க்திபண்ணுபவருக்குத் தாம் அருள்புரியும் தன்மை

...னது தாமே அவர்கள் ஒவ்வொருவரிடத்து
வார்த்தைகளில் சிரத்தையுற்றவர்கள் ... ும்,
இடையிடையே தாமும் சிலவார்த்தை ...ச்
சொல்லிச் சிரித்துக்கொண்டும், சிற்சில ...
களில் எல்லாரும் சேர்ந்து குலுங்கநகைத்துக்
கொண்டும் போனார்கள்.

...ஜ; அதுவே நல்லயோசனை. அந்தக ... 
லாகாதபேடி தன் குருபேச்சைக் கேட ... ரச
கொண்டு இவ்விக்ரஹத்தின் மூலமாய் நம்மை
அவமானப்படுத்த நினைத்தான். அதை நம் ம...
தா சகாம்பரீதேவி சந்நிதியில் வைத்து அவள்
நமக்குச்செய்த சம்மானமாகப் பாவிப்பதே சரி.
'கேடுவரும்பின்னே மதிகெட்டுவரும் முன்னே'
என்கிற பழமொழி வாஸ்தவமானதே. ஜயசந்
தனுக்குக் கெட்டுப்போகுங்காலம் கிட்டிவிட்
டது. அதுதான் மதிகெட்டுத் தன் சௌரியத்
தை நேரில்காட்டி நிலைநிறுத்தாமல்,குருசொன்
னாரென்று குருட்டுவழியாகத் தன்காரியத்தைச்
சாதித்துக்கொள்ளப்பார்த்தான். பச்சைக்கு
ழந்தைகள் மரப்பாய்ச்சிலைவைத்து விளையாடுவது
போல எல்லா அரசர்களையுமே பொம்மையா
கச்செய்துவைத்துக்கொண்டு வெளியில்யாருக்
கும் சொல்லாமல் வேதியர்களைமட்டும் வரவ
ழைத்துப் பட்டாபிஷேகம் செய்யச்சொல்லி
ஷம்ராட் பட்டம் சூட்டிக்கொள்கிறதுதானே.
அப்பொழுது ஒரு உபத்திரவமும் இராது.
ஒரு அரசரும் சண்டைக்குவரார்கள்" என்
றான்.

மிக விசேஷமாகத் தோற்றிய இருவர்களில் ஒருவன் ஆஜானுபாகுவாய் மிக்க கம்பீரமும் விசேஷநிடாத்திரமும் உடையவனாய் வேட்டையுடை தரித்திருந்தான். மற்றொருவன் அவனிலும் திறமானவனாய் இராஜலக்ஷணங்களெல்லாம் பொருந்தி கண்ணுக்கு நேர்த்தியான கட்டழகனாய் முகத்தில் அஷ்டலட்சுமியும் வாசஞ்செய்ய விளங்கினான். அவன் உடையாலும் தோற்றத்தாலும் ஒரு அரசனென்றே நிச்சயிக்கும்படியிருந்தது. அவன் தன்னைப்போல் விளங்கிய ஸ்வர்ணவிக்ரகம் ஒன்றைக் கையில் தாங்கிப் பார்த்துக்கொண்டு அதைக்குறித்துப் பக்கத்திலுள்ள குதிரைவீரனோடு அடிக்கடி பேசிச் சிரித்து வந்தபடியால் அவனது இயற்கையான அழகு, முககாந்தியோடு அச்சுவர்ண



## உலகத்திலுள்ள மதங்கள்.

உலகத்திலே பற்பல மதங்களிருக்கின்றன. அந்த மதங்களின் கொள்கைகளையறிய நாம் மிக்க ஆவலுடையே மாயினும் அவ்வம்மதங்கள் எழுதப்பட்டிருக்கும் பாஷைகள் எல்லாம் நாம் அறியேம். ஆதலின் அம்மதங்களின் கொள்கைகளை யறிவது மிக்க பிரயாசம் ஆயினும் அவ்வாறு அறிந்து கொள்ளக்கூடிய ஒருசந்தர்ப்பம்நேர்ந்தது. அதுகொஞ்சகாலத்துக்குமுன்னர் அமரிக்காவில் 'சிக்காகோ' நகரத்தில் கூடிய சர்வமதசபைதான். உலகத்திற் பற்பல விடங்களிலுமிருந்து லௌகீக வைதீகஞானத்திற்றேர்ந்த அநேகர் அவ்வத்தேயத்து வழங்கப்படும் மதப்பிரதிநிதிகளாக வர்க்கப்பட்டிருந்தனர். அவர்கள் செய்தபிரசங்கங்கள் எல்லாம் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளுட் சிலவற்றை யீண்டுவரைவேன்.

### I. "ஷிந்து" மதம் (SHINTOISM.)

(இது ஜப்பானிலிருந்து வந்த ரைட்றெவரெண்ட்றியுச்சி சிபட்டா என்பவரால் பிரசங்கிக்கப்பட்டது.)

இச்சர்வமதசபையில்"அட்வைசரி கௌன்சிலில்" ஒரு அங்கத்தவனாய்ப் பற்பல பாகங்களிலு மிருந்து வந்த துரைமக்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்பது எனக்கு மிக்க சந்தோஷம். நானிங்கே சிக்கோசாகியத்தாருடைய ஷிந்துமதத்தை விளக்குவேன். "ஷிந்தோ" என்னும்சொல், அல்லது காமினோ மிச்சி என்னும் பதத்தில், "ஷிந்" அல்லது "காமி" என்றதக்குத் தெய்வம் என்று அருத்தம். "தோ" அல்லது "மிச்சி" என்றது தேவஅருள்பெற்ற பூர்வசந்ததியார் எங்கட்குக் காட்டிய வழியைக்குறித்தது. இச்சமயம் பூர்வீகமாகவே எங்கட்குக்கிடைத்தது. மகத்துவம் பொருந்திய இராஜகுடும்பத்தினின்றும் இதுபிரிக்கப் படக்கூடாதது. பூர்வத்தில் "காமி" வமிசம் அதாவது தேவனுடைய வமிசமிருந்தது. அந்தவமிசத்தார் வானத்தையும் பூமியையும் மனிதரையும், பின்னுமதிலுள்ள எல்லாவஸ்துக்களையுமுண்டாக்கினார்கள். தெய்வங்களில், 'இசானியாகினோகாமி' என்றும் 'இசானுசினினோகாமி' என்றும், ஆண்பெண் இருவருளர். அவர்கள்வானினின்று மிறங்கிப் பூமியைத் திருத்தினார்கள். அவர்கள் அநேகம் பிள்ளைகளைப் பெற்றார்கள். அப்படியே ஜப்பானியருக்கு முதற்பிதாக்களானார்கள். அவர்கள் பெற்ற தெய்வங்களில் "அம்தருசு ஒகோமிகாமி" என்னும் தேவிவானத்தையாண்டா... னுடைய பேரனுக்கு "யசாகாட... னும் ஓர் இரத்தினத்தையும் "யதட... னுங் கண்ணாடியையும் "குஷகுனோதா... வாளையுங் கொடுத்து, பூமியில் ஜப்பான் செழிக்க ஆளக்கடவாய் என்று அனுப்பினா... னுக்கும் ஜப்பானியருக்கும், ஜப்பான் சக்கிரவ... கும்இவ்வாறு சம்பந்தமுண்டாயது. ... சக்கிரவர்த்தியாரெனில் "நிநிஜினோமிக... வுடைய பேரனாகிற 'ஜிம்மிநூட்டெனோ' ... தான். இவர் ஜப்பான் முழுமையுமடக்கிய... தேவ அருள் பெற்ற முற்பிதாக்களுக்கு பூஜை... களும் விழாக்களும் செய்து தனக்குப் பிற்சக்கிரவர்த்திகளைப்போல புத்திர அபேட்சையும் பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்யுங்கடமைகளு மிவர் மிகக் காண்பித்தார். ஆகையால்குடிகளெல்லாம் தேவ அருள் பெற்ற பூர்வசந்ததியாரிடத்திலும் சக்கிரவர்த்திகளிடத்திலும் அவர் வமிசத்தாரிடத்திலும்வணக்கமுஞ் சங்கையும் மரியாதையு முடையவரானார்கள். பதினைந்தாஞ் சக்கிரவர்த்தி "ஒஜின்" (Emperor Ojin) காலத்தில் "கொன்வியூசி ஆனிசும்" வந்தும், இருபத்தொன்றாவது சக்கிரவர்த்தியாகிய "கிஸ்நாமி" என்பவர் ஆளுகை காலத்தில் புத்தமதம் பரவியும், தற்காலம் கிறிஸ்துமதம் பலவிடங்களிற்செறிந்தும் பலவிதசமயக் கொள்கைகளைப் போதிக்கப்பட்ட போதிலும் சக்கிரவர்த்தியும் குடிகளும் ஷிந்து மதத்தின் கடமைகளை அசட்டை பண்ணவில்லை. தற்காலம் செய்யப்படும் பூசைக்கிரியைகளெல்லாம் பரம்பரையாக இதிகாசவழியாய் எங்கட்குக் கிடைத்தன. தெய்வச்சந்ததியாரா லளிக்கப்பட்ட மூன்று தேவப்பிரசாதங்களில் இரத்தினம் சக்கிரவர்த்தி மாளிகையில் வைக்கப்பட்டு இப்போதும் வணங்கப்பட்டுவருகின்றது. தெய்வீகக்கண்ணாடியானது "ஐசு" என்னும் பெரிய ஆலயத்திலும் தெய்வீகவாளானது ஓரிஸ்மாகாணத்துள்ள "ஆஸ்டா" என்னுமாலயத்தினும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கும் சக்கிரவர்த்தி, இத்தேவசந்ததியாருக்கு விழாச் செய்து வணங்கிவருகின்றார்.

கிராமதேவதையின் விழாவரும்பொழுது எல்லாருமொருங்குகூடித் தங்களை யதற்கு முன்னர் கிராமதேவதைகள்தான் காத்தன வென்று புகழ்ந்து பின்னுங்காக்குமாறு வணங்குவார்கள். ஆலயங்களில், தேவசந்ததியார், இராஜவிசுவாசிகள், தேசாபிமானிகள் இவ்விதமாகத் தேசத்துக்கு நன்மைசெய்து இறந்தவர் களையும், ஸ்தாபனஞ்செய்து வணங்கிவ

தேயத்துக்கு ஷிந்து மதம்
இதில்தான் சக்கிரவர்த்தியும் சங்
ன் ராஜவிசுவாசமும் இராஜாங்கத்
தங்கியிருக்கின்றன. இப்போ "ஷிந்து"
சுருக்கமாகச்சொன்னேன். இனி நான்
க்கும் (Shint sect) ஐப்பற்றிச் சொல்வேன்.
கற்பனைகள் இலகுவும் வெளிப்படையுமான
தனைத் தன் சொந்த அநுவலைப்பார்க்
கின்றது. இது ஒரு புதிய மதமாயிருத்த
ழையகற்பனையிலும் வீண் பிடிவாதத்திலும்
று விடுபெட்டதாய்த் திருத்தப்பட்ட பகுதி. இதன்
ஆதாரநூல் "சொக்ரோ பூமியாம்டோ பூமி" என்
னும் வேதம். வானமும் பூமியுஞ்சிருட்டிக்கப் படு
முன்னர், (Ameno Minakavushino Kami) அ
மெனோமினகானுஷினோ காமி என்னுந் தெய்வ
மிருந்தது. அவர் சர்வவல்லமை யுடையவர்; சிருட்டி
த்துவமுடையவர்; சர்வத்தையுமாளுந் திறமுடையர்
நித்தியர். இந்தத் தெய்வத்திலிருந்து ஆணும் பெண்
ணுமாக இரு தெய்வங்கள்உண்டாயின. இந்த இரண்
டுதெய்வங்களும் பின்னர்முதற்றெய்வத் தொடுங்கும்.
இவர்கள் ஒருதேவசந்ததியை யுண்டாக்கினார்கள்.
அவர்கள் முறையே ஜப்பானிலுள்ள (Archepelago)
ஆர்கிபெலக்கோவையும் சூரியன், சந்திரன் மலை நதி
தேவசந்ததியார் ஆகிய இவர்களையும்பெற்றார்கள்.

அவ்விதமே யவர்களின் வல்லமை யாச்சரியமான
வை. எங்கள் மதப்படிக்கு பூவுலகத்தின் மூலையும்
பரிசுத்த கர்த்தரின் ஆலயமுமாகிய 'ஃபூஜி' (Fuji)
என்னும் மலையை வணங்கல்வேண்டும். வானத்தி
லுள்ள தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும், ஆதியா
யுள்ள பரமான்மாவினின்றும் பிரிக்கப்பட்டு இங்குவந்
தபடியால், 'ஃபூஜி' மலையைத்தான் தியானப்பொரு
ளாக்கிக்கொள்ளல்வேண்டும். தேசக்ஷேமமும் சக்கிர
வர்த்தியின் ஆயுளும் அபிவிருத்தியாகும்படி துதித்
தல்வேண்டும். இந்தமதத்தை யுண்டாக்கினவர்
"ஹாசிகாவா காகுகாயோ" என்பவர். இவர் 'இசான்'
என்னும் மகாகாணத்தில் "காகசகி" என்னும் நகரத்
தில் 1541 ஆண்டிற் பிறந்தவர். இக்காலத்தில் தேசம்
முழுமையும், உட்கலகம், பஞ்சம், கொள்ளை இவற்
றால் கலக்கமடைந்தது. இவரது 18-ம் வயதில் தன்
தேயத்தின் துர்ப்பாக்கிய நிலையையுணர்ந்து ஷிந்தும
தத்தைச்சேர்ந்த ஆலயங்கள், மலைகள், நதிகள், எங்
கும் போய் யாத்திரைசெய்தார். ஃபூஜி மலையிலவர்பூ
சை செய்துகொண்டிருந்தபொழுது அசரீரிவழியாய்த்
தேவ அருள்பெற்றார். அம்மலையில் தேவனிருக்கிற
தென்றுணர்ந்து ஒரு கொள்கையை யேற்படுத்தியெங்
கும் பரவச்செய்தார். இவர் தம்முடைய 106-ம்
வயதில் குகையிலிருந்தபொழுது இவருடைய மதம்
பரம்பரையான ஆசிரியர்களாலே போதிக்கப்பட்டது.
பத்தாவது ஆசிரியர் யாரெனில் (Ogi) 'ஓகி' நகரத்திற்
பிறந்த "சிபட்டாஹனமொறி" என்னும் என் பிதா.
அவருமிககற்பனையைத் தன் 18-ம் வயதில் ஏற்றார்.
ஏற்று 'Meji' 'மிசியி' நரத்தில் சண்டைநடந்தபோதி
லும் மாகாணங்கடோறும் இம்மதத்தைப்போதித்து
வந்தார். அவர் தன்னுடைய "Fuji sect" ஃபூஜிமதத்
தருக்கு (Ziko) 'சிக்கோ' என்று பெயரிட்டு
1891 ஆண்டில் சுவர்க்கத்துக்குத் திரும்பினார். நான்
அவரைப் பின்றொடர்ந்தேன். இது எங்கள் சமயத்
தின் சரித்திரம். இனிச்சமயத்தைப்பற்றிய என்னு
டைய அபிப்பிராயத்தைக் கூறுவேன். சராசர வஸ்
துக்களெல்லாம் ஒரே தேவனிடத்திருந்துண்டா
யின. ஆதலின் அவைகளையெல்லாம் நாம் சங்கை
பண்ணவேண்டும். உலகத்திலுள்ள பற்பல சமயங்
களையுங் கனம்பண்ணல்வேண்டும். சமயமெல்லாம்
ஒரேயத்திபாரத்தையுடையன. சனங்களின் வித்தி
யாசத்தாலும் உற்பத்தித் தானத்தாலும் பேதமுள்ள
னவாகத் தோற்றலாம். அவையுண்மையிற் பேத
மன்று. எல்லாச்சமயத்தின் ஞானத்திலும் மறைந்து
கிடக்கின்ற உட்பொருளை, பொதுவான உண்மை
யைக் கண்டுபிடித்தல்வேண்டும். இப்போது உண்
மையைக் கண்டுபிடிப்பதில் யாவருந்தத்தஞ்சக்தியை
யொன்றுபடுத்தல் வேண்டும். கடைசியாய் இன்
னுமொன்று சொல்லவிரும்புகின்றேன். தேவனு
டைய நேசகுமாரர்களெல்லாரும் பூமியில் ஒருமித்
துச் சமாதானத்தையும் ஆறுதலையுமடையவேணு
மென்று சிருட்டிகர்த்தருடைய சித்தமும் எல்லாச்சம
யத்தாருடைய இலக்குமாயிருந்தாலும் அனேகதேசங்
கள்ஒன்றுடனொன்று எரிச்சலாயும்பகையாயுமிருந்து,
அற்பகுற்றத்தில் சண்டை தொடுக்கப்பார்க்கின்றன.
திறைவாங்குவது அல்லது அச்சாதியின் தேசத்தை
யபகரித்துக்கொள்ளும் நோக்கமாகவே அவர்கள் அவ்
வாறு செய்கின்றார்கள். இவ்வாறு தேவகட்டளை
யைமீறி, தீங்கற்ற சனங்களின்மீது துன்பத்தை வரு
விக்கின்றார்கள். இப்போதும் எப்போதும் நான்
மன்றாடிக்கேட்பது இது. அதாவது எல்லாச்சாதியா
ருந் தங்கள்சேனையை ஒருங்குசேர்த்துக்கூட்டி ஒரு
வருடன் ஒருவர் சண்டைபிடிப்பதை யொழித்துச்
சமாதானமாய் வாழுங்காலம் வந்துவிட்டது. இவ்
விராஜாக்களுக்கிடையில் வழக்குகள் நேர்ந்தால் அது
தீர்க்குமாறு ஒரு பிரதானகோர்ட்டு (Supreme Court)
நியமிக்கவேண்டும். அப்படியாயின் ஒருசாதி இன்
னொரு சாதியுடன் சருவாது தத்தமுரிமையைத் தாபி
பித்துத்தேவ அருளோடு சந்தோஷமாய் அனுபவிக்கக்
கூடும். கடைசியில் தேவனுடைய கடைசி யெண்
ணமான எல்லாவுலகத்துக்குமுள்ள சமாதானம்பிறக்
கும்.

தீ. சிவசிதம்பரம்.



## நகைப்பைத்தியம்.

### 6-ம் ஆக்ஷேபம்: அந்தஸ்தைக்காப்பாற்றல்.

(முன் தொடர்ச்சி.)

மேற்சொல்லிய திருஷ்டாந்தங்களைத் தவிரப் பற்
பலவாக உதாரணம் எடுத்துச் சொல்லவேண்டிய
ஆவசியகம் இல்லை. ஒழுக்கமும், கல்வியும், புத்தியும்,
மரியாதைக்குக் காரணமென்று சிறு குழந்தைகள்
கூட ஒப்புக்கொள்ளக் கூடியதாகையால் அதைப்
பற்றி உபரி பிரஸ்தாபிப்பது அனுவசியவேலை. ஆனா
லும் இன்னும் ஒருதிருஷ்டாந்தம் சொல்லலாம். ஆப
ரணப் பித்தராய் அலையும் அறிவிலிகள் ஆபரண பூஷ
ணம் அந்தஸ்துக்குக் காரணமாய் நினைப்பவர்கள் சற்
றாலோசித்தால் அதுவே அவர்கள் நிலையைக்கெடுத்து
நேர் விபரீத சித்தாந்தத்துக்குக் கொண்டுவரீத் தக்க
தென்று உறுதியாய்ச் சொல்லலாம். ஆபரணம்
செய்யும் தொழிலும் ஓர்வித வித்தை யாகையா
லும் ஆபரணஞ் செய்வதற்கு உபகாரமாயுள்ள லோ
கங்கள் ரத்னங்கள் வெட்டி யெடுப்பதும் ஒருவித
வித்தையாகையாலும் அவ்விருவகை வித்தை இல்லா
விட்டால் ஆபரணப் பித்தர்கட்கு எங்ஙனம் ஆபர
ணங் கிடைக்கும். காரணமாகிய அறிவுக்கு பூஜிதை
யேயல்லாமல் காரியமாகிய பூஷணத்துக்குப் பூஜிதை
யில்லை. சமீபத்தில் நடந்த சர்வதோமுக யாகத்தில்
யாதொரு ஆபரணமும் இல்லாமல் கேவலம்வெள்ளைப்
புடவை யுடுத்து அழுக்குப்புறண்டு 15நாளாக ஊத்
தைவாய்தேய்க்காமல் ஆகார மருந்தாதிருந்து தன் பு
ருஷனாகிய எக்ஞதீக்ஷைபுரிந்து எக்னம் நடத்திவரும்
எஜமானனுக்கிணங்க நடந்துவந்த ஒருபத்னியை சக
ல ஆபரணங்களும் அணிந்து செல்வங்களும் கொண்
டாடும் எல்லா ஸ்திரீகளும் வந்து நமஸ்கரித்தார்
கள். அப்படி நமஸ்கரித்ததற்குக் காரணம் அவள்
அணியாதிருந்த ஆபரணமா அணிந்திருந்த யோக்கிய
தையா? யோக்கிதைதான். பூர்வகாலத்தில் ஒழுக்கம்,
கல்வி, புத்தி, இவைகட்குப் பூஜிதை கொடுத்தார்க
ளேயல்லாமல் கேவலம் பணத்திற்காவது ஆபரணத்
திற்காவது மரியாதை கொடுக்கவில்லை. இராஜாக்கள்
ராஜாக்கள் ஆகவேண்டுமானால் வித்வான்கள் எழுதி
வைத்திருக்குஞ் சாஸ்திரங்கள் ... ாவியங்கள்
படித்தறியவேண்டி ... லும் அர
சாக்ஷிசெய்வது ஞானசம்ஸ்கிருதமாயிருக்கிற புஸ்த
கங்களேயல்லாமல் ராஜாக்கள் இல்லை. இமாசலமுதற்
கொண்டு கன்னியாகுமரிவரை இப்போது யாவரும்
புகழப்பட்டது வேதவியாசர் குரோடிகரித்த வேதங்
களா அல்லது அக்காலத்திலுள்ள ராஜாக்களா? சீமை
மகாராணிகையில் இருப்பது அவள் நகைப்பெட்டியும்
பணப்பெட்டியுமா அல்லதுமாட்டுத்தொழுவில் பிறந்
து 45 நாள் காட்டில் பட்டினி கிடந்து போதித்த
கிருஸ்துவின் போதனைகள் அடங்கிய பைபிளா?
கார்லைல் சொல்கிறார்: 'மனுஷன் இதுவரை பாடு
பட்டுச் செய்துமுடித்திருப்பதில் ஸ்பரிசத்துக்கும் தி
ருஷ்டிக்கும் புலப்படக்கூடியதாய் உள்ளவைகள்
மூன்று. ஒன்று ஆலோசனைசபைகளும் போர்க்கருவி
களும் பொருந்திய பட்டணங்கள், 2-வது உழுது கி
ருஷிசெய்த வயல்கள், மூன்று புஸ்தகங்கள். ரெஸ்
தாக்களும் பாலங்களும் பட்டணங்களோடாவது வய
ல்களோடாவது சேர்க்கலாம். நகரங்கள் வயல்கள் இ
வைகள் இரண்டும் புஸ்தகங்கள் ஏற்படுமுன் ஏற்பட்ட
தாகவிருந்தாலும் அவைகளில் அடங்கியிருக்கும் யோக்
கியதையைப்பார்க்கிலும் எவ்வளவோ கடந்ததாக புஸ்
தகங்கட்கு யோக்கியதையுண்டு. ஒரு வாஸ்தவமான
புஸ்தகத்தின் குணம் வியக்கத்தக்கதே. வருஷாவரு
ஷம் மராமத்து செய்யாவிட்டால் ஜீர்ணப்பட்டுவரும்
கற்களாலுண்டான ஜீவத்துவமில்லாப் பட்டணங்க
ளைப்போல் அல்லாமல் உழுது கிருஷிசெய்த வயல்
களை ஒத்து ஆனால் ஜடத்துவமில்லாத ஞானபூமிபோ
லவும், ஞான விருக்ஷம்போலவும் வருஷாவருஷம்
தழைத்து சந்ததி பாரம்பரியமாக நீடித்து வியாக்கி
யானங்கள் ஊகங்கள் தத்துவசித்தாந்தங்கள், பிரசங்
கங்கள், பத்திரிகைகள் ஆகிய இலைகள்விட்டு மேம்
பாடடைகின்றன. மந்திரப்பிரயோகம் நடந்தது
போல் அதில் ஒவ்வொரு பத்திரமும் மனிதருடைய
மனதில்தைத்து ஆத்மரக்ஷைக்கு வேண்டிய போத
னைகள் கொடுக்கின்றன.

புஸ்தகங்கள் ஒருவன் ஜீவகாலபரியந்தம் உழைத்து
தன் அனுபோக முயற்சியாலும் மன உழைப்பினாலும்
சங்கதிகள் கோர்வைசெய்து அவைகளை நல்ல வாக்கு
களால் அலங்கரித்து எக்காலத்திலும் அறிவும் இன்ப
மும் கொடுக்கும்படியான ஸம்ஸ்கிரதமாகையால்
புஸ்தகங்களை விசேஷித்துக் கூறியவை யெல்லாம்

கல்வியும் ஞானத்தையும் புத்தியையும் விசேஷித்துக் கூறப்பட்டவையாகவே நினைக்கவேண்டும். எக்காலத்திலாவது கார்லைல் என்னும் மகான் புஸ்தகங்களையும் கிருஷி பூமிகளையும் நகரங்களையும் திர்ஷ்டிக்கும் ஸ்பரிசத்துக்கும் புலப்படாததும் பாரம்பரியமாக படிப்படி வாக்குமூலத்தால் நீடிக்கப்படுவதுமான கைத்தொழில்களையும் தந்திரங்களையும் புகழ்ந்தாரே யல்லாமல் ஆபரணங்களைப்பற்றி ஓரிடத்திலும் புகழக்காணோம்.

ஆபரணம் அந்தஸ்துக்குக் காரணமென்று வந்தால் பொய்சொல்லித்திருடி வழிப்பறித்து கொலைசெய்து மாதா பிதாக்கட்கு அன்னந்தண்ணீர் அளிக்காமல் ஓட்டியடித்து பந்து அபிமானமில்லாமல் மிருகஜடம்போல் நீதி அநீதி பாராமல் தன்வயிறுமாத்திரம் வளர்த்து ஞானமில்லாமல் கல்வியில்லாமல் விடபுருஷனாய்த் திரியும் ஆபரணாலங்கிருதமுள்ளவனையும், மானமிழந்து எவ்வித நிந்தைக்கு முள்பட்டு ஈனத்தொழில்நடத்தி அதர்மங்கட்கு அஞ்சாமல் பணம் சம்பாதித்து ஆபரணமணிந்த நக்கியையும் இன்னும் கெட்டார் கிழிந்தார் முதலானவர்களையும் பூஜிக்கவேண்டும். எக்காலத்திலாவது இப்பேர்ப்பட்டவர்களை பூஜிதைக்கு அர்கமுள்ளவர்களென்றுயாராவது நினைத்திருக்கிறார்களா? ஆபரண நிமித்தம் அதர்மிகளையும் அவிவேகிகளையும் அற்ப புத்திகளையும் மதித்து அஞ்சலிபந்தனஞ்செய்து அவர்கள் கைபார்த்துப் பிழைப்பதைப்பார்க்கிலும் இறப்பது நலம். முட்டாளுக்கு முட்டாள் தெண்டனிட்டவிண்ணப்பம் என்பதொன்றுதொட்டுள்ளபழமொழி. ஆபரணநிமித்தம் சத்தியமுதலிய ஒழுக்கச்சிறப்பும் கூர்மை முதலிய புத்திச் சிறப்பும் இல்லாத முட்டாள்களையும் ஈனபுத்திகளையும் அக்கிரமிகளையும் வம்பர்களையும் பூஜித்தால் பூஜிக்கிறவனும் அவர்கள் குணத்தை அடைவதால் அவனும் அவமரியாதைக் காளாகிறான். முட்டாளை முட்டாள்தான் வணங்கவேண்டும். ஆபரணத்தால் முட்டாள்தனம் அடங்குமென்று நினைப்பதற்கிடமில்லை. அவ்வாறுநினைத்தால் நெருப்பை உமியால்மூடி அவிக்க நினைப்பதொக்கும். முட்டாள்தனத்தை ஆபரணத்தால் மூடுவதே அதை அதிகப்படுத்துவதற்குக் காரணமாகும். கரண்டுகொண்டிருக்கும் நெருப்புக்கு உஷ்ணம் ஜாஸ்தி. கொஞ்சம் இடங்கிடைத்தவுடன் வெளிப்புறப்படும். அதுபோல ஆபரணப்பெருக்க முள்ளவனுக்கு அக்காரணத்தால் மூடத்தனங் கூடுவதுமன்றி ஆபரணப் பெருமையால் ஊத்தைவாயைத் திறந்து வடிக்கட்டின முட்டாள்தமாய்ப் பேசுவதுமல்லாமல் முட்டாள்தனமாகவும் நடக்கிறாள். காட்டு ஜனங்களின் சுபாவம் அவளிடத்தில் கூடியிருக்கும்.

மானமிழந்து பெருமையிழந்து மதியிழந்து ஊக்கமிழந்து பல்லைக்காட்டிப்பரக்க விழித்து முதல்சம்பாதித்து ஆபரணந்தேடுவதில் நேரிடும் அகௌரவம் சொல்லிமுடியாது.

'புகழின்றார் புத்தேளாட்டுய்யாத லென்மற்றிகழ் வார்பின் சென்றுநிலை.'

ஒட்டார்பின்சென்றொருவன் வாழ்தலினந்நிலையே
கெட்டானெனப்படுதனன்று.

மருந்தோமற்றூனோம்பும்வாழ்க்கைபெருந்தகைமை
பீடழியவந்தவிடத்து.

என்று திருவள்ளுவர் அருளிச்செய்திருக்கிறார். நாயனார் மற்றோரிடத்தில் கூறியிருப்பதுபோல்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்சிறப்
பொவ்வா, செய்தொழில்வேற்றுமையால்.
மேலிருந்தும் மேலல்லார் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர்.

அதாவது எல்லாப்பிராணிகட்கும் ஜனனம் பொது. ஆனால் ஒருவனுக்குப் பூஜிதையும் மற்றொருவனுக்கு அவமரியாதையும் உண்டாவது அவனவன் செய்யப்பட்ட தொழிலுக்குத் தகுந்தபடியாம். உயர்ந்தகுலத்தில் பிறந்து எவ்வளவு ஆபரணாலங்கிருதமாயிருந்தாலும் மேன்மையானசெய்கைகளைச் செய்யார்களாகில் அவர்கள் மேன்மக்கள் ஆகார்கள். அதுபோல எவ்வளவு தாழ்ந்தகுடியிற்பிறந்து ஆபரண சூனியமாயிருந்தாலும் மேலானசெய்கைகள் செய்தால் அவர்கள் தாழ்ந்தவர்கள் ஆகார்கள். கனத்திற்கும் கௌரவத்திற்கும் கட்டளைக்கல் கர்மந்தான். திருவள்ளுவர்க்கு நாயனார் என்று பேர்வந்ததே அவர் மேலான குணத்தையும் ஒழுக்கத்தையும் அடைந்த நிமித்தந்தான். ஆபரணப் புஷ்டியாலல்ல. ஸ்வயஞ்சோதியாயுள்ள சுபுத்திகளின் பிரகாசம் மூலாம்பூச்சுக்குக் கிடைக்குமா? ஆபரணப்பெருமையால் அந்தஸ்துண்டென்று நினைக்கும் அவிவேகத்தை நினைக்கநினைக்க நிந்தையும் கோபமும் ஆச்சரியமும் சிரிப்பும் கலந்த உணர்வு யாவர்க்கும் குமிழிபோற் கிளம்பக்கூடும். ஆபரணாசையால் வருந்தீங்குசொல்லிமுடியாதபடி இருக்கிறது. அதோடு ஆபரணந்தான் அந்தஸ்துக்குப் பிரமாணமென்ற சித்தாந்தம் சேர்ந்துவிட்டால் நெருப்போடு காற்றுச் சேர்ந்தாற்போ லிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ராஜ்யமெல்லாம் [illegible]



னம், அறிவு, தர்மம் இவைகள் சாம்பலாகிப் பார்த்தவிடமெல்லாம்பாழாகும். ஆபரணாசை முதலியவையால் ஊரூராய் இப்போது கக்ஷிபுண்டாகி ஜனங்கள் அடைந்திருக்கும் தீங்குக்குமட்டில்லை. ஆபரணந்தான் அந்தஸ்துக்குச் சின்னமென்பது நிலைப்பட்டால் ஒவ்வொரு கிராமமும் குடியின்றிப் பாழாகும். எல்லா நஷ்டத்திலும் தர்ம நஷ்டம்பெரிது. எல்லாப்பதார்த்தத்திலும் சாஸ்திரம்பெரிது. எல்லா முயற்சியிலும் பலிதமான முயற்சி விசேஷம். எல்லா பூஷணத்திலும் ஒழுக்கபூஷணமும் கல்விபூஷணமும் பெரிது. சிறுபெண்கட்கு ஹிதோபதேசமாய் நான் ஒருகாலத்தில் பாடின கும்மிப்பாட்டின்படி

தங்கம்பித்தளை வெள்ளிதாம்பரம்
தரணியிலொருபூஷணமோ
பங்கப்படாத நன்மொழிகல்வினை
பார்த்தாலதுவேபூஷணமாம்.

ஒழுக்கமும் கல்வியும் ஞானமும் பெரிதென்று ஸ்தாபிப்பதற்கு எத்தனை விதத்தில் திருப்பித் திருப்பிச் சொன்னாலும் சலிப்புவராதாகையல் அதின் மகத்வம் பற்றி மேற்கண்டபடி எழுதலானேன். ஆறும் ஆக்ஷேபத்திற்குத்தகுந்த விடையும் அதின்மூலம் சித்தியாயிருக்கென்று நம்புகிறேன்.

மரியாதைக்கும் அந்தஸ்துக்கும் பிரமாணமாகவும் ஆதாரமாகவும் உள்ளது ஆபரணம் என்று நினைப்பதால் வரும்தீங்குகள் அநேகம். அவைகளில் சிலவற்றைமாத்திரம் இவ்விடத்தில் எடுத்துச்சொல்ல உத்தேசித்துப் பின் வருகிறவைகளை எழுதலானேன்.

(1) நிதானதர்மம் இன்னதென்று இயற்கையாகவே உணர்ந்து ஜீவிதமுதல் காப்பாற்றுவதிலும் அதிகப்படுத்துவதிலும் திருஷ்டியுள்ள உண்ணாட்டு ஜனங்கள் எவ்வளவு வரும்படிப்புஷ்டி யுள்ளவர்களாக இருந்தாலும் ஆபரணமில்லாமையால் பட்டணவாசிகள் மரியாதை செய்கிறதில்லை. அவர்கள் கைவசமுள்ள ஜீவிதமுதலெல்லாம் பட்டணவாசிகளின் திருப்திக்காக ஆபரணமென்ற செத்தமுதலாக மாறிவிடும்படி ஒருகாரணம் ஏற்படுகிறது. கொஞ்சகாலத்திற்குமுன் யாதொரு வறுமையுமில்லாத உண்ணாட்டு ஜனங்கள் ஆபரணப் பித்தர்களாயுள்ள நகரவாசிகளிடம் கொள்வினை கொடுப்பினை செய்து உள்ளமுதலெல்லாம் ஆபரணத்திலும் கல்யாணச்செலவிலும் போக்கி வெங்கத்தனமான குடும்பங்கள் அநேகம்.

(2) பட்டணவாசிகளிடம் கொள்வினை கொ பினை வைத்துக்கொண்டு நாட்டுபுறத்தி லுள்ளவர் பட்டண வாசத்திலிருந்துவந்த நாட்டுப்பெண்களா மதிக்கப்படாமல் அலக்ஷியத்திற்குள்ளாகி சண்டை பூசல் சகிக்காமல் குடும்பம் சின்னாபின்னப்பட்டு கெட்டவர்கள் அநேகம்.

(3) ஆபரணமுள்ள அக்கிரமிகட்கும் அதர்மிக கும் அசத்தியவான்கட்கும் ஆபரணப்பெருமையா மரியாதையென்று வந்து விட்டபடியால் அசத்திய மோசம், வஞ்சனை, நாஸ்திகபுத்தி, பொறாமை லுத்து, டம்பம் இவைகள் பெருகியிருக்கின்றன.

(4) வாஸ்தவமான கல்வி குறைகிறது. எவ்வளவு சாஸ்திர பாரங்கதனாகவிருந்தாலும், எவ்வளவு சத்திய புத்தியாகவிருந்தாலும், எவ்வளவு தெய்வபக்தியுள்ளவனாகவிருந்தாலும் மரியாதைக் கிடமில்லையென்று உணர்வு வந்தால் சாஸ்திர பாரங்கதத்தில் காலம் செலவுசெய்து உழைப்பதைப் பார்க்கிலும் கேவலம் அசத்தியமார்க்கம் அனுஷ்டித்து ஆபரண முயற்சியாய்ச் செல்வதில் மனசு சாரக்கூடியதாகையால் அவ்வாறு கல்வி குறையக்கூடும். தற்காலத்தில் வாஸ்தவமான படிப்புள்ளவர்கள் சுருக்கமென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வாறிருப்பதற்குக் காரணம் ஆபரணம் அந்தஸ்துக்குக் காரணமென்ற தப்பிதமான அபிப்பிராயமே.

தற்காலத்தில் இங்கிலீஷ் படிப்புள்ள சில உத்யோகஸ்தர்கள், வக்கீல்கள் தங்கள் ஸ்திரீகட்கு ஆபரணம் இல்லாவிட்டால் தங்கட்குக் கேவலம் என்று நினைக்கிறார்கள். தங்கள்ஸ்திரீகட்கு ஆபரணம்போடுவதால் தங்கட்கு எவ்வாறு பெருமையென்று என்னறிவுக்கெட்டவில்லை. தங்கள் தங்கள் ஒழுக்கத்தின்மேலும் யோக்கியதையின்மேலும் தங்கட்குள்ள மரியாதையும் அவமரியாதையும் பொறுத்திருக்க, ஸ்திரீகட்கு ஆபரணம் போடுவதால் தங்கட்கு எப்படி அந்தஸ்து வரக்கூடும். தங்களைச் சேர்ந்த ஸ்திரீகட்குக் கேவலம் வரக்கூடாதென்று நினைத்தால் ஒழுக்கத்திலும், பயிர்ப்பிலும், புத்தியிலும் தங்களைப்போல தங்கள்ஸ்திரீகட்கும் யோக்கியதை வருத்தவேண்டும். கேவலம் ஆபரணத்தால் தூணுக்கலங்கரித்ததுபோல அலங்கரித்தல் நிமித்தம் தங்கள் ஸ்திரீகட்காவது தங்கட்காவது பூஜிதை கிடைக்குமென்று நினைப்பது பேதமையும் மூடத்தனமுமே. தனக்கு மரியாதைக்கு யோக்கியதையுண்டென்று காண்பிக்கும் பொருட்டு சதாகாலமும் ஆபரணாலங்கிருதமுள்ள தங்கள் ஸ்திரீகளை [illegible]

னுக்கு விட்டு ஒரு அத்தாக்ஷியாகக்கொண்டு நடக்க முடியுமா. அப்படி நடப்பது உசிதமா. அதனால் மகிமை வரக்கூடுமா? சட்ட விஷயங்களில் பரிக்ஞானமில்லை யென்று கோபிக்கப்பட்ட ஒரு வக்கீல் தன் யோக்கியதையைத் தெளிவிக்கும் பொருட்டு தன் சமுசாரத்தினிடம் கேட்கவேண்டு மென்று கோர்டில் சொன்னதாய்க்கேள்வி. அது எவ்வளவு சிரிப்புக்கிடமாயிற்றோ அதுபோல தனக்கு அந்தஸ்து நாடும்பொருட்டு தன் ஸ்திரீமேலுள்ள ஆபரணத்தைக் காட்டும் பேதமையும் சிரிப்புக்கிடமே.

## 7-ம் ஆக்ஷேபம்; பெருமை சம்பாதித்தல்.

அதாவது தாங்கள் எல்லோரைப்பார்க்கிலும் அதிக கனமாகவும், மாத்துயர்ந்ததாகவும், கல்லுயர்ந்ததாகவும், சேகரமாகவும், பெருக்கமாகவும், ஆபரணமணிவதால் ஒருவிதமேன்மை யென்று நினைத்து அதை நிறைவேற்றி சந்தோஷமடையும் பொருட்டு ஆபரணம் உபயோகித்தல்.

ஆபரணப்பெருமையால் பெருமை சம்பாதிக்க நினைப்பது இருட்டில் ஒளிவிளைவிக்க நினைப்பது போலும் அக்னியில் விதைவிதைத்து பலன் எடுக்கக் கருதுவது போலும் இருக்கும். ஆபரணப்பெருக்கம் அநாகரிகமென்று முன்னமே சொன்னோம். அவ்வாறு ஸ்தாபித்தோம். பின்பக்கங்களில் அதை இன்னும் திருஷ்டாந்தப் படுத்திக் காண்பிக்கப்போகிறோம். அநாகரிகம் பெருமைக்குக் காரணமென்று எங்ஙனம் கூறுகிறது. அநாகரிகம் அவமதிப்புக்கும் குறைவுக்கும் காரணம். அப்படியிருக்க அதின்மூலம் பெருமை விளையுமென்று நினைப்பது விரோதசங்கதியிலிருந்து அனுகூலம் எதிர்பார்ப்பதுபோல்இருக்கின்றது. ஆபரணப்பெருக்கத்தால் அவிவேகப் புஷ்டியும் எவ்வளவு தீமையும் நேரிட்டாலும் அதைகவனிக்கக் கூடிய சக்தியில்லாத சாதுரியக்குறைவும் வெளியாகிறது. தன் அவிவேகத்தையும் தன்குறைவையும் தானே விளம்பரப்படுத்துதல் ஒருபெரும் பெருமைதான். தன்கண்முன் எவ்வளவு அபாயமிருந்தாலும் அதை நான்பார்க்கமாட்டேன்; கண்ணை மூடிக்கொண்டு நடந்து அபாயத்தில் வீழ்ந்து நாசமடைந்தாலும் அடைவேன்; அப்படிச் செய்வதுதான் பெருமையென்று ஒருவன் நினைத்து இடுக்கண்ணடைந்தால் அதற்குப் பெருமையுண்டாகுமா? ஆபரணப்பெருக்கம் பெருமைக்கிடமென்று நினைப்பவர்கள் அவிவேகிகள் தான். ஏனென்றால் மூட்டாளை வியக்க வேண்டியது முட்டாள்தான்.

முற்காலத்தில் பெருமைக்குப் பிரமாணமாகச் சொல்லியிருப்பது ஆபரணமல்ல. பின்வரும் குறளே அதற்கு அத்தாக்ஷி.

ஒளியொருவற்குள்ளாவெறுக்கையினி
அஃதிறந்துவாழ்துமெனல்.

பெருமையுடையராற்றுவாராற்றி
னருமையுடையசெயல்.

அதாவது, ஒருவனுக்கு ஒளியாவது பிறராலேசெய்தற்கரியவைகளைச் செய்வோமென்று நினைக்கிற மனவெழுச்சியின்மிகுதியாம். ஒருவனுக்கு மாசாவது அம்மன எழுச்சியில்லாமையாம். பெருமை யுடையோர் அருமையுடையசெயல்களைச் செய்வார் என்றவாறு.

மேற்கண்ட இரண்டுகுறள்களால் பெருமைசம்பாதிக்கக் கருதியவன் அருஞ்செயல் செய்து முடிப்போமென்ற மனவெழுச்சி பொருந்தி அருஞ்செயல்முடிக்கவேண்டு மென்று ஏற்படுகிறது. ஆபரணமணிவதால் எந்த அருஞ்செயல் முடிகிறது? எந்தச்சத்துரு ஜயிக்கப்படுகிறான்? எந்தராச்சியம் பிடிக்கப்படுகிறது? இதுவரை வெளியாக என்ன சாஸ்திரங்கள் ஜனிக்கின்றன? என்னகவிகள் புதிதாக நிர்மிக்கப்படுகின்றன? எந்தரெயில், தந்தித்தபால் உண்டாகிறது? எந்தவஸ்திரம் புதிதாக நெய்யப்படுகிறது? எந்தசாமான் புதிதாக பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படுகிறது? எந்தசமுத்திரத்தில் கப்பல் புதிதாக ஓடுகிறது? எந்தவனுந்திரம் செழுந்தழை மண்டி பழங்களையும் தானியங்களையும் கொடுக்கிறது? எந்தவியாதி நிவர்த்தியாகிறது? எந்த எந்திரசாஸ்திரி, கணிதசாஸ்திரி, க்ஷேத்திரவிவகாரி, உற்பத்தியாகிறான். எந்தவியாசபதஞ்சலி, வியாக்கிரபாதர், திருஞானசம்பந்தர், சங்கராசாரியார், அவதரித்துப் பரோபகாரமாய்ப் பாடுபடுகிறார்?

பெருமையுடையோர் தன்னைத்தான் பேணி நடப்பார்களென்று முன்னமேசொன்னோம். ஆபரண இச்சையால் தன்னைத்தான் பேணுமையை முன்னமே விவரித்தெழுதியிருக்கிறோம். அதனால் பெருமை எங்ஙனம் விளையும்.

ஆபரணப் பெருமையால் அகங்காரமும், மதமும், மாத்சரியமும், டம்பமும்பணிவின்மையும் உண்டாவது முன்னமே எடுத்துக்காட்டியிருக்கிறோம். "பணியுமாம் என்றும் பெருமை சிறுமையணியுமாந் தன்னை



வியந்து" குறள்வாக்கியம் என்பது அகங்காரம் டம்பம் தர்பம்மதம் உண்டாவது பெருமைக்கழகன்று. அப்படியிருக்க நகைப்பெருமை கொண்டாடக்கருதினவர்கள் மேற்கண்ட துர்க்குணங்களைப் பூண்டால் எப்படி சித்தியாகும்.

பெருமைபெருமிதமின்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்துவிடல்.

இப்பாடலும் முன்சொன்னதையே விளக்குகிறது.

பெருமையென்பது பிறர்மானத்தில் கவனம்வைக்குமேயல்லாமல் அவமானத்தில் கவனம் வைக்காது. அதற்கு விபரீதமாக முன்திருஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

மேற்கண்டவைகளால் ஆபரண ஆசையாலும் ஆபரணப்பெருமையாலும் வாஸ்தவமான பெருமை ஏற்படாததுமன்றி உண்டாயிருப்பதும் அழிவதற்கிடமுண்டென்று வியக்தமாகிறது.

## 8-வது ஆக்ஷேபம்.

வழியாத்திரையில் திடீரென்று நேரிடும்
செலவுக்கு வழிதேடல்.

ஆபரணமுபயோகிப்பதற்குக் காரணமாய்க் கூறப்படும் சங்கதிகளைக் கிரகிக்கும்பொருட்டு பலபேரிடத்தில் வாயாடினதில் இதைத்தான் பலமாகச்சொல்கிறார்கள். இது அவர்கள் மனசில் சீக்கிரம் உதித்து வெளியாவதுபோல் வேறே ஒருகாரணமும் உதித்து வெளிவரக்காணேன். ஆபத்திற்குதவுதலால் ஆபரணமென்று பேர்வந்திருப்பதே மேற்கண்ட ஆக்ஷேபம் வகிக்கத்தக்கதென்று சிலர் எடுத்துச் சொல்லியிருப்பது என்காதில் விழுந்திருக்கிறது. இந்த ஆக்ஷேபத்திற்குத்தகுந்த விடையளிக்கவேண்டுமென்று இதனாலேற்படுகிறது.

ஒரு பருவத்திற்கு அல்லது ஒருவித சந்தர்ப்பத்திற்குத்தகுந்ததாய் ஏற்படும் ஒரு ஏற்பாடானது எல்லாப் பருவத்திற்கும் எல்லாச் சந்தர்ப்பத்திற்கும் தகுந்ததென்று வராது. குழந்தைப்பர்வத்தில் உபயோகமாயிருக்கும் மயில்பீலி, அரசிலை, இடுப்புச் சலங்கை இவைபோன்ற ஆபரணங்கள் பிராப்தியான பிற்பாடும் உபயோகப்படாவாம். புருஷக்குழந்தைகட்கு சிலசமயங்களில் குண்டலமணிவது வழக்கம். புருஷப்பிராயமானபிற்பாடும், குண்டலமணிவது உசிதமாயிராது. மாசம் மும்மழை பெய்து வற்றாதவி

யவசாயம் நடக்கும் ஊரில் பெருங்குளங்கள் ஆவசி
கமிராவாம். காலகதியால் வானடைத்து மழைமா
வேண்டியபோதெல்லாம் மழை வராதென்று காணு
போது முன் குளங்களில்லாமல் இருந்ததுபோல் இ
போதும் இருக்கலாமா? மழை முறைபுறண்டு அ
லமாகவும் சிலமாதங்களில் மாத்திரம் சிலவேளை
ளில் பெய்வதென்று வந்தால் பெய்தகாலத்து ஜல
த்தைக் கட்டிவைத்துக்கொண்டு கிருஷிக்கு உபயோ
கப்படுத்தும் பொருட்டு குளங்கள் ஆவசியகம்.

மேற்சொல்லிய நியாயம் அனுசரித்து ஒருகால
தில் ஒரு நிலைமையில் ஆபரணத்தில்முதலிடுவது உ
தமாயிருந்தால் அக்காலமும் நிலைமையும் முற்றும்
தப்பட்டுப் போயிருக்கும்போதும் அவ்வாறு ஆப
ணத்தில் முதலிடுவது உசிதமென்று வராது. இ
முடிபால் முற்காலத்தின் ஸ்திதியென்ன, தற்கால
தின் ஸ்திதி யென்னவென்று நிச்சயப்படுத்த வே
டியிருக்கிறது.

முற்காலத்தின் ஸ்திதியைப்பற்றி ஜார்ஜ் டன்க
என்பவர் பின்வருகிறபடி எழுதியிருக்கிறார். "ச
பகாலம்வரை இந்தியாவிலுள்ள ரெஸ்தாக்கள் ஒ
றையடிப் பாதைகளைப்பார்க்கிலும் சற்று நல்லதா
ருந்தனவே யல்லாமல் வண்டிகள் போக்குவரத்து
குத் தகுந்தவைகளா யிருக்கவில்லை. தனிகர்கள்பிர
ணஞ் செய்வதாயிருந்தால் பெருஞ் செலவின்மே
பல்லக்குகளில் மணிக்கு 4-மயில் வீதம் போகிளா
சுமக்கப்பட்டும், குதிரைகளில் மணிக்கு 3-மயில் வீத
சவாரி செய்தும் வந்தார்கள். ஸாமான்கள், கூட
ரங்கள் இவைகளைச் சுமந்துகொண்டு வேலைக்கா
கால்நடையாகப் பின்தொடர்ந்தார்கள். ஏழைஜன
கள் பகல் முழுமையும் கால்நடையாக நடந்து இ
வில் மரத்தடிகளில் தங்கினார்கள். ஜனங்கட்குவே
டிய சாரட்டுகள், வண்டிகள், படகுகள் இல்லமே
யில்லை. பாலங்கள், ரெயில்பாதைகள், தந்திக
தபால்கள், இவைகளுமில்லை. உள்ளபாதைக
புலிமுதலிய மிருகங்களாலும் வழிப்பறிபறிக்கும் தி
டர்களாலும் நிறைந்திருந்தன. பெரும்பாலும்,
ரம் வாந்திபேதி பிரயாணமாகச் செல்லும் ஜனங்
ளைப் பீடித்து உயிர்ச்சேதம் வருத்தி மேற்செல்
மல் தடுத்துவிட்டது. சத்திரம் சாவடி முதலி
தங்கும் ஸ்தலங்கள் வெகுதூரத்துக் கப்பால் ஒ
வொன்றிருந்தன. கடிதங்கள், திரவியங்கள், ஆப
ணங்கள் மற்றும் விலை உயர்ந்த சாமான்கள் கூலி
காரர்வசம் அனுப்பப்பட்டன. அவர்கள் பந்தோப

னுக்காக தாங்கள் எளிய முகங்காட்டும் தோற்றத்தின்மேல் நம்பியிருந்தார்களே யல்லாமல் பாதைகளில் வேறே பந்தோபஸ்தில்லை. வியாபாரமெல்லாம் சகடாவண்டிகளிலும், ஒட்டகம், எருது, குதிரை, இவைகளின்மேலும் நெடுந்தூரம் 500, 1,000 மயில்வரை கொண்டுபோகப் பட்டன. பிரிட்டிஷ் ராஜாங்கம் ஏற்பட்ட பிற்பாடு நல்லரெஸ்தாக்கள் நகரத்துக்கு நகரம் பட்டணத்துக்குப் பட்டணம் வெட்டியிருக்கிறார்கள். நதிகள், ஆறுகள், கால்வாய்கள், ஓடைகள் கடக்கும்பொருட்டு பாலங்கள் கட்டியிருக்கிறார்கள். வாய்க்கால்கள் வெட்டியிருக்கிறார்கள். ரெயில்பாதைகளும் நிர்மித்திருக்கிறார்கள். பெரும் நதிகளில் படகுகள் கப்பல்கள் செல்லுகின்றன. அல்லாமலும் இரங்கூன் முதல் குராச்சிவரை புகைக்கப்பல்கள் போக்குவரத்தா யிருக்கின்றன. தந்திக்கம்பிகள் நாலு திக்குகளிலும் தேசமுழுமையும் பரவி நிறைந்திருக்கின்றன. இன்னும் கொஞ்சகாலத்திற் குள்ளாக வேண்டிய பரிஷ்காரங்களும், அபிவிர்த்தியும் ஏற்பட்டு பிரபஞ்சத்தில் வெகு உன்னதஸ்திதிக்கு வந்திருக்கும் ராச்சியங்களில் எவ்வளவு சுளுவாகவும் சௌகரியமாகவும் துரிதமாகவும் பந்தோபஸ்தாகவும் பிரயாணம் நடந்துவருகிறதோ அதுபோல இந்தியாவிலும் சாதனமாகுமென்பதில் சந்தேகமில்லை."

முற்காலத்தில் யாத்திரை செல்லும் பிரயாணிகட்கு தகுந்த பாதைகளில்லாமலிருந்ததென்று முன்வாக்கியங்களால் ஏற்படுகிறது. முற்காலத்தில் யாத்திரை செய்யவேண்டுமானால் காட்டுமிருகங்களாலும் கள்ளர்களாலும் பாதைகள் பீடிக்கப்பட்டு வெகுஜனங்கள் சேர்ந்துபோகும்வரை காத்திருக்கும்படி நேரிட்டது. ஊரூராய்த் தங்கித் தாமதித்துத் தருகித் தருகிப் போகும்படியான நிர்ப்பந்தங்கள் இருந்தன. செல்லும் ஸ்தலங்கள்தோறும் ஆகாரத்துக்கு கைப்பொறுப்பில்லாமல் நடக்குமென்று நிச்சயமில்லை. ரூபாயாகக் கொண்டுபோனால் சுமப்பதும் வருத்தமாகவிருந்தது. ஓரிடத்திலுள்ள நாணயம் மற்றோரிடத்தில் உபகாரமன்றியு மிருந்தது. வியாபாரிகள் சுருக்கமாகவிருந்தபடியால் உண்டியல்முதலிய லேவாதேவிகளும் சுருக்கம். ஓரிடத்திற் போயிருந்து கொண்டு தான் முதல் வைத்திருக்கும் ஸ்தலத்திலிருந்து ஆவசியகம்போல் வருத்திக்கொள்வோமென்று தீர்மானித்து நடப்பதற்கு ஸௌகரியமாகத் தபால், தந்தி யில்லை. இப்பேர்ப்பட்ட ஸ்திதியில் பலபாஷைமிருந்த பலநாடுகளில் பிரயாணஞ்செய்ய உத்தேசிக்குமொருவன் கையடக்கமாகவும் எல்லாநாடுகளிலும் செல்லத்தக்கதாகவும் முதற்கொண்டு போகவேண்டுமானால் எப்படிக்கொண்டுபோவது எளிது? ஸாமான்களாகவும் பதார்த்தங்களாகவும் கொண்டுபோவது எளிதாகுமா? ஆகாது. ரூபாயாகக் கொண்டுபோனால் அடக்கமாயிராது. பொன்னாகவும் வெள்ளியாகவும் ரெத்னமாகவும் கொண்டுபோவது எளிதாயிருக்குமென்பதற்குச்சந்தேகமில்லை. கேவலம் பொன், வெள்ளி, ரத்னமாகக் கொண்டுபோனால் ஆபரணத்துக்குள்ள மதிப்பு இருக்கமாட்டாது. தேகத்தில் அணிந்துகொண்டோமென்ற திருப்தியுமிருக்கமாட்டாது. இவையெல்லாம் உத்தேசித்து ஆபரணத்தில் முதலிடுவது பிரயாணிகட்குசிதமாகவிருந்தது. முற்காலத்தில் யாவரும் மதாபிமான முள்ளவர்களாயிருந்தபடியால் புண்ணிய க்ஷேத்திரங்கட்கு யாத்திரை போவதில் எப்போதும் மனமுள்ளவர்களா யிருந்தார்கள். அவ்வாறு செல்வதற்குச் சித்தமுறுதிப்படுவது எக்காலமென்ற நிச்சயமில்லாமையாலும் காட்டுஜனங்கள் பட்டாணிகள் இவர்களைப் பார்த்து ஆபரணமழகென்று துர்ப்புத்தி ஏற்பட்டதாலும் சாதாரணமாய் ஆபரணத்தில் முதலிடும்படி காரணம் சம்பவித்தது.

(இன்னும் வரும்.)

எஸ். இராமஸ்வாமி ஐயர், பி.ஏ., பி. எல்.

# திருஞானசம்பந்தர் காலநிர்ணயம்.

(6-ம் புத்தகம்-375-வது பக்கத்தொடர்ச்சி.)

இனிச், சைவர் சிரமேற்கொள்ளும் 10-வது திருமுறையாகிய திருவிசைப்பாவி னுதாரவைக்கொண்டு நம்பரிசீலனையைமேல் நடத்துவம். நம்பி காடநம்பிகள் தங்கோயிற்றிருவிசைப்பாவில் காழியர் செல்வத்தைப் பாராட்டியுள்ள பரிசை யென்னென்பேம். ஸ்ரீ ஞானசம்பந்தருக்குப் பிற்காலத்தவரான திருநாவலூரர் சீரும் அங்ஙனமே பரவப்பட்டுள்ளது. திருவிசைப்பாவியற்றிய நாயன்மார் ஒன்பதின்மருள் ஒருவரான கண்டராதித்தியரைக்கொண்டு ஒருஅடையாள மேற்படுகின்றது. அந்நாயன்மாருள் நடுநாயகமாக விளங்குபவர் கண்டராதித்தியர். அவர்காலத்தையே அவ்வொன்பதின்மரின் சராசரி காலமாகக்கொள்ள ஆக்ஷேபமில்லாதவரையில், அங்ஙனமே கொள்ளல் சாலுமென்க. கண்டராதித்தியர் தம்மை உறையூர்க் கதிபனான சோழனென்றும், தஞ்சைக் கிறைவனென்றும், தம்மூதாதைகளிலொருவன் மதுரையையுமிலங்கையையும் வென்று சிற்றம்பலத்துக்குப் பொன்னோடு போவித்தானென்றும் பிரஸ்தாபித்துள்ளார். அங்ஙன மிலங்கை யரசனையும் இராஜசிம்மப் பாண்டியனையும் வென்றவன் மஹாசக்கிரவர்த்தியாகிய முதற்பராந்தகனென எவர்க்குந்தெரியும். Hultzsch துரையவர்கள் உதவிய சோழராஜவம்சாவலியில், கண்டராதித்தியர் பராந்தகனுக் கிரண்டுபட்டம் பிந்தியவரெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. 984-வருஷத்தில் பட்டத்துக்குவந்த இராஜராஜனை, மேற்குறித்த வம்சாவலியில் பத்தாவது சோழனாகக் குறிக்கப்பட்டிருக்கின்றமைபற்றி, இவனுக்கு முன்னும் கண்டராதித்தியருக்குப் பின்னுமிடையிட்ட சோழவரசர் நால்வருள் ஒவ்வொருவரும் சராசரி 25-வருஷமாண்டதாகக்கொள்ளினும், கண்டராதித்தியர் காலம் 9-வது நூற்றாண்டின் கடைசியென்று வைத்துக்கொள்ளலாம். 9-வது நூற்றாண்டின் முடிவிலேயே, நம் கௌணியர் செல்வத்தின் பிரபாவமனைத்தும் கௌரிபங்கனுடையவாகப் பாவிக்கப்படும்வண்ணம் பழமைப்பட்டனவென்றால், நம் பாலறுவாயரை 13-வது நூற்றாண்டின் கடைசியாயிருந்தவரென மயங்கல் என்ன பரிதாபம்! ஆதலின் நம் காழியர்பெருமான் கண்டராதித்தியருக்கு வெகுகாலம் முன்னே யிருந்திருக்கவேண்டுமென் றேற்படுகின்றது. இனி விவகாரமெல்லாம் எவ்வளவுகால முன்னே யென்பதைப் பற்றித்தான்.



இவ்விவகாரத்திற்குப் பயன்படும் விஷயங்கள், தமிழி லமைந்துகிடக்கும் சைவநூற்களில், போதுமானமட்டுமிருப்பதாகஞாபகமில்லை. ஆயினும் கண்டராதித்தியர்க்கும் நம் சம்பந்தருக்கு மிடையிட்டகாலம் மூன்று நான்கு நூற்றாண்டுக்குக் குறையாதென்பதற்குள்ள அடையாளங்கள் பல.—

நம்பாலறுவாயர் காலத்திலும், அவருக்குச் சுமார் ஒருநூற்றாண்டு பிந்தியவரான நம்பியாரூரர் காலத்திலும், தஞ்சைநகரமிருந்ததில்லை யென்பதை முன்னே பிரஸ்தாபித்திருக்கிறோம். கண்டராதித்தியரோவெனின் தம்மைத் தஞ்சைக் கதிபரெனக் குறித்துளார் என்பதையும் சூசிப்பித்திருக்கின்றோம். திருவிசைப்பாவியற்றிய நாயன்மார் ஒன்பதின்மருள் ஒருவரான கருவூர்த்தேவர் தந்நூலில் தஞ்சையின் விசேஷித்தவளத்தையும்,விஸ்தீரணத்தையுஞ் சொல்லியுள்ளார். அவர் அதைப் பிரஸ்த்தாபிக்கும்போதெல்லாம் 'மதில்சூழ்ந்ததென்றே' பிரஸ்தாபித்திருக்கிறார். ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் பதிகங்களிற் காணப்படும் தஞ்சையும், கருவூர்த்தேவர் புகழ்ந்த பிரகிருதத்தில் தஞ்சையெனப்படும் மதில்சூழ்ந்த தஞ்சையுமொன்றென மயங்காவண்ணம் முன்னதைப் 'பொட்டைத்தஞ்சை' யென அடைகொடுத்து ஆண்டுவருகின்றனர்போலும். இங்ஙனம் நம் சுந்தரர்க்கும் கண்டராதித்தியருக்கு மிடையிட்ட காலத்தில் மாடமாளிகைகள்நிறைந்த நம் தஞ்சைமாநகரம் உண்டாயிற்றென்றேற்படுகின்றது.

கண்டராதித்தியர்க்கு இரண்டுமூன்று தலைமுறை முந்தியவனும், சிற்றம்பலத்துக்குப் பொன்னோடு போடுவித்த சோழனுமான முதற் பராந்தகனைப்பற்றிக் கோவிற்றேவாரத்திற் கூட ஒரு குறிப்பையும் காணோம். முதற் பராந்தகன் பிரபாவத்தையும் பத்தியையும், அவனை நம்பியாண்டார்நம்பிகள் முதலிய பிற்காலத்தார் பாராட்டலையும் நோக்கின், அவனைப் பற்றிய குறிப்பு ஒன்றும் தேவாரத்திற் காணப்படாதது கவனிக்கத் தகுந்தது. நம்பியாண்டார்நம்பிகள் புகழ் சோழநாயனாரைப் பற்றித் தாம் சொல்லியுள்ளதிலிலங்கையரசன்மீது பராந்தகன் கொண்ட வெற்றியையும், இடங்கழி நாயனார் புராணத்தில் அவன் இராஜசிம்மபாண்டியன்மீது கொண்ட வெற்றியையும், கோச்செங்கட் சோழ நாயனார் புராணத்தில் அவன் சிற்சபைக்குப் பொன்னோடு போடுவித்ததையும் சூசிப்பித்திருக்கிறார். பெரிய புராணமியற்றியவரும் பொன்னோட்டுத் திருப்பணியை யிடம்வந்துழிச் சிறப்பிக்காமலிருந்ததில்லை. நம் ஆளுடைய பிள்ளையார் பராந்தகனுக்குப் பிந்தியவராயின், பராந்தகனாற் பொன்னோடு போடப்பெற்ற சிற்சபைக்கு நேரேநின்று அதன் மான்மியத்தைத் தம் தேவாரத்தி லமைத்த நம் பாலறுவாயர் பொன்னோட்டுத்திருப்பணி யியற்றிய பராந்தகனைப் பற்றியொரு சிறிதும் குறிப்பியாதது யோசிக்கற்பாலதன்றோ. தில்லைவாழந்தணரைக் குறிப்பித்துள்ளவர் பராந்தகனைக் குறிப்பித்ததில்லையே! ஆளுடைய அரசுகள் தேவாரத்தும் பராந்தகனைப் பற்றிய பிரஸ்தாபஞ் சிறிதுமில்லை. அவருக்குச் சில தலைமுறை பிந்திய ஆளுடைய நம்பிகளும் அச்சோழனைப்பற்றிச் சிறிதுங் குறிப்பித்ததில்லை. நம்பியாண்டார் நம்பிகள், புகழ்ச்சோழன், இடங்கழி,கோச்செங்கட் சோழன் ஆகியமூவரையும் பராந்தகனுக்கு மூதாதைகளாகச் சொல்லியுள்ளதைநோக்கப் பராந்தகனுக்கும் ஸ்ரீசம்பந்தருக்கு மிடையிட்டகாலத்தின் நீட்சிதோன்றும்.

நிற்க. ஆளுடையவரசுகள் தேவாரத்தில் 'பொன்னம்பலம்' என்னும் பிரயோக மிருப்பதால் ஸ்ரீ அப்

பரும் அவரோடும் ஏககால வாசியாகிய ஸ்ரீ ஞானசம்பந்தரும் (கொங்குநாட்டுச் சரித்திரத்தின்படி) பொன்னம்பலத்தை நிருமித்தவனெனக் கொள்ளப்படும் பராந்தகனுக்குப் பிந்திய காலத்தவர்களென்று வாதிக்கலாம். ஆனால் கொங்குநாட்டுச் சரித்திரத்தின்படி பொன்னம்பலத்தைப் பராந்தகன் நிருமித்தானெனல் தவறு.

'பொன்னம்பல'மென்பது சிற்றம்பலத்துக்கு அதனருமை பெருமையைநோக்கி அதற்கு இட்டபெயராகும். வடமொழி வித்துவான்களாற் கனகசபையெனவும், நவீனபண்டிதர்களால் 'பொற்கூடமெனவும்' மொழிபெயர்க்கப் பட்டது

அருமை நோக்கி ஔபசாரியமாக பொன்னம்பலமென வழங்கி வந்ததை உண்மையிலும் பொன்னம்பலமாக்குவான் வேண்டிப் பராந்தகன் அதற்குப் பொன்னோடு போடுவித்தான் போலும். பிரகிருதத்தில் தேவிகோட்டை செட்டிமாரும், தாங்கள் பொன்னோட்டினிமித்தம் ஏராளமான திரவியத்தைச் செலவிடுவதற்குக் காரணம், அதற்குப் பொன்னம்பலமெனும்பெயர் வழங்குதல் பற்றியே என்கிறார்கள். ஒருக்கால் பராந்தகனு மிதேநோக்கத்தோடுதான் பொன்னோட்டுத் திருப்பணியிற் றலைப்பட்டான் போலும். பதினோராம் நூற்றாண்டிலிருந்த நம்பியாண்டார்நம்பிகள், பராந்தகன் ஔதாரியத்தையும் சிவநேசத்தையும் பாராட்டும்போதுகூட, சிற்சபைக்குப் பொன்னோடும் போடுவித்தான் என்றாரேயன்றி அதை நிருமித்தான் என்றுசொன்னதில்லை. சேக்கிழார்பெருமானும் தம்மையாதரித்தவனாகிய அநபாய சோழன் பொன்னம்பலத்தைப் புதுக்கினானென்று மாத்திரம் சொல்லியிருக்கிறார். 14 வது நூற்றாண்டிலிருந்தவராகிய உமாபதிசிவாசாரியார் தாமியற்றிய கோயிற் புராணத்தில், சிற்சபையையும் அப்பதியையும் முன் காலத்தில் இரணியவர்மன் அமைத்தானென்றுசொல்லியிருக்கிறார், பொன்னம்பலத்தை யெவர் நிருமித்திருப்பினும் ஸ்ரீ மணிவாசகப் பெருமான் காலத்துப் புலியூர் எனும் பெயர் எதையுணர்த்தியதோ அதைமாத்திரந்தான் 'பொன்னம்பல'மெனும் பெயரும் உணர்த்தியது. ஆளுடைய வரசுகள் தேவாரத்திற் பொன்னம்பலமெனும் பிரயோகம் வந்திருப்பதை மாத்திரங் கொண்டு வகீசப்பெருமான் பராந்தகனுக்குப் பிந்தியவரென்று துணிதல் பொருந்தாது. நாம் மேற் பிரஸ்தாபித்துள்ள வற்றை யழுந்திப் பார்ப்போர்க்கு அத்துணிவு அசப்பியமென்றேற்படும். ஸ்ரீ சம்பந்தராதி சைவப் பெருந்திருவாளர் காலத்தில் சிதம்பரம் சோழ அரசர்களைச் சேர்ந்ததன்று; பல்லவ அரசர்க்குப்பிரதான பட்டினமாகவிருந்தது. பராந்தகன் சந்ததியார்காலத்தில், சிதம்பரம் சோழ தேசத்தோடு சேர்க்கப்பட்டபிறகு, சேக்கிழார் பெருமானை யாதரித்த அநபாயன் காலத்துக்குப் பின் நிரம்பகாலம் வரையில் அவர்கள்வசம்விட்டு நீங்கினதில்லை. ஆதலின் சிதம்பரத்தே பல்லவர் தழைத்த காலம், பராந்தகன் காலத்துக்கு நிரம்பமுந்திய தென்றேற்படுகின்றது. இம்முடிபு, நம் சம்பந்தர்காலத்துக்கும் பராந்தகன்காலத்துக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றி நாம் முன்னொரு சந்தர்ப்பத்திற் சித்தாந்தப்படுத்தியதைப் பசுமரத்தாணிபோல் நிறுத்தியது.

(இன்னும் வரும்.)

கே. எஸ். ஷண்முகசுந்தரம், பி. ஏ.

## நந்தவனநஷ்டம்

அல்லது

## மோட்சஈனம்.

(6-ம் புத்தகம்-377-வது பக்கத்தொடர்ச்சி.)

இப்போது காலைப்போதானது கீழ்த்திசையில் ரோஜாவர்ணமான தன்பாதங்களைப் படிப்படியாக முன்னிட்டெழும்பி பூமியைப்பனித்துளிகளாகியபிரகாசமான முத்துக்களால் அலங்கரித்தபோது, ஆதாம் (Adam) வழக்கப்படி விழித்தான். சுத்தமான பசனத்தாலும், இதபதமான சத்வங்களாலும் உண்டாகியபடியால் அவன் தூக்கம் காற்றைப்போல் இலகுவாக இருந்தது; இலைகள், ஆவியாக எழும்பும் சிற்றாறுகள்இவைகளின்சிற்றொலியாலேயேஅகற்றக்கூடிய அத்தூக்கத்தை அவைகளும், அருணோதய இளங்காற்றும், மரக்கிளைகள்தோறும் பாடும் பட்சிகளின் சில்லென ஒலிக்கும் கானங்களும் எளிதாக அகற்றின. அவன் அவ்வளவு எளிதாக எழுந்திருக்க, ஈவியானவள் நித்திரைதெளியாமல், கூந்தல் கலைந்தும் கன்னஞ்சிவந்தும், தூக்கக்கலக்கமுற்றும் இளங்க



தைக்கண்டு மிக வியப்புற்றான். அவன் ஒருபுறம் சாய்ந்து, சிறிதெழுந்து, உள்ளன்புடன் மோகித்து அவள்மேல் வளைந்துதொங்க, விழித்திருக்கும்போதும் உறங்கும்போதும் விசேஷலட்சணங்களை வீசிய அழகை நோக்கினான். பிறகு, அவள் கையை மெதுவாகத்தொட்டு, கோடையாகிய கந்தவகன் அலரியின்மேல் (Flora) சுவாசிப்பதுபோல் மெல்லிய சுரத்தோடு பின்வருமாறு காதோதினான். "எழுந்திரு என் பரமசுந்தரியே! என்மணமகளே! கடைசியாகக் கிடைத்த பொருளே! ஈசனாலளிக்கப்பட்ட கடைசியான வரப்பிரசாதமே! ஓயாமல் புதிய இன்பத்தைக் கொடுக்கும் பிரியையே! எழுந்திரு! காலை ஒளிவீசுகிறது; இன்றலர்ந்த தளம்நம்மை அழைக்கிறது; நம்முடைய இளமையான செடிகள் வளர்ந்தெழும்புவதையும், ஜம்பீரவுபவனம் புஷ்பிப்பதையும், வெள்ளைப்போளமும் (Myrrh) நாணலும் வாசனையையும் ஆற்றுந்தன்மையையும் உடைய சாரத்தைச் சொரிகிறதையும், விருக்ஷாதிரசனத்தில் வர்ணங்கள் தோன்றுவதையும், தேனீ மலரின்மீது உட்கார்ந்து ஜலரூபமான மதுவை எடுப்பதையும், குறிக்கத்தகுந்த விடியற்காலம் செல்லுகிறது."

இக்காதோதல் அவளை எழுப்பிற்று; ஆனால் அவள் திடுக்கிட்டெழுந்து ஏங்கிய கண்ணால் ஆதாமை (Adam) நோக்கி அவனைத்தழுவிப் பின்வருமாறுபேசினாள். "என் தியானத்துக்கெல்லாம் ஓய்வுகொடுக்கும் பொறுப்பாகிய தனிப்பொருளே! என் மகிமையே! என்பரிபூர்த்தியே! உன் முகத்தைப்பார்க்கவும், பகல் திரும்பவந்ததைக்காணவும் சந்தோஷமாக இருக்கிறது. இதுவரையில் இப்படிப்பட்ட இரவைக்கண்டதில்லை. ஒருகனவுகண்டேன்.-கனவுதானோவாஸ்தவமோ-வழக்கப்படி உன்னைப்பற்றியும், சென்றதினத்தின் வேலைகளைப்பற்றியும், மறுநாள் செய்யவேண்டியவேலைகளைப்பற்றியும் அல்ல. கஷ்டமான இவ்விரவுவரையில் மனதுக்கெட்டாத அபராதத்தைப்பற்றியும், பீடையைப்பற்றியும் கனவுகண்டேன். ஒருவன் என் காதண்டையில் இருந்துகொண்டு மிருதுவான சிறுகுரலால்வெளியேஉலாவவரும்படிஎன்னைஅழைத்ததாக இருந்தது.- அது உன்குரலென்றே நினைத்தேன்." "ஈவியே! ஏன் தூங்குகிறாய்! இதுதான் மிக இன்பமானகாலம். இப்போது குளுமையும், இரவுதோறும் விழித்து மிக இன்பமாகப்பாடும் புள்ளின் அநங்கதகானங்கள் வழங்கும் இடங்கள்தவிர மற்ற இடங்களில் அமைதியும் இருக்கும்காலம். இப்போதுபூர்ணசந்திரன் தாராநாதனாக ஆண்டு சூரியனை விட இன்பமான மந்தப்பிரபையை வீசி சர்வவஸ்துக்களையும் அலங்கரிக்கின்றான். ஒருவரும் பாராவிட்டால் வியர்த்தமன்றோ! வானம் விண்மீன்களாகிய தன் நேத்திரங்களைத்திறந்து விழித்துக் கொண்டிருக்கிறது. அது சிருஷ்டியின் பிரிய வஸ்துவாகிய உன்னை நோக்கத்தானே? உன் அழகால் வசிகரப்பட்டு உன்னைப்பார்க்கப்பார்க்க எல்லாவஸ்துக்களும் ஆனந்தத்தால் பூரிக்கின்றன. நீஅழைத்தாய் என்று எழுந்து பார்த்தேன்; நீ இல்லை; உன்னைத்தேடிப் போனேன். விலக்கப்பட்ட ஞானவிருக்ஷத்தின்கண் போகும் வழியில்சென்று அவ்விருக்ஷத்தை திடீரென்று கண்டதாக நினைத்தேன். அது அழகுள்ளதாகத் தோன்றிற்று. என்புத்திக்கு, பகலில்தோன்றியதைவிட அழகியதாகப்பட்டது. அதை நான் வியப்புற்று நோக்கிக் கொண்டிருக்கையில் நாம் அடிக்கடி பார்க்கும் தேவதூதர்களைப்போலவே உருவும் சிறகும் அமைந்த ஒருவன் அதை அடுத்து நின்றான். பனிபடிந்த அவன் கூந்தல் அமுதத்தை வடித்தது. அவனும் அம்மரத்தை உற்றுப்பார்த்து வினவினான். "அழகியமரமே! கனியை மிகுதியாகத் தாங்கியிருக்கிறாயே! உன்பாரத்தை நீக்கி உன்னமுதைப் புசிக்க தேவனாவது நரனாவது தயவுசெய்யமாட்டானோ? ஞானம் அவ்வளவு வெறுக்கத்தக்கதோ? அதை உருசியாமல் தடுப்பது பொறாமையோ, வேறென்ன தடையோ! யார்மறித்தாலும், வாய்த்த உன் நலனை இரசிக்காமற் போகமாட்டேன். இல்லாவிட்டால் இங்கே ஏன் நாட்டப்பட்டிருக்கிறாய்?" இப்படியே பேசித் தாமதியாமல், தைரியமாகக் கையைநீட்டி ஒரு பழத்தைப் பிடுங்கித் தின்றான். அவனுடைய தைரியமான சொற்களைக் கேட்கவும், அவைகளுக்குக் காட்டாகத் தொடர்ந்த தைரியமான செய்கையைக் காணவும், திகில்பிடித்து உடல் சீதளமாகி விறைத்தது. அவனோ மிகுகளிப்புற்று மொழிந்தான், "தெய்வீககனியே! சுபாவமாகவே இனிமையாக இருக்கின்றாய்; இவ்விதமாக கட்டளையை மீறி அரிந்துண்ணுவது அதிவிசேஷமான இனிமையைத் தருகிறது. தேவர்களுக்கே உரியவனென்று, இங்கே விலக்கப்பட்டிருக்கிறாயாம்; ஆயினும் மானுடரை தேவர்களாக்கும் சக்தி உனக்குண்டே. அப்படியானால் மனிதர்கள் ஏன்தேவர்களாகக் கூடாது? பிறருக்களிப்பதால் நன்மை விளையுமே! அளிப்பவனுக்கு நஷ்டமின்றி கீர்த்திவிளையுமே! இதோ! பாக்கியவதியே! அழகிய தெய்வீக ஈவியே! நீயும் பகிர்ந்துவாங்கு. நீ இப்போது சுகானுபவத்திலேயே இருந்தாலும், உன்சுகம் இன்னும்

அதிகரிக்கும்; அதற்கு உன்னைவிட அர்கமானவள் இல்லை. இதை உருசித்து இனிமேல் தேவர்களின் மத்தியில் தேவியாக இரு; இப்பூமியிலேயே ஒடுங்கி இராமல் நம்மைப்போல் சிலகாலும் ஆகாயத்தில் எழும்பலாம், சிலகாலம் உன் யோக்கியதைக்குத் தகுந்த தேவலோகத்துக்கும் எழும்பிச்சென்று அங்கே இருக்கும் தேவர்களின் வாழ்க்கையைக்கண்டு அவர்களைப்போலவே வாழலாம்." என்று இப்படிப் பேசிக்கொண்டே நெருங்கிவந்து அவன் பிடுங்கி உருசித்த பழத்தையே என் வாயினிடம் பிடித்தான். இனிமையும் உருசியும் பொருந்திய அதன் வாசனை என் அவாவைத்தூண்ட அதை உருசியாமலிருப்பது அசாத்தியமென்று நினைத்தேன். அதை உருசித்த உடனே அவனுடன் நானும் மேகமண்டலத்துக்குப் பறந்து, அங்கிருந்து கீழே நோக்க இம்மண்டலம் நானாவித அகன்ற காட்சிபொருந்தி ஏராளமாகப் பரந்திருக்கண்டேன். நான் பரந்தெழுந்து இவ்வுன்னத ஸ்தானத்தை யடைந்ததைப்பற்றி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையிலேயேதிடீரென்று மார்க்கதர்சகன் மறைந்துபோய்விட்டான்; நானும் கீழேவிழுந்து தூங்கிவிட்டதாக எண்ணினேன். ஆனால் அந்தோ! நான் விழித்து இவை எல்லாம் கனவுதான் என்றறிய என்னசந்தோஷமாக இருந்தது." ஈவி இவ்விதமாக தான்போக்கிய இரவைவர்ணிக்க ஆதாம் விசனமுற்று பின்வருமாறு மறுமொழி கொடுத்தான்.

"என் உத்தம பிரதிரூபமே! அதிப்பிரியமான என் அத்தாம்சமே! இவ்விரவு நித்திரையில் உன்மனதுக்குண்டான கஷ்டம் என்னையும் சமமாகவே வருத்துகிறது; இவ்விநோதமான கனவு என்மனதுக்கொப்பவில்லை; அது தீமையாலுண்டானதென்று பயப்படுகிறேன். ஆனால் அத்தீமை எவ்விடத்தது? நீ பரிசுத்தமாகப்படைக்கப் பட்டிருக்கிறபடியால் உன்னிடம் தீமை தங்கக்காரணமில்லை. ஆனால் ஆத்மாவில் யூகம் பிரதானமாக இருக்க, அதற்குத் துணையாக அநேக சிறியமனோசக்திகள் இருக்கின்றன. அவைகளுள் யூகத்தை அடுத்தது கற்பனை. பஞ்ச இந்திரியங்கள் காட்டும் எல்லாப் பொருள்களைக் கொண்டும் கற்பனையானது விபாவனைகளையும், மாயா ரூபங்களையும் கற்பிக்க, யூகமானது அவைகளை வெவ்வேறு விதமாகச் சேர்த்தும் பிரித்தும், உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் குறித்து ஞானம் என்றும் அபிப்பிராய மென்றும் அழைப்பவைகளைத் தொடுக்கிறது; பின்பு நித்திராகாலத்தில் தன் தனியறைக்குள் ஒதுங்குகிறது. அக்காலத்தில், கற்பனை அடிக்கடி விழித்திருந்து யூகத்தை பாவிக்கிறது. ஆனால் அது ரூபங்களைத்தப்பாகச் சேர்த்து, ஒழுங்கற்ற விசித்திரமான வேலையைச் செய்வதில், விசேஷமாகக் கனவுகளில் முன்பின் சென்ற வார்த்தைகளையும் கிரியைகளையும் சந்தர்ப்ப மில்லாமல்சேர்க்கிறது. இக்கனவில் நாம் நேற்று சாயுங்காலம் பேசிக்கொண்டிருந்த விஷயங்களின் பாகங்கள் கலந்திருப்பதாகத் தோன்றுகிறது; ஆனால் புதிய விநோதமான விஷயங்களும் சேர்ந்திருக்கின்றன. ஆயினும் நீ விசனப்படாதே. அமரன் நரன் இவர்களுடைய மனதினூடேகெட்ட எண்ணங்கள் செல்லுவதுண்டு. ஆனால் அவைகளை அங்கீகரியாதவரையில் அவைகள் கறையையாவது பழியையாவது பின்விடாமற் போய்விடும். ஆகவே, உறங்கும்போது கண்டகனவிலேயே வெறுத்ததை விழித்திருக்கும்போதுவிரும்பமாட்டாய் என்று நம்பி இருக்கிறேன். அதைரியப்படாதே; வழக்கமாக அழகிய அருணோதயத்தை விடச் சிறப்புற்றுச் சந்தோஷமாயும், சமாதானமாயும் உள்ள உன்முகச்சாயையிலிருந்துவிசனப்படலத்தையகற்று. உனக்காகவே, இரவிலிருந்துவிலக்கப்பட்டுசோலைகளிலும், ஊற்றுக்களிலும், அதிசிரேஷ்டமான வாசனை வெளியிட்டலரியிருக்கும் புஷ்பங்களின் மத்தியிலும், புதிய வேலைகளைத் தொடருவோம் எழு."

ஆதாம் (Adam) இவ்வாறு தன்மனையாட்டியைத் தேற்ற அவளும் தேறினாள். ஆயினும் அவள் கூச்சலின்றி இருகண்களினின்றும் கண்ணீர்ச் சொட்டு ஒன்று துளிக்க அத்துளிகளைத் தன் கூந்தலாற்றுடைத்தான். மறுபடியும் இருநேத்திரங்களிலும் கண்ணீர் ததும்ப அது அப்படிகக்கலுங் கல்களிலிருந்து கீழேவிழுமுன்னம் ஆதாம் (Adam) அப்பிந்துக்கள் இதமான பச்சாத்தாபத்தையும், என்னதோஷம் நேரிட்டிருக்குமோ வென்று பயப்படும் பக்தியையும் விளக்கும் நற்குறிகளென்றறிந்து அவைகளை முத்தியிட்டறிந்தான்.

(இன்னும் வரும்.)

டி. சுந்தரராவ், பி. ஏ.



## உபாத்தியாயர்பக்கம்.

### பள்ளிக்கூட ஒழுக்கமும் நன்னெறிப் பயிற்சியும்.

### III. நன்னெறிப்போதனைக்குத் துணைவழிகள்.

#### பாலியசுபாவம்.

...ந்நூன்முகமாய் முதல் அத்தியாயத்திலேபள்ளிக் ...டவொழுக்கம் இன்னதென்றும் இவ்வொழுக்கங் ... மாணாக்கர்களிடத்திலே படியவைக்கவேண்டிய ...ான்முறைமை யென்னவென்றும் எடுத்தோதி, ...ண்டாம் அத்தியாயத்தாலே நாம் கருதுகின்ற நல் ...ாழுக்கங்க ளென்னவென்று யோசிக்கப்புகுந்து, முதன்மையான ஒழுக்கங்களையும் பிறகு நற் ...க்கக்கொத்தினையும் தொடுத்து, அவ்வொழுக்கங்க ...த் தனித்தனியே யோசிக்கும்போது அவைகளை ...ிறுத்தும் வழிவகைகளையு மெடுத்தோதினோம்.

...னி, இவ்வத்தியாயத்திலே நன்னெறிப்போதனை ...க்கெல்லாம் பொதுவான சில துணைவழிகளைச் ...ல்லக்கருதுகின்றோம். ஆசான் பாலியசுபாவத் ...க்கருதி அதனியற்கையையும், அதனைப் பக்குவப் ...த்தும்வகையையும் நன்றாக அறிந்தாலன்றி நற்ப ...ங்களை அப்பாலியர்களிடத்திலே பொருந்தும்ப ... செய்யமுடியாது. குலாலன்மகன் தண்டசக்கரத் ...ியற்கையை யறிந்திருப்பதோடுகூட, மண்ணினி ...கையையும் அறிந்திருக்கவேண்டும்! அதுபோல ஆசான்மார்களும் பாலியசுபாவத்தை நன்றாக ...ந்திருக்கவேண்டும்.

...ருவித்வான் மற்றொரு வித்வானைநோக்கி, "பாலி ...ாவம் என்ன?" என்றுகேட்க, அவர், "ஐயா! ...க்குத் தெரியாது. சிசுக்களைவளர்க்கும் செவிலி ...யாவது, தந்தையையாவது, பாலசிட்சைசெய்யும் ...த்தியாயரையாவது கேளுங்கள்," என்றாராம். ... எவ்வளவு உண்மை! ஒன்றையறியவேண்டும் ...ற அவாவும், முயற்சியும், அம்முயற்சிக்கேற்ப கா ...மமைந்தாற்றானே எதையுமறியலாம். செவிலி ... தக்தையும், உபாத்தியாயருந்தான் இவ்விஷயத் ... முயற்சிசெய்யாமலேனும் செய்கின்றனர். இவர் ...க்குத்தான் காலமுமேற்படுகின்றது.

"கிச்சிக்கிச்சடா கீரைத்தண்டடா
நட்டுவைச்சேனடா பட்டுப்போச்சடா."

என்று சொல்லிக்கொண்டு சிறுவாலிபர்கள் மண்ணிலே விளையாடும்போது, அதை நாம் என்றாகிலும் கவனித்தோமோ! "இதென்னடா பிதற்றல், மேலெல்லாம் மண்ணைவாரிப்பூசிக்கொண்டு" என்றுநினைத்து அப்பாலலீலைகளை யலட்சியம்செய்து, வாலிபர்களை யடிக்குகின்றோமேயொழிய, "இதிலேயும் ஏதோகாரியமிருக்கின்றது: சிறுதுரும்பும் பல்லுக்குத்தவுதவும்" என்ற எண்ணத்தோடு பாலியர்கள் விளையாடும்போது அருகேநின்று பேரவாவோடு கவனித்தோமா? ஆங்கிலேயவித்வானாகிய 'சல்லி' (Sully) என்பவர் மேற்சொன்னபடியே வருந்துகின்றார். இவர் "பாலியசுபாவம்" என்று ஒரு பெரும் புத்தகமெழுதியிருக்கின்றார்

இங்கு நாம் பாலியசுபாவத்தின் சில முக்கியமான மாறுபாடுகளை நோக்குவோம். பல வேறுபட்ட பாலலீலைகளும், சிறுபிள்ளைகளின் மனச்சூடிகையும், பாவனாசக்தியும், பலவிதமான இயற்கையுணர்ச்சிகளும் நாம் கவனிக்கத்தக்கன. எத்தனைக்கெத்தனை இவைகளை நாம் கவனித்துச் சிலவற்றை விருத்தி பண்ணி, சிலவற்றை ரூபமாற்றி, சிலவற்றை அடியோடு வேர்களைந்து போக்கிவருகின்றோமோ அத்தனைக்கத்தனை நாம் நமது கடமையைச் சரிவரநடத்திவருகின்றோமாவோம்.

சிறுபிள்ளைகளிடத்திலே அநேக சுபாவவுணர்ச்சிகளிருக்கின்றன. பாவனாசக்தி, நூதனப்பொருளைக் கண்டறியவேண்டுமென்ற பேரவா, மாற்றானைப் போல் ஜயமடையவேண்டுமென்ற கருத்து, அநுதாபம், ஒரு பொருளின் பயனை யோர்ந்தகாலத்து விடா முயற்சி, ஒருபொருளின் அமைப்பழகைக்கண்டு ஆனந்தமடைதல், தமது வல்லமையை யுணர்ந்தகாலத்து முகமலர்தல், பயம், கோபம், முதலான அநேகவுணர்ச்சிகள் பாலியர்களிடத்திலேயுமுளதாகும். வகுப்பிலே பாடம்படித்து, பாடங்கேட்டு, பாடம்சொல்லிவருகின்ற மாணாக்கர்கள் கற்களல்லவே! இவர்களுக்கும் இவ்வுணர்ச்சிகளிருக்கின்றனவே! எப்போது உணர்ச்சிகளேற்பட்டனவோ, அப்போதே யிவ்வுணர்ச்சிகள் சித்தத்தை மாறுபடுத்தி ஒரு தொழிலை ஒருமாதிரியாய்ச் செய்யும்படி நியமித்து விடுகின்றனவல்லவோ? ஆதலாற்றான் உபாத்திமார்கள் மேற்சொன்ன பாலசுபாவத்தை நன்றாகவறிந்து அதற்கேற்ப நடக்கவேண்டு மென்றேற்படுகின்றது.

(1) விளையாட்டுகள்.

சிறு மாணாக்கர்கள் விளையாட்டுப் பிரியர்களென்பதைப்பற்றி நாட்டுப்பழக்கமுள்ள உபாத்தியாயர்களும்

குநான் அதிகம் எடுத்துரைக்கவேண்டுவதில்லை. ஒடிப்பிடித்தல், நொண்டியடித்தல் கட்டுக்கண்ணுமூச்சி, நாலுமூலைத்தாச்சி, பிள்ளையார்பந்து, பேய்ப்பந்து, யானைமேற்பந்து, பள்ளியடித்தல், பலீன்சடார், கிட்டுப்புள், பாண்டி, நிலாப்பூச்சி நிழற்பூச்சி, கோளியடித்தல், குதிரையேற்றம், பச்சைக்குதிரை, வெண்ணைத்தாழி,—முதலான விளையாட்டுகளையுங் கண்டறிந்திருப்பீர்களே ! பார்க்காமலிருக்கும் பட்சத்தில் நாட்டுப்புறங்களுக்குப்போய் உடனே கவனியுங்கள். இதனைக்கவனிப்பது மிகவும் அதியாவசியகமானது !

மேலேசொன்ன விளையாட்டெல்லாம் ஒழுங்காக இன்னின்ன மாதிரியாக நடத்தப்பட வேண்டும் என்று நிபந்தனைகள் வரையப்பட்டுள்ளன. எப்படியென்றால் 'பலீன்சடார்' * விளையாட்டில், ஐந்தாறு பேருக்குக் குறையாமல் விளையாடவேண்டும். சிறிது விஸ்தீரணமுள்ள ஒரு சக்கரக்கோட்டை ஆற்றுமணலிலே வளைக்கப்படும். அதனுள்ளேயே எல்லாருஞ் சுற்றிவரவேண்டும். சக்கரக்கோட்டைக்கு வெளியே போனவன், "அகப்பட்டான்." சடார் அடிப்பவன், மற்றவர்களால் கட்டுண்டாகாமல் அவர்களைத் தொட்டுவிடவேண்டும். தொட்டு விடுமளவும் மூச்சுவிடாமல் இவ்விளையாட்டிற் கேற்பட்ட பாடல்களைச் சொல்லிக்கொண்டே சாரிதிரிந்து வரவேண்டும். பாடல்கள் பின்வருமாறு :—

1. "பலீன்சடார் அடிக்கவே
காலுங்கையுமுறியவே
உங்கப்பனுக்குமாயிக்கும்
ஒருபணம்தெண்டம்.
தெண்டம், தெண்டம் .."

2. "அஸ்ஸா உஸ்ஸா
அம்பலம்தம்பலம்
பாக்குப்பதின்கலம்
பன்னிரண்டுகோபுரம்
செட்டிசெவாலிங்கம்
செவாலிங்கம், செவாலிங்கம்..."

3. "குடுகுடுசெல்லாய் குப்பைச்சல்லாய்
வேலிமுறிச்சால் விச்சல்லாய்.
விச்சல்லாய்..."

4. "பட்டாபட்டாமாணிக்கம்
படியிலேபட்டாமாணிக்கம்
நெற்றியிலேகுண்டுபொஞ்சு
நேர்ந்துகெட்டாமாணிக்கம்.
மாணிக்கம், மாணிக்கம்..."

5. "வேப்பம்பட்டை வேலம்பட்டை
வேர்த்திருக்கும் சாராயம்
காத்திருந்துபூசைசெய்யும்
காவேரிபண்டாரம் பண்டாரம்.
பண்டாரம்..."

6. "ஈக்கந்தட்டை கம்பந்தட்டை
இந்திரபாண சோலித்தட்டை
பணத்துக்கு பத்துத்தட்டை
வீட்டைவளைச்சுக்கிட்டு
மோட்டைக்குறுக்கிக்கிட்டு.
குறுக்கிக்கிட்டு.."

7. "குடுகுடுநாதாகுளஞ்சிநாதா
கொட்டையில்லாப்பழம் என்னபழம்?
வாழைப்பழம்!—தோலைக்கடி
கத்தரிக்காய் காம்பைக்கடி.
காம்பைக்கடி..."

8. "குடுகுடாநக்கல்கும்பாநக்கல்
தீர்கடதோகடவைதாநக்கல்
சுக்குச்சுண்ணும்புக்கல்சோதிக்கல்.
சோதிக்கல்..."

9. "ஆனையானை யறுபதானை
வாலறுத்துக் கூறுபோட்டு
மன்னவனைச் சாத்திவைத்து
மாரைப்பிளந்துவிட்டு
மாறுகால்மாறுகை,
மாறுகால்மாறுகை..."

10. "யானைமேலேறுவேன்
வீரமணிகட்டுவேன்
மீசையையுடைப்பேன்
நெருங்காதேடாநெருங்காதே,
நெருங்காதே.."

இன்னும் கணக்கிறந்தன பாடல்கள்! தோற்றவனை நோக்கிப்பரிகாசம் செய்யும் பாடல்கள் சில :—

11. "ஆட்டாட்டான்தூசு
செம்பறியாட்டான்தூசு
பச்சைப்பாலைக்குடித்துவிட்டுப்
பறையனோடேபோனவனே,
ஆட்டான்தூசு —"

12 "தோற்றுங்குளிதோலைப்பிடுங்கி
அம்பட்டன்வீட்டுக்குத்
தம்பட்டம்கொட்டி
ஆடுமாடுசெத்துக்கிடக்கிறது
இழுக்கவாடா"

---

இன்னும் 'கிட்டுப்புள்' அடிக்குங்காலத்தில் கவுண்டு தூக்குபவன்,

13. "கவுண்டிகவுண்டிகபாலகவுண்டி
காதுகுத்திமூக்குத்தீஇ
காதுகுத்திமூக்குத்தீஇ —"

என்று மூச்சுவிடாமல் ஓடிவருவதும் இவைகளெல்லாம் பாலலீலைக்குட்படும். இவைகளெல்லாம் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குகின்றனவென்றுரைத்தோம். ஒரு நிபந்தனைகளுக்குமுட்படாது பலவிளையாட்டுக்களுள்ளன. தெருத்திண்ணையிலிருந்து திடீரென்று கீழேவிழுதலும், வீதிமண்ணிலே புரண்டெழுதலும், தேன்குடித்த நரியைப்போல் ஓடுதலும், பல்லைக்கடித்தலும், அருகேநின்றவொருபையனைப் பளீரென்று கன்னத்திலேயறைதலும், அரணம்வோடுதலும், திடீரென்று ஆகாயத்திலே கிளம்பிக்குதித்தலும் ஆகிய இவைகளெல்லாம் பாலலீலைகளே !

**உடற்கூற்றின் சம்பந்தமான சுறுசுறுப்பு.**

பாலியர்கள் இவ்விதமாய்த் துறுதுறுத்து அலைபவர்களென்று முதல்முதல் ஐரோப்பியவித்வானாகிய (Froebel) பிரோபெல் என்பவர் கண்டறிந்து, அதற்கேற்ப நடந்துவந்தார். இவ்வாறு இவர்கள் துறுதுறுத்து அலைவதற்குக் காரணமென்ன ? அவர்களின் உடற்கூற்றிலே சம்பந்தமான ஒரு வகைச் சுறுசுறுப்பு. இளங்கன்றுகளும், ஆட்டுக்குட்டிகளும், காலவேளையில் குதித்துக்குதித்து ஓடுகின்றனவல்லவா ? சரீரத்திலே ஜனித்துப் பெருகுகின்ற ஒரு சுறுசுறுப்பை இவ்வாறு அவைகள் வெளியிடுகின்றன. சிறுபிள்ளைகளும் இப்படியே! தசைநார்க்கட்டின் வலிமையினாலும், சரீரத்திமிர் அதிகரித்தலினாலும், இப்பாலலீலைகளுண்டாகின்றன. மேலும் சில மாணாக்கர்கள் மிகுந்த சுறுசுறுப்புள்ள சுபாவமுள்ளவர்களாக விருக்கின்றார்கள். இவர்கள் விளையாடுவதில் மிகுந்த பேராவாக்கொண்டவர்களாக விருக்கிறார்கள். இத்தன்மையான சுறுசுறுப்புள்ள மாணாக்கனை வெகுநாழி கட்டிப்போட்டு வைத்திருந்தால் பிறகு அதிகமாக விளையாடக் குதித்தோடுவான். தேகசவுக்கியமும் மற்றொருகாரணமாகும். தேக அசௌக்கியமுள்ளவர்கள் அதிகமாக விளையாடார்கள்.

**வகுப்பிலே இச்சுறுசுறுப்பின் தோற்றங்கள்.**

இவ்விதமான உடற்கூற்றின் *சுறுசுறுப்பை நாம் சரிவரப்பயன்படுத்தாவிட்டால், மாணாக்கர்கள் வகுப்பிலே துறுதுறுத்தலைவார்கள் * விஷமஞ்செய்வார்கள். ஓர் அடங்காத்தன்மையும், கவனமின்மையும், சத்தமும், ஒழுங்கின்மையும் உண்டாகும். மேலும் ஆசான் போதகம் சரிவரநடந்தேறாது.

ஆதலால் இவ்வுடற்கூற்றின் சுறுசுறுப்பை ஆசான் எவ்வாறு பயன்படுத்துவது ?

**ஆசான் அடக்கியாளவேண்டும்.**

மாணாக்கர்கள் இச்சுறுசுறுப்பைத் தாம் உக்கியாளும்படி ஆசான் கற்பிக்கவேண்டும். எங்ஙனமெனில் அதனை நசிக்கும்படிச் செய்தல்ல ! அச்சுறுசுறுப்பைப் படிப்பு விஷயத்திலே செலுத்துகையாலே ஆசான் கிரமப்படுத்தி வரவேண்டும். மனோகரமான பாடங்களையும் போதனைகளுடனே சிருட்டித்து அவர்களுடையமனதைக்கவர்ந்து, விஷமசுபாவத்தைப் புத்தகங்களிலுள்ள படங்களை நோக்குவதனாலடக்கி சிறு வழிப்படும்படி செய்துவரல்வேண்டும். மேலும் ஒறுமாணாக்கர்களுடைய அவயவங்களுக்குச் சிறிது மாறுபாட்டையும், வேலையையும், நியமிக்கும்படி அடிக்கடி வகுப்பிலே இடமாறுபாடுகளை யுண்டாக்கி, கைகால்களுக்குச் சுறுசுறுப்புண்டாக்கும்படி அடிக்கடி எழவும், உட்காரவுஞ் செய்து, அவர்கள் சரம்பின் வழியே ஓயாமல் ஓடிக்கொண்டேயிருக்கிற திமிருக்கு ஒருவழிச்செலவைச் சிருட்டித்து ஆசான் மாணாக்கர்களை யடக்கியாளவேண்டும்.

T. R.

* Though this is undoubtedly a little digression, I purposely introduce here a description of this boyish play—'Baleen-Chadar'- partly because I am myself a lover of this play; partly because, there is some virtue of goodness in every thing trifling even, and I wish to exhort my friends to carefully note these boyish plays and see if they are worth their observation.

## காலஞ்சென்ற பி. ஆர். இராஜம் ஐயர்.

மா-ா-ா-ஸ்ரீ, பி. ஆர். இராஜம் ஐயர் அவர்கள் நாளது௴ 13௳ காலமே 7-மணிக்கு மைலாப்பூரில் அவர் குடியிருந்த வீட்டில் காலஞ்சென்றதைக் குறிப்பிட மிக விசனிக்கிறோம். இவர் சிலநாட்களாக தேக அசௌக்கியமாயிருந்து வியாதிமுற்றிக் கொஞ்சக்காலம் பிழைக்கரிய ஸ்திதியிலிருந்து பிறகு இறந்தாரென்று தெரியவருகிறது. இவர் அறிவைப் பிரவச் செய்யும் காரியத்தில் அதிகசிரத்தை கொண்டவராய் **விவேகசிந்தாமணி**க்கு வெகுகாலம் அரிய விஷயங்கள் பல எழுதிவந்தார். இவர் விவேகசிந்தாமணிக்கு எழுதிய விஷயங்களில் விசேஷமாகக் கவனிக்கத்தக்கவை **கமலாம்பாள் சரித்திரமும்**, சீதை யென்னும் தலைப்பெயரிட்டு எழுதிய விஷயமுமேயாம். இவர் எழுதிய கமலாம்பாள்சரித்திரத்தைப் படித்த எல்லாரும் இவரால் தமிழ்ப்பாஷை மிகச்சிறப்புறுமென்று நம்பியிருந்தார்கள். இரண்டு மூன்று வருஷங்களுக்குமுன் இவருக்கு வேதாந்தத்தில் சிரத்தையதிகரிக்க, வேதாந்த ஆசையே பெருகிப் பைத்தியம் போல் முற்றிவர, மற்ற விஷயங்களில் கருத்தைச் செலுத்த மனமற்றவரானார். இவர் வாலிபவயசுடையவராயிருந்தும் மிகவிஸ்தாரமாகப் படித்துள்ளவர். சுற்றிப் புஸ்தகங்களும், தொந்திரவின்றிப் படிக்க ஒரு தனியறையுமிருந்தால் தனக்கு வேறு ஒன்றும் வேண்டியதில்லை யென்று இவர் அடிக்கடி சொல்லக்கேட்டிருக்கிறோம். எப்போதுமியற்கையாயுள்ள இப்படிப்பாசை இவருக்கு வேதாந்தத்தில் புத்திசெல்லவே தத்துவசாஸ்திர சம்பந்தமான புஸ்தகங்களை முற்றும் கற்றுத் தேறவேண்டுமென்னும் நோக்கத்தினால் அபரிமிதமாக அதிகரித்தது. தத்துவ சாஸ்திரத்தைப்பற்றிச் சொல்லும் புஸ்தகங்கள் எவ்வளவு பெரிதாகவிருந்தாலும் எவ்வளவுவிரிவாகவிருந்தாலும் இளைப்புச் சலிப்பின்றி பசி பட்டினியென்றும் பாராமல் அவற்றைப்படித்து அதன் சாராம்சங்களைக் குறிப்பிட்டுக்கொள்வதில் இராப்பகலாய் உழைத்துவந்ததை நாம் அநேகந்தடவை நேரில்கண்டு வியப்புற்றதுண்டு. கமலாம்பாள் சரித்திரம் எழுதி முடிந்தது முதற்கொண்டு சிறுபிள்ளைகளுமறியும்படியாக வேதாந்தசாரத்தைக்கற்பிக்கும் சிறு பத்திரிகையொன்று இங்கிலீஷில் போடவேண்டுமென்கிற ஆசை இவருக்கு அதிகமாக இருந்துவந்தது. ஆரியபாலபோதினி யென்னும் பத்திரிகை மூலமாகத் தன் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளக்கருதியும் அது சரிப்படாமற்போகவே தனியாக ஒரு பத்திரிகை யேற்படுத்தி நடத்தவேண்டுமென்னும் ஆசை மிக அதிகரித்தது. அவ்விதப் பத்திரிகை யொன்று நூதனமாய் ஸ்தாபிக்கவேண்டியதைப்பற்றி மிகவற்புறுத்திப்பேசி அதில் பிரவேசிக்கும்படி நம்மைப்பலமுறை தூண்டியதுண்டு. ஆனால் நம்முடைய ஜனசிரேஷ்டர்கள் சுபாவத்தை உள்ளபடி அனுபவத்திலறிந்த நமக்கு ஏற்கனவே நம் தலைமேற் பாரமாகநின்ற ஒருபத்திரிகையோடு மற்றொரு பத்திரிகையும் ஏற்படுத்தி நடத்துவது சாத்தியமாகத்தோற்றாமையால் அதற்கு உடன்படுவது கூடாமையாகவிருந்தது. பிறகு பட்டணத்தில் வேதாந்தம்கேட்கப் போனஇடத்தில் இவரைப்போல் மனோபீஷ்டமுள்ள வேறொருவர் சிநேகம் தற்செயலாகச்சித்திக்க, அதி மூலமாகவும் ஸ்வாமிவிவேகாநந்தர்முயற்சி அமெரிக்காவில் சித்திபெற்றுவிர்த்தியடைந்து வருவதாகவந்த சமாசாரங்களால் ஜனங்களுக்குள் உண்டான மனவெழுச்சிகாரணமாகவும், ஸ்வாமிகளுடைய அனுக்கிரகம்பெற்று அவர் தம்மாலே நாமகரணம் செய்யப்பெற்ற 'பிரபுத்தபாரதா' என்னும் பத்திரிகையைத்துவக்கினார்கள். ஸ்வாமிவிவேகாநந்தர் பேருக்குள்ளமகிமையாலும் தெய்வகிருபையாலும் இப்பத்திரிகை யாவரும் எதிர்பார்த்திராதபடி மிக விசேஷமாகப்பரவிப் பிரபலித்து வந்தது. இப்பத்திரிகையைச் சரிவர நடத்தும் பொருட்டு காலஞ்சென்ற இராஜமையர் தம் இதரவேலைகளையெல்லாம் விட்டொழித்து இதே வேலையாகவிருந்துவந்தார். இத்துடன் வேதாப்பியாசம் செய்வதிலும் விசேஷமாய்க் காலங் கழித்துவந்தார். இங்கிலீஷிலும் தமிழிலும் விசேஷ விஸ்தாரமாகப்படித்திருந்ததோடு வாசிப்போர்க்கினிமையா யிருக்கும்படி எழுதும் சக்தியும் இவரிடத்தில் விசேஷமாயிருந்தது இவ்வளவு சக்திவாய்ந்தவர் அற்பாயிஸிற் காலஞ்சென்றது எல்லாரும் மிகவிசனிக்கத் தக்கதே. இவர்மரணத்தால் இவர் குடும்பத்தாருக்குப் பெருநஷ்டம் நேர்ந்ததன்றி இத்தேசத்துக்குமே ஒரு நஷ்டம் நேர்ந்துளது. எல்லார் துக்கத்திலும் இவருடைய இளமனைவியின் துக்கமும் இவரைப் பெற்றோர்களின் துக்கமும் பொறுக்க அரிதாம். இச்சகிக்கரியதுன்பத்தைச் சகித்துத் தாங்கக் கடவுள் அவர்களுக்கு வேண்டிய மனோதிடனை யளித்தருள்வாரென்று பிரார்த்திக்கின்றோம்.



## ஸ்பெய்னுக்கும் அமெரிக்காவுக்கும் யுத்தம்.

ஐரோப்பாவிலுள்ள 'ஸ்பெய்ன்' தேசத்துக்கும் அமெரிக்காவிலுள்ள 'யூனைடெட்ஸ்டேட்ஸ்' என்னும் ஐக்கிய மாகாணத்தாருக்கும் யுத்தமுண்டாய் நடந்து வருகிறது. இந்தயுத்தத்திற்குக் காரணமாயிருப்பது மேலிந்திய தீவுகளிலொன்றாகிய 'கியூபா' என்பது. இத்தீவு ஸ்பெய்ன் தேசத்தார் ஆதீனத்தில் இருந்து வந்தது. ஸ்பெய்ன் அரசாங்கத்தார் இத்தீவில் ஆதீனம் செலுத்திவந்தாலும் குடிகளை யடக்கி யாண்டு அமைதி பரவ நடத்திவர முடியாமல், கலகங்களும் குழப்பங்களும் உண்டாகப்பார்த்து வந்தார்கள். சமீபத்திலுள்ள யூனைடெட்ஸ்டேட்ஸின் கவர்ன்மெண்டார், இத்தீவில் கலகமும் குழப்பமும் அதிகரித்து வரக்கண்டு, அங்கேயுள்ள அமெரிக்கப்பிரஜைகளைக் காப்பாற்றும் பொருட்டு, 'மெயின்' என்னும் கப்பலொன்றை '**கியூபா**'வின் தலைநகராகிய '**ஹாவனா**' நகரின் துறைமுகத்தில் தங்கியிருக்க அனுப்பினார்கள். கலகக்காரர்கள் யாரோ அக்கப்பலை நாசம் செய்து அதிலுள்ள கப்பற் சேவகர்கள் மாலுமிகளெல்லாம் இறந்துபோகும்படி செய்துவிட்டார்கள். இதன்மேல் யூனைடெட்ஸ்டேட்ஸ் ப்ரெஸிடெண்டு ஸ்பெய்ன் தேசத்து கவர்ன்மெண்டுக்குச்சமாசாரமனுப்பி, 'கியூபா' உங்கள் ஆதீனத்திலிருந்தும் எங்கள் கப்பலுக்கு அங்கே வீணைச்சேதம் நேர்ந்தபடியால், உங்களால் அடக்கியாளமுடியாத அத்தீவை விட்டு நீங்கள் விலகிப் போவது நியாயம் என்றும், அப்படி நீங்கள் விலகிப் போகாவிட்டால் யுத்தமுகத்தில் உங்களைத் தோற்கடித்து அத்தீவைவிட்டுப் போகும்படி செய்வோமென்றும் கடிதம் அனுப்பினார்கள். அதன்மேல் இருதேசத்தாருக்கும் யுத்தமுண்டாய்க் கப்பல்கள் மூலமாய் சமுத்திரத்தில் சண்டைகள் நடந்து வருகின்றன. ஸ்பெய்ன்தேசத்தரசன் மைனராதலால் அவருடைய தாயாகிய அரசி 'ரிஜண்டாக' விருந்து அரசுசெலுத்திவருகிறார். 'யூனைடெட்ஸ்டேட்ஸ்' குடியரசுநாடு. அதாவது அத்தேசத்து இராஜாங்க காரியங்கள் குடிகளாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. ஜனங்களெல்லாரும் சேர்ந்து தங்களுக்குப் பிரதிநிதிகளாகப் பலரைத்தெரிந்தெடுத்து நியமிக்கிறார்கள். இவர்கள் சபைக்கு ஜனப்பிரதிநிதிகள் சபையென்று பேர். இச்சபையின் படமொன்று இச்சஞ்சிகையின் முகப்பில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவர்களன்றி 'ஸெனேட்சபை' யென்று ஒரு சிறிய சபை யிருக்கிறது. 4-வருஷங்களுக்கு ஒருதரம் ஜனங்கள் கூடி ஒருவரை ப்ரெஸிடெண்டு ஸ்தானத்துத் தெரிந்தெடுத்து நியமிப்பார்கள். இவர்தான் அங்கே ராஜாஸ்தானத்திலிருப்பவர். இப்பொழுது ப்ரெஸிடெண்டாயிருப்பவரின் பேர் '**மாக்கின்லே.**' ஜனப்பிரதிநிதிசபை ஸெனேட்சபை இந்த இரண்டும் சேர்ந்ததற்கு காங்ரெஸ் என்றுபேர். இவர்கள் அனுமதியின்றி ப்ரெஸிடெண்டு எந்த முக்கிய காரியமும் செய்யக்கூடாது. இப்பொழுது நடக்கும் சண்டை இவர்கள் அனுமதி கொடுத்தபிறகே உண்டாயிற்று. இந்த யுத்தம் எப்படி முடியுமோ தெரியவில்லை. மே௴ 1௳ 'மானிலா'வுக்கு எதிரில் நடந்த கப்பல் யுத்தத்தில் ஸ்பெய்ன் தேசத்துக் கப்பற் படையொன்று முறியடிக்கப்பட்டுப் போனதாக சமாசாரம். ஆனால் யுத்தமுடிவு இன்னும் வரவில்லை.

## மிஸ்டர் கிளாட்ஸ்தன் மரணம்.

அநேக வருஷகாலங்கள் ஆங்கிலேய நாட்டுக்கு முதல் மந்திரியாக விருந்து உலகப்பிரசித்தியாய் மகா கீர்த்திபெற்று விளங்கிய மிஸ்டர் கிளாட்ஸ்தன் ஒரு மாசகாலம் தேக அசௌக்கியமாயிருந்து சென்ற 19௳ விடியற்காலம் 5 மணிக்குக் காலஞ்சென்றார். அவர் இறந்ததைப்பற்றி உலகெங்கும் வருத்தப்பட்டு துக்கம் காத்துவருகிறார்கள். அவருடைய பிரேதம் இராஜாங்க கோலத்தோடு நாளது௴ 28௳ 'வெஸ்மின்ஸ்டர் அப்பே' யென்னும் கிறிஸ்துகோவில் பிரகாரத்தில் அடக்கம் செய்யப்படும். அவருடைய குணவிசேஷங்களையும், ஜீவிய சரித்திரத்தையும்பற்றிச் சொல்லவேண்டுமானால் ஒரு புஸ்தகம் எழுதவேண்டும். அவர் இறந்தபொழுது அவருக்கு வயது சரியாக 87-வருஷம் 4௴ 20 நாள். அவர் சென்ற 4-வருஷங்களாக உலக வியாபாரங்களையெல்லாம் ஒழித்துவிட்டு அந்திகாலத்தை அவர் குடும்பத்தில் அதிசாந்தமாக் கழித்துவந்தார்.

# சிறுவர்க்கான பக்கம்.

[ விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது. ]

## மயிலும் பறவைமீனும்.

மயிலானது ஒருநாள் தன் எஜமானியான ஸரஸ்வதியினிடத்திற்சென்று, "தாயே! என்னோடொத்த குயிலானது மனோகரமான குரலால் கேட்டவர்கள் மனதைக் கவரும்படி உன்னால் சிருஷ்டிக்கப்பட்டிருக்க, உன்கிருபைக்குப் பாத்திரமாகிய நான் வாயைத்திறந்தமாத்திரத்திலேயே கர்ணகடூரமான என்குரலைக் கேட்டு எல்லோரும் வெறுக்கும்படியாக என்னைப்படைத்தகாரணம் யாதென்று தெரிவிப்பாய்" என்று முறையிட்டுக்கொண்டது.

அதைக்கேட்ட சரஸ்வதி தன்பிரியமான வாகனத்தின் மனவருத்தத்தை நீக்கக்கருதி "குயிலின் குரல் மதுரமானதாயிருந்தால், உனக்கு அதைவிடவிசேஷ அழகும் காம்பீரியமுமுள்ள தேகமில்லையா?" என்று அன்புடன் சொன்னாள்.

மயில், "அம்மணீ! நிஷ்பிரயோசனமாய் இதரர்களுக்கு சுகஹேதுவில்லாத என் அழகினாலென்ன பயன்? குயில் என்னைக்காட்டிலும் எவ்வளவுமடங்கு தனது தீங்குரலினால் சோபிக்கின்றது." என்று பிரலாபித்தது.

அப்போது சரஸ்வதி, "ஒவ்வொரு செந்துவுக்கும் ரூபகுணங்கள் தெய்வத்தினால் நியமிக்கப்பட்டிருக்கின்றன. மயிலுக்கு அழகும், கழுகுக்குப்பலமும், தைரியமும், குயிலுக்குத்தீங்குரலும், கிளிக்குப்பேசுந்திறமையும், புறாவுக்குக் குற்றமற்ற சுபாவமும், ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உன்னைத்தவிரமற்றப்பட்சிகள் தம்தம் குணங்களைப்பற்றி வருத்தப்படாமலிருக்க நீ மாத்திரம் வருத்தப்படக் காரணமில்லையே! அவைகளைப்போல நீயுந் திருப்தியுற்றிராவிடில் உன்மனதைப் புண்ணாக்கிக் கொள்வதைத்தவிர வேறுபயனில்லை." என்று சொல்லியனுப்பினாள். வெட்கத்தினாற்றலைகுனிந்து நடனஞ்செய்துகொண்டு வெளியே சென்ற மயில் ஓராற்றங்கரையையடைந்தது. அங்கே உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்த ஒரு மீனைச் சந்தித்தது. அம்மீன் பறக்குந்திறமையுடையது. 'பறக்குந்திறமையுடைய மீன்,' என்றமாத்திரத்தில் பொய்யென்று நினையாதீர்கள். சமுத்திரத்திலே இதனையும் விட அதிசயமான விநோதங்கள் உள்ளன. இப்பறவைமீன் சிறகோடு கூடியதாய் பத்துப்பன்னிரண்டு அங்குல நீளமுள்ளதாயிருக்கும். மற்றமீன்கள் ஜலத்திலேயேயிருந்து நீந்தி உணவைத்தேடி சுவாசம் விட்டு ஜலத்திலேயே மாண்டுவிடுகின்றன. இப்பறவைமீன் ஜலமட்டத்திற்குமேலே கிளம்பி தனது சிறகுகளில் நீர் சைப்பு நீங்கிவிடுமளவும் சிறிது தூரம் பறந்துசென்று மறுபடியும் ஜலத்திலே மூழ்கும். ஜலத்திலேமூழ்கியும் சூரியவெளிச்சத்தில் நீர்மட்டத்திற்கு மேலே பறந்து சென்றும் இவ்வாறு ஓரிடத்திலேயும் ஊன்றியிராமல் அங்கேயு மிங்கேயுமாக மாறாடிக்கொண்டேயிருக்கும்; ஏனெனில் இப்பறவைமீனிற்கு சமுத்திரத்திலேயும் பகையுண்டு! ஆகாயத்திலேயும் பகையுண்டு! சமுத்திரத்திலே கடற்பன்றி எப்போது தண்ணீரிலிறங்குமென்று காத்துக்கொண்டேயிருக்கும்! ஆகாயத்திலே கின்னரப்புள் எப்போது வெளியேபறக்க ஆரம்பிக்குமென்று வட்டமிட்டுக் கொண்டேயிருக்கும்.

"உன்னிலைமையைக்கொண்டு திருப்தியடைந்திரு" என்று சொல்லி யனுப்பப்பட்ட மயிலானது இப்பறவை மீனைக்கண்டு, "ஏ! நீர்வாழுஞ் செந்துவே! நீயேன் உன்வீட்டைவிட்டு ஊரில்லா ஊரிலே புகுந்து தவிக்கின்றாய்?" என்றது. இதைக்கேட்ட பறவைமீன், "மிகுந்த வனப்புள்ள பறவையே! நான் சொல்லுவதைக்கேளாய்!—எனக்கு முற்காலத்திலே சிறகுகள் கிடையா. ஜலவாசியாக இருக்கும்போது கடற்பன்றிகள் என்னை ஓயாமற் பின்றொடர்ந்து துரத்திக்கொண்டேவந்து என்னுடைய பலத்தையெல்லாங் குறையச்செய்து என்னையும் விழுங்கிவிட வாரம்பித்தன. இதைக் கண்ட நான் என்னிலைமையைக்கொண்டு திருப்தியடையாமல், 'ஐயோ! பறவைகளைப்போலவெனக்கும் பறக்கத்திறமை யுண்டானால், ஆகாயத்திலேயுள்ள விசேஷங்களையெல்லாமறிந்து கொள்ளலாமே. மேலும் நமது சத்துருக்களினின்றும் தப்பிக்கொள்ளலாமே என்று உத்தேசித்து பிரமனைக்குறித்து வேண்டிக் கொண்டேன். பிரமனும் எனக்கு உடனேயழகான இச்சிறகுகளை யளித்தான். முதலில் என் சிறகுகளை விரித்துக்கொண்டு ஆகாயத்திலே பறந்தேன். ஐயோ! என்னுடையகதி என்னவாயிற்று! —ஆகாயத்திலேயும் எனக்கொரு சத்துரு ஏற்பட்டான். கின்னரப்புள் ஒன்று என்னைக்கௌவிக்கொண்டோடிற்று. நல்லவேளையினாலே நான் என் சத்துருவாயினின்றும் நழுவிவிழுந்துவிட்டேன். இப்போது இங்கே கிடந்து உயிருக்கு மன்றாடி யுழல்கின்றேன். சற்றுநேரத்திற்குமுன் பிரமன் என் வேண்டுகோளிற்கிணங்கி இங்கேவந்திருந்தான். 'உனக்கு நான் சிறகுகளைகொடுத்தபோது, இவ்விபத்து நேரிடுமென்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் உன்னுடைய பொறாமைக் குணத்திற்கும் அதிருப்திக்கும் இந்தச்சிக்ஷைவேண்டியதுதான்,' என்று சொல்லிப்போய்விட்டான். ஆதலால் நான் இங்கேகிடந்து தவிக்கின்றேன். உனக்கு ஏதாகிலும் பொறாமை அதிருப்திகளிருந்தால், இப்போது அவைகளையொழித்துவிட்டு உன் அலுவலைச்செய்ய ஆரம்பித்துவிடு,' என்று சொல்லிக்கொண்டு செத்தது.



சரஸ்வதிசொன்னபடி சகலவிஷயங்களும் கடவுளின் நியமனத்தால் மாறாமல் ஏற்பட்டிருக்குமானால், பேதை ஜனங்கள் தாங்கள் ஒருநாளுமடையக்கூடாத விஷயங்களைப்பற்றி முறையிட்டு நொந்துகொள்வது எவ்வளவு புத்தியீனம்! அடையக்கூடாத குணங்களையடைய வேண்டுமென்று கவலையுற்றுப் பேராசை கொண்டு திரிகின்றசிறுவர்காள்! சில குணங்கள் உம்மாலடையக்கூடாததா யிருக்குமாயின், ஏனோ உமக்கு இயற்கையாயமைந்த நற்குணங்களை மேலுமேலும் செழித்துவளரும்படிச்செய்து கொள்ளக்கூடாது? பேராசையால் மனோவிகாரமடைந்து கடுத்தமுகத்தோடு காலத்தைக் கழியாதீர்கள், உலகத்திலுள்ள எல்லாச்சம்பத்தும் குணமும் நம்மிடத்திலேயே பொருந்திவிட்டால், நமக்கு மிகுந்த சந்தோஷந்தான்; தடையில்லை. ஆனால் அப்படி நேருகிறதில்லையே! உமக்குள்ள செல்வம் குணத்தோடு திருப்தியடைந்துவிட்டால், உம்மைப்போல சுகமுடையாரொருவருமில்லை.

—Adapted from 'The Fables of Aesop' and 'The Evenings at Home'

T. R.

## OPINIONS ON THE
### Vivekachintamani and 'Vivekachintamani Series' of Publications.

(*The Indian Social Reformer.*)

" We have had occasion to refer more than once to that excellent Tamil Monthly *Viveka Chintamani* and the important pioneer work its talented editor Mr. C. V. Swaminatha Iyer is doing in the way of providing wholesome literature in Tamil. The books issued by him in the *Viveka Chintamani Series* are of current interest and written in a language which is classical without being unintelligible to the average reader. The latest output in this Series comprises two books got up in excellent style. One of these, we are delighted to see, is the life of India's greatest son, Gautama Buddha, the other is the life of the latest of Hindu heroes, Sivaji. The two men represent the two greatest developments of our civilization. They are landmarks in the history of our race. Both were before their time. But "the beings of the mind are not of clay," and the beings of Buddha's mind have lived and flourished albeit in corrupted and obscure forms. The lesson of the fall of Sivaji's empire is that which we have been insisting upon in season and out of season

Social reform must precede political reform. Caste dissensions were the rock on which split the grand idea which Sivaji had done so much to realise. All these reflections will of course be out of place in the books before us which are extremely interesting narratives of the lives of their respective subjects. Mr. Swaminatha Iyer has resolved to publish the smaller books together in single volumes, in a series by themselves to be called the *Viveka Manjari* : (*A Tamil Miscellany*), the 1st No. of which contains the Story of Colbert, Fairy Tell-True and life of Sivaji. We wish Mr. Swaminatha Iyer continued success in the good work he is doing."

---

### *The Viveka Chintamani Series.*

(The Light of Truth or Siddhanta Deepika.)

"The Secretary of the Diffusion of Knowledge Agency has sent these to us for a full review. . . . . We wish very much that the utmost help and encouragemen should be afforded to the learned, patient and hard-working Secretary and the Editor of the *Vivekachintamani* magazine and the serial publications. He has been doing in a quiet and an unassuming way a work which ought to command the sympathy of the richest of our Tamil land, and he has been the means of bringing to the front a number of graduates of our local University who at other times would not have condescended to read a line of Tamil. These gentlemen have struck altogether a new and fruitful vein of literature in Tamil and with success too, as is borne testimony to, by most learned Tamil scholars among Indians and Europeans alike. We have read these stories when they appeared in the magazine and we have re-read them now to ourselves and what is more important to our ladies at home and the young children, and the stories are as delightful as ever. Kamalambal in one sense is not new. Almost all the words and thoughts are current coin among the people and it is the chief merit of the author that he has used such available materials with so much dexterity as to afford pleasure and to adorn a tale and point a moral. The conclusion of the poem is truly oriental in its imagination, and touching in the extreme and the author aptly concludes with those divine words from Thiruvachakum out of the hymn of which we gave a translation of in our August number. . . . .

As regards the Lullaby, we need say nothing more about its popularity except that since I put the book into my children's hands I hear nothing but these verses repeated ever and anon.

'Lives of great men always remind us' of our duties and our own possibilities and they serve as a beacon of light to guide and cheer us in our struggles in this life. Life of Colbert is no exception in this respect and instead of one such life, our Tamil people should be made familiar with scores of such among European men and women.

The books are printed and bound in the best of styles and unlike our friend who is a Master of Arts who remarked that our magazine was costly and it need not be got up so well, we think it a duty to introduce a good taste in respect of books, we are given to read. 'Good wine needs no bush' but no merchant desiring to win his money will dispense with the necessary bush and 'how would a diamond look given the worst of setting.' Yesterday we worshipped learning as a Goddess and why should we not give her the best dress and appearance. We would only wish that our Tamil land will wake up soon enough to extend their help and encouragement to enterprises of the sort so disinterestedly undertaken by our friend of the D. K. Agency."

---

### (*The Awakened India.*)

"The Viveka Chintamani Series :"—

"1. *Kamalambal or the Fatal Rumour.*—The strength of the novel lies in its philosophical depth and spiritual significance and in this respect it appears to be a unique production of its kind. . . . . The style is simple, chaste, vigorous and dignified, and it is exceedingly poetic without being ornate.

"2. *Fairy Tell True* by K. G. Seshaiyer, B.A., B.L.,—The story is very interesting and has a grand moral. This little book will, we dare say, be much appreciated by the Tamil reading public and well deserves to be put into the hands of our girls.

"3. '*Vivekarasaitalattu*,' a lullaby by D. Balasubramania Pillay, consists of 108 verses and sings well. The lines flow very sweetly. The story of a boy thief with a good moral in it is cunningly introduced into the song and mothers will feel delighted to sing such lullabies over their children's cradles. The D. K. Agency deserves to be heartily congratulated on the excellent manner, hitherto almost unknown in the field of popular Tamil literature, in which the books have been got up and made available to the public. We wish it godspeed in its endeavours to create a popular and healthy literature for the Tamil-knowing public especially for our wives and sisters.

"4. *The Story of Colbert* :—We owe its author and publisher Mr. C. V. Swaminatha Iyer an apology for not having reviewed this interesting book earlier. It forms No. 4. of that excellent Series in Tamil, known as the 'Vivekachintamani Series' and originally appeared in a serial form in the Tamil Journal of that name. The life is presented in a story form and reads like a little novel. The style is simple and chaste and we are sure the work will be much appreciated by those for whom it is intended."

---



"I read your Story of Colbert with much interest. I am glad to say that I found it to be written in good and very readable style".—*Mr. V. P. Subramania Mudaliar.*

---

"The get-up of the Series is simply excellent and the public can have no idea of the beauty and attractiveness of the volumes before us until they purchase a copy and see it for themselves."—The Hindu.

---

"The books ought to be welcomed in every Hindu home They are well printed, well got up and well bound and are within reach of the poor."—The Madras Standard.

---

"Kamalambal is an excellent story depicting Hindu social life, manners and customs. The book is written in an easy and flowing style and will, no doubt, be much appreciated by the Tamil reading public."—*The Madras Tmes.*

---

"The book (Kamalambal) is replete with choice quotations from standard Tamil authors, appropriately worked into the text."—*The Madras Mail.*

---

"We commend the publications to all lovers of Tamil Literature at large and to all High Schools in the Presidency in particular."—The South Indian Post.

---

The following is from the Right Hon'ble Lord Wenlock, G. C. I. E., late Governor of Madras.

26, Portland Place, London,
*Jan. 13th*, 1897.

*Dear Sir,—I beg to acknowledge with many thanks the receipt of your letter of December 17th and of the set of the Viveka Chintamani Series, which you have been good enough to send me.*

*I hope you will find that all your friends wil rally round you in your efforts to carry on a high class magazine in the Vernacular.*

*Believe me, Yours very truly,*
(Signed) WENLOCK.

M. R. Ry., C. V. Swaminatha Iyer Avergal.

---

Professor P. Sundram Pillay, M.A., F. M. U., F. R. H. S., M. R. A. S., Rao Bahadhur, writes:—

. . . . "Kamalambal looks so splendid in the new dress you have given her. I did not dream she was of this size. The get-up is simply superb. Mr. Seshaiyar's Fairy Tale is also in a very presentable form.

"It would be a pity if one or other of the Viveka-Chintamani Series is not prescribed for the F. A. Examination. It would certainly be more acceptable to the students than Midsummer Night's Dream."

---

"Your reprints from the Viveka Chintamani, . . . . are within the comprehension of pupils even of the Fourth Standard. I consider them excellent and the price reasonable. I have given orders that they are to be added to the libraries of all the Tamil Government schools in the Southern and Western Circles, and I am showing copies and recommending their purchase to the Managers and teachers of all other Tamil Schools, which I inspect. I shall moreover be glad to continue this course with regard to any similar books which you may be able to bring out. There is in my opinion only one defect in these books and that is the want of a few simple but good illustrations; but to remedy this defect would of course add to the cost of the books. Still I commend the idea to you for consideration and will always help to diffuse such books to the best of my power."—Miss Carr, Inspectress of Girls' Schools, S. & W. Circles.

---

"I am glad to hear that Dr. Pope thinks of reviewing more of your Series. I was much interested in his review of Fairy Tell-True and I wish the Series every success I am recommending it to Hindu Ladies and to Managers of Girls' Schools in Madras and Chingleput. Dr. Duncan spoke to me with approval of your books and so did Mr. Jansen of the Danish Mission to whom I lent a copy of Viveka Chintamani. Wishing you all success in your work."—Mrs. Brander, Inspectress of Girls' Schools, N. & C. Circles.

"The Tamils have no decent books to be given to their daughters for their mental and moral culture, nor any recreation works to be recommended to their sons who do not know English. You are supplying this great *desideratum*. The style, moreover of your books, is such as may be advantageously imitated by the undergraduates of our University in learning to write good Tamil prose. . . ." Rao Bahadoor, C. W. Thamotharam Pillay Avergal, B A., B.L., F.M.U.

"Many thanks for the books and your letter. Your Society is supplying a great want and in a very creditable and satisfactory manner."—Rev. W. H. Blake, B.A., F.M.U., Principal, St. Peter's College, Tanjore.

"Many thanks for the little books you sent me. The Series is admirable: and when the history of Tamil literature comes to be written many years hence, you will occupy an honoured position, as one of its founders. I refer of course to modern Tamil literature."—*H. O. D. Harding, Esq., I. C. S.*

The Hon'ble Mr. Justice Subramania Iyer, C.I.E., Dewan Bahadhur

*I have taken interest for some years in the work which Mr. Swaminathaier is doing for the improvement of Tamil journalism and literature. His efforts deserve every encouragement and I trust he will obtain it at the hands of those who are in a position to give such help. The excellence and usefulness of his publications are now recognised on all hands.*

29th Jany. 1898. } *S. SUBRAMANIEM.*

Pandit V. Saminathaiyar of the Kumbaconum College on the Vivekachintamani and 'Vivekachintamani Series' of Publications.

ம-ா-ா-ஶ்ரீ, வி. வி சாமிநாதையரவர்கள் பலவருடங்களாக மிக முயன்று பதிப்பித்து வெளிப்படுத்திவரும் 'விவேகசிந்தாமணி' என்னும் தமிழ்ப் பத்திரிகையை உடனுடன் பெற்றுப் படித்துவருகிறேன். இஃது இக்காலத்தார்க்கு வேண்டுவனவாகிய பலவிஷயங்களைப் புலப்படுத்தும் எளிய தமிழ் நடையில் அமைந்திருத்தல், யாவர்க்கும் உபகாரமாக இருக்கின்றது. இதைப் படித்தலால், தங்கள் பிள்ளைகளுக்கு மேன்மேலும் அறிவு பெருகி வருகிறதென்று பல கனவான்களும் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆங்கிலேய பாஷையில் தேர்ச்சியடைந்த பலர், தாங்களறிந்த அநேக விஷயங்களை அந்தப்பாஷையிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து எல்லாருக்கும் பயன்படும்படி இதில் எழுதலும் இக்காலத்துள்ள பலவகை நடைகளையும் அனுசரித்துத் தாமே கற்பித்து அவர்கள் எழுதியிருக்கும் சரித்திர வகைகளும், பிறவும் மிகுந்த மகிழ்ச்சியை விளைவிக்கின்றன. ஆதலால், இவ்வண்ணம் உலோகோபகாரமாகப் பலரும் எழுதும்படி மிக முயன்று பாடுபட்டு உழைத்துவரும் இந்த வி. வி. சாமிநாதையரவர்களுடைய முயற்சி மிகப் பாராட்டற்பாலது. இப்பத்திரிகை விஷயத்தில் இவர்களுக்குச் சிறிதும் தளர்ச்சியுண்டாகா வண்ணம் இன்னுமுள்ள ஆங்கிலேய பாஷா பண்டிதர்களும் தமிழ்ப் பண்டிதர்களும் அன்பு வைத்து அடிக்கடி அரிய விஷயங்களை எளிய தமிழ் நடையில் எழுதி இப்பத்திரிகைவாயிலாக வெளிப்படுத்துவார்களென்றும், இத்தமிழ் நாட்டுள்ள கனவான்கள் பலரும் இப்பத்திரிகையை யங்கீகரித்து ஊக்கமளிப்பார்களென்றும் உறுதியாக நம்புகிறேன்.

அன்றியும் சென்ற சில வருஷங்களாக "விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள்" என்று தலைப்பெயரிட்டு இவர்கள் வெளிப்படுத்திய புத்தகங்களும் பார்க்கப்பட்டன. அவைகள் இத்தமிழ் நாட்டுள்ள பாடசாலைகளில் படிக்கும் மாணாக்கர்களுடைய தகுதிக்கேற்ப வரையறுத்துச் செப்பஞ்செய்து பாடமாக வைக்கப்படின், மாணாக்கர்களுடைய அபிவிருத்திக்கு மிரம்ப நன்றாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

கும்பகோணம் காலேஜ், 1—2—98. } வே. சாமிநாதையன், *Tamil Pandit.*

## JUST RECEIVED.

A Fresh consignment of **The Gospel of Buddha,** by Dr. Paul Carus, Revised Edition, Price Rs. 1/8. Postage extra. Apply sharp to avoid disappointment. Only a limited No. of copies on hand.

C. V. Swaminatha Aiyer,
*Secretary D. K. Agency.*

லேசான காகிதப்பதிப்பு. தனிப்பிரதி. 5½ அணா,, பழையபிரதி. 6 ,,

சந்தாவின் விவரம். ஒரு வருஷத்துக்கு ரூ. 4 6-மாதத்துக்கு ரூ. 2-2




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம், 7.] .1898ஸு ஜூன்மீ . [இலக்கம். 2.

### Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As. : Back Nos. 8 As. each.

English & Foreign Subscription 7s. 6d net per annum

**Thin Paper Edition** for the People:

Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.
Single copy, current No. 5½ As. Back Nos. 6 As. each.
English & Foreign Subscription 5s. 6d net per annum.

**If Strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions Entered to begin with only April or May of each year
Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year,* i. e., *in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V.P.P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:— அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள். புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2. தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டிஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V.P.P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## சஞ்சோக்தை சுவயம்வரம்,

அல்லது

## ப்ரித்விராஜா சரித்திரம்.

II.

### ஹிந்துஸ்தானத்தின் பூர்வீகசரித்திரம்.

இப்பொழுது ஹிந்துஸ்தானம் என்று சொல்லப்படுவது பூர்வத்தில் ஹிந்துக்கள் குடியேறின காலத்தில் வேறு பெயர்களால் விளங்கியது. பெயர் வேறுபட்டதன்றி விஸ்தீரணமும் வேறுபட்டிருந்தது. இந்த ஹிந்துஸ்தானத்தின் எல்லைகள் ஸர் உவில்லியம் ஹண்டர் வரைந்திருக்கிறபடி, வடக்கே ஹிமாலயம், கிழக்கேஅஸ்ஸாம் தேசம், தெற்கே விந்திய மலைத்தொடர், மேற்கே ஒருவாறு பஞ்சாப் என்று சொல்லலாம்.

இன்றைக்குச் சுமார் 4000 வருஷங்களுக்கு முன் ஹிந்துக்களின் முன்னோர்களாகிய ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து சிந்துநதிதீரத்தில் பிரவேசித்து அங்கிருந்த பூர்வீகக்குடிகளைத் துரத்திவிட்டு இப்பொழுது பஞ்சாப் தேசமென்று விளங்கும் பாகத்தில் குடியேறிப் பரவினார்கள். இங்கிருந்து பல்கிப் பெருகி 5, 6 - நூற்றாண்டுகளாகவும் அவ்விடம் தங்கள் இனத்தார் பரவுவதற்குப் போதாமற் போக கங்கை யமுனாநதி தீரங்களில் பிரவேசித்து காசிவரையிலுள்ள இடங்களில் குடியேறிப் பரவினார்கள். பஞ்சாப்பில் குடியேறிப் பரவியிருந்த 5, 6 நூற்றாண்டுகளும் (கி. மு. 2000 முதல் கி. மு. 1400வரை)வேதங்கள் உண்டான காலமென்று சரித்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப்பின் கங்கை, யமுனாநதி தீரங்களில் அவர்கள் பரவிப் பிரபலித்திருந்த காலம் இராமாயணம் மஹாபாரதம் முதலிய மகாகாவியங்கள் உண்டான காலமாகும்.

சிந்து, கங்கை, யமுனாநதிதீரங்களில் ஆரியர்கள் பூர்வக்குடிகளைப் பூண்டோடழித்துத் தாங்களே முற்றும் குடியேறிப் பரவினார்கள். அவ்விடங்களும் அவர்களுக்குப் போதாமற்போக ஆரியர்கள் கிழக்கிலும் தெற்கிலுமாகப் பிரவேசித்து அங்கிருந்த பூர்வக்குடிகள் சுத்த மிலேச்சர்களாகவின்றி ஏற்கனவே ஒருவாறு நாகரிகமுற்றவர்களா யிருக்கக்கண்டு, அவர்களுக்குள் தங்கள் நாகரிகத்தையும் தங்கள் மதம் நடை உடை பாவனை பாஷை யிவைகளையும் பரவச்செய்து அவர்களோடுகலந்து அவர்களில் மேம்பட்டவர்களாயிருந்து வந்தார்கள். இப்படி ஆரியர்கள் இந்தியாமுழுவதும் பரவுமுன் அவர்கள் சிந்துநதி தீரத்தில் முதல்முதல் குடியேறின காலத்திலிருந்து சுமார் 2000 வருஷகாலமாயிருக்குமென்று சொல்லலாம்.

இப்படி வடஇந்தியா சுத்த ஆரியர்களால் நிரம்பியிருந்தகாலத்தில் அதற்கு ஆரியவர்த்தம் (ஆரியர்கள்நிறைந்தபூமி) என்று பெயர் வழங்கியது. மனு, வசிஷ்டர், காத்தியாயனர், அமரஸிம்மர் முதலான பெரியோர்கள் கிரந்தங்களில் ஆரியவர்த்தத்தின் எல்லைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. வடக்கே ஹிமாலயமும், தெற்கே விந்தியமலைத்தொடரும் அதன் எல்லைகள் என்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கிழக்கு மேற்கு எல்லைகளைப்பற்றி இவ்வாதாரங்களில் பேதம் காண்கிறது. மனு, வசிஷ்டர், அமரசிம்மர் முதலான இன்னும் சிலர் கிழக்கிலும் மேற்கிலும் சமுத்திரம்வரையில் ஆரியவர்த்தம் பரவி யிருந்ததாகச் சொல்கிறார்கள். அப்படியானால் கிழக்கே சீனக்கடல்வரையிலும் மேற்கே மத்தியதரைக்கடல் வரையிலுமுள்ள தேசங்கள் இவ்வெல்லைகளுக்குள் அடங்கினவையாகின்றன. காத்தியாயனர், பதஞ்சலி இவர்கள் ஆதாரப்படி மேற்கெல்லை 'அதர்சவலி' * அதாவது 'அரவலி' (Aravali Hills) மலைத்தொடர் என்றும், கிழக்கெல்லை 'காலகாவனம்' † என்றும் தெரிகிறது. முதலில் மிக விஸ்தீரணமாகவிருந்து பிறகு கிழக்கிலும் மேற்கிலும் அதன் எல்லை குறுகி, ஆதியிலிருந்ததைவிட மிகக்குறைவுபட்ட ஸ்தானத்துக்கு ஆரியவர்த்தம் என்கிற பெயர் அமைந்து வந்ததெனக் கொள்ளும்படியாகவிருக்கிறது. ஆரியவர்த்தம் என்பது தற்காலத்தில் ஹிந்துஸ்தானம் என்னும் பெயரால் விளங்கும் பாகத்தைவிட மேற்குத் திக்கில் அதிகதூரம் பரவியிருந்ததென்பது மஹாபாரதத்தில் காணப்படும் சில விஷயங்களாலே நன்றாகவிளங்குகிறது. விஷ்ணுபுராணத்திலும் மஹாபாரதத்திலும் பாரஸீகம் (பெர்ஸியா), [1] காம்பிலம் (காபூல்), [2] காந்தாரம் (காந்தஹார்) [3] முதலிய தேசத்தரசர்கள் ஹஸ்தினாபுரத்திலாண்ட அரசர்களுக்குக் கப்பம்கட்டினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருதராஷ்டிர மஹாராஜன் மனைவி காந்தாரி, காந்தாரராஜன்புத்திரி. இந்த அடையாளங்களாலும் இவைபோன்ற வேறு அடையாளங்களாலும் மேற்கே பெர்ஸியா, துருக்கி, ஆப்கானிஸ்தான், பெலுசிஸ்தான் முதலிய தேசங்களும், கிழக்கே பர்மா, ஸயாம், சீனாவில் ஒரு பாகமும் ஆரியவர்த்தத்தைச் சார்ந்தனவாகவிருந்தனவென்று ஊகிக்கக்கூடியதா யிருக்கிறது. இவ்வெல்லைகள் எப்படி மாறுபட்டிருந்தாலும், சிந்து, கங்கை, யமுனாநதி தீரங்கள் ஆரியர்கள் இந்தியாவில் குடியேறி வேரூன்றிய மூலஸ்தானங்களாக இருந்தனவென்பதற்கும் அவை அதனால் மிகச்சிரேஷ்டமாகக் கொண்டாடப்பட்டனவென்பதற்கும் சந்தேகமில்லை. ஆரியர்கள் இந்த நதிதீரங்களை விசேஷமாய்க்கொண்டாடியதற்கடையாளமாக அவற்றிற்கு 'ஜன்மபூமி' யென்றும் 'புண்ணியபூமி' யென்றும், 'ஆசாரவேதி' யென்றும் பல அருமையானபேர்களிட்டு வழங்கிவந்தார்கள்.

ஆரியவர்த்தம் என்பது அக்காலத்தில் மூன்று குடியேற்றப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை:— (1) பிரம்மவர்த்தம், (2) பிரம்மரிஷிதேசம், (3) மத்தியதேசம். இவைகளில் பிரம்மவர்த்தம் என்பது ஸரஸ்வதி, த்விஷத்வதி என்னும் நதிகளுக்கு இடையே உள்ளபூமி. இங்குதான் ஆரியர்கள் ருக்குவேதமுண்டானகாலத்தில் முதல்முதல் குடியேறிப் பரவினார்கள். 'பிரம்மவர்த்தம்' என்றால் பிரம்மா வாசஞ்செய்யுமிடம் என்று அருத்தம். பிரம்மரிஷிதேசம் என்பது குருக்ஷேத்திரம், மச்சியதேசம், பாஞ்சாலம், கன்யாகுப்ஜம், மதுராபுரி இவைகளடங்கியது. தற்காலம் ஆஜ்மீருக்கும் பஞ்சாபுக்கும் இடையிலுள்ள பூமி இதிலடங்கியதாகிறது. டில்லி, ஆக்ரா மாகாணங்களும் இதைச்சேர்ந்தனவே யாகும். பிரம்மரிஷிகள் வாசஞ்செய்ததேசம் என்பது இதற்கு அருத்தம். கங்காநதிக்கும் யமுனாநதிக்கும் இடையிலுள்ள 'துவாப்' என்னும்பாகத்துக்கு 'அந்தர்வேதி' என்று பேர்வழங்கிற்று. 'அந்தர்வேதி' யென்றால் † உள்நாடு என்று அருத்தம். இந்தப்பாகம் குன்று பள்ளமின்றி சமமாகவிருத்தலால் 'சமஸ்தலம்' என்றும் இதற்குப் பேர்வழங்கிற்று. இந்தப்பாகத்தில் ஆரியர்கள் குடியேறி வெகுநூற்றாண்டுகள் அங்கே செழித்திருந்தார்கள். ஆரியசக்கிரவர்த்திகளின் தலைநகரங்களும் விசேஷமாக இங்கேயே அமைந்திருந்தபடியால் ஆரியவேதம், ஞானம், தத்துவசாஸ்திரம் முதலிய இன்னும் பல ஆரியகலைகள் மிகச் செழித்தோங்கி விளங்கியது இப்பாகத்திலேயே. இந்த பூமி மிகவிசேஷமான புண்ணியபூமியாக யஜுர்வேதத்திலும், ஆரணியகம், த்விதியப்ரபாதகம் முதலிய உபநிஷத்துக்களிலும், இன்னுமற்ற சாஸ்திரங்களிலும் அதிக பயபக்தியோடு ஸ்தோத்திரம் செய்து கூறப்பட்டிருக்கிறது. இந்த அந்தர்வேதி யிலுள்ள வாரணாசி (ஸ்ரீகாசி), பிரயாகை (அலஹபாத்) என்னும் ஸ்தலங்கள் மஹா பாரதகாலமுதல் இன்று நாளவரையில் இந்தியாமுழுவதிலும் மிக விசேஷமான புண்ணியஸ்தலங்களாகப் பேர்பெற்று விளங்கிவருகின்றன. வடக்கே ஹிமாலயத்துக்கும், தெற்கே விந்தியபருவதத்திற்கும், மேற்கே சரஸ்வதிநதி மணலிற்பாய்ந்

* Adarsavali: A range of Mirrors. † Forest of death.

[1] Persia, [2] Cabool, [3] Candahar.

† Inner land.

து மறைந்துபோகும் 'விநாசனம்' என்னுமிடத்திற்கும், கிழக்கே பிரயாகைக்கும் மத்தியிலுள்ளபூமிக்கு **மத்தியதேசம்** என்று பேர்வழங்கிற்று. இது பிரம்மவர்த்தத்துக்கும் பிரம்மரிஷிதேசத்துக்கும் மத்தியிலிருப்பதால் **மத்தியதேசம்** என்கிறபெயர் இதற்கு வாய்த்தது. இம்மூன்று பிரிவுகளும் சேர்ந்ததற்குத்தான் பிரதமத்தில் **ஆரியவர்த்தம்** என்கிறபேர் உரியது. இதற்குப் புறம்பே இதைச்சார்ந்ததாயுள்ள பாகங்களை வடமாகாணங்கள், கீழ்மாகாணங்கள், பிரத்யேகமாகாணங்கள் என்றும், ஆரியநாகரிகம் அதிகமாய்ப் பரவாதபாகங்களை 'மிலேச்ச மண்டலம்' என்றும், வடமேற்கில் ஆரியர்களால் ஜயிக்கப்படாமலிருந்த தேசங்களை 'அபரிஜித' தேசங்கள் என்றும் ஆரியபாஷையில் பேரிட்டு வழங்கிவந்தார்கள்.

ஆரியர்கள் இந்தியாவில் நூதனமாகக் குடியேறிவந்தஜாதியாராகையால் பூர்வக்குடிகளால் ஹிம்சிக்கப் படாமலிருக்கும்பொருட்டு, அவர்கள் ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குப் பரவும்பொழுது தங்கள் இனத்தார் அதிக தூரமான இடங்களுக்குச்சென்று சிதைந்து போகாமலிருக்க, முதலில் ஓர் எல்லைவரையறை யேற்படுத்தி அதற்கப்பால் ஆரியர்கள் செல்லக்கூடாதென்கிற கட்டுப்பாடு செய்துகொள்ளவேண்டியது அவசியமாயிருந்தது. ஆரியர்கள் கங்கைக்கரையில் குடியேறியபின் அவர்கள் இனத்தார் விந்தியமலையைத்தாண்டி தெற்கே போகக்கூடாதென்னும் கருத்துக்கொண்டு விந்திய பருவதத்தின வடபாகத்திலுள்ள மைதானங்களை "பரியாத்திரை" அதாவது அவர்கள் யாத்திரைக்கு எல்லையாகக் குறிப்பிட்டு அதற்குத் தெற்கேபோவது கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தது. கங்கைநதிதீரம் முழுவதும் ஆரியர்கள் குடியேறியபின் அவர்கள் அந்த எல்லை தாண்டிப் பிரயாணம் செய்யலாமென்று ஏற்பட்டு விந்தியத்துக்குத் தெற்கேயுள்ளபாகம் முழுவதும் **தக்ஷணபாதம்** என்றுகுறிக்கப்பட்டது.

கிறிஸ்து பிறக்க சுமார் 300 வருஷங்களுக்குமுன் இந்தியாமுழுவதும் ஆரியர்கள் குடியேறிய இடங்கள் மூலைக்குமூலை சிதறுண்டு காணப்பட்டதன்றி அவர்களுடைய செல்வாக்கினுலும் முயற்சியினுலும் இந்தியாமுழுவதும் ஆரிய ஆசாரமும், ஆரிய நாகரிகமும் பரவி மேலிட்டிருக்கக் காணப்பட்டன. ஆரியர்கள் இந்தியாமுழுவதும் பரவியபின் "ஆரிய நாகரிகத்திலும் செல்வாக்கிலும் மேம்பட்டு விளங்கியது இப்பொழுது தென்பிஹாராகவிருக்கும் **மகததேசம்**. இத்தேசம் இந்தியா முழுவதற்கும் முதன்மையாக விளங்கியதன்றி இத்தேசத்தை யாண்ட அரசர்கள் எல்லாருக்கும் மேலாக இருந்து ஆண்டுவந்தார்கள்.

மஹாபாரதகாலத்தில் மகத தேசத்தையாண்ட அரசன் **ஜராசந்தன்** என்னும் ஓர் கொடியன் என்று தெரிகிறது. கிறிஸ்துபிறக்க சுமார் 600 வருஷங்களுக்கு முன் **கௌதமபுத்தர்** அவதரித்து புத்தமதபோதனைசெய்து வந்தபொழுது இத்தேசத்தையாண்ட அரசன்பெயர் **பிம்பிசாரன்**. கி. மு. 327 - ம் வருஷத்தில் **மகா அலெக்சாண்டர்** இந்தியாவின்மீதுபடையெடுத்துவந்து திரும்பியபின், மகததேசத்திலாண்ட **நந்தவமிசத்**தாரை நசித்துவிட்டு **சந்திரகுப்தன்**என்னும் மகாகீர்த்திபெற்ற ஹிந்து அரசன் மகததேசத்திலிருந்து வட இந்தியாமுழுவதையும் ஒருகுடைக்கீழ்க் கொண்டுவந்து எங்கும் வல்லமைபொருந்திய தன் செங்கோல் செல்லும்படி ஆண்டுவந்தான். அது முதல் அவன் சந்ததியார் ஆளுகையில் மகததேசம் மகா வல்லமையும் கீர்த்தியும்பெற்று வட இந்தியா முழுவதற்கும் தலைமை ஸ்தானமாக விருந்துவந்தது. இந்த அரசனுடைய பேரனுகிய மகாகீர்த்திபெற்ற **அசோகராஜா** கி. மு. மூன்றும் நூற்றுண்டில் மகததேசத்தை யாண்டுவருகையில், தான் புத்தமதத்தைத் தழுவி மேற்கொண்டதுமன்றி அம்மதத்தை இராஜாங்க மதமாகவும் ஏற்றுக்கொண்டு அதைப் பரவச்செய்வது தன்னுடைய ராஜகடமைகளில்



துவந்தான். இந்த அரசன் காலத்தில் இவன் அனுப்பிய புத்தமதபோதகர் ஐரோப்பாவிலும் சென்று அம்மதத்தைப் போதித்துவந்தார்கள். சந்திரகுப்த, அசோகராஜர்களின் வமிசத்தார் சுமார் 300 வருஷகாலம் மகததேசத்தை யாண்டுவந்தாலும் கடைசியில் அவர்கள் கை இளைத்துப்போக, தக்ஷிணத்தில் அதிக வல்லமையோடு அரசுபுரிந்துவந்த ஆந்தர ஜாதியார் கிறிஸ்து சகாப்த ஆரம்பத்தில் மகததேசத்தைக்கைப்பற்றி 4-ம் நூற்றுண்டுமுடிவு வரையில் வட இந்தியா தென்னிந்தியா இரண்டையும் ஒருகுடைக்கீழ் அடக்கி யாண்டுவந்தார்கள். கி. பி. 400- க்குப் பிறகு ஆந்திர வமிசத்தாரின் பலமும் குறைந்துபோக அவர்களோடு மகததேசத்தின் மேன்மையும் முடிவுக்கு வந்தது.

மகததேசம் மகிமைகுன்றியபின் அத்தேசத்தரசர்கள் செலுத்திவந்த மேலதிகாரம் முறையே காஞேஜ், உஜ்ஜினி நகரத்து அரசர்களின் கைவசத்துக்கு மாறிற்று. இராமாயண, மஹாபாரத காலத்தில் கங்கைக்கரையில் கௌரவர், பாஞ்சாலர் இவர்கள் குடியேறிய பூமிகள் நாகரிகத்திலும் செல்வாக்கிலும் மேம்பட்டு முதன்மையாக விளங்கின. மகததேசம் தலையெடுக்க ஆரம்பித்தபின் இராஜாங்க விஷயத்தில் அத்தேசங்களின் விசேஷத்துக்குக் குறைவு வந்தாலும், சுத்த ஆரியர்கள் குடியேறிய பூமியென்று அவைகள்மட்டும் எப்போதும் புநிதபூமியாக மதித்துக் கொண்டாடப்பட்டன.

5-ம் நூற்றுண்டின்துவக்கத்தில் மகததேசம் க்ஷீணித்துப்போகவே கங்காநதி தீரத்திலுள்ள அத்தேசங்கள் முன்னுக்கு வரத்தலைப்பட்டன. கன்யாகுப்ஜத்திலாண்ட குப்த வமிசத்தரசர்களின் சரித்திர ஆரம்பத்தோடு இத்தேசங்களுக்கு நல்லகாலம் பிறந்தது. காஞேஜ் அல்லது கன்யாகுப்ஜத்தில் ஆண்ட குப்த வமிசத்தரசர்கள், வட இந்தியா முழுவதுக்கும் மேலான அரசர்களாக விருந்தார்கள். இவர்கள் ஆளுகை 5-ம் நூற்றுண்டில் துவக்கி கொஞ்சங்குறைய 100 - வருஷகாலத்துக்குச் சென்றுவந்தது. இந்தவமிசத்தில் மூன்றும் தலைமுறையிலுதித்த **சந்திரகுப்தன்** என்னும் அரசன் **விக்கிரமாதித்தியன்** என்னும் பட்டப்பேர் வகித்து அரசாண்டு வந்தான். இவனுடையபுத்திரனுன **சமுத்ரகுப்தா** என்னும் அரசன் வட இந்தியா முழுவதையும் வென்று ஒருகுடைக்கீழ் அரசாண்டுவந்தானென்று அலஹபாத்திலுள்ள ஒரு சிலாசாஸனத்தினுல் தெரியவருகிறது. அதே சாஸனத்தினுல் வட இந்தியாவின் எல்லைப்புறத்திலுள்ள வங்காளம், நேபாளம், அஸ்ஸாம், முதலிய தேசத்தரசர்கள் அவனுக்குக் கப்பம்கட்டிவந்தார்களென்றும், மேற்கே வெகுதூரத்திலுள்ள இராஜ்ஜியங்களை யாண்டுவந்த ஷாஎன்னும் அரசர்களும் இலங்கையரசர்களும் அவனுக்குக் காணிக்கைகள் அனுப்பிவந்தார்களென்றும் தெரிகிறது. இவருக்குப்பின் மூன்றுந்தலைமுறையில் குப்தவமிசத்தரசனுக வந்த **ஸ்கந்தகுப்தா**வும் மகாவல்லமை பொருந்திய அரசனுக இருந்தானென்று தெரியவருகிறது. இவர்காலத்துச் சிலாசாஸனம் ஒன்றினுல் இவர் மேல்சமுத்திரத்திலிருந்து கீழ்சமுத்திரம் வரையில் உள்ள தேசங்களை ஒரு குடைக்கீழ் அடக்கி ஆண்டுவந்தாரென்றும், தூரதேசங்களிலுள்ள மிலேச்சர் அல்லது அந்நியர்களான ராஜாக்கள்கூட இவர்வல்லமையை ஒப்புக்கொண்டு கப்பம் அல்லது காணிக்கைசெலுத்திவந்தார்களென்றும் தெரிகிறது. இவர் கி.பி. 460௵ முதல் கி.பி. 480௵ வரையில் அரசாண்டுவந்தார். இந்த வமிசத்தில் பிரக்கியாதிபெற்று விளங்கிய அரசர்களில் இவரே கடைசியானவர். இவருக்குப்பின் இரண்டரசர்கள் பட்டத்துக்கு வந்தாலும் இந்தவமிசம் பின்னுல் விளங்காது முடிந்துபோயிற்று.

கிறிஸ்துபிறக்க 100-வருஷங்களுக்கு முன் ஹூணர்கள், யவனர்கள், முதலிய வெள்ளை ஜாதியார் இந்தியாவின் வடமேற்கு மூலையிலிருந்துகொண்டு அடிக்கடி இந்தியாவின்மேல்

படையெடுத்து பஞ்சாப்பில் சில இராஜ்ஜியங்க
ளும் ஏற்படுத்தி ஆண்டுவந்தார்களென்று தெரி
கிறது. இந்த ஜாதிஅரசர்களில் கி. பி. 40-ம்
வருஷத்தில் ஆண்ட கனிஷ்கராஜன் மிக வல்ல
மைபொருந்தி விளங்கினன். இவன் காஷ்மீரத்
திலாண்டபோதிலும் இவனுடைய இராஜ்ஜி
யம் தெற்கே ஆக்ரா, சிந்துதேசமுதல் வடக்
கே ஹிமாலயத்துக்கப்பாலுள்ள 'யார்க்கண்ட்,'
'கோகண்ட்' என்னுமிடங்கள் வரையில் பரவி
யிருந்தது. இந்த அரசன் புத்தமதத்தைத்தழுவி
அதனை மிகஆதரித்துவந்தான். இவனுடைய கா
லத்தில் 4-வது புத்தமத சங்கம் கூடிற்று. 'ஸி
திய' (Scythic) ஜாதியாகிய ஹூணர், யவனர்
முதலிய வெள்ளைமனுஷர்கள் சேர்ந்த இந்நூ
தன ஜாதியர் இந்தியாவில் ஸ்தாபித்த குடியேற்
றநாடுகளில் கனிஷ்கராஜன் ஆண்ட நாடு மிகப்
பிரக்கியாதிபெற்றது. காஷ்மீரன்றி இன்னும
னேக ஸ்தாபனங்கள் அங்கங்கே ஏற்பட்டிருந்
தன. கி.பி. 4-ம் நூற்றாண்டின் கடைசியி
லும் 5-ம் நூற்றாண்டின் துவக்கத்திலும் இவர்
கள் உபத்திரவம் மிக அதிகரித்திருந்தது.
சென்ற 400-வருஷகாலங்களில் ஹூணர்கள்
முதலான இந்த ஜாதியார் கூட்டங்கூட்டமா
கப் படையெடுத்துவந்து கடலோரங்களில்
குடியேறி ஹிந்துமதம், ஆசாரம், பாஷை
இவைகளை அனுசரித்து ஹிந்துக்களோடு ஹிந்
துக்களாய் மாறி, உள்நாட்டிலும் படையெடுத்
துச்சென்று ஹிந்துராஜாக்களைவென்று அவர்
கள் இராஜ்ஜியங்களைக் கட்டியாள முயன்று
வந்தார்கள். இந்த அந்நியர்கள் கூட்டங்க
ளோடு ஹிந்துராஜாக்கள் பல நூற்றாண்டுக
ளாகத் தீராச்சண்டைபோட நேரிட்டது. இப்
படிப்பட்ட சண்டைகளில் எதிரிகளான இந்
நூதன ஜாதியாரோடு எதிர்த்து நிற்கமாட்டா
மையால்தான் கானோஜிலாண்ட குப்தவம்சத்
தார் மறைந்துபோனார்களென்று தோன்றுகி
றது. இக்காலத்தில் இந்த அந்நிய கூட்டத்தா
ரை எதிர்த்து முறியடித்து வெற்றிபெற்றவர்
களே அதிக கீர்த்திபெற்ற அரசர்களானார்கள்.
கள் விழுந்து மறைந்தபின் இந்துதேச சரித்தி
ரத்தில் பிரக்கியாதிபெற்று விளங்கும் அரசன்
உஜ்ஜினி†பட்டணத்து மகாகீர்த்திபெற்ற விக்
கிரமாதித்திய ராஜன். இந்த ராஜா ஹிந்துக்க
ளுக்குத் தலைவனாயிருந்து ஹிந்து தேசத்தின்
மேல் படையெடுத்து வந்த மிலேச்சர் சைனி
யங்களை மூல்த்தானுக்கருகிலுள்ள கோரூர் என்
னுமிடத்தில் ஒரு பெரிய சண்டையில் தோற்க
டித்து அவர்கள் அரசனையும் கொன்றுவிட்
டார். இவருடைய காலத்தில் அந்நியர் படை
யெடுப்பின்றி இந்தியா முழுவதும் அமைதி
மேலிட்டு இவர் குடைக்கீழிருந்து கல்வி, அறி
வு, நாகரிகத்தில் மகா கீர்த்தி பெற்று விளங்கி
வந்தது. சம்ஸ்கிருத பாஷைக்கு என்றும் அழி
யாப்புகழ்விளைத்த மகாகவிகளாகிய கவிநவரத்
னம் என்னும் காளிதாசன் முதலிய மகா கவிக
ளும் இவர்காலத்தில் இவருடைய ஆதரணையி
லிருந்து விளங்கினார்கள். இவருடைய ஆளு
கையில் ஹிந்து மதம், பாஷையெல்லாம் அதிக
பலப்பட்டுச் செழிப்புற்று விளங்கியது. இவர்
காலத்தில் உஜ்ஜினி வட இந்தியா முழுவதற்கும்
தலைநகராக விளங்கியது. இவருக்குப்பின் பட்
டத்துக்கு வந்தவர் சிலாதித்திய ராஜன். விக்கி
ரமாதித்திய ராஜன் ஹிந்துமதத்துக் கனுகூலி
யாகவிருந்ததுபோல் சிலாதித்திய ராஜன் புத்த
மதத் துக்கனுகூலியாக விருந்தான். ஆனால்
இவ்விருமதத்திற்கும் சண்டைசச்சரவில்லாம
லிருந்ததனால், இதனால் யாதொரு மதமாச்சிரி
யங்களுக்கு மிடமின்றி யிருந்தது.*

† மாளவதேசத்தின் தலைநகர்.

* அசோகராஜா காலமுதல் சிலாதித்திய ராஜா
காலம் வரையில் ஹிந்துராஜாக்களில் ஒருவர் புத்தம
தத்தை அநுகூலிக்கிறதும், மற்றொருவர் ஹிந்துமதத்
தை அனுகூலிக்கிறதுமாக விருந்துவந்தார்கள். ஒரே
குடும்பத்தில் தகப்பன் புத்தமதத்தை அனுசரிக்கப்
பிள்ளை ஹிந்துமதத்தை அனுசரித்துவருவதும், இர
ண்டு சகோதரர்களில் ஒருவர் ஹிந்து மதத்தையும்
ஒருவர் புத்தமதத்தையும் அனுசரிப்பவராயிருப்பதும்
வெகுசாதாரணம். இந்த மாதிரி மதமாச்சிரியமின்றி
இரண்டுமதங்கள் ஒருமித்துப் பரவிவந்தது இந்தியா
விலன்றி உலக சரித்திரத்தில் வேறு எங்கும் காணக்



முதலாவது சிலாதித்திய ராஜனுக்குப் பிறகு
பிரபாகரவர்த்தனன் என்னும் ராஜா பட்டத்
துக்கு வந்தான். இந்த அரசன் வங்காள தேசத்
தாரோடு சண்டைசெய்கையில் கொல்லப்பட்டு
இறந்தான். இவ்வரசனுக்குப் பிறகு பட்டத்
துக்குவந்த அரசன் 'ஹர்ஷவர்த்தனன்'. இந்த ரா
ஜன் இரண்டாம் சிலாதித்தியன் என்னும் பட்
டப்பேர் வகித்து கி. பி. 610 முதல் 650-வரை
வரையில் 40 வருஷகாலம் அரசாண்டுவந்தான்.
இந்த அரசன் ஆளுகையில் வட இந்தியாமுழு
வதும் ஒரு குடைக்கீழ்க்கொண்டுவரப்பட்டது.
வட இந்தியா முழுவதையும் ஜெயித்துத் தன்கு
டைக்கீழ்க் கொண்டுவந்தாலும் தெற்கே மஹரா
ஷ்டிரர்களைவெல்ல யத்தனிக்கையில் அபஜயப்
பட்டான். கி. பி. 650-ம் வருஷத்தில் இந்த அர
சன் மரணமடைந்ததோடு வட இந்தியாவின் ச
ரித்திரம் மங்கலடைந்துவருகிறது. *இரண்டா
வது சிலாதித்தியராஜனுக்குப்பிறகு சரித்திரத்
தில் விசேஷமாகக் குறிக்கப்பட்டுள்ள அரசன்
கானோஜ் ராஜ்ஜியத்தையாண்ட யஸோவர்மன்.
இந்தியாவின் மகாகவிகளில் ஒருவராகிய பவ
பூதி யென்பவர் இந்த 'யஸோவர்மன்' அரண்ம
னையில் வசித்து வந்தார். இந்தக்காலத்தில்மகா
கீர்த்திபெற்று விளங்கிய மகாகவிகளில் கடை
சியானவர் பவபூதி. வட இந்தியாவையாண்ட
ஹிந்து ராஜாக்களில் பேர்பெற்ற கடைசி அர
சனும் யஸோவர்ம ராஜா தான். இந்த ராஜா
கி. பி. 700 முதல் 730-வருஷம்வரையில் ஆண்
டதாகத் தெரியவருகிறது. இவருக்குப் பிற
கு வந்த அரசர்கள் அவ்வளவாகச் சரித்திரத்
தில் பேர்வாங்கினவர்களாகத் தெரியவில்லை.
கி. பி. 8 ம் நூற்றாண்டோடு பூர்வீக இந்தியா
வின் சரித்திரமும் முடிவுறுகிறது.

இந்தக் காலத்தில் புராணங்கள் உண்டான
படியால் இந்நானூறுவருஷங்களுக்கும் (கி. பி.
400-800) சரித்திரத்தில் புராணகாலம் என்று
பேரிடப்பட்டிருக்கிறது. பிந்தி வந்த இரண்டு
நூற்றாண்டுகளில் இந்தியாவின் சரித்திரம் காரி
ருளடைந்து தெளிவுபடாமற் கிடக்கிறது. இந்
தக்காரிருள் மூடிய காலத்தில் நடந்த விஷயங்
கள் தெளிவாகத் தெரியாவிட்டாலும் அவை
இன்னவென்று ஒருவாறு ஊகிப்பது கூடாமை
யாகவில்லை. 5-ம் நூற்றாண்டின் துவக்கத்திலே
ஹூணர்களும் மற்ற அந்நிய ஜாதியார்களும்
கூட்டங் கூட்டமாக மேலிந்தியாவிலும், தெ
ன்னிந்தியாவிலும் வந்திறங்கி கடற்கரையோ
ரங்களைக் கைப்பற்றி அங்கிருந்து அடிக்கடி
உள்நாடுகளிலுள்ள ஹிந்து ராஜாக்களின்மேல்
படையெடுத்துச் சென்று அவர்களைத் தொந்தி
ரவு செய்து வந்தார்களென்று சொன்னோமே.
இவர்கள் முதலில் ஹிந்துமத, ஆசார, நடை
யுடை பாவனைகளை அனுசரிக்கத் தலைப்பட்டு,
வரவர முற்றும் ஹிந்துக்களாகவே மாறிவந்தா
ர்கள். இவர்கள் உபத்திரவத்தால் ஹிந்து ராஜ்
ஜியங்கள் பலவீனப்பட ஆரம்பிக்கவும் இவர்
கள் கை வரவரப் பலப்பட்டு வந்ததாகத் தெரி
கிறது. 9, 10-ம் நூற்றாண்டுகளிலுண்டான
குழப்பத்தில் இவர்கள் ஹிந்து ராஜாக்களை
யெல்லாம் கீழ்ப்படுத்தி தாங்களே ராஜாங்கத்
தைக் கைக்கொண்டு, ராஜ்ஜியமாளுவதே தங்
கள் தொழிலெனச்சாதித்து, தங்களை ராஜபுத்தி
ரர்கள் என்று சொல்லிக்கொண்டு கிளம்பிய
தாகத் தெரிகிறது. இவர்கள் கை முற்றும்
பலப்படவே சுத்த ஆரியர்களான ஹிந்துக்கள்
இவர்களை நூதனமான ஒரு க்ஷத்திரிய வகுப்
பாராக ஏற்றுக்கொண்டு, இவர்களுக்கு மந்திரி
களாகவும், புரோகிதர்களாகவுமிருந்து புத்தி
யுக்தி ஆலோசனை சொல்லும் அதிகாரத்தை
மட்டும் கை நழுவவிடாமல், இவை பிராமணர்
களுடைய கடமைகளென்று இவ்வதிகாரங்க

* இந்த அரசன்நாளையில் 'ஹூவேன்த்ஸாங்' என்
னும் சீனதேசத்து யாத்திரிகர் புத்தமத க்ஷேத்திரங்
களை விஜயம்செய்யும்பொருட்டு இந்தியாவில் பிரயா
ணம்செய்துவந்தார். அவர் அப்பொழுது தாம் கண்ட
நாடுநகரங்கள் மற்ற விசேஷங்கள் முதலியவற்றைப்
பற்றிக்குறிப்பிட்டு எழுதிவைத்துப்போன புஸ்தகத்
தால் 7-ம் நூற்றாண்டில் ஹிந்துக்களுடைய நாகரிகம்
நடையுடைபாவனை விசேஷங்களைப்பற்றி நாம் அறி
யக்கூடிய விஷயங்கள் அனேகமிருக்கின்றன.

ளைத் தங்கள் கையிருப்பிலே வைத்துக்கொண்டார்கள். ஆகவே இந்தியாவைமூடிய இக்காரிருட்படலம் 10 ம் நூற்றாண்டின்கடைசியில் ஒருவாறு நீங்கி சரித்திர வெளிச்சம் மறுபடியும் தோன்றும்பொழுது முன் பேர்பெற்ற ஹிந்து ராஜ்ஜியங்களாயிருந்து விளங்கிய, உஜ்ஜினி, கானோஜ், டில்லி, குஜராத், பஞ்சாப் ஆகிய ஒவ்வொரு இடத்திலும் ராஜபுத்திரர்கள்அரசர்களாயிருந்து அரசாண்டுவரக் காண்கிறோம்.

C. V. S.

பிழைதிருத்தம்.—இச்சரித்திரத்தின் முதல் அத்தியாயத்தில், விவேகசிந்தாமணி 2-வது பக்கம், மூன்றாவது 'பாரா' முதல் வரியில் 'மேஷராசி' யென்றிருப்பது 'மகரராசி' யென்று இருக்கவேண்டியது. இதை வாசிப்போர் அனைவரும் தயவுசெய்து இப்பிழையைத் திருத்திக்கொள்ளக்கோருகிறோம்.

## கடற்காற்று, தரைக்காற்று:

## இவற்றின் உற்பத்திவிவரம்.

இப்போது (ஜூன்மாசம்)நமக்கு நல்ல கோடைகாலம். வெயிலினால்தாபமதிகரிக்கும்போது எப்போது குளிர்ந்தகாற்று அடிக்குமென் றெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். கடலோரத்திலுள்ள ஊர்களுக்குப் பன்னிரண்டு மணிக்கு மேல் குளிர்ந்த கடற்காற்றுப் புறப்பட்டு வெயிலின்கொடுமையைத் தணிக்கும். கடற்காற்றுத் திரும்பவில்லையே திரும்பவில்லையே யென்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்து அதுவந்தவுடன்தான் நமக்கு உற்சாகமுண்டாகிறது. கடலோரத்தி லில்லாத ஊர்களுக்கு சாயங்காலத்தில் தென்றல் காற்றடித்து உஷ்ணத்தைத் தணிக்கும். இப்போது கடற்காற்றானது எப்படியுண்டாகிறதென்று பார்ப்போம். கடலோரத்திலிருக்கிறவர்களுக்குத் தினம் கடற்காற்று பிற்பகலிலும் தரைக்காற்று முற்பகலிலுமாக

வி

எப்படியுண்டாகிறதென்றும் உஷ்ணமாகவீசும் தரைக்காற்று எவ்வாறடிக்கிறதென்றும் நம்மில் எத்தனைபெயர் யோஜித்துப்பார்க்கிறோம். சூரியசந்திரன் உதித்து அஸ்தமிக்கிறதுபோல் தவறாமல் தினந்தோறும் இந்தக் காற்றுகளடித்துக்கொண்டிருக்கின்றனவே. அது என்னத்தினாலென்று நாம் அனேகமாய் விசாரிக்கிறதில்லை. நாள்தோறும் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் வஸ்துக்களிலும் விஷயங்களிலும் விசேஷமிருக்கிறதாக நமக்குத் தோன்றுகிறதில்லை. மலையடியிலேயே பிறந்து வளர்ந்தவனுக்கு அந்த மலையினுயரமும், அதின் வெவ்வேறு விதமான கற்களும் செடி கொடிகளும் ஆச்சரியமாகக்காணப்படாது. மலையைப்பார்க்காதவன் அதைக் கண்டவுடனே அதிலுள்ள கல்லுகளையும் செடிகளையும் கண்டு ஆனந்தப்படுவான். கடலோரத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு அதன்பெருமையும் அலைமுதலானவைகளும் விசேஷமாகத் தோன்றாது. அதைப் பார்க்காதவன் முதலில் கண்டவுடன் ஆச்சரியப்படுவதோடுகூட எப்படி ஈசுவரன் சிருஷ்டித்தானென்று யோஜிப்பதுமுண்டு. சாயங்காலவேளையில் தினந்தோறும் கடற்கரைக்குக் காற்றுவாங்கப்போனாலும் அங்கே நாம் படுத்து விளையாடும்படியான மணல் எப்படி அங்கே வந்தது, எங்கேயிருந்து உற்பத்தி ஆயிற்றென்று யோஜிக்கிறோமா? ஈசுவரசிருஷ்டியானது யோஜித்துப் பார்த்தால் அற்பமாகத்தோன்றும் பதார்த்தத்திலும்வெகு ஆச்சரியமாயிருக்கிறது. ஒவ்வொன்றையும் சவனித்துப் பரிசோதித்துப் பார்த்தால் ஈசுவரன் மகிமை புலப்படும். பிரபஞ்ச சிருஷ்டியின் தத்துவமும் விளங்கும். பார்க்கப் போனால், சாதாரணமாய் ஒருபுளியம்விரையை மண்ணில்போட்டால் நாலு ஐந்து நாளுக்கெல்லாம் முளைக்கிறதே; அதெப்படியென்று கேட்டால் அதற்குப் பதில் சொல்லுவது எவ்வளவு கஷ்டம். நம்மில் எத்தனைபேர்களுக்குத்தான் சரியானபதில் தெரியும். ஆகையால் அற்பமாய்க் காணப்படும் விஷயங்களையும் நன்றாக



கடற்காற்று.—கடற்காற்றுகுளிர்ந்து வீசுகிறதற்குக்காரணம் அக்காற்று சமுத்திரத்தண்ணீரின்மேற்பட்டு வருவதாலென்று எல்லாருக்குந் தோன்றலாம். ஆனாலக்காற்று பிற்பகலில்மாத்திரம் அடிக்கிறதற்குக் காரணமென்னவென்று பார்ப்போம். சூரியன் பிரகாசத்தால் எல்லா வஸ்துக்களும் உஷ்ணப்படுமென்பது தெரிந்தவிஷயம். வெயிலில் ஒருகல் கடந்தால் அது சுட்டுப்போகிறது. நம்முடைய கண்ணுக்குத் தெரியாத காற்றுமவ்வாறே. மழைகாலத்திலும் பனிகாலத்திலும் காற்றுக் குளிர்ந்தடிக்கிறது. வெயிலதிகமாயிருக்கும் கோடைகாலத்தில் காற்று வெப்பமாயிருக்கிறது. அடுப்பண்டையிருந்தால் அடுப்பில் பட்டுவரும் காற்று உஷ்ணப்பட்டு, நம்மேல் உஷ்ணமாயடிக்கும். வெயிலில் ஒரு கருங்கல், கட்டை,ஒரு பாத்திரத்தில் ஜலம் இவைகளையெல்லாம் வைத்துவிட்டுக் கொஞ்சநேரத்திற்கெல்லாம் பார்த்தால் கருங்கல் அதிகமாகவும் கட்டை கொஞ்சமட்டாகவும் சுட்டிருக்கும். ஜலம் எல்லாவற்றைக்காட்டிலும் குறைச்சலாக உஷ்ணப்பட்டிருக்கும். செம்பு பித்தளைப் பாத்திரத்தில் வைத்திருந்தால் அந்தப் பாத்திரம் உஷ்ணப்பட்டுத் தண்ணீரும் சுடலாம். மரப்பாத்திரத்தில் வைத்தால் சீக்கிரம் சுடாது. இதனால் நமக்கென்ன தெரிகிறதென்றால் சூரியன் வெயிலினால் சில பதார்த்தங்கள் அதிக சீக்கிரத்திலும் சில கொஞ்சம் மெதுவாகவும் உஷ்ணப்படுகின்றனவென்று தெரிகிறது. காலையில் சூரியன் உதயமானதுமுதல் அவன் கிரணங்கள்பட்டு உலகத்திலுள்ள வஸ்துக்கள் கொஞ்சம் கொஞ்சமாய்ச்சுட ஆரம்பிக்கும். காலையில் சூரிய வெப்பம் அதிக உக்கிரமாயிராது. நாழிகையதிகரிக்க அதிகரிக்க உஷ்ணமும் ஜாஸ்தியாகி எல்லாம் சுட்டுப்போகின்றன. கடல்நீருமப்படியே காலையில் அதிகமாய் உஷ்ணப்படாது. வெயில் ஜாஸ்தியாகஆகத்தண்ணீரிலும் அதிக உஷ்ணம்படுகிறது. ஆனால் முன்னேசொன்னபடி தரையும் அதிலுள்ள வஸ்துக்களும் சீக்கிரம் உஷ்ணப்பட்டுப்போகும். தண்ணீரோ அவ்வளவுசீக்கிரத்திலாகிறதில்லை. அதிகாலைவேளையில் பார்த்தால் தண்ணீரும்தரையும் உஷ்ணத்தில் ஒன்றுக்கொன்று வித்தியாசமில்லாமலிருக்கலாம். எட்டுமணி சுமாருக்குத் தரை கொஞ்சம் சுட ஆரம்பிக்கும். சுமார் 11, 12 மணிக்கு தரை கொதித்துப்போய்விடும். கடலோ அதிகமாய்ச் சுட்டுப்போகிறதில்லை. தரையானது சுட்டும் கடல் சுமாராகக் குளிர்ந்துமிருக்கிறதினால் என்ன உண்டாகின்றதென்று பார்ப்போம். நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்றும் உஷ்ணசீதள சம்பந்தத்தினால் முறையே உஷ்ணப்பட்டும் குளிர்ந்தும்வருமென்று கண்டிருக்கிறோம். அடுப்பண்டையிலிருக்கும் காற்று எவ்வாறு சுட்டுப்போகிறதோ அவ்வாறே தரையைச் சூழ்ந்திருக்கும் காற்றும் சுட்டுப்போகும். கடலைச்சூழ்ந்திருக்கும் காற்று தரையைச் சூழ்ந்திருக்கும் கரற்றைப்போல் சுட்டுப்போகாமல் சுமாராய்க் குளிர்ந்திருக்கும். ஒரு பக்கத்தில் காற்றுச்சுட்டும் இன்னொருபக்கத்தில் குளிர்ந்துமிருக்கும் காற்றுகள் அப்படியப்படியே யிருக்குமாவென்று பார்ப்போம். அசையாப்பொருளாகிய கல் முதலானவை இருக்குமிடத்திலேயேயிருக்கும். காற்று எப்போதும் அசைந்துகொண்டேயிருக்கும். ஒரு விநாடியிலிருந்தவிடத்தில் இன்னொரு விநாடியிலிருக்காது. அசைவதானது நம்முடையகண்ணுக்குத் தெரியாமற்போனாலும் ஒருவிதமாயறியலாம். ஜன்னலைச்சாற்றிவிட்டுக்கொஞ்சம்திறந்துவைத்து அதின்வழியாக சூரியன் வெளிச்சம் ஒரு அறைக்குள் வரும்படிசெய்தாலும்சரி; இல்லாவிட்டால் ஓட்டில் ஒருதுவாரத்தின்வழியாக சூரியவெளிச்சம் வந்தாலும்சரி. கத்தையாய்வரும் வெளிச்சத்தில் பார்த்தால் சின்னத் தூசியும் குப்பையும் கிடுகிடென்று போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருக்கும். அந்தத் தூசிகள் ஓடுவதற்குக் காரணம் காற்று. ஆற்றில் தண்ணீர் ஓடும்போது இலைசெடிகளைத் தன் வேகத்தால் கொண்டுபோவதுபோல், காற்றும் தான் போகும்போது தூசிகளையடித்துக்

கொண்டுபோகும். சாதாரணமாய்க் கண்ணுக்குத்தெரியாது. வெளிச்சத்தினால் தூசிதுப்பு போகிறது தெரிகிறதனால் காற்றின் ஓட்டத்தை ஊகிக்கிறோம். இப்போது தரையின்பேரிலும் தண்ணீரின்பேரிலுமுள்ள காற்று என்ன செய்கிறதென்று கவனிப்போம். அதையறிவதற்குமுன்னாலே உஷ்ணப்படுவதால் பதார்த்தங்கள் ஏதாவது மாறுதலையடைகின்றனவாவென்று பார்க்கவேண்டும். கறண்டிக்காம்பை அடுப்பில்போடுவோம். அதுபழுக்கப்பழுக்கக் காய்கிறது. அது அடையும் விகாரங்களனேகங்களில் ஒன்றைப்பற்றிமாத்திரம் இப்போது கவனிப்போம். அதாவது, கரண்டிக்காம்பு கொஞ்சம் பெருக்கும். அது கண்ணுக்கு நன்றாகத் தெரியாது. ஒரு இரும்புமோதிரத்தில் சரியாய்ப்போகும்படியான ஒரு இருப்புக் கோலிக்குண்டையெடுத்துக்கொண்டு அந்தக்குண்டைமாத்திரம் அடுப்பில் போட்டுக்காய்ச்சுவோம். அதை ஒரு சாமணத்தால் பிடித்துக்கொண்டு இப்போது அந்தக்குண்டு மோதிரத்தில் முன்போல் சரியாய்ப் போகுமாவென்று பார்த்தால் போகாது. இதனால் என்ன விளங்குகிறதென்றால் இரும்புக்குண்டு உஷ்ணப் பட்டதால் பருத்துவிட்டதென்பது விசிதமாகிறது. உஷ்ணத்தினால் இரும்பு முதலிய கடின வஸ்துக்கள் மாத்திரமல்ல. தண்ணீரைப் போன்ற திரவ பதார்த்தங்களும் காற்றைப்போன்ற சூக்ஷ்மபதார்த்தங்களும் உஷ்ணப்பட்டால் பருமனில் ஜாஸ்தியாகும்.

உருவம் பெருத்தால் என்ன உண்டாகும்? அது இலேசாக ஆகிவிடும். இரும்பைக் காட்டிலும் தங்கம் கனமென்று சொல்லுவார்கள். அப்படியென்றாலென்ன? இரும்பில் ஒருபலமும் தங்கத்திலொருபலமும் எடுத்துநிறுத்தால் சரியாய்த்தானிருக்கும். இப்படியிருக்க கனம் லேசென்று எப்படிச் சொல்லுகிறது. ஒருவீசை கத்திரிக்காய் வாங்குகிறோம். கத்திரிக்காயின் கனமும் ஒரு வீசைக் கல்லின் கனமும் [illegible] சைக்கல் சிறிதாயிருக்கிறது. கத்திரிக்காயோ அதைப்போல் எவ்வளவோ மடங்கு பெரிதாயிருக்கிறது. ஒருகையில் ஒரு கத்திரிக்காயையும் இன்னொருகையில் அந்தக்கத்திரிக்காயவ்வளவு பருமனுள்ள இரும்பையும் எடுத்துப் பார்த்தால் கத்திரிக்காய் வெகு லேசாகவும் இரும்பு அதிக கனமாகவுமிருக்கும். ஆகையால் இரண்டு வஸ்துக்களில் ஒன்று கனம் மற்றொன்று இலேசு என்று சொல்லுவதின் தாற்பரியம் என்னவென்றால் ஒரேபருமனுள்ளதாக இரண்டையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் எது கனமாகத்தெரிகிறதோ அதைக் கனமான வஸ்துவென்றும் மற்றொன்றை இலேசான வஸ்து வென்றும் சொல்லுகிறோம். உஷ்ணப்படுவதால் காற்று பருக்குமென்று சொன்னோம் பருத்ததினால் பக்கத்திலுள்ள உஷ்ணப்படாத காற்றைக்காட்டிலும்லேசாக ஆகிவிடாதா? அது எப்படியென்று இன்னும்சற்றுப்பார்ப்போம் சூரிய உஷ்ணத்தால் பூமியானது சுட்டுப்போகிறது. அதற்குச் சுற்றியும் அதன்மேல் பட்டுக்கொண்டுமிருக்கிற ஒருகுன்றுமணிப்பருமனுள்ள காற்றைப்பற்றி மாத்திரம் பேசுவோம். அந்தக்குண்டுமணிக் காற்று தன்மேல் பூமியினுஷ்ணம்படுவதால் ஒன்றரைக் குன்றுமணிப் பருமனுவதாக நினைப்போம். இதற்குமேலே உஷ்ணப்படாமலிருக்கும் குன்றுமணிக் காற்றைக் காட்டிலும் இது லேசாகிவிடாதா. கத்திரிக்காய்ப் பருமனையும் வீசைக்கல் பருமனை யோஜித்துப் பார்த்துக்கொள்ளுவோம். [illegible] படியே ஒவ்வொருகுன்றுமணிக் காற்றுமா[illegible] இப்படி உஷ்ணப்பட்டதால் பூமிக்குச் சமீப[illegible] லுள்ள காற்றானது இலேசாகி மேலே கிளம்பி[illegible] விடும். காற்றானது எப்போதும் அசை[illegible] கொண்டிருப்பதால் லேசாயிருக்கும் கா[illegible] அடியிலும் கனமாயிருக்கும் காற்றுமேலே தங்கியிராது. ஒரு பாத்திரத்தில் தண்ணீ[illegible] வைத்து அதற்கடியில் ஒரு செட்டியைப்போட்டால் அது அடியிலிருக்குமா? அடியில் [illegible] யெடுத்தவுடனே கிவைத்தால்கூட கை[illegible] மேலே கிளம்பு[illegible]



அது இருந்தவிடத்திற்கு மேலேயிருந்த தண்ணீர் வந்துவிடும். இதை நாம் நேரில் பார்க்க முடியும். காற்று மேலே போகிறதும் கீழே வருகிறதும் கண்ணுக்குத் தெரியாதாயினும் இவ்வாறு நடக்குமென்று நாம் ஊகிக்கிறதோடு ஒருவாறு பிரத்தியட்சமாகவும் காணலாம். ஒரு வெள்ளை ஸீஸாவில் கொஞ்சம் புகையையடைப்போம். காற்றென்றால் கண்ணுக்குத் தெரியாது. புகை கண்ணுக்குத் தெரியும். அந்த ஸீஸா அடியில் சற்றே விளக்கைக் காட்டினால் அடியிலிருக்கிற புகை மேலேகிளம்பிவிடும். மேலேயிருக்கும் புகை கீழே வரும்.

ஆகையால் சூரியனுஷ்ணத்தினால் உஷ்ணப்படும் பூமிக்குச் சமீபத்திலிருக்கும் காற்றும் உஷ்ணப்பட்டு லேசாகி மேலே கிளம்பிப்போகும். அக்காலத்தில் சமுத்திரமானது பூமியைப்போல் அவ்வளவு உஷ்ணப்படுகிறதில்லையென்று கண்டோம். அதைச் சுற்றியிருக்கும் காற்றானது குளிர்ந்தும் பூமியைச்சுற்றியிருக்கும்காற்றைக்காட்டிலும் கனமாகவுமிருக்கும். பூமியை யொட்டியிருக்கும் காற்று மேலேபோனவுடனே அந்தவிடத்திற்குக் கடலினின்று குளிர்ந்தகாற்றுவருகிறது. இதுதான் பிற்பகலிலடிக்கும் கடற்காற்று.

**தரைக்காற்று.** பகலில் சுமார் பன்னிரண்டு மணிக்கு ஆரம்பிக்கும் கடற்காற்று சாயங்காலமெல்லாமடித்து இராத்திரியிலும் வெகுநாழிகையடிக்கும். அதற்குப்பின் தரைக்காற்றுத் திரும்பும். பகலில் சூரியகிரணத்தால் பூமிகாய்ந்து சூரியன் அஸ்தமனமாக பூமியின்கொதிப்புக் கொஞ்சம் கொஞ்சமாக நீங்குகிறதைப் பார்க்கிறோம். பகலில் தன்னிடத்திருந்த உஷ்ணத்தை யெல்லாம் போக்கி ராத்திரியில் பூமி குளிர்ந்துபோய் விடுகிறது. சமுத்திர ஜலமுமப்படியே. ஆனால் பூமிக்கும் சமுத்திரத்திற்கும் ஒரு வித்தியாசமுண்டு. பூமி எப்படி சூரியக்கிரணங்களை வாங்கிக்கொண்டு ஜலத்தைக் காட்டிலும் சீக்கிரத்தில் உஷ்ணப்படுகிறதோ அவ்வாறே தன்னிடத்திலுள்ள காங்கையை சீக்கிரம் கொடுத்துவிட்டு தண்ணீரைக்காட்டிலும் சீக்கிரத்தில் குளிர்ந்துபோய்விடும். அது எப்படிப் போலென்றால் சிரமப்பட்டுப் பணத்தைச் சம்பாதிக்கிறவன் அந்தப்பணத்தை வாரியிறைத்து விடாமல் மெதுவாகவே செலவுசெய்வான். சிரமமில்லாமல் சம்பாதிக்கிறவன் எவ்வளவு சீக்கிரத்தில் சம்பாதிக்கிறானோ அவ்வளவு சீக்கிரத்தில் இறைத்துவிட்டு மற்றவனைக்காட்டிலும் முதலில் பணக்காரனாயினும் கடைசியில் அவனைவிட ஏழையாய் விடுகிறான். அப்படிப்போல பூமி முற்பகலில் தண்ணீரைவிடச் சூடாகவிருந்தும்ராத்திரியாக ஆகத் தன் உஷ்ணத்தைச் சீக்கிரம் கொடுத்துவிட்டு சமுத்திர ஜலத்தைக் காட்டிலும் குளிர்ந்துபோய்விடுகிறது. ஆகையால் கடற்காற்று ராத்திரியில் உண்டாகும் நியாயப்படியே, சமுத்திரத்தை யொட்டியிருக்கும் காற்று உஷ்ணமாகவும் தரையையொட்டியிருக்கும் காற்று குளிர்ந்துமிருக்குமாதலால் சமுத்திரத்தைச் சேர்ந்த காற்று லேசாகிப்போய்விட அந்த இடத்திற்குத் தரையினின்றும் காற்று ஓடிவரும். நல்ல கோடைகாலத்தில் பூமிகொதித்து நன்றாக ஆறிக் குளிராதாதலால் அந்தக்காற்று உஷ்ணமாகவேயிருக்கும். கொதிக்கும்படியான மலையில் பட்டுவருமாயின் அதிகக் காங்கையாயிருக்கும். ஆகையால்தான் சென்னப்பட்டணம் முதலான சிலஊர்களில் மே ஜூன் மாசத்தில் பகலில் 11 மணிவரையிலடிக்கும் தரைக்காற்று நெருப்பைப்போலிருக்கும். அந்தக் காற்று கொதித்துக் கொண்டிருக்கிற மலை, குன்றுகளிற்பட்டு வருவதால் நிரம்ப உஷ்ணமாய் வருகிறது.

**தீ. அரங்கசாமி ஐயங்கார், எம். ஏ.**

# IN MEMORIUM.

## WILLIAM EWART GLADSTONE.

காலம் சென்ற மஹா புருஷராகிய க்ளாட்ஸ்டன்துரை அவர்களைப் பற்றிப் பாடிய பாடல்கள்.

நேரிசை வெண்பா.

1. பூதலத்தோ ரெல்லாம், புகழ்ந்து மகிழ்ந்துவளர்
காதலுடன், போற்றநின்ற க்ளாட்ஸ்டனே!—போதியோ,
புண்ணுறுவெந் நெஞ்சம் புழுங்கிப் புலம்பவிட்டு,
விண்ணாடு நோக்கி விரைந்து?

2. எண்ணிற் பெரியோனே, யிவ்வுலகந் தன்னைவிட்டு
விண்ணுக் கெழுந்தாயோ மேலவனே?—மண்ணெல்லாம்,
வன்றுயர மெய்தி மறுகுவது கண்டிலையோ
நன்றுடையாய், சென்று யென?

3. ஆவித் துணையா, வடிநாளி லேயன்பால்
மேவித் தெரிந்த [1] விளங்கிழையைப்,—பாவித்துத்,
தெய்வம்போற் போற்றுந் திருவுடைய கற்பரசை,
நைவுறவிட் டாயென் நவில்?

4. ஆதரித்த மாதரசை, யன்புடைய மக்கடமை,
நீதவிர்த்துச் சென்றிடினும், நீங்காத—ஓதுகவி
[2] ஹோமர்மஹாகாவியத்தை உற்றொழிய வல்லாயோ?
ஆமதனுக் கென்செய்வா யாங்கு?

5. ஆனகுணத்தா, லறிவா, லொழுக்கத்தால்,
மாணவரை வென்ற வலியோனே,—ஏனையொரு
விண்ணுடர் தங்களையும் வெல்லுதற்கோ சென்றனையால்,
அண்ணல்,நீ மற்றவற்று லாய்ந்து?

6. அன்புக் குறைவே, யருட்குறைவே, யாசகலும்
இன்பக் குணக்கடலே, யேந்தலே,—நின்போல,
ஓங்க உலகுயர்த்தி, உண்மைதனைச் சாயாது
தாங்கச், சமர்த்துடையார் யார்?

1 Mrs. Gladstone. இவரதுமனைவி.

2. ஹோமர். கம்பர்போலும் சிறந்த கிரேக்கமஹாகவி. இவர் காவியத்தை க்ளாட்ஸ்டன் நாடோறும் நியதமாகப்படிக்கும் வழக்கமுடையவர்.



7. கண்ணிற், கவசத்திற், காவலட்குக் காரியங்கள்
பண்ணும் அமைச்சியலின் பண்பறிவார்,—எண்ணுங்கால்,
நின்போல வுண்டோவிந் நீள்புவியில்? லோஹத்துட்
பொன்போல வுண்டோ புகல்?

8. எத்துணைய மிக்க எளியாரிடத்தினிலும்
ஒத்து விநயம் குறையா உத்தமனே,—இத்தலத்தில்,
தன்னுறுதி நாடாது தாரணியோர் தம்முறுதி
உன்னுபவர் உன்போ லெவர்?

9. தானடைந்த நன்மைதனைத் தாரணியில் ஏனையரை
ஊனமற வென்றும் உறுவிக்கும்—மாநயப்பால்,
நாடி அயர் லாந்தினுக்குன் நாளெல்லாம் பட்டதொரு
பாடறியோர் யாரே பகர்?

10. எளிமை குடியிருந்த இந்தியர்க்குச் செய்த
அளியின் தகைமையுணர்ந் தண்ணால்,—களிகொண்ட
நெஞ்சம் நலிந்தின்று நீள்துயரில் மூழ்குற்றேம்,
துஞ்சினைநீ யென்சொற் சுட.

11. கீதம்போல் நாதம் கிளர்ந்து, மடைதிறந்த
ஓதம்போ லோங்கும் உனதுரையைத்,—தீதில்
[3] அவிமடுத்த தென்ன அருஞ்சுகம் யா மெய்தச்
செவிமடுப்ப தென்றோ வினி?

12. துட்டருக்குச் செங்கனலைத் தூற்றுகின்ற பேரிடிபோன்ம்,
சிட்டருக்குத் தேன்சொரிந்த செய்கைபோன்ம்,—கிட்டருநின்
வாக்கினெழில் வல்லபத்தால் மாசபையோர் கைபுடைத்து
நோக்குமகிழ் வென்றோ நுவல்?

13. வாக்கெனுநற் றேன்வாய் மடுத்துன் வயப்பட்டுப்,
போக்குகின்ற நின்வழியே போதம்சேர்,—தேக்கவையை
நன்னெறியிற் செல்ல நலமா நடத்தவலார்
உன்னைநிகர் வோரா ருளர்?

14. உற்றவிடை யூறனைத்தும் ஊக்கத்தாலே கடந்து
பெற்றதொரு வென்றிப் பெரியோனே,—குற்றமறு
பேரறிவால் நாடிப் [4] பிரித்தன் உளக்குறிப்பை
நேரறிவார் நின்னன்றி யார்?

3. தேவருணவை யுண்டதென்ன.

4. Britain.

# THE LIFE AND TEACHINGS OF Sree Krishna.

# ஸ்ரீ கண்ணபிரான் திவ்ய சரித்திரமும், மெய்யுபதேசமும்.

(8-வதுபக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு, ஸ்ரீ கண்ணபிரானது கல்யாண குணங்களையும் திவ்ய சரித்திரத்தையும் ஒருவாறு விவரித்தேனாயினும், அவரது நிர்மலமான பெயரை அழியாமல் நிலைநிறுத்துவதும், அவரைப் போலும் மகிமையையுடையார் உலகில் வேறில்லை என்று எல்லோராலும் என்றென்றும் அவரைக்கொண்டாடித் துதிக்கச் செய்வதும் யாதென்னில், அவர் அருச்சுனனுக்கு உபதேசித்தருளிய ஒப்புயர்வற்ற பரமஞானமேயாம். அவ்வருச்சுனன் எல்லா நற்குணங்களையும் மேன்மையையும்பெற்று, அதுகாறும் ஆத்மலாபத்தைக் கருதாமல் பேரும்புகழும் பெறுதலையே பிரதானமாகக் கருதி மிக்கதீரமும் துணிவும் வாய்த்திருந்தும், குருக்ஷேத்திர யுத்தபூமியில் பகைவரை எதிர்த்துநிற்கும் அச்சமயத்தில், 'அவையஞ்சிமெய்விதிர்ப்பார் கல்வித்திறம்' போல அவை யொன்றும் பயன்படாமல் தனக்குரிய க்ஷத்திரிய தருமத்தை நிறைவேற்றுதற்கின்றியமையாத தைரியத்தைக் கைவிட்டவனாய் "ஐயோ, அநித்தியமான ராஜ்யபோகத்துக்காக அரிய பந்துவர்க்கங்களைப் போரிற்பொருது கொல்வேனோ" என்றஞ்சிப் பாரமான மனத்துயரத்தாழ்ந்து அதைரியப்பட்டுப் பின்னிடைந்தபொழுது, எம்பெருமான்,

"நல்லர்தம்மை நவையறக்காக்கவும்
அல்லர்தம்மை அழிவுறமாய்க்கவும்
மல்லறத்தைநிறுத்தவும்மாண்புறச்
சொல்லினூழிதோறும் பிறப்பேனரோ."

என்றபடித் தாம் அவதரித்ததற்குக் காரணமாகிய நல்லோரைக்காத்தல், தீயோரை அழித்தல், அறத்தை நிலைநிறுத்துதல் ஆகிய இம்மூன்று காரியங்களையும் ஒருங்கே நிறைவேற்றுவதற்கு அதுதான் தக்கசமயம் என்றும், அவ்வருச்சுனனது மோகத்தைநீக்கி, மெய்யுணர்வைக்கொடுத்து நிகரற்ற தத்துவபோதத்தினால் அவன் மெலிவைநீக்கி அவனைச் செய்கைக்குத் தூண்டுதலால் அக்காரியங்களை நன்கு நிறைவேற்றக்கூடும் என்றும் திருவுளம்கொண்டனர். அச்சந்தர்ப்பத்தில் அருச்சுனனை அவன் செய்ததற்கஞ்சும் காரியத்தை விட்டொழியும்படிப் போதித்தலும் மிக்க அநுசிதமாகும்; போரில் விருப்பமில்லா அவ்விரணசூரனைப் போருக்கெழுப்பி அநேகரைக் கொல்வித்தலும் மிகவும் கொடிய செய்கையாவதன்றியும் 'அஹிம்ஸாபரமோ தர்ம' என்று அஹிம்சையை வியந்து கூறியுள்ள தம் கொள்கைக்கு மிக்கவருத்தமும் ஆகும். நியாயமோ அநியாயமோ, தாமிட்ட கட்டளையைத் தம்மைவழிபடுவோர் மீறிநடக்கக் கூடாதென்னும் குத்திரபுத்தியையுடையோராயின், தம்கட்டளைக்குட்பட்டுத்தான் தீரவேண்டும் என்று அச்சந்தர்ப்பத்தில் அருச்சுனனை நிர்ப்பந்தித்துத் தம் கருத்தைச் சாதித்துக்கொள்ளக்கூடும். கண்ணபிரானோ அவனுக்கு ஒருசெய்கை அதர்மமாகவும் பாபகரமாகவும் தோற்றியிருக்க அதனைத் தம் கட்டளையையே காரணமாகக்காட்டி அவனை நிர்ப்பந்தித்துச் செய்விப்பாரல்லர். அவ்வாறு செய்வித்தல்தானும், அச்சமயத்தில் தான் செய்யற்பாலது இன்னதென்றறியாது கலங்கினும் நியாயாநியாயங்களை அறிந்த கல்விமானாகிய அருச்சுனனுக்குத் திருப்திகரமாகவும் இருந்திராது; அவனைச்செய்கைக்கும் தூண்டியிராது. அச்சமயத்தில் தத்துவஞானபோதமேயன்றி அவனது சஞ்சலங்களைநீக்கி அவன் செய்தற்குரிய காரியத்தைச் செய்யும்படி அவனைப்பிறிதொன்றும் தூண்டாதாதலால், கண்ணபிரான் அத்தகையான மெய்யுபதேசத்தையருளி அவன் கொண்ட துயரத்துக்கும் துன்பத்துக்கும் காரணம் அவனது அறியாமையே என்றறிந்து அவ்வறியாமையை எடுத்துக்காட்டுவாராயினர்.

"ஓ அருச்சுனா, உனக்கிவ்வதைரியம் எவ்வாறுண்டாகியது? எவர்பொருட்டுத் துக்கித்தல் அநாவசியமோ அவர்பொருட்டுத் துக்கியாநின்றாய். புத்திமான்கள், இருப்பவர்பொருட்டேனும் இறந்தவர் பொருட்டேனும் துக்கியார்.

"ஓ பார்த்தா, யாதொன்று இவ்வுலகமெங்கும் நிறைந்துள்ளதோ அஃது அழிவில்லாததென்றுணர்வாயாக. சர்வவியாபகமாகும் அச்சைதந்யம் அநாதிநித்யமாய் நாசாஹிதமாய், அவிகாரமாய், அவாங்மனகோசரமாயுள்ளதொன்று. மூவுலகங்களிலும் வியாபித்து அவற்றைத் திதித்துநிற்கும் பரமபுருஷனாய் பரமாத்மாவாயுள்ள ஈச்வரன் அனைத்தையும் சூழ்ந்து



அனைத்திலும் நிறைந்து நிற்பன். அகண்டனாயினும் அவன் சிருஷ்டிப் பொருள்களுக்கிடையே வெவ்வேறாகவும் நிற்பன்.

"காரணகாரியங்களாகிய பிரபஞ்சத்துக் காதியாயுள்ளது பிரகிருதியென்றறிவாயாக, நானாபேதங்களும் குணங்களும் எல்லாம் பிரகிருதியினின்று தோற்றியவைகளேயாம். அது புருஷன்போலவே அநாதியானது, அதுதான் சத்தியைக் கொடுக்கின்றது. அதன் வலியாற்றான் ஒவ்வொருவரும் தஞ்செயலின்றிச் செய்கைக்குத் தூண்டப்படுகின்றார்கள்; ஆயினும், அகங்காரத்தால் மதிமயங்கித் தாமே செய்பவராக எண்ணுகின்றனர். எவனொருவன் பிரகிருதியே செயல் புரிவதென்றும் தனக்கோர் செயலும் இல்லையென்றும் அறிகின்றானோ, அவனே உண்மையை அறிந்தவன். பிரகிருதிசம்பந்தத்தால் தேகோபாதியை யடைந்த ஜீவன் அப்பிரகிருதி வயத்தனாய்க் கட்டுண்டுகிடத்தலின் செய்கையை முற்றுந் துறந்திருத்தல் கூடாதாயின் ஜீவன்தானாகச் செய்வதும் யாதென்றும், அவன் எப்படிச் செயல் புரிந்தும் தானொன்றும் செய்கின்றிலனென்று சொல்லக் கூடுமென்றும், நீ கேட்கலாம். அதற்கு விடையாதென்னில், செய்கையை யுண்டுபண்ணும் சக்தி பிரகிருதியதேயாயினும் சுகதுக்கானுபவங்களுக்குக் காரணமாயிருப்பவன் ஜீவனே. ஜீவன் பிரகிருதியின் வயத்தனாயினும் கன்மபலத்தைத் தியஜிக்கும் சக்தி ஜீவனாலேயே உண்டாகக்கூடியது. மனிதன் தான் பிரகிருதியால் தூண்டப்பட்டுச் செய்யும் கன்மங்களின் பலங்களைத் துறப்பானாயின், தன்னுதற்கரிய பிரகிருதியின் உத்தேசத்தை நிறைவேறாமல் தடுக்க வல்லவனாவன். அப்போது அவன் கன்மங்களைச் செய்வானாயினும் கன்மாகிதன் என்று சொல்லப்படுவான். சுகதுக்கங்களாகிய தொந்துவங்களில் நீங்கிச், சத்துவகுணத்தினின்றும் என்றும் நீங்காமல், பொருள்களில் விருப்பமின்றித், தன்மயமாகிப் பரயோகத்திலிருந்து, பற்றுக்களைத் துறந்து, ஜயாபஜயங்களில் சமபாவமுடையோனாய் மனுஷ்யன் கன்மங்களைச் செய்யக்கடவன். கலங்காத ஞானத்தோடும், பரத்தில் பதிந்த புத்தியோடும் விருப்பு வெறுப்பின்றி, ஒருவன் கன்மங்களைச் செய்யக்கடவன். ஐம்புலன்களையும் வென்று, ஞானத்தால் சந்தேகங்களெல்லாம் சேதிக்கப்பெற்றுக், குணங்களால் அசைக்கப்படாமல், தன்னில் கலங்காத நம்பிக்கையுடையவனாய், ஒருவன் கன்மங்களைச் செய்க. பக்தி நிறைந்த தியானத்தோடும், அன்போடு செய்யும் பூசனையோடும், சத்வசம்பந்தமான மனோவாக் காய வைராக்கியத்தோடும், ஒருவன் கன்மங்களை அநுஷ்டிக்கக்கடவன். அடங்கியமனத்தோடும் அனைத்திலும் நிறைந்திருப்பவன் தானேயென்றும், தன்னில் நிறைந்திருப்பது அனைத்தும் என்னும் ஞானத்தோடும், ஒருவன் கிரியைகளை அநுஷ்டிக்கக்கடவன். ஆத்மநாசத்தைச் செய்யும் காயக்குரோத லோபங்களாகிய நரகவாயில்கள் மூன்றையும் அணுகாமல் விலகிநின்று, ஒருவன் கன்மங்களை அநுஷ்டிக்கக்கடவன். இவ்வாறு செய்யின் தன் கன்மங்களால் மலினமடையான். இது ஒன்றே இனி நமக்காஸ்பதம் என்றுணர்ந்து தருமங்களைமுற்றத்துறந்து ஒருவன் என்னைச் சரணமாக அடையின் அவனை என்றென்றைக்கும் பாசத்தின் நீக்கி முத்தியை அடைவிப்பேன்" என்று கூறி எம்பெருமான் அருச்சுனனை நோக்கி "இப்போது உன் மயக்கமெல்லாம் நீங்கிற்றா" என்று வினவினர்.

அதற்கு அருச்சுனன் கூறிய மறுமொழியை இன்னதென்றெடுத்துரைத்தலும் வேண்டுமோ? 'ஓ அச்சுதா! என் மயக்கமெல்லாம் நாசமாயொழிந்தது. என் ஐயுறவெல்லாம் நீங்கிவிட்டது. நான் இப்போது பந்தமொழிந்து முத்தனானேன். தேவரீர் அருளிச் செய்யும் வண்ணமே சித்தனாயிருக்கிறேன்' என்றனன். யாதவகுல ரத்னமாகிய ஸ்ரீ கண்ணபிரானுக்கும் பாண்டுகுலத்தலைவனுக்கும் நிகழ்ந்த அச்சம்பாஷணையின் உள்ளுறைப் பொருளைச் சுருங்கச் சொல்லின் எனக்குத் தெரிந்தவரையில் இதுவேயாகும்.

பகவத்கீதை யென்னும் இந்நூல் பிறப்பொழிந்து முத்தியை அடைதற்குச்சாதகமாகக்கொள்ளும் அநேகமார்க்கங்களின் பிரயோசனத்தை விளக்கும் ஓர் தீபிகையாகும். இதில், கர்மம், ஞானம், தவம், தானம், சந்யாசம், யஜ்ஞம், கடமை, அன்பு, பக்தி, சத்சங்கம், சரியை, யோகம் ஆகியவற்றின் பிரயோசனங்களைச் செவ்வையாகப் பரிசோதித்து, அவற்றின் உயர்வுதாழ்வுகளைப் படிப்படியாக வரையறுக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ கண்ணபிரான் அருளிச்செய்த இந்த பகவத்கீதையானது அதனுள்ளடங்கிய உபதேசத்தாலும் அதன் வியாபகத்தாலும் உவமையற்ற மகிமைதங்கிய ஓர் நூலாகும். உலகவாழ்க்கையை முற்றிலும் துறத்தல் முத்தியை அடைதற்கு இன்றியமையா மார்க்கமொன்றன்றென்றும், இவ்வாழ்க்கையில் இருந்துகொண்டும் ஜீவன் முத்

தியை அடையக் கூடுமென்றும், வேதத்தில் கூறியுள்ள பரமார்த்தத்தை யாவரும் உணர்ந்துய்யும்படி முதல் முதல் தெளிவாக வெளியிட்டுக் கூறிய நூல் இதுவன்றி வேறில்லை. இஃது அனைத்தையும் தன்னுள் அடக்கியிருப்பதும் அனைவர்க்கும் உரியதும் ஆசாபாசத்தில் கிடந்துழலும் வலியற்ற மனுஷ்யர் இப்பௌதிக சம்பந்தமான பஞ்சகோசத்தினின்றும் என்றென்றைக்கும் விடுபட்டு முத்தியை அடையக் கூடிய மார்க்கத்தை விவரித்து விளக்குவதில் சமானமற்றதும் ஆகும்.

கீதைக்கு அதுபோன்ற மற்றெல்லா மதகிரந்தங்களையும்விட விசேஷமான சிறப்பு யாதெனில் அவரவருடைய அறிவிற்கும் பக்குவத்துக்கும் ஏற்றபடி முத்தியை அடைவித்தற்குரிய அநுஷ்டானங்களையும் சாதனங்களையும் இது விதித்திருத்தலேயாம். அன்றியும் யுக்தியுக்தமாயினும் அயுக்தமாயினும் எப்படியாயினும் சரி, தான்கொண்டதே கொள்கையென்று வாயாடி கையாடியாகச் சாதிக்காமல், இந்நூல் தனக்கு முன்னும் பின்னும் தோற்றிய சித்தாந்தங்களையும் மதங்களையும் அங்கீகரித்து, முமுக்ஷு தான் அடையக் கருதியபதவிகளை அடைவிக்க பிறநூல்களுக்குள்ள யோக்யதையை உள்ளவளவில் ஒப்புக்கொள்ளுதலும் இதன் பெருமையாகும். மற்ற மதக்கிரந்தங்களைப் போல் ஒன்றோடொன்றொவ்வாது வேறுபடும் சில அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் முற்றிலும் தள்ளிவிடாமல் கீதையானது அவ்வித வேறுபாடுகள் உண்டாயிருத்தற்குத்தக்க காரணங்களை யுக்திக்கொக்கும்படி விளக்கிக்காட்டி, உண்மைநூலுக்கு லக்ஷணம் கடினமான விஷயங் கண்டும் காணாததுபோல் விட்டுவிடுவதன்று, ஒவ்வொன்றுக்கும்தக்கநியாயத்தை விளங்கவைப்பதேயாம், என்பது இதற்கே உரித்தென்று துதிக்க நின்றது. அந்யமதங்களின் கொள்கைகள் எல்லாம் இதில் நின்று அரைகுறையாக எடுத்து விளக்கமில்லாமல் ஒருவாறு சேர்க்கப்பட்டவைகளேயாம். ஒவ்வொருமதமும் அதன் கொள்கைகளும் ஸ்ரீ கண்ண பிரானது கீதையில் வெள்ளிடைமலைபோல் பளிச்சென்று விளங்குகின்றன. வேத வேதாந்தங்களின் சாரமாகியதும், உபநிஷத்துக்களில் மஹா உத்கிருஷ்டமானதுமாகிய இக்கீதையின் பெருமையையும் அழகையும் யுக்தியுக்தத்தையும்எத்திறத்தாருக்கும் பொருந்துந் தன்மையையும் நான்இதனிலும் விரிவாக எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. இஃது சார்வாகர் லோகாயதர்களின் புனைசுருட்டாகிய குளாந்தகாரத்தில் மூழ்கிவெளிக்காணாமல் உழன்று, உண்மையை நாடுபவர்க்கு, அவ்வந்தகாரத்தினின்றும் நீங்கியுய்ய இதுவொன்றே ஒளியென்று கொள்ளும்படி நிற்பது. இந்நூல் முழுதும் ஆதியோடந்தமா விரவியுள்ள சர்வசமயசமரசக் கொள்கையானது இதனை மதவிஷயத்தில் அனைவர்க்கும் அங்கீகிருதமாக்கற்பாலது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அருளிச்செய்துள்ள "ஒருவன் என்னை எவ்வாறு அடுக்கின்றானோ அவ்வாறே நானும் அவனைச் சுவீகரிக்கின்றேன்" என்னும் இவ்வசனம்,

"இலகுஞானியர்பேதையர்இருந்தவத்தவர்தாம்
அலகில்பல்பெயர்அவரவர்க்கியன்றனவளித்து
நிலவவெங்குமெஞ்ஞான்றடிதொழவுறுங்மலன்
உலகம்யாவையுமுதவியஒருமுதல்வனே."

என்னும் அம்முதற்கடவுளே தாமென்னும் அவரது உணர்ச்சியையே தெரிவிக்குமன்றோ.

கீதையையும் அதன்பெறுதற்கரிய மெய்யுபதேசத்தையும் பற்றி இவ்வளவாக விவரித்தேன். இனி இத்தகையான ஒருநூலை உபதேசித்தல், சச்சிதானந்தமாகிய மெய்ப்பொருளை யுணர்ந்தவராய் அப்பொருளேதாமாகி ஆன்மாக்களை உஜ்ஜீவிப்பிக்கும் பொருட்டு அவதரித்தருளியவரல்லாத ஒருவரால் சாத்தியமாமோ வென்று நீங்களே ஆலோசித்து நிச்சயித்துக் கொள்வீர்களாக.

(இன்னும்வரும்.)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## திருஞானசம்பந்தர் காலநிர்ணயம்.

(20-வது பக்கத்தொடர்ச்சி.)

(3) ஸ்ரீ சம்பந்தப்பெருமான் தந்தேவாரப்பதிகத்தில் கோச்செங்கட் சோழனையன்றி வேறெந்தச் சோழனைப்பற்றியும் பிரஸ்தாபித்ததில்லை. மதுரையின்கண் விளங்கிய சங்கப்புலவர் திலகராகிய பொய்கையார் என்பவராலியற்றப்பட்ட 'களவழி நாற்பது' என்னும் நூலின் கதாநாயகனும் அக்கோச்செங்கட் சோழனே. முதற்பராந்தகன் வம்சம் மேற்குறித்த பழய சோழவம்சத்தினின்றும் முற்றும் வேறாயது. அவன், காஞ்சியாண்ட பல்லவ வம்சமும், புராதீன சோழவம்சமும் நாளடைவிற்கலந்துவழிவந்த ஒரு புதுமரபைச் சேர்ந்தவனெனினுமாம். நாம் முன்னொரு



சந்தர்ப்பத்திற் பிரஸ்தாபிக்க நேர்ந்த 'கலிங்கத்துப் பரணி'யில் படிக்கப்படும் பழய சோழர் சரிதமும் கோச்செங்கட்சோழ நாயனார் வரலாற்றோடு ஒருவாறு முடிவுற்று நிற்கின்றது. பின், பராந்தகன் மரபின் பிரபாவத்தை விரிக்கப்புகுந்த அந்நூலாசிரியர் அதைப்பழய சோழவம்சத்துக்குச் சம்பந்தமில்லாத வேறொன்றைப் பிரஸ்தாபிப்பவர்போல் விவகரித்துள்ளார். இன்னும் கோச்செங்கட் சோழ நாயனார் பரிபூரணதசையை யடைந்ததற்குப் பின்னும் பராந்தக கண்டராதித்தியர் மரபான நவீன சோழவம்சம் தலையெடுப்பதற்கு முன்னும் இடையிட்டகாலத்தில் அருள்நெறி பிழைக்கவே இருணெறி தழைத்தோங்கியது. இங்ஙனமிடையிட்டகாலத்திலே அதாவது புராதீன சோழவம்சம் சின்னபின்னப்பட்டு நவீன சோழவிராச்சியம் ஓங்குமுன் நம் பரசமய கோளரியார் உலகுய்ய அவதரித்தனர்போலும்.

(4) இன்னும், கண்டராதித்தியர் காலத்து பௌத்தம் மழுங்கியதை நோக்கின் முன் யாம் சித்தாந்தப்படுத்தியதே நிலைக்குமென்க. ஸ்ரீ வாகீசப்பெருமான் முதலியோர் காலத்தில் தக்ஷணத்தைக்கவளீகரித்துக் கொண்டு கிடந்த பௌத்தம் திருவிசைப்பா இயற்றியோர் காலத்தில் மிக மெலிந்தமையின், அவர்க்கு அது இலக்கியப்பொருளாகத் தோன்றினதில்லை.

(5) இன்னும் ஒன்று. பராந்தகன் மரபினராய் சோழவரசர்கள் தலைநகராகக் கொண்ட கங்கைகொண்டசோழபுரத்துக்குத் தேவார மின்மையும் திருவிசைப்பா வுண்மையும் நம்கொள்கையை நிறுத்துமென்க.

மேற்போந்த விஷயங்களால் 9-வது நூற்றாண்டினராகிய கண்டராதித்தியருக்கும் நம்காழி வள்ளலாருக்கும் இடையிட்ட காலம் அதிகமெனல் சம்பாவிதமன்றோ!

இங்ஙனம் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பொறுத்த இரண்டு பிரதம அம்சங்களை ஸ்தாபிக்கச் சைவநூல்களிற் பெறப்படுமாதாரமே போதுமானது. முதலம்சம்.—மேற்குறித்துள்ள விஷயங்களால் நம் பாலறாவாயர் 9-வது நூற்றாண்டுக்குப்பிந்தி யிருந்திராரென்பதற்குச் சந்தேகமின்று. இரண்டாவது:—மேற்போந்த இன்னும் சிலவிஷயங்களால் நம் சம்பந்தர் 9-வது நூற்றாண்டினராகிய கண்டராதித்தியருக்கு 3-4-நூற்றாண்டேனும் முந்தியவராக இருந்திருக்கவேண்டுமெனக் கொள்ளக்கிடப்பதைச் சூசிப்பித்திருக்கிறோம். ஆனால் இதேவிஷயமாக இன்னும் இரண்டொரு ஆதாரமுண்டு. அவற்றை மீண்டும் பிரகாசப்படுத்துவாம்.

இதுகாறும் தமிழ் நூற்களினாதாரத்தைக் கொண்டு செய்துவந்த இப்பரிசீலனையைப் பற்றி வடமொழி நூன்முகமாகப் பெறப்படு மாதாரங்களையும் சிறிது கவனிப்போம். இவ்வுபந்யாசத்தின் முற்பாகத்தில் இந்தியமதங்களின் ஆக்கப்பாட்டை விரித்த சந்தர்ப்பத்தில், நம் சம்பந்தர், இராமானுஜர், மாத்துவாச்சாரியர் முதலியோர்க்குமேயன்றி சங்கராச்சாரியர்க்கும் முன்னே யிருந்தனரென்று கொள்ள ஆதாரங்களனந்தமிருக்கக் கண்டோம். சங்கரர் காலத்தைப்பற்றித் தற்காலம் வழங்குங் கொள்கைகளிரண்டு. சங்கரரை கனம் தெலாங் என்பவர் 6-வது நூற்றாண்டினரென்றும் Fleet துரையவர்கள் அவரைச் சுமார் 630, 655, கி. பி. யில் இருந்தவரென்றும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவரும், அவரை, 8-வது நூற்றாண்டிற்குப் பிந்தியவரென்று இதுவரை கொண்டதில்லை. ஆதலின் சங்கரர் நம் கண்டராதித்தியருக்குச் சற்றேறக்குறைய 2 அல்லது 3 நூற்றாண்டு முன் இருந்தவரென்பது வெளிப்படை. நாமும் நம் காழி வள்ளலிருந்தருளிய காலத்தைத் தமிழ் நூற்களைமாத்திரங் கொண்டு நிர்த்தேசிக்க வியன்றதும் சற்றேறத்தாழ அக்காலந்தானே.

(இன்னும் வரும்.)

கே. எஸ். ஷண்முக சுந்தரம், பி. ஏ.

## நகைப்பைத்தியம்.

### 8 வது ஆக்ஷேபம்.

(முன் தொடர்ச்சி.)

தற்காலத்தில் பிரயாணம் எவ்வளவோ எளிது. வாயு வேகம் மனோவேகமாக எவ்வளவோ பந்தோபஸ்துடன் யாத்திரை செல்லலாம். நீர்மேலும் நிலத்தின்மேலும் ஒருமணிக்கு 40-மயில்வரை போகலாம். யாத்திரைபுறப்படுமுன் மிஞ்சும்முதல்களையெல்லாம் யாதொருசெலவின்றியும் சிரமமின்றியும் ஸேவிங்ஸ் பாங்கிகளில் வட்டிஸகிதம் இட்டிருக்கலாம். யாத்திரைபுறப்படுமுன் வேண்டியபணத்தை வாங்கிக்கொண்டு ரூபாயாகக்கொண்டு போகாமல் கோட்டா

கக்கொண்டுபோகலாம். இமாசலம் முதற்கொண்டு கன்னியாகுமரி வரை வியாபாரிகளிடம் உண்டியல்களும் வாங்கலாம். நோட்டாகக்கொண்டுபோனமுதல் செலவாகிவிட்டாலும் ஓரிடத்தில் தங்கிக்கொண்டு தந்திமூலமாய் ஒரு ஜாமத்துக்குள் ஆயிரம், இரண்டாயிரம் மயிலுக்கப்பாலிருந்து பணம் வருவித்துவிடலாம். முற்காலத்தில் ஒருஸ்தலத்தை உத்தேசித்துப் புறப்படுவதற்கு என்ன செலவாகுமென்று தீர்மானிப்பதற்கு இடமில்லாமலிருந்தது. தற்காலத்தில் வெகு சுலபமாகத்தீர்மானித்து வேண்டியமுதல் சகிதமாய்ப்புறப்படுவதற்குச் சௌகரியம் ஒவ்வொருவிதத்திலுமுண்டு. வியாபார சம்பந்த முள்ளவர்கட்கும் கொஞ்சம் அந்தஸ்தாகத் தோற்றப்படுபவர்கட்கும் வாக்குநாணயமாகவாவது அடமானமாகவாவதுகடன் வாங்குவதற்கு எளிதுதான். ஏனென்றால் ராச்சியமுழுமையும் நியாயஸ்தலங்கள் ஏற்பட்டுத் தீர்ப்புநடத்துவதற்கு முக்தியார்நாமா, வகாலத்துநாமா முதலிய சௌகரியமும் ஏற்பட்டிருக்கிறது. இந்துதேசமுழுமையும் ஆங்கிலேய ராச்சியமாகையால் ரூபாய்நாணயம்எங்கும் செல்லத்தக்கதாகவும் இருக்கிறது. அப்படியிருக்க வழியாத்திரையில் உபயோகப்படுமென்று செலவு செய்து ஆபரணத்தில் முதலிடுவானேன்? பிற்பாடு செலவு நஷ்டத்தின் மேலாவது விற்பனை செய்வானேன்? மேற்கண்ட இருவகை நஷ்டமுமில்லாமல் தந்தி, தபால், பாங்கி, நோட்டு, மற்றும் கைமாறத்தக்க பத்திரங்கள், மணியார்டர், முத்திரை, ஆகிய இவைகளின் மூலமாய் முதல் கொண்டுபோய் எவ்வளவோ கையடக்கமாகவும், நாகரிகமாகவும் செலவு செய்து யாத்திரைமுடிப்பதை விட்டுவிட்டு ராஜரீகமுறையும் வியாபார முறையுந்தெரியாதகாட்டு ஜனங்களைப்போல் பொன் வெள்ளி பண்டம் வாங்கிக்கொண்டு சென்று காலந்தள்ளிப் பிரயாணம்முடிக்க நினைப்பானேன்? தற்காலத்தில் எங்கிருந்தாலும்பணம் வருவித்துக்கொள்ளும்படியான சௌகரியமிருப்பதை உத்தேசித்து எப்போதாவது யாத்திரைநேரிடுமென்ற எண்ணத்தின்மேல் ஆபரணத்தில் முதலிடும் முறைக்கும் ஜீவிதமுதலாகவைத்து அவசியம்நேரிடும் சமயத்தில் தபால்வழியிலாவது தந்திவழியிலாவது பணம் வருவித்துச் செலவுசெய்யும் முறைக்கும், எவ்வளவோ தாரதம்மிய மிருக்கிறது. அதாவது, ஆபரணத்தில் முதலிடுவதில், பலவகைநஷ்ட மிருக்கிறது. ஆபரணமாகச் செய்வதற்குச்செலவு நஷ்டம், நாளுக்குநாள் அணிவதால் தேய்வு நஷ்டம், வட்டி நஷ்டம், விற்பனைசெய்யும்போது வரப்பட்டநஷ்டம், இவைகளை யுத்தேசிக்கும்போது முதலாகச் செய்வதற்கு யாதொரு செலவுமில்லாமல் நாளுக்குநாள் லாபமடைந்து வேண்டிய போது நஷ்டமின்றித் திரும்பிவாங்கக்கூடிய முறையே நல்லதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆபரணம் விற்கக் கொண்டுபோகும்போது சிலசமயங்களில் வாங்குபவர்கள் இல்லாமல் கவலைப்பட வேண்டிவரும். பெரும்நஷ்டத்தின்மேல் கொடுக்கவும் மனம்வராது. கொடுக்காமல் இருப்பதற்கும் மார்க்கமிராது. ஆகப் பலவாருசக் கவலைக்கும் சஞ்சலத்துக்கும் இடையுண்டு. அவ்வகைத்துன்பம் ஜீவிதமுதலாய் வைத்திருப்பதில் இல்லை.

அவசரத்துக்கு ஆபரணம் உதவுவதுபோல் ஒன்றும் உதவாதென்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஸேவிங்ஸ் பாங்கியில் இருக்கும் முதலைத் திடீரென்று அரைநாழிகைக்குள் வாங்கமுடியாதென்பது வாஸ்தவந்தான். ஆனால் மானுஷகாரியத்தில் எவ்விதத்திலும் எதிர்பார்க்க முடியாத செலவுநேரிடுவது அபூர்வம். சாதாரணமாய்த் தகுந்தகாலத்திலே, திரும்பிவாங்கவேண்டிய அவசியம் புலப்படும். அதனால் தக்ககாலத்தில் திரும்பிவாங்குவதற்குச் சௌகரியமுண்டு. ஒருவேளை அபூர்வமாய் அவசரங்கடந்து திரும்பிவாங்கினாலும் பாங்கியில் முதல் கிடப்புள்ளதாய் அறிந்தவர்கள் அதை உறுதியாகவைத்துப் பணம் கொடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. எவ்வளவு அவநம்பிக்கையிருந்தாலும் தகுந்த சாக்ஷிகளை வைத்துக்கொண்டு ரேகாமூலம் நிபந்தனைகளை ஐயமறத்தெளிவுபடுத்தி விடலாம். ஆகையால் இவ்வகை ஆக்ஷேபம் செல்லத்தக்கதன்று. ஆபரணத்தை நம்பிக்கொடுப்பதைக் காட்டிலும் பாங்கியில் முதலாகக்கிடைப்புள்ளதைநம்பிக்கொடுப்பது எளிது. மோசமும் வருவிக்காது. ஆபரணத்தின் விலை சிலசமயங்களில் மோசவிலைப்படியிருக்குமாகையால் ஆவசியகத்தின் நெருக்கங்கண்டு விலைக்கு வாங்குபவர் குறைத்துக்கேட்கக்கூடும்.

ஆபரணமாகக் கொண்டு நடப்பதில் கள்ளர்பயம் உண்டு.

---

## 9-வது ஆக்ஷேபம்.

### உலகவழக்கம் அனுசரித்தல்.

ஆபரணத்தில் முதலிடுவது நலமானாலும் கேடானாலும் ஆபரணத்தில் முதலிட்டு ஆபரணமணிவது உல



கவழக்கமாகையால் அதை ஒத்து நடக்கவேண்டியது கட்டாயமாதலால் அதனிமித்தம் அவ்வாறு முதலிடல் சரி என்று சிலர் சொல்லுகிறார்கள். இதற்குப் பிரமாணமாகத் திருவள்ளுவர் அருளியிருக்கும் பின்வரும்பாடலை நாமே எடுத்துக்காட்டலாம்.

> உலகத்தோடொட்ட வொழுகல்பலகற்றுங்
> கல்லாரறி விலாதார்.

அதாவது, உலகத்தோடுபொருந்தநடத்தலைக் கல்லாதவர்கள், பலநூல்களைக்கற்றும் கல்லாதவர்களே என்பதாம்.

உலகவழக்கத்தை யநுசரித்து நடப்பது ஆவசியகமென்றாலும் அவ்வாறு அநுசரித்து நடக்கவேண்டிய வழக்கத்தின் சுபாவம் இன்னதென்று முன்னதாகத் தீர்மானிக்கவேண்டும். வழக்கம் அங்கீகரிக்கப்படவேண்டுமானால் அது தொன்றுதொட்டு வந்திருக்கும் வழக்கமாயிருக்கவேண்டும். சமீபத்தில் முளைப்பது வழக்கமாகாது. அவ்வாறு சமீபத்திற் கிளம்பியிருக்கும் வழக்கத்தை அநுசரிக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆகையால் பிலாக்கு, நத்து, பேசரி, தாலூகா, பச்சைக்கல், முருகு, குருடு, ராக்கொடி, தாழம்பூ, ஜடைசிருங்காரம் ஆகிய இவைகள் புராதனமான வழக்கத்தில் உட்படாதபடியால் அவைகளை அணியவேண்டியதில்லை. முன்சொன்ன ஆபரணங்களில் பிலாக்கு நாற்பதுவருஷத்திற்குமுன் உபயோகிக்கத் தொடங்கப்பட்டது. குருடு உபயோகத்திற்குவந்து இருபது வருஷத்திற்கதிகமில்லை. பச்சைக்கல்லுக்குப் பத்துவருஷப் பழக்கமில்லை. தாலூகா வென்பதற்கு 15 வருஷப்பழக்கம் இன்னுங்கிடையாது. கல்முருகு புறப்பட்டது 30 - வருஷத்துக்குள்ளேதான். அதற்குமுன் சந்திரமுருகென்ற கல்சம்பந்தமில்லாத ஓர் ஆபரணம் இருந்தது. அதற்குமுன் பாவிலி, அல்லது, ராவராக்கு என்ற ஓர் உருப்படி வழங்கிவந்தது. பஞ்சகலசவாளி ஏற்பட்டு 20 வருஷமாகவில்லை. அதற்குமுன் கொடைவாளி, பலாக்காய்வாளி, அல்லது, குடும்பைவாளி யென்பது வழங்கிவந்தது. அதற்குமுன் மொட்டைவாளி நடமாட்டமாயிருந்தது. முன்சொன்ன வாளிகளில் முத்துசம்பந்தமுண்டு, பொட்டைவாளிகளில் முத்து சம்பந்தமில்லை. கொட்டையும் அதற்குப்பின்புதான் வந்தது. ஜடைவில்லையும் நமதுகாலத்தில் தோன்றியதேயன்றி அதற்குமுன் இல்லை. மலையாளத்தில் போத்திமார் என்ற பிராமண ஸ்திரீகட்குள் இன்னும் உபயோகப்பட்டுவரும் கொட்டைகுஞ்சரம் முற்காலத்தில் வழங்கிவந்தார்கள். இராக்கொடி, குச்சம் இவைகள் புறப்பட்டதும் சமீபகாலத்தில்தான். காது மூக்குகளைக் குத்தித் துவாரம் செய்து அவற்றில் பொன் வெள்ளி யடைக்கும் துர்க்குணம் பட்டாணிகளிடம் இருந்து நமக்கு வந்ததேயன்றி நமக்கு ஆதிமுதற்கொண்டு இல்லை. தோடும் குண்டலமும் உண்டு அவை இப்போதிருக்கப்பட்ட மாதிரியன்று. மேற்சொன்ன ஆபரணங்களும் பட்டாணிகளிடமிருந்து கிரகிக்கப்பட்டனவே யன்றி வேறன்று. கொலுசும் சலங்கைப்பீலி முதலியவைகளும் சமீபத்தில் வந்தனவே. மேற்கண்ட சங்கதிகளால் அநேக ஆபரணங்கள் வெகுசமீபத்தில் வழங்க ஆரம்பித்தனவாகவும், ஒருசந்ததிக்குள் ஏற்பட்டனவாகவும் புராதனமில்லாதவைகளாகவும் இருத்தல் நிமித்தம் அவைகளை ஆதரிக்கவேண்டியநியாயமில்லை.

ஒரு வழக்கம் சாதுவாகவேண்டுமானால் அது விடாமல் நீடித்திருத்தல்வேண்டும். ஒரு ஆபரணமாவது அவ்வாறு நீடித்து வந்திருப்பதில்லை. திருமங்கல்யம், தோடு, சில மாதிரி மோதிரங்கள் ஆகிய இவைமாத்திரம் விடாமல் தொடர்ந்து வந்திருக்கின்றன. இவைகளைத்தவிர மற்றவைகளை அசாதுவென்று தள்ளல்வேண்டும்.

ஒரு வழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டுமானால் அது சர்வசனசம்மதமா யிருக்கவேண்டும். சிலர் விரோதித்தும், சிலர் உபேக்ஷித்தும், சிலர்பூஷித்தும் வந்தால் அநுசாதுவாகாது. இப்போது ஜீவனோடுள்ள வயதுசென்ற ஸ்திரீகள் பிலாக்கு, நத்து, பேசரி, குருடு, தாலூகா, பச்சைக்கல் ஆகிய இவைகளை அநாகரிகமென்றும் துர்வழக்கமென்றும், தாசிவேசிகளின் பிரவிருத்தி யென்றும், சாஸ்திர விரோதமென்றும், விகாரமென்றும் நினைக்கிறார்கள். சில ஸ்திரீகள் அவ்வாறு வெறுத்துப் பேசாவிட்டாலும் சிலகாலங் கட்குப்பின் அவைகளை யணியக்கூடா தென்று ஆக்ஷேபிக்கின்றார்கள். சில ஸ்திரீகள் எட்டுப்பிள்ளை பெற்றாலும் அவைகளை அணியலாமென்று பூஷிக்கின்றார்கள். மேற்கண்டவைகளும் இவைபோன்ற ஆபரணங்களும் சர்வஜன சம்மதமில்லாத படியால் அவைகளை அணியும் வழக்கம் அசாதுவென்றும் அதர்மமென்றும் அதனைத் தள்ளல்வேண்டும். யாதேனுமொன்று வழக்கமா யநுசரிக்கப்பட வேண்டுமானால் அது பேதகதிக்குட்படாமல் ஒரே ரீதியாய் ஸ்திரப்பட்டதா யிருக்கவேண்டும். தற்காலத்தில் ஓர் ஆபரணமாவது ஒரே ரீதியாய் ஸ்திரப்பட்டு நீடித்து வந்திருப்பதன்று. பச்சையோந்தியின் நிறம் மாறுவதுபோல நிமிஷத்துக்கு நிமிஷம் ஆபரணம்

மாறிக்கொண்டே வருகின்றது. திருமங்கல்யங்கூட மாறிக்கொண்டுதான் வருகின்றது. அது தெலுங்கர்களுக்குள் மாத்திரம் பூர்வத்தி லிருந்ததுபோல் மாறாமல் பொட்டாக இன்றைக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. ஆலயங்களில் புராதனமாய் வழங்கிவரும் திருமங்கல்யம் பழமையான திருமங்கல்யமென்று நினைக்கவேண்டுமாகையால் ஆலயங்களில் இன்னும் வழங்கிவரும் பொட்டுதான் புராதனமாயுள்ளது. திராவிடஜனங்கள் மூன்று பாதம் வைத்த திருநாமம் போலுள்ள திருமங்கல்யம் அணிவது புது வழக்கமேயல்லாமல் பழய வழக்கமன்று. அப்புதுமாதிரியும் ஒரேரீதியாயிராமல்பல ஊர்களில் பலமாதிரியாயிருக்கின்றது. சில தேவாலயங்களிற் கூடப் புதுமாதிரித் திருமங்கல்யத்தை உபயோகித்து வருகின்றார்கள். இது பெரும்பிழையென்பதற்குச் சந்தேகமில்லை. வழக்கம் ஸ்திரமில்லாதபடியால் மாறிக்கொண்டுவரும் ஆபரணங்களை அணிந்துகொள்ளும் மாதிரி கூடாதென்று அதனைத் தள்ளவேண்டும்.

வழக்கம் சாதுவாக வேண்டுமானால் முகாந்திரத்திற்குட்பட்டதா யிருக்கவேண்டும். அதாவது, குணகுணங்களைப் பற்றிய, யுக்தி, புத்தி, அனுபோகம் ஆகிய இவைகளை அநுசரித்த நியாயங்கட்கு ஒத்திருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் அவ்வழக்கம் நிலைபடத் தகுந்ததாகாது.

ஆபரணத்தைப்பற்றிய வழக்கம் முகாந்திரத்திற்குட்பட்ட தாயிருக்கவில்லை. அது பசி முதலிய வறுமைப் பிணிகளை உண்டாக்குவது மல்லாமல் பஞ்சமா பாதகங்கள் முதலியஅநேக தோஷங்களைவிளைவிப்பதாயிருக்கிறதென்று இப்புத்தகத்தின் முற்பகுதியில் விஸ்தாரமாய் வர்ணித்திருக்கின்றோம். ஆபரணத்தால் ஹிந்து குடும்பங்கள் அநேகம் கெட்டுப்போயினவென்று அதனால் தெரிகின்றது. நம்முடைய குடும்பங்கட்குத் தோஷமும் கெடுதலும் விளைவிக்கும் வழக்கம் முகாந்திரமான வழக்கமன்று. அது கெட்ட வழக்கமேயாம். அதனை உடனே தள்ள வேண்டும்.

பிரகிருதியைப் பார்க்கிலும் அழகு உண்டாக்குந் தொழிலாளியை எவ்விடத்திலும் காண்பது அசாத்தியம். பிரகிருதி முறைக்கு விரோதமாய்க் காது மூக்குகளைத் துளைசெய்து கண்டவற்றை யெல்லாமவைகளி லடைத்து அழகென்று சொல்வது நியாயமன்று. அதனாலும் ஆபரண மனாவசியகமென்றே நாம் அவைகளைத் தள்ளவேண்டும்.

ஆபரண மில்லாவிட்டால் கிடைக்கு மிலாபம் அநேகமென்று முன்னமே காண்பித்திருக்கின்றோம். அந்த லாபங்களை யுத்தேசித்து ஆபரணமூலமாயிங்கு வருவித்துக் கொள்ளும் வழக்கத்தை ஒழிப்பது முகாந்திரத்திற் குட்பட்டிருக்கின்றது. இக்காரணத்தினாலும் நாம் ஆபரணத்தைத் தள்ளவேண்டும்.

ஒருவழக்கம் அநுஷ்டிக்கப் படவேண்டுமானால் அது ஸ்மிருதிகட்கும் பொது நியாயங்கட்கும் விரோதமா யிருக்கலாகாது. திருமங்கல்யத்தைக் கட்டாயமாய் அணியவேண்டியது டருத்திகொண்டு செய்த தர்க்கயிற்றி லல்லாமல் வேறொன்றிலு மன்று. அப்படியிருக்கத் தங்கக்கொடிசெய்து அதில் தட்டான் தொட்ட திருமங்கல்யத்தைக் கோர்த்து அணிந்து கொள்வது ஸ்மிருதிக்கு விரோதம், அசாஸ்திரீயம், அக்கிரமம், அதர்மம். ஆகையால் அவ்வழக்கத்தை யொழிக்கவேண்டும். தோட்டுக்காதைத்தவிர மற்ற காது மூக்குகளைக் குத்துவது அசாஸ்திரீயம். தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்களது வழக்கத்தை அனுஷ்டித்தலும் அசாஸ்திரீயம் நாம் இப்போது அணிந்துவரும் ஆபரணங்களில் மூக்காலே மும்மாகாணி வாசி, தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர் களிடமிருந்து நாம் கிரகித்தவையே யல்லாமல் வேறில்லை. ஆகையால் நாம் அவைகளைத் தள்ளவேண்டும்.

ஒருவழக்கம் ஊர்ஜிதத்திற்கு வரவேண்டுமானால் அது அபிவிர்த்தியடைந்து சாஸ்திர மேம்பாடுள்ள ஜனங்களின் சம்மதியையும் பெறவேண்டும். அப்படி லௌகிகசாஸ்திரம், பொருள்நூல் முதலியவைகளைக் கற்றுணர்ந்தவர்களெவரும் நகைவிஷயத்தில் அவ்வாறு சம்மதிக்கக் காணோம். ஆகையால் நாம் அதனைத் தள்ளவேண்டும்.

ஒருவழக்கம் நம்மைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் அது பெரியோர்களது சம்மதிபெற்றதா யிருக்கவேண்டும். நாம் கலந்துபேசின பெரியோர்களில் அநேகர் ஆபரணத்தை நிஷேதித்தே சொல்லி யிருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் அநேக வித்வான்கள் நகைக்கு விரோதமாய் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீ டி. மாதவராயரவர்களும் அதற்கு விரோதமாகவே பேசியிருக்கிறார்.

மேற்கண்ட காரணங்களினால், உலக வழக்கத்தை அநுசரித்து ஆபரண மணிவதாய்ச் சொல்வது யோசனையற்ற வாதமென்று காணப்படும். ஆகையால் அதை நாம் தள்ளவேண்டியது கட்டாயமேயாம்.

திருவள்ளுவர் எழுதியிருக்கும் குறள் வாக்கியம் வர்ணாசிரம தர்மத்தைப்பற்றிச் சொல்லவந்ததாகும்.



அதற்கும் ஆபரண பூஷணத்திற்கும் சம்பந்தமில்லை; ஆயினும் சம்பந்த முள்ளதாய் வைத்துக்கொண்டாலும் திருவள்ளுவர் குறிக்கும் வழக்கங்களும் முன் எடுத்துக்காட்டிய நிபந்தனைகட்கும் நியாயங்கட்கும் உட்பட்டனவேயன்றி வேறன்று.

ஆபரணமணியும் வழக்கத்திற்கும் மதக்கோட்பாட்டிற்குஞ் சம்பந்தமில்லை. ஆபரணபூஷணம் ஹிந்துமதானுசாரமா யேற்பட்டதென்று நினைக்கக்கூடாது. எந்தச்சுருதியிலாவது, எந்தஸ்மிருதியிலாவது, எந்தப் புராண இதிகாசங்களிலாவது ஆபரணம் அணியாததனால் நரகம் நேரிட்டிருப்பதாகவும் பாபம் விளைந்திருப்பதாகவும் கஷ்டம் ஜனித்திருப்பதாகவும் சொல்லப்படவில்லை. ஆபரணமணிவது பாபமென்றும் நரகத்திற்கிடமென்றும் வேஷத்துக்குத் தகுந்த ஒழுக்கம் இல்லாமைபற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதைத் திருமூலரது திருமந்திரத்திலிருந்து உதாகரணப்படுத்தலாம்:

பூதிபணிவது சாதகமாதியிற்
காதணிதாம் பிரகுண்டலங் கண்டிகை
போதியவர்க்கு முருத்திர சாதகந்
தீதில் சிவயோகி சாதகந்தேரிலே.

குண்டலம் தண்டிகைமுதலிய தவவேஷம் மெய்ஞ்ஞானிகளுக்குரியது. பிழைப்புக்காகப் பொய்யர்கள் இவ்வேஷத்தைப் பூண்டுகொண்டால் அதன் தோஷம் இன்னதென்று பின்வரும்பாடல்கள் ஐயமறக் கூறுகின்றன:—

ஞானமிலார் வேடம்பூண்டிந்த நாட்டிடை
யீனமதே செய்திரந்துண் டிருப்பினு
மானநலங் கெடுமப்ப வியாதலா
லீனவர்வேடம் கழிப்பித்த லின்பமே.

பொய்வேஷம் பூண்டவன் கெடுவதுமல்லாமல் அவனால் உலகமும் கெடும்.

இழிகுலத்தார் வேடம் பூண்பர்மே லெய்த
வழிகுலத்தோர் வேடம் பூண்பர் தேவாகப்
பழிகுலத்தாகிய பாழ்சண்டரானோர்
கழிகுலத்தோர்கள் களையப்பட்டாரே.

பொய்வேடம் பூண்டவர் அதோகதியாய்ப்போவார்களென்றவாறு.

பொய்த்தவஞ் செய்வார் புகுவார் நரகத்துப்
பொய்த்தவஞ் செய்தவர் புண்ணியராகாரேற்
பொய்த்தவ மெய்த்தவம் போகத்தட் போக்கிருஞ்
சத்தியஞானத்தாற் றவங்குத் தவங்களே.

பொய்வேஷங் கொண்டோர் நரகமேசேர்வார்களென்றவாறு.

பொய்வேஷம் பூண்டவர்களைத் தண்டித்துப் பொய்வேடம் விடுப்பது அரசனது கடமையாம்:

இன்புறுந் துன்பமு நாட்டாரிரித்துள்
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்கா
மென்ப விறைநாடி நாடொறு நாட்டினின்
மன்பதை செப்பஞ் செயில் வையம் வாழுமே.

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கண்டு சேரமன மகம்பற்றி யுண்ணோர்
மால்கொண்டு தேறலையுண்ணு மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே.

(இன்னும்வரும்.)

எஸ். இராமஸ்வாமி அய்யர், பி. ஏ., பி. எல்.

## நந்தவனநஷ்டம்

### அல்லது

### மோட்சநாசம்.

(22-வது பக்கத்தொடர்ச்சி.)

இப்படி விசனத்தையெல்லாம் விலக்கிக்கொண்டு அவர்கள் புலன்களைநோக்கித் துரிதப்பட்டுச் சென்றார்கள். ஆனால் அப்படிச் செல்லுமுன்னம் படர் கொடிகளால் அமைந்து நிழல்தரும் பந்தரினின்று வெளிப்பட்டு அருணோதயத்தையும், சூரியனையும்—அப்போது சூரியன் திக்கந்தத்தின் மேலெழும் சமயமானதால் அவன் இரதத்தின் சக்கிரங்கள் சமுத்திரத்தின் விளிம்பைத்தொட, அவன் கிரணங்கள் பனியினூடே பூமிக்குச்சமமாகப்பாய்ந்து நந்தவனம் அதி இன்பமான ஏதேன் மாகாணத்தின் சமநிலங்கள் இவைகளின் கீழ்ப்பாகங்களின் தேசக்காட்சியை விஸ்தாரமாக விளக்கின—கண்டவே தாழவணங்கித்தொழுது பிரார்த்தனை தொடங்கினார்கள். அவர்கள் பிரதிதினமும் காலையில் பற்பலவிதமாகப் பிரார்த்திப்பார்கள். நானாவித ரீதியும், பக்தி ஆவேசமும், தடையன்றிவர அவர்கள் தங்கள் கருத்தானவை வசனத்தாலும், கீதத்தாலும் தகுந்தபடி பூர்வப்பிரயத்தனமில்லாமல் தொழுவார்கள். யாழ் வீணை முதலிய வாத்தியங்களின் சகாயம் உதவாதபடி அதிக இன்னிசையுள்ள செய்யுளிலும் வசனத்திலும் வாசாலம் (eloquence) அவர்கள் அதரத்திலிருந்து அவ்வளவு

தீவிரமாகப் பொழிந்தது. அன்று அவர்கள் பின்வருமாறு கடவுளை வாழ்த்தினார்கள் :—

“ நன்மைக்காதிமூலமே! சர்வவல்லோனே! இவையெல்லாம் உன் மகிமைபொருந்திய சிருஷ்டியே! அற்புதவழகுபொருந்திய இப்பிரபஞ்சம் உன் கட்டடமே! ஆகவே, நீ எவ்வளவு அற்புதனாக இருக்கவேண்டும்! வாக்குக்கெட்டாதவனாயும், கண்ணுக்கெட்டாதவனாயும், இவ்வானத்துக்கப்பால் உயர்ந்திருந்து உன்னுடைய இந்த அற்பக்கிரியைகளின் மூலமாய் மங்கலாக விளங்குகின்றாய். ஆயினும், இவைகள் மனதுக்கெட்டாத உன் அருளையும் பரமசக்தியையும் பிரசித்திக்கின்றன. சோதிபுத்திரர்களான தேவதூதர்களே! நீங்கள் பரலோகத்திலிருந்துகொண்டு பராபரனை நேராகநோக்கி அவன் பீடத்தைச் சூழ்ந்து களிப்புற்று கீதங்களைத் தனித்தும் கலந்தும் பாடி இரவறியாத பகல்தோறும் அவனை வாழ்த்திக்கொண்டே இருப்பவர்களாகையால் அவனைவர்ணிக்க உத்தமதிறமுள்ளவர்கள்—பேசுங்கள். பூமியிலுள்ள சகலபிராணிகளே! நீங்களும் கலந்து முதலும் கடையும் இடையும் நித்தமுமாகியவனை வாழ்த்துங்கள். இரவின் பரிவாரத்தில் கடையானவான சோதிகளில் மிகச்சிறந்த விண்மீனே!—நீ அருணோதயத்துக் குரிமையுடையதாகக் கூறுவது நியாயமன்றோ—நீ அருணோதயத்துக்குத் தவறாத சாட்சியமாக இருக்கின்றாய்; மன உச்சாகத்தைக் கொடுக்கும் அருணோதயத்துக்குப்பிரகாசமான உன் சிறுவிம்பம் கிரீடமாக இருக்கிறது; இன்பமான உத்தமகாலமாகிய விடியற்காலத்தில் உன்மண்டலந்தோறும் அவனைத்துதி. இம்மகாப்பிரபஞ்சத்துக்குக்கண்ணும் உயிரும் ஆகிய சூரியனே! அவன் உன்னைவிட பெரியவன் என்றுதெரிந்து உன்னுடைய நிரந்தரகதியில் வானத்திலெழும்போதும், உச்சியடைந்தபோதும் தாழும்போதும் அவனை வாழ்த்து. ஒருகாலம் கீழ்த்திசையிருக்கும் சூரியனை சந்தித்தும் ஒருகாலம் கதிபொருந்திய ஸ்திர நட்சத்திரமண்டலத்தின்கண் உள்ள விண்மீன்களுடன் சஞ்சரித்தும் செல்லுகிற சந்திரனே, சங்கீதத்துடன் கூடார்த்தமாக நிர்த்தனம் செய்யும் மற்ற ஐந்து நிலையற்றுத்திரியும் சோதிகளே, இருளினின்று ஒளியைத் தருவித்தவனுடைய உத்தமகுணங்களை பிரதிதொனிக்கும்படி கூறுங்கள். பிரகிருதியின் பிரதமசிருஷ்டியாகிய வாயு முதலிய நான்குபூதங்களே! ஓயாமல் பற்பலவிதமாகக்கலந்து வெவ்வேறு பூதமாகத்திரியும்போதும், சர்வவஸ்துக்களுடனும் கலந்து அவைகளை போஷிக்கும்போதும், ஒவ்வொரு மாறுபாட்டுக்கும் தக்கபடி நூதன கீர்த்தனைகளைத் தொடுத்துவாழ்த்துங்கள். இப்போது மலையிலிருந்தும், ஆவியெழும்பும் ஏரியிலிருந்தும் கிளம்பி சூரியன்பிரகாசித்து, ஆட்டுரோமத்தை ஒத்த உங்கள் ஓரத்தைதங்கவர்ணத்தால் அலங்கரிக்கும்வரையில் கருநிறமாகவாவது சாம்பல்நிறமாகவாவது விளங்கும் படலங்களே நீங்கள் எழுந்து உத்தமனான இப் பிரபஞ்சத்தின் கருத்தாவை கனப்படுத்துங்கள்; நீங்கள் ஒரேநிறமான ஆகாயத்தை நாநாவித வர்ணங்களால் அலங்கரிக்க மேகங்களாக எழும்பினாலும், தாகிக்கும் மண்ணுக்கு நீரூட்ட மழையாகத்தாழ விழுந்தாலும் அவனுடைய உத்தமகுணங்களை ஓயாமல் விளக்குங்கள். நாற்றிசையிலிருந்தும் வீசும் காற்றுகளே அவனுடையமகிமையை மிருதுவான சத்தத்தோடாவது உரத்தசத்தத்தோடாவது சுவாசியுங்கள். தேவதாருக்களே நீங்களும் மற்ற எல்லா தாவரங்களோடும் அவனைத் தொழுங்குறியாக உங்கள் உச்சியை அசைத்துத்தாழுங்கள். ஊற்றுக்கண்களே, இன்னிசையோடு முறுமுறுவலித்தோடும் சிற்றாறுகளே உங்களுடைய இசைக்குச் சரியாக அவனை வாழ்த்தும் கீர்த்தனைகளைப் பாடுங்கள். எல்லா ஜீவப்பிராணிகளே குரல்கூட்டுங்கள். கானித்துக்கொண்டு பரலோக வாயிலுக்கெழும்பும் பட்சிகளே உங்கள் சிறகின்மீதும் கீதங்களிலும்அவன்மகிமையை எடுத்துச்சொல்லுங்கள் ஜலத்தில்பாய்பவைகளே, தரையில் கம்பீரமாக காலமிதித்தாவது தாழஊர்ந்தாவது சஞ்சரிப்பவைகளே, நீங்கள் சாட்சி; காலையும் மாலையும், மலை, பள்ளத்தாக்கு, ஊற்றுக்கண், இளைப்பகற்றும் சோலை, இவைகளில் எதையாவது என் கானத்தால் தொனிக்கச்செய்து அவன் மகிமையை அவைகளுக்குக் கற்றுக்கொடுப்பேன்; மௌனமாக இருக்கமாட்டேன். மண்டலாதிபதியே! வந்தனம்! நமக்கெப்போதும் நன்மையையே அளிக்கத் தயவுசெய். இரவானது எவ்விதமான தீங்கையாவது சேகரித்து ஒளித்திருந்தால் அதை, இப்போது ஒளி இருளை அகற்றுவதுபோல், அகற்று.”

கபடமற்ற அவ்விருவர் இவ்விதமாகப் பிரார்த்திக்க அவர்களுடைய மனது உறுதியைக்கொடுக்கும் அமைதியையும் வழக்கமான சாந்தியையும் திரும்பவடைந்தது. இனிய வாசனைபொருந்திய பனியிலும் புஷ்பங்களிலும் காலைக்குரிய தோட்டவேலையைத் தொடர விரைந்து சென்றார்கள். வரிசையாக நாட்டப்பட்ட கனி விருக்ஷங்கள் அதிக செழுமையால் கனிபெறாத நெடுங்கிளைகளை வெகுதூரம்விட்டு நெருங்



கிப் பலனற்றுத் தழுவுமிடங்களில் அக்கிளைகளைக் கழிக்கவும், திராக்ஷக்கொடி தனக்குரிய எல்ம் (elm) விருக்ஷத்தை மணம்புரிய அழைத்துப் போகவும் சென்றார்கள்; அக்கொடி அவ்விருக்ஷத்தை மணம்புரிந்து தன்கைகளாற்றழுவி, சீருக்காகத்தன்பழக்குலைகளைக் கொடுத்து களிப்பித்து அவன் காயாக்கிளைகளை அலங்கரிக்கின்றாள். அவ்விருவர்கள் இவ்விதமாக முயன்றிருந்ததை உத்தமபரலோகாதிபதி இரக்கத்துடன் கண்டு டோபியஸ் (Tobias) என்பவனுடன் சென்று எழுபுருஷர்களைக்கண்ட ஸ்திரீயுடன் அவன் நிரந்தரமாக மணம்புரியச் சகாயம்செய்ய தயவுசெய்த அன்னியோன்னியமான அசரீரியாகிய ராபயல் (Raphael) என்பவனை அழைத்துப் பின்வருமாறு மொழிந்தான்.

“ராபயேல்! (Raphael) சாத்தான் (Satan) நரகத்தினின்று வெளிப்பட்டு இருண்ட ஆழியினூடும் சென்று கடந்து பூமியையடைந்து நந்தவனத்தில் என்ன கலகம் செய்திருக்கிறானென்றும், சென்றஇரவு மானுட தம்பதியை வருத்தப்படுத்தியிருக்கிறானென்றும், அவர்கள் மூலமாக மானுடஜாதி முழுவதையும் எவ்விதமாகக்கெடுக்க எண்ணி இருக்கிறான் என்றும் கேள்விப்படுகிறாய். ஆகையால் நீ அங்கேபோய் இன்று மத்தியானம் ஆதாம் (Adam) சாப்பாட்டுக்காகவாவது ஆசோதைக்காகவாவது தினவேலையை நிறுத்தி, வெயிலினின்றும் ஒதுங்கி இந்த பன்னசாலையிலாவது நீழலிலாவது இருந்தாலும், அவனைக்கண்டு இன்று பகுதிநாள் அவனுடன் சமசிநேகனாக சம்பாஷி. அப்படி சம்பாஷிக்கையில் அவனிப்போது அடைந்திருக்கும் சுகானுபவ நிலைமையைப் பற்றியும், அச்சுகம் சுயேச்சையால் காப்பாற்றிக்கொள்ளத் தக்கதென்றும், ஆனால் அவ்விச்சை நிர்ப்பந்தமற்றிருந்தாலும் மாறுபடத்தக்கதென்றும் சொல்லி ஆகவே சங்கையற்றிருந்து நெறிதவறாமல் இருக்கவேண்டுமென்று எச்சரி. என்ன அபாயம் யாரால் நேரிடத்தக்கதென்றும், எந்தசத்துரு தேவலோகத்திலிருந்து வீழ்ந்து, அவனிழந்த நிலைமைக்கொத்த ஆனந்த நிலைமையிலிருக்கப்பட்டவர்களை அப்படியே வீழ்த்தவேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருக்கிறான் என்றும், அது பயிரங்க பலாத்காரத்தாலோ வென்றால், பலாத்காரம் தகுந்தபடி எதிர்க்கப்படும், ஆகையால் மோசத்தாலும், புரட்டாலும் என்று சொல்லு. இதை அவன் அறியட்டும்; இல்லாவிட்டால் மனதறிய நெயதறிவறிபின், கண்டிக்கப்படாததனாலும், எச்சரிக்கப்படாததனாலும் ஏமாந்துபோனதாக அவன் சாக்கிடலாம்.”

(இன்னும் வரும்)

டி. சுந்தர ராவ்.

## “ மார்பில் பேபர்” என்னும் வர்ணக் காகிதம் செய்யும் வகை.

‘மார்பில் காகித’மென்பது சாமானியமாய் புஸ்தகங்கள் தைக்கப்பட்டு அவைகளுக்குக்கெடுதியுண்டாகாதிருக்கும்படியாய் அவைகளின் இரண்டு பக்கங்களிலும் சேர்க்கப்பட்டிருக்கும் அட்டைகளின் மேற்புறம் அழகாயிருப்பதற்காக ஒட்டுவதற்கும், இன்னும் வேறு சில வேலைகளுக்கும் உபயோகப்படும் வர்ணக்காகிதம். இவ்விதக்காகிதத்தை சாதாரணமாய் யாவரும் பார்த்திருக்கலாம். இதன் பின்பக்கம் சாயமேற்றப்படாமலும், முன்பக்கம் கண்களுக்கினிய பலசாயங்களால் சித்திரவமைப்புடன் வர்ணமிடப் பட்டுமிருக்கும். மேற்புறத்தில் ஏற்றப்படும் சாயவகைகளின் பேதங்களாலும் பின்னல்கள் போலவும் சந்திரப்பிறை போலவும் சக்கிராகாரமாகவும் கீற்றுகளாகவும் அவைகளில் அமைக்கப்படும் சித்திரிப்புகளிலும் இக்காகிதங்கள் அனேக விதங்களாகச் செய்யப்படுகின்றன.

இக்காகிதங்கள் செய்யும் முறை வெகுசுலபமானது. அதற்காக வேண்டிய கருவிகளும் சாதாரணமானவைகளே. சாயம் வார்ப்பதற்காக, வர்ணமேற்றப் படும் காகிதத்தினளவிற்குச்சற்றேபெரியதான அதிக ஆழமற்ற மரத்தொட்டியும் தண்ணீரின் பேரில் மிதக்கும் அழுக்குகளை வழித்துத்தள்ள உபயோகப்படும் 272 அங்குல அகலமும் 72 அங்குலகனமுமுள்ளமரச்சிம்பும், வர்ணங்களை இழைத்தெடுக்க ஒருசலவைக்கற்கல்லும் துவளத்தக்க கத்தியும் போதுமானகருவிகள். இவைகளுடன் சாயங்களை வைத்துக் கொள்வதற்கு சிறு பீங்கான் கிண்ணிகளும் அவைகளைக் குழைத்தெடுக்க வர்ண லேகினிகளும் (brushes) வேண்டும்.

காகிதங்களுக்கு வர்ணமேற்ற ஆரம்பிப்பதற்குமுன் சாயங்களை நன்றாய்ப்பொடிசெய்து

தண்ணீருடன் கலந்து மெழுகு பதமாக்கிப் பீங்கான்களில் வைத்துக் கொள்ள வேண்டும். 172 காலன் தண்ணீருக்கு 72 பவுன் வீதமாக சுத்தமான வெள்ளைக் கோந்து (பிசின்) சேர்த்து குறைந்தது இரண்டு நாள் ஊரவைத்து மெல்லிய துவாரங்களுள்ள சல்லடையில் அச்சலத்தை வடிகட்டி வண்டல் நீக்கி யெடுக்கவேண்டும். இந்தப்பிசின்ஜலத்தை மரத்தொட்டியில்விளிம்பிற்குச் சற்றே கீழாகவார்த்து இறகுகளால் (quills) அதைக் கிளரிக் கொடுத்து வரும் நுரையை மேற்சொல்லிய அழுக் கொதுக்கும் மரச்சிம்பால் வழித்தெறிய வேண்டியது. பிற்பாடு பிரயோகிக்க வேண்டிய வர்ணங்களில் 'ஆக்ஸ் கால்' (ox gall) என்னும் மாட்டுப்பித்தமும், 'டர்பென்டயின்' (oil of turpentine) என்னும்பிசின்எண்ணெயும்சேர்த்து தண்ணீருடன் கலந்து திரவரூபமாக்கிக் கொள்ள வேண்டும். இவ்விதமாய்க் கூட்டிய வர்ணங்களை லேகினிகளால்எடுத்துத் தொட்டியில் வார்க்கப்பட்டிருக்கும் பிசின் ஜலத்தின் பேரில் உதறினால் அவைகள் தண்ணீரின் பேரில் மிதந்து பரவி நிற்கும். இந்தவர்ணங்களை ஒரு இறகைக்கொண்டு புள்ளிகளாகவும் கீற்றுகளாகவும், சக்கிராகாரமாகவும், சுழிகளாகவும், பின்னல்வடிவங்களாகவும், காகிதங்கள் சாயமேற்றப்பட வேண்டிய மாதிரிகளுக்குச் சரியாகப் பலவிதச் சித்திரிப்புகளுடன் திருப்பி அமைத்துக் கொள்ளலாம். சாயந்தீட்டப் படுவதற்கு முந்திய இராத்திரியே வர்ணமேற்றப்படவேண்டிய காகிதங்களைச் சலபமாய்ச் சாய மொட்டுவதற்கு அனுகூலமாகத் தண்ணீரில் நனைத்து ஒன்றின் பேரிலொன்றாய் அடுக்கி அவைகளின்பேரில் பாரம்வைத்து அழுத்தி வைத்திருக்க வேண்டும். இக்காகிதங்களை ஒவ்வொன்று யெடுத்து நான்கு மூலைகளையும் பிடித்துக் கொண்டு தொட்டியில் மிதந்து கொண்டிருக்கும் வர்ணத்தின் பேரில் போட்டு காகிதத்தின் நாலாபக்கங்களும் அதில் சரிவரப் படும் படியாய் மெதுவாய் அழுத்த வேண்டும். இப்படிச் செய்யும் காகிதத்தின் மேற்புறத்தில் சாயநீர்வழியாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியதவசியம். வர்ணம் காகிதத்தில் நன்றாய்ப் படிந்தவுடன் காகிதத்தைச் சாக்கிரதையாக எடுத்துக்கொடிகளில் தொங்கவிட்டு உலரவைப்பது வழக்கம். இக்காகிதங்கள் உலர்ந்த பிற்பாடு ஒருவித யந்திரத்தில் வைக்கப்பட்டு சாயமேறிய பக்கங்கள் பளபளப்பாக்கப் படுகின்றன. காகிதங்களுக்கு சூடேற்றி அழுத்தப் படுவதாலும் மினுமினுப்புண்டாகும்; அல்லது சாயமிட்ட பக்கங்களில் 'வார்னிஷ்' (Varnish) என்னும் எண்ணெயைப் பூசுவதாலும் பளபளப்புண்டாகும். புஸ்தகங்களின் ஓரங்களில் பூசப்படும் பலவர்ணங்களும் இம்மாதிரியாகவே பிரயோகிக்கப் படுகின்றன.

A. V. A.

## உபாத்தியாயர்பக்கம்.

### பள்ளிக்கூட ஒழுக்கமும் நன்னெறிப் பயிற்சியும்.

### III. நன்னெறிப்போதனைக்குத் துணைவழிகள்.

### 2. மனச்சுறுசுறுப்பு.

அவயவாதிகளின் சுறுசுறுப்போடு பாலியர்களிடத்தில் மனச்சுறுசுறுப்பும் இருக்கின்றது. இம்மனச் சுறுசுறுப்பு அவயவாதிகளின் சுறுசுறுப்புக்குத்தக்கபடியே அமைந்திருக்கிறது. எத்தனைக்கெத்தனை தேகநிடமுள்ளதோ அத்தனைக்கத்தனை மனோமுயற்சியுமுண்டாகும்.

**பொருள்.** இம்மனச்சுறுசுறுப்பு என்பது என்னை? மனோசக்திகளை இந்திரியாதிகள் வழியாய்ப் பிரயோகித்து உலகத்திலுள்ள பொருள்களின் தன்மைகளை நன்றாகவறிந்துகொள்ளுவதற்கு முயற்சித்தல் மனச்சுறுசுறுப்பாம். ஐம்புலன்களின் வழியாய் உட்புகுந்த ஐங்குணங்களைக் கொண்டு, உலகத்திலே பொருட்கள் உள்ளனவென்றும், அப்பொருள்களினியற்கையையும், தெரிந்து கொள்ளலே மனமுயற்சியாகும்.

**பயன்.** இம்மனச்சுறுசுறுப்பினால், பொருள்களை நோக்கும் மனமுயற்சியுண்டாகின்றது. மனமுயற்சியுண்டாகவே, நாம் பொருள்களைப் பகுத்தறிந்து, இனத்தோடு கூட்டி, நன்றாய் அறிந்துகொண்டு உணர்ச்சியிற்றேறுகின்றோம்.



**இம்மனச் சுறுசுறுப்பு எவ்வழியே யோடும்.** இம்மனச்சுறுசுறுப்பை ஆசான் அடக்கியாளாவிட்டால், அது நினைத்தவழியெல்லாம் ஓடும். எவ்வழியானது மனோகரமாயும் இனிப்பாயுமிருக்குமோ அவ்வழியே தான் மனமோடும். ஆசான் மாணாக்கர்களுடைய அறிவிற்குப் புலப்படாவண்ணம் பாடமுரைத்தால், மாணாக்கர்கள் வேறு எவ்வழியாகிலும் மனதைச்செலுத்தி நிற்பார்கள். புத்தகங்களிலுள்ள படங்களைப்பார்த்து ஆனந்தமடைந்தாவது, அடுத்தவனோடு பேசி யின்பமடைந்தாவது, தெருவிலேநடக்கின்ற விவகாரங்களிலே நோக்கைச்செலுத்தி மகிழ்ந்தாவது காலத்தைக் கழிப்பார்கள்.

**ஆசான்போதனைமார்க்கம்.** ஆதலால், ஆசான் வகுப்பிலே மாணாக்கர்களின் மனச்சுறுசுறுப்பை எவ்வழியிலே செலுத்தவேண்டும்? பாடங்களிலே செலுத்தவேண்டும்! என்றால், அப்பாடங்கள் பிள்ளைகளின் மனதைக்கவரும்படியாகவும், அவர்கள் கவனமெல்லாம் அங்கே லயித்துப்போகும்படியாகவும் நாம் செய்ய வேண்டும். நாம் இது செய்வது எப்படி? நமது போதனாசக்தியினாலே! நமது போதனாமார்க்க மிப்படியிருக்க வேண்டுமென்று பலதடவைகளில் நாமெடுத்துரைத்தோம். மனோகரமான பாடங்களும், மனதைக்கவரும்படியான உதாரணங்களும், நன்றாகப் பொருள்கூறலும், உமது போதனாமார்க்கத்திலே இசையவேண்டும்.

மேலும் இம்மனச் சூடிகையை வளர்க்கும் ஆசான் கவனிக்கவேண்டியது மற்றொன்றுளது. இம்மனச் சூடிகையினால், மாணாக்கர்கள், ஆசான்போதனையின்றி 'தாமே தமது முயற்சியாலே' விஷயாதிகளையறிந்து கொள்ளக்கூடியவர்களாக விருக்கிறார்கள். ஆதலால், மாணாக்கர்கள், தமது முயற்சியாலே தாமே யறிந்துகொள்ளும்படி, தக்கசாதனங்களையும் அலுவல்களையுஞ் சிருட்டித்துவரவேண்டும். ஆசான் விஷயாதிகளைத்தானே யெடுத்துரையாமல் அவைகளை மாணாக்கர்களேயறிந்து கொள்ளும்படி, அவ்விஷயாதிகளோடு சம்பந்தப்பட்ட வேறு இரண்டொரு வர்த்தமானங்களைக் காட்டி இவ்வர்த்தமானங்களிலிருந்து சம்பந்தப்பட்டுள்ள விஷயாதிகளைத்தாமே யூகித்து அறியும்படி ஆசான் போதித்துவரவேண்டும். இப்படிச்செய்வதால் என்ன விசேஷமென்றால், இம்மனச்சூடிகை தானே வளர்கின்றது. ஒருவன் தனது முயற்சியாலேயே, ஒருபொருளை யறிந்து கொள்ளும்போது, நாம் இதனையறிந்து கொள்ளக்கூடிய சக்தியுள்ளோம்," என்று அறிகிறான். அப்போது இச்சக்தியறிவால், ஓரானந்தமுண்டாகின்றது. இவ்வானந்தம் மேலும்மேலும் ஊக்கத்தோடிருக்கும்படிச் செய்கின்றது. ஒன்றை நாம் நூதனமாய்க்கற்பித்தல், சிருட்டித்தல், கண்டுபிடித்தல், ஆகிய இவ்வினைகளோடு கூடியிருக்கின்ற ஒரு சந்தோஷமிருக்கின்றது. இவ்வானந்தம் நமது ஊக்கத்தை வளர்க்கின்றது.

### 3. சக்தியறிவு.

**பொருளும் பயனும்.** இச்சக்தியறிவை யோசிக்கப்புகுகின்றோம். மேலே சொன்னதுபோல், "ஒரு பொருளையறிந்துகொள்ளக்கூடியசக்தியுடையோம், ஒருவினையைச்செய்து முடிக்கக்கூடியவலிமையுடையோம்," என்று மாணாக்கர்கள் கண்டமாத்திரத்து ஓர் ஆனந்தமடைகிறார்கள். ஒரு சிறுகுழந்தை அருகே கிடக்கின்ற ஒரு சிறியபலகைத்துண்டைத் தூக்க முயன்று சிறிதுமுயற்சிசெய்து அவதிப்பட்டுப் பிறகு அதனைத் தூக்கிவிட்டதாகில், அப்போது அக்குழந்தையின்முகம் எவ்வாறு மலர்கின்றது பார்த்திருக்கின்றீர்களா? "ஹோ, ஹோ" என்று சிரித்துக் கூத்தாடுவதைப் பார்த்திருக்கின்றீர்களா? இது தான் சக்தியறிவினாலுண்டான சந்தோஷம். அருகே நாமிருந்துவிட்டால், இச்சந்தோஷம் அதிகரிக்கிறது. அப்போது தான் குழந்தைகள் அதிக கும்மாளமடிக்கிறார்கள். இச்சக்தியறிவினால் உண்டாகுஞ் சந்தோஷம் மேலும் மேலும் ஊக்கத்தோடிருக்கும்படி செய்விக்கிறதென்று சொன்னோமே! —இவ்வூக்கத்தோடு, காரியத்தை முடித்துவிடலாம், என்றவோர் துணிவும் பலமும், மாணாக்கர்களிடத்திலே யுண்டாகின்றது.

**இச்சக்தியறிவின் தோற்றங்கள்.** இச்சக்தியறிவு எத்தனைவிதமாய்த் தோற்றுகிறது? தாய், தந்தை, மூத்தோர், ஆசான் இவர்கள் முன்னிலையில் சிறுகுழந்தைகள் இச்சக்தியறிவைக் கொண்டார்களாகில், உடனே முகமலர்ந்து கூத்தாடிக் கும்மாளமடிப்பதோடு, ஒருவிதமான கௌரவம் பாராட்ட ஆரம்பிக்கிறார்கள். இதனை மூத்தோர்கள் அப்பப்போது கண்டித்துவாரார்களானால், ஒருவிதமானவணங்காமுடித்தனம் பிள்ளைகளிடத்திலே படிந்துவிடும். வகுப்பிலே மாணாக்கர்கள் தமது வல்லமையைப் புலப்படுத்துகிறார்கள்! சிறிது சுயேச்சையுள்ளவர்கள் போலவும் பிரகனி

யை வேண்டாதவர்கள் போலவும் பாவிக்கிறார்கள். தற்புகழ்ச்சி, வீண்பெருமை, அகந்தை முதலான துர்க்குணங்கள் பிறக்கின்றன.

மேலும் ஓர் அபாயமுண்டாகின்றது!—என்னே?—

**இச்சக்தியறிவாலுண்டாகும் விபத்து.** தமது வலிமையை யறிந்துகொண்ட மாணுக்கர்கள் சிறிது அகம்பாவத்தினால் மமதையுட்கொண்டு மற்றமாணுக்கர்களைத் திரணமாகப்பாவித்து, துரும்புகளென்று நிந்தித்து, அவமதித்து நடப்பதோடு, வாயாடிகளாகி மற்றமாணுக்கர்களை யதட்டி, உறுமி, உரப்புகிறார்கள். இவ்விடத்து ஆசான் சிறிது கவனம் வைக்கவேண்டும். இந்த விருச்சிகங்களின் * கொடுக்குகளைச் சிறிது அறுத்துவிடவேண்டும்!

**மனச்சூடிகை, சந்தியறிவு**—இவைகளின் அபிவிருத்தியோடு, ஆசான் சிறிது இவைகளை

**ஆசான் கடமை.** யடக்கியாளவும் வேண்டுமென்பதுஉண்மையே. லாக் (Locke) என்னும் ஆங்கிலேயவித்வான் உரைப்பது போலவே, சிறுபிள்ளைகள் அதிகாரஞ் செய்யவேண்டுமென்ற ஆசையும் பிறரைக்காட்டிலும் தேகதிடம் புத்திவலிமை இரண்டிலுமே மேனுக்கவேண்டுமென்ற கருத்தோடு, பொருளுரிமையிலேயும் மாற்றானுக்கு மேம்பட்டிருக்க வேண்டுமென்ற அபிப்பிராயமும் கொண்டிருக்கிறார்கள். ஆகலின், ஆசான்மார்கள் வகுப்பிலே மாணுக்கர்களை இதுவிஷயத்தில் சற்றுக் கண்டித்தேவரவேண்டும்! —என்றாலும், 'இவ்வுணர்ச்சியை முற்றிலுமே கண்டித்து விடவேண்டும்' என்பாரோடு நாம் மனவொற்றுமை கொள்ளவில்லை. இச்சக்தியறிவென்னு முணர்ச்சியைத் தகுந்தபடிவளர்த்து வந்தோமாகில், மிகுந்தபயன் தருகின்றது. மேலும்மேலும் வலிமையிலும், புத்திதீக்ஷண்யத்திலும் சாமர்த்தியத்திலும் விருத்தியடையவேண்டும் என்னும் ஒரு தகுதியான ஆசை கிரமமோ கிரமமல்லவோ?— இவ்வுணர்ச்சிதான் பாலியர்களுடைய முயற்சிக் கெல்லாம் மூலகாராணமாயிருக்கின்றது. ஆதலால், ஆசான்மார்கள் இவ்வுணர்ச்சியை வளர்க்கவேண்டும்.

எப்படிவளர்ப்பார்கள்? சிறுமாணுக்கர்கள் மனதிலே சதாகாலமும் போதனையைத்திணி

**வளர்க்கும் வழிகள்.** த்துக்கொண்டே யிருக்கலாகாது! உம்முடைய அபிப்பிராயங்களையும், உமது எண்ணங்களையும் ஏன் மாணுக்கர்களுடைய மனதிலே வற்புறுத்தவேண்டும்? மாணுக்கர்கள் அவரவர்கள் தமக்குத் தாமே பகுத்தறிந்து அவரவர்கள் அபிப்பிராயங்களையே வெளியிடும்படி செய்து வைக்கவேண்டும். இதனாற்றான் 'கிண்டர்கார்ட்டன்' (Kindergarten) போதனுமுறைக்கு அவ்வளவு விசேஷமுண்டானது. மேலும் கல்வி கற்போனுடைய மனதின் சக்திகளெல்லாம் உமது போதனுமார்க்கத்திலே உபயோகப்படும்படி வரவழையுங்கள். கவனம், முயற்சி எல்லாம் பாடங்களிலே படியட்டும். ஆசான் உதவியன்னியில், மாணுக்கர்களே அநேகவிஷயங்களைத் தாமேயறிந்துகொள்ளலாமென்று காட்டுங்கள். அப்போதுதான் மாணுக்கர்கள் தமது மனேசக்திகளை யெல்லாம் பயன்படுத்துவார்கள். 'இவ்விஷயத்தை முடித்துவிடலாம்' என்றவோர்துணிவு மாணுக்கர்களிடத்திலே பிறக்குமாகில் இத்துணிவே மேன்முயற்சிக்கெல்லாந் தூண்டுகோலாக விருக்கும். மாணுக்கர்கள் இடைவிடாது முயற்சித்துக் கொண்டேயிருப்பார்கள்.

டி. இராஜமய்யங்கார், பி. ஏ.

* விருச்சிகம் = தேள்.

## நமது பார்வைக்குவந்த புத்தகங்கள்.

**ஞானத்திரட்டு.**—இஃதுவிவேகாநந்தஸ்வாமிகளின் உபந்யாசங்கள் பலவற்றின் சாராம்சங்களை "எதார்த்தமனிதன், போலிமனிதன்," "ஹிந்துமதம்," "கர்மயோகம்" 'இல்லறம் துறவறம்," "நன்மை தீமை," "முக்தி", "பக்தி" என்கிற தலைப்பெயர்களின்கீழ் சுருக்கமாகத் திரட்டித் தமிழில் பிரசுரிக்கப்பட்ட 100-பக்கங்களுடைய சிறுபுஸ்தகம். இதைத் தமிழில் தெளியநடையில் எழுதிப்பிரசுரித்த ம-ா-ா-ஸ்ரீ வி. நடராஜ ஐயர் அவர்கள் எழுதியிருக்கும் முகவுரையில், "உலகெங்குங் கியாதிபெற்று ஆங்காங்கே நம்முடைய ஆரியமத சித்தாந்தங்களையும் வேதாந்தங்களையும் அனைரியர்களும்தெரிந்துகொள்ளுமாறு ஆங்கிலேய பாஷையில் உபன்யஸித்து நமது ஹிந்துமதத்தின் பெருமையைப் பிறகண்டங்களிலும் விளக்கிக்காட்டிய மகாபரிசுத்தராகிய ஸ்ரீமான் விவேகாநந்தஸ்வாமிகளின் கருத்துப்படி அவர்களுடைய உபந்யாஸங்களை நமது தமிழ்நாட்டார் எளிதிலுணரவேண்டுமென்னும் ஆசையால் மொழிபெயர்த்ததன்றி வேறல்ல" வென்று கூறியிருக்கிறார். இவருடைய நோக்கம் நிறைவேறும்படி யாவரும் முதற்பாகமாகிய இப்புஸ்தகத்தை வாங்கிப் படிப்பார்களானல், சீக்கிரத்தில் 2-வது 3-வது பாகங்களையும் அச்சிட்டு வெளிப்படுத்துவார். இதன் விலை அணு 12.



**யோகம்:**—இத்தலைப்பெயரின் கீழ் மிஸ்ஸஸ் அன்னிபெஸாண்ட் துரைசானி அடையாற்றில் செய்த உபந்யாசத்தின்சாராம்ஸத்தை இங்கிலீஷறியாதவர்களுமறிந்து பயன்படும்படி தமிழில் சிறு புஸ்தகமாக அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தமிழிலெழுதிப் பிரிசுரித்வர் தியஸாபிகல் சங்கத்தைச் சேர்ந்த ஒரு அங்கத்தவரும் கோயமுத்தூரில் உபாத்திமைத் தொழில்நடத்துபவருமானம-ா-ா-ஸ்ரீ பரஞ்சோதி செட்டியார். விஷயம் தெளிவாக விளங்கும்படி மிகச் சாதுர்யமாய்ப் பிரஸ்தாபித்துத் தெளியநடையில் யாவரும் இலகுவாக உணரும்படி எழுதியிருக்கிறார். இதன் விலை அணு 2.

**இந்தியாவின் எதிர்கால நிலைமை:**— ஸ்வாமி விவேகாநந்தர் சென்னையிற் செய்த பிரசங்கங்களில் ஒன்றாகிய இத்தலைப் பெயர்கொண்ட உபந்நியாசம் தமிழில் மொழிபெயர்த்துச் சென்னை ஆரியமதச்சங்கத்தின் பெயரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஸ்வாமி விவேகாநந்தருடைய இதர பிரசங்கங்களையும் மொழிபெயர்த்துப் பிரசுரிக்க நோக்கங்கொண்டிருக்கிறார்களென்று தெரியவருகிறது. இதன் விலை அணு 1.

**நகைப்பைத்தியம்.**—ம-ா-ா-ஸ்ரீ எஸ். இராமஸ்வாமி ஐயரவர்கள், பி.ஏ, பி.எல்., இது விஷயமாய்ப் பெருங் கிரந்த மொன்றெழுதிப் பலவருஷங்களாக அச்சிடத் தயாராக வைத்திருந்தார். இதிற் சிலபாகம் முதல்முதல் 1892-ம்வருஷம் விவேகசிந்தாமணியில் பிரசுரிக்கப்பட்டது. பிந்திநேர்ந்த சில அசந்தர்ப்பங்களால் அதைமுற்றும் விவேகசிந்தாமணியிற் பிரசுரிக்கச் சரிப்படாமற் போயிற்று. இந்தவிஷயம் மிக முக்கியமானதென்று விவேகசிந்தாமணியை வாசிப்போருக்கு நாம் வற்புறுத்திக்கூறத் தேவையில்லை. இதன் முதற்பாகம் இப்பொழுது தனிப்புஸ்தகமாக அச்சிட்டு வெளியிடப்பட் டிருக்கிறபடியால் ஸ்திரீ புருஷர் அனைவரும் இதை வாங்கிப் படித்துப்பார்ப்பது நலம். ம-ா-ா-ஸ்ரீ இராமஸ்வாமி ஐயரவர்கள் நகைப்பைத்தியம் என்னும் ஒருவிஷயத்தை யெடுத்துக்கொண்டு அது சம்பந்தமாகவுள்ள விஷயங்கள் அனைத்தையும் நாலாவிதத்திலும் ஆராய்ந்து அதையொட்டிச்சொல்லக்கூடிய ஒவ்வொரு அம்சங்களையும் எடுத்துக்கொண்டு நியாயாயநியாயங்களையும் ஆக்ஷேப சமாதானங்களையும் விரிவாயும் விளக்கமாயும் கூறிப் பேதைமனதிற்கும் உண்மை புலப்படும்படி எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாய் எடுத்துக்கூறி யெழுதியிருக்கிறார். இரண்டாம் பாகத்தின் முக்கியாம்சங்கள் விவேகசிந்தாமணியில் வெளியாகிவருவதை வாசிப்போர் இம்முதற்பாகத்தையும் வாசித்தறிந்துகொள்ளின் விசேஷமாம். இது யாவர்க்கும் எளிதில்கிட்டும்படியாயிருச்கும்பொருட்டு 180 பக்கம் கொண்ட புஸ்தகத்தின் விலை எட்டேயணுவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் சென்னை தாம்ஸன் கம்பெனிக்கு எழுதிக்கொள்ளலாம்.

**பத்மாவதி சரித்திரம்.**—பத்மாவதி சரித்திரத்தின் முதற்பாகத்தைப் படித்துவந்தோம். கதாசாரத்தையும் அதிலடங்கிய விஷயங்களையும் ஆராயுங்கால் நூலாசிரியரின் கல்வித்திறம் புகழத்தக்கதென நன்கு புலப்படும். அவரது நடை வெகு தெளிவாகவும் சரளமாகவு மிருப்பினும் சிற்சில விடங்களில் ஆங்கிலேய பாஷையின் போக்கை யனுசரித்திருக்கின்றது. இலக்கணவிதிக்குமாறான சில முடிபுகளும் காண்கின்றோம். கதைப்போக்கின் தன்மையைப்பார்க்குங்கால் அவர் அதன் பொருட்டு இறையேனும் முட்டுற்றதாகத் தேரிந்திலோம். இக்கதையானது, உண்மையாய் நடந்தவைகளை நடந்தவாறே எழுதினாற் போலு மிருக்கிறது. நம்மவர் இடையிடையே பெண்கல்வி முதலிய விஷயங்களைப்பற்றி உபந்நியாசம் செய்யப்புகும் விதமானது நம்மனதிற்கு ஒவ்வாததாகவிருக்கின்றது. படிப்போர்க்குப் புகட்டக்கருதும் பலவித நீதிகளும் அறங்களும் எள்ளுக்குள் எண்ணெய் போலச் சம்பாஷணையிலிருந்து திரட்டிக்கொள்ளும்படியாக விருத்தலே யியல்பு.

இப்பாகத்தின் கதையைக்கொண்டு நிதானிக்குங்கால் பத்மாவதியைக் கதாநாயகியாகக்கொள்ள இடமில்லை. அவளுக்கு நேரும் இன்பதுன்பங்கள் (யாதேனுமிருப்பின்) நம்மனதைக் கவரத்தக்கனவல்ல. சாவித்திரியே கதாநாயகியாகக் கொள்ளற்குரியள். நம்மனமானது அவள்பால் நிற்கும் தன்மையதாகவிருக்கின்றது. அவள் இன்புறின் யாமும் இன்புறுவோம். அவள் துன்புறின் யாமும் துன்புறுவோம். கண்டார் கண்ணும் மனமும் கணத்தில் கவரத்தக்க ரூபலாவண்ய சௌந்தரியங்கள் வாய்க்கப்பெற்ற "கல்லும்புல்லும் கண்டுருகும் பெண்கனி" என்று சொல்லற்குரிய சாவித்திரியின் பொறுமையும் கற்பும் அளவிடற்கரியன. தனது பொற்பின் நலத்தைத் துய்த்தற்கு எவ்விதத்திலும் உரியனல்லாத்தன்கொழுநன்பால் உண்மையான அன்பு பூண்டு இல்லறத் தருமம் வழுவாது ஒழுகிய இம்மாது, யமன்பாற்

பட்ட கணவனைத்தன் கற்பின் மகிமையால் மீட்டு வந்த தெய்வீகம் பெற்ற அச்சாவித்திரியைப் போலாது தன்காதலன் தீயிற்பட்டிறப்பத் தன்னழகெல்லாம் புல்லிடையுகுத்தவமுதுபோல் அவமேயாகத் தன்மாங்கல்யமிழந்து மீளாத்துயரக்கடலிலாழ்ந்தது கொடுமையே.

பத்மாவதிக்கும் நாராயணனுக்கும் நாளடைவில் உண்டான அன்பும் நாராயணனுக்கும் கோபாலனுக்கும் உண்டான நேசமும் தளிர்த்துப் பூத்ததையிப் பாதியிற் கண்டோம். அவையிரண்டும் காய்த்துப் பழுப்பதைப் பிற்பாதியிற் கண்டுகளிக்க வெகு ஆவலாயிருக்கிறோம். B. S. S.

---

"கோம்பிவிருத்தம்" — கோம்பி விருத்தத்தின் நூலாசிரியராகிய ம-ா-ா-ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தயவு கூர்ந்து நமக்கோர் பிரதியளித்ததற்கு யாம் அவர்கட்கு எஞ்ஞான்றும் நன்றிபாராட்டற்பாலம். ஆங்கிலேய பாடையில் தேர்ச்சி பெற்ற அவர் தமிழை மிக்கவாவுடன் கற்று அப்பாடையில் நூல் செய்யப் புகுதல், இந்நூலின்கண் வருணிக்கப் பட்டிருக்கும் பாலைவனத்தின் நடுவே அழகுற அமைந்திருக்கின்ற பூங்காவையொக்கும். இந்நூல் உரையிடையிட்ட எழுபத்திரண்டு விருத்தப் பாக்களால் ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருபாட்டிற்கு மடியில் எழுதப் பட்டுள்ள பொழிப்புரையானது வேண்டிய இடங்களில் விரிவாகவும் ஏனைய இடங்களில் சுருக்கமாகவும் தெள்ளிய நடையில் அழகுறவமைந்திருக்கின்றது. இந்நூலின் சிற்சிலவிடங்களிற் கூறும் விஷயங்களைப் பார்க்குங்கால், நூலாசிரியருக்கு அவ்வவ்விஷயங்களில் ஏற்பட்டுள்ள பாண்டித்யமானது படிப்போர்க்கு நன்குபுலப்படும். மேலும் ஆங்காங்கே எடுத்துக்காட்டும் மேற்கோள்களும் பிரயோகங்களும் நம்மவர்க்குத் தமிழ்ப்பாஷையிலுள்ள சிறந்த நூல்களின் பழக்கமுண்டென்பதை நன்குவெளிப்படுத்துகின்றன. அவரது உவமங்களும் மிகப் பொருத்தமாக விருக்கின்றன. இது நிற்க.

ஆரியத்திலும் தமிழிலும் நூல் செய்யப்புகுவோர் நூலைத் தொடங்குமுன்னம் தெய்வவணக்கம் செய வேண்டுவது இன்றியமையாதது. அவ்வாறு செய்யப்படும் கடவுள்வாழ்த்தை மங்கல வெழுத்திற் றொடங்கவும் வேண்டும். நம்மவர் தமிழில் மொழிபெயர்த்திருக்கும் சுவர்க்க நீக்கம்' எனும் நூலின் முதனூலாசிரியராகிய ஜான்மில்டனும் நூலைத் தொடங்குமுன்னம்,

"Sing Heavenly Muse"

என்று பாமகளை வணக்கம் செய்திருத்தல் நம்மவர்க்குத் தெரிந்ததே. ஆதலின் நூல்செய்வோர் நிரீச்சுரவாதிகளாயிருந்தாலன்றி நூலைக்காப்பு முன்னிட்டு இயற்றலே இயல்பு ஆயினும், ஈச்சுரவாதியாகிய நம்மவர் நூற்குக்காப்புச் செய்யாதது என்னையோ அறியோம். ஒருக்கால் மானஸீகமாகத் தெய்வ வணக்கம் செய்திட்டு, அதுவேபோதுமென்று ஒழிந்தனர் போலும். B. S. S.

---

*Health of the Army in India* —A Memorial signed by seventy-nine medical women has been presented to Lord George Hamilton protesting against the Indian Cantonments Rules of 1897. Objections are raised to the secret denunciation of supposed diseased persons, and to the means of compulsion employed to bring suspected persons under observation and treatment. The length of the contagious period, the impossibility of a really adequate detention, the questions of expense, of accommodation, of justice, of definitely establishing either the presence or the absence of disease, the fallacious nature of certificates pronouncing persons who have been known to be diseased as healthy, are discussed. The slight amount of medical treatment usually given to the troops is commented on, and the necessity of trustworthy statistics is urged. A system of dispensaries making treatment easy and popular among the civil populations of Cantonments is advocated. Regulations rendering vice difficult and dishonourable are suggested, as well as the instruction of the soldier when recruited on the moral conduct expected of him.

---

We have received from Messrs. Lawton & Co., Photo-Engravers, Jaffna, their first series of Specimens of Photo-Mechanical reproduction processes, which includes a number of fine reproductions from drawings, Photos and Chromolithos, all done in excellent style and good to print in ordinary paper with letter press. Our readers who are familiar with the several blocks we have published from time to time in the Viveka Chintamani bearing their name will be able to form a favourable opinion of their good work and we can well recommend them to all who are in need of their services.

---

சென்னைக் கவர்னர் மந்திராலோசனை சபையில் 2-வது மெம்பராயிருந்த கனம் மிஸ்டர் ஜேம்ஸ் குரோஸ் அவர்கள் நாளது மீ 7உ சாயந்திரம் உதகமண்டலத்தில் காலஞ்சென்றதைக் குறிப்பிட மிக விசனிக்கிறோம். அவருடைய ஸ்தானத்தில், கவரன்மெண்டு முக்கிய காரியதரிசியாக விருந்த கனம் மிஸ்டர் ஏ. டி. அரண்டல் அவர்கள் கௌன்ஸில் மெம்பராக வேலைபார்த்துவரும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் நியமனம் மாக்ஷிமை தங்கிய மஹாராணியார் அங்கீகாரம்பெற்றபின் காயம்செய்யப்படும். அவருக்கு மேற்படியிலுள்ள கனம் மிஸ்டர் குரோலுக்கு இவ்வேலை கிடைக்காமற்போனது ஒருவிசேஷமே.



# சிறுவர்க்கான பக்கம்.

[ விவேகசிந்தாமணியை வாசிக்கும சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது. ]

## கெட்டசகவாசம் பொல்லாது.

வசந்தகாலத்திலே ஓர் குடியானவன் பல நாள் உழைத்து வேலைசெய்து தன்னுடைய பெரிய வயலொன்றில் தானியம் விதைத்தான். இதைக்கண்ட காக்கை குருவிகள் வயலிலே புகுந்து விதையைச் சூறையாடி தங்கள் வயிராறவுண்டு களிக்கவாரம்பித்தன. வருத்தப்பட்டுத் தான்விதைத்த தானியத்தைப் பறிகொடுக்க மனம்பொறாதவனாகிக் குடியானவன் எப்படியாகிலும் காக்கை குருவிகளைத் துறத்திவிடக்கருதி, தன்னுடைய அழுக்கடைந்ததுப்பாக்கியிலே மருந்தையிட்டுக் கிடித்துக்கொண்டு 'காக்கையொன்றைச் சுட்டுக் கொளுத்திவிடுவது' என்று தீர்மானித்துக் காலவேளையிலெழுந்து துப்பாக்கியுங் கையுமாகத் தன் வயலண்டைபோய் நின்றான்.

குடியானவன் வீட்டிலே கிளி யொன்று வளர்ந்து வந்தது. அக்கிளி மிகுந்த பேச்சுவாயனாகவும் துஷ்டனாகவுமிருந்தது. வளர்ப்புக் கிளியானபடியாலே, சுயேச்சையாகக் கண்டவிடமெல்லாந் திரிந்து விளையாடும்படியாக அதை விட்டுவிடுவார்கள். குடியானவன் காக்கைகளைக் கொல்லக்கருதி நின்றுகொண்டிருக்கும்வேளையில், வெளியே யலைந்துதிரிந்துகொண்டிருந்த கிளி, வயலிலே கறுத்த திருட்டுக் குருவிகள் சில தங்கள் பழைய வியாபாரத்திலே ஊக்கமாக இருந்துகொண்டிருப்பதைக்கண்டது. 'மதுபாலன்' என்னுங்கிளி சகவாசப்பிரியனானபடியால், காக்கை குருவிகளுக்கு மத்தியிலே தத்தித்தத்திச்சென்று அவைகளோடு உறவாடவாரம்பித்துவிட்டது. குடியானவன் கொள்ளையிடப்பட்ட தன்வயலை மேற்பார்வையாகப் பார்த்தவனாகையாலே, மதுபாலன் காக்கைகளுக்கு நடுவிலே கூடியிருப்பதைக் காணவில்லை. துப்பாக்கியைக் குறிப்பாகப்பிடித்துக் குதிரையை யிழுத்துவிடவும், துப்பாக்கியோசையோடு மூன்று காகங்களின் சாகுரலும் மதுபாலனுடைய மரணயாதனைக் கீச்சொலியும் கிளம்பின. இச்சத்தத்தைக்கேட்டு காகங்கள் பறந்தோடின. குடியானவன் தான் நிறைவேற்றிய கொலைத்தொழிலைப்பார்த்து வரும்படி வயலுக்குட்சென்றான். அப்போது என்ன ஆச்சரியம்! குடியானவன் திடுக்கிட்டு, ஒரு காலொடிந்தும் இறகுகளெல்லாம் மடிந்தும் வளைந்தும் தரையோடுதரையாய்நீண்டு முடங்கிக்கொண்டிருக்குந் தனது துஷ்டக் கிளியைக் கண்டான். கண்டு "ஏ! மூடப்பட்சியே! கெட்டசகவாசத்தால் வந்தகேடிதுவோ?" என்றான்.

மதுபாலன் மறுமொழியுரைக்காது ஒடுங்கிப் பயந்து வெட்கத்தினாற் றலைகுனிந்தது. குடியானவன் மதுபாலனைக் கையிலேயெடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். சிறு குழந்தைகள் மதுபாலனுக்குக் கால் காயம்பட்டிருத்தலைக்கண்டு, "ஏனப்பா, இது? கால் காயம் பட்டதெப்படி?" என்று வினவினார்கள்.

மதுபாலன் பயபக்தியோடு, "கெட்டசகவாசத்தால், கெட்டசகவாசத்தால்" என்றுகூறிற்று. குடியானவனும், "ஆம்கெட்டசகவாசத்தால்; நான் காகங்களைச் சுடும்போது, மதுபாலன் அத்துஷ்டக் காகங்களோடு கூடிவிளையாடிக் கொண்டிருந்தது. காகத்தின்மேற் படவேண்டியகுண்டு இதன்மேற்பட்டது; குழந்தைகளே நீங்களுங் கெட்டசகவாசஞ் செய்யாதீர்கள்! மதுபாலன் கதியை நினைத்துக்கொள்ளுங்கள்," என்று சொல்லிப் புத்தி போதித்தான்.

பிறகு குழந்தைகளும் குடியானவனும் குடியானவன் பெண்சாதியும் மதுபாலன் காயத்தைக்கட்டி மருந்துபோட்டு, சிலநாளிற் காற்புண்ணை யாற்றிவிட்டார்கள். மதுபாலன் அதுமுதல் தனக்கு வயலில்நேர்ந்த விபத்தை மறக்

காமலிருந்து குடியானவன் வீட்டுப் பிள்ளைகள் வாதாடும் சிநேகிதர்களோடு பேசிக்கொண்டு வீதியிலே யலைந்துதிரிந்து வீணுகக் காலத்தைக் கழித்து விளையாடுவார்களானால், "கெட்டசகவாசம் பொல்லாது! கெட்டசகவாசம் பொல்லாது!" என்று எச்சரிக்கைசெய்து அவர்களைக் காப்பாற்றிவந்தது.

இக்கதையைப் படிக்கின்ற சிறுவர்களே! நீங்கள் துஷ்டசகவாசஞ் செய்துகொண்டு வீதியிலே திரியும்போது உங்களுக்கு எச்சரிக்கை செய்ய ஓர் மதுபாலன் அருகில்லையே! என்னசெய்வீர்கள்?—ஆனாலும் ஒன்றுசெய்யுங்கள்: தினம் ஒருமுறை இம்மதுபாலன் கதையைப்படித்துவிட்டு வெளியே செல்லுங்கள். அப்போதாகிலும் 'துஷ்டசகவாசம் பொல்லாது' என்று உங்களுக்கு ஞாபகமிருக்கும்.

T. R.

## The Viveka Chintamani Series.

*(The Madras Mail, 9th June 1898.)*

We have received from Mr. C. V. Swaminatha Iyer, Secretary to the Diffusion of Knowledge Agency, a number of books which are reprints from the Tamil monthly magazine the *Viveka Chintamani*. We have from time to time noticed in these columns the useful work that this gentleman has been doing for many years as Editor of the *Viveka Chintamani*, a journal which he has been publishing under considerable difficulties. He has in fact been working hard to maintain the standard of Tamil writing at a high level, and to this end has secured the willing co-operation of many well known graduates in the Presidency. Several useful subjects have been expounded in chaste and simple Tamil in its pages which have earned for the magazine the approval of leading native gentlemen in the Presidency. The Rev. Dr. Pope whose long and disinterested devotion to the study of Tamil literature entitles him to speak with authority in the matter has remarked that the *Viveka Chintamani* is "as a rule interesting from end to end." Mr. Swaminatha Iyer's effort to issue in a permanent form, under the title of the *Viveka Chintamani Series*, a few of the many valuable contributions from its pages will therefore be welcomed. The series as issued up to date comprises five neat little books, the place of honour amongst them being appropriately given to an admirable account of Her Majesty's life to which are appended some very useful chapters describing the constitution of the Government of India and of the India Office, as treated in Sir George Chesney's *Indian Polity*. A second pamphlet is devoted to the story of the life and teachings of Lord Buddha as depicted by Sir Edwin Arnold in his "Light of Asia." "Viveka Manjary," a third publication, is a Tamil Miscellany of instructive and entertaining tracts containing the "Story of Colbert" and other interesting pieces from the magazine. "Kamalambal" or "the Fatal Rumour" is a well written novel by the late Mr. B. R. Rajam Iyer, B.A., whose untimely death a few days ago was sincerely mourned by all lovers of Tamil literature. "Viveka Rasatalattu" (a lullaby), the last of the series, is a poem with an excellent moral, specially composed to be sung as a lullaby, which is a favourite daily occupation of young girls in Hindu families. Mr. Swaminatha Iyer deserves to be congratulated on the excellent way in which he has done the editing of the series and on their general get up.

While on the subject of this Tamil Series, we will refer to a leading article in our issue of the 22nd April last where we dwelt upon the unsatisfactory character of the text books of Indian History in use and on the unsatisfactory method in which knowledge of Indian History is being imparted to Indian youths in public schools. We took the occasion then to point out that History should be taught in lower standards in the pupil's own vernacular instead of by means of English. In the latter case a boy has to devote his attention more to learning the meaning of the English words and phrases in the History text book than to learn the details of historical events; thus he gains practically no knowledge of history. If instead of cramming a youth's head with dates of battles and treaties, he were taught in his own vernaculars—the principal events of an epoch being made to revolve round the lives of great personages who played a leading part in that particular period of his country's history—the lessons of history would be learnt with greater ease and remembered with no very great tax on the youth's powers of memory. To educated natives of the country who profess to take an interest in their rising generation, we can point no more important duty than their writing in the vernaculars of the country books on Indian History on the lines of "Readings" by John Richard Green from his standard work "A short History of the English People," and other well known books. This will not only make the study of Indian History to the youths in the lower standards more attractive but will also be a means of enriching the prose literature of the vernaculars, which is not particularly wide or varied.

Referring in conclusion to the books under notice, we can heartily commend them to the consideration of the members of Dravidian Board of the Text-Books Committee, some of whom, we see, have in their individual capacity already spoken in very high terms of the value of these publications. We think with the late Professor Sundaram Pillay, of Trevandrum, who was considered an authority in Tamil Literature and was himself the author of a most interesting Tamil drama, that "it would be a pity if one or other of the *Viveka Chintamani* series is not prescribed for the F. A. Examination." We trust that these publications will meet with the official patronage which they so richly deserve.

---

[stamp] 30 AUG. 1898

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி. 5½ அணா,,
பழையபிரதி. 6 ,,

சந்தாவிலே விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6-மாதத்துக்கு ரூ. 2-2.

KNOWLEDGE IS POWER
DIFFUSION OF KNOWLEDGE AGENCY
விவேகசிந்தாமணி
VIVEKA CHINTAMANI

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். 7.] 1898வருஷ ஜுலை மீ. [இலக்கம். 3

### Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As, : Back Nos. 8 As. each!

English & Foreign Subscription 7s. 6d net per annum

**Thin Paper Edition** for the People:—

Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.
Single copy, current No. 5½ As. Back Nos. 6 As. each.
English & Foreign Subscription 5s. 6d net per annum.

**If Strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions Entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a Volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V.P.P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தனமான காகிதப்பதிப்பு:— அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள். புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5.
தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறுமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V.P.P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கைபொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

# நிலைக்கண்ணாடிகளுக்கு இரசமிடும் விதம்.

கண்ணாடிகளில் நாம் நமது உருவங்களைப் பார்த்துக் கொள்ளும்போது அவைகளில் அவ்வுருவங்கள் பிரதிபலித்துக் காண்பது அக்கண்ணாடிகளின் பின்புறத்தில் பூசப்பட்டிருக்கும் பாதரசத்தினால் உண்டாகிறது. சில சமயங்களில் வெள்ளித்திராவகத்தைக் கொண்டு; கண்ணாடிகளின் பின்புறத்தில் வெள்ளிப்பூச்சு பூசுவதுமுண்டு. மிகவும் வழவழப்பான கண்ணாடிகளில் இரசத்தை ஒட்டிக் கொள்ளும்படி செய்வது காகிதம்போன்ற மெல்லிய * தகரத்தகடு - இவ்விதத் தகட்டில் இரசத்தைவிட்டால் அது உடனே தகரத்துடன் கலந்து ஒன்றாய்க் கண்ணாடிகளில் கூடுமானவரையில் நன்றாய் ஒட்டிக்கொள்ளும்படியான சக்தியையடைகிறது. இரசமிடுவதற்குமுன் கண்ணாடிகளின் இரண்டுபக்கங்களையும் அழுக்குகளில்லாமலும் தூசுதுரும்புகளில்லாமலும் சுத்தமாக்கிக் கொள்ளவேண்டியது. கொஞ்சமேனும் அழுக்குகள் விடப்பட்டிருந்தால், இரசமிட்டபிற்பாடு அவைகள் கண்ணாடிகளின் மேற்புறத்தில் அதிகமாய்க்காணப்பட்டு, கண்ணாடிகளின் அந்தத்தைக் குறைக்கும்.

இரசமிடவேண்டிய கண்ணாடியினளவிற்கு நான்கு பக்கங்களிலும் ஒரு அங்குலவளவு அதிகமான மெல்லிய தகரத்தட்டை நறுக்கிக்கொண்டு இரசமிடும் வேலைக்காக உபயோகப்படுத்தும் மேடுபள்ளமில்லாமல் சமமானதும் வழவழப்பானதுமான சலவைக் கற்பலகையின்பேரில் தகட்டை நொறுக்குகள்விழாமல் மெதுவாய் வைக்கவேண்டியது. பிற்பாடு ஒரு மர உருளையைக்கொண்டு கற்பலகையின்பேரிலுள்ள தகரத்தகடு நாலாபக்கமும் தேய்க்கப்பட்டுச் சமனாகவும் மெதுவாகவு மாக்கிக்கொள்ளப்படுகிறது. இதன்பின் பூச்சுக்காரன் பாதரசத்தை ஒரு இருப்பகப்பையால் எடுத்துத் தகரத்தகட்டின் எல்லாவிடங்களிலும் பரவிநிற்கும்படி விடுவான். இரசத்தைப் பரப்பியபின்னர் கண்ணாடியை அழுக்காக்காமலெடுத்துப் பிடித்துக்கொண்டு, அதன் ஒரு விளிம்பு தகட்டின் ஒரு ஓரத்திலிருந்து மற்றொரு ஓரம் வரையிலும் சறுக்கும் வண்ணமாய்த் தேய்த்துக்கொண்டு போய்ப் பிற்பாடு கண்ணாடியை மெதுவாய் இரசமமைந்த தகட்டின்பேரில் வைக்கவேண்டியது. இப்படிச்செய்வதினால் தகட்டின்பேரிலிருக்கும் அதிகமான பாதரசமும், காற்றுக்குமிழிகளும், இரசத்திலுள்ள அசுத்தங்களும் நீக்கப்பட்டு தகட்டிற்கும் கண்ணாடிக்குமிடையில் அதிகசுத்தமான மெல்லிய இரசப்பரப்பு மாத்திரம் நிற்கும்.

* தகரம்=வெள்ளீயம்.

இவ்விதமாய்க் கண்ணாடியானது தகரத்தகட்டின்பேரில் வைக்கப்பட்ட பிற்பாடு அதன்பேரில் அதிகபாரமான இருப்புக்கட்டிகளையாவது அல்லது ஈயக்கட்டிகளையாவது வைப்பார்கள். இதனால் தகட்டில் அதிகமாய் ஒட்டியிருக்கும் இரசமெல்லாம் வெளியே பிதுங்கியோடிவிடும். மேலும் அதிகமாயிருக்கப்பட்ட இரசத்தைத் தகடுபதித்த கண்ணாடியைச்சுவற்றிற் சாய்த்து வைப்பதாலும் வெளியேற்றிவிடலாம். இரசமிடும் துவக்கத்தில் தகட்டின்பேரில் அதிகமாய் இரசம் விடப்பட்டபோதிலும் கடைசியாக அதில் ஒட்டிநிற்பது கொஞ்சஅளவுதான். மிஞ்சிய இரசத்தையெல்லாம் சேர்த்தெடுத்துக் கொள்வார்கள். அதிகமான இரசமெல்லாம் வெளிவந்தவுடன் இரசமும் தகரரேக்கும் ஒன்றாகக்கலந்து கண்ணாடியுடன் ஒட்டிக்கொள்ளுகிறது. இரசத்தையாவது தகரரேக்கையாவது தனித்தனியே கண்ணாடியில்ஒட்டப்பார்த்தால் அவை அதில் ஒட்டா. இவ்வாறு இரசம்கலந்த தகரம் கண்ணாடியில் பதிந்தவுடன் நமது சாயைமுதலியன கண்ணாடியில் தெளிவாய்த் தெரியும். கண்ணாடிக்கு இயற்கையாய் அதன்பின் இருக்கும்வஸ்துக்களை ஒளியூடுருவிக்காட்டும் சக்தியுண்டேயொழிய அதன்முன் தோன்



றும் வஸ்துக்களைப் பிரதிபிம்பித்துக்காட்டச் சக்தியில்லை. அதன் பின்பக்கத்தில் இரசப்பூச்சுப் பூசுவதினால் இச்சக்தியுண்டாகிறது. மேற்சொல்லிய பிரயோகம் கனமுள்ள கண்ணாடிப்பில்லைகளுக்கு இரசமிடுவதற்கு உபயோகமாகும். சாதாரணக் கண்ணாடிகளுக்கு இரசமிடுவதில், அவைகளின்பேரில் அதிகபாரமேற்றி எஞ்சிய இரசத்தை வெளியேற்ற முயன்றால் கண்ணாடிகள் உடைந்து பயனில்லாமற்போகும். அதற்காக, தகட்டில் இரசம் பரப்பியவுடன் ஒரு சுத்தமான காகிதத்தை இரசத்தின்பேரில் போட்டு பிற்பாடு கண்ணாடியை அதன்பேரில் வைத்து அழுத்திக்கொண்டு மெதுவாய்க்காகிதத்தை வெளியே இழுத்துவிடுவது வழக்கம். காகிதம் வெளியே இழுக்கப்படும்போது தகட்டின்பேரிலிருக்கும் அதிக இரசமும், காற்றுக்குமிழிகளும் அசுத்தங்களும் நீக்கப்பட்டு, மெல்லிய இரசப்பரப்பு மாத்திரம் உள்ளேநின்று, கணாடியுடன் ஒட்டிக்கொள்ளும். இவ்வாறு வேலைதீர்ந்த கண்ணாடிப்பில்லைகள்தான் நேர்த்தியான சட்டங்களிடப்பட்டு விலைக்கு விற்கப்படுகின்றன.

## சாமானிய முகக்கண்ணாடிகளுக்கு வெள்ளி பூசும் விதம்.

பூச்சுவேலைக்கு ஆரம்பிப்பதற்கு முன் கண்ணாடியைச் சுத்தமாய் தண்ணீரால் கழுவி ஒரு மேஜையின்மேல் வைக்கவேண்டியது. பிற்பாடு அக்கண்ணாடியை 200 பங்கு காய்ச்சி வடித்த தண்ணீரும்(Distilled water),1 பங்கு ரோச்சலி சால்ட் (Rochelle salts) என்னும் உப்பும் கலந்த நீரால் துடைக்கவேண்டும். கண்ணாடியின்பேரில் வெள்ளி பூசுவதற்காக பிரயோகிக்கப்படும் திராவகமானது வெள்ளிகாடிக்காரமும் (Nitrate of silver), நவச்சாரமும் (Ammonia), ரோச்சலி உப்பிட்ட நீருமாகக் கலந்து கூட்டுவதால் உண்டாக்கப்படுகிறது. இந்தத் திராவகம் கூட்டப்பட்ட கொஞ்சநேரத்திற்கெல்லாம் நுரைத்துக்கொண்டுவரும். நுரைத்துவந்தவுடனே திராவகத்தைக் கண்ணாடியின்பேரில் விளிம்புகளில் வழிந்தோடாமல் நாலாபக்கங்களிலும்சமமாய்ப் பரவிநிற்கும்படியாய் விடவேண்டியது. பிற்பாடு கண்ணாடியை இளஞ்சூட்டில்வைத்த இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் திராவகம் விடப்பட்டவிடத்தில் வெள்ளிப் பொடிகள் கண்டு சற்றேறக்குறைய அரைமணிநேரத்திற்கெல்லாம் கண்ணாடியின் பரப்புமுழுவதும் வெள்ளிப்பூச்சு உண்டாகும். கண்ணாடியின்மேல் அதிகமாய் நிற்கும் திராவகத்தை வடித்துவிட்டு பிற்பாடு அதை நான்கு ஐந்துமுறை தண்ணீரால்கழுவி உலரவைக்க வேண்டியது. கண்ணாடி உலர்ந்தவுடன் வெள்ளிப்பூச்சின் பேரில், நிலக்கீல், சில மரப்பிசின்கள் முதலிய கலந்து கூட்டிய மெருகெண்ணை (Varrnish) யைப் பூசுவது வழக்கம். இந்த மெருகெண்ணை கண்ணாடியுடன் நன்றாக ஒட்டிக்கொண்டு வெள்ளிப்பூச்சு அழிந்து கெடாமலிருக்கும்படி தடுக்கும். 'வார்னிஷ்' உலர்ந்தவுடன் கண்ணாடிகளுக்குச் சட்டமிடுவார்கள்.

A. V. A.

பிழைதிருத்தம்.—சென்ற மாதத்துச் சஞ்சிகையில், 57-வது பக்கத்தில் 'வர்ணக்காகிதம் செய்யும்வகை' என்னும் தலைப்பெயருடைய விஷயத்தின் இரண்டாவது'பாரா'7,8-வதுவரிகளில்'272 அங்குலம்' '72 அங்குலம்' என்பன முறையே '2½ அங்குலம்' ½ 'அங்குலம்' ஆக விருக்கவேண்டியது. மூன்றாவது'பாரா'5-வது வரியிலுள்ள'172காலன்''72 பவுன்'முறையே '1½ காலன்,''½ பவுன்' ஆகவிருக்கவேண்டியது. இதை வாசிப்போர் அனைவரும் தயவுசெய்து இப்பிழைகளைத் திருத்திக்கொள்ளக் கோருகிறோம்.

அறிவிப்பு.—இதர பத்திரிகைகள் சில நம் அனுமதியின்றி டை விஷயத்தை இப்பிழைகளோடு எடுத்தச்சிட்டிருக்கின்றன. அவைகள் இப்பிழைகளைத் திருத்துவதோடு, இனி இப்பத்திரிகையில்வரும் விஷயங்களையெடுத்துப் பிரசுரிக்கவேண்டின், பத்திராதிபருக்கு எழுதிக்கேட்டு அவர் அனுமதி பெற்றுக்கொண்ட பின்னரே பிரசுரிப்பார்களென்று நம்புகிறோம். அப்படிக்கின்றிச்செய்வது முறைகேடன் சட்டவிரோதமுமாம்.

டைய தந்திரத்திலகப்பட்டு அவமானமடைந்தவர்கள்கூட நாரதர்பேரில் குற்றமில்லையென்றே சொல்லுவார்கள்.

இலங்காதிபதியாகிய இராவணன் தனது தபோமகிமையால் பிரும்மதேவரிடத்தில் சகல வரன்களும் பெற்று திக்குவிஜயம் செய்துகொண்டு தனக்கு சமானமாகிய பலிஷ்டர்கள் இனி திரிலோகத்திலுமில்லை யென்று வெகு அகம்பாவத்துடன் வீற்றிருப்பதைக் கண்டு, இராவணனுடைய கொழுப்பை அடக்கி அவனுக்கு அவமானத்தை உண்டு பண்ணக்கூடிய வழி இன்னதென்று அறியாமல் சகலதேவர்களும் உள்ளுக்குள் வெகு பொறுமையுடனிருந்தார்கள். இதை அறிந்த நாரதமகாரிஷியானவர் தேவர்கள் கருத்தை வெகுசுளுவாய் முடிக்க ஒருதந்திரம் செய்தார். அதென்னவெனில்: ஒருநாள் இராவணன் மகோன்மத்தனைச் சிங்காசனத்திலிருக்குந் தருணத்தில், நாரதர் தமது வீணையைக்கையிலேந்திக் கொண்டு அச்சபைக்குவந்தார். அவருடைய விஜயத்தைக்கண்டு ஆனந்தமடைந்து இராவணனும் வெகு பரபரப்புடன் ஓடிவந்துநாரதருக்கு எதோக்தமாய்ச் சகலஉபசாரணைகளும் செய்து தகுந்த ஆசனத்தில் அவரை வீற்றிருக்கச்செய்து தங்கள் தரிசனத்தை வெகுநாளாய்எதிர்பார்த்தும் கிடைக்கவில்லை. இன்றைக்கு நான் தன்யனானேன்; என்னை ஜெயிக்கக்கூடிய வல்லமையுள்ள பலிஷ்டர்கள் உலகத்திலிருந்தால் எனக்குசொல்ல வேண்டுமென்று நாரதரைப் பிரார்த்தித்தான். புந்கையுடன் நாரதர் சொன்னதாவது: 'அப்பா உனக்குச் சமதையானபலிஷ்டர்களை நான் கண்டதில்லை. ஆனால் எனக்கொரு சந்தேகமிருக்கிறது. சுவேதத்வீபம் என்று சமுத்திரமத்தியில் தேஜோமயமான ஒரு தீவு இருக்கிறது. அதில் மகாலெக்ஷுமிசமேதராக ஸ்ரீ நாராயணன் என்ற ஒருவர் வசிக்கிறார். அவருடைய சமீபத்தில் அவருக்கு ஊழியம்செய்யும் ஸ்திரீ புருஷர்கள் ஆயிரக்கணக்கா யிருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்களுக்குமிஞ்சியபலிஷ்டர்கள் ஒருவருமில்லை யென்ற அகம்பாவமுண்டு. நீ ஒருதடவை அவ்விடம்போய் அவர்களைமட்டும் அடக்கிவிட்டால், உனக்கு ஒருவரும் நிகரில்லை யென்றுநான் உறுதியாகச்சொல்லக்கூடுமென்றார். இதைக்கேட்டதும்இராவணனுக்கு அவர்களையும் ஜெயிக்கவேண்டுமென்கிற பேராசை மேற்கொண்டு, உடனே ஆகாசமார்க்கமாய் சுவேதத்வீபம் என்கிற அதிபரிசுத்த ஸ்தலத்திற்கு வந்துசேர்ந்தான். அப்பொழுது அவ்விடத்தில் ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்த சிலஸ்திரீகள் பத்துத் தலையுடன்கூடிய இராவணனைக்கண்டு இந்தப்பூச்சி விநோதமாயிருக்கிறது. இதைப் பிடித்துவிளையாடுவோமென்று சொல்லிக்கொண்டு அதில் ஒருத்தி இராவணன் குரல்வளையைஇரண்டு விரல்களால் பிடித்தாள். அவன் திக்குமுக்காடி மூச்சுவிட முடியாமல் விழிபிதுங்கி உயிர்தப்பினாற் போதுமென்று அவள் விரலைக்கடித்தான். அவள் உதறியெறிந்ததில் அனேகம் யோஜனை தூரத்திற் கப்பால் சமுத்திரத்தில்போய் விழுந்தான்.

அந்தக்களைதெளிந்து சற்றுநேரத்திற்குப்பின் இப்படியும் ஒருஸ்திரீயிருக்கிறாளாவென்று ஆச்சரியப்பட்டு அவளை ஜெயிக்காமல் விடுகிறதில்லை யென்று மறுபடியும் கிளம்பி அவளிருக்குமிடத்திற்குச் சமீபத்தில் ஜலத்தில் குதித்தான். அவனைப்பார்த்த மற்றொருவள், இந்தப்பூச்சி மறுபடியும் கிட்டவருகிறதென்று நகைத்து, இராவணனை ஒருகையால் பிடித்துச் சுழட்டியெறிந்தாள். முன்விழுந்தவிடத்திற்கப்பால் வெகுதூரத்தில் போய்விழுந்தான். இப்படி பலதடவை அந்தஸ்திரீகளிடம் அவமானப்பட்டபிறகு அந்தத்தீவில்தவம்செய்துகொண்டிருந்தஸனத்குமாரர்என்ற ஒருயோகியைவணங்கி தனக்கு நேரிட்ட அவமானத்தைச்சொல்லி, 'இதுஎன்ன புதுமை! இராவணனை வெல்லக்கூடிய பெண்பிள்ளைகள் உலகத்திலுண்டோ?' வென்று அவரை வினவினான். இவனுடைய மூடபுத்தியைப் பார்த்து அவர் நகைத்து அப்பா! உன்னுடைய பராக்கிரமம் அதிசயந்தான். இது விஷ்ணுலோ



கம்: இவ்விடத்தில் உன்னுடையபலத்தை திருணமாய் நினைக்கக்கூடிய குழந்தைகள் வெகுபேர் இருக்கிறார்கள். நீ வந்தவழியோடு திரும்பி இலங்கைக்குப்போவதே உனக்குகௌரவம்' என்று புத்திசொன்னார். இராவணனும் அப்படியே திரும்பிவந்து நாரதர் ஒருவர் இல்லாவிடில் நமக்கும் புத்திவராதென்று வெட்கிப்போனான்.

இதுதான் அவருக்குள்ள பிரதான மஹிமை. தேவகாரியங்கள் சீராய் நடந்துவரும்பொருட்டு தந்திரம்செய்வதில் நிபுணராகிய ஒருவர் உலகத்துக்கு அவசியம் வேண்டுமென்றே இந்த நாரதர் அவதரித்திருப்பதாய்ச்சொல்லுவார்கள். பாரதபாகவதம் முதலிய சரித்திரங்களில் நாரதர் செய்திருப்பதாய்ச்சொல்லப்படும்தந்திரங்களைக் கேட்கும்பொழுது 'இப்படியும் ஒரு குடிகேடன் உண்டோ' வென்று சிலர் நினைப்பார்கள். அது நிமித்தம் "நாரதா கலகப்பிரியா" வென்று ஒரு பழமொழியும் உலகத்தில் வழங்குகிறது. அதற்கு அறிகுறியாக இக்காலத்தில் மித்திரபேதமறிந்த நிபுணர்களை 'நாரதர்' என்று ஓர் காரணப்பெயரிட்டு அழைக்கிறதுண்டு. காளிதாஸனும், ஷேக்ஸ்பியரும் கவனத்தில் சிறந்தவர்களென்று எப்படிக்கீர்த்தியடைந்தனர்களோ அப்படியே தந்திரத்திற் சிறந்தவர் என்ற கீர்த்தி நாரதருக்கே உரியது. இதுவரையில் நாம் எழுதிவந்ததெல்லாம் நாரதருடைய வாஸ்தவமான சரித்திரமேயன்றி கட்டுக்கதையல்ல. நாரதர் அவதாரம் முதல் அவர் செய்தகாரியம் முழுவதும் அதி - அற்புதமாகவே யிருக்கும். அவைகளெல்லாம் அனேகம் சரித்திரங்களில் சிதறிக்கிடைப்பதால் அதைப் பொறுக்கிச்சேர்த்துக் கோர்வைப்படுத்துவது இலகுவானவேலையல்ல. அப்படிச் சேர்த்துவிட்டால் அதுவே பெரிய பாரதமாகவும் விநோதரஸ ஸாகரமாகவுமிருக்கும். இந்தப் பெரிய சுமையை வகிக்க இப்பொழுது நம்மாலில்லை. ஆதலால் இதை இவ்விடத்தில் நிறுத்திவிட்டு இந்த நாரதருடைய குணங்களுக்கு முற்றிலும் விரோதமான குணங்களுடன் தற்காலத்தில் அவதரித்திருக்கும் 'கலியுக - நாரதர்களுடைய' சரித்திரத்தை நமக்குத் தெரிந்தமட்டில் இனிச் சொல்லத் துவக்குவோம்.

என். இராஜப்பையர்

## கள்ளுண்ணாமை.

### மானிடக்கும்மி.

கள்ளு சாராயம் குடியாதே யபின்
கஞ்சா வெறியால் மயங்காதே
உள்ளமயங்கிடும் கண்ணும் சிவந்திடும்
ஒட்டாண்டியுமாவாய் மானிடனே.

அல்லும் பகலும் ஒழியா வெறியாலே
ஆனந்தப்பாட்டுகள் வந்திடுமே
நல்லதென்றே யெண்ணிக்கொள்ளாதே மிக
நையாண்டிசெய்குவாய் மானிடனே.

வார்த்தை குளறிடும் வாயது நாறிடும்
வம்பானவார்த்தைகள் பேசச்சொல்லும்
பார்த்தவர் கெட்ட குடிகாரனென்றுன்னை
பங்கமாய்ச் சொல்லுவார் மானிடனே.

கொஞ்சங் கொஞ்சமாய்க் குடித்திடுவாய் பின்
கூடும் பொருளை யழித்திடுவாய்
மிஞ்சிக்கடன்களும் வாங்கிடுவாய் நல்ல
மேனிமெலியுமே மானிடனே.

நித்தம் நினைப்பாகவே யிருக்கும் சற்று
நேரம் குடியாதிருந்து விட்டால்
பித்துப்பிடித்தவன் போலிருக்குங் கெட்ட
பிரமை யுண்டாகுமே மானிடனே.

கண்டபொருளை யடகு வைப்பாய் ஏதும்
கையில்வருவதை மோசஞ்செய்யும்
சண்டாளமான வெறிசெய்து வித்திடும்
சர்ப்பனை கேளீரே மானிடனே.

மேடு பள்ளமென்றுங் காணாது கெட்ட
மூத்திரம் நரகல் தோன்றாது
சாடும் தடுமாறிச் சாக்கடையில் வீழ்ந்து
சவம்போல் கிடப்பாயே மானிடனே.

தள்ளாடித்தத்தி நடக்கச்சொல்லும் வீணில்
சண்டைகள்போடவும் தூண்டிவிடும்
செள்ளையிலடித்து டாணாவில் கொண்டுபோய்
துளையில்மாட்டிடும் மானிடனே.

பற்றியிழுத்து உதைத்தும் அடைத்திடப்
பண்ணுதெல்லாம் செய்யப் பண்ணுவிக்கும்
மற்றுநாள் போலீசில் தண்டம் போடுவித்து
வதைக்கும் கண்டறி மானிடனே.

நெஞ்சும் உலர்ந்திடும் மூளைவரண்டிடும்
நேசமும் பாசமும் அற்றுவிடும்
பஞ்சையாய் எங்குமே பேசச்செய்யும் அத்தால்
பவிஷூம் போய்விடும் மானிடனே.

அசுரர்குருவான சுக்கிராசாரி
ஐயோ மதுவைக்குடித்ததினால்
கசியவயிறு கிழியலானதை
நாடெங்குஞ்சொல்லுவார் மானிடனே.

இத்தியாதி துன்பங்கள் அல்லாமல் அதில்
ஏதும் பிரயோஜன மில்லையப்பா
சுத்தர மதுவை நிறுத்திவிட்டு நெய்யும்
துண்டமும் தின்பாயே மானிடனே.

(குறிப்பு.) நெய்யும் துண்டமும்=தெரியாமல் சுராபானம் செய்தவன் அந்தப்பாவத்தைப் போக்குகிறதற்காகக் கந்தைவஸ்திரம் சடை இவைகளைத் தரித்துக்கொண்டு சாராயச்சட்டியைக் கையில் அடையாளமாக வைத்துக்கொண்டு ஒருவருஷம்வரையில் நெய்யையாவது பிண்ணாக்கையாவது இரவிலொருவேளை சாப்பிட்டுக்கொண்டு இருக்கவேண்டும் என்றார். மனுஸ்மிருதி 11 - ம் அத்தியாயம், 92 - ம் சுலோகம்.

—Temperance Tracts.

## திருஞானசம்பந்தர் காலநிர்ணயம்.

(51-வது பக்கத்தொடர்ச்சி.)

தெக்ஷணத்தில் நேர்ந்துள்ள மதவாக்கப்பாட்டின் வரலாறும், மேற்குறித்த கொள்கைக்குச் சாதகமாவிருத்தலின், நம் சம்பந்தர் சங்கராசாரியர் காலத்துக்குச் சிறிதுமுன்னே யிருந்திருக்கவேண்டுமென்றனுமானிக்கலாம்.

இங்ஙனம்பிறந்த அனுமானம் சங்கரர் திருவாய்மலர்ந்த சுலோகத்துவொன்றால் பிரத்தியக்ஷமாயிற்று. தத்துவசாத்திர பாரங்கதரான சங்கரர் நம் பாலறாவாயர்மாட்டுப் பூண்டிருந்த அன்பின் மேலீட்டைநோக்கின், எம் சீகாழிவள்ளல் மற்றவருக்கு முந்தியிருந்தவரென்று போதரலோடு, இருவருக்குமிடையிட்டகாலம்அதிகமென்றேற்படுகின்றது. மேற்பிரஸ்தாபித்த, சங்கரர் சுலோகமொன்றென்றது அத்தத்துவபாரங்கதர், (சத்திமார்க்கத்தாரும் தாந்திரிகசைவரும் சிரமேற்கொளும்) சௌந்தரியலகரியென்னும் கிரந்தத்தின் 76-வது சுலோகமாகும். நாற்பதுபாடலடங்கிய அதன் முதற்பாகமானது ஆனந்தலகரியெனப் பெயர்பெறும். இதைச்சங்கரர்வாக்கென்றுகொள்ளச் சாக்தர்முதலியோர் துணிவதில்லை. வீரைகவிராசபண்டிதர் தாம் தமிழ்ப்படுத்திய ஆதே சௌந்தரிய லகரியெனும் நூலின் பாயிரத்தில், அதன் பூர்வபாகம் முதன்முதல் புஷ்பதந்தரென்பவரால் கைலாயபருவதத்திலெழுதப் பட்டிருந்ததென்றும் கௌடபாதரென்பவரால் அவர் சிஷ்யர் சங்கரர்க்குக்கிடைத்து அவரால் உத்தரபாசமும் இயற்றப்பெற்றதென்றுங் கூறியுள்ளாரென்பது,

“அரன்கைலைப்புறத்தெழுதப் படுநூலை யருந்தவத்துப்
புட்பதந்தன்,
பார்தவடவரையழுத்த வதைக்கௌட. பாதருளம்
பதித்து முற்றும்,
தாம்பெற்றுசொல் லமுதெனப்பின் சங்கரமா முனிக்
கருளவந்தமேகம்,
சுரந்துலகில் வாடுமுயிர்ப்பயிர் தழைப்பச்சொரிந்ததெ
னச்சொல்வர் நல்லோர்”

என்னுஞ் செய்யுளாற் கொள்ளக்கிடக்கின்றது. இக்கர்ணபரம்பரை வரலாற்றை யுண்மையென்றுகொள்ள இடமில்லை யாயினும், கடைசி 60 சுலோகங்கள் சங்கரர்வாக்கேயென்பது எவர்க்குமுடன்பாடுதான். ஆதலின் நாம் மேலெடுத்தாண்ட

“ தருணமங்கலை யுனதுசிந்தைதழைந்தபாலமுதூறினால்,
அருணநொங்கையிலதுபெருந்தவி யலைநெடுங்கடலாகுமே,
வருணநன்குறு கவுணியன்சிறுமதலைபம்புயல்பருகியே, [தே
பொருணயம்பெறுகவிதையென்றொருபுனிதமாரிபொழிந்த.

என்னும் 74-வது செய்யுளாற் பெறப்படுமோதாரத்தைப் பாதிப்பதொன்றுமின்று. மேற்போந்த பாடலிற் சூசிப்பிக்கப் பட்டிருக்கும் கதைக்குறிப்பு நம் சம்பந்தப்பெருமான் சரிதசாகரத்திற் றிளைத்தவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குமென்க. வடமொழியில் மாத்திரம் பாண்டித்தியமுள்ளவர்களும் இதுவிஷயம் தெரிந்துகொள்வது அசாத்தியமன்று. வடமொழியிலமைந்துகிடக்கும் பக்தவிலாசம் 47-வது அதிகாரத்தில் நம் சிரபுரத்துச் செல்வர் சீரெல்லாம் ஒருங்கே பரவப்பட்டிருப்பதைக் காணலாம். “ இலைபடர்ந்த பொய்கை யிடத்து ” நம்கௌணியர்மதலை தனியே அழக்கண்ட உமாதேவியாராற்றுதவராய்த் தந்திருமுலை சுரந்தவருளமுதமருத்தி யன்னையாயதே அவர்சரித்திரத்தி லதியற்புதமானது. இங்ஙனம் குழந்தைத்திருமேனியாக பரசமய கோளரியாரென்றும் பாலறாவாயரென்றும் எவருங்கொண்டாடத் தமிழ்நாட்டில்விளங்கிய எங்கள் ஐயன்பக்கலே அம்மை பாலுண்ட அற்புதம் கேட்கப்படலால், ‘திராவிடசிசு’ என்னும் பிரயோகம் முதனூலாசிரியராகிய சங்கரனையே குறித்தபடி யாமென்று மயங்கிய இலக்ஷ்மிதரர் முதலியோர் கூற்றையொருபொருட்படுத்தி மறுத்தல் அவசியமின்று. இலக்ஷ்மிதரர்பால் இப்பெற்றித்தாய விபரீதவுணர்ச்சி பலவாகக்காணப்படலாற்றான் சென்ற நூற்றாண்டினராகிய பாஸ்கர ராயரென்பாரும் அவரை நிர்த்தாக்ஷண்யமாகக் கண்டித்திருக்கின்றார் போலும். ‘சிசு’ அல்லது குழந்தையென்று பிரத்தாபித்திருப்பது நம் சம்பந்தருக்குத்தான் பொருந்தியுள்ளதென்பது அவர்க்கு ‘ஆளுடைய பிள்ளை’ யென்று தமிழில் வழங்கும் பெயரால் விளங்கும்.

நிற்க, சங்கராசாரியர் தாமியற்றிய சிவபுஜங்கம் சிவானந்தலஹரி யென்னும் கிரந்தங்களில் நான்கு நாயன்மார்களைத் துதித்திருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் ஸ்ரீ சம்பந்தரோடு ஏககாலவாசியாக விருந்தவர். இன்னுமொருவர் பிறப்பில் வேடரான காளத்தி கண்ணப்பர். ஆனால் ஒருவரும் நம் கவுணியர் தலைவர்பிரபாவத்திற் பாதியேனும் பெற்றவரல்லர்.

ஆதலின் சங்கராச்சாரியர் காலத்திலேயே நம்பாலறாவாயர் வரகவியென்றும், பரதகண்டத்துப் பாவலர் சிகாமணி யென்றும், முனிபுங்கவ ரென்றும், கொண்டாடப்பட்டதுமன்றி பார்வதிதேவியாராற் பாலருத்தப்பெற்றவராதலின் ஓதாதுணர்ந்தவ ரென்றுலகம் பிரமிக்கும் வண்ணம்அவர்சரிதமும் பழமைப்பட்டது. Fleet துரையவர்களால் துணியப்பட்ட சங்கரர்காலத்தை யுண்மையெனக் கொள்ளின் ஸ்ரீ சம்பந்தர் 7-வது நூற்றாண்டிற்குப் பிந்தியிருந்திருக்க முடியாதென்பது ஒருதலை.

மேலும், நம் காழிவள்ளலுக்குச் சிறிதுகாலம் பிந்திய சங்கராச்சாரியர் அவதரித்திருக்க வேண்டுமென்பது சம்பாவிதம். இடையிட்டகால மிவ்வளவென்று நிச்சயிக்கக், கிடைத்திருக்குமாதாரம் போதாது; என்றாலும் இரண்டொரு நூற்றாண்டிடையிட்டிருக்கலாமென்று கொள்ளல் பெருந்தவறாகாது.

(இன்னும் வரும்.)

கே. எஸ். ஷண்முக சுந்தரம், பி. ஏ.

## The Life and Teachings of Sree Krishna.

## ஸ்ரீ கண்ணபிரான் திவ்ய சரித்திரமும், மெய்யுபதேசமும்.

(50 - வது பக்கத்தொடர்ச்சி.)

இனி, ஸ்ரீ கண்ணபிரான்மீது, அவர் உண்மையில் விருப்பு வெறுப்பின்றி அஸ்கலித பிரமசாரியாயிருக்கவும், ஸ்திரீலோல ரென்றும், வியபசார தோஷியென்றும், பலவாறு அவர்க்கு எவ்வாற்றானும் ஏலாத கொடிய தோஷங்களை ஆரோபித்து அவரது நற்குணங்களை இழிவுபடுத்தி, ஆரறிவில்லாக் கற்றுக்குட்டிகளாகிய சிலரை ஏமாற்றி அவர்களுக்குப் பெருமான் விஷயமாக அப்பிரியம் உண்டுபண்ணக் கருதி, அவ்விஷயத்தில் கவலையுள்ள சிலர் முயன்று வருவதை நாமெல்லோரும் அறிந்திருக்கின்றோமன்றோ? அவ்வாறு அவர்கள் செய்வது, ஒருகூறு அறிவில்லாமையாலும், ஒருகூறு நியாயவாதத்துக்குக் கட்டுப்படாதபடி ஒன்றிருக்க ஒன்றைக் கற்பிக்கும் சயமைக்குணத்தாலும் என்பதும் நீங்கள் அறிந்த விஷயமே. ஸ்ரீ பாகவதத்தில், இவ்விதமான இழிந்த கொள்கைகளுக்கு இடங்கொடுப்பதாகக் கூறப்படும் கட்டங்களில், நூலாசிரியர்தம் உள்ளக் கருத்தை அறியாமல், “ கள்ளனுக்குத் தோன்றும் திருட்டுப் புத்தி ” என்றபடி, காமவிகாரத்தில் மூழ்கிக்கிடக்கும் அவிவேகிகள், ஒருவேளை, பெருமான் செய்கைகளைப் பற்றி எங்கே விபரீதார்த்தம் கொள்ளப் போகிறார்களோவென்று பயந்து அவ்வாறு சற்றும் பொருள் கொள்ளாதிருக்கக் கடவரென்று படிப்பவர்களை எச்சரியாத

பாகம் எவ்விடத்தாயினும் உள்ளதாயின், இத்தோஷாரோபம் செய்யும் துர்வியவகாரிகள் அதனை எடுத்துக் காட்ட வல்லவர்களாவார்களா? கண்ணபிரான் தூர்த்தபாவம் காட்டியதாகச் சொல்லப்படும் அக்காலத்தில், அவர்க்கு வயதென்னவென்றும் ஆராய்வோமாயின், அவரைக் கேவலம் சிற்றின்பத்தில் இச்சை வைத்த விடபுருஷனாக எண்ணுதற்கிடமுண்டாமோ? அன்றியும் காமலீலைகளென்று பிழையாகச் சொல்லப்படும் அவரது செய்கைகளை விவரித்துள்ள வசனங்களே இக்கொள்கைக்குச் சற்றும் ஆஸ்பதமில்லையென்பதை, மறுத்து விவகரிப்பதற்கிடமில்லாமற் சாதிப்பதை யன்றி, அவரது சர்வ வியாபகத்தன்மையையும் நிரூபிக்குமன்றோ? எனெனில், பதினாறாயிரம் மடவாரோடும், ஏககாலத்திலே, அவரவர் பவனத்தில், அவரவர்க் கிஷ்டமானபடி, வெவ்வேறான ஆடையாபரணாலங்கிருத பூஷிதராய், ஒவ்வொரு செய்கைகளை வெவ்வேறாகச் செய்திருத்தல் அற்ப சத்தியையுடைய மனுஷியனுக்குச் சாத்தியமாமோ? அன்றியும், அவர்களில் ஒவ்வொருவரும் தன்னோடு மாத்திரமே கண்ணன் கைகோத்து ஆடுகின்றார் என்று எண்ணும்படி, இவ்விருபேர்க்கு மத்தியில் நின்று, அத்தனைபேரோடும் வட்டமாக வளைந்தாடுதல் மனுஷ்யதனமுள்ளவருக்குக் கைகூடுவதாமோ? ஆயினும், ஒரு விஷயம் நிச்சயமாக ஒப்புக்கொள்ளக்கடவதே. ஸ்ரீ பகவானுடைய ஓங்கிவளர்ந்த சௌந்தரியமான ஆகாரமும், அவரது பிரபாவமான பெருந்தன்மையும், சர்வ வசீகர சாமர்த்திய குணங்களும், ஆண்பெண் அடங்க எல்லோர் நெஞ்சையும் கவர்ந்து, அப்பெண்களின் நிறையையும் நிலையையும் அழித்தன என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் அப்பெண்கள் காமத்தால் தலைசுற்றி மயங்கினர் என்பதையும், அவரது காதலைக் கண்ணன், நாமின்னபடியென்று அறியொணாதபடி நிரப்பினார் என்பதையும், இல்லையென்று மறுத்தல் முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைத்தல் போலப் பயன்படாதாதலின் அதனை உண்மையென்றே ஒப்பல் வேண்டும். கண்ணபிரான்றாமே தம் செய்கையைப்பற்றி யாது கூறுகின்றனர் பார்ப்போம்.—"யேமாம் பஜந்தி தாம் பத்யே, தபஸாவ்ரத சர்யயா — காமாத்மகோபவற் கேசம், மோஹிதாமம மாயயா." "முத்திநாயகனாகிய என்னைக் காமாத்மிகளாய்க் காமசுகாநுபவத்தை இச்சித்து எவர்கள் தவவிரதங்களால் பஜிக்கிறார்களோ, அவர்கள் என் மாயையால் மோகிக்கப்படுகிறார்கள்." என்று கண்ணன்தாமே ஸ்ரீ பாகவதத்தில் த்விதிய ஸ்கந்தத்தில் அருளிச் செய்திருக்கின்றார். உண்மையே, அம்மடவார் அவரது மாயையால் மோஹிக்கப்பட்டவர்களே. 'மாயையால் மோஹிக்கப்பட்டவர்கள்' என்னும் இவ்வார்த்தையைக் கவனித்து ஆராயுங்கள். தம்விஷயத்தில் செய்யத்தக்கது இன்னதென்றறியாமல், காமாதுரராய் மனம்தடுமாறிய அப்பெண்களுக்கும், கண்ணன் அவரவர் இச்சைப்படி இசைவதுபோலப் பாவனைகாட்டியது உண்மையே. ஆயினும் அச்செய்கை பயத்தாலும், நயத்தாலும், அவரது அவிவேகத்தை உணர்த்தி அவரைத் திருத்துவதற்கேயன்றி வேறில்லை. துராசாபிமானங்களை எதிர்த்துக் கண்டிக்காமல், அவற்றின் போக்கிலேவிட்டுப் பிடிக்கவேண்டும் என்னும் உண்மைக் கொள்கையை அவர் தமது பேரறிவால் உணர்ந்தவராதலின், இக்கொள்கைக் கேற்ப ஒவ்வொருவிஷயத்திலும் பிரவிர்த்துவந்தனர். தாம் செய்யத்தக்க கருமங்களை வேண்டி வந்தபோது கைவிடாது செய்வதையன்றி அவருக்கு அவற்றிற் பலாபேக்ஷையில்லையன்றோ? நெருப்பிற் கொளுந்தினாலும் நீரில் மூழ்கினாலும் இரண்டும் அவர்க்குச் சமானமே. கொடுவிஷத்தையுமிழும் காளிங்கன் என்னும் பாம்பின் அருவருப்பான உடலாற் கட்டுண்ட துன்பமும், தமது காதற்றேவியரால் அன்போடும் வலிய அணைத்துத்தழுவப்பெற்ற இன்பமும் இரண்டும் அவருக்கு ஒரேதன்மையே. நேசரது இனிய முறுவலும் பகைவரதுகூரிய படைகளும் ஆகிய இரண்டையும் அவர் ஒரேதன்மையாகவே பாவித்தனர். கடும்புலிவாழும் காட்டினிடத்தும், கடிமதில் சூழ்ந்த தம்மினிய அந்தக் கிரகத்தும், வெட்டென உறுத்தும் கற்றறைமீதும், மெத்தெனவிருக்கும் பஞ்சணைமீதும், முட்செடிநிறைந்த புதரினிடத்தும், மென்மலர் நிறைந்த தண்பொழிலுள்ளும், ஒவ்வோரிடத்தும் விருப்புவெறுப்பில்லாத சம்பாவத்தையேயன்றோ அவர் காட்டியிருக்கின்றனர். அவர் அனைவரையும் தமக்கு உறவினராகப் பாவித்து ஒவ்வொருவர்க்கும் அவரவர்க்குத் தக்க பரிசளித்துவந்தனர். சத்ஜனங்களுக்கு முத்தி யின்பத்தைக்கொடுத்தனர். துர்ஜனங்களை அவரது துஷ்கிருதங்களுக்காகத் தண்டித்தனர். கற்புடையார்களை பலாத்காரத்தினின்று காத்தனர். கற்பில்லாதவரையோ அன்புடைய தந்தை தன் சொற்கேளாத பிடிவாதமுள்ள மைந்தனுக்கு அவன்மேலுள்ள அளவில்லாத அன்பினால், அவன் விரும்பியதொன்றைக் கொடுக்கின் அது அவனுக்குக் கெடுதிவிளைக்குமாதலின் அதனையொழித்து அதுபோலும் மற்றொன்றைக் கொடுத்து ஏமாற்றுதல்போலத் தன்மாயையினால் மோகிப்பித்தனர். அவரது அன்பு, தமரென்றும் பிறரென்



றும் வேறுபாடறிந்ததில்லை. அதன் ஆழமும் விரிவும் மோஹலோபாதிகளாகியகும்பியினால் திடருண்ட மனுஷியபரிமாணங்களால் அளக்கலாவதோ? அவரவர் விதைத்ததற்கேற்ப அவரவர்க்கு அன்பின்பயனை விளையச்செய்தனர். ஆ! ஆ! இத்தகையான நிர்மலமான அன்பையன்றோ பாமரர்கள் வேறுபெயரிட்டு வேறொன்றாகக்காட்டத்துணிந்தனர்!

இனி, ஸ்ரீ கண்ணபிரானது கல்யாணகுணங்களை உள்ளபடி உணர்தற்கமையாதபடித் தடுமாற்றங்கொள்ளும்படிக்கு வேதவியாசர் ஏன் இவ்வாறு விவரித்தல் வேண்டும்; அதனால் அவருக்கும் அவர் எடுத்துரைக்கும் விஷயத்துக்கும் பிறரால் தோஷாரோபணம் செய்யப்பட்டு அநீதம் உண்டாகின்றதன்றோ? என்னில், இவ்விஷயமாகச் சற்றுத் தீரவிசாரிப்போமாயின் இவ்வாக்ஷேபணைக்கு எவ்வளவேனும் இடமிராது. இயற்கையாகவே ஆராயும் இயல்பையுடைய ஹிந்துக்களுக்குத், தாம்கொண்டதே கொள்கையென்று முரட்டாட்டமாய் பிறவற்றை நிராகரித்து வெறுத்தல்போல அசஹ்யமானது வேறில்லை. ஆதலால், ஆராய்ந்து துணிந்து நம்பிக்கையுறுதலே சிறப்பாதலின், இக்கிரந்தகர்த்தாவின் கருத்தும் அதுவே. ஆயினும், இளம்பருவமும் பரத்தியானமும் ஒன்றுக்கொன்று பொருந்தாதவைகளன்றோ? அன்றியும்,

"வறுமையிடத்தும் வறுப்பிணிப்போழ்தும்
மறுமைமனத்தாரேயாகி—மறுமையை
ஐந்தையளவேனுமாற்றியகாலத்துச்
சிந்தியார்சிற்றறிவினோர்."

என்றபடிக் காமக்குரோத மோகங்களிலே பிறந்து வளரும் மனிதர்க்குக் கஷ்டதசையில் கடவுள் ஞாபகமுண்டாதலன்றி சுகமாயிருக்கும்போது கடவுள் நினைவு கனவிலும் உண்டாதலில்லை; எப்போதும் போகபோக்கியங்களிலேயே அவரது மனம் பதிந்து நிற்கும். இப்படிப்பட்ட மனுஷியர்களுக்குப், பிரபஞ்சபோகமும் பிரமத்தியானமும் ஆகிய இரண்டனுள், முன்னதை முற்றும் ஒழித்துப் பின்னதையே முழுதும் முயலுதல் கூடாமையின், அவ்விரண்டையும் ஒருபுண்ணிய மூர்த்தியின் புனிதப்பெயரால் பொருத்துமாறெண்ணி, ஸ்ரீ கண்ணபிரானது திவ்ய சரித்திரத்தை, முற்றத்துறந்த பரம ஞானியர்க்குப் போலக் காமவிகாரத்தில் உழலும் பாமரர்களுக்கும் இனிப்பிக்கும்படி, ஞானசிரோமணியாகிய வியாசர் விவரித்தனரேயன்றி வேறில்லை, ஆத்துமஞானம் ஒன்றையே ஒருநூல் உணர்த்துமாயின், பெரும்பாலார்க்கு அந்நூலில் விருப்பமுண்டாகாது. ஆதலின் ஐகிகபோகங்களிலேயன்றி, ஆத்துமஞானத்தில் சிறிதும் மனம் செல்லாதவர்க்கும், ஈச்வரபக்தி யுண்டு பண்ணி அதனை அவர்விடாது போற்றும்படிச் செய்யும் பொருட்டே இக்கிரந்தம் இவ்வாறு விவரிக்கப்பட்டது. இதுவே இதனது மர்மம். ஊன்றி நினைப்பாருக்கு இச்சரித்திரம் அடிமுதல் இறுதியாகத் தத்துவ ஞானத்தை யுணர்த்திச் சந்துஷ்டியைக் கொடுப்பதாகும். ஆத்துமவிசாரமில்லாத பெரும்பாலாருக்கோ, காமாதி குற்றங்களாகிய அபாயமானதிடர்கள் இடையிடையே நெருங்கிய இளமைக்கடலூடே, அவற்றை நீங்கிச்சென்று மோகமதங்களாகிய அலைகளடங்கிப் பகவத்தியானத்துக்கு யோக்கியமாகிய சாந்தமும் அமைதியும் நிலைகொண்ட முதுமைத்துறையைப் பத்திரமாகச்சாருவிக்கும் கட்டல்விளக்குப் போலாகும். ஸ்ரீ வேதவியாசர் இக்காவியத்தை ஊன்றிப்பாராமல் மேலெழுந்த வாரியாகப் படிப்பவர்களுக்குப் பெருமான் விருத்தாந்தங்கள் ஆக்ஷேபத்துக்கிடமாமென்று சந்தேகம் ஜனிக்குமாயினும், உண்மையைத்துணிந்து பற்றும் உறுதியோடு அதனை ஆராய்பவருக்கு அவ்வேதார்த்தம் வெள்ளிடைமலைபோல் விளங்கும்படிக்கும் விவரித்ததின் காரணம் இதுவேயாகும். ஆமாம், நியாயத்தை ஒத்துக்கொள்ளாத சில குதர்க்கவாதிகள் ஆசிரியரது இவ்வுத்தேசத்தை ஆக்ஷேபித்து, இவ்விதமான நூலைப் படிப்போருக்குண்டாகும் கெடுதிகளைப் பற்றி வெகுவாக விஸ்தரித்துச் சொல்லுவார்கள். அவையெல்லாம் அவர்மனதில் தோற்றும் ப்ரமங்களேயன்றிக் கிரியையிலுண்டாகும் கெடுதிகளல்ல, இதற்குவேறே விவகாரம் ஏதுக்கு? பிரத்தியட்சமாக நாம் காண்பதே திருஷ்டாந்தம். இதுவரையில் இந்து மதத்தில் பிறந்த ஒருவனாவது கண்ணன்செய்கையை ஆதாரமாகக்கொண்டு தன் துஷ்கிருதங்களை நியாயமென்றும் யோக்கியமென்றும் சாதித்ததுமில்லை; சாதிக்கவெண்ணினதுமில்லை. சென்ற 5000 வருஷகாலத்தின் அனுபவத்தின்மேல், இனிவரும் 5000 வருஷத்துக்கேனும், அவ்வாறு சாதிக்கக்கருதும் துராத்மா ஒருவனுண்டாவென்று ஐய்யுறவடைய வேண்டுவதில்லை.

ஒருவேளை, அப்படி ஒருவன் புறப்படுவோனாயினும், அவன்வாயை அடக்கக் 'கண்ணனைப்போல மற்றச் செய்கைகளையும் செய்யமாட்டுவாயா?' 'காட்டுத்தீயை விழுங்கிக் கன்மலையையும் குடையாகப் பிடிப்பாயா?' என்னும் இவ்வொரு கேள்வியே போதுமானது.

முடிவில் ஒருவிஷயம் சொல்லுகின்றேன். ஸ்ரீகண்ணபிரான் சரித்திரத்தைத், தோஷாரோபம் செய்ய வேண்டுமென்று தீக்ஷித்துநிற்கும் குதர்க்கிகளைப் போல, அங்கங்கே சிறிது பார்ப்பவர்களுக்கு அச்சரித்திரம் ஒருவாற்ருனும் திருப்திகரமாக விளங்காதென்பதிற் சந்தேகமில்லை. அப்படியன்றி அதை அடிமுதல் இறுதியாகக் கவனித்து ஆராய்பவர்களுக்கு, அவர்கள் கண்ணன் விஷயத்தில் எவ்வளவு அன்பில்லாராயினும், அவ்விருத்தாந்தங்கள் மனசுக்குத் திருப்திகரமானதும் ஒப்பத்தக்கதும் என்று தோன்ருமற் போகாது.

(முற்றும்.)

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## நகைப்பைத்தியம்.

(55-வது பக்கத்தொடர்ச்சி.)

### 10-வது ஆக்ஷேபம்.

### வேதவாக்கியம்.

[illegible]

அதாவது, பத்து மாசம் நெய்சேர்த்து ஆகாரம் அருந்தாவிட்டாலும் தங்கமணியாவிட்டாலும் அத்தியயனமில்லாவிட்டாலும் தீர்த்த ஸ்நானமில்லாவிட்டாலும் பிராமணன் நீசத்வத்தையடைகிருனென்று மநு வென்பவர் சொன்னர். இதனல் பிராமணனைவன் சுவர்ணமணிவது கட்டாயமென்று வந்தாலும் இதுசக்திக்குக்கடந்த ரீதியில் காலக்ஷேபத்திற்கு ஆதாரமாயுள்ள ஜீவிதமுதலெல்லாம் விற்று ஆபரணமாக்கித் தரிக்கவேண்டுமென்று சொல்லவரவில்லை. சாஸ்திரானுஸரணமாய் அற்பம் தரித்தாலும் போதுமானது. இது அந்தணரைப்பற்றிய வாக்கியமேயல்லாமல் மற்றஜாதிகளுக்குச் சம்பந்தித்த வாக்கியமன்று. ஆகையால் மற்ற ஜாதிக்காரர் வேதத்தை ஆதாரமாகக் கைக்கொண்டு எவ்வகை நிலைமையிலும் ஆபரணத்தில் முதலிட நினைப்பது உசிதமன்று. சாஸ்திரத்துக்கு விரோதமில்லாமல் சக்தியை யனுசரித்து அற்பசொற்பமாய்ச் சுவர்ணந் தரிப்பதற்கு ஆக்ஷேபணையில்லை. சக்திக்குமிஞ்சிக் காலக்ஷேபவழியைக் குறைத்து மேம்பாடடைவதற்கு வேண்டியமுறைகளை உபேக்ஷித்து நற்கதிக்கு வேண்டியவழிகளைத் தேடாமல் ஆபரணப்பயித்தியராய் நிறப் பகட்டின் மீதுள்ள ஆக்கிரகத்தின்மேல் சாஸ்திரவிரோதமாய் இரத்னங்களிலும் சாயக்கற்களிலும் முதலிழந்து ஆத்மவஞ்சனைசெய்து அவிவேகமாய் நடப்பதைப்பற்றித்தான் அதிகமாய் நமக்கு ஆக்ஷேபமுள்ளது. பித்தளைநிறமானது வேதத்தினல் விரோதிக்கப்பட்டிருக்கப் பித்தளை வளைகளைவாங்கிப் பிராமணஸ்திரீகளணிவது எவ்வளவோ அசாஸ்திரீயம். தற்காலத்தில் தகரம், சீமைவெள்ளி, வெண்கலம், ஈயம், இரும்பு முதலிய தாழ்ந்த உலோகங்களைப் பிராமணஸ்திரீகள் அணிவது அசாஸ்திரீயத்திலும் அசாஸ்திரீயமாம்.

### 11-வது ஆக்ஷேபம்.

### கடன்காரரை மோசப்படுத்தல்.

ஜீவிதமுதலாகப் பொருள் வைத்திருந்தால் அது கடன்காரர்க்குத் தெரிந்து அவர்கள் தொடர்வார்களாகையால் அவர்கள் தொடராமல் ஆஸ்தியைத்தக்க வைத்துக்கொள்ளும் பொருட்டு ஆபரணத்திற் சிலர் முதல் இடுகிருர்களாம். ஸகலதர்மங்களும் நிறைந்திருந்த ஆரியாவர்த்தத்தில் எல்லாவற்றினும் சத்தியமே பெரிதென்று நிலைப்பட்டு நீடூழி க்ஷேமமும் மேன்மையும் வளர்ந்து வந்திருக்க, மேற்கண்ட மகா அக்கிரமும் அதர்மமுமான எண்ணம் தற்காலத்தில் நம்மவர்களுக்கு வருமென்று நாம் கனவிலும் நினைக்கவில்லை. ஆபரணத்தில் முதலிடுவதற்கு இவ்வகை மூகாந்திரமு முண்டென்று பேசுவதற்கும் எமது மனம் கூசுகின்றது. இதைக்கேட்ட மாத்திரத்தில் இதுசம்மதிக்கக் கூடியதன்றென்று யாவர்க்கும் புலப்படக் கூடுமாகையால், இதற்குச் சமாதானம் விரிவாகக் கூறவேண்டிய அவசியமில்லை. ஆனலும் மேற்கண்ட துஷ்ட எண்ணத்திற்குத் தக்கபடி ஒழுக்கமும் பெருகிவிட்டால், தானுங்கெட்டுப் பிறரும்கெட்டுச் சமுதாயமும் பிரபஞ்சமும் கெட்டுப்போமாகையால் இதைப்பற்றிச் சற்று விஸ்தரித்துச் சொல்ல நினைக்கிருேம்.

மனத்தொடு வாய்மை மொழியிற்றவத்தோடு
தானஞ்செய்வா ரிற்றலை.



மேற்கண்ட குறளினல் எல்லா தர்மங்களிலும் மனப்பூர்வமான சத்தியம் தலைமை என்ருகிறது. சத்தியம் மாத்திரம் இருக்கும்பக்ஷத்தில் அதுவே எல்லா தர்மங்களையும் விளைவிக்குமென்று பின்வரும் குறளிற்காண்க :—

பொய்யாமையன்ன புகழில்லை பொய்யாமை
எல்லாவறமும் தரும்.

பொய்மை இல்லாவிட்டால் வேறே தர்மம் செய்ய வேண்டாமென்று கீழ்வரும் குறளினற் புலப்படும் :

பொய்யாமை பொய்யாமை யாற்றினறப்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

உள்ளம் சுத்தமடையவேண்டுமானல் அது சத்தியத்தினல் மாத்திரம் சாத்தியமென்று குறளே பிரமாணமாக முறையிடுகிறது :

புறந்தூய்மை நீராலமையும கந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்.

ஒருவன் மெய்நூல்கள் எவ்வளவு பரிசோதித்து ஆராய்ந்து பார்த்தாலும் சத்தியத்திற் கதிகமான தர்மம் காணமுடியாது. இதற்குப் பிரமாணயாகத் திருவள்ளுவரே தமது அனுபோகத்தை ஐயமறக்கூறியிருக்கின்ருர் :—

யாம் மெய்யாக்கண்ட வற்றுளில்லை யெனைத்
தோன்றும், வாய்மையினல்ல பிற.

பெரியவர்க்கு விளக்காகவுள்ளதும் அழகாகவுள்ளதும் சத்தியந்தான்; வேறன்று. இதற்குப் பிரமாணம் :

எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யாவிளக்கே விளக்கு.

கேடுப்பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்ருேர்க்கணி.

மோசம் என்பது அசத்தியத்தின் ஒருகுணமாம். தான் ஒருவனை அசத்தியஞ்செய்து மோசப்படுத்தினல் தனக்கே கேடுவரும் :

கெடுவல்யானென்ப தறிகக்தன்னெஞ்ச
நடுவொரீஇ யல்லசெயின்.

ஏனென்ருல், மோசம் என்பது ஒருதர்மமென்று வந்துவிட்டால், தான் பிறரை வஞ்சிப்பதுபோல் பிறரும் தன்னைவஞ்சிக்கக்கூடும். ஒரு கடன்காரனை வஞ்சிக்கும்பொருட்டு ஆபரண ரூபமாயுள்ள முதலைத் தனக்கு நம்பிக்கையாய் நினைக்கப்படும் வேருெருவனிடம் அடைக்கலம் என்று வைத்தால், அவனும் தன்னை வஞ்சித்து அப்பொருளை அபகரித்தெடுத்துக்கொள்ளக்கூடும். பிறர் சம்பந்தமில்லாத கொடுக்கல் வாங்கல் முதலிய வியவகாரங்களில்லாதபடியால், சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் மோசந்தொடுக்கும்பொழுது யாவரும் நிலையில்லாமல் கெட்டழியவேண்டும். அசத்தியம், வஞ்சனை, மோசம் ஆகிய இவைகள் ஒருகாலும் பிரபஞ்சத்தில் ஒருவித சமுதாயத்திற்கும் நிலை கொடுக்காவாம். அசத்தியம் கைப்பற்றிய சமுதாயம் சீக்கிரத்தில் கெட்டழியும்; அதில் ஸொத்து பந்தோபஸ்தும் பிராண பந்தோபஸ்தும் இராது. சொத்தும் பிராணனும் நிலைப்படாவிட்டால் நாசமேயன்றி ஒருவித மேம்பாடும் கிடையாது.

பொய்காட்டி மோசஞ்செய்து பொருள் தக்க வைத்துக் கொள்வது சந்தோஷமடைந்து வாழ்ந்திருக்கும் பொருட்டே. மனப்பூர்வமாய்ப் பொய்பேசிப் பொருள் தக்கவைத்துக் கொண்டால் அதுவே தன்னைச்சுட்டுப் பொசுக்கிக்கொண்டிருக்கும். ஆதலால் அதன் மூலமாய்ச் சுகமில்லை. இதற்குப் பிரமாணம் :—

தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சு தன்னைச்சுடும்.

பொய்பேசி மோசஞ்செய்து ஆபரண முதலிய பொருள்களைத் தக்கவைத்துக் கொள்வோமென்று வஞ்சனையாக நடத்தல் புகழ் விடுத்துப் பழிக்கிடமாகும். ஏனென்ருல், "பொய்யாமையன்ன புகழில்லை."

வாய்மையில்லாமல், வஞ்சனை செய்து கடன்காரரை மோசப்படுத்தும் அதர்மிக்கு யாரும் நம்பிக்கையாகக் கடன் கொடார்கள். இவன் மற்ருெருவனுக்குச் செய்த வஞ்சனையை நாடி, வாஸ்தவத்தில் இவனுக்கு முதல் கொடுக்க வேண்டியவர்களும் இவனை வஞ்சித்து மோசப்படுத்தும் பொருட்டு இவன் செய்த தகாத ஒழுக்கத்தையே பிரமாணமாகக் காட்டி இவனுக்குக் கடன்கொடுக்காமல் ஆஸ்தியைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடும். ஏனென்ருல்,

செப்பமுடை யவனுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்துக்கே மாப்புடைத்து.

ஒருகாலத்தில் ஒருவனை வஞ்சித்து மோசப்படுத்தித்தக்கவைத்துக் கொள்ளும் பொருளானது நன்ருகத் தோற்றினலும் அதை உடனே ஒழித்து விடவேண்டும் :

நன்றேதனினும் நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழியவிடல்.

அசத்தியம், வஞ்சனை, மோசம் முதலிய அதர்மங்கள்செய்து எவ்வளவு பொருள் சேர்த்திருந்தாலும் அதனால் மரியாதைக்கிடமன்று. சத்தியம் இருந்து வறுமை எவ்வளவு விசாலமாக விருந்தாலும் அதனால் மரியாதையும் பெருமையுமன்றி தாழ்வுக்கிடமில்லை:

கெடுவாக வையா துலகனடுவாக
நன்றிக் கண்தங்கி யான்தாழ்வு.

வஞ்சகனது ஒழுக்கத்தைக்கண்டு அவனுடைய பஞ்சபூதங்களும் சிரிக்கின்றனவாம்:

வஞ்சமனத்தான் படிற் றொழுக்கம்பூத
ங்களைந்து மகத்தே நகைக்கும்,

கடன்காரரை மோசப்படுத்துதல் அவர் செய்த உதவியை மறந்து நன்றியறியாமல் இருப்பதாகும். அது மகா கெடுதல்:

நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்றமகற்கு

நன்றிமறந்து வஞ்சனைகாட்டும் தீயார்க்கு ஒருகாலும் ஈடேற்ற மில்லையென்பதாம்.

எப்போதாவது கடன்வாங்கிக் கடன்கொடுத்தவர்களை மோசப்படுத்தவேண்டுமென்று உள்ள முதலெல்லாம் ஜீவிதமுதலல்லாத ஆபரணத்திலிட்டு நாளுக்குநாள் அதனைத் தேய்த்தழித்து நஷ்டம் அடைந்து பலவித தோஷங்களுக்கும் உள்ளாகும்படி நடப்பது நன்றா? அல்லது, அப்படி ஆபரணத்திலிடாமல் ஜீவிதமுதலாக வைத்துக்கொண்டு வருமிலாபத்தைக்கொண்டு காலக்ஷேபம்செய்து கடன் வருவித்துக்கொள்ளாமல் ஒருவேளை கடன் வாங்கினாலும் வரும்படியிலிருந்து சத்தியமாய் அந்தக் கடனைத்தீர்த்து நன்றிகொல்லாமல் ஒருவித அதர்மத்திற்கும் உட்படாமல் தன்மனம்தன்னைச்சுட்டுப் பொசுக்குவதற்கு இடமின்றி அகம்புறமும் சுத்தமாயும் சமாதானமாயும், சமுதாயம் முழுமையும் நிலைப்பெறும் வண்ணம் நம்பிக்கையுண்டாக்கிக்கொண்டு, மேல் நிற்கும் வித்தைத் தேடிநடப்பது நன்றா? விவேகிகளாகிய ஒவ்வொருவரும் பின்சொன்னது நன்றென்று ஐயமற உரைப்பார்களென்று அபிப்பிராயப்படுகின்றோம்.

---

## 12 - வது ஆக்ஷேபம்.
### தட்டார்க்குப் பிழைப்பு.

ஜனங்கள் முதலிட்டு ஆபரணஞ் செய்யாவிட்டால் தட்டார்க்குப் பிழைப்பில்லாமற் போய்விடுமாகையால் ஆபரணத்தில் முதலிடுவது நலமென்று சிலர் சொல்லுகிறார்கள். பலவாறு ஆபரணஞ் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தித்த ஒரு மாதாவினிடம் அது கெடுதலென்று ஒருவன் தர்க்கித்தான். அப்போது அதற்குச் சமாதானமாக அவள் மேற்கூறிய ஆக்ஷேபத்தை எவ்வளவோ பலமாக எடுத்துக் காட்டியிருக்கிறாள். இதைக்கேட்டவுடன் ஸ்திரீகட்கும் நல்ல அறிவிருக்கின்றதென்று மனதிற்பட்டது. மேற்கண்ட ஆக்ஷேபத்திற்கு விடையளிப்பது எளிதானாலும், பெருநோக்காகச் சங்கதிகளைக் கிரகித்து எதிர்வழக்காடக்கூடிய ஸ்திரீகட்கு நல்ல பயிர்ப்பில்லாமல் காதமூக்குகளில் துவாரஞ்செய்து தங்கம் பித்தளை வெள்ளி தாமிரம் ஆகிய இவைகளால்செய்தபலவகைஉருப்படிகளைத்திணித்து ஆசாபாசத்தில் ஆழும்படிசெய்து கல்வியால் வரும் சந்தோஷத்தையும் சாஸ்திரம் சுகிப்பதற்கு ஹேதுவாயுள்ள சிரசையும் பேணாமல் இரண்டிற்கும் தாழ்ந்த ஸ்திதியிலுள்ள வயிற்றையும் உண்டியையும் பெரியவைகளாக நினைக்கும்படியான சிறுதன்மையில் விடுத்து அவர்களை மூடர்களாக்கி விட்டார்களே என்ற மனஸ்தாபமானது எம்மைப் பீடித்திருக்கிறது.

இந்தியாவில் ஆறுலக்ஷத்துச் சில்வானம் தட்டார் ஜனங்கள் இருப்பதாய் முன்னர் சொல்லியிருக்கிறோம். ஆபரணத்தில் முதலிடுவதனால் மேற்கண்ட ஆறுலக்ஷத்துச் சில்வானம் ஜனங்கட்குப் பிழைப்பு கிடைப்பது வாஸ்தவமேயாம். ஆனால் பஞ்சமாபாதகங்கள் முதலிய பெருந்தோஷங்கட்கு வித்தாகிச் செல்வம்பெருகும் வழியெல்லாம் அடைபட்டு ஜீவிதமுதலைச் செத்தமுதலாக்கும்படியான தூர்க்குணத்திற்கும் மார்க்கமாகி வறுமைப்பிணி விளைவித்து உள்ள முதலையெல்லாம் ஆபரணத்திலிட்டு ஆறுலக்ஷத்துச் சில்வானம் ஜனங்கட்குப் பிழைப்புக்கொடுப்பது நலமா? அல்லாவிட்டால், அதை ஜீவிதமுதலாக்கி வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் இட்டுப் பொருளைப் பெருக்கி வறுமைப்பிணியின்றி மகாபாதகங்கள் விடுத்து க்ஷேமமடைவது நலமாவென்று பார்ப்போம்.



சென்ற 50 வருஷத்திற்குள் ஏறக்குறைய 300 கோடி ரூபாய்வரை ஆபரணத்தில் ஆழ்ந்திருப்பதாய் முன்னர் காட்டியிருக்கிறோம். $7\frac{1}{2}$ கோடி ரூபாய் முதல் வைத்துக்கொண்டு சில யந்திரசாலைகள் ஏற்பட்டு 70000 ஜனங்கள் பிழைப்பதாகவும் முன்னால் எடுத்துக் காட்டியிருக்கிறோம். $7\frac{1}{2}$ கோடி ரூபாய் முதலுக்கு 70000 வீதம் பார்க்கும்போது ஏறக்குறைய 28 லக்ஷம் ஜனங்கள் 300 கோடி ரூபாய் முதலுக்குப் பிழைக்கவேண்டும். 28 லக்ஷம் ஜனங்கள் வேலையடைவதாயிருந்தால் அவர்கள் ஒவ்வொருவரையும் சேர்ந்ததாய் அவ்வைந்துபேர் வைத்துக்கொண்டாலும் ஒருகோடியே நாற்பதுலக்ஷம் ஜனங்கள் பிழைக்கவேண்டும். ஒருகோடியே 40 லக்ஷம் ஜனங்கள் பிழைக்கும்வழியைத் தேடுவதுநலமா? அல்லது, ஆறு லக்ஷத்து நாலாயிரத்துச் சில்வானம்பேர் பிழைக்கும் வழியைத் தேடுவது நலமா?

அன்றியும் உபரியுபரியாக ஆபரணத்தில் முதலிடாவிட்டால் தட்டார்க்கு, முன் இட்டிருக்கும் முதலைக் கொண்டு, பிழைப்பு வராது. இதற்கு விபரீதமாக இதுவரை ஆபரணத்திலிட்டிருக்கும் முதல்மாத்திரம் ஜீவிதமுதலாக வந்துவிட்டால் மேன்மேலும் நூதன முதல் வரப்பெறா விட்டாலும் உள்ளமுதலைக்கொண்டே மேற்படி ஒருகோடியே நாற்பதுலக்ஷம் ஜனங்கள் பிழைக்கும். இந்தியாவில் இதுவரை ஆபரணத்தில் முடங்கிக்கிடக்கும் முதலெல்லாம் ஜீவித முதலாகிக் கைத்தொழில், சுரங்கம், வியாபாரம் முதலிய முயற்சிகளுக் காதாரமாய்ப் பவித்துவிட்டால் மேல் முதல் அவசியமில்லையென்றும் சொல்லலாம். விந்தியமலை நீடிக்கும்வரை இந்துஜனங்கள் அம்முதலைக் கொண்டு பிழைப்பதுமன்றி நாளுக்குநாள் செல்வங்கூடி மலைபோற் குவியுமென்றுங் கூறலாம்.

---

## 13 - வது ஆக்ஷேபம்.
### கண்டது காட்சி.

13-ஆவது ஆக்ஷேபம். உலகவாட்கை அநிச்சயம். கண்டது காட்சியென்னும் கொள்கையை அனுசரித்தல். அதாவது, ஆபரணத்தில் முதலிட்டுத் தேகத்தில் போட்டுச் சுகிக்காமல் ஜீவிதமுதலாக்கி வைத்திருப்பதில் இலாபம் என்னை? இன்றைக்கிருப்பானை நாளைக்குக்காணோம். ஆகையால் உள்ள நாளில் நகையு நாணயமுமாக இருப்பதன்றோ நலமென்று அனுசரித்தலாம்.

இந்த ஆக்ஷேபம் தீர்க்க காலக்ஷேபத்தை விரும்பும் விவேகிகள் சொல்லத்தக்கதன்று. வேதாந்த ரீதிப்படி உலகம் அநிச்சயமானாலும் லௌகிக தர்மங்களைப் பற்றி யோசிக்குமிடத்து உலகம் அநிச்சியமென்ற கொள்கையைக் கைப்பற்றலாகாது. அவ்வாறு கைப்பற்றுவதாயிருந்தால் திருமூலர் அருளியிருக்கும் வண்ணம்

அடப்பண்ணி வைத்தார் அடிசிலையுண்டார்
மடக்கொடியாரொடு மந்தனங் கொண்டார்
இடப்பக்கமே இறைநோந்ததே தேயென்றார்
கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே.

அத்திப்பழமும் அரைக்கீரையின் வித்துங்
குத்தியுலைப்பெய்தி கூழிட்டு வைத்தனர்
அத்திப்பழத்தை அரைக்கீரை வித்துண்ணக்
கத்தியெடுத்தவர் காடு புக்காரே.

சமைத்து இறைக்கிவைத்துச் சாப்பிடுமுன் சிலர் இறந்துபோகிறார்கள். சிலர் சாப்பிட்டுப் படுத்துக்கொண்டால்அதேநெடும்படுக்கையாய்ச்சஞ்சயனமாய் ஒழிகிறார்கள். சிலர் வாயில் உணவிருக்கும்போதே மாள்கிறார்கள். இவையெல்லாம் வாஸ்தவமே. உலகவாட்கை அவ்வளவு அநிச்சயமென்று நினைப்பதாயிருந்தால், ஆபரணஞ் செய்வதற்காகத் தட்டானிடம் தங்கமுதலியவை நிறுத்துக் கொடுக்கிறோம்; அவன் பட்டரைக்குக் கொண்டுபோகுமுன் நிறுத்துக்கொடுத்தவன் இறந்துவிடலாமே. ஒருவேளை பட்டரைமுன் தட்டான் வந்து சேர்ந்தானென்று வைத்துக்கொண்டாலும், தங்கத்தை உருக்குமுன் நிறுத்துக்கொடுத்தவனும் நிறுத்துவாங்கின தட்டானும் இருவரும் மாளலாமே. அங்ஙிமிஷம் இறக்காவிட்டாலும் ஆபரணஞ் செய்து முடிக்குமுன் இறக்கலாமே. செய்துமுடித்தாலும் ஆபரணம் கைக்குவருமுன் மரணமடைவதும் வழக்கமன்றோ? கையிற்கிடைத்தது கையிலிருக்கும்போதே கண்மூடுபவர்கள் அநேகரன்றோ? இப்படியிருக்க ஆபரணம் மாத்திரம் அநிச்சயமில்லையென்று எங்ஙனம் கூறுகிறது? உலகவாட்கை அநிச்சயமென்னும் கொள்கையை அனுசரித்தால் ஆபரணத்திலும் முதலிடக்கூடாது.

ஒருபெண்ணை விவாகம்பண்ணி அவள் தன்வீட்டுக்கு வருமுன் அவள் வருவது அநிச்சயமென்று எண்ணி எங்கேயாவது ஒருவன் ஓடுகிறானா? ஒருவேளை வந்தாலும் தானும் அவளும் மறுநாள் இருப்

பது அநிச்சயமென்று பிறிந்தாவது பிறியாமலாவது தத்தம் பாட்டைப் பார்த்துக்கொண்டு மறுநாள் காலக்ஷேபத்துக்கு வழிதேடாமல் அவர்கள் சும்மா இருந்துவிடுகிருர்களா? உலகம் அநிச்சயமாஞல் உழுது பயிர்செய்து ஆறுமாதத்துக்குப்பின் பலனடையலாமென்று காத்திருப்பானேன்? வருஷா வருஷத்துப் பண்டமென்று ஒருவருஷத்துக்கு முன்னரே பதார்த்தங்களைச் சேகரிப்பானேன்? ஒருவருஷம் மழைதவறிவிட்டால் ஏங்குவானேன் நல்லவீடுகட்டவேண்டும், விசாலமாகச்சொத்து சம்பாதிக்கவேண்டும், பெண்பிள்ளைகள் பிறக்கவேண்டும். பேரன்பேத்தி யெடுக்கவேண்டும், கலியாணங் ள் நடத்தவேண்டும், அஷ்டைசுவரியம் அடையவேண்டும் என்றுகருதி முயல்வானேன்? பெண்குழந்தைகளைக் கலியாணஞ்செய்து கொடுப்பதாயிருந்தால் ஆயிரங்காலத்துப் பயிரென்றும் அது க்ஷேமமாயிருக்கும்பொருட்டு நல்ல இடம் பார்த்துக் கொடுக்கவேண்டுமென்றுங் கவலைப்படுவானேன்? உற்ருேர் பெற்ருேர் இறந்தால் கட்டிக்கதரிக்குதூகலம் குன்றுவானேன்? வேதாந்தரீதியாய் நம்முடைய முன்ஞேர்கள் வாட்கை அநித்தியமென்ற அபிப்பிராயம் கைக்கொண்டாலும் லௌகிக தர்மங்கள் சம்பந்தமாய் நிலையான ஏற்பாடுகள் செய்துவந்தார்கள். அவ்வாறு செய்துவந்தது சரியேயன்றி வேறன்று. உலகம் அநித்தியமென்ற சித்தாந்தமானது, இயல்பாகவே பிரபஞ்சஞ்சுகநிலையென்றுஜனங்கள் நாடி ஆத்மரக்ஷையைக் கொஞ்சங்கூடக் கவனியாமல் உலகத்தார் மூழ்கிக்கிடக்கிருர்களென்று யோசித்துச் சரீரசுகத்தைப் பார்க்கிலும் ஆத்மசுகம் பெரிதென்றும் நீடித்ததென்றும் ஸ்திரமென்றும் கண்டுணர்ந்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட சித்தாந்தமாம். "காயத்தைக்கொண்டு கடைத்தேறு" என்பது பூர்வமுதல் உள்ள பழமொழியாம். ஆத்மரக்ஷக்கு முயலும்பொருட்டு உடல் திடமாயிருக்கவேண்டியது அவசியம். ஆத்மபதவி சாசிதாரணமாய் ஒரு நிமிஷத்தில் அடையத்தக்கதன்று. யோகசுத்தி அடைந்த மகான்களே

எண்ணுயிரத்தாண்டு யோகமிருப்பினும்
கண்ணுரமுதினைக் கண்டறிவாரில்லை.

என்றுசொல்லி யிருக்கிருர்கள். ஏனென்ருல், மோக்ஷபதவிக்கு வரவேண்டுமாஞல் மனமடங்கவேண்டும். தாயுமானவர் பாடியிருப்பதுபோல்

கந்துகமதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம்புலி வாயையும் கட்டலாம்
ஒருசிங்க முதுகுமேற் கொள்ளலாம்
கட்செவி யெடுத் தாட்டலாம்
வெந்தளலினிரதம் வைத்துஐந்துலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேருருவர் காணமல் உலகத்துலாவலாம்
விண்ணவரை யேவல் கொள்ளலாம்
சந்ததமு மிளமை யோடிருக்கலாம்
மற்ருெரு சரீரத்திலுட் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மேலிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோம யானந்தமே

எண்ணுயிரத்தாண்டு யோகமிருந்தாலும் சாதிப்பது கடினமாயுள்ள காரியத்தைச் சொற்பகாலத்துக்குள் ஆக்கை அநித்தியமென்று உயிரோம்பாமல் சாதிக்க நினைப்பது அசந்தர்ப்பம். ஆக்கை நிலையாமையைப் பற்றி பாடிய திருமூலர் பின்வரும் பாடல்களையும் பாடியிருக்கிருர் :—

உடம்பாரழியி லுயிராரழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கு முபாயமறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே.

உடம்பினைமுன்ன மிழுக்கென் றிருந்தே
னுடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டே
னுடம்புளே யுத்தமன்கோயிற் கொண்டானென்
னுடம்பினையா னிருந்தோம்பு கின்றேனே.

மேற்கண்டவாறு திருமூலர் முதலிய மகா சித்தர்களே உடலோம்பி உய்யும் வழிதேடுவார்களாகில் பிரபஞ்சசுகத்தை விரும்புவோர்களும் அவ்வாறு உடலைப் பேணவேண்டுமென்ருே?

பிரபஞ்ச வாட்கை அநிச்சயமென் றிருந்தாலும் லௌகிக வியவகாரங்களில் புருஷ ஆயுள் நூறென்று நிச்சயப்படுத்தி அதை அநுசரித்து அநேக ஏற்பாடுகள் செய்து நடத்திவருகிருேம். அது பிரபஞ்சரீதியாகத் தீர்க்க காலமாகையால் அக்காலமுழுமையும் சரீரசுகமும் ஆத்மசுகமும் கிடைக்கும்பொருட்டு ஸ்திரமான ஏற்பாடு செய்யவேண்டும்; ஸ்திரமான ஏற்பாடு ஜீவிதமுதலை அனுசரித்திருக்கவேண்டும் :

அருளில்லார்க் கவ்வுலகமில்லைப் பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகியங்கு.

ஆபரணம் செத்தமுதலாகையால் அது பிரபஞ்சசுகத்துக்கு ஆதாரமாயுள்ள ஸ்திரமான ஏற்பாட்டுக்காதாரமாகாது. அப்படிப் பிரபஞ்ச சுகத்தைநாடிய



ஜனங்கள் அச்சுகத்துக்கு அனுசரணையில்லாத ஆபரணத்தில் முதலிடுவது சுன்னத்திலிருந்து (பூஜ்யத்திலிருந்து) பெருந்தொகை வருவிக்க நினைப்பதை யொவ்வும்.

பிரகிருத ஆக்ஷேபத்தில் ஆபரணபூஷணத்திஞல் சுகமுண்டென்று வைத்துக் கொள்ளப்படுகிறது. அது பிழையேயன்றி வேறன்று. ஆபரணஞ்செய்யக் கொடுப்பதிலும் செய்து வாங்குவதிலும் அணிவதிலும் காப்பாற்றுவதிலும் அடிக்கடி 'ஒக்கிடுவ'திலும் எவ்வளவோ துக்கமுண்டென்று முன்பக்கங்களிற் காட்டியிருக்கிருேம்.

## 14 - வது ஆக்ஷேபம்.

### காது மூக்குகள்.

காது மூக்கு ஆகிய இவைகளிலுள்ள துவாரங்கள் அடைபடவேண்டுமாதலின் ஆபரணமணியவேண்டுமென்பார்கள். அதாவது, ஆபரணத்தில் முதலிடுவது எவ்வளவு சரித்தப்பாயிருந்தாலும், காது மூக்குகளில் துவாரஞ்செய்திருப்பதஞல் அவைகளை அடைக்கும் பொருட்டு ஆபரணஞ் செய்தணியவேண்டுமாம்.

இதை ஒரு ஆக்ஷேபமாக நினைப்பதற்கிடமில்லை. சுருதிஸ்மிருதிகளில் கட்டாயமென்று கற்பிக்கப்படாத துவாரங்களை, அனவசியமான துவாரங்களைச் செய்துகொள்வானேன்? அவைகளை அடைக்கும் பொருட்டு அனவசியமாய் ஆபரணத்தில் முதலிடுவானேன்? இந்த ஆக்ஷேபத்திற்குச் சமாதானம், அனவசியமாய் அசாஸ்திரீயமாய்ச் சுருதி ஸ்மிருதி முதலியவைகட்கு விரோதமாய்த் துவாரங்கள் செய்யக்கூடாதென்பதேயாம். முறைகேடாகக் காது மூக்குகளைக் குத்தி யந்தத் துவாரங்கள் அடைபட ஆபரணந் தேடுவது, பூதங்களை யெழுப்பி அவைகட்குப் பலிதேடுதற்குச் சமமாயிருக்கின்றது. அனவசியமாய்ப் பூதங்களை வருவிப்பானேன், அவைகட்குப் பலிகொடுக்கக் கசங்குவானேன்? அன்றியும் கொடுத்தபின் வருந்துவானேன்? பூதங்களை வருவிக்காமல் இருப்பதன்ருே பலிகொடாமல் நிவர்த்தியடைவதற்கு வழியாகும்?

(இன்னும்வரும்.)

எஸ். இராம்ஸ்வாமி அய்யர், பி. ஏ., பி. எல்.

## நந்தவனநஷ்டம்

அல்லது

## மோட்சஈனம்.

(57-வது பக்கத்தொடர்சசி.)

நித்தனுகிய பிதா் இவ்விதமாகப்பேசி நியாயத்தைச் சித்தித்தான். அச்சிறகமைந்த புனிதனும், சட்டளை பெற்றபிறகு தாமதியாமல் ஆயிரபரலோக சோதிக ளின் மத்தியில், அதிக ஒளிபொருந்திய தன் சிறகுக ளைப் போர்த்துக்கொண்டு நின்றவன் இலேசாக எழும்பி பரலோகத்தின் மத்தியில் பறந்தான்; சோதி பொருந்திய மார்க்கம்தோறும் இருகையிலும் உள்ள தூதக்குழாங்கள் அவனைத்தடுக்காமல் ஒதுங்கினார்கள் பரலோக வாயிலண்டை வந்தஉடன், சுவர்ணப் பிணையல்களில் சுழலும் கதவுகள் சுயமாகத்திறந்து விசாலமாகப்பிரிந்தன. உத்தமசில்பன் ஆகிய கருத் தா தெய்வீகசூக்ஷமத்தால் அவைகளை அவ்வாறு கற் பித்திருந்தான். அவ்விடமிருந்து மேகமாவது நக்ஷத் திரமாவது மறைக்காமலிருக்க, இப்பூமியையும், எல் லாமலைகளுக்கும் உயரமாக எழும்பிய தேவதாருக்க ளைக் கிரீடமாகப்பெற்ற தெய்வசிருஷ்டியாகிய நந்த வனத்தையும்கண்டான். அப்பூமி மிகச்சிறியதாகத் தோற்றினும், மற்ற பிரகாசமான கோளங்களைப் போலவே விளங்கிற்று. அக்காட்சி கியாலிலியோ (Galileo) என்னும் வானசாஸ்திரியானவர் தூரதிருஷ்டிப்படிகத்தின்வழியே இரவில் சந்திரனைநோக்க, தரையாகவும், தேசமாகவும் அநுமானிக்ககூடிய கரைபொருந்திய அந்த பிம்பத்தை ஒத்திருந்தது; ஆஞல் இப்போது இத்தூதனுக்கு அநுமானமில்லை. சைக்ளெடீஸ் (Cyclades) தீவுகளின் ஊடேசெல்லும் கப்பலோட்டியின் திருஷ்டிக்கு டீலாஸ் (Delos) சேமாஸ் (Samos) என்னும் தீவுகள் முதலில் விளங்கும்போது மேகம் மூடிய பொட்டாகத்தோன்றும் அக்காக்ஷியையும் ஒத்திருந்தது. தாழத்தோன்றிய இப்பூமியை நோக்கி விரைந்து பறந்து விசாலமான ஆகாயத்தில் விளங்கிய எண்ணிறந்த கோளங்களின் மத்தியில், ஒருகாலம் துருவங்களின் திசையில் வீசும் காற்றில் சிறகு அடிக்காமலும், ஒருகாலம் நெகிழ்ந்து றழும் வாயுவில் விரைவாகச் சிறகுபுடைத்தும் சென் ருன். கழுகுகள் புழங்கும் உயரத்தை அவனுடைய பட்சிகளெல்லாம் அவனைக்கண்டு அம்சம் (phœnix)

என்று ஊகித்தன; அவ்வொருமையான பட்சியானது தன் சவத்தைச் சூரியனுடைய பிரகாசமான ஆலயத்தில் விட்டுச் சாகும்பொருட்டு ஈகிப்து (Egypt) ராஜியத்து தீப்ஸ் (Thebes) பட்டணத்தை நோக்கிப்பறந்து போவதுபோலிருந்தது. அத்தூதன் நேராகத் தாமதமின்றிச்சென்று நந்தவனத்தின் கீழ்த்திசையிலுள்ள செங்குத்தான மலையின்மீது இறங்கி சிறகமைந்த சொரூபியனுகிய தன் சுயரூபத்தை எடுத்தான்; தன் தெய்வீகரூபத்தை மறைக்கும்பொருட்டு ஆறுசிறகுகளைத்தரித்தான் இருதோள்பட்டைகளையும் உடுத்த சிறகுகளின் ஜதை அவன்மார்பைப்போர்த்து இராஜரீகமாக அலங்கரித்து விளங்கிற்று; மத்திய ஜதை நட்சத்திரங்களால் அமைக்கப்பட்ட ஒட்டியணத்தைப்போல் இடையைச்சுற்றி விலாக்களையும், தொடைகளையும், மெதுவான மெல்லிறகைப்போல் விளங்கிய சுவர்ணத்தாலும் பரலோகத்திலமைக்கப்பட்ட வர்ணங்களாலும் சூழ்ந்து அலங்கரித்தது; மூன்றாவது ஜதை இருகால்களையும், குதிகால்முதற்கொண்டு ஆகாயநிறமான இறகுகளால் அமைந்த கவசத்தால் மூடிற்று. அவன் மேயா (Maia) என்பவளுடைய புத்திரனைப்போல் (Mercury, புதன்) நின்று சிறகுகளை வீச பரலோகபரிமளம் வெகுதூரம் நிரம்பப்பரவிற்று. அவ்விடம் பாதுகாத்துக்கொண்டிருந்த தூதக்குழாங்கள் எல்லோரும் அவன் இன்னுனென்று அறிந்து அவன் அந்தஸ்துக்குத்தக்கபடியும், அவன் வந்தகாரியம் முக்கியமானதாகவே இருக்கவேண்டும் என்று ஊகித்து அதற்குத்தகுந்தபடியும் எழுந்து மரியாதைசெய்தார்கள். அவன் அவர்களுடைய பிரகாசமான கூடாரங்களைக் கடந்து வெள்ளைப்போள விருட்சங்களின் சோலைவழியாகவும், ஆவாரை, நலதம், கஞ்சாங்கோரை முதலிய சுகந்தச்செடிகள் காடாகப்பரவித்தூவிய புஷ்பபரிமளங்களின் வழியாகவும், சென்று அப்பரமானந்த புலத்தின்மத்தியில் வந்தான்; அவ்விடத்தில் பிரகிருதி (Native) யானவள் மங்கையைப்போல் உல்லாசித்து, இஷ்டப்படி தன் கௌமாரீக மனோரதங்களைப் பாராட்டி விளையாடி நிபந்தனையன்றி சுகந்தங்களைத்தூவி அளவற்ற பரமானந்தத்தைக் கொடுத்தாள். அவன் அப்பரிமளவனத்தின் வழியாக வருவதை பன்னசாலையின் வாயிலண்டையிலிருந்த ஆதாம்கண்டான். அப்போது சூரியன் உச்சியடைந்து பூமியின் அதி அந்தப்புறத்தில் உஷ்ணத்தை யூட்டும்படி கொடிய கிரணங்களை செங்குத்தாக எய்து அதிக வெப்பத்தைக் கொடுத்தபடியால் ஆதாம் தன்பன்னசாலையில் ஒதுங்கி இருந்தான்; ஈவியானவள் உட்புறத்திலிருந்துகொண்டு மணிப்படி நிஜமான பசியை ஆற்றவல்ல உருசியான கனிகளையும், மத்தியில் பருகதாகத்தை ஆற்றவல்ல பாலாற்றினின்றும், சிறுபழங்களினின்றும் கொடிமுந்திரிகைப் பழங்களினின்றும் அமுதபானங்களை சித்தப்படுத்தினுள். அப்போது ஆதாம் அவளை அழைத்தான்.

"ஈவியே! சீக்கிரம்வா. உன் திருஷ்டிக்குத் தகுந்த காட்சியைப்பார். கீழ்த்திசையிலுள்ள அம்மரங்களின் மத்தியில் என்னமாகஷிமை பொருந்திய ரூபம் இவ்விடத்தைநோக்கி வருகிறது; நடுபகலில் மற்றொருபகல் உதித்ததுபோலும். அவன் நமக்காகவே பரலோகத்திலிருந்து ஏதோவிசேஷமான பிரசாதம் கொண்டுவருகிறதுபோலும்; இன்றுநம்முடைய விருந்தனுகத் தங்கத் தயவு செய்பவன்போலும். உன் உக்கிராணத்திலுள்ள பதார்த்தங்களை எல்லாம் கொண்டுவந்து தாராளமாகக்கொட்டு; நம்முடைய விருந்தோனுகிய் தெய்வீக பரஸ்தலத்தோனை மரியாதைசெய்து ஆதரிக்கத் தகுந்தபடி இருக்கட்டும். நமக்குத்தானம் அளித்த தாதாக்களிடமே அத்தானங்களைத் தாராளமாகத்திருப்பலாம்; விஸ்தாரமாகக்கிடைத்த பொருளிலிருந்து விஸ்தாரமாகக் கொடுக்கலாம்; இங்கே பிரகிருதியானவள் செழிப்பாக வளர்ந்து விர்த்திபெற்று, சுமைதணிவதால் விசேஷமாகவே கனி கொடுக்கின்றுளாகையால் நாம் லோபிக்கக்கூடாதென்று அறியவேண்டும்."

ஈவி பின்வருமாறு மறுமொழிகொடுத்தாள்:—

கடவுளால் சுவாசிக்கப்பட்ட பரிசுத்தமண்பாண்டமாகிய ஆதாம்! எப்பருவத்திலும் உபயோகத்திற்குத் தகுந்த வண்ணம் முதிர்ந்த கனிகள் கிளைகளினின்று தொங்கிக்கொண்டே இருக்கிறபோது அதிகமாக சேகரிப்பது அவசியமன்று; ஜாக்கிறதையாகச் சேகரித்து வைப்பதால் இளகலான தங்கள் சாரத்திலுள்ள ஜலத்தைக்கவர்ந்து உறுதியடைந்து அதிகபுஷ்டியைக் கொடுக்கவல்ல கனிகளைமட்டும் சேகரிக்கவேண்டும். நான் சீக்கிரம்போய் ஒவ்வொரு மரக்கிளையையும், தூற்றையும், செடியையும் சாரம்பெற்ற கனிகளைத் தாங்கும் கொடியையும் பரிசோதித்து நம்முடைய தேவதூத விருந்தோனைசந்தோஷிக்கத்தக்க உத்தம பலன்களை அறிந்துவருகிறேன்; அவன் அவைகளை நோக்கி, பரலோகத்துக்கு நிகராகவே இப்பூலோகத்திலும் ஈசன் தன்னுடைய பிரசாதங்களை அளித்திருக்கிறுன் என்று கூறுவான்."

இவ்வாறு உரைத்து சீக்கிரமாக வேலையை முடிக்கவேண்டும் என்கிற எண்ணம் முகத்தில் விளங்க,



சடிதியில் திரும்பி, விருந்தோனை உபசரனைசெய்யும் சிரத்தை கொண்டவளாய், எக்கனிகள் அதிருசியுள்ளவைகள் என்று தெரியலாம். அறிந்தகனிகளை சுவை பொருத்தமில்லாத சுவைகளை அப்பிரசஸ்தமாகக் கலவாமல் மாறுபட்டால் அதி இதமாகத்தோன்றும்படி எவ்வரிசையாக வைக்கலாம் என்று ஊகித்தாள். அவள் உற்சாகப்பட்டு ஒவ்வொருநொய்யகாம்பினின்றும், சர்வபலன்களையும் பெறும் பூமாதாகொடுக்கும் கனிகளை எல்லாம் அதிகமாகசேகரித்து மேடையில் தாராளமாகக் குவித்தாள். கீழ் இந்தியாவிலும், மேல் இந்தியாவிலும், தரைமத்திய சமுத்திரத்தையடுத்த பாண்டஸ் (Pontus) ராஜியத்திலும், கார்த்தஜீனியராஜியத்திலும், அல்ஸைனஸ் (Alcinous) ஆண்டதீவிலும் அகப்படத்தக்க சொறியான ஆவரணத்துடனும், மிருதுவான புறணியுடனும், கூர் கொண்டகோதுடனும், ஓட்டுடனும் உள்ள சகலவித கனிகளை சேர்க்க பெரியபரிசாயிற்று. பானத்துக்காக தோஷமற்ற புதிய திராட்சப்பழச் சாற்றையும், அனேக சிறுபழங்களின் (berry) சாரத்தையும் பிழிந்தாள்; தித்திப்பான பருப்புவகைகளையும் நசுக்கி பால் போன்ற சாரங்களையெடுத்து உருசியாகக்கலந்தாள். இவைகளையெல்லாம் வைக்கத்தகுந்த சுத்தமான பாத்திரங்களுக்கோ குறைவில்லை. பிறகு அவள் ரோஜாமுதலிய பரிமள புஷ்பங்களைசெடிகளினின்று எடுத்து தரையில் தூவி புகைபாதையில்லாத பரிமளமூட்டினுள்.

(இன்னும் வரும்)

டி. சுந்தர ராவ், பி. ஏ.

## REVIEWS.

## விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள்.

டாக்டர் ஜி. யூ. போப் துரை அவர்கள் லண்டனில் பிரசுரமாகும் 'இந்தியன் மாகஸின் அண்ட் ரிவியூ', என்னும் மாதாந்திரப் பத்திரிகையில், சமீபத்தில் பிரசுரமான மாக்ஷிமைதங்கிய இந்தியா சக்கிரவர்த்தினியாகியவிக்டோரியாமஹாராணியவர்கள் சரித்திரத்தைப்பார்வையிட்டுப் பின்வருமாறு எழுதியிருக்கிறுர்:—

"இக்கிரந்தத்தின் கர்த்தாக்களால் பிரசுரிக்கப்பட்ட வேறு பல புஸ்தகங்களைக்குறித்து இப்பத்திரிகையில் எழுதியிருக்கிறோம். தமிழில் அறிவைப் பரவச்செய்வதற்கான சபையார் சுலபமான நடையில் அறிவையூட்டத்தக்க நல்ல புஸ்தகங்கள் பல பிரசுரித்து ஜனோபகாரமான வேலை செய்துவருகிறுர்கள். இப்புஸ்தகங்களில் சிலவற்றைக்குறித்து இதற்குமுன் இங்கு எழுதியதில் அவற்றைச் சந்தோஷத்தோடு மனதாரத்துதித்துப்பேசினேம். இப்பொழுதுநம்முன்னிருக்கும் புஸ்தகம் அவைகளெல்லாவற்றையும்விடப் பலவிதத்தில் மிக்க இனியதும் விசேஷமானதுமாயிருக்கிறது. இப்புத்தகத்தில் நாமெல்லாம் அருமையாக விசுவாசிக்கும் நமது ராணியாரின் சரித்திரத்தை மகா மனோகரமாகச் சொல்லியிருக்கிறது. அதைச்சொல்வதில் மஹாராணியாரின் குணத்தையும் மகிமையையும் மிக்கவிசுவாசத்தோடுநன்குமதித்து, கீழ்த்தேசத்தாரின் வழக்கம்போல்தெவிட்டத்தக்க வார்த்தைகள் ஒன்றும் உபயோகிக்காமல்மிகநேர்த்தியானமாதிரியில் எழுதியிருப்பது ஒருபெரியவிசேஷம். ஆங்கிலேயரும் பிரிடிஷ் பிரஜைகளும் நமதுராணியாரைப்பற்றிவிசேஷமாக எண்ணிப்பெருமைகொண்டாடும் ஒவ்வொரு விஷயமும், ராஜவிசுவாசத்தில் வேறு எந்தசாதியாருக்கும் பின்னடையாத, நம் அரசியின் லக்ஷக்கணக்கான தமிழ்ப்பிரஜைகள் படித்து ஆனந்திக்கும் பொருட்டு ரஞ்சிதமான எளிய நடையில் இங்கெடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகத்தில் 27 - படங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன, அவற்றில் சிலமனதை உருகச்செய்பவையாக விருக்கின்றன. இப்புத்தகத்திலடங்கிய விஷயங்களை எடுத்து இங்குதிரட்டிச் சொல்ல நிமித்தமில்லை. ஏனெனில் குணசீலரான நமது மஹாராணியாரின் சரித்திரமனைத்தும் இப்பத்திரிகையை வாசிப்போர் அறிந்துள்ளதேயன்றி வேறல்ல. ஆனுல் ஒன்று: இப்புத்தகத்தில் மஹாராணியார் நடத்தையை மேற்கோளாகக்கூறித் தென்னிந்தியாவிலுள்ள ஸ்திரீகள் அவரது உதாரணத்தைப் பற்றுக்கோடாகக்கொண்டு நடக்கும்படி எடுத்துக்காட்டியிருப்பது மிகவும் விசேஷமென்பதை இங்குவற்புறுத்திக் கூறுவோம். தமிழ்பேசும் லக்ஷக்கணக்கானஸ்திரீகள் ஒருவார்த்தைவிடாமல் இப்புஸ்தகத்தை வரிவரியாகப் படித்திருக்கிறுர்களென்றும் இன்னும் எத்தனையோ காலத்துக்குப்படிக்கக் கேட்பார்களென்றும் மாக்ஷிமைதங்கிய மஹாராணிசக்கிரவர்த்தினியவர்களுக்குத்தெரியவந்தால், அது அவருக்குங்கூடப்புதிதானஒருசந்தோஷத்தையுண்டுபண்ணுமென்பது நிச்சயம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இதைப்பாடமாக வைத்துப்போதிப்பார்கள். கடைத்தெரு தண்ணீர்த்துறைமுதலிய இடங்களில் ஐந்தாறு ஸ்திரீகள் ஒன்றுகூடும்போதும் ஆலமரத்தடியில் பல ஸ்திரீகள் ஒன்றுகூடிக்கொட்டைநூற்கும் பொழுதும்

இதைப்பற்றிப் பேசுவார்கள். உலகத்தாரையெல்லாம் ஒருபாவப்படுத்தும் எல்லாருக்கும் பொதுவான இயற்கைச் சுபாவங்கள் நிறைந்ததாயிருக்கிறது இப்புத்தகம். மகாராணியார் மணக்கோலத்தைக்காட்டும் படமொன்று இருக்கிறது. அரசி ப்ரின்ஸ் ஆர்தரைக் கையில் வைத்துக்கொண்டிருக்கும் படமொன்றுமிருக்கிறது. இவைபோல இன்னும் பலவிருக்கின்றன. இவற்றையெல்லாம் தென்னிந்தியாவிலுள்ள உத்தமஸ்திரீகள் பார்த்துப்பார்த்துச் சலியாமற் பேசிக்களித்துக் கண்ணீர் சொரிவார்கள். ஆனலிப்புஸ்தகமுழுமையிலும் பொறுக்கியெடுத்த முத்துப்போல் விளங்கும் வாக்கியம் ஒன்றுண்டு. அது அரசியார் தம் உந்நதமான பதவிக்குள்ள அந்தஸ்துக்குச சிறிதும் குறைவின்றி நடந்துகொண்டதோடு, பெண்மைக்குரிய குணங்களைக் கைவிடாது அம்முறையில் தாம் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றும் தவறாது எல்லாவற்றையும் குறைவின்றிச்செய்து பெண்மைக்குணத்துக்கு உயர்ந்ததோர் உதாரணமாகத்தம்பிரஜைகளெல்லாம் கொள்ளும்படி நடந்து கொண்டதை வற்புறுத்திக் கூறுமொன்ரும்.

> "அரசியாம் நிலைமைக்குள்ள வாறுபோல்
>     அரிவைமார்க்கு
> மருவுநற்குணங்களெல்லாம் வாய்ந்திடப்
>     பெற்றநல்லாள்
> பெருமைகொண்டிடுவாள்தன்கீழ்க்குடி
>     பெறும் பெருமைகண்டு
> பரிவுறும் எளியார்க்கெல்லாம் எளியவர்
>     பரிவுகண்டே."

அரசியின் வருணனை இதில் எவ்வளவு நன்ருகவிருக்கிறது!

தமிழர்கள் எப்போதும் இராசவிசுவாச முள்ளவர்கள். தமிழ் சிப்பாய்கள் தைரிய பராக்கிரமத்தில் யாருக்கும் பின்னடைந்தவர்களல்லர். தமிழ் பேசும் 160-லக்ஷம் ஜனங்களும் தங்கள் மஹாராணி அன்னையிடம் பக்தி விசுவாசம் நிறைந்து பூரித்த மனதுடையவர்களா யிருக்கிருர்களென்றுசொல்லத்தடையில்லை. ஆகையால் இச்சமயம் சிறப்பாய்ச்சித்தரித்து நன்ருக எழுதப்பட்ட இப்புஸ்தகம் தமிழில் பிரசுரிக்கப்பட்டது மிகவும் இசைவாக விருக்கிறது.

நல்ல சமயத்தில் பிரசுரிக்கப்பட்ட இச்சிறு புஸ்தகம் யதேஷ்டமாய் விலையாகிஜனங்களுக்குள் மிகவும் பரவி வியாபித்து வருகிறதென்னும் சமாசாரத்தைக் கேட்க ஆவலோடு காத்திருக்கிருேம்.

ஜி. யூ. போப்."

பாலியல் காலேஜ், ஆகஸ்போர்ட,
௧௮௯௮ ஜூன்மீ ௮௳.

லண்டன் நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன் காரியதரிசியும் மகா பரோபகாரியுமாகிய மிஸ் மானிங் துரைசானியவர்கள் படங்களோடு கூட மஹாராணியார் சரித்திரம் ஒன்று தமிழில் பிரசுரிக்கக்கருதியது நல்லமேலான எண்ணமென்றும், டாக்டர் போப்துரை அதைப்பற்றி மிகவும்சிலாக்கியமாகப் புகழ்ந்து எழுதியிருக்கிருரென்றும், இப்புஸ்தகம் ஜனங்களுக்குள் மிகப்பரவி வருவதைக் கேட்க தாம் ஆவலாயிருப்பதாகவும், விவேகசிந்தாமணிப்பத்திரிகையினுல் அதிக நன்மை விளைவதாயிருக்கிறதென்றும், ஆகையால் அது மேன்மேலும் விர்த்தியாகிவரத் தாம் கோருவதாகவும் எழுதியிருக்கிருர். விவேகசிந்தாமணியிலிருந்தெடுத் தச்சிட்ட விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள் பள்ளிப்பிள்ளைகளுக்கும்பெண்களுக்கும் பரிசு கொடுக்க மிகவும் உபயோகமாக விருக்குமென்றும் எழுதியிருக்கிருர்.

பெண்பாடசாலைகளின் இன்ஸ்பெக்ட்ரெஸ் ஆகிய மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானியும், மேற்படிஸப்-அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ் ஆகிய மிஸ்கோவிந்தராஜுலு அம்மாளும், இப்படியே இப்புஸ்தகத்தைச்சிலாகித்து இதுமிகவும் உபயோகமான புஸ்தகமென்றுஎழுதியிருக்கிருர்கள். கவர்ன்மெண்ட் பெண்பாடசாலைகளிலெல்லாம் இப்புஸ்தகமும் மற்ற விவேகசிந்தாமணிப் பிரசுரங்களும் வாங்கிவைக்க உத்தரவாயிருக்கிறது. மற்றப் பாடசாலை மானேஜர்களும், தலைவர்களும், தங்கள் பாடசாலையின் உபயோகத்துக்காக இப்புஸ்தகங்களில் ஒருஜதைவாங்கிவைத்துக்கொள்வது மிகவும் மேலாகவிருக்கும். சென்னைப் பள்ளிக்கூடப்புஸ்தகப்பரிசோதனைக்கமிட்டியாரும்* இப்புஸ்தகங்களைப் பள்ளிக்கூடப்புத்தகசாலைகளுக்கு அருகமானவையென்று வித்தியா இலாகாத் தலைவருக்குச் சிபார்சு செய்திருக்கிருர்கள்.

* The Madras Text-Book committee.



## சரசாங்கி.

இந்த நாடகம், இங்கிலீஷ் பாஷையில் ஷேக்ஸ்பியர் மகாகவி செய்திருக்கிற ஸிம்பலின் என்னும் நாடகத்தின் கதாசாரத்தை யாதாரமாகக் கொண்டு அக்கதையில் வரும் ஐரோப்பியபெயர் முதலியவைகளை மாற்றிப் பல நூதன வருணனைகள் சம்பாஷணைகள் முதலியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாட்டுச் சரிதமென்றே தோன்றும்படி இளமையிலேயே காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ, சலசலோசன செட்டியாரவர்களால் இயற்றப்பட்டது.

இந்நாடகத்தின் வசனபாகமும் செய்யுட் பாகமுநன்கமைந்திருக்கின்றன. நாடகத் தமிழாதலாற் சிற்சில இடங்களில் ஆன்ருேராட்சிப் படாத வுலகவழக்குச் சொற்கள் விரவிக்கிடக்கின்றன. இதன் முதலங்கம் எவ். ஏ. பாடமாக நியமித்திருப்பதை யறிந்து மிக்க சந்தோஷமடைந்தோம். இவ்வாறே தக்க நூதன நூல்களைச் சர்வகலாசங்கத்தார் அடிக்கடி பரீக்ஷா பாடங்களாக்கி நவீனக் கிரந்தகர்த்தாக்களுக்கு ஊக்கமளித்துத் தமிழை வளர்ப்பாரென்று நம்புகிருேம்.

வசனமாகவுள்ள பஞ்சதந்திரத்துக்குப் பலவகையிலுங் கீழ்ப்பட்டுச் சொல்வழுமிகுந்த செய்யுட்பஞ்சதந்திரத்தைச் சிறிது பழமையான தொன்றேகொண்டு பிரவேசபரீக்ஷைக்குப் பாடமாகநியமித்து வரு மேற்கூறிய சர்வகலாசங்கத்தார் இந்நாடகத்தை ஒத்தவைகளும் ஆங்கிலேயரது சிறந்தகருத்துக்கள் பொதிந்தவைகளுமான புதுநூல்களைப் பாடமாக நியமிப்பாராயின் அது மிக்க நன்மைபயக்கும்.

இந்நாடகத்தை இனிப்பாடப் புஸ்தகமாக நியமிக்கும்போது, இதன்மூன்ரும் அங்கம் ஏழாங்களத்தில் (97-ஆம் பக்கத்தில்) வரும் காமரசமலிந்த பாகங்கள் போன்ற பாகங்களை நீக்கி விடவேண்டும்.

இந்நூலில் அநேகபாகங்கள்மனதைக்கவரு[ம்] இனிமையுடையன. அவைகளுக்கு இங்கு உ[தார]ணங்காட்டல் அவசியமில்லை. காட்டினுலும், நூலை முறையாக வாசித்தாலன்றி அவற்றின் வனப்புப் பூரணமாக விளங்காது.

## உபாத்தியாயர்பக்கம்.

பள்ளிக்கூட ஒழுக்கமும்நன்னெறிப் பயிற்சியும்.

### III. நன்னெறிப்போதனைக்குத் துணைவழிகள்.

### 4. பாவனுசக்தி.

'ப்ரோபெல்' என்னும் ஐரோப்பிய வித்வான் இதனை 'உருமாறும் உணர்வு' என்கிருர். தற்காலத்துக்கு தனது இயற்கையை மாற்றிக்கொண்டு, பிறர்மனம், சொல், நடை, வினை, முதலியவைகளைத் தானும் பாவித்துநடப்பது பாவனுசக்தியாலாகும் எங்ஙனம் ஒரு குரங்கு நாம் பல்லைக்காட்டினுல் தானும்பல்லைக்காட்டி, நாம் அதட்டியுறுமினுல்,தானும் அதட்டியுறுமி, ஈட்டிக்குப் போட்டிசெய்கின்றதோ, அங்ஙனமே சிறியபிள்ளைகளும் அதிக சூடிகையுள்ளவர்களாகையாலே அவர்கள் முன்னிலையில் நாம் நடப்பதுபோல தாங்களும் நடந்துகொள்ள முயற்சி செய்கின்றனர். இதுதான் பாவனுசக்தியாகும்.

**போதநன்.**

இப்பாவனுசக்தி எக்குணமுள்ள மாணக்கர்களிடத்திலே அதிகம்காணப்படும்?—அவயவாதிகளின் சுறுசுறுப்பும் மனே முயற்சியும் அதிகமாய்ப்பெற்று, தம்மிடத்திலுள்ள சக்தியை யறிந்துள்ள மாணக்கர்களிடத்திலே இப்பாவனுசக்தி மிகவும் குடிகொண்டிருக்கும். மந்த புத்தியும், சரீரத்தாட்டிய மின்மையும் பெற்றுள்ள மாணக்கர்கள், ஒன்றைப்போல பாவித்து நடக்கும் சக்தி மிகவும் குறைந்துள்ளவர்களாக விருப்பார்கள். மேலும், ஊக்கமுள்ள கவனமும், ஞாபகமும், அடிக்கடி பழக்கமும் வேண்டும். பிறருடைய நடையுடை பேச்சு முதலியவைகளை நாமும் பாவித்து நடக்கவேண்டுமென்ருல், முதல்முதல், அவர்களுடையநடையுடை பேச்சுகளை மிகுந்தகவனத்தோடு நோக்கல்வேண்டும் நன்ருகக் கவனித்துக்கொண்டு, பிறகு நமது முன்னிலையில் நாம் யாரைப்போன்று பாவிக்கவேண்டுமோ, அவர் இல்லாம லிருக்கும்போதும், அவர்களுடைய நடை யுடை பேச்சுகளை ஞாபக சக்தியால் அறிந்து கொள்ளத் திறமைவேண்டும். ஆசான் கையெய்

**பாவனு சக்திக்கு ஆதாரம்.**

பம்போலவே சில மாணாக்கர்கள் நினைத்து எழுதவதில்லையா? கவனசக்தி, ஞாபகசக்தி,—அவ்விரண்டு சக்திகளினாலேயும். நாம் அறிந்துகொண்ட ஒரு விஷயத்தை அடிக்கடி அப்பியசித்து வராவிட்டால், காலஞ்செல்ல இரும்பு துருப்பிடிப்பதுபோல நமது அறிவிற்கும் ஈனமுண்டாகும். "நித்தம் நடையும் நடைப்பழக்கம்." என்று ஔவையார் உரைக்கின்றார். ஆதலால் பாவனாசக்தி அதிக தேர்ச்சி யடைவதற்கு இன்றியமையாத காரணங்கள் மேலே எடுத்துக்காட்டிய சக்திகளாகும். 'கிண்டர்கார்டன்' போதனா முறையிலே அப்பாவனாசக்தியதிகத்தேர்ச்சி யடைவதற்குத் தகுந்த சாதனங்க ளேற்பட்டுள்ளன.

**பாவனா சக்தி வெளிப் படும் வேளை.**

சிறுவர்கள் வெளியே ஓடி விளையாடும்போதும், வார்த்தை யாடும்போதும், கதைகள் சொல்லும்போதும் அவர்கள் புரியும் தொழில்கள், பேசும் வார்த்தைகள், இவைகளைக் கவனியுங்கள். சிலர் நன்றாக லீலை புரிந்து சாதுரியமாகப் பேச, சிலர் தாறுமாறாகவோடி, வார்த்தை பேசத் தெரியாது விழிக்கின்றார்கள்! ஏன்? பின்னினத்தாருக்கு பாவனாசக்தி போதாது. வயதுமுதிர்ந்த நம்மவர்க்குள்ளும் சிலர் சக்கர வட்டம்போற் பேசி வெகு சாதுரியமாய் பிறருடைய மனதைக் கவரும்படி வார்த்தையாட, சிலர் என்னவார்த்தை பேசுவதென்று அறியாது மௌனஞ் சாதிக்கின்றனரே! இஃதெல்லாம் பாலியத்திலே நாம் வளர்க்கப்பட்ட மாதிரியானே அமையும். உமது பிள்ளைகள் வயது வந்த சமயத்திலே நன்றாகப் பேசவேண்டும் என்ற அபிப்பிராயம் உங்களுக்கு இருக்குமேயானால், பாலியத்திலேயே அவர்களை உம்மருகே வைத்துக்கொண்டு நீங்கள் கதைசொல்லுங்கள். பிறகு அவர்களைச் சொல்லச்சொல்லுங்கள். இவ்விஷயத்தை நீங்களே யருகிருந்து செய்யவேண்டும். அப்படியில்லாமல், அத்தையிடத்திலாவது, தமக்கையிடத்திலாவது, தாயிடத்திலாவது உமது சிறுவன் ஒப்புவிக்கப்பட்டால், பிறகு வயது வந்த காலத்து உமதுபிள்ளை பெண்வாயனாகவாவது, வீண்வாதம் செய்யும் அதிகப் பிரசங்கியாகவாவது தேர்ந்துவிடுவான்.

**அநுதாபத்திற்கும் மாற்றானோடிகலும்உணர்ச்சிக்கும் அந்தரம்.**

இப்பாவனா சக்தி என்னுங் கரு, அநுதாபம், மாற்றானைப்போல் ஜயமடையவேண்டும் என்னுங் கருத்து ஆகிய இவ்விரண்டு உணர்ச்சிகளையும் கிளைக்கும்படி செய்கின்றது. வருத்தம் அல்லது சந்தோஷம் அடைகின்ற ஒருவனைப் பார்த்து நாமும் வருத்தம் அல்லது சந்தோஷங் கொள்ளுவது தானே அநுதாபம் என்னும் உணர்ச்சி? ஆதலால் பச்சாதாபம் அடைவதற்குமுன் பிறருடைய கஷ்டத்தை நாமும் பாவிக்க வேண்டியவர்களாக ஆகிறோம். மேலும் பிறருடைய சுகத்தை நம்முடையசுகம்போல் பாவித்தாலொழிய நம்மிடத்து அனுதாப வுணர்ச்சி யுண்டாகுமோ? மாற்றானோடிகலாடும் உணர்ச்சிக்கும் இப்பாவனா சக்தி இன்றியமையாதது. மாற்றானுடைய ஜயத்திற்குக் காரணமான ஊக்கம், விடாமுயற்சி, முதலியவைகளை யறிந்துகொண்டு, மாற்றானைப்போல நடக்கக்கருத முதல் முதல் பாவனா சக்திதான் வேண்டும். ஆதலால் இப்பாவனா சக்தியை கிரமப்படுத்தி ஆசான் விருத்திசெய்யாவிட்டால், இது வக்கரமான உணர்வாகப்போய் சங்கடத்தை விளைவிக்கும்.

**வக்கரமான பாவனா சக்தி.**

ஆசான், தாய், தந்தையாரால் ஒழுங்குப் படுத்தாத பாவனாசக்தி கேலிக்கூத்து செய்யும் சக்தியில் முடியும். பிள்ளைகள் விகடகவிகளைப் போலவாரம்பித்து கண்டவர்களை யெல்லாம் பரிகாசஞ் செய்யத் தலைப்படுவார்கள். இப் பிள்ளைகளுக்கும் குரங்குகளுக்கும் வித்தியாசம் ஏற்படாதுபோய் விடும். உபாத்தியாயர் நடையைப்போல நடந்து அவர் பேசுவதுபோல் பேசி, அவர் எழுதுவதுபோல் எழுதி அவருடைய துர்க்குணங்களையெல்லாம் எடுத்துப் பலரறிய வெளிப்படுத்தும் சிகாமணிகள் இவ்வினத்தைச் சேர்ந்தவர்கள். பவணந்தி முனிவர் உத்தம மத்திம அதம மாணாக்கர்களின் இலக்ஷணங்களை எடுத்துச் சொல்லும்போது,

"அன்னமாவே மண்ணொடுகிளியே
இல்லிக்குட மாடெருமை நெய்யரி
அன்னர்தலை யிடைகடை மாணாக்கர்"

என்கிறார். கடைமாணாக்கர்கள், இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி,—இவைகளெல்லாம் ஒரு தன்மையுடையவைகளாம்! வக்கரமான பாவனாசக்தியமைந்துள்ள நமது சிகாமணிகளும் நெய்யரிக்குச் சமானமாவார்கள். சாராம்சங்களைக் கவனித்து அம்சபட்சிகளைப்போல் நடவாது, கசட்டையெல்லாம் தேக்கி வைத்துக்கொள்ளுகிற பன்னாடைக்குச்சமானமாகவா இவர்கள்நடக்கவேண்டும்?—இவர்கள் தலைவிதியிது!

**ஆசான் கடமை.**

இத்தன்மையான மாணாக்கர்கள் முதல்முதல் கேலி செய்ய வாரம்பிக்கும்போது, 'நமது வினை



களில் வினைபொருந்தி யிருக்கின்றது, என்ற ஞாபகம் கொண்டவர்களல்ல. ஏதோ தற்செயலாகத் தம்மை யறியாதே செய்ய எத்தனிக்கின்றார்கள். இப்பாவனாசக்தியின் வக்கரம் முதல் முதல் சில நடை யுடை மாதிரியில் உண்டாகிறது. ஆசான்கவனித்து பாவனாசக்தியை வரையறுத்து வைக்கவேண்டும். சில விஷயங்களில் கண்டனஞ் செய்யவேண்டும். சில விஷயங்களில் விருத்திசெய்ய வேண்டும். சிறு பிள்ளைகள் பெரியோர்கள் நடப்பதுபோலவே நடந்துகொள்ள மிகுந்த ஆவலுள்ளவர்களாக விருக்கின்றபடியாலே ஆசான் கவனமுள்ளவனாக நடந்துகொள்ள வேண்டும். ஆசான் நடை யுடை பாவனைகள் மாணாக்கர்கள் அப்பியசிக்கும் வண்ணம் ஒழுங்குள்ளவைகளாக விருக்கவேண்டும்.

## 5. நூதனமறியுணர்ச்சி.

**பொருள்.**

"நூதனமான பொருள்களைக் கண்டறியவேண்டுமென்ற பேரவா" என்பது இதன் பொருள். இவ்வுணர்ச்சி மனோமுயற்சியின் ஓர் முகமாகும், சிறுபிள்ளைகளிடத்திலே இவ்வுணர்ச்சி அதிகமாகக் காணப்படுகிறது. (Thomas Edward) தாமஸ் எட்வார்ட் என்ற தாபரசங்கமசாஸ்திரி இளங்குழந்தையாக விருந்தபோது தனது மனக்குடிகையினால் தூண்டப்பட்டு கடற்கரையோரமாகவும், மீன் கடைத்தெருவழியாகவும், சென்று சென்று பலவித மீன்கள், பறவைகள், பூச்சிகள், ஊர்வனஜெந்துக்கள், இவைகளின் இயற்கைகளையறிந்துகொண்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆறுவயது ஆவதற்குமுன் மூன்று வெவ்வேறு பள்ளிக்கூடங்களிலே புகுந்து, ஒவ்வொன்றிலிருந்தும் தலையுபாத்திமார்களால் துறத்தியடிக்கப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், பல ஜெந்துக்களின்ரூபம், இயற்கை முதலான விஷயங்களை நன்றாய் அறிந்துகொள்ள வேண்டும் என்ற வோர் பேரவாவால் பள்ளிக்குச்சென்றபோதெல்லாம் தனது சட்டைப்பைகளிலே தட்டாரப்பூச்சி, நத்தை, வௌவால், குளவி முதலான எளிய ஜெந்துக்களைத் திணித்துக்கொண்டுவந்து வகுப்பிலே பிரவேசித்து மற்றமாணாக்கர்களுக்குக்காட்டுவாராம்!- இங்விதமாய் நூதனமாய்க்கண்ட விஷயங்களையெல்லாம் நன்றாய் பகுத்தறியவேண்டுமென்ற வோ பேரவா சிலரிடத்திலே மிகவும் அதிகமாய்க்காணப் டும்.

**இவ்வுணர்ச்சி தோற்றும் வகைகள்.**

இந்நூதனமறியுணர்ச்சி எவ்வாறு தோற்றுகி றது? எதாகிலும் ஓர் நூதனமானகாட் அவர்கள் கண்ணுக்கு முன்னே தோ றுமாகில், உடனே தமது புலனைப் பி யோகித்துப்பொருளையுணரக்கருதுகிறா கள்: சிறுபிள்ளைகள் வேலிமீது உட கார்ந்துகொண்டிருக்கும் தட்டாரப் பூ சியைப்பிடித்து இறகுவேறு, கால்வேறாக இழுத் எளியஜெந்துவைச்சித்திரவதை செய்துவிடுகிறார்க அல்லவோ? எதாகிலும் ஓர் விநோதமான பூவொன் கையிலே அகப்பட்டதானால் அப்பூவை ஒவ்வொ இதழாகப் பிரித்தெறிந்து சின்னபின்னஞ் செய்து குரங்கின்கையகப்பட்ட பூமாலையைப்போல் அதே கதியாக்கிவிடுகிறார்கள் அன்றோ? மேலும் நாம் எதாவது ஒருகதை சொல்லப்புகுந்தோமானால், சிறு வா பர்கள் எவ்வளவு ஊக்கத்தோடும் சந்தோஷத்தோடு கவனத்தையெல்லாம் செலுத்திக் காதுகொடுத்து கேட்கின்றார்கள். தாய்தந்தையர், தமயன் முதலா வர்கள் அருகேயிருந்தால் விஷயாதிகளை அறிந்துகொ ளும் வண்ணம் "அதென்னப்பா? இதென்னப்பா?" வென்று ஓயாது வினவி மூத்தோர்களுக்கும் மனவெ றுப்புண்டாகும்படி தொந்தரவு செய்வதில்லையா? இச்செய்கைகளெல்லாம் நூதனமறியுணர்ச்சியின் தோற்றங்களாம்.

**இவ்வுணர்ச்சிக்கு எல்லை.**

வயது, முன்னனுபவம், அவரவர் மனதின் தன்மை ஆகிய இவைகளுக்கேற்ப இவ்வுணர் சிக்கு எல்லையுண்டு. வீதி மணலிலே பொய்வீடுகட்டி விளையாடுகின்ற சிறு பிள்ளைகளின் நூதனமறியுணர்ச்சி அநேக சாஸ்திரங்களை நிரூபணஞ்செய்யும் நிபுணர்களின் நூதனமறியுணர்ச்சிக்கு இணையா மென்றுசொல்லத்தகுந்ததோ? பிரகிருதியமைப்பிலே பிரவேசிக்கும் மனதையுடையவர் உணர்ச்சி அந்தத்தத்துவத்தில் சற்றேனும் மனஞ்செல்லாதவர் உணர்ச்சி போலாகுமா? உலகவிகாரங்களிலேமனதைச்செலுத்தி ஓயாது கவலைகொண்டு முயற்சித்து சுறுசுறுப்புள்ள மனிதர்களின் உணர்ச்சி தம்முள்ளேயடங்கி மௌனஞ்சாதிக்கும் ஞானிகளின் உணர்விற்கு நிகரா மோ? ஆதலால் இந்நூதனமறியுணர்ச்சி, வயது, அநுபவம், மனதினியற்கை ஆகிய இவைகளால் ஒருவாறு பேதமுறுகிறது.

பம்போலவே சில மாணாக்கர்கள் நினைத்து எழுதவ தில்லையா? கவனசக்தி, ஞாபகசக்தி,—அவ்விரண்டு சக்திகளினாலேயும். நாம் அறிந்துகொண்ட ஒருவிஷயத்தை அடிக்கடி அப்பியசித்து வராவிட்டால், காலஞ்செல்ல இரும்பு துருப்பிடிப்பதுபோல நமது அறிவிற்கும் ஈனமுண்டாகும். "நித்தம் நடையும் நடைப் பழக்கம்." என்று ஔவையார் உரைக்கின்றார். ஆதலால் பாவனாசக்தி அதிக தேர்ச்சி யடைவதற்கு இன்றியமையாத காரணங்கள் மேலே எடுத்துக்காட்டிய சக்திகளாகும். 'கிண்டர்கார்டன்' போதனா முறையிலே அப்பாவனாசக்தியதிகத்தேர்ச்சி யடைவதற்குத் தகுந்த சாதனங்க ளேற்பட்டுள்ளன.

**பாவனா சக்தி வெளிப் படும் வேளை.**

சிறுவர்கள் வெளியே ஓடி. விளையாடும்போதும், வார்த்தை யாடும்போதும், கதைகள் சொல்லும்போதும் அவர்கள் புரியும் தொழில்கள், பேசும் வார்த்தைகள், இவைகளைக் கவனியுங்கள். சிலர் நன்றாக லீலை புரிந்து சாதுரியமாகப் பேச, சிலர் தாறுமாறாகவோடி, வார்த்தை பேசத் தெரியாது விழிக்கின்றார்கள்! ஏன்? பின்னினத்தாருக்கு பாவனாசக்தி போதாது. வயதுமுதிர்ந்த நம்மவர்க்குள்ளும் சிலர் சக்கர வட்டம்போற் பேசி வெகு சாதுரியமாய் பிறருடைய மனதைக் கவரும்படி வார்த்தையாட, சிலர் என்னவார்த்தை பேசுவதென்று அறியாது மௌனஞ் சாதிக்கின்றனரே! இஃதெல்லாம் பாலியத்திலே நாம் வளர்க்கப்பட்ட மாதிரியானே அமையும். உமது பிள்ளைகள் வயது வந்த சமயத்திலே நன்றாகப் பேசவேண்டும் என்ற அபிப்பிராயம் உங்களுக்கு இருக்குமேயானால், பாலியத்திலேயே அவர்களை உம்மருகே வைத்துக் கொண்டு நீங்கள் கதைசொல்லுங்கள், பிறகு அவர்களைச் சொல்லச்சொல்லுங்கள். இவ்விஷயத்தை நீங்களே யருகிருந்து செய்யவேண்டும். அப்படியில்லாமல், அத்தையிடத்திலாவது, தமக்கையிடத்திலாவது, தாயிடத்திலாவது உமது சிறுவன் ஒப்புவிக்கப் பட்டால், பிறகு வயது வந்த காலத்து உமதுபிள்ளை பெண்வாயனாகவாவது, வீண்வாதம் செய்யும் அதிகப் பிரசங்கியாகவாவது தேர்ந்துவிடுவான்.

**அநுதாபத்திற்கும் மாற்றானோடிகலும்உணர்ச்சிக்கும் அந்தரம்.**

இப்பாவனா சக்தி என்னுங் கரு, அநுதாபம், மாற்றானைப்போல் ஜயமடையவேண்டும் என்னுங் கருத்து ஆகிய இவ்விரண்டு உணர்ச்சிகளையும் கிளைக்கும்படி செய்கின்றது. வருத்தம் அல்லது சந்தோஷம் அடைகின்ற ஒருவனைப் பார்த்து நாமும் வருத்தம் அல்லது சந்தோஷங் கொள்ளுவது தானே அநுதாபம் என்னும் உணர்ச்சி? ஆதலால் பச்சாதாபம் அடைவதற்குமுன் பிறருடைய கஷ்டத்தை நாமும் பாவிக்க வேண்டியவர்களாக ஆகிறோம். மேலும் பிறருடைய சுகத்தை நம்முடையசுகம்போல் பாவித்தாலொழிய நம்மிடத்து அனுதாப வுணர்ச்சி யுண்டாகுமோ? மாற்றானோடிகலாடும் உணர்ச்சிக்கும் இப்பாவனா சக்தி இன்றியமையாதது. மாற்றானுடைய ஜயத்திற்குக் காரணமான ஊக்கம், விடாமுயற்சி, முதலியவைகளை யறிந்துகொண்டு, மாற்றானைப்போல நடக்கக்கருத முதல் முதல் பாவனா சக்திதான் வேண்டும். ஆதலால் இப்பாவனா சக்தியை கிரமப்படுத்தி ஆசான் விருத்திசெய்யாவிட்டால், இது வக்கரமான உணர்வாகப்போய் சங்கடத்தை விளைவிக்கும்.

**வக்கரமான பாவனா சக்தி.**

ஆசான், தாய், தந்தையாரால் ஒழுங்குப் படுத்தாத பாவனாசக்தி கேலிக்கூத்து செய்யும் சக்தியில் முடியும். பிள்ளைகள் விகடகவிகளைப் போலவாரம்பித்து கண்டவர்களை யெல்லாம் பரிகாசஞ் செய்யத் தலைப்படுவார்கள். இப் பிள்ளைகளுக்கும் குரங்குகளுக்கும் வித்தியாசம் எற்படாதுபோய் விடும். உபாத்தியாயர் நடையைப்போல நடந்து அவர் பேசுவதுபோல் பேசி, அவர் எழுதுவதுபோல் எழுதி அவருடைய துர்க்குணங்களையெல்லாம் எடுத்துப் பலரறிய வெளிப்படுத்தும் சிகாமணிகள் இவ்வினத்தைச் சேர்ந்தவர்கள். பவணந்தி முனிவர் உத்தம மத்திம அதம மாணாக்கர்களின் இலக்ஷணங்களை எடுத்துச் சொல்லும்போது,

"அன்னமாவே மண்ணொடுகிளியே
இல்லிக்குட மாடெருமை நெய்யரி
அன்னர்தலை யிடைகடை மாணாக்கர்"

என்கிறார். கடைமாணாக்கர்கள், இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி,—இவைகளெல்லாம் ஒரு தன்மை யுடையவைகளாம்! வக்கரமான பாவனாசக்தியமைந்துள்ள நமது சிகாமணிகளும் நெய்யரிக்குச் சமானமாவார்கள். சாராம்சங்களைக் கவனித்து அம்சபட்சிகளைப்போல் நடவாது, கசட்டையெல்லாம் தேக்கி வைத்துக்கொள்ளுகிற பன்னாடைக்குச்சமானமாகவா இவர்கள்நடக்கவேண்டும்?—இவர்கள் தலைவிதியிது!

**ஆசான் கடமை.**

இத்தன்மையான மாணாக்கர்கள் முதல்முதல் கேலி செய்ய வாரம்பிக்கும்போது, 'நமது வினைகளில் வினைபொருந்தி யிருக்கின்றது, என்ற ஞாபகம் கொண்டவர்க ளல்ல. ஏதோ தற்செயலாகத் தம்மை யறியாதே செய்ய எத்தனிக்கின்றார்கள். இப்பவனாசக்தியின் வக்கரம் முதல் முதல் சில நடை யுடை மாதிரியில் உண்டாகிறது. ஆசான்கவனித்து பாவனாசக்தியை வரையறுத்து வைக்கவேண்டும். சில விஷயங்களில் கண்டனஞ் செய்யவேண்டும். சில விஷயங்களில் விருத்திசெய்ய வேண்டும். சிறு பிள்ளைகள் பெரியோர்கள் நடப்பதுபோலவே நடந்துகொள்ள மிகுந்த ஆவலுள்ளிவர்களாக விருக்கின்றபடியாலே ஆசான் கவனமுள்ளவனாக நடந்துகொள்ள வேண்டும். ஆசான் நடை யுடை பாவனைகள் மாணாக்கர்கள் அப்பியசிக்கும் வண்ணம் ஒழுங்குள்ளவைகளாக விருக்கவேண்டும்.



## 5. நூதனமறியுணர்ச்சி.

**பொருள்.**

"நூதனமான பொருள்களைக் கண்டறியவேண்டுமென்ற பேரவா" என்பது இதன் பொருள். இவ்வுணர்ச்சி மனோமுயற்சியின் ஓர் முகமாகும், சிறுபிள்ளைகளிடத்திலே இவ்வுணர்ச்சி அதிகமாகக் காணப்படுகிறது. (Thomas Edward) தாமஸ் எட்வார்ட் என்ற தாபரசங்கமசாஸ்திரி இளங்குழந்தையாக விருந்தபோது தனது மனச்சூடிகையினால் தூண்டப்பட்டு கடற்கரையோரமாகவும், மீன் கடைத்தெருவழியாகவும், சென்று சென்று பலவித மீன்கள், பறவைகள், பூச்சிகள், ஊர்வனஜெந்துக்கள், இவைகளின் இயற்கைகளையறிந்துகொண்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆறுவயது ஆவதற்குமுன் மூன்று வெவ்வேறு பள்ளிக்கூடங்களிலே புகுந்து, ஒவ்வொன்றிலிருந்தும் தலையுபாத்திமார்களால் துறத்தியடிக்கப் பட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், பல ஜெந்துக்களின்ரூபம், இயற்கை முதலான விஷயங்களை நன்றாய் அறிந்துகொள்ள வேண்டும் என்ற வோர் பேரவாவால் பள்ளிக்குச்சென்றபோதெல்லாம் தனது சட்டைப்பைகளிலே தட்டாரப் பூச்சி, நத்தை, வௌவால், குளவி முதலான எளிய ஜெந்துக்களைத் திணித்துக்கொண்டுவந்து வகுப்பிலே பிரவேசித்து மற்றமாணாக்கர்களுக்குக்காட்டுவாராம்!- இவ்விதமாய் நூதனமாய்க்கண்ட விஷயங்களையெல்லாம் நன்றாய் பகுத்தறியவேண்டுமென்ற வோர் பேரவா சிலரிடத்திலே மிகவும் அதிகமாய்க்காணப்படும்.

**இவ்வுணர்ச்சி தோற்றும் வகைகள்.**

இந்நூதனமறியுணர்ச்சி எவ்வாறு தோற்றுகின்றது? எதாகிலும் ஓர் நூதனமானகாட்சி அவர்கள் கண்ணுக்கு முன்னே தோற்றுமாகில், உடனே தமது புலனைப் பிரயோகித்துப்பொருளையுணரக்கருதுகிறார்கள். சிறுபிள்ளைகள் வேலிமீது உட்கார்ந்துகொண்டிருக்கும் தட்டாரப் பூச்சியைப்பிடித்து இறகுவேறு, கால்வேறாக இழுத்து எளியஜெந்துவைச்சித்திரவதை செய்துவிடுகிறார்கள் அல்லவோ? எதாகிலும் ஓர் விநோதமான பூவொன்று கையிலே அகப்பட்டதானால் அப்பூவை ஒவ்வொரு இதழாகப் பிரித்தெறிந்து சின்னாபின்னஞ் செய்து, குரங்கின்கையகப்பட்ட பூமாலையைப்போல் அதோகதியாக்கிவிடுகிறார்கள் அன்றோ? மேலும் நாம் எதாவது ஒருகதை சொல்லப்புகுந்தோமானால், சிறுவாலிபர்கள் எவ்வளவு ஊக்கத்தோடும் சந்தோஷத்தோடும் கவனத்தையெல்லாம் செலுத்திக் காதுகொடுத்துக் கேட்கின்றார்கள். தாய்தந்தையர், தமயன் முதலானவர்கள் அருகேயிருந்தால் விஷயாதிகளை அறிந்துகொள்ளும் வண்ணம் "அதென்னப்பா? இதென்னப்பா?" வென்று ஓயாது வினவி மூத்தோர்களுக்கும் மனவெறுப்புண்டாகும்படி தொந்தரவு செய்வதில்லையா? இச்செய்கைகளெல்லாம் நூதனமறியுணர்ச்சியின் தோற்றங்களாம்.

**இவ்வுணர்ச்சிக்கு எல்லை.**

வயது, முன்னனுபவம், அவரவர் மனதின் தன்மை, ஆகிய இவைகளுக்கேற்ப இவ்வுணர்ச்சிக்கு எல்லையுண்டு. வீதி மணலிலே, பொய்வீடுகட்டி விளையாடுகின்ற சிறு பிள்ளைகளின் நூதனமறியுணர்ச்சி அநேக சாஸ்திரங்களை நிரூபணஞ்செய்யும் நிபுணர்களின் நூதனமறியுணர்ச்சிக்கு இணையாமென்றுசொல்லத்தகுந்ததோ? பிரகிருதியமைப்பிலே பிரவேசிக்கும் மனதையுடையவர் உணர்ச்சி அந்தத்தத்துவத்தில் சற்றேனும் மனஞ்செல்லாதவர் உணர்ச்சி போலாகுமா? உலகவிகாரங்களிலேமனதைச்செலுத்தி ஓயாது கவலைகொண்டு முயற்சித்து சுறுசுறுப்புள்ள மனிதர்களின் உணர்ச்சி தம்முள்ளேயடங்கி மௌனஞ்சாதிக்கும் ஞானிகளின் உணர்விற்கு நிகராகுமோ? ஆதலால் இந்நூதனமறியுணர்ச்சி, வயது, அநுபவம், மனதினியற்கை ஆகிய இவைகளால் ஒருவாறு பேதமுறுகிறது.

**இவ்வுணர்ச்சியின் வகைகள்.**

இங்ஙனம் பேதமுறுகையாலே, இந்நூதனமறியுணர்ச்சி முதல் முதல் அறியாமையாலும் பொருள்களின் விசித்திரத் தன்மையாலும் உண்டாகின்றது. இது சிறுவர்களின் உணர்ச்சியாகும் வயது சென்ற முதியோர்களின் உணர்ச்சி வேறுகின்றது. இவர்களிலும் சாஸ்திரார்த்த வித்தைகளிலே மனதைப்புகுத்துகின்ற சிலருடைய நூதனமறியுணர்ச்சி மிகுந்தவுயர்வு பெற்றுவிசேஷமுள்ளதாகின்றது. இப்போது இவ்வுணர்ச்சி, ஞானத்தைபெறக் கருதுகின்றவோர் பேரவாவால் உண்டாகின்றது.

**இவ்வுணர்ச்சியின் விகாரரூபங்கள் ஒட்டுக்கேட்கல்.**

நூதனமான பொருள்களைக் கண்டறியவேண்டுமென்ற பேரவா மிகவும் உசிதமானதாகும். ஆனால் இவ்வுணர்ச்சியின் விகாரமான ரூபம் ஒன்றிருக்கின்றது. தாங்கள் அறிவது அவசியம் அல்லாத விஷயங்களையும், பிறருடைய இரகசியங்களையும், எப்படியாவது அறிந்துகொள்ளவேண்டுமென்று அவதிப்பட்டாகிலும் ஒட்டுக்கேட்டு தூதர்களைப்போல் விசாரணைசெய்து நடப்பது எவ்வளவு வெறுக்கத்தக்க விஷயம்? ஆயினும் இவ்விசாரணையும் நூதனமறியுணர்ச்சியின் ஒரு ரூபமாகும். ஆசான் இந்த ரூபங்கொண்ட உணர்ச்சியைக்கண்டித்து உசிதமான நல்ல வழிகளிலே பிரவேசிக்கும் உணர்ச்சியை வளர்த்து வரவேண்டும்.

**கள்ளமான உணர்ச்சி.**

மேலும் இவ்வுணர்ச்சிக்கு இன்னமொரு விகாரரூபமிருக்கின்றது இதுதான் (Dr. Bain) பெயின் என்னும் ஆங்கிலேய வித்துவான் எடுத்துக்காட்டுகின்ற "கள்ளமான நூதனமறியுணர்ச்சி"யாகும். அநேகமாய்ச்சிறுபிள்ளைகளின் வினாக்கள் எல்லாம் கவட்டுத்தனமாய் உசாவப்பட்டனவென்றும், தானென்னு மமதையை வெளிப்படுத்தவும், பிறருக்கு ஹிம்சையுண்டாக்கவேண்டுமென்ற வுணர்வையுட்கொண்டும், அவர்களால் கடாவப்பட்டனவென்றும் இவர் உரைக்கின்றார். இதுவும் ஒருக்கால் உண்மைதான்! ஏனென்றால், சிலபிள்ளைகள், மனோவாக்குக் காயம் ஆகிய திரிகரணங்களாலேயும் மிகுந்த சுறுசுறுப்புள்ளவர்களா யிருக்கின்றபடியாலே, ஏதாகிலும் நினைத்துக்கொண்டேயாகிலும், மழைபெய்வதுபோல சளசளவென்று பேசிக்கொண்டாகிலும், ஏதாகிலும் தொழில்செய்துகொண்டேயாகிலும் இருக்க விரும்புகிறார்கள். ஆதலால் வாயுள்ள இப்பிள்ளைகள் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டவர்களாக விருந்தபோதிலும் "அப்பா இதென்ன? அப்பா இதென்ன?" என்று தகப்பனை வதைத்து ஹிம்சிக்கின்றனர். இவ்விதமான கள்ளவுணர்ச்சிக்கு ஆசான்மார்கள் இடங்கொடுக்கக்கூடாது!

**ஆசான் இவ்வுணர்ச்சியை யடக்கியாள வேண்டும்.**

மேலேசொன்ன விகாரரூபங்களை ஆசான் கண்டித்து உசிதமான ரூபங்களை வளர்க்க வேண்டும். சிறுமாணாக்கர்கள் ஞானமடையவிரும்பும் அவாவினாலே தான் வினவுகின்றார்கள். ஆதலால், தாய்தந்தையரைப்போல் ஆசானும் சிறுபிள்ளைகளின் நூதனமறியுணர்ச்சியை மெச்சிக்கொண்டு பொருட்படுத்தி அவர்கள் வினாக்கட்கு மறுமொழிகூறி அவர்களுக்குத் திருப்தியுண்டாக்கவேண்டும். (Locke) "லாக்" என்பவர் பாலசிட்சை செய்யும் ஐங்குரவரையும் நோக்கி "உம்மாற் கூடியஅளவு அவர்களுடைய நூதனமறியுணர்ச்சியை நன்றாகத் தூண்டிக்கிளறிவிட்டு அவர்கள் வினாக்கட்கு உத்தரங்கொடுத்து புத்தியை தீக்ஷணியமடையும்படி செய்யுங்கள்" என்று சொல்லியிருக்கின்றார். வகுப்பிலே ஆசான்மார்கள் இவ்வித்வான் போதனையை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். இப்போதனை நமது மனதிலிருக்குமளவும் மாணாக்கர்களுக்கு பாடங்களிலே மனதூன்றும்படியாய், பாடங்களுக்கு ஓர் வனப்பையும் மனோஹரத்தன்மையையும் புகட்டிவிடலாமென்பதிலையமேயில்லை. கவனசக்திக்குத் தூண்டுகோல், ஆசான் போதனமார்க்கத்திலே இடையிடையே பலவேறுபட்டு அடுக்கடுக்காய்ப் பிரயோகிக்கப்பட்ட வினாக்களும், பொருள் தெரித்தலும் உதாரணங்களும் அல்லவா? இவையெல்லாம் நூதனமறியுணர்ச்சியை வளர்க்கின்றன.

**தாய் தந்தையர்களுக்கு ஓர் அறிவிப்பு.**

தாய்தந்தைமீர்! உமதுகடமை மிகவும் வியக்கத் தக்கது!! நீவிர் எவ்வளவு பொறுமையோடு உமது சிசுக்களைப்பாது காத்து வருகின்றீர்கள்! நீங்கள் உமது பிள்ளைகளின் ஆயிரம்வினாக்கட்கும் மறுமொழி கூறி அவர்களைச்சந்தோஷிப்பித்து வருகின்றீர்களா? அல்லாது அதட்டி, உரப்பி "அடே" இனிமேல் எனதறைக்குள்ளே பிரவேசியாதே! வந்தால் அடிப்பேன், "இல்ப்பானை வாயைத் திறந்ததுபோல் நச்சுநச்சென்று ஏதாகிலும் கேட்டுக்கொண்டிருந்தால், உன்முகத்திலேயேவிழிக்கமாட்டேன்," என்றுசொல்லிக்கோபித்து அவர்களைக் கிட்டநெருங்காம லடித்துவிடுகிறீர்களோ? சிறுபிள்ளைகள் அசம்பாவிதமானவும் மறுமொழிகூறமுடியாததுமானவும், வினாக்கள் சில கேட்டுவிடுகிறார்கள் என்பது எனக்குத்தெரியும், (Sully) "சல்லி" என்பவர் ஓர் தாய்க்கும் அத்தாயின் பெண் நாலரைவயதுள்ள வோர் நங்கைக்கும் நடந்த சம்பாஷணையொன்றை எடுத்தெழுதுகின்றார்:—

பெண்—"அம்மா! அந்த சன்னற் கண்ணாடியிலே என்ன?"

தாய்—"அது ஒரு குளவி."

பெண்—"அதைநான் தொடலாமா?"

தாய்—"ஐயோ! தொடலாகாது! கொட்டிவிடும்"

பெண்—"கண்ணாடியை ஏன் கொட்டவில்லை!"

தாய்—"கண்ணாடிக்கு அறிவில்லை!"

பெண்—"ஏன் அதற்கு அறிவில்லை?"

தாய்—"நம்மிடத்திலிருக்கிறதுபோல உணருஞ்சக்தியுள்ள நரம்புகள் அதற்கு கிடையாது."

பெண்—"நரம்புகள் ஏன் அறிகின்றன?"

இவ்வினாயாரால் மறுமொழிகூறத்தக்கது? தத்துவசாஸ்திரிகள் அல்லவோ உத்தரம்சொல்ல வேண்டும்?

(George Eliot) "ஜியார்ஜ்இலியட்" என்றமாதர் சூடாமணி யுரைப்பதுபோல "குழந்தைகளோடு ஒவ்வொன்றையும் பற்றிவாக்குவாதம் செய்யவாரம்பித்தோமானால் அக்குழந்தைகள் இராக்ஷதர்களாய், பிறரிடத்தில் நேசமும் தெய்வ பக்தியுமில்லாது போய்விடுவார்கள்" என்பது உண்மையே! ஆயினும் நீங்கள் இவ்விபத்திற்குப்பயந்து, ஒரேயடியாய் பிள்ளைகளைக்கிட்டி வரவொட்டாமல், விலக்கிவிடலாமோ? கூடாது! ஆதலால் "லாக்" என்பவர்போதனையைக் கைப்பிடித்து நடவுங்கள்.

டி. இராஜமய்யங்கார், பி. ஏ.

---

## கொள்ளைநோயும் ஜனங்களும்.

சென்ற இரண்டுவருஷங்களாக இவ்விந்தியாவுக்குப் பொல்லாதகாலம் நேரிட்டு ஜனங்கள் பலவிதத்திலும் வருந்திவருகிறார்கள். கொடியபஞ்சம் என்ன, 'ப்ளேக்' என்னும் கொள்ளைவியாதியென்ன, பூகம்பமென்ன, வடமேற்கு மூலையில் மலைநாட்டாரோடு நேர்ந்த சண்டைகளில்நேரிட்ட கஷ்டநஷ்டங்கள் என்ன, இப்படிப் பலவாறாக நேரிட்ட துன்பங்களால் ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் மனோற்சாகமின்றி மிகத்துயருற்று வருந்தும்படி நேரிட்டது. பஞ்சத்தின் உக்கிரம் தணிந்தாலும் அதனால் விளைந்த கொடுமைகள் நீங்கி இன்னும் தேசத்தில் சுபிக்ஷம் ஏற்படவில்லை. 'ப்ளேக்' என்னும் கொள்ளைநோயால் இந்தியாவிற்கு நேர்ந்த துன்பமும் கஷ்டமும் மற்றத் தொந்திரவுகளும் அற்பசொற்பமில்லை. இதனால் ஜனங்கள் ஆயிரக்கணக்காக மாண்டதன்றி இதற்குத் தப்பிப்பிழைத்தவர்களும் மிக்க ஹிம்சைப்பட்டுப் போனார்கள். கவர்ன்மெண்டாருக்கும் ஜனங்களுக்குமுண்டான பொல்லாப்பும் பகையும், அதனால் இருதிறத்தாருக்குமுண்டான துன்பமும் மனோசஞ்சலமும் கொஞ்சமல்ல. கவர்ன்மெண்டுக்கு ஜனங்களை ஹிம்ஸிக்கவேண்டுமென்கிற எண்ணமுமில்லை; ஜனங்களுக்கு சர்க்காரை யெதிர்க்கவேண்டுமென்கிற எண்ணமுமில்லை. இருந்தாலும் இப்பொல்லாத காலத்தில் ஒருவர்கருத்தை ஒருவர் நன்றாயுணர்ந்து கொள்ளத்தவறினதினால் இருதிறத்தாருக்கும் பொல்லாப்பும் தீங்கும் விளைந்தது. கவர்ன்மெண்டார் நல்லெண்ணத்தோடு ஜனங்களைக் கொள்ளைநோய்க்கிரையாகாது பாதுகாக்கவேண்டுமென்று மிகவும் கொடிய தொற்றுவியாதியான அந்நோய் பரவவொட்டாது தடுக்கவெண்ணி அதற்கென்று பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட சாஸ்திரவிற்பன்னர்களோடு ஆலோசித்துச் சில ஒழுங்குகள் ஏற்படுத்தி அதைக் காரியத்தில் நிறைவேற்றிவர உழைக்கிறார்கள். அதனால் ஜனங்களுக்குத் தீராப்பக்ஷமாகப்பல தொந்திரவுகளும் இடையூறுகளும் நேரிடுகின்றன. ஏற்கனவே துன்பத்திலடிபட்டு மனம்நொந்து வியாதியினாலும் ஹிம்சைப்படுகிற ஜனங்களுக்கு சர்க்கார் செய்யும் ஏற்பாடுகளினால் தங்களுக்குத் துன்பம் அதிகரிக்கிறது ஒன்றுமட்டும் பிரத்தியக்ஷமாகத் தெரிகிறதேயன்றி அவ்வேற்பாடுகளெல்லாம் தங்களுடைய நன்மைக்காகவே செய்யப்படுகின்றனவென்று தெரியவில்லை. ஏனென்றால் அதற்குவேண்டிய அறிவு அவர்களிடத்தில் இல்லை. நம்மவர்கள் எப்போதும் விதியைநம்பினவர்களாகவிருப்பவர்கள். எவ்வளவு கொடியதுன்பம் வந்தாலும் தலைவிதியென்று நம்பித் தெய்வத்தைநொந்துகொண்டு அதைப்பொறுத்து அனுபவிப்பார்கள். துன்பம் வந்தவழிமட்டும் அவர்கள் சிற்றறிவுக்குப் புலப்படாமலிருக்கவேண்டும். புலப்படாமலிருந்தால் தெய்வாதீனம் யார் என்னசெய்வ

என்றிருப்பார்கள். அந்தச்சமயத்தில்யாரும் அவர்களி
டத்தில்போய் தொந்திரவுகொடுக்கக்கூடாது. தலை
விதி யென்னசெய்வதென்று அவர்களோடுகூடப்பரி
தபித்தால் ஒருவாறு மனதில் ஆறுதலடைவார்கள். அ
ப்படிக்கின்றி அவர்களுக்குவந்த கதி அவர்கள் குற்றத்
தினாலேயே வந்ததன்றி வேறல்லவென்று யாரா்வது
தெரிந்தவர்கள் உற்றார் உறமுறையாரா் யிருந்து
சொன்னாலுங்கூட தங்களைத் தெய்வம் படுத்து
வதுபோதாதென்று மனுஷர்களும் கூடப்படுத்துகி
றார்களென்று குறைப்பட்டுக்கொள்வார்கள். அப்படி
யிருக்கையில் 'ப்ளேக்' என்னும் கொள்ளைநோய் கொ
டியதென்றும் அதனால் பீடிக்கப்பட்டவர்களைத்
தனியே பிரித்து தூரத்தில் வைக்கவேண்டுமென்
றும் சொல்லி அதற்காக அந்நியர்களைக்கொண்டு உற்
றார், பெற்றார் என்கிற பாசபந்தம் ஒன்றையும் பாரா
மல் காயலாவாகக்கிடக்கிற ஜனங்களைத் தனியே
கொண்டுபோனால் அதைப்பார்த்திருக்க அவர்கள் எப்
படிச்சகிப்பார்கள். "தானகப்பாதி தம்பிரானகப்பாதி"
என்றுசொல்லுகிற பழமொழிப்படி, இவ்வேற்பாடு
கள் சுபாவத்திலே கொடுமைவிளைப்பதாயிருக்க இவற்
றை நிறைவேற்ற ஏற்படுத்தியசிப்பந்திகளின் அறியா
மையினாலும் அனுதாபமின்மையினாலும் இதில் இயல்
பாயுள்ள கொடுமை இன்னும் பதின்மடங்கதிகக் கொ
டுமையாக நேரிடுகிறது. இது பச்சைப்புண்ணில் மிள
காயையரைத்துத்தடவுவதுபோல் ஆகிறது. அறிவில்
லாத ஜனங்கள்துன்பப்பட்டு மனமுடைந்து வாழ்
வில் வெறுப்புற்றிருக்கும்பொழுது அனுதாபமற்ற
சில்லரைச் சேவகர்கள் செய்யும் அதிகாரமில்லாக்
கொடுமைகள் அவர்கள் உக்கிரத்தைக் கிளப்பிவிடப்,
பின்வருவதை யோசியாமல் பலாத்காரம் செய்து
விடுகிறார்கள். தென்றல் முற்றிப்பெருங்காற்றானது
போல், சில்லரைச் சண்டைகள் பலமுற்றிப் பெருங்
கலகமாகி விடுகின்றன. பம்பாய், கல்கத்தா முதலிய
இடங்களில் நேர்ந்த இக்கலகங்களினால் ஜனங்களுக்
கும் கவர்ன்மெண்டுக்கு முண்டான மனக்கிலேசமும்
துன்பமும் கொஞ்சநஞ்சமில்லை. இக்கொள்ளைநோய்
இச்சென்னைராஜதானி யொன்றைத்தவிர இந்தியா
வின்மற்றப்பாகங்களில் எங்கும் ஓரிடமில்லாவிட்டால்
ஓரிடத்தில் புகுந்துபரவிச் சனங்களுக்கும் கவர்ன்மெ
ண்டுக்கும் மனதில் திகில் உண்டாகும்படிச் செய்து
வருகிறது. பம்பாயிலிருந்து வடக்கே கல்கத்தாவ
ரையில் சென்றதுபோக, இப்பொழுது வடமேற்கே
நிஜாம் இராஜ்ஜியத்தின் எல்லைக்குள்ளும் தென்
மேற்கே மைசூர் இராஜ்ஜியத்தி லுள்ள ஹுப்ளி
என்னு மிடத்திலும் தோன்றியிருக்கிறதாகத் தெரி
கிறது. இவ்விராஜதானி கவர்ன்மெண்டார் அக்கொ
டிய கொள்ளைநோய் இவ்விராஜதானிக்குள்ளும் பிர
வேசித்துவிடாதபடித்தடுக்கவெகுஜாக்கிரதை யெடுத்
துக்கொண்டு இவ்விராஜதானிக்குள் வரும் பிரயாணி
களைத்தக்க இடங்களில் நிறுத்திப் பரிசோதனைகள்
செய்து மகாமும்மரமான ஏற்பாடுகள் செய்து வரு
கிறார்கள். கொள்ளைநோய் வராதபடி தடுப்பதற்
கான ஏற்பாடுகளை நிறைவேற்றுவதிற்சிறிதும் இடை
யூறு செய்பவர்களைத் தாக்ஷணியமின்றிக் கண்டித்து
மாஜிஸ்திரேட்டுமுன் கொண்டுபோய்த் தண்டித்து
வருகிறார்கள். சில ஐரோப்பிய துரைகளும் தரை
சானிகளும் பெரம்பூர் ஸ்டேஷனில் கொள்ளைநோய்
பரிசோதனைக்கு இடையூறாக, ஸ்டேஷன் மேடை
யில் நின்றுகொண்டு, அப்பாற் போகும்படி போலீ
ஸார் அவர்களுக்குச் சொல்லியதைத் திரஸ்கரித்தார்
களென்று அவர்களைத் தாக்ஷணிய மின்றி மாஜிஸ்
திரேட்டுமுன் கொண்டுவந்து நிறுத்திப் பெருந்
தொகை அபராதம்போடுவித்தார்கள். கொள்ளைநோய்
வருமுன்னேயே இவ்வளவு கெடுபிடியாக விருந்தால்
அது வந்து விட்டது என்று கேள்விப்பட்டால் அப்
பொழுது எவ்வளவு கெடுபிடியிருக்குமோ அதை
இதை வாசிப்பவர்கள் தாமே யோஜித்துத் தம்மனோ
பாவனாசக்தியாலுணர்ந்து கிரகித்துக்கொள்ளவேண்
டியது. கொள்ளைநோய் இவ்விராஜதானிக்குள் வரும்
படியான துர்ப்பாக்கியம் நேரிட்டால்—அது வரா
தபடிக் கடவுள் நம்மைக் காப்பாராக—அப்பொழுது
அதன்வரவால் விளையும் துன்பங்களைச் சகித்துக்
கொண்டு, அக்கொள்ளை நோய்க்கிடங் கொடாதபடி
சர்க்கார் செய்யும் பிரயத்தனங்களோடு நமது பிரயத்
தனங்களையும் சேர்த்துக்கொண்டு, இருதிறத்தாரும்
ஒன்று சேர்ந்து நின்று அதைப்புறங்காட்டியோடும்
படிச் செய்யவேண்டும். அதற்காகக் கவர்ன்மெண்
டார் வெகு உஷாராக விருந்துகொண்டு வேண்டிய
முஸ்தீப்புக்களெல்லாம் செய்து வருகிறார்கள். ஜனங்
களும் அப்படியே ஆயத்தமாகவிருக்கவேண்டிய
தவசியமாதலால் அவர்கள் செய்கடமையை முன்ன
தாகவே அறிந்துகொள்ளக் கடமைப் பட்டவர்களாக
விருக்கிறார்கள். ஆதலால் சாதாரணஜனங்களும் அறி
ந்துகொள்ளும்படிச் சிலமுக்கியமான விஷயங்களை
அவர்கள்மனதிற்பட இங்குவற்புறுத்திக் கூறுவோம்.

'ப்ளேக்' என்னும் கொள்ளைநோய் ஒருகொடிய
விஷசுரம். அது வெளித்தேசத்திலிருந்து ஒட்டிப்பர
வி இங்குவந்ததாகத் தெரிகிறதேயன்றி இத்தேசத்தி
லுண்டானதாகத் தோற்றவில்லை. அது சீனதேசத்



திலிருந்தோ வேறெங்கிருந்தோ கப்பலில் ஒட்டிவந்து
முதலமுதல் பம்பாயில்தோன்றிற்று. அது ஆரம்பித்த
முதலில் அதிகாரிகள் அதன்வரவையறியாதவர்களாத
லால், கொஞ்சக் காலத்துக்கு அதைக்கவனியா திருந்
துவிட்டார்கள். அதற்குள் அது அங்கே நன்றாக வேரூ
ன்றி எங்கும் விசேஷமாகப் பரவத் துவக்கிவிட்டது.
பிறகு அதிகாரிகள் ஏதோ கொள்ளைநோய் வந்திருக்
கிறதென்று கண்ணைவிழித்துக்கொண்டு அதைத்தடுப்
பதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்ய யத்தனித்
தார்கள். யத்தனித்தும் அவர்கள் முதலில் காலதாம
தப்பட்டுப் போனதால் அக்கொள்ளைநோய் அவர்கள்
செய்த யத்தனங்களிலடங்காது காட்டுத்தீபோல்
விரைவாகப்பரவி ஜனங்களைத்தினம் நூற்றுக்கணக்
காக வாயில்போட்டுக்கொண்டு விழுங்கிவந்தது. இத
ரதேசத்தார் இக்கொள்ளைநோயின் சுபாவத்தையும்
இது பம்பாயிற்பரவிவருவதையும் அறிந்துகொண்டு,
பம்பாயிலிருந்துவரும் கப்பல்களையும், சரக்குகள்,
பிரயாணிகளையும், தங்கள் தேசத்தின்கிட்ட அண்ட
விடாமல், அவைகளைப் பலதினங்கள் தூரமான
இடத்தில் தனியேயிருக்க நீக்கிவைத்துப் பரிசோத
னைசெய்து, அப்புறமேகிட்ட அண்டவிட்டார்கள். சந்
தேகமிருந்தால் கப்பலைக்கிட்ட வரக்கூடாதென்றே
தடுத்துவிட்டார்கள். இதனால் வியாபாரம் நிலைகு
லைந்து, தூரதேசப் போக்குவரத்துச் சாதனங்களுக்
குச் சங்கடமுண்டாகி உலகமே தலைகவிழ்ந்ததுபோல்
இத்தேச சம்பந்தமானகாரியங்களெல்லாம் தடையுற்
றுப்போகநேரிட்டது. உடனே பலதேசத்தாரும் ஒன்
றுகூடி இக்கொள்ளைநோயிருக்குமிடத்தில் அத்தே
சத்துக் கவர்ன்மெண்டார் அது பரவவொட்டாமல்
தடுத்து, அதற்குச் சாதகமான சில ஏற்பாடுகள் செய்
துவரவேண்டுமென்று திட்டம்செய்து, அப்படிச்
செய்துவந்தால் அதிகத்தாமதமின்றி தங்கள் தேசத்
திற்கு அவ்வியாதிவராமற் பாதுகாப்பதற் கவசியமான
சிலகட்டுப்பாடுகள்மட்டும் செய்துகொண்டு அக்கட்
டுப்பாடுகளுக் குட்பட்டு கப்பல்கள் போக்குவரத்துக்
கும் வியாபாரத்துக்கும் இடம்கொடுப்பதாகச் சொன்
னார்கள். அந்தப்படி இந்தியாகவர்ன்மெண்டாரும் இக்
கொள்ளை நோயின் சுபாவத்தை யுள்ளபடி யாராய்ந்
தறியவல்ல வைத்தியசாஸ்திர நிபுணர் ஒருவரைப்
பிரத்தியேகமாக வரவழைத்து வைத்துக் கொண்டு,
இக்கொள்ளைநோயின் சுபாவத்தையும் இதைத் தடுப்
பதற்கான வழிவகைகளையும் அவர் ஆராய்ந்து சொல்
லக்கேட்டு அவர் சாஸ்திரோக்தமாகப் பரீக்ஷித்தறி
ந்து சொல்லும் சங்கதிகளைநம்பி அதற்கிணங்க வேண்
டிய ஏற்பாடுகளையும் செய்துவருகிறார்கள். இக்கொள்
ளைநோயைப்பற்றிக் கவர்ன்மெண்டார் இப்பொழுது
திண்ணமாய் நம்பியிருக்கும் விஷயங்கள் என்ன
வெனில்:—

இது கொடிய விஷசுரமான ஒரு கொள்ளைநோய்.
(இச்சுரம் கண்டவர்களுக்கு இரண்டு மூன்று தினங்க
ளில் அக்குளிலும், அறையிலும், அறையாப்புக்கட்டி
போல் கட்டிபுறப்படும்.)

இந்நோயின்விஷம் காற்றினாலும், துணி மணி ஜலம்
இவற்றாலும் பரவக்கூடியது. இருட்டு அறைகளும்
ஜனமடர்ந்தகாற்றும் இந்நோயின் விஷவித்தை வள
ரச்செய்கின்றன. இந்நோய் ஜனநெருக்கமான இடங்
களிலும் காற்றோட்டமில்லாமலும் சூரியவெளிச்சம்
சரியாகப்படாமலுமிருக்கும் வீடுகளிலும் வசிக்கும்
ஜனங்களிடத்தில் அதிகமாய்ப் பரவுகிறது.

ஆகையால், இதற்கு நிவர்த்தி ஜனநெருக்கமில்லாத
திறப்புவெளிகளில் காற்றோட்டமான விடத்தில்
வசிப்பதே முதலவசியமாம்.

இது மிகவும் கொடிய தொற்றுவியாதியாதலால்
இவ்வியாதி கண்டவர்களை ஊர்மத்தியில் வைத்துச்
சிகிச்சைசெய்துவருவது ஊருக்கே அபாயம் விளைப்ப
தாகிறது. இதுகாரணம்பற்றியும் இவ்வியாதிக்குச்
சிகிச்சைசெய்ய முதலவசியமான சாதனங்கள் ஜன
நெருக்கமில்லாத திறந்தவெளியும் நல்ல சுத்தமான
காற்றுமாதலால் இந்த இரண்டுசாதனங்களும் பட்ட
ணத்துக்குள் கிடைக்காதென்றும், ஊருக்குவெளியே
தகுந்த இடத்தில் பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட
குடிசைகளில் கொண்டுபோய் வைத்தியம்செய்வது
வியாதிவந்தவர்களுக்கும் வியாதிவராத மற்றவர்களுக்
கும் அபாயம் நேரிடுவதைக் குறைப்பதாக விருக்
கிறது.

இவ்வியாதியைத் தனியே பிரித்துப் பரவவொட்
டாமல் தடுத்தாலன்றி, மற்றப்படி இது எங்கும் பரவி
ஜனங்களைச் சூரையாடாதபடி தடுப்பது முடியாதகா
ரியமாக விருப்பதாலும், ஜனங்கள்தாங்களே இவ்வியா
தியைத் தனித்திருக்கவைப்பதற்கு வேண்டிய கட்டுப்
பாடுகளுக்குட்பட்டு மற்றவர்களிடத்துப் பரவவொட்
டாமல் பாதுகாத்துக் கொள்வார்களென்று எதிர்ப்
பார்ப்பது கூடாமையாகவிருப்பதாலும் பலபேர் குழந்
தைகுட்டிகளுள்ள சமுசாரி வீட்டில் ஒருகுழந்தைக்கு
அம்மை முதலானது போட்டினால் அது மற்றக்குழந்

தைகளுக்கும் வராதபடி தாய் தகப்பன்மார் அக்குழந்தையைத்தனியறையில் வைத்துப்பாதுகாத்து மற்றக்குழந்தைகள் அதனருகேயாவது அந்த அறைக்குள்ளாவதுபோகாதபடி கட்டுப்பாடுசெய்து, அக்கட்டுப்பாட்டுக்குள்படாத குழந்தைகளை எப்படி நிர்ப்பந்தம்செய்தாவது கட்டுப்பாட்டுக் குட்படுத்துகிறார்களோ அப்படிப்போல் ஒரு தேசத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு மாதுர் பிதுர் ஸ்தானத்திலிருக்கும் கவர்ன்மெண்டார் தேசத்தில் தொற்றுவியாதி முதலிய கொள்ளைநோய் பரவியபோது அதுஎல்லாரையும் பாதிக்காதபடிச்சிலகட்டுப்பாடுகள் செய்து, அதற்குட்படாதவர்களை அவர்கள்சொந்த நன்மையின்பொருட்டு நிர்ப்பந்தப்படுத்தியாவதுஅக்கட்டுப்பாட்டுக் குட்படச்செய்கிறார்கள். பலபேருள்ள பெரியகுடும்பத்தில் தாயாரே வியாதியான குழந்தையையும் பார்த்துக்கொண்டு மற்றக்குழந்தைகளையும் கட்டுப்பாடு தவறாமல் நடக்கப்பார்த்துக்கொள்வதுகூடாமையாக விருக்கும். அப்பொழுது குடும்பத்தில் உதவிபாகவுள்ள சில்லரை உறவினர்களும், வேலைக்காரர்களும்கூட மற்றக்குழந்தைகள் தாங்களாகக் கட்டுப்பாட்டுக்கடங்காதபோது, அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி அதற்கடங்கி நடக்கும்படிச் செய்ய நேரிடுமல்லவா? அப்படிநேரிடும்பொழுது குழந்தைகளும் புத்திசாலிகளாக விருந்து மற்ற உறவினர் வேலைக்காரர்களும் குழந்தைகளை நடத்தும் சாமர்த்தியமறிந்த விவேகிகளாக விருந்தால், எல்லாம் வெகு சீராகவும் அமைதியாகவும் நடக்கும். குழந்தைகள் சொன்னவார்த்தை கேளாத முரடர்களாயிருந்தலும், அவர்களை நடத்துகிறவர்கள் குழந்தைகள் மாதிரியறிந்து அவர்களை நல்லபடியாக நடத்திக் காரியத்தைச் சாதித்துக்கொண்டு போகும் சாமர்த்திய மற்றவர்களாக விருந்தாலும், அவ்வீட்டில் வியாதிவந்தகுழந்தை சொஸ்தப்பட்டெழுந் திருக்கும்வரையில் எல்லாப்பொறுப்புகளும் தன்தலைப்பாரமாகச் சுமந்த எஜமானிக்கு நாலுபக்கத்திலும் தொந்திரவுகளும் உபத்திரவமும் பிடுங்க, மனச்சஞ்சலம் ஒருபக்கத்தில் பிடுங்கித்தின்ன வீட்டில் அமைதியென்பதின்றி, சண்டைசச்சரவுகளும் குழந்தைகள் அழுகுரல் கூக்குரல்களும் ஒருபக்கத்திலும், வேலைக்காரர்கள் மற்றவர்களுடைய அதட்டலுருட்டல்களும் முரட்டு அதிகாரங்களும் ஒருபக்கத்திலுமாக சதா வாதனைக்குள்பட்டிருப்பாளல்லவா? அப்படியேதான் கவர்ன்மெண்டும். கவர்ன்மெண்டார் எவ்வளவு நல்லவர்களாகவிருந்தாலும், அவர்கள் எண்ணம் எவ்வளவு மேலானதாகவிருந்தாலும் அநேகம் சிப்பந்திகளின் உதவியன்றி அவர்கள் ஒன்றும் செய்யக்கூடியவர்களாகவில்லை. இந்தச்சிப்பந்திகள் சமயோசிதசாமர்த்திய மறியாதவர்களாயிருந்தால் எவ்வளவு கேடுவிளையுமோ அவ்வளவு கேடும் இன்னுமதைவிட அதிகமாகவும்கூடவிளையும் குழந்தைகளாகியபிரஜைகள் காலசந்தர்ப்ப விசேஷங்களையறிந்து நடந்துகொள்ளும் புத்தியில்லாத மூடர்களாயிருந்தால். ஆகையால் இப்படிப்பட்டதுன்பம் நேரிட்ட காலங்களில் எவரும் குற்றங்கண்டு கோபிப்பதே பெரிதாக எண்ணாது சமயோசித சாமர்த்தியத்தோடு மனுஷாளுடைய தராதர மறிந்து அவர்கள் அறிவுக்கும் புத்திக்கும் தக்கபடி இதமாய்நடந்துகொண்டு காரியத்தைச் சாதித்துக்கொண்டு போவதே பெரிய காரியமாக எண்ணவேண்டும். இது சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும்சரியே, சாதாரண ஜனங்களுக்கும் சரியே. இப்படிப்பட்ட ஆபத்துக்காலங்களில் எல்லாரும், கொடுத்து வாங்கிச் சல்லிசாய்க் காரியத்தை முடித்துககொண்டு போவதொன்றையே மேலாகக் கருதவேண்டும். இவ்வித எண்ணம் எல்லாவற்றிலும் மேலாகவில்லாமை யொன்றினாலேயே இல்லாத விலங்கங்களெல்லாம் இதர இடங்களில் விளையநேரிட்டன. அவ்விதவில்லங்கங்கள் ஒன்றும் இங்கு நேரிடாமலிருக்கும்படிஜனங்கள் உத்தியோகஸ்தர்கள் ஆகிய இருதிறத்தாருக்கும் பொதுவாக மேலேவரைந்த சிலவார்த்தைகளை இதமாகச்சொன்னோம். இருதிறத்தாரும் இதை இதமாக வெடுத்துக் கொண்டு நம்மிடத்தில் சொற்குற்றம் பொருட்குற்றம் பாராது ஆபத்துக்காலத்தில் ஒருவருக்கொருவர் வீண்பொல்லாப்புக்களும் மனஸ்தாபங்களும் விளைத்துக்கொள்ளாமற்போகும்வழியென்னவுண்டோ அதையேபார்ப்பார்களென்று ஹிருதயபூர்வமாய்க்கோருகிறோம்.

C.V.S.

## " Enjoyments of this world not real."

## "லௌகிகப்பொருள்களால் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்ல."

இம்மையில் இடம், பொருள், ஏவல், முதலிய எதுக்களைக்கொண்டு அனுபவிக்கும் இன்பம் குறைவுள்ளது. இதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு.



அவைகளை விவரணமாய் எடுத்துச்சொல்வில் பெருகும். ஆதலால் அவற்றுள் விசேஷமாகத் தோன்றும் மூன்று திருஷ்டாந்தங்களை இவ்விடத்தில் சுருக்கித் தெரிவிப்போம். பூலோகத்தில் மனுஷர் சுகம்பெறக் கருதிச் சம்பாதிக்க முயலும் எவ்வகைச்செல்வமும் பொருட்செல்வம், புகழ்ச்செல்வம் என இருவகைப்படும். இவ்விருவிதச் செல்வங்களுக்கும் மூன்று நிலைமைகள் உண்டு, முதல்,தேடும் நிலைமை. இரண்டு, அனுபவிக்கும் நிலைமை. மூன்று, காக்கும் நிலைமை. சிலர்தேட்முயலும் செல்வத்தைத் தாம் கருதியவாறு அடையாமல் பிரதிகூலப்படுகிறார்கள். சிலர் அடைந்தும் அதை அனுபவிக்கும்பொழுது திர்ப்தியின்றி மனக்குறைப்படுகிறார்கள். சிலர் அடைந்தும் சிலகாலம் அனுபவித்தும். அதைச் சிதைவின்றிக் காக்கலாகுமென்ற திடநம்பிக்கையில்லாமையால் சந்தேகக் கடலில் மூழ்கி வருந்துகிறார்கள்.

இவ்வாறே இம்மூன்று நிலைமைகளிலும் துன்பம்? சம்பந்தப்பட்டிருப்பதினால், லௌகிகப் பொருள்களால் ஆகும் இன்பம் பூரண இன்பமல்ல. தேடமுயலும் செல்வத்தைக் கருதியவாறு அடையாமல் பிரதிகூலப்படுவதும், சர்வதேசத்தார்களும் தங்கள் தங்கள் குறைவு, நிறைவு, விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்க வெவ்வேறு அபிட்பிராயங்களைக் கொள்ளுவதும் அவரவர் யுக்திக்கு உசிதமாகத் தோன்றும் பதறுத ஊக்கம், அஞ்சாததீரம், தந்திர சாமர்த்திய முதலிய உபாயங்களால் அந்த அபிப்பிராயங்களை நிறைவேற்றும்படி ஓயாமல் முயற்சிசெய்வதும் இயற்கையே. ஆயினும் பிரயோசனம் என்ன? தடையின்றி யாவரும் சித்தி அடைகிறார்களா? ஏது, எந்தமுயற்சியிலாவது தவறாமல் அனுகூலம் பெறுவதற்கு ஏற்ற சாதனங்களை இதுவரையில்ஊகித்தறிந்தவர் எவருமில்லை. "வேகமுள்ளவர்களுக்குப் பந்தயமில்லை. பராக்கிரமசாலிகளுக்குச் செயமில்லை. புத்திமான்களுக்குச் செல்வமில்லை."

ஒருவன் எந்தக்கருமத்தையாயினும் செய்யும்வகை எதுவென்று அதிசூழ்ச்சியாகத் தேர்ந்து நிச்சயித்து, சிறிதும், இடையூறுவராதபடிக் காப்பதற்கு மிகுந்த ஜாக்கிரதையாயிருந்தபோதிலும், அவன்புத்திக்கு எவ்வளவும், தோன்றாதவிக்கினம் எப்படியோ இடையில் சம்பவித்து, அவன் எடுத்துத்தொடுத்த கருமத்தைச் சிந்திக்காமல் தடுத்து, அவன் வருந்திச்செய்த முயற்சியை முழுமையும் வியர்த்தமாக்குவது மெய்யென்று சொல்லவேண்டியதில்லை. இது யாவருக்கும் அநுபவசித்தமாகத் தெரியுமே: இவ்வாறே தாம்விரும்பித் தேடும் விஷயங்களை அடையாமல் பிரதிகூலப்படுகிறார்கள். யார், அளவற்ற அதிகாரமும், செல்வாக்குமுடையவர்களாகும்படி அபேட்சிக்கும் அரசர் பிரபுக்கள், முதலான பெரியோர்கள் மாத்திரமா? அப்படியானால், மிகவும் சிலராகிய அவர்களுக்கு உண்டாகும் பிரதிகூலம், பிரவாகம்போலத்தேசத்தில் எங்கும் பரவியிருக்கின்ற சாதாரண ஜனங்களுக்கு என்ன? தமக்குள்ள செல்வமும், செழிப்பும், அதிகாரமும், போதாதென்று சர்வதேசத்துச் செல்வப்பொருளையும், கைக்கொண்டு சர்வாதிகாரிகளாகும்படி கர்வித்தவர்கள் காரியசித்தி பெறாமல் தலைகீழாய் விழுந்தார்கள்: ஆனால் நமக்குச்சேதம் என்ன? என்று எண்ணிச்சாதாரண ஜனங்கள் விசாரமற்று இருப்பார்கள். ஆயினும் அனுபவத்தில் அப்படியல்லவே! அரசர், பிரஜைகள், பெரியோர், சிறியோர், கற்றோர், மற்றோர், செல்வர், வரியவர், நல்லோர், தீயோர் முதலிய வகுப்புவரையறையின்றி யாவருக்கும் அவரவர் முயற்சி பலிக்காமல் அப்போதப்போது பிரிதிகூலம் நேரிடுகின்றது. இதைத்தவிர்க்கும்படியான திராணி ஒருவருக்குமில்லை. மிகுந்த விரைவாய் ஓடும் வெள்ளத்திற்கு எதிர்ப்பட்ட துரும்பானது அதற்கு எதிர்முகமாய்ச் செல்லாமல் அதனால் தள்ளப்பட்டு நேர்ந்த துறையில் அடைவதுபோல், மனுஷரும், உலகவாழ்வு என்னும் சமுத்திரப்பிரவாசத்தில் தாம் எடுத்த கருமத்தைக் கருதியபடி எப்பொழுதும் தவறாமல் முடிக்கத் திராணியற்றவர்களாய், காலவியற்கை காரணகாரிய சம்பந்தமுதலிய தடுக்கப்படாத அலைகளின் வழிச் சென்று யாதேனும்ஒருதுறையில் சேர்வார்கள். இந்த நிர்ப்பந்தம் எவர்களுக்கும் சாதாரணமாய் இருக்கின்றது. சிலர் தாம் தேடியபொருளை அடைந்தும் அதை அனுபவிக்கும்பொழுது திர்ப்தியின்றி மனக்குறைவுப் படுகிறார்கள்.

ஒருவன் இடைவிடாது முயன்று எவ்வகையான இடையூறுகள் சம்பவித்தாலும், அவைகளுக்குச் சிறிதும் அஞ்சித்தளர்ந்து பின்னிடாமல், அதிகஜாக்கிரதையாயிருந்து தன்முயற்சியின் பயனை அடைகிறான். அடைந்தும் பிரயோசனமென்ன? அவனுக்கு ரம்மியம் உண்டாகிறதா! அவன் அபேட்சித்த பொருள் அகப்பட்டதென்று திர்ப்தியடைந்து ஆறித்தேறி, இனித்தனக்கு யாதும், குறைவில்லை யென்று எண்ணிப் பூரண சந்தோஷமுள்ளவனாக இருக்கிறானா? இல்லை. எந்தஸ்திதியிலிருப்பவர்களும், தாம் தேடும்பொருள் சித்திக்குமானால் தம்மைப்போல

பாக்கியவான்கள் இல்லையென்று நினைப்பதும் அதுசித்தியாகாத பொழுது, தாங்கள் நினைத்த அளவு இன்பத்தை அடையாதவர்களாய் மனக்குறைகொண்டு விசாரப்படுவதும் இயற்கைதான். சருமம் சிதறினாலும் துக்கம், சித்தித்தாலும் துக்கமே. கல்விப்பொருள் பிரதாப முடையவர்களா யிருக்கும் பெரியோர்தமக்குப் பின்னும் பொருள் வேண்டுமென்று விரும்புவார்கள். செயலற்றுச் சோம்பி யிருப்பவர்கள் தமக்கு யாதேனும் ஒரு முயற்சிவேண்டுமென்று கருதுவார்கள்.

ஓயாமல் உழைக்கிறவர்கள் தங்குவதற்கு அறிய இளைப்புத்தமக்கு உண்டாகிறதாவென்று முறையிடுவார்கள். சாதாரண ஸ்திதியிலிருப்பவர்கள் அதிகதனமும் கனமும் பெறுவதற்கு வகைதேடுவார்கள். உயர்ந்த உத்தியோகங்கள் செய்து மிகுந்தவருமானம் பெறுகிறவர்கள் ஒருவருக்குள் அடங்கியிருந்து வருந்தாமல் சுயாதீனம் பெற்றுச்சுகிப்பது எத்தனை பாக்கியமென்று எண்ணி பெருமூச்சு விடுவார்கள். இப்படியே அவரவர் ஒன்றைவிரும்பித்தேடி அடைந்து பின் அதனால் உண்டாகும், இன்பத்தைத் துன்பமாய்க் கொண்டு, மற்றொன்று பூரண இன்பம் பயக்குமென்று கருதித் தேடுவதும், தேடியபின் இவ்வாறே மனக்குறைப்படுவதும்வழக்கம். உள்ளத்தில் கண்ட ஒருகுறை நீங்க மற்றொருகுறை உண்டாகின்றது.

ஒருவிருப்பத்திற்கு இடங்கொடுக்க, ஒன்றின்பின் ஒன்றாய் ஒன்பதுகோடி விருப்பங்கள் உற்பத்தியாகும். விரும்பியவாறு அநுபவம் உண்டாகுமென்று அபேக்ஷித்தவரொழிய,உள்ளபடி அனுபவித்துத்திருப்தியடைந்தவர் ஒருவருமில்லை. இம்மைக்குரிய விஷயங்களில் மனுஷருக்கு உண்டாகும் இன்பம் குறைதருதற்கு இரண்டு ஏதுக்கள் உண்டு. முதலாவது, அவ்வின்பத்தின் தன்மை. இரண்டாவது, அதைப் பழுதாக்குவிக்கும் சாதனங்கள். அழிவற்ற ஆத்மஜீவராகிய மனுஷாது அனுபவசக்திக்கு ஏற்க அவர்கள் நெஞ்சில்பிறக்கும் உந்நதமாகிய ஆசைகளுக்கு, லௌகிக விஷயங்களால் வரும் இன்பம் ஈடல்ல. வர்ணம் இட்ட சித்திரப்பிரதிமை போல வசீகரசக்தியுள்ளதாகத் தூரத்தில் தோன்றும் இன்பப்பொருள் அனுபவத்தில் வரும்பொழுது அதன் அழகு குன்றி விகாரமாகி வெறுப்புத்தருகின்றது. ஒரு பொருளினிடத்து மனுஷருக்கு உண்டாகும் ஆவலானது அப்பொருளை அழகுள்ளதாகத் தோற்றுவிக்கும். நிழலைப் பொருளென்றும் நீர்க்குமிழியை நிலையென்றும் கொள்பவர்போல, மனுஷர் இந்த மாயத்தோற்றத்தை உள்ளதென்று எண்ணி தமது ஆவலின் வசத்தராகித் தம்மாலாகத்தக்க முயற்சிகள் அனைத்தையும் செய்து அந்தப்பொருளைத் தேடுவார்கள்.

அது கிட்டியவுடன். அவர்கள் ஆவலானது அந்தப் பொருளைவிட்டு, மற்றொன்றைத்தாவ, அவர்கள் தேடினபொருளை உபேட்சித்தபின்னும் ஆவலின் அடியைத்தொடருவார்கள். லக்ஷப்பிரபுவினிடத்தில் இருக்கின்ற திரவியமுழுதும் கிடைக்குமானால் எத்தனைபாக்கியமென்று ஆவலிக்கும் ஏழைக்கு அவன் விரும்பியவாறு திரளாகத் திரவியம் சேர்ந்தபின் சிலகாலமட்டும் அதை அநுபவிப்பார்கள். அப்புறம் பின்னும் அதிகம் வேண்டுமென்று விரும்பி மனக்குறைப்படுவார்கள். லௌகிகப்பொருள் இவ்வாறே மனுஷரை வஞ்சிக்குந் தன்மையுள்ளது. மேலும் குறைவற்றசெல்வமும் குன்றுதவாழ்வும். உடையார்களென்று பலரால் மெச்சப்படும் பெரியோர் தங்கள் செல்வத்தை அநுபவித்துச் சந்தோஷிக்கிறார்களா ?

அவர்களுக்கு விசாரம் இல்லையென்று யார்சொல்லுவார்கள். பெரும்பாலும் சீமான்களே நிர்ப்பந்தப்படுகிறார்கள். ஏதாயினும் குறை அவர்களுக்கும் உண்டு. அதனால் அவர்களுக்குச் சஞ்சலம் தோன்றும். சஞ்சலமானது அவர்களுடைய மனவமைதியை வரவர அரிக்கின்ற சாவாதபுழுப்போலவும், அவர்கள் ஆயுளை அன்றன்று சிதைத்துக்குறைக்கின்ற கூறியவாள்போலவும் இருக்கிறது. ஒருவனுக்குச் சஞ்சலம் இல்லாதிருப்பினும் உலக இன்பம் உள்ளத்தைக் கெடுக்கின்றது. துர்க்குணத்தை வளர்க்கின்றது. தேடி அனுபவிக்கும் இன்பத்தைக்காத்துக் கொள்வது, அதாவது ஒருவன் எவ்வாறாவது தான்விரும்பியபொருளைத்தேடினாலும், மேற்சொல்லியகெடுதிகள் இன்றி அதை அநுபவித்தாலும், அதைக்காக்கும்வல்லமை அவனுக்கில்லை. உலகம், பொருள் ஒன்றாவது நிலையுள்ளதல்ல. விஷயங்களெல்லாம் தோன்றித் துலங்கி மங்கிமறைந்து போகின்றன. அவைகளை ஒரு நிலைமையில் காத்துக்கொள்வது சுபாவத்திற்கு விரோதம்.

செல்வம் வண்டியுருளையைப் போல மாறியும், யானையுண்ட விளாங்கனிபோலச் சிதைந்தும், பட்சியைப்போல பறந்தும், மின்னலைப்போல விரைவில் மறைந்தும், வெயில்முன்பனிபோலக் கரந்தும் போகின்றது. இத்தன்மையாகிய செல்வப்பொருளால் உண்டாகும் இன்பமும், அப்பொருள் போலமாறியும், மறைந்தும், கரந்தும், போவதால், அவ்வின்பத்தைக்காப்பதற்கு எவராலும் இசையாதே ; ஒன்றைக் காக்குந் தொழில் என்ன சொற்பமா! ஒருவன் மிகுந்த திரவியம்வைத்து வியாபாரஞ் செய்து நெடுநாள்வரையில்சமைப்பித்துநிறைவேற்றும்அலங்காரமாளிகையானதுசடிதியில் வீசும் சண்டமாருதம், விழும் இடி, சத்துருக்கள் முதலிய இடையூறுகளால்நொடிக்குள்ளே இடிந்து பொடியாய்த் தரைமட்டமாவது போலவே இவ்வுலகத்தில் அனுபவிக்கும் எந்த இன்பமும், எண்ணிறந்த இடையூறுகளுக்கு ஏதுவாயிருப்பதினால் அதைச்சிதைவின்றிக் காப்பது முழுமையும் அசாத்தியமாம்.

வே. மாசிலாமணி.



# சிறுவர்க்கான பக்கம்.

[ விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது. ]

## 15. வயதுசென்ற வேட்டைநாய்.

ஒரு வேட்டைநாய் தான் பாலியமாக விருக்கும்போது மிகுந்த சூடிகையாகவும் விடாமுயற்சியும் இரையை ஒரேவோட்டத்திற் பிடித்து விடுந்திறமையுங் கொண்டதாகி தனது எஜமானனுக்கு அநேகவேளைகளில் மிகுந்த திருப்தியை யுண்டாக்கிவந்தது. இப்போது விருத்தாப்பியத்தாலே அதற்கு பலங்குறைந்து சேவகத் திறமையற்றுப்போயிற்று. ஆனாலும், ஒருநாள் எஜமானன் வேட்டையாட வெளியே சென்றபோது, தானும் பின்னேடுசென்று காட்டிலே ஒரு மானைத் துரத்திச்சென்று அதன் இடுப்பிலே வாயைக்கொடுத்துக் கவ்வியது. கிழத்தன்மையாலே பற்கள் ஓய்ந்து ஒடிந்து போயிருந்தமையால் வேட்டைநாய் மானைச் செவ்வையாகப் பிடித்துக்கொள்ளக் கூடவில்லை. மான் தப்பிக்கொண்டு ஒரேவோட்டமாக வோடிப்போய்விட்டது. அப்போது எஜமானன் மிகுந்த மூர்க்கத்தனமாய் கோபங்கொண்டிருந்தவனாகையால், தனது நன்றியறிவுள்ள வேட்டைநாயை யடிக்கச்சென்றான். யோக்கியமுள்ள கிழவேட்டைநாய், “ஐயோ ! வயதுசென்ற வுன்னெளிய சேவகனையடிக்காதே ! என்னுடைய மனதும் எண்ணமுங் கெடுதலல்ல. என்னுடைய தள்ளாமையும் ஓட்டக்குறைவும் எனக்கு அபஜயத்தை யுண்டுபண்ணின. இப்போது நானிருக்கும் நிலைமை உனக்கு அதிருப்தியை யுண்டுபண்ணுவதானால், நான் பாலியத்தில் உனக்குச்செய்த சேவகத்தை மறவாதிருங்கள்,’ என்று சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டது.

இக்கதை அநேகமாய் சர்வஜனங்களும் நன்றியறிதலில்லாமலிருக்குந் தன்மையைக் குறிக்கின்றது. ஜனங்கள் ஒருவரோடு ஒருவர் வேலைவிவகார நிமித்தமாகப் பழகும்போது எவ்வளவு மரியாதை யுபசாரணைகளோடு பழகுகிறார்கள் ! — நல்லது ! ஒருவர் மற்றொருவருக்கு லாபத்தையாவது இன்பத்தையாவது கொடுப்பதில் உபகார நிலைமையிலிருக்கக்கூடுமென்ற நம்பிக்கையானது இவ்வளவு மரியாதையையும் உபசாரணையையும் செலுத்தும்படி செய்துவைக்கின்றதே ! —இம்முக்கிய காரணமில்லையாய்விடட்டும் ! அப்போது வென்னநேரிடும் ! இதுகாறும் மிகுந்த மரியாதையைச் செலுத்திக் கொண்டிருந்தவன் உபகாரஞ்செய்யக்கூடாத பிரபுவீட்டு வாசல்வழியாகக் கூடச் செல்லமாட்டான் !—எப்படியாவதிருக்கட்டும் ! பிரபுவீட்டுக்குச்சென்று அவனுக்கு மரியாதை செலுத்தா திருக்கட்டும் ! தன்னுவலையே பார்த்துக்கொண்டு செல்லட்டும் !—அந்தப் பிரபுவைப் புறங்கூறி வையவும்வேண்டுமோ? உபகாரஞ் செய்யக்கூடாது போய்விட்டால், நிந்தனைக்குள்ளாகவேண்டுமோ ?—ஆம் ! எஜமானன் கிழத்தன்மையாற் சேவகஞ்செய்யக்கூடாது போய்விட்டநாயை முன்போலவே மடியிலே விட்டுக்கொண்டு கொஞ்சிக்குலாவி முத்தமிட்டு விளையாடாமற்போனால் ‘இது சகஜந்தான்’ என்று நாம் ஆச்சரியமடையமாட்டோம். ஆனால் சக்திக்குறைவினாலேமாத்திரம் சேவகத்தை நன்றாகச்செய்து முடிக்கக்கூடாத எளிய ஜெந்துவை அதனுடைய நல்லெண்ணத்தைச் சற்றேனுமறியாமல் இவ்வாறு நடத்துதல் மனிதத்தனமோ? அல்லது, நியாயமோ? எல்லாருமிவ் வெஜமானனைப் போலவேதான் நடக்கின்றோம். எல்லாரும் ஒருவண்ணமாய் நடத்தல்

குற்ற சாந்தியோ நீடூழிகாலமாக வுபகாரஞ் செய்துவந்தவர்கள் திடீரென்று பாராமுகம் பண்ணுவதற்கு இரண்டு முகாந்தரங்களுள்ளன. ஒன்று,—அவர்கள் விருத்தாப்பிய மடைந்ததாலோ, அல்லது ஏதோவொரு கஷ்டசம்பவத்தினாலோ, பலக்குறைவடைந்து முன்னே தாங்கள் செய்துகொண்டுவந்த சேவகத்தொழிலைச் செய்யமுடியாது போகிறார்கள். இரண்டாவது,—உபகாரிகள் எவ்வுபகாரஞ் செய்யக்கூடுமோ அதை வேண்டியகாலம் சம்பவியாமற் போய்விடலாம். பொருள் கொடுத்து உபகாரஞ்செய்யக் கூடியவனிருந்தால், பொருளை நாம் இச்சிக்காம லிருக்கலாம். இவ்விரண்டு காரணங்களைக் கொண்டும் உபகாரிகளா யிருந்தவர்களை நாம் பாராமுகஞ் செய்கின்றோம், அதுகூடாது!

சிறுவர்களே! உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது ஒன்றுளது.—உமக்குத் தாய்தந்தையர் கோடானுகோடி கவலையும் வருத்தமும் பட்டுப் பிறந்தது முதல் ஊட்டிவளர்த்துக் காவல்புரிந்து வித்தியாப்பியாசஞ் செய்து வயதிலும் புத்தியிலும் முதிர்ந்தவனாகச் செய்த பிறகுதானே வயோதிகர்களாகப் போகிறார்கள்! அவர்கள் வயோதிகர்களான பிறகு உங்களையவர்கள் தாங்கமாட்டார்கள். ஆனாலும் நீங்கள் திடமுள்ளவர்களாக வாகும்வரையும் அவர்கள் படாதபாடெல்லாம் பட்டிருக்கிறார்களே!—அவைகளையாகிலும் நினைத்துக்கொண்டு வயோதிகர்களைக் காப்பாற்றுங்கள்.

T. R.

## REVIEW.

(*From the Indian Magazine and Review for July 98*).

**The Viveka Chintamani Series.** Edited by C. V. Swaminatha Aiyar. "The Life of Her Majesty Queen Victoria, Empress of India," by S. Muthu Aiyar, B. A., and C. V. Swaminatha Aiyar.

We have noticed several works issued by the enterprising authors of this work. The Tamil 'Society for the Diffusion of Knowledge' is doing good work in providing a series of pure and instructive reading books in an easy and popular style. We have before this felt it a pleasure to give hearty praise to the execution of some of these works, but in many ways the present volume has a much greater interest and importance than any that have preceded it. It gives a most interesting life of our beloved Queen, and this is done in excellent taste, with the most loyal appreciation of Her Majesty's character and exalted dignity, but without any of those fulsome expressions that are sometimes found in oriental compositions on similar subjects. All that an Englishman or a British subject feels and glories in is here set forth in charming simplicity for the delectation of the millions of Tamil subjects who do not yield to any race in loyalty. The book is illustrated by twenty-seven woodcuts, some of which are very touching. It will not be necessary to give a summary of the contents of this little volume—the life of the great and good Queen: they are thoroughly known to all the readers of this magazine; but we would lay stress upon the very admirable way in which Her Majesty's example is held up to the admiration and imitation of the women of Southern India. It surely would be an added pleasure even to the Queen-Empress herself to be made aware of the fact that millions of women speaking the Tamil language have heard and will hear with delight this work read line by line. It will be taught in every school, and will be the talk wherever half-a-dozen women are gathered together in bazaars, or at the wells, or spinning beneath the banyan shade. It is full of these 'touches of nature that make all the world kin.' There is a picture of the Queen in her bridal dress; and, again, of the Queen with Prince Arthur in her arms, and others—which the good women of South India will never be weary of looking at and commenting upon and weeping over. But we think the finest sentence in the book is that in which the writer dwells upon the fact that *while the Queen-Empress possesses a dignity not equalled upon earth, she has always recognised and performed the duties which devolved upon her as a woman, in such a way as to render it possible with honest pride and thankfulness to point to her as the brightest example of womanly virtue that can be presented to her subjects for their imitation.*

The Tamil people has always been loyal. The Tamil sepoys have yielded to none in bravery; and it may safely be said that the hearts of the 16,000,000 who speak the Tamil language are full of the most reverential and affectionate regard for their great Mother. This makes the publication of this graphic and well-written book most fitting.

We shall hope to hear that this excellent and timely little volume has the widest possible circulation.

*Balliol College, June 8, 1898.* G. U. Pope.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி. 5½ அணா,,
பழையபிரதி. 6 ,,

OFFICE ... BOOKS 12 SEP 1898

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4
6-மாதத்துக்கு ரூ. 2-2




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். 7.] 1898ஞு ஆகஸ்டுமீ [இலக்கம். 4.

### Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As. : Back Nos. 8 As. each.

English & Foreign Subscription 7s. 6d net per annum

**Thin Paper Edition** for the People:—

Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.
Single copy, current No. 5½ As. Back Nos. 6 As. each.
English & Foreign Subscription 5s. 6d net per annum.

**If Strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions Entered to begin with only April or May of each year Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V.P.P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தனமான காகிதப்பதிப்பு:— அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5.
தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V.P.P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## சஞ்சோக்தை சுயம்வரம்

அல்லது,

## ப்ரித்விராஜா சரித்திரம்.

### III.

### ஓர் அநாதைப்பிள்ளையின் அருஞ்செயல்கள்:

### இரக்ஷிக்கவந்த ஒரு தீர்க்கதரிசி.

ஹிந்துஸ்தானத்தின் பூர்வீக சரித்திரத்தைச் சொல்லிவந்ததில் இராஜ புத்திரர்கள் உதித்து முன்னுக்குவந்ததைக்காட்டி முடித்தோம். 8-ம் நூற்ருண்டு முதல் 10-ம்நூற்ருண்டுவரையில் வட இந்தியாவாகிய ஹிந்துஸ்தானத்தின் சரித்திரம் மிகத்தெளிவாகவும் தொடர்பாகவும் விளங்கவில்லை. அப்பொழுது ஹிந்துக்களுக்குள் புராணங்கள் மிகுதியாக உண்டாகி வழங்கிவந்ததாகத் தெரிகிறது. ஆகையால் அக்காலத்தின் உண்மையான சரித்திரத்தை ஆராயப்புகுவோர் கதையும் புராணமுமாக வுள்ள கிரந்தங்களில் கண்டவிஷயங்களைக்கொண்டு, மண்ணையரித்து மணலைக்கொழித்து மிகப்பிரயாசைப்பட்டு அதில் மறைந்துகிடக்கும் காண்பதற்கரிதான பொன்பொடி ஆய்வாரைப்போல், கட்டுக்கதைகளும், மனதுக்குத் தோற்றிய வர்ணனைகளும், ஸ்தோத்திரங்களும் நிறைந்துள்ள கிரந்தங்களைப்படித்துஅவற்றில்அங்கங்கே அருமையாகப்பொதிந்துகிடக்கும் சிலஉண்மைகளை யூகத்தாலும்வேறுபிரமாணங்களாலும் ஆராய்ந்துநிச்சயித்துஅவைகளின்ஆதாரத்தைக்கொண்டு அக்காலத்தின்சரித்திரதோரணையை அறிந்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது. அபூர்வமாகக்கிடைக்கும் இவ்வாதாரங்களன்றி பேர்ஷியா தேசத்துக்கவிகளும் கிரந்தகர்த்தாக்களும் எழுதியுள்ள பூர்வகிரந்தங்களில் இந்துதேச சம்பந்தமாகக் கண்டுள்ள சில விஷயங்களும் இதற்காதாரமாம். இவ்விரண்டுவழிகளையும் தவிர வேறு ஆதாரங்கள் இல்லை. அபூர்வமாகக் கிடைக்கும் சிலாசாஸனங்களால் அங்கங்கே இக்காலத்தை மூடியுள்ள காரிருளில் சொற்பவெளிச்சம் பட்டுவருகிறது. இந்த வெளிச்சத்தைக் கொண்டே வழிதேடிக்கொண்டு அக்காலசரித்திரத்தைக் கடந்துசெல்லவேண்டியிருக்கிறது.

ஹிந்துஸ்தானத்தில் இராஜபுத்திரர்கள் தலையெடுத்து முன்னுக்கு வந்துகொண்டிருக்கையில், அரேபியாவில் நூதனமானஒருமதம் உதித்து, ஓரிடத்தில்ஸ்திரமின்றி அல்லாடிப்பிழைத்து சன்மார்க்கங்கெட்டு மகாமூர்க்கர்களாகத் திரிந்துகொண்டிருந்த அத்தேசத்தாரை ஆசியாகண்டத்தில் மட்டுமன்றி, ஐரோப்பா, ஆபிரிக்கா முதலிய திரிகண்டங்களிலும் படையெடுத்துச்சென்று எல்லாத்தேசத்தவர்களையும் நடுநடுங்கச்செய்யவல்ல தைரிய பராக்கிரமதீரம் பொருந்திய ஒருஜாதியாராகச் சேர்த்துத் திரட்டி உருவாக்கி வந்தது.

இந்தியாவில் பகவான் புத்தர் அவதரித்து நிர்வாணதசையடைந்தபின் சரியாக 1113-வருஷம் கழித்து, அதாவது கிறிஸ்துவுக்குப்பின் 570 வருஷங்கழித்து அரேபியாவில் ஒரு பிரபலகுடும்பத்துத் தலைவர்புத்திரியும், 'கோரிஷ்' ஜாதியைச்சேர்ந்த 'ஹாஷம்' குடும்பத்திற்பிறந்த 'அப்துல்லா' என்பவரின் மனைவியுமாகிய அமீன் என்னும் புண்ணியவதி தன்கணவனையிழந்தபின் அவருக்குண்டான ஒரு திவ்ய புத்திரனைப்பெற்றாள். இக்குழந்தைக்கு 6-வயதாகவே அவளும் இறந்துவிட, தாய் தகப்பனற்ற இச்சிறுபாலன் தன்பாட்டனார்வசமிருந்து அவருடைய போஷணையில் வளர்ந்துவந்தான். தன்னுடைய9-வதுவயதில்இவ்வநாதைச்சிறுவன் 100-வயதான அப்பாட்டனையும் இழந்து தனக்கு சிற்றப்பன் முறையில் உறவினராகிய ஒரு நல்லவர் போஷணையிலிருந்து ஆராபியவாலிபரிற் சிறந்தவனாய் வளர்ந்து வயதுவந்தவனானன். இத்தயௌவனபுருஷன் உத்தமகுலத்திற் பிறந்தவனானாலும் அதிக தனவந்தனாகவின்றித் தன் சுயஜீவனத்திற்கே கஷ்டப்பட்டுழைக்கவேண்டியவனாகவிருந்தான். இப்படித் தன்ஜீவனார்த்தம் வியாபாரவர்த்தக வழியில் மிக முயற்சிசெய்து உழைத்துவருகையில், அவனுடைய 25-வது வயதில் அவனுடைய பந்துக்களில் ஒருவரும், பிரபுகுலத்தில் உதித்தவரும், மிக்க தனவந்தருமான 'காடிஜா' என்னும் பெயருள்ள ஒரு பெருமாட்டியுடன், அவருடைய காரியஸ்தனாக 'ஸிரியா' தேசத்துக்கு யாத்திரைபோனான். இந்த யாத்திரையில் இவன் அப்பெருமாட்டியின் காரியங்களை நன்றாகநடத்திவந்த சாமர்த்தியத்தாலும், மற்றப்படி இவனிடத்திலுள்ள குணபூஷண விசேஷங்களாலும் அப்பெருமாட்டிக்கும் இவனுக்கும் நேசமுண்டாகி முற்ற அது விவாகத்தில் முடிந்தது. இவ்விவாகத்தால் மனதுக்குகந்த ஓர் இல்லறத்தோழி யமைந்ததோடு, ஜீவனவிசாரமற்றிருப்பதற்கு வேண்டிய ஐசுவரியமும கிடைத்ததால், வயிற்றுப்பிழைப்பைப்பற்றிய கவலையொழிந்துதனக்கு இயல்பாயமைந்த உத்தமகுணங்கள் தூண்டின வழியில் சென்று "நான்யார்? எங்கிருந்துவந்தேன்? உயிர்வாழ்க்கையென்பதென்ன? மரணமென்றால் என்ன? மரணத்துக்குப்பின் என்ன நேரிடுகிறது?" என்னும் இவைபோன்ற கேள்விகளுக்குச் சரியான உத்தரம் கண்டுபிடிக்கவேண்டுமென்கிற அவாவேலீட்டினால் தேகபோஷணை சிற்றின்ப சுகங்களில் மனப்பற்றற்று தன் யோசனையே பெரிதாகக்கொண்டு சதாகாலமும் சிந்தித்து வருவாராயினர். சிலசமயங்களில் சிந்தித்துச் சிந்தித்து உடல்சோர்ந்து மனம்நொந்து களைப்புற்று அயர்ந்து பெரிய உறக்கத்தில் விழுந்துவிடுவார். இப்படிக் களைத்துப்போய்மனமுடைந்து, உயிர்வாழ்க்கையிலும் வெறுப்புற்றவராய் அயர்ந்து விழுந்துபோகுங்காலங்களில் ஒரு தடவை, தன் உள்ளேயிருந்து ஒரு எண்ணம் எழும்பி, போதிமாததடியில் பகவான் புத்தருக்கு வற்புறுத்தியவாறு, இவரையும் கூவி, "என்மனமுடைந்து விழுந்து வருந்துகிறாய்? எழுந்து வாய்விட்டுப்பேசி உபதேசியப்பா!" என்று சொல்லியதுபோல் ஒருகுரல் காதில்விழுந்தது. இச்சத்தம் இரண்டுமுறைகேட்டும் அவர் சும்மாவிருக்க, மூன்றும்முறையும் அதேசத்தம் காதில் விழ இவர் தன்னை யறியாமல் "என்னத்தைப் பற்றி உபதேசிக்கிறது?" என்று கேட்டார். அதற்கு உடனே அந்த அசரீரிவாக்கு "ஆண்டவன்பேரால் ஆண்டவனைப்பற்றி உபதேசி" என்று பதில்கூறிமறைந்தது. இத்தரிசனை கண்டதால் அச்சமுற்றுக் கொஞ்சநேரம் பிரக்ஞையற்றுப்போனார். பிரக்ஞையற்றிருந்த அக்காலத்தில் இப்பிரபஞ்சமாயை அவ்வளவையும் விளக்கும் மெய்ப்பொருளைப், புஸ்தகத்தைவிரித்துப் படிப்பதுபோல், முற்றும் துறந்த ஞானிகளுக்குப்படும் தத்துவபோத சக்தியால் அறிந்து கிரகித்துக்கொண்டார். இப்படி அவர் அநுபவித்த தரிசனாவஸ்தையிலிருந்து விழித்துக்கொண்டு பிரக்ஞைபெற்றபின் தான்கண்டகனவைத் தன் இல்லறத்தோழியான 'காடிஜா' வுக்குச் சொல்ல, அவ்வுத்தமி, தன் பர்த்தாவின் உண்மை யறிவையும், மெய்ப்பொருளையுணர அவருக்கிருந்து வந்த தீரா ஆவலையும் அறிந்தவளாதலால், அவருக்கு அச்சமயத்தில் ஆதரவு சொல்லி "பர்த்தாவே! மோசே, யேசு இவர்களுக்குத் தரிசனையளித்து அவர்கள் மூலமாகப் பேசிய பரமகர்த்தாவே, இப்பொழுது உம்மைக்கொண்டு பேசுகிறதாகக் காண்கிறேன். நீர் சஞ்சலப்படவேண்டாம். நீர் தப்பாமல் அரேபியாவின் தீர்க்கதரிசியாவீர்." என்றுரைத்து அவரை உற்சாகப் படுத்தினாள். இதுமுதல் அவர் ஐம்புலன்களையு மொழித்து, 'நான்' என்னும் அகம்பாவமற்று மகா பரிசுத்தராயிருந்து வந்தார். தான் பரிசுத்தமாயிருந்து, சன்மார்க்கங்கெட்டுச் சண்டை சச்சரவுகளிட்டுக் குடி, களவு, காமாதி பாதகங்களுக்கு ஆளாகி, கேவலம் மிருகத் தன்மையாக வசித்து வீணாக அழிந்துவந்த தன் தேசத்தாரைச் சீர்திருத்தி ஒருமைப்படுத்திச் சன்மார்க்கத்துக்கு ஆதாரமான ஒருகட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி விர்த்திக்குக் கொண்டுவரக் கடவுள் தன்னை அவருடைய தூதாக அனுப்பியிருக்கிறாரென்று பூர்ணமாய்நம்பினார். நம்பி அத்தூதைநிறைவேற்றுவதொன்றே இவ்வுலகில் தனக்குவேலையன்றி

வேறில்லையென்று ஒரேகருத்துகொண்டு அதற்காக ஏகசிந்தையாய் உழைத்துவந்தார். இவர்தான் முகம்மது என்பவர். இவர்ஸ்தாபித்தமதம் தான் முகம்மது மதம்: இம்மதத்தைத் தழுவி இவர் போதித்த கொள்கைகளையும் உண்மைகளையும்நம்பி அனுசரிப்பவர்களுக்கு முகம்மதியர் என்று பேர். இவர் போதித்தபோதனைகளடங்கிய புஸ்தகத்துக்கு குரான் என்றுபேர். குரான் என்றால் மகம்மதிய வேதபுஸ்தகம் என்பது பொருள்.

முகம்மது தரிசனைபெற்று உண்மையைப் போதிக்கச் சங்கற்பம்செய்துகொண்டு, அக்காலத்தில் பாவியிருந்த அசத்தியம், உட்பகை, துன்மார்க்கம் இவைகளைக் கண்டித்துக்களைந்து சத்தியம், சன்மார்க்கம், ஒற்றுமை இவைகளைப் போதித்து நிலைநிறுத்தப் பிரயத்தனம்செய்துவரவே, சிற்சிலர் இவர் உபதேசத்தைக்கேட்டு இவர்பக்ஷமாக, பெரும்பாலார் இவரையும் இவருபதேசத்தையும் வெறுத்துப் பகைத்துக் கூத்த நிர்ப்பந்தத்தால் இவரை அடக்கிவிடப் பார்த்தார்கள்.

“ மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்.”

என்று கவி கூறிய உண்மையை இம்மூடமதிகள் அறிந்திலர். இவர்கள் அவரையெதிர்த்துத் தொந்திரவு செய்து வதைக்கவும் பார்த்தார்கள். இவர்கள் செய்த ஒவ்வொரு இடையூறுகளாலும் அவர் சித்தம் தான்கொண்ட காரியத்தை யெப்படியும்செய்துமுடிப்பதில் அதிகதிடமும் உறுதியும் கொண்டது. அவர் கக்ஷியும் மூடஜனங்கள் செய்த அக்கிரமங்களினால் அதிகமாய் பலப்பட்டு வரவரப் பல்கிப்பெருகியது. அராபியர்கள் சுபாவத்தில் அதிக மூர்க்கர்கள்; ஆதலால் அவர்களை வழிக்குக் கொண்டுவரப் பாடுபடுகிறவர்களும் மூர்க்கமாகவே பிரசங்கித்துப்பேசி அவர்களைத்திருப்பவேண்டும். மேக்காபட்டணத்தில் அவர் அதிக உக்கிரமாகப்பிரசங்கம்செய்து தம் கொள்கைகளைப் பரவச்செய்து வருகையில் எதிரிகள் பலாத்காரம் செய்து பலதடவைகளில் அவரை ஹிம்சித்துத் தொந்திரவுசெய்து வந்தார்கள். இந்த ஹிம்சை பொறுக்கமாட்டாமல் ஒருதடவை அவர் மேக்காவைவிட்டுக்கொஞ்சக்காலம் மெடினாவுக்குப்போய் அங்கு தங்கியிருக்கவேண்டி நேரிட்டது. அங்கே இவர் கக்ஷி பலப்படவே மறுபடியும் மேக்ககாவுக்குவந்து முன்போல் உக்கிரமாய்ப் பிரசங்கித்து அக்கிரமங்களையும் துன்மார்க்கங்களையும் பலமாய்க்கண்டித்து சன்மார்க்கத்தைப் போதித்துத் தம் கொள்கைகளைப் பரவச்செய்ய உழைத்துவந்தார். இவர் கக்ஷி வரவரப் பலமடைந்து வந்ததைக்கண்ட இவர் சுஜாதியாரான ‘கோரிஷ்’ ஜாதியார் ஒருநாள் இவர் வீட்டைச்சுற்றி வளைந்துகொண்டு இவரைப்பிடித்துக் கொன்றுவிட யத்தனித்தார்கள். அப்பொழுது இவர் தெய்வசங்கற்பத்தால் அவர்களுடைய கோபத்தீயிலகப்பட்டெரிந்துபோகாமல், தப்பிவித்துக்கொண்டு மேக்காவைவிட்டு மெடினாவுக்கு ஓடிவிட்டார். இப்படி இவர் உயிர்தப்பியோடினதை மகம்மதியர்கள் ‘ஹெஜிரா’ என்னும் தங்கள் சகாப்த ஆரம்பமாகக் கொண்டு வருஷக்கணக்கு வைத்து வருகிறார்கள். இந்த சம்பவம் நேரிட்டது கி. பி. 622 - ம் வருஷத்தில். அப்பொழுதே ‘ஹெஜிரா’ சகாப்தம் ஆரம்பமானது. அதற்குப்பின் 10 - வருஷகாலம் ஜீவித்திருந்து முகம்மது தன்மதத்தை நிலைநாட்டியதுமன்றி அம்மதத்தார் அந்நியர்களைச் சயித்துத் தம் மதஸ்தர்களாக்கும்படியான வீரபராக்கிரமமும் ஒற்றுமையும் கட்டுப்பாடுமுடையவர்களாகும்படிச் செய்து, அவர்களெல்லாரும் தம்மையே அவர்களுக்குத் தலைவராகக் கொள்ள,இராஜாங்கம் மதம் இரண்டிற்கும்தலைமையாகவிருக்கும் ஒப்பற்ற அதிகாரத்தையேகத்தில்ஒருவரே செலுத்திவரும்படியானகட்டுப்பாடமைந்த ஒருராஜாங்கத்தை ஸ்தாபித்துவிட்டு 1632-ம் வருஷத்தில் மரணமடைந்து சென்றார்.

இவர் இறந்து நூறு வருஷங்களாகுமுன் இவரை வழிபட்டுவந்தவர்கள் இந்தியாவின் வட



மேற்கேயுள்ள ‘ஹிந்துகுஷ்’ மலைத்தொடர்வரையில் மத்திய ஆசியாவிலுள்ள தேசங்களையும் அவற்றில்வசித்த ஜாதியார்களையும் போரில் வென்று அவர்களைத் தங்கள் மதத்தோடும்இராஜ்ஜியத்தோடும் ஒன்றுபட்டவர்களாகச் சேர்த்துக்கொண்டுவிட்டார்கள். மேற்கே ஐரோப்பாவில் ஸ்பெயின்தேசம்வரையிலும் ஆபிரிக்காவில் நைல் நதிமுதல் அட்லாண்டிக் சமுத்திரம் வரையிலும், ஜெயித்துக் கட்டிக்கொண்டு ப்ரான்ஸ் தேசத்தையும் படையெடுத்துக் கட்டிக்கொள்ள யத்தனித்து விட்டார்கள்.

ப்ரான்ஸின்மீது படையெடுத்தபின்பு அவர்கள் ஐரோப்பாமுழுவதையுமே ஜெயித்துக்கட்டிக் கொள்வார்கள்போல் தோற்றியது. கி. பி. 732 - ம் வருஷத்தில் சார்லஸ் மார்டேல் என்னும் சேனாவீரன் பிரான்ஸின் மத்தியபாகத்தில் அவர்களையெதிர்த்துத் தடுத்து ஏழு நாள் யுத்தம்செய்து அவர்களைத் தோற்கடித்துத் திரும்பச் செய்தான். அதற்குப்பின் அவர்களுக்குள் உட்சண்டை யதிகரித்ததால் அந்தப் போராட்டமே [illegible]களுக்குள் பெரிதா[illegible]ய் விட்டது.

IV
சென்னை 600 008

முகம்மதிய [illegible]யாரம்பகாலத்தில்
இந்தியாவின் நிலைமை.

முகம்மதியர்கள் இந்தியாவின்மேல் கண்வைத்தவர்களாக விருந்தாலும் சுமார் 300 - வருஷகாலங்களுக்கு ‘ஹிந்துகுஷ்,’ மலைக்கு இப்பால் காலடிவைக்கமுடியாமலே மேற்கேயுள்ள ஐரோப்பியதேசங்களில் ஒன்றின்பின் ஒன்றாகத் தங்கள் ஜயக்கொடியை நாட்டிக்கொண்டு சென்றார்கள். அவர்கள் அக்காலத்தில் இந்தியாவுக்குள் வந்ததெல்லாம் வெகுசொற்பம். கி.பி. 636-ம் வருஷத்திலும்,662,664-ம் வருஷங்களிலும்சொற்பமாகப் படையெடுத்துப் பார்த்தார்கள். ஆனால் அவையொன்றும் பலிக்கவில்லை.கி. பி. 712-ம் வருஷத்தில் மகம்மதியகப்பல் ஒன்று இந்தியாவின் துறைமுகங்கள் ஒன்றில் பிடித்துக்கொள்ளப்பட்டதைக் காரணமாகக் கொண்டு சிந்து நதிதீரத்தின்மீது படையெடுத்துச்சென்று, அதை நடத்திய காஸிம் என்னும்மகம்மதிய அரசனின் தைரியபராக்கிரம வீரத்தினால் ஹிந்துக்களைத் தோற்கடித்துச் சிந்துநதிக்கரையில் மகம்மதியர் தங்கள் கொடியை நாட்டினார்கள். 714 - ம் வருஷத்தில் காஸிம் இறந்துபோக அவன் சைனியங்கள் அவனுடைய தலைமையிழந்தபின் அவ்விடத்து இராஜபுத்திரர்களுக்கு எதிர்நிற்கமாட்டாமல் அடிக்கடி பின்வாங்கத் தலைப்பட்டன. கி. பி. 750 - ம் வருஷத்தில் இராஜபுத்திரர்கள் சிந்துநதிக்கரையிலிருந்த மகம்மதிய கவர்னரைத் துறத்தியடித்து விட்டார்கள். 828 - ம் வருஷத்தில் சிந்துநதிதீரம் முழுவதும் முன்போல் ஹிந்துக்கள் வசமாகிவிட்டது.

முகம்மதியர்கள் ஹிந்துகுஷ்மலையைத்தாண்டி பஞ்சாபில் நிலையாக அடிபெறுமுன், மேற்கே ஆசியாகண்டத்திற் பெரும்பாகத்தையும், வென்று ஆபிரிகாகண்டத்திலும், ஐரோப்பாவின் தெற்குப்பக்கத்திலும் தங்கள் ஜயக்கொடியை நாட்டிக்கொண்டுபோய் அரத்திலுள்ள ஸ்பெய்ன், கால்* முதலிய தேசங்களையும் கைப்பற்றி விட்டார்களென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். இந்தியாவிற் பிரவேசிக்க இவ்வளவு தாமதமுண்டானது சிந்துநதிதீரத்தில் வசித்த ராஜபுத்திரர்களின் வீரபராக்கிரமம் எளிதில் அடக்கக்கூடாததாயிருந்தது ஒன்றுமட்டுமன்றி அக்காலத்தில் ஹிந்துராஜ்ஜியங்களுக்குள்ளிருந்த ஒற்றுமை கட்டுப்பாடும், இசைப்பு ஏற்பாடும் மகம்மதியர்களுக்கு வெல்லுதற்கரிய இடையூறாக விருந்தது.

விந்தியாபருவதத்திற்கு வடக்கேயுள்ள ஹிந்துஸ்தானத்தில் ஆண்டுவந்த அரசர்களை முன் வேறுபட்ட அரசர்குலங்களாகப் பிரி[illegible]

* பிரான்ஸ் தேசத்தின் பூர்வீகப்பெயர்.

சொல்லலாம். வடமேற்கே சிந்துநதிக் கரையிலுள்ள பாகங்களிலும் யமுனையின் மேற்பாகத்திலுள்ள அந்நதிதீரங்களிலும் இராஜபுத்திரர்கள் ஒரு தலையாகக் கூட்டப்பட்டிசைந்த பல வேறு சிற்றரசர்களோடும் ஆண்டுவந்தார்கள். இவர்களுக்குத் தலைமை ஸ்தானம் டில்லியாகும். ஸம்ஸ்கிருதம் வழங்கியகாலத்தில் மத்தியதேசம் என்று பேர்பெற்ற பாகமும் அப்படியே பூர்வீகம்தொட்டுப் பேர்பெற்ற 'காஞேஜ்' அல்லது 'கன்யாகுப்ஜம்' என்னும் இந்துமாநகரைத் தலைமை ஸ்தானமாகக்கொண்டு அவ்விடத்து அரசனுக்குள்பட்டிசைந்த பல வலுத்த இராஜ்ஜியங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் அரசர்களால் ஒற்றுமையோடு ஆண்டு வரப்பட்டது. பிஹார்(மகததேசம்)முதல்கங்கைநதியின்கிழப்பக்கத்திலுள்ள பாகங்கள் சந்திரகுப்த அசோக வம்சத்துக்குப்பின்வந்த 'பால்' அல்லது 'பாலன்' என்னும் பட்டப்பேர்வகித்த புத்த வமிசத்தரசர்களால் ஆண்டுவரப்பட்டது. வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் நடுவில் விந்தியா பருவதம் கடக்க முடியாத ஒரு சுவரெடுத்தது போல் காடுவனவனாந்தரங்களோடு குறுக்கிட்டு ஓடிநின்றது. இப்பருவதத்தின் அடிவாரத்திலும் மலைச்சாரல்,காடுகளிலும் வசித்த வில்லிகள், பேரைகள் என்னும் காட்டுச்சாதி, மலைச்சாதியர் மகாமூர்க்கர்கள். விந்தியபருவதத்தின் மேற்குக் கோடியில் பம்பாய்ப் பக்கத்தில் விக்கிரமாதித்தியன் காலம்முதல் கீர்த்திபெற்று விளங்கிவரும் மாளவதேசம் உள்ளது. கல்வி நாகரீகத்தில் கீர்த்திபெற்றுள்ள இத்தேசம் வீரபராக்கிரமத்தில் சிறிதும் குறைவற்ற சிற்றரசர்கள் கூட்டத்தோடு பகைவர்க்கிடங்கொடாப் பெரிய இராஜ்ஜியமாக விளங்கியது.

தெற்கே ஆரிய இராஜ்ஜியங்கள் அதிகமாக இல்லையாயினும், அங்கேயுள்ள அனாரிய அரசர்கள் தைரியபராக்கிரம வீரத்தில் வடக்கேயுள்ள தங்கள் ஆரியசகோதரர்களுக்குச் சிறிதும் பின்னடைந்தவர்களாகவில்லை. பற்பல காலத்தில் பலவேறுபட்ட சிற்றரசர்கள் இவர்களில் பிரபலமடைந்து தலைமைபெற்று விளங்கினர்களாயினும், பொதுவில் சேர, சோழ, பாண்டியவமிச அரசர்கள் தென்னாட்டுச் சிற்றரசர்களுக்குள் தலைமைபூண்ட அரசர்களாயிருந்து அவர்களை ஒருவாறு ஒரு கட்டுப்பாட்டுக் கிசைத்து மாற்றானுக் கிடங்கொடாது ஆண்டுவந்தார்களென்பது திண்ணம்.

இந்தியாவின் பலபாகங்களும் இப்படிப் பல வேறுபட்ட அரசர்குழாங்களால் எதிரிக்கு இடங்கொடாதபடி ஒருவித இசைப்புக்குட்பட்டு ஆளப்பட்டுவந்ததால் வெளித்தேசத்தாருக்கு இந்தியாவில் காலடிவைத்து நிலைக்கப் பெறுவது இலகுவான காரியமாகவில்லை. ஒருபாகத்தில் காலடிவைக்கவேண்டுமானால் எல்லைப்புறத்திலுள்ள சிற்றரசனை வெல்லவேண்டும். இந்தச் சிற்றரசன் எதிர்க்கப்பட்டால் அவ்வரசர் குழாத்திலுள்ள மற்ற எல்லாச் சிற்றரசர்களும் தங்கள் தலையரசன் சைனியத்தோடு அவன் உதவிக்கு வருவார்கள். இவனையும் வென்று தலையரசனையும் வென்றுவிட்டால் பிறகு ஒவ்வொரு சிற்றரசர்களையும் தனித்தனியெதிர்த்து வெல்லவேண்டும். இது இலகுவிலாவது, சொற்பக்காலத்திலாவது ஆகும்காரியமல்ல. ஒவ்வொரு சிற்றரசனையும் ஒவ்வொரு அரசர்குழாத்தையும் வென்றுகொண்டு போனாலும், வென்றவன் அந்தப்பக்கத்தில் சென்றால் இந்தப்பக்கத்தில் அவன் அதிகாரத்தை யெதிர்த்து அவனைத் தான் கைப்பற்றிய இடத்தைவிட்டுத் துரத்த ஒவ்வொரு இடத்திலும் ஒருவர் தனித்தும் பக்கத்திலுள்ளாரோடு சேர்ந்தும் கலகம் செய்யக் கிளம்புவார்கள். இப்படிப்பட்ட ஏற்பாட்டில் இந்தியாவின் எல்லைப்புறத்தின் மீது படையெடுத்துச்சென்று எதிர்த்தவர்களைத் தோற்கடிப்பது சாத்தியமானாலும் சண்டையில் வென்றவன் தேசத்தைக் கீழ்ப்படுத்தித் தன் ஸ்வாதீனமாக அடக்கியாள்வது எளிதாகவில்லை. அந்தவேலை மகா கஷ்டசாத்தியமானது. மகம்மதியர்கள் எளிதில் இந்தியாவைக் கட்டிக்கொண்டு விட்டார்களென்று இந்தியா சரித்திரக்காரர்கள் சாதாரணமாகச் சொல்வது சரித்திர பூர்வமாய் நாம் அறிந்துள்ள விஷயங்களுக்கு முற்றும் விரோதமானதாகவிருக்கிற



தென்று ஸர் உவில்லியம் ஹன்டர் அவர்கள் எடுத்துக்காட்டி நிரூபிக்கிறார். வாஸ்தவத்தில் இந்தியாவை மகம்மதியர்கள் முற்றும் கைப்பற்றியாண்டார்களென்று சொல்வது உண்மைக்கொவ்வாத உரையென்று அவரே சொல்கிறார்.

இந்தியாவில் முகம்மதியர் ஆக்ஷி யென்று சொல்வதெல்லாம் அவர்கள் படையெடுத்துக் கொள்ளையாடிச் சென்றதும், சிற்சிலபாகங்களைமட்டும் வென்று ஆண்டுவந்ததுமேயன்றி முற்றும் இந்தியாவைச்சுவாதீனப்படுத்தி ஆண்டுவந்தார்களென்ற அருத்தத்தில் சொல்வதற்கில்லை. கி. பி. 712-ம் வருஷத்தில் சிந்துநதிதீரத்தில் முகம்மதிய அதிகாரத்தை ஸ்தாபிக்கும்பொருட்டு காஸிம் செய்த யத்தனம் பலிக்காமற்போனதைச் சொன்னோமே. பிறகு கி. பி. 977-ம் வருஷம் முதல் 1176-ம் வருஷம் வரையில் முகம்மதியர் வடமேற்குமூலையிலிருந்து பன்முறையும் படையெடுத்துவந்து இந்தியாவில் அவர்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தவேண்டுமென்று செய்த பிரம்மப் பிரயத்தனங்களெல்லாம், எல்லைப்புறத்திலுள்ள லாஹோர்ப்பட்டணத்தையும் அதைச்சார்ந்த நாட்டையும் தங்கள் ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதில் முடிந்ததேயன்றி அதற்குமேற்பலிக்கவில்லை. அதுவும் பிந்திப் பத்துவருஷங்களுக்கெல்லாம் நம்முடைய சரித்திராரம்பகாலத்தில் ஹிந்துக்கள் வசத்தில் விழுந்துவிட்டது.

பஞ்சாப் எல்லையில் ஹிந்துமதத்துக்கும் முகம்மது அல்லது இஸ்லாம் மதத்துக்கும் நேரெதிரில் போராட்டம் நேரிட்டது. கி.பி.977-ம் வருஷத்தில் அப்பொழுது லாஹோரையாண்ட ஹிந்து ராஜாவாகிய ஜயபால் என்பவர் முகம்மதியர் அடிக்கடி தன் இராஜ்ஜியத்தில் புகுந்து கொள்ளையிட்டு வந்ததைப் பொறுக்கமாட்டாமல் தன்சைனியங்களைக் கூட்டிக்கொண்டு கைபர் கணவாயைக்கடந்து அதற்கப்பால்முகம்மதியர் ஆண்டுவந்த கிஜினி இராஜ்ஜியத்தின் மீது படையெடுத்துச்சென்றார். அப்பொழுது கிஜினியில் ஆண்ட அரசன்பேர் சுபக்தீகின். இருதரத்தாருக்கும் பலத்தசண்டை நடந்துவருகையில் ஒருபெரிய புசற்காற்றடித்துக் கனமழை பொழிய, அப்பொழுதுகிஜினிஅரசன் கணவாயினிருவாய்களையும் தன் வசப்படுத்திக்கொண்டு ஹிந்துக்களைத் தோற்கடித்து 50 யானைகளும் பத்துலக்ஷம் தர்ஹம் பணமும் (25 ஆயிரம் பவுன்) அபராதம்செலுத்துவதாக ஒப்புக்கொண்டதின்மேல் ஜயபால்ராஜாவை அவர்சைனியங்களோடு திரும்பிப்போகவிட்டான். ஜயபால்ராஜா லாஹோருக்குத் திரும்பினதும் அவன் மந்திரசபையிலுள்ள பிராமணர்கள் மிலேச்சனுக்கு நாம்கப்பம் கட்டவாவது, கூடாதென்று சொன்னதைக் கேட்டுக்கொண்டு தன் இராஜபுத்திரவீரர்களும் மந்திரிகளும் சொல்லியதைக் கேளாமல் தான்கொடுத்த வாக்கை நிராகரித்துச் சும்மாவிருந்தான். கடைசியில் சுபக்தீகின், கணவாயைத்தாண்டி லாஹோரின்மீது படையெடுத்துவந்து ஜயபால் அரசனைச்சண்டையில் தோற்கடித்து, பிஷவார் ஸ்தானத்தை அரண் செய்து காத்துவர 10-ஆயிரம் குதிரைவீரர்களோடு ஒரு அப்கான் அதிகாரியைக் காவலாக வைத்துத்திரும்பிச்சென்றான். பிறகு சுபக்தீகின் மத்திய ஆசியாவில் சண்டைக்குப்போகவேண்டியிருந்தபடியால் இந்தியாவில் அவன் படையெடுத்து வந்ததற்கு அடையாளமாக பிஷவார் ஒன்று அவன் வசமாக நின்றதுதான் லாபமாயிற்று. ஆனால் இதுமுதல் கைபர், போலன் கணவாய்கள் இருபுறமும் முகம்மதியர்வசத்திலிருந்துவந்தன.

சுபக்தீகின் கி.பி. 997-ல் இறந்தபின் அவன் புத்திரனான 16 - வயதுள்ள மாம்மூது பட்டத்திற்குவந்தான். இவனே இந்தியாசரித்திரத்தில்பேர்போன கிஜினிமாம்மூது என்பவன். இவன் 33-வருஷகாலம் கிஜினியிலாண்டான். அக்காலத்திற்குள் 17 - முறை இந்தியாவின்மீது படையெடுத்துவந்தான். பட்டத்துக்கு வந்தபின் முதல் 4 வருஷங்களையும் அப்கானிஸ்தானத்தில் தன் அதிகாரத்தைமுற்றும்பலப்படுத்திக்கொள்வதில் செலவழித்து 1001-ம் வருஷத்தில் முதல் முதல் இந்தியாமீது படையெடுத்துவந்தான்.

பஞ்சாப் மாகாணத்தில் மேற்குப்பாகத்தைத்தன் வசமாக்கிக்கொள்ளுமுன் 13-முறை யதன்மேல் அவன் படையெடுத்துச் செல்லவேண்டிநேரிட்டது. ஒருமுறை காஷ்மீர்தேசத்தின்மீதுபடையெடுத்துச் சென்றுகாரியமாகாமல்திரும்பினான். பின்னும் மூன்றுமுறை சிந்துநதியைத்தாண்டி உள்நாட்டிற்சென்று கானோஜ், குவாலியர், சோமநாதபுரம், இவைகளைத்தாக்கிஅங்குள்ள அளவற்றசெல்வங்களைக் கொள்ளைகொண்டுகோயில்களையிடித்து விக்கிரகங்களையுடைத்து நகரையழித்து அவன் சென்றவழியெல்லாம் தும்சம் செய்து ஹதம் செய்துகொண்டுபோனான். இவன் என்ன தும்சம்செய்தும், கொள்ளைக்கு வந்தவனைப்போல் ஏராளமான திரவியங்களைக் கொள்ளையடித்து நாடுநகரங்களைச் சூரையாடிப் போகமுடிந்ததேயன்றி இந்தியாவில் லாஹோர் மாகாணம் ஒன்றைத்தவிர வேறு எங்கும் இவன் அதிகாரம் நிலைக்கும்படி ஏதும் செய்யச் சக்தியற்றவனாகச்சென்றான். இவன் தகப்பனார் முகம்மதியர் அதிகாரத்தைப் 'பிஷவார்' வரையில்கொண்டு வந்துநிறுத்தினார். இவன் அதைப் பஞ்சாப்வரையில்கொண்டுபோய் நிறுத்தினான். இதற்கப்பால் இவன் சென்ற இடங்களிலெல்லாம் இவன் வந்துபோனதற்கடையாளமாக இவன் செய்த தும்சதூளியின் ஞாபகத்தைத்தவிர வேறொன்றும் பின்விட்டானில்லை.

கிஜினி மாம்மூது 1030 ம் வருஷத்தில் மரணமடைந்தான். அதற்குப்பிறகு சுமார் 150 வருஷகாலம் வரையில் 'பஞ்சாப்' மாகாணம் முகம்மதியர் ஆளுகைக்குள்பட்டு கிஜினிஇராஜ்ஜியத்தின் ஒரு பாகமாக மாம்மூதின் வமிசத்தார் வசத்தில் இருந்துவந்தது. அப்கானிஸ்தானத்தில் கிஜினி, கோர் என்று இரண்டு பிரதான பட்டணங்களிருந்தன. கிஜினிமாம்மூது 1010-ம் வருஷத்தில் கோரிப் பட்டணத்தைப்பிடித்து அதன் அரசனைத் தனக்குட்படுத்திக்கொண்டான். மாம்மூது இறந்தபின் 1051-ம் வருஷத்தில் கோரியரசன் கிஜினியைப்பிடித்து அப்பட்டணத்துப் பிரபுக்களைச் சிறையாக்கிக் கொண்டுபோய் அவர்கள் இரத்தத்தைவிட்டு மண்குழைத்து கோரிக்கோட்டைக்கு மதிள் எழுப்பினான். இப்படி இருதரத்தாரும்மகாகுரூரமாய் ஒருவரையொருவர் வென்று, சொல்லவும் உடல்நடுங்கும்கொடுமைகள்செய்துவந்தார்கள். கடைசியில் கோரியரசன் 1152-ம் வருஷத்தில் கிஜினியைப்பிடித்து இந்தியாவினின்றும்கொள்ளையிட்டுக்கொண்டுபோன ஐசுவரியங்களெல்லாம் நிறைந்துகுபேரப்பட்டணம்போல் விளங்கிய அப்பட்டணத்தை அடியோடழித்து அக்கினிக்கிரையாக்கி முடித்தான். கிஜினிவமிசத்தரசர்களில் கடைசியவனான குஷ்ரு என்பவன் அப்பொழுது கிஜினியை விட்டோடி, எல்லைப்புறத்துள்ள லாஹோர்மாகாணத்திற்குச்சென்று அங்கு அரசுசெலுத்திவந்தான். இப்படி கிஜினியையெரித்து வெற்றிமாலை சூடினவன் கோரிவமிசத்து அரசன் அலாவுடீன். இவன் கிஜினியையெரித்து, 'உலகெரித்தோன்' என்னும் பட்டப்பேர் சூட்டிக்கொண்டான். இவன் பேர் அலாவுடீன் ஜிஹான்ஸோஸ், அதாவது "உலகெரித்த அலாவுடீன்"என்பதாம்.

இந்த உலகெரித்த அலாவுடீனுக்குப் பின் அவனுடைய புத்திரன் ஸேய்புடீன் பட்டத்துக்கு வந்தான். இவன் ஒரேவருஷம் அரசாண்டு மரணமடைந்தான். இவனுக்குப்பின் இவன் தாயாதிகளில் ஒருவனான கியாஸுடீன் கி. பி. 1157-ம் வருஷத்தில் கோரி பட்டத்துக்கு வந்தான். இவன் தன்னுடன் தன்சகோதிரனை முகம்மது ஷஹபுடீன் என்பவனை இராஜ்ஜியபாரம் செய்வதில் சேர்த்துக்கொண்டு இராஜாங்க விஷயங்களைப் பெரும்பாலும் அவன்வசத்திலே விட்டுவந்தான். இந்த ஷஹாபுடீன் தான் கோரி முகம்மது என்று இந்துதேச சரித்திரத்தில் பேர் விளங்கினவன். 1176-ம் வருஷத்தில் இவன் மூல்தான் பட்டணத்தின்மீது படையெடுத்துச் சென்று அதைத் தந்திரோபாயத்தால் வென்று திரும்பினான். சிந்துநாட்டின்மீது பின்னுமொருமுறை படையெடுத்துச்சென்றபின், லாஹோரைத்தாக்கி அங்கேயாண்டு கொண்டிருந்த கிஜினிவமிசத்தின் கடைசியரசனான குஷ்ரு மாலிக்



என்பவனைப் பிடித்துச்சிறையிலிட்டான். அக்காலத்தில் சிறையிலிட்ட அரசர்கள் கதி குழியிலிட்ட பிரேதத்தின்கதிக்குச் சமானமாதலால் அவனைப்பற்றி நாம் இனி விசாரிக்கத் தேவையில்லை. அவனோடு கிஜினிராஜவமிசம் முடிந்து அழிந்து போயிற்றென்று மட்டும்சொன்னாற் போதும். இதுநேர்ந்தது 1186 - ம் வருஷத்தில்.

ஷஹாபுடீன் அல்லது கோரிமுகம்மது லாஹோரைக் கைப்பற்றவும் இதுவரையில் முகம்மதியர்க்குமுகம்மதியராக எதிர்த்துநின்று யுத்தஞ்செய்து வந்தது போய்ஹிந்துக்களோடு நேர்நேராக நின்று அவர்களை யெதிர்த்துப் போர்புரிய வேண்டிய அவசியம் நேரிட்டது. இதுமுதல் இவன் இந்தியாவிற் செய்த செய்கைகள் நாம்எழுதிவரும் சரித்திரத்தில் கலந்ததாகவிருப்பதால் இவன்கதையை இந்த மட்டில் இங்கு நிறுத்தி இவன் டில்லியில் ஆண்ட ப்ரித்விராஜாவுடன் ஏககாலத்தில்வசித்தவனன்றி அவனுடைய முக்கிய பகைவனும் எதிரியுமாயினானென்பதைமட்டும் சொல்லி முடிப்போம்.

C. V. S.

## சோபாமணி.

கடலாடை சூழ்ந்த நிலமாமகட்கு வதனம் போல்விளங்கும் இந்து நாடாகிய இந்தநாட்டுக்குமேல்பால் நெடுந்தூரத்தில் பன்னூறுயோசனைகடந்து ப்ரஷ்யா (Prussia) எனுமொருநாடுண்டு. கல்வி, செல்வம் முதலியவற்றால் குறைவின்றி நிறைந்த அந்நாட்டிற்குப் பல்வகையாலுஞ் சிறப்புற்ற பேர்லின் (Berlin) என்பது தலைநகராயது. எந்நாட்டினுள்ளும் முன்னாட்டுந் தகைமைவாய்ந்த அந்நாட்டினை ஆட்சிசெய்து வந்தவன் ப்ரேடரிக் (Frederic) எனுமொரு தோன்றல். அவ்வேந்தன், ஸாக்ஸனி (Saxony) நாட்டைப் படையெடுத்து வென்றபின், அதன் தலைநகராகிய ட்ரேஸ்டேன்(Dresden) நகரத்துக் கைத்தொழிலாளிகளை ப்ரஷ்ய நாட்டுப்பிரதான புரியாகிய பேர்லின் நகரத்திற்குக் குடியேறப் பலாத்கரித்தான். தம்நாடு நகரங்களையும், வீடுவாயில்களையும், உறவினர் நண்பினரையும் துறந்த இந்நிர்ப்பாக்ய ப்ராணிகள், தமது நாடொழிந்து வேற்றுநாடடைந்தும், தம்மைச் சிறைகொண்ட வேந்தனது சிருக்கும் செல்வத்துக்குமே உழைக்கவிதியாயிற்றேயன்றித் தமக்கென இன்பமேனும் இலாபமேனும் ஏதுங்கண்டாரில்லை. இவ்வடிமைத் தொழிலாளிகளுள் சோபியா மான்ஸ்பீல்ட் (Sophia Mansfield) என்றொரு பெண்மணியுண்டு. இவள்பெயரைநம்மவர் எளிதில் உச்சரிக்கக்கூடியதாக இக்கதையில் இவளுக்குச் சோபாமணி யென்னும் பெயரிட்டுவைப்போம். அவளுடைய இளமையும், ரூபலாவண்ய சௌந்தரியமும், அறிவும், அடக்கமும், அச்சமுதலிய மற்றை நற்குணங்களும் கண்டோர் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கவையாயிருந்தமையால் அவளிடத்து அனைவரும் அன்பும் ஆசையுமுடையராயினர். பெண்களுக்கு 'மெல்லியல்' என்றபெயர் அவளுக்கே அமைந்தது என்னலாம். கள்ளங்கவடற்ற உள்ளமுடையவள். 'வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் நீர்' என்றெண்ணும் தன்மையள். அச்சிறுமி மெய்ம்மைக்கு அணிகலம். பொய்ம்மைக்குப்பெரும்பகை. பொறுமைக்கு உறைவிடம். புகழுக்கு நல்வாழ்வு. "அன்னையும்பிதாவுமுன்னறிதெய்வம்" என்னும் முதுமொழிக்கு இலக்கியமாய், பெற்றோரைத் தெய்வமெனப்பேணும் இயல்புடையள். பலசொல்லி யென்? எல்லா நற்குணங்களும் அவளையடைந்தே நலமுற்றன என்பது பொருந்தும்.

இதுநிற்க. ப்ரேடரிக்ராஜன் ஸாக்ஸனி நாட்டிலுள்ள மீஸன்(Meason)என்னும்பட்டணத்துக் கைத்தொழிற் சாலையைப் பார்க்கவந்தகாலையில் அம்மாது தனதுசொந்த யுக்திபுத்தியாற்செய்த சில புதுமையான வண்ண மட்கலங்களைக் கண்ணுற்றான். கண்ணுறலும் அவற்றின் அழகுக்கும் தொழிற்பாட்டுக்கும் வியப்புற்று, அப்

பெண்ணை அங்ஙகரினின்றுதன்னகர்க்குக்கொண்டுபோகத் தீர்மானித்தான். ஆயினும் அவள் பேர்லின் போந்தநாள் தொட்டு முன்போல உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் யுக்தியோடும் வேலைகள்செய்திலள். ஆண்டுச் சிறுமண்ணில் பல்வகைப்பண்ணமைந்த புதுக்கலங்களியற்றுவதும், அவற்றிற்கு வருணந்தீட்டுவதுமே அவளுக்கு அமைந்தபணி. அப்பணியை முன்போல அத்துணைச்செவ்விதாகச் செய்யத் திறமைதானில்லையோ, சிந்தைதானில்லையோ, யாதுகாரணத்தாலோ இயற்றிலள். அவள் அமைத்த உருக்கள் அந்தக்கேடாயும் இருந்தன. அச்சித்திரத்தொழிற்சாலை விசாரணைத்தலைவன் தன்னால் இயன்றவரை அவளை உற்சாகமூட்டவும், ஊக்கமுண்டாக்கவும் புரிந்த பன்முயற்சியும் பயன்படாவாயின. அச்சிறுமியும் விசனமும் விசாரமும் உள்ள உள்ளத்தளாய், கடனீரைக் கையாலிறைப்பார்போல நாள்முழுதும் ஏதேதோ எண்ணுதுமெண்ணி ஏக்கமுற்றிருப்பாள். அதுகண்டு, அவ்விசாரணைத் தலைவன் அப்பெண்பால் அன்பால் வேந்தன் மறுமுறை தொழிற்சாலையை நோக்கவருங்கால் அவளுடைய பிடிவாதத்தையும் சோம்பலையுங்குறித்து அவனுக்கு அறிக்கைசெய்வதாக அவளை அச்சுறுத்தினன்.

இங்ஙனம் சிலநாள்செல்லாநிற்க,ஒருநாள் காவலன் கைத்தொழிற்சாலையைக் காணவந்தான். அவன்கருத்தைத் தொழில்கொள்ளத்தக்க காரியங்கள் பலவுளவேனும் பேர்லினில் சிறுமட்கலத்தொழிலைச் சீர்நிலைக்குக் கொணரச்சிந்தையில் தீரா விருப்பங் கொண்டிருந்தமையால், அவன் அத்தொழிற்சாலையைத்தான் பன்முறை நேரில் கண் ஆணியிட்டுப் பார்த்து வந்தான். அவன் தன்னாட்டு யூதரை ஒருங்குசேர்த்து அவர்களைக் கைத்தொழிலிற் பயிற்றவேண்டுமென ஒரு நகைக்கேதுவான எண்ணங்கொண்டான். அவர்கள் கைத்தொழில் அவலக்ஷணமாயிருந்தமையின் அக்காட்சி காண்போர்க்கு விநோதமாய்த்தோன்றினும், அரசன் அதனைப் பொறுக்கலாற்றாது மனங்குன்றிக் குணமாறி, வந்தகாரியமுடிந்த அக்கணமே தனது மாளிகைக்கேகி அற்றைப்பகல்முற்றும் புறப்படாதிருந்தான். அதற்கு முன்னாள் சிறுமட்கலவேலையிற் சில திறஞ்செய்து பார்க்கக்கருதி, சேளந்தலஹாரன் என்பவனிடம் சிலநாள்தங்கி, அதனைப்பற்றி விஜயவிட்தன் என்பவன்பால் பல சங்கதிகள் கற்றுணர்ந்த ஓராங்கில யாத்திரிகன் ப்ரேடரிக் ராஜனைக் கண்டிருந்தமையால் அம்மன்னவன் யூதர் கைத்தொழிற்காட்சியை அற்றைக்காலை தன்னுடனிருந்து கண்டுகளிக்குமாறு அவனை அழைத்திருந்தான். அங்ஙனமே ஆங்கிலனும் ஆண்டைச்சென்றிருந்தனன். தன்தேயத்தவர் பெருமையொன்றனையே பெரிதுநாடிய அங்கிலப்பிரயாணி ப்ரஷ்யாநாட்டுச் சிறுத்தொழிற்சாலையிற் றன்னைச்சந்திப்பதாகச் சொல்லியிருந்த சில கனவான்கட்குத் தன்னிடமுள்ள ஆங்கில வேலைப்பாடுகளைக் காண்பிக்கச்சென்றான்.

அக்குழாத்துள்சற்றேறத்தாழப்பதினேழாட்டைப்பருவத்தன்அஹஸ்கலாவான்என்பானொரு வாலிபன் இருந்தனன். அவன் போலந்துநாட்டிற் பிறந்தவனாயினும் ப்ரஷ்ய பாஷையிற்படித்துத் தேறினவன். அவ்விளைஞன் கற்றுத்தேர்ந்தது போஸ்டன் பட்டணத்து இராணுவபாடசாலையில். ப்ரேடரிக்ராஜன் அப்பிள்ளையை மகாமேதாவியென நன்குமதித்திருந்தனன். அச்சிறுவன் ப்ரேடரிக்ராஜனுடைய சற்குணங்களையும் துர்க்குணங்களையும் உள்ளவாறு தெள்ளத்தெளியத்தெரிந்திருந்ததுமன்றி அவற்றைப் பிள்ளைமதியால் கள்ளங்கவடின்றிப் பல்லோரறியப் பகர்ந்தும் வந்தனன். அவன் அரசனைச்சுட்டி ஆங்கிலப்பிரயாணியோடு உரையாடிவருங்கால் "தன்னரசியற்றும் மன்னவன் குடிகட்குச் சௌக்கியமில்லை" என்றுரைத்துவந்தான்.

"தன்னரசியற்றும் மன்னவன்! அன்னவொருமன்னவனைக் கொடுங்கோலான் எனக்கூறவொண்ணாதோ? 'கொடுங்கோன்மன்னர் வாழுநாட்டிற் கடும்புலிவாழுங்காடுநன்றே' என்றுங்



கூறியுள்ளாரே" என்று அஹஸ்கலாவானோடு ஆங்கிலன் சொல்லிக் கொண்டே பேர்லின் சிறுவேலைச் சாலைக்குள் நுழைந்தான். நுழைதலும் அதனைப்பார்த்து, இத்தொழிற்சாலை நன்னிலைக்கு வருமென்பதில் ஐயமில்லை. இதுகாறும் ட்ரேஸ்டேன்சீனு! ட்ரேஸ்டேன்சீனு! என்றதெல்லாம் இனிச் சிலநாட்களில் பேர்லின்சீனு! பேர்லின்சீனு!! எனயாவரும் புகழ்ந்து கொண்டாடிப் புகலும்படியாகும். அன்றியும், இஃது உலகிற்கு மிகப்பயன் செய்யத் தக்கதென்றே தோன்றுகின்றது. இதுநிற்க, இங்கேபார்! போரிற் பிடிபட்ட நிர்ப்பாக்கியப் பிராணிகளின் முகத்தை நோக்கும்போதே உங்களரசன் சரிதம் நன்குவிளங்குகின்றதே!" என்று அவ்வாங்கிலன் அஹஸ்கலாவானோடு அதிரப் பேசினான்.

உள்ளவாறே அத்தொழிலாளிகளின் முகங்களில்மிக்கவிசனமும்விசாரமுங் காணப்பட்டன. "அடுத்தது காட்டும் பளிங்குபோனெஞ்சங்—கடுத்தது காட்டுமுகம்" என்பது பொய்யாமொழியன்றோ? அவ்வாங்கிலன் சோபாமணியைச் சுட்டிக்காட்டிப் பின்னுஞ் சொன்னதாவது: "துயரே வடிவெடுத்தது போற்றோன்றும் அப்பெண்பாவையைப் பார்த்தையா! விசாரணைத்தலைவன் அருகுநிற்கும்போதும் எவ்வளவு வெறுப்போடு வேலைசெய்கிறாள்பார். இப்படித்தான் உங்களடிமைகளெல்லாம் உறுதுயர் நுகர்ந்து உழைக்கின்றனர். எங்கள் ஆங்கிலக் கைத்தொழிலாளிகள் (நீ அவர்களைப் பார்த்தால் தெரியும்) வேலைசெய்யும் விதமேவேறு. என்னெனில், அவர்கட்கு இவ்வித நிர்ப்பந்தமில்லை. எல்லாரும் சுதந்திரர்கள்."

இதனைச் செவியுற்ற கலாநிதி "சுதந்திரரான ஆடவரும் மகளிரும் பிணியுறுவதில்லையோ? அல்லது, ஆங்கிலராகிய நீங்கள் எப்பொழுதேனும் உடலம், நோயுற்றால், கொற்றவன்மேற் குற்றங்கூறுதல் இயல்போ? இப்பொழுது நீ காணும் இப்பெண்மணி ஏதோ உடல்நோயுற்றாளேயன்றி உள்ளநோயுற்றாளல்லள். அவளுக்குற்றநோய் இன்னதென விசாரணைத் தலைவனைக் கேட்டறிகின்றேன்" என்றான்.

பின்னர், கலாநிதி விசாரணைத் தலைவனைநோக்கி, ஆங்கிலனறியா மொழியில் பல வினவி, அவற்றிற்கு அவன் விடுத்தவற்றை ஆங்கிலனுக்குஅறிவியாது மறைத்துவிட்டான். ஏனெனில், அரசனுக்கு வசையாகும் செய்திகள் எதையும் பிறர் அறிவதில் அவனுக்கு விருப்பமில்லை. ஆகவே, அவன் முன்னம் அவ்வாங்கிலனோடு உரையாடிவந்த சங்கதிகளை விட்டு மற்றொன்றைத் தொட்டுப் பேசலுற்றான். பரீக்ஷார்த்தம் ஆங்கிலன் செய்யும் வேலைகளைப்பார்த்துக்கொண்டு மற்றவரெல்லாம் அங்குள்ள உலைக்களத்தைச் சூழ்ந்திருக்கையில் நம் கலாவான் சோபாமணி தொழில் செய்துகொண்டிருந்த கூடத்திற்புகுந்து "பெண்ணே! உனக்கு உடம்பு என்னை? நீ இங்குவந்த நாள்முதல் பார்த்து மகிழத்தக்க வேலையாதும் செய்திலையென்று விசாரணைத்தலைவன் குறைகூறுநின்றான். ஆயினும் இவ்வழகிய வேலை (அவள் செய்து ஸாக்ஸனியினின்று கொணர்ந்து வைத்திருந்த ஒரு கிண்ணத்தைச் சுட்டி) நினதுபுத்திசாதுர்யத்தாற் செய்யப்பட்டதன்றோ!" எனக் கேட்டான். அதற்கு அவள்சொன்னது: "ஆம் ஐயா! யான் செய்ததே. இந்தப்பாழுங் கிண்ணந்தான் என் துயருக்கு மூலம். இதனை அரசன் பார்த்திரானாயின், அல்லது இதன்கண் அவன் விருப்பங்கொண்டிரானாயின் யான் இப்பொழுது கவலையின்றி——" இதனைக்கூறிமுடிப்பதன்முன் அவளுக்குத் தனது வீட்டின் ஞாபகம் தோன்றி அதனால் மனங்கொள்ளாத் துயரத்தால் வாய்தடுமாறி வார்த்தை சொல்ல வல்லளல்லளாய் மெய்மறந்து மயக்கமுற்றனள்——. உடனே அஹஸ்கலாவான்,"நீ இப்பொழுது ஸாக்ஸனியிலிருப்பாயன்றோ!" என்றுகூறி, "ஸாக்ஸனியை மறந்தொழிவாய். நினக்கு இப் பேர்லினில்யாதுகுறை?" என்றான்.

அதற்கு அச்சிறுமி மிக்க வணக்கத்தோடு "யான் ஸாக்ஸனியை மறந்தொழியேன்"

யான்மிக்க பாசங்கொண்டுள்ள என் தாய்தந்தையரை எப்படிமறப்பேன்! எவ்வாறு துறப்பேன்! அவர்களோ முதிர்ந்தவயதும் தளர்ந்த நிலையுமுடையவர்கள். 'தந்தைதாய் பேண்' என்னும் சத்தியவசனத்தைச் சிந்தையிற் கொண்ட யான் அதனை எங்ஙனஞ் சிதறவிடுவேன்! அவர்கள் என் கையைப்பார்த்துக் காலந் தள்ளுபவர். ஆகவே, எனது அன்புக்குரிய எதனையும்——எனது ஆசைக்கு விஷயமான எவரையும் மறவேன். மறப்போமெனினும் என்னால் இயலவில்லையே!" என்று உறுதியாக உத்தரங்கூறினாள்.

இன்னணம் அவள் சொன்னவுடனே, அயலின்ற ஒரு ப்ரஷ்ய பணியாள், "ஐயா, இவளுக்குப் ட்ரேஸ்டனில் ஒரு நண்பனுண்டு. அவனை மணஞ்செய்துகொள்ளநிற்குந்தருணத்தில் இவளை இவ்விடத்திற்குக் கொணர்ந்துவிட்டனர்" என்று மறைவாய் அஹஸ்கலாவானது காதிலோதினான். அதற்கு அவன் "அந்நண்பன் இவளோடு இங்குவாராமை யென்னை?" என, வேலையாள், "அவன் பேர்லின் சிறைச்சாலையிலிருக்கின்றான். அவனைக் காட்டிவிடாதீர் எனநம்புகின்றேன்" என்றான்.

கலாவான்:—யான் எவரையுங் காட்டிக்கொடுத்ததுமில்லை; காட்டிக் கொடுப்பதுமில்லை. இங்ஙனமாக அபாக்கியரும் துணையற்றவருமான எளியவரையோ காட்டிக்கொடுப்பேன். ஒருகாலும் அது செய்யேன். அஃதிருக்க; இவளுடைய துணைவன் ஏன் சிறையிருக்கின்றான்?

பரஸஹன்:—இவள் இனி அவனைத் தனதாசைக்கியைந்த அன்பனென்று சிந்தையிலுங்கருதலாகாதென்பது அரசனாணை. ப்ரபுசித்தம்கனசித்தமன்றோ! அன்றியும், இந்த ஸாக்ஸனிப் பெண்களெல்லாம் பேர்லின் போந்தநாள் தொடங்கி ப்ரஷ்யமைந்தரையே மணக்கவேண்டுமென்ற கட்டுப்பாடுண்மையை நீங்கள் அறிவீர்களே. அவ்வாறே இச்சோபாமணியென்னும்பெண்மணியும் ஒரு ப்ரஷ்யனுக்கு மணம்புகவேண்டுமென்று ஏற்பாடாகியுளது. அவனோ, இவள் கலியாணத்திற்குடன்படாது இனிக்காலந்தாழ்ப்பளாயின் இவளது பிடிவாதத்தை ப்ரேடரிக் ராஜனுக்கு அறிவிப்பதாக உறுதிகொண்டு நிற்கின்றான். போதாக்குறைக்குவேலைச்சாலைவிசாரணைத்தலைவனும் இவள் ஒழுங்காய் வேலைசெய்வதில்லையென்று அரசன்பாற் குற்றங்கூற ஆயத்தனாகி யிருக்கின்றான். இந்நிலையில் இவள் இன்னும் இவ்வாறே இருப்பளாயின் இவள்கதி யாதாகுமோ? அது நீங்களே அறிவீர்கள். யாரும் இவளுக்கு இதனைப் பன்முறை யெடுத்துரைத்தும் பயனொன்றுமில்லை. இவளோ பித்துக்கொண்டவள் போலிருக்கின்றாள். எவ்வாறாயினும் அரசனாணைக்கு அமைந்து நடத்தலே தகுதி. "வேந்தன்சீறினாந்துணையில்லை."

(இன்னும்வரும்.)

கே. எஸ். கோபாலாசாரியார்.

## கள்ளுண்ணமை.

### தென்னமரக்கும்மி.

சோபனமடி சோபனமே சுபசோபனம் தமிழ்ப்பாட
அச்சோடிப்பெண்காள் சோபனமே அம்மாடிப்பெண்காள் சோபனமே

(கள்) என்னைக் குடித்தவர்கள் என்னைப்புகழ்ந்து கொண்டாடிப்
பித்தம் பிடித்தவர்போல் பேசாதும் பேசிடுவார்



மானிடர்க்குள் நான்புகுந்து மாறாட்டம் செய்து வைப்பேன்
சண்டைகளு மென்னாலே சவுரியமு மென்னாலே
ஆண்மைகளுமென்னாலே அடிதடிக ளென்னாலே
குத்து வெட்டு மென்னாலே குடிகெடுவது மென்னாலே
கீழ்விழுந்து மேல்புரண்டு கிடப்பதுவு மென்னாலே
கச்சேரி கோர்ட்டுகளைக் கண்டறிவது மென்னாலே
பெண்பிள்ளை தாலிவிற்றுப் பேர்கெடுவது மென்னாலே
அழியாத செல்வங்களை அழிப்பதுவு மென்னாலே
குறையாத செல்வங்களைக் குறைப்பதுவு மென்னாலே
காணிவிற்பது மென்னாலே கடன்படுவது மென்னாலே
பூமிவிற்பது மென்னாலே புண்படுவது மென்னாலே
சபையிலுள்ள பேர்களெல்லாந் தலைகுனிவது மென்னாலே
கொற்றவரும் மாதர்களுங் குணங்கெடுவது மென்னாலே
மன்னர்களும் மாதர்களும் மனமழிவது மென்னாலே
சீச்சீ யென்பது மென்னாலே சீரழிவது மென்னாலே
போ போ வென்பது மென்னாலே பொல்லாங்காவது மென்னாலே
என்னுடைய கெடுதிகளை எல்லாம் சொல்லப் புகுந்தால்
எண்ணித் தொலையாது எட்டிலுமே யடங்காது
சொன்ன சொல்லைக் கேட்டு நீரும் சுகம்பெறவே வழிதேடும்
இல்லையென்றால் ஏமாந்து இழுக்கடைவீர் இதுநிசமே.

—Temperance Tracts.

## சம்பகமாலை
அல்லது
## இளையராஜாவின் தீர்மானம்.
### I. அங்கம்.

லகாராணா - மைவார்தேசத்துராஜா
பீலம்தேவ் - பிரதான்
பேர்சிங்ரவால் - சைந்யாதிபதி
சதாசிவபட், கோபிச்சந்து } இரண்டுபிராமணர்கள்
சோண்டா - லகாராணாமகன், இளையராஜா

முதற்களம் - சபாமண்டபம்

லகாராணா பீலம்தேவ் பேர்சிங்ரவால் சதாசிவபட் கோபிச்சந்த் இவர்கள் சபையில் வீற்றிருக்க.

லகாராணா.—பிரதான்ஜீ!

பீலம்தேவ்.—சித் ஸ்ரீமகாராஜாதிராஜ் மகாராணா லகாராணா ஹிந்துவாசுராஜ சூரியவம்சி மகாராஜ்! கிருபை செய்யவேண்டும்.

லகாராணா.—இரண்டு வருஷங்களுக்கு முந்தி மார்வார மலைப்பிரதேசங்களை ஜயித்தோமே, அவ்விடத்திய பிரஜைகள் நம்முடைய ஆளுகைக்கு அடங்கி நடந்துக் கொண்டிருக்கிறார்களா? விராடகர் கோட்டையை முழுதிலும் இடித்து ஆய்விட்டதா? விராடகரைக் காட்டிலும் பேட்னூர் மிகவும் அரணான இடமென்று நினைக்கின்றோம். நமது தேசத்தின் எல்லைப் பிரதேசங்களில் அரணான சில மலைக்கோட்டைகள் அவசியம் சீக்கிரத்தில் கட்டிமுடியவேண்டும். பேட்னூர் கோட்டை கட்டிமுடிந்ததா?

பீலம்தேவ்.— மார்வார மலைப்பிரதேசத்துக் குடிகளால் நமக்கு யாதொரு தொந்திரவும் இடையாது மகாராஜ்! அவர்களெல்லோரும் நம்முடைய இராஜரீகத்தை மெச்சிக் கொள்ளுகிறார்கள். பேட்னூர் மலைக்கோட்டை இன்னும் ஒரு வருஷத்தில் முடிந்துவிடும். விராடகர் கோட்டையை இடித்துத் தரையோடு தரையாய் நிரவிவிட்டோம்.

லகாராணா.—நாகர்க்காலில் சங்கள ராஜபுத்திரர்களை

வெல்லும்படி சைந்நியம் அனுப்பினோமே, அங்கிருந்து ஏதாவது செய்தி கிடைத்ததா?

பீலம்தேவ்.—சங்களராஜபுத்திரர்கள் தோற்றுப்போனார்களென்று அரைநாழிகைக்கு முன் செய்தி கிடைத்தது மகாராஜ். அந்தச் சைந்நியத்துக்கு தளகர்த்தராகச் சென்ற ரன்சோர் ரவால் உயிரிழக்க மயிரிழை தப்பினாரென்று ஹர்க்கார் சொல்லுகிறான்.

லகாராணா.—ரன்சோர் ரவாலுடைய வீரத்தன்மையை நாம் ஒரு காலத்தில் நேரில்கண்டு ஆனந்தமடைந்தோம். நாம் பேட்னூரில் டில்லி சக்கிரவர்த்தியாகிய மகம்மதுஷா லோடியின் மீது வெற்றிகொண்டோமே, அக்காலத்தில் ரன்சோர் ரவால் செய்த சாகசத்தைப் பற்றி யாது நினைக்கின்றீர். நம் சைந்நியாதிபதி நன்றாய் அறிவார்.

பேர்சிங் ரவால்.—அறிவேன் மகாராஜ்! மிகவும் அற்புதமான செயல்; நான் பலமுறைகளில் அவருடைய சாமர்த்தியத்தைச் சோதித்துப் பார்த்திருக்கிறேன். எனக்குப் பின்னால் சைந்நியத்துக்குத் தலைமை வகிக்க அவரன்றி எவர் உரியவர்?

லகாராணா.—பிரதான்ஜீ! நம்முடைய முன்னோர்கள் இழந்த ராஜ்ஜியங்கள் எல்லாவற்றையும் மீட்டுக்கொண்டோம். நம் புத்திரர்களெல்லாம் வெவ்வேறு தேசங்களைச் சம்பாதித்து ஆண்டு வருகிறார்கள். இனித் தேசங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற ஆவல்கிடையாது. சுமார் பத்துத் தலைமுறைகளாக நம்தேசத்தில் ஓயாத சண்டை நடந்தமையால் தேசம் பாழாய்விட்டது. ஜனங்கள் விவசாயம், கைத்தொழில் முதலிய ஜீவனோபாயமான தொழில்களை விட்டுவிட்டார்கள். இனி தேச அபிவிருத்திக்காக வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும். பொக்கிஷத்தில் சாதாரணமான செலவுகளுக்கு வேண்டிய தொகைபோக மிகுதியாய் எவ்வளவுபணம் இருக்கிறதென்று கணக்கிட்டு விவசாயிகளுக்காக ஏரிகள் ஏராளமாய்க் கட்டும்படி உத்தரவு செய்யும். மழையில்லாத காலங்களில் சிலகிராமங்களில் குடிக்க ஜலம் கிடைப்பதில்லை. அவ்விதமான கிராமங்களிலும் பட்டணங்களிலும் குளங்களை வெட்ட உடனே உத்தரவுசெய்துவிடும். சில பிரதானமான கோவில்களும் நம் அரண்மனையில் சிலபாகங்களும் அல்லாவினால் இடிக்கப்பட்டதன்றோ! அவைகளெல்லாம் உடனே புதுப்பிக்கப்படவேண்டும். நம்மைப் படைத்த பிரம்மாவுக்குக் கோவில் எத்தேசத்திலும் கிடையாது. நம்தேசத்தில் அஃதொன்று இருத்தல்வேண்டும். யாவரும் வியக்கத்தக்க தேவாலயம் ஒன்று கட்டல்வேண்டும். இவ்வளவும் நம்முடைய காலத்தில் முடிந்துவிடவேண்டும். ஒருவேளை பொக்கிஷத்தில் இருக்கும் பணம் போதாமற்போகும். ஜவுரா மலைப்பிரதேசங்களில் வெள்ளி, ஈயம், தகரம் முதலிய லோகங்கள் அகப்பட்டனவென்று சொன்னீரல்லவா? வேண்டிய ஆட்களைவைத்து அவைகளை வெட்டி எடுக்கச்செய்யும். நம்தேசத்துப்பிரஜைகளுக்குத்தக்க ஜீவனம்கிடைப்பதுடன் நாம் இனி முன்னுக்குச் செய்யவேண்டிய செலவுகளுக்குப் பணமும் கிடைக்கும்.

பீலம்தேவ்.— உத்தரவுப்படி செய்கின்றேன் மகாராஜ்.

சதாசிவபட்.—மகாராஜ்! தங்களுடைய ஆளுகையில் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களும், மற்றவர்களும் மிக்க க்ஷேமத்தை அடைந்திருக்கிறார்களென்பதற்கு ஐயமில்லை. இனி அவர்கள் மேன்மேலும் விருத்தியடைவார்களென்பதற்கு உங்களுடைய நற்குணமே அறிகுறியாக விருக்கின்றது. பிரஜைகளுடைய குறைவு நிறைவுகளை அறிந்திருப்பது ராஜாக்களுக்கு முக்கியமான லக்ஷணம், தயையுடைமையும் அவ்வாறே. இவ்விரண்டு குணங்களையும் தாங்கள் நிறையப் பெற்றிருக்கின்றீர் என்று தாங்கள் பிரதான்ஜி அவர்களுக்குக் கொடுத்த கட்டளையினாலேயே அறிந்தோம். இனி நாங்கள் எதற்காகச் சிந்திக்கவேண்டும்?

கோபிசந்த்.—மகாராஜ்! தங்களுடைய பிரஜைகள் அனுபவிக்கும் சுகத்துக்கு அளவுகிடையாது. தங்களுடைய பிதாமகனாகிய ஹமீர் மகாராஜாவின் ஆளுகையிலன்றோ பிரஜைகளுக்குச் சுகமென்கிற வித்து இத்தேசத்தில் நாட்டப்பட்டது. அதன் பலன் தங்களுடைய ஆளுகையில்தான் கிடைத்தது. அக்காலத்தில் ஜனங்கள்பட்ட கஷ்டத்தை நினைத்துக் கொண்டால் உடல் நடுங்குகின்றது. மகாராஜ்! ஆனால் சுகானுபவம் கிடைத்தகாலத்தில் அதற்குமுன் அனுபவித்த கஷ்டங்களை நினைத்துக்கொள்வதினாலும் சுகமுண்டாகும். இம்மைவார் ராஜவமிசத்துக்கு நேரிட்ட கஷ்டங்களை இப்போது நினைத்துக்கொண்டால் பயங்கரமான சொப்பனம்கண்டு விழித்தவனுக் குண்டாகும் சுகம் உண்டாகின்றது. சித்தூரை அல்லா முற்றுகை போட்டதும், ராஜபுத்திரிகளுக்குச் சூடாமணியென்று பெயரெடுத்த பத்மினியைக் கிரகிக்க யத்தனம்செய்ததும், துருக்கருடைய காமாக்கினிக்கு ஆளாகாமல் ராஜபுத்திரிகளெல்லாம் 'ஜோஹர்' என்கிற பெரும் அக்கினியில் குதித்துக் கற்பு நிலைகாத்துக் கொண்டதும், பின்னர் மகாராணாவும் மற்றுமுள்ள ராஜபுத்திரர்களும் மஞ்சட்சேலையுடுத்திப் போர் முனையில் சென்று மாண்டதும், அதற்கும் பிற்காலத்தில் மற்றோர் துருக்க ராஜன் முற்றுகைபோட மகாராணாவும் அவருடைய பதினொரு புத்திரர்களும் தெய்வசாபத்தினால் போர்செய்து மடிந்ததுமாகிய இச்சம்பவங்களை நான் என்ன சொல்லப்போகிறேன். மகாராஜ்! கேட்கக்கேட்க மைவார் மகாராஜாக்களுடைய செயல்கள் அற்புதமாயிருக்கின்றன.



சதாசிவபட்.— அதிருக்கட்டும் மகாராஜ்! தங்கள் பிதாமகனாகிய ஹமீருடைய சரித்திரத்தை என்னவென்றுசொல்வேன்! அவராலேயன்றோ மைவார் ராஜாக்களுக்குச் சித்தூர் கிடைத்தது? கில்ஜி மகம்மதுவினிடத்தில் ஊழியம் செய்துக்கொண்டிருந்த மலதேவ், பன்பீர்சிங்கு ஆகிய இவ்விருவரும் துருக்கனுடைய ஆட்சியினின்று மீண்டது ஹமீரினாலன்றோ? சித்தூர் பட்டணத்தை மீட்டுப்பன்பீர்சிங்குக்குக் கொடுக்கும்போது ஹமீர் "ஓய் பன்பீர்சிங்கு இதுவரையிலும் நீர் ஒரு துருக்கனுக்கு ஊழியனாயிருந்து இச்சித்தூரை ஆண்டுவந்தீர். இப்பொழுதோ உம்முடைய ஜாதியானுக்கு நீர் ஊழியக்காரனாயிருக்கிறீர். சாப்பிடும், ஊழியம் செய்யும், நன்றி மறவாதிரும்" என்று மொழிந்தார். என்ன கம்பீரம்! என்ன தயை! என்ன உதார குணம்! சூரியவமிச ராஜாக்களுக்குத் தகுமேயன்றி வேறொருவருக்குத் தகாது மகாராஜ். இனி ஏதாவது அப்பேர்க்கொத்த ஆபத்து நேரிடுமாகில்,—

பேர்சிங்ரவால்.—(மீசையை முறுக்கிக் கொண்டே) என்ன பேச்சுப்பேசுகின்றீர் சதாசிவபட்! பிராமணன் பேசுகின்ற பேச்சாயிருக்கின்றதே யொழிய க்ஷத்திரியன் பேசும் பேச்சாக இருக்கவில்லை இந்தபுஜங்களும், மகாராஜாவால்பரிசு அளிக்கப்பட்ட இந்தவாளும் எதிரிகளை நாசமாக்குவதற்கு ஒருக்காலும் பின்னடையாதென அறிந்துகொள்ளும்.

லகாராணா — சபிகர்காள்! சைந்நியாதிபதி! ஸ்ரீ ஏகலிங்கருடைய கிருபையும், உங்களுடைய சகாயமும் கிடைத்திருக்கிறவரையில் எமக்கு யாது குறை நேரிடப்போகின்றது? ஒருகுறையும் நேரிடாது.

(ஹர்க்கார் உள்ளே நுழைகிறான்.)

ஹர்க்கார் — சித் ஸ்ரீமகாராஜாதிராஜ மகாராணா லகாராணா மகாராஜ். ஹிந்து வாசுராஜ் சூரியவம்சி, மகாராஜ்! மனுச்செய்து கொள்ளுகிறேன்.

சபிகர்கள்.—ஏகலிங்க கிஜேய்.

சதாசிவபட்.— ஹர்க்கார்! என்ன சமாசாரம்? மகாராஜா அறியச்சொல்.

ஹர்க்கார்.—(கைகூட்டி) மகாராஜ்! மார்வார் மகாராஜாவாகிய ராவ் ரின்மல் அவர்களிடமிருந்து தேங்காய் வந்திருக்கின்றது.

லகாராணா.—அப்படியா! ஆனால் தேங்காய் கொண்டுவந்த ராவ் ரின்மல் அவர்களின் புரோகிதரைச் சபைக்கு வரச்சொல்.

ஹர்க்கார்.—நல்லது மகாராஜ், அப்படியே.

(புரோகிதர் முதலியவர்கள் சபைக்கு வருகிறார்கள்.)

லகாராணா.—(மிக்க மரியாதையுடன்) புரோகிதரே வரவேண்டும். இவ்வாசனத்தில் எழுந்தருள்க. உங்களுடைய மகாராஜாவும் மற்றவர்களும்க்ஷேமமா? தேசம் க்ஷேமமாயிருக்கின்றதா? பிரஜைகளெல்லாம் நிரோகிகளாகவும், திருப்தியுடையவர்களாகவும் இருக்கின்றார்களா?

புரோகிதர்.—ஆம், மகாராஜ்! தங்களுடைய ஆசீர்வாதத்தால் மகாராஜா சுகமாயிருக்கின்றார். சூரியவமிச மகாராஜாக்களுடன் விவாக சம்பந்தம் செய்யவேண்டுமென்றுஎங்களுடைய மகாராஜாவுக்கு வெகுநாளாய் ஒரு கோரிக்கை உண்டு. அதை யிட்டு இந்தத்தேங்காயை அனுப்பி யிருக்கின்றார். பிரம்மகடனம் எப்படி யிருக்கின்றதோ தெரியவில்லை. எல்லாம் ஈசன்செயல்.

லகாராணு.—புரோகிதரே, எமதுகுமாரன் ஏதோ ஒரு காரியத்தை உத்தேசித்துச் சபைக்குப் புறம்பே சென்றான். வரும் சமயமே. வந்து தேங்காயை அங்கீகரிப்பான் (புன்சிரிப்புடன் தாடியை உருவிக்கொண்டே) அவனுக்கன்றி தாடிநரைத்த கிழவனாகிய எனக்கா நீங்கள் இவ்விதமான விளையாட்டுப் பண்டங்களை அனுப்பப்போகிறீர்கள். நான் நினைக்கவில்லை.

(சபையார் கொல்லென்றுசிரிக்க.)

கோபிசண்ட்.—யதார்த்தம் மகாராஜ்! விருத்தாப்பியதசையடைந்த தங்களுக்கேன் கந்நிகை! தடையின்றி இளையராஜனாகிய சோண்டாமகாராஜனுக்கே.

சதாசிவபட்.— சம்பாஷணைக்குச் சாதுரியமானது புளிப்புக்கு உப்பிடுவதுபோல்; சாதுரியம் நிறையப்பெறாச்சம்பாஷணை ரசம்பிழிந்தெடுத்தகரும்புச்சக்கைபோல் உருசியற்றது. மகாராஜா சாதுரியமாய்ப் பேசினாரன்றி வேறில்லை.

சோண்டா.—(சபையில் நுழைந்து) மகாராஜாவே! சபிகர்காள்! கெட்டி! கெட்டி! சாதுரியத்தினால் உண்டாகும் அற்ப இன்பத்துக்காகவா மரியாதையினாலுண்டாகும் பேரின்பத்தைக்கைவிட்டீர்கள். சதாசிவபட்! சம்பாஷணைக்கு மரியாதை ஒரங்கமன்றோ? மரியாதையைக்காட்டிலுமா சாதுரியம் அதிக உருசிபெற்றது! சிரத்தைக்கண்டித்து மற்ற அவயவங்களை உபயோகப்படுத்திக்கொள்ள யத்தனிப்பவன்போல் மரியாதையை மறந்து அஃது இருக்கவேண்டிய இடத்தில் சாதுரியத்துக்கு இடங்கொடுத்தீர்கள். இவ்விதமாகத்தானோ வரனைத்தேடிவரும் ஒரு ராஜபுத்திரிக்கு மரியாதைசெய்வது? பரிகாசமாயாவதுமகாராஜா அக்கந்நிகையைத்தமக்கென்று நினைத்துவிட்டமையால் நான் அக்கந்நிகையை அங்கீகரிப்பது உசிதமா? அப்படிச்செய்வது அவ்விராஜபுத்திரிக்கு அபராதம் செய்ததாகும். மனம், வாக்கு, காயம் என்கிற திரிகரணங்களில் எந்தக்கரணத்தினால் செய்தாலும் ஒன்றே. வாக்கினால் மகாராஜா அக்கந்நிகையைத் தம் மனைவியென்று சொல்லிவிட்டார். இனி அவ்விராஜபுத்திரியை நான் மாதாவென்று நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

லகாராணு.—(சபிகர்களெல்லாம் நடுநடுங்கிநிற்க) புத்திரா! எதற்காக இவ்வளவு நிஷ்டூரமாய்ப் பேசுகின்றாய்? ஏன் உனக்கு இவ்வளவு ரோஷம்? உனது தர்மகுணத்தையும், உன்மனஉறுதியையும், ஸ்திரீகளிடத்தில் நீவைத்த மரியாதையையும் நான் கண்டுகளித்தேன். நீ சூரியவமிசத்தில் பிறக்க ஏற்ற குழந்தையென்று சமுசயமின்றி அறிந்தேன். நான் சாதுரியமாய்ப் பேசினேனன்றி வேறில்லை. மனதினாலே எண்ணினாற்றான் தோஷமாக எண்ணப்படுமேயன்றி, அப்படி ஒன்றையும் எண்ணாமல் வாக்கினாற் சொல்வது தோஷமாகாது. மனதினால் ஒன்றையும் எண்ணவில்லையென்று உறுதியாய்ச்சொல்லுவேன். ஆகையால் புத்திரா! மூர்க்கமாய்ப் பேசாதே. நீ எனது சொல்லைக்கேட்டுக் கந்நிகையை அங்கீகரிப்பாயாக.

சதாசிவபட்.—மகாராஜா அவர்கள் சொல்வது யுக்திக்கும் தர்மசாஸ்திரத்துக்கும் பொருந்தியதாயிருக்கின்றது. எக்காரியத்திற்கும் மனமே ஆதாரம். மனச்சம்பந்தமின்றி வாக்கு நிஷ்பிரயோஜனமானது. வாக்கு திரிகரணங்களில் ஒன்றானாலும், அதனால் வெளியிடப்பட்டதெல்லாம் மனதில் கொண்ட கருத்தாகமாட்டாது. உண்மையான கருத்தைக்காயகர்மங்களைக்கொண்டே அறிதல் வேண்டும். ஆகையால் சோண்டாமகாராஜாவே தங்களுடைய பிதாவினெண்ணம் கெட்டதாக விருக்குமென்று சமுசயிக்க வேண்டுவதில்லை.

கோபிச்சந்த்.— மகாராஜா சாதுரியமாய்ப் பேசிச் சபையைக் களிக்கச்செய்ய உத்தேசித்தனரேயன்றி அக்கந்நிகையைத்தாம் மணம்புரியஉத்தேசித்து அவ்வாறு சொன்னாரென்று எவரும் சொல்லத்துணியார். சாதுரியமெல்லாம் மற்றவருக்குத் தோன்றாத ஒருபொருளைத் திடீரெனக் கற்பிப்பதாகையால் சாதுரியவான்கள் சாதாரணமாய் காலம், தேசம், சந்தர்ப்பம், முறை முதலியவைகளை நோக்கார். சாதுரியத்துக்கு இடம் கொடுக்கும் சந்தர்ப்பமே அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பமாகத்தோன்றும். இது மானிட சுபாவமாகையால் அதைப்பற்றிச் சிந்திப்பது வீணாகும்.

லகாராணு.— சத்தியத்தைச் சொன்னீர் கோபிச்சந். நீர் சொன்னதே வாஸ்தவம். பிள்ளாய்! முரட்டுத்தனமாய்ப் பேசாதே. (கையைப்பிடித்துப் பக்கத்தில் அழைத்துக்கொண்டு) வயதிலும், அனுபவத்திலும் சாஸ்திர ஞானத்திலும்



சிறந்த இச் சபிகருடைய வசனத்தைக்கேள். அவர்கள் உனக்கு ஹிதமல்லாதவொன்றையும் சொல்லார்கள். உன்னுடைய க்ஷேமத்தையே நாடும் பிதாவாகிய நான்சொல்வதைக்கேள். தேங்காயை அங்கீகரியாமல் திருப்பி அனுப்புவது சரியன்று. சமானமான அந்தஸ்துடைய நின்மல் மகாராஜனுக்கு அவமரியாதை செய்ததாகும். அது ராஜதர்மமல்ல. என்னசொல்லுகிறாய் புத்திரா?

சோண்டா.—என்ன சொல்லப்போகிறேன் பிதாவே. தேங்காயைத் திருப்பவேண்டிய ஆவசியகமென்ன இருக்கின்றது. அக்கந்நிகையை நான் மாதாவென்றேஉறுதியாய்க்கொண்டுவிட்டேன். இனி தடைநேரிட்டால் உம்மால்தான். தாங்கள் சொன்னவற்றையும் சபிகர்கள் சொன்னவற்றின் பொருளையும் நன்றாய்த் தெரிந்துகொண்டேன். ஆயினும் அபலைகளாகிய ஸ்திரீகளுக்குச் செய்யும் அபராதத்தைமாத்திரம் சகியேன். சாதுரியத்திற்காகவல்லவோ மரியாதை இரையாக்கப்பட்டது. இனி அவ்விஷயத்தைப்பற்றிப் பேச வேண்டுவதில்லை பிதாவே. அதனால் எனக்கு என்ன நஷ்டம் வந்தாலும் சரிதான்; கஷ்டம் வந்தாலும் சரிதான்.

லகாராணு.—ஹா! மூர்க்கா! பாற்கடலில் ஆலகாலவிஷம் பிறந்தாற்போல் பிதுர்வாக்கிய பரிபாலனத்தினால் மேன்மை பெற்ற இந்த ரகுகுலத்தில் நீ ஏன் பிறந்தாய்? குலதர்மத்தைவிட்ட பிரஷ்டா! நான் கிளிப்பிள்ளைக்குச் சொன்னதுபோல் சொல்லியும் கேளாது ஒழிந்தாய். சபிகர்களையும் அவமதித்தாய். நின்மல் மகாராஜாவுக்கும் அவமரியாதை செய்தாய். நல்லது இருக்கட்டும். (சபிகர்களைப்பார்த்து) சபிகர்காள்!

சபிகர்கள்.—மகாராஜ்! சொல்லியருளல்வேண்டும்,

லகாராணு.— எனக்கோ விருத்தாப்பியதசை வந்துவிட்டது. என்னுடைய யௌவனகாலத்தில் வேண்டியமட்டும் காமிய சுகங்களை அனுபவித்தேன். இனி எனக்கு போகஇச்சை கிடையாது. புத்திரர்களெல்லோரும் அரசுபுரிய ஏற்றவர்களாய்விட்டார்கள். ஜேஷ்ட புத்திரனாகிய இவனுக்கு விவாகம்செய்துராஜ்ஜியபாரத்தைஅவன்மீது சுமத்திக் காட்டுக்குச்சென்று க்ஷத்திரியனுடையஆச்சிரமதர்மத்தை நிறைவேற்ற விருப்பம் கொண்டிருந்தேன். இவனுடைய மூர்க்ககுணத்தினால் நான் இன்னும் சிறிதுகாலம் கிரகஸ்ததர்மத்தை நிறைவேற்ற வேண்டியதாய் நேரிட்டுவிட்டது. அப்படிச்செய்யாமல் தேங்காயைத் திருப்பிவிடுவது தர்மமா சொல்லுங்கள்.

சபிகர்கள்.—ஒருக்காலும் ராஜதர்மமாகாது மகாராஜ்.

லகாராணு.— ஆகையினால்தான் சபிகர்காள் இந்தத்தேங்காயை நானே அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. நான் அங்கீகரிப்பதனால் அவ்விராஜபுத்திரியின் கருத்து நிறைவேறமாட்டாது. வாலிபனான பர்த்தாவையும் தனது புத்திரனுக்கு ராஜ்ஜியபாரத்தையும் கோரிவந்த ராஜபுத்திரிக்கு என்னை மணம்புரிவதனால் இவ்விரண்டும் கிடைக்கமாட்டாவே. வாலிபனான பர்த்தா ஆவதற்கு என்னால் முடியாவிட்டாலும் ராஜ்ஜியபாரம் அவ்விராஜபுத்திரியின் புத்திரனுக்குக் கொடுக்கமுடியுமன்றோ? ராஜபுத்திரி ராஜ்ஜியத்தையாயினும் எதிர்பார்ப்பாளல்லவோ. அதைக்கொடாமலிருப்பது தர்மமாகுமா? ஆகாது. ராஜ்ஜியமோ குலதர்மப்படி ஜேஷ்ட புத்திரனுக்குச் சேரவேண்டியது. (புத்திரனை நோக்கி) ஆகையால் புத்திரா மற்றொரு முறை கண்டிதமாய்ச் சொல்லுகின்றேன். நீ அந்தத் தேங்காயை அங்கீகரிக்காமல் என்னை அங்கீகரிக்கச் சொல்லும்பக்ஷத்தில் உனக்குப் பிறப்பினால் வரவேண்டிய ராஜ்ஜியத்தை இழந்துவிடுவாய். ராஜ்ஜியமானது அவ்விராஜபுத்திரிக்குப்புத்திரன் பிறக்கும்பக்ஷத்தில் அவனுக்குப் போய்விடும். என்னசொல்லுகிறாய்! யோசித்து இச்சபிகர்கள் அறியச்சொல்.

சோண்டா.—தடையின்றி ராஜ்ஜியத்தை உமதிஷ்டப்படி கொடுத்துவிடலாம் பிதாவே. தர்மநிலையிலிருந்து நழுவினால் மறுபடியும் அந்நிலை கிடைப்பது அருமையேதவிர ராஜ்ஜியமிழந்த ராஜபுத்திரனுக்கு ராஜ்ஜியம் கிடைப்பது அருமையா? இந்த புஜங்களில் பராக்கிரமம் உள்ளவரையில் எனக்கு ராஜ்ஜியங்களுக்குக் குறைவேகிடையாது. ஒரு நொடிக்குள் ராஜ்ஜியத்தைச் சம்பாதிப்பேன். அதற்காக நான் சிந்திக்கவேயில்லை. இந்த ராஜ்ஜியத்தை உமதிஷ்டப்படியே அந்த ராஜபுத்திரியின் புத்திரனுக்குக்

கொடுத்துவிடலாம். திரிகரண சுத்தியாய் நான் அதற்குச் சம்மதித்தேன் என்று இச்சபையின் முன்னர் உறுதியாகச் சொல்லுகின்றேன் ! ஏக லிங்கர் சாக்ஷியாய் இது சத்தியம் !

லகாராணு.— சரிதான். ரின்மல் மகாராஜாவின் புரோகிதரே! மைவாரதேசத்து அரசனுகிய சித் ஸ்ரீ மகாராஜாதிராஜ் மகாராணு லகாராணு அவர்கள் தேங்காயை அங்கீகரித்தாரென்று ரின்மல் மகாராஜா அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். மந்திரீ ! புரோகிதருக்கும் இன்னும் மற்றவர்களுக்கும் தக்க மரியாதைசெய்து அனுப்பும்.

(சபைகலைந்தது.)

எச். வேங்கோபராவ்.

# திருஞானசம்பந்தர் காலநிர்ணயம்.

(73-வது பக்கத்தொடர்ச்சி.)

நாம் சிரபுரத்துச் செல்வருக்கு 'அபாண்டமான காலமொன்றையும் நாம்கற்பித்து விடவில்லை யென்பது பின்வரும் சுதேசபண்டிதர் சிலர் அபிப்பிராயங்களைக்கொண்டு தெளிவாகும்.

இலங்கைவாசியான கனம் - சிம்மன்கேஸி சிட்டி யென்பவர் தாமியற்றியுள்ள 'Tamil Plutarch' என்னும் நூலில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "சோழபூர்வபட்டயத்தால் சேரமான் பெருமாள் நாயனார் பட்டத்துக்குவந்தகாலம் நிச்சயமாகக்கொள்ளக்கிடக்கையால் நம்பியாரூரர் முதலியோரிருந்தகாலம் 5-வது நூற்றாண்டாகக் கொள்ளலாம். புராணங்களில் அவர்களுக்கு அபாண்டமாகக் கற்பிக்கப் பட்டிருக்குங்காலமும் பொய்த்தது." நம் வன்றொண்டப்பெருமான் 5-வது நூற்றாண்டில்இருந்திருப்பரேல் அவருக்குச் சிலதலைமுறைகள் முந்தியவரான நம்பாலரூ வாயர் சற்றேறத்தாழ 4-வது நூற்றாண்டிலிருந்திருக்கவேண்டும். ஆனால் மேற்போந்த அபிப்பிராயத்துக்கு ஆதாரமாகிய சோழபூர்வ பட்டயத்தின் வரலாறு இன்னும் செவ்வனே தெளிவாகாதவரையில் நம்மிலங்கை நண்பர் உறுதியாகக் கூறுவதுபோல் நம்மால் எடுத்துரைக்கவியலாது. 'சேரமான் பெருமாள்' என்னும்பெயரும் 'சுந்தரபாண்டியன்' என்பதைப்போல் மயக்கந்தருவதொன்றும். எது எங்ஙனமாயினும், இத்தகைய விஷயங்களில் அழுந்திய ஆராய்ச்சி வாய்ந்த நம்மிலங்கை வாசியார் அபிப்பிராயமும், அவர் ஆதாரமாகக்கொண்ட சோழபூர்வ பட்டயமும் 7-வது நூற்றாண்டினராகிய சங்கரர்க்கும் நம் சம்பந்தர்க்கும் இரண்டொரு நூற்றாண்டு இடையிட்டிருக்க வேண்டுமென்று கொள்ளல் அசம்பாவித மன்றென்பதை உணர்த்தாமற் போகாது.

இரண்டாவது. அரிய பழைய தமிழ்நூற்களைப் புதுப்பிப்பதே, தம் தமிழ்த் தாய்க்குத் தாம் பூண்டகடமையாகக்கொண்ட ஸ்ரீ தாமோதரம்பிள்ளை யவர்கள் அபிப்பிராயம்: கூன்பாண்டியன் 2000 வருஷங்களுக்கு முன்னிருந்தவனென்பது அவர்களுடைய நிச்சயமான கொள்கை. ஆதலின் திருஞானசம்பந்தரும் அக்காலத்தினரென்பதே அவர்கள் சம்மதம். மதுரை ஸ்தலபுராணத்தில் படிக்கப்படும் பாண்டிய அரசர் வம்சாவலியை யாதாரமாகக்கொண்டு பெற்ற இம்முடிபுக்குச் சாதகமாக ஸ்ரீ தாமோதரம்பிள்ளையவர்கள் குறிப்பித்துள்ள விஷயமொன்று. அதாவது கடைசியாக மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்து தலைமை வகித்துவந்தவர் தம்மை அவ்வாதீன கர்த்தராகிய நம் திருஞானசம்பந்தருக்கு 114 பட்டம் பிந்தியவரென்று கொண்டிருப்பதே. இது உண்மையானால், ஆதிமூர்த்திக்கும் கடைசியாகப் பரிபூரணதசையடைந்த தலைவர்க்கும் இடையே இருந்து காலஞ்சென்ற நூற்றுப்பதின்மூவர் காலமெல்லாம் சற்றேறத்தாழ 15, 16 நூற்றாண்டு ஆகும். அதாவது ஸ்ரீ ஞானசம்பந்தர் முதலியோர் சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னிருந்தவரென்று கொள்ளநேரும். அதற்கு நான் துணியேன். ஏனெனின் இரண்டாயிர வருஷத்துக்குமுன் ஜைனர்மதம், நம்பாலரூவாயர் மறக்கருணைக் கிலக்காகும்வண்ணம் முற்றியிருந்திராது. ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்கள் தாம் பதிப்பித்த வீரசோழியத்தின் முகவுரையில் குறிப்பித்துள்ள பின்வரும்விஷயம் அவர்கள் மதுரைமடத்து வரலாற்றைப் பற்றிக்கொண்ட ஆதாரத்தைப் பாதிக்காமலிராது. தற்காலமுள்ள மதுரை மடமானது திருநெல்வேலியில் முன்னொருகாலத்தி லிருந்ததின் உபமடமாக ஏற்பட்டது. திருநெல்வேலி மடத்தையும் மூலமடமென்று கொள்வதற்கிடமில்லை. மதுரை மடத்தின் சரித்திரம் செவ்வனே தெளிவாகாதவரையில் இம்முடிபு நிச்சயமாகக் கொள்ளத்தகுந்ததன்று. மேற்போந்த விரண்டபிப்பிராயங்களால் ஸ்ரீ சம்பந்தர் 5-வது அல்லது 6-வது நூற்றாண்டிலிருந்தவரெனல் அபாண்டமான சித்தாந்தமன்றென் றேற்படுகின்றது.

(இன்னும்வரும்.)

கே. எஸ். ஷண்முகசுந்தரம், பி. ஏ.



# நகைப்பைத்தியம்.

(55-வது பக்கத்தொடர்ச்சி.)

## 15-வது ஆக்ஷேபம்.

### அந்நியதேசிகள்.

நாகரிகம்பெற்ற அந்நியராச்சியத் தவர்கட்குள்ளும் ஆபரணம் நடமாட்ட முண்டென்று உதாரணங்காட்டுகின்றார்கள். அதைப்பற்றி நாமும் ஆபரணமணிய வேண்டுமோம் !

இந்த ஆக்ஷேபமும் சாரமானதன்று. ஆபரணம் அநாகரிகச் சின்னமென்று முன்னமே காட்டியிருக்கிறோம். அந்நிய ராச்சியத்தவர்கட்குள்ளும் ஆபரணம் நடமாட்டமாயிருக்கும்பக்ஷத்தில் அந்தமட்டில் அவர்களும் அநாகரிகம் பொருந்தியவர்களா யிருக்கிறார்களென்றே கூறவேண்டும். சீமையிலிருக்கும் கழுதையும் கழுதையேயன்றி குதிரையாகாது. எந்தப் பிரபுவின் மடிமீதிருந்தாலும் நாய் நாய்தான். காலவித்தியாசத்தினாலாவது ஸ்தலவித்தியாசத்தினாலாவது அநாகரிகம் நாகரிகமாகாது. அநாகரிக தசையிலுள்ள அநேகர்களில் ஒருவரது ஸ்திதி மற்றொருவருடைய ஸ்திதியைப் பார்க்கிலும் அநாகரிகக்குறைவாக இருக்கலாம். அநாகரிகம் எவ்வளவுகுறைந்தாலும் மீந்திருக்கும் அநாகரிகம் நாகரிகமாகாது. ஆகையால் அந்நிய கண்டவாசிகள் அநாகரிகச் சின்னமாகிய ஆபரணங்களைப் பூண்டுவந்தால் அந்த அநாகரிகமானது மற்ற விதங்களிலுள்ள நாகரிகச் சின்னங்களினால் மறைபடாது. அந்நியகண்டவாசிகளின் குணங்களை நாம் கிரகிக்கவேண்டுமேயன்றி குற்றங்களைக் கிரகித்தலாவது அவர்களுடைய குற்றங்களைப்பார்த்து நமக்குள் உள்ள குற்றங்களைக் களையாமல் நீடித்தலாவது கூடாது. அந்நியகண்ட வாசிகள் கட்குடிக்கிறார்களென்று நாமும் கட்குடிக்கலாமா ? அந்நியகண்டவாசிகள் வியபிசாரத்தைத் தோஷமாய் நினைக்கவில்லை யென்று நாம் வியபிசாரம் தோஷமென்று நினைக்கும் நினைப்பை ஒழிக்கலாமா ? அந்நியகண்ட வாசிகள் கிணற்றில் விழுந்தால் நாமும் கிணற்றில் விழலாமா ?

பன்னிரண்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் பிரஞ்சுக்காரக் குடியானவர்கள் ஹிந்துக்களைப்போல் ஆபரணத்தில் முதலிட்டுக்கஷ்டப்பட்டார்கள். பிறகு ஆபரணத்தில் முதலிடாமல் வியாபார முயற்சியாகவும், கைத்தொழில் முயற்சியாகவும் முதலிட்டிருந்தபடியால் இப்போது அவர்கள் நல்லஸ்திதியில் இருக்கிறார்கள்.

நாகரிகமான அந்நியகண்ட வாசிகளுடைய வரும்படிக்கும் நம்முடைய வரும்படிக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கின்றது. ஆங்கிலேயதேசத்தில் வருஷம் ஒன்றுக்குத் தலைக்கு 35 பவுன்கிடைக்கிறது. பிரான்சுதேசத்தில் - 26 பவுன், ஆஸ்டிரியாவில் 16-பவுன், ஸ்பெயின் தேசத்தில் 12 பவுன், ருஷியாவில் 9 பவுன். தலை ஒன்றுக்கு 35 பவுன். அதாவது, தற்கால விலைக்கு, 595 ரூ வரும்படியுள்ளராச்சியத்தில் ஆபரணத்தில் எவ்வளவுபணம் இடக்கூடுமோ அவ்வளவுபணம்நம்மால் இடமுடியாது. நமக்கு ஆகாரத்துக்கே அகக்கையையும் புறக்கையையும் நக்கவேண்டியிருக்க, சீமையில் ஒவ்வொருவர்க்கும் மாதம் ஒன்றுக்கு 50 ரூ கிடைக்கிறது. மாசம் ஒன்றுக்கு 50ரூ வரும்படி யிருந்தால் அவனை நம்முடைய ஏழைஜனங்கள் பிரபுவென்று சொல்வார்கள். நமக்குத் தலைக்குமாசம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கிடைப்பது அபூர்வம். நம்மைப்பார்க்கிலும் 50 மடங்கு ஐசுவரியமுள்ள ஆங்கிலேயர் ஆபரணத்தில் முதலிட்டிருக்கிறார்கள் என்று நாமும் எங்ஙனம் ஆபரணத்தில் முதலிடத்துணியலாம் ? வாஸ்தவத்தில் நமக்குள்ள ஆபரணம் ஆங்கிலேயர்க்குள்ளில்லை. ஐரோப்பா கண்டத்திலுள்ள தட்டார்களைக் கணக்கிட்டால் நம்முடைய தட்டார்களது தொகைக்குவராது.

### நாகரிகம்.

ஆபரணப்பெருக்கம் நாகரிக அங்கமாக நினைக்கிறார்கள். இது ஒருதப்பிதமான அபிப்பிராயமென்று காண்பிக்கும்பொருட்டுக் கொஞ்சம் விஸ்தாரமாகச் சொல்லவேண்டி யிருக்கிறது. அநேகம் ஜனங்கள் இக்காலம் வெகு நாகரிகமான காலமென்று சொல்லக்கேட்டிருக்கிறோம். நாகரிகமென்றால் என்னவென்று அவர்களிடம் ஒருவர்விடாமல் கேட்டதில் இக்காலத்தில் நகை, புடவை, துணி, மணி, மண்

டம், பாத்திரம், கலியாணவிமரிசை, 'நாஸூக்,' விரதோத்தியாபனம், சீர், சீராட்டம் ஆகிய இவைகள் ஜாஸ்தியாக இருத்தல்தான் நாகரிகமென்றார்கள். வாசித்துப் பலவகை உத்தியோகங்கள் நடத்திவரப்பட்டவர்களும் தற்காலம் நாகரிகமென்று சொல்கிறார்கள். கற்றவர்களும் கல்லாதவர்களும் எந்த அர்த்தத்தில் நாகரிகமென்ற பதத்தை உபயோகிக்கிறார்களென்று நிச்சயப்படுத்துவோம். கூர்மையாய் யோசிக்குமிடத்து, டம்பம், நிதானங்கடந்தசெயல், அவிவேகம், ஸ்வயகாரியபுத்தி, பரகாரிய உபேக்ஷை, அற்பத்தனம், அன்பின்மை, பேராசை, நாஸ்திகருஷால், கோணங்கித்தனம், ஆசாரவிருத்தம், இயற்கைவிடுத்த செயற்கைகுணம், துர்வழக்கு, அகங்காரம், அதர்மம், பொய், பிறர்பால் மதிப்பின்மை ஆகிய இவைகட்குத்தான் இப்போது ஜனங்கள் நாகரிகமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். இதைத் திருஷ்டாந்தப்படுத்திக்காண்பித்தால் சீக்கிரம் துலங்குமாகையால் அவ்வாறு செய்வோம்.

## நாகரிகம் - டம்பம்.

எவ்வளவுகடன் இருந்தாலும் கலியாணங்களில் கடன்வாங்கியாவது அபரிமிதமாய்ச் செலவுசெய்து ஒன்றிற்கதிகம் நாகசரமுதலிய வாத்தியங்கள் வருவித்து, மாப்பிள்ளை, சம்பந்தி முதலியவர்களை வீட்டுக்கழைப்பதில் பல்லக்குகள், வாணவித்தைகள், மத்தாப்புக்கள், நாட்டியங்கள், சாரட்டுகள் ஆகிய இவைகள் ஆவசியகம் என்று அதிதோரணைகாட்டி வண்டிகளில் பக்ஷணம் பண்டங்கள் ஊருக்கெல்லாம் வழங்கி சதிர், கூத்து, பட்டணப்பிரவேசம், பூரி சர்வாணி முதலியவைகள் நடத்தி, வந்தபேர்க்கெல்லாம் ஆடை, ரவிக்கை, சாப்பாடு முதலிய விருந்தளித்து, கலியாண சம்பந்தமாய் வந்த நெருங்கின பந்துக்களை ஒருவருஷம், அல்லது ஆறுமாதம் வைத்திருந்து அவர்கள் போகும்போது வஸ்திரங்களும் வழிச்செலவுக்கு ரூபாயுங்கொடுத்து, மூலைக்கு மூலை பாத்திரங்களாகவும் சாமான்களாகவும் சிதறிக்கிடந்து எண்ணெயும் நெய்யும் தண்ணீர் படிம்பாடுபட்டுக் கொட்டிக்கோலமாயிருத்தல் வெகு டம்பமாகையால், அவ்வாறுசெய்வது நாகரிகமென்றும் இல்லாவிட்டால் நாகரிகமில்லையென்றும் எண்ணுகிறார்கள். மேற்கண்டபடி செலவுசெய்வது அனாவசியமென்று நினைத்து ஒருவன் செலவைச்சுருக்கினால் அவன் என்னத்தைக் கண்டானென்றும் என்ன சீர் சீராட்டஞ் செய்து அனுபோகப் பட்டிருக்கிறானென்றும் அவன் லோபி என்றும் ஜனங்கள் பழிக்கிறார்கள். பூர்வத்தில் வைதிகமாய் நடத்தப்பட்டதும் டம்பச்செலவில்லாததுமாகிய ஸம்ஸ்காரங்களையும் இப்பொழுது டம்பமாக நடத்துவது நாகரிகமென்று நினைத்து வீண் செலவுசெய்கிறார்கள். குழந்தைக்கு அன்னப்பிராசனம் நடத்துவதில் 1000 ரூபாய்வரை செலவுசெய்து முடிபில் கெட்டுப்போன குடும்பங்கள் அநேகம் இருக்கின்றன. சௌளம் அக்ஷராரம்பம் முதலிய ஸம்ஸ்காரங்கள் சம்பந்தமாயும் வீண்செலவு நாகரிகமென்று செய்கிறார்கள். இனிமேல் குழந்தைக்கு ஆமணக்கெண்ணைபோட்டி அதனால் அதற்குப் பேதியாவதற்கும் நாகரிகமாகப் பெருஞ்செலவு செய்வார்கள் போலும். இந்துதேச சரித்திரத்தில் மகம்மது டோக்லாக் என்பவன் தனது பல் ஒன்று விழுந்து போகவே அதனைப்பல்லக்கின்மேலேற்றிவாத்தியகோஷங்களோடும் பட்டாளவிருதுகளோடும் பட்டணப்பிரவேசம் செய்வித்து முடிபில் ஒரு கோரிகட்டி அதனில் அதை அடக்கம்பண்ணினதாக வாசித்திருக்கிறோம். இப்பித்தன் செய்ததுபோல நாகரிகம் பெருகப்பெருக நம்முடைய ஜனங்களும் விசேஷச்செலவு செய்து பல்லை அடக்கம் பண்ணுவார்கள்போலும்! பிரசவித்துப் பெண்புக்ககம் போகும்போது சம்பந்தி வீட்டிற்போய் நேரே இறங்காமல் அந்நிய கிருகங்களிலிருந்துகொண்டு பக்ஷணம் பண்டங்களைச்செய்து கொட்டுமேளத்துடன் பெண்ணைப்புக்ககம் சேர்ப்பது நாகரிகமென்று நினைத்து அதற்குவேண்டிய அனாவசியமான செலவுசெய்து வருகிறார்கள். முன்சொன்ன திருஷ்டாந்தங்களில் வெளிப்பகட்டுக்காகவும் டம்பத்திற்காகவும் வீண்செலவு பெருகுவதனால் நாகரிகம் டம்பமென்று அர்த்தமாகிறது.

நாகரிகம் நிதானங்கடந்தசெலவு. பந்துக்கள் ஒருவர் வீட்டிற்கு வந்து நாலுமாசம் ஆறுமாசம் இருந்து திரும்பிப் போகும்போது அவ்வீட்டுக்காரர் கடன்பட்டாவது விலையுயர்ந்த வஸ்திரங்களும் ஆபரணங்களும் வாங்கி அவர்களுக்குக் கொடுத்தனுப்புவது நாகரிகமென்றும், இல்லாவிட்டால் நாகரிகமில்லையென்றும், மற்றெந்தவிதத்திலும் அன்பாதரவு காட்டினாலும் பெருமையாக ஆடையாபரணங்கள் கொடுக்காவிட்டால் உபயோகமில்லையென்றும் ஜனங்கள் நினைக்கிறார்கள். முன்னடந்துவந்த நிதானப்படியாவது அதற்குக் கொஞ்சம்மீறியாவது செய்தாலும் அதில் திருப்தி வராமல் மனஸ்தாபம் ஜனித்து விரோதபாவங்கூட வருகிறது,



நிதானங்கடந்த பெண்கள் கேட்கும் பதார்த்தங்களையும் ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் அவர்களுக்கு வாங்கிக்கொடுக்காவிட்டால் அதுவும் அநாகரிகமாய் ஏற்படுகிறது. மட்டுக்குமிஞ்சி சமையல் செய்வதிற்கூடக் கொட்டிச்சிந்தினாற்றான் நாகரிகமென்ற அபிப்பிராயம் வந்திருக்கிறது. குழந்தைகளின் தேகஸ்திதியைப் பார்த்து மந்தமானதும் எளிதில் ஜீர்ணத்துக்கு வரத்தகாததும் ரோகங்களை விளைவிக்கக் கூடியதுமான பதார்த்தங்களை வாங்கிக்கொடாதிருப்பதுவும் அநாகரிகமாம்! "குழந்தை சாப்பிட்டு வியாதிவந்தாலும் சாப்பிட முடியாமலிருந்தாலும் வாங்கிப் போடவேண்டியது போடவேண்டியதுதானேன்? இந்த நாளையில் தேகசுகத்தை யார் பார்க்கிறார்கள்" என்றும் சொல்கிறார்கள். பரிமாறுவதிலும் மட்டுக்குமிஞ்சி எறியும்படி போடுவது நாகரிகமென்று நினைக்கிறார்கள். விரதாதிகள் முடிப்பதில் ஆவசியகமானவைதிகச்செலவுமாத்திரம் செய்து நடத்தினால் அதுவும் அநாகரிகமாய் ஏற்படுகிறது. தாங்கும்படியான ஆபரணங்கள் செய்தால் சிறிதென்றும் நாகரிகமில்லையென்றும் நகைக்கிறார்கள். உள்ளே கட்டையையடைத்து வெளியே தங்கத்தகடுகள் பொதிந்து நல்லகெட்டி வேலையைப்போலச் செய்தாலும் முழுமையும் தங்கமாயில்லாததனால் அதுவும் அநாகரிகமாய்த் தீர்கிறது. திருமங்கலியம் சாஸ்திரரீதியாய் வேண்டிய அளவில் செய்துபோட்டாலும் அது நிதானங்கடந்த பெருந் திருமங்கலியமாய் இல்லையென்றும் நாகரிகமாயில்லையென்றும் நகைக்கிறார்கள். தங்கக்கொடிசெய்தால் பெருங்கொடியாய் இல்லாவிட்டால் அதுவும் அநாகரிகமே.

## நாகரிகம் — அவிவேகம்.

பெண்கட்குச் "சீராக"க் கொடுக்கப்படும் பாத்திரங்களை உபயோகித்தால் "புதுக்கருக்கு"(கருக்கென்றால் 'நாசூக்'நேர்த்தி) அழிந்துபோகும் என்று நினைத்து உபயோகிக்காமல் சீராக அடைந்த பெண்ணிற்குப் பெண்குழந்தை பிறந்து அக்குழந்தை பிராப்தியாகி அதற்குச் சீர்கொடுக்கும்வரை கொடுத்தமேனியாக வைத்திருப்பது நாகரிகமென்றும் எடுத்தாண்டு காவிப்பூச்சுமாறினால் அது அநாகரிகமென்றும் ஆவசியகம்நேரிட்டால் சீர்வந்திருக்கும் பாத்திரம்போல் விலைக்கு வாங்கிக்கொள்ள வேணுமென்றும் சொல்கிறார்கள். இடத்திற்குக் கேடாய் வந்த பாத்திரங்களை ஆளாமல் வைத்திருப்பானேன். புதுப்பாத்திரங்கள் வாங்குவானேன் என்று சீர்வந்தவீட்டில் பெரியோர்சொல்லி எடுத்தாண்டால் சண்டைவிளைகிறது. ஸ்திரீகள் வார்த்தையைக்கொண்டு புருஷர்கள்கூட அச்சண்டையிலும் அதைச்சம்பந்தித்த விவகாரத்திலும் தலைகொடுக்கிறார்கள். சீப்பு, சிடுக்குவாரி, சுண்ணாம்புக்கரண்டான், சொப்பு, சாந்துச்சிரட்டை, மைச்சிமிழ் இவைகள் வெள்ளியிலும் சுவர்ணத்திலும் செய்யவேண்டியது நாகரிகமென்றும், அவ்வாறு செய்யாவிட்டால் அநாகரிகம் என்றும் நினைக்கிறார்கள். மகாவிகாரமான மரப்பாவைகட்குத் தங்கட்குக் குத்துவதுபோல காதமூக்குக் குத்தி ஆபரணங்கள் இடுவது நாகரிகமென்றும் இல்லாவிட்டால் நாகரிகம் இல்லையென்றும் நினைத்து மரப்பாவைக்குவேண்டிய ஆபரணங்களிலும் அவிவேகமாய்ப் பெரும்பணம் முதல் இழக்கிறார்கள். கொலுசாமான் என்று யாதொரு உபயோகமில்லாத அநேக பதார்த்தங்களில் வீண்பணம் போடுகிறார்கள். முறம், படி, மரக்கால், அஞ்சறைப்பெட்டி இவைகள் கெடுதியானாலும் பித்தளையிலிருப்பது நாகரிகமென்று அனாவசியமாய்ப் பணம் செலவு செய்கிறார்கள்.

## நாகரிகம் — ஸ்வயகாரியபுத்தி.

புருஷன் சம்பாத்தியம் பெண்டாட்டிக்குத் தானென்று பெற்றோர் உற்றோரைத் தள்ளி அவளுக்கும் அவள் குழந்தைக்கும் மாத்திரம் ஆபரணஞ்செய்துபோட்டு சகோதரிகட்கு ஒன்றுமில்லையென்றுசொல்வது நாகரிகமென்று நினைத்து, பெண்டாட்டியின் சொற்கேட்டு அவர்களை அண்ட ஒட்டாமல் அடிக்கிறார்கள். ஒருவள் குழந்தைகள் எவ்வளவு கதறி யழுதாலும் தயங்கினாலும் அவள் சகோதரருடைய ஸ்திரீகள் இந்த நாகரிக நாளில் "ஒருத்தர்குழந்தையை ஒருத்தர் யார் எடுக்கிறாள்-யாருக்கு யார்?" என்று உபேக்ஷையாய் இருந்துவிடுகிறார்கள். தத்தம் காரியம் பெரிதென்றும் நாகரிகமென்றும் நிராதரவாய் விட்டுப்போயிருக்கும் தாயில்லாக் குழந்தைகளைக்கூட கவனித்துப்பார்க்காமல் ஈயும் எறும்பும் பிடுங்கும்படி கைவிடுகிறார்கள்.

## நாகரிகம் — பரகாரியஉபேக்ஷை.

ஆடையாபரண நாகரிகங் கொண்டாடும் தற்கால ஜனங்கள் அடுத்தவீட்டில் பிணங்கிடந்தாலும் எடுப்பதற்கு ஆளில்லாமல் தவித்தாலும் ஒருவித சகாயஞ் செய்யாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு பிரேதத்தை வண்டியிலேற்றி ஆடுமாடுகளைப்புதைக்கும்வண்

ணம் புதைக்கும்படி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அடுத்தவீட்டில் கள்ளன்வந்து கொள்ளையிட்டாலும் ஏனென்று கேட்காமல் நமக்கென்னவென்றிருந்து விடுகிறார்கள்.

### நாகரிகம்—அற்பத்தனம்.

தாயில்லாக் குழந்தைகட்குக் கொஞ்சம் பால்கொடுத்து அன்னமிட்டால் பொருள் நஷ்டமென்றும் அதனால் ஆபரணம் செய்தணிவதற்கு சக்திகுறையுமென்றும் நினைத்து அக்குழந்தை விஷயத்தில் மகா வஞ்சனையாகவும் கடூரமாகவும் இருத்தல்; ஆபரணமணிந்து அழகுகொண்டாடுவதில் அதற்குத் தகுந்தபடி நிறம் செகப்பாய் இருக்கவேண்டுமென்று கருதி வீட்டுபயோகத்துக்கு வாங்கப்பட்ட நெய், எண்ணை இவைகளைவைத்து பூட்டிக்கொண்டு எல்லாருடன் சாப்பிட்டால் தனக்கு நெய் குறைந்துவிடுமென்று தனிமையாயிருந்து சாப்பிடல்; உற்றோர் பெற்றோர் வந்திருக்கும் காலத்தில் பக்ஷணம் பண்டம் செய்தால் அவர்கட்குக் கொடுத்துக் குறைந்துபோமென்று அக்காலத்தில் செய்யாமல் அவர்கள் சென்றபின் செய்தல்; ஏழையாயிருக்கும் பந்துக்கள் வந்தால் அவர் காண நல்லபண்டங்கள் செய்தால் கண்படுமென்றும் கொடுக்கவேண்டுமென்றும் நினைத்து வெளியேபோகச்சொல்லிக்கதவடைத்தல்; இவைகளெல்லாம் நாகரிகமென்று நினைத்து நடத்துகிறார்கள்.

### அன்பின்மை.

ஆபரணஞ்செய்து போட்டால் மாத்திரம் அன்பு வைத்தல்; இல்லாவிட்டால் உபேக்ஷைசெய்தல்; ஏழையை முகம்முறித்துப்பேசல்; அந்நிய ஊரிலிருந்து வந்தாலும் வந்தாயாவென்றுகேட்காதிருத்தல்; முகம்கொடுத்து உரையாடாதிருத்தல்; கொஞ்சம் வரும்படி இருந்தால் பந்துக்களிடம் போக்குவரத்தில்லாமல் இருத்தல்; தாழ்ந்த நிலையிலுள்ள பாலிய சிநேகிதர்களை மறத்தல். இவைகளும் நாகரிகமென்று நினைக்கப்படுகின்றன.

### பேராசை.

இதற்கு உதாரணம் ஆவசியமில்லை.

### நாகரிகம் நாஸ்தீக குஷால்.

"தான் தோன்றித்தனமாய்" மனசே ராஜாவென்ற அவித்தையின் சித்தாந்தம் அனுசரித்து தெய்வபக்தி மூடத்தனம் என்று நினைத்து வந்தனம் இல்லாமல்,
ஸ்நானம் ஜபதப மில்லாமல் நியாயம் அநியாயம் பார்க்
காமல் விஷயாதுரனாய் பிரபஞ்சசுகமே சுகமென்று
கட்சரக்கு முதலிய லாகிரி பதார்த்தங்கள் நாகரிகச்
சின்னமாகக்கைக்கொண்டு ஆசாரவிரோதமாய் நடத்
தல். குடுமி வஸ்திரம் முதலியவை பூர்வமாதிரிக்கு
விரோதமாய் வைத்துக்கொண்டு ஒழுகல்; ஈசுவரன்
நாமம் எடுத்தால் சாதுத்வமென்றும் அநாகரிகமென்
றும் நினைத்தல்; விபூதி முதலிய மதச்சின்னங்கள்
அணிவது அகௌரவமென்று தள்ளி சாந்துப்பொட்
டணிதல்; எதெல்லாம் கூடாதென்று சாஸ்திரங்க
ளிற் சொல்லியிருக்கிறதோ அதெல்லாம் எப்படியா
வது செய்து முடிக்கவேண்டுமென்று ஒரு பிடிப்பாய்
நிற்றல்; தெய்வபக்தியாய் இருப்பவர்களைப் பரிகசித்
தல்; அவர்கட்கு இடுக்கண் வருத்தல்; இவை முதலி
யவை நாகரிகமென்று நாடுகிறார்கள்.

### கோணங்கித்தனம்.

அதாவது—ஜனங்கள் எப்படி நடக்கிறார்களோ அ
தற்கு விபரீதமாய் நடத்தல் நாகரிகமென்று பிரவர்த்
தித்தல்; உட்காரும் பாயிலும் படுக்கையிலும் எச்
சில் காளாங்கிவைத்துத் துப்புதல்; பற்குத்தினால்
கையலம்பாதிருத்தல்; பற்கொண்டு நகம் கடித்தெ
றிதல்; எப்போதும் எச்சில் பண்ணுதல்; ஸ்நானம்
பண்ணமல் ஆகாரமருந்தல்; உண்ணும்போது 'ஜா
கட்டு' முதலிய அங்கி அணிதல், சுருட்டுக்குடித்தல்
சட்டைக்காரனைப்போல் டொப்பிவைத்தல்; உண்
டென்பதற்கு இல்லையென்றும் இல்லையென்பதற்கு
உண்டென்றும் காரியநியாயம் பாராமல் புத்தித்திறம்
காட்டும்பொருட்டு விதண்டாவாதஞ் செய்தல்; தண்
ணீர் கும்பிக்குடித்தல்; இவைமுதலியவையும் நாகரிக
மென்று நடத்துகிறார்கள்.

### ஆசாரவிருத்தம்.

எச்சில், தீண்டல் கவனியாதிருத்தல், ஒவ்வொரு
நாளும் வேஷ்டி மாராதிருத்தல், படுக்கையிலுள்ள
வஸ்திரம் கழட்டாமல் மறுநாள் ஜபதபமென்று பே
ருக்குச் செய்வதுமன்றி ஆலயங்களிற்சென்று உழட்
டுதல், யாகசாலையில் வந்தாலும் சிரஸ்நானமில்லாமல்
சுத்த ஆடைதரிக்காமல் வந்து எல்லோரையும் அசுத்
தப்படுத்தல், இவையும் நாகரிகமென்று நினைத்தல்.

### செயற்கைக்குணம்.

வாக்குமனமொன்றாதசெய்கை செயல்; மனம்ஒன்
றாத வார்த்தைகூறல்; சிரிக்கவேண்டிய இடத்திற்



கெம்பீரமாயிருத்தல்; கெம்பீரமா யிருக்கவேண்டிய இடத்தில் சிரித்தல்; கோணங்கிசுபாவம் காட்டல்; இவைகள் நாகரிகமென்று நடித்தல்.

### துர்வழக்கு.

கோர்ட்டிலும், வக்கீல்களிடத்திலும் போக்குவரத்துவைத்துக்கொண்டு தைரியமாய்ப் பேசி உபசரிக்கப்படுவது நாகரிகமென்று கருதி வழக்கில்லாவிட்டாலும் அந்த அந்த அபிப்பிராயம் நிறைவேறும்பொருட்டு துஷ்தர்க்கம் தர்க்கித்தல், கரட்டுவழக்கு விலைக்குவாங்கல், துரும்பைத் தூணாக்கல், விடாதகண்டன் என்றுபேர்வாங்கும் பொருட்டு என்னசெலவு செய்தாவது பெரியகோர்ட்டு வரை வழக்காடல்; கக்ஷிகளை மோசப்படுத்த தந்திரஞ் செய்தல்; வழக்கில் நிபுணனென்று பேர்வாங்கும் பொருட்டு தேரலங்கரித்தாற்போல் பொய் ஜோடனை செய்து நிர்மிதமாய் விவகாரப்படல்; இவைகளும் நாகரீகமென்று நினைக்கிறார்கள்.

### அகங்காரம்.

பெரியோர் முதியோரென்றமதிப்பின்றி தான் எல்லோரிலும் மேன்மையென்று நினைத்துலக்ஷியமில்லாமல் இருத்தல்; தான் என்ற பிடிவாதம் எல்லாவற்றிலும் உசிதாவுசிதம்பாராமல் நிலை நாட்டல்; தான் யாரையும் பணியாமல் தன்னை யெல்லோரும் பணியவேண்டுமென்று நாட்டம்வைத்தல்; தன்னைப்பணியாதவரைக்கெடுக்கமுயலுதல்; முற்காலத்து ரிஷீசுவரர், முனீசுவரர் இவர்களைத் துடுக்காக எடுத்தெறிந்துபேசல், பிறரைப் புண்படுத்தும்படி பேசல், இவைகளை உதாரணமாய்ச் சொல்லலாம்.

### அதர்மம்.

சமயம்போல் பொய்பேசி, அசத்தியஞ்செய்து மீனுக்குத்தலையும் பாம்புக்கு வாலுங்காட்டி, பிள்ளையையும்கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிட்டு, பாலுக்குக் காவலும் பூனைக்குத் தோழனுமாக இருந்து அகடவிகட சாமர்த்தியங்காட்டி தோசைப்புரட்டுத்தனம் தாராளமாய்ப்பயோகித்துப் பொருள்சம்பாதித்தல் நாகரிகமென்று நினைக்கிறார்கள். மேற்கண்டபடியும் கொடுத்தபின் வருந்துவானேன்? பூதங்களை வருவிக்காமல் இருப்பதன்றோ பலிகொடாமல் நிவர்த்தியடைவதற்கு வழியாகும்?

(இன்னும் வரும்.)

எஸ். இராமஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

---

## நந்தவனநஷ்டம்

அல்லது

## மோட்சஈனம்.

(57-வது பக்கத்தொடர்ச்சி.)

தற்சமயத்தில், நம்முடைய ஆதிமகாபிதா தன்தெய்வீக விருந்தோனை எதிர்கொண்டழைக்கவெண்ணி வெளியே நடந்துவந்தான். அவனுக்கு, சொந்தமான பரிபூரண சுகுணங்களைத்தவிர வேறு பரிவாரம் இல்லை; சர்வாங்கமும் அவனிடமே அடங்கி இருக்க அவ்வங்கம் ராஜரீங்க பரிவாரத்தைவிட கம்பீரமுள்ளதாகவே இருந்தது; குதிரைகள் நடத்தப்பட்டும், சுவர்ண சரிகை வஸ்திரங்களைத் தரித்த சேவகர்கள் தொடர்ந்தும் அதிக செல்வச் சிறப்பான நீண்ட ராஜாங்க பரிவாரங்களின் ஆடம்பரம் சாமானிய ஜனக் கும்பல்கள் கண்கூசி வாய்திறந்தவண்ணம் நோக்கச்செய்யினும், தெரிந்தோர் மனதை இளைப்பிக்கும். ஆநாம் அவ்விருந்தோன் சன்னிதியில் வரவே பயப்படாவிடினும், அவனுடைய சிரேஷ்டமான பதவிக்குத் தகுந்தபடி அமைவுடன் நெருங்கி, தாழ்மையுடன் உபசரித்து தாழவணங்கி, பின்வருமாறு மொழிந்தான்.

"தேவலோகத்தோனே! தேவலோக மல்லாமல் வேறெவ்விடமும் இம்மாட்சிமை பொருந்திய ரூபத்தைக் கொள்ளத்தக்கதன்று—மேலே சிம்ஹாசனம் வீற்றிருப்போர்களை விட்டு கீழேவந்து அவ்வானந்தமயமான இடங்களினின்று சிறுநேரம் விலகி இப்பிராந்தங்களை கனப்படுத்தத் தயவுசெய்திருக்கிறபடியால், இருவர்களாயினும், இவ்விசாலமான தனத்தை ஈசனிடம் தானம்பெற்றிருக்கும் எங்கள்மேல் கிருபை செய்து, இவ்வெப்பமான மத்தியானகாலம் செல்லச் சூரியன் உஷ்ணந்தணிந்து தாழும்வரையில் நீழலமைந்த அப்பன்னசாலையில் தங்கி இத்தோட்டத்தின் சிரேஷ்டமான கனிகளை உருசிப்பாயாக."

ஆதாமை நோக்கி அத்தேவதூதனாகிய சற்குணன் சாந்தமாக மறுமொழி கொடுத்தான்.

"ஆதாம்! அதற்காகவே நான் வந்திருக்கிறேன். உன் நிலையும், இருப்பிடமும் தேவலோக அசரீரிகளை உன்தரிசனத்துக்கு அடிக்கடி அழைக்கத் தகுந்தவை

களே. நிழலைத்தரும் உன்பன்னகசாலைக் கழைத்துப் போ. சாயுங்காலம் வருமளவும் உள்ள மத்தியான நாழிகைகள் என் சுயாதீனத்தி லிருக்கின்றன."

இவ்வாறு அவர்கள் அவ்வாரணிய ஆஸ்ரமத்துக்கு வந்தார்கள். அது சிறுமலர்களால் அலங்கரிக்கப்பட்டும், சுகந்தங்கள் வீசப்பெற்றும், போமோனா (Pomona) வினுடைய பந்தரைப்போல் உற்சாகித்து விளங்கிற்று. ஆனால் ஈவியானவள் தன்னைத் தவிர வேறு ஆபரணாலங்காரமின்றி வனதேவதையைவிட மனோரம்மியமான அழகுள்ளவளாயும், ஐடா மலையில் (Ida) திரிந்ததாகப் பாவிக்கப்பட்ட மூன்று தேவதைகளில் அதிசுந்தரியானவளைவிடச் சிறப்பாயும் தேவலோக விருந்தோனைப் பூஜிக்க நின்றாள்; சற்குண கவசந்தரித்தவள் ஆகையால் வஸ்திர ஆபரணம் அவளுக்குத் தேவையில்லை; மனத்தளர்ச்சிக்குரிய எண்ணம் ஒன்றும் அவள் முகச்சாயலை மாற்றவில்லை. அவளை அத்தேவதூதன் காணவே, நெடுநாளைக்குப்பிறகு இரண்டாவது ஈவியாகிய சௌபாக்கியவதி மேரி (Mary) யை நோக்கிக் கூறப்பட்ட சுபமங்கல மொழியை (hail) உச்சரித்து வாழ்த்தினான்.

"வாழி! மானுட மாதாவே! ஈசுவரசிருஷ்டியாகிய தாவரங்கள் ஈன்ற நாநாவித கனிகள் எவ்வளவு திரளாக இம்மேஜையில் விரிந்திருக்கின்றனவோ அவைகளைவிட அதிகமாக உன்மலித கருப்பாசயத்திலிருந்து பிறக்கும் உன் சந்ததியான பிரஜைகள் இவ்வுலகத்தில் விர்த்திபெற்று நிரம்புவார்களாக!"

அம்மேஜை எப்படிப்பட்டதெனில் புற்பொழியாலெழுப்பப்பட்டு சுற்றிலும் பாசிபடர்ந்த பீடங்களை உடைத்தாயிருந்தது. விஸ்தாரமான அம்மேஜைச்சதுரத்தின் மேல் எப்புறமும் இடைவெளியின்றி கனிக்காலப்பலன்கள்யாவும் குவிக்கப்பட்டிருந்தன. நமக்குகனிக்காலத்திலேமட்டும்கனிகள்விசேஷமாகக் கிடைப்பனவாயினும், அவ்விடத்தில் வசந்தகாலமும், கனிக்காலமும் கைகோர்த்து நிர்த்தனஞ்செய்தன. சிறுநேரம் அவர்கள் சம்பாஷித்தார்கள்—தீனி ஆறிப்போகும் என்கிற பயமில்லை—பிறகு நம்முடைய ஆதிபிதா பின்வருமாறு ஆரம்பித்தான்.

"தேவலோக வைதேசிகனே! எல்லா சம்பூர்ண நன்மையையும் அளக்காமல் அளிப்போனாகிய நம்முடைய போஷகன் நம்முடைய ஆகாரத்துக்காகவும், இன்பத்துக்காகவும் பூமியைப் பெறச்செய்த இப்பிரசாதங்களை உருசிக்கத் தயவுசெய்வாயாக; ஆனால் இவைகள் திராபக சுபாவங்களுக்கு ஒருவேளை உருசியற்றவைகளாக இருக்கலாம்; எனக்குத்தெரிந்தவிஷயம் ஒன்றே, சுவர்க்கலோக பிதா ஒருவன்தான் எல்லாவற்றையும் கொடுக்கிறான்."

அத்தேவதூதன் மறுமொழி கொடுத்தான்:—

"அதினாலேதான் ஆத்மார்த்த அம்சம்பொருந்திய மனுடனுக்கு ஈசனால் (அவனை சதாகாலமும் வாழ்த்துவோமாக) அளிக்கப்பட்ட வஸ்துக்கள் பரிசுத்த திராபகரூபிகளுக்கும் உணவுக்குத் தகாதவைகளாகா. விசாரணைசக்திபெற்ற உன் சுபாவத்தைப்போலவே சுத்தமான அந்தர்ஞானம்பெற்ற அவர்களுடைய சுபாவத்துக்கும் ஆகாரம்வேண்டியதே. அவ்விருதரத்தோரும் மேற்கூறிய சக்திகளுக்குத் தாழ்ந்தவைகளான ஐம்பொறிகளையும் அடையப்பெற்றவர்களாகையால் உருசித்துண்ணும் வஸ்துக்களைப் பக்குவப்படுத்தி, ஜீரணித்து, பரிணாமம்செய்து, சடரூபமுள்ளவைகளைத் திராபகரூபத்துக்கு மாற்றுகிறார்கள். சிருஷ்டிக்கப்பட்ட எவ்வஸ்துவும் ஆகாரத்தால் பரிபாலிக்கப்படும்; பஞ்சபூதங்களில் ஜடமானது அதிக சுத்தமானதைப் போஷிக்கும்; நிலம் நீரையும், அவை இரண்டும் காற்றையும், காற்றானது வானசோதிகளையும் போஷிக்கும்; அவ்வானசோதிகளில் அருகாமையால் முதலில் போஷிக்கப்படுவது சந்திரன்; அவ்விம்பத்தில் தோன்றும் வடுக்கள் அதன் பொருளாக இன்னும் விபாகிக்கப்படாத அசுத்த ஆவியே; அங்கிருந்தெழும்பும் ஆவிகள் இன்னும் மேலான கோளங்களைப்போஷிக்கின்றன. சர்வஸ்வத்துக்கும் ஒளி அளிப்போனாகிய சூரியன் அதற்குப் பிரதியாக எல்லா வஸ்துக்களினின்றும் நீர்ப்பிடிப்பான ஆவிகளைப்பெற்று, சாயுங்காலத்தில் சமுத்திரத்தைப் பானம்செய்கிறான். பரலோகத்தில் ஜீவவிருக்ஷங்கள் அமுதக்கனிகளையீன்றாலும், திராட்சக்கொடிகள் அமிர்தத்தைக் கொடுத்தாலும், பிராதக்காலம்தோறும் மரக்கிளைகளினின்று பனி சேர்த்தெடுத்துப் பானஞ்செய்து தரையில் தூவப்பட்டிருக்கும் முத்துப்போன்ற மணிகளையெடுத்துண்ணுவோமாயினும், இவ்விடத்தில் ஈசன் நூதனமான இனிய வஸ்துக்களைக் கற்பித்து இருக்க இவ்விடமும் பரலோகத்துக்குச் சமானமாகும்; ஆகவே இக்கனிகள் என் உணவுக்குத் தகாதவைகளென்று ஐயப்படுவேனென்று நினையாதே."

(இன்னும் வரும்.)

டி. சுந்தர ராவ், பி. ஏ.



## கட்டாயமாய் அம்மைகுத்துவதினா லுண்டாகும் லாபத்தைக் குறித்து டாக்டர் கிங் எழுதிய நிருபம்.

சென்னப்பட்டணம் வாக்ஸிநேஷன் ஆக்டிங் இன்ஸ்பெக்டரும், டெபியுடி ஸானிடெரி கமிஷனருமாகிய ஸர்ஜியன் மேஜர் டப்ளியூ. எல். கிங் துரையவர்கள் (கட்டாயமாய் அம்மைகுத்தவேண்டிய அவசியமில்லாத பட்டணங்களின்) மியுனிஸிபல் சங்கத்து அக்கிராஸனாதிபதிக்கு சென்னப்பட்டணம் போர்ட் ஸெயின்ட் ஜார்ஜிலிருந்து 1890-ம் ௵ ஜூலை ௴ 12௳ 2439-ம் நம்பர் முதல் 2466-ம் நம்பர் வரையில் எழுதிய கடிதங்கள்.

தங்களுக்கு நான் விநயத்துடன் தெரிவித்துக்கொள்ளுவது என்னவென்றால்:—

இந்த இராஜதானியில் அனேக மியுனிஸிபாலிட்டியார் கட்டாயமாய் அம்மை குத்தும் விஷயத்தைக்குறித்து 1884௵த்திய 4-வது ஆக்ட்டின் 133-வது முதல் 142-வது பிரிவு வரையிலுள்ள பிரிவுகளின்படி கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைச் செலுத்த கவர்னமெண்டாருடைய அனுமதியைக் கேட்டும் பெற்றுக்கொண்டுமிருக்கிறார்கள். அப்படியிருக்க, நீங்கள் கவர்னமெண்டாருக்கு இவ்விஷயமாய் யாதொருவிண்ணப்பமும் செய்துகொள்ளவில்லை. ஆகையால் இந்த முக்கியமான விஷயத்தைக்குறித்து அதிசீக்கிரத்தில் உங்கள் கவுன்ஸிலர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளவேண்டியது உத்தமமென்று தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். உயிரைக்காப்பாற்றுவதற்கு அதிமுக்கியமானதும், மிகச் சுலபமாகிய மார்க்கமானதுமாயுள்ள அம்மை குத்தும் செய்கையை, தங்களுக்கு நன்மை தீமை யின்னதென்று தெரியாதவர்களாயும் மூடபக்தியுள்ளவர்களாயுமிருக்கிற ஜனங்களுடைய இஷ்டப்பிரகாரம் விட்டுவிட்டால் தங்களுடைய சரீரத்தில் விஷநீரை உண்டாக்கிக்கொண்டு அதை அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்கும் பரவச்செய்து அபாயத்துக்கேதுவாகிறார்களென்று உங்கள் மியுனிஸிபாலிட்டியின் அம்மைகுத்தும் உத்தியோகஸ்தர்களுடைய நடவடிக்கைகளின் அனுபோகத்தால் தெரிந்திருக்கலாமே.

2. கட்டாயமாய் எல்லாருக்கும் அம்மைகுத்தும் விஷயத்தைக்குறித்து ஆக்ஷேபனை செய்கின்றவர்களில் அனேகர் தாங்கள் செய்யும் ஆக்ஷேபனைக்கு யாதொரு காரணமும் தெரியாதவர்களாகவே யிருக்கிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை; மற்றும் சிலர் தங்களுடைய அனுபோகத்தில் குறிப்பிட்டுப்பார்த்தும் அம்மைகுத்துவதனால் யாதொரு பிரயோஜனமுமில்லையென்றும் அதனால் கெடுதியுண்டாகின்றதென்றும் மூடத்தனத்தால் நம்பிக்கொண்டிருக்கிறார்களென்று ஒப்புக்கொள்ளவேண்டியதே. இவ்விதமாய்ச் சொல்லுகிறவர்களுடைய ஆக்ஷேபனைக்கு இந்தக்கடிதத்தில் சமாதானஞ் சொல்வது எனக்கு சாத்தியப்படமாட்டாது. ஆனால் அம்மை எவ்வளவு ஜாக்கிரதையாய்க் குத்தவேண்டுமோ அவ்வளவு ஜாக்கிரதையாய்க் குத்தினால் யாதொருகெடுதியும் சம்பவிக்கமாட்டாதென்பது நாகரிகமடைந்த சகலபிரஜைகளின் அனுபோகத்தால் நிச்சயப்பட்ட சங்கதியென்று நான்உறுதியாய்ச்சொல்லக்கூடும். ஆனால், அரைகுறையாய்அனுபோகப்பட்டும்,தங்கள் அனுபோகத்தினால் தெரிந்த சங்கதிகளைச் சரியாய் அறிந்துகொள்ள சக்தியற்றவர்களாயுமிருந்து தாங்கள் அரைகுறையாய்க் கேள்விப்பட்ட சங்கதிகளை ஆதாரமாகக்கொண்டு வாதிக்கும்ஜனங்களுடைய ஆக்ஷேபனைக்குத் தகுந்த சமாதானம்சொல்ல ஆதாரமான சில சங்கதிகளை உங்களுக்குத் தெரிவிக்கவேண்டியது அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட ஜனங்கள் முக்கிய ஆதாரமாகக்கொண்டு வாதம்செய்யும் பெரிய பிழை ஒன்று உண்டு; அதென்னவென்றால், அம்மைகுத்தினால் பிறகு எப்போதும் வைசூரி வார்க்கமாட்டாதென்று நினைப்பதேயாம். இவ்விதமாய்த் தப்புவாதம்செய்வது பிசகு. அப்படிப்பட்ட வாதம் நகைப்புக்கிடம். அம்மைகுத்துதலை ஆதரிப்பவர்கள் அப்படி யாதொன்றும் சொல்லுகிறதில்லை ஏனென்றால் அம்மை குத்தப்பட்டவர்களுக்கும் சில வேளை வைசூரி வார்க்கிறதென்பது எல்லாருக்கும் சாதாரணமாய்த் தெரிந்தவிஷயம். உண்மையாய் வைசூரி வார்த்தவர்களுக்குங்கூட அவர்கள் உயிரோடிருக்கும்வரையில் மறுபடியும்வைசூரிவார்க்க மாட்டாதென்று சொல்லமுடியாது; அப்படியிருக்க அம்மை குத்தினவர்களுக்கு மறுபடியும் வைசூரி வார்க்கமாட்டாதென்று சொல்லுவது மிகவும் பிழை. இரண்டாவதுமுறை வைசூரி வார்க்கிறது அபூர்வமான விஷயமல்ல; இரண்டாவது வைசூரி வார்ப்பதனால் மரணம் நேரிடுவதும் நமக்குத் தெரிந்தேயிருக்கிறது. அப்படியிருந்தும் அம்மைகுத்துவதனால் மரணம் பெரும்பா

லும் சம்பவிக்கிறதில்லை; ஒருவேளை வைசூரி வார்த்த போதிலும் பெரும்பாலும் அங்கக்குறைகள் உண்டாகிறதில்லை. அன்றியும் ஒருமுறை அம்மைகுத்தப்பட்டவர்களுக்குவைசூரி பெரும்பாலும்வார்க்கிறதில்லை; அப்படி வார்த்தபோதிலும் மரணம் சம்பவிக்கிறதில்லையென்பது நிச்சயம். இரண்டாவதுமுறை அம்மை குத்திவிட்டாலோ வைசூரி வார்க்கிறதுமில்லை, மரணம் சம்பவிக்கிறதுமில்லை யென்பது சற்றேறக்குறைய நிச்சயமென்றே சொல்லலாம்.

3. மேற்சொன்ன விஷயங்கள் வெறும் வாய்ப்பேச்சல்ல. வெவ்வேறு தேசங்களின் பற்பல அதிகாரிகளால் பிழையின்றிப் பகிரங்கமாய் எடுக்கப்பட்ட கணக்குகளால் மெய்ப்பிக்கக்கூடியதாயுள்ள இந்தக் கணக்குகள் இடைவிடாமல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறபடியால் இவைகளைப் பிழையென்று சொல்லக் கூடாது. (Dr. Barry) டாக்டர் பாரி என்பவர் (Sheffield) ஷெப்பீல்ட் என்னும் பட்டணத்தில் வைசூரியாகிய பெருவாரியைக் குறித்து எழுதிய ரிபோர்டில் மேற்சொன்ன விஷயங்களுக்கு ஆதாரமாய் அனேக சங்கதிகளைக் காணலாம். அந்தச் சங்கதிகளின் சுருக்கத்தை இதனுடன் அனுப்பியிருக்கும் குறிப்பில் காட்டியிருக்கிறேன். அதிலடங்கிய சங்கதிகளைப் பட்சபாதமின்றி ஆலோசித்துப் பார்த்தால், எந்தப் பொதுச் சங்கத்தார் தங்களுடைய சவரட்சணைக் குட்பட்ட அறிவீனர்களை அம்மைகுத்தும் விஷயத்தில் தங்கள் இஷ்டப்படி விட்டு அம்மை குத்துதலைப் பரவச் செய்யாமல் தடுக்கிறார்களோ அந்தப் பொதுச்சங்கத்தார் பொது நன்மையைப் பாதுகாக்கும் ஸ்தானத்திற்கு உரிய பொறுப்பு இன்னதென அறியாதவர்களென்று நிச்சயமாய்த் தெரியவரும்.

4. முன்பாராவிற் கண்ட பாரி துரையின் சுருக்கக் குறிப்பை நீங்கள் வாசித்துப் பார்க்கும்போது இரண்டாவது தடவை அம்மைகுத்துவது எவ்வளவு முக்கியமென்கிற விஷயத்தை விசேஷமாய் கவனித்துப் பார்க்கவேண்டு மென்று தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். அம்மை குத்தினால் பூர்த்தியாய் அபாயம் நீங்கிவிடுமென்றாவது எவ்வளவு மட்டில் அபாயம் குறையுமென்றாவது ஏற்படுகிற விஷயம் மிகவும் நீடித்த காலத்திய அனுபோகத்தால் மாத்திரந்தான் தெரியவரும். இந்த விஷயத்தைச் சிறிதுகாலத்திற்குமுன், அம்மை குத்துவதனாலுண்டாகும் பிரயோசனத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் பொருட்டு இராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு லண்டன் நகரத்தில் கூடிய சபையார் விசேஷமானகவனத்துடன் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். தேகம் பக்குவமடையும் வயதில் இரண்டாவது முறைஅம்மைகுத்துவது அவசியமென்றும், அதற்குமுன் வைசூரி வார்க்குமென்கிற பயமிருந்தால் அந்தவயது வரையில் தாமதிக்காமல் பத்து வயதிலேயே இரண்டாவது முறை குத்த வேண்டியதென்றும் மேற்கண்ட சபையில் கூடிய அம்மைவார்க்கும் விஷயத்தில் பழகின சில சமர்த்தர்களுடைய சாக்ஷியத்தால் தெளிவாய்த் தெரியவருகிறது. பக்குவமாகும் வயதில் தேகத்திலுண்டாகிற மாறுபாடுகள் முன்னே அம்மைகுத்தினதனாலுண்டான பிரயோசனத்தை நீக்கிவிடுகிறதென்பதல்ல; ஆனால் முதலில் அம்மை குத்தினதினால் பக்குவகாலம் வரையிலேதான் பிரயோசனமுண்டாகும்; இரண்டாவது முறை மேற்கண்ட வயதில் அம்மைகுத்தி விட்டால், அம்மை குத்துவதனாலுண்டாகும் பாதுகாப்பானபிரயோசனம் நிலைத்துவிடும். இந்தச் சங்கதிகளை அறியாமையால் இங்கிலாந்தில் வைசூரியினாலே மரணம் நேரிட்ட ஒருவிந்தையான வயதுக்கணக்கு எடுத்து வருகிறார்கள்; பத்து வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு அம்மை குத்துவதனால் வைசூரி வார்க்கிறது. அம்மை குத்துவது வழக்கமில்லாத ஜனக் கூட்டத்தில் இதற்கு நேர் விரோதமாய்ச் சம்பவிக்கிறது; ஏனென்றால் குழந்தைப்பருவத்தில் வைசூரி வார்த்து விடுகிறதினாலே, பின்னிட்டு அதிக கெடுதி சம்பவிக்கிறதில்லை. ஆகையால் இரண்டாவது முறை அம்மை குத்தப்பட்டவர்களுக்குந் தீங்கு சம்பவிக்காததையும் ஒரு முறைமாத்திரம் அம்மை குத்தப்பட்டவர்களுக்குள் சம்பவிக்கும் மரண அளவையும் யோசித்துப் பார்ப்போமாகில் இரண்டாவது முறை அம்மை குத்துவது அதிக அவசியமென்று ஏற்படுகிறது. ஆகையினால் உங்களுடைய மியுனிஸிபல் வாக்ஸினேடர் ஒருமுறை அம்மைகுத்தப்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் மேலே குறிப்பிட்ட வயதில் இரண்டாவது முறை அம்மை குத்தவேண்டியது அவசியமென்று ஒவ்வொரு குழந்தையின் பெற்றோரிடத்திலாவது சவரக்ஷகரிடத்திலாவது தெரியப்படுத்தியாதொரு தடையுமின்றி இரண்டாவது முறை குத்தும்படி செய்விக்க வேண்டியது அவசியமென்று உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

5. கட்டாயமாய் அம்மை குத்துவதற்காக வேண்டிய அதிகாரங்களைப் பெறும்பொருட்டு விண்ணப்பஞ் செய்துகொள்ளச் செல்லுகையில், ஒருவிஷயத்தை நீங்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டுமென்று



நான் விரும்புகிறேன். அதாவது கல்வியில்லாத வாக்ஸினேட்டர்களுக்கு சரியான முறைப்படி அம்மை குத்தத்தெரியாது; அப்படி முறைதப்பி அம்மை குத்திவிட்டால் அது ஜனங்களுக்கு ஒரு பொய்நம்பிக்கை உண்டாக்குவதனால் எப்படி பார்த்தாலும் தீமை விளைவதாயிருக்கும். ஆகையால் அம்மை குத்தும் விஷயத்தில் ஜனங்களை நிர்ப்பந்திக்கும் பொதுக்கூட்டத்தார் நல்லமாதிரியாகவும் திறமையுள்ள ஆள்களைக் கொண்டும் அம்மை குத்துவிக்கவேண்டுமென்பது மிகவும் அவசியம். ஆகையால் திறமையான படிப்பாளிகளையே அம்மைகுத்துபவர்களாக நியமிப்பதும், அவர்கள் வாக்ஸினேஷன் கோடில் சொல்லப்பட்டிருக்கிறபடி டிஸ்டிரிக்டு மெடிகல் ஆபீசர் முன்பாக அம்மை குத்தும்வேலைக்குத் தகுதியாக்கும் ஒரு பரிட்சையைக் கொடுத்தாவதிருப்பதும் யுக்தம். அம்மைகுத்துவதற்கேற்ற பலமாதிரிகளைக்குறித்துச் சொல்லுகையில், மிருகஜாதிகளின் அம்மைப்பாலைக்கொண்டு குத்தினால் அதிக சீக்கிரமாயும் செலவில்லாமலும் திறமையாயும் காரியசித்தியாகும். இவ்விஷயத்தை முக்கியமாய்க் கவனிக்கவேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

6. வியாதியினால் அவஸ்தைப்படுகிற ஜனங்கள் வியாதியில்லாமையால் இடைவிடாமல் வேலைசெய்யக்கூடிய ஜனங்களைக் காட்டிலும் ஏழைகளாய்த்தானிருக்கவேண்டு மென்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். வைசூரி வார்த்திருக்குங்காலத்தில் தொழிலாளிகள் வேலைசெய்யமுடியாததனால் நஷ்டமுண்டாகிறதுந்தவிர வைசூரிவார்த்தவர்களுக்குள்ளே அடிக்கடி கை, கால், கண், காது ஊனமாய்விடுகிறதனாலே அனேக குடும்பங்கள் தரித்திர தசை அடைந்து சங்கடப்படுகின்றன; இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஒரு முறை நன்றாய் அம்மை குத்தப்பட்டவர்களுக்குச் சம்பவிக்கமாட்டா.

7. உங்களுக்குள்கட்டாயமாய் அம்மைகுத்தும் ஏற்பாட்டினால் உண்டானநன்மைகளுக்கு உதாரணமாய், 1884-ம் ௵ மேமீ௴த்தில் கட்டாயமாய் அம்மைகுத்தும் வழக்கம் ஏற்படுத்தப்பட்ட சென்னைமாநகரத்தையெடுத்துக்காட்டலாம். அந்த நகரத்தில் கட்டாயமாய் அம்மைகுத்தும் வழக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன் வைசூரியால் நேரிட்டகெடுதிகள் அதிகமாயிருந்தும் இப்போது அவ்விதமான கெடுதிகள் மிகவும் குறைந்துபோய் விட்டனவென்றும், சென்னை நகரத்தோடு ரெயில் மார்க்கத்தால் மிகவும் சம்பந்தப்பட்டுள்ள அனேக வெளிஜில்லாக்களில் வைசூரியால் பேராபத்துகள் உண்டாய்க்கொண்டிருந்தும் அப்படிப்பட்ட சமயத்தில் சென்னைமாநகரத்திலே வைசூரியினால் அவ்வளவு ஆபத்துக்கள் நேரிடவில்லையென்றும் அடியிற்கண்டிருக்கிற வைசூரிநோய் அட்டவணையினால் தெரியவரும்:—

| வருஷம். | சென்னை. | தென்னாற்காடு. | தஞ்சாவூர். | திருநெல்வேலி. | வட ஆற்காடு. | சேலம். |
|---|---|---|---|---|---|---|
| 1878 ... ... ... | 441 | 4,691 | 9,068 | 555 | 2,112 | 3,431 |
| 1879 ... ... ... | 888 | 2,120 | 1,332 | 721 | 539 | 133 |
| 1880 ... ... ... | 846 | 931 | 281 | 2,291 | 1,231 | 324 |
| 1881 ... ... ... | 1,594 | 1,108 | 131 | 2,376 | 2,078 | 427 |
| 1882 ... ... ... | 348 | 11,608 | 342 | 1,288 | 2,283 | 701 |
| 1883 ... ... ... | 1,937 | 2,910 | 1,024 | 557 | 2,089 | 1,647 |
| 1884 ... ... ... | 3,997 | 5,858 | 4,039 | 1,401 | 3,276 | 1,365 |
| 1885 ... ... ... | * 25 | 2,865 | 1,637 | 1,723 | 2,067 | 1,483 |
| 1886 ... ... ... | * 1 | 1,029 | 453 | 1,753 | 2,200 | 1,169 |
| 1887 ... ... ... | * 12 | 847 | 619 | 1,881 | 3,241 | 802 |
| 1888 ... ... ... | * 35 | 1,530 | 1,278 | 461 | 2,205 | 1,433 |
| 1889 ... ... ... | * 42 | 4,010 | 1,787 | 228 | 1,725 | 1,607 |

* இதுவும் பெரும்பாலும் பட்டணத்துக்கு வெளியிலிருந்து வந்தவர்களுக்குள்ளே சம்பவித்தது.

8. முடிவில் நான் சொல்லத் துணிந்ததிதுவே. இதனுடன் அனுப்பியிருக்கும் கணக்குகளால் திருஷ்டாந்த பூர்வகமாய்த் தெரியவரும் சங்கதிகளை நன்றாய் ஆலோசனை செய்து உங்களுடைய கவுன்ஸிலர்கள் தங்களுடைய நகர வாசிகளுக்கு எளிதில் நீக்கக்கூடிய வைசூரியினால் விளையும் வியாதிகளையும் மரணத்தையும் நிவர்த்தி செய்யவேண்டு மென்பதாகத் தீர்மானம் செய்தார்களென்று நான் அறிந்து மனம் சந்துஷ்டியாகும்படி செய்வீர்களென நான் நம்புகிறேன்.

## உபாத்தியாயர்பக்கம்.

### பள்ளிக்கூட ஒழுக்கமும் நன்னெறிப் பயிற்சியும்.

### III. நன்னெறிப்போதனைக்குத் துணைவழிகள்.

### 6. இகலாட்டம்.

"இகலாட்டம்" என்பது மாற்றானைப்போல ஜயமடையவேண்டுமென்று முயற்சித்தல்.

**பொருள்.** சக்தியறிவு, பாவனாசக்தி, நூதனமறியுணர்ச்சி, இவைகளைப்போலவே, இகலாட்டமும் மனச் சுறுசுறுப்பின் வேறுபாடாகும். மாற்றானைப்போல் ஜயமடைய வேண்டுமென்று ஒருவன் கருதும்போது, மாற்றானுடைய உயர்ந்தபதவியும் தன்னுடைய தாழ்ந்தபதவியும் அவன் ஞாபகத்திற்கு வரவேண்டியதாகின்றது. ஆகவே, "தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தழிகக் கற்றவெல்லாம், எற்றேயிவர்க்கு நாமென்று," என்றார்போல, ஒருவிதமான ஒப்புக்கோடல் நமது மனதிலே பிரவேசிக்கவேண்டும். "நாம் கற்றகல்வி என்னை? அவர்கற்ற கல்வி யல்லவோ கல்வி." என்றவோர் ஏக்கம் நமக்குண்டாகவும், அப்போது நாம் மிகுந்த ஊக்கங்கைப் பிடித்து இகலாடி முன்னுக்கு வருகின்றோம். இதுவே இகலாட்டம் என்னுமுணர்ச்சி.

மேலேசொன்ன 'இகலாட்டம்', சன்மார்க்கத்திலே, பிரவேசித்த வுணர்ச்சியாகும். ஏனெனில், இவ்வுணர்ச்சியில் இன்னமும் விரோதமும், குரோதமும், பொறாமையும் ஜனிக்கவில்லை.

**இவ்வுணர்ச்சியின் மாறுபாடுகள்.** விரோதமும், குரோதமும், பொறாமையும், எப்போது 'இகலாட்டம்' என்னுமுணர்வோடு கூடுகின்றதோ அப்போது இவ்வுணர்வு துன்மார்க்கத்திலே பிரவேசித்து, 'விருதொட்டல்' என்னுமுணர்வாகி, 'தான் ஜயமடையவேண்டும்' என்ற நினைவுபோய், 'மாற்றான் அபஜயமடைந்து அதபாதாளத்திலே விழவேண்டும்' என்ற கெட்டவெண்ணம் பிறக்கின்றது. இவ்வாறு 'மாற்றானை அமுக்கிவிடவேண்டும்' என்ற பொறாமையெண்ணமும் பகையும் 'விருதொட்டல்' உணர்வாகின்றது. விரோதத்தை விளக்கும் இவ்விருதொட்டல் எண்ணம் சிறுபிள்ளைகளிடத்திலே கிடையாது. பாவனாசக்தியினாலே தூண்டப்பட்டு வேறொருவர்செய்வதைக்கண்டு, தானும் அவ்வாறே செய்யவேண்டும் என்றுமாத்திரம் நினைக்கிறார்களே யொழிய, 'வேறொருவர் தாழவேண்டும், நாமுயரவேண்டும்' என்ற விரோத வுணர்வுகொள்ளுகிறார்களில்லை. மற்றொரு குழந்தைசெய்வதை நோக்கி, அதனைப்போலவே தானும் செய்யக் கருதி முயற்சிசெய்கின்ற ஒரு குழந்தை, தனது வல்லமையை மாத்திரம் அளவிட்டுப் புலப்படுத்துகின்றதேயொழிய, 'மாற்றானோடு பகைத்து அவனைவெற்றிகொள்ளவேண்டும்'. என்ற வெண்ணத்தை வகிக்கின்றதென்று நமக்குத் தோற்றவில்லை. 'மாற்றானைப் போல் தானும் அபிவிருத்தி யடையவேண்டும்' என்றுமாத்திரம் நினைத்து, தன்னைப்பற்றியே கவலைகொள்ளல், 'இகலாட்டாம்'. இவ்வாறு தன்னைப்பற்றிய கவலைமாத்திரம் கொள்ளாது மாற்றானைப்பற்றிய கவலையையும் வகித்து "அவன் அதோகதியாகவேண்டும்" என்று தெய்வத்தைப் பிரார்த்தித்தல், "விருதொட்டல்."

**போதனுமார்க்கத்தினிடையே இகலாட்ட வுணர்வைத் தூண்டலாமா?—** வகுப்பிலே இவ்விரண்டு உணர்ச்சிகளும் வெளியாகின்றன. 'தாம் முன்னிற்கு வரவேண்டும்,' என்று உத்தேசித்து, தன்னைப்பற்றிய கவலையைமாத்திரம் வகுத்து, இகலாடிவருகின்ற பிள்ளைகளும் இருக்கின்றார்கள். இவர்களுக்குப் பக்கத்திலேயே, 'மாற்றானை ஒரேயமுக்காய் அமுக்கிவிடவேண்டும்' என்றுநினைத்து விருதொட்டிவருகின்ற நமது சிகாமணிகளும், இருக்கின்றார்கள். ஆசான்மார்களே! உமது கடமைகள் எவ்வளவு இருக்கின்றன பார்த்தீர்களா?— கேளுங்கள், முன்னாளிலே "ஜெஸுயிட்" (Jesuit) பாதிரிமார்கள் தமது போதனுமார்க்கத்தினிடையிடையே இவ்விகலாட்ட வுணர்வை வெகு விமரிசையாகப் பயன்படுத்திவந்தார்கள். ஒவ்வொரு வகுப்பிலேயும் மாணாக்கர்களை இரட்டையர்கள் இரட்டையர்களாகப்பிரித்து வைத்து, இவ்விரட்டையர்களில் ஒருவன்மற்றொருவனுக்கு விரோதியென்றும், ஒருவகுப்பையே இரண்டு கூறாகப் பிரித்து ஒருபகுதியை "ரோம்" (Rome) என்றும், மற்றொரு பகுதியை "கார்த்தேஜ்" * (Carthage) என்றும் பெயரிட்டு வெகுபிரயாசைப்பட்டு சண்டைமூட்டி "விருதொட்டல்" உணர்வைவளர்த்துவந்தார்களாம்! (Jouvency) "ஜோவன்சி" என்ற பாதிரிமாரும், "இஃதொன்றே? மாணாக்கர்களின்புத்திதீக்ஷணியத்தை வளர்த்து, ஆசான் சிரமத்தைப் பரிகரித்து, அனாவசியமாய் பிரம்பைக் கையிலெடுத்து பயங்கரமாய்த் தோற்றும்படியடித்தலை யொழிக்கும்படி நமக்குப் போதிக்கின்ற இன்னம் அநேக தந்திரங்களும் இருக்கின்றன." என்கின்றார்.

**விபத்துக்கள்.** ஆயினும் இவர்கள் இகலாட்டவுணர்வைத் தடையன்னியிற்பயன்படுத்தவேண்டுமென்று பேரவாக் கொண்டவர்கள். இப்போது நாம் மறுதிறத்தார் கட்சியை நோக்குவோம். (Couper) கௌபர் என்னும் ஆங்கிலேயவித்துவான் "பாடசாலை விசாரணை" என்ற தனது புத்தகத்திலே இவ்விகலாட்ட வுணர்வைச் சொல்லக்கருதி, நிந்தித்துக் கைகொட்டிச் சிரிக்கின்றார். "என்னை" மகா அக்கிரமமன்றோ? இந்த நியமத்தின் பேர்சொன்னால் மிகவும் வனப்பாகவே யிருக்கின்றது. எல்லாரும் மலைக்கின்றார்கள்! ஐயோ! உண்மையை நோக்குவோமானால் இவ்விகலாட்டமென்னுமுணர்வு, பொறாமை, பகை, எரிச்சல், கர்வம், ஆகிய இத்துர்க்குணங்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்த ஒரு பிண்டமன்றோ? என்று வருத்தப்பட்டுப் பரிகாசஞ்செய்கிறார். நாமுன்னுரைத்ததுபோல இவ்விகலாட்டவுணர்வு தன்னைப்பற்றியகவலையோடு நின்றுவிடாது, "விருதொட்டல்" உணர்வாக மாறிவிடுமானால் அதிலுண்டாகும் விபத்து கொஞ்சமல்ல! எல்லாத் துர்க்குணங்களுக்கும் ஜனனபூமியாகின்றது! விருதொட்டுகின்ற இருவருக்குமே கெடுதலாகும். ஒருவன் வீண்பெருமை, டம்பம், கர்வம் முதலான துர்க்குணங்களைக் கொண்டாடுவான். மற்றொருவன் மனந்தளர்ந்து, சக்தியறிவு குன்றி, எரிச்சல், பொறாமைமுதலிய துர்க்குணங்களை வகித்துக்கொள்ளுவான். ஆதலால் இவ்விகலாட்டவுணர்வைப் போதனுமார்க்கத்திற்குத்துணை வழியாகக் கோடல் மிகுந்த பிழையென்று சிலர்கண்டித்து விடுவார்கள்.

**இவ்விகலாட்டமும் ஒரு துணை வழியே.** ஆயினும் இவ்விகலாட்ட வுணர்வைக் கண்டித்துவிடுதல் அசாத்தியம்! மனிதவியற்கைக்கு இன்றியமையாததாக வேற்பட்ட ஒரு உணர்வைக்கண்டிப்பதென்றால் யாரால் முடியும்? மனிதசுபாவம் உள்ளவளவும் உணர்ச்சிகள் நம்மை விட்டுநீங்கா! நமது மாணாக்கர்கள் நம்மைப்போலவே மனிதர்கள்தானே! ஆதலால் ஆசான்மார்களே! இவ்விகலாட்டவுணர்வைப்போதனு மார்க்கத்திற்குத் துணைவழியாகக்கொண்டு, இவ்வுணர்வையும் வளர்த்துவாருங்கள். சிலர் "இகலாட்ட முணர்வைக்கண்டிக்கவேண்டும்" என்று சொல்லுகிறார்களே என்று நின்றுவிடாதீர்கள். யோசித்துப் பார்த்தோமாகில் இவர்கள் "இகலாட்டம்" என்று சொல்கிறவுணர்வு, நாம் சொன்ன "விருதொட்டல்" உணர்வாகும். துன்மார்க்கத்திலே பிரவேசித்த இகலாட்டவுணர்வைக் கண்டிக்கத்தானேவேண்டும்! நூதனமறியுணர்ச்சியை வளர்க்கின்ற நீர், மாணாக்கர்கள் ஒட்டுக்கேளாவண்ணம் செய்துவருகின்றீர்களோ இல்லையோ? சக்தியறிவை வளர்க்கின்ற நீர் மாணாக்கர்கள் கர்வம் பாராட்டாது பார்த்து வருகின்றீர்களோ இல்லையோ? பாவனாசக்தியை வளர்க்கின்ற நீர் மாணாக்கர்கள் குரங்கு சேட்டைகள் செய்யாது கண்டித்து வருகிறீர்களோ இல்லையோ? ஆதலால் இகலாட்டவுணர்வை வளர்க்கப்புகுகின்ற நீர் மாணாக்கர்கள் விருதொட்டாவண்ணங் கண்டித்து வாருங்கள்.

டி. இராஜமய்யங்கார், பி. ஏ.

## பிரஸ்தாப விஷயங்கள்.

### வரப்போகிற இராஜப்பிரதிநிதி.

இப்பொழுது இராஜப் பிரதிநிதியாக விருக்கும் எல்கின் பிரபு அவர்களுடைய 5 வருஷ காலதவணை வருகிற டிசெம்பர்மாசத்தோடு கழிந்து போவதால் அவருக்குப்பதிலாக யார் இராஜப்பிரதிநிதி ஸ்தானத்திற்கு நியமிக்கப்படுவார்களோ என்னும் விஷயமாய்

* பூர்வீகத்தில் மத்தியதரைக் கடலைச் சுற்றிலும் ரோமேனியாதேசம் செழித்து வளர்ந்தகாலத்தில் ரோமுக்குப்பகை "கார்த்தேஜ்" தேசமாம்.

சென்ற இரண்டு மூன்று மாதகாலமாக எல்லாரும் சிந்தனை செய்துவந்தார்கள். பலர் பலவிதமாகச் சொல்லிவந்ததெல்லாம்போய் கடைசியில் கனம். மிஸ்டர் ஜியார்ஜ் நாதனியல் கர்ஸன் என்னும் பார்லிமெந்து சபைமெம்பர் இவ்வுந்நத ஸ்தானத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இப்பொழுதுள்ள ஆங்கிலேய கவர்ன்மெண்டில் பர தேச மந்திரியாகிய ஸாலிஸ்பரி பிரபுவுக்கு உதவி மந்திரியாக விருப்பவர். இவருக்குவயது 39 - இருக்குமென்று தெரிகிறது. இவருடைய தகப்பனார் ஒரு பிரபு. அவருக்கிப்பொழுது வயது சுமார் 70 - இருக்குமாம், மிஸ்டர் கர்ஸன் மத்திய ஆசியாவிலும் ஆப்கானிஸ்தானத்திலும் பலமுறையும் வந்து சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். மத்திய ஆசியா விஷயங்களைப்பற்றியும் இந்தியாவின் பரதேசகாரியங்களை நடத்திவரவேண்டிய முறையைப்பற்றியும் அவர் ஒரு புஸ்தகமெழுதியிருக்கிறார். நல்ல கெட்டிக்காரர். புத்திசாலி. சுறுசுறுப்பாளி. திடகாத்திரமும் திடசித்தமுமுடையவர். தன்வேலையைத் தானே பார்க்கப்பின்வாங்காதவர். சாமர்த்தியவான். வாசாதுரியம்உண்டு. நல்ல திறமைவாய்ந்தவர். ஆனால் ராஜாங்கஅனுபவம்போதாது. கொஞ்சம் அவசரபுத்தியுண்டென்றும், தன்சொந்தத் திறமையில் அதிக நம்பிக்கையுள்ளவரென்றும் அவரையறிந்தவர்களாகச் சொல்லிக்கொள்வோர் சொல்கிறார்கள். அதெல்லாம் பால்யமுதிக்காலும் அனுபவக்குறைவாலும்தோன்றியகுற்றங்களென்றும், அவை பொறுப்புள்ள ஸ்தானத்திற்குவந்து கொஞ்சம் அனுபவம்பெற்றதும் மாறிப்போமென்றும் பலர் சொல்கிறார்கள். இவரை இந்தியா இராஜப்பிரதிநிதியாக நியமித்தது பெரும்பாலும் சாதாரணமாக எதிர்பார்த்திராத விஷயமானாலும் அவர் நியமனம் நிச்சயமானபின் அதிக சாமர்த்தியமும் திறமையும் வாய்ந்தவராதலால் அவருடைய நியமனம் இந்தியாவுக் கனுகூலமாகமுடியுமென்று நினைக்க ஆக்ஷேபமில்லையென்று பலர் கூறுகிறார்கள். இன்னும் பலர் இவர்நியமனம் இந்தியாவுக்கு நன்மைவிளைக்குமென்று தோன்றவில்லை யென்று விசனப்படுகிறார்கள். நாம் இப்படி நினைத்துச் சந்தோஷப்படவாவது அப்படி நினைத்து விசனப்படவாவது தக்க ஆதாரங்கள் ஒன்றையும் காணோம். அவர் நியமனம்உறுதியாய்விட்டபடியால் அவர் சுபாவம் எப்படியென்பதைப் பொறுத்திருந்து காரியத்தில் கண்டுகொண்டு தீர்மானிப்பதே உசிதமென்று நமக்குத்தோன்றுகிறது. அதுவரையில் மாக்ஷிமைதங்கிய மஹாராணியாருக்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவரை நாம் அங்கீகரித்து நல்வரவு கூறுவதே நமது கடமையாகும்.

## கவர்னர் சுற்றுப்பிரயாணம்.

கனம்பொருந்திய கவர்னரவர்கள் இந்தமாசம் திருச்சிறாப்பள்ளி தஞ்சை ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம்செய்து, திருச்சிறாப்பள்ளி, தஞ்சை, கும்பகோணம், மாயவரம், தரங்கம்பாடி, நாகப்பட்டணம் முதலிய இடங்களை விஜயம் செய்துகொண்டு ஆகஸ்டுமீ 20உ உதகமண்டலத்துக்குத் திரும்பிச்சென்றார். அவர்சென்ற இடங்களில் ஜனங்கள் அவருக்கு வாசித்துக்கொடுத்த வந்தனோபசாரப்பத்திரங்களில் தங்களுடைய குறைநிறைகளைப்பற்றிச் சொல்லிக்கொண்டார்கள். இவற்றிற்கு அவர்கொடுத்த விடைகளும் மறுமொழிகளும் ஜனங்களுக்குப் பொதுவாய்த் திருப்தியை விளைத்தன. திருச்சிறாப்பள்ளியிலிருக்கையில் அவ்விடத்துப் பிரபல வித்தியாசாலையான "நாஷனல் ஹைஸ்கூல்" ஸ்தாபனத்துக்கு நூதன கட்டடம் கட்டுவதற்காக ஸ்தாபனக்கல் வைக்கும் சடங்கு நிறைவேற்றினார். திருச்சிறாப்பள்ளி பிராசுதாரர்கள் செட்டில்மெண்டு கொடுமையைப்பற்றி முறையிட்டுக்கொண்டதற்கு நிலங்களைத் தரவாரி செட்டில்மெண்டு செய்வது இடையூறு விளைப்பதாயிருக்கிறதென்பதை ஒப்புக்கொண்டு கூடியவரையில் அவ்வுபத்திரவத்தைக் குறைக்க சர்க்கார் வழிதேடமனமுள்ளவர்களாயிருக்கிறார்களென்று சொன்னார். விவசாய பாங்கி யேற்படுத்தும்விஷயம் கனம் மிஸ்டர் எப். ஏ. நிக்கல்ஸன் துரை ராஜாவின்பேரில் போயிருந்தமையால், இதுவரையில் ஒன்றும் செய்யக்கூடவில்லையென்று அவர் திரும்பி வந்துவிட்டபடியால் இனி யேதாவது அதுவிஷயமாய் ஒரு ஏற்பாடு செய்யவேண்டியதைப்பற்றிக் கவர்ன்மெண்டார் யோசிப்பார்களென்று சொன்னார். காடிலாகா நிர்ப்பந்தங்களைப்பற்றி நிலத்தீர்வை ஜமாபந்திசெய்து வருங்காலத்தில் ரெவினியூ உத்தியோகஸ்தரோடு காட்டிலாகா உத்தியோகஸ்தரும் சேர்ந்திருந்து காட்டிலாகா சம்பந்தமாய்க் குடிகள் அவர்களிடத்தில் சொல்லிக்கொள்ளும் குறைகளை அங்கங்கே விசாரித்து அதற்குவேண்டிய நிவர்த்திகளையும் உடனே செய்ய உத்தாரமிருக்கிறதென்று சொன்னார். ஹிந்துமததர்ம ஸ்தாபனங்களின் சொத்துக்களை விசாரணைசெய்து வருவதில் உண்டாகும் கெடுதிகள் மிகுதியென்று திண்ணமாய் ஏற்பட்டு விட்டதென்றும் ஆகையால் இதுவிஷயத்தில் கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு எழுதி அனுமதிபெற்றுக்கொண்டு இவ்விராஜதானி சட்டநிருபண சபையில் ஒரு சட்டமசோதாவை ஆலோசனைக்குக் கொண்டுவர ஏற்பாடுசெய்து வருகிறார்களென்று சொன்னார், இவ்வித முக்கியமான அம்



சங்கள்போக இன்னும் எத்தனையோ சில்லரை யம்சங்களுக்கும் தக்கவிடைகளளித்துவந்தார். அவர்கொடுத்தவிடை அனுகூலமாகவிருந்தாலும் பிரதிகூலமாகவிருந்தாலும் அவர் ஹிருதயபூர்வமாய் கரவடமின்றிப் பதிலுரைத்ததினால் பிரதிகூலவிடைபெற்றவர்களும் கூட ஒருவிதத் திருப்தியடைந்தார்கள். தஞ்சாவூரில் சதிர்க்கச்சேரிவைத்து கவர்னருக்கு வேடிக்கைவினோதங்கள் காட்டியதில் சதிருக்குவந்த தாசிகள் ஆபாசமான சில இங்கிலீஷ்ப் பாட்டுகளைப் பாடியதால் ஏதோ மரியாதைக்குறைவு நேரிட்டதென்றும் ஆனால் அது தெரிந்துசெய்யாமையால் ஜாடையாகவிட்டுவிடப்பட்டதென்றும் பத்திரிகைகளில் பிரஸ்தாபம் அதிகமாகவிருக்கிறது.

## கொள்ளைநோய் நெருக்கம்.

சென்றசஞ்சிகையில் "கொள்ளைநோயும் ஜனங்களும்" என்னும் தலைப்பெயரின்கீழ் எழுதினபின், அந்நோய் பெங்களூரிலும், ஹாஸ்பெட், குந்தக்கல், திருப்பதி முதலிய இடங்களிலும் தலைகாட்டினதாகத் தெரியவருகிறது. சேலம்ஜில்லாமுழுவதும்கொள்ளை நோய் வரும்போலிருக்கிறதென்று அதிக காபந்து செய்துவருவதுடன் சென்னையைச் சுற்றிலுமுள்ள ரயில்ஸ்டேஷன்களில் ரயில்மார்க்கமாய் வரும் பிரயாணிகளை நிறுத்தி அதிகக்கவனமாய் பரிசோதனை செய்து வருகிறார்கள். கவர்ன்மெண்டார் கொள்ளைநோய் வருவதைத்தடுக்க அவர்களால் செய்யக்கூடிய முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் சகலமும் செய்து வருகையில் அவ்வளவுக்கும் தப்பி 'ப்ளேக்' வந்துவிட்டால் அதைத்தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய முஸ்திப்புகளோடும் தயாராகவிருக்கிறார்கள். அம்மை போடாம லிருப்பதற்காக வசூரி வைக்கிறதுபோல கொள்ளைநோய் வராமலிருக்க ஒருவித ஏற்பாடு கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது 'ப்ளேக்' வியாதி யுண்டுபண்ணும் கொள்ளைநோய்வித்துக்களை விசேஷமாகவளர்த்து அவற்றை வெந்நீரிலிட்டு கொதிக்கக்காய்ச்சி வடிக்கட்டுகிறார்கள். இதனால் கொள்ளைநோய்விஷம் அதன் உக்கிரமிழந்து உயிருக்கு அபாயமுண்டாகாமல் சொற்பமாய்ச் சுரம்வந்து நீங்கிப்போகும்படிச் செய்கிறது. இதனால் கொள்ளைநோய் பிராணஹானி யுண்டுபண்ணும் தன்மை யிழந்துபோவதோடு, இப்படிக் கொள்ளைநோய் வசூரிவைத்துக்கொண்டவர்களைப் பிடிக்கிறதில்லையென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது கொள்ளைநோய்க்கு முற்றும் நிச்சயமான நிவர்த்திமுறையென்று சொல்வதற்குப்போதுமான ஆதாரம் இன்னும் கைகூடிவரவில்லையானாலும் இதுவரையில் பரிக்ஷை செய்துபார்த்ததில ஏதோ அபூர்வமாகச் சில கேஸ்கள்தவிர மற்றவற்றிலெல்லாம் இது கொள்ளைநோயின் அபாயத்தை விலக்க நல்லஉபாயமாகவே பலித்திருக்கிறது. சென்னையில் விஷபேதியும் பெரிய அம்மை, சின்னம்மை முதலிய தொத்துவியாதிகளும் கண்டு வாராவாரம் நேரும் மரணங்களின் தொகையை விசேஷமாக விர்த்திசெய்து வருகின்றன. சென்னை முனிசிபாலடியார் நகரைச் சுத்தியாகவைத்துவர மிகமுயற்சித்து வருகிறார்கள். படித்தவர்களும் விவேகிகளுமாயுள்ளோர் யாவரும் தங்களுடைய சொந்தவீடு வாசல் மனைமுதலியவைகளைச் சுத்தமாய் வைத்துக்கொண்டு வருவதோடு புத்தியில்லாத மற்ற ஜனங்கள் ஆபாஸம் செய்து அசுத்தம் விளைத்துவருவதையும் புத்திபோதனையாலும் சொந்த உதாரணத்தாலும் தடுக்க முயலவேண்டும்.

# சிறுவர்க்கான பக்கம்.

[ விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது. ]

## ஒரு மாலுமிச்சிறுவன்.

'ஹேட்டி' என்ற மேலிந்தியதீவில், 'போர்ட் டாபிரின்ஸ்,' என்ற துறைமுகத்தைநோக்கி ஒரு கப்பல் பிரயாணமாகிச் சென்றது. அக்கப்பலின்மீது சென்ற பிரயாணிகளில் ஓர் அமெரிக்கா வியாபாரியின் செல்வமகள் ஒருத்தியிருந்தாள். கப்பல் ஓடிக்கொண்டிருக்குங்கால், ஒரு தருணம் தனது செவிலியை விட்டுப்பிரிந்து அலைந்து திரிந்தவம்மகள், கப்பலின் மேற்றட்டில் வந்து சேர்ந்தாள். அங்கு மேற்றட்டியோரமாய்வந்து அரண்போன்றிருந்த பக்கத்திலே சாய்ந்து கடல்நீரை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது கடல்பொங்கி ஆரவாரிக்க கப்பல் திடீரென்று கொந்தளித்துச்சாய்ந்து குலுங்குலுங்க, வியாபாரியின் செல்வமகள் மதிமயங்கிப்போய் கடலிலே விழுந்துவிட்டாள் !

தற்சமயத்தில் இம்மகள்விழுந்துவிட்டதைக் கண்டு, "டெக்னர்" என்று பெயர்கொண்ட மாலுமி, அவளுக்குப் பின்னே தானுந்தண்ணீரி

லேகுதித்து விரைவாக நீந்திச்சென்று, அப்பெண்ணை அவளாடையாலே பிடித்துக்கொண்டான். ஒருகையால் அம்மகளைத் தனது மார்போடு இறுக அணைத்துக்கொண்டு, மற்றொருகையால் நீரைவருடி நீந்திவந்து கப்பலைச் சமீபித்தான் அச்சமயத்து, ஒரு சுறுமீன் தன்னைப் பின்றொடர்ந்து ஓடிவருவதைக்கண்டு, "இளம்பெண்ணுக்கு மோசம்வருமே" என்று பயந்து "சுறு, சுறு" என்று ஓலமிட்டான். அபாயசம்பவம் கிட்டிவிட்டது, யாவரும்தாறுமாறாய்க் கப்பல் மேற்றட்டிலோடினார்களேயொழிய தைரியங்கொண்டு தண்ணீரில் விழுந்து சுறுவோடு எதிர்த்துப் பொருதாரில்லை. சிற்சிலர் கைத்துப்பாக்கியையெடுத்து சுறுவின்மீது குண்டுபாய்ச்சினரேனும் பயன்பட்டதில்லை. இங்ஙனமாக, அச்சுறுமீனே தனது வாயினாலே நீரைப் பளீர்பளீரென்று அறைந்து தாக்கிக்கொண்டு, பயங்கரமான வாயைத்திறந்து தனது இரையைவிழுங்கிவிடும்படி நெருங்கி நெருங்கி வந்துவிட்டது.

பலசாலிகள் ஆயிரம்பேர் கப்பல்மீது நின்றுகொண்டிருந்தார்களேனும், ஒருவரேனும் சுறுவை வெட்ட தைரியங்கொள்ளவில்லை. அத்தருவாயில், தந்தையிடத்துத் தான் கொண்டவாசையாலே பெக்னரின் பிள்ளையான வால்னே என்பவன், (வயது பன்னிரண்டுக்கு மேலாகவில்லை,) கையிலே ஒரு குறுவாளைப்பிடித்துக்கொண்டு திடீரென்று தண்ணீரிலே விழுந்து, தானும் ஒரு சுறுவைப்போல நீரிலேமுழுகி மீனிற்குக்கீழாகவந்து தனதுகுறுவாளை அதன் வயற்றிலே கைப்பிடிவரைக்கும் உட்புகும்படி பாய்ச்சினான். இளங்குமரன் தன்னை இவ்வாறு குத்தவும், காயம்பட்டு இரத்தமொழுக, சுறுமீன் தந்தைமீது பாய்வதையொழிந்து, பிள்ளைமீதிற்பாய்ந்தது. வால்னே சுறுமீனோடுகலந்து யுத்தம்செய்து திருப்பித்திருப்பி அதின்மீது குத்தினான். அது ஒருபயங்கரமான காட்சியாகவிருந்தது! கப்பல்மீது தனது பெண்ணைப் பரிகொடுத்த வியாபாரி தவித்துக்கொண்டு நின்றான். ஒருபக்கம் தீனதயாளுவான மாலுமி குழந்தையைக் காப்பாற்றவேண்டிய நிமித்தம் தனது உயிரைக்கூடப் பாராட்டாது நீரிலே கிடந்து உழல்கின்றான். மற்றொருபக்கம் சுறுமீனோடு எதிர்த்துப் போர்செய்துகொண்டு வால்னே என்னுஞ்சிறுபையன் தவிக்கின்றான். கப்பல்மீது ஆயிரக்கணக்கான ஜனங்கள்திரண்டு 'இது எப்படி முடியுமோ' வென்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தனர். ஒரு சிறுபையன் பயங்கரமான சுறுமீனோடு சண்டைசெய்வதென்றால் எவ்வாறுமுடியும்? அவனாற்கூடிய மட்டும்பார்த்தான். அப்படியுமிப்படியும் பாய்ந்தும் கீழேமுழுகியும், மேலேகிளம்பியும், குத்தியும்,—தன்னாலியன்றவளவு சாமர்த்தியங்களைக் காட்டி வெகுநாழிகை அம்மீன்வாய்க்குத் தப்பிக்கொண்டு நின்றான். இறுதியாக அம்மீனை ஏய்த்துவிட்டு திடீரென்று கப்பலிலே தாவிவிடுவதுதான்யுக்தியென்று கண்டான். அப்போது கப்பலிலிருந்து அநேகங்கயிறுகள்கீழேதொங்கவிடப்பட்டன. பெக்னர் என்னும் மாலுமிவியாபாரியின் சிறுபெண் தன்வயற்றிலே குரங்குக்குட்டியைப்போல விடாது அணைத்துக்கொண்டிருக்க, அப்போது அக்கயிறுகளிலே ஒன்றைப் பிடித்துக்கொண்டு 'சரசர' வென்று மேலே ஏறினான். இதுகண்டு, வியாபாரியின் பெண் காப்பாற்றப்பட்ட விஷயத்திலே மகத்தான சந்தோஷத்தை யடைந்து, மகாதீரனான வால்னே என்னும் மாலுமிச்சிறுவன் இனி இம்மீனை ஏய்த்து விடவேண்டுமென்றுகண்டு, ஒருபக்கமாய் நீரிலேபுரண்டு கொழுத்து மூழ்கிக்கிளம்பி தொங்கிய கயிறுகளில் ஒன்றை லாவிப் பிடித்துக்கொண்டான். "ஆகா! பையன்காப்பாற்றப்பட்டான்! காப்பாற்றப்பட்டான்!!" என்று எல்லாரும் களிகூர்ந்து நடனமாடத் தலைப்பட்டார்கள்! ஆனால், அது எங்கே நடந்தது! மாலுமிச்சிறுவன் கயிறுகளில் ஒன்றைத் தாவிப் பிடித்துக்கொண்டானோ இல்லையோ, உடனே சுறுமீன் தனது பகைவன் கரையேறுவதைக் கண்டு, ஆரோதாவலாய்த் தாவி பளீரென்று அவன் முதுகிலேபாய்ந்து, உடலைக்கிழித்து, கிழிபட்டதுண்டத்தை வாயிலே கௌவிக்கொண்டு ஓடிவிட்டது! கயிற்றை விடாது பிடித்துக்கொண்டிருந்த கைகளும் மார்புந் தலையுந்தான் கப்பலிலே இழுக்கப்பட்டன.

சிறுவர் சிறுமிகாள்! முன்னே பரோபகார சிந்தனையுள்ள மகாராஜன் கதையிலேசொல்லப்பட்டதுபோல தமது உயிரைப்பாராட்டாது பிறரைக்காப்பாற்றுகின்ற உத்தமபுருஷர்களில் நமது 'வால்னே' என்னும் மாலுமிச்சிறுவனும் ஒருவனும். நீங்கள் இம்மாலுமிச் சிறுவன் கதையை ஒருநாளும் மறவாதிருக்கக் கடவீர்.

T. R.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி. 5½ அணா,,
பழையபிரதி. 6 ,,

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4,
6-மாதத்துக்கு ரூ. 2-2.




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். 7.] 1898ஹு செப்டம்பர்மீ. [இலக்கம். 5.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

**Minimum Subscription Rs 5 per annum.**

Single Copy 7½ As, : Back Nos. 8 As. each.

English & Foreign Subscription 7s. 6d net per annum

**Thin Paper Edition** for the People :–

Subscrn. Price : Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.
Single copy, current No. 5½ As. Back Nos. 6As. each.
English & Foreign Subscription 5s. 6d net per annum.

**If Strictly Prepaid** at the commencement of the term, (i. e., in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

**Subscriptions Entered to begin with only April or May of each year**
**Enrolled Subscribers may not withdraw except at the end of the year.**

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V.P.P. to prevent accumulation of arrears.

**In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.**

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு :— அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5.
தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்ரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்த விரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்ரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V.P.P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிடவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## சஞ்சோக்தை சுயம்வரம்

அல்லது,

## ப்ரித்விராஜா சரித்திரம்.

IV.

### நான்குபெரிய இராஜ்ஜியங்கள்.

ஷஹபுடீன் லாஹோரைக் கைப்பற்றி இந்தியாவின்மீது படையெடுக்கச் சித்தனாயிருந்த காலத்தில், ஹிந்துஸ்தானம் நான்கு பெரிய இராஜ்ஜியங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் அதன் தலையரசனுக்குட்பட்ட சிற்றரசர் குழாம் ஒன்றினால் ஆளப்பட்டு வந்தது. இக்காலத்தில் இராஜபுத்திரர்கள் எங்கும் செழித்தோங்கி அவர்கள் அதிகாரம் உச்சத்திலிருந்து வந்தது. இவர்கள் 36-இராஜவம்சஸ்தர்களாகப் பிரிக்கப்பட்டு வழங்கிவந்ததெல்லாம் புராணங்களில்சேர்ந்து ஹிந்துசாஸ்திர புராணங்களோடு புராணங்களாகக் கலந்து போய்விட்டது. உண்மையில் 9-ம் நூற்றாண்டு முதல் புத்தமதம் க்ஷீணித்துவந்தது இவர்களுடைய செய்கையாலேயே. இவர்கள் சில நூற்றாண்டுகளுக்குமுன் ஹிந்துக்களோடுஹிந்துக்களாகச்சேர்ந்தவர்களாதலால் ஹிந்துமதத்தைத் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு புத்தமதத்தைப் புறங்காட்டியோடச்செய்து வந்தார்கள்.

இக்காலத்தில் பிரபலமாக விளங்கிய நாலு இராஜ்ஜியங்கள் எவையெனில் :—

முதலாவது.—டில்லி இராஜ்ஜியம்: இது முதலில் தோமர அல்லது துவார் ராஜபுத்திரர்களாலும் பின்பு சஹமான் அல்லது சோஹன் ராஜபுத்திரர்களாலும் ஆண்டுவரப்பட்டது.

இரண்டாவது.—கானோஜ் அல்லது கன்யாகுப்ஜம்: இது ராத்தோர் ராஜபுத்திரர்களால் ஆளப்பட்டுவந்தது.

மூன்றாவது.—மைவார் அல்லது மத்தியவாரம் : இது கிலோத் ராஜபுத்திரர்களால் ஆளப்பட்டு வந்தது. இதற்குத்தலைநகர் சித்தூர் அல்லது அதன் பூர்வீகப்பெயரைச் சொல்ல சித்திரகூடம்.

நான்காவது.—அனல்வாரம் அல்லது குஜராத் : இது சவ்வீர, சோலாங்கி ராஜபுத்திரர்களால் ஆளப்பட்டு வந்தது. இதற்குத் தலைநகர் அனல்வாரபட்டினம்.

இந்தியாவையாண்டுவந்த மற்றச் சிற்றரசர்களெல்லாரும் இந்நான்கு முக்கிய ராஜ்ஜியங்களில் ஒன்றில்லாவிடில் ஒன்றிற்குக் கப்பம் அல்லது காணிக்கை கட்டி வருபவர்களாயிருந்தார்கள்.

டில்லிராஜ்ஜியத்திற்கும் கானோஜ் ராஜ்ஜியத்திற்கும் இடையில் அவை யிரண்டிற்கும் எல்லையாக ஓடியது காளிந்தி நதி. சிந்துநதிக்கு மேற்கேயுள்ள பாகமனைத்தின்மீதும், சிந்துநதியும் அதன் உபநதிகளும் பாயும் நாடுகள் முழுவதிலும், வடக்கே ஹிமயமலையடிவாரம் முதல், மத்தியிலுள்ள பாலைவனமுள்பட அரவலி மலைத்தொடர்வரையிலுமுள்ள நாடுகளிலும் டில்லியின் மேலதிகாரம் சென்றுவந்தது. டில்லியை யாண்டுவந்த தோமர அல்லது துவார் ராஜாக்களுக்குப் பின் பட்டத்துக்கு வந்த சோஹன்ராஜா தனக்குள் நூற்றியெட்டுச் சிற்றரசர்கள் இருந்து ஆண்டுவருவதாகக் கணக்கிட்டுச்சொல்லி பெருமைகூறிக்கொள்வது சகஜமாயிருந்தது. நம் சரித்திராரம்ப காலத்தில் இந்த முக்கியமான டில்லி ராஜ்ஜியத்தை யாண்டுவந்தவர் நம் கதாநாயகராகிய ப்ரித்விராஜா.

கானோஜ்ராஜ்ஜியம் வடக்கே ஹிமாலயத்தின் அடிவாரம்வரையிலும் கிழக்கே காசிவரையிலும் சம்பல்நதிக்கப்பால் (இப்பொழுது 'பண்டில்கண்ட்' என்று பேர்வழங்கும்) சண்டேல் ராஜபுத்திரர்கள் நாடு வரையிலும் தெற்கே மைவார் எல்லை வரையிலும் பரவியிருந்தது. காளிந்தி நதி இதற்கும் டில்லிராஜ்ஜியத்திற்கும் இடையே ஓடிற்றென்று சொன்னோமே. இதையாண்ட அரசன்பேர்தான் ஜயசந்தன்.

மைவார் அல்லது மத்தியவாரம்(பூர்வீக 'மத்தியதேச'த்திலிருந்து இப்பேர்பெற்றது) அரவலி மலைத்தொடரை வடக்கெல்லையாகக் கொண்டு, தெற்கே காஜோஜையடுத்து வாழ்ந்த ப்ராமர ராஜபுத்திரர்களின் ஸ்தானமாகிய தார் நாட்டை யொட்டிப்பரவி, மேற்கே அனல்வார ராஜ்ஜியத்தின் எல்லைவரையில் விஸ்தரித்திருந்தது. இதன் தலைநகர்சித்தூர்அல்லது சித்திரகூடம் இதையாண்ட அரசன்பேர் ஸமரசிங்.

அனல்வார் (குஜராத்) ராஜ்ஜியம் தெற்கே சமுத்திரத்தாலும், மேற்கே சிந்துநதியாலும், வடக்கே பெரியபாலைவனத்தாலும் சூழப்பட்டிருந்தது. இதை நம் சரித்திரகாலத்தில் ஆண்டுவந்த அரசன் இரண்டாவது பீமதேவ். இவனுக்கு போலபீமன் அதாவது 'பித்துக்கொள்ளி பீமன்' என்கிற பட்டப்பெயரொன்றுண்டு.

இந்நான்கு பெரிய ராஜ்ஜியங்களும் ஒன்றோடொன்று போர்புரிவதுண்டு. ஆனால் இவர்கள் ஒருவருக்குள் ஒருவர் என்ன சண்டை போட்டுக் கொண்டாலும் இதுவரையில் எவரும் அந்நியர்களுக்குச் சிறிதும் விட்டுக் கொடுத்ததில்லை. முகம்மதியரைப் போல் அந்நியரான பொதுப் பகைஞர் வந்து விட்டால் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து அவர்களைப் புறங்காட்டியோடச்செய்வதில் நான் நானென்று முந்திக் கொண்டு புறப்படுவார்கள். டில்லியையாண்ட சோஹன் ராஜபுத்திரர்கள் டில்லிப் பட்டத்திற்கு வருமுன் ஆஜ்மீர் நாட்டில் அரசுபுரிந்துவந்தார்கள். இவர்களுக்குமுன் டில்லியையாண்ட துவார் ராஜபுத்திரர்களுக்குப்பின் ப்ரித்விராஜாமூலமாய் சோஹன் ராஜபுத்திரர் டில்லிக் கதிபதியானார்கள். ஆஜ்மீரையாண்ட சோஹன ராஜபுத்திரர்களும் மைவாரை யாண்ட கிலோத் ராஜபுத்திரர்களும் அடுத்துக்கலந்துள்ள நாடுகளை யாண்டு வந்தவர்களாதலால் எப்போதும் அந்நியோந்நிய நேசர்களாகவே இருந்து வந்தார்கள். டில்லியிலாண்ட துவார் ராஜபுத்திரர்களுக்கும், கானோஜிலாண்ட ராத்தோர் ராஜபுத்திரர்களுக்கும் எப்போதும் சண்டைசச்சரவுகளிருந்து வருவதுவழக்கம். இவர்கள் இருவரும் எல்லைப் புறத்தில் சந்தித்து அடிக்கடிச் சண்டைசெய்து காளிந்தியின் கறு நீரைத் தங்கள் உதிரக் கலப்பால் செந்நீராக ஓடும்படிச் செய்வார்கள். ஆனால் இந்த உட்சண்டைகள் ஒருபோதும் நீடித்து நின்று மனதில் உட்பகை விளைத்ததில்லை. ஏதோ காரணமாகச் சண்டைநேரிட்டால் இருவரும் கலந்து சண்டை செய்வார்கள். தோற்புக்கெலிப்புத் தெரிந்ததும் ஜெயித்தவன் தோற்றவன் குலத்து ராஜகுமாரத்தியை மனைவியாகக் கொண்டு மணம்புரிந்து கொள்ள, இருவரும் கலந்து ராசியாகப் போய்விடுவார்கள். பிறகு பின்னுமொரு சண்டைக்குக் காரணம் நேரிடுகிறவரையில் இருவரும் நேசமாயிருந்து வருவார்கள். இப்படி இவர்களுக்குள் உண்டாகும் சில்லரை வழக்குகளெல்லாம் சண்டையில் முடிவதும், சண்டை, விவாக பந்தத்தில் முடிவதும் இவர்களுக்குள் வெகுகாலமாயிருந்து வந்தது. யுத்த மத்தியில் ஒருமுகூர்த்த காலம் சண்டையை நிறுத்தநேரிட்டால் அக்காலத்தில் எதிர்க்கக்ஷித்தலைவர்கள் இருவரும் ஒரு கூடாரத்தில் சந்தித்துக் கலந்து பேசிக் கொள்வதும், முகூர்த்தகாலமுடிவில் இருவரும் ஒருவரிடம்ஒருவர் விடைபெற்றுக்கொண்டு சண்டைக்கு ஆயத்தமாகப் புறப்படுவதும் வெகு சாதாரணம். 11-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் அதாவது கி. பி. 1000 வருஷங்களுக்குப்பின்பு வட இந்தியாவில் இராஜபுத்திரர்கள் அதிகாரம் மிகச்செழித்து விளங்கத் துவக்கியது. இது முதல் 200 வருஷகாலத்துக்கு இராஜபுத்திரர்கள் அதிகாரம் வளர்பிறை போல் விர்த்தியாகி வந்தது. 12-ம்நூற்றாண்டின் மத்தியிலும் இறுதியிலும் அவர்கள் அதிகாரம் உச்சத்திலிருந்தது. மாம்மூதுகாலத்துக்குமுன்னிட்டு ஒருயாத்திரிகர் ஐரோப்பாவிலுள்ள அர

சர்கள் ஸ்தானத்தையெல்லாம்பார்த்துக்கொண்டு 'பைசாண்டியம்' நகருக்குவந்து பிந்தி 'தைமர்' அல்லது 'தாமர்லேன்' படையெடுத்துச் சென்ற வழியாக இந்தியாவில் டில்லி, கானோஜ், அனல்வாரம் இவைகளை விஜயஞ்செய்துகொண்டு சுற்றுப்பிரயாணம் செய்துவந்தால் நாகரிகமென்று சொல்லப்படுமெல்லாவற்றிலும் இராஜபுத்திர அரசர்கள் எவ்வளவு மேலானவர்களாக அவருக்குத் தோற்றியிருப்பார்களென்று, கர்னல் டாட் அக்காலத்து இராஜபுத்திரர்களின் சிறப்பையும் நாகரிகமேன்மையையும் குறித்து வியந்து கூறி யெழுதியிருக்கிறார். நாகரிக வித்தைகளில் ஐரோப்பிய அரசர்களைவிட இராஜபுத்திர அரசர்கள் அளவிட்டுச் சொல்ல முடியாதபடி மேன்மையுற்றிருந்தார்கள்; ஆயுதப்பயிற்சியில் அவர்கள் ஐரோப்பிய அரசர்களுக்கு எவ்விதத்திலும் பின்னிட்டவர்களாகவில்லை. அக்காலத்தில் இந்தியாவிலிருந்ததுபோலவே மேற்குத் தேசங்களிலும் ஒவ்வொரு இராஜ்ஜியமும். * உம்பிளிக்கைமுறையையனுசரித்து ஆளப்பட்டுவந்தது. உம்பிளிக்கை முறையாவது என்னவென்றால் அரசனிடத்தில்நிலத்தை மான்யமாகப் பெற்றுக் கொண்டு வரிகட்டுவதற்குப்பதிலாக குறித்தசில சேவகங்கள் பணிவிடைகள் செய்து வருவதாம்.

இந்தியாவிலிருந்த இவ்வேற்பாட்டைச் சொல்லில், முதலாவது தலையரசனும் அவனுக்குள் சிற்றரசர்களும் இருப்பார்கள். சிற்றரசர்கள் தலையரசனுக்குக் கப்பம் அல்லது காணிக்கை கட்டி வருவதோடு ஆபத்து, சம்பத்துக் காலங்களில் தலையரசன் அழைத்தால் அவன் அழைப்புப்பத்திரத்திற் கிணங்கி அவனிடம் சென்று அவனுக்கு வேண்டிய உதவி செய்வார்கள். அரசர்கள் ஒவ்வொருவரையும் சுற்றி, அவனிடத்தில் ஒரு பெரிய வட்டம் அல்லது மாகாணம் மானியமாகப் பெற்றுக்கொண்டியுத்தகாலங்களிலும் மற்றக்காலங்களிலும் அரசனுடன்கூடவிருந்து படையுதவி செய்யும் தலைவர்களுக்கு சாமந்தர்கள் என்றுபெயர். ஆங்கிலேய நாட்டில் இவ்வகுப்பை யொத்தவர்களுக்கு 'பாரன்ஸ்', 'நைட்ஸ்' என்கிற பெயர்கள் வழங்கிவந்தன.

அரசர்கள் சிற்றரசர்கள் தவிர இவர்களுக்குள்பட்ட தலைவர்கள் பலவகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் முதல் வகுப்பைச்சார்ந்தவர் 16-பேர்கள். இவர்களுடைய மான்யத்தின் வருஷவரும்படி அரைலக்ஷம் முதல் ஒருலக்ஷம்வரையிலும் அதற்குமேலும் இருக்கும். இவர்கள் அரசனுக்குமுக்கியமான ஆலோசனை சொல்லும் அதிகாரிகள். மந்திரி, பிரதானி உத்யோகங்கள் இவர்கள் வம்சத்தில் பெரும்பாலும் பரம்பரையாக இருந்து வரும்.

இரண்டாவதுவகுப்பார் வருமானம் ஆயிரம் முதல் 50-ஆயிரம் ரூபாய் வரையிலிருக்கும், இவ்வகுப்பிலிருந்து இராணுவ அதிகாரிகள், எல்லைப்புறம்காக்கும் அதிபதிகள், பௌஜிதாரிகள் முதலிய உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுத்து நியமிக்கப்படுவார்கள்.

மூன்றாவது வகுப்பார் 5 - ஆயிரத்துக்குக் குறைந்த " வருமானமுள்ளவர்கள். இவர்கள் விசேஷமாய் எப்பொழுதும் அரசன்பக்கத்திலிருந்து வருபவர்களாதலால் அரசனுக்குள்ள பக்கபலமெல்லாம் இவர்களாலேவருவதுதான்.

நான்காவது, ராஜவம்சத்தின் கனிஷ்டவர்க்கங்களி லுதித்தவர்களும் அரசனிடத்தில் கிராமங்கள் மாகாணங்கள் பெற்று அரசனுக்கு உதவிசெய்யக் கடமைப்பட்டவர்களாக இருந்து வருவார்கள். இவர்களுக்கெல்லாம் 'பாபாக்கள்' அதாவது குழந்தைகள் என்று பொதுப்பேர்வழங்கும். ராஜவம்சத்தின் கனிஷ்டவர்க்க சந்ததியாரை 'பாபா', 'பாவா' என்று கூப்பிடுவது வழக்கமாக ஏற்பட்டதுபோல் அரசுசெலுத்தும் ராஜா அல்லது ராணியை எல்லாரும் 'பாபுஜீ' யென்று கூப்பிடுவதுவழக்கம். இராஜபுத்திரர்களில் சிம்மாசனாதிபதியான அரசன் முதல் ஒரு ஏர் நிலம் மான்யமாகக்கொண்டு அதற்கு ஈடாகப் படையுதவிசெய்யும் படைவீரன் ஈறாக எல்லாரும் ஏகபந்துக்களே. ஐசுவரிய வித்தியாசம் அந்தஸ்துவித்தியாசம் எவ்வளவிருந்தாலும் இரத்தபந்தம் எல்லாருக்கும் ஒன்றே. அவர்களெல்லாரும் பாந்தவியர்கள். எவ்வளவு தாழ்ந்த அந்தஸ்திலுள்ளவர்களானாலும் அரசன் குடும்பத்திலும் கூட கொண்டுகொடுத்து சம்பந்தம் செய்துகொள்ள எவ்விதத்திலும் சமதையானவர்களாக நினைப்பார்கள். அரசனானாலும் ஒரு ஏர் நிலமுள்ள ஒருபடைவீரன்புத்திரியை விவாகம்செய்துக் கொள்வதில் கௌரவக்குறைவொன்றையும் காணான். அவர்களுக்குள் 'சகபந்தம்' பெரிது. அதற்குமிஞ்சித்தான் மற்றப் பாத்தியங்களெல்லாம்.

அக்காலத்தில் ஐரோப்பாவிலும் இந்தவழக்கம் விசேஷமாகப்பழகிவந்தது. கி. பி. 1066 வருஷத்தில் நார்மண்டிதேசத் ததிபதியான உவில்லியம், ஹேஸ்டிங்ஸ் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் ஆங்கிலேயர் அரசனாகிய 'ஹாரோல்ட்' என்பவரைச் சம்ஹரித்து அங்கிலேயநாட்டைத் தன் ஸ்வாதீனப் படுத்திக்கொண்டபின், அந்நாட்டுநிலத்தை 60-ஆயிரம் பாகங்களாகப்பிரித்து, வருஷம் 20 - பவுன் வருமானம் தரும்படியான அப்பாகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு குதிரைவீரன் படைச்சேவகம் செய்யவரவேண்டுமென்று நிர்ணயித்துத் தன்னைச்சுற்றியுள்ள வீரர்களுக்கு அத்தேசத்தைப் பங்கிட்டுக்கொடுத்தான். இந்தியாவில் ஒருகுதிரைவீரன் சேவகத்துக்காகக்கொடுக்கப்பட்ட மான்யம் சுமார் 250 ரூபாய் வருமானம் ஈவதாயிருந்தது. ஐரோப்பாவில் இப்படி மானியம் பெறும் படைவீரன் வருஷத்தில் 40 - நாளைக்குத்தான் சேவகம் செய்யக்கடமைப்பட்டவனாயிருந்தான். அதற்குமேல் சேவகம் செய்யும்படி அவனை நிர்ப்பந்திக்க அரசனுக்கு அதிகாரமில்லை. இந்தியாவில் அப்படியில்லை. ''இராஜ்ஜியத்தினுள்ளேயானாலும் வெளியேயானாலும் வேண்டியபோதுவந்து சேவகம் செய்யக்கடமைப்பட்டவனாவேன்'' என்கிற நிபந்தனைக்குள்பட்டு இராஜபுத்திரவீரன் மான்யம் விடப் பெற்றுவந்தான்.

இராஜ்ஜிய காரியங்களினிமித்தமும் இராஜாங்கத்தை யுத்தேசித்தும் அரசனுடைய மேலான சாமந்தர்களில் ஒருபகுதியார் வருஷத்தில் சில மாதங்களுக்கு இராஜதானியில் வந்து வசித்துவருவார்கள். பிறகு அரசன் இவர்களுக்குவிடையளித்து இவர்கள் பூஸ்திதியுள்ள இடம்போக அனுமதிகொடுக்க, வேறொருபகுதியார் வந்து இராஜதானியில் வசிப்பார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயதேச சரித்திரத்திலும், இந்துதேச சரித்திரத்திலும் உள்ள ஒற்றுமையொன்று நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதாவது: இருதேசத்திலும் கி.பி. 1000 வருஷங்களுக்குப்பின்னர்நேர்ந்தசம்பவங்கள்முக்கியமானவையன்றி அவைகளால்அத்தேசசரித்திரங்கள் அதற்குமுன் அவற்றைக்கவர்ந்துகொண்டிருந்த இருட்படலத்தினின்று நீங்கி ஆதாரம் என்னும் வெளிச்சம்பட்டுத் துலங்கத் துவக்குகின்றன. ஆங்கிலேயநாட்டின் சரித்திரம் அத்தேசம் 1066-ம் வருஷத்தில்நார்மன் ஜாதியாரால் கைப்பற்றப்பட்ட பின் விசேஷம் பெற்று விர்த்திக்குவந்ததுபோல இந்துதேச சரித்திரமும் கி.பி. 1000 வருஷங்களுக்குப்பின் கிஜினிமுகம்மது பன்முறையதன்மீதுபடையெடுத்து வந்தது துவக்கி ஆதாரத்தோடு விளங்குகிறது. கி. பி. 11-ம் நூற்றாண்டுதுவக்கி முகம்மதியர்களும் மிக விர்த்தியடைந்து கிழக்கே இந்தியாவில் ஹிந்துக்களோடு போராடத்துவக்கியதுபோல், மேற்கே ஐரோப்பியர்களோடும் போராடிவந்தார்கள்.

டில்லியில் ப்ரித்விராஜா அரசாண்டுவந்து கோரிமுகம்மதோடு போராடி வருகையில் அங்கிலேயநாட்டை யரசாண்ட ரிச்சர்ட் என்னும் அரசன் 'பாலஸ்டைன்' தேசத்தில் 'ஜெருஸலம்' என்னுமிடத்தில் கிறிஸ்துவின் சமாதிஸ்தானத்தைமுகம்மதியர்கள் கொள்ளையிட்டுப் பாழாக்காவண்ணம் அவர்களோடு எதிர்த்துச் சண்டை போட்டுக்கொண்டிருந்தான். அந்த

* Fendal policy.

முகம்மதியர்களை ஐரோப்பியர் 'ஸரஸன்ஸ்' அதாவது 'கிழக்கத்தியர்' என்று பெயரிட்டழைத்து வந்தார்கள். இப்படி ஐரோப்பியர் 'ஸரஸன்ஸ்' என்றுபெயரிட்டவர்களில் ஐரோப்பியர்களுக்கு மிகத்தொந்தரவு கொடுத்துவந்த சக்கரவர்த்தி 'ஸலாடின்' என்பவர். முகம்மதியர் கிழக்கே ஹிந்துஸ்தானத்தில் புகுந்து ஹிந்துமதத்தையழித்து முகம்மதியமதத்தைப் பரவச்செய்யயத்தனித்து வருகையில், மேற்கே கிறிஸ்து சமாதிஸ்தலமாகிய ஜெரூஸலத்தைப் பிடித்துக் கொள்ளையிட்டழிக்க யத்தனம்செய்தார்கள். ஜெரூஸலத்தைமுகம்மதியர்கள் கையினின்றும் காப்பாற்றும்பொருட்டு ஐரோப்பிய அரசர்கள் அனேகர் அவர்களையெதிர்த்துவென்றுகிறிஸ்துசமாதியைக் காப்பாற்றுவதே விருதமாகக் கங்கணங்கட்டிக்கொண்டு போர்க்கெழுந்துசென்றார்கள். அப்படி வந்தவர்களில் ஆங்கிலேயநாட்டரசனாகிய ரிச்சர்ட் என்பவரும் ஒருவர். இவர் மனோதைரியத்திலும் புஜபலபராக்கிரமத்திலும் அக்காலத்து ஐரோப்பிய அரசர்களெல்லாரிலும் மேலானவராகப் பேர்பெற்று விளங்கினபடியால் இவருக்கு "சிம்மசித்தமுடையவர்" (Lion - hearted) என்கிற பட்டப்பெயர் பிரபலமாக வழங்கிவந்தது. இவருடைய புஜபலபராக்கிரமத்தையும் வாள்வித்தை விசேஷத்தையும்பற்றி எத்தனையோ அபூர்வமான அதிசயக்கதைகள் வழங்கிவந்து அக்காலசரித்திரத்தைப்பற்றிச் சொல்லும் ஆங்கிலேய கிரந்தங்களில் சேர்க்கப்பட்டு இன்றைக்கும் நாளைக்கும் படிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவும் இங்கிலாந்தும் இப்பொழுதுஇணைபிரியாது ஒன்றுபட்டுக் கலந்திருப்பதால், 11, 12-ம் நூற்றாண்டில் இந்தியாவின் நிலைமையை விளக்கும் இச்சரித்திரத்தைச் சிரத்தையுடன் படிக்கும் இக்காலத்து ஜனங்கள், அக்காலத்தில் இங்கிலாந்து சம்பந்தமான விஷயங்களில் இக்கதையோடொத்துவரும் சிலசங்கதிகளையெடுத்துச் சொன்னால் இனிப்புடன் கவனிப்பார்களென்று, இடைஇடையே ஆங்கிலேயநாட்டுச்சங்கதியையும் கொஞ்சம் கொஞ்சம் நாமெழுதிவரும் சரித்திரத்துக்கு ஒத்துவருமட்டும் தொட்டுக்காட்டிக் குறிப்பிட்டுவரத் தீர்மானித்தோம். அன்றியும் அப்பொழுது நிகழ்ந்துவந்த காலதேசவர்த்தமானங்களைக் கிரகித்துக்கொள்ள இச்சொற்பவிவரங்கள் அவசியமாகுமாதலால் இக்கதையில் மட்டுமே சிரத்தையுள்ளவர்களுங்கூட இவைகளைக் கவனித்து மனதில் வாங்கிக்கொண்டு கதையைத் தொடர்ந்துசெல்வது நலமாயிருக்கும்.

லாஹோர் ராஜாவாகவிருந்த ஜயபாலராஜன் சுபக்திகீன் என்னும் கிஜினியரசனால் தோற்கடிக்கப்பட்டதை முன் சொன்னோம். பிறகு அவன்பிள்ளையாகிய கிஜினிமுகம்மது இந்தியாவின்மீதுபடையெடுத்துவந்தகாலத்தில்மறுபடியும்அவனையெதிர்ப்பதில்தோல்வியடைய, இருதரம் தோல்வியுற்ற அரசன் அரசாள யோக்கியனல்லனென்னும் ராஜபுத்திர அரசர்களின் உயர்ந்தகொள்கைப்படி, தன்புத்திரனை அனந்தபாலுக்குப் பட்டங்கட்டி விட்டு தான் காஷ்டமேறிப் பிராணனை விட்டான். ஜயபால் இறந்தபின் அனந்தபால் ராஜா, உஜ்ஜினி, குவாலியர், கலிஞ்சர், கானோஜ், டில்லி, ஆஜ்மீர் இராஜாக்களோடுகூடி ஐக்கியமான கட்டுப்பாடுசெய்துக்கொண்டு முகம்மதியர்களைத் துறத்திவிடப் பார்த்தான். இவர்கள் இத்தனைபேர் ஐக்கியப்பட்டு ஒத்துநின்றும் கிஜினிமுகம்மது 1011-ம் வருஷத்தில் ஸ்தானேசுவரத்தைத்தாக்கி, பரீக்ஷித்துராஜன் காலம்முதல் பேர்பெற்று விளங்கிய அங்குள்ள தேவாலயத்தையும் அதிலுள்ள 'ஜகத்சோம்' என்னும் ஸ்வாமியின் விக்ரஹத்தையும் உடைத்து அழித்து ஹதம்செய்து சென்றான். பிறகு டில்லியைப்பிடித்துக் கொள்ளையிட்டுவிட்டு கி. பி. 1017 - ம் வருஷத்தில் கானோஜின்மீது படையெடுத்துச்சென்றான். அப்பொழுது அவ்விடத்தில் மேலரசாக மஹாராஜா என்னும் பட்டத்தோடு அரசாண்டுவந்த கூவர் ராஜா (காராஜாவென்றும் இவன் பேர் சில புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது) இராஜபுத்திரனாயிருந்தும் தைரியமின்றி சண்டைசெய்யப் பின்னிட்டு முகம்மதுவுக்குட்பட்டு அவன் மதத்தையும் தழுவிக்கொண்டு



தன் இராஜ்ஜியத்தை முகம்மதினிடமிருந்துதிரும்பிப்பெற்று அவனுக்குக்கீழ்ப்படிந்து அரசாண்டுவர இணங்கினான். இராஜபுத்திரனாகப்பிறந்தும் சண்டைமுனையில் தைரியமற்று மதப்பிரஷ்டனுமான இந்தமஹாராஜாவைத் தொலைக்கும்படி சுற்றுமுள்ள அரசர்கள் கங்கணங்கட்டிக்கொண்டு முகம்மது திரும்பிய மூன்று வருஷத்திற்கெல்லாம் இவனைப்பட்டத்தைவிட்டுத் துறத்திக் கொன்றுவிட்டார்கள். இவனைத் தண்டிக்க முன்வந்தஅரசர்குழாத்தில் முதலாயிருந்தது கலிஞ்சர்நாட்டரசனாகிய நந்தராஜா.

கிஜினிமுகம்மது இறந்ததும் டில்லி ராஜாவாகிய விசாலதேவ் மற்ற அரசர்களைக்கூட்டிக்கொண்டு கிஜினிமுகம்மது பிடித்துப்போன இடங்களையெல்லாம் திரும்பிப் பிடித்துக்கொண்டு கடைசியில் லாஹோரையும் தாக்கினான். 7-மாதமுற்றுகை தாங்கியபின் லாஹோரிலிருந்த முகம்மதிய சைனியங்கள் திடீரென்றுவெளிப்புறப்பட்டு முற்றுகைபோட்ட சைனியங்களையெதிர்த்துத் தாக்கித் தப்பியோடிவிட்டார்கள். இப்படியாக முகம்மதியர்களை லாஹோருக்குமப்பால் துறத்திவிட்டு லாஹோரை டில்லிராஜா தன் வசமாக்கிக்கொண்டபின், ஹிந்து சைனியங்கள் தங்கள் அரசர்களுடன் அவரவர்கள் சொந்தநாட்டுக்குச்சென்றன. இந்தப்பெரியயுத்தத்தில் டில்லி ராஜாவாகிய விசாலதேவ் அரசனுக்கு ஆஜ்மீர் ராஜா பக்கபலமாகவிருந்து பேருதவி செய்துவந்தார். இவ்விரு அரசர்களும் முதலாகவந்து முன்னிட்டுநிற்க ஹிந்துஸ்தானத்திலுள்ள மற்ற அரசர்களெல்லாரும் இவர்களோடுசேர்ந்து ஐக்கியமாகி முகம்மதியர்களைச் சிந்துநதிக்கப்பால் துறத்தியடிக்க வெகு ஒற்றுமையோடும் ஒத்துநின்று அதிக வீரபராக்கிரமங்காட்டிச்சண்டைசெய்து வந்தார்கள்.

இப்படியாக 12 ம் நூற்றாண்டின் துவக்கத்தில் டில்லி, கானோஜ், மைவார், அனல்வாரம் என்னும் இந்த முக்கிய இராஜ்ஜியங்கள்முகம்மதியர்களை வென்று துறத்தியடித்து மகிமை பெற்று விளங்கின.

C. V. S.

## சம்பகமாலை
### அல்லது
## இளையராஜாவின் தீர்மானம்.
### அங்கம். I.

#### இரண்டாம்களம்.

இடம் - மார்வாரில் வேனிற்காலம் கழிக்கும் வீடு.

ராவ்ரின்மல் - மார்வார்தேசத்தரசன்.
சந்தன்ராஜா - ராவ்ரின்மலின் சிநேகிதன்.

(ராவ்ரின்மலும் சந்தனராஜனும் சம்பாஷித்துக் கொண்டிருத்தல்.)

சந்தன்.—இக்கோடைகால வெப்பத்திற்கு இது மிகவும் ஏற்றகிருகம் மகாராஜ். இப்பொழுது வீசும் இளந்தென்றலானது பக்கத்திலிருக்கின்ற தடம்பொருந்திய ஏரியின் தண்மையான நீரின்மீது ஆடிக் கரையிலுள்ள புஷ்பவிருக்ஷங்களால் உபசரிக்கப்பட்டு நல்லமணத்தோடு வருகின்றது. ஏரிக்கு அக்கரையிலுள்ள சோலைகளிற் கூவும் சுந்தரமான பக்ஷிகளின் ஒலியானது ஏரிஜலத்தில்குளித்து அபஸ்வரமென்கிற தோஷத்தைக் கழித்துவிட்டு நல்ல ஸ்வரத்துடன் காதுகளினிடம்சென்று அவற்றினுக்கு இன்பத்தை ஊட்டுகின்றது. உன்னதமான இந்த மேட்டில் கட்டப்பட்ட சீதளமான இந்த கிருகத்தினின்று நோக்கினால் எதுதான் நேர்த்தியாகக்காணப்படாது? இதோபார்த்தீர்களா மகாராஜ், இந்தப்புறத்தில் காக்கைகளும் குருவிகளும் குளிர்ந்த ஏரிஜலத்தில் நீராடிவிட்டு ஒவ்வொன்றாய் சோலைநிறைந்தமரங்களின்மீதேறி தங்கள் சிறகுகளை மூக்குகளால் சீவிக்கொண்டிருக்கின்றன. அதோபார்த்தீர்களா! செடிகளும் கொடிகளும் நிறையப்பெற்ற அம்மலையில் நிர்ப்பயமாய் ஆடுகள் பின்னிரண்டு கால்களால் ஓங்கிநின்று தழைமேய்கின்றன. அதற்குமாறாக இம்மூலையில் கண்டீர்களா அவ்வாடுகளே மிக்கபயத்துடன் முன்னிரண்டுகால்களை முட்டியிட்டு ஜலம் அருந்துவதை! அதோ அக்குளத்தில் கண்களை மூடித் தலை முதல் தேகமெல்லாவற்றையும் ஜலத்திலாழ்த்தி மூக்கைமாத்திரம் வெளிக்காட்டித் தூங்கும் எருமைகளைப் பார்த்தீர்களோ? என்ன

அற்புதமான காட்சி இங்குகாண்கிறோம்! இவ்விடத்தைப் உடையவர்களுக்கு யாதுகுறை ?

ராவ்ரின்மல்.—என்ன புகழ்கிறாய் மித்திரா, இச்சிறு இடத்தை? அந்நியர் சிறப்பை அறியாதவனுக்கு அவன் சிறப்பே அற்புதமாமென்றதுபோல் இம் மார்வார் தேசமொன்றையே பார்த்த உனக்கு இதைக்காட்டிலும் மேலானவிடம் கிடையாதெனத் தோன்றுவது ஆச்சரியமல்ல. இதோ இவ்விடத்திலிருந்துகொண்டு உன்திருஷ்டியை தூரச்செலுத்திப்பார். கண்கொண்டவரைக்கும் பார்த்தாலும் மணல் மேடிட்டிருக்கிறதேயொழிய தழைத்தசெடி ஒன்றையுங்காணவில்லை. செடியற்றகற்குன்றுகளும், மணல்மேடுகளும், உலர்ந்தகான்யாறுகளும் இவைகள்தாம் உங்கள்மகாராஜனுக்குக் கிடைத்திருக்கிற செல்வம். இம் மாருதேசத்தரசனுக்கும் அவனுடைய பிரஜைகளுக்கும் கிடைத்தபாக்கிய மென்ன, தினைக்கஞ்சிதானே மித்திரா! இந்தச்செல்வத்தைக்கண்டா நீமலைக்கிறாய். அடுத்தமைவார்தேசத்தைப்பார்த்திருந்தால் நீ இப்படி ஒருக்காலும் சொல்லமாட்டாய். அது எங்குகண்டாலும் பசுமையானகோதுமைப்பயிரும், பூங்காவனங்களும் நிறையப் பெற்றிருக்கின்றது. தண்ணிய சுத்தஜலம் நிறையப்பெற்ற ஏரிகள் கிராமங்கள் தோறும் உண்டு. ஜனங்கள் கோதுமை ரொட்டியைச் சாப்பிட்டு உடல் வலுத்துச் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கா, தினைக்கஞ்சிகுடித்து உடலையும் உயிரையும் ஒன்றாக வைத்திருக்கும் மார்வாரி நிகராவன்? ஒருபோதும் ஆகான். ஏன் மித்திரா அந்தவிஷயத்தை யெடுத்துப்பேசி என் உள்ளத்தில் தீயை மூட்டிவிட்டாய்? நீமூட்டிவிட்ட அக்கினியானது இந்தக்கிருகத்தினாலும், ஏரியினாலும் நீசொன்ன மற்றவைகளாலுமா அணையப் போகின்றது! இவைகள் ஒருக்காலும் எனக்கு இன்பத்தைத் தந்தனவில்லை. அற்பசந்தோஷிகளான எனக்குமுன்னிருந்த ராஜாக்களுக்கு இன்பம் தந்திருக்கலாம். எனக்கு ஒருக்காலும் தரா. மித்திரா, அதோ அவ்வறையில் ஒருபுட்டியில் திராக்ஷரசமிருக்கின்றது ; அதில் கொஞ்சம் கொண்டுவா! (அதைக்குடித்துவிட்டு) ஹா ஹா! என்ன நேர்த்தியா யிருக்கிறது மித்திரா! இதோ நீகொஞ்சம் அருந்திப்பார் !

சந்தன்.—எனக்கு வேண்டாம் மகாராஜ் !

ராவ்ரின்மல்.—ஹோ, ஹோ, ஹோ, ஏதேது நீ மெத்தவும் யோக்கியனோ ? அருந்த மாட்டாயோ. பெண்ணையும் கள்ளையும் வேண்டாமென்கிறவர் எவர் ! இருக்கிறவிடத்தை யாவரும் தேடிச் செல்ல நீ மாத்திரம் வேண்டா மென்பது மெத்த ஆச்சரியகரமா யிருக்கின்றது !

சந்தன்.—அப்படியல்ல மகாராஜ் ! நான் யோக்கியனென்று சொல்லிக் கொள்ளவில்லை. தம்முடைய நற்குணத்தைத் தாமே புகழ்ந்துகொள்வதினால் எவர்களுக்கும் கீர்த்திவராது. ராக்ஷரசம் குடிக்கப் பழகினதில்லை யாகையால் வேண்டாமென்றேன்.

ராவ்ரின்மல்.—ஹோ ஹோ மித்திரா ! வெகு சமர்த்தாகப் பேசுகின்றாயே. அமுதை உண்டுபழகித்தானோ தேவதைகளும் இராக்கதரும் அதை அடையக் கோரி மலையைப் பாற்கடலிலிட்டுக் கடைந்தனர்கள்? முதன்முதலில் அனுபவித்தவர்களுடைய அபிப்பிராயத்தைக் கொண்டுதான் நற்பொருள்களையும் கெட்டபொருள்களையும் உலகத்தில் மானிடர்கள் பகுத்தறிவது வழக்கம்.

சந்தன்.—மகாராஜ், தடையின்றித்தாங்கள்சொல்வது உண்மையே. காக்கை பரிவுடன் தின்பதினாலேயே வேப்பம்பழம் மெத்த உருசியென்று கொள்பவர்கள்யார் ? இங்கு காக்கையின் துர்க்குணம் வெளியாயிற்றே யொழிய வேப்பம்பழம் உருசியென்று ஒருக்காலும் பிரசித்தியாகாது. பொருள்களுடைய குண குணங்களைப்பற்றி சுயானுபவமின்றி அந்நியருடைய அபிப்பிராயத்தைக் கொண்டு நடப்பவன் ஒருக்காலும் உண்மையைக் கண்டறியமாட்டான்.

ராவ்ரின்மல்.—(மயக்கத்துடன் கொஞ்சம் கண்ணை மூடி) மித்திரா ! இப்போதுஉன்னுடன் வழக்கிடஎன்றால் முடியாது. மிகவும் ஆனந்தமாயிருக்கிறது. ஆனந்தத்தை அனுபவித்துத் தான் அறியவேண்டுமேயொழிய வேறுவிதமாய் அறியலாகாது. யாராவது வரப்போகிறார்கள். சற்றே ஜாக்கிரதை, புரோகிதர்வந்தால் என்னைத் தட்டி எழுப்பிவிடு. (ராவ்ரின்மல் மயக்கமாய்த் தூங்குகிறான்.)

சந்தன்.—ஹா. ஹா. இந்தராஜாவினுடையபுத்தி எவ்வளவு கெட்டுப்போய்விட்டது ! வர வர இந்த



கிழவனுடைய குணம் மாறிப்போயிற்று. குடியும் வியபிசாரமும் அதிகமாயின. இக்குணங்களைப் பெற்ற ராஜன் எவனும் முன்னுக்கு வரவில்லை. அவனுடைய நாடாயினும், பிரஜைகளாயினும் சுகமடைந்ததில்லை. இன்னும் சில நாளில் இந்தராஜா தன்தேசத்தை இழக்கவேண்டியவனே. மகனறிவு தந்தையறிவு என்பதற்கேற்ப இளையராஜாவாகிய ஜோடாவும் புத்தி ஈனனாயிருக்கின்றான். இதற்கென்ன செய்யலாம். பந்துவாயிருந்து ஏற்ற சமயங்களில் சற்புத்தி சொல்லாமலிருக்கக் கூடாதென்று இவனிடத்தில் சிநேகம் செய்ததற்கு எனக்கே அபகீர்த்திகிடைக்கும்போல் காண்கிறது. அவன் தன் புத்தியை எனக்குப்புகட்ட வருகிறானேயொழிய என்புத்தி கேட்பதில்லை. இவனுடைய கர்மபரிபாகம் எப்படி இருக்கின்றதோ அறியேன். இவன் நல்வழிப்படுவானென்று தோன்றவில்லை. இந்த மார்வார் தேசத்துக்கு அழிவு வந்து விட்டதாகவே தென்படுகிறது.

(புரோகிதர்வர)

சந்தன்.—புரோகிதரே நமஸ்காரம். சற்றே ஆசனத்தில் எழுந்தருளியிருங்கள். மகாராஜாவை எழுப்புகின்றேன். இதுகாறும் என்னுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். இப்பொழுது தான் சற்றே இளைப்பாறினார்.

புரோகிதர்.—இளைப்பாறட்டும் சந்தன்ராஜ், அவசரமில்லை. நாம் சற்றேபேசிக்கொண்டிருக்கலாம். சம்பகமாலையின் கலியாணத்தைப்பற்றி உம்மிடத்தில் மகாராஜா என்னசொன்னார் ?

சந்தன்.—அதைப்பற்றி மகாராஜா என்னோடு ஒன்றும் சொல்லவில்லையே. மைவாருக்குத் தேங்காய் அனுப்பப்பட்ட செய்தி மாத்திரம் எனக்குத்தெரியும்; அதின் முடிவு தெரியாது; எப்படியாயிற்று புரோகிதரே ?

புரோகிதர்.—ஏதேது சந்தன்ராஜ், நீரே சூதாய்ப் பேசக்கற்றுக் கொண்டு, விட்டீர் உம்மிடத்திலேயா மகாராஜ் கலியாணத்தைப்பற்றி ஒன்றும் சொல்லாதிருப்பார்.

சந்தன்.—புரோகிதரே ஏன் உங்களுக்கு என்வார்த்தையில் அவ்வளவு சந்தேகம் ; நான் எப்போதாவது பொய் பேசினதுண்டோ ?

புரோகிதர்.— ஒருக்காலும் கிடையாது சந்தன்ராஜ். உம்மிடத்தில் அவர் ஒன்றும் சொல்லாததைப் பற்றி ஆச்சரியப் படுகின்றேன். இருக்கட்டும். கலியாணம் மாத்திரம் நிச்சயமாய்விட்டது. ராஜபுத்திரி ஒப்பாதிருந்தமையால் இதுகாறும் தடையாயிருந்தது. ராஜாவின் இஷ்டப்படி காரியத்தை முடித்துவிட்டேன்.

சந்தன்.— சம்பகமாலை ஏன் ஒப்பவில்லை, புரோகிதரே ?

புரோகிதர்.—லகாராணாவைப் போன்ற கிழவரைக் கலியாணம் பண்ணிக்கொள்ள வாலிபப் பருவமுள்ள ராஜபுத்திரி எப்படி ஒப்புவாள்?

சந்தன்.—இதுஎன்ன ஆச்சரியம்! லகாராணாவின் புத்திரனுக்கன்றோ ராஜா தேங்காய் அனுப்பினார்.

புரோகிதர்.—என்ன சந்தன் ராஜ்! ஒன்றும் அறியாதவர்போல் பேசுகின்றீர். லகாராணா கலியாணம் செய்து கொள்ளப் போகிறாரென்று கூடவா உங்களுக்கு மகாராஜா சொல்லவில்லை.

சந்தன்.—இல்லை புரோகிதரே. ஏதோ ஒருயோசனை உள்ளுக்குள் வைத்துக்கொண்டுதான் மகாராஜா ஒன்றும் என்னோடு சொல்லவில்லை, எனக்குத் தெரிந்தால் அவருடைய காரியத்திற்குப் பங்கம் நேரிடுமென்றோ என்னவோ அறியேன். வெகுவாய் மகாராஜா அப்படித்தான் உத்தேசித்திருப்பாரென்று நினைக்கின்றேன்.

புரோகிதர்.—ஆனால், சந்தன்ராஜ்! நானும்சொல்வது கூடாது. மன்னிக்கவேண்டும்.

சந்தன்.—எனக்கொருக்காலும்கோபம் உண்டாகாது. அந்நியர்கள் தங்களுடைய ரகசியங்களைச் சொல்லவில்லை யென்று கோபித்துக்கொள்பவன் மூடனேயன்றோ. அவரவர்களுடைய ரகசியம் அவரவர்களுக்குப் பிராணனேயாம். அதை வெளியிடுவார்களா? மாட்டார்கள், ஆனால் துஷ்டர்களுடைய ரகசியம் அன்னியருக்குத் தீங்கு தேடாமலிராது. இருக்கட்டும் புரோகிதரே. மகாராஜாவை எழுப்பிவிடுகிறேன்.

(எழுப்புகிறான்)

மகாராஜ் ! இதோ புரோகிதர் வந்திருக்கிறார், நான்போக உத்திரவாகவேண்டும்.

ராவ்ரின்மல்.—என்மித்திரா நீயுமிருக்கலாமே ரகசியமொன்றுமில்லை; ஆனால் உன்னுடைய காரியத்தைக்கெடுக்க இஷ்டமில்லை. போய்வரலாம். (சந்தன்வந்தனம் செலுத்திவிட்டுப்போகிறான்.) நல்லது புரோகிதரே! சந்தன்ராஜ் போனானா பாரும்.

புரோகிதர். — (எழுந்துபார்த்து) ஓ! வெகுதூரம் போய்விட்டார்.

ராவ்ரின்மல்.—சந்தன் எனக்குச் சினேகிதனே. ஆனாலும் அவனுக்கு இந்த விவாகசங்கதி தெரியக்கூடாது. கெடுத்துவிடுவான். என்காரியம் கெட்டுப்போம். நீரும் அவனுக்கு இதைபற்றி ஒன்றும் சொல்லக்கூடாது.

புரோகிதர். — நல்லது மகாராஜ்! நான் ஒருக்காலும் சொல்லமாட்டேன்.

ராவ்ரின்மல்.—சரிதான் புரோகிதரே! சம்பகமாலை ஒப்பினாளா?

புரோகிதர்.—ஒப்பச்செய்வதுமிகவும் கஷ்டமாயிற்று மகாராஜ்! ஆனால் உடனேவிவாகம் செய்துவிடவேண்டும். தாமதித்தால் யாராவது கலைத்துவிடுவார்கள்.

ராவ்ரின்மல்.—சீக்கிரத்தில் நடத்திவிடுகிறேன். நல்லது இருக்கட்டும் புரோகிதரே! நீர் மைவார்ராஜா சமஸ்தானத்துக்குப்போயிருந்தீரே, அங்கு என்ன விசேஷங்களைப்பார்த்தீர்? தேசத்தின் செழிப்பு அரசனது செல்வம் இவைகளைப்பற்றி உமது அபிப்பிராயமென்ன?

புரோகிதர்.—மைவார் தேசத்துக்கென்ன மகாராஜ், தேவேந்திரனுடைய நந்தனவனம்போல்செழிப்பாயும், குபேரனுடையபட்டணம்போல் அஷ்டஐசுவரியங்கள் நிறைந்தும் இருக்கின்றது. கோவில்கள், குளங்கள், ஏரிகள், வனங்கள், சோலைகள் நிறைந்திருக்கின்றன. மலைகளில் பஞ்சலோகச்சுரங்கங்கள் அகப்பட்டிருக்கின்றன. பிரஜைகள் சந்துஷ்டராயும், பலபராக்கிரமம் பொருந்தியவர்களாயும் இருக்கின்றார்கள். ராஜாவினுடைய புத்திரர்கள் சிறுநாடுகளை ஆண்டுவருகின்றார்கள்.

ராவ்ரின்மல்.—இவ்வளவு சிறப்பாயிருக்கின்றதே அந்நிய ராஜாக்களுடைய பொறாமைக்கு இலக்காய் தேசம் நஷ்டமாய்ப் போகுமே?

புரோகிதர்.—மாட்டாதுமகாராஜ்! இந்தராஜஸ்தானத்திலேயே மைவாரை எதிர்க்கும் ராஜன் ஒருவனிருக்கிறானென்று நான் நினைக்கவில்லை மகாராஜ். அப்படிப்பட்ட தேசத்துக்கு உம்முடைய புத்திரி ராணியாகப் போவதைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கிறேன். ஒருகாலத்தில் உம்முடைய தௌஹித்திரன் பிரசித்திபெற்ற பாப்பாரவால் அவர்களின் சிங்காசனத்தில் ஏறவேபோகிறான்.

ராவ்ரின்மல். — தௌஹித்திரனுக்குக் கிடைத்தால் எனக்குக்கிடைத்ததாகுமா? இருக்கட்டும் புரோகிதரே, நாம்போகலாம் வாரும். கலியாண காரியத்தைச் சீக்கிரத்தில் முடிவுசெய்யவேண்டும்.

(போகிறார்கள்)

---

மூன்றாங்களம்.

**இடம் - கன்னிகாமாடம்.**

சம்பகமாலை - ராவ்ரின்மலின் குமாரத்தி.

சுபகா, } சம்பகமாலையின் தோழிகள்.
வசந்தி. }

---

(சம்பகமாலை, சுபகா, வசந்தி பிரவேசிக்கிறார்கள்.)

சுபகா.—அம்மணீ! சம்பகமாலா! இன்றைக்குச் சரியாய் ஐந்துநாளிருக்கிறது உனக்குக் கலியாணம் நடக்க.

வசந்தி.—உனக்கு யார்சொன்னார் சுபகா?

சுபகா.—உனக்கு எப்போதும் ஆத்திரம் அதிகம். யார்சொன்னாலென்ன? வாஸ்தவமா, அல்லவா, என்பதுதானே நீ கண்டுகொள்ளவேண்டும். நீ சற்றே சும்மாவிரு. சம்பகமாலா! இன்னும் பத்துநாளில் எங்களைவிட்டுப் நீ உன்கணவன் வீட்டுக்குப்போவாய். நீ அங்கேபோய் மெத்த சுகமாய் இருக்கப்போகிறாய். எங்களைக்காட்டிலும் மேலானதோழிகள் அங்கே உனக்குக் கிடைக்கப்போகிறார்கள். நாங்களல்லவோ தனியாய் நின்றுபோகிறோம். நாம் இனியாரைப் பார்த்து குதூகலப் படப்போகிறோம் சம்பகமாலா!

வசந்தி.—வாஸ்தவந்தான் சுபகா! அப்புறம் நமக்கென்னவிருக்கிறது. இந்த மேடைக்குவந்தால்



காலியாய்த் தோன்றாதோடி? அதோ அந்த மாமரத்தினடியில் உட்கார்ந்து மணலில் பூப்பந்தல்போட்டு போனபௌர்ணமியன்று ஹோலிப் பண்டிகை கொண்டாடினோமே. வருகிறவருஷம் என்னசெய்யப்போகிறோம் சுபகா!

சுபகா.—அதிருக்கட்டுமடீ வசந்தீ. நேற்று செங்கழுநீர்படர்ந்த கசத்தில் விளையாடினோமே, அது என்ன நேர்த்தியாயிருந்தது பார்த்தாயா? சம்பகமாலையினுடைய முகம் நேற்றுப்போல் இருக்கவில்லை. வாடியிருக்கின்றது. கண் சிறுத்து, சிவந்துபோயிற்று. கன்னங்கள் வெளுத்திருக்கின்றன. புருவம் கோணியிருக்கின்றது. முகத்தில்மடிப்புகள் காணுகின்றன. ஏதோ யோசனை மனதில் குடிகொண்டிருக்கின்றது. நீ பார் வசந்தீ, சம்பகமாலையின் முகத்தை! நான் சொல்வது மெய்யா பொய்யா?

வசந்தி.— சுபகா, எனக்குக்கூட அப்படித்தான் தோன்றுகின்றது. இன்றைக்குப் பொழுதுவிடிந்தது முதல் சம்பகமாலை நம்மோடு பேசினாளா? இல்லையே. சம்பகமாலா, நாங்கள் ஏதாவது உனக்கிஷ்டமில்லாதகாரியம் செய்தோமா? உன்னைவிட்டு எப்படி யிருக்கப்போகிறோமென்று கலங்குகிறோமே. நீ உன் பர்த்தாவீட்டுக்குப் போய்விட்டால் நாங்கள் எப்படி யிருக்கப்போகிறோமடி சகீ! நீ இப்போதே எங்களிடத்தில் பேசாமலிருக்கிறாயே. நாங்கள் எப்படி சகிப்போம். எங்களைப்போல உனக்கு அனேக சகிகள் கிடைப்பார்கள். எங்களுக்கு உன்னைப் போன்ற தோழி யார் கிடைக்கப்போகிறார்கள் மாலா!

சம்பகமாலை.—(தலையைக்குனிந்து நடுக்கலுற்ற மெல்லிய குரலுடன், புன்சிரிப்புக்காட்டி) வசந்தீ! நிரம்ப கெட்டிக்காரியாய்விட்டாயடீ. இதையெல்லாம் எங்கு கற்றுக்கொண்டாய்? நான் என்றும்போலத்தான் இருக்கின்றேன்.

வசந்தி.—பல்லைக்காட்டினால் சிரிப்பாகுமா? கண்ணீர் கழுவவிட்டால் துக்கமாமா? உன் நடுக்கலுற்ற தொனி நன்றாய் துக்கத்தை காண்பிக்கின்றதே. ஏதோ என்னைத் தலையெடுத்துப்பார்! (சம்பகமாலை பார்க்க) இதோபார்த்தாயா சுபகா! சம்பகமாலையின் கண்ணில் நீர் ததும்புகின்றது. ஏனம்மா அழுகிறாய், (கண்ணைத்துடைத்துதலையைத் தன் தோளில் அணைத்துக்கொண்டு) அழவேண்டாம். சுபகா! கொஞ்சம் விசிறியெடுத்து காற்றுப்போடுவோ; உடம்பெல்லாம் வியர்த்துப் போயிற்று.

சம்பகமாலை.—வசந்தி, சுபகா, நான் எப்படி உங்களைவிட்டு இருக்கப்போகிறேன். உங்களுடைய அன்பையும் தேற்றலையும் பெற்று மாதாவின் தேற்றலையும் மறந்தேன். உங்களுடைய தேற்றலையும் அன்பையும் நான் எப்படி மறக்கப்போகிறேன். உலகத்தில் சிறுபெண்கள் கணவன் தேற்றலை ஆவலுடன் எதிர்நோக்கிச் சந்தோஷமாய்ச் செல்லுவார்கள். எனக்கோ வருங்காலம் வெறுங்காலமாயிருக்கிறது. உங்களுடைய தேற்றலை எப்படி மறக்கப்போகிறேன் தோழிகாள்!

சுபகா.—அது என்ன சம்பகமாலா அசுபவார்த்தைகள் சொல்லுகிறாய்! உனக்கென்ன குறை?

(காவற்காரன் நுழைந்து அரண்மனைவாயலில் சந்தன்ராஜா காத்துக் கொண்டிருக்கிறாரென்றுசொல்ல,)

சம்பகமாலை.— (திடீரென்று எழுந்து கண் முகம் துடைத்துக்கொண்டு மேற்போர்வை போர்த்துக்கொண்டு) சந்தன்ராஜா வரலாமென்று சொல்.

(சந்தன்ராஜாவர)

சம்பகமாலை.— நமஸ்காரம் சந்தன்ராஜ். ஆசனத்தில் வீற்றிருங்கள். ஏது இவ்வளவு தூரம்வந்தது?

சந்தன்ராஜ்.—அம்மா உன்னைப்பார்த்து நெடுநாளாய் விட்டது. கண்டுசம்பாஷிக்கவே வந்தேன்.

சம்பகமாலை.— மெத்தசந்தோஷம் ராஜா! என்னிடத்தில் தாங்கள் அவ்வளவு பிரீதிவைத்திருப்பதைப் பற்றி நன்றி யறிதலுடைய வளாயிருப்பேன். ராஜபுத்திரிகளுடைய வாழ்நாளில் யவ்வனப்பருவம் ஆரம்பித்தது முதல் விவாகம் வரைக்கும் செல்லுங் காலம் ஒரு விசித்திரமான வாழ்க்கையாம். இக்கிரகமும் இச்சோலையும் எனக்கு உலகம். இத்தோழிமாரிருவரும் என்னோடு வசிக்கும் மானுடகோடிகள். பாதாளம் அல்லது சொர்க்கம் போல் வெளிநாடு எனக்கு எட்டாதது. சாதுக்களுடையவும்பெரியோருடை

யவும்தரிசனம் எனக்கெப்படிக் கிடைக்கின்றது, சந்தன்ராஜ்! ஆகிலும் உம்மைப்போன்றவர்களுக்கு யாதொருதடையு மிராதே. உம்முடையதரிசனம் எனக்கு அடிக்கடி கிடைக்கலாமே.

சந்தன்ராஜ்.—ஆம், தடை யொன்றுமில்லை அம்மா! ஆகிலும் ஸ்திரீகள் தனியே யிருக்கும் இடங்களுக்கு புருஷர் காரியமின்றிச் செல்லலாகாது. இன்னும்சில நாட்களன்றோ நீ இங்கே இருக்கப் போகிறாய். காவலன் கிடைத்தால் இக்காவலும் ஒழிந்துபோம். அதிருக்கட்டும். நீ லகாராணுவைக் கலியாணம் செய்துக்கொள்ள ஒத்துக் கொண்டதாக புரோகிதர் சொன்னார். ஆனால் நான் அதை நம்பவில்லை சம்பகமாலா!

சம்பகமாலை.—நம்பாததுசகஜமே சந்தனராஜ். எந்த வாலிபஸ்திரீ தான் விருத்தாப்பியனை பர்த்தாவைக் கோருவாள். அந்தஸ்து, அல்லது ஐசுவரியம் அல்லது குணம் ஆகிய இவைகளில் விசேஷப்பிரீதி வைத்திருந்தாலொழியஎந்தஸ்திரீயும் வாலிபனை பர்த்தாவை அடைகிற சுகத்தை இழக்கமாட்டாள்.

சந்தன்ராஜ். — சரிதான் அம்மா நீ இளையராஜாவை விட்டு லகாராணுவை மணக்க இஷ்டம் கொண்டதற்கு யாதுகாரணம்?

சம்பகமாலை.—முற்சொன்னகாரணங்கள் ஒன்றுமில்லை. இளைய ராஜாவைக்கலியாணம்செய்துகொள்வதால் எனக்கு அந்தஸ்து, ஐசுவரியம், குணம், ஆகிய எவற்றிலும் குறைவிருந்திராது. ஆனால் ஊழன்றோவலியது. இளையராஜா என்னைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேனென்றாராம்.

சந்தன்ராஜ.—அதேனம்மா! அந்தசங்கதிதான்புரோகிதர் எனக்குச் சொல்லமாட்டேனென்றார்.

சம்பகமாலை.— ஒன்றுமில்லை சந்தன்ராஜ். இங்கிருந்து தேங்காய் சென்றதும், லகாராணு பரிகாசமாய் "தாடிநரைத்த கிழவனுகிய எனக்கா கன்னிகையைத்தரப்போகிறீர்கள்" என்றாராம். சாதுரியத்தையே கவனித்து ஸ்திரீகளுக்குச் செய்யவேண்டிய மரியாதையை ராணு இழந்துவிட்டபடியால்கன்னிகையைத்தான் மணப்பதில்லை யென்று இளையராஜா அறைகூறி தகப்பன்மணந்து ஆண்பிள்ளைபெற்றால் தனக்குவரவேண்டிய ராஜ்ஜியத்தையும்அப்பிள்ளைக்குக்கொடுத்து விடுவதாய்ச் சொன்னாராம். என்னகாம்பீரியமான குணம் சந்தன்ராஜ்! என்னைப்போன்ற பாவிகளுக்கு கிடைக்கத் தகுந்த பொருளா அவர். எந்தப்புண்ணியவதியின் தவப்பயனாகப்பிறந்திருக்கிறாரோ அவர் அறியேன்!

சந்தன்ராஜ.—ஆனால் ஆகட்டும். அவர்செய்து கொள்ளாவிட்டால் அந்தக்கிழவனுக்கு மாகாராஜா கொடுக்க இசையவேண்டியதென்ன? இந்த ராஜபுத்திரஸ்தானத்தில் வேறுராஜபுத்திரர்கள் அகப்படமாட்டார்களா?

சம்பகமாலை.—கிடைக்காமலென்ன? ராஜரீக உபாயந்தான். இந்த ராஜஸ்தானத்திலும் சரிதான், மற்றத்தேசங்களிலும்சரிதான்,அனேகப் பெண்களுடைய இல்வாழ்க்கை யின்பம் ராஜரீக உபாயத்துக்கு இரையாயிற்று.

சந்தன்ராஜ்.—அந்த உபாயம்?

சம்பகமாலை.—அது என்தகப்பனுக்கும் தமயனுக்குந்தான் தெரியும்.

சந்தன்ராஜ.—நீ ஒப்பாமல் இருக்கலாமே.

சம்பகமாலை.—என் பந்துக்களில் முதன்மையானவர்களை இழந்துவிடுவேன். சினேகமும் பந்துத்துவமும் உண்மையாயுள்ளதென்று காண்பிக்கவேண்டுமானால் நம்முடைய சுகத்தை அவர்களுக்காகவிடவேண்டும். விட்டாலொழிய விளங்காது. பர்த்தாசுகம் எனக்கில்லையென்று மனதில் உறுதியாய்க்கொண்டுவிட்டேன். எப்படியாயினும் இளையராஜா எனக்குக் கிடைக்கப் போகிறாரோ? கணவனோடு சுகமனுபவிக்கப் பூர்வ ஜன்மத்தில் புண்ணியம் செய்யவில்லை. மிச்சமானதுதர்மந்தான். அதைத்தப்பாது நிறைவேற்றிவிடுகிறேன்.

சந்தன்ராஜ்.—சகலமானதர்மங்களையும் அறிந்திருக்கிறாய் சம்பகமாலா! நான் உனக்கென்ன சொல்லப்போகிறேன். நான் உன்னுடைய நன்மையையே என்றைக்கும் கோரிக்கொண்டிருக்கிற பந்துவென்றுமனதில் மறக்காமல் வைத்திருக்கவேண்டுமெனக் கோருகிறேன்.

சம்பகமாலை.—தடையில்லை சந்தன்ராஜ!



சந்தன்ராஜ.—மற்றொரு வேண்டுகோள். அதாவது நீ கல்லியாணம் செய்துகொண்டு கணவனோடு வாழச்சென்றாலும் உங்கள் தேசத்தில் எனக்கு இருக்க இஷ்டமிருந்தால் இருந்து வாழவும், தேவையானகாலத்தில் உன் அந்தப்புரத்துக்கு வந்து உன்னைப்பார்க்கவும் உத்தரவாகவேணும்.

சம்பகமாலை.—உமக்கு எதற்கும் தடைகிடையாது. சுகமாய்வரலாம்.

சந்தன்ராஜ.—வந்து வெகுநேரமாய்விட்டது. விடையளிக்கவேணும்.

சம்பகமாலை.—போய்வாரும் சந்தன்ராஜ். அம்மணி!

(எல்லோரும் போகிறார்கள்)

## சோபாமணி.

(108-வது பக்கத்தொடர்ச்சி.)

கலாவான்:—(மிகுந்தகோபத்தோடு)"அடே! பஞ்சை! நீ கொடுங்கோன் மன்னன் கீழ்த்தான் வாழற்குரியன். அரசனாணைக்கு அமைந்து நடத்தலே தகுதியென்கிறாய். என்ன! அவன் கட்டளை காரணமற்றதும், நீதியற்றதும், தயையற்றதுமாயிருக்க, அரசன் ஆணைக்கு அமைந்து நடத்தலாவது, துஷ்டா! என்னவார்த்தை சொன்னாய்!" இங்ஙனம் கலாவான் உரத்தகுரலோடு பேசவே, சோபாமணி தவிர அங்குள்ள மற்றையோரெல்லாம் அப்பேச்சைக்கேட்டு வியப்புற்று உளம் நடுங்கி அசைவற நின்றுவிட்டனர்.

சோபாமணியினது முகத்தில் ஒரு புதிய ஒளிதோன்ற ஓடிவந்து கலாவான் காலின்கீழ் கொடி மின்னல் போல வீழ்ந்து, "நீரே என்னைக் காப்பாற்றவேண்டும். நீரே ஆண்மகன்; அரசனுக்குச் சொல்லவல்ல பிரபுநீரே. என்னை எவ்விதமேனும் அந்தப் பாழ்ம் ப்ரஷ்யனுக்குத் தாரைவார்த்து விடாமல் பாதுகாப்பீர் துரையே." என்று மன்றாடி வேண்டினள். இவ்வமயத்து அடுத்த கூடத் திருந்த பிரபுக்கள் இங்கே வேலைக்காரர் ஒருங்கு திரண்டதற்குக் காரணமென்னென்று அறியுமாறு சோபாமணியிடம் குறுகினர். இவர்கள் வருதலைக்கண்ட அப்பெண்மணி மெல்லச்சென்று முன்போலத் தனது வேலையிலிருந்து விட்டனள். கலாவான் ஆங்கிலனை மிக்க ஆத்திரத்தோடு கையைப்பற்றி யீர்த்துத் தொழிற்சாலையின் புறத்தே போந்து "நீகூறியது உண்மையே; ப்ரெடரிக் மிகக் கொடியன்; அதனை இப்பொழுதெடுத்துரைத்து, ஆவதியாது; யான் இச்சிறுமியைக் காப்பாற்றும் உபாயங்கூறாய்" என்றான். இவனது சிற்றத்தை ஆற்றற்குப் பின்தொடர்ந்து சென்ற ஆபத்தரன் எனு மொருவாலிபன் "அன்பனே! நீ விரும்பும் செய்கை கோபத்தாலும் கொடுஞ்சொல்லாலும் இயலாது. யோசனையின்றிப் பேசுகின்றாய். இதனால் அப்பெண்ணைப் பாதுகாக்க நினைக்கின்றாய். இஃதுனக்கு அபாயமாமேயன்றி உபாயமாகாது. இது விவேகமன்று." என்று நயம்படக் கூறினன்.

கலாவான்:—(சினத்தோடும் வெறுப்போடும்) "நீ மிக விவேகசாலி! விவேகத்தைக் கைவிடாதொழுகு யான் தைரியத்தைக் கைவிடேன்; தைரியமே எனக்குமுக்கியம்."

ஆபத்தரன்:—"நன்று! நன்று!! விவேகமும் தைரியமும் ஒன்றற்கொன்று ஒவ்வாப்பொருள்களோ?"

கலாவான்:—இவையெல்லாம்யான் அறியேன்; உனக்குத் தர்க்கஞ் செய்வதில் நோக்கம். அந்தப்பாழ்ந் தருக்கநூற்படி எவ்விஷயத்தையுங் குறித்து நியாயவாதஞ் செய்ய யான்வரவில்லை. நீ உனக்குத் தெரிந்த தருக்கமெல்லாவற்றினையும், சாதுரிய மனத்தையும் பேசு. ஏனெனில், நீ உன் நாவைக்கொண்டும் இறகைக் கொண்டுமே ஜீவிப்பவன். ஆகவே, நீ அங்ஙனம் பேசுதல் உனக்கு ஒத்ததே. யானோ போர் வீரன். இப்போழ் தல்லாவிடினும் இன்னுஞ் சில நாட்களில் போர் வீரனுவேன். நினக்கு

நாவும் பேனாவும் படைக்கலமானால் எனக்கும் படைக்கலங்களும் கருத்துக்களும் வேறிருக்கின்றன.

ஆபத்தான்:—அவ்வாறே இருக்க. நினது ஆயுதப்பெருமையை யானொன்றும்இழித் துரைக்க வந்தேனலன். ஆனால் யான் நின்னை வேண்டிக் கொள்வதியாதெனின் நினக்கு அவசியமான காலத்தில் என் கருவிகளும் துணை புரியுந் திறத்தன வாமென நீ அறியக்கடவையென்பதன்றி பின்னொன்றுமில்லை.

இங்ஙனம் அமைதியோடும் அன்போடும் ஆபத்தான் அஞ்சாதறைந்த உத்தரம் கலாவானது வாயை யாதும் பேசவொட்டாது, பூட்டிட்டது. அப்பொழுது கலாவான் ஆபத்தானது கையைப் பற்றிக் கொண்டு "உன்போல் உற்ற விடத்து உறுதிகூறும் உத்தம நண்பனில்லாவிடின், உள்ளங் கவர்ந்தெழுந்தோங்கிய சினத்தால் இக்கலாவானுக்கு யாது தீது நேருமோ? நல்லது; அன்பனே, இவ்வெளிய பெண்ணின் திறத்தில் என் செய்யலாம்? இவளுக்கு நேர்ந்துள்ள இடுக்கணை எவ்வாற்றானேனும் யாம் ஒழித்து நலஞ்செய்ய நாடவே வேண்டும் "என்றான்.

பின்னர்ச்சிறிது ஆலோசித்து அவ்விருவரும், மிகத் தாழ்நிலையனாயினும் அன்னோன் எழுத்திற் செய்யும் விண்ணப்பத்தை அரசன் உடனே கவனித்து முடிவு செய்கின்றானென்னும் உண்மை அறிந்து, சோபாமணியின் பொருட்டு வேந்தனுக்கு ஒருவிண்ணப்பமெழுதி அதனையவன்பால் விடுத்து விடையை எதிர்பார்த்திருந்தனர். ப்ரெடரிக் மன்னன், போதஸ்தானத்து வதிந்தகாலையில், கலாவானுடைய தாயை அடிக்கடி போய்ப்பார்த்துச் சம்பாஷித்து வருவதுண்டு. அவள் கல்வி கேள்விகளால் மிகுந்து பலவிஷயங்கள் அறிந்து பெருமை பாராட்டற் குரியளாயிருந்தனள். அத்துணைக் கற்றுத் தேறிப் பெண்பாலாரில் சிறப்புவாய்ந்த மாதர் ப்ரஷியாவில் அக்காலத் திருந்ததில்லை. ஆகவே, அவளுடையகல்வி கேள்விகட்கு வியந்து அரசன் அவளிடத்து மேன்மைபாராட்டி வந்தான். அன்றியும்; தான் அவளைக் கனப்படுத்தலால் அந்நாட்டு மற்றைப் பெண்களும் கல்வியிற் பயில முயலுவரென்று அரசன் அங்ஙனஞ் செய்து வந்தனன். இவ்வாறு காவலனும் கலாவான் தாயும் சம்பாஷிக்கும் அமையங்களிலெல்லாம் வேறு சிலகனவான்களும், முக்கியமாய் அப்பொழுது அவ்வேந்தன் சபையைச் சார்ந்திருந்த பிரான்ஸ்தேசப் புலவரும் உடனிருப்பதுண்டு.

இவ்வாறிருக்க, ஒருநாள் சோபாமணியின் விண்ணப்பம் மன்னன்பாற் சென்ற சின்னாட் பின்னர், வேந்தன் கலாவான் வீட்டிற்குச் சென்றிருந்தனன். அத்தருணத்து அங்குக் குழீஇ யிருந்த பலர் கல்வியைப்பற்றி உரையாடியவற்றை யெல்லாம் உற்றுக்கேட்டுக் கொண்டிருந்த ப்ரேடரிக்ராஜன் பொள்ளென ஆங்குடனிருந்த ஆங்கிலப் பிரயாணியைக் கிட்டி அவனைநோக்கி "நுந்தேயத்தராய விஜயவித்தன் என்பார் போர்ட்லான்ட் (Portland) தேசத்தின் மட்கலம் போலவே மற்றொன்று செய்திலரா? என வினவினன்." அதற்காங்கிலன் 'ஆம் அவ்விரண்டிற்கும் வேற்றுமைதோற்றாது இயற்றியுளார்' என்றுரைத்துப் பின்னும் அதனைப்பற்றி ஒரு பெயற்ற ஆங்கிலக்கவி ஒரியற்றிய சிலபாடல்களைச் சொல்லக் கேட்ட ப்ரெடரிக்ராஜன், தானும் கவிஞனும் கவித்திறம் அறியவல்லனும் ஆயினமையின், "ப்ரஷ்யதேச மட்கல வேலைப்பாட்டைக் குறித்து, யானே சில செய்யுட்கள் இயற்றுவேன்" என்றியம்பினன்.

ஆங்கிலன்:—"ப்ரஷ்ய மட்கலமோ! யான் இப்பெர்லின் நகரம் விட்டேகுவதன்முன் அதனைப் பார்ப்பேனாக."

ப்ரேடரிக்:—நீர் இன்னும் ஒரு திங்கள் இங்குறைவீரேல் அங்ஙனமே பார்ப்பீர். "ப்ரஷ்யா பீங்கான்" என இன்னுஞ் செய்யப்படவில்லை. ஆயினும், அதனைச் செவ்விதிற்செய்து



முடிப்பார்க்குத் தக்க பரிசளிப்பதாக இன்று யான் உறுதி செய்திருத்தலின் அதனை எவரேனும் செய்வரே யன்றிச் செய்யாதொழியார். பொருளிலும் புகழிலும் நசையற்றோர் யாவர்? மனிதனுக்கு மனவலிமைகளும், அவயவங்களும் ப்ரஷ்யாவிலுள்ளனபோலவே யன்றோ இத்தலி, இங்கிலாந்து முதலிய தேயங்களிலும் அமைக்கப் பட்டுள்ளன? அந்நாடுகளிலுள்ளார்க்கு ஒன்றின் மிக்க தலைகளும் பத்தின்மிக்க விரல்களும் உளவோ? இலவே. அங்ஙனமாக, இந்நாட்டினுள்ளும் அவ்விதவேலைகள் செய்தலாகாமை என்னே? பார்ப்பேன். (லானிஸ்காவை உற்று நோக்கி) பெர்லின் நகரத்துள்ள சீனமட்கல வேலைச்சாலையில் அதிபுத்தி யுக்தி சாலினியாகிய ஒரு பெண்மணி யிருக்கின்றாள், அவளோ தனது ஆசைக்கியைந்த நாயகனொருவனை உடன்கொண்டு ஸாக்ஸனிக்குச் செல்ல ஆவல் கொண்டுளாள். போரிற்பிடிபட்ட மற்றைச்சிறைகளைப் போலவே அவளும் தன்னைச்சிறைப்படுத்திய மன்னனுக்குப் பொருளையீட்டியோ புத்தியைக்காட்டியோ, இவ்விரண்டினொன்றினால், திருப்திசெய்து செல்லற்குரியள். ஈதன்றி உரிமையடைய உபாயம்வேறிலது. அரசனுக்குத்தனது ஆணையை நடாத்த ஆற்றல்உளதோ இலதோ? அவனுக்கு அடங்கியே ஒழுக வேண்டும்.

இவ்வாறு ப்ரெடரிக் அரசன் சடிதியிலுரைத்திட்டுத் தக்கணமே அவ்விடம் விட்டுப் பெயர்ந்து செல்ல, லானிஸ்கா பெர்லின் நகரத்திருக்கையில் அவன் ஆராய்ச்சியின்றி அரசனைப் பழித்துரைத்த இழிமொழி அவன்றன் செவிக்கெட்டியதெனவும், அதனால் லானிஸ்காவுக்குப்பெருந்துன்பம் விளையுமெனவும் அவன்றன் நண்பர் கூறினர். ஆயினும், அதனைச் சிறிதும் பாராட்டாது, வேந்தன் பெருந்தகைமையோடு லானிஸ்காவை மற்றைநாள் ஸான்ஸுஸியில் வருவித்து, முன்போல அன்பும் பெருமையுங் காட்டி ஆதரஞ்செய்தான். அதுகண்டு வெள்ளைமனமுடைய லானிஸ்கா தனது ஒழுக்கத்தால் மனம்புண்பட்டு வேந்தனடிமீது வீழ்ந்து தொழுதெழுந்து "என் ஆண்டவனே அடியேன் நுந்தம்மைத் தாமதமேலீட்டாற் கொடுங்கோன் மன்னனென்று கூறியிருப்பினும் அக்குற்றங்கொண்டு குணக்குன்றாகிய நீர் அடியேனை ஒறுத்திடாது பொறுத் தருள வேண்டுகின்றேன். "வேந்தன் சீறினுந் துணையில்லை," அரசன் சினத்திற் காளாயினானுக்கு அடைக்கலமேது? கடல் பெருகி மேலிட்டால் அதற்குக் கரையுண்டோ? மழைக்குக் குடைபிடிக்கலாம்; இடிக்குக் குடையுளதோ? "சிறியரானவர் தமக்குரியவே யல்லவோ தீமை, நன்னூலறிஞரானவர் தமக்கல்லவோ பொறைபிறர்க் காகுமோ தான்," "சிறுத்தவர்களறியாமற் செய்த பிழையத்தனையுஞ் செவ்வியோய் நீ பொறுத்தருளாய்," "வாரிகாய்ந்து கொதித்திடின் மாற்றத் தண்-ணீரி யாவர் தருவார் நீதியிற்-சீரியா யெனை நீமிகச்சீறிடின்-யாரியாரினியஞ்சலென்றுள்வரோ" என்றிங்ஙனம் பலவாறு பணிந் திரந்தனன்.

(இன்னும்வரும்.)

கே. எஸ். கோபாலாசாரியார்.

## அலுமினியத்தினால் செய்த பாத்திரங்கள்.

(From a Hindu Lady.)

சென்ற ஆகஸ்டுமாதம் 6உ சனிக்கிழமை சாயந்திரம் 5 மணிக்கு சென்னைச் சித்திரகலாசாலையில், புதிதாகக்கிளம்பியிருக்கும் 'அலுமினியம்' (Aluminium) என்ற உலோகத்தினால் செய்யப்பட்ட பாத்திரங்களைப்பற்றி அதை இங்கு வழக்கத்துக்குக்கொண்டு வந்திருக்கும் துரையே இங்கிலீஷில் பிரஸங்கம்செய்தார். அவர்சொன்ன ஒவ்வொரு வாக்கியத்தையும் மிஸ். ஷண்முகம் அம்மாள் எங்களுக்குத் தமிழில் சொன்னார். அந்தப் பிரசங்கத்துக்கு நாங்கள் சுமார் 50 பேர்கள் போயிருந்தோம். அதைக்கேட்டதினால்

எங்களில் சிலருக்குத் தோற்றியவைகளைப் பின்வரும் சம்பாஷணை மூலமாக உங்களுக்குத் தெரிவிக்கப் பிரியப்படுகிறேன்:—

காமாக்ஷி:—நீங்கள் எல்லோரும்நேற்று பிரசங்கம் கேட்கப் போயிருந்தீர்களாமே. நான் வரக்கூட இல்லையே என்று எனக்கு மிகவருத்தமாக இருக்கிறது. இருக்கட்டும். அங்கே என்னசொன்னார்கள்? ''

விசாலாக்ஷி:—''புதிதாக அலுமினியம் என்ற ஒரு உலோகத்தினால் பாத்திரங்கள் செய்கிறார்கள். அவைகளின் குணகுணங்களைக்குறித்து அதை இங்குவழக்கத்துக்குக் கொண்டுவந்தவரே வெகு விபரமாகச் சொன்னார்.''

கா:—''அதென்ன உலோகம் அது?''

விசா:—''அலுமினியம்.''இந்த அலுமினியம்என்ற உலோகம் பூமியிலிருந்து மண்ணுடன் கலந்த ஸ்திதியில்வெட்டி எடுக்கப்படுகிறது. இந்தமண்ணை உருக்கி தனியாக உலோகத்தைப் பிரித்தெடுக்கிறார்கள். வேறு எந்த உலோகமும் இதனால் செய்யப்பட்ட பாத்திரங்களில் சேருகிறதில்லை.''

கா:—நாம் உபயோகிக்கும் செம்பு, இரும்பு இவைகளைபோல் வெட்டி எடுக்கிறதாக்கும்.''

விசா:—'' ஆம் இந்தப் பாத்திரங்கள் மிகவும் லேசாயும் பார்க்கிறதற்கு வெள்ளியைப்போல் நிரம்பவும் அழகாயும் இருக்கின்றன. இந்தப்பாத்திரம் ஒரு நாள் தேய்க்காவிட்டால்கூட கறுத்துப்போகாது.இவ்வளவு லேசாயிருக்கிறதேயென்று கீழேபோட்டாற்கூட உடையாது. நான் வரும்போது சிலபாத்திரங்கள் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். இதோபார்! உனக்கு ஸந்தேகந்தீரப் போட்டுக்காண்பிக்கிறேன்.'' என்று கையிலிருந்த ஒரு அலுமினியம் வெங்கலப் பானையைத் தூக்கி தொப்பென்று போட்டாள்.

கா:—'' ஐய்யோ! அதோபார் கொஞ்சம் நசுங்கிப்போச்சே. நாம் உபயோகிக்கும் ஈயம்கூடப் போட்டால் ஒன்றும் உடையாது. இப்படித்தான் கொஞ்சம் நசுங்கும். பித்தளையைப்போட்டால் தான் என்ன உடைகிறதா? அதுவும் நசுங்கத்தான் நசுங்குகிறது. இதிலென்ன விசேஷம்?''

விசா:—உங்கள்பாத்திரம் நிரம்பவும் கனமுள்ளது. ஒரே அளவுள்ள ஒரு பித்தளைப்பாத்திரத்தையும், ஒரு அலுமினியம் பாத்திரத்தையும் எடுத்து நிறுத்தால், உங்கள் பித்தளைப்பாத்திரம் 10 சேர் எடையிருந்தால் இந்தப் புதுமாதிரிப்பாத்திரம் 3 சேர் எடைதான் இருக்கும். இதோ இந்தக் கூஜாவை யெடுத்துக்கொள்வோம். உங்கள் வெண்கலக் கூஜா இவ்வளவு பெரிது இருந்தால் சுமார் 7 சேர் நிறை இருக்கும். ஆனால் இது இரண்டு சேர்தான் இருக்கும். இதோ இந்தஜோடி அடுக்குபோசணி, குடம், மூக்குலோட்டா, தட்டு, டம்ளர், இவைகளை எடுத்துப்பார். எவ்வளவு இலேசாக இருக்கின்றன. முக்கியமாக இந்தக்குடத்தை யெடுத்துப்பார். கிணறு, குளம், இதுகளிலிருந்து, தண்ணீர் கொண்டுவருகிறதற்கு எவ்வளவு சுலபமாக இருக்கும். நாம் உபயோகிக்கும் குடம் கனக்கிறது பாதி, தண்ணீர்கனக்கிறது பாதி. இதிலேயோ அப்படியில்லை: தண்ணீர் கனம் மட்டும்தான். குடத்தின்கனம் சொற்பம்.

கா:—'' இதிலே என்ன பிரமாதசுகம்! ஏற்கனவே நமக்கு தேகாப்பியாசத்திற்கு இடமில்லை. முன்காலத்துப் பெண்பிள்ளைகளையும் பார்! இப்பொழுது இருக்கிறவர்களையும் பார்! பலமில்லாமல் தான் மூக்கலவியாதி பிடுங்கித்தின்னுகொண்டு, வரவரமெலிந்து குட்டையாகப்போகிறார்களே; இன்னும் இந்தக் குடத்தையும் பாத்திரங்களையும் வாங்கினால் சொல்லவேண்டியதில்லை.''

விசா:—'' ஸரிதான். உங்கள் வெண்கலப்பானையில் சமையல் செய்வதற்கு எத்தனைநேரம் ஆகிறது குறைந்தபட்சம் இரண்டுமணிநேரமாவது ஆகும். இந்தப்பாத்திரங்களிலோ ½ - மணிநேரத்தில் சமையல் செய்துமுடித்துப்போடலாமே. காலதாமதம் இல்லை தேகத்திற்கும் சிரமம் இல்லை.''

கா:—''உங்கள் பாத்திரத்தில் சமையல் செய்து கொண்டு இருக்கும்போது, தப்பித்தவறி அடுப்பு அணைந்துவிட்டால் அடுப்பில் கொதித்துக்கொண்டிருக்கும் பதார்த்தம், கிணற்றில் கல்போட்டதுபோல் கொதி அமுங்கிவிடும். அல்லாமல் சமையல் ஆய்விட்டால், ஆனதும் ஆகாததுமாயிருக்கும்பொழுதே சாப்பிட உட்கார்ந்துவிடவேணும். கொஞ்சம் தாமதித்தால் எல்லாம் உடனே ஜில் என்று போய்விடும். எங்கள் வெண்கலப்பானை, கல்சட்டி அதுகளில் சமையல் செய்தபிறகு சுமார் 2 மணி ஆனாலும் சூடு இருக்கும். நாம் வற்றல்குழம்பு செய்கிறோமே அதை கல்சட்டியில் செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கிறது. மற்றப்பாத்திரத்திரங்களில் செய்தால் எப்படியிருக்கிறது. கல்சட்டியில் செய்கிற குழம்பே நிரம்பவும் தடிப்பாக உருசியாக இருக்கும். இலேசான பாத்திரங்களில் செய்தால் அவ்வளவு நன்றாய் இருக்காது. இதற்குக் காரணம், மற்றப்பாத்திரங்கள் இலேசாக இருக்கிறதுதான். ஏனென்றால், கனமாக இருக்கிற கல்சட்டியில் செய்த குழம்பு, அடுப்பைவிட்டுக் கீழே இறக்கி கொஞ்சநேரமானால்கூட கொதித்துக் கொண்டிருக்கும். அப்பொழுது அதில் இருக்கிற தண்ணீர் சுண்டிக்கொள்கிறது; குழம்பு தடிப்பாக இருக்கிறது. பித்தளை முதலிய பாத்திரங்களோ அப்படி இல்லை. இலேசாக இருக்கிறபடியால் இறக்கின உடன் ஆறிப்போய்விடுகிறது. ஆகையால் இந்தப் பாத்திரங்களுக்கு உறிஞ்சிக்கொள்கிற அந்த சக்தி இல்லை. மண்பாண்டங்களுக்கு இந்தச்சக்தி கொஞ்சம் இருக்கிறது.''



விசா:—'' அதுகடக்கட்டும். உங்கள் பித்தளை ஈயம் இதுகளை உபயோகிக்கிறதினால் அதிலுள்ள களிம்பு கொஞ்சம்கொஞ்சமாக சாப்பாட்டில்சேர்ந்து, உடம்பிற்கு வியாதியைத் தருகிறது. ஆனால், இந்த 'அலுமினியம்' பாத்திரத்திலோ நாமே வேணுமென்று அராவிக் கொஞ்சம் தூள் எடுத்து சாப்பிட்டால்கூட வியாதிவராது. குடித்தனத்திற்கு வேண்டிய எல்லாவித உபயோகத்திற்கும் இந்தப்பாத்திரங்களையே வைத்துக்கொள்ளலாம்.''

கா:—''உடம்பு ஸௌக்கியமாக இருக்கிறவர்கள் இதைத்தின்றால்கூட ஸௌக்கியமாகவே இருக்கிறார்கள் என்றால்அதில் என்ன இலாபம்? அல்லது இது ஒருக்கால் நன்மையையே செய்கிறதென்று சொல்லுகிறார்களானால் அதற்கு இந்த பாத்திரங்களை வாங்கித்தானா ஆகவேணும். தனியே டாக்டரிடத்தில் அந்தமருந்தை வாங்கிக்கொள்ளலாகாதா? உங்கள் பாத்திரங்கள் உடம்பிற்குக் கெடுதல்செய்யாது என்கிறதை ஒப்புக்கொள்கிறேன். எங்கள் பாத்திரங்களில், வெண்கலம் உடம்பிற்குக் கெடுதல் செய்யாது. கல்சட்டி மண்பானை, முன்சொன்ன வெண்கலப்பானை இவைகளைச் சமையலுக்கு உபயோகித்துக்கொள்ளலாம். இரும்புப் பாத்திரங்கள் அடுப்பில் வைத்து வறுக்க, தாளிக்க இவைகளுக்கு உபயோகிக்கலாம். இவைகளை உபயோகப்படுத்துகிறதினால் ஸௌக்கியத்தைக்கூடத் தரும். மற்றவைகளுக்கெல்லாம், பித்தளை, ஈயப்பாத்திரங்களை உபயோகிக்கலாம்.''

விசா:—'' உங்கள் பாத்திரங்களில் தேள்கொட்டி ஓட்டை ஆகிறதே; இந்தப்பாத்திரத்தில் தேளைப்பிடித்துப்போட்டால் கூடகொட்டாது.''

கா:—''எந்தப்பாத்திரத்திலும் தேளைப்பிடித்துப் போட்டு வேணுமென்று வைத்திருந்தால்கொட்டாதுதான். எங்கள் பாத்திரங்களில்கூட எல்லாப்பாத்திரங்களிலும் தேள்கொட்டினதாகக் கேட்டதில்லை. வெண்கலம் ஒன்றில்தான் கொட்டினதென்று, சிறு ஊசி நுழையும்படியான ஓட்டையைப் பார்த்திருக்கிறோம். அதுகூட நேரில் கொட்டும்போது பார்த்ததில்லை. சொல்லிக்கேள்விதான். எந்தப்பாத்திரத்தையும் தேளின் முதுகில்வைத்தால், உடனே தேள் அதைக்கொட்டும் அப்படிப்பார்த்து தெரிந்து கொள்ளவேணும்.''

விசா:—எங்கேயாவது ஊர்களுக்குப்போகவேண்டியிருந்தால், குடித்தனத்திற்கு வேண்டிய பாத்திரங்களெல்லாம் 'அலுமினியம்', வெகுஇலேசானதால், கொஞ்சச் செலவில் கொண்டுபோய்விடலாம், பித்தளை, ஈயம், வெண்கலம், இந்தப்பாத்திரங்கள்ஜாஸ்தி நிறையாகிறது. மேலும் உங்கள் பாத்திரங்களில் சமையல் செய்ய ஒருநாளைக்கு குண்டு விறகுசெலவாகிறது. எங்கள்பாத்திரங்களில்சமையல்செய்வதற்கு ¼ குண்டு விறகுபோதும். சீக்கிரத்தில் தேயாது. புளி; மோர் வைத்தால் களிம்பு பிடிக்காதாகையால் அடிக்கடி ஈயம் பூசவேண்டிய தொந்தரவேஇல்லை. இந்தப் பாத்திரங்களுக்கு விலைமாத்திரம் கொஞ்சம் அதிகம். ஏனென்றால் வெட்டிஎடுத்து, வேறொரு உலோகமும் கலப்பில்லாமல் அப்படியேஉருக்கிவார்க்கிறதினால் கஷ்டம் ஜாஸ்தி. இதற்குப்போடும்ஜாஸ்தி விலையை, உங்கள் வெண்கலப் பாத்திரங்கள் போல் உடையாமல் வெகுநாளைக்கி வருகிறலாபத்தினாலும் முன் சொன்ன விஷயங்களால் உண்டாகும் லாபத்தினாலும் எடுத்துவிடலாம். கூடியசீக்கிரத்தில் போட்ட பணம் சேர்த்துவிடலாம். உங்கள் பாத்திரங்கள் அழுக்கு ஆனால் தேய்க்கிறது கஷ்டம். எங்கள் பாத்திரத்தை கொஞ்சம் சுடுதண்ணீரும் ஸோடா உப்பும் போட்டுத்தேய்த்தால் போதும். அடுப்பில் வைத்து வறுக்கவும், தாளிக்கவும் உபயோகிக்கலாம். அதோ சமையல் செய்கிறாள் இஷ்டமானால் போய்ப்பார்.

இந்த அலுமினிய பாத்திரத்தைப் பற்றி என்ன கிரகித்து கொள்ளவேண்டுமென்றால், நிரம்பவும் இலேசாயும், பார்க்கிறதற்கு வெள்ளியைப்போல் அழகாயும் உபயோகிக்க ஸௌகரியமாயும் இருக்கிற தென்பதுதான்.

கா:—என்னவோ உங்கள் பாத்திரத்தில் போடும் விலையை, தேய்க்கிறதிலும், உடையாதுஎன்கிறதிலு

சமையல் செய்கிறதிலும், பிரமாத இலாபம் கண்டு பிடிக்கலாம் என்கிறாயே! தினம் பாத்திரங்களை உடைத்துக் கொண்டிருக்கிறோமா என்ன? அப்படி உடைக்கிறபாத்திரம் என்னவென்று நினைக்கிறாய்! வெண்கலம் ஒன்றுதான். அதுகூட மட்டவெண்கலம் உடையாது. பித்தளை உடையாது. ஈயம்உடையாது. தாம்பிரம் உடையாது. சட்டி, கல்சட்டி இவை கைதவறி விழுந்துவிட்டால் உடையும் இவை தினம் உடைந்தால்கூட, உன்பாத்திரத்தின். விலையின் வட்டிபணத்துக்கு புதிது, புதிதாகவாங்கிக் கொள்ளலாம்,

தினம் ஒருசட்டி உடைக்கிறதாக வைத்துக்கொண்டால் கூட, மாதம் 6 அணா ஆகாது. நீஎன்னவோ பிரமாதஇலாபம் கண்டுபிடிக்கலாம் என்று சொல்லுகிறாய். உன்பாத்திரத்தின் விலையென்ன? எங்கள் பாத்திரத்தின் விலையென்ன? என்னவோ கூசா,கூசா என்கிறாயே, எங்கள் கூசா ரூ. 5 இருக்கிறதற்கு சரியான என்னுடையது ரூ. 12 ஆகிறது. ஒருலோட்டாவெண்கல மானால், மூடி உள்பட ரூ. ½ உன்னுடைய பாத்திரத்தில் ரூ. 7; ஒரு மூக்குடம்ளர், எங்க பித்தளையில் அணா ஆறு (6)உன்னுடையதில் ரூ 2. தின்னம்வைத்த தூக்குசட்டியில் எங்கள்பித்தளையில் ரூ1½உன்னுடையதில் ரூ.4 ஸாதாரண புடைடம்ளர் பித்தளையில் 12க்குரூ3. உன்னுடையதில்12டம்ளர் விலை ரூ 18 இதுதான் இவ்வளவு விலைஜாஸ்தியென்றால், அதுதேய்க்க ஸோடாஎவ்வளவு செலவாகும்? "சுண்டைக்காய் கால்பணம், சுமைகூலி முக்கால் பணம்," என்பதுபோல், தினம் 1. தம்படி ஸோடா குறைந்த பக்ஷம் வேணும். அதற்கு உபயோகிக்க வேண்டிய வெந்நீர் காய்ச்ச விறகுசெலவு வேண்டும். என்னவோ இலேசு, இலேசுஎன்கிறாயே! எனக்கு ஏமாத்துகிறது போல் இருக்கிறது. பார்வைக்கிகனமாக இருக்குமெனத்தோன்றி தூக்கும்போது கெட்டியைப்போல் இருந்தால் உன்னுடைய பாத்திரம் பழகுகிறவரையில், எடுக்கும் போதெல்லாம் ஏமாத்திக் கொண்டிருக்கும். நல்லபெருங் காற்றடித்தால் உன்னுடைய உச்சிதடம்ளர் பறந்துவிடும். பிறகு தேட வேண்டியதுதான்.

எங்கள் பாத்திரம் தேய்க்கிற மாதிரியைப்பற்றிச் சொல்லுகிறேன். பித்தளை, செப்புப் பாத்திரங்கள் தேய்க்க ஒருதம்படி புளி மூன்று நாளைக்குவரும். வெண்கலத்திற்கு, வெறும் அடுப்புச்சாம்பலை நன்றாய்வடிக்கட்டி வைத்துக்கொண்டு தேய்த்தால் வெள்ளியைப்போல் நிறமாகவும் நீறுவிழாமலும் இருக்கும். ஈயப்பாத்திரத்துக்கு சாணியும், கூடமணல் சமுத்திரமணலும், கலந்து தேய்த்தால் நிறமும் வெளுப்பாக இருக்கும். இந்தப்பாத்திரங்களை தேய்த்து வைத்தால் வெகுநேர்த்தியாக இருக்கும் உன்பாத்திரம் கொஞ்சம் நாள் ஆனால், அதாவது அதில் கொடுத்திருக்கும் மெருகு அழிந்து விட்டால் இவ்யலக்ஷணம்! என்னதேய்த்தாலும் ஈயத்தைப் போல் கூட பளப்பளபாக இல்லை,

மண்பானை, கல்சட்டி இவைகளுக்கு மணலும் வைக்கோலும் போட்டு தேய்த்தால் போதும். இதற்கெல்லாம் கொஞ்சம் கூட செலவேயில்லை. இதெல்லாம் என்னத்திற்கு சொன்னேனென்றால், எங்கள் பாத்திரத்தைப்பற்றி பழிக்கவேண்டாம். எங்கள் பாத்திரங்களைப்போல் நீயும் ஒருமாதிரி பாத்திரம் புதிதாகக்கண்டு பிடித்திருக்கிறாய். அதுகெட்டிக்காரத்தனம் தான்.

நீ உன்னுடைய பாத்திரத்தில் இருக்கும் நல்லதை மாத்திரம் எடுத்துச் சொல்லி இருக்கிறாய். நான் என்பாத்திரத்தின் நல்லது கெடுதலையும் உன் பாத்திரத்தின், நீசொல்லாமல் விட்ட கெடுதலையும்கூடச் சொல்லி யிருக்கிறேன். யாருக்கு எது இஷ்டமோ அதைவாங்கிக் கொள்ளட்டும். ஸமீபத்தில் பீங்கான் பூச்சுக் கொடுத்த 'இனாமல்' பாத்திரங்கள் புதிதாகத்தான் கிளம்பின. அவை எவ்வளவு ஸாதாரண விலையுள்ளதாயும் நேர்த்தியாகவும்இருக்கின்றன? அதற்கு ஒருவரும் மீடிங்கு கூடவில்லை; அதுபோல இதொரு புதுமாதிரிப் பாத்திரம். விலைவெகுஜாஸ்தியாக இருக்கிறதைத்தவிர இதில் அசாத்தியமாக ஒரு விசேஷத்தையும் நான்காணேன். உனக்கும் எனக்கும் நடந்த தர்க்கம் போதும் நேரம் ஆகிறது. நான் போய் வருகிறேன்."

தாரா.



# கள்ளுண்ணாமை.

(பூர்வ கிரந்தங்களிலிருந்தெடுத்த ஆதாரங்கள்.)

(ஜீவகசிந்தாமணி.)

அளைவது காமமடு நறவுநெய்யொழுகு மூனும்பின்றை
விளைவது தீவினையே கண்டீர் இவை மூன்றும் விடுமின்
.... ... ... ... ... (கேசரியாரிலம்பகம் 140 - ம் பாடல்.

ஒழுக்கமேயன்றித்தங்கள் உள்ளுணர்வழிக்கு மட்டும்
(மட்டு - கள்) (முத்தியிலம்பகம் 223-ம் பாடல்.)

ஊனொடு தேனுங் கள்ளுமுண் டுயிர்கொன்ற பாவத்
தினாய்ப் பிறந்த திங்கனினி யிவை யொழிமின்
(பதுமையாரிலம்பகம் 69)

(திரிகடுகம்.)

கள்ளுண்பான் குடிமை
உள்ளன போலக் கெடும்.

(அரிச்சந்திர புராணம்.)

கள்ளங் கொலை கட்புலை காமமென் றைந்து மற்றார்.
(நாட்டுச்சிறப்பு.)

கட்புலை=கள்ளும் மாமிசமும்.

(நளவெண்பா.)

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய் மொழிதல்
ஈதல் மறுத்தலிவைகண்டாய்—போதில்
சிலையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார்நெறி.

(மனுஸ்மிருதி 11-ம் அத்தியாயம் 90—93-ம் சுலோகங்கள் வரை
சுராபானப் பிராயச்சித்தம்.)

துவிஜர்கள் காமவிகாரத்தால் பைஷ்டியென்னும் சாராயத்தைக்குடித்தால் அதற்குப் பிராயச்சித்தமாக அந்தச்சாராயத்தையே நெருப்பு நிறமாகக் காய்ச்சிக் குடிக்கக்கடவர், அதனால் அவனுடல் வெந்துபோனால் பரிசுத்தனாவான்.

(பைஷ்டி = அரிசியின் மாவினால் செய்யப்படுகிற சாராயம்.)

## திருஞானசம்பந்தர் காலநிர்ணயம்.

(115-வது பக்கத்தொடர்ச்சி.)

[கொழும்பு நகர் வாசியாகிய கனம் - P. குமாரசாமி யென்பவர் அபிப்பிராயம் பின்வருமாறு. திருவிளையாடற் புராணத்தில் வன்னியும், கிணறும், லிங்கமு மழைத்த படலத்தில் நம்பாலறாவாயர் சம்பந்தம் படிக்கப் படுகின்றது. இவ்வன்னி யழைத்தவற்புதம் சிலப்பதிகாரக் கதாநாயகியாற் பிரத்தாபிக்கப் பட்டுள்ளது. அம்மாது சிரோமணியோவெனின் செங்குட்டுவன் மூதாதையாகிய கரிகாலன் காலத்தவதரித்தவரென்பது அநேகர் சம்மதம். மேலும் கி. பி. 113 க்கும் 135 க்கும் இடையே இலங்கை யரசன் கயவாகு கரிகாலனோடு அளவளாவிச் சம்பாஷித்திருந்தா னென்பது திண்ணம்." ஆதலின் நம் சம்பந்தர் காலம் கிறிஸ்து பிறந்ததற்குச் சிறிது முன்னென்றாவது கொள்ளவேண்டுமென்பதே. மேற்போந்த நம் நண்பர் கொள்கையைச் சற்று கவனிப்போம். இலங்கைச் சரிதத்தில் கயவாகுவென இருவர் பிரத்தாபம் கேட்கப்படலால் பிரத்தாபித்த கயவாகுவின் சம்பந்தத்தைக் கொண்டு சிலப்பதிகாரத்தின் காலத்தை யொருதலையாக நிச்சயிப்பதுசிதமன்று. அங்ஙனம் நிச்சயித்தகாலமே உண்மையென்று கொள்ளினும், வன்னியழைத்த வரலாற்றில் நம்பாலறாவாயர் சம்பந்தம் காணப்படுவது திருவிளையாடற் புராணமொன்றின் மாத்திரமே. திருவிளையாடற் புராணம் கவிசாதுரியம் ததும்பியதாயினும் அதிலடங்கிய விஷயங்களெல்லாம் சரித்திரோக்தமானவை யென்று கொள்வதற் கிடமில்லை. இவ்வாலாசிய மான்மியத்தில் நம்சம்பந்தர் பக்கல் ஓதப்படும் வன்னியழைத்த வற்புதம், தொண்டர்சீர்பரவுவார் இயற்றியுள்ள நம்பாலறாவாயர் பிரபாவத்திற் காணப்படுமேதேகதையினின்றும் முற்றும் வேறுபடலால், நம்பரஞ்சோதி முனிவர், பிரத்தாபித்து வருமற்புதத்தை நம் காழியர்பெருமான்மேல் ஆரோபித்திருத்தல் அவ்வளவு நம்பத்தகுந்ததன்று. குறித்த இரண்டு நூலிலுங் காணப்படும் அக்கதாபேதம் நம்நோக்கத்துக்குச் சிறிது அவசியமெனப் படுதலின் அதையீண்டு விவகரிப்போம். பெரியபுராணத்திற் காணப்படுமக்கதையின் வரலாறு :—

வைப்பூர் என்னும் பதியில் வணிகர்குலத் துதித்த தாமனென்பானுக்கு எழுபெண்க ளிருந்தார்கள், அவர்களில் மூத்தபெண்ணைத் தன் உடன்பிறந்தாள் புத்திரனுக்கு விவாகஞ்செய்து கொடுப்பதாக நிச்சயித்திருந்தவன் பொருளாசை மேலீட்டால் மற்றொருவனுக்குக்கொடுத்துவிட்டதுமன்றி, இன்னுமைந்து பெண்களை அங்ஙனமே தன் மருகன்மனம் புழுங்க வெவ்வேறிடங்களிற் கொடுத்து விட்டமையின் ஏழாவது பெண்ணை அவனுக்குக்கொடுப்பதாக வாக்களித்திருந்தான். ஒன்றாலு மடங்காத பொன்னாசை படைத்த அவ்வணிகன் தன்னையும் வேறொருவனுக்கு வாழ்க்கைப்படுத்த எத்தனித்ததை யுணர்ந்த அம்மாதரசி இலவுகாத்த கிளிபோலிதுகாறும் ஏமாந்த தன்மைத்துனற் கிரங்கியேங்க, அவ்விரக்கம், அவன்பால் அன்பாவரும்பிக், காதல்காய்த்து, பாசம்பழுத்து பசலைவிளைத்தது. பெண்மணியும் பாசமேலீட்டால் அந்தரங்கமாக மைத்துனற்கே வாழ்க்கைப்படவிசைந்து, விவாகத்தை யவனூரிலேயே பெற்றோரனுமதியின்றி நடத்திப் போடுவதாக வுத்தேசித்து தாமனறியாவண்ணம், மைத்துனனோடே புறப்பட்டுப் போகும்வழியில் மருகனூரிற்றங்க ஆங்கே அம்மங்கை காதற்கிலக்கானவன் அரவுதீண்டி யிறந்தான். இறந்ததும் அவ்வணிகன் பாவையின்னும் விவாகச்சடங்காகாமையின் அவனைத் தீண்டமுடியாதவளாய்த் தீண்டப்பெறாதற்கு ஏங்கியவளாய், அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னையடைவாக வுடன்போந்தேன், அரவால் வாடி, என்னையு விட்டகன்றாயானென் செய்கே னிவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாருமில்லை, மன்னியசீர்வணிக குலமணியே யானும் வாழே னென்றியர்ந்து 'வாடி' சென்னியிளம் பிறையணிவார்கோயில்நோக்கி நீலவிடவரவணிந்த 'நிமலா'! பொடியான காமனுயிரி ரதிவேண்டப் புரிந்தளித்த புண்ணியனே ! இந்த விடக் கொடுவேகம் நீங்குமாறும் யானிடுக்கட் குழியினின்று மேறுமாறும், அந்திமதிக்குழவிவளர் செய்யவேணியணி மருகற்பெருமானேயருளாய்' என்றிரந்தாள். அவ்வோலம் அப்பொழுது அங்கு எழுந்தருளியிருந்த எங்கள்சண்பை காவலர் திருச்செவி சாரலும் அவர்' அன்னமென அயர்வளெண்' மாட்டுக்குறுகி ' தாங்கள் போந்ததுவும் புகுந்ததுவும், அவள்புகலக் கேட்டருளிப்பதிகம் பாடியிறந்தவனை யுயிர்ப்பித்து உத்தேசித்த விவாகத்தை முடித்தருளிச், செயற்கருஞ் செய்கை செய்து பெறற்கரும் பெருமை பெற்ற சிறுத்தொண்டர் வேண்டச் செங்காட்டங் குடிமீண்டார். மேற்போந்த பெரியபுராணத்திற் காணப்படுமக்கதை வரலாற்றினின்றும் எவ்வெவ் வம்ஸங்களில் பரஞ்சோதி முனிவர் வேறுபட்டுள்ளார் என்று பார்ப்போம்.



மேற்போந்த வரலாற்றில் ஒரு பெண் பெற்றோரனுமதியின்றிக் காதன்மேலீட்டால் ஒருபுருஷனோடுதனியே போதல் பெண்பாலுக்கு அதிகசுதந்தரங் கொடுத்தபடியாமென்றோ பிந்திய இவ்வரலாற்றை மனங்கொண்டமட்டும் மாற்றியிருக்கிறார். பிந்திய வரலாறு:— பெயரூரில்லாத வணிக னொருவனுக்கு ஒரே புத்திரியிருந்தாள். மதுரையில் ஏற்கனவே மனைவியோடு செல்வமாக வாழ்ந்து கொண்டிருந்த தன் மருகனுக்கு இந்தஏகபுத்திரியையும் வாழ்க்கைப்படுத்தித் தன் ஏராளமான் செல்வத்தையும் ஸ்திரீதனமாகக் கொடுப்பதாக நிச்சயித்து அதனைத் தன் உறமுறையார்க்குத் தெரிவித்து எண்ணம் நிறைவேறு முன் காலஞ்சென்றான். காலஞ்சென்றவன் மனைவியும் அனுமரணஞ் செய்து ஆவிநீத்தாள். மதுரையின்கண் வசித்த மருகனும் தன்மாமனது அருங்கொடையைக் கேள்வியுற்று அவற்றையெல்லாம் தன்னூர்க்குக் கொண்டுபோகக் கருதி மாமனூர் சென்றான்.

(இன்னும்வரும்.)

கே. எஸ். ஷண்முகசுந்தரம், பி. ஏ.

## நகைப்பைத்தியம்.

(119-வது பக்கத்தொடர்ச்சி.)

### 15-வது ஆக்ஷேபம்.

மேற்கண்டபடி நாகரிக அபிப்பிராயங் கொண்ட ஜனங்கள் ஆபரணம் நாகரிக அங்கமாக நினைப்பது ஆச்சரியமன்று.

வாஸ்தவமான நாகரிகம் காயபலம், புத்திபலம், ஆத்மபலம், அதிகரித்தலிலும் காயசுகம், இதயசுகம், புத்திசுகம் அடைவதிலும் அவ்வுறுதிகட்கும் சுகங்கட்கும் வேண்டிய எந்திரங்கள் நிர்மாணிப்பதிலும் ஏற்பாடுகள் செய்வதிலும் நிற்கிறது.

### காயபலம் வளர்த்தல்.

சமுதாய நிலைமையடைந்த ஜனங்கள் நாகரிகமென்று பேர்பெற வேண்டுமானால் விவாகமுறைகள் சரியாய் ஏற்படுத்தி, சரீரக்ஷயமும் துர்ப்பலமும் ஹீனங்குலித்தனமாகிய உத்பாத அவலக்ஷணங்களும் இல்லாத சுவலக்ஷணம், சுகுணம்பொருந்திய சந்ததிகள் ஜனிக்குமுறை நன்றாய்த் தேர்ந்திருக்கவேண்டும். ஆபரணப்பெருக்கால் இது நடக்குமா? நடவாது.

சரீரத்தில் ரோகம்பிடித்தால், நிவிர்த்திக்கு வேண்டிய வைத்தியமுறை தெரியவேண்டும். ஆபரணம் நாகரிக அங்கமாக நினைக்கும் ஜனங்கள் என்ன வைத்திய முறைகண்டுபிடித்திருக்கிறார்கள். சென்ற 50-வருஷத்துக்குள் ஏறக்குறைய 300 கோடி ரூ. ஆபரணத்தில் ஆழ்த்தியிருக்கும் நாகரிகமகான்கள் முற்காலத்தில் நம்முடைய அநாகரிக ரிஷீசுவரான் கண்டுபிடித்திருக்கும் மூன்றுலக்ஷம் மருந்து மூலிகைகளைத் தவிர, கூட ஒரு மூலிகையின் குணமாவது புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்களா ? புதிதாய்க் கண்டுபிடிக்காவிட்டாலும் முன் கண்டுபிடிக்கப்பட்ட 3 லக்ஷம் மூலிகைகள் இன்னவென்றாவதுஅறிந்துணர்ந்திருக்கிறார்களா ? வருஷாவருஷம் வாரிக்கொண்டு போகும் வாந்தி பேதி என்ற கொள்ளை நோக்காடுக்கு என்ன மருந்து புதிதாகவும் உடன்கேட்கும்படிக்கும் கண்டுபிடித்திருக்கிறார்கள். போகர் முதலிய சித்தர்கள் முறைப்படி ஒரு குளிகையும் கொடுத்து தப்பளமும் சிரசில் போட்டு $\frac{1}{2}$ அணாச்செலவின்மேல் எத்தனையோ வாந்திபேதியால் வருந்தும் பிணியாளர்களை பொட்டிலடித்தாற்போல் சுகப்படுத்தியிருக்கும் சுதேசவைத்தியர்களைக்கண்டிருக்கிறேன். ஆபரணம் நாகரிகமென்ற சித்தாந்தமில்லாமல் சாஸ்திரம் நாகரிகமென்றபெரியோர்கள்முறை உசிதமா, அல்லது வியாதி வந்தால் நிவர்த்திக்காக சாஸ்திர முறை தெரியாத ஆபரணம் நாகரிகமென்ற அறிவிலிகளின் முறை நல்லதா ?

சரீரத்தில் ரோகம் நிவர்த்தியாகி குணமடைந்தாலும் காயத்தைத்தன் வலிக்குக்கொண்டுவரும் முறை தெரியவேண்டும். இம்முறை ஆபரணத்தால் சாத்தியமா ? இல்லை.

கர்ப்பத்தில் எட்டிய வியாதிகள் நிவர்த்தியாகும் பொருட்டு எந்த ஆபரணத்தையணிகிறது ?

தன் இரக்ஷைக்கும் தன் தேக இரக்ஷைக்கும் வேண்டியபலம் கருவி முதலிய சாதனங்கள் எந்த ஆபரணத்தால் கிடைக்கும் ?

### புத்தி அபிவிருத்தி.

ஊர்வன பறப்பன நடப்பன செயற்கொண்டிருப்பனவாகிய ஜீவஜடங்களில் மனுஷராசிக்கு விசேஷத்

வம் புத்தியினாற்றான். அவ்வாறு ஜீவகோடிகளில் விசேஷத்வத்திற்குக் காரணமாயிருக்கிற புத்தி எவ்வளவுக்கெவ்வளவு விருத்தியாகி நிற்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாகரிகம் ஜாஸ்தி. புத்தி அபிவிருத்திக்குத் தகுந்தபடி பலதேசத்துப் பல்வகை ஜனங்கள் நாகரிகப்படியில் இருப்பார்கள். புத்திவிசாலத்தால் நாகரிகம் மதிக்கவேண்டுமேயல்லாமல் புத்தி குன்றியவெளிப்பகட்டால் நாகரிகம் திட்டப்படுத்த முடியாது. ஆபரணப்பெருக்கின்மேல் நாகரிகம் நிதானப்படுத்துவதாயிருந்தால் அமெரிக்கா, ஆப்ரிக்கா முதலியகண்டங்களிலுள்ள காட்டு ஜனங்கள் எவ்வளவோ மேன்மையடைந்திருக்கும்வெள்ளைக்காரரைப் பார்க்கிலும் நாகரிகமுள்ளவர்களென்று சொல்ல வேண்டிவரும். வஸ்திரம்செய்ய அறிவில்லாமல் இலைகளையும், தழைகளையும், தோல்களையும் அணிந்து மீன்களையும் பக்ஷிகளையும் கொன்று சுடாமற்றின்று மரத்தடியிற்றங்கி கொங்காணிபோல் ஸ்தலமாற்றக் கூடிய குடிசைகளில் பதுங்கி மேலெல்லாம் எலும்பும் கல்லும் லோகங்களும் அணிந்து தலைகளில் இறகுகள் சொருகி கிலுகிலுக்கும் மணிகள் சலங்கைகள் இடுப்பிலும் காலிலும் அணிந்து உடலெல்லாம் சாயப்பூச்சுப்பூசி தீர்க்கவிசாரமில்லாத காட்டுஜனங்களை அங்கிலேயர் முதலிய வெள்ளைக்காரர், இந்துக்கள் இவர்களைப்பார்க்கிலும் எப்படி நாகரிகமுள்ளவர்களென்று கூறுகிறது ?

புத்தி விருத்தியடைய வேண்டுமானால் சாஸ்திரம் நாளுக்குநாள் சாகோபசாகையாய்விரிந்து மேலோங்கி ஆகாயமண்டலம்வரை முட்டவேண்டும். சாஸ்திரரூபம் புத்தி அபிவிருத்தி புலப்படவேண்டுமேயல்லாமல் மற்றவிதத்தில் புலப்பட்டாலும் குணகரமாகவும், தீர்க்ககாலம் நிற்கக்கூடியதாகவும் இருக்காது. தர்க்கசாஸ்திரம் அங்ககணிதம் பீஜகணிதம், க்ஷேத்திரவிவகாரம் முதலிய கணிதசாஸ்திரங்கள் பூகோளசாஸ்திரங்கள், பிரகிருதி சாஸ்திரங்கள், வானசாஸ்திரங்கள், எந்திர சாஸ்திரங்கள், அக்கினி, ஜலம்,வாயு, ஜோதி இவைகளின்சாஸ்திரங்கள் தனிப்பதார்த்தங்கள் சேர்க்கைப் பதார்த்தங்களாகவும்,சேர்க்கைப் பதார்த்தங்கள் தனிப்பதார்த்தங்களாகவுமாகும் முறைகள்விளக்கும்ரசாயனசாஸ்திரங்கள்,ஸஸ்யசாஸ்திரங்கள், வைத்தியசாஸ்திரங்கள், சரீரசாஸ்திரங்கள், ஜட சாஸ்திரங்கள், தத்வசாஸ்திரங்கள், தர்மசாஸ்திரங்கள் நாளுக்குநாள் விஷயம் வெளிப்படும்போல் சாகோபசாகையாய் விரிந்து வியாபகமாகவேண்டும். மேற்கண்ட சாஸ்திரங்களெல்லாம் ஆபரணப்பெருக்கத்தால் எங்ஙனம் அடைகிறது ? ஆபரண ஆசையால் சாஸ்திரங்கள் மலின திசைக்கும் வரும் நிர்ப்பாக்கியத்தை முன்னோரிடத்திற் சொல்லியிருக்கிறேன். சாஸ்திரப்பிரகாசம் நாகரிகச் சின்னமானால் சாஸ்திரமலினம் வருத்தும் ஆபரணம் அநாகரிகமென்றே கூறவேண்டும்.

## ஆத்ம பரிசுத்தி.

எவ்வகைப்பயிற்சியும் எவ்வகை உழைப்பும் மனோசுத்தியும் வாக்குசுத்தியும், கிரியாசுத்தியும் அடைவதற்காகையால் எவ்வகை நிர்ப்பந்தத்திலும் எவ்வகைக்கஷ்டத்திலும் மனோவாக்குக் காயங்களைச் சுத்தமாய் வைத்திருக்கும் திடச்சித்தமும் திடப்பிரவிருத்தியும் நிலைபடவேண்டும். இவ்வாறு நிலைபடுவதுதான் நாகரிகத்தின்கொடுமுடி. கர்மபாசத்தில் அகப்பட்டு வாக்கு மனம் செய்கை இவைகள்வெவ்வேறாகப்போகவிட்டு ஆத்மரக்ஷைதேடாமல் ஆபரணாலங்கிருத முதலிய அற்பசுகங்களை நாடி வாணாள் கழிப்பதைப்பார்க்கிலும் ஆத்மரக்ஷை தேடுவது பூஜிதமென்பதற்குச் சந்தேகமில்லை. பதவி வித்தியாசத்தால் கர்மவித்தியாசம் புலப்படுவதாதலால் தீர்க்ககாலத்தில் துன்பம் விளைக்கக்கூடிய காரியங்களையும் அதர்மங்களையும் ஆபரணாலங்கிருதமுதலிய அற்பமோகநிமித்தம் செய்வது கூடாது. வரப்போகிற காலத்தினளவை உத்தேசித்து ஒரு ஜீவகாலம் ஒரு விநாடியாக நினைப்பதற்கு யோக்கியதை யில்லாதபடியால் இந்த அற்பகாலத்தைக்கருதி வருங்காலத்தை உபேக்ஷிப்பது கடுகைக்கருதி பிர்ம்மாண்டத்தை யிழப்பதொக்கும். ஆத்மசுத்தி, ஆத்மரக்ஷை இவைகட்கனுசரணையாயுள்ள லௌகீகப்பிரவர்த்திகள்நடக்கவேண்டுமே யல்லாமல் விருத்தமான பிரவிர்த்திகள் நடக்கக்கூடாவாம். ஆத்மரக்ஷைக்கு வேண்டிய ஏற்பாடுகளும் பிரவர்த்திகளும் நாகரிகக்கொடுமுடியானால் அது எந்த ஆபரணப்பிரயோகத்தால் வாய்க்கும் ?

## சரீரசுகம்.

பசியால் வருந்துவதற்கும் நாகரிகத்திற்கும் சம்பந்தமில்லை. ஆபரணம் நாகரிகமென்றும் மகாசித்தாந்தத்தை அநுசரித்து நாகரிகங்கொண்டாடும் நாம் முதலெல்லாம் ஆபரணத்திலிட்டு பசியால் கஷ்டப்படுவோமாகில் நம்மை யாராவது நாகரிகமாய் பட்டினி கிடக்கிறதாகச்சொல்லுவார்களா ? மேற்கண்ட சித்தாந்தப்படி நாகரிகமாய் க்ஷுத்பாதை யடைவதைப் பார்க்கிலும் அநாகரிகமாய் பசியாற வுண்பதல்லவோ சுகம். உள்ளமுதலெல்லாம் ஆபரணத்திலிட்டு சயங்கிருதானர்க்கம் வருத்திக்கொண் [illegible]



எவ்வளவுபாடுபடத் தயாராகவிருந்தாலும் வழியில்லாமல் கஷ்டப்படுபவர்களை அநாகரிகமென்றுசொல்லத்தகாது. நாகரிகமாக ஆபரணத்தில் முதலிட்டு வரும் நாம் யாதொரு கஷ்டப்படாமல் மூன்று வேளையும் சாப்பிட்டு சுகமடையக் கூடியவழிகளிருக்க அவ்வழிகளில் முதலிட்டு சுகமடையாமல் அரைப்பட்டினி முக்கால் பட்டினியாக காலத்தைத் தள்ளுவோமானால் அதையெப்படி நாகரிகமென்று சொல்லுகிறது.

நாகரிகம் மூன்றுவேளை பசியாற்றுவது மல்லாமல் சுகபோசன மடைவதாம். நாகரிகமற்ற காட்டுஜனங்களைப்போல் வெந்ததும் வேகாததுமாய் ஓரிரண்டு ரசத்தோடு சாப்பிடுவதைப் பார்க்கிலும் ஷட்ரசங்களோடு வாசனைத்திரவியங்கள் கலந்ததாக விதத்திற்கு விதஞ்செய்து சாப்பிடுவதே நாகரிகமாம். இம்மலையாளத்தில் உணவுபதார்த்தங்கள் எவ்வளவோ சுருக்கமாகவும் அவைகளைச் செய்யும்விதமும் எவ்வளவோ தாழ்ந்தபடியாகவு மிருக்கிறது. இவ்விடத்தில் லக்ஷணமாகச் செய்யவேண்டுமானால் தோசை, சேவை, முறுக்கு, தேங்குழல், சீடை, வடை, இவைகள் செய்யத்தெரியுமே யல்லாமல் விசேஷமாக வொன்றுந்தெரியாது. அடுத்தாற்போல் மதுரை, திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் பக்ஷணங்கள் எவ்வளவோவகை செய்கிறார்கள். இந்தமலையாளத்தை யுத்தேசித்து மேற்படி ஜில்லாக்கள் வெகு நாகரிகமென்றே சொல்லவேண்டும். ஷட்ரசங்களிலும் புதிதுபுதிதாகவும், மனோகரமாகவும், எவ்வளவுக்கெவ்வளவு விதம்விதமாய்ச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாகரிகமதிகம். தற்காலத்தில் ஆபரணாசையால் போசனசுகம் கெட்டிருப்பதைப் பற்றியும் பக்குவமுறை கெட்டிருப்பதைப்பற்றியும் முன்னமே வர்ணித்திருக்கிறோம். தற்காலத்தில் பக்ஷணவகைகள் புதிதாகச் செய்கிறோமென்ற பெருமை சிலஜில்லாக்களில் ஜனங்களடைகிறார்கள். இது நூறுவருஷத்திற்கு முன் மகமதிய அரசாட்சியின் நிர்ப்பந்தத்திற்குட்பட்டு கொள்ளைக்காரருடைய பயத்தின்மேல் சமைத்துவைத்த அடிசிலை சாப்பிடலாமென்ற நிச்சயங்கூட இல்லாமல் அடிவயிற்றில் நெருப்பைக்கட்டிக்கொண்டு கள்ளர் பயத்திற்காக சமைத்த ஆகாரத்தைப் பானையோடு பூமியிற்றோண்டிப் புதைத்து பந்தோபஸ்துசெய்துவந்த காலத்தை யுத்தேசித்து நாகரிகமென்று சொல்லலாம். ஆனால் தற்காலத்தில் புதிதாகச்செய்துவரும் பக்ஷணங்களெல்லாம் வெகுகாலத்திற்குமுன் ஏற்பட்ட நளபாகம்,வீமபாகம், என்ற பக்குவசாஸ்திரங்களில் உட்பட்டிருக்கின்றன. அச்சாஸ்திரங்களிலுள்ள முறைகள் பூரணமாய் இன்னுமனுஷ்டானத்திற்கு வரவில்லை. அவைகளைக்கடந்து இதுவரை புதிதாகவொன்றும் கண்டுபிடிக்கவுமில்லை. அம்முறைகளப்படி நடக்கவேண்டுமானால் திரவியபுஷ்டிவேண்டும். கால்படியரிசிக்குத்தகுந்த கேசரிபாத் செய்யவேண்டுமானால் குறைந்தது ஐந்துரூபாய் செல்லும். அப்படியிருக்க நளபாகம், வீமபாகம், என்னும் சாஸ்திரங்களேற்பட்ட நம்முன்னோர்கள் காலத்தை யுத்தேசித்து தற்காலம் அநாகரிகமென்றே சொல்லவேண்டும்.

நாகரிகம் சுகபோசனமருந்துவதுமன்றி சுகந்தாதிகள் அநுபவிப்பதும்சரீரசுகமாகையால் அதுவும் ஒருவகை நாகரிகந்தான். வராகஸம்மிதையில் புஷ்பஸ்நானம் வாசனைதிரவியம் இவைகளைப்பற்றிய அத்தியாயங்களை பார்த்தோமானால் நம்முடைய முன்னோர்கள் சுகந்தாதிமூலமாய் எவ்வளவு சுகமடைந்திருக்கிறார்களென்று விளங்கும். தற்காலத்தில் ஆபரணப்பெருமையிருந்தாலும் புதிதாக ஒரு முறையாவது கண்டுபிடித்ததாக எவனாவது விரல் மடக்குவானா? மதுரை முதலிய சில ஜில்லாக்களில் புஷ்பம் லேபனம் முதலிய சுகந்தாதியனுபவங்கள் ஜனங்களடைவது வாஸ்தவமே. ஆனால் பசிப்பிணிக்குட்பட்டு சுகபோஜனமில்லாமல் நாக்குச்செத்து சுகந்தாதிகளனுபவிப்பது நாகரிகமன்று.

நல்ல ஆடையுடுத்தல் சரீரசுகமாகையால் நல்ல ஆடைநெய்யக் கூடிய நெசவுதொழில்கள் பலமாய் ஏற்பட்டாலல்லாமல் நாகரிகமென்று சொல்லுவதற்கிடமில்லை. ஐம்பதுவருஷத்திற்கு முந்தி ஜனங்களுடுத்திவந்த வஸ்திரங்களைப் பார்க்கிலும் இப்போது ஜனங்களுடுத்திவரும் வஸ்திரங்கள் நாகரிகந்தான். ஆனால் முன்னோர்கள் செய்துவைத்த கருவிகளைக் கொண்டு தற்காலத்தில் யாதொன்றும் புதிதாகக் கண்டுபிடிக்காமல் அங்கிலேயர் முதலிய அன்னியதேசத்தார் புதிதாகக்கண்டு பிடித்த எந்திரங்கள் மூலம் நூற்றுவரும் சுகமான நூல்களை விலைக்கு வாங்கி வஸ்திரங்கள் நெய்கிறோமேயல்லாமல் நாமாகச் செய்வதொன்றில்லை. ஆபரணத்தில் முதலிட்டு நாகரீகங் கொண்டாடும் நாம் அன்னியதேசக்காரரால் நம்முடைய நெசவுத்தொழில் கீழ் மாண்டு போகும்படிவந்திருக்கும் நிர்ப்பந்தத்திற்குப்பரிகாரமாகவென்ன ஏற்பாடு செய்திருக்கிறோம்.

சுத்த ஆடை சரீர சுகமாகையால் அது நம்முடைய நெசவுக்காரன் மூலங் கிடைத்தாலென்ன அன்னிய இராச்சியத்தார் மூலங் கிடைத்தாலென்னவென்று கேட்கக்கூடும். இது இந்ததேசம் உத்தேசித்து

கேட்கக்கூடிய சரியான கேள்வியல்ல. வஸ்திரங்களுக்கு வேண்டிய பருத்தி முதலிய சரக்குகள் உற்பத்தியாகாததும் அப்படியுற்பத்தியாகப்பட்ட தேசங்களிலிருந்து விலைக்குவாங்கி நெசவுத்தொழில் நடத்துவதால் நஷ்டம் வரத்தக்கதுமான சீமைகளில் அன்னிய தேசங்களிலிருந்து வஸ்திரங்கள் வருத்துவது அநாகரிகமன்று. ஆனால் நம்முடைய தேசத்தார்களுக்கு வேண்டிய முக்கியமான சரக்குகள் நம்முடைய தேசத்திலுற்பத்தியாக அவையெல்லாம் அன்னிய தேசத்திற்கனுப்பி அவர்களால் நெய்துவந்த வஸ்திரங்களைக் கிரகிப்பதாயிருந்தால் ஷட்ரசங்களோடு எல்லாவிதத்திலும் சுகபோஜன மடையக்கூடிய பதார்த்தங்கள் புஷ்டியாக வரும்படியிருந்தும் அவ்வாறுசெய்து சாப்பிட சக்தியன்றி அன்னியதேசங்களுக்குப் பதார்த்தங்களை யனுப்பி பக்ஷணங்களாகச்செய்துவருத்தி சாப்பிடுவதற்கு சமமாகும். நம்முடைய தேசத்திலிருந்து 4000-மைலுக்கப்பாலிருக்கும் அமெரிக்கா கண்டத்திலிருந்தும் பஞ்சு வருத்தி யந்திரங்களால் நூலாகவும் வஸ்திரங்களாகவும் சரக்குச்செய்து நம்முடைய இந்துதேசமுழுமையும் பரப்பி திரவியஞ்சம்பாதிக்கும் அங்கிலேயர் நாகரிகமுள்ளவர்களா? நாம்நாகரிகமுள்ளவர்களா? பூமியின் சுற்றளவு 25000-மைல் இவ்வளவுசுற்றளவுள்ள பூமிமுழுவதும் மாஞ்செஸ்டர்பட்டணத்திலொருநாள்நெசவாகிற வஸ்திரங்கொண்டு மூடிவிடலாமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு விஸ்தாரமாக ஒருநாளில் செய்வது நாகரிகமா? அல்லது மூன்றுநாளைக்கு 18 முழம் நெய்யும் நமதுசுதேசிகளின் முறை நாகரிகமா? பருத்தி விளைவில்லாத அங்கிலேயர் பருத்தி விளைவுள்ள நம்மை நெசவுத்தொழில் முயற்சியிலும் ஜயித்திருப்பதை உத்தேசித்து நாம் அவமானமடைய வேண்டுமேயல்லாமல் நாகரிகமென்று பெருமையடைவதற்கிடமில்லை. அந்த அவமானத்தை நிவர்த்திக்கும் சக்தி நம்மிடத்திலிருக்கும்போது அவ்வாறு நிவர்த்தி தேடிக்கொள்ளாமல் முதலெல்லாம் ஆபரணத்திலிட்டு அவமானத்தி லடங்கியிருப்பது அவமானத்திலும் அவமானம்.

## சங்கீதம்.

தற்காலத்தில் வெகுபேர் சங்கீதம் பழகிவந்தாலும் அதன்சுகம் நமக்கில்லாமற் போய்விட்டது. மனோபாவங்கள் அனுபோகரீதிக்குப் புஷ்டிவரும்படி சமயம் சந்தர்ப்பம் தராதரம் இவைகட்குத் தகுந்த மாதிரியாய் வீண் ஆகோஷமும் கோணங்கித்தனமும் இல்லாமல் சாஸ்திரங்களில் இலக்ஷணங் கூறியவண்ணம் முற்காலத்தில் பாடிவந்தார்கள். அதில் சுகம் இருந்தது. தற்காலத்தில் வேகடை சுபாவம் அதிகரித்திருப்பதற்கொப்பாய் சங்கீதமும் வேகடைப்பட்டுப்போய்விட்டது. மலையாளத்தில் இராமாயணத்திற்குப் புதுமெட்டு அமைத்திருப்பதில் அநேகம் ஜாவளிமெட்டிலும் இந்துஸ்தானி டப்பாமெட்டிலும் இன்னும் வேகடையாயுள்ள பலவகை நாடோடிமெட்டுகளிலும் பாணி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஜாவளியென்பது விடன் சுபாவத்தைக் குறிக்கவந்த மெட்டு. தர்மபாசத்தால் கட்டுண்டு மாதா, பிதா வாக்குப் பரிபாலனம் பண்ணும் பொருட்டு அரசுதுறந்து சுகந்துறந்து நாடுதுறந்து மரவுரி கிருஷ்ணாஜினம் உடுத்தி தவவேடத்துடன் காட்டில் 14 வருஷம் காலந்தள்ளி அரக்கரால் துன்பத்துட்பட்டு யுத்தம்புரிந்து முடிவில் வெற்றியடைந்து மகா புருஷத்துவமாக வாணாள்செலுத்திய இராமகதைக்கும் ஜாவளிக்கும் சம்மந்தமிருக்காது. விநயம், துக்கம், பரிதாபம், வியாகுலம், யுத்தக்குழப்பம், அதின்பினுள்ள சந்தோஷம், வைராக்கியம் பக்தி சிரத்தை இவைகட்குத் தகுந்த மெட்டுக்கள்தான் இணக்கமாயிருக்கக்கூடியவை. அப்படியிருக்க இந்துக்கள் சுபாவமேயல்லாமல் மகமதிய மெட்டுக்களால் இந்துக்கள் உணர்வை எங்ஙனம் விளக்குகிறது. ஒருவேளை இது சாத்தியமென்று வந்தாலும் ராகமெட்டு சமயோசிதமாயிருக்க வேண்டும். இலக்ஷ்மணர் யுத்தத்தில் மூர்ச்சைபோட்டு விழுந்தவுடன் ஸ்ரீ ராமருக்கு விசனமுண்டாகி இலக்ஷ்மணரை மார்பில்சாத்தி புலம்பும்போது 'முத்துபாராச்குலிக்கு' என்றும் சக்கிலிச்சிப்பாட்டின் மெட்டிலிடுவது சமய உசிதமா? அப்படியிருந்தும் அம்மெட்டிற்குன் புதுமெட்டமைந்திருக்கிறது. ரவையுதிர்த்துக் கொட்ட வேண்டுமென்ற தப்பிதமான சித்தாந்தத்தின்மேல் ரம்பங்கொண்டு அறுத்துப் பொடியுதிர்த்தாற்போல் சரசரவென்று சத்தம் எழும்பி சன்னமான தொண்டையிலிருந்ததை திடீரென்று மலைபோல தடித்த தொண்டையிலாக்கிக் கீச்சென்றிருந்து திடீரென்று மடத்தவளை கூப்பிட்டாற்போல் விரிந்த தொண்டையில் ஆழச்செய்து மகா விகாரமாகத் தற்காலத்திற் பாடுகிறார்கள். இவ்வாறு பாடுபவர்கள் முக்கியமாய் புது நாகரிகங்கொண்டாடப்பட்டவர்கள்தான். அதாவது வைரக்கடுக்கன் காதிலிட்டு, மோதிரங்களணிந்து தங்க அரைஞாண்மாட்டி, கமான்குடுமிவைத்துக்கொண்டு சிமிட்டாப்பிடிங்கினெற்றி சகிதம் அருகுமீசை வைத்துக்கொண்டுமூலத்தார்பாய்ச்சி வேஷ்டியுடுத்தி சந்தனப்பொட்டின்மேல் குங்குமப்பொட்டும் அதற்குக்கீழே



விபூதி சாந்துப்பொட்டுமாகத் திரியும் வாலிபர்கள்தான். முதலாவது ஆபரணப்பெருக்கத்தால் சங்கீதசுகம் கிடைக்குமா? இரண்டாவது நகை நாகரிகங்கொண்டாடும் புதுமாதிரி சங்கீதவித்வான்கள் சங்கீதசுகத்தைக் கெடுத்துவிடுகிறதைப் பார்க்கும்போது ஆபரணப்பெருமையின் குணம் சங்கீதம் அவலக்ஷணப்படுதல் என்றாகிறதே. சரீரப்பிரயாசமன்றி பிரயாணஞ்செய்வதூ தூரதிசை சங்கதி அறிவது இவைகளும் ஒருவித சரீரசுகந்தான். எவ்வளவு நகையணிந்தாலும், ரையில், புகைக்கப்பல், தந்தி இவைகள் கிடைக்குமா?

(இன்னும்வரும்.)

எஸ். இராமஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

## நந்தவனநஷ்டம்

அல்லது

## மோட்சஈனம்.

(120)-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆகவே, அவர்கள் ஆசனத்திலிருந்து உணவுகளை புசிக்கத்துடங்கினார்கள். வைதிகர்கள் சாதாரணமாக வியாக்கியானிப்பதுபோல் அத்தூதன் போலியாகவாவது மூடுபனியில் மறைந்தாவது உண்டவனல்லன்; நிஜமான பசியால் ஆவலுடன் துரிதமாக மென்று தின்று உஷ்ணத்தால் சீரணித்து விபாகிக்கவே, மானுடதேகத்தில் விபாகிக்கக்கூடாமல் தங்குபதார்த்தங்கள் திராபக ரூபங்களில் எளிதாகச்செல்லும்; இது ஆச்சரியமன்று. இரச வித்தியாப்பியாசி சருகிறமான கரியிலெழும்பும் தீயால் மிக்க கல்மாஷம் பொருந்திய லோகங்களை, சுரங்கத்திலகப்படும் சுத்தமான தங்கமாகத்திருத்த வல்லவனன்றோ? அப்படித் திருத்தக்கூடியது சாத்தியமென்று எண்ணியவனன்றோ? அதுநிற்க அப்போது ஈவியானவள் நிர்மாணமாக உணவு அமைத்து இன்பமான பானங்களை கிண்ணங்கள் நிரம்பிநிற்க ஊற்றிக் கொடுத்தாள். பேரின்பந்தரும் நந்தவனத்துக்குத் தகுந்த சாத்வீகமே! தேவபுத்திரர்கள் எப்போதாகிலும் மோகத்துக் குட்படுவார்களாயின், அவர்கள் இக்காட்சியால் மோகிக்க நியாயமுண்டு; ஆனால் அவ்விருதயங்களில் காமதோஷமற்ற அன்பு வீற்றிருந்தது; மற்றொருவனால் அபகாரம்பெற்ற காதலன் மனதில் நரகாவஸ்தையை தூண்டும் ஆசங்கையையும் அவர்கள் அறிந்தவர்களல்ல.

இவ்விதமாக அவர்கள் அளவுகடந்து சுமத்தாமல் பசியையும் தாகத்தையும் ஆற்றிக்கொண்டபிறகு ஆதாமின் மனதில் ஓர் எண்ணம் சடிதியாகத் தோன்றியது, இந்த உத்தமமான சந்தியை நிகழவிடாமல், இவ்வுலகத்தின் மேலுள்ள விஷயங்களையும், தன்னுடைய மானுட நிலையைவிட அதிகசிறப்பாகச் சோதிபொருந்திய தேகங்களையும், தெய்வீக தேஜஸும், பராக்கிரமமும் விளங்கிய பரலோகத்தாருடைய நிலையையும், அறிந்துகொள்ளும் எண்ணங்கொண்டு அச்சோதிமண்டல தூதனைநோக்கி சாவ்தானமாக மொழிந்தான்.

“ஈசனுடன் சாலுகாசிப்பவனே! இத்தாழ்ந்த கூரையின்கீழ் வந்தருளவும்,—பரலோகத்து விருந்துகளை இப்போஜனத்துடன் ஒப்பிடலாமோ?—திராபக ரூபிகளுக்குத் தகுந்த ஆகாரமாகாத இப்பூமியின் பலன்களை அங்கீகரித்து, சிறப்பான பரலோக விருந்துகளில் அதிக திருப்தி என்று தோன்றாவண்ணம் இக்கனிகளை பிரியத்துடன் புசித்தருளவும், உன் அன்பை நன்றாக அறிந்துகொண்டேன்.”

இதற்கு சிறகமைந்த அவ்வுத்தமன் பின்வருமாறு மறுமொழிகொடுத்தான்.

“ஓ! ஆதாம்! சர்வவல்லோன் ஒருவன் இருக்கின்றான், அவனிடமிருந்தே எல்லாவஸ்துக்களும் திருத்தமாக சிருஷ்டிக்கப்பட்டு வருகின்றன; சீர்கெடாவிட்டால் அவனிடமே திரும்ப எழும்பிச் செல்லுகின்றன. எல்லாவஸ்துக்களும் ஒரு முதற்பொருளே; அப்பொருள் நாநாவித ரூபங்களையும், படிப்படியான அநேகவித ஜடசத்வங்களையும், ஜீவதசைகளையும் பொருந்தியிருக்கிறது; ஆனால், ஜீவப்பிராணிகள் ஆதிபகவன் சன்னிதானத்தில் இயல்பாக இருப்பினும், அந்தந்த ஜாதியின் சக்திக்குத்தக்கபடி, தேகத்தை ஆத்மரூபமடையச் செய்யும்பொருட்டு முயன்று சாதகத்தால் அவ்வாதிபகவனை நெருங்கினாலும், அவனை அணுக அணுக சீர்மையிலும், பரமார்த்தத்திலும், பரிசுத்தத்திலும் விர்த்தியடையும். ஆகவே, வேரினின்று அதைவிட விலேசான பச்சைத்தாளும், அதிலிருந்து அதைவிட விலேசான இலையும், கடைசியாகதிர்ந்தபிரகாசமானபுஷ்பமும் உண்டாகி, அப்புஷ்பத்திலிருந்து வாசனைத் திராபகம் வீசும். புஷ்பங்களும் அவைகளினின்று விளையும் கனியும்

மானுடனுக்குப் புஷ்டிதரும் உணவாகி, கிரமமாக சுத்தியடைந்து சரயூக ஜீவதசைக் காதாரமான சாரமாகி உயிரையும், பஞ்சேந்திரிய உணர்ச்சியையும், கல்பனு சக்தியையும், அறிவையும் விளைவிக்கும். இவ்விதமாக உண்டான யூகம் ஆத்மாவுடன் புணர்ந்து அதற்கு முக்கிய ஆதாரமாகிறது. அவ் யூகமானது ப்ரமாணத்தைப் பொறுத்தும் இயற்கைஞானத்தைப் பொறுத்தும் உள்ளது; அவ்விரண்டும் ஒரேரீதியானவையாகி தரத்தில்மட்டும் வித்தியாசப்பட்டவை; ப்ரமாணம் முக்கியமாக உன்னுடையது; இயற்கையுணர்வு முக்கியமாக நம்முடையது; ஆகவேகடவுள் உன்னுடைய இதத்துக்காக படைத்ததை நான் வெறுக்காமல் உன்னைப்போலவே வசனிப்பது விநோதமன்று, மானுடர் அசரீரிகளுடன் உண்டு அவர்களுடைய ஆகாரம் அதியிலேசானதாகத் தோன்றுமல் ஒத்துவருங்காலம் ஒன்று வரக்கூடும்; ஒரு வேளை காலாவர்த்தியில் திறங்கொண்டு இச்சடவாகாரங்களாலேயே உங்களுடைய தேகங்களெல்லாம் திராபக ரூபமாகமாறி நம்மைப்போல் சூக்கும ரூபமாக எழும்பி இஷ்டப்படி இவ்விடத்திலாவது பரலோக நந்தவனங்களிலாவது வசிக்கலாம். நீங்கள் உங்களுடைய பிதாவுக்குக் கீழ்ப்படிந்து உங்களுடைய பக்தியை மாறுபாடின்றி சம்பூரணமாக காப்பாற்றிக்கொள்ளுவீர்களானால்தான் இது சாத்தியம். தத்காலத்தில், இவ்வானந்த நிலையில் விளையாடக்கூடிய ஆனந்தத்தையெல்லாம் பூர்த்தியாக அனுபவித்து இன்பமடையுங்கள்."

இதற்கு மானுடகுலபதி பின்வருமாறு மறுமொழி கொடுத்தான்.

" தயாளமான அசரீரியே! அன்புள்ள விருந்தனே! நம்முடைய அறிவை நாம் செலுத்தவேண்டிய வழியைக் கற்பித்து, மையத்திலிருந்து மண்டல வெல்லையிலும் படிப்படியாக வுயர சிருஷ்டிக்கப் பட்ட பொருள்கள் நியமிக்கப் பட்டிருப்பதையும் காண்பித்தாய்; ஆகவே அப்பொருள்களின் மூலியமாகவேபடிபடியாக ஏறிநாம் ஈசனைச்சேரலாம் என்றதும் மிகச்சிறப்பாக இருக்கிறது. ஆனால் நாம் கீழ்ப்படிந்திருக்கவேண்டுமென்று எச்சரித்ததென்ன? நாம் அவனைக் கீழ்ப்படியாமல் இருக்கக்கூடுமோ? ஈசுவரபக்தியை விடுவது சாத்தியமோ? அவன் நம்மைமண்ணாற்பண்டத்து மானுட இச்சை தேடிபற்றக் கூடிய இன்பங்களை யெல்லாம் சம்பூரணமாகக் கொடுத்து நம்மை இவ்விடத்தில் வைத்திருக்கிறானே."

**அத்தூதன்:—** விண்ணுலகு மண்ணுலகு இவ்விரண்டின் அம்சத்தாலும் ஜனித்த புத்திரனே! கவனி. உன்னுடைய ஆனந்தநிலை கடவுளைப்பொறுத்தது; அப்படியே நிலைத்திருப்பது உன்னையேபொறுத்தது; அதாவது உன்னுடைய கீழ்மையைப் பொறுத்தது; அதுதான் உனக்கு உறுதியைக் கொடுக்கவல்லது. இதுவே என் எச்சரிப்பு, இதை சிந்தித்து ஜாக்கிரதையாக இரு. ஈசன் உன்னை உத்தமனாகச் சிருஷ்டித்திருப்பினும் நிர்விகாரியாகச் சிருஷ்டிக்கவில்லை; உன்னை சுகுணனாகப் படைத்திருந்தாலும் அப்படியே நிலைத்திருப்பதும் இராததும் உன் சுயேச்சை. உன்னுடைய இச்சை நீக்கக் கூடாத விதிக்காவது, நிற்பந்தமான கட்டாயத்திற்காவது உட்படிராமல் சுபாவப்படி தடையற்றிருக்கிறது. ஈசனுக்கு வேண்டியது நம்முடைய சுயேச்சையான சேவை. நிர்ப்பந்தத்தால் செய்யப்படும் சேவையல்ல. இப்படிப்பட்ட சேவை அவனுக்குப் பிரியப்படாது; பிரியப்படத்தகுந்ததும் அன்று. நம்முடைய இருதயங்கள் சுவாதந்திரியம் இல்லாமல், விதிப்படியே இச்சிக்கவேண்டியவைகளானல், நம்முடைய சேவை மனஸ் பூர்வகமானதோ அன்றோ என்று சோதிக்கக் கூடாதல்லவா? சிம்ஹாசனம் வீற்றிருக்கும் ஈசனுடைய சன்னிதானத்தில் நிற்கப்பட்ட நானும் மற்ற தேவதூதர்கள் எல்லோரும், உன்னைப் போலவே அவனைக் கீழ்ப்படிந்திருக்கும் அளவுதான் நம்முடைய ஆனந்த நிலைமையைப் பற்றியிருப்போம். வேறு பிணை இல்லை, ஈசனை நேசிப்பதும் நேசியாததும் நம்மிஷ்டத்தையும் பொறுத்திருப்பதால், நாம் சுயமாக நேசிக்கிறோம்; ஆகவே சுயமாக சேவிக்கிறோம். நம்முடைய நிலையும் நிலை குலைதலும் இதைப் பொறுத்தது தான். சிலர் அபராதத்துக்கு இணங்கி பரலோகத்திலிருந்து ஆழ்ந்த நரகத்தில்வீழ்ந்திருக்கிறார்கள். அந்தோ! எப்படிப்பட்ட உன்னதமான பிரமானந்த பதவியிலிருந்து எப்படிப்பட்ட துன்பத்தில் விழுந்திருக்கிறார்கள்."

இதற்கு நம்முடைய உத்தம பூர்வஜன்.— தெய்வீகபோதகனே! உன்னுடைய வார்த்தைகளை கவனித்துக் கேட்டேன்; இரவில் சமீபமான குன்றுகளில் கெருபியர்களால் பாடப்பட்டு ஆகாயமார்க்கமாக வரும் கானங்களைவிட அதிக சந்தோஷப்பட்டுக் கேட்டேன். நம்முடைய இச்சையும் வி[illegible]யும் தன் மூப்பானவைகளென்று நான் அறியாதவனல்லன்; ஆயினும் நம்முடைய கர்த்தாவை நேசிக்கவும் நியாயமாகவே இருக்கும். அவனுடைய ஒற்றைக் கட்டளைக் கிணங்கவும் நாம் ஒருநாளும் மறக்கமாட்டோம் என்று என்னுடைய நிலையான எண்ணம் உறுதியாகச் சொல்லிற்று; இப்பவும் சொல்லுகிறது; ஆனால், தேவலோகத்தில் நடந்ததாகச் சொன்ன சங்கதி சிறிது சமுகத்தையும், ஆயினும் அவைகளை சவிஸ்தாரமாக உரைக்கக் கேட்கவேண்டும் என்கிற மிகுந்த ஆசையையும் தூண்டியிருக்கிறது; அச்சங்கதிகள் மௌன பக்தியுடன் கேட்கத்தக்கவைகளாகவும், விநோதமானவைகளாகவும் இருக்கவேண்டுமாகையால் உனக்கு இஷ்டமிருந்தால் அவைகளைவிஸ்தரித்துரைப்பாயாக. பகல் இன்னும் நெடுநேரமிருக்கிறது; இப்போதுதான் சூரியன் விஸ்தாரமான விண்மண்டலத்தில் முற்பாதிவழி சென்று பிற்பாதியில் புகுந்திருக்கிறான்."

(இன்னும் வரும்)

டி. சுந்தர ராவ், பி. ஏ.



## * அலூமினியம் என்னும் உலோகம்.

அலூமினியம் என்பது தங்கம், வெள்ளி, ஈயம், இரும்பு முதலிய உலோகங்களைப் போன்ற ஒரு தாதுப்பொருள். இந்த உலோகத்தினல் செய்யப்படும் பாண்டங்கள், பித்தளை வெண்கலம் முதலியகலப்பு உலோகங்களாலும் ஈயம் துத்தநாகம் முதலிய உலோகங்களாலும் செய்யப்பட்டு சாமானியமாய் நமதுதேசத்தார் உபயோகப் படுத்திவரும் பாத்திரங்களைக் காட்டிலும், அதிக சுசிகரமும், சுத்தமும், தேக ஆரோக்கியமு முண்டாக்கக் கூடிய குணங்களுள்ளவை யானதால் இந்த உலோகத்தைக்குறித்து ஒருவாறு இவ்விடத்தில் எழுதப்படுகிறது.

இந்த உலோகம் தங்கம், வெள்ளி, பாதரசம், தாமிரம் அல்லது செம்பு முதலியவைபோல இயற்கையிலேயே சுத்தமான ஸ்திதியில் கிடைக்கக்கூடியதல்ல. ஆனால் இது [1] பிராணவாயுவினும், சில [2] காரச்சரக்குகளுடனும், புளிப்புச்சரக்குகளுடனும் [3] கலந்து பாறைகளிலும், மண்ணிலும்விசேஷமாய் அகப்படுகிறது. கருங்கல், வெண்கல், [4] அப்பிரகம் முதலியவைகளிலும் இந்த உலோகம் அதிகமாய்க்கலந்திருக்கிறது. நாம் ஆபரணங்களாக உபயோகப்படுத்தும் கெம்பு, நீலம், செம்மணி, இந்திரநீலக்கல், புஷ்பராகம் முதலிய இரத்தினவகைகளும் இந்த உலோகம் பிராணவாயுவுடன் கலந்து பளிங்குருவமடைவதால் உண்டாகின்றன. கந்தகாமிலீயமான இந்த உலோகமே [5] படிக்காரமென்று சொல்லப்படுகிறது. களிமண்ணில் [6] அலூமினியம் உலோகமும், [7] ஸிலகான் என்னும் தாதுப்பொருளும் பிராணவாயுவும் கலந்துள்ளன.

இந்த உலோகத்தின் நிறம் வெள்ளியைப் போன்ற சுத்த வெண்மையானது. ஆயினும் இதன்நிறம் அதைக்காய்ச்சி உருக்கும் சூட்டிற்கு அனுகுணமாயிருக்கும்.

இந்த உலோகத்தை உருக்கி குளிர்ந்த அச்சுகளிலாவது, அல்லது ஈரமணலினாலாக்கப்பட்ட அச்சுகளிலாவது வார்த்து சீக்கிரத்தில் ஆற்றினால் அதற்குப் பிரகாசமான வெண்ணிறமுண்டாகும். ஆனால் வெகுசூட்டுடனாவது அல்லது உலர்ந்த மண்ணச்சுகளிலாவதுவார்க்கப்பட்டால் அதன்நிறம் ஈயத்தைப்போன்ற சாம்பல்வர்ணமாகவும், துத்தநாகத்தைப்போன்றவெண்மை கலந்த நீலவர்ணமாகவுமிருக்கும்.

இந்த உலோகத்தினல் செய்யப்படும் பலவித தட்டுமுட்டு சாமான்களும், கிரக்கிருத்திய காரியங்களுக்கு உபயோகமாகும் பாத்திரவகைகளும், சாதாரணமாய் நமது தேசத்தில் வழங்கிவரும் பித்தளை, செம்பு, வெண்கலம், ஈயம், தகரம், துத்தநாகம் முதலிய உலோகங்களால் ஆக்கப்படும் சாமான்களையும் பாத்திரங்களையுங்காட்டிலும் பல விஷயங்களில் மேன்மைப்பட்டுள்ளனவாக அனுபவத்தால் தெரியவருகிறபடியால் அவைகளை ஒருவாறு இவ்விடத்தில் எழுதுகிறோம்.

* Notes on Aluminium & its Alloys. British Aluminium Co., Ld., Sole Agents in India & Best & Co, Madras.

1 Oxygen. 2 Alkalies. 3 Acids.

4 Mica-5 Alum=Aluminium Sulphate. 6 Clay=Aluminium silicate+Aluminium+Silicon+Oxygen.

7 Silicon; இந்த தாதுப்பொருள் பிராணவாயுவுடன் கலந்து உண்டாயிருப்பது: சமுத்திரமணல், சக்கிமுக்கிக்கல், மணற்கல் முதலியன.

சுத்தமான அலூமினியத்தினால் செய்த பாத்திரங்களில் பித்தளை, தாமிரம் முதலியவற்றால் செய்தபாண்டங்களில் களிம்பேறுவதுபோலும் நாற்றமுண்டாவதுபோலும் ஒருவிதக் கெடுதலும் உண்டாவதில்லை. சுத்தமில்லாமல் 'ஸிலிகான்'முதலிய தாதுப்பொருள்களுடன் கலக்கவிட்டு உருக்கினால், அது தண்ணீருடனும் புளிப்பு வஸ்துக்களுடனும் சம்பந்தப்படும்போது இரும்புத் துருவையொத்த நாற்றமுண்டாகும். ஆனால் சுத்த அலூமினியத்திற்கு நாற்றமில்லை. இந்த விசேஷ குணத்தால் இந்த உலோகத்தாலாக்கப்படும் பாத்திரங்களுக்கு ஈயம் பூசவேண்டிய நிமித்தமில்லை; இவைகளில் சமைக்கப்படும் போஜனவகைகள் தேகத்திற்கு ஆரோக்கியத்தை யுண்டாக்கும். தாமிரப்பாத்திரத்தில் ஜலத்தைக் காய்ச்சிச் சாப்பிடுவதால் உடனே வாந்தியுண்டாவதைப்பலகாலும அனுபவத்தால் கண்டிருக்கிறோம். தண்ணீர் காயும்பொழுது அந்த சூட்டில் தாமிரமும் மிகவும் கொஞ்சவளவு உருகித் தண்ணீரில் கலப்பதால் உண்டாகும் ஒருவிதமான பாஷாணமே வாந்தியை யுண்டாக்குகிறது. சுத்த அலூமினியப் பாத்திரங்களில் திரவ வஸ்துக்களை எவ்வளவு சூடேற்றிக் காய்ச்சினாலும் அது கொஞ்சமேனும் உருகாது. வெள்ளிப் பாத்திரங்களை வெளியே வைத்திருப்பதால் ஆகாயத்தில் பரிணமித்துக்கிடக்கும்[8] கந்தகம் கலந்த ஜலவாயு அவைகளின்பேரில் படும்போது ஒருவிதகருப்புக்களிம்பேறி அவைகள் பார்வைக்கு அவலட்சணமாகின்றன. ஆனாலோ அலூமினியப்பாண்டங்களில் அந்தவாயு லவலேசமும் பற்றுகிறதில்லை; எப்போதும் சுத்த நிறமாயிருக்கும்.

அலூமினியமானது அதே பரிமாணமுள்ள தங்கத்தின் எடையில்சற்றேறக்குறைய $7\frac{1}{4}$-க்கு ஒன்றும், ஈயத்தின் எடையில் $4\frac{1}{4}$-க்கு ஒன்றும், வெள்ளியின் கனத்தில் 4- க்கு ஒன்றும், செம்பின் எடையில் $3\frac{1}{4}$-க்கு ஒன்றும், பித்தளையின் கனத்தில் $3\frac{1}{8}$-க்கு ஒன்றும், துத்தநாகத்தின் கனத்தில் $2\frac{3}{4}$-க்கு ஒன்றுமாக உள்ளது. ஆகவே இந்த உலோகமானது நாம் பாத்திரங்களாக உபயோகப்படுத்தும் எல்லா உலோகங்களைக் காட்டிலும் கனக்குறைவானது. இதனால் வழிப்பிரயாணங்களுக்காகக் கொண்டுபோகவேண்டிய பாத்திரச்சாமான்களை இந்த உலோகத்தினால் செய்துகொள்வதால் அதிக கனமின்றி சுலபமாய் அவைகளைக் கையாடுவதற்கு அநுகூலமாயிருக்கும்.

வெள்ளி, செம்பு, தங்கம் இம்மூன்று உலோகங்களுக்கும் அடுத்தபடியாய் மற்ற உலோகங்களைக்காட்டிலும் அலூமினியத்தில் நெருப்புச்சூடு சீக்கிரத்தில் பிடிக்கும். ஆதலால் அலூமினியப் பாத்திரங்களில் சமையல் செய்வதில் மற்ற வெண்கல முதலியபாத்திரங்களில் செய்வதைக்காட்டிலும் விறகு குறைவாகவே செலவாகும். கீழே விழுந்தமாத்திரத்தில் உடையக்கூடிய வெண்கலப் பாத்திரங்களைப்போலல்லாமல் அலூமினியப் பாத்திரங்கள் கீழேவிழுந்தாலும் உடைந்து நஷ்டமாகா. அவைகளைத் துலக்குவதும் சுலபமானது.

காய்ச்சிப்பதப்படுத்திய அலூமினியமானது அதிக மெதுவடைகிறபடியால் அதை அதிக மெல்லிய வெள்ளிரேக்குகளைப்போலவும் கம்பிகளைப்போலவும் அடிக்கவும் நீட்டவும்கூடும். அலூமினிய ரேக்குகள் வெள்ளி ரேக்குகளைக் காட்டிலும் விலை சரசத்திலும் களிம்போராத் தன்மையிலும் சிறந்ததாதலால் அலங்காரச் சித்திரிப்பு வேலைகளில் மிகவும் பிரயோசனப்படுகின்றன. இந்தரேக்குகள் பொடி செய்யப்பட்டு ஒருவிதவெள்ளிப்பூச்சுவர்ணமும் செய்ய உபயோகப்படுகின்றன.

அலூமினியத்தால் செய்யப்படும் பாத்திரங்களின் விலை அதேமாதிரியான பித்தளைப்பாத்திரங்களைக் காட்டிலும் இரண்டுமடங்கு அதிகமும், வெண்கலப் பாத்திரங்களைக் காட்டிலும் கால்பங்கு அதிகமும், வெள்ளிப் பாத்திரங்களைக் காட்டிலும் 30 பங்கு குறைவும் உள்ளதாகச் சொல்லப் படுகிறது. சாமானியமாய் பித்தளை-தாமிரமுதலியவற்றால் செய்யப்படும் பாத்திரங்களைக்காட்டிலும் அலூமினியப் பாத்திரங்களின் விலை அதிகமாகவிருந்தாலும் அதற்கேற்ற அநுகூலங்களு மிருக்கின்றன. வென்று இவ்வுலோகத்தால் செய்த பாத்திரங்களை இங்கு வழக்கத்துக்குக் கொண்டுவர முயற்சித்து வரும் மிஸ்டர் சாட்டர்டன்துரை கொல்கிறார்.

செம்புடன் ஈயம், துத்தநாகம் முதலிய உலோகங்களைக் கலப்பதால் பித்தளை, வெண்கலம் முதலிய வேறு கலப்புலோகங்கள் செய்யப்படுவதுபோல் அலூமினியத்துடன் மற்ற சில உலோகங்களைக் கலந்து கலப்பு உலோகங்கள் செய்வதுண்டு.

நமது சென்னைநகரிலுள்ள சித்திரவித்தியாசாலை(School of Arts)யில்அலூமினியத்தால் அழகிய தவலை, அடுக்குப்பாத்திரம், தட்டம், அருக்கஞ்சட்டி, குடம், சொம்பு, பாணலி, லோட்டாடம்லர், தூக்குச்சட்டி, கோகர்ணம், தூக்குச்சொம்பு, கூஜாமுதலியபலவிதவீட்டுப் பாத்திரங்களும் தயார்செய்யப் படுவதுடன் கூடுமானவரையில் விலைசரசமாகவும்விற்கப்படுகின்றன.

A. V. A.





## கொள்ளை நோயைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள்.

'ப்ளேக்' என்னும் கொள்ளை நோய் இவ்விராஜதானியில், அனந்தப்பூர், பெல்லாரி, சேலம், வட ஆற்காடு இந்த ஜில்லாக்களில் தலை காட்டிவருவதன்றி ஹுப்ளியிலிருந்து பெங்களூருக்கு வந்து அங்கே நன்றாகக் குடியேறி விட்டது. பெங்களூரிலிருந்து சென்னப்பட்டணத்துக்கு ஒரே ராத்திரிப் பயணமாதலால், அது எப்பொழுது சென்னைக்கு வருமோவென்று பயந்து, அது வந்தால் உடனே அதைத் தடுப்பதற்கு வேண்டிய முஸ்தீப்புகளெல்லாம் வெகு மும்முறமாகச் செய்து வருகிறார்கள். கவர்ன்மென்டார் 'ப்ளேக்' கிட்டநெருங்கி விட்டதென்று இம்மகா கொடிய கொள்ளை நோயைத் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இவ்விராஜதானி யெங்கும் குறைவறச் செய்துவரவேண்டு மென்று அதற்காக ஒருவரை "ப்ளேக் கமிஷனராக" நியமித்திருக்கிறார்கள். இந்த வேலைக்குத் தெரிந்தெடுத்து நியமிக்கப் பட்டிருப்பவர் இவ்விராஜதானி போலீஸ் இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரலாக விருந்த மிஸ்டர் எம். ஹாம்மிக் அவர்கள். இச்சென்னை முனிசிபாலடி எல்லைக்குள்பட்ட இடங்களில் சென்னை முனிஸிபல் ப்ரெஸிடெண்டை ப்ளேக் கமிஷனராக நியமித்திருக்கிறார்கள். சென்னை முனிசிபல் ப்ரெஸிடெண்டும் கமிஷனர்களும் ஸானிடெரி கமிஷனர் டாக்டர் கிங் அவர்களும், டிப்டி ஸானிடரி கமிஷனர் டாக்டர் பானர்மான் அவர்களும் கொள்ளைவந்தால் அது பரவாதபடி தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் வெகு மும்முறமாக இருந்துவருகிறார்கள். 'ப்ளேக்' என்னும் கொள்ளை வியாதி மகாகொடியது. அது ஒருவரைப்பற்றினால் அதற்கு மருந்து மாயம் ஒன்றுமில்லை. மூன்று நாள்முதல் 9-நாளில் ஆளைக்கொண்டுபோய் விடும். அது மகா கொடிய தொத்து வியாதியென்றுமட்டும் தெரிந்திருந்திருக்கிறதே யன்றி அந்தக்கொள்ளைநோய் வித்து என்னமாகத் தொத்துகிறது என்று இன்னும் நன்றாகக் கண்டுபிடித்தார்களில்லை. அந்த வியாதி தொத்திப்பரவினால் பரவினதேயன்றி தானாக உண்டாவதில்லையென்பதுமட்டும் நிச்சயம் ஆகையால் அதின்வாயில்விழாமல்தப்பித்துக் கொள்ளவேண்டுமானால் அது கிட்ட அணுகாதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டியதொன்றே முதற்காரியம். எப்படியோ அது நமக்கு மத்தியில் வந்துவிட்டால் என்னசெய்கிறது? கொள்ளைநோய் வந்தவர்கள் பிழைப்பது அரிதாயிருப்பதாலும் அதற்கு மருந்து மாயம் ஒன்றும் கண்டுபிடிக்கப்படாமையாலும் அந்நோய் வந்தவர்களை விலக்கித் தனியாகவைத்து அவர்களுக்கு வேண்டிய உதவி செய்யலாமேயன்றி வேறொன்றும் செய்யக்கூடியதில்லை. ஜனநெருக்கமான இடங்களிலும், நல்ல காற்று சூரியவெளிச்சம் இவையில்லாத இடங்களிலும் வசிப்பவர்களிடத்தில் இக்கொள்ளைநோய் இலகுவாகப் பற்றிக்கொள்கிறது. ஆகையால் ஜனங்கள் ஜனநெருக்கமான இடங்களிலிராமல் நல்ல காற்றோட்டமான மைதானங்களில் வசிப்பது நலம். இக்கொடியநோய் வந்தால் அதைத்தடுக்க இரண்டு முக்கிய உபாயங்கள் உண்டு.

பிரத்தியேக நபர்கள் தங்களை அவ்வியாதி தொற்றாதபடி காப்பாற்றிக்கொள்ள வைசூரி வைப்பதுபோல், அந்நோய் வித்தை வளர்த்துக்கொண்டு தயார் செய்த பாலை இரத்தத்தில் கலக்கும்படி பீச்சிக்கொள்வதால் அந்நோய் சொற்பமாக வந்து இரண்டு மூன்றுநாள் சுரம் நீங்கிப்போய் விடுகிறது. இப்படி 'ப்ளேக்வித்து' இரத்தத்தில் செறிக்கப்பெற்

றவர்களை அந்நோய் பீடிப்பதில்லையென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் இதனுடைய பலன் 6 - மாசம் வரையில்தானிருக்கிறதாகத் தெரிகிறது. அதற்குமேல் பலிக்கிறதில்லை. கொள்ளைநோய் பரவியிருக்கு மிடத்திலுள்ளவர்கள் இவ்வாறு ப்ளேக் குத்திக் கொள்வதால் தங்களிடத்தில் 'ப்ளேக்' வராமல் காப்பாற்றிக்கொள்ளலாம். இது பிரத்தியேக நபர்களைக் காப்பாற்றுவதற்கான உபாயம். 'ப்ளேக்' வந்தவிடத்தில் ஜன சமூகத்தைக் காப்பாற்றுவதற்கான உபாயம் என்னவெனில் : ப்ளேக் பீடித்தவர்களையும், அவர்களையண்டியுள்ளவர்களையும், 'ப்ளேக்' என்று சமுசயிக்கக்கூடியபடி நோயுற்றவர்களையும், இதரஜனங்களின் சம்பந்தம் சிறிதுமின்றி தனியிடத்தில் கொண்டுபோய் வைத்து அவர்களுக்கு வேண்டிய சிகிச்சைகள் செய்துவருகையில், அவர்களைப்பற்றிய நோய் வேறு யாரையும் தொற்றிப்பரவாதபடி பார்த்துவருவதேயாம். இந்த வியாதி 10 - நாளைக்கு மேலிருப்பதில்லையாதலால் இந்த 10 - நாள் வரையில் ஒதுக்கிவைத்துப் பார்த்து அக்காலமானபின் விட்டுவிடுவார்கள். இதற்காக முனிசிபாலிடியாரும் கவர்ன்மெண்டாரும் ஏற்படுத்தும் ஆஸ்பத்திரிகளில் நம்ஜாதியாசாரங்களை யனுஷ்டிக்க சாத்தியப்படாதாகையால் ஒவ்வொரு ஜாதியாரும் அவரவர்கள் ஜாதியாசாரங்களை யனுஷ்டிக்கக்கூடியபடி அவர்கள் சொந்தச் செலவில் கவர்ன்மெண்டார் குறிப்பிடும் இடங்களில் 'ப்ளேக் ஆஸ்பத்திரியும்' ஒதுக்கிடமான ஜாகைகளும் கட்டிக்கொள்வது நலமாயிருக்குமென்று முனிசிபல் கமிஷனர்கள் மூலமாக ஜனங்களுக்கு வற்புறுத்தி வருகிறார்கள். இதற்காக ஒவ்வொரு டிவிஷனிலும ஜனக்கூட்டம்கூட்டி இது சங்கதிகளைப்பற்றி விவரமாய் ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லி 'ஜாதியாசார ஆஸ்பத்திரிகள்முதலானவைகட்டுவதற்காகக்கையொப்பத்தொகைசேர்த்துவருகிறார்கள். இவ்வாஸ்பத்திரிகள்கட்ட சென்னையில் அங்கங்கேயுள்ள மைதானங்களில் 10, 12 - இடங்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஜனங்கள் தாங்கள் வசிக்கும் வீடுவாசல்களையும், தங்கள் தேகம் வஸ்திரங்களையும் சுத்தமாகவும் சுசியாகவும் வைத்துக்கொண்டு இருட்டு மண்டிய வீடுகளிலும், காற்றோட்டம் சூரியவெளிச்சம் இல்லாத வீடுகளிலும்ஜன அடர்த்தியானஇடங்களிலும்வசிக்காமலிருந்துகாலாகாலங்களில்வேளைதப்பாமல் அன்ன ஆகாரம்புசித்து ஒழுங்காய்வசித்துவந்தால் அவர்களைக்கொள்ளைநோயணுகுமென்கிற பயமின்றி யிருக்கலாம். கொள்ளைநோய் பீடிக்கப்பட்டவன் முதலில் புத்திகலங்கி மதிமயங்கி கட்குடித்தவன்போல் காணப்படுவானும். இதுதான் அதற்கு முதலுடையாளமாம். பிறகு சுரமூஸம் அக்குள், இடுப்பு,தாழ்வாய்க்கட்டை இவ்விடங்களில் கட்டிகளும்காணுமாம்.

## விசேஷக் குறிப்புகள்.

ம-ா-ா-ஸ்ரீ பால கங்காதர திலகரைச் இந்த செப்டம்பர்மீ 15உ ஜெயிலிலிருந்து விடுதலைசெய்துவிட்டார்கள். அவருக்கு விதிக்கப்பட்ட 18 மாச காவலில் 12 மாசம் ஆய்விட்டது. பாக்கி 6 - மாச காவலையும் ஏதோ சில நிபந்தனைகளின்மேல் தள்ளிவைத்து விடுதலைசெய்திருக்கிறார்களென்று தெரிவருகிறது.

---

ஹிந்துப்பத்திரிகைக்குஆசிரியராயிருந்தம-ா-ா-ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் அப்பத்திரிகைக்கு ம-ா-ா-ஸ்ரீ மு. வீரராகவாசாரியார் அவர்களோடு சொந்தக்காரரா யிருந்ததிலிருந்து பிரிந்து அவர்களிருவரும் பரஸ்பரம் சம்மதித்துச் செய்துகொண்ட ஏற்பாட்டிற் கிணங்கி அப்பத்திரிகையில் தனக்குள்ள பாத்தியதையை விட்டுவிட்டார் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற 20 வருஷகாலமாய் இவர்கள் இருவரும் சேர்ந்து உழைத்து ஹிந்துப் பத்திரிகையை மிகவும்மேலான ஸ்திதிக்குக்கொண்டு வந்தார்களாயினும், ஹிந்துவுக்குள்ளபேரும் கீர்த்தியும் முக்கியமாய் ம-ா-ா-ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் அதை மிக்கசாமர்த்தியமாக நடத்திவந்ததாலே வந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. இத்தனை காலமாக இருவரும் சேர்ந்துழைத்துவிட்டு இப்பொழுது இணைபிரிய நேரிட்டது விசனிக்கத்தக்கதே. ஆயினும் இவ்வுலகில் நன்மையின்றித்தீமைவிளைவதில்லை. இங்கிலீஷுக்குநஷ்டமானது தமிழுக்குலாபமாகமுடியுமென்று நம்புகிறோம். சுதேசமித்திரன் பத்திரிகையை இனி அவர்நேரில் நடத்திவரலாமாகையால் அதனால் தமிழ்பத்திரிகைகளுக்கேமொத்தத்தில் ஒரு நன்மையுண்டாகுமென்று எதிர்பார்க்கிறோம்.

---

லண்டனில் பிரசுரமாகும் செப்டம்பர் மாசத்து "ரிவியூ ஆவ்ரிவியூஸ்" என்னும் ஆங்கிலேயமாதாந்தப் பத்திரிகையின் முகப்பில் நமது புதிய இராஜப்பிரதிநிதியாகிய கர்ஸன்பிரபுவின் மனைவியாகிய மிஸ்ஸஸ் கர்ஸன் பெருமாட்டியின் அழகானபடம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. கர்ஸன் பெருமாட்டி, அமெரிகா ஐக்கியமாகாணங்களில் சிகாகோ, வாஷிங்டன் பட்டணங்களில் தானியவியாபாரம் செய்யும் 'லீடர்' என்னும் பாரிவர்த்தகருடையஅபூர்வகுமாரத்தி. அமெரிக்கா குடியரசு நாடாயிருந்தும், அத்தேசத்துப் பெண்பால் இந்தியாவில் சக்கிரவர்த்தினிக்குப் பிரதிநிதியாக ராஜபதவியிலிருந்துவரப் பெற்ற பாக்கியத்தைப் பற்றி அத்தேசத்தார் விசேஷமாகப் பெருமைபாராட்டிக் கொள்கிறார்கள்.

---

அக்டோபர்மீ 1உ முதல் இந்தியாவில் கடிதங்களுக்கு தபால் சார்ஜ்விகிதம் அரைத்தோலா எடைக்கு அரையணாவும், 1½ - தோலா எடைக்கு ஒரு அணாவும், அதற்குமேல் ஒவ்வொரு 1½ - தோலாவுக்கும் அல்லது அதில் ஒருபாகத்துக்கு ஒரு அணாவுமாகவிருக்கும். அடுத்த ஜனவரிமீ முதல் சீமைக்குத் தபால் அனுப்ப இப்பொழுதுள்ள 2½ - அணா சார்ஜ் 1 - அணாவாகக் குறைக்கப்படுமென்று தெரியவருகிறது.



# சிறுவர்க்கான பக்கம்.

[ விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது. ]

## சிரஞ்சீவி யிரகசியம்.

பூர்வகாலத்தில் காசியில் ஒருவகையான பிராமணர்கள் இருந்தனர். இவர்கள் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய குடும்பப் பெயர் தர்மபாலு. இப்பெயர்கொண்ட ஒருவன் அரசு செலுத்திவந்தான். அவனுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அந்தப் புத்திரனுக்கும் தன்னைப்போலவே தர்மபாலு என்று பேரிட்டான்.

இந்த தர்மபாலு என்னும் ராஜகுமாரனுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்கும் பருவம் வந்துவிட்டது. ஆதலால் அக்காலத்தில் கல்வியிற் சிறந்த பெரும்புகழடைந்திருந்ததேசலை Tes:la) என்னும் பட்டணத்திலுள்ள ஒரு பண்டிதரிடம் அவன் தகப்பன் அவனை அனுப்பினான்.

இப்படியாக இந்த ராஜகுமாரன் வித்தியாப்பியாசம் செய்துகொண்டு வருங்காலத்தில் பண்டிதருடைய ஜேஷ்டபுத்திரன் காலகதியால் மரணமடைந்தான். குருவானவர் அந்தப்பிணத்தை தகனம் பண்ணும் பொருட்டு நதிக்குச் சென்றார். அப்போது எல்லாச் சிஷர்களும் குருவோடு சென்றார்கள். தர்மபாலு மாத்திரம் வீட்டிலேயே இருந்துவிட்டான்.

நதிக்கரையில் நடத்தவேண்டிய கிரியைகளையெல்லாம் நடத்திவிட்டு குருவும் சீஷர்களும் வீடுவந்து சேர்ந்தார்கள். பிறகு சீஷர்களெல்லாம் அவரைச் சுற்றிக்கொண்டு மிகவும் நல்லவனும் விவேகியாயும் இருந்த அவருடைய பிள்ளையின் மரணத்தைப்பற்றி அவருடன் துக்கித்துக் கொண்டிருந்தார்கள்.

பின்பு அடியில்வருமாறு தர்மபாலுவுக்கும் அவனுடைய சகோதர சீஷர்களுக்கும் சம்பாஷணை உண்டாயிற்று.

தர்ம.—"நீங்கள் நமது குருவின்மகன் சிறுவயதிலேயே இறந்துபோய்விட்டான் என்று விசனப் படுகிறீர்கள். ஆனால் மனிதர் சிறுவயதில் இறந்துபோகக் கூடாதுதான்."

மற்றசிஷ.—"எல்லா ஜீவ ஜெந்துக்களுக்கும் மரணம் உண்டென்பது உனக்குத் தெரியாதா ?"

தர்ம.—"ஆமாம் நீங்கள் சொல்வது சரியே ஆனாலும் மனிதர் விருத்தாப்பியமான பிறகுதான் இறக்கவேண்டுமேதவிர சிறுவயதில் இறந்துபோகக்கூடாது."

மற்றசீஷ.—"ஆனால் உங்கள் வம்சத்தில் சிறுவர் இறப்ப தில்லையா ?"

தர்ம—"இல்லை, எங்கள் வமிசத்தில் ஒருவர் தவறாமல் எல்லாரும் இரட்டைக் கிழவராகி (மிகவும் வயது முதிர்ந்து) இறக்கிறார்களே தவிர ஒருவரும் சிறுபிராயத்தில் இறப்பதில்லை."

இவன் இப்படிச் சொல்லவே மற்ற சிஷர்கள் இதைக்கேட்டு மிக்க ஆச்சரியப்பட்டு குருவினிடம் இந்த சங்கதியைச் சொன்னார்கள்.

இதன்மேல்குருவானவர் தர்மபாலுவையழைத்து "உங்கள்வம்சத்தில் ஒருவராவதுசிறுவயதில் இறப்பதில்லையா" என்று கேட்டார்.

தர்மபாலு "ஆமாம் எங்கள்குலத்தில் ஒருவரும் சிறுவயதில் இறப்பதில்லை" என்றான்.

இதைக்கேட்டு குரு மிகவும் ஆச்சரியப்பட்டு தனக்குள்ளே சொல்லிக் கொண்டதாவது:—

இது என்ன அதிசயம்! நான் தர்மபாலுவின் தகப்பனிடம் சென்று அவரிடம் இதைச் சொல்லி இதன் உண்மையை அறியவேண்டும். அவர் இந்தசங்கதி நிஜந்தான் என்று சொன்னால் நான் அவர்களிடம் குடிகொண்டிருக்கிற குணகுணங்களைக் கேட்டறிந்து அந்தப்படி என்னைச் சீர்திருத்திக் கொள்ளக் கடவேன்."

அந்தப் பிரகாரமே ஐந்து நாளைக்குப் பிறகு அவர் ஒரு கூலியாளின் தலையின் மேல் ஒரு வெள்ளாட்டின் எலும்புகளை மூட்டையாகக் கட்டுவித்து, அவனையும் கூட்டிக்கொண்டுக் காசிப்பட்டணம் வந்துசேர்ந்தார்.

இவர் தர்மபாலுவின் வீட்டுக்கு வந்ததும் தர்மபாலுராஜன் இவரை மிக ஆசார உபசாரத்தோடு அழைத்து, அவருடைய பசியை யாற்றி ஒரு ஆசனத்தின்மேல் வீற்றிருக்கச்செய்தான். குருவானவர் தன் காலைக்கழுவிக்கொண்டு உட்கார்ந்துக்கொண்டு "ஓ பிராம்மணோத்தமா! உனக்கு மிகவும் சங்கடமான சங்கதி ஒன்று கொண்டுவந்திருக்கிறேன். மூன்றுவேதங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவனும், மிக புத்திசாலியாயுமிருந்த உன்னுடைய குமாரனாகிய தர்மபாலு இறந்துபோனான். ஆனால் உனக்கு எல்லாப் பொருள்களும் அநித்தியம் என்றது தெரியும். ஆகையால் வீணாக விசனப்படாதே" என்று சொன்னார்.

அரசன் இவரைப்பார்த்து சிரித்து "என் மகன் இறந்துபோகவில்லை. வேறு யாராவது இறந்துபோயிருக்கவேண்டும்." என்றான். உபாத்தியாயர் அரசனுடைய நிர்ணயத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து "உன் சொந்தமகனே இறந்து போயிருக்கிறான். இதோபார் அவனுடைய எலும்புகள்" என்று சொல்லிக்கொண்டு மூட்டையிலிருந்த எலும்பைக் காட்டினார்.

மறுபடியும் அரசன் "இந்த எலும்புகள் ஒரு ஆட்டினுடையதோ அல்லது ஒரு நாயினுடையதோ அல்லாமல் தர்மபாலுவின் எலும்புகள் அல்ல. என்மகன் இறந்துபோகவில்லை. எங்கள் வம்சத்தில் 7 தலைமுறைகளாக ஒருவரும் சிறுவயதில் இறந்துபோனதில்லை." என்றார்.

"ஓய் பிராமணோத்தமா! நீர் என்ன நீதிகளை அனுசரிக்கிறீர்? என்ன விரதங்களை அனுட்டிக்கிறீர்? உன் வம்சத்தில் சிறுவர்களை சாவினின்றும் காப்பாற்றும் இரகசியமான சங்கதி எது?" என்று குரு சிரேஷ்டர் கேட்டார்.

தர்மபாலு என்பவர் அடியில் வருமாறு சொன்னார்.*

"1. நாங்கள் மாசற்ற தர்ம வழியில் நடக்கிறோம்.

"2. பொய் யென்பது எங்களிடம்நாடாது.

"3. பாவச்செயல் எங்களைக் கண்டால் விலகும்.

"4. எது பாவமான காரியமோ அதைத் தவிர்த்து புண்ணியமான காரியங்களைத் தழுவுவோம்.

"5. நல்லவர்கள் சொல்லுகிற பிரசங்கங்களைத் தான் கேட்போம்.

"6. துஷ்டர்கள் எங்கள் காதினிடம் வந்து [illegible] கூவினாலும் செவி கொடோம்.

"7. நாங்கள் துஷ்டர்களைத் தள்ளி சிஷ்டர்களை [illegible] கொள்ளுகிறோம்.

"8. அதிதிகளுக்குப் பிக்ஷை மிகவும் சந்தோஷத்தோடு கொடுக்கிறோம்.

"9. அப்படிப்பட்ட தர்மத்தின் பலனாககடவுள் [illegible]ஐஸ்வரியத்தை எங்களுக்குத் தந்தருளுகிறார்.

"10. அதிதிகளுக்குப் பிக்ஷைபோட்டால் அவர்கள் தங்கள் மனங்குளிர்ந்து எங்களை ஆசீர்வதித்துச் செல்லுகிறார்கள்.

"11. நாங்கள் பிராமணகுல சிரேஷ்டர்களையும், [illegible] இல்லாதவர்களையும், களைத்துப்போன வழிப் போக்கர்களையும், சட்டிய பிக்ஷைக்காரர்களையும், கந்தை உடுத்துக் கொண்டுவருகிற பிச்சைக்காரர்களையும் எங்கள் பந்துக்கள்போல பூஜிக்கிறோம்.

"12. எங்களிடம் களங்கமற்ற பதிவிரதா தர்மம் குடியிருக்கிறது.

எங்களது சுந்தரமான மனைவிகளைத் தவிர வேறொருவர்மீதும் விருப்பம் கிடையாது.

அவர்களோ என்றால் தங்களுடைய மிகவும் அருமையான பர்த்தாக்களைத் தவிர வேறொருவரையும் பார்த்திருக்க மாட்டார்கள்.

இப்பேர்ப்பட்ட பதிவிரதா தர்மங்களின் பலனாக எங்களுக்கு புத்திக் கூர்மையும், சாஸ்திர விஷயங்களில் மிகவும் பயின்றகுண சீலமும் குழந்தைகள் உற்பத்தியும் ஆகிறார்கள்.

"13. எங்கள் பந்துஜனங்களும் *மித்திரர்களுமாகிய, பிள்ளை, பெண், சகோதரன், சகோதரி, மனைவி முதலிய எல்லோரும் மற்றும் எங்களிடம் சேவகம் செய்கிறவர்களும் எங்களுடைய அடிமைகளும் இதேமாதிரி புண்ணிய திசையை நாடுகிறவர்களாயிருக்கிறார்கள்.

"14. உண்மையான புண்ணியவழி எங்கள் மனதில் குடிகொண்டிருக்கிறது. எங்களுடைய மனதாகிய ஆகாயத்தை அசுத்தப்படுத்த ஒரு நோவுக்காவது ஒரு விசனத்துக்காவது தைரியம் இல்லை.

"15. எங்களுடைய நெற்றி எல்லையில்லாத சந்தோஷத்தில் நிறைந்திருக்கிறது.

"இவைகளின் பலன்தான் எங்களுடைய குழந்தைகளை சிறுவயதில் இறப்பதினின்றும் காப்பாற்றுகிறது."

பின்னும் அரசன், "பனையிலையால் செய்த குடை எப்படி ஒருவனை வெயிலினின்றும் மழையினின்றும் காக்குமோ அப்படியே பரிசுத்தமான மனமுள்ளவர்களுக்கு நேரும் துன்பங்களை அவர்கள் செய்யும் புண்ணியங்கள் நீக்குகின்றன. என் மகனை தர்மபாலு அவன்பண்ணிய புண்ணியத்தாலும் ஆயுர் பலத்தினாலும் உயிரோடிருக்கிறான். இந்த எலும்புகள்வேறு யாருடையதோ எனக்குத் தெரியாது." என்றார்.

குருவானவர் பிராமண குலத்தரசனான தர்மபாலுவின் முகத்தில் தோன்றிய தர்ம குணத்தையும் தாராள குணத்தின் மகிமையையும் பார்த்து வெட்கித்துப் போய்விட்டார்.

ஆகையால் இதைப்படிக்கிற எல்லோரும் மேற் சொன்னவாறு நடந்து நீடித்தவாழ்வை பெற்று சுகமாக வாழ்வார்களாக.

* இந்த நீதிகளெல்லாம் ஸ்லோகங்களாக விருப்ப [illegible] அவைகளை தமிழில் பாட்டாக இய [illegible]

---

[illegible] 5½ அணா,
[illegible] 6 ,,

[illegible]
ஒரு வருஷத்துக்கு [illegible]
6- மாதத்துக்கு ரூ. 2-2.




அறிவைப்பரவச் செய்வதற்கான

மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். 7.] 1898ஞு அக்டோபர்மீ [இலக்கம். 6.

**Terms of Subscription to the 'Viveka Chintamani.'**

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As, : Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d NET PER ANNUM

**Thin Paper Edition** for the People :—

SUBSCRN. PRICE : YEARLY Rs. 4; HALF-YEARLY Rs. 2-2.

SINGLE COPY, CURRENT No. 5½ As. BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d NET PER ANNUM.

**If Strictly Prepaid** at the commencement of the [illegible], (i. e., in May of each year) 8 As. discount, off the [illegible] rate, and 4 As. off the half-yearly rate.

[illegible]tions Entered to begin with only April or May of each year [illegible] Subscribers may not withdraw except at the end of the year.

To regular annual subscribers 2 months' grace [illegible] allowed for the prepayment of subscription and in [illegible] case of regular half-yearly subscribers 3 weeks' [illegible], within which all subscriptions should be paid [illegible] entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a [illegible], though regular subscribers may elect to pay [illegible] subscriptions in half-yearly instalments. *All [illegible] for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often [illegible] by V.P.P. to prevent accumulation of arrears.

[illegible] all business correspondence, Subscribers are [illegible] to quote their register number found on [illegible], as it would ensure prompt attention [illegible] delay and needless correspondence.

**விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.**

தனமான காகிதப்பதிப்பு :— அத்தியக்ஷர்கள், சீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ஒரு வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2. தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவின்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

ஒரு வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்டபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்த விரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே [illegible]த்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V.P.P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்கு [illegible] தெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரை [illegible] வேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் [illegible] தம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக [illegible]க்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## செல்வ நூல்.

செல்வநூல் என்னும் சாஸ்திரம் பற்பல தேசங்களின் செல்வத்தைப்பற்றிப்படிக்கிறது. ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தவரைக் காட்டிலும் ஏன் செல்வவந்தர்களாக வாழ்கிறார்கள் என்பதை விளக்கிக் காட்டுகிறது. ஏழைகள் என்பவர் கூடியமட்டும் ஒரு ராச்சியத்தில் எப்படி இல்லாமல் செய்யலாம், என்ன செய்தால் எல்லோரும் தத்தம் பிரயாசத்திற்குத் தக்கபடி கூலி பெறுவார்கள் என்பதை விளக்கிக்காட்டுகிறது. ஆக மொத்தத்தில் ஜனங்களின் அபிவிருத்தியை உண்டாக்குமோர் பெரிய சாஸ்திரமாய் இருக்கிறது இந்தச் செல்வநூல்.

இந்த சாஸ்திரத்தினாலேயே ஜனங்களுக்கு சர்வாபீஷ்டமும் சித்தித்துவிடுமென்று எண்ணக்கூடாது. ஜனங்கள் சௌக்கியப்படவேண்டுமானால், நல்ல நீதி நடக்கவேண்டும். ஆகையால் சட்டசாஸ்திரம் நேராகவேண்டும். ஊர்ப்புறங்கள் சுத்தமாயிருந்து சுரமாரிகள் இல்லாமல் சரீர சௌக்கியம் உண்டாக வேண்டும். ஆகவே சுகசாஸ்திரம் விருத்தியாகவேண்டும். இப்படியே யின்னும் பற்பல சாஸ்திரங்கள் ஜனங்களுக்கு நன்றாகத்தெரிந்து இருக்கவேண்டும். இவைகளுக்குள் இச்செல்வநூல் என்னும் நூலும் யாதொன்றுக்கும் பின்னிட்டதல்ல.

இதின் விஷயம் என்னவென்றால் செல்வம் அல்லது பொருள். செல்வம் எப்படிக்கிடைக்கும், எப்படி அதை அனுபவிக்கவேண்டியது. எப்படி அதை யடைய நாம் முயலவேண்டும் என்பவற்றை நாம் முதலில் அறியவேண்டும்.

செல்வத்தைப்பற்றிப் பேசும் இந்த சாஸ்திரத்தைப் படித்தென்ன? பணம், பணம், என்று பணம்தானா பெரிதாகப்போய்விட்டது. புண்ணியம், சினேகம், பிரேமை, தயை, முதலியவை யில்லையா; அவைகளைவிட இதுதானா பெரிதாகப்போயிற்று என்று இந்த சாஸ்திரத்தை யிகழ வொண்ணாது. ஒருவன் தன் வாயை வயிற்றை யொடுக்கியும், ஜனங்களைப் பலவாறு ஹிம்சித்தும்பணத்தைச்சேகரிக்கலாம். ஆனால் அவன் நடத்தையை இந்தச் சாஸ்திரம் கொஞ்சம்கூடச் சிறப்பிக்கிறதில்லை. பணம் சம்பாதிக்கவேண்டுமென்றால், அநியாயஞ்செய்து சம்பாதிக்க யார்சொல்வார்கள்? நியாயம் அநியாயம் என்கிற ஞானம் வேறுசாஸ்திரத்தின் மூலமாய் முன்னமே தெரிந்திருக்கிறது என்றதின்மேல்தான் இந்த சாஸ்திரம் பிறக்கிறது. யுக்தாயுக்தம் அறிந்த பேர்கள்தான் இந்த சாஸ்திரத்திற்கு அதிகாரிகள். எப்படி யொரு சாஸ்திரத்தை விவரணம் செய்யும்காலத்தில் எல்லாசாஸ்திரங்களையும் பற்றிச்சொல்வது !

இப்போது சாதாரணமாக ஜனங்கள், இந்த சாஸ்திரத்தை நன்றாகப் படிக்காமலே, தங்களுக்கு அதைப்பற்றிய விஷயங்கள் யாவும் தெரியும் என்று நம்புகிறார்கள். இதைக்காட்டிலும் பெரிய பயித்தியக்காரத்தனமுண்டா? வைத்தியசாஸ்திரம் அறியாதவன் உடம்புக்கு மருந்து கொடுத்தால் என்னவாகும்? எல்லா சாஸ்திரங்களிலும் மிகவும் கடினமானதும், ஆயுள்நாள் முழுவதும் முயன்றாலும் நன்றாக அறியக்கூடாததுமான இந்த சாஸ்திரவிஷயத்தில் மாத்திரம் எப்படி இவ்வளவு குருட்டுறுதியாயிருக்கிறார்களோ தெரியவில்லை.

முக்கியமாய். தானம் தருமம் செய்கிறதுண்டே அதையெடுத்துக் கொள்ளுங்கள். யார்யார் யாசகம் கேட்டாலும் அவரவர்களுக்கு தானம்செய்வது நலமென்றும், புண்ணியகரமென்றும், பலபேர் புண்ணியவான்கள் தாங்கள் செய்யும் தருமத்தின்முடிபு என்னவென்று யோசிக்காமலே நம்புகிறார்கள். பிச்சைக்காரர்கள் கண்முன்னால் சந்தோஷப் படுவதைப் பார்த்து மோகித்து விடுகிறார்களே யொழிய பிற்பாடு தாங்கள் செய்யும் தருமத்தினால் அவர்களுக்கு என்ன நேரிடுமென்று எண்ணுகிறதில்லை. பிச்சைக்காரர்களுக்கு இலேசாய் காலக்ஷேபம் நடக்கும் பக்ஷத்தில், நாளுக்குநாள்



அவர்களின் சங்கை யதிகரிக்கிறது. இப்போது நம் கண்முன்னால் இருக்கும் தாரித்திரியமும், பாபங்களும் முன்னால் உள்ள ஜனங்கள் செய்த தப்பெண்ணம் கொண்ட தருமத்தினால்தான்; பலபெயர்கள் தகுந்த சாக்கிரதை, முன்யோசனையில்லாமல் சோம்பேரித்தனமாய்க் காலங்கழிக்கக் கற்பித்து வைக்கப்பட்டதனால், நமது தேசத்தில் இவ்வளவு கஷ்டம் அதிகரித்திருக்கிறது. இச்செல்வநூல் கற்பிப்பதென்னவென்றால்: இப்படி யோசனையின்றி வியர்த்தமான தானம்புரிவதிலும் ஜனங்களுக்கு வித்தைகற்பித்து, தங்கள் தங்கள் செலவுக்கு வேண்டியதைச் சம்பாதிக்கும் வேலைகளைக் கற்பித்து, வேலைசெய்து கூலிகொண்டு சுகமாகச் சாப்பிட்டு மூப்புக் காலத்திற்கும் சேர்க்கச்சொல்வது எவ்வளவு நலம்பாருங்கள். இப்படி ராச்சியத்தில் ஏற்பாடு இருந்தும்ஜனங்கள் சோம்பேரிகளாகவிருக்க விரும்பினால் அந்தக் கஷ்டம் அவர்கள்தான் அனுபவிக்கவேண்டும்.

இதனாலேயே இந்தநூல் பணத்தைப் பிறருக்கு ஈதல் வேண்டாமென வுரைக்கிறதில்லை. தனாட்டியர்கள் தங்கள் செல்வத்தை யோசனையுடன் லோகோபகாரத்தின் பொருட்டு செலவிடலாம். அவர்கள் தங்கள் பந்துமித்திரர்களுக்கு உதவிசெய்யலாம்; ஜனங்களின்பொது உபயோகத்திற்காகப் புத்தகசாலைகள், சித்திரசாலைகள், மனோஹரமான வுத்தியானங்கள், ஔஷதசாலைகள் முதலியவைகளையேற்படுத்தலாம், ஏழைகளுக்குக் கல்விகொடுக்கப் பாடசாலைகள் உண்டாக்கி நடத்திவைக்கலாம். பலத்த தெய்வீகமான கஷ்டங்கள்படும் வரிஞர்களுக்கு கைக்கோல்கொடுத்து உதகரிக்கலாம். பிரயாசைப் படத்திருடம் இல்லா கூன்குருடாகியவர்களுக்குப் பலவிதத்தில் உதவலாம். இது எல்லாம்தருமம்தான். இவைகளைச் செய்வதில் செல்வநூல் வேண்டாமென்கிறதில்லை.

தானம் என்பது உண்மையாகவே தானமாய் தானம் பெறுவோருக்கு நற்பலன் அளிப்பதாயிருத்தல் வேண்டும்.

ஆகவே, மொத்தத்தில் இந்தச் செல்வநூல், நாம் செய்யுங் காரியங்களில் எல்லாம், தற்கால சௌக்கியத்தை மாத்திரம் பாராமல் ஜனங்களுக்குப் பொதுவாக நீடித்த நன்மையைப் பயக்கத்தக்கதெதுவோ அதை யோசித்துச் செய்யவேண்டுமென்று கற்பிக்கிறது.

இப்போது ஐரோப்பாதேசத்தில் அநேக ராச்சியங்கள் சம்பத் அனுபவிப்பது இந்த சாஸ்திரத்தை நன்றாகக்கற்று அதன்படி நடப்பதால்தான். சுமார் 100 வருஷங்களுக்கு முன் ஆடாம் ஸ்மித் என்பவர் நாட்டுச்செல்வம் * என்னும் நூலை யியற்ற அவர்பின்னநேகர் அதன் தத்வங்களை வெளியிட்டு இப்போது ஐரோப்பாவில் எங்கேபார்த்தாலும் அதன் விஷயம் ஜனங்களுக்குத் தெரிந்திருக்கிறது.

நமது தேசத்தில்மாத்திரம் இன்னும் நன்றாகப் பரவவில்லை.

ஆயினும் சமஸ்த ஜனங்களுக்கும் செல்வத்தைப்பற்றிய கொள்கைகள் சிலவுளவேயுள. அவை சாஸ்திரோக்தமான தத்வங்களாயிராவிடின் அசாஸ்திரீயமாகவும், ஆகவே தப்பாகவும் தீமைவிளைக்கத்தக்கனவைகளாகவும் இருக்கின்றன. ஆதலால் நம் தேசத்தார்களுக்கு இச்செல்வம் என்பதைப்பற்றிச் சிற்சில விஷயங்களைத் தெரிவிக்க ஜெவன்ஸ், மில், மார்ஷல் முதலிய செல்வநூலாளர்களுடையகோட்பாடுகளை யனுசரித்துச் சுருக்கமாக அப்போதைக்கப்போது படிக்கக்கூடியதாகச்சில சிறியபாடங்கள் எழுத உத்தேசிக்கிறோம். தமிழறியும் மானிடர்களுக்கு இது நன்மை விளைக்குமேல் மிகக் களிகூருவாம்.

டி. கஸ்தூரி ஐயங்கார்.

* Wealth of Nations.

## கொள்ளைநோய் விளம்பரம்.

சென்னை முனிசிபாலிடி ஹெல்த் டிபார்ட்மெண்டார் கொள்ளைநோயின் விவரமும் அதைத் தடுப்பதற்காக சர்க்காரும் முனிசிபாலிடியாரும் செய்யும் யத்தனங்களும், அவ்யத்தனங்கள் நிறைவேற ஜனங்கள் ஒத்துழைக்க வேண்டிய அம்சங்களும் எல்லாருக்கும் தெரியும்படி இங்கிலீஷிலும் தமிழ் தெலுங்கு ஹிந்துஸ்தானி முதலிய சுதேசபாஷைகளிலும் ஆயிரங்கணக்காக விளம்பரங்கள் அச்சிட்டு ஜனங்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். அதில் நமக்கனுப்பப்பட்ட தமிழ்விளம்பரத்தை யாவருமறிய இங்குபிரசுரிக்கிறோம் :—

**மஹம்மாரி அல்லது பம்பாய்வியாதியென்று பலவாறாய்ச் சொல்லப்படுகிற பியூபானிக் பிளேக் என்னும் கொள்ளைநோயின் குறிகளாவன:—**

ஷை வியாதி காணும் மனிதனுக்குத் திடீரென்றுசுரங்காணும். இப்படிச்சுரங்காண்பதற்கு முன்னே குளிரும் நடுக்கலும் உண்டானாலுமுண்டாகும். நெற்றித் தலைநோய் மிகுதியாயிருக்கும். சில சமயம் மயக்கமும் காணும். முகம் சிவந்திருக்கும்; முகத்தோற்றம் மந்தமுள்ளதாகவும்ஏக்கங்கொண்டதாகவுமிருக்கும். கண்களோ பெரும்பாலும் இரத்தமயமாயிருக்கும். குமட்டலும் கடூரமான வாந்தியும் அடுத்தடுத்துக் காணும். இரண்டாவது அல்லது மூன்றும்நாள் சுரக்காய்ச்சல் உயர்ந்திருக்கும். சர்மம்வறண்டு கொதிப்பாயிருக்கும். இரண்டாம்நாள்—சில சமயம் அதற்குப் பின்னிட்டும்—கட்டிகள்காணும். இந்தக் கட்டிகள் தேகத்தின் ஒரு பாரிசத்திலாயினும் இரு பாரிசத்திலுமாயினும், கண்டம் கக்கம் கவட்டியாகிய இடங்களிலும்காணும். வியாதி மட்டுமீறின காலத்தில் பினற்றல் உண்டாவதுமுண்டு. வியாதியஸ்தன் அப்போதுகேட்குங்கேள்விகளுக்கு விடைசொல்லக் கஷ்டப்படுவதுமன்றித் தடுமாறியும் போவான். இந்த ரோகஸ்தர்களின் வஸ்திரங்களையும் அவர்களுடைய சீழ் முதலானது பட்ட வேறு வஸ்துக்களையும் வாங்குவதினாலும் இவர்கள்மற்றவர்கள்மத்தியில் வருவதினாலும் இந்த வியாதி மற்றஜனங்களைப் பிடிக்கும். மேலே விவரிக்கப்பட்ட இந்த வியாதி சீக்கிரத்தில் மதராஸுக்கு வந்தாலும்வரும். அப்படி வரும் பட்சத்தில் முனிசிபல் கமிஷனர்கள், இவ்வூரிலுள்ள நல்ல குடித்தனக்காரர்கள்யாவரும்ஷை வியாதிபரவாதபடித்தடுக்க தங்களோடே ஒத்து வேலை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறார்கள். இந்த வியாதிகண்ட மனிதர்களை முனிசிபல் கமிஷனர்கள் உடனே கவனிக்கும்படி குடிகள் யாவரும் அடியிற்கண்ட சட்ட நிபந்தனைகளை அனுசரிக்க வேண்டியது. இந்தநிபந்தனைகளைத் தப்பி நடப்பது வியாதியைப் பரவச்செய்து தங்கள் அயலாருடைய பிராணனுக்கு ஆபத்தை உண்டாக்குவதாகும். ஆகையால் இந்த நிபந்தனைகளை அனுசரித்து நடவாத மனிதன் அபராத தண்டனைக்கும் கடினக்காவலுக்கும் பிராப்தனாவான்.

### பம்பாய்வியாதிச் சட்ட நிபந்தனைகளின்

### 1 - வது பிரிவு.

ஒவ்வொரு சொந்த வீட்டுக்காரனும் தன் வீட்டிலேயாவது அல்லது மதராஸ் பட்டணத்து முனிசிபல் எல்லைக்குள் இருக்கிற மற்றெந்த இடத்திலேயாவது 'பியூபானிக்' வியாதி அல்லது வீக்கங்காணும்சுரம் கண்ட மனுஷன் இருப்பதை யறிந்திருந்தாலும் அல்லது கவர்ன்மெண்டாரிலாவது முனிசிபல் பிரசிடெண்டுதுரையவர்களினாலாவது வியாதியுள்ள இடமென்று விளம்பரம் செய்யப்பட்ட மற்ற எந்த இடத்திலேயாவது இருந்து அப்படிப்பட்ட வியாதியஸ்தன் வந்திருப்பதைத் தான் அறிந்திருந்தாலும் அந்தச் சங்கதியை ஷை முனிசிபாலிடியைச் சேர்ந்த ஹெல்த் ஆபீசர் அல்லது யாதாமொரு சானிடெரி இனிஸ்பெக்டருக்கு உடனே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறான். அப்படியே ஒவ்வொருசொந்த வீட்டுக்காரனும் சோற்றுக்கடை சத்திரம் அல்லது சனங்கள் குடியிருக்கும் பொதுவான இடங்களைப் பரிபாலித்துக்கொண்டு வருபவர்களும் ஷை வீட்டிலாவது சாப்பாட்டுக்கடையிலாவது, சத்திரத்திலாவது வேறு மற்ற இடத்திலாவது, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அல்லது கலெக்டரினால் வியாதிப்பட்ட இடமென்று அறிவிக்கப்பட்ட இடத்திலிருந்து வந்திறங்கும் எந்த மனிதனைப் பற்றியும் உடனே தெரிவிக்கவேண்டும்.

### முனிசிபல் ஆக்ட் ஸெக்ஷன் 347.

தொத்துவியாதி கண்ட இடத்திலிருந்த சாமானை அல்லது வஸ்துவையாவது ஔஷதப் பிரயோகத்தினால் ஏற்கனவே சுத்தம் செய்யாமல் யாதாமொருவனுக்குச் சொந்தமாக அல்லது இரவலாகக் கொடுப்பவனும் விற்பவனும் வாங்கி அப்புறம் செலுத்துபவனும் பைசல் செய்பவனும், 50 ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனைக்கு உட்பட ஏதுவாயிருப்பான்.

### ஷை பம்பாய் வியாதிச்சட்ட நிபந்தனைகளின்

### 5 - வது 7 - வது பிரிவுகள்.

பம்பாய்நோய் கண்ட மனுஷன் குடியிருந்தானென்று தெரிந்திருக்கும் யாதாமொரு கட்டடத்தையாவது அதனுடைய ஒரு பாகத்தையாவது பிரசிடெண்ட் துரையினால் நியமிக்கப்பட்ட வைத்திய உத்தியோகஸ்தர் அங்கீகரிக்கும்படியான விதமாய் ஔஷதப் பிரயோகத்தினால் சுத்தம் செய்யாமல் அப்பேர்ப்பட்ட கட்டடத்தையாவது அதன் ஒரு பாகத்தையாவது வேறு ஜனங்கள் குடியிருக்க விடவும் அல்லது காட்டவும் கூடாது. கந்தைபொறுக்கிகள் வீடுகளிலேயும் கந்தைகளைச் சேர்மானம் செய்யுமிடங்களிலேயும் உள்ள கந்தைகளையும் பம்பாய் வியாதி வியாபகமாகிய இந்தியாவின் எந்த இடத்திலேயாவது இருந்து வந்திறங்கும் பழைய கோணிகளையும் பிரசிடெண்டு துரை தனக்கு யுக்தமாய்த் தோன்றுகிறபடி ஔஷதப் பிரயோகத்தினால் சுத்தம் செய்தாலும் செய்யலாம்; அல்லது சுட்டெரித்தும் போடலாம். இப்படியிந்தச் சட்டநிபந்தனையைக்கொண்டு சுத்தப்படுத்தப்படுகிறதும், அல்லது நிர்மூலம் செய்யப்படுகிறதுமான எந்த வஸ்துக்களைப்பற்றியும் எவனும் நஷ்டச்சேத பரிகாரத்துக்குத் தொடர் வழக்கிடலாகாது.

### வியாதி வராமலிருக்க வழி.

இந்த வியாதி வராமல் தடைசெய்வதற்கும் வந்தாலும் மரணத்திற்குத் தப்புவதற்கும் ஒரு வித்வானாகிய எம். ஆப்கின் என்னும் துரையவர்கள் நெடுநாள் அனுபோகத்தினால் கண்டுபிடித்த உபாயம், சர்மத்தைக் குத்தி மருந்தேற்றுவதேயாம். இப்படிக் குத்துவதற்கு முனிசிபல் கமிஷனர்கள் அடியிற்கண்ட இடங்களை நியமித்திருக்கிறார்கள். அவ்விடங்களில் பிரதி தினமும் காலை மாலையில் மேற்படி வேலை நடத்தப்படும். இவ்விடங்களில் குத்திக்கொள்ளுகிறவர்களுக்கு யாதொரு பணச்செலவுமில்லை. குத்திக்கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்தும் சட்டநிபந்தனையுமில்லை. தங்கள் சொந்த இஷ்டமாய்க் குத்திக்கொள்ள வேண்டுமென்று வருகிறவர்களுக்கே மேற்படி பிரயோகம் செய்யப்படும்.

### குத்தும் இடங்களாவன.

இராயபுரம் மன்னார்சாமி கோயில் தெருவில் இருக்கும் ஜனனமரண ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்.

சைனாபஜார் ரோட் போலீஸ் டாணா ஜனனமரண ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்.

சென்னப்பட்டணம் எர்ராபாலுசெட்டித்தெருவில் இருக்கும் முனிசிபல் ஆபீஸ்.

வேப்பேரி ஸ்மித்பீல்ட் மார்க்கட்டுக்கடுத்த ஜனனமரண ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்.

பாந்தியன்ரோட் ஆண்டர்சன் வாராவதிக்கடுத்த போலீஸ் ஸ்டேஷன்.

திருவல்லிக்கேணி வாலாஜாரோட் போலீஸ்டாணா ஜனனமரண ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்.

மைலாப்பூர் கச்சேரி ரோட்டு ஜனனமரண ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்.

இவ்வூரார் தங்கள் தேக சௌக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அடியிற்கண்ட ஒழுங்குகளை அனுசரித்து வருதல் நலமாயிருக்கும்.

இவை ஸர்ஜன் லெப்டினண்ட்- கர்னல் கிங் என்பவர்செய்த சுக ஒழுங்குகளிலிருந்து பேர்த்தெழுதப்பட்டன.

பம்பாய் வியாதி நெருங்கிவரும் சமயத்தில் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகள் :—

முதலாவது: வாஸஸ்தானம்.

1. ஒவ்வொரு வீடும் பூரண சுத்தமாயிருக்க வேண்டும், அதாவது அசுத்த ஜலத்தையும் மாட்டுத்தொழுவங் கழுவிய ஜலத்தையும் மற்றெந்தவிதமான குப்பையையும்முழுவதும் அப்புறப்படுத்தவேண்டும்.

2. அப்படி அப்புறப் படுத்தியபின் தரை ஈரமாயும் அசுத்தமாயுமிருக்குமாகில் காய்ந்ததும் சுத்தமானதுமான மண் காணப்படும் வரையிலும் பூமியை வெட்டியெடுக்க வேண்டும்.

3. அப்படி எடுக்கப்பட்ட பழயமண்ணைப் பட்டணத்தினின்று அப்புறப்படுத்தித் தூலைவிலிருக்கும் வயல்களுக்கு எருவாக உபயோகப்படுத்தலாம். அப்புறப்படுத்திய பழைய மண்ணுக்குப் பதிலாகச் சுத்தமான இடத்திலிருந்து எடுத்த புதுமண்ணைப் போடவேண்டும்.

4. வீடுகளை உள்ளும் புறமும் சுண்ணும்பு வெள்ளை அடிக்கவேண்டும். வெளிப்புறத்தைச் சுண்ணும்பு அடிக்கக்கூடாத ஜனங்கள் உட்புறத்தையாவது சுண்ணும்பு வெள்ளை அடிக்க வேண்டும்.

5. துணி மூட்டைகளையும் தூலங்களிலே தொங்கிக் கொண்டிருக்கும் அல்லது ஜனங்கள் நித்திரை செய்யும் அறைகளில் அடைத்துக் கொண்டிருக்கும் சாமான்களையும் அப்புறப்படுத்தல்வேண்டும்.

6. காற்று விசாலமாய் உலாவுதற்குக் கதவுகளையும் ஜன்னல்களையும் கூடுமானபோதெல்லாம் திறந்து வைக்கவேண்டும்.

7. வீடுகளிற் கொல்லைகளிருந்தால் அவைகளில் மலம் குவியாதபடிக்குப் பிரதிதினமும் இருமுறை அப்புறப்படுத்திச் சுத்தமாகவைக்க வேண்டும்.

8. வீட்டிலுள்ள ஜலதாரைகள் பிரதிதினமும் இருமுறை சுத்தி செய்யப்பட வேண்டும்.

9. ஜலதாரைத் தண்ணீர் சேர்ந்து நிற்கும் இடங்களையும் மாடுகுதிரைகள் பெய்யுமூத்திரம் விழும் குழிகளையும் பிரதி தினமும் காலிசெய்ய வேண்டும்.

இரண்டாவது: சரீரம்.

1. தேகமும் வஸ்திரமும் பூரண சுத்தியாயிருக்கவேண்டும். தேக மெலிக்கை யுள்ளவர்கள் குளிர்ந்த ஜலத்தைத்தவிர்த்து வெந்நீர்ஸ்நானம் செய்யவேண்டும்.

2. ஆகாரம் சாதாரணமானதும் தேகபோஷணையானதும் தகுந்ததாயு மிருக்கவேண்டும்.

3. வயிற்றுப் போக்கை யுண்டாக்கும் சகல காய்கறிபதார்த்தங்களையும் கீரைகளையும் பழங்களையும் விலக்கவேண்டும்.

4. மட்டுமீறிய மதுபானம், பெருந்திண்டி, நெடுநேரங் கண்விழித்தல், பனியிலும் வெயிலிலும் உலாவுதல் முதலியவற்றை விலக்க வேண்டும்.

5. சமைத்து ஈரித்துப்போன சாப்பாட்டைச் சாப்பிடலாகாது. சாப்பாட்டின்மேல் ஈக்கள் உட்காரலாகாது. மரக்கறிப் பதார்த்தங்களையும் கீரைகளையும் சமைக்காமல் சாப்பிடலாகாது. சமைப்பதற்குமுன் காய்ந்து சுத்தமான ஜலத்தில் அவைகளைச் செவ்வையாகக் கழுவவேண்டும். போஜன பதார்த்தத்தோடு உப்பை தாராளமாய்ச் சேர்க்கவேண்டும். ஆனால் வயிற்றுப் போக்கைக் கிளப்பவும் உபத்திரவம் உண்டாவதற்கேதுவாகவும் அபரிமிதமாகவும் சேர்க்கலாகாது.



6. கீழ்த்தரமான ஜலத்தை வீட்டில் வைத்திருக்கலாகாது. கிடைக்கக்கூடுமான உயர்ந்த ஜலத்தையே உபயோகப்படுத்த வேண்டும்.

7. பானம் பண்ணுவதற்கும் வாய் கழுவுதற்கும் போஜனபானம் செய்யும் பாத்திரங்களைக் கழுவுதற்கும் உபயோகிக்கும் ஜலத்தையும் பாலையும் அப்படி உபயோகிப்பதற்குமுன் காய்ச்ச வேண்டும்.

8. வெட்டுக் காயமுள்ளவர்களும் கைகால் முதலிய திறந்த இடங்களில் சர்மம் உராய்ந்து தேய்ந்திருப்பவர்களும் பம்பாய் வியாதி கண்டவர்களோடு நெருங்கி யிருக்கலாகாது. ஆனால் அப்படி நெருங்கி யிருப்பது அவசியமாகில் காயம்பட்ட இடங்களை நன்றாகக்கட்டி மூடிக் கொண்டிருக்கவேண்டும். அப்படி நெருங்கியிருந்து சிற்சிலசமயம் அவர்களை விட்டு நீங்கும் போது மேற்படி காயப்பட்ட இடங்களை விஷநிவாரணதிராவகங்களால் கழுவவேண்டும். இந்தத் திராவகம் ஸானிட்டேரி டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தரைக் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

---

## முனிசிபல் விளம்பரம்.

குடியிருக்கும் வீடுகளெல்லாம் இந்த விபத்துக்காலத்திலே உள்ளும் புறமும் சுண்ணும்பு வெள்ளையடிக்கப்பட்டிருக்கவேண்டுமென்பது மிகவும் விரும்பத்தக்க விஷயமாம். குடிகள் யாவரும் சற்றேனும் தாமதியாமல் இப்படிச் செய்யும்படி மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்த விண்ணப்பத்தைச் சகலஜனங்களும் தன்னோடு மனமொத்து நிறைவேற்றுவார்களென்று பிரெசிடெண்ட் துரை நம்பியிருக்கின்றார்.

J. W. கார்ன்வால், லெப்டினெண்டு,
எல்த் ஆபீசர்,
மதராஸ் முனிசிபாலிடி.

---

# சம்பகமாலை
அல்லது
# இளையராஜாவின் தீர்மானம்.
## அங்கம். 11.

---

முதற்களம்.

இடம்: கயா கோவில்.

மௌலா சய்யதாலி- மகம்மதீயகுரு

| | |
|---|---|
| காதர் ஆலி<br>குலாம் காதர்<br>மீராலி<br>தாவூத்<br>காதர் உசேன்<br>குலாம் உசேன்<br>மஸ்தான்சாப்<br>குலாம்ஹைதர் | தார்தாரி மகம்மதியர். |
| விஷ்ணுசர்மா<br>கோபிநாத்<br>ராதாகிஷன் | கயாவிலிருக்கும்மூன்று பிராம்மணர்கள். |

---

(மண்வெட்டி, கடப்பாறை, குந்தாலி, கோடரி கத்திமுதலியவைகளைக்கைக்கொண்டு ஓர் தார்த்தாரி மகம்மதீயக் கூட்டம் வருகின்றது. மற்றோர் புரத்தில் மூன்று பிராம்மணர்கள் கைகளைப்பிசைந்துகொண்டு பதுங்கிப் பார்க்கிறார்கள் )

தார்த்தாரி மகம்மதியக்கூட்டம்.—தீன். தீன். தீன். மௌலாதீன்! குத்து, இடி, நகர்த்து, வெட்டு

மௌலாசய்யதாலி.—ஓ! காதராலிசாப்! இந்தச்சுவரை இடி ஓ! குலாம்காதர்! இந்த ஸ்தம்பத்தைத் தள்ளு. ஓ மீராலி! ஓதாவூத்! ஓ காதர் உசேன்! ஓ குலாம் உசேன்! இந்த துவஜஸ்தம்பத்தைக் கோடரியால் வெட்டித் தள்ளுங்கள். ஓ மஸ்தான் சாப்! இதோ இந்தக் குளத்தை குந்தாலியால் மண்ணை வெட்டித் தூர்த்துப் போடு. ஓ குலாம்ஹைதர்! அந்தஅறையில் நாட்டி யிருக்கிற பொம்மையை எடுத்து வெளியேதள்ளு. ஓ! மாமூது! அந்தக் கொட்டகையில் கட்டியிருக்கும் பசுக்களை இழுத்து வந்து இந்த பலிபீடத்துக்கு முன்னால் டவியிடு, சீக்கிரம்! சீக்கிரம்! இன்று சூரிய அஸ்தமனமாவதற்கு முன் இந்தப் பார்ப்பனர்கள் வைத்திருக்கும் பொம்மைகளும், அவர்கள் கோவில்களும் ஒன்று மிருக்கப்படாது. அந்த விடத்தில் மசூதிகட்ட அஸ்திவாரம் எடுத்து ஆக வேண்டும்.. அவர்

களுடைய தெய்வங்களெல்லாம் மசூதிக்குப் படிக் கற்களாகவேண்டும். சீக்கிரம்! சீக்கிரம்! ஜல்தி! ஜல்தி!

காதர் உசேன்.— (மீசையை முறுக்கிக்கொண்டு) குலாம் உசேன் சாப்! இதோ பார். இந்த மண்டபத்தை ஒரு நொடிக்குள் கீழே தள்ளுகின்றேன்?

மீராலி.—குலாம்! அதென்ன ஆச்சரியம். (புயத்தைத் தட்டிக்கொண்டு) இந்த ஸ்தம்பத்தை ஒரு க்ஷணத்தில் உதைத்துத் தள்ளுகிறேன்பார்!

(மற்றோர்புறத்தில்)

விஷ்ணுசர்மா.—கோபிநாத பட்டாச்சாரியா! அதோ பாரும் மண்டபம் விழுந்து விட்டது. ஐயோ! பாபி! பாபி! துவஜஸ்தம்பம் விழுந்து விட்டது. பாரும், ஐயா!

கோபிநாத்.—இதோ பசுக்கள் கதறுகின்றன கேளும். மஹாபாதகர்கள் கொலை செய்கிறார்கள் போல் காண்கின்றதே. (காதில் விரல் வைத்துக் கொண்டு) ஹரி! ஹரி! கிருஷ்ண! கிருஷ்ண! நான் கேட்க மாட்டேன் இந்த ஆர்த்தஸ்வரத்தை.

ராதாகிஷன்.—(யஞ்ஞோபவீதத்தை உருவிக் கொண்டு) நானாவது போகட்டுமோ?

மௌலா சய்யதாலி.—குலாம் ஹைதர்!

குலாம் ஹைதர்.—ஹாஜர், ஹஜரத்

மௌலா சய்யதாலி.—(தாடியை உருவிக்கொண்டு) அதோ சில பார்ப்பனப் பன்றிகள் குருகுருக்கின்றன. குடுமியைப் பிடித்து இழுத்துவா.

குலாம் ஹைதர்.—நல்லது செய்கிறேன். ஹஜரத் (போகிறான்.)

கோபிநாத்.—விஷ்ணு சர்மா! ராதாகிஷன்! பாபிகள் இங்கேவருகிறார்கள்போல் காணுகின்றது. "அபதாமபஹர்த்தாரம் தாதார்மஸர்வ ஸம்பதாம்" ஆபத் பாந்தவா! அநாதரக்ஷகா! என் செய்வேன்!

விஷ்ணு சர்மா.—என்னசெய்யலாம் கோபிநாத்! ஜாதியும் போய்விட்டது! பிராணனும் போய் விட்டது. ஒன்றும் தக்காது போல் தோன்றுகின்றது.

ராதாகிஷன்.—வீட்டில் என்மனைவி கர்ப்பம் ஐயா!

கோபிநாத்.—பிள்ளைக்கு இன்னும் உபநயனம் செய்யவில்லை. என்ன செய்வேன் விஷ்ணுசர்மா!

விஷ்ணுசர்மா.—சண்டாளர் கிட்டக்கிட்ட வந்து விட்டார்களே! ஐயோ! என்ன செய்வோம் ஓடிப்போகலாமா? அல்லது புதரில் ஒளித்துக் கொள்ளலாமா? சொல்லுங்கள்.

ராதாகிஷன்.—ஏதேது, யாதுசெய்யவும் அவகாசமில்லை. நெருங்கி வந்து விட்டார்கள். ஓய் கோபிநாத்! ஓய் விஷ்ணு சர்மா! பேசாதேயுங்கள்.

கோபிநாத்.—ஓடலாம். (மூவரும் ஓடத்தலைப்பட)

குலாம்ஹைதர்.—(மூவருடையகுடுமியையும் இரண்டு கைகளால் சேர்த்துப் பிடித்துக்கொண்டு கொஞ்சம் ஆட்டி விட்டு) பார்ப்பனப் பயல்காள்! ஓடவா போகிறீர்கள்? எங்களுக்கு முன்னால் ஓடிப் பிழைக்க உங்களால் முடியுமா?

பிராம்மணர்கள்.—இல்லை இல்லை சாயபு அவர்களே! உங்களுக்கு நமஸ்காரம் செய்கிறோம். எங்களை விட்டு விடுங்கள். இனி இங்குவருவதில்லை. நாங்கள் பின்னுக்குத் திரும்பிப் பார்க்காமல் ஓடிப் போகிறோம்.

குலாம் ஹைதர்.—உங்களை விட்டு விட்டால் நான் முஸல்மான் ஆவேனோ. வாருங்கள் என்னோடு கூட.

(பிராம்மணர்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்க.)

குலாம் ஹைதர்.—என்ன ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளுகிறீர்கள். முன்னால் நடவுங்கள். (கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறான்)

மௌலா சய்யதாலி.—குலாம் ஹைதர்! இவர்கள் மூவரையும் அந்த விக்கிரகத்தின் மேல் ஏறி நிற்கச் சொல்.

குலாம் ஹைதர்.—மௌலா சொன்னது தெரிந்ததா ஏறி நில்லுங்கள். (ஏறத்தாமதிக்க ஒரு குத்துக் குத்துகிறான்)

மௌலா சய்யதாலி.—அவர்களுடைய தலையை மொட்டையடித்து, கழுத்தில் போட்டிருக்கிற நூலை அறுத்து குடுமியைத் தாடியாகக் கட்டிப் போடு.

பிராம்மணர்கள்.—மன்னிக்கவேணும், சாயபு அவர்களே! நாங்கள் பிராம்மணர்களாயிற்றே.



மௌலா சய்யதாலி.—(கத்தியைக் கையிலேந்தி) பேசாதேயுங்கள். வெட்டிப் போடுவேன்.

குலாம் ஹைதர்.—ஹஜரத்! முடிந்தது.

மௌலா சய்யதாலி—நாம் வெட்டிய பசுக்களுடைய மாமிசத்தை இவர்கள் வாயில் கொண்டு வந்துவை.

குலாம்ஹைதர்.—(செய்துவிட்டு) முடிந்தது, ஹஜரத்.

மௌலா சய்யதாலி.—நான் சொல்லுமாறு அவர்களைத் தங்களுடைய வாயால் மூன்றுதரம்சொல்லச் சொல். "அல்லா ஒருவரே தெய்வம். அவருடைய தீர்க்கதரிசி முகம்மதுவே." (பிராம்மணர்கள் மூன்றுதரம் சொல்ல)

மௌலா சய்யதாலி.—குலாம்ஹைதர்! இவர்களைத் துரத்தி விடு. (ஓடிப்போகிறார்கள்)

(மகம்மதியர்களும் போகிறார்கள்)

---

## இரண்டாம் களம்.

இடம்:—மைவாரில் ஒரு வீதி

தாகூர்தாஸ்-ராஜசேவகன்
பிரிதிமல்-வர்த்தகன்.

---

(பிரிதிமல், தாகூர்தாஸ் இவர்கள்சந்திக்கிறார்கள்.)

பிரிதிமல்.—ராம் ராம்ஜெ, தாகூர்தாஸ்! எங்கு ஐயா! வெகுவிரைவாய் ஓடிக்கொண்டிருக்கிறீர்.

தாகூர்தாஸ்.—பிரதான்ஜி வரச்சொன்னார். போய்க் கொண்டிருக்கிறேன் ஐயா!

பிரிதிமல்.—என்ன ஐயா விசேஷம், அரண்மனையிலே! ராத்திரிமுழுவதும்பேரிகைமுதலிய வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தனவே?

தாகூர்தாஸ்.— தெரியாதா பிரிதிமல் உங்களுக்கு! மகாராஜாவுக்குப் பட்டப்பிள்ளை பிறந்திருக்கிறாரே. பட்டணம் அலங்கரிக்கவும், லக்ஷப்பிராம்மண சந்தர்ப்பணைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவுந்தான் ஓடிக்கொண்டிருக்கிறேன்.

பிரிதிமல்.— பட்டப்பிள்ளையா! இது என்ன அதிசயம்! சற்றே நில்லும். சோண்டாராஜா என்னானார்?

தாகூர்தாஸ்.—என்ன ஐயா! சுவர்க்க லோகத்தினின்று இப்போதே தொப்பென்று குதித்தாற்போல் பேசுகின்றீர். ஊரெல்லாம் உலாவித்திரியும் செய்தி உங்கள் காதிலே நுழையமாட்டேனென்கிறது.

பிரிதிமல்.— நான் மகததேசத்துக்கு வர்த்தக விஷயமாய்ப் போயிருந்து இப்பொழுதுதான் வருகின்றேன். எனக்கு ஒரு சங்கதியும் தெரியாதையா.

தாகூர்தாஸ்.— அந்தக்கதை யெல்லாம் எடுத்துச் சொல்ல இப்போது எனக்கு அவகாசமில்லையே.

பிரிதிமல்.—சுருக்கமாய்ச் சொல்லும், போதும்.

தாகூர்தாஸ்.— மார்வார் தேசத்தரசன் இளையராஜாவாகிய சோண்டாவுக்குத் தன் புத்திரியைக் கொடுப்பதாய்ப் புரோகிதரை அனுப்பினர். சோண்டா இல்லாத சமயத்தில் புரோகிதர் வர, மகாராஜா சாதுரியமாய் "தலை நரைத்த கிழவனாகிய எனக்கா கந்நிகையைக் கொடுக்கப்போகின்றீர்கள். சோண்டா சிறிது நேரத்தில் வருவான். வந்தவுடன் அவன்கையில்கொடுங்கள்" என்றார். சபிகர்கள் சிரித்தார்கள். இச்செய்திகேட்டவுடன் சோண்டா ராஜாவுக்குக் கோபம்வந்து பரிகாசமாகவாயினும் அந்தக்கந்நிகை தனக்கென்றுமகாராஜாசொன்னமையால் அவரே கலியாணம்செய்யவேண்டு மென்றும், தான் செய்துக் கொள்ளப்போவதில்லை யென்றும் உறுதியாய்ச் சொல்லிவிட்டார்.

பிரிதிமல்.— அப்புறம், அப்புறம்! இதென்ன ஆச்சரியம்!

தாகூர்தாஸ்.— அப்புறமென்ன? மகாராஜா என்ன சொல்லியும் இளையராஜா கேளாமையால் மகாராஜாவுக்குக் கோபம் மூண்டு தான் அவ்வாறே கலியாணம் செய்து கொள்ளுவதாயும், அந்த ராணிக்குப் பிள்ளைபிறக்கும் பக்ஷத்தில் இந்த ராஜ்ஜியம் அவனுக்குச் சேரவேண்டியதென்றும் சொன்னார்.

பிரிதிமல்.— என்ன விசித்திரமா யிருக்கிறது! ஆ! அப்புறம்! இளையராஜா அந்த ஏற்பாட்டுக்கு ஒப்பினார்!

தாகூர்தாஸ்.— ஆம், ஒப்பினார் பிரிதிமல்!

பிரிதிமல்.— எல்லா விஷயத்திலும் அவருடைய குணம் இவ்வாறே சிரேஷ்டமாயிருக்கிறது.

ஆனால் நமக்கு சோண்டாராஜா மகாராணாவாகப் போவதில்லையா ?

தாகூர்தாஸ்.— அதற்குரிய பிள்ளைதான் நேற்றுப் பிறந்ததே !

பிரிதிமல்.— எவ்விதமாயினும் சோண்டாவைப் போல் நமக்கு மகாராணா கிடைக்கப் போவதில்லை. என்ன மனஉறுதி, என்ன தைரியம், என்ன சாகசம் ! இன்னுமொருவர் அவரைப் போல் இருப்பாரென்று, தாகூர்தாஸ் ! நீர் கனவில் கூட நினையாதேயும். அநியாயமாய் சோண்டா ராஜாவை நாம் இழந்து விட்டோம். வாஸ்தவந்தானா சொல்லும் தாகூர்தாஸ் !

தாகூர்தாஸ்.— என்ன நிச்சயம் பிரிதிமல் ! ராஜ்ஜிய பாரம் மாறுகிற சமயத்தில் பார்க்கவேண்டும். இந்த ராஜபுத்திரஸ்தானத்தில் நடக்கிற சண்டைகள் நமக்குத் தெரியாவா ?

பிரிதிமல்.— உமக்கென்ன பைத்தியம், தாகூர்தாஸ்! சோண்டாராஜா ஒருக்காலும் சொல் தவறமாட்டார். அவருடைய குணம் எனக்கு நன்றாய்த் தெரியும். எவ்வகையாயினும் மகாராணா அவ்விதமான பரிகாசம் செய்திருக்கப்படாது. அந்தத் தப்பிதந்தான் செய்தாரென்றால், பின்னால் சோண்டாராஜாவுக்கு ராஜ்ஜியம் கிடைக்கக் கூடாத ஏற்பாடும் செய்தார். வெகுகொடுமை, தாகூர்தாஸ் !

ர்தாஸ்.— தூஷியாதேயும் பிரிதிமல் ! ராஜாக்கினைக்கு உமது தலை இரையாகும்.

)மல்.— என்னபேசுகிறீர் தாகூர்தாஸ் ! உலைவாயை மூடினாலும் மூடலாம் ஊர்வாயை" மூடலாமா" என்னும் பழமொழியை யாயினும் கேட்டிலீரோ. பளிங்குபோல் ஜனவாக்கியத்தின் சுபாவம் குணதோஷங்களை எடுத்துச் சொல்வது. தம் அழகைப்பார்த்து சந்தோஷப் படுவதற்கு மாத்திரமா உலகத்தில் மானிடர்கள் கண்ணாடியில் முகத்தைப்பார்த்துக் கொள்ளுகிறார்கள். தோஷத்தையுங் கண்டறிந்து திருத்திக் கொள்ளவுமன்றோ. தோஷத்தைக் காட்டினதென்று கண்ணாடியை உடைக்கிறவர்களுமுண்டோ ? அதற்காக நான் பயப்படவில்லை தாகூர்தாஸ். ராஜாவினுடைய குணதோஷங்களானாலும் எடுத்துக்சொல்லுவதே நலம். ராஜாக்களும் மனிதர்களே யன்றோ. இந்தச் சுவதந்திரம் சூரியவம்ச ராஜாக்களுடைய பிரஜைகளுக்கு இன்று அன்று கிடைத்ததல்ல. ஸ்ரீ ராமசந்திர சக்கரவர்த்தி நாள்முதல் உண்டு. ஒருசாதாரண மனிதனுடைய அபிப்பிராயத்துக்கிணங்கி யன்றோ ஸ்ரீராமசந்திரன் சீதையைக் காட்டில் விட்டார். சங்கதி அறியீரோ தாகூர்தாஸ்!

தாகூர்தாஸ்.—வாஸ்தவந்தான், பிரிதிமல். ராஜனுடைய ஊழியக்காரனுதலால் என் கடமையைச் செலுத்தினேன். எனக்கு நேரமாய்விட்டது பிரதான்ஜி எனக்காகக் காத்திருப்பார். தயவு செய்து விடை கொடும் ராம்! ராம்!

பிரிதிமல் —நல்லது! நல்லது! தாகூர்தாஸ். போய் வாரும். (இருவரும் போகிறார்கள்.)

---

## மூன்றாங் களம்.

இடம்:—கங்கை நதிக்கரை.

---

(விஷ்ணுசர்மா, ராதாகிஷன், * கோபிநாத் பிரவேசிக்கிறார்கள்.)

விஷ்ணுசர்மா.—கோபிநாத் பட்டாச்சாரியரே! ராதாகிஷன்மிசிரரே ! பின்னால் அந்தச்சண்டாளர்கள் வருகிறார்களா பாரும். தூ! தூ! தூ! சுடவேணும் இந்ததேகத்தை. இந்த காக்கைதர்ப்பையைப்போட்டுக் கொளுத்தினால் தான் சுத்தியாகும் இதோபாய்கிறாள் லோகபாவனியாகிறகங்கை

“ ஸம்ஸ்ருஷ்டா ஸ்ருஷ்டம்வாபி ஸ்தூலஷூக்ஷ்மம்வா
வா । மாம்ஸமாவயவேன நாத்ராஸம் வாவ[illegible]
[illegible]ணாத்திகம்॥ ” என்று மரீசி சொன்னவாறு ஒ[illegible]
வன் சாந்தியையும் அனுபவிக்கத் தக்க பெரு[illegible]
பாவங்களையும் விரைவிற் போக்கிப் புனித[illegible]
செய்யும் கங்கை. முழுகியாவது நாம் செய்[illegible]
பாபங்களைப்போக்கிக் கொள்ளலாம் வாருங்க[ள்]

கோபிநாத்.—அதிருக்கட்டும் விஷ்ணுசர்மா ! கா[illegible] கிருச்சிரம், சாந்திராயணம் முதலிய விரத[ங்]கள் செய்து, புனருபநயனம் செய்து கொ[illegible]டாலொழிய நாம் ஜாதியில் சேர ஏற்றவ[ர்]களாக மாட்டோமே. முழுகினால் மாத்திரம் யா[து] பிரயோசனம்?

* 'ராதாகிஷ்ணன்' என்னும் வார்த்தை ஹிந்தியில் 'ரா[தா] கிஷன்' என்று மருவியது.



ராதாகிஷன்.—அதெல்லாம் ஒரு கொடிக்குள் செய்துவிடலாம் கோபிநாத் ! நம்முடைய சிகைகள் யதாப்பிரகாரமாய் முளைக்கிற வரையில் நாம் நம்முடைய ஊருக்குப் போகலாகாதே.

விஷ்ணுசர்மா.—ஊருக்குப் போகிற யோசனை செய்யாதேயும் ராதாகிஷன் ! கோவிலை யிடித்து நம்மை இவ்விதமாய்ப் பரிபவப்படுத்திய பாபிகளைக் கயையை விட்டுத் துறத்தியன்றோ அப்புறம் நாம் ஊருக்குப் போகவேண்டும்.

கோபிநாத்.—நம்மால் என்ன முடியப்போகின்றது விஷ்ணுசர்மா ?

விஷ்ணுசர்மா.— நம்மால் தான் முடியவேணும். மற்று யாரால் முடியப்போகின்றது. பகவான் மானிடர் மூலமாக வன்றோ ஸர்வ காரியங்களையும் முடிக்கின்றார்.

ராதாகிஷன்.—சரிதான் விஷ்ணு சர்மா! இந்த மூன்று ஏழைப்பிராம்மணர்களால் என்னவாகப் போகின்றது? வீட்டில் பிரசவகாலமாயிற்றே.

விஷ்ணு சர்மா.— மூன்று பிராம்மணர்களென்கிறீரே. என்ன ஐயா! சாணக்கியனென்கிற ஒற்றைப் பிராம்மணனன்றோ பிரபலமாய் மகததேசத்திலாண்டு வந்த நவநந்தர்களையும் நாசம் செய்தார். அவ்வளவு தூரம் நாம் ஏன் சொல்லவேண்டும். விசுவாமித்திரர் தாடகை, சுபாகு, மாரீசன் முதலியவர்களுடைய ஹிம்சையை எப்படி ஐயா போக்கிக் கொண்டார் ?

கோபிநாத் —அவருக்குத்தான் தசரத ரொருவர் அகப்பட்டார், நமக்குயார் இருக்கின்றார்கள் ?

விஷ்ணுசர்மா.—அவ்வளவு பெரிய ராஜபுத்திர ராஜ்ஜியத்தில் நமக்குச் சகாயம் செய்யத் தகுந்தவர் ஒருவரேனும் அகப்படாமல்போகின்றாரா பார்ப்போம். பிரயாகைக்குப் போய் கங்காஸ்நானம், பிராயச் சித்தம் செய்து கொள்வோம் வாருங்கள். இங்கு நின்றால் மோசம்; அந்தப் பாபிகள் ஒருக்கால் தொடர்ந்து வருவார்கள்.

(எல்லோரும் போகிறார்கள்.)

---

## நான்காம் களம்.

இடம்:—சபாமண்டபம்.

(லகாராணா மந்திரி முதலியவர்களுடன் சபையிலிருக்க.)

வாசற்காப்போன்.— (சபைக்குள் நுழைந்து) சித் ஸ்ரீமகாராஜாதிராஜ மகாராணா லகாராணா மகாராஜ் ஹிந்து வாசுராஜ் ஸூரியவம்சி மகாராஜ்! கயாவினின்று யாரோ மூன்று பிராம்மணர்கள் தரிசனார்த்தமாய் வந்திருக்கின்றார்கள்.

லகாராணா.— தடையென்ன? உடனே வரச்சொல். (பிராம்மணர்கள் வர.)

லகாராணா.— (ஆசனங்களைக்காண்பித்து) ஆசனத்தில் எழுந்தருள வேண்டும் பிராம்மணோத்தமர்களே. உங்களைத்தரிசித்த இந்த நாள் நல்லநாள். சத்பிராம்மணர்களாகிய உங்களுடைய வரவால் எனது கிரகம் பாவனமாயிற்று. அந்தணர்காள் ! சுகமா ?

விஷ்ணு சர்மா.—உங்களுடைய கிருபை உள்ள வரையில் சுகத்துக்கு யாது குறை. ஒருக்கால் குறை நேரிட்டாலும் நிறைவுபடுத்த ராஜ சிரேஷ்டர்களாகிய தாங்களிருக்கின்றீர்கள்.

லகாராணா.— சந்தேகமென்ன விப்பிரர்களே ?
அராஜகே ஹி லோகேஸ்மிந் ஸர்வதோ வித்ருதே
பயாத் । ரக்ஷார்த்தமஸ்ய ஸர்வஸ்ய ராஜா
நமஸ்ருஜத்ப்ரபு: ॥ என்று மனுசொன்னவாறு உலகத்துள் எளியவர் யாவரும் வலியவர்களால் அச்சமுற்று ஓடும்போதும், அவர்களைக் காக்கும் பொருட்டன்றோ பிதாமகன் அரசர்களாகிய எங்களைப் படைத்தார். தாங்கள் மூவரும் வெகுதூரத்திலுள்ள எனது குடிலை நோக்கிவந்த வழியென்ன ? சொல்லியருளல் வேண்டும் அந்தணர்காள்!

விஷ்ணுசர்மா.— என்னசொல்லப் போகிறோம் மகாராஜா, நாங்கள் பட்டகஷ்டத்தை ? எங்கள் ஜாதிபோய் விட்டது. குலம்போய் விட்டது. வீடு போய் விட்டது. நாடுபோய் விட்டது. நாடோடிகளாய்விட்டோம்.

லகாராணா.—என்னசமாசாரம், ஏன் அப்படி, யார் உங்களுக்கு அபராதம் செய்தனர்கள்?

மூன்றுபிராம்மணர்களும்.— என்ன சொல்வோம் மகாராஜா! நினைத்துக் கொண்டால் உடல் நடுங்குகின்றது. தார்தாரி மகம்மதீயர் கயைக்கு வந்து கோவில்களை இடித்து நிரவிவிட்டு, கோக்களைவதித்து, எங்கள் சிரங்களை முண்டனம் செய்து யஞ்ஞோபவீதங்களை அறுத்து எங்கள் வாயில் கோமாமிசத்தை வைத்து அடித்துத் துரத்திவிட்டார்கள் மகாராஜ்! பதிதர்களாய் விட்டோம். என்ன செய்வோம் மகாராஜ்! அந்தச் சண்டாளர்கள் பட்டணத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய கிரகங்கள் போய்ச் சேரவழியின்றி இந்த நான்கு வருஷகாலமாய் தேசந்தோறும் திரிந்து வருகிறோம். அவர்களை ஒட்டி எங்களுக்கு அபயப்பிரதானம் செய்ய வல்லமையுள்ள ராஜா ஒருவர் எங்களுக்கு அகப்படவில்லை. கடைசியில் உங்களை அடைக்கலமாய் அடைந்தோம். ஆவிளவ்பாஷளஜொகெ ஸஹூஸ்ரய ஜஹெஹிநள । வஙிவூாஜெூாம யாகஸூஹா ணெவாஹிர்ஹவொஹஜக: ॥ என்று சத்ருக்களை வென்று எங்களைக் காப்பாற்றுவதினால் மறுபடியும் திரும்பாத திவ்வியமான பதவி உங்களுக்குக் கிடைக்கும் மகாராஜ்! மேலும் விசுவாமித்திரர் யாகரக்ஷணையினால் பெயர்பெற்ற குலமாயிற்றே உங்களுடைய குலம். எங்களுக்குச் சகாயம் செய்வதும் உங்கள் குலதர்மமே யன்றோ மகாராஜ்!

லகாராணு.—அதைப்பற்றி அதிகமாய்ச் சொல்ல வேண்டுவதில்லை அந்தணர்காள்! அது உங்களுடைய காரியமல்ல. நான் செய்யவேண்டிய கடமை. ஜிதெநஜஷுெதஜக்ஷீ ஜூூதெ கநா விஸ்பாஂமநா । க்ஷணயூாவஹிநிகாலெய விநாவிதாஜெணாஜெண ॥ என்று எனக்குக் கவலையே கிடையாது. சைந்நியசேகரம் செய்துக் கொண்டு இதோ வந்து விட்டேன். நீங்கள் முன்னர் நடவுங்கள். (எழுந்து போகிறார்கள்). மந்திரீ! சோண்டாவை அழைத்து வாரும்.

மந்திரி.—அப்படியே, மகாராஜ்!

(சோண்டாவர)

லகாராணு.—சோண்டா! புத்திரா! என் சமீபத்தில் வா. இதுகாறும் இங்குவந்து பேசியிருந்த மூன்றுப் பிராம்மணச் சிரேஷ்டர்களைக் கண்டாயோ

சோண்டா.—நான் அவர்களைச் சற்று முன்னர் கேட்டைவாயிலிற் கண்டேன் பிதாவே!

லகாராணு.—அவர்கள் கயையினின்று வந்த பிராம்மணோத்தமர்கள். அங்கு மகம்மதீயர்களால் மிக்க வாதைப்பட்டு பொறுக்கமாட்டாமல் நம் சகாயத்தைக் கோரி இங்குவந்தார்கள். மகம்மதீயர்கள் கயா கோவில் முழுவதையும் நாசமாக்கி விட்டார்களாம். கேட்டாயா அவர்கள் செய்த கொடுமையை?

சோண்டா.—அப்படியா மகாராஜ்! தயவு செய்த என்னை சைந்நியங்களோடு கூட்டி அனுப்பும். ஒரு நொடிக்குள் சத்துருக்களைக் கொன்று வெற்றிகொண்டு வருகிறேன், பாரும் மகாராஜ்!

லகாராணு.— நீ வெற்றிபெறுவா யென்பதற்குச் சமுசயமில்லை புத்திரா. ஆகிலும் விருத்தாப்பிய தசையடைந்த நானிருக்க இளைஞனாகிய உன்னை யுத்தத்திற்கு அனுப்புவது உசிதமல்ல.

சோண்டா.—தசரத சக்கிரவர்த்தி விசுவாமித்திரருடைய யாகத்தைக் காப்பாற்றும் பொருட்டுத் தமது அருமைப் புதல்வராகிய ஸ்ரீராமலக்ஷ்மணர்களை அனுப்பவில்லையா மகாராஜ்?

லகாராணு.— விசுவாமித்திரரைத் திருப்திசெய்யும் பொருட்டு அனுப்பினாரன்றி மனஸ் பூர்த்தியாய் அனுப்பினாரில்லை. இப்பொழுதுப் நான் யார் வேண்டுகோளுக்கிணங்க உன்னை அனுப்ப வேண்டும். நீ கிருகஸ்த தர்மத்தை ஏற்றுக் கொண்டு பலவருஷங்கள் உலகத்துக்கு ஹிதார்த்தமாய் ராஜ்ஜியபாரம் வகித்துப் பிறகன்றோ மறுமைக்காக இத்தகைய காரியங்களைச் செய்ய முயலல் வேண்டும். எனக்கோ வயதாகிவிட்டது. மறுமைப் பயனைத் தேடவேண்டிய காலம் வந்துவிட்டது. செங்கோல் செலுத்துங்கால் அரசர் தீராமல் அனேக பாவத்தொழில்களைச் செய்ய நேரிடுகின்றது. பிற்காலத்தில் இவ்வித நற்காரியங்களைச் செய்தன்றோ பாவபலன்களைத் தொலைக்கவேண்டும். ஆகையால் புத்திரா, நானேபோவேன். அதற்குத் தடை செய்யாதே. மேலும் சத்துருமத்தியிலிருக்கும் இவ்விராஜ்ஜியத்தைக் காப்பாற்ற உன்னைப்போன்ற



வீரர்கள் தேசத்திலேயே சித்தமாயிருக்க வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள் சபிகர்காள்?

சபிகர்கள்.—சத்தியம்! சத்தியம்!

சோண்டா.—நல்லது மகாராஜ்! நான் இனித்தடை செய்யேன்.

லகாராணு.—மற்றொரு விஷயம் புத்திரா!

சோண்டா.—என்ன பிதாவே?

லகாராணு.—முரடர்களாகிய மகம்மதீயருடன் சண்டையிட இந்த விருத்தாப்பிய காலத்தில் வெகு தூரதேசம் செல்லப் போகின்றேன். கால தேச விவகாரங்கள் எவ்விதமாயிருக்குமோ அறிய மாட்டோம். உயிர் தப்பித் திரும்பிவருவது வெகுவாயச் சமுசயம். ஆகையால் புத்திரா! இவ்விராஜ்ஜிய விவகாரத்தை ஒழுங்குபடுத்திப் பிறகு பிரயாணம் செய்யலாமென நினைக்கின்றேன். உனக்கும் உன் தம்பியாகிய குழந்தை மோதலுக்கும் தவிர மற்றவர்களுக்குத் தகுந்த ஏற்பாடு முன்னரே செய்திருக்கின்றேனல்லவா?

சோண்டா.—ஆம்.

லகாராணு.—இப்போது உன் தம்பி மோதலுக்கு எந்தெந்த மாகாணங்களைக் கொடுக்கலாம் சொல்?

சோண்டா.—"சித்தூர் சிங்காஸனாதிபத்தியம்" மகாராஜ்! சமுசயம் ஒழிந்துபோமாறு மகாராஜ், தாங்கள் யாத்திரை போகு முன்னரே மோதலுக்கு ராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்து பிறகு பிரயாணம் செய்யல் வேண்டும். பட்டாபிஷேக சமயத்தில் நானே முதன் முதலில் குமாரராஜாவுக்கு அடங்கி நடப்பதாயும், துரோகம் செய்வதில்லை யென்றும் உறுதிமொழி கூறுகின்றேன். ஆனால் மகாராஜ் எனக்குத் தாங்கள் ஒரு வாக்குத்தத்தம் செய்யவேண்டும். அதாவது, ராஜசபையில் எனக்கு பிரதமஸ்தானத்தைக் கொடுக்கவேண்டும். சாமந்தராஜர்களுக்கு நாடுகள் விடுகிற சாஸனங்களில் மகாராணு கையொப்பமிடுங்காலத்தில் அதற்கு முன் என் ஆயுதத்தின் குறிப்பு அச்சிடப்படல் வேண்டும். மகாராஜ்! இது தான் எனது வேண்டுகோள்.

லகாராணு.—உனது சத்தியகுணத்தை மெச்சினேன் புத்திரா! உனதிஷ்டப்படியே யாவும் நடக்கும். சமுசயமில்லை. ஜேஷ்ட பிராதா பிதாவுக்குச் சமானன் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றமையால், புத்திரா! நீ உன் தம்பி மோதல் குழந்தையாகையால் அவனை உன் புத்திரனாகப் பாவித்துக்காப்பாற்றல்வேண்டும். உன்தாயார் சம்பகமாலையையும் காப்பாற்று. எல்லாவற்றையும் அறிந்த உனக்கு நான் என்ன சொல்லப் போகின்றேன். ராஜபுத்திரர்கள் மத்தியில் இளங்குழந்தை ராஜனாயிருத்தல் வெகு அபாயகரமானது. ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள் சோண்டா! சொன்னேன்! சொன்னேன்! (மந்திரியை நோக்கி).

மந்திரீ, நாளையதினம் பட்டாபிஷேகம். வேண்டிய வஸ்துக்களைத் தயார் செய்யும். சாமந்தராஜாக்களுக்கெல்லாம் செய்தி அனுப்பும். எனக்கு வேண்டிய சைந்நியங்களையும் பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களையும் சேகரியும். தாமதம் செய்யலாகாது. எழுந்திரும் சீக்கிரம்! சீக்கிரம்!

(சபை கலைந்தது)

எச். வெங்கோபராவ்.

## சோபாமணி.

(143-வது பக்கத்தொடர்ச்சி.)

அரசன்.— "என்றன் காதலனம்பனே! நீ இன்னும் இளைஞனா யிருக்கின்றாய். இளைஞரும் மூடரும் என்னைப் பழிகூறின் யான் அதனைப் பொருள் செய்வதில்லை. நீ பெரியனாகி வியவகார தசையடையுங்கால் விஷயங்களை நன்காராய்ந்தே பேசுவாய். அதுநிற்க. இதுவே சோபையா மான்ஸ்பீல்டின் விண்ணப்பதிற்கு உத்தரவு." (அவனிடத்து ஆல்பார்ட் எழுதிய விண்ணப்ப பத்திரிகையைக் கொடுத்தான்.) அதனுட்கண்ட உத்தரமாவது:— வருமாதம் இந்நாளினுள், பெர்லின் நகரத்துச் சிறுமட்கலத்தைக், கண்டோர் வியக்குமாறு மிக்க தொழிற் பாடமைந்ததாகச் செய்து முடித்துக் காட்டுவோர் எவரேயாயினுமாகுக, அவர்

யாரை மணக்க விரும்புவரோ அவரை மணக்கவும், யாரை மணவா தொழிய வேண்டுவரோ அன்னோரை மணவாதொழியவும் செய்வேன். அஃதன்றியும், அத்திறமமைந்த சிற்பியின் விருப்பின் வண்ணம் வேண்டிய அமைப்புக்களோடு அவரை ஸாக்ஸனிக்கு ஏகுமாறு விடுக்கவும் விடுப்பேன். மற்றும், அவர் இந்நகரத்தே வதிய விரும்புவரேல் அன்னவர்க்கு ஐஞ்ஞூறு பொன்னும்பரிசில் அளித்து அவரது நல்வாழ்க்கைக்கு அடுத்த நலனெல்லாம் அமைத்துந் தருவேன். இம்மட்டேயோ? அத்தகைய தொழிற்றிறம் வல்ல சிற்பியின் பெயரும் அக்கலத்தின் மீதே பொறிக்கப்படும். அக்கலத்துக்கு ப்ரஷ்யாப் பீங்கான் எனப்பெயரும்இடப்படும்."

இதனைப்படிக்கக் கேட்டலும், ஸோபையாவுக்கு உண்டாகிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் என்னென்றியம்பலாம்! களிப்பெனும் அளக்கரிற் குளித்தெழுந்தாள். ஆயினும், அவள்போலவே சித்திரவேலையிற் றிறமமைந்த வேறு சிலரும் இருந்தனர். ஆதலின், அரசன் அளித்த உத்தரவை அறிந்த அக்கணமே அத்தொழிற்சாலையிலுள்ள ஆடவர் மகளிரனைவரும் முனைந்து வேலைசெய்ய முயன்றனர். சிலர் சிறை நீங்கிச் சுதேயஞ் சென்று சுகம் பெற நினைந்தனர். சிற்சிலர் ஐஞ்ஞூறு பொன்னுக்காசைகொண்டனர். சிலச் சிலர் தம்பெயர் கலத்தின்மீது பொறிக்கப்படுமென்று அப்பெருமைக்கு அவாக் கொண்டனர். எனினும், நம் ஸோபையாவைப்போல அத்துணை ஊக்கமும் உற்சாகமுங் கொண்டாரொருவருமிலர். இறுதியில் ஸோபையா இயற்றிய சித்திர மட்கலனையும் ஏனையோர் செய்த மட்கலன்களையும் ஸான்ஸூஸியிலுள்ள சித்திரசாலைப் படிக்கட்டின் மீது நிரனிற அடுக்கி வைக்குமாறு அரையன் ஆணைசெய்ய, அங்ஙனமே அவையனைத்தும் ஒருசேர ஒழுங்காக அச்சோபான்மிசை வைக்கப் பட்டன. பிரடரிக் வேந்தன் தான் பகற்கட் புரியலாகுந் தொழிலனைத்தையும் முடித்துக்கொண்டு மாலையில் அவற்றைப் பார்வையிட ஆண்டுச் சென்றனன். அவனோடு லானிஸ்காவும் மற்றுஞ் சிலரும் போயினர். மன்னவன் மட்கலன்களைக் கண்ணுணியிட்டு அவற்றின் தரங்களைப் பார்த்துவருதலை நோக்கி எவரும் உரையாடாது அமைதியோடிருந்தனர். அவ்வமயத்து, "இதுவே ப்ரஷ்யாமட்கலன்" என்று ஒன்றினைக் கையிலெடுத்தனன். அதுவோ நம் ஸோபையாவினது. அதனைக்காணலும். லானிஸ்கா அதனடியிற் பொறிக்கப்பட்ட அவளது பெயரை அரசனுக்குக் காட்டுவான் அங்ஙனே சிறிது பொழுது தங்கியிருந்து, அக்கணமே, அம்மகிழ்ச்சியை ஸோபையாவுக் குரைத்திட ஓடினன். அப்பொழுது, தனது கதி யாதாகுமோவென் றேக்கங்கொண்டு விதியை நினைந்து, போட்ஸடத்தில் லானிஸ்காவின் தாய் வீட்டிற் காத்திருந்த ஸோபையா வினது வாட்டத்தைக் கண்ட அப்பெரியாள் "பெண்ணே! அருட்பெருங் கடலான ஆதிநாயகன் நினது வேண்டுகோளை அளித்திடுவன். அவனது திருவருட்டிறத்தைச் சிந்தைசெய்து தேறியிராய். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது அறியாயோ? தன்னையேபற்றினார்க்கு அவன்றன் பொன்னடிப் போதே மன்னிய துணையென் றுன்னுவாய்.

### ஆசிரிய விருத்தம்.

வீட்டினுற்றுணை வெளியினற்றுணை
விண்ணினற்றுணை மண்ணினிற்
காட்டினற்றுணை மேட்டினற்றுணை
கடலினற்றுணை யுடலெனுங்
கூட்டினற்றுணை சாற்றினவ்விறை
கோதி னற்றுணைப்பாதமே
நாட்டினற்றுணை கூடவேறிலை
நாடுவாய் நலனீடவே.

மழை பொழிவதும், காற்று வீசுவதும் சூரியன் முதலியவை ஒளி செய்வதும், மக்கள் தத்தமக்கு விதித்தநெறியி னிற்பதும் ஆகிய இவ்வுலகியல்கள் நிகழ்வது எவருடைய ஆணையினால்? அம் முழுமுதற் கடவுளது திருவாணையினாலன்றோ? ஒவ்வொரு காலத்தில் மழை பொழியாதொழியவும், காற்று வீசாது நீங்



வும், சூரியன் முதலிய ஒளிகள் விளக்கஞ் செய்யாது மறையவும் செய்பவர் யாவர்? அவர் தாமே. அவருடைய பரமசக்தியின்றி எப்பொருளும் எதனையும் இயற்றவல்லதாகாது. "அவனன்றி யோரணுவுமசையாது' கண்டாய்" என்றிங்ஙனம் தேற்றலும், அப்பெண்மணி பின்வருமாறு அவ்வருட் பெருங்கடலான இறைவனைத் துதிப்பாளாயினள்: "அகிலநாயகனே! ஆதியந்த மில்லாதானே! இனைத்தென்றறிவரிய பொருளே! ஈறிலின்ப மூர்த்தியே! உன்னுவாருள்ளத்தூறுமோர் தெள்ளமுதே! ஊனுமுயிருமானவனே! எய்ப்பில் வைப்பே! ஏத்துவா ரிடர் கெடுக்கு மீசனே! ஐந்தவித்தவர்தம் அரும் பெறன் மணியே! ஒப்புயர் வற்ற நற்பொருளே! ஓதியோதியுணருந்தொறு முணர்ச்சியுதவு மொண்சுடரே! ஔவியமவித்தார்க் கரும்பெருஞ் செல்வமே! நினது கண்ணிடங்கொண்ட திருவருள்வெள்ளத்தி லொரு சிறு துளியை யென்மீது சிதறவிடலாகாதோ?

'கடலமுதே தேனேயென் கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார் நீ பராபரமே.'

'பாராயோ வென்னைமுகம்பார்த்தொருகாலென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.'

'ஓயாதோ வென்கவலை யுள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே.'

'உள்ள மறிவா யுழைப்பறிவாய் நானேழை
தள்ளி விடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.'

'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய் பராபரமே.'

'எண்ணாத வெண்ணமெலா மெண்ணியெண்ணி
யேழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே.'

'துன்பக்கண் ணீரிற் றுளைந்தேற்குன் னானந்த
வின்பக் கண்ணீர் வருவ தெந்நாள் பராபரமே.'

நீங்காத வின்ப நிறைவே யெனையருளித்
தாங்காய்நீ யிந்தத் தருணந் தயாகரனே!

உன்னையே நற்றுணையா வுற்றலைடந்தே னுள்ளமுவந்
தென்னைநீ காத்தருளா யெந்தாய் தயாகரனே!

வந்தித் துன்பாதம் வாழ்த்தி யடுத்தேனென்
சிந்தைப் பிணிதீரச் செய்யாய் தயாகரனே!"

என்றின்னவாறு பன்னிப் பரவி உள்கரைந்துரைத்து, வேந்தன் கட்டளையை எதிர்பார்த்திருக்கு மெல்லையில், லானிஸ்கா விரைந்தோடி வந்து அவளது மட்கலம் அரசனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மகிழ்ச்சியை உரைத்திடவே, அவளுக் குண்டான ஆனந்தத்தை அளந்துரைக்க யாரானாகும்? எழுதினும் அடங்காது மொழியினு மடங்காது. நடுக்கடலிற் றிசைதப்பி அலைந் தல்லற்படுவானொருவன் தற்செயலாய் ஒருதுறையைக் கண்டது போலவும், கைப்பொருளை யிழந்து கலங்குமொருவன் அதனை மீளவும் கைப்பெற்றாற் போலவும், கவலையாற் கலங்கி நின்ற ஸோபையா 'தனது கவலையொழியும் உபாயங் கையுறப் பெற்றாள்' 'கரை செய்யவரியதொருபேருவகைக்கடன் மூழ்கி' ஆநந்தக் கண்ணீருகுத்தாள். உள்ளங் குளிர்ந்தாள். ஓடினாள். ஆடினாள். பாடினாள். தனக்குச் சந்தோஷங் கூறிய லானிஸ்காவினது பாதத்து வீழ்ந்தாள். எழுந்தாள். புகழ்ந்தாள். தன்னுடன் ஆங்குக் காத்திருந்த தன் காதல் நண்பனைக் கிட்டினள். அவனுக்கு அக்களிப்பினை யுரைத்திட்டாள். அவனும் அக்களிப் பென்னும் அளக்கரிற் றிளைத் தெழுந்து, "தேமொழீ! நின்பங்கில் இறைவன் செய்த திருவருட்டிறத்தை யென் சொல்வேன்? ஆபத்பந்து, அநாதரக்ஷகன், அடைந்தாரைக் கைவிடான் என்று ஆன்றோர் கூறும் மொழித்திறத்தினது உண்மையைக் கண்டாயே.

### கலி விருத்தம்.

கவலை யாழியுட் பட்டுக் கலங்கிய
அவல நீங்கி யகமகிழ்ந்தாரிங் கிவள்
தவல ருஞ்சுகந் தான்பெறச் செய்தனை
குவல யத்துன் குணஞ்சொலலாவதே"

என்றிங்ஙனம் உரையாடித்தன் காதலியுந் தானுங் களியாட்டயராநிற்க, ஸோபையாதன் நண்பனை பிற்றைநாட் காலையில் மணஞ் செய்து கொண்டு அவர்களுடைய தந்தைதாயர் உறையும் ஸாக்ஸனிக்குப் போகலாகுமென்று காவலனது கட்டளையுற, அதனைப் பெற்ற அவ்விருவரும் தமது வேண்டுகோள் முற்றும் ஈடேறப் பெற்றவராகிக் கொண்டடங்காத ஆநந்தவாரியிற் குளித்தெழுந்து, லானிஸ்காமாட்டும் அவன்றன் தாய்மாட்டும் விடைபெற்றுத் தம்மூர்க்குச் செல்லப் புறப்படுங் காலையில், சடிதியில் மாடப்படிக்கட்டில் ஓராரவாரம் எழுந்தது கேட்டுத் திடுக்கிட்டனர்.

(இன்னும்வரும்.)

கே. எஸ். கோபாலாசாரியார்.

## கள்ளுண்ணாமை.

---

### திருக்குறள்.

93-ம் அதிகாரம்.

உட்கப்படாஅ ரொளி யிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகுவார்.

(பொழிப்புரை) கள்ளில் இச்சை வைக்குபவர் எந்நாளும் பகைவரால் அஞ்சப்படார். அதுவே யல்லாமல் முன்பெற்று நின்ற கீர்த்தியை இழந்துவிடுவார்.

உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
னெண்ணப்படவேண்டாதார்.

(பொழி) அறிவுடைய ராயினோர் அவ்வறிவு கெடுதற்கு ஏதுவாகிய கள்ளை உண்ணாதிருக்கக்கடவர். உண்ணவேண்டுவோர் உண்டாயின் நல்லோரால் மதிக்கப்பட விரும்பாதார் உண்ணக்கடவர்.

ஈன்றாள் முகத்தேயு மின்னாதாலென்ன மற்றுச்
சான்றோர் முகத்துக்களி.

(பொழி) எது செய்தாலும் மகிழ்ச்சியடைகின்ற தாய் முன்பானாலும் கள்ளுண்டு களித்தல் துன்பம் செய்வதாம். ஆதலால் பின்குற்றம் யாதும் பெறாத பெரியோர் முன்பு அக்களித்தல் அவர்க்கு யாதாகும்.

நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத்தார்க்கு.

(பொழி) மதுவென்று சொல்லப்படுகின்ற யாவரும் இகழும் மிகுந்த குற்றத்தையுடையவர்க்கு நாணமாகிய நல்லவள் அவரைப்பார்க்கிறதற்கு அஞ்சி எதிர்முகமாகாள்.

கையறியாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறியாமை கொளல்.

(பொழி) ஒருவன் கைப்பொருளைக்கொடுத்து கள்குடித்து மெய்மறதியைக் கொள்ளுதல் அறிவில்லாமை யுடையது.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.

(கருத்துரை) கள்ளைக்குடித்தவர் விஷத்தைக் குடித்தவர்க்கு ஒப்பாவார்.

உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றும்
கள்ளொற்றிக்கண் சாய்பவர்.

(கருத்) கள்ளைக்குடித்து அறிவுமயங்குவோர் சிரிக்கப்படுவார்.

களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கேமிகும்.

(கருத்) கள்குடிக்கில் உட்பொருள் வெளிப்படும் ஆகையால் ஆசாரஞ் சோருதலை கைவிடக்கடவர்.



களித்தானைக்காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇயற்று.

(கருத்) கள்குடித்தவனை தெளிவித்தல் எதுபோலெனில் நீருள் மூழ்கினவனை விளக்கினால் தேடுதல் ஒக்கும்.

கள்ளுண்ணாப்போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான் கொலுண்டதன் சோர்வு.

(கருத்) கள்ளுண்பவன் தான் குடியாதபோது குடித்தவனைக்கண்டு தன் சோர்வை நினையான் போலும்.

### வெண்பா.

நாதவிந் தூறு களிர்ப்பாண டொடுசோபை
வாதபித்தங்கிராணி வன்காப்பான்—பேதியிவை
பொங்கி யதிகரிக்கும் புத்திகெடு மேகமுண்டாந்
தெங்குமது விற்கென்றே செப்பு.

(கருத்) தென்னங்கள்ளுக்குச் சோணித சுக்கிலம் பெருக்கம் பாண்டு ரோகம் சோபைவாதபித்த தொந்தம் ரத்தக்கழிச்சல் கரப்பான் பேதிபிரமேகம் ஆகிய இவைகள் உண்டாகும். அறிவும் கெடும்.

### பழமொழி.

"கள்ளுவிற்றுக் கலக்காசு சம்பாதிப்பதிலும் கற்பூரம் விற்றுக் கால்காசு சம்பாதிப்பது மேல்" என்ற பழமொழியும் உண்டு.

---

### கம்பராமாயணம்.

கிஷ்கிந்தா காண்டம்—கிஷ்கிந்தைப் படலம்.

(90—95).

ஏயின விதுவலான் மற்றேழைமைப் பாலதென்றோ
தாயிவண் மனைவி யென்னும் தெளிவன் றேற்றரும மென்னும்
தீவினையைந்தி னொன்றாமன்றியுந் திருக்கு நீங்கா
மாயையின மயங்குகின்றா மயக்கின் மேன் மயக்குவைத்தாம்.

(கருத்) கள்ளைக் குடிப்பதினால் தாயிவள் மனைவி இவள் என்று புத்தி தெரியாதிருக்குமானால் வேறு என்ன தருமம் இருக்கிறது? பஞ்சமா பாதகங்களில் ஒன்று இந்தக்கள் குடி. ஏற்கனவே மாயாசம்பந்தத்தால் மயங்குகின்றோம். இதையறியாது பின்னும் கள்ளைக்குடித்து மயக்கத்தின்மேல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டோம்.

தெளிந்து தீவினையைச் செற்றோர் பிறவியைத் தீர்வரென்ன
விளிந்திலா வுணர்வினோரும் வேதமும் விளம்பவேயும்
நெளிந்துறை புழுவைநீக்கி நறவுண்டு நிறைகின்றேனால்
அளிந்தகத்தெரிந் தீயை நெய்யினாலவிக்கின்றாரின்.

(கருத்) இது நல்லது இது கெட்டது என்று அறிந்து கெட்டவினைகளை வெறுத்து நீக்குபவர் இப்பிறவித் துன்பத்திலிருந்து நீங்குவார்கள் என்று

மேன்மைதங்கிய அறிஞரும் வேதமும் சொல்வதாயிருக்க இதை அறியாது நெளிந்துகொண்டிருக்கிற புழுவை நீக்கிவிட்டு கள்ளைக்குடித்து நிறைந்திருக்கிறேன். இது உள்ளே எரியும்படியான தீயை நெய்யைவிட்டு அவிக்க முயல்வதை ஒக்கும்.

தன்னைத்தானுணரத் தீருந்தகையறு பிறவியென்ப
தென்னத்தான் மறையுமற்ற துறைகளுமிசைத்தவெல்லம்
முன்னைத்தான் றன்னையோரா முழுப்பிணி யழுக்கின்மேலே
பின்னைத்தான் பெறுவதம்மா நறவுண்டு திகைக்கும் பித்தோ.

(கருத்) ஒருவன் தன்னைத்தானே உணர்வானாயின் துன்பமுள்ள பிறவியானது நீங்கும் என்று வேதமும் சாஸ்திரங்களும் சொல்லும் தன்னைத் தானே யறியாது மாயா சம்பந்தத்தில அகப்பட்டுப் பின்னும் கள்குடித்துத் திகைப்பது பைத்தியக்காரத்தன மேயன்றி வேறல்ல.

அளித்தவர் அஞ்சநெஞ்சின் அடைந்தவர் அறிவு மூழ்கிக்
குளித்தவர் இன்பதுன்பங் குடைந்தவர் குடைந்த வேரி
ஒளித்தவர் உண்டு மீண்டிவ்வுலகெலா முணர வோடிக்
களித்தவரெய்தி நின்றகதியொன்று கண்டதுண்டோ ?

(கருத்) கள்ளை வார்த்தவர்கூட மிகவும் பயப்படும்படி குடித்தவர் அறிவு கெட்டுத் துன்பத்தை யடைந்து உலகமெல்லாம் அறியும்படி அங்கு மிங்கும் ஓடிக்களிப்படைவதல்லாமல் அவர்கள் அடையும்படியான வேறு நல்லகதி ஒன்று உண்டோ ?

செற்றதும் பகைஞர் நட்டார் செய்த பேருதவிதானும்
கற்றதுங் கண்கூடாகக் கண்டதுங் கலைவலாளர்
சொற்றதுமானம் வந்து தொடர்ந்ததும் படர்ந்த துன்பம்
உற்றது முணராராயின் இறுதி வேறிதன்னின் உண்டோ ?

(கருத்) அதன் கெடுதியைக் குறித்துத்தான் கற்றதும் தன் கண்ணால் அக் கெடுதிகளைப் பார்வையிட்டதும் சாஸ்திர பண்டிதர்கள் சொன்னதும் மானம் வந்து தொடர்ந்ததும் அதிக துன்பம்நேர்ந்ததும் ஆகிய இவைகளை ஆராய்ந்தறியாவிட்டால் இதைவிட வேறு என்ன முடிவு இருக்கிறது ?

வஞ்சமுங் களவு பொய்யும் மயக்கமும் மாயில் கொட்பும்
தஞ்சமென்றோரை நீக்குந்தன்மையுங் களிப்புந்தாக்கும்
கஞ்சமெல்லணங்குந் தீருங்கள்ளினால் அருந்தினோரை
நஞ்சமும் கொல்வதல்லால் நரகினை நல்காதன்றே.

(கருத்) வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் சரணமடைந்தவரை நீக்கும் தன்மையும் கள்ளருந்தினவர்களிடத்தில் உண்டாகும். இலட்சுமி கடாட்சமும் நீங்கும். விஷமும் ஒருவனைக்கொல்லுமேயொழிய நரகத்திற் சேர்க்காது. கள் என்றாலோ நரகத்தையும் அடைவிக்கும்.

ஐயா நான் கள் உண்பதால் இவ்வளவு கெடுதலிருக்கிறதென்று அறிந்து கொண்டேன். இனி மனதிலும் நினைக்கமாட்டேனென்று சுக்கிரீவன் சொன்னான்.

நான்மணிக்கடிகை.

"கள்ளிடும்பைகளியறியும்"

(இ. பொ) கள்ளுண்பதினாலாகும் துன்பத்தைக் கள்குடிப்பவனே யறிவான்.



## பிரபஞ்சமாயாவிலாசம்.

III.

(VI-வாலியம் 365-வது பக்கத்தொடர்ச்சி)

### தீக்ஷதர் வரன்தேடச்சென்ற வைபவம்.

அப்புதீக்ஷதர் மறுநாட் காலையில் எழுந்திருந்து ஸ்நாந ஸந்தியாவந்தனம் முதலியன முடித்துத்தனது சகபாடியாகிய இராமசுவாமி சாஸ்திரிகளுடன் கலந்து ஆலோசனைசெய்து அன்று சூரியாஸ்தமனத்திற்குள் ஒரு நல்ல முகூர்த்தத்தில் வரன் தேடப்புறப்பட்டு விடுகிறதென்கிற தீர்மானம் செய்துகொண்டு வீட்டிற்குவந்தார். இதனிடையில் அவரது பத்நி அருணோதயத்திற்குமுன் துயில் நீத்துத் தன்பர்த்தாவைப் பயணப்படுத்தியனுப்பவேண்டுமென்ற ஆவல்தூண்ட வீட்டுக்காரியங்களை யெல்லாம் விரைவில் செய்துவிட்டு நீராடிக் கௌரிபூஜையும் செய்து பின்பு சமையலுக்கு ஆரம்பித்துவிட்டாள். இடையிடை தன்குழந்தைகளைத் தன்னருகிலழைத்து மிக அன்புபாராட்டிக் கல்யாணம் நடக்கப்போகிறதென்கிற சந்தோஷ சமாசாரத்தையும், அதன் பொருட்டு அகமுடையான் தேடிவர அன்று மாலையில் அவர்களது தகப்பனார் புறப்பட்டுப் போகிறார் என்றசங்கதியையும் அப்பெண்களுக்குத்தெரிவித்து, அடிக்கடி "ஜானகி! அப்பா வருகிறாரோ பார். பொழுதாகி விட்டதே" என்றுசொல்ல, ஜானகியும் அவளது சகோதரியும் தங்கட்கு விவாகம் நடக்கப்போகிறதென்கிற எண்ணத்தினால் எழுந்த மகிழ்ச்சியானது தமது களங்கமற்ற மனதில் ஊசலாடா நிற்ப, வாசற்கும் சமையல் அறைக்கும் போவதும் வருவதுமாக விருந்தார்கள். இவ்வாறிருக்கையில் தெருக்கோடியில் தங்களது பிதா வருவதைக்கண்ட சிறுமிகள் மிகக்களிப்புற்று "அம்மா அம்மா". வென்று கூப்பிட்டுக் கொண்டு உள்ளே ஓடிவந்து "அப்பா வந்து விட்டார்" என்று சொல்ல, அவர்களது தாயாரும் மனதில் சந்தோஷமும் முகத்தில் புன்னகையும் உலவக் குழந்தைகள் பின்னால் ஓடிவரத் தன் பர்த்தாவை எதிர்கொள்ள வாசலை நோக்கி வந்தாள். அவள் வாசற்படியில் வந்து நின்றவுடன் தீக்ஷதரும் வைதிகக்கோலத்துடன் வீட்டையணுக, ஒருபெண் ஓடிப்போய் ஆவலுடன் புஷ்பப்புட்டிலையும் மற்றவள் மடிசஞ்சியையும் வாங்கிக்கொள்ளவே தலையிலிருந்த ஈர வேஷ்டிகளை இடதுகையில் எடுத்துக்கொண்டு வலதுகையில் ஸ்தாலியுடன் உள்ளே நுழைந்தார். தன் குழந்தைகள் தன்னுடைய வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்து தான் வந்தவுடன் தாயைக் கண்ட கன்றுபோலத் துள்ளிக் குதித்து ஓடிவந்து தன்னிடத்தில் இருந்த சாமான்களைத்தலைக்கொன்றாய்க் களிப்புடன் கைக்கொண்டு தனதுசிரமத்தை நிவர்த்திசெய்ததையும், இயற்கையாய் அழகுவாய்க்கப்பெற்ற தனது இல்லாள் சுமங்கிலிக்கின்றியமையாத மஞ்சட்பூச்சும் குங்குமப்பொட்டும் அமைந்துள்ள முகத்தினில் மனதின்கணுள்ள உவகையானது நடனம் செய்யாநிற்பப் புன்னகையோடு தன்னையெதிர்கொண்டு வந்ததையும் கண்டு அகங்குளிர்ந்து முகமலர்ந்து சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருப்ப, அவரது காதலி "இன்னும் நீங்கள் வரவில்லையேயென்று கிலேசம்கொண்டு மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். நல்லவேளையாய் சீக்கிரம் வந்துவிட்டீர்கள். சமையலும் ஆகிவிட்டது" என்றனள்.

தீ —"என்னாலொன்றும் ஆலஸ்யமில்லை. பூஜை முடிந்தவுடன் போஜனத்திற்குட்கார வேண்டியதுதான்."

சம்.—"பூஜைக்கு வேண்டியனவெல்லாம்சித்தமாய் வைத்திருக்கிறேன். ஆரம்பிக்கலாம்" என்று சொல்லிக்கொண்டே ஈர வேஷ்டிகளை வாங்கித் தட்டிக் கொட்டி உலர்த்தினாள். 10 நாழிகைப்பொழுதிற்குச் சாப்பாடும் ஆகிமுடிந்தது. பிறகு தீக்ஷதர் பஞ்சாங்கத்தை யெடுத்துப்பார்த்து 5 மணிக்குமேல் 5½ மணிக்குள்ளாக நல்ல

வேளையில் புறப்படுவதாகத் தீர்மானித்தார். பிரயாணத்திற்கு வேண்டியசாமான்களை யெல்லாம் எடுத்துத் தயார் செய்த பின்பு சிரமபரிகாரம் செய்துகொள்ளும் பொருட்டுச் சற்றுச் சயனித்துக் கொள்ள, அவரது காதலி பக்கத்திலிருந்து தாலாட்டுவதுபோல ரஸமாய் உரையாட நித்திரைகொண்டனர். கொள்ளவே அவரது பத்நி சில சிற்றுண்டிகளைச் சமைத்து வைப்ப அவரும் தூக்கம் தெளிந்து எழுந்திருந்து அவ்வுண்டிகளையுண்டு பயணத்திற்குச் சந்நத்தமாயினர். இவ்வாறிருக்கையில்,

சம்சாரம்.—இராத்திரி ஆகாரம் வேண்டுமே. கட்டுசாதம் பிசைந்து கொடுக்கட்டுமா.

தீ.—அஸ்தமன சமயத்திற் புறப்படுகிறதினால் இராத்திரியில் திருச்சிராப்பள்ளியில்தான் தங்கவேண்டும். அப்படியிருக்கும் பக்ஷத்தில் கட்டுசாதம் என்னத்திற்கு?

சம்.—அங்கிருந்தால் பசியாதா?

தீ.—பசியாதென்று சொல்லுகிறேன்! மகாராஜன் 'களப்பு'ப் போட்டிருக்கிறான். சுசிருசியாயிருக்கும் சாப்பாடு. ஆசாரத்தில்கும் குறைவில்லை. திருச்சிக்குப்போகும் பொழுதெல்லாம் அங்கேதான் சாப்பிடுவது வழக்கம்.

சம்.—அப்படியா சமாசாரம்! போகிறபோதெல்லாம் பணங் கொடுத்தா தின்னு'ட்டுத் தின்னு'ட்டு வருகிறீர்கள்?

தீ.—பணமா? அதெங்கடிவந்தது? அவர் விஷயத்தில் அப்படிச் சொல்லாதே. பாவம் வந்து சம்பவிக்கப் போகிறது. அவரோ வைதிகச் சிரத்தையுள்ளவர். வேதாத்தியயனம் செய்தவர்களைக்கண்டால் விழுந்து விழுந்து கும்பிடுவார். அதிலும் என்னைக்கண்டுவிட்டால் பரமதிருப்தி. விடவேமாட்டார். காசென்பது பேசக்கூடாது.

சம்.—காசுவாங்காமற்தான் 'களப்பு' போட்டிருக்கிறாரோ?

தீ.—காசுவாங்கமாட்டாரென்று சொல்கிறேன்! என்னிடத்தில் வாங்கமாட்டார். இதைத் தெரிந்தே நானும் பணம் கொடுக்கிறதுண்டு. அவர் அதற்கு மனஸ்தாபம் கொண்டு,

“தீக்ஷிதரவாளே! என்னை சர்வ பாமரனாய் நினைத்திருக்கிறதாகத் தோன்றுகிறதே. இத ராளிடத்தில் காசுவாங்கிப் பாவத்தைக் கட்டிக் கொள்கிறது போதாதா? உங்களிடத்திலும் வாங்கவேண்டுமா? உங்களைப் போன் மகான்கள் வந்து ஒருவேளை போஜனம் பண்ணினாலும் போதுமே. அந்தப் பாபமெல்லாம் பறந்துபோய்விடுமே. நான் கிருதார்த்தனாக கூடாதென்ற எண்ணமிருக்குமானால் சொல்லுங்கள். உங்களிடமும் பணம் வாங்கிக் கொள்ளுகிறேன்.”

என்று சொல்லுகிற வழக்கமாயிற்றே.

சம்.—சரிதான். அவரும் ஒருகாரியத்தை உத்தேசித்துத்தான் பணம் வாங்குகிறதில்லை

தீ.—இதோடேபோகவில்லை. கண்ணாடி 'பீரோ'வில் 'குஞ்சாலாடு' செய்துவைத்திருப்பார். அதைப்பார்த்தாலே நாவில் சலம் ஊறும். நாலு லாடு வேணுமென்று சொல்வதுதான் தாமசம். உடனே எடுத்துக்கொடுப்பார்.

இந்த சமயத்தில் இராமசுவாமி சாஸ்திரிகளும் “அதிலெனக்கொன்று, நல்ல சமயத்தில் வந்தேன்” என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

தீ.—சாஸ்திரிகளே! அதற்குத்தானா குறை கல்யாணம் நிச்சயமாகிற பக்ஷத்தில் எவ்வளவோ சாப்பிடலாம். நீங்கள் சாப்பிடாமல் வேறுயாருக்கு?



இரா. சா.—“லாடுவை நினைத்துக் கொண்டேயிருந்தால் நல்ல லக்னம் தவறிவிடப் போகிறது. 5-மணி ஆகிவிட்டது. புறப்படுங்கள்.” என்றனர்.

உடனே தீக்ஷிதரும் புறப்பட, நல்ல சகுனமானதைக்கண்டு எல்லாரும் உவகை பூத்தார்கள். சாஸ்திரிகளும் சிந்தாமணி வரையிலும் போய் வழியனுப்பிவிட்டுத் திரும்பினார். தீக்ஷிதர் காவேரியில் அநுஷ்டானம் செய்து முடித்துக்கொண்டு வெங்கப்பய்யர் 'களப்பு' வந்துசேர்ந்தார். வந்தவுடன் அய்யரும் அவரைக்கண்டு முகமலர்ச்சிகொண்டு தக்கபடி உபசரித்து வேண்டிய சௌகரியங்களைச் செய்வித்தார். அங்குப் போய்ச் சேர்ந்தது முதல் “தபால் வண்டி யேறிப்போகிறதா அல்லது நடந்து போகிறதா” என்ற யோசனையில் ஆழ்ந்தார். அதைக் கண்டு வெங்கப்பய்யர், “தீக்ஷிதரவாள்! ஏதோ பலமாய் யோசனை செய்கிறீர்களே. அதைச் சொல்லுங்கள் கூடுமானால் நான் செய்விக்கிறேன்.” என்றார். தீக்ஷிதர் 'தன்னுத்தேசத்தை வெளியிட்டால் தன்னைக் கேவலமாக மதிக்கப் போகிறார்' என்று நினைத்து அதையொன்றும் வெளிவிடாமல் “குழந்தைகளுக்கு இந்தவருஷம் விவாகம் ஆகவேண்டியிருக்கிறது. வரன் அகப்படவில்லை. அதனை உத்தேசித்துத்தான் புறப்பட்டு வந்திருக்கிறேன். அதிகமலைப்பாயிருக்கிறது.” என்றுசொல்ல, அய்யரும் “தாங்கள் ஆகிதாக்கினிகள் ஆயிற்றே. தங்கள் புத்திரியை விவாகம் செய்து கொள்கிறவன் பூர்வஜன்மத்தில் நல்ல பூஜையன்றோ செய்திருக்கவேண்டும்” என்றனர்.

தீ.—ஆகிதாக்னியை இந்தக் காலத்தில் யார் அய்யா கவனிக்கிறார்கள்!

வெ.—கவனியாதிருந்தால் அவர்களதுகுறைவு. உங்கள் யோக்யதைக்கு எக்காலத்திலாவது குறைவுண்டோ? மலையாதேயுங்கள். மலைக்கோட்டையில் ஜகத்ரக்ஷகன் எழுந்தருளி யிருக்கிறான். போய்த் தரிசனம் செய்து வாருங்கள். நினைத்த காரியம் சித்திக்கும் பாரத்தை வகிக்கிறதற்கு அவன் ஒருவனிருக்கும் பொழுது நமக்கென்ன கவலை?” என்றனர்.

இதைக்கேட்டுத் தீக்ஷிதர் மிக நாணி “நாம் வேதாத்தியயனம் செய்தென்ன! உபநிஷத்துப் படித்தென்ன! அந்த பக்தி யேற்படவில்லையே நமக்கு” என்று மனதில் எண்ணித் துக்கித்து அய்யரைநோக்கி “அய்யரவாள் தாங்கள் சொல்வது சரி. பாரத்தை அவன் மீது போட்டால், விட்டபடி விடுகிறான்.' எனப்பகர்ந்து கோயிலுக்குப் போய் மாதுபூதேசுவரரைத் தரிசித்துத் திரும்பிவந்து போஜனத்திற்குப்பிறகு அந்த இடம்விட்டுக்கிளம்பினார். கால்நடையாகவே போகிறதென்று தனக்குள்ளே தீர்மானம் செய்துகொண்டு மால் தெருவில் சேதுவய்யர் வீட்டுத் திண்ணையில் வந்து படுத்தார். வைகறை யாமத்தில் 4-மணி சுமாருக்கு எழுந்திருந்து புறப்பட்டு நடுப்பகலில் கீரனூருக்கு வந்தார்.

அவர் அந்த ஊருக்கு இதற்கு முன்னாற் போனவரேயில்லை. திக்குத் திசை யொன்றும் தெரியவில்லை. ஒருப் பிராமணரைச் சந்தித்துத் தனக்குவேண்டிய விஷயங்களெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு கோயிற் கிணற்றுக்குப் போய் ஸ்நானம் முதலியவைகளை முடித்துக்கொண்டு அக்கிரகாரத்தை நோக்கி வந்தார். நாலைந்து வீடுகளுக்குப் போயும் அன்னமிடுவோர் யாருமில்லை. அவ்வீட்டார் சொல்லும் நாஸ்தி சப்தத்தைக்கேட்டு மனவருத்த முற்றவராகிச் சஞ்சலத்தோடிருக்குங்கால் ஓரேழைப்பிராமணரைச் சந்திப்ப, அவர் இவரது யோகக்ஷேமத்தை விசாரித்துத் தன் வீட்டுக் கழைத்துப்போய் போஜனத்திற்கு வேண்டியன தயார் செய்ய, தீக்ஷிதர் வெளித் திண்ணையில் உட்கார்ந்து தனக்குள்ளே அடியில் வருமாறு யோசிக்கத் தொடங்கினார்:—

“நாம் யார் யார்வீட்டுக்குப்போனோமோ அவர்களெல்லாரும் பணக்காரரே. 'ஐயோ! ஒருபிராமணன் இனம்விட்டுப்பிரிந்த மான்போல பட்டப்

கலில் பசியோடே வந்திருக்கிறான். அவனுக்குக் கொஞ்சம் அன்னமிட்டு ஆதரிப்போம்' என்று ஒருவனுக்காவது மனமிரங்கவில்லை. இம்மி தயையில்லை. தாக்ஷிணியமில்லை. என்ன கடின சித்தம்! இவரோ ஏழைபோலத் தோன்றுகிறது. என்ன அன்பு! என்ன தயவு! எவ்வளவு இளகியமனசு! அவரது அன்பே பசியாற்றிவிட்டதே. இந்தக் குணங்கள் ஒருவனிடத்திலாவது காணேன், 'இல்லை'யென்றுச் சுமுகமாய்ச் சொல்லட்டுமே. என்ன கடுகடுப்பு! என்ன கொடூரம்! என்ன காடின்னியம்! என்ன கம்பீரஜன்னி! பணமிருந்தால் இந்தத் துர்க்குணங்களெல்லாம் குடிகொண்டிருக்குமோ? ஏழையைக் கண்டிரங்குவ துண்டானால் சொத்து விரயம்தானே! பணத்திற்கும் பரோபகாரத்திற்கும் நிரம்பத்தூரம்! அதனால் தானே மகான்கள் எல்லோரும் 'பணத்தைக்கொடாதே' என்று பலமுறையும் தெய்வத்தினிடத்தில் முறையிட்டிருக்கிறார்கள். பணமிருந்தால் பக்திக்குறைவே. பணச் செருக்கானது அவ்வாறு செய்கிறது அவர்கள் என்ன செய்வார்கள்! தெய்வத்தினிடத்திலேயே இ[illegible]றானால் மனுஷ்யாளிடத்தில் [illegible]வும் வேண்டுமோ?"

இதனிடையில் ஒரு விஷயம் அவரை மிகவும் பாதித்தது. சில சமயங்களில் தன் வீட்டுக்கு வந்த அதிதிகளை 'இல்லை'என்று சொல்லிப் போக்கிவிட்டார். அது மனதில் உறுத்திக்கொண்டேயிருப்பத், தனக்கு அவர்களில்லை என்றது சரியானதுதான் எனச் சமாதானம் செய்துகொண்டு "இனிமேல் 'தேகி'யென்று வந்தவனுக்கு 'இல்லை' யென்று சொல்வதேயில்லை" யெனச்சங்கல்பம் செய்துகொண்டார். அத்தருணத்தில் போஜனத்திற்கு அழைப்பு, உள்ளேபோய்ப் பசியமர உண்டு களைப்பாறி அஸ்தமன மட்டும் சம்பாஷித்திருந்து இராவில் ஜாமத்திற்கெல்லாம் சாலையிலுள்ள ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துறங்கினார்.

தீக்ஷதர் ஸ்தூல சரீரமுள்ளவர். பகலில் தனக்கிருந்த களைப்பினால் தேகம் தெரியாமல் அயர்ந்து பலமான குறட்டை விட்டுத் தூங்கினார். இதனிடையில் தலையில் தபாற்கட்டைச் சுமந்துகொண்டு ஒரு தபாற்காரன் அந்த மார்க்கமாய் ஓடிவந்தான். அவனோ இரண்டொரு தடவைகளில் புலியினிடம் அகப்பட்டுக் கொண்டு உயிர் தப்பினவன். தீக்ஷதர் சயனித்திருந்த திண்ணையை யணுகவனு[illegible] அங்கிருந்து வரும் கோரமான சப்தத்தைக் கேட்டு அவனுக்குத் திகிலும் பயமும் அதிகரிப்ப, முன்போல ஓடவொட்டாமல் கால்கள் பின்னாலிழுக்க ஆரம்பித்தன. போகாமல்நின்று விடலாமென்றாலோ குறித்த காலத்தில் தபாற்கட்டைக் கொண்டு போய்ச் சேர்க்காததற்கு அபராதம் விழும். ஆயினும் சற்று நின்று பார்த்தான். அந்தப் பயங்கரமான உறும[illegible] நிற்பதாகத் தோன்றவில்லை. "கடவுள் [illegible]டபடி விடுகிறார். போகாமல் தீராது" என்று தீர்மானித்துக் கொண்டு, தனக்கிருந்த பிரா[illegible] பயம் பின்னாலிழுக்கவும் தன் வயிற்றுப் பி[illegible]ப்பு பிடர்பிடித்து முன்னால் தள்ளவும் [illegible]முடிக்னவு தனக்கில்[illegible]ருதுபோல் புறப்பட்டான். தீக்ஷதரிருந்த வீட்டுக்கெதிரில் வந்தவுடன் பயமிகுதியினால் கால்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொள்ளத் தலையிலிருந்த கட்டுடன் மரஞ்சாய்ந்ததுபோல் கீழேசாய்ந்தான். அவன் விழுந்த சத்தத்தைக் கேட்டுக் கூப்பிடு தூரத்திலிருந்த போலீஸ் 'ரோந்துக்காரன்' (Beat constable) அந்த இடத்திற்கு ஓடிவந்து அவன் காலை உதைத்துக் கொள்வதையும் வாயில் நுரை தள்ளுவதையும் கண்டு "ஏன் கீழேவிழுந்தாய்?" என்று கேட்டான். அவன் யாதொருபதிலும் சொல்லமுடியாமலிருந்ததனால், போலீஸ்காரன் அவனைத் தட்டிக் கொடுத்துத் தைரியப்படுத்தி "ஏன் விழுந்தாய்" என்று மறுபடியும் வினவினான். தபால்காரன் சங்கதியைச் சொல்ல முயன்றும், நாவெழவில்லை. உளறலும் நிற்கவில்லை. சற்றுநேரத்திற்கெல்லாம் "புலி புலி" யென்று கதறினான். போலீஸ்காரனுக்கு அதைக் கேட்டு ஒன்றும் விள்ள[illegible]



'புலியேதடா இங்கே' என்று சொன்னதின் பேரில், தபாற்காரன் திண்ணையை நோக்கிக் கையைக் காண்பித்தான். அதைக்கண்டு "மனுஷன் விடுகிற குறட்டையைக் கேட்டுப் புலியெனப் பயந்தான்" எனத் தெரிந்து கொண்டு, தீக்ஷதரண்டையிற் போய் முதுகில் ஒரு அறை வைத்து "ஆரய்யா தூங்குகிறது? எழுந்திரய்யா" என்று அதட்டினான். அடிவிழவே தீக்ஷதர் திடுக்கிட்டு உளறிக் கொண்டெழுந்தார்.

போ.—சாலையில் போகிறவர்களைப் பயமுறுத்தவா இங்கே வந்து படுத்தாய். அதோ பாரய்யா வழியில் ஒருவன் விழுந்து காலை உதைத்துக் கொள்கிறான். நன்றாய் விட்டாய் 'குறட்டை' !

தீ.—நான் ஒருபாவமும் அறியேனே! அலுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன்.

போ.—நன்றாய்த் தூங்கினாய்! ஒரு பிராணனைக் கொல்ல அல்லவோ இருந்தாய்! நான் வாராமற் போனால் இவன் செத்தே போயிருப்பான்.

தீ.—குறட்டையைக் கேட்டுச் சாகிற பேர்வழி யிவனைத் தான் கண்டேன். நானும் நாற்பது வருஷகால மாகத்தான் தூங்கிக் கொண்டிருக்கிறேன். என் குறட்டையைக்கேட்டுப் பயந்தவன் ஒருவனை யாவது காணேன்.

போ.—காணுமா? அதோபாரய்யா. வாரச் சோறு தின்கிற பார்ப்பான் வழக்குப் பேசுகிறாயா! இங்கிராதே. எழுந்திரய்யா. ஊருக்குள்ளே போ." என்றான்.

தீக்ஷதர் விழித்துக் கொண்டவுடன் குறட்டையும் நின்று விடவே, தபாற்காரனுக்குப் போன பிராணனும் வந்தது. ஆயினும் நெஞ்சு படபடவென்று துடித்தல் நிற்கவில்லை. தனது வேண்டுகோளின்படி போலீஸ்காரன் கொணர்ந்து கொடுத்த தண்ணீரைக் குடித்து முகத்தையும் கழுவிக் கொண்டு எழுந்திருந்தான். அவனுக்கிருந்த பீதி போய் லஜ்ஜைவந்து பிடித்துக் கொண்டது. குறட்டையைக் கேட்டுப் புலியென்று பயந்ததற்கு நாணிக் குனிந்ததலை நிமிரவேயில்லை. இதுவெல்லாம் அவனுக்கு அடங்காத கோபத்தை யுண்டுபண்ண, தீக்ஷதரது அருகிற்போய் உற்றுப் பார்த்து, "நீ பாப்பான் தானா? இப்படித்தானாக் குறட்டை விடுவே! உங்க நடுவீடெண்டு நினைச்சுக்கிட்டையோ! இந்தப் புதுக்கோட்டைச் சாலையிலே இனிமே தலையைக்காட்டு, உன் உசிரைக் கொண்டு விடுகிறேன்" என்று சொல்லித் தலைப் பொறியே யென்று தலையிற் கட்டும் கையிற் கம்புமாய்,வழிநடக்கத் தொடங்கினான்.

தீக்ஷதரை அந்த இடத்தை விட்டுக் கிளப்புகிற வரையில் போலீஸ்காரனுக்கு மனது சமாதானப் படவில்லை. அவரும்எழுந்திருந்து ஊருக்குப் புறப்பட்டார். அந்த ஊரில் நாய்கள் அநேகம். மோப்பத்தினால் இவரை அயலான் எனத் தெரிந்து கொண்டு தலையில் மூட்டையைக் கண்டு திருடன் என்று நினைத்துச் சிலநாய்கள் வந்து முற்றுகை போட்டாற்போல் வளைத்துக் கொண்டன. வளைத்துக் கொள்ளவே தூக்கிக் கட்டியிருந்தவேஷ்டியை அதிசீக்கிரத்தில் கால்வரையில் தொங்கவிட்டு "நாய் நாய்" என்றுஅலறினார். தெருத்திண்ணையில் படுத்திருந்த சொந்தக் காரன் எழுந்து வந்து அவைகளை அடக்கி அவரையும் விடுவித்தான். பிறகு தீக்ஷதர் "அங்கே போனால் போலீஸ்காரன் இங்கேவந்தால் வேட்டைநாய். எங்கேதான்போகிறது! இந்தச் சனியன் பிடித்த ஊரிலிருக்கவே வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டு ஆகாயத்தில் நக்ஷத்திரங்களைப் பார்த்து, $4\frac{1}{2}$-மணியாயிற்று எனத்தெரிந்து புதுக்கோட்டையை நோக்கிப் போதலே நலமெனத் துணிந்து புறப்பட்டார்.

கிரானூருக்கு ஒரு மைல் தூரத்தில் சாலைக்கிருபுறங்களிலும், சோளத் தோட்டங்கள் உள்ளன. வெள்ளைச் சோளப் பயிரானது கதிர்

விடும் தருணமாயிருந்தது. கோடைகாலமாகையால் வெயிலுக்குப்பயந்து பகலெல்லாம் சும்மா விருந்துவிட்டு இரவில் ஏற்றமிறைத்துப் பயிருக்குத் தண்ணீர்ப் பாய்ச்சி முடிந்தவுடன் அதிகக் களைப்போடுங்கூட 5-மணிசுமாருக்கு நாலைந்து சூத்திரர்கள் சாலைக் கரையில் வந்து உட்கார்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் நமது தீக்ஷதரும் அந்த மார்க்கமாய் வந்தார். அதனைக் கண்டு அவர்கள் "யார் போகிறது? நில்" என்று சொல்ல, மனதில் பீதியும், உடம்பில் கம்பமும் ஜனிக்க 'விலுவிலு'த்து நின்றார். அவர்களும் வந்து சுற்றிக்கொண்டார்கள். தலையில் மடிசஞ்சியையும் கையில் ஸ்தாலியையும் கண்டு அவர்களில் ஒருவன் "ஒரு வேளைச் சோத்துக்கு ஒன்பது காதம் போ'ற பா'ப்பான் அல்லவா! இவன் கிட்ட என்ன இருக்கப் போகுதடா! விட்டுத் தொலையுங்க'டா" என்றான். வேறொருவன்: "கருப்பணை! உனக்கு ஏண்டா இவ்வளவு பதட்டம்? சாமியைச் சமாசாரம் கேட்டுக்கலாம். 'ஏஞ்சாமி! அண்ணுக்கவுறு அந்து போ'ற மட்டும் சோறு உங்கிற தெங்கிறார்களே! அந்த விவரம் சொல்லு கே'ப்போம்,'' எனக் கேட்டான். இதைக் கேட்டு மற்றவர்களும் "ஆமய்யா அதெண்ணு சொல்லுகிறா'களே. அந்த விவரம் தெரிஞ்சுக்கலாம்." என்றார்கள்.

அவர்கள் சொல்வது இன்னதென்று தீக்ஷதருக்கு விளங்கவில்லை. அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டாவது பதில் சொல்லலாமென்றாலோ பேச நாவே எழவில்லை. இங்குமங்கும் பார்த்து விழிக்கிறார். இதனைக் கண்டு அவர்களில் ஒருவன் மற்றவர்களை நோக்கி "பிரமகுலமடா! ஏண்டா வேட்டைநாய் சுத்திக்கிட்டாப்பலே வளைச்சிக்கிட்டிருக்கேயுங்கள்! விட்டு விடுங்கடா. என்ன பாவம் பண்ணினமோ! இப்படி ஒருவாய்ச் சோத்துக்கில்லாமல் திண்டாடு'றோம்'' எனப்பகரத், தலைமையாயுள்ள காளியென்பவன் "ஏ வீரா! மகாஞானம் கண்டு'ட்டையில்லே! பேசினு' அடிச்சுக் கொண்டு விடுவம்." என்று சொல்லிவிட்டு மற்றவர்களை நோக்கி "அடே பய'கா, ஏண்டா அவரோடே வீண்வம்பு. காரியத்தைப் பாத்துக்கிட்டு விடுங்க'டா,'' என்றான். இப்படிச் சொல்லவே முண்டன் தீக்ஷதர் தலையிலிருந்த மூட்டையைக் கையிலெடுத்து அதனை அவிழ்க்கத் தொடங்கினான். வீரனைத் தவிர மற்றவர்களெல்லாரும் போய் அவனைச் சுற்றிக் கொண்டார்கள். முதலில் மடி சஞ்சியிலிருந்து ஒருசிறுமூட்டை எடுத்தான். அதனை அவிழ்க்க அதில் அவலிருந்ததைக் கண்டு களித்தார்கள். அவல் என்று சொல்லவே, காளி யென்பவன் 'கருப்பட்டி' * யிருக்குதோ பாரடா என்றான். மறுபடி சற்றுப்பெரிய மூட்டையை மடிசஞ்சியிலிருந்து வெளியேற்றினான். சிவபூஜைக்கு வேண்டிய அக்ஷதை முதலியன வைத்திருக்கும் பில்வக் குடுக்கைகள் சில அதிலிருந்தன. அதனைக் கண்டு பனைவெல்லந்தான் வட்டுவட்டாக வைத்திருக்கிறாரென்று நிச்சயித்து அதிக சந்துஷ்டியடைந்தார்கள். ஆனால் அதை அவிழ்த்துப் பார்க்கவே அவர்கள் மிக நாணி நின்றார்கள். மடி சஞ்சிமுழுதும் தேடியும் வெல்லம் கொஞ்சம் கூடக் காணாமல் கோபங்கொண்டு,

"ஏ சாமி! உண்டை உண்டையாய்க்குடுக்கையும் காடுமுரடாய் ருத்ராச்சமும் மூட்டைகட்டிக்கிட்டு வந்தையே! கருப்பட்டி கொஞ்சம் கொண்டுவந்தால், இந்த அவல் இருக்கிறதுக்கு எவ்வளவு ருசியாயிருக்கும்! வெத்துச் சோறுதிண்டா' புத்தியில்லாம'ப்போய் விடும்?'' என்றான் மூட்டையவிழ்த்த முண்டன்.

தீ.—"போலீஸ்காரனிடம் அடி வாங்கவும் உங்களிடம் அவல் கொடுக்கவும் வேண்டியது என்று தெரியுமா எனக்கு?" என்றார்.

முண்டன்.— போலீசில் அடி திங்க எங்கே திருடினே?

* பனைவெல்லம்.



காளி.—ஏ ப'லே முண்டா! இந்த கிருதெல்லாம் ஏண்டா பேசு'றாய். ஆத்தாடி! இந்த ஊதச் சதையை வச்சுக்கிட்டுத் திருடினாலும், ஓடித்தான் போய்விடுவாரு! போதுமடா சும்மா இரு.

முண்டன்.— (தீக்ஷதரை நோக்கி) "இனிமேக் கருப்பட்டி யில்லாமே யிந்த வழியிலே வா கழுத்தை முறுச்சுப்பிடு'றேன்"

என்று சொல்ல எல்லோரும் அவல் மூட்டையோடு ஓட்டம் பிடித்தார்கள்.

தீக்ஷதர் அவல் போய்விட்டதற்காக வருந்தவேயில்லை. "திருடர்கள் அவலைத் தட்டிப் பறித்துக் கொண்டது மல்லாமல், வெல்லம் கொணராததற்காகக் கண்டித்தார்களே'' என்று மிகவும் துன்பமுற்று, தனக்கு வழியில் நேர்ந்த சங்கடங்களை யெண்ணி யெண்ணிக் கண்ணீர் சொரிந்து 'தலைவிதி நொந்து தனிவழி நடந்து'' புதுக்கோட்டை போய்ச் சேர்ந்தார்.

B. S. S.

## மணிமேகலை.

தமிழ்ப் பூர்வகிரந்தங்களிலொன்றாகிய இவ்வரிய பௌத்தநூல் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களால் பலபிரதி ரூபங்களையும் கொண்டுதிருத்தி அரும்பதவுரையுடனும் நூலாசிரியர் வரலாறு, புத்தசரித்திரம், பௌத்ததருமம், பௌத்தசங்கம், கதைச்சுருக்கம் இவைகளுடன் அதிகப்பிரயாசைவகித் தமிகநேர்த்தியாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலின் கருத்து விளங்கப் பின்வருவதை அவர் எழுதிய முகவுரையிலிருந்தெடுத்துப் பிரசுரிக்கிறோம்:—

இது மதுரைக்கூல வாணிகன் சாத்தனாரென்னும் புலவர் பெருமானால் அருளிச்செய்யப்பட்டது; இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார், சமயதிவாகரவாமன முனிவர், இலக்கணவிளக்க உரையாசிரியர், திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், சங்கரநமச்சிவாயர் முதலிய உரையாசிரியர்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ள பிரமாண நூல்களுள் ஒன்று. தன்மை நவிற்சியணியும பாவிகவணியும் இன்னோரன்ன பிறவணிகளுமே ஆங்காங்கு அமைந்திருத்தலால், தன்னுட் கூறப்பட்டுள்ள மலை கடல் தீவு வனம் நாடு நகர் ஆறு முதலியவற்றையும் நேரில் அறிந்துகொண்டாற் போலப் படிப்பவர்களுடைய மனத்திற்கு நன்றாகப்புலப்படச்செய்யும் நலப்பாடுற்றது; இக்காலத்தில் வேறொருவாற்றாலும் விளங்காதனவாகிய சில தெய்வங்களுடைய பெயர்களையும், அத்தெய்வங்களை வழிபடுமுறைமையையும், சிலசாதியாரையும், அவர்களுடைய நடை முதலியவற்றையும், சிலநகரங்கள் தீவுகள் மலைகள் வனங்கள் கோட்டங்கள் அறச்சாலைகள் மன்றங்கள் முதலியவற்றையும், அவைகள் இன்ன இன்னவண்ணமாக இருந்தன வென்பதையும், இன்ன இன்ன இடத்திற் பரவியிருந்தன வென்பதையும், அவற்றின் இலக்கணங்களையும், சில அரசர் சிலமுனிவர்முதலியோருடைய சரித்திரங்களையும் பிறவற்றையும் இந்நூலில்விளங்க அறிந்துகொள்ளலாம்; இதில் சொல்நுட்பம் பொருள்நுட்பங்கள் நூலளவேயாகிய நுண்ணறிவிற்கேற்ப எவ்விடத்துங் காணப்படுமென்று கூறுவர்.

சிலப்பதிகாரக் கதைத் தலைவனான கோவலனுடைய மகளாகிய மணிமேகலை யென்பவளுடைய சரித்திரமாதலின், இந்நூல், சிலப்பதிகாரத்தோடு கதைத் தொடர்புடையது.

இதில், சோழவளநாட்டுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடி வாணிகர் மரபில் உதித்த கோவலனுக்கு மாதவியென்னும் நாடகக் கணிகையிடந் தோன்றிய மணிமேகலை யென்பவள், தன்னுடைய தாய் கோவலன் மதுரையில் வெட்டுண்டிறந்தது கேட்டுப் பரத்தைமைத்தொழிலை வெறுத்துப் பௌத்தமுனிவராகிய அறவணவடிகளைச் சரணடைந்து வாய்மை

நான்கும் சீலமைந்தும் உபதேசிக்கப்பெற்றுப் பௌத்தசங்கத் திருத்தலை யறிந்து, அவளோடு பழகி, சிறுபிராயத்திலேதானே பௌத்த தருமங்களை அறிதற்கேற்ற உணர்ச்சியுற்று, ஒருநாள் தாயின் கட்டளைப்படி சுதமதியுடன் பூக்கொய்தற்கு மலர்வனஞ்சென்று, தன்னை விரும்பிவந்த உதயகுமாரனுக்கு அஞ்சி அங்குள்ள பளிக்கறையில் ஒளித்திருந்து, அவன் போனபின்பு வெளியே வந்து தன்குலதேவதையாகிய மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவ தீவிற் கொண்டுபோகப்பட்டு, அத்தீவிலுள்ள புத்த பீடிகைக்காட்சியால் தன்னுடைய பழம்பிறப்பில் நிகழ்ந்த செய்திகளையறிந்து, அப்பால் அத்தெய்வம் அறிவுறுத்திய மூன்றுமந்திரங்களை யுணர்ந்து, முற்பிறப்பிற் கணவனாயிருந்த இராகுலனென்பனே இப்பிறப்பில் உதயகுமாரனாக வந்தானென்று அத்தெய்வங் கூறக்கேட்டு, அப்பீடிகையின் காவற்றெய்வமாகிய தீவதிலகையி னுதவியாற் கோமுகியென்னும் பொய்கையை யடைந்து, அதிலிருந்த அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரம் தன் கையில் வரப்பெற்று, பின்பு காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்து, அறவணவடிகளை யடைந்து, ஆபுத்திரன் வரலாற்றையும் அவளுக்கு மதுரையிற் சிந்தாதேவி அமுதசுரபியைக் கொடுத்ததையும் பசித்த உயிர்களுக்கு உணவளித்தலே எல்லாவற்றினும் மேலான தருமமென்பதையும் அவர் கூறக்கேட்டு, அவர் கூறியவாறே உணவளித்தற்பொருட்டு அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு வீதியிற் சென்று, சிறந்த பத்தினியாகிய ஆதிரையென்பவள் வந்து முதலிற் பிச்சையிடப்பெற்று காயசண்டிகையென்னும் வித்தியாதரமங்கையின் தீராப்பசியை அப்பாத்திரத்திலிருந்தெடுத் துதவிய ஒருபிடி யமுதாற்போக்கி, அப்பாத்திரத்தில் மேன்மேலும் அமுதுவளரப்பெற்று, அந்நகரத்துள்ள உலகவறவியென்னுமம்பலத்தை யடைந்து, அங்கே வந்த எல்லா உயிர்களின் பசியையும் போக்கி, அவ்வறஞ் செய்தலையே நித்த நியமமாகப் பூண்டு, தன்னைவிரும்பி வந்த உதயகுமாரன் அறிந்து கொள்ளாவண்ணம் மேற்கூறிய காயசண்டிகையின் வடிவங்கொண்டு அந்நகரத்துள்ள சிறைச்சாலையையடைந்து, அங்கே பசித்திருப்பவர்களுக் கெல்லாம் உணவளித்து அதனை அறச்சாலையாக்கி, தன்னை மீட்டும் விடாது தொடர்ந்த உதயகுமாரன் காயசண்டிகையின் கணவனால் வெட்டுண்டு வீழ்ந்தது கண்டு மனங்கலங்கிப் பின்பு கந்திற்பாவைத் தெய்வத்தின் மொழிகளால் தேருதலுற்று, உதயகுமாரனுடைய தந்தையாகிய மாவண்கிள்ளியாற் சிறையில் வைக்கப்பட்டு, இராசமாதேவியின் முயற்சியால் அச்சிறையினின்று நீங்கி, நாகபுரத்தையடைந்து அதன்தலைவனான புண்ணியராசனோடு மணிபல்லவஞ்சார்ந்து புத்தபீடிகையைக் காட்டி அதனால் அவனது பழம்பிறப்பை அவனுக்கறிவித்து, காவிரிப்பூம்பட்டினம் கடல்கொள்ளப்பட்ட செய்தியைத் திவதிலகையா லறிந்துகொண்டு, அப்பாற்சென்று வஞ்சிநகர்ப் புறத்தேயுள்ள பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் கோயிலை யடைந்து தரிசித்து, தன்னுடைய எதிர்காலச் செய்திகளைக் கண்ணகிகூற அறிந்துசென்று, ஆங்கிருந்த சமயவாதிகள் பலரையுஞ்சார்ந்து அவரவர்களுடைய கொள்கைகளைத் தனித்தனியே வினாயுணர்ந்து, அந்நகரில் தவம்புரிந்து கொண்டிருந்த மாசாத்துவானைக்கண்டு அவன்மொழி செய்திகள் பலவற்றையுங்கேட்டு, அவன் கூயவாறு காஞ்சிநகரம்போய், அந்நகரிற் பசியா வருந்திவாடிய எல்லா உயிர்களுக்கும் உணளித்து அங்கேவந்த அறவணவடிகளைத் த சித்து, அவர் உபதேசித்த அறமொழிகளை கேட்டு, பின் முத்தி பெறுதற்பொருட்டு அ நகரிலேயே தவஞ்செய்துகொண்டிருந்தாளெனுங் கதை விரித்துக் கூறப்படும்.

இந்நூல், பௌத்த சமயச் சார்பினளாகி மணிமேகலையின் சரித்திரமாதலின், இதி அச்சமயக் கொள்கைகளைப் பரக்கக் கான லாம்.

பற்பல தருமங்கள் இதிற் சொல்லப்பட்டு ளன; அவற்றுள் மிகுதியாகக் காணப்படுவது ஒருவன் மனமொழிமெய்கள் தூயனாகி எல்ல உயிர்களிடத்தும் எப்பொழுதும் அருளுடை னாதல் வேண்டுமென்பதே.



## திருஞானசம்பந்தர் காலநிர்ணயம்.

(149-வது பக்கத்தொடர்ச்சி.)

அங்ஙனம் சென்று சுவீகரித்த பொருள்களையும் தன் உறவினரையும் முன்னரே தன்னூர்க்கனுப்பிய வணிகன் யாது காரணங் கருதியோ தனக்கு வாட்கைத் துணையாக ஊத்தேசித்துள்ள பெண்ணை மாத்திரம் நிறுத்திக்கொண்டான். (இங்ஙனம் செய்வது நம்மவர் வழக்கத்துக்கு முற்றும் விரோதமென்க.) பின்னர் மதுரையிற் சிறிது காலங்கழித்து அவ்வணிகன் தன் மைத்துனியோடு தன்னூர்க்குச் செல்லும் வழியில் அரவு கடித்திறக்க அதைச் செவியுற்ற நம் காழிவீரகர் பதிகம்பாடி, அவனை யெழுப்பிக் குறித்த விவாகத்தையும் முடித்தருளினர். தம்மைச் சேர்ந்த உறவினர் பலரையும் ஏவலாளர் அநேகரையும் முன்னரே போகவிட்டு இங்ஙனம் இடர்ப்பட்டு விவாகச் சடங்கையும் அவதியில் முடித்து அவலமுற்றாரெனல் அசம்பாவிதமென்க.

மேற்போந்த பரஞ்சோதிமுனிவர் கூற்றைப் பெரிய புராணத்திற் படிக்கப்படும் வரலாற்றோடு ஒப்பிட்டு நோக்குவோர்க்கு, அருண்மொழித் தேவரருளிய சரிதம், பிற்காலத்து நம் மதுரை முனிவர் கற்பனையால் வன்னியழைத்த உபகதையோடு கலக்கப்பட்டுப் புராணமாயிற்றென்பது எளிதிற் புலப்படும். நம் கொழும்பு நகர் நண்பர் விவகாரமெல்லாம், மதுரை முனிவர் பிற்காலத்திற் சேர்த்த வன்னியழைத்த உபகதையையே யொட்டி யிருத்தலின் அதனை யிங்குச் சிறிது பிரஸ்தாபிப்போம். மேலே கூறிய வண்ணம் விவாகம் முடிக்கப்பெற்ற தம்பதிகள் மதுரைபோய்ச் சேர்ந்து அங்ஙனம் சேர்ந்த கொஞ்சகாலத்துக்குள் ஒரு புத்திரனைப் பெற்றார்கள். அந்தக் குழந்தைக்கும் முதற்றாரத்தின்குழந்தைகளுக்கும் சிறு சச்சரவு உண்டாக சக்களத்தியரிருவரும் அந்நிமித்தம் வார்த்தை யாடும்போது மூத்தாள் இளையாளைநோக்கி "சேர்ந்த உனக்கு என்ன உரிமை? நீ என் புருஷனை மணந்தவளென்பதற்குச் சான்று ஏதேனுமுண்டோ" என்று ஏளனம்செய்து வினவ, அதற்கு ஏற்ற இறையளிக்க ஏதுந்தோன்றாதவளாய் அவலமுற்று "நான் என்மைத்துனனை மணந்ததைத் திருப்புரம்பியத்தில் உள்ள சிவலிங்கமும் வன்னிமரமும் கிணறுந்தான் அறியு" மென்று பிதற்ற மற்றவள் "விந்தை! விந்தை! நல்ல சாக்ஷிகள்" என்று பின்னும் நகைத்தாள். தம்மொடு மதுரைக்கு வந்தவரையெல்லாம் விட்டு மரத்தையும் கிணற்றையும் சான்றாக அழைத்தது புதுமை யென்க. எங்ஙனமோ சான்றாகவழைத்த பொருள் மூன்றும் அவலமுற்றவள் களிக்கவும், இகலுற்றவள் ஏங்குமாறும், மறுநாட் காலையில் மதுரைக் கோவில் வந்து சேர்ந்தன. இதுதான் திருவிளையாடலிற் காணப்படும் விஷந்தீர்த்த கதையோடு சேர்க்கப்பட்ட வன்னியழைத்த உபகதை. இப்பொழுது நாம் கவனிக்கவேண்டியதென்னெனின் ஆலாசியமான்மியத்தில் வன்னியழைத்த கதை விஷந்தீர்த்த கதையோடு சேர்க்கப்பட்டிருக்கிறதை மாத்திரம் ஆதரவாகக் கொண்டு வன்னியழைத்தது, மருகனூரில் எம் காழிவள்ளலால் மணம் நடத்தப்பெற்றதைத்தன் பாவைகாலத்து நிகழ்ந்ததென்று கொள்ளலாமா என்பது. பெரிய புராணத்தில் வன்னியழைத்த கதையைப்பற்றி யொன்றும் காணோமென்பதை முன்னரே குறிப்பித்துள்ளோம். அங்ஙனம் காணப்படாமைபற்றி அக்கதை அவ்வணிகன் பாவை காலத்து நிகழ்ந்ததல்லவென்று கொள்ளலாகாது; ஏனெனின் நம்சம்பந்தர் கருணைக்கிலக்கானவர்கள் காலத்தில் நடந்த எல்லா விஷயங்களையும் பெரிய புராணம் விவகரித்திருக்க வேண்டுமென்பதில்லையே. அவ்வுபகதை நடந்ததென்பதற்குச் சாதகமாகவாவது பாதகமாகவாவது புறச்சாக்ஷிகள் ஒன்றுமில்லாத வரையில், திருவிளையாடற் புராணத்திற் சொல்லிய விஷயங்கள் பொதுவாக எவ்வளவு சரித்திரோக்தமானவையோ அத்துணைச்சரித்திரோக்த முடையதாக அவ்வுபகதையையும் கொள்ளவேண்டும் திருவிளையாடற் புராணம் இத்துணைச் சரித்திரோக்தமானதென்று நிச்சயித்தல் நம்தரமன்று. அங்ஙனம் செய்ய இது சந்தர்ப்பமுமன்று. இக்கதையின் பூர்வபாகம் பெரியபுராணத்திற்காணப்படுவதற்கும் திருவிளையாடலிலுள்ளதற்கும் இருக்கும் பேதத்தை நோக்கின், நம்கொழும்பு நகர் நேயர் வன்னியழைத்தஉபகதையையே ஆதரவாகக்கொண்டு கூறிய காலநிர்ணயம் எத்துணைய பலமானதென்பது வெளியாகும். எனக்குப் படுவதெல்லாம் பரஞ்சோதிமுனிவர் தம் காலத்தில் வழங்கிவந்த இரண்டு வேறான கதைகளைப் புணர்த்தியிருக்கிறாரென்பதே. திருவிளையாடற்புராணத்தில் கடைசிப்படலந்தான் அக்காலத்திலாண்ட நாயக்க அரசர்களைப் புகழவேண்டி யேற்பட்டதல்ல வென்பது என் நிச்சயம். இன்னும், கடைசிப் படலங்களில் எம் ஆளுடையபிள்ளையார் சம்பந்தம் படிக்கப்படுவது தம் ஆதீனத்துக்கு ஆதிமூர்த்தியாகிய திருஞானசம்பந்த சுவாமிகள்பிரபாவத்தைப் பாராட்ட நம்முனிவர் விரும்பியபடியுமாமே. நிற்க வன்னியழைத்த கதைநிகழ்ந்தது

நம் காழிவன்னல் காலத்திலென்று கொள்ள, நம் கொழும்பு நகர் நண்பர் கொண்ட ஆதாரத்தைவிடச் சிறந்த ஆதாரம் வேண்டுமென்பதே என் அபிப்பிராயம்.

(இன்னும்வரும்.)

கே. எஸ். ஷண்முகசுந்தரம், பி. ஏ.

## உபாத்தியாயர் பக்கம்.

### இல்லப்பயிற்சிக்கும் பள்ளிப்பயிற்சிக்குமுள்ள வித்தியாசம்.

1878ம் வருஷத்தில் ஜனவிநோதினிப் பத்திரிகையில் 'நீதிபோதனை' யென்னும் தலைப்பெயரின்கீழ் பின்வருகிறபடி எழுதப்பட்டிருக்கிறது. அப்பொழுதே குற்றமாகக் காணப்பட்டது இப்பொழுது பரிகாரஞ்செய்து நிவர்த்திக்கப் பட்டிருக்கலாமென்று நினைக்கக்கூடியதாயிருப்பது சகஜம். ஆயினும் உண்மையில், அந்தப்படி முன்கண்டகுற்றம் அப்படியே விடப்பட்டு வளர்ந்து வந்திருக்கிறது. பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருக்கையில் மனதிற் பதியப்பெறும் அபிப்பிராயங்களுக்கும், வீட்டிலிருக்கையில் பதியப்பெறும் அபிப்பிராயங்களுக்குமுள்ள விரோதம் முன்னிலுமிப்பொழுது அதிகப்பட்டிருக்கிறது. இதனால் சிறுபிள்ளைகள் பகுத்தறிவுண்டாகாத காலத்திலே இன்னது சரி இன்னது பிசகு என்று ஐயமற உணர்ந்துகொள்ளக்கூடாமல் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான இருவகை யதிகாரங்களுக்குட்பட்டு அவர்கள் சரியாக நடக்கவேண்டியவழியின்னதென்றுணரக்கூடாமல் மனம் ஊசலாட அவதிப்படுகிறார்கள். இதனால் சரியான வழியில் நடக்கவேண்டுமென்கிற நல்ல தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் சமயத்துக்குத் தக்கபடி நடந்துகொள்வதே சாமார்த்தியமென்கிற தப்பெண்ணம் மனதிற் பதிந்து அவர்கள் மனதைக் கெடுத்து விடுகிறது, இது காரணத்தினாலேயே தற்காலம் இங்கிலீஷ் படித்தவர்கள் பெரும்பாலும் காலத்துக்குத் தக்க கோலம் போட்டு மனஉறுதியும் சீர்மைக்குணமுமின்றி வீட்டில் ஒருமாதிரியாகவும் வெளியில் ஒருமாதிரியாகவும் பேசிப் பழகிப் பலவேஷக்காரர்களாய் ஆங்கிலேயருக்குள்ள மனோதைரியமும் துணிவுந்திடமுமின்றி அவர்களால் இளப்பமாகவெண்ணி அனேகமாய் அவமதிக்கப்பட்டும் வருகிறார்கள். இது பெற்றோர் குற்றம் மாத்திரமின்றிப் பள்ளிக்கூட ஏற்பாட்டிலுமுள்ள குற்றமாம்.

இக்குற்றத்தைத் தக்க காலத்தில் கண்டு நிவர்த்திக்காமையால் நம்தேசத்துக்கு எவ்வளவோ சொல்லரிய தீங்கு விளைந்திருக்கிறது. இன்னமும் நிவர்த்திக்காமல் காலதாமதம் செய்துவரில் என்ன விநாசகாலம் நேரிடுமோ அதைப்பற்றி நினைக்கவும் மனம் நடுங்குகின்றது. இவ்விஷயத்தை சுதேசபாஷாபிவர்த்தி விஷயமாக நேர்ந்த தர்க்கத்தில் மதராஸ் மெயில் பத்திரிகையில் மிக வற்புறுத்திக்கூறியிருக்கிறோம். கவர்ன்மெண்டார், வித்தியா இலாகா அதிகாரிகளுமேயன்றி நம்முள்பெற்றோராயிருக்கும் பொறுப்புவாய்த்த ஒவ்வொருவரும் இதுவிஷயத்தைக் குறித்து ஆர அமர யோசித்து இக்குற்றத்தை நிவர்த்திக்க முயற்சி செய்யக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இக்கடமையை அவர்கள் நிறைவேற்றப் பின்வாங்குவரேல் மகா பாதகம் விளையும். வித்யா அதிகாரிகளும் கிளிப்பிள்ளைக்குப் பேச்சுக்கற்றுக் கொடுப்பது போல் நம்பிள்ளைகளுக்கு இங்கிலீஷைப் பொட்டைப் பாடமாக நெட்டுருப் போட்டு வைப்பதே வித்யாபோதனை யென்று ஏமாந்து, தங்கள் கடமையைத் தாங்கள் இதனாலேயே சரிவரச்செலுத்தி வருவதாக மனப்பால் குடித்திராமல் உண்மையை யாராய்ந்தறிந்து இப்பொழுதுள்ள இப்பெருங்குற்றம் நிவர்த்தியாகும்படி வித்யாபோதன முறையைச் சீர்திருத்தி, சரியான மனோவிர்த்தியுண்டுபண்ணக்கூடிய உண்மையான வித்யாபோதனை தேசத்திற்பரவும்படிச்செய்யமுயற்சிக்க வேண்டும்.

ஜனங்களும் அதிகாரிகளும் சேர்ந்துழைத்துப் பிள்ளைகளின் இல்லப்பயிற்சிக்கும், பள்ளிப்



பயிற்சிக்குமுள்ள வித்தியாசத்தைக் குறைத்து இரண்டையும் ஒன்றுபடுத்தப் பார்க்க வேண்டும். இச்சிலவார்த்தைகளுடன் இதன் ஆரம்பத்தில் குறிப்பிட்ட விஷயத்தைக் கீழே பிரசுரிக்கிறோம். இது சம்பந்தமாகச் சமயம் நேர்ந்துழிப் பின்னும்பேசி இப்பொழுது நமது பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் முறையிலுள்ள குறைகளை வற்புறுத்திக் காட்டி வருவோம்.

“இப்போது இத்தேசத்தில் பிள்ளைகளைப் படிப்பிக்கப் பாடசாலைகள் அநேகம் ஏற்பட்டிருக்கின்றன; அவற்றில் படிக்கின்ற பிள்ளைகளுக்கோ கணக்கில்லை; ஆயினும் அப்பிள்ளைகள் படிக்கின்ற படிப்பெல்லாம் வெகுவாய் மதிமலர்ச்சிக்குமட்டும் ஏதுவாயிருக்கின்றனவேயொழிய நீதிபோதனைக்குப் பயன்படவில்லை. பிள்ளைகள் முதலில் ஒரு பாடசாலையில் படிக்கப் பிரவேசிக்கிற நாள்முதல், கடைசியில் படிப்பெல்லாம் முடிந்ததென்றுசொல்லி ஒருபெரிய வித்தியாசாலையைவிட்டு நீங்குகிற நாள்வரையில், சர்வகலாசாலையார் ஏற்படுத்திய பரீக்ஷைகளுக்கு உபயோகமான பாடங்களையே படித்துக் காலங்கழிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கை நிறைவேறாமல் இருக்கிறதென்பதில்லை; அந்த விஷயங்களில் சித்தி பெறவே பெறுகிறார்கள். ஆயினும் பின்பு உலக வியாபாரங்களிற் புகவேண்டுமென்றால் வருத்தமுண்டாகின்றது. இக்காலத்துப் பிள்ளைகளுக்குப் புத்தி விவேகங்கள் இல்லையென்பதில்லை; உபாத்தியாயர்கள்கூடக் கண்டு ஆச்சரியப்படும்படியான புத்திநுட்பமும் விவேகமுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய புத்தி வாலிபத்திலேயே நன்றாய்ப் பயிற்றப்படுமானால், பின்பு அவர்கள் உலக வியாபாரங்களில் வெகு சாமர்த்திய முடையவர்களாயிருப்பார்கள். அப்படிப் பயிற்றுவதுதான் வெகு அருமையாயிருக்கின்றது. உபாத்தியாயர்கள் அததற்கேற்றபடி புத்திகூர்மையைமட்டும் கற்பித்துக் கொடுக்கிறார்களேயொழிய உலகவாழ்க்கைக்கு வேண்டிய நீதிமுறைகளை நன்றாய்ப் போதிப்பதில்லை.

இக்காலத்துப் பிள்ளைகளுக்கு நீதிமுறைகள் மனதில் சரியாகப் படிவதில்லை. ஒன்றுக்கொன்று விரோதமான கருத்துகள் முதலிலேயே அவர்களுக்கு உண்டாகின்றன. வீட்டிலிருக்கையில் ஒரு விதமான அபிப்பிராயமுண்டாகின்றது; பாடசாலையிலும் புத்தகங்களைப் படிக்கையிலும் மற்றொருவிதமான அபிப்பிராயமுண்டாகின்றது. பந்துக்களும் அவ்விரோதாபிப்பிராயங்களைமாற்றி அப்பிள்ளைகளின் மனதை ஒருமைப்படுத்துவதில்லை; பாடசாலை உபாத்தியாயர்கள் அதைச் செம்மைப்படுத்தினால் படுத்தலாம்; அவர்களும் தாங்கள் கடமையாய்ச் செய்யவேண்டிய கற்பனையொன்று தவிர மற்ற விஷயங்களிற் புகுவதில்லை. பிள்ளைகளுக்கு வீட்டிலே கிடைக்கின்ற நற்போதனை மிகவும் அற்பமானது. செடியாய் வணங்காதது மரமாய் வணங்குமா என்கிறபடி, இளமையிலேயே திருத்தப்படாத மனது முதிர்ந்தபிறகு திருந்துமா என்பதைக் கவனியாமல், தாய்தந்தையர்களும் நம்மிஷ்டப்படி வணங்கத்தக்க இளமனதைச் சீர்ப்படுத்தாது உபேக்ஷையாயிருந்து விடுகிறார்கள். பாடசாலைகளில் பூர்வகாலத்துக் கோதண்டம் முதலிய கொடிய தண்டனைகளெல்லாம் அனேகமாய் அடக்கப்பட்டிருந்தாலும், கோபமும் கொடுமையும் அதிகமாய் அடங்கவில்லை. இப்படிப் பலவாறிருப்பதனால், பிள்ளைகள் அடங்கி யொழுகவேண்டிய வழி செம்மையாய்த் தெரியாமலே பெரியோராவார்களானால், அதைக்கண்டு நாம் ஆச்சரியப்படுவானேன்? சில பிள்ளைகளுக்குச் சரி இன்னது தப்பு இன்னதென்பதுகூடச் செம்மையாய்த் தெரிவதில்லை. தற்செயலாய் அவரவர் புத்திக்குத் தோன்றியபடி ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான அபிப்பிராயமுண்டாகின்றது. வித்தியாசாலையில் உயர்ந்த பாடங்கள் படிக்கும்போதும் இப்படியே. பின்பு தானே சுதந்திரமாய் உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய வியாபாரங்களை நடத்திக்கொண்டு போகவேண்டிய நாள்வந்தால் அப்போது வெகு வருத்தமுண்டாகின்றது. சிறந்த துணிவும் ஏதோ ஒரு கொள்கையில் நல்ல பிடிமானமுள்ள சிலர்மட்டும் செம்மையாய்க் காரியங்களை நடத்திக்கொண்டு போகிறார்கள். மற்றவர்கள் ஒருவழியுந் தெரியாமல் தவிக்கிறார்கள்.

இத்தேசம் முன்போலிராமல் இப்போது வெகுவாய்ச் சீர்ப்படுத்தப் பட்டிருந்தும், சிறந்த நீதிபோதனைமட்டும் பிள்ளைகளுக்கு மிகவும் அருமையாயிருக்கின்றது. இனி இத்தேசத்துப் பெண்பிள்ளைகளெல்லாம் தக்கபடி நன்றாய்க் கற்பிக்கப்பட்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் புத்தி தெரியாமலிருக்கையிலேயே விவாஹம் செய்வது நிறுத்தப்படுங்காலம் வரும்போது இதுவும் சீர்படுமெனத் தோன்றுகின்றது. அதற்கு இடையிலேயே பிள்ளைகளுக்குப் பலவித நீதிகளும் ஜீவகாலத்தில் அவர்கள் சமுசாரத்தை நடத்தவேண்டிய விதமும், யுக்தாயுக்தங்களைப் பகுத்தறியுந் திறமையும், இவைமுதலியவெல்லாம் கொ

சங்கொஞ்சமாய்க் கற்பிக்கப்பட்டு வந்தாலும் வரலாம்.

இச்சிறந்த விஷயங்களை யெல்லாம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் வழி எப்படியெனில், நாமே வருத்தி அவர்களை ஒரு வழியில் திருப்பாமல். பிள்ளைகள் தங்களுக்குத் தாங்களே நியாயங்களையும் நன்மை தீமைகளையும் கடமைகளையும் அறிந்துகொள்ளும்படி அவர்கள் மனதை நாம் பண்படுத்திவிடவேண்டும். தத்துவ விசாரங்களும் ஆத்மவிசாரங்களும் செய்வதிற் பயனில்லை. யாவரிடத்திலும் அனுதாபமுடையவர்களாயிருப்பது, அதாவது பிறர் நம்மிடத்தில் எவ்விதமாய் நடக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அவ்விதமாகவே நாம் பிறரிடத்தில் நடப்பது நமது கடமை என்பதை முதலில் பிள்ளைகளுக்குக் கற்பித்து, பின்பு அதைக்கொண்டு நல்வழியில் நடப்பதற்குவேண்டிய பல நற்குணங்களையும் கற்பிக்கவேண்டும். தருமம், தயை, ஈவு, இரக்கம், உண்மை, அடக்கம், அன்பு, உழைப்பு ஆட்சி, ஆண்மைத்திறம் முதலிய உலகவாழ்க்கைக்குவேண்டிய பல நற்குணங்களும், கர்வம், கொடுமை, பொறாமை, கள்ளம், கபடம், மோசம் பெருமிதச்செலவு முதலிய பல தீக்குணங்களும் ஆகிய இவற்றையெல்லாம் தெளிவாய்த் தெரிவிக்கவேண்டும் இக்குணங்களையும் இவற்றால் விளையும் குணதோஷங்களையும் நாமே எடுத்துக்காட்டுவதைவிட, அவரவருடைய அனுபவத்தையும் புத்திநுட்பத்தையும் சாமர்த்தியத்தையுங் கொண்டு பிள்ளைகள் தங்களுக்குத் தாங்களே தக்க உதாரணத்துடன் அக்குணங்களின் நன்மை தீமைகளை எடுத்துக் காட்டும்படிச் செய்தால். தற்காலத்தில் அதனால் அப்பிள்ளைகளுக்கு மிக்க உற்சாகமுண்டாவதோடுகூட, அவ்விஷயங்களெல்லாம் அவர்களுடைய மனதில் நன்றாய்ப் பதிந்துபோம். இப்படி அவற்றை ஒருதரம் எடுத்துக்காட்டுவது போதாது; ஒன்றுமாற்றியொன்றாய்ப் பலதினங்களில் பல மூன்னோர்களுடைய சரித்திரங்களையும் பிரபஞ்சத்திலுள்ள பல நியாயங்களையும் உதாரணமாகக் காட்டிப் பலவாறு போதிப்பிக்கவேண்டும்: அப்போதுதான் அவற்றின் நன்மைதீமைகளெல்லாம் பிள்ளைகளுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்றாய் விளங்கும். பின்பு அவர்கள் தீக்குணங்களைவிட நற்குணங்களையே கையாளத் தலைப்படுவார்கள். இக்குணங்களைப் பிள்ளைகளுக்குப் போதிப்பிக்கும்போது போதகர்களுடைய குணமும் நடத்தையும் அதற்கேற்றபடியே இருக்கவேண்டும். மேலும் போதகர்கள் பிள்ளைகளிடத்தில் அதிக நேசம்பாராட்டிச் சிரிப்பும் விளையாட்டுமாகவே நீதிகளைப்போதிப்பார்களானால், அப்போது அவை மிகவும் உறுதியாகப் பிள்ளைகளின் மனதில் பதியும் இவற்றோடுகூடப் பிள்ளைகளை அடக்கியாளுந்திறமை உபாத்தியாயர்களுக்கு அவசியமானது.

இவ்விதமாக விதிகளைப் பிள்ளைகளின் மனதில் பதியச்செய்ய உதாரணங்கள் இன்றியமையாதிருப்பதுபோல், உதாரணங்களிலுள்ள விஷயங்களைத் தெளிவாக்க விதிகளும் தக்கபடி சேர்ந்திருக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் முக்கியமாய் உபாத்தியாயர்களுடைய சாமர்த்தியம் அவசியமானது, பிள்ளைகளுடைய தேர்ச்சிக்குவேண்டிய பல வழிகளையும் நன்றாய் ஆய்ந்தோய்ந்துபார்த்து உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குக் கற்பிப்பார்களானால், அப்போது பிள்ளைகள் உலகத்தில் நல்லவர்களென்று பேர்பெற்றுத் தங்கள் வாழ்நாளைச் செம்மையாய்ப் போக்குந் திறமையுடையவர்களாவார்கள்."

## 'ப்ளேக்' குத்திக்கொள்ளல்.

'ப்ளேக்' குத்திக்கொள்ள விரும்புகிறவர்களின் அனுகூலார்த்தம் அவர்கள் கவனிக்கவேண்டிய பின் வரும் சாதாரணமான முக்கியாம்சங்கள் 'ப்ளேக் குத்திக்கொண்டு அனுபவப்பட்ட ஜனசிரேஷ்டர் ஒருவரால் குறிக்கப்பட்டு டாக்டர் பானர்மான் அவர்களால் இங்கிலீஷில் பார்வையிட்டுத் திருத்தப்பட்டவை. அவற்றை, எல்லாருக்கும் உபயோகமாகும்படித் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே பிரசுரிக்கிறோம்:—

'ப்ளேக்' குத்திக்கொள்ள விரும்புகிறவர்கள்:—

(1) இரண்டொரு நாள் முன்னதாக எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வது நலம்.

(2) மலக்கட்டு உண்டாயிருந்தால் சிலநாள் முன் பாக பேதிக்கு வாங்கிக்கொள்ளலாம்.

(3) 'ப்ளேக்' குத்திக்கொண்டபின் சுலபமாய் ஜீர்ணமாகத் தக்க இலேசான ஆகாரம் சாப்பிட வேண்டும்; பால், கஞ்சி, செவ்வரிசி, காபி, ஸோடா வாட்டர் முதலிய இவைபோன்றவை தாராளமாய்ச் சேர்த்துக் கொள்ளலாம்.

(4) 'ப்ளேக்' குத்திக்கொண்டபின் சிலருக்குக் களைப்பும் இறுகிறுப்புமுண்டாய் வருத்தவுண்டு இதைக் குறித்துக்கவலைப்பட நிமித்தியமில்லை. இதற்குப் பரிகாரம் ஒரு நாற்காலியிலுட்கார்ந்துகொண்டு முழங்கால்களுக்கு மத்தியில் தலைவரும்படி குவிந்து இருந்தால் அனுகூலமுண்டாகும். 'ஸோடாவாட்டர்' அல்லது நல்ல காபிக்கஷாயத்தில் கொஞ்சம் பால் சேர்த்துச் சாப்பிடச் சுகிர்தமுண்டாம்.

(5) குத்திக்கொண்ட கை அதிகமாக வலித்தால், உமி அல்லது வேறு உலர்ந்த ஒற்றடம் கொடுக்க அனுகூலமாம். கழுத்தில் கவண்கட்டிக் கையை யேந்திக் கொள்ளல் வேண்டும்.

(6) 'ப்ளேக்' குத்திக்கொண்டவர்கள் சுரம் சுத்தமாகப் படிகிறவரையில்காற்றுக்குளிர்படாதபடிஜாக்கிரதையாக விருக்கவேண்டும். கையில் கொஞ்சநாளைக்கு வலியிருக்கும்; ஆனால் அதனால் வேலைக்குக் குந்தகம் நேரிடவேண்டியதில்லை. குளிர்ந்தஜல ஸ்நானம் கூடாது.

(7) மூன்று, நான்கு நாள்கள் வரையில் நித்தியப் படிஸ்நானம் ஆகாது. வேண்டியிருந்தால் வெந்நீரில் துணியை நனைத்து சீதளம் பிடக்காதபடி கதவுகளை மூடிக்கொண்டு உடம்பைத் துடைத்துக் கொள்ளலாம். குளிர்ந்தஜலஸ்நானம் கூடாது.

(8) குத்திக்கொண்ட 8-10 நாள் வரையில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளக்கூடாது *

(9) ப்ளேக் குத்திக்கொள்வதால் வரும் சுரத்துக்கு வைத்தியம் செய்து கொள்ளவேண்டியதில்லை. இரண்டு மூன்று நாளில் அதுதானகப்படிந்துவிடும். தலைவலியிருந்தால், 'மென்தால்' தடவிக்கொள்ளலாம். அல்லது பனிக்கட்டியினால் சிகிச்சை செய்துகொள்ளலாம். சுரம் அதிக உக்கிரமாகக் காய்ந்தால் தகுந்த மெடிகலுத்தியோகஸ்தரைக் கேட்டு வைத்தியம் செய்து கொள்ளவேண்டும். அல்லது ப்ளேக் குத்திக்கொண்ட ஸ்டேஷன் ஆபீஸருக்குச் சங்கதி தெரிவிக்க வேண்டும். ஒன்றுந் தெரியாத பாமர வைத்தியர்களை நம்புவது மோசம்.

(10) கோவு, குமட்டல் இருந்தால் பனிக்கட்டி போட்ட ஸோடாவாட்டர் அல்லது பால் கலந்த ஸோடாவாட்டர் கொஞ்சம் சாப்பிடச் சுகிர்தமாம்.

(11) குறைந்தது இரண்டு மூன்றுவாரம் வரையில் சம்போகவிஷயம் கூடாது.

(12) ஸ்திரீகள் 'தீட்டு'க்காலம் வருவதற்கு ஒருவாரம் அல்லது 10-நாள் முன்னதாகக்குத்திக்கொள்வது நலமாயிருக்கும். அல்லது தீட்டாய் முழுகியபின் ஒருவாரங்கழித்துக்குத்திக்கொள்ளலாம்.

(13) ஹிருதாசயம், ஸ்வாசப்பை ஆகிய இந்திரியங்கள் பலவீனமாயிருப்பவர்களும், வலிப்பு வியாதியுள்ளவர்களும், ஹிருதயத்தைப்பற்றிய வியாதி அல்லது நரம்பைபற்றிய பலவீனம் உள்ளவர்கள் ப்ளேக் குத்திக்கொள்ளுமுன் தகுந்த மெடிகல் ஆபீஸரால் பரிசோதனைசெய்யப்பெறல்வேண்டும்.

* உடம்பு நலிந்திராமல் சௌக்கியமாயும் திடமாயுமிருந்தால் நாலைந்து நாளைக்குப்பின் எண்ணெய் தேய்த்துக் கொள்ளலாமென்று 'ப்ளேக்' குத்திக்கொண்டு அனுபவப்பட்டவர்கள் சிலர் சொல்கிறார்கள். வி.சி-ப.

## திரிசிரபுரம் நாஷனல் ஹைஸ்கூல்.

திரிசிரபுரம் நாஷனல் ஹைஸ்கூல், கட்டடத்துக்கு ஸ்தாபனக்கல் வைக்கும் சடங்கை கனம் பொருந்திய கவர்னர் நேரில் நடத்தினதைப் பற்றிச் சென்ற சஞ்சிகையில் குறிப்பிட்டோம். கவர்னர் அவர்கள் ஸ்தாபனக்கல் வைக்கும் சடங்கு முடிந்தபின் கட்டடவேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படுமென்று கேட்டதற்கு அப்பாடசாலைக் கமிட்டியார் உடனே வேலை துவக்கப்போவதாகச் சொன்னார்கள். கவர்னருக்கு அவர்கள் கொடுத்த வாக்குத் தட்டாதபடி, அப்பாடசாலை சம்பந்தமாக தங்கள் சொந்தச் செலவில் சில பாகங்கள் கட்டுவதாக ஒப்புக்கொண்ட கனவான்கள் அவர்கள் ஒப்புக்கொண்ட வேலையைச் செய்து முடிக்க சித்தமாயிருக்கிறார்கள். அவர்கள் சொந்தச் செலவில் கட்டி முடிக்கும் பாகங்களுடன், கட்டடத்தின் இதரபாகங்களையும் கட்டி முடித்து விட்டால் நலமாயிருக்கும். இதற்காக வேண்டிய ரூபா 30,000-த்தில் ரூபா 10,000-கவர்ன்மெண்டார் கொடுத்து விடுவார்கள். பாக்கி ரூபா 20,000த்தில் ரூபா 16,000 வரையில் சேருவதற்குக் கையொப்பங்கள் வாங்கியிருக்கிறார்கள். இது போக பாக்கி வேண்டியது ரூபா 4,000-மே இந்த 4,000 ரூபாயும் சேருவது ஒரு பெரிய காரியமன்று. கையொப்பம் செய்த கனவான்கள் கையொப்பத் தொகையை அட்டியின்றிக் கொடுத்துதவினால் காலத்திற் செய்த உதவி சாலப்பெரிதாமாகையால் கவர்னர் சொல்லியபடி ஒட்டிக்கு இரட்டி கொடுத்தது போல் பாவிக்கப்படும். வித்தியாதானத்திலும் பெரிய தானம் வேறொன்றில்லை. அதுவும் திருசிரபுரத்தில் மிஷனரிகள் கோஷ்டி மிகப்பலத்தது. அவர்கள் தங்கள் மதபோதனை செய்யும் பாடசாலைகள் மிகப் பலத்திருப்பதால், ஹிந்து வாலிபர்கள் சுய மதாபிமானத்துக்குக் குறைவுவராமல் இங்கிலீஷ் படிக்கும்படியான் பாடசாலையொன்று இருக்க வேண்டியது மிக்வும் அதியாவசியகமாக விருக்கிறது. அதற்கு இந்த நாஷனல் ஹைஸ்கூல் பக்கத்திலுள்ள

மிஷன் ஸ்கூல்களைப் போல் பலப்படுத்தி நடத்த வேண்டியது ஹிந்துக்கள் ஒவ்வொருவரையும் பொருத்த கடமையா யிருக்கிறது. இப்பாடசாலையில் " சர்க்கார் பரீக்ஷைக்கு வேண்டிய லௌகீகபாடங்களுடன் பிள்ளைகளுக்குத் தேசாசார மதாசார குலவசார தர்மங்களில் சிரத்தை யுண்டாகக்கூடிய பக்தி' நீதிமார்க்கம் ஸ்ரீ ஜகத் குரு ஸ்ரீங்ககிரிஸ்வாமிகள் அனுக்கிரகத்தாலும் பொருளுதவியாலும் போதிக்கப்பட்டு வருகின்றன" அன்றி காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ சணியூர் விஷ்ணய்யர் செய்த தர்மத்தால் அந்நிய இடங்களிலிருந்து வந்து இப்பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளுக்குத் தனியாக ருப்பிடமும் போஜனக்கிரகமும் வசதியாக ஏற்பட்டு நடந்து வருகிறது. நமது மடாதிபதிகளும் மதாபிமானிகளும் இப்பாடசாலையின் அவசியத்தையும் உபயோகத்தையும் உணர்ந்து இதை நன்ருக ஆதரித்து வருவார்களென்று நம்புகிறோம். கட்டடநிதிக்குப் பணம் அனுப்ப விரும்புகிறவர்கள் 'நாஷனல் ஹைஸ்கூல், சபையின் அக்கிராசனாதிபதி ம-ா-ா-ஸ்ரீ கொடியாலம் வாஸுதேவய்யங்கார் அவர்கள் பேருக்கு அனுப்பலாம். இந்த கனவான் அப்பாடசாலைக் கமிட்டிக்கு அக்கிராசனாதிபதியாகவிருந்து ஆதரித்துவருவதுடன்' நமது கவர்னர் பேரால் அப்பாடசாலைக்கட்டடத்தில் ஹாவ்லாக்ஹால்' என்று ஒரு பெரிய கூடம் கட்டுவதாகவும்ஒப்புக்கொண்டிருக்கிருர். இவரைப்போல்இதரகனவான்களும் முன் வந்து இச்சமயத்தில் உதவி புரிந்து இப்பாடசாலை முன்னுக்குவர ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

REVIEWS OF BOOKS.

*(The Indian Journal of Education for October 1898.)*

THE VIVEKA CHINTAMANI SERIES.

Edited by C. V. Sawminatha Iyer.

This Series is intended for the whole Tamil-reading public, young and old, men and women alike. As regards the Series in general, it is both instructive and interesting. High morals run through every story. The general style is clear, though it might be somewhat more colloquial, so that young girls who are just beginning to read might follow more closely the thread of each story. Chasteness of style and clearness of expression are among the best features of the three books of the Series.

We will take each little work separately and offer a few remarks upon it.

I. *Life of Her Majesty Queen Victoria*, by S. Muthu Iyer, B. A., and C. V. Sawminatha Iyer.

Great credit is due to both the authors of this little book. Everything important concerning the life of Her Majesty has been brought out very clearly and forcibly, so as to set before our women the ideal royal example in the various phases of life as daughter, wife and mother.

The manifestation of the country's joy at the birth of Her Majesty is described in true oriental fashion adapted to the taste of the readers.

The illustrations are excellent in their way, and afford a very favourable opportunity to our Women of seeing in pictures their fabulous Queen and her country.

In the whole of the book we find only one instance in which the author descends to a somewhat pedantic style, and that is in the concluding portion of the Introduction.

As regards Appendix I on "the Government of India," and Appendix II on "the India Office," we may say that both of them deal with the subject *in detail*. * *

II. *The story of the Life of Buddha* is by an author who "has expressed a wish to remain anonymous."

In this book the chief tenets of Buddhism are very clearly brought out. The doctrine of Karma is specially well expounded by persuasive arguments suited even to the average mind. * * * * *

This is the first production of its kind, and it is a well-written one. As such, we give it a hearty welcome, and we hope that many more short lives of the founders and saints of other religions will follow.

III. *Viveka Manjai*, a Tamil Miscellany, Volume I, comprising—

(1) *A Life of Colbert*, by C. V. Sawminatha Iyer.
(2) *Fairy Tell-True*, A Tale, by K. G. Sesha Iyer, *B. A., B. L.*
(3) *A Life of Sivaji*, by S. Muthu Iyer, B A.

With regard to the *Life of Colbert* we have only to express our appreciation of the work. The story is very well narrated, and boys who happen to tell lies in their school days may learn from it the simple lesson that truth and honesty bring their own reward. But one thing we must not pass over unnoticed, and that is the breach of continuity in the middle of the story. We are not told how the Banker's travelling agent got into the service of the Royal Secretary, how the Banker made up his mind to part with his trusted assistant, what motives actuated Colbert, or what special fascination the new employer had for him. All these must needs find a place in the story if it is to be considered complete.

As the *Life of Colbert* is a moral lesson for boys, so *Fairy Tell-True* is a moral lesson for girls on the evil of untruthfulness and obstinacy. The consequence of the heroine Padmavadani's persistency in hiding the truth and the result of her final confession emphasise the lesson.

The *Life of Sivaji* is an attempt to write in Tamil a life of one of the most striking personalities in Indian history.

The defence of Sivaji's treacherous methods of dealing with the Muhammadans is well conducted in the light of mordern investigations, but is no more edifying for the young than would be a defence of Clive in his dealings with Umachand. It is not a sign of moral progress that one should pay a rascal in the same coin. There are other means of overcoming a foe. * * *

Viewing the Series as a whole, we fully appreciate the services rendered by its authors to Vernacular Literature. The three publications are very interesting and very instructive.

It is generally said that the first production in a new field is entitled to lenient criticism. It is not for this reason that we sympathise with the aim of the authors and praise their publications. It is on account of their real worth. We wish the Series all the popularity it well deserves, and trust the editor will continue to give forth to the Tamil world many more publications like the books now in our hands, which will, we hope, gradually displace the silly and badly written stories like the *Madanakamarajankathai* and *Vivegasagaram* that usually form the favourite reading of our half-educated girls.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி. 5½ அணா,,
பழையபிரதி. 6 ,,

சந்தாவிலை விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6-மாதத்துக்கு ரூ. 2-2.

KNOWLEDGE IS POWER
DIFFUSION OF KNOWLEDGE AGENCY

விவேகசிந்தாமணி

VIVEKA CHINTAMANI

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing seperately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம். 7.] 1898ஞ நவம்பர்மீ [இலக்கம். 7.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs 5 per annum.

Single Copy 7½ As, : Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d NET PER ANNUM

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY Rs. 4; HALF-YEARLY Rs. 2-2.
SINGLE COPY, CURRENT No. 5½ As. BACK Nos. 6 As. EACH.
ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d NET PER ANNUM.

**If Strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions Entered to begin with only April or May of each year
Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a Volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V.P.P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:— அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள். புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5.
தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவருமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசச்சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V.P.P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## READINGS AT HOME.

### A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.

தாயார்.—அம்மா, சுப்பலக்ஷ்மி. நீ நேற்றுப் படித்த தமயந்தியின் கதையைக் கேட்கக் கேட்க இன்னமொருதரம் கேட்க வேண்டுமென்றுவலாயிருக்கிறது. ஆ ஆ! அந்தத் தமயந்தி, நளமஹாராஜாவைப் பிரிந்து காட்டில் பட்டபாட்டை நினைக்க நினைக்கக் கண்ணீர் ஆறாகப்பெருகுகின்றதே. எவ்வளவு கஷ்டப்பட்டாள் பாவம்! விதியின்பயன் ஆரைவிட்டது? "ஹரிணாபிஹரேணாபி ப்ரஹ்மணாபி ஸுரைரபி— லலாடலிகிதாரேகா பரிமாஷ்ட்ரும் நசக்யதே." என்று பெரியோர் சொல்லியிருப்பது பொய்யாமோ?

சிவகாமி.—இவளெப்போதும் இப்படித்தானம்மா. நானில்லாத வேளைபார்த்து நல்ல நல்ல கதையெல்லாம் வாசித்துவிடுகிறாள். நானேன் நேற்றைக்கு மீனாக்ஷிபக்கத்துக்கு விளையாடப்போனேன்?

தாயார்.—சிவகாமி, உனக்கிப்போது அந்தக் கதையைக் கேட்கவேண்டும்போலிருந்தால் நீ இன்றைக்கு அதையெடுத்துவாசியேன். எங்கே போய்விட்டது?

சுப்பலக்ஷ்மி.—அம்மா, நானேவாசிக்கிறேனின்றைக்கும். நேற்று உனக்காகத் தடதடவென்று வாசித்துக் கொண்டு போய்விட்டேன். அநேக சங்கதிகள் என்மனசில் பட்டதும் படாததுமாய்ப்போய்விட்டன.

தாயார்.—ஆனால் நல்லது; நீயேவாசி. உனக்குத் தெரியும்படியாயும், கேட்கிற பேருக்கும் விளங்கும் படிக்கும், கவனித்து நிறுத்திநன்றாய்வாசி. முகத்தைப் புத்தகத்தால் மறைத்துக்கொள்ளாதே. சிவகாமி, கவனமாய்க்கேள்.

சுப்பலக்ஷ்மி.- புஸ்தகத்தையெடுத்துச் சற்றே[...] கனைத்துவிட்டுப்படிக்கின்றாள்:—

கடல் சூழ்ந்த இந்தப்பூவுலகத்திலே, பூவில் தாமரைபோலவும், பொன்னில் ஜாம்பூந[...] போலவும், ஆவில் தேனுவைப் போலவும், அவயவங்களில் கண்களைப் போலவும், ஞான[...]த்தில் ப்ரஹ்மஞானம் போலவும், நதிகளில் கங்கையைப் போலவும், விளங்குவதாகிய பார[...] கண்டத்திலே, முற்காலத்தில், அங்கம், வங்கம், கலிங்கம், குலிங்கம், காஸ்மீரம், மகதம், குருதம், மாளவம், சாளுவம், மச்சம், கூர்[...]சரம், கேகயம், கேரளம், கோசலம், விதேகம், விதர்ப்பம், தெலுங்கம், மராடம், விராடம், நிஷதம், கர்ணாடகம், சேரம், சோழம், பாண்டியம் முதலான ஐம்பத்தாறு ராஜ்யங்கள் இருந்தன.—

சிவகாமி.—அம்மா, நானேதாவது கேள்வி கேட்கலாமா, சந்தேகமுண்டானால்?

தாயார்.—ஆகா, வேண்டிய கேள்விகள் கேட்கலாம். கதையை ஒட்டினதாயும் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமாயுமிருந்தால், எத்தனை கேள்விகள் கேட்டாலும் எனக்குச் சம்மதமே. அவற்றிற் கெல்லாம் எனக்குத் தெரிந்தவரையில் விடைகொடுக்கிறேன். உங்கள் ஸ்கூலில் சொல்லி வைத்ததைக் கொண்டு குதர்க்கம் பேசி மடக்கப்பார்த்தாலென்னால் முடியாது.

சிவ.—ஆமா, ஸ்கூலில் ஏதோ சொல்லி வைத்துவிட்டார்கள்! அதுகிடக்கட்டும். இந்த ஐம்பத்தாறு தேசமும் இப்போது எங்கே போய்விட்டன? அன்றியும், இந்த ஹிம[...] ஸேதுவுக்குட்பட்ட நாட்டில், ஐம்பத்தாறு ராஜ்யங்கள் இருக்குமானால் ஒவ்வொன்றும் அதிக சொற்பமாகத்தானே இருக்கவேண்டும்? இந்த வெள்ளைக்கார[...]ரத்தனை ராஜ்யம் ஒருவர்க்கும் இருந்ததி[...]ராதே? இவ்வளவு தானா அந்நாளைய ராஜாக்களின் பெருமை? இதைத்தானா பெருக்கப் பெருக்கக் கதை கதையாச் சொல்லுகிறார்கள்?

தாயார்.—அவ்விராச்சியங்களில் அநேகம் பிற்காலத்தில் வலியிழந்துசிதைந்துபோயின. மற்றவை முதலில் மகம்மதியருக்கும் பின்பு ஐரோப்பியருக்கும் ஸ்வாதீனமாய்ப் போய்விட்டன. அன்றியும், இவ்வெள்ளைக்காரரைப்போல இவ்வளவு விஸ்தீரணமான ராஜ்யமும், பிரபுத்வமும், செல்வமும், செங்கோலும், ஒருவர்க்கும் இருந்ததில்லை யுண்மையே. ஆயினும், அந்நாளிலும் அநேக ராஜ்யங்களுக் கதிபதிகளாய் மகா வீர தீர பராக்ரமசாலிகளான சக்கரவர்த்திகள் அநேகர் இருந்திருக்கிறார்கள். நாமிப்போது வாசிக்கும் தமயந்தியின் நாயகனாகிய நளமஹாராஜா அப்படிப்பட்ட சக்கரவர்த்திகளில் ஒருவன் தான். இந்நளமஹாராஜா இப்பாரத கண்டத்தையே யன்றி இதற்கு மேற்கும் வடக்குமுள்ள மற்ற அநேக கண்டங்களையும் கட்டியாண்டதாகச் சொல்லியிருக்கின்றது.

அதாவது, மற்ற அரசர்களெல்லாம் அவனுக்குக் கீழ்ப்படிந்து கப்பம் செலுத்தி வந்தார்கள். இன்னொருசங்கதி. அரசர்களின் பெருமைக்கும் பிரதாபத்துக்கும், அவரது ராஜ்யத்தின் அளவுக்கும் வெகுவாகச் சம்பந்தமில்லை. அநேகமாகச் சரித்திரங்களில் விவரிக்கப்பட்ட வீரர்களும் சூரர்களும் எத்தனையோ சிறிய ராஜ்யங்களுக்கே அதிபதிகளாயிருந் திருக்கிறார்கள். இவ்விஷயத்தை விவரிக்கிற் பெருகுமாதலின், இத்துட னிறுத்தி மேற்கதையைக் கேட்போம்.

சுப்ப.—அந்த ஐம்பத்தாறு ராஜ்யங்களிலும் மிக்க நீர்வளமும் நிலவளமும் பொருந்தியதாய், மாத மும்மாரிபெய்ய வருஷமுப்போகம் விளைந்து, பலவளங்களும் நிறைந்து சுபிக்ஷமாயிருந்த விதர்ப்ப தேசத்திலே, குண்டின புரத்திலே, வீமராஜனென்றோர் அரசன், பருந்தும் கிளியும் ஒருகூட்டத்தில் பொருந்தி வாழவும், பசுவும் புலியும் ஒருதுறையில் நீர்குடிக்கவும், துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் செய்து, ஆறிலொரு கடமை கொண்டு மனுநெறிவழுவாமல் செங்கோல்செலுத்தி வந்தான்.

சிவகாமி.—இதேது ஆச்சரியம்! எங்கேயாவது பருந்துங்கிளியும் ஒரு கூட்டிற் பொருந்தி வாழுமா? பசுவும் புலியும் ஒருதுறையில் நீர்குடிக்குமா? ஒன்றை யொன்று கண்டால் உடனே கொன்று விழுங்கிவிடுமே.

தாயார்.—ஆமாம், அப்படித்தான்; சுபாவத்திலே அவற்றிற்கொன்றுக்கொன்று பகைதான். இங்கே இதற்கு அருத்தம்: அரசன் செங்கோலனாதலினாலே, அவனுக்குப் பயந்து வலியோர் எளியோர்களைப் பிடித்து வருத்தாமல் ஒருவரோடொருவர் சிநேகமா யுறவாடிக் கலந்து வாழ்ந்து வந்தார்கள்; என்று மாத்திரம் கொள்ள வேண்டும். அன்றியும், அரசனுடைய தர்மபரிபாலனத்தினால், தர்மசிந்தையும் மாற்சரிய மின்மையும் சிற்றறிவினவாகிய கொடிய வனவிலங்குகளுக்கும் பக்ஷிகளுக்கும் கூட உண்டாகுமானால் மனிதர்களுக்குண்டாகச் சந்தேகமே யில்லை யென்பதையும் காட்டுகின்றது. மேலே வாசி.

சுப்ப.—அவ்வீமராஜனுக்கு நெடுநாளாகப் புத்திரபாக்கிய மில்லாமையாலே, ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு முதலாகிய அநேக தர்மங்களைச்செய்து, கடைசியில் தமனிய முனிவ ரென்றும் ஒருமுனிவரது அருளினாலே ஒரு பெண்குழந்தையைப் பெற்றான்.

சிவ.—"பெண்ணானாலும் பிறவாதா, பீர்க்கானாலும் காயாதா!" என்று பெண்ணையாவது பெற்றானே! பெரியகாரியம்தான்!

தாயார். — ஏனப்படிச் சொல்லுகிறாய் அப்பா? 'புத்ராச்சதகுணப்புத்ரி' என்ற ஆன்றோர் வாசகப்படி, புத்திரனால் அவன் ஒருகுலம் மட்டுமே பெருமைப்படும்; புத்திரியாலோ பிறந்தகுலமும் புகுந்தகுலமும் இரண்டும் மேன்மைப்படுமன்றோ? பெண்களை நாம் குறைவாக மதிப்பது இக்காலத்தில் நமக்குள் ஏற்பட்டிருக்கும் சிற்சில துராசாரங்கள் காரணமாகவும், பெண்களுக்குத்தக்க வரனைத்தேடி விவாகம் செய்வித்தல் முதலிய பலகாரணங்களால், பெற்றோர்களுக்குண்டாகும் மிக்க கவலைகளையும் மனக்கிலேசங்களையும் பற்றியுமேயன்றி வேறில்லை.

சுப்ப. — பேசாமல்வாயைமூடிக்கொண்டிரேன், சற்றுப்போது, சிவநாமி.

சிவ. — உனக்கென்னடி யம்மா? அம்மாளைக் கேட்கிறேன், அம்மாள் விடைகொடுக்கிறாள். 'எருது இழக்க உண்ணிக்கு நாக்கு வாங்குகிறதாம்!' என்பதுபோலிருக்கிறதே!

தாயார். — சுப்பு நீயேன் அவசரப்படுகிறாய்? கதை இன்றைக்குமுடியாவிட்டால் இன்னம் நாலுநாளில் முடியட்டுமே. விஷயங்களைக் கிரகிப்பதுதான் முக்கியம்.

சுப்ப. — ஆனால் சரி, எனக்கென்ன? (வாசிக்கிறாள்) — அந்தப் பெண்ணுக்குத் தமயந்தியென்று நாமகரணம் செய்து, பிறவிக்குருடனுக்கிருகண் கிடைத்ததுபோல நற்றாயாகிய காஞ்சனமாலையும் செவிலித்தாயர்களும் குதூகலித்து, நாள்தோறும் எண்ணெய்தேய்த்து, நன்னீராட்டிப், பட்டால்துவட்டி நற்பொட்டணிந்து, கருவிழிகளுக்கு அஞ்சனமிட்டு, மார்போடணைத்து மகிழ்ச்சிபூண்டு, இன்னமுதூட்டிப் பொன்னணி பூட்டித், தொட்டிலிலிட்டுத் தாலாட்டித் தூங்கச்செய்து, கையைவிட்டுக் கீழிறக்காமல் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வந்தனர். காஞ்சனமாலை[...] செவிலிகளும் குழந்தையின் பேரழ[...] கண்டு கண்கொள்ளாமல் மனமகிழ்.

1. "பார்க்கும் சுவைவானமுதமே
பார்வேந்தணியே யெந்துயரம்
தீர்க்கும்கரும்பே கண்மணியே
திருவே பொருவில் செல்வமே
கார்க்குஞ்சரத்தி னிளம்பிடியே
கரியகுயிலே பசுங்கிளியே
வார்க்கும் பசுந்தேன் வெறுப்பவிள
மழலைமொழியும் மதர்விழியே."

2. "பொன்னே யெமது பூங்கொடியே
புகரில் குடிக்கோர் மணிவிளக்கே
பூவைகுயில் யாழிவைநாணப்
பொழியும் மழலைப் பசுங்கிளியே
அன்னே யெமது கலிநீங்க
அரிதிற்புகுந்த பெருந்திருவே
ஆரமணிப் பூணெழில்திருத்த
அருகேவருக வருகவே;
மின்னேரிடைமே கலையணிய
வழிவேலிணைக்கஞ் சனமூட்ட
வேரிக்குழன்மென் மலர்முடிக்க
விரைவின் வருகவருகவே;
பன்னாளிதிற் புரிதவத்தின்
பயனேவருக வருகவே;
பார்க்கும் விழிக்கோர் நல்விருந்தே
பாவாய் வருகவருகவே."

3. "அம்மே யெந்தமருங் கொடியே
அழகே யகத்தே மகிழ்வுதவும்
அணங்கே யெமது குலம்விளக்க
அரனாருளும் திருவிளக்கே
எம்மால் முயன்று தேடரிய
எழிலாருலவாப் பெருநிதியே
எமது மகவில் விருந்துயர்நோய்
இரிய அடுத்த அருமருந்தே
கைம்மாறுகவாக் கருமுகிற்செங்
கரத்தெம்மரசன் கருத்துவக்கக்
கழறும் மழலைக் கனிவாயாள்
கற்பத்தருவின் பொலன்கொம்பே
மும்மையுலகும் தேடரிய
முளரிமலர்மேல் மடமானே
முகிழ்மென் முத்தம் தருகவே
முதல்விமுத்தம் தருகவே."



— என்று சீராட்டிப் பாராட்டி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர்.

இவ்வாறு, பெற்றோர் மகிழ, நாளுக்குநாள் அழகிலும் வடிவிலும் அறிவிலும் குணத்திலும் சிறந்து, பூருவபட்சத்துச் சந்திரனைப்போல் வளர்ந்து, பேதைப்பருவங்கடந்து பெதும்பைப் பருவத்தை யடைந்தனள். அரசன்புதல்வியின் பருவத்தையாலோசித்து, அவட்காக வேறோர் கன்னிமாடமொன்று கட்டுவித்து, அதில் கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் சிறந்த மாதர்கள் பலரும்சூழத் தமயந்தியை இருத்தினன்.

தமயந்தி, அக்கன்னிகாமாடத்தில் அநேகம் பெண்களோடு பாடல் பயின்றும் வீணைவாசித்தும், மத்தளம் முதலிய கருவிகள்சேர நர்த்தனம் செய்தும் நாண்மலர் கொய்தும், பூந்தொடைவேய்ந்தும் சாந்தம்பூசியும், ஏந்திழை பூண்டும் தீஞ்சுவை மாந்தியும், மணிப்பந்தடித்து மலர்க்கரஞ்சிவக்க அம்மனைபாடியும், அருங்கிளிக்கூட்டியும், பொன்னூசலாடியும், பூம்புனல் குடைந்தும், இனிதாகப் பொழுது போக்கி மகிழ்வுற்றிருந்தனள்.

ஆ! ஆ! அத்தமயந்தியின் அழகையும் அருங்குணங்களையும் விவரித்துச் சொல்லுதல் ஆதிசேஷனுக்கும் வசமாகாதென்னில் மற்றவர்க்கு எவ்வாறு கைகூடும்? அதிகமாக வர்ணிப்பதேன்? அவளுக்கிணையான வடிவழகுடையார் சுவர்க்க மத்திய பாதாளமாகிய மூன்றுலோகங்களிலும் தேடிப்பார்த்தாலும் கிடையார்கள். பிரமதேவர், இவளைப் பெண்ணழகுக்கோர் எல்லையாகப் படைத்ததன்றி வேறில்லை.

சிவ — தமயந்தியைப்போலே அழகிற்சிறந்தவர் மூன்றுலோகத்திலேயும் இல்லையோ?

தாயார் — இல்லையென்றே சொல்லியிருக்கிறது? அவளைவிரும்பி மணஞ்செய்யும் பொருட்டுப், பின்பு, இந்திரன் முதலான தேவர்களும் மனுஷ்யரூபங்கொண்டு பூவுலகுக்கு வந்து பகுவிதமாகப்பிரயத்தனம் செய்ததாகவும், பிற்காலத்தில், தமயந்திக்கும் அவள் காதல் நாயகனுக்கும் உண்டாகிய துயரங்களுக்கெல்லாம்காரணம் அவளது அழகைக் கேட்டுக்காமுற்று அவளைவிவாகம் செய்யக்கருதிய கலிபுருஷன், அது தனக்குக் கைகூடாததினால், அடைந்த துவேஷமே யென்றும், சொல்லியிருக்கிறது. அன்றியும், மனுஷரூபத்தைக்கண்டு மோகித்து வியத்தற்கேதுவில்லாத பக்ஷிஜாதியாகிய அன்னம்கூட அவளிடம் தூதுசென்றபோது அவளது பேரழலைக் கண்டு.

"தெய்வத்தாமரைப் போதுறைசெல்வியும்
கொவ்வைவாயயிராணியும் கூறுமிந்
நவ்விநோக்கிக் கிணையென நாட்டுதல்
எவ்வமென்ன இகழ்ந்து வியந்ததே." *

என்று சொல்லி யிருக்கிறது. இதனிலும் அவளழகைப் புலப்படுத்துவதற்குச் சாக்ஷி வேறு வேண்டுவதில்லை.

சிவ — இருக்கட்டும். தமயந்தியிலும் அழகிற்சிறந்தவர் வேறில்லை யென்றே வைத்துக்கொள்வோம். பெண்களுக்கு முக்கியமாக வேண்டுவது அழகொன்றுதானா? அழகிருந்தும், கல்வியும் நற்குணமுமில்லாவிடில் என்னபிரயோசனம்?

" குஞ்சியழகும், கொடுந்தானைக் கோட்டழகும்,
மஞ்சளழகும், அழகல்ல;— நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையால்
கல்வியழகேயழகு."

என்ற நாலடியார்பாட்டு எனக்கு ஞாபகம் வருகிறது. இந்தப்பாட்டு எதிர்த்த வீட்டுக் கைலாசம் தாத்தா அடிக்கடிச்சொல்வார் கேட்டிருக்கிறேன்.

தாயார் — ஆமாம், அப்பாட்டிற் சொல்லியது உண்மைதான். அறிவும் மகிழ்வும் கொ

---

* அன்னமானது இலக்ஷ்மியையும் இந்திராணியையும் இகழ்ந்து தமயந்தியைப் புகழ்ந்தது — என்பது இதன் கருத்து.

டிக்கும் கல்வியைப்பேணுமல், சதாகாலமும் தேகத்தை மினுக்கிச் செயற்கையழகுசெய்து கொள்வாரைக்குறித்துச்சொன்னது வாஸ்தவமே. தமயந்தியின் அழகோ இயற்கையழகு. அன்றியும் இங்கே தமயந்திக்கு வடிவழகைத்தவிர வேறொன்றும் இல்லையென்று எப்படி நிச்சயித்தாய்? கீழே கதையில் வாசித்ததைக் கவனிக்கவில்லையோ? 'அழகிலும் வடிவிலும் அறிவிலும் குணத்திலும் சிறந்தவள்' என்றும் ஆடல் பாடல்முதலியபலகலைகளில் தேர்ந்தவள் என்றும் சொல்லி யிருக்கின்றதே. மேலும் உலகத்தில் இயற்கையாகவடிவும் வனப்பும் உள்ள விடத்தில் அநேகமாக அதற்குத்தக்கபடிக் குணமும் நலமும் இருக்கவேயிருக்கும். 'அகத்தழகு முகத்திற்றெரியும்', என்றபடி உடலும்மனமும் ஒன்றுக்கொன்று ஒத்திருக்கு மென்பதை ஒவ்வொருபொருளிலுங்காணலாம். பொன்னுக் கொளியும் பூவுக்கு மணமும் இயற்கையாக அமைந்திருத்தல் போல, அழகுக்குத்தக்க குணமும் அறிவும் அவசியம் அமைந்திருக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வுண்மை, தமயந்தியின் சரித்திரத்தை மேலே படிக்கப் படிக்கத் தானே விளங்கும். அவளது மனவுறுதியும், பதிவிருதாச்சிறப்பும் அறிவின் பெருமையும், குணநிறைவும் எல்லாம் அழகிலும் பன்மடங்காப் பிரகாசிக்கும். முழுதும் படிக்கக்கேள்.

சுப்ப. — ஆச்சுதா அம்மா உன்பிரசங்கம்? மேலே வாசிக்கலாமா?

சிவ. — ஆனால் *தேவலே! உன்னைப்போல — பேசும் பெட்டியுண்டாம்; சூத்திரத்தை முடுக்கிவிட்டால் பேசிக்கொண்டேயிருக்குமாம் அந்தமாதிரி, — வாசிக்கிறதுதான் காரியம். வேறே யோசனையா யுத்தியா ஒன்றும் வேண்டா மென்கிறாயா, அம்மா? உன் கெட்டிக்காரத்தனத்தை நீதான் மெச்சவேண்டும்.

தாயார் — கோபித்துக் கொள்ளாதே. நீ கேட்டதெல்லாம் நியாயம் தான். சுப்பு இன்று இதுவரையில் போதும் நிறுத்திவிடு.

(இன்னும் வரும்.)

எஸ். முத்துஐயர், பி. ஏ.

## செல்வ நூல்.

### 2. ஜனசங்காதங்களது பரஸ்பராபேக்ஷை.

ஒரு நாட்டின்கண் வாழும் ஜனங்கள் பரஸ்பராபேக்ஷை யுள்ளவர்களாக விருக்கிறார்கள். ஒவ்வொருவரும் மற்றவரின் சகாயத்தின் மீது சார்ந்தே ஜீவிக்கிறார்கள். சிறிது ஆலோசித்துப் பார்த்தால் நம்முடைய சுகதுக்கங்களுக்கு எவ்வளவு பிறர் காரணபூதர்களாகிறார்கள் என்று நன்குவிளங்கும். நாம் பிறர் உதவி கிஞ்சித்தேனும் இல்லாமலே ஜீவிப்போம் என்று சங்கல்பம் செய்துகொண்டு அதன்படி நடக்கமுயன்றால் மூன்றுநாள்கூடப்பிழைத்துக்கடைத்தேற மாட்டோம்.

நாம் உடுத்தும் துணியை எடுத்துக்கொள்வோம். அது நம்மானத்தைக்காக்கவும் குளிருக்குப் போர்க்கவும் உதவி, நம்மேல் உல்லாஸமாய்வந்து அமைவதற்குமுன் எவ்வளவு வேலைக்காரர்கள் கைப்பாட்டிற்கு இலக்காயிருக்கவேண்டும்.

முதல் முதல், காலாகாலத்தில் பருத்தி போட்டகுடியானவனை நாம் கணக்கில் சேர்க்க வேண்டியது. திருநெல்வேலி, பல்லாரி, கடப்பை, கோயமுத்தூர் முதலிய தேசத்தவா[illegible] கவுண்டனும், கவுடனும், வடுகனும் பாடுபட்டு பருத்திபோட்டுக் காவலிருந்து அது வெடி[illegible]கும் தருவாயில் தனது குடும்பசகிதமாக சி[illegible] மிகளும் கிழவிகளும் ஒருங்குக்கூடி அந்த [illegible]டித்த பருத்திகளை யெடுக்கவேண்டும். பிர[illegible] அச்சமயத்தில் இத்தேசத்திலும், மறுதேச[illegible]



[illegible]ளிலும் உள்ள யந்திரசாலைக்காரர்களுக்காக, அச்சாரம் கொடுத்துக் காத்திருக்கும் சில்லரை வியாபாரிகள் சேர்ந்து வண்டி வண்டியாய்ப்பட்டணங்களுக்குக்கொண்டுபோக, அங்கு ராட்டைகளில் அகப்பட்டு கொட்டை வேறு பஞ்சு வேறாகப்பிரிக்கப்பட்டு கட்டியான மூட்டை மூட்டைகளாகக் கட்டப்பட்டு வெவ்வேறு ஊர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பிறகு வேறு சிலயந்திரங்களிடம் அகப்பட்டு விதம் விதம் திடமுள்ளநூல்களாக ஆக்கப்பட்டு, மற்றும் சில இடங்களுக்குச்செல்கிறது. அங்கே அந்நூற்கட்டுகள் சாயம்போடப்பட்டு பலவிதத்துணிகளாக நெய்யப்படுகின்றன. இப்படி அந்தத்துணி ஆவதற்குள் எவ்வளவுவேலைப் பாடுபடவேண்டியிருக்கிறது! எவ்வளவு கூலியாள், எத்தனை எஜமான்கள், எந்தெந்த வர்த்தகர் வேண்டியதோ அதைக்கணக்கிட்டு முடியாது.

இப்படியேதான் நாம் உண்டு உடுத்து ஆண்டு அனுபவிக்கும் ஒவ்வொரு பதார்த்தமும் நமக்கு உபயோகமாகுவதற்குள் வெகுவான ஜனங்கள் கையுதவி வேண்டுகின்றன. நாம் விளக்குப்பற்றவிடும் தீக்குச்சி பதினையாயிரம் மயில்களுக்கு அப்பால் உள்ள நார்வே என்னும் தேசத்திலிருந்து வருகிறது. ஆகவே நாம் எல்லோரும், (இந்நாட்டில்வாழும் ஜனங்கள்மாத்திரம் அல்ல, இவ்வுலகம் முழுதும் வாழும் ஜனங்கள் எல்லாரும்) பிறருடைய அபேக்ஷையில்லாமல் தம் மட்டில் தம்மையே சார்ந்தவராகவில்லை.

இப்பூமியில் வாழும் எல்லாரும், ஊகித்துப் பார்த்தால், ஒரு குடும்பஸ்தர் மாதிரி கலந்து சுகதுக்கங்களுக்குபாத்தியப்பட்டிருக்கிறார்கள். ஒருபிலையாவதற்கு எப்படி சிறுசிலாசகலங்கள் இன்றியமையாதவையோ, எப்படி ஒருபிராணியாக, உடம்பின் உறுப்புகள் இன்றியமையாதவைகளோ, அப்படியே உலகத்தில் வாழும் ஒவ்வொருவனும், இராச்சியத்தின்தேகத்தைப் புஷ்டிகரிக்க ஏற்படுத்தப்பட்ட ஒருபாகம் என்று நாம் கொள்ளவேண்டியது.

இதற்கிணங்கவே சுக்கிராசாரியர் ஸ்யோக்யஃ வா[illegible]ஷோநாஸ்தி என்று யோக்யமில்லாத மனிதன் ஒருவனும் இல்லை என்ற அருத்தத்துடன் சொன்னார்.

ஜனங்கள் செய்வதென்னவென்றால் அவரவர்கள் தங்கள் தங்கள் அத்தி, சக்தி, சமயம் இவைகளுக்குத் தக்கபடி என்னென்ன வேலை செய்யக்கூடுமோ அந்தந்த வேலைகள்செய்து, என்னென்ன பொருள்கள் ஜனங்களுக்குப் பிரயோசனமாகத்தக்கவைகளோ அவைகளை ஏராளமாகத் தங்களாலியன்றமட்டும் உண்டாக்கி, தங்களுக்கு வேண்டியதுபோக மிகுதியைவியாபாரிகள் மூலமாகப் பிறருக்குச் சேர்ப்பிக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டியபதார்த்தங்கள் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாக்கப்பட்டு வெவ்வேறு கையேறி சமுத்திரம்பாயும் ஆறுகள்போல, பல இடங்களில் பாவி இவ்வுலகில் வாழும் பற்பல ஜனங்களின் சங்காதமாகிற மகாசமுத்திரத்தில் விழுந்து லயமடைகிறது. ஒருநாள் உலகம் முழுதும் வேலை செய்யாவிடில் எப்படி உடனே சமஸ்தமானிட ஜீவமும் மடிந்து விடுமென்று எளிதில் விளங்கும். ஆகையால் நாமறியவேண்டியது என்னவெனில் உழைப்பு என்பதின்பேரில்தான் இந்த ஜகத்ஜீவனெல்லாம் சார்ந்திருக்கிறது. உழைப்பு இல்லாவிடில் பிழைப்பு இல்லை என்பது செல்வநூல் கற்பிக்கும் தத்துவங்களில் முதன்மையானது. ஆகவே எல்லாரும் உழைத்தே பிழைக்க வேண்டியது. எவன் உழைப்பில்லாமல் பிழைக்க வகைதேடுகிறானோ அவன் திருடனே யொழிய வேறில்லை. நாம் மற்ற ஜனங்களிடமிருந்து அவர் உழைப்பின் பலனை அடைகிறோம். நாமும் அவர்களுக்கு நம் உழைப்பின் பலனைக் கொடுக்கவே வேண்டும்.

[illegible]

ஜி. கஸ்தூரி ஐயங்கார்.

* 'தாழ்விலே' என்னும் வார்த்தையின் மரூஉ.

## வாழ்க்கைத்துணைநலம்.

"மனைத்தக்கமாண்புடையளாகித்தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை."

"மனைமாட்சிஇல்லாள் கணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித்தாயினுமில்."

"இல்லதெனில்லவள் மாண்டாளுல் உள்ளதெ
னில்லவள்மாணுக்கடை."

இல்லறத்திற்குத்தகுந்த நற்குண நற்செய்கைகளையுடைய வளாகித் தன்னை மணம்புரிந்தகணவன்வரவுக்குத்தக்கசெலவு செய்பவள்தான் இல்வாழ்க்கைக்குத் துணையாவாள். மேற் கூறிய மனையாள் வாய்க்காவிடின், எச்சிறப்புடைத்தே னும், அவ்வில்வாழ்க்கை சிறப்புடைத்தன்று. மாட்சிமை தங்கிய மனையாள் வாய்க்கின் இல்லாததொன்றுமதோ. அஃதன்றேல் உள்ளதுதான் யாது.[1]

"பெண்ணிற்பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண்டாகப்பெறின்."

ஒருவன் பெறக்கூடிய பெரும் பேறுகளுள், கற்பென் னுங் கலங்கா நிலைமையுடைய மனையாளினும், சிறைப் புடைத்து யாது.

"தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யுமழை."

தெய்வம் எனக்கூறும் எதையும் வணங்காளாகி, உறங்கி விழிக்கவும், கணவனைத் தொழும் பெண்டிர் பெய்யென்று சொல்ல மழைபெய்யும்.[2]

"தற்காத்துத்தற்கொண்டாற் பேணித்தகைசான்ற
சொற்காத்துச்சோர்விலாள்பெண்."

தன்கணவன் கற்பு நிலையினின்று, தன்னையுங் காத்து, அவனையும் காப்பாற்றி நற்குண நற்செய்கை களை மறவாது புரிபவளே மனையாள்.

"சிறைகாக்கும் காப்பெவன்செய்யுமகளிர்
நிறைகாக்குங்காப்பேதலை."

கணவன் காக்கும் காவலென் செய்யும் பெண்கள் தங்கள் கற்பினால் காக்கும் காவலே சிறந்தது. 'அறைக்காத்தான் பெண்டிழந்தான்' என்பதும் அறியத்தக்கது.[3]

"பெற்றாற்பெறிற்பெறுவார்பெண்டிர்
பெருஞ்சிறப்புப் புத்தேளிர்வாழுமுலகு."

பெண்கள் கணவனை வணங்கிவந்தால் சுவர்க்கத் தில் தேவரால் வணங்கப்படும் பெருஞ் சிறப்படை வர், முற்கூறியபடி தெய்வமும் அவர்கள் வாய்ச் சொல்தட்டாது.[4]

"புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற்பீடுநடை."

'கற்புடையாள்' என்று உலகம் கூறும் கீர்த்தியை விரும்பா மனையாள் வாய்க்கின், அவருக்குப் பகைவர் முன் சிங்கம்போன்ற பெருமித நடையில்லை.[5]

"மங்கலமென்பமனை மாட்சிமற்றத
னன்கலனன்மக்கட்பேறு."

மனைவியின் மாட்சிமைக் குணங்களை ஒருவனுக்கு நன்மையென்றும், நன்மக்கள் பெறுதலை அந்நன் மைக்குப் பூஷணமென்றும் அறிந்தோர் கூறுவர்.[6]

---

வாழ்க்கைத்துணைநல விசேஷத்தைக் குறித்து நம் மனோர் இவ்வாறு கூறியிருக்கின்றனர். ஆங்கிலேய கிரந்த கர்த்தாக்களில் ஒருவராகிய வாஷிங்டன் இர்விங் என்பவர் மனைவியின் குணத்தைச் சிறப் பித்து தம்மவருள் தாமறிந்த உதாரணம் ஒன்றைக் கூறியெழுதியிருக்கிறார். அதை நம்மவர் அறியப் பின் னால் வரைகிறோம்.

(1) அந்நற்குண நற்செய்கைகள் பின்வரும் செய்யுளான் விளங்குமே :—

அடிசிற்கினியாளே யன்புடையாளே
படிசொற்றவறுதபாவாய்—அடிவருடிப்
பின்றூங்கிமுன்னெழுந்த பேதையேபோதியோ
வென்றூங்கு மென்கணிரா.

(2) இவ்விடத்து வாசுகிசரித்திரம் அறியக்கூடியது,

(3) சீதாபிராட்டியாரைக்காத்தது அவள் கற்புநிலைமை யன்றோ.

(4) கண்ணகியைத் தெய்வமாய் லங்காபுரி, மதுரை, திரு வாங்கூரில் கொண்டாடுவதற்கு இதன்றோகாரணம்.

(5) ஆங்கிலேயதேசத்து பூர்வீக அரசனாகிய ஆர்தர்-குவி னிவீயர் கதை இதைவிளக்குகின்றது.

(6) இதைச்சந்திரமதி சரித்திரம் புலப்படுத்தும்.



## மனைவி.*

(ஒரு ஆங்கிலேய குடித்தனக்கதை.)

"உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா"

"பெண்ணின் பிரியத்தால் சூழப்பட்ட மனிதன் மனத்துள்ள சுகமும், சௌக்கியமும், ஆழ்கடலில் ஆழ்ந்துள்ள விலையற்ற முத்துக்கள் முதலியவைகளி லும்மிகவும்சிறந்தது.தான் இல்லம்அணுகும்பொழுதே அருள்வாடை வீசுகின்றதே. மணத்தில் எம்மண முளது பார். ரோஜாப்பத்தியும் அவ்வளவு மணமு டைத்தன்று"—என்றார் மிடில்டன்.†

பெண்கள், ஒருவராலும் தாங்கக்கூடாத ஆபத்து விபத்துக்களை அதிகமான தைரியத் தோடு பொறுத்திருப்பதை நான் அநேகம் தடவை பார்த்திருக்கிறேன். மனிதனது ஊக் கத்தையழித்துத் தரையில் வீழ்த்தும்படியான துயரம் மெல்லியரின் முயற்சியைக் கிளப்பி மாக்ஷிமைப்படத்தக்க தீரத்தையும் மேன் மையையும் உண்டுபண்ணுகின்றது. உயர்ந் தோங்கும்நாளில், சோர்வும் தளர்வும், சார்பு மாயேயுள்ள, சிறு கொடுமையும் அஞ்சச்செய் யும் இனிமையும் மேன்மையுமுள்ள ஒருபெண் திடீரென்று மனோதைரியத்திலுயர்ந்து தன் கண வனைத் தேற்றி ஆதரித்து மிகவும் திடனுடன், வறுமையின்மிகுந்த இடுக்கண்களைப் பொறுக் கப்பார்ப்பது மிகவும் மனதை உறுக்கத் தகுந் ததே.

தேக்குமரத்தைத் தன் அழகிய இலைகளால் சுற்றியிருக்கும் திராக்ஷக்கொடி, அவ்வுயர்மரம் இடியினால் பிளக்கப்பட்ட பொழுதும், தன் இளந்தளிர்களுடன் இன்னும் அதைத் தழுவிக் கொண்டு, அதன் ஒடிந்த கிளைகளைச் சேர்த்துக் கொண்டிருப்பதுபோல, சுகானுபவத்தில் கண வனுக்குப் பூஷணமாயிருந்து, திடீரென்று விப த்து சம்பவிக்கும்நாளில் அவன் நொந்தமனதை ஆற்றி, தொங்கும் தலையைத்தாங்கி அவனுக்கு ஆறுதலும் உதவியுமாய் இருக்கும்பொருட் டன்றோ சுவாமி பெண்களைச் சிருஷ்டித்திருக் கின்றனர்.

"மனைவியும் குழந்தைகளும் உடையனாயி ருத்தலைவிட மிகவும் நலமானகதி நான் உனக்கு விரும்பக் கூடியதன்று": ஆக்கம் வருநாளில் அதை உன்னுடன் அனுபவிக்கவோ, துக்கம் வருநாளில் உன்னை ஆற்றவோ அவர்களி ருக்கிறார்கள்.

மணம்புரிந்தவன், துயரத்துள் வீழ்ந்தால், தன்னந்தனியா யிருப்பவனைவிடச் சீக்கிரத்தில் தன்னிலைமையைத்திருப்பி அடையக்கூடும். ஏ னெனில் ஜீவனத்திற்கு அவனையே நம்பியிருக் கும், கதியற்ற பிரியமுற்ற பெண்சாதி பிள்ளைக ளின் குறைகளினால் அவன் வேலைக்குத் தூண் டப்படுவான். இதன்றி இன்னும் முக்கியமாக ஒரு சாதகமுண்டு. வெளியெல்லாம் மனம் நோக வுழைத்தாலும், சுயாதிபத்தியமுள்ள பிரி யமான ஒரு சிறு உலகமாகிய தன் இல்லமு ண்டு.—அதற்காகத் தன் மானத்தைக் காப் பாற்ற வேணும் என்ற எண்ணம் தூண்டுதலி னாலும், இல்வாழ்க்கையில் ஒரு ஆறுதல் காண லாம் என்ற எண்ணத்தினாலும் தன்நிலைமை யைத் திருத்த முயலுவான்.

இவன்கதி இப்படியாக, தனிமையாயிருப்ப வனோ அசாக்கிரதையாய் வீண்செலவில் வீழ்ந்து, தன்னை எல்லோரும் கைவிட்டதாயும் தனக்கு வேறுகதியில்லை என்றும் நினைத்து குடி யில்லாமல் பாழாய்க்கிடக்கும் வீடு இடிந்து விழுவதுபோல மனமுடைந்து வீழ்ந்து விடு வான்.

இப்படி யோசிக்குங்கால் நான்நேரில்பார்த்த இருவர் இல்வாழ்க்கை என்ஞாபகத்துக்கு வரு கின்றது. உயர்ந்தகுடியிற்பிறந்து செல்வமாய் வளர்க்கப்பட்டவளான அழகுவாய்ந்த கற்றுத் தேறிய மெல்லிய மங்கையொருவனை என் அத் யந்தசிநேகனான லேஸ்லிமணம்புரிந்தான். அவ ளோ ஆஸ்தி யொன்றும் ஸ்ரீதனமாக கொண்டு வரவில்லை; ஆனாலும் என் சினேகிதனிடத்திரு

* Translated from Washington Irving's Sketch Book.
† Middleton.

ந்த ஐசுவரியம் அவர்கள் எவ்வித சுகபோகங்களையும் அனுபவிக்கப் போதுமானதாயிருந்தது. அவளுக்குத் தான் எல்லா இந்திர போகங்களையும் அளிக்கக்கூடும் என்று எண்ணி எண்ணி ஆனந்தப்படுவான். 'அவளை ஸர்வபோகங்களையும் அனுபவித்து ஆனந்தித்திருக்கச் செய்வேன்' என்று சொல்வான்.

அவர்கள் சுபாவம் வெவ்வேறாயிருந்தும், அவ்வேற்றுமையே அவர்களை ஒத்திருக்கச் செய்தது. அவன் விசித்திரமான எண்ணங்கொண்டு எப்பொழுதும் ஒருமாதிரியாயிருப்பவன். அவளோ சிரிப்பும் உற்சாகமுமுள்ளவள். அவள் பத்துப்பேர் மத்தியிலிருக்கும்பொழுதும், அவள் கணவன் அவளையே, வாய்திறந்து ஆனந்தத்துடன் பார்த்துக்கொண்டிருப்பான். அவளைப் பலர் தெய்வமாகக் கொண்டாடும் பொழுதும் அவள் கண், அருளும், அங்கீகரிப்பும் லெஸ்லியிடத்துத்தான் வேணுமென்றாற்போல, அவனிடத்தே செல்லும். அவன்கையில் அவள் சாய்ந்துகொண்டிருக்கும்பொழுது, அவள் மெல்லிய சரீரமும், அவன் உயர்ந்த ஆண்மை தங்கிய உடம்பும் வெகு நேர்த்தியாயிருந்தது. இல்வாழ்க்கை என்னும் பூம்பாதையில் மிகவும் சுகித்திருக்கக்கூடிய வகைகளுடன், இவ்விருவரைப்போல், வேறெவரும் நடக்கத் தொடங்கினார்களில்லை.

லெஸ்லி தன் ஆஸ்தியைக்கொண்டு பெரு வியாபாரம் செய்துவந்தனன். மணம்புரிந்து சிலமாதத்திற்கெல்லாம் திடீரென்று ஒன்றின் மேலொன்றாய் விபத்துக்கள் சம்பவிக்க, அவன் ஆஸ்திமுழுவதும் அழிந்து மிகவும் வறுமையுற்றான். கொஞ்சக்காலம் இதை ஒருவரோடும் சொல்லாமல் வாடினவதனமும் உடைந்தநெஞ்சுமாய் உள்ளூர வருத்தப்பட்டுவந்தான். அவன் உயிரோ ஓயா வேதனையாயிருந்தது. அத் துக்கத்தை இன்னும் பொறுக்கமுடியாமற் செய்தது யாதெனில், தன் மனைவியிடத்து அதைச் சொல்லத்துணிவுவராமையால் அவள்முன் நகைமுகம் காட்டியிருக்கவேண்டி நேரிட்ட அவசியமேயாம். ஆனால் அவளோ, மிகவும் கூர்ந்த புத்தியுள்ளவளாகையால் 'தன் கணவனுக்கு யாதோ துயரம் நேர்ந்திருக்கின்றது' என்றறிந்தாள். அவன் முகத்திலுண்டான வாட்டத்தையும் மனதிலுண்டான துக்கத்தையுமறிந்தாள். அவள் அசட்டுச்சிரிப்பினால் ஏமாந்துபோகக் கூடியவளன்று. அவள் தன்னால் இயன்றமட்டும் தன் உல்லாசத்தினாலும், இன்சொல்லாலும் இத வசனத்தாலும் தன்கணவனை உற்சாகப் படுத்தப் பார்த்தாள். ஆனால் அது அவன் துக்கத்தை அதிகப் படுத்தியதேயன்றி சாந்தப் படுத்தவில்லை. அப்பொழுதும் அவளிடத்து அவனுக்கு நேசம் அதிகரித்தது. அதிகரிக்கவும் அவளை சீக்கிரம் துர்ப்பாக்கியமுள்ளவளாக்குவோமே என்று எண்ணிஎண்ணி வாதனைப்பட்டான். இன்னும் சில க்ஷணம்தான்—அவள் இனியமுகத்தினின்றும் சிரிப்பு ஒழிந்துவிடுமே—அவள் குமுத வாயினின்றும் பாட்டு ஒழிந்துவிடுமே— அவள் தாமரைக் கண்ணினின்றும் ஒளி நீங்கிவிடுமே— உற்சாகமாய் உலாவும் அவளது உல்லாசமனம் இவ்வுலகத்துக் கவலைகளினாலும் துன்பத்தினாலும் மாறிவிடுமே—என்று எண்ணிஎண்ணி யேங்கினான்.

இப்படியிருக்க அவன் ஒருநாள் என்னிடத்துவந்து மிகுந்த துயரத்துடன் தன் நிலைமையைக் கூறினான். நான் முழுதும் கேட்ட பிறகு "உன் மனைவிக்கு இதெல்லாம் தெரியுமா" என்றேன். உடனே அவன் கண்ணும் கண்ணீருமாய் மிகுந்ததுயரத்துடன் "உனக்கு என்னிடத்து இரக்கமிருப்பின் அவள் பெயரைச் சொல்லாதே. அவளை நினைக்கவே வெறிபிடித்தவனாகிறேன்" என்றான். "ஏனப்பா, அவளுக்கு எப்படியாவது தெரியத்தானே போகிறது. நீ அதிகநாள் ஒளிக்கமுடியாது. நீ சொன்னால் உண்டாகும் துயரத்தைவிட, மிக்கத்துயரம் விளைக்கத்தக்கதாகத் திடீரென்று அவளுக்கு வேறு எப்படியாவது தெரியும்படியாயிருக்கும். நீ சொல்லிவிடல் நலம். ஏனெனில் நேசிப்பவர்கள் வாய்ச்சொல் மிகக் கடுமை



...ன சமாசாரத்தையும் கடுமை நீக்கி மிருதுவாக்கும். நீ அவளிடத்துச் சொல்லாமையால் அவளாலுண்டாகும் ஆறுதலை நீக்கிக் கொள்ளுகிறாய்— இன்னும் இருவர்மனதை ஒருமைப் படுத்தும் பாசத்தையும் விநாசப்படுத்துகிறாய். அப்பாசமாவது ஒருவர்க்கொருவர் தட்டுத் தடையின்றி திறந்த மனத்துடன் அவரவர் எண்ணுவதையும் நினைப்பதையும் ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொள்ளுவதே. 'ஏதோ உன் மனதை அரித்துக்கொண்டிருக்கிறது' என்று அவள் சீக்கிரம் அறிவள். இருவர் நிஜமாக நேசித்தால் ஒருவர் வெளிப்பார்வைக்கு மிகவும் அமைதியாயிருப்பது போலிருந்து தன் மனதிலுள்ளதை ஒளித்தலை மற்றொருவர் சகியார்: அதுவும் துக்கத்தைச் சொல்லாமல் மறைத்தாலோ, தன்னை அலக்ஷியம் செய்து அவநம்பிக்கையுடன் நடத்தியதாக நினைக்க இடமுண்டாகும்."—என்று விவரமாய்ப் புத்திசொன்னேன்.

"அவள் வெகு ஆனந்தத்துடன் எண்ணியிருப்பதையும், நோக்கியிருப்பதையும் நாசப்படுத்துவேனே. 'அவள் கணவன் தாரித்திரியமடைந்தான்' என்றுசொல்லி அவள் மனதைத் தரையில் வீழ்த்தப் போகிறேனே. உந்த வாழ்வின் இன்பங்களையெல்லாம் அவள்இழக்கவேண்டுமே. நக்ஷத்திரகணத்து மத்தியில் பூர்ண சந்திரன்போல் விளங்கிக்கொண்டிருந்த அவள், வறுமைக்கு இலக்காகவேணுமே. அவள் அதை எப்படிப் பொறுப்பாள். அவள் செல்வத்திலேயே வளர்க்கப்பட்டாளே. எல்லாரும் அவளைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்களே— இப்படியிருக்க, இவையெல்லாம் அவள் மனதைப் பிளக்குமே—மனதைப் பிளக்குமே."—என்று பாலாபித்தழுதான்.

'அவன் ஆறாத்துக்கம் அழுகையின் நீங்கும்' என்று எண்ணி அவன் போக்குக்கு விட்டுவிட்டேன். அவன் அழுகை ஓய்ந்து தலையைத் தொங்கவிட்டு மௌனமாயிருக்கையில் அவன் நிலைமையை அவன் மனைவிக்குக் கூறும்படி மெதுவாய் வற்புறுத்தினேன்; அவன் விசனத்துடன் 'அகத்தியம் ஆகட்டும்' என்றான்.

"நீ என்னமாய் அவளிடத்தினின்றும்மறைக்கமுடியும், உன் நிலைமைக்குச்சரியாய் நீ குடித்தனம் செய்யும் விதத்தை மாற்றவேண்டாமா? மாற்ற அவளுக்குத் தெரியவேண்டியது அவசியமல்லவா" என்று சொல்லவும் அவன் முகம் வாடியது. "நீ மனத்தொந்தரவு படாதே. நீவெளி டம்பத்திலா உன் சுகானுபவமுழுவதையும் வைத்திருக்கிறாய். நீ முன்னிருந்தபடி டம்பமாய் வசிக்காமற்போனாலும், அதற்காக உன்னைக் குறைவாய் எண்ணாத மிகவும் வேண்டிய சிநேகிதர்கள் சிலர் இருக்கிறார்கள். நிச்சயம் நீ உன் மனைவியுடன் சுகித்திருக்க அரண்மனை வேண்டுவதில்லையே". "ஒரு குடிசை போதும்— நான் அவளுடன் அங்கேயும் சுகமாயிருப்பேன். நான் அவளுடன் வறுமைக்கும் போவேன்— மண்ணுக்கும் போவேன். நான் எதுக்கும் அவளுடன் ——அவளை சுவாமி ரக்ஷிக்க, சுவாமி ரக்ஷிக்க" என மிகத்துயரத்துடன் விம்மிவிம்மி யழுது கூறினான்.

"நான் சொல்வதை நம்பு, நம்பு; நீ சொன்ன பிறகும் முன்னிருந்ததுபோல் தானிருப்பாள்: இன்னும் அதிகப் பிரியமாகக்கூட இருப்பாள். அவள் 'உன்னை, உனக்காகவே மணம்புரிந்தேன், செல்வத்திற்காக அன்று' என்று உனக்குத்தெரிவிக்க சமயம் வாய்த்ததே என்ற சந்தோஷத்தினால் கம்பீரமும் மேன்மையுமுற்றிருப்பாள். அவளிடத்து மறைந்திருக்கும் திரத்தை உயர்த்தி உன்னிடத்துக் கூடின இரக்கத்தையும் உண்டுபண்ணும். ஒவ்வொரு பெண்ணினிடத்தும் ஒருவித தெய்வசக்தி உளது. அது ஆக்கம் வருநாளில் மறைந்து, துக்கவருநாளில் வெளியாகி மிகவும் பிரகாசிக்கும். தம் மனதுக்கு அருமையான பெண்சாதி இப்படிப்பட்டவளென்று அவளுடன் உலகத்துக் கடுந்துன்பங்களை அனுபவிக்கும் வரையில் ஒருவருக்குத் தெரிகிறதில்லை— வெளியாகிறதில்லை.— அவள் துக்கம்வரும்

பொழுது தன் கணவனது குறைகளைத் தீர்த்து ஆறுதல்செய்யும் தேவதை போலிருக்கிறதும் தெரிகிறதில்லை.”

நான் பேசினமர்திரியும்' சொன்ன பேச்சும் அவன் மனதைக் கவர்ந்தது. கவர்ந்ததை அறிந்து “உன் துக்கத்தை அவளிடத்துப் போய் வெளியிட்டு ஆற்றிக்கொள்” என்று மறுபடியும் தூண்டினேன்.

இம்மாதிரி நான் பேசியும் ‘சொன்னால் என்னமாய் முடியுமோ’ என்று கொஞ்சம் விசாரப்பட்டேன். இதுவரை இன்பத்திலேயே புரண்டாளே. அவள் மனோதைரியம் எப்படியிருக்குமோ. இருண்ட தாரித்திரிய வழி போகக் குழம்பி, அவ்வுல்லாச வழியை விடமாட்டேன் என்கிறாளோ. உயர்ந்த பதவியில் அழிவுநேரிட்டால் மற்றப் பதவிகளுக்கெல்லாம் இல்லாத துன்பங்களை உண்டுபண்ணி மனதை மிகப் புண்படுத்துகிறது.

ஆகையினால் மறுநாள்காலமே லெஸ்லியைக் கொஞ்சம் சந்தேகத்துடனே பார்த்தேன். அவன் அவளுக்கு எல்லாம் சொல்லிவிட்டதாகத் தெரிந்தது.

“அதை அவள் எப்படிப் பொறுத்தாள் ?” என்றேன். “தேவதைபோல! அவளுக்கு ஒரு பாரம் நீங்கினாற்போலிருந்தது. பிறகு அவள் என்னைப்புல்லியணைத்து ‘உன்னைத் துன்பப்படுத்தியதெல்லாம் இதுதானா’ என்று கேட்டாள். ஆனால் அவள்நிலைமையில் என்னமாறுதல் உண்டாகும்என்று அறியவில்லை. தாரித்திரியம்என்ற பெயர்தவிர அது இப்படிப்பட்டதென்று அறியாதவள். கணவனுடன் மனைவிகள் அனுபவித்ததாகக்கவிகள் வர்ணித்தெழுதியிருக்கிறதாரித்திரியத்தைத்தவிர அவளுக்கு வேறுதெரியாது. அவள் துக்கப்படுவதாகத்தெரியவில்லை. அவள், வழக்கமா யனுபவித்த சௌக்கியங்களையும், சௌகரியங்களையும் இன்னும் குறைக்கவில்லை. சமுசாரதுக்கங்களையும்கவலைகளையும் உண்மையாக அனுபவிக்கும் பொழுதல்லவோ அவள் குணமெல்லாம் நிஜமாகவெளிப்படும்.” ... றான்.

“அவளுக்குச் சொல்லியாய் விட்டது. ... உலகுக்கு எவ்வளவு சீக்கிரம்தெரிவிக்கிறோ... அவ்வளவுக்கவ்வளவு நலம். முதலில் செ... யிடும்பொழுது மனதுக்கு மிகவும் துக்கமா... தானிருக்கும். ஆனால் அது ஒரே துன்... அதுவும் சீக்கிரம் நீங்கிவிடும். அப்படி செ... யிடாவிடில், எப்பொழுது வெளியாய் விடு... என்று நாள்முழுதும் மனத் துன்பத்தி... வருத்தப்படுவாய். ஒருமனிதன் மனதைத்... தாவுப்படுத்துவது தாரித்திரியமல்ல, வெளி... டம்பமாயிருக்கும் பாசாங்கே—செருக்குக்... தாரித்திரியத்துக்குமுள்ள விருத்தமே—ஒ... துவிடவேண்டிய வெளிடம்பத்தில் இன்... பிரியம்வைத்துக்கொண்டிருப்பதே. வெளி... ஏழைபோலிருக்கத்துணி. துணிவாயாகில் ... மையின் கடுங்கொடுக்கை அறுத்துவிடுகிறா... நான் இப்படிச் சொல்ல லெஸ்லி சரியென்று... அவனுக்குவீண்செருக்குக் கிடையாது. அ... மனைவியோ எப்பொழுது நம் புதுநிலைமக்... தகுந்தபடி இருக்கப்போகிறோம் என்று ... லாயிருந்தாள்.

சிலநாட் கழித்தபின் அவன் என்வீட்டு... ஒருநாள் சாயங்காலம் வந்தான். அவன் த... முன்னிருந்த மனையை விற்றுவிட்டு பட்ட... துக்குக் கொஞ்சதூரத்தில் ஒரு கிராமத்... ஒரு சிறு குடிலிற்கு குடிப்போயிருப்பத... சொன்னான்.

அவன் நாள்முழுதும் சாமான்களை வெளி... தூக்கி யனுப்புவதிலேயே முனைந்திருந்தா... அச்சிறுகுடிசைக்கு சில சாமான்கள் த... வேண்டியிருந்தன. அவைகளும் வெகுசாத... ணமானவைகள். அவன் மனைவியின் வீ... யைத்தவிர முன்வீட்டு நேர்த்தியான சாம... களையெல்லாம் விற்று விட்டான். வீணை... அவள் ஞாபகத்துடன் அதிகமாகச் சேர்ந்தி... தது. அவர்கள் மணக்குமுன் நேசித்தகா...



...தச் சேர்ந்ததாயிருந்தது. அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்குங்காலத்து அவ்வீணையின் சுரத்தோடிசைந்துபாடும் அவள் இனிய ...ரலைக் கேட்டுக்கொண்டிருக்கும் காலந்தான் அவனுக்கு மிகவும் ஆனந்தமான காலமாயிருந்தது. ஆகையினால்தான் அதை விற்கவில்லை என்றான்.

நாள்முழுதும் வீட்டுச்சாமான்களை வரிசைப்படுத்தி நேரிலே மேற்பார்வைபார்த்துக்கொண்டிருக்கும் அவன் மனைவியிருந்த குடிசைக்கு இப்பொழுது போய்க்கொண்டிருந்தான். எனக்கு அவர்களிடத்து அக்கறை பிறந்தபடியாலும் அந்திப்பொழுது நன்றா யிருந்தபடியாலும், நானும் கூடச்சென்றேன். அவன் மிகவும் தளர்வுற்றிருந்தபடியால், என்னவோ யோசித்துக்கொண்டேவந்தான்.

“ஐயோமேரி” என்றுதுக்கத்துடன்பரிதாபித்தான். “அவளுக்கென்ன, ஏதாவது நேர்ந்ததா” என்றேன். “இந்நிலைமைக்குவந்ததேபோதாதா? இக்குடிசையில் மிகவும் இழிவான வேலைகள் செய்யவேண்டியதாயிருப்பது போதாதா” ? ‘இம்மாறுதல் அவளைமிகவும்வருத்தப்படுத்தியதோ’? “வருத்தமா—அவள் இனிமையும்நற்குணமும் ஒழிய வேறில்லை. அவள் முன்னினும் அதிக உற்சாக முடையவளாக இருக்கிறாள். அவள் என்னிடத்து முன்னினும் அதிகப்பிரியமும்மேன்மையும், ஆதரவுமாயிருக்கிறாள்.”

“மெச்சத்தக்கதே! நீ உன்னை ஏழையென்றாயே. நீ ஒருபொழுதும் இவ்வளவு செல்வவானாகவிருந்ததில்லை. அம்மாதினிடத்துள்ள அளவற்ற நற்குணக்குவியல் இதுவரை உனக்குத் தெரியவில்லை”. என்றேன்.

“இப்பொழுது அக்குடிசையில்அவளைமுதல் தடவை பார்ப்பது ஒழிந்தால் நான் அப்புறம் சௌக்கியமா யிருப்பேன். கஷ்டத்தை நேரிலனுபவிப்பது இன்றைக்குத்தான் முதனாள். அவளை இச்சிறு குடிசைக்கு இழுத்தாய்விட்டது. அவள் நாள்முழுதும் சாமான்களைச் சீர்திருத்துவதிலே முயன்றிருந்தாள். வீட்டுவேலையின் சிரமத்தை முதல் முதல் அனுபவிக்கிறாள். நேர்த்தியானவைகளும் சௌகரியங்களுக்கு வேண்டியவைகளுமற்ற வீட்டை இதுதான் முதற்தடவை பார்க்கிறாள். இனி அனுபவிக்கப்போகிற வறுமையை யோசித்து யோசித்து வாடி யிருக்கின்றனளோ!’ என்று அச்சமுற்று ஏங்கிடந்தான். ‘இவைகளெல்லாம் நிஜமாயிருக்கலாம்.’ என்று எண்ணி வாய்மூடிப் பேசாமலிருந்தேன். பெரியவீதியினின்றும் பிரிந்து ஒப்புறவாயுள்ள ஒருநெருக்கமான சந்துக்குள் நுழையவும் அந்தக் குடிசையைப் பார்த்தோம். அது பார்வைக்குமிகவும் தாழ்மையாயிருந்தது. ஆனால் அது பார்வைக்கு மிகவும் மனோரம்மியமாயிருந்தது. இலைகள் நிறைந்த திராக்ஷக்கொடி ஒருமூலையில் படர்ந்திருந்தது. அழகாய்ச் சில மரக்கொம்புகள் அதன்மேல் வளைந்திருந்தன. வாசற்கதவுக்கருகேயும் முன்னிலையிலேயும் வெகுவழகாய் அநேகபூச்செடித் தொட்டிகள் வரிசையாய்வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் அதை அணுகவும் கீதசப்தம் காதில் விழுந்தது. — லெஸ்லி உடனே என்கையைப் பிடித்துக்கொண்டான். நாங்கள் கொஞ்சம் நின்றுகேட்டோம். தன்கணவன்மனதுக்கு மிகவும் இசைந்த ஒருசிறுபாட்டை வெகுநேர்மையுடன் பாடிக்கொண்டிருந்தாள்.

லெஸ்லி கை நடுக்குற்றது. அக்கீதத்தைசெவ்வையாய்க்கேட்கமுன்சென்றான். செல்லவும்சப்தம் கேட்டது. உடனே மிகவுமழகிய ஒரு முகம் ஜென்னலில் தோன்றி மறைந்தது ; உடனே ஒரு மிருதுவான காலடிசப்தம் கேட்டது மேரி எங்களை எதிர்கொள்ள வெளியேவந்தாள். அவள் முழுவெள்ளை உடுப்புத் தரித்திருந்தாள். அவள் நேர்த்தியான கூந்தலில் புஷ்பம் சூட்டப்பட்டிருந்தது. அவள்முகத்திற் புதிதாய் ஒரு மலர்ச்சி உண்டாயிருந்தது. — சிரிப்பும் நிறைந்திருந்தது. — அவள் இதற்குமுன் அவ்வளவு அழகாய்த் தோன்றியதேயில்லை.

"என்பிரியமுள்ளஜார்ஜே† உன்னைப்பார்க்கமிகவும் சந்தோஷமாயிருக்கிறது. நீ எப்பொழுது வரப்போகிறாயென்று சந்துவழியெல்லாம்பார்த்துக்கொண்டிருந்தேன். நான் உனக்காகக்காத்துக்கொண்டிருக்கிறேன். குடிசைக்குப் பின் ஒரு அழகிய மரத்தடியில் சாப்பாட்டுக்கு மேசைபோட்டு, அதன்மேல் சாப்பாடு வைத்திருக்கிறேன். மிகவும் நேர்த்தியான 'ஸ்ட்ராபெரி'ப்பழங்கள் சேகரித்துவைத்திருக்கிறேன். உனக்கு அதில்மிகப்பிரியமல்லவா—நேர்த்தியான பாலாடைவைத்திருக்கிறேன். இவ்விடத்தில் எல்லாம் நேர்த்தியாயும், நிசப்தமாயும் இருக்கின்றது. ஓ நாம்மிகவும்சுகமாயிருக்கலாம்" என்று அவன் கையைபிடித்துக்கொண்டு முகத்தைப்பார்த்து முகமலர்ச்சியுடன் கூறினாள்.

லெஸ்லியோ ஆனந்த பரவசமடைந்து அவளை இறுகப்புல்லி முத்தமேல்முத்தமிட்டான்.‡ அவனால் பேசமுடியவில்லை. கண்ணினின்றும் ஆனந்த நீர்ப்பெருக்கோடியது. பிறகு அவன் நல்லஸ்திதி அடைந்த பொழுது, இக்காலத்தில் தான் அனுபவித்த சுகத்திற்கு பின்எக்காலமும் ஈடாகாது என்று அடிக்கடி கூறுவதுண்டு.

N. R. K. T.

## பிரபஞ்சமாயாவிலாசம்.

### IV.

### பிள்ளைவிவாகம்: பெற்றோர் ஆலோசனை.

தீக்ஷதர் புதுக்கோட்டையைப் பழையஸ்திதியிற் பார்த்தவர். இராஜதந்திரீகத்தில் மகாவல்லவரென இந்தியாமுழுவதும் புகழ்பெற்ற சேஷய்யா சாஸ்திரியாரவர்களுடைய மதிநுட்பத்தினாலும் மனவலிமையினாலும் புதுப்பிக்கப்பட்ட அவ்வூரின் ஒழுங்கும் விசாலமுமுள்ள வீதிகளேயும் அவ்வீதிகளின் இருபுறங்களிலும் நூதனமாய்க் கட்டப்பட்டவெகு உன்னதமான மாடி வீடுகளையும் அவ்வீடுகளின் அழகைக் கண்டு வியந்து அதனை அங்கீகாரம் செய்வது போலச் சிரக்கம்பம்செய்யும் வீதிக்கிரண்டு பக்கங்களிலும் வரிசையாய் அமைந்துள்ள தென்னை கமுகு வாழைமுதலிய மரங்களையும் கண்டு தீக்ஷதர் பிரமித்தவராகத் தன் ஞாபகத்திலிருந்த பழைய அடையாளங்களும் இலக்குகளும் தெரியாமற்போயின. ஆயினும் வாயிலிருக்கிறது வழி. தனக் கெதிர்ப்பட்ட சிலரைக்கேட்டுத் தெரிந்துகொண்டு தான் உத்தேசித்த சுந்தரமய்யர் வீட்டுக்குவந்தார்.

சுந்தரமய்யர் இராஜாங்கத்தில் உத்தியோகத்திலிருப்பவர். லௌகிகத்தில் சமர்த்தர். தான் சுயமாய்ச் சம்பாதித்த சொத்துத்தவிர பூர்வீகசொத்து முள்ளவர். அவருக்கு ஒரு செல்வப்புதல்வன். அவன்செவ்விய அழகும் கூரிய புத்தியுமுள்ளவன். பலவருஷங்களாகப் புத்திரபாக்கிய மில்லாதிருந்து பெற்றவராகையால், சுந்தரமய்யர் அப்புத்திரனை அதிக அருமையாகவும் அன்பாகவும் வளர்த்து வந்தார். சுந்தரமய்யரது கௌரவமான அந்தஸ்தையும் பையனது யோக்யதையையும் உத்தேசித்துத் தம் பெண்ணை அச்சிறுவனுக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வந்தவர்கள் அநேகர். அவ்வாறு உத்தேசித்து வந்தவர்களில் ஒருவர் நமது தீக்ஷதர். அவர் கல்யாணத்தை முன்னிட்டுச் சுந்தரமய்யரை யிதற்குமுன்னால் கலந்தாரில்லையேனும், பெண்டுகள் மூலமாய்ப் பிரஸ்தாபம் முன்னரே நடந்ததுண்டு. அதுவிஷயம் சுந்தரமய்யருக்கும் தெரியும்.

தீக்ஷதர் வந்தவுடன் அவரைக்கண்டு சுந்தரமய்யர் அதிகசந்துஷ்டியோடும்முகமலர்ச்சியோடுங்கூட அவரது க்ஷேமலாபங்களை ஆவலுடன் விசாரித்து அளவளாவித்தக்கபடி உபசரித்தார். வழிநடந்த சிரமத்தினால் தீக்ஷதர் போஜனத்திற்குப் பிறகு சற்றுச்சயனித்துக் கொண்டார். இதனிடையில் சுந்தரமய்யரும் அவரது அகமுடையாள் மீனாக்ஷியம்மாளும் தீக்ஷதர் வரனை உத்தேசித்து வந்திருக்கிறாரென்பதைப்பற்றிச் சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

சுந்தரமய்யர்.—சம்பந்திப் பிராமணர் வந்திருக்கிறார். பார்த்தாயா ?

மீனாக்ஷியம்மாள். — சம்பந்தியாகிற காலத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

சு.—ஏனடி அப்படிச் சொல்லுகிறாய்?

மீ.—எத்தனையோ பேர்கள் வந்து விட்டுப்போயிருக்கிறார்கள். இவர் முப்பதோடே முப்பத்தியொன்று.

சு.—ஏதாவதொரு இடத்தில் நிச்சயமாக வேண்டுமோ இல்லையோ?

மீ.—ஆகத்தான் வேண்டும், ஆகாமலிருக்கப் போகிறதா? எங்கே முடிபோட்டிருக்கிறதோ? நமக்கென்ன தெரியும் ! கண்ணைக் கட்டிக்காட்டில் விட்டாற்போலிருக்கிறது. தெய்வசம்மதம் எங்கேயோ ?

சு.—தெய்வசம்மதமென்ன வந்தது ? நமக்கு எங்கே இஷ்டமோ அங்கேதான் தெய்வசம்மதமும்.

மீ. — அப்படிச் சொல்லாதேயுங்கள். கொள்வோர் கொடுப்போர் இரண்டுபேரும் சம்மதித்து நடத்தவேண்டுமென்று பிரயத்தனம் செய்த கல்யாணங்கள் எத்தனையோ நின்று போய்விடவில்லையா? திருவிடைமருதூரிலே குப்புசாமி அய்யர் பெண்ணைக் கணபதி அய்யர்பிள்ளைக்குக் கொடுப்பதாகப்பேசி முடித்து முகூர்த்தமும் நிச்சயித்து விரதத்திற்கு மாப்பிள்ளையை அழைக்கப் போகும்போது பூனைகுறுக்கிட்டதைக்கண்டு பெண்ணைப் பெற்றவர் கொஞ்சமாகிலும் இஷ்டமில்லாதவராய் அங்கிருந்தே தன் வீட்டுக்குத் திரும்பிப் போய்விட்டார்.

சு.—அதற்குமேலே என்னநடந்ததுதெரியுமா?

மீ.—உத்தேசித்த இடத்தில் பெண்ணைக்கொடுக்கவில்லை. சாமான்களெல்லாம் சேகரித்தாய் விட்டது. கல்யாண முகூர்த்தத்திற்காக ஊரூரிலிருந்து பந்துக்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். பெண்ணுக்கும் வயதாகிவிட்டது. இவைகளை யெல்லாம் உத்தேசித்துக் குப்புசாமி அய்யர் தூங்கிக்கொண்டிருந்த ஒரு பையனை எழுப்பிப் பெண்ணைக் கொண்டுபோய்க் கொடுத்தார். அதேமுகூர்த்தம் நடந்தது. "காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்றுவந்தவன் கொண்டுபோனான்" என்று ஆகிவிட்டது.

சு.—இந்த சங்கதியைக்கேட்கவில்லை, கணபதி அய்யர் அதன் பிறகு என்ன செய்தார் தெரியுமா ?

மீ.—என்னசெய்தாரோ, எனக்குத் தெரியாது.

சு.—நஷ்டிக்குவியாச்சியம் பண்ணி ரூபா 1000 வாங்கினார்.

மீ.—ரூபா 1000 வாங்கினாரா? அவர் மகாசாதுவாயிற்றே. அந்த வழிக்கெல்லாம் போக மாட்டாரே.

சு.—அவர் சாதுதான். ஊரிலிருக்கிற போக்கிரிகள்சும்மாவிருக்கிறார்களா? எரிகிறவீட்டிற் பிடுங்கினது லாபமென்று எத்தனையோபேர் அக்கிரமத்திற்கு ஏற்படுகிறார்கள். 'தப்பிலி' ஒருவன் முளைத்துப் பிள்ளையாண்டானைத்தூண்டிவிட்டு "அழைக்கவந்தவர் ஏதோவொருவியாஜத்தைமுன்னிட்டுப் பெண்ணைக்கொடாமல் அவமானப்படுத்திவிட்டாரே" யென்று அவனுக்குத் துர்ப்போதனை செய்து, குப்புசாமி அய்யரைச் சந்தியிலிழுத்துவிட்டு ரூபா ஆயிரம் இறக்கி விட்டான்.

† அங்கிலேயருக்குள் ஸ்திரீபுருஷர் ஒருவரையொருவர் பேரிட்டழைத்துக் கொண்டாடுவது சகஜம்.

‡ இதுவும் அவர்கள் ஜாதியாசாரத்துக்கு ஒத்ததேயன்றி வேறு வித்தியாசமானதல்ல.

மீ.—இந்த அநியாயம் எங்கும் கேட்டதில்லை. ஐயோ பாவம்! அவர் (குப்புசாமிஅய்யர்) என்ன செய்வார்! சம்மதித்துத் தானே பெண்ணைக் கொடுக்கவேண்டுமென்று அழைக்கப் புறப்பட்டார் சகுனமாகாவிட்டால், அவர்மீதென்ன குற்றம்? தெய்வசம்மதமில்லை. தெய்வ சம்மதமில்லாத காரியத்தில் யாராகிலும் பிரவேசிப்பார்களா? மனசுக்கு அசந்துஷ்டியான காரியம் ஏதாவதுநடந்துபோய்விட்டால், இரண்டுபேரையும் தானே பாதிக்கும். பிராப்தமில்லை.

சு.—பிராப்தத்தைத்தானே பார்க்கிறார்கள் கோர்ட்டில். 'லா'ப்பிரகாரம் 'கேஸை'த் தீர்மானித்து விட்டார்கள்.

மீ.—'லா'வுமாச்சு! அல்லாவுமாச்சு! இதிலேதான் நஷ்டத்தைவாங்கினார்கள். சேங்காலிபுரத்தாரை என்ன செய்துவிட்டார்கள்? விரதம்கூட ஆகிவிட்டது. அன்றைக்கு இராத்திரி கல்யாணப்பெண் தந்தப்பொம்மைபோலே படுத்துக்கொண்டவள்தான். அருணோதயத்தில் மங்கள ஸ்நானத்திற்கு எழுப்ப எழுப்பப் பெண் எழுந்திருக்கவில்லை. பெண்ணுக்குக்கழுத்திற்குமேலே தீயாக் காய்கிறது. இடுப்புக்குக்கீழே ஜலமா ஓடுகிறது. கையைப்பார்த்தாலோ சிலேஷ்மம் கட்டிவிட்டது. பிள்ளைவீட்டார் உடனே சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குப்போய்விட்டார்கள். கல்யாணம் நின்றுபோய்விட்டது.

சு.—இதைத்தான் தெய்வசம்மதமில்லையென்று சொல்ல வேண்டும்.

மீ.—அபசகுனமாகிற விஷயம் குறைந்ததோ? அதற்கிது தாழ்வில்லை. எப்படியிருந்தாலும் எங்களது பெண்ணையே தாலிகட்ட வேண்டுமென்று சொன்னால் கொள்வோர் சம்மதிப் பார்களா?

சு.—பாரதமாக வளர்த்து விட்டாயே. தீக்ஷிதர் எழுந்திருக்கிற சமயமாயிற்று. காரியமான பேச்சைப்பேசு. ஊர்வம்பெல்லாம் நமக்கென்னத்திற்கு!

மீ.—நான் சொல்வதெல்லாமிதுதான். நமது இஷ்டத்தில் ஒன்றுமில்லை. தெய்வசங்கல்பம் வேறாயிருக்கிறது.

சு.—அப்படியானால் ஒருபிரயத்தினமும் செய்யாமல் சும்மாவிரு. கல்யாணம் நடக்கிறதோ பார்க்கலாம்.

மீ.—அது நடக்குமா? மனுஷ்ய யத்தனமில்லாமல் தெய்வயத்தனம் எங்கேயாவது உண்டா?

சு.—கதைபண்ணாதே. உனக்கெந்த இடத்தில் இஷ்டமாயிருக்கிறது? சொல்பார்ப்போம்.

மீ.—உங்களுக்குத் தெரியாதா?

சு.—உன் மனசுக்குள்ளே புகுந்தா பார்த்துக்கொண்டிருக்கிறேன்? உன் இஷ்டத்தை வெளியிட்டால் அதன் பிரகாசம் நடத்துகிறேன்.

மீ.—பெண்ணை உத்தேசித்தால் இந்தத் திருச்சிராப்பள்ளிப் பெண்தான் மனசுக்குத்திருப்தியாயிருக்கிறது. சம்பந்தத்தை உத்தேசித்தால்—

சு.—என்ன யோசிக்கிறாய்! சம்பந்தத்தை உத்தேசித்தால் எது?

மீ.—டிப்டிகலெக்கட்டர்.

சு.—உன்பிள்ளைக்கு நேர்த்தியான பெண்வேண்டுமா? டிப்டிகலெக்டர் வேண்டுமா?

மீ.—பெண்தான் வேண்டும்.

சு.—அப்படியானால், துப்படிகலெக்கட்டர் என்னத்திற்கு? துப்படிகலெக்டர் சம்பந்தத்திலே உனக்கு அதிக ஆவல்போலிருக்கிறதே.



மீ.—உங்களுக்கென்ன! ரிஷபம்போலே கொழுத்துத்திரிகிறீர்கள். இந்த அசத்தெல்லாம் இங்கேபேசாதேயுங்கள்.

சு.—அசத்தென்னடி வந்தது! நீ சொன்னத்தையேதானே நான் திருப்பிச்சொன்னேன்.

மீ.—உங்கள் சூது எனக்குத்தெரியாதோ?

சு.—சூதொன்றுமில்லை. அடியே! பயித்தியக்காரி! நான் சொல்வதைக்கேள். நமது அந்தஸ்துக்குமேல் போன இடத்திலே சம்பந்தம் செய்யக்கூடாது.

மீ.—ஏன்? கசக்குமோ? சரிசமானமான சம்பந்திவந்தால்தான் லக்ஷணமாயிருக்கும். யானையும் யானையும் சேர்ந்தால் பொருத்தமாயிருக்கும். யானையும் பூனையும்சேர்ந்தால் என்னமாயிருக்கும்?

சு.—நன்றாய்த்தானிராது, அவரொருயானை நானொருபூனை.

மீ.—அப்படியே வைத்துக்கொண்டாலும், உங்களுக்கு மகிமைதானே.

சு.—மகிமையா? உனக்குத் தெரியாது. நமக்குச் சரிசமானமான இடமாயிருந்தாலே பிராணசங்கடம், மேல் போய்விட்டால் கேட்கவும் வேண்டுமோ? யானைமேலிருப்பவனைச்சுண்ணாம்புகேட்பதுபோலாகும்.

மீ.—அப்படியானால் 'அப்பம்வடை'ச் சாஸ்திரியோடே சம்பந்தம் செய்யுங்கள்.

சு.—தெரியாமற் சொல்கிறாய்; நமது அந்தஸ்துக்கு ஒருபடி குறைந்திருக்கிற இடத்தில் பெண்ணைக்கொண்டால் நமக்கு எவ்வளவோ சௌகரியமாயிற்றே. நமது இஷ்டப்படி அவர்கள் நடப்பார்கள்.

மீ.—அவர்கள் நடந்தென்ன? நடவாதிருந்தென்ன? நமக்கு வேண்டியது பெண்தானே.

சு.—அந்தவழியிலே நீவரவேண்டுமென்றுதான் காத்திருந்தேன். பெரியமனுஷியாள் வீட்டுப் பெண்களுடைய சமாசாரம் தெரியாதா?

மீ.—தெரிகிறதென்ன! நானொருத்தியில்லையோ?

சு.—நீ இருக்கிறாயா! நீங்களெல்லாம் அந்தக்காலத்து மனுஷ்யாள். இந்தக்காலத்துப் பெரிய இடத்துப் பெண்களைக் கோவிலிலே வைத்துத்தான் கும்பிடவேண்டும்.

மீ.—அவாள்மேலேயே சதாகுற்றம் சொல்லுகிறீர்களே. உங்களை அடிக்கிறார்களா?

சு.—அடிக்கவும் வேண்டுமா? இந்த அக்கிரமம் போதாதா? அடுப்பண்டை போகிறதேயில்லை. இங்கிருக்கிற துரும்பையெடுத்து அங்குப்போடமாட்டார்கள். மாமியார்மாமனாரைக்கொஞ்சமேனும் லக்ஷியம் செய்யார்கள். அகமுடையானுண்டு தாங்களுண்டு. சயனக்கிரகத்தில்தான் குடி. கண்ணாடியும் சீப்பும்சந்தனமும் புஷ்பமும்—இத்தோடேவேலை சரியாயிருக்கும். பையன் அம்மாளிடத்தில் ஐக்கியந்தான். அப்புறம் நமக்குச் சொந்தமில்லை. நீயுண்டு சமையலுண்டு. விடியுமுன்னே அம்மாளுக்குக் காபி போட்டுத் தரவேண்டும். இல்லாவிட்டால் விரைத்தது விரைத்தாற்போல் நீட்டிப்படுத்துக்கொள்வாள். வீட்டுக்காரியம் ஒன்றும் செய்கிறதில்லையென்று முணுமுணுத்தையோ புருஷனையிழுத்துக்கொண்டு பிறந்தவீட்டுக்குச் சவாரிதான். முதலுக்கே மோசம்வரும்.

மீ.—அப்படி நாட்டுப்பெண் வந்தென்ன! வாராமலென்ன!

சு. — எல்லாம் உனக்காகத்தான் சொல்லுகிறேன். பின்னால் சங்கடப்படுவாய்.

மீ.—நமது பிள்ளை நமது வீட்டோடேயிருந்தால் போதும். தவமிருந்துபெற்றபிள்ளை. செல்லத்தைவிட்டிருக்க ஒரு நிமிஷம் கூடச் சகிக்கமாட்டேன். ஒரு ஏழைப் பெண்ணைக் கல்யாணம் செய்தால் நமது இஷ்டப்படி யிருப்பாள்.

சு.—அதற்கென்ன ! பின்னால் பார்த்துக்கொள்வோம். இப்போதென்ன அவசரம்.

மீ.—அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்களே! கல்யாணப்பிராயம் வந்துவிட வில்லையா செல்லத்துக்கு?

சு.—கல்யாணப் பிராயம் வந்துவிட்டதென்று சொல்லுகிறாயே, சம்பாதிக்கிற பிராயம் வந்துவிட்டதா?

மீ.—கல்யாணத்திற்கும் சம்பாத்தியத்திற்கும் என்ன சம்பந்தம்?

சு.—சம்பாதிக்கிற யோக்கியதை வருகிறவரைக்கும் கல்யாணம் செய்யக்கூடாது.

மீ.—செய்தால் பாவமோ?

சு.—பாவமில்லை. நாசம். சொத்து நாசம். தான் கட்டிக்கொள்ளும் பெண்டாட்டிக்குச் சம்பாதித்துப்போடும் திறமை ஒருபுருஷனுக்குண்டாகிறவரையில் அவன் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது.

மீ.—அப்படி எந்தச் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது ?

சு.—சாஸ்திரத்தில்சொல்லாததினாலேயே நமது தேசத்தார் கெட்டது. சொல்லியிருந்தால் பிழைத்துப்போயிருப்பார்களே.

மீ.— இப்போது கெட்டுப் போனதென்ன ? சொல்லுங்கள்.

சு.—இதைவிடக் கெடுதல் வேறேவேண்டுமா ? பையன்களுக்குப் பன்னிரண்டு வயதில் கல்யாணம் செய்துவிடுகிறார்கள். பொடிப் புகையிலையும் சம்பாதிக்க யோக்கியதை யிருக்கிறதில்லை. சிறு பெண்ணையாவது கட்டுகிறார்களா ? அதுவும் இல்லை. ஒரு வருஷத்திற்குள் பெண் வீட்டுக்கு வந்துவிடுகிறாள். 'அம்மம்' எங்கிருந்து சாப்பிடுகிறது?மிச்சம்மீதி யிருக்கிற பிதுரார்ச்சித சொத்தில் கைவைக்கவேண்டியது தான். அதுதான் எத்தனை நாளைக்குவரும். வரும்படியோ கிடையாது. பையன்கள் சும்மாவிருக்கிறதுமில்லை.

" பூப்பிளக்கவெழுகின்ற புற்றீசல்போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவுமாட்டீர்."

என்று அந்த மகாஞானி * சொன்னது சரியாயிருக்கிறது. 'டஜன் டஜனு'ப் பிள்ளைகளையும் பெற்றுவிடுகிறார்கள். பின்னவாள் பெரியவாள் எல்லாரும் சேர்ந்து தின்று தீர்க்கிறார்கள். முடிவென்ன தெரியுமா? இருக்கிற சொத்து நாசமாகிறது. இவ்வாறாக எத்தனை குடும்பங்கள் கெட்டுப்போய்விட்டன. பார்த்துங்கூடத் தெரியவில்லையே.

மீ.— ஊரெல்லாம் இப்படித்தானே யிருக்கிறது.

சு.—ஊரெல்லாம் கிணற்றில் விழுந்தால் நாமும் விழவேண்டுமா ? அவாள் கெட்டதைக் கண்டு நாம் ஜாக்கிரதையா யிருக்கக்கூடாதா ?

மீ.—ஜாக்கிருதை என்னவந்தது ஜாக்கிருதை நமக்கிருக்கிற சொத்து நாலுதலைமுறைக்குப்போதுமானது. அவன் கையைப்பார்த்தானா ஆகவேண்டும்? சுவாமி கொடுத்திருக்கிறார். யாதொரு குறைவுமில்லை

* பட்டணத்துப்பிள்ளை.



நமது தலைமுறைக்கும் கண்டு அவனுக்கும் மிஞ்சினால் போதுமே. பின்னாலிருக்கிறவர்களுக்குத் தலையெழுத்துப் பிரகாரம் நடக்கிறது.

சு.—பின்னாலிருக்கிறவர்கள் குடிக்கக் கஞ்சியுமில்லாமல் திண்டாடவேண்டும். நம்மை நாள்தவறாமல் வைதுகொண்டே யிருக்க வேண்டுமென்று சொல்லுகிறாயோ ?

மீ.—அதற்கு நாமென்ன செய்வோம் ? உங்கள் பாட்டனார் எவ்வளவோ கஷ்டப்பட்டார். நீங்கள் சுகமாயிருக்கிறீர்கள். அவாள் அவாள் செய்த கருமபலனை அவாள் அவாள் அநுபவிக்கிறார்கள்.

சு.—இந்தக்கருமம்தானே நமது நாட்டுக்குச்சனியனாய் வந்திருக்கிறது. போன வழியிலே போய்ப்போய்க்கெட்டார்கள் நம்மவர்கள். முன்னுக்கு வரும்படியான மார்க்கத்தைத் தேடுகிறதில்லை. எவனாவது ஒருவன் புது வழியில் பிரவேசிப்பானாகில், சும்மாவிருக்கிறது மில்லை நமது பெரியவாள். தூஷிக்கவும் கேலி பண்ணவும் ஏற்பட்டு விடுகிறார்கள். இவர்கள் சொல்வதைக்கேட்டு அவனும் மனம் தளர்கிறான். எடுத்தகாரியம் நின்றுபோய் விடுகிறது. யார் என்ன சொன்னாலும் பின்வாங்காமல் தமது புத்திக்கும் யுக்திக்கும் தகுந்தபடி ஒரு தொழிலில் ஏற்பட்டுத் திரவியம் சம்பாதிக்கிற விஷயத்தில் சமர்த்தர் அந்த வெள்ளைக்காரர் ஒருவரே. பிரபுவினுடைய பிள்ளையாயிருப்பான். செருப்புத்தைத்தலைத் தொழிலாக வைத்துக் கொண்டிருப்பான்.

மீ.— நமது செல்லத்தையும் செருப்புத்தைக்கச் சொல்லுங்கள்.

சு.—ஞானசூன்யமே ! நான் இதுவரைக்கும் சொன்னதின் சாரத்தையெல்லாம் நன்றாய்க் கிரகித்துக்கொண்டுவிட்டாய்! நல்ல புத்திசாலி ! உபாத்தியாயர் பையனைப் பார்த்து 'எல்லாம் நுழைந்ததாடா ?' என்று கேட்டதற்குப் பையன் "வால் மட்டும் பாக்கி" என்று சொன்னானே. அவனைச் சேர்ந்தவள் நீ. உனக்குக் கொஞ்சமாவது ஞானமிருந்தால் அப்படிச் சொல்வாயா ? நான் சொல்வதின் சாரத்தை அறியவில்லையே! உனக்கு எப்படி ஞானமிருக்கும்? மூடாத்மாவாயிருக்கிறாய். படிப்பில்லாதபோது ஞானம் எவ்வாறு விர்த்தியாகும். நல்ல புஸ்தகங்களைப் படிக்கப்படிக்கவன்றோ புத்தி கூர்மையாகும். உன்னைக் குற்றம் சொல்வதற்கு ஒரு நியாயமுமில்லை. "பெண்டுகளெல்லாரும் மிருகப்பிராயமாகவேயிருக்க வேண்டும். அவர்களைப் படிப்பிக்கக் கூடாது" என்று ஆதிகாலமுதற்கொண்டு ஏற்பட்டிருக்கிறதே வழக்கம். அந்த வழக்கத்தை யன்றோ சொல்லவேண்டும். நமது பெரியவாளெல்லாரும் பூபாரமாக இருந்துவிட்டுப் போனார்கள். நாமும் அவ்வாறு இருக்கவேண்டு மென்கிறாய். நான் இப்பொழுது புதுவழக்க மேற்படுத்த விரும்பினால் அது நடக்குமா? நான் தான் பிழைப்பேனா ?

மீ.—உங்களுக்கென்ன இன்றைக்கு உபரியுபரியாய்க் கிளம்புகிறது !

சு.—நாமிருக்கும் ஸ்திதியை நினைக்க நினைக்க மனம் கொதிக்கிறது.

மீ.—ஒத்தைமரம் தோப்பாகாது நீங்கள்மட்டும் ஒரு புதுவழக்கத்தை ஏற்படுத்தினால், ஊரார்சிரிப்பார்களே. நிர்மாணதேசத்தில் கோவணம் கட்டினவன் பயித்தியக்காரன் அல்லவா? நீங்கள் என் இப்படி வீண்சங்கடத்தை உண்டு பண்ணிக்கொள்ளுகிறீர்கள். நமது காரியத்தை நாம் பார்த்துக் கொண்டு போவோம். ஊரெல்லாம் கட்டி மேய்க்க நம்மால்முடியுமா ? நமது குடும்ப

விஷயம் தலைக்குமேலிருக்கிறதே. அதைக் கவனிக்கவே போது காணாது. அந்தப் பிராமணர் நாலுகாதம் நட வந்திருக்கிறார். அவரோடே பேசவேண்டியதைப் பேசி முடியுங்கள்.

சு.—நான் இத்தறுவாய் ஓதினதெல்லாம் வேலையில்லாமலா சொன்னேன்?

மீ.—உங்களுக்கேன் இவ்வளவு கோபம் வருகிறது? நன்றாயிருக்கிறது நீங்கள் பண்ணுகிற காரியம்! மனுஷ்ய சரீரமோ அநித்யமானது. இன்றைக்கு இருக்கிறவர்களை நாளைக்குப் பார்க்கிறது துர்லபமாயிருக்கிறது. நமது கண்முன்னால் கல்யாணமோ கார்த்திகையோ நடந்தால்தானே நமக்குச் சந்தோஷம். நமக்குப் பிற்காலம் நடந்தாலென்ன நடவாவிட்டாலென்ன! நாம் பார்க்கப் போகிறோமோ? கண்ணுள்ள போதே காக்ஷி. பிள்ளை குட்டிகளைப் பெறுகிறதும் சொத்து சம்பாதிக்கிறதும் இந்தச் சந்தோஷத்தை அனுபவிக்கத்தானே.

சு.—என்னடி. ஆளை அதற்குள்ளே பைசல் ஆக்கிவிடுவாய் போலிருக்கிறதே. 'ஞானமில்லை' யென்று சொன்னேனே! அதனை மனதில் வைத்துக்கொண்டு இந்த ஞானமெல்லாம் எனக்குப் போதிக்க ஆரம்பித்து விட்டாயோ?

மீ.—உங்களுக்குப் போதிக்கும்படியாக அவ்வளவு ஞானம் எனக்கு வந்துவிட்டதா? இருக்கிற சங்கதியைச் சொல்கிறேன்.

சு.—நானுமிருக்கிறசங்கதியைத்தான் சொல்லுகிறேன். நீயும் இருக்கிறசங்கதியைத்தான் சொல்லுகிறாய். ஆனால் உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா? நீ சொல்லுகிறது எனக்குத் தெரிகிறது. நான் சொல்வது உனக்குத் தெரியவில்லை.

மீ.—தெரியாமலா இருக்கிறது? சம்பாதிக்கிற திறமை வருகிறவரையில் செல்லத்துக்கு கல்யாணம் பண்ணக்கூடாதென்கிறீர்கள். ஏழைகளானாலன்றோ அப்படி யோசிக்க வேண்டும். நமக்கிருக்கிற ஐசுவரியம் போதாதா?

சு.—(சற்று யோசனை செய்துவிட்டு) சம்பாதிக்க வேண்டாம். வித்தையாவது பூராவாக வரட்டும். பிற்பாடு கல்யாணம் செய்யலாம்.

மீ.—ஆயுசுமுழுதும் படித்தாலும் வித்தை பூர்த்தியாகுமா? அது சாகரம் ஆயிற்றே. 'கல்வியோ கடலோ' என்று என் தகப்பனார் அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பார்.

சு.—இவ்வளவு சாதுரியமாய்ப் பேசத் தெரிந்திருக்கிறதா உனக்கு? நீ சொல்வது உண்மையே. கல்விக்குக் கரையில்லை. ஆனாலும் நாம் ஒரு எல்லை ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறோம். பி-ஏ-பரிக்ஷை 'பியாஸ்' பண்ணியாகட்டும். உடனே விவாகம் செய்துவிடலாம்.

மீ.—இப்போது வலிய வந்திருக்கிற பெண்கள் எல்லாரும் அதுவரைக்கும் கல்யாணமில்லாமலிருப்பார்களா? 'மேலைக்குத் தாலி கட்டுகிறேன் கழுத்தே சுகமாயிரு' என்ற சமாசாரம்போலேதான்.

சு.—இந்தப்பெண்கள் போனால் போகட்டுமே. பிற்பாடு லோகத்தில் அஸ்தமித்துப்போய் விட்டார்களோ? பயப்படாதே நீ. இந்தக் காலத்தில் என்ன! அந்தச்சரக்கு மலிந்து கிடக்கிறது. காலுக்கொன்று கைக்கொன்று கட்டிவிடலாம். பி.ஏ. மட்டும் பியாஸாகட்டும். சந்திரபிம்பம்போலே எத்தனை பெண்கள் வலிய வருகிறார்கள்பார்.

மீ.—உங்களுக்கு இவ்வளவு பிடிவாதமென்ன? கல்யாணத்திற்குப்பிற்பாடுதான் பி.ஏ. தேறட்டுமே. யாராவது வேண்டாமென்று சொல்வார்களா?



சு.—கல்யாணமானபிறகு தேறுவது படிப்பில்லை. நீயோபெரிய பெண்ணைக் கட்ட வேண்டுமென்கின்றாய். விவாகமானஒருவருஷத்திற்குள் பெண் வீட்டுக்குவரவேண்டுமென்றும் சொல்கிறாய். இந்த வைபவத்தின் மத்தியில் படிக்கிறதேது? படுக்கிறதுதான் ஏற்படும்.

மீ.—எத்தனையோ பேர் சாந்தியான பிற்பாடு கூடப் படித்துத் தேறவில்லையா?

சு.—கல்யாணமாயிற்றென்றால் உடனே படிப்பைத் தூக்கட்டி வைக்க வேண்டியதுதான். அம்மாள் முகத்தை ஏற இறங்கப் பார்ப்பதே வேலையாய்முடியும்.

மீ.—நமது செல்லம் அப்படி யிருக்கவேமாட்டான்.

சு.—நமது செல்லம் இருக்கமாட்டானா? அவன் யாருடையபிள்ளை? என்பிள்ளையில்லையா? நான் உன்முகத்தைப் பார்த்துப் பார்த்து மயங்கவில்லையா? அதனால்தானே பாதிக்கிணறு தாண்டினேன். படிப்பு பாதியில் நின்று விட்டது. அப்பனைப் போலத்தானே பிள்ளையும்.

மீ.—அப்பனைப்போலே யிராமல் யாரைப்போலிருக்கும் பிள்ளை? அப்பனைப்போலில்லாவிட்டால் ஊரார் ஏசியன்றோ காட்டுவார்கள். இந்தமட்டிலாவது சொல்லி என்மானத்தைக் காப்பாற்றினீர்களே.

இத்தருணத்தில் யாரோ ஒருவன் வந்து வாசற்கதவைத் தட்டினான். அந்தச் சத்தத்தினால் தீக்ஷதருக்குத் தூக்கம் கொஞ்சம் கலைந்தது. ஆயினும் சரீரசிரமத்தினால் நித்திரை தெளிந்ததும் தெளியாததுமான ஸ்திதியில் கண்ணை விழியாது படுத்துக்கொண்டிருந்தார். தன் மனைவியோடு சம்பாஷித்துக் கொண்டிருந்த சுந்தரமய்யர் அதைக்கேட்டு முன்கட்டுக்குவந்து 'யார் கதவைத் தட்டுகிறது' என்று கேட்க, "ஏசமான்! நான்தான் தபால்காரன்" என்று விடைபகர்ந்தான் கதவைத்தட்டினவன். அவன் சொன்னது தீக்ஷதரது காதில் நாராசம்போற் பாய்ந்தது. உடனே திடுக்கிட்டெழுந்து அப்படுக்கையிலேயே உட்கார்ந்தார். தன்மனதில் உதித்தபயமானது முகத்தில் பிரசன்னமாயிருந்தது. அந்த சமயத்தில் அய்யரும் அங்குவர, தீக்ஷதர் அவரைநோக்கி "அய்யரவாள்! தபால்காரன் இங்கேது வந்தது?" என்று வினவினார். அதற்கு அய்யரும் 'கடுதாசி கொண்டுவந்திருப்பான் போலிருக்கிறது' என உரைப்பத்தீக்ஷதர் "கடுதாசி கொணர்ந்து கொடுக்கிற தபால்காரனோ! கட்டுச்சுமந்து போகிறவனோவென்று சந்தேகித்தேன்" என்று மொழிந்தனர். இதைக்கேட்டுச் சுந்தரமய்யர் "தீக்ஷதரவாளே! அந்தசந்தேகம் எதற்காக வந்தது? உங்கள் முகத்தைப் பார்த்தால், அதிக பீதியோடிருக்கிறதாகத் தெரியவருகிறதே. ஏதாவது கனவு கண்டீர்களோ?" என்று கேட்டுவிட்டுக் கையிற்கிடைத்த கடிதத்தை உடைத்துப்பார்த்து அந்த விஷயத்தில் ஞாபகமாக இருந்துவிட்டார்.

பி. எஸ். சுப்ரமணிய அய்யர், பி. ஏ.

## "கொள்ளை நோய்க்கு ஓர் கைகண்ட ஔஷதம்."

இத்தலைப்பெயரின்கீழ் சென்னை "மெடிகல் அஸோஸியேஷன்" என்னும் வைத்தியர்கள் சங்கத்தின்முன் மகா-ா-ா-ஸ்ரீ ஜெ. வி. இராமசாமி நாயுடு, L. M. & S. அவர்கள் இங்கிலீஷில் ஒரு பிரபந்தமெழுதி வாசித்தார். அதைச் சிறு புஸ்தகமாக அச்சிட்டுப் பிரசுரித்திருக்கிறார்கள். அதில் ஒருபிரதி அச்சங்கத்தின் காரியதரிசி நமக்கு அனுப்பினார். அதன் சாராம்சத்தைக் கீழே பிரசுரிக்கிறோம்:—

வெகு நாள் முன்னமே, மத்தியதரைக் கடலோரத்துள்ள தேசங்கள் இக்கொள்ளை வியாதியால் அடிக்கடி நீடித்தகாலம் அடிபட்டு வந்தன. அத்தேசங்களில் இவ்வியாதியின் அனுபவமானது, நம்முடைய தேசத்துக்கு 'பிளேக்' வராமற்காக்க சாதகமாயிருக்கலாம்.

அவர்கள் பிரயோசனப் படுத்திய மருந்து 'ஆலிவ் எண்ணெய்'. அது அவ்வியாதி வராமற்காக்கவும் வந்தால் ஆற்றவும் ஏற்றசாதகமாம்.

எகிப்து தேசத்தில், 4 வருடகாலத்தில் லக்ஷக்கணக்காய் ஜனங்களை வாரிச்சென்ற பிளேக்வியாதியினால், ஒரு வாணியனாவது இறக்கவில்லை. இதறிந்து 'வெனிஸ்' தேசத்து மாலுமிகள் சிலர், 'ஆலிவ்' எண்ணெயை அடிக்கடி தடவிக்கொண்டு, பிளேக் வந்த மூவருடன், ஐந்து நாள் அவ்வியாதி தொத்திக்கொள்ளாமலிருந்தனர். 'ஆர்மீனியா' தேசத்தில் மூன்று குடும்பம் இவ்வெண்ணெயைத் தேய்த்து வந்தபடியால், பிளேக் வந்தவர்களுடன் கூட இருந்து அவர்களை இடைவிடாமல் கவனித்துக் கொண்டிருந்தும் அவ்வியாதி தங்களைப்பிடித்துக் கொள்ளாமல் காத்தார்கள். Sir Brook Falkner என்பவர் பிளேக் ஆஸ்பத்திரியைக்காத்துவரும் சிப்பாய்கள் எண்ணெய் தடவிய அங்கி தரித்திருந்ததால், அவ்வியாதி அவர்களைத் தொத்தவில்லை என்று கூறியிருக்கிறார். 'டியூனிஸ்' தேசத்தில், இவ்வியாதி மிகவும் மும்மரமாயிருந்தபொழுதும், எண்ணெய்க் கிடங்குகளிலிருந்தவர்களுக்கு, அவர்கள் எப்பொழுதும் எண்ணெயிலேயேபழகிக்கொண்டிருந்தபடியால், வரவில்லை என்று Jackson என்பவர் எழுதியிருக்கிறார்: (இந்தியாவிலும் எண்ணெயாட்டும் வாணியர்களை இவ்வியாதி பீடிக்கக்காணோம்.)

இவ்வெண்ணெயில் பழகுகிறவர்களுக்கு இவ்வியாதி வருகிறதில்லை என்று காணவும், இவ்வெண்ணெயினால் வியாதி வந்தவர்களுக்கு சாதகமுண்டோ என்று அறியும் பொருட்டும், இவ்வெண்ணெயைக் காய்ச்சி 'பிளேக்' வந்தவர்கள் உடம்பெல்லாம் தடவ ஆரம்பித்தார்கள்: அதுவும் பலித்தது. 'இவ்வெண்ணெய் பிளேக் வராமற் செய்யலாம். வந்தவர்களைப் பிழைப்பிக்குமா?' என்று அநேகர் சந்தேகித்தார்கள். ஆனால் அவர்களே, இவ்வெண்ணெய் தேய்க்கவும் உடம்புமுழுவதும் ஒரே வியர்வையாய் வியர்ப்பதினால் வியாதியின் விஷநீரைப்போக்கி ஸௌக்கியமுண்டு பண்ணுவதாகப் பின் அங்கீகரித்தனர்.

முற்கூறிய Jackson என்பவர் Moracco தேசத்தில் வந்த பெருவாரிக் காய்ச்சலில், அநேகருக்கு, வராமலிருக்கும்பொருட்டும், வந்தவர்களைப் பிழைப்பிக்கும்பொருட்டும், இந்த எண்ணெயை உபயோகிக்கச் சொல்ல, அது இருவிதத்திலும் மிகவும் பிரயோசனப்பட்டதாக எழுதியிருக்கிறார்:

Pavia தேசத்து Lewis என்பவர், 5 வருஷகாலமாய் இவ்வெண்ணெயின் உபயோகங்களைப் பரீக்ஷித்துப்பின் வருமாறு கூறியிருக்கின்றனர்:—எவரையும் பிளேக் வந்தவுடன், காற்றோட்டமற்ற ஒரு அறைக்குள் கொண்டுபோய், நல்ல நெருப்பண்டை உட்கார்த்தி நன்றாய் வியர்க்கும்படி, தலை முதல் கால் பரியந்தம் 'ஆலிவ்' எண்ணெயைக் காய்ச்சிக் கடற்பஞ்சிற்தோய்த்து விரைவாய்த் தேய்க்க வேண்டும்: இன்னுமதிகமாக வியர்க்கும் பொருட்டு, நெருப்பில் சூரத்தாவிரையையுஞ் சர்க்கரையையும் எரிக்கவேண்டியது. நான்கு நிமிஷத்திற்கு மேற்படாமல் ஒவ்வொரு தடவையும் ஒரு (Pint) பைண்டளவு எண்ணெய் எடுத்துத் தேய்க்க வேண்டியது. முதற்தடவை தேய்க்கவும் மிகுந்த வியர்வை உண்டாகும். அப்படி உண்டாகாவிடில், உடம்பை உலர்ந்த உஷ்ணமான துணியினால் நன்றாய்த்துடைத்துவிட்டு எண்ணெயை விடாமல் தேய்க்கவேண்டும். தேயிலை முதலியவைகள், உடம்பு வியர்க்கும் பொருட்டு, உஷ்ணமாய்க் கொடுக்கலாம். கண்களில் ஒன்றும் செய்யவேண்டுவதில்லை. இன்னும் மெல்லிய பாகங்களை மிருதுவாய்த் தேய்க்கலாம். தேய்க்கும்பொழுது நோயாளிக்கு சளி பிடிக்காமல் சாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ள வேணும். தேய்க்காத பாகங்களில் குளிர்ந்த காற்றுப்படாத படிக்கும் கதகதவென்று இருக்கும் படிக்கும் ஜாக்கிரதையாக மூடிவைக்க வேண்டும். இவ்விதமாய், வியாதியனுகூல அறிகுறிகள் காணுமளவும் தினம் ஒருதடவை தேய்க்க வேண்டியது. உடம்பில் கட்டிகள் புறப்பட்டிருந்தால், அவைகளின் விஷஜலம் வெளியாகுமளவும் அவ்விடங்களை மிருதுவாய் அடிக்கடி தேய்க்கவேண்டியது—பிறகு பிளாஸ்திரிகளால் புண்ணை ஆற்றிவிடலாம். வியாதிவந்ததாகத் தெரிந்தவுடன் இவ்விதமாகச் செய்யவேண்டியது. அப்படிச் செய்யாமல், வியாதியின் விஷவித்து உடம்பு முழுதும் பரவி வாந்திபேதி உண்டாய்விட்டால் பிழைப்பது நிச்சயமில்லை. வாந்திபேதி எடுத்த பிறகும் சிலர் பிழைத்திருத்தலின், ஏக்கங்கொண்டு கைவிட்டுவிடாமல், தேய்த்துக்கொண்டேயிருக்கவேண்டியது.



மேற்கூறியபடி தேய்ப்பதினால். வெகுவாக அனுகூலம் இருக்கப்பார்த்து இவ்வெண்ணெயை உள்ளுக்கும் கொடுக்க ஆரம்பித்தார்கள். இருநூறு பேருக்கு இவ்வாறு கொடுக்க, பத்துப்பேர்தான் இறந்தார்கள். அது கொடுக்கும்விதம்:— 'வியாதி வந்தவுடன் அவனவன் உடம்பிற்குத் தக்கபடி 4 அவுன்ஸ் முதல் 8 அவுன்ஸ் வரையில் கொடுக்கவேண்டியது. உடனே தேகத்திலுள்ள விஷநீர் வியர்வையாக வெளிவந்து விடும். இவ்வெண்ணெய் உள்ளுக்குச் செல்லவும். சிலருக்கு வாந்திசெய்யும். சிலருக்குப் பேதியுண்டாகும். ஆனால் எல்லாருக்கும் மிகுந்த வியர்வை உண்டாகி அனுகூல ஏதுவாகும்.

பிறகு இவ்வெண்ணெயை உள்ளுக்கும் கொடுத்து வெளியும் தேய்க்க ஆரம்பித்தார்கள். இப்படிச் செய்யவே ஒருவராவது இறக்கவில்லை, 1820-ம் வருடமுதல் இவ்வியாதியால் அடிபட்ட முன்னூறு பேர்களுக்கும் இவ்விதமாகச் செய்யவே அவர்களில் பன்னிருவர்தான் மாண்டார்கள். அதே வருஷத்தில் (Mauritius) மோர்சு தீவில், இவ்வியாதி வந்தவர்களுக்கு 'ஆலிவ்' எண்ணெய் மிகவும் ஸாதகமாயிருந்ததாகவும் தெரியவருகிறது.

'ஆலிவ்' எண்ணெய்க்கு மாத்திரமே இவ்வளவு குணமுள்ளதாகச் சொல்லக்கூடாது. ஏனெனில் 'பிளேகைப்' போன்ற ஒரு வியாதி வட இந்தியாவுக்கு வந்தபொழுது செக்கடியில் எண்ணெயாடிக் கொண்டிருக்கும் வாணியர்களுக்கு இவ்வியாதி வரவில்லை என்று ஜனங்கள் கூறினதாக Dr. Adam எழுதியிருக்கிறார். இவ்விடத்தில் எண்ணெயென்றது ஆலிவெண்ணெயல்ல.

லண்டனில் இப்பெருவியாதி வந்தகாலத்து மெழுகு உருக்குகிறவர்களையும், கசாப்புக்காரர்களையும், இவ்வியாதி அணுகவில்லை. 'லாப்லாண்டு' தேசத்தில் (Seal) 'ஸீல்' என்னும் மீனிலிருந்து எடுக்கும் எண்ணெயைக் குடிக்கும் 'எஸ்கிமோ' என்னும் ஜாதியாரை இவ்வியாதி அணுகுகிறதேயில்லை. ஆகையால், எவ்வெண்ணெயும், எவ்விதக்கொழுப்பும் இவ்வியாதிக்குப்பகை என்று தெரிகிறது.

ஆகையால் நம்மதேசத்து வேப்பெண்ணெயும், மாமிசத்தை அழுகாமற் பரிகரிக்கும் குணமிருத்தலின், இவ்வியாதி வராமற்காக்கலாம்.

நவம்பர் மாதத்து 'Theosophist' பத்திரிகையில் சூரத்துப்பட்டணத்து ஈடல் பேராம், என்பவர் பிளேக்கினின்றும் பிழைப்பிக்கும் ஒரு ரகஸியம் கண்டு பிடித்திருக்கிறதாகச் சொல்லுகிறார். அவர் இரண்டரை வருஷகாலமாய் ஒரு பிளேக் ஆஸ்பத்திரிக்குத் தலைவராய் இவ்வியாதியுடன் போராடினதாயும், வேப்பெண்ணெயையும் நல்லெண்ணெயையும் நன்றாய்க் கலந்து 'பிளேக்' வந்தவனுக்குத் தேய்த்த உடனே சுரம் இரண்டு டிகிரி குறையக் கண்டதாகவும் வியாதி மீறியிருந்தாலொழிய, வியாதிக்காரன் நிச்சயம் பிழைப்பதாகவும், அது தினம் தடவிக்கொள்ளுகிறவர்களைக் கொள்ளைநோய் நெருங்குவதில்லை என்றும் கூறியிருக்கிறார்.

இளம்வேப்பிலையைக் கொத்தாகக் கொணர்ந்து, ஆயாமல் எல்லாவற்றையும் அப்படியே ஒன்றாக வைத்து ஜலம் விடாமல் நறுக்கிச் சாறுபிழிந்து, அதே அளவு நல்லெண்ணெயுடன் கலந்து, ஓசையடங்கி வேப்பஞ்சாறு முழுதும் ஆவியாய்ப் போமளவும் காய்ச்சி, காற்றுப்புகாமல், ஒரு புட்டியில் மூடி வைத்து ப்ளேக் வராமல் தேய்த்துக்கொண்டு வரலாம்,

இது நன்மருந்தாயிருப்பினும், வேப்பந்துளிர்கள், வசந்தகாலத்தன்றி, மற்றக்காலங்களில் கிடைப்பது அபூர்வமாகையாலும், முதிர்ந்த இலைகள் சாறு அதிகமாகக் கொடுக்காவாகையாலும், எப்போதும் இதையனுசரிப்பது அசாத்தியம். ஆகையால் வேப்பங்கொட்டையிலிருந்தெடுக்கும், வேப்பெண்ணெயை உபயோகித்துப் பரீக்ஷை பார்க்கலாம். வேப்பெண்ணெயை அநேக வியாதிகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கிறார்கள். அது குஷ்டரோகம், கட்டி சுரம் இன்னும் பூச்சி சம்பந்தமான வியாதிகளெல்லாவற்றையும் தொலைக்கின்றது.

ஆகையால் ப்ளேகையும் வேப்பெண்ணெய் வெல்லுமென்று நம்புகிறேன்.

## நந்தவன நஷ்டம்
### அல்லது
### மோட்ச ஈனம்.

ன்று களை ஒரு

(126 வது பக்கத் தொடர்ச்சி.) போதிசத்தமனுடைய கட்

இவ்விதமாக ஆதாம் வேஞ்லகுமுன்னம் ஸிரேஷ் (Raphael) சிறிது நேரம் கொடியை யெடுத்துச்

கூறிய வர்த்தமானங்களை வர்ணிக்கத் தொடங்கினான்.

“முதற்புருஷனே! மேலான வேலையை எனக் கிட்டிருக்கிறாய்; அது விசனகரமாயும், பிரயாசமாயும் உள்ளது; ஏனெனில், போராடும் அசரீரிகள் நடத்தும் அதரிசனமான வீரச்செய்கைகளை மானுட அறிவுக் கெட்டும்படி எவ்விதமாக உரைப்பேன்? சீரழியா முன்னம் மகிமை பொருந்தியும், பரிபூரண சிறப்பமைந்தும் இருந்த அத்தனை பேர்களின் கேட்டை விசனப்படாமல் உரைக்கக் கூடுமோ? வெளிப்படுத்த யோக்கியமற்றதாகத் தோன்றக் கட்டிய மற்றொரு உலகத்தின் இரகசியங்களை எப்படி விஸ்தரிப்பேன்? ஆனால், உன்னுடைய நன்மையையே உத்தேசித்து மேற்படி விருத்தாந்தங்களைக் கூறுகிறேன். மானுட அறிவுக்கெட்டாத விஷயங்களை வர்ணிப்பதில், சூக்குமரூபங்களுக்கு ஜடரூபங்களில் மிகத்தகுந்தவைகளை உபமானமாகக்கூறி அவைகளை விளக்குவேன். ஆயினும் உபமானமாகக் கூறுவானேன்? பூலோகத்தார் அறிந்திருக்கிறதை விசேஷமாக, பூமியானது தேவலோகத்தின் சாயையாகவே இருந்து, இருலோகத்திலுள்ள வஸ்துக்களும் ஒன்றுக்கொன்று ஒத்திருப்பனவாகில் என்ன சொல்லுவோம்!

“பிரஸ்தாபகாலத்தில் இப்பிரபஞ்சம் சிருஷ்டிக்கப் பட்டிருக்கவில்லை; இவ்வானம் சுழலுமிடத்திலும் பூமி தன் மையத்தின் மேல் நிறுத்தப்பட்டு நிலைத்திருக்குமிடத்திலும் பொல்லாத ஸம்கரன் (Chaos) ஆண்டு கொண்டிருந்தான். அக்காலத்தில் ஒருநாள்—ஆதியந்த மில்லாத நித்தியத்திலும் சலனத்தை அநுசரித்து நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்னும் காலப்பிரிவுகள் ஏற்பட்டு அவைகளால் நிலையான எல்லாவஸ்துக்களும் அளவிடப்படுகின்றன. தேவலோகத்துக்குரிய நீடிய வருஷத்தின் பிறப்பாகிய ஒருநாள் ஈசுவரகட்டளைப்படி எண்ணிறந்த பிரகாசமான தூதக்குழாங்கள் எப்புறத்து அந்தத்திலும் இருந்து வந்து சர்வவல்லோனுடை சிம்ஹாசனத்தின் முன்னிலையில் பட்டாளங்களாகப் பிரிந்து தங்கள் தலைவர்களை அணுகுகின்றார்கள்;
...னணிக்கும்பின்னணிக்கும் மத்தியில் பலவிதமான
ணெய் பிடே... ஆயிர கொடிகள் ஆகாயத்திற் பறந்தன.
பிழைப்பிக்குமா? சில அப்பட்டாளங்களின் அந்தஸ்தைக்
ஆனால் அவர்களே, ...க்தி, வைராக்கியம், அன்பு முதலிய
உடம்புமுழுவதும் ஒரே ...றப்பட்ட செய்கைகளை சித்தி
வியாதியின் விஷநீரைப்போ... விளக்கின. இவ்விதமாக அத்
பண்ணுவதாகப் பின் அங்கீகரித்,

தூதக்குழாங்கள் அளவுக்கெட்டாத சுற்றளவு பொருந்திய சக்ராகாரமான கும்பல்களாகியும், அக்கும்பல்கள் சக்ரத்திற்குள் சக்ரங்களாகத் தோன்றவும் ஈசுவரசிம்ஹாசனத்தைச் சுற்றி நின்றன. மத்தியில் அனந்தனாகிய பிதா தன்மகனை அருகில் பிரமானந்தத்தில் வீற்றிருக்க அருளியிருந்தார். அக்காலத்தில் அவன் பின்வருமாறு பேச எத்தனிக்க எரிமலையிலிருந்து ஜுவாலை யெழும்பும்போது அதன் சிகரம் அதிப்பிரகாசத்தால் கண்ணுக் கெட்டாமல் விளங்குவது போல் தரிசனங் கொடுத்தான்.

“சோதி புத்திரர்களான தூதர்களே! எல்லோரும் கேளுங்கள்; ஆசனக்கிரகிகளே! அதிபதிகளே! அரசுகளே! வீரியர்களே! வலியர்களே! நான் இயற்றப் போகிற ஸ்திரமான கட்டளையைக் கேளுங்கள். இன்று என் வலது பக்கத்தில் இருப்பவனை சிருஷ்டித்து, அவனை என் ஏகபுத்திரனாகக்கூறி, இத்தூய மலையில் ராஜாங்கத்துடன் ஸ்தாபித்து, அவனை உங்கள் தலைவனாக நியமித்து, இந்த லோகத்தார் எல்லோரும் அவன் முன்னால் வணங்கி, அவனைத்தலைவனாக அங்கீகரித்து அவனுடைய பிரதிநிதியான ஆளுகையில் அவனுடன் ஐக்கியமாகி எந்நாளும் சந்தோஷமாக இருக்க வேண்டியதென்று நான் பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறேன். அவன் கட்டளையை மீறுவோன் என் கட்டளையை மீறுகிறான்; ஒற்றுமையை முறிக்கிறான்; மேலும் அன்று முதல் தேவசந்நிதானத்தினின்றும் மோட்சப் பேறினின்றும் விலக்கப்பட்டு வெளியிருளில் ஆழ்த்தப்பட்டு விமோசனம் இல்லாமலும் முடிவில்லாமலும் சிறையடைக்கப்படுவான்.”

சர்வவல்லோன் இவ்விதமாகப் பேச எல்லோரும் அதிக மகிழ்ச்சியடைந்ததாக விளக்கினார்கள்; ஆனால் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தவர்கள் அல்ல. மற்ற களிநாட்களைப் போலவே அத்தினமும் அப்பரிசுத்த மலையைச் சுற்றிப்பாடி நிர்த்தனஞ் செய்தார்கள். கூடார்த்தமான அந்நிர்த்தனம் சஞ்சாரக் கிரகங்களும், ஸ்திரகோளங்களும் நிரம்பிய நட்சத்திர மண்டலத்தின் நாநாவித சுழற்சியை மிக ஒத்தது. அக்கதிகள் சிக்கி மயக்கத்தக்கவைகளாகவும், மையத்தைச் சுற்றுகிறவைகளாகவும், சக்ரத்திற்குள் சக்ரமாகவும் சுழன்று மிக முறைகேடாகத் தோன்றினும் மிக ஒழுங்காக இருப்பவைகள். அக்கோளங்கள் இவ்விதமாக சுழலும்போது தெய்வீக இன்னிசைவ...ரமாகவும் சாந்தமாகவும் ஒலிக்க ஈசனே செவிகொடுத்துச் சந்தோஷமாகக் கேட்பான், சாயுங்காலம் அ...



கவே — நமக்கும் காலைமாலை உண்டு, ஆனால் அது இதமான மாறுபாட்டுக் கல்லாமல் உயிர்ப்புக்கவசியமானதல்ல — நடனத்தை நிறுத்தி இனிமையான உண் பொருள்களை நோக்கித் திரும்பினார்கள். அவர்கள் சக்ராகாரங்களாக நின்று கொண்டிருக்கவே அவர்களுக்கருகில் மேசைகள் வைக்கப்பட்டு அவைகளின்மேல் சடுதியில் தேவதூதர்களின் உணவு குவிக்கப்பட்டு, முத்துக்களாலும், வைரக்கற்களாலும் இழைக்கப்பட்டும் கனமான சுவர்ணத்தால் செய்யப்பட்டுமுள்ள பாத்திரங்களில் தேவலோக விளைவாகிய கொடிகளில் உண்டாகிய இரத்தினவர்ணமான அமுதச் சாறுகள் வழிய ஊற்றப்பட்டன. புஷ்பங்களின் மீது சாய்ந்தும் புதியமலர்களை கிரீடங்களாகத் தரித்தும் உண்டு குடித்து இன்பமாக சம்பாஷித்து ஆனந்தியத்தையும் ? ஆனந்தத்தையும் பருகுகின்றனர்; மிதம்தவறும் என்கிறபயம் அவர்களுக்கில்லை; எல்லாவற்றையும் நிறைவாகச் சொரிந்து அருளும் ஈசன் இவர்களுடைய ஆனந்தத்தைக்கண்டு மகிழ்ந்தான்.

அமுதைப்போல் சுகந்தரும் இரவு வரவே, ஒளியையும் இருளையும் வீசவல்ல ஈசனுடைய வாசஸ்தலமாகிய அவ்வுயர்ந்த மலையிலிருந்து மேகங்கள் வெளிப்பட்டு தேவலோகத்தின் அதிப்பிரகாசத்தை சந்திவெளிச்சமாக மாற்ற—அங்கே இரவு இதைவிடக் கருகலாக இராது—ரோஜாவாசனை பொருந்திய பனி நித்திரையறியாத ஈசனுடையகண்களைத்தவிர மற்றவர்களுடைய கண்களை யெல்லாம் நித்திரைதேடச் செய்தது. அப்போது விசாலமான சமநிலத்தி லெங்கும்—ஈசனுடைய சாலைகள். கோளாகாரமான இப்பூமியை தட்டையாகப் பரவினால் அது எவ்வளவு விசாலமாகத் தோன்றுமோ அதைவிட அதிவிசாலமாக இருக்கின்றன—தூதக்குழாங்கள் கும்பல் கும்பலாகப் பிரிந்து ஜீவவிருக்ஷங்கள் அடர்ந்த ஓடும் அருவிகளின் கரையில் தேவாலயங்களையொத்த எண்ணிறந்த கூடாரங்களை சடுதியில் எழுப்பி அவைகளில் சயனித்து குளிர்ந்த காற்றுவீச உறங்கினார்கள்; சிலர் மட்டும் முறைப்படி மாற்றி மாற்றி ஈசுவர சிம்மாசனத்தைச் சுற்றி நின்று இன்பமான கீர்த்தனைகளை இரவு தோறும் பாடினார்கள். ஆனால் சாத்தானோ—அவனை இப்பெயராலேயே குறிப்பிடுவோம். முந்திய பெயர் இப்போது தேவலோகத்திலும் வழங்குகிறதில்லை—இவ்விதமாக விழித்தவனல்லன். அவன் உத்தம தூதர்களில் முதல்வன் அல்லவனாயினும் சிரேஷ்டர்களில் ஒருவனாகவும், பராக்கிரமத்திலும், ஈசுவரகடாக்ஷத்திலும், அந்தஸ்திலும் உத்தமனாயினும், மகாதேவனால் அத்தினம் அபிமானிக்கப்பட்டும் அபிஷேகிக்கப் பட்டும் அரசனாக கூறப்பட்ட தேவப்புதல்வன் மேல் பொறாமை கொண்டு, அசம்பாவத்தால் அக்காட்சியைச் சகிக்காமல், தன்னந்தஸ்து குறைந்ததாக நினைத்தான். ஆகவே ஆழ்ந்த குரோதத்தையும் வெறுப்பையும் கொண்டு தூக்கத்திற்கும் அமைதிக்கும் அதி இஷ்டமானநடு இரவுவந்த உடன் அதி உத்தமனாகிய ஈசனைத்தொழாமலும்வணங்காமலும் அசட்டையாக விட்டு தன் படைகளையெல்லாம் பெயர்த்துக்கொண்டு போக எண்ணித்தனக்கடுத்த தலைவனை எழுப்பிப் பின்வருமாறு இரகசியமாகப் பேசினான்.

“தூக்கமோ, பிரியமானதோழனே! நேற்றுதினமே சர்வவல்லோனுடையவாக்கினால் பிறந்தகட்டளை ஞாபகமிருக்க உன் கண்ணிதழ்களை மூடக்கூடிய தூக்கமும் உண்டோ? நம்முடைய எண்ணங்களை பரஸ்பரமாக அறிவித்துக்கொள்வது நம்முடைய வழக்கம்; இருவரும் ஒரேகாலத்தில் விழித்துக்கொண்டிருந்து வித்தியாசமின்றி ஒற்றுமைப்பட்டிருப்பது வழக்கம்; அப்படியிருக்க, இப்போது நான் விழித்துக்கொண்டிருக்கும்போது நீ தூங்கலாமோ? புதுச் சட்டங்கள் விதிக்கப்படுகின்றன பார், அரசன் புது விதிகளை ஏற்படுத்தவே, ப்ரஜைகளில் புது எண்ணங்கள் உண்டாகி, அவர்கள் அவ்விதிகளின் பயன் ஏதோவென்று தர்க்கித்து புது ஆலோசனை செய்யலாம். இவ்விடத்தில் இதை விட அதிகமாகப் பேசுவதில் அபாயமுண்டு. நீ நமக்குட்பட்ட ஏராளமான படைகளை யெல்லாம் கூட்டி ஒரு கட்டளை பிறந்திருப்பதாகச் சொல்லு. இரவின் மந்தாரம் விலகும் முன்னம் நான் என்படைகளைச் சேர்த்துக் கொண்டு வடபாகமாகிய நம்முடைய இடத்துக்குச் சீக்கிரம் போய் இருந்து, நம்முடைய மகாராஜன் தன் ராஜ்ஜியத்தின் வழியாய் துரிதமாக விஜயம் செய்து விதிஸ்தாபிக்கும் போது அவனைத் தகுந்தபடி அழைத்து உபசரித்து அவனுடைய புதுக் கட்டளைகளைப் பெற வேண்டும்.”

வஞ்சகனான அம்மகாதூதன் இவ்விதமாகப் பேசி தீங்கெண்ணாத தன்தோழனுடைய இருதயத்தில் கெட்ட ஆவசத்தைப் புகட்டினான். அவன் தன்னாளுகைக் குட்பட்ட வல்லர்களான அரசுகளை ஒருமிக்கவும் ஒவ்வொருத்தனாகவும் அழைத்து, போதிக்கப்பட்டபடி சொன்னான்; சர்வோத்தமனுடைய கட்டளைப்படி இரவின் மந்தாரம் விலகுமுன்னம் சிரேஷ்ட அரசக்குரிய உயர்ந்த கொடியை யெடுத்துச்

செல்லவேண்டுமென்று சொன்னான். மேலும் கற்பிக்கப்பட்ட காரணத்தையும் ஈரடிப் பயனுள்ள பதங்களையும், பொறுமையை யுண்டாக்கும் பதங்களையும் சொல்லி அவர்களுடைய நேர்மையைப் பரிசோதித்துக் கெடுத்தான். எல்லோரும் தங்களுடைய சிரேஷ்டமான தலைவனுடைய தலைமையான வாக்கையும், வழக்கமான குறியையும் கவனித்து இணங்கினார்கள்; தேவலோகத்தில் அவன் பெயர் பிரதானமாகவும், அவன் அந்தஸ்து உயர்ந்ததாகவும் இருந்தது. விண்மீனினங்களைத் தலைவனாக நடத்தும் காலைச்சுக்கிரனைப் போல் விளங்கிய அவன் முகம் அவர்களை மயக்கி, பொய்யால் தேவலோகப் பிரஜைகளில் மூன்றில் ஒருபங்கை அவனைப் பின் தொடரச் செய்தது.

டி. சுந்தரராவ், பி. ஏ.

## உபாத்தியாயர் பக்கம்.

### குழந்தைகளும் விளையாட்டுக்கருவிகளும்.

குழந்தைகள் எங்கும் விளையாட்டுப் பிரியர்களாயிருக்கிறார்கள். இப்பிரபஞ்சவாழ்வே ஒரு விளையாட்டாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் இப்பிரபஞ்சநாடகத்தில் ஆடப் பிறந்தவர்கள் ஆரம்பந்தொட்டே விளையாட்டிற் பிரியர்களாயிருப்பது சகஜந்தானே. குழந்தைகளுக் கியல்பாயுள்ள விளையாட்டுப்பிரியத்தைத் தக்கபடி வளரவிட்டு அதன் வளர்ச்சியைச் சமயோசித சாமர்த்தியத்தோடு தக்கவாறு மேற்பார்வைசெய்து நடத்திவருவதே வித்தியாப்பியாசமாகும். குழந்தைகளைச் சுபாவத்தில் வளரவிட்டு குற்றநற்றமறிந்து குற்றத்தைநீக்கிக் குணத்தை வளர்த்து நாலாவிதத்திலும் குழந்தைகள் சமதோரணையாக விர்த்தியடைந்து வரப்பார்த்து வருவதே கிண்டர்கார்டன் முறையென்று சொல்வதாம். இந்த முறையைச் சரிதோரணையாகக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினவர், ப்ரோபேல் என்னும் ஜர்மனி தேசத்தவர் ஒருவர். இவர் தம் ஆயுள்கால முழுவதையும் குழந்தைகளை வளர்க்கும் விதத்தையறிந்து முறைப்படுத்திச் சீர்ப்படுத்துவதில் கழித்தார். ஆகையால் இம்முறை காரணப்பெயரால் இவர்பெயர்பற்றி ப்ரோபேல் முறையென்று வழங்குகிறது.

இவர் கண்டுபிடித்தது ஒன்றும் நூதனமல்ல. இவர் காலத்துக்குமுன் ஜனங்கள் உணராத உண்மைகளை, இவர் ஆராய்ந்தும் ஊகித்துமுணர்ந்து அவ்வுண்மைகளை உபயோகிக்கும் வழியையும் கண்டுபிடித்து ஒழுங்குபடுத்தினதே இவர்செய்த பெரிய வேலை. "இப்புவியில் இல்லாததொன்றில்லை இளங்குமரா" என்று ஸ்ரீராமர் லக்ஷ்மணனுக்குச் சொல்லியபடி இவ்வுலகில் இல்லாததொன்றுமில்லை எல்லாம் புராதனமானதே. ஆனால் அதுதன் குணகுணத்தையறிந்து குற்றத்தை நீக்கக் குணத்தை வழிப்படுத்தி உபயோகிப்பதே விசேஷமாம். இந்த மர்மம் நமக்குத் தெரிய வரும்வரையில் உள்ளனவெல்லாம் இருந்தும் நமக்கு இல்லாதனவேயாகும். பிரபஞ்சத்திலுள்ள சூக்ஷ்மவிலாசயுத்திகளின் மர்மத்தை யறிந்துகொள்ளும்போதே நாம் அவைகளின் இருப்பை உணர்ந்தவர்களாகிறோம். இந்த உணர்வுநமக்குஉண்டாகும்போதே ஒன்றை நாம் கண்டுபிடித்ததாகச் சொலகிறோம். அதாவது நம் புத்திக்குப் புலப்படாமல் மறைந்திருந்ததைக் கண்டுபிடித்ததாகச் சொல்கிறோம். ஆகையால் இப்படிக்கண்டுபிடித்த விஷயமோ, வஸ்துவோ, முறையோ, எதுவோ ஒன்றைப்பற்றி விவரிக்குங்கால் அதில் சில பல பாகங்கள் நமக்குத் தெரிந்ததாக விருத்தலால் இதிலென்ன அதிசயமென்று நிராகரித்துப்பேசுவது சரியல்ல: அப்படிப் பேசுவது யுக்தி புத்தி இரண்டிற்கும் ஒவ்வாததாகும். இந்த வழக்கம் நம்மவர்களுக்குள், விசேஷமாய் நமது பெண்பாலார்களுக்குள், அதிகமாய் உண்டு. இதனால் நேரும் கெடுதி மிகுதி. ஊகமாய் யுத்திபுத்தியோடு எதையும் உற்று நோக்கி ஆராயும்வழக்கம் படியப்பெற்றோருக்கு அவர் கண்முன்படும் எவ்வளவு சாதாரணமாகத் தோன்றும் வஸ்துவும் ஓர் அதிசயக் களஞ்சியமாகுமென்பதிற் சந்தேகமில்லை. மின்னலையறியாதார் யாருமில்லை. மின்சாரமென்பது மின்னலின் சக்தியேயன்றி வேறல்ல. மின்சாரத்தினுதவியால் வண்டியோடுவதையும், ஒளிவிளக்கு வெளிச்சந்தருவதையும், பேசுந்தந்தியாலும், அடிக்குந் தந்தியாலும் வெகுதூரத்திலுள்ளோர் 'வாயுவேகம்,மனோவேகம்' என்று உவமித்துச்சொல்லும் மிகுதியானவேகத்திலும் அதிக வேகமாகக்கலந்துபேசிக்கொள்வதையும்பார்த்தால்எவ்வளவுஅதிசயமாகவிருக்கிறதுபாருங்கள்.—சிலநாள்முன் நாட்டுப்புறத்திலிருந்துவந்த ஒரு புத்திசாலி சென்னையில் டிராம்வண்டியோடுவதைப்பார்த்து மிக அதிசயப்பட்டு அது எப்படி ஓடுகிறதென்பதை விளக்கும்படி மிக வருந்திக் கேட்டார். நான் மின்சாரத்தின் உதவியால் ஓடுகிறதென்றும் மேலேபோகும் கம்பிவழியாக வரும் மின்



சார ஓட்டம் யானையின் துதிக்கைபோல் வண்டியின் மேற்றட்டிலிருந்து வளைந்துசென்று கம்பியை ஒட்டி உருவியோடும் சிறு சக்கரத்தின்வழியாக வண்டியிலிறங்கி அதன்கீழே வண்டியோடும் உருளைகளை ஒட்டி அமைந்திருக்கும் யந்திரத்திற்சென்று உருளைகளைச் சுற்ற, வண்டியோடுகின்றது என்றும் சொன்னேன். இது ஒன்றும்விளங்காதவராய் மின்சாரமாவது வண்டியோட்டவாவது என்று நம்பிக்கையற்றுப் பேசினார். மின்னலுக்குச் சக்தியிருக்கிறதென்று தெரியுமா? வானத்திலதோன்றும் மின்னல் நம் கண்ணைப் பறித்துக்கொண்டு போவதில்லையா? மரத்தில், அல்லது கட்டடம் கோபுரத்தில் விழுந்து தகர்த்துவிடுவதில்லையா என்று கேட்டேன். அதற்கு அவர் "ஆம் சரிதான். ஆனால் இந்தமின்சாரம் என்பது மின்னலைப் போல் இல்லையே. வண்டியில் தெரியும் மின்சார வெளிச்சம் மின்னல் வெளிச்சம்போலவா விருக்கிறது என்றார். இவருக்கு வாயாற்சொன்னால் விளங்காது என்று மின்சாரத்தின் மின்னலை முதலில் காட்டுகிறேன், அப்புறம் பேசலாமென்று சொல்லி வார்த்தையை நிறுத்திவிட்டு அவரை வீட்டிற்கழைத்து வந்தேன். அன்று சாயங்காலம் அவரை யழைத்துக்கொண்டு 'டிராம்வே' மூலைதிரும்பும் ஓரிடத்தில் கொண்டுபோய் நிறுத்திக்கொண்டு வண்டி வந்து இந்த மூலை திரும்பும்பொழுது மேலும்கீழும் கண்ணுக்கு மறைந்திருக்கிற மின்சாரம் மின்னலாகத் தோன்றும் பாருமென்று சொன்னேன். வண்டி வந்து திரும்பும்பொழுது மேலும் கீழும் உராசல் அதிகமாக உண்டாகப் பளிச், பளிச் என்று மேலே கம்பியிலும் கீழே வண்டியுருளை தண்டவாளத்தைத் தொடுமிடத்திலும் மின்னல் தோன்றியது. அதைப் பார்த்தவர் "மின்னலிருக்கிறதுஇப்பொழுது தெரிந்தையா. எப்படியோமின்னலைப்பிடித்து மேலேகம்பியிலும் கீழே சக்கரத்திலும் மாட்டிவிட்டான்; அது ஓடுகிறது. எல்லாந் தெரிந்துவிட்டது வாருங்கள்" என்றார். சற்றுமுன் ஒன்றுந் தெரியவில்லை யென்றீரே இப்பொழுது எல்லாந் தெரிந்துவிட்டது என்கிறீரே மின்னல் மின்சாரமாகவிருக்கிறது ஒன்று தெரிந்தால் மற்றதெல்லாம் தெரிந்தவிட்டதா? அது எப்படி?" என்றேன். "எப்படியோ மின்னலைப் பிடித்துவிட்டான். அப்புறம் அதைக்கொண்டு ஓடச்செய்வதில் என்னவிருக்கிறது. அது ஒரு சொப்படிவித்தை" என்றார் மின்சாரமென்பது மின்னலையொத்தது. மின்னல் அவர் கண்ணாற்கண்டது: மின்சாரத்தையும் கண்ணாற்கண்டாய்விட்டது. ஆகவே அவர் இனி அறிந்துகொள்ளவேண்டிய அதிசயம் அதிலொன்றுமில்லை! அவர்புத்திக்குப்பட்டது அவ்வளவுதான். இப்படி நுனிப்புல்மேய்ந்து எல்லாமறிந்துவிட்டதாகப் பாவிக்கும்புத்தி நம்மவர்க்கு அதிகமுண்டு. இதையடக்கி எதையும் ஆழ அறிந்து ஆராய்ந்து தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற புத்தியும் அதற்குவேண்டிய மனஉறுதியும் திடசித்தமும் உண்டாகப் பயிலவேண்டும், இப்பயிற்சி யுண்டாக எதையும் அரைகுறையாக அறிந்ததிலிருந்து எல்லாந்தெரிந்துவிட்டதாகப் பாவித்துத் திருப்தியடையும் சித்தம்கூடாது. எதையும் ஆய்ந்தோய்ந்து ஆழ்ந்துணரும் சக்தியும் அதற்குவேண்டிய சித்தமும் உண்டாகவேண்டும். இது உண்டானால் விர்த்திக்குமெத்த அநுகூலம் உண்டு. இக்குறை மிகவும் முக்கியமான குறையாக விருப்பதால் இதை நிவர்த்தித்துக்கொள்ள வேண்டியதின் அவசியத்தைக் குறித்து இவ்வளவு தூரம் வற்புருத்தியெழுதினோம். இனிநாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைக்குறித்துப் பேசுவோம்.

விளையாட்டுக்கருவிகள் வித்யாப்பியாசத்திற்கு மிகவும் இன்றியமையாதன. விளையாட்டுக்கருவிகள் உபயோகிக்காத குழந்தைகள், உலகவிஷயங்களைக் கிரகித்துக்கொள்வதில், அவை உபயோகிக்கும் குழந்தைகளைவிட மந்தமாகவே யிருக்கும்.

சித்திரவிசித்திரவேலைகளிற்சிறந்தவர்கள் விசேஷமாயுள்ள தேசத்தார் தங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டுக்கருவிகள், படங்கள் முதலியன யதேஷ்டமாகக் கொடுத்து வளர்ப்பவர்களா யிருக்கிறார்களென்பது பிரத்தியக்ஷாநுபவத்தி லறிந்தவிஷயம். சிறு குழந்தைகளுக்கு இவ்வுலகவிஷயங்கள் அவர்கள் புத்திக்கெட்டாத பெரியனவாகவிருக்கின்றன. ஆகையால் குழந்தையின் பச்சைப்பிராயத்துக்குத் தக்கபடி விளையாட்டுக் கருவிகளால் அவர்களுக்கு ஒரு சிறு உலகம் சிஷ்டித்துக் கொடுக்கவேண்டும். நல்ல ஆடையாபரணங்களணிந்த ஒரு ஸ்திரீயைக்கண்டால் சிறிதும் கவனியாதகுழந்தை சிறியபொம்மை அல்லதுமரப்பாய்ச்சிஜோடித்து வைத்திருப்பதைக்கண்டால் சந்தோஷம் பொங்கிக் குதூலகலப்படும். பச்சைப்பிராயமான குழந்தைகளின் அறியாத்தன்மைக்கும் உலகசம்பந்தமான பெரியகாரியங்களுக்கும் இடையே அதபாதாளமான இடைவெளியிருக்கிறது. இந்த இடைவெளியைத் தாண்டிச்செல்ல விளையாட்டுக்கருவிகள் குழந்தைகளுக்கு ஒரு பாலம்போல் உதவுகிறது. ஆகையால் குழந்தைகளுக்கு பொம்மைகளும், சொப்புகளும், மற்ற விளையாட்டுக் கருவிகளும், படங்களும் விளையாடக் கொடுக்கல்வேண்டும். விளையாடக் கொ

டுப்பதன்றி குழந்தைகளது விளையாட்டில் நாம் சிரத்தையுமெடுத்துக் கொள்ளல்வேண்டும். நம்மவர்கள் குழந்தைகள் என்னவோ விளையாடிவிட்டுப்போகின்றன. உபத்திரவம் செய்யாமலிருப்பதொன்றே போதும் என்று இருப்பது வழக்கம். அப்படியிருப்பது சுத்தப்பிசகு. குழந்தைகள் விளையாடும்பொழுது அவர்களுக்கு நூதனமான எண்ணங்களும் கருத்துக்களும், சரி, தப்பு என்கிற விவரங்களும் உண்டாகின்றன இவைகளையெல்லாம் நாம் கவனிக்காவிடில், குழந்தைகளின் மனதையறிந்து, மனோவிர்த்தியை ஒழுங்குபடுத்தும் மார்க்கத்தையிழந்துவிடுகிறோம். குழந்தைகள் பொம்மைவைத்து விளையாடுகையிலே நன்னடக்கை, சன்மார்க்கவழி இவைகளையறிந்துகொள்ளத் துவக்குகின்றனர். அப்பொழுது நாம் அவர்கள் விளையாட்டைக் கவனித்துக்கொண்டிருந்தால், அவர்கள் பிசகிப்போகும் தருணம் பார்த்து அவர்கள்மனதை நல்வழியில் திருப்பலாம். பொம்மை யல்லது மரப்பாவைவைத்து விளையாடும்பொழுது குழந்தைகளுக்கு, சரி, தப்பு விவரமும், நல்லதில் விருப்பும், கெட்டதில் வெறுப்பும், அனுதாபம், இரக்கம், ஆதரவுமுதலிய குணங்களும் நன்னடக்கையில் பற்றும் உண்டாகின்றன. குணங்களெல்லாம் அப்பொழுதுதான் முளைக்க ஆரம்பிக்கின்றன. குழந்தைகளுக்கு ஊகபுத்தி யதிகஜாஸ்தியாகையால் அவர்கள்முன் பெற்றோர் நடத்தை சிறிதும் வழுவற்றதாகவிருக்கவேண்டும். குழந்தைகளை அலக்ஷியமாக நடத்துவதும் அவர்களிடத்து அநுதாபமின்றிப்பேசுவதும் மகா கெட்டகுணங்கள். இந்த நடத்தைகளையெல்லாம் குழந்தைகள் அறிந்துகொண்டு அவைகளை நன்றாகப்பற்றிக்கொள்கின்றனர். குழந்தைகள் விவரம் தெரியாதவர்கள்தானேயென்று மூடமதிகளான பெற்றோர் உற்றோர், அவர்களிடத்து இல்லாத சாக்குப்போக்குகளெல்லாம் சொல்லி ஏமாற்றுகிறார்கள். பிறகு குழந்தைகள் தாங்கள் ஏமாற்றப்படுவதைக் கண்டுகொண்டு இவர்கள் சமாதானத்தில் நம்பிக்கையிழந்தவர்களாகக்காட்டினால், குழந்தையின் புத்திகூர்மையைப்பற்றிக் கொண்டாடிச் சந்தோஷப்படுகிறார்களேயன்றி, தாங்கள் தம் குழந்தைகளுக்குக் கெட்ட உதாரணங்காட்டி பொய், சூது, வினை, முதலிய கெட்ட குணங்களெல்லாம் முளைப்பதற்கு வித்தாயிருக்கிறார்களேயன்றி தங்கள் மூடத்தனத்தைப்பற்றி விசனக்கிறார்களில்லை. நமது குழந்தைகள் சிறுபிராயத்திலே பொய், புளுகு, சூது, வினை சொல்லத்தெரிந்தவர்களாயிருப்பதற்குக், காரணம் பெற்றோர்கள், விசேஷமாய் தாயார், அத்தை, பாட்டிமார்கள் குழந்தைகளிடம் பொய்சொல்லி அவர்களை ஏமாற்றிவரும் கெட்ட வழக்கத்தினாலேயே உண்டாகின்றது. மிகவும் சிறிய ஒரு குழந்தையினிடத்து ஏதாவது துர்க்குணங்கள் இருக்கக்கண்டால் அக்குழந்தையின், தாய், பாட்டி, அத்தை அல்லது அக்குழந்தையோடு அதிகமாகப்பழகும் வேறுயாரோ அவர்களிடத்து அத்துர்க்குணங்கள் இருக்கின்றனவென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். நமக்குள் தாய்மார்கள் பச்சைப்பாலன்கள் மனதில் நாம் மேற்காட்டியபடி பொய், சூது, வினை முதலிய கெட்ட வித்துக்களைத் தாங்களே விதைத்துவிட்டுப் பிந்தி அவ்வித்துக்கள் முளைத்துக்களைக்கும்பொழுது குழந்தைகள் கெட்டவர்களென்று அவர்களைக் கண்டிக்கிறார்கள். இதனால் அவர்கள் தங்கள் அறியாமையைக் காட்டுவதுமட்டுமன்றிப் “பண்டமொருபக்கம் பழியொருபக்கம்” என்கிற பழமொழிப்படி குற்றம் தங்களிடத்திலே யிருக்க, வீணாய்க் குழந்தைகளைப் பிடித்து ஹிம்சிக்கிறார்கள். குழந்தைகள் விளையாடும்பொழுது ஊகமாய்ப்பார்த்துக் கவனித்துக்கொண்டுவந்தால், வேண்டியபொழுது நாமும் அவர்களோடு கலந்துகொண்டு விளையாட்டு மூலமாகவே அவர்களிடத்துக்காணும், துர்க்குணங்களை ஆரம்பத்திலேயறிந்துகொண்டு அவை குழந்தைகள்மனதிற் பதியாதவண்ணம் எளிதில் அவைகளை மாற்றி, குழந்தைகளின் குணத்தை நல்லவழியில் திருப்பிவிடலாம். இப்படிச் செய்ய நம்மிடத்தில் நல்லகுணம் உண்மையிலிருக்கவேண்டும். ஒன்றில் நமக்கே பற்றின்றி யிருக்கையில் அதைக்குழந்தைகளுக்குப் போதிக்க யத்தனித்தால், நாம் கற்றுக்கொடுக்க யத்தனிப்பதைவிட, நாம் பாசாங்கு செய்வதையேகுழந்தைகள் எளிதாகக் கற்றுக்கொள்ளும். ஒரு தீக்குணம் படிந்தபின் நீக்கயத்தினப்பதைவிட அதுபடியாமற் காப்பது எப்போதும் எளிதாகையால், குழந்தைகளை வளர்க்கும்பொறுப்பு வாய்க்கப்பெற்றோர் அப்பொறுப்பைப் பிழையின்றி வகித்துச் சமாளித்து வருவதற்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டும். இதற்கு முதலாவது பெற்றோரிடத்துப் படிப்பும் புத்தியும் வேண்டும். இது இல்லாதவர்க்குப் பத்திரிகை வாயிலாகப் புத்திபோதிப்பது இயலாத காரியமாதலால் இந்த இரண்டு முக்கிய குணங்களும் இதை வாசிப்போரிடத்து இருக்கிறதாகப் பாவித்துக்கொண்டு, அவர்கள் தங்கள் கடமையைச் செலுத்துவதற்குதவியாகச் சில குறிப்புகளை யடுத்த முறை யித்தலைப்பெயரின்கீழேயெடுத்தெழுதுவோம்.

C. V. S.



# சிறுவர்க்கான பக்கம்

[ விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது. ]

## உத்தமகுணம் ஜாதி இனத்தைப் பொறுத்ததன்று.

### ஓர் உண்மையான கதை.

*வேம்பினிலையுட் கனியினும் வாழை தன் தீஞ்சுவை*
*யாதுந் திரியாதாம்;—ஆங்கே*
*இனந்தீதெனினும் இயல்புடையார் கேண்மை*
*மனந்தீதாம் பக்கம் அரிது*

வேப்பிலைக்குள்வைத்துப் பழுக்கவைத்தாலும் வாழைப்பழம் அதனால் தன் தீஞ்சுவை சிறிதும் மாறாது; அதுபோல உத்தமகுணமுள்ளவர் எவ்வினத்தாராயினும் உத்தமகுணத்தாலே விளங்குவர்.

“அமெரிக்கருக்கும் யேவிந்தியருக்கும் சில நாளைக்குமுன் நடந்த ஒரு சண்டையில் அமெரிக்க சேனாதிபதியின் இரண்டு பிள்ளைகள் எதிரிகளாகிய இந்தியருடைய கையில் சிறையானார்கள். அந்த இளஞ்சிறைகளை என்ன செய்யலாமென்று வெகு யோசனை நடந்தது. சில அமெரிக்கருக்குப் பழிவாங்கும் நிமித்தமாயும், மற்ற அமெரிக்கருக்கு ஒரு பயமுண்டாக்கும்படியாயும் அந்த இளஞ்சிறைகளை ஒரு மரத்தில் கட்டித் தொங்கவிட்டு அம்புகளை ஒவ்வொன்றாக அவர்கள்மேல் எய்து பிராணவதை செய்து கொன்றுவிடலாமென்று சிலர் யோசனைசொன்னார்கள். சிலர் எதிரிகளின் நல்ல நடக்கைக்கு அவர்களைப் பிணையாக வைத்துக்கொள்ளவேண்டும் என்றார்கள். ஆனால் அந்த இந்தியருக்குள் “வெண்மேகம்” என்று அருந்தங்கொள்ளும் பெயர்பெற்ற ஒரு வீரன், “அந்தச்சிறுவர்களை நானேபிடித்தேன்; அவர்களை என்னிடத்திலேயே ஒப்புவிக்கவேண்டும்” என்று சொல்ல, மற்ற இந்தியரும் அதற்கிசைந்து, அந்தச் சிறுவர்கள் அவன் வசத்திலேயே இருக்கவேண்டும் என்றும், உடனே அமெரிக்கருடைய சேனையை அப்புறப்படுத்தி இந்தியர் கேட்ட நிபந்தனைகளுக்கு இணங்காதபக்ஷத்தில் அவன் பிள்ளைகளிருவரும் கொலை செய்யப்படுவார்களென்று அவர்கள் தகப்பனுக்குச் சேதிசொல்லி அனுப்பவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். சேனைத்தலைவனுக்குத் தூதுபோன மனிதன் திரும்பிவரக் கொஞ்சகாலம் சென்றபடியால் அதுவரையில் வெண்மேகம் என்னும் வீரன் அந்தப் பிள்ளைகளைத் தன்னுடனேகூடியமட்டும் தயவாய் நடத்திவந்தான். இது மற்ற இந்தியத் தலைவர்களுக்கெல்லாம் இஷ்டமாய் இராமையால் அவர்கள் அந்தக் குழந்தைகளைக் கடுகடுத்துப் பார்த்துவந்தார்கள்.

இந்தச் சிறு பிள்ளைகளுக்குத் தாங்கள் நிர்ப்பந்தமான ஸ்திதியில் இருந்த சங்கதி தெரியாதிருந்தாலும், மூத்தவனான (Edger) எட்கர் என்பவன் மாத்திரம் இந்தியவீரர்களின் முகக்குறிகளைப்பார்த்துத் தங்களுடைய அபாயமான ஸ்திதியை ஒருவாறு ஊகித்தான். வெண்மேகத்துக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் பேசத்தெரியுமாதலால், அந்தப் பிள்ளைகளை எப்போதும் ஆயுதபாணிகளாய் இந்தியர் காத்துக்கொண்டிருந்தபோதிலும், அவர்களை அடிக்கடிவெளியே அழைத்துக்கொண்டுபோவான். ஒருநாள் அந்தத் தலைவன் அந்த ஊரிலுள்ள குதிரைகள் எல்லாவற்றிலும் அதிக வேகமுள்ளதென்று பேர்பெற்ற தன் குதிரைமேல் தானும் அந்தச் சிறுவர்களுமாக ஏறி அந்த இந்திய சேனைகளிருந்த கூடாரத்தைச்சுற்றிச் சவாரி செய்துக்கொண்டிருக்கையில் சிறுவர்களைப் பார்த்து, “குழந்தைகளே! இந்தக்குதிரையின்வேகத்தை நான் என்னவென்று சொல்லப்போகிறேன்; இதன்குணம் அதிகம் புகழத்தக்கது; மேலும் குறிப்பும் இதற்கு நன்றாய்த் தெரியும். இதன்

வேகத்தால் நான் எத்தனையோதரம் எதிரிகளிடத்தினின்றும் தப்பி உயிர்பிழைத்திருக்கிறேன்" என்று இவ்வாறு குதிரையின் குணங்களை அந்தப்பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொண்டிருக்கையில், கூடாரத்தில் ஒருவிதயானை சந்தடியும் குழப்பமும் உண்டாயிற்று. அதென்னவெனில், அமெரிக்க சேனைத்தலைவனுக்குத் தூதுபோயிருந்த மனுஷன் திரும்பிவந்ததனால் உண்டானது.

உடனே வெண்மேகம் மூத்தபிள்ளையைப் பார்த்து: "நீ குதிரைசவாரி பண்ணுவாயா?" என்ன, "எங்கள் தகப்பனார் கற்றுக்கொடுத்திருக்கிறார்" என்று அவன் மறுமொழி சொல்லவே, அவனைப்பார்த்து: "உங்கள் தகப்பனிடத்தில் போன மனுஷன் அவர் இந்தியர் சொன்ன நிபந்தனைகளைக் கேட்கமாட்டேனென்று சொன்னதாகத் திரும்பி வந்துவிட்டான். இனி உங்களுக்கு மீட்சியில்லை. இந்தியர்கள் உடனே உங்களைக் கொன்றுவிடுவார்கள். நான் உங்களைக் காப்பாற்றக்கூடுமாவென்று பார்ப்போம். அதோ சிறிதுதூரத்தில் இருக்கிறதே அந்தத்தோப்பு உனக்குத் தெரிகிறதா? அந்தத் தோப்பிலேதான் உங்கள் தகப்பனார் பாளயம் இறங்கி இருக்கிறார். நான் உங்களைக் கொஞ்சதூரம் குதிரைமேல் ஏற்றிக்கொண்டுபோய் உங்களைக் குதிரைமேல் விட்டுவிட்டு இறங்கிவிடுகிறேன். நீ உடனே குதிரையின் காதைப்பிடித்துக் கிள்ளினால் அது அதிக வேகமாய் ஓடும், அந்தத் தோப்பைநோக்கிக் குதிரையைச் செலுத்தினால் உன் தகப்பனாரிருப்பிடம் போய்ச் சேரலாம். ஆனால் கல்லடிக்குமாத்திரம் தப்பித்துக் கொள்ளவேண்டும்." என்றான். இவ்வண்ணம் வெண்மேகம் சொல்லக்கேட்ட மூத்தகுமாரன்: "உம்முடைய தயவேதயவு; நீர் எங்களை இப்படி விட்டுவிட்டால் இந்தியர் உம்முடைய உயிரை வாங்கமாட்டார்களா" என்ன, அதற்கு வெண்மேகம்: "நீங்கள் எனக்காகச் சிந்திக்கவேண்டாம், எனக்கு 40 வயதாயிற்று; நீங்களோ சிறுவர்கள். இரண்டுபேரைக் காப்பாற்ற ஒரு உயிர்போனால் மிகுந்ததல்லை. என்னுயிர் அவ்வளவு மேலானதல்ல" என்றான். இவ்வாறு வெண்மேகமும் சிறுவனும் பேசிக்கொண்டிருக்கையில் இந்திய போர்ச்சேவகர்களெல்லாம் அமெரிக்க சேனாதிபதியினிடமிருந்து சமாசாரம் கொண்டுவந்த மனுஷன்மேலேயே கியாபகமாய்ச் சிறுவர்களைக் கவனியாமல் இருந்தார்கள்.

இப்படி அவர்கள் அயர்ந்திருக்கிற தருணம் பார்த்து வெண்மேகம் குதிரையை விட்டுக் குதித்துப் பிள்ளைகளுக்குக் குதிரையை முடுக்கும்படிச் சமிக்கைபண்ணினான். மூத்தவனாகிய எட்கரின்நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டிருந்தாலும் அவன் உடனே குனிந்து குதிரையின் காதைப்பிடித்து நசுக்க, அது வாயுவேக மனோவேகமாய் ஓடி இந்தியர் என்னவென்று பார்த்து விழித்துக்கொள்வதற்கு முன்னே 100 கஜதூரம் போய்விட்டது. அப்போது அவர்கள், பின்னே தங்களைத் தூரத்திக்கொண்டுவருகிற சப்தத்தையும் 'விர் விர்" என்று தங்கள் சமீபத்தில் வந்து விழுகிற பாணங்களின் ஓசையையும் கேட்டுப்பயந்து, மூத்தவன் இளயவனைநோக்கி "லயொனெல்! கெட்டியாய்ப் பிடித்துக்கொள், பின்னே அவர்கள் வருகிறார்களா பார்" என்று சொல்லவே, "லயொனெல் ஆம் அவர்கள் வருகிறார்கள், ஒரு பெருங்கூட்டம் அவர்களைப் பின்தொடர்ந்து வருகிறது. வெண்மேகந்தான் அவர்களை நடத்திவருகிறான்" என்ன, அதற்கு எட்கர்: "வெண்மேகம் ஒருக்காலும் நம்மை எதிர்க்கவரமாட்டான், இன்னும் யாரோ பார்" என்றான்.

அச்சமயத்தில் இவர்களைச் சுற்றி அம்புகள் சாமாரியாய்ப் பொழிய எட்கர்தானே திரும்பிப் பார்த்தபொழுது தம்பிசொன்னது சரியென்று காணப்பட்டது. இவர்களைத் தொடர்ந்து வந்தவர்களுக்குள் வெண்மேகம் அதிக சமீபத்துக்கு வந்துவிட்டான். அவன் சேணமில்லாத ஒரு



குதிரைமேல் சவாரிசெய்து இந்தச் சிறுவர்களைக்கிட்டி இந்தியபாஷையில் பிள்ளைகளுக்குத் தெரியாமல் ஏதோ சிலவார்த்தைகள் சொல்லிக் கத்தினான். இப்படிப் பேசினது தன் எஜமானன் ஆபத்துக்காலத்தில் காட்டுங்குறி என்று அறிந்த அந்தக்குதிரை, இதுவரைக்கும் காற்றாய்ப் பறந்தால் இப்போது மின்னலைப் போல் பாய்ந்தது. இப்படிச் சென்ற குதிரையின் வேகத்தால் பின்னேவருகிறவர்கள் இன்னார் என்று காணக்கூடாதபடி அவர்கள் அதிக தூரம் போய்விட்டார்கள். சிறிதுநேரத்தில் அவர்கள் அம்புகளுக்குத் தப்பி க்ஷேமமாய்த் தோப்பை அடைந்து, அங்கிருந்து ஒரு மலையிறக்கத்தில் அடித்திருந்த தங்கள் தகப்பனுருடைய கூடாரத்தை அன்றுசாயந்திரம் போய்ச் சேர்ந்தார்கள். இதுவரையில் பிள்ளைகள் இறந்துபோனதாக எண்ணியிருந்த தகப்பன் இவர்களைக்கண்டு கட்டித் தழுவிக்கொண்டு இப்படித் தன் குழந்தைகளைக் காப்பாற்றின இந்தியனை வாழ்த்தித் தன்னால் கூடுமானால் வெண்மேகத்துக்குத்தக்க பிரதியுபகாரம் செய்வதாகத் தீர்மானித்தான்.

ஆனால் அந்த இந்தியத்தலைவன் அப்படிக் கொத்த வெகுமானம் பெறும்வரையில் உயிரோடிருக்கவில்லை. எப்படியென்றால் அப்பிள்ளைகளைத் தொடர்ந்துபோன இந்தியன் ஒருவன், வெண்மேகம் குதிரையுடன் பேசின வார்த்தைகளின் கருத்தை அறிந்து அந்தப்பிள்ளைகள் தப்பித்துக்கொண்டுபோனதற்கு இவன்தான் காரணமென்று கண்டு, அதிக கோபங்கொண்டு கையில் இருந்த அம்பை வெண்மேகத்தின்மேல் எறிய, அது அவன் மார்பில் பொத்திக்கொண்டு உருகிப்போக, வீரன் குதிரையில் இருந்து விழுந்து மடிந்தான், இப்படி அவன் குரூரமாய்க் கொலை செய்யப்படவே, உபகாரியாகிய அந்தத் தலைவனுக்கு ஒன்றும் பிரதியுபகாரம் செய்ய இடமில்லாமற் போயிற்றே என்று அமெரிக்க சேனாதிபதி விசனப்பட்டு, வெண்மேகம் விழுந்து மரித்த இடத்தில் ஒரு கோரிகட்டி அதன்மேல் "சிநேகிதனுக்காக உயிரைக் கொடுப்பதிலும் பேருதவி வேறொன்றுமில்லை" என்கிற வாக்கியத்தை எல்லாரும் பார்த்துப் புகழும்படிச் செதுக்கிவைத்தான்."

Opinions on the V. C. Series of Publication.

(Mrs. Brander, Inspectress of Girls' Schools, N.& C. Circles.)

"Sir,—The presentation copy of the Life of H. M. the Queen Empress reached me this morning and I thank you for giving it to me."

I have looked through it and found the matter interesting and the language pleasant and not too difficult. It should be read with interest, especially by Indian women and girls and I hope that it will find its way into many Tamil households, Schools and Libraries. The appendix with its information regarding the Government of India and the India Office, should do much to spread in India, even among those who do not know English, a knowledge of the manner in which India is governed." 16-5-1898.

(Miss. Manning, Secretary, National Indian Association.)

"I am much obliged to you for the Life of Her Majesty Queen Victoria. I am glad to say that Dr. Pope has sent me a notice of it for the July No. of the Indian Magazine and Review. He praises your book very highly. I hope it will have a good circulation. . . . It was a good idea to have a life of the Queen, with illustrations. . . .

These reprints must be of great service as prize books.

With kind regards and every good wishes for the success of your valuable efforts,

10-6-1898. Believe me, yours sincerely,
(Sd.) E. A. Manning.

( H. O. D. Harding, Esq., I. C. S.)

"Very many thanks for the book you so kindly sent me. I congratulate you on its production and also on its get up which is very nice. . . . . I trust success will always attend your efforts to improve the modern literature of your country." 26-5-93.

(Professor M. Seshaghiri Sastriar, M.A., Member of the Text-Book Committee and of the Dravidian Board of Studies.)

Sir, Many thanks to you for the books which you sent to me. The life of Buddha is a very excellent Tamil work, and is fit to be used in all Schools as prose texts. The language is very good and chaste and is a model that can be imitated by graduates and under-graduates. The book is highly suitable for the third, fourth and fifth forms. It is full of morals which the Hindu parents would try to have well impressed in the minds of their sons and daughters from the very childhood. In the whole Indian literature except the very well-known hero of the Ramayana, there is not a single character whose life is perfectly immaculate and moral as that of Buddha. The spotless and exemplary life of Buddha has found its way to remotest corners of the world and has secured a large number of admirers among all nations. I therefore very gladly recommend that the book may be used in all schools and kept in the libraries of all Tamil institutions.

The story of Colbert, the French Prime-minister, who rose to his eminent position from the condition of a draper, the tale of the Fairy Tell-True and the life of Sivaji are as good as the preceding. They are small works and cannot be separately used as text-books; but all of them taken together* contain matters sufficient to be studied in each class (third, fourth and fifth forms). Our young boys should always study the histories of such great men as Colbert, Howard and the like, who excel in the qualities of the head or the heart or both.

I remain,
Yours most sincerely,
(*Sd.*) M. SESHAGHAGHIRI SASTRI.

* Published in a Combined form under the title of *Viveka Manjary*, Vol. 1.

---

(From the Rev. J. Lazarus, Member of the Text-Book Committee.)

Danish Mission, Vepery, July 27, 1898.

Dear Sir,

I have read through the Story of Buddha and some portions of the Queen's Life (which you subsequently sent me). The Story of Colbert I read last year in connection with the Text-Book Committee.

I am of opinion that the books are written in an excellent, idiomatic and attractive style. They are admirably fitted to be read in Schools of the Upper Secondary Grade as *additional readers*. The pupils will profit very much by their perusal.

---

(Rao Bahadaur C. W. Tamotharam Pillay Avl., B.A., B.L., Member of the Dravidian Board of Studies).

I read with great pleasure the series of books published by the enterprising Editor of "The Viveka Chintamani" noted in the *margin, from his monthly Magazine, thoroughly revised to adopt them for Schools and Libraries. I fully hope these books will be accepted by the Text-Book Committee and prescribed as Text Books. The style of the language in which they are written and the morals they inculcate are such as to fit them not only for Schools but also for popular home reading. The approval of the Rev. G. U. Pope, M.A., D.D., carries an authority by itself, as he is an excellent Tamil Scholar well-known throughout Europe.

* Life of H. M. the Queen Empress.
Life of Buddha.
The Viveka Manjari.
The Fatal Rumour.

MADRAS, 11th July 1898.

## VERNACULAR STUDIES IN MADRAS.

Being reprint of a series of 4 articles originally contributed to the "MADRAS MAIL" by C. V. Swaminatha Aiyar, with an Introduction by Henry K. Beauchamp, Editor of the MADRAS MAIL. Demy. 8 vo. 32 pp. Price 4 As. Postage Extra.

---

## THE ENCOURAGEMENT OF VERNACULARS.

A paper contributed to the "Madras Review" by C. V. Swaminatha Aiyar. Royal 8 vo. ... pp. Price 3 As. Postage Extra.

To be had of,
The Diffusion of Knowledge Agency,
*Triplicane, Madras.*

---

## THE VIVEKA CHINTAMANI SERIES.

**Printed in large type on good paper in a Handy Form.**
**Neatly got up and Tastefully bound.**
*16 mo. Full cloth, Gilt Back, Ornamental Sides.*
Also a Special Edition, Extra gilt, suitable for prizes, &c.

**Life of H. M. Queen Victoria, Empress of India**: with 27 Illustrations and an Appendix describing the constitution of the Government of India and of the India Office, London. 293 pp. Rs. 1-4. By V.P.P. Rs. 1-8. Special edition, extra gilt, Rs. 1-6. By V. P. P. Rs. 1-10.

**The Story of the Life of Buddha**, Describing the Great Renunciation, (MAHABHINISHKRAMANA) as depicted by Sir Edwin Arnold in his Light of Asia. 14 As. By Post Re. 1, or By V. P. P. 1-2. Special edition, extra gilt, Rupee 1. By V. P. P. Rs. 1-4.

**The Viveka Manjari**: A Tamil Miscellany of Instructive and Entertaining Tracts, Vol. 1, containing (1) The Story of Colbert, (2) Fairy Tell-True, (A TALE) & (3) Life of Sivaji. Handsomely Bound in Full Cloth, Gilt Back, Ornamental sides, 14 As. By V.P.P. Rs. 1-2. Special edition, extra gilt, Re. 1. By V. P. P. Rs. 1-4.

Or Separately in full cloth, without gilt letters, as follows:—

1. *Story of Colbert*; The Draper's Apprentice, who became prime-minister. 5 As. By V. P. P. 8 As.
2. *Fairy Tell-True*: 5 As. By V. P. P. 8 As.
3. *Life of Sivaji*: 6 As. By V. P. P. 9 As.

**Kamalambal or the Fatal Rumour**: A Novel in Tamil of absorbing interest. 480 pp. 16 mo. Price Rs. 1-8. Postage 3 As. By V. P. P. Rs. ... Special edition, extra gilt, Rs. 1-12-0. Postage extra.

**Vivekarasattalattu** (A LULLABY), 6 pies. Postage 6 pies.

*Apply to*: **C. V. Swaminatha Aiyar,**
*Secretary, D. K. Agency,*
*Triplicane, Madras.*

Prices quoted are net. Orders unaccompanied by remittance will be executed by V. P. P.


லேசான காகிதப்பதிப்பு. தனிப்பிரதி. 5½ அணா,, பழையபிரதி. 6 ,,

சந்தாவின் விவரம். ஒரு வருஷத்துக்கு ரூ. 4. 6-மாதத்துக்கு ரூ. 2-2.

# விவேக சிந்தாமணி

KNOWLEDGE IS POWER
DIFFUSION OF KNOWLEDGE AGENCY
VIVEKA CHINTAMANI

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing seperately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம். 7.] 1898வரு டிசம்பர்மீ [இலக்கம். 8.


## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d NET PER ANNUM

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY Rs. 4; HALF-YEARLY Rs. 2-2. SINGLE COPY, CURRENT No. 5½ As. BACK Nos. 6 As. EACH. ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d NET PER ANNUM.

**If Strictly Prepaid** at the commencement of the term, (i. e., in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions Entered to begin with only April or May of each year Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V.P.P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தனமான காகிதப்பதிப்பு:— அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள். புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ஒரு வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்ரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

ஒரு வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்ரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V.P.P. மூலமாக வசூல்செய்யப்படும்

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## READINGS AT HOME.

### A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.

2-ம் நாள் படிப்பு.

மறுநாட்பகலில்போஜனம்முடிந்துகிருககிர்த்திய காரியங்களெல்லாம் ஆனபின்பு, தாழ்வாரத்தில் எல்லாருமாய் உட்கார்ந்து தாம்பூலம் போட்டுக்கொண்டிளைப்பாற இருக்கையில், சிவகாமி புஸ்தகத்தை எடுத்துக்கொண்டுவந்து,

"அம்மா, இன்றைக்கு நான்தான் வாசிப்பேன்; நேற்றைத்தினம் சுப்பு வாசித்தாய்விட்டதல்லவா" என்றாள்.

சுப்ப.—வாசித்தாகவாவது! சுக்லாம்பரதரம் குட்டினது முதல் உன் பிரசங்கமாய்ப்போய் விட்டதே! புஸ்தகத்தில் இரண்டுபக்கம் கூட முழுதும் படிக்கவில்லையே. எனக்கென்ன, வேண்டுமானால் நீயேவாசி. அப்படியாவது உன்வாய் அடங்கியிருக்கட்டும்.

தாயார்.—சிவகாமி, நீயேவாசி. யார்வாசித்தால்தானென்ன? செவ்வையாக, கேட்போர்களுக்கும் தனக்கும் விளங்க நிறுத்தி வாசிக்கவேண்டும். விஷயங்களைக் கவனமாகக் கேட்கவேண்டும்

சுப்ப.—அம்மா, நானின்றைக்குச் சற்றே சிவகாமி உத்யோகத்தை வாங்கிக்கொள்ளுகிறேன். என்பிரசங்கம் எவ்வளவு நடக்கிறது பார்ப்போம்.

சிவகாமி.—என் உத்யோகம் முழுதும் உனக்குக் கொடுத்துவிடுவேனோ? எனக்கு மிஞ்சித்தான் உனக்கு.

தாயார்.—நல்லது, எடுத்துப்படி கணீர் என்று.

சிவகாமி(வாசிக்கிறாள்): இவ்வாறுதமயந்தியானவள் ப்ரௌடைப் பருவத்தையடைந்து, தனது தோழிமார்களோடும் கன்னிகாமாடத்தில் இருந்து ஆடல் பாடல்முதலிய விநோதங்களில் கருத்துக்கிசைந்தபடிக் காலம்போக்கி வருகையில், ஒரு நாள், மாலைப்பொழுதில், தாரகைக்கூட்டத்தின்மத்தியில்சந்திரன் தோன்றியதுபோலத் தனது உயிர்த்தோழிகளாகிய ஆயக்கூட்டம் சூழப்புறப்பட்டுத் தன்னரண்மனையைச் சார்ந்த உத்யானத்துக்குச் சென்று, அங்குச் சந்திரகாந்தக்கற்களாற் செய்தபாத்தியில் முளைத்தெழுந்த முல்லைக்கொடிகளின் மலர்களைப் பறிக்கலுற்றாள். அப்போது, நிஷததேசாதிபதியாகிய நளமகாராஜாவால் அனுப்பப்பட்ட, தெய்வத்தன்மையையுடைய ஓர்அன்னம், அவ்வரசனுக்குத் தமயந்தியை மணம்பேசி முடிக்கும்பொருட்டு அச்சோலையில்வந்து தமயந்திக்கு முன்னே இறங்கியது. உடனே, அவ்வன்னத்தின் பொன்மயமாகத் தகதகவென்று பிரகாசிக்கும் சிறகுகளையும், பவளம்போன்ற சிவந்தவாயையும், கால்களையும், அதன் அழகிய நடையையும், நிலையையும் தமயந்திகண்டு, முன்னாட் பொன்மயமான மாய மானைக்கண்டு மயங்கிய சீதாபிராட்டியைப் போல, ஊழ்வலிசெலுத்த அதனிடத் தாசைகொண்டவளாய் அதனைப்பிடிக்க வெண்ணித் தன்மணிப்பூண்கள் அசைந்தொலியாமல் அடக்கி மெல்ல மெல்லத் தொடர்ந்தனள். அன்னமும், அவள்கையில் அகப்படுவதுபோலப் பாவனைகாட்டி மெல்ல மெல்ல நடந்தது. அதைப்பார்த்து ஆயங்கள் அவளுடைய பேதமைக்குக் கைகொட்டி ஹேஹேயென்று நகைத்து, "ஆகாயத்தில் பறந்துதிரியும் அன்னபக்ஷி உன்கையில் அகப்படுமோ? நீ அதைத் தொடர்வது என்ன புத்தியீனம்"! என்று பரிஹாசம் செய்தனர். தமயந்தி அவர்களைநோக்கிக் கோபங்கொண்டு "நீங்கள் எனக்கதைப் பிடித்துத் தாராவிடினும் கைகொட்டி நகைத்து



ஓட்டிவிடுவதோ செய்யும் உபகாரம்? இதுவோ உங்களன்பு? நன்று நன்று! நீங்கள் இனி என்னோடும் வரவேண்டுவதில்லை. நில்லுங்கள் நில்லுங்கள்" என்று நிறுத்திவிட்டுத் தான் ஒருவளாகவே அதனைத் தொடர்ந்து சென்றாள். அன்னமும் அவள்கையில் இதோ பிடிபட்டது என்று கருதும்படி மெல்ல மெல்லச் சென்று அச்சோலையின் ஒருபுறத்தே நிறையத்தழைந்து பூத்த ஓர் மாதவிமரத்தைச்சார்ந்து, "இதுதான் நாம் இவளுடன் சம்பாஷித்தற்கேற்ற ஏகாந்தமானவிடம்," என்று மதித்துத் தமயந்தியை நோக்கித் தேன்பொழிந்ததுபோலச் சில வார்த்தைகளைச்சொல்லத் தொடங்கியது. "ஓ பெண்ணமுதமே, என்னைப்பிடித்தல் உன்னால் ஆவதோ? நான் கேவலம் இப்பூவுலகத்துப் பக்ஷி யல்லேன். சத்தியலோகத்தில் பிரமதேவருக்கு வாகனமாகிய அவ்வன்னத்தின் பந்துவர்க்கத்தைச்சேர்ந்துளேன். அங்கு பிரமதேவரது .மானதவாவியிலேயுள்ள பொன்மயமான தாமரை வளையங்களைத்தின்று தின்று எங்கள் தேகமெல்லாம் பொன்னொளி பெற்றது. நாங்கள் எங்கும் செல்லவல்லேம். எங்களுக்கொருவராலும் திங்குநேரிடற்பாலதன்று." யான் இங்கு வருவதற்குக்காரணம் யாதென்று கேட்பாயாகில் அதுவும்சொல்லுகிறேன். என்றுதன் வரலாற்றைச் சொல்லத் தொடங்கியது.

சிவகாமி.—அம்மா, ஒரு கேள்வி. அன்னமென்பது ஒருவித பக்ஷிதானே.—

அப்போது எதிர்த்த வீட்டுக் கைலாசத் தாத்தாவா, வந்தவர்,

ஆமடி ஆமாம்; அன்னமென்பது பக்ஷிதான் உனக்குத் தெரியாதோ அது? என்றார்.

தாயார்.—வாரும் தாத்தா.—(சுப்புவைப்பார்த்து—தாத்தாவுக்கு ஒரு பலகையெடுத்துப் போடடி)—உட்காரும். நேற்றெங்கே காணவே காணோம்.

கைலா.—நேற்றுக்கொஞ்சம் காரியமாய் ஜம்புகேச்வரம்வரையில் போயிருந்தேன். இப்போதுதான் வந்து பூஜை பண்ணி சாப்பிட்டு வெளியில்வந்தேன். ஏதென்ன காலக்ஷேபம் நளமஹாராஜா கதையோ. நிரம்ப நன்றாயிருக்கும். வாசியம்மா சிவகாமி.

சிவ.—தாத்தா ஒருசந்தேகம் தெரிந்துகொண்டு மேலே வாசிக்கிறேன். சமயத்துக்குத் தாத்தா கூட வந்தீரே. பக்ஷி எங்கேயாவது மனுஷியாளைப்போல பேசுமா? 'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை' யென்று, கிளியானாலும் ஒருவேளை இரண்டு வார்த்தை சொன்னாலும் சொல்லும்; அன்னம் பேசுமென்று கதையிலேயும் கேட்டதில்லையே! அது நளனுக்கும் தமயந்திக்கும் மணம் பேசவாவது! முடிக்கவாவது! இதெல்லாம் நரிக்கதை புலிக்கதை போலக் கட்டுக்கதையாத் தோன்றுகின்றதே. இதற்கென்ன சமாதானம்?

தாத்தா.—நல்ல கேள்வி கேட்டாய்! இதெல்லாம் நேற்றை சமாசாரம் இன்றை சமாசாரம்என்று எண்ணிக்கொண்டிருக்கிறாயோ; கிருதயுகத்து சமாசாரம் அல்லவோ? அந்தநாளில் பக்ஷி மிருகங்களெல்லாம் மனுஷியர்களைப்போலப்பேசுவதும் பிரவர்த்திப்பதும் வழக்கம்தான். ஸ்ரீமத்ராமாயணத்தில், சுக்ரீவாதி வானரங்களெல்லாம் ஸ்ரீராமசந்த்ரஸ்வாமிக்கு ராக்ஷச நிக்ரகத்தின்பொருட்டுத் துணைசெய்தது அறியாயோ? ஹனுமார் நவவியாகரணமும் படித்த மகாபண்டிதர் என்பதும் தெரியாதோ? வரவரக்கலி முற்ற முற்ற எல்லாம் பொய்யாய்போயிற்று. தெய்வம்கூட கல்லாய் போய்விட்டது. சொல்லேன் ருக்மணி.

தாயார்.—நீர் சொல்வதெல்லாம் வாஸ்தவம் தான் தாத்தா. ஆனால் அதெல்லாம் இக்காலத்துப் பெண்களும் பிள்ளைகளும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவர்களுக்குத் திருப்தியாகும்படி நாம் ஏதாவது நியாயம்காட்ட வேண்டியதுதான்.

தாத்தா.— ஆனால் உன்சமாதானமென்ன கேட்போம்; நீ எப்படியும் படித்தவள். யுக்தி புத்திகளில் வல்லவள். 'சண்டிக்கு மொண்டி சாமுண்டி' என்று இவர்கள் வாயை அடக்க நீதான் தகுந்தவள்.

தாயார்.—அன்னத்தின் தூதைப்பற்றின விருத்தாந்தங்களுக்கு நாம் வாசகார்த்தம்[1] செய்துகொள்ளக்கூடாது. ரூபகார்த்தம்[2] செய்துகொள்ளல் வேண்டுமென்று தோன்றுகின்றது, ஏனெனில், ஏகச்சக்கிராதிபதியாய் நவகண்டங்களையும் ஒரு குடைக்கீழாண்டுவந்த நளமஹா சக்கிரவர்த்திக்கும் அவனுயிர்த் துணைவியாகிய தமயந்திக்கும் மணம்பேசி பொருத்த வேறொருவரும் இல்லாமற் போய்விட்டார்களா? அன்னப்பக்ஷிதானா அகப்பட்டது? அதுதான் ஒரு வேளை கிளிப்பிள்ளைபோலப் பேசுமாயினும் இரண்டொரு வார்த்தைகள் கற்பித்தவற்றைச் சொல்வதேயன்றி, இவ்வன்னம் பேசியதுபோல அறிவும் மதியும்காட்டிப் பேசவல்லதாமோ? தெய்வீகம் என்ற ஒரு அம்சம் இருப்பினும், அது அவ்வளவு திருப்தியாகத் தோன்றவில்லை.

சிவகா—பின்னை என்னசமாதானம்?

தாயார்— இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கையில் எனக்கோர் சமாதானம் தோன்றுகின்றது. ஆனால், அதை ஆன்றோர் அங்கீகரிப்பார்களோ யாதோ அறியேன். ஆயினும் அதை இங்கேசொல்லத்தடையில்லை.

1. வாசகார்த்தம் - Literal interpretation.
2. ரூபகார்த்தம் - Allegorical interpretation.

இந்த அன்னப்பக்ஷியானது தன்வாலாற்றைச் சொல்லுங்காலத்தில், தான் சத்தியலோகத்தில் பிரமதேவரது மானசவாவியிற் றங்கியிருப்பதாகவும், தான், நளனை வலையும் செய்வதாக உபசாரமாச் சொன்னபோதிலும், அப்பிரமதேவரதேவலையே யன்றி வேறு இந்திரன் முதலானோருடைய ஏவலையும் செய்யாதென்றும், தான் சுவர்க்க மத்திய பாதாளமாகிய எவ்வுலகினும் தடையறச் செல்லவல்லதென்றும் தனக்கெவ்விதமான இடையூறும் வாக்கடவ தில்லையென்றும், தானொருகால் நளனுக்குரிய மணமகள் எவளென்று நான்முகக்கடவுளைக் கேட்க அதற்குத் தமயந்தியே யென்று அவர் விடைபகர்ந்ததாகவும், அவரவர்க்குரிய உயிர்த்துணைவர்களைக் கூட்டுவிப்பது விதியேயென்று விதியின் செயலைச் சிறப்பித்தும், தானென்றும் பொய்பேசி யறியாதென்றும், பொய்யென்பது ஒருநாளும் தன்னுவில் வாராதென்றும் இன்னம் பலவிதமாகக் கூறியுள்ள அப்பக்ஷியின் வரலாற்றை ஊகித்துப்பார்க்கையில் இங்கு அவ்விதாதாவின் கூட்டுவிக்கும் சக்தியாகிய விதியையே இவ்வாறு கவிகள் அன்னமாக உருவகப்படுத்திச் சொல்லியிருக்கின்றனர் என்று தோன்றும்.

சிவ—அதெப்படி இன்னம் சற்றே விவரமாகச் சொல்லவேண்டும்.

தாயார்—சொல்லுகிறேன் கேள். பிரமதேவரது மானதவாவியிற்றங்கியிருப்பதென்றதனால் விதியென்பது அவரவர்கள் கன்மங்கட்குத் தக்கபடி அவற்றின்பயனை அடைவிக்கும்பொருட்டுக் கடவுளால் நிச்சயிக்கப்பட்டு அவர் மனத்தினிடத்தே தோன்றுவதென்றும், மற்ற லக்ஷணங்களால், அவ்விதி காலதேசாவஸ்தைகளின் கட்டுப்பாட்டுக் குட்படாமல் எங்கும் எவர்விஷயத்திலும் செல்லவல்ல தென்றும், அவ்விதியைத் தடுத்தற்கும் மாற்றற்கும்வல்லார் ஒருவருமில்லையென்றும், அவ்விதி ஒருநாளும் பொய்க்காதென்றும் இன்னம் விதியின் இலக்கணங்களெல்லாம் ஒருவாறு பெறப்படுதலினால் நளனையும் தமயந்தியையும் கூட்டுவித்து அவ்விருவரது பாஸ்பர சுகிருதத்தின் பயனை விளைந்த விதியே இவ்வன்னமன்றி வேறில்லையென்பது நன்றாகவிளங்கும். இக்கொள்கையை அநுசரித்தே, பின்பு, சுயம்வரகாலத்தில் தமயந்திக்கு அரசர்வரலாற்றை எடுத்துரைப்பார்யாவரென்று அவள் தந்தையாகிய வீமராஜன் கடவுளை வேண்டி இருந்தபொழுது, நான்முகக்கடவுள் தம் நாயகியாகிய சரஸ்வதி தேவியை அனுப்பி அங்கும் தம்விதியை நிறைவேற்றியதாகச் சொல்லியிருக்கின்றது. ஆதலால், அன்னம் என்பதை விதிரூபமென்றே சொல்லவேண்டும்.



கைலாசம்.—ருக்மணீ. உன் சமாதானம் நிரம்பச் சாதுரியமாயிருக்கின்றது. இதற்குமுன் நளமகாராஜா அன்னப்பட்சியைப் பிடித்தபோதுகூட—

"சூழ்வளியுடன் சுழல்சருகிற்றோன்றிய
ஊழ்வழிமனஞ்செல்லுண்மையன்றகொல்
தாழ்புலன் வழிமனஞ் சாரவோதிமம்
பாழியந்தோளினன் கையிற்பற்றினன்."

என்று விதிவழிப்பட்டதே மதியென்றதை வற்புறுத்தியதல்லாமல், தனக்கும் தமயந்திக்கும் மணம்பொருந்தும்படிவிதியே அவ்வன்னத்தை நளனைப் பிடிக்கச் செய்ததென்றும், அவ்விதி முகமாகவே அன்னம் அவன் கையில் வந்துற்றதென்றும் சொல்லியிருத்தலும் உன் நியாயத்துக்குச் சாதகமாகவே தோன்றுகின்றது.

சுப்ப.—அம்மா, நானொரு கேள்வி கேட்கிறேன். இதைத்தான் இப்படிச் சொல்லிவிட்டாய். தாத்தா சொல்லியபடி இராமாயணத்தில் வானரவீரர்கள் ஸ்ரீராமருக்குத் துணைசெய்ததாகச் சொல்லியிருக்கிறதே. அவ்விடத்திலும் இவ்வாறே யுக்தியுக்தமாகச் சமாதானம் சொல்லமுடியுமோ?

தாயார்.—ஆகா தடையென்ன? அவ்விடத்திலும் சுக்ரீவாதி வீரர்களை வானரங்களாகச் சொல்லியிருந்த போதிலும், பண்டிதர்கள் அவர்கள் கேவலம் வானரங்களல்லரென்றும், ஆரியர்களினும் பன்மடங்கு நாகரிகத்திலும் நடையுடை ஆசாரங்களினும் குறைந்த பூர்வஜனங்களே யன்றி வேறில்லை யென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்களுக்குள்ளே ஆராவது ஆயிரத்தில் ஒருவர் அநுமானைப்போல ஆரியர்களுடைய சம்பந்தத்தால் வேதசாஸ்திரங்களை யுணர்ந்து புண்ணியபாவப் பகுத்தறிவும் பகவத்பத்தியும் சதாசாரமும் பெற்றிருந்தார்களேயன்றி, மற்றத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதுபேர்களும் கேவலம் பாமரர்களாய் மிருகப்பிராயத்தில் தானே இருந்துவந்தார்கள் என்பது, இராமாயணத்தைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் விளங்கத்தக்கது. அவர்களுக்குள்ளே தேகவலியும் காமக்குரோதாதி தாமதகுணங்களுமே, மேலிட்டிருந்தன. உழுது பயிர்செய்து ஜீவனம்செய்ய அறியாமையேயன்றி தற்காலத்தில் உள்ள குறவர் மறவரைப்போலவும் வேட்டையாடிக் கூட ஜீவனம்செய்ய அறியாதவர்களாய் காய்கனி கிழங்குகளைத்தின்று ஆயுதப்பயிர்ச்சிகூட இல்லாதவராய் கையும் தடியும் கல்லும் கட்டியும் கொண்டு சண்டைசெய்துவந்தார்கள் என்றும் விளங்குமாதலின் அவர்களை ஆரியர் குரங்குகளாகச் சொன்னது ஒரு வியப்பாகுமோ? அவர்களுக்குள்ளே எவ்வகைப்பட்ட வரன்முறையும் நாகரிகமும் இல்லையென்பது, அவர்களில்

மிகச்சிறந்து அவர் குலத்துக்கெல்லாம் அரசனாயிருந்த வாலி என்பவன் தன் தம்பி சுக்ரீவன் மனைவியை அபகரித்துக் கொண்ட இவ்வொரு சங்கதியினாலே விசதமாகுமன்றோ? இந்விஷயமாய் இம்மட்டில் போதும், இனிமேலே கதையைக் கேட்போம்.

சிவ.—(வாசிக்கிறாள்): அன்னம் சொல்லுகின்றது. "கேளம்மா தமயந்தியே, நாங்கள் இப்பூவுலகத்தில் நிடததேசத்தை யாளுகின்ற நளமஹாராஜாவின் நாட்டில் உள்ள தாமரைவாவிகளைக் கண்டு களிக்கும் பொருட்டுவந்தவிடத்தில் அவ்வள்ளலது இராஜதானியாகிய மாவிந்தநகரத்தில் உள்ள மலர்த்தடங்களின் நல்லவளங்களைக்கண்டு அந்நளனையும் அவன் பெருமைகளையும் செவ்விதாகத்தெரிந்து கொண்டனம். அந்நளனது குணாதிசயங்களை என்னால் முழுதும் அளவிட்டுச் சொல்ல முடியாதாயினும் நானுணர்ந்தமட்டும் ஒருவாறு எடுத்துச் சொல்லுவன்கேள். அவ்வரசனது பேரழகுக்குக் காமவேளும் ஒப்பாக மாட்டானென்றால் மற்றவர்களைச் சொல்வானேன். அவன் முகத்துக் கொப்பாகப் பூரண சந்திரனையும் வகுக்கப் பெறுமையினாலன்றோ நான்முகக்கடவுள் அதனை மாதந்தோறும் சிதைத்துச் சிதைத்துப் புதிதாகச்செய்து கைவருந்துகின்றனர். அவனது மலைபோலும் உயர்ந்த தோள்களையும் அகன்ற மார்பையும் கமலதளம் போன்ற அருளொழுகும் அழகிய கண்களையும் ஆண்யானைபோலும் கம்பீரமான தோற்றத்தையும் சிங்கவேற்றைபொத்த தீரத்தையும் பார்த்த பெண்கள் பிறகு வேறொரு புருடனைக் கனவிலும் கருதுவார்களோ. அவனது பொறுமைக்கிணையாகப் புவிமாதையும் அப்புவியைத்தாங்கி நிற்கும் ஆதிசேடனையுமன்றி வேறு யாரைச் சொல்லுவது? ஒருபொழுது நாங்கள் வானுலகிற்சென்று இந்திரன் முன்பாக அந்நளன் பாடிய பாடலை எடுத்துச் சொல்ல, அவ்விந்திரன் தன் அவைக்களத்துள்ள வீணாகானத்தில் மிகவல்லவனாகிய கந்தருவனை நோக்கி, 'நீ இந்தப்பாடலைப் பாடவல்லாயா?" என்ன, அவன் பாவம்! முகம் விழ்ந்து தன்னாலாகாதென்றதனாலன்றோ அன்றுமுதல் அவனுக்கு 'ஆகா' என்று பெயரிடப்பட்டது. புஜபலபராக்ரமத்திலோ இந்நளனுக் கொப்பானவரில்லை. இவன் பகைவரைவென்று நவகண்டங்களையும் தனக்குச் சுவாதீனப்படுத்தி உலகுக்கெல்லாம் ஒப்பற்ற உயர்ந்த சக்கிரவர்த்தியாயிருக்கின்றான். தன்னுயிர்போல மன்னுயிர் யாவையும் காத்திரக்ஷிப்பவன். அருளுக் குறைவிடம், அறத்துக்குவேலி, கல்விப் பெருங்கடல், குணமகாமேரு. இன்னம் இந்நளனது பெருமையை முற்றும் எடுத்துக் கூறுதல் சிற்றறிவுடையேனாகிய எனக்குச் சாத்தியமாவதோ? ஏதோ தெரிந்தவரையில் சிறிது சொல்லினேன்." என்றி பின் அத்தமயந்தியின் உளக்குறிப்பை அறிய வேண்டிப் பேசாமல் மௌனமாயிருந்தது.

சிவ.— அம்மா இத்தமயந்தி நளமஹாராஜாவைப்பற்றி அன்னம் சொல்லுதற்குமுன்னே ஒருபோதும் கேட்டதில்லையோ?

சுப்ப — வம்புக்காரியிவள் இந்தக் கேள்வியெல்லாம் உனக்கென்னத்துக்கு. கதையையன்றோ அம்மா கேட்டுக்கொண்டு போக வேண்டும்.

தாத்தா.—சுப்பு என்ன அப்படிச் சொல்லுகிறாய். புராணங்களில் கூட குருசிஷ்ய சம்வாதங்களும் உத்தரப் பிரத்யுத்தரங்களும் விரிவாகக்காணப் படுகின்றனவே. கதையைமாத்திரம் வாசிப்பதானால் உன்னம்மாளெதற்கு நானெதற்கு சிவை



எதற்கு? நீமாத்திரம் ஒருமூலையில் இருந்துகொண்டு குசுகுசுவென்று படித்துவிடலாமே. கற்றலினும் கேட்டல் மிகவும் சிறந்ததென்று உனக்குத் தெரியாதோ?

'செல்வத்துட்செல்வம் செவிச்செல்வமச்செல்வம்
செல்வத்துளெல்லாந்தலை' என்றும்
'செவிக்குணவில்லாத போழ்துசிறிது
வயிற்றுக்குமீயப்படும்' என்றும்

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் கேள்வியின்பெருமையைப்பற்றி இன்னம் எவ்வளவு சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார். ஆதலால் அடிக்கடி கேள்வி போடுதல்வீண் காலக்ஷேபம் என்றெண்ணாதே. எனக்கு ருக்மணியைப்போல் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஆணியறைந்தாற்போல் தகுந்த விடைசொல்லத் தெரியாவிடினும் கேள்வி கேட்பதில் எனக்கும் இஷ்டம்தான்.

தாயார் —சுப்பு உனக்கு நான் இதற்குமுன்னமே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இப்போது தாத்தா சொன்ன வார்த்தைகளை முத்திரையாய் முடிந்துகொள். அம்மா சிவே நீ கேட்டகேள்விக்குப் பதில் சொல்லுகிறேன் கேள். தமயந்தி நளமகாராஜாவைப்பற்றிப் பல முறையும் கேட்டிருக்கிறாள். அவள் சில வேளைகளில் நளமகாராஜாவின் ஒப்பற்ற அழகின் வகைகளைக் கேட்டு அவன்மேல் ஆசைகொண்டு அல்லும்பகலும் அதுவே தியானமாகி ஊணுறக்கத்தையும் துறந்திருப்பாள். சிலவேளைகளில் அந்நளன் பெயரைக்கேட்கும் ஆசையினால்தன் பிதாவின் ஆஸ்தானமண்டபத்தில் வந்து, அங்கு வந்தியர்கள் உலகிலுள்ள அரசர்களெல்லோரினும் நளனையே மேலாகச் சிறப்பித்தலைக் கேட்டுப் புளகாங்கிதளாகி வருந்துவாள். சிலவேளைகளில், அவள் அவ்வந்தியனைக் கூப்பிட்டு, மன்மதன்போல அழகிற்சிறந்த புருடன் யாவன் நீங்கள் ஆராய்ந்து சொல்லுங்கள் என்று கேட்டு, அவர்கள் மற்ற அரசர்கள் ஒவ்வொருவருக்கும் ஓரோர் குற்றம்காட்டி ஒழித்துவிட்டு நளனையே யாவரினும் சிறந்தவன் என்று சொல்ல அவன்மேல் ஆசைபூண்டு வருந்துவாள். சிலவேளைகளில் சித்திரவேலையில் வல்லவனாகிய ஓர் சிற்பியை அழைத்து உருவின்மிக்க இராஜகுமாரனொருவனையும் அவனுக்கிணையான ராஜகன்னிகை ஒருவளையும் தீட்டுக பார்ப்போமென்ன, அவன் அவ்வாறே தீட்டிக்கொடுக்க அவ்வுருவங்கள் தானும் நளனுமாக விருக்கக் கண்டு மகிழ்ச்சியில் மூழ்குவாள். இவ்வாறே நளனும் தமயந்தியின் ரூபலாவண்யங்களைக் கேட்டு அவள்மேல் காதல் கொண்டவனாகி வருந்துவான். ஆதலால் அன்னம் தூதுசெல்லுமுன்னமே இருவரும் ஒருவரையொருவர் அறிந்து நேசித்துக் காதல்கொண் டிருந்தார்கள். கண்ணால்மாத்திரம் பிரத்தியக்ஷமாகக் கண்டதில்லை.

சிவகாமி.—ஆனால் இந்நளமகாராஜாவின் நிஷததேசமும் தமயந்தியின் விதர்ப்பதேசமும் ஒன்றுக்கொன்று சமீபந்தானோ?

தாயார்.—அக்காலத்து ராஜ்யங்களின் விஸ்தீரணம், எல்லை, இருப்பு முதலியவற்றைப் பற்றி விவரமான ஆதாரங்கள் இல்லை. சிலர் இப்போது பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த காண்டீஷ் மாகாணமே நளன் அரசுபுரிந்த நிடத நாடென்றும், சிலர் மத்திய இந்தியா அல்லது மாளவம் என்று வழங்குவதே அந்நாடென்றும் நிஜாம்ராஜ்யத்துக்கு வடக்கில் உள்ள பீரார் என்பதே பூர்வம் விதர்ப்பதேசமாயிருந்ததென்றும் கூறுதலால் இவையிரண்டும் ஒன்றுக்கொன்று சமீபமாயிருந்ததேயன்றி ஒன்றையொன்று அடுத்துத் தொடர்ந்ததாகவும் இருந்திருக்கலாம். தெக்காணத்தில் பீடர் நகரில் இன்றைக்கும் விழுந்து

பாழாய்ப் பரவியிருக்கும் உன்னதமான கோட்டையும் அரண்மனையும் விதர்ப்ப ராஜன் கோட்டையும் அரண்மனையுமே யென்று கூறுகின்றனர். நளன்ராஜதானி யிருந்த இடமானது இன்னதென்று குறிக்கப்படவில்லை, என்கின்றனர். ஆனால் நைஷதத்தில் நாட்டுப் படலத்தில் அந்நிடதநாட்டின் முக்கியமான நதி கங்காநதியென்றும் அந்நாட்டைச்சார்ந்த மலையும் இமயமலையேயென்றும் சொல்லப்பட்டிருத்தலால் இவ்விஷயத்திற் கொஞ்சம் சந்தேகமும் உண்டாகின்றது. இன்னது இன்னபடியென்று ஒன்றும் உறுதியாகத் துணிந்துசொல்லப்படவில்லை.

சிவ.—நவீன பண்டிதர்கள் சொல்லுகிறபடி நிஷதநாடு காண்டீஷ் அல்லது மாளவம் ஆயிருப்பின் கவி நர்மதாநதியையும் விந்தியபர்வதத்தையுமன்றோ நாட்டுப்படலத்தில் சிறப்பிக்க வேண்டியது. ஆனால் முற்காலத்துக் கவிகளுக்குப் பூகோள ககோள விஷயங்களில் தற்காலத்து ஸ்கூல்பிள்ளைகளுக்கிருந்த ஞானம் கூட இருந்ததில்லை. பூமியை ஆரோ ஒரு அசுரன் பாயாகச் சுருட்டிச் சென்றதாகவும், ஆதிசேஷன் என்னும் பாம்பு அதைத் தன் தலையில் தாங்கிநிற்பதாகவும் சூரிய சந்திரக்கிரகணங்கள் ராகுகேதுக்களாகிய பாம்புகள் அவற்றை விழுங்குதலால் உண்டாகின்றனவென்றும் பலவாறு தாறுமாறாய்ச் சொல்லுகின்றார்களல்லவா?

கைலாசம்.—சிவே, நீ பேசுவதைப் பார்த்தால் அக்கவிகளைவிட நீ நிரம்பத் தெரிந்தவளென்று அகம்பாவம் கொண்டவள்போலத் தோன்றுகிறதே.

'முற்றுமுணர்ந்தவரில்லை முழுவதூஉம்
கற்றனமென்றுகளியற்கச்—சிற்றுளியால்
கல்லும்தகரும் தகராதனங்குழாய்
கொல்லுலைக்கூடத்தினால்' என்றும்

'கற்றதுகைம்மண்ணளவுகல்லாதுலகளவென்
றுற்றகலைமடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந்தயங்கூற வேண்டாம்புலவீர்
எறும்புந்தன்கையாலெண்சாண்.' என்றும்

ஆன்றோர்கள் கூறியிருத்தலையுணராயோ. அவர்கள் ஏதோசில விஷயங்களைப் பிழையற அறியவில்லை யென்று அப்புலவர்களை ஏளனஞ்செய்கின்றாயே. இக்காலத்தவர் மாத்திரம் எல்லாம் அறிந்துவிட்டார்களோ? இவர்கள் கொள்கைகள் எல்லாம் பிழையின்றிச் சரியானவைதாமோ. முற்காலத்தவர்களுக்குத் தெரிந்த மந்திரம், வைத்யம், ஜோதிஷம் முதலான அநேக விஷயங்களில் இக்காலத்தவருக்குச் சிறிதும் பிரக்ஞையில்லாமல் அவ்வருமையான நூல்களெல்லாம் இளங்குழந்தை கையில் அகப்பட்ட மாணிக்கக்கிண்ணம் போலப் பயனற்றுப் போயினவன்றோ. பூர்வீகர்கள் சிற்சில விஷயங்களில் தேர்ச்சிகுறைந்தவர்களாயிருப்பினும் அநேக சங்கதிகள் நாமிப்போதறிந்திருப்பது அவர்கள் வருந்தித் தேடிவைத்த திரவியமேயன்றோ? என் ருக்மணி நான் சொல்வது நியாயந்தானோ?

தாயார்.—ஆமாம் தாத்தா, அவள்சொன்னதை ஒரு பொருளா எண்ண வேண்டாம். தெரியாத்தனம். அன்றியும், சிவே, இந்த விஷயத்தில் கவிக்கு அறியாமையைச் சுமத்துவதற்கென்ன நியாயமிருக்கிறது? நளன்நாடு மாளவமென்றோ அல்லது காண்டீஷ் என்றோ விசதமாக நிலைத்த பின்பல்லவோ நாம் கவியைத் தூஷிக்க வேண்டும். ஒருவேளை ஓரிடத்திலுள்ள மலையையும் மற்றோரிடத்துள்ள நதியையும் ஓரிடத்திலேயே பொருத்திச் சொல்லியிருந்தாலும் கவிக்கூற்றைத் தள்ளிவிடலாம். அப்படிக்கில்லையே. இமயமலையையும் கங்கைநதியையும் ஒருங்கே கூறியிருத்தலின் கவியின்கருத்தே அநேகமா



கச் சரியாயிருக்கலாமென்றும் நிடததேசம் கங்காதீரத்தில்தானே ஓர் இராச்சியமாயிருக்கலாமென்றும் தோன்றுகின்றது. ஆனால் பின்பு நளன் புஷ்கரனோடு சூதில் தோற்று நாடு நகரங்களையிழந்து கானகம்புகுந்து உயிரினும் சிறந்த மனைவியையும் பிரிந்து அயோத்திநகருக்கு வேற்றுருவமைந்துசென்றபோது மார்க்கத்தில் கடலைக்கண்டதாகச் சொல்லுகின்றனர். ஆதலால் நிடத நாட்டுக்கும் அயோத்தியாதேசத்துக்கும் நடுவே கடல் சார்ந்த நாடிருந்ததாகிறது. இது அந்நாட்டின் இருப்பிடத்தைப் பற்றி நாம் கொள்ளும் எவ்வகைக் கொள்கைக்கும் மாறுபடுவதாயிருக்கின்றது. இதைப்பற்றி இன்னம் ஆராய்ந்து சொல்லுகிறேன்.

கைலா.— சந்தியாகாலம் சமீபித்துவிட்டது. 'காணாமற் கோணாமற்கண்டு கொடு' என்று சொல்வதனாலே சூர்யாஸ்தமனத்துக்கு முன்னே சந்தியாவந்தனம் செய்யவேண்டும். போகிறேன்.

தாயார்.—சிவே நமக்கும் காரியங்களிருக்கின்றன. இத்துடன் நிறுத்திவிடு. பிழைத்திருந்தால் நாளைக்குப் பார்த்துக் கொள்வோம். சுப்பு எழுந்திரு. அடுப்பை மூட்டிச் சமையல்செய்வோம். அண்ணா வரலாயிற்று.

சிவகாமி—அன்னமும் தமயந்தியும், நாளைமத்தியானம் நம்முடைய காரியங்களெல்லாம் ஒழிந்துட்காரும் வரையில், பூஞ்சோலையில் மாதவி மரத்தின்கீழேயே யிருக்க வேண்டியதுதான். பாவம் அவளுக்குச் சாப்பாடுமில்லை தூக்கமுமில்லை.

(இன்னும் வரும்.)

எஸ். முத்துஐயர், பி. ஏ.

# பிரபஞ்சமாயாவிலாசம்.

## V.

## விவாகவிஷயம் : உற்றார் ஆலோசனை.

தீக்ஷிதர் தான்உத்தேசித்துவந்தகாரியத்தின் முடிவு தெரிந்துகொண்டு மறுநாளே புறப்பட்டுப் போகவேண்டுமென்ற அபிப்பிராயத்தைவெளியிட்டபடியால், சுந்தரமய்யர் அன்றிராத்திரியே அவருக்கு விருந்துசெய்யப்பிரயத்தனித்து அதற்கு வேண்டியன வெல்லாம்தயார்செய்து தனக்கு ஆப்தமான சில சிநேகிதர்களையும் பந்துக்களையும் விருந்திற்கு அழைத்தார். 8-மணிசுமாருக்குப் போஜனமுமாகிமுடிந்தவுடன் முன்கட்டிலுள்ள 'ஹாலுக்குள்'வந்து எல்லாரும் உட்கார்ந்தார்கள். அந்த அறைக்குள் பலவர்ணங்களாலும் நேர்த்தியான சித்திரங்கள் அமைந்த விலையுயர்ந்த ரத்நகம்பளம் விரித்திருந்தது. நிலைக்கண்ணாடிகளும் "ஓவியத் தொழிலில் உயர்ச்சிபெற்ற" ரவிவர்மா ராஜா வெகுரஸமாய்த் தீட்டிய லக்ஷ்மி, ஸரஸ்வதி, மேனகை-விசுவாமித்திரர், சீதை, தமயந்தி, மகாசுவேதா, கருடாரூடரான மகாவிஷ்ணு, விருஷபாரூடரான பரமசிவன், இன்னோரன்னவெகு காம்பீரியமானபடங்களும் நான்கு பக்கத்துச் சுவர்களையும் அலங்கரியாநிற்ப, அவைகளினிடையிடையே உடலில்லாப் போலிமான்கள் உயிரோடிருந்தாற்போலும் விளங்கிக்கொண்டிருந்தன. அவ்வறைக்கு ஊட்டிய யட்டுப்பால், 'ஊதுவத்தி' முதலியவைகளின் மனோரம்மியமானவாசனையானது வீதியினிருபக்கங்களிலும் செழித்துவளர்ந்திலங்கும் பனிநீர் சம்பங்கிப்புஷ்பங்களின் மகரந்தத்தைத்திருடிச் சுமந்துஉத்தமமான ராஜஸ்திரீயைப்போல அதிக உல்லாசமாய் உலவிக் களிக்கும் மந்தமாருதமானது தயவுடன் உதவிய வாசனையோடு கலந்து அள

விடற்கரிய ஆநந்தத்தை விளையாநிற்ப, வாத்தியப் பெட்டியினின்றும் மிக இனிமையாக எழுந்த கானமானது செவிக் கினிமையளித்தது. இவ்வைபவத்தின் மத்தியில் எல்லோரும் சந்தனம் பூசிப் புஷ்பம் முடித்துத் தாம்பூலம்போன்று சற்றுநேரம் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் தீக்ஷதர்மட்டும் அவர்களது சம்பாஷணையிற் கலக்கவில்லை. நளபாகமான சாகபாகங்களின் ருசியையும், இந்திரசபைபோன்ற அந்த ஹாலின், அமைப்பையும், விரிப்பின் சிறப்பையும் சித்திரங்களின் வனப்பையும், பலவித வாசனைகளின் சுகத்தையும், சங்கீதத்தின் மாதுரியத்தையும், தென்றலின் இனிமையையும், தனக்குச்செய்த உபசாரத்தையும் நினைத்து நினைத்து மதுவினையுண்டு மயங்கிய வண்டுபோல்பரவசமானார். ஆனாலிந்த நிலைமையானது நீடித்திருக்கவில்லை. கொஞ்சநேசகாலம்கிரமித்துத்தனக்கிருந்தஆநந்தத்தையெல்லாமிழந்து எப்படியாவது தனது புத்திரியை அந்தஇடத்தில் வாழ்க்கைப்படுத்த வேண்டுமென்றஎண்ணம் கொண்டவராகித் தீராக் கவலையுள்மூழ்கினார். இவரிவ்வாறிருக்க, மற்றவர்களெல்லாரும் பேசிஓயச், சற்றுநேரம் ‘ஈப்பாக்கு’* வைத்தாற்போலிருந்தது. இத்தருணத்தில் சுந்திரமய்யர் தனக்கெதிரிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தார். அவர் அவ்வாறு செய்ததின் அர்த்தத்தைத் தெரிந்துகொண்ட ராமாஜோஸ்யர் அய்யரை நோக்கி அடியில்வருமாறு மொழிந்தனர்.

ரா.—அய்யரவாள்! தீக்ஷதரவாளை முன்னிட்டு நாங்களெல்லோரும் திருப்தியாய் விருந்து சாப்பிட்டோம். அவாள் ஒரு காரியத்தை உத்தேசித்து வந்திருக்கிறார்கள் போலிருக்கிறதே!

சு.—ஆம் வந்திருக்கிறார்கள். அவர்களது வரவை உத்தேசித்துத்தானே நாமெல்லோரும் இப்பொழுது சந்தித்திருப்பது.

ரா.—அவர்கள்ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்கிறார்கள்போலும்.

இதைக்கேட்டுத் தீக்ஷதர் “வேறு யோசனை என்ன! ஒன்றுமில்லை. இங்கு நான் வந்ததே உங்களைப்போலொத்த சிநேகர்களை வைத்துக்கொண்டு அய்யாவர்களுடன் கலந்து ஒருமுடிவுதெரிந்துகொண்டுபோகத்தான்” என்றுசொல்லினர்.

ரா.—அய்யாவர்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை.

தீ.—ஆயினும் இருதிறத்தாருக்கும் ஆப்தமான சிநேகிதர்களுடைய சம்மதமும் இக்காரியங்களில் இருக்கவேண்டியது அத்யாவசியமாயிற்றே.

ரா.—அய்யாவாளது சம்மதந்தானே பிரதானம். அவர்களது யோசனையெவரும் ஆக்ஷேபிக்கும்படியாயிராது.

தீ.—நீடித்த காரியங்கள் பெற்றோர்மாத்திரமேயன்றி உற்றார் உறவினரது சம்மதத்தின்பேரிலும் செய்யவேண்டியதன்றோ!

ரா.—தாங்கள் சொல்வது சரியே. அய்யவாள் என்போலொத்தவர்களுடைய இஷ்டத்தைத் தெரிந்துக்கொள்ளாமல் ஒன்றும் பிரயத்தனம் செய்யார்கள் நாங்களும், அவர்கள் வாய்திறந்து கேட்குமட்டும் எங்கள் அபிப்பிராயத்தை வெளியிடாமல் இருக்கவும்மாட்டோம்.

தீ.—அப்படியானால் அவாள் அபிப்பிராயம் இன்னதென்று தெரிந்துகொள்ளுங்கள்.

ரா.—நாங்களின்னும் கலந்தோமில்லை. தாங்கள் வந்தது இன்று காலையில்தானே. வழக்கமாய் நாங்களிருவரும் சந்தித்துப்பல சங்கதிகளையும்பற்றிப் பேசுவது இராத்திரிகாலத்தில்தான் ஏற்படும் இதுவரையிலும் அவாளுக்கு மூச்சுவிடக்கூட அவகாசமேற்படவில்லை. (சுந்தரமய்யரைப் பார்த்து,) என்ன அய்யாவாள்! மௌனமாயிருக்கிறீர்களே!

சு.—நான் பேசினாலென்ன! நீங்கள் பேசினாலென்ன!

ரா.—நான் எதுவரைக்கும் பேசக்கூடுமோ அதுவரைக்கும் பேசியாய்விட்டது. ‘நாமிருவரும் இன்னும் கலக்கவில்லை’ என்று தீக்ஷதருக்குச் சொன்னேனே! அதைத் தாங்கள் கவனிக்கவில்லையோ?

சு.—அப்படியானால் நானே பேசுகிறேன். தீக்ஷதரவாள்! தாங்கள் உத்தேசித்துவந்த காரியமென்ன?

தீ.—என் பெண்ணைத் தங்களது புத்திரனுக்குக் கன்னிகாதானம் செய்யவேண்டுமென்ற உத்தேசம் நெடுநாளாக ஏற்பட்டிருக்கிறது. அதை முன்னிட்டுத்தான் வந்திருக்கிறேன்.

சு.—நிரம்ப சந்தோஷமாயிற்று. தங்களைப்போலொத்தவர்களுடைய கன்னிகை எங்களுக்குக் கிடைப்பது எவ்வளவோ அரிதாயிற்றே!

ரா.—அரிதென்றுமட்டும் சொல்கிறீர்களே. சர்வசிலாக்கியமென்றும் சொல்லக்கூடாதா?

சு.—நானும் அந்த அர்த்தத்திலேதான் சொன்னேன்.

ரா.—நானும் தங்களது அபிப்பிராயம் இன்னதென்று திறந்து காட்டினேனேயொழிய வேறில்லை.

சு.—சிலாக்கியமென்பதில் ஏதாவது ஆக்ஷேபனையுண்டா? பெண்ணைக்கொள்வதானால் முதலில் குலம் கோத்திரம் விசாரிப்பது வழக்கம். அவர்களது பரம்பரை நமக்கும் நமது பரம்பரை அவாளுக்கும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ரிஷிதுல்யமானகுலமாயிற்றே.

ரா.—அதற்கேதாவது சந்தேகமுண்டா?

சு.—பெண்ணிற்கு எத்தனை வயதாயிற்று?

தீ.—பத்தாவது வயது நடப்பு.

சு.—விவாகத்திற்கு தக்க காலந்தான்.

ரா.—அய்யரவாள்! பெண்ணைத் தாங்கள் பார்த்ததுண்டோ?

சு.—பார்த்ததில்லை.

ரா.—பையனுக்குத் தகுந்த பெண்தான். வெகு அழகாயிருப்பாள். வெறும் அழகு மட்டுமிருந்தால் நான் இவ்வளவு சிலாக்கியமாகச் சொல்லமாட்டேன். நல்லகுணவதி. அதிபுத்திசாலி. அதிவினயமுள்ளவள். எல்லாரிடத்தும் அதிக மரியாதையாயிருப்பாள். தங்களது அபிப்பிராயத்திற்கேற்க நன்றாய்ப் படித்திருக்கிறாள். சாரீரமோ கோகிலத்தொனிதான். மிக ரஸமாய்ப் பாடுவாள்.

இதைக் கேட்டவுடன் சுந்தரமய்யருக்கு உள்ளம் பூரித்தது. தான்கொண்ட அபிப்பிராயமுழுதும் மாறி, இந்தப்பெண்ணையே விவாகம்செய்துவிட வேண்டுமென்ற ஆவல் ஜனித்தது. ஆயினும் அந்த ஆவல்முதிர்ந்து பரு...

* ‘ஈப்பாக்கு’ என்பது குழந்தைகளது விளையாட்டு. இரண்டு குழந்தைகள் ஓரிடத்திலுட்கார்ந்து தலைக்கொரு பாக்கைக்கீழே வைத்துவிட்டுச் சத்தம் பண்ணாமல் அமரிக்கையாயிருப்பார்கள். யாருடைய பாக்கின்மேல் ஈயானது வந்து முதலில் உட்காருகிறதோ அந்தக்குழந்தைதான் ஜயிக்கிறாள். தனது தோழியினது பாக்கும் அவளுக்குச்சேரவேண்டியது. இவ்வாறாகப் பலமுறை விளையாடுதல் வழக்கம். கீழே வைத்த பாக்குமேயன்றி, ஜயித்தவளுக்கு எதிராளி இத்தனைபாக்கு அதிகமாகத்தருகிறது என்ற ஒப்பந்தம் செய்துகொள்கிறதுமுண்டு. பாக்கைக்கீழேவைத்துவிட்டு நிசப்தமாயிருந்தாலொழிய ஈ வந்துபாக்கின் மேலுட்காராது.

வில்லை, பையனது வித்தையை நினைக்கும்போது அந்த எண்ணமானது சூரியனைக்கண்டபனி போலகன்றது.

சு.—ஜோஸ்யரவாள்! நீங்கள் சொன்னால்போதும், நான் பார்க்கவேண்டுமென்பது அவசியமில்லை. மேலும் என் சம்சாரத்திற்குத் திருப்திதான். பல முறையும் பெண்ணினது அழகையும் குணத்தையும் பற்றி என்னிடத்தில் வர்ணித்திருக்கிறாள். ஆனால் பாட்டுப் பிரஸ்தாபமட்டும் வரவேயில்லை. அவள் அவ்வளவு சிலாகிப்பது வெகு துர்லபம். அவள் வாயினாலே நன்றாயிருக்கிறாள் என்று சொல்லவே மாட்டாள். எந்தப்பெண்வந்தாலும் ஏதாவது ஒருகுறை சொல்லாதிராள். 'வசிஷ்டர்வாக்கினாலே பிரமரிஷி' என்று வந்தது நமது நல்லகாலம்தான். ஆதலின் நான் பார்க்கவேண்டியதவசியமில்லை

ரா.—பெண்டுகளுக்குத்திருப்தியானால்எல்லோருக்கும் திருப்தி என்பதில் ஆக்ஷேபனையில்லை.

சு.—பெண்ணினது பாட்டும் படிப்பும் அழகும் குணமும் உத்தேசிக்கிறபொழுது, எத்தனையோபேர் தாமரையில் வண்டுவந்து விழுவதுபோலத் தேடிவந்து பெண்ணைக்கொள்வார்கள் என்பதிற் சந்தேகமில்லை, பெண்ணுக்கும் விவாகம் செய்ய வேண்டிய தருணம்தான்.

இதைக்கேட்டவுடன் தீக்ஷதர் ஜோஸ்யரைப் பார்த்தார். ஜோஸ்யர் தீக்ஷதருக்கும் ஆப்தமானவராகையால், அந்நோக்கின்கருத்தைத் தெரிந்துகொண்டு சுந்தரமய்யரைப்பார்த்து,

"அய்யரவாள்! என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள். நீங்கள் பேசுகிறதைப்பார்த்தால் அந்த உத்தேசம் உங்களுக்கில்லையென்று தோன்றுகிறதே" என்றார்.

சு.—பெண்ணினது யோக்யதையைப்பார்க்கும்பொழுது, வாங்கிக்கொள்வதில் சர்வசம்மதம்தான். ஆனால் பையனது ஸ்திதியை ஆராயுங்கால், யோசனையாயிருக்கிறது.

இதைக்கேட்டவுடன் தீக்ஷதருக்கிருந்த நம்பிக்கையெல்லாம் பறந்தோடிப்போக மனதில் அதைரியமும் விசனமும் உண்டாகிவிட்டன.

ரா.—அதென்ன முன்சொன்னதற்கும் இப்பொழுது சொல்கிறதற்கும் முற்றும்விரோதமாயிருக்கிறதே.

சு.—முன்னால் அப்படி என்ன சொன்னேன்! இந்தப்பெண் எவரும் வெகு ஆவலாய்க் கவர்ந்துகொள்ளத்தக்க பதார்த்தமென்றும் அவளுக்கு விவாகம்செய்யற்குரிய பருவம் வந்துவிட்டதென்றும் சொன்னதைத்தவிர வேறுண்டா? பையனுக்கு இப்பொழுது விவாகம் பண்ணுகிறபக்ஷத்தில் இந்தப் பெண்ணையே வாங்கிக்கொள்கிறேன் என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டதைத்தவிர வேறுண்டா?

ரா.—அவனுக்கு இப்பொழுது கலியாணம் பண்ணுவதில் என்ன ஆக்ஷேபனைவந்தது

சு.—அதைக் கேளுங்கள் சொல்கிறேன். பையனுக்கென்னவயது தெரியுமா?

ரா.—அது தெரிந்துதானிருக்கிறது.

சு.—இவ்வளவு பால்யத்தில் விவாகமென்னத்திற்கு? இன்னும் கொஞ்சம் வயதாகட்டுமே. அதற்குள்படிப்பும் உத்தேசித்தபடி முடிந்துவிடும்.

ரா.—இந்த வயது விவாகத்திற்குத்தக்க காலந்தானே.

சு.—உங்களுக்கு எத்தனை வயதில் விவாகம் செய்தார்கள்?

ரா.—25, 26, க்கு மேல்.



சு.—உங்களது தகப்பனாருக்கு?

ரா.—32, 33-க்கு மேலே.

சு.—எனது பெரியவாளுக்கெல்லாம் எத்தனை வயதில் நடந்தது தெரியுமா?

ரா.—இதை யெல்லாம் சொல்லுகிறீர்களே; உங்களுக்கு எப்போது நடந்தது?

சு.—என்னைத்தான் கெடுத்துவிட்டாரே என் தகப்பனார்.

ரா.—வெகு அநுகூலமாய்க் கெடுத்தார்.

சு.—அநுகூலமில்லை, பிரதிகூலமென்று சொல்லுங்கள்.

ரா.—நமக்கு அவ்வாறு செய்தால், நாமும் அப்படிச் செய்யவேண்டுமென்பது அவசியமா? அவர்கள் தெரியாமற் செய்திருக்கலாம்.

சு.—அவர்கள் தெரியாமற் செய்யவில்லை. நாம் தாம் தெரியாமற் செய்கிறோம்.

ரா.—அவர்கள் தெரிந்துசெய்ததைக் கொஞ்சம் விவரித்துச் சொல்லுங்கள்.

சு.—முதிர்ந்த மரத்தின் விதையெடுத்து நட்டால் அதினின்றுமுண்டாகிறமரம் அநேகவருஷம் உறுதியாய்ச் சீவித்திருக்கும். இளமர விதையானால் அவ்விதையினின்றும் உண்டாகிற மரம் சுவல்பகாலத்தில் பட்டுப்போகும். இதை ஒப்புக்கொள்கிறீர்களா?

ரா.—ஒப்புக்கொண்டேன்.

சு.—அதேமாதிரிதான் கல்யாணமும். நமது முன்னோர்களெல்லாரும் 25,26 வயதிற்கு மேற்பட்டு 30, 35 வயதுவரையில் கல்யாணம் செய்துகொண்டார்கள். சாந்தியாகிறவரையில் ஜிதேந்திரியராயிருப்பார்கள். கெட்டவிஷயத்தில் பிரவேசிப்பதேயில்லை. விடிந்தால் பழையது சாப்பிட்டுவிட்டு பகல் 20 - நாழிகைமட்டும் கடுமையான வேலைசெய்கிறதாக விருந்தது. வியாதி என்பதே கண்டறியார்கள். சரீரபலமோ பூராவாகவிருந்தது. தேகத்திலுள்ள இரத்தம் வீணாக விரயமாகாதிருந்தால் தேகசௌக்கியமும் திடமு முண்டாவதில் என்ன ஆக்ஷேபனை? அக்கிரமம்அநியாயத்திற்குப் போகாமல் நெற்றிவியர்வை நிலத்திற் சிந்த சரீரப் பிரயாசைப்பட்டுக் "காடிக்கஞ்சியானாலும்மூடிக்குடி"த்துக் கொண்டு நல்லவாள் என்னும் பெயரெடுத்து மரியாதையாய்க் காலந்தள்ளினார்கள். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளோ வெகு திடமாயிருந்தன. யாரும் 70, 80 வயதிற்குக் குறைந்து சாகிறதேயில்லை.

ரா.—இக்காலத்தாரும் 70, 80 வயசுவரைக்கும் இருக்கட்டுமே! அல்பாயுசாய் ஏன் போகிறார்கள்? லலாடலிபி அந்தமட்டும்தான் ஓடுகிறது.

சு.—நாமாச் செய்துகொள்ளுகிற காரியமேயொழிய வேறில்லை. தலையெழுத்து 70 - வயதானாலும் 40 - வயதாக்குறைத்துக் கொண்டுவிடுகிறோம்.

ரா.—தலைஎழுத்தைமாற்ற யாரால் முடியும்? அதை எழுதின பிரம்மாவினாலேகூடமுடியாதே!

சு.—காயானது பழுத்தால் சாரமாயிருக்கும். காயென்றுகூடச்சொல்வதுதகாது. பிஞ்சென்பதே பொருத்தமாகவிருக்கும். பக்குவகாலத்திற்கு முன்னமே பையன்கள் சிருங்கார லீலைகளைச் செய்யவேண்டியதாய் ஏற்படுகிறது. விரதம் கெட்டாலும் சுகமாவதுண்டா? அதுவு மில்லை. பையன்கள் பிஞ்சிற்பழுக்கிறார்கள். சரீரம் துர்ப்பலமடைய ஆயுசும் க்ஷீணித்துப்போ

கிறது. தேகத்தில்இரத்தம்குறையக்குறைய மூளைக்குப் பலமேற்படுகிறதில்லை. ஆதலின் புத்தியும் விர்த்தியாகாமல் கட்டைபாய்த்துப்போகிறது. பையனைப் பார்த்தாலோ என்ன தேஜஸு! குழிந்த கண்ணும் ஒட்டிய கன்னமுமாய்த் தேவாங்கு * போல் ஆய்விடுகிறான். அவர்கள் திடமெங்கே! இவர்கள் திடமெங்கே!

ரா.—திடமெப்படி ஐயா வரும்? மூன்று வயதிலேயே ஜயிலில்' போட்டாற்போலபள்ளிக்'கூடத்தில் போட்டுவிடுகிறீர்கள். புதிய சங்கதிகளைக் கிரகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இராத்திரியும் பகலும்மூச்சுவிடாமற் படிக்கிறார்கள். 15 - வயதில் பி. ஏ. 'பியாஸ்'பண்ணுகிறார்கள். இரத்தம் சோஷித்துப்போகிறது. பிஞ்சிற்பழுக்காமல் என்னசெய்வார்கள்! நமது பெரியவாள் எந்த பி. ஏ. தேறினார்கள்? மூன்றுமிரண்டும் அஞ்சென்று சொல்லத்தெரியாது. ஒரு எழுத்தெழுதத்தெரியாது. பூதாகாரமாய்த் தேகத்தைவளர்த்தார்கள். புத்தியினால் என்னவேலை செய்தார்கள்? இப்படிக்காலங்கழித்தால், 100 வயது கூட இருக்கலாம்.

சு.—அவர்களுக்குப் படியாததினாலே பலமும் இவர்களுக்குப் படிக்கிறதினாலே துர்ப்பலமும் ஏற்பட்டதோ? தெரியாமற் சொல்லுகிறீர்கள். படிக்கிறதினால் மோசம் போய்விடவில்லை. அகாலத்தில் விஷயாதிகளில் பிரவேசிப்பதுவே துர்ப்பலத்திற்குக் காரணம். சுயங்கிருதாபராதத்தைத் தவிர வேறில்லை.

ரா.—இது சுயங்கிருதாபராதமென்று வைத்துக்கொள்வோம். காலம் முன்னிருந்ததுபோலவே இப்பொழுதிருக்கிறதா? அநேக மாறுபாடுகளுக்கு என்ன காரணம் சொல்வீர்கள்? ஒருகலம் நெல்லின்விலை அரை ரூபாயாயிருந்தது. ரூபாயிக்கு 24, 25 படி உளுந்துவிற்றது. நாடு எவ்வளவோ சுபிக்ஷமாயிருந்தது. இவை யெல்லாம்இப்பொழுது ஏனய்யா காணவில்லை?

சு.—ஓரிடத்திலிருந்துமற்றோரிடத்திற்குப்போகும்படியான சாதனங்கள் ஏற்பட்டிராதபடியால் அங்கங்கேவிளைந்த நெல்லோ துவரையோ அந்தந்த இடங்களில் விற்றாகவேண்டியிருந்தது. அதவா என்னகஷ்டப்பட்டாவது அயல் ஊர்களுக்கு அத்தானியங்களைக் கொண்டு போவார்களானால் வழியில் திருடர்களது உபத்திரவத்திற்குத்தப்பிப்பிழைப்பது அசாத்தியமாயிருந்தது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போக்குவரவில்லாதபடியால் அங்கங்கே இருந்த ஜனங்கள் அங்கங்கே அடைபட்டிருந்தார்கள். இப்பொழுதிருக்கிறதுபோல ரோட்டுகளும் ரயில்வண்டிகளும் ஏற்பட்டிருக்குமானால் ரூபாய்க்கு 24 படி உளுந்தும் 30 படி துவரையும் நன்றாய் வாங்கலாமே!

ரா.—இதெல்லாம்போகட்டும். மாதம் மும்மாரிபெய்ததே. அந்தமழையிப்பொழுது எங்கேபோய்விட்டது? முன்மாதிரி பெய்யச்சொல்லுங்கள் பார்ப்போம். 'மழையின்றி மாநிலத்தார்க்கில்லை.' மழை யில்லாததனால் விளைவில்லை. விளைவில்லாததனால் க்ஷாமம் பிரதிவருஷமும் உண்டாகிறது. இது யாருடையகுற்றம்?

இதைக்கேட்ட சுந்தரமய்யர் உடனே பதில் சொல்லமுடியாமல் சற்றுத்திகைத்து நின்றார் அந்தசமயத்தில் மணியும் 12 அடித்தது இதைக்கண்டு ஜோஸ்யர்:

"அய்யரவாள்! நமது சம்பாஷணையை எத்... லேயோ ஆரம்பித்து எதிலேயோ கொண்டுவந்து முடித்தோம்! வேளையும் நிசியாகிவிட்டது. தீக்ஷதர்நாளைக்குப்புறப்படவேண்டுமென்றுசொல்கிறாரே. ஒருமுடிவு சொல்லவேண்டாமா அவருக்கு? உங்களது அபிப்பிராயம் நன்றாய்த்தெரிந்துவிட்டது. உங்களது இல்லாளுக்கும் இதே மாதிரியான எண்ணமிருக்குமானால், தீக்ஷதருக்கு சொல்லக்கூடிய முடிவு சுருக்கம்தான். பெண்டுகளது அபிப்பிராயம் என்ன?

சு.—என் அபிப்பிராயத்திற்கு நேர்விரோதமாயிருக்கிறது.

சுந்தரமய்யரும்ஜோஸ்யரும்பழையநாட்களையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததைக்கேட்டு மனதிற் குழப்பமும் அதைரியமும்மேலிட என் செய்கிறதென்று தெரியாது பயங்கிக்கொண்டிருந்த தீக்ஷதரது செவியில் அய்யர்சொன்னது புகுந்தவுடன், காரியத்தை முடித்துக்கொண்டு போய்விடலாமென்ற நம்பிக்கை அவருக்குண்டாயிற்று.

ரா.—உங்கள் வழிக்குப் பெண்டுகளாவது வரவேண்டும். அலலது அவாள் அபிப்பிராயத்திற்கு நீங்களாவது இணங்க வேண்டும். இந்த இரண்டிலொன்று ஏற்படாலொழிய அந்தக் கிரகஸ்தருக்குத்தீர்மானமாய் ஒன்றும் சொல்லமுடியாதே.

சு.—நீங்கள் சொல்வதுண்மையே. எங்களுக்குள் ஒருதீர்மானம் செய்துகொள்ளவேண்டியது முதற்காரியம்.

ரா.—அப்படிச் செய்யுங்கள்.

சு.—இப்பொழுது அகாலமாயிற்றே. விடிந்துதான் ஆகவேண்டியது.

ரா.—(தீக்ஷதரைப்பார்த்து) தீக்ஷதரவாள்! பேசினதெல்லாம் கேட்டீர்களோ? காலமே யுங்களுக்கு முடிவு சொல்லுவார்கள்.

தீ.—சரி. விடிந்துபார்த்துக்கொள்வோம்.

பி. எஸ். சுப்ரமணிய அய்யர், பி. ஏ.

* தேவாங்கென்பது உடும்புவர்க்கத்தைச்சேர்ந்த ஒரு பிராணி. அது நிலத்தில் வாழ்வது. தலைபெரிதாயும் உடற்சிறிதாயுமுள்ள விகாரமான ஜந்து.



## ஆத்திசூடி விருத்தியுரை.

'ஆத்திசூடி விருத்தியுரை' என்னும் இந்நூல் மதுரை சேதுபதி ஹைஸ்கூல் உபாத்தியாயராகிய அரியூர். எஸ். சுவாமிநாதைய்யர் அவர்களால் இயற்றப்பட்டது இப்புத்தகத்தை எமது பார்வைக்கனுப்பியதற்காக நாம் அவர்க்கு அனேக வந்தனம் சமர்ப்பிக்கின்றோம். இந்நூலைப்பற்றி யாம் கொண்ட அபிப்பிராயத்தை அடியில் வரைகின்றோம்.

பேரறிவாண்மையினும் மதிநுட்பத்தினும் சிறந்தவராகிய ஔவையார் அருளிச்செய்துள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்னும் இந்நான்கு நூல்களும் பள்ளிப்பிள்ளைகள் முதலாக யாவர்க்கும் பால்யமுதல் பழக்கமானவைகளன்றோ? இந்நூல்கள் எல்லாவற்றினும் ஆத்திசூடி பலகாரணங்களாலும் மிகவும் சிறந்தது.

மற்ற நூல்களில் வேறுவேறாக விபாகித்து விவரித்துச் சொல்லிய பலவிஷயங்களையும் இந்நூலில் தொகுத்து அதிசங்கிரகமாக இரண்டு மூன்று வார்த்தைகளில் இளைஞர்க்குத்தக்கபடி எவ்வளவோ அழகாகச் சொல்லியிருக்கின்றனர். இந்நூல் அளவிற்சிறிதாயிருப்பினும் இதில் அடங்காத விஷயங்கள் இல்லை. அறம்பொருள் இன்பம் வீடு ஆகிய நால்வகைப்புருஷார்த்தங்களையும், அவற்றை அடையக்கூடிய சாதனங்களையும், அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் ஆகிய நால்வகையோரது வர்ணாசிரம தர்மங்களையும், அவற்றை அநுஷ்டித்தலாலுண்டாகும் நன்மைகளையும், மாதாபிதாக்களுக்கு மக்கள் செய்யும் கடமைகளையும், அந்தணர் பெரியோர் அரசர் முதலானோர் ஆணையில் நிற்றற்சிறப்பையும், கல்வி செல்வங்களைப் பெற்றும் பேணவேண்டியதையும், சுற்றந்தழுவல், தீமையினீங்குதல், நன்மையினிற்றல், நன்றிமறவாமை, பெரியாரைத்துணைக்கோடல், தெய்வங்கொள்கை, சரீரசுகம்பேணல் முதலான இகபரசௌக்கியங்களுக்கின்றியமையாத அநேக விஷயங்களையும் இந்நூலில் தொகுத்துக் கூறியிருத்தல் உய்த்துணர்வாரனைவர்க்கும் தெற்றெனப்புலப்படும். ஆதலின், இது அளவிற்சிறிதாயிருப்பினும் 'உருவுகண்டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க், கச்சாணி யன்னாருடைத்து'- என்றபடி பொருளமைதியில் மிகச்சிறந்ததென்பது எளிதில் பெறப்படும். இதுபற்றி இந்நூலை நம்மவர் மாத்திரமேயன்றி ஐரோப்பியர்களும் மிக

வும் கொண்டாடி ஆங்கிலேய பாஷையிலும் மொழி பெயர்த்திருக்கின்றனர். அதிகமாகச்சொல்லுவதென்னை? சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் ஆழமுடைமை முதலாக நூல்களுக்குக்கூறியுள்ள உத்தம லக்ஷணங்களையுடைய காவியங்கள் இதனிலும் சிறந்தது நம்தமிழ்ப்பாஷையிலேயன்றி இதர பாஷைகளிலும் இல்லையென்றே சொல்லலாம். இந்நூலிலுள்ள ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு புஸ்தகத்துக்கு விஷயமாக நிற்கத்தக்கது. அவ்வளவு சிறப்புடையது.

இந்நூலுக்குச் சாதாரணமாக ஏற்பட்டிருக்கும் உரைகள் கண்ணை நேத்திரமென்றும், அறத்தை தருமமென்றும், வீட்டை மோக்ஷமென்றும், ஊக்கத்தை தைரியமென்றும் தமிழ்மொழிக்கு வடமொழியும், சிலவேளைகளில் இயற்சொல்லுக்குத்திரிச்சொல்லுமாகிய பிரதிபதங்களேயன்றி, இன்னது இத்தன்மையது என்று சொல்லையும் பொருளையும் விவரித்து திருஷ்டாந்தங்களாலும் மேற்கோள்களாலும் சுருங்கச் சொல்லியவற்றை விளங்கவைப்பவைகளல்ல. ஆதலால் அவற்றைப்படிக்கும் பிள்ளைகளுக்கும் அநேகமாகக் கற்பிக்கும் உபாத்தியாயர்களுக்கும் அந்நீதிமொழிகளுக்குள் அடங்கியிருக்கும் சிறந்த பொருளைக்கிரகிப்பது அரிதாகின்றது. இக்குறையை நீக்குதற்பொருட்டு ஆபாலவிருத்தம் அனைவர்க்கும் பிரயோசனமாகும்படி இவ்விருத்தியுரையை மிக இனிமையாகச்செய்து கொடுத்த பேருதவிக்காக இவ்வுரையாசிரியர்க்குத் தமிழ்நாட்டாராகிய நாமெல்லாரும் கட்டுப்பட்டிருக்கின்றோம்.

இவ்வுரையில் ஒவ்வொரு சொல்லையும் பொருளையும் விரிவாகவும் தெளிவாகவும் சுலபமான இனிய நடையில் விளங்கவைத்திருப்பதேயன்றிப், புராணாதிகளிலிருந்தும், சரித்திரங்களிலிருந்தும், உலகவழக்கினின்றும், அநேகதிருஷ்டாந்தங்களை எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அன்றியும், ஒவ்வொரு வாக்கியத்துக்கும் அததற்கிணையான பொருளைத் தெரிவிக்கும் அநேக மேற்கோள்களை ஒளவையாரது மற்றநூல்களினின்றேயன்றி குறள், நாலடியார், நீதிநெறிவிளக்கம், விவேகசிந்தாமணி முதலான அநேகநீதிநூல்களிலிருந்தும், கம்பராமாயணம், ஜீவகசிந்தாமணி, திருவிளையாடற்புராணம் முதலான பல அரிய பெரியகாப்பியங்களிலிருந்தும், மநுஸ்மிருதி, பகவத்கீதை முதலான சிறந்த வடமொழி நூல்களிலிருந்தும் எடுத்துக்காட்டிப்படிப்போருக்கு அறிபயனும் ஆனந்தமும் உண்டாகும்படி வெகு இனிமையாகக் கூறியிருக்கின்றனர், அங்கங்கே தாம் கொள்ளும் பாடபேத அர்த்தபேதங்களுக்கு ஏனோதானோவென்று விட்டுவிடாமல் தக்க காரணங்களையும் எடுத்துக்காட்டித்திரப்படுத்தி யிருக்கின்றனர். இலக்கணக்குறிப்புகள் சாதாரணமாக மாணாக்கர்களாவது உபாத்தியாயர்களாவது கவனித்தல் இல்லை யாதலினாலும், இந்நூலைப்படிக்கும் இளைஞருக்கு அநாவசியமாதலினாலும் விசேஷமாக எடுத்துக்காட்டாவிடினும் ஆங்காங்கே முக்கியமான இடங்களில் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

ஆசிரியர் இவ்வுரையைப்பாடசாலைகளில்கற்கும் மாணாக்கர்களுக்கு உபயோகமாகும்படி எழுதி வெளியிட்டிருப்பினும் இது கேவலம் எட்டுமிரண்டும் தெரியாத இளம்பிள்ளைகளுக்குபயோகமாகும்படிச் செய்ததாகத்தோற்றப்படவில்லை. சற்றே விவரம் தெரிந்த மேல்வகுப்புப்பிள்ளைகளுக்கும் கற்பிக்கும் உபாத்தியாயர்களுக்கும் இன்னம் அறிவு முதிர்ச்சியில் ஆசையுள்ள ஸ்திரீபுருஷர்கள் எல்லாருக்கும் பயன்படும்படிச்செய்திருக்கின்றனர் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. இவ்வுரை அடிமுதல் இறுதியாக ஒரேதன்மையாய்ப்படிக்கப்படிக்க மிக இனிமையாயுள்ளது இவ்வுண்மையை இப்புத்தகத்தைவாங்கிப் படிப்பவர் ஒவ்வொருவரும் தத்தம் அநுபவத்தில் காண்பார்கள் நிச்சயம். ஆசிரியர் இன்னம் இதுபோன்ற நூல்களுக்கு இனிமையாக விருத்தியுரைகள் செய்துகொடுக்கும்படி இந்நூலை எல்லாரும் தக்கபடி ஆதரித்து ஆசிரியர்க்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகின்றோம். புஸ்தகத்தின் அச்சுப்பதிப்பு மட்டும் இன்னும் கொஞ்சம் சுத்தமாயிருப்பின் விசேஷமாம். இதன் விலை அணா நாலாக ஏற்படுத்தியிருப்பது மிகவும் சுலபமே.

---

## புகையிலை—அதன் கெடுதிகள்.

பதினைன்காம்நூற்றாண்டின்கடைசியில் கொலம்பஸ் 'கியூபா' தீவைக்கண்டுபிடிக்கவும், மாலுமிகள் இருவரை அதை ஆராயும்பொருட்டு அனுப்பினான். அவர்கள் தாங்கள் பார்த்த விசேஷங்களுக்குள் அவ்வூரார், எரி கொள்ளி ஒன்றை வாயில் வைத்து வாயின் வழியாயும், மூக்கின்வழியாயும் புகையைக்கக்கி உடம்பை வாசனை செய்துகொள்ளுகிறார்களென்றும், பெரிய இலைகளைச் சுற்றிப் பேய்கள்போல் சுருட்டுப் பிடிக்கிறதாகவும் கூறினார்கள். இப்பொழுது நாகரிகத்துக்கு இன்றியமையாத அறிகுறியாயும், மிகவும் சிறப்புயர்ந்த பட்டணங்களுக்கெல்லாம் நாற்றத்தையோ நன்மணத்தையோ ஊட்டிக்கொண்டுமிருக்கும் இவ்வழக்கம், ஐரோப்பியர்களுக்கு அப்பொழுதுதான்முதலில் தெரியவந்தது. அமெரிக்காதேசத்து 'காட்டு முரண்டர்'களில் ஆரம்பித்த இத்துர்வாடிக்கை, புதிதாக யாது வரப்போகின்றது என்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் ஐரோப்பிய வைத்தியர்களும், 'நன் வழக்கம்தான்' என்று ஒப்பம்வைக்கவே, கீழோர்களிலன்றி, மேலோர்களிடத்தும், அரசர் பிரபுக்களிடத்தும் வெகுசீக்கிரம் பரவியதே.

**பொடிபோடுவதினாரம்பம்.**

இதுவும், அமெரிக்காதேசத்து இந்தியர்களிடத்தே முதலில் காணப்பட்டது. கொலம்பஸுடன் சென்ற ஒரு வேதகுரு இதைப்பற்றி பின் வருமாறு கூறியிருக்கின்றனர்:—"அமெரிக்கர்கள், புகையிலையை வெகு நேர்த்தியான தூளாக்கி சாண் நீளமுள்ள குழாயின் ஒரு நுனியை மூக்கில் வைத்து மற்றொரு நுனியால் அத்தூளை வலியுடன் இழுக்கிறார்கள் ; உடனே, தும்மல் மேல் தும்மலாய் பைத்தியம் பிடித்தவர்கள்போல் ஓயாமல் தும்முகின்றனர்." முன் பேயென்றும், பின்பைத்தியங்கள் என்றும் கூறியிருக்கும் அறிவுயர்ந்து சிறப்புற்ற ஐரோப்பியர்களிடத்து இந்த அசாதாரணமான மிகவும் அருவருக்கத்தக்க துர்ப்பழக்கம் எப்படி உண்டாயதோ அறிகிறோமில்லை.

**முதலில் புகையிலை வெல்ல உபயோகிக்கப்பட்டது.**

1503-வருடம் ஸ்பெயின் தேசத்தவர்கள் தென் அமெரிக்காவில் 'பராகுவே' என்னுமிடத்தில் தாங்கள் கரையேறப்பார்க்கவும், ஊரார் கூட்டமாய்த் திரண்டு வந்து புகையிலையை வாயில்மென்று ரஸத்தை மேலே துப்பியதாகக் கூறியிருக்கிறார். இப்படிச் செய்தது புகையிலைவிஷம் வருபவர்கள் கண்ணில் பட்டு செயலறச்செய்யும்பொருட்டே. முதலில்புகையிலை மெல்வது பகைவரினின்றும் காத்துக்கொள்ள பிரயோசனப் படுத்தப்பட்டது — இப்பொழுதும் புகையிலை மெல்பவனண்டை காதவழி நெருங்கமுடியவில்லையன்றோ.— இப்படியிருக்க கைச்சண்டை நடந்த அக்காலங்களில் புகையிலை துர்நாற்றமும் விஷமும் சூழ்ந்துள்ள மேற்கத்தி இந்தியன் மிகவும் பயங்கரமானவனே,

**முதல் சுருட்டும், கருவிகளும்:**

முதல்முதல், புகையிலையைச் சுருட்டி, ஒரு பக்கத்தைப்பொறுத்தி மற்றொரு நுனியை வாயில் வைத்துக் கொண்டார்கள். பிறகு கவையுற்ற குழாய்கள் செய்து கவையைப் புகையிலைப் புகையில் வைத்து இழுத்தார்கள். இவையெல்லாம் காட்டு மிருகங்கள்போல் மைதானங்களிலும் அடர்ந்த காடுகளிலும் திரியும் அந்தக் காட்டுமுரண்டு ஜனங்களிடத்தே காணப்பட்டது. இம்முரடர்களுக்கு இந்த இலையும், அதன் உபயோகங்களும் அதை உபயோகிக்கும் கருவிகளும் எப்படித் தெரிந்ததோ தெரியவில்லை; இந்தியர்களுடைய முன்னோர்கள் புதைக்கப்பட்டிருக்கும் சமாதிகளுக்குள் இக்கருவிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அச்சமாதிகள்மேல் பல நூற்றாண்டுகளாய் வளர்ந்துவரும் பெரியமரங்கள் முளைத்திருக்கின்றன. ஆகையால் இக்கருவிகளும் பல நூற்றாண்டுகளுக்குமுன்னமே தெரிந்துள்ளது போலிருக்கிறது. புகையிலையினாலேயே அமெரிக்காதேசத்து இந்தியர்கள் நாசமடைந்தார்கள் என்பதுண்மையே.

**மிகவும் விஷமுள்ளது.**

ரசாயனசாஸ்திரி, தாவரசாஸ்திரி, வைத்தியன் எல்லோரும் இது மிகவிஷமுள்ளது என்கின்றனர். அது, சரியாகக்கொடுத்தால், 3,4-நிமிடத்தில் உயிரை நீக்கக்கூடியது. ஒருபவுண்டு புகையிலையில் 380குன்றுமணியளவு விஷம் (Nacotine) தங்கியுள்ளது : ஒரு குன்றுமணி விஷத்தில் பத்திலொரு பங்கு நாயை ஒரு க்ஷணத்தில் கொல்லும். இதேவிஷம் ஒரு மனிதனை 10 விநாடியில் கொன்றிருக்கிறது. ஆகையால் ஒரு பவுண்டு புகையிலையினால் 300 பேரைக்கொல்லலாம்.

**அதினின்று பெருந்தும் விஷதைலம்.**

புகையிலையினின்றும் ஒருவிதத் தைலம் எடுத்து அதை மனிதரைக் கொல்ல உபயோகிக்கிறார்கள். முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன், 'போகார்மி' (Bocarme) பிரபு, தன் மைத்துனர் ஆஸ்தியைக் கட்டிக்கொள்ளும் பொருட்டு, அவரை இவ்விஷத்தால் கொன்றார். இத்தைலத்தில் ஒரு பொட்டு, பாம்பை, மின்னல்செல்லுமளவில் கொல்லுகிறதாம். இத்தைலம் தோட்டங்களில் தொந்தரவுசெய்யும் சிறு பூச்சிகளைக்கொல்ல பிரயோசனப் படுத்தப்படுகிறது. பல குழந்தைகள் தலையிலோ, மூக்கிலோ உள்ள தங்கள் சிரங்குகளில் சுருட்

டுப்பிடிக்கும் கருவிநுனியில் தங்கியுள்ள தைலம்பட இறந்திருக்கிறதாக கேள்வியுற்றிருக்கிறோம்.

**மேலே படுதல் கூட விஷம்.**

பச்சை இலைகளை உடம்பின்மேல்வைத்துக்கட்டியிருந்தாலும் மிகுந்த தீங்குவிளைக்கும். வயிற்றின்மேல் போட்டிருந்தால் குமட்டலுண்டாகும். கட்கத்தண்டை வைத்திருந்தாலோ, வியாதியுள்ளவன் போற்செய்யும். இதனாலன்றோ, சண்டைக்குத் துணியாத சிப்பாய்கள் (ஆ. ஆ, சிப்பாய்களென்ன!) இவ்விலையை கட்கத்தண்டை வைத்துக்கட்டிக் கொள்ளுகிறார்கள். இங்கிலாந்திற்குள் புகையிலை கொண்டுபோக ஒரு வரி செலுத்தவேண்டியது; செலுத்தாமல் திருட்டுத்தனமாய் அநேகர் கொண்டு போவதுண்டு. சில வருடங்களுக்கு முன் ஒருவன் புகையிலையை உடம்போடுஉடம்பாய் ஒளித்துக்கொண்டுபோக முயன்றனன்: உடம்பில் அதுபட்ட, சிறு நேரத்திற்கெல்லாம் அவனுக்கு இசிவும் வலிப்பும் உண்டாயது. அதற்குக் காரணம் தேடவும், புகையிலை யென்றறிந்தார்கள்.

**புகையிலைப் புகை உட்கொள்ளல் அதனிலும் விஷம்.**

இப்படி மேலேபடுவதே தீங்குள்ளதாயிருக்கும்பொழுது, உள்ளுக்குச்செல்வது எவ்வளவு கெடுதலாயிராது. சிறு பக்ஷிகள், தேனீமுதலிய அற்ப ஜெந்துக்கள், இப்புகை படவும் இறக்கின்றன. இப்புகையை உள்இழுக்கவும், சுவாசப்பையிலுள்ள காற்றெல்லாம் விஷமாக்கி, பிறகு இரத்தத்தில் கலந்து உடம்பெல்லாம் பரவி மிகக் கெடுதலை விளைக்கின்றது.

**புகையிலையும் பொடியும் போட்டுக் கொள்வது அதனிலும் கேடுதீ.**

புகையிலை போட்டுக் கொள்வதும், பொடிபோட்டுக் கொள்வதும், விஷத்தைசுவாசப்பை வழிமாத்திரமன்றி, ஆகாரப்பை வழியாலும் பரவச் செய்தலின் இரட்டத்தனை கொடுமையுள்ளது.

புகையிலைஉபயோகிப்பவர்களிடத்துள்ளகிறுகிறுப்பும், வாயிலெடுப்பும், பிணம்போன்ற ஒய்ந்தபார்வையுமே, அதன் கெடுதிக்குத்தகுந்த அறிகுறிகள்: இன்னும் சிலபேருக்கு, ஓயாத வாயிலெடுப்பும், வயிற்றெடுப்பும், குடிகாரநடையும், மூச்சுபோய்விடும்போல் படபடவென்ற மார்படிப்பும், உண்டாகும். சுருட்டுப்பிடிப்பவனுடைய தேகஸ்திதி பின்வருமாறு இருப்பதாகக் கூறுகின்றனர்: 'மூளை இரத்தம்செத்துப்போகின்றது. வயிற்றில் சிவப்பாய் சொட்டைகள் விழுகின்றன. இரத்தம் தண்ணியாய்ப்போகின்றது. சுவாசப்பைகளும் இரத்தமற்றுவெள்ளைவெளேலென்று போகின்றன. இருதயமோ, மெதுவாயும் படபடவென்றும், சக்தியற்றதுபோல் அடிக்கின்றது.'

**சுருட்டுபிடிப்பவர்களெல்லாரும் ஏன் அவ்விஷத்தால், இறந்தின்றில்லை.**

ரசாயனசாஸ்திரிகள்முதற் பலர், புகையிலை கடுவிஷமென்று கூறுகின்றனர். ஆனால் அநேகர் தங்கள் அனுபவத்தால் விஷமில்லையென்றும் அப்படி விஷமுனதேல் அதனால் சாதல் மிகவும் அதிகரித்திருக்கவேண்டுமென்றும் ஆக்ஷேபிக்கின்றனர். இவ்வாக்ஷேபத்துக்குப் பின்வருமாறு சமாதானம் கூறுகிறோம்:—நமது சரீரத்தில் மிகவும் ஆச்சரியகரமான விசேஷமுள்ளது. அது எந்நிலைமைக்கும் தகுந்தபடி செய்துகொள்ளக்கூடியது. இதனாலன்றோ, கடுநஞ்சும், சிறுசிறு அளவாக உட்கொண்டு பழக்கி, பின் சாவு, அல்லது வேறோர் கெடுதியும் தோன்றாமல் மிகுந்த அளவும் உட்கொள்ளக் கூடியதாகிறது. இவ்விஷயம், எட்டிக்கொட்டை சாப்பிடுபவர்கள் அநேகரிடத்தில் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கலாம்.

புகையிலை உபயோகிப்பவர்கள் பலரும், அவ்விஷத்தாலேயேசாகின்றார்கள். புகையிலைவிஷம் உடம்பில் உறைந்து அதன் கெடுதிகளை விளைக்க பலவருஷங்கள்செல்லுகின்றனவேயொழிய வேறில்லை.

T. N. K. T.

## சஞ்சோக்தை சுயம்வரம்.

அல்லது,

## ப்ரித்விராஜ சரித்திரம்.

### VI. டில்லி, கன்யாகுப்ஜம்.

இக்காலத்தில் பூர்வீக டில்லி யிருந்த இடத்தின் காக்ஷியைக்கண்ட ஒருவர்* பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—"டில்லி யிருந்தஸ்தானத்தை இக்காலத்தில் பார்க்க என்னபயங்கரமான காக்ஷியாகவிருக்கிறது! பாழின்மேல்பாழ்! கோரிமேல் கோரி! இடிந்த செங்கற்சுவர்களும் கட்டடங்களுமென்ன! தனியாகச்சிதைந்து கிடக்கும் பாறுங்கற்கள் என்ன! கற்பாறைகள் என்ன, சலவைக்கற்கள் என்ன! இவைகள் புடாவத்தில் புல்பூண்டற்ற கல்தரையான வறட்டுப்பூமியில் எங்கும் எறிந்துகிடக்கும் காக்ஷி காணக் கம்பீரமாயும் சிந்திக்கப் பயங்கரமாயுமிருக்கிறது!" இப்படிப் பாழாய்க்கிடக்கும் ஸ்தலம் "ஷாஜஹான்பாத்" என்று வழங்கும் தற்காலத்து டில்லிப்பட்டணத்தின் தெற்கெல்லையிலிருந்துஇப்பொழுதுபாழாய்க்கிடக்கும் † ராய்பிதோராகோட்டை, டுக்ளகபாத் கோட்டைவரையில் 10 மைல்தூர விஸ்தீரணத்துக்குப் பரவிக்கிடக்கின்றது. சுமார்45-சதுரமைல் விசாலத்துக்கு ஆதிகாலமுதல்இந்தியாவில் தலையெடுத்து விழுந்துபோன அநேகப்பெரிய மகாராஜ்ஜியங்களுக்குத் தலைநகராக விருந்து விளங்கிய நகர்கள் இப்படி உருத்தெரியாமல் இடிந்துவிழுந்து பாழாகப் பரவிக்கிடக்கின்றன. இப்பொழுதுள்ள டில்லிக்கோட்டைச் சுவர்களுக்கு 2 மைல்தூரத்துக்கப்பால் 'இந்திரபட்' அல்லது 'புராணகிலம்' என்னும் பெயரையுடைய ஒரு சிறுகிராமமும் கோட்டையும் இருக்கின்றன. முற்காலத்தில் காண்டவவனத்தை யெரித்தபின் மயன் என்பான் வந்து "தெம்மாறவுலகாளுஞ் செங்கோன்மைக் குருபதிக்குச் சிற்பம்வல்லோர் அம்மாவென்று அதிசயிப்ப அரிய மணி மண்டபமொன்று அமைக்கின்றேனே" என்றுசொல்லி, "மனத்தாலும் திருத்தகுநூல் வரம்பாலும் உரம்பயில் தோள் வலியினாலும், இனத்தாலும் தெரிந்து தனதெண்ணிய எண்ணினுக்கேற்ப எண்ணில்கோடி, தினத்தாலும் செயற்கரிய செழுமணிமண்டபம் ஈரேழ்திங்கட்செய்தான்" என்று மஹாபாரதத்தில் சொல்லிய குபேரப்பட்டணத்தையுந் தோற்கடித்த இந்திரப்பிரஸ்த நகரில் தற்காலம் எஞ்சியுள்ளது இவ்வேழைக் கிராமமும் இடிந்தகோட்டையுமே.

இந்திரப்பிரஸ்தம் என்னும்பேர் மஹாபாரதகாலம் தொட்டு வழங்கிவந்தாலும், டில்லி அல்லது தில்லிபுரம் என்பது அதற்குச்சரியான பூர்வீகமுடையதாகவில்லை. தில்லிபுரம் என்கிற பேர் கிறிஸ்து சகாப்தம் துவங்க 50 வருஷத்துக்கு முன்னே முதல் முதல்வழங்கத்தொடங்கினதாகத் தெரிகிறது. பெரிஷ்டா என்னும் மகம்மதிய சரித்திரக்காரர் எழுதியிருக்கிறபடி பூர்வீக தில்லிநகர், இப்பொழுதுள்ளடில்லிப்பட்டணமிருக்குமிடத்திற்குக் கீழே 5 மைல்தூரத்தில் யமுனை நதிக்கரையில் ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அதை ஏற்படுத்தினவர் மயூரவமிசத்தரசர்களில் கடைசியரசனை ராஜா திலு என்பவர் என்று சொல்லப்படுகிறது. இந்த மயூர வமிசத்தார், இந்திரப்பிரஸ்தத்தையாண்ட கௌதம வமிசத்துக்குப் பின்வந்த அரசர்களென்று தெரியவருகிறது. இதன்உண்மை யெப்படியாயினும் கிறிஸ்து பிறந்து 300, 400 வருஷங்களாகுமுன் தில்லி நகர் பேரும் புகழும்பெற்று விளங்கியது என்பது நிச்சயமாகவிளங்குகிறது. இதற்கு அத்தாக்ஷி இன்றைக்கும் பார்க்கக்கூடும் இரும்புஜயஸ்தம்பமும் அதில் வெட்டியுள்ள வெட்டெழுத்துலிபிகளுமேயாம். இந்த ஜயஸ்தம்பம் 16 அங்குலம் குறுக்களவுள்ள கட்டிஸ்தம்பம்; இதன்நீளம் சுமார் 50 அடி; இது அசைக்கக்கூடாமல் பாதியளவுக்குப் பூமியில் புதைக்கப்பட்டுள்ளது. இதன் மேற்குப்புறத்தில் சமஸ்கிரத எழுத்தில் வெட்டப்பட்டிருக்கும் லிபியினால் ராஜதேவர் என்னும் தில்லியரசன், தன் வீரபராக்கிரமத்தால் உயர்வொப்பின்றி ஏகாதிசக்கரம் நடத்திவந்ததற்கு அடையாளமாக இந்த ஜயஸ்தம்பத்தை நிர்மித்து அதில்வெட்டியுள்ள ஒவ்வொரு எழுத்துக்களும் அவ்வரசன் அவன்பகைவரை வெட்டிய வெட்டுக்களுக்குச் சமானமென்று சொல்லும்படி தன்னுடைய ஜயப்பிரதாபத்தை நிலைநிறுத்த இந்த ஜயஸ்

* Bishop Heber,

† 'பரித்விராஜ்' என்னும்பெயர் ஹிந்தியில் 'பிதோரா' என்று மருவிவந்தது.

தம்பம் நிர்மித்தான் என்றும் தெரியவருகிறது. இந்த ஜயஸ்தம்பத்தின் வேலைப்பாடு ஒன்றினாலே அக்காலத்தில் இந்தியா கைத்தொழில் வேலைகளில் மிக்க விர்த்தியடைந்து பெரும் புகழ்பெற்று விளங்கியதென்றுதெரியவருகிறது. கானோஜிலாண்ட குப்தவமிசம் நசிந்தகாலம் கி. பி. 319. ஆதலால் இந்த தில்லி அரசன், கானோஜ் ராஜ்யத்தை நசுக்கியவனாக விருக்கலாமென்றும் அப்பூர்வீக ராஜ்யத்தின்மீது தான் வெற்றிகொண்டு அதைத் தனக்குக்கீழ்ப்படுத்திய பெருமையில் இந்த ஜயஸ்தம்பம் நாட்டியிருக்கலாமென்றும் சொல்கிறார்கள்.

இஃதன்றி, தில்லி யென்னும் பேர்வந்ததற்குப் பிந்திவந்த பழங்கதையொன்றிருக்கிறது. அதன்படி தில்லி என்னும் பேர் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ராஜபுத்திரர்கள் வட இந்தியாவில் பலமாக ஏற்பட்டுவந்தகாலத்திலுண்டானதாகச் சொல்லப்படுகிறது. விக்ரமாதித்தியன் வடஇந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டு உஜ்ஜினிபட்டணத்தைத் தனக்குத் தலைநகராக்கிய காலம் முதற்கொண்டு இந்திரப்பிரஸ்தம் அல்லது தில்லி முதலிய மற்றப்பிரதான நகர்கள் மகிமைகுன்றி சிறுமைப்பட்டிருந்தன என்பது நமக்குத் தெரிந்த சங்கதியே. பிறகு கி. பி. 8-ம் நூற்றாண்டில் ராஜபுத்திரர்களில் துவார் அல்லது தோமர ராஜவமிசத்தை ஏற்படுத்திய அனங்கபால் ராஜன் தில்லியைப் புதுப்பித்து அதைத் தனக்குத் தலைநகராகக்கொண்டு சிறப்புற்று அரசாண்டுவந்தானென்றும், அப்பொழுது ஒரு பிராமணன்வந்து அங்குநின்ற இந்த இரும்பு ஜயஸ்தம்பத்தைக்காட்டி அதுபாதாளத்தில்வாசுகி தலையிலேறும்படி ஆழ இறக்கி யடிக்கப்பட்டிருக்கிறதென்றும், அந்தஸ்தம்பம் அதேநிலையிலிருக்கும்வரையில் அவன்கீர்த்திக்கும் அவனுடைய வமிசத்துக்கும் அழிவில்லையென்றும், அது அசைந்தால் அவன் வமிசத்துக்கு அழிவுண்டாகுமென்றும் சொன்னதாகவும், அனங்கபாலராஜன் அந்த பிராமணன் பேச்சைநம்பாமல், அந்தஸ்தம்பமாவது வாசுகிதலையில் ஏறப் புதைக்கப்பட்டிருக்கவாவதென்று சொல்லி அதைப்பெயர்த்து அதன் அடியைப்பரிசோதித்துப்பார்க்கவிரும்பி, ஆட்களைவிட்டு அந்த ஸ்தம்பத்தைப்பிடுங்கச்சொன்னானென்றும், வெகுதூரம் ஆழமாகப்பறித்தும், அடிதோன்றாமையால், அதைச்சிரமப்பட்டு அசைத்தபொழுது பூமியின்கீழிருந்து இரத்தம் வந்ததென்றும், அது வாசுகிதலையிலிருந்து வந்த இரத்தமென்றுசொன்னார்களென்றும், இதைக்கேட்டு அவன் அச்சமுற்று மறுபடியும் அந்தஸ்தம்பத்தைமுன்போல் அசையாமல் புதைத்துவிடக்கட்டளையிட்டானென்றும், ஆனால் அவன் என்னமுயற்சித்தும் அந்தஸ்தம்பம்முன்போல உறுதியாகநிற்காமல் (தில்லா) ஆடிக்கொண்டிருந்தபடியால் அந்நகருக்கு தில்லியென்று பெயர்வந்ததென்றும்சொல்லப்படுகிறது. இதுபழங்கதை யானபடியால், இதையாராய்ந்தால் இதிலுள்ள உண்மை ஒருவாறு விளங்கும் ஆனால் இதைஆராயப்புகுவது நமது காரியத்துக்கு விருத்தமாகுமாதலால் அக்கதையைமட்டும் சொன்னதோடு விட்டு மேலே, நமது காரியத்தைக் கவனித்துப்போவோம். இந்த அனங்கபால் ராஜா துவார் அல்லது தோமர ஜாதி ராஜபுத்திர வமிசத்தை ஸ்தாபித்து தில்லியையும் புதுப்பித்தவர் என்று மேற்சொன்ன கதையால் தெரிந்துகொண்டோம்.

இந்த வமிசத்தார் டில்லியில் ஆண்டுவருகையில் ராத்தோர் ராஜபுத்திரவமிசத்தார் கன்யாகுப்ஜம்அல்லதுகானோஜில் ஸ்திரமாக வேரூன்றி பலத்தராஜாக்களாக விளங்கிவந்தார்கள். 5-ம்நூற்றாண்டில்குப்தவமிசம்நசித்தபொழுதே ராத்தோர் ராஜபுத்திரர்கள் கானோஜில் கால்வைத்து வரவர ராஜ்யத்தைக்கைப்பற்றி அங்கு உறங்கொண்டுவந்தார்களென்று தெரிகிறது. கி. பி. 470-ம்வருஷத்தில் நயனபால் என்னும் ராத்தோர் ராஜபுத்திர அரசன் கானோஜ் இராஜ்யத்தைவென்றுகைப்பற்றி அதைச்சுற்றியுள்ள தேசங்களைத் தன் குடைக்கீழ்க் கொண்டுவந்தான்



என்று தெரியவருகிறது. அவன் முதல் அவனுடைய சந்ததியார் கானோஜில் ஆண்டுவந்தார்கள். இந்த வமிசத்தின் கடைசியரசன்தான் நமது கதாபுருஷர்களில் ஒருவனாகிய ஜயசந்திரராஜன். இந்தஜயசந்தனுக்குமுன் அரசாண்ட இவன்பிதா விஜயபால் அல்லது விஜயசந்திரராஜன். கானோஜ் அல்லது கன்யாகுப்ஜத்தை வென்ற நயனபால் தாமத்துவஜ* முடையவனாயிருந்தபடியால் அவன் வமிசத்தரசர் அனைவருக்கும் காமத்துவஜன்என்பதுஒருபட்டப்பெயராய்விட்டது.

கானோஜ் நகர் ஆதிகாலந்தொட்டு மிகப்பிரக்கியாதிபெற்று விளங்கியதென்று நமக்குத்தெரியுமே. அந்நகர் நமது கதாரம்பகாலத்திலும் மிகக்கீர்த்திபெற்று வளப்பமிகுந்து விளங்கியது. அந்நகரைச் சுற்றியுள்ள சுவர்களின் பக்கவீதிகள் 30 மைல் தூரமுள்ளவையாக விருந்தன. அதன் சைனியங்களின் மிகுதியைச் சொல்லி முடியாது. சைனியங்கள் சண்டைக்குப்புறப்பட்டால் பின்னணிகள் நகருமுன் முன்னணிகள் யுத்தகளம்போய்ச் சேர்ந்துவிடுமாம். அதாவது அவர்களின்தொகை அவ்வளவு தூரம் விஸ்தரித்திருந்தது என்பது கருத்து. கானோஜ் அரசனுடையசேனைகள் இப்படி ஏராளமாக இருந்தபடியால் அவை நடக்கும்பொழுது நெருக்கமிகுதியால் தாராளமாக நடக்கக்கூடாமல் நின்று நின்று நடப்பதால் "தளபங்களா" அதாவது "தளர்நடையுடைய சேனைகளுடையவன்" என்னும் பட்டப்பெயர் ஜயசந்திரராஜனுக்குக்கிடைத்தது. ஜயசந்திரன் நினைத்தமாத்திரத்தில் 80 ஆயிரம்பேர் போர்க்கவசம் பூட்டிய வீரர்களும், 30 ஆயிரம் குதிரைவீரர்களும், 3 லக்ஷம்பேர் காலாட்படைகளும், 2-லக்ஷம் வாள்வீரர் வில்வீரர்களும், இவைகளைத் தவிர கூட்டம் கூட்டமான யானைப்படைகளும் போர்க்குக் கொண்டுவரும் சக்தியுடையவனாகவிருந்தான். ஜயசந்திரராஜன் அக்காலத்தில் மிகவும் கீர்த்திபெற்று விளங்கியதன்றி தன்னிடம் வந்து அடைந்தவர்களுக்குத் தாராளமாகக்கொடுக்கும் ஈகை உள்ளவனாக இருந்தமையால் சகலஜாதி மதஸ்தர்களிலும் துணிந்தகைகளாயுள்ளோர் அனைவரும் அவனிடம் சென்று அவன் சேவகத்திலமர்ந்தார்கள். ஹிந்துக்களில் பலஜாதி வருணத்தார்களும், பைராகிகளுமன்றி, துருக்கர், முதலான அந்நியதேசத்தாரும்கூட அவன் சேவகத்திலமர்ந்து அவன் ஏராளமான சைனியத்தைப் பின்னும் ஏராளமாகப் பெருக்கினார்கள். அவன் இராணுவச்சிறப்பு இப்படியென்றால் நகர்ச்சிறப்பும் இதற்கு ஏற்றதாகவே யிருந்தது. அக்காலத்தில் அந்நகரிலிருந்த வெற்றிலைக் கடைகள்மட்டும் 30 ஆயிரம் என்றும், நர்த்தனமாதர்களின் தொகை 3000 என்றும் தெரியவருகிறது. இப்பொழுதோ இம்மாநகர் சிதைந்து பாழாகி, இஃதிருந்த இடம் 5 சிதைந்தகிராமங்களால் மூடப்பட்டிருக்கின்றது. பூர்வகாலத்திய மகிமைக்கடையாளமான சின்னங்கள் அபூர்வமாகச் சில இன்றைக்கும்காணும்படியாகவிருக்கின்றன. டில்லி, கானோஜைப்பற்றிச் சொல்லும் இவ்வதிகாரத்தில் சஹாமான் அல்லது சௌஹான் ராஜபுத்திரர்களுடைய சரித்திரத்தைப்பற்றிச் சொல்லாமல் விடுவது பருப்பின்றிக் கலியாணம் செய்வதுபோலாகும்.

சௌஹான் அல்லது சஹாமான் ராஜபுத்திரர்கள் 36 - ராஜவமிசத்தார்களில் முக்கியமானவர்களும் முதன்மைபெற்றவர்களுமாய் விளங்கினார்கள். ராஜபுத்திரர்கள் ஆதியிலுள்ள ஆரியபுத்திரர்களாகவின்றி, பூர்வக்ஷத்திரிய குலம் நசித்துப் போனகாலத்தில் இந்தியாவின்மீது படையெடுத்துவந்த 'ஸிதியர்கள்' கூட்டத்திலிருந்து உற்பத்தியானவர்களென்று முந்திச் சொல்லியிருக்கிறோமே. இவர்கள் அந்நியர்களானாலும் ஹிந்துமதத்தைத்தழுவி ஹிந்துக்களோடு ஹிந்துக்களாகச்சேர்ந்து க்ஷத்திரியதர்

* அவன்கொடியில் ஒரு கன்னியையின் உருவம் எழுதப்பட்டிருந்ததனால் "கன்யத்துவஜன்" என்றும் "காமத்துவஜன்" என்றும் அவனுக்குப் பெயர்வந்தது.

மத்தை விசேஷமாயனுசரித்ததால் தாங்கள் பூர்விக க்ஷத்திரியவம்சத் தாசர்களின் சந்ததிகளென்று சொல்லி, தங்கள்கதையைப் புராணங்களில் சேர்த்து சூரியசந்திரவமிசத்திலிருந்து தாங்கள் உதித்தவர்களாக வம்சாவலி காட்டி பிராமணர்களால் அங்கீகரிக்கப்பெற்றார்கள். இதற்குப் பிரத்தியக்ஷத்தில் ஓர் உதாரணம் பாருங்கள். இராஜபுத்திரர்களில் அக்னிகுலர்என்று 4 முக்கிய ஜாதியார் இருக்கிறார்கள். இவர்கள் உற்பத்தியைப்பற்றி அபூ மஹாத்மியத்தில் சொல்லியிருக்கிறபடி இங்கு சுருங்கச்சொல்கிறோம். ரிஷிகள் அபூபருவதத்தில் தங்கள் நியமப்படி தபசுசெய்துகொண்டிருக்கும்பொழுது சுற்றியுள்ள வில்லிகள்மேரைகள் முதலிய காட்டுஜனங்களாகிய அசுரர் அல்லது தைத்தியர்கள், ரிஷிகள் தபசைக்கெடுத்து அக்னிகுண்டத்தை நாசம்செய்து ஹிம்சை செய்துவந்தார்கள். இப்படி அவர்கள்செய்த ஹிம்சை பொறுக்கக்கூடாமல் ரிஷிகள் மஹாதேவனிடத்தில் முறையிட்டுக்கொண்டு அவருடைய அருள்வேண்டி யக்ஞம் செய்தார்கள். ரிஷிகள் வசிஷ்டரைத் தங்களுக்குத் தலைவராகக்கொண்டு அக்னிகுண்டத்தைச் சுற்றியிருந்து மந்திரங்கள் ஜபித்து ஆகுதி செய்தார்கள். செய்கையில் அக்னிகுண்டத்திலிருந்து ஒரு புருஷன் உற்பத்தியாகக் கண்டார்கள். அப்புருஷன் விலக்ஷணங்களற்றிருந்தமையால் அவனை வாசற்காப்பானாகவைத்து "பிரிதிதுவாரா" என்று பேரிட்டார்கள். இவனுடைய சந்ததியார்களுக்கு பிரிதிஹார் அல்லது புரிஹார் என்று பேர்வந்தது. இது ராஜபுத்திரர்களில் முக்கியமான ஒருவமிசத்தாருக்குப்பேராய் வழங்குகிறது. தைத்தியர்களை யடக்க இவன் ஏற்றவனல்லவென்று கண்ட ரிஷிகள் பின்னும் மஹாதேவனை வேண்டிக்கொண்டு அக்னிகுண்டத்தில் ஆகுதிசெய்தார்கள். இரண்டாவதாக ஒரு புருஷன் அவதாரமானான். இவன் (சாலு) உள்ளங்கையில் உதித்தவனாகையால் "சாலுக்கியன்" என்று பேர்கொடுத்தார்கள். இந்தப் புருஷன் சந்ததியில் உதித்தவர்கள் சாலுக்கியர்கள். இதுவும் ராஜபுத்திரவமிசங்களில் முக்கியமான ஒருவமிசத்தின் பேராக வழங்கலாயிற்று. மூன்றாவது அவதாரமான புருஷன் தைத்தியர்களை யெதிர்த்துச் சண்டைக்குச் சென்றும் அவர்களால் தோற்கடிக்கப்பட்டானாகையால் அவனுக்கு "பிரமாரன்" "முதல்முதல் சண்டைக்குச் சென்றவன்" என்று அர்த்தங்கொள்ளும்படி பேரிட்டார்கள். இப்படி மூன்று அவதாரபுருஷர்கள் அக்னிகுண்டத்தில் இருந்து உற்பத்தியாகியும் தங்கள்காரியம் நிறைவேறாமற்போனதைக்கண்டு ரிஷிகள் மஹாதேவனைக்குறித்துப் பின்னும் தபசுசெய்து மறுபடியும் அக்னிகுண்டத்தில் ஆகுதிசெய்தார்கள். ஆகுதி செய்துவருகையில் அக்னிகுண்டத்திலிருந்து உயர்ந்த உருவும், அகன்ற மார்பும், நீண்ட புஜங்களும், சிவந்தகண்களும் பொருந்தி கம்பீர லக்ஷணங்களெல்லாஞ்சேர்ந்து ஒருருவெடுத்தாற்போல் கவசம் அம்புறாத்தோணியோடு ஓர் மஹாவீரபுருஷன் தோன்றினான். இவனைக்கண்டதும் ரிஷிகள் சந்தோஷப்பட்டு இவனுடைய உதவியால் தைத்தியர்களுடைய உபத்திரவம் இனிநீங்கிவிடுமென்கிற தைரியங்கொண்டு மஹாதேவனைத் துதித்து தங்கள் முன் அவதரித்த மஹாபுருஷன் நாலுபுஜங்களையுடையவனாயிருந்தபடியால் சதுர்ப்புஜன் அல்லது சதுரங்கன் என்று பேரிட்டார்கள். இவன் சிம்மவாஹனரூடராய் சக்திதேவி வந்து ஆசீர்வதித்ததைப் பெற்றுக்கொண்டு தைத்தியர்களை யெதிர்த்துச் சென்று அவர்களைஹதம்செய்து பூண்டற்றுப்போகச் செய்துவிட்டான். ரிஷிகளெல்லாம் சந்தோஷப்பட்டார்கள். சக்திதேவி வந்து ஆசீர்வதித்து ரிஷிகளின் ஆசையை இவன் மூலமாகநிறைவேற்றிவைத்ததால் ஆசா பூர்ணியென்னும்பேரால் அவளையே தனக்குக் குலதெய்வமாகக்கொண்டான். இப்படிப்பட்டவன் வமிசத்திலுதித்தவர்களுக்குத்தான் சௌஹான் ராஜபுத்திரர்கள் என்றுபேர். இவனுடையவமிசத்திலுதித்தவனே நமது கதாநாயகனாகிய ப்ரித்விராஜாவும். சௌஹான்ராஜபுத்திரர்களுடைய வம்சாவலியால் அனலிற்பிறந்த அ



ர்கள் ஜாதிமுதல்வனான இவன் முதல் பிரித்விராஜாவானவன் 39-வது தலைமுறை யரசனென்று தெரியவருகிறது. புராணத்தின்படி சதுரங்கன் உற்பத்தியானகாலத்தைப் பார்த்தால் கிறிஸ்துபிறக்க அனேகவருஷங்களுக்கு முன் இந்த சம்பவம் நேர்ந்ததாகத்தெரிகிறது. ப்ரிதிவிராஜா ஸம்வத்ஸரவருஷம் 1215-ல் (கி. பி. 1159) பிறந்தான். விக்கிரம சம்வத்ஸரம் துவங்குவதற்கு வெகுகாலமுன் உற்பத்தியான ஒருபுருஷனிலிருந்து அந்த ஸம்வத்ஸராரம்பமான 1215 வருஷத்திற்குப் பிறகு பிறந்தவர் 39-வது தலைமுறைச்சந்ததியென்பது நம்பக்கூடாதவிஷயமாக விருக்கிறது.

ஆகையால் நாம் முன்னமே விவரித்தபடி நடுவில் வந்தவர்கள் பூர்வீகம் பாராட்டவேண்டித் தங்கள் பூர்வோத்திரத்தைப் புராணத்தினாற் சூரிய, சந்திரவமிசத்தாரோடு சேர்த்துக் கொண்டார்களென்னும் அனுமானம் இதனால் பலப்படுகிறது.

புராணவிஷயங்கள் ஒருபுறம் நிற்க. சௌஹான் ராஜபுத்திரர்களுடைய பூர்வஸ்தானம் சம்பார் என்னுமிடமென்று தெரிகிறது. இது மாணிக்கராஜ் என்னும் அரசனால் ஸ்தாபிக்கப்பட்டது. சம்பார் என்பது ஸகாம்பரி என்னும் அவர்கள் குலதெய்வத்தின்பேரிலிருந்து உற்பத்தியானது. பிறகு இக்குலத்தில் பேர்பெற்ற அஜிபால் அரசன் ஆஜ்மீர் பட்டணத்தை ஸ்தாபித்து அதைத்தனக்கு முக்கியபட்டணமாகச் செய்துகொண்டான். அதுமுதல் ப்ரித்விராஜா காலம் வரையில் சம்பார், ஆஜ்மீர், இவ்விரண்டு ஸ்தலமும் சௌஹான் ராஜபுத்திரர்களின் முக்கிய ஸ்தானங்களாக விளங்கின. மகம்மதியர்கள் காஸிம் என்னும் தளபதியின்கீழ் சிந்துதீரத்தின் மீது கி. பி. 685-ல் படையெடுத்து வந்தபொழுது அவனை யெதிர்த்த ஹிந்துராஜாக்களில் தளராஜ் என்னும் சௌஹான்ராஜா முக்கியமான ஒருவன். இந்த அரசன் காசிம் என்னும் மகம்மதிய தளபதியை யெதிர்த்ததில் கொல்லப்பட்டான். இவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தசௌஹான் அரசன் மாணிக்கராஜ் என்பவன். இந்த அரசன்தான் சகாம்பரசாகரம் என்னும் பெரிய ஏரியின்கரையில் சம்பூர் அல்லது சம்பார் என்னும் பட்டணத்தை ஸ்தாபித்தவன். பிறகு கிஜினிமாம்மூது சோமநாதபுரத்தின்மீது படையெடுத்துப் போகையில் வழியில் ஆஜ்மீர் பட்டணத்தில் ராஜபுத்திரர்களால் விசேஷமாக எதிர்க்கப்பட்டதாகக் கேள்விப்படுகிறோம். அப்பொழுது அரசனாகவிருந்தவன் தர்மதேவராஜ் என்பவனென்று தெரியவருகிறது. அவனுடையமகனான விசாலதேவ் சரித்திரத்தில் மிகப் பேர்பெற்றவன். அவனுடையபெரும் கீர்த்தியும் டில்லியிலுள்ள இரும்பாற்செய்த ஜயஸ்தம்பத்தில் வெட்டப்பட்டிருப்பதை இன்றைக்கும் காணலாம். இந்த அரசனுடைய பெருமுயற்சியாலே கிஜினிமாம்மூதுகாலத்துக்குப்பின் மகம்மதியர்கள் சிந்துநதிக்கு இப்பாலிருந்து அடியோடு துரத்தப்பட்டார்கள். இந்த அரசன் அப்பொழுது இதற்காகச்சேர்த்த இந்து அரசர்குழாத்தில் உதயஜித்ப்ரமாரன் என்னும் ப்ரமாரஜாதி ராஜபுத்திரர்களில் பேர்பெற்ற அரசனின்பேர் விளங்குகிறது. இவர்கள்கூடி மகம்மதியர்களைப் புறங்காட்டி யோடும்படி செய்த பின் தாங்கள்பெற்ற வெற்றியை டில்லியிலுள்ள ஜயஸ்தம்பத்தில் என்றென்றைக்கும் அழியாதபடி வெட்டி தங்கள் கீர்த்தியை நிலைநாட்டினார்களென்று தோன்றுகிறது. இவருடையகாலத்தில் மகம்மதிய அரசனாகவிருந்தவன் கிஜினிமாம்மூதுக்குப்பின் நாலாவது அரசனான மடுட் (Modud) என்பவனென்று விளங்குகிறது. விசாலதேவராஜன் டில்லியையும் ஜயித்ததாகத்தெரிகிறது. இவர்காலத்தில் வெட்டிய விசாலசாஹரம் என்னும் பெரிய ஏரி இன்றைக்கும் இவர்பேருக்கு அத்தாக்ஷியாக விருக்கிறது. இவருக்குப்பின் இந்தவமிசத்தில் பேர்பெற்ற அரசன் சோமேஸ்வர் என்னும் அரசன். இந்த அரசனுக்கும் அக்காலத்தில் டில்லிராஜாவாகிய கடைசி அனங்கபால் ராஜன்புத்திரிக்கும் பிறந்தவன்தான் நமது கதாநாயகனாகிய ப்ரித்விராஜா.

சோமேஸ்வர் ஆஜ்மீரிலாண்ட காலத்தில் டில்லியிலாண்டவன் அனங்கபால் ராஜாவென்று சொன்னோமே. இந்த அனங்கபால்தான் டில்லியிலாண்ட துவார் அல்லது தோமராஜாதி ராஜபுத்திரவமிசத்தின் கடைசி அரசன். -ம் நூற்றுண்டின்மத்தியில் அனங்கபால்ராஜன் டில்லியைப்புதுப்பித்து அரசாண்டது முதல் 12 ம் நூற்றுண்டில் அதேபேருள்ள கடைசி அரசன் காலம்வரையில் துவார் வமிசத்தார் டில்லியையாண்டுவந்தார்கள். இடை இடையேவிசாலதேவராஜன் டில்லியை வென்றதுபோல், இதர அரசர்கள் வென்றாலும், வென்ற அரசனுக்குக்கப்பம் அல்லது காணிக்கை கட்டுவதொன்றைத்தவிர மற்றப்படி அவர்களுடைய அதிகாரத்துக்குக் குறைவு ஒன்றும் வந்ததில்லை. ஆஜ்மீர் அரசர்கள் சில சமயங்களில் டில்லியைவென்றாலும், பெரும்பாலும் டில்லிராஜாக்களுக்குப் பக்கபலமாயிருந்து அவர்களுடைய மேன்மைக்குத் தாங்கள் ஆதாரமாக விருப்பதொன்றோடு திர்ப்தியடைந்து வந்தார்களென்று தெரிகிறது. 12-ம் நூற்றுண்டில் அனங்கபால் ராஜன் டில்லியிலாண்டபொழுது ஆஜ்மீரில் சோமேசரும், கானோஜில் ஜயசந்திரனும் ஆண்டுவந்தார்கள். ஜயசந்திரன் தகப்பனை விஜய்பால், மகா வல்லமை பொருந்திய அரசனுயிருந்ததோடு நடுவில் கிளம்பும் உட்சண்டைகளில் டில்லி ராஜாவைப் பலமுறையும் தோற்கடித்தவனென்று தெரிகிறது. இச்சண்டைகளின் விசேஷமொன்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். இதில் நீடித்த துவேஷம் கிடையாது. வெற்றி தோல்வி விளங்குமட்டும் சண்டைபோடுவதும், சண்டைமுடிவில் தோற்றகைப்பக்கத்துஇராஜகுமாரத்தியை வலுத்தகையரசன்விவாகம்செய்துகொள்வதோடு இருவரும் பந்துக்களாய்ப் பிரிந்துபோவதும் வழக்கமென்று தெரியுமே. இந்தவழக்கப்படி கானோஜுக்கும் டில்லிக்கு முண்டான சண்டையில் டில்லிராஜா இளைத்த கையானதுபற்றி டில்லிராஜகுமாரத்திகள் பலர் கானோஜ்ராஜவம்சத்தில் மணம் பெற்றிருந்தார்கள்.

விஜயபால் ராஜாவின் மனைவிகளில் ஒருத்தி அனங்கபால் தகப்பனாகிய டில்லிராஜாவின் சகோதரி. அதாவது விஜயபால ராஜாவின் மனைவி, அனங்கபால்ராஜாவுக்கு அத்தையாகிறாள். பிறகு விஜயபால்ராஜாவின் புத்திரனான ஜயசந்தராஜா அனங்கபால் ராஜவின் ஜேஷ்டபுத்திரியை விவாகம் செய்துகொண்டிருந்தான். ஜயசந்தராஜா ஒருமுறையில் அனங்கபால்ராஜாவுக்கு அத்தைமகனும், வேறொரு முறையில் தன் சொந்த மருமகனுமானாலும், அவன், தன் கை வலுத்தகையென்பதைக்காட்டும்பொருட்டு அடிக்கடி டில்லிராஜாவோடு சண்டைக்குப்புறப்படுவது வழக்கமாய் வைத்துக்கொண்டிருந்தான். இச்சண்டைகளில் ஆஜ்மீர் ராஜா டில்லிராஜாவுக்கு பக்கபலமாயிருப்பது வழக்கம். ஒருமுறை கானோஜோடு நேர்ந்தசண்டையில் டில்லிராஜ சைனியம் முற்றும் முறிபட்டுப் போகும்போ விருக்கையில் ஆஜ்மீர் ராஜாவாகிய சோமேச காட்டிய வீர பராக்கிரமத்தினுல் கானோஜ் சேனைகள் முதுகுகாட்டித் திரும்பியோடும் படி நேரிட்டது. சோமேசர் தான்கொண்ட வெற்றியைக் கைவிடாமல் தொடர்ந்து க னோஜ் சேனைகளை காளிந்திநதி தாண் மட்டுந் துறத்தியடித்துவிட்டு அனங்கபால ஜாவோடு டில்லி வந்துசேர்ந்தான். அப்பொ ழுது அனங்கபால் சோமேசர்செய்த உதவி காக அவன்பேரில் ஆனந்தம்கொண்டு மன பூரித்துத் தன் இரண்டாவது குமாரத்தியான செல்வமகளை அவ்வெற்றி யுற்சாகத்திலே அவ னுக்கு மணஞ்செய்துகொடுத்து கனப்படுத்தி அவர்களிருவருக்குமுள்ள உறவை இதனு மிகப் பலப்படுத்திக்கொண்டான். அனங்கபா ராஜாவுக்கு இவ்விருபுத்திரிகளைத்தவிர வேறு புத்திரசந்தானமில்லை. சோமேசருக்குக்கொ த்த செல்வப்புத்திரிபேர் கமலாதேவி. ஜயசந் ராஜனுக்குக் கொடுத்த ஜேஷ்டபுத்திரிபேர் ரூ சுந்தரி. சோமேசருக்கும் கமலாதேவிக்கு உண்டான விவாகத்தின் முதல் உற்பத்திதா நமது கதாநாயகனாகிய பிரித்விராஜா. ஜயச



ராஜாவுக்குக்கொடுத்த ரூபசுந்தரிக்கும் புத்திரசந்தானமிருந்தபோதிலும், கமலாதேவி அனங்கபால்ராஜனுக்கு அருமைப்புதல்வியாயிருந்ததுபற்றியும், சோமேசர், அவனுக்கு எப்போதும் பக்கத்துணையாயிருந்து ஜயசந்தராஜாவின் கொட்டத்தை யடக்க நல்லுதவிசெய்து வந்ததினாலும் அனங்கபால்ராஜன், கமலாதேவியின் வயிற்றுட்பிறந்த ப்ரித்விராஜாவை தனக்குப் பிள்ளையில்லாததுபற்றித்தன்னுடையபட்டத்துக்கு வர தத்தெடுத்துக்கொண்டான். ப்ரித்விராஜா குழந்தையாயிருந்ததுமுதல் டில்லியிலேயிருந்து வளர்ந்தவன். தத்தெடுத்துக்கொள்ளவும், அனங்கபால், அவன் பாலப்பருவத்தைப் பாராமல் 8-வயதிலே அவனுக்குப் பட்டங்கட்டிவிட்டு, தான் தன் ராஜபத்னியோடும் பத்ரிகாச்சிரமத்துக்குச்சென்று பூர்விக ஹிந்துராஜாக்களின் வழக்கப்படி தன் கடைசிநாளை அங்கே முத்திக்கு வேண்டிய வழிதேடும் மார்க்கத்தில் கழித்துவரத் தீர்மானித்தான். அனங்கபால்ராஜன் தன்பட்டத்தரசியோடு ராஜ்ஜியபாரத்தையொழித்துவிட்டு தபசுசெய்ய பத்ரிகாச்சிரமத்துக்குச் செல்ல, சோமேசராஜா ஆஜ்மீரில் தன் சுயராஜ்ஜியகாரியங்கள் நடக்க ஏற்பாடுசெய்துவிட்டு டில்லிக்குவந்து தன்புத்திரனுக்கு வயதுவருகிறவரையில் அவனுக்காகடில்லியின் ராஜ்யபாரம் சரியாகநடந்துவர உதவிசெய்வானுனன். ப்ரித்விராஜாவுக்குவயதுவரவும் டில்லியின் ராஜ்யபாரத்தைப் பிள்ளையினிடம் ஒப்புவித்துவிட்டு தான் ஆஜ்மீருக்குச்சென்று தன் ராஜ்யத்தை ஆண்டுவந்தான். சோமேசர் இருந்தவரையில் ஆஜ்மீர் ராஜ்ஜியம் அவரால் ஆளப்பட்டு வந்தது. அவருக்குப் பிறகு ஆஜ்மீர், டில்லி இரண்டும் ப்ரித்விராஜன்கீழ் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. சேர்க்கப்பட்டபின்னும் கூட சம்பார்ராஜா என்னும் சௌஹான் ராஜாக்களின் பட்டப்பேர் ப்ரித்விராஜாவைவிட்டு நீங்கவில்லை. சகாம்பரசாகரத்தைச் சுற்றிக் காடுகள் அதிகமாயிருந்ததால் அதற்கு "ஜங்களதேசம்' என்னும் பேர்வழங்கிற்று. ப்ரித்விராஜா அங்கே வேட்டைமிருகங்கள் அதிகமாகவுள்ளதுபற்றித்தன்னுடைய பிதிரார்ஜ்ஜிதமாகிய அத்தேசத்துக்கு அடிக்கடி வேட்டையாடப் போவதுண்டு. ஆஜ்மீர்ராஜ்ஜியத்தைவிட டில்லிராஜ்யத்தின்பதவி மிகமேலானதாயிருந்தாலும், ப்ரித்விராஜா தன் பிதிரார்ஜ்ஜிதஅந்தஸ்தை அதனுல் புறக்கணித்துஒதுக்காமல், இப்பதவியில் வந்தமேன்மையால் அதுவும் மேன்மையுற்றுவிளங்கும்படி தன்னுடைய பூர்வோத்தர மகிமையில் மிகப்பெருமைகொண்டாடுபவனுகவே யிருந்தான். இப்பெருங்குணங்காரணமாக, அவன் டில்லியைத் தன் ராஜாங்கஸ்தானமாக அமைத்துக்கொண்டுஅங்கிருந்து அரசாண்டுவந்தாலும், தான்வெற்றிபெற்று உற்சவங்கொண்டாடுங்காலங்களிலும் மற்றப்படி நேரும் சந்தோஷகாலங்களிலும் சகாம்பரசாகரத்தையும் சம்பார்நகரையும் அதையொட்டியுள்ள ஜங்களதேசத்தையும்மறவாது அவற்றின்மேல் அதிகங் கருத்துள்ளவனுகக் காட்டிவந்தான். முதலதிகாரத்தில் அவன் வெற்றிபெற்று உற்சாகம்பொங்க ஊருக்குத் திரும்பும்பொழுது தன் சகாவும் வேட்டைத்தலைவனுமாகிய ஆஜானுபாஹுவோடு பேசிக்கொண்டு போகையில் ஜங்களதேசமும், சகாம்பர சாகரமும் அங்குள்ள சகாம்பரமாதாவின் சந்நிதியும் அவன் மனதைக் கவர்ந்துகொண்டிருந்ததற்குக் காரணம் இதுவே.

C. V. S.

## மிஸ் மானிங் துரைசானி விஜயம்.

லண்டனில் ஸ்தாபித்துள்ள "நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன்" சங்கத்து கௌரவ காரியதரிசியும் பரோபகார சிரேஷ்டையுமாகிய மிஸ் மானிங் துரைசானி இந்தியாவுக்கு விஜயமாக வந்திருக்கிறார். அவர் டிசம்பர் மாச மத்தியில் பம்பாய் வந்திறங்கினார். ஜனவரி, பிப்ரவரிமீ' முழுவதும் இங்கிருந்து இ

தியாவெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து அங்கங்கே ஏற்பட்டுழைத்துவரும் ஷை சங்கத்தின் கிளைச்சங்கங்கள் செய்துவரும் வேலைகளை யுணர்ந்துகொண்டு அந்தந்தச் சங்கத்து மெம்பர்கள் இன்னுமூக்கத்துடன் உழைக்கும்படி உற்சாக மூட்டிக்கொண்டு வருகிறார். இவர் பம்பாயிலிறங்கி அந்நகரில் சொற்பகாலம் தங்கியிருந்து பிறகு சூரத், ஆமதபாத் முதலிய பட்டணங்களுக்குப்போய், வட இந்தியாவுக்குப் பிரயாணமாகச் சென்று, இப்பொழுது கல்கத்தாவிலிருக்கிறார். கல்கத்தாவிலிருந்து ஜனவரிமாசம் 30-ந்தேதி சென்னைக்கு வந்து சேருவார். லண்டனிலுள்ள "நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன்" மிஸ் மேரி கார்பேன்டர் என்னும் பரோபகார சிரேஷ்டையவர்களால் முதல்முதல் ஸ்தாபிக்கப்பெற்றுப் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அச்சபையேற்பட்டதின் நோக்கம் மிக சிலாக்கியமானது. இந்தியாவில் ஜன சமூகவிர்த்தியை நாடிப் பெண்கல்வியை விர்த்தி செய்வதோடுஇந்தியர்களுக்கும் அங்கிலேயர்களுக்குமுள்ள வித்தியாசத்தையகற்றி இருதரத்தாரும் சரிசமமாகக் கலந்து ஒருவரையொருவர் உணர்ந்து நெருங்கிப் பழகிப் பரஸ்பரம் நல்லெண்ணத்தோடு நேசம் பாராட்டி வசித்துவரவேண்டுமென்பது இச்சங்கமேற்பட்டதின் பிரதானநோக்கம். இதற்கிசைய இப்பெருநோக்கத்தைக்காரியத்தில் நிறைவேறப் பார்ப்பதிலுண்டாகும் அபாரப் பொறுப்பை வலிய நாடிச் சந்தோஷமுடன் வகித்துச் சங்கத்திற்குக் கீர்த்தி யுண்டாகும்படி நடத்திவந்தார் மிஸ் கார்பேன்டர் துரைசானி. அவர் காலகதி யடைந்தபின் மிஸ் மானிங் துரைசானி மிஸ் கார்பென்டர் ஸ்தானத்துக்கு வந்து அவர் பொறுப்புகள் எல்லாவற்றையும் தம்மேலேறிய பாரமாகச் சந்தோஷத்துடன் வகித்து, சங்கத்தின் கீர்த்திக்குச் சிறிதும் குறைவுவராதபடி மிஸ் கார்பென்டர் காலத்தில் ஓங்கி வளர்ந்த கீர்த்தி இன்னு மதிகமாக மேன்மேலும் ஓங்கிவளர்ந்து பெருகி எங்கும் வியாபிக்கும்படி 20-வருஷகாலமாக இதேகாரியமாக சுத்தசித்தத்தோடு, உபகாரசிந்தையே காரணமாகத் தூண்ட அலுப்புச்சலிப்பின்றி உழைத்துவருகிறார். சுமார் 10-வருஷங்களுக்கு முன் இத்துரைசானி தாம் காரியதரிசியாகவிருக்கும் சங்கத்தின்பொருட்டு இத்தேசத்துக்கு வந்து சுற்றுப்பிரயாணம் செய்துபோனார். அவர் வந்து போனதின் பயனாக இந்தியாவில் பெண்கல்வி யதிகமாகக் கவனிக்கப்பட்டு அங்கங்கே விசேஷ பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வந்ததினால் மிக விர்த்தியாகி வந்திருக்கிறது. இப்பொழுதும் அச்சங்கத்தின் பொருட்டே அவர் இந்தியாவுக்கு விஜயமாக வந்திருக்கிறார். இவரைப்போலொத்த பரோபகாரிகளுக்கு இந்தியா எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது. அவருக்குத் தக்கபடி கைம்மாறு செய்ய நாம் சக்தியற்றவர்களாயிருப்பினும் நம்மாலாகக்கூடியது ஒன்றுளது. அது என்னவெனில், அவர் திரிகரணசுத்தியாய் அளவிடக்கூடாத ஆவல்கொண்டு நமதுநன்மைக்காக உழைத்துவருவதை நன்குமதித்து நம்முடைய நிலைமையை நாமே சீர்ப்படுத்திக்கொள்ள ஊக்கமுடனுழைத்து அவர்களுடைய பிரயத்தனங்கள் எளிதில்பயன்படும்படி நடந்துகொள்வதேயாம். இதுவும் செய்ய நாம் பின்வாங்குவமேல் இவரைப்போலொத்த பரோபகாரசிரேஷ்டர்களின் நல்லுதவியைப் பெற நாம் முற்றும் அனருகரென்று காட்டிக்கொள்வதுபோலாகும். நாளுக்குநாள் நாம் ஊக்கமுடனுழைத்து, கல்வி, யறிவு, புத்தியில் விர்த்தியடைந்து வருவோமாயின், நமது விர்த்தியைக் கண்குளிரக்கண்டு களிப்பதே இத்தகைய பரோபகாரசிந்தையர்க்கு நாம் செய்யக்கூடிய மனதுக்குகந்த மரியாதையும் கைம்மாறுமாக அவர்கள் மதிப்பார். இந்தப்பாக்கியம் இவ்விசை மிஸ் மானிங் துரைசானிக்கு விசேஷமாகக் கிடைக்க இடமுண்டென்று எண்ணுகிறோம். பம்பாயில் அவர் வந்திறங்கித்தங்கினகாலத்தில் அங்குள்ள "ஹிந்து மாதர்சங்கத்தார்" அவரைத் தங்கள் சங்கத்துக்கழைத்து வந்தனோபசாரப்பத்திரம் அளித்தது மிஸ் மானிங் துரைசானிக்கு அடங்கா



மகிழ்ச்சியை யுண்டுபண்ணி யிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அவர் சென்னைக்கு வருகையில் சென்னையிலுள்ள "நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன்" கிளைச்சங்கத்தின் முயற்சியால் தத்தம் வீட்டிலிருந்து படிக்கும்படியான பெருஞ்சாதகமனுபவித்த ஹிந்துமாதர்கள் அனைவரும் அவரை நேரிற்கண்டு உபசரிக்க விரும்பும் ஆவலில் அவர்களுடைய பம்பாய் சகோதரிகளுக்குப் பின்வாங்கினவர்களாயிரார்களென்று, பம்பாயில் மிஸ் மானிங் துரைசானிக்கு அவர்கள் நல்வரவுகூறி வாசித்த வந்தனோபசாரப் பத்திரத்தையும், அதற்கு மிஸ் மானிங் அளித்த பதிலுரையையும் தமிழில் கீழே பிரசுரிக்கிறோம்.

"பம்பாய் ஹிந்து மாதர்சங்கம்" என்பது அந்நகரிலுள்ள பலவர்ணஸ்திரீகளும் சேர்ந்து தங்களுடைய சொந்த விர்த்திக்காக ஏற்படுத்தியிருக்கும் சங்கம். இச்சங்கத்திற்கு அக்கிராசனாதிபதி, காரியதரிசி முதலிய சங்க உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் ஸ்திரீகளே. மிஸ் மானிங் துரைசானிக்கு நல்வரவு கூறியுபசரிக்கக் கூடின கூட்டத்தில் அவருக்கு உபசாரம் செய்ததும் வந்தனோபசாரப் பத்திரம் படித்தளித்ததும் ஸ்திரீகளே. கனம்பொருந்திய தாஜி அபாஜி காரெ என்பவரின் மனைவி அச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாக விருக்கும் முறையில் மிஸ் மானிங் துரைசானியை உபசரித்தழைத்துச் சென்றபின் கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் ரானடே அவர்களின் பத்தினியார் வந்தனோபசாரப் பத்திரத்தைப்படித்து அளித்தார்.

அது பின்வருமாறு :—

"மிஸ் மானிங் துரைசானியவர்களுக்கு:—நீங்கள் இப்பம்பாய்நகரத்திற்குப் பத்துவருடங்களுக்கு முன்னால் எழுந்தருளினீர்கள். அக்காலத்தில் இச்சங்கமானது ஏற்பட்டிராதபடியால், உங்களை நாங்கள் இன்று உபசரிப்பதுபோல் அன்று உபசரிக்கக்கூடவில்லை. தூரதேசமாகிய இங்கிலாந்தில் நீங்கள் வசிப்பினும் உங்களுடைய ஞாபகமானது எங்களது உள்ளத்தில் சதா குடிகொண்டிருக்கின்றது. மிஸ் கார்பென்டர் இறந்தநாட்தொட்டு, இந்தியாவின் பெண் கல்வியைப் போற்றும் பரமோபகாரியாக உங்களையே மதித்திருக்கின்றோம். ப்ரிஸ்டல்நகரத்தில் மிஸ். கார்பண்டர் துரைசானி 'நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன்' என்னும் சங்கத்தை ஸ்தாபித்தபொழுது லந்தன்நகரத்திலும் ஒருகிளைச்சங்கமானது ஏற்படுத்தப்பட்டது. இக்கிளைச்சங்கத்து கௌரவ காரியதரிசியாக நீங்கள் ஏற்பட்டீர்கள். 1877-ஆ மிஸ் கார்பென்டர் துரைசானி இவ்வுலக வாழ்க்கையை நீத்தேக அச்சங்கத்தை லந்தன்நகரத்திற்குக் கொண்டு வரவேண்டியதாயிற்று. அன்று தொட்டு இருபதுவருஷகாலமாக அந்தச்சபையின் கௌரவ காரியதரிசியாகவிருந்து உழைத்துவருகிறீர்கள். கல்விபயிலும் கருத்துக்கொண்டு இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குப் போகும் மாணாக்கர்களுக்கு வேண்டிய புத்திமதிகளை அப்போதப்போது கற்பித்து அவர்களது விஷயத்தில் அதிக சிரத்தையெடுத்துக்கொண்டு விடுமுறை நாட்களில் அவர்களை உங்களது இருப்பிடத்திற்கழைத்து மிகக் கற்றுணர்ந்த உபாத்தியாயரது பழக்கத்தை அவர்கட்குச் செய்வித்துப் பலவிதத்திலும் அவர்கட்குச் செய்த உதவியும் ஈந்த ஆதரவும் எக்காலத்தும் நாங்கள் மறக்கத்தக்கனவல்ல. இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் ஸ்நேக சம்பந்தத்தை யுண்டுபண்ணின உபகாரமானது ஒவ்வொருவரது மனதிலும் வாக்கிலும் நிலைத்து நிற்கிறது. நீங்கள் பிரசுரித்துவரும்* பத்திரிகையைப் பெரும்பாலர் கைக்கொண்டு படித்துவருகிறார்கள். பலவிதத்திலும் நீங்கள் செய்த உபகாரத்தை முன்னிட்டு இச்சபையாரும் மற்றோரும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இந்த சத்காரியத்தில் நீடித்து நெடுநாள் உழைக்கும்படியாக உங்களுக்குக் கடவுள் கருணைபுரிவாராக. இந்தச் சங்கமானது பால்யதசையி லிருக்கிறது. வாரத்திற்கொருமுறை கூடுகிறோம். இச்சங்கத்தில் இந்தியர், மகம்மதியர் இவ்வருணங்களது எல்லாப்பிரிவாரும் சேர்ந்திருக்கிறபடியால் நாங்களெல்லோரும் ஒவ்வொருவருக்குமுள்ள சினேகதருமத்தையும் உறவையும் விருத்திசெய்து பொதுநன்மைக்காகப் பாடுபடுகிறோம். பெண்கள் பள்ளிக்கூடத்தில் படித்த படிப்புடன் நின்றுவிடாமல் அப்படிப்பை மேல்மேலும் விருத்தி செய்யும்படியாக சிலவகுப்புகளை ஏற்படுத்தினோம். இந்தக் கொள்ளைநோய் வந்ததினிமித்

* "இந்தியன் மாகஸின் அண்ட் ரிவியு :" இது இங்கிலீஷில் மாதமொருமுறை பிரசுரிக்கப்பட்டுவருகிறது.

தம் அவைகளைக்கொண்டு செலுத்தமுடியாமல் நிறுத்திவிடவேண்டியதாயிற்று. ஆனால் அடுத்தவருஷத்தில் அவ்வகுப்பைக் கூட்டிநடத்துவதாக உத்தேசித்திருக்கிறோம். இப்பேர்க்கொத்த வகுப்புகள் மதிராஸ், ஐதராபாத்து முதலிய இடங்களிலுமிருக்கின்றன. எங்களுக்கில்லாத ஒரு அநுகூலம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆங்கிலேயஸ்திரீகள் இந்துஸ்திரீகளோடு யதேச்சையாய்க் கலந்து அவர்கட்கு வேண்டிய உதவியைப் புரிந்துவருகிறார்கள். நாங்களும் அவ்விதமான உதவியை அடைய அதிக ஆவற்கொண்டிருக்கிறோம். அந்தந்த சமயங்களில் ஆங்கிலேயஸ்திரீகளை நாங்கள் அழைக்கிறதுண்டு. அவர்களும் வந்து எங்களை கனப்படுத்துகிறார்கள். ஆனால் படிப்புவிஷயத்தில் எங்களுக்கு உதவிபுரிய வேண்டுமானால், அவர்கள் மராத்தி அல்லது குஜராத்திப்பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டும். உங்களது உழைப்பினால் இந்த உத்தேசமும் நாளடைவில் நிறைவேறிவிடும்.''

இந்த உபன்னியாசம் முடிந்தபிறகு மிஸ் மானிங் துரைசானி தனக்குண்டான திருப்தியையும் சந்தோஷத்தையும் தெரிவித்து இந்துஸ்திரீகள் படிப்புவிஷயத்தில் சுவல்பகாலத்தில் இவ்வளவுவிருத்தி அடைந்தது புகழத்தக்கதென்றும் அச்சங்கம் ஏற்பட்டிருக்கிறதே இனிமேல் உண்டாகப்போகிற நன்மையை நன்றுகுறிக்கிறதென்றும், இத்தகையசங்கங்கள் ஏற்பட்டிருப்பதால் எல்லாச்சாதியாரும் ஒருவரோடொருவர் கலந்து சிநேகவாஞ்சைகொண்டு ஒருவருக்கொருவர் ஒத்தாசைசெய்துகொள்ள இடமுண்டாயிருக்கிறதென்றும், அச்சங்கங்கள் ஒன்றுபத்தாய் விருத்தியாகி நாட்டுக்கு நன்மையையும் அநுகூலத்தையும் விளைக்குமென்று கோருவதாகவும் சொல்லிப் பிரசங்கித்தனர்.

இதன் பிறகு அங்குக்கூடியிருந்த எல்லாருக்கும் சந்தனம் தாம்பூலாதிகள் வழங்கச் சபையானது முடிவிற்குவந்தது.

மிஸ் மானிங் ஜனவரிஸ்ரீ 30வ சென்னை வந்துசேருவர். சென்னையிலிருக்குங் காலத்தில் மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானியுடன் அவருடைய அதிதியாகத்தங்கியிருப்பார். பிப்ரவரிஸ்ரீ 4வ மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானி, மிஸ் மானிங் துரைசனியை யெல்லாரும் கண்டுகளிக்கும் பொருட்டு ஹிந்து, ஐரோப்பியசீமாட்டிகளை யழைத்து தோட்டக்கச்சேரி வைத்து உபசரிப்பார். இது போன்ற இன்னம் சில கச்சேரிகளும் வைக்கஏற்பாடு செய்யப்பட்டுவருவதாகக்கேள்விப்படுகிறோம். கல்வியிற்பிரியமுள்ள ஹிந்துமாதர்களெல்லாரும் இச்சமயத்தைமேற்கொண்டு, மிஸ்மானிங் துரைசானியைக் கௌரவிக்கப் பின்வாங்கார்களென்று நம்புகிறோம்.

---

## சம்பகமாலை

அல்லது,

## இளையராஜாவின் தீர்மானம்.

### அங்கம். II.

ஐந்தாம்களம்.

இடம் - அந்தப்புரம்,

(சம்பகமாலை குழந்தை மொகுலுடன் ஆசனத்தின் உட்கார்ந்திருக்கிறாள்.)

லால்பாய் — சம்பகமாலையின்தோழி.

லால்பாய்.—(விரைவாய் வந்து) அம்மா! சம்பகமாலா! இதோ ராஜா வருகிறார்.

சம்பகமாலா—என்ன! (எழுந்து நின்று) இதென்ன ஆச்சரியம்? லால்பாய்! அகாலத்தில் ராஜா அந்தப்புரத்திற்கு வரும் வழக்கமில்லையே! என்ன விசேஷம், உனக்குத்தெரியுமா? லால்பாய்.

லால்பாய்.—நான் அறியேன் சம்பகமாலா! வெகு விரைவாய்த்தான் வருகின்றார்.

(ராஜா வர லால்பாய் சொல்லுகின்றாள்.)

சம்பகமாலை.—பிராணநாத்! என்றைக்கும் தாங்கள் இவ்வேளையில் அந்தப்புரத்திற்குவந்ததில்லையே!

லாகாராணு.—பெண்ணே! புருஷர் தம் மனைவியைக் காணக்காலவரையும் ஏற்பட்டுளதோ?



சம்பகமாலை.—இல்லை பிராணநாத். ஆயினும் தங்களைக்கண்டவளவில் ஏதோ விசேஷமுளதென்று மாத்திரம் எனக்குத் தோன்றிற்று. நான் நினைத்தது பிசகாயிருக்கலாமோ?

லகாராணு.—பிசகல்ல பிரியே! கணவன் குறிப்பை அறியாத மனைவியரும் மனைவியரோ! விசேஷமொன்றுளதுதான்.

சம்பகமாலை.—நான் அறியவேண்டுவதோ? பிராணநாத்!

லகாராணு.—பிரியே! நீ அறியவேண்டுவதல்லாது வேறென்ன? என்கோரிக்கையை உனக்கு அறிவித்து உன் அனுமதியைப் பெறுவதற்கன்றோ நான் இங்குவந்தேன்.

சம்பகமாலை.—உங்களுக்கு மனமிருந்தால்கேட்கச்சித்தமாயிருக்கிறேன் பிராணநாத்! உங்களது கோரிக்கைக்கு என் அனுமதி எண்ணத்திற்கு? விரோதமாய் எதும் செய்யத் தகுந்தவளோ நான்.

லகாராணு.—இல்லை, பிரியே! ஆகிலும் நான் வந்த காரியத்தை உனக்கு அறிவிப்பது ஆவசியகம் சிலநாளைக்கு முன்பு நான் இத்தேசத்தை விட்டு அடித்துத்துறத்தின தார்தாரி மகமதியர்கள் கயைக்குச் சென்று அங்கு கோவிலையிடித்து, கோக்களை வதைத்து, பிராமணர்களை இம்சித்து, கயையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்களாம். அவர்களால் இம்சிக்கப்பட்ட மூன்று பிராமணோத்தமர்கள் இன்று இங்கு வந்து அவர்களை அவ்விடத்தினின்று துறத்த வேண்டுமென்று என்னைக்கோரிக்கொண்டார்கள்.

சம்பகமாலை.—ஹா! மகாபாதகர்கள்! அவர்களை அவ்விடத்தினின்று துறத்திப் பிராமணர்களையும் சாதுக்களையும் ரக்ஷிப்பது க்ஷத்திரியர்களுடைய கடமையே! வேண்டிய சைந்நியத்தை அனுப்பவேவேண்டும். நாம் அந்தச்சகாயம்செய்யாவிடில் அவர்களுக்கு எவர் சகாயம் செய்யப் போகின்றார்கள்.

லகாராணு.—தடையின்றி நாமே சகாயம் செய்ய வேண்டும். வேண்டிய சைந்நியங்களைச் சேகரித்துக் கொண்டு நானே அவைகளுக்குத் தலைவனாகச் செல்லப்போகின்றேன். அப்படிச் சென்றுபிரம்மகுலத்தையும், தேவாலயத்தையும் காப்பாற்றாவிடில் நான் இக்ஷத்திரிய ஜன்மம் எடுத்ததற்கு யாதுபலன்? அரசனாயிருந்து நான் அறியாமற்செய்த பாவங்களை எப்படித்தொலைப்பேன்?

சம்பகமாலை.—தாங்கள் சொல்வது சத்தியம் பிராணநாத்! க்ஷத்திரிய ஜாதியில் ஓர் பெண்ணாய்ப் பிறந்து உலக ரக்ஷணைக்காகச் செல்லும் பதியைப் போகவேண்டாமென்று சொல்லுவேனோ? ஒருக்காலும் மாட்டேன். ஆயினும் மொகுல் குழந்தையாயிற்றே, விட்டுச் செல்லலாமா?

லகாராணு.—அது உண்மையே. குலதர்மத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்ட க்ஷத்திரியனுக்கு இத்தகைய பந்தங்கள் கூடாதுதான். காரியம் அவ்வாறு நடந்துவிட்டது. என்செய்வது? எனக்கோ விருத்தாப்பிய தசை வந்துவிட்டது. காயம் நிலையாதது. நற்காரியங்களைத் தாமதிக்கக் கூடாது. இனி என் வாணாளைப் பரலோக சுகத்தின் பொருட்டு கழிக்க எண்ணங்கொண்டிருக்கின்றேன். கற்றறிந்த மானிடர் தம் வாணாளைப் பருவத்துக்கேற்ற கருமஞ்செய்து கழித்திடுவார்கள். எனக்கு இப்போது கிடைத்திருக்கும் மூப்பை பேரின்பத்தின் பொருட்டு கழித்திடாமல் சிற்றின்பத்தின் பொருட்டு கழித்திடுதல் உசிதமா சொல். காலத்துக் கேற்ற கர்மம் செய்யா மானிடரை உலகத்தார் பழிக்கமாட்டார்களா?

சப்பகமாலை.— பழிப்பார்கள் பிராணநாத். அப்பருவம் எனக்கு வந்திலதாயினும் பர்த்தாவின் தர்மத்தை பாரியையும் ஆசரிக்கத் தகுந்தவளானமையினால் நானும் உமது வழியிலேயே செல்லச் சித்தமாயிருக்கின்றேன் ஸ்திரீகளுக்குக் கணவன் சென்றவழி செல்லுதலே பரமாசாரம். கணவனிருக்குமிடமே அரண்மனை மாளிகை. சீதை தன் கணவனுடன் காடுபுகவில்லையா? சாவித்திரி தன் கணவன் பின்னர் யமலோகம் செல்ல முயன்றாளன்றோ. உம் பின்னால் உமது நிழல்போல் செல்லச் சித்தமாயிருக்கின்றேன்.

லகாராணு.—பெண்ணே! யுத்தத்துக்கா என்னோடு கூடவரப் போகின்றாய்? ஒருக்காலும் அது கூடாது. குழந்தையைப் பாதுகாப்பவர் யாவர்,

மேலும் யுத்தத்துக்கு ஸ்திரீகளை அழைத்துச் செல்வதுண்டோ!

சம்பகமாலை.—ஆ! பிராணநாத்! என்னை இங்கு விட்டா தாங்கள் தனியாய்ச் செல்லப்போகின்றீர்கள். இஃது தர்மமா தங்களுக்கு? ஆயுள் முழுமையும் கூட இருந்து தர்மார்த்த காம மோக்ஷங்களை அனுபவிப்பதாய் அக்கினியின் முன்னர் உறுதிமொழி கூறினதையும் மறந்து விட்டீரோ பிராணநாத்! விருத்தாப்பிய காலத்திலேனும், மோக்ஷ உபாயம் தேடும்போதேனும் பாரியையை ஒதுக்கும்படி சாஸ்திரங்கள் சொல்லவில்லையே. யுத்தத்திற்குக்கூட தசரதர் தமது பாரியையை அழைத்துச் செல்லவில்லையா. வைராக்கிய செல்வத்தைப் பெற்று தவம் புரியச் சென்ற அனேக ராஜாக்கள் தம்மனைவியருடன் சென்றிருக்கின்றார்களே! வீடு, நாடு, புத்திரர், செல்வம் எதுவிட்டொழிந்தாலும் தங்கள் சுகதுக்கங்களைப் பங்கிட்டுக் கொண்ட மனைவியரைக் கணவர்விட்டுச் செல்லலாமா? சூரியனைவிட்டுப் பிரகாசமிருக்குமா? உடலை விட்டு உயிர்நிற்குமா? தங்களுக்குப்பணிவிடை செய்யும் கடமை எனதன்றோ! என்னைக்கூட அழைத்துச் செல்வதே உசிதம் பிராணநாத்! பர்த்தாவைவிட்டுப் பிரிந்திருத்தல் பதிவிரதைகளுக்குப் பெருந்துக்கமன்றோ? உங்களை விட்டு நான் எப்படி யிருப்பேன்?

லகாராணு.—பெண்ணே! திருஷ்டாந்தங்கள் இரு பக்கமும் கூராக்கப்பட்ட வாட்களைப் போன்றன. பூர்வகாலத்தவருடைய நடை உடைகளைக் கண்டு நிகழ்கால வழக்கங்களுக்கு மாறாக எதும் செய்யலாகாது. யுத்தத்திற்கு உனை யழைத்துச் செல்லுதல் சரியன்று. என் சொல்லை மறுக்காதே பெண்ணே.

சம்பகமாலை.—பதில் பேச வொட்டாமல் என் வாயை மூடிவிட்டீர்கள் பிராணநாத். நான் என்செய்யப் போகின்றேன்! உங்கள் மனதிற்குத் தோன்றியவாறு செய்யலாம்!

லகாராணு.—பிரியே! மற்றோர்விஷயம். நம் குழந்தை மொகுல் இளங்குழந்தையா யிருக்கின்றான். இவ்விராஜ்ஜியபாரத்தைவகிக்க ஏற்றவனல்லன். அவனுக்குத் தகுந்த வயது வந்து தானே ஆளுகை ஏற்றுக்கொள்ளும்வரையில் இவ்விராஜ்ஜியத்தை சோண்டாவினிடத்தில் ஒப்புவிக்கலாமென்று நினைக்கின்றேன். இந்த ராச்சியத்தை முறையாய்ப் பரிபாலிக்கவல்லவர் வேறெவருமில்லை. அவனிடத்தில் ராஜ்ஜியத்தைப் பரிபாலிக்கவிடுவது உனக்குச் சம்மதமா?

சம்பகமாலை.— எனக்கு ஆக்ஷேபம் கிடையாது. நானும் அவன்தான் ஏற்றவனென்று நினைக்கின்றேன்.

லகாராணு.—போய்வருகிறேன் பிரியே! வியசனப்படாதே. சோண்டாவை உன் சொந்தப் புத்திரனைப்போல் பார்த்துக்கொள். (மொகுலைப் பார்த்து) குழந்தாய், மொகுல்! நான் ஊருக்குப் போய்வரட்டுமா?

மொகுல்.—எனக்கு ஒரு குதிரைவேண்டும் கொண்டு வருகிறாயா பாப்.

லகாராணு.—கொண்டுவருகிறேனப்பா.

(முத்தமிட்டுச்செல்லுகிறான்.)

சம்பகமாலை.—(ஆசனத்தில்சாய்ந்துகொண்டு) யுத்தத்திற்குச் செல்லும்படி அனுப்பிவிட்டேன். இனி எனக்கு என்னவிருக்கின்றது? யார் பந்து, யார் ரக்ஷகன்? எனதுவாழ்க்கையில் சுகமேனும் துக்கமேனும் அற்பகாலம் தோன்றித் தோன்றி மறைந்து என்மனதை அலையாய்ப் பாயச்செய்தன. சுபங்கள் வருவனபோல் காணப்பட்டு மறைகின்றன. அசுபங்கள் அந்தகாரம்போல் கவர்ந்து வருகிறகாலத்தில் காற்றாலடிபட்டு ஓடும் மேகங்கள்போல் சிதறுண்டு ஓடுகின்றன. சுகமென்பதைக் கொஞ்சக்காலமாயினும் அனுபவித்துத் திருப்தி அடைந்தேனில்லை. கைக்கெட்டினது வாய்க்கு எட்டவில்லை யென்பதுபோல் விவாகசமயத்தில் என் துரதிருஷ்டம் விபரீதத்தை விளைவித்தது. பிறகு அற்பகாலம் புத்திரனுற்பத்தியால் சந்தோஷமடைந்தேன். வந்துவிட்டது மறுபடியும் என் துரதிருஷ்டகாலம். அந்தோ! எனக்குக்கிடைத்ததே பெரியதென்று மனச்சமாதானமடைந்து என்காலத்தைக் கழித்துவந்தேன். தெய்வமே! அதையும் நீ சகிக்கவில்லையோ? என்பர்த்தாவை என்னின்று பிரித்துவிட்டாயே! அருமையான என்னொரு குழந்தைக்குக் கிடைக்கப்போகிற பெருஞ்செல்வமொன்றில்லாவிடி லிவ்வுயிரை ஒருக்ஷணமேனும் வைத்திருக்கமாட்டேன். என்னத்திற்கு இந்த ஜன்மம். ஏகலிங்கா! கருணை கூறாயோ.

(போகிறாள்.)

எச். வெங்கோபராவ்.



TO OUR SUBSCRIBERS.

Owing to unexpected difficulties and delay in the Press, the December No. has been unusually delayed in publication. We are doing our best to expedite work with the limited resources at our disposal and hope soon to revert to our usual time of publication.

நமது சந்தாதாரர்களுக்கு.

எதிர்பாராச் சில அசந்தர்ப்பங்களும் அச்சாபீஸில் தாமதமும் நேரிட்ட காரணத்தால் டிசம்பர்மாசத்துச் சஞ்சிகை மிகவும் தவக்கப்பட்டுப்போய்விட்டது. நம் மாலானவரையில் வேலை சீக்கிரம் நடக்க முயற்சித்து வருகிறோம். நேரிட்ட காலதாமதத்தை நிவர்த்தித்து வழக்கம்போல் சீக்கிரம் பிரசுரித்துவருவோம்.

INDIA: VERNACULAR EDUCATION.

(From the Asiatic Quarterly Review for January, '99.)

We are favoured with two important pamphlets on the "Encouragement of Vernaculars" being reprints of very able articles by C. V Swaminathaiyar which have appeared in the *Madras Mail* and *Madras Review*. In earnest and forcible language, the author points out the radical defects of the present system of education in the Universities and Government Schools. Too much stress has been hitherto placed on the desire of parents to see their children educated in English with the view of speedy employment, and on the side of those who control the University System to prepare students for official appointments. The author shows that each of those views is radically wrong as violating the first principles of social life and educational training. In the elementary and secondary schools, the youth ought to be taught in the "vernaculars," in order that they may grasp their own tongues, and be useful in their various spheres of social life; and in the Universities the study of vernacular literature ought, at least to have an equal place with English. Thus by English modes and training, from the University down to the lowest elementary school, the acquisition of knowledge in native languages and literature would be encouraged and promoted, instead of by the present system allowed to fall into desuetude. This is a natural and most reasonable mode of procedure, and the only way by which the Masses of the people can be truly educated, and inspired not only with a love of their own language, but a love of their past literature and history. As it has been indicated by the able writer, true education is not to "manufacture candidates for office," but to make them men—good parents, loyal citizens, enlightened and capable administrators, and just and beneficent rulers. We most cordially recommend the perusal of these pamphlets by all who desire to promote the happiness and permanent welfare of India.


THE VIVEKA CHINTAMANI SERIES.

**Printed in large type on good paper in a Handy Form.**
Neatly got up and Tastefully bound.
*16 mo. Full cloth, Gilt Back, Ornamental Sides.*
Also a Special Edition, Extra gilt, suitable for prizes, &c.

**Life of H. M. Queen Victoria, Empress of India**: with 27 Illustrations and an Appendix describing the constitution of the Government of India and of the India office, London. 293 pp. Rs. 1-4 By V. P. P. Rs. 1-8.
Special edition, extra gilt, Rs 1-6. V. P. P. Rs 1-10

**The Story of the Life of Buddha,** Describing the Great Renunciation, (Mahabhinishkramana) as depicted by Sir Edwin Arnold in his Light of Asia. 14 As. By Post Re. 1, or By V. P. P. 1-2
Special edition, extra gilt, Rupee 1. By V. P. P. Rs. 1-4.

**The Viveka Manjari:** A Tamil Miscellany of Instructive and Entertaining Tracts, Vol. I, containing (1) The Story of Colbert, (2) Fairy Tell-True, (A Tale) & (3) Life of Sivaji. Handsomely Bound in Full Cloth, Gilt Back, Ornamental sides, 14 As. By V.P.P. Rs. 1.2.
Special edition, extra gilt, Re. 1. By V. P. P. Rs. 1-4.
Or Separately in full cloth, without gilt letters, as follows:—

1. *Story of Colbert*: The Draper's Apprentice, who became prime-minister. 5 As. By V. P. P. 8 As.
2. *Fairy Tell-True*: 5 As. By V. P. P 8 As.
3. *Life of Sivaji*: 6 As. By V. P. P. 9 As.

**Kamalambal or the Fatal Rumour:** A Novel in Tamil of absorbing interest. 430 pp. 16-mo. Price Rs. 1-8. Postage 3 As. By V. P. P. Rs. 1-14-0.
Special edition, extra gilt, Rs. 1-12-0. Postage Extra.

**Vivekarasattalattu** (A Lullaby), 6 pies. Postage 6 pies.

*Apply to:* **C. V. Swaminatha Aiyar,**
*Secretary, D. K. Agency,*
*Triplicane, Madras.*

Prices quoted are net. Orders unaccompanied by remittance will be executed by V. P. P.

## VERNACULAR STUDIES IN MADRAS.

Being reprint of a series of 4 articles originally contributed to the "Madras Mail" by C. V. Swaminatha Aiyar, with an Introduction by Henry K. Beauchamp, Editor of the Madras Mail. Demy. 8 vo. 32 pp. Price 4 As Postage Extra.

## THE ENCOURAGEMENT OF VERNACULARS.

A paper contributed to the "Madras Review" by C. V. Swaminatha Aiyar. Royal 8 vo. 24 pp. Price 3 As. Postage Extra.

To be had of,

The Diffusion of Knowledge Agency,
*Triplicane, Madras.*

---

### விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள்.

இவை ஒவ்வொன்றும் நாணயமான இங்கிலீஷ் பைண்டு செய்து கில்ட் எழுத்துகள் பதித்துள்ளன.

மாக்ஷிமைதங்கிய இந்தியா சக்கிரவர்த்தினியாகிய விக்டோரியா மஹாராணியவர்கள் சரித்திரம். 27-படங்களோடும், இந்தியாகவர்ன்மெண்டு, இந்தியாஆபீஸ் இவைகளின் அமைப்பு, அமுல்செலுத்தும் முறை விவரங்களோடும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1-4. V.P.P. ரூ. 1-8. அதிககில்ட்கொடுத்தது: ரூ. 1-6. V.P.P. ரூ. 1-10.

புத்தரது திவ்விய சரித்திரம். -- விலை அணா 14. V.P.P. ரூ. 1-2. அதிக கில்ட்கொடுத்தது: ரூ. 1. V.P.P. மூலமாக ரூ. 1-4.

விவேகமஞ்சரி.—புஸ்தகம் 1. இதிலடங்கியவை: (1) கோல்பர்ட்சரித்திரம். (2) சத்தியதேவதைக்கதை. (3) சிவாஜிமஹாராஜா சரித்திரம். விலை அணா 14. V.P.P. ரூ. 1-2. அதிக கில்ட்கொடுத்தது: ரூ. 1. V.P.P. ரூ. 1-4.

இம்மூன்று புஸ்தகங்களும் கில்ட் எழுத்துகளின்றி காலிகோகட்டடம்செய்து தனித்தனியாகவும் கிடைக்கும்:

(1) கோல்பர்ட் சரித்திரம்: துணிவியாபாரி கடையிலிருந்து முதல்மந்திரி ஸ்தானத்துக்கு வந்த வாலிபன்கதை. விலை அணா 5. V.P.P. அணா 8.

(2) சத்தியதேவதைகதை: விலை அணா 5. V.P.P. மூலமாக அணா 8.

(3) சிவாஜி மஹாராஜாசரித்திரம்: விலை அணா 6. V.P.P. மூலமாக அணா 9.

ஜூபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம். விலை ரூ. 1-8. V.P.P. ரூ. 1-14. அதிக கில்ட் கொடுத்தது: ரூ 1-12. V.P.P. ரூ. 2-2.

விவேகரஸத்தாலாட்டு. 6 பை. தபாற்கூலி 6 பை. வேண்டுவோர் சென்னை திருவல்லிக்கேணி அ. டி. ஏஜன்ஸி காரியதரிசி ஸி. வி. சாமிநாதய்யர் அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## MADRAS RAILWAY CO.

### சென்னை ரயில்வே கம்பெனி.

### மெதுவு செய்யும் எண்ணெய் சப்ளை செய்கிறவர்கள் தேவை.

எஞ்சின், ஜனங்கள் உட்காரும் வண்டிகள், சாமான்க[ள்] முதலியவைகளை மெதுவுசெய்ய 684 பாரம் எண்[ணெ]யும் எஞ்சின்களின் வால்வு, பிஸ்டன் முதலியவைகளை [மெதுவு]செய்ய 45 பாரம் ஸிலிண்டர் எண்ணெயும் சப்ளை[க்கு] டெண்டர்கள் சென்னை ஏஜண்டு அண்டு மானேஜர் [ஆபீ]ஸில் ஏற்றுக்கொள்ளப்படும். இராயபுரம் பண்டசா[லை]... எண்ணெய்களைக் கொடுக்கவேண்டும்.

1899-ளு ஜனவரிமீ 12உக்கு முன்பாக ஒவ்... திலுசிலும் அரைகாலன் விழுக்காடு நன்றுகமூடி டெ... ரின் பெயரையும் எழுதி அனுப்பவேண்டும். அதேப... 25-உ க்குள்ளாக "மெதுவு செய்யும் எண்ணெ[ய்] டெண்டர்கள்" அல்லது "ஸிலிண்டர் எண்[ணெய்] டெண்டர்கள்" என பின்னால் எழுதி டெண்டர்கள் ... பாரங்களை ஜெனரல் ஸ்டோர்கீபரிடம் பெற்றுக்கொள்ள... சப்ளை செய்பவர்கள், பாரத்தில் எண்ணெயின் ம... கொட்டை முத்தெண்ணெய் அல்லது வேறு எண்ணெ[ய்]... அல்லது மினரல் எண்ணெய் சாதாரணமாய் மெதுவு... வதற்கு மாத்திரம் ஸிலிண்டர் மெதுவுக்காக தனிமை... எண்ணெய் எத்தேசத்திய எண்ணெய்முதலிய முழு வி... களும் கண்டிருக்கவேண்டும். தந்திமூலமாக டெண்ட... தெரியப்படுத்தக்கூடாது. ஒவ்வொரு டெண்டரும்... பெனி கேஷியரிடம் ரூ. 500 - கட்டவேண்டும். க... ராக்டைப் பூர்த்திசெய்யாத டெண்டர்கள் தாங்கள் கட... தொகையை இழந்துவிடுவார்கள்.

ஜெயமடைந்த டெண்டரர் ஸ்டாம்பு செலவும், ... ணெய் கொடுப்பதாக ஒத்துக்கொண்டதின் கிரய... 100-க்கு 10-வீதம் பணமாகவாவது அல்லது கவர்ன்மெ... செக்யூரிடியாவது கண்டிராக்டைப் பூர்த்திசெய்வதின் ... ருட்டு செக்யூரிடியாக கம்பெனியில் டிபாஸிட்டு கட... தாக ஒரு உடன்படிக்கைப் பத்திரத்தில் கையெழு[த்து] போட்டு கொடுக்கவேண்டும் மெதுவு எண்ணெய் பின்... மாறு கொடுக்கப்படவேண்டும்.

1899-ளு பிப்ரவரிமீ முதற்கொண்டு ஜூலைமாத ... வதும் 684 பாரம் ஒவ்வொரு மாதத்திலும் முதல்... முதற்கொண்டு 10 தேதிக்குள் 114 பாரம் விழுக்காடு... டப்படவேண்டும். ஒத்துக்கொண்ட டெண்டர் காப்... மாதிரிப் பிரகாரம் கிரமமாய் கொடுக்கவேண்டும். இ... விடின் ஒத்துக்கொள்ளப்படமாட்டாது.

இரண்டு, மூன்றுகவாவது சப்ளை செய்கிறவரின் ... ரிபப்பிரகாரம், ஸிலிண்டர் எண்ணெய் முழுவதை... ஒரே தவணையிலாவது அல்லது (கண்டிராக்டு ஒத்துக்கொ[ண்]... ட தேதிமுதல் ஆறுமாதத்திற்குள் முழுதொகை... பாதிபாகத்தை கண்டிராக்டர் கட்டும்பக்ஷத்தில்) அ... லாம். ஏஜண்டு மானேஜரவர்கள் வேறே குறைந்த ... கொடுக்கும்படியான டெண்டர்களை ஏற்றுக்கொள்ள கட்... யப்பட்டவரல்ல.

சென்னை றெயில்வே ஏஜண்டு மானேஜர் ஆபீஸ்,
இராயபுரம் டெர்மினஸ்,
1898-ளு டிசம்பர்மீ 12உ.

LOUIS, S. MOSS
ஏஜண்டு அண்டு மானேஜர்.

---

சாதாரண காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி. $5\frac{1}{2}$ அணா,,
பழையபிரதி. 6 ,,

சந்தாவிலை விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6-மாதத்துக்கு ரூ. 2-2.




அறிவைப்பரவச் செய்வதற்கான
மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing seperately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம். 7.] 1899ளு ஜனவரிமீ [இலக்கம். 9.

### Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As, : Back Nos. 8 As. each.

English & Foreign Subscription 7s. 6d net per annum

**Thin Paper Edition** for the People:—

Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.
Single copy, current No. $5\frac{1}{2}$ As. Back Nos. 6 As. each
English & Foreign Subscription 5s. 6d net per annum.

**If Strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions Entered to begin with only April or May of each year Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V.P.P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:— அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள். புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5.
தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசான காகிதப்பதிப்பு:— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறுமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V.P.P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## சஞ்சோக்தை சுயம்வரம்.

அல்லது,

## ப்ரித்விராஜா சரித்திரம்.

### VII. ஓர் ராஜசூய யாகம்.

ப்ரித்விராஜா டில்லிப்பட்டத்துக்கு வந்தபொ
ழுது அவனுக்குவயது எட்டே. முதலதிகாரத்
தில் நடந்த சம்பவம் நேர்ந்தகாலத்திற்கும்
அதற்கும் சுமார் 25-வருஷம்வித்தியாசமுண்டு.
இந்த 25 - வருஷகாலத்துச் சங்கதிகளேயும்
காலதோரணைப்படி சொல்லின் கதை மிக வி
ரிந்து வளர்ந்துவிடும். ஆகையால் சுருக்கமாக
அங்கங்கே சந்தர்ப்பங்கள் நேருமிடத்துத் தெ
ரிந்து கொள்ளவேண்டிய சங்கதிகளேமட்டும்
சமயோசிதமாகவெடுத்துரைப்போம். ப்ரித்
விராஜா டில்லிப்பட்டத்துக்கு வந்ததும் அனங்
கபால்ராஜா பத்ரிகாச்சிரமத்துக்குத் தன் ராஜ
பத்னியுடன் தபசுசெய்யப் போய்விட்டான்.
அனங்கபால் தோமர ஜாதிராஜபுத்திர வமிசத்
தைச் சேர்ந்தவனுக விருக்க, ப்ரித்விராஜா சௌ
ஹன் ஜாதிராஜபுத்திரனு யிருந்ததால், முத
லில் தோமரஜாதியைச் சேர்ந்த சாமந்த, சீமந்தர்
கள் புது ஒழுங்கில் சௌஹன் ஜாதி ராஜபுத்
திரர்களுக்கே அதிகாரமும் செல்வாக்கும் கி
டைக்கிறதென்று முறுமுறுத்துப் புகார்செய்
தார்கள். இவர்கள்முறுமுறுப்பு மாளவதேசம் வ
ரையில் எட்ட, அத்தேசத்தரசனுன மஹி
பால் ராஜா தோமரஜாதி ராஜபுத்திரர்களுக்குப்
பரிந்துகொண்டு ஆஜ்மீர் ராஜ்ஜியத்தின் முக்கி
ய பட்டணமாகிய சம்பார் நகரைப் பிடித்துக்
கொண்டு, பிறகு டில்லியையேநேரில் போய்ப்
பிடித்துக் கொள்கிறதென்று படையெடுத்து
வந்தான். ப்ரித்விராஜாவின் தகப்பனுகிய சோ
மேசர் இந்த சங்கதியறிந்து தந்திரமாக இராக்
காலத்தில் மஹிபால் ராஜாவின் சேனைகளின்
மேல் விழுந்து முறியயடித்துப் புறங்காட்டி
யோடும்படி துறத்தியடித்து விட்டான். பிறகு
பத்ரிகாச்சிரமத்திலிருந்த அனங்கபால் ராஜன்
தன் பிரஜைகள் கஷ்டப்படுகிறார்க ளென்று
கேள்விப்பட்டு இராஜ்யத்தைத்திரும்பவும் தன்
னிடம் ஒப்புவிக்கும்படித் தூதனுப்பினுன்.
சோமேசர் தன்பிள்ளைக்கென்று தானம்செய்து
கொடுத்தபின் இராஜ்ஜியத்தைத்திரும்பக் கொ
டுப்பது தன் ஆண்மைக்குக்குறைவென்று
கருதி மறுத்தான். அதன்மேல் அனங்கபாலன்
கோரிநாட்டுக்குச் செய்தியனுப்பி ஷஹபுடீனைத்
தனக்குதவிசெய்யும் பொருட்டுப் படைகூட்டி
வரக் கேட்டுக்கொண்டான். ப்ரித்விராஜாவும்
அவன் தகப்பனர் சோமேசரும் அந்நியன் உத
வியைக்கோரி அவனை நாட்டுக்குள் அழைக்
காமலிருக்கக் கேட்டுக்கொண்டும் அனங்கபால்
கேட்கவில்லை. இருதாரத்தாருக்கும் யுத்தம்
நடந்ததில், ப்ரித்விராஜா, அனங்கபாலேக்கொல்
லாமல் உயிரோடு சிறைப்பிடிக்கும்படி கட்ட
ளையிட்ட பிரகாரம் அவனுடைய தளகர்த்தர்
கள் பிடித்துவர, ஷஹபுடீனும் தோல்வியடை
ந்து சிறைப்பட்டுப்போனுன். இருவரையும்
பிடித்துக்கொண்டு டில்லிக்குத்திரும்பி, அனங்
கபால்ராஜனுக்குத் தலைநகரில் எவ்வித மரியா
தையும் உபசாரமும்செய்து, திங்குசெய்யமட்
டும் அவனுக்கு இடங்கொடுக்காதபடி கட்டுப்
பாடுசெய்து, ஒரு வருஷத்துக்குமேல் தன்னி
டம் வைத்திருந்தான். ஷஹபுடீன் சில காலங்
கழித்துப் பெருந்தொகையளித்துச் சிறைமீட்
டுக்கொண்டு வீரமழிந்து வெட்கித் தன் தேசத்
துக்குச்சென்றுன். அனங்கபால் கூடவிருந்த ஒ
ருவருஷகாலத்தில் ப்ரித்விராஜா தோமர, சௌ
ஹன் ஜாதிராஜபுத்திரர்களிருவர்க்கும் பொது
வாயிருந்து இருதாத்தார் பிரீதியையும் பெற்
றுத் தன் அதிகாரம் மிகப்பலப்பட்டு ஓங்கிவளர
சகல சாம்பிராஜ்யங்களும்பெற்று ஆளுகைசெய்
துவந்தான். அனங்கபால்ராஜா ஒருவருஷத்துக்
குமேலிருந்து பார்த்துவிட்டு, பின்னும் யுத்தம்
செய்து தன் இராஜ்ஜியத்தை மீட்டுக்கொள்கி
றதா அல்லது முன்போலப் பத்ரிகாச்சிரமத்
துக்குப்போய் தபசுசெய்கிறதா வென்று



ஆலோசனைகேட்க, தனது மந்திரியும், ராஜபத்
னியும் யுத்தம் வேண்டாம் தபசுக்குப்போவதே
உத்தமம் என்றுசொல்ல, அந்தமட்டில் திர்ப்தி
யடையாமல் தனது அரண்மனை ஜோஸ்யனை
யழைத்து ஆலோசனை கேட்டான். அவன்
சொன்னதும் அவர்கள்சொன்ன ஆலோசனைக்
கிணங்கியிருக்க, ப்ரித்விராஜாவினிடம் தன்னை
பத்ரிகாச்சிரமத்துக்கு அனுப்பிவிடும்படி கேட்
டுக்கொண்டான்.

ப்ரித்விராஜா டில்லியிலேயிருந்துகொண்டு
தன்னுடைய நியமநிஷ்டைகளை யனுஷ்டித்து
வரும்படிக் கேட்டுக்கொண்டும் தனக்கு பத்ரி
காச்சிரமத்துக்குத்திரும்புவதிலே மனம் அதிக
மாகவிருப்பதால் அங்கேயனுப்பும்படி கேட்டுக்
கொள்ள, அவனும் தக்க பிருது வெகுமதிக
ளோடு உபசரித்தனுப்ப, பத்ரிகாச்சிரமம் சேர்
ந்து தபசுசெய்து காலத்தைக் கழிப்பானுயி
னுன். ப்ரித்விராஜாவுக்கு வயது வளரவும்
அவன் அதிகாரம் இராஜ்ஜியத்தில் பலப்படவும்
ஹிந்துஸ்தான முழுவதிலும் சிறந்தவர்களெ
ன்று சொல்லத்தக்க சாமந்தர்களும் சிற்றரசர்
களுமான சுத்தவீரர்கள் நூற்றியெண்மர் தன்
னைப்புடைசூழ்ந்து ஆதரிப்ப, சுற்றுமுள்ள
அரசர்களில் பகைத்தாரைப் பங்கப்படுத்திச்
சேர்ந்தாரைச் சிலாக்கியப்படுத்தி அவனுடைய
கீர்த்திப் பிரதாபம் நாலாதிசையும் பரவிப் பிர
காசிக்க, வடக்கேயிருந்து வந்த மகம்மதியர்
களைப்பலமுறையும் எதிர்த்துவென்றுப் பெருங்
கீர்த்திபெற்ற பிரதாபவீரனுக விளங்கினுன்.
இவன் 12 வயதாக விருக்கும் பொழுதில்
போர்முகத்தில் மகாகீர்த்திபெற்று வில்வித்
தை வாள்வித்தை ஆனையேற்றம் குதிரையேற்
றம் இவற்றில் மிகத் தேர்ந்தவனுகி தனக்கு
நிகர் யாருமில்லையென்று சொல்லுப்படி கீர்த்
திபெற்று விளங்கினுன். ராஜபுத்திரர்களுக்
குள் "வீரனுக் குரியர் வனிதையரில்மேலோர்"
என்னும் கருத்து விசேஷமாகப் பரவியிருந்த
மையால் அழகில் மிகுந்த இராஜகுமாரத்தி
களின் பொருட்டு ராஜாக்களுக்குள் அடிக்கடி
சண்டை சச்சரவுகள் நேரிடுவதுண்டு. இவை
சிலசமயங்களில் பெரும் போராகமுடிவதும்
சகஜமே. ஒருவருக் கொருவர் போட்டியாக
நிற்கும் ராஜாக்களில் ஒரு அரசனுக்குக் கொடு
ப்பதாகப் பேசிய பெண்ணை அவனுக் கெதிரியா
ன ராஜா பலாத்காரமாய்க் கொண்டுபோய் தா
னே விவாகம் செய்துகொள்வதுண்டு. இப்ப
டிச் செய்வதில் தன் வீர பராக்கிரமத்தைக்
காட்டுவதற்குக் காரணமேற்படுவதன்றி அத
ற்குடனே பலனும் கைகூடி எதிரியை அவ
மானப் படுத்தினது போதுமாவதால் தன்கை
வலுத்தகையென்று காட்ட இவ்விதம் நடத்
தல் இராஜபுத்திர வீரர்களுடைய மனதுக்
கிதமான வீரப்பிரதாபச் செய்கையாக மதிக்கப்
பட்டு வந்தது. இப்படி, ப்ரித்விராஜா ஒருதரம்
ஜயசந்தராஜாவுக்குக் கொடுப்பதாக நிச்சயித்
திருந்த தேவகிரிராஜா புத்திரியாகிய சசிவ்
ரிதா என்னும் பேருடைய இராஜகுமாரத்தி
யை பலாத்காரமாய்க் கொண்டுபோய் விவாகம்
செய்துகொண்டு விட்டான். இதனுல்,
கானேஜ், தேவகிரி ராஜாக்களோடு பெரும்
போர் புரியும்படி நேரிட்டது. இப்போரில் ப்ரித்
விராஜாவின் தளபதிகளில் ஒருவனும் அவனுக்
கு நெருங்கிய பந்துவும் சிநேகனு மாகிய சாமு
ண்டராஜ் என்பவன் தேவகிரி கோட்டையைப்
பிடித்து டில்லிக்குள்பட்டதாகச்செய்து அந்த
ராஜா ப்ரிதவிராஜாவுக்குக் கப்பம் கட்டிவரும்
படிச் செய்தான்.

இஃதன்றி சகபந்துக்களான இராஜபுத்திர
வம்சத்திலும், சிநேகத்திலும் பாந்தவியத்தி
லும் நெருங்கினவர்களென்று கொண்டு
கொடுத்து விவாகஞ் செய்து கொள்வதுமுண்
டு. இதற்குகாரணமாக சாமுண்ட ராஜாவின்
சகோதரி புண்டிரிதஹிமி யென்னும் பேருடை
ய'பயானு' † நாட்டு இராஜகுமாரத்தியை ப்ரித்
விராஜா ஏற்கனவே தன் மூன்றுவது மனைவி
யாக விவாகஞ் செய்து கொண்டிருந்ததைச்

† ஆக்ராவுக்குத் தென்மேற்கே 40 மைல் தூரத்
திலுள்ளது.

சொல்லலாம். இம்மனைவியின் மூன்று சகோதரர்களும் ப்ரத்விராஜாவுக்கு மிகவும் பக்கபலமாக விருந்துதவினார்கள். முத்தவனான கேய்மாஸ், மந்திரியாக விருந்தான். இரண்டாவதவனான சண்ட் புண்டிர் லாஹோர்க் கோட்டைக் கதிபனாய் எல்லைப் புறத்தைக் காற்று வந்தான். கடைசியவனான சாமுண்டாராஜா, ப்ரித்விராஜாவோடு சமவயதுள்ளவனும் நெருங்கிய சிநேகிதனும் சகாவுமாக விருந்தபடியால் அவன் பக்கத்திலேயிருந்து அவனது வீரப்பிரதாபச் செய்கைகளிலெல்லாம் உடனிருந்து உதவிசெய்து அவனால் மிகமதிக்கப்பெற்றிருந்தான்.

இப்படிப் பலவிதத்திலும் ப்ரித்விராஜா எற்கனவே 12 - மனைவிகளை விவாகம் செய்துகொண்டு ஹிந்துஸ்தானமுழுவதிலும் மகாகீர்த்தி பெற்ற பிரதாபவீரனாக விளங்கிவந்தான். இவனுக்கு எதிரியென்று சொல்லத்தக்கவன் கானோஜ் ராஜாவாகிய ஜயசந்தராஜா ஒருவன்தான். அவனுக்குப்பின் குஜராத்ராஜாவாகிய 'பித்துக்கொள்ளி' பீமதேவராஜா இவனுக்கு ஒரு முக்கிய எதிரியாகவிருந்தாலும், அவன் கையால் ப்ரித்விராஜாவின் தகப்பனாகிய சோமேசர் சண்டைமுகத்தில் விழுந்துபோக, தகப்பன் போரைப் பிள்ளைவாங்கிக்கொண்டு கடைசியில் பீமதேவ ராஜனைத் தோற்கடித்துவிட்டான். † இவன் அந்தயுத்தத்தில் மடிந்தானென்பது வாஸ்தவமானாலும் பிழைத்தானென்பது வாஸ்தவமானாலும் நமக்கு அக்கறையில்லை. நமது சரித்திராரம்பகாலத்தில் ப்ரித்விராஜாவுக்கு ஏற்ற வலுத்த எதிரியென்று சொல்லத்தக்கவன் ஜயசந்தராஜா ஒருவனைத்தவிர வேறு யாருமில்லை.

கன்யாகுப்ஜம் அல்லது கானோஜ் ராஜாவாகிய ஜயசந்தராஜன் வீரபராக்கிரமத்திலும் வெற்றிப்பிரதாபத்திலும் டில்லிராஜாவைவிடச் சிறிதும் பின்வாங்கினவனல்ல. அவனுடைய முன்னோர் கி. பி. 5-ம் நூற்றாண்டுமுதல் கானோஜிலாண்டுவந்தவர்கள். அதற்கு முன் ஆரியராஜ்யங்கள் கங்காநதிக்கரையில் செழித்தோங்கிய காலத்தில் கன்யாகுப்ஜம் ஆரியவர்த்தம் முழுமைக்கும் முக்கியமான தலைநகராகவிருந்தது. இப்படி குலமகிமையாலும் ஸ்தலமகிமையாலும் மிகக்கீர்த்திபெற்ற ஹிந்துஸ்தானத்திலுள்ள இராஜ்யங்களுக்கெல்லாம் முதலாகநின்று பிரதமஸ்தானம்வகிக்கப் பாத்திரனாயிருந்த ஜயசந்தராஜா தன் புஜவலியாலும் படைவலியாலும் அந்த அந்தஸ்துக்கு யோக்கியனென்றே யாரும் கொண்டாடும்படியான வீரப்பிரதாபமுற்றவனாக விருந்தான். கங்காநதிதீரத்தைச் சுற்றியுள்ள சில்லரை ராஜ்ஜியங்களையெல்லாம் தனக்குக் கப்பம் கட்டும்படி செய்ததன்றி தெற்கே வெகுதூரம்வரையில் தன்னுடைய மேலதிகாரம் செல்லும்படியாகவும் வெற்றிவீரனென்று பேர்பெற்றிருந்தான். தக்ஷணத்திலுள்ள அரசர்கள்கூட ஜயசந்தராஜனுக்கு காணிக்கை யனுப்பி வந்தார்களென் தெரிகிறது. இப்படி மகிமைபெற்று விளங்கும்பொழுது ஒருநாள் அனங்கபால் ராஜனுடைய புத்திரி ரூபசுந்தரிக்கும் ஜயசந்தராஜனுக்கும் பிறந்த ஸ்ரீரத்னம் போன்ற மகள் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து பேதைப்பருவங்கடந்து பெதும்பைப்பருமுஞ்சென்று மங்கையோ, மடந்தையோவென்று கண்டோர் மயங்கும்படி யிருந்தவள், தன் தோழிமாரும் சேடியரும்,

"தன்னேரில்லாமங்கையர் செங்கைத்தளிர்மானே
அன்னே தேனே யாரமிர்தே யென்றடி போற்ற"

கன்னியாமாடத்தினின்றும் புறப்பட்டுத் தன் தாயாரிருக்கும் அந்தப்புரத்துட் செல்லப் புகுந்தாள். அத்தருணம் சபையில் கொலுவிருந்துநீங்கித் தன்னறைசென்றுத் தனியிருந்த ஜயசந்தராஜன் இந்தக்கோலத்தைக்காணவும் அந்தப்புரமேகி யளவளாவியிருக்க மனங்கொண்டவனாய்க் கொலுவிற்றிருக்கப் பூண்ட ராஜாங்க உடைகள் ஆபரணங்கள் முதலியவற்றைகளைந்தெரிந்துவிட்டுச் சாதாரண வுடை தரித்து, தன் பிரியநாயகி ரூபசுந்தரியிருக்கும் அந்தப்புரம் நோக்கிச் சென்றான். சென்றடையவும் அங்கு அவன் கண்டகாக்ஷி அவன் மனத்தி லுறுத்தச் சற்றுப் பிரமித்து நின்றான். அவன் கண்ட காக்ஷியை யுரைக்க நம் சுயவாக்கு ஈடாகாமல் தடுமாறுவதால் இரவல் வாக்கைக் கொண்டாவது அக்காக்ஷியை அரசன் 'கண்டபடி வர்ணித்து' உருவகப்படுத்திக் காட்ட முயல்வோம். கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் வேறோர்காக்ஷியை வர்ணித்ததுபோல், அரசன் அந்தப்புரத்துச் செல்லவும் அங்கு,

† இந்த பீமதேவராஜன் ப்ரித்விராஜாவோடு சண்டைசெய்கையில் விழுந்து மடிந்துவிட்டானென்று சிலரும், ப்ரித்விராஜாவுக்குப்பின் பலவருஷகாலம் பிழைத்திருந்தானென்று சிலரும் சொல்லுகிறார்கள்.



'பொன்சேர்மென்காற் கிண்கிணியாரம்புனையாரம்
கொன்சேரல்குல் மேகலைதாங்குங் கொடியன்னார்
தன்சேர்கோலத்தின் னெழில்காணச் சதகோடி
மின்சேவிக்க மின்னரசென்னும்படி நின்றாள்."

" கொல்லும்வேலுங் கூற்றமுமென்னும்மிவை
யெல்லாம்,வெல்லும்வெல்லு மென்னமதர்க்கும்விழி
கொண்டாள், சொல்லுந்தன்மைத்தன்றது குன்றுஞ்
சுவருந்திண், கல்லும்புல்லும்கண்டுருகப் பெண்கனி
நின்றாள்."

நின்ற அப்'பெண்கனி'யைக் காணவும் அக்காக்ஷி அரசன் மனத்தில் சுருக்கென்று உறுத்தியது. உறுத்தவும் சற்று பிரமித்துநின்று உடனே சுவாதீனப்பட்டவனாய் சுபாவமாகத் தன் பிரியசகி ரூபசுந்தரி யிருந்தவிடம் நெருங்கிச் சென்றான். அரசன் அகால வரவையும், அவன் மனத்துறுத்திய விஷயத்தையும் ஊகமாய் உடனே யறிந்துகொண்ட ரூபசுந்தரி, ஆசனம் விட்டெழுந்து அரசனையுபசரித்து: "பிராணநாத், இச்சமயம் தேவரீர் இங்குவந்தது என் பாக்கியம்" என்றாள்.

அரசன் தன்மனத்தெழுந்த எண்ணங்களையடக்கிக்கொண்டு வெகுளியாய் மறுமொழி சொல்வான்போல்: " பிரியசகீ, இப்பொழுது என் வரவையும் எதிர்ப் பார்த்திருந்தையோ?" வென்றான்.

ரூபசுந்தரி.—"இல்லை, பிராணநாத்; ஆனாலும் நீங்கள் இத்தருணம் இங்குவந்தது என் பாக்கியமே. தெய்வசங்கல்பம் என்று சொல்லினும் சொல்லலாம்."

ஜயசந்தராஜன்.—"பாக்கியம்" என்ன? "தெய்வ சங்கல்பம்" என்ன? விளங்கச்சொல்லேன் கேட்போம்.

ரூபசுந்தரி. — சொல்கிறேன், பிராணநாத். (பெண்ணைப் பார்த்து) அம்மா † சம்யோகிதா இங்கேவா. தேசம் சௌக்கியமா? சந்தோஷமாகத் தோழிகளுடன் விளையாடிக்கொண்டு வருகிறாயா? கன்னியாமாடத்தில் உன் சுகத்துக்குக் குறை யேதேனுமுண்டா? இருந்தால், பாப் இருக்கிறார், அவர் அறியட்டும், சொல்.

சஞ்சோக்தை. — (நாணத்தால் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு) எனக்கு ஒரு குறையுமில்லையம்மா.

ரூபசுந்தரி.— முகமேன் கருகி வாடியிருக்கிறது?

சஞ்சோக்தை. — (வெட்கம் நீங்காதவளாய்) ஒன்றுமில்லையம்மா.

ரூபசுந்தரி.—(தோழிமார்களைப்பார்த்து) குழந்தைக்கு உடம்பு என்ன? முகத்தில் வேற்றுமை தோற்றுகிறதே.

தோழி: அம்மா அவளுக்கு உடம்பு ஒன்றுமில்லை. முகத்தில் வேற்றுமை கண்டால் அதற்குக் காரணம் அகத்தில்தானிருக்கவேண்டும். அதைக்காட்டத்தான் தங்களிடம் அழைத்துவந்தோம்.

சஞ்சோக்தை. — அடீ, விமலே, உன் வாய் பொல்லாது. அங்குதான் விளையாட்டோடு விளையாட்டாய்ப் பரிகாசம் செய்தாயென்றால், இங்கும் அந்தப் பரிகா

† 'சஞ்சோக்தை'யென்று ஹிந்தியில் மருவியது.

சந்தானு? உன் பரிகாசத்துக்குக் காலாகாலம், சமயாசமயம் கிடையாதா? உன்னைப் யார் பதில் சொல்லச்சொன்னது?

விமலை.—அம்மா, ராணி கேட்டதற்கு பதில் சொன்னேன். எல்லாரையும் பார்த்துக் கேட்டகேள்விக்கு யாராவது ஒருவர் பதில் சொல்லித்தானேதீரவேண்டுமென்று நான் உள்ளதைச் சொன்னேன். உனக்கு அதுபொறுக்காவிட்டால் நான் பேசவில்லை.

ரூபசுந்தரி.—அம்மா குழந்தாய் அவளைக் கோபியாதே.

சஞ்சோக்தை.—இல்லையம்மா, இவள் எப்பொழுதும் இப்படித்தான் ஏதாவது குயுக்தி செய்து இரண்டர்த்தம் படும்படிப் பேசுகிறது!

ரூபசுந்தரி.— அடி, செவிலி, குழந்தைமேற் கண்ணுயிரு. மஹாராஜா காத்துக் கொண்டிருக்கிறார். உங்களை யப்புறம் காண்கிறேன். அம்மா, மனதிலொன்றும் நினையாதே. உடம்பு வாடிப்போம். அப்பாவோடு பேசிவிட்டு நான் உன்னைவந்து பார்க்கிறேன். (கிட்ட அணைத்து உடம்பைத் தழுவித்தடவிக்கொண்டு) தோழிமாருடன் கன்னியாமாடத்துக்குப் போய் விளையாடுபோ. (உச்சியை முகர்ந்து முத்தமிட்டு) அப்பாவோடு சொல்லிக்கொண்டுபோ.

சஞ்சோக்தை.—பாப் நான் போய்வருகிறேன்.

ஜயசந்தராஜா. — போய்வருகிறாயா அம்மா. உடம்பை ஜாக்கிறதையாய்ப் பார்த்துக் கொள். கவலையொன்றுங் கொள்ளாதே.

சஞ்சோக்தை.— புஞ்சிரிப்புடன் "இல்லை" என்று சொல்லிப்போகிறாள்.

ரூபசுந்தரி.— (கணவனருகில் வந்துட்கார்ந்து கொண்டு) பிராணநாத், குழந்தைமுகம் வாடியிருக்கிறதைப் பார்த்தீர்களோ?

ஜயசந்தராஜா.—பார்த்தேன் சகி, ஏன் வாடியிருக்கிறது?

ரூப.—ஏனென்று கேட்கிறீர்களே, உலகத்தில் இப்பொழுது தான்வந்துதித்ததுபோல! நீங்கள் என்ன! வேடிக்கையாகப்பேசுகிறீர்களோ, அல்லது என் மனதையறிய வேண்டிச் சோதிக்கிறீர்களோ தெரியவில்லை. உங்கள் மனதிற்பட்டதை நான் அப்பொழுதே யறிந்துகொண்டேன். இது விஷயத்தில் அசிரத்தையாகவிருந்து காலம் ஓட்டுவது இனிச்சரியல்ல. உடனே ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜய.—ஏற்பாடுசெய்யத்தான் நானும் யோசிக்கிறேன். ஆனால் நமது மேன்மைக்குத் தக்கபடி யிருக்கவேண்டும். நம்மை நிர்ப்பந்தித்து நமது பெண்ணை மணம்புரியத்தக்கவன் ஹிந்துஸ்தானத்தில் ஒருவனுமில்லை. நாமாக ஒருவனுக்கு நமது பெண்ணை வலியகக் கொடுப்பதாகச் சொல்லித் தேங்காயனுப்புவதும் கௌரவமல்ல.

ரூப.—பெண்ணைக் கொடுவென்று ஒருவன் கேட்டாலும் குற்றம். கொடுக்கிறேனென்றுசொன்னாலும் கௌரவக்குறைவு. போர்முகத்தில் நமக்கெதிர் நிற்கத்தக்கவனும் ஒருவருமில்லை. குழந்தைக்குத் திருமணம் பின்னை எப்படித்தான் நடக்கிறது?

ஜய.—சீதைக்குக் கல்யாணம் எப்படி நடந்தது? த்ரௌபதி யெப்படி திருமணம் செய்துகொண்டாள்? தமயந்தியை வீமராஜா எப்படி விவாகம் செய்துகொடுத்தான்? ருக்மணி விவாகம் எப்படி நடந்தது?

ரூப.—அதெல்லாம்போய் இப்பொழுது காலம்



மாறிவிட்டதே. சுயம்வரம் கோருவது அக்காலத்தில் எங்கும் சகஜமாகவிருந்தது. இப்பொழுது முன்போல் சுயம்வரம நடப்பதைக் காண்பதே யறிதாகவிருக்கிறதே. அப்படிச் செய்யக்கூடுமானல் சுகிர்தந்தான். அப்பொழுதும் ஒரு இடைஞ்சலிருக்கிறது. நமது குழந்தை நமக்கனுகூலமாய் நம் கக்ஷியைச் சேர்ந்த ராஜா ஒருவனையே விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்கிறீர்கள். சுயம்வரம் நாட்டினல் இந்த எண்ணம் பலிக்குமா?

ஜய.—"கூடுமா?" "பலிக்குமா?" என்கிறாயே, என்ன? நம்மால்கூடாத காரியம் ஒன்று உண்டா? நாம் மனதுவைத்தால் பலிக்காதகாரியம் ஒன்று உண்டா?

ரூப.—மகாராஜா மனதுவைத்து நடத்தச் சித்மானல் எனக்குமெத்தச் சந்தோஷந்தான். சுயம்வரம்நாட்டி எல்லா ராஜாக்களையும் அழைத்துச் சபையில் நிறுத்தி; நமக்கு மனதுக்குப் பிடித்த ராஜாவையே மாலையிடும்படி குழந்தைக்குச் சொன்னல், அது எப்படியாகுமோ! அதுயட்டும்தான் எனக்குச் சந்தேகமாகவிருக்கிறது. குழந்தை மனம் அச்சமயத்தில் எப்படிமாறுமோ? அதைக் குறித்துமட்டும் நாம் நிச்சயமாய் ஒன்றும் நம்பக் கூடாது.

ஜய.— நமக்கு வேண்டிய சிற்றரசர்களும் ராஜாக்களும் எத்தனைபேர் இருக்கிறார்கள். இவர்களில் மேலானவனாக நீ யாரைத் தெரிந்தெடுத்தாலும் எனக்குச் சம்மதந்தான்.

ரூப.—சரி! இந்த விஷயத்தில் என்னலான முயற்சியெல்லாம் நான் செய்கிறேன். குழந்தை மனதையும் மெதுவாக அறிந்துகொண்டு நான் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். இனி க்ஷணமும் தாமதிக்க கூடாது. நாளைக்கே சபையில் மந்திரிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள்செய்ய உத்தரவாகவேண்டும்.

ஜய.—அவ்வளவு அவசரப்படாதே. நாளைக்கே மந்திரிகளோடு ஆலோசனை செய்கிறேன். ஆனல் ஏர்பாடுசெய்து சுயம்வரம் நடந்தேற சுமார் ஒருவருஷ காலமாவது செல்லும். அதுவரையிற் பொருத்திருக்க வேண்டும்.

ரூப.—நாளைக்கே ஏற்பாடுசெய்யத்துவக்கினல் ஒருவருஷகாலம் என்னத்திற்கு. இது வசந்தகாலாரம்பமாக விருக்கிறது. இவ்வசந்தகாலம் கழியுமுன்னமே குழந்தைக்குவிவாகம்நடந்தேறினல் இப்போப்பட்டகாலத்தில் குழந்தை கணவனோடு கூடி மன்மதனும் ரதியும் போலிருந்து சந்தோஷமனுபவிப்பாள். இல்லாவிட்டால் உள்ளங்கருகி தேகம் வாடிவதங்கி இக்காலத்தில் மிக வருந்துவாள். ஏற்கவே குழந்தைமுகம் கருகியிருப்பதைப் பார்த்தீர்களோ, இல்லையோ!

ஜய.—இவ்வளவுஅவசரப்பட்டால் சரிப்படாது. ஏற்பாடுசெய்ய உடனே கட்டளையிட்டுவிடுகிறேன். நீயும்குழந்தைக்கு சுயம்வரங் கோரப்போவதாகச் சொல்லிவிடலாம். ஆனல்ஏற்பாடு நடந்தேறமட்டும் ஒருவருஷகாலம் நன்றாகப்பிடிக்கும். அதற்குள் ஏற்பாடு நடக்கும் மும்முறத்தில் வரப்போவதை நினைத்துக் குழந்தை சந்தோஷம் பூரித்து, மனம் கவலைபாயாமல், அவளும் வேண்டிய ஏற்பாடுகள் செய்வதில் மும்முறமாயிருப்பாளென்பதிற்சந்தேகமில்லை. நீ சுபாவமாக மிக்க புத்திக்கூர்மையுள்ளவளானலும் இதில்மாத்திரம் என் மனதிலுள்ளதை நீ யின்னம் அறிந்தாயில்லையென்று எண்ணுகிறேன்.

ரூப.—நீங்கள் சொல்வது வாஸ்தவமே. இது விஷயமாய் உங்கள் மனதிலுள்ளதை நான்

இன்னமறிந்தேனல்லேன் என்பது வாஸ்தவம். அன்புகூர்ந்து மனதிலுள்ளதை விளக்கித் தயவுபுரியவேண்டும்.

ஜய.—நான் இங்கு வந்தபொழுதுமட்டும் என் மனதிலுள்ளதை நான் ஒளித்தும் அதிசூக்ஷ்மமாய் அறிந்துகொண்டாயே! இப்பொழுதுமட்டும் இவ்வளவு பேசியும் என் மனதிலுள்ளதை யறிந்து கொள்ளவில்லையே!

ரூப.—மன்னிக்க வேண்டும். அப்பொழுது என் சிந்தை சென்றவழியில் உங்கள் சிந்தையும் சென்றது. ஆகையால் உடனே யறிந்துகொண்டேன். இப்பொழுது என்மனம் ஒன்றையேபற்றி ஊசலாடுகிறபடியால் மற்ற விஷயத்தில் நுழைய அவ்வளவு நுட்பமாகவில்லை. "கொக்குக்கொன்றே மதி" யென்றதுபோ லிருந்துவிட்டேன். மன்னித்து அடியாள்மீது கிருபை புரியவேண்டும்.

ஜய.—உன் வினயத்திற்கு முன் என் பிடிவாதம் நிற்குமா? நான் ஏதோ குழந்தை விவாகத்தைப் பற்றிக் கவலையற்றிருப்பதாகநீ தப்பெண்ணங்கொண்டிருந்ததாகத் தோற்றுகிறது. அப்படியொன்றுமில்லை. அதைச் செய்யவேண்டிய விதமாய்ச் செய்ய நினைத்து, என் மனதிற்குள் ஆலோசித்து வந்தேன். அவ்வாலோசனையை நிறைவேற்ற இன்று முதல் பிரயத்தனம் செய்யத் தீர்மானித்து விட்டேன். கன்யாகுப்ஜம் பூர்வீகர்தொட்டுப் பிரபலம் பெற்றுள்ள இராஜ்ஜியமாக விருக்கிறது. அதிகாரத்திலும் மேன்மைபெற்றே விளங்கி வந்துளது. இப்பொழுது அம்மேன்மையும் அதிகாரமும் குறைவின்றி நமக்குக் கிடைத்திருப்பதாலும், நம்மையெதிர்த்துப் போர்செய்ய நம்மில் மிக்க அரசர் யாருமில்லையாகையாலும், நமது செல்வக் குழந்தை சஞ்சோக்தையின் விவாகத்தை முற்காலத்தில் நடந்ததுபோல் சுயம்வரம் நாட்டி நடப்பிக்கக் கருதினேன். அத்துடன் நமது மேன்மையையும் பகிரங்கமாக ஸ்தாபித்துக்கொள்ள உத்தேசித்தவனு யிருக்கிறேன். நமது சஞ்சோக்தைக்குச் சுயம்வரமென்று நாம் அழைத்தால் வராமலிருக்கு மரசன் இப்பாதகண்டத்தில் யாருமில்லை. அதை முன்னிட்டு ராஜசூயயாகம் ஒன்று செய்து அதன் முடிவில் நம் கட்டழகியின் சுயம்வரத்தை வைத்துக் கொண்டால், நாம் ஷம்ராட்பட்டம் சூட்டிக்கொண்டு நமது கண்மணியையும் அவளது ஒப்பற்றகுணத்துக்கும் அழகுக்குமேற்க உச்சிதமாக விவாகம் செய்து கொடுக்கலாமென்று நினைக்கிறேன். என், பிரியசகி, என் யோசனையைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

ரூப.—பிராணநாத், தங்களது யோசனைமிகவும் மேலான யோசனையே. ஆனாலிது விஷயம் சபையில் மந்திரிகளைக் கூட்டி ஆர அமர ஆலோசித்துச் செய்யவேண்டிய காரியமாதலால் அவசரப்பட்டாலாகாதென்பதையுணர்ந்துகொண்டேன். இது விஷயத்தில் உங்கள் சித்தம் என்பாக்கியமாக விருப்பதால் உங்கள் யோசனையை முற்றும் மெச்சிக்கொண்டாடுகிறேன் என்பதைத் தவிர நான் வேறு என்ன சொல்லப்போகிறேன்.

ஜய.—சரி, நேரமாகிறது. நான் உடனே மந்திரிக்குச் சொல்லியனுப்பி அவரோடு கலந்துபேசி, இந்த யோசனையை நமது குரு முதலானவர்களுக்கும் தெரிவித்து, நாளைக்குச் சபையில் இவ்விஷயத்தை ஆலோசனைக்குக் கொண்டுவந்து, மேலாகவேண்டியவைகளுக்கு நடவடிக்கை நடத்துவேன். நீ கன்னியாமடம்போய் குழந்தைக்கு ஒருவிதத்திலும் சுகத்தாழ்வில்லாதபடி வேண்டியவற்றைச் செய்து அவள் மனதையும் இச்சந்தோஷ சமாசாரத்தைக் கேட்கச் சரிப்படுத்திவை. நாம் இதைப்பற்றிப் பிந்தி இன்னும் ஆகவேண்டிய காரியங்களுக்குக் கலந்து பேசிக்கொள்ளலாம்.

ரூப.—அப்படியே, பிராணநாத். மெத்த சந்தோஷம்.

C. V. S.



## செல்வநூல்.

### 3. செல்வமென்றால் என்ன?

மானிடர்களனுபவிக்கும் சௌக்கியாதிகளுக்குக் காரணபூதங்களான பதார்த்தங்கள் பலவுள. உயர்ந்த அந்தஸ்தில் உள்ள ஒருவனுக்கு வேண்டியவைகள் பலவாயினும், ஒவ்வொரு ஜீவனும் உயிருடன்பிழைத்துவாழ முக்கியாபீஷ்டமான பொருள்கள் சிலவே. அவை அன்னவஸ்திராதிகள். இவைகள் கையேறினதின்பேரில்தான் மற்றய அலங்காரார்த்தமானவிஷயங்கள் வேண்டியிருக்கின்றன. இப்படியே படிப்படியாக கீழில் உள்ள ஆசைகள் தீரத்தீர மேன்மேலான ஆசைகள் உதித்து அவ்வவ்வாசைகளைப் பூர்த்திசெய்ய பற்பல வியாபாரங்களில் மனிதன் உழைக்க வாரம்பிக்கிறான். ஆகையால் மனிதன் உழைப்பதற்கு ஆசையே காரணம். ஆகவே மனித வாழ்க்கையை ஆராய்ந்து நோக்குங்கால் நாம் அறிவதென்னவெனில், படிப்படியாகப் பல ஆசைகளும், அவ்வாசாபூர்த்தியின்பொருட்டு ஏற்படும் பலமுயற்சிகளும், அம்முயற்சிகளால் பிரசமிக்கப்பட்டகாமங்களின்மீது துஷ்பூரமாகக் கிளம்பும் வேறு பலகாம்யங்களும் மனிதஜன்மத்திற்குசுபாவமாயுள்ளன என்பதுதான். இதுதான் சாமானிய மனித தருமம். பலபெயர்கள் ஆசையைஅடக்கிப் பேரின்பம்தேடி நடக்கிறார்கள். அவர்கள் நடவடிக்கைகளைப்பற்றிக் கொஞ்சமேனும் நாம் குறைத்துப்பேசுவதில்லை. சாமானியமனிதன் நடத்தைதான் சரியென்று நாம் பூஷிக்கிறதும் இல்லை. உலகவியற்கையைப்பற்றிப் பேசுவது நமது எண்ணமேயொழிய இது நல்லது பொல்லாதென்கிற விஷயம் நமக்கு இப்போது பிரகிரதமல்ல. ஆகையால், பெரும்பான்மையாக ஜனசங்காதங்களைப்பற்றிப் பேசும்போது, சாமானிய மானிடத்தன்மையைத்தான் அங்கீகாரம் செய்துகொண்டு அதனால் உண்டாகும் பலாபலன்களைப்பற்றி விவரிக்கவேண்டியதேயொழிய மனிதர்கள் இப்படித்தான் நடக்கவேண்டியது என்று தருமசாஸ்திரம் விதிப்பது நமதுகாரியமல்ல. இந்தலோகத்தில் பலவித சக்திகள் இருக்கின்றன. அவைகளால் நன்மையும் நேரிடும், தீமையும் உண்டு. ஆனால் அவைகளைச் சரியானவழியில் உபயோகித்தால் தீமையை நீக்கிகூடுமானமட்டும் நன்மையைவிளைக்கலாம். எப்படியெனில் ஏராளமாய் மழைபெய்து பெருகும் ஆற்றின்ஜலம், தோட்டம் துரவுகளைமூழ்கச்செது ஜனங்களுக்குப் பலவித ஹிம்சைகளைச் செய்யத்தக்கதாயினும் அதை நேரானபடி ஏரி குளங்களில் தேக்கி சீரானகால்வாய் அணைக்கட்டு மூலமாய் உலகத்திற்கு நன்மையுண்டுபண்ணச்செய்யலாம். அப்படியே இயற்கையான சக்திகளில் ஒன்றாகும் மனிதர்களது இச்சா சக்தி. அதனைநேரில் உபயோகிப்பதால் பலவிதமான போக போக்கியங்கள் பெருகும். ஆதலால் அச்சக்தியின் சுபாவத்தை நாம் நன்றாக அறியவேண்டியது.

இப்போது, ஜனங்களுக்கு சந்தோஷபலிதமான எல்லாப்பொருள்களைப் பற்றியும் நாம் பேசுவதில்லை. தேகதாட்டியம், ஆரோக்கியம், மனதின்சாந்தி, சௌகுண்ணியம் பந்துமித்திரர்களின் பிரேமை முதலிய பலபொருள்கள் மனிதசந்தோஷத்தைக் கொடுக்க அத்தியாவசியமானவை. ஆனால் அவைகளைப்பற்றி இச்செல்வநூல் உரைப்பது ஒன்றுமில்லை. இந்தசாஸ்திரத்தின் விஷயம்யாதெனில், சந்தோஷபலிதமான பொருள்களில் எவைகளுக்குச்

செல்வம் எனப் பெயர் வழங்கிவருகிறதோ அவைதான்.

இப்படிக்குச் சாஸ்திரவிஷயமான செல்வத்திற்கு முக்கியமான இலக்ஷணங்கள் மூன்றுள.

முதலாவது.— *கிரயவிக்கிரயார்ஹதை. இதனால் நாம் அறிவது என்னவெனில் எந்தப்பொருளுக்கு ஒருவர் கையினின்றும் மற்றவர்கைக்கு முழுதாயாவது, பாகம் செய்யப்பட்டாவது, சங்கிரமணம் செய்யச் சிலமுண்டோ அதற்குத்தான் செல்வமென்ற பெயர் கொடுக்கப்படும். இப்படி சங்கிரமிக்கச் செய்யப்படக் கூடாதவைகள் பலவுண்டு. அவைகள் செல்வமென்று அழைக்கப்படமாட்டா. ஒருவனுடைய சாமர்த்தியம், பலம் முதலியகுணங்கள்செல்வமாகமாட்டா. ஆனால் அவைகளைக் கொஞ்சகாலம் பிறருக்காக உபயோகப்படுத்தலாம். அப்போது அவைகளின் உபயோகம் செல்வத்தின் முதல் இலக்ஷணத்தை உடையவை யாகலாம்.

இரண்டாவது.—†பாகுள்யாரித்தியம்? அல்லது ஏராளமாய்க் கிடைக்கமாட்டாமை. எந்த வஸ்து ஏராளமாய்க் கிடைக்கக்கூடுமோ அது எவ்வளவு உபயோகமுள்ளதாயினும் செல்வமாகாது. எப்படியெனில், நாம் உட்கொள்ளும் காற்று நம் ஜீவனைத்தரிக்க முதல் கருவியாயிருக்கிறது; ஆயினும் அது ஏராளமாய்க் கிடைப்பதால் செல்வமல்ல. அப்படியே தான் ஜலத்தின் விஷயத்திலும். ஆனால் சிலகாலங்களில், சிலவிடங்களில் இவைகள் ஏராளமாய்க் கிட்டாமையால் இவைகளுக்கு விலையேற்படும். அப்போது இவைகள் செல்வம்தான்.

மூன்றாவது.—முக்கியமாய் பதார்த்தங்கள் உபயோக முள்ளவையாக இருத்தல்வேண்டும். உபயோகம் என்றால்மனிதனுக்கு துக்கத்தைப் போக்கி சுகத்தைக்கொடுத்து ஆசையைத்தீர்க்கும் குணம். இது இருந்தால்தான் ஒரு பொருளுக்குச் செல்வம் எனப்பெயர் பிறக்கும். ஆகையால் இதே முதல் இலக்ஷணம். ஆனால் உபயோகம்மாத்திரம் போதாது. காற்றும், ஜலமும் எவ்வளவு உபயோகமுள்ளவையாயினும் ஏராளமாயிருத்தலால் வேண்டியபொழுது எத்துணைவேண்டுமோ அத்துணை கிடைக்கும். ஆகையால் அவைகளைச் சேகரிக்கவும், காப்பாற்றவும் சாமானியமாகயாதொரு பிரயாசமும் வேண்டியதில்லை. ஆகவே அவைகளுக்கு விலை ஏற்படுகிறதில்லை. இப்போது நாம் மொத்தமாய் அறிவது என்னவெனில், எந்தெந்த பதார்த்தங்கள் மனிதனுக்கு துக்கத்தைப் போக்கி சுகத்தை உண்டுபண்ணுவதினால் உபயோகமாகிறதுடன், அவை ஏராளமாயிராமலிருத்தலினால, சேகரிக்கவும் காப்பாற்றவும் பலவிதமான பிரயாசம் வேண்டியிருந்து, பல பெயர் கைம்மாற்றுக்கிடமாகிச் சமானமான வேறு பதார்த்தங்களைச் சம்பாதிக்கக் கூடியவையோ அவைகளுக்குத்தான்செல்வம் என்று இச்சாஸ்திரத்தில் வழங்கும் பரிபாஷை. வாகர் (Walker) என்னும் செல்வநூலாளர் கூறியபடி, செல்வமென்பது 'குணி', விலையென்பது 'குணம்.' அவைகள் பரஸ்பரம் வேறுபட்டு நிற்கமாட்டாதவை. எப்படி பதார்த்தமும் அதன் குணமும் ஒருங்கக்கூடியவையோ அப்படியே தான் செல்வமும் விலையும்.

ஜி. கஸ்தூரி ஐயங்கார், எம். ஏ.

* The quality of being transferred.
† Limited Supply.

---

## சம்பகமாலை
அல்லது,
## இளையராஜாவின் தீர்மானம்.
### அங்கம். III.

ருதம்களம்.

இடம் - ஒரு அறை.

மீராபாய்=மொகுலுக்குப் பால்கொடுத்துவளர்ப்பவள்.

(மீராபாய் குழந்தையை எடுத்துக்கொண்டு நுழைகிறாள்.)

மொகுல்ஜி.—தாயி! அம்மா ஏன் அழுதுக்கொண்டிருக்கிறாள்? சொல் தாயி!



மீராபாய்.—அப்பா! குழந்தாய்! மொகுல்! அப்பா ஊருக்குப்போனாரே அம்மா அழமாட்டாளா?

மொகுல்ஜி.—நான் அழுகிறேனாபார்! அம்மா சிறு குழந்தையைப்போல் அழுகிறாளே. அப்பா ஊருக்குப் போம்போது சற்றே அழுதேன். அப்பா எனக்கு ஒரு குதிரையைக் கொண்டு வந்து கொடுப்பதாய்ச் சொன்னார். அழாமல் நின்றுவிட்டேன். அம்மாவுக்கு ஒன்றும் கொண்டுவந்து கொடுக்கமாட்டேனென்றாரோ. அப்பாவுக்கு என்மேல்தான் நிரம்ப ஆசை. அண்ணனிடத்தில்கூட அவ்வளவு ஆசைகிடையாது. அப்பா என்றைக்கு வருவார் தாயி! நாளைக்கு வருவாரா?

மீராபாய்.—(புன்சிரிப்புடன்) வருவார் குழந்தாய்.

மொகுல்ஜி.—வருகிறபோது குதிரையைக் கொண்டு வருவாரா?

மீராபாய்.—ஆம் குழந்தாய்! அதோ லால்பாய் வருகிறாள் பார்.

மொகுல்.—நான் பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடலாமா?

மீராபாய்.—விளையாடிக்கொள் குழந்தாய் (விளையாடுகிறான்.) (லால்பாய் வர), ஏன்வந்துவிட்டாய் லால்பாய், ராணி என்னசெய்கிறாள்.?

லால்பாய்.— ராணி மெத்த வியசனத்துடன் உட்கார்ந்துக்கொண்டிருக்கிறாள். நான் அங்கிருந்து என்னசெய்ய? ஆகையால் இங்குவந்தேன்.

மீராபாய்.—ஐயோ! பாபம்! வியசனப்படுவது சகஜமேயன்றோ. கணவனை விட்டுவிலகிய பக்ஷிகள் கூடப் பிரிவை ஆற்றொணாமல்சஞ்சலப்படுகின்றன. ராணி வியசனப்படுவது ஆச்சரியமா?

லால்பாய்— அஃதொன்றைப்பற்றிமாத்திரம் வியசனப்படுவதாகக் காணப்படவில்லை. இன்னும் ஏதோ ஒரு காரணமிருக்கின்றது.

மீராபாய். — என்ன இருக்கக்கூடும். மகாராஜா சோண்டாவை ராஜ்ஜியபாரம் செய்யும்படி நியமித்ததில் ஏதாவது அதிருப்தியுண்டோ?

லால்பாய்.— அதிருப்தி ஒருக்காலும் இருக்கமாட்டாது. ராணிக்கு சோண்டாவின்மீது மெத்த பிரியம். ஒருநாள்கூட அவரைக்காணாமலிருக்கமாட்டார். சோண்டாவும் ராணியின் உத்தரவு பெறாமல் அற்பகாரியத்தையும் செய்வதில்லை. ராணிக்கு அதிருப்தி இருப்பதற்கு முகாந்திரமென்ன விருக்கின்றது.

மீராபாய்.—ஒருவரிடத்தில் மற்றவருக்கு அவ்வளவு பிரியமிருப்பது மெத்த ஆச்சரியம், லால்பாய் உலகத்தில் எந்த மாற்றாந்தாயும் புத்திரனும் அவ்வளவு நேசமாயிருக்கின்றார்கள். சோண்டாவையும் நானேவளர்த்தேன். நல்லகுழந்தை லால்பாய். ஆயினும் உலகத்தில் மாற்றாந்தாய்கள் தங்கள் மாற்றும் புத்திரர்களுடைய நற்குணங்களை மறைத்து துர்க்குணங்களை யெடுத்துப்பேசி அவர்களைப் பழிப்பது வழக்கமல்லவா? ராணி அவ்வளவு பிரியமாயிருப்பது ஆச்சரியப்படத்தகுந்ததே. இப்போது வியசனப் படுவதற்குக் காரணமென்ன?

லால்பாய்.— சோண்டாவினிடத்தில் ராணி அவ்வளவு பிரியம்வைத்திருப்பதற்கு அவருடைய நற்குணமேகாரணம். அவரை யார்தான் நேசிக்கமாட்டார்கள். எனக்குக்கூடத்தான் அவர்மீது மெத்தப் பிரியமுண்டு. உனக்குக்கிடையாதா? அதிருக்கட்டும். நீ அனேக குழந்தைகளை எடுத்து வளர்த்தாயே அவர்களெல்லோரிலும் ராஜதேவர்மீது உனக்கு விசேஷ அன்புடைமைக்குக் காரணம்யாது. மானிடரைப்பிரகாசிக்கச்செய்வது நல்லுருவமும் நற்குணமும். இவையிரண்டும் அவரிடமிருப்பதினாலன்றோ, உனக்கு அவரிடத்தில் மெத்த பிரியம் உண்டாயிருக்கிறது.

மீராபாய் —வாஸ்தவம் லால்பாய்! வெகு நன்றாய்ச் சொன்னாய். ராணி வியசனப்படுவதற்குக் காரணம் இன்னதென்று ஏன் நீ கண்டுகொள்ளவில்லை?

லால்பாய்.—எவ்வளவு தோழமையிருப்பினும் ஒருவருடைய அந்தரங்க விவகாரங்களைக்கேட்பது சரியன்று. வெகுவாய் தம் பர்த்தா யுத்தத்திற்குச் சென்றபிறகு தம்முடைய தாய்தந்தையராயினும், அண்ணனாயினும் வந்து தமக்கு துக்க உபசமனம் செய்யவில்லையென்ற குறை ராணி மனதிலிருப்பதாக நான் அறிகிறேன்.

மீராபாய்.—இருப்பது சகஜமேயன்றோ. அவர்கள் வந்து பார்க்காமலிருப்பது பிசகுதான்.

லால்பாய்.—பேச்சைநிறுத்து மீராபாய், இதோ ராணிவருகிறார்.

(ராணிவர, ஆசனங்கொடுத்து இருவரும் நிற்கிறார்கள்.)

சம்பகமாலை.—என்பக்கத்தில் உட்காருங்கள் அம்மா. (மொகுலைநோக்கி) மொகுல்! இங்குவா குழந்தாய் (தூக்கி மடியில்உட்காரவைத்து தழுவிக்கொண்டு உச்சிமுகர்ந்து) மொகுல்! என்னைவிட்டு ஏன் நழுவுகிறாய் அப்பா?

மொகுல்.—நீதான் அழுகிறாயே நான் உன்னிடத்தில் இருக்கமாட்டேன் போ!

சம்பகமாலை.—இனிமேல் அழுவதில்லை; என்னை விட்டுப்போகாதே குழந்தாய்!

மீராபாய்.—ஆம் அம்மா! குழந்தைகள் அன்னையினிடத்திலாயினும் அழும்போது அணுகா. நீங்கள் அழுதால் குழந்தை என்னசெய்யும். யாரிடத்தில் செல்லும். கணவனை விட்டுப்பிரியும்துக்கம் ஸ்திரீகளுக்குப் பெருந்துக்கம்; ஆயினும் என் செய்வது! குழந்தை உம்மிடத்தில்அணுகப்பின்னடையுமே. உலகத்தில் மானிடர்கள் ஒரு துக்கத்தைத்தொலைக்க சந்தோஷமொன்றைத் தேடிக் கொள்ளுவார்கள். தாங்கள் இலவசமாய்க்கிடைத்த புத்திரசந்தோஷத்தைப் பேணாது துக்கசாகரத்தைஆழமாக்கிக்கொள்ளுகிறீரே! என்செய்வது?

சம்பகமாலை.—மீராபாய்! மூத்தோராயிருக்கிற நீங்கள் சொல்வது மெத்தவும் உசிதமான மொழிதான். ஆயினும் அம்மா துக்கத்தை அடக்குவது அயனாலும் முடியாத செயலாயிற்றே. துக்கப்பட்டால்தான் என் மனக்கஷ்டம் நிவர்த்தியானாற்போல் தோன்றுகின்றது.

மீராபாய்.—நீர் சொல்வது உண்மையே. குழந்தையைநோக்கி நீங்கள் துக்கத்தை அடக்கிக்கொள்ளவேண்டும். பிறர் சுகதுக்கங்களில் நாட்டமுடையோர் தங்கள் சுகதுக்கங்களைப் பாராட்டார்கள். நீர் ஏன் அவ்வளவு துக்கப்படவேண்டும்? உமக்கு யாதுகுறை? மகாராஜாசீக்கிரம் திரும்பி வந்துவிடுவார்.

சம்பகமாலை.—அதென்னவோ அறியேன், மீராபாய்! திரும்பிவருவாரென்று என்மனதுக்குத் தோன்றவில்லை. என்ன காலக்கொடுமையோ! அறியேன்.

மீராபாய்.—ஏன் அப்படி நினைக்கவேண்டும் அம்மா? உமக்குக்குறைவு ஒருக்காலும் நேரிடாது. குழந்தையைப்பார்த்து சந்தோஷமடையுங்கள். உங்களுடைய தாய்தந்தையர்களைப்பார்த்து நெடுநாளாய்விட்டது. உங்கள் பந்துக்களைப்பார்த்தால் ஒருவேளை உம்முடைய துக்கம் தீரும்.

சம்பகமாலை.—தாய்தந்தையர்க்குக்கூட என் ஞாபகமிருக்கின்றதா? ஞாபகமிருந்தால் துக்கமடைந்த இத்தருணத்தில் என்னை வந்து பார்க்கமாட்டார்களா? பெண்ணாய்ப் பிறப்பது பெரும்பாவத்தின்பயனே. பிறந்தவுடன் பெண்ணைப் பிறனுடைய சொத்தென்றுமதித்து கலியாணம் செய்து தாய்தந்தையர் ஒழித்துவிடுகின்றனர். அப்புறம் அவர்களுக்கு நம்முடைய ஞாபகமேது?

(சேவகன் மார்வாரினின்று யாரோ வந்திருக்கிறாரென்ன,)

சம்பகமாலை.—உடனேவரச்சொல்.

(ப்ரிதா உள்ளேவர.)

சம்பகமாலை.—ப்ரிதா! வந்தாயா, வா, உட்காரு. உன்னைக்கண்டவுடன், என் தாயாரைக்கண்ட சந்தோஷம் உண்டாய்விட்டது. என் தாயார் க்ஷேமமா, என் தகப்பனாருக்குச் சுகமா, என் அண்ணனுக்குக்குசலமா, மற்றவர்கள்க்ஷேமமா? என் தோழியாராகிய வசந்தி சுபகா இருவரும் க்ஷேமமாயிருக்கின்றார்களா? என்னைநினைத்துக் கொள்ளுகிறார்களா?

ப்ரிதா.—எல்லோரும்க்ஷேமமாயிருக்கின்றார்களம்மா.

சம்பகமாலை.—என் தாய்தந்தையர்களுக்கு என் ஞாபகமிருக்கின்றதா? அண்ணன் தங்கையொருத்தியிருக்கிறாளென்று நினைத்திருக்கின்றானா?

ப்ரிதா.—ஞாபகமில்லாமலென்ன. அவர்கள் எப்போதும் உன்னையே நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

சம்பகமாலை.—ஏது! நான்நினைக்கவில்லை. ப்ர்த்தாவை தேசாந்திரமனுப்பிவிட்டு துக்கப்படுகிற என்னை வந்து பார்க்கமாட்டார்களா?



ப்ரிதா.—பாராமைக்குக் காரணமிருக்கக்கூடும்; அது இன்னதென்று எனக்குத் தெரியாது. (கடிதம் ஒன்றை வெளியில் எடுத்துக்காட்டி) இதோ இந்தக் கடிதம் நீ விரும்பியதை அறிவிக்கலாம். (கொடுக்கிறாள்.)

சம்பகமாலை.—ஆ! இது என்தகப்பனார் எழுதியகடிதம். அவர் தாமே எழுதியிருக்கின்றார். அவர் எழுத்து எனக்கு நன்றாய்த் தெரியுமே. எத்தனைநாளாயிற்று அவரை நான் கண்டு; அவருடைய எழுத்தைப்பார்த்தவுடன், அவரை நேரில் கண்ட திருப்தியுண்டாயிற்று. என்ன எழுதியிருக்கின்றார் பார்ப்போம். (கடிதத்தைப் பிரிக்கப்போகிறாள்.)

ப்ரிதா.—அவசரப்படாதே சம்பகமாலா; கடிதத்தைத் திருப்பிப்பார்.

சம்பகமாலை.—(திருப்பிப்பார்த்து) அறிந்துகொண்டேன் ப்ரிதா. இப்போது அவசரமொன்றுமில்லை. (தன் வஸ்திரத்துக்குள் மறைத்துக் கொள்ளுகிறாள்.)

(சேவகன் சோண்டா மகாராஜா வருகிறாரென்று சொல்ல)

சம்பகமாலை.—வரலாம் தடையொன்றுமில்லை வரச்சொல்.

(மீராபாயும் லால்பாயும் போகிறார்கள். ப்ரிதாவும் எழுந்து செல்லப்போகிறாள்.)

சம்பகமாலை.—ப்ரிதா! ஏன் எழுந்துபோகிறாய். நீ இருக்கலாம்.

சோண்டா.—(வந்து) நமஸ்காரமம்மா. மெத்த அவசரமான ஒரு ராஜ்ஜியகாரிய ஆலோசனையின்பொருட்டு வந்தேன்.

சம்பகமாலை.—நல்லது சோண்டா உனக்குத்தெரியாத ஆலோசனை நான் என்னசொல்லப்போகிறேன். உனக்கு இவ்விராஜ்ஜிய ரகசியங்கள் யாவும் தெரியும். நீ ஒருவனே இந்தராஜ்ஜியத்தைச்சரியாய்பரிபாலித்துஉன்தம்பிமொகுலையும் என்னையும் காப்பாற்றத்தகுந்தவனென்று நம்பி உங்கள் தகப்பனார் எல்லாவற்றையும் உன்னிடத்தில் ஒப்புவித்தார். அவரறியாததைநானென்ன அறியப் போகின்றேன். உனக்கு யுக்தமென்று தோன்றியதைச் செய்யலாம். அது எனக்கும் சம்மதமே. (ப்ரிதா ஆச்சரியத்துடன் இருவர் முகத்தையும் திருட்டாட்டமாய்ப்பார்க்கிறாள்.)

சோண்டா.—வாஸ்தவந்தானம்மா; எல்லாபாரத்தையும் என்மீது சுமற்றித்தான் பிதா சென்றார், அற்பமானாலுங்கூட ராஜ்ஜிய பரிபாலனவிஷயங்களில் உமக்கு சிரமம் கொடாமலே நடத்திக்கொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கின்றேன், காரியங்களை சரியாய் நடத்தாவிடில் புகழ்ச்சி இகழ்ச்சிகளுக்கு நான்பாத்திரனாகின்றேன்; லாப நஷ்டங்களுக்கு நீர் பாத்திரராகின்றீர். இவ்விஷயத்தில் நம்மைக் காட்டிலும் அதிக இன்பதுன்பங்களை அனுபவிப்பவர்கள் வேறெவருமில்லாவிடினும், தாங்கள்என்னிடத்தில் மிக்கநம்பிக்கைவைத்திருப்பினும் உம்முடைய யோசனையை நான் கேட்காவிடில் உலகத்தார் என்மீது குறைகூறுவார்கள். ஆகையால் அம்மணி நான் சொல்லப்போகும்விஷயத்தை ஜாக்கிரதையாய்க் கேட்கவேண்டும். ராஜ்ஜியபரிபாலன விவகாரங்களில் அதுமுக்கியமானது.

சம்பகமாலை.—சொல்லலாமப்பா கவனிக்கின்றேன்.

ப்ரிதா.—(தனக்குள்ளே) அது என்னவாக விருக்குமோ எப்படி அதற்கு பதிலளிப்பாளோ. ஐயோ முன்னர் அவள் ராஜாவின் கடிதத்தைப் பார்க்காமற்போனாளே.

சோண்டா.—அம்மா நீங்கள் அறிந்திருக்கலாம்: நம் தேசத்துக்கு மேற்கு எல்லையாகிய 'அரவலி' மலைப்பிரதேசங்களில் 'ஷிரோநல்லா' வென்ற மிக்க வளம்பொருந்திய பள்ளத்தாக்கில் நம்தேசத்தில் ஓர் பாகமாகிய 'கெயில்வாரா' வென்கிற மாகாணம் ஒன்றிருக்கின்றது. அந்தநாட்டில் முக்கியநகரமான கெயில்வாரா, மலைத்தொடர்களால் சூழப்பட்டு ஒரு பெரியமலைக்கணவாய்க்கு அடியிலிருக்கின்றது. ஜலசம்ருத்தி யுடையதாயும், கடுங்காடடர்ந்து மிருப்பதுமன்றி அவ்விடம் நல்லபழங்கள் கிழங்குகள் முதலியவற்றை நிறையப்பெற்றிருக்கின்றது. அங்கு பூமி விசாலமாயும் பயிர்செய்ய வற்றதாயும் இருப்பதுடன், மார்வார் குஜராத்முதலிய தேசங்களினின்றும் மேற்கேவசிக்கும்வில்விஜாதியாரிடமிருந்தும்வேண்டிய சாமான்களைக் கஷ்டமின்றி வரவழைத்

துக்கொள்ளவும் ஏற்றதாயிருக்கின்றது. சண்டைகள் நேர்ந்தகாலத்தில் ஒகளு, பனோராவென்கிற இரண்டு வில்விஜாதிபா: வேண்டிய சாமான்களுடன் 5,000 வில்லாளிகளைக் கொடுப்பது வழக்கம். அதுமிகவும் அரணுன இடம். ஆபத்துநேர்ந்தகாலத்தில் நம் பெரியோர் அவ்விடத்தில் போய்வசிப்பார்கள். ராணு அஜயசிங் அவர்களும், அவருடைய பிரசித்திபெற்றபுத்திரராகிய அயரசிங்கும் அவ்விடத்திலேயே குடியிருந்தனர். அவ்வளவு முக்கியமான மாகாணமானது தலைவனின்றியிருக்கின்றது. சத்துருக்களிடமிருந்து அகண்ட ராஜ்ஜியங்களை ஜயித்து அவைகள் மறுபடியும் சத்துருக்களின் கையில் சேராமலிருக்கும்பொருட்டு பிதா தம்முடைய புத்திரர்களுடைய வசத்தில் அவ்விராஜ்ஜியங்களைவிட்டிருக்கின்றார். இம்மாகாணத்துக்கு ஒருவரையும் தலைவராய் தாமே ஏற்படுத்தா விட்டாலும், ஏற்றகாலத்தில் என்தம்பியாகிய ராஜதேவனை அதற்குத் தலைவனுக்கும்படி ஆக்கியாபித்திருக்கிறார். இப்பொழுது ஆங்காங்கு சத்துருக்கள் விருத்தியடையும் காலமாயிருக்கின்றது. மேலும் அம்மாகாணத்தில் தலைவனொருவனை கெடுநாளாய் ஏற்படுத்தாமலிருந்தமையால் கலகத்தின்குறிகள் கொஞ்சம் காணப்படுகின்றன. உடனே ராஜதேவனை ஏற்படுத்த உத்தரவாகவேணும். நீதியிலும், வீரத்தன்மையிலும், அழகிலும் மேன்மை பொருந்தியவனுனதால் அவனே அதற்குத் தகுந்தவனென்று நினைக்கின்றேன், பிதாவின் எண்ணமும் அதுதான்.

ப்ரிதா.—(தனக்குள்ளே) சோண்டா மெத்தயோக்கியனென்று காணப்படுகின்றது: கபடில்லாதவன். சம்பகமாலைக்கும் அவனிடத்தில் மிக்க நம்பிக்கை யிருக்கிறுப்போல் காணப்படுகின்றது. நான் எப்படி என்காரியத்தை முடிக்கப்போகின்றேன் தெய்வமே!

சம்பகமாலை.—உன்பிதாவினுடைய எண்ணம் அதுவாக விருக்கும்பக்ஷத்திலும், ராஜதேவன் அதற்கு ஏற்றவனுயிருக்கும்பக்ஷத்திலும் அப்படியே செய்யலாம்.

(நமஸ்காரம் செய்துவிட்டுச் செல்லுகின்றுன்.)

ப்ரிதா.—ஐயோ! கெட்டாயே சம்பகமாலா! நான் என்னசெய்வேனடி!

சம்பகமாலை.—என்னப்ரிதா ? ஏன் அப்படிச்சொல்லுகிறுய்?

ப்ரிதா.—உன்பிதா அனுப்பின கடிதத்தைப்பிரித்துப் பார்; உனக்குத்தெரியும்,

சம்பகமாலை.— (கடிதத்தைப் பிரித்து வாசிக்கிறுள்) "என்பிரியமுள்ளபுத்திரிகா, எம்மில் எவரேனும் நீ துக்கமடைந்திருக்கிற இக்காலத்தில் அங்கு வந்து உன் துயரத்தை ஆற்றுதலைப்பற்றி நீ சிந்திக்கக்கூடும். ஆனால் அது எங்களுடைய குற்றமன்று. நீ இதுவரையில் நடத்தியிருக்கிற விவகாரங்களை நோக்கினால் எங்களை நீ முக்கியமான பந்துக்களென்று நினைத்ததாகக் காணப்படவில்லை. உனக்கு அவ்வக்காலத்தில் நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றி புத்திமதிசொல்ல தகுந்தமனிதர்கள் அவ்விடத்திலேயே இருக்கிறதாகக் காணப்படுகிறது. இனி எங்களுடைய சகாயம் உனக்கு என்னதிற்கு? ஆயினும் மாதாபிதாக்களுடைய மனம் நிற்கமாட்டாது. உன் பர்த்தா யுத்தத்திற்குச் செல்லுங்காலத்தில் குழந்தைமொகுலுக்குப் பட்டாபிஷேகம் செய்யாமலும், ஆளுகைக்கு வந்திருக்கவேண்டிய சோண்டாவை ராஜ்ஜியபாரம் வகிக்கும்படி விட்டுச்சென்றதை நீ கவனிக்காமலிருந்ததைப்பற்றி வியசனப்படுகின்றேன். இவை உன் க்ஷேமத்தைக்கருதிச் சொன்னசொற்களேயொழிய வேறில்லை. இக்கடிதம் கொண்டுவரும் ப்ரிதா உனக்கு மற்றவிஷயங்களைத் தெரிவிப்பாள். காலத்தில் நடக்கவேண்டியவைகள் இன்னவையெனத்தெரிவிப்பாள். அவளுடைய அபிப்பிராயம் எனதாகவேயிருக்கும். அவளை ஆதரிக்காமல் நீ விடும்காலத்தில் அயனுல் உனக்கும் எனக்கும் உண்டாக்கப்பட்ட சம்பந்தம் முடிவுறும்.

ஆசீர்வாதம்.

இப்படிக்கு உனதுபிதா ரீஷ்மல்."

ஆ! விதியே! உன்வலிமையே வலிமை. உனது செயல்கள் மிகவும் விசித்திரமானவை. இப்புவியில் பெண்ணுய்ப்பிறந்தது முதல் நான் என்வாழ்நாளைப் பிறருடைய இன்பத்தின் பொருட்டே கழித்தேன் என் சுகத்தைத்தேடிக்கொண்டேனில்லை. என் பிதாவுக்கு கவலைநேரிடுமே யென்று நினைத்து என் சுகத்தை ஒழித்தேன். ஆயினுமென்ன? கடைசியில் என்



பிதாவின் வெறுப்புக்குப்பாத்திரமாயினேன். ஏ! ஜன்மமே! உனக்கு என்னவிருந்தென்ன? எல்லாம் உண்டு, மனச்சமாதானம் மாத்திரம் கிடைக்காதொழிந்தது. ஓ மனமே! நீ என்றைக்குச் சுகப்படப்போகிறுய்! நீ என்னசெய்வாய்! உன் தோஷமல்ல; என் வினையின்பயனே.

ப்ரிதா.—சம்பகமாலா! ஏன் அப்படி புலம்புகின்றுய்! காரியம் என்னகெட்டுப் போய்விட்டது. எல்லாம் நாளாவட்டத்தில் சரியாய்முடியும். உன் தகப்பனுருக்கு மறுபடியும் உன்மீது பிரியமுண்டாகுமாறு செய்வது எனதுதொழில். அதற்கு நீ சிந்திக்கவேண்டாம். நிரம்ப களைத்திருக்கின்றுய். உன்னைப்பார்க்க என்மனம் மெத்தவும் பரிதபிக்கின்றது. சற்றே இளைப்பாறினுல் நன்றென நினைக்கின்றேன்.

(இருவரும் எழுந்து போகின்றுர்கள்.)

எச். வேங்கோபராவ்.

## புகையிலை—அதன் கெடுதிகள்.

(242 - வது பக்கத்தொடர்ச்சி.)

வாடிக்கையாய் சுருட்டுப்பிடிப்பதின் தீங்குகளை இங்கிலாந்து தேசத்து பெரிய வைத்தியர் Richardson என்பவர் பின்வறுமாறு கூறி யிருக்கின்றனர். அவர் அதைப்பற்றி உறுதியாயும் பிரமாணமாயும் சொல்லக் கூடியவர். அவரே சுருட்டுப் பிடிப்பவராகையின் அவர்சொல்வதை நாம்விசேஷமாகக்கவனிக்கத்தக்கது. அது (1) இரத்தத்தைவெகு நீராக்கி அதில் மிதக்கும் சிவப்பு அணுக்களை (Red corpuscles) மாற்றுகின்றது, (2) வயிற்றில் பலவீனமும், அருவருப்பும், வாந்தியும் உண்டுபண்ணுகின்றது. (3) இரத்தகோசத்தை பலகீனப்படுத்தி தாறுமாருய் இயங்கச்செய்கிறது. (4) பொறிகளிலோ, கண்மணியைப் பரத்தி பார்வையை மங்கச்செய்து காதும் கேட்காமல் செய்வதுடன் எப்பொழுதும் காதில் ஊதுதல் போலவோ, மணிசப்தம் போலவோ, ஒரு சப்தம் செய்துக்கொண்டே யிருக்கின்றது. (5) நரம்புகளை சக்தி யறச் செய்து அவைகள் நடத்துகிற கோளங்களில் (Glands) ஒருவித திராவகத்தையும் உருக்கின்றது. (6) உள்நாக்கை வளரச்செய்வதுடன் அதைப் புண்ணுக்குகின்றது. அடிக்கடி வாயில் தோலுரியச் செய்து ஈறுகளை அசாதாரணமாய் கொழுக்கவும் செய்கின்றது.

புகையிலையிலுள்ள Necotine விஷத்தால் இரத்தத்துக்கு விளையும் தீங்குகளை, பூதக் கண்ணுடியினுல் ஒருவனது உதிரத்தைபார்த்து மேற்கூறிய வைத்தியரே பின்வருமாறு எழுதி யிருக்கின்றனர்: — உதிரத்தை வெகுநீராக்கி வெளேரெனச் செய்கின்றது. இரத்தம் தேகமுழுதும் பரவியிருத்தலின், உடம்பை வெளுத்த மஞ்சள்நிரமாகச் செய்வதன்றி ஊதவும் செய்கின்றது. முக்கியமாய் இரத்தத்தில் படிவுடன் மிதக்கும் அச்சிறு அணுக்களை † வெகுவாக மாற்றுகிறது. சுருட்டு பிடித்தல் அவைகளின் உருண்ட வடிவைமாற்றி கோணலாய்ச் செய்கின்றது. தேகசௌக்கியத்திற்கு இன்றி யமையாம விருக்கவேண்டிய இவ்வணுக்களின் சேர்க்கையைக்கெடுத்து தன்னந்தனியாய் கிடக்கச் செய்கின்றது: இவைகளைப் பார்க்கவும், நன்ருய் அறிந்தவன், அம்மனிதன் மிக பலவீனன் என்றும், ஞாபகசக்தி யற்றவனென்றும் தெளிவாக அறிவான்.

புகையிலை அளவுகடந்து உபயோகித்தால் உயிரை மாய்க்குமென்றும், சிறிதளவு உட்கொண்டாலும் தீங்குவிளைக்கின்றதென்றும் நிச்சந்தேகமாய் ரூபிக்கப்பட்டிருக்கின்றது. அது சுவாசத்தை துற்நாற்றப்படுத்தி ஜீரணசக்தியைக்கெடுத்துநாக்குருசியையும்மூக்குவாசனையையும் கெடுத்து, இரத்தத்தைக்கெடுத்து தலைவலி உண்டுபண்ணி இரத்தகோசத்தை ஓய்வடையச்செய்து, ஈரலை உலைத்து, கண்ணை மங்கச்செய்து உடம்பிலுள்ள ஒவ்வொரு அங்கத்துக்கும் யாதாவது தீங்குவிளைக்கின்றது. இன்னும் அது உடம்பின் உற்சாகத்தை நீக்கி, உணர்ச்சியை யழுத்தி, உயிரைக் குறுக்கி, சடையில் மாய்த்துவிடுகின்றது.

புகையிலை உடம்பைக்கெடுத்து இதர வியாதிவாராமற் தடுக்கும் சக்தியையும் குறைத்து அவ்வியாதிகள் எளிதில் அணுக இடம் உண்டாக்குகிறது. இதைப்பற்றி அநேக வைத்தியர் அபிப்பிராயங்களைக் கீழ்வரைகிறேம்:—

Dr. F. Ro. Solly. சொல்லுகிறுர்:—விஷசுரமடிக்கும் அசௌக்கியமான தேசங்களி விருப்பவர்களுடைய வெளுத்தமுகத்தையும், வளர்ச்சிக்குறைவையும் வலுவின்மையையும் பாருங்கள்; அவர்கள்உடம்

† Corpuscles.

பில் அரை உயிர்தானிருக்கின்றது. வாடிக்கையாய் சுருட்டுப்பிடிப்பவன் நிலையும் இப்படியே!

Dr Richardson :—நல்ல தேகபுஷ்டியுள்ள ஆண் பெண் சிலரை சிறுவயதுமுதலே சுருட்டுப் பிடிக்கச் செய்து அவர்களுக்குள்ளேயே மணம்புரியவும் செய்துவந்தால், பலமற்று ஒப்வுள்ளபெண்களும் பிள்ளைகளும் பிறப்பார்கள் என்பதற்கு ஐயமேயில்லை. Dr. Edward Smith: — அது சகலவியாதிகளுக்கும் ராஜாசுகக்கேடுக்குவித்து. சுருட்டுப்பிடிப்பவர்களுக்கு 'Sore throat' தொண்டைப்புண் உண்டாகும், அவர்களுக்கு வாயில் சிவப்பும், உலர்ச்சியும் உண்டாயிருப்பது, சுருட்டினின்றும் உட்புகும் உஷ்ண விஷப் புகை உண்டாக்கும் எரிவினாலேயே. இவ்வியாதி சுருட்டுப்பிடிப்பவர்களுக்கு சகஜம். சிலர் தாங்கள் சுருட்டுப்பிடிப்பது தங்கள் தொண்டைவியாதி நீங்கும்பொருட்டு எனக்கூறுகின்றனர். அது வீண்வியாஜமே. புகையிலை அதை ஒருநாளும் ஆற்றுவதில்லை, தத்காலசாந்திசெய்யலாம், முடிவில் வியாதியை அதிகரிக்கின்றதே.

**க்ஷயரோகம்.** புகையிலை க்ஷயரோகம் உண்டுபண்ணுகின்றது, அசுத்தக்காற்றினால் ஈரலுக்கு அநேகவியாதி உண்டாகின்றது, நாம் உட்கொள்ளும் விஷக்காற்று உதிரத்திலும், சுவாசாசயத்திலும் கலக்க க்ஷயரோகம் விளைகின்றது. நாம் ஒருதரம் வெளியில் விட்டகாற்றை உட்கொள்ளுவதே மிக அபாயம். இப்படியிருக்க நிகொடீன் (Nicotime) நிறைந்த புகையிலைப் புகையினால் சுவாசாசயத்தை நிறப்புவது அக்கோசத்துக்கு வியாதி விளைக்காமற் போகுமா? இது அனுபவஸித்தம். சிறுவயது முதல் சுருட்டுப்பிடிப்பது க்ஷயக்ஷயம் உண்டுபண்ணுவதாகவும் கூறுகின்றனர்.

**புகையிலையும் ரக்தகோசமும்.** ரக்தகோசத்தின்‡நிலை நாடியிலே விளங்குமன்றோ. சுருட்டுப்பிடிப்பவனது நாடிகள் மெதுவாயடிக்கின்றன. அதனால் அவன் ஹிருதயம் செயலற்று வலிநீங்கி விஷமேறிவிட்டதெனத் தெரியவருகிறது. வெகுநாளாய் சுருட்டுப்பிடிப்பவனது ஹிருதயம், திடீரென படபடவென்று அடிக்கிறதும், நாடிகள் விட்டுவிட்டு அடிக்கிறதுமன்றி, இன்னும் அநேக வியாதிகளுக்கு இடமாக இருக்கின்றது. இவ்வியாதியை (Narcotien of the Heart) 'இரக்தாசயவிஷம்' எனக்கூறுகின்றனர்; இவ்வியாதி நாலில்ஒருவரிடத்தில்நிச்சியம்காணலாம். புகையிலை இவ்வுறுப்பின் செயலில் மாத்திரமல்ல, அமைப்பிலுங்கூட அநேகக்கெடுதல்கள் விளைக்கின்றதாகவும் தெரியவருகின்றது.

**புகையிலையும் அஜீரணசக்தியும்.** அஜீரணத்துக்கு புகையிலையை நல்லமருந்தென்று அநேகர் சொல்லுகின்றனர். புகையிலை ஒருவிதவிஷத் தன்மையுள்ளது. அவ்விஷம் வயிற்றில் ஒருவித திராவகம் (Gastric juice) உண்டாவதைக் குறைத்து பசியை மந்திக்கச்செய்து ஜீரணசக்தியையும் கெடுக்கின்றது. பசியை சுருட்டுப்பிடிப்பதினால் ஒருவாறு அடக்கலாம். ஆனால் சாந்திசெய்யமுடியாதே. பொடிபோடுவதும் அத்தன்மையதே. பொடிபோடுவது மூக்கில் எரிவுண்டாக்கி அத்துடன் ஒத்துநடக்கும் வயிற்றிலும் ஜீரணசக்தியையும் குறைக்கின்றது.

**புகையிலையும், ரணமும்.** புகையிலை ரணமுண்டாக்கி பித்துவளரச்செய்யும். உதட்டிலும் நாக்கிலும் ரணப்பித்து உண்டாவதாகக் கூறுகின்றனர். இதன்றி, அவ்விடங்களில் உண்டாகும் பித்துக்களெல்லாம் சுருட்டுப் பிடிப்பதினாலேயே என்பதற்கு ஐயமேயில்லை. லண்டன்மாநகரத்தில் இவ்வியாதிக்கு ஏற்பட்டிருக்கும் ஆஸ்பத்திரியில் வந்த பதினாயிரவரில், ஸ்திரீஜாதி அதிகரித்திருப்பினும், உதட்டிலும் நாக்கிலும் பித்துவைத்திருந்த ஆண்பிள்ளைகள் பெண்களைவிட 5 பங்குஅதிகமாம்.

**புகையிலையும், பார்சவாயுவும்.** புகையிலை உபயோகிப்பதினால் தசை நரம்புசக்திகுறைய தேகம்மெலிந்து ஒருவித பார்சவாயு உண்டாகின்றதாம். இதன்றி, நயனவைத்தியர்கள், நேத்திரத்துக்கு ஒரு அபாயம் உண்டாகின்றதெனவும் கூறுகின்றனர். இவ்வியாதி சுருட்டுப் பிடிப்பதிலேயே மூழ்கியுள்ள பெல்ஜியம் (Belgium) ஜெர்மெனியில் (Germany) மும்முறமாய் காணப்பட்டது. அது, அவர்கள் சுருட்டுப் பிடிக்குமளவும் சொஸ்தமாகிறதில்லையாம்; பிடிப்பதை ஒழிக்கவும் நிவர்த்தியாய் விடுகின்றதாம்.

சுருட்டுப் பிடிப்பவருக்கு மிகுந்தகூச்சமும் அச்சமுமுண்டு: சிலர் சீக்கிரம் திடுக்கிடுகின்றனர். சிலர் தீராக்கோபத்தில் ஆழ்கின்றனர். சிலர் இரவுமுழுதும் நித்திரையற்றிருக்கின்றனர். சிலர், எழுதமுடியாமல் கைநடுக்கமுறுகின்றனர். இவ்வியாதிகளெல்லாம் சுருட்டைநீக்கவும் ஒழிந்துவிடுகின்றனவாம். முதலில் புகையிலை நரம்புகளை வலுவாகவும் உறுதியாகவும் செய்வதுபோல் தோற்றுகின்றது. அது ஸ்தாபிதமல்ல. எவ்வியாதியை சாந்தம் எனச்செய்கின்றதோ, அவ்வியாதியையே அதிகப்படுத்துகின்றது. புருடர்களும், தகப்பன்களும், பெருஞ்சுருட்டுப்பிடிப்பவர்களாயிருத்தலின் அநேகம் பெண்சாதிகளும் பிள்ளைகளும் தங்கள்மெல்லியலில் புகையிலைவிஷம் உறைத்து இரத்தத்தோடு கலக்கவும் பலக்குறைவடைகின்றனர்.

**சுருட்டுப்பிடிப்பதினால் பரம்பரையாயுண்டாகும் தீங்குகள்.** நல்ல பலமுள்ளவனொருவன் சுருட்டுப்பிடித்துக்கொண்டேயிருக்கும்பொழுதும் 'நாம் எப்பொழுதுமிருக்கிறதுபோலே தான் இருக்கிறோம். நமக்கு புகையிலையினால் கெடுதியில்லை' என்று எண்ணியிருக்கலாம். அவன்பிள்ளைகளும் நல்லபலமுள்ளவர்களாய் இருக்க வேண்டுமன்றோ. ஆனால் அவர்கள் அப்படியிருப்பதுநீங்கி, பலம்குன்றி, எவ்வியாதிகளுக்கும் எளிதில் இரையாகின்றனர். இது அனுபவஸித்தம். ஒருவன்தான் ஒரு கெட்டவழக்கத்தில் பழகிவருவதினால் தன் சரீரத்தையும் மனத்தையும்மட்டும் கெடுத்துக்கொள்ளும்பக்ஷத்தில் அவனை அதிலேயே பழகும்படி விட்டுவிடலாம். புகையிலையின் கேடு அவனையன்றி அவன் சந்ததியையும் யழிப்பதாயிருக்கின்றதே. தகப்பனது குற்றத்துக்காகப் பிள்ளை பலன் அனுபவிக்கின்றனென்பது இது புகையிலை விஷயத்திற்காட்டிலும் வேறொன்றிலும் அதிக ஸ்பஷ்டமாகபுலப்படுவதாயில்லை.

**கேடுகள்.** பலவீனமும், பிரமையும் வலிப்பும், பைத்தியமும், அங்கங்கள் குன்றுவதும். க்ஷயரோகமும், பிள்ளைகள் கஷ்டப்படுவதும், சிறுவயதிலே இறப்பதும் இவைகளெல்லாம் இக்கெட்டவழக்கத்திற்கு தகுந்த அறிகுறிகளன்றோ. இதன்றியும், இன்னும் பல வியாதிகளையும் விளைக்கின்றன. ஆதலால் சிறுவர்களை சுருட்டுப்பிடிக்காமலிருக்கச்செய்வதுடன் சுருட்டுப்பிடிப்பவர்களை அவ்வழக்கத்தினின்று மாற்றவேண்டுவது மிக அவசியமே.

இப்புகையிலையினால் உயிருக்கும் தேகசௌக்கியத்திற்கும் எவ்வளவோ கெடுதிகளை விளைக்கின்றதாக எடுத்துக்கூறியும், அவ்விலையில் பழகுபவர்கள் வருடந்தோறும் அதிகரிக்கின்றனரே. ஒருவர் இவ்வழக்கத்தினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள முயல்வராகில், அவர் அவ்வழக்கத்தை உடனே நிறுத்திவிடவேண்டியது. இது முதலில் கடினமாயிருப்பினும் நாளடைவில் சாதாரணமாகிவிடும்.

N. R. K. T.

## மனைமாக்ஷி.*

[பிரக்கியாதிபெற்ற அங்கிலேய கிரந்தகர்த்தாவாகிய 'நாதனீல் ஹாதர்ன்' 'மனைமாக்ஷியை'ப்பற்றி தான்நேசித்த ஒருசிமாட்டிக்குஎழுதிய கடிதத்தின் மொழிப்பெயர்ப்பைக் கீழே பிரசுரிக்கிறோம்.]

டாம்பிகர்களும், தனவான்களும், செருக்குள்ளவர்களும் இன்னும் உலகுளோர் பலரும் மதிகெட்டு மயங்கித் திகைத்திருப்ப, நமது வழியை விசித்திரமென்றும், நூதனமென்றும், நாம் அகம்பாவமுடையவர்களென்றும் அழைப்பினும், நாம் அம்மயக்கத்துள் வீழாமல் உலகினின்றும் விலகி ஒருவரையொருவர் எப்பொழுதும் நேசித்திருக்கச்செய்யும் நமது இல்லத்திற்கு ஏகுவோமன்றோ. அவ்விடத்து, அயலார், அந்நியர்கள் தொந்தரவின்றி, வேறுயாதொரு இடையூறுமின்றி மனப்பூர்த்தியாய் சந்தோஷித்து இன்பமாயிருக்கலாம். நாம் நிஜமான பேரின்பம் அவாவின் அது நம்மனத்தே உளது. அதைத்தேடி உலகில் திரிபவர்களெல்லாம் மூடர்களே. நமது இன்பங்களெல்லாம் நம்மிடத்தே இருக்கின்றன— அவை நமது பிரியமான சிறு குடிலிலேயே தங்கியுள்ளன. மனத்திலுள்ள இதத்தை மூடர்கள் அறிகின்றாரில்லை. நாமோ அதை அனுபவித்து மேல்மேல் விருத்திசெய்வோம். அதன் உண்மையை அறிந்த மெல்லியருக்கும் நல்லவர்களுக்கும் இவ்வுலகத்திலேயே சுவர்க்கானுப

‡ Heart.

* 'Fireside'—From Nathanel Hawthorne.

வம்கொடுக்குமன்றோ. இது நமக்கு அனுபவ சித்தமல்லவா.

நமது குழந்தைகள் நமக்கு மிகுந்த சௌக்கியத்தை உண்டுபண்ணுவார்களன்றோ: அவர்கள் மனதை நல்விஷயங்களில் செலுத்தி சன்மார்க்கத்திலேயே கொணர்வோமாகில் நமது இன்பத்திற்கு அவர்கள் சுரங்கம்போலாவார்கள். நமது யௌவனபருவத்தில் நம்மைச் சந்தோஷப்படுத்தி முதிர்ந்தகாலத்தில் ஊன்றுகோலாகி, நிறைத்த காலத்தில் மரியாதைசெய்வார்கள். அவர்கள் தினந்தோறும் நல்வழியில் அபிவிருத்தியடைவதைநோக்கி 'நமக்கு அவர்களிடத்துள்ள பிரியம் வீணன்று. நாம் இனி அவர்களைப்பற்றிய கவலை நீங்கலாம்' என்று அறிவோமன்றோ.

நாம் உலகத்தாரறியாமல் வசிக்கின்றோமல்லவா? இருந்தும் இவ்வளவு சந்தோஷமும் எங்குவிளைந்தது. எல்லாம் நாம் செய்துகொண்டதல்லவா. ஒருவரிடத்தும் அவைகளுக்காக யாசிக்கவில்லையே. மன்னர்களே! உங்களது சிறப்பை நாங்கள் நயக்கவில்லை. உங்களைப் பார்த்தும் பொறாமைப்படவில்லை. உயர்ந்த பதவியிலிருப்பவரைப்பார்த்து இரங்கி, எங்கள் அற்பகதியைக்கொண்டே சந்தோஷப்பட்டிருக்கிறோம்.

நமது ஆஸ்திபெரிதல்ல; ஆனால் நமக்கு எவ்வளவு தேவை? வேண்டுவது சுவல்பந்தானே. நமக்கு இன்றியமையாது வேண்டியவைகளையே விரும்பி, அவைகளைக்கொண்டே காலம் கழிப்போம். எம்பெருமான் கொடுத்ததை வைத்து திருப்தியடைவோம். அளவுக்குமிஞ்சிய ஆசையை ஒழிப்போம். இருப்பது அற்பமாயினும், இச்சமயத்தைக் கைவிடாமல் மேல்மேல் ஆசைப்படாமல் அவை முழுதையும் அனுபவிப்பதன்றோ விவேகம். கஷ்டம் நேரும்பொழுதும் இஷ்டம் கூடாதபொழுதும் அமரிக்கையாய்ப் பொறுத்திருப்பதும், கூடும்பொழுது சந்தோஷப்பட்டுமிருப்பதன்றோ ஞானத்திற்கு ஏற்றதன்றி மோக்ஷத்திற்கும் ஏது.

நாம் ராஜபோகங்களையா இச்சிக்கின்றோம்? இல்லையே. நமது உணவை பிள்ளை பெண்களுடன் பிரியமுடன் பகர்ந்து உண்டு சுவாமியை அதற்காக வந்தனஞ்செய்வோமன்றோ.

இப்படிக் கைகோர்த்துப் பிரியாமல் உலகத்து இன்பதுன்பங்களைப் பொறுத்து அனுபவித்து ஆயுளைக்கழித்து, வருத்தமும் பயமுமின்றி இவ்வுலகம் விட்டுப்பரலோகமடைவோமன்றோ. உள்ளங்கை நெல்லிக்கனிபோல் களங்கமற்ற நம்மனம், சாகும்தருணம், மிகப்பிரியமான தேவதைபோல் நம்மைத் திடப்படுத்தி, சாவை மனங்குளிர எதிர்பார்க்கச் செய்யுமன்றோ.

## வித்யாவிஷயமாய் கவர்னர் பேசியது.

கனம்பொருந்திய கவர்னர் ஸர்ஆர்தர் ஹாவ்லாக் அவர்கள் சென்ற டிசெம்பர்மீ 22உ கூடிய வித்யாவிஷயாலோசனை சபை (Educational Conference) ஆரம்பத்தில் வித்யாவிஷயங்களைக் குறித்து ஓர் உபந்நியாசம் செய்தார். அதில் இப்பொழுதிருக்கும் வித்யாபோதனை ஏற்பாடு அடிமுதல் நுனிவரையில் திருப்திகரமாகவில்லை யென்றும்; பெற்றோர்களும், பிள்ளைகளும், உபாத்தியாயர்களும், பரீக்ஷை பரீக்ஷையென்று, அது ஒன்றின்மேலே கண்ணாயிருந்து அதுதேறுவதற்கான வழியைத்தேடுகிறார்களேயன்றி வாஸ்தவத்தில் வித்யாபேக்ஷைகொண்டு, வித்யாபலனை விரும்பியுழைப்பதில்லையென்றும், இதனால் இப்பொழுதுள்ள வித்யாபோதனையேற்பாடு உத்யோகங்களுக்கு நபர்கள் தயார்செய்வதான நோக்கம் ஒன்றையே பிரதானமாகக்கொண்டு அதற்கேற்றதாகவே நடந்துவருகிறதென்றும், இப்படியிருப்பது பிசகென்றும், இதற்குக்காரணங்களை ஆராயுங்கால், கவர்ன்மெண்டார் சிறுவயதுமுதல் பிள்ளைகள் படிக்கும் ஒவ்வொருபடியிலும் ஒரு பரீக்ஷைவைத்து அப்பரீக்ஷையில் தேறினவர்கள் சர்க்கார் உத்தியோகத்திற்கு அருகமானவர்களென்று ஏற்படுத்தியிருப்பதால், பரீக்ஷைப்பைத்தியம் அதிகமாய் முற்றிப்போய் விட்டதாகத்தோன்றுகிறதென்றும், இப்பொழுது வித்யா



விஷயத்திலுள்ள குறைகளையெல்லாம் எடுத்துப்பார்க்கையில் மூன்றுவிஷயங்கள் காரியாம்சத்தில் நாம் கவனிக்க வேண்டியனவாகவிருக்கின்றன வென்றும் உரைத்து அவற்றை இச்சபையில் கூடியிருக்கும் உபாத்தியாயர்கள் அடுத்த வருஷம் சபைகூடுமுன் தீரவிசாரித்து ஆலோசனைசெய்து அவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று கோருவதாகச் சொல்லிப்பேசினார். கனம்பொருந்திய கவர்னர் குறித்த மூன்றுவிஷயங்கள் என்னவெனில்:

(1) இப்பொழுதுள்ள ப்ரைமெரி, செகண்டெரி பரிக்ஷைகளை முற்றும் எடுத்துவிடலாமா? அல்லது அவைகளை விசேஷமாய் மாற்றவேண்டுமோ?

(2) இப்பொழுதுள்ள ஸர்வகலாசங்கம்(University) பரீக்ஷைநடத்தும் சங்கமாகமட்டு மிருப்பதைமாற்றி போதனாசங்கமாகவு மிருக்கும்படி செய்யலாமா?

(3) ப்ரைமெரிஸ்கூல்களில் இங்கிலீஷுக்குபதிலாக சுபாஷைகளையே போதித்துவரும்படிசெய்து ஹைஸ்கூல் டிபார்ட்மெண்டுவரையில் சுபாஷைகளிலே பாடங்களைப் போதித்துவரச் செய்யலாமா? இதற்கு அனுகூலமாக உத்தரமளித்தால்,இங்கிலீஷை ஒருபாஷையாகச் சொல்லிக்கொடுப்பது ப்ரைமெரிஸ்கூல் 4-வது ஸ்டாண்டர்டில் ஆரம்பிக்கலாமா அல்லது அதற்கும் தாழவிருந்தாவது மேலிருந்தாவது ஆரம்பிக்கலாமா?

இம்மூன்று கேள்விகளும் மிகமுக்கியமான கேள்விகளென்பதிற் சந்தேகமில்லை. மூன்றாவது கேள்வி எல்லாவற்றிலும் மிகமுக்கியமானதும் எல்லாரையும் பாதிப்பதுமாயிருக்கின்றது. இதைப்பற்றிவிவேகசிந்தாமணியை வாசிக்கும் உபாத்தியாயர்கள் ஆரத்தீர ஆலோசனைசெய்து யோசித்து அவர்கள் அபிப்பிராயத்தை நமக்குத்தெரிவித்தால், அவ்வபிப்பிராயங்களைத் திரட்டிப் பிரசுரிப்பதுடன் கனம்பொருந்திய கவர்னர் அவர்களுக்கும், வித்தியா இலாகாத்தலைவர் அவர்களுக்கும் அவர்களுடைய அபிப்பிராயங்கள் எட்டும்படிச்செய்ய ஏற்பாடு எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கிறோம்.

## மிஸ் மானிங் துரைசானி விஜயம்.

### சென்னையிலிருந்தகாலம்.

(ஒரு ஹிந்துமாது எழுதியது.)

1899-வது வருஷம் பிறக்குமுன்னும் பிறந்தபின்னும் இச்சென்னை இரண்டொரு மாதகாலமாய் சர்வஜனங்களுக்கும் சந்தோஷத்தையே உண்டுபண்ணிவந்ததென்பதில் சந்தேகம் இல்லை. சிலர் அப்படியாப்பட்ட சந்தோஷம் என்னவென்றும் அந்த சந்தோஷத்தை எப்படி ஸர்வஜனங்களும் அடைந்தார்கள் என்றும் கேட்க ஆவலாயிருக்கலாம். முதலாவது 'நாஷனல்இந்தியன்காங்ரெஸ்' முதலான பல மகா சபைகள் கூடின விசேஷம் ஒன்று. இரண்டாவது மிஸ் மானிங் துரைசானியுடைய நல்வரவு. இந்த காங்ரெஸுக்கு வெளி ஊர்களிலிருந்தும் படித்தவர்களெல்லாரும் வந்ததுமன்னியில் எல்லா இடங்களிலும் இதையே பேச்சாகவும் வம்பாகவும் பேசிவந்தார்கள். அந்த காலத்தில் சென்னையில் இருக்கும் வீடுகள்தோறும் காங்ரெஸ், காங்ரெஸ் என்று கல்யாணம் பட்டபாடுபட்டது. தெருவில்போகும் அவிசற்பழம்விற்கும் 'ஆக்கர்'முதல்,"காங்ரெஸ் விலைசாஸ்தி" என்று இலாபம் சம்பாதித்தார்கள். இதுநிற்க. நாம் எடுத்துக்கொண்ட விஷயம் காங்ரெஸைப்பற்றியல்ல. ஆனாலும் இவ்வருஷத்தில் ஜனங்களுக்குண்டான ஒருவித சந்தோஷத்தைப்பற்றி சொன்னோம்.

### மிஸ்மானிங் நல்வரவு.

மிஸ்மானிங் துரைசானி அம்மாள் ஜனவரிமீ 30உ காலமே 7-மணிக்குச் சென்னை ஸென்ட்ரல் ஸ்டேஷனில் வந்திறங்கினார். ஸ்டேஷனுக்கு மிஸ்ஸஸ் ப்ராண்டார்துரைசானி அம்மாளும் இன்னும் சிலரும்போனார்கள். அந்த அம்மாள் எல்லாருடனும் சந்தோஷமாய் சில வார்த்தைகள் பேசிவிட்டு மிஸ்ஸஸ் ப்ராண்டர் அம்மாளுடன் அவர் வீட்டுக்குப் போய்விட்டார்கள். அவர் இங்கிருந்த இரண்டுவாரமும் வெகு மும்முரமாய் வேலையாகவிருந்தாரென்று கேள்வி. ஆனாலும் நான் நேரில் கண்டமட்டில்தான் சொல்லக்கூடும். அவர் வந்ததும், மிஸ்ஸஸ் பிராண்டர் அம்மாள் நம்மையெல்லாம் அந்த அம்மாள் பார்க்கும்பொருட்டும் நாமும் அந்தம்மாளைப் பார்க்கும்படிக்கும் தான் நிரம்ப பிரயாசை யெடுத்துக்கொண்டு சுதேச ஐரோப்பியமாதர்கள் அநேகருக்கு அவரைக் காணும்படி அழைப்புப்பத்திரம் அனுப்பி அழைத்து,

பிப்ரவரிமீ 4௳ சனிக்கிழமை சாயங்காலம் 4 - 30 மணிக்கு ஒரு தோட்டக்கச்சேரி வைத்தார்கள்.

## மிஸ்ஸஸ் ப்ராண்டர் தோட்டக்கச்சேரி.

இதற்கு வழக்கம்போல் குழந்தைகளும் ஹிந்துமாதர்களும், கிறிஸ்தவ, ஆங்கிலேய மாதர்களுமாக சுமார் 70, 80 - பேர்களுக்குக் குறையாது வந்திருந்தார்கள். பங்களா கேட்டுக்குள் அத்தனைவண்டிகளும் போகச் சரிப்படாததினால் தோட்டவாசலிலே வண்டிகள் நின்றுவிட்டன. அவ்விடத்தில் மிஸ்ஸஸ் கார்டன் துரைசானி அம்மாள் வந்தவர்களையெல்லாம் கைகொடுத்துபசரித்து அழைத்துக்கொண்டு போய், மிஸ்மானிங் துரைசானியினிடம் அவர்கள் பேரைச் சொல்லி பரிச்சயம் செய்துவைத்தார். மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானி அம்மாள் இன்னும் சில முக்கியமான பேர்களை யழைத்துக்கொண்டு அவர்கள்பேர் புருஷர்கள் பேர்களைச்சொல்லி சிநேகம்செய்துவைத்தார். அந்த அம்மாள் (மிஸ்மானிங்) எல்லாரையும் நிரம்ப சந்தோஷத்துடன் பார்த்துப்பேசினார். அதில் அனேகம்பேர்களுக்கு இங்கிலீஷ் தெரியாததினால் அவர்களுக்குண்டான சந்தோஷத்தை முகமலர்ச்சியால் காண்பித்தார்களேயன்றி அவரோடு நேரில் கலந்துபேச முடியாமலிருந்தது. அப்படிப்பட்டவர்களில் நானும் ஒருத்தி. அந்தம்மாள் நம்மிடத்தில் அவ்வளவு அபிமானம் காட்டிக் கொண்டாட நாம் மனம்பூரித்தும் வெளியிடமாட்டாமல் ஊமைபோலிருக்கவேண்டி நேரிட்டதேயென்று எனக்கு நிரம்ப வருத்தமாயிருந்தது. இந்தமாதிரி என்னைப்போலொத்தவர்கள் அனேகருக்குத் தோன்றியிருக்கலாமென்று நினைக்கிறேன். இதுநிற்க. பங்களாவெளியில் அழகாய் பசும்புல்நிறைந்த தரையில் நாற்காலிகள் 'பெஞ்சிகள்' போடப்பட்டிருந்தன. நடுவில் ஜமக்காளம் விரித்து அதிலிருந்து மூன்று சிறுமிகள் 'பிடில்,' தமபூருகள் வைத்து பத்து நிமிஷம் வாசித்தார்கள். பிறகு குழந்தைகளுக்குச் சந்தோஷமுண்டாக பொம்மைகளைக்கொண்டு ஆட்டம் காண்பித்தார்கள். இந்தவேடிக்கை, பார்ப்பதற்குச் சந்தோஷமாயும், அப்பொம்மைகளின் பேச்சுகள் காதுக்கினிமையாகவும், இருந்தபடியால் குழந்தைகளெல்லாரும் சந்தோஷப்பட்டார்கள். அன்றையதினம் அவ்விடம் வந்தபேர்களுக்கெல்லாம் அவ்விடத்திலுள்ள மரங்களும் செடிகளும் கண்ணுக்கு ரமணீயமாய் இருந்தன. இது தவிர, அவரவர்கள் சிநேகிதர்களைப்பார்க்க ஒரு நல்ல சமயம் கிடைத்ததைப்பற்றி எல்லாரும் நிரம்ப சந்தோஷமடைந்தார்கள். ஒரு சாட்டைக்கழியில் கயிறுகட்டி அந்தக் கயிற்றுநுனியில் கொக்கிவைத்து அதை 8, 9-வயதுள்ள சிறுமிகள் கையில்கொடுத்து விளையாட்டுமீன்களை ஒரு பெட்டியில் வைத்து அந்த மீன்மூக்கில் பொட்டுப்போல் துவாரம் செய்திருக்க, இவர்கள் கையில் கொடுத்திருக்கும் சாட்டைக் கொக்கியை அதில்கோர்த்து எடுக்கச்சொன்னார்கள். இது மீன்பிடிப்பதை விளையாட்டாகக் காட்டினது போல் தோன்றிற்று. அப்புறம் 'இங்கிலீஷ் பியாண்டு' வாத்தியம் வாசித்தார்கள். இதற்கு மத்தியில் வந்தவர்களெல்லாரும் தங்கள் சிநேகிதர்களைக் கண்டுகொண்டாடி, பேச்சும் சிரிப்புமாயிருந்தார்கள். அப்போது அங்கிலேய ஸ்திரீகளுக்கெல்லாம் சிற்றுண்டிகள் உதவப்பட்டன. ஹிந்து ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் பெங்களாவின் ஓர் அறையில் பழதினுசுகளும் மிட்டாய் பொட்லங்களும் வைக்கப்பட்டிருந்தன. இதற்குள் மணி ஆறு ஆகிவிட்டபடியால் அவரவர்கள் வீட்டுக்குத்திரும்பக் காலமாய்விட்டது. மிஸ்ஸஸ் ப்ராண்டர் அம்மாளின் கோரிக்கைப்படி பழதினுசுகள் மிட்டாய்பொட்டலங்கள் இவைகளை யெல்லாரும் உள்ளேசென்று அவரவர்களுக்கிஷ்டமானபடி எடுத்துக்கொண்டு வந்தார்கள். வரும்வழியில் மிஸ்மானிங் துரைசானி பூச்செண்டு கொடுக்க, மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானி தாம்பூலம்கொடுத்து உபசரித்தது எல்லாருக்கும் நிரம்ப சந்தோஷமாயிருந்தது. இந்தம்மாள் இப்படி அடிக்கடி ஸ்திரீகளையும் குழந்தைகளையுமழைத்துபசரித்து நிரம்ப உற்சாகத்துடன் மிகவும் சிரமமெடுத்துக்கொண்டு நடத்திவருகிறார்கள். இந்தம்மாள் நம்பேரில் வைத்திருக்கும் விசுவாசத்துக்கு நாமும் அப்படியே அவரிடத்தில் அத்யந்த விசுவாசம்வைத்து மறவாமலிருக்கக் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம்.

## செட்டிப்பேண்கள் பாடசாலையில் நடந்த பிரசங்கம்.

இதற்கு அடுத்தசனிக்கிழமை சென்னை செட்டிப் பெண்கள் பாடசாலையில் ஒரு உபந்நியாசம் நடந்தது. அன்றைய சாயங்காலம் மிஸ்ஸஸ் ப்ராண்டர், மிஸ்மானிங் இவர்களும், இன்னும் சில துரைசானிகளும், கிறிஸ்தவ, ஹிந்துமாதர்கள், பாடசாலைப்பெண்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். மிஸ்ஸஸ் கந்தசாமி செட்டியார், பெண்களுக்குள் படிப்பு முன்காலத்திலிருந்ததைவிட இப்போது எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கிறதென்றாலும் பிராமணப்பிள்ளைகள் நூறு பிள்ளைகள் படித்தால் பிராமணப்பெண்கள் படிப்பது நூற்றுக்குப்பத்து குறைச்சலாய்த்தானிருக்கிறதென்



றும்; முதல்முதல், பெண்கல்வி சென்னை, பம்பாய், கல்கத்தா அந்தமூன்று இடங்களிலும்ஆரம்பத்ததில், மற்ற இரண்டு பட்டணங்களைவிட சென்னையில் பெண்கல்வி குறைவு என்றும்; எழெட்டு வருஷங்களில் மெட்ரிகுலேஷன், எப். ஏ., பி. ஏ., பரிக்ஷைகளில் தேறினவர் இம்மூன்றுபட்டணங்களிலும் இத்தனை இத்தனை பேர்களென்றும்; இப்படி இங்கே பி. ஏ-யில் தேறியவர்கள் மூன்றுபேர்களென்றும், அவர்களில் மிஸ்ஸஸ் சத்தியநாதன் ஒருவர் தாம் சுதேசப்பெண் என்றும்; பெண்கல்வி விஷயமாய் மிஸ்மானிங் துரைசானி நிரம்பவும் சிரமமெடுத்துக்கொண்டு உழைப்பதாகவும்; நாமும் அவர்கள் வேலைக்கு அலுப்புவராமல் காக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோமென்றும் சொல்லி உபந்நியாசத்தை முடித்தார். முடிந்தவுடன் எல்லாரும் சந்தோஷத்துடன் கைகொட்டினார்கள்.

இது முடிந்ததும் மிஸ்மானிங் துரைசானியம்மாள் உங்களையெல்லாம் நேரில்கண்டு நிரம்ப சந்தோஷத்தையடைந்தேனென்றும், நான் இங்கு முன் வந்திருந்தபின் இப்போது உங்களைப்பார்த்து நிரம்பச் சந்தோஷமடைந்தேன் என்றும் நீங்ககள் எல்லாரும் குழந்தைகள் புருஷர்களுக்குச் செய்யவேண்டியசிசுருஷைகள், வீட்டுவேலைகள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு அத்துடன் படிப்பையும் கைவிடாமல் வாசிக்கிறதைப்பார்க்க எனக்கு நிரம்ப திர்ப்தியாயிருக்கிறதென்றும், எல்லாவிஷயத்திற்கும் படிப்புவேண்டியது அவசியமென்றும், நல்லமனைவியாகவும் நல்ல தாயாகவும், நல்ல சிநேகிதையாகவும் இருப்பதற்கு படிப்பு அவசியமென்றும், வேலைக்காரர்களை நடத்துவதிலும் ஈவு, இரக்கம் இருக்கவேண்டுமென்றும்; இப்படி எல்லாவற்றிற்கும் படிப்பு இன்றியமையாத வஸ்துவாய் இருக்கிறபடியால் எல்லாரும் அதைக்கைவிடாமல் காப்பாற்றவேண்டுமென்றும், இதற்குதிருஷ்டாந்தமாய் ஒரு துரைசானியிருந்தாளென்றும், நீங்கள் எல்லாரும் என்பேரில் பக்ஷமாயிருப்பதை நான் ஒருபோதும் மறவேன் என்றும், நான் ஊருக்குப் போகிறபடியால் உங்களைவிட்டுப்போக மனம் இல்லாதவளாய் இருக்கிறேன் என்றும், இன்று 15 - ம் நாள் சனிக்கிழமையதினம் நீங்கள் ஆடும் ஊஞ்சலைப் போல் அலைகளாலாடும் கப்பலில் ஏறி நான் பிரயாணம்செய்வேன் என்றும், அந்தசமயத்தில் நான்சென்னையைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டோமே யென்று நினைப்பேன், ஆனால் நான் எவ்வளவுதூரத்திலிருந்தாலும் உங்களிடத்தில் எனக்குண்டான அன்புபிரியாதென்றும் சொன்னார். இதையெல்லாம் அவர் இங்கிலீஷில் சொன்னார். அதை மிஸ் ஷண்முகம் அம்மாள் எல்லாரும் அறியும் பொருட்டு தமிழில்சொன்னார். இதற்குமுன், சென்ற வருஷம் உபந்நியாசம் செய்தவர்கள் மூன்றுபேர்களுக்குச் சேரவேண்டிய பரிசுகளைத் தம் கையால் அவர்களுங்களித்தார், எல்லாருக்கும் பக்ஷணம் தாம்பூலம் கொடுக்கப்பட்டன. மிஸ் மானிங் துரைசானியம்மாள் எல்லாரையும்பார்த்து இக்கல்விச்சங்கம் மேன்மேலும் விர்த்தியடைய வேண்டுமென்றும், நீங்கள் விர்த்தியடைந்துகொண்டு வருவதைப்பற்றி எனக்கு மிஸ்ஸஸ் கார்டன், மிஸ்ஸஸ் பிரண்டர், இவர்கள் அடிக்கடி கடிதம் போடுவார்களென்றும் சொன்னார். இதற்குள் மணி 6 - ஆய்விட்டபடியால் எல்லாரும் அந்த அம்மாளைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்களாய் வீடுவந்துசேர்ந்தோம். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் மிஸ்மானிங் துரைசானி சென்னைவிட்டு ரயிலேறிச்சென்றார்.

## நமது பார்வைக்குவந்த புஸ்தகங்கள்.

### இல்லாண்மை.

இல்லாண்மை என்பது இல்லத்தையாளுந்தன்மை. இது குடித்தனம் செய்வோர் எல்லாருக்கும் இன்றியமையாததொன்று. ஹிந்துதேசத்தில் குடித்தனம் செய்யும் முறையைப் பெண்கள் தம் பிறந்தகத்தில் தாயாரிடத்தும், புக்ககத்தில் மாமியாரிடத்துமிருந்து ஒக்கவேலைசெய்துபழகிக் கற்றுவந்தார்கள். முன்காலத்து ஸ்திரீகள் குடித்தனம் செய்வதில் தேர்ந்தவர்களாயிருந்தார்களென்றும் இக்காலத்துப்பெண்கள் அவர்களைப்போல் அவ்வளவு குடித்தன சாமர்த்தியம் அறியாதவர்களாயிருக்கிறார்களென்றும் 'பண்டங்களைக்கொட்டிவாரிக் குட்டிச்சுவர் செய்துவிடுகிறார்கள்' என்றும் வயதானஸ்திரீகள் சொல்லக் கேள்வி. அனுபவத்திலும் முன்காலத்துஸ்திரீகளுக்குக் குடித்தனவிஷயங்களில் இருந்த அறிவும் ஞானமும் இக்காலத்துப் பெண்களுக்குள் காண்பது அரிதென்றேசொல்லும்படியாக விருக்கின்றது. இப்படி முற்காலத்தைச் சிலாகித்துத் தற்காலத்தைப்பற்றித் தாழ்வாகப்பேசுவது காலசுபாவமென்பதை ஒப்புக்கொண்டாலும் மேற்சொன்னவற்றில் உண்மையும் உண்டென்டதை நாம் மறுக்கக்கூடவில்லை.

இப்பொழுது காலம் மாறுபட்டுவருகிறது. "பழையனகழிதலும் புதியன புகுதலு" மாகவிருக்கிறது இக்

காலம். இப்படியிருக்குங்காலத்தில் எத்தேசத்திலும் எக்காலத்திலும் தடுமாட்டத்துக்கிடமுண்டாவது சகஜமே. மாறுபாடடையும் காலத்தில் இயல்பாயுண்டாகும் தடுமாட்டத்துக்கு இடங்கொடுத்து யோசிப்போமானால் வரவரக் காலம் விர்த்தியாய்க்கொண்டு வருகிறதென்று நமக்கு நன்றாய்ப்புலப்படும். இப்படிக் காலம் விர்த்தியாய்க்கொண்டு வருவதற்கறிகுறியான சின்னங்களில் நமது முன்னிருக்கும் இல்லாண்மை என்னும் சிறுபுஸ்தகம் ஒன்றாக நினைக்கிறோம்.

இப்புஸ்தகம் முதலில் இங்கிலீஷில் எழுதிப் பிரசுரிக்கப்பட்டது. இது தமிழிலில்லாக் குறையை நிவர்த்திக்க இப்பொழுது தமிழிலும் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலை இங்கிலீஷில் எழுதினவர் மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானி. இவர் சென்ற 30-வருஷங்களாகப் பெண்கல்வி விஷயத்தில் இவ்விராஜதானியிலிருந்துழைத்து இப்பொழுது பாலிகாபாடசாலைகளை மேற்பார்வைசெய்து வரும் பிரதம 'இன்ஸ்பெக்ட்ரேஸ்' வேலைவகித்திருக்கிறார். இவர் தமிழ் தெலுங்கு இரண்டும் கற்றிருக்கிறார். தமிழில் பேசவும் வாசிக்கவும் நன்றாகப் பழகியிருப்பதோடு எழுதவும் பயின்றிருக்கிறார். ஹிந்துக்களுடைய நடையுடைபாவனைகளையும் அவர்களுடைய பழக்கவழக்கங்களையும் நன்றாக ஊகித்தறிந்து கொண்டவர். மேற்கத்திவித்தையில் மிகத் தேர்ந்திருப்பதோடு அவ்விடத்து ஏற்பாடுகளை இத்தேச விசேஷங்களுக்கேற்க மாற்றியனுசரிக்கவேண்டுமேயன்றி, நமது பழக்கவழக்கங்கள், எண்ணங்கள், தேசஜனாசாரங்கள் இவைகளைக் கருதாது மேற்கத்தியார் அதாவது ஐரோப்பியர் அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் அப்படி அப்படியே இங்கு வேரூன்றச் செய்வது யுக்தமுமல்ல சாத்தியமுமல்லவென்று நன்றாயறிந்தவர். அறிந்ததோடு அவருக்குள்ள ஐரோப்பிய ஞானத்துடன் இந்துக்களின்பழக்கவழக்கங்கள் நடையுடைபாவனைகளையும் அவைகளின் உபயோக விசேஷங்களையும் அவைகளால் விளையும் நன்மை தீமைகளையும் உள்ளூர உணர்ந்தறிந்தாலன்றி தன்னுடைய மேற்கத்தி ஞானத்தையவ்வளவாக முற்றும் பயன்படும்படி உபயோகித்தலரிதென்றுமறிந்தவர். அதற்கிசையநமதுபழக்கவழக்கவிசேஷங்களையறிந்துணர்ந்து உள்ளபடி கிரகித்துக்கொள்ளவேண்டிய சிரமமெடுத்துக்கொண்டுமிருக்கிறார். ஆகையால் இப்படிப்பட்ட ஒருவர் பெண்ணாய்ப்பிறந்த ஒவ்வொருவருக்கும் உபயோகமானதும், சரியாயும் சுகமாயும்குடித்தனம் நடத்தஇன்றியமையாததுமான ஒரு விஷயத்தைப்பற்றி எழுதப்புகுந்தால் அதில் ஐரோப்பியர், இந்தியர் இருவருக்குள்ளும் சிரேஷ்டமாக மதிக்கப்படும் உபயோகமான போதனைகளெல்லாம் அடங்கியிருக்குமென்று எதிர்பார்ப்பது சுபாவந்தானே. அப்படி எதிர்பார்க்கக்கூடியதற்கேற்ப இப்புஸ்தகம் அமைந்து முற்றும் திர்ப்திகரமாக விருப்பதைக்கண்டு மிகச் சந்தோஷிக்கிறோம். இதைத்தமிழில் மொழிபெயர்த்த ம-௱-௱-ஸ்ரீ, தி-த. கனகசுந்தரம்பிள்ளை பீ. ஏ அவர்களும், தமிழில் வல்ல பண்டிதரேனும், நமது பண்டிதர் வழக்கப்படி கடினமான நடையிலெழுதாமல் யாரும் சுலபமாய் அறியும்படியான எளியநடையில் சுத்தமான தமிழில் மொழிபெயர்த்திருப்பதைப்பற்றிச் சந்தோஷிக்கிறோம். இடை இடையே வரும் சில அடைமொழிகளும் வேறுசிலவார்த்தைகளும் இப்புஸ்தகத்தை வாசிக்கும் ஸ்திரீபாலார்க்குப் புதிதும் அரிதுமானவையாகத் தோற்றலாம். ஆனால் இப்படியுள்ளனவைகளில் அனேகம் வழக்கத்தில் தொகுத்தும், திரிந்தும், மருவியும் வழங்கும் சொற்களைச் சுத்தமாகவெழுதியிருப்பதால் உண்டாகும் பிரமையேயன்றி வேறல்ல. வேறு சில வார்த்தைகள் மொழிபெயர்த்தவர் இலங்கையைச் சேர்ந்தவராதலால் அங்குவழங்கும் யாழ்ப்பாணத் தமிழிற்கும் இங்குவழங்கும் சென்னைத் தமிழுக்குமுள்ள வித்தியாசமேயன்றி வேறல்ல. இவ்வேற்றுமை விகாரங்கள் விலக்கக்கூடாதனபோலும் எளியநடையில் சுத்தத்தமிழ் எழுதுவது கூடாதென்று நினைக்குமவர்க்கு அஃது கூடுமானதே யென்று செய்துகாட்டியதுபோல பிள்ளையவர்கள் மூலத்தின் கருத்துத் தெள்ளெனவிளங்க மிகவும் இலகுவான நடையில் எழுதியிருப்பது கொண்டாடத்தக்கதே.

இப்பொழுது இச்சிறு புஸ்தகத்திலடங்கியிருக்கும் விஷயங்களைச்சுட்டிக்காட்டிச் சிலமொழிகள்சொல்லி இதை முடிப்போம். "இல்லாண்மை" யென்னும் நூலின்கருத்து விளங்க இப்புஸ்தகத்தை மொழிபெயர்த்துள்ள ம-௱-௱-ஸ்ரீ கனகசுந்தரம் பிள்ளையவர்களே இவ்விவேகசிந்தாமணிப் பத்திரிகையின் முதல் வருஷத்து மூன்றாவது சஞ்சிகை முதலில் விரியச் சொல்லி விளங்கவைத்திருக்கிறார் அவற்றை நாம் இங்கு திரும்பச்சொல்ல நிமித்தமில்லை. இச்சிறு புஸ்தகத்திலடங்கிய விஷயங்கள் 8 ப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு அதிகாரத்தில் விளங்கவைக்கப்பட்டிருக்கிறது. இவ் வெட்டதிகாரங்களிலும் விரித்துரைக்கப்பட்ட விஷயங்கள்:—(1) வீடமைத்துக்கொள்ளல், (2) வீட்டுக்குவேண்டும்சாமான்கள்சேர்த்தல், (3) வீட்டினையும் வீட்டிலுள்ளாரையும் ஆளுந்தன்மை, (4) குழந்தைகளை வளர்த்தல், (5) நோயாளியைப்பேணல், (6) வருவாயாட்சி—அதாவது, வரவுக்குத்தகுந்தபடி செலவுசெய்து வருங்காலத்துக்கும் ஆதாரம்செய்துகொள்ளும்படி நிர்வகிக்கும் சாமர்த்தியம், (7) வழிச்செலவு—இத்தலைப்பில் சத்திரம், சாப்பாட்டுவீடு, உடை, பெட்டி, திருநாளுக்குப்போதல் முதலிய விஷயங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது - (8) குழந்தைகட்குக் கல்விகற்பித்தல். கடைசியான 8-வது அதிகாரம் மிகவும் முக்கியமானபடியால் அதிலடங்கிய விஷயங்கள் மிகவும் தெளிவாகச்சொல்லிப் புத்தியிற்படத் தீட்டப்பட்டிருப்பதைக்கண்டு சந்தோஷிக்கிறோம்



இப்புஸ்தகம், குடித்தனம்செய்யும் முறையையும் பாங்கையும்பற்றிச் சொல்வதால் இது வாசித்துப் பாடம் பண்ணுவதாலே யறிந்து பயன்படக்கூடியதாயில்லை. இதைவாசித்து அனுபவத்தாலறிந்துகொள்ளவேண்டுமாதலால் வாசிக்கத்தெரிந்த பெண்கள் வாங்கி வாசிக்கும்பொழுது தங்கள் தாயார், தமக்கை, அத்தை, பாட்டி முதலானவர்களைக் கிட்டவைத்துக்கொண்டு அவர்களுக்கும் வாசித்துக்காட்டினால் அனுபவத்திலனேகவிஷயங்கள் அவர்களிடத்தில் கற்றுக்கொள்ளலாம். குடித்தனம்செய்யும் ஸ்திரீகளும், புத்தியை ஊன்றி இப்புஸ்தகத்தில் சொல்லியிருப்பவைகளைக்கவனிப்பாரானால்தாங்கள்செய்யும்பிழைகள் பல தெளிவாப்புலப்படுவதோடு குடித்தனத்துக்கின்றியமையாத அனேகவிஷயங்கள் தங்களுக்குத் தெரியாமலிருப்பதும் விளங்கும். இதுமூலமாய்த் தங்களிடத்திலிருக்கும் குறைகள் தெரியவந்தால் அவைகளை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டுமென்கிற ஆசையும் உண்டாகலாம். அவ்வாசையையொட்டி அக்குறைகளை நிவர்த்தித்துக்கொள்வதற்கான வழிவகைகளும் தோன்றலாம். இப்படிப்பட்ட எண்ணங்களும் வழிகளும் தோன்றும்பொழுது இதுவரையில் குடித்தனம் செய்யக் கற்றுக்கொண்டவர்கள் சிறுகச்சிறுகப் பழக்கத்திலே கற்றுக்கொண்டு வந்ததும், இப்பொழுது குடித்தனம் செய்வதற்கவசியமான விஷயங்களெல்லாம் உருட்டித்திரட்டினாற்போல் எடுத்து வகைவகையாகப்பிரித்து விளங்கச் சொல்லப்பட்டிருப்பதும்—இதுமூலமாய் அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் இவ்வளவென்றும் அவர்கள் அறிந்தது இவ்வளவு அறியாதது இவ்வளவென்று தெரிந்துகொண்டு குறையை நிவர்த்தித்துக்கொள்ள வழி தேடி, தான் சொந்தத்தில் குடித்தனம்செய்யத் தொடங்குமுன் அதற்குவேண்டிய முயற்சிசெய்து குடித்தனக் காரியங்களையும் குடித்தனம் செய்பவளின் கடமைகளையும் முன்னதாகவே அறிந்துகொண்டு தன் பொறுப்பான கடமைகளைச் செய்யத் தான் அருகமுள்ளவளாகச்செய்துகொள்வது கூடுமாயிருப்பதும்- அவர்கள் புத்தியிற் சுருக்கென்றுபடும். புத்திசாலிகளான பெண்டிர்கள் பலர், "ஐயோ! நாம் இப்படி முன்னதாகவே குடித்தனம் செய்யும் முறையை அறிந்துகொள்ளக்கூடாமல்தானே, மாமியாரிடத்திலும் நாத்தனாரிடத்திலும், 'குத்துக்கொழுக்கட்டை அடியதர்சம்' என்று வாங்கித்தின்று வேலைகற்றுக்கொண்டோம்! இப்படிப்பட்ட சாதகம் நம்காலத்திலிருந்ததா!" என்று, இதை வாசிக்கக்கேட்ட ஒரு ஸ்திரீ நம்மெதிரில் சொல்லியதுபோல், அவரவர் தமக்குத்தாமே சொல்லிக்கொள்வார்களென்றெண்ணுகிறோம் காலவிர்த்திக் கறிகுறியான சின்னங்களில் இச்சிறு புஸ்தகத்தை யொன்றாக நாம் சொன்னதின் கருத்து இதனால் விளங்குமே. இப்புஸ்தகம் வித்யா இலாகாத்தலைவர் அனுமதிப்படி சர்க்கார் புஸ்தகமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6. S. P. C. K. புத்தகசாலையில் விற்கப்படுகிறது.

---

## உபநிஷதார்த்த தீபிகை.

---

இப்பெயர்கொண்ட இரண்டு மாதச் சஞ்சிகைகளை வரப்பெற்றோம். இம்மாதிரி சஞ்சிகைரூபமாக தசோபநிஷத்துக்களையும் மூலம், பதவுரை, தாற்பரியம், அத்வைத விசிஷ்டாத்வைதத்வைத பாஷ்யங்களுடன் தமிழில் மொழிபெயர்த்து மாதந்தோறும் பிரசுரிக்க உத்தேசித்து தஞ்சைஜில்லா குத்தாலம் சட்ரிஜிஸ்தரரார் ம-௱-௱-ஸ்ரீ, ஏ சிவராயரவர்கள் ஆரம்பித்திருக்கின்றார். இக்கனகாரியம் மிகப்பெருமையுடைத்து. சாதாரணமாய்ச் சம்ஸ்கிரதம் படித்தவர்களுக்கே உபநிஷத்துக்களும் அவற்றின் பாஷ்யங்களும் எளிதில் விளங்குவனவன்றெனின் சம்ஸ்கிரதம் படியாத ஏனையோர்க்கு இவைமறைபொருளென்பதற்குச் சொல்வானேன். இந்த வேதாந்த விஷயங்களை ஒவ்வொருவரும் விசாரித்து அறியவேண்டியது அவசியமாயிருக்க அதனிமித்தம் நாம் சம்ஸ்கிரதம் கற்கவியலாதிருக்க இங்கிலீஷ் மொழிபெயர்ப்புக்களைக் கொண்டு அரைகுறையாகத் தெரிந்து திருப்தியடையகாலமாயிற்றென்றும் இங்கிலீஷும்கற்காத சாமான்யரனேகருக்கு முக்கியமான இந்த வேதாந்தகிரந்தங்களைப்படிப்பதற்கு அவகாசமேயில்லையென்றும் மிகுந்த சிந்தையுற்றிருந்தோம். ஆகையால் இப்பொழுது சிவராயரவர்கள் முன்னிட்டிருக்குங் காரியம் வெகுஜனோபகாரமாயிருக்கு மென்பதற்குச் சந்தேகமில்லை. நமது நாட்டில் உள்ள மூன்றுமதத்தார்களுக்கும் அது

கூலமாக விருக்கும்பொருட்டு மூன்றுமதபாஷ்யங்களும் தெளிவாயும் விஸ்தாரமாயும் மொழிபெயர்க்சப்பட்டிருக்கின்றன. இந்தப் பெரியகாரியத்தைச்சாதிப்பதற்குத் தகுந்த பண்டித சிகாமணிகளும் சகாயஞ்செய்கின்றார்களென்று அறிகிறோம். இவ்வளவு சிரமப்பட்டு விசேஷதிரவியத்தைச் செலவிட்டு மிகுந்த உபகாரமான இந்தக்காரியத்தை நிறைவேற்ற முயலுகின்ற நமது சிவராயரவர்களுக்கு நமது நாட்டார் வந்தனபூர்வகமாய்த் துணைபுரிய வேண்டியது அவசியம். இதே உத்தேசத்துடன் மற்றொரு தமிழ்ப்பதிப்பு உபநிஷத்து ஒன்றுவெளியாய் வருகின்றதென்பதையும் அறிந்திருக்கிறோம். ஆயினும் இப்பொழுது சிவராயர் பிரசுரித்துவருவது சம்ஸ்கிரதத்திற்குச் சரியான விஸ்தாரமான மொழிபெயர்ப்பென்றும் இதில் பாஷ்யங்கள் விரிவாய் எழுதப்பட்டிருக்கின்றனவென்றும்சொல்லத் துணிந்தோம். இப்பொழுது ஈசாவாசியோபநிஷத்து எழுதப்பட்டு வருகின்றது. மாதந்தோறும் நாற்பதுபக்கங்களுள்ள ஓர் சஞ்சிகை நல்லதாளில் நேர்த்தியா யச்சிட்டுக் கொடுக்கப்படுகின்றது. இதற்குவருஷசந்தா ரூ—3—8—0 வேண்டுவோர் ஷை குத்தாலத்திலுள்ள சிவராயருக்கேனும் சென்னையிலுள்ள சத்துவசாதனி பத்திராதிபராகிய தி. அ. சாமிநாதய்யருக்கேனும் எழுதிவரவழைத்துக்கொள்ளலாம். இந்தச் சமயத்தைக்கைவிடாது யெல்லோரும் வாங்குவார்களென்று நம்புகிறோம்.

S.

---

**காங்கிரஸ் ரிபோர்ட்:**— சென்ற டிசெம்பர்மாசக் கடைசியில் சென்னையிற்கூடிய 14 - வது இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மகாசபையின் கூட்டம் வெகு விமரிசையாக நடந்தேறியது. அச்சபையின் ப்ரெஸிடெண்டாகிய கனம்பொருந்திய அனந்தமோஹன் போஸ் அவர்கள் செய்தபிரசங்கங்கள் இரண்டும் மகா சிலாக்கியமானவையாகவிருந்தன. அவர் வருஷத்திற் கொருதரம் காங்கிரஸ் கூடிக் கலைந்து போவதால் மட்டும் காரியம் ஆகாதென்றும், காங்கிரஸ் அபிமானிகள் அனைவரும் அவரவர்கள் சக்திக்கும் செல்வாக்குக்கும் தக்கபடி நமது தேசத்தைமுழுமனதோடும் அபிமானித்து தேசக்ஷேமத்துக்காக உழைத்து வரவேண்டுமென்றும், உண்மையான தேசாபிமானத்துக்கு அடையாளம் சுயநயம்பாராட்டாது தேசநன்மைக் குழைத்துவருவதே முக்கியலக்ஷணமாமென்றும், ஆகையால் எல்லாரும் "Love and Service" என்னும் வார்த்தைகளைக் கட்டுரையாகக்கொண்டு தேசநன்மைக்காகப் பலவிதத்திலும் அபிமானம்வைத் துழைத்துவர வேண்டுமென்று பச்சைமரத்தாணி பாய்ந்தாப்போல் யாவரும் மனமுருகி அவர்சொல்லியவற்றில் பற்றுறும்படி வற்புறுத்திக் கூறிப்பேசினர். இம்மகாசபைகூடிக்கலைந்து இரண்டு மாசமாகுமுன் இச்சபையில் நடந்த விர்த்தாந்தங்களை விவரமாய்த் தெரிவிக்கும் ரிபோர்ட்டுகள் இரண்டு தமிழில் பிரசுரமாய்விட்டன. முதன்முதல் பிரசுரிக்கப்பட்ட ரிபோர்ட்டு சுதேசமித்திரன் ஆபீஸிலிருந்து வெளியாயிற்று. அப்பத்திரிகையின் ஆசிரியராகிய ம-ா-ா-ஸ்ரீ, ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் ஹிந்து பத்திரிகையைவிட்டுநீங்கியபொழுது இங்கிலீஷுக்கு நஷ்டமானது தமிழிற்கு லாபமாய் முடியுமென்று சொன்னோம். அந்தப்படியே சுதேசமித்திரன் விர்த்தியாயிக்கொண்டு வருவதன்றி தமிழில் காங்கிரஸ் ரிபோர்ட்டு வெளியானதும் நாம்சொல்லியதற்கு அத்தாக்ஷியாகவேயிருக்கிறது. இதற்குமுன் தமிழில் காங்கிரஸ்ரிபோர்ட்டு வெளியானதில்லை. ஆதலால், இந்த ரிபோர்ட்டில் காங்கிரஸ் உற்பத்தியானது முதலுள்ள வரலாற்றையும் சென்ற 13 - காங்கிரஸ்களின் முன்னும் ஆலோசனைக்கு வந்த முக்கியாம்சங்களையும் சுருக்கமாகச் சொல்லியபிறகு 14 - வது காங்கிரஸ் ரிபோர்ட்டைவிவரமாகத்தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 77-பக்கமுள்ள இந்த ரிபோர்ட்டை வாசிப்போருக்கு காங்கிரஸைப்பற்றிய சமாசாரங்கள் நன்குவிளங்குமென்பதில்ஐயமில்லை. இதில்கனம் அனந்தமோஹன் போஸ்அவர்களுடைய படமொன்றிருக்கிறது. இதன் விலை அணா 8 - தபாற்கூலி ½ அணா.

---

**மற்றொரு காங்கிரஸ் ரிபோர்ட்டு**.—கோயமுத்தூர் ஜில்லாபொள்ளச்சியில் பிரசுரமாகும் "வாரவர்த்தமனி" யென்னும் வாராந்தத்தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியர், 14 – வது காங்கிரஸ்ரிபேர்ட்டு ஒன்று தமிழில் பிரசுரித்திருக்கிறார். இதில் 14-வது காங்கிரஸ் நடவடிக்கைகள் முற்றும் அடங்கியிருக்கின்றன. தமிழில் காங்கிரஸ் ரிபோர்ட்டு பிரசுரிக்கும் எண்ணங்கொண்டு முதலில் அக்கருத்தை விளம்பரமூலமாக வெளியிட்டது இவர். ஆனால் தமிழ் அச்சாபீஸ் வார்த்தையை நம்பி காலதவணை குறிக்கக்கூடாதென்பதை இவர் அறியார்போலும், இவர் விளம்பரப்படுத்திய காலதவணைகள் ஒன்றாவதுசரியாக நிறைவேறவில்லை. இதனால் ஜனங்கள் புகார்செய்ய இடநேர்ந்ததன்றி வேறுபிரயோசனமில்லை. இதில்காங்கிரஸ் தலைவர்கள் நால்வர்படங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இது முனிசிபல் கமிஷனரும் தவிபாயுமாகிய "ம-ா-ா-ஸ்ரீ, அப்புசுந்தரம்பிள்ளை யவர்களுடைய பேருதவியைக்கொண்டு பிரசுரிக்கப்பட்டது" என்று தெரியவருகிறது. இதன்விலை அணா லே.

---



## வறுமைக்கு மருந்து.

இந்துதேசமானது நெடுங்காலமாக அதிக செல்வமுடைய தேசமாகவே பலராலும் மதிக்கப்பட்டு வந்தது. இப்போது சில காலமாக இந்தத்தேசம் அதிகவறுமையுடைய தேசமென்றே நம்மையாள்கின்ற ஐரோப்பியர்களாலும் எண்ணப்படுகின்றது. நம்முடைய முன்னோர்கள் செல்வவான்களாய் இருந்தனர் என்பதை, பழையகாவியங்களாலும் பழைய அரமனைகள் ஆலயங்கள் முதலான கட்டடங்களாலும் நாம் கர்ணபரம்பரையாகக் கேள்விப்படுகின்ற பழங்கதைகளாலும், சரித்திரங்களாலும், ஒருவாறு அறிந்துகொள்ளக்கூடும். ஆனால் இக்காலத்தில் வசிக்கின்றவர்களில்பெரும்பான்மையோர் செல்வவான்கள் அல்லர் என்பதற்கு நம்முடைய வறுமையே பிரத்தியக்ஷ அநுபவமாக இருக்கின்றது. இதற்கு வேறு சாக்ஷி வேண்டுவதில்லை.

நம்முடைய முன்னோர்கள் அத்தனை செல்வவான்களாய் இருந்ததுபோக நாம் இத்தனை தரித்திரவான்கள் ஆனதற்குக் காரணமென்ன? அவர்கள் அவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்ததுபோய் நாம் இவ்வளவு தாழ்ந்த பதவியை அடைந்ததற்குக் காரணமென்ன? அவர்கள் புளியேப்பம் விட்டதுபோய் நாம் பசியேப்பம் விடுவதேன்? இதை ஆராய்ந்து பார்த்துத் தீர்மையாக முடிவுசெய்யப் புகுந்தால் நாம் குருத்துரோகிகளும் இராஜத்துரோகிகளும் ஆவோம்: நம்மைநாமே வஞ்சித்துக்கொண்டவர்கள் என்பதும் வெளியாகும்: ஆகையால் துந்தகுணற்றைத் தூர்வாராமல் அநாவசியமானவைகளைப் பாராட்டாமல் ஆகவேண்டிய காரியத்தைமாத்திரம் குறித்துப் பேசுவோம்.

நம்முடைய முன்னோர்கள் மாடமாளிகை கூடகோபுரங்களைக்கட்டி அருமையான ஆடையாபரணங்களை உடுத்து அதிக சிறப்புற்றிருந்த காலத்தில், உடுக்க உடைதொடுக்கவும் உண்ணும் உணவைப் பாகஞ்செய்யவும் அறியாமல் இருந்த மிலேச்சர்கள் அநேகர் இப்போது இராச்சியபாரம்செய்யும் பெருமையை அடைந்திருப்பதைக் காணுமிடத்தில் நாம் நம்முடைய வறுமையை ஒழித்துவிட்டுப் பழையபடி மேன்மையை அடைவது முடியாதகாரியமல்ல என்பது தெரியவரும். ஆகையால், பழையபதவியை அடைவதற்கும் நாமே காரணராக இருக்கிறோம்; இன்னுங் கொடியவறுமையைத் தேடிக்கொள்வதற்கும் நாமே காரணராக இருக்கிறோம் என்பதும்தெரியவரும். உறியிலே வெண்ணெயிருக்க ஊரெங்கும் நெய்க்கலைவாரைப் போல, நம்முடைய கையிலே மருந்தைவைத்துக்கொண்டே வகைதெரியாமல் அலைகிறோம். "பெருமையும் சிறுமையும் தான்தரவருமே" என்கிற நறுந்தொகை ஏற்பட்டு ஆயிரவருஷங்களாகியும் அதை நாம் நினைக்கிறதில்லை. "தன்னோய்க்குத் தானே மருந்து" "தமக்கு மருத்துவர் தாம்" என்ற பழமொழிகள் உண்டாகி எத்தனையோ ஆயிரவருஷங்களாகியும் மதிகெட்டுப்போனோம். இனியாகிலும் வறுமைநோய்க் கிடங்கொடாமல் நம்மைக் காத்துக்கொள்ள உபாயந் தேடவேண்டும். ஆவதும் நம்மாலே அழிவதும் நம்மாலேயாயிருக்க, நாளுக்குநாள் அழிவுற்று மதிமோசம் போவானேன்.

நம்முடைய வறுமைக்கு மருந்து இவ்வளவு சூக்ஷ்மத்தி லிருந்தால் இதுவரையி லிருந்த பெரியோர்கள் அதனைக் காட்டிக்கொடுக்காமல் இருந்தார்களா? இதுவரையில் இல்லாதது இப்போதென்ன அதிசயமாக முளைத்துவிட்டது என்று ஆக்ஷேபிக்கக்கூடும். நம்மிடத்தில் உள்ளது நவீனமானமருந்தென்று நாம் மலைவுசெய்கின்றோமில்லை. நம்முடையமுன்னோர்கள் அதனைக்கையாண்டதனால் அவர்கள் சுகமாகவாழ்ந்திருந்தார்கள். அவர்களிடத்தில் அதுகைகண்ட அவுஷதமாகவே இருந்தது. ஆனால் அது சற்றுக்கைப்பதனாலே அதன் குணத்தைப்பாராட்டாமல் அதைக் கைவிட்டோம். அதனால் வறு

மைமேலிட்டோம். இனியாயினும் பத்திய பரிகாரந்தவறாமல் அந்தமருந்தை உட்கொண்டால் நன்மையடைவோம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதுசெய்யத்தவறினால் நம்முடைய வறுமைநோயானது இன்னும் நாட்குநாள் முற்றி அசாத்திய ரோகமாகிவிடும். அப்புறம் அகத்தியராலும் ஆகாது: தேறையரும் கிட்டவரமாட்டார்: தந்வந்திரியும் கையை விரித்துவிடுவார்.

நோய்க்கு மருந்து கொடுப்பவன் கண்ணை மூடிக்கொண்டு கஷ்கத்திலிருக்கிற மாத்திரையை எடுத்துக்கொடுத்து விடலாமா? “நோய்நாடி நோய்முதனாடியது தணிக்கும், வாய்நாடி வாய்ப்பச் செயல்” என்று விதிக்கப்பட்டிருக்கின்றதே. அதாவது, வைத்தியனானவன் வியாதியையும் அதன் காரணத்தையும் அது நீங்கும் உபாயத்தையும் ஆராய்ந்து பார்த்து வைத்தியஞ் செய்யக்கடவன் என்பதாம். என்பதனால் நாம் முன்னதாய் இந்த வறுமையாகிய தரித்திரம் என்னும் நோயின்நிதானத்தையறியவேண்டும். வைத்தியவாகடத்தைப் பிரித்துப் பார்க்கலாம்.

*தரித்திரமிக்கவனப்பினையொடுக்கிச்*
*சரீரத்தையுலர்தரவாட்டும்*
*தரித்திரமளவாச்சோம்பலையெழுப்புஞ்*
*சாற்றுருமுலோபத்தைமிகுக்கும்*
*தரித்திரங்களிப்பாங்கடலுக்கோர்வடவை*
*சாற்றுமெண்ணங்கள்வாழிடமாம்*
*தரித்திரம்பற்பறுக்கமுந்தோன்றத்*
*தக்கபேராகரமென்ப.*

இன்னும், ஔவையார் ஒருமுறை இவ்வுலகில் மிகக்கொடியது யாதென்று கேட்கப்பட்டபோது “கொடிதுகொடிது வறுமை கொடிது” என்று சொன்னாரல்லவா? இப்படிப்பட்டகொடுமையுடையதை ஒழிக்க முயற்சி செய்யாவிட்டால் மனிதராய்ப் பிறந்த நம்மால் வேறு எந்தக்காரியந்தான் செய்யக்கூடும். இதனை நீக்கும் உபாயத்தைத் தேடுவதற்குமுன்னே இது நம்மைத் தொடர்ந்து பற்றிய காரணத்தை ஆராய்தல்வேண்டும்.

இதனை ஆராய்வதானால் இன்னின்ன துரோகத்துவம் நேரிடும் என்று முன்னே சொன்னோமாயினும், நாமே காரணமாக இருந்தவற்றை ஆராய்ந்து நம்முடைய குற்றங்களைக் களைவதனால் குறைவொன்றுமில்லை. ஆகையால் நாமே காரணமாக இருந்த குற்றங்களை இயன்றமட்டில் ஆராய்ந்து பார்க்கலாம்.

நாமே காரணமான குற்றங்கள் எல்லாவற்றையும் ஒருவன் யூகித்தறிந்ததுமில்லை, இனியறிவதுமில்லை; அவனவன் தன்தன் அளவாகப் பிரத்தியக்ஷத்தில் கண்டதைக்கேட்டதைத்தான் ஒருவாறாக விவரிக்கக்கூடும். ஆகவே நாம்கண்டதுகேட்டதுகளில் எல்லார்க்கும் பொதுவான சில குற்றங்களையே இங்கு விவரிப்போம். அக்குற்றங்களுக்கு ஏதுவென்ன என்றால், கலியாணம் - கல்லெடுப்பு - தானதருமம் - கல்வி ஒழிவுவேளைகளைக் கழிக்கும்விதம் என்றாற்போல்வனவற்றின் கருத்தையறியாமல், குடித்தனப்பாங்கின் கூறுபாட்டை யுணராமல், இது விஷயங்களில் பெரியோருடைய சொற்பேச்சுங்கேளாமல் சுயபுத்தியுமில்லாமல் இடர்ப்படுவதேயாம்.

கலியாணம்.—வயதடைந்த புருஷனும் வயதடைந்த பெண்ணும் ஒருவரையொருவர் அந்தரங்கத்தில் விரும்பி அதன்பின் கலியாணஞ் செய்துகொள்வதாகிய காந்தருவ விவாகமே சிறந்ததென்பது எல்லா தேசத்தாருக்கும் கொள்கையாகவும் இந்துதேசத்திலுள்ள ஆரியர்கள் தமிழர்களுக்கும் சாஸ்திர சம்மதமாகவும் இருக்க இதையெல்லாம் கட்டோடேதொலைத்துவிட்டு கலியாணமென்றால் மேளங்கொட்டுவதென்றே அறிந்த பச்சைப் பாலகர்களுக்குக் கலியாணத்தைச்செய்து பாதவிக்க விடுகின்றோம்.

“ஆடியானை வாலொத்தகரும்பும், புரட்டாசி பதினைந்தில் நட்டநடவும், அறுநான்கில் (இருபத்துநான்காம் வயதில்) பெற்ற புதல்வனும், இம்மூன்றும், பெரியோர்கள் வைத்[illegible]



என்கிற பெரியோர்வார்த்தையைத் தட்டிநடக்கிறோம். “ஆறுமாற்றதே தாரம்” என்பதை மறக்கிறோம். கலியாணப் பிள்ளை படித்தவனா? ஏதாயினும் ஒருதொழில் வல்லவனா? கைப்பொருளேனும் உடையவனா? உடல்வலியாகிலும் உற்றவனா என்பதொன்றும் பார்க்கிறதில்லை. கலியாணப்பெண் படித்தவளா, சோறுவடித்தவளா, வரவு செலவுபார்ப்பவளா, வியாதி உடம்பில் அற்றவளா, நற்குண நற்செயல் பெற்றவளா என்பதொன்றும் விசாரிக்கிறதில்லை. கலியாணஞ்செய்து கண்ணால் காண்பதே போதும் என்கிறபித்தம் நம்முடைய தலைமண்டையைவிட்டு இன்னும் இறங்கவில்லை. பெண்ணும்பிள்ளையும் நாளைக்கு வாயில் மண்ணைப் போட்டுக்கொண்டாலும் சரிதான். அவர்கள் மண்ணாய்ப்போனாலும் சரிதான்; கடன்பட்டாயினும் கலியாணத்தைப் பண்ணிவிடவேண்டும் என்கிற வாதம் இன்னுங் கண்டிக்கப்படவில்லை. நான்கு பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டால் அவைகளைக்காப்பாற்றத்திறன் உண்டோ இல்லையோ என்கிற ஐயம்மாத்திரம் நம்மைப்பிடிக்கிறதேயில்லை. எத்தனைபேர் பட்டதைக்கெட்டதைப் பார்த்தும், இன்னும் நம்முடைய கலியாணம் ஒருநாளாயினுந் திருநாளாகவே யிருக்கிறது. மண்டைக்கேற்ற கொண்டைபோடுகிறதில்லை.

கல்லெடுப்பு.—“நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென், பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென், தோற்பையுணின்று தொழிலறச் செய்தூட்டுங், கூத்தன் புறப்பட்டக்கால்” என்கிறநாலடியில் ஓரடியும் நம்முடைய நினைவில் இருக்கிறதில்லை. சாகிறவரையில்விடாத வைத்தியன் பேச்சைக்கேட்டு உயிரோடிருந்தபோது ஒருகரண்டி நெய்யும் வார்க்கப் பெறாதவர்களுக்கு செத்தாலும் விடாதபஞ்சாங்கப் பார்ப்பான் பேச்சைக்கேட்டு ஓமகுண்டத்தில் ஒருகுடம் நெய்யைச் சாய்க்கிறோம். செத்தவர்கள் வாயிலே மண்ணைப் போட்டுவிட்டு இருந்தவர்கள் வாயிலே சோற்றைப்போடவேண்டியதென்ன. சாவுவிசாரிக்கவந்தவர்களுடைய தலையிலே பனிநீரைத்தெளித்து விசாரிக்கவேண்டுமோ. நரகத்தில் அவசியம் போவார்களென்று தெரிந்தபேர்களுக்கெல்லாம் மோக்ஷதீபமேன். வைகுண்டவாத்தியார் சங்கதியை இதற்குள் எல்லாரும் மறந்துவிட்டார்களோ?

தானதருமம்.—நாம் கட்டுகின்ற வரிப்பணத்தில் ஒருபாகத்தைக்கொண்டு துரைத்தனத்தார், ஏழைகளுக்குக் கல்விகற்பிக்க உதவிசெய்கின்றார்கள்; தருமவைத்திய சாலைகளை நடத்திவருகின்றார்கள்; க்ஷாமகாலங்களில் சோறிடுகின்றார்கள். இதெல்லாம் நம்முடைய கையால் நடக்குந் தருமந்தானே. இதை அடியோடு அறியாமலும் மறந்தும் வீணான தருமங்களைச் செய்து மதிகெட்டுப் போகின்றவர்களைப் பார்த்தால் இக்காலத்தில் நமக்கு அதிகதுக்கத்தைத் தருகின்றது. இவர்கள் தாங்கள் புண்ணியந் தேடிக்கொள்ளலா மென்றெண்ணிக் கஷ்டவேலைசெய்யக்கூடிய அநேகரைச் சோம்பர்களாக்கிவிடுவதைக்கண்டால் நமக்குவயிறுபற்றி யெரிகிறது. “அம்பலம்வேகுது காணண்ணே: அத்தைத்தான்சொல்வானேன்: வாய்தான் நோகலையோ” என்றகதையைக் கேட்டதில்லையா. இது போக. அநேகர் உற்றார் உறவினரைவிட்டு ஊரார்களுக்குச் செலவிடுகின்றார்கள். இதுமுழுமூடர்களுடைய செய்கையேயாம். “ஏதிலாராரத்தமர் பசிப்பர் பேதை, பெருஞ்செல்வமுற்றக்கடை” என்கிறகுறளில், மூடர்கள்கையில் தெய்வாநுகூலத்தால் செல்வங்கிடைக்குமாயின் எவரோ வழியேபோகின்றவர்கள் எல்லா நன்மையுமடைய சொந்த உறவாளிகள்சோறுகூடக் கிடைக்காமல் பசியாநிற்பர் என்பதை எப்போது மறப்போம்? பெற்றதாயைப் பசிக்கவிட்டு கோதானம் பூதானங்களைக் கொண்டுபோய் கும்பகோணத்தில் செய்வதை எப்போது வெறுப்போம்? பஞ்சத்தின் நிமித்தமாக ஆண்டியானவர்களுக்குத் தானஞ் செய்யவேண்டியதைவிட்டு பரம்பரை பரம்பரையாய் வருகின்ற ஆண்டிகளுக்கே தானங்கொடுப்பதை எப்போது கறுப்போம்?

*கல்வி.*—பிள்ளைகள் படிப்பது உத்தியோகஞ் செய்தற்காகவே என்கிற விபரீதம் இன்னும் பற்பல இடங்களில் குடிகொண்டிருக்கிறது. இது எப்படியும் இன்னும் சிலநாளில் வெளுத்துப்போகும். நூல்களிற் கற்குங்கல்வியானது நன்மை தீமைகளைப்பகுத்தறிவதற்குச் சாதனமாவதல்லது அனைவரும் ஜீவனம் செய்வதற்கே கருவியாவதில்லை என்பதை ஒவ்வொருவரும் பரிஷ்காரமாகத் தெரிந்துகொண்டாலன்றி, நாம் க்ஷேமமடைவது குதிரைக்கொம்பேயாகும் என்பது திண்ணம். கல்வியை விளக்கிற்குச் சமானமாகவும் ஊன்றுகோலிற்கு ஒப்பாகவும் கைகாட்டி மரத்திற்கு உவமையாகவும் நினைக்கவேண்டுமே யல்லாமல், கல்வியைக் கொண்டே கரையேற எண்ணுதலாகாது. மனிதனுடைய உயிர்வாழ்க்கைக்கு அநந்தங்கோடி ஜீவனோபாயங்கள் உண்டு. கல்வியின் மூலமாகவே கரையேற வேண்டியவர்கள் கல்விகற்பிக்கின்ற உவாத்தியார்களும் நூல்களையியற்றுகின்றவர்களும் இவர்களைப்போல்வாரும் இவர்களுக்கு உதவியாயிருப்பாரும் என இவர்களே யாவர்.

*ஒழிவு வேளை கழிக்கும் விதம்—.* மனிதனுடைய உடம்பானது யந்திரங்களுக்கு ஒப்பாக இருக்கின்றது. அவைகளுக்கு ஒழிவில்லாமல் வேலைவைத்தால் அவைகள் வெகு சீக்கிரத்தில் கட்டுக்குலைந்து கலகலத்துப் போகின்றன. அப்படியே மனிதனுடம்பும் ஓய்ச்சலொழிவின்றி உழைத்தால் வெகுசீக்கிரத்தில் தளர்ச்சியடையும். ஆகையால் உழைப்பாளியாயிருப்பான் ஒவ்வொருவனும் அவனவனுழைப்பிற் கேற்றபடி கொஞ்சநேரமானாலும் அதிக நேரமானாலும் அன்றாடம் வேலை யொன்றுமின்றி ஒழிவாக இருத்தல் வேண்டும். அப்படி ஒழிந்த வேளைகளில் உண்பதும் உறங்குவதும் போக மற்ற மிகுதியை எப்படிக்கழிப்பது மிகுந்த நன்மையத்தரும் என்பதே நாம் எடுத்துக்கொண்ட விஷயம். உடம்பின் உழைப்பினால் ஜீவனஞ் செய்வார்கள் மனோகரமான நல்லநூல்களை வாசிப்பதில் பொழுது போக்கலாம். மனசின் உழைப்பினால் ஜீவனஞ்செய்பவர்கள் சிலம்பம்பழகல் நந்தவனம் வைத்தல் உலாவிவருதல் பந்து முதலியன ஆடுதல் என்ற இப்படிப்பட்ட மூலத்தில் ஒழிந்த வேளைகளைக்கழிக்கலாம். வீட்டில் உள்ள சிறுவர்களுக்குப் பாடங் கொடுத்தல் அவர்களுக்கு உற்சாகமான காரியங்களைச் செய்தல் என்னும் இப்படிப்பட்ட பிரயோசனமான விஷயங்களிலும் ஓய்ந்தவேளைகளைக் கழிக்கலாம். இப்படிக்கின்றியே கூத்திக்கிட்டுக் குரங்காவாரும் வேசிக்கிட்டு விறகாவாரும் சூதாடித்தோற்பாரும் கள்ளைக்குடித்துக் கனத்தை யிழப்பாருமாய்க்கெட்டொழிந்தால் "உள்ளதையுங்கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்" என்றபடி கையிலுள்ள அற்பப்பொருளையுந் தாரைவார்த்து உடம்பையும் ஊனமாக்கிக் கொண்டு நாசகாலர்களாவதல்லாமல் நாம் க்ஷேமமடைவதுண்டா? நம்முடைய குடும்பங்கள் எப்போது மேன்மையடையும். நம்முடைய தேசம் எப்படி பெருமையடையும். இதுவரையில் வறுமையாகிய வியாதியின் கொடுமையையும் அதன் காரணத்தையும் நிதானித்தோம். இனி அந்த வியாதி நீங்குவதற்கான உபாயங்களை ஆராய வேண்டும். ஆனால் இதற்கு மருந்து கொடுக்குமுன்னே சில பத்தியபரிகாரங்களைச் சொல்ல வேண்டும். முன்னே சொன்னபடி கலியாணங் கல்லெடுப்பில் கடன் பட்டும் கையிலுள்ளதை வாரியிறைத்தும் ஊரார் மெச்சிக் கொள்ளும்படி வீண்செலவு செய்யலாகாது. எப்படியும் மந்திரங்களைச் சுருக்கிச் சொல்லவும் சடங்குகளைக் குறைத்துச் செய்யவும் பிராமணர்கள் அநேகர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நயமான வாத்தியங்களை நாட்டு அம்பட்டர்களே நன்றாக வாசிப்பார்கள். சீமை ஜவளிகள் வெகுசரசமாகவும் நாணயமாகவும் விற்கின்றன. அழகுக்கிட்டால் ஆபத்துக்குதவுமென்று கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை நகைகளையாக்கி நம்பி மோசம்போக வேண்டாம். நம்முடைய நகைகளைக் கொள்ளையடிக்கின்ற திருடர்களை, நமக்கு புத்திபுகட்டும்படியாகவே



துரைத்தனத்தார் நம்முடைய செலவிலே தானே சோறிட்டு ஆதரிக்கின்றார்கள். நம்முடையபொருளைக் கூன் குருடு மொண்டி முடம் கிழம் பழங்களுக்குத் தானதருமஞ் செய்ய வேண்டுமே யல்லாமல், நம்முடைய கஷ்டார்ஜிதத்தைக் கள்குடிக்கின்ற பண்டாரங்களுக்கும் "அவன் கெட்டான் குடியன் எனக்கிரண்டு திராம் வாரு" என்கிற தாதர்களுக்கும் அள்ளியள்ளிக் கொடுக்க வேண்டாம். பிள்ளைகளுக்கு ஆயிரமாயிரமாகச்செலவழித்துக் கடைசியில் பத்து பதினைந்து ரூபாவுக்காகப் பேனா ஓட்டுகிற உத்தியோகங்களைத்தேடவேண்டாம். ஒழிந்த வேளைகளை "அவனே யிவனே யென்னாமல் சிவனே சிவனே" என்றபடி சத்காலக்ஷேபமாய்க் கழிக்கவேண்டும். "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்." ஆகையால் சோம்பலைக் கழற்றி யெறிந்து விட்டு "பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும் பொருளல்லதில்லை பொருள்" என்பதை குரூபதேசமாகக் கொண்டு திரைகடலோடியுந் திரவியந் தேடவேண்டும். "இன்னல் தரும் பொருளை யீட்டுதலுந் துன்பம்" என்கிற ஏட்டைத் தள்ளிவிட வேண்டும். அதைக்கிழித்தெறிந்து விட்டாலும் நமக்கு அதிக சந்தோஷந்தான்.

இப்படித்திரை கடலோடியுந் தேடிய திரவியத்தை வைத்துக்கொண்டு இனிமேல் வறுமை நோய்க்கிடங் கொடுப்பதில்லை யென்று வாக்குறுதி செய்கின்றவர்களுக்கு

வளவனாயினும் மளவறிந்தழித்துண்

(அளகேசனாலும் அளவறிந்து செலவுசெய்ய வேண்டும்) என்கிற மருந்தைக் கொடுக்கிறோம். "மந்திரமுந் தேவு மருந்துங் குருவருளும்" என்கிறபடியே நம்பினார்களுக்கெல்லாம் நம்முடைய மருந்து பலிதமாகும். நம்பிக்கையில்லாதவர்கள் கதி அதோ கதிதான்.

இந்த ஔஷதப் பிரயோகத்தால் அந்தநோய் ஒழியாமல் தலைகாட்டிக் கொண்டிருந்தால் நம்மிடத்தில் சர்வரோககுடோரி யொன்றுண்டு. அதைக்கண்ட வளவிலே அந்த நோய் அப்பால் போய் விடும். இந்த அருமையான மருந்தை என்னவோ என்று இகழாமல் உயிரைப்போல் ஒப்புதல் வேண்டும். அதைத்தருகிறோம். இனிய முகத்துடனே ஏற்றுக் கொள்ளுங்கள்.

"போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து."

தி. செல்வகேசவராயமுதலியார்.

# சிறுவர்க்கான பக்கம்.

[ விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது. ]

## எலி.

சிறுவர்களே உங்களுக்கு இன்று ஒருகதை சொல்ல எண்ணினேன். அது எலியைப்பற்றியது. எலியானது எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த ஜந்து. மனுஷர் எங்கேயெல்லாம் சென்று குடியேறினார்களோ அந்த இடங்களிலெல்லாம் எலிதவறாமலிருக்கும். கடல்சூழ்ந்த தீபாந்தரங்களிலுங்கூட மனுஷர் போவாரானால் அங்கும் எலியைக்காணலாம். எலிகளில் எத்தனையோ வகைகளுண்டு. அவைகளில் கறுப்பு எலியும் வெள்ளெலியும் சாம்பல்வர்ணமான எலியும் முக்கியமானவைகள். கறுப்பெலி புராதனமாய் ஒவ்வொரு இடங்களிலும் உள்ளதென்றும், சாம்பல்வர்ணமான எலி புதிதாய் சிலதே

சங்களிலிருந்து வந்துசேர்ந்து பெருகினதாகவும் சிலருடைய அபிப்பிராயம். புதிதாய்க்குடியேறின மனுஷஜாதிகள் பூர்வீகர்களை எப்படி இருந்த இடம்தெரியாமல் நெறுக்கி வெருட்டி மலைகளிலும் காடுகளிலும் சஞ்சரிக்கச்செய்துவிட்டார்களோ, அதேமாதிரியாக, கறுப்பு எலியை சாம்பல்வர்ணமான எலி இருந்தவிடந்தெரியாமல் ஆக்கிவிடுகிறதாம். அனேகந்தேசங்களில் இப்படி நடந்திருக்கிறது. இதற்குங்காரணம் புதிதாய்க் குடியேறுகிற ஜனங்களுக்கு புத்திசாதுரியமும், கபடமும் அதிகமாயிருப்பதுபோலவே சாம்பல்வர்ணமான எலிகளுக்கு மேற்கூறிய குணங்கள் அதிக விசேஷமாக அமைந்திருக்கின்றன. மனுஷாளால் தனக்குப் பிராணஹானி நேரிடாமல் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய தந்திரமும் அந்தஜாதி எலியினிடத்தில் விசேஷமாக உண்டு. மற்றஜாதி எலிகளுடன் சண்டைசெய்வதில் அதற்கு பலமும் வீரியமும் அதிகம்.

கப்பல்களில் எலிகள் வீடுகளில் வசிப்பதுபோல சதா வாசமாயிருக்கும். மனுஷாள் தங்கள் வியாபாரச்சரக்குகளை இறக்குமதி செய்யும்போது சில எலிகள் அந்த சரக்குகளுடன் அந்தப்புதிய இடங்களில் குடியேறுகின்றன. புகைவண்டிகளிலும் அவைகள் ஸ்திரமாக வசிக்கின்றன. சாதாரணமாட்டுவண்டிகளிலும் பெட்டிகள் வைத்திருக்குமாகில் அவைகளில் புகக்கூடிய சிறுதுளைகளுண்டுபண்ணி அங்கேயிருக்கும். சுருக்கமாகச் சொன்னால் அவைகளுக்கு எங்கெங்கே உணவுகிடைக்குமோ அந்தந்த இடங்களிலெல்லாம் தவறாமல் இடைவிடாமல் முயன்று இருப்பிடமுண்டாக்கிக் கொள்ளும். அவைகளால் மனிதருக்கிருக்கும் துன்பமும் நஷ்டமும் சொல்லிமுடியாது.

சிலகாலங்களில் எலிகள் நாம் முன் கேட்டறியாத இம்சைகளும் துன்பங்களும் உண்டாக்குவதாக நான்வாசித்திருக்கிறேன். அந்த சங்கதிகளை உங்களுக்கிப்போது சுருக்கமாய்ச்சொல்லுகிறேன்.

ஒருதேசத்தில் ஓர்காலத்தில் க்ஷாமம் மிகுந்து பணக்காரருக்குங்கூட தானியம்கிடைப்பது அருமையாயிருந்தது. அந்தக்காலத்தில் ஒரு பிரபு தனவந்தராயும் நிலம் உடையவராயுமிருந்தபடியால் முன்வருஷங்களில் அவர் காப்பாற்றிவைத்திருந்த தானியத்தைக் கொண்டு அவரும் அவர்குடும்பத்தாரும் சுகமாகப் பட்டினியின்றி உணவு அருந்தி சந்தோஷமாயிருந்தார்கள். இந்தசங்கதி ஜனங்களுக்குள் பரவ, பிரதி தினமும் எளிய ஜனங்கள் அந்த தனவந்தரை தொந்தரவுசெய்து வந்தார்கள். ஒருநாள் அவருக்குக் கோபமுண்டாகித் தன்னிடம் பிச்சைகேட்டு வந்த எளியஜனங்களையெல்லாம் யமலோகம் போகச்செய்தால் அப்பால் தன்னைத் தொந்தரவுசெய்ய மாட்டார்களென்று எண்ணி, அவர்களுக்கு உண்டி உதவுவதாகத்தன் கூரைக்கட்டடத்தில் அவர்களை வரச்செய்து, கதவைச்சாத்தித்தாளிட்டு கட்டடத்தில் அக்னிபகவானைப் பிரவேசிக்கச்செய்தார். எல்லாரும் மாண்டுபோயினர். அன்றிரவு அவர் வெகுதிருப்தியுடன் நித்திரைசெய்தார்! மறுநாள் காலையில் அவர் எழுந்துவரும்போது தன் வீட்டுக்கூடத்தில் தொங்கவிட்டிருந்ததன் படத்தை எலிகள் கரும்பிவிட்டதைப் பார்த்து விசனித்துக்கொண்டுசற்றுநின்றார். அப்போது அவர் வேலையாட்களில் ஒருவன் ஓடிவந்து பிரபுவே! உம்முடைய களஞ்சியங்களில்சேர்த்துவைத்திருந்த தானியங்கள் முழுமையும் எலிகள்தின்றுவிட்டன! என்றுசொன்னான். துரை அதைநம்பாமல், என்ன ஆச்சரியமான சங்கதி சொன்னாய்! பஞ்சதந்திரத்தில் இரும்புக்கம்பிகளை எலிகள் கரும்பிவிட்டதாய்ச் சொன்னகதைபோலிருக்கிறதே!" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் வீட்டெலி காட்டெலி மோட்டெலி, கறுப்பெலி, வெள்ளெலி, சுண்டெலி முதலிய அனேகவிதமான எலிகள் ஏராளமாய்க்கூடி பிரபுவின்வீட்டின் ஓர் பக்கத்திலிருந்து புறப்பட்டு பிரபுவை விரட்டிக்கொண்டே வந்தன. அந்தக் கூட்டத்தைக் கண்டு அவர்பயந்து ஓடியொளிக்கப்பார்த்தும்



எங்கேபோனாலும்விடோமென்று எலிகள்தொடர்ந்தமையால் அவர் தன்னைத் தப்புவிக்கும் பொருட்டு உயர்ந்த கோபுரத்தில் ஏறிக்கொண்டார். அப்படிசெய்தும் எலிகள் ஜன்னல்கள் வழியாகவும் ஓடுகளின் இடைகள் வழியாகவும் வேறு துவாரங்கள் வழியாகவும் சென்று எங்கே பார்த்தாலும் எலிகள்மயமாகநிரம்பிமுன்னும் பின்னும், வலதுபுறமும் இடதுபுறமும், மேலும்காலின்கீழும், அவரைக்கடித்து நிமிஷநேரத்துக்குள் அவர்உயிரை எமலோகத்துக்கு அனுப்பிவிட்டு அவர்தேகத்தைத் தங்களுக்கு இரையாக்கிக் கொண்டனவாம்.

இன்னொருகதையுண்டு வாஸ்தவமாய் நடந்த சங்கதிகளில் இது ஒன்று. நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் அனேக குதிரைகள் வேலைசெய்வதுண்டு. அவைகள் தொடர்ந்து 10-15 நாட்களுக்கு சுரங்கங்களுக்குள்ளேயேயிருந்து வேலைசெய்யும். ஒருகாலத்தில் தொடர்ந்து இரண்டுவாரம்வரையில் ரஜாநாள் சம்பவித்து, அதன் மூலமாக குதிரைகளெல்லாம் சுரங்கத்துக்கு வெளியே கொண்டுபோகப்பட்டிருந்தன. சுரங்கத்தினுள்ளிருந்த எலிகள் குதிரைகளுக்குப் போடும் புல்லையும், தானியவகைகளையும் தின்றுவருவதுண்டு. இந்த இரண்டுவாரவிடுமுறையில் எலிகளுக்கு அந்த உணவுகிடைக்கவில்லை. பசியானது அதிகரித்து எலிகளை வெகுவாய்த் தவிக்கச்செய்தது. இப்படியிருக்கையில் ரஜாநாள் கழித்தபின் கூலிவேலைக்காரன் ஒருவன் முதல்முதல் சுரங்கத்தின் கதவைத்திறந்து உள்ளேயிறங்கினவுடன் அங்கே தயாராய்க் காத்திருந்த அனேகம் எலிகள் ஒன்றாய்ப்பாய்ந்து தங்கள் கூர்மையானபற்களால் அம்மனிதனைக் கொன்றுதின்று பசியாறினவாம்.

இந்த திருஷ்டாந்தங்களால் எலிகளுக்கிருக்கும் விசேஷபுத்திக்கூர்மை வெளியாகும். அதற்கு இன்னொரு திருஷ்டாந்தம். ஒருகாலத்தில் தண்ணீர்க்குழாய்கள் பதித்திருந்த இடத்தில் தண்ணீர் கசிவு கண்டதால் அதைச்சோதிக்கவேண்டி ஒட்டர்களைவிட்டு மண்ணை ஆழமாய்த்தோண்டி குழாய்களை சோதித்தார்கள். அப்போது ஈயக்குழாய் ஒன்றில் துவாரமுண்டாக்கப்பட்டிருந்தது. பல்பட்டிருக்கும் விதத்தாலும், அந்த இடத்திலிருந்து எலிவளையுண்டாயிருந்ததாலும், எலிகளால் செய்யப்பட்ட கெடுதியென்று வெளியாயிற்று. சற்றுநேரத்தில் எலிகூட்டங்கள் ஒவ்வொன்றாய் வந்து அந்தத்துவாரத்தின் வழியாய் தண்ணீர்குடித்துப்போயின. தண்ணீர்க்குழாய் அவ்விடம் பதித்திருப்பதாக அவ்வெலிகளுக்குத் தெரிந்தவிதமெப்படியோ? ஆச்சரியம்!.

எலிகள் வருஷத்தில் அனேகந்தரம் குட்டிபோடும். ஒவ்வொருதரமும் பத்துப்பதினைந்து குட்டிகள்போடும். எலி ஏகதாரத்தைக்கொண்டிருக்கும் ஜந்துக்களில் ஒன்றல்ல. எந்தக்கூட்டத்திலும் பெண்எலிகளைவிட ஆண் எலிகளின் தொகை அதிகமாகவே யிருக்கிறதாக அனேகர் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

எலிகள் எவ்வளவுதூரத்தில் இருந்தபோதிலும் வஸ்துக்களின் வாசனையைக் கண்டுபிடித் அவைகளின் மூலமாய் அந்த வஸ்துக்களை அபகரிக்கும் விசேஷசக்தியுடையவைகள்.

J. D. R.

---

### TO OUR SUBSCRIBERS.

Owing to unexpected difficulties and delay in the Press, the December and January Nos have been unusually delayed in publication. We are doing our best to expedite work with the limited resources at our disposal and hope soon to revert to our usual ime of publication.

*8th March 99.*

---

### நமது சந்தாதாரர்களுக்கு

எதிர்பாராச் சில அசந்தர்ப்பங்களும் அச்சாபீஸில் தாமுதமும் நேரிட்ட காரணத்தால் டிசம்பர் ஜனவரி மாசத்துச் சஞ்சிகைகள் மிகவும் தவக்கப்பட்டுப்போய் விட்டன. நம்மாலானவரையில் வேலை சீக்கிரம் நடக்க முயற்சித்துவருகிறோம். நேரிட்ட காலதாமதத்தை நிர்வதித்து வழக்கம் போல் சீக்கிரம் பிரசுரித்துவருவோம். மார்ச்சுமீ 8உ

## விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள்.

இவை ஒவ்வொன்றும் நாணயமான இங்கிலீஷ் பைண்டு செய்து கில்ட் எழுத்துகள் பதித்துள்ளன.

**மாட்சிமைதங்கிய இந்தியா சக்கிரவர்த்தினியாகிய விக்டோரியா மஹாராணியவர்கள் சரித்திரம்.** 27-படங்களோடும், இந்தியாகவர்ன்மெண்டு, இந்தியாஆபீஸ் இவைகளின் அமைப்பு, அமுல்செலுத்தும் முறை விவரங்களோடும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1-4. V.P.P. ரூ. 1-8. அதிககில்ட்கொடுத்தது: ரூ. 1-6. V.P.P. ரூ. 1-10.

**புத்தரது திவ்விய சரித்திரம்.** -- விலை அணா 14. V.P.P. ரூ. 1-2. அதிக கில்ட்கொடுத்தது: ரூ. 1. V.P.P. மூலமாக ரூ. 1-4.

**விவேகமஞ்சரி.**—புஸ்தகம் I. இதிலடங்கியவை: (1) கோல்பர்ட்சரித்திரம். (2) சத்தியதேவதைக்கதை. (3) சிவாஜிமஹாராஜா சரித்திரம். விலை அணா 14. V.P.P. ரூ. 1-2. அதிக கில்ட்கொடுத்தது: ரூ 1. V.P.P. ரூ. 1-4.

இம்மூன்று புஸ்தகங்களும் கில்ட் எழுத்துகளின்றி காலிகோகட்டடம்செய்து தனித்தனியாகவும் கிடைக்கும்:

(1) கோல்பர்ட் சரித்திரம்: துணிவியாபாரி கடையிலிருந்து முதல்மந்திரிஸ்தானத்துக்கு வந்த வாலிபன்கதை. விலை அணா 5. V.P.P. அணா 8.

(2) சத்தியதேவதைகதை: விலை அணா 5. V.P.P. மூலமாக அணா 8.

(3) சிவாஜி மஹாராஜாசரித்திரம்: விலை அணா 6. V.P.P. மூலமாக அணா 9.

**அபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்.** விலை ரூ. 1-8. V.P.P. ரூ. 1-14. அதிக கில்ட் கொடுத்தது: ரூ 1-12. V.P.P. ரூ. 2-2.

**விவேகரஸத்தாலாட்டு.** 6 பை. தபாற்கூலி 6 பை. வேண்டுவோர் சென்னை திருவல்லிக்கேணி அ. ப. ஏஜன்ஸி காரியதரிசி ஸி. வி. சாமிநாதய்யர் அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---


## சி. டி. சாமி எனபவரின் பல்பொடி.

இதை உபயோகிப்பதால் பல் அரணை, பல் ஈறு சுரப்பு, பற்கூசல், பல் அசைவு, பல்லில் இரத்தம் விழுதல், வாய்நாற்றம், இன்னும் பல்லைச்சேர்ந்த சகலவியாதிகளையும் கண்டிப்பதுமன்றி பற்களை வலிவாகவும் சுத்தியாகவும் இருக்கச்செய்யும்.

தந்தப்பொடி 40 நாள் உபயோகிக்கக்கூடிய டப்பியின் கிரயம் (தபால் சார்ஜ் அன்னியில்) 0—6—0

சி. டி. சாமி.

நெ. 117. இராமசாமிதெருவு,
முத்தியால்பேட்டை,
சென்னப்பட்டணம்.


## VERNACULAR STUDIES IN MADRAS.

Being reprint of a series of 4 articles originally contributed to the "MADRAS MAIL" by C. V. Swaminatha Aiyar, with an Introduction by Henry K. Beauchamp, Editor of the MADRAS MAIL. Demy. 8 vo. 32 pp. Price 4 As. Postage Extra.

---

## THE ENCOURAGEMENT OF VERNACULARS.

A paper contributed to the "Madras Review" by C. V. Swaminatha Aiyar. Royal 8 vo. 24 pp. Price 3 As. Postage Extra.

To be had of,
The Diffusion of Knowledge Agency,
*Triplicane, Madras.*

---

## THE VIVEKA CHINTAMANI SERIES.

**Printed in large type on good paper in a Handy Form.**
Neatly got up and Tastefully bound.
*16 mo. Full cloth, Gilt Back, Ornamental Sides.*
Also a special Edition, Extra gilt, suitable for prizes, &c.

**Life of H. M. Queen Victoria, Empress of India**: with 27 Illustrations and an Appendix describing the constitution of the Government of India and of the India office, London. 293 pp Rs. 1-4 By V. P. P. Rs. 1-8.
Special edition, extra gilt, Rs 1-6. V. P. P. Rs 1-10

**The Story of the Life of Buddha.** Describing the Great Renunciation, (MAHABHINISHKRAMANA) as depicted by Sir Edwin Arnold in his Light of Asia. 14 As. By Post Re. 1, or By V. P. P. 1-2.
Special edition, extra gilt, Rupee 1. By V. P. P. Rs 1-4.

**The Viveka Manjari**: A Tamil Miscellany of Instructive and Entertaining Tracts, Vol. I, containing (1) The Story of Colbert, (2) Fairy Tell-True, (A TALE) & (3) Life of Sivaji. Handsomely Bound in Full Cloth, Gilt Back, Ornamental sides, 14 As. By V.P.P. Rs. 1-2.
Special edition, extra gilt, Re. 1. By V. P. P. Rs. 1-4.
Or Separately in full cloth, without gilt letters, as follows:—

1. *Story of Colbert*: The Draper's Apprentice, who became prime-minister. 5 As. By V. P. P. 8 As.
2. *Fairy Tell-True*: 5 As. By V. P. P 8 As.
3. *Life of Sivaji*: 6 As. By V. P. P. 9 As.

**Kamalambal or the Fatal Rumour**: A Novel in Tamil of absorbing interest. 430 pp. 16 mo. Price Rs. 1-8. Postage 3 As. By V. P. P. Rs. 1-14-0.
Special edition, extra gilt, Rs. 1-12-0. Postage Extra.

**Vivekarasattalattu** (A LULLABY), 6 pies. Postage 6 pies.

*Apply to*: **C. V. Swaminatha Aiyar,**
*Secretary, D. K. Agency,*
*Triplicane, Madras.*

☞ Prices quoted are net. Orders unaccompanied by remittance will be executed by V. P. P.

---


லேசான காகிதப்பதிப்பு. தனிப்பிரதி. $5\frac{1}{2}$ அணா. பழையபிரதி. 6 ,,

சந்தாவிவரம். ஒரு வருஷத்துக்கு ரூ. 4. 6-மாதத்துக்கு ரூ. 2-2.

KNOWLEDGE IS POWER
விவேக சிந்தாமணி
DIFFUSION OF KNOWLEDGE AGENCY
VIVEKA CHINTAMANI

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing seperately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம். 7.] 1899ஆம் பிப்ரவரிமீ [இலக்கம். 10.


## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.
Minimum Subscription Rs. 5 per annum.
Single Copy $7\frac{1}{2}$ As, : Back Nos. 8 As. each.
ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d NET PER ANNUM

**Thin Paper Edition** for the People:—
SUBSCRN. PRICE: YEARLY Rs. 4; HALF-YEARLY Rs. 2-2.
SINGLE COPY, CURRENT No. $5\frac{1}{2}$ As. BACK NOS. 6 As. EACH.
ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d NET PER ANNUM.

**If Strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

**Subscriptions Entered to begin with only April or May of each year Enrolled Subscribers may not withdraw except at the end of the year.**

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a Volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for, otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V.P.P. to prevent accumulation of arrears.

**In all** business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:— அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசான காகிதப்பதிப்பு:— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்ரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றப்படி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்ரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V.P.P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

இவ்வாறு அன்னம் கூறியதைக்கேட்டுத் தமயந்தி அன்னத்தைப்பார்த்து "ஓ ராஜஹம்ஸமே. அறிவில்லாமையினால் உன்னை யான் பிடிக்கக்கருதித் தொடர்ந்து உனக்கன்றோ நான் பிழையிழைத்துள்ளேன். அங்ஙனமிருக்க நீ எனக்குப் பிழையிழைத்ததாகச் சொன்னது நிர்மலமாகிய பளிங்குக்கல்லில் அலைதச்சார்ந்த மற்றப்பொருள்களின் சாயை தோன்றுவதுபோலக் களங்கமற்ற உன்னுள்ளத்தில் யான்செய்தபிழை பிரதிவிம்பித்ததனாற்போலும். இதுநிற்க. நீ எனக்கு வேண்டியகாரியங்களைச் செய்வேனென்றாய். உன்னை ஆசையோடும் கண்டு களித்தலன்றி நான் வேண்டுவது வேறென்னுள்ளது? ஆகாயத்தில் உலவுகின்ற சந்திரன் உலகிலுள்ளார் தன்னைக்கண்டு களிக்க விளங்குவதைவிட வேறே யாதுசெய்யவேண்டுவது? ஒருவேளை நானொன்றை இச்சித்திருப்பினும், அந்தோ! என்மனத்திலுள்ள அவ்விச்சையை உனக்கெவ்வாறு வெளியிட்டுச்சொல்வேன் ? அவ்விச்சை மனதிற் குடிகொண்டு புறம்போாமல் இருப்பதனால் நாவிற்கெட்டவின்றாதலின் நாவாலெப்படியுரைப்பது? அன்றியும் சுலபத்தில் பெறுதற்குரியதோர் பொருளைக்கேட்டால் நியாயமாயிருக்கும். அப்படிக்கன்றிப்பெறுதற்கரிய 'தருவினறுங்கொழுநனை'த் தாவென்றுசொல்லுதல் பெண்களுக்கு அடுக்குமோ ? என்னை அதிகமாகப் பரீக்ஷிக்காதே உனக்குத் தெரியாததொன்றுமில்லை" என்று தன் உள்ளத்தை ஒருவாறு மறைத்துக் குறிப்பித்தாள்.

அதுகேட்டு அன்னம் சொல்லுகின்றது: "ஓ தமயந்தியே, நீ யிவ்வாறு மறைத்துச் சொன்னால் நான் எப்படித் தெரிந்துகொள்வேன்? அம்மறைபொருளை நான் அறியக்கூடாதோ? நீ கருதியதை எனக்குவிளங்க வெளியிட்டுக் கூறுவாயானால் அப்பொருள் எந்தத்தீவாந்திரத்தில் இருந்தாலும் எவ்வளவு அரியதானாலும், க்ஷணமாத்திரத்தில் உனக்குக்கொண்டுவந்து கொடுப்பேன். நான் சொல்லும்வார்த்தையை நீ உறுதியாகநம்பு. நானொருநாளும் பொய்யுரைசொல்லேன். பொய்யென்பது என்னாவில் நான் வேண்டினாலும் வாராது. பிரமதேவர்கூட சத்தியசந்தர்கள் எம்மைப்போலும் உலகில் இல்லையென்று பலமுறையும் எங்களைச் சிலாகித்திருக்கிறார். உன்னெண்ணம் இன்னதென்றறியாமல் நான் என்ன பண்ணுவது ?" என்றது.

அப்போது தமயந்தி உள்ளெழுந்த நாணத்தால் ஒன்றையும்விட்டுச் சொல்லமுடியாதவளாய், மறுபடியும் மறைபொருளாகவே, "'மருவு புரிநரம்பிசைக்கும் மாடகநல்யாழிசைக்கேட்டுருகி நளன்பால் வேட்கை யுற்றனளென்றறியாயோ?' இனி நான் என் இச்சையை இதனினும் தெளியத் தெரிவிக்க அறியேன். உனக்குத் தெரிந்துகொள்ளச் சாமர்த்தியமுண்டானால் தெரிந்துகொள் ; இல்லாவிட்டால் என் அதிர்ஷ்டம் விட்டபடி விடட்டும்." என்றாள்.

சிவகாமி.—அம்மா தமயந்தி மறைபொருளாகச் சொன்ன வார்த்தைகளுக்குப் பொருளென்ன. எனக்கு விளங்கச்சொல்லவேண்டும்.

தாயார்.—நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களில் நாணம் என்பது பெண்களுக்கு இன்றியமையாத முதற் குணமாதலின், அந்நாணத்தால் தான் கோரிய பர்த்தாவைத் தனக்குத் தேடிக்கொடுக்கவேண்டும் என்று ஸ்பஷ்டமாகச் சொல்லமாட்டாதவளாய், அவ்வாறு மறைத்துச் சொன்னாள். அவள் சொல்லிய வார்த்தைகளில் முன்னதாகிய 'தருவினறுங் கொழுநனைத் தாவென்பார்களா?' என்றதற்கு, மேலுக்கு, 'கற்பகவிருக்ஷத்தின் வாசனையுள்ள செழித்த அரும்புகளைக்கொடு என்பார்களா ?' என்பது பொருள். அவள் கருதிய உட்பொருளோ 'கற்பகவிருக்ஷத்தைப் போலச் சிறந்தபர்த்தாவை எனக்குத்தேடிக்கொடு என்று சொல்ல மனமெழுமோ?' என்பது. பின்னர்க்கூறியதாகிய 'மருவு புரிநரம்பிசைக்கும் மாடக நல்யாழிசைகேட்டுருகி நளன்பால் வேட்கை யுற்றனளென்றறியாயோ?' என்பதற்கும் வெளிப்பொருள், 'ஒன்றுறக்கட்டிய நரம்புகளால் இசைக்கின்ற வீணாகானத்தைக்கேட்டு அதன் இனிமையால் மனமுருகி அதனை மேன்மேலும் கேட்கவேண்டுமென்று அன்பால் ஆசையுற்றனளென்பதை அறியாயோ?' வென்றும், உட்பொருள்: 'வீணாகானத்தைக்கேட்டு மனமுருகித் தன் காதலனாகிய நளனிடத்தில் விருப்பமுற்றாளென்று அறியாயோ?' வென்றுமாம்.



சிவகாமி.—பலே தமயந்தி! மகா கெட்டிக்காரியாயிருக்கிறாளே. *"தாசிப் பொன்னிக்குக் கம்பரடிமை" என்றதற்குக் கம்பர் கூறிய உறையைக்கேட்டுச் சோழ மகாராஜா—

"போற்றினும்போற்றுவர் பொருள்கொடாவிடில்
தூற்றினும் தூற்றுவர் சொன்னசொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்கணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியராவரே."

என்று வீணே பாவலரைமட்டும் நிந்தித்தானே. தமயந்திபோன்ற காதலர்கூட ஒருசொல்லுக்குப் பலபொருள் கொடுத்துச் சமயத்துக்குத் தக்கபடி பேச்சை மாற்றிக்கொள்வார்கள்போலும். அதனால் தானோ பெண்களைக்கூடப் பொல்லாதவர்கள், நம்பக்கூடாதென்கிறார்கள்? தாத்தா அடிக்கடி இதுவிஷயமாக ஒரு பாட்டுச் சொல்லுவதுண்டே அதென்னது?

கைலாசம்.—மகா குறும்புக்காரி! அந்தப்பாட்டு உனக்குத்தெரியாதோ? ஒருதரம் சொல்லுவதற்குமுன்னாலே உனக்கு உருவாய்ப் போய்விடுமே. என்வாயைக் கிண்டுகிறதற்குக் கேட்கிற கேள்வியன்றோ? அந்தப்பாட்டை வேண்டுமானால் இன்னொருதரம் சொல்லுகிறேனே. பயமா, அல்லது நான் பாடினபாட்டா. பெண்கள் பண்ணுகிற நீலித்தனம் எல்லாருக்கும் தெரிந்ததுதானே. விவேகசிந்தாமணிக்காரர் நன்றாய்ச்சொன்னார்.—

"ஆலகாலவிஷத்தையுநம்பலாம்;
ஆற்றையும் பெருங்காற்றையும்நம்பலாம்;
கோலமாமதயானையை நம்பலாம்;
கொல்லும் வேங்கைப்புலியையும் நம்பலாம்;
காலனார்விடு தூதரைநம்பலாம்;
கள்ளர்வேடர் மறவரைநம்பலாம்;
சேலைகட்டிய மாதரைநம்பினால்
தெருவில்நின்று தியங்கித்தவிப்பரே."

சிவகாமி.— அம்மா நீயேசொல்லு. இந்தப் பாட்டில் சொல்லியிருக்கிறபடி, பெண்கள் வாஸ்தவத்தில் அவ்வளவு பொல்லாதவர்கள்தானா ? பெண்களுக்குள்ளே எத்தனை பேர்கள் அறிவொழுக்கங்களினால் சிறந்து பர்த்தாமுதலான சுற்றத்தார்களுக்கு மேன்மையும் சுகமும் உண்டுபண்ணியிருக்கிறார்கள்? திருவள்ளுவர் தம்முடைய மனைவி யிறந்துபோனபோது அவளைநினைத்து துக்கித்தபாட்டு உமக்குத் தெரியாதோ தாத்தா ? மறந்துபோனால் ஞாபகமூட்டுகிறேன். கேளும்—

"அடிசிற்கினியாளே அன்புடையாளே
படிசொற்கடவாதபாவாய்—அடிவருடிப்
பின்தூங்கிமுன்னெழூஉம் பேதையேபோதியோ
என்தூங்கும் என்கண் இரா."

திருவள்ளுவரைவிட தெரிந்தவராக்கும் உம்முடைய பேரில்லாத விவேகசிந்தாமணிக்காரர் ? அவர் ஆர்கையில் அகப்பட்டுக்கொண்டு பாவம் மோசம் போனாரோ !

தாயார். — படபடப்பாகப்பேசாதே, சிவகாமி; நிதானித்துச்சொல்லு. நீங்கள் சொல்லிய இரண்டுபாடல்களும் உண்மையே. உலகில் பெண்களில்மாத்திரம் என்ன ?

* தாய்+ஸ்ரீ+பொன்னிக்கு=லோகமாதாவாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்குக் கம்பரடிமை.

ஸ்திரீபுருஷர்கள் எல்லாருக்குள்ளேயும் நல்லவர்களும் இருக்கிறார்கள் பொல்லாதவர்களும் இருக்கிறார்கள். நல்லவர்கள் இல்லாவிட்டால் மழை யெப்படிப்பெய்யும்? உயிர்கள் எப்படிப்பிழைக்கும்? பொல்லாதவர்களும் அநேகர் இருக்கிறார்கள். பார்க்கப்போனால் ஸ்திரீகளுக்குள்ளேயுள்ள அடக்கமும், விநயமும், அன்பும், அநுராகமும், இரக்கமும், ஈவும், புருடர்க்குள்ளே யில்லையென்றே சொல்லவேண்டும். ஆனாலொன்று; புருஷர்களுக்குச் சுதந்தரமும் ஸ்திரீகளுக்கு அது இல்லாமையும் ஆனதினாலே, 'மாமியாருடைத்தால் மண்கலம், மாட்டுப்பெண்ணுடைத்தால் வெண்கலம்' என்றபடி புருஷர்கள் செய்கிற அக்கிரமங்களை ஒருவரும் கவனித்துப் பாராட்டுவதில்லை. ஸ்திரீகளின் தூஷணம் உடனே வெளிப்பட்டு அதிகமாகப் பாராட்டப்படுகிறது. அதுதான் உள்ள சூக்ஷமம். அன்றியும், பெண்களது குற்றங்களைப் புருஷர் எடுத்துத் தூற்றுவதுபோலப் புருஷரது குற்றங்களைப் பெண்கள் எடுத்துத் தூற்றுவதில்லை. இதுநிற்க. தமயந்தி இரட்டுறச் சொல்லி மறைத்துப்பேசிய வார்த்தைகளை ஆலோசிக்க, அவள் நற்குணமும் பெருமையும் எவ்வளவு விளங்குகிறது! நாணமும் காதலும் ஒன்றுக்கொன்று முரணி, ஆசை முன்தள்ள நாணம் பின்னிழுக்க அவள் என்னசெய்வாள் பாவம்? சமயம்வாய்த்தபோது நாணத்தால் அதனை இழந்துவிடுவாளாயின், அவளுக்குப்பின் எவ்வாறு கருதியசுகம் கிடைக்கும்? ஆசை வெட்கமறியாதென்றபடி ஆசையினால் பெண்களுக்கியற்கையான உயிரினும் சிறந்த நாணத்தைக்கைவிடுதலும் தன் குலத்துக்கும் குடிப்பிறப்புக்கும் குறைவாகுமன்றோ? ஆதலால், அவளுக்கு அப்போது இரட்டுற மொழிதல் மிக்க இயல்பும் நிரம்பச் சிலாகிக்கத்தக்கதும் ஆயிற்று. பிறரை வஞ்சிக்கும்பொருட்டு இரட்டுறச்சொல்லல் குற்றமாமேயன்றி இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் குற்றமேயாகாது. இனிமேல் கதையை வாசி கேட்போம்.

சுப்பலெக்ஷ்மி. — (வாசிக்கிறாள்.) அதுகேட்டு அன்னம் இன்னமும் அவள்கருத்தைச் சந்தேகமின்றி நிச்சயமாகத் தெரிந்துகொள்ளக்கருதி அவளை நோக்கிச்சொல்லுகின்றது. "ஓபெண்மணியே, நீநாணத்தால் வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பாலுணர்த்த பொருளை நானெனது கல்வித்திறத்தினால் அப்போதே அறிந்துகொண்டேனாயினும், பெண்களுடைய மனம் மிகச் சபலமானதென்றும் ஒன்றைப் பற்றியும் உடனே பிரியுமென்றும் அறிவுடையோர் கூறுதலினால், அப்பொருளை அறிந்தும் அறியாததுபோல் ஐயுறவுற்றிருந்தேன். அன்றியும், உலகமெங்கும் தனதாஜ்ஞாசக்கரத்தைச் செலுத்தி, அளவில்லாத பெரும்புகழைத்தரித்த அரசர்பெருமான் முன்சென்று, தமயந்தி நாணத்தால் ஐயுறவுற்று ஏதோசிலவார்த்தைகளைச் சொன்னாளென்று நான் மழமழவென்று சொல்லுவதும் ஞாயமாகுமோ? நான் உன் அரைகுறையானவார்த்தைகளை நம்பி நளமகாராஜாவின் மனசை உன்னிடத்தில் கூட்டினால் பின்பு உன் தந்தை உன்னை மற்றொருவனுக்குக்கொடுத்துவிடுவானாயின், என்பேச்சுப் பொய்யாய்ப் போகுமன்றோ? நீ உன்னுள்ளத்தைத்திறந்து சொல்லாமல், மறைபொருளாய்ச் சொல்லுவதைப்பார்த்தால், என்மனசில் உள்ளதுபோலவே உன்மனசிலும் தந்தை எவனுக்குக் கொடுத்துவிடுவானோ என்னும் சந்தேகம் உள்ளதென்று தோன்றுமாதலின், இனி இவ்விஷயத்தை விட்டுவிடுக. இதுதவிர வேறுநீ யாது



சொல்லினும் செய்துமுடிக்கச் சித்தனாயிருக்கின்றேன்." என்று அவளது மனநிலையை நன்றாய் அறியும்படிச் சொல்லியது.

சிவகாமி.—அடே அப்பா! அன்னபக்ஷி லகுப்பட்டதல்ல. தமயந்தியைவிட ஒருமுழம் மிச்சமாகவேபேசுகிறது. அவள்தடுக்கின் கீழ்ப்பாய்ந்தால், இது கோலத்தின் கீழ்ப்பாய்கிறதே!

தாயார்.—ஆமாம் அப்படித்தான் பேசவேண்டும்; வெட்டொன்று துண்டமிரண்டாய்க் கண்டித்துப் பேசாமல் இவ்விதமான பெரிய காரியங்களில் பின்பு சந்தேகத்துக்கும் வார்த்தைக்கும் இடம்வைத்துக் கொள்ளலாமா? அவமதிப்பும் மானபங்கமும் வருமன்றோ.

சுப்பலெக்ஷ்மி—(வாசிக்கிறாள்.) இவ்வாறு அன்னம் கூறியவார்த்தைகளால் தமயந்தியின் மனசைக்கோட்டைபோலச்சூழ்ந்துகிடந்த நாணமெல்லாம் அகன்றுபோக, அவள் சிறிது ஆலோசித்துப்பின்பு புன்சிரிப்புற்று முகத்தைச் சற்றே திருப்பிக்கொண்டு இனிய அமிர்தத்தை வாய்வழியே சிந்தவிடுதல்போல வெளிப்படையாகச் சொல்லப் புகுந்தாள். "ஓராஜவன்னமே! தாமரைமலருக்குச் சூரியனையும், செவ்வாம்பற்குச் சந்திரனையும், ஒழிய வேறு தலைவர்களுண்டா? அதுபோல்வே எனக்கும் நளமகாராஜாவையன்றி வேறுநாயகனில்லையென்று நம்பக்கடவாய். இதுவிஷயத்தில் நீ சிறிதும் சந்தேகப்படவே வேண்டாம். என் கருத்துக்கிசைந்த நளமகாராஜாவின் மார்பில் நான் மணமாலையைச் சூட்டுவதல்லாமல், சகல ஜீவராசிகளுக்கும் காதலையுண்டுபண்ணும் புஷ்பபாணனாகிய மன்மதன் தானே எதிரேவந்து நிற்பினும் என்மனம் அவன் பாற்செல்லாது. என்னுடைய உறுதிக்கு மாறாக ஒருவேளை என் தந்தை பிறனொருவனுக்கு என்னைக் கொடுக்கக்கருதுவானாயின் நான் அதற்குடன்படுவேனென்று நீ கனவிலும் எண்ணவேண்டாம். அப்போது அக்கினிப்பிரவேசம் செய்து பிராணத்தியாகம் செய்தாவது உன் வார்த்தையை நிலை நிறுத்துவேன். நீ இதில் எள்ளளவேனும் சந்தேகிக்கவேண்டாம். அந்நளமகாராஜாவுக்கு ஊழியம் செய்யும் நிலைமையாயினும் லபிக்கவேண்டுமென்று உள்ளுருகிக்கொண்டிருக்கும் என்னை அவற்கு விவாகம் செய்வித்தல், ஒருவேளை, உன்னால் ஆகுமோ ஆகாதோவென்று அதைரியப்பட்டு நீ இக்காரியத்தில் தலை யிட்டுக்கொள்ளத் தகுமோ வென்றெண்ணாதே. தாமரையிதழ்கள் சந்திரனுக்கலராதாயினும் சூரியனைக்கண்டமாத்திரத்தில் அலருமல்லவா. ஆதலால் மற்றவர்க்குச் சாத்தியமாகாத காரியம் உனக்குச்சாத்தியமாவதிற்றடையில்லை. அதிகமாகச்சொல்லுவதென்னை. நீ எவ்விதமாவது என்னை நளனோடு கூட்டுவிப்பாயாயின் நானுயிரோடிருப்பேன். இல்லாவிடில், பல்லோரறிய தழல் மூட்டி அதனுட் குதித்திறந்துவிடுவேன். ஓ அன்னமே, நீ எனக்கந்த துர்க்கதி வாராமல் காக்கக்கடவாய். என் உயிரினும் பன்மடங்கு சிறந்த என்காதலனை எனக்களிப்பாயாக. நீ செய்யும் உதவிக்கு நானெதனைக் கைம்மாறு செய்வது? உனக்குக் கைம்மாறு செய்தல் முடியாதாயினும் என்னுயிருள்ளமட்டும் உன்னை மறக்கமாட்டேன். மிக்கமனக்களிப்போடு உன் புகழையே எப்போதும் பாடிக்கொண்டிருப்பேன். நீ சீக்கிரம் சென்று அரசர்பிரான் திருவருளைப்பெற்று என்னுயிரைக் காப்பாயாக,"வென்று வருந்தி வேண்டிக் கொண்டனள்.

சிவ—ஆகா! இவள் நளனிடத்தில்வைத்த அன்

பின்மிகுதி மிகவும் வியக்கத்தக்கதே. புரு
ஷனும் ஸ்திரீயும் இப்படி ஒருவ
ரையொருவர் நேசித்து மணம்புரிந்தாலல்
லவோ அவரது இல்வாழ்க்கை மேன்மே
லும் இனிதாகும். நம்முன்னோர்களுக்குள்
ளே பூர்வகாலம் விவாகம் நடப்பது இவ்
வாறு ஸ்திரீபுருஷர்களுடைய சம்மதிப்ப
டிக்கும் இஷ்டப்படிக்கும் தானே? இவ்
வாறாயின் கிருதயுகம் கிருதயுகம் என்று
கொண்டாடுவது மெத்தநியாயந்தானே.

தாய்ார்—அநேகமாக அரசர்களுக்குள்ளே இவ்
வாறுதான்சுயம்வரமென்றுகன்னிகையின்
இஷ்டப்படியே அவள்விரும்பியகணவனை
வரித்துக் கல்யாணம் செய்தல் வழக்க
மென்று தோற்றுகிறது. பிராமணர்க
ளுக்குள்ளே இந்தப்பத்ததி இருந்ததாகத்
தோன்றவில்லை. ஆயினும் அவர்களுக்
குள்ளேயும் அநேகமாக வதூவரர்களு
டைய அபிப்பிராயம் தெரிந்து அதை அ
னுசரித்தே பெற்றோர்கள் மணவினைமு
டிப்பது வழக்கம் என்று தோற்றுகின்ற
து. மார்க்கண்டேயமுனிவர் பிதாவாகிய
மிருகண்டு முனிவர் தம் கருத்துக்கிசைந்
த பலகுணங்களும் நிறைந்த கன்னியைத்
தேடியளிக்கின் விவாகம் செய்துகொள்வ
தாயும், அல்லாவிடில்செய்துகொள்வதில்
லையென்றும் தீர்மானிக்க, அவரது கருத்
தின்படியே அவர் பிதா தக்க கன்னிகை
யைத்தேடி மணம் புரிவித்தனரென்று
சொல்லியிருக்கின்றது. இன்னம், இருப்
புக்கடலையைச்சமைத்துக்கொடுத்து அத்
திரிமகாமுனிவரை மணம்புரிந்த அநுசூ
யை முதலானவர்களுடைய விர்த்தாந்தங்
களாலும் அந்நாளில் எட்டும் இரண்டும்
தெரியாத குழந்தைப் பிராயத்தில் இப்
போதேற்பட்டிருக்கும் மாப்பாவைக் கல்
யாணம் போன்ற கல்யாணங்கள் இல்லை
யென்று ஊகிக்கத்தக்கது. இவ்விஷயம்
எப்படியானாலும் முன்னேயிலும் இப்போ
து நம் ஆசாரங்களும் செய்கைகளும் பல
காரணங்களாலும் அநேகமாகக் கெட்டுப்
போயிருக்கின்றன என்பதில் சந்தேகமில்
லை. எந்த மஹாபுருஷனால் நம் ஆசாரங்
களுக்குச் சீர்திருத்தமுண்டாமோ அறி
யேன்.

தாத்தா—மஹாபுருஷன் எப்போதுவருவானோ
சீர்திருத்தம் எப்போதாகுமோ? உதைத்
த கால் புழுக்குமுன் அடிவயிறு சீக் கட்
டிப்போகின்றதே. கல்யாணவிஷயங்களில்
இப்போதுநடக்கும் அக்கிரமங்கள் சொல்
லிமுடியாது. பெண்ணின்சம்மதம் யாருக்
குவேண்டும், பிள்ளையின் யோசனையை
ஆர் கேட்கிறார்கள்? பணமல்லவோ பெரி
து. பெண்ணுக்குப் பணமும் அழகும்,
பிள்ளைக்கு*'பியாசும்' பிரபலமும் அன்றி
வேறே குலம், கோத்திரம், நிமித்தம், பொ
ருத்தம், யார் பார்க்கிறார்கள்? 'வால்போச்
சு கத்திவந்தது டம்டம்' என்று முன்னே
பெண்ணை விலைக்கு வாங்கிக்கொண்டிருந்
தார்கள், இப்போது பிள்ளைகளை விலைக்கு
வாங்குவதாயிருக்கிறது!

சிவ—இதெல்லாம் கதைகதையாய்ச்சொல்லுகி
றார்கள் தாத்தா. வாசிக்கவாசிக்க நிரம்ப
வேடிக்கையாயிருக்கிறது.

தாத்தா—கதைக்குப்போவானேன்? இந்நாளில்
பெண்ணைப்பெற்றபேர் பாடு மகாகஷ்டத்
தில் வந்துவிட்டது. நீ அதிர்ஷ்டசாலி
தான் ருக்மணி. உன்னிரண்டு பெண்களை
யும் அதிகப்பணச்செலவில்லாமல் நல்ல இ
டத்தில் கொடுத்துவிட்டாய். இனிமேல்
உனக்குப் பிக்கில்லை. எங்கள் சா
மாவைப் பார். இரண்டு பெண்களை வைத்
துக்கொண்டு தவி தவி யென்று தவிக்கி
றான். எங்கேபோனாலும் யானைவிலை குதி
ரை விலையாயிருக்கிறது. ஐந்நூறுகொண்டு
வா, ஆயிரம் கொண்டுவா வென்கிறார்கள்.

* 'Pass' என்னும் இங்கிலீஷ் வார்த்தையின்மரூஉ.



பெண்களுக்கோ வயசாகிறது. யாராவது
வேதாத்தியயனம் பண்ணின பிரமசாரி
யைப்பார்த்துக் கொடுப்போமென்றாலும்
அதுவும் கிடைக்கிறதில்லை.

ருக்மணி. — அந்த வயிற்றெரிச்சலை யேன்
சொல்லுகிறீர்? இந்நாளில், யப். ஏ., பீ.ஏ.,
எம். ஏ. முதலான 'ஏ'ப்பரிக்ஷைகள் பியா
சாகிற பிள்ளைகளெல்லாம் உத்தியோகஸ்
தர் பிள்ளைகளும் குடித்தனக்காரர் பிள்ளை
களும்தானே? முக்காலே மூன்றுவீச
மும் வைதிகர் பிள்ளைகள் தானே. தீக்ஷித
ரும், சாஸ்திரியும், அவதானியும், ஜடாவல்
லவருமாயிருக்கிறார்கள் இந்நாள் இங்கி
லீஷ்படிக்கும் பிள்ளைகளெல்லாம். அதவா
ஆராவது சிலபேர்கள் குலவித்தையைப்
படித்து வைதீகமார்க்கத்திலிருந்தாலும்,
அவர்களுக்குள்ளேதான் பிராமணாத்தத்
துக் காசைப்பட்டுக்கொண்டு பத்துவயசி
லே எட்டுவயசிலே கல்யாணம் பண்ணி
விடுகிறார்கள். பிள்ளைகள் அகப்படுவது
வெகுப் பிரயாசமாயிற்றே. போயும்வந்
தும் பிள்ளைகள்வேண்டுமானால், திரிசங்கு
சொர்க்கம் மாதிரி இதுவும்கெட்டு அது
வும் கெட்டுப் படிப்புமில்லாமல் பணமு
மில்லாமல் வரண்டுகிடக்கும் இடங்களில்
தான் அகப்படுவதாயிருக்கிறது. அங்கே
பெண்களைக் கொடுப்பதானால் பெற்றவர்க
ளுக்கு மனசாகிறதா? எல்லாம் 'சம்சாரம்
சாகரம் துக்கம்' என்று சம்சாரத்தில் மாட்
டிக் கொண்டவர்கள்பாடு மகா கஷ்டம்
தான்.

சுப்பிலக்ஷ்மி.—ஆனால் முன்னாளில் இந்தச்
சங்கடங்க ளொன்றுமில்லையோ? ஏன்
தாத்தா நீர் வெகுநாளை அநுபோகசாலி
யாயிற்றே. எப்படி?

தாத்தா.—முந்நாளிலே இந்தப்படிப்பை யார்
சிந்தினார்கள்! 'பியாசை' யார்கண்டார்
கள்! பணம்பணமென்று இவ்வளவு பணப்
பேய்பிடித்து ஆட்டினபேர்களையும் பார்த்
ததில்லை. பணமுள்ளவர்கள் ஏதாவது
சீர்செலுத்தி செய்வார்கள். மற்றவர்கள்
எப்படியாவது காரியத்தை ஒப்பி முடிப்
பார்கள். நாகரிகம் என்கிற பேர் வைத்
துக்கொண்டு கையில் இல்லாதபோனாலும்
காணிபூமிகளை அடகுவைத்து விற்றுப்
பெண்களுக்குச் செய்து ஆண்டியானபேர்
களைக்காணோம். எல்லா வாழ்வும் வலிப்
பும் இப்போதுதான் வந்திருக்கிறது.
இது கிடக்கிறது. நாழிகை ஆய்விட்டது
இன்றைக்கு இத்தோடே நிறுத்திவிடலா
மா?

தாயார்.—சுப்பு, மேலே தமயந்திக்கும் அன்
னத்துக்கும் சம்பாஷணம் நிரம்ப வளரும்
போலிருக்கிறது. நாளைப்பார்த்துக்கொள்
வோம்.

எஸ். முத்துஜயர், பி. ஏ.

## சம்பகமாலை

அல்லது,

## இளையராஜாவின் தீர்மானம்.

### அங்கம். III.

### களம். II.

இடம் - அந்தப்புரத்துக்கடுத்த நந்தவனம்.

(சந்தன் சாதுவேஷத்துடன் நுழைகிறான்.)

சந்தன்.—ஓ! இந்தத்தோட்டம் இச்சமயத்திற்கு வெ
குநேர்த்தியாய்க் காணப்படுகின்றது. உலகத்தில்
நடக்கும் அக்கிரமங்களைச் சகியாமல் சூரியன் கு
டதிசையில்வீழ்ந்தனன். புள்ளினங்கள் தம்மி
ருப்பிடஞ்சேர்ந்தன. மாந்தர் தம்மனைகளைநோக்
கிச் சென்றனர். செடிகள் அசைவற்றுநிற்கின்ற
ன. அந்தகாரமென்கிற யானையின் அடிகளால் ந
சுக்கப்பட்டு வாரி இறைக்கப்பட்டதின்மணி சக

லங்கள்போல் தீபங்கள் காணத்தொடங்கின. மாணிடகோடிகளின்சொன்முழக்கம்கிருகங்களை நாடி ஒலியிழந்தது. இச்சோலை சந்தடியின்றி வாசயோக்கியமாயிருக்கின்றது ஏன் நான் இவ்விரவு இவ்விடத்தில் தங்கியிருக்கலாகாது? பொழுதுவிடிந்தால் எனக்குத் தகுந்த வழி தோன்றலாம். ஒருவேளை இவ்விரவே தோன்றினாலுந் தோன்றும். நான் இவ்வளவு சீக்கிரத்தில் ஏன் ஏக்கமுறவேண்டும்? நான் செய்யமுயன்ற காரியம் கெட்டகாரியமன்று. அதை நிறைவேற்ற வேண்டுவது பகவானுடைய உரிமை. எனக்கு நல்வழி கிடைக்கவும் கூடும். ஓ! இரவே! உனைக்கண்டு களிப்பவர் திருடரும், கொலையாளிகளும், வியபிசாரிகளுமே. என்னைக்கூடவன்றோ நீ இன்று களிக்கச்செய்தாய். உனது சக்தியே சக்தி! ஓ! ஏகாந்தமே! உன்சுபாவம் மிகக்கபடமானது யோகிகளைக் களிக்கச்செய்து ஆதரிப்பவளென்று உன் உண்மையான சுபாவமறியா மாந்தர் சொல்லுவார்கள். உன்னைநாடிப் பிறர் சொத்தைப் புதைத்துவைக்கத் திருடரும் வருவார்கள். தங்களாயுதங்களை மறைக்கக் கொலையாளிகளும் வருவார்கள். தம் கற்புநிலைமையையொழிக்கக் காமுகரும் வருவார்கள். தங்கள் எஜமான்களின் குடும்பரகசியங்களை யெடுத்துப் பேச ஏவற்காரரும் வருவார்கள். உன் ரகசியத்தை இன்று கண்டுபிடிக்கின்றேன். உன் துஷ்டகுணத்திலும் பிறர்நன்மை தேடுகின்றேன். வைத்தியன் பாஷாணத்தையும் வியாதிநீக்கும் மருந்தாக்கவில்லையா? (சற்று உற்றுக்கேட்டு) ஏது இங்கு சம்பாஷணைச்சத்தம்! யாரோ வந்திருக்கிறதாகக் காணப்படுகின்றதே! இங்கு மறைந்திருப்பதே உத்தமம்.

(ஒளித்துக்கொள்ளுகின்றான்.)

(மீராபாயும் லால்பாயும் ஒருவர் தோள்மேல் மற்றவர் கையைப் போட்டுக்கொண்டு வருகிறார்கள்.)

லால்பாய்.—இதோ! இந்தப் பலகையின்மீதுட்காரலாம் வா மீராபாய். ஏன் வெகுதூரம் செல்லவேண்டும். நான் தனிமையாய் வந்தால் எப்போதும் இங்குதான் உட்காருவது வழக்கம்.

மீராபாய்.—இந்தவிடம் அந்தப்புரத்துக்குச் சமீபமாயிருக்கின்றதே: நாம் பேசிக்கொண்டிருந்தால் அது எவர்காதிலாயினும் விழுமே.

லால்பாய்.—விழாது மீராபாய்; இங்கு இக்காலத்தில் எவர்களும் வருவதில்லை.

மீராபாய்.—ஆனால் சரி! அப்புறம் என்ன செய்தி சொல் லால்பாய்! ப்ரீதா என்னத்திற்காக வந்திருக்கிறாள். ராணி ஏன் இன்னும் மனச்சமாதானம் அடையவில்லை.

லால்பாய்.—அவைகளையெல்லாம் வெகு எளிதாய் அறியலாமென்று நினையாதே மீராபாய்! எல்லாம் ரகசியம். நான் அறிந்த செய்தியெல்லாம் ஊகையினாலேதான்.

மீராபாய்.—அதைத்தான் எனக்குச்சொல்லேன்.

லால்பாய்.—என்ன சொல்லப்போகிறேன் மீராபாய். ப்ரீதா ராணியின் தகப்பனிடத்தினின்று ஒரு கடிதம் கொண்டுவந்திருக்கிறாள். அதைப் பார்த்துப்பார்த்து ராணி வியசனசாகரத்தில் மூழ்குகிறாள்.

மீராபாய்.—அதில் என்னவிருக்கலாம் லால்பாய்!

லால்பாய்.—நான் அறியேன் மீராபாய்!

மீராபாய்.—அவர்கள் ஏதாவது பேசும்பொழுதேனும் நீ கேட்கவில்லையோ?

லால்பாய்.—அவர்கள் பேசவேண்டுமானால் என்னை அனுப்பிவிடுகிறார்கள். நான் ராணியோடு ஏகாந்தமாயிருந்து குறிப்பையறிந்துகொள்ளலாமென்றாலோ எப்போதும் அந்தத் தாடகை யிருக்கின்றாள். என்செய்வேன்?

மீராபாய்.—ப்ரீதாவும் ராணி தாயார்வீட்டில் வேலைக்காரியாயிருக்கலாம். அவளுக்கு ஏன் அவ்வளவு சுதந்தரம் ராணி கொடுக்கவேண்டும்?

லால்பாய்—இல்லை மீராபாய் அவள் ராணியின்தாயாருடைய தோழிபோல் காணப்படுகிறது. அவளும் நம்மைப்போல் க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்தவளே. இல்லை யென்றுதான் வைத்துக்கொள்ளுவோம்; தாயார் வீட்டுத்துடைப்பக்கட்டையென்றாலும் அதின் மீது பிரியமதிகந்தான்.

மீராபாய்.—ஒருபோதும் அப்படிச் செய்யலாகாது லால்பாய்! நீ யன்றோ என்றைக்கும் இருப்ப



வள். அதிருக்கட்டும்! நீ எட்டடியாவது அந்தக்கடிதத்தைக்கொண்டுவந்து எனக்குக் காண்பிக்கவேண்டும். இது உன்னால் சாத்தியந்தான். என்ன சொல்லுகின்றாய்.

லால்பாய்.—சாத்தியந்தான் மீராபாய்! ராணி, கடிதம் வைத்திருக்கிற இடம் கூட எனக்குத் தெரியும். இப்போது கூடக்கொண்டுவருவேன். ஆனால் ஒருவருடைய அந்தரங்க விவகாரங்களை அவரனுமதியின்றி எப்படி அறியலாமென்று யோசிக்கின்றேன்.

மீராபாய்.—யோசனைசெய்யாதே லால்பாய்! சிலசமயங்களில் அவ்வாறுசெய்வதும் தர்மமேயாகும். அதர்மமானாலும் ஆகுக. அதற்குப்பரிகாரம் பின்னால் தேடிக்கொள்ளலாம். கூடுமானால் இப்போதே அதை இங்குகொண்டுவா லால்பாய்!

லால்பாய்.—இங்கு கொண்டு வர சாவகாசமில்லை மீரா. இங்குதானேநீ இரு. ஒரு நொடிக்குள் நான் கடிதத்தை வாசித்துவந்து உனக்குச் சொல்லுகின்றேன். (போகிறாள்.)

மீராபாய்.—(தனக்குத்தானே) லால்பாய் யோக்கியமானபெண். அயலாருடைய கடிதத்தை அவர்களனுமதியின்றி பார்ப்பது தர்மமல்ல. உண்மையே! ஆனால் நான் ரகசியத்தை எப்படி அறிவேன். ஆனாலும் அவர்களிருவருக்கு மத்தியில் அவ்வளவு ரகசிய மென்ன? நான் க்ஷத்திரியஸ்திரீ யல்லவோ. அசைகிற இலையிலும் பறக்கிற கொடியிலும் அபாயத்தை அறிய வேண்டும். நான் செய்தகாரியம் ஒருக்காலும் அதர்மமல்ல.

சந்தன்.—(தனக்குள்ளே) ஆ! ஜயித்தேனிப்பொழுது. இவ்வளவுயுக்திசாலிகளான ஸ்திரீகள் இவ்வரண்மனையிலுள்ளவரையில் இந்தராஜ்ஜியத்திற்கு அபாயம் நேரிடாது. இவர்கள் இவ்வரண்மனைவேலைக்காரராயிருக்கவேண்டும் இவர்களுடைய சினேகம் சம்பாதித்து இவர்களோடுகலந்தேனேயானால் என்காரியம் முடிவுறும். அந்தஸ்திரீ என்ன செய்தி கொண்டுவருகிறாளோ பார்ப்போம். (லால்பாய் திரும்பிவர.)

மீராபாய்.—லால்பாய், நீ சென்றகாரியம் காயா, பழமா?

லால்பாய்.—பழந்தான் மீரா! சமீபத்தில்வா. (வர) சுருக்கமாய்ச் சொல்லுகின்றேன் கேள்! ராணியின்தகப்பனார் மெத்தக்கோபத்துடன் கடிதம் எழுதி யிருக்கின்றார். லகாராணா மொகுல்ஜிக்கு பட்டாபிஷேகம் செய்யாது ராஜ்ஜியபாரத்தை சோண்டாவினிடத்தில் ஒப்புவித்துப்போனது அவருக்குச் சமாதானமில்லை. இவ்விஷயத்தில் முன்னதாக ராணி தம் யோசனையைக்கேளாதது பற்றிக்கோபிக்கிறார். அவர் தம்முடைய இஷ்டத்தைப்ரீதாவினிடம்சொல்லியிருக்கின்றாராம். அவள்சொன்னபடி ராணி நடவாவிட்டால் தமக்கும் தம்புத்திரிக்கும் உள்ளசம்பந்தம் போய்விடுமாம்.

மீராபாய்.—(பெருமூச்சுடன்) கெட்டதுகுடி! லால்பாய்! அவருடைய இஷ்டமென்னவோ? நாமெப்படி அறிவது? லால்பாய்! நீதான் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். நீ ஏதாவது கண்டாலும் சரி கேட்டாலும்சரி உடனே எனக்குவந்து சொல். பகவான் சங்கற்ப மெப்படியிருக்குமோ யாரறிவார்? நாம் போகலாம் வா.

(போகிறார்கள்)

சந்தன்.—(தனக்குள்ளே) ரின்மலின் எண்ணம் எதுவாகவிருக்கும்! சோண்டா ராஜ்ஜியபாரம் செய்வது அவனுக்கு இஷ்டமில்லையென்று இதுவரையில் நடந்த சம்பாஷணையினால் தெரியவந்தது. அவன் செய்யாது மற்றெவர்செய்வார்? ரின்மல்தாம் வந்து செய்யப்போகிறாரோ? இதிலேயே இவ்விராஜ்ஜியத்திற்குப் போதுமான அபாயமிருக்கின்றது. ஆயினும் அவசரப்படக்கூடாது. எக்காரியத்தையாயினும் நீள யோசித்து பொட்டென முடிக்கவேண்டும். இருக்கட்டும். இவ்விராத்திரி எனக்கு மற்றுமென்ன உதவிசெய்யப் போகின்றது பார்ப்போம். அந்தப்புரத்தில் யார் வருவது?

(மறைகிறான்.)

(மற்றோர்புறமாய் ப்ரீதா நுழைகிறாள்.)

ப்ரீதா.—சம்பகமாலா! (தனக்குள்ளே) சம்பகமாலை இன்னும் வரவில்லைபோல் காண்கிறது. தவக்கஞ்செய்வதற்கு யாதுகாரணம். பயந்து அங்கு தானேநிற்கின்றாளோ. சற்றுநேரம் காத்திருக்கலாம். சீக்கிரமே வந்துவிடுவாள். நான் என்செய்வேன்? எவ்வாறு அவளதுமனதைத்திருப்பப்போகின்றேன். போதனைக்கு வசப்படாத பெண்!

ளில்லையென்று உலகவழக்கு ஆயினும் அவளுக்கு நான்என்னபோதிப்பேன். ராஜ்ஜியபாரத்தை சோண்டாவின் கையினின்று வாங்கிவிடுவது தானே ராஜா எனக்கிட்டகட்டளை. எவ்விதமாய்ச் சம்பகமாலைக்குச் சோண்டாவினிடத்தில் அருவை உண்டாகும்படி செய்வேன். சோண்டாவோ நற்குணமுடையவன்; சம்பகமாலைக்கோ அவனிடத்தில் மெத்த நம்பிக்கையிருக்கின்றது. அந்நம்பிக்கையை எப்படிப்போக்கடிப்பேன். என் அதிருஷ்டந்தான் எனக்குத்தகுந்த வழிகாண்பிக்க வேண்டும் (சற்றே ஆலோசித்துத்தலையை அசக்கி) ஆம்! ஒரேவழியிருக்கின்றது. ஒருவனுக்கு எதனிடத்தில் மரியாதையேனும், ஆசையேனும், வெறுப்பேனும், அச்சமேனும், மிகுந்திருக்கின்றதோ அதைக்கொண்டே அவனை ஜயிக்கவேண்டும். ஹரிச்சந்திரனை அப்படித்தானே விசுவாமித்திரர் ஜயித்தார். சம்பகமாலையோ தகப்பனிடத்தில் மிக்கமரியாதைவைத்திருக்கிறாள். அவருடையசொல்லைத் தவறிநடக்கப் பின்னிடையாள். சோண்டாவோ தான் நன்றெனக் கண்டதைச் செய்யாமல் விடான். இவ்விருவருடைய இவ்விருகுணங்களைக் கொண்டுதான் என் காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும். கெயில்வாராவுக்குத் தகுதியான தலைவன் ராஜதேவனேயென்றுநம்பி சோண்டா தன் தம்பியை நியமித்திருக்கின்றான். அவன்தான் தகுதியானவனென்று அவன் நினைத்திருக்கின்றானகையால் சம்பகமாலை அதற்குவிரோதமாய் யாதுசொல்லினும் அவன் கேட்கப்போவதில்லை. அதற்குத்தலைவனாக ஜோடாவை நியமித்தால்தான் ரின்மலினுடைய கோபம்தணியுமென்று சம்பகமாலைக்கு நான் சொன்னாலென்ன? இப்படிச்சொன்னால் இவ்விருவருக்கும் ஒருநொடிக்குள் மனஸ்தாபம் உண்டாகலாம்.

**சந்தன்.**—(தனக்குள்ளே) ஆ! இவள்தான் ரின்மலினால் அனுப்பப்பட்டஸ்திரீயாயிருக்கவேண்டும். இவளொரு ஸ்திரீயன்று. ஒரு ராக்ஷஸிதான் ஸ்திரீயாய் உருவெடுத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு மாயை கற்றவளாயிருப்பாளா? அதினாலன்றோ இருடிகள் மாயையைப் பெண்ணாய் வர்ணித்தனர். நானா அவளுடைய மாயையை ஜயிக்கவல்லவன்? இல்லை இல்லை. அவளுடைய எண்ணந்தான். நிறைவேறும். நான் பொறுமையாகத்தானிருக்கவேண்டும். இருக்கட்டும் பார்ப்போம்.

(சம்பகமாலா வர)

ப்ரிதா.—சம்பகமாலா! வந்தாயா! உன்னைத்தான் நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேன். உட்காரு இங்கு குளிர்ந்தகாற்று வீசுகின்றது.

சம்பகமாலை.—எனக்கேன் குளிர்ந்தகாற்று. என் மனம் தபிக்கின்றது. அதை யார்குளிரச்செய்யப் போகின்றார்கள். கணவனைத்தான்விட்டுப்பிறிந்தேனென்றால் பெற்றோர், மற்றோரையும் துறக்கும்படி நேரிட்டுவிட்டது. எந்தச்சுகத்தை அனுபவித்தாலும் பந்துக்கள் மத்தியில் அனுபவிக்கவேண்டும். அவர்களை யிழந்து விட்ட எனக்கு காற்றின் சுகமேன்? காட்டின் சுகமல்லவோ ஏற்றது.

ப்ரிதா.—ஏன் சம்பகமாலா, அப்படிப்பேசுகின்றாய்! உன்மீது உன்பெற்றோருக்குப் பிரியம் உண்டாமாறு செய்வது என்கடமை. அதற்காக ஏன்சிந்திக்கின்றாய்.

சம்பகமாலை.—எப்போழ்து செய்யப்போகின்றாய். ஒருக்ஷணமேனும் பொறுக்கஎன்றால் முடியாது. பெற்றோர் உறவிழந்த பெண்ணென்றல்லவோ நான் பெயர் பெறுவேன்,

ப்ரிதா.—இந்தக்ஷணமே செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

சம்பகமாலை.—மற்றென்னயோசனை?

ப்ரிதா.—உன்னுடைய சகாயமின்றி நான் என்செய்வேன். நீ செய்யவேண்டியதும் ஒன்றுளது.

சம்பகமாலை.—நானென்ன செய்ய? என் பெற்றோருக்காக நான் எதுவேண்டுமென்றாலும் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

ப்ரிதா.—வெகுதூரம் யோசித்தேன் சம்பகமாலா உனதுபிதா உன்னிடத்தில் மறுபடியும் பிரியம்வைக்க ஒரேவழியுளது. அதைச் செய்கின்றாயா? அது மெத்த சுலபமானவழி.

சம்பகமாலை.—பயப்படாமற் சொல் ப்ரிதா. அது என் பிதாவுக்குப் பிரியமான செயலாயிருந்தால் நான் செய்யத் தடையேயில்லை. கஷ்டமானதாயிருந்தாலும் சரிதான்.



ப்ரிதா.—உன்பிதாவுக்கு உன்மீது பிரியம் உண்டாகவேண்டுமென்று உனக்கு மனமிருக்கும்பக்ஷத்தில் உன்தமயன் ஜோடாவுக்கு உன் ராஜ்ஜியத்தில் தகுந்த உத்தியோகம் ஒன்று தரவேண்டும்; குறைந்தது ஒரு மாகாணத்துக்குத் தலைவனாகவாவது ஏற்படுத்தவேண்டும். அப்புறந்தான் உன்பிதாவின் கோபம் தணியும் என்று நினைக்கின்றேன்.

சம்பகமாலை.—அது என்ன அவ்வளவு பெரியகாரியமா! அவசியமாய்ச் செய்கின்றேன் ப்ரிதா! என் தகப்பனுக்கேனும் தமயனுக்கேனும் உத்தியோகத்தில் ப்ரியமுளதென்று எனக்குத்தெரியாது. இனி சமயம் வாய்த்தபோது என்புத்திரனுடன் சொல்லித் தகுந்த உத்தியோகமொன்றைக்கொடுக்கச்செய்கின்றேன். தமயன் இங்கிருந்தால் எனக்கும் மிகவும் சந்தோஷமாயிருக்கும். என் தகப்பனும் என்னோடு இருக்கலாம். இது ஒரு கஷ்டமான செய்கையா? அவசியமாய்ச் செய்கின்றேன்.

ப்ரிதா.—தடையென்ன சம்பகமாலா? உன்னைக்காட்டிலும் அதிகமாகவா-வேறொருவர் அவர்களுடைய க்ஷேமத்தை நாடப்போகிறார்கள். ஜோடாவுக்குத் தகுந்த உத்தியோகம் கொடுப்பாயென்பது உண்மையே. ஆயினும் சம்பகமாலா! உனக்குத் தெரியாததைநான் சொல்லப்போவதில்லை. நீ நிரம்ப புத்திசாலி; கோபங்கொண்ட ஒருவருடைய மனதுக்குத் திருப்திசெய்யவேண்டுமானால் அவர்களுடைய கோறிக்கையை உடனே நிறைவெற்றவேண்டும். தாமதமாயின் அச்செய்கையின் மதிப்பை அவர்கள் குறைத்துவிடுவார்கள். அவர்களுடைய கோபமும் பெரும்பாகம் ஒழியாமலேபோகும். ஆகையால் சம்பகமாலா எதைச்செய்தாலும் உடனே செய்துவிடு. என்றைக்கானாலும் செய்யவேண்டும். ஜோடாவுக்கேன் உத்தியோகம்! அவருக்கு ராஜ்ஜியமில்லையா! உன் தகப்பன்கிழவரன்றோ? கிழத்தனத்துக்கடுத்த சில சித்தப்பிரமைகள் அவரிடத்திலிருக்கின்றன. விருத்தாப்பிய தசையடைந்த அவருக்கு ஏன்மனக்கவலை உண்டாக்குகின்றாய். அவர் எத்தனைநாள் ஜீவிக்கப்போகின்றார்.

சமபகமாலை.—அப்படிச் சொல்லாதே ப்ரிதா! அவரைக்கூடவா நான் இழக்கவேண்டும்!(கண்ணைத் துடைத்துக்கொண்டு) இப்பொழுதே செய்துவிடுவேன். ஒன்றும் அகப்படவில்லையே.

ப்ரிதா.—ஏதோ ஒன்று காலியாயிருப்பதாய்ச் சோண்டாராஜா உன்னிடத்திற் சொன்னாரே.

சம்பமாலா.—அதை என் மற்றொரு புத்திரனாகிய ராஜதேவனுக்குக் கொடுத்துவிட்டோமே.

ப்ரிதா.—ஆனாலென்னசம்பகமாலா? இன்னொருக்கால் மற்றொன்றை அவருக்குக் கொடுக்கலாமே.

சம்பகமாலா.—பேச்சைப் புரட்டலாமா ப்ரிதா! சோண்டா என்னநினைப்பான்? வஞ்சனையன்றோ? என் தமையனானாலென்ன அவன் தம்பியானாலென்ன?

ப்ரிதா.—வஞ்சனையாவதென்ன? இவ்விராஜ்ஜியமே அவர்களுடையதாக விருக்கின்றது. ஜோடாவுக்கு நீ கொடுக்கப்போவது உத்தியோகந்தானே.

சம்பகமாலா.— உத்தியோகந்தான். ஆயினும் இவ்வற்பவார்த்தையைச் சோண்டாவுடன் எப்படி சொல்லுவேன்? அவன் பெருந்தன்மையுடையவனாயிற்றே.

ப்ரிதா.—இருக்கலாம். உன்னிஷ்டம். எப்படிவேண்டுமானாலும் செய். உனக்கு இஷ்டமில்லாததைச் [illegible] டாயப்படுத்தவே[illegible] எனக்கு வேறுகாரியமும் இவ்விடத்தில்லை. உத்தரவுகொடு. நான் ஊருக்குப்போகிறேன். ராஜாவுக்கு என்னபதில் சொல்லுகின்றாய்?

சம்பகமாலா.—கோபித்துக்கொள்ளாதே ப்ரிதா? நான் சோண்டாவிடம் பேசுகின்றேன்.

ப்ரிதா.—நீ யாரோடு வேண்டுமென்றாலும் பேசிக்கொள். எனக்காகவேண்டுவதென்ன? என் தமயனுக்கா உத்தியோகம் கொடுக்கப்போகின்றாய்? உன் தகப்பனுடைய கோபம் தணிக்கச் சொன்னாயே என்று நான் அவ்வாறு சொன்னேன். இல்லாவிட்டால் எனக்கென்னகவலை? நான் போகின்றேன்.

(போகிறாள்.)

சம்பகமாலை —ஐயோ! தெய்வமே யான் என்னசெய்வேன்! எவ்வாறு என் பேச்சைப்புரட்டுவேன்! எவ்வாறு சோண்டாவுடன் சொல்லுவேன்! எவ்வாறு என்தகப்பன் கோபத்தைத்தணிப்பேன்!

(போகிறாள்.)

சந்தன்.—கட்டாயமாய் ப்ரிதா தீங்குசெய்யவேபோகிறாள். ஸ்திரீகள் தீங்குசெய்ய எண்ணங்கொண்டால் முடித்தே தீருவார்கள். சம்பகமாலையின் சொல்லைச் சோண்டா கேளாவிட்டால் அவனைச் சம்பகமாலை என்னசெய்வாளோ அல்லது ஒன்றும் செய்யமாட்டாளோ நான் அறியேன். அது சிறிதுகாலம் பொறுத்து நேரிடப்போகும் தீங்கு. ஜோடாவுக்கு ஒரு மாகாணத் தலைமை உத்தியோகம் கொடுத்துவிட்டால், தீங்கு உடனே வந்துவிடும். நெருங்கிவந்த சத்துருவை முன்னர்க் கண்டிக்கவேண்டும். நாளைக்கு நடக்கவேண்டிய காரியத்தை யோசிக்கலாம்.

(போகிறான்.)

(இன்னும் வரும்.)

எச். வெங்கோபராவ்.

## மிஸ் மானிங் விஜயம்.

### சீமைக்குத் திரும்பியது.

மிஸ்மானிங் சென்னையிலிருந்து ஐதராபாத்துக்குச் சென்று அங்கிருந்து பூனாமார்க்கமாய் பம்பாய்க்குப் போய் பிப்ரவரி 25௳ சனிக்கிழமையன்று பம்பாயைவிட்டுச் சென்ற மெயில் ஸ்டீமரில் சீமைக்குப் பிரயாணமாகப் போயினர். போகுமுன் பிப்ரவரி 23௳ பம்பாயில் நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன் கிளைச்சங்கத்து மாதர்கள்கூடிய சபையில் தான் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்ததைப் பற்றிப் பிரசங்கித்துப் பேசினார். பத்துவருஷங்களுக்குமுன் அவர் இந்தியாவுக்குமுதல்முதல் வந்தார். அப்பொழுது அவருக்கு எல்லாம் புதிதாய்த்தோன்றியபடியால் மனதிற்கு மனோகரமாயிருந்தது. இப்பொழுது இரண்டாந்தரம் வரும்பொழுது எல்லாம் நூதனமிழந்து மனோகரமற்றிருக்குமோ வென்று அஞ்சியிருந்தார். ஆனால் அவருடைய அனுபவத்தில் அதற்குமாறாகமுடிந்தது. இந்தியாவில் விஷயங்களை நெருங்கிப்பார்க்க அவருக்கு இந்தியாவிலுள்ள சிரத்தை மிகவும் அதிகரித்தது. இத்தேசத்தார் விஷயத்தில் அவருக்கிருந்த அன்பும் அபிமானமும் அதிகரித்தது. இதற்குமுன் அவர் அறிந்திருந்ததைவிட இந்தியாவின் சம்பந்தமான விஷயங்களின் உள்மர்மம் அவருக்கு இப்பொழுது நன்றாகவிளங்கியது. மிஸ் மானிங் பம்பாயில்வந்திறங்கி, அங்கிருந்து சூரத்துக்குச் சென்றார். அங்கே டாக்டர் ருக்மாபாய்வீட்டில் அதிதியாகத் தங்கியிருந்தார். டாக்டர் ருக்மாபாய் சீமைக்குப்போய் டாக்டர் பரீக்ஷைகொடுத்துத் திரும்பிவந்தபின், சூரத்திலேற்பட்டிருக்கும் ஸ்திரீகளுக்கான டப்ரின் ஆஸ்பத்திரிக்குத் தலைவியாகவிருந்து நன்றாக வேலைசெய்து வருகிறார். அங்கே பெண்கல்வி விஷயத்தில் சிரத்தையுள்ள அனேகர்களைக்கண்டு களித்து பாலிகா பாடசாலைகளையும் பார்வையிட்டுக்கொண்டு ஆமதபாத்துக்குச்சென்றார். சூரத்தில் மிஸ்ஸஸ் மரீஸ்பான் என்னும் இன்னொருஸ்திரீடாக்டரையும் கண்டு சந்தோஷப்பட்டார். ஆமதபாத்தில் டாக்டராகிய மிஸ் காபேடியா என்னும் மாதுவீட்டில் அவருடைய அதிதியாகத் தங்கியிருந்தார். மிஸ் காபேடியா ஆமதபாத்திலுள்ள ஸ்ரீகளுக்கான ஆஸ்பத்திரிக்குத் தலைவியாகவிருந்து வேலைநடத்திவருகிறார். அந்த ஆஸ்பத்திரி மகா மேன்மைதங்கிய கோனூட் பட்டவர்த்தனர் பம்பாய் முக்கியசேனாதிபதியாக விருந்தபொழுது அவரால்ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது அது மிகவும் நல்லஸ்திதியி லிருப்பதாகச்சொன்னார். ஆமதபாத்திலுள்ள மாதர்கள் மனோவிர்த்திக்குக் காரணமான விஷயங்களில் மிக்கசிரத்தை யெடுத்துக்கொண்டு வருகிறார்களென்றும், ஸ்ரீகளுக்கு உயர்கல்விபோதிக்கும் பொருட்டுச் செய்யப்படும் பிரசங்கங்களைக் கேட்க அவர்கள் பெருந்தொகையாகப் போகிறார்களென்றும் சொன்னார். அங்குள்ள முனிசிபல் பாடசாலைகள் இருக்கும் வீடுகள் பள்ளிக்கூடம் வைப்பதற்கு உபயோகமான கட்டடங்களாகவில்லை யென்றும், இதுவிஷயத்தில் மிக்க அதிர்ப்திக்குக் காரணமாயிருக்கின்றனவென்றும் சொன்னார். ஆமதபாத்திலிருந்து அலஹாபாத்து (பிரயாகை க்குச்சென்றார். அங்கு மிஸ் கார்னிலியா ஸொராப்ஜி வீட்டில் அவருடைய அதிதியாகத் தங்கியிருந்தார். மிஸ் கார்னிலியா ஸொராப்ஜி, பம்பாய் யூனிவர்ஸிடியில் பி. ஏ. பரீக்ஷைகொடுத்துவிட்டு சீமைக்குப்போய் 'ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி' யில் படித்து அந்த 'யூனிவர்ஸிடி' பரிக்ஷையிலும் தேறி லண்டனில் பாரிஸ்டர் பரீக்ஷைகொடுத்து பம்பாய்க்குத் திரும்பிவந்தார். இவர், இந்தியாவில்



மிக்க ஆஸ்திவந்தர்களாகவிருக்கும் படுதாஸ்திரீகள், புருஷர்களான வக்கீல்களைக்கண்டு பேசமுடியாமலிருப்பதால், அயோக்கியர்களான 'ஏஜண்டுகள்' கையில் அகப்பட்டுக்கொண்டு வீணாக மோசம்போவதன்றி அனேகசமயங்களில் மிக்கதுன்பப்பட்டு துயருறுகிறார்களென்றுணர்ந்து, அவர்களுக்குதவியாக பெண்பால் ஒருத்தி சட்டங்களெல்லாம் நன்றாகப்படித்து கோர்ட்டுமுன் பேசத்தக்க யோக்கியதையுள்ளவளாகவிருந்தால், அவர்களுக்கு எவ்வளவோ சுகிர்தமுண்டாகுமென்று கருதி, தான் வக்கீல்பரீக்ஷைக்குப் படித்து, சீமைக்குப்போய் பாரிஸ்டர் பரீக்ஷைகொடுத்துவந்தார். பம்பாயில் ஹைகோர்ட்டு முன் வக்கீலாக அப்பியாசம் செய்யவேண்டுமென்று சிலவருஷங்களாக அவர் செய்தபிரயத்தனங்கள் பலிக்காமற்போயின. ஸ்ரீஜாதி இதற்குமுன் ஹைகோர்ட்டில் சட்டாப்பியாசம் செய்ததில்லை யாதலால், பெண்பாலுக்கு சன்னதுகொடுக்க ஆதாரமில்லையென்று சொல்லிவிட்டார்கள். கடைசியில் அலஹாபாத் ஹைகோர்ட்டில் வகீலாக அப்பியாசம் செய்ய அனுமதிபெற்று அங்குசென்று சட்டாப்பியாசம் செய்துவருகிறார். அலஹாபாத்தில், ஸ்கூல்கள் அதிகமாயிருந்தன. அவைகளி லனேகத்தைப் பார்வையிட்டுக்கொண்டு, அங்கிருந்து கல்கத்தாவுக்குச்சென்றார். கல்கத்தாவில் அனேகஸ்தாபனங்களை விஜயம்செய்ததன்றி நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷனின்கல்கத்தா கிளைச்சங்கம்; அதன் காரியதரிசிகள் இருவர், ஒருவர்பின்னொருவராக இறந்துபோனபின், உயிரற்று ஒய்ந்து நின்றதை உயிர்ப்பிக்கவேண்டிய பிரயத்தனங்கள்செய்தார். இராஜப்பிரதிநிதியின் பத்னியாராகிய லேடி கர்ஸன் அவர்களை நேரில்கண்டு பேசி, நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன் விஷயத்தில் அவருக்கு அக்கறை பிறக்கும்படிசெய்து கல்கத்தா கிளைச்சங்கத்துக்கு அவர் அத்தியக்ஷகராக விருக்கும்படி சம்மதிக்கவும் செய்தார். அக்கிளைச்சங்கம் இப்பொழுது ஏற்பட்டுவிட்டது.

கல்கத்தா கிளைச்சங்கத்துக்கு லேடிகர்ஸன் அத்தியக்ஷகராயிருப்பதோடு, பங்கால் உதவிக் கவர்னர் ஸர் ஜான் வூட்பர்ன் அவர்கள் ப்ரஸிடெண்டாகவும், லேடி வூட்பர்ன் வைஸ்-ப்ரெஸிடெண்டுகளில் ஒருவராகவுமிருக்கச் சம்மதித்திருக்கிறார்கள். கல்கத்தாவில் ஸ்ரீகளுக்கான காலேஜ் ஒன்றிருக்கிறது. இதற்கு 'பெதூன் காலேஜ்' என்றுபெயர். இக்காலேஜுக்குத் தலைவியாகவிருப்பவர் மிஸ் சந்திரமுகிபோஸ், எம். ஏ. இவர் பிரம்மசமாஜத்தைச் சேர்ந்தமாது. இக்காலேஜிலிருந்து அனேகம் பெண்கள் பி. ஏ., எம். ஏ. பரீக்ஷைகளுக்குப்போய்த் தேறுகிறார்கள். கல்கத்தாவில் அவர் பார்வையிட்ட பாடசாலைகளில் சுத்த வைதீக வழியையனுசரித்தேற்படுத்தி நடத்திவரும் பாலிகா பாடசாலையொன்று. இப்பாடசாலையை மிஸ் மானிங் பார்க்கப்போனபொழுது, கால்ஜோட்டைக் கழட்டிவிட்டு உள்ளே போகவேண்டியிருந்ததாம். இப்பாடசாலை பண்டைமுறையை யனுசரித்து நடத்தப்பட்டு வந்தாலும், அதன் வழியில் அதுவும் ஓர் உபயோகமான ஸ்தாபனமேயென்று மிஸ் மானிங் சொன்னார். கல்கத்தாவில் மிஸ்டர் அண்டு மிஸ்ஸஸ் இ. டி. லாய்ட் அவர்கள் வீட்டில் அதிதியாகத் தங்கியிருந்தார். கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு வர இராப்பகலாக 5 தினங்கள் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. சென்னையில் அவர் மிஸ்ஸஸ் ப்ராண்டர் வீட்டில் அவருடைய அதிதியாகவிருந்தார். இங்கிருந்தபொழுது தினம் காலமே ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ப்ளேக்பரிசோதனைக்குட்படவேண்டியிருந்த கஷ்டத்தைப்பற்றிச்சொன்னார். சென்னையில் எழும்பூரிலுள்ள கவர்ன்மெண்டு நார்மல் பாடசாலையைப் பற்றிப்புகழ்ந்து பேசினார். அவர் பார்த்த மற்றப் பாடசாலைகளும் அவருக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணின. உயர்ந்தபடிப்புச் சொல்லிக்கொடுக்கத் தக்க பெண்பாடசாலை யொன்றுகூட இல்லாததொன்று பெருங்குறையாகச் சொன்னார். (சென்னையிலிருக்கும்பொழுது அவர்பொருட்டுக் கூடிய மாதர்கள் கூட்டங்களைத்தவிர ஆண்டர்ஸன் ஹாலில் ஹிந்து ஜனாசார சீர்திருத்தத்தைப்பற்றி ஒரு பிரபந்தமும், ப்ரஸிடென்ஸி காலேஜ் ஹாலில். திருவல்லிக்கேணி லிடெரரி சொஸைட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்கி, வித்யாப்யாசவிஷயத்தில் குழந்தைகள், பெற்றோர், உபாத்தியாயர் இவர்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய முயற்சிகளையும் அவற்றின் பலனையும்பற்றி ஒரு பிரபந்தமும் எழுதி வாசித்தார்.) சென்னையிலிருந்து மிஸ்மானிங் ஐதிராபாத்துக்கு சென்று அங்கிருந்து பூனாமார்க்கமாய் பம்பாய்க்குத் திரும்பிச்சென்றார். பூனாவில் பெண்கள் படிப்பதற்காகவுள்ள ஹைஸ்கூலையும் மற்ற ஸ்தாபனங்களையும் கண்டு அவைகளை அங்கீகரித்துப்பேசினார். மிஸ்மானிங் இங்கிலாந்துக்குத் திரும்பியதும், கேம்ப்ரிட்ஜிலுள்ள "டிரெய்னிங்காலேஜில்" இந்தியாவில் அவர் சுற்றுப்பிரயாணம் செய்துவந்ததிற்கண்டவிவரங்களையும், பெண்கல்வி இத்தேசத்தில் விர்த்தியாயிருக்கும் அளவையும்பற்றி விவரம்கண்டு பேசப்போவதாகச் சொன்னார். நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன் சங்கத்து மெம்பர்களில் யாராவது இங்கிலாந்

துக்குவந்தால் தன்னை வந்துபார்க்கும்படிக்கும், வேறு விவரங்கள் தெரியவேண்டியிருந்தாலும் தனக்கு எழுதிக்கேட்டால் தெரிவிக்க எப்பொழுதும் தனக்குச் சந்தோஷமாயிருக்குமென்றும் சொல்லி அவர்பிரசங்கத்தை முடித்தார். மறுநாட்சாயங்காலம் பம்பாய் நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன் கிளைச்சங்கத்தின் கமிட்டியார் மிஸ்மானிங் துரைசானிக்கு உபசாரம்செய்தனுப்பும்பொருட்டு ஒரு உல்லாசச்சபை கூட்டி வேடிக்கைக் கச்சேரிவைத்தார்கள். அதற்கு பம்பாய் கவர்னர் பத்னியாராகிய லேடி ஸாண்டர்ஸ்ட் அவர்களும் வந்தருளியிருந்தார்கள். 25வ. சனிக்கிழமைமெயில்ஸ்டீமரில் மிஸ்மானிங் சீமைக்குப்பிரயாணமாகச்சென்றார். அவர் சுகமாய்ப்பிரயாணம் செய்து முடித்து சௌக்கியமாய்த் தம்மில்லம் போய்ச்சேர்ந்து, இன்னும் வெகுகாலம் திடகாத்திரராயிருந்து இந்தியாவின் நன்மையை நாடிய பரோபகாரவேலைகளை நடத்தி உழைத்துவரக் கடவுள் அருள் புரிவாரென்று அவரைக்கண்டு களித்த எல்லாரும் மனப்பூர்வமாய் ஜகதீசனை வேண்டிக்கொள்ளும் எண்ணங்கள் அவரை சுற்றிக்கொண்டு பாதுகாத்துச்செல்லுமென்பதில் ஐயமில்லை.

---

## சோபாமணி.

(—பக்கத் தொடர்ச்சி.)

சிலர் தம்மை வீட்டினுள் விட்டிடுமாறு 'லானிஸ்கா'வின் வாயில்காப்போருடன் வீரங்காட்டி வாதுசெய்தனர். அப்பேரிரைச்சலைக்கேட்ட லானிஸ்கா அஃதென்னை யென்றறியும் வண்ணம்வெளியேவந்திடலும் தடதடவென்று அக்கூடமுழுதும் போர்வீரர் நிறைந்து விட்டனர். அவர்தம்முள் ஒருவன் 'லானிஸ்கா'வை முகநோக்கி, "லானிஸ்கா என்பான் நீயேயோ?" என்று சீறிக்கேட்டனன்.

லானிஸ்கா. — (சிறிதுங் கலங்காத தைரியத்தோடு) "யானேகண்டாய். என்னை எதன்பொருட்டு வினவுகின்றாய்? இவ் வகாலத்தில் எம்மில்லத்தினுட்புக்கு ஏனிந்தப் போராவாரஞ் செய்கின்றீர்?"

போர்வீரன்.— "யாம் வேந்தனது ஆணையை மேற்கொண்டு ஈண்டிவ்விடம் போந்தோம். ஸோபையா மான்ஸ்பீல்ட் என்னும் பெயரிய ஒரு சிறுமி இங்கிருக்கின்றனளல்லளோ?"

லானிஸ்கா.—"ஆம்; இருக்கின்றனள். அவளைச்சுட்டி ஏன்வினவுகின்றனை?"

போர்வீரன்.—"அன்னாள் இக்கணமே எம்முடன் வரற்பாலள். நீ எமக்குச்சிறை."

அவனை யாது கேட்பினும் அவன் "எமக்குவேறொன்றும்தெரியாது; அரசன் அப்பெண்ணினை மீஸ்பனுக்குக் கொண்டுபோகவும், நின்னை ஸ்பாண்டா என்னும் அரசர் சிறைச்சாலையில் வைக்கவும் கட்டளையிட்டுள்ளார். இதுவே யாம் அறிந்தது" என்று ஓரேவிடைபகர்ந்தான்.

லானிஸ்கா.—(மிகச்சினந்து) "என துகுற்றம் இன்னதென்று யான் அறிவதன்முன் எங்ஙனம் சிறையாவது?" என்றுரைத்து, தன் தாய் வருதல் கண்டு சீற்றத்தைமாற்றி; அவள் கூறியதன்மேல் "இதுவும் விதியேயோ?" என்று வாய்திறவாது அப்போர்வீரன் கைவயப் பட்டான். அப்பொழுது அவன்தாய் அவனை நோக்கி, "குழந்தாய்! நீகுற்றமற்றவனென்றும், அரசன் உன்னைத் தண்டனைக்குள் தப்பச்செய்வானென்றும், நம்பியிருக்கின்றேன்' என்று சொல்லிவிட்டு, தன் கண்ணினின்று நீரைச்சிந்தாமல் வேந்தன் மாளிகைக்குச் சென்று. தன்மகனது தண்டனைக்குக் காரணமின்னதென்று அரசனிடம் நேரிற்கேட்டறியும் பொருட்டு வெளியே சென்றிருந்த வேந்தன் மீண்டுவருமளவும் காத்திருந்தனள். கோமகன் குதிரைவிட் டிறங்கினவுடன் லானிஸ்காவின் தாய்க்குமுதலிற் காட்சியளித்தான். அப்பொழுது அவன் அவளைநோக்கி, "நும்புதல்வன் என்பாற் காட்டியபேதைமையினும் நன்றிகொன்ற இழிதகைமையினும் நீர் தலையிட்டுக் கொண்டு சங்கடமுறுதொழிலென்று [illegible] கின்றேன்" என்றுரைத்தலும், அவள் என்



கன் நன்றிகொன்றவனென்றெண்ணுதல் தகாது. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்னும் அரியநீதியை அறிந்தொழுகும் இயல்புடையனே. ஆயினும், இளைஞனதலின் ஒருகாற் குணந்தவறிக்குற்றம்பட. ஏதேனுஞ்செய்திருத்தல் கூடுமென்பது திண்ணம்" என்று கெம்பீரமாகச் சொல்லினள். அதுகேட்ட அரசன் "நன்று. இன்றுமாலை ஸான்ஸூஸியின் சனுள்ள வன்னச்சாலையில் என்னைச் சந்திப்பின் நும்புத்திரனது குற்ற மின்னதென்று அறிவிப்பேன்" என்றறைந்தனன்.

அவ்வாறே அவள், குறித்தபொழுதில் ஸான்ஸூஸியின்வன்னச்சாலையிற்போய் இறைமகன் வரவை யெதிர்பார்த்திருந்தனள். பிறகு சிறிது நேரத்திற்குள் சடிதியில் அரசன் வந்தமையறிந்து அசைவற்று மௌனத்தோடு நின்றாள். அரசன் அவளது முகத்தை உற்றுநோக்கி, "அம்பா! நும்புத்திரன் செய்தகுற்றம் இன்னதென நீர் அறிந்திலீர்போலும்" என்றிங்ஙனஞ் சொல்லிக்கொண்டே இறைமகன் சோபையா மான்ஸ்பீல்ட் என்னுஞ் சிறுமி இயற்றியமட்கலத்தைக் கைபிலெடுத்தான். அதனை லானிஸ்காவின் தாய்பார்த்தவளல்லள்.

பின்னர், பிரிடரிக் வேந்தன் அவளைநோக்கி, "இம்மட்கலத்தை நீர் இதற்குமுன் பார்த்திருக்கலாமே. இதன் அடிப்புறத்து வரைந்திருப்பதையும் பார்த்திருக்கக்கூடுமே' என வினவ, அவள் "ஆம், பார்த்ததுண்டு. அவ்வெழுத்துக்கள் என்மகன் எழுதியவை' என்றனள்.

அரசன். — இவை நும்புதல்வன்கையினால் பொறிக்கப்பட்டவைதாமே?

லானிஸ்காவின்தாய்.—ஆம், அந்த ஸாக்ஸநிப் பெண் அழகுபெற வன்னங்களெழுத அறிவாளேனும் எழுத்துக்கள் எழுதவறியாள். ஆதலின் அவளது வேண்டுகோட்கிணங்கி என் சிறுவனெழுதினன்.

அரசன்.—இதனை உற்றுநோக்குக. இம்மொழிகள் புகழ்வனபோற் றோன்றி இகழ்வைக்குறித்து நிற்கின்றன.

லானிஸ்காவின்தாய். — என் சிறுவன்செய்த பிழை யாதாயினு மாகுக. அவன் எவரையும் பொய்ப்புகழ்ச்சி செய்பவனல்லன். அவன் அத்துணை இழிகுணமுடையனென மகாராஜா திருவுளம்பற்றத்தகாது; ஏனெனில், சின்னாள் முன்னர்த்தான் அவன் தமது திருவுளங்கன்றுமாறு உய்த்துணராது வஞ்சனையின்றி ஏதோ தகாமொழிகூறினனென்று அவனது குற்றத்தையெடுத்துக்காட்டி அதனைப் பொறுத்தருளினீர்கள். அவன் கவிபாடிப்பிழைப்பவனல்லன். துதிநிந்தையான இரண்டொருவரி வரையப் பட்டிருத்தலால் தமது சித்தங்கலங்கி அவனைச் சிறைப்படுத்தினீர்களென்று யான் நினைத்திலேன்.

அரசன். — நீர் தாயாயினமையின் தநயனுக்குப் பரிந்துரைத்தல் தக்கதே. துதிநிந்தையாக இரண்டொருவரி யெழுதியதனிமித்தம் நும்மகனைச் சிறைப்படுத்தினேனல்லன். புகழ்ச்சியும் இகழ்ச்சியும் பார்த்தாலே புலப்படுமே. இவ்வரிகளில் பழிமொழி நிகுந்திருத்தலால் பொறுத்தல் அரிதாயிற்று. சிறிது பொறுமையோடு இங்ஙனே எழுதியிருக்கும் இரண்டுவரிகளைப் படித்துவிட்டுப் பின்னர் நும்புத்திரன் பக்கற் பரிவினாற் கூறத்தகுவனவற்றைக் கூறுவிராயின் கேட்பேன். இதனைப்படிக்குமுன் ஒரு வார்த்தை. யான் இவ்வழகியமட்கலத்தைப் பாரிஸ் நகரத்தில் ஒரு சீமானுக்கு அனுப்பவிருந்தேன். அவனை நீரும் அறிந்திருத்தல்கூடும். இதனைக்கட்டியனுப்பும்படி ஒருவனுக்குக் கட்டளையிட்டேன். அவன் இக்கலத்தைத் துலக்க முறத் துடைத்துக் கொண்டிருக்கையில் அடிப்புறத்து யாதோ பொறிக்கப்பட்டிருந்தமையறிந்து அதனைப் படித்துப்பார்த்துவிட்டு என்பால் விரைந்தோடிவந்து அதனைக்காட்டினான். யான் அந்தப் புகழ்மொழியைப் படித்துப்பெருநகைகொண்டது மன்றி, "இதனை இயற்றிய

கவிஞனுக்குயாதுபரிசளிக்கலாம்" என்று என் பேதைமையால் எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், அம்மனிதன் இக்கலத்தின் வெளிப்புறத்தைத்தேய்க்க அதன்மீதுபூசியிருந்த நீலவர்ணம் திடீலென்று கலைந்துபோகி அதனைக்கண்டு வியந்து என்னோடு சிலவார்த்தைகள் பேசி எனதெண்ணத்தைக் குலைத்துவிட்டான். யான் இந்தக் கலத்தை அவன்கையினின்று வாங்கிப்பார்த்தேன். பார்த்தலும், பார்த்தவிடத்தின் மாத்திரம் நீலவர்ணம் பூசியிருந்தது. அதன்கண் 'பிரிடரிக் வேந்தன் மகிமைக்குறி' என்றெழுதப்பட்டிருந்தது. அதனையடுத்துள்ள பதம் அப்பொழுது வன்னத்தின் மறைந்திருந்தது. அப்பதம் இப்பொழுது, பாரும் அம்மா, நன்று விளங்குகின்றது" என்று 'கொடியன்' என்ற பதத்தை அரசன் அவளுக்கு எடுத்துக்காட்டி "பார்த்தீரோ! 'கொடியனுய பிரிடரிக்வேந்தன் மகிமைக்குறி' என வரையப்பட்டுளது. யான் கொடுங்கோன் மன்னனாயின் ஆகுக. தநயன் குற்றத்திற்குத் தாயைத்தண்டியேன். நும்முடைய ஏனையநண்பரோடு செவ்வாய்க்கிழமை மாலையில் நும்மில்லத்தின்கண் என்னைக்காண்பீர்" என்று பகர்ந்தனன்.

இதுகேட்டு, லானிஸ்கா'வின் தாய் மாறேதுங்கூறாது அரசன்பானின்று அப்பால் அகன்றனள். தன் மகனது கையொப்பத்தோடு அம்மொழிகள் அவனாலே யெழுதப்பட்டிருக்குமாயின் அவன் அரசதண்டத்திற்குத் தப்பவகையில்லையென்று அவள் எண்ணினாள். இவ்விஷயத்தில் அவளுக்குத் தீரா ஐயம் ஜெனித்தது. ஆகவே, அதனைக்குறித்து நினைக்கலாற்றாது முதலில் அவள் சிந்தைகலங்கித்திகைத்தனள். தன்புதல்வன் அத்தகைய தீயொழுக்கத்தினுட்படான் என்ற துணிவு அவளுக்குண்டு. உண்டெனினும், முன்னம் அவன்பேதைமையால் பேசிய மொழிகளும் செயல்களும் இடையிடையே அவளது எண்ணத்தில் வந்துதோன்றி அவளைக்கவற்றின. கலத்தின் மீதெழுத்துக்கள் [illegible]போர்க்கு லானிஸ்காவின் கையெழுத்துப்போலவே தோன்றின. அன்றியும், சீனமட்கலத்தொழிற்சாலையின் கண் நிகழ்ந்த சம்பாஷணையும், அக்கலத்திற் பொறிக்கப்பட்டவை அவனுடைய மொழிகளென்பதை அறுதியிட்டது. லானிஸ்காவின் தாய் தனதில்லிற்கு மீண்டுசென்றகாலையில், அரசனைக் கண்டு பேசி லானிஸ்காவினது செய்தியின் முடிவையறியும்வண்ணம் ஆதரத்தோடு காத்திருந்த ஆல்பர்ட் என்பான்பால் மேற்போந்த விஷயங்களனைத்தையும் அமைதியோடு எடுத்து விடுத்துரைத்தாள். அதுகேட்ட ஆல்பர்ட் அகந்திகைத்தனன். தன் நண்பன் குற்றமற்றவனென்று ரூபிக்கத்தனக்கு உபாயம்யாதும் புலப்படாவிடினும், குற்றஞ்செய்திருப்பானென்னுமளவில் லானிஸ்கா நம்பினனில்லன். அதனால், அவன் வீண்யோசனையிலும் ஆழ்துயரத்திலும் காலம்போக்காமல் மட்கலத்தைக் கட்டியனுப்பும் மனிதன்பால் அக்கணமே ஓடினான். ஓடி, அவனை மிகுதந்திரமாகப் பல கேள்விகள்கேட்டு உண்மையுணர்ந்து; ஸோபையா மான்ஸ்பீல்டுக்காக 'லானிஸ்கா' இரண்டுவரி யெழுதியபொழுது அவனுடன் வேறெவரேனும் இருந்தனர்கொலோவென்று அறியுமாறு பேர்லின் நகரத்துச் சீனமட்கலத் தொழிற்சாலைக்குச் சென்றனன். இங்ஙனம் பல்லிடங்களிலும் உழன்று சங்கதிகளை உள்ளவாறே யுணர்ந்து லானிஸ்கா குற்றவாளியல்லனென்பதைத் தன்னுள் துணிவுகொண்டனன்.

அரசவள்ளல் லானிஸ்காவின் தாய் வீட்டிற்கு வருவதாகக் குறித்தல் செவ்வாய்க்கிழமையன்றோ. ஏந்தல் அவ்வயினெய்துதற்கு முன் அப்பெருமாட்டியும் ஏனையோரும் கூடியிருந்து லானிஸ்காவின் ஊழினை நினைந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது, "குற்றவாளிக்கு அவன் செய்த குற்றத்தை யெடுத்துககாட்டாது தண்டியாத அரசாட்சியில் வாழும் உயிர்களின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். விசாரணையின்றி ஒருவன்மேற் குற்றம் சுமர்த்தாததும், குற்றஞ் செய்



தவனுக்கு அவனது குற்றத்தை யெடுத்துக் காட்டியன்றித் தண்டனைவிதியாததும், குற்றவிசாரணை செய்யுமளவில் யாவருமறியப் பகிரங்கமாக விசாரிப்பதும், அங்ஙனம் விசாரிக்குமிடத்தும் குற்றவாளியின் தேயத்தார் முன்னும் பிரபுக்கள் முன்னும் அவனோடொத்த நிலையினர் முன்னும் நீதிவிசாரணை நிகழ்த்தப்படல் வேண்டுமென்னும் ஒழுங்கினையுடையதுமான அரசு முறையில் வாழும் மன்பதையின் சுகமே சுகம்" என்றிவ்விதமாக ஆங்கில யாத்திரிகன் தமது நியாயவிசாரணை முறையினையே மேலாக வெடுத்துச் சிறப்பித்துப் பேசும் அமையத்து, எப்பொழுதும் வருகிற வழக்கம்போல் ஏந்தல் அவ்விடத்தெய்தினன். ஆண்டுக் குழுமியிருந்தோரனைவரும் ஆங்கிலன் வாயை ஆணியிட்டு ஆர்வமுடன் பார்த்துக்கொண்டிருந்தனரேயன்றி அரையன் ஆங்கடைந்து தம்முள் அவனும் ஒரு கேட்போனாகி யிருந்தமையை அறிந்தாரிலர். ஆங்கிலன் தனதுரையினை முடிக்குந்தருணத்து லானிஸ்காவின் தாய் "என் புதல்வனும் அத்தகைச் சீரிய விசாரணைக்குட்படும் பாக்கியத்தை யடையுமாறு ஆண்டவனருள்புரிக" என மிக்கதோராதரத்தோடுணர்த்தலும் "அங்ஙனமே அகிலரக்ஷகன் அருள்புரியின் யானும் என் ஆருயிர் நண்பனுக்குப் பரிந்து நியாயவாதஞ்செய்யும் பேறடைவேன்" என ஆல்பர்ட் கழறினன். இவ்வாறிவர்கள் உரையாடா நிற்புழி "அதன்கண் ஒருசங்கதி" என அரசன் அறைந்தனன். அதனைக் கேட்டலும் அனைவரும் திடுக்கிட்டனர்.

(இன்னும் வரும்.)

கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்.

## சுகாதாரவிஷயமாய் டாக்டர் கிங் செய்த ஓர் பிரசங்கம்.

சென்னை ஸானிடரிகமிஷனராகியஸர்ஜியன் லெப்டினெண்ட்-கர்னல் டப்ளியூ.ஜி.கிங்அவர்கள் '[illegible]தவ பாலிகசங்கத்தினர்' முன்பு பிப்ரவரிமீ 17உ மாலை 'பூர்வீக இந்திய மகம்மதியர்களின் சில சுகாதாரவிதிகள்' என்னும் விஷயத்தைப்பற்றி இனிய பிரசங்கம் ஒன்று செய்தனர். அச்சமயத்தில் சென்னை டைம்ஸ் பத்திராசிரியரான மிஸ்டர். ஜி. பார்லோ அவர்கள் சபாநாயகராகவீற்றிருந்தனர்.

பூர்வீககாலத்தில் சுகாதார விதிகளும் மதாசாரங்களும் மிகச் சம்பந்தமுடையவாயிருந்தன; உண்மையில்இவையிரண்டும்ஒன்றாகவேயிருந்தனவென்றுசொல்லிடாக்டர்கிங்பிரசங்கத்தைஆரம்பித்தனர். உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றையனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவதில்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாயிருந்தது. சுகாதாரம்தெய்வாராதனைக்கு இன்றியமையாததாயிருந்தபடியால் சுகாதாரத்தை அதற்குவேண்டியமதாசாரமாகவேற்படுத்தினர்கள். சுகாதாரவிதிகட்குமாறாக ஒழுகியவர்களைநியாயஸ்தலத்திற்குக்கொண்டுவரும்படியான இக்காலத்துள்ள 'முனிசிபல்கவுன்ஸில்களும்' 'லோகல்போர்டுகளும்' அக்காலத்தில்லையாகலின் அப்பூர்வீககாலத்து ஜனங்களுடையமனதில் சுகாதாரவிதிகட்குமாறாக ஒழுகியவர்கட்கு நரகதண்டனையுண்டென்னும் பயத்தைப் புகட்டவேண்டியதாயிருந்தது. இதுவும் தகுந்தவொருதடையாகவேயிருந்தது. பூர்வீக இந்துக்களுள் வழங்கியஜனங்கள்சுகாதாரவழியையனுசரிக்கச்செய்யும்முறையானது, தற்காலச்சுகாதாரவிஷயங்களில் இலக்ஷக்கணக்கில் செலவிடும் பெரிய முனிசிபாலிடிகளுக்காவது, ஒவ்வொரு இடங்களில் நெருங்கிக் கூடிவசிக்கும் பெரிய ஜனசங்கைகட்காவது ஏற்றதாகவில்லை. ஆனால் நாட்டின் நாலாபக்கத்திலும் சிதைந்து கிருஷித்தொழில் செய்து சாதாரண ஜீவனஞ்செய்துவரும் ஜனசமூகத்துக்கு ஏற்றதாகவிருந்தது. இதன் பிறகு டாக்டர் கிங், தன்வந்தரி, அஷ்டாங்கிர்தயம் மனு முதலிய பூர்வீக இந்துசாஸ்திரங்களிலிருந்து இந்துகுடும்பத்தவர்கட்கு—அதிலும்பு

கியமாய் பிராமணர்கட்கு—கண்டிப்பான தேகாரோக்கியவிதிகள் ஏற்பட்டிருக்கின்றனவென்று மேற்கோள்களெடுத்துக்காட்டினர். உதாரணமாக ஒரு இந்துவானவன் குப்பைமுதலிய கழிவு வஸ்துக்களைத் தன் வீட்டுக்கு நெடுந்தூரத்துக்கப்பால் அகற்றிவிட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அசுத்தவஸ்துக்களை நீர்நிலைகளில் ஒருவனும் எறியக்கூடாதென்பதனால் குடிக்கின்ற சலத்தை சுத்தமாகவும் வேறுவஸ்துக்கள் புகாமலும் வைத்திருக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்திக்கூறப்பட்டிருக்கின்றது. மேலும் இந்துக்கள் சுத்தசலத்தில் ஸ்நானம் செய்யவேண்டுமென்றும், சாப்பிடுவதற்குமுன்பு சுத்தவஸ்திரம் தரித்துக்கொள்ளவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. சாப்பாடு உஷ்ணமாக இருக்கும்பொழுது சாப்பிடவேண்டுமென்றும் காற்றிற்றிறந்து வைக்கப்பட்ட பழைய அன்னத்தை அவர்கள் உட்கொள்ளக்கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நவீன சாஸ்திரிகள் அவ்விதமாகக் காற்றிற்றிறந்து வைக்கப்பட்ட பழைய அன்னத்தில் வாந்திபேதி முதலிய வியாதிகளை உண்டாக்கக்கூடிய (Bacteria) என்னும் அணுப்பிரமாணமான கிருமிகள் பலவும் இருக்கக்கூடும் என்று கற்பிக்குமுண்மையே அவர்கட்கும் ஆதாரமாக விருந்ததென்று காணப்படுகின்றது. ஒட்டுவியாதிகளுள்ள காலத்தில் அநுசரிக்கவேண்டிய விதிகளும் பிரத்தியேகமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு இந்துவானவன் ஒட்டுவியாதி பரவிக்கொண்டிருக்கும் ஒரு கிராமத்தைவிட்டு நீங்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அவன் ஒட்டுவியாதி போன்றவைகள் நிகழ்ந்த வீட்டைக்காலிசெய்துவிட்டு அதைவிடச் சௌக்கியமான இடங்களுக்காவது காடுகளுக்காவது போய்விடவேண்டுமென்று கூறப்பட்டுமுள்ளது. ஓடுகின்ற ஜலமானது அழுக்கை யடித்துக்கொண்டு போகிறதாகலின் மற்றவைகளைப் பரிசுத்தப்படுத்துகிறதென்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இப்போதுள்ள இந்துக்கள் இவ்விதியினுண்மைப்பொருளை யுணராது ஓடும் ஜலமெல்லாம் பரிசுத்தமானதென்று உபயோகித்து, அவர்கள் அப்படிச் செய்வதற்கு இந்த விதியை யாதாரமாகக் கூறுகின்றனர். அப்போது இந்துவொருவன் ஓராற்றிற்குப் போய்ச்சிறிது தூரத்துக்குமேல் வண்ணார்கள் எல்லாவித அழுக்குவஸ்திரங்களையும் தோய்க்கின்றனர் என்பதை முற்றும் மறந்துவிட்டு தண்ணீர் குடிப்பான். ஓடும்ஜலம் பரிசுத்தமாகலின் தன் செய்கை நியாயமென்றுகூறுவன். ஓடுகின்றஜலமானது சுத்தமாவதற்கு அழுக்கு தன்னிடத்திற் கலந்தவிடத்திலிருந்து குறைந்தது 30, 40 மைல்தூரம் ஓடவேண்டும். அதன் பின்னரே அந்தஜலம் சுத்தமானதென்று சொல்லக்கூடும். அம்மை வியாதியைத்தடைசெய்யும் பொருட்டு அம்மைகுத்துதலின் உபயோகமும் பூர்வீக இந்துக்களுக்கு நன்றாகத்தெரிந்திருந்தது. அவர்கள் மழைநீரைச்சுத்தமான ஜலமென்று கருதினர். ஆகையினால் தண்ணீர் பிடித்துவைக்கவேண்டுமானால் அவ்விடத்தை மிகச்சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்றுசொல்லப்பட்டிருக்கின்றது. தற்கால ஹிந்துக்கள் ஊரைச்சுற்றியுள்ள வெளிகளிலும் ஆற்றங்கரை குளத்தங்கரைகளிலும் ஜலமலஉபாதிக்கிருந்து ஆபாசம்செய்கின்றனர். அதனால் மழைபொழியும் பொழுது இந்த அசுத்தங்களெல்லாம் கரைந்து நீர்நிலைகளில்போய்ச்சேர்ந்துகுடிக்கும் ஜலத்தை விஷமாக்கிவிடுகின்றன. இச்சுகாதாரவிதியை அநுசரிக்காததினாலேயே ஆயிரக்கணக்கான ஜனங்களைக்கொண்டுபோகும் சுரம் வாந்திபேதி முதலிய வியாதிகளுற்பவிக்கின்றன. பிறகு டாக்டர் கிங் இதுபோன்ற பல சுகாதாரவிதிகள் பூர்வீக இந்துசாஸ்திரங்களில் உள்ளனவென்று எடுத்துக்காட்டினர். அவர் பல அராபிப்புத்தகங்களிலிருந்து 'அலிகர்' என்னுமிடத்திலுள்ள மகம்மதிய கலாசாலையின் பண்டிதரொருவரால் செய்யப்பட்ட பல மொழிபெயர்ப்புகள் தமது கையில் வைத்திருந்தனர். நேரமில்லாக் காரணத்தால் அவைகளை அவர் அங்கு வாசிக்கவில்லை. ஆனால் அவைகள் இப்போது 'ப்ளேக்' கொள்ளைநோயைத்தடுக்க என்று கவர்ன்



மெண்டார் செய்யும் ஏற்பாடுகளெல்லாம் தகுந்தவையென்று இப்போதுள்ள மகம்மதியர்களறிந்துகொள்ளுதற்குத்தகுந்த உதவியாகவிருக்குமென்று நினைத்தார். இக்காலத்தில் இந்துக்களும் மகம்மதியர்களும் சுகாதாரவிதிகளை அநுசரிக்காவிட்டால் அது அவ்விதவிதிகளை அநுசரிக்கவேண்டிய நியமம் அவர்கள் பூர்வீக சாஸ்திரங்களிலில்லாததினாலல்ல. ஆனால் அவைகளிலிருக்கும்பலவிதிகளைக் கடந்தேயாம் என்பதை டாக்டர் கிங் தம் பிரசங்கத்தில் உறுதியாய் நாட்டினார். கடைசியில் மிஸ்டர் ஜி. பார்லோ இந்துக்களோடும் யூதர்களோடும் தமக்குள்ள சுயாநுபவத்தின் ஆதாரங்கொண்டு சில இனிய விஷயங்களெடுத்துக்கூறினர். இக்காலத்திய இந்துக்களும் யூதர்களும் தங்கள் பூர்வீக சாஸ்திரங்களில் தங்கட்கேற்பட்ட தேகாரோக்கியவிதிகளைக்கடந்தொழுகுதலுக்குக் காரணமென்னவென்றால் அவர்கள் அவ்விதிகளினுட்பொருளைக் கவனியாது அவற்றின்சொல்லையே மேற்கொண்டு நடத்தலேயாகுமென்று சொன்னார்.

டாக்டர் கிங் அவர்கட்கு வந்தனம்தந்து சபைகலைந்தது.

## பிரபஞ்சமாயாவிலாசம்.

### VI

### விவாகதந்திரம்: விசாலாக்ஷியம்மாள் சூழ்வினை.

சுந்தரமய்யருக்குப் புதுக்கோட்டையில் பந்துக்கள் சில குடும்பத்தாருண்டு. அவர்களிற் சிலர் சமீப பந்துக்கள். சிலர் தூரபந்துக்கள். பின்னையவருள்ளிற்சேர்ந்தவர் வீரவல்லி சுப்பய்யர் என்பவர். அவரது பத்னியாகிய விசாலாக்ஷியம்மாள் சுந்தரமய்யருக்கு ஒன்றுவிட்ட சகோதரியாகவேண்டும். தூரபாந்தவ்வியமானாலும் அடிக்கடி வெகு அந்நியோந்நியமாய் நெருங்கிப் பழகுவதனால் அயலாரெல்லாரும் விசாலாக்ஷியம்மாளை சுந்தரமய்யரது சொந்தச் சகோதரியென்றே நினைத்துக்கொண்டிருந்தார்கள். சுந்தரமய்யரும் சுப்பய்யரும் பிரதிதினமும் ஒருவரையொருவர் சந்தித்து யோகக்ஷேமங்களை விசாரிக்கிறதும் சுகதுக்கங்களைச் சொல்லிக்கொள்ளுகிறதும் வழக்கமாயிருந்தது. அதே மாதிரியாக அவர்களது சம்சாரங்களும் ஒருவரையொருவர் சந்தித்துக் குலாவாமல் ஒருநாளாவதிரார்கள்.

சுந்தரமய்யருக்கு ஒரு செல்வப்புதல்வன் வாய்த்ததுபோல் சுப்பய்யருக்கு ஒருசெல்வப் புதல்வி வாய்த்தாள். அழகிலும் குணத்திலும் தீக்ஷிதரது புத்திரிக்குக் குறைந்தவளில்லை. பிறந்தநாள்தொட்டு இந்தப்பெண்ணைச் சுந்தரமய்யரது புத்திரனுக்குக் கொடுப்பதாகப் பிரஸ்தாபம் நடந்துகொண்டிருந்தது. அந்தப் பெண்ணை வாங்கிக்கொள்வதில் சுந்தரமய்யருக்கும் அவரது இல்லாளுக்கும் சர்வசம்மதம். இவ்வாறிருக்கையில் மீனாக்ஷியம்மாளுக்கும் விசாலாக்ஷியம்மாளுக்கும் சுவல்ப மனஸ்தாபம் நேரிட்டது. பெண்டுகளுக்குச்சாந்தமும் பொறுமையும் ஏற்படுதல் அரிதாகையால், அந்த மனஸ்தாபம் காட்டுத்தீயைப்போல் வரவர விருத்தியாகிவிட்டது. சண்டையும் நாளடைவில் பலத்தது. அவர்களுக்குள் முகாலோபனமுமில்லாமற்போயிற்று. விசாலாக்ஷியம்மாளது பெண்ணைத் தனதுபிள்ளைக்கு வாங்கிக்கொள்ளுகிறதில்லையென்று மீனாக்ஷியம்மாள் தனக்குள் தீர்மானம்செய்துகொண்டாள். புருஷர்களுக்குள் யாதொரு மனஸ்தாபமுமில்லாதிருப்பினும், தங்கள் தங்கள் மனைவிமாருக்குப்பயந்து அவர்களும் முன்போல நெருங்கிப்பழகுகிறதில்லை. ஆயினும் தன்பெண்ணைச் சுந்தரமய்யரது பையனுக்கு எப்படியாவது கொடுத்துவிடலாமென்ற நம்பிக்கை விசாலாக்ஷியம்மாளுக்குண்டு. இவளுக்கு இந்த நம்பிக்கை வந்ததற்குக் காரணம் சுந்தரமய்யரே. இதனை மர்மமாய்த் தனது

மனதில் வைத்துக்கொள்ளாமல், தனது தமயனுக்குப் பெண்வாங்கிக்கொள்ள இஷ்டமிருக்கும், அவளால் (மீனாக்ஷியம்மாளால்) யாதொரு விகாதமும் செய்யமுடியாதென்று பெண்டுகளிடத்தில் விசாலாக்ஷியம்மாள் சொல்லி, 'நுணலுந் தன் வாயாற்கெடும்' என்பதுபோல் தன் வாயினாலே கெட்டாள். பெண்டுகள்வாயும் சும்மா இருக்கவில்லை. இவள் சொன்னதையெல்லாம் மூட்டைகட்டிக்கொண்டுபோய் அவளிடத்தில் சொன்னார்கள். இதையெல்லாம் கேட்கக்கேட்க மீனாக்ஷியம்மாளுக்குக் கோபமிகுந்து, அவள் பெண்ணை வாங்கிக்கொள்கிறதேயில்லையென்று பிரதிக்ஞைசெய்துகொண்டு அகமுடையானுடன் சண்டையிட்டுத் தன் இஷ்டத்திற்கு விரோதமாகப் பையனுக்கு விவாகம் செய்கிறதேயில்லையென்று அவரிடம் வாக்குத்தத்தம் வாங்கிக்கொண்டு தான் பிடித்ததைச் சாதிக்கத்தீர்மானித்தாள். இந்த விபரீதத்தைத் தெரிந்துகொண்ட விசாலாக்ஷியம்மாள் துக்கசாகரத்தில் மூழ்கினவளானாள்.

இந்த இரண்டு குடும்பத்தாருக்கும் இவ்வளவு விரஸம் ஏற்பட்டிருக்கும் சமயத்தில் தான் தீக்ஷிதர் வரனைத்தேடிப் புதுக்கோட்டைக்குச் சென்றது. சுந்தரமய்யர் தனது சம்பந்தியாகப் போகிற தீக்ஷிதருக்கு விருந்துசெய்ததும் கல்யாணத்தைப்பற்றி இவ்விருவரும் பேசியதும் விசாலாக்ஷியம்மாளுக்குத் தெரிந்தவுடன் அவளுக்குள்ள மனோவியாகுலம் அதிகரித்தது. சரீரம் மெலிந்தது. இரவில் துயிலென்று கண் மூடுவதேயில்லை, சதா கண்ணீர் சொரிந்த வண்ணமாயிருப்பாள். தனக்குள் தீர்க்காலோசனைசெய்து தன் பெண்ணை அந்தவிடத்தில் வாழ்க்கைப்படுத்தாதபோதிலும் மீனாக்ஷியம்மாளுக்குப் பெண்ணைக்கொடுக்கிறதாக வருகிறவர்கள் எல்லாரையும் கலைத்துவிடவேண்டுமென்று தனக்குள் சங்கல்பம் செய்துகொண்டாள். அவ்வாறு செய்வதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடவேண்டுமென்று கருதித் தனது பர்த்தாவினோடு சண்டைபோட்டு அவரைக் குளவிகொட்டுவதுபோல் கொட்டிச் சரிப்படுத்தித் தன் வழிக்குக் கொண்டுவந்து தீக்ஷிதரை போஜனத்திற்கு அழைக்கும்படி சொன்னாள். சுப்பய்யருக்கும் தீக்ஷிதருக்கும் சுவல்ப பழக்க முண்டாகையால், சுப்பய்யரும் அவ்வாறு செய்யவுடன்பட்டார்.

தீக்ஷிதர் சூரியோதயத்திற்கெல்லாம் எழுந்து தடாகத்தை நோக்கிப் புறப்பட்டார். அவரை போஜனத்திற் கழைக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் அந்த சமயத்தில் தனது வீட்டுவாசற்படியில் நின்றுகொண்டிருந்த சுப்பய்யர், அவரைக்கண்டவுடன் மந்தஹாஸத்தோடு க்ஷேமம் விசாரித்துக்கொண்டே அவரோடு தானும் புஷ்கரணிக்குப்போனார். முதலில் 'லோகாபிராமமாய்'ச் சம்பாஷித்தார்கள். பிறகு கல்யாண சமாசாரம்வந்தது. தான் வந்தகாரிய மின்னதென்பதையும் அதைப்பற்றி நடந்த சம்பாஷணையின் சாராம்சமின்னதென்பதையும் அன்று காலையில் சொல்லப்போகிறார்கள் என்பதையும் சுப்பய்யருக்குச் சொல்லினர் தீக்ஷிதர்; அவர் சொல்வதையெல்லாம் சுப்பய்யர் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார். தனதில்லாள் ஓதிய தலையணைமந்திரத்தைக்கேட்டுக்கேட்டு அவளது கெட்ட எண்ணம்முழுவதும் தன்மனத்தில் வேரூன்றப் பெற்றாரேனும், சுப்பய்யருக்குத் தன் வாயினால் யாதொருவிதமான மித்திரபேதத்தையும் செய்விக்கக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. ஆகையால் தீக்ஷிதர்சொல்லிய சமாசாரங்களுக்கு யாதொரு ஆக்ஷேபனை சமாதானங்களையும் உரையாது சும்மாவிருந்துவிட்டு சுப்பய்யர் கடைசியாகப் பெரியபீடிகையுடன் வெகுசாதுரியமாய் அவரை போஜனத்திற்கழைத்தார் அவரும் சம்மதித்துவந்தார். போஜனமானபிறகு கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் விசாலாக்ஷியம்மாள் சனிவிடுத்த தூதுபோல் அவர்களுக்கெதிரில்வந்து நின்றாள். சற்றுநேரத்திற்குப் பிறகு தீக்ஷிதரைப்பார்த்து விசாலாக்ஷியம்மாள்,

"கல்யாண விஷயத்தில் அதிக மூர்த்தனியமாய் இருக்கிறதாகத் தெரிகிறது. என்ன பேச்சு நடந்தது? என்னமுடிவாயிற்று? சீர்வரிசைகள் என்னென்ன ?' என்றுகேட்டாள்.



தீ.—பெண்ணைக் கொள்கிறது நிச்சயமாகியன்றோ சீர்வரிசைகளைப் பற்றிப் பேசவேண்டும்.

வி.—நிச்சயமாகாமலா நேற்றிராத்திரி நிசிவரைக்கும் பேசிக்கொண்டிருந்தீர்கள்.

தீ.—பேசித்தானே நிச்சயமாகிறதும் ஆகாததும் தெரியவேண்டும்.

வி.—நிச்சயமாகிவிட்டதா ?

தீ.—இன்னுமில்லை.

தனதுபத்தினியின் மனோபாவத்தைத் தெளிவாய்த் தெரிந்துகொண்ட சுப்பய்யர், அவள் தீக்ஷிதருக்கு ஏதோ விபரீதத்தைச் சொல்லி அவர் மனதைக் கலைக்கப்போகிறாள் என்றும், அந்த சமயத்தில் தான் அங்கிராமல் வெளியேறிப் போய்விடுவதே உசிதமென்றும் நினைத்து, அவரிடத்தில் ஏதோ சாக்குப்போக்குகளைச் சொல்லிவிட்டு வெளியிற் புறப்பட்டுவிட்டார்.

வி.— அப்படியானால் இன்னொரு சிவராத்திரியிருக்கிறதா ?

தீ.— சிவராத்திரியுமில்லை. விஷ்ணுராத்திரியுமில்லை. இனிமேல் தூங்குகிற ராத்திரிதான்.

வி.— முடிவென்ன சொன்னார்கள் ?

தீ.— இன்னும் ஒருமுடிவும் தெரியவில்லை. இன்று காலையில் சொல்வதாகச் சொன்னார்கள். விடிந்தது முதற்கொண்டு நான் அங்குத் தங்காததனால் அவர்களது முடிவான அபிப்பிராயம் தெரிந்து கொள்ளக் கூடவில்லை. காயோ பழமோ தெரியவேண்டும்

வி.—உங்களுக்கு காய்வேண்டுமா ? பழம் வேண்டுமா ?

தீ.—அதென்ன அப்படிக் கேட்கிறாய் ?

வி.—காரியமாகத் தான் கேட்கிறேன்.

தீ.—ஊரைவிட்டு புறப்பட்டு வழியில் பாடுபட்டு வந்து காயா வேண்டுமென்பேன்?

வி.—சில சமயங்களில் காய் அநுகூலப்படுகிறதுபோல் பழம் அநுகூலப்படுகிறதில்லை.

தீ.—அது உண்மைதான். ஆரில்லையென்கிறார்கள். இந்த சமயத்தில் அதையேன்சொல்லுகிறாய் ?

வி.—இந்த விஷயத்தில் காயானால்தான் பெண்ணினது அதிர்ஷ்டம் நல்லதென்றுசொல்வேன்.

தீ.—ஏன் அம்மா அப்படிச்சொல்கிறாய் ?

வி.—உங்கள் நல்லகாலமல்லவா அவ்வாறென்னைச் சொல்லச் செய்கிறது. யார் எப்படிப் போனாலும் நமக்கென்ன வென்று சும்மா இருந்தவள் தானே நான். நல்லகாலமானது உங்களை என்னிடத்திற் கொண்டுவந்து தள்ளிற்று.

தீ.—சங்கதியை இன்னதென்று சொல். கேட்போம்

வி.—நான் சொல்லித்தானா உங்களுக்குத் தெரியவேண்டும். ஊருக்கெல்லாந் தெரியுமே ! டமாரம்போட்டிருக்கிறதே.

தீ.—தெரிந்தால் உன்னைக் கேட்பேனா? ஊரில் நடக்கிற சமாசாரம் நமது காதிற்கெட்டினால் தானே நமக்குத்தெரியும்.

வி.—என்னமோ! அஞ்ஞானம் கிடந்து பாதிக்கிறது என்னை. பாலிய ஸ்நேகமாயிற்றே; குழந்தையாயிருந்தபோது விளையாடினவளாயிற்றே என்று மனசு சங்கடப் படுகிறது.

தீ.—யாரைப் பற்றிச் சொல்லுகிறாய்?

வி.—அகமுடையாளைப் பற்றித்தான் பேசுகிறேன்.

தீ.—கூட விளையாடினவர்களா?

வி.—அது தெரியாதா உங்களுக்கு?

தீ.—நீ சொல்லத்தான் தெரிந்தது.

வி.—இல்லாமற் போனால் இவ்வளவு சங்கடமேன் உண்டாகிறது? அவளிருந்த இருப்புக்கு இவ்வளவாவது மேன்மையாயிருக்கிறாளே என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தேன்.

தீ.—சந்தோஷமிருக்கட்டும். சங்கடத்தை இன்னதென்றுசொல்லு.

வி.—அவளுக்குக் குழந்தையும் பிறக்கப்போகிறதாவென்றிருந்தது. ஸ்வர்ணவிக்கிரகமாயிற்றே பெண். கிளியைக்கொண்டுபோய்ப் பூனைவாயிலே கொடுப்பார்களா? அந்தப்பெண் தலையெழுத்து எப்படியோ! கெட்ட எழுத்து எழுதியிருந்தால் நான்தான் என்னசெய்யமுடியும். நீங்கள்தான் என்னசெய்ய முடியும்.

தீ.—சங்கதியைச் சொல்லாமல் என்னென்னவோ பிதற்றுகிறாயே.

வி.—இன்னும் தெரியவில்லையா உங்களுக்கு? சொல்லலாமென்றால் நா(க்கு) எழும்பவில்லை. மனசுபதறுகிறது. வாயினால் கூடச்சொல்லக் கூடாத காரியத்தைப்பாபத்திற்கஞ்சாமல் தைரியமாய்ச்செய்ய ஆரம்பிக்கிறார்களே! அவர்களுடைய மனசை நான் என்னவென்று சொல்வேன்! மகா பாபிகளாயிருந்தாலொழிய ஒரு பாபத்தையும் அறியாத பெண்ணைக்கொல்லத் துணிவார்களா? செத்தேதீரவேண்டும்.

தீ.—கலியாணத்தில் ஆரம்பித்துச் சாவில் கொண்டுவந்து முடித்தாயே!

வி.—மனுஷியஜன்மமெடுத்தவர்களுக்கெல்லாம் சாவுதானே முடிவு.

தீ.—அதுசரி. அது என்னத்திற்கு இங்கே. காரியத்தைச்சொல்லு.

வி.—இன்னும் "சொல்லு, சொல்லு" என்று நெருக்குகிறீர்களே. என்வாயினாலேயா சொல்ல வேண்டும் வேறெங்கேயாவது கேட்டுத்தெரிந்து கொள்ளுங்கள்.

தீ.—எங்கள் குலதெய்வமாய்த்தோன்றியிருக்கிறாயே. நீசொல்லாமல் யார் சொல்வார்கள்? மனசில் அந்தரங்க விசுவாசமில்லாவிட்டால் நீதான் இவ்வளவு சங்கதியைச் சொல்வாயா? மனதிலிருக்கிறதை வெளிவிட்டுச்சொல் பார்ப்போம்.

வி.—நான் உங்களுக்குச் சொல்லவும் நீங்கள் போய் நான் சொன்னதாகச் சொல்லவும் அதனாலே எனக்குக் கெட்டபெயரும் வீண் அவதூறும் வரவும்—இந்தச்சங்கடங்களெல்லாம் என்னத்திற்கெனக்கு? வீதியில்போகிற சனியனை வீட்டுக்குள் அழைத்தாற்போலேயாகும். என் அகமுடையான் ஒருவர் போதும் என்னைக் குத்திப்பிடுங்க.

தீ.—நான் என்ன மூடனா? உன்பெயர் வெளியில் வருமா? எனக்கு நீ அநுகூலமாயிருக்கும்பொழுது உன்னை இழுத்துச்சந்தியில் விடுவேனா? விட்டால் என்யோக்கியதை நன்றாய்விளங்குமே!

வி.—அப்படியானால் சொல்லுகிறேன். நான் சொன்னதாக இரண்டாம்பேருக்குத்தெரியக்கூடாது. அப்படி நீங்கள் உறுதி—

தீ.—உறுதியாய்ச் சொல்கிறேன். உன்பெயர் வெளியில் வரவே வராது.

வி.—நேற்றிராத்திரி கலியாணப்பேச்சு நடக்கும்பொழுது இராமாஜோஸ்யர் இருந்தாரா?



தீ.—அவரில்லாமலா? அவர்தானே எனக்கு வெகு அநுகூலமாயிருந்தவர்.

வி.—அநுகூலமாயிருந்தால்தானே உங்கள் குடியைக் கெடுக்கலாம். 'குடிகேடி'யாயிற்றே அவன். துரியோதனாதிகளுக்குச் சகுனி அநுகூலமாயிருந்தானன்றோ அதேமாதிரிதான்.

தீ.—அவ்வளவு கெட்டவரா அவர்?

வி.—"உங்களைப்பிடித்த நல்லகாலத்தினால் என்னிடம்வந்தீர்கள். இல்லாவிட்டால் அவன் குடியைக்கெடுத்தேவிடுவான். இனிமேல் அவன் விஷமம் சாயாது."

இதையெல்லாம் கேட்டுதீக்ஷதர் மனோவியாகுலம் கொண்டு கட்குடியனைப்போல் புத்தி மயங்கப்பெற்றுக் கொஞ்சநேரம் வரையில் ஸ்தம்பித்திருந்தார். இதனைப்பார்த்த விசாலாக்ஷி அம்மாள், அவரைநோக்கி, "என்னயோசிக்கிறீர்கள்? இனிமேல்விசனப்படவேண்டிய காரணமேயில்லை. இந்தமட்டில் நீங்கள் சந்தோஷத்தையன்றோ அடையவேண்டும்" என்றாள்.

தீ.—எல்லாம் உனது தருமம்தான் அம்மா?

வி.—பிள்ளைஜாதகம் பார்த்தீர்களா?

தீ.—ஜாதகம் பார்க்காமல் யாராவது நிச்சயம் பண்ண ஆரம்பிப்பார்களா?

வி.—எப்படியிருக்கிறது?

தீ.—வெகு பொருத்தமாயிருக்கிறது.

வி.—பொருத்தமாயிருக்கிறதா! பொருந்தச் செய்யத் தானே அவனை (ஜோஸ்யனை)ச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தீ.—ஜாதகம் நன்றாயிருக்கிறதே. அதிலென்ன மோசம் பண்ணக் கூடியது?

வி.—மகா 'மாயாவி'யாயிற்றே அவன். கண்மூடித்திறக்கிறதற்குள் நூறு ஜாதகங்கள்—பொய் ஜாதகம்-சிருஷ்டனை செய்துவிடுவானே. அதற்காகத்தானே அவனை "ஜோஸ்யர், ஜோஸ்யர்" என்று தாங்குகிறார்கள்.

தீ.—முதலே மோசமா!

வி.—'பட்டால் தெரியும் பாப்பானுக்கு.' உங்களுக்கும் அப்படியேதான்.

தீ.—படவேவேண்டாம். உன்னிடத்தில் எப்பொழுது வந்து சேர்ந்தேனோ அப்பொழுதே எனக்கு நல்லகாலம் தான் என்று தெரியவில்லையா?

வி.—நான் சொல்கிறதும் அதுவே.

தீ.—பொய்ஜாதகம் கணிப்பானேன்?

வி.—நிஜமான ஜாதகத்தை வெளியே காட்டினால் யாராவது பெண்ணைக் கொடுப்பார்களா? பெண்ணோ கண்ணோ என்று சொல்வதைக்கேட்டதில்லையா? மனதொப்பி யாராவது பெற்ற பெண்ணைக் கொல்வார்களா?

தீ.—பையனுக்குப் பாபஜாதகமோ?

வி.—அல்ப சொல்பமான பாபமல்ல.

தீ.—பாபிகளா! இந்தவேலை யாராவது செய்வார்களா?

வி.—யாராவது வந்துவிடப் போகிறார்கள். சொல்ல வேண்டியதெல்லாம் சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேன். கேளுங்கள்.

தீ.—இவ்வளவு சொன்னது போதாதா? இனிமேல் அதிகமாய்ச் சொல்ல வேண்டியது ஒன்றும் இல்லை. இதோ இப்பொழுதே ஊருக்குப் போகிறேன். அவர்கள் முடிவேசொல்ல வேண்டாம். இனிமேல்பெண்ணைக் கொடுக்கவா? ஒருபோதுமில்லை.

இதைக் கேட்ட விசாலாக்ஷியம்மாள் தான் நினைத்தகாரியம் நிறைவேறிற்றென்று

மகிழ்ந்து கூனியானவள் கைகேயிக்குத் துர்ப்போதனை செய்ய, அதனை முதலில் செவிகொடுத்துக் கேளாது அவளை அவ்வாறுசெய்ததற்கு நிந்தித்தபோதிலும்,— "அரக்கர் பாவமும் அல்லவரியற்றிய தவமும்துறக்கநல்லருள் துறந்தனள்" ஆகிய கைகேயி அப்போதனை முற்றும் தனது மனதில் ஏற்றவுடன் அத்தீய சிந்தையாள் எவ்வளவு உள்ளம் பூரித்தாளோ அவ்வளவு பூரித்தாள் விசாலாக்ஷியம்மாளும்.

வி.—சுருக்கமாய்ச் சொல்கிறேன் கேளுங்கள். பையனுக்குப்பாபஜாதகம். களத்திரம் இரண்டு. கலியாணமான ஒருவருஷத்திற்குள் பெண் யமலோகம்போய்ச் சேரவேண்டியதுதான். ஐயோ! பாவம்! எந்தப்பெண் இரையாகிறாளோ! பிள்ளைவீட்டாருக்கென்ன விசனம்? ஒன்றுமில்லை. ஒருபெண் செத்தால், இன்னொருபெண் வருகிறாள் என்ற தைரியம். பெற்றமனம் பித்து. பெற்றவளுக்கன்றோ வயிறெரியும். பிள்ளைவீட்டார் பெண்கொள்வது சந்தையில் நாம் மாடுவாங்குவதுபோலவேதான். ஒரு மாடுபோனால், இன்னொருமாடுவருகிறது. பையனுக்குக் களத்திரம் இரண்டாகையால், முதலில் கட்டுகிறபெண் சாவதுநிச்சயம். இரண்டாந்தாரம்தான் நிலைக்கும். இதற்காகத்தான் அவனை—அந்த ஜோஸ்யனைக் கையிற்போட்டுக்கொண்டிருக்கிறார்கள். உங்களைப்பார்த்தால் வெகு பரமார்த்தமாகத் தோன்றுகிறது. உங்களுக்காக இல்லாவிட்டாலும் அவளுக்காகவாவது நான் இவ்வளவுகாரியம் செய்யவேண்டியதுண்டு. இருக்கிறமோசத்தைச் சொல்லிவிட்டேன். இனிமேல் நீங்கள் கொடுத்தாலும் சரி; கொடாவிட்டாலும் சரி.

தீ.—இனிமேல் கொடுக்கிறதா? அந்தவார்த்தை ...விட்டுவிடு. சொப்பனத்திலுமில்லை.

வி.—என் பெயரை வெளியில் விடவேண்டாம்.

தீ.—அக்கினி குளிர்ந்தாலும் குளிர்ந்து போகும், உன்பெயர் வெளியில் வாராது.

வி.— இப்பேர்ப்பட்ட சமயத்தில் உதவாத ஸ்நேகிதாள் இருந்தென்னபிரயோஜனம்?

தீ.—அது நீ சொல்ல வேண்டாம். உன் நடத்தையினாலேயே உன்குணம் விளங்குகிறது.

வி.—இன்னொன்று சொல்கிறேன். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

தீ.—என்ன அம்மா! சொல்லு. கேட்கிறேன்.

வி.—இந்தஊரா ரெல்லாரும் உங்கள் சம்பந்திக்கு வேண்டியவர்கள்.

தீ.—சம்பந்தி என்கிறவார்த்தையை விட்டுவிடு செத்தவன் பிழைத்தாலும் என்மனம் திரும்பாது.

வி.— அவர்களிடத்தில் இந்தச் சங்கதியைப் பற்றி யாதொன்றும் கேளாதேயுங்கள். எல்லாரும் அவாளுக்கு அநுகூலம். உங்களை எப்படியாவது சிக்கல்வைத்துவிடுவார்கள். ஒரு க்ஷணம்கூட இங்கே தங்க வேண்டாம். உடனே ஊருக்குப் புறப்பட்டு விடுங்கள். பெண் உயிரோடிருந்தால் போதும்.

தீ.— நீ சொன்னதை நம்பாமலிருந்தாலன்றோ கண்டவர்களைப்போய்க் கேட்க வேண்டும். நீசொன்னதெல்லாம் இராமாயணம்போல் மனதில் பதிந்துவிட்டது.

வி. — நான்சொன்னதெல்லாம் உங்கள் அநுகூலத்திற்காக. "மனசிலொன்று வாயிலொன்று எனக்குக் கிடையாது" பால்யஸ்நேகமல்லவா இவ்வளவு தூரம் என்னை இழுத்துவிட்டது.

தீ.— பொய் சொல்லியாவது ஒருஉயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று தருமசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. நீயோ மெய்பேசியே ஒரு பிராணனைக் காப்பாற்றிவிட்டாய். உனக்கு மகா சுகிர்தமுண்டு. இந்தப் புண்ணியம்எல்லாருக்கும் கிடைக்கக்கூடியதா?



வி.—உங்களைப்போன்ற சாதுக்களுடைய ஆசீர்வாதத்தினால் தான்.

தீ.—யாரோவருகிறார்கள். நான்போய்வரட்டுமா?

வி.—ஊருக்குப் போகும்பொழுது இங்கே வந்துவிட்டுப்போங்கள். நான் சொன்னதெல்லாம் ஞாபகத்திலிருக்கட்டும்.

தீ.—அப்படியே ஆகட்டும்.

பி. எஸ். சுப்ரமணிய அய்யர், பி. ஏ.

## சென்னைச் சிற்ப சித்திர அற்புதக்காட்சி.

## MADRAS FINE ARTS EXHIBITION.

சென்னைச்சிற்பசித்திரசங்க (Fine Arts Society) மானது சென்ற ஐந்துவருடங்களுமுறங்கிவிட்டு இவ்வருடமெழுந்து விட்டதென்பதற்கு இப்போது செனட் ஔசில், (Senate House) நடந்த அதன்கண்காட்சியே போதுமான சாட்சியாம். அக்காட்சியை சென்னையிலும் வெளியூரிலுமிருந்து பலஜனங்களும் சென்றுபார்த்துக் களித்தனர். இக்காட்சியிற்போல ஒழுங்கும் ஏற்பாடும் இதற்குமுன் எவ்வருடமு மிருந்ததில்லையென்றே சொல்கிறார்கள். இவ்வேலைகளையெல்லாம் தங்கள்மெய்வருத்தம்பாராதுசீர்ப்படுத்திய டாக்டர் தர்ஸ்டன் (Dr. Thurston), மிஸ்டர் சாடர்டன் (Mr. Chatterton) ஆகிய இருவர்கட்கும் நாம் வந்தனமளிக்கக் கடமைப்பட்டுள்ளோம். காட்சிக்கு வந்த பொருள்களாவன. — தைலவர்ணங்களாலும் நீர்வர்ணங்களாலும் எழுதப்பட்ட படங்கள், புகைப்படங்கள் (Photographs) என்பவைகளோடு மரம் உலோகம் இவைகளாலமைந்த வேலைத்திறம்பொருந்திய சாமான்களுமாம். இவைகளில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியவை அலுமினியம் (Aluminium) என்னும் உலோகத்தாலமைக்கப்பட்டசாமான்களே.

அப்பொருள்கள் பின்வருமாறு ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டன. — அந்தப் பெரிய செனட்ஹாலை அதனகலத்திற்கேற்ற இரண்டு பெரியதிரைகளால் மூன்று பெரிய அறைகளாக வகுத்து அத்திரைகளினிருபக்கங்களிலும் சுவர்களிற்போல படங்களையெல்லாம் தொங்கவிட்டிருந்தனர். அவ்வறைகளின் மத்திய இடங்களில் வெள்ளி அலுமினியம் முதலிய உலோகங்களாற்செய்த பண்டங்களும் மரச்சாமான்களும் நாற்காலிகளின் மேலும் தளத்திலும் ஒழுங்காக அமைக்கப்பெற்றிருந்தன.

படங்களுள் ஆறு, மலை, வனம் முதலிய இயற்கைப் பொருள்களின் படங்களை யோர் பக்கமும் மனிதர்களின் படங்கள் முதலியவற்றை மற்றோர்பக்கமுமாக ஒவ்வொருதிரையினும், தொங்கவிட்டிருந்தார்கள். படங்களைப் பொதுவாகக் கவனிக்கும்போது தைலவர்ணங்களால் தீட்டப்பட்ட படங்கள் பொதுவாக நீர்வாணங்களா லெழுதப்பட்ட படங்களைவிட நன்றாகவிருந்தன. தைலவர்ணத்தால் எழுதும்சுதேச சித்திரவேலைகள் இரவிவர்மா முதலியோரால் இப்பொழுது விர்த்தியாகிவருகின்றன.

இயற்கைப் பொருள்களின் தைலவர்ணப் படங்களில் மேஜர் ஆல்போர்ட் (Major Allport) எழுதிய ஓர் அலை (A Wave No 53) ப்படமானது பரிசளிக்கப்பெற்றது. இது அளவிற் சிறியதாயிருப்பினும் கவனித்துப்பார்க்கவேண்டியவற்றுளொன்று. இதில் நீல ஆகாயமும், கடலின் பலவர்ணங்களும், மோதிச்சிதறும் அலையின்மேல்காணும் வெள்ளியநுரையும் உண்மையாகவும் மதிக்கக்கூடியதாகவும் காணபிக்கப்பட்டிருந்தன. அக்காட்சியில் இதனையே மிகத்தேர்ந்த சித்திரமெனச் செப்பலாம். மற்றவைகளுள் "மதராஸ் கோரி"(Madras Mosque)"நீண்டஏரி"(LongTank) சான்தோமிலிருந்து சென்னைக்கடற்கரை (Madras Beach from St. Thome),"டிசம்பரின் குளிர்ந்த காலைநேரம்"(A Chill December Morning)"சூரியாஸ்தமனத்தின்பின் பொம்பாய்க்குடாக்கடல்"(Back-bay, Bombay after Sunset), "சூரியோதயத்தில் டார்ஜீலிங்கில் பனிக்கட்டிகள்" (The snows at Darjiling at sunrise), நிலாவிற்கண்ட நீர் அருவி (Waterfall by Moonlight)," என்னும்படங்கள்" பார்ப்பதற்கு இனிமையாகவே யிருந்தன.

ராஜா இரவிவர்மா எழுதிய "தமயந்தியும் தூதன்னமும்", "ஒரு ரிஷி" என்னுமிரண்டுபடங்களும் அத்திரையின் இந்தப்பாகத்தில் பார்ப்போர்கண்ணைக் கவரக்கூடியனவாயிருந்தன. மேலும் அவற்றுள் அவ்விருஷியின் படமானது அக்காட்சிக்குவந்த படங்களிலெல்லாம் முதன்மையானதென்று சொல்லும்படியுள்ளது. இவ்விரண்டு படங்களும், அப்பேர்போன இரவிவர்மாவின் சக்திக்கேற்றனவும், அவர் பெயரை நன்குவிளக்கக்கூடியனவுமா யிருந்தன. பார்ப்பவர்களெல்லாம் இதுதகும் என்பார்களேயன்றி வேறுசொல்லார்.

மனிதரூபப்படங்களில் இராஜவர்மா என்பவரால் எழுதப்பட்ட "நீர்கொண்டுபோபவள்" (Water carrier) என்னும்படத்திற்குத்தா னினாமளிக்கப்பட்டது. இது தன்தலையில் தண்ணீர்க்குடத்தை வைத்து ஓர் கையாற்றாங்கிக்கொண்டு செல்வாளாகிய வெண்புடவைகட்டிய ஒருஸ்திரீயின் பின்புறத்தைக் காட்டும் படம். இன்னும் இவ்வித உருவப்படங்களுள் "ஒருசிறிய இந்துக்குழந்தை" (நகை முகம்) "சோமக்கலம் தட்டும் ஆண்டிப்பையன்" "ஒருபார்சிஸ்திரீ" ஆகிய படங்களும் கவனிக்கத்தக்கவை.

மற்றொரு பக்கத்திலிருந்தவைகளுள் "கொடைக்கானலில் வீடுகட்டும் வேலையாட்கள்" "தண்ணீர் எடுப்போர்கள்" "பழம் விற்பவள்" "இந்திய பாம்பாட்டிகள்." "பார்சிகளின் முற்காலத்திய தற்காலத்திய நடையுடைபாவனைகள்" அப்போதுதான் குளித்துவந்தபெண் (Fresh from the Bath), என்னுமிவைகள் மிகவேலைப்பாடுடையனவாய் அழகாயிருந்தன. இதற்கெதிரிலிருந்த திரையில் பழம், பூ, தழை முதலியவற்றின் படங்களிருந்தன. இவற்றுள் மிஸ்ஸெஸ் ப்ரூஸ் (Mrs. Bruce) எழுதிய சூரியகாந்திப்பூக்கள் என்னும்படத்திற்கு இனாமளிக்கப்பட்டது. இப்படத்தில் மேகங்கள் தங்கிய நீலஆகாயத்தின் முன்பு அப்பூக்கள் இருந்தனவாக எழுதப்பட்டிருந்தது மிகநன்றாக விருந்தது. மேலும்இப்படங்களுள், "ரோஜாப்பூகள்" "காட்டு ரோஜாப்பூக்கள்" "மலைநிலங்கள்" "இந்திய காய்வர்க்கங்கள்" என்னுமிவைகள் நன்றாகவும் காணத்தக்கனவாயுமிருந்தன. நீர்வர்ணங்களுள் மிஸ்ஸெஸ் பின்னீ (Mrs. Piney) எழுதிய சதுப்புநிலம்" முதன்மை பெற்றுள்ளது. இதன் காட்சி அந்நிலத்தினியல்பை உண்மையிலுணர்த்துவதும் மனதிற்கு ரம்மியத்தைத்தருவதுமாயிருந்தது. மற்றவைகளில் "பனைமரங்கள்" "மாலையில் தென்னந்தோப்பு" "அடையாற்றில் சூரியாஸ்தமனம்" "காற்றாலலையும் பனைமரம்" "சப்பாத்துக்கள்ளி" என்பவைகளை விசேஷமாகச் சொல்லலாம்.

"மரங்களிடையிற்றோன்றுமோரேரி" என்னும் படமானது கண்டோர் கருத்தைக் கவரக்கூடியதாயிருந்தது.

புகைப்படங்களில் மெஸ்ஸர்ஸ் வீல் அண்ட் க்லீன் கம்பெனியாரால் பிடிக்கப்பட்ட கும்பகோணம் மகாமகக் கூட்டத்தின் படமே உயர்ந்ததும் யாவரும் கவனிக்கத்தக்கதுமாயிருந்தது. இதில் ஏறக்குறை 1000 பேருக்கு மேல் முகந்தெளிவா யறியக்கூடியதாயிருந்தது.

இவ்வறையின் மத்தியில் வைக்கப் பட்டிருந்த புத்தகம் வைக்கத்தகுந்த ஒரு பெரியநிலையானது (Magnificent revolving bookcase) சென்னைச் சித்திர. வேலைப் பள்ளிக்கூடத்தாரால் (School of Arts) அனுப்பப்பட்டது: இது முழுதும் செம்மரத்தால் மிகவேலைத்திறமாகச்செய்யப்பட்டிருந்தது. இதிற்சித்திரித்திருந்த வேலைகள் மிக நன்றாயிருந்தன. அது முழுதும் பார்ப்பதற்கு மிக அழகாயிருந்தது. இன்னும் அங்கனுப்பப் பட்டிருந்த மரவேலைகளில் குருசாமி யாசாரி அனுப்பிய வெண் தேவதாரு முதலிய நிலைப்பெட்டி(Rosewood &White cedar Cabinet), முத்துசாமி ஆசாரி (Carpentry Instructor, Madura Technical Institute) அனுப்பிய மண்டபமும் அதனுள் மயிலின்மீது சுப்பிரமணியசுவாமியும் என்பதும் மதுரமுத்து, ரோசாப் (Industrial School, Karur) என்பவர்களனுப்பிய இரண்டு சதுரங்கப் பலகைகளும் மிக வுயர்ந்த அழகிய வேலைப்பாடோடுகூடிப் புகழத்தக்கவையாயிருந்தன. அக்காட்சிக்குவந்த மரவேலைகளின் தொகை மிகக்குறைந்ததென்பதை யறிய விசனிக்கிறோம். ஆங்காங்கிருக்கும் வேலையாளர்களும் இனிமேல் தங்கள் தங்களரியவேலைகளை இக்காட்சிக் கனுப்புவார்களென்றெண்ணுகிறோம். புளியங்கொட்டைப்பருப்பில் செய்த யானையொன்று டி. சுப்பண்ணா என்பவரால் அனுப்பப்பட்டிருந்தது. (கோயமுத்தூர் ஜில்லாவில் துவரம்பருப்பொன்றில் விநாயகர் செய்ததையும் அரிசியொன்றில்தண்டாயுதபாணிசெய்ததையும் கண்ணுற்றிருக்கின்றோம். அவ்வேலைகளை இதைவிடக்கடினமாக்குவதெதுவென்றால் அவைகள் வேலைக்கு நிற்காது உடைந்துபோமென்பதே. அவ்வேலைத்திறமுடையார் தங்கள் வேலைகளை வருடந்தோறு இக்காட்சிக்கனுப்புவார்களாயின் மிக நன்றாயிருக்கும்.) இவற்றுள் மாட்சிமைதங்கிய கவர்னரவர்களாலனுப்பப்பட்ட மைசூர் சந்தனமரப்பெட்டியொன்று மிக்க வேலைத்திறமுள்ளதே.



மெஸ்ஸஸ் பி. ஆர். அண்டு சன்ஸ்(Messrs . P.R. & Sons.,) எப். பி. பொம்காரா (F.P. Bhumgara) டாடேகான் (Daday Khan) என்பவர்கள் அனுப்பியவேலைத்திறமமைந்த வெள்ளிசாமான்கள் கவனிக்கத்தக்கனவே. முருகேசபத்தரென்பவரும் சில நல்ல வெள்ளிசாமான்கள் அனுப்பியிருந்தனர். அவற்றுளுயர்ந்தது ஒரு காகிதக்கத்தி (A Paper Knife). இதற்கும் ஒரு இனாமளிக்கப்பட்டது.

இவ்வருஷக்காட்சியில் ஓர் விசேஷமென்னவென்றால் அங்குவைக்கப்பட்டிருந்த அலுமினியம் சாமான்களே. அலுமினியத்தாற் பண்டங்கள் நன்றாகச் செய்யப்படின் வெள்ளிபோலவேதோற்றும். இச்சாமான்களிற் சில சென்னைச் சித்திரவேலைப் பள்ளிக்கூடத்தாராலும் சில சென்னை அலுமினியம் பாக்டோரி Aluminium Factory) யாராலும் சிலமுருகேசபத்தரென்பவராலும் அனுப்பப்பட்டன. இவற்றைக் கவனிக்கும்போது செம்பு, லோட்டா, விளக்கு, கூசா, தோண்டி, பானை முதலிய வீட்டுப்பண்டங்களெல்லாம் இந்த உலோகத்தாற் செய்யப்படலாமென்றும் அப்படிச்செய்தல் மிகச்சுலுவாகவும் உபயோகத்திற் கேதுவாகவும் மொத்தத்தில் செலவு குறைப்பதாகவும், இருக்குமென்றும் தெரியவருகின்றது. இச்சாமான்கள் மிக இலகுவாக இருக்கின்றன.

அக்காட்சியினால் சுதேச சிற்பசித்திர வேலைகள் முன்னிருந்ததைவிட இப்போது விர்த்தியாய்வருகின்றனவென்று தெரியவருகின்றது. இவ்விதமாகவே ஆங்காங்குள்ள எல்லாவித வேலையாளர்களும், தங்கள் தங்கள் தொழிலை ஊக்கமுடன் மேற்கொண்டு விர்த்திசெய்துழைத்து உலகிற்குபகரிப்பரென்று நம்புகின்றோம். சுதேசவேலையாளர்கட்கு ஊக்கமூட்ட தேசத்தவர்களாகிய நாமும், நம்மையாளும் இராஜாங்கத்தாரும் உதவிபுரிந்து வரவேண்டுமென்பதே நம் எண்ணம்.

முடிவில் காட்சிக்காகச்சென்னைச் சிற்பசித்திர சங்கத்தினருக்கு நாம் மனப்பூர்வமான வந்தனமளிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இக்காட்சியானது முன்போலிராமல் வருடந்தோறும் நிலைபெற்று நடந்து வருமாயின், அனுப்பப்படும் காட்சிப்பொருள்களும் தொகையிலும் குணத்திலும் உயர்ந்து வருமென்பதில் தடையில்லை. இக்காட்சிக்கு முன்னின்று உழைத்தவர்களாகிய டாக்டர் தர்ஸ்டன், மிஸ்டர் சாடர்டன், மிஸ்டர் W. J. கிளிப்போர்டு (Mr. W. J. Clifford) ஆகிய இம்மூவர்க்கும் இக்காக்ஷியை கண்டுகளித்த ஜனங்கள் வந்தனமுள்ளவர்களாயிருக்கக்கடமைப்பட்டிருக்கிறார்கள்.

V. M.

## உபாத்தியாயர் பக்கம்.

### குழந்தைகளும் விளையாட்டுக்கருவிகளும். II.

விளையாட்டுக் கருவிகள் வித்யாப்பியாசத்திற்கு இன்றியமையாதன வென்று சொன்னோம். அவைகளையுபயோகிப்பதினால் குழந்தைகளுக்குண்டாகும் சந்தோஷத்தையும் மனோவிர்த்தியையும் நாம்கோட்டமிட்டு அறிந்து கொள்ளவேண்டும். சிறு குழந்தைகளிடத்தில் அவர்கள் மனதுக்கிசைந்த பொருள் ஒன்றைக்கொடுத்தால் ஒரு நிமிஷம் அதைவாங்கிக் களிப்புடன் பார்த்துவிட்டு அப்புறம் எறிந்து விடுவதைக் காணலாம். கொஞ்சகால்ம்சென்று விளையாட்டுப் பருவம் வந்த குழந்தைகளிடத்தில் ஒரு பொம்மையைக்கொடுத்தால் அதை அவர்கள் ஆவலோடு வாங்கிக்கொள்வதோடு "அது எனது, எனது" என்று சொல்லிக் கொண்டாடுகிறதைப் பார்க்கலாம். பொம்மைகளால் குழந்தைகளுக்கு முதல்முதல் 'சொத்து' என்கிற எண்ணம் உண்டாகிறது. "எனது, எனது" என்று சொல்லும் பொழுது முதல் முதல் "சொந்தம்" என்கிற எண்ணம் உதிப்பதில்லை; சொத்து' என்கிற எண்ணம் உதித்தபின் "சொந்தம்" என்கிற எண்ணம் உதிக்கிறது. முதலில் "எனது, எனது" என்று சொல்லிக்கொள்வதோடு திருப்தியாக விருக்கும் குழந்தை கொஞ்சகாலம் சென்றால் அந்தமட்டோடு திருப்தியடையாமல் அதில் 'சொந்தம்' பாராட்ட விரும்பும். அப்பொழுது 'என்பொம்மை' என்று அது சொல்வதைப்பிறர் ஒப்புக்கொண்டால் அதோடு திருப்தியடைகிறதில்லை. தன்பொம்மையைத் தான் வைத்துக்கொண்டிருக்க வேண்டும்; தன்னனுமதியின்றி வேறொருவர் தொடக்கூடாது; தன்னதென்று அதைத்தனியாக வைத்துக்கொள்ள வேண்டும்; என்று, சொந்தம் பாராட்டுவதற்குரிய எண்ணங்களெல்லாம் ஒன்றின் பின்னொன்றாக உதிக்கின்றன. பொம்மை அல்லது சொப்புக் கொடுத்தவுடன் புதிய கொடையொன்று கிடைத்தது என்கிற சந்தோஷம் சொற்பகாலமிருந்து போய்விடுகிறது. ஆனால் அதுமுதல் குழந்தை உலகானுபவங்களை அறிந்தனுபவிக்கத் தொடங்குகிறது. கொடுத்த கொடை ஒரு மரப்பாய்ச்சியல்லது பொம்மையானால் அதைக் குழந்தை யென்று பாவித்துப் பாராட்டித் தாலாட்டிப் பால் போட்டி, எண்ணெய்தேய்த்து இன்னும் குழந்தைக்குச் செய்யும்

காரியங்களில் தான் அறிந்ததெல்லாம் அதனிடத்தில் காட்டி அனுபவம் பெறுகிறது. ஒரு குதிரை கொடுத்தால் "ஹைஹை"யென்று ஓட்டி விளையாடுகிறது. ஒருநாய்க்குட்டி கொடுத்தால் "தோ, தோ"என்று கூப்பிட்டுவிளையாடுகிறது. இரண்டு மூன்று பலகைகளைக் கொண்டு ஒரு உள்ளுத்தடுத்துக் கொடுத்தால், அதை முன்னிட்டு அப்பா, அம்மா,குழந்தை, அடுப்பு, சமையல், சாப்பாடு முதலிய விளையாட்டுகள் விளையாடும் இப்படி பொம்மைகள், சொப்புகள் மூலமாகவே குழந்தைகள் முதல் முதல் லோகானுபவங்களை யுணர்ந்து அனுபவிக்கத் தொடங்குகிறார்கள். ஆகையால் குழந்தைகளுக்கு விளையாட்டுக் கருவிகளும் பொம்மைகளும், படங்களும் எவ்வெளவுக் கெவ்வளவு கொடுக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களுக்குச் சந்தோஷம் அதிகமாவதோடு அறிவும் ஞானமும் அனுபவத்துவமாக அதிகமாய்வளர்கிறது. இதுவே குழந்தைகளின் பள்ளிக்கூடப் படிப்புக்கு அஸ்திபாரமாக ஏற்படுகிறது. குழந்தைகளின் மனோவிர்த்திக்குக் காரணமான இவ்விஷயத்தில் பெற்றோர் எவ்வளவு சிரத்தையெடுத்துக் கொள்ளவேண்டும்! இருந்தும் நம்மவர்களில் எத்தனைபேர்கள் குழந்தைகள் விளையாடுவதைக் கண்டால், "என்னவோ சிறிதுகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன" வென்று அலக்ஷியம் பாராட்டி அசிரத்தையாயிருக்கிறார்கள். ஐரோப்பா—,அமெரிக்கா தேசங்களில் குழந்தைகளின் மாதிரிகளை யறிந்து கொள்ள வேண்டி,மகாநிபுணர்களெல்லாரும் எவ்வளவோ பிரயாசை யெடுத்துக் கொண்டு வருகிறார்கள். உபாத்தியாயர்கள், பெற்றோர்களெல்லாரும், இதுவிஷயமாய் சங்கங்கள் கூடி ஒருவருக்கொருவர் ஒத்தாசைசெய்து கொண்டுவருகிறார்கள்; குழந்தைகள் சுபாவங்களை யறிந்து அவர்களைச் சரியாக நடத்தி அவர்கள் தேகமனோவிர்த்தி ஆத்மவிர்த்திக் கனுகூலமானபடி நடத்தி வளர்த்துவர உதவி செய்யும் பொருட்டு இதற்கென்று பிரத்தியேகமான பத்திரிகைகள் எத்தனை பிரசுரிக்க பட்டுவருகின்றன. நம்மவர்கள் இது விஷயத்தில் அக்கறையற்று அசிரத்தையாகவிருப்பதால் நமதுதேசப்பொதுவிர்த்திக்குண்டாகும் இடையூறு இவ்வளவவ்வளவல்ல. ஆகையால் பெற்றோராயுள்ள எல்லோரும் இது விஷயத்தில் தங்கள் கடமையை யுணர்ந்து அதைச் சரிவர நிறைவேற்றிவர முயற்ச்சிக்கவேண்டும். பால போதகர்களாயிருக்கும் உபாத்தியாயர்களும், பிரதம பாடசாலை உபாத்தியாயர்களும் தங்கள் பொறுப்பை யறிந்து அதற்குச்சரியாக நடந்து கொள்ள யத்தனிக்க வேண்டும். இத்தேசத்தில் பிரதமபாடசாலை உபாத்தியாயர்கள் சம்பளம் மிகக்குறைவாக இருப்பதால் அதிகப்படிப்பும் புத்திசாமர்த்தியமு முள்ளவர்கள் அவ்வேலைக்குக்கிடைப்பது துர்லபமாகவிருக்கிறது. இருப்பவர்களில் புத்திசாலிகளாயுள்ளவர்கள் வயிற்றுப்பாடு பெரும்பாடாகவிருப்பதால், இது விஷயத்தில் வேண்டியமட்டும் படித்து நூதனமுறைகளையும் விஷயங்களையு மறிந்து தங்கள் ஞானத்தை விர்த்தி செய்து கொள்ள வழியற்று தங்கள் தொழிலில் உற்சாகமற்றவர்களாக விருக்கிறார்கள். இக்குறைகளெல்லாமிருந்தாலும், நாமெல்லாரும் நமது குறைகளுக்கு மேல் எழுந்து விர்த்திவழியை நாடவேண்டியது அவசியமாயிருக்கிறபடியால் புத்திசாலிகளான பெற்றோர்களும், உபாத்தியாயர்களும், இது விஷயத்தில் மிக்ககவனம் செலுத்திப் பிள்ளைகளை வளர்க்கும் வழியை நன்றாயறிந்து கொள்ள முயற்சிப்பார்களென்று நம்புகிறோம்.

C. V. S.

# சிறுவர்க்கான பக்கம்

[ விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## யானை.

விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர்,சிறுமிகளே, சென்ற சஞ்சிகையில் எலியைப்பற்றிய சிலவிசேஷங்களையும் அபூர்வமான கதைகளையும் வாசித்தீர்கள். இச்சஞ்சிகையில்யானையைப்பற்றிக் கொஞ்சம் உங்களுக்குச் சொல்ல உத்தேசிக்கிறேன். ஏனென்றால் உங்களில் சிலர் நாம் சிறுவர்களென்று சின்னஎலியைப்பற்றி இல்லாதகதைகளை யெல்லாஞ் சொல்லி ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்று நினைக்கலாம். அப்படிநினைக்க ஆதாரமில்லையென்று எனக்குத்தெரியும். தெரிந்தாலும் குழந்தைகள் குழந்தைகள்தானே. அப்படி நினைத்தால் நினைக்காதேயென்று சொன்னால் கேட்கமாட்டீர்கள். அல்லாமலும் எலிக்கு அவ்வளவு புத்தியுண்டென்று ஒருவர்காட்டினால், பிராணிகளெல்லாவற்றிலும் உடலிற் பெரியாதாயிருப்பது போல அறிவிலும் சிறந்ததாயிருக்கும் யானைக்குள்ள புத்தியைக்காட்ட நான் ஏன்உங்களுக்கு ஒருகதை சொல்லக்கூடாது. மிகவும் சிறிய



அற்பஜந்துவாகிய எலியின் சாமர்த்தியத்தைப் பற்றிப்படித்தபின், மிகவும் பெரிய மகாமேனியானபிராணியாகியயானையின்சாமர்த்தியத்தைப் பற்றிவாசிப்பது உங்களுக்குச் சந்தோஷமாயிருக்கும். மனதுக்கிதமானபடி போதிப்பதே நல்லபோதனை: ஆகையால் எலியைப்பற்றி எழுதினவர் உட்கருத்தை ஒட்டியெழுதி உங்களுக்கும் சந்தோஷ முண்டுபண்ணக் கூடுமானால் அதுஎனக்கும் எவ்வளவு இதமானவேலை பாருங்கள். எலியைப்பற்றியெழுதினவர் உட்கருத்தென்ன? சிறியஜந்துக்களுக்கும் ஒருவிதத்தில் புத்தியும் அறிவுமிருக்கிறதென்பதாம். அதையே ஸ்தாபித்து பெரியஜந்துவில் ஒன்றுக்கிருக்கும் புத்திகூர்மையை விளக்க உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்லப்போகிறேன். இது கட்டுக்கதையல்ல. வாஸ்தவமாய் நடந்தது. ஆகையால் உண்மையாக நம்பலாம்.

1805-ம்வருஷத்தில்பிரிட்டிஷ்இந்தியாவிலுள்ள இராணுவ அதிகாரிகள் பர்ட்பூர் கோட்டையை முற்றுகை போட்டபொழுது தண்ணீர்ப் பஞ்சம் நேரிட்டது. வெயில் பொன்னுருகக் காய்ந்தது. உஷ்ணம் ஒட்டிக்கொண்டு போயிற்று. காற்று நெருப்பாக அடித்தது. குளங்குட்டைகள் முதலிய நீர்நிலைகளிலுள்ள ஜலமெல்லாம் ஒட்டி உலர்ந்து போய்விட்டது. தண்ணீர்கிடைப்பது மிகவும் அரிதாய்விட்டது. கோட்டைக்கருகிலுள்ளகிணறுகளிலுள்ளஜலத்தைத்தவிர வேறுஜலம் எங்கும் கிடைப்பதரிதாய்விட்டது. அங்கும் ஜனங்களும் பிராணிகளும் கோடைவெயில் தாங்காமல் தவித்தபடியால், எனக்கு உனக்கென்று தண்ணீர் மொள்ள எல்லாரும் நான் நீயென்று முன்னிட்டுக்கொண்டு சண்டைபோட்டுச் சந்தடிசெய்து வந்தார்கள். இக்கிணறுகளில் மிகப்பெரிதான கிணறு ஒன்று இருந்தது. அங்கு மனுஷர்களும் மாடுகளும், ஆனைகளும் குதிரைகளும் வந்துநெருங்கி தண்ணீர்க்குச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அக்கிணற்றுக்கு இரண்டுயானைகள் தண்ணீர் மொள்ளச்சென்றன. யானைப்பாகர் மேலிருந்து நடத்திக் கொண்டுபோனார்கள். ஒரு குட்டியானை தன் துதிக்கையில் தண்ணீர்மொள்ள ஒரு தொட்டியைப் பிடித்துக்கொண்டு கிணற்றுக்குச் சென்றது. அப்பொழுது அதைக்கண்ட பெரிய யானையொன்றுதண்ணீர் மொண்டு மேலேவிட்டுக்கொள்ள அத்தொட்டி மிக வாய்ந்த சாதனமாயிருப்பதைக்கண்டுகுட்டியானையிடமிருந்து பலாத்காரமாய் அதைப் பிடுங்கிக்கொண்டுவிட்டது. குட்டியானைக்கு அப்பெரிய யானையையெதிர்த்துநிற்கமுடியாமையால் தான்தோல்வியடைந்ததைப் பொறுத்துக்கொண்டு சும்மாப் போயிற்று. ஆனாலும் அது மனதில் அப்பெரிய யானை செய்த அநியாயத்தை வைத்துக் கொண்டிருந்ததேயன்றி மறக்கவில்லையென்று பின்னேர்ந்ததால் தெரியவந்தது. யானைப்பாகர்கள் திட்டி சண்டை போட்டுக்கொண்டார்கள். வலுத்தவன்கை ஜயிக்குமென்றபடி பெரியயானை தொட்டியைப்பிடுங்கிக்கொண்டது,பிடுங்கிக் கொண்டதாகவே போயிற்று. அதைத்திரும்பிவாங்க குட்டியானைக்கும் பலமில்லை. அவ்யானைப்பாகன் சண்டைபோட்டதும் பலிக்கவில்லை. பெரியயானை தொட்டியை எடுத்துக் கொண்டு கிணற்றண்டை சென்று தண்ணீர் மொண்டு மேலே விட்டுக்கொண்டு சுகமனுபவிக்கத் தலைப்பட்டது. குட்டியானை மனங்கருகி ஒதுங்கியிருந்து பார்த்துக் கொண்டிருந்தது. மேலுக்கு அசிரத்தையா யிருப்பதுபோல் தோற்றினாலும் அது உண்மையில் அப்படியில்லை. ஏனெனில் பெரிய யானை தண்ணீர் குடித்து மேலெல்லாம் தண்ணீரை வாரிவிட்டுக்கொண்டு அலுப்பாற கிணற்றருகில் விலாப்புரமாய் நின்றுகொண்டிருக்கையில் தருணம் பார்த்துகுட்டியானைபின்வாங்கிச்சென்று ஓடிவந்து அசப்பில் பெரியயானையை ஒருமுட்டுமுட்டிக்கிணற்றில் தள்ளிவிட்டது. கிணறு மிகப் பெரிதாயிருந்ததால் யானை விழுந்தும் அது தாராளமாகத் தண்ணீரில் மிதக்கும்படியிருந்தது. கிணற்றுவாய்க்கும் தண்ணீர்மட்டத்துக்கும் 20 - அடி தூரமிருந்தது. அதன் கீழ்தண்ணீர் அனேக அடிகள் ஆழமிருந்தது. கிணற்

றில் விழுந்தயானை, விழுந்த திகைப்பு நீங்கின
தும் பொறுக்கக்கூடாத அக்கோடைவெயிலில்
உடம்புமூழ்கத் தண்ணீரில் அமர்ந்துகிடப்பது
அதற்குமிக இன்பமாயிருந்ததால் அதுசுகமாய்
மிதந்துகொண்டிருந்தது. யானையைக் கிணற்
றிலே கிடக்கவிட்டால் ஜலம்கெட்டு எண்ணி
றந்த பிராணிகள் தண்ணீரின்றிச்சாக நேரிடும்
போலிருந்தது. கிணறு 20 - அடி ஆழமாயி
யிருந்ததால் யானையைக்கிணற்றிலிருந்து ஆபத்
துவராமல் தூக்கியெடுப்பதும் அசாத்தியமாய்
விருந்தது. இந்தசமயத்தில் யானைப்பாகன்
யோசனைசெய்து ஒரு யுக்திசெய்தான். முற்
றுகைநடக்கையில் பீரங்கிகளையேற்ற அனே
கங்கட்டைகள் உபயோகப் படுத்தப்பட்டன.
இவை பாளையமிறங்கின இடத்தில் ஏராளமா
கக்கிடந்தன. இவற்றையெடுத்து யானையினி
டம்கொடுத்து அதன்கீழ்ஒன்றின்மேலொன்றாக
அக்கட்டைகளை யடுக்கிக்கொள்ளும்படிச்செய்
தால் கிணற்றின் மேல்மட்டம்வரையில் கீழே
கட்டைகட்டி உயர்த்தி யானையை வெளிப்ப
டுத்திவிடலாமென்று எண்ணினன். உடனே
கட்டைகளைக் கொண்டுவந்து யானையினிடம்
கொடுத்து அதைக் கீழே யடுக்கிக்கொள்ளும்
ம்படி மிகக்கஷ்டப்பட்டு அதற்குப் போதித்
தான். அது அடுக்கும் விதமறிந்துகொண்ட
தும் சரசரவென்று கட்டைகளை வாங்கிக் கீழே
போட்டு அடுக்கிக்கொள்ள அது கீழேகாலூன்
றி நிற்கக்கூடிய அளவுக்கு அடுக்கிக்கொண்டு
விட்டது. பிறகு பாகனுடைய உத்தேசத்தை
யறிந்து யானை தண்ணீரைவிட்டு வெளிவா
இஷ்டமில்லாமையால் மேலேயடுக்காமல்நின்
றுவிட்டது. வைதான், திட்டினன், பயமுறுத்
தினன். ஒன்றுக்கும் அது அசையவில்லை.
கடைசியில் நல்லவார்த்தைசொல்லி அதை
ஸ்தோத்திரம் செய்ததின்மேல் கொஞ்சம்
வழிக்குவந்தது. பிறகு நல்ல அரக்குச்சாரா
யம் குடிக்கக் கொடுப்பதாகச்சொல்லி மெல்ல
மெல்ல நல்லவார்த்தைசொல்லி, அது தரைமட்
டத்துக்குச் சரியாகவருகிறவரையில் கீழே
கட்டையடுக்கச்சொல்லி, அந்தக் கிணற்றின்
கைபிடிச்சுவரை ஒருபக்கத்திலிடித்து யானை
யை வெளிப்படுத்தினன். இப்படி வெளிப்ப
டுத்த 14 - மணிநேரம் சென்றது. யானைக்
குள்ள புத்திசூக்ஷ்மத்தையும் சாமர்த்தியத்தை
யும் தந்திரோபாயத்தையும், பழிவாங்கும்சமர்த்
தையும் பாருங்கள். மிருகங்களுக்கு இவ்வ
ளவு புத்தியிருக்கும்பொழுது அவைகளெல்லா
வற்றிலும்மேலானசிருஷ்டியானமனுஷப்பிறவி
யில் பிறந்த நமக்கு எவ்வளவு புத்தியிருக்க
வேண்டாம். அவ்வளவு புத்தியையும் விர்த்தி
செய்து பெருகச்செய்வதும், சும்மாகிடந்து
மழுங்கச்செய்வதும்நம்மைப்பொறுத்ததாயிருக்
கிறது. ஆகையால் சிறுவர்களாகிய நீங்கள்
விர்த்திக்குக்காரணமான உங்கள்காலத்தையும்,
பள்ளியிலும், வீட்டிலும்,உங்களைச்சுற்றியுள்ள
சந்தர்ப்பங்கள் வஸ்துக்களிலுமுள்ள சாதக
சாதனங்களை எப்படி உபயோகிக்கிறீர்களோ
அதற்குத் தக்கபடியிருக்கும்பிற்காலத்திலுங்க
ளுக்குவரும் நிலைமையும்.

" பெருமையும் சிறுமையும் தான்தரவருமே "
என்று சொன்ன வாக்கியத்தை மறவாதேயுங்
கள்.

வெகுநாளாக உங்களைக்காணமற் கண்டு
களித்த

மாயாண்டி,

## TO OUR SUBSCRIBERS.

Owing to unexpected difficulties and delay in the Press, the December and January Nos. have been unusually delayed in publication. In our last we promised to do our best to expedite work with the limited resources at our disposal and hoped soon to revert to our usual time of publication. We are issuing the February No. now and hope to issue the March No. immediately.

*20th March'99.*

## நமது சந்தாதாரர்களுக்கு

எதிர்பாராச் சில அசந்தர்ப்பங்களும் அச்சாபீஸி
தாமுதமும் நேரிட்ட காரணத்தால் டிசம்பர் ஜனவ
மாசத்துச் சஞ்சிகைகள் மிகவும் தவக்கப்பட்டுப்போ
விட்டன. நம்மாலானவரையில் வேலை சீக்கிரம் நட
முயற்சித்து வருகிறோமென்றும், நேரிட்ட காலதா
தத்தைநிவர்த்தித்து வழக்கம் போல் சீக்கிரம் பிர
ரித்து வருவோமென்றும் சொன்னோம். அப்படி
இப்பொழுது பிப்ரவரிமாசத்துச்சஞ்சிகையைப் பிர
ரிக்கிறோம். மார்ச்சுமாசத்து சஞ்சிகையையும் உட
னே பிரசுரிப்போம்.

மார்ச்சுமீ 20வ.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, $5\frac{1}{2}$ அணா.
பழைய பிரதி, 6 ,,

GRAVES COOKSON & Co.
28 MAR. 1899
PRINTERS & PUBLISHERS
MADRAS

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 7.] 1899வரு மார்ச்சுமீ [இலக்கம் 11.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As.: back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People :—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4 ; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. $5\frac{1}{2}$ AS. ; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year,* i. e., *in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. . 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

# சஞ்சோக்தை சுயம்வரம்
## அல்லது
# ப்ரித்விராஜா சரித்திரம்.

### * VIII. ஆயத்தங்கள்.

ஜயசந்த்ராஜன் தன் பிரியநாயகியான ரூபசுந்தரியுடன் கலந்துபேசி தன்னறை செல்லவும் அவன் மனத்துதித்த எண்ணங்களும் யோசனைகளும் சொல்லி முடியாதன. அவைகள் ஒன்றின்மேலொன்றாகப் பந்தயம் போட்டுக்கொண்டு ஓடுவனபோல் ஓடிப்பாய்ந்தன. அவ்வெண்ணங்களையும் யோசனைகளையும் மனதில் திரட்டியொழுங்குபடுத்தியாலோசிப்பது அவனுக்கேயசாத்தியமாகவிருந்ததென்றால் அவன் மனதுக்கு அந்நியமான நாம் அவற்றைவரையறைந்து விளங்கவைப்பது எப்படியாகும். ஒரு சமயம் அவன் தன் வீரத்தையும், படைவலிமையையும், பெருமையையும், பிரதாபத்தையும்பற்றி யெண்ணுவான். உடனே தான் வென்ற அரசர்களும், தான் ஜயித்த யுத்தங்களும், தானடைந்த வீரப்பிரதாபங்களும் ஒன்றின்பின்னொன்றாக . அரசன்பார்வைக்கு அணிவகுத்துச்செல்லும் சைனியங்கள்போல அவன் மனக்கண்முன் வரிசையாக ஓடிநிற்கும். இப்படித் தன்வீரப்பிரதாபங்களையுன்னிப் பெருமிதங்கொண்டிருக்குங்காலத்தில் தன்னெதிரிகளில் ஒருவனை அடக்கமுடியாமற்போன எண்ணம்வந்து அவன் மனச்சந்தோஷத்தையும் பெருமித எண்ணத்தையும் கெடுத்துவிடும். உடனே சிந்துநதிக்கப்பாலுள்ள வடதேசத்து மன்னரையடக்கி அவர்களில் எண்மரைத்தனக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்களாக்கிக்கொண்டதை நினைத்துப் பெருமிதங்கொண்டு சந்தோஷிப்பான். அனுல்வாரதேசத்து அரசனை இருமுறை போர்முகத்தில் தோற்கடித்து நர்மதா நதிக்குத்தெற்கே தன் மேலதிகாரம் செல்லும்படி செய்த தன் வீரப்பிரதாபத்தை நினைத்து மனமகிழ்வான். உடனே தனக்குக் கொடுப்பதாகவிருந்த தேவகிரிராஜாவின் புத்திரியைத் தன் எதிரியான ப்ரீத்விராஜா கொண்டுபோய் விவாகஞ்செய்துகொண்டதுமன்றி அவனோடு நேர்ந்த யுத்தத்தில் தன்சேனைகள் தோல்வியடைந்துவந்ததைப்பற்றி நினைந்து வெட்கி வருத்தப்படுவான். உடனே தானடைந்த எண்ணிறந்த வெற்றிப் பிரதாபங்களை நினைத்து "அடாதமன்னரையடர்த்தடுத்தவரையஞ்சவென்றமருடற்றின" வீரன் நாமல்லவோவென்று பெருமிதங்கொண்டு பூரிப்பான். தன்னெதிரியாகிய ப்ரீத்விராஜாவை அடக்கமுடியாத குறையொன்றே பெரிதென்று ஒருகால் மனந்தாழ்வான். உடனே தன்னெதிரிகளும் தன் பெருமையையும், வீரப்பிரதாபத்தையும் மெச்சித் தன்னை மண்டலீசன் என்று அவர்கள் வாயாலேசொல்லிப் புகழும்படியான சிறப்புற்றதேபோதுமென்று கருவித்துப் பெருமைகொண்டாடுவான். இப்படிப்பலவாறு பல எண்ணங்களால் அவன்மனம் சமநிலையற்று ஊசலாடிநிற்கக், கடைசியில் இப்பேர்ப்பட்ட சிந்தனைகளினாலும், இனி அவன் தனக்கு சித்திக்க வேண்டுமென்று ஆசைவைத்த எண்ணங்களின் கவலைகளினாலும், அவன்மனம் சோர்வுற்று ஆடியோய்ந்தபம்பரம்போல் அயர்ந்து அடங்கி அவனை நித்திரையில் வீழ்த்தியது. அந்த நித்திரையில் அவன்கண்ட கனவுகள் அவன் மனதுக்கிதமானவையாக விருந்தமையால் அவன்மனம் மிக உற்சாகங்கொண்டது. இப்படி நனவில் உண்டான மனக்களைப்பு, கனவில் உண்டான உற்சாகத்தால் நீங்க, மறுநாட் காலையில் தான்கொண்ட கருத்து ஒன்றையே பின்தொடர்ந்து அதற்குவேண்டிய யத்தனங்களைப் பின்வாங்காது செய்து தன் மனோரதத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டிய ஊக்கமும் உறுதியும் மனோதிடமும் பிடிவாதமும் உள்ளவனாக எழுந்திருந்தான். எழுந்து காலைக்கடன்களை முடித்தானதும் தன் முக்கியமந்திரிக்கும்

*திருத்தம்.—VII-அதிகாரத்தில் வி. சி. 261-வது பக்கத்தில் காணும் முதற்பாட்டின் 2-வது அடியைப் பின்வருமாறு திருத்திக்கொள்ளலாம்: "கொன்சேரம்போன் மேகமேரக்குங் கொடியன்னார்."



தன் குருவாகிய சுக்கிராசாரியருக்கும்தன்னை வந்துகாணும்படிச்சொல்லி அவசரமாய் அரிக்காரனையனுப்பிவிட்டு, அவர்கள் வரவையெதிர்பார்த்துத் தன் எண்ணங்களையும் ஆலோசனைகளையும் ஒழுங்குபடுத்தி மனதில் ஸ்திரப்படுத்திக்கொண்டிருந்தான். மந்திரிவந்து குசலப்பிரசனம்செய்து மஹாராஜாவுக்கு மரியாதை செய்து அவர் உத்தரவால் ஆசனத்திருக்க, குருவாகிய சுக்கிராசாரியரும் உடனேவந்து சேர்ந்தார். வந்தவரை மஹாராஜாவும் மந்திரியும் ஆசனம்விட்டெழுந்து உபசரித்தழைக்க, அவரும் ஆசீர்வசனம்சொல்லி ஆசனம்வகிக்க, எல்லாரும் ஏதோ பிரமாதமான முக்கியகாரியம் ஆலோசனைக்கு வரப்போகிறதென்கிற எண்ணத்தினால் மனமொடுங்கி 'ஈப்பாக்குவைத்தாற்போல்' க்ஷணநேரம் சும்மாவிருந்தார்கள். யாவருக்கும் பொறுக்கமுடியாதிருந்த அந்த நிசப்தம் நீங்க ஜயசந்த்ராஜா உடனே வாய்திறந்து பேசுவானாயினான்.

ஜயசந்தராஜா.—மந்திரீ!, குருராஜ்! இப்பொழுது மிகவும் முக்கியமும் மகா அவசரமுமான ஒரு பெரிய காரியத்தைப்பற்றித் தங்களுடைய ஆலோசனையைக் கேட்கவேண்டியிருந்ததால், இவ்வளவு காலமே சொல்லியனுப்பினேன்.

மந்திரி.—தங்களுடைய சித்தமறியக் காத்திருக்கிறேன், மஹாராஜ்.

குரு.—சரி, அப்படியே, 'பஞ்சாணிதேவி' அருள்புரிவாள், சந்தேகமில்லை.

ஜய.—தேவியினுடைய அருளாலும், தங்களுடைய உதவியாலும் அக்காரியம் குறைவற நிறைவேறி முடியுமென்றே கோறுகிறேன்.

குரு.—அப்படியேயாக தேவி யருள்புரிவாளென்பதிற் சந்தேகமில்லை. நான் வரும்பொழுது நல்ல சகுனங்கள் கண்டேன். இந்த முகூர்த்தமும் பெரிய சங்கற்பங்கள் செய்துகொள்ள ஏற்ற திவ்வியமான முகூர்த்தமாக விருக்கிறது. உடனே தங்கள் மனதை வெளியிட்டுப் பேசுங்கள். காரியசித்தி யாகுமென்பதிற் சந்தேகமில்லை.

மங்.—(தனக்குள்) இவர் எப்போதும் இப்படித்தான்! ராஜா இன்னதென்று அவர் எண்ணத்தை வெளியிடுமுன் அவர் மனது அவ்விஷயத்தில் உறம்படச் செய்துவிடுகிறார். அது ஏதாவது ஆகாதகாரியமாயிருந்தால் அவர் மனதைத் திருப்புவது முடியாதகாரியமாகுமே!

ஜய.—மந்திரீ! என்ன உள்ளுக்குள் ஆலோசனை செய்கிறீர்.

மங்.—ஒன்றுமில்லை மஹராஜ், தங்கள் மனதிலுள்ளதை வெளியிட எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

ஜய.—நமது குழந்தை சஞ்சோக்தைக்கு விவாகத்துக்குப் பக்குவமானகாலம் ஆய்விட்டபடியால் அதற்காக வேண்டிய ஏற்பாடு செய்யவில்லையென்று ராணி குறைப்படுகிறாள்.

குரு.—ஆம். இதுவிஷயத்தில் காலதாமதம் செய்யக்கூடாதென்று நான் முன்னமே ராணியிடம் சொன்னேன்.

ஜய.—அதற்காக வேண்டிய ஏற்பாடு செய்ய உடனே தீர்மானிக்க வேண்டுமென்றுதான் இப்பொழுது நாம் கூடியிருப்பது.

மங்.—மஹாராஜாவுடைய சித்தத்தைத் தெரிவித்தால் அப்படியே நடத்தத் தடையில்லை.

ஜய.—நீர் தடைசொல்லாமலிருப்பீரோ வென்று முன்னதாகத் தெரிந்துகொள்ளத்தான் நாம் அந்தரங்கத்தில் ஆலோசிக்கக்கூடியது.

மங்.—இதில் நான் தடைசொல்வதற்குக் காரணம் ஒன்றையும் காணேனே. மஹாராஜா சந்தேகிப்பானேன்.

ஜய.—நான் சொல்வதை முற்றும் கேளும்: நமது குழந்தைக்கு விவாகம் செய்யும்

பொருட்டு ‘சுயம்வரம்’ கூற நிச்சயித்தேன். அதை முன்னிட்டு இராஜசூய யாகமும் ஒன்று செய்யக் கருதினேன். யாகமுடிவில் குழந்தையின் ‘சுயம்வரம்’ நடக்குமென்று எல்லா அரசர்களுக்கும் தூதுபோக்கி ஓலையனுப்பவேண்டும்.

மந்.—(தன் மனதிலுண்டான பிரமிப்பை முகத்தில் காட்டாமல் மறைக்க யத்தனித்துக்கொண்டு) மஹாராஜ், இராஜசூயயாகம் செய்வது அவ்வளவு இலகுவான காரியமோ? அதற்கு தேசத்திலுள்ள அரசர்களை யெல்லாம் ஜெயித்துக் கீழ்ப்படுத்த வேண்டுமே. மற்ற அரசர்கள் எல்லாரிலும் நமது கை மேலான கையென்பதில் சந்தேகமில்லையானாலும், இக்கருத்துக் கிசையாத அரசர்களைப் போர்முகத்தில் வென்று நமக்குட்படுத்த வேண்டுமே! இதற்கு முதலில் யுத்த முஸ்தீப்பு பலமாகச் செய்யவேண்டுமே; குழந்தை விவாகம் அவசரமாக நடக்கவேண்டுமென்றீர்களே; இதன் முடிவில் விவாகம் நடப்பதென்றால் வெகு தாமதமாகுமே; முதலில் திக்குவிஜயம் செய்யப் புறப்படவேண்டுமே.

ஜய.—என்ன மந்திரீ! நம்மை யெதிர்க்கத்தக்க அரசனும் இப்பரதகண்டத்தி லிருக்கிறானோ?

மந்.—அப்படியில்லை மஹாராஜ். இராஜசூயம் செய்து ‘ஷம்ராட்’ பட்டம் கட்டிக்கொள்ளவேண்டு மென்றால் எல்லா அரசர்களும் மனமுவந்து கீழ்ப்பட்டு அந்த யாகத்தில் ஊழியஞ் செய்யவேண்டும். மஹாபாரதகாலத்தில் நடந்த ராஜசூயயாகத்தைத் தவிர, இப்பரதகண்டத்தில் வேறு எந்த அரசனும் அந்தயாகம் செய்யக்கருதினானில்லை. அப்பொழுதும் அது எவ்வளவோ கஷ்டமாகமுடிந்தது. இப்பொழுது நாம் இத்தனை காலமாக இல்லாது நூதனமாக இராஜசூயயாகம் செய்யக்கருதினால் சிநேகமாயிருக்கப்பட்ட அரசர்களில் கூட அனேகர் அதற்கிணங்காது முரணலாம். ஒரு அரசன் அப்படி முரண்டாலும் போதும். யாகம் நிறைவேறுவது அவனை உடனே ஜெயித்தாலன்றிச் சாத்தியமாகாது. இப்படி எச்சமயத்தில் இடுக்கண் நெரிட்டாலும், யாகம் நிறைவேறாது விருதாவாகிவிடும். இதை யெல்லாம்பற்றி மஹாராஜாவுக்குச் சொல்லவேண்டியது என் கடைமையாகையால் சொன்னேன். மன்னிக்கவேண்டும்.

ஜய.—என் மந்திரீ! இதையெல்லாம்பற்றி நான் யோசித்தேன். இது நம்மால் முடியாத காரியமென்று நமக்குத் தோற்றவில்லை. சிற்றரசர்களில் நம் வாக்குக்கு விரோதமாய் நடப்பவர் எவருமில்லை. பெரிய அரசர்களிலும் நமது குழந்தை சஞ்சோக்தையின் சுயம்வரம் கடைசியில் நடக்கப் போகிறதென்றழைத்தால் வரமாட்டேனென்று சொல்பவர் ஒருவருமிரார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். எல்லா அரசர்களும் நமது அழைப்புப் பத்திரத்தையேற்றுக்கொண்டு வந்துவிட்டால் அப்புறம் இது விஷயத்திலுள்ள கஷ்டம் இன்னதென்று எனக்கு விளங்கவில்லை.

மந்.—“வந்துவிட்டால்!” சரிதான். முரண்செய்தால்? ஒரு காரியத்தைச் செய்யக் கருதிக் கைவிட்டாலும், செய்யத் தவறினாலும் நமக்கு மெத்த அவமானமாயிற்றே. இது சம்பந்தமாக எத்தனையோ போர்களுக்கு இடமுண்டாகும். எத்தனையோ சங்கடங்கள் நெரிடும். ஆகையால் இது விஷயம் ஆரத்தீர யோசித்து நமது சைனியங்களை எவ்வளவோ பலப்படுத்தி முஸ்தீப்புச் செய்துகொண்டு, அப்புறம் செய்யவேண்டிய காரியமாயிருக்கிறது. அவசரமாய் ஓலையனுப்பினபிறகு, யாராவது முரணிக்கொண்டு இடுக்கண் செய்ய யத்தனித்தால், பின்பு எவ்வளவோ சங்கடங்கள் நேரிடும். அவசரமாக ஓலையனுப்பினால், அப்புறம் தொட்டகாரியத்தை முடித்தே தீரவேண்டும். செய்யுங்கருமத்தைச் சீர்தூக்கிப் பார்த்துச் செய்யவேண்டும். நான் சொல்லவேண்டியதைச் சொன்னேன். பின்பு மஹாராஜா கட்டளைப்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

ஜய.—குருராஜ், தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

சுக்கிராசாரி.—நீங்கள் எண்ணிய எண்ணம் சரியானதே. இதுவிஷயத்தில் மந்திரியினுடைய மனம் பின்வாங்குவதுபோல் என் மனம் பின்வாங்கவில்லை. சதுர்விதோபாயங்களில் அரசன் சமயோசிதப்படி எதையும் உபயோகித்துக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாமென்று தர்மசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இராஜசூயத்துக்குவரப் பிரியப்படாத மன்னவர்களும் சஞ்சோக்தை சுயம்வரத்தை யுத்தேசித்துக் கட்டாயம் வருவார்களென்றே நானும் உறுதியாய் நம்புகிறேன். வந்தால் வந்தவர்களை யுபசரிக்கும் முறையறிந்து சமயோசித சாமர்த்தியத்தோடு உபசரித்தால் இடையூறு ஒன்றும் நேரிடாது; யாகசமாப்தி செய்துவிடலாமென்றே நான் நினைக்கிறேன். எப்படியும் நீங்கள் கருதிய எண்ணம் சித்திக்கத் தக்கதே. தேவியின் கிருபையும் கடாக்ஷமும் உங்களுக்குப் பூரணமாய் சித்தித்திருக்க நீங்கள் அஞ்சவேண்டிய தொன்றுமில்லை யென்பதே நான் மனப்பூர்வமாய்க் கொண்டிருக்கும் அபிப்பிராயம். ஆகையால் உடனே ஓலையனுப்பச் செய்யலாம் என்பது என் ஆலோசனை. ஓலையனுப்புவதில் மட்டும் சஞ்சோக்தை சுயம்வரம் முக்கியாம்சமாகவும், ராஜசூயயாகம் அதை உத்தேசித்துச் செய்வதாகவும் படும்படி நிரூபம் வரையப்படவேண்டும். இதனால் எதிரிகளின் பொறாமையைக் கிளப்பிவிட அதிகமாய் இடமிராது.

ஜய.—மந்திரீ! இது விஷயமாய் நாம் ஆரத்தீர ஆலோசித்தபிறகே, உங்களிருவருடனும் ஆலோசனை செய்யத் தலைப்பட்டோம். இந்த ஆலோசனையிலும் குருராஜ் அவர்களுடைய அபிப்பிராயம் நமது அபிப்பிராயத்துடன் முற்றும் பொருந்தியிருப்பதால் நீர் இதுவிஷயத்தைக் குறித்து ஆலசியம் கொள்ளாமல் உடனே எல்லாருக்கும் ஓலையெழுதித் தனித்தனித்தூதனுப்பும். குருராஜ் சொல்லிய வசனங்கள் ஞாபகத்திலிருக்கட்டும். பிந்தி இடுக்கண் வந்தால் பின்னடைவதில்லை. எப்படியும் இக்காரியத்தை நிறைவேற்றியே குழந்தைக்கு விவாகம் செய்வதென்று நாம் குருராஜ் அறிய சங்கற்பம் செய்துகொள்ளுகிறோம். இனி ஆகவேண்டிய காரியங்களில் சிறிதும் தாமதம் வேண்டியதில்லை. இன்றைக்கே இதுவிஷயத்தில் ராஜசபையில் பகிரங்கமாய்த் தெரிவிக்கத் தீர்மானித்திருக்கிறோம். இன்றுகூடும் சபைக்கு மந்திரி பிரதானிகள், தளகர்த்தர்கள், சிற்றரசர்கள், சாமந்தர்கள் அனைவரும் வரும்படி ஏற்பாடு செய்யும். இதுவே நம் முடிவான தீர்மானம். நேரமாகிறது; இனி நாம் போகலாமே! நமஸ்காரம் குருராஜ்.

ஜயசந்தராஜன் இப்படித் திடீரென்று தன் முடிவான தீர்மானத்தைத் தெரிவித்து மேல் வார்த்தைக்கிடங்கொடாமல் சபையைக்கலைத்துப்போக மந்திரி சற்றுநேரம் திகைத்து நின்று “விதியை வெல்ல மதியாலாகுமா?” என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு பின்னும் “இந்த சுக்கிராசாரியுடன் நாம் வாக்குக்கொடுத்தால் வில்லங்கம் விளையும். இவனிழைக்கும் துன்பங்களுக்கு அளவில்லை. அரசனும் இவன் குருட்டாலோசனையை நம்பி மதிகெட்

டுப் போகிறான். ஆயினும், நாமென்செய்யலாம்! நம்மாலானதை நாம் குறைவறச்செய்து நமது கடமையைச் செய்துமுடிப்போம்; பின்னர் தெய்வம் விட்ட வழி விடுகிறது" என்று நினைத்து குருவுக்கு நமஸ்காரம்செய்து தன்வழிசென்றான். சுக்கிராசாரியும் அரசனிடம் தனக்குள்ள செல்வாக்கைப் பின்னும் விர்த்திசெய்துவளர்க்கவாய்த்ததோர் பெருஞ்சமயம் நேர்ந்ததென்று உள்ளுக்குள் சந்தோஷித்துச்சென்றான்.

அன்று சாயங்காலம் ராஜசபை கூடியபொழுது, ராஜன் சபையார்க்குத் தன் தீர்மானத்தை அறிக்கையிடுமொதிரியாகப் பேசினனேயன்றி, அவர்களை ஆலோசனைகேட்கு மாதிரியாகப் பேசவில்லை. அரசன் தன் கருத்தைத் தெரிவித்து அதற்காகச் செய்யவேண்டியகாரியங்களைச் சீக்கிரம் செய்துமுடிக்க உத்தரவுசெய்துவிட்டு கொலுநீங்கிச்சென்றான். அவனிடத்திருந்த நானாவித படைவீரர்களில்பலர் யுத்தத்துக்குச் சமயம் நேர்ந்ததென்று கருதிச் சந்தோஷப்பட்டார்கள். மந்திரி பிரதானிகளில் சிலர் அரசனது தீர்மானத்தைக்கேட்டுத் திகைத்தார்கள். இன்னும் பலர் பலவிதமாகப பேசிக்கொண்டார்கள். ஆனால் எல்லாரும் அரசன் கருத்தை நிறைவேற்றுவதில் மனங்கொண்டவர்களாக விருந்தார்களேயன்றி ஒருவராவது அவன் கருத்துக்கு விருத்தமாக நடக்க எண்ணினார்களில்லை. அரசன் செய்த தீர்மானம் யுக்தமானதாவென்று சந்தேகித்த மதிவல்லாரும்கூட அரசன் கருத்துக்கு மாறுநடக்க மனத்திலும் நினைத்திலர். இது அக்காலத்திருந்த விசேஷமான இராஜவிசுவாசகுணத்தை விளக்குவதற்கேற்ற ஒரு திருஷ்டாந்தமாம். இராஜபுத்திரர்கள் பிராணன்போனாலும் உண்டசோற்றுக்கு இரண்டு நினைக்கமாட்டார்கள். இராஜவிசுவாசம் அவர்கள் விசேஷமாகக் கொண்டாடும் க்ஷத்திரிய தர்மங்களில் முக்கியமானதொன்று. இராஜத்துரோகம் நினைப்பவன் [illegible] ஜன்மம் மகாகொடியநரகவேதனைகளை [illegible]ப்பானென்பது அவர்களது கொள்கை, உறுதியான நம்பிக்கையுமாம். தைரியம், தேசாபிமானம், இராஜாபிமானம், கௌரவம், விருந்தோம்பல், கபடமின்மை முதலிய குணங்களில் இராஜபுத்திரர்கள் மிகச்சிறந்தவர்கள். ஒரு அரசனுக்குட்பட்டிருந்துதவச் சம்மதித்துவிட்டார்களானால், பிறகு அவனுக்குண்மையாயிருந்து அவன்பக்கத்திலிருந்து தங்கள் உயிரையும்கொடுத்து அவன்பேரையும்கௌரவத்தையும் பாதுகாப்பதே அவர்களுக்கு க்ஷத்திரிய தர்மம். உண்டசோற்றுக் கிரண்டுநினைத்தவனையும், தன்னரசனுக்கு ஆபத்திலுதவிசெய்யப்பின் வாங்கினவனையும் பெற்றதாயும் ஏற்றுக்கொள்ளாள். இக்குற்றங்கள் இராஜபுத்திரர்களுக்குள் அவ்வளவு இழிவாக மதிக்கப்பட்டு வந்தன. ஜயசந்தராஜாவின் முக்கியமந்திரியும் குருவாகிய சுக்கிராசாரியும் ராஜசூயயாகத்துக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்வதில் மும்முரமாயிருக்கையில் இராஜபுத்திரர்களின் இவ்விசேஷகுணத்தை விளக்கத்தக்க உபகதை யொன்றைச் சொல்லி அவர்களின் மாதிரி இவ்விதமென்று இதை வாசிப்போர் உணர்ந்தறியும்படி விளங்கவைப்போம்.

## IX. இராஜபுத்திரர்கள் குணத்தைக் காட்டும் ஓர் உபகதை.

டில்லி ராஜாவாகிய ப்ரித்விராஜா சமேத நாட்டு அரசன் புத்திரியை பலாத்காரமாய்க் கொண்டுபோய் மணம்புரிந்துக்கொண்டான். அவ்விராஜகுமாரத்தியைப் பலாத்காரமாய்க் கொண்டுபோகையில், அவனுக்காதரவாயிருந்த வீரர்களில் அநேகர் சண்டையில்காயம்பட்டுப் போய்விட்டார்கள். காயம்பட்டும் அவர்கள் பெண்ணைக்கொண்டுபோகும் ப்ரித்விராஜாவை எதிரிகள் துரத்திக்கொண்டுபோய்ப் பிடிக்காதபடி வழிமறித்து யுத்தம்செய்தார்கள். ப்ரித்விராஜா தன் மணமகளோடு டில்லிராஜ்ஜியத்தின் எல்லையையடையவும் இவர்கள் அவனுடன் பின்வாங்கிச்சென்றார்கள். இப்படிச் செல்லுகையில் மஹோபா நாட்டுக்கதிபதியாகிய சண்-



டேல் ராஜபுத்திர ஜாதியரசனான பூர்மல் சண்டைசெய்யத் தகுதியற்றவர்களாயிருந்த அவர்களைத்தாக்கி, காயப்பட்டவர்களில் சிலனைக் கொன்றுவிட்டான். காயம்பட்டவர்களையும் ஆயுதமில்லாதவர்களையும், சரிசமமாக யுத்தம் செய்யத் தகாதவர்களையும் எதிர்த்துக்கொல்வது யுத்தமுறைக்கு முற்றும் பிறழான காரியம். இராஜபுத்திரர்களின் வீரத்தன்மைக்கும் கௌரதைக்கும் முற்றும் ஒவ்வாத செய்கை. இப்படியிருக்க, காயம்பட்ட தன் வீரர்களைப் பூர்மல் தாக்கிக்கொன்ற செய்தி கேள்விப்படவும், ப்ரித்விராஜா அடங்காக் கோபமூண்டு அவனையுடனே தண்டிக்கக்கருதித் தான் பலவந்தமாய்க்கொண்டுபோன இராஜபுத்திரியை டில்லியிற்கொண்டுபோய் சாவதானமாகச்சேர்த்ததும், சண்டேல் ராஜபுத்திரர் நாட்டின்மீது படையெடுத்துச்சென்று அந்நாட்டு எல்லைப்புறத்திலுள்ள ஸிர்ஸ்வா கோட்டையைப்பிடித்துக்கொண்டு அவன் துருப்புகளைக் கண்டதுண்டமாக வெட்டி நாசம்செய்யத் தலைப்பட்டான். இப்படி வெற்றிமேல் வெற்றிபெற்று எதிரியின் துருப்புகளையும் நாடுகளையுமழித்துச் செல்கையில் பூர்மல் ராஜா அவனுடைய பட்டத்தரசி மாலன்தேவி சொன்ன ஆலோசனையைக் கேட்டு தன்னுடைய பாரதியின் சகோதரனைத் தூதாக அனுப்பி, தன்னுடைய தளபதிகளான அலா, உதிலா என்னும் சிற்றரசர்கள் இல்லாமையால் அவனையெதிர்த்துச் சரிசமானமாக யுத்தம்செய்ய வாய்க்கவில்லையென்றுசொல்லி ஒருமாசத்துக்கு யுத்தத்தை நிறுத்திச் சமாதானமாயிருக்க கேட்டுக்கொண்டான். ப்ரித்விராஜாவும் அப்படியே ஒருமாதக் கெடுக்கொடுத்து அதுவளாயில் யுத்தத்தை நிறுத்திச் சமாதானம் பாராட்டுவதாகச் சொல்லியனுப்பிவிட்டு, தன்னருகிலிருந்த தன் அரண்மனைக் கவியாகிய சந்துபாரதியைப்பார்த்து அலா, உதிலா என்னும் 'பிஞூர்' இராஜகுமாரர்களை சண்டேல் அரசன் தன் தேசத்தைவிட்டுத் துரத்தியதற்குக் காரணமென்னவென்று கேட்டான். அதற்குத் திரிகாலஞானியாகிய அந்த பாரதி பின்வருமாறு மறுமொழிபகர்ந்தான்:—

"காட்டு மனுஷர்களான கோண்ட் ஜாதியார் சண்டேல் ராஜகுமாரனை யெதிர்த்துத் தோற்கடித்தபொழுது அவன் சைனியத்துக்கு அதிபதியாயிருந்தவன், பிஞூர் சிற்றரசனான ஜேஸ்ராஜ். அவன் இவர்களால் தோல்வியுற்றதைப் பொறுக்காமல், அக்காட்டுஜாதியார்களை யெதிர்த்துத் துரத்தி அவர்கள் கோட்டைகளையும்பிடித்து சண்டேல் அரசனுக்குட்பட்டதாகச் செய்துவிட்டு யுத்தத்தில் விழுந்து போனான். பூர்மல் வெற்றிப்பிரதாபனாய்த் தன் முக்கிய ஸ்தானமாகிய மஹோபாவுக்குத்திரும்பிவந்து ஜேஸ்ராஜ் தனக்காகப் பல வெற்றிகளையும் பெற்றபின் போர்முகத்தில் பிராணனை விட்டதற்காக நன்றியுள்ளவனாய் அவனுடைய புத்திரர்களான அலா, உதிலா என்னுமிருவர்களையும் கட்டியணைத்து அவர்களைத் தன் சேர்ந்த ஆதரவில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு நாடு நகரங்களும் பூமிகளும்கொடுத்து கௌரவித்துச் சிறப்பாய் நடத்திவந்தான். பட்டத்துராணி மாலன்தேவியும் அப்புத்திரர்களுக்கும் தன்சொந்தப்புத்திரர்களுக்கும் வித்தியாசமின்றிப், பாராட்டிச் சீராட்டி அவர்கள் சிறுவராயிருக்கும்வரையில் தன்னருகேவைத்துப் பெருமையாய்வளர்த்துவந்தாள். அவர்களுடைய தாயார் தேவாள்தேவியும் இக்குழந்தைகள் நிமித்தம் தன் கணவனிறந்தும் உயிர் வைத்துக் கொண்டு இவர்களை அன்பாதரவாய் இராஜபுத்திரர்களுக்குரிய வீரமும் குணமும் இவர்களுக்குப் படியும்படி வளர்த்துவந்தாள். பிஞூர் அதிபதிகளான இச்சகோதரர்களுடைய பிரதம ஸ்தானம் பேர்பெற்ற கலிஞ்சர் கோட்டை. இது சண்டேல் அரசனாலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

"பூர்மல் கலிஞசர்க்கோட்டைக்கு விஜயமாகப்போயிருந்தபொழுது அலாவுக்குச் சொந்தமான மிக நேர்த்தியான குதிரையொன்றைப் பார்த்து அது தனக்குவேண்டுமென்று இச்சித்து கேட்டான். அலா, அது தானேறிச் சவாரி செய்யும் அருமைக்குதிரையானதால் அதை

விட்டுப்பிரியமனமில்லாதவனாகக்காட்டினான். உடனே சண்டேல் அரசன் அவ்விராஜகுமாரர்களும், அவர்கள் தகப்பனும் தனக்குச்செய்த பேருதவிகளையெல்லாம் மறந்து தன் நாட்டைவிட்டுப்போகும்படி கட்டளையிட்டான். இது அவர்களுக்குப் பெருத்த அவமானமாயிற்று. அவர்கள் தங்கள் தாயாரோடும்பரிவாரங்களோடும், அந்நாட்டைவிட்டுப் போகையில் அடுத்திருந்து இக்கலகத்துக் காரணமாயிருந்த புரிஹாராஜபுத்திரத் தலைவனுடைய கிராமங்களைக் கொளுத்திவிட்டு வல்லார்க்கு அடைக்கலமான கானேஜ் நகருக்குச்சென்று, ஐயசந்தராஜனால் உபசரித்தேற்றுக்கொள்ளபபெற்று, அது முதல் அங்கேயே வசித்துக்கொண் டிருக்கிறார்கள்" என்றுசொல்லி, சண்டேல் அரசனுடைய பாரதியாகிய ஜக்நக், இப்பொழுது மாலன்தேவி தூண்டுதலால், அவர்கள் உதவியைக்கோறியழைத்துவரச் சென்ற விவரத்தைச் சொல்லுகிறார்.

ஜக்நக் கன்யாகுப்ஜம் சென்று அலா, உதிலா என்னும் ராஜகுமாரர்களைக் கண்டு "சௌஹான் மஹோபாவுக் கருகிலுள்ள மைதானத்தில் வந்து பாளையமிறங்கியிருக்கிறான். நரசிங், வீரசிங், இவர்கள் இருவரும சண்டையில் விழுந்துவிட்டார்கள். ஸிர்ஸ்வாகோட்டையை எரித்துவிட்டார்கள். சௌஹான் பூர்மல்ராஜ்ஜியத்தை நாசம்செய்து வருகிறான். ஒருமாசத்துக்கு சண்டையை நிறுத்தி சமாதானமாயிருக்கும்படி கேட்டுக்கொண்டு, உங்களை இந்த ஆபத்துக் காலத்தில் வந்து உதவிசெய்யும்படி அழைத்துவர என்னைத் தூதனுப்பியிருக்கிறார்கள். கேளுங்கள் ராஜகுமாரர்களே, நீங்கள் மஹோபா நாட்டைவிட்டு வந்ததுமுதல் ராணி மாலன்தேவி துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறாள். கானேஜிருக்கும் திக்கைநோக்கி உங்களை நினைக்கும்போதெல்லாம், கண்ணீர் சொரிந்து சண்டேல் வம்சத்துக்கீர்த்திக்குப் போங்காலம் வந்துவிட்டதென்று ஏக்கிக்கிறாள். சண்டேல் அரசன் கீர்த்தி போய்விட்டால், அப்புறம் உங்கள் மனமே யுங்களைச்சு[illegible], வீணாகவருத்தப்படுவீர்கள். காலத்திலேதானே மஹோபாவைக் காப்பாற்ற நினையுங்கள்" என்று உருக்கமாய்ச் சொல்லி அவர்களைத் திரும்பும்படி கேட்டுக்கொண்டான்.

"மஹோபா நாசமாகப் போகட்டும்! சண்டேல்வம்சம் அழிந்து பூண்டற்றுப்போகட்டும்! எங்கள் தகப்பனார் அவன் சேவகத்தில் தன் தலையைக்கொடுத்து அவனுக்குக்காக வெற்றிகள்பெற்றார். அவருடைய உதவியால் அவன் இராஜ்ஜியம் பரவி விஸ்தீரிணமடைந்தது. அவதூறு சொன்ன புரிஹாரனைக்கூப்பிட்டு சௌஹானை யெதிர்க்கும்படி அவன் சைன்னியங்களை நடத்திக்கொண்டு போகச்சொல்கிறதுதானே! அவனுடைய ராஜ்ஜியத்தை நாங்கள் தலையால் தாங்கிவந்தோம். கோண்டல் ஜாதியாரை மடக்கியடித்துத் துறத்தி அவர்கள் கோட்டைகளையும் அவன் ராஜ்ஜியத்தோடு சேர்த்தது நாங்கள். 'பயானு' நாட்டுத் தலைவனை யெதிர்த்துப் போர்புரிந்தது நாங்கள். சௌஹானுடைய சிற்றரசர்களில் ஒருவனான அம்பார்நாட்டு 'பஜூன்ராஜ் சண்டேல நாட்டை வெல்லாமற்றடுத்தது நான் (மாரைத்தட்டிக்கொண்டு அலாசொல்கிறான்.) வடதேசத்து சுல்தானுடைய அமீர்கள் எங்கள்முன் புறங்காட்டி ஓடினார்கள். அந்தர்வேதியை நான் திக்கிரையாக்கினேன். எங்களுடைய தகப்பனார் ஜெஸ்ராஜ் 10-அரசர்களையடக்கி அவனுக்குக் கப்பம் கட்டும்படி செய்தார். இவ்வளவும் நாங்கள் செய்தோம். இதற்கெல்லாம் பிரதிபலனாக அவன் எங்களை நாட்டைவிட்டோட்டினான். அவனுக்காகப் போர்புரிகையில் ஏழுதரம் நான யுத்தகளத்தில் காயம்பட்டேன். என்னுடைய தகப்பனார் இறந்தபிறகு 40-சண்டைகளில் அவனுக்காக வெற்றிபெற்றேன். ஏழுதரம் என் தம்பி உதிலன் போர்க்களத்திலிருந்து அவனுக்கு ஜயபத்திரிகை கொண்டுபோயிருக்கிறான். மூன்று தரம் நான் போரில் மடிவது தடுக்கக்கூடாததுபோல் நேரிட்டது. அவனுடைய வம்சத்தின் கீர்த்தியை நான் இப்படியெல்லாம் காப்பாற்றி வந்தேன். இதற்கெல்லாம் எனக்குக்கிடைத்த மரியாதையென்ன? தேசப்பிரஷ்டனானதே!"



ஜக்நக்பாரதி இவன் கோபத்தைக்கண்டு பின்வாங்காமல் அவர்களைநோக்கிப் பின்னுமுரைக்கிறான்: "பூர்மல்லினுடைய தகப்பனார் அவனைக்குழந்தையாக விட்டுச்சென்றார். உங்களுடைய தகப்பனார் அவனுக்குத் தகப்பன் ஸ்தானத்திலிருந்து அவனை முன்னுக்குக்கொண்டுவந்தார். தகப்பன் முன்னுக்குக் கொண்டுவந்த அரசனை அவன் பிள்ளைகள் ஆபத்துக் காலத்தில் ஆதரிக்காமல் விடலாமா? ஆபத்துக் காலத்தில் அரசனைக்கைவிட்ட இராஜபுத்திரன் நரகத்தையடைவானென்பதுங்களுக்குத் தெரியாதா? ஆகையால் உங்கள் தகப்பனார்காட்டிய இராஜவிசுவாசத்தை நீங்கள் கைவிடாமல் தலைமேற்பாரமாகக்கொண்டு, இச்சமயம் கூடவந்து மஹோபாவைக் காப்பாற்றுங்கள். நீங்கள் பிறந்தபோது சந்தோஷப்பட்டு ஆயிரங் கணக்காகச் செலவழித்து உற்சவங்கொண்டாடின ராஜவம்சம் அழிந்துபோகும்போல் ஆபத்திலிருக்கையில் உங்களுக்கு கானேஜில் தங்கியிருக்க மனம்வருகிறதா? தன் சொந்தப்பிள்ளைகளைப்போல் உங்களை நேசிக்கும் ராணி மாலன்தேவி உங்களைத் திரும்பிவரும்படி வற்புறுத்தியழைக்கிறாள். உங்கள் தாயார் தேவாள்தேவி மஹோபாவிலிருந்தபொழுது ஆபத்துக்காலத்தில் உங்களுயிரும் மஹோபாவும் ஒருபோதும் பிரியாதென்று அடிக்கடிச்சொல்லி வாக்குக்கொடுத்ததுண்டே, அதைச்சொல்லி அவ்வாக்கை இப்பொழுது நிறைவேற்றும்படி தேவாள்தேவியைக்கேட்கும்படி எனக்கு ராணி உத்தரவு செய்திருக்கிறாள். வாக்குத்தவறினவன், இகத்தில் அவமதிக்கப்பட்டு, பரத்திலும் நரகப்பிராப்தியடைந்து சூரிய சந்திரர் உள்ளவரையில் மீட்சியின்றி அங்கேயேகிடந்து நரகவாதனை யனுபவிப்பானென்று நீங்கள் அறியீர்களா!" என்று மறுபடியும் அவர்கள் உதவியைக் கோறினான். தேவாள்தேவி, ராணி சொல்லியனுப்பிய வார்த்தைகளைக்கேட்டதும், பிள்ளைகளைப்பார்த்து, "நாம் இப்பொழுதே மஹோபாவுக்கு ஓடி உதவிசெய்வோம் புறப்படுங்கள்!" என்று அவசரமாய்ச்சொன்னாள். அலா அவ்வார்த்தைகளைக்கேட்டு மௌனமாயிருந்தான். அவன் தம்பி உதிலன் "மஹோபாவில் பேய் பிசாசுகள் வந்தடையட்டும்!—வருத்தமுற்றகாலத்தில் இரக்கமின்றி எங்களை நாட்டைவிட்டுத் துரத்தினானே, அதை நாங்கள் மறப்போமா?—மஹோபாவுக்குத் திரும்பவா-அது இருந்தாலென்ன, விழுந்து நாசமாகப் போனாலென்ன, இரண்டும் எனக்கு ஒன்றுதான்; இனிமேல் கானேஜ்தான் எனக்கு இருப்பிடம், ஸ்வபூமி." என்று உரத்துப் பதில் கூறினான்.

இதைக்கேட்ட தேவாள்தேவிக்கு உடல் பதைத்தது; கண்சிவந்தது; மனம் கொதித்தது. "ஆ! தெய்வமே! என்னை மலடியாகச்செய்யாமற் போனையே! இராஜபுத்திரர்கள் தர்மத்தைவிட்டு ஆபத்திலுள்ள தங்கள் அரசனுக்கு உதவிசெய்யாமலிருக்கும் இந்தப் புத்திரர்களை ஏன் பெற்றேன்?"—என்று துக்கப்பெருக்கால் அவள் மனமுடைய, ஆகாசத்தைப்பார்த்து அவள் கண்களைத் தூக்கிக்கொண்டு "ஓ! பரமேசுவரா, குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்புகளான இப்பிள்ளைகளைப் பெறவா நான் பிரசவ வேதனை யனுபவிக்கும்படிச் செய்தாய்! (பிள்ளைகளைப் பார்த்து) ஆகாப் பிள்ளைகளே! உண்மையான இராஜபுத்திர குலத்திற் பிறந்தவன் மனம், சண்டைப்பேச்சைக் கேட்டமாத்திரத்தில் சந்தோஷப்பட்டுக் குதிக்கும்—சீர்கெட்ட நீங்கள் ஜெஸ்ராஜாவுக்குப் பிறந்த பிள்ளைகளாக இருக்கமாட்டீர்கள்—யாரோ குறும்பன் திருட்டுத்தனமாய் என்னையறியாமல் என்னைச் சேர்ந்திருக்கவேண்டும், அவனிடத்திலிருந்து நீங்களுற்பத்தியாயிருக்கவேண்டும்."—என்று படபடத்து மனம் வெதும்பத் துக்கித் துச் சொன்னாள். இதைக்கேட்டு ராஜகுமாரர்கள், விசனத்தால் முகம் வாடிவதங்க எழுந்திருந்து "மஹோபாவைக் காப்பதில் எங்கள் பிராணனைவிட்டு, உடம்பெல்லாம்காயம்நிரம்ப யுத்தகளத்தில் என்றும்

அழியா வீரச்செய்கைகள் செய்தோமானல்,--போர்க்களத்தில் முதலாயிருந்து, எதிரிகளைச் சின்னபின்னப்படுத்தின பிறகு எங்கள் தலைகள் உருண்டதானல்,—சண்டைமுகத்தில் வீரர்களை யெதிர்த்து வெம்போர் செய்து சௌஹனுடைய வீரர்களே புகழும்படி எங்கள் இரத்தத்தை யுத்தகளத்திற் சிந்தி இருவழியிலும் எங்கள் வமிசத்தின் மேலான கீர்த்தியை நிலைநாட்டி ஜ்வலிக்கச் செய்தோமானல், அப்பொழுது எங்கள் தாய் சந்தோஷப்படட்டும்'' என்று சிங்கக்குட்டிகள்போல் யுத்தத்துக்குச் சன்னத்தர்களாகப் புறப்பட்டார்கள்.

உடனே ஜயசந்தராஜாவினிடம் சென்று மஹோபாவைக் காக்கும்பொருட்டு போய் உதவிபுரிய அனுமதி வேண்டிக்கேட்க, அந்த ராஜனும் மனமகிழ்ந்து அவர்களுக்குவேண்டிய பிருது வெகுமதிகளும் படையுதவியும் கொடுத்து, இராஜபுத்திரர்கள் கொள்கைக்குக்குறைவு வாராதபடி நடந்துகொள்வதே மேலென்று புகழ்ந்து உபசாரங்கள் செய்தனுப்பினுன்.

வரும் வழியில் அபசகுனங்கள் அனேகங்கண்டார்கள். கூடவந்த பாரதி அவைகளின் பலாபலன்களை யெடுத்துரைக்க, கானேஜ் அரசன் அனுப்பியபடைக்குத்தலைவனுகவந்த லக்ஷ்மணசிங் மனதில் அதைரியப்பட்டான். 'பினூர்' இராஜகுமாரர்களும், சண்டேல் ராஜாவின் கீர்த்திக்குப்போங்காலம் வந்துவிட்டதென்று சகுனக் குறிகளாலுணர்ந்தாலும், அவர்கள் மனதில் மட்டும் சிறிதும் அதைரியப்படாமல், "உண்மையாயுள்ள இராஜபுத்திரன், தான்போகும் பாதை எவ்வளவு காடு முரடாகவும், முள் முனையாகவு மிருந்தாலும், கடைசியில் அது போர்முகத்திற்கொண்டுவிடுமென்று மட்டுமறிந்தால் வழியிலுள்ள வருத்தங்களை அவன் சிறுதும் பாராட்டான்:'' என்று சொல்லி, பூர்மலுக்கு உதவி வந்ததென்று சந்தோஷமுண்டுபண்ணுவதொன்றையே பெரிதாகக்கருதி வெகுவிரைவாகச் சென்றார்கள். வழியில் எங்கும் தங்கவில்லை; மஹோபாவுக்குள் புகுமுன்மட்டும் சிறிது தங்கி, மஞ்சள் உடைதரித்து உயிரைப்பார்க்காமல் பிராணன்போகும்வரையில் யுத்தம் செய்கிற விரதம் பூண்டார்கள். சண்டேல் அரசன் அவர்கள்வரவைக்கேட்டுச் சந்தோஷித்து வெகுதூரம் எதிர்வந்து அழைத்து அவர்களைக் கட்டித்தழுவிக் கொண்டாடி நகருக்கு அழைத்துச்சென்றான். ராணி மாளன்தேவியும் வந்து தேவாள்தேவியை யெதிர்கொண்டுபசரித்து அரண்மனைக்கழைத்துச்சென்றாள்.

ராணி, பினூர் அரசர்களை அரண்மனைவாசலில் எதிர்கொண்டு, ஆலத்தி சுத்தி ஆசீர்வதித்து உள்ளேயழைத்துச் சென்றாள். தூதுபோய்வந்த பாரதிக்கு இதற்காக கிராமங்கள் மானியமாகவிடப்பட்டன.

சமாதானம் செய்துகொண்டு ஒரு மாசமும் கழிந்துபோய்விட்டது. சண்டேல்ராஜா இன்னும் சண்டைக்குப் புறப்பட்டானில்லை, சௌஹன் பாளையமிறங்கியிருந்த இடத்தில் மேல்நடவடிக்கைநடத்த ஆலோசனை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சந்துபாரதி, ப்ரித்விராஜாவைநோக்கி பினூர் இராஜகுமாரர்கள் வந்துசேர்ந்தும், இன்னும் சண்டையாரம்பம் செய்யவில்லை: ஆகையால் எதிரிக்கு மறுபடியும் ஒரு தூதனுப்பி சண்டைதொடங்கவாவது, இல்லாவிட்டால் மஹோபாவை விட்டுவிட்டு டில்லிக்குக் கப்பங் கட்டுவதாக ஒப்புக்கொள்ளவாவது இரண்டிலொன்றை உடனே சம்மதிக்கவேண்டுமென்றுகேட்கும்படி ஆலோசனைசொல்ல, அதைக்கேட்டுப் பித்விராஜாவும் அப்படியே ஒரு தூதனுப்பினுன். அவன் சொல்லியனுப்பியதாவது:—"சமாதானம் கழிந்து ஏழுநாள் வரையில் இராஜபுத்திரர்கள் கோட்பாட்டுப்படி காத்திருந்தேன்; உதவிவந்து இத்தனை நாளாகியும் இன்னும் சண்டைக்காரம்பம் செய்யவில்லை. சிங்கநாதம் சப்திக்கவில்லை. காயம்பட்டவர்களைக் கொன்று இராஜபுத்திரர்கள் கோட்பாட்டுக்குக் குறைவாக



நடந்துகொண்டபடியால் இந்தச்சண்டையுண்டாக நேரிட்டது. உடனே சிங்கநாதம் செய்து சண்டைக்குப் புறப்படட்டும். சண்டை செய்ய இஷ்டமில்லாவிடில், மஹோபாவை விட்டுவிட்டு டில்லிக்குக கீழ்ப்படிந்து கப்பம் கட்டிவருவதாகத் தெரியப்படுத்தட்டும்'' என்று சொல்லியனுப்பினுன்.

பூர்மல் இச்சமாசாரத்தைக்கேட்கவும் கதிகலங்கினுன்: ஆயினும் அவன் தலைவர்களையழைத்து ஆதிவாரத்தன்று சண்டை தொடங்குவதாகச்சொல்லியனுப்பினுன்.

ப்ரித்விராஜா அதுவரையில் காத்திருக்கவுடன்படாது, சுக்கிரவாரத்தன்றே சங்கு முழக்கி நகாரா அடிக்க உத்தரவுசெய்தான். உடனே அவன் சேனைகள் யுத்தத்துக்குக் கிளம்பிவிட்டன. எதிர்த்த சைனியங்களை முறியடித்து ஊர்களைக்கொளுத்தி நாசம்செய்துகொண்டு, அவன் தலைநகராகிய மஹோபாவை நோக்கிச்சென்றான்.

மஹோபாவில் இச்சமயம் என்னசெய்வதென்று தீர்மானிக்க ஒரு பெரிய ஆலோசனை சபை கூடிற்று. அச்சபையில் ராணி மாலன்தேவியும், தேவாள்தேவியும் ஒரு மெல்லிய திரைக்குப் பின்னிருந்து ஆலோசனை நடத்தினுர்கள். உடனே மாலன்தேவி தேவாள்தேவியைப்பார்த்து "அலாவின் தாயே, மண்டலீசனை மஹாராஜாவை யெதிர்த்து நாம் எப்படி ஈடுகொடுப்போம். தோல்வியடைந்தோமானுல் மஹோபா போயிற்று. கப்பம் கட்டச் சம்மதித்தாலோ பொறுக்கமுடியாத அவமானம் சித்திக்கிறது. இதற்கு என்ன செய்கிறது?'' என்று கேட்டாள். அதற்கு தேவாள்தேவி, "முதலில் இச்சபையில் கூடியிருக்குந் தலைவர்கள் அபிப்பிராயத்தை வரிசையாகச் சொல்லச்சொல்லிக் கேட்போம்'' என்றாள்.

உடனே அலா எழுந்திருந்து "தாயே, உன் புத்திரன் சொல்லும் வாக்கைக்கேளும். நற்குலத்திற்பிறந்த இராஜபுத்திரன், தன்னைப்பற்றிய எண்ணமின்றித்தன்னரசனுக்குச்செலுத்தவேண்டிய பக்தியொன்றையே பெரிதாகக் கொண்டு தன் அரசனுக்காகத் தன் உயிரைக்கொடுப்பான்; ஆகையால், பூர்மல் கீர்த்தியைக்காப்பாற்ற வேண்டுமென்கிற ஒரே எண்ணம் தான் என்மனத்தி லுள்ளது. அவள் * உயிரோடிருந்தால் பார்வதியைப் போல் சதியாகி சூர்யலோகத்திலும் என்னோடு வந்துசேருவாள். ஓ, அரசனே, என்னுடைய புத்திரன் ஈண்டலை உன்னிடம் விட்டுப்போகிறேன்: என்தாய் தேவாள்தேவியின்கீர்த்தியையும் உன் பாதுகாப்பில் வைத்துப்போகிறேன்''

ராணி மாலன்தேவி சொல்லுகிறாள்:—"சௌஹனுடைய வீரர்கள் ஏராளமாகவிருப்பதுடன், மூர்க்கர்களாகவுமிருக்கிறார்கள். கப்பம்கட்டுவதாக ஒப்புக்கொண்டு மஹோபாவைக்காப்பாற்றிக்கொள்ளுங்கள்.'' இதைக்கேட்ட உதிலன் உள்ளம் பொங்கி யெழுந்தது. அவன் ராணியைப்பார்த்து:—"ஆதரவற்றவர்களைக்கொன்றபோது இந்த எண்ணம் எங்கு போயிற்று? அப்பொழுது என்பேச்சு ஏறவில்லையே. இந்தப்புத்தி இப்பொழுது எங்கிருந்துவந்தது? அப்பொழுது மும்முறை உம்மை மன்னிப்புக்கேட்டுக்கொண்டேனே. போனது போகட்டும். என் உயிர் உள்ளவரையில் மஹோபாவுக்குப் பயமொன்றுமில்லை! ஓ! பூர்மல் ராஜாவே உன் சண்டையில் நாங்கள் தேவகன்னிகைகளை மணம்புரிவோம். †''

இதைக்கேட்ட தேவாள்தேவி சொல்கிறாள்:—"நன்றாய்ச்சொன்னுய், மகனே! இனி ஆகவேண்டிய தொன்றுமில்லை. உன் வீரச்செய்கைகளால் உன்னைப்பெற்றுவளர்த்த தாயின் கீர்த்தியைப் பிரகாசிக்கச்செய்யவேண்டியதொன்றொழிய வேறில்லை. எதிரிகளால் ஊரைவிட்டுத் துரத்தப்பட்ட பயிரிடுங்குடிக

* தன் பத்னியைக்குறிக்கிறான். இராஜபுத்திரர்கள் தன் மனைவியின் பேரைச் சொல்வதில்லை.

† சண்டைமுகத்தில் விழுந்தவர் தேவமாதர்களால் வரிக்கப்படுவார்களென்பது இராஜபுத்திரர்களது கொள்கையும் நம்பிக்கையும்.

ளின் கூக்குரல் காதில் விழுகின்றது. நாம் இங்கிருந்து ஆலோசனைசெய்துகொண்டிருக்கையில் நமது கிராமங்களெல்லாம் தீக்கிரையாகக் கொடுக்கப்படுகின்றன."

பூர்மல் ராஜன் "ஆனால், இன்றைக்குச் சனிவாரம் ஆயிற்றே, நாளைக்குப் பகைவனை யெதிர்த்துச் சண்டை செய்வோம்" என்று போக்குச்சொன்னான்.

இதுகேட்ட அலா ஆத்திரத்தோடு அரசனை நோக்கி: "தீயிட்டுப் பாழாகப்போகும் தன்பட்டணங்களிலிருந்தெழும் புகையைக்கண்டும், தன்னுடைய விளைநிலங்கள் நாசமாக்கப்படுவதைப்பார்த்தும் சும்மாவிருப்பவன் இராஜபுத்திரன் அல்லன்—தன் தேசத்தின்மீது பகைவன் படையெடுத்துவருகையில் பயத்துக்காளாகிறவன், ரௌரவாதி நரகங்களை யடைந்து வருந்த, அவன் ஆத்மா பேய்ரூபங்கொண்டு, 60-ஆயிரம் வருஷங்களுக்கு பூதலோகங்களில் அலையும். சண்டைமுகத்தில் தன் கடமையைச் செலுத்துவதில் விழுந்துபோகும் வீரனே சூரியலோகமடைகிறான். அவன் வீரச்செய்கைகள் என்றுமழியாது நித்தியமாய் விளங்கும்" என்றாள்.

குரூரசித்தமுள்ளவனிடத்தில் பயங்கொள்ளித்தனமும் கூடவே குடியிருக்குமென்பது நிச்சயம். ஆகையால் இப்படி தீப்பறக்கச் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டும், பூர்மல் ரோசமுற்றுச் சண்டைக்குப் புறப்படத் திடங்கொள்ளாதவனாய்த் தன் மனைவியாகிய ராணியிடத்திற்போய்ப் புலம்பினான். அவள் அவன் ஆண்தன்மைக்குறைவைக் கண்டு திட்டி தன் சைனியங்களுக்குத் தலைவனாகவிருந்து சண்டைக்குப் போகும்படி கடிந்து சொன்னாள். யுத்தத்துக்குப் போகும் வீரர்கள் தங்கள் மனைவிகளைக் கடைசியாகத் தழுவிக்கொண்டு விடியற்காலையி லெழுந்து தங்கள் வைதீகக் கடன்களை முடித்து யுத்தத்துக்குச் சன்னத்தராய்ப் புறப்பட்டார்கள். பினாபூர் இராஜகுமாரனான அலா நவக்கிரக பூஜை செய்து, தன் குலதெய்வத்தை வேண்டி, அனுமார் ஆதரவாகக்கிடைத்த ரக்ஷையைக் கழுத்திலணிந்து, தன் புத்திரன் ஈண்டலையும், தம்பி உதிலனையுமழைத்து, லோகமாதாவறிய, தான் ஜெஸ்ராஜாவின் உதிரத்திற்பிறந்தவனென்பதையும் தேவாள்தேவியின் வயிற்றிற் பிறந்து அவள் ஸ்தன்யபானஞ்செய்து வளர்ந்தவன் என்பதையும் போர்முகத்தில் எதிரிகள் முன் காட்டி தன் வீரப்பிரதாபத்தையும் தன் பெற்றோர் கீர்த்தியையும், நிலை நாட்டுவதாக மறுபடியும் சபதம் கூறிக்கொண்டான். அது கேட்டு அவன் தம்பி உதிலனும் "நன்றாய்த் தீர்மானித்தீர் அண்ணா. என் கீர்வாளையும் எதிரிகள்முன் ஜ்வலிக்கச்செய்து சம்பார் அதிபதியே பொறிதட்டச்செய்கிறேன். என்முன் அவன்பின்வாங்குகிறான்பார்" என்று தானும் சபதம் கூறிப்பேசினான்.

தேவாள்தேவி தன் பிள்ளைகள் கூறிய சபதங்களைக்கேட்டுச் சந்தோஷித்து, "குழந்தைகளே! போய்வாருங்கள்; உண்டசோற்றுக்கு உண்மையாயிருங்கள்; உங்கள் அரசனுக்காக உங்கள்தலைகளை யிழப்பீர்களானால் ஸ்வர்க்கசாம்ராஜ்யம் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை, நடயுங்கள்" என்று தைரியம் சொல்லி அனுப்பினாள். அவள்பேசி வாய்மூடவும், கூடவிருந்த அவ்விராஜ குமாரர்களின் பத்னிமார் இருவரும்: "சத்பாத்திரமான மனையாள் யார்தான் தன் பதிக்குப்பின்னிருப்பாள்? சண்டைமுகத்தில் விழும் பதிக்குப்பின்னிருக்கும் ஸ்திரீ ஒருபோதும் மோக்ஷம் அடையாது. திருப்தியற்ற பிசாசுரூபமெடுத்து பூதலோகங்களில் அலைந்து திரிவாள் என்று *சௌரிஜி சொல்லி யிருக்கிறாளே," யென்றார்கள்.

இராஜபுத்திரர்களின் குணங்களும், தன்மையும், இராஜபுத்திர மாதர்களின் செல்வாக்கும் அக்காலத்திலிருந்தது இருந்தபடி இவ்வுபகதையைச்சிந்திப்போருக்கு விளங்குமென்பதிற்சந்தேகமில்லை.

C. V. S.

* லோகமாதாவாகிய பார்வதிக்கு வழங்கும்பேர்.



## நமது தேசத்தில் பெண்கல்வியின் ஸ்திதி. *

(ஒரு ஹிந்துமாது எழுதியது.)

அநேக வருஷ காலங்களாய் இந்து ஸ்திரீகளாகிய நமது கல்விக்காக மிகக் கவலை யெடுத்துக்கொண்டு நமது விருத்தியையும் சந்தோஷத்தையுமே தனது வாழ்நாளின் முக்கிய எண்ணமாய்க் கருதிக்கொண்டு நமது நன்மைக்காக மிக ஊக்கத்துடன் உழைத்து வருகின்ற மிஸ் மானிங் துரைசானி இன்று சாயந்திரம் நடிதிடையில் வீற்றிருப்பதற்கு நாம் மிகச் சந்தோஷமுள்ளவர்களா யிருக்கவேண்டும். பெண்கல்விக்காக இவ்வளவு கவலையும் பிரயாசையுமெடுத்துக் கொண்டிருக்கும் இந்த துரைசானி வந்திருக்கும் தருணத்தில் பெண்கல்வி இந்த தேசத்தில் முன்னாட்களில் எப்படியிருந்தது என்பதையும் இபோது எப்படி யிருக்கிறது என்பதையும் குறித்துப்பேசுவதே தகுந்த விஷயமாய்த் தோன்றுகிறது.

பூர்வகாலங்களில் கார்கி, மைத்ரேயி முதலிய ஸ்திரீ வித்வான்கள் இருந்தார்களென்று பிரசங்கங்களில் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் நல்ல கல்வியும் ஞானமுமுள்ள ஔவை என்ற ஸ்திரீ இருந்ததாய், அவருடைய பாடல்களால் நன்றாய்த் தெரியவருகிறது. ஆனால் அக்காலங்களில் இப்படிச் சொல்லப்பட்ட சில ஸ்திரீகளைத் தவிர, பொதுவாய ஸ்திரீகளெல்லாம் படித்திருந்தார்களோ என்பது சந்தேகம். மிகப் புத்திசாலிகளாயிருந்த சில ஸ்திரீகள், வித்தை கற்று சாஸ்திர பரீக்ஷை முதலியன செய்து வந்ததனாலேயே, அக்காலத்திலுள்ள மற்ற ஸ்திரீகளுக்கெல்லாம் கல்வியில் தேர்ச்சியும் கற்கவேண்டுமென்ற ஆசையுமிருந்ததென்று நினைப்பதற்குக்காரணமில்லை. ஆனால் இக்காலத்திலோ பொதுவாய் ஸ்திரீகளுக்கெல்லாம் எழுதப் படிக்கத் தெரியவேண்டும் என்ற ஆசையிருக்கிறது. மேலும் அநேக ஸ்திரீகள் அப்படியே கற்றுக்கொள்ளுகிறார்கள். நம்மவர்களுள் அநேகர் நமது முன்னோர்களிருந்த நிலைமையைக்குறித்து பெருமை கூறுவது மிக சாதாரணம். அதன் பிரகாரம் மேற்கூறிய வித்வசிரோமணிகளைக் குறித்தும் வீண்பெருமை கூறிக்கொள்வதுண்டு. ஆனால் அவர்கள் பெருமையைக் குறித்துப் பேசுவதனால் நமக்கென்ன உண்டு? பல நூற்றாண்டுகளுக்கு முன் சில இந்துஸ்திரீகள் நன்றாய்க் கல்விகற்றிருந்ததனால் நாம் படித்தாற்போலாகுமா? அவர்களது கல்வித்திறமை நமது குழந்தைகளுக்கு நல்லறிவைப் புகட்டி அவர்களை நல்வழிகளில் திருப்பக் கூடுமோ? அல்லது அது நமது கணவர்களைச் சந்தோஷப்படுத்தி அவர்கள் வேலையில் ஒத்தாசைக்கிடமாயிருக்குமோ? ஆகையால் வீண் கர்வத்துடன் நமது முன்னோர்களைப் புகழ்ந்து கொண்டிருப்பதைக் காட்டிலும், இப்போது நம்முன்னோர்கள் நம்மைவந்து பார்த்தால் அவர்கள் நம்மைப் புகழத்தக்கபடி நாம் நடந்து கொள்வது எவ்வளவு சிலாக்கியமானது?

இப்போது நமது நாட்டை ஆளும் பிரிடிஷ் துரைத்தனத்தார் தான், மிகக்கருத்து எடுத்துக்கொண்டு பெண்கல்வியை விருத்திசெய்ய விரும்புகிறார்கள். நமது இந்து ராஜாக்கள் நாட்களில் என்ன செய்தார்கள் என்பது புராணம் மூலியமாய் நமக்கு தெரிகின்றதேயொழிய நிச்சயமாய் சரித்திர பூர்வமாய்த் தெரியாது. ஆயினும் இராஜாங்கத்தார் பொறுப்பு எடுத்துக்கொண்டு பெண்கல்வியை விருத்திசெய்ததாக தகுந்த சாக்ஷியங்கள் இல்லை. மகம்மதியர் நாட்களிலோ கேட்கவே வேண்டியதில்லை. அவர்கள் ஸ்திரீகளைச் சும்மாவிட்டால் அதுவே பெரிய உபகாரமாய் ஜனங்கள் எண்ணினார்கள். இங்கிலீஷ்காரர்கள் நமது தேசத்தைக் கைக்கொண்டபிறகுதான், இன்னும் நமது தேசத்துக்குச் செய்யும் மற்ற நன்மைகளுடன் பெண்கல்வியையும் கொஞ்சம் கொஞ்சமாய் விருத்தி

* பிப்ரவரிமீ 11உ செட்டிப்பெண்கள் பாடசாலையில் கூடிய ஹிந்துமாதர் கூட்டத்தில் மிஸ் மானிங் வீற்றிருக்க, ஒரு ஹிந்துமாது படித்த உபந்யாசம்.

செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்களுக்குள்ளும், கிறிஸ்தவ பாதிரிமார்கள் தான் முதலில் பெண்கல்வியில் சிரத்தையெடுத்துக் கொண்டார்கள். சுமார் 1840-ம்வருஷத்தில் சென்னை ராஜதானியில் முதல் முதலில் கிறிஸ்தவப்பெண்பிள்ளைகளுக்காக பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தினார்கள். 1850-ம் வருஷத்தில் சுமார் 250 - பெண்பாடசாலைகளும் அவைகளில் சுமார் 8000 - மாணாக்கர்களும் இருந்ததாகத் தெரியவருகிறது. இப்பாடசாலைகளெல்லாம் கிறிஸ்தவ பாதிரிகளுக்குச் சேர்ந்தவையே. 1854-ம் வருஷத்தில் துரைத்தனத்தார் கல்வியின் விஷயமாய்ப் பொதுவாய் அநேக ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தார்கள். அவைகளில் பெண்கல்வியையும் சேர்த்துக்கொண்டு அதற்காகப் பணஉதவி (Grant) முதலானவைகள் கொடுத்தும், இன்னும் மற்ற விதமாயும் அபிவிருத்தி செய்யவேண்டிய ஏற்பாடு செய்தார்கள். இதனால் அநேகம் புதிய பெண்பாடசாலைகளுண்டாய், கல்வி கற்கும் பெண்கள் அதிகமானார்கள். 1882 - ம் வருஷத்தில் சுமார் 560 - பெண் பாடசாலைகளும் அவைகளில் 35-ஆயிரம் மாணாக்கர்களும் இருந்ததாய்த் தெரியவருகிறது. ஆனால் சென்ற வருஷத்திலோ, இந்த ராஜதானியில் சுமார் 1,100 பெண் பாடசாலைகளும் அவைகளில் லக்ஷத்து இருபதினாயிரம் மாணாக்கர்களும் இருந்ததாகத் தெரியவருகிறது.

நமது ராஜதானியை விட்டு வங்காளத்தில் பெண் கல்வியின் ஸ்திதியைக் குறித்து நோக்குங்கால், அங்கேயும் முதலில் கிறிஸ்தவ பாதிரிகள்தான் அதைத்துவக்கினதாய்த் தெரியவருகிறது. ஆனால் 1850-ம் வருஷத்தில் இந்து ஸ்திரீகளுக்கென்றே தனியாயிருக்கும் காலேஜாகிய 'பெத்யூன் காலேஜ்' (Bethune College) அங்கே ஸ்தாபிக்கப்பட்டது. சில வருஷங்கள் சென்றபின் டல்ஹௌஸி பிரபு (Lord Dalhousie) கவர்னர் ஜனரலாயிருக்கையில், இது கவர்ன்மெண்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்போது அவர்கள் வசத்தில் தானிருக்கிறது. 1879 - ம் வருஷத்தில் இந்தப்பாடசாலையிலிருந்து ஸ்திரீகள் பி. ஏ. பரிக்ஷைக்குச் சென்றார்கள். அது முதல் வருஷா வருஷம் அந்தப் பரிக்ஷைக்குச் சென்று தேறிப் பட்டம் பெற்று வருகிறார்கள். சிலர் மிக கவுரவமாய்த் தேறுகிறார்கள். சிலர் M. A. பரிக்ஷையும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் இரண்டுபேர் சென்ற வருஷத்தில் கல்கத்தா (University) சர்வகலா சங்கத்தாரால் (Chief Examiners) முக்கிய பரிக்ஷாதிகாரிகளாய் நியமிக்கப்பட்டிருந்தார்கள். மேற்சொன்ன பெத்யூன் காலேஜைத்தவிர வங்காளத்தில் ஸ்திரீகளுக்கென்றே பெரிய பாடசாலைகள் இன்னும் சில இருக்கின்றன. இவ்விஷயங்களிலெல்லாம் நமது ராஜதானியைவிட வங்காளம் சிறந்ததாயிருந்தபோதிலும், பொதுவாய்ப்பார்த்தால், பிரம்மசமாஜத்தைச் சேர்ந்த சில ஸ்திரீகள் தான் மேற்சொன்ன பாடசாலைகளுக்குச் சென்று கற்கிறார்களேயொழிய, மற்றப்படியுள்ள ஹிந்து ஸ்திரீகள் நம்மிலும் வித்தையில் குறைவாகவே தானிருக்கிறார்களென்று தெரிகிறது.

பம்பாய் ராஜதானியிலும் முதலில் கிறிஸ்தவ பாதிரிகள்தான் பெண்கல்வியை விருத்தி செய்தார்கள். ஆனால் அந்த ராஜதானியில் இந்துக்கள் தங்கள் பெண்களுக்கென்றே, வெகுவருஷங்களுக்கு முன், பூனா, ஆமதபாத் முதலிய பட்டணங்களில் பாடசாலைகள் ஏற்படுத்தினார்கள். இப்போது பம்பாய் ராஜதானியில் பெண்கல்வி அதிக விருத்தியடைந்திருக்கிறதென்பது நமக்கெல்லாம் தெரிந்த விஷயமே.

மூன்று ராஜதானிகளிலும் கிறிஸ்தவ பாதிரிகள்தான் முதலில் பெண்கல்வியை விருத்தி செய்தார்களென்றும் கிறிஸ்தவப்பெண்பிள்ளைகள் தான் முதலில் கல்வி கற்றார்கள் என்றும் மேலே கண்டோம். இப்போது கூட இந்து ஸ்திரீகளை விட கிறிஸ்தவ ஸ்திரீகள் தான் வித்தையில் மேலாகவும் கணக்கில் அதிகமாகவும் படிக்கிறார்களென்பது நம்மெல்லாருக்கும்



தெரிந்த விஷயமே. நமது ராஜதானியில் இப்போது பி. ஏ. பரிக்ஷை தேறின ஸ்திரீகள் 3-4 பேர் இருக்கிறதாகத் தெரியவருகிறது. அதில் சென்ற வருஷம் அந்தப்பட்டம்பெற்ற மிஸ்ஸஸ் வைத்தியநாதனைத் தவிர மற்றவர்களெல்லாம் ஐரோப்பியர்கள். இப்போது எம். ஏ. பரிக்ஷையில் தேறின ஸ்திரீகள் 25 பேர் இருக்கிறதாகத் தெரியவருகிறது. அதில் 20 பேர் ஐரோப்பியர்களும் மற்ற 5 பேர் கிறிஸ்தவர்களுமாம். 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷையில் தேறியிருப்பவர்கள் 309 பேர் இருக்கிறார்களாம். அதில் 4 பிராமண ஸ்திரீகளும், 1 மகமதிய ஸ்திரீயும், 6 பார்சீக ஸ்திரீகளும், 71 கிறிஸ்தவர்களும், 227 ஐரோப்பியர்களும் இருப்பதாய்த் தெரியவருகிறது. மேற்கண்ட எண்ணிக்கைகளைப் பார்க்குங்காலத்தில் கிறிஸ்தவ ஸ்திரீகளும் ஐரோப்பிய ஸ்திரீகளும் அதிகமாய்க் கல்வி கற்கிறார்களேயொழிய நம்மவர்கள் கற்கிறதில்லை யென்று செவ்வையாய் விளங்குகிறது. பெண் பாடசாலைகளில் இன்னும் கீழ் வகுப்புகளாகிய 'லோயர்-செகண்டரி', 'ப்ரைமெரி' வகுப்புகளில் படிக்கும் பெண்களைக் கணக்கெடுத்தாலும், மேற்கண்ட விஷயமே தெரியவருகிறது. முன்னே யிருந்த ஸ்திதிக்கு இப்போது பெண்கல்வி விருத்தியாய்க் கொண்டிருக்கிறதென்பதற்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. ஆனால் ஆண்பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில், நமது பிள்ளைகள் கிறிஸ்தவப் பிள்ளைகளைக் காட்டிலும் அதிகமாயிருக்க, பெண்பாடசாலைகளில் மாத்திரம் ஏன் கம்மியாயிருக்கிறார்கள் ? இது நமக்கு மிகவும்வெட்கத்தைத் தரத்தகுந்ததல்லவா ? மேலும் ஆண்பிள்ளைகள் பாடசாலைகளில் முக்கால்வாசிப் பிள்ளைகள் பிராமணர்களாயிருக்க, பெண்பாடசாலைகளில் 100-க்கு 10 க்கூட பிராமணப் பெண்கள் இல்லாதிருப்பதற்கு என்னகாரணம்? இந்தக் குறைகளை யெல்லாம் சீர்திருத்துவது நம்முடைய கடமையாய் எண்ணிக்கொண்டு நாம் ஒவ்வொருவரும் நம்மாலியன்ற மட்டும் முயல வேண்டும்.

கல்கத்தாவில் இந்து ஸ்திரீகளுக்கென்றே தனியாக ஏற்பட்டுள்ள 'பெத்யூன் காலேஜ்' ஒன்றிருக்கிறதென்றும் அதிலிருந்து வருஷா வருஷம் ஸ்திரீகள் பி. ஏ. பரீக்ஷைக்குச் சென்று பட்டம் பெறுகிறார்களென்றும் முன்னமே கண்டிருக்கிறோம். பம்பாயில் இப்படிக்கொத்த காலேஜ் இல்லாவிடினும் இந்து ஸ்திரீகளுக்காக அநேகம் உயர்தரபாடசாலைகள் (High Schools) இருக்கின்றன. நமது பக்கத்தில் சுதேச சமஸ்தானமாகிய மைசூரில் மகாராணியவர்களது காலேஜ் ஒன்றிருக்கிறது. பாளயங்கோட்டையிலும் இந்தப்பட்டணத்திலும் கிறிஸ்தவ பாதிரிகளால் ஏற்படுத்தப்பட்ட காலேஜ் ஒவ்வொன்றிருக்கின்றன. இவைகளிலெல்லாம் எப். ஏ. பரிக்ஷைக்குக் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால் இவைகளைத் தவிர இந்து ஸ்திரீகளுக்கென்று நம்மவர்களால் நடத்தப்பட்ட 'ஹைஸ்கூல்கள்' எங்கேயிருக்கின்றன ? நமது நன்மைக்காக மிகப்பிரயாசை யெடுத்துக்கொண்டு அதிக கருத்தோடு உழைக்கிற மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானி இந்தப் பட்டணத்தில் பெண்களுக்காக ஒரு 'ஹைஸ்கூல்' ஏற்படுத்துவதற்காக அதிக பிரயத்தனம் செய்ததாகவும் அந்தப் பிரயத்தனங்களெல்லாம் உபயோகமொன்றுமில்லாமல் முடிந்ததாகவும் கேட்க மிக விசனமாயிற்று. அப்படி 'ஹைஸ்கூல்' ஏற்படுத்தக் கூடாததற்குக்காரணம், நம்மவர்களுள் தனிகர்களாயிருப்போர் திரவிய சகாயம் செய்ய இஷ்டமில்லாதிருத்தல் ஒரு காரணமென்றும், மற்றொரு காரணம் பாடசாலைக்கு வேண்டிய மாணாக்கர்கள் இல்லையென்றும் தெரியவருகிறது. முதல் காரணத்தை நீக்க நம்மாலாகாவிட்டாலும், இரண்டாவது காரணத்தை நீக்க நாம் பிரயாசையெடுத்துக்கொண்டால் முடியுமே.

பெண் கல்வியை விருத்திசெய்ய, மேற்கண்ட பாடசாலைகளைத் தவிர, வீட்டுக்கு வந்து கல்வி கற்பிக்கும் 'ஜினை' உபாத்திமார்களும் இருக்கிற விஷயம் நமக்கெல்லாம் தெரிந்ததே. இந்த 'ஜினை' ஏற்பாடு இந்தப் பட்டணம்

தவிர கூடலூர், கோயமுத்தூர், சேலம் முதலிய பட்டணங்களிலும் இருக்கின்றனவாம். இவைகளிற்சில கிறிஸ்தவ மிஷன்களால் நடத்தப்பட்டும், மற்றவைகளெல்லாம் 'நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன்' என்னும் சங்கத்தால் நடத்தப்பட்டும் வருகின்றன. லண்டனிலுள்ள தலைச்சங்கத்துக்கு, இப்போது நமதிடையிலிருக்கும் மிஸ மானிங் துரைசானி தான முக்கிய காரியதரிசி. மகாராணியின் ஜேஷ்டபுத்திரராகிய வேல்ஸ் இளவரசரும் இன்னும் இந்த தேசத்தில் கவர்னர் ஜெனரல், கவர்னர் உத்தியோகங்களிலிருந்து நீங்கிச் சென்றவர்களும், மிக முதன்மையான மெம்பர்கள். அவர்களெல்லாம் நமது நன்மைக்காக எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்கு நாம் மிகவும் வந்தனமுடையவர்களாயிருக்க வேணடும்.

பொதுவாய்ப் பெண்கல்வியில் முன்னிலும் இப்போது கொஞ்சம் விருத்திக்குறைவு இருப்பதாய் இவ்விராஜதானியில் வித்யா இலாகாத் தலைவராயிருப்பவர் (Director of Public Instruction) சென்ற வருஷத்து ரிபோர்ட்டில் சொல்லியிருப்பதாய்த்தெரியவருகிறது. இந்தக் குற்றம் நிஜமாயிருக்கும் பக்ஷத்தில் நாம்கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். ஏனெனில் ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிப்பதனால் தீங்கு விளைகிறதென்ற சந்தேகத்துக்கிடமில்லா விட்டால் அது குறைவதற்குக் காரணமேயில்லை. மேற்சொன்ன சங்கதி நிஜமாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், கல்விகற்ற ஸ்திரீகள் தங்கள் பொறுமையினாலும், அடக்கத்தினாலும், பிறருக்கு உதவி செய்துகொண்டு நடந்து கொள்ளும் மற்ற எல்லா வித நடத்தைகளினாலும் கல்வியினால் ஸ்திரீயினது குணாதிசயங்கள் ஸ்வர்ணத்தில் பதித்த இரத்தினம் போல பிரகாசிக்குமே யொழிய தீங்கு அடையா என்று தெளிவாய்க் காட்டவேண்டும். அப்படிப் படித்த ஸ்திரீகளெல்லாம் நடந்துகொண்டால், கல்வியின் வாசனையறியாத மூடர்கள் கூட அதனது சிரேஷ்டத்தை நன்கு உணர்வார்கள்; பெண்கல்வி நாளுக்கு நாள் விருத்தியடையுமென்பதற்குச் சிறிதேனும் ஆக்ஷேபமில்லை.

ஸ்திரீகள் கல்விகற்பதற்குத் தடைகள் அநேகம் நமது தேசத்தில் இருக்கின்றன. இக்காரணங்களால் பெண்கல்வி விருத்தியடைகிறதில்லை. முதலாவது—பத்து வயதுக்கு மேல்பெண்கள் பள்ளிக்கூடத்துக்குப்போனால், ஊர் ஜனங்களுக்கு வெறுப்பு உண்டாகிறது, பேசப்போனால் நாம் இவ்விடத்தில் மாதத்துக்கு ஒருதடவை பிரசங்கங்களுக்கு வருகிறது கூட சாதாரண ஜனங்களுடைய எண்ணங்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் விரோதமாயிருக்கிறது. கிரகணம் முதலிய விசேஷ நாட்டிளில் புருஷர்களுக்கெல்லாம் எதிரே சமுத்திரத்தில் போய் ஸ்நானம் செய்வதில் தப்பில்லையாம். புருஷர்கள் நெருங்கிய கூட்டங்களுக்குள் உற்சவாதி நாட்களில், இராக்காலத்தில், கோயில்குளங்களுக்குச்செல்லுவதில் பிசகொன்றுமில்லையாம் ஆனால் பகற்காலத்தில ஸ்திரீகள்மாத்திரம் இருக்கும் பாடசாலைகளுக்கு. 10-வயதுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகள் சென்றால் தோஷத்துக் கிடமாகும் என்பார்கள். பொதுஜன அபிப்பிராயத்தை எதிர்த்துச் செல்வது கஷ்டம் தான். ஆனால் இந்த விஷயத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயம் எவ்வளவு மூடத்தனமானதாய் இருக்கிறது! மேலும் அநேகர் தங்கள் பெண்பிள்ளைகளைப்பாடசாலைகளுக்கனுப்ப வண்டி வைத்துக்கொடுக்கவும் இன்னும்மற்ற விதங்களில் பணம் செலவழிக்கவும் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். தவிரவும், ஸ்திரீகளுக்கும் படிக்கவேண்டுமென்ற ஆசை அதிகமாயில்லை. இப்படிக்கொத்த பல காரணங்களால்தான் பெண்கல்வி அதிகமாய் நமது தேசத்தில் விருத்தியாகிறதில்லை.

ஆனால் இவைகளுக்கெல்லாம் புருஷர்கள் பேரில் குற்றம் கூறுவதில் உபயோகமில்லை. அவர்கள் தங்களாலியன்ற மட்டும் பிரயாசைப் படுகிறார்கள். பிரயாசை யெடுத்துக்கொள்பவர்கள்பேரில் குற்றம் கூறினால் உள்ளதும்



போய்விடும். ஆகையால் நாமும் நம்மால் கூடிய உதவி செய்யவேண்டும். ஒவ்வொரு ஸ்திரீயும் தனது புருஷனிடத்தில் ஏன் கல்வி கற்றுக்கொள்ளக்கூடாது? அவர்கள் அவகாசமாயிருக்கும் காலத்தில் நாம் அவர்களைக் கற்றுக்கொடுக்கச் சொன்னால் செய்யமாட்டார்களா? எவ்வளவு சந்தோஷத்துடன் செய்வார்கள் "மனமுண்டானால் வழியுண்டாகும்" என்ற பழமொழியின்படி நாம் கல்வி கற்கவேண்டுமென்ற ஆசையுடன் வேண்டிய முயற்சிசெய்தால், கற்றுக்கொள்ள வழியில்லாமல் போகாது.

## வித்யா விஷயமாய் மிஸ் மானிங் செய்த ஓர் பிரசங்கம்.

"வித்யாப்யாச விஷயத்தில் குழந்தைகள், பெற்றோர், உபாத்தியாயர், இவர்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய முயற்சிகளும் அவற்றின் பலன்களும்" என்னும் தலைப்பின்கீழ் மிஸ் மானிங் சென்னையிலிருந்தபொழுது ஒரு பிரசங்கம்செய்தார். அது மிகவும் முக்கியமானதன்றி நாம் கவனித்துக் கிரகித்துக்கொண்டு பயன்படவேண்டிய ஆணித்தரமான புத்திமதிகள் பல நிரம்பினதாயிருப்பதால் அப்பிரசங்கத்தின் சாராம்ஸம் விளங்க அதை மொழிபெயர்த்து இங்கு பிரசுரிக்கிறோம்.

'படித்த மனிதன்', 'படித்த ஸ்திரீ' என்று சொல்லுகிறோமே, அப்படியென்றால் என்ன? படித்தவர் என்றால் இந்த ஜன்மத்தில் செய்யவேண்டிய கடமைகள், வேலைகளைச்செய்ய நன்றாகவும் ஜாக்கிரதையாகவும் பழக்கப்பட்டவர் என்று அருத்தம். இந்தப்பழக்கம் போதனையாலும் அப்பியாசத்தாலும், சொந்த முயற்சியாலும் சித்திக்கத் தக்கது. இப்படி அவர்களைத் தயார்செய்வதற்குத்தான் படிப்பித்தல் அல்லது வித்தியாப்பியாசம் செய்வித்தல் என்று சொல்கிறது. இப்படித் தயார் செய்வதற்குப் பிடிக்குங்காலந்தான் இளமைப்பருவம். இந்த இளமைபருவத்தில் ஒவ்வொருவரும் பின்னால் செய்யவேண்டியகடமைகள், தொழில்களுக்கு அவர் தகுதியானவர்களாகும்படி தர்பீது செய்து பழக்கப்படவேண்டியது, அத்யாவசியகம். இளமைப்பருவம் எல்லாருக்குமுரியதுபோல அக்காலத்திற்குரிய மேற்குறித்த தர்பீதுமுயற்சியும், அதாவது பின்வரும் காலத்தில் அவரவர் செய்யவேண்டிய கடமைகள் தொழில்களைச் சரிவரச்செய்துமுடிக்கத்தக்கவராகப் பழக்குவித்தலும் ஒவ்வொருவருக்கும் உரித்தானதே. இவ்வுரிமையைப்பெற்றோரும் இராஜாங்கத்தாரும் சரிவரச்செலுத்தக் கடமைபட்டிருக்கிறார்கள். பெற்றோர் தம் குடும்பத்துக்குத் தலைவராயிருப்பதுபோல், இராஜங்கத்தார் அவர்கள் அதிகாரத்துக்குட்பட்டு வாழும் ஜனசமூகத்துக்கு மாதா பிதுர்ஸ்தானத்தை வகித்தவர்களாயிருக்கிறார்கள். குடும்ப க்ஷேமத்துக்குப் பெற்றோர் பாத்தியப்பட்டவர்களாக விருப்பது போல தேசக்ஷேமத்துக்கு இராஜாங்கத்தார் பாத்தியப்பட்டவர்களாக விருக்கிறார்கள். இவ்விருதரத்தார் கடமைகளையும் வரையறுத்து விளங்கவைப்பது, பிரஸ்தாபவிஷயத்திற்கு அவ்வளவு ஒட்டினதாகவில்லை. இருவரும் அவரவர் கடமைகளைச் சரிவரச் செலுத்தவேண்டிய தவசியமென்று மட்டும் வற்புறுத்துவோம். இது நிற்க. வித்யாப்பியாசத்துக்குரிய இளமைப்பருவகாலத்தைச் சரியாக முறைப்படி ஏற்பாடுசெய்து செலவழித்துவந்தால் அக்கால முடிவில் புருஷத்துவம், பெண்மைத்தனம் வரும்பொழுது 'படித்தவர்' என்று சொல்லும்படியான யோக்கியதையுள்ளவர்களாவோம். 'படித்தவன்,' 'படித்தவள்' என்று சொல்வதற்கு உண்மையான அருத்தம் இது. இப்பொழுது நாம் ஒருவரைக் கண்டு "உங்கள் பிள்ளை படித்தவனா?" என்று கேட்டால், "ஆம், அவன் அந்த 'ஸ்கூலில்' படித்தான், இப்பொழுது இந்த 'காலேஜில்' படிக்கிறான்." என்று மறுமொழி சொல்வது சகஜமாயிருக்கிறது. அவர் சொல்லியபடி, அவர்பிள்ளை ஒரு ஸ்கூலில் படித்து முடித்து ஒரு காலேஜில் படித்துக்கொண்டிருப்பது விசேஷந்தான். ஆனால் அதனாலேயே அவன் "படித்தவன்" என்று நிச்சயிக்க நியாயமில்லை. அப்படியானால், பின்னை, பிள்ளை 'படித்தவன்' என்று எப்பொழுது நிச்சயமாய்ச் சொல்லலாம்? என்கிற கேள்வி உடனே பிறக்கும். அதற்குபதில்சொல்லி விளங்கவைப்பதுதான் மிஸ் மானிங் உபந்நியசிக்க எடுத்துக்கொண்ட விஷயம்.

பிள்ளை பள்ளிக்கூடத்தில் வாசிக்கிறது ஒன்று மட்டும், மேற்சொன்ன அர்த்தத்தில் 'படிப்பு' ஆகமாட்டாதென்றால் பின்னர் வேண்டியது என்ன? 'படிப்பு' அநேகர் நினைக்கிறபடி உபாத்தியாயரை மட்டும் பொறுத்ததாகவில்லை. உண்மையான படிப்புக்கு அவசியமான அம்சங்கள் இன்னும் இரண்டிருக்கின்றன. அவை படிப்பு விஷயத்தில் பிள்ளை

தானே செய்யும் முயற்சியொன்று ; பிள்ளையின் பெற்றோர் செய்யும் முயற்சியொன்று. இப்படிக்குள்ள எல்லா அம்சங்களும் சேர்ந்து, உபாத்தியாயர் முயற்சியோடு, பிள்ளையின் சொர்தமுயற்சி, பெற்றோரின் முயற்சி இவைகள் கலந்துவர உழைத்துவந்தால்மட்டுமே உண்மையான படிப்பு, அதாவது, உயிர்வாழ்க்கைக்குவேண்டிய உண்மையும் பிரயோஜனகரமுமான யோக்யாம்சங்கள் பொருந்தினவர்களாவோம்.

இப்பொழுது படிப்பில், குழந்தை, அல்லது பிள்ளையின் சொந்த முயற்சியைப்பற்றிச் சற்று விசாரிப்போம். குழந்தை ஐந்து வயதாகுமுன், பிந்தி அதன் ஆயுள் முழுவதிலும் கற்றுக்கொள்வதைவிட அதிகமாகக் கற்றுக்கொள்கிறது, என்று மிக்க சாதுர்யவான் ஒருவர் ஒரு காலத்தில் சொன்னார். அது வாஸ்தவமே. ஐந்துவயதான குழந்தையையும், மூன்று நான்குமாசமான குழந்தையையும் ஒத்துப்பார்ப்போமானால், ஐந்துவயதுக் குழந்தைக்கு நிலை குலையாமல் நிற்கத்தெரிகிறது. நடக்கத்தெரிகிறது, ஓடவும் குதிக்கவும்கூடத் தெரியும். தாராளமாயும் வேகமாயும் பேசத்தெரிகிறது. தன் மனதிலுள்ள எண்ணங்களையும் கருத்துக்களையும் திட்டமாய்ச் சொல்லத்தெரிகிறது. தான் சொல்வதின் அருத்தம் நன்றாக விளங்கும்படி தெரிவிக்கத்தெரிகிறது. வஸ்துக்கள் தூரத்திலிருப்பது சமீபத்திலிருப்பதையறிந்துகொள்ளக் கற்றிருப்பதனால் தானாக வழியறிந்து நடக்கத்தெரிகிறது. ஸ்பரிச உணர்ச்சியால், வஸ்துக்களின் குணங்கள் அனேகத்தை யறிந்திருக்கிறது. கடினம், மென்மை, பளு, இலேசு, உருண்டை, நீளம், சூடு, குளிர்ச்சி, முதலான பல குணங்களை யறிந்திருக்கிறது. இப்படி இன்னும் வஸ்துக்கள் பலவற்றின் குணம் குறிகளை யறிந்திருக்கிறது : அவனுடைய மனோசக்திகள் பலவும் அப்பியசிக்கப்பட்டு விர்த்தியாய்க்கொண்டிருக்கின்றன. ஞாபகசக்தி, பாவனாசக்தி, யூகசக்தி இவைகளை யெல்லாம் உபயோகிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறான். தர்மவிஷயத்திலும் இது நல்லது, கெட்டது, என்று ஒருவாறு பகுத்தறியவும், இன்னார் நல்லவரென்றுணர்ந்து அவரை நேசிக்க அபிமானிக்கவும், மற்றவரை விலக்க வெறுக்கவும் கற்றுக்கொண்டிருக்கிறான். சரி தப்பு இன்னதென்று உணரவும், உணர்ந்தபடி நடக்கவும் கற்றுக்கொண்டிருக்கிறான். இவைகளெல்லாம் ஐந்துவயதுக் குழந்தை எங்கு கற்றுக்கொண்டது? பள்ளிக்கூடத்திலுமில்லை, காலேஜிலுமில்லை. ஆயினும் இந்த 5 வருஷகாலத்தில் இக்குழந்தை கற்றுக்கொண்ட விஷயங்கள் நாம் கண்டபடி மிகவும் ஏராளமானவையே. இவைகளை யெல்லாம் அக்குழந்தை யறிந்துகொண்டதெப்படி? எல்லாம் தன்முயற்சியாலே. இப்படிப்பட்ட சிறுகுழந்தைகளுக்கு முதற்றரப்படிப்பு அல்லது வித்யாப்யாசம் சித்திக்க நாம் செய்யவேண்டிய தென்னவெனில் தகுந்த வரையறைகளுக்குட்பட்டு தன்னிஷ்டப்படி தாராளமாகச் செல்லவிட்டுத் தானாகக் கற்றுக்கொள்ள விடுவதேயாம்.

குழந்தைகள் எதைக்கண்டாலும் அதைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுவது சுபாவமாகவிருக்கிறது. அது என்ன, எங்கேயிருந்து வந்தது, இப்படிச்செய்தால் என்ன, அப்படி செய்தால் என்ன? என்று ஆயிரங் கேள்விகள் கேட்கின்றனர். ஒரு பொம்மையைக் கொடுத்தால் அதன் அழகைப்பார்த்து, அதன் வர்ணத்தைப் பார்த்து, அதை உடைத்துப்பார்த்து இன்னும் எத்தனையோ பரீக்ஷைகள் செய்துபார்க்கின்றனர். இக்காலத்தில் பள்ளிப்பிள்ளைகள் அருத்தம் தெரியாமல் பொட்டைப்பாடம் செய்வதுபோல் எதையும் தெரிந்துகொள்வதில் குழந்தைகள் திர்ப்தியடைகிறதில்லை. நெருப்பு சுடுமென்றால், கேட்காது ; அதைத் தொட்டு, கையைச் சுட்டுக்கொண்டு, 'சுடுகிறது' என்றால் இன்னவென்று அனுபவத்தில் தெரிந்துகொண்டபின்தான் திர்ப்தியடையும். தனக்குத் தெரியாத விஷயங்களையெல்லாம் தன் தகப்பனைக்கேட்டுத் தெரிந்துகொள்ளும். பெரியவர்கள் தெரியாத வார்த்தைகளுக்கு அர்த்தம்பார்க்க அகராதியைப்பார்ப்பதுபோல, குழந்தைகள் தங்களுக்குத் தெரியாத விஷயங்களைத் தெரிந்துகொள்ள தகப்பனைப் பார்த்திருக்கும். புத்தியில்லாத பெற்றோர்களோ குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு சரியானபதில் சொல்லாமல், சாக்குப்போக்குச்சொல்லி வாயை யடக்குவார்கள். குழந்தைகள் செய்யும் ஒவ்வொரு காரியமும், ஒவ்வொருவார்த்தையும், ஒவ்வொரு யத்தனமும், எல்லாம் அக்குழந்தைகளின் விர்த்தியை நாடினதாய், விர்த்திக்கும் வளர்ச்சிக்கும் காரணமாயிருக்கின்றன. இப்படியாக, ஐந்துவயதுக்குழந்தை தான்கற்றதெல்லாம் தன் சொந்த முயற்சியாலே யென்று அறிகிறோம். எல்லாம் 'கிண்டர்கார்டன்'முறைப்படி தானாகக் கற்றுக்கொண்டதே. 'கிண்டர்கார்டன்' முறையாவது குழந்தைகள் தங்கள் தேகமனோ சக்திகள் விரிந்து வளருவதற்கு அனுகூலமானபடி வஸ்துக்களும், சந்தர்ப்பங்களும் சூழ்ந்திருக்கும்படியான ஸ்திதியில்வைத்து அவர்கள் தக்கமேற்பார்வையில் தம் அந்தக்கரணங்



களைத் தாராளமாக உபயோகித்துத் தம் சொந்த முயற்சியால் அறிவைபடைந்து விர்த்தியடையத் தக்க வழியாம். இப்படி ஐந்து வயது வரையில் குழந்தை தன்முயற்சியால் தானாகக் கற்றுக்கொண்டதுபோலவே, அதற்குமேல் வயசில்வளரவும் அவனுடைய சொந்தமுயற்சி அவன் உண்மையான படிப்புக்கு அவசியம் வேண்டியதாயிருக்கிறது. இப்படி ஒவ்வொரு குழந்தைக்கும் இயற்கையாய் அமைந்துள்ள படிப்புக்கனுகூலமான தன்முயற்சி செய்யும் சக்தியை அவனுடைய வித்தியாப்பியாச விஷயத்தில் நாம் எப்பொழுதும் துணைக்கொள்ளவேண்டும். 5 அல்லது 6-வயதில் பள்ளிக்கூடத்துக்குப் போகத் தலைப்பட்ட பின்னும், விஷயங்களைத் தானாக அறிந்து கிரகித்துக்கொள்ளும் விஷயத்தில், இதற்கு முன்னுள்ள தன்முயற்சியில்லாவிட்டால், பள்ளிக்கூடத்துக்குப் போவதினால் அவனுக்குண்டாகும் நற்பயன் மிகவும் சொற்பமாம். மேற்காட்டியபடி, படிப்பதில் அவன் சொந்த முயற்சியில்லாவிட்டால், அவன் பள்ளிப்படிப்பினால் புத்திசாலியாவதற்குப்பதிலாக, சுட்டைபுத்தியுடையவனாக ஆனாலும் ஆவான். காலேஜிலும்கூட மாணாக்கன், எவ்வளவுக்கெவ்வளவு தானாகமுயற்சித்து, எதையும் தன் சொந்த யத்தனங்களால் அறிந்துகொள்ளப் பிரயாசைப்படுகிறானோ, எவ்வளவுக்கெவ்வளவு போதனாசிரியர் உதவியையே நாடியிருப்பது குறைந்து, தன் சொந்த முயற்சியாலும் பிரயாசையாலுமே விஷயங்களையும் உண்மைகளையும் உணர்ந்து கிரகித்துக்கொள்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் காலேஜில் வாசிப்பதும், ஆராய்வதும், அவனுக்குப் பயன் தருவதாய், அவன் படிப்பு பூரண அறிவைக் கொடுப்பதும், மனோசக்திகளை விர்த்திசெய்வதுமாகவிருக்கும். உண்மையை உரைக்கில், எந்தப்படிப்பும், படிக்கிறவன் தானேமுயற்சித்த, விடாது பிரயாசையெடுத்துக்கொண்டு ஒவ்வொன்றையும் தானே சுயமாகக் கிரகித்துக்கொள்ளும்படியாக விருக்கும் வித்யாப்பியாசமே, உண்மையும், ஆணித்தரமானதுமாகும். மற்றதெல்லாம், வீணாகவும், பொய்யாகவும், பயனற்றதாகவும் முடிவதாகும்.

வித்தியாப்யாச விஷயத்தில் குழந்தைகள் செய்யவேண்டிய முயற்சியையும் அதன் முக்கியத்தையும் பற்றி இவ்வளவுதூரம் வற்புறுத்திக் கூறியபின், மிஸ் மானிங் துரைசானி பெற்றோர் கடமையையும் அவர்கள் செய்யவேண்டிய முயற்சியையும்பற்றி விஸ்தரித்துப்பேசினார். குழந்தைகள் கடைத்தேற, தாயும் தகப்பனும் சேர்ந்து அவர்கள் குழந்தைகளாயிருக்கும்பொழுது அவர்களை நன்றாகக் கவனித்து வரவேண்டியது மிகவும் முக்கியமான காரியம் என்று சொன்னார். இந்தவிஷயத்தில் பெற்றோருக்குள்ள சக்தி ஒரு அரசனுக்குமில்லை. ஆகையால் பெற்றோர் குழந்தைகளிடத்தில் தங்களுக்கிருக்கும் அளவுகடந்த அதிகாரத்தையும் செல்வாக்கையும் புத்தி யுத்தியோடு செலுத்தப்பார்க்கவேண்டும். அவர்கள் ஒழுக்கவழக்கங்களாலும், ஏற்பாடுகளாலும் தங்கள் குழந்தைகளின் வித்யாபிவிர்த்திக்கு அனுகூலமாகவோ, பிரதிகூலமாகவோ இருக்கலாம். பெற்றோர் நல்லவர்களாயிருந்து தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செலுத்த விரும்பினால் தங்களுடைய குழந்தைகள் எப்படிப்பட்டவர்களா யிருக்கவேண்டும், எவ்விதம் வளர்ந்து விர்த்தியடைய்வேண்டுமென்று உயர்ந்த மாதிரியான எண்ணங்களை மனதில் திரட்டி உருவாக்கி வைத்துக்கொள்ளவேண்டும், வைத்துக்கொண்டு அந்த உயர்ந்தமான தக்காக்ஷி யுருவுக்குச் சரியாகத் தங்கள் குழந்தைகளை வளர்க்க வழிதேடி ஓயாது சிந்தித்துழைக்கவேண்டும். தங்கள் பெண்களும் பிள்ளைகளும் பெற்றோர்க்கடங்கி, சுறுசுறுப்பும் நன்னடக்கையு முள்ளவர்களாயிருக்க விரும்பினால், நன்னடத்தையை மெச்சி, துர்நடத்தையைக் கண்டித்து, நல்லவழியில் நடக்கத் தங்கள்சொந்த நடத்தைகளால் உதாரணம்காட்டி, கெட்டவர்கள் சகவாசம் படியாமல் பார்த்துத் தீயவழிகளை விலக்கச் செய்து, தங்கள் குழந்தைகள் நல்வழியில் விர்த்தியடைய ஒத்தாசை செய்துவரவேண்டும். பள்ளிக்குப் போகும் பருவம் வந்தபின் நல்ல சேர்மானமும் நன்னடக்கையும் நல்லதிட்டமும் படிமானப்படுவதற்கேதுவான பள்ளிக்கூடத்தைத் தேர்ந்தெடுத்து அதற்குத் தங்கள் பிள்ளைகளை யனுப்பவேண்டும். அனுப்புவதோடு தங்கள்கடமை முடிந்துபோய்விட்டதாக நினைக்கக்கூடாது. பள்ளிக்கூடத்தில்நடக்கும் விஷயங்களிலும், பிள்ளைகளின் படிப்பிலும் அக்கறையெடுத்துக்கொண்டு அவர்களை நல்வழிகளில் உற்சாகப்படுத்தி தீவழிகளில் எச்சரித்து நடத்திவரவேண்டும். இப்படி உறுதியாய் விடாமுயற்சியோடுழைத்து தினமானம் கொஞ்சம் கொஞ்சமாக உத்தேசித்த உருவகத்துக்கு ஒத்துவரப்பழக்கிக்கொண்டு போகவேண்டும்.

பெற்றோர்கடமையும் முயற்சியும் இப்படியாகவிருக்க, உபாத்தியாயர் கடமையைப்பற்றிப் பேசுங்கால், அவர் பிள்ளைகளின் "வித்யாப்யாசம்" முழுவதையும் கவனிக்கவேண்டியவரா யிருக்கிறார். 'வித்யாப்யாசம்' என்பது புஸ்தகப்படிப்பைமட்டும்

குறிக்காமல் குணம் நடத்தை மனோவிர்த்தி எல்லாவற்றையும் சேர்த்துக் குறிக்கும் அருத்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் உபாத்தியாயரின் கடமை மிகப்பொறுப்புள்ளதாயிருக்கிறது. உபாத்தியாயர் பாடங்களை முறைப்படி நன்றாகச் சொல்லிக்கொடுப்பதோடு பள்ளிக்கூடமுள்ள காலத்தில் பிள்ளைகளின் நடத்தைகளையும் கவனித்துத் திருத்த நல்வழியில் அவர்களை நடத்தக் கடமைப்பட்டவராயிருக்கிறார். பள்ளிக்கூடத்தில் சச்சரவு, கீழ்ப்படியாமை, சோம்பர், சூது, வஞ்சகம், முதலிய துர்க்குணங்கள் படிவதற்குக் காரணமான சந்தர்ப்பங்கள் உண்டாகலாம். அச்சந்தர்ப்பங்களில் உபாத்தியாயர் பிள்ளைகள் நடத்தையை நோட்டமிட்டுக்கண்டித்துச் சரிப்படுத்தத் தவறினால், அப்பள்ளிப்படிப்பால் பிள்ளைகளுக்கு நன்மை விளையக்காரணமில்லாமற்போகும். பிள்ளை பரீக்ஷைகளிலெல்லாம் முதலாகவிருந்தாலும் அப்பள்ளிப்படிப்பு உபயோகமற்றதென்றே சொல்லவேண்டும். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குப் பெற்றோர் ஸ்தானத்தை வகித்திருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் பிள்ளைகளை நல்வழியில் நடக்க உற்சாகப்படுத்தி கெட்டவழியில் நடக்கவிடாமல் தடுத்து ஆதரித்துவரவேண்டும். எந்தப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் தங்கள் உபாத்தியாயர் குணம், நடத்தையில் அதிக மதிப்பு வைத்து அவரைக் கண்யப்படுத்தி நடத்திவருவதோடு, அவ்வுபாத்தியாயருக்குத் தங்களிடத்திலிருக்கும் மதிப்பை யிழக்கக்கூடிய எந்தச்செய்கையையும் செய்வது இகழ்ச்சியாக நினைக்கிறார்களோ, அந்தப்பள்ளிக்கூடந்தான் நல்ல பள்ளிக்கூடம் என்று சொல்லத்தக்கதாகும்.

முடிவாக, **மிஸ் மானிங்** வற்புறுத்திக்கூறியதென்னவென்றால், மேற்குறித்த மூன்று அம்சங்களும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும். குழந்தை தானாகமுயற்சித்து எதையும் சொந்தப் பிரயாசையால் நன்குணர்ந்து கிரகித்து விர்த்தியடைந்துவரவேண்டும்; பெற்றோர் அப்படி விர்த்தியடைய முயற்சிக்கும் குழந்தைகளுக்கு நல்வழிகாட்டி அவர்கள் சொந்த அபிவிர்த்தியின் பொருட்டுச் செய்யும் யத்தனங்கள் பலிப்பதற்கு வேண்டிய சாதகங்களும், சாதனங்களும் அளிக்கச் சிரமமெடுத்துக்கொண்டுழைத்துவரவேண்டும்; உபாத்தியாயரும் தான் செய்யவேண்டிய பாகத்தில் குறைவுவராமல் கவனித்து நடத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் ஒன்றுந்தெரியாத உதவியற்ற சிறுபாலன், நாலாவிதத்திலும் ஸமவிர்த்தியடைந்து, பயபக்தி நிறைந்து, சக்தி வாய்ந்த மனமும், கண்யமும் பொருந்திய புருஷன் அல்லது ஸ்திரீயாக வளரக்கூடும்—என்று சொல்லிப் பிரசங்கத்தை முடித்தார்.

## செல்வநூல்.

### 4. தனோத்பத்திக்குவேண்டிய சாதனங்கள்.*

நாம் முந்தினபாடத்தில் செல்வம் (Wealth) என்றால் என்னவென்று விசாரித்திருக்கிறோம். முக்கியமாய், செல்வமென்றால் பணம் என்றுதான் சாமனிய ஜனங்கள் எண்ணுவது வழக்கம். ஆயினும் நாம் அது அப்படியல்லவென்று வற்புறுத்திக் கூறியிருப்பதால் இப்போது செல்வமென்றால் உபயோகமுள்ளதும், ஏராளமாய்க் கிடைக்கக்கூடாமையால் கைமாற்றுதல் பெறக்கூடியதுமான வஸ்துவே என்று உறுதியாக மனதில் கொள்ளவேண்டியது.

இச்செல்வம் மூவகைப்பட்டது:—

(1) இயற்கையாக பூமியிலும், ஆறு குளங்களிலும் கனிகளிலும் இருப்பதால் மனிதர்கள் ஸ்வஸ்தீகரணம் (monopolised) செய்துக்கொள்ளக்கூடியது சிலது.

(2) வேறுசில வஸ்து மனிதர்கள் உழைப்பால் வெவ்வேறுவிதமாக ஆக்கப்பட்டு, அவர்களது இஷ்டபூர்த்தியின்பொருட்டு உபயோகமாவது.

(3) மற்றும் சிலது, வேறுபொருள்களின் உற்பத்திக்காக ஸககாரியாக உபயோகிக்கப்படுவது.

இம்மூவகைச் செல்வமும் உழைப்பினால்தான் பெறப்படுகிறது. உழைப்பில்லாவிடில் (Labour) செல்வம் விசேஷமாய்கிடைக்காது. ஆனால் வெறும் உழைப்பினால் ஒன்றையும் புதிதாய் உண்டுபண்ணமுடியாது. இயற்கையாகவே அநேகம்பொருள்கள் நமக்குக் கிட்டுகின்றன. அவைகளை நாம் ஸ்வஸ்தீகரணம் செய்யும்பொருட்டு பிரயத்தனம்செய்கிறோம். அல்லது அவைகளைமாற்றி மற்றும் வேறுவிதமான நாமரூபங்களைக்கொடுத்து மனிதனது பலவகை வேண்டுதலின் பூர்த்திக்காக நானாவித வஸ்துக்களை உண்டாக்குகிறோம். அல்லது ஓரிடம் உத்பத்தியானபொருள்களை மற்றும் அவை வேண்டிய இடங்களுக்குக்கொண்டு போய் சேர்க்கிறோம். இப்படிப் பலவிதயாக உழைப்பு (Labour) செல்வத்தின் உத்பத்திக்குவேண்டியிருப்பினும் செல்வத்திற் கெல்லாம் மூலாதாரமானது இயற்கையாயுள்ள பூமியும் அதில் உள்ள பிருகிருதி சக்தியுமே. இப்படி இயற்கையாகக் கிடைக்கக்கூடிய பொருளுக்கெல்லாம் நாம் க்ஷேத்திரம் (Land) என்னும் சொல்லைக் குறிச்சொல்லாகக்கொள்ளுவோம். இத்துடன் வேலையை எளிதில் நடத்திவருவதற்கு கைமுதல் (Capital) என்பதும் வேண்டும். ஆகவே செல்வம் உண்டாக இம்மூன்று சகாயங்களும் இல்லாமல் தீராது. ஆனாலும் இம்மூன்றும் தனோத்பத்தி விஷயத்தில் ஸமஸாதனங்கள் அல்ல.

ஆகையால் செல்வத்தின் உத்பத்தியையும் (Production), விபாகத்தையும் (Distribution) பற்றி விவரிக்கப்பிறந்த இச்செல்வநூல், க்ஷேத்திரஸாதனம் தனோத்பத்தியில் எவ்வளவுமட்டும் உபயோகப்படுகிறது, உழைப்பு அல்லது உத்யமம் எத்துணைமட்டும், கைமுதல் அல்லது மூலதனம் எவ்வளவு மட்டும் என்று அறிவதுடன், தனவிபாகத்திலும் இவ்வாறே இம்மூன்று ஸாதனங்களிற்கு இசைய க்ஷேத்திரத்திற்கு உரியவன் பெறவேண்டிய பாகம் இன்னது; உழைப்பாளிகளின் கூறு இம்மாற்றம்; மூலதனம் போட்டவனது ஈவு இத்துணைதான்; என்று நிச்சயிக்கவேண்டும். இதுதான் செல்வநூல் கற்பிக்கவேண்டிய முக்கியமான விஷயம்.

மேற்கூறிய மூன்று ஸாதனங்களில் இயற்கைப்பொருள் அனைத்தும் க்ஷேத்திரத்தைச் சார்ந்திருக்கிறது. உத்பத்தி யென்பது உத்-பூர்வக, பத் - தாதுவினடியாகப் பிறந்த வடசொல். அதன்பொருள் 'மேற்கிளம்பியது' என்றாகும். ஆகையால் நாம் உத்பத்தி செய்வதெல்லாம் இப்பூமியினின்றும் 'மேற்கிளம்பியது' தான். பிரகிருதி சத்தியின்படி உத்பத்தியாகும் இயற்பொருளைக்கொண்டுதான் நாம் ஜீவிப்பது. ஆகையால் நமக்குச் செல்வம் வேண்டுமானால் ஏதாவது ஒரு க்ஷேத்திரத்தினிடம் சென்று காலதேசங்களுக்குத் தக்கபடி பிரகிருதி சக்திகளை (Natural Forces) அனுசரித்து அதால் பெறக்கூடிய பொருள்களைப் பெறவேண்டியது. பிறகு அதை நம் கைப்பாட்டிற்குள்ளாக்கி வேண்டுமானபடி மாற்றி உபயோகித்துக்கொள்ளவேண்டியது. சமஸ்தத்திற்கும் உபாதானகாரணமான (First Cause) பொருள் க்ஷேத்திரத்திலிருந்து வரவேண்டியதுதான். அதை உபயோகிக்கவேண்டிய சக்தியும் பல தடவைகளில் ஸ்வபாவிகமாக க்ஷேத்திரத்திலேயே யிருக்கிறது. இதற்கு நிதர்சனமாக ஓயாமல் அடிக்கும் காற்று, சமுத்திரத்தில உள்ள அலைகள், மலைகளில் பெருகும் அருவிகள், மின்சாரம், நீராவி முதலியவைகளைக் குறிப்போம். இவைகளை நேராகக்கைக்கொண்டுதான் இப்போது ஐரோப்பாக்கண்டத்தில் உத்பத்தியாகும் பொருள்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. எவ்வளவுக்கு எவ்வளவு நாம் இவ்வாறு உள்ள ஸ்வபாவிகமான பிரகிருதி சக்தியை உபயோகிக்கிறோமோ அவ்வளவிற்கேற்கவே நமது செல்வமும் பெருகும். இப்போது ஐரோப்பியர்கள் நாகரிகத்திலும் செல்வத்திலும் மிக்கவர்களாகியது இச்சக்திகளின் பிரபாவம்தான்.

செல்வ ஸாதனங்களுக்குள் க்ஷேத்திரத்திற்குப் பிந்தியது உழைப்பு அல்லது உத்யமம் தான். (Labour) உழைப்பு என்றால் என்னவென்பது எல்லாரும் அறியக்கூடும் விஷயம்; உழைப்பில்லாவிடில் ஒன்றுமே சாதியமாகாது. ஏராளமாய்க் காய்கனிகள் காட்டில் இருக்கினும் அவைகளை வேண்டியபோது புசிக்கத் தேடியாவது வைத்திருக்கவேண்டும். இம்மட்டிலாவது உழைப்புவேண்டும். மேலும் செல்வம்பெருக உழைப்புத்தான் முக்

* The Requisites of Production.

கியமாய் வேண்டும். க்ஷேத்திரவளம்மாத்திரம் போதாது. எவ்வளவு வளம்பொருந்திய தேசமாயினும் ஜனங்கள் உழைப்பாளிகளாயில்லாவிடில் செல்வம் கூடிவராது. அமெரிக்காதேசத்தை கொலம்பஸ் கண்டுபிடிக்குமுன்னம் அவ்விடத்திய ஜனங்கள் நித்திய தரித்திரப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களது தேசமோ நீர்வளத்திலும் நிலவளத்திலும் முதன்மையானது. இப்போது ஐரோப்பியர் கைவேலைப்பாட்டால தங்கம் விளையும் அவ்விசாலமான தேசத்தில் சிறுபான்மையோராகிய பூர்வீகசுதேசிகள் சோற்றுக்குச் செத்துக்கொண்டிருந்தார்கள். மேலும் இப்போது நமது இந்தியாவிலும் இங்கிலாந்து தேசமானது நீர்வளம நிலவளம் இவைகளில் மிகத் தாழ்ந்தது. ஆகிலும் ஆங்கிலேயர் நம்மிலும் தனத்தில் பதின்மடங்கதிகமுடையவரா யிருப்பது அவர்கள் உழைப்பினாற்றான் என்று நாம் அறியவேண்டியது. இதனால் நாம் இப்போது உழைப்பு என்பதே இல்லாமலேயிருக்கிறோம் என்று சொல்வதில்லை. சாமான்ய உழைப்பு உழைப்புடன் சேர்ந்தது அல்ல; உழைப்புக்குக் குணம்கொடுப்பது அறிவு (Knowledge) அல்லது கியானமும், விடாமுயற்சியும் (Perseverence) தான். நம்மறிவுக்குத் தக்கபடிதான் நாம் உழைப்போம். நம்மறிவுக்குத் தக்கப்படிதான் நம்முழைப்புக்குப் பலன் உண்டு. உழைப்பை சேராகப் பிரயோகிக்கப் பிரகிருதிசக்தியின் ஸ்வபாவம் முதலியது தெரியவேண்டியதாகையால் அறிவு அல்லது கல்வி உழைப்புக்கு முக்கியமாய் வேண்டியது. விடாமுயற்சியும் வேண்டும். எனெனில் நாம் முடிக்கக்கருதும் ஒவ்வொரு கருமத்திலும் பலவித விகாதங்கள் நேரிடுவது ஸகஜம். அவைகளுக்கு அஞ்சி மனம் தளராது உறுதியுடன் உழைத்தால்தான் எந்தக்காரியமும் கைகூடும். இப்படி உழைப்பது ஸர்வஜன ஸாமானியமான குணமல்ல. ஆகையால் யார் இம்மாதிரி உழைக்கிறார்களோ, அவர்களது உழைப்புத்தான் உழைப்பு.

ஆகவே தனோத்பத்திக்கு க்ஷேத்திரமும், உழைப்பும் வேண்டும். ஆயினும் இவையிரண்டு ஸாதனங்களும்மாத்திரம் இருந்தால் பொருள் ஏராளமாகக் கிடைக்கமாட்டாது. உழைப்பில் இருக்கும் வேலையாட்கள் உண்டு உடுக்கும்பொருட்டு செலவிடப்படவேண்டிய பொருள்களும், அவர்கள் வேலைசெய்யும் யந்திரங்களும் ஆயுதங்களும் இல்லாவிடில் வேலை எளிதில் ஆகமாட்டாது. இப்படி செலவாகும் பொருளுக்குத்தான் நாம் முன்னமே மூலதனம் என்று பெயர் கொடுத்திருக்கிறோம்.

மூலதனம் இல்லாவிடில் நேரிடும் கஷ்டத்தை நாம் இவ்வகைத்தானது என்று அறியவேண்டுமானால் ஒரு சுலபமான திர்சனம் போதும். நான்கு பெயர்கள் கூடி யாதொரு ஆயுதங்கள வகைரா இல்லாமலும், ஆகாரமில்லாமலும் ஒரு காட்டிற்குப்போய் ஏதாவது ஒருகாரியம் செய்யப்போனால், எப்படி அவர்கள் எந்தக்காரியம் துவங்கப்போனாலும் வேறு ஒரு பொருள் முந்தி வேண்டியிருப்பதாக அறிந்துகொள்வார்கள் என்று நாம் ஊகித்துக்கொள்ளலாம் ஆயினும் இம்மூலதனம் முற்கூறிய இரண்டு ஸாதனங்களைப்போல அவ்வளவு முக்கியமானதல்ல. ஆதியில் மூலாதனமில்லாமலேதான் பொருள் உண்டாயிருக்க வேண்டியது. ஆயினும் தற்காலத்திய நாகரிகத்திற்கு அனுகுணமாகத் தனோத்பத்தியாக்க மூலதனம் இல்லாமல் முடியாது.

ஜி. கஸ்தூரி ஐயங்கார்

—✣—

## ‘செங்கோன்மை’.

‘செங்கோன்மையாவது அரசனாற் செய்யப்படு முறையினது தன்மை’. அந்த முறையானது ஒருபாற்கோடாது சமமாய் நிற்கும் செவ்விய தராசுகோல் போன்றிருத்தலின் செங்கோலென்பர்.

“ஓர்ந்துகண்ணோடா திறைபுரிந்தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை”.



என்றார் பெரியாரும். தன்கீழ் வாழ்வார் யாவராயினும், உயிரிற் சிறந்தஉயர்ந்தோராயினும் தாழ்ந்தோராயினும், வலியாராயினும் மெலியாராயினும், உற்றோராயினும் மற்றோராயினும் சமநிலையாகக் கருதி நடுவுநிலமையாக, எந்தக்குற்றம் செய்தார்களோ அந்தக் குற்றத்துக்கேற்ற தண்டனையை அறிந்தோரிடமாராய்ந்து செய்வதே அதனிலக்கணமாம்.

“இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.”

என்று கூறிய திருவள்ளுவரது சிறிய உரையே அவ்வரசன் செய்யவேண்டுவனவும், அவன் அவற்றைச் செய்தலாலுண்டாகும் பயனும் என்பனவற்றை யெல்லாங்கூறும். பருவகாலத்தில் பெய்து பயிரையும் உயிரையும் காக்கும் மழையைப்போல உலகத்தையெல்லாம் அரசன் காப்பான். அவன் தன் முறையினின்றும் விலகி நடக்க நேர்ந்தவிடத்தும் விலகாது தன் செங்கோன்மையைக் காத்து நடப்பதே அவ்வரசனைக் காக்கும் காவலாம். அங்ஙனம் விலக நேர்ந்தவிடத்தும் விலகாது முறைசெய்தாரிருவரை பரிமேலழகர் கூறியுள்ளார். அவர் வரலாறுகளை இங்குச் சிறிது சொல்லுவோம்.

திருவாரூரில் குடிகட்கெல்லாம் கண்ணும் உயிரும்போலநீதிதவறாது அரசு செலுத்திவந்த மனுநீதிகண்டசோழர் என்பவரிருந்தனர். அவர் அரசு செலுத்திக்கொண்டு வருங்காலத்து அவருடைய புத்திரன் சேனைகளெல்லாம் தன்னைச் சூழ்ந்துவர தேர்மீதேறி ராஜவீதியில் உலாப்போயினன். போகும்போது ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டு போய் அந்தத் தேர்க்காலினடியிற்பட்டிறந்தது. அது கண்டு தாய்ப்பசு சுழன்று ஓடிவந்து அலறிச்சோர்ந்து நின்றது. அதுகண்ட சோழபுத்திரன் அபாயம் வந்ததேயென்று மனதில் மிக்க துன்பங்கொண்டு அறிவழிந்து,

“மலர்தலை யுலகங்காக்கு மனுவெனுமெங்கோமானுக்
குலகிலிப்பழிவந்தெய்தப் பிறந்தவாறொருவன்”

என்று சொல்லிவீழ்ந்தனன். பின் நான் அறியாது செய்த இப்பாவத்துக்குப் பிராயச்சித்தம் உண்டாயின் தந்தையறிதற்குமுன்னே பிராமணர் விதித்தபடி அதைச்செய்யவேண்டுமென்று பிராமணரிடத்தே போயினன். கன்றையிழந்த அப்பசு துன்பம் சகிக்கமாட்டாது ராஜமாளிகை வாயிற்கட்டிய ஆராய்ச்சிமணியைத் தன்கொம்பினால் அடித்தது. அச்சப்தத்தைக் கேட்ட சோழர் சிங்காதனத்தினின்றும் உடனே இறங்கி விரைந்துவந்து வாயிலையடைந்து அங்கேநின்ற காவலாளர்களால் ஒரு பசு தன்கொம்பினால் அம்மணியை அசைத்ததென்றறிந்தனர். அங்கு வருத்தத்தோடு நின்று பசுவைப்பார்த்து இதற்கு என்ன இடையூறு நேர்ந்தது என்று மந்திரிகளைப் பார்க்க அவர்களிலொருவன் “உம்முடைய புத்திரன் தேர்மீதேறி சேனைகள்சூழ ராஜவீதியிற் போகும்பொழுது ஒரு பசுக்கன்று அத்தேர்காலிற்பட்டிறந்தது., அதன் தாயாகிய இப்பசு வந்து இம்மணியை யடித்தது” என்று விண்ணப்பம் செய்தனன். அது கேட்ட சோழர் பெருந்துயர்கொண்டு “என் செங்கோன்மை நன்று, இது யாது செய்தாற்றீரும்” என்றிரங்கி ஏங்கி அப்பசுவின் முகத்தைப்பார்த்துச் சோர்ந்தார். அதுகண்ட மந்திரிகள் இதற்குத் தாம் மனந்தளர்வது பரிகாரமாகாது. கோவதைக்கு தர்மநூல்களில் சொல்லிய பிராயச்சித்தத்தை நமது புத்திரனைக்கொண்டு செய்விப்பதே முடிவென்றார்கள். அதுகேட்ட அரசன் “நீங்கள் சொல்லும்பிராயச்சித்தம் இப்பசுவின் நோய்க்கு மருந்தாகுமா? என்பேரில் பரிவுகொண்டு நீங்கள் செப்பிய வார்த்தைக்கு நானிசைந்தால் நடுவுநிலமை தவறாதா?

“மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லானமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ”

என்றபடி உயிர்களுக்குத் தன்னாலும், தன்பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வராலும் மற்ற உயிர்களாலும் வரக்கூடிய ஐந்து பயத்தையும் நீக்கி அவைகளைக் காப்போனன்றோ அரசனென்னப்படுவான். என் புத்திரன் செய்த கொலைக்கு பிராயச்சித்தம் செய்துவிட்டு வேறொருவன் செய்த கொலைக்குமாத்திரம் அவனைக் கொல்வேனாயின் ஆதிமனுவால் ஏற்பட்ட தர்மசாஸ்திரம் பின்மனுவென்னும் சோழனால் நீக்கப்பட்டது என்னும் பழி உலகத்தில் நிலைக்காதா?” என்றார். அப்பொழுது மந்திரிகள் ‘இதுபோல முன்னும் நடந்திருக்கின்றதே இதன்பொருட்டு புத்திரனைக் கொல்லல் முறையன்று. விதித்தபடி பிராயச்சித்தம் செய்தலே சான்றோர் வழக்கு’ என்றார்கள். அதற்கவர் ‘நீங்கள் நெறியினுண்மை யறியாது பேசுகின்றீர்கள். எந்த உலகத்திலே, எந்தப்பசு கன்றையிழந்த துன்பத்தினால் ஆராய்ச்சிமணியை அடித்தது? சொல்லுங்கள். இவனைக்கொல்வதே தகுதி. என்னால் இப்பசுவின் துயரை நீக்கமுடியாததலால் இப்பசு துன்பம் அடைத

லைப்போல நானுமென் புத்திரனை யிழந்து துன்பமடைதலே நீதி' யென்றுசொல்லி எவ்விடத்தும், எக்காலத்தும், எவராலும் செய்தற்கரிய இச்செய்கையைச் செய்யத்துணிந்தார். துணிந்துசோழர் தம் புத்திரனை தாமேகொண்டு வீதியிற்போய் ஏகபுத்திரனே தங்குலத்துக்குள்ளானென்பதை நினைக்காது தர்மவழியில் செல்லுதல் ஒன்றையே நினைத்து அவனைப் பூமியிற்கிடத்தி அவன் மார்பிலே தேர்ச்சக்கரம் செல்லும்படியாகத்தேரை நடத்தினார். உடனே கடவுள் அவர்க்குக் காக்ஷிதந்தருளி பசுக்கன்றையும் இராசகுமாரனையும் உயிர்ப்பித்தருளினார்.

**பரிமேலழகர்** கூறியமற்றொரு உதாரணம் வருமாறு:—"மதுரையிலரசுபுரிந்த பொற்கரப்பாண்டியன்,

'ஒற்றிற்றெரியா சிறைப்புறத்தோர்து மெனப்
பொற்றோன்துணையா தெரிந்தும்"

என்றபடி, தானே மாறுவேடம் பூண்டு இரவில் சென்று விஷயங்களறிந்து வருவது வழக்கம். ஒருநாள் நடுராத்திரியில் போய்க்கொண்டிருக்கும் பொழுது ஒரு வீட்டில் ஆண் பெண் ஆகிய இருவர் பேசிக்கொண்டிருந்த சப்தம் கேட்டது. எல்லாரும் தூங்குமிச்சமயத்தில் இங்குமட்டும் அரவங்கேட்பானேன் என்றெண்ணி சமீபத்திற்போய் கேட்டுக்கொண்டிருந்தான். அப்போது அவ்வீட்டு அந்தணன் தான் போவதாயிருக்கும் யாத்திரையைப்பற்றி தன் மனைவியிடத்திற் சொல்லிக்கொண்டிருந்தான். அம்மனைவி 'நீங்கள் என்னைத் தனித்துவிட்டுப்போய்விட்டால் எனக்குத்துணை யார்' என்று கேட்க அதற்கவன் 'அரசன் ஆணையிருக்கும்போது உனக்குப்பயமேது' என்று சொல்ல அவளும் சம்மதித்திருந்தனள். அப்போதரசன் 'இதென்னவிபரீதம்! இவன் நம்மீது பாரத்தைப்போட்டுச் செல்லுகின்றானே' என்று நினைத்து அவ்வந்தணன் போனபின்னர் நாடோறும் இரவில் மாறுவேடம் பூண்டு அவ்விடத்தில் வெளியே சற்றுநின்று சங்கதியறிந்துபோய்விடுவான். அவ்வாறிருக்க யாத்திரைபோயிருந்த அந்தணன் திரும்பிவிட்டான். அன்றிரவும் அரசன் வழக்கம்போல வீதியிற் செல்ல, அவ்வீட்டினுள் இருவர் பேசும் குரல்கேட்டது. கேட்கவே பிராமணன் தான் வந்துவிட்டானோ இல்லாவிட்டால் அவன் போனசமயம்பார்த்து வேறு எவனாவது புகுந்துவிட்டானோ என்று யோசித்து, அதை அறிய 'எப்படியிருக்கினும் நாம் கதவைத்தட்டுவோம். நாயகனாயிருந்தால் ஏனென்பான், அன்னியனாயிருந்தால் சும்மா இருப்பன். அப்போதறிந்துகொள்ளலாம்' என்று தீர்மானித்துக்கொண்டு கதவைத்தட்டினான். அப்பொழுது அவ்வந்தணன், "யாரது?" என்று கேட்கவே அந்தணன் வந்துவிட்டானென்று தீர்மானித்துக்கொண்டு அரசன் திரும்பிவிட்டான். கொஞ்சதூரம் வந்து அரசன் "இதென்ன நாம் செய்தகாரியம் விபரீதமாய் முடியுமே நான் தட்டினதைக்கேட்டு தானில்லாத காலத்து வழக்கமாகவரும் சோரநாயகன் தன் வரவை யறியாது இன்னும் வந்து தட்டினனோ என்று நிரபராதியாகிய அப்பார்ப்பினியின் பேரில் சந்தேகங்கொள்வானே" என்று பயந்து அடுத்தாற்போலிருக்கும் வீடுகளையும் அவ்வாறே தட்டிச் செல்வோமானால் எவனோ கள்வன் வந்தானென்று நினைத்துவிடுவார்கள் என்று தீர்மானித்துக்கொண்டு அவ்வாறே செய்துவிட்டுப்போயினன். விடிந்தவுடனே அந்தணர்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து அரசனிடம் வந்து 'நம்மூரில் திருடர்பயம் அதிகரித்துவிட்டது; நேற்றிரவு எங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டினார்கள்' என்று முறையிட அதற்கரசன் 'அப்படியொருவன் வீட்டாரெண்ணத்துக்கு விரோதமாக இரவில் கதவை இடிப்பானேயாகில் அவனுக்கு என்ன தண்டனைசெய்வதென்று கேட்க மந்திரிகள் 'அவன் கையைக்குறைத்துவிடுவதே முறை' என்றார்கள். உடனே அரசன் உடைவாளை உருவி தன் கையை வெட்டிக்கொண்டான். பின் கடவுளருளால் அக்கரம் பொன்னிறமாக வளர்ந்துவிட்டது" என்பதே.

இச்செங்கோன்மையே அநாதியாகிய வேதம், அறம் என்பவைகளையும் நிலைநிறுத்துதற்கு இன்றியமையாத காரணமாயிருக்கின்றதனால் அவற்றிற்கு ஆதியென்று சொல்லப்படுவது. தான் உலகொக்குங் காலையில் தன் குடிகட்குக் குற்றஞ்செய்தாரை தண்டித்து ஒழித்தல் அவனது கடமையாம். அத்தண்டமாவது துன்பஞ்செய்தல், பொருட்கொள்ளுதல் கொல்லுதல் என்னு மிவை மூன்றுமேயாம். தன் கீழ்வாழ்வாரை தண்டித்தல் தர்மமல்லாததால் பழியன்றோ என்னின், அப்படியல்ல; ஏனெனில் அப்படித்தண்டித்தல் அவன் தொழிலாகும். தண்டித்தலால் வரும்பயன் யாதென்றால் ஓர் முறை குற்றஞ்செய்தவன் மறுபடியும் அக்குற்றத்தைச் செய்யாமலிருக்கவும் குற்றஞ் செய்தவனொருவனைப் பார்த்து அவன் அயலாரும் அது செய்யாமலிருக்கவும் பண்ணுவதே. இதனுள் முதற்பயன் துன்பஞ் செய்தல் பொருட்கொள்ளுதல் என்னு மிரண்டினாலும் பெறப்படும். மூன்றாந்தண்டமாகிய கொல்லுதலினால் இரண்டாவது பிரயோசனமே பெறப்படும். அங்ஙனம்



கொல்லுதலினால் வேந்தனுக்கு ஒரு பொழுதும் பாவம் வந்தெய்தாது. எப்படி பயிர்கள் களைக்கு அஞ்சி அழியுமோ, அதுபோல அரசன் குற்றம் செய்தாரை தண்டியாது விட்டால் உலகத்துள்ளார் பலதுன்பங்கட்குட்பட்டு வருந்துவராகலின் கொல்லுதலும் ராஜதர்மமே.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்
கூழ்களைகட் டதனொடு நேர்."

என்றார் பெரியாரும்.

இத்தகைய செங்கோன்மைக்குள் ஒன்று இப்போது நம்முடைய காருண்ணிய ஆங்கிலேய ராஜாங்கத்தார் அரசாக்ஷியும் என்பது கற்றோர் பலரும் அறிந்த விஷயமே. இதுவரை ஆங்கிலேய அரசாங்கத்தாரால் இந்தியராகிய நமக்குச் செய்யப்பட்ட அளவற்ற நன்மைகட்கெல்லாம் நாம் அவரிடம் என்றும் நன்றிபாராட்டி ராஜவிஸ்வாசம் மறவாது, குடிகளின் துன்பம் நீக்கக்கருதி அவர்கள் செய்யும் எல்லாவற்றிற்கும் மனப்பூர்வமாய் உதவிபுரிந்து வரவேண்டுவது நம்முடைய கடமையாகவே இருக்கின்றது.

C. K. S

---

# சம்பகமாலை

அல்லது

# இளையராஜாவின் தீர்மானம்.

## அங்கம் III.

### மூன்றாம் களம்.

இடம்: ஓர் மண்டபம்.

(சொண்டாவும் ராஜதேவனும் உட்கார்ந்திருக்கிறார்கள்.)

**ராஜதேவன்.**—அண்ணா! நான் கெயில்வாராவுக்குச் செல்ல சித்தமாயிருக்கின்றேன். வேண்டிய சாமான்களையும், ஆயுதங்களையும் சேகரித்துவிட்டேன். சைந்நியமும் ஆயத்தமாயிருக்கின்றது. உம்முடைய உத்தரவை எதிர்பார்க்கின்றேன்.

**சொண்டா.**—அவசரப்படாதே ராஜதேவா! உனக்குத் தரவேண்டிய கட்டளைப் பத்திரத்தை மகாராணியினிடம் அனுப்பி யிருக்கின்றேன். ராஜமுத்திரையுடன் அது திரும்பிவந்தாலொழிய நீ போகமுடியாது? அது இருக்கட்டும், சிந்தையில்லை. கெயில் வாராவினின்று ஏதாவது செய்தி கிடைத்ததோ? *'மீனர்'களுடைய கலகம் எவ்வாறு நிகழ்கின்றது ரர்ஜதேவா?

**ராஜ.**—அவ்விடத்திய செய்தி ஒன்றுமே தெரியவில்லை அண்ணா! 'மீனர்கள்' கலகஞ்செய்து நம்தேசத்தில் நுழைந்து சில கிராமங்களைக் கொள்ளையாடியது உண்மைதான். அவர்கள் அடங்கினதாகத் தெரியவில்லை. பிரதாபசிங்கினால் அக்கலகம் அடங்கி முடியாதென்று நினைக்கின்றேன்.

**சோ.**—ஆனால் நீ ஆலசியஞ் செய்யாமல் புறப்படவேண்டும். ராணி இன்னும் கட்டளைப்பத்திரத்தை அனுப்பாமைக்கு முகாந்திரம் தெரியவில்லையே.

[ஓர்புறத்தில் "மகாராஜா! அடைக்கலம்புகுந்தோம். காப்பாற்றவேண்டும். தேசம் அராஜகமாய்விட்டது" என்ற சப்தம், உண்டாகின்றது.]

**சோ.**—(உற்றுக்கேட்டு) இது என்ன விந்தை! ராஜதேவா! யார்வந்திருக்கின்றார்கள் பார். தேசம் அராஜகமாவதென்ன?

(ராஜதேவன் சென்று ஒரு சாதுவை அழைத்து வருகிறான்).

**ராஜ.**—அண்ணா! இச்சாதுவின் மொழிகள்தான் நாம் சற்றுமுன்னர் கேட்டவை.

**சோ.**—(எழுந்து நின்று) ஆசனத்தில் உட்காருங்கள் தபோதனரே. எத்தேசம் தங்களுடைய இருப்பினால் மேன்மை பெற்றிருக்கின்றது? என்ன ஆபத்து நேரிட்டது சாது! தங்களுக்கு? தேசம் அராஜகமாய்ப் போய்விட்டதென்றேன் நினைக்கின்றீர். எங்களுடைய பிதாவின் கட்டளையைக் காப்பாற்ற நாங்களில்லையா?

**சாது.**—உமக்குச் சுபம் உண்டாகட்டும் மகாராஜா! உம்முடைய பிரியவசனத்தைக்கேட்டு என் மனம் களிப்புற்றது. உம்மைக்கண்ட வளவில் என் பயம் நீங்கிற்று. இந்த தேசத்தைக் காப்பாற்றி என்ன பிரயோஜன மடையப்போகின்றேன். அரவலிமலைப் பிரதேசத்தில் என்னைப் போன்ற துணையற்ற பலசாதுக்கள் மீனர்களாலும் வில்லிகளாலும் படும் அவஸ்தையை நான்

* ஒரு மலைஜாதியார்.

வாயால் சொல்லமாட்டேன். எத்தனைநாள் அவர்களுடைய துஷ்ட கிருத்தியங்களைச் சகிப்போம். எங்களைத் தாங்கள் முற்றிலும் மறந்துவிட்டீர்கள்; உங்களுடைய குலதெய்வத்திற்கும், குலகுருவுக்கும், மற்றுமுள்ள சாதுக்களுக்கும் பிரிய வாசஸ்தலமாகிய கெயில்வாராவைத் தகுந்த தலைவனின்றி விட்டுவிட்டீர்கள். அந்த மாகாணம் அராஜகமாய்ப் போய்விட்டதென்பதற்குத் தடையென்ன?

**சோ.**—க்ஷமிக்கவேண்டும் சாது! இதுகாறும் அம்மாகாணத்தைத் தலைவனின்றி விட்டது நிசமே. எனது பிதா திடீரென கயைக்குச் சென்றமையால் ராஜ்ஜிய பரிபாலன விஷயங்களில் சிற்சில குறைகள் நேரிட்டன. ஆயினும் நான் அவ்விஷயத்தை மறக்கவில்லை. இதோ (சுட்டிக்காட்டி) என்தம்பி **ராஜதேவனை** அம்மாகாணத்திற்குத் தலைவனாக மகாராணி ஏற்படுத்தியிருக்கின்றார். அம்மாகாணத்துக்கு அவன் தலைமைவகித்தல் ஜனங்களுக்குச் சமாதானமாயிருக்குமென்று நினைக்கின்றேன்.

**சாது.**—மெத்த சந்தோஷம் மகாராஜா! ராஜதேவனைவிட மற்றவர் யார். சௌரியத்திலும், தைரியத்திலும், நற்குணத்திலும் அவருக்கிணையில்லையென்பதை இத்தேசத்து ஜனங்கள் யாவரும் அறிந்திருக்கிறார்கள். அவர் தலைமைவகிக்கத் தகுதியானவரென்பதற்குத் தடையென்ன? தாமதம் செய்யாமல் இந்தக்ஷணமே அனுப்புங்கள்.

**சோ.**—உடனே அனுப்புகிறேன் சாது! ராஜதேவனும் புறப்பட ஆயத்தமாயிருக்கின்றான். அதிகாரப்பத்திரம் ஆஸ்தான முத்திரையுடன் மகாராணியிடமிருந்து கிடைக்கவேண்டும். அதனாலேதான் பிரயாணம் தடைபட்டு நிற்கின்றது.

**சாது.**—(தனக்குள்ளே) அந்தத் தாடகை பிரிதா தடைசெய்கிறாள்போல் காண்கின்றது. இருக்கட்டும். (பிரகாசமாய்) மகாராஜா! ஒரு விஷயஞ்சொல்லுகின்றேன். கோபங்கொள்ளாமல் தயவுசெய்து கேட்கவேண்டும்.

**சோ.**—பயப்படாமல் சொல்லும் சாது! பிரியமில்லாததாயிருந்தாலும் பிறருடைய அபிப்பிராயம் அறியத்தகுந்தது.

**சாது.**—ராஜ்ஜியமாளும் ராஜாக்கள் ஒழுங்கு சடங்குகளைக்கவனித்துக் காரியத்தை விட்டுவிடுவார்கள். காரியம் கெட்டபிறகு ஒழுங்கு சடங்குகளாலாவதென்ன? இத்தருணத்தில் முத்திரையுள்ள அதிகாரபத்திரமேன்? "சிறுபிள்ளை ஆளும் ராஜ்ஜியமும் பெண்ணாளும் ராஜ்ஜியமும் கேடடையும்" என்று மகாகவி **சந்து** தேவர் எழுதியிருக்கின்றார். மகாராணிக்கு அவசரமாய் நடத்தவேண்டுவது இன்னதென்றும் சாவகாசமாய் நடத்தவேண்டுவது இன்னதென்றும் என்னதெரியும்? நீங்கள் ஆஸ்தான முத்திரைப்பத்திரத்தை எதிர்நோக்கினால் காரியம்கெட்டுப்போம். க்ஷணம்கூட தாமதம்செய்யலாகாது. மகாராணியினுடைய அனுமதியை முன்னமே தாங்கள் பெற்றிருக்கின்றீராகையால் முன்னர் ராஜதேவனை அனுப்பிவிடுங்கள். பின்னர் அதிகாரப்பத்திரம் அனுப்பலாம்.

**சோ.**—(சற்றே யோசித்து) ராஜதேவா! உடனே புறப்படு. அதிகாரப்பத்திரத்தை பின்னர் அனுப்புகின்றேன். உன்னைக் 'கெயில்வாரா'வுக்கும் 'கோவேரியா'வுக்கும் தலைவனாக ஏற்படுத்தியிருக்கிறோமாகையால் நீ ஆயிரம் குதிரைப் பட்டாளத்துடனும், இரண்டாயிரம் காலாட் சேவகருடனும் வருஷத்தில் ஆறுமாதம் இராஜதானிக்குவந்து ஊழியம் செய்யவேண்டும். வெளிதேசத்தாரோடு சண்டை நேரிட்டகாலத்தில் மூவாயிரம் குதிரைப்பட்டாளத்தையும் மூவாயிரம் காலாட்சேவகரையும் தரவேண்டும். உனக்குக்கிடைக்கும் சுதந்திரங்கள் வருஷத்திற்கு மூன்றுலக்ஷம் ரூபாய் கிடைக்கும் ஸ்திர ஆஸ்தி; 4,0000 ரூ. ரொக்கவருமானம்; கெயில்வாரா பட்டணத்துக்கு வெளியே தோட்டமொன்று; மகாராணாசபையில் உனக்கு மூன்றாந்தரம் அந்தஸ்து. அன்றியும் நீ உன்னுடைய நகாராவை கோட்டைவாயில்வரையில் இரண்டு கழிகளால் அடித்துவரலாம். தசராதர்பாரில் ஒரு குதிரையும் ஒரு வஸ்திரமும் மகாராணாவால் மரியாதையாக உனக்கு அளிக்கப்படும்; நீ வேட்டைக்குச் செல்லுகையில் நகாராவை அடித்துக்கொள்ளலாம்; விசேஷ இராஜபுத்திரர்களுடைய சுதந்திரங்களெல்லாம் உனக்கு உண்டு; நீ தள்ளிவிட்ட வேலையாட்களையும் உத்தியோகஸ்தரையும் மகாராணாவாயினும், சாமந்தராஜாக்களாயினும் ஏற்றுக்கொள்ளார்கள். தனியே உன்னுடைய சத்திரம், சாமரம் முதலியவற்றை



நீ உபயோகப்படுத்தலாம். மகாராணாவுக்கெதிரில் உபயோகப்படுத்தலாகாது. உன்னுடைய வக்கீல் உனக்கு பதிலாக மகாராணாசபையில் மரியாதைகளைப்பெறலாம். இவைகள் தாம் உனக்குக் கிடைக்கும் சுதந்திரங்கள். அம்மாகாணத்தை ஆளத்தகுந்தவன் நீதானென்று நினைத்து மகாராணி உனக்கு அந்த அந்தஸ்தைக்கொடுத்திருக்கின்றார். உன்னுடைய கடமையை நீ தப்பாது செலுத்து. கெயில்வாரா நம் தேசத்தில் பிரதானமாகாணம். முன்னர் இத்தேசத்திற்குப் படையெடுத்துவந்த சத்துருக்களெல்லாம் அவ்வழியாகவே இத்தேசத்திற்குவந்தனர்கள். நீ வெகுஜாக்கிரதையாயிருக்கவேண்டும். பக்கத்தில் வசிக்கும் **ஓதூ, பஞோரா,** வில்லி ஜாதியார் நம் வமிசத்தாருக்கு மெத்த சகாயம் செய்திருக்கின்றார்கள். அவர்களோடு சிநேகமாயிரு. நம் குலதெய்வமாகிய **ஸ்ரீ** ஏகலிங்கருடைய ஆலயத்தையும், அரவலி மலையிலுள்ள சாதுக்களையும் பேணி அவர்களுடைய ஆசீர்வாதத்தைப்பெறு. ஜனங்களுடைய அன்பையும் மதிப்பையும்பெறு. எல்லாம் அஸ்திரம். தேகவாழ்க்கை மின்மினிப்பூச்சியின் பிரகாசம்போல் தோன்றித்தோன்றி மறைவது. செல்வம், வீடு, நிலம் எல்லாம் போய்விடும். நற்குணமுடையவனென்ற பெயர் மாத்திரம் என்றைக்கும் நிலைக்கும். எல்லா பாவங்களிலும் கொடியது செய்நன்றி மறத்தல். செய் நன்றி மறந்தவன் அறுபதினாயிரம் வருஷம் நரகத்தில் விழுந்துகிடப்பான். ராஜதேவா! செய்நன்றி மறவாதே; கண்ணியத்தையும், நம்பிக்கையையும் கைவிடாதே; நம் வமிசத்திற்கும், பிதாவுக்கும், குலத்திற்கும் கீர்த்தியைத்தேடு. காலதாமதமாய் விட்டது. தக்ஷணம் சாதுவையும் கூட்டிக்கொண்டு கெயில்வாராவுக்குச்செல்.

**ராஜ.**—(நமஸ்காரஞ் செய்துவிட்டு) போய்வருகிறேன் அண்ணா.

**சாது.**—உமக்கு மங்களம் உண்டாகட்டும் மகாராஜா! போய்வருகிறேன்.

(இருவரும் செல்கிறார்கள்.)

**சோ.**—(தனக்குள்ளே) மகாராணி அதிகாரப் பத்திரம் அனுப்பாமைக்குக் காரணம் என்ன? வேறு ஆலோசனை கொண்டனரோ? இந்த சாது எவராயிருக்கலாம்! அங்கு பெருங்கலகம் நேரிடக் காரணமென்ன? ராணி அதிகாரபத்திரம் கொடாவிடில் என் செய்வது? ராணியென் யோசனையைக் கேளாதொழியார். ஆனால் பெண்களின் மனதை என்னென்று நம்புவது! நடக்கவேண்டுவது நடக்கட்டும்; நான் என் முத்திரையுடன் அதிகாரப்பத்திரத்தை அனுப்பிவிடுகின்றேன். ராஜதேவனைவிட தகுதியானவன் வேறெவனிருக்கின்றான்.

(போகின்றான்.)

**எச். வெங்கோப ராவ்.**

## திராவிட சங்கம்.

(ஆரியஜனப் பிரியன்).

இவ்விராஜதானியில் "தென்னிந்தியா திராவிட சங்கம்" என்று ஓர் சங்கம் ஏற்படுத்தும்பொருட்டு, சென்னைப் பச்சையப்பன் காலேஜில் நாளது 5௨ மாலை ஒரு கூட்டம் கூடிற்று. கனம் நீதிஅதிபர் சுப்பிரமணிய அய்யரவர்கள் சபாநாயகராக வீற்றிருந்தனர். அன்றைய விஷயத்தைத் துவக்குங்கால் அய்யரவர்கள் சொன்னதாவது:—தற்காலத்துக்குத் தேவையானபடி மாற்றிக் கொள்ளாமல் பழைய காலத்திய இலக்கியங்களைச் சாசுவதப்படுத்துவதற்கல்ல, இன்று நாம் கூடி யோசிப்பது. சாதாரணமாய் ஜனங்கள் பிரயோஜன மடையக்கூடியபடி சுதேச பாஷாஞானத்தை அபிவிர்த்தி செய்வதற்கே நாம் பாடுபடவேண்டும். ஜனங்களுக்கு இஷ்டமிருக்கட்டும், இல்லாமற் போகட்டும், நாமெல்லோரும் நல்ல நாகரிகம் பொருந்திய கவர்ன்மெண்டாரால் ஆளப்பட்டு வருகின்றமையால் அவர்களுடைய ஞானமும் படிப்பும் ஜனங்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும். அதைச் சுதேசபாஷைகளைக் கொண்டு கற்கவேண்டும். கற்பிக்க ஏற்றவிதமாக இச்சங்கமானது சுதேசபாஷைகளை அபிவிர்த்தி செய்யவேண்டும். பிறகு வித்தியா இலாகாத் தலைவராகிய **டாக்டர்** டங்கன் துரையவர்களிடமிருந்து வந்த கடிதமொன்றை வாசித்தார். அவர் இவ்விஷயத்தை ஆமோதித்து எழுதியிருந்தார். ம-ள-ள-ஸ்ரீ டி. ஆர். ராமநாதய்யர் கிறிஸ்தவர் பிரசுரித்த சுதேச

பாஷா புஸ்தகங்களையும், மாக் மில்லன் கம்பெனியார் பிரசுரித்தவைகளையும் ஆதரிக்கவேண்டுமென்றார். ம-ா-ா-ஸ்ரீ வி. டி. சேஷாத்திரியாசாரியார் சுதேசபாஷா படிப்பு வீணாய்ப்போகாமல் வித்தியாதிகாரிகள் செய்த சில வேலைகளைச் சொல்லி, சுதேசபாஷைகளில் புஸ்தகங்களே இல்லையென்றும், எழுதுகிறவர்களும் கற்பிக்கிறவர்களும் கிடையாரென்றும், சில முக்கியமான விஷயங்களைப் பற்றிப் புஸ்தகங்களெழுதிப் பிரசுரிக்கும்படி செய்வதே இச்சங்கத்தினுடைய கருத்தென்றுங் கூறினார். ம-ா-ா-ஸ்ரீ இ. பாலசுந்தர முதலியார் மேற்கூறியவற்றை ஆமோதித்துச் சாஸ்திரம், சுகாதாரம், விவசாயம் முதலியவற்றைக் குறித்த சுலபமான சுதேசபாஷா புஸ்தகங்களில்லையென்றும் அவைகளைத் தருவதே இச்சங்கத்தினுடைய கருத்தென்றும் சொன்னார். பள்ளிக்கூடத்தை விட்டபிறகு படித்தவர்கள் சுதேச பாஷைகளைப் படிக்கும் பொருட்டுப் பழைய இலக்கியங்களுக்கு உரை யெழுதுதலும், அகராதி முதலியவைகளை அச்சிடுதலுமே இச்சங்கத்தினுடைய கருத்தென்றார் ம-ா-ா-ஸ்ரீ எச். நாராயணராவ் அவர்கள். ரெவரெண்டு ஜே. லாஜரஸ் அவர்கள் ஸ்கூல்புக் சொசைட்டி என்று ஓர் சங்கமிருந்ததென்றும் அந்தச்சங்கத்தார் எவ்வளவோ பிரயத்தனஞ்செய்தாலும் எவரும் சுதேசபாஷையில் புஸ்தகம் எழுதவில்லையென்றும் ஆகையால் இச்சங்கமானது முன்னர் ஜனங்களுக்குத் தம்முடைய பாஷைகளில் ஆசையை உண்டாக்கவேண்டுமென்றும், அதை உண்டாக்கினபிறகு தகுந்த புஸ்தகங்களெழுதி அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றுங் கூறினார். ஞானத்தை ஜனங்களுக்குக் கற்பிப்பதே அச்சங்கத்தினுடைய கருத்தாயிருக்கவேண்டுமென்றும், அதிலும் மேற்குத் தேசத்திய ஞானத்தைக் கற்பிக்கவேண்டுமென்றும், ஆகையால் ஜனங்களுக்குப் புலப்படும்படி விஷயங்களைச் சஞ்சிகைகள் மூலமாய் அறிவிக்கவேண்டுமென்றும் ம-ா-ா-ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் சொன்னார். திவான் பகதூர் வ. கிருஷ்ணமாச்சாரியார் இச்சங்கத்தினுடைய நோக்கத்தை மொத்தமாய் ஒத்துக்கொண்டு, அதனுடைய நோக்கம் புதியகாலத்திய ஆங்கிலேய பண்டிதனையும், பழையகாலத்திய சுதேசபாஷா பண்டிதனையும் ஒன்றுபடுத்துவதாகவே யிருக்கவேண்டுமென்றார். நடந்த விஷய மிவ்வளவுதான். இதனோடு அக்கூட்டங் கலைந்தது. பலருடைய பலவிதமான சம்பாஷணையில் சங்கத்தின் நோக்கம் இன்னதென்றும், அது இன்னவிதமாக வேலை செய்யப் போகிறதென்றும் கண்டு பிடிப்பது கஷ்டமாயிருக்கும். சுதேச பாஷைகளுக்கு வந்த வியாதி இன்னதென்று கொஞ்சம் ஏறக்குறைய மேற்கண்ட கனவான்கள் அறிந்திருந்தாலும் சிகிச்சைமட்டும் வெவ்வேறு விதமாய்ச் சொன்னார்கள். இதைப் படிப்பவரறியும்பொருட்டு இங்கு அவைகளைத் தொகுத்துச் சொல்வோம். பழையகாலத்திய படிப்புப் போதாதென்பதும், மேற்கத்திய ஞானம் உண்டாக்கவேண்டுமென்பதும் எல்லோரும் ஒத்துக்கொண்ட விஷயங்களே. அதை ஜனங்களுக்கு எப்படிப் புகட்டுவது? (1) ம-ா-ா-ஸ்ரீ டி. ஆர். ராமநாதய்யர் சொல்வது கிறிஸ்தவர்களும், மக்மில்லன் கம்பெனியாரும் அச்சிட்ட புஸ்தகங்களை ஆதரிப்பது, (2) ம-ா-ா-ஸ்ரீ வி. டி. சேஷாத்திரியாச்சாரியார் சொல்வது முக்கியமான சில விஷயங்களைச் சுதேசபாஷையில் எழுதி அச்சிடுவது, (3) ம-ா-ா-ஸ்ரீ பாலசுந்தர முதலியார் சொல்வது சாஸ்திரம் விவசாயம் முதலியவைகளைக் குறித்துப் புஸ்தகம் எழுதல், (4) ம-ா-ா-ஸ்ரீ நாராயணராவ் சொல்வது பழைய புஸ்தகங்களுக்கு உரையெழுதுதலும், அகராதி எழுதுதலும், (5) ரெவரெண்டு லாஜரஸ் சொல்வது ஜனங்களுக்குப் படிப்பில் ஆசையை உண்டாக்குதல், (6) ம-ா-ா-ஸ்ரீ ஜி. சுப்பிரமணியய்யர் சொல்வது ஒரு சஞ்சிகையை அச்சிடுவது, (7) திவான்பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் சொல்வது பண்டைக்காலத்திய படிப்புப்படித்த சுதேச பண்டிதனையும் புதியகாலத்து அங்கிலேய பண்டிதனையும் ஒட்டவைப்பது. இவ்விதமாகச் சிகிச்சைகள் பிரயாவம் பொருந்திய எண் ஏழு ஆகின்றன. லக்ஷியம் இன்னதென்று அறியாமல் பேசிய பேச்சினின்று நாம் ஆய்ந்து அறிந்தது இவ்வளவுதான்.

திராவிடசங்கமென்ற பெயரைக் காணுமிடத்து அச்சங்கமானது தமிழை மாத்திரம் பேணுமோவென்று சிலர் சந்தேகிக்கலாம். திராவிடம் என்றால் தமிழ், தெலுங்கு, கன்னட மாதியாவும் சேர்ந்ததேயாம். அப்போது தெலுங்கர் மாத்திரம் எவரும் பேசவில்லை. மற்றவர் வெகு சிலர்தான் வந்திருந்தார்கள். ஆயினும் இன்னும் பெருங்கூட்டத்துக்கு இது முன்னிட்டதாகையால் முக்கியமான சிலர் வந்தாரென வைத்துக்கொள்ளுவோம். மேற்கண்ட ஏழுவகைகளுள் சில முன்னரே பழுதுபட்டனவாகக் கண்டுபிடிக்கப்பட்டன. நன்றாய் நடத்தப்பட்டு வந்த ஞானபோதினி நின்றுவிட்டது. இஞ்சினீயரிங்கு, பிஸிகல் சைன்ஸ் அல்லது பௌதிக சுபாவசாஸ்திரம் இன்னும் சில சாஸ்திரம் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் வழங்கவில்லை. அகராதிகளும், உரைகளும் பழைய கிரந்தங்களுக்கு வேண்டிய அளவு எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளில்லாமையால் இப்பொழுது சுதேச பாஷாப் பயிற்சி குறைவுபடவில்லை. ரெவரெண்டு லாஜரஸ் அவர்கள் சொன்னபடி ஜனங்களுக்குப்படிப்பில் ஆசையில்லாமையினால் ஆசை உண்டாக்குதலே சங்கத்தார் முதலில் செய்யவேண்டியது. ஞானம் ஓரிடத்திலிருக்கட்டும், மற்றப்படி ஜீவனத்துக்கு ஆதாரமல்லாத எப்படிப்பையும் ஜனங்கள் படிக்கமாட்டார்கள். சுதேச பாஷையில் பாண்டித்தியம் கிடைப்பதினால் யாதுபிரயோஜனம்? ஜீவனம் ஆங்கிலேய படிப்பிலன்றோ இருக்கின்றது? ஆங்கிலேய படிப்போடு சுதேசபாஷா படிப்பைச் சேர்த்ததினால் சுதேசபாஷா ஞானம் விருத்தியாகவேண்டுமேயொழிய வேறல்ல. இப்பொழுதும் அவ்வாறே சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வித்தியார்த்திகள் சுதேச பாஷைகளைக் கவனிப்பதில்லை. அவர்கள் கவனியாமலிருப்பதற்குக் காரணம் வித்தியா இலாகாத்தலைமை வகித்தவர்களும், யூனிவர்சிட்டியாருமே. ஒரு தினத்தில் 6 மணி காலம் இங்கிலீஷ் படித்தால் ஒரு வித்தியார்த்தி சுதேசபாஷை ஒரு மணியே படிக்கின்றான். அவரவர்களுக்குத் தோன்றியபடி பேசிவிடாமல் சில கனவான்கள் ஒன்றாய்க் கூடிச் சுதேச பாஷையில் நாட்டமில்லாமற் போனதற்கு உண்மையான காரணத்தைக் கண்டுபிடித்து, பிறகு சிகிச்சையைத் தேடவேண்டும். அக்கூட்டத்தார் அவ்விதமாய்க்கண்டு தேறினவைகளை வித்தியா இலாகாத்தலைவர் தழுவி நடக்கும்படி முன்னர்க் கவர்ன்மெண்டாரிடமிருந்து வாக்குத் தத்தம் பெறவேண்டும். அவ்வாறு ஏதாவது செய்வதே யிச்சங்கத்திற்குப் பலமாம்.



## உபாத்தியாயர் பக்கம்.

### குழந்தைகளும் விளையாட்டுக்கருவிகளும். III.

குழந்தைகள் பொம்மைகளையும் விளையாட்டுக்கருவிகளையும் கண்டு அவைகள் தங்களுக்கு வேண்டுமென்று ஆசைப்படவும், கிடைத்தால் வைத்துக்கொண்டாடவும் கற்றுக்கொண்டபிறகு அப்பொம்மைகளையும் விளையாட்டுக்கருவிகளையும் தாங்களே வைத்துக்கொண்டு தனியாக அநுபவிக்க விரும்பாது தங்களையொத்த சிறு குழந்தைகளோடு கூட அவைகளை வைத்துக்கொண்டு விளையாட விரும்புகின்றன. அப்பொழுது தங்களதென்று சொந்தம் பாராட்டிக்கொண்டாடிய விளையாட்டுக் கருவிகளைத் தங்களோடு விளையாடும் மற்றக் குழந்தைகளுக்கும் கொடுக்கக் கற்றுக்கொள்கின்றன. இதனால் அநுதாப சிந்தையுண்டாகிறது; அநுதாபசிந்தை வளரவே, பிறகு தங்களுடைய சிறுதங்கை தம்பிகளுக்குத் தங்கள் பொம்மைகளைக் கொடுக்கவேண்டுமென்கிற எண்ணம் உதிக்கிறது. இது மூலமாக தயாளத்துவம் உதிக்கக்காரணமாகிறது. இப்படியாக விளையாட்டுக்கருவிகள் குழந்தைகள் மனதில் அநேக நல்லெண்ணங்களும் கருத்துக்களும் உதிக்கக் காரணமாகின்றன. விளையாட்டுக் கருவிகளில்லாவிட்டால் இந்த நல்ல எண்ணங்கள் கருத்துகள் எல்லாம் உதிப்பதற்கு மூலமாயிருக்கும் காரணம் இல்லாமற் போய்விடுகிறது. விளையாட்டுக்கருவிகளினால் மனதும் சிந்தையும் சரியாக விர்த்தியடைந்து லோகசுபாவத்தையும் மாதிரியையும் அநுபவித்தறிந்துகொள்ள ஆஸ்பதமான ஸ்திதியை யடைகின்றன. ஆகையால் நாம் விளையாட்டுக்கருவிகளையும் பொம்மைகளையும் அலக்ஷியம் செய்யாமல் நமது குழந்தைகள் விர்த்தியடைய மிகவும் உபயோகமான கருவிகளாக மதித்து தெய்விகமாக அவைகளைப் பாராட்டவேண்டும். குழந்தை மனம் நன்னடத்தையின்னதென்று யூகித்தறியச் சக்திபெறுமுன், விளையாட்டுக் கருவிகளும் பொம்மைகளும் அம்மனதில் நல்லெண்ணங்கள் உதிக்கும்படிச் செய்கின்றன. குழந்தைகள் விளையாடும்பொழுது பொம்மைக்களைத் தாலாட்டிச் சீராட்டுவதையும், அது அழுவது போல் பாவித்து சமாதானப்படுத்துவதையும், பொம்மைக்குக்காயலாவென்று சிகிச்சைசெய்வதையும், இது போன்ற நடவடிக்கைகளையும் அலக்ஷியம் செய்வது பிசகு. குழந்தைகளுக்கு அத்தருணங்களில் உண்மையான நல்லெண்ணங்கள் உதித்து மனதில் பதியும்படியான நிலையிலிருக்கின்றன. அச்சமயத்தில் நாம் யோசனையின்றி அலக்ஷியம் காட்டினால் அம்மேலான எண்ணங்கள் மனதில் பதிந்து வேரூன்றுவதற்குப் பங்கமுண்டாகும்.

புஸ்தகங்களைக்கொண்டு குழந்தைகளுக்குப் போதிக்க முடியாதவைகளை ஒழுங்கோடு கூடிய வேடிக்கை விளையாட்டுக்களால் மிக நன்றாகவும் இலகுவாகவும் போதிக்கலாம். இதனாலேயே எந்தெந்த தே

சத்தில் குழந்தைகளுக்கு விளையாட்டுக்கருவிகளும் பொம்மைகளும் அதிகமாகக் கொடுத்துதவிச் சீராய் வளர்த்து வருகிறார்களோ அந்தத்தேசத்தார் விசேஷமாக ஏகத்துவம், (அதாவது, குருட்டுத்தனமாய்ப் பிறரைப்பார்த்துப் பின்தொடராமல், தாங்களாக சொந்த யோசனைசெய்து சுயபுத்தியைக்கொண்டு நடக்குந்தன்மை)*, எதிலும் மிகமேன்மையான எண்ணங்களைத் திரட்டி உருவகப்படுத்திக்கொண்டு அதற்கொப்ப நடக்குந்தன்மை†, சௌரியம்‡ முதலிய மேலான குணங்களில் சிறந்து விளங்குகிறவர்களாகவிருக்கிறார்கள். இந்த உண்மையை **ப்ரோபெல்** என்பவர் கண்டு பிடித்து இந்த சூக்ஷ்ம வழியையனுசரித்துக் குழந்தைகளைப் படிப்பித்துப் பழக்கவேண்டுமென்று, வேடிக்கை விளையாட்டுகளையெல்லாம் நன்றாக கவனித்துத் தீர ஆலோசித்து அவைகளை வித்தியாவிஷயத்துக்கு அனுகூலமாக, அதாவது குழந்தைகள் நாலாவிதத்திலும் விர்த்தியடைந்து வளருவதற்கு ஒத்தாசையாகவிருக்கும்படி ஒழுங்குபடுத்தி முறைக்குக் கொண்டுவந்தார். இப்படி அவர் நூதனமான போதனுமுறை கண்டுபிடித்ததில் அவர் உபயோகப்படுத்தின வழி வகைகள் [illegible] சொலிகளான தாய்மார் தங் [illegible] ளையாட்டுக்காட்ட உபயோகித்துவந்த பந்து, கல், குச்சி, பாட்டு, விளையாட்டு, கஸரத் முதலியவைகளையன்றி வேறல்ல. அப்படியானால் இவைகளை அவர் உபயோகித்ததில் விசேஷமென்ன வந்ததென்று கேட்டாலோ, அவர் வேடிக்கை விளையாட்டுகளை உபயோகித்ததில் குழந்தைகள் உத்தேசமின்றி, ஒழுங்கற்று, நினைத்தபடி விளையாடுவதை ஒழித்து, ஒவ்வொரு விளையாட்டையும் ஒழுங்காகவும், கருத்தாகவும், இடையில் அதைவிட்டு வேறொன்றில் மனம் பற்றாதபடி திருத்தமாகவும் விளையாடும்படி குழந்தைகளுக்கு ஒத்தாசைசெய்து எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துவதை ஒரு பெரிய காரியமாகக் கொண்டு நிறைவேற்றத் துவக்கினார். விளையாட்டுக் கருவிகளை நினைத்தபடி உபயோகித்து நினைத்தபடி யெறிந்துவிட்டுப் போவது கூடாதென்று காட்டித் தடுத்தார். விளையாடுவதிலும் குழந்தைகள் மனதை ஒருவழிப்படுத்தி அந்தவழியில் சரியாகச் செல்வதால் விர்த்திக்கிடமுண்டாகும்படி அவ்விளையாட்டுகளையெல்லாம் ஒழுங்குபடுத்தினார். இப்படி ஒழுங்குபடுத்திய விளையாட்டுகளை 'கிண்டர்கார்டன் விளையாட்டுகள்' என்றும், அவ்விளையாட்டுக்கு வேண்டிய கருவிகளுக்கே 'கிண்டர்கார்டன் கொடைகள்' என்றும் பேர் வழங்கிவருகிறது. நமது தேசத்தில் வழங்கிவரும் விளையாட்டுகள், பாட்டுகள் முதலியவைகளை 'கிண்டர்கார்டன்முறை'க்கு ஏற்கும் வண்ணம் உபயோகிக்கலாமென்று அனேகம் பாட்டுகள் விளையாட்டுகளை அதற்கேற்ப உபயோகிக்கும் விதத்தை யெடுத்து விளக்கிக்காட்டி இவ் **விவேகசிந்தாமணியில்** பிரசுரித்து வந்திருக்கிறோம். 'கிண்டர்கார்டன்' விளையாட்டுக்கும், சாதாரணமாகக் குழந்தைகள் நம் வீடுகளில் விளையாடுகிற விளையாட்டுக்கும் ஒரு பெரிய வித்தியாசமுண்டு. கிண்டர்கார்டனில் குழந்தைகள் விளையாடும் விளையாட்டு ஒவ்வொன்றும் ஒரு பலனை உத்தேசித்துச் செய்யப்படும். அப்பலன் சித்திக்கும்படி கிண்டர்கார்டன் உபாத்தியாயர் குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்திருந்து அவர்களை நிர்ப்பந்திக்காது இதமாகவே சரியான வழிகாட்டி அந்தவழியிற் செல்ல நடத்திக்கொண்டு போவார்கள். வீட்டில் விளையாடும் விளையாட்டுகளோ மேற்பார்வையற்று அடிக்கடிமாறும் குழந்தைகள் மனபேதத்துக்குள்பட்டும், வீண்காலப்போக்கு, சோம்பித்திரிதல், அற்பசொற்பம் முதலிய குற்றங்களுக்கு இடந்தருவனவாகவுமிருக்கும். இவ்வித குற்றங்களுக்கு இடமுண்டானால் அவ்விளையாட்டு வளர்ச்சிவிர்த்திக்குக் காரணமாகவின்றி ஒழுங்கீனம், துர்க்குணம் இவைகளுக்கு ஆதாரமாகின்றன. குழந்தைகள் விளையாடும்பொழுது நடுவில் நேரும் இடையூறுகள், எண்ணங்களால் அவ்விளையாட்டின் நோக்கமும் பயனும் கெட்டுப் போகாதபடி காக்க அவர்களுக்கு தக்கவர்கள் உதவியாயிருந்து வழிகாட்ட வேண்டியது அவசியம். ஆனால் அப்படி வழிகாட்டி நடத்திக்கொண்டு போவதில் அவர்களை நிர்ப்பந்திக்காமல் லாவண்யமாய் நாம்அவர்களை நடத்துவது தெரியாதபடி அவர்களிடத்தில்வெகு மிருதுவாக நடந்துகொள்ளவேண்டும். இப்படியாகக் குழந்தைகளின் வித்யாப்பியாச விஷயத்தில் பொம்மைகளும் விளையாட்டுக்கருவிகளும் மிக அவசியமும் உபயோகமுமான வைகளென்பது ஸ்பஷ்டமாய் விளங்கும். விளையாட்டுக்கருவிகளிலேயே குழந்தைகளுக்கு குணங்களெல்லாவற்றிலும் மேலான மானுஷிகத்தனம் முதல்முதல் உதிக்கிறது. இதற்கு ஆதாரமாக விருப்பது அனுதாபம். அனுதாப குணம் பொம்மை விளையாட்டில் தான் குழந்தைகளுக்கு முதல்முதல் உதிக்கிறது. விளையாட்டுபொம்மை யில்லாவிட்டால் அக்குணம் உதிப்பதற்கு அனுகூலமின்றிப் போய்விடும். ஏனெ

* Individuality. † Idealism. ‡ Heroism.



ன்றால் சிறு குழந்தைகளுக்கு பொம்மை விளையாட்டுக்கருவிகள் மூலமாகவின்றி மற்றப்படி லோகவிஷயங்களைக் கிரகித்துக் கொள்வதற்கான சக்தியில்லாமலிருக்கிறது.

இதுசங்கதியை முன்னரேயெடுத்து விளக்கிக்காட்டியிருக்கிறோம். விளையாட்டுக் கருவிகளையுபயோகித்தல் வித்தியாரம்பத்தின் பிரதமபாகமென்னலாம். இதையொட்டி இதற்கு மேல் வருவது 'பொருள் பாடம்' ஆகும். 'கிண்டர்கார்டன்' முறையில் இந்தப் 'பொருள்பாடம்' சொல்லல், விளையாட்டுக்கருவிகளையுபயோகித்தலுக்கு அடுத்த இரண்டாவது படியில் வருவதாகச் சொல்லலாம். இதைப் பற்றிப் பின்னால் வேறொரு சஞ்சிகையில் எழுதுவோம்.

C. V. S.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## குரங்கும் குழந்தையும்.

சிறுவர்களே! சென்றசஞ்சிகையில் யானையைப்பற்றி யெழுதியிருந்ததைவாசித்து யோசித்திருப்பீர்களே! இவ்விசை "குரங்கும் குழந்தையும்" என்று ஒரு சிறுகதை சொல்கிறேன் கேளுங்கள். கதை யென்றால் கட்டுக்கதையல்ல, உண்மையாக நடந்ததே. நடந்ததைப்பார்த்தவர் சொல்லக்கேட்டு எழுதியதையே உங்களுக்கு நான்சொல்லுகிறேன். யானை அறிவிலும் விவேகத்திலும் மிகச்சிறந்த பிராணியானால், குரங்கு உருவத்திலும், சேஷ்டையிலும், மனுஷனுக்கு மிகவும் நெருங்கிய பொருத்தமுள்ளதன்றி, மனுஷனைப்போல் நடிப்பதிலும் மற்ற எல்லாப் பிராணிகளையும்விட மனுஷனை யொத்ததாக விருக்கிறது. டார்வின் என்னும் சாஸ்திரவிற்பன்னர் பிரபஞ்சவிர்த்தியில் மனுஷராகிய நாமெல்லாம் குரங்காயிருந்து விர்த்தியாகி வளர்ந்து மனுஷரூபமடைந்தோமென்றும் சொல்லியிருக்கிறார். இப்படி குரங்கு ஜாதியை மனுஷர்களாகிய நமக்கு மூதாதையாக ஏற்படுத்தியது வாஸ்தவமானாலும், இல்லாவிட்டாலும், மனுஷனையொத்து எல்லாவிதத்திலும் அவனுக்கு நெருங்கிய பொருத்தமுள்ள பிராணி குரங்கினமென்பது நாமெல்லாரும் நிதர்சனமாய்க் காணக்கூடியதே. நம்மில் சாமானியர்களும் இதையுணர்ந்திருக்கிறார்களென்பதற்கு உதாரணம் வேண்டினால் வாலில்லாக்குரங்கைப்பார்த்த சாமானியர்கள், அதற்குக் "காட்டுமனுஷன்" என்று பெயரிட்டிருப்பது ஒன்றேபோதும். இது நிற்க.

ஜெமேய்க்கா தீவிலிருந்து இங்கிலாந்துக்குப் போன கப்பலொன்றில் ஏறிச்சென்ற பிரயாணிகளில் வெள்ளைக்கார துரைசானி ஒருவரிருந்தார். அந்தம்மாள் இரண்டொரு மாசமான தன் கைக்குழந்தையோடு கப்பலேறி தன் சுதேசமாகிய இங்கிலாந்துக்குப் பிரயாணமாய்ப் போய்கொண்டிருந்தார். கப்பலில் போகும் பிரயாணிகள் வெகுநாளைக்கு நிலத்தைக் காணாமல் சமுத்திரமத்தியில் கப்பலிலேயிருந்து வசித்துவரவேண்டியது அவசியமாதலால், பிரயாணிகள் ஏற்றிக்கொண்டுபோவதற்கான கப்பல்கள், அனேக ஜனங்கள் வெகுநாள் குடியிருப்பதற்குவேண்டிய வசதிகளும் சாதனசௌகரியங்களும் பொருந்தினவைகளாகக் கட்டப்பட்டிருக்கும், தளமும், தட்டும், சமையலறையும், ஸ்நான அறையும், தூங்குமறையும், போஜனகூடமும், உலாத்த மேலதட்டும் கீழ்தட்டுமாக, பெரிய அடுக்கு மெத்தைவீடுபோல் திவ்வியமாய்க் கட்டப்பட்டிருக்கும். ஆடுமாடுகள் கட்டுவதற்குத் தொழுவமும்கூட அமைந்திருக்கும் சாயங்காலம் காத்துவாங்க பிரயாணிகள் மேல்தட்டில் வந்து உலாத்துவதும் கூடிக்குலாவுவதும், சமுத்திரத்தில் போகும் இதர கப்பல்களையும் மற்றப்படி கப்பலிலிருந்து காணக்கூடும் காக்ஷிகளையும் பார்த்துச் சந்தோஷமனுபவிப்பதுமாக விருப்பார்கள். இப்படியிருக்குங் காலத்தில் ஒரு நாட் சாயங்காலம் அந்தத் துரைசானி தன் கைக்குழந்தையுடன் மேல்தட்டிற்கு வந்து ஒரு 'சோபா'வில் உட்கார்ந்து காத்துவாங்கிக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது அக்கப்பற்றலைவன் தூரத்தில் போகும் கப்பலொன்றைத் தன் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் கண்டு, அது அவ்வளவு தூரத்திலிருந்து பார்க்க மனதுக்கு ரமணீயமாகவிருந்ததால், பக்கத்திலுட்கார்ந்திருந்த அத்துரைசானியைக் கூப்பிட்டு அவருக்கு அக்காக்ஷி

யைக் காட்ட நினைத்தான். அத்துரைசானி யும் அக்காக்ஷியைக் காணவிரும்பி, குழந்தை யைச் சோபாவில் படுக்கவிட்டு, கப்பற்றலை வன் தூரதிருஷ்டிக் கண்ணாடியைச் சரிப் படுத்தி அவர் அக்காக்ஷியை நன்றாகக்காணும் படி வைத்துக்கொடுக்க, இவர் அதுமூலமாகப் பார்க்கத் துவக்கினார். அப்பொழுது சுங்கானி லிருந்தமனிதன் "அதோப்பார், அந்தக்குரங்கு—" என்று மனப்பதறக்கூவினான். அவன் சொல்லிமுடிக்குமுன் திரும்பிப் பார்த்தார்கள். அக்கப்பலிலிருந்த பெருங்குரங்கு ஒன்று ஒரு கையால் குழந்தையை யெடுத்து உறுதியா யணைத்துப் பிடித்துக்கொண்டு இன்னொரு கையால் பாய்மரத்தின்மே லேறிக்கொண் டிருந்தது. அதைப்பார்க்கவும் தாய் பிரமை கொண்டு மூர்ச்சித்துப் போய்விட்டாள். கப் பற்றலைவன் இன்ன செய்வதென்று தெரி யாது திகைத்து நின்றான். அக்குரங்கு வளர்ப்புக் குரங்காதலால் குழந்தையைக் கெட்டெண்ணத்தோடு எடுத்துக்கொண்டு போகவில்லை யென்று அவருக்குத் தெரி யும். ஆனாலும், பாய்மரத்தின் நுனியில் குழந்தையை யெடுத்துக்கொண்டுபோய் உட் கார்ந்து கொண்டிருக்கும் குரங்கினிடத்தில் குழந்தையை விட்டு விட்டுப் பார்த்திருக்க யாருக்குத்தான் மனம் பொறுக்கும். கப்பற் சேவகரைப் பாய்மரத்தின் மேலேறிச்சென்று குரங்கைப்பிடித்துக் குழந்தையை வாங்கிக் கொண்டு வரும்படி அனுப்பலாமென்றால் அது ஆபத்தாகமுடியும். மனுஷன் தன்னைப்பிடிக்க வருவதைக்கண்டால் குரங்கு குழந்தையைப் போட்டுவிட்டு ஒரு பாய்மரத்திலிருந்து மற்றொரு பாய்மரத்துக்குத் தாவித் தப்பப் பார்க்கும். ஆகையால் ஒன்றும் செய்யத் தோன்றாமல், காப்பாரும் செய்யாமல் சற்றுநேரம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பாய்மரத்தி லேறிய குரங்கு வசதியான ஒரு இடத்திலுட் கார்ந்துகொண்டு குழந்தையைத் தாயார் கை யில் வைத்துக்கொள்கிறமாதிரி மாரோடணைத் துக் கையில் வைத்துக்கொண்டு ஒரு கையால் அதைத் தடவிக்கொடுத்துச் சீராட்டித் தாலா ட்டி அழுதுகொண்டிருந்த குழந்தையை சமா தானப்படுத்தித் தூங்கவைக்கவும் முயர்சித் தது. கவலை நீங்கிப் பிரக்ஞைபெற்ற தாயார் பாய்மரத்தின் உச்சியில் தன் குழந்தை யிருப் பதைக் கண்டு மனம் பதறிக் கதறுகிறாள். அவள் மனம்பதறிக் கதறுவதைப் பார்த்துச் சகிப்பது கஷ்டமாயிருந்தது. குழந்தையை வாங்கச் செய்யக்கூடியதோ இன்னதென்று தோன்றவில்லை. குரங்கைக்கீழே வரும்படி யழைக்கச் செய்த தந்திரமொன்றும் பலிக்க வில்லை. இந்தசமயத்தில் கப்பற்றலைவன் எல்லாரையும் கப்பல்தட்டைவிட்டுக் கீழே போகும்படிச் செய்து தானும் ஒரு இடத்தில் ஒளிந்துகொண்டு சத்தம்சந்தடியின்றி மேல் தட்டை ஒழித்துவிட்டு வெகு ஆவலோடு பார்த்திருந்தான். கீழே மனுஷர் ஒருவருமில் லாததுகண்டு குரங்கு தானாகக் குழந்தையை உறுதியாக ஒரு கையால் அணைத்துக்கொண்டு ஜாக்கிருதையாகக் கீழே இறங்கிவந்து குழந் தையை முன்போல் சோபாவின்மேல் மெது வாய் வைத்துவிட்டுப் போய்விட்டது. அப் பொழுது குழந்தை யுடம்பு ஜில்லிட்டு வெடு வெடுப்பாய் அழுதுகொண்டிருந்தது. இதோடு கொஞ்சம் பயந்துகொண்டு மிருந்திருக்கலாம். மற்றப்படி அதற்கு ஒரு தீங்கும் நேரிடவில்லை. தன் குழந்தையை உயிரோடு ஒரு தீங்குமின்றி மறுபடியும் தன் கையிலெடுத்து அணைத்துக் கொள்ளும்படியான பாக்கியம்பெற்ற அத்தா யின் மனச்சந்தோஷத்தையும் நன்றியறிதலை யும் சொல்ல முடியாது. என் அருமைச் சிறு வர்களே உங்களில் யாராவது திருநாட்கடை, தேர்க்கடையில் உங்கள் தாயாரை விட்டுப் பிரிந்துபோய் அப்புறம் அகப்பட்டிருந்தால், அப்பொழுது உங்களை அம்மாள் வாரியெடுத்து கட்டியணைத்து முத்தமிட்டு மூகர்ந்து சந்தோ ஷம் பொங்கி அழுதது உங்கள் ஞாபகத்தி லிருக்குமே. அப்படியிருந்தால் அதை அக் குழந்தையின் தாய் பட்டசந்தோஷத்தைக் குறிப்பிட உங்களுக்கு ஒரு அடையாளமாகச் சொன்னேன். அதன் உண்மையை அனுபவ த்தில் உணர்ந்தால் அறியலாமேயன்றி வாயி னால் சொல்லியுணர்த்துவது சாத்தியமல்ல.

மாயாண்டி.

— ✿ —

We thank God, we have been able to make good our word by publishing the March No. a week before the end of the month.

22nd March 1899.

நம் வாக்குத்தவறாது மார்ச்சுமாசத்துச் சஞ்சிகை யை அந்தமாத முடிவதற்கு ஒருவார முந்தியே பிரசு ரிப்பது சாத்தியமாகும்படி பேரருள் பெற்றதற்கு வந்தனம் செலுத்துகின்றோம்.

மார்ச்சுமீ 22உ.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 „

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு „ 2-2.

விவேகசிந்தாமணி
KNOWLEDGE IS POWER
DIFFUSION OF KNOWLEDGE AGENCY
VIVEKA CHINTAMANI

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 7.] 1899ளு ஏப்ரல்மீ [இலக்கம் 12.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**தளமான காகிதப்பதிப்பு:**—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழய பிரதி 8 அணா.

**லேசானகாகிதப்பதிப்பு:**—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.

தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

**வருஷாரம்பத்திலே** (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்ரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்,

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்ரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## ஸப்த அப்த பூர்த்தி.

இந்த மாதத்துச் சஞ்சிகையோடு விவேகசிந்
தாமணி ஆரம்பித்த ஏழாம் வருஷம் முடிவா
கிறது. இந்த ஏழுவருஷகாலமாக பலர் பல
விதமாக் நல்லதும் பொல்லாதும் சொல்ல
எப்படியோ எடுத்த காரியத்தைக் கைவிடா
மல் தொடர்பிடியாய்த் தொட்டுழைத்து
வரும்படியான பாக்கியம் பெற்றதற்காகப்
பரம்பொருளைத் துதிக்கின்றோம். இக்காலத்
தைப் பின்னிட்டுப் பார்ப்போமானால் மனத்
தில் எத்தனையோ எண்ணங்களும் அனுபவங்
களும் திரளாய்க்கூடி நெருக்கி யடித்துக்
கொண்டு வருகின்றன. இதற்குள் நமக்கு
நேர்ந்த அனுகூலங்கள் பல; பிரதிகூலங்க
ளும் பல. அனுகூலங்களைவிடப் பிரதிகூலங்
கள் பலத்தவையாகத் தோன்றி, பலசமயங்
களில் அவைமுன் நாம் மனந்தளர்ந்து காரி
யத்தைக் கைநழுவவிடுவதன்றி வேறு வழி
யில்லாததுபோல் தோற்றினும், அப்படித்
தோற்றிய ஒவ்வொரு தடவையிலும் கடை
சிவேளையில் நாம் எதிர்பாராதபடி அனுகூ
லங்கள் நேர்ந்தோ அல்லது நமக்கு மனோ
திடமும் ஊக்கமும் அதிகரித்தோ மலைபோல்
வந்த இடர்களெல்லாம் பனிபோல் நீங்கப்
பெறும்காக்ஷியைக் காணும் பாக்கியம்பெற்
றோம். இப்படிப்பட்ட சமயங்களில்தான்
நாம் மேற்போட்டுக்கொண்ட வேலை தெய்வ
சங்கற்பத்தால் எடுத்துக்கொள்ள நேர்ந்த
தென்றும், கடவுள் நமக்குக் கொடுத்துள்ள
அற்பசக்தியையும் சொற்ப ஊக்கத்தையும்
முழுமனதோடு அவருக்கு அர்ப்பணம்செய்து
சுத்தஹிருதயத்தோடு உழைத்து வருவதொ
ன்றைத் தவிர நாம் செய்யத்தக்கது வேறு
ஒன்றுமில்லை யென்றும் உணர்ந்து, உணர்ந்த
வாறு காரியத்தில் நடந்துகொள்ள ஊக்கம
ளிக்கப்பெற்றோம். இதுகாறும் கடவுள் கரு
ணைபுரிந்து அற்பசக்தியுள்ள நம்மையும் அவர்
திருவுளக்கருத்தை நிறைவேற்றுவதற்கான
ஒரு கருவியாக உபயோகித்துவந்ததற்குச்
சந்தோஷப்பட்டுப் பேரருளைத் துதித்தேத்திக்
கொண்டாடுகின்றோம்; அத்துடன் அதேக
ருணையைப் பின்னும் பெற்றனுபவிப்பதற்கருக
மான பாக்கியம்பெற யோக்கியதையுள்ளவர்க
ளாக நடந்துகொள்ள எல்லாம் வல்ல ஈசன்
அருள்புரிவாரென்று பிரார்த்தித்துக்கொள்கி
றோம். இந்த ஏழுவருஷகாலத்தில் இடர்செய்ய
யத்தனித்தோர் பலர் முயற்சியும் தீமைபோல்
தோன்றி, தெய்வபக்தியும் நன் முயற்சியில் நம்
பிக்கையும் உண்டாகச்செய்து நன்மையே
பயப்பதாகமுடிந்ததால் அவர்கள் செயலும்
ஈசன் அருளே யென்றுன்னி அவர்களுக்கு
முதல் வந்தனமளிக்கின்றோம். இக்கால முழு
வதும் பலர் பலவிதமாய் நல்லதும் பொல்லா
தும் சொல்ல, நன்மையையே நாடி நமது
முயற்சிக் கனுகுணமாயிருந்து விஷயங்கள் எழு
தியும் அசைகரியப்பட்டகாலத்தில் ஆதரவு
சொல்லியும் ஆதரித்து வந்த நமது நண்பர்கள்
அனைவர்க்கும் நாம் கடமைப்பட்டிருப்பதைப்
பகிரங்கமாய்த் தெரிவித்து நன்றிபாராட்டி
அவர்களுக்கு நாம் ஹிருதய பூர்வமான வந்
தனமளிக்கின்றோம். இப்பத்திரிகையின் அத்
தியக்ஷகர்களும், சந்தாதாரர்களும் நமக்கு
விலைபெற்ற அவர்கள் ஆதரவையளித்து இத்த
னைகாலம் இப்பத்திரிகையை நடத்திவருவது
சாத்தியமாகும்படிச் செய்ததற்கு நாம் அவர்
களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.
சந்தாக்கள் பெருந்தொகையாகப் பாக்கிவிழுந்
துபோனமையால் நமக்குண்டான பலகஷ்ட
நஷ்டங்களையுத்தேசித்து இந்த வருஷம் கண்
டிப்பாய்ச் சந்தா வசூல்செய்ய நேரிட்டதில்
பெரும்பாலார் முன்னதாகவே யவர்கள் சந்
தாக்களைச் செலுத்திவிட்டார்கள். அதனால்
அவர்கள் நமக்குச்செய்த பேருதவியை நன்கு
மதித்து மிகக்கொண்டாடுகின்றோம். சிறுபா
லார் இன்னும் பாக்கிவைத்துக்கொண்டிருப்
பினும் அவர்கள் உடனே அப்பாக்கிகளைச்
செலுத்தி மறுவருஷத்துச் சந்தாவையும் முன்
னதாகவே யனுப்பி ஆதரிப்பார்களென்று
கோருகிறோம்.



நாம் இடர்ப்பட்டு ஊக்கமழிந்து மன சஞ்ச
லப்பட்டுக்கொண்டிருந்த காலங்களில் நமக்கு
ஆறுதல் சொல்லி உற்சாகப்படுத்தினவர்களில்
இத்தேசத்து ஜனங்களின் க்ஷேமத்தை நாடி
ஜனங்களுக்குள் அறிவு பரவுவதில் அக்கறை
யெடுத்துக்கொள்ளும் அங்கிலேய கனவான்
களும் சீமாட்டிகளும் உற்றசமயத்துதவியாய்
நமக்கு வழிவகைகாட்டி ஆதரவுகூறி களைத்
திளைத்த நமக்கு மனக்கிளர்ச்சி யுண்டுபண்ணி
னதை நாம் என்றும் மறவோம். சுயபாஷை
யை அலக்ஷியம்செய்யும் நம்மவர்கள், அந்நியர்
களான ஆங்கிலேய கனவான்களும் சீமாட்டி
களும் நமது பாஷாபிவிர்த்தியின்பொருட்டும்
நமது ஜனங்களின் ஞானவிர்த்தியின்பொருட்
டும் எடுத்துக்கொள்ளும் சிரம, சிரத்தையை
யும், காட்டும் அன்பு ஆதரவையும் அறிந்தால்
எவ்விதத்திலும் சொந்தப்பொறுப்புள்ள தாங்
கள் இவ்விஷயத்தில் அசிரத்தைபாராட்டு
வதைக்குறித்து வெட்கி வாடி மனந்தாழ்
வார்களென்பதிற் சந்தேகமில்லை. இந்த ஏழு
வருஷகாலத்தில் சுயபாஷாபிவிர்த்தி விசேஷ
மாக உண்டாய்விட்டதென்று பெருமை
கூறிக்கொள்ள இடமில்லையாயினும் சுபாஷை
களை அசட்டைசெய்து அந்தரத்தில்விடுவது
கூடாதென்பது எல்லார் மனதிலும் முன்னுக்
கிப்போது மிகஸ்பஷ்டமாகப் பட்டிருக்கிற
தொன்றினாலே, நல்ல காலம் எப்படியும்
வருமென்று நம்ப இடமுண்டாயிருக்கிறது.
இந்த நம்பிக்கை பூர்வந்தொட்டே நம்மனத்
திருந்தது இப்பொழுது வெளித்தோற்றமாய்ப்
புலப்படும் சிற்சில காலசின்னங்களால் உறப்
பட்டிருக்கிறது. இதுகாறும் நமக்கு நாலா
விதத்திலும் அன்பாதரவாயிருந்து உதவி
செய்த நண்பர்கள் அனைவருக்கும் நாம் இரு
தயபூர்வமாய் வந்தனம் செலுத்துவதோடு,
அவர்கள் தம் அன்பாதரவைப் பின்னும்
தொடர்ந்தளித்து மென்மேலும் இச்சத்காரி
யம் விர்த்தியாகி எல்லாருக்கும் பயன்படும்படி
ஆதரித்து அனுக்கிரகித்து வருவார்களென்று
கோறுகிறோம். இது விஷயத்தில் நம் சொந்தக்
கடமையை நம் அற்பசக்திக்கேற்றபடி முற்றும்
நிறைவேற்றிவரப் பின்னடையோம்.

முடிவில், இவ்விவேகசிந்தாமணியை நாம்
துவக்கியகாலத்தில் செய்துகொண்ட விண்ணப்
பம் இப்பொழுதும் அப்படியே செய்துகொள்ள
ஏற்றதாக விருப்பதால் அதைக் குற்றமின்றிக்
கீழே பிரசுரிக்கிறோம். 1892-ம் ௵ மேமாசத்
தில் நாம் கூறியபடியே ஒவ்வொருவார்த்தையும்
பொருந்த இப்பொழுதும்கூறுகின்றோம்: "இதை
வெளிக்குக்கொண்டுவரத் துணியுமுன் பெரி
யோர் பலரையும் கண்டுபேசி அவர்கள் ஆலோ
சனையை மேற்கொண்டு அவர்கள் அங்கீகாரத்
தையும்பெற்றுக்கொண்டோம்; அறிவுக்குறை
விடமாகிய அறிஞர் பலரிடத்தும் சென்று நேரி
லும் கடிதமூலமாகவும அவர்களிடத்துள்ள
அறிவைச் சனங்களுக்கு ஊட்ட இவ்வேற்பாட்
டுக் கிசைந் துதவிபுரியவேண்டுமென்று கேட்
டுக்கொண்டோம். நாடெங்குமுள்ள விவேகி
களுக்கெல்லாம் விண்ணப்பம் செய்து அறிஞர்
பலரெழுதும் விஷயங்களைத் தாங்கள் வாங்கி
வாசிப்பதுடன் பன்னாட் பழக்கத்தின் விசை
யால் படிப்பிற் பிரியமற்றுக்கிடக்கும் சாமா
ன்ய ஜனங்களுக்கும் படித்துக்காட்டி வலுவி
லூட்டி அவர்களுக்குச் சிறுகச் சிறுகப் படிப்
பில் பிரியமுண்டாக்கிவிடக் கேட்டுக்கொண்
டோம். இவ்விருதாத்தாரிலும் நமது வேண்டு
கோளுக்கிசைந்து வாக்களித்தோர் பலர்.
அவர்கள் வாக்கைநம்பி அவ்விருதாத்தார்க்
கும் நடுவிலிருந்து அறிவைப் பரவச்செய்யும்
விஷயத்தில் அவர்களுக்குப் பணியாளாக
விருந்துழைக்கத் துணிந்து இக்காரியத்தில்
இறங்கிவிட்டோம். இனி நம்மைக் கரையேற்
றிவிட்டாலும் அல்லது நட்டாற்றிற் கைவிட்டு
வேடிக்கைபார்த்தாலும் அதனால் வரும் பாப
புண்ணியம் அவர்களதே. நம்மட்டில் நமது
கடமையைச் செய்துவரச் சிறிதும் தளரோம்.
நமது வேலை சிறப்பதும் சிறக்காததும் நம்ம
னோர் இச்சத்விஷயத்தில் ஒத்துநின்று நமக்
குக் கைகொடுத்துதவும் உதவியின் அளவின

தாகவிருக்கும். நம்மவரில் கற்றோர் மற்றோர் எல்லாரும் இவ்விஷயத்தில் ஒத்துநின்று உதவிபுரிந்து அறிவைப் பரவச்செய்யச் சுத்த இருதயத்தோடுழைக்கவேண்டுமாய் இன்றைக்கால் அவர்களெல்லார்க்கும் விண்ணப்பம்" செய்துகொள்கிறோம்.

READINGS AT HOME.

A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.

4-ம் நாள் முடிப்பு.

காலாகாள், வழக்கம்போலத் தாயாரும் பெண்களும் கைலாசத்தாத்தாவும் காலக்ஷேபார்த்தம் வந்து கூடி, அவரவர் தானத்தில் இருந்தபின், சுப்பலக்ஷ்மி வாசிக்க ஆரம்பித்தாள்.

"இவ்வாறு, தமயந்தியானவள், எங்கே கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற்போய்விடுமோவென்னும் பயத்தினால், நாணத்தையும் துறந்து தன் மனோபாவங்களை வெளியிட்டு விளங்கச் சொல்லிப் பின்னும் அன்னத்தைநோக்கிச் சில வசனங்கள் சொல்லுகின்றாள். 'ஓ அன்னமே, உனக்குத்தெரியாத தொன்றுமில்லை! ஆயினும், என் பெண்புத்தியினால் சில சங்கதிகள் சொல்ல விரும்பினேன். நீ செவிகொடுத்துக் கேட்பாயாக. நீ அரசர் பெருமானிடம் என் காதல் விண்ணப்பத்தை உணர்த்துவது தக்க சமயம்தெரிந்து செய்தல்வேண்டும். வேற்றரசர் நிறையளக்கும் வேளையிலாவது, பகையரசர்மேற் கோபிக்கும்போதாவது, புத்தியில் வல்ல அமைச்சரோடும் ஆலோசனைசெய்யும் போதாவது, நீபோய்ச் சொல்லாதே; காரியத்துக்குக் குந்தகமுண்டாகும். அரசர்களோடு பழகுதல் மிக்க பிரயாசம். தும்மினால் குற்றம், இருமினால் அபராதம் என்பார்கள். ஐம்பொறிகளையும் துர்விஷயங்களில் செல்லாமல் தடுக்கும் பெருமையை யுடையாராய், அரசனுக்காக இரணகளத்தில் உதிரம் பெருகும் பொழுது பகைவரை வென்று பெருந் திரவியங்களைச் சம்பாதித்து இன்னம் செய்தற்கரிய அனேக காரியங்களையும் செவ்விதிற்செய்து முடிக்கும் திறலுடையாராயினும், யாதேனும அற்பக் குற்றமொன்று தப்பித்தவறிச் செய்துவிடுவார்களாயின், மற்றொன்றையும் கருதாது அவர்களையும் அரசர்கள் மிகக் குரூரமாகத் தண்டித்து வருத்துவார்கள். அவர்களோடு பழகுவது நல்லபாம்போடு பழகுதல்போலாகும். ஆதலால் நீ தக்க சமயம் தெரிந்து அரசர்பெருமான் பிரீதியைப்பெற்று எனது விருத்தாந்தங்களை அவர்க்கு உணர்த்தல் வேண்டும் ஒருவருள்ளில் உள்ளது முகத்தில் புலப்படுமாதலின், அதனைக் குறிப்பாலுணர்ந்து தூதர்கள் காரியங்களைச் சாதித்தல் வேண்டும். தூத்ய விஷயங்களில் நீ அறியாததொன்றுமில்லை. சீக்கிரம் சென்று அரசர் பெருமானருளைப்பெற்று என் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி என் உயிரைக் காத்தல் வேண்டும்.' என்றனள்,"

சிவகாமி.—ஆ ஆ! தமயந்தியை நானேதோவொன்றுந்தெரியாத செல்வப்பெண்ணென்றல்லவோ எண்ணியிருந்தேன். எவ்வளவு புத்தி புத்தி! எவ்வளவு சாதுர்யம்! அரசர்களுடைய சுபாவமும், தூதருடைய செய்கையும் காரியம் சாதிக்க வேண்டிய தந்திரமும், இவையெல்லாம் இவள் எவ்வாறு தெரிந்துகொண்டாள்? யாவர் கற்பித்தார்கள்?

தாயார்.—நீ பேசுவது நன்றாயிருக்கிறது! மான்குட்டிக்கு வேகமும் மீன்குஞ்சுக்கு நீச்சும் ஒருவர் கற்பிக்கவேண்டுமா? அரசன் வயிற்றிற்பிறந்து, அரசனகத்தில் வளர்ந்து, அரசர்களோடேபழகி, அரசர் பிரானை மணம் செய்யவேட்டிருந்த தமயந்திக்கு இவையெல்லாம் தெரிவது ஆச்சரியமா? அன்றியும், தமயந்தியைக் கற்



றறிவில்லாச் சிற்றறிவுடையாளாக நீ ஏன் கருதவேண்டும். நமக்குள்ள படிப்பும் அறிவும் கூட அவளுக்கில்லாமற்போயிற்றா?

சிவ.—இல்லையம்மா. எனக்கெப்போதும் பூர்வீகர்களென்றால், அத்தை, பாட்டி முதலான கர்னாடக மனுஷியாளின் ஞாபகம் வந்துவிடுறது. இவர்களெல்லாம் நிரக்ஷரகுக்ஷிகளாயிற்றே. வயிற்றைக்கிழித்தால் வாரடையுங் கிடையாதே. எட்டு வாசனை இன்னதென்றும் தெரியதே. இன்னும போகப்போக அதிககர்னாடகம் தானே! என்று எண்ணினேன். அதற்கேற்க முற்காலத்தவருக்கு அடுப்பு மூட்டிப் பக்ஷியபாகங்களும் செய்யத்தெரியாதென்றும், இன்னம் அநேக அசந்தர்ப்பமான கதைகளையும் கேட்டுக்கேட்டு அவை என்மனதில் பசுமரத்தாணிபோலப் பதிந்து போயிருக்கின்றன; ஆதலால் அடிக்கடி இவ்வெண்ணமுண்டாகின்றது.

தாயார்.—அதெல்லாம் புத்திஹீனம். பூர்வகாலத்துப்பெண்களுடைய படிப்பிலும் புத்தியிலும் அறிவிலும் காரியத்திலும் நமக்கு நூற்றிலொருபங்கு கூடவில்லை. உன்னைப்போலப் பேனாப்பிடித்தெழுதவும் சித்திரத் தையல்தைக்கவும் அவர்களுக்குத் தெரியாதோ என்னவோ! அவர்களுக்குத் தெரிந்த சாஸ்திரம், சம்பிரதாயம், ஆசாரம், வியவகாரங்களில் ஆயிரத்திலொருபங்குகூட நமக்குத்தெரியாதே! அன்றியும், தமயந்தி போன்ற ராஜகன்னிகைகளுக் கென்ன பணத்தாற் குறையா? பாக்கியத்தால் தாழ்வா? சொல்லி வைப்பவர்களில்லையா? எவ்வளவோ கவனமாகவும் அவர்களுயர்ந்த நிலைமைக்குத் தக்கபடியும் அநேக கலாசாஸ்திரங்களெல்லாம் கரைத்துப் புகட்டியிருப்பார்களே. முன்னிலும் இப்போது பெண்களுக்கு வீம்பும் வைராக்கியமும் அகங்காரமும் ஆடம்பரமும் ஆகிய துர்க்குணங்கள்மட்டுமேமிகுந்திருப்பனவன்றி வேறில்லை. ஆதலால் முன்னோர்கள் நம்மிலும் குறைந்தவர்கள் என்னும் இந்தப் பெண்ணத்தை இனி முற்றிலும் விட்டுவிடு.

தாத்தா.—இந்த விஷயங்களெல்லாம் என்கூட்டாளி எடுத்துச்சொன்னால் உன்பெண்களுக்குப் போதியமாகாது. நீயே சொன்னாயே. இனிப்பேசமாட்டார்கள். அன்றியும், முன்னவர்களை இவ்வளவு இகழ்ந்து ஏளனம் செய்யும்படி இக்காலத்துப் பெண்கள் என்ன தாண்டி விட்டார்கள்? நம் பெண்களுக்குள் ஆயிரத்திலொருவருக்குக்கூடச் செவ்வையாக எழுத வாசிக்கவும் தெரியாது. எங்கள் சுப்புசாமியோடு இவ்விஷயமாக முந்தாநாள் ஜம்புகேசுவரத்தில் பேசிக்கொண்டிருந்த பொழுது, அவன் ஐரோப்பிய துரைசானிகளைப்பற்றி அவர்களுடைய படிப்பையும் சாமர்த்தியத்தையும் புகழ்ந்து எவ்வளவோ சொன்னான். கொண்டாடினாலும் அவர்களைக்கொண்டாடத் தகும். அவர்களுக்குள்ளே வெகுபேர்கள் அபாரமான சாஸ்திரவிஷயங்களையெடுத்து அநேக ஆயிரம்பேர்கள்கூடிய பெருஞ்சபைகளில், சபையோர்கள் வைத்தகண் வாங்காமலும், திறந்தவாய் மூடாமலும், சித்திரப்பதுமைகள் போல விருந்து செவிகொடுத்துக்கேட்டு மனங்களிக்கும்படிப் படபடவென்று முத்தும் மணியும் சொரிந்ததுபோல எத்தனையோ சாதுரியமாகவும் மாதுரியமாகவும் பிரசங்கஞ் செய்ய வல்லவர்களாம்! அன்னி பெசண்ட் என்னும் ஒரு பெருமாட்டி, வருஷந்தோறும் நம்தேசத்தில் அங்கங்கே மதப்பிரசங்கங்கள் செய்து, மதாபிமானமும் ஈசுவரபக்தியும் இழந்தவர்களுக்கு அவற்றை நெய்சொரிந்த நெடுந்தழல்போல ஓங்கி வளரும்படிச் செய்கின்றாளாம்! இன்னம் இவளைப்போல

அநேக சீமாட்டிகள் பிரசங்கம் செய்வதன்றி, காவியம், வைத்தியம் முதலான பலகலைகளில் மிகவும் தேர்ச்சிபெற்று ஜனோபகாரமான, அநேக நற்காரியங்களைச் செய்கிறார்களாம்! நமக்குள்ளே ஆராவது அப்படிப்பட்டவர்களுண்டா என்று கேட்டதற்கு, இப்போதுதான் அத்தி பூத்ததுபோல இரண்டொருவர் சுதேசக் கிரிஸ்தவர்களுக் குள்ளும் பிரம்ம சமாஜத்தார்களுக்குள்ளும் சர்வகலா சங்கப்பரிக்ஷைகளில் தேறிவருகிறார்களென்றும், ஐரோப்பியப்பெண்கள் இப்போதடைந்திருக்கும் படிப்பும் திறமையும் நம்பெண்கள் பெறுதற்கு இன்னம் ஏழெட்டுத் தலைமுறை செல்லவேண்டுமென்றும் சொன்னான். இதெல்லாம் சிவகாமி காதில் பட்டதில்லைப் போலிருக்கிறது.

தாயார்.—இதெல்லாம் அவளெங்கே கண்டாள். குழந்தைப் புத்தியாய்ப் பேசுகிறாள். சுப்பு, படியடியம்மா.

சுப்பலெக்ஷ்மி.—(படிக்கிறாள்) "இவ்வாறு தமயந்தி கூறிய வார்த்தைகளைக் கேட்டு, அன்னபக்ஷி அவளுடைய மனோபாவங்களை யறிந்து சந்தோஷித்து, அவளதுபேரழகைத் தன் கண்களால் அருந்துதல்போல ஆவலோடு நோக்கிச் சொல்லலுற்றது. 'ஓ மடவரலே, நீ யாதும் சஞ்சல மடையாதே. உன்பால் மிக்க காதலுற்று உன்னைத் தனக்கு மணம்பேசி முடிக்கும்பொருட்டு அந் நளமஹாராஜன் தானே என்னை உன்னிடம் தூதாக அனுப்பினான். நான் வந்தகாரியம் சபலமாயிற்று. நீங்களிருவரும் செய்த தவப்பயனால் ஒருவரையொருவர் மணஞ்செய்ய உடன்பட்டீர்கள். இனி நான்போகின்றேன், விடைதா.' என்று விடைபெற்று அவளால் பலவாறு உபசார வார்த்தைகள் சொல்லப்பெற்று நளன் பால் மீண்டது.

"இவ்வாறு மீண்ட அன்னம் அங்குத்தமயந்தியே நினைவாகப், படுத்திருந்த புஷ்பசயனமும் கரிந்துபோகக் காமத்தழலாற் கதுவுண்டு வருந்தும் நளனைக்கண்டு, தான் சென்றதும் தமயந்தியைக் கண்டதும் சொல்லித், தனக்கும் அவளுக்கும் நடந்த சம்பாஷணையையும் விரிவாக உணர்த்தியது. அவனும், அவற்றைக் கேட்டுப் பெறுதற்கரியதேவாமிர்தத்தை உண்டவன்போல அகமகிழ்ந்து மெய் புளகித்துத் திரும்பத்திரும்ப அவ்விஷயங்களைச் சொல்லச் சொல்லிப் பலமுறையும் கேட்டு ஒருவாறு தன் துயரத்தைப்பொறுத்திருந்தனன்.

"இங்குத் தமயந்தியைச் சோலையில்விட்டுப் பிரிந்த தோழியார்கள் அவளைத்தேடிச்சென்று கண்டு, அவள் அன்னம் நீங்கியபின் நளன் மேலே நினைவாகித். தழலிலிட்ட சொர்ண விக்கிரகம்போல உடலுருகி மெலிந்திருக்கக் கண்டு, அதன் விவரம் தெரியாதவர்களாய் ஏதோவென்று ஐயுறவுற்றுச், செவிலித்தாயர்களுக்குணர்த்த, அவர்களும் ஓடிவந்து தமயந்திக்குத் திருநீறிட்டு ஆலத்தியெடுத்துத் திருஷ்டிகழித்துத் தெய்வங்களுக்கு வேண்டிக்கொண்டு மெல்ல அரண்மனைக்குக் கூட்டிச் சென்றார்கள். பின்பு, தமயந்தி விரகதாபத்தால் வருந்துவதை நற்றாயாகிய காஞ்சனமாலை தன் நாயகனாகிய வீமராசனுக்குத் தெரிவித்தனள். வீமராசனும் தன் மகளுக்கு விவாகத்துக்குரிய பருவம் அடுத்தமைகண்டு, இனித் தாழ்த்தல் முறையன்றென்று கருதித் தமயந்தியின் சுயம்வரத்துக்கு வேண்டுவன பலவற்றையும் அமைத்துச் சகல தேசத்தரசர்களுக்கும் மணவோலை போக்கினான்."

சிவகாமி.—தமயந்திதான் நளனையன்றி வேறொருவரையும் மணம்புரிவதில்லையென்று பிரதிஜ்ஞை செய்துகொண்டாளே. அப்படியிருக்க, இப்போது சுயம்வரம் என்று பேர்வைத்து ஊரிலுள்ள அரசர்களையெல்லாம் வரவழைப்பது எதற்காக? தூங்குகிறபேர்களை எழுப்பி 'உங்களுக்குப் போஜனமில்லை சொஸ்தமாகப் படுத்துத் தூங்குங்கள்' என்று சொல்லுதல்போலன்றோ ஆகும்?



தாயார்.—நீ சொல்வது நியாயமே. ஆயினும் தமயந்தி அன்னபக்ஷியினிடம்தான் தீரவில்லை, தன் மனோபீஷ்டத்தைத் தெரிவித்தாள். அது போலவே, மற்றவர்களிடத்தும் எவ்வாறு தன் நாணத்தை விட்டு வெளியிடுவாள்? தோழிகளிடத்திலும் தாய்மாரிடத்திலும் தான்கோரிய கணவன் இன்னானென்று வலியப்போய்ச் சொல்லுதல் தகுதியாமோ? அன்றியும், ராஜகுலத்துக்கு ஏற்பட்டிருக்கும் சம்பிரதாயத்துக்கு மாறாகத் தமயந்தியைத் தந்தை அவள் கருத்தின் வழியே ஒருவனுக்குத் தானாக அழைத்து விவாகம் செய்துகொடுப்பின், உலகத்தார் நகையார்களா? நாம் மற்றவிஷயங்களில் எவ்வளவு வழக்கத்துக்குமாறாக நமது சௌகரியத்தையேமுன்னிட்டு நடந்துகொள்ளினும்விவாகம்முதலிய சிலமுக்கியமான விஷயங்களில் அவ்வாறு நடந்துகொள்ளுதல் இயலாதன்றோ? உலைவாயை மூடலாமேயன்றி ஊர்வாயை மூட லாமா?

சிவகாமி.—இவ்வாறு பலரையும் வரவழைத்து ஒருவனை வரிக்கின் மற்றவர்க்குப் பொறாமையும் பகையும் மேலிடாதோ? ஒவ்வொருவரும் தங்களை வீணாக மானபங்கப்படுத்தியதாக எண்ணார்களோ? பெண்ணின் இஷ்டத்தைத் தெரிந்துகொண்டு அவள் இஷ்டானுசாரமாக மணம் புரிவித்தல் ஒருவேளை நியாயமாயினும், இவ்வாறு ஆடம்பரம் பண்ணுவதில் ஒன்றும் பிரயோசனத்தைக்காணோமே. தற்காலத்தில் ஐரோப்பியர்களுக்குள்ளே அநேகமாகப் பெண்ணின் இஷ்டப்படியே மணம் புரிவிப்பினும் இவ்விதமான கோலாகலம் அரசர்களுக்குள்ளேயும் இல்லையே.

தாயார்.—ஆமாம்; நீ சொல்லியதெல்லாம் வாஸ்தவமே. இதனால் அநேக மாற்சரியமும், கொடிய போரும் விளைவது உண்மையே. தமயந்தியின் சுயம்வரத்துக்குப் பின்பு நீ எண்ணியபடியே அரசர்களெல்லாம் பொறாமைகொண்டு நளனோடு போர்புரிந்து புறங்காட்டி முன்னினும் அதிகமாக மானபங்கப் பட்டுப்போனதாகச்சொல்லி யிருக்கின்றது. ஆயினும் இதற்கு வேறே நிவிர்த்தியில்லை. அற்பசொற்பமாக மதிக்கக்கூடிய பெண்களின் பொருட்டு யாதும் போட்டி யுண்டாகாது. தமயந்தியைப்போல அழகிற் சிறந்த ஓர் இராசகன்னிகையை அநேகர் இச்சிப்பார்கள் ஆதலின், எவ்விதமாக மணத்தைச்செய்து முடிக்கக் கருதினும் ஏதேனும் மாற்சரியமும் கெடுதியும் உண்டாகாமற் போகாது. இதற்குத் திருஷ்டாந்தமாக ராஜபுத்திரர் சரிதத்திலிருந்து ஒருகதை சொல்லுகிறேன்.

சிவகா.—எங்கே. சொல்லம்மா கேட்போம்.

தாயார்.—இராஜஸ்தானம் அல்லது இராஜபுத்திரஸ்தானம்* என்பது இந்தியாவின் வடமேற்புறத்தில் சிந்து நதிக்குக் கீழ்த்திசையில் உள்ள நீர்வளமும் நிலவளமும் பொருந்தின விசாலமான நாடு. இது சென்ற 800 வருஷங்களாக ராஜபுத்திரர்களுக்கு முக்கிய வாசஸ்தானமாயிருத்தலின் இதற்கு இராஜபுத்திரஸ்தானமென்னு மிப்பெயர்வந்தது. இது அநேக சிறு இராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டுப் பல சிற்றரசர் ஆளுகைக் குட்பட்டிருப்பினும், அவ்விராச்சியங்களில் முக்கியமானவை மூன்று. அவை உதயபுரம், ஜாட்புரம், ஜயபுரம் என்பன. உதயபுர ராஜர்களாகிய இராணா என்பவர்கள் மஹாராஜாதிராஜர் என்னும் பட்டம் வகித்து மற்ற அரசர்களுக்கெல்லாம் தலைமை பூண்டு பிரபலமாயிருந்தார்கள். தற்காலத்திலும் இவர்களுக்கு வளத்திலும் வலியிலும் சற்றுக்குறைவு வந்திருப்பினும் மகிமைக்கும் கௌரவத்துக்கும் யாதும் குறைவில்லை. இவ்விராணாவின் புத்திரியை மணம்புரிதலென்றால் அன்றுமுதல் இன்று வரையில் விசேஷ கௌரவமாக மதிக்கப்படுதலின், ராஜபுத்திர ராஜர்கள் ஒவ்வொ

* Rajastan or Rajputana.

ருவரும் அக்கௌரவத்தை அடையக் கோருவார்கள். அதனால், அவர்களுக்குள்ளே போட்டியும் போரும் அடிக்கடி உண்டாவதுண்டு.

கொஞ்சம் குறைய நூறு வருஷங்களுக்கு முன் இவ்வுதயபுரத்தில் அரசனாயிருந்த இராணாவுக்கு ஒரே ஒருபுத்திரிதான். அவளை ஜாட்புராராஜாவுக்கு விவாகம் செய்து கொடுப்பதாகப் பால்யத்திலேயே நிச்சயம் பண்ணியிருந்தது. ஐயோ! அவளது துரதிர்ஷ்டத்தினால் கொஞ்சநாளைக்கெல்லாம் அந்த ஜாட்புராராஜன் இறந்து போனபடியால், அவ்விவாகம் நடக்கவில்லை. அதன்பின் அவளை அவள் தந்தை ஜயபுராராஜாவுக்கு நிச்சயம் பண்ணினான். ஆனால் இறந்துபோன ஜாட்புராராஜாவுக்குப் பின் பட்டத்துக்குவந்த மான்சிங்கென்பவன். தன் முன்னவனுக்குப் பேசின அக்கன்னிகை தனக்கே உரியவள் என்று விதண்டாவாதம் பேசி, ஜயபுராஜாவோடு யுத்தத்துக்குப் புறப்பட்டான். ஆகவே, ஜாட்புரம் ஜயபுரம் ஆகிய இவ்விரு ராஜ்யங்களுக்கும் கொடிய போருண்டாகியது. அப்போரில் முன்னம் பாரதப்போரில் எப்படி அரசர்களெல்லாம் பாண்டவர் பக்ஷத்திலோ கௌரவர் பக்ஷத்திலோ நின்று சண்டை செய்தார்களோ அப்படியே இராஜ புத்திரஸ்தானத்தின் அரசர்களெல்லாரும் தத்தமக்கேற்றபடி இரு பக்ஷத்திலும் சேர்ந்து யுத்தம் செய்ய, சுவர்க்கதுல்யமான அந்நாடு முழுதும் கொலையும் கொள்ளையும் நெருப்பும் நெடியுமாய்ப் பாழாகியது.

இராணாவோ இவ்யுத்தத்தில் தலையிட்டுக் கொள்ளவில்லை. அவன் நாடுமுழுதும் அப்கானியர் தலைவனாகிய அமீர்கானென்னும் ஓர் பாதகனும், கொள்ளையே ஒள்ளிய தொழிலாகக் கொண்டிருந்த மஹாராஷ்டிரர் தலைவனாகிய தௌலத்ராவ் சிந்தியா வென்னும் ஒரு கொடுங்காதகனும் புகுந்து, ஊர்தோறும் கொளுத்திக் கொள்ளையிட்டு விளைபயிர்களை யெல்லாம் பாழாக்கி அதம்செய்து, சோலைபோல்செழித்திருந்த அச்சாரக்ஷேத்திர முழுதும் பார்த்தவர் கண்ணும் மனமும் பதைக்க நீரும் நிழலுமில்லாப் பாலைவனமாக்கி விட்டார்கள். ஆதலின், இராணாவுக்குத் தன் இராஜ்யத்தைக் காப்பதே அசாத்தியமாய்ப் போய்விட்டது.

அக்காலத்தில் இக்கொடுமைகளைத் தவிர்ப்பதற் கொருவரும் இல்லையோ? வலியவர்களை அடக்கி எளியவர்களை ஆதரிக்கவல்லவர் நம்தேசத்தில் இல்லாமற்போனார்களோ? இல்லாமற்போகவில்லை. தற்காலத்தில் ஹிமசேது பரியந்தம் எங்கும் தம் கொடியை நாட்டிக் கெடியைச் செலுத்திக் குடிகளை ஆதரித்துவரும் நெடியபுகழ்பெற்ற படைவலியும் பராக்கிரமுமுள்ள அங்கிலேயர், அந்நாளிலும் அதிபராக்கிரமசாலிகளாய்த் தமது ஆணையினாலே அனைவரையும் வெல்லும் திறமையுடையவர்களாயிருந்தார்கள். இருந்தும் பயனென்? அவர்கள் இச்சச்சரவுகளிலொன்றும் தாங்கள் தலையிட்டுக்கொள்வதில்லை யென்று வீரவிரதம் பண்ணிக்கொண்டிருந்தமையால், இவ்விராஜபுத்திரர்கள் அவர்களை எவ்வளவு கெஞ்சிக்கேட்டும் கொஞ்சமும் தாக்ஷணியமின்றி ஒரே உறுதியாய் உதவி செய்வதில்லையென்று உதறிவிட்டார்கள். இராணா தன் நாட்டிற் பாதியையாவது காக்க வெண்ணி மற்றொருபாதியை அவர்களுக்குக்கொடுப்பதாகச் சொல்லியும் பயனில்லாமற் போயிற்று. தானாக் கனியாப்பழத்தைத் தடிகொண்டடித்தாற் கனியுமா?

அமீர்கான் என்னும் காதகன் முதலில் ஜயபுராராஜாவின் பக்ஷமாய் நின்று மான்சிங்கென்பவனைத் தோற்கடித்துச் சிறையில்வைத்து அவன் நாடுகளையெல்லாம் கொள்ளையிட்டான். பின்பு—பணமே பெரிதாகக் கருதுபவர்க்கு வியவஸ்தையேது? சத்தியமேது? நியாயமேது? நீதியேது? தயையேது? தாக்ஷண்யமேது?—அக்கொடியன் மான்சிங்கு பக்ஷமாய் நின்று ஜயபுராராஜனை எதிர்த்துப்போராடினான். ஊரிரண்டு பட்டாற் கூத்தாடிக்கெளிதுதானே. அவனைச்சொல்லக் குற்றமென்ன? இவ்வாறு இருவரிடத்தும் கைக்கூலியும் கப்பமும் கொண்டு இருவரையும் கைவிட்டதன்றியும் அவன் இந்நாட்டிற்செய்த கொடுமைக்கும் கொலைக்கும், சதிக்கும் சர்ப்பனைக்கும் கணக்கும் இல்லை, வழக்கும் இல்லை. இவன்போன்ற பாதகர்களுக்கு எந்த நரகம் சமையுமோ அறியேன்!



கடைசியில் அந்த துராத்மா அவ்யுத்தத்தை நிறுத்துவதற்கு ஒரு ஆலோசனை பண்ணினான். ஐயோ! அக்கொடிய ஆலோசனையைச்சொன்ன பாவியை வெறுப்பதோ? அதற்குடன்பட்ட ராஜபுத்திரப் பதர்களை வெறுப்பதோ? ஆ ஆ! அதை நினைக்கவும் மனம்பதைக்கின்றதே! சொல்லவும் துணியவில்லையே! இச்சண்டைக்கெல்லாம் நிமித்தமாகிய நிர்த்தோஷியான கன்னிகாரத்தினத்தைக் கொன்றுவிடுவதே காரியமென்று அப்பாதகன் நிச்சயித்து அவள் தந்தைபாற்சென்று அதனைக்கூறினான். அவன் அதுகேட்டுக் காய்ச்சிய நாராசத்தைக் காதிற்பாய்ச்சியதுபோலப் பதை பதைத்துத் தன் கண்மணியினும் சிறந்த பெண்மணியைக்கொடுமையாகக் கொலைசெய்ய எவ்வாறுடன்படுவான், அதற்கொப்பவில்லை. ஆயினும் நிவிர்த்தியில்லை. அமீர்கான் கிராதகன் தன் ஆலோசனைக்குடன்படாவிடின், அக்கன்னிகையைத்தான் பலாத்காரமாகக் கவர்ந்து சென்று மான்சிங்கென்பவனிடத்தில் ஒப்புவித்துவிடுவதாகப் பயமுறுத்தினான். ஆதலால் ஐயோ! அந்த அநியாயத்துக்கு இராணாவும் உடன்படவேண்டியதாயிற்று. கொடுமை! கொடுமை! அக்குலமகளும் தன் தலைவிதிக்குட்பட்டுப் புலையர்களின் சர்ப்பனையால் வலிய விடமுண்டு கொலையுண்டிறந்தாள்! இக்கொடிய கொலையைக்கேட்டு மருளாத மனமுமில்லை, வாடாத முகமுமில்லை, கண்ணீர்விட்டுக் கரையாத கண்ணுமில்லை. அதிற்சம்பந்தப்பட்டவர்களை வசைகூறாதவாயுமில்லை. யார் என்னநினைந்தும் என்ன உணர்ந்தும் என்னசொல்லியும் என்னபயன்? அக்கன்னிகாமணியின் பிராணன் மீளுவதில்லையே.

சிவகாமி—அம்மா எனக்கிதைக்கேட்க என்னவோ செய்கிறது. நாசகாலர்கள்! ஏன் அவர்களுக்கு இவ்வளவு பொறாமையும் கொடுமையும்? இப்படிப்பட்ட துரோகிகளால்தானே நம்முடைய இராச்சியம் நலம் குலைந்து நமக்கெல்லாம் கெட்ட பேர்வந்திருப்பது.

தாத்தா—ருக்மணீ, சந்தியாகாலம் சமீபித்துவிட்டதே, நிறுத்திவிடுவோமா.

தாயார்—நல்லது, நாளைக்குப்பார்த்துக்கொள்வோம்.

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## சம்பகமாலை
### அல்லது
## இளையராஜாவின் தீர்மானம்.
### அங்கம் III.

நான்காம் களம்.

இடம் : ஓர் அறை.

(சம்பகமாலையும் ப்ரிதாவும் உட்கார்ந்திருக்கிறார்கள்).

**ப்ரிதா.**—சம்பகமாலா! கேட்டையா செய்தியை?

**சம்பகமாலை.**—என்ன செய்தி ப்ரிதா? சோண்டாவை நீ காணவில்லையோ.

**ப்ரிதா.**—கண்டு சொன்னேன் சம்பகமாலா! அரைகடிகைக்குள்வந்து உன்னைக்காண்பார். கண்டு என்ன பிரயோஜனம். அவர் ராஜதேவனை முன்னரே கெயில்வாராவுக்கு அனுப்பிவிட்டனராமே.

**சம்.**—அனுப்பியிருக்கமாட்டான். நான் இன்னும் அதிகாரப்பத்திரம் அனுப்பவில்லையே.

**ப்ரிதா.**—உனக்கு அவரிடத்திலிருக்கிற நம்பிக்கையே நம்பிக்கை, பிரியமே பிரியம். உண்மையைச் சொன்னால்கூட நம்பமாட்டாயே. அது தானே எனக்கும் சரிதான், உன் தகப்பனுக்கும் சரிதான் ஆச்சரியமாயிருக்கின்றது.

**சம்.**—உத்தமமான குணமுடையவன். அவனிடத்தில் நம்பிக்கையிருப்பது ஆச்சரியமா?

**ப்ரிதா.**—இப்படித்தான் கெட்டுப்போகப்போகிறாய். க்ஷத்திரியனுக்குப் பெண்ணினும் மண் பெரிது. மண்மீது ஆசைவைத்த க்ஷத்திரியனை நம்பலாமா?

**சம்.**—அவனுக்கு மண்ணின்மீது ஆசையேகிடையாது. இல்லாவிட்டால் தன் சுதந்தரத்தை விட்டு என் பிள்ளைக்கு ராஜ்ஜியம் தந்திருப்பானோ.

**ப்ரிதா.**—உனக்கு லோகானுபவமே தெரியாது. உருசியறியா முன்னர் மானிடர் உலகத்தில் ஏதேனும் ஒரு வஸ்துவை லக்ஷியம் செய்யார்களேயொழிய ஒரு முறை உருசி கண்டுவிட்டால் மறுபடியும் அதை விட்டுவிடுவார்களோ? அதிகார உருசியைப் புருஷனொருவன் கண்டுவிட்டால் அதை அவன் விடுவானோ.

**சம்.**—புருஷனுக்குமாத்திரமென்ன. அதிகார உருசி பெண்ணையும்விடாது. உலகத்தில் அதிகாரம் கிடைப்பது அருமையல்லவா?

**ப்ரிதா.**—(தனக்குள்ளே) இவளுக்கு அதிகாரத்தில் பிரியமிருப்பதாகக் காணப்படுகிறது. வழி அகப்பட்டது. (வெளிப்படையாய்) அருமையென்று தெரிந்தும் உன் அதிகாரத்தை நீ விட்டிருக்கிறாயே. உன் உத்தரவின்றியே அவர் தம் தம்பி **ராஜதேவனை** அனுப்பிவிட்டனரே. தம் அதிகாரத்தைப் பலப்படுத்திக்கொள்ளவல்லவோ அவர் **ராஜதேவனை** அவ்வளவு அவசரமாய் அனுப்பினார்.

**சம்.**—அனுப்பினாலென்ன? என் உத்தரவின்றி ஒன்றும் நடவாது. சோண்டா மறுபடியும் ராஜதேவனை வரவழைத்துவிடுவான்.

**ப்ரிதா.**—ஒருக்காலும் உன்னால் முடியாது. ராஜதேவனும் திரும்பிவரமாட்டான். உன் தமயனுக்கும் கெயில்வாரா தலைமை உத்தியோகம் கிடைக்கப் போவதில்லை. உனக்கேன் அந்தப் பிரமை.

**சம்.**—பார்க்கலாம். உன்னுடையபேச்சை பொய்யாக்குகின்றேன்.

(ஒரு சேவகன்வந்து சோண்டா வருகிறாரென்று சொல்ல).

வரச்சொல் சேவகா!

**சோண்டா.**—(நமஸ்காரம் செய்துவிட்டு) எதற்காக வரக்கட்டளையிட்டீரம்மணீ!

**சம்.**—விசேஷமொன்றுமில்லை புத்திரா! உன் தகப்பனிடமிருந்து செய்தி ஏதேனும் கிடைத்ததா? நெடுநாளாய்விட்டதே அவர் **கயைக்குச்** சென்று! யுத்தம் எவ்வாறு முடிந்தது? உண்மையான செய்தி தெரியாமல் மனம் பதைக்கின்றது.

**சோ.**—ஒன்றும் தெரியவில்லை அம்மணீ! உண்மையானசெய்தியை அறிந்துவரும்படி ஆட்களை அனுப்பியிருக்கிறேன்.

**சம்.**—ராஜதேவனை கெயில்வாராவுக்கு அனுப்பிவிட்டாயோ?

**சோ.**—அனுப்பிவிட்டேனம்மா.

**சம்.**—அதிகாரபத்திரம் கொடாமல் எப்படி அனுப்பிவிட்டாய்?

**சோ.**—அதிகாரபத்திரத்தை மகாராணா முத்திரை போட்டு அனுப்பினேன். தாங்கள் முத்திரையிட்டு அனுப்பவில்லை.

**சம்.**—நான் அனுப்பாமைக்குக் காரணமுண்டு. அதை அறிந்துகொண்டல்லவோ நீ **ராஜதேவனை** அனுப்பவேண்டும்.

**சோ.**—கெயில்வாராவில் மீனர்களால் பெருங்கலகம் நடந்ததென்றும், உடனே தகுதியான தலைவனை அனுப்பாவிட்டால் அனேக கஷ்டங்கள் நேருமென்றும், சாதுக்களையெல்லாம் அச்சாதியார் தொந்திரவு செய்கிறார்களென்றும், அராஜகமாய்ப்போய்விட்டதென்றும் ஓர் சாதுவந்து சொல்லி தக்ஷணம் தகுந்த தலைவனை அனுப்பும்படிகேட்டார். ராஜதேவனை முன்னரே தாங்கள் நியமனம் செய்திருக்கின்றமையாலும், கெயில்வாராவுக்கு உடனே ஒரு சைந்நியம் செல்லவேண்டியிருந்தமையாலும், உங்களுடைய அதிகாரபத்திரத்தை எதிர்நோக்காமலே அனுப்பிவிட்டேன். அதிகார பத்திரத்தை இப்போது தாங்கள் கொடுத்தாலும் அவனுக்கு அனுப்பிவிடுகின்றேன். முன்னரே தாங்கள் யோசித்து செய்த காரியமேயன்றோ.

**சம்.**—வாஸ்தவந்தான் புத்திரா! ஆகிலும் இச்சந்தர்ப்பத்தில் ராஜதேவனை அங்கு அனுப்ப நான் உத்தேசிக்கவில்லை. அதற்காகவே அதிகாரபத்திரம் கொடாமல் நிறுத்திவிட்டேன். ராஜதேவனைக் கூடிய சீக்கிரத்தில் வரவழைத்துவிடு.

**சோ.**—ஏன் அம்மா? வேறுயோசனை ஏதேனும் உண்டோ? இக்காலத்தில் அவனை வரவழைப்பது உசிதமல்ல, அவனன்றி அக்காரியத்தை முடிக்க வல்லவர் ஒருவருமில்லை.



**சம்.**—அதற்காக சிந்திக்கவேண்டாம் புத்திரா! என் தமையன் **ஜோடா** வெகு சமர்த்தன். அவனை அனுப்புகின்றேன். ஜோடாவே சிலநாளைக்குக் கெயில்வாராவுக்குத் தலைமை வகித்திருக்கட்டும். பிறகு ராஜதேவனை அனுப்பலாம்.

**சோ.**—அப்படிச் செய்வதற்கு யாது முகாந்திரம்? ஜோடாவுக்கு ராஜ்ஜியமில்லையா? என் பிதாவே உங்களுடைய பிதாவுக்கு இத்தேசத்தில் **டீர்லோ** பட்டணத்தையும், அதைச் சுற்றிலுமுள்ள நாற்பது கிராமங்களையும் கொடுத்து, ராணா சபையில் முதல் அந்தஸ்தும் கொடுத்திருக்கின்றாரே. வேறு மாகாணங்களை ஏன் கொடுக்கவேண்டும்? ராஜதேவனுக்கு என்ன கொடுப்பது? அவனுக்கு ஒரு மாகாணம் வேண்டாமா?

**சம்.**—ஏதோ ஜோடா வேண்டுமென்று இச்சிக்கின்றான். ராஜதேவனுக்குப் பின்னர் ஏதாவதொன்றைக் கொடுக்கலாம்.

**சோ.**—இத்தேசத்தின் முறைமையை யனுசரித்தும் உங்களுடைய க்ஷேமத்தை அனுசரித்தும் நான் உண்மையைப் பேசுகின்றேன். கோபங்கொள்ளாமல் கேட்கவேண்டும் அம்மா!

**சம்.**—சொல் புத்திரா! கேட்கின்றேன். உண்மையாயிருந்தால் கோபமேன் வருகின்றது.

**சோ.**—இவ்விராஜ்ஜியத்தில் கெயில்வாரா மிகவும் முக்கியமான மாகாணம். அந்த மாகாணம் சிசோதியஜாதி க்ஷத்திரியர்களால் பரிபாலிக்கப் படவேண்டுமேயொழிய மற்ற ஜாதி க்ஷத்திரியர்களால் பரிபாலிக்கப்படாது. ஜோடா எவ்வளவு சமர்த்தனாயிருந்தாலும்கூட அம்மாகாணத்திய ஜனங்கள் அவனுக்கு அடங்கி நடக்கமாட்டார்கள்; கலகங்கள் உண்டாகும்.

**சம்.**—சிலநாள் ஜோடா பரிபாலிக்கட்டும். என்ன நடக்கிறதோ பார்க்கலாம்.

**சோ.**—அது எனக்கு யுக்தமாய்த் தோன்றவில்லை. நான் அதற்குச் சம்மதிக்கமாட்டேன். ராஜதேவனுக்குக் கொடுத்த மாகாணத்தைத் திருப்பி வாங்குவது எனக்கு மரியாதையெனத் தோன்றவில்லை.

**சம்.**—(தனக்குள்ளே) என்றைக்கும் என் சொல்லைத் தப்பாது கேட்பவன் இன்றைக்கு மூர்க்கமாய்ப் பேசுகின்றானே என் செய்வது? என் தகப்பனுருக்குத் திருப்தியுண்டாவதெப்படி? என் தாய் தந்தையர், உடன்பிறந்தோர், பந்துக்கள் முதலியவர்களை எப்படி விட்டுவிடுவேன்? முரட்டாட்டமாய்ப் பேசினால் இவனுக்குக் கோபம் உண்டாகுமெனத் தோன்றுகின்றது. (சற்று யோசித்து வெளிப்படையாய்) அதிருக்கட்டும் புத்திரா! ராஜதேவனுக்கு இதற்கும்மேலான ஒரு அந்தஸ்தையும், மாகாணத்தையும் கொடுப்போம். அவனும் என் குழந்தையே, அவனை வஞ்சிக்கமாட்டேன். இந்த மாகாணத்தைமாத்திரம் ஜோடாவுக்குக் கொடுத்துவிடு. வேறு வகுப்பு க்ஷத்திரியனானாலென்ன? அவ்வகுப்பினின்று உங்கள் தகப்பனார் என்னைக் கொள்ளவில்லையா? என் பிதா உங்களுக்கு ஆஜ்மீரக் கோட்டையைப் பிடித்துக் கொடுக்கவில்லையா. இத்தேசத்திற்காக எனது பிதா எவ்வளவு பாடுபட்டிருக்கின்றார்?

**சோ.**—அஃதெல்லாம் உண்மையே. அவர் உபகாரம் செய்தார், அதற்குத் தகுந்த கைம்மாறு எனது பிதா செய்திருக்கின்றார். மொகுலுக்குத் தகுந்த வயது வந்தபிறகு எதை வேண்டுமென்றாலும் செய்துகொள்ளட்டும். அவன் சிறுவனாயிருக்க நான் ராஜ்ஜியபரிபாலனம் செய்யும் வரையில் இவ்விராஜ்ஜியத்தில் அந்நிய வகுப்பு க்ஷத்திரியனை ஒரு ஊசிகுத்தும் நிலத்திற்குக்கூடத் தலைமை யாக்கமாட்டேன். அபாயம் உண்டாகும்; அது ராஜரீக உபாயமன்று.

**சம்.**—அவ்வளவு மூர்க்கமாய்ப் பேசுகின்றாயே நான் என்ன செய்வேன். என் உடன்பிறந்தோன் எனக்குத் துரோகம் செய்வானா? என் தகப்பனார் எனக்குத் துரோகம் செய்வாரா? ஏன் அப்படி என் பந்துக்களின்மீது குறை கூறுகின்றாய்?

**சோ.**—மன்னிக்கவேண்டும் அம்மா! அவர்களின்மீது குறை யொன்றுங் கூறவில்லை. க்ஷத்திரியர்கள் எவ்வழியாகவாயினும் ராஜ்ஜியத்தைச் சம்பாதிக்கப் பார்ப்பார்களே யொழிய அவ்விஷயத்தில் நியாயத்தைக் கவனிக்கமாட்டார்கள். ஆஜ்மீரைக் கைக்கொள்ளும்பொழுது **ராவ் ரின்மல்** நியாயாந்நியாயம் யோசித்தனரோ?

**ப்ரீதா.**—(தனக்குள்ளே) காரியம் கெட்டுப்போகும்போல் காண்கின்றதே. மெல்லமெல்ல ராணிக்குத் தந்தை தமையன்மீது அவநம்பிக்கை உண்டாகுமாறு செய்துகொண்டிருக்கிருன். சும்மாவிருந்தால் என் முயற்சி வீணுகும். (பிரகாசமாய்) சம்பகமாலா! உனது புத்திரனிடத்தில் எவ்வளவுதான் உனக்குப் பிரியமிருந்தாலும் உன் தந்தை தமையன்மீது இப்படியும் அவனைக் குற்றங்கூற விடலாமோ? உலகத்தில் க்ஷத்திரிய ஸ்திரீகள் தம் பர்த்தா வேனும் தம் தாய் தந்தையர்மீது குற்றம் கூறினல் சகியார்கள். உனது க்ஷத்திரியத்தன்மை எங்கு சென்றது. தாய் தந்தைகளென்கிற மரியாதை உனக்குத்தான் இல்லை, எனக்கு என் ராஜன் மீதும் ராணியின்மீதும் அன்பில்லையா? அவர்களுடைய உப்பை சாப்பிட்டு அவர்கள் மீது இவ்வாறு தூற்றபபடும் குறைகளை நான் கேட்க என் தலையில் அயன் எழுதிவிட்டனனே. ஆ! ஆ! இது என்ன விந்தை! உன்னைப்போன்ற புத்திரியை நான் எங்கும் காணவில்லை. இம்மரியாதையைப் பெறத்தானே உன் பிதா உன்னைத் தவஞ்செய்து பெற்ருர். உன் தகப்பனும் தமையனுமே உன் குழந்தையினுடைய ராஜ்ஜியத்தை அபகரிப்பார்களென்ற சமுசயம் உனக்கு உண்டாளுல் உன் குழந்தையினுடைய தாயாதிகள் அதை அபகரிக்க மாட்டார்களோ. இத்தேசத்து இராஜ குலத்தரான க்ஷத்திரியர்களுக்குத் தங்கள் சிநேகிய குலத்தில் எவர்களாண்டாலும் ஒன்றே. உன்குழந்தை ஆளவேண்டுமென்ற அவா உனக்கும் உன் பிதாவுக்குமன்றி வேறெவர்க்கிருக்கும். இவ்வவதூறு வார்த்தைகளை ஒரு க்ஷணமேனும் கேளேன். நான் போகிறேன்.

(போகிருள்.)

(சோண்டா வியப்புடன் பார்க்கிருன்.)

**சம்.**—(சற்றுசும்மாவிருந்து) புத்திரா! ப்ரீதா சொல்வதெல்லாம் உண்மை. எனது பந்துக்களை அவமதித்தாய். இதைக்கேட்டால் என் தகப்பனர் என்ன நினைப்பார்? இப்படியும் செய்யலாமா? நற்குணமுடையவனென்று எல்லா விவகாரங்களையும் நீயே நடத்திக்கொள்ளும்படி விட்டேன். இவ்வற்பகாரியத்தில் நீ எனது யோசனையைக்கேளாதொழிந்தாய். எனக்கு மனவருத்தமுண்டாக்கினய். நானே பெண்; எனக்கென்னவிருக்கிறது. (கண்ணீர்விட்டு) பர்த்தாவை அனுப்பிவிட்டேன். குழந்தை மோதல் கண்திறவாக் குழந்தை. பெயருக்குமாத்திரம் மகாராணுவாயிருக்கிருன். உண்மையில் அதிகாரம் உன் கையிலிருக்கின்றது. நான் என் செய்வேன்? என் எண்ணம் எப்படி நிறைவேறும். ராஜ்ஜியம் உன்கையிலிருக்கின்றது. நீ என்னசெய்தாலும் யார் கேட்கப் போகிருர்கள்.

**சோ.**—உமக்கு மந்திராலோசனை சொல்பவர்கள் இன்னரென நான்இதுவரையில் அறிந்திலேன். இனி ஒருக்ஷணமேனும் நானிவ்விடத்திலிருக்கமாட்டேன். ப்ரீதா சொல்வதெல்லாம் உமக்கு உண்மையாகத்தோன்றியது விந்தை. உம் தாயினுடைய வேலைக்காரியோ இவ்விராஜ்ஜிய விவகாரத்தைப்பற்றிப் பேசுவது? அவளுடைய மந்திராலோசனையே ஏற்றதாக நீர் நினைக்கும்பக்ஷத்தில் தாங்கள் அதையே ஏற்றுக்கொள்ளலாம். என் ஆலோசனையேனும் சகாயமேனும் வேண்டுமென்று உமக்குத் தோன்றும்வரையிலும் இத்தேசத்தின் எல்லைக்குள் அடியெடுத்துவைக்கமாட்டேன். நானு அதிகாரத்தை அபேக்ஷித்தவன்! நானு தேசத்தை அபகரிக்க எண்ணங்கொண்டவன்! ஒரு வேலைக்காரியின் சொற்களைக்கேட்டு தாங்கள் என்னிடத்தில் வைத்திருந்த நம்பிக்கையை ஒழித்துவிட்டீர். மனப்பூர்த்தியாய் என் ராஜ்ஜியத்தை மோதலுக்குக்கொடுத்தேன். வலக்கை கொடுத்ததை இடக்கை வாங்கிக்கொள்ளுமா? திரிகரணசுத்தியாயும் உண்மையாயும் இத்தேசத்தின் நன்மைக்காகவும், மகாராணுவின் மேன்மையின் பொருட்டும் க்ஷேமத்தின் பொருட்டும் பாடுபட்டேன். யார் மோசக்காரரென்பதை நாள் செல்லச்செல்ல அறிவீர். எல்லா அதிகாரத்தையும் நீங்களே வகித்து தேசத்தை ஆளுங்கள். ஆளவேண்டுமென்கிற ஆவல் எனக்குக்குக்கிடையாது. ஆனல் ஒன்றுமாத்திரம் கேட்டுக்கொள்ளுகின்றேன். இவ்விராஜ்ஜியம் சிநேகியர்களுடைய ஆளுகையினின்று நழுவாமல் பார்த்துக்கொள்ளுங்கள். இதோ பொக்கிஷச்சாவி, எடுத்துக்கொள்ளுங்கள். என் குதிரையும் சூலமும் தவிர வேறு எதையும் நான் கொண்டுபோவதில்லை. ஹர்க்கார்!

**ஹர்க்கார்**—மகாராஜ்! வந்திருக்கின்றேன்.



**சோ**—அரண்மனைவாயிலில் என் குதிரையைக் கொணர்ந்து நிறுத்தச்சொல்.

(ஹர்க்கார்போய் வந்து)

**ஹர்க்கார்**—குதிரை வந்துவிட்டது மகாராஜ்!

**சோ**—போய்வருகிறேனம்மா, உத்தரவுகொடுங்கள். நானெத்தேசத்திலிருந்தாலும் தாங்கள் கஷ்டகாலத்தில் என் உதவியைப்பெறலாம்.

(போகிருன்)

**சம்**—(நெடுநாழிகை பிரமையுடன் உட்கார்ந்திருந்து, தனக்குத்தானே) ஆ! ஆ!! இது என்ன? நான் கண்டகாக்ஷி கனவிலா, நனவிலா? ப்ரீதா எங்கே! சோண்டா எங்கே! சாவி இங்கு என் வைத்திருக்கிறது? ஆ! சோண்டா! நான் என்ன சொன்னேனப்பா உன்னை? நீ ஏன் கோபித்துக்கொண்டு போய்விட்டாய்? நீ நிரம்ப ரோஷக்காரனென்று தெரிந்திருந்தும் புத்திபிசகி ஏதோ இரண்டு சொற்களை வாயினின்று நழுவவிட்டேன். இதற்கோடா இவ்வளவு கோபம்? உன் மன உறுதியையும், நற்குணத்தையும் அறியாதவளோ நான். என்ன உனது நேர்மை. உன்னை ஊரைவிட்டு விலக்கினபிறகும் என் கஷ்டகாலத்தில் உன் உதவியைப்பெறலாமென்றனையே! ஐயோ! உன்னையா நான் இழந்துவிட்டேன்; இனி என் குழந்தையை யார் காப்பாற்றுவார்கள்?

**ப்ரீதா**—(உள்ளேவந்து) என்ன அப்படி புலம்புகின்ருய் சம்பகமாலா! தேசத்தைப்பரிபாலிக்க தகுந்த பந்துக்கள் யாரும் இலரோ உனக்கு? தந்தையில்லையா தமயன் இலையா? நாதனில்லாதவள்போல் என் புலம்புகின்ருய்? போகலாம் வா!

(போகிருர்கள்.)

எச். வேங்கோபராவ்.

## "கிண்டர்கார்டன்."

சென்ற டிசெம்பர்மாசம் வித்யாவிஷயமாய் ஆலோசிக்கக்கூடிய சென்னை உபாத்தியாயர்கள் மகாசபையில்* வாசிக்கப்பட்ட பிரபந்தங்களில் முக்கியமானதொன்று "கிண்டர்கார்டன்" என்னும் விஷயத்தைப்பற்றியது. இது மிஸ்ஸஸ் ப்ராண்டர் துரைசானியால் எழுதி வாசிக்கப்பட்டது. இது விஷயம் மிகமுக்கியமானதால் அதி துல்லியமாய் இதை விளக்கி அவர் வாசித்த பிரபந்தத்தின் சாராம்ஸம் விளங்க அதை இங்கு தமிழில் பிரசுரிக்கிறேம்.

**கிண்டர்கார்டன்** விஷயமாய் அச்சபைமுன் பேசுவதற்கு வாய்த்த சமயம் கிடைத்ததற்காக மிஸ்ஸஸ் ப்ராண்டர் தாம் நன்றியுள்ளவராக விருப்பதாகச்சொன்னர். ஏனெனில் பிரதமபாடசாலைகளில் மட்டுமன்றி 'ஸ்கூல் படிப்பு' முழுவதிலும் கிண்டர்கார்டன் ஒழுங்குகளையும், அபிப்பிராயங்களையும் அனுசரிப்பதினலேயே வித்யாப்பியாசம் பயன் படுவதாகவேணுமென்பது அவருடைய அபிப்பிராயம். கிண்டர்கார்டன் முறையாவது ஐம்புலன்களும் அறிவும் விர்த்தியாய் வளர்ந்துவரும்படி குழந்தைகளைப் பழக்கிவருவதாதலால், கண்கள் கைகளைப் பழக்குவதில் அம்முறை நேராகவும், மற்றப்படி ஸ்கூலில் போதிக்கும் எல்லாப்பாடங்களையும் போதிக்குமுறையில் அபிற்சார்பாகவும் அம்முறை உபயோகப்படுவதாயிருக்கிறது. ஆகையால் வித்யாப்பியாசத்துக்கு இவ்வளவு முக்கியமான இவ்விஷயத்தைப்பற்றி அம்மகாசபையில் பேசவாய்த்தது பெருங்காரியமாக மதித்தார்.

**கிண்டர்கார்டன்** என்றல் குழந்தைகள் சரியாக வளரப் பழக்கும் ஒரு வித்யாமுறையென்றும், அம்முறை சுமார் 60-வருஷங்களுக்குமுன் **ப்ரீட்ரிக் ப்ரோபெல்** என்னும் ஜெர்மானியர் ஒருவரால் கண்டுபிடித்து ஒழுங்குசெய்து வழங்கத்துவங்கிற்றென்றும் எல்லாரும் அறிந்திருக்கலாம்.

வித்யா விஷயமாய் **ப்ரோபெல்** கொண்டிருந்த பிரதம எண்ணங்கள் என்னவெனில்:

(1) வித்யாப்பியாசம் குழந்தையின் தேகமனே சக்திகள் எல்லாவற்றையும் விர்த்தியாகச் செய்து நல்லொழுக்கத்தையும் விர்த்திசெய்ய வேண்டுமென்பது.

(2) குழந்தை தானக (தன்முயற்சியால்) செய்யும் எதுவும், பிறர்சொல்லி அல்லது போதித்துச் செய்யும் காரியத்தைவிடப் பன்மடங்கு விசேஷமாக விர்த்தியடையும்படிச் செய்கிறது: ஆகையால் உபாத்தியாயர் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதை விசேஷமாகக் கருதாமல், அவர்கள் தன்முயற்சியால் விர்த்தியடைவதற்கு ஆதாரமான சாதகசாதனங்கள் சித்திக்கும்படி பார்த்துவரவேண்டுமென்பது.

(3) இப்படி கூட்டுவிக்கும் சாதக சாதனங்கள் அந்தந்தக் குழந்தையின் தன்மைக்குத் தக்கவாறு

* The Madras Teacher's Conference.

ஏற்றிருக்கவேண்டியதோடு குழந்தைகள் விர்த்தியடைவதற்கு ஆதாரபூதமாயுள்ள உத்தேசங்களுக்கு ஏற்றவையாகவு மிருக்கவேண்டும்; அன்றி, அச்சமய சாதனங்கள், முன்யோசனை செய்து இசையச்சமைத்த ஒரு ஏற்பாட்டுக்கிணங்கவும் அளிக்கப்பட வேண்டுமென்பது.

**ப்ரோபெல்** இம்முறையைச் சீர்படுத்தியதில் அவர் உத்தேசம் இன்னதென்பது இம்முறைக்கு அவர்கொடுத்த பெயராலேயே விளங்குகிறது. **கிண்டர்கார்டன்** என்னும் ஜெர்மன் வார்த்தைக்குப் பதப்பொருள் "குழந்தைகள் தோட்டம்" என்பதாம். இதனால் அவர் குறித்துரைக்கக் கருதியதென்னெனில், குழந்தைகளைச் செடிகள்போல் பாவித்து, உபாத்தியாயர் தோட்டக்காரனைப்போலிருந்து அவர்களை வளர்த்து வரவேண்டுமென்பதாம். தோட்டக்காரன் செடிகள் தானாகவளருவதற்கு வசதியான படி எருப்போட்டுத் தண்ணீர்வார்த்து, வெயில், நிழல் சரியானபடியும் அனுகூலமாகவும் படும்படி அமைத்துவைக்கிறான்; செடி தானாக வளருகிறதேயன்றி; தோட்டக்காரன் அதை எவ்வளவும் நேரில் வளரச்செய்வதில்லை. அது வளருவதற்கனுகூலமான உபகரணங்கள் எல்லாவற்றையும் மட்டும் அவன் ஜாக்கிரதையாகவும் கவனமாகவும் அளவும் காலமுமறிந்து செய்கிறான். பிள்ளைகள் விஷயத்திலும் உபாத்தியாயர் செய்யத்தக்கது அவ்வளவே என்பது அவர் கருத்து. குழந்தைகள் சரியாகவளர்ந்து விர்த்தியாவதற்கு அனுகூலமான சாதக சாதனங்கள் யாவையும் அளித்து, அவர்கள் வளர்ச்சி, கோணியாவது குறைந்தாவது போவதற்கு ஆதரவாகவிருக்கும், எவ்விதகாரணங்களையும், தோட்டக்காரன் களை பிடுங்குவதுபோல களைந்து நீக்கி அக்காரணங்கள் அவர்கள் வளர்ச்சிவிர்த்தியைப் பிரதிகூலமாகப் பாதிக்காதபடி பார்த்துவர வேண்டும்.

சௌக்கியமாயிருக்கிற ஒரு குழந்தையை நாம் நோட்டமிட்டுப்பார்த்து வருவோமானால் நாம் அறிவதென்ன? முதலாவது அக்குழந்தை அநேகமாக எப்பொழுதும் சந்தோஷமும் சிரிப்புமாக விளையாடிக்கொண்டிருக்கிறது; (2) உடம்பு உறுப்புகளைச் சுறுசுறுப்பா யுபயோகிப்பதில் சந்தோஷ மனுபவிக்கிறது; அதன்மனது எப்போதும் சுறுசுறுப்புள்ளதாய், ஐம்புலனறிவுகளாலும், பெரியாரைக் கேட்கும் கேள்விகளாலும், தன்னைச் சுற்றியுள்ள விஷயங்களை யறிந்துகொள்வதே மணியமாக விருக்கிறது. எதையும் தானாகச்செய்வதில் சந்தோஷப்படுகிறது: ஒரு காரியம் செய்தால் அதைத் தான் செய்யவேணுமென்று விரும்பிச்செய்ய வருகிறது. பக்ஷிணங்கள், பாடிகள், பொம்மைகள் ஏதாவது செய்துகொண்டிருப்பதைப் பார்த்தால் தானும் அப்படி செய்யத்தலைப்பட்டு முயற்சிக்கிறது. தான்கண்டு கேட்டதைப்பார்த்துத் தானும் அவ்வாறு செய்யயத்தனிக்கிறது. இப்படித்தானாகச் செய்யும் முயற்சிகளில் தான் கையாடக்கூடாத கத்தி சூர்க்கத்தி முதலியவைகளையெடுத்து அதற்காகக்கண்டிக்கப்படுகிறது. தன்னைப்போலொத்த குழந்தைகளோடு கூடியிருக்கவும், நாய், பூனை, பறவைகளோடு விளையாடவும் விரும்புகிறது. இன்னும் சொன்னால், கடைசியாக, நன்மை தீமை செய்யச்சக்திவாய்த்துள்ளதாகவும் காட்டுகிறது. இவை யெல்லாம் குழந்தைகளின் சுபாவம். இந்த சுபாவ விசேஷங்களெல்லாம் அப்பியாசத்தினால் விர்த்தியாகும்படி **கிண்டர்கார்டனில்** சாதகசாதனங்கள் ஏற்படுகின்றன. குழந்தைகள் எப்போதும் சுறுசுறுப்பாயிருக்க விரும்புகிறவர்களானபடியால், அச்சுறுசுறுப்பைக் காட்ட அநேக விளையாட்டுகளும், ஆட்டபாட்டங்களும், விர்த்திக்குக்காரணமாகும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சுற்றியுள்ளதை யறிந்துகொள்ள வேண்டுமென்கிற ஆசை கிண்டர்கார்டன் உபாத்தியரால் விர்த்திக்குக் காரணமான வழியில் செல்ல உபயோகிக்கப்படுகிறது. ஏனெனில், சுற்றியுள்ள எல்லாவற்றையும் ஐம்புலன் அறிவுகளால் ஆராய்ந்து அறிந்துகொள்ள அந்த உபாத்தியார் குழந்தைகளுக்கு ஒத்தாசையாகவிருக்கிறாள். விதையடுக்கல், குச்சிவைத்தல், மணிகோர்த்தல் முதலிய கிண்டர்கார்டன் தொழில்கள், எதையும் தானாகச்செய்து பார்க்கவேண்டுமென்கிற குழந்தைக்குள்ள ஆசையைத் திர்ப்திசெய்யக் காரணமாயிருக்கின்றன. அன்றி, இவை குழந்தைகளுக்கு மனதில் படும் எண்ணங்களையும் தோற்றங்களையும் நன்றாகவிளக்கவும் காரணமாகின்றன. குழந்தைகளுக்குக் கூடிவிளையாட இதரக் குழந்தைகளும், வளர்ப்புப் பிராணிகளும் கிண்டர்கார்டனிலிருப்பதால், குழந்தைகளுடைய தேக மனோவிர்த்திக்குக்காரணமான எல்லா உபகரணங்களும் கிண்டர்கார்டனில் அமைந்திருக்கின்றன. சாதக சாதனங்கள் உபாத்தியாயர் மேற்பார்வையாலும், சொல்லும் கதைகள், பேசும்பேச்சுகள், சம்பாஷணைகளாலும் சித்திக்கக்கூடியவையாக விருக்கின்றன. பின்னும் கிண்டர்கார்டனிலுள்ள சகவாசமனது சந்தோஷம், சௌக்கியம், சன்மார்க்கம் இவைகளுக்கடுத்ததாக விருப்பதால் குழந்தைகளுக்கு நற்பழக்



கங்கள்படிந்து நற்குணசக்தி விர்த்தியடைகிறது. அங்கே சொல்லும் கதைகள், பாட்டுகளினாலும், மற்றப்படி அவர்கள் காணும் உதாரணங்களினாலும் அவர்கள் மனம் நல்லெண்ணங்கள் நிரம்பி நல்வழியில் செல்வதற்கு ஏற்றதாக விருக்கிறது.

குழந்தைகள் பிரகிருதி வஸ்துக்களையும் விஷயங்களையும் நேரில்கண்டறியும்படி செய்வது மிகமுக்கியமென்று **ப்ரோபெல்** வற்புறுத்தியிருக்கிறார். பிரகிருதியில்காணும் காக்ஷிகளையும், சப்தங்கள், தொனிகளையும் நேரில் உணர்ந்து அனுபவிப்பதில் குழந்தைகளுக்கு அதிக ஆசை இயல்பாயுண்டென்றும், புஷ்பங்கள், பறவைகள், பிராணிகள் இவைகளைக் கண்டு களிப்பதில் அவர்களுக்குள்ள அனுதாபத்தை நாம் விர்த்திசெய்து வளர்க்கவேண்டுமென்றும் அவர் சொன்னார். ஆகையால் ஒவ்வொரு கிண்டர்கார்டனிலும் ஒரு தோட்டமாவது, குழந்தைகள் தாங்களாகப் பயிர்செய்யக்கூடியதாக ஒரு துண்டு நிலமாவது பிரத்தியேகமாக விருக்கவேண்டியது முதலவசியமென்று **ப்ரோபெல்** போதித்தார்.

**பிரகிருதி** வஸ்துக்களையும் விஷயங்களையும் குழந்தைகள் நேரனுபவத்தால் அறிந்துகொள்ளவேண்டியதோடு, பருவகாலங்கள் மாறுவதையும், அவ்வப்பருவங்களில் விசேஷ லக்ஷணங்கள் அப்பருவகால சம்பிந்தமான உற்சவாதிகள் இவைகளைக் குழந்தைகள் மனதிற்படும்படி அவர்கள் கவனத் திருத்திக்காட்டவேண்டுமென்று அவர் சொன்னார். வசந்தகாலத்தில் மரஞ்செடிகள் புஷ்பிப்பதையும் பக்ஷிகள் பாடுவதையும், வெயிலின் உக்கிரத்தையும் விதை விதைத்தல் முதலிய மற்றவிசேஷங்களையும் குழந்தைகள் உணரக்காட்டி, பாட்டுகள் மூலமாகவும், கதைகள்மூலமாகவும், தகுந்தவிளையாட்டுகள் மூலமாகவும் அப்பருவகால் விசேஷங்கள் அவர் மனதிற்பதியும்படி செய்யவேண்டும். அப்படியே வேனிற்காலம், கனிகாலம், மாரிகாலம், இவைகளின் குணங்குறிகளையும் விளக்கவேண்டும்.

**ப்ரோபெல்** வற்புறுத்திய மற்றொருமுக்கிய அம்சம் என்னவென்றால், கிண்டர்கார்டனில் நடக்கும் அனைத்தும் ஒன்றுக்கொன்று தோரணையாய். கோர்வைதப்பாது தொடர்ந்து செல்லவேண்டுமென்பதாம். முன்பின் கோர்வையின்றி விஷயங்களை அங்கு கொஞ்சம், இங்குகொஞ்சமாகச் சொல்லிக்கொண்டுபோனால், குழந்தைகள் விஷயங்களின் தோரணையறியாது மயங்கி, அவற்றைச் சரியாகக் கிரகித்துக்கொள்ள முடியாது தவிப்பார்கள். **ப்ரோபெல்** தாமே குழந்தையாக விருந்தபொழுது தோரணையின்றி துண்டும் துணுக்குமாக விஷயங்கள் போதிக்கப் பெற்றதனால் அவைகளைக்கிரகத்துக் கொள்ளமாட்டாமல் வருந்தினவர். அப்பொழுது அவர் அறிந்தவைகளெல்லாம் முன்பின் தொடர்பின்றி, ஏதோ ஆகாசத்தில் மிதக்கும்மாதிரியாக அவருக்குப்பட்டதாம். ஆதலால் இக்குற்றத்துக்கிடமின்றி அவர் சீர்படுத்திய முறையில் இதைமுற்றும் நிவிர்த்திக்கத் தீர்மானித்தார். இதுகாரணமாக, அவர் ஒழுங்குபடுத்திய விளையாட்டுகள் தோரணியாக ஒன்றின்மேலொன்றாகத் தொடர்ந்து சென்றன. ஒவ்வொருவிளையாட்டுத் தோரணியும் முதலாரம்பத்தில் மிகவும் சுபாவமான இலகுவிளையாட்டிலிருந்து படிப்படியாக மேலேறிவிர்த்தியாகிப் போவதாயிருக்கின்றன. அவர் ஒழுங்குபடுத்திய விளையாட்டுத் தோரணிகள் ஒவ்வொன்றையும் ஒரு சங்கிலிக்கு ஒப்பிட்டால், அதிலடங்கிய ஒவ்வொரு விளையாட்டும் ஒரு சங்கிலிவளையத்துக்கு ஒப்பாகச்சொல்லலாம். ஒரு வளையம் விட்டுப்போனால் சங்கிலியின் கோர்வை விட்டுப்போவதுபோல, ஒரு விளையாட்டு விட்டுப்போனால் தோரணியின் கோர்வையும் விட்டுப்போகும். ஒரு தோரணியிலுள்ள ஒவ்வொரு விளையாட்டும், சங்கிலிவளையம்போல் தொடுத்திருப்பதொப்ப, ஒவ்வொரு தோரணியும் அதேமாதிரி. ஒன்றின்பின் ஒன்று தொடர்ந்துவரும்படி கோர்வையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த விளையாட்டுகளனைத்தும் குழந்தையின் பிரத்தியக்ஷானுபவத்துக்குட்பட்டு அதோடு சம்பந்தப்பட்டவையாக விருக்கவேண்டும். உதாரணமாக, அறுவடைவிஷயமாய்ப் பேசவேண்டுமானால், அறுவடைகாலத்தில் அப்பேச்சைத்துவக்கி அக்காலத்தில் நடப்பவைகளைக் குழந்தைகளுக்குப் பிரத்தியக்ஷானுபவமாகக் காட்டவேண்டும். அந்தமாசத்தில் அல்லது வாரத்தில், கிண்டர்கார்டனில் குழந்தைகளுக்கிடும் வேலைகள் அதாவது தொழிற்பாடங்கள், அறுவடைகாலவிசேஷங்களை விளக்குவனவாக இருக்கவேண்டும். முதிர்ந்த நெற்கதிர்களைக் கொண்டுவந்து அவற்றைக்குறித்துப் பொருட்பாடம் சொல்லவேண்டும்; அறுப்பறுக்கும் அரிவாளைக்குறித்தும், கட்டுக்கட்டுதல், நெல்லடித்தல், களத்துவேலை, சேர்க்கட்டல் முதலியவைகளைக் குறித்தும் பொருட்பாடங்கள் சொல்லவேண்டும். குழந்தைகளுக்குப் போதிக்கும் எதுவும் அவர்கள் பிரத்தியக்ஷத்தில் கண்டவைகளாகவேயிருக்கவேண்டும். காணாதவைகளை அவர்களுக்குக் காட்டுவித்து அவைகளைப்பற்றிய விஷயங்கள் அவர்கள் மனதில்

படும்படி பாடஞ்சொல்லவேண்டும். எழுதல், உருச் செய்யல் முதலிய பாடங்களிலும், ஒரு நெற்கதிரைப்போல் படம் எழுதிக்காட்டி அவர்களையும் எழுதச்சொல்லலாம். மணி கோர்ப்பதில் ஒரு நெற்கதிர்போல் கோர்க்கச்செய்யலாம், இன்னுமிப்படி இடத்துக்கும் காலத்துக்கும் தக்கபடி அவர்களுக்கு அக்கால வியல்புகளும் விசேஷங்களும் மனதிற்பதியும்படி போதிக்கவேண்டும். அறுவடைசம்பந்தமான பாட்டுகள், கதைகளும் சொல்லவேண்டும். கூடுமானால் அறுப்பறுக்கும் வயலை நேரில் போய் அவர்களுக்குக் காட்டி வருவது மிகவும் விசேஷம்.

ப்ரோபெல் கருத்துப்படி 'கிண்டர்கார்டன், போதனை குழந்தைபிறந்த சிலமாதத்திற்கெல்லாம் வீட்டிலே ஆரம்பிக்கவேண்டும்; தாயார்தான் முதல் உபாத்தியாயர். மூன்று வயது ஆனதும், குழந்தையைக் கிண்டர்கார்டன் ஸ்தாபனத்துக்கு அனுப்பவேண்டும் அங்கே 6 அல்லது 7 வயது வரையில் இருக்கவேண்டும். கிண்டர்கார்டனிலிருக்கும் இந்த மூன்று நான்கு வருஷங்களில் எழுதல், வாசித்தல் அல்லது கணக்குப்போடல் முதலான பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கும் பாடங்கள் எதுவும் குழந்தைக்குச் சொல்லிக்கொடுக்க விடுவதில்லை. இந்த மூன்று நான்கு வருஷகாலமும் ஒழுங்குபடுத்திய விளையாட்டுகள் மூலமாக குழந்தை தேகமனோ சக்திகள் அப்பியாசத்தால் பலப்பட்டு விர்த்தியாய் வளர்ந்து வரப்பார்ப்பதொன்றே முக்கிய நோக்கமாகக் கவனித்துவரவேண்டியது. ப்ரோபெல் சீர்ப்படுத்திய இந்த கிண்டர்கார்டன் முறையை யனுசரித்தவர்கள், இவ்விதமாக தங்கள் அந்தக்கரண சக்திகளை அப்பியசித்து விர்த்தி செய்யப்பெற்ற குழந்தைகள், பள்ளிக்கூடத்தில் படிக்கத்துவக்கும் பொழுது, 5 அல்லது 6 வயது, முதல் எழுத வாசிக்கவும் கணக்குப்போடவும் கற்றுக்கொடுக்கப்பட்ட குழந்தைகளைவிட மிகவும் சூடிகையும் புத்திகூர்மையுமுள்ளவர்களாக விருக்கக்காணப்படுகிறார்களென்று அனுபவசாக்ஷியாகக் கண்டறிந்திருக்கிறார்கள். கிண்டர்கார்டன் போதகர் ஒருவர் இதைப் பற்றிப் பின்வருகிறபடி எழுதுகிறார் :—"பள்ளியில் போட்டதும் குழந்தைகள் அக்ஷராப்பியாசமும் நெடுங்கணக்கும் கற்கத்துவக்குகிறார்கள். அக்ஷரங்களும், எண்களும் விஷயங்களைக்குறிக்கும் அடையாளங்களே. 5-வயதுக்குழந்தை விஷயங்களை முதலில் நன்றாக அறிந்திருந்தாலன்றி அவைகளைக் குறிக்கும் அடையாளங்களை யறிந்து பயன்பட யோக்கியமான ஸ்திதியிலில்லை. ஏனெனில் விஷயங்களையும் வஸ்துக்களையும் நேர்நேரில் கண்டு பிரத்தியக்ஷானுபவமாக அவைகளை யுணர்ந்து கிரகித்துக் கொள்ளப் போதுமானகாலம் அவர்கள் செலவிடவில்லை ஆகவே விஷயங்களைவிட்டு அவைகளைக் குறிக்கும் அடையாளங்களை யுணர்ந்து கிரகித்துக் கொள்வதில் அவர் மனம் தடுமாறிப்போகிறது. கிண்டர்கார்டனிலோ, விஷயங்கள் தாமே, நேர் நேரில் கண்டுணர்ந்து கிரகித்துக்கொள்ளப்படுகின்றன. பள்ளிக்கூடத்தில, 1, 2, என்று எண்களைக்குறிக்கும் அடையாளங்களைக் கற்கிறார்கள். கிண்டர்கார்டனிலோ, 1, 2, என்பவை அடையாளக்குறியாகவிருக்கும் எண்கள் எதைக்குறிக்கின்றனவோ அதை விஷயபூர்வமாக அறிந்துகொள்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் பசுவைப்பற்றிய ஒரு பாடம் வாசித்தால், பசுவின் பெயரையும் அதன் செய்கைகளையும் குறிப்பதற்கடையாளமான எழுத்துகளைப் படிக்கிறார்கள். கிண்டர்கார்டனிலோ பசுமாட்டையே நேரில் கண்டு அது சம்பந்தமான எல்லாவிஷயங்களையும் பிரத்தியக்ஷானுபவமாக அறிந்துகொள்கிறார்கள். விஷயங்கள் நேரில் கண்டுணர்ந்தமாத்திரத்தில் மனதிற்பதிவதுபோல, அவைகளைக்குறிக்கும் அடையாளங்கள் மூலமாக அவைகள் அவ்வளவாக மனதிற்படுவதில்லை. ஆகவே விஷயஞானம் முந்தி யிருத்தலவசியமாகிறது. இதற்கு கிண்டர்கார்டன்முறைப்படி போதித்தலே ஏற்ற சாதனமாம்.

"**கிண்டர்கார்டன்**, என்பது, அவ்வார்த்தையின் பதப்பொருளுணர்த்துகிறபடி, குழந்தைகள் வளரும்படியான இடம். வளர்ச்சி யென்றால், தேக வளர்ச்சிமட்டுமல்ல; தேகம், மனம், ஆத்மா எல்லாம் சரிப்பிரமாணமாக முறைப்படி விர்த்தியாய் வருவதையுணர்த்தும் வளர்ச்சியாம். கிண்டர்கார்டனில் குழந்தைகள் எழுத வாசிக்கவாது கணக்குப்போடவாவது கற்றுக்கொள்ளாமல் விளையாட்டுகளிலே கருத்தாயிருப்பதால், அவர்கள் அறிவு அடையவில்லை யென்று நினைப்பது சுத்தப்பிசகு. நிறங்கள், உருவங்கள், சப்தங்கள், எண்கள் இவைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள், எண்ணங்கள் பல உணர்கிறார்கள். உபாத்தியார் சொல்லும் வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேட்டுணரக் கற்றுக் கொள்கிறார்கள். வாத்தியங்கள் அல்லது வேறு சப்தங்கள் மூலமாகச்செய்யும் அடையாளங்களையுணர்ந்துநடக்கக் கற்றுக் கொள்கிறார்கள். பிராணிகளைப்பற்றியும் செடிகள், கொடிகளைப்பற்றியும் எத்தனையோ விஷயங்களையுணர்ந்தறிந்து கொள்கிறார்கள்.



பருவகாலங்கள் மாறுவதையும், காற்றடிப்பதையும், மழைபொழிவதையும், பனிவிழுவதையும், வெயில் எறிப்பதையும், மேகங்கள் ஓடுவதையும் நோட்டமிட்டுப்பார்த்துணரக் கற்றுக் கொள்கிறார்கள். பிரகிருதி வஸ்துக்களில் அநேகத்தைச் சேர்த்து அவைகளைப் பலவாறு பரிசோதித்து அவைகளின் குணங் குறிகளை யுணர்ந்தறிந்துகொள்கிறார்கள். பஞ்சு, பருத்தி, காய், கனி, புஷ்பவர்க்கங்கள், ஓடு, கிளிஞ்சல், கூழாங்கல் முதலிய அநேகப் பிரகிருதவஸ்துக்களைச் சேகரித்துப் பரிசோதித்து, உபாத்தியாயருடைய உதவியால் அவைகளின் குணங் குறிகளை யறிந்துகொள்ளும்பொழுது, அவர்கள் மனோபாவசக்தி தூண்டப்பெற்று, ஐம்புலன்களையுமுபயோகித் தறிவையடையப் பழகுகிறார்கள். உண்மையான கிண்டர்கார்டன் போதகருடைய சதாநோக்கம், குழந்தைகளுக்கியல்பாயுள்ள சுறுசுறுப்பு முயற்சிக்கு வழி வகையுண்டாக்கி, அதை அவர்கள் விர்த்திக்குக் காரணமாகும்படி உபயோகிப்பதேயாகும். குழந்தை சுறுசுறுப்பாயிருப்பதோடு தன்முயற்சியால் எதையாவது உண்டாக்கினவண்ணமாயிருக்கப் பழக்கப்படுவதால், அக்குழந்தையின் தேகமனோ சக்திகளனைத்தும் அப்பியசிக்கப்பட நேரிடுகிறது. குழந்தைகள் கிண்டர்கார்டனில் கட்டுவதும், கோர்ப்பதும், தைப்பதும், நெய்வதும், அறுப்பதும், வெட்டுவதுமான தொழில்கள் புரிவதும், மண்ணிலும், மணலிலும் உருப்பிடிப்பதும் வேலையாக விருக்கிறார்கள். இவ்வகையில் அவர்கள் விஷயஞானம் அடைவது அவர்களுடைய பள்ளிப் படிப்புக்கு நல்ல அஸ்திவாரம் போட்டது போலாகிறது."

## பிரபஞ்சமாயாவிலாசம்.

### VII

### தீக்ஷிதரின் மதிமயக்கமும் சிந்தனையும்.

விசாலாக்ஷி அம்மாளது வீட்டினின்றும் வெளியேறும் பொழுது தீக்ஷிதருக்கிருந்த மனக்குழப்பமும் வியாகுலமும் இவ்வளவவ்வளவல்ல. அவர் இன்ன இடத்திற்குப்போகிறதென்று தெரியாமல் மயங்கினார். வெயிலின்கொடுமையும் தரையின் சுடுகையும் வெகு உக்கிரமாயிருந்தபடியால் தெருவில் ஒரு நிமிஷமேனும் தங்கக்கூடவில்லை. 'இட்டடி நோவ எடுத்தடி கொப்புளிக்க' வருந்தி, இரண்டு மூன்று வீடுகளுக்கப்பாலிருந்த மடத்துத்திண்ணையிற்போய் உட்கார்ந்தார். விசாலாக்ஷியம்மாள் வீட்டை விட்டு வெளிக்கிளம்பியதும் மடத்துத்திண்ணையில் வந்துட்கார்ந்ததும் அவரது பிரக்ஞையிலில்லை. மேலும் சீறும் சூரியவெப்பம் தாக்கியது மட்டும் அவரதுணர்ச்சியிலிருந்தது. நிழலில் போய் உட்கார்ந்தும்கூட வெயிலிலிருப்பதாகவே எண்ணினார். உயிரற்ற உடல்போலவும் ஒளியற்றகண்போலவுமானார். சற்று நேரத்திற்கெல்லாம் 'நாமிருப்பது எவ்விடம்? இது இரவோ பகலோ? இது கனவோ நனவோ? நமது மனதில்நிகழ்வது பொய்யோ மெய்யோ?' என்ற பலவாறான சந்தேகங்களும் கொண்டார். மாயையிற் சிக்கிய ஒருவன் எவ்வாறு தன் மதி மயங்கி யுழல்வானோ அவ்வாறு அவரும் மயங்கி யுழன்றார். வசந்தருதுவாகையால் வெயிலினுக்கிரத்திற்குப்பயந்து ஜனங்களெல்லோரும் தத்தம் வீடுகளில் ஒடுங்க, வீதியில் ஜனநடமாட்டமில்லை. ஆதலின் ஊரெங்கும் நிசப்தமாயிருந்தது. தீக்ஷிதர் யாதொரு விக்கினமுமில்லாது ஒரு முகூர்த்தகாலம்வரையில் அதேநிலையிலிருந்தார். பிறகு வெப்பமானது தணிய, 'மெல்லிய பூங்காற்று' வீசிற்று; ஜனங்களும் வீதியில் நடக்க ஆரம்பித்தார்கள். இங்குமங்கும் போவார் வருவாரது பேச்சுக்குரலும் கேட்டது. இம்மாறுபாடுகளால் தீக்ஷிதருடைய மனநிலையும் கொஞ்சம்கலைந்தது. கலையவே விசாலாக்ஷியம்மாளுடன் சம்பாஷித்ததெல்லாம் ஞாபகத்தில் வந்தது. அத்துடன் மனத்துயரமும் அதிகரிக்கத் தன்னினைவு தனக்கு வந்தவராய் அடியில்வருமாறு ஆலோசிக்கத்தொடங்கினார் :—

"மனுஷியன் ஒன்று நினைத்தால், தெய்வம் ஒன்று நினைக்கிறது. நேற்றிராத்திரி நமக்கிருந்த உற்சாகமென்ன! இப்பொழுதிருக்கும்

படும்படி பாடஞ்சொல்லவேண்டும். எழுதல், உருச்செய்யல் முதலிய பாடங்களிலும், ஒரு நெற்கதிரைப்போல் படம் எழுதிக்காட்டி அவர்களையும் எழுதச்சொல்லலாம். மணி கோர்ப்பதில் ஒரு நெற்கதிர்போல் கோர்க்கச்செய்யலாம், இன்னுமிப்படி இடத்துக்கும் காலத்துக்கும் தக்கபடி அவர்களுக்கு அக்கால வியல்புகளும் விசேஷங்களும் மனதிற்பதியும்படி போதிக்கவேண்டும். அறுவடைசம்பந்தமான பாட்டுகள், கதைகளும் சொல்லவேண்டும் கூடுமானால் அறுப்பறுக்கும் வயலை நேரில் போய் அவர்களுக்குக் காட்டி வருவது மிகவும் விசேஷம்.

ப்ரோபெல் கருத்துப்படி 'கிண்டர்கார்டன், போதனை குழந்தைபிறந்த சிலமாதத்திற்கெல்லாம் வீட்டிலே ஆரம்பிக்கவேண்டும்; தாயார்தான் முதல் உபாத்தியாயர். மூன்று வயது ஆனதும், குழந்தையைக் கிண்டர்கார்டன் ஸ்தாபனத்துக்கு அனுப்பவேண்டும் அங்கே 6 அல்லது 7 வயது வரையில் இருக்கவேண்டும். கிண்டர்கார்டனிலிருக்கும் இந்த மூன்று நான்கு வருஷங்களில் எழுதல், வாசித்தல் அல்லது கணக்குப்போடல் முதலான பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கும் பாடங்கள் எதுவும் குழந்தைக்குச் சொல்லிக்கொடுக்க விடுவதில்லை. இந்த மூன்று நான்கு வருஷகாலமும் ஒழுங்குபடுத்திய விளையாட்டுகள் மூலமாக குழந்தை தேகமனோ சக்திகள் அப்பியாசத்தால் பலப்பட்டு விர்த்தியாய் வளர்ந்து வரப்பார்ப்பதொன்றே முக்கிய நோக்கமாகக் கவனித்துவரவேண்டியது. ப்ரோபெல் சீர்ப்படுத்திய இந்த கிண்டர்கார்டன் முறையை யனுசரித்தவர்கள், இவ்விதமாக தங்கள் அந்தக்கரண சக்திகளை அப்பியசித்து விர்த்தி செய்யப்பெற்ற குழந்தைகள், பள்ளிக்கூடத்தில் படிக்கத்துவக்கும் பொழுது, 5 அல்லது 6 வயது, முதல் எழுத வாசிக்கவும் கணக்குப்போடவும் கற்றுக்கொடுக்கப்பட்ட குழந்தைகளைவிட மிகவும் சுடிகையும் புத்திகூர்மையுமுள்ளவர்களாக விருக்கக்காணப்படுகிறார்களென்று அனுபவசாக்ஷியாகக் கண்டறிந்திருக்கிறார்கள். கிண்டர்கார்டன் போதகர் ஒருவர் இதைப் பற்றிப் பின்வருகிறபடி எழுதுகிறார் :—" பள்ளியில் போட்டதும் குழந்தைகள் அக்ஷராப்பியாசமும் நெடுங்கணக்கும் கற்கத்துவக்குகிறார்கள். அக்ஷரங்களும், எண்களும் விஷயங்களைக்குறிக்கும் அடையாளங்களே. 5-வயதுக்குழந்தை விஷயங்களை முதலில் நன்றாக அறிந்திருந்தாலன்றி அவைகளைக் குறிக்கும் அடையாளங்களை யறிந்து பயன்படயோக்கியமான ஸ்திதியிலில்லை. ஏனென்னில் விஷயங்களையும் வஸ்துக்களையும் நேர்நேரில் கண்டு பிரத்தியக்ஷானுபவமாக அவைகளை யுணர்ந்து கிரகித்துக் கொள்ளப் போதுமானகாலம் அவர்கள் செலவிடவில்லை ஆகவே விஷயங்களைவிட்டு அவைகளைக் குறிக்கும் அடையாளங்களை யுணர்ந்து கிரகித்துக் கொள்வதில் அவர் மனம் தடுமாறிப்போகிறது. கிண்டர்கார்டனிலோ, விஷயங்கள் தாமே, நேர் நேரில் கண்டுணர்ந்து கிரகித்துக்கொள்ளப்படுகின்றன. பள்ளிக்கூடத்தில, 1, 2, என்று எண்களைக்குறிக்கும் அடையாளங்களைக் கற்கிறார்கள். கிண்டர்கார்டனிலோ, 1, 2, என்பவை அடையாளக்குறியாகவிருக்கும் எண்கள் எதைக்குறிக்கின்றனவோ அதை விஷயபூர்வமாக அறிந்துகொள்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் பசுவைப்பற்றிய ஒரு பாடம் வாசித்தால், பசுவின் பெயரையும் அதன் செய்கைகளையும் குறிப்பதற்கடையாளமான எழுத்துகளைப் படிக்கிறார்கள். கிண்டர்கார்ட்னிலோ பசுமாட்டையே நேரில் கண்டு அது சம்பந்தமான எல்லாவிஷயங்களையும் பிரத்தியக்ஷானுபவமாக அறிந்துகொள்கிறார்கள். விஷயங்கள் நேரில் கண்டுணர்ந்தமாத்திரத்தில் மனதிற்பதிவதுபோல, அவைகளைக்குறிக்கும் அடையாளங்கள் மூலமாக அவைகள் அவ்வளவாக மனதிற்படுவதில்லை. ஆகவே விஷயஞானம் முந்தி யிருத்தலவசியமாகிறது. இதற்கு கிண்டர்கார்டன்முறைப்படி போதித்தலே ஏற்ற சாதனமாம்.

"**கிண்டர்கார்டன்**, என்பது, அவ்வார்த்தையின் பதப்பொருளுணர்த்துகிறபடி, குழந்தைகள் வளரும்படியான இடம். வளர்ச்சி யென்றால், தேகவளர்ச்சிமட்டுமல்ல; தேகம், மனம், ஆத்மா எல்லாம் சரிப்பிரமாணமாக முறைப்படி விர்த்தியாய் வருவதையுணர்த்தும் வளர்ச்சியாம். கிண்டர்கார்டனில் குழந்தைகள் எழுத வாசிக்கவாது கணக்குப்போடவாவது கற்றுக்கொள்ளாமல் விளையாட்டுகளிலே கருத்தாயிருப்பதால், அவர்கள் அறிவு அடையவில்லை யென்று நினைப்பது சுத்தப்பிசகு, நிறங்கள், உருவங்கள், சப்தங்கள், எண்கள் இவைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள், எண்ணங்கள் பல உணர்கிறார்கள். உபாத்தியார் சொல்லும் வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேட்டுணரக் கற்றுக் கொள்கிறார்கள். வாத்தியங்கள் அல்லது வேறு சப்தங்கள் மூலமாகச்செய்யும் அடையாளங்களையுணர்ந்துநடக்கக் கற்றுக் கொள்கிறார்கள். பிராணிகளைப்பற்றியும் செடிகள், கொடிகளைப்பற்றியும் எத்தனையோ விஷயங்களையுணர்ந்தறிந்து கொள்



பண்ணினேனே. 'எல்லாம் எனையாளும் ஈசன் செயல்.'

தீக்ஷதர், 'ஈசன் செயல்' என்பதைமட்டும் தற்செயலாய் உரக்கச் சொல்லினர். இவ்வார்த்தைகளை இடைகழியிலிருந்த ஒரு வயோவிருத்தர்கேட்டு, அவ்வாறு சொல்பவர் யாரென்று பார்க்க ஆவல்கொண்டு வாசலுக்கு வந்தார். திண்ணையி லுட்கார்ந்திருந்த தீக்ஷதரைப்பார்த்தார். ஆலோசனையிலாழ்ந்திருப்பதாகத் தென்பட்டது. மேலும் அவர் மனோவியாகுலத்தோடிருப்பதாகவும் தெரிந்து இரங்கி மனது இளகப்பெற்றவராய், இரண்டொரு தடவை அவரை 'சுவாமி, சுவாமி' என்று அழைத்தார். பதிலொன்றும் சொல்லாததைக்கண்டு, அவரது அருகிற்போய், " சுவாமி, நீங்கள் யார்? என்ன பலமாய் யோசிக்கிறீர்கள் ?" என்றார். இதனால் தீக்ஷிதரது மனநிலை கொஞ்சம் கலைய, "மனுஷியாளாய்ப் பிறந்தால், யோசனையும் விசாரமும் தவிர வேறென்ன இருக்கிறது?" என்று பதிலீந்தார்.

விருத்தர்.—ஸஹஜந்தானே! விசாரமில்லாதவர்கள் யாராவதிருக் கிறார்களா? ஒருவருமில்லை. தோட்டிமுதல் தொண்டமான்வரையில் துன்பப்படுகிறவர்களே. இராஜாக்களானால், அவர்களுக்குள்ள விசனம் பெரும்தாராவாயிருக்கும். லோக முழுமையும் ஜயித்த ஆளவில்லையே யென்று துக்கப்படுவார்கள். ஏழையானால் கூழுக்கழுவான். சஞ்சலப்படுவதில் இவனும் அவனும் சமானந்தான்.

தீ.—இதுவில்லை அதுவில்லை யென்ற விசனமொன்றுமில்லை. நினைத்தகாரியம் நிறைவேறவில்லையே என்ற விசாரம்தான்.

வி.—அதற்கு நாம் என்னசெய்யக் கடவது! மனுஷியன் எத்தனிக்கிறதெல்லாம் கைகூடுவது சாத்தியமா? தெய்வானுகூலம் வேண்டாமா? சிலகாரியங்களுக்குத்தான் தெய்வம் அநுகூலமாகவிருக்கும், சிலவிஷயங்களில் தெய்வானுகூலமிராது. என்னப்பன், திவ்வியமங்களமூர்த்திதான் எல்லாவற்றையும் ஆட்டிவைக்கிறான். இந்தச்சகமே அவனது இச்சையின் காரியம். ஆகைபால் நம்மை சுகப்படுத்துவதும் கஷ்டப்படுத்துவதும் அவனது லீலா விநோதங்களே, நமக்குச் சம்பவிப்பதெல்லாம் நமது நன்மைக்கென்றே நினைக்கவேண்டும். இதுவே வேதாந்த சாரம். இந்தப் பக்குவம் ஏற்படுகிறது கஷ்டம். ஏற்பட்டுவிட்டால் அதைப்போல் திருப்தியைத் தரத்தக்கதொன்றுமில்லை."

இவ்வாறு தீக்ஷதருக்கு உபதேசித்துவிட்டுக் கிழவர் தன் வேலையைப்பார்க்க வெளியேறிப் போய்விட்டார். இவர் தீக்ஷதருக்குமுன் தோன்றியதும் பேசியதும் நாடகசாலையில் நடிப்பான் ஒருவன் தோன்றி மறைந்தது போலிருந்தது. இவரது உபதேச முழுதும் கனிந்த வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற்போல தீக்ஷதரது மனதிற்பதிந்தது. பதியவே அவர்க்கிருந்தமனக்குழப்பமும் மதிமயக்கமும் சூரியனைக்கண்ட பனிபோல அகன்றன. மனோதைரியமுமுண்டாயிற்று. பெரியவரது உபதேசசாரத்தையுட்கொண்டவராய் நினைத்தகாரியம் கைகூடாததற்கு விசனமுறுதலை விட்டொழித்தார். தனது மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, வசிஷ்டரிஷிபோல் தோன்றிக் கிழவர் உபதேசித்து மனத்தெளிவையுண்டாக்கியதற்கு அடங்கா உவகைகொண்டார். அவரை வாழ்த்தினார், வணங்கினார், தொழுதார். புதுக்கோட்டை சம்பந்தத்தை முற்றும் மறந்தவராகி யாரிடத்திலும் சொல்லிக்கொள்ளாமல் புறப்பட்டுவிடவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார். ஆனால் எங்கே போகிறதென்று புரியவில்லை. தனது ஊருக்குப் போகலாமோவென்று நினைத்தார். ஆனால் வரனை நிச்சயம் செய்யாமல் ஊருக்குப்போனால், அகமுடையாளிடம் தப்புவதரிதென்று தேர்ந்தார். அவளுக் கேற்பட்டிருக்கிறதைக் காட்டிலும்

தனக்குள்ள பொறுப்பு அதிகமேனும், அவளுக்குச் சமாதானஞ் சொல்லி நிர்வகிக்கத் தைரியமில்லாதவராய் விசனத்திற் குள்ளானார். முன்போல மனோவியாகுலம் அவரைப்பீடித்தது. மனத்தெளிவு மறைந்துவிட்டது. மனோதைரியம் வீழ்ந்தது. விசாரசாகரத்தில் மூழ்கினார். ஆனால் முன்போல மதிமயக்கம் கொள்ளவில்லை. வரவர இரவும் சமீபித்தது. இதனைக்கண்டு கொஞ்சம் விழித்துக்கொண்டு, அந்த இடத்தை விட்டுப் பெயரக் காலமாகிவிட்டதென்று நினைத்து இனிமேல் செய்யவேண்டியகாரியத்தைப்பற்றி ஒரு முடிவு செய்துகொண்டாலன்றி, எழுந்திருப்பதில்லை என்று சங்கல்பித்துக் கொண்டார். சற்று யோசித்தபிறகு தன் ஊருக்குப்போவதில்லையென்றும் சிதம்பரம் முதலான ஊர்களுக்குப்போய் வரனைத் தீர்மானித்துகொண்டு தான் ஊரில் தலைகாட்டவேண்டுமென்றும், அன்றிரவே புதுக்கோட்டையை விட்டுப்புறப்படவேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டு மடத்தினின்றும் வெளியேறினார்.

**பிழை.**—310-வது பக்கம் முதற்கலம் 3-வது வரியில் **தும்** என்னும் எழுத்துக்களுக்குப்பின் **பொழுது** என்பதையும், 2-வது கலம் 19-வது வரியில் **காலையில்** என்பதற்குப்பின் **முடிவு** என்பதையும் சேர்த்துக்கொண்டு, 314-வது பக்கம் முதற்கலம் 6-வது வரியில் 'துறக்க' என்பதை 'துரக்க' என்றும், 2-வது கலம் 26-வது வரியில் 'இராமாயணம்' என்பதை 'இராமபாணம்' என்றும் திருத்திக்கொள்ளவும்.

**பி. எஸ். சுப்பிரமணிய அய்யர், பி. எ.**

## சென்னை ஸர்வகலா சங்கத்து வருஷாந்தக் கூட்டம்.

சென்னை 'யூனிவர்ஸிடி' யென்னும் ஸர்வகலா சங்கத்தார், வித்யாபட்டங்கள் அளிப்பதற்காகக் கூடும் வருஷாந்தக்கூட்டம் சென்ற மார்ச்சுமீ 24உ வெள்ளிக்கிழமையன்று 'ஸெனேட்'மாளிகையில் கூடிற்று. இந்த சமயத்தில் பட்டமளிப்பதற்காக நடக்கும் சடங்குகளை இதற்கு முன்னொரு முறை விவரித்திருக்கிறோமாதலால், அதேவிவரங்களை இப்பொழுதும் திருப்பிக்கூற நிமித்தமில்லை. அன்றைக்கு வித்யாபட்டங்கள் பெற்றவர்கள் தொகை விவரம் பின் வருமாறு: லா (சட்ட) பரிக்ஷையில் தேறி பட்டம் பெற்றவர்கள் 92-பேர்கள். வைத்திய பரீக்ஷைகளில் தேறி பட்டம் பெற்றவர்கள் 7-பேர். எஞ்சினியரிங் பட்டம் பெற்றவர் ஒருவர். உபாத்திமைத்தொழிலுக்குரிய பரீக்ஷையிற்றேறி **எல். டி.** பட்டம்பெற்றவர்கள் தொகை 20. **எம். ஏ.** பட்டம்பெற்றவர்கள் தொகை 8. **பி. ஏ.** பட்டம் பெற்றவர்கள் தொகை 348. இந்தவருஷம் வித்யாபட்டம் பெற்றவர்களில் 4. பேர் ஸ்திரீ வித்யார்த்திகள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் சுதேச கிறிஸ்தவர்: இவர் பேர் மிஸ் ரத்னம்கிஷ்ணம்மா. இவர் முசிலிபட்டணம் 'நோபிள் காலேஜில்' படித்துத் தேர்ந்தவர். அவ்வூர் டிஸ்திரிகட் முனிசீபாகிய மிஸ்டர் கிஷ்ணம்மா அவர்களின் கனிஷ்ட புத்திரி. சென்ற வருஷம் **பி. ஏ.** பட்டம்பெற்று, இந்நகரிலுள்ள ப்ரொபெஸ்ஸர் எஸ். ஸத்தியநாதன் அவர்களை மணம் புரிந்த மிஸ்ஸஸ் கமலா சத்தியநாதனின் தங்கை. இவ்விராஜதானியில் சுதேசிகளுக்குள் இவர்கள் அக்காள் தங்கை இருவருமே **பி. ஏ.** பட்டம்பெற்றிருக்கிறார்கள். வேறெந்த ஸ்திரீயும் இப்பட்டம் பெற்றார்களில்லை. இவரன்றி பட்டம்பெற்ற மற்றமூவர்களும் யூரேஷியமாதர்கள். அவரில் ஒருவர் **எல். டி.** பட்டம் பெற்றார். இருவர் பி. ஏ. பட்டம்பெற்றார்கள். இந்தவருஷம் வித்யாபட்டம் பெற்றவர்களுக்குள் மலையாளத்து மாப்பிள்ளை ஜாதியைச்சேர்ந்த. காடாக்குட்டி என்னும் ஒருவர் **பி. ஏ.**பட்டம் பெற்றார். இவரைச்சேர்த்து அந்த ஜாதியில் **பி. ஏ.** பட்டம் பெற்றவர்கள் இரண்டேபேர்களுளர்.

வித்யாபட்டங்கள் அளிக்கும் சடங்கு முடிந்தபின் ஸெனேட்மெம்பர்களில் ஒருவரான மிஸ். எப். ஜெ. இ. ஸ்ப்ரிங் அவர்கள், சான்ஸெலர் கோரிக்கைப்படி வழக்கமாய் வித்யாபட்டம் பெற்றவர்களுக்குச் செய்யும் உபந்யாசம் செய்தார். இவர் கவர்ன்மெண்டுக்கு ரயிலிலாகாவில் கன்ஸல்டிங் ஆர்கிடெக்ட் ஆக இருப்பவர். வாஸ்து சாஸ்திரத்திலும், ரயில்வே வேலையிலும் தேர்ந்தவர். கைத்தொழில் வித்தையின் அவசியத்தைப்பற்றி வற்புறுத்திப்பேசும்படி கவர்னர் இவரை இந்த உபந்நியாசம் செய்ய நியமித்தார். அப்படியே இவரும் அதுவிஷ்யத்தை வற்புறுத்தி ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். அவர்



செய்த பிரசங்கத்தில் முக்கியமான சில அம்சங்களை யெடுத்துக் கீழே வரைகிறோம்:—

புதிதாய் வித்யாபட்டம் பெற்றவர்களுக்கு வழக்கம்போல் சந்தோஷமுகமன் கூறிவிட்டு அவர்களுக்கு புத்திமதி சொல்லும் விதமாக இதற்குமுன் 1893-ம் வருஷத்தில் கனம் பாஷ்யம் ஐயங்கார் அங்கு செய்தபிரசங்கத்தையும், அடுத்த 1894-ம் ௵ ரெவரெண்ட் டாக்டர் மில்லர் செய்த பிரசங்கத்தையும் சிலாகித்துப்பேசி, அவர்கள் சொல்லிய ஆணித்தரமானவார்த்தைகளைவிடத் தாம் விசேஷமாகச் சொல்லக் கூடியதொன்றுமில்லையாதலால் அவர்கள் சொல்லியவற்றை எல்லாரும் கவனித்தொழுகும்படி வற்புறுத்தி அவர்கள் பிரசங்கத்திலிருந்து இரண்டொருவாக்கியங்களை மேற்கோளாகவும் எடுத்துச் சொன்னார். கனம் பாஷ்யம் ஐயங்கார் பி. ஏ. முதலான வித்யாபட்டம் பெற்றவர்கள் என்னசெய்கிறதென்ற கேள்விக்குத்தரமாக, அவர்கள் பி. ஏ. பட்டம் பெறுவிட்டால் என்னவேலைசெய்வார்களோ அதேவேலைகள் தொழில்களையனுசரித்து அவைகளைச் சீராகவும் சிறப்பாகவும் நடத்தவேண்டுமென்று சொன்னதை யெடுத்துச்சொன்னார். ரெவரெண்ட் டாக்டர் மில்லர் அவர்கள் இந்தியா முன்னுக்கு வரவேண்டுமானால் வித்யாப்பியாசம் இத்தேசத்தில் விசேஷமாகப் பரவவேண்டுமென்றும், மற்ற இராஜதானிகளெல்லாவற்றிலும் முன்னடைந்ததாகக் கருதப்படும் இவ்விராஜதானியிலுங்கூட எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றில் எட்டேபேர்கள் விகிதம்தானிருக்கிறபடியால், வித்தை விசேஷமாகப் பரவவேண்டி யிருக்கிறதென்றும், சாமான்ய ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்யவேண்டுமென்றும், இத்துடன் கைத்தொழில் வித்தையும் பரவவேண்டுமென்றும், இவை பரவினால்தான் இந்தியா முன்னுக்கு வரக்கூடுமென்றும் சொன்னதை யெடுத்துக்கூறி வற்புறுத்தினார். பிறகு **பேகன்** எழுதியவற்றிலிருந்தும், **பைபிளி**லிருந்தும் இரண்டு மேற்கோள்கள் எடுத்துக்கூறி கற்றுத்தேறி கௌரவமான தொழில்புரிந்து ஜீவனம்செய்ய முயற்சிப்போர், அத்தொழிலைத் தங்களுக்கு ஜீவனோபாயமாகமட்டும் கருதாது, அது தங்களுக்கு ஆதரவாகவிருப்பதுபோல, தாங்களும் அத்தொழிலுக்கு ஆதரவாயிருந்து அதை ஜனங்கள் மதிப்பில் உயரச்செய்து விர்த்திசெய்யக் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும்; எந்தவேலை அகப்பட்டாலும் அதைத் தீரச்செய்துநேர முடிப்பதே மனுஷனுக்கு கௌரவமென்றும்; இவ்விரு உண்மைகளையும் கேட்போர் மனதி லிருத்தும்படி வற்புறுத்திப் பேசினார்.

இதன்பின் இந்தியாவில் கைப்பழக்கமும், பலதொழில்வேலையும் விருத்தியாகத்தக்க படிப்பு இல்லாதது ஒருபெருங்குறையாக விருக்கிறதென்றும், ஐரோப்பிய அமெரிக்கதேசங்களில் இராஜாங்கத்தார் இது விஷயத்தில் மிக்க கவனம் செலுத்தி ஏராளமான பணம் செலவிட்டு அவர்கள் பிரஜைகளுக்குக் காரியத்துக் குபயோகமான இக்கல்வி புகட்டி வருகிறார்களென்றும்; இந்தியாவில் அவ்வித்தக்கல்வி கவனிக்கப்படாதிருப்பது இந்தியா முன்னுக்கு வருவதற்குப் பெருந்தடையாகி யிருக்கிறதென்றும் சொல்லி,—பலதொழில் வித்தை இந்தியாவில் இல்லை யென்றால், வைத்திய பரிக்ஷைகளிலும், இஞ்சினியரிங் பரீக்ஷைகளிலும் தேறி வித்யாபட்டம் பெற்றுள்ள சொற்ப வித்யார்த்திகளைக் காட்டி இதோ இவர்களிருக்கிறார்களே யென்று சொல்வது சரியான பதிலாகாதென்றும்; அவர் குறை கூறுவது, பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகள் கைப்பழக்கமின்றி, கண்ணாலும் காதாலுமே, வாசிக்கக் கற்றுக்கொண்டு, பிந்தி எழுதவும் வாசிக்கவும், பேசவும் தவிர மற்றப்படி உபயோகமான தொழில்களில் தங்கள் கைகளை உபயோகிக்கப் பழக்கமற்றவர்களாக விருப்பதைப்பற்றி யென்றும்; பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு பிள்ளையும் தன்கைகளை யுபயோகிக்கப்பழகவேண்டுமென்றும்; ஜப்பான்தேசத்தில் இந்த சூக்ஷமத்தையறிந்து கைப்பழக்கத்தையபிவிர்த்தி செய்ததினாலேயே அத்தேசம் அவ்வளவு சீக்கிரம் வளம்பெற்று விர்த்தியடைந்து சிறந்து விளங்குகிறதென்றும், இங்கிலாந்திலும் இந்த உண்மையை யுணர்ந்து இதைத்தக்கபடி கவனித்து வருவதாலேயே சிறுகச்சிறுக அத்தேசமும் விர்த்தியாகி இப்பொழுது மேலான ஸ்திதியிலிருக்கிறதென்றும், கைப்பழக்க வித்தையைக் கவனியாவிடில் இந்தியா இன்னும் பின்னடைந்து பிரபலமிழந்து பரிதாபநிலைமைக்கு வருமென்பதில் சந்தேகமில்லை யென்றும் சொன்னார்.

பலதொழில் வித்தையும் கைப்பழக்கமும் அவசியமென்பதை யேற்றுக்கொண்டால், அவ்வேற்பாட்டை நிறைவேற்றுவதிலுள்ள சங்கடங்களைப்பற்றி யோசிக்கவேண்டும். அப்படி யோசித்தால் எவ்வளவோ கஷ்டங்கள் தோற்றுகின்றன. முதலாவது லக்ஷத்து 50-ஆயிரம் சதுரமயில் விஸ்தீரணமுள்ள இவ்விராஜதானியில் 5000-ஜனங்களுக்கு மேலுள்ள பட்ட

ணங்களும் நகரங்களும் சுமார் 200-தானுண்டு. இந்த இருநூறு பட்டணங்களும், ஒன்றுக்கொன்று 25-அல்லது 30-மைல் தூரமுள்ளதாய்ச் சிதறிக்கிடக்கின்றன. இவ்விராஜதானியிலுள்ள 3-கோடியே 60-லக்ஷம் ஜனங்களில், மேற்குறித்த பட்டணங்களில் வசிக்கும் சொற்பத்தொகை போக பெரும்பான்மையான மற்ற ஜனங்கள் எல்லாரும், சில நூறு ஜனங்கள்மட்டும் வசிக்கும் கிராமங்களில் வசித்துவருகிறார்கள். இந்த கிராமங்களில் வசிக்கும் ஜனத்தொகை சராசரி ஒரு சதுரமைலுக்கு 250-பேர்களுக்குமேலில்லை. பெரும்பான்மையான பாகங்களில் வசிக்குஞ் ஜனத்தொகை சதுரமைலுக்கு 100-முதல் 600-வரையில் வித்தியாசப்பட்டிருக்கிறது. ஏதோ சில இடங்களில்மட்டும் ஒரு சதுரமைலுககு 1000-ஜனங்கள் விகிதம் அடர்ந்து வசிக்கிறார்கள். ஜனஸ்திதி இப்படி இருப்பதால் துரைத்தன விஷயங்களுக்கு இத்தேசம் கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு நிற்கின்றதென்பது ஸ்பஷ்டமாக விளங்கும். இப்படி சில்லரையாகச் சிதறிக்கிடக்கும் கிராமங்களை வித்யாவிஷயத்துக்கு தனித்தனியாக எடுத்துக்கொள்ளாமல் ஒன்றுசேர்த்து எடுத்துக்கொள்வதும் தேச, ஜன, ஜாதியாசார விசேஷங்களால் கூடாமையாகவிருக்கிறது. அதிகப்படிச்செலவு நேரிடக்கூடிய அல்லது பிரத்தியேகமாக தர்பீது செய்யப்பட்ட உபாத்தியாயர்களை நியமிக்கவேண்டிய தவசியமாகத் தோன்றும் சீர்திருத்தங்களைச் செய்வதில், கிராமஜனங்களுக்குபயோகமாகும்படி முதல் முதல் ஏற்பாடுசெய்வது முற்றும் கூடாமையாக விருக்கிறது. ஆகையால் இது விஷயத்தில் ஏதாவது செய்யக்கூடுமோனால் முதல் முதலில் முனிசிபாலிடிகளாயிருக்கும் பட்டணங்களில்தான் ஏதாவது செய்யத்தொடங்கலாம். இப்படித் தொடங்கினால் பெரும்பான்மையான ஜனத்தொகையில் மிகவும் சொற்பமான ஒரு பாகத்தாருக்கு மட்டும் இச்சீர்திருத்தங்கள் பிரயோஜனப்படக்கூடும். இப்படி யாரம்பித்தாலுங்கூட கைத்தொழில் வித்தையும் பலதொழில் வித்தையும் போதிக்கத்தக்க உபாத்தியாயர்கள் வேண்டிய அளவுக்கு தர்பீதுசெய்து சித்தமாகச் சில வருஷங்கள் செல்லுமென்பதிற் சந்தேகமில்லை. இஃதன்றி ஜாதி, வழக்கம் இவைகளை யொட்டி நேரிடக்கூடிய சங்கடங்கள் பல இருக்கின்றன. ஆனால் இவைகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. நாகரிகமும் விவேகமும் பரவப்பரவ இந்தக்கஷ்டங்கள் உடைந்து நிவிர்த்தியாகிவிடுமென்பதிற் சந்தேகமில்லை. சுயநயத்துக்குப் பாதகமாயிருக்குந் தன்மையிலும் இவை பெரும்பாலும் நீங்கிப்போய்விடுமென்று நம்பலாம். இப்படியாக கைத்தொழில்வித்தை, பலதொழில்வித்தை அவசியமென்றேற்பட்டால் அவை அனுஷ்டானத்துக்கு வருவதெப்படி? இது பொதுஜனவாக்கு விசேஷத்தாலே ஆகவேண்டும். கற்றுத்தேர்ந்தவர்கள் பொதுஜனவாக்காவது, இவ்விராஜதானியில், யூனிவர்ஸிடிபட்டம் பெற்றவர்கள் பெறப்போகிறவர்கள் இவர்களுடைய வாக்கேயாகும். பொதுஜன அபிப்பிராயம் இது விஷயத்தில் பலமாக விருந்தாலே கவர்ன்மெண்டார் இச்சீர்திருத்தத்தை மேலெடுத்துப் போட்டுக்கொள்வார்களாதலால், அவ்வித அபிப்பிராயம் உண்டாகிப்பெருக, படித்தவர்களெல்லாரும், முக்கியமாய் வித்யாபட்டம்பெற்றவர்கள் உழைத்து வரவேண்டுமென்று மிஸ்டர் ஸ்பிரிங் சொன்னார்.

சாதாரணப்படிப்பு என்றால் இன்னதென்றும், சாஸ்திரப்படிப்பென்றால் இன்னதென்றும், விளக்கிகூறி இப்பொழுதுள்ள படிப்பு எழுதவாசிக்கவும், வாசாலகமாகப்பேசவும் மட்டும் உபயோகப்படுவதாயிருக்கிறதேயன்றி, எவரும் கைத்தொழில்வேலைகளில் பிரவேசிக்கச்செய்யப் பயனற்றதாயிருப்பதால், இப்படிப்புப் போதாதென்று சொன்னார். இப்பொழுதுள்ள படிப்பினால் சர்க்காருக்கு ஊழியஞ் செய்யத்தக்க நபர்கள் கிடைத்திருக்கிறார்களென்றும், இவர்களும் மேஜை நாற்காலியிலுட்கார்ந்துகொண்டு பேனாப்பிடித் தெழுதவும் கோர்ட்டு கச்சேரிகளில் வாசாலகமாகப் பேசவும் உபயோகமாக விருக்கிறார்களேயன்றி மற்றப்படி தேசவிர்த்திக்கடுத்த விஷயங்களிலுழைக்க உபயோகமற்றவர்களா யிருக்கிறார்களென்றும், படிப்பின் உத்தேசம் குமஸ்தாக்களும் வக்கீல்களுமுண்டுபண்ணுவதொழிய வேறில்லை யென்றிருந்தால் இப்பொழுதுள்ளபடிப்புப் போதுமானதென்றும்; படிப்பின் உத்தேசம் அந்தமட்டில் நில்லாது தேசக்ஷேம ஜனக்ஷேம விர்த்தியை நாடினதாக விருப்பதால், அவற்றிற்கு அனுகுணமான கைத்தொழில் விர்த்தி, வியாபாரவிர்த்திக்கு வேண்டிய சாதகசாதனங்க ளளிக்கக்கூடியதாயிருக்கவேண்டிய தவசியமென்றும் சொன்னார். இந்தியாவில் ஜனங்கள் நித்தியப்படி வீட்டிலுபயோகிக்கும் வஸ்துக்கள் சாமான்கள் அவ்வளவு மில்லாவிடில் அவற்றிற் பெரும்பான்மையானவை அந்நிய தேசங்களில் செய்துவந்தவையாக இருக்கின்றனவே. அவைகள் என் அப்படியிருக்கவேண்டும்! அவற்றையெல்லாம் கூடுமானவரையில் இத்தேசத்திலே செய்துகொள்வது கூடுமானதாக விருக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்தியா விர்த்தியடைந்து முன்னுக்குவரும். இங்கிலாந்திலும் ஐரோப்பிய அமெரிக்க தேசங்களிலும் இராஜாங்கத்தார் ஏராளமாகப்பணத்தைச் செலவிட்டு ஜனங்களுக்கு சாஸ்திரஞான முண்டாகும்படி வித்தை கற்பித்துவருகிறார்கள். இவ்விராஜதானியிலுள்ள 3 கோடியே 60 லக்ஷம் ஜனங்களின் படிப்புக்காக வருஷத்தில் 39 லக்ஷம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. இங்கிலாந்திலுள்ள 2 கோடியே 90 லக்ஷம் ஜனங்கள் படிப்பின் பொருட்டு அங்கிலேய நாட்டில் 20 ஆயிரம் பாடசாலைகளேற்படுத்தி 60 லக்ஷம் பிள்ளைகளுக்குப் படிப்புச்சொலிக்கொடுத்து, அதற்காக 600, லக்ஷம் ரூபாய் செலவழிக்கிறார்கள். இத்தொகையில் பெரும்பாகம் படிப்புக்கென்று ஜனங்கள் தாங்களாக வரிவிதித்துக்கொண்டு கட்டிவருகிறார்கள். இவ்விருபதினாயிரம் பாடசாலைகளில் 18,000 த்தில் 'ட்ராயிங்' அதாவது படமெழுதல் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. சுமார் 1000 பாடசாலைகளில் கைத்தொழில்வேலை கற்றுக்கொடுக்கிறார்கள். 650 பாடசாலைகளில் காரியத்துக் குபயோகமான சாஸ்திரவித்தை சொல்லிக்கொடுக்கிறார்கள்.

இவ்விராஜதானியிலோ மொத்தமுள்ள ஜனத்தொகை 3-கோடியே 60-லக்ஷம். இவர்களில் பள்ளிக்கூடத்துக்குப் போகத்தக்க வயதுள்ளவர்களான ஆண்பிள்ளைகளின் தொகை சுமார் 26 லக்ஷத்து 43-ஆயிரம். இவர்களில் 7-லக்ஷத்து 8-ஆயிரம் பேர்கள்தான் படித்து வருகிறார்கள். அதாவது நாலு பிள்ளைகளில் ஒருவன்தான் படித்துவருகிறான். இவர்களுக்குப் படிப்புப்போதிக்கும்பொருட்டு வருஷத்தில் 69-லக்ஷம் ரூபாய்செலவழித்துவருகிறார்கள். பள்ளியில்படிக்கும் 7-லக்ஷத்து 8-ஆயிரம் பிள்ளைகளில் 450-ல் ஒருவனே கையை உபயோகிக்க கற்றுக்கொள்கிறான். வைத்தியசாஸ்திரம், வியவசாயம், எஞ்சினியரிங் இவைபடிக்கும் பிள்ளைகளை நீக்கிக் கணக்குப்பார்த்தால் 500-ல் ஒருவனே கையையுபயோகிக்கக் கற்றுக்கொடுக்கப்படுகிறான். மற்ற 499-பேர்களும் கண்ணாலும் காதாலுமே வித்தை பயிலுகிறார்கள். பேனாப்பிடித்து எழுதுவதற்கன்றி மற்றப்படி கையை உபயோகிக்க அவர்களுக்கு சுத்தமாகத்தெரியாது. பள்ளிக்குப்போகும் வயதுள்ள ஆண் பிள்ளைகளின் தொகை 26-லக்ஷத்து 43-ஆயிரம்பேர்களென்று எடுத்துக்கொண்டால், இவர்களில் 1,650-ல் ஒருவனே கையை உபயோகிக்கக் கற்றுக்கொடுக்கப்படுகிறான். வித்யாவிஷயமாகச் செலவழிக்கும் 69-லக்ஷத்தில் 3¾-லக்ஷம் ரூபாய் தான் கண், காதுகளையன்றி மற்ற உறுப்புகளையுபயோகித்து வித்யாப்பியாசஞ் செய்யும் விஷயத்தில் செலவழிக்கப்படுகிறது. இந்த 3¾-லக்ஷ ரூபாய்ச் செலவைக்கொண்டு சுமார் 2000-பிள்ளைகள் கைகளை உபயோகித்து கல்வி கற்கச்சொல்லிக் கொடுக்கப்படுகிறார்கள். இது எவ்வளவு தூரம்போகும்! 3-கோடியே 60-லக்ஷம் ஜனங்களில் 2000 பிள்ளைகள்மட்டும், கைப்பழக்கம் பெற்றுவந்தால் போதுமா? இப்படிப்பட்ட தேசம் கைத்தொழில் வியாபாரத்தில் எப்படி முன்னுக்குவரும்? இதுவிஷயத்தில் இங்கிலாந்திலுள்ள பள்ளிக்கூடப் பையனுக்கும், இந்தியாவிலுள்ள பள்ளிக்கூடப் பையனுக்குமுள்ள வித்தியாசத்தை விகசிதமாய் எடுத்துக்காட்டி, இந்தியாவிலும் கைப்பழக்கந்தரும் வித்தை ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சொல்லிக்கொடுக்கப் படவேண்டுமென்று வற்புறுத்தினார். ஒவ்வொரு பாடசாலையிலும் படமெழுதக்கற்றுக்கொடுப்பதோடு கைகளை யுபயோகிக்கப் பழக்கத்தக்கவேலை யொன்றும் சொல்லிக்கொடுக்கவேண்டியதவசியம். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும், வித்தியாபோதனை விஷயத்தில் கண்களையும் கைகளையும் நன்றாக உபயோகிக்கப் பழக்குவது முக்கிய நோக்கமாகக்கொண்டு அதற்காக வேண்டிய கைப்பழக்க வேலைகள் சொல்லிக் கொடுப்பதை முக்கியமாக அனுசரித்து வருகிறார்கள். இந்தியாவிலும் அவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டிய தவசியமென்று வற்புறுத்துவது அவர் பிரசங்கத்தின் பிரதமநோக்கமாக விருந்தது.

கடைசியாக அவர் பெண்கல்வி விஷயத்தைத் தொட்டு இங்கிலாந்தில் பெண்கல்வியிலும் காரியத்துக்குதவும் சாஸ்திரஞானம் போதிப்பது பெரிய காரியமாக மதிக்கப்பட்டு வருகிறதென்று திஷ்டாந்தப்படுத்திக்காட்டி, இந்தியாவில் பெண்கல்வி விர்த்தியாகத் தலைப்பட்டிருக்கிறதென்பது அங்குள்ள ஸ்திரீ வித்யார்த்திகளால் நிதர்சனமாக விளங்கினாலும், பெண்பாலார் படியாதிருப்பதால், அவர்கள் மௌட்டியம் பின்சந்ததியை யொட்டி ஒருவாறு பாதிக்காது விடாதாகையால், பெண்களும் ஆண்களைப்போல் கல்விபயின்று விர்த்தியடைந்தாலன்றி இந்தியா முன்னுக்கு வந்து மற்றத்தேசங்களுக்குச் சரியாகச் செழித்து விளங்குவது கூடாத விஷயமாக முடியுமென்று வற்புறுத்திப்பிரசங்கத்தை முடித்தார்.

## சோபாமணி.

(307-வது பக்கத்தொடர்ச்சி.)

**அரசன்.**—நன்று. அங்ஙனமே நீயுன் ஆருயிர் நண்பனுக்குப்பரிந்து நியாயவாதஞ் செய்யலாம். உனதுவேண்டுகோளுக்கு இணங்குவாம். ஆனால் ஒரு சங்கதி. உன்நண்பன் குற்றவாளியல்லனென்று நீதியதிபர் ஒப்புமாறு நிரூபிக்கத் தவறுவையாயின் அவனுக்கு விதிக்குந்தண்டனையில நினக்கும் ஒரு பாகம் உரித்தென்று நினைத்திடு. ஸ்பாண்டா சிறைச்சாலையில் ஓராண்டு இருக்க அவனுக்குச் சிக்ஷைவிதிக்கப்பட்டுளது நீயின்று மேற்கொள்ளும் கக்ஷியைத் தாபிக்கத்தவறுவாயேல் அச்சிறைச்சாலையில் அவனுக்குத்துணையாவாய். நாம் அறிவீனராதலே அபாயத்திற்கேதுவாம். அறிவீனரோடு நட்பாடல் அதனினுங்கொடியதோரபாயமாகும். "ஸம்ஸர்க்கஜா தோஷகுணாபவந்தி:" "நல்லிணக்கமல்லதல்லற்படுத்தும்" என்பன கேட்டிலையோ? லானிஸ்கா தன்னையொத்த மனிதரால் விசாரணை செய்யப்படுதலில் எனக்கு ஆக்ஷேபமிலது. அங்ஙனம் விசாரிப்போரும் பன்னிருவராயிருக்க; அவர்க்கு (வேண்டுமாயின்) பஞ்சாயத் என்று பெயரும்வைத்துக்கொள்க. இவற்றில் எனக்கு எத்துணையும் இடர்ப்பாடில்லை. நமதுவாதங்களைச் செய்ய நாமே ஒரு நியாயவாதியை நியமித்துக்கொள்வாம். நீயோ லானிஸ்காவுக்கு நியாயவாதியாய் நிற்கின்றனை. நியாயத்தை நாட்டுந்திறத்தில் காட்டிய நிபந்தனை நீயறிவாயே. அதன்கண் நினக்கேதேனும் ஆக்ஷேபம் உளதோ?

ஆல்பர்ட்.—மிகநன்று. அங்ஙனமே ஆகுக. தாங்கூறிய நிபந்தனையில் எனக்கு எட்டுணையும் இன்னலில்லை. ஸ்பாண்டாவிற் சிறைப்பட்டிருக்கும் என் சிநேகனைக்கண்டு பேசும்படிமட்டும் கட்டளையளிக்கவேண்டும்.

**அரசன்.**—நீ கூறும் இந்நிபந்தனை உடன்படிக்கையிற் சேர்ந்ததன்றே. புதிதாயினும் இதற்கும் உடன்படுகின்றோம். குற்றவாளியைக் கண்டுபேசும்படி ஐந்து நாழிகைக்காலம் தந்திருக்கின்றனம். அவனைக்கண்டு நீ ஸம்பாஷித்த பிறகு அவனைப்பற்றிநீகொண்டுள்ள கருத்து மாறுமாயின் யாம் நிபந்தனையை நிறைவேற்றத் தவறோம். அதுகொண்டு எம்மைக்குறை கூறவொண்ணாது

ஆல்பர்ட் அத்துணையே தனக்குச்சாலுமென்றான். லானிஸ்காவின் தாயும் மற்றும் ஆண்டுக்குழீஇயிருந்தோரும் அரசனது பெருந்தகைமையினையும், ஆல்பர்ட் தன் நண்பன்திறத்துச் செய்யப்புகுந்த கைம்மாறுவேண்டாத பேருதவியினையும் வியந்து புகழ்ந்தனர். பேர்லின் நகரத்திலும் போட்ஸ்டம் நகரத்திலும் ஆங்காங்குக்கூடும் அவைகளில் சனங்கள் லானிஸ்காவினது விதியைக் கதையாகப் பிரசங்கித்துவந்ததுமன்றி, ஸான்ஸௌஸியில் அரையனது அரண்மனைப்புலவரும் மன்னவன் மனத்திலூன்றுமாறு அதனைக்குறித்து ஆக்ஷேபசமாதானங்கள் பன்னிப் பகர்ந்துகொண்டிருந்தனர். அவ்வாங்கிலயாத்திரிகனும் லானிஸ்காவின் செய்திகளையறிந்து அவன் விதியிங்ஙனமாயிற்றேயென மனம் வருந்தினன். பிரடரிக் மன்னன் தன்னைக்குறித்து அந்நியர் தன்பெருமைக்குப் புறம்பாகப்பேசினால் அதனைப்பொருள்செய்யான். அவ்விஷயங்களை யெழுதி வெளியிடின்மட்டும் அவன் சம்மதியான்.

ஆல்பர்ட் ஸ்பாண்டா சிறைச்சாலையில் லானிஸ்காவைக் கண்டுபேசிய பின்னரே அரசனுடன் தான் செய்துகொண்ட பிரதிஜ்ஞைக்குப் பின்னிடாதிருக்க அவனுக்குத்துணிவுண்டாயிற்று. லானிஸ்காவோ தன்திறத்தில் தன் மித்திரன் வேந்தனோடுசெய்துகொண்ட சூளினையறிந்து துணுக்குற்றான்.

**லானிஸ்கா.**—எனது உயிரினுமினிய உத்தம நண்ப! நிருபன் கேட்ட நிபந்தனைக்கு நீயேன் உடன்பட்டாய்? ஐயோ! ஆழமறியாமல் அடியிட்டுக்கொண்டாயே. நம்மித்திரன் யாதுகுற்றமுஞ் செய்திரானென்று நினக்குத் துணிவிருக்கலாம். நீ அங்ஙனமே துணிவுகொண்டிருக்கின்றனை யென்பதில் ஐயப்பாடில்லை. ஆனால்



அதனைத் தாபித்தன்மட்டும் உன்னாலாகாத செயல். ஆகவே, எனக்குநேரும் அவமானம் நின்னையும் பற்றுமே. ஏன் நீ இவ்விடரிற்றலையிட்டுக்கொள்கின்றாய்? இது 'வேலிக்கு முட்போடக் காலுக்குள் தைப்பது'போலாகுமே.

ஆல்பர்ட்.—நிரபராதியான என்னருமைத் தோழனுக்கு நேரும் அவமானத்தில் நானும் கூட்டாளியாயின் அஃதெனக்கு இழிவாகுமோ? உடலுக்கு உளதாம் உறுகண்ணினை அவ்வுடலோடுகூடிய உயிரும் உறுகின்றது.

"அழிவி னவைநீக்கி யாறுய்த்தழிவின்கண்
அல்ல லுழப்பதா நட்பு"

எனவும்,

"முட்டுற்ற போதே முடுகியென்னாருயிரை
நட்டானொருவன்னகநீட்டேனேல்—நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச்செல்க
நெடுமொழி வைய நக"

எனவும் ஆன்றோர் கூறினரன்றோ? ஆதலினால், நினக்குநேர்ந்த இடுக்கணொழிப்பேன்; இன்றேல், நின்னோடு உறுதுயர் நுகர்வேன். **பிதியஸ்** எனும் ஓர் உத்தமன் தாமன் எனும் தன் நட்பாளனுக்குப் பிணை நின்றுதனதாருயிரையுங்கொடுக்கத் துணிந்து தன் துணைவனை மரணதண்டனையினின்று மீட்டசெய்தியறியாயோ? அங்ஙனமே யானும் என் துணைவன் திறத்திற் செய்ய நின்றேன். உற்றவிடத்துதவுவோனே உயிர்த்துணைவனெனப்படுவன். சீனமட்கலத்தொழிற்சாலையைப் பார்த்துத் திரும்புங்காலையில் உனதாயுதத்தை நீ வியந்துரைத்திட, யான் எனதாயுதமும் நினக்கொருகாலுதவுமென்றேனே. நீ அதனை மறந்தனையோ? அதனுதவி நினக்கு இத்துணை விரைவில் வேண்டுவதாகுமென யான் நினைத்திலேன். இது நிற்க. அஃதுனக்கு வெற்றிபுரிவதாக.

லானிஸ்காவினது விசாரணைக்குக் குறித்த தினத்தில் அக்காட்சியைப் பார்க்கப் பல்லிடங்களினின்றும் வெகு பெயர்கள் ஆண்டுத்திரண்டுவந்திருந்தனர். போட்ஸ்டம் நகரத்திற் படைவீரர் குடியிருப்பான பெரியதோர் கட்டடத்தை நியாய விசாரணைத்தலமாக அமைத்துக்கொண்டனர். பார்க்க வந்தவர் தங்கியிருக்கும் வண்ணம் அவ்வமயத்திற்கேற்க ஒரு படிக்கட்டு அமைக்கப்பட்டது. அம்மண்டபத்தினிடை உயர்வாகிய மேடையொன்று செய்து நீதியதிபர் வீற்றிருக்க அதன்மீது அரியணையும் நிறுத்தப்பட்டது. அதன் வலத்தில் பஞ்சாயத்தாரிருக்க இடனும், இடத்தில் அக்காட்சியைக் காணவந்தோர்க்குத் தலமும் வகுக்கப்பட்டன. நீதியதிபர்க்கு முற்புறத்தில் மரத்தாலியன்று உயர்ந்து பரந்து அழகிதான பீடமும்,(மேசை) அதன் இருபுறத்தும் நியாயவாதிகளும் சாக்ஷிகளுமிருக்க நாற்காலிகளும்பலகைகளும் போடப்பட்டிருந்தன. அரசன்பக்கத்து நியாயவாதிக்கு வலப்புறமும் குற்றவாளியின் பக்கத்து நியாயவாதிக்கு இடப்புறமுமாக இவ்வாறு ஆங்கில நீதித்தல ஏற்பாட்டின்படி அரசன் கட்டளையால் அனைத்தும் அழகுற அமைக்கப்பட்டன. லானிஸ்காவின் தாய் தன்னுடனிருந்த சில நண்பரோடு நியாயத்தலத்தினுட்புக்குப் படிக்கட்டின் கீழ்ப்புறத்திருந்தனள். ஆண்டுக்குழுமியிருந்தாரனைவரும், புதல்வன்கதி யாதாகுமோவென்று புந்திவருந்திச்சிந்தனை செய்துகொண்டிருந்த தாயின் முகத்தை உற்றுநோக்கி உரையாடுவாராயினர். ஒவ்வொருவரும் லானிஸ்காவின் விசாரணையைக்குறித்துத் தத்தமக்குத்தோற்றிய அபிப்ராயங்களை வெளியிட்டுக்கொண்டிருந்தனர். "லானிஸ்கா இழைத்த தீங்கோ மிகப்பெரியது; அங்ஙனமாக, வீணே இந்த ஆல்பர்ட் குற்றவாளிக்குப் பரிந்துபேசவந்தமை பேதைமையாம்" என்றனர் சிலர். சணப்பன் வீட்டுக்கோழி தானே தளைப்படுவது'போல, இந்த ஆல்பர்ட் தன்னைத்தானே இடர்ப்படுத்திக்கொள்வன்" என்றுரைத்தனர் வேறு சிலர். "ஒரு நண்பன்திறத் திற்பரிவுகொண்டு, அவன் குற்றமற்றவனென்று வற்புறுத்திச் சாதிக்கத்தவறின் அவனுக்கு விதிக்கும் சிக்ஷையைத் தானுமடைய உடன்பட்டானே. ஆ! ஆ!! இந்த ஆல்பர்ட்டினது தைரியமே தைரியம்" என வியந்தனர் மற்றுஞ் சிலர்.

(பூமியிலே மனிதப்பிறப்பெடுத்தவர்கள் பெறும் உறுதிப்பொருளாவது சிவனடியார்கட் கமுது செய்வித்தலும் பெருமானுடைய திருவிழாத்தரிசித்தலும் என்பது உண்மையாயின் இவ்வுலகோர் முன்வருவாய்) என்னுங்கருத்தடங்கிய

"மட்டிட்ட புன்னையங்கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பில் உருத்திர பல் கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்பதை முதலாக உடைய திரு ... அருளிச்செய்தார். உடனேயனதாய் எவ்வாருற்றி கொண்டு பூமபாவை ... என்றிரங்கினர் பின் ... சிலர். 'மெய்யே வெல் ... பதிகத்தை' என்று உச்சரித் ... குடத்தையுடைத்துக் ளாரிற் ெ... மெயழுந்தனள். இதைக்கண்ட யாவரும் வியந்து "அரகர" என்று துதித்தார்கள். சிவநேசர் தன் மகளை விவாகம் செய்துகொள்ளும்படி திருஞானசம்பந்த சுவாமிகளை வணங்கினர். அவர் 'உம்முடைய புத்திரிக்கு யாம் உயிர்கொடுத்தமையால் பிதாவாயினோம், ஆதலால் அது தகாது' என்று மறுத்தனர். பின்பு சிவநேசர் தன் மகளைக் கன்னியாமாடத்திருத்தினர். இருவரும் திருஞானசம்பந்தமூர்த்திகளையே தியானித்துக்கொண்டிருந்து சில காலஞ் சென்றபின் சிவசாயுச்சிய மடைந்தனர்கள்.

உற்சவத்தின் இரண்டாம் பாகமாவது அப்படிப் பூம்பாவையை யுயிர்ப்பித்தருளின ஸ்ரீ சம்பந்தமூர்த்திகள் சிவநேசரோடும் பூம்பாவையோடும் கோயிலுட்செல்ல பெருமானுனவர் பஞ்சமூர்த்தங்களோடும் அறுபத்துமூன்று நாயன்மாரோடும் சிவகணங்களெல்லாம் தம்மைச்சூழ்ந்துவர திருக்காக்ஷிகொடுத்தருளுதல்.

திருக்கோயிலுற்சவங்கள் நித்தியம், நைமித்தகம் என இருவகைப்படும். நித்தியமாவது தினந்தோறும் அவ்வக்காலங்களில் செய்யப்படும், அபிஷேக அலங்கார தீபாராதனைகளே. நைமித்தகமாவது கோவிலுக்குள் வந்து தரிசிக்கமுடியாத பஞ்சமர் முதலிய பலஜாதியாரும் தரிசித்துய்யவேண்டி ஒவ்வோர் காலங்களில் செய்யப்படும் உற்சவங்கள். இது இந்நிமித்தங்கருதிச் செய்யப்படுவதால் நைமித்தகமென்னும் பெயர் பெறுமென்று கூறுவர். இவ்வறுபத்துமூவர் உற்சவமானது பின்னர்க்கூறிய வகையிற் சேர்ந்தது. சாதாரண காலங்களினும் உற்சவகாலங்களில் விசேஷமாக ஆடையாபரண அலங்காராதிகள் செய்யப்பட்டு சுவாமி வெளிவருவது எதன் பொருட்டென்றால் சாதாரணமாக ஒரு மனிதனைப் பார்க்கும்போதிருப்பதை விட நல்ல ஆபரண வஸ்திரங்களோடு இருக்கும்போது பின்னுமிரண்டு பிலேயே யாவரையும் தரிசிக்கச்செய்யும் பெருமானுக்கு ஆடையாபரணங்களிருப்பின் மிகக் கவனத்தை உண்டாக்குமன்றோ.

அறுபத்துமூவருற்சவத்தில் செய்யப்பட்ட ஆபரண அலங்காராதிகள் மிக அற்புதமாகவே யிருந்தன. கண்ணுற் கண்டறியவேண்டியதேயன்றி காதாற் கேட்டும் படித்தும் அறியக்கூடியதல்ல ...

இனி, ரூபமில்லாது எங்குந்நிறைந்தவொருவனை நம்போல் ... யைப்பற்று எழுநூப்படுத்திவைத்தது ... யை கட ... ரில் மார்ச்சுமீ 25உ சனிக்கிழமையில் கூடுமோ என்று கேட்கின் கூடும். அதற்குப் பலவிதமான பிரபல நியாயங்கள் உள்ளன. நம்முடைய மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐந்து பொறிகட்கும் விஷயமல்லாததொன்றில் மனம் பற்றுவதில்லை. ஆகவே நினைக்கவேண்டுமாயின் இவ்வைந்துபொறிகளால் அறியப்பட்டதொன்றையே நினைத்தல்வேண்டும். கடவுளை அவ்விதமாக உருப்படுத்திவைப்பது ஐந்து பொறிகளிலும் மிக உணர்ச்சித்திறத்ததாகிய கட்பொறிக்கு விஷயமாக்குதலே மிகப் பயன்கொடுக்கும் என்னும் கருத்தாலென்று நம்புகின்றோம். எடுத்துக்கொண்ட விஷயம் வேருகலின் இதை இம்மட்டோடு நிறுத்தி மேற்செல்கின்றோம்.

இவ்வுற்சவமானது மிகப் பிரக்யாதிபெற்றதாதலால் அதைப் பார்க்கவரும் ஜனத்தொகைக்களவில்லை. இவ்வருடமும் அப்படியே. ஆயிரக்கணக்காக அளவிடவேண்டுமேயன்றி வேறல்ல.

ஆகக் கடைப்பட்ட திமைக்கும் தலைப்பட்ட நன்மைக்கும் உதாரணம் பெருங்கூட்டங்களிலும் பெரும்பட்டணங்களிலும் பார்க்கலாம். அதுபோலவே இவ்வுற்சவத்திலும் உயர்ந்த பக்திமான்களையும் பக்தியீனர்களையும் காணலாம்.

உற்சவ விமரிசையாவது?

காலை 10-மணியிலிருந்து குளக்கரையிலமைக்கப்பெற்றிருந்த நீண்டபந்தரில் திருஞானசம்பந்த சுவாமிகட்கு தமிழ் வேதகோஷத்துடன் அபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

1-மணிக்கு அச்சுவாமிகட்கு குளக்கரையில் அலங்கார தீபாராதனை முடிந்தது.

3-மணிக்கு சுவாமிகள் சிவநேசச்செட்டியார் கோவிலின் மதிற்புறத்திலிருந்து கொண்டுவந்த குடத்தைக்கண்டு பதிகமோதி அங்கத்தைப் பூம்பாவையாக்கிய ஐதீகம் நடந்தேறியது.

இது கண்டோர் கேட்டோருடைய கண்களையுங் கருத்தையும் ஒருங்குசேரக் கவரக்கூடியகா



பின்பு $3\frac{1}{2}$-மணிக்கு சுவாமி அறுபத்துமூன்று நாயன்மாருடனே காட்டிய அற்புத திருவோலக்காக்ஷியானது யாவரும் புகழ்ந்து துதிக்கத்தக்கது.

சுவாமி நகர் வலம் வரும்பொழுது யானையும் விருதுகளும் திருக்கூட்டத்து அடியார்களும் வேதகோஷமும் தமிழ்வேத ஒலியும் நிறைந்து அலங்காரமாகவிருந்தது.

முடிவில் கோயில் வாயிலில் அறுபத்துமூன்று நாயன்மார்களும் இரண்டு வரிசையாக நிற்க சமயகுரவராகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் நால்வரும் தனித்தனி பல்லக்கின்மீது ஆரோகணித்து இடையில் நிற்கவும் மண்டபத்திற்கு முன் விநாயகக்கடவுளும், மண்டபத்துள்ளே வலதுபக்கத்தில் தனியம்பாளும் இடதுபக்கத்தில் சுப்பிரமண்ணியரும் இடையில் கபாலீச்சுரரும் பின்னே சண்டேசுரரும் ஆக எழுந்தருளிநின்ற பெருங்காக்ஷியைப் பார்க்கும்போது தேவர்களும் வந்து வணங்கினார்கள் என்று சொல்வது உண்மையே என்று தோன்றும்.

இவ்வுற்சவத்தையும் அது காணவரும் அடியார்களையும் கண்டாயினும் தீநெறியொழுகும் பாபிகள் திருந்தியுய்வார்கள் என்று நம்புகின்றோம்.

மனிதப்பிறப்பெடுத்தலின் உறுதிப்பொருளாவது சிவனடியார்களையும் திருவிழாக்களையும் தரிசித்தலேயென்று யாவர்க்கும் வற்புறுத்திய இவவுற்சவமானது எல்லாரும் அவசியம் வந்து தரிசிக்கவேண்டிய காக்ஷியாம்.

இவ்வுற்சவமானது இவ்வருடம்போல எவ்வருடமும் சிறந்தோங்கி நடைபெற்று ஆன்மாக்களை உச்சீவிக்கச்செய்ய கருணைபுரியும்படி கடவுளைப்பிரார்த்திக்கின்றோம்.

V. M.

# பிரஸ்தாப விஷயங்களும் குறிப்புகளும்

## காலஞ்சென்ற டாக்டர் லீட்னர்.

பஞ்சாப் யூனிவர்ஸிடியை நியமித்து அங்குள்ள 'ஓரீண்டல் காலேஜுக்கு'த்தலைவராயிருந்து, பிறகு சீமைக்குச் சென்று அங்கு 'ஓரீண்டல் இன்ஸ்டிடியுட்' என்னும் ஸ்தாபனத்தை யேற்படுத்தி கீழ்த்தேசத்துப்பாஷைகளின் அபிவிர்த்திக்காக உழைத்துவந்த பேர்பெற்ற மகாபண்டிதரான டாக்டர் லீட்னர் மார்ச்சுமீ 24உ இங்கிலாந்தில் மரணமடைந்ததைக்குறிப்பிட மிகவிசனிக்கிறோம். இவர் ஹங்கேரி தேசத்தில் பேஸ்த் என்னுமிடத்தில் 1840-ம் வருஷத்தில் பிறந்தவர் இவர் பலதேசங்களில் படித்து பால்யவயதிலே பல பாஷைகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். 15-வயதுப் பையனாயிருக்கையில் ருஷியாவில் நடந்த சண்டையில் பிரிடிஷ் கமிஸெரியதிகாரிகளுக்கு பிரதம துவிபாஷியாக விருக்கும் வேலைபெற்றுப்பார்த்துவந்தார். பிறகு அராபி, துருக்கி, கிரேக்குபாஷைகள் போதிக்கும் 'லெக்சரராக' 'கிங்ஸ்காலேஜில்' வேலைபார்த்து வந்தார். 21-வயதில் எம். ஏ. பட்டமும் Ph. D. என்கிற டாக்டர் பட்டமும்பெற்ருர். அவர் இந்தியாவிலிருந்தகாலத்தில் பஞ்சாப் யூனிவர்ஸிடியையும், 'ஓரீண்டல் காலேஜ்' எனனும் ஸ்தாபனத்தையும் எற்படுத்த காரணகர்த்தராயிருந்தார். இவைகளன்றி ஜனங்கள் இலவசமாகச்சென்று படிக்கக்கூடிய அநேக புத்தகசாலைகளையும் எற்படுத்தினர். இவர் இந்தியாவிலும் இதரதேசங்களிலும் எற்படுத்திய ஸ்தாபனங்களின் தொகை 80-இருக்குமென்று சொல்லப்படுகிறது. இங்கிலீஷ், அராபி, உர்டு முதலிய பாஷைகளில் 6 பத்திரிகைகள் ஆரம்பித்து நடத்திவந்தார். பாஷைகள் கற்பதில் இவருக்கு மேலானவர் இவ்வுலகிலே வேறெவருமில்லையென்று சொல்லலாம். இவருக்கு 25-பாஷைகளில் நன்ருக எழுதப்படிக்கவும் பேசவும் கற்றிருந்தார். இவர் இங்கிலாந்துக்குப் போனபிறகு "வோகிங்" என்னுமிடத்தில் "ஓரீண்டல் இன்ஸ்டிடியூட்" என்னும் ஸ்தாபனமொன்று எற்படுத்தி அங்கு கீழ்த்தேசங்களில் வழங்கும் பாஷைகளைப் போதிக்க ஏற்பாடுசெய்து நடத்திவந்தார். அன்றி "எஷியாடிக் குவாடர்லி ரிவியூ" என்னும் மூன்று மாதத்துக்கொரு முறை பிரசுரிக்கப்படும் உயர்தரப்பத்திரிகை யொன்றையும் ஆரம்பித்து வெகுகாலமாக நடத்திவந்தார். அப்பத்திரிகையில் மகாநிபுணர்களானவர்களெல்லாம் எழுதிவந்தார்கள். இந்தியாமுதலான கீழ்த்தேசங்கள் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அவ்வத்தேசத்தில் படித்துத்தேறிப் பாண்டித்தியம் பெற்ற நிபுணர்கள் எழுதுவதை அவர் பத்திரிகையில் பிரசுரித்து கீழ்த்தேசத்தார்களைக் கௌரவித்து, மேல்தேசத்தார் கீழ்த்தேசத்தார்களை நன்ரக அறியும்பொருட்டு சாதகங்களுண்டுபண்ணி உதவிவந்தார். இந்தியாவில் சுதேசபாஷா ஞானம் குறைந்து வருவதைப்பற்றி இங்குண்டான தர்க்கங்களில் சிரத்தையெடுத்துக்கொண்டு, இந்தியாவிலுள்ள பாடசாலைகளில் சுதேசபாஷை நன்ருகப் போதிக்கப்படவேண்டியதின் அவசியத்தைப்பற்றி ஆமோதித்து அவருடைய பத்

திரிகையில் எழுதப்பட்டிருந்த குறிப்பொன்றைச் சென்ற டிசம்பர்மாசத்துச் சஞ்சிகையில் எடுத்துப் பிரசுரித்துள்ளோம். அவர் ஏற்படுத்திய "ஓரீன்டல் இன்ஸ்டிடியூட்" ஸ்தாபனமும் "ஏஷியாடிக் குவார்டர்லி ரிவியூ" என்னும் பத்திரிகையும் மிகப்புகழ்ந்து மேலோர் எல்லாராலும் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவர் அந்த ஸ்தாபனத்திலிருந்து கீழ்த்தேசத்துப் பாஷைகளில் எழுதப்பட்ட அரிய பெரிய பூர்வீக கிரந்தங்கள் பலவற்றைப்பரிசோதித்துப் பிரசுரிப்பதில் மும்முரமாய் உழைத்து வந்தாரென்றறிகிறோம். உலகெங்கும் புகழ்பெற்ற பலபாஷாபண்டித சிகாமணி [illegible]யும் மகா நிபுணருமாகிய இவர் தம்[illegible]டைய 59-வது வயதில் மரணமடைந்ததைக்குறித்துப் பல தேசங்களிலுமுள்ள வித்வான்களும் வருத்தப்பட்டுத் துக்கிப்பார்கள். இவருடைய மரணம் உலகிலுள்ள வித்வக்குழாங்களுக்கெல்லாம் மிகத் துக்கம் தருவதாயிருக்கும். இது உலகுக்கே யொரு பெருநஷ்டமாம்.

## சுதேச பாஷாபிவிர்த்தி.

ம-ා-ா-ஸ்ரீ, டி. ஆர். இராமநாதய்யர் அவர்கள் சென்னை "டீச்சர்ஸ் கில்ட்" என்னும் உபாத்தியாயர்கள் சங்கத்துமுன் "சுதேசபாஷையில் உடனே வேண்டிய கிரந்தங்கள்" என்னும் தலைப்பெயரிட்டு ஒரு பிரபந்தமெழுதி வாசித்தார். அதில் இப்பொழுது சுதேசபாஷையிலுள்ள கிரந்தங்களெல்லாம் கதையும் புராணமுமாகவே யிருக்கின்றனவென்றும், இவைகளையே ஜனங்கள் வாசித்துவருவதால் விர்த்திக்கு இடமில்லாமற்போகிறதென்றும், சுதேசபாஷைகளில் இந்தியாவைப்பற்றியும் இங்கிலாந்தைப்பற்றியும் ஆங்கிலேய பாஷையிலுள்ள சரித்ரங்களைப்போல, உண்மையான சரித்திரங்கள் வேண்டியதவசியமென்றும், திராவிடபாஷைகள் ஒவ்வொன்றிலும் ஆங்கிலேயபாஷையிலுள்ள அகராதிகளைப்போல சொல்லிலக்கணங்களை விளக்கும் நல்ல அகராதியொன்று வேண்டுமென்றும், உலகத்தில் பற்பல தேசங்களிலுமுள்ள ஜனசமூகங்களுக்குள் வழங்கும் நடை யுடைபாவனைகள், சட்டங்கள், பழக்க வழக்கங்களை நியாயவாயிலாக விளக்கும் கிரந்தங்களும், அந்தந்ததேசத்து ஜனங்களின் குணகுணங்களையும், பழக்கவழக்கவிசேஷங்களையும், மற்ற உபயோகமான விஷயங்களையும் விவரித்துச்சொல்லும் பூமிசாஸ்திர புஸ்தகங்கள் வேண்டுமென்றும் சொன்னார். இவையெல்லாம் [illegible]பதை யெல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். இக்கிரந்தங்கள் உண்டாகி வழங்கும் வகையை யோசிக்கப்புகும்பொழுது தான் சுதேசபாஷாபிமானிகளும் சுதேசபாஷாபிவிர்த்தியைக்கோரும் நேசர்களும் திகைதப்பித் தியங்குகிறார்கள். உண்மையாயுள்ள கஷ்டத்தை நிவர்த்திக்க ஏதும் உபாயம் சொன்னாரில்லை. ம-ா-ா-ஸ்ரீ, இராமநாதய்யர் அவர்களைப்போலொத்தவர்கள் அதுவேண்டும் இது வேண்டுமென்று சொல்லிப் பிரசங்கிப்பதோடு நிற்காமல், சுயபாஷாபிவிர்த்திக்கு அவசியமென்று கண்[illegible]தை யுண்டுபண்ண முயற்சிப்பார்களானால் இப்பொழுது அசாத்தியமாகத் தோற்றும் முக்கியமான இப்பெருவிஷயம் நாளடைவில் காரிய சாத்தியமாகப் புலப்படும்.

## சர்க்கரை இறக்குமதி வரி.

இந்தியா இராஜப் பிரதிநிதியவர்களுடைய சட்ட நிரூபண சபையில் வெளிதேசத்திலிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் சர்க்கரைக்கு வரி விதிப்பதற்காக ஒரு மசோதா ஆலோசனைசெய்து 20உ திங்கட்கிழமையன்று சட்டமாகப் பாஸ்செய்யப்பட்டது. ஐரோப்பாதேசங்களிலிருந்து 'பீட்ரூட்' என்னும் கிழங்கிலிருந்து செய்யப்பட்ட சர்க்கரை ஏராளமாக இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகிறது. 'பீட்ரூட்' என்னும் கிழங்கிலிருந்து சர்க்கரை செய்வது சாத்தியமென்று ஜெர்மனிதேசத்திலுள்ள ரஸாயன சாஸ்திரியொருவர் கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்தமுறையைப் பரீக்ஷித்து விர்த்திசெய்து ஏராளமாகச் சர்க்கரைசெய்து ஏற்றுமதிசெய்துவர அத்தேசத்து கவர்ன்மெண்டார் மிக்க உதவி செய்துவருகிறார்கள். வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சர்க்கரையின்மேல் மணங்கு அல்லது டன்னுக்கு இவ்வளவு என்று வெகுமதி கொடுக்கிறார்கள். இந்த வெகுமதியை ஏற்றுக்கொண்டு அவர்கள் சர்க்கரை செய்யபிடிக்கும் செலவிலும் குறைத்து வெளிதேசங்களில் விற்றுவருகிறார்கள். கவர்ன்மெண்டு சகாயமிருப்பதால் அவர்களுக்கு நஷ்டம் வருகிறதில்லை. ஆனால் இச்சர்க்கரை இறக்குமதி செய்யப்படும் இதரதேசங்களில் சுயமாகச்செய்யப்படும் சர்க்கரை வியாபாரத்துக்குக் குறைவு நேரிடுகிறது. இவர்கள் சர்க்கார் உதவி பெற்று நன்றாகச் சுத்திசெய்து கண்ணுக்கு நேர்த்தியாக விருக்கும் மணல் மணலான சர்க்கரையை நாட்டுச் சர்க்கரையைவிடக் குறைந்தவிலைக்கு விற்பதால் இந்த வியாபாரம் பெருத்து நாட்டுச் சர்க்கரை வியாபாரம் குறைந்துபோகிறது. இதனால் இந்தியாவில் கரும்பு பயிர்செய்துவந்தவர்கள் கருப்பஞ்சாற்றினால் சர்க்கரை செய்துவிற்பது லாபமற்ற வேலையாக விருப்பது கண்டு அதை விட்டுவிட்டார்கள். கரும்பு விளைவு இரண்டு வருஷத்தில் மிகக்குறைந்துவிட்டது. இப்படி கரும்பு விளைவுக்ும் சுதேசத்தில் செய்யப்படும் சர்க்கரை வியாபாரத்துக்கும் குறைவுவருவதைத் தடுக்கும்பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டார் வெளிதேசங்களிலிருந்து கொண்டுவந்து இறக்குமதி செய்யும் சர்க்கரையின் மேல் சொற்பவரி விதித்து, உள்நாட்டிற்செய்யப்படும் சர்க்கரையைவிடக் குறைந்த விலைக்கு விற்பது கூடாதபடி செய்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தினால் இந்தியாவில் க்ஷீணிக்கத் தலைப்பட்ட சர்க்கரை வியாபாரம் மறுபடியும் தலையெடுத்து ஓங்கிவளருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சட்டம் ஜனங்களுக்கு மிகவும் அனுகூலமான சட்டம். இதை யுடனே செய்ததற்காக லார்ட் கர்ஸனை எல்லாரும் துதிக்கிறார்கள்.



## பரோடாதிவான்.

திவான்பஹதூர் எஸ். ஸ்ரீனிவாசராகவய்யங்கார் அவர்கள் மூன்று வருஷங்களுக்குமுன்பு சென்னையில் ரிஜிஸ்திரேஷன் இலாகாத்தலைவராகவிருந்து பரோடாதிவானாக நியமிக்கப்பட்டதின்மேல் அங்கு சென்றது யாவருக்கும் தெரியுமே. அவர் பரோடாவில் திவானாயிருக்க ஒத்துக்கொண்ட மூன்றுவருஷகாலகெடு இன்னும் மூன்று மாசகாலத்தில் முடிந்துபோய் விடுமாதலால், அவர் மூன்றுமாச ரஜாவெடுத்துக்கொண்டு சென்னைக்கு வரவிருக்கிறார் என்று அறிகிறோம். ரஜாக்கழிந்ததும் ரிஜிஸ்திரேஷன் இலாகா இன்ஸ்பெக்டர் - ஜெனரல் வேலையை ஒப்புக்கொள்வாரென்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர் இங்கேயேதானிருப்பாரோ அல்லது மறுபடியும் திரும்பி பரோடாவுக்கு திவானாகப் போவாரோ, இரண்டிலொன்று நிச்சயமாகத் தெரியவில்லை.

## வித்தியா இலாகாத்தலைவர்.

கனம்பொருந்திய டாக்டர் டங்கன் ஒரு மாசத்துக்கு ரஜா வெடுத்துக்கொண்டிருக்கிறபடியால், அவருக்கு பதிலாக கனம் மிஸ்டர் ஜி. எச். ஸ்டூவர்ட் எம். ஏ. அவர்கள் வித்தியா இலாகாத்தலைவர் வேலைபார்த்து வருகிறார். கனம் மிஸ்டர் ஸ்டூவர்டுக்கு பதிலாக மிஸ்டர் பில்டெர்பெக் ப்ரெஸிடென்ஸி காலேஜ் தலைவராக விருக்கிறார். கனம டாக்டர் டங்கன் நவம்பர்மாசக் கடைசியில் பென்ஷன் பெற்றுக்கொண்டு வேலையைவிட்டு நீங்கிப் போவார்.

சென்னை கவர்ன்மெண்ட் ப்ளீடராகிய மிஸ்டர் இ. பி. பௌவல் ரஜாவின்மேல் சீமைக்குப்போக அவருக்கு பதிலாக ம-ா-ா-ஸ்ரீ. சங்கரன் நாயர் பி. ஏ., பி. ல்., அவர்கள் அந்தவேலைபார்த்துவர நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னை ஸிடி ஸிவில்கோர்ட் ஜட்ஜ் ம-ா-ா-ஸ்ரீ. திவான் பஹதூர் ஸ்ரீனிவாசராவ் அவர்கள் ஏப்ரல் மாசம் 1உ யோடு பென்ஷன் [illegible]பெற்றுக்கொண்டு வேலையைவிட்டு நீங்கிப்போய்விட்டார். அவருக்கு பதிலாக ஹைகோர்ட் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ. ஸி. ஆர். பட்டாபிராமய்யர் பி. ஏ., பி. எல்., அவர்கள் அந்த வேலைக்கு நியமிக்கப்பட்டு வேலைபார்த்துவருகிறார்.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## யானைகளைப்பற்றிய இன்னொருகதை.

குழந்தைகளே! சென்ற சஞ்சிகையில் யானைகளின் தந்திரத்தையும் புத்திசாமர்த்தியத்தையும் காட்டும் கதை யொன்று சொன்னேன். இம்முறை யானைகளின் குணவிசேஷங்களைக் காட்டும் இன்னொரு கதைசொல்லுகிறேன் கேளுங்கள். இலங்கைத் தீவில் மிகவும் பெரிய நெற்களஞ்சியம் ஒன்றில் ஏராளமான நெல்கொட்டியிருந்தது. அதைப் பாதுகாக்க அங்கு ஒரு பட்டாளம் சிப்பாய்கள் பாராக்கொடுத்து நின்றார்கள். ஒரு சமயம் உள்காட்டில் ஏதோ கலகம்நேரிட அதை யடக்கும்படி அவர்கள் எல்லாரும்போயிருக்

தார்கள். அவர்களில் இருவர்மட்டும் நெற்களஞ்சியத்தைக் காத்துக்கொண்டிருந்தார்கள். சிப்பாய்களெல்லாம் அங்கில்லாத சமயத்தில் காட்டு யானைகள் ஒருகூட்டம் அங்குவந்தன. இவை சிலகாலபாக அவ்விடத்தைச் சுற்றிக்கொண்டு திரிந்தாலும் சமயம் நேரிடாமையால் பக்கத்துக் காடுகளில் பதுங்கித்திரிந்துகொண்டிருந்தன. இப்பொழுது அவைகள் மிகத்துணிகரமாய் அட்டகாசம் செய்துகொண்டு கூட்டமாய் வர, அங்கு காவல்கொடுத்துக்கொண்டிருந்த இருசிப்பாய்களும் எதிர் நிற்கமாட்டாமல் ஓடிப்போய் ஒரு ஆலமரத்தின்மேலேறிக்கொண்டுவிட்டார்கள். அங்கு யானைகளுக்குத் தெரியாமல் "இலைமறவில் பதுங்கியிருந்து அந்த யானைகள் என்னதான் செய்கின்றனவோ பார்ப்போமென்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த நெற்களஞ்சியம் மிகவும் பெரிதாயிருந்ததோடு மிகப்பலமாகவும் கட்டப்பட்டிருந்தது. சுற்றியுள்ள காரைச்சுவர்கள் வெகு பலமாயிருந்தன. களஞ்சியத்தின் உச்சியிலுள்ள ஒரு கதவைத் தவிர மற்றப்படி அதனுள்ளே போகச் சுவர்களில் எங்கும் வேறு வழியில்லை. இயற்கையில் புத்திகூர்மையுள்ள யானைகள் களஞ்சியத்தின் மூலைகளில் தாக்கி அதை இடிக்கப்பார்த்தன. இரண்டு பெரிய யானைகள் தங்கள் பலத்தையெல்லாம் காட்டிக் களஞ்சியத்தை யிடிக்கப்பார்த்தும் முடியாமல்போக களைத்துப் பின்வாங்கிச்சென்றன. அதன்மேல் மூன்றாவது யானை யொன்றுவந்து தன் கொம்பை கட்டைப்பாரைபோல் உபயோகித்து ஒரு செங்கல்லைப் பேர்க்க யத்தனித்ததும் அந்த யத்தனம் பலிக்கவே மற்ற யானைகளும் சேர்ந்துகொண்டு சுவற்றில் ஒருபெரிய வழி செய்துகொண்டுவிட்டன. பெரியவழி செய்துகொண்டாலும், அக்கூட்டத்துயானைகள் அவ்வளவும் ஒருமிக்கநுழைந்து நெல்லைப்புசிக்க இடம்போதாமலிருந்தது. ஆகவே அவை மூன்று நான்காகப்பிரிந்துகொண்டு, ஒரு கக்ஷி உள்ளேசென்று நெல்லைத்தின்கையில் மற்றவை வெளியிலிருந்து காவல்கொடுத்து ஆபத்துவராமல் ஆஜர் பார்த்துக்கொண்டிருந்தன. இப்படி முறைபோட்டுக்கொண்டு ஒரு தடவைக்கு மூன்று நான்காகக் களஞ்சியத்தில் புகுந்து வயிறுறப் புசித்து வந்தன. இப்படி அக்கூட்டத்திலிருந்த 20 யானைகளும் முறைப்படிசென்று வயிறுறத்தின்று பசியாற்றிக்கொண்டன. கடைசியில் ஒரு யானை கி[illegible]ச்சென்ற சப்தம் போட்டுக்கத்தியது. உடனே களஞ்சியத்துக்குள்ளிருந்த யானைகள் வெளியே ஓடிவந்து மற்ற யானைகளோடு சேர்ந்துகொண்டன. முதல் முதல் களஞ்சியத்திற்போய்த் தின்று வந்த மூன்று யானைகளில் ஒன்று கொஞ்ச தூரத்தில் நின்று ஆபத்து வராமல் காவல் காத்துக்கொண்டிருந்தது. தூரத்தில் துருப்புப்பட்டாளம் திரும்பி வருவதைக்கண்டு, மற்ற யானைகளுக்கு எச்சரிக்கும்பொருட்டு அப்படிப்பட்ட சப்தம்போட்டுக் கற்றியது. அதைக்கேட்டு யானைகளெல்லாம் திரளாகக் கூடி, துதிக்கைகளைத் தூக்கி வீசிக்கொண்டு அதிககொண்டாட்டத்தோடு காட்டுக்குள் ஓடி விட்டன. சிப்பாய்கள் வந்து தானியத்தின் பெரும்பாகத்தை யானைகள்தின்றுவிட்டதைக் கண்டு, விசனித்து, ஓடுகிற யானைகளை நோக்கி ஒரு பீரங்கியிற் குண்டுபோட்டுச் சுட்டார்கள். ஆனால் அதை அவைகள் இலக்ஷியம்செய்யாமல், அவர்கள் பலியா யத்தனத்தைக் கண்டு பரிகாசம் செய்ததுபோல் வாலையாட்டிக்கொண்டு காட்டுக்குள்போய் மறைந்துவிட்டன. 20-மனுஷர்களுக்கு சேர்ந்தாப்போல் அவ்வளவு பெரிய தனம் கிடைத்தால், அந்த யானைகளைப்போல், அவ்வளவு ஒழுங்காகவும், கட்டுக்காவலாகவுமிருந்து தங்களுக்குள் சண்டைபோட்டுக்கொள்ளாமல் அதைப் பங்குபோட்டுக்கொள்வார்களா! அந்த யானைகளுக்குள் எவ்வளவு ஒழுங்கு, எவ்வளவுகட்டுப்பாடு, எவ்வளவு ஜாக்கிரதை எவ்வளவு புத்தி பாருங்கள்.

மாயாண்டி.

THE

# VIVEKA CHINTAMANI,

## A MONTHLY TAMIL MAGAZINE AND REVIEW,

**Devoted to the Diffusion of General Knowledge.**

"Knowledge is power."

**VOL. VIII.**

MAY 1899—APRIL 1900.

# விவேகசிந்தாமணி.

அறிவைப்பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்."—குறள்.

8-ம் புத்தகம்.

(1899-ம் வருஷம் மேமீ முதல் 1900-ம் வருஷம் எப்பிரல்மீ வரை.)

PUBLISHED BY

C. V. SWAMINATHA AIYAR,

*Secretary, Diffusion of Knowledge Agency, Triplicane,*

Madras.

1899-1900.

[All Rights Reserved.]

BOUND VOL. RS. 5. UNBOUND VOL. RS. 4.

# INDEX TO CONTENTS.

## Vol. VIII.


PAGE.

Adventures of Kohinoor, The—, ... ... ... 258
Adwaita Asrama, The—, in the Himalayas ... 267
Anagarika H. Dharma Pala ... ... ... 196
Appeal re Village Sanitation ... ... ... 9
Associations of Helpers, Unjalur ... ... 216
——— in the Mofussil ... 253, 281
———, Report of Work done by the—, 314, 384
Avarice in disguise, or the Holy Pandaram unveiled. 341
Baghavathgithartha Sangraham ... ... 377
Baroda, Female Education in—, Speech by H. H. the Maharani Sahiba ... ... 338
Books, Reviews and Notices of—, ... ... 282
Brahma Samaj, The S. I.—, ... ... 307
Buddha's first preaching of the Truth in Benares ... 139
Chambakamala or the Heir Apparent's Resolve (c. l.)
Act III, Scene 5 and Act IV, Scene 1, ... 25
Act IV, Scene 2, ... ... ... 81
" Scene 3, ... ... ... 112
" Scenes 4 & 5 ... ... ... 152
" Scenes 6 & 7 ... ... ... 184
" Scenes 8 & 9 ... ... ... 207
Act V, Scenes 1 & 2 ... ... ... 245
" Scenes 3, 4 & 5 (concluded) ... 271
Change of Address ... ... ... 226
Children, The Teaching of—, ... ... 122
CHILDREN'S PAGE:—
Advice to the Young ... ... ... 31, 32
Knowledge the greatest Wealth ... ... 92
The Advantage of Learning ... ... ... 126
Laziness ... ... ... ... ... 159
Jealousy ... ... ... ... ... 192
Castle-building in the Air ... ... ... 228
No Royal Road to Learning ... ... ... 254
Avarice ... ... ... ... ... 288
Against Ingratitude ... ... ... ... 319
He reaps Evil who sows Evil ... ... ... 352
Parents' Duty to their Offspring ... ... 382
Circular on Sanitation, A—(By the Sanitary Commissioner) ... ... ... ... 127
——— by the Inspector of Schools, S. Circle ... 246
Coimbatore, My visit to— ... ... ... 226
Conjeeveram, A week spent in—, ... ... 90
Common Salt, On—, (Gleaned from Rattan's Handbook) ... ... ... ... 106, 137, 180
Cultivation of Mental Happiness ... ... ... 218
——— of the Vernaculars ... ... 55, 345
Current Notes ... ... ... ... 318, 380
Cuttle fish (with Illustration) ... ... ... 293
Damayanti, See Readings at Home.
Dharma Pala, Anagarika H.—, ... ... ... 196
Diffusion of Knowledge Scheme, The —, ... ... 93
——— at work in Conjeeveram ... ... 94
Educational Conferences, The two—recently held in Madras ... ... ... ... 284
Eighth Birth-day, Greetings to the Viveka Chintamani on its— ... ... ... ... 5
Eighth Year, On the Threshold of— ... ... 2
Female Education in Baroda ... ... ... 338
Festival, Kolattam—, See Kolattam—
Festival of Lamps, The—, its Significance ... 307
Fine Arts Exhibition ... ... ... ... 344
Gowri Sankar, A model Hindu and Prime Minister ... ... ... ... ... 49
Goodness, Persevere in— ... ... ... 156
Greetings to the Viveka Chintamani on its Eighth Birth-day ... ... ... ... 5
Heir Apparent's Resolve, See Chambakamala.
Health Knowledge for the People (English Extract) 225, 255, 320, 383
Himalayas, The Advaita Asrama in the— ... 267
How Plants Feed ... ... ... ... 165
Kanthimathi (A novel) ... ... ... 297, 325, 358
Kindergarten (By Mrs. Brander) (c. l.) ... 62, 120
Kindergarten Occupations in Boys' Schools ... 246
——— Songs for Children ... 268, 304, 335
Kohinoor, The Adventures of—, ... ... 258
Kolam Drawings ... ... ... ... 316
Kolattam Festival, Revival of the—in Triplicane ... 239
Lakshmi (Short story) ... ... ... ... 144
Lamps, Festival of—, See Festival.
LESSONS IN POLITICAL ECONOMY; (c. l.)
5. Land as an Agent of Production ... ... 19
6. Labour ... ... ... ... 40
7. The Efficiency of Labour ... ... 78
8. Division of Labour ... ... ... 103
9. Capital ... ... ... ... 134
10. Distribution of Wealth ... ... ... 171
11. Rent ... ... ... ... ... 201
12. Interest ... ... ... ... 230
Liquid Air ... ... ... ... ... 86
Life and Life work of Sir M. Monier Williams: Prospective union of the East and the West ... 29
Malati Madhava—A Review ... ... ... 376
Manliness ... ... ... ... ... 315
Marriage Broker, Ramasastri, the—, ... ... 142
Matters Sanitary: See Sanitary.
Mental Happiness, Cultivation of— ... ... 218
Model Hindu & Prime Minister, A—, See Gowri Sankar.
Monier-Williams, Sir M—, Life and Life work of— ... 29
Nirvana Diyana and Samathi ... ... ... 158
Persevere in Goodness ... ... ... 156
Plants Feed, How— ... ... ... ... 165
POETRY:—
Greetings to the Viveka Chintamani ... ... 5
The Wreck of the Stella ... ... ... 48
Wordsworth's "We are Seven" ... ... 230
The Street of Bye and Bye ... ... ... 296
Some Noted Indians of Modern Times ... ... 366





PAGE.

Political Economy. See Lessons.
Presidency College Tamil Sangam, The— ... 276
Prithiwi Rajah. See Sunjogtha's Choice.
Prospective Union of the East and the West: Life and Lifework of Sir M. Monier Williams ... 29
Ramasastri, the Marriage Broker ... ... 142
Readings at Home: A Glimpse into the Future— Damayanti (c. l.) 6, 34, 70, 98, 130, 162, 194, 226, 290.
Salt, See Common Salt.— ... ... ... 181
——— in the Ocean, The— ... ... ... 181
———, Substances found mixed with Common—, ... 180
SANITARY MATTERS:—
The Use of Health ... ... ... 21, 51
The Food We Eat... ... ... ... 87, 115
The Spread of Cholera by contaminated water ... 119
The Air we breathe ... ... ... ... 148
The Conjeeveram Water Supply ... ... 186
The Conjeeveram Water Works... ... 213, 251, 278
Of Privy accommodation in individual houses ... 214
Tirukkalukkundram—its traditional importance and present day sanitary conditions ... ... 310
———, An Ancient Hindu Sanatorium ... ... 349
Stray Notes on Sanitation in Madras ... ... 378
SHORT STORIES AND STRAY SKETCHES:—
Avarice in disguise or the Holy Pandaram unveiled. 341
Lakshmi ... ... ... ... ... 144
Ramasastry, the Marriage Broker ... ... 142
Sivasankaran ... ... ... ... 368
Sundarum ... ... ... ... ... 108
Visalakshi ... ... ... ... ... 174
Shanar-Maravar Riots in Tinnevelly ... ... 89, 126
SUNJOGTHA'S CHOICE OR PRITHWI RAJAH (the last of the Hindu Emperors) (c. l.)
X. Arrival of guests and the beginning of the Yag ... ... ... ... 15
XI. Contumacious Kings ... ... ... 83
XII. Overcoming the Obstacle ... ... 101
XIII. Avenging an Insult ... ... ... 167
XIV. The Talk of the Town ... ... 169
XV. An Awkward Dilemma ... ... 232
XVI. Cogitation in a cage ... ... ... 261
XVII. A Brave Resolve ... ... ... [illegible]
XVIII. Festivities Again ... ... ... 354
The Teaching of Children ... ... ... 122
Vernaculars, The Cultivation of— ... ... 55, 345
Visalakshi (Short story) ... ... ... 174
Visit to Coimbatore, My—, ... ... ... 58
Viveka Chintamani, Greetings to the—, on its 8th Birth-day ... ... ... ... ... 5
Water Supply, The Conjeeveram— ... ... 186
Water Works, The Conjeeveram—, ... 213, 251, 270
Week, A—spent in Conjeeveram ... ... 98


## அட்டவணை.

8-ம் புஸ்தகம்.


பக்கம்.

அகமெம்ப்பயிற்சி ... ... ... 218
அறிவைப் பரவச்செய்வதற்கான ஏற்பாடு ... 93
அது ஏற்பாடு காஞ்சீபுரத்தில் அனுஷ்டானத்தில் இருத்தல் ... ... ... 94
ஆண்தன்மை ... ... ... ... 315
ஆபீஸ் விலாசம் மாறியது ... ... ... 226
ஆத்திசூடி வாக்கியங்கள் ... ... ... 205
இல்லப்படிப்பு: வருங்கால திருஷ்டி— தமயந்தி 6, 34, 70, 98, 130, 162, 194, 226, 290
இமாலய அத்வைத ஆச்ரமம் ... ... 267
இரண்டு சபைகள், சென்னையில் வித்யா விஷயமாகக் கூடிய— ... ... ... 284
இல்பராஜனின் நிர்மாணம், (சம்பகமாலை, பார்க்க.) 106, 137
உப்பு ... ... ... ...
உப்புகள், சாதாரண உப்புடன் சம்பந்தப்பட்ட ... 180
வேறு பலவிதம்— ... ... ... 181
உப்பு சமுத்திரம் ... ... ...
உபகார சங்கங்கள், வெளியூர்— 216, 253, 281, 314, 384
உலகத்தில் ஜீவஜெந்துக்கள் பரவியிருக்கும் வகை ... 211
எட்டாவது வருஷாரம்பம் ... ... ... 2
கடல்துறை ஜந்து ... ... ... 293
காஞ்சீபுரத்தில் ஒரு வாரம்... ... ... 90
காந்திமதி ... ... ... 297, 325, 358
கார்த்திகை தீபம் ... ... ... 307
காற்றுத்திரவகம் ... ... ... 86
கிண்டர்கார்டன் ... ... ... 62, 120
கிண்டர்கார்டன் தொழில்கள் கற்பித்தல் ... 246
கிண்டர்கார்டன் பாட்டுகள் ... 268, 304, 335
கீழ்த்தேசத்தாருக்கும் மேற்தேசத்தாருக்கு முண்டாகவேண்டிய ஒருமை ... ... ... 29
கோஹினூர் வைரத்தின் வரலாறு ... ... 258
கோயமுத்தூருக்குப் போய்வந்தது, நான்— ... 58
கோலப்புஸ்தகம்... ... ... ... 316

பக்கம்.

கோலாட்ட ஜலக்கிரீடை, திருவல்லிக்கேணியில் நடந்த— ... ... ... ... 239

தௌரிசங்கர், உண்மையான ஹிந்துவாகிய ஒரு முதல் மந்திரி... ... ... ... 49

**சந்தோக்ஷை சுயம்வரம் அல்லது ப்ரீத்விராஜா சரித்திரம் :—**

X. விருந்தினர் வரவும் யாகாரம்பமும் ... 15

XI. அடங்கா மன்னர்... ... ... 83

XII. தடையறுத்தல் ... ... . 101

XIII. பழிக்குப்பழி ... ... ... 167

XIV. வீரப்பேச்சு ... ... ... 169

XV. தர்மசங்கடம் ... ... ... 232

XVI. சிறையிற்சிந்தனை ... ... ... 261

XVII. துணிகரமான தீர்மானம் ... ... 322

XVIII. உத்ஸவாரம்பம் ... ... ... 354

சம்பகமாலை அல்லது இளையராஜாவின் தீர்மானம் 25, 81, 112, 152, 184, 207, 243, 271

சாணார் மறவர் கலகம், திருநெல்வேலியில்— ...92, 126

சிற்பசித்திர அற்புதக்காட்சி ... ... 344

சிவசங்கரன் ... ... ... ... 368

**சிறுவர்க்கான பக்கம் :—**

சிறுவர்க்குபதேசம் ... ... 31, 63

வித்தையே பெரியதனம் ... . ... ... 92

வித்தியாபலன்... ... ... ... 126

சோம்பேரித்தனம் ... ... ... 159

பொறுமை ... ... ... ... 192

ஆதாரமற்ற கோரிக்கைகள் ... ... 223

கல்விப்பயிற்சி ... ... ... ... 254

அதிக ஆசை ... ... ... .. 288

நன்றிமறத்தல் நன்றன்று .. ... ... 319

கெடுவான் கேடுநினைப்பான் ... ... 352

பெற்றோர்கடமை ... ... ... 382

சுந்தரம் (சிறுகதை) ... ... ... 108

**சுகாதாரவிஷயம் :—**

சுகத்தின் பயன் ... ... 21, 51

நாம் உண்ணும் உணவு ... 87, 115

வாந்திபேதிக்கு அசுத்தஜலம் காரணம் ... 119

நாம் சுவாசிக்கும் ஆகாயம் ... ... 148

காஞ்சீபுரம் ஜலாதாரம் 186, 218, 251, 278

வீடுகளில் சுகாதாரவிஷயமாய் கட்டவேண்டிய கக்கூஸ்கள் ... ... ... ... 214

திருக்கழுக்குன்றம் ஸ்தலவிசேஷமும், சுகாதார நிலைமையும் ... ... ... ... 310

———, ஒரு பூர்வீக ஆரோக்கியஸ்தலம் ... 349

சுகாதாரக் குறிப்புகள் ... ... ... 378

பக்கம்.

சுகாதாரவிஷயமாய் டாக்டர் கிங் அனுப்பிய சர்க்குலர் (இங்கிலீஷ்) ... ... ... 127

சுகாதாரவிஷயமான இங்கிலீஷ் திரட்டு 223, 255, 320, 383

சுகாதாரவிஷயமாய் விண்ணப்பம் (இங்கிலீஷ்) ... 95

சுதேசபாஷைப்பயிற்சி ... ... ... 55

சுதேசபாஷைப்பயிற்சி விஷயமாய் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ் எழுதிய கடிதம் (இங்கிலீஷ்)... ... 128

சுயபாஷாபிவிர்த்தி, தமிழ் முதலிய— ... ... 345

**செல்வநூல் :—**

5. க்ஷேத்திரம் தனோத்பத்திஸ்தானம் ... 19

6. உத்யமம் அல்லது உழைப்பு ... ... 40

7. வேலைக்காரனது திறம் ... ... 78

8. உத்யம விபாகம் ... ... ... 103

9. மூலதனம் ... ... ... 134

10. தனவிபாகம் ... ... ... 171

11. குத்தகை ... ... 201

12. வட்டி... ... ... ... 230

செம்படவர்க்கோர் விண்ணப்பம் ... ... 124

சென்னை ஸர்வகலாசங்கத்தார் பட்டமளிக்கும் உற்சவம் .. ... ... ... 372

தர்மபாலா, அநகாரிக எச்.— ... ... 196

தாகு விவாகம் ராமாசாஸ்திரிகள் ... ... 142

தமிழ்ச்சங்கம் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ்— ... 276

நன்மைகடைப்பிடி ... ... ... 156

நவீன இந்தியர்கள், சில பேர்பெற்ற— ... ... 366

நாங்கள் எழுபேர் (செய்யுள்) ... ... 236

நான் கோயமுத்தூருக்குப் போய்வந்தது ... 58

நிர்வாணம், தியானம், சமாதி ... ... 158

நீராவிக்கப்பல் 'ஸ்டெல்லா' முழுகிப்போன பெருவிபத்து (செய்யுள்) ... ... .. 43

பகவத்கீதார்த்த சங்கிரஹம், ஸ்ரீ— ... ... 377

பணத்தாசையற்ற பரமயோகியண்டாரம் ... 341

பயிர்கள் எப்படி வளர்கின்றன ... ... 165

பரோடாவில் பெண்கல்வி—மஹாராணி பிரசங்கம்.. 338

பாலர்களுக்குப் போதிக்கும் முறை ... ... 199

பாலபோதகம் ... ... ... ... 122

பிரம்மசமாஜம், தென்னிந்தியா— ... ... 307

பின்செய்வோம் என்னும் பேதைநெறி (செய்யுள்).. 296

புத்தர் காசியில்செய்த முதற்பிரசங்கம், பகவான்— 139

மாலதிமாதவம் ... ... ... ... 376

லட்சுமி (சிறுகதை) ... ... ... 144

விசாலாட்சி (சிறுகதை) ... ... ... 174

விசேஷக் குறிப்புகள் ... ... 318, 380

விவேகசிந்தாமணியின் 8 - வது வயதாரம்பத்தில் கூறிய வாழ்த்துரை (செய்யுள்) ... ... 5



லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவிலை விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2.




அறிவைப்பரவச் செய்வதற்கான

மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1899ஞ மேமீ [இலக்கம் 1.


## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As. : Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7*s*. 6*d*. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People :—

SUBSCRN. PRICE : YEARLY RS. 4 ; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS. ; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s*. 6*d*. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year,* i. e , *in April or May ; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு :— ஆதியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு :—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6 மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## எட்டாவது வருஷாரம்பம்.

### விவேகசிந்தாமணியை வாசிப்போர்க்கு விண்ணப்பம்.

---

இந்தச் சஞ்சிகையோடு இப்பத்திரிகை பிரசுரிக்காரம்பித்த 8-வதுவருஷம் துவங்குகிறது. இப்பொழுது கடந்துபோன ஏழுவருஷகாலத்தில் நாம் செய்த வேலையென்ன? நாம் ஆதியில் கொண்ட நோக்கம் என்ன? அதில் காரிய சாத்தியமானது எவ்வளவு? ஆகாமல் நின்றது எவ்வளவு என்று ஆராய்ந்தறிய இது வாய்த்ததோர் சமயமாம். நாம் 1892-ம் வருஷத்தில் "அறிவைப் பரவச்செய்வதற்கான ஏற்பாடு" ஒன்று தயார்செய்து பிரசுரித்ததில், அவ்வேற்பாடு "பயன்படுவதற்கு இன்றியமையாததாக வேண்டியது பத்திரிகையாதலால்" அதற்காகவென்று "நாம் பிரத்தியேகமாக வெளிக்கொண்டுவரவிருக்கும் விவேகசிந்தாமணி என்னும் பத்திரிகை நிலைபெறுவதற்கு அவசியமான முயற்சிகளைச் செய்யவேண்டியது" நம் முதற்கடமையாக நியமித்துக்கொண்டோம். அக்கடமையை இதுகாறும் எவ்வாறு நிறைவேற்றி வந்தோமென்றும், இனியும் எவ்வாறு நிறைவேற்றிவரக் காத்திருக்கிறோமென்றும் சென்ற சஞ்சிகையில் விண்டுரைத்தோம். பத்திரிகையின் உபயோகத்தைப்பற்றி நாம் முதலில் சொன்னவுண்மை இந்த ஏழுவருஷகாலத்தில் இன்னுமுறப்பட்டுப் பிரகாசமாய் விளங்குவதாயிற்று. "பத்திரிகை நாடெங்கும் பரவாவிட்டால் பற்பல விடங்களிலுள்ள பலபேர் ஒன்று கூடி ஒரு விஷயத்தில் ஒத்துழைப்பது கூடாததாம்" என்றுரைத்தோம். பின்னும் நாம் சொல்லியதற்காதாரமாக ஆங்கிலேய மகான் ஒருவர் சொல்லிய பின்வரும் வாக்கை மேற்கோளாக எடுத்துரைத்தோம். "பத்திரிகையினால் ஒரு தேசத்திலுள்ள ஜனங்களெல்லாம் அவரவர்கள் வீட்டிலிருந்தபடி ஏக காலத்தில் எல்லாருமடங்கிய சபைகூடி யோஜிப்பதுபோல் ஒரு காரியத்தை யோசித்துச் செய்வது சாத்தியமாகிறது." "அறிவைப்பரவச் செய்கிறதும் பத்திரிகையாலே" ஆகவேண்டியிருக்கிறதென்று டாக்டர் ஜான்ஸன் சொல்லியதையும் ஓர் கட்டுரையாக எடுத்துரைத்தோம். நம்மவர்கள் கிராமாந்தரங்களில் வசித்து "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?" என்று தங்கள் ஊர் அக்கப்போர்களைத் தவிர வெளியூர் விஷயங்களை விசாரிக்காமலேயிருந்து வந்தார்கள். இது வழக்க பலத்தால் மாமூலாகி "மாமூல்பூஜை" நடக்கும் இத்தேசத்தில் அசைக்கப்படாதபடி ஜனங்கள் மனதில் வேரூன்றி ஸ்திரப்பட்டுப்போய்விட்டது. ஒரு ஊரைவிட்டு அயலூருக்குப்போவதற்கென்றால் பிரமப்பிரயத்தனம் செய்யவேண்டியிருந்த அக்காலத்தில் "தன்னூருண்டு தானுண்டு" என்ற இந்த எண்ணம் மெச்சத்தக்கதாக விருந்திருக்கலாம். ரயிலும் தந்தியும் உலகையெல்லாம் சேர்த்து ஒன்றாக வளைத்துத் தங்கள் இருகரங்களால் கட்டியணைத்ததுபோல் உள்ள இக்காலத்தில் நமது பழைய வழக்கம் பயன்படுவதில்லை. ஒரு அணா செலவிட்டால் 17 - நாளில் கடிதமூலமாக லண்டனுக்குச் செய்திபனுப்பலாம். ஒரே நாளில் உலகில் எந்தப்பாகத்தில் நடக்கும் சங்கதிகளும் மற்றப்பாகங்களிலெல்லாம் தந்திமூலமாய்ச் சுற்றிவருகின்றன. அகஸ்தியர் சமுத்திர ஜலமுழுவதையும் உள்ளங்கையில் அடக்கிப் பானம் பண்ணினாரென்று புராணங்களில் சொல்லக்கேட்டு முழு நம்பிக்கையோடு தலையையசைக்கும் நம்மவர்கள், உலகுமுழுவதும் ஒரு உள்ளங்கையி லடங்கியதுபோல பல தேசவிஷயங்களும் அண்டை வீட்டுச் சமாசாரத்தைவிட அதிசீக்கிரத்திலெட்டி வழங்கிவருவதைக் கண்கூடாக்கண்டும் அதன் அதிசயத்தையுணர்ந்து காலமாறுபாட்டுக்குத்தக்கபடி நடந்துகொள்ள வழிதேடாததென்னேயோ அறிகிலம். அச்சுப்போடும் வித்தை யில்லாத காலத்தில் வேதங்களையும் சாஸ்திரங்களையும் மனப்பாடம் பண்ணி வேண்டியபோது ஒப்புவிக்கக்கூடிய



வன் மகா வித்வானாக விளங்கினான். வேதங்களும் அச்சிட்டுவழங்கும் இக்காலத்தில் அவ்வித அபூர்வமான ஞாபகசக்தி அனாவசியமாக, அதற்கு மதிப்பும் குறைந்துவிட்டது. இப்படியே காலதேசமாறுபாடுகளுக்குத்தக்கபடி சாதக சாதனங்களும் அவற்றின் உபயோகங்களும் மாறுப்பட்டுவருகின்றன. அச்சுத்தொழிலினுபயோகம் மிகவும் மதிக்கப்பட்டுவரும் இக்காலத்தில் பத்திரிகைகளையும், புஸ்தகங்களையும் காரியசித்திக்கடுத்த சாதனங்களாக உபயோகிக்காத ஜனசமூகத்தார் எவரும் முன்னுக்கு வர யத்தனிப்பது முடியாதகாரியமாம். ஆகையால் நாம் மேன்மேலும் அறிவைப்பரவச்செய்யப் பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் துண்டுப்பத்திரங்களையுமே விசேஷமாக உபயோகிக்கவேண்டியதவசியமாயிருக்கிறது. விவேகசிந்தாமணியினாலுண்டாகுமென்று நாமுத்தேசித்த நற்பயன் அங்கங்கே உண்டாகிவந்திருக்கிறதென்று நமக்கு ஸ்பஷ்டமாய்த் தெரியவந்திருக்கிறது. முதலில் விவேகசிந்தாமணி பிரசுரிக்க ஆரம்பித்தபோது பலபேர் பலவாறு நம் முயற்சியை இகழ்ந்து ஏளனம்செய்ததுண்டு. அவர்கள் இகழ்ச்சி ஏளனத்தால் நாமும், விவேகசிந்தாமணியை வாசிப்போரும் மனஞ்சலித்து நியமந்தப்பாதிருக்கும்படி ஸ்ரீ. மணவாளமாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய பின்வரும் திருவாக்கைக் கட்டுரையாகக்கொண்டு சிலவருஷகாலம் அதை நம் பத்திரிகையின் முதற்பக்கத்தில் விடாது அச்சிட்டு வந்தோம்.

"கற்றோர்கடாமுகப்பர் கல்விதனிலாசையுள்ளோர்
பெற்றோமெனவுகந்து பின்புகற்பர்-மற்றோர்கள்
மாச்சரியத்தாலிகழில்வந்ததென்னெஞ்சேயிகழ்கை
யாச்சரியமோதானவர்க்கு."

காலஞ்செல்லச் செல்ல இகழ்ந்துரைத்தவரும் பத்திரிகையைப் படிக்கப்படிக்க புகழ்ந்துரைக்க நினைத்தார்கள். இப்படி முதலில் அசிரத்தையாயிருந்து பிறகு சிரத்தையோடு பத்திரிகையைப் படிக்கத் தலைப்பட்டவர்கள் அனேகரென்று அறிகிறோம். இதற்குச்சாக்ஷியாக நமக்குத் தெரியவந்திருக்கும் திருஷ்டாந்தங்களைவிட இதைவாசிக்கும் நமது நண்பர்களுக்கு இன்னுமதிகமாய்த் தெரிந்திருக்கலாமென்று எண்ணுகிறோம். ஆனாலும் இத்தருணத்திலே நமது ஆப்தர் ஒருவர் வாய்ப்பிறப்பாக வந்த அத்தாக்ஷியொன்றை இங்கு கூற விரும்புகிறோம். சில தினங்கள் முன்னர் இவர் இதே சங்கதியைப்பற்றி நமக்கு எழுதியிருந்தபடியால், இவர் சொல்லியது முகஸ்துதியல்லவென்று நாம்நிச்சயமாய்ச்சொல்லக்கூடும். குறித்த நண்பர் நமக்குப் பால்ய சிநேகராயிருந்தும் வெகுகாலம்வரையில் நம் விவேகசிந்தாமணியிடத்துச் சிந்தைவைக்கவில்லை. பிறகு சென்ற 95-ம் வருஷத்தில் விவேகசிந்தாமணியைவாங்கி வாசித்து வந்த அவர் பந்துக்களில் ஒருவர் அதன் உபயோகத்தைப்பற்றிச் சொல்லக்கேட்டுத், தானும்பத்திரிகைக்குக் கையொப்பம் செய்யத்துணிந்தார். முதலில் பால்ய சிநேகம் பாராட்டி நம் பத்திரிகையை வாங்குவதில் ஒரு திருப்திகொண்டிருந்தார் என்று தோன்றுகிறது. ஏனெனில் வீட்டிலுள்ள அவர் பத்தினியார் அப்பத்திரிகைவாசிப்பதில் அவ்வளவு சிரத்தையெடுத்துக்கொண்டாரில்லைபோலும். இருந்தாலும் நமது நண்பர் பிள்ளைகுட்டிக்காரராதலால் குழந்தைகளாவது படிக்க உதவும் என்று பத்திரிகையை வாங்கி வந்தார். முதலில் கணவன் கைப்பணம் வீணில் செலவழிகிறதேயென்று அவருக்குச் சந்தோஷமுண்டுபண்ண வேண்டிக் கொஞ்சக்காலத்துக்கு வேண்டா வெறுப்பாகப் பத்திரிகையைக் கடனுக்குப் படித்துவந்தார். கொஞ்சக்காலம் செல்லவே அந்த அம்மாளுக்குத் தாம் படித்துவந்ததில் தமக்கே ஒருவித அக்கறையுண்டாகக் கண்டார். இப்படிச்சில காலம் சிரத்தையுடன் படிக்கவும் அவருக்குப் படிப்பில் ஒருவித ஆசை பிறந்து பழைய பத்திரிகைகளை யெல்லாம் அடியிலிருந்து

படிக்கத்துவக்கினர். துவக்கவே ஆதியில் குறையாகவிருந்த சஞ்சிகைகள் இல்லாததைப்பற்றிச் சிந்தித்து அதைத்தருவித்துப் பத்திரிகையை ஆதியோடந்தம் பூர்த்தியாகச் சேகரிந்துத்தரவேண்டுமென்று தம் கணவரைப் பலமுறையும் வருந்திக்கேட்டதாகத்தெரிகிறது. இதனல் எமது நண்பருக்குண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. இதைக்கேட்ட நமக்கோ, நாம் பட்ட சிரமத்துக்கெல்லாம் கைம்மாறு கிடைத்ததுபோல் ஒருவிதத் திருப்தியும் மன அமைதியும் உண்டாயிற்று. ஆனல் ஒரு வருத்தம். நமது நண்பர் விரும்பிக்கேட்ட முதல் வருஷங்களின் பழைய சஞ்சிகைகளை அவர்மனோரதமீடேறக் கொடுத்துதவும் பாக்கியம் பெற நம்மாற் கூடாமற் போயிற்று. இது சம்பந்தமாக, இதைவாசிக்குமெவரேனும் முதலிரண்டு வருஷத்துச் சஞ்சிகைகளைக்குறையின்றிச் சேகரித்தனுப்பினல் அதன் கிரயத்தையளித்துப்பெற ஆவலுற்றிருக்கிறோமென்பதை இச்சமயத்தை முன்னிட்டுத் தெரிவிக்க விரும்புகிறோம். இப்படியே இன்னுமனேக திருஷ்டாந்தங்கள் நமக்குத் தெரியவந்திருக்கின்றன. சென்ற டிசெம்பர், ஜனவரி, பிப்ரவரி மாசத்துச் சஞ்சிகைகள் பிரசுரிக்கத் தவக்கப்பட்டதில் அனேகர் எழுதிய கடிதங்களினல் இப்பத்திரிகை நின்றுவிட்டால் எத்தனைபேர் வருந்துவார்களென்பது நமக்கு நன்றாகத்தெரியவந்தது. நம் முயற்சிக்குறைவால் இப்பத்திரிகைக்கு ஒரு ஹீனம் வரக்கூடாதென்றே மார்ச்சுமாசப்பத்திரிகையை வேறொரு அச்சுக்கூடத்தில் கொடுத்து காலக்கிரமத்தில் பிரசுரித்ததோடு, ஏப்ரல்மாசத்துச் சஞ்சிகையையும் அந்தமாசம் 10-வ-யிலே பிரசுரித்தோம். இந்த மேமாசமுதற்கொண்டு அந்தந்த மாசப்பத்திரிகை அந்தந்தமாசமுதலிலே பிரசுரமாகிவரும்படி அதற்கு வேண்டியமுயற்சி யெடுத்துக்கொண்டு வருகிறோம். நம் பத்திரிகையை வாங்குவோர் சந்தாவைத் தாமதமின்றிக் கொடுத்துதவினலன்றி வேலை சரிவர நடவாதாகையால் இது விஷயத்தில் எல்லாரும் அவர்கள் சந்தாக்களை முன்னதாகவே யனுப்பிவிடுவதோடு, நமது பழைய கையொப்பக்காரர்கள் ஒவ்வொருவரும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கும் சிநேகிதர்களுக்கும் இப்பத்திரிகையைக்காட்டி ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு கையொப்பக்காரர்களாவது புதிதாகச்சேர்த்தனுப்பப் பிரயாசையெடுத்துக் கொள்வார்களென்று கோருகிறோம். பத்திரிகைக்குக் கையொப்பக்காரர்கள் அதிகமாய்ச் சேர்ந்தால் படங்களோடு சாஸ்திர சம்பந்தமானவிஷயங்களை யெழுதிப்பிரசுரித்துவருவது சாத்தியமாகும். அன்றி இந்தவருஷமுதற்கொண்டு சுகாதார முறைகளை ஜனங்கள் அறிந்தொழுகுவதற்குச் சாதகமாக "சுகாதாரவிஷயம்" என்னும் தலைப்பெயரின்கீழ் சுகத்துக்காதாரமான பல விஷயங்களையும்பற்றி எழுதிவர உத்தேசித்திருக்கிறோம். இந்த விஷயத்தில் ஸானிடெரி கமிஷனர் டாக்டர் கிங் அவர்கள் தம்மாலான உதவியெல்லாம் அளிப்பதாக வாக்களித்திருக்கிறார். அன்றி, உயர்ந்த உத்தியோகங்களிலிருக்கும் ஆங்கிலேய சுதேசகனவான்கள் சிலரும் இது விஷயத்தில் அனுதாபம் காட்டி ஆதரவு செய்ய மனமுள்ளவர்களாகக்காட்டியிருக்கிறார்கள். "லண்டன் நாஷனல் இந்தியன் அஸோஸியேஷன்" சங்கத்துக்கௌரவ காரியதரிசியாகிய மிஸ் மானிங் துரைசானியவர்களும் இது விஷயத்தில் மிக சிரத்தையெடுத்துக்கொண்டு வேலைமட்டும் நடப்பதாயிருந்தால் லண்டனிலிருந்து வேண்டிய சகாயம்செய்வதாக வாக்களித்துச் சென்றிருக்கிறார்கள். இது விஷயமாய் நாம் ஆதியில் உத்தேசித்த உபகாரசங்கத்தை உய்ப்பித்து வழிக்குக்கொண்டுவர விரும்புகிறோம். கிராமாந்தரங்களில் பள்ளிக்கூட உபாத்தியாயர்களாக விருக்கும் ஒவ்வொருவரும் இது விஷயத்தில் முன்வந்து ஊருக்குழைக்கும உபகாரிகளாயிருந்துதவுவார்களென்றுகோருகிறோம். இது விஷயத்தில் உறுதியாயிருந்து ஒத்துழைக்கச் சித்தமுள்ள எல்லாரும் பிரதமத்தில் அ. ப. ஏஜன்ஸி காரியதரிசிக்கு எழுதித்தெரிவித்துக்கொண்டால் மேலாகவேண்டியதைப்பற்றி யோசித்து ஒரு ஏற்பாடுசெய்யச் சாதகமாகும்.



## விவேகசிந்தாமணியின் எட்டாவது வ்யதாரம்பத்திற் கூறிய வாழ்த்துரை.

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்பூத்த சென்னைநகர்ச் சாமிநா தப்பெயர்கொள் செல்வன் பாலிற்
பேர்பூத்த தனையையா யுதித்தினிய தமிழ்ப்புலவோர் பிறங்கக்காத்து
நார்பூத்து வளர்க்கவளர்ந் தெவ்விடமு மகிழ்விக்க நாடி யோடிக்
கார்பூத்த வறிவினுயர் விவேகசிந் தாமணியாங் குலவு நங்காய். (1)

சென்றவெழு வருடமுநீ வளர்வதற்குப் பலசுவிவு சேர்ந்ததேனு
மன்றவனைக் காத்தின்றோர் வன்மையுட னின்னுக வன்மையாலே
வென்றுநல மடைந்தனையா லவைகளினி யுனையடையா வடைந்த வேனு
நின்றநிலை தளராம லெளிதிலவைகளை யொதுக்கி நிற்பாய் நீயே. (2)

பருவநா லிரண்டாதல் கடிமணத்தின் பருவமெனப் பகர்வர் சான்றோர்
உருவமா யிரத்தெண்ணூ றொடுதொண்ணூற் றிரண்டாண்டின் உயரும் மேயின்
மருவினையிவ் வயதெட்டின் மேனல்லோர் மணநினக்கே வருகவந்தத்
திருவமைசீர்ச் சங்கமதின் மகிழ்சிறந்து நன்மைபெறத் திகழ்வாய் நீயே. (3)

### கலிவிருத்தம்.

சிந்தாகுல மெல்லாமறச் செய்தே தமிழ் மொழிக்கு
நந்தாவிளக் கென்றே வரு நன்றே சொல் விவேக
சிந்தாமணி நாமம் புனை திருவே யுல கோரின்
சிந்தாமணி யெனவே திகழ் பெறவே வளர் வாயே. (4)

### வெண்பா.

ஈச னருளா லிடையூறு வாராது
நேசமுட னெங்கு நிலாவியே—பேசரிதாய்
நாடு டுயர்ந்து நலமிகுசிந் தாமணிதான்
நீடூழி வாழ்க நிலைத்து. (5)

C. K. S.

READINGS AT HOME.

A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.

5-ம் நாள் படிப்பு.

ஐந்தாநாட் பகலில், ருக்மணி அம்மாளும் பெண்களிருவரும் கைலாசத்தாத்தாவும் வழக்கம்போலக் கதை கேட்க வந்து சேர்ந்ததும், சுப்பலெக்ஷ்மி வாசிக்க ஆரம்பித்தாள். அப்போது,

தாத்தா — இன்றைக்கென்ன தமயந்திக்குக் கலியாணமோ? ஞாபகமில்லாமற்போய் விட்டதே. வாசிக்கும் இடத்தை அலங்காரம் செய்து 10-ப்பேர் சுமங்கலிகளை யழைத்துச் சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலானவை கொடுக்கலாமே கலயாணகட்டம் கிடைக்குமா? சும்மா போக விடுவானேன்?

ருக்மணி.—நீர் மறந்துபோனாலும் நான் மறக்கவில்லை. அதெல்லாம் ஆலோசித்து வைத்திருக்கிறேன். இன்னம் கல்யாண கட்டத்துக்கு வரச் செல்லும். நாளைப் போக நாளன்றைக்குச் சுக்கிரவாரமாதலால் தாத்தா உத்தேசித்தபடியே செய்துவிடுவோம். அதற்குள்ளே கதையைக் கொண்டுபோய் முடிப்போம். வாசி அம்மா சுப்பு.

சுப்பு.—(வாசிக்கிறாள்) இவ்வாறு தமயந்திக்கு சுயம்வரமென்று அரசர்களுக்கெல்லாம் வீமராஜன் சுயம்வரபத்திரிகை அனுப்ப, அந்த சமாசாரம் தெரிந்ததும், மண்ணுலகத்துள்ள அரசர்கள் மாத்திரமன்றி விண்ணுலகத்துள்ள இந்திரன், அக்னி, இயமன், வருணன் ஆகிய திக்பாலகர்கள் நால்வரும்கூடத் தமயந்தியின் பேரழகைக் கேட்டு அவள்மேல் காதல் கொண்டு அவளை விவாகம் செய்யும்பொருட்டு இப்பூவுலகத்துக்கு வந்துசேர்ந்தார்கள்.

சிவகாமி.—அம்மா, அன்னத்தைத் தூதுவிட்டவிஷயத்தில் அவநம்பிக்கை கொள்வாருக்கு ஒருவிதமாகச் சமாதானம் ஒன்றைச் சொல்லிச் சரிப்படுத்திவிட்டாய். இப்போது தமயந்தியின் சுயம்வரத்துக்குத் தேவர்கள் வந்தார்களென்பது எளிதில் நம்பத்தக்கதாக இருக்கவில்லையே.

தாயார்.—ஒருவேளை இது, தமயந்தியின் அழகின் பெருமையையும் அவட்கு நளன்மேலுள்ள காதல் மிகுதியையும் உணர்த்தி, நளனது வள்ளன்மை, சுயநயம் பாராட்டாமை முதலிய அருங்குணங்களைச் சிறப்பித்தற்பொருட்டும், அவர்கள் இருவருக்கும் பரஸ்பர ஸந்தி உண்டுபண்ணுதற்பொருட்டும், கவிகள் கற்பித்துச் சொல்லிய சங்கதியாயிருந்தாலும் இருக்கலாம். ஆனால் அத்தேவர்களுடைய விருத்தாந்தங்களை நம் பௌராணிகர் கொண்டிருக்கும் கொள்கைப்படி ஆராயின், இதில் அசம்பாவிதம் ஒன்றும் தோற்றுதற்கிடமில்லை.

சிவ.—அக்கொள்கைகள் என்ன? அவற்றை விவரமாகச் சொல்லவேண்டும்.

தாயார்.—தெரிந்தமட்டும் சொல்லுகிறேன் கேள். தாத்தா, நான் சொல்லும் விஷயங்களில் ஏதேனும் பிழைகள் உண்டானால் பொறுத்துத் திருத்தவேண்டும். முதல்முதல், தேவர்கள் என்பவர் நால்வகைப்பிறப்பாகிய எழுவகைச் சீவராசிகளில் ஒருவகையாரேயன்றி வேறல்லர். அவர்களுக்கு அமரர் என்ற பெயர், நம்மினும் நெடுங்காலம் ஜீவித்தலால் உபசாரமாத்திரமாக வந்ததேயன்றி, அவர்களுக்கும் இறப்பு பிரப்பு, இன்பம் துன்பம், ஈனம் மானம் முதலிய எல்லா பிராரப்தானுபவங்களும் உண்டு.

"நூறுகோடி பிரமர்கள் நொந்தினர்;
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே;
ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர்;
ஈறிலாதவன் ஈசனொருவனே,"



என்ற தேவாரப்பாட்டின்படி, அரிப்பிரமாதி தேவர்களுக்குக்கூட அழிவுண்டாயின் மற்றவர்களுக்குக் கேட்பானேன்? அத்தேவர்களுக்குக் காமக்குரோத லோபமோஹ மதமாற்சரியாதி ஜீவகுணங்களும், தேகாதி அபிமானமும் உண்டு. அன்றியும், அசுரர்களால் பயமும் பீடையும், முனிவர்களது சாபாநுக்கிரகங்களும், நோய் முதலிய அரிஷ்டங்களும், எல்லாம் உள்ளன. அவர்கள் கற்பக விருக்ஷத்தின்கீழ அழியா இளமைவாய்ந்த அழகிய அரம்பை மாதரோடுகலந்து பொற்கலத்திருந்த புத்தமுதுண்டு ஆடல்பாடல்களில் அகமகிழ்ந்திருப்பினும், அச்செல்வம் அவர்களுக்கு சாசுவதமன்று.

மதுமழை பிலிற்றிப்புதுமணம் விரித்துப்
பற்பலவுதவும் கற்பகத்தருவும்
நந்தாவளமருள் சிந்தாமணியும்
வாமமா மேனிய காமதேனுவும்
அருளிய ஏவல் வரன்முறை கேட்பக்,
கடவுளரணிமணித்தட மகுடங்கள்
காற்றுணைவருடப், போற்றினரிறைஞ்சி
முனிவராசி நனிபலமொழியக்,
கரம்பயில் கவரி அரம்பையர் இரட்டக்,
கின்னரர் விபஞ்சி நன்னரம்புளரா
இசையமுதிருஞ்செவி மிசை யெடுத்தூற்ற,
முடங்குளைச் செங்கண் மடங்கலை நாப்பண்
அமுதுகுமென்சொற் குமுதமென்செவ்வாய்
இந்திராணி வந்தருகிருப்பக்,
கருமுகில் ஆயிரம்திருமலர் பூத்துச்
செங்கதிர்ச்சேகரம் தங்கவீற்றிருந்த
பெருந்திறன்கடுப்ப இருந்து, விண்புரக்கும்
அண்ணல் புரந்தரப்பண்ணவன் அரசும்;
பழமறைகனிந்து மழவுபெற்றிருந்த
செந்நாத்தவிசில் முன்னூட்டடங்கிப்
பனுவலாட்டி இனிதுவந்திருப்ப,
வண்டுகள் முரன்று கிண்டுபு துதைந்து
பொற்றாதுண்ணு முற்றூ இன்பப்
பிரசம் உற்றிருந்த வாசரோருகத்தன்,
நெருக்கியபுவனப் பெருக்கினைத்தனது
திண்ணிய மனத்திடை எண்ணியாங்கியற்றி,
'எம்மால் எவையும் இயன்றன' என்னச்
செம்மாந்திருக்கும் சிறியவாழ்க்கையும்;
திதலை பூத்தலர்ந்து மதகளிறிகலி
வருமுலை சுமந்த திருமகள் பச்சைப்
பசுந்துழாய் அலங்கல் அசும்புதேன்துளித்துக்
கடிகமழ்மார்பிற் குடிபுகுந்திருப்பத்,
தண்ணிலவெனவரி வெண்ணிறப்பாற்கடல்
ஒல்லொலித்தரங்கம் மெல்லடிவருடக்,
காமர் தென்காலெனும் சாமரை அசைப்பத்,
துத்தி நெய்பரந்து பைத்தபையகலில்
அணிகிளர் பலகதிர் மணிவிளக்கொளிரச்,
சுடிகைவாளரவ நெடிய பேரணைமேல்
மறுவிலா நீல வரைகிடந்தென்ன
அறிதுயில் அமர்ந்த அச்சுதன்வாழ்க்கையும்,
அழியா இன்பமென்றெழியாதுரைப்பினும்
கற்றவர்கருத்தின் உற்றுநோக்குழி
இந்திரஜாலம் முந்துநீள்கனவு
வெண்தேர்போல உண்டெனத்தோன்றி
இலவாம்."

என்று சுத்த ஞானியான பட்டணத்துச் சுவாமிகள் சொல்லியபடி அத்தேவர்கள் படைத்த செல்வமும் செருக்கும் ஒன்றும் நிலையானதன்று! 'கெஞ்சினால் மிஞ்சுதல், மிஞ்சினால் கெஞ்சுதல்' என்றபடித் தமக்கொருகாரியம் ஆகவேண்டுமானால், மனிதர்களைவந்து நல்லவார்த்தை சொல்லிப் பஞ்சக்கோலம்பாடிக் கெஞ்சுவதுமுண்டு. அவர்களால் மனிதர்க்கொன்று ஆகவேண்டி அவர்களை வேண்டினால் இருந்தவிடம்விட்டுத் திரும்பிப்பாராமல் இறுமாப்புற்று அசட்டைசெய்திருப்பதும் உண்டு. நிவாதகவச காலகேயர்களை வெல்லும்பொருட்டு இந்திரன். அருச்சுனனை அழைத்துச்சென்றதாகவும், சம்பரன் முதலான அசுரர்களை வெல்லும்பொருட்டுத் தசரதன் முசுகுந்தன் முதலான மண்ணுலகத்தரசர்களை அவன் துணைக்கொண்டதாகவும், அநேக விருத்தாந்தங்கள் இருக்கின்றன.

இப்படிப் புராணங்களில் இத்தேவர்களைப் பற்றி உயர்த்தியும் தாழ்த்தியும் அவ்வச்சமயங்கட்குத்தக்கப்படி பலவாறு கூறியிருத்தலின், கவிகள் தங்கள் இஷ்டப்படி இவர்களை வேண்டியவிடங்களில் மனிதரோடு உறவுபடுத்தியும், உயர்த்தியும், தாழ்த்தியும், பலவாறு சொல்லு

தல்வழக்கம். இவற்றிற்கெல்லாம் காரணகாரியங்களும் யுக்தி யுத்தங்களும் தேடப்புகுந்தால் சாத்தியப்படாது. என் தாத்தா நான் சொன்னதெல்லாம் உமக்குச்சம்மதம்தானா?.

தாத்தா.—ஆகா சம்மதம்தான். இத்தேவர்கள் கெஞ்சினால் மிஞ்சுவார்கள் மிஞ்சினால் கெஞ்சுவார்கள் என்றாயே, அதற்கொரு திருஷ்டாந்தம் பளிச்சென்று நினைவில் தோற்றுகிறது. ஸ்ரீமத் ராமாயணத்தில், ஸ்ரீராமபிரான் சேதுபந்தனம் செய்யும் பொருட்டுச் சமுத்திரத்தில் வழிவிட வேண்டுமென்று சமுத்திரராஜனாகிய வருணனைவேண்டி ஏழுநாள் தவஞ்செய்தும் அவன் திரும்பிப்பார்க்கவில்லை. பின்பு இராமர் கோபங்கொண்டு அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்துக் கடலை வறச்செய்ய அப்போது ஓடிவந்து காலில்விழுந்து செஞ்சாதவண்ணம் கெஞ்சி மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். ஆதலால், நீ சொன்னதெல்லாம் ஆலோசிக்க உண்மையாகவே தோற்றுகிறது.

சிவகாமி.—தேவலோகத்துக்கும் இப்பூமிக்கும் போக்குவரவுமுண்டோ? எப்படிப்போய் வருகிறது?

தாயார்.—தேவர்கள் காமரூபிகளானதால் எவ்வுருவமும் எடுக்கவல்லவர்; எங்கும் செல்லவல்லவர்கள். மனிதர்கள் தேவலோகத்துக்குப் போகவேண்டுமானால் சாதாரணமாக இந்தஸ்தூலதேகத்தோடு போகமுடியாது சூக்ஷ்மதேகத்தோடு போனால்தான் போகலாம். ஆதலால் இவ்வுடலோடு போகவேண்டுமானால் முனிவர்களைப்போலத் தபோமகிமையினாலாவது, அல்லது அருச்சுனன் முதலான அரசர்களைப்போல தெய்வ விமானங்களிலாவது செல்லவேண்டும். இந்திரன் பூவுலகத்தரசனைத் தன்னிடம் தருவிக்கவேண்டுமானால் தன் விமானத்தை மாதலியென்னும் சாரதியின் வசமாகக் கொடுத்தனுப்புவது வழக்கம். இதுவன்றி இறந்துபோன பின் நம் ஆன்மாவானது போகசரீரத்தைப் பெற்றுத் தேவலோகம் சென்று அங்கு நம் புண்ணியத்துக்குத்தக்கபடிச் சிலகாலமிருந்து சுகங்களை அனுபவித்து மீளும் என்றும், யாதனாசரீரத்தைப்பெற்று நரகம்புகுந்து அங்கு நம் பாவத்துக்குத் தக்கப்படிச் சிலகாலம் கஷ்டங்களை அனுபவித்து மீளும் என்றும் கொள்வது சாதாரணமான கொள்கை.

சிவ.—தேவலோகத்துக்கும் பூலோகத்துக்கும் அக்காலத்தில் இருந்த போக்குவரவுகள் இக்காலத்தில் இல்லையே. இப்போது அங்கு போய்வந்த ஒரு முனியையாவது அரசனையாவது காணோமே! வெள்ளைக்காரன் எவ்வளவோ விசித்திரமெல்லாம் செய்கிறான். ஒரு விமானம் கண்டுபிடிக்க மாட்டவில்லையே!

தாத்தா.—கண்டுபிடிக்காமலென்ன? ஏதோ புகைக்கூடு கட்டி ஆகாசமார்க்கமாய் விமானத்திற் சஞ்சரிப்பதுபோலச் சஞ்சரிக்கிறார்களாமே. அது நீ கேட்டதில்லையா?

சிவ.—கேட்டிருக்கிறேன். அதெல்லாம் குண்டுசட்டியில் குதிரைசவாரிவிடுவதுபோல பூமிக்குமேல், அரைமைல் கால்மைலுக்குள்ளேதானே. விமானம்போல வானுலகத்துக்குச்செல்லுமா? இது நிற்க இன்னொரு கேள்வி அம்மா; பூவுலகத்தரசர்களுக்குத்தான் வீமராஜன் தூதுபோக்கினான் வானுலகத்தாருக்குத் தமயந்தியின் சுயம்வரம் யாராவது சொல்லத்தெரிந்ததோ. தாமாகத்தான் தமது ஞானதிருஷ்டியினால் அறிந்துகொண்டார்களோ?

தாயார்.—வானுலகத்தாருக்கு நாரதமுனிவரால் தெரிந்தது. வீமராஜன் தன் மகளை மண்ணுலகின் மன்னர்களுக்கே உரியளாகக் கருதியிருந்ததனால் வானோர்க்குத் தூதனுப்பவில்லை. ஆனால் 'நாரதா கலகப்பிரிய' வென்று நாரதமாமுனிவர் கலகப்பிரியரானதனாலே இது கலகம்மூட்டுவதற்கு ஏற்ற தருணமென்றெண்ணி, அத்தேவர்களுக்குத் தமயந்தியின் அழகின் பெருமையை விவரித்து கலகநெருப்பை நல்லப் பற்றவைத்துவிட்டார்.

தாத்தா.—நாரதரில்லாத காரியம் கிடையாதே. 'கலகக்குருவி நாரத பட்டர்' என்னும் பட்டத்துக்கேற்பத் தற்காலத்துச் சில பெண்டுகளைப்போலச் சதாகாலமும் கலகம் மூட்டிக்கொண்டேயிருந்தால்தானே அவருக்குச் சரியாயிருக்கும். இல்லாவிட்டால் வயிறு வீங்கி வெடித்துப்போமே.

சிவ.—அச்சா தாத்தா. பெண்டுகள் பாவத்தைக் கொட்டாமற்போனால் உமக்குப் பொழுது போவதில்லையே. நிற்க, இந்நாரதர் மூட்டிவிட்ட கலகங்கள் அநேகமுண்டோ? அவற்றிலொன்று சொல்லலாமா?

தாயார்.—நாரதர் பண்ணும் கலகங்களுக்குக் கங்குமில்லை கரையுமில்லை. அவற்றைச் சொல்லப் புகுந்தால் ஒரு பெரிய பாரதமாகவல்லவோ முடியும். இராவணனை, ஒருவிசை. வாலியின் வாலில் பிடிபட்டு அவன் மகன் அங்கதனுக்கு விநோதமாகத் தொட்டிலின்மீது அவனால் கட்டுண்டு கிடக்கச்செய்தனர். இன்னொருவிசை, அவ்விராவணன் கார்த்தவீரியனால் உதைபட்டுக் காராக்கிரகத்தில் கிடந்துவரும்படிச் செய்தனர். இன்னம் இவற்றைப்போல எவ்வளவோ வேடிக்கைகள் செய்திருக்கின்றனர். ஆயினும், அவற்றுள் ஒன்று மிக்க விசித்திரமானது. தாத்தாகூட ஒருவேளை அதைக் கேட்டிருக்கமாட்டார். என் தாத்தா, ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கும் அருச்சுனனுக்கும் நாரதர் கலகம் மூட்டிவிட்டுச் சண்டை நடந்த சங்கதி கேள்விப்பட்டதுண்டோ?



தாத்தா.—இதென்ன ஆச்சரியம்! கிருஷ்ணனுக்கும் அருச்சுனனுக்கும் சண்டையாவது நான் கேட்டதேயில்லையே. எங்கே சொல்லு கேட்போம்.

ருக்மணி.—சொல்லுகிறேன் கேளும். பகவான் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஒருநாள் துவாரகாபுரத்திலே ஒரு தடாகத்திலே,மாலைப்பொழுதில், சூரியன் மலைவாயில் விழுகின்ற தருணத்தில், சந்தியாவந்தனம் செய்கையில், அர்க்கியப்பிரதானத்துக்காக இரு கையிலும் அபிமந்திரித்து ஏந்திய தீர்த்தத்தில் ஏதோ ஒன்று மேல்நின்று சொரடக்கென்று விழ்ந்தது. உடனே அது யாதோ வென்று மேலே நோக்க, அப்போது ஆகாசமார்க்கமாக, 'அற்பனுக்குப் பவிஷு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பன்' என்பதுபோல, ஒரு கந்தர்வன் குதிரையேறித் தடத்தடவென்று மேல் கீழொன்றும் பாராமல் போகாநிற்க, அவன் குதிரையின் வாய் நுரையென்று கண்டனர். உடனே அவ்வர்க்கிய நீரைத் த்யஜித்துவிட்டு மகா கோபம் கொண்டு அக்கந்தருவனை நோக்கி, 'அடா கந்தருவாதமா எம்மிடத்தில் உனக்கு எவ்வளவேனும் பயமில்லாமற்போயிற்றல்லவா? உன் வலியையும் உன் துணைவலியையும் கண்டுவிடுவோம். நாளை அஸ்தமனத்துக்குள் உன்னைக் கொன்று என் பகை தீர்த்துக்கொள்ளாமற் போனால் எம்பேரை மாற்றி அழை' என்று கொடியதோர் வஞ்சினம் கூறித் தமது நித்திய கருமத்தை மறுபடியும் செய்து முடித்தனர்.

அவ்வாய்மொழியைக்கேட்டதும் அப்போதே கந்தருவனுக்குப் பாதிச்சீவன் போய்விட்டது. அவன் அச்சமயத்தே பகவானைச் சரணமாக அடைந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருப்பானாயின், அவர் அவன் குற்றத்தைப்பொறுத்து மன்னித்திருப்பார். காகாசுரன் பிராட்டியாருக்குச்செய்த அபராதத்தினும் இது பெரிதோ? கெடுமதிக்குக் கண் தோன்றாதன்றே? ஆதலினால் அவனுக்கு அச்செய்கை தோன்றாதாகிப் பிராணபயத்தி

னால் ஓடிச்சென்று தன் நண்பனாகிய இந்திரனை அடைந்து நடந்த வரலாற்றைச்சொல்லித் தன் பிராணனை இரக்ஷிக்கும்படி அழுது வேண்டிக்கொண்டனன். அப்போது இந்திரன், ஐயோ என்னகாரியம் செய்தாய்! கண்ணபிரானைப் பகைத்துக்கொண்டபின் உன்னைக் காக்கவல்லவர் யாவர்? இடிநெருப்புக்கு முன் கைத்தடிபோல அவரது சுதர்சனப் படைக்குமுன் என் கைக்குலிசமாவது மற்ற வானவர்களது எத்திறமான ஆயுதங்களாவது நிற்கவல்லனவோ? கடல்நெருப்பைக் கை நீரால் அவிக்கலாமோ? என்னை நம்பாதே வேறு புகலிடம் தேடிக்கொள்" என்று கைவிட்டனன்.

சிவகாமி.—இந்திரன் சாப்பாட்டுராமன்; இவ்வளவுதானா? அப்புறம் கந்தருவன் என்ன பண்ணினான் பாவம்?

தாயார்.—பண்ணுவதென்ன? அங்கும் இங்கும் அலைந்து திரிந்தும் அவனைக் காப்பவரில்லை. 'ஐயோ நமக்கு இப்பேருலகத்தில் புகலிடமில்லாமற் போயிற்றே; பிராணபடத்தை நிவர்த்திப்பவரைக்காணேனே, யாது செய்வேன்!' என்று அவன் அழுதுவருந்துகையில் நாரதமாமுனிவர் வீணையும் கையுமாய் முன்வந்து நின்றனர். அவரைக் கண்டதும், நடுக்கடலில் வீழ்ந்து நிலையில்லாமல் ஆழ்கின்ற ஒருவனுக்கு ஓர் தெப்பம் கிடைத்தது போல அவரிரண்டுபாதங்களையும் இறுகப் பிடித்துக்கொண்டு, சுவாமீ, இவ்வாபத்துவேளைக்கு என் குலதெய்வம்போலத் தோன்றினீரே, அடியேனை இவ்வபாயத்தினின்றும் தேவரீர்தாம் காக்கவேண்டும், என்று தன் வரலாற்றைச் சொல்லி வருந்திவேண்டிக் கொண்டான். நாரதர் 'ஏதப்பா இந்திரன் முதலிய அந்தரர் பார்த்தும் ஆகாத காரியம் இந்த ஏழைப பார்ப்பானால் ஆவதோ? ஆனாலும் உனக்கோர் உபாயம் சொல்லுகின்றேன் கேள். பஞ்சபாண்டவர்கள் வஞ்சகனாகிய துரியோதனனோடு மாயச்சூதாடி நாடு நகரம் அரசு ஆக்கினை அனைத்தையும் தோற்று, இப்போது துவைத வனத்தில் வாசஞ்செய்கின்றார்கள். அவர்கள் ஐவரினும் வல்லவன் அருச்சுனன்; கண்ணபிரானுக்குக் கண்ணைப் போன்றவன். அவன்தான் உன்னைக்காக்க வல்லவன். அவனிடத்தில் சங்கதியைச் சொல்லாமல் அடைக்கலம் பெற்றுக்கொள். இதுதான் உபாயம்" என்று சொல்லிமறைந்தனர்.

அது கேட்டுக் கந்தருவன் இழந்தபிராணனைத்திரும்பப் பெற்றவன்போலக் களைதெளிந்தெழுந்து உடனே ஓடிச்சென்று பாண்டவர் வாசம்செய்யும் வனத்தையடைந்து, அங்கு அருச்சுனன் காலைக்கட்டிக்கொண்டு, "ஓ புண்ணியபுருஷனே, அண்டினபேரை ஆதரிக்கும் வள்ளலே, காண்டகவனத்தைத் தீக்கடவுளுக்கு விருந்துசெய்த கருணாநிதியே, என்னை இவ்வாபத்தினின்றும் காக்கவல்லவர் நீயன்றி யாவர்? சரணம் சரணம் என்பிராணனைக் காக்கவேண்டும்! என்று பலவாறு சொல்லிப் பரிதாபமாக அழுது வேண்டிக் கொண்டான். அருச்சுனன் அவன் பரிதாபத்தைக்கண்டு "அஞ்சற்க அஞ்சற்க. உனக்கு எவ்வித அபாயம் வரினும் காக்கின்றேன். என் காண்டீபத்தை எடுத்து வளைக்கின் என் முன்னின்று போர்செய்வார் மண்ணுளாயினும் விண்ணுளாயினும் உள்ளாரோ? ஈசனோடு போர்புரிந்துவென்று பாசுபதமும் திருவருளும்பெற்ற எனக்கோர் குறையுமுண்டோ? நிவாதகவசரையும் காலகேயரையும் நிர்த்தூளி செய்த எனக்கு வெல்லமுடியாத பகையுமுண்டோ? உன்னைக்காவேனாயின், போர் முகத்துப் புறங்கொடுத்தோடும் புல்லியர் போகும் கதியிற்போவேனாக. நன்றிகொன்ற நாசகர் அடையும் நரகிற்செல்வேனாக. பிறன் மனைப்புகுந்த பேதையர் வீழும் பெருநரகில் வீழ்வேனாக." என்று பல கொடியசபதம் செய்து அபயம் அளித்தனன். பின்பு கந்தர்வன் தன் வரலாற்றைச் சொல்லக்கேட்டதும், இடியேறுண்ட மால்வரைபோல ஏக்கமுற்றுக் கீழேவீழ்ந்து, பின் ஒருவாறு தெளிந்து "ஐயோ, கண்ணன் துணையாலன்றோ நாங்கள் இக்காசினியில் தரித்திருப்பது? பகைமை வெல்லவும் பாரதப்போர் முடிக்கவும் இழந்த அரசைத்திரும்ப எய்தவும் எல்லாம் கண்ணன் அருளாலன்றோ பெறுதற்கிருக்கின்றோம். எம்முயிரினும் சிறந்த கண்ணபிரானைப்பகைத்துக் கொண்டபின் எமக்குய்வழி வேறேயுண்டோ. ஐயோ யோசனையில்லாமற் சொல்லிவிட்டோமே." என்றாலோசித்துப்பின்பு சரணம்புகுந்தவரைக்காவாது தவிர்த்தலும் சபதமொழிகளை விடுப்பதும் தருமத்துக்கிழுக்காகுமாதலின் யாதுவரினும் சபதத்தை நிறைவேற்றுதலே கருமமென்று துணிந்தனன்.



இச்சங்கதியைக்கேட்டபோது தருமன்முதலிய சகோதரர்களுக்கும் திரௌபதிக்கும் உண்டான துயரம் அளவிட்டுச்சொல்லக் கூடியதோ? கண்ணனோடு போர்புரியின் சண்டைமுகத்தில் ஒப்பாரி இல்லையாதலின் அருச்சுனன் கண்ணன் கையால் இறந்து போவது நிச்சயம். போர்செய்யா தொழியின் கந்தருவனையாக் காப்பாற்றுவதாகச் சொல்லிய கட்டுரை பொய்யாய்ப்போகும். ஆதலின் அவர்கள் இன்னது செய்வதென்று துணியமாட்டாமல் இருதலைக்கொள்ளி எறும்புபோல வருந்தினார்கள். அப்போது அருச்சுனன் வந்து நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள், அன்று எழுதினதை ஒருவரும் அழித்தெழுதப்போகிறதில்லை. கண்ணன் கைப்படையால் நான் இறந்துபோக விதியுண்டாயின் அதனை ஒழிப்பவர்யாவர்?" என்று சொல்லி அவர்களைச் சாந்தப்படுத்தித் தான் போருக்குச் சன்னத்தனாயினன். கண்ணபிரானும் நடந்த விஷயங்களையெல்லாம் கேள்விப்பட்டு அருச்சுனனை அடுத்து, "என்னசெய்தி, கந்தர்வனை விடுகின்றாயா இல்லையா? என்ன, அருச்சுனன் "புகலடைந்தவர்களைக் கைவிடுதல் ராஜதர்மமன்று; ஆதலின் என் பிராணனைக் கொடுத்தாயினும் இக்கந்தர்வனுயிரைக்காத்தலே எனக்குக் கடமையாகும்; ஆகையால், தேவரீர் திருவுள்ளப்படிச் செய்யலாம்" என்றான்.

அதுகேட்டுக் கண்ணபிரானும் கோபாக்கிராந்தராகி 'யுத்தத்துக்குப் புறப்படு' என்ன, இருவரும் அநேக ஆயிரம் திவ்வியாஸ்திரங்களைப் பிரயோகம்பண்ணி ஒருவர்க்கொருவர் பின்வாங்காமல் நெடுநேரம் போர்புரிந்தார்கள். கடைசியாகக் கண்ணன் மிகவும் கோபித்துத் தமது நிஜாஸ்திரமாகிய நாராயணாஸ்திரத்தைப் பிரயோகிக்க அருச்சனனும் அதற்கெதிராகப் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்தனன். அவ்விரண்டு அஸ்திரங்களும் ஒன்றோடொன்று மலைந்து உலகமெல்லாம் அழிக்கப்புகுகையில், நான்முகக்கடவுள் தோன்றிக் கண்ணன் கைப்படையால் உயிரிழந்த கந்தர்வனுக்கு உயிரளித்து அருச்சுனன் சபதத்தைக் காத்து அவர்களிருவரையும் சமாதானப்படுத்திச்சென்றனர்.

தாத்தா.—இக்கதை மிகவும் விசித்திரமாயிருக்கிறது. இதற்குமுன் என்றும் கேள்விப்பட்டதில்லை.

சுப்ப.—நாரதர் கலகத்தினால் நன்மையுண்டாவதன்றித் தீமையுண்டாவதில்லை யென்கின்றார்களே! நிஜம்தானா அம்மா?

தாயார்.—நிஜம்தான். அவர் செய்யும் கலகமெல்லாம் ஓரோர் காரணத்தைப்பற்றியிருக்குமேயன்றி விருதாவாக ஒருவர்க்கு ஒருதீங்கை உண்டுபண்ணுவதாகாது.

சுப்ப.—அப்படியானால் ஸ்ரீபாகவதத்தில் தேவகியின் புத்திரர்கள் அறுவரையும் கம்ஸனைக்கொண்டு கொல்வித்ததேன்?

தாயார்.—அவர்கள் தேவகி புத்திரராயினும் அசுராம்சம் ஆதலின் மேலால் கம்ஸனுக்குத் துணையாகிக் கண்ணனுக்குப் பகையாவார்களாதலின், முள்ளைக்கொண்டு முள்ளைக் களைபவர்போல, அவ்வாறு கொல்வித்தார். இது நிற்க. மேற்கதையை வாசி கேட்போம்.

சுப்ப —(வாசிக்கிறாள்) இந்திரன் முதலான நால்வரும் பூவுலகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். நளமஹாராஜாவும் தமயந்தியின் சுயம்வரப்பத்திரிகையை விதர்ப்பராஜன் தூதர்கள் கொண்டுவந்து கொடுக்க. அதை வாங்கி அதிலெழுதியதை முற்றும் படிப்பதற்கு முன்னே சந்தோஷத்தால் உடலம் பூரித்து இருபுயங்களும் மலைபோல்வளர, உடனே நால்வகைச் சேனைகளும் புடைசூழச் சாமரையிரட்ட வெண்குடை நிழற்ற அநேக முடிமன்னர்கள் வணங்கி உடன் வரத் தேர்மேற்கொண்டு விதர்ப்ப நகரை நோக்கிப் புறப்பட்டான்.

அவ்வாறு விதர்ப்பநகரைநோக்கி வரும் வழியில், அவன் தேரொலியைக் கேட்டு, இது ஏது கடல் முழக்கமோ அல்லது இடிமுழக்கமோ இங்கு வருவது என்று வானவர்கள் நால்வரும் சந்தேகித்துப் பின்பு தேரொலியென்று தெளிந்து அத்தேரின்மேற் தோன்றிய அவன் பேரழகைக் கண்டு ஆச்சரிய மிகுதியினால் ஒன்றுந் தோன்றாமல் திகைத்துநின்று பலவாறு அவனழகைப் புகழலுற்றார்கள். இந்திரன், "ஆ ஆ இப்பூவுலகத்துக்கு வந்து இவ்வரசனது பேரழகைக் கண்டதனால் இமையாக்கண்கள் ஆயிரம் பெற்றதன் பயனை இன்று நானடைந்தேன்" என்று மகிழ்ந்தனன். வருணன், "ஆ இவ்வடிவழகனைக் கண்டபின் தமயந்திக்குப் பயித்தியமா வேறொரு புருஷனை இச்சித்து மாலை சூட்டுவதற்கு?" என்றனன். அக்கிதேவன் "மாணிக்கக் கல்லைச் செம்பொன்னில் பதித்ததுபோல இவ்வரசனுக்கே மாலை சூட்டாளாயின் அவள் பெற்ற பேரழகால் யாது பிரயோசனம். கமரில் ஊற்றிய அமுதம் போலன்றோ ஆகும்" என்றனன். தென்றிசைக்கிழவன், "இவ்வரசன் சர்வாலங்கிருத பூஷிதனாய் மணக்கோலங்கொண்டு இங்கு வந்தது தமயந்தியை விவாகம் செய்தற்பொருட்டே ஆயின் நாம் நால்வரும் வந்த வழியே திரும்பிப் போதலே சிறப்பாகும்" என்றனன். இவ்வாறு அவரவர் தத்தமக்கேற்றபடிச் சொல்லி வியக்க, 'இந்திரனுக்குப் பின்னும் ஆசை விடாமல் மானம் பாதிக்க, "ஐயோ இவ்வளவுதூரம் வருந்தி வந்தும் தமயந்தியைப் பெறாது மீள்வேனாயின் எவ்வாறு என் அந்தப்புரத்துள்ள அரம்பைமாதர் முகத்தில் விழிப்பேன்? அப்போதே ஐராணி முதலிய அரமகளிர் நான் தமயந்தியை விரும்பிப் பூவுலகத்துக்குப் போகக் கருதியது கண்டு மிக வருந்திப் பிணங்கினார்களே. என் செய்வது?" என்று ஆலோசித்து, வந்தது வந்தோம் யாவத்சக்கியம் பார்த்துவிடுவதே கருமம் என்று தீர்மானித்து நளனைச் சமீபித்து அவனை நோக்கிச் சொல்லுகின்றனன்: "ஓ அரசனே, அசுரர்களைக்கொன்று எமக்குச் செல்வமும் சிறப்பும் திரும்ப நல்கிய வள்ளலாகிய வீரசேன மஹாராஜாவைப்போலிருத்தலினால், நீ அவன் மகனாகிய நளமகாராஜாவே என்பதற்குச் சந்தேகமில்லை நாங்கள் நல்ல சுபமுகூர்த்தத்தில் புறப்பட்டதனால் உன்னை வழியில் சந்திக்கப் பெற்றோம். எங்கள் நால்வரில், இவன் அக்கிதேவன், இவன் வருணன், இவன் இயமன், இவர்கள் ஒழிந்து நின்ற நான் தேவராஜாவாகிய இந்திரன். நாங்கள் உன்பால் பெறுவதொன்றுள்ளது. அதனை அளிக்க உடன்படுவாயாயின் பின்பு இன்னதென்று தெரிவிப்பேன்" என்றனன்.

அதுகேட்டு அரசன் தேரினின்று கீழே குதித்து அவர்கள் பாதங்களில் வணங்கி நின்று பின்வருமாறு ஆலோசிக்கலானான். "தேவலோகத்தை ஆளும் பெருமையையுடையாருக்கு அரிதாகியதொன்று மண்ணுலகத்தாரிடத்துளதாமோ? இவர்கள் கருதியது யாதோ அறிந்திலேனே. கொடை யென்பது யாசகர் குறிப்பறிந்து கேட்பதற்குமுன்னே கொடுப்பதன்றோ? கேட்டபின் கொடுத்தல் இல்லை என்று மறுத்தற்குச் சமானமேயாகும் அன்றோ? இவர்கள் என் ஆருயிரைத்தான் ஈகென்று வேண்டினும் அகமகிழ்ந்து கொடுப்பேனே. அந்தோ! இவருள்ளம் தெரிந்ததில்லையே. உலகத்தில் கொடுத்தலன்றே பெரிது கேட்டலே பெரிதாகும். யாசகமென்பது எவ்வளவு நீசமானது! எண்சாணுடம்பும் ஒருசாணாக்குறுகி நாணத்தால் அகமெலிந்து முகம் கவிழ்ந்து இல்லை யென்று எளிமைபாராட்டி யாசிப்பது எவ்வளவு கஷ்டமானது! அவ்வாறு யாசித்தலாலுண்டாகும் சோர்வுதெளிய முகத்தில் தெளித்தற்கன்றோ கொடுக்கும் பொருளை நீரோடு தாரைவார்த்துக்கொடுப்பது? வானுலகத்துக்கரசர்களாகிய இந்திரன் முதலிய அமரர்களுக்கு வேண்டிய தொன்றைக் கொடுக்கப்பெறுவேனாயின், அதனின் மேலான புகழொன்றுண்டோ? இப்புகழைப் பெறுதற்கு இவர் சிந்தனைமகிழக் கருதிய தொன்றை எவ்வாறு வழங்குவேன்? அன்றியும் இவ்வுலகத்தில ஈகையிற் சிறந்ததொன்றுண்டோ? இரவலர் இம்மையில் தமக்குக் கொடுத்த பொருளை மறுமையில் தவறாமல் நமக்குக்கொடுப்பாராதலின் அவ்விரவலர் சுற்றத்தாரினும் இனியவராவார்கள். மேலும் ஒருவர் தமக்குள்ளபொருளை லாபங்கருதிப் பேராசையினால் வட்டிக்கிட்டு வகைமோசம் போவதைவிட வறுமையால் வருந்திவந்து தேஹியென்று கேட்டவர்களுக்கு நாஸ்தியென்னாமற் கொடுக்கின், ஒன்றே கோடியாக வளருமன்றோ? 'கொடுத்தார்க்குக்குறையில்லை' யென்றும், 'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை வைத்திழக்கும் வன்கணவர்' என்றும், 'சாதலின் இன்னாததில்லை இனிதது உம்—ஈதலியையாக்கடை'. என்றும் பலவாக ஈகையின்பெருமையைப்பற்றிச் சாத்திரங்கள் உரைக்கின்றனவே" என்று பலவாறு சிந்தித்துப் பின்பு இந்திரனை நோக்கிச் சொல்லுகின்றான்.



தாத்தா.—இந்திரனுக்கு இரப்பதென்றால் கொஞ்சமும் பயமில்லைப்போலிருக்கிறது. இரவச்சத்தைப்பற்றிக், 'காவாது வந்தீயும் கண்ணன்னார் கண்ணும்—இரவாமை கோடியுறும்' என்றும் 'ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்—கிரவின் இளிவந்ததில்' என்றும் நூல்கள் கதறவும் இவ்விந்திரன் பலதடவைகளிலும் பலரையும் இரந்திருக்கின்றான். ஒருவிசை ததீசிமுனிவரிடம் சென்று அவர் முதுகெலும்பைக்கொடும் என்றான். இன்னொருதரம் தன்னால் வெல்லமுடியாத வலாசுரனை வஞ்சனையாக நளனைக்கேட்டதுபோலவே முதலில் கேட்டபொருளைத் தருவதாக வாக்குப்பெற்றுப் பின்பு அவனுயிரைக்கொடுவென்று சதிசெய்தான். கர்னனிடத்தில் சென்று கவசகுண்டலங்களைப் பெற்றதுதான் யாவருக்கும் தெரியுமே.

சிவ.—அப்படியா சங்கதி இந்திரன் யாசகத்தில் நெடுநாளாகத் தேர்ந்ததைதான் போலிருக்கிறதே. 'எங்கெங்கேபோனாலும் இடதுகை துழாவுமடி' என்று எங்கேபோனாலும் கையை நீட்டுகிறதே காரியம்போலிருக்கிறது.

தாத்தா.—ஆனாலொன்று இந்திரன் எதும் கொடாத லோபிகளைப்போயிரப்பதில்லை. 'இரத்தலும் ஈதலேபோலும், காத்தல்கணவிலும் தேற்றாதார்மாட்டு' என்றிருப்பதனால் நளன் கர்னன் முதலானோரைப்போன்ற வள்ளன்மையுடையவரை இரத்தலினால் ஏதும் இளப்பம் இல்லை யென்று அப்படிப்பட்டவர்களையே யிரந்திருக்கிறான்.

சிவ.—அவ்வளவுகூடத் தெரியவேண்டாமா இவன் இந்திரபட்டம்பெற்று ஏற்றமா வாழ்வதற்கு? இது நிற்க. நளன், என்னவோ கேட்டதற்குப் பின் பார்த்துக் கொள்வோமென்றிராமல், எவ்வளவோ யோசனைபண்ணி வருத்தப்படுகிறானே. ஆ ஆ இவன்குணம் எவ்வளவு சிலாகிக்கத்தக்கது! இவனுக்குமுன்னே அந்த ததீசி, கர்னன் முதலான கொடையாளர் கூட நிகராகார்கள் என்று தோன்றுகின்றதே. இந்நாளில் இப்படிப்பட்ட கொடையாளர்கள் எங்காவதுண்டா?

ராத்தா.—ஆமா! இந்நாளில் கேட்குமுன் குறிப்பறிந்து கொடுப்பவர்கள்கூட உண்டா?

"பல்லெலாம் தெரியக் காட்டிப்
பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல ஓட்டி
மானமென்பதனை வீட்டி
இல்லெலாம் இரந்தக்காலும்
இரந்தவர்க் கிடுவாரின்றே."

என்றொரு புலவர் சொல்லியவாறு எவ்வளவு பஞ்சபாட்டுப்பாடிக் கெஞ்சிக்கேட்டாலும் அரும்பசிக்கு அமைவயிற்றுச் சோறு கூடப் போடுவாரைக்காணோம். வரவரக் கலிமுற்றத் தருமமும் குறைந்துபோய்விட்டது, முன்னைப்போலச் சத்திரங்கள் சாவடிகள்கூட இந்நாளில் இல்லையே.

"சத்திரத்தைச் சாத்தித் தடாகங்களைத் தூர்த்து
வைத்திருக்கும் ஐவேஜிவாரியே—எத்திசையும்
ஊணர் கலைகள் உபதேச ஸ்கூல்களை யிவ்
வீணர் திறப்பார் வியந்து" என்றும்

"அறத்தினுக்கே யீயார் அருந்தவத்தோர்க்கீயார்
மறத்தினுக்கே ஈவர் இம்மண்மேல்—வறுத்த
இனத்தோர்க்கும் ஈயார் இடைபிடித்தே ஆடும்
தனத்தோர்க்கே ஈவார்தனம்" என்றும்

ஒரு பண்டிதர் சொல்லியபடி இக்காலத்தில ஏழைகளுக்கு அன்னதானமென்பதே யில்லாமல் போய்விட்டது. பணத்தையெல்லாம் துர்விநியோகம் பண்ணுகிறார்கள்.

தாயார்.—ஏன் ஸ்கூல் வைப்பவர்களைத் தூஷிக்கவேண்டும்? வித்யாதானமும் சிறந்ததுதானே. பார்க்கப்போனால் அன்னதானம் அப்போதைப் பசியைமட்டும் ஆற்றும்; வித்யாதானமோ அறிவை வளர்த்து ஆயுள்முழுதும் பசியாமல புசித்திருக்கும்படிச் செய்யுமே. ஊணவித்தைதானே இக்காலத்தில் ஞானம், புகழ், செல்வம், மேன்மை எல்லாவற்றிற்கும் காரணமாயிருக்கின்றது. வேதம் நான்கையும் தலைகீழாகக் கற்றாலும் வயிற்று வளர்ப்புக்கும் வகையைக்காணோமே! காலசுபாவம் அப்படியிருக்கிறது இரணியன் ராஜ்யத்திலே 'இரணியாயநம' என்று தானே சொல்லவேண்டும்? இது நிற்க. கொடுப்பவர்கள் முன்போலில்லையானால் யாசகர்கள் மட்டும் முன்போலத்தானிருக்கின்றார்களோ? முற்காலத்தில் பிராமணர்கள் எவ்வளவு வருந்தினாலும் தானம் வாங்கமாட்டார்களாம்: அத்திபூத்தாற்போல் ஆயிரத்திலொருவர்தாம் தானம் வாங்குவார்களாம். இக்காலத்தில் அநேகர் திடகாத்திரராய்த் தத்தமக்கேற்ற தொழில்களைச் செய்து மானமாகச் சீவனம்செய்யப் பலவழிகள் இருந்தும் சோம்பல் முதலிய துர்க்குணங்களால் அவற்றைச் செய்யாமல் இலச்சைகெட்டு யாசிக்கின்றனரே. கூனர், குருடர், முடவர் முதலான அங்கவீனர்களுக்கும், வியாதியினாலும் வார்த்தக்கியத்தினாலும் மெலிந்து தளர்ந்தவர்க்கும் கொடுத்தலே புண்யமாகும். அன்றிச் சோம்பல் முதலிய துர்க்குணங்களால் துணிந்து யாசிப்பவர்களுக்கு இல்லையென்று மறுத்தலும் பாவமாகாது. எத்தனைபேர்கள் தடித்தடியாப் பிச்சைக்காசுக்கும் கொட்டும் சோற்றுக்கும் தெருத்தோறும் அலைகிறார்கள்! மாசம் நாலு ரூபாய் தருகிறேன், காவேரித்தீர்த்தம் கொண்டுவந்து கொடு, கச்சேரிக்கு 'டீபன்' கொண்டுபோவென்றால் மார்பைப்பார்த்துக்கொள்ளுகிறார்களே! அவர்களைச் சொல்லக் குற்றமென்ன? உடம்பு நலுங்காமல் அவர்களுக்கு ஊணும் காசும் கிடைத்துப்போகிறதன்றோ? நிற்க. கதையை வாசி சுப்பு.

சுப்ப.—(வாசிக்கின்றாள்) இவ்வாறு ஆலோசித்துப் பின்பு தேவர்களை நோக்கி நளமகாராஜா, "ஓ விண்ணுக்கிறைவர்களே நீங்கள் வானுலகத்தைவிட்டு இம்மண்ணுலகத்துக்கு



என்பால் வரப்பெற்றது நானொருவன் செய்த தவப்பயனாலன்று. என் முன்னோர்கள் பலரும் செய்த அருந்தவப்பயனே யாகும். இப்போது உங்களுக்கு வேண்டியதொன்றைச் சொல்லுங்கள், மறுக்காமல் அளிக்கக்கடவேன்' என்றனன். அதுகேட்டு இந்திரன், "ஓ வாக்குத்தவராத வள்ளலே, கட்டழகால் காமவேளை வென்ற நீயேயல்லாமல் அக்கருப்புவில்லோன் தொடுத்தெய்யும் புஷ்பபாணங்களால் எமக்குண்டாகும் துயரத்தைப்போக்க வல்லார் யாவர்? ஆதலால் நீ தமயந்தியிடத்துத் தூது சென்று அவள் மனத்தை எம்பாற் பொருத்தவேண்டும். இதுவே நீ எமக்குச் செய்யும் பேருதவி". என்று அந்நளனது பிராணனையே தாவென்று கேட்பதினும் பன்மடங்கு அவனுக்குத்துயருண்டாகும்படி அவன் தலையிற் பெருங்கல்லைத் தூக்கிப் படீரென்று போட்டதுபோலக்கேட்டான்.

அச்சொல்லைக் கேட்டலும் நளனுக்கு, உலைமுகத்தில் பழுக்கப்பழுக்கக் காய்ச்சி உருக்கிய செம்பை இருசெவித்துளையிலும் ஊற்றினாற்போல-ஆற்றமுடியாத துயரமுண்டாகி மனங் கலங்கி உயிர்சோர்ந்து பின்பொருவாறு தன்னுணர்வை மீட்டுக்கொண்டு அவ்விந்திரனைப் பார்த்து, ஓ உத்தம புருஷனே, உமக்குத்தெரியாத தொன்றுமில்லை. யாவருடைய மனோபாவங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணரவல்லீர், ஆதலின், தமயந்தியை மணஞ்செய்ய நெடுநாட்பிரயத்தனம்செய்து கருதியிருக்கும் என்னை அவளிடத்து உங்கள் பொருட்டுத் தூதாகச் செல்லச் சொல்லுதல் நியாயமாகுமா? நான் உங்கள் பேச்சைத் தட்டுதற்கஞ்சி அவளிடம் சென்று உங்கள் செய்தியை உரைத்தாலும், அவள் முன்னமே என்பால் விருப்புற்று என்னையே மணம்செய்யத் துணிந்திருக்கின்றனளாதலின் இப்போது எவ்வாறு மனம் வேறுபட்டு நாணத்தைவிட்டு உம்பால் மணம் பொருந்தக்கூடும்? வீணே என்னை அனுப்புவதில் உங்களுக்கு வரும் பயனென்ன?" என்று சொல்லி எப்படியாவது தப்பித்துக்கொள்ளப்பார்த்தான். இந்திரனோ விடுவானல்லன். கொடிறும் பேதையும் கொண்டது விடாது என்பதுபோல முரட்டுத்தனமாய் ஒரேபிடியாகப்பிடித்து யாது சொல்லியும் கேளானாகிப் பின்னும் நளனைநோக்கி, "ஓ சொன்ன சொற்றவறாத மன்னவரேறே, இப்பூவுலகத்திலே உன்னையும், பரதனையும், பார்த்தனையும் ஆகிய மூவரையும் நினைத்தபோதிலும் எண்ணியகாரியமெல்லாம் கைகூடுமன்றோ? அப்படியிருக்க நீயே நேரிடையாகச்சென்று பேசினால் கைகூடாத காரியமு முண்டோ? ஆதலின், நீ மறுக்காமல் செல்லத்தான்வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டனன். அதுகண்டு நளன், "இதேது காலைச்சுற்றிய பாம்பு கடித்தாலொழியப் போகாதென்னும் கதையாயிற்றே. அன்றியும் இவர்களுக்கு நாம் முன்னே செய்வோமென்று ஒப்புக்கொண்டதைச் செய்யாது விடுப்பதும் தருமமன்று. விதிவசம் எப்படி விடுகிறதோ பார்ப்போம்" என்று உடன்பட்டுத் தான் தமயந்தியினிடத்துக் காவலாளர் முதலான ஒருவரும் அறியாமற்போய்வருதற்குத் தன் உருவை மறைத்துச் செல்லத்தக்க ஓர் அரிய மந்திரத்தை அவ்விந்திரன்பாற்பெற்று விடைபெற்றுக்கொண்டு சென்றனன்.

தாயார்.—நாழிகை ஆய்விட்டது. இத்துடன் இன்று நிறுத்துவோம் சுப்பு.

எஸ். மூத்து ஐயர், பி. எ.

பிழைதிருத்தம்.—சென்ற சஞ்சிகையில் 356-வது பக்கம், 2-வது பத்தி, 2, 3-வது வரிகளில் 'பெருதும்பொழுது' என்றிருப்பதை 'பெருகப்போருது' என்று திருத்திக்கொள்ளவும்.

## சஞ்சோக்தை சுயம்வரம்
### அல்லது
## ப்ரித்விராஜா சரித்திரம்.

### X விருந்தினர்வரவும் யாகாரம்பமும்.

ஜயசந்தராஜன் ராஜசூயயாகம் துவக்கி அதன் முடிவில் தன் செல்வப்புத்திரி சஞ்சோக்தை சுயம்வரம் நடத்தத் தீர்மா

னித்ததை ராஜசபையில் தெரிவித்து அதை நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்கள் செய்தாகவேண்டுமென்றுத்தரவளித்துச் செல்லவும், அவன் துணிகரமான தீர்மானத்தை யெதிர்பார்த்திராத மந்திரத்தலைவர் முதலான மூத்தோர் சிலர் அவன் வெளியிட்டதைக் கேட்டு வாய்திறவாமல் திகைத்து பிரமித்திருந்தார்களாயினும், அப்பிரேமை நீங்கவும் அனைவரும் அரசன்கருத்துக்கிசைந்து அவன் கருதியகருமம் கடைத்தேறிமுடிய வழிதேடுவராயினர் என்று சொன்னோம். இப்படி எல்லோரும் ஒரு மனப்பட்டுழைக்கவும் வேண்டிய ஆயத்தங்கள் வெகு சீக்கிரத்தில் நடந்தேறிவந்தன. குருவாகிய சுக்கிராசாரியின் யுக்தியைக்கேட்டு ராஜசூயயாகத்துக்கு முதலவசியமான திக்குவிஜயம் அனுவசியமென்று அரசன் தீர்மானிக்கவும், ஆகவேண்டிய காரியங்கள் வெகு சுலபமாகப்போய் விட்டன. உடனே நகரை யலங்கரிக்கும்படி நகாராப்போட்டு நகரமாக்களுக்கு அறிக்கையிட்டு, யாகசாலை அமைக்கவும் யாகத்துக்கு வரும் விருந்தனரான வேந்தர்முதலானோருக்கு விடுதிகளமைக்கவும் உத்தரவு செய்துவிட்டு, முதல்மந்திரி, ராஜாதிராஜனை மகாமண்டலேசுவரன் ஜயசந்தமஹாராஜா பேரால் 'தாணி பார்க்கெல்லா மோலைதனி[illegible] என்றும் க்கி,' [illegible] தனித் தூதிற்போ[illegible] பின்னும் ஆகவேண்டிய காரியங்களைப் ஏமைக[illegible] பரபரப்போடு பார்த்துவந்தான். குருவாகிய சுக்கிராசாரியரும் யாகதிரவியங்கள் சேகரித்து வெளித்தேசங்களிலிருந்துவரும் பிராமணர்கள், வேதோத்தமர்கள், ராஜகுருக்கள் முதலானோர் அனைவரும் குறைவின்றி உபசரித்தழைக்கப்படுவதற்கான முயற்சிகளைத்தும் முறைப்படி செய்துவந்தார். யாகத்துக்குக் குறித்தகாலம் சமீபிக்கவும் கன்யாகுப்ஜம், தருமபுத்திரர் ராஜசூயயாகம் செய்தகாலத்தில் இந்திரப்பிரஸ்தம் அளித்த காக்ஷிக்குத்தோற்றதாகவின்றி, இப்பாரதகண்ட முழுமைக்கும் தலைநகராய் அமைந்த அதன் மகிமையெல்லாம் ஒருங்குதிரண்டு உருக்கொண்டு விளங்கியதுபோல் தோற்றியது.

அவ்வபூர்வமான விசேஷ சம்பவத்தை யுத்தேசித்துக் கட்டப்பட்ட மகாபெரிய மண்டபத்தில் வேந்தரானவரெவரும் வந்து சேர்ந்தார்கள்; அந்தணரெவரும் வந்தடைந்தார்கள்; மாக்ஷிமைபெற்ற மகான்களானவர்கள் எவரும் வந்தமர்ந்தார்கள். இப்படி எல்லாரும் 'வரம்பற' வந்து நெருங்கியடைய, நரபதியான ஜயசந்த மஹாராஜா,

> "வரவரவந்த வந்தமுனிவரை வணங்கியாசி
> திரமுறப்பெற்று வேந்தர் சிறப்பெலாந் திருக்க
> ணோக்கி,"

தன் குலகுருவாகிய சுக்கிராசாரியர் இருக்குமிடம் நோக்கி மேலாகவேண்டிய காரியங்களை யுத்தேசித்துச் சென்றான். சென்றவன் தம் குலகுரு[illegible]ண்டு நமஸ்காரஞ் சொல்லி மேலாகவேண்டியதைப்[illegible]வரம் கேட்க, அவர் இனி மஹாராஜா [illegible]கோலத்தோடு நகர்வலம்வந்து யாவர்க்கும் [illegible]க்ஷியளித்து யாகத்துக்குரிய கோலங் கொ[illegible]ளவேண்டியதே யென்று சொல்லினர். உ[illegible]னே மஹாராஜாவும் திருக்கோலம்கொண்டு [illegible]தர்மேலேறி முடிமன்னர் புடைசூழ, அந்தண[illegible]ர்கள் வேதகோஷம்செய்ய, வெகு ஆர்ப்ப[illegible]ட்டங்களோடு பவனிவருவானாயினன். மஹாராஜா திருக்கோ[illegible] லங்கொண்டு மண்டலேசுவரனாய்ப் பவனி வருவதை நகரமாக்கள் கேள்விப்பட்டு அவ்வபூர்வமான திருக்கோலக்காக்ஷியைக் கண்டு களிக்கும்படி அவரவர்கள் கைவேலையை யப்படியப்படியேவிட்டு அவசரமாக ஓடிவந்தார்[illegible] இப்படி வந்தவர்களில் அங்கு வந்தடர்[illegible] மாதர்களின் காக்ஷி கவிகூறிய வர்ணனை[illegible] ஒப்பாகவிருந்தமையால் அதை நாம் சிறப்[illegible] துக் கூறுதலினும், கவியின் வாக்காலே அ[illegible] சிறப்பைத் தெரிவித்தல் விசேஷமாமென்[illegible] அவர் வாய்மொழியைக்கீழே யெடு[illegible] வரைகிறோம்.

> ஈரடிகளினுஞ் செம்பஞ்செழுதுவாரெழுதுமுன்
> ஓரடியெழுதிமின்போலொல்கிவந்திறைஞ்சுவாரு
> ஆரமுதனையகண்ணினஞ்சனமெழுதுகின்ற
> சீரியகோலுங்கையும் திருத்தகத்தோன்றுவாரும்



> விரிதுகில்வேறுமாடல் விரைகமழ்துநீராடிச்
> சரிகுழல்மேகமாரி துளித்திடவெதிர்கொள்வாரும்
> கரதலமலரிற்சங்குங் கலாபமுஞ்சிலம்புமார்ப்பத்
> தெருவெலாந்தாமேயாகிச் சீரடிசிவப்பிப்பாரும்.

* * *

> இவ்வகைகுழக்கொண்டாங்கணெழுவகைப்பருவமாதர்
> செவ்வியுமழகுந்தேசுஞ் செய்யபுந்திருவோடொப்பார்,

மன்மதன்போலும் மஹாராஜா திருக்கோலங்கொண்டு ராஜவீதியில் பவனிவரும் வைபவத்தை 'மைவழிக்கண்ணிணோக்கி' மனம் பூரித்து மகிழ்ந்தார்கள்.

ஜயசந்தமஹாராஜா கோலாகலத்தொடு பவனிவந்து யாகசாலையையும் வலம்வந்து, அச்சமயத்தை முன்னிட்டு அதி ஆடம்பர அலங்காரங்களோடும் அமைக்கப்பட்ட மிகப் பெரிய கொலுமண்டபம் வந்தடைந்து "அரசவைக்கணிசெய் சிங்கவாசனத்திருந்து" யாகத்துக்கு வந்தவர்களையெல்லாம் உபசரித்து தானமும் தியாகமும் செய்வதற்கு வேண்டிய கட்டளைகளிட்டுக்கொண்டிருந்தான். அம்மகாசபையில் வடதேசத்து ராஜாக்களன்றி தென்தேசத்து அரசர்களும்கூட வந்திருந்தார்கள். அப்பொழுது அந்நகர் ஐசுவரியத்தில் அளகாபுரியை ஒத்து கம்பீரத்திலும் பெருமையிலு இந்திரபுரமேபோலிருந்தது. இதைக்கண்டகவிகள் பூர்வம் இந்திரப்பிரஸ்தத்தைப்புகழ்ந்து பாடியதுபோல கன்யாகுப்ஜத்தையும் ஓர் இந்திரபுரியேயென்று புகழ்ந்து பாடினார்கள். அக்காலத்து பாரதிகள் ஹிந்தி பாஷையில் பாடின ஸ்தோத்ரக்கவிகளைமொழி பெயர்த்துக்கொண்டிருப்பானேன்? ஹிந்து கவிகள் புகழ ஆரம்பித்தால் அவர்கள் கற்பனாசக்தி எவ்வளவுயர எழும்புமென்று தெரியாதா? உத்தமகவிகள் திரிகாலஞானிகள் ஆனபடியால் அவர்கள் அலங்கார உருபுகளும் உவமான உவமேயங்களும் திரிலோகங்களையும் தொட்டுநிற்கும். பூலோகத்தில் ஒரு காக்ஷிகண்டால் அதை விளங்கவைக்கத் தேவலோகத்திலிருந்து உவமானங்கள் எடுத்துக் கூறுவார்கள். பின்வரும் இந்தப்பாட்டு எவ்வளவு ரஸமாக விருக்கிறது பாருங்கள்:

> இந்திரபுரிக்குமிந்தவிந்திரபுரிக்குந்தேவர்
> அந்தரமறிவுறாமலதிசயித்துவகைகூரச்
> செந்திருமடந்தைக்குள்ளசெல்வங்களனைத்துஞ் சேர
> வந்ததுபோலும் வேள்விமாநகர்த் தோற்றமம்மா.

மஹாராஜா கொலுவீற்றிருந்து, யாகத்துக்குவந்த விருந்தினர்களை யுபசரிக்கவும் மற்றப்படி வேண்டிய தானதர்மங்களைக் குறைவறச் செய்யவும் ஏற்பாடுசெய்யக்கருதி, அத்தருணத்தில் ஆகவேண்டிய செய்கடன்களனைத்தையும் தனித்தனி பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆசனைப்பொறுப்பாளியாக நியமித்து ஒன்றிலும் குறைவு வராதபடி நடத்திவரக்கட்டளையிட்டுக்கொண்டிருக்கையில், அவரோடு கூட வந்த அந்தணர் முதலானோர் யாகசாலையடைந்து சுக்கிராசாரியின் மேற்பார்வையில் தத்தம் கடமைகளைச்செய்ய சித்தம்செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் யாகசாலையுட் சென்றதைக் கவியொருவர் பின்வருகிற பாட்டில் வெகு அழகாக வர்ணித்துக் கூறியிருக்கிறார்.

> தோரணவீதிதோறும் தூரியமுழக்கந்தன்னி
> ஞரணமுழக்க மிஞ்சவந்தணராகியுள்ளோர்
> காரணமுணர்ந்தோர்வேள்விக்கனன்முகமாகத் தேவர்
> பாரணம் பண்ணவிட்ட பைம்பொன்வேதிகையிற் சேர்ந்தார்.

அவ்யாகசாலையின் சிறப்பைப்பற்றிச் சொல்லசாத்தியமில்லை. சுக்கிராசாரியர் மகாபண்டிதர்களோடு கலந்து ச்ரௌதங்களைப் புரட்டி மிக ஆராய்ந்து முன் பாண்டவர்கள் செய்தயாகத்திற்கு அமைக்கப்பட்ட யாகசாலையொப்பவிருக்கத்தக்கதாக மகாசிரமமெடுத்துக்கொண்டு எல்லாம் பொருந்த அமையும்படி சமைத்திருந்தார்.

> சுடுமணற்கலுழனுகச்சுருதியின்படியே கோட்டி
> நடுவுறத்திசைகளுன்குநான்குவெள்ளேறுகோட்டி
> வடுவறச் சமைத்த சாலை மண்டபந்தன்னைநோக்கிற்
> கடவுளர்க்கமைத்தயாகதலமெனக்கவினிற்றம்மா.

என்று கவி கூறியதற்கு முற்றும் பொருந்தியிருந்தது. இவ் யாகசாலையின் சிறப்பைப்பற்றி அக்காலத்துக் கவிச்சக்கிரவர்த்தியென்று பேர்பெற்று விளங்கிய சந்துபார்தி மிகப் புகழ்ந்து வளர்த்திப் பாடியிருக்கிறார். அதையெல்லாம் எடுத்துச்சொல்ல இங்கு நமக்கு இடம் போதாது. அக்காலத்தில் இப்பாரதகண்ட முழுமையிலுமுள்ள வேதப்பிராமணர்களும், தபோதனர்களும், மற்றுமுள்ள பைராகிகள் முதலான மதவைராக்கியர்களும், எண்ணிலா மஹாஜனங்களும், ஒருசார் நெருங்கிவந்தடைந்திருக்க; 'பூதலத்தரசெலாம்' முடிமன்னர்களும், சிற்றரசர்களும், சிறந்த சாமந்தர்களுமாக, தத்தம் படைவலியோடும், கப்பம் காணிக்கைகளோடும் ஒருசார் வந்து நெருங்கி அந்நகர் நிறைந்திருந்தார்கள். இவர்களன்றி படையாட்கள், பூமியாட்களும், துணிந்த கைகளான பலவேறு ஜாதிமதத்தைச்சேர்ந்த படைவீரர், தலைவீரர்கள் முதலான "இரும்பினைக்குழைக்குநெஞ்சர் யாவரு மீண்டிமொய்த்தார;" மற்றுள்ள கூத்தாடிகள், குரங்காட்டிகள், வில்லிகள், பேழைகள், குறவர்கள் முதலான பூர்வீக காட்டுமலைச்சனங்கள் கலந்த பிச்சைக்கூட்டங்களும் ஏராளமாகவந்து கூடியிருந்தன. இக்காலத்தில் ஒரு தேசத்தின் குணங்குறி விசேஷங்கள் விளங்க, லண்டன், பாரிஸ் முதலிய மகாநகரங்களில் வைக்கப்படும் பிரமாண்டமான பொருட்காக்ஷிகளில் காணக்கூடிய விசித்திர, விநோத, வேறுபாடுகளடங்கிய விசேஷங்களெல்லாம் அந்நகரில் காணப்பட்டன. அந்நகரின் காக்ஷியை உள்ளதுள்ளபடி யெடுத்து வகுத்துரைக்கவேண்டுமாயின் அதுவே ஒரு பெரும் புஸ்தகமாக வளரும். அக்காலத்துக் கவிகள் வர்ணனையை யெடுத்துச் சொல்வோமென்றால் அது காரியத்துக்குதவாது. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாததுபோல் நம் தேசத்துக் கவிகளின் வருணனையால் விஷயம் விளங்குவது அரிது. பூலோகத்துக்காக்ஷியை வர்ணித்து விளங்கவைக்கத் தேவலோகத்திலிருந்து உவமானங்கள் கூறினால் அதனால் இக்காலத்தாருக்கு விஷயம் என்ன விளங்கப்போகிறது! ஒன்றுமில்லை. ஆகையால் சுருக்கமாக நாம் சொன்னதைக்கொண்டும் அங்கங்கே குறிப்பாய்க் கூறுவதைக்கொண்டும் இதை வாசிப்போர் தங்கள் கற்பனாசக்தியால் மற்றவற்றை மானஸீகமாக அறிந்துகொள்ள விடுவதே சரியென்று துணிந்தோம்.

சுக்கிராசாரியரும் மற்ற வேதப்பிராமணர்களும் யாகசாலையில் இவ்விதம் முயற்சியாயிருக்க, ஜயசந்தமஹாராஜா கொலுமண்டபத்தில் சிங்காசனத்திருந்து, வந்தவந்த மன்னர்களும் மற்றுமுள்ளோரும் கொணர்ந்தளித்த கப்பங்களையும் காணிக்கைகளையும் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய உபசாரங்கள்செய்து யாகம் குறைவறமுடிவதற்கு வேண்டிய ஏற்பாடுகள்செய்து கட்டளையிட்டுக்கொண்டிருந்தார். முகூர்த்தகாலம் நெருங்கவே, சுக்கிராசாரியர் அரசனும் தேவியும் மங்களஸ்நானஞ்செய்து முடிப்பமுடித்து யாகசாலைக்கு வரசித்தமாகவேண்டுமென்று அறிக்கையிடக் கொலுமண்டபம் நோக்கித் தூதனுப்பினார். இதை யறிந்த முதல்மந்திரி இனிக் காலதாமதம் செய்யலாகாதென்று, சிங்காசனத்திருந்த அரசனை நெருங்கி கையால் வாய்மூடிக் காதண்டைசென்று இரகசியமாய் ஏதோ சிலவார்த்தைகள் ஓதினான். மந்திரி சொல்லிய வார்த்தைகளைக்கேட்கவும், அரசன் கண்கள் சிவந்தன; உதடும், மீசையும், படபடவென்று துடித்தன; நெற்றி வியர்த்தது; முகத்தில் கம்பீரம் ஜ்வலித்தது. அவன் வலது கை அவன் முயற்சியின்றி உடைவாளைப்பிடிக்கச்சென்றது. சபையிலுள்ளோர் எல்லாரும் அரசன் முகக்குறிகளைப் பார்த்துக் காரணமறியாது கலங்கித் திகைத்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். சுக்கிராசாரியிடமிருந்து தூதுவந்த பிராமணன், அரசன் முகக்குறிகளைக்கண்டு அரசவைக்குள் பிரவேசிக்கப் பயந்து திரும்பி யோடிவிட்டான். திரும்பி யோடிவந்த பிராமணன் உளறின உளறலைக்கேட்ட சுக்கிராசாரியர் ஏதோ வில்லங்கம் வந்திருக்கிறதென்று நினைத்து காரியம்



முற்றிப்போகுமுன் அதை நம் உபாயத்தால் நீக்கப் பார்க்கவேண்டுமென்று பரபரப்பாய் தனக்குதவியாயமைந்த பிராமணோத்தமர்கள் இருவரோடு அரசவை நோக்கி அவசரமாகச் சென்றார். இஃதெல்லாம் இங்கு வரையச்சிலநேரம்பிடித்ததாயினும் நடந்தது க்ஷணமாத்திரத்திலே. சுக்கிராசாரியர் அரசனிடத்தில் தனக்குள்ள செல்வாக்கையுன்னி தடதடவென்று அரசவைபுகுந்து சிங்காசனத்துக்குப் பக்கத்திலுள்ள தனக்குரிய ஆசனத்தருகேவந்து அரசனுக்காசிகூறி ஆசனத்தமர்ந்தார். குரு வரவும் அவருக்கு ராஜசபையில் காட்டவேண்டிய மரியாதை செய்து ஆசனத்திருக்கச்சொல்லுமாறு உள்ளெழுந்த ஆத்திரத்தை அரசன் ஒருவாறு அடக்கிக்கொள்ள வேண்டி நேரிட்டது. இச்சமயத்தை முன்னிட்டு குரு அரசன் பக்கத்தணுகி "இடருற்றது என்னோ? முகூர்த்தகாலம் கிட்டியதே!" என்று மெதுவாகவுரைத்தார். அரசன் மறுபடியும் உக்கிரங்கொண்டு மீசைபடபட வென்று துடிக்க, மந்திரி பிரதானிகளை நோக்கி "நாம் தத்க்ஷணம் நேரில் சென்று வென்று கத்திமுனையில் அவர்களைக்கொணர்வோம். சேனைகளைச் சித்தமாயிருக்கச்செய்யுங்கள்!" எனத் திடமுறமொழிந்தனன். சுக்கிராசாரி யுத்தப்பேச்சைக்கேட்கவும் "ஆலோசனையன்றி எக்காரியமும் செய்யத்துணிவது முறையன்றே. மஹாராஜா மன்னிக்கவேண்டும். யாகத்துக்குநியமித்த முகூர்த்தம் கிட்டிவிட்டதால், நான் இவ்வளவுதூரம் சொல்லத்துணிந்தேன். மன்னிக்கவும்." என்றார். யாகப்பேச்சு காதில்விழவும், அரசன் ஆத்திரமடங்கி தன் குருவின் பேச்சைக்கேட்க இச்சையுற்றுத் திரும்பினான். அரசன் தனக்குச் செவிகொடுக்கத் திரும்பினதைக்கண்டு, சுக்கிராசாரி, இனி இக்காரியத்தை நம் மனப்படி முடிப்பதில் கஷ்டமில்லையென்று மனத்துள் தீர்மானித்துக்கொண்டு, அரசனோடு கலந்து பேசத் துவங்கினான். இப்படிக்கொஞ்சநேரம் இருவரும் அந்தரங்காலோசனை செய்வாராயினர். இதற்குள் அரசவையில் சங்கதிவெளியேற, எல்லாரும் 'கொசகொச' வென்று இரகசியம் பேசிக்கொள்ளத்தலைப்பட்டார்கள். கொஞ்சநேரத்தில் நகர் முழுதும் கவிந்து கூடியுள்ள சேனைப்படைகளுள்ளும், துணிந்தகைகளான தனிவீரர்களுள்ளும், மற்றத்தலைவர்களுள்ளும், 'மொலமொல' வென்று ஒருவிதமான கலகலப்பும், 'ஹம்' என்று அமர்ந்த சப்தமும், அசைவும், உண்டாகத்தலைப்பட்டன. அப்பொழுது அம்மாநகர்த்தோற்றம் கலைக்கப்பட்ட தேனீக்கூட்டங்கள் மொய்த்துக்கொண்டிருக்கும் ஒரு பெரிய தேன்கூண்டுபோ லிருந்தது.

C. V. S.

## செல்வநூல்.

### 5. க்ஷேத்திரம்-தனோத்பத்திஸாதனம்.*

நாம் செல்வமாக உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளும் கடைசியில் பூமியிலிருந்துதான் வரவேண்டியிருக்கிறது என்றும், அப்படி க்ஷேத்திரத்திலிருந்து பெறுவதற்கு உழைப்பும் மூலதனமும் வேண்டுமென்றும் முன் பாடத்தில் படித்தோம். இப்படி விளையும் பொருள்களின் பெருக்கம் அந்தந்தக்கால தேசானுகுணமாகவும், சீதோஷ்ணஸ்திதியனுகுணமாகவும் பலவாறாக மாறுதல் அடைகிறது. ஆயினும் அப்படி யுண்டாகும் பொருள்களெல்லாம் ஒரு நியமத்தை யனுசரித்து இருக்கிறது. குறித்த ஒரு பூமியிலிருந்து தகுந்த லாபம் வரவேண்டுமானால் அதன்பேரில் பிரயோகிக்கப்படும் உழைப்பிற்கும், மூலதனத்திற்கும் ஒரு வியவஸ்தை ஏற்படுகிறது. அதற்குமேல் உபயோகமாகும் உழைப்பிற்காகிலும் சரி, மூலதனத்திற்காகிலும் சரி, கம்மியாகத்தான் பலன் கிடைக்கும். இதை நாம் ஒரு உதாரணத்தால் விளக்கிக்காட்டுவோம். பத்து ஏகரா பூமியை நான்கு ஆட்கள் கூடிப் பண்ணையம் செய்கிறார்கள் என்று வைத்

* LAND AS AN AGENT OF PRODUCTIN.

துக்கொள்வோம். அதற்குவேண்டியஸாதன ஸாமக்கிரயைகளுடன் வேலைசெய்தால் 100 சலகை தவஸம் கிடைக்கிறது என்றும் வைத்துக்கொள்வோம். இதனால் ஆள் ஒன்றுக்கு 25 சலகையும், ஏகரா ஒன்றுக்கு 10 சலகையும் ஏற்படுகிறது. இப்போது இன்னும் ஒரு வேலையாள் அவர்களுடன் சேருவானாகில் என்னவாகும்? இக்கேள்விக்கு உத்தரம் ஒன்றேயல்ல. இவர்கள் பயிர்செய்யும் பூமி இன்னும் இளம்பூமியாயிருந்தால், ஒருவேலையாள் அதிகமானதினால் அதில்நடக்கும் வேலைப்பாடு சேர்மையாய் நடந்து 150 சலகை தவஸம் வரலாம். அப்போது ஆள் ஒன்றுக்கு 30 சலகையாகும். இப்படியே இன்னும் அதிக ஆட்கள் சேரச்சேர விளைச்சல் அதிகமாவதுடன் நபர் ஒன்றுக்குப் பிரியும் ஈவும் அதிகமாகும். ஆனால் இப்படி விளைச்சல் பெருகுவது சிறிது காலம் மட்டும்தான். பூமியிலுள்ள பிரகிருதி சக்தியின் வீச்சுக் குறையவே விளைச்சலின் வீச்சும் குறைய வாரம்பிக்கும். மொத்த வரவு அதிகமாகத் தோன்றலாம், ஆயினும் தலையொன்றுக்குப் பிரியும் ஈவு குறையத் தலைப்படும். இந்த விஷயத்தைக் கீழ் வரையப்பட்டிருக்கும் கோட்டறையில் நன்றாகக் காணலாம்.

| வேலையாட்களின் சங்கை. | ஏகரா. | விளைச்சல் மொத்தம். | ஏகரா ஒன்றுக்கு ஈவு. | ஆட்கள் நபர் ஒன்றுக்கு ஈவு. |
|---|---|---|---|---|
| 4 | 10 | 100 | 10 | 25 |
| 5 | ,, | 150 | 16 | 30 |
| 6 | ,, | 180 | 18 | 30 |
| 8 | ,, | 200 | 20 | 25 |
| 10 | ,, | 220 | 22 | 22 |
| 15 | ,, | 230 | 23 | 15⅓ |

முதல்முதல் க்ஷேத்திரத்தின் முழுச்சக்தியும் உபயோகமாகும்வரையில் உழைப்பு மிக மிக உழைப்புக்குத்தக்கபடி லாபமும் தலையொன்றுக்கு மிகுந்து வருகிறது. பிறகு ஒரு எல்லையை யடைந்த மேல், வேலையாட்கள் அதிகமாக வதிகமாக வரும்படி குறைய வாரம்பிக்கிறது. இது க்ஷேத்திரத்திற்கெல்லாம் ஸாமானியமாயுள்ள வொருநியமம். ஏனெனில் க்ஷேத்திரத்திலிருக்கும் தனோத்பத்தி செய்விக்கும் சக்தி மட்டற்றதல்ல வாகையால் சீக்கிரம் அதனது வளம் குன்றிப்போகிறது. இவைகளுக்கு முறையே செல்வநூலாளர்கள் பலோன்மீலனவிதி (The Law of Decreasing Returns), பலநிமீலனவிதி (The Law of Diminishing Returnns) என்று பெயரிட்டிருக்கிறார்கள். பலோன்மீலனம் என்பது பலம், உன்மீலனம் என்னும் இரண்டுவடசொற்றொடர். உன்மீலனமென்பது உத் பூர்வக, மீல் தாதுவினடியாகப்பிறந்த தொழிற்பெயர். இதன் பொருள் 'அதிகரித்தல்' என்பது. ஆகவே பலோன்மீலனம் என்றால் 'பெருகும் வரவு' என்றாகும். இப்படியே பலநிமீலனத்திற்கு, 'குன்றும் வரவு' என்று பொருள்படும். இப் பலோன் மீலன, நிமீலன விதிகள் இன்னவையென்று மனத்தில் நன்றாக வாங்கிக்கொண்டால்தான் செல்வநூலின் தத்வங்கள் நன்றாக விளங்கும்.

பலோன்மீலனவிதி புதிதாக வியவஸாயத்திற்குக் கொண்டுவரப்பட்ட பூமிகளில் காணப்படும். மற்றயதாகிய பலநிமீலன விதிதான் நாகரிகம் பெற்ற தேசங்களில் இருக்கப்பட்ட ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் காணப்படும் நியமம். ஆகவே க்ஷேத்திரங்களினின்றும் உத்பத்தியாகும் ஒவ்வொருபொருளும் இவ்விதியை யனுசரித்துத்தானிருக்கிறது.

மேலும், கைத்தொழிலில் உபயோகப்படும் ஒவ்வொரு வஸ்துவும் ஆதியில் க்ஷேத்திரத்திலிருந்து வரவேண்டியிருப்பதால் கைத்தொழிலும் கூட இப்பலநிமீலன விதிக்கு ஒருவாறு உட்பட்டிருக்கிறது. ஆயினும் இந்நியமம் கைத்தொழிலுக்கு நேராக வுள்ளது அல்ல. கைத்தொழில்களுக்கு முதற்காரணமான ஸாமக்கிரியைகள் வேண்டியமட்டும் இருந்தால் உழைப்பும் மூலதனமும் மிகமிக கைத்தொழிலால் உண்டுபண்ணப்படும் செல்வமும் மிகும். இங்கே பலோன்மீலன விதியேயொழிய பலநிமீலனவிதி யேற்படுகிறதில்லை. ஆயினும் கைத்தொழிலின் மூலப்பொருள்கள் க்ஷேத்திரத்தில் இருந்து ஆவதால் அவைகளைத்தொட்டு இதற்கும் சிறுபான்மை யவ்விதியேற்படலாம். ஆனால் வேலைப்பாடு அதிகரிக்க வதிகரிக்க,—ஆகவே வியவசாய ரூபமான க்ஷேத்திரசம்பந்தம் ஒதுங்க வொதுங்க,—பொருள்களின் உத்பத்தி பலநிமீலன விதியின் வீச்சுக்கு எட்டியொதுங்குகிறது. இதற்கு உதாரணமாக வாகர் (Walker) பாபஜ் (Mr. Babbage) என்னும் ஓர் அமெரிக்கா செல்வநூலாளரது பட்டியையெடுத்து வரைந்திருக்கிறார்.

அமெரிககாவில் 1832-ம் வருஷத்தில் ஒரு பவுன் விலையுள்ள இரும்பை கைக்தொழில் படுத்தினதால் உண்டாயிருந்த பொருள்களின் விலைப்பட்டி:

| | |
|---|---|
| தாண்டவாள இரும்பு | 1.10 |
| குதிரை லாடம் | 2.55 |
| இரம்பம் | 14.28 |
| கத்திரிகள் | 446.94 |
| கூர்மையானகத்தி | 657.14 |

இங்கே 657.14 விலையுள்ள கத்திகள் ஆவதற்கு ஸாதனமான இரும்பின் விலை ஒன்றுதான். பலநிமீலன விதியால் இரும்பின் விலை யதிகரித்து இரட்டிக்கினும் கத்திகளின் விலை யதிகரிக்க மாட்டாது ஆதலால் அவைகளின் உத்பத்தியும் குறையமாட்டாது. ஆகையால் வியவஸாயசம்பந்தம் ஒதுங்கவொதுங்க உழைப்பும் மூலதனமும் அதிகமாக உபயோகிக்கப்படுவதனால் கைத்தொழில் விஷயத்தில் பலநிமீலனவிதி யேற்படுகிறதில்லை.

ஜி. கஸ்தூரி ஐயங்கார், எம். ஏ.



# சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாகவிருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

## சுகத்தின் பயன். *

மனிதர் பெறக்கூடிய எல்லா நன்மைகளிலும் சுகமே விசேஷமானது.

எல்லாப் பிராணிகளுக்கும் சுகமே மிகவும் விசேஷமான பேறு. சுகத்துக்கு மிஞ்சின நன்மை இவ்வுலகின்கண் இல்லவே இல்லை. ஒருவர் துக்கமில்லாமல் சந்தோஷமாக மன ஆறுதலுடன் ஜீவிக்கவேண்டியவர் அவசியமா யடையவேண்டியது சுகத்தைவிட வேறென்ன விருக்கிறது? எல்லா தேசங்களிலும் எவ்வகைப்பட்டவர்களும் சிநேகிதர் முதலியவர்களைக் கண்டமாத்திரத்தில் செய்யும் முதல் விசாரிப்பு, "க்ஷேமமா?" அதன்பின், "குழந்தை குட்டிகள் சௌக்கியமா?" அல்லது "வீட்டி[illegible]ம் சுகமாயிருக்கிறார்களா?". இவ்விரண்டு கேள்விகளுக்கப்புறந்தான் "தாங்களிப்போது என்னவேலையிலிருக்கின்றீர்கள்" என்றிவைபோன்ற மற்றக் கேள்விகள் கேட்கத் தலைப்படுவார்கள். எல்லாவற்றிற்கும் முதன்மையானது சௌக்கியமே. நாம் உயிருடனிருப்பது முதன்மை. உயிருடனிருப்பதிலும் சுகத்துடன் ஜீவித்தல் மிக்க விசேஷம். ஒருவர் லக்ஷாதிபதியா யிருப்பினுமென்? அல்லது தேசாதிபதியா யிருப்பினு மென்? புத்திர மித்ர களத்திராதிகளாகிய சகல சம்பத்தும் பெற்று சன்மார்க்கனெனச் சகலரும் புகழ வாழ்ந்திருந்து மென்? தனக்கு நிகரொருவரு மில்லையென்று சொல்லும் வண்ணமாய் சகல சாஸ்திரங்களிலும் மிகத் தேர்ந்து கல்விப்பொருளைக் கண்டோருக்குத் தானமிடும் கல்விமானானாலு மென்? பிரம்மகுலத்தில் ஜன்மித்துமென்? எல்லாரு மிப்புவியில் இச்சிக்கும் சகல வைபவங்களுங் கிடைக்கப்பெற்றுமென்? சௌக்கியமொன் றில்லையாயின், மேற்சொன்னவைகளெல்லாம் பலனற்றுப்போமென்பதற் கையமுண்டோ? இல்லை இல்லை சம்பத்து மிகுத்துள்ள கனவான் பிள்ளைக்குச் சுதாகாரமும் வயிற்றுநோவுண்டாகி சாமப்பொழுதுகூட உறக்கமென்ப தறியாதிருப்ப

*From a tract originally written for the D. K. Agency, in 1893.

துக்கொள்வோம். அதற்கு வேண்டியஸாதன ஸாமக்கிரயைகளுடன் வேலைசெய்தால் 100 சலகை தவஸம் கிடைக்கிறது என்றும் வைத்துக்கொள்வோம். இதனால் ஆள் ஒன்றுக்கு 25 சலகையும், ஏகரா ஒன்றுக்கு 10 சலகையும் ஏற்படுகிறது. இப்போது இன்னும் ஒரு வேலையாள் அவர்களுடன் சேருவானாகில் என்னவாகும்? இக்கேள்விக்கு உத்தரம் ஒன்றேயல்ல. இவர்கள் பயிர்செய்யும் பூமி இன்னும் இளம்பூமியாயிருந்தால், ஒருவேலையாள் அதிகமானதினால் அதில்நடக்கும் வேலைப்பாடு நேர்மையாய் நடந்து 150 சலகை தவஸம் வரலாம். அப்போது ஆள் ஒன்றுக்கு 30 சலகையாகும். இப்படியே இன்னும் அதிக ஆட்கள் சேரச்சேர விளைச்சல் அதிகமாவதுடன் நபர் ஒன்றுக்குப் பிரியும் ஈவும் அதிகமாகும். ஆனால் இப்படி விளைச்சல் பெருகுவது சிறிது காலம் மட்டும்தான். பூமியிலுள்ள பிரகிருதி சக்தியின் வீச்சுக் குறையவே விளைச்சலின் வீச்சும் குறைய வாரம்பிக்கும். மொத்த வரவு அதிகமாகத் தோன்றலாம், ஆயினும் தலையொன்றுக்குப் பிரியும் ஈவு குறையத் தலைப்படும். இந்த விஷயத்தைக் கீழ் வரையப்பட்டிருக்கும் கோட்டறையில் நன்றாகக் காணலாம்.

| வேலையாட்களின் சங்கை. | ஏகரா. | விளைச்சல் மொத்தம். | ஏகரா ஒன்றுக்கு ஈவு. | ஆட்கள் நபர் ஒன்றுக்கு ஈவு. |
|---|---|---|---|---|
| 4 | 10 | 100 | 10 | 25 |
| 5 | ,, | 150 | 16 | 30 |
| 6 | ,, | 180 | 18 | 30 |
| 8 | ,, | 200 | 20 | 25 |
| 10 | ,, | 220 | 22 | 22 |
| 15 | ,, | 230 | 23 | $15\frac{1}{3}$ |

முதல்முதல் க்ஷேத்திரத்தின் முழுச்சக்தியும் உபயோகமாகும்வரையில் உழைப்பு மிகமிக, உழைப்புக்குத்தக்கபடி லாபமும் தலையொன்றுக்கு மிகுந்து வருகிறது. பிறகு ஒரு எல்லையை யடைந்த மேல், வேலையாட்கள் அதிகமாக வதிகமாக வரும்படி குறைய வாரம்பிக்கிறது. இது க்ஷேத்திரத்திற்கெல்லாம் ஸாமானியமாயுள்ள வொருநியமம். ஏனெனில் க்ஷேத்திரத்திலிருக்கும் தனோத்பத்தி செய்விக்கும் சக்தி மட்டற்றதல்ல வாகையால் சீக்கிரம் அதனது வளம் குன்றிப்போகிறது. இவைகளுக்கு முறையே செல்வநூலாளர்கள் பலோன்மீலனவிதி (The Law of Decreasing Returns), பலநிமீலனவிதி (The Law of Diminishing Returnns) என்று பெயரிட்டிருக்கிறார்கள். பலோன்மீலனம் என்பது பலம், உன்மீலனம் என்னும் இரண்டுவடசொற்றொடர். உன்மீலனமென்பது உத் பூர்வக, மீல் தாதுவினடியாகப்பிறந்த தொழிற்பெயர். இதன் பொருள் 'அதிகரித்தல்' என்பது. ஆகவே பலோன்மீலனம் என்றால் 'பெருகும் வரவு' என்றாகும். இப்படியே பலநிமீலனத்திற்கு, 'குன்றும் வரவு' என்று பொருள்படும். இப் பலோன்மீலன, நிமீலன விதிகள் இன்னவையென்று மனத்தில் நன்றாக வாங்கிக்கொண்டால்தான் செல்வநூலின் தத்வங்கள் நன்றாக விளங்கும்.

பலோன்மீலனவிதி புதிதாக வியவஸாயத்திற்குக் கொண்டுவரப்பட்ட பூமிகளில் காணப்படும். மற்றயதாகிய பலநிமீலன விதிதான் நாகரிகம் பெற்ற தேசங்களில் இருக்கப்பட்ட ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் காணப்படும் நியமம். ஆகவே க்ஷேத்திரங்களினின்றும் உத்பத்தியாகும் ஒவ்வொருபொருளும் இவ்விதியை யனுசரித்துத்தானிருக்கிறது.

மேலும், கைத்தொழிலில் உபயோகப்படும் ஒவ்வொரு வஸ்துவும் ஆதியில் க்ஷேத்திரத்திலிருந்து வரவேண்டியிருப்பதால் கைத்தொழிலும் கூட இப்பலநிமீலன விதிக்கு ஒருவாறு உட்பட்டிருக்கிறது. ஆயினும் இந்நியாயம் கைத்தொழிலுக்கு நேராக வுள்ளது அல்ல. கைத்தொழில்களுக்கு முதற்காரணமான ஸாமக்கிரியைகள் வேண்டியமட்டும் இருந்தால் உழைப்பும் மூலதனமும் மிகமிக கைத்தொழிலால் உண்டுபண்ணப்படும் செல்வமும் மிகும். இங்கே பலோன்மீலன விதியேயொழிய பலநிமீலனவிதி யேற்படுகிறதில்லை. ஆயினும் கைத்தொழிலின் மூலப்பொருள்கள் க்ஷேத்திரத்தில் இருந்து ஆவதால் அவைகளைத்தொட்டு இதற்கும் சிறுபான்மை யவ்விதியேற்படலாம். ஆனால் வேலைப்பாடு அதிகரிக்க வதிகரிக்க, —ஆகவே வியவசாயரூபமான க்ஷேத்திரசம்பந்தம் ஒதுங்க வொதுங்க,—பொருள்களின் உத்பத்தி பலநிமீலன விதியின் வீச்சுக்கு எட்டியொதுங்குகிறது. இதற்கு உதாரணமாக வாகர் (Walker). பாபஜ் (Mr. Babbage) என்னும் ஓர் அமெரிக்கா செல்வநூலாளரது பட்டியையெடுத்து வரைந்திருக்கிறார்.

அமெரிககாவில் 1832-ம் வருஷத்தில் ஒரு ...வுன் விலையுள்ள இரும்பை கைத்தொழில் ...டுத்தினதால் உண்டாயிருந்த பொருள்களின் ...விலைப்பட்டி:

| | |
|---|---|
| ...ண்டவாள இரும்பு | 1.10 |
| குதிரை லாடம் | 2.55 |
| இரம்பம் | 14.28 |
| கத்திரிகள் | 446.94 |
| கூர்மையானகத்தி | 657.14 |

இங்கே 657.14 விலையுள்ள கத்திகள் ஆவ...ற்கு ஸாதனமான இரும்பின் விலை ஒன்று ...ான். பலநிமீலன விதியால் இரும்பின் விலை ...திகரித்து இரட்டிக்கினும் கத்திகளின் விலை ...திகரிக்க மாட்டாது. ஆதலால் அவை...ளின் உத்பத்தியும் குறையமாட்டாது. ஆகை...ால் வியவஸாயசம்பந்தம் ஒதுங்கவொதுங்க ...ழைப்பும் மூலதனமும் அதிகமாக உபயோ...க்கப்படுவதனால் கைத்தொழில் விஷயத்தில் ...லநிமீலனவிதி யேற்படுகிறதில்லை.

ஜி. கஸ்தூரி ஐயங்கார், எம். ஏ.



# சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாகவிருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

## சுகத்தின் பயன். *

மனிதர் பெறக்கூடிய எல்லா நன்மைகளிலும் சுகமே விசேஷமானது.

எல்லாப் பிராணிகளுக்கும் சுகமே மிகவும் விசேஷமான பேறு. சுகத்துக்கு மிஞ்சின நன்மை இவ்வுலகின்கண் இல்லவே இல்லை. ஒருவர் துக்கமில்லாமல் சந்தோஷமாக மனஆறுதலுடன் ஜீவிக்கவேண்டியவர் அவசியமா யடையவேண்டியது சுகத்தைவிட வேறென்ன விருக்கிறது? எல்லா தேசங்களிலும் எவ்வகைப்பட்டவர்களும் சிநேகிதர் முதலியவர்களைக் கண்டமாத்திரத்தில் செய்யும் முதல் விசாரிப்பு, "க்ஷேமமா?" அதன்பின், "குழந்தை குட்டிகள் சௌக்கியமா?" அல்லது "வீட்டிலெல்லோரும் சுகமாயிருக்கிறார்களா?". இவ்விரண்டு கேள்விகளுக்கப்புறந்தான் "தாங்களிப்போது என்னவேலையிலிருக்கின்றீர்கள்" என்றிவைபோன்ற மற்றக் கேள்விகள் கேட்கத் தலைப்படுவார்கள். எல்லாவற்றிற்கும் முதன்மையானது சௌக்கியமே. நாம் உயிருடனிருப்பது முதன்மை. உயிருடனிருப்பதிலும் சுகத்துடன் ஜீவித்தல் மிக்க விசேஷம். ஒருவர் லக்ஷாதிபதியா யிருப்பினுமென்? அல்லது தேசாதிபதியா யிருப்பினு மென்? புத்திர மித்ர களத்திராதிகளாகிய சகல சம்பத்தும் பெற்று சன்மார்க்கனெனச் சகலரும் புகழ வாழ்ந்திருந்து மென்? தனக்கு நிகரொருவரு மில்லையென்று சொல்லும் வண்ணமாய் சகல சாஸ்திரங்களிலும் மிகத் தேர்ந்து கல்விப்பொருளைக் கண்டோருக்குத் தானமிடும் கல்விமானானாலு மென்? பிரம்மகுலத்தில் ஜன்மித்துமென்? எல்லாரு மிப்புவியில் இச்சிக்கும் சகல வைபவங்களுங் கிடைக்கப்பெற்றுமென்? சௌக்கியமொன் றில்லையாயின், மேற்சொன்னவைகளெல்லாம் பலனற்றுப்போமென்பதற் கையமுண்டோ? இல்லை இல்லை சம்பத்து மிகுத்துள்ள கனவான் பிள்ளைக்குச் சதாகாலமும் வயிற்றுநோவுண்டாகி சாமப்பொழுதுகூட உறக்கமென்ப தறியாதிருப்ப

* From a tract originally written for the D. K. Agency, in 189[illegible].

தை நான் கண்டு, மிக்க மன சஞ்சலத்துடன் ஜீவிப்பதைக்காட்டிலும் சாவது மெத்த நலமென நினைத்திருக்கிறேன். இராஜன் தேசமுழுவதையுமாளும் வலிமையுடையவன்தான். அவ்விஷயத்திலும் மற்றெவ்விஷயத்திலும் பிறர் இச்சிக்கக்கூடிய பதவியைத்தான் அடைந்திருந்தபோதிலும் தேகசௌக்கியமில்லாதவனாயிருந்தால், "ஐயோ! நம்முடைய வேலைக்காரன் மகன் சுகஜீவியாய் வாழ்ந்துக்கொண்டிருக்கிறானே. நம்மைவிட அவன் எவ்வளவோ சிறந்தவனா யிருக்கவேண்டும். தேகசௌக்கியமில்லாமல் இராஜ்ஜியபரிபாலனம் செய்துகொண்டிருப்பதைப்பார்க்கிலும் தேகசௌக்கியத்துடன் வேலைக்காரன் மகனாய் நான் பிறந்திருந்தால் எவ்வளவு உத்தமமா யிருக்கும்" என்று மனப்பூர்வமாய்ச் சொல்வான். இது ஒருவருக்குந் தெரியாதவிஷயமல்ல. சுகத்தின் மகிமையையும் விசேஷத்தையு மெல்லாரும் அறிந்திருக்கிறார்கள். அப்படியானால் நாம் நினைக்கக்கூடியது யாதெனில்: இப்புவியிலுள்ள எப்பொருளிலும் அற்புதமா யோர் பொருள் இருந்தால் அப்பொருளை எப்படியும் கைப்பற்ற எல்லோரும் இச்சிப்பார்களே. அப்படி அதை அடைவதுமல்லால் அப்புறம் தப்பித்தவறி யதை இழந்து விடாமல் பத்திரமாய்க் காப்பாற்றவும் முயலவேண்டுமே? சுகத்தைவிட விசேஷமான பொருள் வேறில்லை. ஆகையால் எல்லாரும் சுகத்தை யடையவும், பின்பு தாம் அடைந்த சுகத்தை இழந்துவிடாமற் காக்கவும் பிரயாசப்படவேண்டும். ஆம் அப்படிச் செய்யவேண்டியதுதான். ஆனால் அநுபோகத்தில் நாம் காணுவதுமட்டும் வேறாயிருக்கிறது. ஒருவனும்தான் வியாதிப்படவேண்டுமென்று கோறமாட்டான். வியாதி இல்லாமல் சுகமாயிருக்கவும் இச்சைப்படுவான். ஆனால் வியாதியற்றிருப்பதற் கவசியமான வழிகள் எவ்வெவையென செவ்வையாய் யோசித்து அவ்வழியில் நடக்கப் பிரயாசப்படுவது மிக அபூர்வம். ஜனங்களில் விசேஷபகுதியோர் தேக சௌக்கியத்தைக் குறித்து சற்றேனும் யோசிக்கிறதேயில்லை. நமக்கு எவ்வளவும் பலனற்ற ஒரு பொருளை எப்படி அலக்ஷியம் செய்வோமோ அவ்விதமாகவே அனேகர் சுகத்தையும் ஜீவனையும் அலக்ஷியம் செய்கின்றனர். இதன் முடிவு அற்பாயிசும் அலங்கோல வாழ்வுமாயிருக்கிறது. வயதுமுதிர்ந்தும், கொலை முதலியவைகளால் திடீலென்று அகஸ்மாத்தாயும் இறந்துபோவது மகாகொஞ்சம் பேர்தான். வருமுன்காப்போ[illegible]ப்போல வராமல் தடுக்கக்கூடிய வியாதிகளேத்த[illegible]விருக்கின்றன. இவைகளால் வருஷாவருஷம் இவ்விந்தியாவிலிறக்கும் பிராணிகளையோ எண்ணி முடியாது. சற்றேறக்குறைய 20 லக்ஷமெனச் சொல்லலாம். மேலும் மேற்சொன்ன தடுக்கத்தகுந்த வியாதிகளால் தாங்கள் சாமளவும் அவஸ்தைப்பட்டு சஞ்சலத்துடன் காலங்கழிப்பவர் 2-கோடி யென மதிப்பிடலாம். இப்படி யிருப்பதின் காரணமென்? ஒன்றை நன்மையென வறிந்தும் அதையடைய முயலாதிருப்பது எதனால்? இதற்கு இரண்டு காரணங்களுண்டு.

*சுகவழிகளை ஜனங்கள் அனுஷ்டிக்கா திருப்பதின் காரணங்கள்.*

சுகத்தினால் வரு மின்பங்களையும் அசுகத்தினால் வருந் துன்பங்களையு மறியாதவரில்லை யென்றாலும், அச் சுகத்தை யடையும் வழி யின்னதென்று பெரும்பான்மையோ ரறியார். இஃதொன்று. சில ரிவைகளை முற்று மறிந்தாலும் உணர்ச்சி யின்மையாலோ, அல்லது நமது முன்னோர்கள் நாடாத நவீன முறைகளென்று எண்ணியோ அவ்வழிகளை யனுஷ்டானத்திற்குக் கொண்டுவருகிறதில்லை. வியாதி எப்படி யுண்டாகிறது? அகாரணமாய்த் தன்னைத் தானே யது சிருஷ்டித்துக்கொண்டதா? இல்லையெனின் நம்முடம்பில் அதுண்டாகவேண்டிய காரணமென்ன? வியாதி எப்படிப்பட்டது? எந்தெந்த நிலைமையிலிருந்தால் என்னென்ன வியாதி ஜனிக்கும்? அப்படி யவைகளுண்டாகாதபடி தடுக்கக்கூடிய முறைகள் யாவை? அப்படியே யுண்டாய்விட்டாலும் சொஸ்தப்படுத்தும் விதமென்ன? என்றிவையெல்லாம் அறியாதவர் பலர். அறிந்தோர் சிலரும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரக்கூடாமற்செய்ய தரித்திரம், சோம்பல், புதுமை முதலியவைகளெல்லாம் வந்து சம்பவிக்கின்றன. மேலும் "வியாதி வராமல் தடுக்க நம்மாலென்னவிருக்கிறது. அவனன்றி யோரணுவு மசையாது. சுவாமியின் ஆக்ஞையில்லாமல் என்ன காரியந்தான் முடிவுக்குவரும். வரும் விதி இராத் தங்குமா? ஆகையால் நாம்செய்யவேண்டியது ஒன்றுமில்லை" யென்று எண்ணுகிறது மல்லாமல் மற்றோருக்கும் ஆறுதல் சொல்லிப்போதித்து வருபவர்களு முளர். சுவாமியின் ஆக்ஞையில்லாமல் ஒன்றும் நடவாதென்பது வாஸ்தவமானாலும், அவரால் கொடுக்கப்பெற்றிருக்கும் புத்தியை யுபயோகப்படுத்தாமலிருப்பது மதியீனமல்லவோ? மனுஷனால் ஆவது ஒன்றுமில்லை எல்லாம் சுவாமியால் ஆவதுதான் என்றால், தோட்டவேலை செய்பவனும் வீட்டில் கைகட்டிக்கொண்டு வரும் விதி தானே வரும்



என்று நம்பிக்கையுடனிருந்தால் ஐயனே என்றழைத்து யாராலும் அமுது படைப்பார்களா? ஒருவன் ஓர் உத்தியோகத்தில் அமர்ந்த மாத்திரத்தில் எஜமானிடத்திற்போய் நான் நன்றாய் வேலைபழகியிருக்கிறேன், என் சம்பளம் உயர்த்தவேண்டுமென்று கேட்பதுமல்லாமல் இன்னும் அவ்விஷயத்தில் என்னென்ன முயற்சியெல்லா மெடுக்கிறான். ஏனப்படிச்செய்யவேண்டும்? ஒருவன் வருஷம் முழுவதும் வாசித்து பரீட்சை ஏன்கொடுக்கவேண்டும். வருவதுதானே வரும் என்று நினைத்துக்கொண்டேயிருந்தாற் போதாதா? அப்படி எத்தனைபேர் மனத்திருப்திகரத்தோடிருக்கிறார்கள்? ஒருவருமில்லை. ஆகையால் எதிலும் நாம் நாடாமல் ஒருபொருளும் நமக்குக் கைகூடாது. இழந்துவிட்டால் இலேசாய் என்றாலும் சம்பாதிக்கக்கூடிய பொருள்களை மனிதர் எத்தனை கவனத்துடன் பாது காக்கிறார்கள்? தன் மேல்வேஷ்டியையாவது மோதிரத்தையாவது மற்றொருவன் எடுத்துக்கொண்டுபோக யாராவது சம்மதிப்பார்களா? ஒருக்காலும் சம்மதியார்களே. என்றாலும், இவைகளெல்லாம் எளிதில்சம்பாதிக்கக் கூடியவைகள்தானே. அடுத்த வீட்டில் நேற்றிரவு நடுச்சாமத்தில் அண்டை அயலார்கள் அயர்ந்து நித்திரை செய்யும்போது திருடர் புகுந்து அடுக்கடுக்காய் வைத்திருந்த தட்டுமுட்டு சாமான்களையும் பெட்டிப்பணத்தையும் கட்டித் தூக்கிக்கொண்டு போய்விட்டார்களென்று கேள்விப்பட்டால் உடனே தன் வீட்டைப்பத்திரப் படுத்துவதற்கு என்னென்ன ஏற்பாடெல்லாம் செய்வார்களென்பதை இங்கு விவரிக்கவேண்டுமா? அப்படியே பக்கத்து வீட்டுப் பையனுக்குக் காய்ச்சல் அல்லது வாந்திபேதியுண்டாயிற்றென்று தெரிந்தால் தன் வீட்டிலவைகளுண்டாகாதிருக்கும் வண்ணம் காக்க என்னென்ன முயற்சி செய்யவேண்டும். முன்சொன்ன வகையிலோ பொருள்மட்டும் நஷ்டமாகும். அதை யெப்போதும் சம்பாதித்துக்கொள்ளலாம். ஆனால் இவ்விஷயத்திலோ சுகாஷ்டமும் பிராணசங்கட்டமும் சம்பவிக்கின்றன. பிராணனைவிட விசேஷமாய் மதிக்கத்தக்க பொருள் ஒன்றுமில்லையே. அப்படியிருந்தும் மனிதர் இதைக் கவனிக்கிறதில்லை.

*சுகாதாரவிதிகளை யனுஷ்டித்ததாலும் தேகப்பயிற்சியாலும் நாகரிகத்தில் விர்த்தியடைந்த ஜாதியார்.*

பூர்வம் நாகரிகத்தில் விசேஷித்தவர்களென்று பேர்பெற்ற ஜாதியாரில் அனேகர் சுகாதார விஷயமாக அனேகவித ஏற்பாடுகள் செய்துவந்ததாகத் தெரிகிறது. சுகத்தையும் தேகத்தையும் பேணுவதில் அவ்வளவு சிரத்தையா யிருந்ததினாலேயே அவர்கள் மற்றெல்லா ஜாதியாரையும் ஜயித்து ஆளக்கூடிய வலிமை பெற்றவர்களானார்கள். உதாரணமாக கிரேக்கர் சரித்திரத்தை வாசித்தறிந்த ஒவ்வொருவருக்கும் இவ்விஷயம் நன்றாய்ப் புலப்படும், யுத்தத்திலும், கைத்தொழில், சித்திரம் முதலிய நாகரிக வித்தைகள் சகலத்திலும் பேர் பெற்றவர்கள். அத்தேசத்திலிருந்துதான் அன்னிய ஐரோப்பிய தேசத்தோர் ஆயுதப்பயிற்சி முதலிய அனேக சிறந்த வித்தைகளைக் கற்றுக்கொண்டார்கள். இப்படி மற்றவர்களைவிட கிரேக்கரைப் பிரதமஸ்தானத்துக்கு வரும்படி செய்ததும், அவர்கள் தேகத்தைப் பலப்படுத்தினதும், அவர்களுக்கு மகத்துவம் உண்டாக்கினதும், அவர்கள் அதிகாரத்தைப் பரப்பி அவர்களுக்குச் செல்வாக்கு உண்டாகப் பிறர் அவர்களுக்கு அடங்கி அவர்களை யபிமானிக்கும்படிச் செய்ததும், அவர்கள் மேன்மை பெறுவதற்கு மூலாதாரமாயிருந்ததும் எதுவென்றால், அவர்கள் சுகாதார தேகாப்பியாச விஷயங்களில் எடுத்துக்கொண்ட கவலை. எப்படியெனில் சுகாதார முறைகளை யனுஷ்டிப்பதாலும், தேகப்பயிற்சியாலும் சுகமும் புஜபலபராக்கிரமங்களு முண்டாகின்றன. சுகமுள்ள சரீரமுடையவர்களுக்கு கூர்மையுள்ள புத்தி விவேக முண்டாகிறதென்பது சகஜம். ஆகவே பலமும் புத்தியும் ஒருவரிடத்திருந்தால் அவர்களுக்கு மேற்சொன்ன மேன்மை யுண்டாகுமென்பதிற் றடையில்லை. கிரேக்கருக்கு அடுத்தாப்போல் உன்னதஸ்தானத்துக்கு வந்தது உரோமர். இவர்கள் வரவர கிரேக்கரை மிஞ்சிவிட்டார்கள். காற்றோட்ட விஷயங்களிலும், மழை ஜலம் கட்டி நிற்காமல் வடிந்துபோகவும், ஜலதாரைகள் முதலிய பற்பல விர்த்தியான முறைகளைக்கண்டு பிடித்தார்கள். சுத்தஜலம், சுத்த ஆகாயம் இவைகளின் பிரயோஜன மின்னதென் றறிந்து, அவைகளைப் பெறுதற்கு வேண்டிய முயற்சி செய்திருக்கிறார்கள்.

*இந்தியாவிலுள்ள பூர்வீகர்களுக்கும் சுகாதாரமுறைகள் தெரிந்திருந்தன.*

இப்படிக்கிருக்க இந்தியாவிலும் இவ்விஷயம் பூர்வீகர்களுக்குத் தெரியாதென்று சொல்லவிடமில்லை. மனுதர்ம சாஸ்திரம் முதலிய பூர்வீக கிரந்தங்களில் சுகாதார விஷயமாக எத்தனையோ ஸ்லோகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அதுவுமல்லாமல் அவ்வழிகளில் நடவாதவர்களுக்கு தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கின்றது.

*தர்ம சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் சுகாதார முறைகள் எதனால் பயன்படாது போயிற்று.*

இப்படிக்கிருந்தும் சுசியின்பொருட்டு இவ்விதிகளேற்பட் டிருந்தபோதிலும், அவைகளை மதவிஷயங்களுடன் கலந்து அவ்விதிகளின் பிரகாரம் நடக்கத்தவறினால் சுகவீனம் எப்படியும் சம்பவிக்கும் என்றதைத் தெளிவாய் விவரிக்காமல், ஜாதிப் பிரஷ்டத்துவமும், மதானுசாரத்துக்கும் வைதீக முறைமைக்கும் கேடும் உண்டாகுமென்றே சொல்லி யிருப்பதால், அவைகள் வரவரப் பயன்படாது போயிற்றென் றெண்ண விடமிருக்கிறது. எப்படியெனில் "ஒருவன் பிராதக்காலத்தில் ஸ்நானம் செய்யத்தவறினால் அது ஆசாரக் குறைவு" என்ற ஐதீக மிப்புஸ்தகங்களில் ஏற்படுத்தி யிருக்கிறது. "ஒருவன் தன் வீட்டின் சமீபத்தில் அழுகி நாற்றம் வீசும் பதார்த்தங்களைப் போட்டிருப்பானுனாலும், பிறர் போட்டிருக்கப் பார்த்துக் கொண் ... ந்தாலும், அவனுக்கு அதனால் மதவிஷயமான ... சம்பவிக்கும்" என்ற ஐதீகமு மேற்படுகிறது. இப்படி சுகாதார விதிகளை மதசம்பந்தப் படுத்தியிருப்பது இக்காலத்தவரான நமக்கு அனுவசியம் எனத் தோற்றுகிறது. இதைவிட "ஒருவன் பிரதிதினமும் தன் தேகத்திலிருக்கும் அழுக்கு நிவர்த்தியாகும் பொருட்டாய் ஸ்நானம் செய்யாவிடில், நாளாவட்டத்தில் அவ்வழுக்கு நிரம்பி தேகத்திலுள்ள மயிர்த்துவாரங்களை யடைத்துவிடுவதால் வேர்வை சரியானபடி வெளியாகாமல் உள்ளடங்கி துர்நீர் அதிகப்பட்டு சொரி சிறங்கு உண்டுபண்ணுவதுமல்லாமல், உடம்பிலிருக்கும் உஷ்ணம் அப்போதைக்கப்போது சாந்தியாகாமல் விர்த்தியாகி காய்ச்சல் முதலிய வியாதிகளையு முண்டாக்கும்" "தன் வீட்டைச்சுற்றி துர்நாற்ற முண்டாகக்கூடிய அழுகின வஸ்துக்களைப் போட்டு வைத்தால், அவைகளினின்றுண்டாகும் துர்நாற்றம் நாம் சுவாசிக்கும் ஆகாயத்திற் கலந்து, சுவாசத்தின் தொழிலாகிய இரத்தசுத்தியைத் தடைப்படுத்தும்" என்று தெளிவாய்ச் சொல்லியிருந்தா லவ்விஷயத்தில் ஜனங்களுக்கிவ்வளவு அசிரத்தை பிறந்திருக்குமென்றெமக்கு தோன்றவில்லை. ஆனால் டாக்டர் கிங் சொல்லியபடி அக்காலத்திற்கு அதுவே உசிதமான ஏற்பாடாக அவர்களுக்குத் தோற்றியது. "சுகாதார விதிகட்கு மாறாக ஒழுகியவர்களை நியாயஸ்தலத்திற்குக் கொணடுவரும்படியான இக்காலத்துள்ள முனிசிபல் கௌன்ஸில்களும், லோகல் போர்டுகளும் அக்காலத்திலில்லையாகலின் அப்பூர்வீக காலத்து ஜனங்களுடைய மனதில் சுகாதார விதிகட்கு மாறாக ஒழிகியவர்கட்கு நேராக தண்டனையுண்டென்னும் பயத்தைப் புகட்டவேண்டியதாயிருந்தது. இதுவும் தகுந்த ஒரு தடையாகவேயிருந்தது." அது எப்படியானாலுமென்ன? பூர்வீகர்களுக்கு சுகாதார விஷயத்திலுள்ள நன்மைகள் முற்றும் தெரிந்திருந்தும், வரவர விர்த்தியாகாமல் க்ஷீணித்துப்போயிற்று. இப்போது நாம் காண்பதெல்லாம் இந்துக்களுக்கும் சுகாதார விஷயங்களொன்றுந் தெரியாதென்று சொல்லுவதற் கேஷிபமான ஸ்திதியி லிருக்கின்றனவேயன்றி வேறல்ல.

*இங்கிலாந்தில் பூர்வீக ஸ்திதியும் தற்கால விர்த்தியும்.*

இங்கிலாந்தும் சில வருஷங்களுக்குமுன் னப்படித்தானிருந்தது. 50 - வருஷங்களுக்குமுன் அத்தேசத்தில் எங்கும் ஆகாயம் ஜலம் பூமி இவைகளெல்லாம் அசுத்தமானதாகவேயிருந்தனவென்று தெரிகிறது; வைசூரிகுத்தும் விதமும், அதனால் விளையும் பயனும் ஒருவருக்கும் தெரியாது; பொதுநன்மைக்குபயோகமான முயற்சிகள் செய்வதற்குப் போதுமான பொருள் சேர்க்கும் விதம் தெரியாது; ஜனனமரண கணக்குகள் வைக்கப்படவேயில்லை. வியாதிப்பட்டுக்கிடக்கும் ஜனங்களின் தொகையையும் மதிப்பிடஹேதுவில்லை. இப்படி கேவல ஸ்திதியிலிருந்த இங்கிலாந்துதேச மிப்போது என்ன ஸ்திதியிலிருக்கிறது பாருங்கள். இவ்வளவு சீக்கிரத்தில் திடீரென்று இம்மாறுத லெப்படி யுண்டாயிற்றென்றால், 1837-ம் வருஷத்தில் முதல் முதல் ஜனனமரணங்களைக் கணக்கிடவேண்டுமென்ற நிபந்தனை யேற்பட்டது. அப்படி முதல்தரம் கணக்கிடப்பட்டதும் இராஜாங்கததாருக்கு மிகவும் ஆச்சரியத்தையும் துக்கத்தையும் உண்டாக்கிற்று. மனிதர் தடுக்கக்கூடும் அற்ப வியாதிகளால் ஆயிரமாயிரமாய் மாண்டு போவதையும், இன்னு மனேகமாயிரம் ஜனங்கள் அனேகவித வியாதிகளி லழுந்தி அவஸ்தைப் பட்டுக்கொண்டிருப்பதையும், அடிக்கடிவாந்திபேதிமுதலிய அனேக விஷ வியாதிகள் திடீரென்று பரவி சொற்பகாலத்துக்குள் கணக்கற்ற ஊர்களைப் பிணக்குவியலாக்கி விடுவதையும் இராஜாங்கத்தார் பார்த்தவுடனே, இனி யிதற்கேதாவது உபாயந் தேடவேண்டும், இல்லையாகில் நமது பிரதான நகருங்கூட சில நாளையில் பாழாய்விடும் என்று யோசிக்கத் துவங்கினார்கள். இவ்வித ஆரம்பத்தைப்பற்றி மட்டும் குறிப்பாய்ச்சொல்ல நம்மால் முடியுமேயன்றி, அது எப்படி விர்த்தியடைந்தது என்று சொல்ல நம்க்கு



சாத்தியமில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் விர்த்தியாயிற்றென்றே சொல்லலாம். இவைகளுக்கு விசேஷ காரணகர்த்தா ஒருவரென்று குறிப்பிட்டுச்சொல்ல முடியாது. எல்லாருக்கும் சுகாதாரவழிகளை விருத்திசெய்யவேண்டுமென்ற ஆவலிருந்ததால், அவரவர்களுக்குத் தெரிந்தமட்டும் அப்போதைக்கப்போது விர்த்திசெய்துவந்தார்கள். செய்யவே எங்கும் மரணம் குறைந்து தேக ஆரோக்கிய மிகுந்து ஜனங்கள் செழிப்படைந்தார்கள். எங்கெங்கே விசேஷ முயற்சிகள் செய்யப்பட்டனவோ அங்கங்கே சுக விர்த்தி விசேஷமா யுண்டாயிற்று. இவ்விஷயத்தில் இங்கிலாந்தில் செலவாயிருக்கும் பணத்துக்கோ கணக்குவழக்கில்லை. அனேக கனவான்களின் சொந்தச்செலவும், லோக்கல் போர்டாருடைய வசூல்களும் போக, கி. பி. 1848 ம்ஷுத்திலிருந்து 18?6-ம் வருஷம் வரைக்கும் செலவான தொகையில் கடன் வாங்கிச் செலவழித்ததுமட்டும் 13-கோடி பவுன். அதாவது கிட்டத்தட்ட 200 - கோடி ரூபாய். அப்படியானால் மொத்தச்செலவை மதிப்பிட்டுப் பார்த்துக்கொள்ளலாம். இதற்குத் தக்கவிதமாய் ஜனங்கள் சுகவிர்த்தியடைந்து க்ஷேமப்பட்டிருக்கிறார்கள். 1,000-ஜனங்களுக்கு மரணம் 50-ஆகவிருந்தது இப்போது 15-ஆகியிருக்கிறது. இன்னும் கொஞ்சக்காலத்தில் மரணம் 1,000-த்துக்கு 12-ஆகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

*இந்தியாவிலும் விர்த்தி செய்வது அவசியமானகாரியம்.*

ஜனசங்கியை யதிகரித்து வீடுகள் நெருங்கி அங்கங்கே சதுப்புநிலமுள்ள இங்கிலாந்திலேயே இவ்வித விர்த்தி செய்யப்பட்டிருந்தால், ஜனசங்கியை குறைந்ததும், அங்கங்கே அகண்ட வெளியுள்ளதும், மேட்டுப்பாங்கு நிலமடங்கியதுமான இவ்விந்தியாவிலேன் சாத்தியப்படமாட்டாது? கல்கத்தா, சென்னை முதலிய பெரிய பட்டணங்களில் சுத்த ஜலப்பிரயோகத்தால் வாந்தி பேதியினாலுண்டாகும் மரணம் சற்று குறைந்திருக்கின்றது. இராணுவஸ்தானங்களிலும் சிறைச்சாலைகளிலும் அனுஷ்டித்துவரும் நல்ல முறைகளால், மரணத்தொகை யவ்விடங்களில் விசேஷமாய்க் குறைந்திருப்பது பிரசித்தமாய் எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். இந்தியாவில் இப்படி குறிப்பிட்ட விடங்களைப்பற்றியே நமக்கு சமாசாரங்கள் தெரியக்கூடுமேயொழிய, மொத்தமாய் எல்லா விடங்களைப்பற்றிப் பேச கணக்குகள் கிடையா. முனிசிபாலிடி கணக்குகள் கொஞ்சம் நம்பக்கூடியதாயிருக்கின்றன. இவைகளில் 1,000-ஜனத்தொகையானால் மரணம் 30-ஆகிறதாக கணக்கிடலாம். இம்மரணங்களில் பாதி, அதாவது 1,000-த்துக்கு 15 - தடுக்கக்கூடிய வியாதிகளினால் நேர்ந்தனவென்று தெரியவருகிறது. வாந்திபேதி, வைசூரி, அனேக விதமான காய்ச்சல், வயிற்றிரைச்சல் இந்த நான்கு முக்கிய வியாதிகளாலேயே விசேஷித்த மரணங்கள் நேர்ந்திருக்கின்றன. இவைகளில் சிலவற்றைத் தடுக்கலாம், சிலவற்றை முற்றிலுந் தடுக்காவிட்டாலும் அனேகமாகத் தணித்து சாந்தப்படுத்தலாம்.

(இன்னும்வரும்)

## சம்பகமாலை

அல்லது

## இளையராஜாவின் தீர்மானம்.

### அங்கம் III.

---

### ஐந்தாம் களம்.

---

இடம்: ஒரு காட்டுமுனையில் வில்லிகளுடைய குடிசைகள்.

(டேங்காவில்லி சுடப்பட்ட புலியொன்றை இழுத்துக் கொண்டும், ஒரு காவடியில் இருபுறமும் முள்ளம்பன்றிகளைக்கட்டித் தூக்கிக்கொண்டும் பிரவேசிக்கிறான்).

**டேங்காவில்லி.**—(பிரவேசித்துக்கொண்டே) அடே! டாண்டியா! அடேபூமியா! அடே! மந்தாலிகா! அடிடோலி! எல்லோரும் வாருங்கள்! எல்லோரும் வாருங்கள். இன்றைக்கு நமக்கு பெரியவிருந்து. வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள்!

(குடிசைகளினின்று ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும் ஓடிவருகிறார்கள்.)

**டாண்டியா.**—(புலியைப் புரட்டிப்பார்த்து) அடேயப்பா! இது பெரியபுலி. யார் கொன்றார் மாமா?

**டேங்காவில்லி.**—அடே! பைத்தியக்காரா! வேறியாவது கொன்றால் நானேன்கொண்டுவருகிறேன்.

**மந்தாலிகா.**—(டேங்காவின் முதுகைத்தட்டி) அண்ணா! அண்ணா! இது வெகுகோபமான புலி, எப்படிசுட்டாய் அண்ணா! உன்னைப் புலி கடிக்கவில்லையா?

**டேங்காவில்லி.**—(தன் சூலத்தைக்காண்பித்து) இதனால் ஒரு குத்து குத்தினேன் தம்பி!

**டாண்டியா.**—அடே போடா! மாமா பொய் சொல்லுகிறான்; குதிரையின்மேல் குந்தியன்றோ குத்தவேண்டும். குதிரை ஏதடா மாமனுக்கு.

**டேங்காவில்லி.**—அடேபோடா! உனக்கு என்னேடாதெரியும், புலியைக்கண்டால் கிலிபிடிக்குமே உனக்கு இதோ பார்த்தாயேடா முதுகில் புலி அடித்தகாயம்.

**டோலி.**—ஐயோ! மாமா (கழுத்தில் கையைக் கோத்துக்கொண்டு) செத்தாயோ மாமா! பிழைத்துவந்தாயாமாமா! சீட்லாம்மாதா காப்பாற்றினாளா உன்னை. ஐயோ! நீ புலிவாயில் விழுந்திருந்தால் என் குழந்தையின் கதியென்ன? என்கதியென்ன?

**ஒதுணி.**—அடிபோடி! டோலி! எங்கள் மாமா என்ன இளப்பமோ! இதோ பார்த்தாயா! எவ்வளவு முள்ளம்பன்றிகளடி (ஒன்றைக்கையால் பிடித்துக்காட்டி) இதைச் சமைத்தால் நன்றாயிருக்குமடி!

**டோலி.**—சமைக்கிறது அப்படி யிருக்கட்டுமடி ஒகுணி! உனக்கு நிரம்ப கொழுப்புப் பிடித்திருக்கிறதுபோலிருக்கிறது. என் மாமா உனக்குக்கூட மாமனோடி பத்திரம்! ஜாக்கிரதை!

**ஒதுணி.**—என்னடி ஜாக்கிரதை! அவன் உனக்கு மாத்திரந்தான் மாமனோடி, அவனை முதுகில் கட்டிக்கொண்டிருக்கிறாயோ.

**டோலி.**—அல்லது என்ன, உன்னை இலக்ஷியம்செய்வானோ அவன். என் தகப்பன் எட்டு எருமை சீதனம் கொடுத்தான். உன் அப்பன் என்னடி கொடுத்தான்?

**ஒதுணி.**—அடிபோடி! பைத்தியக்காரி! மாமாவுக்கு வீட்டுவேலைக்காரியடி நீ. மாமா என்னோடல்லவோ நேற்று ரகசியமாய் சொல்லிவிட்டு வேட்டைக்குப்போனான்.

**டோலி.**—(டேங்காவின் தாடையில் குத்திவிட்டு) இப்படித்தானா நீ வஞ்சனைசெய்வது! எனக்கு வேண்டாம் இந்தப் புலியும் கிலியும். நீங்களெல்லாம் சாப்பிடுங்கள். நான்போகிறேன்.

**பூமியா.**—(துணியைப்பிடித்திழுத்து) அடி போகாதடி டோலி! அவன் வேண்டாது போனால் என்னை கலியாணம் பண்ணிக்கொள்.

**ஒதுணி.**—அப்படிசெய் மாமா.

**டோலி.**—என்னடி! சனி ஒழியட்டுமென்று பார்க்கிறாயோ? நானேனடி விடுவேனவனை. அவனைப்போல் சூரனாரடி! நீவேண்டுமென்றால் அவனைக் கல்லியாணம்செய்து கொள்ளடி! நான் மாட்டேன்.

**பூமியா.**—சண்டை நிறுத்துங்கள். இப்போது நாமெல்லோரும் சேர்ந்து சீட்லாமாதாவுக்குப் பூஜைசெய்யலாம். புலியின் வாயினின்று டேங்கா மிகுந்துவந்தானே. அடி ஒகுணி! சீட்லாமாதாவைக்கொண்டுவந்துவை.

(ஒரு கலசம் கொண்டுவந்துவைக்கிறாள்.)

மாமிசங்களைப் படைத்து சுற்றிலும் எல்லோரும் ஆடிக்கொண்டே சுற்றிவருகிறார்கள்.

கொன்றவிப்புலியின் நல்லகொழுவிய தசைகளெல்லாம்
நன்றெனுமாறுதீயின் நறுமணம் வீசக்காய்ச்சி
இன்றுனக்கேற்குமாறு ஏற்பிப்போம் சீட்லமாதா
என்றுநின்னன்பர் எம்மை இசைவுடன் காப்பாய்காபபாய்

காட்டினில் வேட்டைமல்கக் கானவர்குலம் விளங்க
வேட்டுவர் நம்குலத்து வெம்மறச் சீட்லமாதா
தாட்டுணை வாழ்த்தவிங்கு தாமதமின்றிவாரும்
வேட்டவை எல்லாம்பெற்று மேன்மையாய் வாழலாகும்.

வழங்கரியும்புலியும் மதகரியும் பிடிப்போம்
கொழுமையுள்ள பலநற்கிழங்கு கல்லியெடுப்போம்.

செழுங்கனிகள்சிதறும் தேறலைவாய் மடுப்போம்
தழங்கருவிதாழும் தாழ்வரையிற்படுப்போம்

காடுநன்றாய்ச் செழித்தால் கவலையொன்றுமில்லோம்
மாடுமனையாதி வளமதிக்க இல்லோம்.

நாடி எமையடையும் அன்பருக்கு நல்லோம்
கேடுசெய எண்ணும் கீழவர்க்குப் பொல்லோம்.

(சோண்டாவும் ராஜதேவனும் வருகிறார்கள்.)

**டேங்கா.**—அடே! பூமியா! அடே! டாண்டியா அடே! மந்தாலிகா! நம்மகாராஜாக்களிருவரும் வந்திருக்கின்றார்களடா! எல்லோரும்வந்து கும்பிடுங்கள்.

(எல்லோரும் வந்து கும்பிடுகிறார்கள்.)

**டேங்கா.**—மகாராஜாக்களே! எங்களுடைய குடிசைகளை நோக்கித் தாங்களிருவரும் வந்ததும் என்ன? காக்கையின் காலில் ஒரு சீட்டுக்கட்டி அனுப்பினாலும் நொடிக்குள் அரண்மனைக்கு வந்து தங்களைக்கண்டுகொள்வோமே! எங்



ளாலாகவேண்டுவ தென்ன மகாராஜ்! காத்துக்கொண்டிருக்கிறோம்.

**சோண்டா.**—நாங்கள்வந்தகாரியம் அரண்மனையில் பேசத்தகுந்ததல்ல (சற்றே தூர அழைத்துப் போய்) டேங்கா! உன்னுடைய பந்துக்களும் ஜாதியாரும் இத்தேசத்து மகாராணுக்களுக்குச் செய்த நன்மை அளவற்றது, "அஹிரா வேட்டையிலும் சரிதான், கோட்டையைக் காப்பாற்றுவதிலும் சரிதான்", சண்டைகளிலும் சரிதான் உங்களுடைய ரத்தத்தை ஆறாகப் பெருகவிட்டிருக்கிறீர்கள். அதற்குக் கைம்மாறுகிடையாது.

**டேங்கா.**—மகாராஜ்! வேறு கைம்மாறு என்னத்திற்கு? எங்களுக்குவேண்டியது நிர்ப்பந்தமில்லாத வாழ்க்கை. அது உங்களுடைய தேசத்தில் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

**சோண்டா.**—அதற்கு ஒருக்காலும் குறைவுநேரிடாது.

**டேங்கா.**- எங்களுக்கு வேறொன்றும்வேண்டுவதில்லை. எங்களுடைய ஆயுதங்களும், நாங்களும் யாவும் உங்களுடைய சொத்துதான். தாங்கள் இங்கு வர நேரிட்ட காரணம் சொல்லும் மகாராஜா!

**சோண்டா.**—சொல்லுகின்றேன் டேங்கா! முன்னால் ரகசியத்தை வெளியாக்குவதில்லை யென்றும், நான் சொல்வதைத்தப்பாது கேட்பதாயும் சத்தியம் செய்துகொடு டேங்கா! பிறகு சொல்லுகின்றேன்.

**டேங்கா.**—அப்படியே மகாராஜ்!

**சோண்டா.**- (தரையில் ஒரு சிறு குழியைத்தோண்டி கையில் ஒரு சிறுகல்லை வைத்துக்கொண்டு) இதோபார் டேங்கா! ரகசியத்தைக் காப்பாற்றுவதாயும், நல்லகாலத்திலும் கெட்டகாலத்திலும் எனக்கு அடங்கி நடப்பதாயும், நீ ஆங்காங்கு கேட்கும் ரகசியங்களை எனக்குத்தெரிவிப்பதாயும் சத்தியம் செய்துகொடு. இதைத் தவறினால் (கல்லைக் குழியிற்போட்டு) இந்த கல்லைப்போல் உங்களுடைய பிதுருக்கள் செய்த நற்செய்கையெல்லாம் வண்ணானுடைய இணற்றில் விழக்கிடவன.

**டேங்கா.**—சீட்லாமாதா சாக்ஷியாய் உங்களுக்குச் சகாயஞ்செய்கின்றேன். நான் உங்களுக்கு என்ன செய்யட்டும்.

**சோண்டா.**—நான் குறிப்பாய் சில ரகசியங்களைச் சொல்லுகின்றேன், அதற்குமேல் ஒன்றையும் கேட்கவேண்டாம்.

**டேங்கா.**—நல்லது மகாராஜ்!

**சோண்டா.**-ராணிக்குத் தன் உறவினரைக்கொண்டு ஆளுகை செலுத்தவேண்டுமென்ற கோரிக்கையிருப்பதாகக் காணப்படுகிறது. அதற்கு நான் இஷ்டப்படவில்லை யாகையால் இத்தேசத்தை விட்டு வெளியே போயிருக்க எண்ணம் கொண்டிருக்கின்றேன். மாண்டு மகாராஜா எனக்குச் சொந்தமாக ஊலார் மாகாணத்தைக் கொடுத்திருக்கின்றார். நான் அங்கே வசிக்கப்போகின்றேன். உங்களில் வீரர்களான இருநூறுவேட்டைக்காரர்கள் ஆயுதங்களுடன் என் மாகாணத்தில் வசிக்கவேண்டும். நான் சொல்வதைத் தப்பாமல் செய்யவேண்டும்.

**டேங்கா.**—அப்படியே செய்கிறோம் மகாராஜ்! உங்களுடைய கட்டளையை மீறுவோமா?

**சோண்டா.**—உங்களுடைய பெண்டு பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டுவரலாகாது. அவர்களை எல்லாம் சித்தூர்க்கோட்டையில் குடியிருத்தவேணும். அவர்களெல்லோரும் வாசற்காப்போருக்கு ஊழியம்செய்துக்கொண்டிருக்கட்டும். நடக்கவேண்டியதைப் பிறகு சொல்லுகின்றேன். சீக்கிரம்! சீக்கிரம்!

**டேங்கா.**—நாங்கள் வேண்டியவைகளைச் சித்தம்செய்துகொண்டு வழியில் உங்களைக் கலந்துகொள்ளுகிறோம் மகாராஜ்!

(வில்லிகள் போகிறார்கள்).

**சோண்டா.**—ராஜதேவா! ராத்தோர் ராஜபுத்திரர்கள் ஏதோ மோச எண்ணம் கொண்டிருக்கின்றார்கள். இல்லாவிட்டால் மகாராணியின் புத்தியை இவ்வாறு கெடுத்திருக்கமாட்டார்கள். இனி மகாராணியினுடைய பந்துக்கள் ஒவ்வொருவராய்வந்து ராஜாங்கத்தில் முக்கியமான அதிகாரங்களைப் பெறுவார்கள். சிசோதியர்களுக்கு ஆபத்து நேரிடக்கூடும். நீ இத்தேசத்திலிருக்கின்றமையினால்தான் நான் தேசத்தைவிட்டுப்போக வெண்ணங்கொண்டேன். நீ மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நீ எதைச்செய்தாலும் உன் மாகாணத்திலிருந்து கொண்டேசெய். சித்தூருக்குப் போகாதே. அபாயம் நேரிடும். மகாராணாவின் தர்பாருக்கு உன் வக்கீலை அனுப்பிவிடு. அவ்வக்காலத்தில் தேசத்தில் நடக்கும் செய்திகளை எனக்கு தெரிவித்துக்கொண்டே இரு. நல்லது நீ நில், நான் போகட்டுமா?

**ராஜதேவன்.**—போய் வாரும் அண்ணு!

(சோண்டா போகிருன்.)

**ராஜதேவன்.**—ஆ! என்ன, இவரது குணம் இவ்வளவு சிறப்பாயிருக்கின்றது. இவருக்குத் தகுந்த தம்பியோ நான். ஒரு பெண்ணுக்குச் செய்த அவமரியாதையைச் சகிக்காமல் தனக்கு வரவேண்டிய சிங்காஸனத்தையும் விட்டுவிட்டார். தேசத்துக்குத்தன் செய்கையால் தீங்கு ஒன்றும் நேரிடக்கூடாதென்ற மன உறுதியுடன் தேசத்தையும் விட்டுவிட்டார். இத்தேசத்தைக் கட்டி ஆளவேண்டிய அவருக்குக் கடைசியில் என்ன கிடைத்தது? அவருடைய குதிரையொன்றும் வேல் ஒன்றுந்தானே! யோக்கியர்கள் சமயத்தில் எல்லாவற்றையும் விடச் சித்தமாயிருக்கவேண்டும்.

(போகிருன்.)

---

### அங்கம் IV.

#### முதற் களம்.

இடம் : மலையில் ஒரு குகை.

(ரின்மல், ஜோடா, சித்தயோகி மூவரும் பிரவேசிக்கிருர்கள்.)

(சித்தயோகி ஒரு செடிக்குக் கயிறுகட்டி அதின்மேல் தலையைச் சாய்த்து நிற்கின்ருர்.)

(ரின்மலும் ஜோடாவும் அவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு)

**ரின்மல்.**—சித்தயோகி சுவாமிகாள்! இன்றைக்கு நாற்பது வருஷகாலமாக நான் தங்களுடைய சந்நிதியில் காத்துக்கொண்டிருக்கிறேன். கடைக்கண் பார்வையாயினும் பார்க்கமாட்டீர்களா? இந்நாற்பது வருஷ காலமும் பூமியின் மீது உடலைச் சாய்க்காமல் இவ்வாறு சமாதியில் நிற்கின்றீர். தாங்கள் இப்பகுர்சீராமலையிலிருப்பதினுல் இத்தேசத்தையுடைய எனக்கு என் தகப்பனுருக்கு நேர்ந்த ஆபத்துகள் நேராமல் நான் சுகமாயிருக்கின்றேன். உங்களுடைய ஆசீர்வாதத்தால் என் ராஜ்ஜியம் விஸ்தாரமாகவேண்டும். ஆகுமல்லது ஆகாதென்று ஒரு குறிப்பைக் காண்பிக்கலாகாதோ! கண்திறந்துப் பார்க்கலாகாதோ! வாய்திறந்து பேசலாகாதோ?

**சித்தயோகி.**—(கண்திறந்து) ராஜா! நாங்கள் சகல தேசங்கள் திரிந்து, மானிடருடன் உறவாடி அவர்களுடைய துக்கத்தையும், நம்முடைய துக்கத்தையும் சேர்த்து அனுபவித்து, வெறுப்படைந்து, வேதங்களைத்தேடி, சாஸ்திரங்களைச் சோதித்து, தேகத்தைப் பரிசீலனை செய்து, தபித்து, கடைசியில் மாய்கையை இழந்து, மானிடர்களுடைய விவகாரங்களில் தலையிட்டுக்கொள்ளக் கூடாதென்று வனவாசிகளாய் இவ்வேகாந்தமான குகையில் சாந்தியடைந்தோம். தபசிகளான எங்களை இங்கும் தேடி வந்து உங்களுடைய விவகாரங்களைச்சொல்லி ஏன் தொந்திரவு செய்கிறீர்கள். ராஜாக்கள் கடவுளால் படைக்கப்பட்ட யாவும் தமக்குச் சேர்ந்ததென நினைத்து காடுகளில் வசிக்கும் தபசிகளையும் தங்கள் பிரஜைகளாக்கி அவர்களின்மீது அதிகாரம் செலுத்துகிருர்கள். ஆகையால், ராஜா! நீர் கேட்டதை நான் சொல்லியே தீரவேண்டுமோ?

**ரின்.**—தங்களுடைய வாக்கினின்று கிடைக்கும் ஆசீர்வாதத்துக்காக வெகுநாளாய்க் காத்துக் கொண்டிருக்கின்றேன். சொல்லவேண்டும் சுவாமி.

**சித்த.**—ஆனுல் ராஜா! நான் சொல்வதைக் கேளும்; மறுமொழி நீர் பகரலாகாது.

**ரின்.**—தங்களுடைய சித்தம், சுவாமி.

**சித்.**—ராஜா! உம்மோடுகூட வந்திருக்கும் உம்முடைய புத்திரன் சிலகாலம் கஷ்டப்பட்டு பிறகு பெரிய ராஜ்ஜியத்தைக் கட்டியாளப் போகின்ருன், கீர்த்திமானுகப் போகின்ருன். அவனுல் ராத்தோர் க்ஷத்திரிய குலம் விளங்கப் போகின்றது. மார்வாரா தேசத்துக்கு இராஜதானியாகிய பட்டணம் யோதகிரியாகிய இம் மலையின் உச்சியில் கட்டப்படப்போகின்றது. ஜோடா பதினான்கு பிள்ளைகளைப் பெறப்போகின்ருன். அவர்களெல்லாம் தேசங்களை சம்பாதிக்கப்போகிருர்கள்.

**ரின்.**—(மிக்க ஆவலுடன்) அதெல்லாம் சரிதான் யோகி, என்னுடைய பிரயத்தினம் எவ்வாறு முடியும்? நான் பெரியதேசத்துக்கு ராஜனுவேனே?



**சித்.**—அடே பிரஷ்டா! உன் பிரயத்தினத்திற்கு ஏற்றபயன்தான் கிடைக்கும்.

(திடீரென மறைகின்ருர்.)

(ரின்மலும் ஜோடாவும் பிரமித்து நிற்கிருர்கள்.)

**ரின்.**—யோகி எங்கேபோய்விட்டார் ஜோடா! பயன் என்ன கிடைக்குமென்று கேட்கலாமென்று இருந்தேன்! பிரஷ்டாவென்று ஏன் அழைத்தார் புத்திரா?

**ஜோ.**—மறுமொழி பகரவேண்டாமென்ருரே மறந்துவிட்டீரோ பிதாவே!

**ரின்.**—அதற்கா "பிரஷ்டர்" வென்று சொன்னுர்?

**ஜோ.**—அப்படித்தானிருக்குமென்று நினைக்கின்றேன்.

**ரின்.**—ஆனுல் ஜோடா! என்பிரயத்தினம் வீணுமென்று சொல்லவில்லையே. தக்க பயன்தான் கிடைக்குமென்ருர். அதுமாத்திரமன்று; உனக்குப் பெரிய ராஜ்ஜியங்கூட கிடைக்குமென்ருரே; வேறுவிதமாய் எப்படி கிடைக்கக்கூடும். நம் பிரயத்தினம் பயனைத் தருமென்றுதான் நினைக்கின்றேன். ஆகையால் ஜோடா! உடனே புறப்படு; சம்பகமாலை ராஜ்ஜியபரிபாலனை செய்ய வேறு எவரையாவது நியமித்துவிடுவான். ஒருமாசம் கழித்து நானும் வருகின்றேன். முக்கியமான ஸ்தானங்களில் சிசோதியர்களை நியமிக்காதே. அவளுடைய மாற்ருன் பிள்ளைகளை சமீபத்தில் சேர்க்காதே.

**ஜோ.**—அப்படியே செய்கிறேன் பிதாவே!

(இருவரும் செல்லுகிருர்கள்.)

எச். வேங்கோபராவ்.

---

## கீழ்த்தேசத்தாருக்கும் மேற்றேசத்தாருக்கு முண்டாகவேண்டிய ஒருமை.

**காலஞ்சென்ற ஸர் எம். மானீர் - வில்லியம்ஸ்.**

**ஆக்ஸ்போர்ட் 'இந்தியன் இன்ஸ்டிடியூட்'.**

---

சென்ற சஞ்சிகையில், கீழ்த்தேசப் பாஷைகளில் தேர்ந்த மகாவித்வான்களில் ஒருவரான டாக்டர் லீட்னர் காலஞ்சென்றதை விசனத்தோடு குறிப்பிட்டோம். இப்பொழுது அப்படிப்பட்ட வித்வான்களில் இன்னொருவருடைய மரணத்தைக்குறிப்பிட மிக விசனிக்கிருேம். இப்பொழுது இறந்தவர் ஸர் எம். மானீர்-வில்லியம்ஸ். இவர் ஏப்ரல்மீ 12-உ யில் இறந்ததாக லண்டனிலிருந்துவந்த தந்திசமாசாரத்தால் தெரியவருகிறது. இவர் சம்ஸ்கிருதத்தில மிக்க பாண்டித்தியம் பெற்றவர். இந்தியாவில் பிறந்து இந்தியாபாஷைகளை ஆங்கிலேயதேசத்திலும் முன்னுக்குக்கொண்டுவர மிக உழைத்துவந்தார். இவருடைய தகப்பனுர் பம்பாயில் 'ஸர்வேயர் - ஜெனரல்' லாகவிருந்த லெப்டினென்ட்-கர்னல் மானீர் - வில்லியம்ஸ் என்பவர். இவர் 1819-ம் வருஷத்தில் பம்பாயில் பிறந்தார். இவர் பாலிய வயது முதல் சம்ஸ்கிரதமும் மற்றக்கீழ்த்திசைப் பாஷைகளும் கற்பதில் பிரியமுற்றவராய்க் காட்டிவந்தார். ஹெய்லிபரிஸ்கூலில் படித்து, லண்டனிலுள்ள கிங்ஸ்காலேஜ் விருந்து ஆக்ஸ்போர்டுக்குச்சென்று அங்கு வித்தியாபட்டம்பெற்றுத் தேறினர். 24 வது வயதில் ஸம்ஸ்கிருதம் படிப்பதற்காகஆக்ஸ்போர்டில் போடன் என்பவர் பேரால் ஏற்படுத்தப்பட்ட உபகாரச்சம்பளம்பெற்று சமஸ்கிருதத்தில் மிகத்தேர்ந்தவராக விளங்கினர். அடுத்த 1844-ம் வருஷம் ஹெய்லிபரிஸ்கூலில் சம்ஸ்கிருதபோதகராக நியமனம்பெற்று 1858-ம் வருஷம் வரையில் அவ்வேலையிலிருந்தார். 1860-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்டுக்குத் திரும்பி அங்கு சம்ஸ்கிருத ப்ரொபெஸ்ஸராக நியமனம்பெற்று சாகும்வரையில் அதேவேலையிலிருந்தார். இவர் ஆக்ஸ்போர்டிலிருந்த 39-வருஷகாலத்தில் இந்தியாவுக்கு எவ்வளவோ நன்மைசெய்துளார். 1875-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி சம்பந்தமாக "இந்தியன் இன்ஸ்டிடியூட்" என்று இந்தியா பாஷைகள் கற்பதற்கான ஸ்தாபனமொன்று ஏற்படுத்தவேண்டுமென்று சிலகாலமாக அவர் உத்தேசித்திருந்ததைக் காரியத்தில் நிறைவேற்றக்கருதி அதற்கு வேண்டிய முயற்சி யெடுத்துக்கொண்டார். இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்குத் திரவிய சேகரம் செய்யும்பொருட்டு ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி அதிகாரிகளின் அனுமதிபெற்று தம்முடைய சொந்தச்செலவில் மும்முறை இந்தியாவுக்கு விஜயம்செய்தார். முதல்முறை 1875-76-ம் வருஷத்தில் வந்தார். இரண்டாம்முறை 1876-77-லும், மூன்ரும்முறை 1883-84-லும் வந்தார். 1875-ம் வருஷம் இந்தியாவுக்கு வந்தபொழுது 'இந்தியன் இன்ஸ்டிடியூட்' ஸ்தாபனவிஷயமாக அவர் மனதிற் கொண்ட ஏற்பாட்டைப்பற்றி இந்தியாவிலுள்ள பல இராஜதானிப்பட்டணங்களிலும் அலஹபாத்,

லாஹோர் முதலிய இடங்களிலும் பயிரங்கமாகப் பிரசங்கம்செய்தார். மகாமேன்மைதங்கிய **வேல்ஸ் இளவரசர்** அவர்கள் அப்பொழுது கீழ்த்திசைத் தேசங்களைப் பார்க்கும்பொருட்டுவந்து இந்தியாவில் சுற்றுப்பிராயணம் செய்துகொண்டிருந்தார்; அவர் இவ்வேற்பாட்டைக்கேட்டு இதற்கு ஆதரவளிக்க, இந்தியாகவர்னர்-ஜனரலும், இராஜதானி கவர்னர்களும், உதவிக்கவர்னர்களும் இதை ஆதரித்துதவி செய்தார்கள். இந்தியாவிலுள்ள சுதேச அரசர்களும் இதற்கு வேண்டிய ஆதரவு செய்தார்கள். இப்படி எல்லாரும் ஆதரவளித்ததால் மொத்தம் 40,000 பவுன் அதாவது 6-லக்ஷ ரூபாய் இதற்காகச்சேகரமாயிற்று. மாக்ஷிமைதங்கிய மஹாராணியவர்களும் வேல்ஸ் இளவரசரும் முதல்முதல் ஒரு பெருந்தொகை யளித்தார்கள். லார்ட் ப்ராஸி அவர்கள் 9000-பவுன் அளித்தார். கோண்டால் காட்டு தாகோர் ஸாஹிப் அவர்கள் 4500-பவுன்கொடுத்தார். இன்னும் இந்நாட்டிலுள்ள சுதேச சிற்றரசர்களும், உத்தியோகஸ்தர்களுமன்றி, லண்டனிலுள்ள வர்த்தகசங்கத்தார்கள், புஸ்தகவியாபாரிகளும் தாராளமாக இதற்குத் திரவியசகாயம் செய்தார்கள். ஆக்ஸ்போர்ட் யூனிவர்சிடியார் வருஷத்திற்கு 300-பவுன் கிடைக்கும்படியான தொகையைக் கொடுத்துதவினார்கள். 1883-ம் வருஷத்தில் "இந்தியன் இன்ஸ்டிடியூட்" கட்டடம் கட்டுவதற்காக அஸ்திவாரம் போட்டு, வேல்ஸ் இளவரசரால் ஸ்தாபனக்கல் வைக்கப்பட்டது. 1884-ம் வருஷத்தில் இக்கட்டடத்தில் ஒரு பாகம் கட்டிமுடிந்து திறக்கப்பட்டது. 1886-ம் வருஷத்தில் கீழ்த்தேசப் பாஷைகளில் உயர்தர வித்தை கற்றுக்கொடுக்க யூனிவர்ஸிடியார் தீர்மானம் செய்தார்கள். 1896-ம் வருஷத்தில் இக்கட்டடம் முற்றும் கட்டிமுடிந்து இந்தியா மந்திரியாகிய லார்ட் ஜார்ஜ் ஹாமில்டன் அவர்களால் ஆடம்பர சடங்குகளோடு திறக்கப்பட்டது. இந்த ஸ்தாபனத்தில் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், அராபி முதலிய கீழ்த்தேசப் பாஷைகள் கற்றுக்கொடுக்கத்தக்க போதனாசிரியர்கள் ப்ரொபெஸ்ஸர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்ற வருஷம் ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடியில் படித்து ஸிவில் ஸெர்வீஸ் பரீக்ஷையில் தேறி இவ்விராஜதானிக்கு நியமிக்கப்பட்டுவந்த இங்கிலீஷ் ஸிவிலியன் உத்தியோகஸ்தர்கள் சிலரை நாம் கண்டோம். அவர்களில் ஒருவருடைய பரிச்சயம் நமக்கு நெருங்கக் கிடைத்ததில் அவர் சீமையிலே தமிழ்ப்படித்து, தமிழ்ப்பாஷையில் சாதாரணமாகக் கடிதப்போக்குவரவு வைத்துக்கொள்ளத்தக்க தேர்ச்சி யடைந்திருந்ததைப் பார்க்க நமக்குமெத்த ஆச்சரியமாயிருந்தது. விசாரித்ததில் அவர் ரெவரண்ட் டாக்டர் போப் துரை அவர்களிடத்தில் தமிழ் கற்றவரென்றும் அவரோடு தமிழ்கற்ற மற்ற மாணாக்கர்களும் அவரவ்வளவு தேர்ச்சி யடைந்தவர்கள் தாமென்றும் கேட்டு அடங்கா மகிழ்ச்சியடைந்தோம். நம் தேசத்துக்கு உத்தியோகமாகவரும் ஐரோப்பியர்கள் நமது சுயபாஷை கற்பதில் காட்டும் சிரத்தை கூட நமது தேசத்தில் பிறந்து வளர்ந்து நமது பாஷையை 2-ம் பாஷையாகக்கொண்டு வித்தியா பட்டம்பெறப் படிக்கும் சுதேச மாணாக்கர்களும், படித்துத்தேறிய வித்தியார்த்திகள், உத்தியோகஸ்தர்களும் எடுத்துக்கொள்வதில்லையே யென்று சிந்திக்க நமக்கு மிக வருத்தமும் வெட்கமும் உண்டாயிற்று. இது நிற்க. ஸர் மானீர்- வில்லியம்ஸ் அவர்களுடைய முயற்சியால், 1886-ம் வருஷத்தில் இந்தியா மந்திரியவர்கள் வருஷத்தில் 200 பவுன் பெறுமான 6-'ஸ்காலர்ஷிப்புகள்' (வித்யோபகாரச் சம்பளம்) ஏற்படுத்தினார். இவைகளுக்கு "இந்தியா கவர்ன்மெண்டு ஸ்காலர்ஷிப்புகள்" என்று பெயர். இவை இன்னும் வழங்கிவருகின்றன. இந்தியாவில் ஒவ்வொரு இராஜதானியிலுமிருந்து சீமைக்குப் போய்ப் படித்துத் தேறிவர விரும்புவோர்களுக்குதவியாக இது ஏற்படுத்தப்பட்டது. இந்த உதவிச் சம்பளம்பெற்றே இவ்விராஜதானியிலிருந்து சென்ற ம-௱-௱-**ஸ்ரீ**, ஆர். நாராயணய்யர் அவர்கள் இப்பொழுது **கேம்ப்ரிட்ஜ்** யூனிவர்ஸிடியில் படித்துக்கொண்டு ஸிவில்ஸெர்விஸ் பரீக்ஷைக்கும் படித்துவருகிறார். இந்தவருஷம் இதே உதவிச்சம்பளம் பெற்றுப் படித்துவருவதற்காகச் சிபார்சுசெய்ய மிஸ்டர் ஹென்ஸ்மன் என்னும் சுதேச் கிறிஸ்தவ மாணாக்கரை சென்னை யூனிவர்ஸிடியார் தெரிந்தெடுத்திருப்பதாகக் கேள்வி. முதலில் ஸர் மானீர்-வில்லியம்ஸ் அவர்களுடைய உத்தேசம், இந்த உதவிச்சம்பளம் பெறுவோரெல்லாம் ஆக்ஸ்போர்டுக்குச் சென்று 'இந்தியன் இன்ஸ்டிடியூட்' ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களாகப் படித்துவர வேண்டுமென்றிருந்தது. இந்தியா மந்திரியவர்கள் "இந்தியா கவர்ன்மெண்டு ஸ்காலர்ஷிப்புகள்" ஏற்படுத்தினதில் கவர்ன்மெண்டு சகாயம் பெறுகிறவர்கள் இவ்விங்கிலாந்திலுள்ள யூனிவர்ஸிடிகளில் அவர்களுக்கு இஷ்டமானதெதுவோ அதில் சேர்ந்து வாசிக்கலாமென்றுவிட்டதினால் இவ்வேற்பாட்டைப் பிரேரேபித்தவர் உத்தேசம்நிறைவேறாமற்போய்விட்டது. இப்பொழுது "இந்தியன் இன்ஸ்டிட்யூட்" ஸ்தாபனத்தில் கீழ்த்தேசப் பாஷைகளிலுள்ள கிரந்தங்கள் நிறைந்த புத்தகசாலையும், மியூஸியம் (விநோதசாலை) ஒன்றும், அப்பாஷைகளைப் போதிப்பதற்கருகமான போதனாசாரியர்களும், அழகும் விசாலமுமமைந்த கட்டடமும் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனத்தைக்கட்டி முடித்து ஸ்திரமாய் ஏற்படுத்த ஸர் மானீர்-வில்லியம்ஸ் 21-வருஷகாலம் அலுப்புச்சலிப்புக் காட்டாமல், விடாது தொடுபிடியாய்த் தொட்டு நின்றுழைத்துவந்தார். இதுவல்லவோ ஊக்கமும் விடாமுயற்சியுமாம். இப்படிப்பட்ட ஆங்கிலேய ஊக்கம் விடாமுயற்சிக்கு ஈடுசொல்லத்தக்க முயற்சியும் ஊக்கமும் நம்தேசத்தில் எங்குகாணலாம்! நம்மவர்களில் அறியாதார்பலர் ஆங்கிலேயர் நமக்கு என்னசெய்கிறார்கள், நம்முறவை அவர்கள் எங்கு தேடுகிறார்கள் அல்லது கோறுகிறார்கள் என்று சொல்கிறார்கள். சம்ஸ்கிருதத்தில் இவருடைய முயற்சியையும் நமது வேதங்களையெல்லாம் ஆராய்ந்து மொழிபெயர்த்துப்பிரசுரித்திருக்கும் ப்ரொபெஸ்ஸர் **மாக்ஸ் மூலர்** அவர்களுடைய முயற்சியையும் அறிந்தோர் எவர் ஆங்கிலேயர் நம்மைச் சிந்தவில்லையென்று சொல்லத்துணிவார்? சம்ஸ்கிருதத்தில் இவர் உழைப்பதுபோல தமிழில் **டாக்டர் போப்** உழைத்துவருகிறார். தமிழிலுள்ள சிறந்த கிரந்தங்களையும் உயர்ந்த எண்ணங்களையும் ஆங்கிலேயர் அறிந்து தமிழர்களையும் தமிழையும் அவர்கள் கண்டுமெதிக்கும்படி அவர் ஓயாது சலியாது உழைத்துவருகிறார். அவருடைய குறளையும், நாலடியாரையும்பற்றி முன்னமே இங்கு சொல்லியிருக்கிறோம். சென்ற 7-வருஷகாலமாக ஓயாது ஒழியாது சிரமப்பட்டுழைத்து **திருவாசகத்தை** இங்கிலீஷ் மொழிபெயர்ப்போடு சீமையில் அச்சிட்டுவருகிறார். ஆகஸ்போர்டிலுள்ள யூனிவர்ஸிடி ப்ரெஸ்ஸில் தமிழெழுத்துகள் வார்த்து வைத்துக்கொண்டு, தமிழில் புத்தகங்கள் அச்சிட்டுவருகிறார்களே. இவையெல்லாம் நம்மையும் நம்பாஷையையும் கிரந்தங்களையும் சிந்தாமலும் விரும்பாமலுமா, எவ்வளவோ சிரமமெடுத்துக் கொண்டு செய்துவருகிறார்கள். டாக்டர் லீட்னர் அராபிபாஷையில் எவ்வளவோ சிரமப்பட்டுழைத்துவந்தார். பார்க்கப்போனால், நம்மவர்களே ஓரியாக ஒட்டாமல் ஒதுங்கி நிற்கிறார்களென்று ஏற்படும். கீழ்த்தேசத்தாரும் மேற்றேசத்தாரும் மனங்கலந்து ஒருவரையொருவரறிந்துணரவும் இருவர்க்கும் ஐகமத்தியம் ஓங்கிவளரவும் உழைப்பவர்கள் யாரோ அவர்களே உண்மையில் லோகோபகாரிகளாவார்கள்: இருதிசையாராலும் புகழ்ந்து கொண்டாடத் தக்கவர்களாவார்கள். இவ்வகையானோர் இங்கிலாந்து ஜெர்மனி முதலிய ஐரோப்பிய தேசங்களிலும் அமெரிக்காவிலும்கூட அதிகரித்து விர்த்தியாய்க் கொண்டுவருகிறார்கள். நமது பாஷை, மதம், கிரந்தம் இவைகளை அவர்கள் அதிசிரமப்பட்டு ஆராய்ந்து இங்கிலீஷ்மட்டு மறிந்தவர்களறிந்துணரும்படி புஸ்தகங்களும் பத்திரிகைகளும் பிரசுரித்துழைத்து வருவதுபோல, நாமும் அவர்களுடைய விஷயஞானத்தைக்கிரகித்து இங்கிலீஷறியாத சுதேசிகளறிந்துணர அவைகளைச் சுதேசபாஷைகள் மூலமாக நம் தேசத்தாருக்குத் தெரிவித்துவரவேண்டும். அப்பொழுதே இங்கிலீஷ்படித்துத்தேறி வித்யாபட்டம் பெற்ற நம்மவர்கள் தங்கள் கடமைகளைச் செய்தவர்களாவார்கள்.



# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## சிறுவர்க்குபதேசம.

### முகஸ்துதி செய்பவர்கள்.

உன்னுடைய யோக்கியதைக்கு மிஞ்சி உன்னை ஸ்துதிப்பவன் ஏதோ ஒரு காரியத்தின் பொருட்டே ஸ்துதிப்பான்.

ஸ்தோத்திரங்களுக்கும் முகத்திற்கெதிராகச்சொல்லும் பிரீதிவார்த்தைகளுக்கும் சந்தோஷிப்பவன் மாத்திரந்தான் மோசம்போகிறவன். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் உண்டு.

ஒரு நரி பசியால் ஆகாரத்திற்காக அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கையில், திடீரென்று தனக்கெதிரே ஒரு மரத்தில் ஒரு அணிற்பிள்ளை யிருக்கக்கண்டது. அது மிருதுவான பிராணியாகவும் தன்னுடைய ஆகாரத்துக்கு சித்தமாகவு மிருந்தது: ஆனால் அதை எப்படிப்பிடிப்பதென்று வகைதோன்றாமலிருந்தது. கடைசியில அணிற்பிள்ளையைப்பார்த்து "உன் தகப்பனும பாட்டனும் மகாசமர்த்தர்கள், புத்திமான்கள்: அவர்கள் ஓரே தாண்டாக ஒரு மரத்திலிருந்து மற்றொன்றிற்கு குதிப்பது வழக்கம்" என்று நரி சொல்லிற்று. உடனே அந்தச்சிறிய அணிற்பிள்ளை அதேபிரகாரம்

தாண்டிற்று. பிறகு நரி "அவர்கள் ஒரே குதிப்பில் மரத்தின் கொம்பிலிருந்து அடி மரத்திற்குக்கூட தாண்டுவார்கள்" என்றது. அப்பொழுது அந்தப்பேதை அணிப்பிள்ளை நரியின் ஸ்துதிக்கு உற்சாகமடைந்து கீழ்குதித்தது; தத்க்ஷணம் நரி அதைப் பிடித்து விழுங்கிவிட்டது.

பார், ஒருவன் தன் சொந்தப்பிரயோசனத்திற்காக ஸ்தோத்திரம் செய்கிறான். எவன்காதில் அப்படிப்பட்ட ஸ்தோத்திரங்கள் முட்கள் மாதிரி தைக்கின்றனவோ அவன் ஒரு பொழுதும் அவைகளினால் மோசம்போகமாட்டான். ஆனால் குழந்தைகள் தம் தாய்கள் தம்முடைய காதுகளுக்குள் விரலை விடும்போது எப்படி அதனால் உண்டாகும் கூச்சவிருப்பத்தினால சந்தோஷப்படுமோ அப்படி முகஸ்துதியினாலும் "பெருமையான வார்த்தைகளினாலும்" சந்தோஷப்படுகிறவன் மூடனாவான்; நிச்சயமாய் கஷ்டமுமடைவான்.

### உபகாரி.

உபகாரம் செய்பவனுக்குத் தீமை நினைப்பவன் ஒருநாளும் முன்னுக்கு வரமாட்டான்.

ஒரு பாக்கியவான் உதயத்திலேயே குதிரையேறிக்கொண்டு ஒரு பட்டணத்தின்வழியாய்ப்போகும்பொழுது அவனுக்குத் தெரியாமல் அவன் பையிலிருந்து பதினாறு மொஹராக்கள் இருந்த ஒரு காகிதப்பொட்டலம் வழியில் விழுந்துவிட்டது. ஒரு ஏழைப்பையன் அதைக் கண்டெடுத்து அந்தவூர் நியாயாதிபதியிடம்கொண்டுபோய்க்கொடுத்தான். நியாயாதிபதி பட்டணத்தில் இந்தச்சங்கதியைப் பறையறைவித்தான். அதன்பேரில் மேற்சொன்ன பாக்கியவான் நியாயசபைக்கு வந்து அதிபதிகொடுத்த மொஹராக்களைப் பெற்றுக்கொண்டு தன்னுடையபணம் குறைந்திருக்கிறதென்றும் பொட்டலத்தை எவன்கண்டெடுத்தானோ அவனிடமே மீதி மொஹராக்களும் இருக்கவேண்டுமென்றும் சாதித்தான். அப்போது ஏழைப்பையன் மிகவும் பயந்து நியாயாதிபதியிடம் தனக்கு எவ்வளவு அகப்பட்டதோ அவ்வளவையும் கொண்டுவந்து கொடுத்ததாகவும் தான் ஒன்றும் அபகரிக்கவில்லையென்றும் நிஜத்தைச் சொன்னான். நியாயாதிபதி மொஹரா வைத்திருந்த காகிதத்தைக்கொண்டுவரும்படிக் கட்டளையிட்டு அதில் மறுபடியும் அந்த மொஹராக்களைப்போட்டுப் பார்த்ததில் பதினாறைக் காட்டிலும் அதிகமாய்க்கொள்ளாதென்றறிந்துகொண்டு, பாக்கியவானுடனே இந்தப் பதினாறு மொஹராக்கள் உன்னுடையதல்ல; ஏனென்றால் இந்தப்பொட்டலம் இதைக்காட்டிலும் ஜாஸ்திகொள்ளாதாகையால் உன்னுடைய பணம் வேறே யாருக்கோ அகப்பட்டிருக்கவேணும், அதைப்பற்றி விசாரித்துக் கொள்ளென்று சொல்லிவிட்டு ஏழைப்பையன் கையில் அந்த மொஹராக்களைக்கொடுத்து இது உன்னுடையது எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போவென்று சொல்லி யனுப்பிவிட்டான்.

### உழைப்பு.

கஷ்டப்பட்டால் மாத்திரம் பாக்கியம் உண்டாகிறது. உங்கள் பிரயோஜனத்தற்காக இதன்கீழ் சொல்லப்போகிற திருஷ்டாந்தத்தை வாசித்து ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

ஒரு குடியானவன் சாகப்போகிற சமயத்தில் தன் பிள்ளைகளுடன் நம்முடைய திராட்சைத் தோட்டத்தில் பணம் புதைத்து வைத்திருக்கிறேன் என்றுசொல்லி இறந்துவிட்டான். பிறகு அவனுக்கு உத்தரகிரியைகள் செய்து பிள்ளைகள் யாவரும் ஒருங்குசேர்ந்து புதைத்து வைத்திருக்கும் பணத்தை யெடுத்துக்கொள்வோமென்று தோட்டத்தில் அனேகவிடங்களில் தோண்டினார்கள். பணமிருக்கிற இடம் பலானதென்று குறிப்பாய் அவர்கள் தகப்பன் சொல்லாததினாலே தோட்டமுழுமையும் இடுப்பத்தனை ஆழம் தோண்டிப் பார்த்தார்கள்; தனமகப்படவில்லை. பிறகு குழிகளையெல்லாம் மறுபடியும் மூடிவிட்டு திராட்சைக்கொடி போட்டார்கள். அந்த வருஷம் எப்பொழுதும் விளைகிறதைவிட இருபது மடங்கு ஜாஸ்தியாய் விளைந்தது அதனால அந்தப்பழங்களை விற்று சகலமான செலவுகளும்போய் மிகவும் விசேஷமான லாபமடைந்தார்கள் அப்பொழுது அவர்கள் தங்கள் தகப்பன் புதையலிருக்கிறது தோண்டியெடுத்துக்கொள்ளுங்களென்று சொன்னதின் தாற்பரியம் "கஷ்டப்பட்டால் பலனுண்டாகும், பாக்கியமுண்டாகும்" என்று அறிந்துகொண்டார்கள்.

எல். வி. வரதராஜ சர்மா, பி. ஏ.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2.

விவேக சிந்தாமணி
KNOWLEDGE IS POWER
DIFFUSION OF KNOWLEDGE AGENCY
VIVEKA CHINTAMANI

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1899ஞ ஜூன்மீ [இலக்கம் 2.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People :—

SUBSCRN. PRICE : YEARLY RS. 4 ; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS. ; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a Volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**தளமான காகிதப்பதிப்பு**:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

**லேசானகாகிதப்பதிப்பு**:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.

தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

**வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.**

ஏப்ரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்ரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

குறென்கும்' என்பதுபோல, ஒளிந்துபோகும் தன்னைத்தான் கேட்கின்றார்களோ என்று ஐயுறவுற்றுத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போவான். அங்கு போகும் வழியில் நடந்த விசித்திரங்களுக்கோ அளவில்லை. ஒருபுறத்தில் அவன் தமயந்தியின் உருவத்தைத் தீட்டித் தன்கழுத்திரத்தினமாலைகளில் ஒன்றை அதற்குப் பூட்டிவிட்டு அப்பாற்செல்ல அவ்வுருவத்தைக்கண்டோர் யாவரும் இதேது புதிதாயிருக்கிறதே. இவ்வளவு அழகானபடத்தை என்றும் பார்த்ததில்லையே. இதைச் சித்திரித்தவர்யாவரோ வென்று உற்று நோக்கிவியப்பார்கள். பின்பு இராஜவீதி வழியேசெல்லுகையில் அவ்வீதியிற் படிந்த புஷ்பங்களின் மெல்லிய மகரந்தப்பொடியின்மீது இவன் அடிகள் பதிந்திருப்பதைக்கண்டு பெண்களெல்லாம் கூடி இங்கேது உத்தமலக்ஷணங்கள் நிறைந்த அரசன்காலடி பதிந்திருப்பது! என்று ஒருவர்க்கொருவர்பேசி ஆச்சரியப்படுவார்கள். இன்னோரிடத்தில் பெண்கள் பந்தாடிக்கொண்டிருக்க அவர்களெறிந்த பந்து அவ்வழியே செல்லும் அவன் மார்பிற்றாக்கி மறிந்து விழுதலும், அவர்கள் அளவற்ற ஆச்சரியமடைந்து எறிந்த பந்து ஒன்றிலும் தாக்காமல் வெட்டவெளியிற்பட்டு இவ்வாறு மீண்டதற்குக்காரணம்யாதோ என்று திகைப்பார்கள்.

இவ்வாறு வழியிடையில் மகளிர்முதலானோர் பேசிக்கொள்ள இன்னம் அநேகவேடிக்கைகளுக்கு ஆஸ்பதமாகச்சென்று நளன் தமயந்தியின் இருப்பிடத்தை நாடி வண்டுகள் பாடும் பூஞ்சோலையிலும் வானுறவோங்கிய செய் குன்றத்திலும் அத்தமயந்தியைத் தேடிக்காணாமல், கடைசியில் அவளிருந்த கன்னிகாமாடத்தை யடைந்து, அந்த தெய்வப்பெண்களுக்கு மத்தியிலே விளங்கும் இந்திராணியைப்போலே அநேக மாதர்களுக்கு நடுவில் விளங்கிய தமயந்தியைத் தன்னிருகண்களுக்கும் விருந்தாகக்கண்டு ஆனந்தக்கடலில் மூழ்கினான். அப்போது அங்கே நாள்தோறும் 'நளன்வந்தான் நளன்வந்தான்' என்று பெண்கள் சொல்வனவற்றைக்கேட்டுப் பயின்றகிளிகள் வழக்கம்போல நளன்வந்தான் என்று சொல்லவே, அவன் திடுக்குற்று மனிதர் கண்ணுக்குப்புலப்படாத நம்முருவத்தை இக்கிளிகள் கண்டுவிட்டனவோ வென்று ஐயமுற்றுப், பின்பு அக்கிளிகளின் பேச்சை ஒருவரும் கவனியாமையினால் இவைகளுக்கு இப்பேச்சுவழக்கமென்று துணிந்து உடல்புளகித்தான். பின்னும் அங்குள்ள விசேஷங்களையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கையில், நளனிடத்தில் நம்பிக்கையில்லாமலோ அல்லது ஒரு தூதினால்தானே காரியம் முற்றும் சாதிக்காதென்று பயந்தோ அவ்விந்திரன் முதலான தேவர்கள் தமது மனோரதத்தைத் தமயந்திக்குச் செவ்வையாகத் தெரிவித்து அவள்மனத்தைத் தம்மிடத்தில் பிணிக்க வல்ல தந்திரமுள்ள சில பெண்களைத் தூதாக அனுப்ப அவர்கள் வந்து தமயந்திக்கு ஏதோ போதனை செய்யப்போவதைக்கண்டு இவர்கள் யாரோ வரலாறென்னவோ பார்ப்போமென்று வெளிப்படாமலிருந்தனன்.

அவர்களில், முதல்முதல் இந்திரன் தூதி தமயந்தியை நோக்கி, "ஓ தெய்வப்பெண்களிலும் சிறந்த செவ்வியையுடையாளே, நான் வானவர்க்குத்தலைவனாய்க் கற்பகவிருக்ஷத்தின் கீழிருந்து அரசுசெலுத்திவரும் இந்திரனால் அனுப்பப்பட்டுவந்தவள். நீ இப்போது சுயம்வரத்தை நாடினையாதலின் இந்திரன் உன்னை இச்சிக்கப்பெற்ற உன்பாக்கியமே பாக்கியம். உனக்கு போக்கியமான புருஷன் தேவேந்திரனைக்காட்டிலும் யாவருள்ளார்? அவன் பெருமையை நீ அறியாதவளா? வானுலகம் முழுதும் தன்னொருகோல் செலுத்திப் பகைவர்களையெல்லாம் வென்று தேவர்களெல்லோரும் தன்னைப் பணிந்திருக்கக் குளிர்ந்த சுகந்த மலர்கள் பூத்த கற்பகத்தருவின் நிழலில் ரத்நசிம்ஹாசனத்தில் வீற்றிருந்து காமதேனுவும் கனகநிதிகளும் கேட்டபொருள்களை மகிழ்ந்து கொடுக்கப்பெற்று வாழும் வாழ்க்கைக்கும் வைபவத்துக்கும் நிகரொன்றுண்டோ? இப்



பூவுலகத்தில் அநேக அசுவமேதயாகங்களைச் செய்து வெகு அருமையாகப்பெற்ற இச்செல்வங்கள் யாவும் நீ அவன்பால் கடைக்கண் வைத்து கிருபைநோக்கம் செய்வாயாயின் உன்னுடையதாகுமன்றோ? இதனிலும் நீ பெறவேண்டுவது யாதொன்றுள்ளது? கிடைத்தற்கரிய இப்பெரும்பதவி புண்ணியவசத்தால் உனக்கு எளிதில் பெறத்தக்கதாயிருந்தது. ஆதலின் கிடைத்த சமயத்தை விட்டுவிடாமல் பிடித்துக்கொள்" என்று பலவாறு தனக்குத் தெரிந்த யுக்திகளைச்சொல்லிப் போதனைசெய்தாள்.

அதுகேட்டுத் தமயந்தி அத்தூதியை நோக்கி, "நீ இவ்வளவு சிறப்பித்துச் சொல்லும் இந்திரனுக்கு எல்லார் மனமும் தெரியத் திறமிருந்தும் என் மனதை மாத்திரம் அறியத் திறமில்லாமற்போனது என்ன ஆச்சரியம்! உன்னை இவ்வளவுதூரம் தூதாக அனுப்பி உனக்கு வீண்சிரமம் உண்டுபண்ணினனே யன்றி வேறில்லை. என் மனதில் எப்போதும் நீங்காமல் இருப்பவர் நளமஹாராஜா ஒருவர்தான் நீ சொல்லும் தூதுக்கு அவர் சம்மதப்படுவாரா? என் மனோராஜ்யம் சிந்திக்கின்றாய்? உனக்கு வேறு காரியமுண்டானால் பார் போ" என்று அங்கு நின்று கேட்டுக்கொண்டிருந்த நளமகாராஜா மனங் களிக்கும்படிச் சொன்னாள். தூதியும் இனிக்காரியமில்லையென்று மீண்டனள். அதுகண்டு மற்றத் தூதிகளும் இந்திரனுக்கே இசையாதவள் எரிமுகனுக்கும் எமனுக்குமா இசையப்போகிறாள் என்று அதைரியப்பட்டு ஒன்றுஞ்சொல்லாமலே திரும்பச் சென்றார்கள்.

சிவ—தமயந்தியை இந்திரன் கேவலம் காசுபணத்துக்கும் கௌரவத்துக்கும் ஆசைப்பட்டு வேசையர்போல ஒருவரிடத்து இச்சைவைத்து ஒருவர்க்கு வாழ்க்கைப்படும் சிறுமதியுடையாரைப்போல் எண்ணிவிட்டானே! இந்திரன் ஜபம் இவளிடத்தில சாயுமா. இனி நளன் போய்ச் சொன்னாலும் இதுதான்முடிவு. ஆயினும் பார்ப்போம்.

தாத்தா—உனக்கென்னடியம்மா தமயந்தியினிடத்தில் இவ்வளவு உறுதி? கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்று கேட்டதில்லையோ. பூர்வம் கைகேயியின் மனதைக் கூனி கரைக்கவில்லையா.

சிவ.—ஆமாம் நளனுக்குவந்தது அககரை! ஏதோ சொன்னவார்த்தையைத் தட்டப்படாதென்று போகிறானேயொழிய இந்திரன் கக்ஷியை எடுத்துப்பேச வக்காலத்து வாங்கியிருக்கிறானோ? இன்னொருவரானால் இவன்செய்யும் இடும்புக்குச் சீச்சீ என்று எறிந்துவிட்டுப் போய்விடுவார்கள்.

"அற்றதலைபோக அறாததலை நான்கினையும்
பற்றித்துணித்துப் பறியேனோ—முற்றும்
மரமனையானுக்கிந்த மாதை வகுத்திட்ட
பிரமனை யான் காணப்பெறின்."

என்று ஔவையார் சொன்னதுபோல இவ்விந்திரனை மாத்திரம் நான் காணப்பெறுவேனாயின் இரண்டொருவார்த்தைகள் அவன் தலைகுனியும்படி வயிற்றெரிச்சல்தீரக் கேட்டுவிடுவேன்.

த்தாத்தா.—ரொம்பப் பயமுறுத்திவிடாதே. அப்புறம் என்னசெய்யப்போகிறான் இந்திரன்!

தாயார்—கிடக்கிறது, மேலேவாசியம்மா.

சுப்பு (வாசிக்கிறாள்).—இவ்வாறு தேவதூதியர் அகன்று போனபின் நளன் தமயந்தியின் அவயவங்களின் அழகைக்கண்டு வியந்து அவள் தன்மேல் வைத்துள்ள காதலை நினைத்து மனமுருகி மகிழ்ந்தனன். பின்பு தான் வந்தகாரியத்தை அவளுக்குத் தெரிவிக்கக்கருதி, மன்மதன் தானே உருக்கொண்டு முன்னின்றது போலத் தன்னுருவம் தோன்றும்படி அவளிரண்டு கண்களும் கண்டுகளிக்க அவளுக்கெதிரே நின்றனன். தினந்தோறும் உருவெளித்தோற்றத்தைக் கண்டு வருந்துவாளாகிய அத்தமயந்திக்கு நளனது அந்நிஜரூபத்தைப் பிரத்தியக்ஷமாகக் கண்டதனால் உண்டான பேருவகையை யாவர் எடுத்துரைப்பார்?

நளனும் தமயந்தியும் இவ்வாறு ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டபோது தூதனாகவந்த நமக்கு இது இயல்பன்றென்று அவள் மேற்சென்ற மனத்தை நளன் தன்பேரறிவாலே மீட்கத் தமயந்தியின் கருத்தையும் அவள் நாணமானது தடுத்து நின்றது. அப்போது தமயந்தியின் தோழிமார்கள் 'அநேகம் கட்டுக்காவல்களைக் கடந்து இங்குவந்து நின்ற இப்பேரழகன் யாவன்! தேவனோ யக்ஷனோ எவ்வுலகத்தானோ ஆ! ஆ! இவனைப்பெற்ற உலகினும் சிறந்ததொன்றும் இல்லை.' என்று வியந்து பின்பு அவன் காலடி நிலத்திற்படிந்திருத்தலால் தேவனல்லனென்று நிச்சயித்தனர். தமயந்தி அன்னம் சொல்லிய லக்ஷணங்கள் அவனுக்குப் பொருந்தியிருத்தல் கண்டு இவன் நளன்தானோவென்று ஆலோசித்தாள். தோழிகள் அவனைநோக்கி 'இங்குவந்த உன்னைப்பிரிதலினால் பொலிவிழந்திருந்த நாடெது? உன்னை உணர்த்தலினால் பவித்திரமாகிய பெயர் எது? நீ இங்குவந்த காரியமென்ன? என்று கேட்க, நளன், 'தமயந்தியின் மணத்தை விரும்பி இந்திரன் முதலான வானவர்களால் அனுப்பப்பட்டு வந்த தூதன் நான். ஓ பைந்தொடியே! உன்மேல் ஆசைகொண்டு, வாசவன் அக்கி வருணன் இயமன் ஆகிய நால்வரும் மதிமயங்கி வருந்துகின்றார்கள். இவர்கள் உன்னை இச்சித்து இப்பூவுலகத்துக்கு வரும்படியாக நீ முற்பிறப்பில் என்னதவம் செய்தாயோ!" என்றனன். தமயந்தி "ஏது இச்சனியன் நம்மைவிட்டொழிந்தபாடில்லையோ! தூதிகளோடு தொலைந்ததென்றெண்ணியிருந்தேனே. இன்னொரு தூதனையும் அனுப்பிவிட்டார்களே. அன்றியும் இவன் நளமஹாராஜாவே என்பதற்குச்சந்தேகமில்லை. இவன் என்மீது காதலில்லாமல் தேவர்தூதனாய் இங்கு வருதற்குக்காரணம் யாதோ?" என்று மனம்வருந்தித் தலைகுனிந்து ஒன்றும் சொல்லாமல் நின்றனள். தோழிகள் அவனைப்பார்த்து "ஓ தூதனே, நளனேயன்றித் தனக்கு உயிரும் வேறில்லையென்று எண்ணியிருக்கும் எம்மிறைமகள் மெய்பதைத்து உயிர் சோர்ந்து வருந்தும்படி இக்கொடியவார்த்தையைச்சொன்னதனால், நீ உன்னைக் காலதூதன் என்று சொன்னது மிகப்பொருத்தமானதே. இத்தமயந்தியின் மனஉறுதியை அத்தேவர்கள் அறியாதவாறென்ன? யார் எதைச்சொன்னாலும் சரி; அவள் மனம் மாறமாட்டாது. நளமஹாராஜாவுக்கு வாழ்க்கைப்படுதலன்றி மற்றொருவர் பெயரைச்சொன்னாலும் அவள் சகிக்கமாட்டாள். அவளுறுதிக்கு இரண்டில்லை. அதிக நிர்பந்தப்படுத்தினால் தழலில் விழுந்து இறந்துவிடுவாள் என்றனர். அது கேட்டு நளன், "இவள் என்னசெய்தாலும் தேவர்களுக்குத்தப்ப இவளால் ஆமா? எரியில் வீழ்ந்திறந்தால் அக்னியைப் புணர்ந்ததாகும்! அன்றி ஜலத்தில் வீழ்ந்திறந்தால் வருணனை மருவினதாகும்! மேலும், அக்னிசாக்ஷியாயல்லாமல் இவள் ஒருவரை மணம்புரிதல் கூடுமோ? வருணன் சம்மதியில்லாமல் தாராதத்தமாகிய இவளது விவாகம் எவ்வாறு நிறைவேறும்? தேவர்களுடைய தயவில்லாமல் உலகில் எத்தகையாருக்காயினும் காரியம் நடக்குமோ? இன்னம், இந்திரன் பார்த்து அவன் ஏவலில் நிற்கும் ஐந்தருக்களையும இந்த க்ஷணம் தமயந்தியைக் கொண்டுவந்து கொடுங்கள் என்றால் அனைத்தையும் கொடுக்கவல்ல அத்தருக்கள் அவன் ஏவலின்படி இவளை அளிப்பின் உங்களால் கூடாதென்று தடுக்க முடியுமோ? வீண்பிடிவாதம் செய்யாமல் உடன்படுதலே நலம்." என்று தேவர்கள் கக்ஷியைப் பலமாக எடுத்துப்பேசினபோது, தமயந்தி, "நம்மிடத்தில் இவனுக்கு உண்மையாக விருப்பம் இருப்பின் இவ்வாறு சொல்வானோ? நான் அனுப்பின அன்னம் என் துயரமெல்லாம் அரசனுக்கு எடுத்துச்சொல்லவில்லையோ?" என்று நினைந்து இரு கண்ணினின்றும் பிலுபிலுவென்று கண்ணீர் சொரிய அழுதுவருந்தினாள். அப்போது, நளனுக்கும் ஆற்றமுடியாத வருத்தமுண்டாக அறிவுதீர்ந்து மனம் தளர்ந்தனன். அந்தவேளையில் அவ்விருவரையும் கூட்டுவிக்கக் கங்கணம் கட்டிக்கொண்ட அன்னபக்ஷியானது அங்குவந்து தமயந்தியைப்பார்த்து, "ஓ பெண்மணியே! நீ ஏன் வருந்துகின்றாய்? இப்புருஷன்தான் நளமஹாராஜன். இவன் இப்போது சொல்லியவார்த்தைகள் உன்மேல் காதலில்லாமற் சொன்னவைகளல்ல. தான் தேவர்களுக்குச் சொல்லிய வாக்குப்பழுதாகும் என்ற பயத்தினால் சொன்னவைகள். ஆதலின் நீ அழுது வருந்தாதே." என்று அன்போடு அவளைத்தேற்றிப் பின்பு நளனைப்பார்த்து, "நீ உன் காதலைமறைத்து இவ்வாறு அன்பில்லாவார்த்தைகளைச் சொல்லின் இப்பெண்மணி பொறுப்பாளோ? இவளது மனநிலையும், நீ இசைந்தபடியே அத்தேவர்பரமாகப்பேசினதும், யாவும் அவர்கள் உணர்வார்கள். ஆதலின், நீ இனிச்சென்று நடந்த விவரங்களை அவர்களோடு சொல்லிவிடு" என்று சொல்லிப்போய்விட்டது. நளனும் தமயந்தியின் மனவலியைத் தெரிந்துகொண்டு, தன்மனமும் கண்ணும் அவள்மேல்கிடக்க மீண்டுசென்று தேவர்களுக்கு நடந்த செய்திகள் எல்லாவற்றையும் உணர்த்தினான். தேவர்களும் அவன் செய்கையைக் கண்டு அவன்மேல் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.



தாத்தா.—என் சிவகாமி! நீ சொன்னது நிசமாயிற்றா? நான் சொன்னது நிசமாயிற்றா? நளனென்ன வக்காலத்துப் பிடித்திருக்கிறானோ? என்று கேட்டாயே. நளன் பேசினதைப் பார்த்தாயா?

சிவ.—துஷ்டர்களைக் கண்டால் தூரவிலகு. அத்தேவர்கள் நால்வரில் இந்திரனே காமப்பேய் பிடித்தவன்; கொல்லுக்கொலைக்கு அஞ்சான்.

"கொலையஞ்சார் பொய்யென்னார் மானமும்
பாரார் களவொன்றோ ஏனையவும் செய்வார்
பழியொடு.
பாவமிஃதென்னார் பிறிதுமற்றென்செய்யார்
காமம் கதுவப்பட்டார்."

என்று சொல்லியிருக்கிறதல்லவா? அக்கியுமயமனும் சொல்லவேண்டியதில்லை. நிமிர்ந்து பார்த்தால் சமஸ்தமும் நீறாய்ப்போய்விடும். வருணன் செய்தியா அப்பா நெருப்புக்குத்தப்பினாலும் தப்பலாம், நீருக்குத்தப்ப முடியாதே! ஆதலால் இவர்களுக்கு இசைந்தபடிச் செய்யாமற்போனால் தனக்கு என்ன இடையூறுண்டாமோ என்று பயந்தும் அன்னம் சொல்லியபடித் தன் வாக்குப்பழுதாகும் என்னும் அச்சத்தாலும் சொன்ன வார்த்தையேயன்றி வேறில்லை. நளன் விஷயத்தில் உம்பேச்சு நிசமாயிற்றுச் சரி. தமயந்தி விஷயத்தில் என் பேச்சுத்தானே நிலைக்கு நின்றது. அவள் மனம் ஆர் கரைத்தும் கரையவில்லையே.

தாயார்.—கற்பிற்சிறந்த ஸ்திரீகளின்மனத்தை மாற்ற யாரால்வசம். மலையைப்பெயர்த்தாலும் பெயர்க்கலாம்! அவர்கள் மனவுறுதியை அசைக்க முடியாதே!

சிவ.—அம்மா, நளன் சொல்லியபடி ஒருவேளை இந்திரன் கற்பகவிருக்ஷத்தால் பலாத்காரமாகத் தமயந்தியைப் பெறக்கூடுமோ?

தாயார்.—எனக்குக் கூடுமென்று தோன்றவில்லை. முதலில் இந்திரன் எவ்வளவு காமக்குரோத மதமாற்சரியங்களுக் குட்பட்டிருப்பினும் தேவனாதலின் அவ்விதமான அக்கிரமச் செய்கைகளைச் செய்யமாட்டான். தற்காலத்தில் நாகரிகத்திலும் கல்வியிலும் சிறந்த ஐரோப்பியர் முதலானோர் தாங்கள் எவ்வளவு கெட்டுப்போனாலும் நாகரிகமில்லாத காட்டுமிருண்டிகளான துர்ஜனங்களைப்போல பழிபாவங்களுக்கு ஏதுவான செய்கைகளைச்செய்வார்களா? 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' இந்திரனாவது மற்றத்தேவர்களாவது ஒருகட்டில் அகப்பட்டு நிற்பார்களேயன்றி வரன்முறையின்றி அசுரகிருத்தியங்களைச் செய்யார்கள். அன்றியும் கற்புடையார்களின் பெருமைக்குமுன் மற்றொன்றும் நில்லாது.

“காண்டகைய தங்கணவரைக் கடவுளார்போல்
வேண்டலுறு கற்பினர்த மெய்யுரையில் நிற்கும்
ஈண்டையுள தெய்வதமுமாமுகிலு மென்றால்
ஆண்டகைமை யோர்களுமவர்க்கு நிகரன்றே.”

அவர்களை எவ்விதமான தீங்கும் அணுகாது. அவர்களைக்காக்கத் தேவர்கள் முதலானோர் நீங்காது நெருங்கி நிற்பார்கள்.

“காசறு மனத்திற்றுயகற்புடை மகளிர்தம்மை
மாசறு வினைகளொன்றும் மருவிடாதினிதுகாப்பர்
நேசமுற்ற மரரெல்லாம்; நிருமலன் தனக்குமற்றவ்
வேசலில் கற்பின்மிக்கவினியதொன்றில்லையன்றே.”

இக்கற்பின் பெருமையைப்பற்றி நம்மவர்களே யன்றிப் பிற மதத்தாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு வேறே திர்ஷ்டாந்தம் வேண்டுவதில்லை. கற்புக்கணிகலனாகிய தமயந்தியின் சரித்திரத்தாலே இது மேலே விசதமாகும். இன்றைக்கு இத்துடன் நிறுத்திவிடுவோம்.

எஸ். மூத்துஐயர், பி. எ.

## செல்வநூல்.

### 6. உத்யமம் அல்லது உழைப்பு: *

### தனோத்பத்திக்கு இரண்டாவது ஸாதனம்.

தனோத்பத்திக்கு வேண்டிய ஸாதனங்களில் இரண்டாவதானது உத்யமம் அல்லது உழைப்பு என்று மூந்தி யொருபாடத்தில் படித்தோம். ஆயினும் சிலதூரம் வரையில் மனிதனது பிராகிருதங்களான காம்யங்கள் ஸுலபமாக இயற்கைப் பொருள்களாலேயே தீர்க்கப்படுகின்றன. மனிதன் காட்டில் ஸஞ்சரித்துக்கொண்டு, குரங்குகள்போல காய்கனிகளை யுண்டு புரண்டுகொண்டிருந்த காலத்தில், செடி கொடிகளிலிருந்து இயற்கையாயுண்டாகும் பல வருக்கங்களைக்கொண்டு ஜீவனைத் தரித்துவந்திருக்கவேண்டியது. அல்லது மற்றைய கொடிய மிருகங்களைப்போலத் தாழ்ந்த ஜீவன்களை வதைத்துப் புசித்தாவது வாழ்ந்திருக்கவேண்டியது. இந்நிலைமையில் இருக்கும் காலத்தில் மனிதனுக்கு மனிதன் என்ற பெயரே தகாது. மிருகத்துடன் மிருகமாய்த்தான் ஓடி யாடிக்கொண்டு யாதொருதேசஸ்வம் குணமும் இல்லாமல் இருந்திருக்க வேண்டியது. இப்படியிருப்பாருக்குத்தான் நம் முன்னோர்கள் கிராதர்கள் என்றும் வியாதர்கள் என்றும் பெயரிட்டிருந்தார்கள். அவர்களது கும்பல்கள் விந்திய மலையைச் சார்ந்த கானங்களில் நெடுநாள் வரையில் இருந்ததாக நம் முன்னோர் நமக்கீந்திருக்கும் காவ்யங்களில் காண்கிறோம். இப்படியாகி உழைப்பின்றி ஜீவிக்கிற வரையில் மனிதன் செல்வம் என்பதை யறிவதேயில்லை. ஆகையால் இவனைப்பற்றிச் செல்வநூலுரைப்பது யாதொன்றுமில்லை.

முதல் முதல் உழைப்பு என்பது காணப்படுவது இடையர் கூட்டத்தில்தான் (Pastoral tribes). முன்கூறிய வேடர் நிலைமையினின்றும் (Hunter state) நாளாவட்டத்தில் தனது இயற்கையான மேல்நோக்கிற்கேற்க மனிதன் அபிவிருத்தியடைந்து மிருகத்துடன் மிருகமாயிராமலும், கையிற் கண்டதையெல்லாம் நிர்மூலம்செய்து காலாந்தகனாகத் திரியாமலும், தனக்கு நாளைக்கு வேண்டியதை யின்றைக்கே தேடிவைத்துக்கொள்ள ஆலோசனைசெய்யும் திறமைபடைந்து, எப்போதும் நிரந்தரமாய் ஆகாராதிகள் கிடைக்க ஆடுமாடுகளைப் பிடித்துப் பழக்கிவைத்து, அவைகளை மேய்த்து, அவைகளுக்கு நோய்வந்தபோது தகுந்தபடி சிகித்சை செய்து, அவைகளைக்கொண்டு ஜீவனம்செய்யத் துவங்குகிறான். இப்படி யபிவிருத்தியடைந்த நிலைமைக்கு இடையர் நிலைமையென்ச் சரித்திரதத்வபோதிகள் (Historical Philosophers) பெயரிட்டிருக்கிறார்கள். இந்நிலைமையில் அதிகமாக வுழைப்பு வேண்டியிருக்கிறது என்பது விசதமாக விளங்கக்கூடிய விஷயமே. இப்படி இடையர் நிலைமையை யடைந்த ஜனஸங்கங்களில் நாமிரண்டு முக்கியமான குணங்களைப் பார்க்கிறோம். காலாகாலத்தில் ஆகாராதிகள் கிடைப்பதாலும்,

* Labour as an Agent of Production.



குளிர் முதலிய பாதைகள் இல்லாமல் தங்களைக் காத்துக்கொள்ளக்கூடிய சக்தியும் அறிவும் ஜனங்களுக்கு இருப்பதாலும் இந்நிலைமையர் சீக்கிரம் ஸங்கையில் அதிகரிக்கின்றார்கள். ஆயினும் முன்னால் அலைந்து திரிந்து ஜீவனத்திற்குப் போதாமல் தடுமாறிக்கொண்டிருந்த பூமியின் பாதிபாகத்திற் குள்ளாகவே தங்களுக்கு வேண்டியதைச் சம்பாதித்துக்கொள்ளும் திறமையைப் பெறுகிறார்கள். முன்னால் வேடராயிருந்த காலத்தில் ஒருவேளைப் பசி தீர்க்கக் கொல்லப்பட்ட ஆடுமாடுகள் இப்போது பாதுகாக்கப்பட்டுப் பல வேலைகளுக்குதவிப் பாலும், தயிரும் கொடுக்கின்றன. இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் முந்திய நிலைமையைக் காட்டிலும் இப்போது ஜனங்கள் அதிகமாக வுழைத்து வேண்டியபடி பொருள்களை யுண்டாக்கிக்கொள்கிறார்கள். இம்மாதிரி உண்டாக்கப்பட்ட பொருள்களைச் சரியான படி வேண்டிய காலங்களில் உபயோகமாகும்படி காத்தும் வைக்கிறார்கள். ஆகையால் இந்நிலைமையில் க்ஷாமம் என்பது அதிகமாகப் பீடிக்கிறதில்லை.

இதற்கு அடுத்தநிலை வேளாண்மை. (Agricultural state). முன்னிருந்ததைக்காட்டிலும் பன்மடங்கு நாகரிகம் அதிகரிக்க, மனிதன் பூமிகளை யுழுது மண்ணில் மழுங்கி யிருக்கும் பிரகிருதி சக்திகளை வெளிப்படுத்தி, முன்னால் தன்னைப்போல தானே விளைந்து புல்லாந்தரையாகக் கிடந்த விடங்களிலிருந்து, தன்நாவிற்கினியதான வுணவையும், தன்னுடுமாடுகளுக்குப் போதுமான தீவனங்களையும் சம்பாதிக்கிறான். முன்னால் ஒரு இல்லத்தாருக்கு பல வேலி பூமி வேண்டியிருந்தால் இப்போது சில வேபோதும். ஜனங்களும் வெகுவாய் ஸங்கையில் அதிகரிக்கிறார்கள். ஆகாரார்த்தம் அலையவேண்டியதில்லை. இருந்தவிட மிருந்து ஆகாரத்தைப் பூமியினின்றும் எழுப்புகிறார்கள். அலைந்து திரியவேண்டிய கட்டாயம் போகவே இருக்க ஸ்திரமான வீடுகளைக்கட்ட வாரம்பிக்கிறார்கள். வேண்டியவையெல்லாம் எப்போதும் கையிலேயே கொண்டுபோக வேண்டிய ஆவசியகம் குறையவே, புது வகையான ஆசைகளும் அவைகளைப் பூர்த்திசெய்ய புதுவகையான செல்வமும் உண்டாக்கப்படுகின்றன.

இதற்கடுத்த ஸ்திதிதான் நாமிப்போதடைந்திருக்கும் தொழிலாண்மை. (Industrial state). வேளாண்மையுடன் இராமல் கைத்தொழிலினால் வெவ்வேறு பொருள்களை யுண்டாக்கி யனுபவித்து வருகிறோம். இப்படியாக மனிதர் அபிவிருத்தி யடைந்து வந்திருக்கும் மார்க்கத்தைப்பற்றி ஆலோசித்துப் பார்த்தால் இந்நான்கு நிலைமைகள் வழியாகத்தான் என்று நன்றாகத் தோன்றும். ஆயினும் இந்நிலைமைகள் பரஸ்பர விருத்தங்களானவைகள் அல்ல. இப்போது கைத்தொழில் அபிவிருத்தி யடைந்திருக்கும் நமது காலத்திலேயே, வேடர்களும், இடையர்களும், வேளாளர்களும் இருக்கவேயிருக்கிறார்கள். தங்கள் தங்கள் புராதனமான விருத்தியை விடாமல் நடத்தியும் வருகிறார்கள். ஸாமானியமாக வொரு மனிதன் தனக்கு அநுகூலமான ஒரு பொருளை யொரு தடவை உண்டாக்கக் கற்றுக்கொண்டால் அதை அவன் ஒருபோதும் கைசோரவிட மாட்டான். வாழ்நாள் முழுதும் ஒவ்வொருவனும் பிரகிருதியுடன் விடாப்போர்புரியவேண்டி யிருப்பதால் இப்போரில் ஒருதடவை யடைந்த வெற்றியை யிழந்துவிட்டால் ஒருவித சௌக்கியமுமில்லை யாதலால் ஒரு நிலைமையில் அறிந்த விஷயமும் கற்ற கலையும் என்றைக்கும் பிரயோசனப்படுத்தப்படுகின்றன.

இப்படியாக எவ்வகைப்பட்ட நிலைமையிலும் உழைப்பு இருக்கவே யிருக்கிறது. உழைப்பால்தான் மூவகையரும் செல்வத்தை யுண்டு பண்ணுகிறார்கள். இப்படி யெங்கும் விளங்கும் உழைப்பின் சிறப்பானது (1) வேலைக்காரனது திறம் (2) உழைப்பின் விஷயமான [illegible] பாகேன் (3) உழைப்பாளிகளின் ஸங்கை ஆகிய இம்மூன்று காரணங்களைப்பற்றியதா யிருக்கிறது. இவைகளில் [illegible]

வேலைக்காரனது திறம் (The efficiency of the labourer) என்பதைப்பற்றி கொஞ்சம் விஸ்தாரமாய் இந்தப்பாடத்தில் வியவஹரிப்போம்.

நன்றாக வேலைசெய்வதற்கு சரீர தாட்டியம் வேண்டியிருப்பதால் எவ்வளவுக்கெவ்வளவு வேலையாள் திடகாத்திரமுடையவனாகவிருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு வேலை சிறப்பாக நடக்கும். ஆகவே ஒரு இராச்சியத்தின் சீர்மைக்கு அதில் இருக்கும் செல்வம் காரணமாதலால், அச்செல்வத்தை யுத்பத்தி செய்விக்கும் வேலைக்காரர்களது தேகபோஷணையைச் சரியாக நடத்திவைப்பது இராஜாங்கத்தின் முக்கியமான கடமை. வேலையாட்களின் தேகதாட்டியத்திற்கு ஒரு பகுதி பிறப்புக்காரணமாயிருக்கிறது உண்மையே. தாய் தகப்பன்மார்களது சக்தியை யனுசரித்துத்தான் பிள்ளை பெண்களுக்கு சரீரபலம் வருகிறது. மேலும் பிறப்பைத்தொட்டுவந்த இந்த வித்தியாஸம் தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதி, ஜனங்களின் ஜாதி முதலியவைகளைப் பொருத்தும் வாய்க்கிறது. இப்படியாக இயற்கையாயுண்டாகும் காரணத்தைமாற்றுவதற்கு மனிதரால் ஆகாது. ஆனதினால் இதைப்பற்றி நாம் இங்குரைக்கவேண்டியது யாதுமில்லை.

ஆயினும் உழைப்பாளியின் திறத்தை யதிகரிக்க வொரு முக்கியமான காரணம் அவனுண்ணும் உணவு. அவனவன் உணவின் அளவையும் ஸாரத்தையும் பற்றித்தானிருக்கும் அவனவன் திறம். எப்படி புகைவண்டிக்கு விறகு போட்டால்தான் வண்டிகளை யிழுக்கும திறம் வருகிறதோ, அப்படியே மனிதனுக்கும் வயிறுநிறைந்தால்தான் வேலை செய்யச் சக்தியுண்டாகும். ஆகாரவிஷயத்தில் மனிதன் ஒரு யந்திரம்போலத்தான். எப்படி விறகாகப் பரிணமித்திருக்கும் சூரிய சக்தி நெருப்பாக மாறி நீரைக்காய்ச்சி நீராவியால் வண்டிகளையிழுக்கும்படி யுதவுகிறதோ அப்படியேதான் காய் கனிகளாயும், தானியங்களாயும், அல்லது இரைச்சியாயும் இரத்தமாயும் நீராயும் [illegible] பரிணமித்திருக்கும் பாஸ்கரனது சக்தியானது நம்முள் ஆகாரரூபமாகச்சென்று நாம் செய்யும் ஒவ்வொரு கருமத்திற்கும், நாமெண்ணும் ஒவ்வொரு எண்ணத்திற்கும், நாம்வேண்டும் ஒவ்வொரு ஆசைக்கும் காரணமாகிறது. ஆகாரவிஷயத்தைப்பற்றிப் பேசும்போது மனிதனும் ஒரு யந்திர விசேஷமென்று சொல்வதில் யாதொரு பிசகுமில்லை. இத்திருச்சியமான லோகத்தில் உள்ள சக்தி அக்ஷயமானதாகையாலும், நம்முள் காணும் ஸமஸ்தமும் இந்த அக்ஷயமான சக்தியின் பரிணதிகள் தாமாகையாலும் சக்திக்கெல்லாம் அதிஷ்டானம் பாஸ்கரதேசஸ்தானாகையாலும், நம்முடைய திறத்தை அதிகரிக்க அப்பாஸ்கர தேசஸின் பரிணதியான ஆகாரத்தை நாம் உட்கொள்ளவேண்டியது. ஆயினும் எவ்வளவுக்கெவ்வளவு நாம் ஆகாரத்தை அதிகரிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு திறம் சமமாக அதிகரிக்குமென்று எண்ணக்கூடாது. சில தூரம்வரையில்தான் ஆகாரம் அதிகரிக்கவதிகரிக்க வேலைத்திறமும் சமமாக வதிகரிக்கும். எப்படியெனில், ஒருவனுக்கு நாளொன்றுக்கு 10-பவுன் நிறையுள்ள ஆகாரம் வேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். 100-அவுன்ஸ் அல்லது சற்றேறக்குறைய 6½-பவுன் அவன் சாப்பிட்டால், வயிறு நிறையாமல், சக்திகுறைந்துபோய் ஊர்ந்துகொண்டுதான் வேலைக்குப் போகவேண்டும். 100-அவுன்ஸை 125 - அவுன்ஸாகக்கொடுத்தால், நால்பங்கு மாத்திரம்தான் அவனது வேலைத்திரம் அதிகரிக்கும் என்று எண்ணக்கூடாது. அரைவயிறு நிரம்பவும், சுறுசுறுப்புடன் வேலைசெய்யத் தொடங்குவான். 150-அவுன்ஸுக்கு ஆகாரம் உயர்ந்தால், சுகமாகப் பசிதீர்ந்து முன்னிலும் பலமுறை அதிகமாக வேலை நடக்கும். இப்படி யதிகரிக்கும் உணவிற்கு ஒரு எல்லையுண்டு. அதற்குமேல் போனால் அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாமென்கிறபடி விஷமாக உபத்திரவிக்கும். ஆகையால், வேண்டிய ஆகாரம் செல்லுகிறவரையில் ஆகாரத்தை லோபித்தனமாகக் குறைப்பது வேலைக்குக்



கேடு உண்டாக்குகிறது. ஆகையால் ஒவ்வொரு இராசாங்கத்திலும் வேலை செய்கிறவர்களுக்கு தகுந்த ஆகாரம் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியது. உயிருடன் வாழ்வதற்கு வேண்டிய ஆகாரத்துடன் கொஞ்சம் கூட்டினால் போதும். சுகஜீவனத்திற்கு வேண்டிய பாகம் வந்துவிடுகிறது. சந்தைக்குக் கொண்டுபோகவைத்துக் காப்பாற்றும் ஆடுமாடுகளுக்குமன்றோ வேண்டியபடி ஆகாரம் போடுகிறோம். அது குறைந்தால் இளைத்துப்போகுமென்று பயப்படுகிறோம். மனிதன் விஷயத்தில் மாத்திரம் ஏன் இப்படி நிஷ்கருணையுடையவர்களாயிருக்கிறோம் என்பதை நன்றாக யோசிக்கிறதில்லைப்போலும்.

ஜி. கஸ்தூரி ஐயங்கார்.

பிழை. 8-வது வாலம் 1-வது நெம்பர் 20-வது பக்கம் 8-வது வரி The law of Decreasing return என்பதை The law of Increasing returns என்று வாசிக்கவும்.

## THE WRECK OF THE STELLA.

### 'ஸ்தெல்லா' வென்னும் நீராவிக்கப்பல் முழுகிப்போன பெரு விபத்து.

['ஸ்டேல்லா' வென்னும் நீராவிக்கப்பல், சென்ற மார்ச்சுமீ 30உ இங்கிலீஷ்கால்வாயென்னும் சமுத்திரத்தில் பிரயாணம் செய்கையில், 'அல்டர்னி' என்னும் தீவுக்கருகாமையில் ஓர் பாறைமேல்மோதி உடைந்து முழுகிப்போயிற்று. அதில் ஸ்திரீ புருஷர்கள் அடக்கம் பிரயாணிகளும் மாலுமிகளுமாய் மொத்தம் 210-பேர் இருந்தார்கள். வசந்தருதுவின் ஆரம்பமாதலின் அப்பிரயாணிகள் சமுத்திரமத்தியில் உள்ள தீவுகளுக்கு விநோதார்த்தமாகப் போவார்களாயிருந்தார்கள். கப்பலிலிருந்த ஸ்திரீகளும் பிள்ளைகளும் படவுகளில் ஏற்றிக் காக்கப்பட்டார்கள். புருஷர்களில் மாத்திரம் 80-பேர்வரையில் இறந்துபோனார்கள். இப்பரிதாபமான கொடிய விபத்தை அடியில்வரும் பாடல்களில் ஒருவாறு விவரிக்கலானேன்.]

1. காண்மினோநெடும் தாரகை * யெனும் அணிக் கலத்தைப் !
பூண்மினும்பல பூவையர் புனையிளம் புதல்வர்
தோண்மிடைந்ததார் மைந்தரைச் சுமந்தது விரையும்,
வாண்மினேடைமால் களிறெனை, மறிகடல் மிசையே.

(அதோ பாருங்கள் தாரகை என்னும் கப்பலை. பூவையரையும் புதல்வரையும் மைந்தரையும் சுமந்து களிற்றைப் போலக் கடல்மேல் விரைகின்றது.)

2. மலர்ந்த கொம்பரின் மகளிரும், மைந்தரும் மல்கி,
நிலந்த விர்ந்தனர் கடன்மிசை நெறிக்கொளல் நோக்கின்,
நலந்த ரும்பெரு விழவொன்று காணுறு நயப்பால்,
கலந்து செல்குந ராமெனக் காணுவர் அன்றே.

(மகளிரும் மைந்தரும் கடன்மிசை நெறிக்கொள்ளல்நோக்கின் விழவொன்று காணும் நயப்பால் செல்பவர்போலக்காண்பர்.)

* Stella which means a star has been interpreted into தாரகை,

3. மாணெ ழில்பெறு மடந்தையர் பலரொடு, மைந்தர்,
பூணி லங்கிய மழலையஞ் சிறுவரும் புரிந்து
வேண வாவொடு காணுமவ் விழவினைத் தானும்
காண உள்விழைந் தாலெனக், கடுகுமக் கலமே.

(மடந்தையரோடு மைந்தரும் சிறுவரும் காணும் விழவினைத் தானும்காண விழைந்தது போலக் கடுகும்.)

4. ஒருங்கு நூலுணர் வினர்தர ஆவிகொண் டுயிர்த்துச்,
சுருங்கு சிற்றிடைத் தோகையர் மைந்தரைச் சுமந்து,
நெருங்கு மாளிகைத் தலையொன்று நெறிக்கொளல் போலும்
கருங்க டற்றலை விரைவது, காணுமக் கலமே!

(நூலுணர்வினர்தர உயிர்த்துத் தோகையரையும் மைந்தரையும் சுமந்து மாளிகை யொன்று நெறிக்கொளல் போலும் அக்கலம்.)

5. தேன மர்குழற் றெரிவையர் புருடர்கள் செறியும்
யான மன்னதங் கியம்பிடின், இமையவர் இலங்கும்
வான மாதரோ டிழிந்துமண் மருவிய மணிசெய்
மான மொன்றுநீள் மறிகடல் ஊர்வதை மானும்!

(தெரிவையரும் புருடரும் செறியும் அந்த யானம் இமையவர் மாதரோடு மண்ணெய்திய விமானமொன்று கடலில் ஊர்வதுபோலும்.)

6. ஏகும் அன்னவர், மகிழ்ச்சியின் எறிதிரைக் கடலின்
ஆகும் பல்வளம் விழிவிருந் தாகனி கண்டு,
பாகு மென்மொழிப் பாவையர்க் கரும்புதல் வருக்கு
வாகு டன்தெரித் தகமகிழ்ந் ததையெவன் வகுப்பேன்?

(அன்னவர் கடலின் ஆகும் வளங்களைக்கண்டு பாவையர்க்கும் புதல்வருக்கும் தெரி வித்து மகிழ்ந்ததை எப்படிவகுப்பேன்.)

**வேறு.**

7. கணவரைத் தழுவி நின்று, கதிர்மணி முறுவல் பூப்ப,
அணிகிளர் பவளச் செவ்வாய் அலர்ந்தசெங் குமுதம் ஊற்றும்
தணிவறு சுவைச்சொற் றேறல் தாமவர் செவிவாய் உண்ணத்,
திணிதரும் அன்பின் நோக்கிச், செவ்விதின் ஊட்டுவாரும்;

(தழுவிநின்று முறுவல்பூப்ப சொல்லாகிய தேறலை உண்ண அன்பின்நோக்கி ஊட்டு வாரும்.)



8. மழலைமென் குதலைச் செவ்வாய் மைந்தரைக் கரத்தில் ஏந்திக்
குழை தர உள்ளம் அன்னார் குளிர்மொழி மாந்து வாரும்;
தழைவுறும் அன்பின் அன்னார் தாமரை முகத்தை நோக்கி
அழகெனும் அமுதைக் கண்ணால் அருந்தியுள் மகிழுவாரும்;

(மைந்தரை ஏந்தி உள்ளம் குழைய அன்னார் மொழி மாந்துவாரும், அன்பின் நோக்கி அமுதைக் கண்ணால் அருந்தி மகிழ்வாரும்.)

9. செங்கரம் பிடித்து நின்ற திருவினிற் சிறந்த தங்கள்
மங்கையர்க் கொன்றைக் காட்டி மனமுற மகிழு வாரும்;
நங்கையர் பிணையிற் றம்மை நயந்துற, நடைகொள் பீடார்
சிங்கவல் ஏறு போல வயின்வயிற் றிரிகு வாரும்;

(நின்ற மங்கையர்க்குக்காட்டி மகிழ்வாரும், நங்கையர் நயந்துற ஏறுபோலத் திரிவாரும்.)

**வேறு.**

10. தொக்கவெண் வயப்பரித் தொகையிற் றுள்ளியே
ஒக்கமுன் விரைந்திடும் உததி நோக்கியே,
கைக்களி றனையதம் கணவர்க் காட்டினர்,
இக்கடல் ஏகும்நம் மோடென் பார்களும்;

(பரித்தொகையைப்போலத் துள்ளிவிரையும் உததியைநோக்கி கணவர்க்குக்காட்டி ஏகுமென்பார்களும்.)

11. பாருமின் பரதவர் படகிற் கூடினர்,
நேரிய தூண்டிலும் வலையும் நீட்டியே,
பேருறு மீனினம் பிடித்தல் காண்மெனச்,
சீருறு சிறுவரைத் தேற்று வார்களும்;

(படகில் பரதவர் கூடி தூண்டிலும் வலையும் நீட்டி மீனினம் பிடித்தல் பாருமின் என்று சிறுவர்க்குக் காட்டுவாரும்.)

12. இழைவளா மேனியர்க் கியன்ற காதலால்,
மழைவளர் மதர்விழி மகிழ மாறுகண்
நுழைவறு நெடுந்திசை நுட்ப மார்பொருள்
குழல்வழிக் குறுகிடக் காட்டு வார்களும்;

(மேனியர்க்குக் காதலோடு மகிழுமாறு நுட்பமார் பொருள்களைக் குழல்வழிக்காட்டு வார்களும்.)

13 கொண்டதோர் சைவலக் கூந்த லும்பிறழ்
கெண்டைவாள் விழிகளும், பவளக் கேழ்கிளர்
தொண்டைவா யும்கொடு துலங்க லாற்கடல்
பெண்டிரே போலுமாற் பெரிதென் பார்களும்;

(சைவலக்கூந்தலும் கெண்டைவிழிகளும் பவளவாயும் கொண்டுதுலங்கலால் கடல் பெண்டிர்போலும் என்பார்களும்.)

14. வாளையொண் வாட்படை வீசி, வார்திரைக்
கோளறு பரிநிரை செலுத்திக், கூம்புடை
நீளுறு கலங்களைத் தேரின் நேரலால்,
மீளிமொய்ம் பினர்தமை மிகுமென் பார்களும்;

(வாளையாகிய வாட்படையைவீசி திரைகளாகிய பரிநிரையைச் செலுத்திக் கலங்களைத் தேரைப்போல் செலுத்தலால் கடல் யுத்தவீரரையே ஒக்கும் என்பார்களும்.)

15. நாளைநாம் நமர்அணி மனையில் நண்ணியிவ்
வேளைநல் விருந்துண மிளிர்வ மென்பரும்;
மாளிகை வீதியும், மலர்கொள் சோலையும்,
நீளநின் றுலவுவம் நெடிதென் பார்களும்;

(நாளை இவ்வேளைக்கெல்லாம் நம்மவர் மனையில் விருந்துண்டு மகிழ்வோமென்பார்களும்; வீதிகளிலும் சோலைகளிலும் உலவுவோ மென்பார்களும்.)

16. இன்னணம் பலபல இயம்பி, மைந்தரும்,
பொன்னனை யார்களும் புரிந்து மேவினர்;
அன்னவண் கலமிசை அவர்கள் கொண்டதோர்
துன்னுநன் மகிழ்வினைச் சொல்ல லாவதோ?

வேறு.

17. புதுப்பி றங்கணி துகிலொடு பொலிந்தனர், மனத்தில்
மிதப்ப தாகிய களிப்பொடு விழவணி காண்பான்
கதிப்பொ டேகுவார்க் கடுத்ததென்!—கன்மத்தின் தொடர்பாம்
விதிப்ப யன்தனை விலக்குவார் யாவரே விளம்பின்?

(அணியோடும் துகிலோடும்பொலிந்து களிப்போடு ஏகுவார்க்கு நேரிட்டவிபத்தென்ன! விதிப்பயன்.)

18. இன்ன ராஅவர் செல்வுழி வானிடம் எல்லாம்
என்னையே! பனி கவிந்ததால் இரவியும் மறைந்தான்,
பின்னும் முன்னும் எத் திசையினும் கட்புலன் பிறழத்,
துன்னும் வல்விதி சூழ்ந்ததோர் சூழ்ச்சியின் அன்றே.
(செல்லும்போது வல்விதியின் சூழ்ச்சிபோல எங்கும் பனி கவிந்தது.)

19. பாயும் ஒண்கலன், பாகனுக் கடங்கலா மதங்கொள்
காயும் வெஞ்சினக் களிறெனக், கணத்தினிற் கடுகி,
ஆயும் உள்ளறி வில்லவர் செயலென, அந்தோ!
மேய தோர்பெரும் பாறைமேல் வீசிய தன்றே!

(கலமானது பாகனுக்கடங்காக்களிற்றைப்போலக்கடுகி உள்ளறிவில்லார் செய்கைபோல பாறைமேல் வீசியது.)



20. அடைந்த பேர்களை யளிக்குமா் அறிவிலா தறனைக்
கடிந்து தீவினை வயப்படும் கசடனங் கொருவன்
மிடைந்த சுற்றமோ டிறுதியில் விளிவது போல,
உடைந்து போயதால் ஒண்கலம் ஒருகணத் தன்றே!
(அறிவில்லாது தீவினைவயப்படும் கசடன் விளிவதுபோல உடைந்து போய்து.)

21. கோல மார்கலன் குன்றொடு குன்றுறத் தாக்கல்
போல வாரியிற் புதைந்துறு பொருப்பினில் மோதிக்
காலன் ஊர்புகக் காட்டிய வழியெனத் திறக்க
வேலை நீர்புகுந் தியாவையும் விழுங்கிய தன்றே!
(கலன் பொருப்பில் மோதித்திறத்தலால் நீர்புகுந்து விழுங்கியது.)

வேறு.

22. மாக்கலன் உடைதலும், வனிதை மார்களும்,
நீக்கரும் புதல்வரும், நெடிய மைந்தரும்,
ஏக்கமுற் றினைந்தனர்; இரங்கி வாடினர்;
ஆக்கையும் தளர்ந்தனர்; அறிவும் சோர்ந்தனர்.

23. மைந்தர்தம் மகளிரைத் தழுவி "மற்றுமை
இந்தவெவ் விடரினுள் இருத்த வோவிவண்
தந்தனம் பாவியேம்" என்று சாற்றியே
நிந்தனை தமைப்பல நிகழ்த்து வார்சிலர்.

24. "எம்முயிர்க் கிடருழந் தில்லம் எம்சிறார்
தம்முயிர் காக்குமோர் தகையுண் டோ",வெனச்
செம்மையின் மக்களைத் தழுவித் தேம்புவார்.—
அம்மவோ! அவர்துயர் அறையற் பாலதோ?

25. கற்புடை மகளிர்தம் கணவர்க் காப்பதே
முற்படு செயலென முன்னு வாருமை
அற்புடன் காப்பதெவ் வாறென் றன்பனைப்
பொற்புடன் அணைத்தொரு பூவை ஏங்குமால்.

(கணவரைக்காப்பதே முற்படுசெயலென்று கற்புடைமகளிர் முன்னுவார்.)

26. மெல்லியல் தங்களை மெலிவொன் றின்றியே
ஒல்லையிற் காப்பது கணவர்க் குற்றதால்,
நல்லாளை இடருறப் பார்த்து நாணுறல்
புல்லிதென் றொருமகன் புழுங்கிச் சோருமால்.

27. "மங்கையை இழத்தற்கோ மகவைத் தீர்தற்கோ
பங்கமில் குணத்தமர் பரித வித்தற்கோ
இங்குனை அடுத்தனம்?" என்று நிந்தனை
சங்கலை கட்லினைச் சாற்று வார்சிலர்.

28. "திட்பமின் றெமைச்சதி செய்த வங்கமே,
மட்பரி நம்பியா திழிந்த வாறுனைப்
பெட்புறப் பேதையேம் பிடித்திட் டேம்"என்க்
கொட்புறு மனத்தராய்க் கூறுவார்சிலர்.

29. கொல்லும் வெம் புலிபுதர் ஒளிந்து கோமுதற்
பல்விலங் கினையுயிர் செருக்கும் பான்மைபோல்,
மெல்லவிக் கடலிடை யொளிந்து வீட்டிய
கல்லினுக் கென்குறை கருதி னேம்?" என்பார்.

வேறு.

30. இன்ன வாறிவர் இடர்உழும் வேலையில்
துன்னும் நீள்கலக் காவலன் தோன்றியே
முன்னர் யாம்சிறூர் மொய்குழ லாரையும்
நன்னர் காத்தல் கடனென நாட்டினான்.

31. இறக்கி னார்பல தோணிகள், ஏற்றினார்
நறைக்கு ழல்மட வாரைநற் பாலரைய்,
பறக்கை யோடவர் தங்களைப் பாண்மையின்
நெறிக்கொ டேகினர் நீள்கரை நோக்கியே.

32. ஒன்றின் பின்னுற ஒன்றுமற் றேணிமேல்,
மன்றல் வார்குழ லாரைநன் மக்களை
நன்று கொண்டுசென் றுருயிர் நல்கினார்;
அன்ற வர்செயல் தானென் னறைவதே!

33. ஆவி போவ துறுதிய தாயினும்,
தாவ ரும்முறை யிற்றவிர்ந் தாரலர்;
காவ லன்சொற் கடந்திலர் யாருமே,
மேவும் ஆடவர் மேன்மையென் சொல்வதே!

34. பெற்ற தாயரைப் பெட்புறு மக்களை
உற்று நோக்கி, அவர்உயிர் உய்யுமேல்,
மற்று நாமுயிர் மாயின் வழுக்கிலென்



35. தாக்கிப் பத்து நிமிடத் துட் டாழ்ந்ததால்
நோக்கி நின்ற பலரொடும் நோன்கலம்
மாக்க ளன்னவர் ஆவி மடியினும்
ஆக்கு மொண்புகழ்க் காரழி வில்லையே.

36. சமரில் வெல்லலன் றேதனிச் சௌரியம்,
அமரும் நம்மில் மெலிபவர்க் காதரம்
சமையு மாறுறு தங்கலம் தீர்தலே
அமையு மாப்பெருஞ் சௌரியம் ஆவதே.

வேறு.

37. பொள்ள லாகிய பூதவிவ் வுடம்பினைப் போக்கி
ஒள்ளி தாகிய புகழுடம் பினையவர் உற்றார்.—
தள்ள ரும்துயர் மலிபுமிச் சாணெனும் வாழ்வில்
கொள்ளும் வண்புக ழல்லது குறிப்பதொன் றுளதோ?

38. தார கைப்பெருங் கலத்தினுக் கயர்துமோ? தகைசேர்
வீர னுமதன் காவலற் கயர்துமோ? விருப்பால்
நாரி மாரையும் சிறாரையும் நலனொடு புரக்க
நேரு மாவிதிர் புருடரை நினைந்தயர் குதுமோ?

S. M.

## கௌரி சங்கரர்:

### உண்மையான ஹிந்துவாகிய ஓர் முதல் மந்திரி.

'ப்ரொபெஸ்ஸர் மாக்ஸ் மூலர் அவர்கள் 'நைன்டீன்த் ஸென்சுரி'... 'பார்ட்னைட்லி ரிவியூ' என்னும் லண்டன் மாதாந்த பத்திரிகையின் பிப்ரவரிமாதச் சஞ்சிகையில்இந்தியர் வாழ்க்கையின் உட்பொருளை விளக்கக்கூடிய ஓர் முதன்மந்திரியின் சரிதையை அவர் அறிந்தவண்ணம் எடுத்தெழுதி யிருக்கின்றனர். அவர் உத்தேசம் கீழ்த்தேசத்தாரிற் சிறந்துள்ளவற்றை மேற்றேசத்தார் அறிந்துணர வேண்டுமென்பதே. இவர் சமீபகாலத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் சரித்திரமொன்று இங்கிலீஷில் எழுதிப் பிரசுரித்துளார். இப்படி மேற்றேசத்தாரிற் பலர் நம்மிற் சிறந்துளவற்றை அறிந்துணரவும் உணர்த்தவும் முயன்று வருகையில் நாம் நம்மிற் றன்மடங்கு சிறந்து விளங்கும் மேற்றேசத்தார் அறிவையும் ஞானத்தையும் அறிந்துணரவும் உணர்த்தவும் வகைதேடாது, சும்மாவிருப்பது மௌடீக மன்றோ!

ப்ரொபெஸ்ஸர் மாக்ஸ் மூலர் எழுதியிருக்கும் அந்த முதன் மந்திரியின்பேர் கௌரிசங்கரர். அவர் 'பாவநகரின்' மந்திரித் தொழில் செலுத்திவந்தார். ஜர்மானிய தேசத்தை எப்படி பிஸ்மார்க் என்பவர் நிலைநாட்டினாரோ அதுபோல பாவநகரை நிலைநாட்டியவரிவராம். இவ்விருவர் வேலைகட்கும் மிகுந்த வித்திய சமுண்டு; ஆதலின் அவற்றை ஒப்பிட முயல்வதும் அறியாமையேயாம். ஆனால் அவ்விரண்டிலும் பின்பற்றிய வழிகள் முடிவில் ஒன்றேயாம். இதுமட்டோ! ஒரு பெரிய கடியாரத்தைவிட ஒரு சிறிய கைக்கடியாரத்தைச் செய்வதிலும் சீர்ப்படுத்துவதிலும் அதிக வேலைத்திறமும் சாக்கிரதையும் வேண்டுமென்பதுபோல, ஜர்மானியை உருப்படுத்தி ஸ்திரப்படுத்துவதற்கு வேண்டிய சாமர்த்தியத்தைவிட இச்சிறிய பாவநகரைச் சீர்ப்படுத்துவதில் அதிக திறமை வேண்டுமென்பது யாவருமறிந்ததே. இவ்விந்திய மந்திரியானவர் குற்றமற்ற வாழ்க்கையையுடைய சாதுவாய் எப்போதும்,

எவ்விடத்தும் சமாதானமே பெரிதுஞ் செய்பவராயிருந்தார். மிஸ்டர் கிளாட்ஸ்டனைப்போல இவரும் 'அப்பெரியவரான மகான்' என்று,—அதைவிட விசேஷமான 'அப்பெரியவரான சாது' என்று இந்தியாவில் பிரசித்தி பெற்றார். மேலும் அந்த கிளாட்ஸ்டனைப்போல யோசனை, செய்கை என்னுமிரண்டையும் ஒருங்கே தம்மிடத்துடையரா யிருந்தார். இந்நிலவுலகத்துள்ள மனிதவாழ்க்கைக்குறிய அறிய பெரிய தத்துவஞான விஷயங்களிலே அவர் எண்ணம் பதிந்திருந்தது. அப்படி யிருந்தபோதிலும் அந்தச் சிறிய நாட்டின் நித்திய வாழ்க்கையிலும் கவலைகளிலும் ஒவ்வொன்றிலும் அதி ஊக்கத்தோடும் முயன்று செய்துகொண்டேவந்தனர். அவர் பாவநகரின் அரசர்களுக்கு நான்கு தலைமுறையாக மந்திரித்தொழில் செய்துவந்தார். மேலும் காத்யவாரில் (Kathiawar) இருந்த 'பொலிடிகல் ஏஜண்டு'களுக்கு சிக்கலான இராஜ்யவிஷயங்களில் அடிக்கடி யோசனை சொல்பவராயிருந்தார். 1805-ம் வருஷத்திற் பிறந்த இவருடைய எண்பத்தொன்றாம் வயதில், இவ்விருத்தனைச் சந்தித்தபின் அப்பொழுது பம்பாய் கவர்னராயிருந்த லார்ட் ரே (Lord Reay) அவர்கள் இவருடைய கலங்கா அறிவையும், டம்பமும் கபடமுமற்ற நல்ல மனதையும் பார்த்து மிக ஆச்சரியமடைந்ததாக வெளியிட்டிருக்கின்றார்.

இவர் சிறந்த இராஜதந்திரியும் அறிதற்கரிய தத்துவ ஞானியுமாயிருந்தார். இப்படி தத்துவ சாஸ்திர உணர்வை பெரிதுடையராய், உலகத்தார் சொல்வதுபோல் நனவில் கனவு காண்பவராயிருந்ததோடு செய்கையிலும் மிக வல்லவராயிருந்த இவரைப்பற்றி ப்ரொபெஸ்ஸர் மாக்ஸ்மூலர் பின்வருமாறு மிக வியந்தோதி யிருக்கின்றனர் :—

இவரறிந்த தத்துவஞானமானது, இவ்வுலகினுபயோகமுள்ளதென்று சொல்லப்படும் மேற்கத்தி ஞானத்தைப்போன்றதல்ல ; அதாவது இவ்வுலகத்தையும் அதனியலையும் பற்றியதல்ல. இவ்வித உலகஞானமானது ஐரோப்பாவிலுள்ள முதன் மந்திரிகளிடத்தும் இருக்கத்தக்கவை. இது அப்படியல்ல. ஐரோப்பாவிலிருக்கும் மகா வல்லவரான தத்துவசாஸ்திர நிபுணர்களின் முற்றிய அறிவையும் விளங்காதுழற்றி முற்றும் வருத்தும் தன்மையதாகிய அரிய கீழ்த்திசைத் தத்துவ ஞானமாக்கும் இவரறிந்தது. அப்படி யிருப்பினும் அந்த தத்துவஞானமானது கௌரிசங்கரரை மந்திரியாயிருக்கும் அக்கடின வேலைக்கு அபாத்திரராக்குதலைவிட்டுத் தினந்தோறும் அவர் கையாற் செய்வன யாவுந் திருந்தச் செய்தற்கு மேலும்மேலும் தகுதியுடையராக்கிற்று. அவர் தன் இராஜ்ய வேலையின் மதிப்பைப் பூரணமாயறிந்திருந்தபோதிலும், எப்போதும் அதற்கும் மேலானதொன்றுண்டென் றுணர்ந்திருந்தார். இவ்வுலக வாழ்க்கையின் கடமைகளைச் செய்வதில் அவர் தன் வல்லமைகளை யெல்லாம் செலுத்தினபோதிலும், இவ்வுலக வாழ்க்கையானது நீர்மேற் குமிழிபோல் நிலையற்றதாய் அதிசீக்கிரம் அழியக்கூடியதென்றும் இதில் உண்மையொன்றுமில்லையென்றும், இதற்குப்பின் இதற்கும் மேலான வாழ்க்கை மற்றொன்று உள்ளதென்றும் அதுவொன்றே நாமெல்லாம் வாழத்தகுந்ததென்றும் அவர் பூர்ணமா யுணர்ந்திருந்தார். இப்பரலோக ஞானமே, அவரைக் குழப்பமும் சந்தடியும் நிறைந்த இவ்வுலக விவகாரங்களை நடத்தற்கு வேண்டுவனவற்றைச் சரிவரச்செய்ய மிகத் தகுதியுடையவராக்கிற்று. இதனாலேதான், அவர், தம் முயற்சிகள் பிரயோசனப்படாது இடருற்றாலும், எதிரிடையாய் முடிந்தாலும், தாம் நம்பிய தோழர்கள் தம்மைக் கைவிட்டாலும், அதைரியப்பட்டு மனந் தளர்ந்தாரில்லை.

சுருக்கத்தில், வேதாந்தமே அவருடைய கொள்கையாக விருந்த தென்பதை விளக்கச் சில குறிப்புகள் மட்டும் நமது அங்கிலேய பண்டிதர் எடுத்துக் காண்பிக்கிறார் :—

அவர் இவ்வுலக வாழ்க்கையை யொதுக்கியது தன் எண்பதாவது வயதில். இவ்விருத்தரானவர் இவ்வுலகத்தினின்றும் ஒதுங்கி, வேதத்தில் விதித்தபடி மூன்றாவதாச்சிரமத்தை யனுசரித்து, வனத்திற் புகுந்து அங்கே தவஞ்செய்து தன் பஞ்சப்புலன்களையும் வென்று மனோவிகாரங்களை யடக்கிச் சிந்தையைத் தன்வழிப்படுத்துதலையே மேற்கொண்டு காலங்கழித்து வந்தார். இவர் வானப்பிரஸ்தாச்சிரமத்தி லிருக்கையில் ப்ரொபெஸ்ஸர் மாக்ஸ் மூலருக்கெழுதிய கடைசிக் கடிதத்திற் பின்வருமாறு கூறியிருக்கின்றார் : "என் தேகவன்மை சீக்கிரமாகக் குறைந்துகொண்டே வருகின்றது. அதனை நன்முடிவேற்றுவதற்கு நான்காவதாகிய சந்நியாசாச்சிரமத்திற் புகுவதாகத் தீர்மானித்துவிட்டேன். அதனாலே, இவ்வுலகவாழ்க்கையின் எண்ணங்களையும் கவலைகளையும் முற்றும் ஒழித்து, இதனோடு யாதொரு சம்பந்தமு மில்லாததாகிய பதத்தை யடைவேன். அறுபது வருஷங்களுக்கு மேலே இராஜ்ய விஷயங்களில் இராஜாதிகாரம் செலுத்திக் காலங்



கழித்துவிட்ட பிறகு இப்போது, என் ஆத்மாவானது அந்தப்பரமாத்மாவோடு இரண்டறக் கலத்தற்கேதுவென்று நம் முன்னோர்களாற் காட்டப்பட்ட சந்நியாசத்தைவிட என்னால் இச்சிக்கப்படத்தக்கது இவ்வுலகில் வேறொன்றில்லையென் றெண்ணுகிறேன். இது முடியுமாயின் எவனும் பிறப்பிறப்பை யறுத்துவிடுகிறான். அப்படி பிறப்பிறப்புகளை யொழித்து மோட்சமாகிய வீட்டை யடைவதற்கு வழியாகிய இதைவிட நான இச்சிக்கத்தக்கது வேறென்னவுள்ளது ?"

பின் அவர் உலகத்தோடு கௌரிசங்கரரென்னும் பேரையு மொழித்து சந்நியாசம்பெற்று சச்சிதாநந்தர் என்னும் பெயரால் விளங்கினார். 'சச்சிதாநந்தர்' என்றால் கடவுளுடன் ஒன்றாய் இருந்து அறிந்து அனுபவிப்போர் எனப் பொருள்படும். இப்படிக் கடவுளோடொன்றுபட்டுப் பிரம்மானந்தமனுபவித்துக்கொண்டிருந்த இவரைப்பற்றி இவர் மகனார் 'பகவத்கீதை' யொன்று அனுப்பியபோதறிந்ததல்லாமல், வேறெப்போதும் பின்னர் இவரைப்பற்றித் தாம் கேள்விப்பட்டதில்லையென்று ப்ரொபெஸ்ஸர் மாக்ஸ் மூலர் கூறியிருக்கிறார்.

இங்கு பிரஸ்தாபித்த கௌரிசங்கரர் என்னும் முதன் மந்திரியைப்போலவே வடநாட்டிலிருந்து வாழ்ந்தோர் பலர். தென்னாட்டிலும் அப்படியே. முந்நாள் மதுரையில் அரசுபுரிந்த அரிமர்த்தன பாண்டியனுக்கு மந்திரியாக வாதவூரார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் வாழ்க்கையும் பலவிடங்களில் இத்துடன் ஒத்திருப்பதாக நாம் புராணங்களாலறிந்தவரை தோற்றுகின்றது. தமிழ் நாட்டில் புகழ்பெற்று விளங்கும் தாயுமானவர் சரித்திரமும் ஏறத்தாழ இத்தகைத்ததே. ஆதிகாலந்தொட்டு நம்மவர்களில் உண்மையான மேலோர் வாழ்க்கைமுறை இப்படியே யிருந்துவருகிறது. உன்னிப்பார்க்கின், நம் தேசத்தில்மட்டுமல்ல, மேற்றேசங்களிலும் ஞானத்தில் முதிர்ந்த மேலோர் வாழ்க்கையும் இப்படியேதானிருக்கிறது. இதற்குதாரணம் வேண்டின் மேலே குறிப்பிட்ட மிஸ்டர் கிளாட்ஸ்டனின் ஜீவ்யசரித்திரமே இசைந்ததோர் உதாரண

## சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாகவிருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

## சுகத்தின் பயன்.

(25-வது பக்கத்தொடர்ச்சி.)

ஜனங்களின் தற்கால வறுமையினால் வருங்கேடும் அவ்விஷயத்தில் பணக்காரர் உதவிசெய்யவேண்டிய அவசியமும்.

சுகாதார முறைகளை யெங்கும் பரவச்செய்வதற்கிடையூறா யிருக்கும் அனேக காரணங்களில் இந்து தேசத்தின் வறுமை பிரதானமானதுதான். என்றாலும் சுகவீனமாயிருத்தல் திரவிய நஷ்டத்தை யுண்டாக்குகிறது. இதற்குத் திருஷ்டாந்தம் தேவையோ? ஓர் சிறு ஊரில் ஒரு குப்பைவண்டி வைத்து நாள்தோறும் ஆங்காங்கு சிந்திக்கிடக்கும் அசுத்தமானதும் அசங்கியமானதுமான எல்லா வஸ்துக்களையும் அப்புறப்படுத்த யோசித்தால், அவ்வகையில் மாதம் சராசரி ரூ. 10 செல்லுமென்று யோசித்து அவ்வூரார் அவ்விஷயத்தில் ஒன்றுஞ்செய்யாமல் சும்மா இருந்துவிட்டார்களென்று வைத்துக்கொள்வோம். மார்கழிமாதம் மழை யதிகமாய்ப்பெய்து பூமி குளிர்ந்து எங்கெங்கே பூமி சமனற்றிருக்கிறதோ அங்கங்கே தண்ணீர் கட்டி முன் அதில் குவிந்திருந்த அசங்கிய வஸ்துக்கள் மிகவும் அழுகி நாற்றம் கிளம்பி ஆகாயம் அசுத்தப்பட்டு அம்மூலமாய் தேக ஆரோக்கியம் குன்றி முறைக்காய்ச்சலும் வாந்திபேதியுமுண்டாயிற்றென்றும் வைத்துக்கொள்வோம். அப்படி வியாதிகளா லனேகர் வருந்தி மரணம்நேர்ந்ததால் அவ்வூரிலுள்ள பணக்காரருக்கு [illegible]டுதியுண்டாகிறது. பக்கத்து வீட்டில் ஒருத்தி செத்தால் துக்கத்துக்குப் போயிருந்த தன் பெண்டுபிள்ளைகளெல்லாம் ஒருபக்கத்தில் கூடி சொக்கம்மாள் இறந்துபோனாள் என்று அதிக சிந்தையுற்று பேசிக்கொண்டிருக்கிறதைக் கேட்டு "அடுத்த வீட்டுக்கு வந்த அம்மனைத் தடுத்துச் சொன்னாலும் போகமாட்டாள்", "விடுவிடென்று நம்முடைய வீட்டிற்கு வந்துவிட்டால் என் செய்வது" என்று ஐந்துரூபாய் செலவிட்டு அடுக்களைமுதல் படுக்கையறைசேர்த்து யடிக்கிறான். இதோடே

போகிறதா? துர்வாசனை நிறையாதபடி வீடுகளில் சாம்பிராணிவத்திகள் வாங்கிக் கொளுத்துகிறான். இப்படியிருக்க ஊரில் ஒருவரிரண்டுபேர் ஓரே நாளில் மடிந்துபோய்விட்டால் ஒரு சகுதிக்காரர் மேற்படி ராமனல்லூர் சாமளாதேவிக்குப் பூமாலை சாத்திப் பொங்கலிட்டுக் கொடைகொடுக்கவேண்டுமென்று ஊர் வரி யெடுத்து பாதிப் பணத்தைப் பக்கத்துவீட்டுப் பரமசிவன் அறியாமல் பாதகாணிக்கையாய்ப் பாவித்துக்கொண்டு, பறைமேளஞ் சாற்றுப் பாதிராத்திரிமட்டும் படித்தறியாதபேதை ஜனங்களைப் படுத்துறங்காமல் விழித்திருந்து விபூதி வாங்கி வெண்பொங்கல் உண்டு விரதமிருக்கச்செய்கின்றனர். இதனாலேயே எவ்வளவுதீமை விளையக்கூடியது பாருங்கள். இது இப்படியிருக்க, மற்றொரு சகுதிக்காரரோ தொற்றுவியாதிகள் பரவாதிருக்கும்பொருட்டாய் 10-அல்லது 15-ரூபாய்க்கு குங்கிலியமாவது தாரெண்ணெயாவது வாங்கி அங்கங்கே தெருக்கள்தோறும் எரிக்கிறார்கள். இவைகளி லெல்லாம் எவ்வளவு செலவு நேரிடுகிறது பாருங்கள். மேலும் எத்தனை பிராண நஷ்டம் நேரிடுகிறது.

*இராஜாங்கத்தாரும் கல்விமான்களும் செல்வவந்தர்களும் செய்ய வேண்டிய காரியங்களெவை.*

ஆகையால் வறுமையை முகாந்திரமாக்கி சுகவழிகளில் பணச்செலவு செய்யாதிருக்கும் லோபிகளுக்கு அதற்கிரட்டிப்பு செலவாகுமென்பதிற் சந்தேகமில்லை. என்றாலும் ஏழைகளால் என்னசெய்ய முடியும். இவ்விஷயத்தில் முயற்சிக்கவேண்டியவர்கள் இராஜாங்கத்தாரும் கல்விமான்களும் செல்வவந்தர்களுந்தான். இராஜாங்கத்தார் தம் தேசத்துக்குடிகள் க்ஷேமமப்படும் பொருட்டாய் தாமே முன்னின்று திரவிய சகாயஞ்செய்து மேல்நடத்தவும், குடிகளில் தனவந்தர் கஞ்சத்தனம் செய்யாமல் அங்கங்கே கொஞ்சம் கொஞ்சம் பொருளுதவி செய்யவும், கல்விமான்கள் தங்கள் புத்திகூர்மையால் சமயோசிதமான காரியங்களெவையோ அவைகளை யறிந்து தெரிவித்து வரவும் வேண்டிய கடமைகளை யுடையவர்களா யிருக்கின்றனர். இம்மூன்று வகுப்பாரும் ஒருங்கு சேரவில்லையாயின் ஒன்றும் நடக்கமாட்டாது.

*சுகாதாரமுறைகளை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வெகுகாலஞ்செல்லும்.*

வியாதிகளைத் தடுக்கும் வழியை ஒரு நாழிகைப் போதில் கண்டு பிடித்துவிடலாமென்பது புத்தியீனம். அது நாளாவட்டத்தில் நடக்கவேண்டிய காரியம். முதலில் குடிகளெல்லாருக்குமே இவ்விஷயத்தில் அவரவர்கள் என்னென்ன செய்யவேண்டுமென்று தெரியவேண்டும். அப்படி தெரியச்செய்யவேண்டியது கற்றோரின் கடமை. குப்பைவண்டிக்காரன் வந்துவிட்டுப்போன கொஞ்சநேரத்துக்கெல்லாம் கோபாலசுவாமி கோவிலைச் சுற்றி உச்சிட்டத்துடன் எச்சிலைகளைப் போட்டுவிட்டும் குழந்தைகளைக் கொண்டுபோய் மலபாதை செய்ய விடுவதுமாயிருந்தால் அப்புறம் பின்னவனம்பிள்ளை தொப்பையாண்டியைக் கோபித்துக்கொண்டதனால் பலனென்ன? இப்படி நடவாதிருக்கச் செய்வது ஒரு நாளிற் கூடுமா? நாளாவட்டத்தில்தான் நடக்கவேண்டும். ஏனெனில் கல்வியறிவென்பது கொஞ்சமுமில்லாத சாதாரண ஜனங்களுக்கு அசுத்தமான செய்கைகளைச் செய்வதினா லுண்டாகுங் கெடுதிகளின்னதென்று தெரியாது.

*அறியாத ஜனங்களுக்குத் தெரியும்படி எடுத்துப் போதிக்க வேண்டும். தண்டிப்பதிற் பயனில்லை.*

தெரிந்திருந்தா லவர்கள் அப்படிச் செய்யவுமாட்டார்கள். அறியாமையி லமிழ்ந்திக்கிடக்கும் அந்தகருக்கு அவர்களின் சொந்த க்ஷேமத்தைக் குறித்தே முந்திப் பேசவேண்டும். அப்புறம் அன்னியருக் குண்டாகும் இடைஞ்சலையும் கெடுதிகளையும் விவரமாய் வரவரச் சொல்லிவரவேண்டும். இஃதொன்று அறியாத ஜனங்களைக் கோபிக்கவாவது தண்டிக்கவாவதுகூடாது. கொஞ்சநாளைக்குப் பின் அனேகர் சுசியாயிருக்குங்கால் சிலர் மட்டும் தெரிந்தும் அசுசியான காரியங்களைச் செய்தால் அவர்களைத் தண்டிக்கவேண்டியதுதான்.

*மனவூக்கமும் விடா முயற்சியு முள்ளவர்களாய் இராஜாங்கத்தின் நோக்கத்தையும் ஜனங்களின் ஸ்திதியையும் நன்கறிந்தவர்களை நியமுகம் செய்யவேண்டும்.*

குறையாத மனவூக்கத்துடன் எங்கெக்கே சுகவழியினின்றும் ஜனங்கள் விலகி நடக்கிறார்களென்று வெகு ஜாக்கிறதையாய்ப் பார்த்துவரக்கூடியவர்களாயும், இராஜாங்கத்தாரின் நோக்கமும் ஜனங்களின் நிலைமையும் நன்கறிந்தவர்களாகவும் பார்த்து இவ்வேலைகளுக்கு நியமுகம் செய்யவேண்டும். சிலவிடங்களிருக்கும் அசுத்தகரமான நிலைமையினாலுண்டான வியாதிகளி லொன்றிரண்டை ஜனங்களுக்கு உதாரணமாகக் காட்டவேண்டும். "சாக்கடைத் தண்ணீருக்குப் போக்குவிடாமல் புறக்கடையில் கட்டிக்கிடப்பதனாலுண்டாகுந் துர்க்கந்த மதிகரித்து ராமசாமிகுழந்தைக்குக் காய்ச்சல் வந்தது" "சேஷன் எந்த வேளையும் சர்க்கரை கலந்த மிட்டாய் மிதமின்றிச் சாப்பிடுவதால்தான் அவனுக்கு கண்களில் இரத்தமில்லாமல் பித்தசோகை வந்திருக்கிறது" "கிருஷ்ணன் ஒரு நாளாவது வெளிகளில் உலாத்தப் போவதில்லை யாதலால்தான் தேகத்தின் அவயவங்களில் பலமில்லாமல் மெலிந்து அடிக்கடி வயிற்றுவலியினால் வருந்திக்கொண்டிருக்கிறான்" என்று ஜனங்களுக்குத் தெரிந்தவர்களின் உதாரணங்களையும் அவர்களுக்கு என்னகாரணத்தால் வியாதி வந்ததென்றும் காட்டிச் சொன்னால் அது அவர்கள் புத்தியில் உடனே படும். இல்லாவிட்டால் எளிதிற் படாது.



*வியாதிகள் வரம்பெற்ற இராக்ஷதர்களுக்கு சமானம்.*

நமது கோட்டை ஏராளமான இராக்ஷதர்களால் முற்றுகை போடப்பட்டிருக்கிறது. அவ்விராக்ஷதர்களில் இருவர் மஹாபலசாலிகளா யிருப்பதுடன் வெகு வஞ்சசாலிகள். யாராவது இவர்களைக் கொல்ல முயன்றால் இவ்விருவரிடத்திலிருந்தும் இருநூறு இராக்ஷதர்கள் ஜனிப்பார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் புகுந்துவரக்கூடிய திட்டிவாசமொன்று நமது கோட்டையிலிருந்தால், பாமன சமயங்களைக் கொண்டு அதை மூடாமல் திறந்து வைத்திருக்கப் பார்த்துக்கொண்டிருப்போமா? மாரிகாலத்தில் நதி வாய்க்கால் குளம், குட்டைகளில் தண்ணீர் தடாகித்திருக்கும் தருணத்தில் நம்மூரிலுள்ள இரண்டாயிரம் ஏக்கர் நிலத்துக்கு இதைவிட வேறு தாரகமில்லையென்று சொல்லும் ஏரிக்கரையின் பலவீனமான பாகத்தில் ஒருஜாண் தண்ணீர் போகக்கூடிய உடைப்புண்டாகி யிருந்தால் அதை எவ்வளவு ஜாக்கிறதையாக அடைக்க முயலவேண்டும். அக்காலத்தில் அதை யடைக்காவிட்டால், சிறிதுநேரத்துக்கெல்லாம் நீரோட்டத்தினால் மண்ணரிப்புண்டு உடைப்பு பெரிதாய் "ஏரியின் ஜலமெல்லாம் எங்கே!" என்று கண்டோர் ஏங்கி நிற்கவேண்டியதாயிருக்கிறதுமன்றி, ஏரிப்பாசனமான வயல்களிலெல்லாம் மண் திரடிட்டு ஜலப்பிரளயமா யிருக்குமென்பதிற்கு ஐயமுண்டோ? இதேவிதமாகவே நமதூரில் தொற்றுவியாதி யுண்டாகக்கூடிய நிலைமையில் நமது வீடு, வாசல், தோட்டம், துரவு, மாட்டுத்தொழுவம், தெருத்திண்ணைகளை வைத்திருக்கலாமா? வைத்திருப்போமானால் மேற்சொன்னபடி கோட்டைக்குள் இராக்ஷதர்கள் புகும்படிக்கான திட்டிவாசலைத் திறந்து வைத்திருப்பதற்கும், ஏரியின் கரையிலுண்டான சிறுமொட்டையை அடைக்காமலிருந்ததற்கும் சமானமாகுமல்லவா? என்று இவை போன்ற உதாரணங்களை உண்மையில் ஒன்றுமறியக்கூடாத மூட ஜனங்களுக்கு பட்சமாயும் நல்லெண்ணத்துடனும் சொல்லி சுகாதார விதிகளை யெங்கும் பரவச்செய்யவேண்டும்.

*முதலில் தண்டிப்பதில் பிரயோஜனமில்லை.*

இப்படிக்கன்றி எடுத்தவுடனே இன்னாரின்னார் நமது உத்தரவை மீறி நடந்தார்களென்று முனிசிபல் ஓவர்சியர் வந்து சொன்னால் உடனே அவர்களைக் குறித்து நியாயாதிபதிகளைக் கொண்டு விசாரணை நடத்தி அபராதம் போட்டுவிடுவதால் ஏழை ஜனங்களின் பணம் பாழாவதன்றி சுகாதாரவிதிக ளின்னதென்று தெரியாதவர்களாதலால், அதிகாரிகள் கண்டுபிடிக்கக்கூடாதவிதமாய் முன்செய்த துர்ச்செய்கைகளையே திரும்பத்திரும்பச் செய்துக்கொண்டிருப்பார்கள். இதற்கு திருஷ்டாந்தங்களை அங்கங்கே யனுபோகத்திற் காணலாம். சில நாட்களுக்குமுன் இவ்வூரில் ஒருவன் தன் மாட்டுத்தொழுவத்தின் சமீபத்திலிருக்கும் சாக்கடைத் தண்ணீரைத் தெருவில்விட்டு, அதினால் துர்க்கந்தமுண்டாக்கிக்கொண்டிருந்தான். இதற்காக அவனை முனிசிபாலிடியார் கண்டிக்கவே, அந்தத் தண்ணீருக்கு வேறுவிதமான போக்குவிடாமல் தன் புறக்கடையிற் கட்டி நிற்கும்படிசெய்து இராத்திரிகாலத்தில் ஒருவருக்குந் தெரியாமல் மடையைத்திறந்து தண்ணீரை வெளியில் விட்டுக்கொண்டிருந்தான். இது எவ்வளவு கெட்ட காரியம் பாருங்கள். சாக்கடைத்தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தாலுமே துர்க்கந்தம் சகிக்க முடியாது. அதைப் புறக்கடையிலே கட்டிக் கிடக்கவைத்தால் அதனால் துர்க்கந்தமுண்டாகுமென்று சொல்லவும் வேண்டுமோ? அடைத்துவைத்திருந்து இராத்திரிகாலங்களில் ஓரேமட்டாய்த் திறந்துவிடும்போதில் அவ்வழியாய்ப் போக்குவரவு செய்யும் ஜனங்களுக்குக் கெடுதி சம்பவிக்குமென்பதிலும் சந்தேகமில்லை. அவன் வீட்டிலே விஷசுரங்கண்டு ஒருவர்மாற்றி ஒருவர் நோவால் வருந்தினதுமன்றி அவனும் வியாதியினால் வருந்தி ஒருமாசம்வரையில் வேலைசெய்ய அசக்தனானான். அவனை முதலில் கண்டித்துவந்த முனிசிபாலிடியார் அவன் சாக்கடை ஜலத்துக்குப் போக்குக்காட்டியோர் தொட்டிகட்டுவித்து பிரதிதினமும் வண்டிகளின் மூலமாய்த் தண்ணீரை அப்புறப்படுத்தியிருந்தால் ஒருவித சுகவீனமும் நேர்ந்திராது. இதற்

காகத்தான் இவ்வேலைகளுக்கு நியாயவந்தர்களாகவும், சூட்சுமபுத்தி யுள்ளவர்களாகவும், சாமர்த்தியவான்களாகவும், தீர்மான முள்ளவர்களாகவும், ஜனங்களின் தற்கால நிலைமையை நன்ற யறிந்தவர்களாகவும் நியமிக்கவேண்டுமென்று முன்னமே சொன்னோம். சுகவீனமான செய்கைகள் எவ்வளவு அற்பமா யிருந்தபோதிலும் கவனித்து, அவைகளை நீக்குதற்கு வேண்டிய முயற்சி செய்துகொண்டேயிருக்கவேண்டும். இப்படி மிக விழிப்புடன் கவனித்தாலன்றி சுகாதார விதிகள் பரவவும் சுகவீனமான செய்கைகளும் வழக்கங்களும் நிவர்த்தியாகவும் வழியில்லை.

*இராஜாங்கத்தார் முக்கியமாய் கவனிக்கவேண்டியது.*

இராஜாங்கத்தார் விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டிய அனேக காரியங்களில் பொதுஜன சௌக்கியம் மிக முக்கியமானது. ஜனங்கள் நாளுக்குநாள் பலத்திலும் சுகத்திலும் விர்த்தியடைந்து பூர்ணாயுசுக்கு ஜீவித்திருந்தாலல்லவோ, அவர்கள் இராஜாங்கத்துக்கு முற்றுமுபயோகப்படுவார்கள். 10-வயதுள்ள பாலகனைப்பார்க்கிலும் 15-வயதுள்ள சிறுவனுக்கு இவ்வுலகவிஷயங்களில் அனுபோக மதிகம். அப்படியே 50-வயது மனுஷனைப்பார்க்கிலும் சாதாரணமாய் 80-வயதுக் கிழவனுக்கு அனுபோக மதிகம். அனுபோகசாலிகளுக்கு அறிவு மிகுதி. எந்தக் காரியாதிகளையும் அனுபோகத்தாலெளிதில் செய்யக்கூடும். சாமர்த்தியமும், ஏதாவது ஒரு விஷயத்தில் பாண்டித்தியமும் அனுபோகத்தாலேயே யுண்டாகும். இப்படி சாமர்த்தியத்திலும் அனுபோகத்திலும் மிகுந்த அனேக ஜனங்க ளிருப்பது ஒரு இராஜாங்கத்தாருக்கு எவ்வளவு விசேஷம்! சாதாரணமாய் பூர்ணாயுசுக்கு சுகஜீவிகளாயிருக்கும் அனேக ஜனங்களை யுடைத்தாயிராமல், வெகுவித வியாதிகளில் விசனப்பட்டுக்கொண்டிருக்கும் ஜனங்களை யுடைத்தாயிருந்தால் அதிலெவ்வளவு நஷ்டம் நேரிடும்! இராஜாங்கத்தாருக்கு அனேக உபயோகமான விஷயங்களில் தகுந்த யோசனை சொல்லக்கூடிய காரியஸ்தர்களனேக ரிருந்தால் அதில் எவ்வளவு சிலாக்கியம்! மேலும், அன்னிய தேசத்தவர் படையெடுத்து வந்தார்களானால் அவர்களை யெதிர்த்துப் போர்செய்யக்கூடிய பலமும் சுகமுமுள்ள ஜனங்க ளிருப்பதும் எவ்வளவு விசேஷம். இச்சென்னை இராஜதானியில் அந்திகாலத்தைக் கழித்து ஜீவித்திருந்த ஸர் டி. மாதவராவ். அவர்களால் இராஜாங்கத்தாருக் எவ்வளவு பிரயோஜனம்! இவரைப்போலொத்த புத்தியும் நல்ல சௌக்கியமுமுள்ள அனேகரிருக்கவேண்டியது இராஜாங்கத்தாருக்கு அதியாவசியகம். சுகாதார முறைமைகள் நன்கறிந்து நடத்திவருவதால் ஜனங்களின் சௌக்கியமும் பலமும் விர்த்தியாகும். ஆதலால் பொதுஜன உபகாரார்த்தமாகச் சுகாதார விஷயங்களை விர்த்திசெய்யவேண்டியது இராஜாங்கத்தாருடைய கடமையாயிருப்பதுமன்றி, அவர்களுடைய காரிய நிர்வாகத்துக்கு இன்றியமையாததாயும் இருக்கிறது. இந்தக் காரணங்களால்தான் இராஜாங்கத்தார் இவ்விஷயத்தில் முதன்மையாயிருந்து நடத்திவரவேண்டும் என்று நாம் சொல்லவேண்டியதாயிற்று.

*சட்டம் வேண்டியது அவசியம்.*

இராஜாங்கத்தார் இவ்விஷயத்தில் செய்யவேண்டிய அனேக காரியங்களில் ஒன்றை இத்தருணத்தில் யோசிப்போம். அதாவது சுகாதார விதிகளேற்படுத்துவதும், அவைகளினின்று விலகி நடக்கும் ஜனங்களைத் தண்டிக்கவேண்டியதற்காக அவ்வவ்விடங்களுக்கேற்ற சட்டங்களையுண்டாக்கி வழ[illegible]தத்துக்குக்கொண்டுவர தகுந்த அதிகாரிகளை நியமிக்கவேண்டியதும்தான். ஏனென்றால் ஓரோ தருணத்தில் எல்லாஜனங்களுக்கும் சுகாதாரவிதிகளின் உபயோகங்களைத் தெரியச்செய்வது கூடாதகாரியம். அப்படி தெரிந்தோர் சிலர் நல்வழிகளில் நடக்க முயலுங்கால் அறியாமையாலோ செருக்கினாலோ சுகவீனமான செய்கைகளைச் செய்தார்களானால் தாங்கள் வியாதியில் வருந்துவதுமல்லாமல், சுகாதாரவிஷயங்களைச் சரிவர அனுஷ்டித்துவரும் பிறருக்கும் வியாதியுண்டாகச்செய்கிறார்கள். அனுசா[illegible]மான ஓரிடத்திலுண்டான வியாதி சுயமாய் நக்[illegible]டத்திலும் பரவும் சுபாவமுள்ளதா யிருக்கிறது. ஆகையால் ஒவ்வொருவரும் தான்மட்டும் சுகாதார விதிகளைக் கவனித்தால்மட்டும் போதாது. பிறரும் கவனித்துவருகிறார்களாவென்று பார்க்கவேண்டும். இவ்விஷயம் சரியாய் அனுஷ்டானத்துக்கு வர வேண்டுமானால் கண்டிப்பான சட்டமேற்பட்டிருந்தாலொழிய முடியாது. தன் அயலான்வீட்டை அசங்கியமாய் வைத்திருப்பதை ஒருவன் கண்டு அவனுக்குத்தகுந்த புத்தி சொன்னால் அதன்படி அவன் நடந்தால்தான் நல்லதாயிற்று. “இல்லை; நானப்படித்தான் செய்வேன்” என்று முரட்டுத்தனம் செய்வானாகில் அவனுக்குத்தக்க புத்தி வருத்தவேண்டியது இராஜாங்கத்தாரின் கடமை. ஒருவன் மற்றொருவனை ஓரடியடித்தால் அதற்காக அவனைத் தண்



டிக்கிறது இராஜாங்கத்தாருடைய கடமையென்றால் எத்தனையோபேருக்கு ஒரு அடியைப் பார்க்கிலும் அதிக கொடூரமான வியாதியுண்டாகச்செய்து அதனால் மரணமுண்டாக்குவதைப்பார்த்து சும்மாஇருக்கலாமா? ஒருபோதும் இருக்கலாகாது. தகுந்த தண்டனைசெய்வதே நலம். இனி வியாதிமூலங்களையும் அவைகளுடன் சம்மந்தப்பட்ட விஷயங்களையும் கவனிப்போம்.

*வியாதிமூலங்களெவை?*

வியாதிகள் எப்படியுண்டாகின்றன? இருந்தாப்போலிருந்து அகாரணமாயுண்டாயிற்றா? ஒன்றுமில்லாமையிலிருந்துஉண்டாகின்றதா? நாம் பிறக்கும்போது வியாதியும் நம்முடன் பிறந்துவிட்டதா? அல்லது நம்முடன் சம்மந்தப்பட்ட பல காரியாதிகளிலெதையாவது ஒட்டிவருகிறதா? அப்படித்தானிருக்கவேண்டும். இல்லாவிடில் நமது தேகத்தில் வியாதியுண்டாகவேண்டிய காரணமென்ன? ஒன்றுமில்லையே. அப்படியானால் நமது தேகத்துக்கு சம்மந்தப்பட்ட காரியாதிகளெவை? நாமுண்ணும் உணவு ஒன்று. நாம் சுவாசிக்கும் ஆகாயம் மற்றொன்று. நாம் பானம்பண்ணும் தண்ணீர், நாம் வசிக்கும் வீடு, நாமுடுக்கும் வஸ்திரம், நாம் படுக்கும் பாய் முதலியவைகள் எல்லாம் ஒருவாறு நமக்கு சம்மந்தப்பட்ட விஷயங்கள்தான். ஆனால் இவைகளெப்படி வியாதிமூலங்களாகின்றன? என்று ஒவ்வொன்றாய் கவனிப்போம்.

## சுதேசபாஷைப் பயிற்சி.

சென்னையிற் பிரசுரமாகும் ‘ஆரியஜனப்பிரியன்’ என்னும் தமிழ்ப் பத்திரிகையில் ஒருவர் இது விஷயத்தைப்பற்றி நீள நினைந்து யோசித்து எழுதியிருக்கிறார். சென்ற ஒருவருஷகாலமாக இது விஷயம் இங்கிலீஷ்படித்தவர்களால் பயிரங்கமாகவும், அந்தரங்கமாகவும் மிகக் கவனித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டுவந்திருக்கிறபடியால் இதுவரையில் நடந்துவந்த பேச்சுவார்த்தைகளின் முடிவின்னதென்று இங்கிலீஷ்தெரியாத அனேகர் ஒருவாறு தெரிந்துகொள்ள விரும்புவார்கள். அவர்களின்பொருட்டும் விஷய விளக்கத்தின்பொருட்டும் கீழ்வருவதை இங்கு பிரசுரிக்கிறோம்.

“சிறிதுகாலமாகச் சுதேசபாஷைப் பயிற்சியைப் பற்றிப் புலவர் பலவிதமாகப் பேசியும் வருகின்றார்கள், எழுதியும் வருகின்றார்கள். ஆயினும் பிரயோஜனத்தைத் தரும் முயற்சியை எவரும் செய்துவருவதாகக் காணப்படவில்லை. சில வருஷங்களுக்குமுன் வித்தியா இலாகா அதிகாரிகள் சிலரும், பெரியமனிதர்கள் சிலரும் சென்னை யூனிவர்சிட்டியில் சுதேச பாஷா பண்டிதர்களுக்குப் பட்டங்கள் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்ய எண்ணங்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் இதைப்பற்றி எழுந்த விவாதத்திற்கு அளவில்லை. அவ்வேற்பாடு உபயோக முள்ளதென்று சிலரும் உபயோகமில்லையென்று சிலரும் பேசியும் எழுதியும் வந்து, கடைசியில் இருக்கிற இடந்தெரியாமல் மறைந்துபோனார்கள். இத்தருணத்தில் அவ்வேற்பாடு என்ன ஸ்திதியிலிருக்கின்றதோ அறியோம்.* ஆனால் திராவிடசங்க மென்றதொன்று கிளம்பினபோது விருத்திராசுரன் கிளம்பினதுபோல் அதற்குமுன் யோசிக்கப்பட்டுவந்த ஏற்பாட்டின் சாம்பலினின்று கிளம்பிற்றென்று நினைத்தோம். மறுபடியும் திராவிட சங்கத்தைப்பற்றி யொன்றும் நிகழாமையால் அதுவும் அதற்குமுன் குறிக்கப்பட்ட ஏற்பாட்டின் கதியை அடைந்ததென நினைக்கவேண்டியதாயிருக்கிறது. ஒவ்வொரு ஏற்பாடும் அதை உண்டாக்கினவருடைய சக்தியை அனுசரித்துப் பிரகாசிக்கும் அல்லது மறைந்துபோகும். அவ்விரண்டு ஏற்பாடுகளும் ஒழிந்துபோயிருந்தால் அது நம்மவர்களின் முயற்சிக் குறைவேதான். கூட்டங்கள்கூடி பெருத்த விஷயங்களையெல்லாம் முடிவுகட்டும்போது இவ்வொரு விஷயத்தை ஆலோசித்து முடிவுக்குக் கொண்டுவர நம்மவர்களால் முடியாமற் போனதற்குக் காரணமென்ன? நம்மில் அதிகாரம், செல்வம், செல்வாக்கு உடையவர்களுடைய அநாதரவேதான். வங்காளத்தில் சுதேசபாஷை வெகு சொற்ப காலத்தில் நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டது; மகாராஷ்டிர பாஷையும் நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டது; குஜராத் பாஷையும் நல்ல ஸ்திதிக்கு வந்திருக்கின்றது; ஹிந்தி, உர்டு பாஷைகளும் தக்க அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. இவ்விஷயத்தில் தென் இந்தியா ஒன்றே மிக்க ஹீனஸ்திதியிலிருக்கின்றது. தேசபாஷையை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு துரும்பையேனும் அசைக்க இஷ்டமில்லா நம்மவர் பாஷையின் குணங்களைப் புகழ்ந்து

* யூனிவர்ஸிடி ஸெனேட் சபையார் இதைப்பற்றி யோசித்து ரிபோர்ட்டு செய்யும்படி நியமித்த கமிட்டியார் இதுவிஷயமாக யூனிவர்ஸிடி சம்பந்தமாக உத்தேசித்தபடி ஏற்பாடுசெய்யக் காலம் நேரவில்லையென்று தீர்மானித்திருக்கிறதாக அறிகிறோம்.—வி. சி. ப.

கொள்வதற்கு மாத்திரம் பின்னடைவதில்லை. தமிழ் அமிழ்தினையொத்ததென்பார் சிலர், தொன்மையான பாஷையென்பார் சிலர், தனிமையான பாஷையென்பார் சிலர், தாய்ப்பாஷை யென்பார் சிலர். அதை அபிவிருத்தி செய்வதற்காக இவர்களில் ஒருவரும் முன்வந்தாரில்லை. சுதேசபாஷையொன்றனையே கற்ற பண்டிதர்களைத் தூஷிப்பதில் பிரயோஜனமில்லை. சுதேசபாஷை ஜீவித்திருப்பின் அவர்களிடத்தேதான் ஜீவித்திருக்கின்றது. பாஷை பழுதாய்ப் போகாமல் அவர்கள் தங்களால் கூடியவரையில் பாதுகாத்துவருகிறார்கள். மதவிஷயமாகவும், நீதிவிஷயமாகவும் சிரமப்பட்டுக் கிரந்தங்களெழுதிப் பாஷையைக் காப்பாற்றி வருகிறார்கள். அவர்களாலாவது அதுவே. வேறு விஷயங்களைப்பற்றி எழுதப் போதுமான விஷயஞானம் அவர்களுக்குக் கிடையாது. தற்காலத்திய ஞானம் அவர்களுக்கு எட்டாது. தற்காலப் படிப்பையும், ஞானத்தையும், நாகரிகத்தையும்பெற்ற ஆங்கிலேய பாஷா விற்பன்னர்கள் என்ன செய்திருக்கின்றார்கள்? தங்களுடைய தேசபாஷைக்கு யாது நன்மை செய்திருக்கின்றார்கள்?"

வாஸ்தவமாய்ச் சுதேசபாஷையை அபிவிருத்தி செய்பவைகள் பத்திரிகைகளேயென்றும் அவைகளை ஆதரிப்பாரில்லையென்றும் கூறி எத்தேசத்தில் சுதேசபாஷா பத்திரிகைகள் ஆதரிக்கப்பட்டு வருகின்றனவோ, அத்தேசத்தில் சுதேசபாஷை அபிவிருத்தியாயிருக்கின்றது என்று காட்டுகின்றார்.

"திருஷ்டாந்தமாக மகாராஷ்டிரதேசத்திலும் பங்காளதேசத்திலும் சுதேசபாஷா பத்திரிகைகள் மதிக்கப்படுகின்றன. அங்குச் சுதேசபாஷை அபிவிருத்தியாயிருக்கின்றது. பங்காளத்தில் அனேக கதைகள், சரித்திரங்கள், சுதேசபாஷையில் கல்விமான்களால் எழுதப்பட்டிருக்கின்றன. நம் தேசத்து ஆங்கிலேய படிப்பாளிகளுக்குத் தேசபாஷையிலேனும் குலபாஷையிலேனும் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தங்கள் பந்துக்களுக்கு அறிவிக்கத் தெரியாது. நாட்டுப்புறத்துப் பெண்ணொருத்தியைக் கலியாணம் பண்ணிக்கொண்ட ஒரு ஆங்கிலேய பாஷாவித்வான் ஒருவன், தன் மனைவியைக் கடற்கரையோரத்திற்குக் கூட்டிக்கொண்டுபோக எண்ணங்கொண்டு 'அடி! நாம் பீச்சுக்குப்போகலாம்வா!' என்றான். அவள் ஒன்றும் தெரியாமல் திகைத்தாள். 'அது தாண்டி ஸீஷோருக்கு' என்றான். பிறகு அவள் நாற்புறமும் பார்த்தாள். 'இதுதாண்டித் உனக்கு தெரியாதா? நாட்டுப்புறத்துப் (Fool) பூலாயிருக்கிறாய், மணலாயிருக்கிறதே' என்றான். அவள் 'ஆற்றுக்கா' என்ன, 'இல்லேடீ, ஆறுபோய் விழுகிறதே, அதுதான்' என்றான். அதற்கவள் 'ஐயோ கடற்கரைக்கா! அப்படிச் சொல்லுங்களேன்' என்றாள். 'அதுதாண்டி எனக்கு வரவில்லை! பீச்சென்றால் சுலபமாயிருக்கின்றது' என்றான்."

நமது இராஜதானியில் சப் கலெக்டராகவிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, வெங்கல் வேணுகோபாலசெட்டி அவர்கள் திண்டிவனம் மிஷன் பள்ளிக்கூடத்தில் வித்தியார்த்திகளுக்குப் பரிசளிக்கும் தருணத்தில் சுதேசபாஷையைப்பற்றிச் சில பேசியதில், "நாம் நம் தேசத்துப் பாஷைகளை அபிவிருத்திசெய்ய முயன்றாலும் ஆங்கிலேய பாஷையிலுள்ள ஞானத்தைப் பெற்றலதான் முன்னுக்கு வருவோம்" என்பதை வற்புறுத்திப் பேசினார். ஆங்கிலேயருடைய லௌகிக ஞானம் நமக்கு அத்தியாவசியகமானதே. அந்த ஞானத்தை நாம் எந்தப்பாஷையின் மூலமாய்ப் பெறுவது? ஆங்கிலேயபாஷையின் மூலமாகவா? அல்லது சுதேசபாஷைகளின் மூலமாகவா, ஆங்கிலேயருடைய ஞானத்தைச் சுதேச பாஷைகள் மூலமாய்க் கற்றுக்கொள்ளவேண்டியதென்ன? ஆங்கிலேயபாஷை மூலமாகவே கற்கலாமே என்பாருக்குப் பின்வருமாறு விடைபகர்ந்தெழுதுகிறார்:—

"ஆங்கிலேயபாஷையை தேசபாஷையைப் போல் ஆண்கள் பெண்கள், குழந்தைகளும் சுலபமாய் அறியுமாறு செய்வது முடியாதகாரியம். அறிவை அன்னியபாஷையின் மூலமாகவே கற்கவேண்டிய ஆவசியகமில்லை. சுவயபாஷை மூலமாகவே கற்கலாம். அதற்கு ஆங்கிலேயபாஷையே திருஷ்டாந்தம். ஆங்கிலேயபாஷையானது சுமார் 1500 வருஷங்களுக்கு முந்தி அநாகரிக ஜாதியாரின், பாஷையாயிருந்து, நாகரிகக் குறிகளான சில அபிப்பிராயங்களைத் தெரிவிக்கப் போதாததாயிருந்தது. அவர்கள் தாங்கள் நாகரிகத்தில் அபிவிருத்தியாகும் பொருட்டுத் தம்மிலும் மிக்க நாகரிகம் பொருந்தியிருந்த கிரேக்கர், ரோமர் முதலிய ஜாதியாரின் பாஷைகளைப்படித்து அவைகளில் வேண்டியபாகங்களையெடுத்துத் தம் சுயபாஷையில் சேர்த்துக்கொண்டார்கள். இப்போது நாம் ஆங்கிலேய பாஷையை எப்படிப் படிக்கின்றோமோ, அவ்வாறே அவர்களும் கிரீக், லத்தீன் பாஷைகளைப் படித்துவந்தனர். அவ்வாறு படித்துத் தம் தேசபாஷையை அபிவிருத்தி செய்துகொண்டார்களே யொழிய,



நம்மைப்போலத் தேசபாஷையைக் கைநழுவவிட்டு, அந்நியதேசப் பாஷையின் மூலமாய்க் கடைத்தேறப்பார்த்தனரில்லை. இந்த க்ஷணத்தில் ஆங்கிலேயபாஷை சிரேஷ்டமான பாஷையாயிருந்தால் அது அவர்களுடைய முயற்சியினாலேதான். அப்பாஷையின் மூலமாய்த் தெரிவிக்கக்கூடாத அபிப்பிராயம் கிடையாது. ஒருவேளை நம் மதக்கிரந்தங்களிலுள்ள அபிப்பிராயங்கள் சிலவற்றை விளக்க அப்பாஷையில் பதங்களில்லாமலிருக்கலாம். அந்தக் குறையையும் அவர்களுடைய வித்துவான்கள் கவனித்துத் தக்க பதங்களைச் சேர்த்துவருகிறார்கள். நாளுக்குநாள் ஆங்கிலேயபாஷையில் பதங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன. ஆங்கிலேயர் எத்தேசத்துக்குப் போனாலும் அத்தேசத்தினின்று நூதன ஞானத்தையும் அதை விளக்க வல்ல பதங்களையும் கொண்டு வருகிறார்கள். திருஷ்டாந்தமாகப் "புத்துருக்கு நெய்"க்கு அவர்கள் பாஷையில் தகுந்த பதம் கிடையாது. அதற்கு இந்துஸ்தானி பாஷையினின்று "கீ" என்னும் பதத்தை எடுத்துக்கொண்டார்கள்; அவ்வாறே தமிழ்ப்பாஷையினின்று "கூலி," "பந்தல்," "கட்டுமரம்," "சுருட்டு," "மிளகாய்த் தண்ணீர்," "ஆயா," "வண்டி" என்னும் பதங்களைச் சேர்த்துக்கொண்டார்கள். சங்கிரகித்துத் தங்களுடையதாக்கிக்கொள்ளுவதில் ஆங்கிலேயருக்குள்ள சமர்த்து எவர்களுக்கும் கிடைக்கமாட்டாது. நம் ராஜதானியில் மற்ற ராஜதானிகளைவிட, ஆங்கிலேயபாஷாஞானம் விஸ்தாரமாய்ப்பரவியிருக்கிறதென்று எண்ணப்படுகிறது. ஆயினும் ஆங்கிலேயபாஷை தெரியுமென்று சொல்லப்படுகிற அனேகருக்கு ஒரு ஆங்கிலேய புத்தகத்தை வாசித்து அதிலுள்ள விஷயத்தைச் சம்சய விபரீதங்களின்றி உண்மையாய் அறியும் திராணியில்லை. இதுதானா பாஷா ஞானம்? இதினால் கடைத்தேற எண்ணங்கொள்ளலாமா? எந்த ஞானமானாலும் சரிதான், சுதேசபாஷையில் மாற்றப்பட்டால்தான் அது தேசத்தில் விஸ்தாரமாகும். நம் முன்னோர்களும் அவ்வாறே செய்தார்கள். நம் தேசத்தில் ஜோதிஷ சாஸ்திரத்தில் வருஷபலன்களைச் சொல்லும் ஜாதகபாவ சாஸ்திரம் கிடையாது. ஆகிலும் சமஸ்கிருத வித்துவான்கள் சமஸ்கிருதபாஷையில், யவன துருஷ்கஜாதியாருடைய கிரந்தங்களினின்று அதை மொழிபெயர்த்து வைத்திருக்கின்றார்கள். மொழிபெயர்த்தபிறகு "தாஜிகம்" என்கிற அவர்களுடைய சாஸ்திரமானது நம் தேசத்தில்

...றென்ற வானசாஸ்திர விற்பன்னர் யவன கிரேக்கர்களுடைய சித்தாந்தங்களைக்கொண்டு சம்ஸ்கிருதக் கிரந்தங்களை எழுதினார். நம்தேசத்தில் சாஸ்திர ஞானம் ஏராளமாய் அபிவிருத்தி யாகவேண்டுமானால் சுதேசபாஷையின் மூலமாகவே ஆகவேண்டும். அதற்காக ஆங்கிலேயபாஷை நன்றாய்க் கற்ற சுதேசிகளே தக்க முயற்சி செய்யவேண்டும்; பலவிஷயங்கள் தேசபாஷைகளில் எழுதப்படவேண்டும். அவைகளைப் பள்ளிக்கூடங்களில் வித்தியார்த்திகளுக்குச் சொல்லித்தரவேண்டும். சுதேசபாஷை அபிவிருத்தியாகவேண்டுமானால் பள்ளிக்கூடங்கள் மூலமாக ஆகவேண்டுமே யொழிய வேறுவிதமாய் ஆகாது. ஆனால் பள்ளிக்கூடங்களில் சுதேசபாஷைகளைச் சொல்லித் தருவதா, ஆங்கிலேய பாஷையைச் சொல்லித்தருவதா என்ற கேள்வி பிறக்கும். இந்தக் கேள்வி அனேகமுறை இதற்கு முன் பிறந்து விவாதத்திற்கு இடமா யிருக்கின்றது. ஸ்ரீ வேணுகோபாலசெட்டியார் செய்த மேற்கண்ட பிரசங்கத்திலும் அந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கின்றது. அலகாபாத்தில் லெப்டினெண்டு கவர்னர் சர் ஆண்டொணி மக்டானல்ட் அவர்கள் செய்த பிரசங்கத்திலும் இக்கேள்வியைக் காணலாம். இவர்களெல்லோரும் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அது யாதெனில் சுதேசிகளின் அபிவிருத்தியின் பொருட்டு ஆங்கிலேய உயர்தரப்படிப்பே சொல்லித்தரவேண்டு மென்றும், பழைய காலத்தைப்போல் பண்டிதர்கள் வைத்திருக்கும் சுதேச பாடசாலைகளில் படிப்புச்சொல்லித்தரக்கூடாதென்றும், லார்ட் மெக்காலே அவர்கள் செய்த இவ்வேற்பாடு வெகு நேர்த்தியானதென்றும் சொல்லப்படும் சித்தாந்தமே. இந்தச் சித்தாந்தத்தை ஆமோதித்த சுதேசிகளான ஆங்கிலேயபாஷா விற்பன்னர்கள் சிலர் யாது சொல்லுகிறார்களென்றால் சுதேசபாஷாபிவிருத்தியைப்பற்றி உழைப்பவர்களெல்லாம் பழையகாலத்துப் படிப்பை நிலைநாட்டப் பார்க்கிறார்களென்றுதான். அது சுத்தப்பிசகு. நாம் சொல்வதெல்லாம் யாதெனில் ஜனங்களுக்கு இகலோக நன்னடக்கைக்கும், நல்ல ஜீவனத்துக்கும், மேலான பரலோக வாழ்க்கைக்கும் எது தேவையோ, அதைத் தேசபாஷையில் சொல்லித்தரவேண்டுமென்பது; ஆங்கிலேயபாஷா ஞானத்தை அடியோடே ஒழிக்கவேண்டுமென்பது எமது கருத்தல்ல. எவருக்கேனும் தம்முடைய தேசபாஷையையும், ஆங்கிலேய பாஷையையும் பூர்ணமாய்க்

சமும் இருந்தால் அவர்கள் ஆங்கிலேயபாஷையைக் கற்கலாம். தேசபாஷையை அலக்ஷியம்செய்து ஆங்கிலேயபாஷையைக் கற்பதுமாத்திரம் யுக்தமாய்த் தோன்றவில்லை. அவ்வாறு செய்வதினால் அவர்களுடைய படிப்பானது சுவயப்பிரயோசனத்தைக் கருதியதாக மதிக்கப்படுமே ஒழியத் தேசநன்மையை உத்தேசித்ததாக விருக்கமாட்டாதென்பது துணிபு. மேலும் பொது ஜனங்களின் அறிவு அபிவிருத்திக்காக எதைச்செய்தாலும் ஆங்கிலேய பாஷையின் மூலமாகவே செய்வதென்று வைத்துக்கொண்டால் நம் தேசத்தில் பெரும்பாலார்க்கு அறிவை அபிவிருத்தி செய்யும் படிப்பே இல்லாமற் போகும். விவசாயிகள், தொழிலாளிகள் முதலிய பொது ஜனங்களுக்கு வேண்டிய யாவும் தேசபாஷையிலேயே சொல்லித்தரவேண்டும்; சிறுவர்களுக்கு 14-வயது வரையில் தேசபாஷையிலேயே யாவையும் கற்பிக்கவேண்டும். சாதாரணமாய் 14 வயதில் சிறுவர்கள் இப்போது லோயர்செகண்டரி என்னும் திட்டத்தைத் தாண்டிவிடுகிறார்கள். அதுவரையில் அச்சிறுவர்களுக்கு ஆங்கிலேய பாஷையில் விஷயங்களைப் போதிக்கலாகாது; சரித்திரம், கணக்கு, பீஜகணிதம், க்ஷேத்திரகணிதம், பூகோளம் முதலியவற்றை ஆங்கிலேய பாஷையில் புகட்டலாகாது; ஆங்கிலேய வியாகரணத்திலும் நுண்மையான அமிசங்களை அவர்களுக்குச் சொல்லலாகாது; லோயர்-செகண்டரிவரைக்கும் பீஜகணிதம் க்ஷேத்திரகணிதம் வேண்டியதில்லை. தேசபாஷையில் அங்ககணிதம், தேசசரித்திரம், பூகோளம் படிப்பித்தால் போதுமானது. இப்போதுள்ள ஏற்பாட்டினால் பிள்ளைகள் ஆங்கிலேயபாஷையில் விஷயங்களை அறிந்து வெளியிட முடியாமல் மனப்பாடம் செய்து வீணாய்க் காலம் கழித்துக் கஷ்டப்படுகிறார்கள். தேசபாஷையிலானால் இவைகளை மனப்பாடம் செய்யவேண்டுவதில்லை. தேசபாஷையில் இலக்கியமும் இலக்கணமும் நன்றாய்ச் சொல்லப்பட்டு ஆங்கிலேயபாஷையில் பாஷாஞானத்திற்கு வேண்டிய அமிசங்களையும், வாக்கியங்களின் உறுப்புகளையும் எழுவாய் பயனிலையையும் தெரிந்துகொள்ளும்படியான ஆங்கிலேய வியாகரணமும் சொல்லப்பட்டால் போதுமானது. அதுமுதல் தேச பாஷா ஞானத்தையும், ஆங்கிலேயபாஷா ஞானத்தையும் சமானமாகக் கொண்டுவந்தால் மெட்ரிகுலேஷன் வகுப்புக்குவருங்கால் இரண்டு பாஷைகளின் ஞானமும் நன்றாய் வரும். க்ஷேத்திரகணிதம், பீஜகணிதம், அங்ககணிதம், பூகோளம், சரித்திரம், வியாகரணம் முதலிய யாவும் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு வேண்டிய அளவு மூன்று வகுப்புகளில் முடிந்துபோகலாம். இவ்வாறு செய்யின் சுதேசபாஷைகளும் விருத்தியாகும்; பிள்ளைகள் படும் சிரமமும் குறைந்துபோகும். மெட்ரிகுலேஷன், எப்.ஏ., பி.ஏ., பரீக்ஷைகளில் செய்யப்படும் மொழிபெயர்ப்புப் பரீக்ஷைகளைக் கடினமானதாகச் செய்யவேண்டும். அவைகளின் மதிப்பைத் தனியாகப் பார்க்கவேண்டும். இலக்கிய இலக்கண மதிப்புகளுடன் சேர்க்கலாகாது. முதற் பரீக்ஷைக்கு அவ்வாறே செய்கிறார்களென்று நினைக்கின்றோம். பரீக்ஷைகள் சுதேசபாஷையில் இன்னும் கொஞ்சம் கஷ்டமாயிருக்கலாம். இவ்விதமான ஏற்பாடுகளை வித்தியா இலாகா அதிகாரிகளுடைய சகாயம்கொண்டு செய்து பிறகு வேறு ஏதேனும் ஏற்பாடுகள் செய்தால் தேசபாஷை முன்னுக்கு வருமேயொழியத் திராவிடசங்கத்தினாலும், அல்லது தேசபாஷைக்குரிய பட்டங்களாலும் முன்னுக்கு வராது.”

## நான் கோயமுத்தூருக்குப் போய்வந்தது.

“ஆண்டாண்டுதோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டாம்
நமக்கு மதுவழியே நாம்போமளவும்
எமக்கென்னென் றிட்டுண்டிரும்.”

என்று நல்வழியில் கவி உலகத்தார்க்கு உபதேசித்த ஞானத்தைச் சிறுவயதுமுதல் படித்துப் பாடம்பண்ணி வந்தும், சமயம் நேர்ந்த காலத்தில் அவ்வுபதேசப்படி நடப்பது கஷ்டமாகவே முடிகிறது. கஷ்டமாக முடிந்தாலும் அப்படிப்பட்ட காலங்களில் பிரிவாற்றாமையால் கரைகடந்த வெள்ளம்போல் வரும் துக்கம் தன்னிச்சையாய்ப் பெருகித் ததும்பி வழிந்து வடிந்தபின் இவ்வுலகவாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகள் எத்தனையோ தோன்றுகின்றன. முடிவில் பார்க்குங்கால், மலைபோல் வரும் துன்பங்கள் மனதைத் தீப்போல் சுட்டெரித்தபின், நெருப்பிலிட்ட தங்கம்போல், சித்த சுத்தியை யுண்டுபண்ணிக் கடவுளின் கருணையையும் மனிதன் கடமையையும் தெளிவாக உணரும்படிச் செய்வதாகின்றன. முடிவில் இப்படியானாலும், மனது சாந்தப்படும் அம்முடிவு வருகிறவரையில் மனப் ஆலையிலிட்ட கரும்புபோலும், நெருப்பிலிட்ட



மெழுகுபோலும், அலையிலகப்பட்ட துரும்புபோலும், அறைந்து உருகி அல்லல்பட்டு அனுபவிக்கும் சஞ்சலத்துக்கு அளவில்லை. இப்படிப்பட்ட சஞ்சலத்தினின்றும் தப்பித்துக் கரையேறிச் சமபுத்தியடைந்து சாந்தமாகி மனம் ஸ்திரநிலைப்படுவதே கஷ்ட சாத்தியமாம். கஷ்டசாத்தியமாயினும் இந்நிலையடைய முயல்வதே துன்பத்திலாழ்ந்தார் ஆய்துறச் செய் கடனும்.

இவ்வித எண்ணங்கள் சிந்தனைகளால் தூண்டப்பெற்ற நாம் சென்ற மேமீ 10உ மாலை $3\frac{1}{2}$-மணி வரையில் நிலையற்ற புத்தியினால் சஞ்சலப்பட்டிருந்து அத்தருணம் எம் கைக்குவந்த ஆப்தர் ஒருவர் எழுதிய லிகிதத்தினால் தீர்மானமடைந்து உடனே பிரயாணத்துக்கு சந்நத்தரானோம். பிரயாணம்போகத் தீர்மானித்தது கோயமுத்தூருக்கு. அங்கே மறுநாள் சென்னை “ப்ரொவின்ஷியல் கான்பரென்ஸ்” என்கிற மாகாணக்கூட்டம் கூடுவதாயிருந்ததால் அதற்காக வந்த நண்பர்பலரையும் கண்டு களிக்கலாமென்கிற எண்ணம் மனவெழுச்சியை யுண்டுபண்ணிற்று. அஸ்தமனத்துக்குச் சென்னையைவிட்ட நாங்கள் பொழுதுவிடிய ஈரோட்டுக்குவந்து சேர்ந்தோம். அதுவரையில் ரயிலி னிருபக்கங்களிலும் வெட்டைவெளியே மிகுதியாயிருந்தது. இடைஇடையே குன்றுகளும், சில இடங்களில் பனந்தோப்புகளும் தவிர வேறு விசேஷக்காக்ஷி ஒன்றும் அந்த இராத்திரியில் கண்ணுக்குத் தோன்றவில்லை. ஈரோட்டிலிருந்து ஜாமப்பொழுது பிரயாணஞ்செய்ய போத்தனூர் வந்து சேர்ந்தோம். இது ஒரு பெரிய ‘‘ஜங்ஷன்’ ஸ்டேஷன். இங்கே ‘பிளேக்’ பரிசோதனைக்காக டாக்டர் அரைமணிநேரம் வரையில் எல்லாரையும் கூட்டிலடைத்த குரங்குபோல் வண்டியில் போட்டடைத்து வைத்திருந்தார். முதலிரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் மட்டும் ஸ்டேஷன் மேடையிலிறங்கி நடமாட இடங் கொடுக்கப்பட்டார்கள். இவ்விடத்தில் கோயமுத்தூர் ரிஸெப்ஷன் கமிட்டியார் பிரதிநிதிகளையெதிர்கொண்டழைக்க வந்திருந்தார்கள். பிரயாணம்செய்து களைத்திருந்த பிரதிநிதிகள் ரிஸெப்ஷன் கமிட்டியார் உபசாரணையினால், இங்கு பல்விளக்கி முகங்கழுவி, காபி சாப்பிட்டு களைதீர்த்துக்கொண்டார்கள். போத்தனூரிலிருந்து கோயமுத்தூருக்கு $3\frac{1}{2}$-மைல் தூரமே. ஆதலால் போத்தனூரைவிட்டுப் புறப்பட்ட சில நிமிஷங்களுக்கெல்லாம் கோயமுத்தூர் ஸ்டேஷன் வந்து சேர்ந்தோம். அங்கு ரிஸெப்ஷன் கமிட்டி மெம்பர்களும், ப்ரெஸிடெண்டு, காரியதரிசிகளும், வாலண்டியர்களும், வந்தவர்களை உபசரித்து அவரவர்களை அவரவர்களுக் கேற்படுத்திய விடுதிகளுக்கழைத்துக்கொண்டுபோய் மற்றப்படி அவர்கள் சௌக்கியத்திற்கு வேண்டிய உபசாரங்களனைத்தும் செய்தார்கள். மாகாணக் கூட்டத்துக்கு அக்கிராசனாதிபதியாக விருக்க இசைந்த மிஸ்டர் நார்ட்டன் துரை அவர்களுக்கு ராஜோபசாரம் நடந்ததென்று நான் சொல்லத்தேவையில்லை.

11உ வியாழக்கிழமை மூன்றுமணிக்கு மாகாணக்கூட்டம் கூடியது. எல்லாம் காங்ரெஸில் நடக்கிறதுபோல் நடவடிக்கைகள் நடந்தேறின. ரிஸெப்ஷன் கமிட்டித்தலைவர் நல்வரவுகூறி உபசரித்தார். அக்கிராசனாதிபதி நியமனம்செய்யுமுன் பலர் பிரேரேபித்தும் ஆமோதித்தும் ஆதரித்தும் பேசினார்கள். அக்கிராசனாதிபதியும் ஆசனம் வகித்தபின் ஒரு நீண்ட பிரசங்கம்செய்து பேசினார். மறுநாள் முதல்சபையில்பேசி முடிவுகட்டவேண்டிய விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் தயார் செய்து அவைகளைப் பிரேரேபித்தும் ஆமோதித்தும் பேசுவோரைத் திட்டம்செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் தீர்மானித்த விஷயங்கள்பிந்தி இரண்டு தினங்களிலும் பற்பலர் ஆசைதீரப்பேசி முடிந்தபின் தீர்மானங்களாக அங்கீகரிக்கப்பட்டன. அவைகளைப் பற்றி விவரிக்க இங்கு நிமித்தமுமில்லை, இடமும் போதாது. இம்மாகாணக் கூட்டங்கள் கூடுவதினாலுண்டாகும்முக்கியமானபலனொன்றுண்டு. அது என்னவெனில் பலபாகங்களிலுள்ளவர்களும் ஒன்றுகூடி உறவாடிக் கலந்து பேசி சேர்ந்துண்டு சிநேகம் பாராட்டிப் பழகுவதே. இராஜாங்க சீர்திருத்த விஷயமாயுண்டாகும் பிரயோஜனத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கில் தர்க்கத்திற்கிடமுண்டாகுமாதலால் அதைப்பற்றி இங்கு பேசாதுவிடுவதே நலம்.

13உ சனிக்கிழமையன்று காலையிலும், 14உ காலையிலும் ஜனாசார சீர்திருத்த சபையார் கூட்டங்கூடி நடவடிக்கை நடத்தினார்கள். ஜனாசாரவிஷயமாய் வருஷாவருஷம் வற்புறுத்தி நடத்தப்படும் விவாக சீர்திருத்தம், பெண்கல்வி

யபிவிர்த்தி, அன்னியமதத்திற்குச் சென்றவர்கள் திரும்பிவந்தால் ஹிந்துமதத்திற் சேர்த்துக்கொள்ளவேண்டிய அவசியம் முதலான முக்கிய விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன. இந்தச்சபையில் இவ்வருஷம் நூதனமாக ஆலோசனைக்குவந்த ஒரு விஷயமென்னவெனில் கிராமாந்தரங்களின் சுகாதாரவிர்த்தியின்பொருட்டு சுகாதார விஷயங்களைப்பற்றி ஜனங்களுக்கு ஞானமுண்டாகும்படி சிறு புஸ்தகங்கள் அச்சிட்டுப் பிரசுரித்தும், கிராமாந்தரங்களில் பிரசங்கங்கள் செய்ய ஏற்பாடுசெய்தும், இப்படி வேண்டியமுயற்சிகள்செய்ய விசேஷ யத்தனங்கள் செய்யவேண்டியது முக்கியமாயிருக்கிறதென்று தீர்மானித்ததே. இந்தத்தீர்மானம் அச்சபையில் அங்கீகரிக்கப்பட்டது மிகவும் விசேஷமாகப் பாராட்டத்தக்கது. நம்மவர்கள் இராஜாங்கச் சீர்திருத்தத்திற்காக உழைப்பதாகச் சொல்லி, கவர்ன்மெண்டார் அப்படிச் செய்யவேண்டும் இப்படிச்செய்யவேண்டுமென்றும், அந்த சுதந்திரம் தரவேண்டும் இந்தசுதந்திரம் தரவேண்டுமென்றும் வாசாலமாகப் பேசிக் கூடியிருப்பவர்கள் கைகொட்டி ஆர்ப்பரிக்கத் தீர்மானம் செய்துவிடுகிறார்கள். இத்தீர்மானங்களை நம்மையாளும் ஆங்கிலேயர் நன்குமதித்துக் கவனித்தாலன்றி, நாம் அவர்களைக் கவனிக்கும்படிச்செய்ய எவ்விதவழியுமற்றிருக்கிறோம். நம்மவர்கள்வார்த்தை நம்மையாள்வோரால் மதிக்கப்படுவதற்கு முதலாவது நம்மிடத்தில் அவர்களுக்கு மதிப்புண்டாகவேண்டும். நம்மையாள்வோராகிய ஆங்கிலேயர், மிகவும் காரியவாதிகள். காரியமில்லாமல்பேசுவது அவர்களுடைய ஜாதி சுபாவமன்று. அப்படிப்பட்டவர்கள் நம்மை மதிக்க யத்தனிக்கும்பொழுது, நம்மிடத்திலபிமானமுள்ளவர்களும், நம்வார்த்தைகளுக்கும் செய்கைகளுக்குமுள்ள வித்தியாசத்லைதயுணரவே நம்மிடத்தில் முற்றும் நம்பிக்கைவைக்கப் பின்வாங்குகிறார்கள். நம்மோடுபழகி நமது குணகுணங்களையறிந்துகொண்டவர்கள் நம்மை நமது செய்கையால் மதிக்கிறார்களேயன்றி, நமது வாக்சாதுரியத்தாலும், பிரசங்க சாமர்த்தியத்தாலும் மதிக்கிறார்களில்லை. இப்படி மதிக்கும்பொழுது அவர்களுக்கு நம்மிடத்தில் மதிப்புக் குறைவுண்டாக நேரிடுகிறது. இதற்குக்காரணம் நம்மிடத்திலுள்ளகுறையே. இந்தக் குறையை நிவர்த்தித் [illegible] நாம் முயற்சிக்கவேண்டும். இதனால் காங்ரெஸ்களும், கான்பரென்ஸுகளும் கூடாதென்று சொல்லவரவில்லை. இவைகளோடு, இவைகளுக்குப்பின்னால் காரியத்திலுழைக்கும் ஊக்கமும் சக்தியுமிருக்கவேண்டும். வருஷம் 360-நாளுமுழைத்த உழைப்பின்பலனை பலர் கூடி ஒத்துப்பார்த்து அறிந்துணர்ந்துகொள்ளவும், அடுத்த வருஷத்திலுழைக்கவேண்டிய விஷயங்களின்னவையென்றும், அதற்கு இன்னமுறையை யனுசரிக்கவேண்டுமென்றும் கலந்து யோசனைசெய்து தீர்மானித்துக்கொள்ளவும் கூடும் காங்ரெசும், கான்பரென்ஸும், எவ்வளவோ பலமுடையதாகவும் பலனளிப்பதாகவுமிருக்குமென்பதே எம்முடைய கருத்து. இப்படிக்கின்றி வருஷத்திற்கு மூன்றுநாள் கூட்டங்கூடிப் பிரசங்கமாரிபொழிந்து தீர்மானங்கள் செய்து மறுகூட்டம் கூடுகிறகாலம்வரையில் அந்த ஞாபகமேயின்றியிருப்பது விசேஷபலன் தருவதாகாது. சென்ற காங்ரெஸ் சபையில் அக்கிராசனாதிபதியாகவிருந்த கனம்பொருந்திய அனந்த மோஹனபோஸ் அவர்கள் இவ்விஷயத்தை பச்சைமரத்தாணி பாய்ந்தாற்போல் எவ்வளவோ சாதுர்யமாய் மனதுருகப் பேசி வற்புறுத்திக்கூறினார். "Love and Service" ஊராரைநேசித்து ஊருக்குழைப்பதுவே ஒவ்வொருவரும் தமது கடமையாகக்கொண்டு, அவ்வார்த்தைகளை மூலக் கொள்கையாகக் கொண்டனுசரிக்கவேண்டுமென்று மிக வற்புறுத்திக்கூறினார். அவர் அப்படிக் கூறியதை அனுஷ்டித்து நடக்கவேண்டுமென்பதுதான் நாம் கூறுவதும். இதுநிற்க.

மேற்சொன்ன சுகாதார விஷயமாக நாம் ஏற்கனவே உழைக்கத்தீர்மானித்துக் கங்கணம் கட்டியுள்ளோமென்பது விவேகசிந்தாமணியை வாசிப்போருக்குத் தெரியுமே. இது விஷயத்தை இராஜாங்க விஷயமாய்க்கூடிய மாகாணக் கூட்டத்தார் ஆலோசனைக்குக் கொண்டுவருவது கூடாமையாக முடிந்தாலும், ஜனசாரசீர்திருத்த சபையாராவது இதன் முக்கியத்தை ஒப்புக்கொண்டு இது விஷயமாய் விசேஷ யத்தனங்கள் செய்யவேண்டியது அவசியமென்று தீர்மானித்தது நமக்கு மெத்த அனுகூலமாயிற்று. "ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" என்பது வெகுகாலமாய் நமக்குள் வழங்கிவரும் பழமொழியாக விருக்கிறது. ஆகையால இவர்கள் தீர்மானம் செய்ததோடு நின்றுவிட்டால் காரியமாகாதே. இதை மன



னிட்டு கோயமுத்தூரிலுள்ள உத்தியோகஸ்தர்களையும் மற்றப் பிரமுகர்களையும நேரில் கண்டு பேசி இது விஷயத்தில் அவர்கள் சிரத்தை வகிக்கும்படி நம்மாலான பிரயத்தனஞ் செய்யத் தீர்மானித்தோம். தீர்மானித்துச் சுமமாவிருக்கவில்லை; அஜ்ஜில்லாவில் நமக்குப் பரிச்சயமாயுள்ள மிஸ்டர் இ. டப்ளியூ. ஷீ துரை அவர்களைப் பார்க்கப்போன சமயத்தில், இது விஷயத்தில் அவருக்கு அக்கறையுண்டென்பதை யுணர்ந்த நாம், மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் இதில் அக்கறை பிறக்கச்செய்யும்படி இது விஷயத்தை அவர்களுக்கு வற்புறுத்தச் சமயம்கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்று கோற, அவரும் கோயமுத்தூர் டிப்டி கலெக்டரும் தாலூகா போர்டு ப்ரெஸிடெண்டுமாகிய மிஸ்டர் ஹூட் அவர்களுக்கு நம்மைப் பரிச்சயம் செய்துவைத்தார். இவர் சுமார் முக்கால் மணி தேசகாலம் செலவிட்டு நாம் சொல்வதைக் கிரகித்துக்கொண்டு, இவ்வேற்பாட்டினால் ஜனக்ஷேமத்துக்கிடமுண்டென்று அறிந்துகொண்டு, தாம் இதுவிஷயத்தில் முற்றும் அனுதாபமுற்றவராகவிருப்பதைத்தெரிவித்தது, அப்படியே தாலூகாபோர்டு மெம்பர்களுக்கும் அக்கறையுண்டாகும்படிசெய்ய அன்று சாயந்திரம் நடக்கும் தாலூகாபோர்டு மீட்டிங்கில் வந்து பேசும்படியழைக்க அவர் கோரிக்கையை யங்கீகரித்து,நாமும் அப்படியேசென்று அன்று சாயந்திரம் அந்த போர்டார் கூடிய மீட்டிங்கில், சுகாதார விஷயமாக ஜனங்களுக்கு ஞானமுண்டாகும்படி முயற்சி செய்யவேண்டியதினவசியத்தை வற்புறுத்தி, மிஸ் மானிங், டாக்டர் கிங் முதலான ஐரோப்பியர்கள் இது விஷயத்திலெடுத்துக்கொள்ளும் அக்கறையையும், இதற்காக அவர்கள்படும் சிரமத்தையும் அவர்களுக்கு விண்டுரைத்து விளங்கப்பேசினோம். அவர்களும் நாம்பேசியதை யங்கீகரித்து அனுதாபமுற்றவர்களாகக்காட்டினார்கள். மறுநாள் கலெக்டர் துரையாகிய மிஸ்டர் மௌண்ஸியவர்களை நேரில்கண்டு, இது விஷயத்தைப்பற்றி அவருக்குத் தெரிவித்துக்கொள்ள, அவரும் நாம் சொல்லியதையெல்லாம் ஆர அமர இருந்து கேட்டு, இவ்வேற்பாடு பலிதமாகக்கோறி அனுதாபமுற்றவராகக்காட்டினார். மறுநாள் அங்குள்ள மிஷனரி ரெவரெண்ட் மிஸ்டர் லாங் துரையவர்களைக்கண்டு, அவர் அனுதாபமும் கிடைக்கப்பெற்றோம், அவர் மூலமாக வியவசாயவிஷயங்களில் விற்பன்னராகிய மிஸ்டர் ஏ. எம். ரெம்ஸென் துரையினுடைய பரிச்சயம்கிடைத்தது. இவர் நம்மிடத்து மிகப்பிரீதிகாட்டி கோயமுத்தூர் ஸ்டேன்ஸ் கம்பெனியாருடைய எருவகை தயார்செய்யும்வேலைச்சாலைக்கழைத்துப்போய், அங்கு குறித்த நிலத்தின் பூசாரம் முதலிய கண்டுபிடிக்க அங்கிருந்தெடுத்த மண்ணைப்பரிசோதித்து அதிலிருக்கும், இரும்பு, உப்பு, முதலான, பயிர்களுக் காகாரமாகும் வஸ்துக்களின் பிரமாணங்களைக் கண்டுபிடிக்கும் வகையைக் காட்டி, அப்பிரமாணங்கள் கண்டுபிடித்தபின், அந்நிலத்திலுள்ள குறைகளை நிவர்த்திக்க பல வேறுவிதமான எருக்கள் தயார்செய்து உபயோகித்து வருவதையும், அவைகள் தயார்செய்யும் முறையையும் விளங்கக்காட்டினார். இதைப்பற்றி அங்கு அறிந்ததை இன்னொரு சஞ்சிகையில், அவகாசமானபொழுது எழுத உத்தேசிக்கிறோம். அங்கு தயாராகும எரு வகைகள் பலவற்றில் ஒவ்வொன்றுக்கும் மாதிரியாக அவர் கொஞ்சம் கொடுத்துதவியதை நாம் நம்முடன் கொணர்ந்திருக்கிறோம். இது விஷயத்திலக்கறையுள்ள வியவசாயிகள் தங்கள் பேர் ஊர் விவரங்களையும் உத்தேசத்தையும் முன்னதாகத் தெரிவித்து காலநியமனம செய்துகொண்டு இந்த ஆபீஸுக்குவந்தால் பார்க்கலாம்.

மறுநாளாகிய வியாழக்கிழமையதினம் கோயமுத்தூர் முனிசிபல் சேர்மான் அனுதாபமுற்றளித்த அனுமதிப்படி முனிசிபல் கௌன்ஸில் மீட்டிங்கில் இது விஷயத்தைப்பற்றி வற்புறுத்திப்பேசுவதாகவிருந்தும் அன்று கூட்டிய மீட்டிங்குக்குப் போதுமானபேர் வராமையால் மீட்டிங்கு இல்லாமற்போக நேரிட்டதுபற்றி வாய்த்தசமயம் கிட்டாமற்போய்விட்டது.

19உ வெள்ளிக்கிழமையன்று கோயமுத்தூருக்கு மூன்றுமைல் தூரத்திலிருக்கும் பேரூரில் ஆதிசிதம்பரமென்று பேர்பெற்ற இவ்வுக்ஷேத்திரத்திலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று சுவாமிதரிசனம் செய்துவந்தோம். அக்கோயில் மிகப் பூர்வீகமானதாயிருக்கும் கோயில் கட்டடங்கள் ஜீரணமாய்ப் போனதினிமித்தம் நூதனமாகத்திருப்பணிவேலை நடந்துவருகிறது. அங்கே நடனசபையில் முழுக்கல்லில் வெட்டப்பட்டிருக்கும் நடனசபாபதியும் அம்மனும், மற்றக் கல்வெட்டு வேலைகளும் மிகவும் அபூர்வமானவையாகவும் மகா நேர்த்தியானவை யாகவுமுள்ளன. அவ்வளவு வேலைக்

திறமமைந்த கல்வெட்டுச்சித்திரவேலைகள் தென்னிந்தியாவில் வேறெங்கு மில்லை யென்று சொல்லத்தக்கதா யிருக்கின்றன. வெள்ளிக்கிழமைசாயந்திரம் கோயமுத்தூரை விட்டுப் புறப்பட்டு 20உ சனிக்கிழமை சென்னைவந்து சேர்ந்தேகம்.

C. V. S.

## "கிண்டர்கார்டன்."*

(எப்ரல் மாதத்தொடர்ச்சி.)

சென்ற எப்ரல்மாதச்சஞ்சிகையில் கிண்டர்கார்டன் என்னும் விஷயத்தைப்பற்றிச் சொல்லியிருந்தது. அவ்வித கொள்கைகளின்வழி நடத்தப்பெற்ற கிண்டர்கார்டன் பள்ளிகள் ஒன்றின் விருத்தாந்தம் வருமாறு : 'ஈசனேக் என்னுமிடத்திலிருந்த ஒரு சிறிய" கிண்டர்கார்டனுக்கு நான்போய்ப்பார்த்தது இன்னும் என் ஞாபகத்தில் நன்றாயிருக்கிறது.' மரமடர்ந்தமலைவரையும் பரந்த கீழ்ப்பிரதேசமொன்றில் அது கட்டப்பட்டிருந்தது. அதைச்சுற்றிலும் பழமரங்களடர்ந்த கிராட்சைத்தோட்டங்கள் இருந்தன. கதவுநிலையின்பேரில் 'வாருங்கள் நாம் நம் சிறுவர்களுக்காக வாழ்வோமாக' என்னும் பேர்போன பழமொழி வரையப்பட்டிருந்தது. இதன் முன்னால், பரற்கல்லிட்டுச் சமப்படுத்திய விளையாடுமிடம் சிறுவர்களின் தோட்டங்களாற் சூழப்பட்டிருந்தது. தோட்டங்கள் மிக்க கவனமாய்ப் பாதுகாக்கப்பட்டிருந்தன. இவற்றுட்குப்பை செத்தை ஒன்றுங்காண்பதரிது. மேலும் அங்கே வசந்தகாலத்துப் பூக்கள்யாவும் அரும்பு விட்டலர்ந்திருந்தன. அங்கே வளர்ந்த எல்ம் (Elm) முதலிய வனவிருட்சங்கள் அவ்விளையாட்டிடத்திற்கு நிழல் செய்தன. சிவந்த கன்னமுடைய சிறுமிகள் மூவர் சணல் போன்ற தங்கள் தலைமயிர் சிறுமுடிப்புகளாயலைய, அங்கே ரோசாச்செடிகட்குத் தண்ணீர் விட்டுக்கொண்டிருந்தார்கள். அதற்கு உருண்டைமுகமுள்ள வலிய சிறுவன் ஒருவன் ஒரு தோற்பையில் தண்ணீர் சுமந்து தந்துகொண்டிருந்தான். வேறு சில பிள்ளைகள் காலையில் உபாத்தியாயருக்குத் தரும் பூச்செண்டிற்குப் பூக்கள் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். இப்பள்ளிக்கூடத்தின் பின்புறத்திற் காடுவரையும் பரந்த பழைய தோட்டமொன்றுள்ளது. இங்கே புல்முதலியன இல்லாமற் செதுக்கிச் சமப்படுத்திய வெளியிடமொன்றில் இரண்டு மூன்று வண்டி மணல் அச்சிறுவர்களின் உபயோகத்திற்காகக் கொட்டப்பட்டிருந்தது. இத்தோட்டத்தின் எல்லையில் ப்ரிம்ரோஸ்(Primrose)முதலிய பூச்செடிகளால் நிறையப்பெற்றதும், அச்செடிகளின்மேல் செஸ்ட்னட் (Chestnut) மரங்களால் முகடுபோல மூடப்பெற்றதும் இவற்றின் மேலும் இருண்ட காட்டுத்தேவதாருவிருட்சங்கள் மெல்லியனவாய் நீண்ட கோபுரங்கள்போல வளரப்பெற்றதும் ஆகிய கரையொன்றுள்ளது. அப்பள்ளிப்பிள்ளைகள் அனைவரும் பெரிய அறையிற்கூடிக் காலைவாழ்த்தும் கடவுள் வணக்கமும் பாடி முடிந்தபிறகு தத்தம் வகுப்பின் அறை சேர்ந்தனர். நான் இருந்த அறையில் மேமாதத்தைப் பற்றிப் பேசப்பட்டது. அப்பிள்ளைகள் நாம் நீலோத்பலம் என்னும் பூக்கள்தாம் மேமாதத்திற்குரிய பூக்களென்று சொன்னார்கள். ஒரு சிறியபெண் உடனே தன் சிறிய தோட்டத்திற்கு ஓடிக் காலைப் பனித்துளிகளோடுகூடிய ஒரு சிறிய செடியை வேரோடு மிக்க கவனமாய்த் தோண்டி யெடுத்துக் கொண்டுவந்தாள். அதை ஒரு வெறும்கண்ணாடியில் வைத்து அச்சிறுவரெல்லாரும் மிகக்கவனமாய்ப் பரிட்சித்தார்கள். அதன்வேர், தண்டு, இவற்றையும் இலையின் வடிவம், நிறம் என்பவற்றையும் வருணிக்கப்பட்டது. அதன் இலையை சூரிய கிரணத்திற் பிடித்து அதன் 5 நரம்புகளையும் அச்சிறுவர் கவனித்தார்கள். ஒரு குழந்தை அந்த இலை மஞ்சள்நிறமுண்டயதென்று சொல்லிற்று. ஆதலின் அதைக் 'கௌஸ்லிப்' செடியின் மஞ்சள் இலைக்கு ஒப்பிட்டார்கள். விளையாடுமிடத்திலிருந்து 'எல்ம்' மரத்தழைகள் சில கொண்டுவந்ததனால், பற்களால் இடையிட்ட அவற்றின் ஓரத்தையும் இவற்றின் சமமான விளிம்பையும் பிள்ளைகள் பகுத்தறியக்கூடியதாயிருந்தது. இதன் பூ, மணிக்கு ஒப்பிட்டும், பனித்துளியினின்று வேற்றுமைப்படுத்தியும் உரைக்கப்பட்டது. இதனால் 'வார்ட் பர்க்' விருத்தாந்தங்களின் ஒன்றாகிய ஒருமணியின் கதைசொல்ல ஏதுவாயிற்று. பின் அச்செடியைக்கொண்டுபோய்த் திரும்பவும் நட்டு மிகக்கவனமாய்த் தண்ணீர்விட்டுவைத்தார்கள். பிறகு, 'காற்றானது புஷ்பங்களாகிய மணிகளின் அகவிதழ் என்னும் உள்நாக்கை யசைத்தலால் மேமாதத்திற்கு வாழ்த்துரையிசைப்பது' என்னும் கருத்தடங்கிய பாடலொன்றைக் கற்கத் தொடங்கினார்கள்.

சிற்றுண்டிக்காக விடும் அரைமணியிடைநேரத்தில் ஒரு இளைய உபாத்தியாயர் பிள்ளைகளின் தின்பண்டங்களடங்கிய சிறுகூடைகளை எடுத்துத்தர, அப்பிள்ளைகள், தோட்டத்தில் விளையாடியும், புல்லடர்ந்த கரையின்மீது புஷ்பச்செடிகளின் இடையே உட்கார்ந்தும், மணற்குவியலின்மேலிருந்தும் தம் உண்டியைத் தின்றுகொண்டிருந்தார்கள். சிற்றுண்டிநேரங்கழிந்தபிறகு பிள்ளைகள் ஆட்டமும் வரிசைபோதலும் செய்வதற்காகத் தத்தம் வகுப்பிற்குத் திரும்பினார்கள்.

இவ்வாட்டங்களில் ஏறக்குறைய எண்பது பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் வரிசைசெல்கை மிகவும் அழகாயிருந்தது. அது ஒவ்வோர் பாகங்களில் 'குவாட்ரில்' (Quadrille) என்னும் ஓர்வித நடனத்தின் ஞாபகத்தைப் பார்ப்போருக்குண்டு பண்ணக்கூடியதாயிருந்தது. அவர்களுடைய விளையாட்டுகள் வசந்தகாலத்தைக்குறித்தனவாயிருந்தன. ஒன்று பட்சிகள் கூடுகட்டுதலைப் பற்றியது, வேறொன்று பூக்கள் காற்றிலசைதலைக்காட்டியது. மற்றொன்று 'கக்கூ' என்னும் பட்சியைப்பற்றியதாயிருந்தது. பிறகு ஐந்துவயதுப்பிள்ளைகளோடும் மணலில் விளையாடிய மிகச் சிறிய குழந்தைகளோடும் இருந்து அரைமணிநேரம் கழித்தேன்.

(இன்னும் வரும்.)

* From a paper read by Mrs. Brander before the Madras Educational Conference.



# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## சிறுவர்க்குபதேசம்.

### உபகாரத்தைப்பற்றிய மற்றொரு கதை.

குழந்தைகளே - போன சஞ்சிகையில் உபகாரத்தைப்பற்றி ஒரு கதை சொன்னேனல்லவா? அந்த நீங்கள் மறக்கவில்லையென்று நம்புகிறேன். அதே விஷயத்தைக்குறித்து இன்னமொரு விநோதமான கதை சொல்லுகிறேன் கேளுங்கள்.

"ஒரு காட்டில் பெரிய தீ யொன்று பற்றியெரிந்துக்கொண்டிருக்கும்பொழுது ஒரு பாம்புப் புதரில்கூட அந்த நெருப்புப் பிடித்துக்கொண்டது. அந்தப் புதரிலிருந்த ஒரு பாம்பு பிராணபயமடைந்து தப்பித்துக்கொள்ள வழி பார்த்தது. ஆனால் நெருப்பு புதரைச் சுற்றிலும் வியாபித்துக்கொண்டு எரிந்ததனால் தப்பிப்போக வழியில்லை. அந்தச்சமயத்தில் ஒரு வர்த்தகன் பிரயாணமாய் தன்னைநோக்கி வருகிறதைக் கண்ணுற்று அவனைக்கூப்பிட்டு ஓ! சிநேகிதனே! என் பிராணனைக் காப்பாற்றென்று வேண்டிக்கொண்டது. அதற்கந்த வர்த்தகன் நீயோ விஷஜந்து உனக்கு நான் உபகாரம் செய்வேனேயானால் உடனே நீ எனக்குத் தீங்கு விளைவிப்பாயாதலால் உன்னருகில் வர பயப்படுகிறேன் என்று சொன்னான். அதற்கந்த பாம்பு உனக்கு பயம்வேண்டாம் நீ என் பிராணனை ரட்சிக்கும்போது நான் உன்னுயிரை வாங்குவேனென்று எண்ண வேண்டாமென்று சொல்லிற்று.

அப்பொழுது அந்த வர்த்தகன் ஆலோசித்து உபகாரம்செய்த மனிதனுக்கு அபாயம் சம்பவிக்காது; ஏனென்றால் கடவுளே அவனை யதார்த்தமாய் ரட்சிப்பாரென்று நம்பினவனாய் தன்னிடமிருந்த ஒரு பையின் இரண்டு நுனிகளுக்கும் ஒரு கயிறுகட்டி அதை ஒரு தடியிற் கோர்த்து முடிந்து புதரிற் போட்டான். பாம்பும் பைக்குள் நுழைந்துகொண்டது. வர்த்தகன் பையை வெளியிலிழுத்து பாம்பை விட்டுவிட்டான். பாம்பு குரூரமும் வஞ்சகமனதுமுள்ள பிராணியாகையால் தன்னுடைய அபாயகாலத்தில்மட்டும் மிகவும் வினயத்துடனிருந்து தப்பித்துக்கொண்டு, பிறகு சமயம்பார்த்து தனக்கு உபகாரம்செய்த வர்த்தகனை கடிக்கப்போயிற்று. வர்த்தகன் என்ன இப்படி அநியாயஞ்செய்கிறாயென்று கேட்டான். அதற்குப் பாம்பு "நீ எனக்கு சகாயஞ்செய்தபோதிலும் நான் உன்னைக் கொல்லுவதற்கு ஒருவிதமான தடையுங் காணேம். ஏனென்றால் உபகாரம்செய்தவர்களுக்கு தீமை விளைவிப்பதே எங்களுக்கு சகஜம். நாங்கள் சாதாரணமாய் மனிதர்களைக் கொல்லுங் குணமுடையவர்கள். மனிதர்களும் எங்களுக்குமாத்திரமேயல்ல, மற்ற எல்லா ஜந்துக்களுக்கும் சத்துருக்கள். நான் சொல்லு

றகிது உனக்கு சந்தேகமாயிருக்கும்பட்சத்தில் உனக்கு இஷ்டமான விசாரணைசெய்துக் கொள்ளலாம்" என்றது

அந்தச்சமயத்தில் அவர்களுக்கு எதிரே மைதானத்தில் மேய்ந்துகொண்டிருந்த ஒரு ஆட்டைப்பார்த்து வர்த்தகனும் பாம்பும் அதனிடம்போய் நடந்த சங்கதியைச் சொல்லிக் கொண்டார்கள். முதல்முதல் பாம்பு இந்த மனிதன் எனக்குபகாரஞ்செய்தவனாயிருப்பதால் இவனைக் கொல்லலாமா கூடாதா என்று கேட்டது. இந்தக்கணமே அந்த வேலையைச் செய்து முடி; எள்ளளவேனும் தாமதிக்கவேண்டாம். மனிதசாதியாரின் நடத்தை எனக்கு நன்றாய்த் தெரியும் அதைப்பற்றி கொஞ்சம் சொல்லுகிறேன் கேள். "என் மயிரினால் நெய்யப்பட்ட கம்பளிகளை கட்டிக்கொண்டும் அவைகள்பேரில் உட்கார்ந்துகொண்டுமிருக்கிறார்கள். ஆனால் அந்த உபகாரத்தை நினையாமல் நான் குட்டிபோடும்போது என் பாலைக்குடித்து விருத்தியாகும் என்னுடைய குட்டிகளைக்கொன்று என் மனதைப் புண்படுத்துகிறார்கள். அதனால் என்னையும் ஒருநாளில்லாவிட்டாலும் மற்றொருநாள் கொன்றுபோடுவார்களென்கிற பயமும் விசனமும் எனக்குண்டாகிறது. ஆகையால் அப்படிப்பட்ட சாதியாரை நாசம்செய்தல் கொஞ்சமேனும் தப்பிதமாகமாட்டாது" என்றிப்படி ஆடு சொல்லிற்று.

அதைக்கேட்டு வர்த்தகன் ஒருவர் சொல்லும் சாட்சியம் போதாது; இரண்டுமூன்றுபேர்களாவது சம்மதிக்கும்பட்சத்தில் என் தலைவிதிப்பிரகாரம் நடக்கட்டும் என்று சொன்னான்.

பிற்பாடு அவர்கள் ஒரு கிழப்பசுவைப்பார்த்து இந்த சங்கதிகள் யாவற்றையும் சொல்லவே அந்தப்பசு நான் மனிதர்கள் நடத்தையைக்குறித்துச் சொல்லட்டுமா: "பார்! ஒருவனிடமிருந்து நான் வருஷத்துக்கோர் கன்று போட்டுக்கொண்டிருந்தேன்; மேய்ச்சல்கூட அவன் செலவல்ல; மற்ற மாடுகளோடு வெளியில் மேய்ந்துவந்து பிரதிதினமும் பால் கொடுத்துக்கொண்டிருந்தேன். என் பாலினால் அவனுக்கு ஆடை, தயிர், வெண்ணெய் முதலான அனேக ருசிகரமான போசனபதார்த்தங்கள் உண்டாய்க்கொண்டிருந்தன. இந்தப்பிரகாரம் அனேகவருஷங்களாய் அவனுக்கு உபகாரம் செய்துவந்தபோதிலும் நான் கிழமாய்விட்டேனென்று என்னை ஒரு கசாப்புக்கடைக்காரனுக்கு விற்றுவிட்டான். அவன் நாளையதினம் என்னைக் கொல்லப்போகிறான். ஆகையால் மனிதர்கள் யாவரும் துன்மார்க்கர்கள். இந்த நிமிஷம் இவனைக்கொன்றுவிடு" என்று பாம்புடன் சொல்லிற்று.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் வர்த்தகன் ஐயோ! சாகிறேனே என்றுதிகிலடைந்து அழுதுகொண்டிருந்தான். அப்பொழுது அவ்விடமிருந்த ஒரு நரி ஓ! சிநேகிதனே! ஏன் இப்படி விசனப்படுகிறாயென்றுகேட்டது. வர்த்தகன் பதில் ஒன்றுஞ்சொல்லவில்லை. பாம்பு அவன் கதையைக்கேள் என்று நரியுடன் சொல்லுகிறது: "இவன் என்னை பெருந்தீயினின்றும் காப்பாற்றினது நிசம். ஆனால் நானே அவனை இப்பொழுது கடிக்கப்போகிறேன். ஏனென்றால் உபகாரம் செய்தவர்களுக்கு இம்சைபுரிவதே எங்களுக்கு சுபாவம். ஆடும் பசுவும் கூட இவனைகொல்லுவதே யுக்தமென்று தீர்ப்புச்செய்து போட்டன" என்று சொல்லிற்று. அப்போது நரி; இதைக்கேட்க எனக்கு மிகவும் ஆச்சரியமாகவிருக்கிறது; தீயிலிருந்து இவன் உன்னை எப்படி சம்ரட்சித்தானே தயவுசெய்து விவரமாய்ச் சொல்லென்றது. அதற்குப்பாம்பு: அவன் தன் பையை ஒரு தடியின் நுனியில்கட்டி அதைப் புதரில் போட்டான். அப்போது நான் பைக்குள் நுழைபவே என்னை வெளியிலிழுத்து விடுவித்தான். அந்தப்பை அவன் தோளிலேயே இருக்கிறது பார் என்றது. "உன் பெருத்த உடம்பு இந்தச்சிறிய பைக்குள் அடங்கியிராது; பார்க்கிறவரையில் எனக்கு நம்பிக்கையில்லை என்று நரி பாம்புடன் சொல்லவே, பாம்பும் வர்த்தகனைக்கேட்டு பையைவாங்கிக்கொண்டு தான் மறுபடியும் அதற்குள் பிரவேசித்தது அப்போது நரி பைவாயை கெட்டியாய்க்கட்டிப்போடென்று வர்த்தகனுக்கு கண்ஜாடை காட்டிற்று. அந்தக்ஷணமே அவன் அப்படிச் செய்தான். தடியினால் பாம்பின் தலையை நன்றாய் நசுக்கிவிடென்றது இந்தப்பிரகாரம் நரி சொல்லிக்கொடுத்த தந்திரத்தினால் வர்த்தகன் பாம்பைக்கொன்று தன் உயிரைக்காப்பாற்றிக்கொண்டான்.

ஆகையினால் தனக்கு உபகாரம் செய்தவனுக்கு இம்சைசெய்கிறவனும் உபகாரத்தை மறப்பவனும் ஒருநாளும் சம்பன்னனாகமாட்டான்.

L. V. V.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, $5\frac{1}{2}$ அணா.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2.




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1899ஆ ஜூலைமீ [இலக்கம் 3.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7*s.* 6*d.* NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. $5\frac{1}{2}$ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s.* 6*d.* NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year,* i. e., *in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசான காகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

LIQUID AIR.

## காற்றுத்திராவகம்.

நாம் புராணாதிகளிலும் கட்டுக்கதைகளிலும் அனேகவிதமான வித்தைகள் சிலர் செய்ததாக படித்தும் கேட்டுமிருக்கிறோம். மயில்ராவணன் வாலி முதலானவர்களும், சுக்கிரீவன், அனுமார் முதலானவர்களும் பீமசேனன் அருச்சுனன் முதலானவர்களும் செய்ததாகச் சொல்லியிருக்கும் அற்புதமான செய்கைகளெல்லாம், இந்த நாளில் வாஸ்தவமாக நடக்கும் ஆச்சரியங்களுக்கு முன்னிலையில் அபூர்வமானவைகளல்லனபோல் தோன்றுகின்றன. அசாத்தியமான காரியங்களென்று நினைக்கும் அவைகள் இப்போது சாத்தியமாகிவிடுகின்றன. வித்தைகள் செய்வது ஜனங்களை மயக்குவதற்காகவல்ல. அவைகளால் உலகத்திற்கு வெகுவிதமான உபயோகங்கள் கிடைக்கின்றன. ரயில்வண்டியென்ன, தந்தித்தபாலென்ன, இவைகளின் ஆச்சரியத்தை யளவிடக்கூடாதென்றால், சென்னபட்டணத்தில் நெருப்பும் புகையுமில்லாமல் தெருத்தெருவாக வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. தந்தித்தபால் செல்லுவதற்காக, இரும்புக்கம்பங்கள் நாட்டி அவைகள்மேல் கம்பி போகிறது. அந்தக்கம்பியின் வழியாகத்தான் மின்தபால் செல்லுகிறது. ஆயிரம்மயிற்கப்புறம் இருக்கிறவர்களிடமிருந்து சமாசாரம் நிமிஷத்தில் வருகிறது. இனிமேல் அந்தக்கம்பமும் வேண்டாம்போலிருக்கிறது. கம்பியும் வேண்டாம்போலிருக்கிறது. இரண்டு மாசத்திற்கு முன்னாலே ஐரோப்பாவில் ஒரு வித்வான் கம்பமும் தந்திக் கம்பியுமில்லாமலே, ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு தந்தி சமாசாரம் அனுப்பலாமென்று சொல்லி அதையும் பண்டிதர்களுக்கு நிரூபணம்செய்து காட்டினார். இன்னும் கொஞ்சகாலத்தில நம்முடைய தேசத்திலும் தந்திக்கம்பங்களையும் தந்திக் கம்பியையும் பிடுங்கி யெறிந்துவிடுவார்களென்று தோன்றுகிறத. இவைகளையெல்லாம்பற்றி இப்போது சொல்லப்போகிறதில்லை. இவைகளைப்போன்ற இன்னொரு ஆச்சரியமான விஷயத்தைப்பற்றிப் பேசுவோம். அதாவது நம்மேல் அடித்து வீசிக்கொண்டிருக்கும் காற்றைத் திராவகமாக இறக்கி யிருக்கிறார்கள். அந்தத் திராவகத்தை வைத்துக்கொண்டு நெருப்பு கரி புகை யொன்றுமில்லாமல் ரயில் கப்பல் இவை ஓட்டலாம் போலிருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லுவோம்.

காற்றையாவது திராவகமாக இறக்கவாவது! வாயுபகவானை வருணனாக மாற்றி ஜயிலில் போட்டாற்போல சீசாவில் அடைக்கவாவது! இதெல்லாம் நம்ப முடியாததாக வேதோற்றும். ஆனாலும் அவ்வாறு செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்வது எப்படி சாத்தியமென்று யோசிப்போம். இப்போது கொஞ்சம் தண்ணீரை யெடுத்து அதை அடுப்பில்வைத்துக் காய்ச்சினால், அது ஆவியாகக் கிளம்பிப்போகிறது. இதை நீராவியென்று சொல்லுகிறோம். அந்த நீராவியினால்தான் ரயில்வண்டிகளும் புகைக் கப்பல்களும் ஓடுகின்றன. அந்த நீராவியே கொஞ்சம் குளிர்ந்தால் தண்ணீராக மாறிவிடும். சமையல் செய்வதற்காக அடுப்பில்வைக்கும் பானையின் மேல் மூடியிருக்கும் பாத்திரத்தின் அடியில் நீராவி தங்கியிருக்கும். அந்த மேல்பாத்திரத்தை வெளியில் எடுத்தவுடனே அதிலிருந்து சொட்டுச்சொட்டென்று ஜலம் விழுவதை யெல்லாரும் கண்டிருக்கிறோம். அந்த ஜலமானது ஆவியிலிருந்தே யுண்டாகிறது. தண்ணீரைக்காய்ச்சினால் ஆவியாகமாறுகிறது. ஆவி குளிர்ந்தால் தண்ணீராகமாறுகிறது. சாதாரணமான தண்ணீரைச் செவ்வையாகக் குளிரும்படிச்செய்தால் பனிக்கட்டியாகவுறையும். இங்கிலாந்து முதலான குளிர் தேசங்களில், குளிர்நாளில் தண்ணீர் உறைந்து கட்டியாகும். மழையே கட்டியாகப்பெய்யும். நம்முடைய தேசத்திலேயே இமயமலையின்மேல் தண்ணீர் உறைந்து பாறையாகவே நிற்கும். பாறை



போலிருக்கும் பனிக்கட்டி உருகித் தண்ணீராக கங்கை முதலிய ஆறுகளில் பிரவாகிக்கின்றது. அவ்வளவுதூரம் போகாமலே பனிக்கட்டியை - அதாவது தண்ணீர்க்கட்டியை - சென்னபட்டணத்தில் தெருத்தெருவாக விற்கக்காணலாம். ஜலத்தைக் கட்டியாக மாற்ற இயந்திரங்களிருக்கின்றன. அவைகளால் தண்ணீரைப் பாறை பாறையாக உறைத்து ரயில் மார்க்கமாகவும் வெவ்வேறு ஊர்களுக்கு அனுப்புகிறார்கள். ஒரு கட்டியைத் தண்ணீரில் போட்டால் தண்ணீர் ஜில்லென்றுபோகிறது. இப்பனிக்கட்டி கோடைகாலத்தில் தண்ணீர் ஜிலுஜிலுப்பாயிருக்கிறதற்காகவும் இன்னும் சில காரியங்களுக்கும் உபயோகிக்கப்பட்டுவருகிறது.

இதனால் நமக்கு என்ன விளங்குகிறதென்றால்: தண்ணீரானது, உஷ்ணம் அல்லது குளிர் சேர்ந்தால் வேறுவேறாக உருவம் மாறுமென்பது தெரிகிறது. சாதாரணமாகத் தண்ணீராக விருக்கும்போது திரவமாயிருக்கிறது. அந்தத் தண்ணீரைக் காய்ச்சினால், அது உஷ்ணத்தை ஏற்றுக்கொண்டு, அதனால் உருவம் மாறி ஆவியாகிறது. தண்ணீரைக் குளிரச்செய்தால், அதாவது, அதின் உஷ்ணத்தை யெடுத்துவிட்டால், தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து கடினமாகிவிடும். நம்முடைய தேசத்தில் தண்ணீரானது ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் ஓடிக்கொண்டிருப்பதும், குளங்களிலும் கிணறுகளிலும் தங்கியிருப்பதும் நமக்கு சாதாரணமாகத் தெரிந்தகாட்சி. பனிக்கட்டியைப் பார்க்காதவர்களோடு தண்ணீர் சிலவிடங்களிலும் சிலகாலங்களிலும் கட்டியாயுறைந்துபோகுமென்று சொன்னால் அவர்கள் அதை நம்பமாட்டார்கள். அப்படியே இமயமலையினுச்சியிலேயே வசிக்கும் ஒருவனுக்குத் தண்ணீரே தெரியாது. பாறையாயிருக்கும் பனிக்கட்டி தண்ணீராகிறதென்று சொன்னால் அவன் நம்பமாட்டான். அப்படியே பூமியின் பேரில் மிகவும் அதிக உஷ்ணமான தேசமிருக்கிறதாக நினைப்போம். அதில் உஷ்ணம் அசாத்தியமாயிருந்தால் ஜலம், தண்ணீராக விருக்கமுடியாமல் ஆவியாகத்தானேயிருக்கும். இப்போது பூமியில் அப்படிப்பட்ட விடங்களில்லை. பூமி சிருஷ்டிக்கப்பட்டபோது, வெகு வெகு காலங்களுக்கு முன்னாலே பூமியில் தண்ணீரேயில்லாமல், நீராவிதானிருந்ததாகப் பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அந்தக்காலத்து மனுஷன் ஒருவன் இருந்தால் அவன் நீராவி தண்ணீராக எப்படி மாறுமென்று கேட்பான். இப்போதும் சூரியமண்டலத்திலொருவனிருந்தால் அவன் தண்ணீரையே அறியமாட்டான். அவனுக்கு ஆவிதான் தெரியும். அவ்வாறே காற்றை கண்ணுக்குத்தெரியாத ஆவிரூபமாகவே யறிந்திருக்கும் நமக்கு அது ஜலரூபமாக மாறுமென்றால் நம்புவது கஷ்டம். தண்ணீர் மாத்திரமல்ல, இவ்வாறு பல உருவமடைவது. நெய் தேங்காயெண்ணெய், இலுப்பையெண்ணெய் இவைபோல்வன குளிர்காலத்தில் கட்டியாகத்தோய்ந்துபோகிறதும், கோடைகாலத்தில் உருகுகிறதும் நமக்கெல்லாருக்கும் தெரியும். கட்டியாய் இருக்கிற ஈயத்தை உலையில் வைத்துக் காய்ச்சினால் உருகுகிறது. அப்படி உருகின ஈயத்தை இன்னம் காய்ச்சினால் அது புகை, அதாவது, ஈய ஆவியாகக் கிளம்புகிறது நம்முடைய கருமான் உலையில் கிடைக்கக் கூடிய உஷ்ணத்தினால் அனேக கடினபதார்த்தங்களை உருக்கமுடியாது. இரும்பை உருக்க முடியாது. கருங்கல்லை உருக்கமுடியாது. அவைகளுக்குத் தகுந்த உஷ்ணம் கொடுத்தால் உருக்கக்கூடும். வெள்ளைக்காரர்கள், இரும்பு கருங்கல் இவைகளைக்காட்டிலும் கடினமாயுள்ள வஸ்துக்களையும் எளிதில் உருக்கும்படியாய்ச்செய்கிறார்கள். காலாக்கினிபோல் எரிக்கும்படியான உலைகளில் உருகாத வஸ்து அனேகமாய் ஒன்றுமில்லை. அவ்வாறே குளிர் உண்டாக்கவேண்டுமானால் பல உபாயங்களாலுண்டாக்குகிறார்கள். குளிரென்று தனியாக ஒன்றுமில்லை. ஒவ்வொருவஸ்துவிலும் உஷ்ணமிருக்கிறது. இரண்டு கல்லை அடுப்பில் போட்டு அதிலொன்றை வெளியில் வைத்து

விட்டால் அது மற்றொன்றைக் காட்டிலும் குளிர்ச்சியாயிருக்கிறதாகச் சொல்லுகிறோம். அதாவது, மற்றொன்றைப்போலிருந்த அதின் உஷ்ணம் போய்விட்டது அதனால்தான் குளிர்ந்தது. குளிர்ந்த ஜலத்தில் விரலைவைத்தால் விரல் குளிர்ந்துபோகிறது. ஏனென்றால் குளிர்ந்த ஜலத்தில் உஷ்ணம் விரலைக் காட்டிலும் குறைவானதால் விரலின் உஷ்ணத்தை ஜலம் இழுத்துக்கொள்ளுகிறது. அதனால் அதனுஷ்ணமும் கொஞ்சம் அதிகப்படும்.

பலவிதமாகக் குளிர் உண்டுபண்ணலாம். தண்ணீரில் கொஞ்சம் ஸோடா உப்பைக் கரைத்தால் அது கொஞ்சம் ஜில்லென்று போய்விடும். நவச்சார உப்பைக்கரைத்தாலுமப்படியே. இப்படியே வேறு உபாயங்களால் அதிகக்குளிர் உண்டாக்கலாம். பனிக்கட்டியைக் கொஞ்சம் உப்போடுகலந்து இடித்தால் பனிக்கட்டியைக்காட்டிலும் நிரம்பக் குளிராகும். இப்படிப்பட்ட குளிரெல்லாம் கையினாலிவ்வளவென்று அறியமுடியாது. கட்டைத்தணலில் கையைவைத்தாலும் கைசுட்டுக் கொப்பளித்துப்போகிறது. பழுக்கக்காய்ந்த கரண்டிக்காம்பில் வைத்தாலுமப்படியேபோகிறது. இவை இரண்டில் எது உஷ்ணம் ஜாஸ்தி எது குறைவு என்று சொல்லுவது முடியாது. அப்படியே குளிரையும் கையினால்பார்த்து அளவிடமுடியாது. இவைகளை அளவிட சில கருவிகளுண்டு. அவைகளால் எளிதிலறியலாம்.

ஈயத்தை உருக்குவதற்கு வேண்டிய உஷ்ணத்தைக்காட்டிலும் இரும்பை உருக்குவதற்கு எப்படி ஜாஸ்தியான உஷ்ணம் வேண்டியிருக்கிறதோ அப்படியே வெவ்வேறு ஆவிகளைத் திராவகமாகக் காண்பதற்கு சிலவற்றிற்குக் கொஞ்சமான குளிரும் சிலவற்றிற்கு அதிகமான குளிரும் வேண்டியிருக்கிறது. நீராவி சுளுவாய்த் தண்ணீராகும். நாம் சுவாசம்விடும் காற்றைத் திராவகப்படுத்த வெகு அதிகமான குளிர் வேண்டும். அதிகமான குளிர் உற்பத்தி செய்யும்விதம் கண்டறிந்ததுமுதல் நவீனதத்துவசாஸ்திரிகள் பற்பல வாயுக்களைத் திராவகமாக இறக்க முயன்றார்கள். சில வருஷங்களுக்கு முன்னாலே நாம் விடும் மூச்சுக்காற்றை திராவகமாக்கினார்கள். அந்த மூச்சுக்காற்றைத்தான் கார்பானிக்வாயு (Carbonic acid gas) என்று சொல்லுவார்கள். சுண்ணாம்புக்காளவாயில் சுண்ணாம்புக்கல். கிளிஞ்சல் இவைகளைப்போட்டு எரித்தால் அதிலிருந்து கிளம்புகிற வாயுவும் இதுவே. அந்தப்புகையில் நாம் நின்றால் மூச்சுவிட முடியாமல் திக்குமுக்காடிச் செத்துப்போவோம். பெரிய தீவர்த்தி அல்லது எரிபந்தங்களை அந்தப்புகையில் காட்டினாலும் அணைந்துபோய்விடும். அந்தக்காற்றைத் திராவகமாகச்செய்து கெட்டியான கண்ணாடிசீசாவில் அடைத்து பெரிய கட்டடங்களில் தொங்கவிட்டிருப்பதைப் பார்க்கலாம். பார்வைக்குத் தண்ணீரைப்போலே காணப்படுகிறது. ஆனால் தண்ணீரைக்காட்டிலும் இலேசானதாகத் தெரிகிறது. கட்டடங்கள் நெருப்புப்பிடித்துக்கொண்டால் இந்த திராவகக்குப்பிகளை நெருப்பிலெறிந்தால் குப்பிவெடித்து அதிலடங்கியிருந்த திராவகம் கார்பானிக் வாயுவாகமாறி நெருப்பைத்தணிக்கும். கால்சேருள்ள திராவகத்திலிருந்து அசாத்தியமான ஆவிகிளம்பும். அது சுவாலையை அவிக்கும்.

அந்த வாயுவை (Carbonic acid gas) எப்படித் திராவகமாக மாற்றியிருக்கிறார்களென்றால்: முதலாவது, நாம் முன்னேகண்டபடி அதற்குவேண்டிய தகுந்த குளிர் வேண்டும். குளிர்மாத்திரம் போதாது அத்துடன் காற்றைக் கடினமாய் நெருக்கினால் திராவகமாகும். காற்றை எப்படி நெருக்குகிறது? அது கையிலகப்படுமாவென்று கேட்கலாம் கெட்டியான இரும்புப்பாத்திரத்தில் காற்றையடைத்து அதன் மூடி அந்தப்பாத்திரத்தில் நகரக்கூடியதாகவிருக்கிறதென்று நினைப்போம். மூடிமேல் இயந்திரத்தினால் அதிகபளுவைத்துத் தாக்கினால், அது நகர்ந்து, பாத்திரத்திற்குள் காற்றி



ருக்குமிடம் குறையும். சிறுபையன்கள் பாவட்டங்குழாய் என்று வைத்துக்கொண்டு, ஒரு சின்ன மூங்கில் குழாயின் வழியாய் பாவட்டங்காய், கல்லு, கடுதாசியுண்டை இவைகளைத் துப்பாக்கிமாதிரி விடுகிறதைப் பார்த்திருக்கிறோம். அந்தக்குழாயை நுனியில் விரலால் அடைத்துக்கொண்டு மேல்கொம்பை அழுத்தினால் குழாய்க்குள்ளகப்பட்ட காற்றுத் தன் உருவம்குறைவதைப் பார்க்கலாம். இப்படியே யந்திரமூலமாய் அதிக நெருக்கத்தை உண்டாக்கலாம். காற்றடைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தைச் சுற்றி நாம் முன்னே சொன்ன அதிக குளிருண்டாக்கும் பதார்த்தத்தைவைத்தால், உள்ளேயிருக்கும் காற்றுத் திராவகமாக மாறிவிடும். இப்படிச் செய்யக்கூடுமென்று சில வருஷங்களுக்கு முன்னேயே அறிந்திருந்தபோதிலும் அதற்கு வேண்டிய குளிரும் நெருக்கமும் கிட்டாதபடியால், வெகுநாள்வரையில் அப்படிச்செய்ய முடியாமலேயிருந்தது. காற்றைத் திராவகமாக இறக்கமுடியாதென்றே நினைத்தார்கள்.

ஆனால் யுக்தியும், வேண்டியசாதகங்களும் அதிகமாகவே, முன்னாலே திராவகமாக மாற்றமுடியாதென்று நினைத்திருந்த வாயுக்களையெல்லாம் ஒவ்வொன்றாக திராவகமாய் மாற்றிவிட்டார்கள். நாம் சுவாசத்தில் உட்கொள்ளும் (Oxygen) பிராணவாயுவென்று சொல்லும் காற்றை வெகு சிரமப்பட்டு சில வருஷங்களுக்குமுன்னாலே நீராக்கினார்கள். பனிக்கட்டிபோல் சிறுகட்டியாகவும் மாற்றினார்கள். கொஞ்சநாளைக்குமுன்னாலே நம்மைச்சுற்றியிருக்கும் நம்மேல் வீசும் காற்றையும் திராவகமாக இறக்கமுடிந்தது. இப்படி திராவகமாக இறக்க ஆதியில் வெகுபணம் சென்றது. ஆகையால் அந்தத் திராவகத்தால் வேடிக்கையைத் தவிர வேறே உபயோகத்தையடைய முடியவில்லை. இப்போது சிலமாசங்களுக்கு முந்தி ஒரு பெரிய பண்டிதர் அதிகபணமே செலவில்லாமல் காற்றுத்திராவகத்தை குடங்குடமாக இறக்கலாமென்று கண்டிருக்கிறார். நாம் மேல் கார்பானிக்வாயுவை எப்படி திராவகமாக மாற்றலாமென்றோமோ அப்படியே இதையும் மாற்றலாம். வெகு பலத்தோடு நெருக்கப்பட்ட காற்றைச்சுற்றி அதிககுளிர் உண்டாககுவதோடுகூட, அடைபட்ட காற்றை மெல்லிய குழாய் வழியாய் வெளியில் செல்லும்படி விட்டால், கொஞ்சம் காற்றுப்போனவுடன், பாக்கியிருக்கிற காற்று தண்ணீராகப்போய்விடும்; இன்னும் கொஞ்சம்போனால் சிறு சிறு கட்டியாகக்கூட மாறும்.

இப்படி சம்பாதித்த காற்றுத்திராவகத்தின் குளிர்ச்சி எவ்வளவென்று அளவிடக்கூடுமாவென்று பார்ப்போம். உஷ்ணத்தையளக்கிறதற்கு சிலபரிமாணங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். துணியளக்க முழத்தைப்போலவும், அரிசியளக்கப் படியைப்போலவும். உஷ்ணத்தை இவ்வளவு 'டிக்ரி' (Degree) என்று சொல்லுவார்கள். இக்காலத்தில் நம்மேலடிக்கும் காற்று 96-டிக்ரி, பனிக்கட்டி 32-டிக்ரி அதாவது இந்தக் கோடை காலத்திலுள்ள நீரிலிருந்து 64-டிக்ரி உஷ்ணத்தைக் குறைத்தால், அது பனிக்கட்டியாகிவிடும். பனிக்கட்டியின் உஷ்ணத்தை 344-டிக்ரி குறைத்தால் காற்றுத்திராவகத்தின் குளிர்ச்சியின் அளவாகும்! அது எப்படிப்பட்ட குளிர்ச்சியென்று நாம் மனதினால்கூட அளவிடமுடியாது! பனிக்கட்டியைச் சற்றுக் கையில்வைத்துக்கொண்டால், கை தேள்கொட்டுகிறதுபோல் கடுக்கிறது. காற்றுத் திராவகத்தில் விரலைவைத்தால் விரலப்படியே கொப்பளித்துக் கருகிப்போய்விடும். அது பட்ட இடத்தைத்தவிர வேறேயிடங்களில் தின்றுகொண்டு போகாததினால், அதை ரணவயித்தியத்தில் வெகுவாய் உபயோகப்படுத்தக்கூடும். கட்டிச்சிரங்கு, புத்து இவைகளின்மேல் ஒரு பொட்டுத் திராவகம் விட்டால் அவை அப்படியே செத்துக்கருகிப்போய்விடும். ரசத்தின்மேல் கொஞ்சம் திராவகத்தைப்போட்டால், ரசமப்படியே பாறையாக வுறைந்துபோகிறது. அந்த ரசப்பாறையால் கருங்கல்லைக்கூட உடைக்கலாமாம். உலகத்திற்கு இந்த திராவ

கத்தால் பெரிய உபயோகமுண்டாகலாமென்று தோன்றுகிறது. இதை இறக்குத்தலைப்பட்டவர் ஒரு வண்டி செய்திருக்கிறார். அது தானாகவே திராவகத்தால் ஓடுகிறது. எப்படியென்றால் கொஞ்சம் திராவகத்தை படைத்து வைத்தால் அது சுற்றியிருக்கும் காற்றைக் காட்டிலும் வெகு குளிர்ச்சியாயிருப்பதால் பக்கத்திலிருக்கும் உஷ்ணம் தாங்காமல் ஆவியாக வெளியில்கிளம்ப யத்தனித்து வண்டியைத்தள்ளுகிறது. தண்ணீரை அடுப்பில் வைததுக்காய்ச்சினால் அதிலிருந்துண்டாகும நீராவி எவ்வாறு வெளிக்கிளம்பிப் போகப் பார்க்கிறதோ அவ்வாறே இதுவும் ஆனால் தண்ணீருக்கு நெருப்புப்போட்டு எரிக்கவேண்டியிருக்கிறது. இதற்கோ நெருப்பே வேண்டியதில்லை. அதைச்சுற்றியிருக்கும் காற்றேபோதும். அது அதற்குப் பெரியநெருப்பு. ரயில் வண்டிகளிலும் புகைக்கப்பல்களிலும நீராவியை உண்டுபண்ணி அதனால் அவைகளை எப்படி ஓட்டிவைக்கிறார்களோ, அப்படியே காற்றுத் திராவகத்தால் ஓட்டிவைக்கலாமென்று தோன்றுகிறது. அப்படியானால் ரயிலுக்கு நெருப்பு வேண்டியதில்லை; கட்டை, கரியும் வேண்டியதில்லை. இவைகளில்லாமலே ஓடக்கூடுமென்று நினைக்கிறார்கள். இன்னும் ரயில் வண்டிக்கும் புகைக்கப்பல்களுக்கும் போட்டுப் பரிட்சைபார்க்கவில்லை. பார்த்தால் முடியுமென்றே தோன்றுகிறது. ரயிலுக்குக் கரிதான் அதிகச்செலவு. கரியேயில்லாமல் கொஞ்சம் காற்றுத்திராவகத்தைக்கொண்டு ஓடக்கூடியதாயிருந்தால் எவ்வளவு செலவில்லாமலும் அற்புதமாயுமிருக்கும். தந்திக்கம்பங்கள், கம்பிகள் இல்லாமல் தந்தித்தபாலும் நெருப்பு புகை கரியில்லாமல் ரயில்வண்டிகளும் ஒன்றுக்கொன்று ஆச்சரியத்தில் குறைவில்லை. இன்னும் இந்தத்திராவகம் சுலபமாய்க்கிடைக்கும்பட்சத்தில் எப்படிப்பட்ட உஷ்ணமான இடத்தையும் நீலகிரியாக மாற்றிக்கொள்ளலாமென்று தோன்றுகிறது. கடுங்கோடையில் நமக்கு வெப்பம் தாங்கமுடியாமலிருக்கிறது அப்போது நம்முடையவீட்டில் ஒரு சீசா காற்றுத்திராவகத்தைக்கொணர்ந்து திறந்தால், நீலகிரியைப்போல் வீடு குளிர்ந்துபோகும்.

தி. அரங்கசாமி ஐயங்கார்.

READINGS AT HOME.

A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.

7-ம் நாள் படிப்பு.

ஏழாநாட் பகலில் ருக்மணி அம்மாளும் பெண்களிருவரும் போஜனம் முடிந்து காரியங்களொழிந்து வழக்கப்படி கதாகாலக்ஷேபத்துக்குவந்துட்கார்ந்தார்கள். கைலாசத் தாத்தாவும் மெல்லவந்து தம்மிருப்பிடத்தில் உட்கார்ந்து ருக்குமணி அம்மாளை நோக்கிச் சொல்லுகின்றார்:

"ருக்மணி, நேற்றுத் தயயந்தி கல்யாணம் வெகுசிறப்பாய் நடத்தினாய். பஞ்சபக்ஷ்ய பரமான்னங்களோடு சாப்பாடென்ன, சந்தனமென்ன, புஷ்பமென்ன, வாத்யமென்ன, பாட்டென்ன, நலங்கென்ன, ஊஞ்சலென்ன, நகர்த்திவிட்டாயே!"

ருக்மணி.—ஆமாம், ஏதோ பொன் வைக்கும் இடத்தில் பூவைப்பதுபோலப் பாவனையாகக்காட்டிக் கூட்டினதன்றி அதிகமாக என்னசெய்துவிட்டேன்? குருவிக்குத்தகுந்த ராமசரம்! ஏதோ என் சக்தியாநுசாரம் செய்தேன். கல்யாணம் என்கிற பேரேயொழியக் கல்யாணத்துக்குத் தக்கபடி ஒன்றும் செய்யவில்லை. விளையாட்டுக் கல்யாணம்தானே. சம்பந்திப்போர்கள் குற்றஞ் சொல்லுவார்கள் என்கிற பயமில்லையே.

தாத்தா.—எனப்படிச் சொல்லுகிறாய்? இனி வேண்டுமென்று செய்கிற மெய்க் கல்யாணத்துக்குமாத்திரம் இதைவிடச் செய்வதென்ன இருக்கிறது? கல்யாணமென்பது வந்தபேர் போனபேர் எல்லாரையும் வளைத்து நாலுநாளு மிராப்பகல் நாற்றமெடுக்கச்சோற்றைக்கொட்டுவதுதானா? நமக்கு வேண்டிய பந்துமித்திரர்களோடு உண்டு களித்து உறவாடி உகந்திருப்பதுதான் கல்யாணத்துக்கு லக்ஷணம். நம்முடைய கல்யாணங்களில் 'ஆற்றுத்தெய்வமில்லை, அரங்கத்துத் தெய்வமில்லை, சோற்றுத்தெய்வமே தெய்வம்' என்று, ஆடலா பாடலா வேடிக்கையா விநோதமா ஒன்றையும் காணேன். சோற்றுப் பூசையே பூசை; சோற்றுச்செலவில்தான் முக்கால்வாசியும் செல்லுகிறது.

ருக்மணி.—சாப்பாடில்லாமல்போனால் கல்யாணத்தில் கொட்டுச்சத்தம் கேட்டு வயிறு நிறையுமா? கூத்தாடி வேஷத்தைப் பார்த்துப் பசியாறுமா? ஏழைபரதேசிகளுக்கு உண்டு தெவுட்டும்படிக் கல்யாணத்தைச் சாக்கிட்டு அன்னதானம்செய்தல் விசேஷம்தான். ஆனாலொன்று; அவரவர் சத்திக்குத் தக்கபடிச் செய்ய வேண்டும். விஷயமில்லாமல் ஐயாயிரம் பதினாயிரம் என்று செலவு செய்ய வல்ல தனிகர்கள் தங்கள் பணத்தை ஆழவெட்டித் தாழப்புதைத்துவிட்டு பிச்சைக்கார வேஷம் போட்டாலும் நன்றாயிராது. கையிலில்லாதவர்கள் வீண் கௌரவம் பாவித்து ஆஸ்தியை விற்றுக் கடனை வாங்கித் தங்கள் நிலைமைக்கு மிஞ்சித் தோரணைச் செலவு பண்ணுதலோ அதிலும் கேடு. எல்லாவற்றிற்கும் ஒரு சீருண்டு, அதின்படிச்செய்தால்தான் அழகாயிருக்கும். குறளன் கோபுரவாயில் தலையில் இடிக்குமோ வென்று குனிந்து செல்லுதல்போல, அபரிமிதமாகக் கொட்டிக்கிடக்கும் தனவந்தர்கள் செலவழிக்க அஞ்சிச் சிக்கெனப்பிடித்தல் சிரிப்புக்கிடமாகும். முடவன் கொம்புத்தேனுக்காசைப்பட்டு எம்பிவிழுந்து இடுப்பொடித்துக்கொள்வதுபோல ஏழைகளாயிருப்பவர் மிதமிஞ்சின செலவுசெய்து ஏழைமையைப் பெருக்கிக்கொள்ளுதல் மிகவும் பரிதாபமாகும்.



தாத்தா.—நீ சொல்வது நியாயம்தான். ஏழைகளாயிருப்பவர் தம் நிலைக்கு மிஞ்சிச் செலவு செய்தல் தகாதென்றுதான் நானும் சொல்லவந்தேன். பணக்காரர்கள் செலவுசெய்வதில் எனக்கோராக்ஷேபனையுமில்லை. நிற்க, வடதேசத்தில் ராஜபுத்திரர்களுக்குள்ளே எளியவர்கள் கல்லியாணம் முதலிய சடங்குகளில் மிதமிஞ்சின செலவுசெய்து வறுமையடைதலைத் தவிர்க்கும்பொருட்டு அவர் தங்களுக்குள் சில நிபந்தனைகள்செய்துகொண்டிருக்கிறார்களாமே. அப்படி நமக்குள்ளேயும் சிற்சில கட்டுப்பாடுகள் செய்துகொண்டால் எவ்வளவோ நலமாயிருக்குமே?

ருக்மணி.—இன்னொரு சங்கதிகூட நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஏதோ ஓரூரில் (இன்ன ஊரென்று ஞாபகமில்லை) சாப்பாட்டுச் செலவென்பது இல்லவேயில்லையாம்! கல்லியாணமென்றால் ஊராரெல்லாரும் 'மீட்டிங்' கூடுவதுபோல ஒரு கட்டிடத்தில் கூடித் தம்பதிகளை வரவழைத்து விதிப்படி விவாகத்தை நடத்தி வதூவரர்களை ஆசீர்வதித்துப் போய்விடுவார்களாம். சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலிய சில்லரைச் செலவுகளைக்கூடக் கிராம சமுதாயத்திலிருந்து எடுத்துச் செலவு செய்வது வழக்கமாம். இந்த ஏற்பாடு அதிலும் மிகவும் சிலாக்கியமாக எனக்குப்படுகிறது. ஏழை ஜனங்களின் உபயோகார்த்தமாக கிராமசமுதாயத்தில் நிதியொன்று ஏற்படுத்திச் செலவுகளை நடப்பித்தால் மிகவும் நன்றாயிருக்கும். இத்தனை வரும்படிக்கு மேற்பட்டவர் தங்கள் வீட்டில் கல்யாணம் நடத்

தும்போதெல்லாம் மேற்படி சமுதாய நிதிக்கு இவ்வளவு தொகை சம்பாவனையாகக் கொடுப்பதென்றும், இத்தனைக்குக் குறைந்த வரும்படியுள்ளவர்கள் மானம் பாவித்து மதியோசம போகாமல் அச்சமுதாய நிதியின் உபகாரத்தைப் பெற்றுத் தம்சடங்குகளை நிறைவேற்றிக் கொள்ளல்வேண்டும் என்றும், அதை மீறிச் செலவு செய்யக்கூடாதென்றும், சில நிபந்தனைகள் செய்துகொண்டால் மிகவும் நலமாயிருக்கும். ஆனால் லோகத்தில் டம்பாசாரமும் அந்தஸ்துக்கு மிஞ்சின அங்கங்களைத்தேடுதலும் இவையிரண்டு முள்ளளவரையில் இவ்விதமான நிபந்தனைகளாற் பயனில்லை. நீரும் நானும் யோசித்து இக்காரியம் ஆகப்போகிறதா? கோழிகூவி விடியவில்லையாம்; கோட்டான் கூவியா விடியப்போகிறது? நம் ஆசாரங்களைச் சீர்திருத்தும் பொருட்டு ஜனாசாரச்சீர்திருத்தச் சங்கத்தார் முதலானோர்கள் எலிபிடிக்க மலைகெல்லுவதுபோல் எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்கிறார்கள். என்ன செய்தும் அவர்கள் ஏற்படுத்திய ஸ்திரமான சீர்திருத்தம் ஒன்றையும் காணோம்.

தாத்தா.—வருஷாவருஷம் ஏதோ ஜனாசாரச் சீர்திருத்தச் சபையென்று அங்கங்கே நகரங்களில் மகாசபைகூடிப் பேசுகிறார்களாமே. அதைப்பற்றி நீ யாதேனும் கேள்விப்பட்டதுண்டோ?

ருக்மணி.—ஆகா. கேட்டதுண்டு. ஆனால், இவர்களெல்லாம் விதவாவிவாகம், சமுத்திரப்பிரயாணம்; வர்ணசங்கரம் முதலான பகுஜனப்ரயோசனமல்லாதனவும், சாஸ்திர சம்மதமானவென்றும் அல்லாதவென்றும் விவாதத்தில் நிற்பனவுமான சிலவிஷயங்களை முக்கியமாகக்கொண்டாடுதலினால், இவர்கள் பிரயத்தினம் கருங்கல்லில் அறைந்த பசுமரக்குற்றிபோல் பயன்படாமல் போகின்றது. இவைகளை முற்றிலும் தள்ளி, ஸ்திரீ வித்யாபிவிர்த்தி, பாலிகாவிவாகங்களை மறுத்தல், பிராமணர் முதலிய ஜாதிகளில் ஒருவரோடொருவர்கலந்து போஜனம் செய்தற்குரிய உட்பிரிவுகளில் பரஸ்பர விவாகாதி சம்பந்தங்கள் ஏற்படுத்தல், முதலிய வெகுஜனசம்மதமான, அத்யாவசியமான சீர்திருத்தங்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவைகளைச் சாதித்தற்குரிய சாதனங்களை உபயோகப்படுத்தினால் இவர்கள் முயற்சி நிறைவேற இடமுண்டு. லோகானுவாதத்தை அலக்ஷியம்செய்து திரஸ்கரித்து ஜனாசாரங்களைச் சீர்திருத்தவெண்ணுதல் இருப்புக்குண்டுகளை இடுப்பில் கட்டிக்கொண்டு இருகரையும் புரண்டோடும் போற்றை நீந்திக் கடக்க வெண்ணுதல்போலாகுமன்றோ?

தாத்தா.—இவ்வாறு மகாசபைகள்கூடி அது செய்யத்தக்கது, இது செய்யத்தக்கது, இது கொள்ளத்தக்கது, அது தள்ளத்தக்கது, என்று வெகு சாதுர்யமாகப் பிரசங்கம்செய்து தீர்மானம் செய்கின்ற இவர்கள் பிறரைத் தம் வழிப்படுத்தாமல் போனால் போகிறது; தாம் நலமென்று கண்டவற்றைத் தாமேயாயினும் அனுஷ்டிக்கலாகாதோ? இவர் தம் கொள்கைகளைத் தாமே அவலம்பிக்காதவரையில் இவர்கள் பேச்சுமுழுதும் விருதா கண்டக்ஷேபம் ஆகுமேயன்றி அவற்றால் பயனுண்டாகுமா? இது கைகண்ட மருந்து, கொடிய வியாதிகளையெல்லாமபோக்கும் என்று பிறருக்குக் கருணையோடு கொடுக்கவரும் வைத்தியன் ஒருவன் தானே தின்று தன் நோய்களை நீக்கிக்கொண்டாலன்றோ மற்றவர்க்கு நம்பிக்கை கொடுக்கும்?

ருக்மணி.—நீர் சொல்வது உண்மைதான். ஆயினும் இவ்விஷயத்தில் பாடுபடுகின்ற



தேசாபிமானிகளாகிய சத்புருஷர்களைத் தானே சொல்லக் குற்றமில்லை. ஜனசங்கமென்பது ஒரு மகா வலைபோலும். வலையிற் கயிறுகள் ஒன்றோடொன்று பிரிக்க முடியாமற் பிணைந்திருத்தலின், ஒரு கயிற்றை இழுத்தால் மற்றெல்லாவற்றையும் சேர்த்திழுத்துக்கொண்டு வருமேயன்றி ஒன்று மாத்திரம் வேறாக விடுபடுமா? அதுபோல் இவர்கள் தங்கள் படிப்பாலும் செய்கையினாலும் எவ்வளவு உயர்ந்த நிலைமையை அடைந்திருப்பினும் தமது உற்றார் பெற்றார் ஊரார் இனத்தார் முதலான ஆயிரம்பேர்களின் கட்டில் நின்று தம்மை விடுவித்துக்கொள்ள இவர்களாலாகுமா? சர்வசங்க பரித்தியாகம்செய்த சந்நியாசிகளுக்கும் அது சாத்தியமன்றோ. ஒரு குடும்பத்தில் பத்துப் பேர்கள் இருந்தால் அவர்கள் எல்லாரும் ஒரு மனப்பட்டு ஒத்துநின்று ஒருகாரியத்தைச் செய்தால் அது நிறைவேறுமேயன்றி ஒருவரோடொருவர் வேறுபட்டு முரணிக்கொண்டால் அக்காரியம் நடந்தேறுமா? அன்றியும் சபையில் வந்து "கேளுங்கள் கேளுங்கள்" "சபாஸ் சபாஸ்" என்று கைகொட்டி ஆர்ப்பரிப்பவரெல்லாருந்தானே அக்கொள்கைகளை உறுதியாகக் கொண்டவரென்றெண்ண வேண்டாம். ஒருவேளை அக்கொள்கைகள் கேட்குந்தருணத்தில் அவர்களுக்கு உவப்பாயிருப்பினும், சபையைவிட்டு அப்புறம் பெயர்ந்த மாத்திரத்தில் அவற்றை முற்றிலும் மறந்துவிடுவார்கள். இவர்கள் வைராக்கியம் எல்லாம் ஸ்மசான வைராக்கியம், புராணவைராக்கியம், பிரசூவவைராக்கியம், என்று கேட்டதில்லையா? அவற்றைப்போலத்தான்! நிற்க. கதையைவாசி சுப்பு.

சுப்பலக்ஷ்மி (வாசிக்கிறாள்).—இவ்வாறு தேவர்கள் 'கிட்டாதாயின் வெட்டெனமற' என்பதை உணராமல் தமயந்தியின் மணத்தைப் பெறும்பொருட்டுப் பற்பல உபாயங்களைச் செய்துகொண்டிருக்க, இதனிடையில், சுயம்வரத்துக்காக சுவர்க்கமத்திய பாதாளமென்னும் மூவுலகத்திலுமுள்ள சமஸ்தமான அரசர்களும் ரதகஜதுரகபதாதிகளாகிய சேனைகளோடும் பரிவாரங்களோடும் அவ்விதர்ப்பராஜதானியாகிய குண்டினபுரம் தாங்கமுடியாமல் வந்து நெரிந்தார்கள். வீதிகளிலும் வெளியிடங்களிலும் எங்கும் எள்ளுப்போட இடமில்லை. தேவர்கள் மனிதர்மேலும் மனிதர்கள் தேவர்கள்மேலும் உராய்ந்துகொண்டு போவதால் இவரது மார்பிற் சாந்தம் அவரது மார்பிலும், அவரது கற்பகமாலையின் பரிமளம் இவரது மார்பிலும் கமழ்ந்தன. புரநகரெங்கும், யானைகளின் மதஜலத்தாலும் குதிரைகளின் வாய் நுரையாலும் புருஷர்களின் களபச்சேற்றாலும் நனைந்து சேறுபட்டன. விஞ்சையர் இயக்கர் முதலான தேவகணங்களின் பைம்பொன் விமானங்களும் அரசர்களது மணிமயமான தேர்களும் ஒன்றோடொன்று பிரித்தறியக்கூடாமல் மயங்கும்படி நெருங்கி நின்றன. யானைகளின் பிளிறொலியும் தேர்களின் அதிகோஷையும் முரசமுதலிய வாத்தியகோஷங்களும் காதுகள் செவிடுபடும்படி சதா ஒலித்துக்கொண்டேயிருந்தன. ஆகாயத்திலெங்கும் பொற்கொடிகள் தெய்வமகளிர் இறங்கிவருதல்போல அசைந்தாடிக்கொண்டிருந்தன. மன்னவர்களது வெண்கொற்றக்குடைகள் பல்லாயிரம் பூரணசந்திரர் பகலில் உதயமானதுபோல் இனிது விளங்கின. நானா தேசத்தவர்களும் ஒருவரையொருவர் உணரும்பொருட்டு அனைவர்க்கும் பொதுமொழியாகிய சம்ஸ்கிருதபாஷையில் பேசிக்கொள்வாராயினர்.

இவ்வாறு, அரசர்கள் முதலான அனைவரும் வந்துசேரத் தேவர்கள் நால்வரும் தமயந்தியை இனிப் பெறுதற்கு வேறுவழியில்லை. அவள் நளனுக்கேயன்றி வேறொருவர்க்கும் மாலை சூட்டாளாதலின் அந்நளமஹாராஜாவின் உருவைத்தரித்து அவளை வஞ்சனையால்

ஏமாற்றிப்பெறுதலே உபாயமென்று நிச்சயித்து அவ்வாறே அவ்வுருவைத்தாங்கி நகருட்பிரவேசித்தனர். விதர்ப்பராஜனும் நால்வகைச்சேனைசூழத் தன் பந்துவர்க்கங்களோடும் சென்று அவ்வரசர்கள் அனைவரையும் எதிர்கொண்டழைத்துவந்து அவரவர் பெருமைக்குத்தக்கபடி வரிசையில் வழுவாமல் உபசரித்துச் சிறப்புச்செய்தான்.

சுயம்வரதினத்தன்று, அக்குண்டினபுரத்தார் தத்தம் இல்லங்கள்தோறும் செய்த அலங்காரங்களையும் அந்நகர் அன்று கொண்ட கோலத்தையும் விவரித்துச் சொல்லுதல் எளிதோ? வாயில்கள்தோறும் கமுகும் கன்னலும் கதலியும் நட்டு மணிக்கொடி கட்டி மலர்மாலை நாற்றுவார்கள். வீடுகள்தோறும் வெண்சுதைதீற்றிச் சந்தனத்தால் மெழுகிப் பொற்குடம்வைத்துப் பாலிகை யமைத்து மணிப்பொடியிறைத்து மங்கலதீபங்கள் ஏற்றுவார்கள். பெண்கள் வாரிமுடித்து மலர்த்தொடைசூடி கண்களுக்கு அஞ்சனமெழுதி பூஷணம்தரித்துப பொற்றுகில் உடுத்து அலங்கரித்துக்கொள்வார்கள். யானைகள் குதிரைகள் இரதங்கள் சிவிகைகள் முதலிய வாகனங்களை அலங்கரித்து அவற்றிலேறிச் செல்வார்கள். முல்லையரும்புபோன்ற அன்னத்தை வெள்ளிமலைபோலக் குவித்து கறிவருக்கங்களோடு முக்கனியும் சர்க்கரையும் கூட்டிப் பாலும் நெய்யும பெருக்கெடுத்தோட இரவலர்களுக்கு இன்னமுது படைப்பார்கள். அச்சுயம்வர மகோற்சவத்தைக் காணவந்தவர்களில் புருஷர் மிகுதியென்றும் பெண்கள் மிகுதியென்றும் தேவர்கள் மிகுதியென்றும் மனிதர்கள் மிகுதியென்றும், அந்தணர் மிகுதியென்றும் அரசர் மிகுதியென்றும யாவர் அளவிட்டுச் சொல்லவல்லவர்? இவ்வாறு, நகரமெங்கும் அலங்கரித்து நானாஜனங்களும் வந்து நெருங்கினார்கள். சுயம்வரத்துக்கு நியமித்த சுபலக்கினமும் வந்தடுத்தது. உடனே மணிமயமாக இழைத்து விசாலமாகச்சமைத்த சுயம்வரமண்டபத்துக்கு அரசன் கட்டளையால் மன்னவர் அனைவரும்வந்து தத்தமக்கேற்படுத்திய ஆசனங்களில் வீற்றிருந்தனர். நளமஹாராஜாவும் பொன்முடிகவித்துப் பூமாலைசூடி சர்வாலங்கிருதபூஷணனாகிக் கால்களில் வீரகண்டையணிந்து அரையில் உடைவாள்கட்டி கையில் கூர்வேலேந்தி சூரியன்போலச் சொலிக்கத் தேர்மேற்கொண்டு வெண்குடை நிழற்றச் சாமரையிரட்ட ஆனைமுதலிய சேனைகள் நெருங்க மாகதரேத்த மன்னவர்சூழ வாத்தியங்கள்முழங்க மகாவைபவத்தோடும் இந்திரகுமாரனைப்போலக் கண்டோர்மனமும் கண்களும்களிக்க எழுந்தருளி அச்சுயம்வரமண்டபத்திற் பிரவேசித்தனன். அவன் அரசர்கள் நெருங்கிய அச்சபையில் வந்து சேர்ந்ததும் அங்கிருந்த அழகிற்சிறந்த அரசர்களெல்லாம் அவனைக்கண்டமாத்திரத்தில் சந்திரனைக்கண்ட நக்ஷத்திரங்கள்போலானார்கள். அவனது முகத்தைப்பார்த்த அவ்வரசர் முகங்களெல்லாம் முழுமதிகண்ட முளரிகள்போல வாட்டமுற்றன. அவன் பேரழகைக்கண்டு அங்கிருந்த தேவர்களெல்லாம் பொறாமைகொண்டு "ஆயிரம் அழகிருந்துமென்ன இவன் மண்ணிற்பிறந்த மானிடன்தானே" யென்றார்கள். அநேக அரசர்கள் அவனை எதிரிட்டுப்பார்க்கவும் நாணமுற்றவராய்க் கடைக்கண்ணாலே குனிந்த வண்ணமே பார்த்தார்கள். இவ்வாறு அங்குள்ளாரெல்லோரும் பொறாமையும் நாணமும் கொள்ளச் சென்று தனக்கிட்ட ஆசனத்தில் ஆண்சிங்கம்போல வீற்றிருந்தனன். இந்திரன் முதலிய நால்வரும்கூட அவனுருவைத்தாங்கி அவன் பக்கத்தில் வந்திருந்தனர்.

சிவகாமி.—அம்மா! இத்தேவர்களைப்போல சாகசக்காரர் நான் பார்த்ததில்லை. தமயந்திக்காக என்னெல்லாம் கிருத்திரமங்கள் செய்கிறார்கள் கவிசொல்லியிருப்பது வாஸ்தவமானால் இவர்களைப்போலப் புரட்டர் இனி யுலகில் இல்லையென்றே சொல்லவேண்டும். நளனைப்போலப் பொய்யுருக்கொண்டு தமயந்தியை ஏமாற்றிக் கபடமாகக்கொள்ள நினைத்த இவர்கள் எதுதான் செய்யத் துணியார்கள்? தற்காலத்தில் ஆள்மாறாட்டம்செய்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் மயக்கடித்து ஊரார் சொத்துக்குப் பேயாய்ப்பறக்கும் துஷ்டர்கள்கூட இவர்களுக்குத் தாழ்வில்லையே.



தாயார்.—இதெல்லாம் வேடிக்கையாகக் கவிகள் கற்பித்துச்சொல்லியதேயன்றி வாஸ்தவமாகக் கொள்ளத்தக்கதன்று. ஆனால், நம்மவர்சொல்லும் கற்பனைகளும் கதைகளும், செய்யும் காரியங்களும், கொள்ளும் கொள்கைகளும், அன்னியமதத்தாருக்கு ஆக்ஷேபனைக்கிடமாயிருப்பதன்றி நமக்கும் ஓரோர்கால் திகைப்பைத் தருவனவாயிருக்கின்றன! இக்கதைகளும் கற்பனைகளும் இந்திரன் முதலிய தேவர்களைமட்டும் குறித்து அம்மட்டோடே நிற்பதில்லை. நாம் முதற்றேவர் என்றுகொண்டு வழிபடும் சிவபெருமான், திருமால், விநாயகர் முருகக்கடவுள் முதலானோர் திறத்திற்கூட ஆக்ஷேபங்களுக்கிடமான சில ஐதிகங்களையும் துர்வழக்கங்களையும் கொண்டு அவர்களுடைய அருட்செய்கைகளை மருட்செய்கைகளாக மாற்றித் தத்தமக்குரிய அக்ஞானம்பற்றி யுண்டாகும் ஆசாபாசங்களையும் காமாதி துர்க்குணங்களையும் அத்தேவர்களுக்கு ஏற்றி அருவருப்பான சில அநுஷ்டானங்களையும் அவரது ஆலயங்களில் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவ்விதமான துராசாரங்களும் துரநுஷ்டானங்களும் முதல்முதல் எவ்வாறு ஏற்பட்டனவோ? ஒருவேளை உலலாசபுருஷராய் உலகவிஷயங்களில் மனங்கொண்ட யாரேனும் கொடிய அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தால் ஏற்பட்டுச் சிறிதுகாலம் பகுஜனங்களுக்கு அபிஷ்டமாகவே யிருந்திருக்கலாம். ஆயினும்,

"தீயொழுக்கினைச்சிந்தையில்வெறுத்திடக்கொடிதாம்
ஆயதன்னுருக்காண்டலேயமைகினும் அதன்றன்
பேயின்வெம்முகம்பழகலின்பொறுத்தனைதப்பின்னர்
சாயுமுட் கனிந்திறுதியிற்றழுவுகின்றனமால்."

என்று ஒரு அங்கிலேய மகாகவி சொல்லியிருக்கிறபடி கெட்டவழக்கங்களை முதல்முதல் வெறுப்பினும், காணக்காண அவற்றின் அருவருப்புநீங்கி அவற்றை இனிமையாகக்கொண்டு பின்பு அவற்றை விட்டுத்தள்ளத் துணிவில்லாமற் பற்றுதல் மனிதரது இயற்கையாதலின் அத்துர்வழக்கங்களே நாளாவர்த்தியில் நல்வழக்கங்களாகக் கொள்ளப்படுகின்றன. அவற்றில் ஒன்றைமட்டும் இங்கு விவரிக்கின்றேன். நம்மாலயங்களில் நியதமாக ஏற்பட்டிருக்கும் தாசி நாட்டியமும் நட்டுவக்கொட்டும் ஆக்ஷேபனைக்கு இடமானவைகளல்லவா? அவற்றை ஏன் நாம் விட்டொழிக்கக்கூடாது?

தாத்தா.—ஆனால் கோயில்களிலும் உத்சவாதிகளிலும் ஆடல்பாடல் வேண்டாமோ? மேளதாளமில்லாத கோயிற்பூசையாவது உத்சவங்களாவது சிறக்குமோ? கானப்பிரியர், கானலோலர், நடனவினோதர் என்று கடவுளுக்கு நாமங்களும் ஏற்பட்டிருக்கின்றனவே.

ருக்மணி.—நீர் சொல்வது உண்மையே. கடவுள் கானப்பிரியர், நடனப்பிரியர் என்பதிற் சந்தேகமில்லை. ஆயினும் அன்பர்கள் மனமுருகி மெய்புளகித்துக் கண்பனித்துப் பாடித்துதிக்கும் பாடல்களும் அவர்கள் மெய்ம்மறந்து ஆடிக்களிக்கும் தாண்டவங்களுமே அவர்க்குப் பிரியமானவை. இவ்வுண்மையறியாமல் ஆலயங்கள்தோறும் ஐயோ! ஆசாரவீனர்களாய் அற்ப புத்தியுள்ளவர்களாய் வியபசாரம் முதலிய கொடிய துராசாரங்களையுடையவர்களாய் நட்டுவர்களையும் கெட்ட நடத்தையுடையாரான தேவடியாள் என்று பொய்ப்பெயர்கொண்ட மைப்படு கண்ணாராகிய வேசையர்களையும் அங்கு

ஆடல்பாடல்களுக்கு நியமித்திருப்பதுமன்றி, இன்னம் சுவாமி தேவடியாள் வீட்டிற்குப்போகிறதென்றும் மற்றும் தாறுமாறான அசப்பியமான சில ஐதிகங்களையும் ஏற்படுத்தி ஆலயப்பொருள்களையெல்லாம் கூத்திக்கும் குரங்காட்டிக்குமிட்டு ஒட்டாஞ்சிற்போல வாரிவாரி இறைக்கின்றார்களே! காலையும் மாலையும் பூஜைகள் நடக்கும்போதெல்லாம் வேதகோஷமும், கண்டாநாதமும், வீணை மிருதங்கம் முதலிய கருவிகள் சேரப்பாடும் பகவத் பக்தராகிய பாகவதரது பஜனசங்கீர்த்தனங்களும் ஈசன் காதுகளுக்கிதமாயிராவோ? எச்சில்வாய்வைத்தூதும் நட்டுவன் குழலும், இளைஞரை மயக்கும் குணமிலா வேசையர் கானமும் தான் கடவுளுக்கு இனிமையானவைகளோ? நாம் கோயிலுக்குச்சென்றால் அங்கு திவ்ய சந்நிதியைத்தவிர நமக்கு பக்தி வைராக்கியங்களையும் சித்த சுத்தியையும் உண்டுபண்ணத்தக்கவை என்னுள்ளன? குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்கொள்வதைப்போலக் கோயிலுக்குச் சென்று மனோசஞ்சலத்தையும் மருட்சியையுமன்றோ அநேகர் பெறுகிறார்கள்? நம்முடைய கோயில்களில் மதப்பிரசங்கமா, உபநியாசமா, புராணபடனமா, தேவதா பஜனையா ஏதாவதொன்றுண்டா? சுவாமி தரிசனம் ஒன்று தவிர வேறொன்றையும் காணோம். இவ்வொன்றுக்குக்கூட இடையூறாக எத்தனை விகாதங்கள் உள்ளன?

தாத்தா.--நீ சொல்வதெல்லாம் உண்மைதான்; நமது ஜாதி மதாசாரங்களில் எவ்வளவோ சீர்திருத்தங்களுக்கிடமிருக்கின்றது.

ருக்மணி.—ஆதலால், நம்முடைய புராணாதி நூல்களிலே அநேக கதைகளும் கற்பனைகளும் கவிகளின் யுக்திக்கும் படிப்போர் அபிப்பிராயத்துக்கும் உருசைக்கும் தக்கபடியுள்ளன. அவற்றுள் கொள்ளத்தக்கவைகளுமுண்டு தள்ளத்தக்கவைகளுமுண்டு. படிப்போர்கள் நீரைத்தள்ளிப் பாலைக்குடிக்கும் அன்னபக்ஷியைப்போலத தள்ளத்தக்கவைகளைத் தள்ளிக் கொள்ளத்தக்கவைகளைக் கொள்ளவேண்டும். ஒவ்வொன்றையும் உண்மையாகக்கொண்டு ஆசரித்தே தீரவேண்டுமென்பது நூல்களின் கொள்கையுமன்று; மதத்தின் சித்தாந்தமுமன்று. மேலேபடி சுப்பு.

சுப்பு (படிக்கிறாள்).—இவ்வாறு அரசர்கள் பலரும் வந்து அவரவர் தானத்தில் வீற்றிருந்தபோது, அச்சுயம்வரமண்டபம் மூவுலகத்தையும் உள்ளடக்கிய மாயன் திருவயிறுபோல விளங்கியது. அதுகண்டு விதர்ப்பராஜன் மனக்களிப்புற்றுத் தமயந்தியைக் கூட்டிவருகவென்று தாதிமார்களுக்கு உத்தரவுசெய்ய, அவர்களும் விரைந்து சென்று நற்றாயாகிய காஞ்சனமாலையைச் சார்ந்து அரசன் உத்தரவைத் தெரிவித்தனர். உடனே தமயந்தியை ஒளிவிளங்குகின்ற மணியைக் கழுவி விளக்குதல்போலத் துவர்விரைமுதலிய மாசுநீக்கும் சுகந்தவஸ்துக்களால் தேய்த்துக் கங்காதீர்த்தத்தால் ஸ்நானஞ்செய்வித்துக், கூந்தல் உலரப் பூம்புகையூட்டி மயிர்முடித்து முல்லைமாலைகளைச்சூட்டி யலங்கரித்து, வாள்விழிகளுக்கு அஞ்சனந்தீட்டி, மதிநுதலுக்குத் திலதம் அணிந்து, சந்தனக்குழம்பால் மார்பலங்கரித்து, மணிமயமான அநேக ஆபரணங்களைப் பூட்டிக் கேசாதிபாதம் பல அலங்காரங்களையும் செய்தார். பின்பு பந்து, அம்மானை, பொற்பதுமை பைங்கிளி வீணைமுதலிய பொருள்களைக்கொண்டு தாதிமார்கள் உடன்வரவும், மணமகனுக்குச் சூட்டுதற்குரிய மலர்மாலையைக்கொண்டு சிலர் மருங்கு செல்லவும், சிலர் கவரிவீசவும், சிலர் அடைப்பைதாங்கவும், சிலர் சிலையும் தூணியும் வாளும் கேடகமும் கொண்டு முன்னேசெல்லவும், பழமையாகிய உயர்ந்த குலத்திற்பிறந்து ஐம்புலன்களையும் அவ்வவற்றின் நெறியிற் புறஞ்செல்லாது காத்துக் கல்வியிற்கரைகடந்த விருத்தர்களும், கவசம்பூண்ட பரிசனர்களும் கையிற் பிரம்பு



கொண்ட வேத்திரக்காரரும் 'நில்லுங்கள் நில்லுங்கள்' என்று அரசர் கூட்டத்தின் நெருக்கம் ஒதுக்கித்தொடர்ந்து செல்லவும், சந்தனத்தால் மெழுகி மென்துகில்விரித்து அனிச்சப்பூக்களைப் பரப்பிய அழகிய வீதிவழியே தமயந்தியை மெல்ல நடத்திச், சங்கம் முரசு முதலிய பலவாத்தியமும் முழங்கச் சுயம்வர மண்டபத்துக்குக் கூட்டிவந்தனர். வந்த கன்னிகை தன்னிருகரங்களையும் கூப்பித் தன் பிதாவைத் தொழுது நிற்க, அரசன் அவளை மகிழ்ந்து நோக்கி இம்மகாசமுத்திரம்போன்ற மன்னவர்களை இன்னார் இனையாரென்று மங்கைக்கு ஆராய்ந்துரைக்க வல்லவர் யாவரென்று தன் இஷ்டதெய்வமாகிய ஸ்ரீமந்நாராயணனைத் தியானித்தனன். அப்போது பொன்மலையின் மீது பசுங்கொண்டல் கண்படல்போல ஆயிரம் பணாமுடிச்சேடன்மேல் அறிதுயிலமர்ந்திருக்கும் அக்கடவுள், தன் முன்னே தொழுது நின்ற பிரமதேவரை நோக்கி "எம்பக்தனாகிய இவ்வரசன் வேண்டுகோளை நிரப்புதற்குக் கலைமகளையன்றி வல்லவர் யாவர்?" என்ன, நான்முகக்கடவுள் அக்குறிப்பையுணர்ந்து தம் காதலியாகிய வாணியை நோக்கி "நீ சென்று அரசர்வரலாற்றைத் தமயந்திக்கு உணர்த்துவாயாக" என்று கட்டளையிட்டருளினார். சாரதர்தேவியும் அவ்வாக்கினைச் சிரமேற்கொண்டு பூவுலகுக்கெழுந்தருளி அப்பேரவையில் உள்ள அரசரின் குலமுறையையும் மேன்மையையும் தமயந்திக்கெடுத்துக் கூறத்தொடங்கினாள். "ஓ உவமையில்லா அழகுபெற்ற தமயந்தியே, இங்கு முதல்முதல் வீற்றிருக்கும் இவன் சூரியதேவன்; இவன் சந்திரன்; இவர்கள் கந்தர்வராஜர்கள்; இவர்கள் வித்யாதரவேந்தர்; இவன் நளகூபரன்; அவன் ஆதிசேடன்; இவன் புஷ்கரத்தீவுக்கரசன்; இவர்கள் முறையே சாகம், கிரௌஞ்சம், சால்மலி, இலவம், கோமேதகம், குசையென்னும் தீவுகளுக்கரசர்கள். இனிமேல் இந்நாவலந்தீவிலுள்ள அரசர்களைச் சொல்லுவேன் கேள். ஏ தமயந்தி, இங்கிருந்த அரசன் அவந்திராஜன், இவன் கௌடதேசாதிபதி, இவன் எதுகுலமன்னன் இவன் கங்கைநாட்டரசன், இவன் காம்பிலிவேந்தன், இவன் கலிங்கராஜன், இவன் காசிவேந்தன், இவன் மகதர்பெருமான், இவன் குருநாடர் கோமான், இவன் பல்லவர் பார்த்திபன், இவன் கேகயராஜன், இவன் மத்திராதிபதி, இவன் வங்கபூபதி, இவன் பாஞ்சாலராஜன், இவன் மிதிலைராஜன், இவன் மாளவராஜன், இவன் சாளுவராஜன், இவன் கோசலராஜன், இவன் குடகுமன்னன், இவன் பொன்னிநாடன், இவன் கன்னிநாடன்." என்று அரசர்களெல்லோரையும் வரிசையாக விவரித்துக்கொண்டு வந்து கடைசியில் நளனையும் அவன்போல மாறுவேடம் கொண்டிருந்த தேவர்கள் நால்வரையும் விவரிக்கலுற்றாள். "ஓ தமயந்தி இவன் உன்பொருட்டு நளனுருக்கொண்ட இந்திரன், இவன் அவ்வுருக்கொண்ட அக்கினிதேவன், இவன் இயமன், இவன் வருணன்," என்று வெளியிட்டுச் சொல்லாவிடினும் அவளுக்கு விளங்கும்படிக் குறிப்பாயுணர்த்திக் கடைசியில் நளனண்டை வந்ததும் "ஓ நங்காய் இவன்தான் நீ நெடுநாளாகக் காதலித்த நளமகாராஜன். இவனுக்கே மாலையிட்டு மணஞ்செய்து நீங்களிருவரும் மதனும்ரதியும்போலவும், மாலும் லக்ஷ்மியும்போலவும், ஈசனும்உமையும்போலவும் சுகித்து வாழ்வீராக." என்று அருளோடும் ஆசிர்வதித்துக் கலைமகள் தன்னிருப்பிடம் சென்றனள். தமயந்தியும் மனக்குறைநீங்கிச் சந்தோஷித்து மணமாலையையெடுத்து அரசர்கள் எல்லோரும் கண்டு பொறாமைகொள்ள நளமஹாராஜனது மலைபோலும் தோள்மேல் மணியருவிபோல விளங்கும்படிச்சூட்டி அவன் மலரடிகளில் வணங்கி நின்றனள். நளமகாராஜனும் பிடியைத்தழுவிய மதகளிறுபோலப் பெருவகை பூத்தனன். உடனே தாய்மாரும் தேவிமாரும் தமயந்தியைக் கூட்டிச்சென்று ஒரு பளிங்குமாடத்தில் இருத்திப் பொற்றிரையை வீழ்த்தினார்கள். மற்ற அரசர் முகங்களெல்லாம் நளன்மார்பில் மாலையைக்கண்டு நாணங்

வைகளாக விருத்தலினால், பதார்த்தம் நாசமடைவதால் வரும் நஷ்டம் இவ்வளவு அவ்வளவு அல்ல.

(4) பொதுவாக புத்திசாலியான வேலையாட்கள்தான் இப்போது கைவேலைகளைக் குறைத்து அல்பகாலத்தில் பகுபலன்களை விளைக்கும் பல யந்திரங்களை நுட்பமறிந்து உபயோகிக்க சக்தியுள்ளவர்களா யிருக்கிறார்கள். இக்காலத்திய ஐரோப்பியர் கைத்தொழிலில் சிறந்திருப்பதிற்கு ஒரு முக்கியமான காரணம் அவர்களது யந்திரங்களை உபயோகிக்கும் சக்திதான். முதல்முதல் யந்திரங்களை நிர்மாணம்செய்ய எவ்வளவு சக்தி வேண்டுமோ அவ்வளவு அவைகளை உபயோகிக்க வேண்டியதில்லை ஆயினும், புத்தியின் நுட்பத்தால்தான் அவைகளைச் சேர்க்கவும், பிரிக்கவும், மராமத்து முதலியன செய்யவும் வேண்டியிருக்கிறது.

இப்படி நுட்பமான யந்திரங்களைப் பிரயோகிக்கும் சக்தி ஆட்களின் சாதியைப்பற்றியதாய் பெரும்பாலும் இருக்கிறது.

இங்கிலாண்டிலும், யுனைடெட் ஸ்டேட்ஸிலும் இவைகள் அதிகமாக உபயோகமாவதற்குக் காரணம் டியூடானியரது விசேஷ சக்திதான். ஆயினும் சாஸ்திரப் பயிற்சியினால் கூடியமட்டும் இச்சக்தியை சம்பாதித்துக்கொள்ளலாம். இப்போதைய ஜப்பானியர் சுமார் 50-வருஷங்களுக்குள்ளாக அடைந்திருக்கும் சீர்மையைப் பற்றி யோசித்துப் பார்க்குங்கால் பிரயாசைப் பட்டால் இது அசாத்தியமல்லவென்று நன்றாக விளங்கும்.

வேலையாட்களின் மனோதர்மத்தைப் பற்றினதாயும் இருக்கிறது அவர்களது வேலை செய்யும் திறம். வேலையில் சொந்த பாத்யதை முதலிய விருப்பதாலும், நாளுக்குநாள் முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆசையும் பகுமானமும் இருப்பதாலும் சில ஜனங்கள் மனஸ்ஸந்துஷ்டியுடன் வேலை செய்கிறார்கள். இவர்கள் செய்யும் வேலை மிகவும் நேர்த்தியாக நடக்கும். இப்பேர்ப்பட்ட மனோதர்மத்தின் ஆவசியகத்தை அடிமைகளைக்கொண்டு வேலை நடத்துவதினால் உண்டாகும் நஷ்டத்தைக் கவனித்துப்பார்த்தால் நன்றாக விளங்கும். தகுந்த லாபம் கிடைக்கும் என்ற ஞானத்தின்மீது வேலை செய்வோனது வேலை யெங்கே, தடியடிக்குப் பயந்து கண்முன்னால் ஒன்றும் காணாவிடில் வேறொன்றுமாக நடக்கும் கடனிழவு எங்கே? மேலும், சுவாதீனத்துடன் சொந்தத்திற்கு வேலை செய்வோரிலும், எவ்வளவுக்கு எவ்வளவு லாபம் நிச்சயமாகவும் சீக்கிரம் கிடைக்கக்கூடியதாகவும் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவுதான் வேலையின்பேரில் அபிருசி யுண்டாகும். ஆகையால்தான் அற்றைக் கூலியாளிடம் வேலை வாங்குவது அவ்வளவு கஷ்டமாயிருக்கிறது.

இப்படியாக அதிக குணமுள்ள மனோதர்மத்தை சட்ட முறைகளால் உண்டாக்கலாம். அழிக்கவும் அழிக்கலாம். சுமார் 150-வருஷங்களுக்கு முன்னால் ஸ்காட்லாண்டு தேசத்துக் குடித்தனக்காரன் மிகச்சோம்பேரித்தனமுள்ளவனென்று இகழப்பட்டிருந்தான். இப்போது அவனைக்காட்டிலும் மன உறுதியிலும், வேலைப்பாட்டிலும், சுறுசுறுப்பிலும் மேலானவன் ஒருவனும் இல்லை யென்னும் வதந்தி உலகமுழுதும் பரவியிருக்கிறது. இதற்குக் காரணம், முன்னால் ஸ்காட்லாண்டில் பூமியானது குடியானவனுக்குச் சேர்ந்திருக்கவில்லை. அவன் எஜமானிடம் பூமியை குத்தகைக்கு வாங்கிப் பயிர் செய்து வந்ததில், குத்தகைச்சீட்டு அல்பகாலத்திற்கு மாத்திரம்தான் வரையப்பட்டிருந்ததினாலும், நினைத்தபோது பூமியைவிட்டு அவனைத் துரத்திவிடலாமென்ற சட்டம் இருந்ததினாலும், அங்கே குடியானவன் முன்னுக்கு வர வழியிருந்திருக்கவில்லை. இப்பொழுது அந்தச் சட்டம் யாற்றப்படவும் அவன் அபிவிருத்தி யடைந்திருக்கிறான். இப்படியே, நமது இராச்சியத்தில் பறையர் அடிமைகளாகவிருந்தவரையில் காடுகளும் வயல்களும் தகுந்த பலனைக் கொடுக்கவில்லை. இப்போது



அவர்கள் சொந்தப் பண்ணையம் பண்ண ஆரம்பிக்கவும், எவ்வளவு சீக்கிரம் முன்னுக்கு வருகிறார்கள் என்பது செங்கல்பட்டு முதலிய ஜில்லாக்களின் ஸ்திதியை நோக்குவோருக்கு விளங்கும்.

ஜி. கஸ்தூரி ஐயங்கார்.

## சம்பகமாலை

அல்லது

## இளையராஜாவின் தீர்மானம்.

### அங்கம் IV.

---

இரண்டாம் களம்.

---

இடம்: அரண்மனை மண்டபம்.

(ரீன்மலும் ஜோடாவும் பிரவேசிக்கிறார்கள்.)

**ரீன்மல்.**—புத்திரா! சமஸ்தானகாரியங்கள் எப்படி நடந்தேறுகின்றன. சம்பகமாலை உன்னுடைய பேச்சைக் கேட்கின்றாளா? சோண்டா தேசத்தைவிட்டுப் போனதைப்பற்றிக் கவலைப்படுகின்றனளா?

**ஜோடா.**—சமஸ்தானகாரியங்கள் சரியாகவே நடந்தேறுகின்றன. சம்பகமாலை எவ்விஷயத்திலும் என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்கின்றாள். என்மீது அன்பு அவளுக்கு எம்மாத்திரமும் குறையவில்லை. ஆகிலும் அவள் மனதை அறிவது வெகு கஷ்டம். அது ஆழ்ந்தது. சோண்டா தேசத்தைவிட்டுப்போனதைக்குறித்து கவலைகொள்வதாகத் தோன்றவில்லை பிதாவே!

**ரீன்.**—நல்லது! புத்திரா! உன் அபிப்பிராயத்தைத் தவறாமல் கேட்கிறாளென்று சொல்லுகின்றனையே, கெயில்வாராவினின்று ராஜதேவனை நீக்கிவிடுமாறு நீ இதுகாறும் அவளைத் தூண்டவில்லையோ?

**ஜோ.**—பலமுறை தூண்டினேன். எதைச்சொன்னாலும் கேட்கிறாள். இதைமாத்திரம் கேட்பதில்லை. யாதுகாரணமோ அறியேன்.

**ரீன்.**—(சிரித்து) அதை நீ அறியவில்லையா புத்திரா! சோண்டாவுக்கு மனவருத்தமுண்டாகுமென்றுதான் உன்பேச்சைக் கேட்கவில்லை. சோண்டாவைப்பற்றி கவலைப்படவில்லையென்று எண்ணாதே. தன் மாற்றான்பிள்ளைகளை வெறுக்கிறாளென்று நினைந்து அஜாக்கிரதையாய் ஏதேனும் செய்யப்போகிறாய். பத்திரம்! மற்றக் காரியங்களை எப்படி முடித்தாய்?

**ஜோ.**—மற்றவைகளை என்னிஷ்டப்படியே செய்துவிட்டேன். ஐஸல்மீர்தேசத்து ஓரபட்டி ராஜகுமாரனைக் கோட்டைக்குத் தலைவனாக்கிவிட்டேன். சைந்நியம் பொக்கிஷம் முதலிய முக்கியமான ஸ்தானங்களில் சிசோதிய ராஜகுலத்தைவிரும்பாத அன்னியகுல க்ஷத்திரியர்களை வைத்திருக்கின்றேன். அவர்களெல்லாம் நம்முடைய ஆஞ்ஞைக்கு அடங்கிநடப்பவர்களே.

**ரீன்.**—சம்பகமாலைக்குச் சமுசயமுண்டாகாமல் இவைகளையெல்லாம் எப்படிச்செய்தாய்? புத்திரா!

**ஜோ.**—அது கஷ்டமல்ல. சம்பகமாலைக்கு ராஜ்ஜியவிவகாரங்கள் அவ்வளவுநன்றாய்த்தெரியாது. உத்தியோகஸ்தர்களுடைய குணங்களும் சுபாவங்களும் அவள் அறியாள். இதற்குமுன் நம்பிக்கையினால் எல்லா விவகாரங்களையும் சோண்டாவின் கையில் விட்டிருந்தனளன்றோ. அதுவும் நமக்கு அனுகூலமாகவே முடிந்தது.

**ரீன்.**—சரிதான். உன்னிடத்தில் அவ்வளவு நம்பிக்கைவைத்திருக்கிறாளா?

**ஜோ.**—ஆம்! அதை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிவருகிறேன்.

**ரீன்.**—இப்போதுதான் நீ எனக்கேற்ற புத்திரனானாய். சாமந்தராஜாக்களுடைய அந்தரங்க விவகாரங்களும், அவர்களுடைய வெறுப்பு, விருப்பங்களும், அவர்களுடைய பலாபலங்களும் எப்படி யிருக்கின்றன? அறிந்துகொண்டிருக்கின்றாயா?

**ஜோ.**—லகாராணா எல்லாமாகாணங்களுக்கும் தம் புத்திரர்களையே விஸ்தாரமாக சாமந்தராஜாக்களாக்கியிருக்கின்றார். அதைக்கண்டுதான் நான் பயப்படுகின்றேன். தனித்தனி ஒவ்வொரு சாமந்தராஜன் நமக்கு ஈடல்ல. அனைவரும் சேர்ந்தக்கால் நாம் அவர்களுக்கு ஈடாகமாட்டோம்.

**ரீன்.**—அவளையும் ஒருங்குசேர்க்கத்தகுந்த விஷயம் என்ன விருக்கின்றது?

**ஜோ.**—அதென்ன அப்படி சொல்லுகிறீர். நம் வயித்தரிடத்திலின்று ராஜ்யம் நழுவுமோ வென்ற பயம் போதுமானதல்லவா?

**ரீன்.**—மெத்தவும் சரி. புத்திரா! ஆயினும் அவர்களெல்லோரும் நாயகிகளாயிருப்பது நமக்கு அனுகூலமன்று.

**ஜோ.**—வாஸ்தவந்தான். அவர்கள் மேலான குணமுடையவர்களாயிருந்தே.

**ரீன்.**—அத்தகையவர் பலருக்கு [illegible] நினைக்கின்றேன்.

**ஜோ.**—இருந்தபோதிலும் வெகு சாமர்த்தியமுள்ளவர்களையும், விரியவான்களையும், செல்வாக்குடையவர்களையுமிருக்கின்றார்களே.

**ரீன்.**—சோண்டா தேசத்தைவிட்டுப் போய்விட்டானன்றோ.

**ஜோ.**—ராஜதேவனிருக்கின்றானே. அவனைக்கண்டுதான் பயப்படுகின்றேன். எவ்விஷயத்திலும் இவன் சோண்டாவுக்கு ஈடானவன். உள்ளவைகளில் பெரிய மாகாணத்தை ஆளுகின்றான். அது மிகவும் அருமையான மாகாணம். பெரிய சைந்நியத்தை வைத்திருக்கிறான். அவனுக்குச் சகாயஞ்செய்ய ஏராளமாய் விஸ்ஜாதி வில்லாளிகள் வருவார்கள்.

**ரீன்.**—அவனைக்குறித்து பின்னால் யோசிக்கலாம். சம்பகமாலையினிடத்தில் நம் இரகசியத்தை வெளியிடுபவர்கள் எவர்களேனும் அரண்மனையிலிருக்கின்றார்களோ?

**ஜோ.**—ஸ்திரீகள் சிலர் இருப்பார்களென்று நினைக்கின்றேன்.

**ரீன்.**—புத்திரா! ப்ரிதாவுக்கு அவ்விஷயம் தெரிந்திருக்கலாம்; அவளை இங்கு வரச்சொல்.

(ஜோடா போக ப்ரிதா பிரவேசிக்கிறாள்.)

**ப்ரிதா.**—(நமஸ்காரஞ்செய்துவிட்டு) மகாராஜா! உத்தரவை எதிர்பார்க்கின்றேன்.

**ரீன்.**—ப்ரிதா! இங்குவா! என் கட்டளையை மகோத்தியாய் முடித்துவிட்டாய். எனக்கு மெத்தவும் சந்தோஷம். நீ செய்த உபகாரத்திற்கு யாது பதில் செய்யப்போகின்றேன்?

**ப்ரி.**—பதிலொன்றையும் நானெதிர்பார்க்கவில்லை மகாராஜா! உங்களுடைய பிரியமான மொழிகளும், இனிமையான புகழ்ச்சியுமே எனக்குப் போதுமானவை.

**ரீன்.**—ஆகிலும் அவ்வளவோடே முடிக்க எனக்கிஷ்டமில்லை. நான் உன் சமர்த்தை மதித்தமைக்குத் தகுந்த வெகுமதி ஒன்றைச்செய்ய எண்ணங்கொண்டிருக்கின்றேன். (தன் கழுத்திலிருந்த ஹாரமொன்றை கழற்றி) இதோ ப்ரிதா! வாங்கிக்கொள். இது எனக்கு மெத்தப் பிரியமான ஹாரம். என் புத்திரனுக்கேனும் புத்திரிக்கேனும் கொடுக்க இசையேன். ஆயினும் நீ செய்த உபகாரத்திற்கு அது ஈடாகமாட்டாது.

**ப்ரி.**—மகாராஜா! தாங்கள் பிரியத்துடன் கொடுப்பதை நான் வேண்டாமென்று மறுப்பேனே, ஒருக்காலும் மாட்டேன்.

(வாங்கி தன் கழுத்திலிட்டுக்கொள்ளுகிறாள்.)

**ரீன்.**—இது உன்கழுத்துக்கு மிக்க அழகைத்தருகின்றது ப்ரிதா.

**ப்ரி.**—மகாராஜா! அழகு எதினுடையதென்கிறீர். அதைக்கொடுத்த மனதின் அழகன்றோ அழகென்னப்படவேண்டும்.

**ரீன்.**—ப்ரிதா! நிரம்ப கெட்டிக்காரி நீ. உன்னைப் போன்ற சமர்த்தான ஸ்திரீகளுடைய சகாயம் எனக்கு அடிக்கடி தேவையாயிருக்கின்றது.

**ப்ரி.**—தங்களுடைய கட்டளை எதுவானாலும் நிறைவேற்ற நான் சித்தமாயிருக்க, தாங்களேன் வேறுயோசனை செய்யவேண்டும். தாகம்தணித்துக்கொள்ள எவர்கள் ஆகாயத்திலுள்ள மேகங்களை பிரார்த்திப்பார்கள், பிருதிவியினிடத்திலன்றோ அடைவார்கள்.

**ரீன்.**—மெத்த சந்தோஷம் ப்ரிதா! உன்னால் மற்றோர் பெருங்காரியம் முடிவுறவேண்டும்.

**ப்ரி.**—சித்தமாயிருக்கிறேன் மகாராஜா!

**ரீன்.**—நம் சம்பகமாலையினுடன் அரண்மனையில் அந்தரங்கமாய்ப் பேசத்தகுந்த ஸ்திரீகள் யார்.

**ப்ரி.**—லாலாபாய் என்னும் சம்பகமாலையின் தோழி ஒருத்தியும் நம் மொகுலுக்குச் செவிலித்தாயாகிய மீராபாயொருத்தியுந்தான்.

**ரீன்.**—இவ்விருவரையும் உன் வசமாக்கிக்கொள்ளுவாயா?

**ப்ரி.**—லாலாபாய் கபடற்றவள் மகாராஜா. இதற்குமுன் அவள் என்னை வெறுத்தாலும் இப்



போது எனக்குப் பிரியமான தோழியாயிருக்கிறாள். இளம்பெண்ணுதலால் போதனையினுலும், சற்றே பணம்கொடுத்தும் வசப்படுத்திக்கொள்ளலாம். தாங்களிஷ்டப்பட்டால் நொடிக்குள் அவளை வசப்படுத்திக்கொள்ளுகிறேன். மீராபாய் அப்படியல்ல மகாராஜா! அவள் வயதுசென்றவளாகவும் நிரம்ப புத்திசாலியாகவுமிருக்கின்றமையால் அவளை வசப்படுத்துவது அசாத்தியமாகும். நம் ஜனங்களை எப்போதும் அவநம்பிக்கை நிறைந்த திருஷ்டியினுல் பார்க்கிறாள். அவளோடு கலவாமலிருப்பதே உத்தமம். ஆனால் ஒன்றுமாத்திரம் நான் செய்யமாட்டுவேன். சம்பகமாலையினுடன் அவள் கலந்து அந்தரங்கமாய்ப் பேசாமல் பார்த்துக்கொள்ளுகின்றேன்.

**ரீன்.**—அவ்வளவு செய்தால் போதுமானது. அரண்மனை ரகசியங்கள் ஒன்றும் அவள் அறியலாகாது.

**ப்ரி.**—செய்கிறேன் மகாராஜா! என்சாமர்த்தைப்பாரும்.

(போகிறாள்.)

**ரீன்.**—(தனக்குள்ளே) எல்லாவற்றையும் யோசித்துப்பார்க்கின் நம்முடைய நிலைமை அபாயகரமானதாயிருக்கின்றது. அந்நியகுல க்ஷத்திரியர்மத்தியில் இருக்கின்றோம். அவசரப்பட்டுக் கத்தியைக் கையிலெடுத்தால் நம் கையிலிருக்கிற கத்தி நம்தலையையே வெட்டிவிடும். பொறுமையாயிருந்து மெல்ல சிங்காசனத்தின்மீது நழுவிவிடவேண்டும். முடியும்வரையில் எவர்களும் நம்முடைய எண்ணத்தைக் கண்டுகொள்ளலாகாது.

(போகிறான்)

எச். வேங்கோபராவ்.

## சஞ்சோக்தை சுயம்வரம்

### அல்லது

## ப்ரித்விராஜா சரித்திரம்.

### XI அடங்காமன்னர்.

ஜயசந்த மஹாராஜாவின் தூதர்கள் தேசதேசமாகச்சென்று மன்னர்களுக்கெல்லாம் திருமுகமளித்து அவர்களை யாகத்துக்கும் அதன் முடிவில் நடக்கும் சுயம்வரத்துக்கும் வரும்படி யழைத்துவந்தார்கள். இச்செய்தி கேட்ட மன்னர்களில் பலர் பலவாறு எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்கள். இஷ்டமான மன்னர்கள் இதுவும் ஓர் அதிசயம் என்று புறப்பட்டார்கள். உட்பட்ட மன்னவர்கள் உகந்தேற்றுப் புறப்பட்டார்கள். வேற்று மன்னர்கள் வெந்து புழுங்கினும் எதிர்த்து வெல்ல சக்தியின்மையால் விதியேயென்று புறப்பட்டார்கள். சமனான மன்னர்கள சமாதானமே பெரிதென்றெண்ணி சஞ்சோக்தையின்மேல் கருத்தாய் புறப்பட்டார்கள். மற்ற அரசர்களும் மனதிற்குள் என்ன நினைத்தாலும் வெளிக்கு வித்தியாசமின்றி ஜயசந்தன் விடுத்த தூதை யேற்றுக்கொள்வதே யுசிதமென்று ஒவ்வொருவரும் ஒரு உத்தேசத்தைக்கொண்டு யாகவிருந்துக்குப் புறப்படுவாரானார்கள். டில்லியரசனாகிய ப்ரித்விராஜாவும் அப்படியே புறப்படுவதாயிருந்தான். அவன் புறப்படவிருக்கும் சமயத்தில் அவன் மைத்துனனை (சகோதரி புருஷன்) சித்தூர் (சித்திரகூடம்) அரசன் சமரசிங்கு: டில்லியரசனே பரம்பரையாக பிரதமஸ்தானம் வகித்து ஆண்டுவந்திருக்க, ராஜபுத்திரர்களுட் சிரேஷ்டமான சேஹன், ராத்தோரானுக்குத் தலைவணங்கி அவன் செய்யும் ராஜசூயத்தை ஒப்புக்கொள்வானோ? ஷம்ராட் பட்டம் சூட்டிக்கொள்ள அவன் எப்படி அருகனுவன்? என்று கேட்டான். இக்கேள்வி ப்ரித்விராஜாவின் செருக்கைக் கிளப்பிவிட, அவன் அந்த யாகத்துக்குத் தான் போவதில்லையென்று தீர்மானித்து தான் புறப்படச் சித்தமாயிருந்த பிரயாணத்தை நிறுத்தி அது சங்கதியைத் தெரிவிக்க உத்தரவு செய்தான். அவனுடன் சித்தூர் அரசனான சமரசிங்கும் தான் போவதில்லையென்று தீர்மானித்து அது சங்கதியை அதே தூதன் மூலமாகத் தெரிவிக்கச்சொல்லி யனுப்பினான்.

இத்தருணத்தில பரித்விராஜா, சமரசிங்கு இவர்களின் நிலைமையைப்பற்றியும், சிநேக முறை பந்துத்துவம் இவைகளைப்பற்றியும சற்

றுவிசாரிப்பது உசிதமாயிருக்கும். ப்ரித்விராஜாவுக்குமுன் டில்லியிலாண்ட துவார் வமசத்துக்கடைசியரசனுன அனங்கபால்ராஜா ஹிந்துஸ்தானத்தில் பெருமைபெற்று வசித்தானென்பது சந்துபாரதியின் ஆதாரத்தின்மேல் தெரியவருகிறது. அவனுடைய காலத்தில் ஹிந்துஸ்தானத்தில் மகிமைபெற்று விளங்கிய அரசர்கள்: அனுலவாரபட்டணத்தில் "இரும்பினைக்குழைக்குநெஞ்சர்" என்று கவிசொல்லியதற்கு இணங்கப்பெற்ற சாலுக்கியராஜா போலபீமன் புஜபல பாராக்கிரமத்தால் விளங்கப்பெற்று வாழ்ந்துவந்தான். அபூமலையில் ப்ராமரவம்சத்து ஜயித் அரசன், போரில் அசைக்கக்கூடாதவன் என்று பேர்பெற்று விளங்கிவந்தான். மைவார்தேசத்தில் சமரசிங்கு, மகா வல்லவர்களான அரசர்களிடத்தும் திரை வாங்கி, டில்லிக்குவரும் சத்துருக்களுக்கு வழியில் இரும்பைப்போல் அசைக்கக்கூடாத ஒரு பெரிய இடையூருகி, இறுமாந்திருந்தான். இவர்களுக்கெல்லாம் மத்தியில் நடுநாயகம்போல் மகா பராக்கிரமசாலியான மண்டூர் அரசனிருந்தான்; இவன் மாருதேசத்துக்கதிபதி. இவர்களுக்கெல்லாம் தலைவனாக டில்லியில் அனங்கபால்ராஜன் வீற்றிருந்தான். அவனுடைய உத்தரவுக்குட்பட்டவர்கள், மண்டூர், நாகோர், சிந்து முதலான எல்லைப்பக்கத்திலுள்ள தேசத்தரசர்கள். பிஷவார், லாஹோர், காங்கிரா முதலான மலைப்பிரதேசத்தரசர்களும் அப்படியே. உள்நாட்டில் காசி, பிரயாகை, தேவகிரிமுதலான தேசத்தரசர்களெல்லாம் அவன் ஆக்கினைக்குட்பட்டவர்களே. இப்படியாகச் சுற்றியுள்ள 108-சிற்றரசர்கள் டில்லி அரசனுக்கு கப்பங்கட்டி அவன அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டவர்களாகவிருந்தார்கள். ஆஜ்மீரில் ஆண்ட சௌஹன் இராஜபுத்திரவம்ச அரசர்களும் டில்லிக்கு கப்பம்கட்டி வந்தவர்களே. இந்த கப்பம் விசாலதேவராஜன காலமுதல் மரியாதைக்கு மட்டும் இருந்துவந்தது வாஸ்தவமேயானாலும், அந்த விசாலதேவராஜனுக்கு நாலாந்தலைமுறைச் சந்ததியான சோமேசுவரர் காலத்தில் டில்லியையாண்ட துவார்வம்சத்துக் கடைசியரசனுன அனங்கபால்ராஜா தன்னுடைய மேலதிகாரத்தை நிலைநாட்டிகாலேனஜையடக்கிவந்தது அவருடைய உதவியினுலேயேயானாலும், 8-வது நூற்றுண்டில், ஜீரணமாய்ப்போன இந்திரப்ரஸ்தம் இருந்த இடத்தில் டில்லியை ஸ்தாபித்த முதலாவது அனங்கபால்ராஜன்முதல் தொடர்ந்து 400-வருஷங்களுக்கு டில்லியரசர் ஹிந்துஸ்தானத்தில் முதன்மைபெற்றுவந்தவர்கள் என்பது பிரத்தியக்ஷமாகவிளங்கும். இப்படிப் பேர்பெற்ற ஸ்தானத்துக்கு சௌஹன் ராஜபுத்திரது பெருமையும் வலிமையுமுடைய ப்ரீத்விராஜா பட்டந்தரித்த அரசனுகவர அவனுக்குண்டாயுள்ள மேன்மைக்குக் கேட்கவேண்டுமோ? ப்ரித்விராஜாவும், ஜயசந்தராஜாவும், அனங்கபால்ராஜனுக்குச் சரிசம்பந்தமுள்ளவர்கள். இருவரும் அவனுக்குப் பெண்வயிற்றுப் பேரர்கள். அப்படியிருக்கையில் ப்ரித்விராஜா டில்லிப்பட்டத்துக்கு வந்தபொழுது ஜயசந்தராஜா அவன் பட்டத்துரிமையை ஒப்புக்கொள்ள மறுத்ததன்றி, தான் அனங்கபாலராஜனுடைய மூத்தகுமாரத்தி வயிற்றிற்பிறந்தவனுதலால் தானே அப்பட்டத்துக்குரியவனென்றும் வாதாடினுன். இதனுல் இருவருக்கும் ஆதிமுதலுண்டான மாச்சரியம் உள்ளுக்குள்ளிருந்துகொண்டேயிருந்தது. ப்ரித்விராஜா தன் சொந்த வீரப்பிரதாபத்தாலும் தன் படைவலி துணைவலியாலும் ஜயசந்தராஜாவுக்கு ஏற்ற எதிரியாக விருந்ததன்றி வடக்கேயிருந்து ஹிந்துஸ்தானத்தின்மீது படையெடுத்துவந்த மகம்மதியர்களை எதிர்த்து அடக்கிப் பலமுறையும் அவர்களை மடக்கியடித்துவந்ததால் அவன்பேர் அதிக பிரக்கியாதிபெற்று ஹிந்துஸ்தானமுழுவதிலும் விளங்கிவருவதாயிற்று. இப்படி மகம்மதியர்களை மடக்கியடிக்குந்தோறும் ப்ரித்விராஜாவுக்குப் பக்கபலமாகவிருந்து புஜபல பாராக்கிரமத்தாலும் புத்திமதி யாலோசனையினுலும் பேருதவிசெய்துவந்தவன் சித்தூர் அரசனுன சமர



சிங்கு. இவன் ப்ரித்விராஜாவின் சகோதரியாகிய ப்ரீதா என்னும் இராஜகுமாரத்தியை மணம்புரிந்திருந்ததினுலும், இருவரும் எல்லாவற்றிலும் ஒற்ற தேகமனோபாவமுடையவர்களாயிருந்ததாலும், இவர்கள் இணைபிரியா இஷ்டர்களாகவிருந்தார்கள். டில்லியரசனுக்கு உகந்த இஷ்டனும், நெருங்கிய பந்துவும், உற்ற உதவியும், தேர்ந்தமந்திரியும், எக்காலத்தும் ஏமாறுதவிழிப்புள்ள பாதுகாப்பாயுமிருந்தான் இந்த சமரசிங்கு. இதுகாரணங்களால் ப்ரித்விராஜாவின் சாமந்தராஜாக்களும் இவனிடத்தில மிக்கமதிப்பு வைத்திருந்தார்கள்.

சமரசிங்கு கிலோத் ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்தவன். சௌஹன்; ராத்தோர் முதலிய ராஜபுத்திர ஜாதியாரைப்போல் இதுவும் புராதனமாக ஏற்பட்டுள்ள ஜாதி. இவர்கள் சூரியவம்சிகள். ஸ்ரீராமபிரானிலிருந்து லவன் வழியாக இறங்கின சந்ததியாராகச் சொல்லிக்கொள்ளுகிருர்கள். கட்டுக்கதை புராணங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டுப்பார்த்தால் 5-அல்லது 6 வது நூற்றுண்டில் இவர்கள் மைவாரில் ராஜ்யாதிகாரம்பெற்று அதுமுதல் பல்கிப் பெருகி வலுத்த ஜாதியாரானுர்களென்று தோன்றுகிறது. கிலோத்ஜாதியென்னும் பேர் குஹிலோத் என்பதிலிருந்து மருவிவந்தது. இதை ஸ்தாபித்த முதல் புருஷன் பேர் குஹன் ஆதலால் அவனுடைய சந்ததியார்களுக்கு இந்தப்பேர் வந்தது. இந்த குஹனைப்பற்றிச்சொல்லும் வரலாறு கேட்கரசமாயிருக்கும். வல்லபிபுரத்தில் சிலாதித்யராஜன் ஆண்டுவருகையில் ஹுணர்கள் முதலான வேற்று ஜாதியார் கூட்டங்கூட்டமாக வந்து இந்தியாவில் பல ராஜ்யங்களையும் தாக்கி ஹதம்செய்து வந்ததுபோல் வல்லபிபுரத்தையும் தாக்கித் துவம்சம்செய்தார்கள். அவர்களை யெதிர்த்துக் காப்பதில் சிலாதித்தியனும் அவனுடைய படைகளும் விழுந்து மடிந்துபோயின. அவன் மடியவும் அவனுடைய ராணிமார்களெல்லாம் காஷ்டமேறி தங்கள் புருஷனைச் சேரவேண்டி ஸ்வர்க்கத்தைநாடிச்சென்றுர்கள். அவர்களில் ஒருத்தியான புஷ்பவதிராணிமட்டும் அத்தருணம் வல்லபிபுரத்திலில்லாமல் தன் பிறந்தகம் போயிருந்தாள். அவள் சந்திரவதி நாட்டு ப்ராமரஜாதி ராஜபுத்திரத்தலைவனின் மகள். அந்நாட்டிலுள்ள லோகமாதாவாயாகிய "அம்பாள் பவானி" கோயிலுக்குச்சென்று தனக்கு புத்திரசந்தானம் உண்டாகவேண்டுமென்று செய்துகொண்ட பிரார்த்தனையை நிறைவேற்றிவிட்டு அம்பாள் வரப்ரஸாதம்பெற்றுத் திரும்பிவருகையில், வழியில் தன் புருஷனுக்கு நேர்ந்தவிபத்தைக் கேள்விப்பட்டாள். கேட்டவள் மனதுருகி பிள்ளைவரத்துக்குப்போய்ப் புருஷனை யிழந்தகதி வாய்ந்ததேயென்று துக்கித்து துன்பக்கடலில் ஆழ்ந்திருந்தாள். துன்பக்கடலிலாழ்ந்தும் ஏற்கனவே கருத்தரித்திருந்ததால் பூர்ணகர்ப்பம் ஆகும்வரையில் உயிர் வாழ்ந்திருந்து பிரசவகாலம் வரவும் ஒரு குகைபுட்சென்று பிரசவித்து, பெற்ற புத்திரனை பிர்நகரிலுள்ள கமலாவதி யென்னும் பிராமண ஸ்திரீவசம் பாதுகாத்து வரும்படி ஒப்புவித்து, விவாககாலம் வரும்பொழுது அவனை ஒரு ராஜபுத்திர கன்னிகைக்கு மணஞ்செய்து வைக்கவென்று சொல்லிவிட்டு, ஸ்வர்க்கலோகத்திற்சென்று தன் புருஷனைச் சந்திக்க அவாக்கொண்டு, காஷ்டமேறிப் பிராணனை விட்டாள். அக்குழந்தையை கமலாவதி அருமை பெருமையாய்ப் போற்றி வளர்த்து, குகையில் பிறந்தபடியால் குஹன் என்ற பேருமிட்டாள். அவனுக்கு வயது 11-ஆகவும் அவன் பிராமணப்பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடாமல், ராஜபுத்திரச் சிறுவர்களோடு சேர்ந்து பக்ஷிகள் மிருகங்களை வேட்டையாடிக்கொண்டு வீரபராக்கிரமத்தை வளர்க்கும் விளையாட்டுகளில் அதிக பிரியமுள்ளவனுகக் காட்டினுன். இவ்விளையாட்டுகள் பிராமணகுலத்துப் பிள்ளைகளுக்கு அடாதனவாகையால் அவனை வளர்த்த பிராமணகுலத்தோர் இதுபற்றி மெத்த வருத்தமுற்று அவனை யடக்கமுடியாமல் வருந்தினுர்கள். இக்காலத்

தில் எடேர் என்னும் சமீபத்திலுள்ள மலைப்பிரதேசம் காட்டுமிராண்டிகளான வில்லிஜாதித் தலைவன் ஒருவனால் ஆளப்பட்டு வந்தது. அவன்பேர் மண்டலீசன். சிறுவயதுள்ள குஹன், வில்லிகளோடு சேர்ந்து காடுகளிற் சென்று வனவேட்டையாடிக் காலங்கழிப்பதில் அதிக விருப்புற்றவனாகக் காட்டிவந்தான். கொஞ்சகாலத்தில் அவன் அந்த வனபுத்திரர்களுக்கு மிகவும் வேண்டியவனானான். ஒருநாள் வில்லிகள் விளையாட்டாக தங்களுக்குள் ஒருவனை அரசனாகத் தெரிந்தெடுக்க ஆரம்பித்தார்கள். ஆரம்பிக்கவும் அவ்வுந்நதஸ்தானத்துக்கு குஹன் தெரிந்தெடுக்கப்பட்டான்; உடனே அங்கிருந்த வில்லி வாலிபர்களில் ஒருவன் தன் கட்டைவிரலைக் குத்தி வெளிவந்த இரத்தத்தை குஹனுக்கு திலகமாக இட்டு அவனை இராஜஸ்தானத்துக்கு நியமித்ததாகப் பாவனை காட்டினான். இதுசெய்தி மண்டலீசனுக்குத் தெரியவும அவன் எடேர் அதிபதி ஸ்தானத்தை குஹனுக்குக் கொடுத்துவிளையாட்டாக நியமனஞ்செய்ததைத் தான்வாஸ்தவமாகவே உறுதி செய்து முடித்தான். இப்படியாக இவன் முதல்முதல் அரசு பெற நேரிட்டது. இந்த குஹனுடைய சந்ததியாருக்குத்தான் குஹிலோத், அல்லது கிலோத் ஜாதி ராஜபுத்திரர்கள் என்று பேர்.

குஹனுடைய சந்ததியார் எட்டுத் தலைமுறைகாலம் இந்த மலைப்பிரதேசங்களில் வில்லிகள் அரசனாக எடேரில் அரசு செலுத்திவந்தார்கள். எட்டாந்தலைமுறையரசனான நாகாதித்யன் அரசு செலுத்திவருகையில் வில்லிகள் அந்நிய ஆளுகையில் அலுப்புற்று அவன் வேட்டையாடிக்கொண்டிருக்கையில் அவனைத் தாக்கி அவன் உயிரைவிட்டு எமபுரம் போகும்படிச்செய்துவிட்டார்கள். குஹன் ராஜாதிபத்தியமடைந்தபொழுது அவனை வளர்த்துவந்த கமலாவதியின் குடும்பத்தார் அவனுக்கு குலகுருவாக ஆனார்கள். இப்படி அவர்கள் தலைமுறை வரிசையாக அவன் சந்ததியாருக்குக் குலகுருவாக விருந்துவந்தார்கள். நாகாதித்யன் கொல்லப்படவும் கமலாவதியின் சந்ததியார் அவனுடைய புத்திரனை மூன்றுவயதுப்பாலனை பாண்டேர் என்னும் வேறொரு மலைப்பிரதேசத்துக்குக் கொண்டுபோய் அங்கு அரசாண்டுவந்த யாதவகுலத்து வில்லியரசன் ஆதரவில் அவனை வளர்த்துவந்தார்கள். இக்குழந்தைதான் பிந்தி சரித்திரத்தில் பேர்போன பப்பா என்னுமரசன். பப்பா என்பது அவன்பேரல்ல. பப்பா என்றால் குழந்தையென்று அருத்தம். அந்தப்பேர் அவனுக்குரிய நாமமாக வழங்கிவந்துவிட்டது. பப்பா மிகவும் பிரக்கியாதி பெற்ற சித்தூர் அரசன். அவன் முதலில் மாடு மேய்க்கும் பையனாகவிருந்து காளியின் வரப்பிரசாதத்தால் அவள் கைப்பட ஆயுதங்கள் பெற்று, சில்லரைச் சண்டைகளில்கீர்த்திபெற, அக்காலத்தில் சித்தூர் அரசனாகவிருந்த மோரி அரசன் அவனைத் தன்னுடைய சாமந்தர்களில் ஒருவராகச் சேர்த்துக்கொண்டதும், பிறகு இதர சாமந்தர்கள் இவனிடத்தில் அரசன் காட்டிய அதிகப் பிரீதியைக்கண்டு மாற்சரியமுற்று மனங்கன்றியிருந்ததும், பிறகு ஒரு ஆபத்வந்த காலத்தில் அந்த சாமந்தர்களெல்லாம் சேர்ந்து மோரி வம்சத்தரசனைத் தள்ளிவிட்டு, பப்பாவை அரசனாகவைத்து முடிசூட்டினதுமாகிய வரலாறு அனைத்தையும் அவர்கள் வம்சாவளி சரித்திரத்தில் சொல்லியிருக்கிறபடி வாசிக்க மிகவும் விநோதமாகவும் வேடிக்கையாகவும் அதிசயமாகவுமிருக்கும். இச்சரித்திரம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலாவிநோதங்களைப்போல அவ்வளவு அற்புதமாக விளங்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் இங்கு விரித்துரைக்கிற் பெருகுமென்று விடுத்தோம்.

பப்பா இப்படி கீர்த்திபெற்றுவிளங்கி சித்தூர் அரசனாக ஸ்தாபிதமானது ஸம்வத்சகம 784-க்குச் சரியான கி. பி 728-ம வருஷத்தில்; அதுமுதல் பிரஸ்தாபகாலத்தில் அரசனாகவிருக்கும் சமரசிங்க காலம்வரையில் பப்பாவினுடைய சந்ததியார் இடைவிடாது சித்தூர் இராஜ்ஜியத்தை யாண்டுவந்ததுமன்றி ஹிந்து ராஜ்ஜியம் நிலைபெற்றிருக்க முக்கிய ஆதாரமாகவுமிருந்தார்கள். பிற்காலத்திலும் சித்தூர் அரசர்கள் சுத்தமான தேசமதாபிமானத்தோடு ஹிந்து அதிகாரமும் ஹிந்து மதமும் நிலைபெறவோ, அவை யெதிரிகளால் தாக்கப்பட்ட காலத்தில் அவைகளைப் பாதுகாக்கவோ, சுத்த ஹிருதயத்தோடும் மஹா வீரத்தோடும் தங்கள் உயிரைக்கொடுக்கச் சித்தமாயிருந்து வந்தார்கள். இவர்கள் ஆதிமுதல் தங்கள் தேசத்துக்கும் மதத்துக்கும் உண்மையாகவிருந்து வந்த காரணத்தினாலே, மற்றத்தேசங்கள் இராஜ்ஜியங்கள் இருந்த இடம் பாழாகி புல்முளைத்துப்போக, இவர்கள் இராஜ்ஜியம் இன்றைக்கும் இருந்து கீர்த்திபெற்று விளங்குகிறது.



ஜயசந்தன் ஸாம்ராட் பட்டஞ்சூட்டிக்கொள்ளச்செய்த யத்தனத்தையெதிர்த்த சமரசிங்கின் குலவரலாறு இப்படிப்பட்டது. அவனுடைய குணமோ அவ்வம்சத்திலுள்ள அரசர்களெல்லாரிலும மேலானதாகவிருந்தது. அவன் வீரியமும் அப்படியே. அவன் சம்வத்சரம் 1206 க்குச் சரியான கி. பி. 1149-வது வருஷத்தில் பிறந்தவன். ஆதலால் இச்சரித்திர சம்பவகாலத்தில் 40-வயது சென்ற நடுவயதுள்ளவனாகவிருந்தான். அவன் குணத்தாலும், குலத்தாலும், வயதாலும், வீரியத்தாலும், புத்தியுக்தியனுபவ விசேஷத்தாலும், பராக்கிரமத்தாலும் ப்ரித்விராஜாவுக்கு வலக்கைத்துணையாகவிருந்தான். அப்படிப்பட்டவன், "ஜயசந்தன் ஸாம்ராட்பட்டம் கட்டிக்கொள்ள நாம அவனண்டை சென்று கைகட்டி நிற்கிறதா"வென்றுசொல்லவே சஞ்சோகதையினழகைக்கேட்டு மயங்கியிருந்த ப்ரித்விராஜா அவளை யுத்தேசித்துப்போகப் பிரயாணப்பட்டும், சமரசிங்கு சொன்னவார்த்தை சுருக்கென்று சுட்டதுபோல் தன் வீரபராக்கிரமத்தைத் தூண்டிவிட, அது மேலெழுந்தவாரியில் தற்காலத்துக்கு அவள் மையலொழிந்து தான் போவதில்லையென்று தூதனுப்பியதோடு, தன் மைத்துனர் சமரசிங்கோடு ஜயசந்தன் ராஜசூயயாகம் செய்யத்துணிந்த துணிச்சலைப்பற்றிப் பழித்துச் சிரித்துப் பரிகாசஞ்செய்து பேசிக்கொண்டிருந்தான். கடைசியில் அவன் திருமுகத்தையெடுத்துப் படித்துப்பார்த்து "ஹா, ஹா, ஹா" வென்று வாய்விட்டுச்சிரித்து "இதுவுமோர் தந்திரமோ" வென்று தலையையாட்டிக்கொண்டிருந்தான்.

"அந்தத்தந்திரத்தில் நீயுமகப்பட்டுக்கொள்ளத்தானேயிருந்தாய்!" என்று சமரசிங்கு பரிகாசமாகச்சொல்ல,

ப்ரித்விராஜா சிறிது நாணினவனாய், "இனி அவன் சூது பலிப்பதைப் பார்ப்போமே!" என்று கருவிக்கொண்டு மறுமொழி சொன்னான்.

C. V. S.

## சுகாதார விஷயம்.

*உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாக விருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.*

### நாம் உண்ணும் உணவு.

ஆகாரம் எப்படி வியாதி மூலமாகின்றது.

சுகத்தின்பயனைக்குறித் தெழுதியதின் முடிவில் வியாதிமூலங்களைப்பற்றி விசாரித்தபொழுது ஆகாரம் அவைகளில் ஒன்றாயிருக்கலாமென்று சொன்னோம். ஆகாரத்தின் மூலமாய் வியாதியெப்படி யுண்டாகின்றது? இவ்விஷயத்தைத் தீர யோசிக்குங்கால் ஆகாரம் குறைந்துபோவதால் சிலருக்கும், மட்டுக்கதிகப்பட்டுப்போவதால் சிலருக்கும், சரியானபடி சமைக்கப்படாத ஆகாரத்தால் சிலருக்கும், கெட்டுப்போன ஆகாரத்தால் சிலருக்கும் வியாதிகளுண்டாகின்றனவென்று தெரிகிறது. ஆகவே நாம் உண்பது எதற்காகவென்றும், அவ்வுணவு எவ்விதமாயிருக்கவேண்டுமென்றும் கவனிப்போம்.

**உணவின் உபயோகம் சரீரத்தைப் போஷித்து வளரச் செய்தல்.**

ஆலமரத்தின் வித்து எவ்வளவு சிறிதாய் இருக்கிறது. அதைப் பூமியிற்போட்டுத் தண்ணீரூற்றுவதால் முளைக்கும் மரம் எவ்வளவு பெரிதாகிறது. இப்படி மரம், இலை, பூ, காய் முதலியவைகளும் உண்டாகிறது அவ்வித்திலிருந்தா? இல்லை. பூமியிலிருந்தும் ஜலத்திலிருந்தும், வாயுவிலிருந்தும் சேகரித்தெடுத்துக்கொண்ட உணவினாலேயே அம்மரமுண்டாயிற்று. அதேவிதமாகக் குழந்தை பிறந்தவுடனே எவ்வளவு சிறிதாயிருக்கிறது. பின்பு வரவர வளர்ந்து, பெரிய உருவமுண்டாகின்றது. முதலில் ஏறக்குறைய 6-பவுண்ட் நிறையுள்ள குழந்தை முதுமைப்பருவத்தில் 150-பவுண்ட் நிறையுள்ள பெரிய சரீரத்தை யடைகின்றது. இது எப்படியாகிறது பாருங்கள். எல்லாம் நாம் உண்ணும் உணவினால்தான். ஆகையால் உணவின் பலன் முதலில் நமது சரீரத்தைப் போஷித்து வளர்க்கும்பொருட்டு என்று அறிந்துகொள்ள வேண்டும்.

**சரீரத்தி லுண்டாகும் செலவழிவைத்தடுத்தல்.**

ஒருவன் விடியற்காலத்தி லெழுந்து இரண்டு மைல்தூரத்துக்கு நடந்துபோய்த் திரும்பி வந்தால், அவனிடத்தில் முன்னிருந்ததைப் பார்க்கிலும் என்னென்ன மாறுதல்காணப்படுகின்றது. இதை யோசிக்குங்கால் அனேக காரியங்கள் வெளிப்படும். முதலில் போகவர 4-மைல்தூரம் நடந்ததினால் அவனுக்கு ஒருவித களைப்பு உண்டாகின்றது. இது எல்லாருக்கும் அனுபவத்தில் தெரிந்தவிஷயம்.

**நாம் சுவாசிக்கும் ஆகாயத்தில் உண்டாகும் மாறுதல்கள்.**

இரண்டாவது அம்மனிதன் வெளியேபோகுமுன்னும் திரும்பி வந்தபின்னும் அவனைத் தராசில் வைத்து நிறுத்துப்பார்த்தால், முன்னிருந்த நிறையில் ஏறக்குறைய இரண்டு பவுண்ட் நிறை குறையும். இவைகள் தவிர இன்னுஞ் சில மாறுதல்களுண்டாகின்றன. நடக்கும்போது இப்படியானால், வேலை செய்யும்போது எப்படியிருக்கும்? சம்மட்டி கொண்டு அடித்து வேலை செய்யுங் கொல்லனைப் பார்த்திருக்கிறீர்களே. அவனைப்போல மிகவும் தேகப் பிரயாசத்துடன் வேலைசெய்யும் அனேக கைத்தொழிற்காரரிருக்கின்றனர். இவர்கள் வேலை செய்வதால் தேகத்தி லெவ்வளவு மாறுதல்களுண்டாகின்றன. முதலில் நாம் ஸ்வாசிக்கும் ஆகாயத்தைக் கவனிக்கவேண்டும். சாதாரணமாக நாம் மூக்குத் துவாரங்கள் வழியாய் உட்கொள்ளும் ஆகாயத்தைப்பார்க்கிலும் வெளியாக்கும் ஆகாயத்தைப் பரிசோதித்தால் அது மெத்த வித்தியாசப்படுகிறது. அதிக உஷ்ணமுள்ளதாகவும் நீராவியடங்கியதாகவும், கனமுள்ளதாகவும் காணப்படுகிறது. இதையும் அனுபவத்திற்காணலாம். நாம் சுவாசித்துவிட்ட ஆகாயத்தையோர் சிறு லேசான சீசாவிலடைத்து அதை நிறுப்போமானால், சாதாரண வாயு அடங்கிய சீசாவைவிட அதிக நிறையுள்ளதாய்க் காணப்படும். மேலும், சீசாவில் நன்றாய் வடிகட்டிய சுண்ணாம்புத் தண்ணீரை வைத்து நன்றாய்க் குலுக்கினாலும் வெளியிலுள்ள ஆகாயம் அதிற்படுவதால் ஒரு மாறுதலுமுண்டாகிறதில்லை. ஆனால் அதில் நாம் ஒரு சிறு குழலின் வழியாய் மூச்சுவிட்டுக் குலுக்குவோமானால், முன் வெகு தெளிவாய் சுத்தஜலத்துக்கு சமானமாயிருந்த சுண்ணாம்புத்தண்ணீர் கலங்கி வெண்மையாய்ப்போகிறது. அப்புறம் அதை நிறுத்துப் பார்த்தால் முன்னிருந்ததைவிட அதிக நிறையுள்ளதாய்க் காணப்படும். இதற்குக் காரணம் நாம் வெளியேவிடும் ஆகாயத்திலுள்ள கரியமிலவாயு சுண்ணாம்பில் கலந்துகொள்ளுகிறது. இதனால் நாம் ஸ்வாசிக்கும் ஆகாயத்திற் கரியமிலவாயு இருக்கிறதென்று தெரியவருகிறது.

**நாம் தேகத்திலிருந்து எப்போதும் உஷ்ணம்வெளியாய்க் கொண்டிருக்கிறது.**

இரண்டாவது, பனிக்கட்டிகள் நிறைந்துள்ள ஓர் அறையில் நால்வர் சற்றுநேரத்துக்கிருப்பார்களானால், அவர்கள் தேகத்திலிருந்து வெளியாகும் உஷ்ணமானது அவ்வறையிலுள்ள பனிக்கட்டிகளைக் கொஞ்சங்கொஞ்சமாய் இளகச்செய்யும், அவர்களின்னும் சற்றுநேரத்துக் கிருப்பார்களானால், அவ்வறையிலுள்ள பனிக்கட்டியெல்லாம் கரைந்து தண்ணீராய்விடுமென்பதிற் சந்தேகமில்லை. அவ்வறையிலுள்ளோர் பனிக்கட்டியைத் தொடவேண்டியதேயில்லை. அப்படி யிருந்தும் அவர்கள் மூச்சுவிடுவதால் அவ்வறையிலுள்ள வாயு உஷ்ணமாகி, அதனால் பனிக்கட்டி கரைந்துபோய்விட்டது. இதனால் நம்முடைய தேகத்திலிருந்து எப்போதும் உஷ்ணம் வெளியாய்க்கொண்டேயிருக்கிறது என்று தெரியவரும்.

**நீராவியும் வெளியாகிறது.**

மூன்றாவது, மழை ஏராளமாய்ப் பெய்து ஆகாயம் எல்லாம் மிகக் குளிர்ந்து போயிருக்கும் நாட்களிலாவது, விடியற்காலத்தில் பனி பெய்து மிகவும் குளிர்ச்சி யுண்டாயிருக்கும்போதாவது



நாம் வெளியே போவோமானால், நமது மூச்சு புகையைப்போல் வெளியாவதை நாமே பார்க்கலாம். இது எப்படி யுண்டாகிறதென்றால், நாம் வெளியேவிடும் ஆகாயத்திலிருக்கும் நீராவியானது வெளியிலிருக்கும் குளிர்ந்த ஆகாயத்திற் பட்டவுடனே நீர்த்துளிகளாய் மாறுவதானது மேகத்தைப்போலும் புகைபோலும் வெண்மையான நிறத்தை யுண்டாக்குகிறது. இதனால் நம்முடைய தேகத்திலிருந்து இடைவிடாமல் நீராவியானது வெளியாய்க்கொண்டேயிருக்கிறது என்று தெளிவாய்த் தெரிகிறது.

**தேகத்திலுண்டாகும் செலவழிவுகளினா லுண்டாகும் பலன்கள்.**

ஆகவே நாம் ஸ்வாசிப்பதினால்மட்டும் நமது தேகத்தினின்று, தண்ணீர், உஷ்ணம், கரியமிலம் இவைகளெல்லாம் இடைவிடாமல் வெளியே போய்க்கொண்டிருக்கின்றனவென்று தெரிகிறது. இவைகளைத்தவிர வியர்வையாலும் மல மூத்திராதிகளாலும், சரீரத்திலிருக்கும் வஸ்துக்கள் வெளியாய்க் கொண்டே யிருக்கின்றன. நல்லது. நாம் சும்மா இருக்கும்போதுதானிதாயிற்று. ஆனால் வேலை செய்யும்போதோ, முன்சொன்ன செலவழிவுகள் இரண்டத்தனை யதிகமா யுண்டாகும். நாம் வேலை செய்யும்போதும், நடக்கும்போதும், ஓடும்போதும், விளையாடும்போதும், அதிக விரைவாய் உஸ்வாச நிஸ்வாசங்களுண்டாகின்றன. அதற்குத் தக்கபடியே நமது தேகத்திலுள்ள வஸ்துக்கள் குறைந்துபோகின்றன. ஒரு கையை மெதுவாய் உயர்த்துவதற்கு எவ்வளவு சக்தி வேண்டியதிருக்கிறது. வியாதியால் மகா வருந்தி வெகுநாளாய்ப் படுக்கையைவிட்டெழுந்திராமற் கிடந்த ஒருவனைக் கையுயர்த்தச் சொன்னால் எவ்வளவு பிரயாசையுடனுயர்த்துகிறனென்று கவனித்திருக்கிறோமே. அதேபோல் சாதாரண சுகமுள்ள ஒருவன் கனத்த சம்மட்டியை இரண்டு கைகளாலுந் தூக்கியடிப்பதி லெவ்வளவு பிரயாசமிருக்கும். அப்படியே ஒருமணிநேரத்துக்கு ஒருவன் கடுமையாக வேலை செய்தால் அலுத்துப்போவான். அதன்பின் வேலைசெய்ய முடியாமற்போய்விடுகிறது. இது எதனாலென்றால் வேலைசெய்வதால் தேகவலிமையானது இருக்கவிருக்கக் குறைந்து போகின்றது. இப்படி தேகத்திலுள்ள தசை, இரத்தம், தோல், எலும்பு, நரம்பு முதலியவைகளைப் போஷிக்கும் வஸ்துக்களில் முக்கியமானவைகள் நிமிஷத்துக்கு நிமிஷம் குறைந்துகொண்டே வந்தால், அம்மனுஷன் சில தினங்களுக்குள் எப்படியாய்விடுவானென்று யோசியுங்கள். இப்படி இடைவிடாமல் ஒருவனுடைய தேகத்திலுண்டாய்க்கொண்டிருக்கும் குறைவுகளைப் பூர்த்திசெய்துகொண்டிருப்பதே நாமுண்ணும் போஜனத்தின் இரண்டாம் உபயோகம். ஒருவன் கடுத்தவேலை செய்யும் நாட்களில் தகுந்த உணவில்லையானால் அவன் தேகம் மெலிந்துபோகும் என்பதை எல்லாருஞ் சொல்லுவார்கள். அவனுடைய சரீரத்திலுண்டாகும் செலவுக்குத்தகுந்த போஷணையில்லாததால் அவன் தேகத்திலுள்ள தசை குறைந்து உடம்பு மெலிவடைவதுமன்றி பலமுங் குறைந்து போகின்றது. இதனாலும் மேற்சொன்ன உணவின் இரண்டாவது உபயோகமின்னதென்று தெரிகிறது.

**சரீரத்திற் ஒரே மட்டான உஷ்ணமுண்டாக்குகின்றது**

உயிருடனிருக்கும் ஒவ்வொரு ஜெந்துவும் இருக்கவும், நடக்கவும், வேலைசெய்யவும்வேண்டிய உஷ்ணத்தையுடைத்தாயிருக்கின்றது. இந்த உஷ்ணமில்லாவிட்டால் நமது தேகம் குளிர்ந்து அரைக்ஷணத்தில் விறைத்துட்போகும். இப்படியாகாமல் ஒரேவிதமாக உஷ்ணமுண்டாகி நமது தேகத்திலுள்ள எல்லாக் கருவிகளும் விடாமல் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்யவேண்டியதற்காக உணவு அவசியம்.

### ஓர் உபமானம்.

மேற்சொன்ன விஷயாதிகளில் நமது சரீரத்தை ஒரு நீராவி யந்திரத்துக்கு ஒப்பிடலாம். எப்படியென்றால், நீராவி யந்திரத்தின் பற்பல பாகங்களையும் அதின் கருவிகள் வேலை செய்கிறதையும் கவனித்தால் ஏறக்குறைய எல்லா விஷயங்களிலும் அது நமது சரீரத்துக்கு சமானமா யிருக்கும்.

**நீராவியந்திரத்தின் பற்பலபாகங்களும் நமது சரீரத்தில் அவைகளுக்கு சமானமான பாகங்களும்.**

1. **நிலக்கரி யெரியும் ஓர் அறை.**—இதன் மூலமாய் தண்ணீரிலுண்டாகி நீராவியாகிறது. அதன் மூலமாய்த்தான் யந்திரம் ஓடுகிறது. நமது சரீரத்தில் இதற்குச் சமானமாக ஸ்வாச கருவியாகிய நுரையீரலிருக்கின்றது. இவ்விடத்தில் நாம் ஸ்வாசிக்கும் ஆகாயத்திலுள்ள பிராணவாயுவானது நம் இரத்தத்தில் உள்ள கறியமிலத்துடன் சேர்ந்து, அடுப்பிலிட்ட விறகு அல்லது நிலக்கரி எப்படி எரியுமோ அப்படியே யெரிந்து நமது சரீரத்தில் உஷ்ணமுண்டுபண்ணுகிறது.

2. **தண்ணீர் கொதித்து ஆவியாகுமிடம்.**—மேற்சொன்னபடி நிலக்கரி யெரிகிறதால் இவ்வறையி

லுள்ள தண்ணீரில் சூடுண்டாகி நீராவியாய் யந்திரத்துக்கு உயிர் கொடுக்கின்றது. நமது சரீரத்திலுள்ள இரத்தாசயத்தையும் இரத்தக் குழல்களாகிய நரம்பு முதலியவைகளையும் இவ்வறைக்குச் சமானமாய்ச் சொல்லலாம். நமது தேகத்தி லிருவிதமான இரத்தமிருக்கிறது. சற்று வெளுத்த நிறமுள்ள புருஷர் அல்லது ஸ்திரீகளின் சரீரத்தையாவது கைகளையாவது கவனித்துப்பார்த்தால் அதில் ஓர் வகையான பச்சை நரம்புகள் காணப்படும். இவைகளின் வழியாய் இரத்தாசயத்துக்குப்போவது அசுத்தமான இரத்தம். இரத்தாசயத்தினின்று கை, கால், தலை முதலிய அவயவங்களுக்குப்போவது சுத்தமான இரத்தம் மேற்சொன்ன அசுத்தமான இரத்தம் நமது தேகத்தின் பற்பல பாகங்களினின்றும் அழுக்கான பதார்த்தங்களைச் சேர்த்துக்கொண்டு பச்சை நரம்புகளின் வழியாய் நுரையீரலுக்குச் செல்லுகின்றது. அவ்விடத்தில் நாம் உட்கொள்ளும் ஆகாயம் அவ்விரத்தத்திற் கலப்பதனால் பிராணவாயு இரத்தத்திலுள்ள அழுக்கான வஸ்துக்களை எரித்து கரியமலவாயுவாக்கி நமது நாசித்துவாரங்கள் வழியாய் வெளியே போக்கிவிடுகின்றது. இப்படி இரத்தத்திலுள்ள அழுக்கு எரிக்கப்பட்டுப்போவதால் இரத்தம் சுத்திகரிக்கப்பட்ட பின்பு இரத்தாசயத்துக்கு போய் விழுந்து மறுபடியும் தேகபோஷணைக்காகப் பற்பல பாகங்களுக்கும் செல்லுகின்றது ஆதலால் இவ்விரத்தாசயத்தையும் நரம்புகளையும் இயந்திரத்தில் தண்ணீர் கொதித்து ஆவியாகும் அறைக்குச் சமானமாய்ச் சொன்னோம்.

3. இயந்திரத்தில் தண்ணீர் கொதித்து நீராவியானவுடன் அந்த ஆவியானது ஒரு குழலுக்குப் போய் அதிலுள்ள உருக்குத்தடியை முன்னே தள்ள அதுபோய் சக்கரங்களைத் தள்ளுகிறது இந்தப் பாகங்களுக்குச் சமானமாய் நமது தேகத்திலுள்ள எலும்பு, தசை, நரம்பு முதலியவைகளைச் சொல்லலாம். இரத்தாசயத்தினின்று தேகத்திற்குப்போகும் இரத்தத்தால் உண்டாகிற சக்தியின் மூலமாய் நமது எலும்பு முதலிய பாகங்களில் அசைவுண்டாகி நாம் நடக்கவும், படுக்கவும், எழுந்துநிற்கவும் சாத்தியப்படுகிறது.

ஆகவே நிலக்கரியும் தண்ணீரு மில்லாமல் எப்படி நீராவியந்திரமானது ஒரு வேலையும் செய்யாதோ, அப்படியே நமது சரீரமும் போஜனமில்லாமல் ஒருவேலையுஞ் செய்யாது. ஆனால் நாம் எரிக்கும் நிலக்கரியால் இயந்திரத்தில் நாளாவர்த்தியில் வேலை மிகுதியால் தேய்ந்துபோகிற பாகங்களைச் சரிப்படுத்த முடியாதென்றாலும், நமது தேகத்தில் நாம் உண்கிற உணவு நமது சரீரத்தில் நிமிஷத்துக்கு நிமிஷம் உண்டாகும் செலவழிவை நிவர்த்தித்து சரீரத்தை வளர்க்கின்ற ஒரு விசேஷ மிருக்கிறது. இதன் மூலமாய் உணவின் உபயோக மின்னதென்று தெளிவாயறிந்துகொள்ளுகிறோம்.

(இன்னும் வரும்)

## காஞ்சீபுரத்தில் ஒருவாரம்.

ஜூன்மாச முதல்தேதி சென்னையைவிட்டு அரக்கோணமார்க்கமாய் காஞ்சீபுரத்துக்குச் சென்றோம். அங்கு ஒருவாரம் தங்கியிருந்து சுகாதார விஷயமாக நாம் செய்துவரும் ஏற்பாடு சம்பந்தமாகச் சிறிது முயற்சி யெடுத்துவந்தோம் அப்பட்டணத்துக்குப் புதிதாய்த் தண்ணீர்க்கு ஏற்பாடு செய்து சுமார் 2-வருஷமாகிறது. ஊருக்கு சுத்தஜலம் கிடைக்கும்படி ஊர்ப்புறத்துக்கப்பால் வேகவதி யாற்றின் மத்தியிலிருந்துண்டாகும் ஊற்றுநீரைக் கரையிலுள்ள ஒரு கிணற்றில் கொணர்ந்துகட்டி. அதிலிருந்து யந்திர மூலமாகக் குழாய்களில் தண்ணீர் செலுத்தடியிறைத்து பட்டணத்திலுள்ள குழாய்களுக்கும் நூதனமாகக்கட்டிய பெரிய நீர்நிலைக்கும் தண்ணீர் செல்லும்படி செய்திருக்கிறார்கள். அந்த ஜலம் ஆற்று மத்தியில் ஊறி வருவதுமுதல் பட்டணத்திலுள்ள குழாய்களைத் திறந்தால் வெளிவருகிறவரையில் அசுத்தம்படச் சிறிதும் இடமின்றியிருக்கிறது. யந்திரத்தைபோட்டு நீராவி யந்திரத்தின் அடுப்புக்குக் கட்டைபோட்டு எரிக்க ஒருவனும், யந்திரங்கள் வேலைசெய்கையில் அதன் பாகங்களுக்கு எண்ணை விட்டு ஜாக்கிரதை செய்திருக்கும் சூக்ஷும ஏற்பாடு சரியாகவிருக்கிறதாவென்றுபார்க்க ஒருவனும் ஆக இருவரே அந்த யந்திரம் வேலைசெய்துவருவதற்கு வேண்டிய வேலையாட்கள். இவர்களுக்குமேல் யந்திரத்தில் கோளாறு வராது பார்த்துக்கொள்ளவும், அந்தக்கால் சாப்படுத்தவும் ஒருவரிருக்கிறார். அந்த தண்ணீரிறைக்கும் யந்திரங்கள் முதலியன இவருடைய பொறுப்பில்தான் இருக்கின்றன. இவர் மிக மரியாதையுள்ளவராகையால் அவ்வேலைகளைப்பார்க்க வருவோர்களுக்குப் பொறுமையோடு பலவிஷயங்களும் விளங்கும்படி சிரத்தையுடன் காட்டிவருகிறார் இதைபற்றிய விவரங்களை அது சம்பந்தமானபடங்கள் சிலவற்றோடு பின்னொரு சஞ்சிகையிலெழுதி விளங்கவைப்போம். இப்பொழுது அவ்வேலையைப்பார்ப்போர்க்கு மனதிற்படும் ஆச்சரியத்தைமட்டும் குறிப்பிட்டு நிறுத்துவோம்.

மஹாபாரதத்தில் பாண்டவர்கள் காட்டில் குடிக்கத் தண்ணீர் அகப்படாமல் வருந்துகையில் பீமன் தன் கதாயுதத்தால் பூமி பிளக்க ஓர் அடி அடிக்க அதனால் பாதாளத்திலிருந்து நீர்சுரந்துவந்ததென்று நாமெல்லாரும் படித்து ஆச்சரியப்பட்டதுண்டு. இந்த விஷயத்தைக் கதையாகப் படிக்கும்போதே நமக்கு ஆச்சரியமுண்டானால், இந்த அதிசயத்தைக் கண்கூடாகக்காணும்பொழுது எவ்வளவு ஆச்சரியமுண்டாகுமென்பதை அவரவர்கள் தாமே நினைத்துக்கொள்ளவேண்டும். வேகவதியென்பது 'ஆறு' என்னும் பேர்கொண்டாலும் அதில் நீரோட்டம் சுத்தமாகக்கிடையாது. கனமழைபொழிந்தால் ஒரு நாள் அரை நாளைக்கு ஒரு அடி இரண்டடி ஜலம் ஓடுமாம். மற்றக்காலங்களில் அது எங்கும் ஓரே மணற்காடாகவே இருக்கும். இந்த மணற்காட்டின்



மத்தியிலிருந்து ஒரு பட்டணம்முழுவதுக்கும் தேவாமிர்தத்தையொத்த திவ்யமான தீர்த்தம் குடிக்கவும் குளிக்கவும் கிடைக்கிறது. இது என்ன அதிசயம் பாருங்கள். இந்த அதிசயமானவேலைசெய்து மிக்க புண்ணியம்தரும் இப்பெரிய தர்மத்தைச் செய்தவரை நாம் ஏன் நமது புராணகர்த்தர்கள் சொல்லும் ரிஷிகளோடு ஒப்பிடக்கூடாது.

இவ்வளவு திவ்யமான தீர்த்தம் கிடைப்பதாயிருந்தும் அனேகர் அதையருந்தக் கொடுத்துவைக்காமல் அறியாமை யென்னும் பாசத்தால் கட்டுண்டு ஆபாசமான தண்ணீரைக் குடித்து ஆனைக்கால் ஆனைக்கை முதலிய கொடிய வியாதிகளால் வருந்திக்கொண்டிருக்கிறார்களெனக் கேட்பது பரிதாபமன்றோ! இது சங்கதி அவ்வூர் 'டிப் ஸானிடேரி இன்ஸ்பெக்டர்' மூலமாகத் தெரியவர அதுபற்றிய விவரமனைத்தையும் உள்ளதுள்ளபடி யறிந்துகொள்ள இச்சைப்பட்டோம். உடனே சின்னக்காஞ்சீபுரத்தில் ஒருபாகமிருக்கும் ஆபாசநிலையைக் காட்டவேண்டி யழைத்துக்கொண்டுபோனார். அன்று நாம் கண்ட காக்ஷியை இனி நம் ஆயுள்காலமுழுவதும் மறக்கமாட்டோம். இரண்டு தெருவிலுள்ள இரண்டு பத்தி வீடுகள் பின்புறம் ஒன்றோடொன்று பொருந்த இடைவழியின்றி கட்டப்பட்டிருந்தன. அதனால் புழக்கடைக்குப்போக வாசல்வழியன்றி வேறுவழியின்றியிருந்தது. புழக்கடையிலோ மலமல ஆபாசங்களுக்கு வெளிப்போக்கில்லை. வீட்டுவழியாகத் தோட்டி புழக்கடைக்குப் போகக்கூடாதாகையால் அங்குள்ள ஆபாசங்கள் தலைமுறை தலைமுறையாகக் குவிந்துகொண்டுவந்தன. ஒரு பக்கத்தில் மலக்குழியும், ஒருபக்கத்தில் சாக்கடைத் தண்ணீர் தங்கும் குழியும் இரண்டுக்கும் மத்தியில் சொற்பதூரத்தில் வீட்டுக் கிணறுமாக விருந்தது. கிணற்றுநீர் சுற்றியுள்ள பூமியிலிருந்து தரையின் கீழாக ஊறிவரும் ஜலம் என்பது எல்லாருக்கும் தெரியுமே. அப்படியிருக்க இந்த ஸ்திதியிலிருக்கும் கிணற்றிலுள்ள ஜலம் மலமூத்திராதி ஆபாசங்களை வடிக்கட்டியெடுத்த நீரேயன்றி வேறல்ல வென்பது யோசிப்போர்க்கு விசதமாக விளங்குமே. இந்த ஜலத்தைக் குடித்துவந்தால் ஆனைக்கால் முதலிய கொடிய வியாதிகள்நேரக் கேட்பானேன்? இதையுணராத நமது ஜனங்கள் ஆசாரம் கொண்டாடுவதாகச் சொல்லி மிகவும் அருவருப்பும் அசூயையு முண்டுபண்ணத்தக்க இவ்விதத் துராசாரங்களையனுஷ்டிக்கிறார்கள். இவர்களுக்கு உண்மையை விண்டுக்காட்டி விளங்கக்கூறுவார் இல்லாமையாலும் நம்முள் கற்றவர்கள் வீட்டிற் செல்வாக்கின்றி பெண்டுகள் மௌட்டீகத்தால் செய்யும் காரியங்களைத் தடுக்கச் சக்தியற்றவர்களாயிருக்கின்றமையாலும் இப்படிப்பட்ட இழிகுவில் விலக்கத்தக்க வியாதிகள் துன்பங்களுக்கு நாம் ஆளாகி வருந்துகின்றோம். இதனாலேயே சுகாதார சம்பந்தமாகவும் மற்ற உபயோகமான விஷயங்கள் சம்பந்தமாகவும் ஜனங்களுக்கு அறிவையூட்ட முயற்சிக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்திக் கூறிவருவதின் அவசியம் விளங்கும். பித்தாப்பூர் திவானாகவிருக்கும் திவான்பஹதூர் ஸி. ஸோமசுந்தர சாஸ்திரிகள் இது விஷயமாக நம்மோடு பேசிக்கொண்டிருக்கையில் கற்றோரெல்லாம் சரியாக நடந்துவந்தால் ஜனங்களுக்குப் போதிக்கவேண்டிய வேலை அவ்வளவாக இராது என்று சொன்னார். உதாரணத்தைப்போல் போதனை மனதில் ஏறுவதில்லை. இது மிகவும் உண்மையானவாக்கு. இதைப்பற்றி நாம் விரித்துரைப்பது நம்மில் கற்றோர்க்கு இதமாயிராது. அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ச்சிபெற்ற பெரியோர்களும் நமக்குப் புத்திபுகட்டத்தக்கவர்களுமாயிருப்பவர்கள் இது விஷயத்தில் என்ன நினைக்கிறார்களென்பதை அவர்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டு அவர் வாய்ப்பிறப்பாகவந்த மிக முக்கியமான இவ்வாக்கியமொன்றை இங்கு வரைந்திட்டோம்.

பிறகு அறிவைப்பரவச்செய்யும் விஷயமாய் நாம் கருதியுள்ள ஏற்பாடு இன்னதென்பதை தாசில்தாரவர்களிடம் சொல்லிக்கொண்டிருக்கையில், அவர் அவ்வூர் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல்மாஸ்டர் அவ்வேற்பாட்டையே அனுஷ்டித்து நடத்திவருகிறாரென்று சொல்ல நாம் மிகவும் மகிழ்ச்சியெய்தி அவரது பரிச்சயத்தைநாடி மேல்விவரங்களையும் நன்றாக அறிந்துகொண்டோம். அவர் பிரதமைகள்தோறும் ஒன்றுகூட்டிப்போதித்துப் பிரசங்கித்துவரும், பிள்ளைகளையும், உபாத்தியாயர்களையும் நாம் பார்க்கவேண்டுமென்று ஆசைகொள்ள, அவர் 6-வ யன்று சாயந்திரம் அவர்கள் எல்லாரையும் காஞ்சீபுரம் பச்சையப்பன் ஸ்கூல் மண்டபத்தில் சேர்த்துவைத்தார். அந்த மண்டபம்கொள்ளாது அச்சிறுவர்கள் கூடியிருந்த காக்ஷியைக்காண நமக்குண்டான சந்தோஷத்தைச் சொல்லிமுடியாது. அப்பொழுதே அவ்விடத்தில் ஒரு பொதுக்கூட்டம்கூட முனிசிபல் சேர்மான் அவர்கள் கையெழுத்திட்ட விளம்பர மொன்று பிரசுரிக்கப்பட்டு, ஊர்முழுவதும் தமுக்கடித்து விளம்பரப்படுத்தப்பட்டிருந்ததால், அந்த மண்டபத்தில் அவ்வூர் உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், வர்த்தகர்கள், முனிசிபல் கௌன்ஸிலர்கள், மிராசுதாரர்கள் முதலான பிரமுகர்கள் பலரும் வந்துகூடி அக்காக்ஷியைக்கண்டு களித்தார்கள். அப்பொழுது சுகாதாரவிஷயமாய் ஜனங்களுக்குள் அறிவைப்பரவச்செய்யவேண்டி இதுகாறும் நாம் எடுத்துக்கொண்ட ஏற்பாட்டையும், அதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டி அவர்கள் அதுவிஷயத்தில் உதவிசெய்து ஒத்துழைக்கவேண்டுமென்று வற்புறுத்திக்கோறி விண்ணப்பம்செய்துகொண்டோம். அப்பொழுது அக்கிராசனம் வகித்திருந்த ஸப்-மாஜிஸ்திரேட்டு ம-ள-ள-ஸ்ரீ, இராமச்சந்திரராயர் பி. ஏ., பி. எல். அவர்கள் **விவேகசிந்தாமணி** பிரசுரிக்கப்பட்டுவருவதின் நோக்கத்தையெடுத்து விளங்கவுரைத்து அதனாலுண்டாய்வரும் நன்மைகளையும், கற்றோர் மற்றோரிருவரும் மனதொத்துவாழ அது உற்றதோர் உதவியாயிருப்பதையும் வற்புறுத்திக்கூறி அப்பத்திரிகையையும் நம்மையும் சபையறியப் பரிச்சயம் செய்துவைத்தார். அதன்பின் அங்கு நாம் செய்த

பிரசங்கத்தின் நோக்கத்தை மேலே குறிப்பிட்டுவிட்டோம். ஒருமணிநேரத்துக்குமேல் நடந்த அப்பிரசங்கமுடிவில் அவ்வூரில் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ. அரங்கநாதய்யர் ஏற்கனவே யுழைத்துவருகிறபடியால் அவருடைய முயற்சியை ஆதரித்து அவரை உற்சாகப்படுத்துவதோடு இன்னும் அவ்வேலையைத் தொடர்பிடியாய்த் தொட்டுவிடாது நடத்திவர அவ்விடத்துப் பிரமுகர்கள் சிலர் ஒன்றுகூடி ஒரு கமிட்டியாகவிருந்துழைப்பது உசிதமாயிருக்குமென்று சொன்னோம். ம-ா-ா-ஸ்ரீ. அரங்கநாதய்யர் அவர்கள் தாம் செய்துவரும் வேலையை அவர் வாய்ப்பிறப்பாகவே கேட்ட சபையார் நாம் சொன்ன அந்த யோசனையை அங்கீகரித்தவர்களாகக்காட்டினதுமன்றி, அவ்வூர் ரீடிங்ரூம் காரியதரிசியவர்கள் அதையனுமோதித்து அப்படிச்செய்யவேண்டியது அவசியமென்று வற்புறுத்தி வெளியரங்கமாக அச்சபையில் பேசினார்.

"அறிவைப்பரவச்செய்யும் ஏற்பாடு" விவரத்தையும், காஞ்சீபுரம் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டர் செய்துவரும் வேலை விவரத்தையும் இதற்கு அடுத்தபக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். அங்கங்கே இது விஷயத்தில் அக்கறையெடுத்துக் கொள்ளும் நண்பர்கள் அவற்றை முற்றும் படித்து அவ்விதம் தாங்களிருக்குமிடங்களிலும் வேண்டிய முயற்சி யெடுத்துக்கொள்ள முனைவார்களென்று பிரார்த்திக்கிறோம். இவ்வேலை உதாரணத்தாலே யெங்கும் பரவவேண்டுமாதலால் இது விஷயத்தை இவ்வளவு விவரித்து சொல்லநேர்ந்தது.

C. V. S.

## திருநெல்வேலியில் சாணர் - மறவர் கலகம்.

திருநெல்வேலி ஜில்லா சிவகாசியில் சாணருக்கும் மறவர்களுக்கும் ஜாதி மதவித்யாசமாய் உண்டான சண்டைகாரணமாக 6-ந்தேதி மறவர்கள சிவகாசியிலிருந்த சாணர் வீடுகளைக் கொளுத்தி, அவர்கள் சொத்துகளை கொள்ளையிட்டு அவர்கள் ஸ்திரீகளையும் கால்நடைகளையும் உபத்திரவம் செய்து பெருங்கலகம் செய்தார்கள். தென்னல் முற்றிப் பெருங்காற்றானதுபோல இது முற்ற திருநெல்வேலி ஜில்லா வட்டாரம் முழுவதும் பரவி மதுரை, திருவாங்கூரைச்சேர்ந்த இடங்களிலும் பரவி, எங்கும் ஓரே பெருங்கலகமாகப் பரவிவிட்டது. இந்தக் கலகத்தை யடக்க துருப்புகள் சென்று அங்கங்கே யெழுந்த கலகக்காரர்களை யடக்கி நூற்றுக்கணக்கானவர்களைக் கைதிகளாக்கி யிருக்கிறார்கள். மூன்றுவாரமாக நடந்துவரும் பகல்கொள்ளை, தீக்கொள்ளையினாலுண்டான உயிர்ச்சேதம் சொத்துச்சேதம் மிகுதியென்று தெரிகிறது. அனேக கிராமங்கள் பாழாய்ப்போய்விட்டன. இப்படி கலகத்தால் வருந்தி கஷ்ட நஷ்டப்பட்ட கிராமங்கள் நூற்றுக்குமேல் இருநூறுவரையிலிருக்குமென்று தெரிகிறது. கலகத்தையடக்கி, கலகமுண்டானதின் காரணத்தை யறிந்து தெரிவிக்க மிஸ்டர் ஹேம்பிக் அவர்களை கவர்ன்மெண்டார் இரண்டு மாசத்துக்கு மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு ஸ்பெஷல் கமிஷனராக நியமித்திருக்கிறார்கள்.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## வித்தையே பெரியதனம்.

வித்தையின் குணங்களைக்கேள்.

அது கற்பிக்கிறவனுக்கும் சரி கற்கிறவனுக்கும் சரி மேன்மை புரிகின்றது

நீங்கள் யாதாயினும் ஒரு வஸ்துவைப் பிறருக்குக் கொடுத்துவிடும்பட்சத்தில அது உங்களுக் கில்லாமற்போகின்றதல்லவா? ஆனால் வித்தை அப்படிக்கல்ல. அதின் மகத்துவம் என்னவென்றால், வித்வான் தான் அதை இழக்காமலே பூர்த்தியாய்க் கொடுத்துவிடலாம். மற்றொருவன் அதை கிரகிக்கவும் செய்யலாம். வெள்ளி தங்கத்தை இடைவிடாமல் கொடுத்துக்கொண்டிருந்தால் அது குறைகிறது. ஆனால் வித்தையோ பிறருக்குக் கொடுபடுவதினால தினந்தோறும் விர்த்தியாகுமேயல்லாமல குறையவேமாட்டாது. திரவியம் போகிறமாதிரி வித்தை ஒருவிதத்திலும் போகாது, செலவாகாது, திருட்டுப்போகாது நல்ல ஆலோசனைகர்த்தாமாதிரி, நமக்கு வரப்போகிற அபாயங்களை முன்னதாகவே தெரிவித்து அவைகளின் பலன்களை காண்பிக்கிறது. கிரகசாரதினால் ஒருவேளை நமக்கு தொந்திரவு வந்தால் அப்போது வித்தை நல்ல ஆலோசனை சொல்லுகிறது. ஜனங்களுக்கு வித்தையே தோழனாகவும் பிராண சினேகதனாகவு மிருக்கிறது.

இருட்டில் தீவட்டி எப்படி வெளிச்சம் தருமோ அப்படி வித்தை ஜனங்கள் மத்தியில் பிரகாசிக்கிறது. மேலும் ஒரு தீபத்தில் மற்றொன்றை ஏற்றினால் முதல் தீபம் எப்படி அணையாதோ அப்படியே வித்தை சொல்வதனால் மூடனாகிற குருடனுக்கு மூடத்தனமாகிற இருட்டு போய்விடுகிறதேயொழிய சொல்பவனுக்கு குறைவுண்டாகிறதில்லை.

ஆகையினால் வித்தை யென்கிற தனமுள்ளவன் தன் அஜாக்கிரதையினால் அதைப் போக்கடித்துக்கொள்ளவும் கூடாது. தன்சக்தியளவு பிறருக்கு அதைக் கற்பிக்க அசம்மதமாயிருக்கவும் கூடாது.

L. V. V. S.



## அறிவைப் பரவச்செய்வதற்கான ஏற்பாடு.

இந்த ஏற்பாட்டுப்படி சென்னைத் திருவல்லிக்கேணியில் ஏற்படுத்திய "அறிவைப் பரவச்செய்யும் ஏஜன்ஸி" சென்ற 7-வருஷகாலமாக வேலைசெய்து வருகிறது. இந்த ஏஜன்ஸி மூலமாகப் பிரசுரமாகி வரும் **விவேகசிந்தாமணி** யென்னும் அறிவைப்பரவச்செய்வதற்கான மாதாந்தபத்திரிகையும் 7-வருஷமாகி இப்பொழுது 8-வது வருஷம் நடைபெற்று வருகிறது. இவற்றின் முக்கிய நோக்கங்கள்:—

i. உபயோகமான விஷயங்களைப்பற்றி ஜனங்களுக்கு அறிவுண்டாகும்படிச் செய்வது.
ii. தற்காலம் ஆங்கிலேயவித்தை பரவிவருவதால் கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரிவுண்டாய் பேதம் அதிகரித்து வருவதைத்தடுத்து, ஒருவர் கற்ற கல்வியின் சாரத்தை மற்றவர் அறியப்புகட்டுவதற்கு உற்றதோர் உதவியாகவிருந்து இருதரத்தாரும் ஒருமனப்பட்டு வாழும்படிச் செய்யவேண்டுமென்பது.
iii. இந்நோக்கங்களைக்கொண்டுழைக்கும் இதர சங்கத்தாரோடு ஒத்துழைக்கவேண்டுமென்பது.

இந்நோக்கங்கள் நிறைவேற 1892-ஞ மேமீ'த்திலிருந்து பிரதிமாதம் **விவேகசிந்தாமணி** யென்னும் பத்திரிகை பிரசுரித்து வருவதோடு, 1896-ஞ முதற்கொண்டு அதிலிருந்து முக்கியமும் நிரந்தர உபயோகமுமான ரசமான நல்லவிஷயங்களைத் திரட்டி, "**விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள்**" என்னும் தலைப்பெயரிட்டுப் பல புஸ்தகங்கள் நல்லமாதிரியில் அச்சிட்டு நேர்த்தியான கட்டடம் செய்து பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. (இவைகளின் ஜாப்தா அ. ப. ஏஜன்ஸி காரியதரிசிக்கு அரையணா தலையனுப்பி எழுதிக்கொண்டால் கிடைக்கும்.)

இதுடன் நாளது 1899-ஞ மேமாதம் முதற்கொண்டு ஜனங்களுக்குள் **சுகாதாரவிஷயங்களைப்** பற்றியுள்ள அறியாமை காரணமாக வுண்டாகும் பெருந்தீங்குகளை யுத்தேசித்து **சுகாதாரசம்பந்த**மான அறிவைப் பரவச்செய்ய உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் சேர்ந்த செல்வாக்குள்ள ஒரு கமிட்டியார் உதவியையும் ஒத்தாசையையும் கொண்டு விசேஷ முயற்சிசெய்யக் கருதி உழைத்து வருகிறோம். மேலாதரவுக்கு இக்கமிட்டியார் இருப்பதுபோல் காரியத்தில் அறிவைப்பரவச்செய்ய உழைக்கும் **உபகாரிகள்** உதவி அங்கங்கே வேண்டியிருப்பது தீரா அவசியமாக விருப்பதால் ஆதியிலுத்தேசித்தேற்படுத்திய அறிவைப்பரவச்செய்வதற்கான **உபகாரசங்கத்தை** உப்பிக்க விரும்புகிறோம். ஸானிடேரி கமிஷனர் **டாக்டர் கிங்** அவர்களும், வித்தியா இலாகாத்தலைவர் **கனம் டாக்டர் பங்கன்** அவர்களும் இது விஷயத்தில் மிக்க அனுதாபமுற்று ஆதரவுசெய்துதவுவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

**I. உபகார சங்கமாவது:—**

i. **சென்னையிலுள்ள அறிவைப் பரவச்செய்யும் ஏஜன்ஸி** சம்பந்தமாக நாட்டுப்புறங்களிலுள்ள ஒவ்வொரு சிறுபட்டினம், கிராமங்களிலும் அறிவைப் பரவச்செய்யும் விஷயத்தில் ஆசைவைத்து ஊருக்குபகாரமாக அவர்கள் சக்தியானுசாரம் கஷ்டப்பட்டுழைக்க இஷ்டமுள்ளவர்களெல்லாரையும் ஒன்றுசேர்த்து, புண்ணியம்தரும் இப்பொதுவிஷயத்தில் அவர்கள் ஊக்கமவைத்துழைக்கும்படி உற்சாகமூட்டிவர "**உபகாரசங்கம்**" என்று ஒரு சங்கம் ஏற்படுத்தப்படும்.
ii. இச்சங்கத்துக்கு மெம்பர்களாக விருப்பவர்களெல்லாரும் ஊருக்குழைத்து உபகாரம்செய்ய இஷ்டமுள்ளவர்களென்று தாமாக வலுவில் வந்துரைத்து, அதற்காக ஏற்படும் ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளடங்கியுழைப்பவர்களாக விருப்பார்களாதலால் அவர்களெல்லாரும் **உபகாரிகள்** என்று அழைக்கப்படுவார்கள்.

**உபகாரிகளாக இருப்பவர்கள்,**

i. அறிவின் பெருமையையறிந்து அதை யடையப்பேராவா உள்ளவர்களாக விருக்கவேண்டும்.
ii. தாம அறிவையடைய ஆவலாயிருப்பதோடு தாமறிந்தமட்டில் அவ்வறிவைத் தம்மைச்சுற்றியுள்ளாரிடம் பரவச்செய்யவேண்டுமென்கிற நல்லெண்ணமும், அவ்வெண்ணத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உபகாரசிந்தையுமுடையவர்களாகவிருக்கவேண்டும
iii. பொதுவிஷயத்தில் பாடுபட்டுழைக்கப் பூர்ண சிந்தையுடையவர்களாக விருக்கவேண்டும்.
iv. அவரவர்களிருக்குமிடங்களிலுள்ள ஜனங்கள் சோம்பேறிக்கூட்டங்கள் போட்டு வீண்வம்புகள் பேசுவதில் விருதா காலக்ஷேபம் செய்வதைத் தடுத்து, ஒழிந்தவேளைகளில் 10 ப்பேர் ஒன்றுகூடி அறிவுவிர்த்திக்காதாரமாய், தங்களுக்குள்ள விவேகத்தை விசாலிக்கச்செய்யும் உபயோகமான பத்திரிகைகள், புஸ்தகங்கள் இவற்றை வாசித்தோ, வாசித்துக்கேட்டோ சத்காலக்ஷேபம் செய்யும்படி தூண்டப் பின்னடையாது பிரயாசைப்படுகிறவர்களாக விருக்கவேண்டும்.

[ஜனங்கள் மனதைக் கொஞ்சம் கொஞ்சமாக இப்படிச் சத்விஷயங்களில பிரவேசிக்கச்செய்யத் திருப்பிவந்தால், நாளடைவில் 10-ப்பேர் ஒத்து வருகிறவர்களைக்கொண்டு ஒழுங்கான ஒருசபை ஏற்படுத்தி அதில் உபயோகமான புஸ்தகங்கள், பத்திரிகைகளைத் தருவித்துப்படித்தும், பிரசங்கித்தும், மேலே விர்த்தியடையும் வழிகளை நாடியுழைக்கலாம்.]

**சுகாதாரவிஷயமாக, விவேகசிந்தாமணியில்** வெளியாகும் விஷயங்கள் தக்கவர்களால் எழுதப்படுவதோடு வைத்தியசாஸ்திரங்களிற்றேர்ந்த போதகராயிருக்கும் கமிட்டி மெம்பர்கள் இருவருடைய அங்கீகாரம் பெற்ற பின்னே பிரசுரிக்கப்படும். இவைகளில் முக்கியமானவைகள் சிறு புஸ்தகங்களாகத் தனியாக அச்சிட்டு ஸானிடேரிகமிஷனர் **டாக்டர் கிங்** அவர்களுடைய ஆதரவு அங்கீகாரத்தோடு பிரசுரிக்கப்படும்.

**விவேகசிந்தாமணியை** வாங்கி வாசிக்கும் **உபகாரிகள்** இச் சிறுபுஸ்தகங்களைக்கொண்டு மற்ற சாமான்ய ஜனங்களுக்கும் பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கும் படித்துக்காட்டிப் போதிக்கவும், பிரசங்கிக்கவும், இவை உபயோகமாகவிருக்கும். லோகல்

போர்டாரும், முனிசிபாலிடியாரும் இதுவிஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொண்டு உதவிசெய்யக் கடமைப்பட்டவர்களாக விரும்புதால், அவர்களின் கீழுள்ள பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், இன்ஸ்பெக்டிங் ஸ்கூல்மாஸ்டர்களும், ஸானிடெரி இன்ஸ்பெக்டர்கள், ஓவர்சியர்கள், வாக்ஸிநேடர்கள் முதலான உத்தியோகஸ்தர்களும் இது விஷயத்தில் சற்று மனதுவைத்து, சிரமத்தைப்பாராமல் ஜீவோபகாரமாக உழைத்துவர இசைந்தார்களானால் இம்முயற்சி எவ்வளவோ பயன்பட்டுப் பிரயோஜனகரமாக முடியுமென்பதிற் சந்தேகமில்லை. இப்படியே உழைத்துவரும் காஞ்சீபுரம் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டர் அவர்கள் முயற்சி மிகவும் மெச்சத்தக்கதாயிருப்பதால் அவர் உதாரணத்தை மற்றவர்களும் பின்பற்றி நடக்கச் சகமாக, அவர் எழுதிய கடிதத்தை இதன்கீழே சேர்த்து அச்சிட்டிருக்கிறோம். அப்படிப்பேர் எற்கனவே உழைத்து வருவோரும், இனி உழைக்கவிரும்புவோரும் தயவுசெய்து கீழே கையெழுத்திட்டவருக்கு எழுதிக்கொண்டால், இப்படி அங்கங்கே யுழைத்துவரும்உபகாரிகள் முயற்சிகள் வீண்போகாதபடி ஒழுங்குபடுத்தி ஒன்றுசேர்த்து உற்சாகத்துக்கிடந்தரும்படி சீர்ப்படுத்திவருவது சாத்தியமாயிருக்கும்.

சி. வி. சாமிநாதையர்.

திருவல்லிக்கேணி. காரியதரிசி, அ. ப. ஏஜன்ஸி.

---

## காஞ்சீபுரத்தில் அறிவைப்பரவச் செய்யும் ஏற்பாடு அநுஷ்டிக்கப்பட்டுவருவது.

காஞ்சீபுரம் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ, நெ. ரங்கநாதய்யர் அவர்கள் நமக்கு எழுதுகிறார்:

"ஐயா, தாங்கள் சென்ற 7-வருஷகாலமாய் பிரசுரித்துவரும் மாதாந்தரப்பத்திரிகையாகிய **விவேகசிந்தாமணி**யை சென்ற 4-வருஷகாலமாக முனிஸிபாலிடியார் எனக்காக வரவழைத்துக்கொடுக்கிறார்கள். அவைகளில் வெளியாகும் விஷயங்களோ மனிதன் எந்தெந்த விஷயங்களைக் கவனித்தால் விருத்தியடையக்கூடுமோ அந்த விஷயங்களைத் தெளிவாயும் சுலபமாயும் படிக்க உற்சாகப்படுத்தும்படியுமான நல்ல தமிழ் நடையில் எழுதப்பட்டுவருகின்றன. ஒவ்வொன்றையும் விவரித்து எழுதவேண்டுமானால் அதிக இடங்கொள்ளுமாகையால் இரண்டொரு விஷயங்களைமாத்திரம் குறிப்பிடுகிறேன்: 1. வேளாண்மை, 2. நகைப்பைத்தியம், 3. செல்வநாசம், 4. சுகாதாரவிஷயம், இன்னும் அநேகமுள. இவைகளில் நமக்குத்தெரியாத விஷயம் என்ன சொல்லியிருக்கப்போகிறது என்று நினைக்கலாம். படித்துப்பார்த்தால்மாத்திரந்தான் தெரியவருமேயொழிய என்னால் சொல்லத்திறமில்லை.

2. இந்தப்பத்திரிகை எனக்கு வர ஆரம்பித்தது முதல் அந்தந்தமாதப்புத்தகத்தை நான் நன்றாய்ப் படித்தும் மாதத்தில் இரண்டுமுறைவரும் பிரதமையன்றுதினம் உபாத்தியாயர்களையும் 4 5-பாடசாலைகளின் பிள்ளைகளையும் முறை முறையாக வரவழைத்து அவர்கள் மனதில் பதியும்படியாகப் படித்தும் தெரியாதும் கொஞ்சம் கஷ்டமான விஷயங்கள் இருந்தால் அவைகளை நன்றாய் விளங்கும்படி போதித்தும் வருகிறது வழக்கம். பிறகு இவ்வூரிலுள்ள மூன்று முனிஸிபல் பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறேன். அவர்கள் வரிசைக்கிரமமாக படித்துத் தங்களுடைய பிள்ளைகளுக்குப் போதித்து வருகிறார்கள்.

3. மேற்கண்ட பிரதமைதினங்களில் ஆஜராகும் பிள்ளைகளை கிராண்டுக்குப் பரீக்ஷிப்பதுபோல கிராண்டுபாடங்களிலும், விவேகசிந்தாமணியில் பிரசுரமாகும் சுகாதாரவிஷயங்களைப் போன்ற முக்கிய விஷயங்களிலும் பரீக்ஷித்து விசேஷமாய்த் தேறியவர்களுக்கு அரையணாவும் சாதாரணமாய்த் தேறியவர்களுக்கு காலணாவும் கொஞ்சநாள் கொடுத்துவந்தோம். பிறகு துட்டுகொடுக்குமதியை மாற்றி சிறியகதைப்புத்தகங்கள் இனாமாகக் கொடுத்துவந்தோம்.

4. ஒவ்வொரு மீட்டிங்குக்கும் சுமார் 10 முதல் 20, 25 உபாத்தியாயர்களும் 50 முதல் 70, 80-பிள்ளைகளும் வருவார்கள். விசேஷ மீட்டிங்காக இருக்கும்போது இவ்வூரிலுள்ள இப்பேர்ப்பட்ட விஷயங்களில் சிரத்தையும் உற்சாகமும் எடுத்துக்கொள்ளும் வித்வான்களாயும் பிரமுகராயுமிருக்கப்பட்டவர்களை அக்கிராசனம் வீற்றிருக்கும்படி கேட்கிறதுண்டு. அவர்களும் எனது வேண்டுகோளின்படி வந்து வேண்டிய உதவிகளைச்செய்து பரிசுகளை அவர்கள் கையால் கொடுப்பது வழக்கம்.

5. இதற்கு ஜீவோபகாரம் எப்படியென்றால் கல்வி அபிவிர்த்தியில் ஆசக்தியுள்ளவர்களை நான் இம்மாதிரி உதவிசெய்யவேண்டும் என்று கேட்கிறதுண்டு. இப்பேர்ப்பட்ட உதவியைக்கொண்டு என்னால் இயன்றவரையில் செய்துவருவது வழக்கம்.

6. தங்கள் **விவேகசிந்தாமணி**யைப் படிக்கிறதினால் நான் எவ்வளவோ விர்த்தியடைந்து வருவதுடன் எனது உபாத்தியாயர்களையும் விருத்தி செய்ய வெகு உபயோகமுள்ள கருவியாயிருக்கிறது. இதுவரையில் தங்கள் புத்தகத்தைப்படித்துமாத்திரம் ஆனந்தப்பட்டிருந்தேன். இப்போது இரண்டு மூன்று நாளாக எங்களூருக்குத் தாங்கள் விஜயஞ்செய்து தங்கள் சிநேகத்தைச் சம்பாதித்து தங்களுடன் கூடவிருந்து அனுபவித்த சந்தோஷத்தை அளவிட்டு சொல்லமுடியாது. தங்களுக்குள்ள எவ்வளவோ வேலையுடன் இந்த ஊர் க்ஷேமத்தைநாடி சௌகரியமாயிருக்கும்போது இவ்வூருக்கு விஜயம்செய்து வேண்டியசகாயம் செய்வீர்களென் கோருகிறேன்.

காஞ்சீபுரம், 7-6-99. } நெ. ரங்கநாதய்யர், இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டர்.

# VILLAGE SANITATION IN INDIA.

SIR,—I have just returned to Madras after making a week's stay in Coimbatore, where I have been busy endeavouring to interest officials and members of Local Boards and Municipal Councils in the sanitation movement now being started under the auspices of some of the best lovers of the country both among Europeans and Indians.* I interviewed most of the District officials, from the Collector downwards, and many of the leading men in Coimbatore, all of whom received me kindly and gave a sympathetic hearing to my proposals in connection with spreading a knowledge of the elementary principles of sanitation among the people at large, and promised their co-operation to a certain extent. By kind invitation of the President, Coimbatore Taluq Board—who, by the bye, is in entire sympathy with the new movement—I addressed a meeting of the members of that Board on Monday last, the 15th instant, and urged on the members the necessity of taking active steps in enlightening the people on sanitary matters, and was fortunate enough to enlist their active sympathy for the movement. The Provincial Social Conference has also passed a Resolution on the subject, recognising the necessity of making special efforts, to enlighten the people on the elementary principles of sanitation. I append below a short appeal on the subject, which, I trust, will receive your earnest attention and favourable response.

APPEAL.

Writing in July, 1898, on the subject of educating the masses in sanitary matters, in reply to an editorial note on the subject that appeared in the *Madras Mail*, I related a bit of my own experience and concluded as follows:—

"What is wanted is an awakening of the masses to a consciousness of the evils that surround them every moment of their life owing to their living under insanitary conditions. The best way to do this under the present circumstances is by the wide circulation of useful tracts and by frequent lectures. The latter course, if adopted and worked by a central organisation on a large scale and in a systematic way, would produce much beneficial result; but it would require such a large command of resources in men, money and brains, that it is impossible to think of any feasible scheme in the near future. The former course appears to me a little more feasible, and a beginning at least could be made if only the educated people, including officials, would stand up and stretch out a helping hand. The Diffusion of Knowledge Agency is prepared to issue useful tracts on sanitation and public health, and other kindred matters, if some of our leading men who talk big on public occasions will give it a little help and support—not mere lip support, as they are wont to give in plenty, but a little substantial help and support in hard cash or harder work. The Local Boards and Unions can do much by purchasing these tracts and distributing them among the people through the agency of schoolmasters, overseers, and others interested in the work. Dr. King quite approves of the feasibility of this idea; but the difficulty is, that no idea, however feasible and good, takes practical shape in this country, unless brought out under the ægis of direct official support and countenance: and such countenance and support it is hard to obtain for an unpretentious agency, under existing circumstances."

It is proposed to publish regularly every month in the *Viveka Chintamani* a series of easy papers on sanitation and allied subjects and to issue them afterwards separately in the form of tracts, which will be available at a moderate price for distribution among people by Local and Municipal Boards and Unions—whose willing co-operation will form an essential condition of success for such a movement—by private persons and philanthroppists and all others who are interested in the progress of sanitary ideas among the people.

The principle relied on for working the movement is that of utilising voluntary efforts and willing co-operation for public good by individual members of society; and if our endeavour to organise a voluntary Association of Helpers proves successful, it is proposed to organise a system of popular lectures in villages.

Besides what the Government can do and actually does by Acts and Regulations to promote village sanitation "there are other agencies from which much may be expected." The first of these is, to quote from the Government of India's Blue Book on village sanitation in India, "the constant pressure of the Government officials, both as advisers of the people and in their Magisterial and executive capacity. There is no doubt they can do immense good by visiting the villages and impressing on the villagers the necessity of improved sanitation." The second, as ably urged by the veteran Miss Nightingale, "is the influence of the educated classes as missionaries of sanitary reform. There can be no better work for the educated classes to undertake," and it is hoped they "will see the necessity of it."

I now appeal to all educated persons in general and to Presidents and Members of Local and Municipal Boards and Unions, and to Government officials in particular, who wield an immense influence for good over the people in this country, to lend their aid and co-operation to this movement and help to further the cause of sanitary reform by enlightening the people on matters that most vitally affect their well-being in every day life.

C. V. SWAMINATHAIYAR,
*Secy. D. K. Agency.*

*Triplicane, May* 1899.

*P. T. O.*

---

* The following is a list of persons who have up to date consented to lend the weight and influence of their names and their active interest in furthering the movement

Lieut-Col. W. G. King, M. B., D. P. H., I. M. S., C. I. E.
The Hon'ble Mr. Justice Subramania Iyer, C. I. E.
A. O. D. Harding, Esq., I. C. S.
M. R. Ry. R. V. Srinivasiar Avgl., Dewan Bahadur.
" V. T. Vedadrisadasa Moodr. Avgl., Retired Judge.
" H. Subbaraya Aiyar Avgl., Retired Dy. Collector.
" A. C. Pranatharthihara Iyer Avgl., Asst. Inspector of Schools.
W. Legh, Esq., I. C. S.
M. R. Ry. T. S. Balakrishna Iyer Avgl., Public Prosecutor.
Dr. P. S. Chandrasekara Iyer, M. B., C. M.
Dr. C. B Rama Rao, L. M. & S.
Dr. T. Luker, Madras.

## THE DIFFUSION OF KNOWLEDGE AGENCY.

*(ESTABLISHED MARCH 1893.)*

### OBJECTS OF THE AGENCY.

To diffuse general knowledge on useful subjects among the masses.

To serve as a medium of communication between the educated classes and the masses and thereby create a fusion of thought and feeling between those two classes.

To co-operate with other Agencies having similar objects in view.

### METHODS OF WORKING.

1. Publishing a monthly Journal in Tamil which will be devoted to the diffusion of general knowledge.

2. Organising an Association of Helpers in Villages and Towns who will do all in their power to carry out the objects of the Agency.

3. Affording information and advice to people who may seek them in matters connected with the aims of the Agency.

4. Circulating and aiding the circulation of useful books and publications in the Vernacular.

5. Encouraging and extending the establishment of Reading Rooms or Village Societies in the Mofussil.

### MEMBERSHIP, &c.

All educated persons sympathising with the objects of the Agency and willing to promote the achievement of those objects by active work or pecuniary aid will be eligible to become Members.

Willing workers and intending subscribers or donors are requested to communicate with the Secretary to the Agency, Mr. C. V. Swaminatha Iyer, *Triplicane, Madras.*

☞ To facilitate the work of the Agency in 'diffusing general knowledge on useful subjects among the masses,' and in creating a healthy taste for general reading among the people, a "Library of General Knowledge" is being gradually formed and developed. Contributions to the Library, in the shape of interesting and instructive books and other useful publications, will be gratefully received and thankfully acknowledged by the Secretary.

Note (1).—"*Viveka Chintamani*," the organ of the Diffusion of Knowledge Agency, is published regularly every month from May 1892.

Note (2).—In furtherance of the Objects of the Agency, a series of useful and interesting Tamil publications of permanent value are issued from time to time since 1896 in a handy form, under the title of the "*Viveka Chintamani* Series." For further particulars, apply to the *Secretary, D. K. Agency*, Triplicane, Madras.

Note (3).—Considering the importance of a wide diffusion of the elementary principles of sanitation and public health among the mass of the people, it is proposed to make a special effort, with the aid and co-operation of an influential Committee,* to publish tracts and booklets on Sanitation and Health, and later on to organise a system of popular lectures in villages and towns with Magic Lantern exhibitions, if possible.

The Director of Public Instruction who has in one of his previous proceedings "noticed with pleasure the satisfactory working of the "*Diffusion of Knowledge Agency*" has passed the following proceedings in connection with the "*Viveka Chintamani.*"—

**Proceedings of the Director of Public Instruction,** *No B. B., 1, 8, dated 13th December 1893:—* "*The Acting Director considers that the* "Viveka Chintamani," *judging from the matter hitherto published in it, is a most useful and interesting Magazine and he wishes it every success.*"

(Signed) A. MONRO,

*Ag. Director of Public Instruction.*

* For a list of members see foot-note on the reverse.

P. T. O.

The Hon'ble Dr. Duncan, Director of Public Instruction, writes:—"Thanks for your pamphlet on Village Sanitation, which I have read with interest . . . I fear that 90 % of Indian villages are managed in the way you describe.

"I have read Note 3 and cordially approve of what you propose and will do what I can to promote the measures you have in view . . . I think you are wise in confining yourselves to the Tamil Districts at the outset."

... OF BO... MADRAS 7 - ... 1899

லேசான காகிதப்பதிப்பு
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2.




அறிவைப்பரவச்
செய்வதற்கான

மாதாந்தரத்
தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1899வரு ஆகஸ்டுமீ [இலக்கம் 4.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year*, i. e., *in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

**In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.**

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**தளமான காகிதப்பதிப்பு:**—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

**லேசானகாகிதப்பதிப்பு:**—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

**வருஷாரம்பத்திலே** (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவங்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவின்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட அநுகூலப்படி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## சந்தாதாரர்களுக்கு அறிக்கை,

**விவேகசிந்தாமணி**, சென்றமே௴ முதல் பிரதிமாதம் முதல்தேதியன்று பிரசுரிக்கப்பட்டுவருகிறது. பத்திரிகை வந்து சேராதவர்கள் அந்தந்த௴ 15௳க்குள்ளாக எழுதித் தெரிவிக்கவேண்டும். அதற்குப்பின் வரும் முறைபாடுகள் கவனிக்கப்படா. பலர் மாதக்கடைசியிலும் மறுமாதத்திலும் பத்திரிகை வரவில்லையென்று எழுதுவதால் அவர்கள் புகார்கள் சரியாக விசாரிக்க முடியாமற்போகின்றன.

## READINGS AT HOME.

### A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.

8-ம் நாள் படிப்பு.

எட்டாநாட்பகலில் யதாப்பிரகாரம் நால்வரும் கதாசிரவணத்துக்கு வந்து கூடினதும், சுப்பலக்ஷ்மி தாயாரின் அனுமதியால் புஸ்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினாள்.—

"இவ்வாறு, சுயம்வரமண்டபத்தில் வந்து, தமயந்தி நளமஹாராஜாவுக்கு மணமாலையைச் சூட்டி யகன்றபோது, அங்கிருந்த அரசர்களெல்லோரும், 'ஹாஹா! தமயந்தி இன்று பெறுதற்கரிய பேரழகைப் பெற்றதனால் அடைதற்குரிய அரும்பயனை யடைந்தாளன்றோ?' என்று ஓரே சொல்லாக வாய்விட்டுக்கூறி மகிழ்ச்சிகொண்டனர். அதைக்கண்டு தேவேந்திரன், 'நாம் என்ன தந்திரம் செய்தும் எவ்வளவு பிரயாசைப்பட்டும் நமக்கு லபிக்காத மடந்தையை இந்நளன் எளிதில் கொண்டுசெல்வானோ?' என்னும் பொறாமையினால் மனம் புழுங்கிக் கண்களினின்றும் கோபப்பொறிகள் சிதற அங்கிருந்த அரசர்களைநோக்கிச் சொல்லுகின்றனன். 'ஓ சூரியகுலத்தில் தோன்றிய அரசர்களே, சூரியனைக்கண்டு சந்திரன் ஒளிமழுங்குவதன்றிச் சந்திரனைக்கண்டு சூரியன் ஒளிமழுங்குவது முண்டோ? நீங்கள் இச்சந்திரகுலத்தானாகிய அரசனுக்கு அழகில் தோற்று அரிவையை இழந்தது என்ன ஆச்சரியம்! இவ்வொன்றுதானோ? இன்னம் கேளுங்கள்: என்றைக்கு, தமயந்தியை நளன் தழுவப் பெற்றானோ அன்றைக்கே இக்கடல்சூழ்ந்த உலகமெல்லாம் அவனடிக்கீழ் ஆயிற்று. இனி உங்களுக்குச் செய்யத்தக்கது வேறொன்றுமில்லை. பொன்முடி எதுக்குப் பூஷணம் எதுக்கு? வெண்கொடை எதற்கு, வேற்படையெதற்கு? இவையனைத்தையும் துறந்துவிட்டுச் சடைமுடிதரித்து வற்கலையுடுத்துக் காட்டிற் சென்று காய்கனியருந்தித் தவம்செய்தலே யோக்கியமாகும்.' என்று அவர்களை நிந்தித்துப் பின்னும் சொல்லுகின்றனன்: 'ஓ அரசர்களே உங்களுக்கு மானமும் வலியும் உண்டானால் என் வார்த்தையை ஓருங்கள், ஒருகை பாருங்கள், உங்களுக்குற்றவாசையைத் தீருங்கள். தமயந்தி மாலை சூட்டியவனுக்கே உரியளென்று எண்ணவேண்டாம். எவன் நளனோடு போர்செய்து வெற்றிகொள்ளுகின்றானோ அவனுக்கே உரியவள்.' என்று பலவாறுசொல்லி அரசர்களைத் தூண்டிவிட்டனன். இயற்கையிலேயே போரில் இச்சையுள்ள அவ்வரசர்கள் இவ்வாறு தூண்டப்பட்டபின் விட்டுவிடுவார்களா? வெறும்வாயை மெல்லும் அம்மையாருக்கு அவலகப்பட்டதுபோலாயிற்று! உடனே அவர்கள் எரிபோற்கனன்று, இடிபோலார்ப்பரித்து ஊழிக்காற்றைப்போல் அதிவேகமாய் உருவியவாளும் கையுமாகக் குதித்தெழுந்து, தங்கள் சேனைகளைத்திரட்டித் தும்பை மாலை சூடிப் போர்செய்யப் புறப்பட்டனர்.

"அதுகண்டு நளன் 'ஹாஹா அப்படியா! இவ்வரசர்கள் வலியையும் இந்திரன் சூதையும் இன்று பார்த்துவிடுவோம்.' என்று புன்னகை கொண்டு தானும் போருக்கெழுந்தனன். அப்போது தமயந்தி 'ஐயோ என்னவிளையுமோ! கடல்போலக் கலந்துநின்ற இத்தனைபேர்களையும் அரசன் வெல்ல வல்லானோ' என்று பயந்து முத்துமுத்தாய்க் கண்ணீர்சிந்த அழுது கலங்க, நளன் அவளை நோக்கி, 'என்காதற் கண்மணியே! நீயேன் வருந்துகின்றாய்? நான்



போய் இதோ நொடிப்பொழுதில் இவர்கள் அனைவரையும் வென்று புறங்கண்டு வருகின்றேன். என்னுடைய விற்றிறத்தையும் வீரத்தையும்நீ பார்.' என்று தைரியப்படுத்தித் தனக்குச்சாதகமாக யுத்தத்துக்கெழுந்துநின்ற மாமனாகிய வீமனைநோக்கி 'நீரிங்கு நங்கையைக்காத்துக்கொண்டிரும்; நானே சென்று அரசர்குலங்களை வென்றுவருகிறேன்.' என்று தன் சேனாசமுத்திரத்தைத் திரட்டி நடத்திப் போருக்குப்புறப்பட்டனன்.

"இவ்வாறு சென்ற நளமஹாராஜன் யானைக் கூட்டத்துட்புகுந்த ஆண்சிங்கம்போல அரசர் கூட்டத்துட் புகுந்து, அவர்களெல்லோரும் நடுங்கி அலமரவும் திக்கஜங்களும் திகைத்தோடவும் சங்கநாதம் செய்து வில்லைவளைத்து நாணொலிகொண்டபோது இந்திரன் கண்டு, 'ஐயோ! என்னவெண்ணி என்னசெய்தேன்.! இவனது தோள்வலிக்கு இம்மன்னவர்கூட்டம் எதிராமோ?' என்று ஏக்கம்கொண்டனன். அன்று நளனுக்கும் அரசர்களுக்குமுண்டான அவ்வுயுத்தத்தை வருணித்துக்கூறல் ஆயிரம் நாவைப்பெற்ற ஆதிசேடனுக்கும் அசாத்தியமாயின் மற்றவர்களுக்குச் சாத்தியமாமோ? அன்று அந்நளன் கைப்படையால் உயிரிழந்து அந்தகபுரத்தையடைந்தவர் எத்தனை! உயிர் கொண்டோடிப்பெற்றோம்பிழைத்தோமென்று தப்பி யொளித்தவர் எத்தனை!

"இவ்வாறு நிடதர்பெருமான், யுத்தத்தில் எதிர்த்த அரசரையெல்லாம் வெற்றிகொண்டு முற்றும் முடிக்கும் காலாக்கிருத்ரன்போலக் கனன்றுநின்ற அளவில் தேவர்கோன் பார்த்து, 'நாமின்று அரசனைவேண்டி இவ்வுயுத்தத்தை விலக்காவிடின் இவன் இவ்வுலக முழுதும் முடித்துவிடுவான் போலிருக்கின்றதே,' என்று கருதித் தானும் மற்றத்தேவருமாக நளனை அடுத்து, "ஓ ராஜசிங்கமே, உன் வாய்மையின் பெருமையை அன்று நீ எம்பொருட்டுத் தூது சென்றபோது கண்டோம். உன் தோள்வலியின் பெருமையை இன்று இப்போரில் கண்டோம். உனக்கொப்பாவார் உலகில் யாவர்! இனி இச்சமரைவிட்டுத் தமயந்தியை மணம் புரிந்து சுகமாகவாழ்ந்திருப்பாயாக," என்று வேண்டிக்கொண்டனன். நளனும் அவ்வேண்டுகோளுக்கிணங்கித் தேரினின்றிழிந்து பாரினிற்குதித்து அத்தேவர்களை வணங்கிநிற்க, அவர்கள் நால்வரும் அவன்பால் மனமகிழ்ந்து அவனுக்குச் சிலவரங்களைக்கொடுத்தனர். இந்திரன், 'நீ எவ்விடத்தே வேள்விசெய்யினும், நானங்கு என்னுருவோடு வந்து அவிர்ப்பாகம் கொள்வேன்" என்றான். அக்கினி, அழலில்லாமல் அமுதம்போலச் சமைக்கவும்; இயமன், எவ்வகையான இடர்வந்தகாலத்தும் நெஞ்சில் தர்மசிந்தை நீங்காதிருக்கவும், யுத்தத்தில் வேண்டிய ஆயுதங்களைப்பெறவும்; வருணன், மாலைவாடாதிருக்கவும், சமுத்திரத்தை வேண்டினும் வற்றச்செய்யவும், நீரில்லாத பாலைவனத்தில் நினைத்தவுடனே ஜலமுண்டுபண்ணவும், இப்படி வேறுவேறு வரங்களை அளித்தனர். நளனுக்கிவ்வரங்களை அளித்ததேயன்றித் தமயந்திக்கும் அவளது கற்பைக் கெடுக்கக் கருதி அவளைத்தொட்டபேர்கள் ஆவி நீங்கவும், அவள் வேண்டிய ரூபங்களைத்தரிக்கப் பெறவும் வரங்களீந்து, அவர்களிருவரையும் ஆசீர்வதித்துத் தேவர்கள் தத்தம் இருப்பிடம் சென்றனர். அரசர்களும் அவரவர் நகரம் போய்ச்சேர்ந்தனர்."

சிவகாமி.—தேவர்கள் தொலைந்தார்களா ஒரு சாதி? அவர்கள் தம்மாலானமட்டும் தான் பார்த்தார்கள். தமயந்தியும் வசப்படும் வழியைக்காணோம். நளனும் இவர்களது கிருத்திரமச்செய்கைகளுக்கு ஈடழிந்து பின் வாங்குவதாயில்லை. நல்லவேளையாய்ப், 'போகிறபிசாசு குடத்தையுடைத்தது' மென்று போகிறபோக்கில் இன்னம் இடையூறிழைத்துக் கெடுதல் சித்தமும் தீர்க்கவைரமும் பகையும் கொள்ளாமல் அவர்பால் மகிழ்ந்து அவர்களுக்கு வரங்களையும் கொடுத்துச் சென்றார்களே. அது விசேஷம்தான். இவர்

களுடைய தெய்வத் தன்மையும் சிறப்பும் இதில்தான் செவ்வையாய் விளங்குகின்றன. இவ்வரங்கள் நளனுக்கும் தமயந்திக்கும் பிற்காலத்தில் நிரம்ப உபயோகமாயிருந்திருக்கலாமென்று எண்ணுகிறேன்.

தாயார்.—ஆகா, வெகு உபயோகமாயின. அவ்வரங்களில் ஒன்றால் தமயந்தி ஆபத்துக் காலத்தில் தன் கற்பையும் உயிரையும் காத்துக்கொண்டனள். நளனும் மண்ணிழந்து வறுமையால் மெலிந்தகாலத்தில் ஒரு ஜீவனத்தைக் கஷ்டமில்லாமல் தேடிக்கொண்டான். அவற்றை மேலே வாசிக்கும்போது பார்க்கலாம்.

தாத்தா.—அக்நிதேவன் நளனுக்குப் பாகவித்தையை அனுக்கிரகித்தபோது இது அரசனாகிய நமக்கேன்? வேண்டாமென்று வெறுத்துத்தள்ளாமல் ஸ்வீகரித்ததைப் பார்த்தால், இவ்வளவு பராக்கிரமசாலியாகிய இந்நளமகாராஜன், 'களவும் கற்று மற' என்றபடி, எல்லா வித்தையும் தெரிந்திருத்தல் அவசியமென்று எண்ணினான்போலும். இப்படியிருக்கத் தற்காலத்தில் சில பெண்டுகள்கூட உப்புப்புளிபோட்டுச் செவ்வையாகச் சமைக்கத்தெரியாமல் சமையற்றொழிலை அலக்ஷ்யம் செய்கின்றார்களே! கையில் இரண்டு காசுண்டானால் "நமக்கேன் அடுப்பண்டையிற்போய் பொசுங்கவேண்டும்? வேண்டுமானால் பரிசாரகனைப் போட்டுக்கொள்ளுகிறோம்." என்றெண்ணுகிறார்களே! என்ன பேதைமை பார்த்தாயா?

ருக்மணி.—நன்றாகச் சொன்னீர். சமைக்கத் தெரியாத பெண்ணும் சம்பாதிக்கத் தெரியாத புருஷனும் இரண்டும் ஒருபோலத்தான். கணவனைச் சந்துஷ்டிபண்ணுவதற்கும், அவன் சுகாபிவிர்த்திக்கும், அதிதிகளையும் விருந்தினரையும் உபசரித்து ஆதரிப்பதற்கும், கணவன் வரும்படிக்குத் தக்கபடி செலவு செய்தற்கும், இச்சமையல்திறமை இன்றியமையாதது. ஒவ்வொரு காரியத்துக்கும் பரிசாரகனையே நம்பி அவன் முகம் பார்க்கவேண்டிவரின் வீட்டெஜமானியின் அதிகாரம் அவனிடத்தில் எவ்வாறு செல்லும்? அவனைத்தள்ளித் தானே செய்யத்திறமிருந்தாலல்லவோ அவனுக்குப் பயமிருக்கும்? வேலை தெரியாத மேலதிகாரியின் வெருட்டலுக்கு அவன்கீழிருப்பவர் பயப்படுவார்களா?

தாத்தா.—இன்னும் பார்த்தாயா! பெண்ணாய்ப் பிறந்தவளுக்குச் சமைக்கத்தெரியாமற்போகிறதா என்று சொல்லி அநேகர் இக்காரியத்தை அதிசுலபமாக எண்ணி அலக்ஷ்யம் செய்கிறார்கள். பெண்களுக்குத் தக்கபடி பால்யத்தில் கற்பிப்பதில்லை. அதற்கென்ன, நானும் சமைத்தேனென்று வெந்ததும் வேகாததும் கைத்ததும் காறலுமாக உப்புப்புளி முதலிய பதார்த்தங்களைக் கைகொண்டமட்டும் வாரியிட்டு வாய்க்கு வழங்காமலும் உடம்புக்கொவ்வாமலும் அடுப்பிலேற்றி யிறக்கிவிட்டாலாயிற்றா? பாகமென்பது சிற்ப முதலியவற்றைப்போல ஒரு வித்தையன்றோ? அதில் தேர்ச்சியடைய எவ்வளவோ சூசனையும் புத்தியும் பழக்கமும் வேண்டுமே.

ருக்மணி.—ஆகா, இதில் எவ்வளவோ தேர்ச்சிக் கிடமிருக்கின்றது. செய்பவர் அறிவுக்கும் யுக்திக்கும் செயலுக்கும் தக்கபடிப் பதார்த்தங்களைப் பற்பல விதமாகக்கூட்டிப் பல வேறுணவுகளாக நாவுக்குச் சுவையார எவ்வளவோ தினுசு தினுசாகச் சமைக்கலாம். தெரியாதவர் கையில் எவ்வளவு சாமக்கிரியைகளிருந்தும் பேடிகையில் ஆயுதம்போலப் பயனில்லாமற்போகும். தெரிந்தவர்களோ வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்றபடி எதையும் பக்குவம்செய்ய வல்லவர்களாவார்கள். நம்தேசத்தில் ஆரோ ஒருவள் சமயலுக்குத்தக்க சாதனங்களில்லாமல், நெற்குருத்தைக் கறியாக்கியும் புளியின்பூவை ரசம்செய்தும் பசியால் வருந்திவந்த ஒரு அரசனுக்குப்போட்டு அவனால் மானியம் கொடுக்கப்பெற்றாளாமே! இதுபோல்வே பிரான்சுதேசத்திலொருவன் சமையலுக்குத் தக்கபொருள் கிடையாதபோது ஒரு பழஞ்செருப்புத்தோலைப் பதமாக்கிப் பக்குவமாகச் சமைத்து உண்டவர் அனைவரும் உவந்துகொள்ளும்படிப் பரிமாறினானென்று கேள்வி.



சிவகாமி.—நான் வெகுநாளாய் 'ஐரோப்பிய துரைசானிகள் வேலையே செய்வதில்லை. அதினும் சமையல் முதலிய கடினவேலைகளைச்செய்ய அவர்களுக்கென்ன தலையிலெழுத்தா? எப்போதும் புருடருடன் வண்டிபோட்டுக்கொண்டு உலாத்துவதுதான் வேலை' யென்றெண்ணியிருந்தேன். அவ்வெண்ணம் முற்றும் தப்பென்று நேற்று விக்டோரியா சக்கிரவர்த்தினியின் சரித்திரத்தைப் படித்தபோது தெரிந்துகொண்டேன். இராணியவர்களின் புத்திரிகள் பால்யத்தில் சமையல் வேலையை நன்றாகக் கற்றுக்கொண்டதாகவும் பலமுறையும் சமையல்செய்து சிற்சில சமயங்களில் தம் தாய் தந்தையருக்கும், அநேகமாக ஏழைஜனங்களுக்கும் இட்டுவந்ததாகவும் படித்தேன். மஹாராணியின் பெண்களுக்கே சமையல் தொழில் கற்றுக்கொள்வ தவசியமானால் மற்றவர்களுக்குக் கேட்பானேன்?

தாத்தா.—எங்கேயோ கேட்ட ஞாபகம். இப்போது ஐரோப்பாவிலுள்ள இராணிமார்களில் ஒருவர் சமையல்வேலையில் நிரம்பத் தேர்ந்தவராம்! தம் கணவருக்குத் தக்க போஜன பதார்த்தங்களைத் தாமே சமைத்துப்போடுவாராம். இந்தச் சங்கதிகளெல்லாம் நம்முடைய பெண்களுக்குத் தெரியாதுபோலிருக்கிறது. தையலும் குத்தலும் சிரமப்பட்டுப் பழக்குகிறபேர்கள் தங்கள் பெண்களுக்கு முதல் முதல் சமையல் பழக்கினால் நிரம்ப உபயோகமாயிருக்குமே.

ருக்மணி.—அநேகவிஷயங்களில் ஐரோப்பியர்களுடைய ஆசாரங்களையும் நடவடிக்கைகளையும் அறியாமல் நாம் அவர்களைத் தூஷித்து நம்மைப் பூஷித்துக்கொள்ளுகிறோம். உண்மையை விசாரித்தால், அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் எவ்வளவோ கவனத்தைச் செலுத்துகின்றார்கள். 'செய்வன திருந்தச்செய்' என்பதைத் தேவவாக்கியமாகக் கொண்டவர்கள் இவர்களே. ஒரு காரியத்தையும் எவ்வளவு அற்பமானாலும் அலக்ஷ்யம் செய்வதில்லை. ஸ்வீடன் தேசத்தில் பெண்களுக்குக் கல்யாணமாகவேண்டுமானால் அவர்கள் சமையல் பரிக்ஷையில் தேறவேண்டுமாம்! இது எவ்வளவு நல்ல சட்டம் பாருங்கள். இந்த ஏற்பாடு நமது தேசத்தில் ஏற்படுத்த முடியுமா! ஐந்து வயசிலும் நாலுவயசிலும் கல்யாணம் ஆகும் பெண்களுக்குச் சமையலெப்படிக் கற்றுக்கொடுப்பது? அவர்களுடைய கட்டெங்கே சட்டமெங்கே? அவர்களுக்கும் நமக்கும் வெகுதூரம். இன்றைக்கிவ்வளவில் கதையை நிறுத்துவோம்.

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## சஞ்சோக்தை சுயம்வரம்

அல்லது

## ப்ரித்விராஜா சரித்திரம்.

### XII. தடையுறுத்தல்.

ஜயசந்தமஹாராஜா யாகாரம்பத்திலே தடைநேரிட்டதைக்கேட்டு ஆத்திரம்பொங்கி

யுத்தத்திற்குச் சித்தம்செய்ய உத்தரவுகொடுக்கையில் குருவாகிய சுக்கிராசாரிவந்து யுத்தப்பேச்சை மாற்றி அரசனோடு அந்தரங்க ஆலோசனை செய்யத்தொடங்கினதைக் கண்டோமே. அவர்கள் அந்தரங்க ஆலோசனை செய்துக்கொண்டிருக்கையில் நாம் ஓலைகொண்டுபோன தூதுவருடன்சென்று சுற்றிக்கொண்டு வந்துவிட்டோம். ஜயசந்தமஹாராஜா கொலுமண்டபத்தில் வீற்றிருக்கையில் அவருக்கு மந்திரி காதில் ஓதிய செய்தி இன்னதென்று இப்பொழுது நாம் நிச்சயமாய் ஊகித்தறிந்துகொள்ளத் தக்கவர்களாய்விட்டோம். மஹாராஜா கொலுமண்டபத்தில் வைத்துக்கொண்ட அந்தரங்காலோசனை சபையின் முடிவு என்னாயிற்றோ விசாரிப்போம். ஜயசந்த்ராஜன் யுத்தம்செய்து அடங்காமன்னரை யடக்கிக் கத்திமுனையில் அவர்களைக்கொணர்ந்து நிறுத்தி யாகத்தை நடத்துவதே தன் வீரத்திற்கும் கீர்த்திக்கும் ஒத்ததாம் என்று இன்னும் நினைத்தாலும், இப்படிப்பட்ட சமயங்களில் மந்திராலோசனை செய்யாது காரியம் நடத்துவது சரியல்லவென்பதை குரு ஞாபகப்படுத்தியதின்பின் தன் இச்சையாகநடக்க இஷ்டமின்றி உடனே மந்திரசபைகூட்டி ஆலோசிக்கத்தொடங்கினான். முதல்மந்திரி இப்படிப்பட்ட வில்லங்கம் வருமென்று எதிர்பார்த்தவராதலாலும், ஆதிமுதல் இது விஷயத்தில் தன்னாலோசனை ஏறாததையறிந்தவராதலாலும், நேர்ந்த சங்கடத்தில் அரசனுக்கு உற்ற இடத்துதவியாயிருந்து "ஸ்வாமிதர்மம்" தவறாமல் நடந்துகொள்ள வேண்டுமென்கிற எண்ணத்தைத்தவிற மற்றப்படி ஏதும் மனதில் நினைத்திலர். அரசன் யுத்தம்செய்ய நிச்சயித்தால் அதில் முதலாயிருந்து உற்சாகத்தோடுழைக்கத்தக்கவர் அவரைவிட வேறொருவர் அவன் பக்கத்திலில்லையென்று சொல்லும்படி நடந்துகொள்வார். அரசன் ஆலோசனையிலிருக்கையில் தான் எதிலும் படபடப்பாயிருக்கக்கூடாதென்று, இச்சந்தர்ப்பத்தில் யார் என்னவழி சொல்வார்களோ அதையெல்லாம் கேட்போமென்று அடக்கமாய் இருந்தார். சுக்கிராசாரியார், அரசன் தனக்குக் காதுகொடுக்கச் சித்தமாயிருப்பதை யுணர்ந்ததும் தன் மனப்படி காரியத்தை முடித்துக்கொள்வதில் உறுதிகொண்டவராய் அதற்கு வேண்டிய ஆலோசனைகளைச் செய்தார். செய்து, அரசனை அவருடைய அபிப்பிராயத்துக்கிசையும்படி வழிப்படுத்தி நடத்திவருவதற்கு வேண்டிய உபாயங்களையெல்லாம் உஷாராக உபயோகிக்கத்தொடங்கினார். ஆனால் அவர் அவ்வளவு உஷாராகவிருக்க நிமித்தமில்லாமலிருந்தது. அரசன் முதலில் ஆசைக்கிடங்கொடுத்து, புத்திமயங்கி, குருவின் இச்சகவார்த்தைகளைக்கேட்டு அவர் ஆலோசனைக்குக்கட்டுப்பட்டுநடக்க ஆரம்பித்தபின் நேர்ந்தவில்லங்கத்திலிருந்து தப்புவதற்கு நுழைவழி அவர் காட்டுவதன்றி வேறு ஒன்றும் இலகுவில் காணாதவனாகவிருந்தான். இதைத் தன் புத்திநுட்பத்தால் அறிந்துகொண்ட சுக்கிராசாரியர் கொஞ்சம் ஆலோசனாடம்பரம்செய்து காட்டிப், பின் தன் உட்கருத்தை வெளியிடுவாராயினர். அரசனது ஆத்திரம் ஆலோசனையினாலுண்டான சஞ்சலத்தில் முற்றும் அடங்கிவிட்டதையறிந்து சுக்கிராசாரி பின்வருகிறபடி தன் ஆலோசனையை வெளியிட்டார்:—

"மஹாராஜ்! ப்ரித்விராஜா வீரசூரத்துவமுடையவனேயாயினும் திடசித்தன் அல்லனென்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. திடசித்தமிருந்தால், முதலில் புறப்படப் பிராயணப்பட்டவன், இப்படிப்பட்ட சமாசாரம் சொல்லி யனுப்புவானா? கேட்டார்பேச்சைக் கேட்டு அவன் கெட்டுப்போனானென்று தோன்றுகிறது. இவ்வளவும் சமரசிங்கு செய்த கலகமன்றி வேறல்ல. உடனே அவர்களுக்குப் புத்திவரச்செய்வது உசிதமான ஆலோசனையே. ஆனால் காலம், இடமறிந்து காரியம் நடத்தவேண்டும். காலமோ மிகவும் ஏற்காதாகவிருக்கிறது. யாகத்துக்கு நியமித்த முகூர்த்தமோ கிட்டிவிட்டது. இப்பொழுது படையெடுத்துச் செல்வதென்றால், மன்னர்களும், படைகளும், திரண்டு மொய்த்திருக்கும்



இம்மாநகர் என்ன ஸ்திதியிலிருக்குமோ யார் சொல்லவல்லார்? மேலும், அவர்கள் வரநினைத்தும் வராமல் நின்றது அசம்பாவிதமாக நேரிட்டதேயன்றி வேறல்ல. அசம்பாவிதமாக நேரிடும் இடையூறுகளுக்கு நிவர்த்திகள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன" என்றார்.

அரசன் அது கேட்கவும், "இப்பொழுது நேர்ந்துள்ள இடையூறுக்கு நிவர்த்தியென்ன?" என்று ஆவலாய்க் கேட்டான்.

குரு, "பைம்பொன்னால் வாராத மன்னர்களிருவரின் பிரதிமைகள் செய்துவைத்துச் சாஸ்திரப்படி யாகத்தை முடிப்பதே சரி" என்றார்.

அரசன், "நீர் சொல்வதற்கு ஆதாரங்களுண்டோ?" என்று வினவ,

சுக்கிராசாரி, "ஆகா. ஆதாரமில்லாமலா நானுரைப்பேன். ச்ரௌதத்தில் ஆதாரமிருப்பதோடு, பிரபலமான உதாரணமும் ஒன்று இருக்கிறதே. ஸ்ரீராமர் அசுவமேத யாகம்செய்தபோது சீதாபிராட்டியைக் காட்டுக்கனுப்பிவிட்டபடியால் செம்பொற்பாவை செய்து பாரியாச்சங்கற்பித்து யாகத்தைநடத்தினார்களென்று வால்மீகிபகவான் சொல்லியிருக்கிறாரே" என்று உத்தரகாண்டத்திலிருந்து ஒரு சுலோகத்தை மடமடவென்று ஒப்புவித்தார். அதை ஒட்டக்கூத்தர் மொழிபெயர்த்திருக்கிறபடி கீழே வரைகிறோம்:—

தேவர்கள்செல்லறீர்த்த விராமன்முன்செம்பொற்
பாவையைத்தனுவகத்துப்பாரியாச்சங்கற்பித்துப்
பூவையையனையதன்மைப்புரோகிதன்சடங்குகாட்டத்
தூவருந்தவர்களோடுந்தொடங்கினன்வேள்வியென்ன.

அரசன் குரு சொல்லியதைக்கேட்டு, "அப்படியா! ஆனால் உங்கள் கருத்துப்படிச் செய்யுங்கள். யாகமுடிந்ததும் அவனுக்குப் புத்திவரச்செய்கிறேன்" என்றான்.

உடனே அரசன் மந்திரியை நோக்கி ப்ரித்விராஜா, சமரசிங்கு இவர்களைப்போன்ற பிரதிமைகள் இரண்டு பொன்னாற்செய்துவைக்க உத்தரவுசெய்தான். குருவும் தன் காரியம் பலித்ததென்று மேல் நடவடிக்கைகளை நடத்துவதில் யோசனையுற்றிருந்தார்.

அரசனும் ஆலோசனைமுடிந்ததும் இடையில் ஒன்றும் நிகழாததுபோல் அமரிக்கையாய் கொலுவிலிருந்து மேல் ஆகவேண்டியவைகளுக்கு உத்தரவுகொடுத்துக்கொண்டிருந்தான். அரசர்களுக்குப் பணிவிடை பகர்ந்துரைத்து வருகையில் ப்ரித்விராஜாவுக்கு வாசற்காக்கும் வேலையிட்டு சமரசிங்குக்கும் அதேமாதிரி யிழிவான ஒரு வேலையிட்டான்.

அரசனிவ்வாறு தடையறுத்து யாகம்நடத்தத்தீர்மானிக்கவும் இது செய்தியெங்கும் ஒரு நொடியிற்பரவியது. பலரும் பலவாறு இதைப் பற்றிப் பேசத்தொடங்கினார்கள். ப்ரித்விராஜாவின் சுவர்ணவிக்கிரகம் செய்துமுடிந்து வாயிற்காப்போனாகச் சங்கற்பித்து நிறுத்தப்படவும் அவனைப்பற்றிய பேச்சு நகரெங்கும் அதிகரிக்கலாயிற்று. சமரசிங்கு ப்ரித்விராஜாவைச்சேர்ந்தவனும் அவனுக்குட்பட்டவனுமாதலால், ப்ரித்விராஜா வராமைக்குக் அவனே காரணபூதமென்றுதெரிந்திருந்தும் அவன் பேர் அவ்வளவாக ஜனங்கள்வாயில் அடிபடவில்லை. இது சகஜமே. "தலையிருக்க வாலாமோ?" என்பது பழமொழி யல்லவோ!

C. V. S.

## செல்வநூல்.

### 8. உத்யம விபாகம். *

ஒரு ஜனஸங்காதத்தின் உத்யமத்திற்கு ஸஹகாரியாயிருப்பதில் இரண்டாவது, உழைப்பை பற்றிய சில விதமான கட்டுப்பாடுகள் என்று முந்தியுரைத்திருக்கிறோம். இதற்கு உத்யம விபாகம் (Division of Labour) என்று

* Division of Labour [illegible]

ஸாதாரணமாய் பெயர் வழங்கிவருகிறது. ஆனால் இந்த வாசகம் இவ்வளவு திருப்திகரமானதல்ல. இப்பெயரால், தனோத்பத்திவிஷயமாக ஜனங்களின் ஏகீபூதமான வியாபாரங்கள், உத்பத்தியில் பிரயோகிக்கப்படும். பல ஸாதனவிசேஷங்கள், விருத்தி வித்தியாசங்கள் முதலியவை பொதுவாகக்குறிக்கப்படுகிறபடியால் உழைப்பின் கட்டுப்பாடுகள் (Organization of Labour) என்னும் வாசகமே தகுமாயிருக்கும். ஆயினும் வழக்கத்தில் வந்த வாசகத்தை விட்டுவிடுவது அசாத்தியமாதலால் உத்யம விபாகம் என்பதைக் குறிச்சொல்லாக இந்த அருத்தத்தைக்குறிக்க வைத்துக் கொள்ளுவோம்.

நாகரிகமில்லாத ஜனஸமூகங்களில் மேற்கூறிய உத்யமவிபாகம் விசேஷமாய்த் தென்படுகிறதில்லை. ஒவ்வொருவனும் தனக்கு வேண்டியவேலைகளனைத்தையும் தானே செய்துகொள்ளுகிறான், ஆதிகாலத்தில் ஒவ்வொருவனும் தன்னுடைய குடிசையைக் கட்டிவைக்கிறதும், தனது வில்லம்புகளை ஸித்தப்படுத்திவைத்துக்கொள்ளுதலும், தன்னுடுமாடுகளைப் பார்த்துக் காத்தலும் ஆகிய அக்காலத்திய வியாபாரங்களெல்லாவற்றையும் தானேதான் செய்துகொள்ளவேண்டியிருந்தது. ஆயினும் இங்கேயும் ஆண்பெண்ணென்ற வித்தியாசத்தின்பேரில் ஸ்திரீகள் கிருத்ய மின்னதென்றும், புருஷர்களது தொழிலின்னது என்றும் விபாகம் ஏற்பட்டிருக்கலாம். இப்படி சில காலம் சென்ற மேல் லிங்க வித்தியாசத்தின் பேரின்றி ஸாமர்த்தியத்தை யனுசரித்தும் உத்யம விபாகம் ஏற்படுகிறது. இப்படிப் பிரிந்த உழைப்பில் முதலானது கம்மாளன் தொழில். ஆதியில் அவன், இரும்பு, கல், மரம் இதுகளில் பொதுவாக வேலைசெய்யத் துவங்கி, மற்றவர்களது உதவியைத் தான் அவர்களுக்குச் செய்துகொடுக்கும் ஸாமான்களிற்குப் பதிலாகப் பெற்றுக்கொண்டான். இப்படிச் செய்யும் வேலை வ்யாபாரத்தில் அதிகமாக, கம்மாளன் மூவகைத்தாகப்பிரிந்து, இரும்பு வேலைக்குமாத்திரம் ஒருவனும், மரவேலைக்குத் தச்சனும், கல் கொத்துவதற்குக் கொத்தனுமாக மாறுகிறான். இப்படியே மற்றும் சுதேச வியாபாரங்கள் உதிக்க பல விதமான தொழில்களும் அவைகளுக்கு வேண்டிய தொழிலாளிகளும் உத்பத்தியாகிறார்கள்.

உத்யம விபாகத்தால் தனோத்பத்தி யெப்படி உபகரிக்கப்படுகிறது என்பதைச் சற்று யோசித்து பார்ப்போம்.

(1) **வேலையைக் கற்றுக்கோள்வதற்காகக் கழியும் காலம் குறைகிறது.**—ஒருவன் ஒரு வேலை ஸம்பந்தமான ஸகலவியாபாரங்களையும் கற்றுக்கொள்ளவேண்டுமானாலும் அல்லது பலவேலைகளைக் கற்றுக்கொள்ளவேண்டுமானாலும் வெகுவானகாலம் செலவாவதுடன் பல பதார்த்தங்களையும் காரண ஸாமக்கிரியைகளையும் அழித்து நாசம் செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் ஒரு வேலையைமாத்திரம், அல்லது ஒரு வேலையைப்பற்றிய ஒரு பரிகர்மத்தை மாத்திரம் அவன் கற்றுக்கொள்ளவேண்டுமென்றால், சீக்கிரம் தகுந்த பயிற்சியடைந்துவிடலாம்.

(2) **வேலையாட்களின் கைத்திறத்தை யதிகரிக்கிறது.**—ஒரு வேலையைப் பலதடவைகளில் செய்வதால், நன்றாகக் கற்றுக்கொண்ட வேலையைச் செய்வதிலும் வேலையாள் பிரபலமான ஸ்வாதீனத்தைப் பெறுகிறான். அந்தந்த வேலையைப் பற்றிய கர்ணேந்திரியங்கள் அத்புதமான தேர்ச்சியை யடைகின்றன. அங்கங்கே வேண்டிய அங்கப்பிரத்யங்கங்களும் ஸ்நாயுக்களும் பருத்து பலமடைந்து விசேஷமாக வேலைசெய்யக்கூடியவை யாகின்றன. காசுக்கடைக்காரன் எவ்வளவு சீக்கிரம் பணத்தை யெண்ணுகிறானென்பதையும் மின்தந்திவேலையில் நியமிக்கப்பட்டவன் எவ்வளவு சுலபமாக ஸமாசாரத்தை யறிவிக்கவும் அறியவும் வல்லவனாக விருக்கிறானென்பதையும் ஊகித்துப் பார்ப்போர்க்கு அப்பியாசத்தால் உத்யம் லாகவம் எவ்வளவு உண்டாகலாம் என்பது நன்றாக விளங்கும்.



(3) **ஒருவேலையினின்றும் இன்னொரு வேலைக்குப்போவதினால் நேரிடும் காலநஷ்டம் குறைகிறது.**—ஒருவன் ஒரு வேலையைச்செய்யவேண்டுமானால் அதற்குவேண்டிய ஸஹாய ஸாமக்கிரியைகளையெல்லாம் ஸித்தம்செய்துகொண்டுதான் ஆரம்பம் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு வேலையைத்துவக்கி ஒரு ஸாமானைச் செய்தானால், மற்றொரு ஸாமானைச் செய்ய முன்சென்ற காலத்தில் கால்வரிசைகூடச் செல்லாது. ஆனால் வேலைக்காரன் முதல் ஸாமான் ஆனதும் ஆகாததும் அதைப்போட்டுவிட்டு, வேறொருவேலைக்குப்போனால் அதற்குவேண்டிய உபகிரியைகளையெல்லாம் செய்துவிட்டு அதைத் துவக்கி முடிப்பதற்குள் வெகு காலமாய்விடும்: மேலும் மறுபடியும் பழைய வேலைக்கு வந்தால் இது எல்லாம் சிதறிப்போய் முன்போலவே ஸாதனங்களைச் சேகரிக்கக் காலம் வேண்டியிருக்கும். மேலும் ஒருகாரியத்தைவிட்டதும்விடாததும்நேராகச் சட்டென்று மறுகாரியத்திற்குப்போவது ஸுலபமல்ல. மனிதனுக்கு ஆலஸ்யம் ஸாமானியமானது. சோம்பேரித்தனத்துடன் அங்குமிங்கும் கொஞ்சம்நின்று நிழலாடிவிட்டுப்போவது மனிதனுக்கு இயல்பு. ஆகவே ஒருவன் ஒருவேலையினின்றும் மற்றொரு வேலைக்குப் போகத் தட்டுப்பட்டுக்கொண்டிருந்தால் இப்படி சோம்பேரித்தனம் கொஞ்சம் கொஞ்சமாகப்பழகி வேலையின்பேரிலுள்ள அபிருசி நீங்கிப்போய்விடும்.

(4) **யந்திர தந்திர நிர்மாணங்களை ஸாத்தியமாக்குகிறது.**—இப்படியாகப் பிரிக்கப்பட்டுத் தொழில்நடந்தால் ஒவ்வொரு பாகமும் ஒன்றாகச்செய்யப்படுகிறது. அந்தந்தப்பாகம் எப்படி ஸுலபத்தில் நேர்த்தியாக நடக்கும் என்று அதில் பொறுப்புள்ள வேலைக்காரன் பார்த்துச்செய்விக்கிறான். ஆகவே இப்படி வேலையைக்குறைத்து, பலபெயர்கள் செய்யும் வியாபாரத்தைச் சில மனிதர்களைக்கொண்டே செய்வதற்கான பலவித யந்திரங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆயினும் பெரும்பாலும் யுக்தியால் யந்திரநிர்மாணம் செய்வோர் வேலையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வேலையாட்களல்ல. இதற்கு வெகுவான சாஸ்திரப்பயிற்சியும், புத்தி நுட்பமும் வேண்டியிருப்பதால் இதைச்செய்யவென்றே உத்யம விபாகத்திற்கேற்கச் சில வித்வான்களும், புத்திசாலிகளும் தங்கள் ஆயுள்நாள்முழுதும் இதிலேயே பரிசிரமிக்கிறார்கள்.

(5) இதனால் ஏதாவது அங்கஹீனர்களாகவிருக்கும் ஜனங்கள் கஷ்டமில்லாமல் தத்தம் ஜீவனத்தை ஸம்பாதிப்பதுடன், ஜனஸமூஹத்திற்கும் செல்வத்தை யுண்டாக்கிவைக்க இடமாகிறது. மேற்கூறிய உத்யமவிபாகம் உழைப்பாளிகளைப்பற்றியது மாத்திரம் அல்ல. பிரத்யேகமான ராச்சியங்களும், ஜனஸங்காதங்களும் தத்தம்தேசத்தின் சீதோஷ்ணஸ்திதி, ஜனங்களின்குணம் ஸாமர்த்தியம், பூமியின் ஸ்வபாவம் இவைகளை யனுஸரித்து ஒவ்வொருவிதமான உத்யமத்தை மாத்திரம் விசேஷமா யபிவிருத்திக்குக் கொண்டுவந்திருக்கின்றன. இப்படியாகப் பிரியும் உழைப்பிற்கு ஸமுதாய விபாகம் என்னும் பெயரைக் கொடுப்போம் (Territorial Division of Labour). இதற்கு ஜெவன்ஸ் என்னும் செல்வநூலாளர் (Local Adaptation) "தேசானுகுணமாக வுத்யம ஆதானங்கள்" என்று பெயரிட்டிருக்கிறார். இதனால்தான் ஒரு தேசத்திலிருந்து இன்னொருதேசத்திற்கு வர்த்தகம் ஏற்படுகிறது. எந்தெந்தப்பதார்த்தங்கள் எந்த தேசத்தில் சுலபமாயும், ஏராளமாயும் உத்பத்தியாக்கப்படலாமோ அங்கங்கேயே யவைகளை உண்டாக்கிக்கொண்டு மற்றைய தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்வதினால் வெகு பயனுண்டு. ஸாமான்களும் சுலபமான விலைக்குக்கிடைக்கும்; பலதேசஸஞ்சாரத்தினாலும், ஒரு தேசத்தாருடன் மற்றொருதேசத்தார்சேர்ந்து நடப்பதினாலும் நாகரிகத்தை யபிவிருத்திசெய்யப் பலவித ஸஹாயமேற்படுகிறது.

மேற்கூறிய உபயோகங்களைத்தவிர உத்யம

விபாகத்தினால் வேறு இரண்டு உண்டென்று ஜேவன்ஸ் கூறியிருக்கிறார்.

(1) ஸஹாயவிஸ்திருதி (Multiplication of Services).

அதாவது ஒருவனுக்காவது, அல்லது ஒரு தடவையாவது செய்யப்பட்ட வேலை பலருக்கும் பலகாலத்திற்கும் உபயோகமாவது. இதற்கு நிதர்சனமாகத் தபால் ஆபீஸ் முறைமைகளைக்கூறுவோம். ஒரு கடிதத்தை ஓரிடமிருந்து இன்னோரிடத்திற்குக் கொண்டுபோக நியமக்கப்பட்ட சேவகன், ஆயிரம் காகிதங்களை அந்தவிடத்திற்கு யாதொரு விசேஷ சிரமமில்லாமல் கொண்டுபோகலாம்.

(2.) பிரதிருபவிஸ்திருதி (Multiplication of Copies).

இதற்கு நிதர்சனமாக அச்சு யந்திரத்தைபெடுத்துக்கொள்வோம். ஒரு புஸ்தகம் வரையவேண்டுமானால் அதிக செலவாகும். ஆயிரம் கிரந்தத்திற்கு, அதாவது 32,000 அக்ஷரத்துக்கு ஏறக்குறைய மூன்று ரூபாய் கொடுத்து ஸம்ஸ்கிரத புஸ்தகங்களை வரையவைப்பது வழக்கமாயிருக்கிறது. அப்படியானால் சுமார் 30-பக்கமுள்ள புஸ்தகத்திற்கு மூன்று ரூபாய் வேண்டிவருகிறது. ஆனால் இக்காலத்தில் 300-பக்கமுள்ள புஸ்தகம் மூன்று அணுவுக்குக்கிடைக்கிறது. இப்படி விலை ஸஹாயமானதற்குக் காரணம் பிரதிருபவிஸ்திருதியினால்தான். ஒரு தடவை அச்சுருபமாகக்கோர்த்தமேல் அதன் பிரதிருபத்தையெத்தனைதடவை வேண்டுமானாலும் காகித முதலான தகுந்த ஸாமக்கிரியைகளில் கொள்ளலாம்.

இப்படியாக உத்யமவிபாகத்தில் பலவித நன்மைகள் உண்டானபோதிலும், இவ்விபாகம் மிகவும் ஸூக்ஷ்மமாகப்பரவிவிட்டால் சில தீங்குகளும் நேரிடும். ஆயினும் நன்மைகளபேக்ஷயாக இந்த தோஷங்கள் அவ்வளவு பலத்தவைகளல்ல.

(1.) வேலைக்காரனது காரியமெல்லாம் ஒரு வியாபாரத்தில்மாத்திரம் இருப்பதால் அவனது கைலாகவம் குறைந்துபோய் அவ்வியாபாரத்தைத்தவிர மற்ற விஷயங்களில் மூடனாகிறான். ஒருவனது காலம் முழுதும் குண்டூசிக்குத் தலைகட்டிவைப்பதில் மாத்திரம் சென்றால் அவன் வேறு என்னகாரியுத்திற்கு உதவப்போகிறான். ஆகையால் இவ்வேலைக்காரன் ஏதாவது காரணத்தால் தனக்கு வரும் வேலையை நடத்தக்கூடாமல்போனால் இன்ன செய்வதென்று தெரியாது தியங்கிவிடுகிறான். புதிதான தேசங்களுக்குப்போனால் அதற்கு வேண்டியபடி தன்னுடைய வேலையைமாற்றிக் கொள்ள அவனால்முடிகிறதில்லை.

(2.) இதனால் கைத்தொழில் மிகவும் சிக்குமுக்காக ஸூக்ஷ்மமாகிவிடுகிறது. அதனால் ஏதாவது ஒரு காரணத்தால் ஒருவித வியாபாரம் லாபம்கொடுக்காவிட்டால் அதைவிட்டுவிட்டு அதில் வியாபிருதர்களான வேலையாட்கள் வேறொன்றுக்குப்போக முடிகிறதில்லை. அதனால் ஜனங்கள் தாரித்திரியமதிகரித்து அதிருப்தியும் கஷ்டமும் மேலாகி இராச்சியத்தைச் சிதறடிக்கத் தகுந்த எண்ணங்களையும் நடத்தைகளையும் உடையவராக ஆகிறார்கள்.

ஜி. கஸ்தூரி ஐயங்கார்.

## உப்பு.

### I.

நம்முடைய உணவிற்கு முக்கியமான பதார்த்தமாயிருந்தும் உப்பைப்பற்றி நமக்கு விசேஷமாய் ஒன்றும் தெரியாது. அதை உற்பத்திசெய்யும் வகைகளைக்குறித்துப்பின்னால் சொல்லப்படும். இவ்விடத்தில் அதின் சரித்திரத்தைக்கொஞ்சம் எடுத்துரைப்போம்.

2. உப்பின் உற்பத்தி காலத்தைப்பற்றி விசாரிக்குமிடத்து மனிதஜாதியின் நாகரிக உற்பத்திகாலமே அதின் உற்பத்திகாலமென்று சொல்லவேண்டியதாகிறது. மனிதர்கள் உப்பை உப்பென்று அறிந்த காலத்தைக் குறித்துக்காண்பிக்கும் கிரந்தங்கள் எத்தேசத்திலுமில்லை. ஆனால் உலகத்தில் வழங்கிவரும் பற்பல பாஷைகளில் உப்பிற்குப்பெயர்களாக



வழங்கிவரும் சொற்களைப்பரிசோதித்தால் இக்காலத்தைச்குறிப்பாய்ச் சொல்லலாம்.

3. ஸமஸ்கிருதத்திலும் அதைச்சேர்ந்த பாஷைகளிலும் உப்பிற்குப்பெயர்களாகவழங்கிவரும் சொற்களுக்குப்பொதுவான ஆதிபதம் (Root) ஒன்றுமில்லை. நீடித்தகாலமாய்வழங்கிவரும் பாஷைகளெல்லாம் உப்பிற்குத்தனித்தனியான பெயரையிட்டிருக்கின்றன. சீன, ஜபானிய பாஷைகளில் "ஜான்" "ஜென்" அல்லது "ஜாம்" என்றும், மலேய, ஜவானிய பாஷைகளில் "காரம்" என்றும், ஹிந்துஸ்தானியில் "நிமக்கு" "ராம்ரூங்" "நூன்" என்றும், பாரசீகத்தில் "லன்" என்றும், தமிழில் "உப்பு" என்றும் சொல்லுகிறார்கள். ஐரோப்பா கண்டத்துத் தேசத்தார்களும் இவ்விதமாகவே பல பெயர்களைத் தனித்தனியே இட்டிருக்கிறார்கள். பிரெஞ்சில் "ஸெல்" என்றும், ஜர்மானிய பாஷையில் "ஸால்ஸ்" என்றும், டச்சுபாஷையில் "ஸெறட்" என்றும், ருஷியனில் "ஸாஹல்" என்றும், ஸபானியாவில் "ஸால்" என்றும், இங்கிலீஷில் "ஸால்ட்" என்றும் சொல்லுகிறார்கள். இவ்விதமாய் உப்பிற்கு வெவ்வேறுபாஷைகளில் வெவ்வேறு பெயரிடப்பட்டும் அப்பெயர்களுக்கு எல்லாப்பாஷைகளுக்கும் பொதுவான அடிப்பதம் இல்லாமலுமிருப்பதினால் மனிதஜாதியார் பூர்வகாலத்தில் வெகுகாலம் வரைக்கும் உப்பைக்கண்டு அறிந்தவர்களல்லவென்று பிரத்தியக்ஷமாகிறது. ஒருக்கால் அவர்கள் தங்கள் கண்களினால் மலையுப்பு, கடலுப்பு, ஏரியுப்பு முதலிய உப்புக்களைப்பார்த்திருந்தாலும் இருக்கலாம். ஆனாலும் உப்பின் ருசியையும் அதின் அவசியத்தையும் அவர்கள் அறிவதற்குக்காரண மில்லாமலிருந்ததினால் அதைப்பற்றி விசாரித்து அதின் குணவிசேஷங்களையறிவதற்கு அவர்களுக்குத் தூண்டுதலில்லாமலிருந்தது.

4. நம்முடைய ஆதிகாலமுன்னோர்கள் பகாசுரர்களாய் பூமியில் விளைந்த எவ்விதபதார்த்தங்களையும், மிருகங்களையும், பக்ஷிகளையும், மீன்களையும் அவையவைகளைக்கண்ட இடத்திலேயே அந்தத்த க்ஷணமே கொன்று பச்சையாய்த் தின்று நாளைக்கு வேண்டுமே யென்கிறகவலையில்லாமல் காலம்கழித்து வந்தார்கள் என்பதை நாம்படித்தும் கேட்டுமிருக்கலாம். பச்சையாய்த்தின்னப்படும் உணவிற்கு உப்பு வேண்டுவதில்லை. பழங்களிலும் காய்கறிகளிலும் சுபாவமாய் உப்புண்டு. மாமிசபதார்த்தங்களில் உப்பு யதேஷ்டமாயிருக்கிறது. பச்சை இறைச்சியில் 1000-க்கு $4\frac{1}{2}$ பங்கும் உலர்ந்ததில் $19\frac{1}{2}$ பங்கும் உப்பிருக்கிறது. ஆகையால்தான் மாமிசபக்ஷிணிகளாகிய மிருகங்களுக்கு உப்பின்மீது அபேக்ஷையில்லை. அவைகள் தின்னும் மாமிசத்திலேயே அவைகளுக்கு வேண்டிய உப்பு இருக்கிறது.

எப்பொழுதும் காய்கனிகளைப் பச்சையாய்த் தின்று வளரும் குரங்குகள், பக்ஷிகள் முதலிய பிராணிகளுக்கு உப்புத் தேவையில்லை. இக்காலத்தில் கூட உப்பின் உதவியில்லாமல் அரைவரிசை சமைக்கப்பட்ட உணவை உண்டுவரும் முரட்டுமனிதர்களிருக்கிறார்கள். சுமார் 2800-வருஷங்களுக்கு முன்கூட கிரீக்தேசத்தார் தங்களுடைய தேவதைகளுக்குச் செய்த பூஜை நிவேதனங்களில் பதார்த்தங்களை சமைக்காமல் நெருப்பில் சுட்டு உபயோகித்தார்களென்று தெரியவருகிறது. அவ்விதம் புசிக்கும் பதார்த்தங்களுக்குக்கூட உப்பு வேண்டியதில்லை. இறைச்சியைச் சுட்டுச் சாம்பலாக்கினால் அச்சாம்பலில் 100-க்கு 46 பங்கு உப்பிருக்கிறதாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இத்தியாதி விஷயங்களினால் ஆதி மனிதர்களுக்கு உப்பைப்பற்றிப் பேசக்கூட அவசியம் இல்லாமலிருந்ததற்குக் காரணம் அவர்கள் அதை உபயோகப்படுத்தாமலிருந்ததுதானென்று விளங்குகிறது. இவைகளையெல்லாம் யோசிக்குமிடத்து மனிதசாதியார் உப்பின் உபயோகத்தை யறிந்து அதை உபயோகித்தது அவர்கள் நாளாவர்த்தியிலடைந்த நாகரிகத்தைக் குறிக்கும் இடையிடையேயுள்ள அடையாளங்களென்று யூகித்தறியலாம்.

5. மனிதஜாதியார் முன்னொருகாலத்தில் ஆடுமாடுகளை மேய்த்து சவரக்ஷணைசெய்து ஜீவனம் செய்வதுதவிர வேறொரு தொழிலும் தெரியாதவர்களாய் இருந்ததுண்டு. அக்காலத்தில் அப்பிராணிகளுக்குத் தேவையானமட்டில் உப்பின் குணாதிசயங்களை அவர்கள் கண்டிருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. ஏனெனில் ஆடுமாடுகளுக்கு உப்புத் தேவையான பதார்த்தமாதலால் அவைகள் அதை எங்கே கண்டபோதிலும் மனிதர்களுக்குக் குறிப்பாய்க் காண்பிக்கின்றன. இவ்விதமாய் மனிதர்கள் உப்பை அறிந்திருந்தபோதிலும் அவ்வுப்புத் தங்களுக்கு வேண்டாதபதார்த்தமாயிருந்தபடியால் அதை அவர்கள் கவனிக்கவில்லை. அக்காலத்தில் மேற்சொல்லியபடி ஆடுமாடுகளை மேய்த்து ஜீவனம் செய்துவந்த "நுமிடியர்" என்னுமொரு ஜாதியார் உப்பில்லாமல் மாமிசத்தைக்கொண்டும் பாலைக்

கொண்டும் ஜீவனம் செய்துவந்ததாய் "ஸாலஸ்டு" என்னுமோர் கிரந்தகர்த்தா சொல்லுகிறார். யோஜிக்குமிடத்து மண்பாத்திரங்களைச் செய்வதற்கு மனிதஜாதியார் கற்றுக்கொண்டபிறகுதான் உப்பின் உபயோகத்தை அவர்கள் அறிந்திருக்கவேண்டுமென்பதை நிதானிக்கலாம். மண்பாத்திரங்கள் வேண்டியதற்குக் காரணமென்ன? பச்சையாய்த்தின்று சுகிக்கமுடியாத பயிர்களையும் தானியங்களையும் உற்பத்திபாக்கினதுதான். ஆகையால் நாளாவர்த்தியில் மனிதர்கள் நாகரிகத்தில் விருத்தியடைந்து பயிரிடுதொழிலையறிந்ததும் தானியங்கள் கிடைத்தன. கிடைத்ததும் அவைகளைச் சமைக்க பாத்திரங்கள் தேவையாயின. அப்பாத்திரங்களைக்கொண்டு தானியங்கள் முதலியவைகளைச் சமைத்து ருசிபார்த்ததும் உப்பு வேண்டியதாயிற்று. சுபாவத்திலேயே சிறிய செடிகள் கொடிகளில் உற்பத்தியாகும் உணவு பதார்த்தங்களில் உவற்பு கம்மி. நம்முடைய உணவில் ஏராளமாய்ச்சேரும் துவரை முதலிய நவதானியங்களில் உவற்பு இன்னும் அதிகக் கம்மியாயிருக்கிறது. புல்வில் உவற்பு சுத்தமாயில்லை. இதனால்தான் புல்லைத்தின்று வளரும் பிராணிகளுக்கு உப்பின்மேல் ஜாஸ்தியான ஆவல் உண்டாகி உப்பிருக்குமிடத்தை அவைகளாகத் தேடிக்கொண்டு போகின்றன.

ஆகையால் மேலே சொன்ன பிரகாரம் மனிதர்களுக்கு சமைக்க சட்டிப்பானைகள் கிடைத்ததும் பதார்த்தங்களைச் சமைத்தார்கள். சமைக்கவே சமைக்கப்பட்ட பதார்த்தங்களில் உவற்புக்குறைந்ததினால் உணவின் ருசிகுறைந்ததைக் கண்டார்கள், கண்டதும் இவ்விதம் உணவிற்கு ருசிகுறைந்ததற்குக்காரணத்தை விசாரிக்கத் தலைப்பட்டு உப்பு என்று சொல்லப்படுமொரு பதார்த்தம் தங்களுக்கு வேண்டியிருந்ததையறிந்து அப்பெயரை யதற்குக் கொடுத்தார்கள். உப்பின் அவசியத்தை மனிதர்கள் கண்டுகொண்டது உவற்பில்லாத தானியங்களைச் சமைத்துப் புசித்ததினால் மாத்திரமல்ல. மாமிச பதார்த்தங்கள் கூடசமைக்கப்பட்டால் அவைகளிலுள்ள சுபாவமான உவற்பை இழந்துபோய்விடுகின்றன. இதனாலும் மனிதர்கள் உப்பின் ஆவசியகத்தை யறிந்துகொண்டார்கள்.

டி. ஸி. சௌரிராஜய்யங்கார்.

SHORT STORY.

## சுந்தரம்.

"என்னடி? நேரமாயிற்று; பசியெடுக்கின்றது; சமையலாயிற்றோ, இல்லையோ?" என்று சுப்பராமய்யர் தன் பெண்சாதி லட்சுமியம்மாளைப்பார்த்து அதட்டிக் கேட்டார்.

"சமயமெல்லாம் சாயங்காலமே செய்துவைத்துவிட்டேன். என்ன அவசரம். குழந்தை சுந்தரம் காலமே 10-மணிக்கு ஒருவாய் சாதம் சாப்பிட்டுவிட்டுப் போனான். எங்கேபோயிருக்கிறான் என்று தெரியவில்லை. கேள்விமுறை கிடையாது. நீங்களும் விசாரிக்கிறதில்லை. அவன் வருவதற்குள்ளாக சாப்பாட்டுக்கென்ன ஆத்திரம்" என்று லட்சுமியம்மாள் கோபத்துடன் பதில்சொன்னாள்.

"சுந்தரம், சுந்தரம், என்று ஏன் அடித்துக்கொள்ளுகிறாய். தசரதமகாராஜன்கூட, ஸ்ரீராமனை அடைந்ததில், நீ சுந்தரத்தைப் பெற்றதினாலடைந்த பெருமையடையவில்லை." என்றுசொல்லி, தான் உபயோகித்த திருஷ்டாந்தத்தை ஆலோசித்து, சந்தோஷத்தால் புந்நகைசெய்து, சற்று நேரத்திற்குப் பிறகு மறுபடியும் கூறினார்: "எங்கேயோ குலத்தைக்கெடுக்கப்பிறந்த கழுதை கெட்டலைகின்றது; தானவந்துசேருகின்றது. சுந்தரமும், அவனைப்பெற்ற நீயும், இவ்வுலகத்தில் மனுஷாளென்று உயிருடனிருக்கின்றதைவிட சாகின்றதே நல்லது."

லட்சுமியம்மாளியற்கையாகவே நல்லவளானதினாலும், புருஷனிடத்திலதிக பயமுடையவளானதினாலும், பேசினால் சண்டைநேரிடுமென்று வாயைத் திறவாதிருந்தாள்.

உடனே, சுப்பராமய்யருக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. ஆனால் பின்வருமாறு விளம்பினார்: "படிப்பா, ஒன்றா? யாதுமில்லை. அது தான் குளம், குட்டை, ஏரி, மேடு என்று திரிகின்றான். யாரோ இவனைப்பிடித்துக்கொண்டு போகிறார்களோ?"

"படிப்பு என்றால், இந்தக்காலத்தில் சும்மாவருகின்றதா என்ன. அதற்கும் பணம் காசு வேண்டியிருக்கின்றது. நான் எவ்வளவு வைத்திருந்தாலும் இந்தப்பாழும் வயிற்றிற்குக் கொட்டுகிறதற்கே போதுகின்றதில்லை. அவனுக்குச் சம்பளம்கொடுக்க இங்கே பணம் எங்கு இருக்கின்றது." என்று புலம்பினாள்.



"எங்கள் தகப்பனார், பாட்டனாரெல்லாம் சம்பளம்கொடுத்துப் படிக்கவில்லை. அவர்கள்கூடத்தான் சம்பாதித்து காலட்சேபம் கண்ணியமாக நடத்திக்கொண்டுபோனார்கள். நானும் படிக்கவில்லை. இதோ இன்றுவரையில் கஷ்டப்படவில்லை." என்று விடைகூறினார். கொஞ்சம் முன்பாக, சுந்தரத்திற்கு "படிப்பா, ஒன்றா?" என்று கேட்டோமே என்கிற கவனம் சற்றும்கிடையாது. "படிக்கவேண்டுமென்று எவனுக்கு ஆசை உண்டோ, அவன் எப்படி கஷ்டப்பட்டாவது படித்துவிடுவான்; எவ்வளவோபேர் சர்க்கார் விளக்கின்கீழ்படித்து மேன்மையடைந்தவர்கள்." என்று இயம்பினார்.

"படிக்கவேண்டுமென்கிற கருத்து அவனிடத்திலிருக்கிறதைப்போல் வேறுயாருக்குமிருக்காது. போனவருஷம் 4-வது வகுப்புப்பரிட்சையில் தேறினும். சிறுவனாயிருந்தபோதிலும் நம்மால் இனிமேல் படிப்பிக்க இயலாது என்று தெரிந்துகொண்டு திர்வீட்டு வக்கீலிடம்போய் தன்னிலைமையைக்கூறினன். அவர் பச்சாதாபப்பட்டு 'எங்கள் இராமசாமியுடன் நீயும்படி, நான் உனக்கு சம்பளம் தருகின்றேன்' என்று சொன்னாராம். அவனுக்கு இவ்வளவு ஆசையிருக்கின்றது. நம்முடைய சுகதுக்கங்களை அவன் தெரிந்துகொள்கிறதுபோல நீங்கள்கூட அறிகின்றதில்லை. அவ்வளவு புத்திசாலியாயிருக்கிறான்." என்று பதில்சொல்லி கஷ்டத்தை நினைத்து அழுதாள். சற்று சும்மாஇருந்து, பிறகு மனவருத்தம் சகிக்காததினால் "உங்கள்போல் தகப்பனாரை வீட்டில்வைத்துக்கொண்டு இரந்து படிக்கவேண்டுமாய் அவன் தலையிலெழுதியிருக்கின்றது" என்று பசினாள்.

இந்தக் கடைசிவாக்கியத்தைக்கேட்டதும் சுப்பராமய்யருக்குவந்த கோபத்திற்கோரளவில்லை. தன் கையில் தன்னை எழுப்பி காடெல்லாம் அலையச்செய்த வேடனை, ஒரு மிருகேந்திரன் பார்ப்பதுபோல், அச்சத்தால் நடுங்கிக்கொண்டிருந்த தன் பெண்சாதியை விழித்துப்பார்த்து, அவள்மேலெறிந்து அடியில் அவளைக்கொல்ல ஏதாவது கிடைக்குமா என்று வீட்டைச்சுற்றிலும்பார்த்தார். ஒன்றும் கிடைக்காததினாலும், ஏதாவது பிரமாதம் செய்தால், சாதம்போடாது முரட்டுத்தனம்செய்வள் என்ற பயத்தினாலும், தன் கோபத்தைத்தானே விழுங்கிக்கொண்டு, பின் வருமாறுகதறினார்: "நீயும் உன் மகனையும் எக்கேடுகெட்டுப்போனாலும் எனக்கென்ன. சாதம்போடுகின்றாயா; வீட்டைவிட்டுப் போகட்டுமா" என்று வெருட்டினார்.

இந்த இடிபோன்ற கோபத்திற்கு இணங்காவிட்டால் என்ன தொந்திரவுகள் நேரிடுமோவென்று பயந்து இலையைப்பரப்பி பரிமார ஆரம்பித்தாள். அதற்குள் இவரிருவர்களுடைய புராதனகதையாதென்று விசாரிப்போம்.

சுப்பராமய்யரின் தகப்பனார் சாகும்பொழுது தன் ஒரே மகனுக்கு சுமார் 10,000-ரூபாய் பெறும்படியான சொத்தை வைத்துவிட்டுப்போனார். மேலும் சுப்பராமய்யர் அதிகசெல்வாக்கில் தான்சென்ற போக்கிலே வளர்ந்துவந்தவர். தப்பிதங்கள் யாது செய்தாலும் பிதா கண்டிக்காததினால், சுப்பராமய்யருக்கு கெட்டகுணங்கள் பிடிபட்டனவே யொழிய நற்குணங்களின் வாசனைகூட தெரியாது. இளமையில் கல்யாணமும் நடந்துவிட்டது. பிதா மாண்டதும் சொத்தை சுப்பராமய்யர் ஆளத்தொடங்கினார். சிறுவயதுமுதல் நாட்டுப்புறத்தில் வசித்துவந்ததினாலும், கற்கவேண்டுமென்கிற சிந்தையில்லாததினாலும், பொழுது போக்குக்காக சீட்டாட்டம், சூது முதலிய கொடுரங்களையெல்லாம் கற்றுக்கொண்டார். 'தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டு' மானதினால் இத்துர்நடத்தைகள் வயதாயும் இவரைவிட்டு நீங்கினவல்ல; மேலும் பொய்சாட்சி, தாசி முதலிய வலைகளில் சிக்கிக்கொண்டு, ஆஸ்திமுழுவதையும் அரைநாழிகையில் கெடுத்துக்கொண்டார். இவரைக் கொண்ட பெண்சாதியோ மகாபதிவிரதை. கொழுனன் மகாதுர்மார்க்கி, கல்நெஞ்சுடையவன் என்று தெரிந்தும் தெய்வம்போல் அவரைப் பாராட்டி அவரிஷ்டப்பிரகாரம் நடந்து, அவரைச் சந்தோஷப்படுத்துகிறதே தன் கடமையாகக்கொண்டாள். மேற்கூறின கஷ்டதிசை வந்தவுடன்; "கெட்டும் பட்டணம்சேர்" என்கிறதைமேற்கொண்டு, தன் புருஷனை நயமானபேச்சுக்களாலும் கீழ்ப்படிவாலும் பட்டணம்கொண்டுவந்து சேர்த்தாள்.

சேர்த்ததும் காலக்ஷேபத்தை நடத்துவதற்காக, தான் முறுக்கு, வடை, கடலைச்சுண்டல் முதலிய தின்பண்டங்களைச் சீராகச்செய்து சாயங்காலம் கூடையில் சுமந்துகொண்டுபோய் விற்று, அதனால்கிடைக்கும் லாபத்தைக்கொண்டு பிறரறியாமல், ஒழுங்காக நாட்களைக் கழித்துவந்தாள். இம்மாதிரியாக சுப்பராமய்யர் தன் சாப்பாட்டுக்கு பெண்சாதியை நம்பவேண்டியிருந்தபோதிலும், அவளை சகிக்க முடியாத துன்பத்திற்காளாக்குவார். இப்பொழுதும் சீட்டாடுவதற்காக பெண்சாதி கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்துவைத்திருந்த பணத்தையும் பிடுங்கிக்

கொண்டுபோவார். நன்மையும், இரக்கமும் மற்ற நற்குணங்களும் வடிவுகொண்டாற்போலிருந்த லட்சுமியம்மாளுக்கு, இவ்வளவு கொரே சிந்தையும், இரக்கமின்மையும் நிறைந்திருந்த கணவன் வாய்த்தது, ஜனங்களால் அறியக்கூடாத தெய்வச்செயல்களிலொன்று; ஒன்றுமறியாத பேதையான சுந்திரத்தின்மேல், அவன் தந்தைக்கு எள்ளளவேனும் வாஞ்சையென்பதில்லாததும் தெய்வ ரகசியங்களிலொன்று. ஓ, உலகமே, இம்மாதிரியான தந்தைகளும், கணவர்களும் எவ்வளவுபேர் உன்மேல் வசிக்கிறார்கள்! சற்புத்திரரையும், அவர் வேரூன்றிய கீர்த்தியையும், பெருமையையும், கொஞ்சமாகிலும் அடையாளமில்லாமலழித்துக்கொண்டுபோகிறகாலம்! மனதிற்கே எண்ணுவதினாலுண்டாகும் பயங்காரமான இக்கொடியர்களுக்கு, ஒரு முடிவு உண்டாக்காதது ஒரு அதிசயமானகாரியமே. ஆ! பகவானே! யார்தான் உன் அருமையான காரியங்களை அர்த்தம்கொள்ளத் தக்கவர். எல்லா அண்டங்களுக்கும், எல்லா உலகங்களுக்கும், எல்லா ஜந்துக்களுக்கும், எல்லா புற்பூண்டிற்கும் மேன்மையானவும், அளவில்லாத சக்தியும், எல்லையில்லாத அன்பும், கருணைக்கடலுமாயிருக்கின்ற ஒரு கடவுளிருக்கின்றார் என்று நம்பினவர், எம்மாதிரியான இயற்கை விரோதமும், கடையில் உலகவின்பத்தைப் பாராட்டியிருக்கின்றது என்று அதி சீக்கிரமாக அறிவர்.

சுப்பராமய்யர் "போதும், போதும்" என்று சொல்லிக்கொண்டே, சுந்தரத்தைக்குறித்து ஒருவிசனமுமில்லாமல் வயிறுநிறையச் சாப்பிட்டு எழுந்தார். எழுந்ததும், நடைத்திண்ணையில் விளக்கு வைத்துக்கொண்டு படுக்கையை விரித்து அதன்மேலுட்கார்ந்து வெற்றிலைபாக்குப்போட ஆரம்பித்தார். அவர் வெற்றிலைபாக்கு போட்டுக்கொண்டே ஆலோசனைசெய்யத் தொடங்கினதினால், எவ்வளவு வெற்றிலை போட்டாரென்று கணக்கிடமுடியாது; சுமார் 100-இருக்கலாம்; வெற்றிலை ஜாஸ்தியென்று பாக்கும், பாக்கு ஜாஸ்தியென்று வெற்றிலையும் தின்று அதன்மேல் ஒரு காசு புகையிலையை உருண்டையாகச்சுருட்டி அதையும் வாயிலடைத்து மென்றுக்கொண்டே படுத்துக்கொண்டார். படுத்துக்கொண்டே சிந்தையில் மூழ்கினார்.

சுந்தரம் அவ்வளவு நேரமாயும் வீட்டிற்கு வராததைக்குறித்து, லட்சுமியம்மாளுக்குண்டான துக்கமும் விசனமும், பொழுது செல்லச்செல்ல மிகவும் [illegible]க்கொண்டேயிருக்க, வீதியில்போய் தேடுகிறதென்றால், யமன்போல் நடையிலுட்கார்ந்துக்கொண்டிருந்தார்; போகவும்விடார்; தானும் தேடார்; தனக்கு ஒரே குழந்தையானதினாலும், தன்னன்புக்கெல்லாம் இடமானதினாலும், தன் பிரியமுள்ள சுந்தரத்தைப்பார்த்தே தன் கணவன் செய்கிற தீமைகளையெல்லாம் மறந்து[illegible]டிருந்தவளானதினாலும், தன் மகன் வராததை[illegible]த்து நினைத்து அழுது சிரமத்தால் படுத்துக்கொண்டாள். சாயங்காலமெல்லாம் தினபண்டக்கூடையுடன் ஊர்முழுமையும்சுற்றின வருத்தத்தால், தன்னை யறியாமலே நித்திரைவர அயர்ந்து தூங்கினாள்.

ஆனால் நமது சுப்பராமய்யரோ எலியைப்பிடிக்க பூனை கண்விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறது போல் சிவந்தவும் பயந்தருவனவுமான கண்களைத் திறந்துக்கொண்டு படுத்துக்கொண்டிருந்தார். அவரைப்பார்த்தால் எதற்கோ மிகவும் ஆவலுடன் காத்திருப்பவர்போலத்தோன்றிற்று.

சுமார் 10-மணி யானவுடன், வெளிக்கதவை யாரோ நிதானமாகத் தட்டினது கேட்டது.

"யார் அது?" என்று சுப்பராமய்யர் கேட்டார்.

"நான்தான்" என்று ஒரு இனிமையான குரல் விடை கூறிற்று. சுப்பராமய்யர் உடனே கதவைத் திறந்தார். அடுத்த நிமிஷத்தில் நடையில் சுமார் 8-வயதுள்ள ஒரு பையன் நின்றான்; அவன் பளபளப்பான வுருண்டைமுகமும், மின்னுகின்ற கண்களும், நன்றாக அமைத்த மூக்கும், பவளம்போன்ற வாயும், சிறு முத்துக்களைச் சேர்த்தாற்போன்ற ஒளிவீசுகின்ற பற்களின் வரிசையும், உறுதியான உதடுகளும், ரோஜாபுஷ்பம்போல் சிவந்தகன்னங்களும், கறுத்து சுருள் சுருளாய் படர்ந்து தோட்களின்மேல் விளையாடும் மயிரும், உருட்டிவைத்தாற்போன்ற கைகால்களும் பொருந்திய இச்சிறுவன் தேவேந்திரலோகத்திலிருக்கின்ற கந்தர்வன் புத்திரனென்று வியக்கும் அழகுடையவனாய் இருந்தான். அவன் முகம், சூரியன்போல் பிரகாசித்தபோதிலும், "அடுத்ததுகாட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்ததுகாட்டு முகம்" ஆனதினால் இளமையிலிருந்தபோதிலும் அதிக கஷ்டங்களை அனுபவிக்கிறானென்று தோற்றிற்று; மேலும் இக்கஷ்டங்களையெல்லாம் ஜயித்து சுகப்படலாம் என்கிற தைரியமும் மனதிலிருந்ததென்று முகம் வெளியிட்டது. பேதமை, அன்பு, இவைகளின் உருவுபோலவே தோன்றினான். அவன் உள்ளேவந்து நின்றதும், கன் [illegible]க்க



முடியாத துன்பம் பாய்ந்ததுபோல் அவன் பத்மம் போன்ற முகம்குறுகி மங்கிற்று. "இத்தனை நேரமென்னடா, கழுதையே!" என்று சொல்லிக்கொண்டே சுப்பராமய்யர் கால்வீசி உதைத்தார். காலைமுதல் போஜனம் செய்யாதிருந்ததினாலும், தெருக்களெல்லாம் சுற்றி கைகால்களில் சக்தியற்றவனாய்ப் போனதினாலும், உதையைத் தாங்கமாட்டாமல், சுருண்டு கீழேவிழுந்தான். விழுந்தும், பதில் சீக்கிரமாகச்சொல்லாமற்போனாலும், அவர் காலடியிலேயே கிடந்தாலும், அதிக உதைகள் விழுமென்று நினைத்துக்கொண்டு திடீரென்று எழுந்து, அழுகையை அடக்கிக்கொண்டு பின்வருமாறு மொழிந்தான்:

"சாயங்காலம்வரையில் ஒருவேலையும் அகப்படவில்லை. யாரைக்கெஞ்சினாலும் ஒரு காசுகூடத் தரவில்லை; பிறகு——"

"ஏண்டா, நாய்மாதிரி குலைக்கின்றாய், நிதானமாய்ப்பேசேன்," என்று கூறிக்கொண்டு கன்னங்களில் இரண்டறை அறைந்தார்.

இந்த அடிகள்படவே அவனுக்குண்டான மனக்குழப்பம் இவ்வளவவ்வளவென்றில்லை. தொண்டையில் பெரிய கல்லடைத்தாற்போல் துக்கம் வந்து சிக்கிக்கொண்டது. வாய்விட்டலறி அழுதால் வருத்தம் தீரும்போல் தோன்றிற்று. எதிரிலுட்கார்ந்துக்கொண்டிருந்த பூதத்திற்கு பயந்து தன் துக்கத்தை தானே சமாதானம் செய்துக்கொண்டு நின்றான்.

"பிறகு ——என்னயே சமாசாரத்தை முடியேன்" என்று ஒரு குட்டுக் குட்டினார்.

"பிறகு, ஒருவர் வீட்டில் நடந்த திரக்ஷிக்குப்போய், இவ்வளவுநேரமும் காத்துக்கொண்டிருந்து அங்கே தக்ஷிணையாகக்கொடுத்த இரண்டு அணாவைக் கொண்டுவந்திருக்கின்றேன்," என்று அழுதுக்கொண்டே தன் வேஷ்டியில் முடித்துவைத்திருந்த [illegible]த்தைத் தந்தைகையில் கொடுக்கப்போனான்.

"நாயே, இத்தனைநேரம் போயிருந்தும், இரண்டு அணாதானா கொண்டுவருகிறாய்" என்று, கோபத்துடன் அப்பணத்தைவாங்கி வீசிவிட்டு, அவன் மயிரைப்பிடித்துத் 'தரதர' என்று வீதியிலிழுத்துக்கொண்டுபோய், இரண்டு உதை உதைத்து, கீழே தள்ளிவிட்டு வந்து, கதவை மூடிக்கொண்டு படுக்கையில் படுத்து, மறுநாள் சீட்டாட காசு இல்லையே என்கிற வியாகுலத்துடன் தூங்க ஆரம்பித்தார்.

பசியாலும், அலைச்சலாலும், களைத்துப்போன சுந்தரம், இவ்வளவு அடிகளைத் தாங்கமுடியாமல், நடுவீதியில் சிந்தைகலங்கி மூர்ச்சித்தான். அவ்வொரு நாளில் இவ்வளவு கஷ்டப்பட்ட சுந்தரத்தின்பேரில் கடவுளுக்கும் கருணையில்லாமல்போயிற்று. ஏனெனில், சுப்பராமய்யர் தூங்க ஆரம்பித்ததும், சண்டமாருதம்போல் காற்றுவீச ஆரம்பித்தது; ஆகாயத்தில் எல்லாப்பக்கங்களிலும் மேகங்கள் நிறைந்தன; கருமையும், அந்தகாரமுமான இருள் உலகத்தைக் கவர்ந்துகொண்டது. இடி மின்னல் என்கிற இரண்டு இராட்சதர்களும் அண்டங்களெல்லாம் பொடியாகப்போகும்படி தங்கள் காரியங்களை வர்ணிக்கமுடியாத உக்கிரத்துடன் நடத்தினார்கள். இவ்வளவு ஆனந்தமான சுபமுகூர்த்தத்தில் வருணபகவான் தன் திறமையை வெளியிட்டு அதிகாரம் செலுத்த இஷ்டப்பட்டார். இடியின் ஓசையும், குளிர்ந்தகாற்றும், ஓடுகளையும் ஒடிக்கத்தக்க மழைத்துளிகளும், சுந்தரத்தின் மூர்ச்சையைத் தெளியச்செய்தன. அவன் எழுந்ததும் வலிபொறுக்கமாட்டாமல் மனது வெடித்துப்போகும்படி அழுதான். அவன் கட்டிக்கொண்டிருந்த துண்டு, தலைமயிர் சகலமும் நன்றாக நனைந்திருந்தது. அவன் நாற்புறமும் சுற்றிப்பார்க்கும்பொழுது, அவ்வீதியின் கடைசியில் ஒரு வீட்டுத்திண்ணையில் விளக்கிருந்ததைக் கண்டான். கஷ்டத்தைப் பலதரமும் எண்ணிக்கொண்டு துக்கத்தைச் சமாதானப்படுத்தமுடியாமல், அழுதுகொண்டே அவ்விளக்கெரியும் திண்ணையைச் சேரப் புறப்பட்டான். இடியோசையைக்கேட்டுப் பயந்தான்; மின்னலைப்பார்த்துத் தியங்கினான்; காற்றும், மழைச்சாரலும் முகத்தில் வீசவே நடுங்கினான். இவைகளையெல்லாம் தாண்டிக்கொண்டு அந்த திண்ணையில்போய் உட்கார்ந்தழுதுக்கொண்டேயிருந்தான். காற்று அத்திண்ணையின் மூலையில் சில கிழிந்த காயிதத்துண்டுகளை ஒதுக்கியிருந்தது. எக்காயிதத்தைக் கண்டாலும் படிக்கவேண்டுமென்று சிறு பாலர்களுக்கு இயற்கையாயுள்ள ஆவலுடன், ஒரு சிறு காயிதத்துண்டையெடுத்துப்படிக்க ஆரம்பித்தான். அது கிழிந்ததாயுமான சுவாமி பாடல்களின் ஒரு துண்டு. அதில்,

"பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே"

என்று அச்சிட்டிருந்தது. இதைப் படித்தவுடன் தன் துயரத்தை மறந்து, இதற்கு அருத்தம் கண்டுபிடிக்கப் பிரயத்தனப்பட்டான். "நாம் பார்க்கும் ஒவ்வொருஇடத்திலும், பூர்ணமான இன்பம்" இருக்

கிறதென்று எண்ணி, "ஐயோ, பாவியான என் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே" என்று விசனப்பட்டான். கண்மூடியும் பார்த்தான்; கண்திறந்தும் பார்த்தான்; ஒன்றும் காணவில்லை. "ஐயோ, எங்கு இருக்கிறதோ, இந்த ஆனந்தம். நான் பார்க்க முடியவில்லையே!" என்று சொல்லிவிட்டு, மறுபடியும் அழத்தொடங்கினான்.

இச்சமயத்தில், மழை சிறிது நின்றபடியால், வீதியில் காவல்காரன்போனான். ஒரு சிறுபையன் அழுகிறதைக்கேட்டு, மனதுருகி பையனிடம் வந்து "நீ யார், குழந்தாய்? ஏன் அழுகின்றாய்? உங்கள் வீடு எது?" என்று நிதானமாயும், பட்சமாயும் கேட்டான்.

இவ்வன்புள்ள வார்த்தைகளைக் கேட்டதும், சிறுவன், தன் கஷ்டத்தை நினைத்துக்கொண்டு, அதிகமாக அழுதானேயொழிய பதில்கூற முடியவில்லை. இந்த காவல்காரன், உலகத்தில் அபூர்வமாய் காணப்படுகின்ற நற்குணமுள்ளவர்களில் ஒருவனானதினால், சிறுவனை நற்சொற்களால் தேற்றி மறுபடியும் விசாரித்தான். சுந்தரத்திற்கு பேசுந்திறமை வந்ததும், தன் கஷ்டத்தைக்குறித்து ஒன்றும் சொல்லாமல், தான் கையில்வைத்திருந்த காயிதத்தைக்காட்டி, "இந்தப் பரிபூரணானந்தம் இவ்விடத்திலிருக்கின்றதா! நான் என் பார்க்கமுடியவில்லை" என்று அதிக ஆவலுடன் கேட்டான். காவல்காரன் மறுமொழி சொல்லுகிற விதம் யாதென்று தெரியாமல் மதிமயங்கி நின்றான். வீட்டுசமாசாரத்தைக்குறித்து யாது கேட்கினும் சிறுவன் மறுமொழி கூறவில்லை. தான் கேட்ட கேள்வியையே வருந்தி வருந்தி வினவினான். ஒன்றும் தெளிவாய்ச்சொல்ல முடியாமல், காவல்காரன் "குழந்தாய், இந்த திண்ணையில் படுத்துத்தூங்கு, கனவில் ஆனந்தத்தைக்காண்பாய்." என்றுசொல்லி, தன் வஸ்திரத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டு தன் காரியம் செலுத்தப்போனான். அச்சமயத்தில் "கணார், கணார்," என்று இரண்டுமணி யடித்தது, சுந்தரத்தின் எண்ணம் முழுவதிலும் தெய்வபக்தி வந்து நிரம்பிற்று. கடவுளை தியானம்செய்துக் கொண்டே தூங்கினான்.

அவன் அன்றைக்குகண்ட கனவுகள் வயது முதிர்ந்த, மனிதர்களால், எண்ணத்திலும் காணாத [illegible]ருமையும், ஆனந்தமும் கலந்தவைகளே.

மறுநாட்காலையில், லட்சுமியம்மாள் காவல்காரனைக் கூப்பிட்டு, "ஒரு சிறுவனைக்கண்டாயோ, இராத்திரி" என்று கேட்டாள்.

"நீயும் ஒரு தாயோ அம்மணி! குழந்தையை அம்மாதிரி அலையவிட்டு நீ தூங்க உன் கல்நெஞ்சும் உடன்பட்டதே." என்றுசொல்லி சுந்தரம் படுத்துக்கொண்டிருந்த திண்ணையையும் சுட்டிக்காட்டினான்.

லட்சுமியம்மாள் சீக்கிரமாக அவ்விடம் ஓடிப்பார்த்தாள். அவ்விடம் சுந்தரம் தூங்கிக்கொண்டிருந்தான். அவனைப்போய் தொட்டாள். பனியில் கிடந்த பளிங்குபோல் அவன் தேகம் குளிர்ந்திருந்தது. மந்தகாசம் செய்துகொண்டே அழிவில்லாத் தூக்கம் தூங்கினான்.

"ஐயோ சுந்தரம் என் அருமைக்குழந்தையே உன் அன்புள்ள தாயிடம் ஒருவார்த்தை பேசடா' என்று பிரயோஜனமில்லாமல் கதறினாள்.

முடிவில் அவன் பரிபூரணானந்தத்தைக் கண்டுகொண்டான்.

பாலசுப்பிரமணியம்

---

# சம்பகமாலை
## அல்லது
# இளையராஜாவின் தீர்மானம்.

## அங்கம் IV.

### மூன்றாம் களம்.

இடம்: அந்தப்புரத்துக்கடுத்த வெளிப்பிரதேசம்.

(நிலவில் ரின்மல் சோபாவின்மீது சாய்ந்திருக்க லால்பாய் ஒரு கோப்பையை கையிற்கொண்டு பிரவேசிக்கிறாள்)

**லால்பாய்.**—(கோப்பையை மோந்து) ஓ! நன்றாய் மணக்கின்றது. ப்ரிதா செய்துக்கொடுக்கும் பானத்தைக்காட்டிலும் நான் இன்றைக்குச் செய்தது அதிகவாசனையாகவும் உருசியாகவும் இருக்குமென்று நினைக்கின்றேன். மனதிற்கு மிக்க உற்சாகம்தரும்பொருட்டு நேர்த்தியான அபினியையும் கஞ்சாவையும் இட்டிருக்கின்ர, ராஜனுக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ராஜன் எங்கேயிருக்கிறார் பார்க்கலாம் (திரும்பிப்பார்த்து) ஆ! இதோ, இங்கிருக்கின்றனரோ! (வணக்கமாய்) மகாராஜா! இதோ! உலம் ஜலத்தைக் கொண்டுவந்திருக்கின்றேன்.

**ரின்மல்.**—(தனது கையில் வாங்கி மோந்துபார்த்து) வா! என்னமணம்! (கொஞ்சம் குடித்து) ஆ! ஆ! நிரம்ப உருசியாயிருக்கின்றது. நிச்சயமாய் இது ப்ரிதாசெய்த பானமன்று. இதை யார் செய்தார் சொல் லால்பாய்!

**லால்.**—(கொஞ்சம் நாணத்துடன்) மகாராஜா! தங்களுடைய ஊழியக்காரியாகிய நான்செய்தேன்.

**ரின்.**—நான் இதற்காக உனக்கென்ன செய்யப்போகிறேன்!

**லால்.**—ஈகையிற்சிறந்த தங்களுக்கு ஏதுதான் பெரிது? முன்னரே எனக்கு இவ்விலையுயர்ந்த மோதிரம் தந்திருக்கிறீர்கள். தங்கள் வாக்கினின்று நான் செய்த பானம் வெகு நேர்த்தியாயிருக்கிறதென்று சொல்லக்கிடைத்ததே பேர்துமானது. மகாராஜா! நான் போகலாமா?

**ரின்.**—(கொஞ்சம் குடித்து) இப்பானங்களெல்லாம் ஒரேதடவையாய்க் குடிக்கத்தகுந்தவையல்ல. மேலும் உருசியான பானத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்தால்தான் இனிமையாயிருக்கும். நான் குடித்து முடித்தபிறகு பாத்திரத்தைக் கொண்டுபோகலாகாதா?

(ரின்மல் சற்று குடிப்பதும் சற்று உறங்குவதுமாயிருக்கிறான்.)

**லால்.**—(தனக்குள்ளே) ஐயோ! இது என்ன? மகாராஜா இவ்வாறு காலத்தைப் போக்குகின்றாரே. நிறைநிலவு இந்தர் வந்துவிட்டது. அரண்மனை அமைதியாய்விட்டது. நான் இன்னும் என் இருப்பிடம் சேராவிடில் என் பந்துக்களும் சினேகிதர்களும் யாது நினைப்பார்கள். (பிரகாசமாய்) மகாராஜா! நான் இங்கு வந்து நெடுநேரமாய்விட்டது. பாத்திரத்தைக் கொடுத்தால் எடுத்துக்கொண்டுபோவேன். இல்லையாகில் வெறுங்கையளாய்ப் போகின்றேன்.

**ரின்.**—லால்பாய்! பாத்திரத்தைக் கொடுக்கின்றேன்! நீ கொண்டுபோகலாம். இந்நிலவைக் கண்டாயா? எவ்வளவு நேர்த்தியாயிருக்கின்றது பார். இந்நிலவும் இப்பானமும் நீ ஒருத்தி இங்கில்லாவிடில் பிரயோஜனமற்றவையாயிருக்கும்.

**லால்.**—(தனக்குள்ளே) ஆ! என்ன! மகாராஜா என் இல்வாழ்க்கையைக் கெடுக்க எண்ணங்கொண்டிருக்கிறாரோ! ஆ! என்ன்செய்வேன்? ஏகாங்கியாயிருக்கின்றனனே! (பிரகாசமாய்) மகாராஜா! நான் அந்தஸ்தில் குறைந்தவள். தங்களுடைய புத்திரிக்கு வேலைக்காரியன்றோ? தங்களுடைய வாக்கினின்று வரும் உபசார வார்த்தைகளுக்கு ஏற்றவளல்ல, மகாராஜா!

**ரின்.**—குற்றமில்லை, லால்பாய்! அந்தஸ்து உடன் பிறந்ததல்ல. ஆகஸ்மீகமாய் நடுவில் கிடைப்பதே. உருவச்சிறப்பும் குணச்சிறப்புமே அவ்வாறு பிறந்தவை. அடுத்தவர்களுக்கு மேலான அந்தஸ்து கொடுக்கத்தகுந்த உயர்ந்த பதவியிலிருக்கும் எனக்கு மற்றவர்களுடைய அந்தஸ்தினால் ஆவதென்ன?

**லால்.**—மகாராஜா! சகல கலைகளையும்கற்ற தங்களுடைய வசனங்களுக்குத்தகுந்த பதிலளிக்க வல்லவளோ நான்? உலகத்தில் நற்குணம் நிறையப்பெற்ற மானிடர்கள் தங்களுடைய பிறப்புக்குமிஞ்சிய அந்தஸ்தைக் கோரமாட்டார்கள். நாய் விரும்பும் உன்னதஸ்தானம் குப்பைமேடுதானே.

**ரின்.**—ஆம். லால்பாய்! நாய் குப்பைமேட்டிற் கதிகமான அந்தஸ்தை அபேக்ஷிக்காவிடினும், அதைவிரும்பிய மானிடர்கள் குப்பைமேட்டினின்று அதையெடுத்து தங்கள் மடியின்மீது வைத்து கௌரவப்படுத்துவதில்லையா?

**லால்.**—அவ்வாறு மானிடர்செய்வது தங்கள்வினோதத்திற்கன்றி நாயைக் கௌரவப்படுத்தவன்று மகாராஜா!

(பாத்திரத்தையெடுக்க முயல்கிறாள்.)

**ரின்.**—(பாத்திரத்தை யிழுத்துக்கொண்டு) பெண்ணே! பாதையிற்கிடக்கும் பணமுட்டையை உதைத்தெறிந்துச்செல்லும் அதிருஷ்ட [illegible]கிய வறிஞன்போல் தவம்புரிந்தாலும் கிடைக்கமாட்டாத என்னைப்போன்றவனை விலக்கிச் செல்லுகின்றாய். உன்னைக்காட்டிலும் மதிஈனர்களுண்டோ?

**லால்.**—(தனக்குள்ளே) ஐயமின்றி இவருக்குக் கெட்ட எண்ணம் உண்டாயிருக்கின்றது. நான் என்னசெய்யலாம். [illegible]

துப்பார்க்கலாம். (பிரகாசமாய்) மகாராஜா! நான் அந்தஸ்து, செல்வம் ஆகிய எதையும் அபேக்ஷித்தவளன்று. ஸ்திரீகளுக்குக் கற்பே செல்வம், கற்பே அந்தஸ்து. அதைக் காப்பாற்றிக்கொண்டால் செல்வம் அந்தஸ்து முதலியவற்றை அடைந்தவளாவேன். மகாராஜா! லோகபாலகராகிய தாங்கள் எளியவளாகிய என்னுடைய அருமைச்செல்வமாகிய கற்பைக் காப்பாற்றுங்கள். க்ஷத்திரியகுலத்தில் பிறந்த உங்களுக்கு இது ஏற்ற தருமமன்றா?

**ரீன்.**—என்னபேச்சுபேசுகின்றாய் பெண்ணே! லால்பாய்! வேறு புருஷனால் மணக்கப்படாத உன்னை நான் அடைந்தக்கால் அதர்மமென்னை. உன் கற்புநிலை எப்படி ஒழியும்?

**லால்.**—மகாராஜா! ஸகலதர்ம ரகசியங்களையும் அறிந்த தாங்கள் அற்பவின்பத்தை அபேக்ஷித்து இவ்வாறு பேசலாகாது. உலகில் ஜனசமூகம் ஏற்படுத்தியிருக்கும் விதிகளுக்கிணங்க ஸ்திரீபுருஷர் கூட்டுறவு செய்துகொள்ளவேண்டும். லோகவிருத்தமான கூட்டுறவு சிற்றின்பத்தைக்கருதி செய்ததாகவே மதிக்கப்படும் மகாராஜா! நம் பந்துக்களும், தோழர்களும், மற்றவர்களும் நம்மை ஒதுக்கிவிடுவார்கள். அப்புறம் நமக்கு என்ன இன்பம்வாய்க்கும்? பந்துமித்திரர்கள், ஜனசமூகம் அன்றோ ஸ்திரீபுருஷர்களுக்குச் சம்பூர்ணமான வின்பம் தருகின்றார்கள். அவர்கள் விதித்த வழியை நாடி எனக்கு ஏற்ற அந்தஸ்துடைய புருஷனை அடைந்து சந்தானம், இன்பம், உலகப்புகழ்ச்சி, தர்மம் முதலியவற்றை அடைய விரும்பும் எளிய பெண்ணாகிய என்னை கண்ணில்லாத உமது காமாக்கினிக்கு ஆளாக்கக்கூடாது மகாராஜா! என்னை உம்புத்திரியாக நினைத்துக் கொள்ளும். நான் உமது புத்திரியின் தோழியன்றா? உமது தர்மகுணத்தில் சம்பூர்ணமான நம்பிக்கைவைத்தன்றோ நான் இந்நேரத்தில் தனியே தாங்களிருக்கிற இவ்விடத்திற்கு இப்பானத்தைக் கொண்டுவந்தேன். இவ்விராஜபுத்திரஸ்தானத்தில் தேகபலத்திலும், சௌரியத்திலும் உமக்கு இணையான ராஜபுத்திரன் கிடையாது. நீண்ட தேகமும், உருண்டுதிரண்டு முழங்கால்வரைக்கும் தொங்கும் கரங்களும், சிங்கத்தையேனும் வெல்லும் உமது புஜபலமும் ராஜபுத்திரர்களுள் மதிப்புப்பெற்றிருக்கின்றன. உயர்ந்த கோபுரத்தினுச்சியில் பிரகாசிக்கும் பொன்கலசங்கள்போல் உயர்ந்த நீதி உம்மிடத்திலிருந்தால் மகாராஜா! நீர் ராஜசிரேஷ்டனாவீர். அற்ப வின்பத்திற்காக பெரும் புகழை இழந்துபோகவேண்டாம். என்னை விட்டுவிடும். உமக்குச் சுபம் உண்டாகும், உம் புத்திர பௌத்திரிகளுக்குச் சுபம் உண்டாகும். உமது வமிசம் நீடூழிகாலம் நிலைபெறும்.

**ரீன்.**—பெண்ணே! லால்பாய்! உனக்கு லால்பாயென்ற பெயர் வீணேகிடைக்கவில்லை. ஆ! உன் பெயர் கெம்பா! மாணிக்கமா! ரத்தினமா! எதைச்சொன்னாலும் தகும். பத்தரைமாற்றுத் தங்கத்தை உருக்கிவார்த்தாற்போல் பிரகாசிக்கும் உன்னைக்கெம்பென்று மாத்திரம் அழைத்தாற் போதுமா? தங்கத்தில் இழைத்த இரண்டு கெம்புக்கல் வரிசைபோல் விளங்கும் உன்னிரண்டு உதடுகளினின்று முத்துகள்போல் உதிரும் உன் இனியசொற்களைக் கேட்கக்கேட்க என்னாசை அளவுகடந்து செல்லுகின்றது. உன் தூஷணையும் என் காதிற் செல்லுகையில் ஆசீர்வாதமாகின்றது. வீணே உலகவிவகாரங்களைப்பேசி ஏன் காலதாமசம் செய்கின்றாய். நான் சௌந்தரிய முடையவனென்று அறிந்தும் என்னை யேன் வெறுக்கின்றாய்? இலவசமாய்க்கிடைக்கும் பேரானந்தத்தை ஏன் இழக்கின்றாய்.

**லால்.**—மகாராஜா! என்னைக்காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! நான் ஏழை, நாதனற்றவள், (கண்ணினின்று நீர் சொரிய) தாய் தந்தையற்றவள். உற்றாரில்லை. உறவினரில்லை. கற்புநிலை ஒன்றைமாத்திரம் வைத்துக்கொண்டிருக்கிறேன். அதை ஒழித்துவிட்டு என் வாணாளை வீணாக்கவேண்டாம். மகாராஜா! உமக்கு வேண்டுமானால் உம் கருத்துக்கிசைந்த பெண்கள் பலர் கிடைப்பார்கள்.

(மெல்லப் பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு ஓரடி வைக்கப் போகிறாள்.)

**ரீன்.**—(அவள் வஸ்திரத்தின் தலைப்பைப்பிடித்துக்கொண்டு) பெண்ணே! வேண்டாம், போகாதே! உச்சிமரத்தில் பழுத்த பழம்போல் நீ ஒருவருக்கும் எட்டாமல் வளர்ந்த இனிமையான பெண். உன்னைக்காட்டிலும் மேலான பெண்களா எனக்குக்கிடைக்கப்போகின்றார்கள்.

**லால்.**—(தன்வஸ்திரத்தை யிழுத்துக்கொண்டு) அடே! புருஷஅதமா! என் வஸ்திரத்தையா



பிடித்திழுக்கின்றாய். அடே துஷ்டா! சண்டாளா! துரோகி! துணையற்றபெண்ணை இப்படியும் மானபங்கம் செய்யலாமா! க்ஷத்திரியகுலம் நாசமாக்கவந்த காலாக்கினியே! கபடவேஷம்தரித்த கம்பேயே! பித்தா! நீதியில்லா நீசா! என்னைத்தொட்டாயேயானால் அந்தக்கையை அறுப்பேன். என்னைக்கெடுக்க எண்ணங்கொண்டால் அந்த இருதயத்தைப் பிளப்பேன். பத்திரம், நான் சிசோதியகுலத்தில் பிறந்த க்ஷத்திரியப்பெண்ணென்று எண்ணிக்கொள். எங்கள் குலத்தவர் உன்னைக் கண்டதுண்டமாக வெட்டி எறிவார்கள். அக்கினியை அபேக்ஷித்துச்செல்லும் விட்டிற்பூச்சிபோல் நாசமடையாதே சொன்னேன்.

(ரீன்மலைப் பார்த்துக்கொண்டே பின்னால் நகருகிறாள்.)

**ரீன்.**—புருஷன் ஸ்திரீயினுடைய அனுமதியை எதிர்பார்ப்பது முதன்முதலில். அவளுடைய தூஷணையை அவன் பொறுத்துகொள்வதற்கும் அளவுண்டு பெண்ணே! நீ அளவுகடந்து சென்றனை. பாம்பின் தலையிலுள்ள ரத்தினத்தை அதைக்கேட்டுத்தான் எடுத்துக்கொள்ளுகிறார்களோ? கடையாமல் பாற்கடல் தேவர்களுக்கு அமிர்தம்தந்ததோ! கிடைத்தால் காந்தர்வம் கிடைக்காவிட்டால் ராக்ஷஸ விவாகமிருக்கவேயிருக்கின்றது. உன்னை அணையாவிட்டால் நான் புருஷனாய்ப்பிறந்து பயனென்னை.

(எழுந்து கையைப்பிடித்திழுக்கிறான்.)

**லால்.**—துராகிருதம் செய்யும்பக்ஷத்தில் உனக்கு இராவணனுக்கும் கீசகனுக்கும் கிடைத்தகதி கிடைப்பது நிச்சயம். அடே மூர்க்கா! நீ என்னை யாரென்று நினைத்தாய்! ஒரு சிசோதியகுல க்ஷத்திரியப்பெண் தன் உடலில் உயிர் வைத்திருக்கும்வரையில் உன்னைப்போன்ற ஒரு புருஷனுக்கு அடங்குவாளென்று நினைக்கவேண்டாம். ஸ்திரீ வசப்பட்டால் மிருதுவான தேகத்தையுடைய கந்தர்வஸ்திரீ; இல்லையேல் ராக்ஷஸி என்றெண்ணிக்கொள். இதோ என் கையைப்பிடிப்பதன் முன்னர் அதினால் கிடைக்கும் குத்தை வாங்கிக்கொள்.

(ஒருகுத்தினால் ரீன்மலைத் தள்ளிவிட்டு ஓடுகிறாள்.)

**ரீன்.**—புலியினால் துரத்தப்பட்ட மான் எவ்வளவு தூரம் ஓடப்போகின்றது பார்க்கலாம்.

(பின்னால் ஓடுகின்றான்.)

எச். வெங்கோபராவ்.

# சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாகவிருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

## நாம் உண்ணும் உணவு.

(முன்தொடர்ச்சி.)

நமது சரீரத்திலடங்கி யிருக்கும் வஸ்துக்களவை.

இப்போது நமது தேகத்தில் என்னென்ன வஸ்து அல்லது சத்து செலவாகிறது என்று யோசிப்போம். ஏனென்றால் இது தெரிந்தால்மட்டிலும் அச்செலவுக்குத் தகுந்த வரவு எவ்வகையான உணவினாலுண்டுபண்ணி தேகம் இளைத்துப்போகாமல் பாதுகாக்கலாமென்று நன்றாய்த்தெரியும்.

முதலில் நமது சரீரம் எவ்வகையான வஸ்துக்களடங்கியதா யிருக்கிறதென்று யோசிப்போம்.

1. நமது தேகத்திலிருக்கும் வஸ்துக்களைப் பிரித்து ஒவ்வொன்றையும் நிறுத்துப்பார்த்தால் முக்காற்பங்கு தண்ணீராகவே இருக்கும். மற்ற வஸ்துக்களெல்லாம் காற்பங்கு நிறையுள்ளதாயிருக்கும். ஒரு பச்சைவாழைக்காயை முதலில் நிறுத்துப்பார்த்துக்கொண்டு அப்புறம் அதை நன்றாய்க் காயவைத்து அதில் தண்ணீரென்பது கொஞ்சமாவது மில்லாமற்போனபின்பு திரும்ப நிறுத்துப்பார்த்தால் அதன் நிறை எவ்வளவு குறைந்துபோகுமோ, அதே விதமாய் நமது சரீரத்தையும் உலர்த்திவிட்டால் அதன் நிறை முக்காற்பங்கு குறைந்துபோகும். ஒரு ஆட்டுத்துடையை வாங்கி முதலில் அதன் நிறையைக் கணக்கிட்டு அப்பால் அதை முன்சொன்னபடியுலர்த்தி நிறையிட்டுப்பார்த்தால் அதன் நிறையும் அப்படியே குறையும். ஆகையால் நமது தேகத்தில் 100-ல் 75-பங்கு ஜலமிருப்பதாக வைத்துக்கொள்ளலாம்.

2. தாதுப்பொருட்களை (அதாவது உப்புமுதலியவைகளை)* ஒரு பாகமாகப் பிரிக்கலாம். ஒரு மனிதன் இறந்துபோனவுடன் அந்த சரீரத்தைத் தகனம்செய்துவிட்டால் ஒருபிடி மண் சாம்பலாய்விடும். 150-பவுண்டு நிறையுள்ள ஒரு சரீரத்தைத் தகனம்

* Minerals or Salts.

செய்தால் அதிலுண்டாகும் சாம்பல் ஏறக்குறைய 3-பவுண்ட் நிறையுள்ளதாயிருக்கும். இப்படியொரு பொருளைத் தகனித்து மிகுந்திருக்கிற வஸ்துவுக்கு தாதுப்பொருள்களென்று பெயர். இது 100-ல் 2-பங்கு ஆகிறது. தேகத்திலுள்ள தாதுப்பொருள்கள் விசேஷமாக எலும்புகளிலடங்கி யிருக்கின்றனவென்று சொல்லலாம். அவைகளுள் முக்கியமானவை சுண்ணும்பு, உப்பு, மரஉப்பு, (Potash) கெந்தகம், அயபஸ்பம் முதலியவையே.

**3. மஸ்துப்பதார்த்தம்** (Nitrogenous Matter) இது நமது இரத்தத்திலும் பற்பல உறுப்புகளிலுள்ள தசையிலும் நிறைந்திருக்கிறது.

**4. கொழுப்பு** இது தேகாத்தியந்தமு மிருக்கும். என்றாலும் விசேஷமாய் அடிவயிறு முதுகு முதலிய பாகங்களில் அதிகமாக விருக்கும். நமது அவயவங்கள் இங்கு மங்கும் அசையும்போது, அவைகளிலுள்ள எலும்புகள் ஒன்றோடொன்று உரசிச் சேதப்படாமல் மெதுவாய் நழுவிச் செல்லத்தகுந்த விதமாய் மெழுக்குபதங் கொடுப்பதற்கும் அங்கங்கே கொழுப்பானது உருகி நிற்கும். மேலும் நமது தேகத்தில் முன்சொன்ன விதமாய் உஷ்ணத்தையுண்டுபண்ணுவதற் குதவுகிறது. விளக்கிலூற்றிய எண்ணெய் எவ்விதமாய் எரிந்துவருவதில் உஷ்ணத்தை யுண்டுபண்ணுகிறதோ அதேவிதமாய் நமது தேகத்திலும் தைலம் என்கிற எண்ணெயானது கொழுப்பாய் மாறி ஒவ்வொரு பாகத்திலும் திரண்டு அடை அடையாய் நிற்கும். ஆகவே இந்திரிய வஸ்துக்களும் அனிந்திரிய வஸ்துக்களுமாக மேற்சொன்ன பொருட்களெல்லாம் நமது சரீரத்தி லடங்கியிருக்கின்றன.

5. **'ஸ்டார்ச்சு'** மா, சர்க்கரை பதார்த்தங்கள்,* தேகத்திலுள்ள அனேக யந்திரங்கள் முதலான இடங்களில் இருக்கின்றன. நமது சரீரத்திலிருந்து உண்டாகும் சேதாரமானது இப்பொருட்களி னின்றுதான் உண்டாகவேண்டும். ஆனால் இவைகளிலெந்தெந்தப் பொருட்கள் அதிகமாகச் செலவாகின்றன? நமது சரீரத்திலுள்ள சத்து குறைபடாமலிருக்கவேண்டுமானால் செலவுக்குத்தகுந்த வரவிருக்கவேண்டு மல்லவா? ஒரு கனவான் வீட்டில் 4-குதிரைகளும் இரண்டு மாடுகளு மிருந்து அவருடைய களஞ்சியத்தில் 10-மரக்கால் கடலையும் 10-துலாம் பருத்தி விதையு மிருந்ததென்று வைத்துக் கொள்ளுவோம். இம்மிருகங்களுக்கு நாளொன்றுக்கு 4-படி கடலையும் கால் துலாம் பருத்தி விதையும் போட்டு வருகிறுரென்றும் வைத்துக்கொள்வோம். இப்படிச் செய்துவந்தால் 20-நாளிற் களஞ்சியத்திலுள்ள கடலை முழுவதும் செலவாகிவிடும்; 10-துலாம் பருத்திவிதை செலவாகிறதற்கோ 40-நாட் செல்லும். ஆகையால் கடலையை அடிக்கடி வாங்கிவரவேண்டும். இவ்விரண்டையும் ஒரேகாலத்தில் வாங்கிவந்தால் பருத்திவிதையைவிட கடலையை யதிகமாய் வாங்கிவரவேண்டும். இதே விதமாக நமது சரீரத்திலுண்டாகுஞ் சேதாரத்துக்குத் தக்கபடி நமது உணவு மிருக்கவேண்டியது அவசியம். ஆகையால் நமது சரீரத்திலுள்ள பற்பல வஸ்துக்களில் எவ்வெவை யதிகமாகச் செலவாகின்றனவோ அவைகளையே யதிகமாக நாம் நிறைக்கவேண்டும். இந்தக்காரணத்தால் நமது சரீரத்திலிருக்கும் எந்தெந்தப் பொருட்களில் எவ்வளவெவ்வளவு சேதாரமுண்டாகிறதென்று தெரியவேண்டியது அவசியம்.

தேகத்தில் இந்தமாதிரியாக 5-வித வஸ்துக்கள் அமைந்திருக்கின்றன.

எப்படி நீராவியந்திரமானது கரியும் ஜலமும் இல்லாமல் வேலைசெய்யாதோ அதுமாதிரியாகவே ஆகாரமில்லாமல் நமது தேகமும் வேலைசெய்யாது அதுமாத்திரமல்ல; ஆகாரமில்லாவிடில், தேகமானது நாளுக்குநாள் க்ஷீணமடைந்து பிற்பாடு உயிரும் போய்விடும். ஆனதினால் நாம் உயிரோடிருக்கும்பொருட்டும், வேலைசெய்யும்பொருட்டும்தகுந்த உணவுசாப்பிடுவது அவசியம். நமது தேகத்திலுள்ள வஸ்துக்களைப்போலவே ஆகார பதார்த்தங்களையும் 5-வகுப்பாகப் பிரிக்கலாம். அவைகள் என்னவென்றால்:—

1. **'பிரோடீட்'**[1] — அல்லது மஸ்துபதார்த்தங்கள் இவைகள் மாம்ஸத்திலும், பாலிலும், முட்டைகளிலும், துவரை, கடலை, பயறு, உளுந்து, கொள்ளு முதலிய தானியங்களிலும் விசேஷமாக விருக்கின்றன. கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு இவைகளில் மிதமாகவும், அரிசியில் மிக சுவல்பமாகவும் இருக்கும்.

* இவைகளுக்கு இங்கிலீஷில் 'Carbohydrates' என்று பேர்வழங்குகிறது. 'ஸ்டார்ச்' என்பது எல்லா மாவகைகளிலும் அதிகமாக இருக்கிற வஸ்து. செவ்வரிசி, கார்னபிளவர்மாவு, ஆரோரூட்மாவு இவைகள் ஸ்வயமான 'ஸ்டார்ச்'கள். இது அரிசியில் அதிகமாகவிருக்கும். கோதுமை ரவையில் அவ்வளவின்றி இன்னும் கொஞ்சமாயிருக்கும், இறைச்சியில் இல்லவேயில்லை.

[1] Proteid.



2. **கொழுப்பு,**[2]—அல்லது எண்ணெய்—மிருகங்களின் கொழுப்பு, நெய், வெண்ணெய், தேங்காயெண்ணெய், நல்லெண்ணெய் இவைகளெல்லாம் தேகத்திற்குள் ஒரே குணமுள்ளவைகள்.

3. **ஸ்டார்ச்சு**[3]—இது எல்லாவித தானியங்களிலும் விசேஷமாக இருக்கின்றன. இது இல்லாத மாவு கிடையாது. சர்க்கரைகளும் சமானகுணமுள்ளவைகளே.

4. **உப்புகள்**[4]—இவைகள் மாம்ஸங்களிலும், தானியங்களிலும் காய்கறிகளிலும், தனியாகவும் இருக்கின்றன.

5. *தண்ணீர்.*[5]

எல்லாவித உணவு பதார்த்தங்களிலும் உள்ள ஸத்துக்களையும் இந்த ஐந்து வகுப்புகளாகப் பிரிக்கலாம்.

இவைகளிலெல்லாம் முக்கியமானது 'பிரோடீட்' ஸத்தே. தசைகள், நரம்புகள், மூளை, யந்திரங்கள் நாடிகள், இருதயம், ஜீர்ணரஸங்கள் முதலிய பிரதான வஸ்துக்களிலெல்லாம் அமைந்திருக்கிறது. அது இல்லாவிடில் உயிர் நிலைக்காது. தேகத்திற்கு, புசிக்கப்பட்ட 'பிரோடீடை' மற்ற ஸத்துக்களாக மாற்றிக்கொள்ள சக்தியுண்டு; ஆனால் மற்ற ஸத்துக்களையோ பிரோடீடாக மாற்றிக்கொள்ள முடியாது. இது மிகவும் அவசியமானது. தேகத்திலுள்ள யந்திரங்களெல்லாம் வேலை செய்தால் தான் நாம் ஜீவித்திருக்கலாம். யந்திரங்கள் வேலை செய்யும்பொழுது, அவைகளிலுள்ள 'ப்ரோடீட்' வஸ்துக்கள் குறையும். இப்படி குறைந்துபோன 'பிரோடீட்' வஸ்துக்களை மறுபடியும் அந்தந்த யந்திரங்களில் சேர்க்கிறதற்காகவே நாம் 'பிரோடீட்'களை சாப்பிடவேண்டியது அவசியம். பால்யத்தில் யந்திரங்கள் வளருகிறதற்காகவும் பிரோடீட்களை சேர்த்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

கொழுப்பு, எண்ணெய் இவைகள்தேகத்தில்சென்று பிற்பாடு அனேகவிதமாக உபயோகப்படுகின்றன. இவை எப்படி விளக்கில் எரிந்து உஷ்ணத்தையுண்டு பண்ணுகின்றனவோ அது மாதிரியாகவே தேகத்தில் எரிந்து நமது தேக உஷ்ணத்தைக்கொடுக்கின்றன. எப்படி கதவுகளின் கீல்கள், சக்கரங்கள் இவைகளில் தடவினால் உறைசலில்லாமல் இருக்குமோ அதுமாதிரியாகவே நமது தேகத்திலுள்ள யந்திரங்கள், பூட்டுகள் இவைகளில் சேர்ந்திருந்தால், நமது அங்கங்களும், தசைகளும் வேலைசெய்யும்பொழுது, உறைசலும், கஷ்டமும் இல்லாமலிருக்கும். தேகத்தில் தோலிற்குக் கீழாக அமைந்திருக்கிற கொழுப்பானது உள்ளே குளிர் அதிகமாக இறங்காமலும் பார்த்துக்கொள்ளுகிறது.

நாம் சாப்பிடும் கொழுப்பு மேலே சொன்ன விதங்களில் தேகத்திற்குத் தேவையானமட்டும் உதவினபின் மீந்திருந்தால், சில இடங்களில் படிந்து இருந்து, பிற்காலங்களில் தேவையானபொழுது உபயோகப்படும். ஆனால் நாம் வேலைசெய்கிறதற்கு ஆதாரமாக விருக்கிறதே கொழுப்பின் முக்கியபிரயோஜனம். எப்படி நீராவியந்திரத்தின் வேலைக்கு கரியானது ஆதாரமோ அப்படியே கொழுப்பும் நமது தேகவேலைக்கு ஆதாரம்.

**ஸ்டார்ச்சு**, அல்லது மா, சர்க்கரைகள்.—தேகத்தில் உஷ்ணம் உண்டுபண்ணுவதற்கும், வேலைசெய்கிறதற்குமாக உபயோகப்படுகின்றன. சிலவேளை, தேகத்திற்குள், கொழுப்பாகவும் மாறக்கூடும்.

**உப்புகள்** இல்லாத யந்திரமாவது, தசையாவது, ஸத்தாவது தேகத்தில் இல்லவே இல்லை. பிரதிதினம் மூத்திரத்தில்மாத்திரம் சுமார் ஒரு அவுன்ஸ் உப்பு நமது தேகத்திலிருந்து வெளிப்படுகின்றது. இதைத்தவிர வேர்வை மூலமாகவும் வெளிச்செல்லுகின்றது.

இந்தமாதிரி குறைந்துபோன உப்புகளை மறுபடியும் உட்செலுத்துகிறதற்காகவே, நாம் உப்பு சாப்பிடவேண்டியது அவசியம்.

தானியாதிகளில் உள்ள உப்பு போதாததினால், தனியாகவும் நாம் உப்புசேர்த்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

தேகத்தில் ஸகல ஆகார ஸத்துகளும், அனேக இடங்களுக்கும் யந்திரங்களிற்கும், திரவரூபமாகத்தான் ஓடவேண்டுமாதலால், தண்ணீரும் அவசியமானதே.

இந்தமாதிரி 5-வித ஆஹார வஸ்துக்களும் தேவையானவைகள். இதில் ஏதாவது ஒன்றைத் தள்ளமுடியுமாவென்றால் ஸ்டார்ச்சு என்னும் வஸ்துவைக் கொஞ்சகாலம் தள்ளலாம். ஆனால் தேகம் ஸௌக்கியமாக இருக்கவேண்டுமானால் 5-வகை பதார்த்தங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டியது தான்.

[2] Fat. [3] Starch. [4] Salt. [5] Water.

காய்கறிகள் தினம்தோறும் அதியாவசியகமில்லாவிட்டாலும் அடிக்கடி சேர்த்துகொள்ளாவிட்டால் **ஸ்கர்வி (Scurvy)** என்னும் ஒருவித உபாதி காணக்கூடும்.

இப்பதார்த்தங்களையெல்லாம் நமக்கு வேண்டிய அளவில் சாப்பிட்டு, ஜரித்து, தேகத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டுமானால் அவைகளை சமையல்செய்தும், '**வ்யஞ்ஜனங்க**'ளோடும் * சாப்பிடவேண்டும்.

ஒருமனிதன் வேலைசெய்யாமல் சோம்பலாகவிருந்தால் நாளொன்றிற்கு கீழே சொல்லுகிற அளவு சாப்பிடவேண்டும்.

| | அவுன்ஸ். |
|---|---|
| பிரோடீட் (மஸ்துபதார்த்தம்) | 2½ |
| கொழுப்பு அல்லது எண்ணெய் | 1 |
| ஸ்டார்ச்சு (மா, சர்க்கரை) | 12 |
| உப்பு | 1 |
| மொத்தம். | 16 |

இந்த சத்துக்களெல்லாம் போஜனபதார்த்தங்களெல்லாவற்றிலும் ஜலத்துடன் சேர்ந்திருக்கிறதினால் தினம் ஒன்றுக்கு சுமார் 32 - 40 - அவுன்ஸ் ஆஹாரம் சாப்பிடவேண்டும். இதைத்தவிர தினம் ஒன்றிற்கு சுமார் 30 - 40 - அவுன்ஸ் தண்ணீரும் தேவையானது.

மேலேசொன்ன அளவு பெரியவர்களுக்குமாத்திரமே. பாலவிருத்தர்கள் குறைவாகச் சாப்பிடவேண்டும்.

தேகத்தில் உபாதி ஏதாவது இருந்தாலும் அளவு குன்றயும்; ஆனால் சும்மா இராமல் வேலை செய்தால்,

பிரோடீடில் 3-அவுன்ஸும்.
எண்ணெயில் 1½ ,,
ஸ்டார்ச்சுகளில் 20 ,,
உப்பில் 1 ,,
} சாப்பிடவேண்டும்.

இந்தமாதிரி சாப்பாட்டின் மொத்த அளவுமாத்திரம் அல்ல, ஒவ்வொரு ஸத்தின் தனித்தனி அளவுகூட ஸந்தர்ப்பத்திற்குத்தக்கபடி மாறக்கூடும்.

குழந்தைப்பருவத்தில் தேகமானது வளர்ந்து கொண்டு வருவதினால், அதற்கு அவசியமான பிரோடீட் ஸத்துக்கள் அதிகமாக இருக்கவேண்டும். ஸ்டார்ச்சுகளை ஜீரணிக்கமுடியாததினால், ஸ்டார்ச்சு இருக்கக்கூடாது. ஆனால் சர்க்கரை வெண்ணெய், இவைகளை குழந்தைகள் சீக்கிரம் ஜீரணிக்கக்கூடுமாதலால் அவைகள் விசேஷமாக இருக்கலாம். அப்படியே, பாலில் பிரோடீட் ஜாஸ்தியாகவும், ஸ்டார்ச்சு இல்லாமலும், சர்க்கரை, வெண்ணெய் வேண்டிய அளவிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. வயது ஆக ஆக ஸ்டார்ச்சுகளை ஜீரணிக்கமுடியுமாதலால், அதிகமாகச்சேர்த்துக்கொள்ளலாம். யவ்வன பருவம்வந்து தேகம் வளர்ந்தானபிறகு அதிக பிரோடீட் தேவையில்லை. வயது முதிர்ந்தபிற்பாடு பிரோடீட் மிகவும் சுவல்பமாயிருந்தால் போதும்.

வேலை ஜாஸ்தியாக செய்கிறவர்களுக்கு பிரோடீடும், கொழுப்பும் அதிகமாக தேவை. வேலையில்லாதவர்களுக்கோ கொஞ்சமாயிருந்தால் போதும்.

மேலும், சில சில வியாதிகளில் சில சில ஸத்துக்களை நீக்கவேண்டியது அவசியம். நீர்ரோகத்தில் ஸ்டார்ச்சு, சர்க்கரைகளையும்; சுரங்களிலும், ஜலத்திலும், சிலவித வீக்கங்களிலும் பிரோடீடையும், தொப்பையுள்ளவர்கள் கொழுப்புகளையும், குறைக்க வேண்டியது அவசியம்.

நாள் ஒன்றிற்கு இவ்வளவு பிரோடீட் முதலான சத்துகள் தேவையென்று மேலே சொன்னோம். ஆனால் அவைகள் பிரபஞ்சத்தில் தனித்தனியாக இருக்கமாட்டா. எல்லா பதார்த்தங்களிலும், இரண்டு, மூன்று ஸத்துகள்சேர்ந்துதான் இருக்கும்.

கீழே வரையப்பட்டிருக்கிற கட்ட விவரத்தினால் சில பதார்த்தங்களில் ஒவ்வொரு சத்திலும், சுமார் எவ்வளவு இருக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம்.

* காய், கறி, குழம்பு, ரசம், ஊறுகாய், முதலியன.



| நூறு பங்கில். | பிரோடீட். | கொழுப்பு. | ஸ்டார்ச்சு. | தண்ணீர். | உப்பு. |
|---|---|---|---|---|---|
| துவரைப்பருப்பு உளுந்து ... | 22 | 2 | 56 | 10 | 4½ |
| அவரை ஜாதியெல்லாம் இதுமாதிரியாகவே யிருக்கும். | | | | | |
| சோயா அவரை ... | 35 | 19 | 26 | 11 | 4½ |
| கோதுமை ... | 13½ | 1 | 68½ | 12½ | 1½ |
| சோளம் ... | 9 | 2 | 72 | 12½ | 1½ |
| கம்பு ... | 10½ | 3½ | 71½ | 11 | 2 |
| கேழ்வரகு ... | 7½ | 1½ | 73 | 13 | 2½ |
| வரகு ... | 12½ | 3½ | 70 | 12 | 1½ |
| அரிசி ... | 6½ | ½ | 79 | 13 | ½ |
| பால் ... | 4¾ | 3½ | 4 (சர்க்கரை) | 87 | ¾ |
| முட்டை ... | 14 | 10½ | — | 74 | 1½ |
| இறைச்சி ... | 18 | 5 | — | 72 | 5 |

போஜனபதார்த்தங்களில் அனேக ஸத்துக்கள் கலந்திருப்பதினால் சாதாரணமாக என்ன அளவு சாப்பிட்டால், எல்லா சத்துகளும் வேண்டிய அளவில் கலந்திருக்கும், என்று சொல்வோம்.

கேழ்வரகு, அல்லது அரிசி 24-அவுன்ஸ்.
துவரப்பருப்பு 3½ ,,
எண்ணெய் 1 ,,
உப்பு 1 ,,
காய்கறிகள் 2 ,,
} கேழ்வரகு அல்லது அரிசி சாப்பிடுகிறவர்கள் தினம்தோறும் சாப்பிடவேண்டிய அளவு.

ரொட்டி 20-அவுன்ஸ்.
வெண்ணெய் 1½ ,,
இறைச்சி 10 ,,
} இறைச்சி, ரொட்டி, சாப்பிடுகிறவர்கள் சேர்த்துக்கொள்ள வேண்டிய அளவு.

அல்லது,

கேழ்வரகு அல்லது அரிசி 24-அவுன்ஸ்.
துவரப்பருப்பு 3 ,,
எண்ணெய் ½ ,,
இறைச்சி 2 ,,
உப்பு 1 ,,
காய்கறி 7½ ,,

## வாந்திபேதிக்கு அசுத்தஜலம் காரணம்.

சேலம் ஸானிடெரி இன்ஸ்பெக்டர் ம-ள-ள-ஸ்ரீ, ஏ. இராமச்சந்திர ஐயர் அவர்கள், சென்னை ஸானிடெரி கமிஷனர் மூலமாக நமக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தைக் கீழே பிரசுரிக்கிறோம் :—

சென்ற ஏப்ரல்மீ 30உ சேலம் டவுனைச் சேர்ந்த கருவாட்டுப்பாறையில் வேறொரு ஊரிலிருந்துவந்த ஒரு பெண்பிள்ளைக்கு வாந்திபேதி கண்டதாகத் தெரியவந்தது. உடனே முனிஸிபல் அதிகாரிகள் அந்த ஸ்திரீயை ஆஸ்பத்திரியிலுள்ள கலரா கொட்டகைக்கு அப்புறப்படுத்திவிட்டு அந்தப் பெண்பிள்ளை படுத்திருந்த இடத்தை சர்க்கார் விதிப்படி சுத்தம்செய்தார்கள். பிறகு அடுத்தநாள் அந்த ஊரில் வீடுகள் ஒவ்வொன்றிலும் ஒன்று - இரண்டு - மூன்று விகிதம் மேற்கண்ட விஷநோய்கண்டு அதிக பயத்தை உண்டுபண்ணிற்று. இதற்குக் காரணம் விசாரிக்கப்பட்டபொழுது இந்த ஊரிலுள்ள பறையர்கள் சாப்பிடும்படியான இரண்டு நடை கிணறுகளில் ஒன்றில் மேற்சொன்ன பெண்பிள்ளையின் வஸ்திரங்கள் துவைக்கப்பட்டதாகவும் அந்தக் கிணற்றுஜலம் கொண்டுவந்த வீடுகளில்மாத்திரம் ஷை வியாதி சம்பவித்ததாகவும் தெரியவந்தது. உடனே ஷை கிணற்றுஜலத்தை யாரும் எடுக்க ஒட்டாமல் தடைசெய்தபிறகு புதியதாக கேஸ்கள் சேராமல் பதினைந்துதினத்துக்குள்ளாக கேஸ்கள் நின்றுவிட்டன. ஷை தண்ணீர்க்கிணறும் செம்மையாக சுத்தம்செய்யப்பட்டது. தவிர, ஷை வியாதி கண்ட வீடுகள் எல்லாம் கிரமமாக 'டிஸ் - இன்பெக்ஷன்' செய்யப்பட்டன. அங்கு காணப்பட்ட அழுக்குத்துணிகள் எல்லாம் வெந்நீரில் கொதிப்பிக்கப்பட்டன. இவ்விதமாய் வீடுகள்தோறும் செய்யப்பட்டபடியால் ஷை ஊரைவிட்டு கேஸ்கள் அப்பால் பரவவில்லை. 15-தினத்திற்குள்ளாக 51-பேருக்கு வியாதிகண்டு அதில் 27-பேர் இறந்துவிட்

டார்கள். மேற்கண்ட சங்கதியினுல் அசுத்தமாக்கப்பட்ட ஜலத்தினுல் கலரு உண்டாகிறதுஎன்பது வியக்தமாக ஏற்படுகிறது.

இப்படி யிந்த ஊரில் சம்பவித்ததினுல் எல்லா ஜனங்களும் குடிக்க, சமைக்க தண்ணீரெடுத்து உபயோகப்படுத்தும் ஜலாதாரங்களை அசுத்தமாக்கக்கூடாதென்றும் அப்படி ஒருவேளை தெரியாமல் அசுத்தமாக்கப்பட்டால் அதை எந்த விதத்திலும் உபயோகப்படுத்தக்கூடாதென்றும் அறிந்துகொள்ளவேண்டும். சுத்தமான ஜலம் சுத்தமான காற்று சுத்தமான ஆகாரம் இம்மூன்றும் சுகாதாரத்துக்கு இன்றியமையாத அம்சங்கள்.

## “கிண்டர்கார்டன்.”

(ஜூன்மீத் தொடர்ச்சி).

இங்கிலாந்திலேதான் நம் குழந்தைப் பள்ளிக்கூடங்களில், கணக்குப்போடுதல், எழுதல், படித்தல் என்பன முதல்முதல் ஆரம்பிக்கப்படுகின்றன. சரியானபடி, கிண்டர்கார்டன் வெறும் விஷயஞானங்களடைவதைக் கற்பிப்பதில்லை. குழந்தைகளின் இயற்கையறிவானது ஒழுங்குப்படுத்திய விளையாட்டுகளாலும் **ப்ரோபெல்** மிக்க கவனித்துச் சீர்ப்படுத்திய அப்பியாசங்கள் பலவற்றாலும் விருத்தியாக்கப்படுகின்றது. நான் முற்கூறிய அந்த கிண்டர்கார்டனைப் பலமுறை சென்று பார்த்திருக்கிறேன். எல்லாவற்றிலும், அப்பிள்ளைகள் தம் உபாத்தியாயர்களையுங் கூட்டிக்கொண்டு அக்காட்டில் விளையாடிக்கொண்டிருப்பது கண்ணுக்கினிய காட்சியாயிருந்தது. நான் கடைசியாய் அங்குப்போய்த் திரும்பியபோது அப்பிள்ளைகளிற் சிலபேர் தலைவாயில் வரையும் என்னைத் தொடர்ந்துவந்து அத்தோட்டங்களிலுள்ள அரிய பூக்களால் ஒரு பூச்செண்டு ஆக்கியளித்து, தங்கள் கைகளைச் சந்தோஷத்தால் அசைத்துக்கொண்டும், ‘என் பயணம் நற்பயணமாக’ என்று வாழ்த்திக்கொண்டும் நான் அவர்கள் கண்ணினின்றும் அக்காட்டிற்குள் மறைகின்ற வரை நின்றுகொண்டிருந்தார்கள்.

**ப்ரோபெல்** நினைத்தபடி சரியான கிண்டர்கார்டன் இம்மாதிரிதான் இருக்கவேண்டும். ப்ரோபெல் ஏற்படுத்திய கொள்கைகள் இன்னும் **கிரேட் பிரிடேனில்** பொதுப்பள்ளிக்கூடங்களில் வழக்கத்திற்குக்கொண்டுவரப்படவில்லை. முன் சொன்னது போன்று கணக்குப்போடல், எழுதல், படித்தல் இவற்றின் பயிற்சிக்கலப்பில்லாத கிண்டர்கார்டன் ஒன்றும் இராஜாங்கத்தார் இப்பொழுது ஏற்படுத்தவில்லை. ஆனல் **கிரேட் பிரிடேனி**லுள்ள குழந்தைப்பள்ளிகள் பலவும் **ப்ரோபெல்** கொள்கைகளையனுசரித்து அதனுற் பெரிதும் பயன்பெற்றன. இங்கிலாந்தில் மேன்மைதங்கிய மகாராணியாரின் பள்ளிக்கூட மேல்விசாரணைக்காரர்களில் ஒருவர் கொஞ்சகாலத்திற்கு முன்; “சிறுகுழந்தைகளைக் கிண்டர்கார்டன் முறைப்படி கற்பிப்பதின் உபயோகத்தைப்பற்றி யாதொரு சந்தேகமுமில்லை. இவை இங்கிலாந்தின் குழந்தைப் பள்ளிகள் எல்லாவற்றிலும், அதிலும் முக்கியமாய்ப் பெரிய நகரங்களில் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்றுவருகின்றது. அப்பள்ளிக்கூடங்களை நடத்துகிறவர்கள் உபாத்தியாயர்கள், மேல்விசாரணைக்காரர்கள் எல்லாம் இதன் உபயோகத்தைப்பற்றித் திருப்தியடைந்திருக்கிறார்களென்று எனக்குத் தெரியவருகின்றது. ஒருதரம் கிண்டர்கார்டன் முறைகளை யனுசரித்துவிட்டபிறகு மறுபடியும், இம்முறையேற்படாத முன்காலத்திற்போல, முழுநேரத்தையும் எழுதல் படித்தல் கற்பிப்பதில் செலவிட்ட முறைகளை யனுசரிக்க விரும்பிய ஒரு உபாத்தியாயரையும் நான் கண்டதில்லை”. என்று எழுதியிருக்கிறார். மற்றொருவர், “நான் விசாரணைத்தனம் வகித்தநாள் முதற்கொண்டு கிண்டர்கார்டன் முறைகள் ஏற்படுத்தப்பட்டன. உபாத்தியாயர்களைப் பயிற்றுதலிலும், பிள்ளைகள் அறிவைப்பயிற்றி விர்த்திசெய்தலிலும் இதன் உபயோகத்தைப்பற்றி நான் எப்போதும் புகழ்ந்து பேசக்கடவேன்.” என்று எழுதியிருக்கிறார். இதனுல் கிண்டர்கார்டன் ஒழுங்குகள் தாமாகவே, மற்ற கலப்புகளின்றி, ஏற்படுத்தப்பட முடியாவிட்டாலும், பள்ளிப்பயிற்சியை ஒருவிதமாக மாற்றி, கிண்டர்கார்டன் கொள்கைகளையும் ஒழுங்குகளையும் தாராளமாய்க் கலந்து நடத்துதல் மிகப் பயன்படுமென்று தெரியவருகின்றது. இதனுல் அச்சிறுவர்கள் முயற்சிக்கு வழியேற்படுகின்றது. அவர்களின் அந்தக்கரண அறிவுகள் பயிர்ச்சிபெறுகின்றன. ஊக்கம் கிளம்பித் தொடர்ந்த கவன சக்தியானது தீட்டப்படுகின்றது. மேலும் இதனுல் அவர்கள் பள்ளிக்கூடத்திற்பயிலும் காலமுழுமையும் விருத்திகரமாகவும் சந்தோஷகரமாகவும் இருக்கின்றது. இங்கே நாம் குறிக்கவேண்டியது இந்தியாவின் பள்ளிக்கூடங்களில் கிண்டர்கார்டன் கொள்கைப்படி போதனுமுறை எப்படிப் பரவுகின்றது என்னும் விஷயமே.



இவ்விராஜதானியில் பலவருஷங்களாக இம்முறையானது அங்கீகரிக்கப்படாததால், ‘ரிசல்ட்’ பாட்சாலைகளை நடத்துவோர் அதற்காக யாதொரு ‘கிராண்ட்’ என்னும் உதவிப்பணம் பெறக்கூடாததாயிருந்தது. 1880-ம்வருஷத்தில் இம்முறையானது கொஞ்சம் கவனிக்கப்பட்டது. பொருட் பாடங்களும் அபிநயப்பாடல்களும் பிள்ளைகள் கற்கவேண்டிய பாடங்களுளொன்ருக ஏற்பட்டு, அவற்றிற்காகத் தனியாய்க் கொஞ்சம் உதவிப்பணம் கொடுத்துவரப்பட்டது. 1892-ல் இதை இன்னும் கொஞ்சம் அதிகரிக்கவேண்டியிருந்தது; ஆனல் தொழில்கள், அவ்வவ்வற்றின் பாட்டுகளோடல்லாது, தனியாய்க் கற்பிக்கவும், பாட்டுகள் செயலோடன்றிக் கற்பிக்கவும் கூடியனவாயிருந்தன. இச்செயல்கள் ஏதோகைவேலையாகச் செய்யப்பட்டனவே யாதலின் தேகப்பயிற்சியேயன்றி பொருள்களின் வடிவு நிறம் முதலியவற்றின் அறிவு அப்பிள்ளைகளுக்குச் சிறிதும் வளராதாயிற்று. 1896-ல் இது இன்னும் கொஞ்சம் திருப்திகரமாக விருத்தியாயிற்று. பிள்ளைகளுக்குச் சுலபமான கதைகள் சொல்லவேண்டும், அவர்கள் தொழில்களும், தொழிற்கவிகளும் இக்கதைகளை விளக்கக்கூடியனவா யிருக்கவேண்டுமென்றும், கதை, கவி, தொழில், என்னு மிம்மூன்றிற்குமாக, அப்பள்ளிக்கூடங்கள், அதற்கென்றேற்படுத்திய உதவிப்பண மளிக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். பொருட்பாடங்கட்கு வேண்டிய கருவி சாதனங்களையும் மறுபடி வழக்கிற்குக் கொண்டுவந்தார்கள். ஆனல் கதைசொல்வதற்கு நேரமிருப்பதற்காக, இக்கருவிகளை முன்னிருந்ததைவிட குறைத்தேற்படுத்தினர்கள். காலநிலை, செடிகள், பிராணிகளை நேராய்ப்பார்த்து பிள்ளைகள் அறிவதற்காக இயற்கைப்பொருள்களின் கல்வி விருத்தியாக்கப்பட்டது. ஆகையால் கிண்டர்கார்டன் போதனுமுறையானது இவ்விராஜதானியின் கல்விப்பிரிவினரால் (Education Department) அங்கீகரிக்கப்பட்டு விருத்தியாகிவருகின்றது.

குழந்தைகளின் வகுப்புகளிலும், முதலிரண்டாவ்து வகுப்புகளிலும் கற்கவேண்டும் பாடங்களிற் கிண்டர்கார்டனும் ஒன்ருயிருக்கின்றது. அப்பள்ளிக்கூடங்கள் அதற்காக உதவிப்பணம் பெற்றுவருகின்றன. பெண் உபாத்தியாயர்களைப்பயிற்றும் பள்ளிக்கூடங்களில் கிண்டர்கார்டன் பயிற்சியும் அவர்களுக் களிக்கப்படுகின்றது. பலவிடங்களில் மிக நன்ருகவே யளிக்கப்படுகின்றது. பெண்பாடசாலைகளை நடத்துவோர் கிண்டர்கார்டன் கொள்கைகளில் ஊக்கங்கொண்டு பயிற்றிவருகிறார்கள். அதனு பெண்பாடசாலைகளில் இம்முறையானது மிகப் பி[illegible]யோசனகரமாகவிருக்குமென்று நம்ப ஏதுவாயிருகின்றது.

தாழ்ந்த முதல்வகுப்புகளைப் போய்ப்பார்ப்ப[illegible] இப்போது உண்மையில் இன்பம் தருவதாயிருக்கி[illegible]றது. அங்கே பிள்ளைகள் தாங்கள் மிக ஆவலாய் கேட்ட கதைகளைச் சொல்லுகிறார்கள்: சில விடங்[illegible]ளில் மிகப் பாவனையோடு சொல்லுகிறார்கள்: அவ[illegible]கள் அச்செய்கைகளிலேயே அமிழ்ந்தி யதுவே கரு[illegible]தாய்விடுகிறார்கள். ஏனென்றால் அச்செய்கைகள் தாம் கதைகளிற் கேட்டும், பொருட்பாடங்க[illegible]லறிந்து முள்ளவற்றை பிள்ளைகட்கு விளக்குவ[illegible]வாயிருக்கின்றன. வேறு புதுமாதிரியாக அதேகரு[illegible]துகளடக்கிய விளையாட்டுகளிலும் பாட்டுகளிலு[illegible] அவர்கள் மிக உற்சாகத்தோடு புகுகின்றார்கள். அவ[illegible]கள் கற்கும் பொருட்பாடங்கள், அவர்களுடைய[illegible]பிற்செய்கைகளோடு சம்பந்தமுடையனவாதலின் உண்மையில் அவர்களுடைய அனுபவ ஆராய்[illegible]சியைவிளக்கும் அப்பியாசங்களாகின்றன. சிலவி[illegible]டங்களில் இப்போது சிறுமிகள் விதைவிதைத்து அச்செடிகள் வளர்வதையும், கம்பளிப்பூச்சிகளை வைத்து அவைகள் கூட்டுப்புழுக்களாகவும் பின் தட்டாரப்பூச்சிகளாகவும் மாறுதலையும் கவனித்து ஆராய்ந்துவருகிறார்கள். இதேமாதிரி சிறு ஆண்பிள்ளைகள் கற்கும் பள்ளிகளில் இல்லாமை விசனிக்கத்தக்கதே. அவர்கட்குத்தக்க ஒரு கிண்டர்கார்டன் போதனுமுறை ஏற்படுத்தவேண்டிய விஷயம். அவர்கள் கல்வியை உண்மையிற் கருதும் ஒவ்வொருவரும் கருத்திலமைத்து ஊன்றி யோசிக்கவேண்டியது. கீழ்வகுப்புகளில் நல்ல கிண்டர்கார்டன் போதனுமுறையினுல் பின் மேல்வகுப்புகளுக்குண்டாகும் பயன் முக்கியமாய்க் கவனிக்கவாவது. கிண்டர்கார்டன் முறைகள் பள்ளிக்கூடங்களின் உயர்வகுப்புகளிலும் பிரவேசிக்குந்தன்மையோடிருப்பனவாகக் காணப்படுகின்றது; [illegible]தாரணமாக [illegible]கோளமானது களிமண்ணுற்செய்த பொருள்களால் உதகரிக்கப்பட்டே கற்பிக்கப்பட்டும், பொருட்பாடங்களும் சாஸ்திரங்களின் முதலாரம்பமும் பொருட்களினுதவியால் மிக விளக்கப்பட்டும் பயின்றுவருகின்றன. இக்கல்விப்பயிற்சிகளிலெல்லாம் புத்தகங்களினுதவிகுறைந்தும், பொருள்களினுதவி யதிகரித்தும் வருகின்றது. அல்லாமலும் நல்ல கிண்டர்கார்டன் வகுப்புகளைவிட்டு மேற்சென்ற பிள்ளைகள் மேலும்மேலும் அறிவுவிருத்திக்கு

ஆசைப்படுகின்றார்கள். அவர்களுடைய கைகள் வேலைத்திறத்திலும், கண்கள் காட்சித்திறத்திலும், பயிற்சியடைகின்றன. அவர்கள் வாக்குவன்மையும் அதிகரித்து கல்வியில் அவர்கள் மேன்மேலும் உயர ஏதுவாகின்றது.

ஆதலின் அந்த மேல்தரப்பயிற்சியும், கீழ்வகுப்புகளின் கிண்டர்கார்டன் போதனாமுறைபோலக் கண்களையும் கைகளையும் பயிற்றக்கூடியனவா யிருக்க வேண்டுமென்பது யாவரும் விரும்பத்தக்கது.

அதற்குள்ள பெருங்குறை யொன்றென்னவென்றால், ஊக்கமும் உற்சாகமுமுடையராய், **ப்ரோபெல்** சொன்னவைகளைச் சரிவரத்தெரிந்து, அவர்சொன்ன 'வாருங்கள்! நாம் நம் சிறுவர்க்காக வாழலாம்' என்னும் பழமொழியினடங்கிய கருத்தே தமக்கும் எண்ணமாகக்கொண்ட உபாத்தியாயர்கள் வேண்டிய அளவிற்குக்கிடைக்கவேண்டுமென்பதொன்றே.

## பாலபோதகம்.

கிண்டர்கார்டன் முறையும் அபிப்பிராயங்களும் பரவப் பரவ, குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் முறையும் விர்த்தியாகிவருகிறது. நாட்டுப்புறங்களிலுள்ள திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ஹரிக்குழிவெட்டி குழந்தைகளின் கைவிரல் தேய அக்ஷராப்பியாசம் செய்துவந்தகாலம் அனேகருக்கு இன்னும் நன்றாக ஞாபகத்திலிருக்கும். ஞாபகசக்தி ஒன்றையே வளர்த்துவந்த குருட்டுப்பாடம் செய்யும் முறையால் நேர்ந்துள்ள குற்றங்குறைகள் இவ்வளவவ்வளவல்ல. சுதேசிகள் பி. ஏ. முதலான பெரிய வித்தியாபட்டங்கள் பெற்றும் சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை, யென்று தாங்கள் கற்றதையே திரும்பவும் போதிக்கத் திறமையுள்ளவர்களாயிருக்கிறார்களேயன்றி மற்றப்படி நூதனவழிகளிற் பிரவேசித்து, நூலாராய்ச்சி, சாஸ்திராராய்ச்சிகள் செய்து சுயமாக புத்திவிர்த்தி, அறிவுவிர்த்தி செல்வவிர்த்திக்கடுத்தமுயற்சி ஏதும் செய்யச் சாமர்த்திய முள்ளவர்களாகவில்லை யென்னும் குறை அங்கிலேயராலும் மற்றவர்களாலும் விசேஷமாகக் கூறப்படுகிறது. இது பெரும்பாலும் காரியத்தில் உண்மையாகவேயிருக்கிறது. இப்படியிருப்பதற்குள்ள காரணங்களில் முக்கியமான ஒன்று பாலப்பருவத்தில் அவர்களுடைய அந்தக்கரணசக்திகள் உண்மையான முறைப்படி விர்த்திசெய்யப்படாமல் குருட்டாட்டமாக குழந்தைகளின் தேகமனோபாவ மறியாதவர்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம்குழந்தைகளுக்குப்போதிக்கும்படி விட்டுவருவதே யென்று இதைப்பற்றி ஆழ அமரச்சிந்திப்போர் எவரும் உணரப்பின்னடையார். இதையுத்தேசித்தே கிண்டர்கார்டன் முறையும், அபிப்பிராயங்களும் பரவும்படி அடிக்கடி இப்பத்திரிகையில் எழுதிவருவது. வித்தியா இலாகாவிலும் மிஸ்ஸஸ் ப்ராண்ட்ர் துரைசானியின் விடாமுயற்சியால் பாலிகா பாடசாலைகளில் கிண்டர்கார்டன் போதனாமுறை விசேஷமாகப் பரவி வருகிறது. பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளிலும் அம்முறை விசேஷமாகக் கவனிக்கப்பட்டுவந்தால் எவ்வளவோ பிரயோஜனகரமாகவிருக்கும். தற்காலம் அப்படிக்கில்லாமையைக்குறித்து விசனிக்கவேண்டியதாயிருந்தாலும், பிள்ளைகளுக்குப் போதிப்பதிலும் வரவர கிண்டர்கார்டன் முறை விசேஷமாகக் கவனிக்கப்படும் காலம் கிட்டிவருகிறதென்று காண மிகவும் சந்தோஷிக்கிறோம். இதற்காதாரம் வேண்டின், நம்முன்னிருக்கும் சில சிறு பிரசுரங்களை யெடுத்துக்கூறுவோம். * இவை லண்டனிற் பிரபலமான புத்தகவியாபாரிகளான 'லாங்மான்ஸ், கிரீன் அண்ட் கம்பெனி' யார் பம்பாயில் ஸ்தாபித்திருக்கும் கிளை யாபீஸில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒன்று அக்ஷராப்பியாசம் செய்வதற்குச் சாதகமான எழுத்து அட்டை. இதில் உயிரெழுத்துகள் 12-ம் அகரம் ஏறிய மெய்யெழுத்துகள் 18-ம் அழுத்தமாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

* Longman's *Tracing Board for Infants* (½ Anna.)
Longman's *Sheet of Building Pieces* (Tamil) (2 As.)
*Tamil Primer* by Rau Bahadhur C. Nagoji Rau B.A., Fellow of the Madras University & Inspector of Schools, Southern Circle. (1½ As.)



குழந்தைகள் ஒரு கூர்மையான குச்சி அல்லது எழுதுகோலால் எழுத்துக்களின்மேல் எழுதிப் பழகி அக்ஷரங்களின்வடிவம் மனதிற்பதிய உணருவதற்கு இது சாதகமாம். மற்றொரு அட்டையில் அகரமேறிய மெய்யெழுத்துகள் 18-ம் வரிவடிவொப்புமைகொண்டு பிரித்து அச்சிடப்பட்டிருக்கின்றன. இதனால் ஒரு அக்ஷரம் கற்றுக்கொண்டதும் மற்ற அக்ஷரம் அதே வரிவடிவில் சொற்ப மாறுபாடுள்ளதாகவிருப்பதால் எளிதில் எழுதக்கற்றுக்கொள்ளக்கூடுவதாயிருப்பதோடு இரண்டிற்குமுள்ள ஒற்றுமை வித்தியாசங்களும் சிறுவர் மனதிற் பதிவதற்கு அனுகூலமாகவிருக்கிறது. பிறகு மற்றப்பதினொரு உயிர்களுமேறிய உயிர்மெய்யெழுத்துகள் எழுதுவதற்குவேண்டிய சின்னங்கள் முறைப்படி வகுத்துப்பிரித்து விளங்கக்காட்டப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஆகாரமேறிய உயிர்மெய்யெழுத்துகளைக் காட்ட 'ா' அடையாளமாகிறது. இகரமேறிய உயிர்மெய்க்கு ி விசிறி அடையாளமாகிறது. இப்படி மற்றவைகளுக்கும் காட்டியிருக்கிறது. இந்த சின்னங்களை முதலெழுத்துக்களோடு சேர்க்கும்விதம் இப்படி யென்று விளங்கக் காட்டும்பொருட்டு அந்தந்தச் சின்னங்களை தனித்துண்டுகளாக வெட்டி முதலெழுத்து எழுதியுள்ள துண்டுகளின்மேல் சரியானபடி அமைத்துக்காட்டத் தக்கதாக வரையப்பட்டிருக்கிறது. இதனால் குழந்தைகள் அக்ஷராப்பியாசம் செய்வது முதல் தங்கள் புத்தியை உபயோகித்து, எதையும் புத்திபூர்வமாக அறிந்துகொள்ளும்படியாக விருக்கிறது. சமீபகாலத்தில் இங்கிலீஷ் அக்ஷரங்கள் போதிக்க ஒரு பந்தையும் கோலையும் கொண்டு பெரும்பான்மையான இங்கிலீஷ் அக்ஷரங்களைக்கட்டும் விதமொன்று அதி சூக்ஷ்ம சாமர்த்தியத்தோடு அமைத்து வரையப்பட்டிருந்ததைப் பார்த்தோம். குழந்தைகளுக்கு முதலில் வஸ்துக்கள் மனதிற்படுவதுபோல் கோடுகள் மனதிற் பதியாது. ஆகையால் அட்டையிலுள்ள எழுத்துக்களையும் சின்னங்களையும் துண்டுகளாகவெட்டி, ஒவ்வொரு எழுத்தையும் அததற்குரிய துண்டுகளைக்கொண்டு கட்டிக்காட்டுவது அவசியம். அதற்கு அனுகூலமாக ஒத்துவரும்படியே இதில் எழுத்துகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நம்முன்னிருக்கும் மற்றொரு புஸ்தகம் **முதற் பாலபாடம்**, இதுவும் மற்ற இரண்டு அக்ஷராப்பியாச அட்டைகளும் தென் ஸர்க்கிள் ஸ்கூல் இனிஸ்பெக்டராகிய ம-ா-ா-ஸ்ரீ, ராவ் பஹதூர் ஸி. நாகோஜிராவ் அவர்களால் ஆராய்ந்து அமைக்கப்பட்டவையாகவிருக்கின்றன. ம-ா-ா-ஸ்ரீ, நாகோஜிராயரவர்கள் தம்முடைய குழந்தைகளுக்கு மகாராஷ்டிரம் போதிக்கக் கண்டுபிடித்த கிண்டர்கார்டன் முறையை ஒட்டிய நூதனவழியை அனுசரித்துத் தமிழிற்குப் பொருந்த அமைத்து இவைகளை வெளிக்கொண்டு வரலானாரென்று தெரியவருகிறது. முகவுரையில் அவர் எழுதுகிறார்:—

“நான்கு ஐந்து பிராயங்களுக்குட்பட்ட என்னுடைய இரண்டுகுழந்தைகளின் உபயோகத்தின்பொருட்டு மகாராஷ்டர முதற் பாலபாடபுஸ்தகமொன்று எழுதுவதற்கு ஒரு புதிய வழியை ஏற்பாடுசெய்து அவ்வழியானது அக்குழந்தைகள் நாள்தோறும் கால்மணிநேரமே பழகிக்கொண்டுவந்து இரண்டுமாதத்திற்குள்ளே அப்பாஷையின் நெடுங்கணக்கிலுள்ள இரண்டொன்றொழிந்த எல்லா எழுத்துக்களையும் ஒரு பிரயாசமுமில்லாமல் விளையாட்டாகக் கற்றுக்கொள்வதற்குப் பயன்பட்டதை நேரே கண்டதால், அப்புதிய வழியிலேயே இத்தமிழ் முதற்பாட புஸ்தகம் எழுதலானேன்.”

இப்படி அறிவின் மிகுந்த பெரியோர் கற்றுத்தேர்ந்த தங்கள் சாமர்த்தியத்தை உபயோகித்து குழந்தைகளுடை தேகமனோவிர்த்திக்கனுகுணமான வழிகளைக்கண்டுபிடித்து சிறுவர்களின் கல்விப்பயிர்ச்சியில் சிரத்தையுள்ளவர்களாகக் காட்டினாலன்றி நமது தேசத்தார் முன்னுக்குவருவது கஷ்டம். “விளையும் பயிர்

முளையிலே" என்ற பழமொழிப்படி சிறுகுழந்தைகளாகவிருக்கும்போதே அவர்களை நன்றாகப்பயிர்ச்சிசெய்ய நாம் சிரமப்பட்டுழைக்காவிட்டால், முதிர்ந்தபின் ஹைஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் சொல்லிக்கொடுக்கும் படிப்பு முற்றும் பயன்படாதொழிந்து கிளிப்பிள்ளைப் பாடமாகமுடியுமென்பதற் கையமில்லை. ஆகையால் ராயர் அவர்கள் இது விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொண்டு நூதனவழியையனுசரித்து அக்ஷராப்பியாசம் செய்விக்கவும், முதற்பாடம் போதிக்கவும் இச்சிறு பிரசுரங்களை வெளியிட்டது மிகவும் விசேஷமாகக் கொண்டாடத்தக்கதாக விருக்கிறது. முதற் பாலபாடமும் நூதனவழியையனுசரித்தே பாடங்களோடு, குழந்தைகள் மனதில் சுலபமாகவும் விளையாட்டாகவும் எழுத்துகளின் வடிவங்களும் வார்த்தைகளும் படுவதற்கு அனுகூலமான விதத்தில் ஏற்பாடாக எழுதப்பட்டிருக்கிறது.

C. V. S.

---

## செம்படவருக்கோர் விண்ணப்பம்.

சகோதரர்களே! உலகில் மனிதன் சிறந்தவன். மனிதனில் அறிவுசிறந்தது. அறிவை விர்த்திசெய்யும் முயற்சி அதனிலும் சிறந்தது. முயற்சி செய்து அறிவை விர்த்திசெய்வதே புருஷலட்சணமாகும். அதுதான் மனிதனென்பதற்கு அடையாளமாகும். இல்லாவிடில் மிருகாதிகளுக்குச் சமானமாவான்.

உலகத்திலுள்ள பல வகுப்பினரும் பூர்வீக மிருகத்தன்மையினின்று மனிதத்தன்மையடைந்து, பலருக்குத் தாங்கள் அடைந்திருக்கும் ஞானத்தையும் அதனால் உண்டாகும் சுகத்தையும் தெரிவிக்கின்றார்கள். நம்மை அரசாளும் அங்கிலேயர்களும், நமக்குக் குருமார்களாகவும், புரோகிதர்களாகவும், ஆசாரியர்களாகவும் வரும் சில பிராமணர்களும், அவர்கள் அடைந்திருக்கும் ஞானத்தாலன்றோ அவர்களுடைய நாகரிகமும் குருத்துவமும் நிலைபெற்றிருக்கின்றன? உலகில் அவர்கள் அடைந்திருக்கும் கீர்த்தியும், பெருமையும், செல்வாக்கும், சம்பத்தும் அவர்கள் கற்ற கல்வியாலல்லவா?

இவ்விதமாக அநேக வகுப்பினர் விர்த்தி அடைந்ததையும் அடைவதையும் பார்த்திருந்தும், * பட்டினவர்களாகிய நாம், நம்முடைய அறிவை விர்த்திசெய்வதற்கும், நம்முடைய சந்ததிகளை படிக்கவைப்பதற்கும் யாதொருமுயற்சியுஞ் செய்யாமல் † பிணக்கட்டைகள்போல மிதந்து வருவது மிகப்பரிதாபப்படத்தக்கதாக இருக்கிறது. நம்மைக்காட்டிலும் அறிவிலும் நாகரிகத்திலும் தாழ்ந்தவர்களென்று நாமே சொல்லிக்கொள்ளும் அநேகர் தத்தம் வகுப்பினர்களை விர்த்திசெய்யவும் தங்களுடைய பிள்ளைகளுக்குக் கல்விப்பயிர்ச்சி செய்வித்து சீரடைய கூட்டங்கள்கூடி தங்களால் இயன்றமட்டும் தலைக்கட்டு விதித்தபடி பொருளைச் சேகரித்துவருகின்றார்கள். நேற்று, சேலத்தில் கூடிய சாயக்கார் கூட்டத்தில் சாயக்கார வகுப்பினர் ஒற்றுமையுடன் வாழ்வதற்கும், அவர்களுக்குள் கல்வி விர்த்திசெய்வதற்கும், அவ்வகுப்பினர்களில் கூன் குருடு செவிடு முதலிய ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் முதலிய தர்மம் செய்வதற்கு, மூவாயிரம் ரூபாய்க்குமேல் அக்கூட்டத்தில் வசூலாயிற்று. பள்ளர் பறையர் முதலியவர்களும் கூட்டங்கள் கூடியும், சபைகள் நியமித்தும், தத்தம் ஜாதியர் விர்த்தியடைதற்கு வேண்டிய முயற்சியைத் தேடிவருகின்றார்கள்.

சகோதரர்களே! நாமும் விர்த்தியாகிய வெள்ளத்துடனே சென்று நாகரிகமாகிய கரையைச் சேரலாமா? அல்லது 'பாடு' ‡ போனபிறகு அலைகளால் அடிக்கப்பட்டு மூடத்தனமாகிய கரைதட்டிப்போகலாமா?

தற்காலம் உலகம் எம்மாதிரியாகப் போகின்றதென்று உங்களுக்குத் தெரியவில்லை. உங்களுக்குச் சொல்வாருமில்லை. உலகத்திலுள்ளவர்கள் தங்கள் தங்கள் மரபைச் சேர்ந்தவர்களை முன்னுக்குக் கொண்டுவர, பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கிறார்கள் பகற்காலங்களில் வேலை செய்யப்பட்டவர்களுக்கு ஒழிந்த வேளையாகிய இரவில், அவர்கள் படிக்கும்படி இராப்பள்ளிக்கூடங்களை உண்டாக்குகிறார்கள்; தச்சுவேலை கருமாரவேலை முதலிய கைத்தொழில் வேலைகளைக் கற்று பலவிதமான ஜீவனத்தொழிலைப் புரிந்து சுகமடைகின்றார்கள்.

* 'பட்டினம்' என்றால் கரையோரங்களில் இருக்கும் சிறு கிராமம் அதில் வசிப்பவர் பட்டினவர். இப் பெயர் கடலோரங்களில் வசிக்கும் ஓர் ஜாதியாராகிய மீன் வணிகருக்கே வழங்கிவருகின்றது.

† பெரிய வலைக்கயற்றில் கட்டப்பட்டு பிணத்தைப் போல் மிதந்துவரும் ஓர்வித கட்டைக்கு பிணக்கட்டை என்று வழங்குவர்.

‡ 'பாடு' என்பது, அலைகள் ஓய்ந்த நேரம். "பாடு பார்த்துத்தோவு" என்று வழக்கச்சொல்,



நாமோ, வடபத்து தாம்பூலம் முதல் வாங்குவோமா? அல்லது தென்பத்து தாம்பூலம் முதல் வாங்குவோமா? என்று, வாதாடுகின்றோம்! நாமோ, "ராமன் கட்டுக்கடங்கவில்லை, ஆதலால் அவன் வீட்டு சுபாசுபங்களுக்கு யாரும் போகக்கூடாது" என்ற கட்சியை பலப்படுத்துகின்றோம்!! நாமோ, "லட்சுமணன் கட்சிக்கு விரோதமாய் நடந்தவன், ஆதலால் அவனுக்கு அபராதம் விதித்து ஜாதியில் சேர்த்துக்கொள்ளவேண்டும்" என்று வற்புறுத்துகின்றோம்!!! இதுதானா மனுஷத்தனம்? இதுதானா புருஷலட்சணம்? இதுதானா நம்மவர் அடையும்படியான விர்த்தி? இதுதானா நம் அறியாமை நீங்கும் வழி? இதுதானா நமக்கு இரவும்பகலும் தொழில்?

உலகம் தினந்தினம் அடையும்படியான விர்த்தியைக் கவனியாமல், மூடவைராக்கியத்தை மேற்கொண்டு, நான் உயர்ந்தவன் அவன் தாழ்தவன் என்னும் இறுமாப்பை மேற்கொண்டு, கொலை களவு முதலிய கெட்ட காரியங்களைச்செய்துவந்த குடும்பங்கள், பெயரற்று, புகழற்று, சந்ததியற்று, மதிப்பற்று, நம் கண்முன்னே அழிந்துபோனதை நம்மவர்களில் காணவில்லையா?

நீங்கள் கிணற்றுத் தவளைகளைப்போல் ஊர்வளப்பம் தெரியாமல் மௌடீகத்தில் இன்னமும் காலங் கழிப்பீர்களாகில், உங்கள் குடும்பங்கள் அழிந்து போவதற்கு அதிககாலம் செல்லாது. இருபது வருஷங்களுக்குள்ளாக பட்டினவர்களுக்கு தரித்திரம் அதிகப்பட்டிருக்கின்றது; செல்வாக்குங் குறைந்துவிட்டது; முன்னிருந்த நிலைமையைவிட தாழ்ந்த நிலைமையில் வந்திருக்கின்றீர்கள்.

கொஞ்சகாலத்துக்குமுன், ஒவ்வொரு குப்பங்களிலும் ஐந்து பெயராகிலும் படித்திருந்தார்கள். தற்காலம், படித்திருந்தவர்களுடைய பிள்ளைகளும் படிப்பதைக்காணோமே! கொஞ்சகாலத்துக்குமுன், அநேகர் பசிபட்டினியாக இருப்பதைப் பார்ப்பது அபூர்வமாகவிருந்தது. தற்காலம், அநேகரைப் பசிபட்டினியாகப் பார்ப்பது தினக்காட்சி ஆய்விட்டதே!! கொஞ்சகாலத்துக்குமுன், அவன் வீட்டுக்குப்போகக்கூடாது இவன் வீட்டுக்குப் போகக்கூடாது என்னும் மூட கட்சிகள் கனவிலும் கேட்டதில்லை. தற்காலம், ஒருவன் வீட்டுசுபாசுபங்களில் கட்சியே பொழுதுபோக்காக முடிகின்றதே!!!

இவ்வித பரிதாபநிலையில் நாம் வந்திருப்பதற்குக் காரணம், நம் அறியாமைத்தன்மையே. நம்முடைய அறியாமைத்தன்மையை நீக்குவது **நம்மில் படித்தவர்களுடைய கடமையாகவேண்டும்; நம்மில் பெரியதனக்காரர்களுடைய முயற்சியாகவேண்டும்**, நம் சகலருடைய ஆதாரமும் கூடியிருத்தல் வேண்டும்.

ஆதலால், நாம் மூடத்தனத்திலிருந்து நீங்கி மற்ற * ஜாதியார் அடைந்திருக்கும் விர்த்தியை நாமும் அடைந்து அவர்களுக்குச் சமானமான நிலையில் வரவேண்டுமென்றால், ஒவ்வொரு குப்பங்களிலும் சிறியவன் பெரியவன் என்கிற வித்தியாசமற்று, பழைய வைராக்கியத்தை மறந்து, யாவரும் சகோதரர்களாகக் கலந்து, கூட்டங்கள் போடவேண்டும். கூட்டங்களிலில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும். ஆலோசனைசெய்து வருஷா வருஷம் கூட்டங் கூடுவதைப்பற்றி தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். அந்தந்த குப்பங்களில் ஆதரவற்ற எளியவர்கள் யாராகிலும் இருந்தால், அவர்களைக் காப்பாற்றும் வண்ணம், பொதுப்பணத்திலிருந்து அவர்கள் உதவிக்குக் கொடுத்துவரத் தீர்மானிக்கவேண்டும். பள்ளிக்கூடங்கள் நிலைபெற்றுவிட்டால், ஒரு குடும்பத்தவர்கள் பலதொழில்களைப் புரிந்தால் அதனால் வரும் பயன் அவர்கள் தரித்திரத்தைப்போக்கும் ஆதலால், பலவித் கைத்தொழில் வேலைகளைக் கற்றுக்கொடுக்க, கைத்தொழிற் சாலைகளை ஸ்தாபிக்கவேண்டும்.

இவ்விஷயங்களுக்கெல்லாம் பணம் வேண்டுமேயென்பீர்கள். ஆனால் உங்களுக்கு நிச்சயமாகச் சொல்லுகின்றேன், பணங் கிடைப்பது கஷ்டமல்ல, உழைக்கும் மனிதர் கிடைப்பதுதான் கஷ்டமாகும். ஒவ்வொருவனும் கைப்பிடி மீன் எடுத்துவைத்தாலே தினம் ஓர் அளவாய்விடுமே! தான் என்னும் அகங்காரத்தை ஒழித்து, பொது விஷயத்தில் உழைப்பவன்தான் கிடைப்பது அரிது.

சகோதரர்களே! அந்தந்த ஊர் பெரியதனக்காரர்களையும் படித்தவர்களையும் உங்களுக்கு வழிகாட்டும்படியாய் மன்றாடுங்கள்; அவர்களை வருந்திக் கேளுங்கள்; அவர்களை நல்ல விஷயங்களை உங்களுக்குத் தெரிவிக்கும்படி சொல்லுங்கள்; "கேட்டவனுக்குக் கொடுக்கப்படும் தட்டினவனுக்குத் திறக்கப்படும்" என்னும் முதுமொழிப்படி நடப்பீர்களா

* ஜாதியார் என்றால், தொழிலாளர் என்று அறியவும்.

இல், நன்மையை அடைவீர்கள், சுகப்படுவீர்கள், வணிகர் குலத்தில் நிலைபெறுவீர்கள்.

திருமயிலை
நடுக்குப்பம்,
15-6-99. } தர்மப்பிரியன்.

புத்த தர்மத்தைப் பரவச்செய்யும் சங்கத்தாரால் பதிப்பிக்கப்பட்டது. 22. சவுத்து பீச்சுரோட்டு, திருவல்லிக்கேணி **சென்னப்பட்டணம்.**

## சாணர் - மறவர் கலகம்.

திருநெல்வேலி ஜில்லாவில் நடந்துவந்த இப்பெருங்கலகம் இப்பொழுது நின்றுவிட்டது. கலகம் நடந்தகாலத்தில் மறவர்களும் அவரைச்சேர்ந்தவர்களும் சாணர்களைப்படுத்தியபாடு இவ்வளவு அவ்வளவல்ல. ஐதர் கலாபத்தில் நடந்த கொள்ளைமாதிரி, பட்டப்பகலில் வீடுகளைக் கொளுத்தி கொள்ளையாடி ஸ்திரீகளை ஹிம்சித்து கன்று காலிகளை நாசஞ்செய்து, ஊர்களைப் பாழாக்கி அவர்கள் செய்த அக்கிரமம் சொல்லிமுடியாததாயிருந்ததென்று நேரில் கண்டவர்கள் சொல்கிறார்கள். ஸ்பெஷல் கமிஷனர் அங்கங்கேசென்று விசாரித்து, கலகம் நடந்த தாலூகாக்களில் அதிகப்படி போலீஸ்கார்களை நியமித்து அதற்குப் பிடிக்கும் செலவை அவ்விடத்து ஜனங்கள்மீது வரியாகவிதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். கலகத்தில் பிடிபட்டவர்கள் அதற்காக நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டுகள் முன்னும் மற்ற ஐரோப்பிய மாஜிஸ்திரேட்டுகள் முன்னும் விசாரித்துத் தண்டிக்கப்பட்டுவருகிறார்கள். கலகத்தையடக்கி அதற்கானகாரணங்களை விசாரித்து ரிபோர்ட்டு செய்யும்படி அனுப்பப்பட்ட ஸ்பெஷல் கமிஷனராகிய மிஸ்டர் **ஹாம்மிக்** அவர்கள் இன்னும் ஒருவாரத்தில் தம்வேலையை முடித்து உதகமண்டலதத்துக்குத் திரும்பிவருவாரென்று தெரியவருகிறது. சிவகாசியிலுள்ள ஹிந்து தேவாலயம் மூடப்பட்டுக்கிடப்பதால் கலகத்துக்கு ஆஸ்பதம் அதிகமாகிறதென்று, மிஸ்டர் ஹாம்மிக் சாணர் அக்கோயிலுக்குள் பிரவேசிக்க தங்களுக்கு பாத்தியதையுண்டென்று ஸிவில்கோர்ட்டில் ஸ்தாபிதம் செய்யும்வரையில் அதற்குள் பிரவேசிக்கக்கூடாதென்று உத்தரவுசெய்து கோயிலைத்திறக்கும்படி செய்துவிட்டார். மதுரைஜில்லாவில் காமுதிகோயிலில் சாணர் பிரவேசித்தது பிசகென்று அக்கோயில் தர்மகர்த்தாவாகிய ராமநாதபுரம் ராஜா மதுரைசப்-கோர்ட்டில் வழக்கிட்டிருந்த கேஸ் முடிவாகி தீர்ப்புச்சொல்லியாய்விட்டது. சாணர் பிரவேசிக்கப் பாத்தியதையில்லையென்றும் அவர்கள் பிரவேசித்தது பிசகென்றும், ஸப்ஜட்ஜ் வரதராவ் அவர்கள் தீர்ப்புச்செய்திருக்கிறார். திருநெல்வேலி கலகத்திற்கு ஆதிகாரணமாகவிருந்த கோயில்வழக்கு சிவகாசியிலும், மதுரையிலும் சாணர்களுக்கு விரோதமாகவே தீர்ப்பாகி முடிந்திருக்கிறது. இனி அவர்கள் அப்பீலில் தங்கள் பாத்தியதையை ஸ்தாபிக்க யத்தனித்தால் உண்டு. எப்படியும் கலகாஸ்பதமான இந்த வழக்கு ஒரு வழியாகத் தீர்மானிக்கப்பட்டது நல்லதாயிற்று. இனி இவ்வித கலகம் நேரிடாதபடி பாதுகாக்க அதிகாரிகள் விழிப்பாயிருப்பார்களென்பதிற் சந்தேகமில்லை. இப்பொழுது நேர்ந்த கலகத்தில் டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டு முதல் மேலதிகாரத்திலுள்ளவர் முதலில் அஜாக்கிரதையாயிருந்ததாகவும் கீழுத்தியோகஸ்தர்கள் கலகக்காரர்களுக்கு உடந்தையாகவோ, ஒத்தாசையாகவோ இருந்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. இது விஷயம் எந்தமட்டும் உண்மையோ சொல்வதரிதாயிருக்கிறது. இது விவரமும் இதன் உண்மையும் ஸ்பெஷல் கமிஷனர் மிஸ்டர் ஹாம்மிக் அவர்களுடைய ரிபோர்ட்டு வெளிவந்ததும் தெரியும்.

## சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

### வித்தியாபலன்.

"பாக்கியத்துக்கு மூலம் குணம், குணத்துக்கு மூலம் விடாமுயற்சி"
"பாக்கியத்தின் பலன் போகவிச்சை!
குணத்தின் பலன் பூஷணம்!!"

ஒருவன் ராஜசமுகத்தில் இந்தவார்த்தை [illegible] சொல்லிக்கொண்டிருந்தான். ராஜா அவ்வாக்கியங்களின் யதார்த்தத்தை[illegible] தெரிந்துகொள்ளவேண்டுமென்று [illegible] குமாரர்களில் ஒருவனை நல்லபண்டிதனிட[illegible]தில் ஒப்புவித்து வித்தையும் நீதியும் கற்பிக்[illegible] வேண்டுமென்றும் பிரதிதினம் பையன் நன்றாய் புதுப்பாடங்கள் கற்கவேண்டுமென்றும் ஆக்[illegible]யாபித்தான். இளையகுமாரனுக்கு தினந்தே[illegible]



றும் விலையுயர்ந்த மாணிக்கமொன்று கொடுத்துவந்தான்.

மூத்தபையன் அறிவில் மேன்மேலும் விருத்தியடையவே, அதன் மூலமாய் வணக்கமும் மரியாதையும் கற்று வித்தையும் நற்குணமும் பயின்று தன் படிப்பில் வரவர விசேஷ பிரியமுள்ளவனானான். இளையவனோ பாக்கியத்தினால் நாளுக்கு நாள் கர்வமும் அகங்காரமுமடைந்து வித்தையில் இஷ்டமில்லாதவனாய் அதை இகழ்ந்துகொண்டுவந்தான்.

இரண்டுபேரும் வயதுவந்தபிறகு ஒரு தூரதேசத்துக்குப்போனார்கள். பணக்காரன் விசேஷ தனமெடுத்துக்கொண்டுபோனான். ஆனால் வித்வான் பரதேசத்தில் வித்தையே நமக்கு சிநேகிதன் என்பதை அறிந்தவனாதலால் சில புத்தகங்கள்மாத்திரம் கொண்டுபோனான்.

"பாக்கியவான்" ஒரு பட்டணம் சேர்ந்து அனேகதுன்மார்க்கர்களோடும் மோசக்காரர்களோடும் கலந்து அவர்களுடைய கெட்ட புத்தியால் தன் பணமனைத்தையும் கெட்ட வழிகளில் செலவழித்துவிட்டு, கடைசியில் கடன்பட்டு சிறைச்சாலைக்கனுப்பப்பட்டான்.

"வித்வான்" ஒரு ராஜ சபையில் பிரவேசித்தவனாய் தன்னுடைய மரியாதையினாலும் யோக்கியதையினாலும் ராஜாவுக்கு தன் கல்வியைத்தெரிவித்து ராஜனருகாமையிலேயேயிருக்கப்பெற்றான். பிறகு ராஜா பையனுடைய நன்னடத்தைகளை நன்றாய்த்தெரிந்துகொண்டு அவனுக்கு ஒரு வீடு கட்டிக்கொடுத்தான். கடைசியில் விசேஷ பிரபல்லியமடைந்ததனால் ராஜா மிகுந்த ஐசுவரியத்துடன் தன் பெண்ணை அவனுக்கு விவாகம் செய்துகொடுத்து ஜனசகாயத்துடனும் வேலைக்காரர்களுடனும் அவன் சொந்ததேசத்துக்கனுப்பினான். அவன் தகப்பன் அவன் வந்தபோதுண்டான ஆரவாரத்தைக்கேட்டு மிகவும் பயந்தான். அப்போது ஒரு வேலைக்காரன் வந்து "ஓ! ராஜா பயப்படவேண்டாம் தங்கள் குமாரன்தான் வருகிறான்" என்று சொன்னான். அதைக்கேட்டதும் ராஜா தன் சபையோர்களையும் பந்துக்களையும் தன் குமாரனை எதிர்கொண்டழைத்துவரவனுப்பி பையன் வந்தவுடன் அவனை ஆலிங்கனம்செய்து தன்னிடத்தில் உட்காரவைத்து அனேக சம்பிரமங்கள் செய்வித்தான். பிறகு விவகாரங்கள் நடத்துவதில் தன் பையனுக்கிருக்கும் சக்தியையறிந்து தன் பிரபுத்துவத்தையே அவனிடம் ஒப்பிவித்துப்போட்டான்.

இந்த ராஜாவின் பணக்காரக்குமாரன் இன்னமும் சிறைச்சாலையிலேயே இருந்தான். கல்விமானான குமாரன் அந்த சமாசாரம் தெரிந்தவுடன் அவன் கடன்களையெல்லாம் தீர்த்து அரண்மனைக்கு வரவழைத்துக்கொண்டான். இந்தப்பிரகாரம் ராஜா வித்தைக்கும் பாக்கியத்துக்குமுள்ள வித்தியாசத்தை அனுபோகசித்தமாய்த் தெரிந்துகொண்டான்.

## A Circular on Sanitation.

The following circular letter has been addressed by Lieutenant Colonel W. G. King, I. M. S., C. I. E., Sanitary-Commissioner for Madras, to all Presidents, District Boards, and all Chairmen, Municipal Councils, of Tamil Districts:—

"I have the honour to remind you of the difficulty there exists in bringing home sanitary truths to the important section of the native population which has solely a knowledge of the vernacular. I consider one of the most important methods of securing sanitary advance must be by endeavouring to meet this end, having special regard to the fact that it is practically only by means of the vernacular that the "rulers" of the household (the women) can be taught sanitary facts. I see no reason why beaten official tracks solely should be pursued in this matter. The best means available must be utilised, I have for some time past had it brought to my notice by Mr. Swaminatha Aiyar, the Editor of *Viveka Chintamani*, a Tamil monthly magazine, having a good circulation and long known to have a healthy tone, that he would

be willing to render his organ a medium for supply of sanitary information if he secured sufficient encouragement. A Committee has been formed (of which the editor will doubtless supply a list,) having for its object the encouragement of sanitary knowledge amongst the masses. Certificated Sanitary Inspectors have been required to give simple instances of the benefits of sanitary measures as they come to their notice, and Dr. Chandrasakar, Assistant Professor of Hygiene, Medical College, and Dr. Rama Rao, Assistant Professor of Physiology, have promised to see that information conveyed is of a suitable and correct nature. Contributions will also be obtained from time to time from Medical Officers. Under these circumstances, I have the honour to suggest, as the promotion of sanitary objects falls within your official functions, that you aid the movement by promising to take a certain number of copies for circulation amongst the Members of the Board or Municipality with the proviso that, after they have read them, they will do their best to circulate them amongst families where Tamil is read."

The following is the list of persons who have up to date consented to lend the weight and influence of their names and their active interest in furthering the movement:—Lieutenant-Colonel W. G. King, I. M. S., C. I. E.; the Hon'ble Mr. Justice Subramania Iyar, C. I. E.; Mr. H. O. D. Harding, I. C. S.; Dewan Bahadur R. V. Srinivasa Iyer; Mr. V. T. Vedadrisadasa Moodelliar; Mr. H. Subbarayar; Mr. A. C. Pranatharthihara Iyar; Mr. E. W. Legh, I. C. S.; Mr. T. S. Balakistana Iyar; Dr. P. S. Chandra Sekara Iyar, M. B. and C. M.; Dr. C. B. Rama Rao and Rao Bahadur C. Nagoji Rao.

## The "Viveka Chintamani."

A Retired Judge on the Vernaculars.

The July number of the *Viveka Chintamani*, the well-known Tamil Magazine and Review devoted to the diffusion of knowledge, maintains its usual standard of excellence and contains twelve articles, all of them treating of some branch or other of general knowledge. The first article is on "Liquid Air," by Mr. T. Rengasawmy Iyengar, M. A., who handles the subject in a popular and instructive manner, conveying several scientific truths in an easily understandable form. Mr. G. Kasturi Iyengar, M. A., has taken for his subject "Political Economy" and treats about efficiency of labour. Mr. C. V. Swaminada Iyer, the energetic Editor of the Journal, has extended its sphere of usefulness by introducing a new feature into it, namely, a Sanitary Section, devoted to the spread of correct and useful knowledge of village sanitation and hygiene. We are glad to note that the Editor is forming a Committee composed of influential officials and leaders of society to further the movement he has started. In this he has support of Lieutenant-Colonel W. G. King, I. M. S., C. I. E., Sanitary Commissioner, Madras, than whom none can be found more qualified and willing to work in furtherance of the cause of sanitation. Mr. Swaminada Iyer has brought out a popular Tamil pamphlet on the importance of sanitation, and the fact that it has been revised by two competent native medical gentlemen is sufficient guarantee for the general trustworthiness and correctness of the information it contains. Arrangements are also being made to circulate these pamphlets among Municipalities and Local Boards for distribution. If worked with patience and perseverance, the scheme is likely to prove successful and to contribute to the general welfare of the community.

In connection with another branch of the work in which the Editor of the *Viveka Chintamani* is greatly interesting himself, namely, the encouragement of the vernaculars, the following letter addressed to him by Mr. L. C. Innes, a retired Judge of the Madras High Court, may be read with interest:—

"I feel very much obliged to you for sending me your excellent paper on the encourgement of the vernaculars. The state of things disclosed is disheartening, as it is clear that the efforts that have been made by the several Universities have failed to bring about any improvement in the promotion of greater taste of vernacular literature, or of more extensive adoption of the venacular, as a medium for education and enlightenment of the masses. It seems to me that very little can be done by the University through any change in the course of studies, whether by placing the vernaculars on a par with English or otherwise. More may be effected by reforming *school* education so as to enable the young student to receive a good grounding in his own vernacular through the medium of vernacular text-books. But even this will be of comparatively little use unless there is a good supply forthcoming of attractive literature for the young. Original Tamil literature of such a pure and harmless character as would alone be suitable would not, I take it, be sufficiently attractive to young people; and the transfusion of western literature into the vernaculars of India proceeds but slowly, and very little of it is, in its nature, likely to attract the young. To effect its object, the literature so turned into the vernacular must be amusing and instructive. As Mr. M. Shama Rao, M. A., of the Mysore Educational Department, intimates in the passage you have quoted from him at page 17 of your paper, the supply of such literature may be expected to create the demand, and when the demand is once created, the supply will still further promote it. For the more advanced your magazine and kindred works strike me as best adapted to keep up the taste once acquired by the young for vernacular literature. The University might do somewhat in the way of encouraging the vernaculars by offering prizes for vernacular essays. I am very glad you are taking up the subject and wish you every success. It is impossible that the proper instruction and enlightenment of people should be effected except through the medium of its own special vehicle of thought."

The views expressed in the above letter by Mr. Innes, who has had long experience as an official intimately acquainted with the people and their vernaculars, deserve careful consideration by those interested in the advancement of vernacular education.—*Madras Mail, 13th July* 1899.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2.




# விவேகசிந்தாமணி

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1899ஹு செப்டம்பர்மீ [இலக்கம் 5.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

English & Foreign Subscription 7s. 6d. net per annum.

**Thin Paper Edition** for the People:—

Subscrn. Price: Yearly Rs. 4; Half-yearly Rs. 2-2.

Single copy, current No. 5½ As.; Back Nos. 6 As. each.

English & Foreign Subscription 5s. 6d. net per annum.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year,* i. e., *in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தன் முதல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுத வேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

READINGS AT HOME.

A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.

9-ம் நாள் படிப்பு.

ஒன்பதாநாட் பகலில் போஜனமானபின், ருக்மணியம்மாள் சுப்பலக்ஷ்மியை வழக்கம் போலப் புஸ்தகத்தையெடுத்துப் படிக்கச்சொல்ல, அவளும் பின்வருமாறு படிக்கத்தொடங்கினாள்.

"சுயம்வரத்துக்கு வந்த தேவர்களும் அரசர்களும் அவரவர் இருப்பிடத்துக்குச் சென்றனர். நளமஹாராஜாவும் தன்னுடைய உறைவிடம் வந்து போரிலுற்ற சிரமங்களெல்லாம் தீர்ந்து சுகமாக வீற்றிருந்தனன். அப்போது வீமராஜன் மணமண்டபத்துக்கு வந்து குலகுருவாகிய கௌதமமுனிவரால் மணவினைக்குரிய காரியங்களையெல்லாம் முறைப்படி அமைப்பித்து, முகூர்த்தத்துக்கேற்ற சுபலக்கினம் வந்தடுக்க ஒற்றரை நோக்கி, 'நீங்கள் உடனே சென்று நளமஹாராஜாவை அழைத்து வாருங்கள்' என்று சொல்லியனுப்பினான். அவர்களும் அவ்வாறே சென்று கூற, நளனும் வேதவிதிப்படி ஸ்நானம்செய்து, சந்திரகலாதராகிய சாம்பமூர்த்தியைத் தியானம்செய்து வழிபட்டு, வேதப்பிராமணர்களுக்கு விதிப்படி அநேக தானங்களை வழங்கி, கிரீடகுண்டல ஹாரகேயூராதி பூஷணங்களையணிந்து மணக்கோலம் கொண்டு, தேர்மேலேறிப் புறப்பட்டு, மன்னவர் சூழ்ந்து வெண்கொடைபிடிக்க, மங்கையர் நெருங்கிப் பொற்கவரியிரட்ட, வீதிநெடுக மகளிரும் மைந்தரும் கண்டுகளிக்க, அந்தணர் பலரும் ஆசிகள் கூற, மணமண்டபத்தை அடைந்தனன். உடனே அநேகம் சேடியார்கள் தமயந்தியைக் கூட்டிக்கொண்டுவந்து அம்மண்டபத்தைச்சார்ந்து மணத்தவிசில் நளனோடும் இருத்தினார்கள். சுபமுகூர்த்தத்தில் வீமராஜன் கமலமலர்மேல் காந்தள் அலர்ந்ததுபோல நளன்கையில் நங்கை கையைவைத்து, நீங்கள் இருவரும் இமயமாதையும் இறைவனையும் போல என்றென்றும் இனிமையாக வாழ்ந்திருப்பீராக என்று ஆசீர்வதித்து வேதவிதிப்படி தாரைவார்த்துக்கொடுத்தனன். நளமஹாராஜாவும் அக்கினிசாக்ஷியாகத் தமயந்தியைப் பாணிக்கிரகணம் செய்து, செய்யவேண்டிய சடங்குகள் எல்லாவற்றையும் விதிப்படிச்செய்துமுடித்து, அங்குள்ள அந்தணர் பெரியோர் முதலானோர்களால் ஆசீர்வதிக்கப்பெற்றுக் கல்யாணத்தை நிறைவேற்றினான்.

சிவகாமி.—விலைமதித்தற்கரிய பெருவிலை மாணிக்கத்தை மாற்றுயர்ந்த தங்கத்தில் வைத்திழைப்பதுபோலத், தமயந்தியை நளனோடும் அவர்களுடைய நல்வினையும் தெய்வசங்கற்பமும் கூட்டிவைத்தன. உண்மையான நேசத்துக்குண்டாகும் விகாதங்களுக்களவில்லையென்பது இவர் திறத்திற்றான் கண்டேன். இனிமேலாகிலும் இவர்கள் கடவுளருளால் இடையூறின்றி இனிதாகச் சுகித்திருக்கவேண்டும். இது நிற்க. எந்தக்கருமமும் ஸ்நானம் செய்து சுசிருசியோடு செய்யவேண்டுமென்று நமக்குள் சாஸ்திரம் ஏற்பட்டிருக்கின்றது பார்த்தாயா? இது எவ்வளவு சிலாக்கியமான ஏற்பாடு!

தாயார்.—சுசியென்பது தேகாரோக்கியத்துக்கு இன்றியமையாததாதலின் இகபர சௌக்கியங்களுக்குக் கருவியாகிய கர்மங்களை விதிக்கும் சாஸ்திரங்கள் சுசியை முக்கியமாகக் கொண்டாடும். ஆனால், சுசியென்பது கேவலம் காக்கைபோல முழுகுவதொன்றேயன்று. தேகநின்மலம், வஸ்திர நின்மலம், வாசநின்மலம், ஆகார நின்மலம், சங்கநின்மலம் ஆகிய ஒவ்வொன்றும் தேகாரோக்கியத்தையும் மனஸ்ஸந்துஷ்டியையும் விரும்புவார்களுக்கு இன்றியமையாத அத்யாவசியகமான பொருளாம்.



சிவகாமி.—தேக நின்மலம் வஸ்திர நின்மலம் இல்லாதவர்கள், பள்ளிப்பறை முதலான ஈனஜாதியிலன்றி, பிராமணர் வைசியர் முதலிய மேற்சாதிகளில் விசேஷமாயிராரென்றெண்ணுகிறேன்.

தாயார்.—பள்ளிப்பறையை அபேக்ஷித்துப் பார்ப்பார்கள் மிகவும் சுசிருசியுடையவர் என்பதில் தடையில்லை. ஆயினும், நமக்குள்ளே கூட இவ்விஷயத்தில் தெரியாமையும் துராசாரமும் வெகுவாயிருக்கின்றன. நாம் ஸ்நானம்செய்யும் ஜலம் அப்பழுக்கில்லாமல் சுத்தமாயிருந்தாலன்றி நமக்கு தேக நின்மலமும் வஸ்திர நின்மலமும் எவ்வாறு சித்திக்கும்? இவ்வுண்மையை அறியாமையாலோ அசட்டையாலோ அநேக ஊர்களில் ஸ்நானத்துக்குரிய தடாகம் முதலிய நீர் நிலைகளை எவ்வளவோ கெடுத்துவிடுகிறார்கள். அதில் தாங்கள் கால்கழுவுதல், பல்விளக்குதல், பாத்திரம் தேய்த்தல், அழுக்குத்துணிகளைத்தோய்த்தல், முதலான அருவருப்பான அசுத்தங்களைச்செய்வதன்றி இன்னம் சேற்றிற் புரண்டு சாணியிற்கிடக்கும் எருமைகளையும் குளிப்பாட்டுகின்றார்கள். இவ்வெருமைச்சண்டிகளுக்குச் சலமென்றால் பேரீதும். இலகுவில்விட்டுப் போமாட்டாவன்றோ. அவை சேற்றைக்கலக்கி நாற்றத்தைக்கிளப்பி எவ்வளவு அசுத்தமாக்குகின்றன. சிலவூர்களில்இந்த நீரை ஸ்நானத்துக்கன்றி பானத்துக்கும் உபயோகப்படுத்துகிறார்களே, என்ன அருவருப்பு! இவர்களுக்குள்ளே வியாதி வருவதோ—வாராதிருப்பதன்றோ ஆச்சரியம்?

த்தா.—ஆமாம் நம்மவர்கள் செய்யும் செய்கை மிகவும் வெறுக்கத்தக்கதே. இவ்விஷயத்தில் வடதேசத்தார் நம்மிலும் எவ்வளவோ தாழ்வில்லை. அவர்கள் கையில் செம்பொன்றில்லாமல் வெளிப்புறப்படுவதில்லை. கால்கழுவவும் பல்விளக்கவும் இன்னம் அசுத்தங்களை நீக்கிக்கொள்ளவும் செம்பு எவ்வளவு உதவியாயிருக்கும். குளத்திலிருந்தோ கிணற்றிலிருந்தோ வேண்டிய நீரை மொண்டு தூரச்சென்று அசுத்தங்களை நீக்கிக்கொள்ளுதல் எவ்வளவு நல்லவழக்கம். கால்கழுவிக் காறிக் காறியுமிழ்ந்து அசுத்தப்படுத்திய நீரில் ஸ்நானம் செய்வதேயன்றி நீ சொல்லியபடிச் சிலவூரில் அதைச்சமையலுக்கும் சாப்பிடுதற்கும் கூட உபயோகிக்கின்றார்கள். எவ்வாறு மனம்பிடிக்கின்றதோ? என்னபரிதாபம்! அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும் என்றபடி இவ்வாறு சுகாதாரமுறைகளைப்பேணாமல் அசௌக்கியகரமான காரியங்களைச் செய்வதின் கெடுதி உடனே தெரியாது. நெடுநாளாகச் சேர்ந்து குவிந்த பஞ்சுப்பொதியில் தீப்பற்றியதுபோல இவ்வசுத்தங்களெல்லாம் உடலிற்செறிந்து ஊறிக்கிடக்க, கடைசியில் 'கலரா' முதலான பல கொடிய வியாதிகள் தோன்றி, ஜனங்களை நூறு, ஆயிரக்கணக்காக விழுங்கி, ஊர்களைப் பாழாக்கிவிட்டுப்போக அப்போது தெரியவரும்.

சிவகாமி.—கலரா முதலிய வியாதிகள் அசுத்தங்களால்தான் உண்டாகின்றனவோ? இவ்வுபத்திரவங்கள் காளிமுதலிய தேவதைகளின் கோபத்தாலுண்டாகின்றனவென்று காப்புக்கட்டி உற்சவம் கொண்டாடுகின்றார்களே.

தாயார்.—சுகாதாரமுறைமைகள் சர்வஜீவ தயாபராகிய கடவுளாலேற்படுத்தப்பட்ட சுபாவதர்மங்களாதலின் அவற்றை அலக்ஷியம் பண்ணுதலால் நாம் தெய்வகோபத்துக் கிலக்காவதுண்மையே. ஆதலால் தெய்வகோபமென்றெண்ணுதலும் உற்சவம் கொண்டாடுவதும் முற்றும் தவறன்று. அன்றியும் இவ்வுற்சவங்களைச்சாக்

கிட்டு நம்முடைய வீடு வாசல்களைச்சுத்
தப்படுத்துதலின், அவ்விதமானகொள்
கை ஒருவாறு நாம் ஆதரிக்கத்தக்கதே.
ஆயினும், அழுகல் குப்பி மலம் மூத்திரம்
முதலான அசுத்த பதார்த்தங்களைத் தூர
அகற்றாமையால் அவற்றினின்றும் ஏதோ
ஒருவகை கண்ணுக்கும் புலப்படாத நுட்
பமானஜந்துக்கள் கணக்கில்லாமல் உற்பத்
தியாகி நாம் சுவாசிக்கும் காற்றிலும் உட்
கொள்ளும் ஜலத்திலும் பரவி அவற்றின்
வழியே நம்தேகத்தில்புகுந்து வியாபித்து
இரத்தத்தை அசுத்தப்படுத்தி, மேற்கூறிய
கொடிய வியாதிகள்வேரூன்ற இடங்கொ
டுத்து உயிர்களைக்கொல்லுகின்றன என்
பது அவ்விஷயமாகப் பரிசோதித்தறிந்த
கல்விமான்களின் கொள்கை. ஆதலால்
நாம் உட்கொள்ளும் உணவுகளும் பரு
கும் நீரும் சுத்தமாயிருப்பதன்றி சுவாசிக்
கும் மூச்சுக் காற்றும் கூடச் சுத்தமாயிரு
ப்பது சுகத்தைப்பேணுவதற்கு அத்யா
வசியகமான சாதனமாகும். இவ்விஷயத்
திலும் நம்மவர் செய்யும் அக்கிரமம்
சொல்லிமுடியாது. பட்டணவாசங்களில்
முனிசிபாலிடி ஏற்பட்டுத் தெருத்தெரு
வாகக் குப்பைகளைப்பெருக்கி அசுத்தங்
களை நீக்கவும் அசுத்தம் செய்பவர்களைப்
பிடித்துக்கண்டித்து விலக்கவும் ஆட்களை
ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் கட
னிழவுக்காவது தங்கள் வேலையை ஒரு
வாறு செய்து முடிக்கிறார்கள். கிராமாந்
தரங்களிலோ இவ்விஷயமாக முயற்சி
செய்யும் புண்யவான்கள் ஒருவரையும்
காணோம். தெருக்களும் சந்துகளும,
ஐயோ! நரகம்தான்; அதிலும் மழைநாளும்
சேர்ந்துவிட்டாற் சரி, எச்சிலும் மலமும்
குப்பையும் செத்தையும் கால்வைக்க
இடமிராது. ஊகித்து வெகுஜாக்கிரதை
யாய் நடந்தாலன்றி மிதியாமல் தப்புவது
கஷ்டம். ஆராவது 'சானிடெரி இனஸ்
பெக்டரோ' வேறு அதிகாரிகளோ வருகி
றாரென்றால் பரபரப்பாகச் செத்தை குப்
பைகளையகற்றி அபராதத்துக்குத் தப்
பிக்கொள்வார்கள். அவர்கள்போய்விட்
டால் பழையகுருடி பழையகுருடிதான்.

தாத்தா.—அவர்களைத்தானே சொல்லக்குற்ற
மில்லை; அவர்கள் என்னபண்ணுவார்கள்.
அதற்கேற்ற இடமும் தலமும் இருந்தா
ல்லவோ? நான்குபக்கமும் நன்செய்வ
யல்களும் சேறும் சகதியுமாயிருப்பதினா
லே காலைவீசிப்போவதற்கிடம் கிடை
யாது. புறங்கடைகளில் மாடு கன்றுக
ளுக்கும் வைக்கோற்போருக்கும் குப்பை
மேட்டிற்கும்தான் இடம்போதாது.

ருக்மணி.—என்ன நீர் அப்படிச்சொல்லுகிறீர்?
வேண்டுமானால் வேரிலும் காய்க்கு
மென்று வசனம் கேட்டதில்லையா?
ஊரில் முக்கியமானவர்களாய் நாலுபேர்
சேர்ந்து வீட்டுக்கு, அதிகமாக வேண்
டாம், மாசம் ஒரு அணாவீதம் வரிவைத்
தாலும் 100-வீடுகளுள்ள ஒரு கிராமத்
துக்கு மாசம் ஆறு ரூபாய் வசூலாமே.
அதனால் இரண்டுதோட்டிகளையேற்படுத்
தலாமே. குப்பை செத்தைகள் ஏன்
விழுந்தவிடத்திலே கிடந்து மடியவேண்
டும்? எவ்வளவு சுவச்சதையாய் வீதிகளை
யும் சந்துகளையும் புறங்கடைகளையும்
வைத்துக்கொள்ளலாம்! நம்மவர்களுக்கு
இன்னமும் இவ்விஷயத்தில் அக்கறை
கொடுக்கவில்லை. இக்காரியங்களெல்லாம்
அதிகாரிகளுக்குப் பயந்தா செய்து
கொள்ளுவது? ஒருவருக்குப்பயந்து நிர்ப்
பந்தத்தாற் செய்யும் காரியம் எத்தனை
நாள் நிலைநிற்கும்?

தாத்தா.—நீ சொல்வது நியாயம்தான். அக்க
றையும் ஆசையும் உண்டானால் கொல்லை
களில் கிச்சிலி, நாரத்தை, எலுமிச்சை,
தென்னை, மா, கமுகு முதலான பலவிரு
க்ஷங்களும், பூச்செடிகளும் செறிந்து
குயில் கூவச் சோலைபோல வைத்துக்



கொள்ளலாம். வீதிகளையும் மேடுபள்ள
மின்றிச் சமப்படுத்திக் கெட்டிப்படுத்திச்
செத்தை குப்பைகளின்றி முத்துருள
வைத்துக்கொள்ளலாம். அனேககிராமாந்
தரங்களில் அப்படிவைத்துக்கொள்ள
வில்லையாவென்ன? இதுவிஷயமாக ஜன
ங்களுக்கு அக்கரையும் விருப்பமு முண்
டாக்கவேண்டியது அவசியம். அதற்குத்
தான் இக்காரியத்தில் சிரத்தையெடுத்
துக்கொள்ளும் தேசாபிமானிகளாகிய சத்
புருஷர்கள் முயற்சிசெய்யவேண்டும்.

சுப்பு.—இன்னம் சுகாபிவிர்த்திக்கும் வியாதி
களை விலக்குவதற்கும் வேண்டிய சாத
னங்கள் அநேகம் உண்டோ? அவற்றை
எல்லாம் விவரித்தால் பெருகும்போலி
ருக்கிறதே.

சிவகாமி.—ஏனம்மா உனக்கு வாயைமூடிக்
கொண்டு கேட்டுக்கொண்டிருப்பது கூட
வலிப்பாயிருக்கிறதோ? கொட்டாவி
விட்டு ஆடிவழியாதே. புஸ்தகத்தைவைத்
துவிட்டு வேண்டுமானால் ஒரு தூக்கம்
தூங்கிவிட்டுவா, போ.

தாயார்.—இன்னம் அநேக அம்சங்களிருக்கின்
றன. அவற்றையெல்லாம் இன்றைக்கு
விஸ்தரிப்பதென்றால் போது போதாது.
இன்னம் ஒரு விஷயத்தைமட்டும் குறிப்
பிட்டு இச்சம்பாஷணையை முடித்துவிடு
வோம்.

சிவகாமி.—இவ்விஷயம் அநேகருக்குப் பிரயோ
சனமானது. விவரித்துச்சொல்லு கேட்
போம்.

தாயார்.—தேகநின்மலம், வஸ்திரநின்மலம்,
வாச நின்மலங்களைப்பற்றியும் அவற்றை
யடையும் வழிகளைப்பற்றியும் ஒருவாறு
விவரித்தோமல்லவா? இனி நாமுட்கொள்
ளும் ஆகாரத்தைப்பற்றிச் சிறிதுசொல்ல
வேண்டும். நாமுட்கொள்ளும் உணவு
கள் சுசிருசியாய் நாவிற்கினியனவாயும்
தேகத்துக்கு ஒத்துக்கொள்வனவாயும்
நன்றாய்ப்பாகமானவையாயு மிருத்
லன்றி, அவற்றை உட்கொள்வதில் நா
மிகவும் ஜாக்கிரதையாயும் இருக்கவே
டும். "மாறுபாடில்லாத உண்டி மறு
துண்ணில் ஊறுபாடில்லையுயிர்க்கு
என்று தெய்வப்புலவர் சொல்லிய ப
நம்முடம்புக்கொவ்வாத உணவுகளை
எவ்வளவும் தொடக்கூடாது. அதனா
அஜீர்ணம் முதலிய அநேகரோகங்க
உண்டாகி சுகம் கெட்டுப்போம். மேலு
உண்டபதார்த்தங்கள் செரிக்கு முன்ன
மே மேலும் உட்கொள்ளுதல் அநேகவி
யாதிகளுக்கும் துன்பத்துக்கும் ஆஸ்பத
மாகும். "மருந்தெனவேண்டாவா
யாக்கைக்கருந்தியதற்றது போற்றி உணின்"
என்றும், "அற்றதுதேறிக்கடைப்பிடித்து
மாறல்ல துய்க்கதுவரப்பசித்து" என்
றும் நாயனார் இவ்விஷயத்தை வற்புறுத்
திக்கூறியிருக்கின்றனர். ஆதலால் நினைத்த
போதெல்லாம் ஏதாவதொன்றை வாயில்
போட்டு மென்றுகொண்டிராமல் சாப்
பாட்டுக்குக் கிரமமானகாலங்கள் ஏற்ப
டுத்தி அவ்வக்காலங்களில் மாத்திரமே
தவறாமல் ஆகாரங்களை யுட்கொள்ளவே
ண்டும். "பாலோடாயினும் காலமறிந்
துண்" என்றார் ஔவையாரும். இவை
யன்றி இன்னொருவிஷயம் மிகவும் முக்கிய
மானது. மாறுபாடில்லாத உணவுகளைக்
காலமறிந்துண்ணுவதும் தவிர வாய்க்கி
னிதாயிருப்பதென்று வயிறுகொண்டமட்
டும் உண்ணும் வழக்கத்தை மனசில்
கூட நினைக்காமல் விடவேண்டும். "அள
வறிந்துண்பான்கணின்பம்போல் நிற்கும்
கழிபேரிரையான்கண் நோய்." என்று
வள்ளுவர்தாமே கூறியிருக்கின்றனர்.
'மீதூண்விரும்பேல்' என்னும் ஔவை
யார் சொல் யாவர்க்கும் தெரிந்தது
தானே.

தாத்தா.—இக்கொள்கைகள் வள்ளுவருடைய
கொள்கை. அவர் பாண்டித்திய மெல்

லாம் இக்காலத்தில் பலியாதென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஏனெனில் "வைகறைத் துயிலெழு," "மூன்றுயின்று மூன்றெழுதல் மூன்றும் சுகம், புத்தி, துன்று பொருள் மூன்றும் தரும்" என்னும் கொள்கைகள் தற்காலத்துக்குச் சரிப்படாவென்று குதற்கம்பேசிச் சிலர்சாதிக்கின்றார்களன்றோ?

ருக்குமணி.—அவர்கள் சாதனை எவ்வாறாயினும் ஆகுக. நாயனார் சொல்லியதும் ஒளவையார் சொல்லியதும் ஒருகாலத்தில் ஒரு சார்பினர்க்குப் பயன்படவன்று. அக்கொள்கைகள் முக்காலத்தும் உண்மையே. எத்திறத்தாருக்கும் பொருந்தியவைகளே. இனி வேண்டுமானால் நேற்றுத் தோன்றியதாகிய ஓர் நவீன பத்திரிகையில் பேர்போன அங்கிலேய வைத்திய பண்டிதர் ஒருவர் கூறியிருப்பதையும்பாரும். இவர் கொள்கைக்கும் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னெழுந்திய வள்ளுவர் கொள்கைக்கும் எவ்வளவு ஒற்றுமையிருக்கின்றது! 'உணவைப்பற்றிய உபதேசவொன்பது' என்று அவற்றிற்கு நாமம் சூட்டியிருக்கின்றார். அவை பின் வருமாறு.

1. "பிடியி னளவூண் குறையில் நமக்கு
   படியிற் பிணியில்லை பார்.
2. "எள்ளளவு குன்றநமக் கில்லை யுபாதிமிகக்
   கொள்ளவரும் துன்புபல கொள்.
3. "பெருணவால் நுண்ணறிவு தேயும் பிழை [யுண்டாம்
   ஒருகஇவ் வுண்மைதனை யுற்று.
4. "சோற்றுவல் கொண்ட கடனுக்குத் தான் [பெற்ற
   நற்சுகமே ஈடாய் விடும்.
5. "நாளைப்பா டின்றே புரிந்திடுக இற்றையூண்
   நாளைக்குக் கொள்க நயந்து.
6. "செல்வத்திற் செல்வம் சுகச்செல்வம் [அஃதென்னும்
   நல்வகையாப் போற்றுக்கடை.
7. "காற்றும் புனலும் முயற்சியும்ஊணும்தான்
   போற்றும் மருத்துவர்பூமேல்.
8. "அக்நிபல னூற்றால் அதுவே சுதந்தரத்தின்
   மிக்கதுகா ணென்றிடுவோர் மேல்.
9. "மண்ணின்மேல் வெற்றுச் சுழிக்கெல்லாம் [மெய்ச்சுகமே
   நண்ணுபயன் நல்குமுதலெண்."

தாத்தா.—இவ்வுபதேசங்கள் நன்றாயிருக்கின்றன. இனிச் சுகாதாரத்துக் கேதுவாகிய தேகமுயற்சி முதலிய விஷயங்களை இன்னொரு சந்தர்ப்பத்தில் விவரிக்கலாமென் றெண்ணுகிறேன். சந்தியாகாலமாய்விட்டது. இத்துடன் நிறுத்துவோம்.

எஸ். முத்து ஐயர், பி. எ.

## செல்வநூல்.

### 9. மூலதனம்.*

தனோத்பத்திக்குவேண்டிய ஸாதனங்களில் மூன்றாவது மூலதனம். தனோத்பத்தி செய்வதற்காக யந்திராதிகளாகவாவது, உழைப்பாளிகளுக்கு ஆகாரம் வகைராவாகவாவது பிரயோசனப்படுத்தப்படும் பொருளுக்குத்தான் மூலதனம் என்று பெயர்.

**மூலதனத்தின் உத்பத்தி.** மூலதனம் உத்பத்தியாவது எல்லாரும் கண்கூடா பார்க்கக்கூடிய விஷயமே. ஒரு சிறு உதாரணம் போதும். ஒரு கடற்கரையில் மீன்பிடித்து ஜீவனம் செய்துவரும் செம்படவர் கூட்டத்தைப்பற்றி விசாரித்துப்பார்ப்போம். முதல் முதல் அவர்கள் கரையில்வந்து தங்கும் மீன்களைப்பிடித்து அன்னன்று காலக்ஷேபம் செய்துகொண்டு வருவார்கள். மீன்கள் ஏராளமாய்க்கிடைத்தால் மஸ்தாகத்தின்று கொழுத்துத் திரிவார்கள். அவை குறைந்தால் பசியுடன் வருந்துவார்கள். எக்காலத்திற்கும் சரியாக ஆகாரம் கிடைக்கும்படி செய்துகொள்வதற்கு அவர்களால் ஆகாது. ஆனால் இப்படியுள்ள செம்படவக்கூட்டத்தில் ஒருவன் தன் நிலமையை நன்றாக்க, மீன்கள் அதிகமாகக் கிடைத்தபோது, தனது வாயைக் கையை யொடுக்கிக் கொஞ்சம் சேர்த்துவைத்தால், இப்படிச் சேர்த்துவைக்கப்பட்டதிற்கு தனம் என்று பெயர்வரும்.

இப்படிச் சேர்க்கப்பட்ட திரவியஸஞ்சயத்தை கஷ்டதசை வந்தகாலத்தில் சாப்பிடுவதற்காக வைத்துக்கொள்ளலாம். அல்லது அவைகளைக்கொண்டு வேறொரு பதார்த்தம் உண்டாக்கத்துவக்கலாம். எப்படியெனில், மீன்கள் குறையுங்காலம் கிட்டவே இவன் தன்னுஸ்தியாகிய கருவாட்டை யெடுத்துக்கொண்டு கடற்கரையைவிட்டு உள்நாட்டுப்புறம்போய் அங்கே ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களை கல்லுளிமுதலிய சிறு கருவிகளால் வெட்டி அவைகளைக்கொண்டு ஒரு சிறிய படவைச்செய்து முடிக்கலாம். அது முடிந்தவுடன் அதைத் தோளில் தூக்கிக்கொண்டு போய் கடற்கரை சேர்ந்து அதினால் கரையில் வந்துவிழும் மீன்களைத்தவிர மற்றும் கடலில் போய் பலவிதமான மீன்களைப்பிடித்து பல வாரங்களிலும் அடையக்கூடாத அவ்வளவு மீன்களை ஒரே நாளிற்பெறலாம். இப்படியாக பொருள் ஸம்பாதிப்பதில் உபயோகமாகும் படகு மூலதனம். அதை உடைய செம்படவன் மூலதனக்காரன். (Capitalist) இப்போது இம்மூலதனக்காரன் மூன்று காரியங்களில் ஒன்றைச்செய்யலாம். தன்படகைக்கொண்டு கடற்குள்போய் ஏராளமாக மீன்கள் கொண்டுவந்து அவற்றின் பெருக்கத்தால் கலியாணம் செய்துகொண்டு, குழந்தை குஞ்சுகளைப்பெற்று செம்படவர்களுக்குத் தலைவனாகவாகலாம். அல்லது, வேறொருவனுக்கு அதை உபயோகத்திற்குக் கொடுத்துவிட்டு அதற்காக அவன் கொடுக்கும் மீன்களாகிய உபஹாரத்தை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு சுகமாக விருதாவில் காலம் கழிக்கலாம். அல்லது அந்தப் படகை வாடகைக்குக் கொடுப்பதுடன், தான் அறிந்த படகுசெய்யும் வித்தையை கைசோரவிடாது மேன்மேலும் படகுகள் செய்துகொண்டு அவைகளை பலபேர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து ஏராளமான பொருள்களைப் பெறலாம். இப்படியாகப் பிறந்த மூலதனம் அதிகரிக்க வதிகரிக்க திரவியோத்பத்தியும் பலக்கிறது.

மூலதனத்தின் முக்கிய பிரயோஜனமென்னவென்றால் அது உழைப்பை மிகவும் ஸுலபமாக்குகிறது. முன்னால் நடந்துவந்த வேலையின் ஒரு பகுதியைக்கொண்டேமுன்னடைந்த ஸௌக்கியாதிகள் கிட்டிவிடுவதினால் மீதியாக்கப்பட்ட உத்யமசக்தி வேறு புதுக்காரியங்களில் பிரவேசித்து நூதனமான ஆசைகளைத் தீர்க்க உபயோகமாகிறது. இதற்கு உதாரணம் முன் சொன்ன செம்படவன் படகை நிர்மாணம் செய்ததும் ஒரு நாளிலேயே மற்றவர்கள் பலநாளில் ஸம்பாதிக்கும் மீன்களைப் பெற, அவன் மேலே கலியாணம் செய்துகொள்ளவும், வீடுகட்டிவைக்கவும், தேகத்தை அலங்காரம் செய்துகொள்ளவும் வேண்டிய சாமக்கிரியைகளைத்தேட ஆரம்பிக்கிறான்.

ஆகவே மூலதனமென்பது வேறு பொருளையுண்டாக்குவதற்கான ஸஹகாரியான பதார்த்தங்கள்தான். முதல் முதல் இம்மூலதனம் உழைப்பாளியின் ஆகார ரூபமாயிருக்கிறது. கொஞ்சகாலத்திற்கு ஆகாரம்வரும்படி சேர்த்துவைப்பது முதல் முதல் மனிதன் செய்யும் காரியம். ஆனால் அது அவ்வளவு ஸுலபமானதல்ல. இதில்லாமல்தான் பலகுடிகள் வருந்துவதுடன் பல ஜனக்கூட்டங்கள் இருக்கும் இடம்தெரியாமல் அழிந்துபோய்விட்டன, நாகரிகமதிகரித்து ஆகாரம்கைகூட, மூலதனமானது மற்றொரு ரூபத்தை யெடுத்துக்கொள்கிறது. அதாவது மூலதனமானது வேலைசெய்யவுபயோகமாகும் கருவிகளாக உருக்கொள்கிறது.

வேலையை ஸுலபமாக நடத்திவைப்பதற்குத் தகுந்த கருவி மிகவும் வேண்டிய ஒரு வஸ்து. ஆகாரம் மிகவே, நான் முன்சொல்லியிருக்கும் நிதர்சனத்தில் கண்டபடி. காருவிகள்

* Capital.

விருத்தியடைகின்றன. பிறகுநாளாவட்டத்தில் பலவித வேலைப்பாடுகள் உச்பத்தியாக அந்தந்தவேலைக்குவேண்டிய உபதான காரணமான பதார்த்தங்களும் மூலதனமென்று அழைக்கப்படுகின்றன. இப்படியாக நாகரிகம் பலத்த ஜனஸங்காதனங்களில் மூலதனம் மூவகைத்தானதாயிருக்கிறது. ஆயினும் நாம் முன் கூறியபடி எல்லாவற்றிற்கும் ஆதியான உழைப்பாளிகள் வேலையை நடத்திவரும்போது உண்டு, உடுத்து அனுபவித்துவரும் பொருள் தான் மூலதனம். மூலதனத்தினால் இன்னமொரு பிரயோஜனமுமுண்டு. அதாவது, மூலதனம் மிகவும், தனோத்பத்தியும் பலக்கும். எப்படியெனில், ஒருவன் ஒரு தோட்டம் போடுகிறானென்று வைத்துக்கொள்வோம் அவனிடத்தில் மூலதனமில்லாவிட்டால், அல்லது மூலதனம் அல்பமாகமாத்திரமிருந்தால் அவன் ஒரு சிறிய குடத்தைச் சம்பாதித்து அதைக் கொண்டு அக்கம்பக்கங்களிலிருக்கும் ஸ்வபாவிகமான ஏரிகளிலிருந்தும், ஆறுகளிலிருந்தும் ஜலத்தைத் தன் தலையில் சுமந்துகொண்டுவந்து கொட்டி தான் போட்டிருக்கும் அல்ப காய்கறிகளை வளர்க்கவேண்டும். பிரயாஸம் அதிகமாயிருப்பதுடன், நடக்கும்வேலையின் பிரமாணம் குறைச்சலாயிருப்பதால் அல்பமான தனோத்பத்திதான் ஆகும் இப்போது, அவனிடம், கொஞ்சம் மூலதனம் கட்டினால், ஒரு கையேற்றமாவது போடலாம். ஆகவே கொஞ்சம் விலையதிகம்பெறக்கூடிய பதார்த்தங்களையுண்டாக்கிவைக்கலாம். மேலும் இன்னம் கொஞ்சம் கைமுதல் கூடினால் எருதுகள் முதலிய கால்நடைகளைக்கொண்டு பெரிய ஏற்றம் வகைராகட்டலாம் கடைசியில் ஏராளமாக மூலதனமிருந்தால், நீராவியந்திர மொன்றைக் கொண்டு நிரந்திரமாக நீர்வளம் இருக்கும்படி தூரத்திலிருந்து கால்வாய்களையும் அல்லது பூமியின் அந்தர்தேசத்திலிருந்து நீர்ப்பெருக்கையும் ஏற்படுத்திக்கொள்வான். நீர்வளம் மிகவும் நிலவளமும் மிகுந்து ஏராளமாக தனோத்பத்தியாகிறது.

இப்படியாக உபயோகமாகும் மூலதனம் ஸ்திரம் அஸ்திரம்என்று இருவகைத்தானது. முற்கூறிய ஸ்திரமான மூலதனம் நெடுநாள் நீடித்து இருக்கக்கூடியது. அது யாதெனில் வேலைக்கு ஸஹகாரியாகவிருந்து உதவும்படி ஏற்படுத்தப்படும் சாலைகள், யந்திரங்கள், கைக்கருவிகள், உத்யமசாலைக்கும் பண்டங்கள் விற்கப்படும் சந்தைக்கும் இடையே வரத்துப்போக்குக்கு அனுகூலமாகப்போடப்படும் ரஸ்தாக்கள், வண்டிவகைராக்கள், ரெயில்வண்டி முதலிய தேசாந்திரம் போக்கு வரவுக்கு உபயோகமாகும் பலத்த ஏற்பாடுகள், கப்பல்கள், முதலியன. அஸ்திரமான மூலதனம் எவையெனில், வேலை செய்யும் காலத்தில் அதைச்செய்வோர் உண்டு, உடுத்து அத்யாவசியகமாய் அனுபவிக்கும் பதார்த்தங்கள் : அல்லது வேலையில் உபாதன காரணமாக உபயோகமாகும் பண்டங்கள். இதற்கு உதாரணமாக, துணிகள்செய்யும்வேலையில் பிரயோகிக்கப்படும் நூற்கள், நூற்கள் செய்யும் வேலையில் உபயோகமாகும் பஞ்சும், பருத்தியும், பருத்திவிளைவிக்கும் வேலைக்கு வேண்டிய பருத்திக்கொட்டை, எரு, முதலியவை. இவைகளுக்கு அஸ்திரமென்று பெயர் வந்ததற்குக்காரணம் அவைகள் கொஞ்சகாலம் கூட ஓரிடத்தில் ஒரு மாதிரியாகவிருப்பதில்லை. ஆயினும் நாம் ஸ்திரமென்று அழைக்கப்படும்பொருளும் சாஸ்வதமானதல்ல. எல்லாம்காலத்தைப் பொருத்த விஷயமானது. 4 - வருஷம் வரக்கூடிய கருவியை அபேக்ஷித்து 10 - வருஷம் வரக்கூடியது ஸ்திரம்; ஆனால் 100 - வருஷம் தாட்டக்கூடியவஸ்துவி னபேக்ஷையாக அது அஸ்திரம் தான். ஆகையால் ஒரு பொருளைப் பற்றி உடனே ஸ்திரம் அஸ்திரமென்று சொல்ல முடியாது. ஆகவே மூலதனம் காலத்தையனுசரித்தது; எந்தப்பொருள் எவ்வளவு காலம் வருகிறதோ அதை யபேக்ஷித்து அதற்கு ஸ்திரம், அஸ்திரமென்னும் பெயரைக் கொடுக்க வேண்டியது.

இப்படியான மூலதனம் முதல்முதல்உண்டாவது சேர்த்துவைப்பதினால்.—சேர்த்தல் அல்லது



செலவிடாமலிருத்தல் அதன் மூலகாரணம். சேர்த்தல் என்பதற்கு, ஒரு பதார்த்தத்தைக் கண்ணில் கண்டபொழுதே அழிக்காமல் மற்றொரு ஸமயத்திற்கு வேண்டும்படி பாதுகாத்துவைத்தல் என்று அருத்தம். இப்படி சேர்க்கப்பட்டிருக்கும் மூலதனத்தை நாம் தனோத்பத்தி செய்வதில் வியாபிருதர்களாக விருக்கும்போது, நமது ஜீவனத்திற்காகவாவது மற்றும் வேலை செய்வோரது ஜீவனத்திற்காகவாவது உபயோகித்தால் அந்த மூலதனத்தை ஸார்த்தகப்படுத்திவைப்போம். இப்படி ஸார்த்தகப்படுத்திவைப்பதை நாம் மூலதனத்தை விருத்திக்கப் போடுகிறது (Invest the Capital) என்று சொல்வோம்.

ஜி. கஸ்தூரி ஐயங்கார்.

## உப்பு.

## II.

1. அமைப்பு.—சாதாரண உப்பு, "ஸோடியம்" (Sodium) "குலோரயின்" (Chlorine) என்ற இரண்டு பூதங்கள் ஒன்றுசேர்ந்து உருவாகியது; 23 - பாகம் "ஸோடியத்தோடு 35½ - பாகம் குலோரயின் கலக்கப்பட்டால் உப்பாகிறது. அதாவது 100 - பாகம் உப்பில் * 60·4-பாகம் குலோரயினும் 39·6-பாகம் ஸோடியமுமிருக்கின்றன. இவ்வாறு கலக்கப்படுவதினால் உண்டாகும் உப்பு உருவத்தில் மேற்சொல்லிய இரண்டுபூதங்களிலொன்றையாவது ஒற்றதல்ல. குலோரயின் என்பது ஒரு மஞ்சள் நிறமான வாயு. ஸோடியமென்பது நிறத்தில் வெள்ளி போன்ற ஒரு உலோகம். அதை நீரின்மேல் போட்டால் தானாய் தீப்பற்றிக்கொண்டெரியும்.

2. கனம்.—சீதோஷ்ணத்தைச் சரிசெய்துகொண்டு ஓரளவு உப்பையும் அதற்குச் சமமான அளவு தண்ணீரையும் நிறுத்துப்பார்த்தால் தண்ணீரைக் காட்டிலும் உப்பு 2-முதல் 2¼-மடங்கு கனமுள்ளதாயிருக்கும். கட்டியாவதில் எல்லா உப்பும் ஒரேவிதமான கட்டியாவதில்லையானதினால் வேறுவேறாகவுற்பத்தி செய்யப்பட்ட இரண்டுவித உப்பை நிறுத்துப் பார்த்தால் இரண்டின்கனமும் சரியாயிராது. ஆனாலும் பொதுவாய்த் தண்ணீரைக் காட்டிலும் உப்பு சுமாராய் இரண்டு மடங்குக்குக் குறையாத கனமுள்ளதென்று உறுதியாய்ச்சொல்லலாம்.

3. நீரில் கரையும்குணம்.—உப்பை நீரில் சரியாய்க் கரைத்துவிடுவதற்கு உப்பு ஒரு பங்கானால் 60° உஷ்ணமுள்ள நீரில் 2½ - ப்பங்கு வேணும். அதாவது 100 - பங்கு ஜலம் சுமார் 37 - பங்கு உப்பைமாத்திரம் கரைக்குமேயல்லாமல் ஜாஸ்தி உப்பு போடப்பெற்றால் அவ்வுப்பைக் கட்டியாக நிறுத்திவிடும். நீரில் கரைந்துபோகும் குணம் உப்பிற்கு விசேஷமாய் சாதாரண நிலைமைகளில் ஒரே அளவாகவேயிருக்கும். ஆனாலும் நீரின் உஷ்ணத்தை ஜாஸ்திசெய்தால் அந்நீர் மேற்சொல்லிய கணக்கிற்கதிகமானவுப்பையும் கரைக்கும். குளிர்ந்த ஜலத்தில் உப்பு கரைந்துபோவதைக்காட்டிலும் அதிக சீக்கிரமாய் உஷ்ண ஜலத்தில் கரையும். எவ்வளவிற்கெவ்வளவு சீக்கிரமாய் உப்பைக்கரைக்க வேண்டுமோ அவ்வளவிற்கவ்வளவு உப்பு போடப்பெற்ற தண்ணீரைக் காய்ச்சவேண்டும். உப்பையே வறுத்து அதின்மேல் தண்ணீரைப்போட்டால் இன்னும் அதிசீக்கிரமாய்க் கரைந்துபோம். பாறையுப்பு (Rock salt) ஒரு பெரியகட்டியைப் பழுக்கக்காய்ச்சி சரியான அளவு தண்ணீரிலதைப்போட்டால் போடப்பட்ட நிமிஷமே அந்தக்கட்டி கரைந்து போகும். சாராயம் முதலிய மதுக்களில் சாதாரணவுப்புக்கரைவது மத்திமம்; சுத்த மத்தியத்தில் சுத்தமாய்க் கரையவே கரையாது.

சாதாரண வுப்புடன்கூட "ஸோடியம் ஸல்பேட்" (Sodium Sulphate), "மாக்னிஷியம் ஸல்பேட்" (Magnesium Sulphate), "மாக்னிஷியம் குலோரயிட்" (Magnesium Chloride), என்னும் வேறுப்புகள் கலந்திருப்பது வழக்கம். அப்படிப்பட்ட சாதாரணவுப்பைத் தண்ணீரில் போட்டால் அவ்வுப்பு அத்தண்ணீரில் கரைவதற்குமுன் மேலே சொல்லிய உப்புகள் அத்தண்ணீரில் கரைந்து போம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சாதாரணமான உப்பு கரையாமல் கட்டியாய் நின்றுவிடும்.

4. நீரை இறக்குங்குணம்.—சுத்தமான வுப்பு காற்றினின்றும் விரூபமாய்வரும் நீரைக்கிரகித்துக் கொள்வதில்லை. கடைகளில் விற்கப்படும் உப்பு முழுவதும் மழைகாலத்தில் ஈரமாய்ப்போய்விடுவது

* 60·4 என்பதை 60 டெஸிமல் 4 என்று வாசிக்க வேண்டும். நடுவிலுள்ள புள்ளிக்கு 'டெஸிமல்' என்று இங்கிலீஷில் பேர் வழங்குகிறது. அதாவது 10-ல் இவ்வளவு பாகம் என்பதைக் காட்டுகிறது. ·4 என்பது 10-ல் 4 பாகத்தைக்குறிக்கும்.

சாதாரண உப்பின் குணமல்ல; அதோடு நீக்கப்படக்கூடாமல் கலந்திருப்பதும் நீர்க்காற்று அடித்த மாத்திரத்தில் நீராய்ப்போய்விடுவதுமான "மாக்னிஷியம் குலோரயிட்" என்னும் அசுத்தத்தின் குணமேயாம்.

இக்காரணத்தினால் காற்றின் குணங்களை யறிவதற்கு ஓர் கருவியாகிறது, சாதாரணமானவுப்பு காற்றின் நீரை ஜாஸ்தியாக இழுத்துக்கொண்டு ஈரமாய்ப்போனால் அவ்வுப்பு அசுத்தமானது. அதை உணவில் உபயோகிப்பது நன்மையன்று.

5. உஷ்ணகுணம்.—உஷ்ணகுணத்தினால் உப்பு கெட்டுப்போவதில்லை. பழுக்கக் காய்ச்சப்பட்டால் சுத்தமான உப்பு உருகிப்போகிறது; ஆறினால் திரும்பவும் கட்டியாய்விடுகிறது. திறந்தவெளியில் உப்பை உருக்கிக்காய்ச்சினால் ஆவியாய்ப் போய்விடும்; மூடப்பட்ட பாத்திரத்தில் இளகின கட்டியாய் ஒன்றுசேர்ந்துநிற்கும். ஆனால் செந்தீக்கு ஜாஸ்தியாய் வெண்தீயுண்டாகும் வரையில் காய்ச்சப்பட்டால் மூடப்பட்ட பாத்திரத்தில்கூட உப்பு ஆவியாய்ப்போய்விடும். உப்பைக் காய்ச்சும்பொழுது படபடவென்று வெடிப்பது உப்பிற்குள்ளடங்கியிருக்கும் வாயு முதலியது. உப்பு நீலவர்ணமாய் எரியும்; ஊதுகுழலினால் ஊதினால் மஞ்சள்நிறமாய் எரியும்.

பளிங்குபோன்ற உப்புக்கட்டிகள் மூலமாய் சூரிய வெப்பம்முதலிய உஷ்ணம் தடையின்றி வெகுதூரம்செல்லும். கண்ணாடிமூலமாய் வெளிச்சம் எப்படிப்போகிறதோ அப்படியே உப்பின் மூலமாய் உஷ்ணம் பிரவேசிக்கும். இக்காரணத்தினால் பூமியில் சுரங்கம்செய்து உப்பு வெட்டியெடுக்கப்படுமிடங்களில் அச்சுரங்கங்களுக்குள் சூரிய வெப்பத்தின் பிரவேசத்தினால் மனிதர்கள் வாசம்செய்துவர முடியாமல்போகிறது.

6. உருசி.—உப்பின் உருசி நமக்கு நன்றாய்த் தெரிந்ததே; அதற்கு உவற்பு என்கிறார்கள். இந்த உவற்பு எவ்வித உணவு பதார்த்தங்களுக்கும் மாதுரியத்தைத் தருகிறது. ஆனால் உப்பின் இக்குணம் அது விளையும் ஸ்தலத்தின் விஸ்தீரணத்தின்மேலும், அதுவே ஈரமில்லாமல் காய்ந்திருப்பதின்மேலும் பொறுத்திருக்கிறது. சாதாரணமாய் இத்தேசத்தில் உபயோகப்படும் கடலுப்பைக்காட்டிலும் இங்கிலாந்திலிருந்து சன்னமான பொடியாய் வரும் உப்பிற்கு உவற்பு ஜாஸ்தி. ஆனாலும் நாட்டுப்புக்களில் சிலவற்றில் உவற்பு ஜாஸ்தியாகவே யிருக்கிறது. இதற்குக்காரணம் அவ்வுப்புக்கள் சுத்தமில்லாமல் 'மாக்னிஷியம்குலோரயி'டோடு கலந்திருப்பதுதான். தண்ணீரில் உவற்பை யுண்டாக்குவதற்கு குறைந்தபக்ஷம் ஒரு காலன் (அதாவது 400 துலாம் எடை) தண்ணீருக்கு 30-கோதுமை எடை உப்புக் கலக்கப்படவேண்டும்.

7. உறுதி.—உப்பு படிகாரத்தைப்போல் கெட்டியானபதார்த்தம். முன்காலத்தில் இந்தியாவின் வடமேற்கு மாகாணங்களில் பாறையுப்பினால் தான் பாளங்கள் தட்டுகள் முதலிய பாத்திரங்கள் செய்து வந்தார்கள். சில தேசங்களில் இப்பாறையுப்பு பளிங்குக்கற்கள்போல கெட்டியான பலகைகளாக அகப்படுகிறது. இன்னும் சிலதேசங்களில் பாறையுப்புச் சுரங்கங்களில் கூலியாளர்கள் அவ்வுப்பினால் சிலைகள், ருத்திராட்சங்கள், புஸ்தகங்கள், அம்மானைக்காய்கள், மசிக்கூடுகள் முதலியவைகளைச் செய்து விற்று லாபம் சம்பாதிக்கிறார்களாம்.

"வீலிஸ்கா" என்னு பிரதேசத்து உப்புச் சுரங்கங்களில் 1698-ம் வருஷத்தில் ஒரு பெரியகோயிலை உப்புக்கற்களினாலேயேகட்டி அதற்குவேண்டிய கதவுகள் சன்னல்கள் பலகைகள் குறிச்சிகள் மேஜைகள்முதலிய எல்லாவற்றையும் உப்பினாலேயே அமைத்து அந்தக்கோயிலை அச்சுரங்கங்களில் வேலை செய்தவர்கள் வெகுகாலம்வரையில் உபயோகித்து வந்ததாகவும், இப்போதைக்கு 30-வருஷங்களுக்கு முன் போய்ப் பார்த்தபொழுதும் அக்கோயில் பழுதுபடாமலிருந்ததாகவும் தெரியவருகிறது. மேலும் இச்சுரங்கங்களில் குதிரைலாயங்களும் தண்ணீர் தொட்டிகளும்கூட அவ்வுப்புப்பாறைகளினாலேயே அமைக்கப்பட்டு உபயோகப்பட்டு வந்தனவென்றும் சொல்லுகிறார்கள்.

8. சத்தகுணம்.—சத்தத்தை கிரகித்துப் பரவச்செய்யும் குணம் உப்பிற்கு அதிசயத்தக்கதாயுண்டு. செம்பு இரும்பு முதலிய உலோகங்களைப்போல உப்பு சத்தத்தை வெகுதூரம்வரையில் பரவச்செய்கிறது. உப்புச் சுரங்கங்களுக்குள் சமயாசமயங்களில் 45-அல்லது 50-கஜ தூரத்திலிருந்து கூலியாட்களுக்குள் ஒருவருக்கொருவர் சமாசாரம் தெரிவித்துக்கொள்வதற்கு சுரங்கத்தின் பக்கச்சுவர்களில் கட்டியாய் அடிப்பார்கள். அந்த ஓசை தூரத்திலிருப்பவர்களுக்கு கணீரென்றுகேட்டுத் தகுந்தபடி அர்த்தம் செய்துகொள்ளுவார்களாம். இங்கிலாந்தில் செஷ்ஷயர் (Cheshire) என்னும் மாகாணத்து உப்புச்சுரங்கங்களுக்குள் கூலியாட்கள் வேலை



செய்வதினோசை இரண்டு மயில் தூரம்வரையில் கேட்கிறதாகச்சொல்லுகிறார்கள்.

9. காத்தற்குணம்—எல்லாக் குணங்களிலும் மேன்மையானகுணம் ஒன்று உப்பிற்குண்டு. எவ்வித ஜீவனில்லாத வஸ்துக்களையும் கெட்டு நாற்றமெடுத்து அழுகிக்கரைந்துபோய்விடாமலும் சுபாவமான உருவத்தோடு மிருக்கச்செய்யும். இக்குணத்தின் பலனை விசேஷமாய் அனுபவிப்பவர்கள் செம்மடவர்கள். மீன் முதலியவைகளைப்பிடித்து வெகுகாலம் வரையில் துர்க்கந்தம் வராமல்மாத்திரமல்ல நல்ல வாசனையோடுங்கூட இருக்கும்படி இவ்வுப்பினால் செய்கிறார்கள். உப்புச்சுரங்கங்களில் பச்சை யிறைச்சியைக்கொண்டுபோய் வைத்தால் அது வெகுகாலம் வரையில் அவ்விடத்து உப்பங்காற்றினால் பச்சையாகவே புது இறைச்சியைப்போலவே யிருக்கும். சமுத்திரத்து நீரை நன்றாய்க் காய்ச்சி ஆறினபிறகு அதற்குள்ளாக காப்பிச்செடியின் ஒரு கிளையை பச்சையாய்ப்போட்டு 53 வருஷங்கள் வைத்திருந்து பிற்பாடு பரிசோதிக்கையில் அக்காப்பிச்செடி காப்பிச்செடியாகவே யிருந்ததாம். முறிந்துபோன ஒரு கால்விரலை அப்படிப்பட்ட நீரில் 3-வருஷம் போட்டு வைத்திருந்து எடுத்ததில் அவ்விரல் அப்பொழுது தான் முறிந்து விழுந்ததுபோலிருந்ததாம்.

10. நிறம்.—சுத்தமான பாறையுப்பு வர்ணமில்லாமல் பளிங்குபோல் ஒளியுடையது. 6-அங்குலம் கனமுள்ள ஒரு உப்புக்கல்லை சின்ன அச்சு அக்ஷரங்கள் மேல் வைத்துப்பார்த்தால் அக்ஷரங்களை தெளிவாய்ப்பார்க்கக்கூடிய அவ்வளவுசுத்தமான உப்புக்கற்களிருக்கின்றன. பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படும் உப்பிற்கு அப்பூமியைச்சேர்ந்த நிறம் கொஞ்சகொஞ்சமிருக்கும். ஆகையால் சிவப்புப்பு, பழுப்புப்பு, பச்சையுப்பு, நீலவுப்பு, வெள்ளுப்பு முதலியவைகளைக்காணலாம். கடலுப்பு அசுத்தங்கலக்கப்படாமலிருந்தால்பெரும்பாலும் வெளுப்பாயிருக்கும். சுத்தமான உப்பைப் பொடியாக்கினால் துல்லியமாயிருக்கும். வியாபாரம் செய்யப்படுமுப்பு வெண்மையாகவேயிருக்கவேண்டும். ஆனாலும் இந்ததேசத்தில் உப்புக்களர்களின் மண்முதலியவைகளால் அழுக்குப்பட்டு கடையில் விற்கப்படுமுப்பு பழுப்பும் கறுப்புமாயிருக்கிறது.

**டி. ஸி. சௌரிராஜய்யங்கார்.**

## பகவான் புத்தர் காசியில் செய்த முதற் பிரசங்கம்.

[புத்தர் ஞானோதயம் பெற்றதும் போதிமரத்தடியினின்றெழுந்து தாம்கண்ட உண்மையை, உலகம்உணர்ந்து உய்யச்செய்யவேண்டி, காசிநகரை நோக்கிச் சென்றார். காசிநகரைச் சேர்ந்து, புத்த தர்ம்மமாகிய வாய்மை நான்கும் சீலம் ஐந்தும் ஞானிகளுக்கும் அஞ்ஞானிகளுக்கும், கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும், தனவந்தர்களுக்கும் ஏழைகளுக்கும், தாழ்ந்தவனுக்கும் உயர்ந்தவனுக்கும் யாதொரு வித்தியாசமுமின்றி போதித்து, கங்கை யமுனை நதிகளின் ஓரங்களிலுள்ள ஊர்களிற் சென்று, ஞானமும் அறிவும் சாந்தமும் அன்பும் பரவும்படிச்செய்தார்.]

**துதி.**

"மாரனை வெல்லும் வீர நின்னடி
"தீநெறிகடும்பகை கடிந்தோய் நின்னடி
"பிறர்க்கறமுயலும் பெரியோய் நின்னடி
"துறக்கம்வேண்டா தொலலோய் நின்னடி
"யெண்பிறக்கொழிய விறந்தோய் நின்னடி
"கண்பிறர்க்களிக்கும் கண்ணோய் நின்னடி
"தீமொழி கடந்த செவியோய் நின்னடி
"வாய்மொழி சிறந்தநாவோய் நின்னடி
"நரகர்துயர் கெட நடப்போய் நின்னடி
"யுரகர்துயர மொழிப்போய் நின்னடி
"வணங்குதலல்லது வாழ்த்த லென்னாவிற்
"கடங்காது."

1. ஐந்து சந்நியாசிகளும் தங்களுடைய பழைய குருவானவர் தங்களிடம் வருவதைக் கண்டார்கள். அவரை வணங்கக்கூடாதென்றும், அவர்பெயரால் கூப்பிடுவதன்றி குருவென்று அழைக்கப்படாதென்றும் ஐந்து சந்நியாசிகளும் தங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டு, அவர்கள் சொல்லிக்கொண்டதாவது; "நாம் இந்த கௌதமனை மரியாதைசெய்வதற்குக் காரணமில்லை. ஏனென்றால், இவன்விரதத்தை இழந்தவன். பரிசுத்தத்தையுங் கைவிட்டான். இவன் கௌதமனேயொழிய சன்னியாசியல்ல. இந்த கௌதமன் உலகவின்பத்தில் ஆழ்ந்தவனாகி, விசேஷ சுகத்தில் மூழ்கினவனானான் என்றார்கள்.

2. ஆனால் பகவான் பெருந் தகைமையோடு தங்களிடம் வருவதைக்கண்ட சந்நியாசிகள்,

தாங்கள் முன்செய்த தீர்மானத்தைக் கைவிட்டு, தங்கள் ஆசனத்தை விட்டெழுந்து, பகவனை வணங்கி வந்தனுபசாரஞ் செய்தார்கள். ஆகிலும் பகவனை அவர்பெயரால் கூப்பிட்டு "சினேகிதனே" யென்றழைத்தார்கள்.

3. இவ்விதமாக பகவனை அழைக்கவும், பகவன் பின்வருமாறு பிரசங்கிக்கத் தொடங்கினார். "ததாகதரை" பெயரிட்டழைக்காதிருங்கள். ஏனென்றால், அவர் பரிசுத்தராகிய புத்தராகிவிட்டார். புத்தரை சகலவுயிர்களும் பிதாவென்றழைக்கின்றன. பிதாவை அவமதித்தல் பிசகு; இகழ்தல் பாவம்.

4. ததாகதர் கடினதவத்தால் மோக்ஷத்தை நாடுவதில்லை; அந்த காரணத்தினாலேயே அவர் இன்ப சுகத்திலாழ்ந்தவ ரென்றாகிலும், விசேஷ இன்பத்தை அனுபவிப்பவரென்றாகிலும் எண்ணவேண்டாம்.

5. மாய்கையினின்று நீங்காதவன், மாமிச பட்சணத்தை வெறுத்தவனாயிருந்தாலும், நிர்வாணமாகச் சென்றாலும், மொட்டையடித்துக்கொண்டாலும், ஜடைதரித்துக்கொண்டாலும் முரடான வஸ்திரமணிந்தாலும், சாம்பலைப் பூசிக்கொண்டாலும், அக்னிதேவனுக்குப் பலிகொடுத்தாலும், பரிசுத்தவானாகமாட்டான்.

6. மாய்கையைவிட்டு நீங்காதவன், வேதங்களை யோதினாலும், தேவர்களுக்கு பலியிட்டாலும், நெருப்பில் குளித்து நீரில் முழுகினாலும், மோட்சத்தை விரும்பி இன்னும் அநேககொடிய தவங்களைச்செய்தாலும் பரிசுத்தவனாக மாட்டான்.

7. கோபம் கள்ளுண்ணல், முறட்டுத்தனம், பிடிவாதம், வஞ்சகம், பொறாமை, தற்புகழ்ச்சி, புறங்கூறல், ஆணவம், கெடுமதி, இவை தான் ஒருவனை அசுத்தமாக்கும்.

8. தவசிகளே! இரண்டுக்கும் பொதுவாகிய நடுவழியை நான் உங்களுக்கு போதிக்கின்றேன். தவசியொருவன் தேகத்தை உபத்திரவப்படுத்துவதால் தன்னுடைய அறிவை மழுங்கச்செய்வதோடு, தானுந்தடுமாறிப்போகின்றான். உபத்திரவம் உலகஞானத்துக்கே உபயோகப்படாதென்றால், புலன்களையடக்கப் பிரயோசனப்படாதென்பதைக் கேட்பானேன்.

9. தண்ணீரால் விளக்கை ஏற்றுகிறவன், இருளைப்போக்கமாட்டான். ஈரக்கட்டையைக் கொண்டு தீமூட்டுகிறவன் நெருப்பை யுண்டாக்கமாட்டான்.

10. தேகத்தை வீண்விரதங்களால் உபத்திரவப்படுத்துகிறது துக்கம்; அது வீண் டம்பம்; பிரயோசனமில்லை. காமத்தீயையவிக்காதவன் இந்த அற்பவாழ்வைக்கொண்டு ஆணவத்தை எப்படிப்போக்குவான்.

11. ஆணவமுள்ளவரையிலும் சகலவிரதங்களும் வீண்; ஆணவமுள்ளவரையிலும் இகபரவிச்சையும் வீண். ஆணவத்தைப் போக்கினவன் இச்சையினின்றும் மீண்டான், இகபரசுகங்களைக்கருதான். தினக்கடனை திருப்திசெய்துக்கொள்வதால் அசுத்தனாகான். வாழ்வுக்கு வேண்டியவரையில் அவன் உண்ணட்டும், உடுக்கட்டும், அதனால் பாதகரமில்லை.

12. தாமரபுஷ்பம் தண்ணீரில் மிதந்தபோதிலும் தண்ணீரால் ஈரமாவதில்லை.

13. அதுபோல, தேகத்தை அத்யாவசியமானவைகளால் போஷிப்பது குற்றமாகாது. தேகத்தை சுகஸ்திதியில் வைக்கவேண்டியது நமது கடமை. அப்படி வைக்காமற்போனால், அறிவைத் தெளிவாக வைப்பதற்கும் ஞானத்தை யடைவதற்கும் ஏதுவில்லாமற்போகும்.

14. ஆனால் சகலவித மோகங்களும் பலவீனத்தையுண்டாக்கும். காமியானவன் தன்னுடைய புலவன்களுக்கு அடிமைப்படுகின்றான். சுகத்தை நாடுவது கேவலமாகும்.

15. "தவசிகளே! இதுதான் இரண்டுக்கும் பொதுவான மார்க்கம்."



16. இவ்விதமாக பகவன் புத்தர், கருணையோடு தன் சிஷர்களுக்குப்போதித்து, அவர்கள் குற்றத்துக்காகப் பரிதாபப்பட்டு, அவர்கள் செய்யும் முயற்சியின் பிரயோசனமின்மையை, பிரியவசனங்களால் காண்பிக்கவே அவர்களுடைய கன்மனங்கரைந்து உள்ளங் கனிந்தது.

17. பகவன் சிறந்த தர்ம சக்கரத்தைச் சுழலவைத்து, பேரின்பவாழ்வையும் நிர்வாண சுகத்தையும் அறியும்படி ஐந்து தவசிகள்முன், பிரசங்கிக்கத்தொடங்கினார்.

18. பகவன் பிரசங்கிக்கத் தொடங்கவே, பிரபஞ்சமுழுதும் பரவசமாயின.

19. தேவர்கள் உண்மை சுகத்தை உணர வேண்டி, தெய்வலோகத்தை விட்டிறங்கினார்கள். இவ்வுலகவாழ்வைக்கடந்த ஞானிகளும் நற்செய்தியைக்கேட்க சிறந்தோனிடம் அணுகினார்கள். உலகப்பிராணிகளும், ததாகதர் போதித்த நற்செய்தியில் அடங்கிய அருளை யுணர்ந்தன. சகல அறிவுள்ள ஜீவன்களும்— தேவர்கள், மனிதர், மிருகங்கள் யாவும் ஆசாபாசத்தினின்று விடுபடுஞ் செய்தியைக்கேட்டு, ஏற்றுக்கொண்டவர்களாய், தத்தம் பாஷையில் தெரிந்துகொண்டார்கள்.

20. புத்தர் சொல்லத் தொடங்கினார்.

21. "தரும சக்கரத்தின் இலைகளே ஒழுக்க விதிகளாகும்; இலைகளின் சமரச நிகளமே நீதியாகும்; அதன் வட்டமே ஞானமாகும்; அசையாபுண்மையாகிய அச்சுமாட்டப்பட்ட குடமே மரியாதை யோசனையாகும்; உலக துன்பத்தையும், அதன், காரணத்தையும் அதனைப்போக்கும் வழியையும், அதன் முடிவையும், கண்டறிகிறவன், வாய்மை நான்கை யறிந்தவனாவான்; அவன்தான் நீதி மார்க்கத்தில் நடப்பான்.

22. அவன் செல்லும் மார்க்கத்தில், தகுந்த யோசனைகளே; விளக்காயிருக்கும்; தகுந்த நோக்கங்களே துணையாய் நிற்கும். தகுந்தவார்த்தைகளே மார்க்கத்தில், தங்க இடமாயிருக்கும்; நடையும் கம்பீரமாயிருக்கும் ஏனெனில், அதுதான் கிரமமான நடை. தகுந்த முயற்சியே நடையாகும், தகுந்த எண்ணமே சுவாசமாகும், தகுதியான ஜீவனமே உட்கொள்ளும் உணவாகும், அவன் போகும்வழி முழுதும் சாந்தமும் சமாதானமும் பின்தொடரும்.

23. இவ்விதமாக முதல்வன் பிரசங்கித்து, நிலையில்லா அகத்தைப்பற்றி விளங்கச்செய்தார்.

24. உண்டானது அழிந்துபோகும். அகத்தைப்பற்றிவிசாரிப்பது வீண், அகமானது கானலையொத்தது, அதனை சோதிக்கும்படி செய்யும் முயற்சியாவும் ஒழிவதோடு விழித்தவுடன் கனவு பறந்துபோகுமாறு, அது ஒன்றுமில்லாமற் போய்விடும்.

25. விழித்துக்கொண்டவன் பயத்தினின்று மீண்டான்; அவன் புத்தனானன். அவன் பட்ட விசாரத்தையும், தன்னிடம் உதித்த பேராசையும், தான் அனுபவித்த துக்கமும், வீணென்று தெளிகிறான்.

26. ஒருவன் குளிக்கும்போது, ஈரமான கயறு ஒன்றை மிதித்து, அதனைப் பாம்பென்று நினைத்து, பாம்பின் விஷக்கடியாலுண்டாகும் பாதையெல்லாம் மனதில் எண்ணியெண்ணி, திகிலடைந்து, பயத்தால் தேக நடுக்கமடைகிறான். பாம்பல்ல, பழுதைதானென்று தெரிந்துகொண்டவுடன், என்ன சுகத்தை அனுபவிக்கின்றான்! அவனுடையபிசகும், மூடத்தனமும், மயக்கமுமே அவன் பட்ட பயத்துக்குக் காரணம்; கயற்றின் வாஸ்தவநிலையை அறிந்தானால், அத்தட்சணமே மனஅமைதியும் திரும்பவும் வரும், துக்க நிவர்த்தியையும் யுணருவான்; சுகமும் சந்தோஷமுமாகவே இருப்பான்.

27. இந்த மனவமைதி தானென்னும் அகம் இல்லையென்று அறிந்தவனுக்குவரும்; இந்த மனவமைதி தான்பட்ட, கஷ்டங்கள்

விசாரங்கள் கானலை யொத்ததென்றும் நிழலென்றும் கனவென்றும் உணர்ந்தவனுக்கு வரும்.

28. தன் அகத்தைக் கடந்தவன் எவனோ, அவன் சுகப்படுவான். உண்மையை அறிந்தவன் எவனோ, அவன் சுகப்படுவான்

29. மதுரமும் பெருந்தன்மையுமானது உண்மை; துன்பசாகரத்திலிருந்து உன்னை விடுவிக்கச்செய்வதும் உண்மை; உன்னை உலகிலிருந்து விடுவிக்கச்செய்யும், ரட்சகர் உண்மையைத்தவிர யாருமில்லை.

30. நீ உண்மையை அறிவதற்கு சக்தியில்லாதவனாயிருந்தாலும், அதனுடைய மதுரத்தை கசப்பென்று எண்ணியிருந்தாலும், அதனை முதல் முதல கண்டவுடன் திகிலடைந்தாலும், உண்மையில் நம்பிக்கைவை, உண்மையை நம்பு.

31. யதார்த்தத்தில் உண்மைதான் யாவற்றிற்குஞ் சிறந்தது; அதை யாரும் மாற்றவாவது விர்த்திசெய்யவாவது முடியாது. ஆதலால் உண்மையில் நம்பிக்கைவை. உண்மையில் நட.

32. தவறுதல் மோசத்துக்குள்ளாக்கும்; மயக்கம் துக்கத்திலாழ்த்தும்; இவைகள் மதுபானங்களைப்போல் வெறியுண்டாக்கும். இவைகள் சிக்கிரத்தில் மறைந்துபோம். அதிர்ப்தியோடு மனோவிகாரப்பட்டு நிற்பாய்.

33. தானென்னும் அகம் சூரத்துக்கொப்பாகும். அகம் கணப்பொழுதும் நில்லாத கனவொத்ததோற்றம்; ஆனால் உண்மைதான் சுகமுள்ளது, உண்மைதான் மகத்துவமுள்ளது; உண்மைதான் சாஸ்வதமானது; உண்மைதான் நித்தியவாழ்வு; உண்மைதான் சதாகாலமும் நிலையுள்ளது.

34. பகவன் இவ்விதமாக உபதேசிக்கவே, தவசிகளில் முதன்மையான கௌண்டினியர், மனக்கண்ணால் உண்மையையறிந்து பகவனை நோக்கி "ஓ புத்தரே! நீர்தான் நம் ஆதிபகவன், நீர் உண்மையைக் கண்டறிந்தீர்" என்றான்.

35. தேவர்களும், தேவபக்தர்களும், மகாபுருஷர்களும், ததாதகர் செய்த பிரசங்கத்தைக் கேட்டு, ஆநந்தத்துடன் அங்கீகரித்து "உண்மையாகவே ஆதிபகவன் சத்திய ராஜ்ஜியத்தைக்கண்டு தெளிந்தார். ஆதிபகவன் உலகத்தை அன்புமயமாக்கினார். தேவனாகிலும், மனிதனாகிலும், யாரும் திரும்பாதபடி உண்மைசக்கரத்தை ஆட்டுவித்தார்; உண்மை ராஜ்ஜியம் உலகில் பிரசிங்கிக்கப்படட்டும், உலகில் பரவப்படட்டும்; சத்தியமும், அமைதியும், அன்பும், மனிதரிடம் ராஜ்ஜியபாரம் செய்யும்" என்னு கைகொட்டி இறைந்தார்கள்.

(புத்த தர்மத்தைப் பரவச்செய்யும் சங்கத்தாரால் பதிப்பிக்கப்பட்டது).

## தரகுவிவாகம் இராமசாஸ்திரிகள்.

காலம் - பிராதக்காலம்.

இடம் - சாலை.

நடர் - இராமசாஸ்திரிகள் தலையில் மடிசஞ்சியோடு பாட்டைசாரியாக வருகிறார். தீக்ஷிதர் ஸ்நானம் செய்துவிட்டு வீட்டுக்குத்திரும்புகையில் சாஸ்திரிகளை வழியிற்கண்டு வார்த்தையாடுகிறார்.

**தீக்ஷிதர்.**—சாஸ்திரிகளே! எங்கே விழுந்தடித்துக் கொண்டுபோகிறீர்? ஏதேனும் வேட்டை உண்டோ?

**ராமசாஸ்திரி.**—இல்லாத நாள் எனக்குண்டா? கீர்த்தியோ அபகீர்த்தியோ நாலிலும் புகுந்தால் தானே இரண்டு காசு கிடைக்கும். பணம் சம்பாதிப்பது துர்லபமாயிருப்பதெனில் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தால் நம்மை கவனிப்பார் யார்? பிராதக்காலத்தில் எழுந்து ஸ்நானஞ்செய்து மூக்குப் பிடித்துக்கொண்டு காவேரிக்கரையில் ஜபம்பண்ணுவதினால் வயிறு நிரம்பிவிடுமோ? பொய்யோ மெய்யோ சமயம் பார்த்து நடக்கவேணும். சீமாகலியாணத்திற்கு கொஞ்சப்பாடா? மலையாளம் எங்கே நெல்லூர் ஜில்லா எங்கே இருக்கிறது? அதற்குமிதற்குங் கொஞ்சமா அலைந்தேன்? எத்தனைதடவை ரயிலில்போகிறதும் வருகிறதும்; வேளாவேளையில் சாப்பாடுண்டோ? அதேது. நல்லது அங்கு தான்போனேனே முகம்கொடுத்து பேசினாலென்ன? மனசில் ஒன்று வெளியில் ஒன்று. அவர்கள் வார்த்தையைநம்பி கடிதம் எழுதினாலோ கேட்டதற்கு பதில் இராது.



**தீ.**—அதேன் அப்படி?

**சா.**—நாதியற்றதாயிருக்கிறது. பெண் செக்கச்செவேரென்று அழகுள்ளது. ஆனால் ஏழை. தாய் தந்தையர்களோ இல்லை. தமயன் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு ரயிலில் பத்தெட்டு வருகிறது. அவனுக்கு பிறக்கிறதோ இரட்டைப்பிள்ளைகள். தங்கையின் கலியாணத்திற்கு ஒன்று அரையாக நூறு ரூபாய் வரையில் 'பண்டில்' போட்டிருக்கிறானாம்.

**தீ.**—ஒருநூறுக்குள் நடக்குமா?

**சா.**—அதற்குள்தான் மாப்பிள்ளைக்கு சோமன் ஜோடி பஞ்சபாத்திரம் உத்திரணி மற்றப்படி பாத்திரம் பண்டங்களெல்லாம்.

**தீ.**—அப்படியானால் நிச்சயம்பண்ணுகிறதுதானே?

**சா.**—இதற்காக பெரிய வைத்திநாதசுவாமி அய்யர் அவர்களைக்கேட்டேன்.

**தீ.**—அது எதற்காக? அவருக்கு என்னசம்பந்தம்?

**சா.**—அவரிடம்தானே பெண்ணின் தகப்பனார் காரியம் பார்த்துவந்தார். இப்பவும் ஐவேஜுகள் அவரிடத்திலேயே சிக்கிக்கொண்டிருக்கின்றன. அவர் பார்த்து வைத்தால் குடுமி சரைத்தால் மொட்டை. இன்றைக்கும் நாளைக்கும் அந்தக் குடும்பத்தை அவரே பார்த்துவருகிறார். பையனுக்கும் வேலைசெய்துவைத்தது அவரே.

—அவரிடம்போய் பேசி கலியாணத்தை ஏன் முடித்திருக்கக்கூடாது?

—குடுமி அங்கேயிருப்பதை அறிந்துதான் அவரிடம் பிரஸ்தாபித்தேன்.

—ஆனால் நமக்கு சம்பாவனை இருக்கிறது!

—தீக்ஷிதரே, நம்முடைய சம்பாவனை இருக்கட்டும். நடந்ததை முழுவதிலும் கேளும்: வீண் புராணத்தை வளர்த்துகிறாரேயொழிய காரியத்தில் ஒன்றுமில்லை. ஏதோ தன்னுடைய மைத்துனனுக்கு அந்தப்பெண்ணை ஏற்பாடுசெய்ய எண்ணங்கொண்டவராகத் தெரியவருகிறது. மைத்துனனுடைய சாமர்த்தியமோ அடுப்பங்கரையில்தான்! இவர் கொண்டிருக்குங் கருத்தை போனதும் பளிச்சென்று வெளியிட்டிருப்பாராகில் மல்லியம்பெண்ணையாவது நிச்சயித்திருப்பேன். அது நான் போவதற்குமுன் நிச்சயமாகிவிட்டது. பிறகு காஞ்சிபுரம் பெண்ணையாவது நிச்சயிக்கலாமென்று போனேன்.

**தீ.**—அதுவும் சரிபடவில்லையா? என்ன?

**சா.**-பொருத்தம் அவ்வளவு சிலாக்கியமாகவில்லை. சகுனம் நல்லதாகவேயிருந்தது. முடிக்க வேண்டுமென்பது என் கருத்து. நாலைந்து நாள் முந்திதான் பெண்ணின் பாட்டி என் கிரகத்திற்கு வந்திருந்தாள். மாப்பிள்ளையினுடைய பூர்வ நிலைமையையும் பேத்தியினுடைய குணாதிசயங்களையும் வெகுசாய் எடுத்துச்சொன்னாள். கலியாணத்தை முடித்துவைத்தால் அநந்தகோடி புண்ணியம் உண்டென்றும் என்னை தூக்கிவைத்துப்பேசினாள். அகத்தில் பெண்டுகள் மூலமாயும் சொல்லச்சொன்னாள்! இவள் சொன்னாளேயென்று மாப்பிளைக்கும் எழுதினேன். அந்தமேதாவியோ "நான் இப்போது நொடித்திருக்கிறேன். கையிலோ ஒரு பைசா இல்லை. வரவேண்டியதொகைகளோ அப்படிக்கப்படியே தங்கிவிட்டன. அவரவர்கள் ஏப்பம்விடுகிறார்கள். இந்த சமயத்தில் ஏதாவது ஒத்தாசைசெய்தால் கலியாணத்தை முடிப்பதில் ஆக்ஷேபனை இல்லை" என்று கடிதம் எழுதினார். இந்த சங்கதி இப்படியிருக்க மருத்துக்குடியிலிருந்து ஒரு ஜாதகம் கிடைத்தது. அது சற்று துடியான ஜாதகம். முதல் வதூவைப் பார்த்ததில் அவள் சீமாவுக்கே பந்துவாகையால் மூத்தாள் குழந்தையையும் கவனித்துக் கொள்ளக்கூடுமென்று வைத்திநாதசுவாமி அய்யரிடம் பிரஸ்தாபித்ததில் அவர் ஆகாசத்தைப் பார்த்தார்.. மற்றொரு பெண்ணோ பெரிதாகவும் நம்மைச் சேர்ந்ததாகவும் இருக்கிறதென்றெண்ணி சிரமப்பட்டதில் அது வீண்வாயப்பந்தலை தவிர வேறொன்றுமில்லை. மருத்துக்குடிபெண்ணை இசைத்ததில் நமக்கு பிரதிபலன் முன் பின் இருந்தாலுங் கூட விவாகம் சுபமே நிறைவேறிற்று.

**தீ.**—என்னை மறந்துவிட்டீர் அல்லவா? இருக்கட்டும்! இப்போது எங்கே?

சா.—நம்ம கீழகத்து சேஷன் பெண்ணை ஆடுதுறையில் சூரியநாராயண சாஸ்திரியின் குமாரன் சிரஞ்சீவி இராமாமிருதத்திற்குக் கொடுப்பதாக நிச்சயம்பண்ணி முகூர்த்தமும் சுக்கிரவாரம் நடக்கிறது.

தீ.—இதற்காவது சொல்லுவீரோ மாட்டீரோ?

சா.—நானே கூடவிருந்து பத்திரிகை உமக்கும் அனுப்பியிருக்கிறேன். வந்தால் நல்ல பிரயோஜனம்கிடைக்கும்.

தீ.—எப்போபார்த்தாலும் ராமாசாஸ்திரியருக்கு கலியாண தடபிடலாகவேயிருக்கிறது!

சா.—உம்மை வரவேண்டாமென்று தடுத்ததுயார்? உமக்கு இளையாள் மோகமே மோகம்! எனக்குத்தெரியாதா?

என்று சொல்லிவிட்டு ராமாசாஸ்திரியள் சாலையைநோக்கிசெல்லவும் தீக்ஷிதர் தன் கிரகத்திற்குப் போயினர்

R. S.

SHORT STORY.

## லட்சுமி.

அது ஒரு குக்கிராமம். அதை நான்குபக்கங்களிலும் மலைகள் சூழ்ந்திருந்தன. "ஜிலுஜிலு" என்று பனிநீர்போல் நீரையுடைத்தாய் ஒரு சிற்றருவியும், அதனருகாமையில், பாக்கு, வாழை, தென்னை முதலிய தோப்புகளின் இடையில் ஓடிக்கொண்டிருந்தது. அக்கிராமத்தில் ஒரே வீதிதான் உண்டு. வீதியின் கடையில், ஆற்றின் கரையைச் சார்ந்தாற்போல் ஒரு சிறு வீடுகட்டியிருந்தது. அவ்வீட்டைச் சுற்றிலும் ஒரு வேலி போடப்பட்டிருந்தது. அவ்வேலியுள் பயரிடப்பட்ட ரோஜா, மல்லிகை, பவளமல்லி முதலிய பூசைக்குவேண்டியதாய் கொடிகளும் செடிகளும், ஒரு சிறு நந்தவனம்போல் தோன்றின.

நாம் இந்த கிராமத்தைப் பார்த்தபொழுது மலையுச்சியில் சூரியன் தோன்றினான். இருட்டில், பூதம், பிசாசுபோல் காணப்பட்ட ஒவ்வொருமலையும், பாறையும், மரமும், தங்கவர்ணமான சூரியனது ஒளிபட்டு, "முலாம்" பூசினாற்போல் பிரகாசித்தன. காலையில் மலர்ந்த புஷ்பங்களின் வாசனையுடன், காற்று இனிமையாய் வீசிற்று. சூரியனது உதயத்தைநோக்கி, மரங்களின்மேல் உட்கார்ந்திருந்த பறவைகளும், தமது மனோரம்மியமான குரல்களுடன் பாடத்தொடங்கின. தானியங்கள் நிறைந்த வயல்களும், தண்ணீர்நிறைந்த ஏரியும், அவ்வூரார் சுகமனுபவிக்கிறார்கள் என்று ரூபித்தன.

இச்சமயத்தில், நாம் மேற்கூறிய வீட்டின் முன்பாக, பேராலமரத்தின்கீழ், வழிப்போக்கர்கள் சிரமபரிகாரம் செய்துகொள்ளும்பொருட்டு கட்டியிருந்த ஒரு திட்டின்பேரில், ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன்வயது, பார்க்கும்பொழுது அறுபதின்மேலிருக்கவேண்டுமென்று தோன்றினாலும், ஐம்பதுக்குக்குறைவே. அவன் தேகம் மெலிந்தும், கண்கள் ஆழ்ந்தும், முகம்சுருங்கியுமிருந்தன. சகிக்கமுடியாத கஷ்டங்களை அனுபவித்தவன்போலிருந்தான். மேலும் அனேகதேசங்களைச் சுற்றிப்பார்த்தவன்போல் காணப்பட்டான். அவன் கிழிந்த கந்தைகளை இடுப்பிலுடுத்தியும், மேலே ஒரு கருங்கம்பிளியைப் போட்டுக்கொண்டுமிருந்தான். அவன் இந்த ஜாதி, இன்னவூர் என்று சொல்ல முடியாததாயிருந்தது. அவன் ஆலோசனைசெய்துகொண்டே அவ்வீட்டை உற்று நோக்கிக்கொண்டிருந்தான் என்ன எண்ணிக்கொண்டானோ தெரியவில்லை. அவனையறியாமல், அவன் கண்களிலிருந்து ஜலம் தாரைதாரையாய்ச் சொரிந்தது. அடுத்த நிமிஷத்திலேயே சிரித்தான். "பைத்தியக்காரனோ, இவன்?" என்று எண்ணுவதற்குக்கூட இடமிருந்தது.

இவன் இம்மாதிரி நினைத்துக்கொண்டு உட்கார்ந்துக்கொணடிருக்கும் சமயத்தில் அவ்வீட்டை நோக்கி, ஒரு அம்மாளும் ஒரு பாலனும் வந்துக்கொண்டிருந்தார்கள். அவளுக்கு சுமார் முப்பது வயதிருக்கலாம். மிகவும் அழகுள்ளவளாகவே தோன்றினாள். அவள் முகம் என்ன சிரித்ததாயிருந்தபோதிலும், அதில் வியசனமும், துக்கமும் குடிகொண்டிருந்தன. மனதில் ஏதோ ஆராத துன்பத்தை அடைந்திருந்தாள்போலும். அவள் குடத்தில் "தீர்த்தம்" கொண்டுவந்துக்கொண்டிருந்தாள். அவளுடன்வந்த சிறுவன் கையில் ஒரு தட்டம் வைத்துக்கொண்டிருந்தான். அதில், சுவாமிபூஜைசெய்து மீந்த, புஷ்பம், குங்குமம், மஞ்சள், பழம் முதலிய வஸ்துக்கள் நிறைந்திருந்தன. ஆற்றங்கரையில், அரசமரத்தின் கீழிருந்த கணபதியைத்தான் அவள் தொழுதிருக்கவேண்டும் இல்லாவிடின் அதிகாலையில் 'ஏன் ஆற்றங்கரையிலிருந்து அவ்வஸ்துக்களுடன் வரவேண்டும்? நாள்தோறும் தொழுதலே அவள் வழக்கமாய் இருக்க



வேண்டும். அப்படிச் செய்வது தன் சிந்தையிலுள்ள கோரிக்கை நிறைவேறுதற்கே.

இந்த இரண்டுபேரும், நமது கிழவனைக் கண்டார்கள்.

"அக்கா, அதோ, பார். நமது ஆலமரத்தின் கீழ் ஒரு "பைராகி" உட்கார்ந்துக்கொண்டிருக்கிறான்."

"அவன் பைராகிபோல் இருக்கவில்லை."

"அவன் துளசிஹாரம், கையிலும், கண்டத்திலும் அணிந்துகொண்டிருக்கிறான். மேலும், அவன் கம்பளியைப்பார்த்தால் பைராகியாகத்தானிருக்க வேண்டும்."

இவர்கள் இப்படி பேசிக்கொண்டு வீட்டில் நுழையும் தருணத்தில் நம்முடைய கிழவன் கையால் சாடைகாட்டி அவர்களை வரும்படி யழைத்தான். அவள் மிகவும் அன்பும், கஷ்டப்படுகின்றவர்கள்பேரில் கருணையுமுடையவளானதினால், "என்னத்திற்கோ, கூப்பிடுகிறான், வாடா, ஸ்ரீநிவாச, போகலாம்" என்று தன் தம்பியை, யழைத்துக்கொண்டு, ஆலமரத்தண்டை வந்தாள். கிழவன், தன்கையால், வயிற்றைத்தடவி "ஆ" என்று வாயைத்திறந்தான்.

"அவனுக்கு பசிபோலிருக்கு; அதுதான் வயிற்றைத்தடவி வாயைத்திறந்தான். கொஞ்சம் ஆகாரம் கொடுக்கலாம். என்னைப்போல வருத்தப்படுகின்றவர்களைப்பார்த்தால் எனக்கு இரக்கம் தான்" என்று சொல்லிக்கொண்டு வீட்டுக்குள் சென்றாள். தம்பியும் பின்சென்று, "அவன் பள்ளியோ, பறையனோ, நாம் எப்படி சாதம் அவனுக்குப்போடுகிறது!" என்று கூறினான்.

"இல்லையடா; அவன் முகத்தில் 'களை' யிருக்கின்றது. எவனானாலுமென்ன? 'பசி' யென்றால் 'இல்லை' என்றுசொல்லக்கூடாது." என்று சொல்லிக்கொண்டே, 'சாத்தீர்த்தப் பானையிலிருந்து சாதத்தையெடுத்து, மீந்திருந்த புளித்த தயிருடன் நன்றாக்கலந்து, பழைய 'ஊறுகாயையும்' எடுத்துக்கொண்டு கிழவனிடம் வந்தாள். அதிகதூரம் நடந்ததினால் சோர்வடைந்தவனாயிருந்ததினாலும், அன்புடனளித்த அன்னமானதினாலும், கிழவன், மனத்திருப்தியுடன் வயிறார உண்டுகளித்தான். பிறகு ஒரு கிண்டி ஜலமும் குடித்துக்கொண்டான்; இப்பொழுதுதான் பேசத்தொடங்கினான்.

"நீங்கள் எப்பொழுதும், ஐசுவரியமும், சுகமுமனுபவிப்பீராக" என்று கூறி, மறுபடியும், "நான் ஒரு ஜோசியன். வடக்கிலிருந்து வருகின்றேன்; நீர் எனக்கு இப்பொழுது மனப்பூர்த்தியாய் இட்ட அன்னத்திற்கீடாக, உங்களுடைய ஜாதக பலன்களைக் கூறுகின்றேன்" என்று சொல்லிக்கொண்டே, ஸ்ரீநிவாசனுடைய கையை நீட்டச்சொன்னான். அவனும் நீட்டினான்.

கொஞ்சநேரம் அவன் கையிலிருக்கின்ற வரிகளைப் பரீட்சைசெய்துவிட்டு, தானே சிரித்துக்கொண்டு "நீ, மிகவும் அதிர்ஷ்டசாலி. இச்சிறு வயதிலேயே, மிகவும் உயர்ந்தவகுப்பில் வாசிக்கின்றாய், அதி சீக்கிரத்தில் மிகவுயர்ந்த உத்தியோகத்திற்கு வருவாய். இவற்றையெல்லாம் பார்த்து சந்தோஷப்பட உன் தாய் தந்தைகளில்லை, பாவம்!" என்று சொன்னான்.

"மேலும். உனக்கு இவ்வுலகத்திலுள்ளவர்களெல்லாம் ஒரேதமக்கைதான். அவள் முன்னமேயே மனம் நொந்துகிடக்கின்றாள். அவளிஷ்டப்படி நடந்துக்கொள்," என்று கூறினான்.

இவைகளையெல்லாம் கேட்ட ஸ்ரீநிவாசனுக்கும், அவன் தமக்கை லட்சுமிக்குமுண்டான அதிசயத்திற்கும், ஆச்சரியத்திற்கும் அளவில்லை. "வடக்கத்தியக் கிழவனுக்கு இந்தசங்கதிகளெல்லாம் எப்படி தெரிந்தன" என்று வியந்து, இவன் பூரணஜோசியனாகவேயிருக்கவேண்டுமென்று நம்பினார்கள்.

கிழவன், லட்சுமியைப்பார்த்து, "அம்மணீ, உங்கள் கையைக்காட்டுங்கள் எனக்குத்தெரிந்த, ஜோசியத்தைக்கூறுகிறேன்" என்று விளம்பினான்.

"என் ஜென்மத்திற்கு, ஜோசியம்கூடவா வேண்டும்? நான் இத்தனைநாளும் பட்டபாடேபோதும். எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை." என்று விசனத்துடன் சொன்னாள்.

"அப்படியல்ல, அம்மணி, நமது பலன்களைத்தெரிந்துக்கொண்டால், அவைகளுக்குத் தக்கவாறு நடந்துகொண்டு நமது விக்கினங்களையெல்லாம் தீர்த்துக்கொள்ளலாம். ஆனதினால் தயைசெய்து கையைக் காட்டுங்கள்" என்று கேட்டான்.

ஸ்ரீநிவாசனும் "கையை நீட்டு, அக்கா" என்று வற்புறுத்திக்கேட்கவே, "இவர்களையேன் சந்தோஷிப்பிக்காமலிருக்கவேண்டும்?" என்று நீட்டினாள். ஜோசியனும் சற்றுநேரம் குறிப்பாகநோக்கிவிட்டுப் பின்வருமாறு கூறினான்.

"அம்மணி, பதினைந்து வருஷங்களுக்கு முன்பாக, உங்கள் சிறுவயதில் நீங்கள் மிகவும் சுகப்பட்டுக்கொண்டிருந்தீர்கள்" என்றான்.

இந்த வார்த்தைகளைக்கேட்கவும், லட்சுமியம்மாள் தான் மறந்திருந்த கஷ்டங்களையெல்லாம் நினைத்துக்கொண்டாள். பத்மம்போல இருந்த அவள்முகமும் அன்னொடியில் வாடிற்று. அவள் கண்கள் இரண்டிலும் நீர் ததும்பின.

"அப்பொழுது, உங்களை மணந்துகொண்டவர், மாதம் ஆயிரம் ரூபாய் வரும்படியான பெரிய உத்தியோகத்தை ஆண்டுகொண்டிருந்தார். அவருடைய பெருமையையும், புகழையும், ஊரிலிருக்கிறவர்களெல்லாம் கூறிக்கொண்டாடுவார்கள். ஒன்று மறியாதபேதையாயிருந்தும், பெரும் அந்நியாயத்தை அவர்மேல் சுமத்தினார்கள்." என்று சொன்னான்.

இவைகளையெலலாம், கேட்டுக்கொண்டே லட்சுமியம்மாள் அழுதுக்கொண்டிருந்தாள். "ஐயோ, எனக்கு எல்லாம் தெரியுமே. நீ என் மறுபடியும் தெரிந்தசங்கதிகளைக்கூறி என்னை வருத்துக்கின்றாய். அவர் ஒரு குற்றமும் செய்யவில்லையென்று எனக்குத்தெரியுமே; எல்லாமறிந்த கடவுளுக்கும் கண்களில்லாமல்போயினவே." என்று அடக்கமுடியாத துக்கத்துடன் அழுதாள்.

வருத்தத்தால் அலறுகின்ற லட்சுமியை கிழவனும் தன்னாலியன்றமட்டும், நல்வார்த்தைகளைக் கூறித்தேற்றினான்.

"அழாதே, அம்மணி, நான் சொல்லுவதை எல்லாம் கேட்டால் உங்களுக்கே நலமாயிருக்கும். உங்கள் புருஷன் பட்டகஷ்ட சுகங்களையெல்லாம் சொல்லுகின்றேன். எல்லாம் உங்களுக்கு 'மங்கலமாகவேமுடியும்" என்று உறுதியுடன் கூறினான்.

"எல்லாம் உங்களுக்கு நல்லதாகவே முடியும் உங்கள் புருஷனைக்குறித்துச் சொல்லுகின்றேன்" என்றவார்த்தைகளைக் கேட்டதும், தன் துக்கங்களையெல்லாம் மறந்துவிட்டு, "நமக்கு நற்காலம் வந்திருக்கின்றது" என்று எண்ணிக்கொண்டு, கிழவன் சொல்லுவதைக் கவனித்தாள்.

"உங்களகமுடையானுக்கு ஒரு 'உள்' விரோதியுண்டு. அவன் பொய் சாட்சிகளால், 'உங்கள் புருஷன் இராஜாங்க உத்தியோகஸ்தராயிருந்தும், இராஜாங்கத்திற்கு நஷ்டம்வரும்படி யனேக காரியங்கள் செய்திருக்கிறார்" என்று 'துரையை நம்பும்படிச் செய்து, இருபத்திரண்டு வருஷங்களுக்கு 'அண்டமான்' தீவுகளில் கடுங்காவலில் இருக்கும்படி செய்வித்தான். அவன் துரோகமே உங்களுடைய கஷ்டங்களுக்குக் காரணம். அவனுக்குத் தகுந்த தண்டனை கடவுள் இனிமேல் செய்வார்" என்றான்.

"இதெல்லாம் எங்களுக்கே தெரியும். அவரைக் குறித்துச்சொல்லும்" என்று ஸ்ரீநிவாசன்வினவ, கிழவன் பின் வருமாறு கூறுவான்.

"அவரத்தீவில் பட்டகஷ்டங்கள் கூறமுடியாது. இரவும் பகலும் உழைப்பார். அவருடைய பெண்சாதியின்பேரில் நீங்காத அன்பு இல்லாவிடின் அப்பொழுதே பிராணனை விட்டிருப்பார். சாகிறதற்கு முன்பாக அவள் முகத்தை எப்படியாவது பார்த்துவிடவேண்டுமென்கிற தொலையா எண்ணம் தான் அவர் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது. பெண்சாதியைப் பார்க்கவேண்டுமென்றுதான், மூன்றுவாரத்திற்கு முன்பு, மகாபிரயத்தனத்துடன், அத்தீவுகளிலிருந்து யாவருமறியாமல் தப்பித்து, திருவாங்கூர்கரைவந்துசேர்ந்தார்" என்றான்.

இந்த வார்த்தைகள் காதிற்படவே, லட்சுமிக்கும், ஸ்ரீநிவாசனுக்கும் பயமும் ஆனந்தமுமுண்டாயின. அதிசீக்கிரத்தில் நாம் அவரைப்பார்க்கப்போகிறோம் என்று ஒருபக்கம் ஆனந்தம்; ஐயோ, மறுபடியும் அவரைப் பிடித்து எங்கே கொன்றுவிடுகிறார்களோ என்று ஒரு பக்கம் பயம். ஆனாலும் "இவ்வூர் வந்து சேர்ந்தால் எப்படியாவது, அவரை யாருமறியாமல் காப்பாற்றி, இருவரும் சுகமாக வாழலாம்" என்ற எண்ணத்துடன், லட்சுமி "அவர் எங்கேயிருக்கிறார், எப்பொழுது இங்கே வருவார்; சீக்கிரமாய், சொல்லு" என்று ஆத்திரத்துடன் வினாவினாள்.

இந்தக்கேள்விகளுக்கு இந்த விதமாக மறுமொழி கூறுவதென்று தெரியாமல், கிழவன் சற்று ஆலோசித்துப் பிறகு கூறுவானாயினான்; "ஜோசியப்பிரகாரம் பார்க்கும்பொழுது, அவரை நீங்கள் இன்று சாயந்திரமே காணலாம். மத்தியான வேளையில் வெளியில் வந்தால் யார் பிடித்துக்கொள்ளுவார்களோ என்கிற பயத்தினால், எங்கேயாவது தன்னையே ஒளித்துக்கொண்டிருப்பார். நான் இப்பொழுது சொன்னவற்றையெல்லாம் நீங்கள் நம்புகிறீர்களோ, இல்லையோ? இதையெல்லாம் உண்மை என்று அறிந்துக்கொள்ளவேண்டுமானால், அதோ, கிராமத்தின் கடைசியல், மலையடிவாரத்தின் ஓரமாக இருக்கும் குடிசையில்போய் விசாரித்தால், உங்கள் அன்பர் எழுதிய கடிதம் கிடைக்கும். என் வல்லமையால் சொல்லக்கூடியது இவ்வளவுதான். எல்லாம் கடிதம் பார்த்தால் தெரியும்" என்று சொல்லி முடித்தான்.



"நீ சொன்ன சமாசாரத்திற்கு பதிலாக என் பிராணனைக்கூட கொடுத்துவிடுவேன்" என்று லட்சுமியம்மாள் சொல்லிவிட்டு, ஸ்ரீநிவாசனையும் கூட்டிக்கொண்டு அக்குடிசையை நோக்கிச்சென்றாள்.

ஸ்ரீநிவாசன் ஆங்கிலேய பள்ளிக்கூடத்தில் பெரியவகுப்பில் படிக்கின்றான் என்று முன்னமே கூறினோம். அவனுக்கு நாள்தோறும் பட்டணத்திலிருந்து "சமாசாரப்பத்திரிகைகள்" வருவது வழக்கம். அன்றையதினம், ஸ்ரீநிவாசன் குடிசைக்குப் போகும் சமயத்தில் தபால்காரன் சில "சமாசாரப் பத்திரிகைகளைக்கொண்டுவந்து, லட்சுமியம்மாளின் வீட்டில் கூவினான். கிழவன் "வீட்டில் யாருமில்லை, நான் இங்கேயே யிருப்பேன். அவர்கள் வந்தால் கொடுத்துவிடுகிறேன்" என்று அப்பத்திரிகைகளை தான் வாங்கிக்கொண்டான். தபால்காரனும் கொடுத்துவிட்டு தன்வழி நடந்தான்.

"இப்பத்திரிகைகளில் ஏதாவது முக்கிய சமாசாரங்கள் இருக்கின்றனவா? என்று பார்ப்பேன்." என்று சொல்லிக்கொண்டு அருகாமையிலிருந்த பாக்குத்தோப்பைநோக்கிக் கிழவன் சென்றான்.

அக்குடிசைக்கு ஸ்ரீனிவாசனும் லட்சுமியும் சென்றார்கள். கிழவன் சொன்னபிரகாரமே, கடிதமிருந்தது. "ஏதடா உனக்கு இந்தக்கடிதம்?" என்று ஸ்ரீனிவாசன் கேட்க, "எனக்கு ஒன்றும் தெரியாது சாமி, என் வீட்டில் நேற்றிராத்திரி யாரோ, எறிந்துவிட்டுப்போனார்கள்" என்று அக்குடிசைக்காரன் சொன்னான்.

ஸ்ரீனிவாசன் அதிக சீக்கிரமாக கடிதத்தை விரித்துப்பார்த்தான். அதில் அதிகமாக ஒன்றும் எழுதவில்லை:—"என் பிரியமுள்ள லட்சுமி—உன் முகத்தைப் பார்க்கும்படியான பேரானந்தம் எனக்கு இன்றிராக் கிடைக்கப்போகின்றது. இன்றுடன் என் கஷ்டங்கள் நிவாரணமாகுமென்று நம்புகின்றேன். என்பாவத்திற்கு தகுந்த தண்டனைகள், கடவுள் எவ்வளவு விதித்தபோதிலும், உன்னைப் பார்க்கும்படியான பாக்கியத்தையும் அளித்தார். மற்ற சங்கதிகளெல்லாம் இராத்திரி நேராகப் பேசிக்கொள்ளலாம்—உன் அன்புள்ள, கிருஷ்ணசாமி சாஸ்திரி", என்ற அற்ப சமாசாரம்தான் எழுதப்பட்டிருந்தது.

லட்சுமியம்மாள் தனது கணவர் தன்மேல் வைத்திருந்த அன்பை நினைத்து நினைத்து மனம் பொறாமல் அழுதாள். ஸ்ரீநிவாசனும் அவள் துயரத்தை ஆற்றிவிட்டு, "அக்கா, என் மனதில் ஒரு ஆலோசனை படுகின்றது. நமக்கு ஜோசியம் கூறின கிழவன் உனது கணவரா யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு சமாசாரமும் அவருக்கு எப்படித்தெரியும்" என்றான்.

"எனக்கும், அப்படித்தான் தோன்றிற்று" என்றாள் லட்சுமி.

"நமக்கு திடுக்கென்று காட்டிக்கொண்டால், எங்கே நாம் மூர்ச்சிக்கிறோமோ, என்று பயந்து, இம்மாதிரியான தந்திரம் செய்திருக்கிறார்" என்றான் ஸ்ரீனிவாசன்.

"அவரேதான், அவரேதான், இப்பொழுது எல்லாம் எனக்கு நன்றாக விளங்கிற்று; வா, போய்ப் பார்ப்போம்." என்று லட்சுமியம்மாள் ஸ்ரீனிவாசனைக் கூட்டிக்கொண்டு ஆலமரத்திற்கு வந்தாள். அவரவ்விடத்திலில்லை யென்று நமக்கு நன்றாகத் தெரியும். 'கிழவரே தனது கணவர்' என்று லட்சுமியம்மாளுக்கு உறுதியாயிற்று.

"ஐயோ, பாவியாய்ப்போனேனே, அடையாளங்கூடத் தெரியவில்லையே. சமயத்தில் புத்தியும் மயங்கிப்போயிற்றே. எங்கு போனாரோ தெரியவில்லையே" என்று அழுதாள். ஸ்ரீனிவாசனும் அவளும் தேடத் தொடங்கினார்கள். ஆறு, ஏரி, வயல்கள் முதலிய இடங்களிலெல்லாம் தேடிக்காணாமல் கடைசியாக கிழவர் சென்ற தோப்புக்குச் சென்றார்கள். தூரத்திலிருந்து பார்க்கும்பொழுதே, அவர் கம்பளியை விரித்துப் படுத்துக்கொண்டிருப்பதாக காணப்பட்டது. இருவரும் அவ்விடம் ஓடினார்கள். கையில் ஒரு "சமாசாரப்பத்திரிகை"யின் ஒரு பக்கத்தைத் திறந்து வைத்துக்கொண்டே தூங்கினார். லட்சுமியம்மாள் நிதானமாகப்போய் கூப்பிட்டாள்—பதிலில்லை. கையால் தொட்டு அசைக்கினாள்—அசைக்கக்கூடவில்லை. மூக்கண்டை கைவிரல் வைத்துப் பார்த்தாள்—மூச்சு இல்லை.

இதையெல்லாம் பார்த்து லட்சுமியம்மாள், கண்ணீர் மாலைமாலையாய் வடிய, சித்தம் பிரமை பிடித்து, உயிரற்ற தூண்போல் நின்றாள். ஸ்ரீனிவாசன் என்ன சமாசாரம் என்று பார்க்கும்பொருட்டு அவர் வைத்திருந்த பத்திரிகையின் பக்கத்தைப் பார்த்தான். அதில் பின்வரும் சமாசாரம் ஆங்கிலேயபாஷையில் அச்சிட்டிருந்தது.

"இராஜத்துரோகத்திற்காக தண்டிக்கப்பட்டு, 'அண்டமான்' தீவுகளுக்கு அனுப்பப்பட்ட கிருஷ்ணசாமி சாஸ்திரியார் என்பவர், தப்பித்துக்கொண்டு கோயமுத்தூர் ஜில்லாவிலிருப்பதாகக் கேள்வி. அவரைக் கண்டுபிடிப்பவர்களுக்கு 500-ரூபாய் வெகுமதி." என்றும், மேலும் அவர் அங்கம் அடையாளங்கள் யாவையும் குறிக்கப்பட்டிருந்தன.

மேலும் அவர் முதுகில் "கிருஷ்ணசுவாமிசாஸ்திரி குற்றவாளி 1336 நெ." என்று "பச்சை" குத்தியிருந்தார்கள்.

"இந்த இடிபோன்ற சமாசாரமே அவரைக் கொன்றது" என்று ஸ்ரீநிவாசன் தீர்மானித்து அழுதான்.

"பாழுந் தெய்வமே, உனக்குக்கூட கண் தெரியவில்லையோ" என்று அலறிக்கொண்டு லட்சுமியம்மாள், கீழேவிழுந்து மூர்ச்சித்தாள்.

இவள் துக்கத்தையும், விசனத்தையும் கூற எம்மாலியலாது. "எல்லாம் ஈசனது செயல்."

எல். சிவசம்பன்.

## சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாகவிருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

### நாம் சுவாசிக்கும் ஆகாயம்.

ஆகாரத்தின் விஷயமாக ஆகாரத்திற்கும் வியாதிக்கும் உள்ள ஸம்பந்தத்தை எடுத்துச் சொன்னோம். ஆகாரத்தின் மூலமாக வியாதி வராமல் தடுக்கவேணுமென்றால் எப்படி ஆகாரத்தின் தேவையின் கணக்கும், நாம் சாப்பிடும் பதார்த்தங்களின் குணகுணங்களும் நன்றாய்த் தெரிந்திருக்கவேணுமோ, அதேமாதிரி நாம் சுவாசிக்கும் ஆகாயத்தின் வழியாயும் வியாதி வராமல் தடுக்கவேணுமானால் ஆகாயத்தின் சாதாரண சுபாவமும், பலபல இடங்களில் ஆகாயம் தேசகால வித்தியாசங்களால் எப்படி மாறுபாடடையும் என்பதும் விவரமாகத் தெரியவேணும். ருசக்கரப்பொருட்கள், மா பதார்த்தங்கள், கொழுப்புப் பதார்த்தங்கள், தாதுப்பொருட்கள் என்று ஆகார விஷயமாக வேண்டியவைகளைப் பிரித்ததுபோல ஆகாயத்திலும் 'ஆக்ஸிஜன்' அல்லது பிராணவாயு, 'கார்பானிக் அஸிட்' அல்லது கரிவாயு, 'நைட்ரஜன்' என்று உள்ளவைகளைப் பிரிக்கலாம். ஆகார விஷயமாக இன்ன பதார்த்தங்கள் இவ்வளவு இவ்வளவு நமக்கு வேண்டியதென்று சொன்னோமல்லவா? அதேமாதிரி நமக்கு சுவாசிக்கவேண்டிய விஷயத்திலும் கணக்குள்ளது

சுபாவமான ஆகாயத்தில் 100 பாகத்தில் சுமார் 79 அளவு நைட்ரஜனும், 21 அளவு பிராணவாயுவும் உள்ளது. இதுடன் கூட சாதாரணமாகக் கொஞ்சம் கரிவாயுவும் கலந்திருப்பதுண்டு. ஆகாயத்துடன் நீராவி சாதாரணமாக கலப்பில்லாமலிருக்கிறது அரிது. இவைகளில் கரிவாயு மற்றவைகளைக் காட்டிலும் கனமுள்ளது. ஆகையால்தான் தரையில் படுக்கிறதைக்காட்டிலும் கட்டிலிலும் கட்டில்போல உயரமான இடங்களிலும் படுக்கிறது நலம் என்றும், தரையில் படுத்தாலும் சற்று உயரமான தலையணை ஒன்றின்மேல் தலையை வைத்துப் படுக்கிறது நலமென்றும் சொல்வது சாதாரண அபிப்பிராயமாயிருக்கிறது. சுற்றுப் பக்கங்களைக் காட்டிலும் பள்ளமான இடங்களில் படுத்தால் இந்தக் கரிவாயு அதிகமாக சுவாசத்தில் உட்கொள்ளும்.

பிராணவாயு (ஆக்ஸிஜன்) ஆகாயத்தில் இல்லாமலிருந்தால் சாதாரணமாகவிளக்கெரிகிறது கஷ்டம். கரிவாயு விளக்கை எரியவொட்டாது. சீமைச்சுண்ணாம்பைத் தூள்செய்து அதின் மேல் கந்தக திராவகத்தைக் கொஞ்சம் ஊற்றினால் அதிலிருந்து கரிவாயு வெளிக்கிளம்பும். இந்தத்தூளையும் திராவகத்தையும் ஒரு சீசாவில் சேர்த்து அந்த சீசாவின் வாயை அடைத்தாப்போல் ஒரு எரிகிற சுளுந்துக் குச்சியைப்



பிடித்தால் அது உடனே அணைந்துபோகும். இதேமாதிரி ஒரு சுளுந்துக்குச்சியைக் கொளுத்தி ஒரு ஆழமான கிணற்றின் அடியில் கொண்டுபோனால் அங்கே அது அணைந்துபோம். ஒரு எரிகிறவிளக்கைப்போல் எப்பொழுதும் பிராணவாயுவே இன்றியமையாததாயுடைத்தான நம் ஜீவனானது இந்தக் கரிவாயுவை மிதமிஞ்சி உட்கொள்ளாதபடி காக்கவேண்டும். ஆகவே நாம் தெரிந்துகொள்ளுகிறது என்னவென்றால், நமக்குச் சரியான அளவு பிராணவாயு வேணுமென்பதும், கரிவாயு மிதமிஞ்சினதாயுள்ள ஆகாயம் விஷமுள்ளதென்பதும்.

இது சம்பந்தமாக ஒரு கிராமத்தில் நடந்த சங்கதி ஒன்று சொல்லுகிறேன். ஒரு வீட்டில் புருஷன், மனைவி, மூன்று குழந்தைகளிருந்தார்கள். (இப்பொழுதும் இருக்கிறார்கள்.) சற்று குளிர்காலமாக இருந்ததாலும், அந்த சமயம் ஊரில் கள்ளர் பயம் கொஞ்சம் இருந்தபடியாலும் அவர்களெல்லாரும் ஒருநாளிரவு ஒரு அறையில் படுத்துக்கொண்டார்கள். அது வெகு சிறிய கிராமம். ஊரில் அக்கிரஹாரத்திலுள்ளது சுமார் 10 வீடுகள்தான். அந்த 10 வீடுகளிலும் ஜன்னல்களுடைத்தான வீடுகள் இரண்டே. மனுஷனுக்கு நாசித்துவாரத்தைப்போல் வீட்டிற்கு ஜன்னல் அவசியம். இப்படி வீட்டுக்கு அவசியமான துவாரமாகிய ஜன்னல் அற்ற வீடுகளில் நான் சொல்லுகிற வீடு ஒன்று. இவர்கள் எல்லாரும் படுத்துக்கொண்டிருந்த அறைக்கு ஜன்னலே இல்லை. அந்த அறை சுமார் 15-அடி நீளம், 10-அடி அகலம், 8-அடி உயரம்; ஓலை கூரை; கதவைச்சாத்தி உள்ளே தாளிட்டு விட்டார்கள். இரவில் மணி சுமார் $1\frac{1}{2}$ இருக்கலாம். இவர்களுக்கு அசாத்திய பயங்கரமான சுவப்பனங்கள் உண்டாயின. குழந்தைகளில் ஒருவன் பிதற்ற ஆரம்பித்தான். தகப்பனார் ஏற்கனவே ஸங்கடப்பட்டுக்கொண்டிருந்தவர், விழித்துக்கொண்டார். ஆனால் அவரால் விரைவாய் எழுந்திருக்க முடியவில்லை. ஒரு குழந்தை "ஒண்ணும் தெரியாதே, வருகிறதே" என்று அழுதுகொண்டு அம்மா, அம்மா, என்று தவிக்க ஆரம்பித்தது. தாயார் விழித்துக்கொண்டாள். தகப்பனார் கதவைத் திறக்க எழுந்து சென்றார். முடியாமல் கீழே விழுந்துவிட்டார். தாயார் இதை யறிந்து திடுக்கிட்டு என்னவென்று கேட்க, அவர் தனக்கு கிறுகிறென்று வருகிறதாகச் சொன்னார். தாயார் கதவைத் திறந்தாள்; வெளியில் வந்து விளக்கேற்றப்பட்டபாடு அவளுக்குக் கஷ்டமாகிவிட்டது. விளக்கேற்றிப் பார்த்தால் எல்லாரும் மயங்கிக் கிடந்தார்கள். உடனே கூ, கூ, வென்று சத்தம் போட்டாள். அடுத்த வீட்டிலிருந்த என் உறவினர்கள் திடுக்கிட்டு எழுந்துபோய்ப் பார்க்கும்பொழுது கீழே கிடந்தவர்களெல்லாரும் பாம்போ, ஏதோ கடித்து சோகம் போட்டு விழுந்துகிடந்தது போலிருந்தார்கள். அங்கிருந்த சுகநூல் படித்திருந்த சிறுமி ஒருவள் இவர்கள் அன்றிரவு படுத்திருந்த வைபவத்தைக் கேட்டு உடனே அவர்களெல்லாரையும் தூக்கி வெளியில் தாழ்வாரத்தில் போடச்செய்து அவர்களுக்கு மயக்கம் தெளியும்படி குளிர்ந்த ஜலம் முகத்தில் தெளித்து சற்றுநேரம் வீசிக்கொண்டிருந்தபிறகு ஒருவரொருவராய் எழுந்தார்கள். எல்லாரைக்காட்டிலும் தைரியமாயிருந்த தாயாரோ என்னவோ பயித்தியம் பிடித்தாற்போலிருக்கிறதென்று சொல்லிக்கொண்டே தான் சற்றுச்சற்று நடமாடிக்கொண்டிருந்தாள். காலை 3-மணியானபின்பு அவரவர் தங்கள் வீடு சென்றார்கள். இந்து தேச சரித்திரம் படித்திருக்கிற சிறுவர் சிறுமிகள் கலகத்தாவில் 146-பேர்கள் ஒருதடவை ஒரு இருட்டறையில் போடப்பட்டதின் விவரங்களைப் படித்திருக்கலாம். அந்த அறையின் விஸ்தீரணம் 18-அடிச் சதுரம். அதற்கு இரண்டு சிறு ஜன்னல்கள்மட்டுமிருந்தன. அதில் இராத்திரி கைதிகளாக அடைக்கப்பட்ட 146-பேர்களில் 23-பேர்களே காலையில் உயிரோடிருக்கக் காணப்பட்டார்கள்.

மற்றவர்கள் திக்குமுக்காடி இறந்துவிட்டார்கள்! பாவம்! கொடுமை! அதுமாதிரியே இது. இது நேர்ந்ததின் பிறகுதான் அந்த ஊரில் நல்ல காற்றின் பிரயோஜனமும், காற்று நம் உச்சுவாசங்களினால் கெடுதலாகிறதென்பதும். அப்படிக் கெடுக்கப்பட்ட காற்றை உட்கொள்ளுகிறதினாலுள்ள அபாயமும் தெரிந்தது. ஆனால் இன்னமும் சிலர் அங்கே இந்த சங்கதி நடந்தது ஏதோ பிசாசின் செய்கை என்ற மூடத்தனமான நம்பிக்கையை விடுகிறார்களில்லை, விவேகசிந்தாமணியையும் படிக்கிறார்களில்லை.

நம் உச்சுவாசங்களில் வெளிவருகிறது கரிவாயுமாத்திரமல்ல, இன்னும் அவரவர்கள் தேகங்களில் உள்ள வியாதிகள் சம்பந்தமான அனேக விஷப்பதார்த்தங்களும் கறியழுக்குகளும் (organic impurities) வெளிவருகின்றன. ஒரு அறையில் அடைக்கப்பட்டிருக்கும் மனிதர்கள் தாங்கள் ஒவ்வொரு தடவையும் சுவாசிக்கும்போதும் அவர்கள் உட்கொள்ளும் ஆகாயத்தில் சரியான அளவு பிராணவாயு இருக்கவேணும். ஒருதடவை நாம் சுவாசித்து வெளிப்படுத்தின வாயுவானது மிகவும் அசுத்தமானது; அந்த வாயுவானது காற்றோட்டமில்லாத அறைகளில் நாழிகைக்கு நாழிகை சேர்ந்துகொண்டிருக்கும்; அப்பேர்ப்பட்ட அறைகளில் ஸஞ்சாரம் பண்ணிவந்தால், தலைவலி, தேகத்தில் ஒரு பளு, சோம்பல் குமட்டல் முதலிய அஸௌகரியங்கள் உண்டாகும். நெடுங்காலம் அப்பேர்ப்பட்ட அறைகளிலாவது வீடுகளிலாவது ஸஞ்சரிக்கிறவர்கள், நாளுக்குநாள் தேகம் மெலிந்து, அசக்தர்களாக ஆகி, தொத்துவியாதிகள், க்ஷயம், பிளேக், முதலிய அனேக ரோகங்களுக்கு சீக்கிரம் உள்படுவார்கள் என்பது உறுதி. வெளியிலிருந்து உள்ளே புதிதான காற்றடித்து, உள்ளே அப்போதைக்கப்போது கெடுதலாகும் காற்றை அப்புறப்படுத்தும்படியாக தகுந்த திறப்புகளில்லாமலிருந்தால் மேலே விவரித்தபடி அபாயம் நேரிடுகிறதில் சந்தேகமில்லை.

சாக்கடை நீர், மூத்திரம் முதலான அழுக்கு ஜலம் தேங்குமிடங்களில் துர்நாற்றம் உண்டாகிறதல்லவா? இதுவிஷக்காற்றினால் உண்டாகும் வீச்சம். எந்தப்பதார்த்தமும் அழுகிப்போனால் கண்ணுக்குப்படாத வெகுசிறு கிருமிகள் அந்த அழுகிக்கொண்டிருக்கும் பதார்த்தங்களில் கோடி கோடிக்கணக்காய் விருத்தியாகின்றன. இந்த விருத்தியினால் பதார்த்தத்தில் உண்டாகும் மாறுபாட்டினால் கெட்ட வீச்சம் வெளிக்கிளம்புகிறது. இந்தமாதிரி நாற்றம் உள்ள இடங்களில் பிராணவாயு குறைவுபட்டிருக்கும். ஆனால் நாற்றமுள்ள இடங்களையாவது மூக்கின் உதவியினால் அறிந்துகொள்ளலாமல்லவா? இப்படி மூக்கினாலும அறிந்துகொள்ளக்கூடாத சந்தர்ப்பங்களுண்டு. நுட்பமான உணர்ச்சியுள்ளவர்கள் இந்த சமயங்களில் கூட அபாயம் உள்ளதென்று அறிந்துகொள்ளக்கூடியது.

சிறுவர்கள் திருட்டுப்பாட்டுக்கச்சேரி வைக்கிறதுண்டு: ஒரு அறையில் கதவுகள் ஜன்னல்களெல்லாம் சாத்திவிட்டு உள்ளே இரகசியக்கூட்டம் கூடிக்கொண்டு ஒருவன் பாட்டுப்பாட பக்கவாத்தியங்கள் வாசித்துக்கொண்டிருக்க, சந்தனப்பூச்சுகளும், ஊதுவத்திப்புகைவாசனையும், ஏலம் கிராம்பு வகையராவுடன் பாக்கு வெற்றிலைகளுமாக அடைத்துக்கொண்டிருந்துவிட்டு பிறகு தலைவலியென்றும், எழுந்திருந்தால் கிறுகிறுவென்று கீழே தள்ளுகிறதென்றும் அவஸ்தைப்படுகிறது எனக்குத் தெரியும்.

ஒரு அறையில் நாம் இருந்தால் அந்த உள்ளின் ஆகாயத்திலிருக்கும் பிராணவாயு எப்படி நமக்காகச் செலவாகிறதோ அப்படியே அந்த உள்ளில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தால் அதற்காகவும் பிராணவாயு செலவாகும் அரைபுட்டி 'கொஸீன்' எண்ணெய் எரிகிறதற்கு சுமார் 120-கனஅடி காற்று தேவையாயிருக்கும். ஆகையால் விளக்குகளை ஏற்றிவைத்துக்கொண்டு ஒரு அறையை அடைத்துவைத்துக்கொண்டிருக்கலாகாது.



| நாம் உட்கொள்ளும் சாதாரண ஆகாயத்தில் 1000-பாகத்தில் | | நாம் உட்சுவாசித்து வெளியில் விடும் ஆகாயத்தில் 1000-பாகத்தில். | |
|---|---|---|---|
| நைட்ரஜன் | ... 790 | நைட்ரஜன் | ... 790 |
| பிராணவாயு | ... 210 | பிராணவாயு | ... 160 |
| கரிவாயு | ... ½ | கரிவாயு | ... 40 |

இந்த வித்தியாஸத்தைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள். ஒவ்வொரு தடவை நாம் மூச்சு விடும்போதும் நாம் உட்கொள்ளும் ஆகாயத்திலிருந்து 100-க்கு கிட்டத்தட்ட 5-பங்கு பிராணவாயு நம்மால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதற்குப்பதிலாக 100-க்கு 4-பங்கு கரிவாயுவும் இன்னும் நீராவியும், கறியழுக்குகளும் (organic impurities) நாம் வெளிமூச்சு விடும்போது வெளிவருகின்றன. முன்சொன்னகிராமத்தில் நடந்த காபராவின்காரணமும் கல்கத்தா இருட்டறையினுடையவும், திருட்டுப்பாட்டுக்கச்சேரியினுடையவும் அபாயமும் இப்பொழுது விளங்கும். இன்னொரு கணக்குச்சொல்லுகிறேன் கேளுங்கள். சாதாரணமாக மூச்சுவிட்டுக்கொண்டிருக்கிற ஒரு மனிதன், 18-அடி நீளம், 18-அடி அகலம், 10-அடி உயரமுள்ள ஒரு அறையிலுள்ள 3240 - கன அடி அளவுள்ள ஆகாயத்தை ஒரு மணிநேரத்தில் ஏறக்குறைய முழுவதும் கெடுதலாக்கி விடுகிறான். இப்படியான அறையில் காற்றுப் போக்குவரத்து சரியாக இல்லாவிட்டால் அபாயம் உண்டென்று விளங்குகிறதன்றோ.

நம் ஆத்மா குடியிருக்கிற வீடான நம் தேகம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றது கவனியுங்கள். ஓட்டையில்லாத இடம் கிடையாது. நம் தோல்மேல் எங்கே ஊசிமுனையால் குத்தினாலும் அங்கே ஒரு சிறு துவாரமிருக்கும், அங்கிருந்து நம் தேகத்திலுள்ள அழுக்கு ஜலமெல்லாம் வியர்வையாக வெளிவரும். இந்தஓட்டைகள் எப்பொழுதும் திறந்திருக்கவேண்டியன. அடைத்துப்போய்விட்டால் சாக்கடைத்தண்ணீர் வெளியில்போகாமல்போனால் எப்படி வீடு எல்லாம் நாற்றமுண்டாகி வியாதிகள் புறப்பட ஆரம்பிக்கின்றனவோ, அதேமாதிரியாக நம் தேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்திலிருக்கிற மஷ்டுக்கள் வெளிப்படாமல் உள்ளே தங்கி இரத்தம் கெட்டு நம்தேகத்தில் வியாதிகள் உண்டாகும்.

இந்த் சிறுதுவாரங்களான தோலிலுள்ள வேர்வைத்துவாரங்கள் தவிர பெரியதுவாரங்கள் ஒன்பது உண்டு. ஒவ்வொன்றுக்கும் வேறு எந்த உபயோகமிருந்தபோதிலும் தேகத்திலுள்ள அழுக்குகளை வெளிப்படுத்துகிற முக்கியமான உத்தியோகம் ஒன்று எப்பொழுதும் உள்ளது.

நாம் வசிக்கும் வீடுகளிலிருந்து காற்றுத்தவிர மற்ற அழுக்குகளெல்லாம் அடிக்கடி வெளிப்படுத்தப்படவேண்டும். காற்று யதேஷ்டமாக உள்ளே வீசும்படியாக ஜன்னல்கள் நிரம்ப இருக்கவேண்டும். ஒருக்கால் குளிருக்காகவோ, உடம்புக்குக் காற்றுவேண்டியிருக்காமலோ ஜன்னல்கள் சாத்தப்படவேண்டியிருந்தால் நம் உயரத்துக்குக்கீழே இருக்கும் ஜன்னல்களைச் சாத்திவிட்டு, அறையின் சுவர்களில் உயரமாக நாலுபக்கமும் ஜன்னல்கள் வைத்து அவைகளை எப்பொழுதும் திறந்து வைக்கவேண்டும். மழைபொழியும் சமயங்களில் அந்த அறையின் உயர்ந்தகண்கள்வழியாக உள்ளே சாரலடியாதபடி சாய்ந்திருக்கும் கதவுகள் அந்த சன்னல்களுக்கு வைக்கவேண்டும். வீடுகளில் ஏதோ அஜாக்கிரதையினால் ஏதாவது அழுகிக்கிடந்து துர்நாற்றமுண்டாக நேரிட்டால் அழுகிக்கிடக்கும் பதார்த்தத்தை அப்புறப்படுத்திவிட்டு அது இருந்த இடத்தில் Phenyl அல்லது Condy's fluid முதலிய சிறுகிருமிஹாரிகளை பிரயோகம் செய்யவேணும். துர்நாற்றம் நாம் வசிக்குமிடங்களில் எங்கேயிருந்தாலும், அதை உடனே கவனித்து நீக்கஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேணும்.

வீட்டில் எல்லா இடங்களைக்காட்டிலும் நாம் படுக்கும் அறைகள் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியவைகள். ஏனென்றால் நாம் தூங்கிவிட்டால் மறுபடி விழித்துக்கொள்

ளுகிறவரையில் காற்று சரியாயிருக்கும்படி ஏற்பாடு முன்னதாகவே ஆகவேண்டியதல்லவா? நாம் படுத்துக்கொண்டபிறகு இரவு முழுவதும் அறையில் நல்லகாற்றின் போக்குவரவு தாராளமாக உள்ளபடி ஏற்பாடுசெய்துவிட்டுப் படுக்கவேணும். படுக்கையில் சிலர் முகத்தின்மேல் துணியைப்போட்டுக்கொண்டு மூதேவியைப்போல் தூங்குகிறதுண்டு. இது மிகவும் அசிங்கியமான வழக்கம். நாம் வெளியில் மூச்சுவிடும் கெட்ட ஆகாயம் நம்மைவிட்டு அப்புறப்படவேண்டியது அவசியமாயிருக்க, அதைப்பிடித்து அடைத்துக்கொண்டு அதையே மறுபடியும் உட்கொள்ளலாமா? ஏதோ ஒரு சமயம் புசல்காற்றுப்போல் அடித்துக்கொண்டிருந்து நாமும் தூசியடிக்கிற இடங்களில் படுக்கநேரிட்டால் மெலிசான 'மஸ்லின்' போன்ற வஸ்திரங்களை முகத்தின்மேல்போட்டுக்கொள்ளலாம். ஒரு காரணமுமில்லாமல் ஏதோ குளுருகிறதென்று ஏற்கனவே அடைபட்ட அறைகளில் படுத்துக்கொண்டிருக்கையிலேயே இன்னும் மூஞ்சியையும் தடிக்கம்பளியைப்போட்டு மூடிக்கொள்வது முழுமூடத்தனம்.

அறைகளில் சுவர்களில் உயரமாக ஜன்னல்கள்வைக்கிறதின் பிரயோசனம்;—ஒரு எரிகிற அடுப்பைக் கவனித்துப்பாருங்கள், அடுப்பின் எரிகிற பக்கத்தின்மேலே உள்ள புகை நேரே 'விர்' என்று உயரக்கிளம்புகிறது. ஏனென்றால் புகை (அதேமாதிரி, காற்று) உஷ்ணப்பட்டால் இலேசாகி (ஒரு தண்ணீர் நிரப்பியிருக்கும்பாத்திரத்தினடியில் ஒருகெட்டித்துண்டை அழுத்தி அங்கிருந்து விட்டுவிட்டால் எப்படி அந்த கெட்டித்துண்டு உடனே மேலே மிதந்துவிடுமோ, அதேமாதிரியாக) மேலே மிதந்துவிட ஓடுகிறது. நாம் உட்கொள்ளுகிற காற்றைவிட (அதாவது, நம்மைச்சுற்றிலும் அறையிலிருக்கிற காற்றைவிட)நாம்சுவாசித்து வெளிவிடுகிற காற்று உஷ்ணமுள்ளதாகையால், அது மேலே கிளம்பிவிடுகிறது. மேலும் நம் தேகமே உஷ்ணமுள்ளதாகையால் நம்தேகத்தின்மேல் அப்போதைக்கப்போது படும் காற்று சுட்டுப்போய் மேலே கிளம்புகிறது. இந்தமாதிரி மேலே கிளம்பிப்போகிற காற்றிருந்த இடத்தைப்பிடித்துக்கொள்ள சுற்றுப்பக்கத்திலுள்ள சாதாரணமான காற்று நெருங்குகிறது. சுபாவத்திலேயே கெட்டகாற்று இந்தமாதிரி நம்மைவிட்டு ஓடும்படியான சவுகரியம் இருக்கும்போது, இப்படி மேலே கிளம்பிப்போகிற காற்றுக்கு அறையைவிட்டு வெளியில் போக வழிவிடாமல்போனால் இது தற்கொலை செய்துகொள்ளுகிறது போல் நம் கேட்டை நாமே தேடிக்கொள்ளுகிறதாகவிருக்கும் அல்லவா? மேலே ஜன்னல்கள்வைத்து வீடுகட்டுகிறதின் பிரயோசனம் இதுவே. மேலேயும் ஜன்னல்கள் இருக்கவேண்டியதுபோல கீழேயும் இருக்கவேண்டியது. ஆனால் கீழிருக்கும் ஜன்னல்கள் எப்பொழுதும் திறந்திருக்கவேண்டியதென்கிற அவசியமில்லை. அடிக்கடி திறக்கலாம், மேலே இருக்கும் ஜன்னல்களோ எப்பொழுதும் திறந்திருக்கவேண்டியவை.

N. S.

## சம்பகமாலை

### அல்லது

## இளையராஜாவின் தீர்மானம்.

### அங்கம் IV.

---

### நான்காம் களம்.

---

இடம்: ஊருக்கு வெளிப்பிரதேசத்தில் தேவாலயம்.

(மீராபாய், லால்பாய் பிரவேசிக்கிறார்கள்).

**லால்பாய்**—(மீராபாய்தோளின்மீது தலையை சாய்த்து) என்னசெய்வேன் மீரா! உ முகத்தை நான் எப்படிப்பார்ப்பேன். ப துக்களுடைய முகங்களையும் சிநேகிதர்களுடைய முகங்களையும் எப்படிப்பார்ப்பேன சொல். ஐயோ! முன்னரே நீ சொன்ன உன்சொல்லைக்கேளாமல் அந்தப்பாவிப் தாவைநம்பி ஏமாந்துபோனேன். அவளுடைய சூழ்ச்சியினால்தான் எனக்கு இக்கெதி கிடைத்தது. துஷ்டனான ரின்மல்கையில் அகப்பட்டுக்கொண்டு உலகத்தோரால் ஒதுக்கப்பட்டவளானேன். இனி நானிருந்தென்ன இறந்தென்ன. எனக்கு இகபரசுகங்கள் கிடையாது, கீர்த்தியுமில்லை. (கோவிலை சுட்டிக்காட்டி) துரோபதையின் மானத்தைக்காப்பாற்றின ஸ்ரீ கிருஷ்ணனுக்கு என்மீது கிருபையில்லாதொழிந்தது. தேவர்களாலும், மக்களாலும் வெறுக்கப்பட்ட இவ்வுடலும், பிராணனும் இருந்தென்ன போயென்ன? போவதே நலம். என்னை விட்டுவிடு மீரா! என்னுயிரைப் போக்கிக்கொள்ள நான் தகுந்த உபாயம் தேடிக்கொள்ளுகிறேன்.

**மீராபாய்**.—போடீ! பைத்தியக்காரி! உயிரைப் போக்கிக்கொள்ள உபாயமும் தேடவேண்டுமா? உயிரைப்போக்கிக்கொள்ள வழிகள் அநேகம்; அதை இருத்திக்கொள்ளமாத்திரம் வழிகிடையாது! உயிரைப்போக்கிக்கொள்வதா பெரிய காரியம். உயிரைப்போக்கிக்கொண்டு பலகாரியங்களை நிறைவேற்றலாமென்று எண்ணங்கொள்பவர்கள் மூடர்களேயன்றோ. உலகத்தில் மானிடர்கள் உயிரைவைத்துக்கொண்டு இவ்வுலகில் மோக்ஷமுள்பட நான்கு புருஷார்த்தங்களையும் சம்பாதிக்கிறார்களேயொழிய உயிரைவிட்டு மறு உலகில் சேர்ந்தல்ல. நடந்த காரியம் நடந்துவிட்டது. பிசகிப்போனதைப் பற்றி சிந்திக்கக்கூடாது. நாம் நம் சுகத்தைத் தேடிக்கொள்ளவே பிறந்தவர்களாக எண்ணப்படாது. அந்நியர் சுகத்தைநாடுவதும் நம் கடமைகளில் ஒன்று. உலகத்தில் மானிடர்கள் தம் சுகத்தைக்கூட விட்டுப் பிறர் சுகத்தை நாடவில்லையா? நான்கு தினங்களுக்கு முன்பு ராணி சமுகத்துக்கு அழைத்துக்கொண்டு போய்ச்சேர்த்தோமே அச்சாது தம் சுகத்தைப் பேணவா அவ்வாச்சிரமம்கொண்டார்.

**லா**.—எனக்கொன்றும் தோன்றவில்லை மீரா! என்னை என்ன செய்யச்சொல்லுகிறாய். அற்பஸ்திரீயாகிய என்னால் என்னவாகப்போகின்றது. நான் செய்யவேண்டியது என்ன உளது?

**மீ**.—உன் குலத்தையும் அந்தஸ்தையும் மறந்து பேசுகின்றாய் லால்பாய் நீ. சிசோதயகுலத்திற் பிறந்த க்ஷத்திரியப்பெண்ணல்லவா நீ. உன் மானபங்கம் செய்தபாவியை நீ விட்டுவிடலாமா. உன்னைக் கட்டியணைந்த அப்பாபியினிரண்டு கரங்களும் அறுந்துவிழவேண்டாமா? நான் பல சொல்லவேண்டுவதில்லை. லால்பாயுனக்கு சிசோதயர்களுக்குக் குலதனமாயிருக்கின்ற இம்மைவார் சிங்காசனமே உன்னால் காப்பாற்றப்படவேண்டும். அவ்வளவு பெரியகாரியம்செய்து புகழ்பெறவேண்டியிருக்க நீ அருமையான உன்னுயிரை விட்டுவிடலாமா? தன் கடமையை அறிந்த ஒவ்வொருவனும் தன்னுயிர் தனக்குச் சொந்தமென்று நினைக்கலாகாது. தனக்காகவே தான் பிழைப்பதாகவும் நினைக்கலாகாது. அவசரப்படாதே குழந்தாய்!

**லா**.—மீராபாய்! உனக்குமிஞ்சினபந்துக்கள் எனக்குக்கிடையார்கள். சிநேகிதர்களுமில்லை. உன் கட்டளையைக் கட்டாயமாய் நிறைவேற்றுகின்றேன். நான் செய்யவேண்டுவதென்ன சொல் மீரா!

**மீ**—சற்றேபொறு நம் சாது இங்குவந்து நாம் செய்யவேண்டியவைகளின்னவென நமக்குச்சொல்லுவார். அவர் மகா யுக்திசாலி. நம்க்ஷேமத்தையும் தேசத்தின் க்ஷேமத்தையும், மகாராணாவின் க்ஷேமத்தையும் நாடுபவரென்று தெரிந்துகொள். இதோ அவரும்வந்துவிட்டார்.

(சாதுவைநோக்கி) சாது! வாரும், உம்முடைய வரவைத்தான் நாங்களிருவரும் எதிர்பார்த்திருந்தோம்.

**சாது**.—மீராபாய்! நாம்வெகுஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நம்மூவரில் எவர்களேனும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதை அந்தப்புரவாசிகள் எவர்களும் அறியலாகாது. ஒரேகாலத்தில் நாம் மூவரும் அந்தப்புரத்தைவிட்டு விலகியிருக்கலாகாது. ரின்மலினுடைய வேவுகாரர்கள் ஒவ்வொருவருடைய போக்கு வரவுகளை கவனிப்பார்கள். நான் உங்களுக்குச் சொல்லவேண்டுமென்று எண்ணங்கொண்ட ஓரிரண்டு முக்கியமான விஷயங்களைமாத்திரம் உங்களுக்குச் சொல்லிவிட்டுப்போகின்றேன். உங்களுடைய சகாயமின்றி என்னால் ஒன்றும் செய்யமுடியாது. நான் சொல்வதையெல்லாம் நீங்களிருவரும் செய்யவேண்டும். மற்ற சங்கதிகளை நான் கவனித்துக் காரியம்முடிக்கின்றேன். சம்மதமா சொல்லுங்கள்.

இரண்டு ஸ்திரீகளும்.—அப்படியே செய்கிறோம். சொல்லுங்கள் சாது!

**சாது.**—சொல்லுகின்றேன் கேளுங்கள். சத்துருக்களை வெறுத்து அவர்களைவிட்டு விலகி நாம் இருந்தோமானால் அவர்களுடைய இரகசியங்களை நாம் அறியமாட்டோம்; அறியாவிட்டால் அவர்களை நாம் ஜெயிக்கமாட்டோம். நம் காரியம் சித்தியாம் பொருட்டு அவர்களோடு தோழமைபாராட்டவேண்டும். (மீராபாயைநோக்கி) மீராபாய்! நீர் மகாராணியினுடன் உறவாடி சிலாக்கியங்களை அறியவேண்டும். அவள் கபடற்றவள். (லால்பாயைநோக்கி) லால்பாய் நீ ரின்மலுடன் உறவாடவேண்டும்.

**லா.**—(கோபத்துடன்) என்ன பேச்சு பேசுகின்றீர் சாது! உம்முடைய வாக்கினின்று இத்தகாத சொல் கிடைத்தது வெகு ஆச்சரியம், என்மனதை நோகச்செய்யவேண்டாம் சாது! எது எவ்வாறு முடிந்தால் எனக்கென்ன? நான் தகாத காரியம் செய்வேனோ?

**மீ.**—அவசரப்படவேண்டாம் லால்பாய், சாது சொல்வதை முழுவதிலும் கேள்.

**சாது.**—அம்மணீ! லால்பாய்! மன்னிக்கவேண்டும். உம்முடைய மாசற்ற குணத்தை நன்றாய் அறிந்திருக்கின்றேன்; ஆயினும் தேச க்ஷேமத்தைக் கருதி அவ்வாறு சொன்னேனன்றி வேறில்லை. ஸ்திரீகளுக்குக் கற்பு நிலைமையானது அரிசியை மூடிநிற்கும் உமிபோன்றது. அது பிரிந்தால் மறுபடியும் முன்போல் ஒட்டமாட்டாது. கொடியனாகிய மன்னன் தர்மநிலை யறியாமல் மாசற்ற உம்முடைய வாழ்க்கைக்கு களங்கமொன்றை உண்டாக்கிவிட்டான். அக்களங்கம் இனி நீங்காது. அப்புறம் நாம் செய்யவேண்டுவதென்ன?

**மீ.**—அவனை சிக்ஷிக்க வழிதேடவேண்டுவதே.

**சாது.**—அதற்குத் தடையென்ன அம்மணீ!

**லா.**—வாஸ்தவம் சாது! என் கையினாலேயே அவனைக் கொல்லவேண்டும், அன்றுதான் என் துயரம் நீங்கும்; என்மனம் திருப்தியடையும்.

**சாது.**—அப்படி செய்யவேண்டுமானால் அவனிடத்தில் நீர் தோழமை பாராட்டவேண்டும். அவனுடைய ரகசியங்களை அறியவேண்டும். ஒருவனுடைய ரகசியம் அவனிடத்திலிருக்கும் வரையில் அது அவனுக்கு பந்துவாகும்; பிறலறியப்பட்டால் சத்துருவாகும். நம் கையிலுள்ள ஆயுதம் பிறன் கையிற் சென்று நம்மைக் கொல்லவில்லையா?

**லா.**—என்ன செய்வேன்! கிருஷ்ண-கிருஷ்ண! சாது! அப்படியே செய்கின்றேன்.

**சாது.**—நெடுநேரமாய்விட்டது நாம் இங்குவந்து அந்தப்புறத்திலுள்ளவர்கள் சந்தேகிப்பார்கள். நீங்கள் முன்னர் நடவுங்கள். வெவ்வேறு பாதையைத் தொடர்ந்தீர்களானால் நலம்.

(லால்பாயும் மீராபாயும் போகிறார்கள்.)

**சாது.**—(தனக்குள்ளே) ஓ! தெய்வமே! நான்தான் இவ்வாபத்துகளுக்குக் காரணம். ராஜதேவனை கெயில்வாராவுக்கு அனுப்புமாறு சோண்டாவைத் தூண்டாதிருந்தேனானால் ஒருக்கால் மகாராணி சோண்டாவை தேசத்திலிருக்கச் செய்திருப்பாள். ரின்மலும் அவனுடைய பந்துக்களும் இத்தேசத்திற்குவந்து நிலைபெற்றிருக்க மாட்டார்கள். ரின்மல் லால்பாயிக்கு இவ்வபராதத்தைச் செய்திருக்கமாட்டான். அகோ! மகா பாவியாய்விட்டேன். நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததென்பது உண்மையாயிற்று. (சற்று யோசித்து) என்ன மூடன் நான். மனிதனறிவு புல்லறிவன்றோ. மனிதன் நல்ல எண்ணத்துடன் நல்ல முடிவைக் கோரிப் பிரயத்தினமாகிய தன்னுடைய கடமையைச் செய்யவேண்டுபவனே அல்லது முடிவின் நன்மை அல்லது தீமைக்குப் பாத்தியப்பட்டவனன்று. அது கடவுளுடைய சங்கல்பம். அதற்காக நானேன் சிந்திக்கவேண்டும். என் கடமையை நான் செய்கிறேன்.

(போகிறான்.)

---

## அங்கம் IV.

---

### ஐந்தாம் களம்.

---

#### இடம்.—தர்பார் மண்டபம்.

(ரின்மல் தன் துடையின்மீது முகுலை வைத்துக்கொண்டு சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கின்றான். ஜோடா, புரோகிதர், சாது, சபையில் வீற்றிருக்கின்றார்கள்.)

**முதல்.**—தாத்தா! நான் எவ்வளவுநேரம் இங்கே உட்கார்ந்திருக்கவேண்டும். விளையாடப்போலாமா?



**புரோகிதர்.**—மகாராஜ்! தர்பார் முடிந்துவிட்டது, மந்திரிகளும் பிரதான்களும், சர்தார்களும், சாமந்த ராஜாக்களும் சபையினின்று எழுந்து போய்விட்டனர்கள். இனிகுழந்தை சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கவேண்டிய ஆவசியகமில்லை. குழந்தை விளையாடப்போகட்டும் மகாராஜ்!

**சாது.**—ஆம். ஆம். குழந்தை விளையாடப்போகலாம்.

**ரின்மல்.**—குழந்தாய்! முகுல், புரோகிதர் நீ போகலாமென்று சொல்லுகிறார். நீ விளையாடப்போகலாம்.

**முதல்.**—மறுபடியும் இன்றைக்கு நான் சிங்காதனத்தின்மீது உட்காரவேண்டுமா?

**புரோகிதர்.**—வேண்டாம் மகாராஜா!

(முகுல் போகிறான்.)

**ரின்மல்.**—புரோகிதரே! ராஜ்ஜியமானது ஒரு பெரும்பாரம்; வகிக்கத் திராணியுள்ளவனுக்கு அது இன்பம், புகழ்ச்சி, முதலியவைகளைக் கொடுக்கின்றது. திராணியற்றவனுக்கு பெருந்துக்கத்தைத் தருகின்றது. விளையாட்டைவிட்டு குழந்தை இந்த சிங்காதனத்தில் நெடுநேரம் உட்கார்ந்திருக்குமா? மாட்டாது. அனேக காரியங்களை நாமே செய்து முடிக்கவேண்டும்.

**சாது.**—உலகத்தில் அனேக காரியங்கள் அவ்வாறே நடக்கின்றன. ராஜனென்பதும் பிரஜைகளென்பதும் எல்லாம் தர்மஸ்வரூபம். ராஜன் பிரஜைகளை அடக்கி ஆளுவதும், பிரஜைகள் ராஜனுக்கு அடங்கி நடப்பதும் எல்லாம் தர்மத்தினுடைய காரியம். ராஜனிடத்திலும், பிரஜைகளிடத்திலும் தர்மசிந்தனை குடிகொண்டிருந்தால்தான் தேசத்திற்கு க்ஷேமம் உண்டாம். பிரஜைகள் தர்மத்திற்குக் கட்டுப்பட்டிருக்கின்றமையினால்தான் குழந்தைகளும் ஸ்திரீகளுங்கூட ராச்சியபாரம் வகித்து வருகிறார்கள்.

**புரோ.**—வாஸ்தவம் சாது! இல்லாவிடில் ராச்சியபாரம் குழந்தை வகிக்கத்தகுந்தபாரமா? அல்ல.

**சாது.**—ஸ்தானங்களுக்குரிய மரியாதை நாம் கொடுப்பதினாலேதான் வருகின்றது. இதோ இந்த சிங்காதனத்திற்கும் உன்னதமான ஆசனத்தை ஒருவன் ஏற்படுத்திக்கொண்டால் மாத்திரம் அது சிங்காதனமாகுமா?

**புரோ.**—சிங்காதனத்தின்மேல் உட்காருபவனெல்லாம் ராஜாவாகமாட்டான். வாஸ்தவமாய் உலகத்தார் செய்யும் மரியாதையே மானிடர்களுக்கும் மற்றவற்றிற்கும் அந்தஸ்தைத் தருகின்றது. "கொண்டாடின விடத்தில் தெய்வமென்ற" பழமொழியைக் கேட்டிருக்கின்றோமல்லவா?

**ரின்மல்.**—(தனக்குள்ளே) புரோகிதர் என்னை அவமானப்படுத்த எண்ணங்கொண்டு சொன்னாரோ.' நான் சிங்காதனத்தின்மீது உட்கார்ந்திருப்பது புரோகிதருக்குத் தப்பாகத் தோன்றிற்றோ. இவ்வளவு சீக்கிரத்தில் அவர்களுக்கு அவ்விதமான அபிப்பிராயம் உண்டாகும்படி இடம் கொடுக்கப்படாது. (பிரகாசமாய்) வெகு நேர்த்தியாய்ச் சொன்னீர். ராஜா உட்கார்ந்திருக்கிறவரையிலுந்தான் அது சிங்காசனமாகமதிக்கப்படும்.

(மீராபாய் பிரவேசிக்கிறாள்.)

**மீராபாய்.**—(சபாமண்டபத்தின் மத்தியில் நின்று நான்குபுறமும் பார்த்து) என் குழந்தை முகுல் எங்கேபோனான். சிங்காதனத்தின்மீது அவனை நான் காணவில்லையே. இது என்ன ஆச்சரியம்! மைவார்தேசத்து அரசனுடைய கொடி மண்டோர் தேசத்தரசன் தலைமீது பறக்கின்றது. ராச்சியபாரத்தைத் தன் பாட்டன்தலையில் சுமற்றிப்போய் விட்டானோ.

**ரின்மல்.**—(சற்றே திகைத்து) இந்த ஸ்திரீ என்ன பேச்சுபேசினாள் பார்த்தீரா சாது. குழந்தை முகுலும் நானும் உட்கார்ந்திருந்தோம். அவன் விளையாட்டுக்குப்போனான். நான் ஆசனத்திலேயே இருந்தேன். எனக்கு ராச்சியமில்லையா? சிங்காதன மில்லையா? இதோ இறங்கிவிட்டேன். (இறங்குகிறான்.)

**ஜோடா.**—(உக்கிரமான கோபத்துடன்) என்ன புரோகிதரே! என்ன சாது! வாயை மூடிக்கொண்டிருக்கிறீர்கள். குழந்தைக்குச் செவிலித்தாயாயிருக்கும் ஒரு வேலைக்காரி ஒரு மகாராஜாவைப்பற்றி இப்படியும் பேசலாமா? (வாளையெடுத்து) இதோ ஒரு வெட்டாய் வெட்டிப்போடுகிறேன். (ஓங்குகிறான்.)

**புரோ.**—(ஜோடா கையைப்பிடித்துக் கொண்டு) ஸ்திரீவதம் செய்யலாகாது மகாராஜா! உமது

கீர்த்திபோய்விடும். ஏதோ அறியாமற் சொல்லி விட்டாள். மன்னியுங்கள்.

(ஜோடா வாளை உரையிலிடுகிறான்.)

**சாது.**—(கண்ணால் காட்டி) அம்மா! நீங்கள் அவ்வாறு பேசியிருக்கலாகாது. இப்போது மகாராஜா மன்னித்துவிட்டார் உங்களை (ரின்மலை நோக்கி) மகாராஜா! போகலாம் வாருங்கள்.

**(ஒருவர்பின் ஒருவராய் எல்லோரும் போகிறார்கள்.)**

**எச். வேங்கோபராவ்.**

## "நன்மை கடைப்பிடி."

தென் இந்தியா பிரம்மசமாஜ மண்டபத்தில் கூடிய மாதர்கள் சபையில் சௌபாக்கியவதி **மாணிக்கம்மாள்** வாசித்தது:—

நான் இன்று சொல்லப்புகுந்த சிலசொற்களினால் என்னுடைய அபிப்பிராயங்களை உங்களுக்குத் தெரிவித்து அவைகளிலுள்ள குற்றம் குறைகளை நீங்கள் அன்புகூர்ந்து எடுத்துக்காட்டினால், நான் நன்மை அடையக்கூடுமென்கிற எண்ணங்கொண்டு அவைகளை வெளியிடத்துணிந்தேன். இவ்வாறு நாம் கூடுந்தோறும் நமது அபிப்பிராயங்களையும் எண்ணங்களையும் ஒருவருக்கொருவர் தெரிவிப்பதினாலேயே நமதுசிந்தனை தெளிவடையுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஐரோப்பிய சகோதரிகளுக்கு பாக்கியவசமாய் இவ்வித சந்தர்ப்பங்கள் உண்டாயிருப்பதினாலே, அவர்கள் பலவிதத்திலும் நன்மை அடைந்துவருவதாய்த் தோன்றுகிறது.

நமது நாட்டில் பூர்வீகத்திலிருந்த மாதுசிரோமணிகளுக்கு ஐரோப்பிய சீமாட்டிகளைப்போலவே சர்வ சிலாக்கியமான கல்வி நாகரிகங்கள் உண்டாயிருந்தன என்று காவியங்களால் தெரியவருகிறது. தமது பூத உடம்புபோய் எத்தனையோ காலமாகியும் அழியாப் புகழுடம்பைப் பெற்று விளங்காநின்ற நமது அருமைப்பாட்டியம்மாளாகிய ஔவை பிராட்டியாரால் பெண்பாலாராகிய நமக்கு எல்லாம் பெருஞ்சிறப்புண்டாயிருக்கிறது. அந்தம்மாள் செய்த நூல்களே இத்தென்னாட்டில் ஆண் பெண் ஆகிய சிறியவருக்கும் முதியவருக்கும் வேத வாக்கியமாயிருக்கிறது. அந்தம்மாள் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய வித்துவான்களுக்கு கல்வித்திறமையில் பின்வாங்கினவள் அல்லவென்று சொல்லப்பட்டிருப்பதுடன், தனது நீதி ஒழுக்கத்தில் அவ்வித்வான்களைவிட மாசு, மறுவில்லா உயர்ந்த ஒழுக்கத்தைப் பெற்றிருந்ததனால் அந்தம்மாளை தெய்வப்பிறப்பென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அம்மாள் அடைந்திருந்த கல்வித்திறமையினாலும், மாசற்ற நடக்கையினாலும், வங்காள முதலிய இடங்களில் சிலசகோதரிகள் எம். ஏ. முதலிய பட்டங்களைப்பெற்று ஒழுக்கத்திலும் பெருமைபெற்றிருப்பதாய் இப்பொழுது நாம் பார்ப்பதினாலும் நாமும் அம்மாதுசிரோமணிகளைப்போல் ஆகத்தக்கவர்கள் என்கிற பெருமையைக் கொண்டவர்களாய் இருக்கிறோம் அல்லவா? இவ்வாறு இருந்தும் நமதுபெருமை இப்படிப்பட்டதென்று சிந்திக்காதவர்கள் போல் நம்முடைய அரிய வாழ்நாளை வீணாகப்போம்படி பார்த்து வருகிறோம்.

ஔவையார் நமக்குப் புகட்டிய வாக்கியங்களில் ஒன்றாகிய "**நன்மைகடைப்பிடி**" என்கிறதை நாம் எவ்வளவு பயன்படுத்திக்கொண்டோமென்று சற்று கவனிப்போம். "நன்மைகடைப்பிடி" என்றால் நன்மை பயக்கத்தக்கதை உறுதியாய்ப்பிடி என்று அருத்தமாம். நல்லதென்று தேர்தற்கு ஆராய்ச்சிவேண்டும். ஒரு காரியத்தை அல்லது வஸ்துவை நல்லதென்று தெரிந்து எடுப்பதற்கு முந்தி அதற்கு இனமான காரியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான் நல்லது வெளியாகும். இன்ன காரியத்தில் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் இன்னதில் கூடாது என்கிற நிர்ப்பந்தமில்லை. "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியம் பொதுப்பட இருப்பதினால் எக்காரியத்திலும் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டுமென்று ஏற்படுகிறது. இவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பதை எதில் கொள்ளுகிறோம், எதிற் கொள்ளவில்லையென்று சற்று ஆலோசித்துப் பார்ப்போம். நாம் உண்ணும் உணவிலும் உடுக்கும் உடையிலும் அணியும் ஆபரணங்களிலும் ஒப்பிட்டு நல்லதென்று தோற்றுவதை கைக்கொள்ளுகிறோம் என்பதில் ஆட்சேபனையில்லை. உடைகள் மாறின, பணிகளில் பழையனபோய் புதியன நுழைந்தன. நா விற்கு இனிமையான உணவுகளை தேவாமிர்தமே அறுசுவையோடு கூடிய உண்டியாய் வந்ததோ வென்று வியக்கும்படியாக பதார்த்தங்களைச்செய்து அனுபவிப்பதற்கு பாகசாஸ்திரங்களைத்தெரிந்தெடு[illegible] கிறோம். தேக சுகானுபவங்களுக்கு இன்னும் பல துறைகளில் நாகரிகம் நாளுக்குநாள் விர்த்தியாய்க் கொண்டே வருகிறது. இவ்விஷயங்களிலெல்லாம் ஒருவர் சொல்லவேண்டியதில்லை. ஆட்சேபனை செய்வாருமில்லை. ஆசாரங்களிலும் மதசம்பந்தமான



ஆசாரியங்களிலுமோவென்றால், ஏதேனுமோர் சீர்திருத்தம் செய்ய முயற்சித்தால் பலபக்கங்களிலும் போராட்டங்கள் உண்டாகின்றன. வீட்டுக்கொரு ஆசாரம் உண்டு.

பல நூற்றாண்டுகளுக்குமுன் உண்டான ஆசாரங்கள் நாளதுவரையில் யாதொரு மாறுதலுமில்லாமல் நடந்தேறிவருகின்றனவென்று சொல்லுகிறார்கள். நல்ல ஏற்பாடான சதாசாரங்கள் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்திற்கிணங்க, எப்போதும் நடந்தேறிவரவேண்டும் என்பது நியாயத்திற்கு ஒத்து இருக்கின்றது. பால்குடி மறவாத குழந்தைகளுக்கு விவாகஞ் செய்கிற கொடியவழக்கம் சில ஜாதியாருக்குள் நடந்தேறிவருகிறது. அதனால் உண்டாகும் தீமைகளோ அநந்தமென்று தெரிந்திருந்தும், மற்ற தேசங்களில் பாலிய விவாகம் அருமையென்று உணர்ந்தும் இக்கொடிய வழக்கத்தைக் கைவிட நம்மவர்கள் துணிகிறதில்லை. இதற்குக் காரணம் என்னவென்று ஆலோசிப்பமாயின் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்தைக் கொஞ்சமும் பாராட்டாமல், "**வழக்கம்**" என்கிற கொடுங்கோல் அரசனுக்கு அடிமைபூண்டு இருக்கிறதென்று தோன்றுகிறது. இந்த மன்னனுடைய கொடி இந்நாட்டில் எங்கும் பறக்கிறது. அவனுடைய கொடுங்கோல் அரசை வாழச்செய்கிறவர்கள் கல்வி கேள்விகளின் வாசனையற்ற நமது சகோதரிகளே. இவர்களும் தேவானுகூலமாக நாம் அடைந்த கல்வியினால் உண்டான சிறித்ஞானத்தையாவது அடைவார்களானால் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்தின் பெருமையை உணர்வார்கள். உணர்ந்தாலோ நாளாவட்டத்தில் "**வழக்கம்**" என்கிற கொடியபாதகனது கொட்டம் அடங்கிப்போம். நான் மேற்குறித்த பாலிய விவாகத்தைப்போன்ற அவ்வளவு கொடியதாய் இல்லாமற்போனாலும் தீமையுண்டாக்கத்தக்க மற்றும் பல துராசாரங்கள் உண்டு. அவைகள் இன்னவென்றும், அவற்றால் உண்டாகும் கெடுதிகள் இன்னவையென்றும், இங்கு எடுத்துரைக்கப் புகுந்தால், பெரிய ராமாயணமாகுமாதலால் கொடியதிலும் கொடிதாகிய பாலியவிவாகம் ஒன்றைமாத்திரம் இங்கு திருஷ்டாந்தமாகக் காட்டினேன். ஆண்பாலார் துராசாரங்களைப் போக்கமுயன்றாலும் அவர்கள் காரியம் சித்திபெற தடையாயிருப்பவர்கள் பெண்பாலாரென்று, நாம் பழிச்சொல் ஏற்பவர்களாய் இருப்பதினால் நாம் நமது பர்த்தாக்களுக்குத் துணையாய்நின்று அவர்கள் செய்யும் நன்முயற்சியைனால் ஆனமட்டும் பலித்மாக்கவேண்டும்.

ஆசாரசீர்திருத்தத்தில் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்தை அனுசரிக்கவேண்டியது போலவே இன்னொரு முக்கியமான விஷயத்திலும் அவ்வாக்கியத்தை அதிகமாகக் கொண்டாடவேண்டியவர்களாய் இருக்கிறோம். அவ்விஷயம் என்னவெனில் இவ்வுடல் அழிந்தும், என்றும் அழியாததான ஆத்துமார்த்தம். நித்தியானந்த வாழ்வைப் பெறுவதற்குத்தான் பக்திசெய்ய வேண்டுமென்று யாவரும் சொல்லுகிறார்கள். அதற்குத்தான் அநந்தமான நூல்கள் உண்டாயிருக்கின்றன. இந்த வாழ்வை அடைவதற்குப் பலமார்க்கங்கள் உண்டு. ஒவ்வொருமார்க்கமும் ஒவ்வொருமதமாய் இருக்கிறது. இந்நாட்டில் ஒவ்வொருமதத்திலும் பலகிளைகள் உண்டு. அன்றியில் ஆண்களுக்கு ஒருவழி, பெண்களுக்கு ஒருவழி. ஒரு குடும்பத்தில் ஒரு கிழ அம்மாள் இருந்தால் காட்டேரியோ, முனீஸ்வரனோ அல்லது வேறுவித தேவதையோ அந்தம்மாளுக்கு வழிபடும் தெய்வம். அந்தம்மாள் குமரனோ சைவராகவாவது வைஷ்ணவராகவாவது இருப்பார். அம்மாள் புருஷனோ வேதாந்தி என்று சொல்லிக்கொண்டு திரிவார். அவ்வொரு வீட்டிலேயே பல தேவதைகளுக்கு அந்தந்த விரதநாள்களில் பூசை புரஸ்காரங்கள் நடக்கும். வீட்டிற்குத் தலைவராயிருக்கிறவர், இவைகளெல்லாம் பெண்டுகள் காரியங்களென்று தன்னைப்போல் அவர்களும் தெளிவடைய வேண்டுமென்கிற எண்ணம் கொஞ்சமும் இல்லாமல் விரதநாள்களில் சலித்துக்கொண்டாவது பணங்கொடுத்து பண்டு பலகாரங்களை நன்றாய் சாப்பிடுவார். காட்டேரி முனீஸ்வரன் முதலிய தேவதைகளைத் தொழும்படியாயும் புண்ணியதினங்கள் என்கிற சாக்கில் பலகாரங்களைச் செய்யும்படி பெண்டுகளை விட்டிருப்பதுடன் சிறந்த பக்தி இன்னதென்று தெரிந்துகொள்ள பெண்டுகளுக்கு ஞானம் இல்லையென்றும் சொல்லுவார்கள். நம்மை இதைக்காட்டிலும் இழிவுசெய்யும்படியான விதம் என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஔவைப் பிராட்டியைக் கண்டாவது நமக்கு புத்தி சிரேஷ்டம் உண்டென்று கொள்ளலாம். தெய்வப் பிறப்பாய் வந்தவள் ஔவை ஆதலால் மற்றப் பெண்பாலாரை அவளோடு ஒப்பிடக்கூடாதென்றால், இக்காலத்திய ஐரோப்பிய மாதுசிரோன்மணிகளைக் கண்டாவது இந்நாட்டில் வங்காளம் முதலிய இடங்களில் உள்ள கற்றுத்தேறிய சுதேச மங்கையர்களைக் கண்டாவது பெண்பாலாருக்கும் பரமார்த்த நூல்களை அறியும் சக்தி உண்டென்று தேர்ந்து நம்மிடத்தில் இழிவுகூறாது விடு

வார்களாக. அவர்கள் எவ்வாறு சொல்லினும் சொல்லுக; நம்முடைய பெண்பாலுக்குரிய சிறப்பு இருந்தேயிருக்கிறது. நாம் மாத்திரம் "நன்மை கடைப்பிடி" என்கிற வாக்கியத்தை நன்றாய் உணர்ந்து எந்த மார்க்கத்தைப் பற்றுவதினால், நமக்கு சிறந்த ஞானம், பக்தி, சிரத்தை ஆகிய இவைகள் கைவல்லிய மாகி இகபரசாதனங்களை நாம் அடையக்கூடுமோ அதை நன்காராய்ந்து கடைப்பிடியாகப் பிடிக்க வேண்டும். அப்போதுதான் "நன்மைகடைப்பிடி" என்கிற வாக்கியத்தை அனுஷ்டித்தவர்கள் ஆகலாம். இதுவிஷயத்தில் நாம் செய்யும் நன்முயற்சிக்கு ஜெகதீசன் அருள்புரிவாராக.

## நிர்வாணம், தியானம், சமாதி.

1. நிர்வாணமாவது, கெட்ட எண்ணங்களைப்போக்கி நிற்கும் மனத்தின் நிலைமை. கெட்ட எண்ணங்களை நீக்கி நல்ல எண்ணங்களால் மனத்தைநிரப்புவது, நிர்வாணமாகும். *நல்ல எண்ணங்களால் நிறைந்தமனது, 'நான்,' 'எனது' என்னும் அகம்பாவம் ஒழிந்து நிற்கும். ஒழிந்துநிற்கவே, துவிதம், அதாவது இரண்டென்னும் தோற்றம் ஒழியும். சகலவுயிர்களும் தான் எனவும், தானே சகலவுயிர்கள் எனவும்வரும். இரண்டென்னும் பாவம் ஒழிந்து, சகலவுயிர்களுடன் தானும் கலந்து நிற்கும் நிலைமையே நிர்வாணமாகும்.

2. தியானம், சமாதி என்னும் நிலைமை, மனத்தின் நிலைமையாம். சமாதி நிலைமை, இரண்டற்று நிற்பதே சமாதியென்பர். இரண்டற்று என்பதில் இரண்டென்பது என்னவெனில், காண்பான் காட்சி. அதாவது, காணும் பொருளும், அப்பொருளை அறிகிறவனுமாம்.

3. காண்பானும் காட்சியும் வஸ்துவில் வேறாகுமா? காண்பானை நோக்கக் காட்சியில்லாமற் போகின்றபடியாலும், காட்சியை நோக்கக் காண்பான் இல்லாமற் போகின்றபடியாலும், வஸ்துவில் தனிப்பொருள்கள் ஆகா. வேறாகும் எனில், எண்ணத்தில் மாத்திரம் வேறேயொழிய, வஸ்துவில் வேறாகா. எப்படியெனில், தீட்சண்யத்தை நெருப்பினின்று மனத்தினால் பிரித்து அறியலாமேயொழிய, தனிவஸ்துக்களாகப் பிரிக்கமுடியாது. அதுபோல், காண்பானும் காட்சியும் எண்ணத்தில் வேறுபொருள்களாகத் தோன்றியபோதிலும், வஸ்துவில் ஒன்றே. ஆதலின், வஸ்துவில் நான் என்னுங் காண்பானும் நீயென்னுங் காட்சிப்பொருளும் வேறாக இல்லை எனப்பெறப்பட்டது.

4. துவிதத்தைப்போக்கி நிற்பதே சமாதி என்பர் என்றோம். மேற்போந்த காரணங்களால், "நான்", "எனது" என்னுந்துவிதம் சமாதியில் கிடையாது. அதாவது சகலவுயிர்களும் தானாகி நிற்றலே சமாதியாகும். இச்சமாதி, ஒருவழிப்பட்ட மனத்தின் நிலைமையாகும். இவ்வித சமாதி, நல்ல எண்ணங்களால் மனத்தை நிரப்புவதால் வருவதே யொழிய, மூர்ச்சை அடக்குவதாலும், யோகாப்பியாசங்களாலும், நினைப்பு, மறப்பு, எண்ணமற்று நிற்பதாலும் உண்டாவதல்ல.

5. மூர்ச்சை அடக்குவதால் மனம் ஒரு நிலைமையில் நிற்குமென்றால், மூர்ச்சை அடக்குவது தேகத்துக்கு உபத்திரவம் ஆகும். உபத்திரவத்தால் மனம் ஓர் வழிப்பட்டு நின்றதென்பது அனுபவமாகுமா?

6. நினைவற்று நிற்றலால் மனம் ஒரு வழிப்படுமென்றால், நினைவு இல்லாமல் ஒழியுங்காலம் அநித்திய காலமாகும்! உயிரோடுகூடிய காலத்தில் அநித்திய நிலைமையில் நிற்பதைக் காட்டிலும், தற்கொலை புரிவதே நலமாகும்!!

7. நினைப்பு மறப்பு ஒழிந்த நிலைமையே சமாதி எனில், உலக காரியங்களும், ஜீவர்களின் மேல் அன்பும், அவர்கள் அடையவேண்டிய விர்த்தியும் நிகழ்வதெப்படி? நினைவோடு

* நல்லெண்ணங்களாவன:—நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு, ஆகிய அஷ்டாங்கமார்க்கங்களாம். "பழித்திடாப் பழுதில் வாழ்க்கையெட்டையும் பாரித்து"—

சிவஞானசித்தியார்.



கூடியிருந்தாலன்றோ பரோபகாரம், ஜீவகாருண்ணியம், தயை முதலிய சத்விஷயங்கள் பாராட்ட ஏதுவாகும். கண்களை மூடிக்கொண்டு நினைப்பற்று மறப்பற்று நின்றால், பசிதாகம் முதலிய வினைகளைத் திருப்திசெய்வதெப்படி? உயிர்கள் அடையவேண்டிய பலனைப் போதிப்பதெப்படி?

8. சிறிதுகாலம் நினைப்பற்று, சிறிதுகாலம் நினைப்புடன் இருப்பது எனில், நினைப்பற்று இருப்பதால் வரும்பயன் யாது? உனக்குப்பயன் எனில், துவிதமாகும். நீயென்றவனே சமாதியில் இல்லையென்று சொல்வதால், உனக்குப்பயன் எப்படியாகும்? உனக்குப் பிரயோசனம் இல்லையெனில் மற்றவர்களுக்குப் பிரயோசனம் எவ்விதம்? நான் என்னும் பாவம் இல்லை. ஆதலால், நானே சகலவுயிர்களாக இருப்பதால், நினைவற்று இருத்தலால் வரும் பயன் சகலவுயிர்களும் அடையும் எனில், சகலவுயிர்களும் விஷயங்களை நினைவுடன் தெரிவித்தாலொழிய அறியா. ஆகலின், நினைவற்று இருத்தல் உயிர்களுக்குப் பிரயோசனமாகா. ஆதலால், சமாதி நிலைமை "அதல்ல, இதல்ல, அனுபவத்தில் தான் தெரியும்" என்பது ஏயத்தலாகும்; தெளிவாகா.

9. ஆகலின் 'நான்' 'எனது' என்னுந் துவிதம் ஒழிவது நினைவோடுகூடிய நிலைமையில் தான் வரும்.

10. "சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல்" என்னும் வாக்கியப்படி கெட்ட எண்ணங்களை ஒழித்த மாத்திரத்தில் துவிதம் அழியும். அழிந்த மனமே சமாதியடைந்த மனமாகும். அதுதான் நிர்வாணம் ஆகும்.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## சோம்பேரித்தனம்.

இல்லாமை சோம்பேரிக்கு உரியது: விசனத்தைத்தவிர வேறொன்றும் அவனுக்கு உண்டாவதில்லை.

சோம்பேரித்தனம் சரீரத்துக்கு ஒரு பெரியவியாதி: எப்படியென்றால் அதனால் மிகுந்த பாபமும், விசனமும், தொந்தரவும் உண்டாகின்றன.

முதலாவது: உடம்பு வணங்காதவன் பிறரிடத்தில் பொய்சொல்வதற்குப் பின்வாங்க மாட்டான். அதற்கு திருஷ்டாந்தமாக யாராயினும் அவனை பலான மனிதனிடத்திற்கு போய்வரும்படி சொன்னால் உடனே அவன் வீட்டிலில்லையென்று சொல்லிவிடுகிறான். யாதாயினும் ஒரு வஸ்து கொண்டுவரும்படி சொன்னால் அது அகப்படாது எனக்குத்தெரியும் என்று சொல்லுகிறான்.

இரண்டாவது: சோம்பேரி தனக்கு உத்ஸாகமாயிருப்பதைத்தான் அநுசரிப்பான். வேலைக்கு அருகனல்ல. எப்பொழுது தன் வேலையை செய்கிறதில்லையோ, அவன் சொத்தும் சௌக்கியானுபவங்களும் நாளுக்கு நாள் குறையும். கடைசியில் துஷ்டத்தனத்துக்கே அருகனாகிறான்.

READINGS AT HOME.

A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.

10-ம் நாள் படிப்பு.

பத்தாம்தினம், ருக்மணியம்மாளும் பெண்களிருவரும் கைலாசத்தாத்தாவும் வழக்கம்போலக் கதாசிரவணத்துக்கு வந்து கூடினார்கள். சுப்பலெக்ஷ்மியும் புஸ்தகத்தையெடுத்துப் பின்வருமாறு படிக்கத்தொடங்கினாள்.

"அரசர்பிரானாகிய நளமஹாராஜன் இவ்வாறு தமயந்தியைத் திருமணம்செய்துகொண்டபின், தன் மனைவியோடும் தன் நகருக்குச் செல்லக் கருதி, அதனை மாமனாகிய வீமராஜனுக்கு உணர்த்தினான். வீமராஜனும் தன் மனைவி முதலான சுற்றத்தாரை யழைத்து அச்செய்தியைத் தெரிவித்து, மகளையும் மருமகனையும் பிரயாணமாக அனுப்புவதற்கு வேண்டிய எத்தனங்களைச் செய்தனன். மகளுக்கு ஸ்த்ரீதனமாக ஆயிரம் குதிரைகளையும், இரண்டாயிரம் தேர்களையும், ஆயிரத்தறுபத்தொன்பது யானைகளையும், கொடுத்துக், கற்பகநாட்டைப்போல வளமிகுந்த ஐம்பது பேரூர்களையும், மணிமயமான கட்டில், மெத்தை, பேழை, கவரி, சாமரை முதலான அனேக பொருள்களையும், பூஷணங்களையும், ஆடைகளையும், அபரிமிதமாகக் கொடுத்துப் பிரயாணம்பண்ணுவித்தான்.

தமயந்தியைவிட்டுப் பிரிதலினால் தாய்தந்தையருக்கும் சுற்றத்தாருக்கும் உண்டான வருத்தம் அளவிடற்பாலதோ? அவர்கள் அவளைப் பலமுறையும் ஆசையோடு நேசமாகக் கட்டியணைத்து முத்தமிட்டு, "எம்மிளங்கிளியே உன்னைப்பிரிந்து நாங்கள் எவ்வாறு உயிர் தரித்திருப்போம்? உயிரைவிட்டு எவ்வாறு உடல் தனித்துநிற்கும்?" என்று பலவாறு சொல்லி வருந்துமளவில், புரோகிதராகிய கௌதமமுனிவர் வந்து அவர்களைநோக்கிப், "பெண்கள் புக்ககம்செல்லுதல் உலகில் தொன்றுதொட்டுள்ளவழக்கம்தானே. அவர்களுக்குப்பிறந்தகம் மூவைந்து பதினைந்து பிராயம்மட்டுந்தானே உரியது. புக்ககம்தானே முழுதும் சாசுவதமானது. ஸ்ரீமஹாலக்ஷ்மியைத் திருமாலோடும் பெற்றதாயாகிய பாற்கடல் அனுப்பவில்லையா"? என்று பல நியாயங்களைச்சொல்லி அவர்களைத்தேற்றினார். அவர்களும் ஒருவாறு தேறித் தமயந்தியுடன்செல்லும் அவளது உயிர்த்தோழியைநோக்கி, "இதுவரையில் தமயந்திக்கு நாங்கள் தாயாராயிருந்தோம்; இனிமேல் நீயேதாயார்; உன்னைவிட எங்களுக்கு அதிகமல்ல; அவளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்க;" என்று சொல்லியனுப்பிக் கன்றைவிட்டுப்பிரிந்த கறவைபோல வருந்தியிருந்தனர்.

தாத்தா.—பெண்களைவிட்டுப் பிரிதலென்றால் நிரம்பக்கஷ்டம்தான். ஒருவரோடு ஒரு நாள் பழகிவிட்டால் அவரைவிட்டுப்பிரிதல் எத்தனை கஷ்டமாயுள்ளது! பிறந்தது முதலா எடுத்து வளர்த்து ஆசையோடு நேசம்வைத்து இராப்பகலாக நெடுநாள் பழகியபின் விட்டுப்பிரிதல் எளிதோ? அதிலும் பெண்களைத் தூரதேசங்களுக்கனுப்புதல் ஆற்றக்கூடாத பெருந்துபராகவே யிருக்கும். ஆனால், இந்நாளில் மஹாராஜன், வெள்ளைக்காரன், 'ரெயில்' போட்டபின் தூரமெல்லாம் சமீபமாய்ப் போய்விட்டது. பணச்செலவுசெய்ய வல்லவர்களுக்குத் தினம் ஒருநடை வேண்டுமானாலும் போய்ப் பார்க்கலாம். இல்லாதவர்களுக்குக் கஷ்டம்தான். இதற்குப்பயந்துதான் அநேகர் உள்ளூரிலும் நெருங்கிய பந்துக்களுக்குள்ளும் சம்பந்தம் தேடுகிறார்கள்.

ருக்மணி.—பெண்களுக்கு அவ்வளவு துயரம் இராது. தம்புருஷர் வீடுவாசல் யோகக்ஷேமங்களில் சீக்கிரம் மறந்துவிடுவார்கள். 'பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு,' என்றபடிப் பெற்றோர்களுக்கு மனம் கரைந்து கொண்டேயிருக்கும்.



ஆயினும், பெண்களைப் பெற்றுவளர்ப்பது வீட்டில் வைத்துக்கொண்டிருப்பதற்கன்றே. அவர்கள் கணவரோடு ஒற்றுமைப்பட்டு அனபாகச்சுகித்து வாழ்ந்து பிள்ளைகளைப்பெற்றுப் பெருகுவதுதான் பெற்றோர்களுக்கு ஆனந்தம். இதுநிற்க, பெண்களை நெருங்கிய பந்துக்களுக்குள்ளேயும், உள்ளூரிலும், கொடுப்பது ஒரு காரியத்துக்கு அனுகூலமாயிருப்பினும், சிலகாரியங்களுக்கு மிகக் கெடுதியாகின்றது. நெருங்கிய பந்துக்களுக்குள்ளே சம்பந்தம் செய்வதால், காயபல மனோபலங்களுக்குக் குறைவுண்டாகுமென்றும், விருத்தியாதற்கிடமில்லையென்றும்; அச்சம்பந்தங்களால் உண்டாகும் சந்ததிகளுக்குத், தாய்தந்தையர் இருதிறத்தாரும் சற்றேறக்குறைய ஒரே குணமும் நடையும் உடையவராதலின், அக்குணங்களையன்றி வேறே சிறந்த குணமும் உயர்ந்த நடையும் தோன்றுதற்கிடமில்லையென்றும், தத்வநிரூபணம் செய்த பண்டிதர்கள் சொல்லுகின்றார்கள். தூரதேசங்களில் வேற்றுக்குணமும் புத்தியும் நடையும் உடையாரோடு சம்பந்தம்செய்தால், இருதிறத்தாருடைய குணங்களும்கலந்து ஒன்றையொன்று பலப்படுத்திச் சந்ததிகளுக்குத் திடகாத்திரமும், சூக்ஷ்மபுத்தியும், செம்மைக் குணங்களும், உண்டுபண்ணுமென்கின்றார்கள். ஒரு ஜாதியைவிட்டு இன்னொரு ஜாதியில் சம்பந்தம்செய்தால் இக்கொள்கைக்கு மிகவும் அநுகுணமாயிருப்பினும், ஒரு ஜாதியிலேயாயினும் கூடிய வரையில் நெருங்கிய சுற்றத்தாரைவிட்டுச் சம்பந்தம்செய்தல் நலமாயிருக்கும்.

தாத்தா:—ஆமாம் நீ சொல்லுவதுண்மையே. நம்தேசத்தில் புஜபல பராக்கிரமங்களில் மேன்மைபெற்றவர்களில் இராவணனை விட ஒருவருண்டா? கைலாசமலையைக் கையாற்பெயர்த்தெறிந்த வீரனன்றோ? இவன்புத்திவன்மைக்கும் அளவில்லை. சாமவேதத்துக்குப் பண்வகுத்துச் சீர்திருத்திய பண்டிதனன்றோ? இவன் யாருடையசந்ததி? தகப்பனார் விச்சிரவசு என்னும் பிராமணர்; தாயாரோ ஆரிய ஜாதியேயன்று, அநாரியை. இன்னம் இதுபோல முற்காலத்தி லெவ்வளவோ சம்பந்தங்கள் நடந்திருக்கின்றன.

ருக்மணி.—ஆமாம்; முற்காலத்தில் இப்போதுள்ள கள்ளாசாரங்களும் திருட்டுப்புத்தியும் கிடையாது. நீசமும், உயர்வும் ஊனுடைகளாலும் தொழில்களாலும் உண்டாவனவாக இக்காலத்திற்போல் அக்காலத்திற்கருதவில்லை. ஆதலின் இக்காலத்திற்போல இவ்வளவு கட்டுப்பாடும் கிடையாது. நன்மையென்று கண்டவற்றை நாலுபேரும் அங்கீகரிப்பார்கள். நிற்க, மேலேவாசி சுப்பு.

சுப்பு வாசிக்கிறாள்.—"நளமஹாராஜன் தன் மனைவியோடும், பந்துவர்க்கங்களோடும், நால்வகைச்சேனை சூழவிதர்ப்ப நகரைவிட்டுப் புறப்பட்டுத், தன் இராஜதானியாகிய மாவிந்த நகருக்கு வந்துசேர்ந்தான். தமயந்திக்கு இக்காலம்தான் அவள் வாழ்நாளில் மிகவும் இனிமையானகாலம். எழிலும் இளமையும், பொருளும் போகமும், அருளும் அன்பும், இடமும் ஏவலும், எல்லாம் ஒருங்குகூடியிருந்தன. 'காதலிருவர் கருத்தொக்க ஆதரவாப் பட்டதே இன்பம்' என்றபடிப் புருஷனும் ஸ்த்ரீயும் கண்ணிரண்டும் ஒரேபொருளையே பார்த்தல்போல, ஒருவர்க்கொருவர் மாறுபாடின்றி ஒருமனப்பட்டு, உயிரும் உடலும்போல ஒன்றுபட்டு நேசித்துவாழும் இல்லறவாழ்க்கையினும் இனியதொன்றுள்ளதோ? தமயந்தி தன் பிராணநாயகனோடு அந்தப்புரத்திலும் ஆராமங்களிலும் கூடிக்களித்துப் போதுகொய்தும், புனல்விளையாடியும்; தேம்பாடியும், இன்னுரையாடியும், அடைந்த சுகானுபவத்துக்களவுமுண்டோ? அன்றியும்,

"அன்னைதயையும், அடியாள்பணியும், மலர்ப்
பொன்னினழகும், புவிப்பொறையும்—என்னுநல்சேர்
வேசிதுயிலும், விறல்மந்திரிமதியும்,
பேசிலிவையுடையாள் பெண்."

அதாவது, தன் கணவனுக்கு அன்போடும் இனிய உணவுகளை யூட்டுவதில் தாய்போலவும், உரியபணிவிடைகளைச் செய்வதில் தாசியைப்போலவும், அழகில் இலக்ஷ்மியைப்போலவும், பொறுமையிற் பூமிதேவியைப் போலவும், சயனத்தில் வேசியைப் போலவும், உரிய ஆலோசனைகளைச் சொல்வதில் மதியால்வல்ல மந்திரியைப்போலவும், ஆகிய இக்குணங்கள் அமைந்தவளே பார்யை யென்னப்படுவாள். அவளாலே குலமெல்லாம் உத்தரிக்கும். என்று பெரியோர் கூறியபடித் தமயந்தி சகல நற்குணங்களும் நிறைந்தவளாய் நளனுக்கு பார்யாரத்நமாக விளங்கிவந்தனள்.

இவ்வாறு, இவ்விருவரும் மதனும், ரதியும் போல மகிழ்ந்துவரும் காலத்தில், "மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்—நன்கலம் நன்மக்கட்பேறு" என்றபடித் தமயந்தி மனைமாட்சிக்கு விசேஷ பூஷணமாகிய நன்மக்களையும் பெற்றாள். முதலில் ஒரு ஆண் குழந்தையையும், பின்னர் ஓர் பெண்குழந்தையையும் பெற்றாள். அரசர் பிரானும் குழலிசையினும் இனிமைமிகுந்த அம்மக்களது குதலைச்சொற்களைக்கேட்டு மனமுருகி ஆனந்தக் கடலில் மூழ்கினான்.

சிவகாமி.—நமது ஸாஸ்திரங்களில் சொல்லியிருப்பதெல்லாம் நன்றாய்த்தானிருக்கிறது. அதை அநுசரித்து நடப்பதுதான் நமக்குள்ளே பூஜ்யம். பாரியைக்கு வேண்டியகுணங்கள் இன்னின்னவையென்று வகுத்துக்கூறியது நன்றாயிருக்கிறது. இக்குணங்கள் ஒருவர்க்குச் சுபாவத்தில் உண்டாகக் கூடியவைகளோ? பயிற்சியினாலேதானே உண்டாகவேண்டும். அதற்குத்தக்கபடி யார் பயிற்றுகின்றார்கள். புருஷனுக்கு மந்திரிபோல ஆலோசனைகளைச் சொல்வது தக்க சுதந்திரமும்படிப்பும், அநுபோகமும், இன்றி எவ்வாறாகும்?

காந்தா.—ஆமாம்; இக்குணங்கள் இல்லாமையினாலேயே நமக்குள் ஸ்த்ரீகள் பெரும்பாலும் புருஷனுடைய யோகக்ஷேமங்களில் உள்நுழைந்து அவனோடும் அநுதாபப்படுவதில்லை. அநேகர் சம்பாதித்துப்போடுவது புருஷன் காரியமென்றும், சமைத்துப்போடுவது தங்கள் காரியமென்றும், எண்ணுகிறார்கள். மேலும் நகைப்பேய்பிடித்து சிலர் புருஷர்களைக் கூரிய கொர்குளைமுள்ளைப்போலக் குத்திப் பிடுங்குகிறார்கள். இவர்களுக்குப் புருஷன் சுகதுக்கம் எள்ளளவும் அறியத் தேவையில்லை. தங்களுக்கு எப்படியாயினும் முகத்திலும், காதிலும் மாட்டிவிடவேண்டும். இதற்குக்காரணம் அவிவேகமேயன்றி வேறில்லை. இவ்வவிவேகத்துக்குக்காரணம் படிப்பில்லாமையே.

ருக்மணி.—படிப்பு அவசியம் பெண்களுக்கு வேண்டியதே. ஆயினும், இக்குணங்களெல்லாம் படிப்பினாலே வரத்தக்கவையென்று எனக்குத் தோற்றவில்லை. படிப்புள்ள ஐரோப்பியப்பெண்கள் புருஷரைப் படுத்திவைக்கும் பாட்டை. விசாரித்தாலல்லவோ தெரியும். நம் பெண்கள் நகைக்கு ஆசைப்படுகிறார்கள்; அவர்கள் உடைக்கு ஆசைப்படுகிறார்கள். நாழிக்கொருதினுசு உடுத்தால்தான் அவர்களுக்குச் சரீரம் பாந்தமாயிருக்குமாம். எப்படியானால் தான் என்ன? புருஷனுக்கு ஹிம்சை யிரண்டும் ஒன்றுதான். ஆதலால் இந்நற்குணங்கள் அநேகமாகப்பழக்கத்தினாலே யுண்டாகவேண்டும். இவ்வனைத்திற்கும் அஸ்திபாரமாயிருப்பது அன்பு. அன்பொன்றுண்டானால் மற்றக் குணங்களெல்லாம் தானேயுண்டாகும். அன்பொன்றில்லையாயின் மற்று ஆயிரம் குணமிருந்தும் பிரயோசனமில்லை. அன்



பில்லாப் பெண்டிரோடு வாழ்தலைப்பற்றி ஞானபானுவாகிய ஔவையார் அருளிச்செய்திருப்பது உமக்குத்தெரியாதோ? "கொடியது கேட்கின் நெடியவெவ்வேலோய், கொடிது கொடிது வறுமைகொடிது; அதனினுங்கொடிது இளமையில் வறுமை; அதனினும்கொடிது ஆற்றொணாக்கொடுநோய்; அதனினுங்கொடிது அன்பிலாப்பெண்டிர்; அதனினுங்கொடிது இன்புற அவர்கையில் உண்பதுதானே," என்று எவ்வளவு உண்மையாகக் கூறியிருக்கின்றாள்!

இன்று இவ்வளவுபோதும் கதையை நிறுத்துவோம்.

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## பயிர்கள் எப்படி வளருகின்றன.

உலகத்தில் எல்லாத் தேசங்களைவிட இந்தியாவில் பயிர்செய்வோர் அதிகமென்றே யெண்ணுகிறோம். ஆனால் அவர்களில் எவ்வளவுபேர் பயிர்வளர்ச்சியின் முறைகளைப்பற்றி யோசிக்கிறார்கள் என்பதை நினைக்க நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது.

எந்தச் செடியையாவது நாம் ரசாயன சாஸ்திரவழியாகப் பிரித்துப்பார்த்தால் அது ஏறக்குறையப் பதினைந்து மூதற்பொருள்கள் அல்லது மூலவஸ்துக்கள் (Elements) பல வேறளவினவாகச்சேர்ந்து ஆயிருக்கின்றதெனத் தெரியவரும். இப்பதினைந்து பொருள்களில் பத்து எல்லாச்செடிகளிலும் இருப்பதாலும் மேலும் அவை யெல்லாவற்றையும் வேண்டிய அளவிற் பெறாவிடில் எந்தப்பயிரும் சரியாக வளருவதில்லை யாதலாலும் இப்பத்தும் பயிர்களின் முக்கிய ஆதாரமாகக் கருதப்படுகின்றன. அவையாவன: (1) கரி, (2) ஹைட்ரஜன் (Hydrogen), (3) பிராணவாயு, (4) நைட்ரஜன் (Nitrogen), (5) கந்தகம், (6) பாஸ்பரஸ் (Phosphorus), (7) பொடாசியம், (8) மேக்னீசியம், (9) கால்சியம், (10) இருப்பு என்பவையாம். இவை இன்னும் சில அவ்வளவு முக்கியமில்லாத முதற்பொருள்களோடு வெவ்வேறு விதமாகக்கூடி நமக்குப் பயிர்களிலிருந்து கிடைக்கும் பொருள்களாகின்றன. ஹைட்ரஜன், பிராணவாயு இவை இரண்டும்சேர்ந்து தண்ணீராகின்றது. இத்தண்ணீர்தான் எல்லாச் செடிகளிலுமுள்ள முக்கியமானபொருள். முதல் மூன்றும் சேர்ந்து சர்க்கரை, எண்ணெ, ஸ்டார்ச்சு (Starch) என்பவையாகின்றன. முதலைந்தும் சேர்ந்து விதைகளின் முக்கியபாகமும் தண்டு, இலை, இவைகளின் அணுக்களில் (Cells) நிறைந்துள்ளதுமாகிய 'ப்ரோடோப்ளாஸ்ம்' (Protoplasm) என்னும் ஜீவப்பொருள் ஆகின்றது.

மேற்சொல்லியவற்றில் கரி முதலான சிலவற்றையே ஆகாயத் (air) திலிருந்து செடிகள் பெறுகின்றன.

நைட்ரஜனும் மேலேசொன்ன ஜாப்தாவில் அதின்பின் நிற்பவையும் நிலத்திலிருந்து கிடைக்கின்றன. தொன்றுதொட்டுவரும் பழக்கத்தாலே* செடிகள் உணவுட்கொள்ளுதலுக்கு அழகான ஒருவழி உடைத்தாயிருக்கின்றன. ஆகாயத்திலுள்ள கரிவாயுவானது (ஒருபங்கு கரியும் இரண்டுபங்கு பிராணவாயுவும் சேர்ந்து ஆகும் காற்று) இலைகளின் மெல்லிய தோலின்வழி உள்ளேசெல்லுகிறது. அங்கே பச்சை 'க்ளோரபில்' (Chlorophyll) என்னும் வஸ்துவால அதிலுள்ள கரிமட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபின் மீந்தபிராணவாயுவானது பிராணிகளுக்குபயோகப்படும்படி வெளியே வந்துவிடுகின்றது அப்பிராணவாயு பிராணிகளால் சுவாசிக்கப்பட்டு மறுபடியும் கரிவாயுவாகின்றது. நிலத்திலுள்ள லோகசம்பந்தமான மற்ற உணவுகள் செடிகளின்

* By the development of ages.

சிறிய மயிரிலைபோன்ற வேர் நுனிகளால் உட்கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை சிறு வேர்களின் மெல்லிய தோல்வழியே உட்செல்லுமுன்னர் கரைந்த ஸ்திதியிலிருக்க வேண்டும். வேர்களிலிருந்து ஓர்வகை திராவக (Acid) முள்ள நீர் ஊறுகின்றது. அது சாதாரண தண்ணீரில்கரையாத பலலோக சம்பந்தப் பொருள்களையெல்லாம் தன்னுட் கரைத்துக்கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. அவ்விதமாக நிலத்திலுள்ள உணவுத்தூள்கள் பக்கத்திலுள்ள வேர்களின் வழியாய் உட்புகுகின்றன. வயற்பயிர்களின் விஷயத்திலோ பயிர்கள் எவ்வளவுதூரம் சன்னமான கிளைவேர்கள்விட்டு உண்டபோதிலும், அந்நிலத்திலுள்ள முக்கிய உணவுகளான பாஸ்பரஸ், பொடாஷ், நைட்ரஜன், என்பவைகள் கொஞ்சம் கொஞ்சமாயிருத்தலால் சீக்கிரம் தீர்ந்துபோகின்றன. நிலம் எவ்வளவு காய்ந்ததாயிருந்தபோதிலும் அதில் செடிகள் வளரவேண்டுமானால் மிகுதியாக நீரிருத்தல்வேண்டும. ஏனென்றால் செடிகள் சூரியவெளிச்சத்தில் வளர்ந்துவரும்போது எப்பொழுதும் தம் வேர்வழியாய் தண்ணீரையிழுத்து அதைத்தண்டிலே மேற்செல்லவிட்டு பின் அத்தண்ணீரிலிருக்கும் உணவுமுற்றும் தம்முட்கொண்டபிறகு அந்நீரை இலைகளின் வழியாய் ஆவிரூபமாக வெளிவிடுகின்றது. இவ்வாறு அடிக்கடி வேர்கள் தண்ணீரையுறிஞ்சுதலால் நிலத்திலிருக்கும் தண்ணீர் ஓடுவதற்குக் காரணமாகிறது. அந்த ஓட்டத்தினால் நிலத்திலுள்ள தண்ணீரிற் கரையக்கூடிய செடியுணவுகள் கரைந்து வேர்களிடம்வர ஏதுவாகிறது.

இயல்பில் ஆகின்ற அழுகுந் தன்மை (கெட்டுப்போகும் தன்மை) யால் நிலத்திலுள்ள லோகசம்பந்தமான பதார்த்தங்கள் நீரிற்கரையக்கூடியனவாகின்றன. மேலும் ஒவ்வொரு நல்ல நிலத்திலும் கணக்கில்லாத அணுப்பிரமாணமான சிறுஜெந்துக்கள் (Bacteria) இருந்து இம்மாறுதலில் உதவுகின்றன. மேலும் அவைகள் காய்ந்த இலைகள் முதலியவற்றிலுள்ள நைட்ரஜனை வெடியுப்பாக்கி செடிகட்குபயோகமாக்குகின்றன. இவ்வுணவுகள் உட்கொள்ளத்தக்க ஸ்திதியில் கிடைத்தாலன்றி ஏற்றவளர்ச்சியும் விளைவும் உடைய செடிகள் இருப்பதரிது.

நிலத்தில் சீக்கிரம் குறைந்துவிடக்கூடிய பயிருணவுகள் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாஷ் என்பவையே என்று முன்னமே கூறினோம். ஆனால் இவ்விஷயக்கொள்கை தெரியாத வெகுநாள் முன்னமேயே கிருஷிகர், சாணம், எலும்பு, முதலியவை தம் வயல்கட்கு அதிகரித்த விளைவைத் தந்தனவென்று கண்டுபிடித்திருந்தார்கள்.

ஆனால் இயற்கைச்(Science)சாஸ்திர ஆராய்ச்சியானது. இந்த எருவுகள் ஏன் அந்த விளைவைத்தந்தன என்பதையுணர்த்தியபோது மனிதர்கள், இந்த உணவுப்பொருள்கள் ஒன்றும் பலவும் அதிகமாயும் உடனே பயன்படக்கூடியனவாயும் நிறைந்துள்ள வேறு ரசாயனப்பொருள்களைக் குறைந்த அளவாய் ஏன் எருவாக வுபயோகிக்கக்கூடாதென்று யோசித்தார்கள். பலமுயற்சிகள்செய்து கடைசியில் அது முடிவெய்தி, இப்போது ஐரோப்பா அமெரிக்கா தேசங்களில கிருஷிக்கு வேண்டிய எருவுகளைச் செய்துகொள்வது, ரசாயன சாஸ்திரத்தொழில்களில் முக்கியமானதாக இருக்கின்றது. கிரேட்பிரிடேன் தீவுகளிலிருந்துமட்டும் வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியாகிற எருவு 4-லட்சம் டன்னிற்கு மேற்படுகின்றது. இவ்விந்திய நாட்டிலும், ஜனத்தொகை மிக விரைவில் அதிகரித்தலாலும் அதனால் ஆகாரத் தானியங்கள் அதிகமாக வேண்டப்படுதலாலும் இந்நாட்டுக் கிருஷிகள் ரசாயனமுறைப்படி செய்த எருக்களை அதிகமாக உபயோகித்து, இது விஷயத்தில் தான்யவுற்பத்தி செய்யும் பிறதேசங்களின் கிருஷிமுறைக்குச்சமமாகத்தாம் அனுசரிக்கும் கிருஷிமுறையை விர்த்திசெய்து முன்னுக்குக்கொண்டுவரவேண்டிய அவசியம் நேரிடுமென்பது நிச்சயமாய்த் தோற்றுகிறது.



வங்காள ராஜாங்கத்தார் பரீட்சார்த்தமாக ஏற்படுத்திய விளைநிலங்களில் (Expermental farms) செய்த பரிட்சைகளில் இவ்விதமாக தயார்செய்யப்படும் எருவுகள் மற்ற தேசங்களிற்போலவே இந்நாட்டிலும் பயன்கொடுக்குமென்பதை யறிவித்தன. மேலும் நெல்விளைவானது அவ்வெருவால் இரட்டித்ததென்றும், எருவின் விலையைக்கழித்தபின்னும் அதிகலாபமிருந்ததென்றும் கண்டார்கள். இப்போது இருப்பதைவிட அதிகவிளைச்சலுக்காக அதிக நிலங்களை (நிலங்கள் கிடைத்தாலும்) நூதனமாகப்பயிரிடுவதைவிடக் கிருஷிகளுக்கு எருவால் விளைவை யதிகப்படுத்திக்கொள்வது மிக லாபகரமாக இருக்கின்றது. ஏனென்றால் அதிக நிலங்களை சாகுபடிசெய்தால் அதன் கந்தாயமும், வேலிபோடல், உழுதல் முதலிய செலவுகளும்சேர்ந்துசெலவு மிக அதிகமாகின்றது. ஆனால் பின் சொல்லியதிலோ எரு விலைதான் கிருஷிகள் செலவுசெய்ய வேண்டியிருக்கின்றது.

இந்தியாவிலே பயிர்வளம் தரும் பொருள்கள் ஏராளமாயிருக்கின்றன. ஆனால் எலும்பு, புண்ணாக்கு, வெடியுப்புமுதலிய எருவுக்குபயோகமான பொருள்கள் (அவற்றின் உபயோகத்தைக்கண்டறிந்த) வேறுதேசங்களுக்கு ஆயிரக்கணக்கான டன்களாக வருஷா வருஷம் இங்கிருந்து ஏற்றுமதி யாகின்றபடியால் இவ்வளந்தரும் வஸ்துக்கள் அற்றுப்போகக்காரணமாகி நிலவளமும் குறைய ஹேதுவாகின்றது. இந்தியாவில் எருவிடுதல் ஏறக்குறைய மற்றெல்லாதேசங்களைவிடக் குறைந்த செலவில் ஆகும்.

இராஜாங்கத்தார் இதுவரையிலும் விவசாயத்தை விருத்திசெய்வதற்காக, குளங்கள் வெட்டுவதிலும் இருப்புப்பாதை போடுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்திவந்தார்கள். இந்தவிவசாய விருத்திவிஷயத்தில் இன்னும் செய்யவேண்டியது அதிகமிருக்கின்றது. விளைவையு மதிகரிக்கச்செய்து நிலவளப்பத்தையும் குன்றாதிருக்கச்செய்யும் அந்த மார்க்கத்தையும் நாம் கவனிக்காதிருக்கக்கூடாது.

மழையுங்குறைந்து இருக்கின்ற கொஞ்சம் தண்ணீரால் பாயப்பெற்ற பூமிகளிலிருந்து எவ்வளவு விளையக்கூடுமோ அவ்வளவும் விளையவேண்டிய அக்காலங்களில் எருவிடுதல் மிகப் பயனுள்ளதாயிருக்கின்றது. இதனால் ஜனங்களுக்குப் பொதுவில் உண்டாகும் நன்மை தீமைகளைப்பற்றி விரித்தற்கிடமில்லை. ஆனால் இன்னும் அதிகப்பயன் தரும் விவசாயமுறைமையாளப்பட்டால் அதனால் கிருஷிகள் நாள்முழுதும் கடினவேலை செய்துவருந்துவது குறைந்து, அவர்கள் கஷ்ட ஜீவனமும் கூடிய அளவிற்கு மட்டுப்பட்டு சுகமெய்தும் என்பதற்கு ஐயமில்லை.

சாதாரணமாக இப்போது கிருஷிகள் தம் பெரியோர் நாட்களில் இருந்ததைவிட இப்போது காலங்கெட்டு மழை குன்றியதனாலே தமது நிலங்களின் விளைவுங் குன்றியது என்று நினைக்கிறார்கள். ஆனால் அந்நிலங்கள் அடிக்கடி வெள்ளாமைசெய்வதால் வளப்பங் குறைந்து தகுதியற்றவைகளாய்ப் போய்விட்டமையே விளைவின் குறைவிற்குப் பெரும்பாலும் காரணமென்பது திண்ணம்.

அலெக்ஸாண்டர் எம். நேயல்ஸன்.

## சஞ்சோக்தை சுயம்வரம்

அல்லது

## ப்ரித்விராஜா சரித்திரம்.

### XIII. பழிக்குப்பழி.

வசந்தகாலம் பிறந்தது. "குன்றிடைப் பிறந்ததென்றல்" இன்புறவீசி உயிர்களையெல்லாம் களிக்கச்செய்தது.

மாந்தளிர்கள் வசந்தலக்ஷ்மி மேனி மினுக்கிச் சிங்காரம் செய்துகொண்டு ஒய்யாரம் செய்

பவள்போல் தென்றற் காற்றிலசைந்து தகதக வென்று பிரகாசித்து நின்றன. குயில்கள் கூவின. வண்டுகள் பாடின. புஷ்பச்செடிகளும் கொடிகளும் தளிர்த்துச் செழித்து அரும்பு விட்டு அலங்காரம் செய்துகொண்ட மாது போல வசந்தலக்ஷ்மி வரவைத்தெரிவித்தன. கவிகூறியபடி, வசந்தகாலத்தின் சிறப்பெல்லாம் விசேஷித்து விளங்கின.

"கள்ளுயிர்த்தலருமுல்லைக்கடிமுகை முறுவலேற்ப,
வள்ளிதழ்க்குவளையுண்கண்மலர்ந்துமாந் தளிர்மென் கையாச்,
கிள்ளைமென்குதலைசாற்றிக்கிளரொளி வண்டுபாடுந்
தெள்விளி பாடமேனிற்றிருமகள் சிறந்தாளன்றே".

இப்படிச்சிறந்து விளங்கிய வேனிற்காலத் துவக்கத்தில் உலகெலாம் உயிர்த்துக்களித்து உத்ஸாகம் நிறைந்திருக்கையில் நாடுநகரங்களிலுள்ள மாந்தர்களும் வேந்தர்களும் வசந்தோத்ஸவம் கொண்டாடக்கருதி அதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்வதில் அவரவர்கள் மும்முரமாய் முனைந்திருந்தார்கள். டில்லி நகரில் ப்ரித்விராஜாவும் தனது சாமந்த சீமந்தர்கள் தன்னைச்சூழ்ந்திருப்ப, வசந்தோத்ஸவம் கொண்டாட முஸ்தீப்பாயிருந்தான். இத்திருவிழாக் கொண்டாடுவதில் உண்டு களித்து அரண்மனையிலும் சிங்காரவனத்திலும் ஆடல் பாடல் கச்சேரிகள் வைத்து மாதர் மக்களோடு சந்தோஷமனுபவிப்பதன்றி, வீரசூரத்துவத்தைக்காட்டும் வேட்டை விளையாட்டுகளும் விசேஷமாய் நடப்பதுண்டு. ப்ரீத்விராஜா தன் இன்னுயிர்த் தோழனும் வேட்டைத்தலைவனுமாகிய ஆஜானுபாகு பக்கத்திருக்க வேட்டை விளையாட்டுகளைப்பற்றிப்பேசி அதற்குச் செய்வன செய்தாமாறு ஏற்பாடுசெய்து கொண்டிருக்கையில் கானோஜிக்கனுப்பிய தூதன் திரும்பி வந்து அஞ்சலிசெய்து அரசன் முன் நிற்பானாயினன். அரசன் முகத்தில்தவழ்ந்த புன்னகை மாறாது வந்தவனைக் கண்டு செய்தி விசாரித்தான். தூதனும் நடந்ததை நடந்தவாறு எடுத்துரைத்து மனம்வருந்தினவனாய் முகங்காட்டி நின்றான்.

தூதன் சொன்னதைக் கேட்டதுதான் தாமதம்: அரசன் முகத்திலிருந்த புன்னகை மாறியது. வீரமும் வைராக்கியமும் முகத்தில் ஜ்வலிக்க, கம்பீரம்தோன்ற உடலை விரைத்து வலித்துக்கொண்டான். உடனே ஆஜானுபாகுவைப் பார்த்தான்; பார்த்தகுறிப்பில் அவனும் அரசன்மனதையறிந்துகொண்டான்.

"ஆஜானபாஹு! முகூர்த்த வேட்டை நல்லதாக நேர்ந்தது. காலதாமதம்வேண்டாம். வேட்டைநாய்களை நாய்வீட்டில்கட்டி. நமது சாமந்த ராஜாக்களில் மிகத்துணிகரமானவர்களைத் தெரிந்தெடுத்து இவ்வேட்டைக்குப் புறப்பட உடனே வேண்டிய முஸ்திப்பு செய்! நானுமிதோ வந்துவிட்டேன்" என்றுசொல்லி சரசரவென்று தன்னிருப்பிடஞ் சென்றான். மேல் நடந்தவற்றை விவரித்துக் கதையை வளர்ப்பதில் காரியமில்லை. இப்பேச்சு நடந்த நாலாநாள் கன்யாகுப்ஜத்தில் ஜயசந்த ராஜா யாகசாலையில் யாகம் செய்துகொண்டிருக்கையில் ஆசாரவாசலிலும் வெளியிலும் கூடியிருந்த கணக்கில்லாத குப்பல் கூட்டங்களில் ஏதோ ஒரு குழப்பமுண்டாகியது. காரணமின்னதென்று விளங்குமுன், ஆபத்துக்காலத்தில் அடிப்பதற்காகக் கட்டிய ஆராசியமணி அடிபட்டது. கோட்டை வாசலிலுள்ள காவல் தலைவர்கள் நகாரா அடித்துப் போர்வீரர்களைச் சண்டைக்கழைத்தார்கள். ஜயசந்த ராஜா இந்த அபாய சின்னங்களைக்கேட்டு யாகத்தை விட்டெழுந்து நடந்ததை விசாரித்து ஆவேசங்கொண்டு யுத்தசந்நத்தனாய் எதிரியைத்துரத்தப்புறப்பட்டான். ஐயோ! பாவம்! அவன் ஆவேசம் வீணாயிற்று. இவன் சங்கதியறிந்து யுத்தசந்நத்தனாய்ப் புறப்படுமுன் வந்த எதிரி அவன் பரிவாரங்களோடு தன்னை யெதிர்த்தவர்களை வென்று அனேகரைக்கொன்று தன்பக்கத்தில் மகாவீரான் சிலரை யிழந்தாலும் அதனால் தானடைந்த ஜயத்துக்குப் பின்னமின்றி எதிரிகள் நடுவே கத்திமுனையால் வழிவெட்டிக்கொண்டு கன்யாகுப்ஜத்தின் எல்லை தாண்டி தன்னெல்லை



சேர்ந்துவிட்டான். இப்படித் தன்னெல்லை சேர்ந்ததும் இதுவரையில் அவசரப்பட்டு அதிவேகமாக வந்தவர்கள் இனிப் பயமில்லையென்கிற தைரியத்தாலும் தாங்கள் எளிதில் பெற்ற வெற்றியின் பெருமிதத்தாலும், பழிக்குப்பழி வாங்கினோமென்கிற திர்ப்தியாலும் ஒய்யாரமாகக் குதிரையை விட்டுக்கொண்டு உல்லாசமாகப்பேசிப் பரிகாசம் செய்துகொண்டு சென்றார்கள். இப்படிச்சென்ற வீரர்களைத்தான் நாம் முதலதிகாரத்தில் நேருக்குநேராய்ச்சந்தித்துக்காண நேரிட்டது. அங்கு கண்ட காட்சியை இங்கும் வர்ணிக்க நிமித்தமில்லையே. அவர்கள் நாம்கண்டபடி கும்மாளமடித்துக்கொண்டு குதூகலத்தோடு செல்லுகையில், ஜயசந்தராஜா கன்யாகுப்ஜத்தில் தான் செய்துவைத்த தன் எதிரியின் ஸ்வர்ண விகரஹத்தை யிழந்து, ஆவேசமழிந்து, தலையிறங்கி, தன் யாகத்துக்கு விக்நம் நேர்ந்ததன்றி தனக்கும் தீரா அவமானம் நேர்ந்ததைக்கருதி மனம் கொதித்து வெதும்பியிருந்தான். அவனிஷ்டப்படி நடந்திருந்தால் இப்பொழுதாவது, அவன் தன் எதிரியைப் பின்தொடர்ந்து அவன் ராஜ்ஜியத்தின்மேற் படையெடுத்துச்சென்று ஜெயித்துத் தன் கத்திமுனையில் அவனை நேரே கொணர்ந்து யாகத்தை நடத்துவதே அவனுக்குத் திருப்தியாயிருந்திருக்கும். "கேடு வரும்பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்பது வெகுகாலமாக வழங்கிவரும் பழமொழியல்லவோ! பழமொழி பொய்யாது என்பது வாஸ்தவம். ஆனாலும் இத்தருணத்தில் இவன் மேலே எப்படி நடந்துகொள்கிறானே பார்ப்போம்.

## XIV ஊர்ப்பேச்சு.

"உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடலாமா?" என்பது பழமொழி. ஜயசந்தராஜன் தான் எதிர்பாராத சம்பவம் நேரிட்டதில் தன் எண்ணங்கள் சிதறியதன்றி தனக்குத் தீரா அபகீர்த்தியுமுண்டானதைப் பற்றி மனம் வெதும்பி யிருந்தானாயினும், ஜனங்கள் நடந்த சம்பவத்தைப்பற்றி தங்கள் மனதை வெளியிட்டுத் தாராளமாகப் பேசத்தொடங்கினார்கள். ஜயசந்தனுடைய எண்ணங்களையும் வருத்தங்களையும் பற்றி அவர்கள் கவனித்தார்களில்லை. அரண்மனையில் அரசனைச் சுற்றியுள்ளவர்கள் அவன் நோக்கமறிந்து அவனுக்கெதிரில் அதைப்பற்றி அவன்மனம் நோக ஏதும் சொல்லக்கூடாது என்று சாக்கிரதையாக விருந்தார்கள். ஆனால் அரண்மனையிலும்கூட "ஊர்ப்பேச்சு" ஊர்ப்பேச்சாகவே யிருந்தது. அதை அடக்க யாராலும் முடியவில்லை. ஜனங்கள் எங்குபார்த்தாலும் எதிரியின் துணிகரத்தையும் தைரியத்தையும் சாமர்த்தியத்தையும் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டது அரண்மனைக்குள்ளும் நுழையாதிருக்கவில்லை. அரண்மனை வேலைக்காரர்கள் ஒருவருக்கொருவர் எதிரியின் துணிகரசாமர்த்தியத்தையும் அவன் வீரத்தையும்பற்றி "கொச, கொச" வென்று பேசிக்கொண்டார்கள். அந்தப்புரத்துச் சேடிகளும், ராஜஸ்திரீகளும் தோழிகளும் தாதிகளும் ப்ரித்விராஜாவின் அதிசய பராக்கிரமத்தைப்பற்றி ஆச்சரியப்பட்டுப் புகழ்ந்து பேசிக்கொண்டார்கள். அவர்கள் மூலமாக, 'ஊர்ப்பேச்சு' அவ்வளவும் அந்தப்புரத்து ராஜஸ்திரீகளுக்கும் எட்டிவிட்டது. ராணி ரூபசுந்தரி இச்சம்பவத்தைக் கேட்டதும், தன்புருஷனுக்கு நேர்ந்த அவமானத்துக்காகக் கொஞ்சம் வருத்தமுற்றாளானாலும், உள்ளுக்குள் தன் சகோதரி புத்திரனான ப்ரீத்விராஜாவின் வீரபராக்கிரமத்தைக் கண்டு வியந்து பெருமிதங்கொண்டாடாமலிருக்க முடியவில்லை. ஸ்திரீஜாதிகள் சுபாவமாகவே தற்பெருமை கொண்டாடுவதில் பிரியமுள்ளவர்கள் என்பது உலகறிந்த விஷயம். ரூபசுந்தரிக்குத் தன்பிறந்தகத்துப் பெருமையை யதிகரிக்கச்செய்ய ஹேதுவான இத்துணிகரச் செய்கை எவ்வளவு இடங்கேடுகெட்டதானாலும் அது தற்பெருமைக்கு இடங்கொடுத்தமட்டில் உள்ளூரச் சந்தோஷமேயன்றி வேறல்ல.

இவ்வளவுதூரம் வந்த செய்தி சஞ்சோக்தை காதில்மட்டும் விழாமற்போகுமா? அவள் நடந்த விவரங்களைக் கேள்விப்படவும், அவள் இளமனம் அவனை யறியாது அவ்வீரனிடத்து பற்றுற்றுச் சென்றது. அவ்வீரச் செய்கை செய்தவன் அவளுக்கு நெருங்கிய பந்துவாக விருந்தது, அவனைப்பற்றி மென்மேலும் பேசி அவன் பிரதாப குணங்களைச்சொல்லக்கேட்க வேண்டுமென்கிற அவள் மனதுள் ளெழுந்த ஆசையைத் திர்ப்தி செய்துகொள்ள அனுகூலமாக விருந்தது. அதிலும் விசேஷமாக ப்ரித்விராஜாவின் அரண்மனையிலிருந்த சேடிப்பெண் ஒருத்தி அவளுடைய அரண்மனையில் வேலையாக இருக்க நேரிட்டதால் அவள் மூலமாக அடிக்கடி அவனைப்பற்றிப் பேசவும் அவன் கீர்த்தியைப்பற்றிக் கேட்கவும் அவளுக்கு விசேஷ சாதகமுண்டாயிருந்தது. இப்படி உண்டாயிருந்த சாதகத்தை அவள் முற்றும் உபயோகிப்பதில் சிறிதும் பின்னடைந்தாளில்லை. எப்படியோ மற்றச் சேடிகளெல்லாரும் அவளுக்கு விருப்பாகவில்லை. மேற்குறித்த சேடி ஒருத்திமட்டும் பேசும் பேச்சிலும், செய்யும் உபசாரங்களிலும் அவளுக்கு மிக்க திர்ப்தி யுண்டாயிருந்தது. இதை யவளுடைய மற்றத் தோழிகள் அறிந்து கொள்ளப் பின்னடையவில்லை. அறிந்து, அதற்கு அருத்தம் செய்துகொள்ளுவதிலும் அவர்கள் தப்பவில்லை. தென்னல் முற்றி இளங்காற்றானதுபோல், முதலில் அவளறியாப்பாசமாயிருந்தது, அவனைப்பற்றி அவள் விடாது செய்த சிந்தனையாலும், தோழிகள் வேடிக்கை விளையாட்டாகவும் பரிகாசமாகவும், ஒளித்தும் மறைத்தும் சொல்லிய வார்த்தைகளாலும் பெருங்காதலாக வளர்ந்து முதிர்ந்து, அவள் மனதினின்றும் அசைக்கக்கூடாதபடி வேரூன்றிவிட்டது. அவனை அக்கன்னிகை இன்னும் கண்ணால் கண்டாளில்லையானாலும் அவனுருவமும் சாயலும், அவள் மனதின்கண் அழியாது பதிந்து கிடந்தது. காதல் முற்ற முற்ற அவன் உருவை உருவெளித்தோற்றமாகவும் கண்டு பிதற்றுவாளானாள். அவளுடைய மனநிலை இந்த ஸ்திதிக்கு வரவும் அதை இரகசியமாக ஒளித்துவைப்பது கூடாமற்போயிற்று. ஆகவே இதுசங்கதி ரூபசுந்தரிக்குச் சீக்கிரத்திலே தெரியவரலாயிற்று. தெரியவரவும், அவள் முதலில் மனந்தியங்கி நடுக்குற்றாள். அவள்தானே அவன் தனக்கு மருமகனாக வாய்ப்பதைப்பற்றிப் பெருமிதமாக எண்ணியிருந்தாளானாலும், அவள் செல்வக்குமாரி, அவன்மேல் கரைகடந்த காதல்கொண்டு வருந்துகிறாளென்பதை யுணரவும் அவள் மனம் பகீரென்று திடுக்கிட்டுத் தியங்கியது. அரசன் குணத்தை நன்று யறிந்தவளாதலால், இச்சந்தர்ப்பத்தில் தன்மகள் ப்ரித்விராஜாவின்மேல் காதல்கொள்ளல் தீராவில்லங்கம் விளைக்குமன்றி வேறு சாதகமொன்றும் விளையாதென்று நன்று யுணர்ந்தாள். பெண்பாலானபடியால், இளங்கன்னியர் உண்மையாகக் கொள்ளும் மாசற்ற காதலின் வலிமையையும் உள்ளபடி ஊகித்தறிந்துகொண்டாள். இரண்டையுமறிந்தவளாதலால், "தெய்வமே! என்னவழி விடப்போகிறாயோ!" வென்று மனதிற் கருதி ஒன்றும் தோன்றாது தியங்கினவளானாள்.

அந்தப்புரத்துச்செய்தி யிப்படியிருக்க, அரசன் அந்தரங்க மந்திராலோசனை சபை கூட்டி ஆங்காரிய மின்னதென்று தீர்மானிப்பதில் கவலையுற்றிருந்தான். அவ்வந்தரங்க மந்திராலோசனை சபையில் நடந்த சங்கதிகளையெல்லாம் விவரமாய் வெளியிட நிமித்தமில்லை. சுக்கிராசாரி, இவ்வளவு நேர்ந்தும் தன் ஆலோசனையே சிலாக்கியம் என்று வற்புறுத்துவதில் பின்னடையவில்லை யென்று மட்டும் சொன்னாற்போதும். அரசன் உடனே படையெடுத்துச்சென்று எதிரியை ஜயித்துத் தன் பராக்கிரமத்தை நிலைநாட்டி தனக்கு நேர்ந்த அவமானத்தை உடனே நிவர்த்திசெய்துக்கொள்ளவேண்டுமென்று தன் கருத்தை ஆத்திரத்தோடு வற்புறுத்திச் சொன்னான். "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்பது உலகறிந்த உண்மையாதலால், சுக்கிராசாரிக்கு அரசன் நோக்கத்தை மாற்றுவது கஷ்டமாகவில்லை. அவன் ஆசையைத் தூண்டிவிட்டு, இடையில் யாகத்தை நிறுத்துவதினாலுண்டாகும் நஷ்டத்தையும், அபகீர்த்தியையும் விசேஷமாக வர்ணித்துரைத்து, எப்படியும் யாகத்தை முடித்துவிட்டே ப்ரித்விராஜாவைத் தண்டிக்கிறதென்று தீர்மானிக்கும்படிச் செய்தான். அவனுடைய ஸ்வர்ண விக்ரகம்கூட இல்லையே என்னசெய்கிறதென்றாலோ: "அதற்குபதில் அவனைப்போல விகாரமான விக்ரகமொன்று செய்துவைத்து அதனால் அவனை இன்னும் அதிகமாக அவமானப்படுத்திவிடலாம். ஊர் ஜனங்கள் அவனைப் புகழ்ந்து பேசிக்கொள்கிறார்களென்பது வாஸ்தவமே! அவனுக்குப் பிரதியாக விகாரமான ரூபமொன்று செய்துவைத்து, முதலில் வைத்த ஸ்வர்ணவிக்ரகத்தை அவன் திருட்டுத்தனமாய் வந்து எடுத்துக்கொண்டுபோனபடியால், அது திருட்டுப்போனதாகவே பாவிக்கவேண்டுமன்றி, எதிரியின் பராக்கிரமத்தையாவது வீரத்தையாவது ஸ்தாபிக்கத்தக்க செய்கை அதில் ஒன்றுமில்லை. திருடன் வந்தானென்று மகா பெரிய யாகத்தை நிறுத்தக் காரணமில்லை, ஆகையால் அவன் செய்த திருட்டுச்செய்கைக்காக அவனுடைய ஸ்தானத்தில் விகாரமான சிலை செய்துவைத்து அதையே தற்காலத்துக்கு தகுந்த தண்டனையாகத் தெரிவித்தால், தர்மசாஸ்திரப்படி நியாயம் செலுத்தினதாவதோடு ஜனங்களும் இப்பொழுது புகழ்ச்சியாகக் கொண்டாடுவதை இகழ்ச்சியானகாரியமாக மதிப்பார்கள்" என்று, சுக்கிராசாரி தன்னுடைய சமயோசித சாமர்த்திய தந்திரோபாயங்களையெல்லாம் உபயோகித்து அரசனை அவ்வாலோசனைக்கிணங்கி அப்படியே தீர்மானிக்கும்படி செய்துவிட்டார். அரசனும் வலையில் சிக்கிய மீன்போல், அவர் ஆலோசனையில் சிக்கினவனாய், அதற்கு வெளிப்போகச் சக்தியற்றவனாய், அவர் சொல்லியதற்கு உடன்பட்டு, அப்படியே தீர்மானித்தான்.



கூட இருந்த மந்திரிகள், வேறுவழியில்லாமையால், என்னகேடு வந்தாலும் தங்கள் ராஜவிசுவாசத்துக்கு ஒரு ஹானிவராது காப்பாற்றிக்கொள்வதே தாங்கள் செய்யத்தக்க பெருங்கடமையென்று அரசன் வார்த்தைக்கு எதிர் சொல்லாமல் அவன் தீர்மானத்தை எப்படியானாலும் நிறைவேற்றுவதே தங்களுக்குப் பெருமையென்று சம்மதித்தார்கள். உடனே அந்தரங்காலோசனை சபையில் அரசன் செய்த தீர்மானமும் தக்க ஆடம்பரங்களோடு வெளியிடப்பட்டது. அரசன் உள்ளுக்குள் தன் கீர்த்திக்கு நேர்ந்த ஹானியைப்பற்றி எவ்வளவு வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாலும் வெளிக்கு நடந்த சம்பவத்தால் தன்னுடைய ராஜாங்கத்துக்கு ஏதும் குறைவு நேரிடவில்லையென்று காட்டி, விக்கிரகம் களவுபோனதால் அதைப்பற்றி ஆலோசனைசபையில் விசாரித்து தற்காலத்துக்குத்தக்க தண்டனை விதித்திருக்கிறதாகவும், பிந்தி இதுவிஷயம் தீர விசாரித்துக் களவாளிக்குத்தகுந்த சிக்ஷை நேரில் விதிக்கப்படுமென்றும் மிக்க ஆடம்பர அதிகாரக் கோலத்தோடு அரசன் ஆக்கினை வெளியிடப்பட்டது. களவுபோன ஸ்வர்ணவிக்ரகமிருந்த இடத்தில் விகாரமான விக்ரகமொன்று ப்ரித்விராஜாவுக்குப் பிரதியாகச் செய்துவைக்கும்படியான உத்தரவும் உடனே நிறைவேற்றப்பட்டது.

C. V. S.

## செல்வநூல்.

### 10. தனவிபாகம்.*

நாமிதுவரையில் தனம் என்றாலென்னவென்றும், அதையெப்படி யுத்பத்தியாக்குகிறது என்றும விசாரித்துப்பார்த்தோம். இப்பொழுது இப்படியாகவுண்டாக்கப்பட்ட தனம் எவ்வாறாக அதை உத்பத்திசெய்வதில் வியாபிருதர்களான ஜனங்களுக்கு ஈந்துகொடுக்கப்படவேண்டியது என்று அறிய முயலவேண்டும்.

* Distribution of Wealth.

தனோத்பத்திக்கு வேண்டிய ஸாதனங்கள் மூன்றென்று படித்திருக்கிறோம் இம்மூன்றும் ஓரேமனிதனால் உத்பத்தியில் பிரயோகிக்கப்பட்டிருந்தால் உத்பத்தியாகும் தனம் முழுவதும் அவனுக்கேதான் சேரவேண்டியது. ஆனால் ஒரு ஜனஸ்ங்காதத்தில் ஆகும் தனோத்பத்தியில் உபயுக்தமான ஸாதனங்கள் ஸாமானியமாய் ஒரு மனிதனைச் சேர்ந்தவையல்ல. ஆகையால் தனம் உண்டானதும் அதன் உத்பத்தியில் சம்பந்தப்பட்ட எல்லா ஜனங்களும் திருப்தியடையும்படி விபாகிக்கப்படவேண்டியது. அவர்கள் சரியானபடி திருப்தியடையாவிட்டால் தாங்கள் வேலைக்குக்கொண்டுவரும் ஸாதனங்களைக் கொண்டுவரமாட்டார்கள். ஆகவே வேலை நடக்காது. இவ்வகைத்தான தனவிபாகத்தைப்பற்றிச் சில ஸ்வபாவிகமான விதிகள் ஏற்படலாம். அவைகளைக் கூடிய மட்டும் விசதமாக அறிந்துகொள்ள முயலுவோம்.

தனோத்பத்தியில் பிரயோகிக்கப்பட்ட க்ஷேத்திரம், உத்யமம், மூலதனம், ஆகிய இம்மூன்று ஸாதனங்களும் அத்யாவசியமானவையாகையால் உத்பத்தியாக்கப்பட்ட தனம் இம்மூன்று ஸாதனங்களுக்குரியவரான ஜனங்களுக்குள் பங்குபோடவேண்டியது. உத்யமம் அல்லது உழைப்புக்கு உரியவனுக்குக் கொடுக்கப்படும் தனத்தின் பாகத்திற்கு நாம் வேதனம் (Wages) என்னும் பெயரைக்கொடுப்போம். க்ஷேத்ரஸாதனத்தையுடையவன் பாகத்திற்கு குத்தகை (Rent) என்பதுவழக்கமாகவருகிற பெயர். மூலதனம் போட்டவனது பாகத்திற்கு விருத்தி (Interest) என்று பெயர்கொடுப்போம். மேலும் தனோத்பத்தி சரியாக நடக்கவேண்டுமானால் தகுந்தபடி களவுமுதலிய ஈதிபாதைகளில்லாமலிருக்கவேண்டியது அவசியமாகையாலும் அவைகளைப் போக்கடிக்கத் தகுந்த பலமான ராஜாங்கம் வேண்டுமாகையாலும், இராஜாங்கத்தை நடத்தச் செலவுக்கும் ஒரு பாகம் உத்பத்தியாக்கப்பட்ட தனத்திலிருந்து கொடுக்கப்படவேண்டியது. இதற்கு வரி (Taxes) என்றுதான் பெயர் வழங்குவது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. ஆகவே உத்பத்தியாகும் தனம் எல்லாம் இந்நான்கு வழியாகத்தான் செலவாகவேண்டியது. உத்பன்னமானதனம் = வேதனம் + குத்தகை + விருத்தி + வரி. இதுதான் தனவிபாகத்தைக் குறித்த சாசுவதமான ஸம்பந்த தருமம். இதற்கு தனவிபாகஸம்சிலேஷம் (The equation of distribution) என்ற பெயரைக்கொடுப்போம்.

இதற்கு உதாரணமாக இப்போது பலமாகத் துணிகள் நெய்யப்படும் ஒரு நூலாபீஸில் பத்து லக்ஷம் கஜம் நீளமுள்ள துணியொன்று செய்யப்பட்டது என்று வைத்துக்கொள்வோம். வாகர் கூறும்படியெத்தனைவிதமாகவந்த தனம் அதை யுண்டாக்குவதில் உதவினஜனங்களுக்குள் ஈந்து கொடுக்கப்படவேண்டியது என்று வினவுவோம். முதல் முதல் ஆபீஸ் கட்டியிருக்கும் இடத்திற்கு உடையவன் வந்து தனக்கு வேண்டிய வாடகைக்காக சிலவாயிரம் கஜங்களைக் கிழித்துக்கொண்டுபோகிறான். பிறகு ஆபீஸில்நடக்கும் வேலைக்கெல்லாம் காரணமான நீரின் சக்தியையோ நீராவியின் சக்தியையோ உண்டாக்கவாவது சமீபத்திற்குக் கொண்டுவரவாவது ஏற்படுத்தப்பட்ட சிப்பந்தி வகைராக்கள் மற்றும் ஒரு பாகத்தையெடுத்துக்கொள்ளுகிறார்கள். பிறகு கைமுதல் போட்டு வேலையை நடத்திவந்தவன் தன் பங்கிற்கு வெகுமயில் நீளமுள்ள துணியைக் கொண்டுபோவான். இவை போக மீதியுள்ளது ஏறக்குறைய 6-லக்ஷம் கஜமுள்ள துணியிருக்கக்கூடும். இவை இரண்டு பங்காளிகளுக்குள் பிரிக்கப்படவேண்டியது. முதற் பங்காளிகளாக ஒரு பெருங்கும்பல் புறப்படுகிறது. ஆபீஸில் வேலைநடத்திய ஓவர்சியர், குமஸ்தாக்கள், கூலியாட்கள் ஆகிய பல ஆண் பெண், குழந்தைகள் கூடின பலர் வந்து தங்களது பங்கை யபேக்ஷிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு சிறுபாகந்தான் கிடைத்தபோதிலும் முடிவில் கொஞ்சம்பாகந்தான் வேலையை



நடத்திவைக்கும் எஜமானன் பங்குக்குச் சேருகிறது. வேலை நேர்த்தியாகநடந்து, உத்பத்தியான சாமான் சரியாக விலைப்போனால் எஜமானனுக்கு உண்டென்று லாபம்கிடைக்கும் அப்படியில்லாவிடில் கையிலிருந்துகூட நஷ்டம் வரலாம். இப்படியாக நடக்கும் தனவிபாகத்தைப்பற்றிக் கொஞ்சம் நிதானமாக விசாரித்துப்பார்ப்போம்.

**வேலையாட்களின் பாகம் அல்லது வேதனம்:** இப்போது நாம் வேதனம், வரி, விருத்தியென்று உபயோகிக்கும் வார்த்தைகள் சாமானியமாக வழக்கத்தில்வரும் அருத்தத்தில் உபயோகமாவதில்லை. வேதனம் என்று வேலைக்கு நேராகக் கொடுக்கப்படும் கூலிக்குத்தான் செல்வநூலில் பெயர். ஆனால் சாமானிய உலக வழக்கத்தின்படி வேலைசெய்பவன் வேலைக்கு வேண்டிய கருவிகளைத்தானே வைத்திருக்கிறான். ஆகவே அவன் பெரும் ஆச்வாஸத்தில் (Remuneration) ஒரு பங்கு அந்த ஏனங்களைத் திட்டமாக வாங்கி வைத்திருக்கவேண்டிய கைமுதலின் உபயோகத்திற்காகக்கொடுக்கப்படும் விருத்தியை (Interest) அடக்கிக்கொண்டிருக்கிறது. ஆகையால் செல்வநூலின்படி வேதனம் அவன் பெருகிற பாகத்திலிருந்து இப்படிப்பட்ட விருத்தியைக் கழித்ததின் மேல் வரும் பொருளுக்குத்தான் பெயராகும்.

**க்ஷேத்திரஸம்பந்தமான பதந் அல்லது குத்தகை:** பிரகிருதி சக்தியின் உபயோகத்திற்காகக் கொடுக்கப்படுவது இது. ஆகையால் ஒரு க்ஷேத்திரத்திற்கு நாம் குத்தகையென்று கொடுக்கும் பாகமெல்லாம் குத்தகையாகமாட்டாது. அந்தக்ஷேத்திரத்தின்மேல் கட்டியிருக்கும் கட்டடங்களுக்காகக்கொடுக்கப்படும் பாகம் அந்தவேலையை நடத்துவதில் பிரயோகிக்கப்பட்ட உத்யமம், மூலதனம் முதலியவைகளுக்காகப் பிரித்துவைக்கப்படவேண்டியது.

**மூலதனத்தான் பதநீ அல்லது வட்டி:** சாமானியமாய் மூலதனத்தான் தானே வேலையையும் நடத்திவருவதால் இவன் பெற்றுக்கொள்ளும் பாகத்தில் ஒருகூறு இவன் செய்யும் மேற்பார்வை முதலிய வேலைக்காகச் சேரவேண்டியது. இவன் கையிலிருந்து போட்ட முதலுக்குமாத்திரம் கிடைக்கும் பணமே வட்டியென்னப்படும். மேலும் இவன் பணம் போட்டு வேலைசெய்ய ஆரம்பித்தபோது வேலை சரியாகநடந்து தான் போட்டபணம் வந்துசேருமோ சேராதோவென்ற சந்தேகம் பலமாயிருக்குமாகையால் இந்த சந்தேகத்தை கவனிக்காமல் வேலையை யாரம்பித்து நடத்திய தைரியத்திற்காகவும் ஒருபாகம் சேரவேண்டியது. இவ்வளவும் சேர்ந்துதான் நாம் சாமானியமாக லாபம் என்றுசொல்லும் பாகம் ஆகிறது. இப்படியாக,

லாபம் = மேல்விசாரணைக்குரிய வேதனம், + வட்டி + சந்தேகத்திற்காக வுபசாந்தி.

ஆகவே, முடிவில் ஆராய்ந்து பார்த்தால் விபாகமானது பிரத்யேகமாக ஒவ்வொரு மனிதனையும் பற்றியது. ஒவ்வொருவனும் தன்தன் பகுதிசரியாகக் கிடைக்கவேண்டுமென்று பார்க்கிறதற்கு ஆஸ்பதம் அதிகமாகவிருக்கிறதே ஒழிய பலர்கூடி சங்காதத்தின் ஸாதகாபேக்ஷையாகத் தன்தன் கஷ்டத்தைப் பாராமலிருப்பது அரிது. ஆயினும் பலர் தங்கள் பகுதி சரியாகக் கிடைக்காது என்று கண்டால் ஒருங்குகூடித் தத்தம் காரியசாதனைக்காக சிறுபான்மையோருக்கு நஷ்டம் நேரிடினுமதைப் பாராட்டாமல் நிற்பது ஐரோப்பா தேசத்தில் அடிக்கடி காணப்படும் ஒரு விஷயம். இப்படிச்சேருவதால் தனவிபாகமானது சுவபாவிகமாக நடக்காது. சிற்சில விஷயங்களில் ஜனங்களின் ஸ்திதியை யனுசரித்து மாறுபாட்டையடையும். ஆயினும் முடிவில் தனவிபாகத்தின் ஸ்வபாவிகமான விதிகள் தான் நீடித்துநிற்கின்றன. மேலும் இப்படிப்பட்ட விபாகத்தில் சம்பந்தப்பட்ட ஜனங்கள் பலதேசத்திற் பலவாகப் பிரிந்திருக்கிறார்கள். இங்கிலாண்டு தேசத்தில் தனவிபாகம்பெறும் ஜனங்களின்பிரிவு இந்தியாவில் காணப்படாது.

நமது தேசத்தில் ஐரோப்பா கண்டத்தின் பலத்த இராச்சியங்களில் காணும்படியான விசேஷமான யந்திரசாலைகள் பெரும்பான்மையில்லை. யந்திரசாலைகளில் தனமுத்பத்தியாவதில் கூடும் ஜனங்களின் கூட்டத்தின் மாதிரியே வேறு; நம்தேசத்தார் போன்ற கைவேலையில் வியாபிருதர்களான உழைப்பாளிகள் வேலை செய்து தனவிபாகம் பெறும்மாதிரியே வேறுதான். பொதுவாக இங்கே வேலையாள் தன் ஏனங்களைத்தானே வாங்கிவைத்திருப்பதினால் சில விஷயங்களுக்கு அவனே மூலதனத்தான் (capitalist) ஆகிறான். மற்றும் வெகுவேலைக்காரர்கள் சேர்ந்து யந்திரங்களில் வேலை நடத்திவருவதாலும், இங்கே ஒவ்வொருவனும் தன் பாட்டைமாத்திரம் பார்ப்பதினாலும், ஐரோப்பாகண்டத்தில் வேலையாட்களும், மூலதனத்தாரும் ஒருங்குகூடித் தத்தம் லாபநஷ்டங்களைச் சீர்திருத்தச்செய்யும் ஏற்பாடுகள் இங்கே நடப்பதற்கு ஆஸ்பதமில்லை. ஆயினும் தக்காலத்தில் ஐரோப்பா, ஆசியா என்கிற வித்தியாசமே அழிந்துபோகும்படி, ஐரோப்பிய தனோத்பத்தியின் ரீதியே உலகமெங்கும் பரவிவருகிறது. யந்திரங்களும் யந்திரசாலைகளும் ஆயிரக்கணக்காக உலகெங்கும் வியாபிக்கின்றன. ஐரோப்பிய மூலதனமே நம்தேசத்திலும் பலவான பலத்த உத்பத்தியில் பிரயோகிக்கப்படுகின்றது. ஆகவே இன்னும் கொஞ்சநாளில் ஐரோப்பிய தனோத்பத்தி ரீதிதான் எங்கேயும் பரவிவிடும். நமது வேளாண்மைகூட இம்மாதிரி மாறுவதற்கு ஆரம்பித்துவிட்டது.

ஜி. கஸ்தூரி ஐயங்கார்.

SHORT STORY.

## விசாலாட்சி.

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்பது பழமொழி. அதன் உண்மையை அனேகர் உணர்ந்திருக்கலாம். மனிதனுக்கு கஷ்டங்கள் வந்தால் ஒன்றன்பின் ஒன்றாக நெருங்கி அவனைச்சூழ்ந்து அவனை தலையெட ஒண்ணாமல் செய்துவிடுகின்றன. இன்பங்களுமவ்வாறே. ஆயினும் மானிடருக்கு இவ்வுலகத்தில் துன்பங்களேதவிர, நிலைபெற்றுநிற்கும் இன்பங்கள் கிடையா.

இவ்வாறு துன்பங்களுக்கு இரையானவர்களில் நமது இராமகிருஷ்ணய்யர் ஒருவர். இவர் மிகவும் உயர்ந்தகுலத்திற் சேர்ந்தவர். காவிரிக்கரையில் ஒரு கிராமத்திலிருந்த வயல்கள், தோப்புகள், தோட்டங்களும் இவருடையனவே. இவ்வளவு பாக்கியத்திற்கும் சுதந்தரவாளியானேமென்று சற்றும் கர்வப்படாமல், தமக்கு வேண்டிய கல்வியைக் கற்றுக்கொண்டார். மேலும் கடவுள்மேல் முழு நம்பிக்கையிருந்தபடியால் தருமத்திலும், கடவுளுக்கு வேண்டிய கிரியைகள் செய்வதிலும் செல்வத்தைக் கணக்கிடாமல் செலவழித்துவந்தார். பிராமணபோஜனம், சமாராதனை, வனபோஜனம் முதலியனவையெல்லாம் வருஷந்தோறும் தப்பாமல் நடத்திவந்தார். "கடவுள் தம்மைக்குறித்து தியானம் பண்ணுகிறவர்களிடமிருந்து, உலக இன்பங்களில் அவர் மனம் செல்லாமல், அவர் ஐசுவரியம் முதலானவைகளை நீக்குவார்" என்று சான்றோர் கூறுவர். அக்கூற்று உண்மையாயிற்றோ என்னவோ. இராமகிருஷ்ணய்யர் அதிக சீக்கிரத்தில் தமது அளவிறந்த ஆஸ்திமுழுவதையும் இழந்தார். நேசர்கள் விசனப்படவும், விரோதிகள் மகிழவும் தாம் உபகாரம் பண்ணினவர்கள்கூட இலட்சியம் செய்யாத ஏழையானார். உலக இயற்கை மாதிரியே பந்துக்களும் நடந்துகொண்டார்கள்.

உண்டாய போழ்தி னுடைந்துழிக் காகம்போற்
றொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதருங் காலத்து திதிலரே லென்பா
ரொருவரிவ் வுலகத்தில்.

சற்றும் எதிர்பார்க்காத இத்தகைமையான வறுமை வந்தவுடன், தன் மாளிகைபோன்ற வீட்டைவிற்று, வேறு ஒரு சிறு வீடுவாங்கிக்கொண்டு, தன் மனைவியுடனும், அருமைப் புதல்வியுடனும், யாவருமறியாமல் நாட்களைக்



கழித்துவந்தார். இவர் கஷ்டங்கள் இத்துடன் நிற்கவில்லை.

தம்முடைய கஷ்டதிசையை நோக்கி சற்றேனும் இராமகிருஷ்ணய்யர் மனவருத்தப்படவில்லை. சகலமும் 'பாவத்தின் பலன்கள்' என்று சொல்லுவார். அனுபவிக்கவேண்டியது நமது கடமை என்பார். ஆனால் இவருடைய பெண்சாதியோ இவருக்குத் தீராத தொந்தரவு உண்டாக்குவாள். மிகவும் செல்வமான புத்திரியானதினால், கஷ்டங்களையே யறிந்திலள். செல்வாக்கிலேயே வளர்ந்துவந்ததனால் சமயோசிதயாக நடந்துகொள்ளத் தெரியாது. மனதில் நல்லவளானபோதிலும் புத்தியீனத்தினால் தன்னைத்தானே நொந்துகொண்டு அழுவள். "இக்கஷ்டங்களை அனுபவிக்க உலகத்தில் நான் ஏன்பிறந்தேன்?" என்று திட்டிக்கொள்ளுவாள். பிறரையும் வைவாள். கோபம் வந்தசமயத்தில் தன் அகங்காரத்தைப் புருஷன்பேரிலும் சாந்தகுணமுள்ள பேதையான தன் குமாரி விசாலாட்சியின் பேரிலும் செலுத்துவள். தம்முடைய மனைவி செய்யும் "போராட்டங்களை" கவனித்து கவனித்து, இராமகிருஷ்ணய்யர் சம்சாரத்தையே வெறுக்கும்படி நேரிட்டது. "சம்சாரம் சாகரம் துக்கம்" என்று பெரியோர் விளம்பினது மெய்யே என்பார். பெண்ணின் அகத்தழகை எள்ளளவேனும் விசாரியாமல், முகத்தழகின்மேல் மாத்திரம் இச்சையிட்டு செய்துகொள்ளும் மணங்களின் முடிவு இஃதன்றோ.

இராமகிருஷ்ணய்யரின் செல்வமகள் விசாலாட்சியோ வயதில் மிகவும் சிறியவளாயிருந்தாலும், பிறருடைய அனுபோகங்களை நன்றாக ஆராய்ந்து மிகவும் புத்திசாலியானாள். சுமார் அவளுக்கு வயது பதினாறு ஆயிருக்கலாம். உயர்ந்தகுலத்தில் பிறந்ததனாலும், யௌவனகாலமானதினும், அவள் மிகவும் அழகும்சௌந்திரியமுமுள்ளவளாய்த்தோன்றினாள். 'அழகாயிருக்கிறேன்' என்று அவள் கர்வப்படவில்லை; அவளுக்கு தெரியவும் தெரியாது. அவளுடைய பேதமை, அறிவு, இரக்கம், முதலிய குணங்களைக்குறித்து அவ்வூரார் அவளைக் கொண்டாடி கண்டபோதெல்லாம் கண்குளிரக்களிப்பார்கள். நற்குணமும், இளமையும் இவ்வளவுள்ள விசாலாட்சிக்கு கஷ்டங்களுக்குக்குறைவில்லை. முன்னமேயே துக்கங்களிலும், துன்பங்களிலும், ஆழ்ந்த தாய்தந்தையர்களுக்கு அதிக விசனம் கொடுப்போமே என்று பயந்து தன்மனவருத்தங்களை வெளியிடாள். இருஷி, தன்மடியின்மேல் தலைவைத்து தூங்கும்பொழுது தன் தொடைகளை புழு எவ்வளவு துளைத்தபோதிலும், இருஷியின் தூக்கத்தைக் கெடுக்காத பிராமணப் பிள்ளையைப்போல், தனக்கு சங்கடங்கள் எவ்வளவு இருந்தபோதிலும், அவைகளை இதயத்திலடக்கிக் கொண்டு, மிகவும் சந்தோஷத்துடன் காலங்கழிப்பதுபோல் காட்டிக்கொள்வாள். இராமகிருஷ்ணய்யர் தம்மனைவி செய்யும் 'ஆர்ப்பாடங்களை' சகிக்கமுடியாத சமயத்தில், "ஐயோ, விசாலாட்சி, நீயில்லாவிடில் இவ்வுலகத்தில் எவ்வாறு ஜீவித்திருப்பேன்," என்று வியாகுலத்துடன் விளம்புவர். விசாலாட்சி, தாயாருக்கு ஒருவேலைகூட வைக்காமல், வீட்டுக்காரியங்கள் எல்லாவற்றையும் தானே செய்துமுடித்துவிடுவாள். தந்தையையும், தாயாரையும், சந்தோஷப்படுத்தும்படி நடந்துகொள்ள விசாலாட்சி மிகவும் கஷ்டப்பட்டாள்.

தமக்கு ஐசுவரியம் இருந்தகாலத்திலேயே, இராமகிருஷ்ணய்யர், விசாலாட்சிக்கு கல்யாணம் செய்ததினால், அவர் மிகவும் பெரிய வீட்டிலேயே சம்பந்தம் செய்திருந்தார். விசாலாட்சியின் மாமனார் "ஜில்லா கோர்ட் வைக்கில்." மாதம் ஆயிரம் ரூபாய் வரையில் சம்பாதிக்கக் கூடியவர். அவருக்கு ஒரேமகன்தான். அவன்தான் விசாலாட்சியின் அகமுடையான். லட்சுமிநாசனுக்கு விசாலாட்சியின் பேரில் அன்பிருந்ததோ இல்லையோ, எம்மால் சொல்ல முடியாது. கல்யாணம் நடந்த இரண்டுவருஷத்துக்கெல்லாம், தனக்கு மாமனார் வரதட்சணையாகக்கொடுத்த 2,000 ரூபாயை எடுத்துக்

கொண்டு எங்கெயோ ஓடிவிட்டான். மூன்று வருஷமாக அவனைக்காணோம். அவன் தந்தையும் இறந்துவிட்டார். அவனைக்குறித்து விசாரிப்பவருமில்லை. லட்சுமிராசனைச் சேர்ந்த பந்துக்களெல்லாம், "அந்த கம்மணாட்டியை கட்டினதே வீட்டுக்கு எமனைக்கொண்டுவந்தாற்போலாச்சு. மாமனாரையும் தின்றாள்; புருஷனையும் தொலைச்சா" என்று சற்றேனும் பரிதாபமின்றி தூஷிப்பார்கள். இந்த விசனமே, இராமகிருஷ்ணய்யர் மனத்தையிடைவிடாது அறுத்துக்கொண்டிருந்தது. விசாலாட்சி இத்துக்கங்களைவெளியிடாமல் எப்படிச்சகித்தனளோ தெரியவில்லை. நல்லவர்களுக்கல்லவோ, இவ்வுலகத்தில், ஆபத்துகள் வந்தடைகின்றன.

இராமகிருஷ்ணய்யர், தன்மருமகனைத்தேடுவான் பொருட்டு தன் வீட்டை ஆதாரமாக வைத்து 500 ரூபாய் கடன்வாங்கி, எங்கெங்கோ சுற்றிப்பார்த்தார். அவருடைய பிரயத்தனங்கள் எல்லாம் பிரயோஜனமற்றனவாகப் போயின. கடன்கள் அதிகரித்தனவேயொழிய, வேறு ஒரு லாபமு மில்லை.

ஒருநாள் சாயங்காலம் இராமகிருஷ்ணய்யர் தன் வீட்டுக்கூடத்தில் என்னவோ ஆலோசனைசெய்துகொண்டு உட்கார்ந்துக்கொண்டிருந்தார். அவருக்கு சற்றே விலகி அவர் மனைவி வெங்கம்மாளும், விசாலாட்சியும் உட்கார்ந்துக்கொண்டிருந்தார்கள்.

"என்னயோசனை செய்கிறீர்கள்" என்றாள் வெங்கம்மாள். "ஆலோசனையால் என்னமுடியப்போகின்றது. அனுபவிக்கவேண்டியதெல்லாம் வந்துதான் தீரவேண்டும். எல்லாம் அவர் சித்தம்" என்று ஆகாயத்தைநோக்கிச் சுட்டிக்காட்டினார்.

"புதிசா என்ன ஆபத்துவந்திருக்கின்றது? சொல்லுங்களேன். பட்டதெல்லாம்போதாதா. இன்னும் படவேண்டுமா" என்று ஆவலுடனும், வியாகுலத்துடனும், வினவினாள்.

"என்ன சொல்லுகின்றது. இராமசுவாமியிடம் 500-ரூபாய் கடன்வாங்கியிருந்தோமே! அவன் பிராதுசெய்திருக்கிறான், நாளைக்கு வீடு ஏலத்தில் போகப்போகின்றது." என்று சொல்லி தனக்குத்தெரியாமலே அவருடைய வாழ்நாளில் முதல்தரம் கண்ணீர்விட்டார்.

"ஐயோ கடவுளே, அடைந்த அவமானம் போதாதா. இன்னும்படவேண்டுமா. உலகத்தில் நல்லவர்களெல்லாம் சாகின்றார்களே, எனக்கு ஒரு சாவு, வரப்படாதா. இந்த துன்பங்களையெல்லாம் நான் எப்படிப்பார்க்கிறது" என்று வெங்கம்மாள் தலையிலடித்துக்கொண்டு, அழுதாள்.

விசாலாட்சி, தானும் அழுதால் "கங்காதரன் கதை" ஆய்விடுமென்று நினைத்து, விசனத்தை வெளியில் காண்பிக்காமல் தாயாரையும், தந்தையையும், தேற்ற ஆரம்பித்தாள். "ஏனம்மா அழுகின்றாய் அப்பா, உனக்குக்கூட என்ன இவ்வளவு துக்கம்? அரிச்சந்திரன், நளன் பட்டத்தைவிடவா நாம் அதிகமாக துன்பம் அனுபவிக்கப்போகின்றோம். நமக்கும் நல்லகாலம்வரும்; விசனப்படாதேயுங்கள்.' என்று தன்னாலியன்றமட்டும், அவர்கள் துக்கத்தையாற்றினாள். அவர்களும் வியாகுலத்திலிருந்து தணிந்தார்கள்.

சற்றுநேரம் பேசாமலிருந்து பிறகு இராமகிருஷ்ணய்யர் ஆரம்பித்தார்: "பழைய டிப்டி கலக்டெர் கூட இப்பொழுது ஏலம்போட வருகிறதில்லையாம். ஒரு சிறு பையன் என்னவோ பரிட்சையில்தேறிவிட்டு, புதிதாக வேலைபெற்று வந்திருக்கிறானாம். வேலையை அதிக கண்டிப்பாக நடத்துகிறானாம். முன்னவனிருந்தால், நான்போய் கேட்டுக்கொண்டால், ஏலத்தை இரண்டுமாதமாவது தள்ளிப்போடுவான். ஐயோ! துரதிருஷ்டங்கள் ஒன்றாகச் சேர்ந்தனவே" என்று வியசனத்துடன் கூறினார்.

வெங்கம்மாள் கொஞ்சகாலம் தன் கைகளை தலைமேல் வைத்துக்கொண்டு, சிந்தையில் ஆழ்ந்தாள். என்ன சமாதானப்படுத்தின போதிலும், ரோஷமும், அவமானமும் அட-



காததனால் கிஞ்சித்தேனும் இரக்கமின்று பின் வருமாறு இயம்பினாள்.

"ஏண்டி! விசாலம். உனக்குத்தான் ஏன் அவ்வளவு கர்வம்? உன் நகைகளைத்தான் கொண்டுவந்து கொடேன். விற்றுவிட்டு உங்களப்பா கடனைத் தீர்க்கட்டுமே. ஆபத்துக்காலத்திலே கூடவா உனக்கு கருணையில்லை. என்னடி! மகா நகைகள். ஆனாலும் இவ்வளவு கல்நெஞ்சம் கூடாதம்மா."

தினையளவேனும் அன்பின்றி இவ்வார்த்தைகளை வெங்கம்மாள்சொல்லக்கேட்டதும், விசாலாட்சி மனதில் துன்பம் சகிக்கமுடியாமல் துக்கித்தாள்.

"என்னடியம்மா! என்மேல் அநியாயம் சொல்லுகின்றாயே. எவ்வளவுதரம் நகைகளை அப்பா இடத்தில் கொண்டுவந்து தந்தேன். "உன் நகைகளுக்கும் எனக்கும் பாத்தியமில்லை" யென்றுசொல்லி, 'எடுத்துக்கொள்ள மாட்டேன்' என்று வாங்கிக்கொள்ளாது போனார். இப்படியிருக்க நீ என்மேல் அவதூறு சொல்லுகின்றாயே." என்று அழுதாள்.

"எல்லாம் போதும். நீகூட என்னைப்பேசாதே; இப்பொழுது கொண்டுவந்துகொடு. வாங்கிக்கொள்வார்." என்று முகத்தை சுளுக்கிக்கொண்டு பதில் கூறினாள். இராமகிருஷ்ணய்யர் "என்ன செய்யலாம்" என்று நினைத்துக்கொண்டிருந்ததினால், தன் பெண்சாதிக்கும் பெண்ணுக்கும் நடந்தசம்பாஷணையை கவனிக்கவில்லை.

தாய் பகர்ந்தது காதில்படவே, விசாலாட்சி தன்னறையில் சென்று, ஒருகாசுமாலையையும், காரையையும், கொண்டுவந்து "இந்தா அப்பா, வாங்கிக்கொள். கஷ்டப்படாதே, ஏதோ ஒரு நல்லவழி கடவுள் நமக்கு காண்பிப்பார். இந் நகைகளை விற்று கடன் கட்டிவிடு." என்று அந்நகைகளை தன் தந்தையின்முன் நீட்டினாள். இந்நகைகளை மனப்பூர்த்தியாகத் தந்தனளே யொழிய, தான் அன்னையைத் திருப்திசெய்ய வேண்டும் என்று கொடுக்கவில்லை.

அநேக தடவைகளில் காரணங்கள் கூறி நகைகளை சொந்தவிஷயமாக உபயோகப்படுத்தக்கூடாது என்று இராமகிருஷ்ணய்யர், விசாலாட்சிக்கு நிரூபித்திருந்தபோதிலும், இப்பொழுது அவள் பிடிவாதத்துடன் நகைகளைக் கொடுப்பதைப் பார்த்து வருத்தப்பட்டுக் கொண்டார்.

"ஏன் பின்வாங்குகிறீர்கள்? வாங்கிக்கொள்ளுங்கள்" என்று வெங்கம்மாள் வற்புறுத்திக் கூறினாள்.

"என் பிராணன் போவதாயிருந்தாலும், நான் அந்நகைகளின் தூசைக்கூடத்தொடேன். விசாலம், நீயாவது நான் சொன்ன வார்த்தையைக்கேட்பாய் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். உன் அம்மாள் குணத்தை நீயும் கொஞ்சம் படைத்திருக்கின்றாய். என் தலைவிதி! போனபிறப்பில் யாது பாவங்கள் செய்தேனோ, தெரியவில்லை," என்று புலம்பினார்.

இராமகிருஷ்ணய்யர் வசித்த கிராமத்துக்கு நாலுமைல் தூரத்திற்கு அப்பால், ஒருசிறு ஊரிருக்கிறதென்றும், அது நியாயஸ்தலமென்றும் உத்தியோகஸ்தர்கள் வசிப்பிடமென்றும் சொல்ல மறந்தோம்.

வீணாகப்பேசினால் ஒரு பிரயோசனமுமில்லை என்று தெரிந்துகொண்டு இராமகிருஷ்ணய்யர் உடனேயெழுந்து, "எனக்கு ஒருவழி புலப்படுகின்றது. அடுத்தவூரில் சுப்பிரமணிய சாஸ்திரி வேலை பார்த்துக்கொண்டிருக்கிறான். அவனுக்கு நாம் எவ்வளவோ உபகாரம் செய்திருக்கிறோம். இச்சமயத்தில் நான் அவனிடம்போய் 500 ரூபாய் வாங்கிக்கொண்டு வருகிறேன். அவன் தந்தால் இன்றிரா இங்கு வருவேன், இல்லாவிடில் காலையில் வேறு ஏதாவது ஏற்பாடு செய்துகொண்டுவருவேன்." என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

அவர் வீட்டைவிட்டு வெளியில் புறப்பட்டதும், பக்கத்துவீட்டு சுப்பம்மாள், இரா-

கிருஷ்ணய்யர் வீட்டில் பிரவேசித்தாள். வெங்கம்மாள் அழுதுக்கொண்டிருந்ததைப் பார்த்து "என்ன சமாசாரம்" என்று கேட்கவே, வெங்கம்மாள்: "நீ யாருக்கும் வெளியிடாதே" என்றுகூறி சமாசாரத்தையெல்லாம் விளம்பினாள். அவள் இரகசியமாக இச்சமாசாரத்தை தன் உறவினருக்குத் தெரிவிக்கவே, அது விளம்பரமடித்தாற்போல் கிராமம் முழுவதும் பரவிற்று. ஆகையால், வெங்கம்மாள், தான் அடையவிரும்பாத அவமானத்தை தன் புத்தியீனத்தினால் அதிசீக்கிரமாகப் பெற்றுக்கொண்டாள். அன்றிராத்திரியெல்லாம், வெங்கம்மாளும் விசாலாட்சியும் தூங்கவேயில்லை. வெங்கமமாள் அழுதுகொண்டே யிருந்தாள். இராமகிருஷ்ணய்யர் போனகாரியத்தை பழமாக்கிக்கொண்டு, இராத்திரியே வந்துவிடுவார் என்று நம்பியிருந்தாள். எவ்வளவு நேரம் எதிர்பார்த்திருந்தபோதிலும், அவர் வாராததை நோக்கி வேலை ஜெயமாகவில்லை என்று தெரிந்துகொண்டு முன்கோபத்தினால எல்லோரையும் திட்ட ஆரம்பித்தாள்.

விசாலாட்சி சமாதானப்படுத்த வந்தபொழுது அவளையும திட்டினாள். "நல்ல பாக்கியசாலியடி நீ! நீ பிறந்த நாள் முதல் எங்கள் வீடு கெட்டு குட்டிச்சுவராய்க்கொண்டேவந்தது. கொஞ்சமாவது 'லட்சுமீகடாட்சம்' உன்னிடத்தில் கிடையாது. பிறந்தவீடுதான் இம்மாதிரி போயிற்று என்றால புகுந்தவீடு என்ன வாழ்ந்தது. அதையும் ஒழுங்காகத் துடைத்துவிட்டாய். நல்ல லக்கிணமடி அம்மா நீ பிறந்தது! உன்னைப்பெற்ற வயிற்றைப் பொசிக்கினாலும் பழிதொலையாது" என்று வயிற்றில் கைகளால் அறைந்துகொண்டாள்.

விசாலாட்சி மிகவும் விவேகமுள்ள பெண்ணானதினால், தாயார் செய்யும் "நீலித்தனங்கள்" எல்லாம் கோபத்தின் ஆவேசங்கள் என்று தெரிந்துகொண்டு, பேசினால் வாதமும் கூச்சலும் நேரிடுமென்று அறிந்து மௌனமாய் இருந்துவிட்டாள்.

* * * *

மறுநாள் விடியற்காலம் நாலுமணி அடித்தது. பௌர்ணமியானதினால், சந்திரன் நன்றாக பிரகாசித்துக்கொண்டிருந்தான். வெங்கம்மாள், கோபம் ஆறினதனால், விசாலாட்சியை யெழுப்பி மிகவும் அன்புள்ளவார்த்தைகளுடன் ஒரு ஆலோசனை அவளுக்கு தெரிவித்தாள். "உங்க அப்பா இன்னும் வரவில்லை. ரூபாய் கிடைக்கவில்லைபோலிருக்கின்றது. உன் நகைகளைக் கொண்டுவா; நான் அடுத்த ஊருக்குப்போய், அவற்றை குதுவைவைத்து ரூபாய்வாங்கிக் கொண்டுவருகிறேன். இந்தசமாசாரம் உன் அப்பாவுக்குத தெரியவேண்டாம்" என்றாள்.

மிகவும் சந்தோஷத்துடன் நகைகளை விசாலாட்சி கொண்டுவந்துகொடுத்து "அம்மா, இன்னும் நன்றாக விடியவில்லையே; தனியாக அந்தவூருக்கு எப்படிப்போவாய், நானுங் கூட உன்னைத்தொடர்ந்துவரட்டுமா" என்று பட்சமுடன் வினவினாள். "எனக்கு என்னபயம்? மேலும் பாதையில் ஜனங்கள் நடந்துகொண்டேயிருக்கிறார்கள். நிலா இன்னும் வீசுகின்றது. நாலுமைல்தானே, அரைநாழிகையில் வருகிறேன்; நீ வீட்டைப்பார்த்துக்கொள்" என்று சொல்லிவிட்டுச்சென்றாள். வெங்கம்மாள் நகைகளைத் தன்மடியில் முடிந்துகொண்டு, அடுத்த ஊருக்குப்போகும வழியில் நிதானமாக நடந்துகொண்டு போனாள். இக்கிராமத்திற்கும் அவ்வூருக்கும் இடையில், பாதையின் இருபக்கங்களிலும் மரங்கள் சூழ்ந்து அடர்ந்திருந்தன. திருட்டுக்கும், கொள்ளைக்கும் பெயர்போன இடம். இவ்விடத்திற்கு அவள் வந்தவுடனே, தனக்கு எதிரே, கொஞ்சம் தூரத்திற்கப்பால், இரண்டு வண்டிகளும், அவற்றைச்சூழ்ந்து 'போலீஸ்காரர்களும்' 'பில்லை' தரித்த சேவகர்களும் வர கண்டாள். இப்பொழுதுதான் அவளுக்கு பயம் தோன்றிற்று. எங்கே என்னைப்பிடித்து, திருடினதாக சந்தேகிக்கப்போகிறார்களோ என்று நடுங்கினாள். யாதுசெய்வது என்று நினைத்துவிட்டு, அவர்கள் தன்னைக்கடந்து போனபிற்பாடு, தான் போவதாகத் தீர்மானித்துக்கொண்டு, ஒரு பெரிய மரத்தினடியில்



போய் ஒளிந்துகொண்டாள். அவள் இருதயம் அதிக படபடப்புடன், அச்சத்தால் அடித்துக்கொண்டது. 'போலீஸ்காரர்களும்' சேவகர்களும் அதிகசமீபத்தில் வந்துவிட்டார்கள். ஒரு ஸ்திரீ மரத்தடியில் ஒளிந்திருந்ததைக்கண்டுவிட்டார்கள். ஏதோ திருட்டுத்தனம் செய்துவிட்டு மறைந்துகொண்டிருப்பதாகவும் தீர்மானித்தார்கள். உடனே அவளிடம்போய் பரிசோதிக்க ஆரம்பித்தார்கள். அவள் மடியிலிருந்த நகைகளைக்கண்டவுடன் அவர்களுடைய சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாயின. அச்சமயத்தில்யார்தான் வெங்கம்மாளைத் திருடினவள் என்று சொல்லமாட்டார்கள்? பார்ப்பனஸ்திரீ ஆனதனாலும், மனதில் ஈரமும் பச்சாதாபமும் உடையவர்கள் ஆனதனாலும், வலிய வார்த்தைகள் ஒன்றும் பேசாமல் அவளைத் தங்கள் பின நடந்துவரச்சொன்னார்கள். வெங்கமமாள் செய்கிறகாரியம் தெரியாமல் தியங்கினாள். அழவும் அழுதாள்; உண்மையையும் சொன்னாள். அச்சேவகர்கள ஒன்றுக்கும் செவிகொடாது சென்றனர் "ஐயோ! இதுவும் என் தலைவிதியோ" என்று சொல்லமுடியாத சங்கடத்துடன் கண்ணீர்சொரிய நடந்தாள். "ஊரில் எப்படி தலையைக்காட்டுவேன்" என்று அதைரியப்பட்டாள். "கிராமத்தில்போய், சமாசாரங்களை விசாரித்து, நீங்கள் சொல்வது உண்மையானால் உங்களை விட்டுவிடுகிறோம் அம்மணீ!" என்று அவர்கள் சொன்னார்கள். "தெய்வமே, செய்வதெல்லாம் செய்" என்று எண்ணிக்கொண்டே ஏகினாள். அச்சேவகர் பேசியதைக்கேட்டு, 'டிப்டி கலெக்டர்' விடியற்காலம் மூன்றுமணிக்கே, அக்கிராமத்திற்குப் போய்ச் சத்திரத்தில் இறங்கியிருப்பதாகவும், காலை ஏழுமணிக்கு நடக்கபோகின்ற ஏலத்திற்குப் போவதாகவும அறிந்துகொண்டாள். "ஐயோ நமது வீட்டை நாசமாக்கப்போகின்றார்களே" என்று எண்ணிக்கொண்டாள். அவர்களுடன் தன் கிராமம், போய் சேருவதற்குள்ளாக பைத்தியம் பிடித்துவிட்டவள் போலாய்விட்டாள். 'டிப்டி கலெக்டருக்கு' சமாசாரம் தெரியப்படுத்தவேண்டுமென்று, சேவகர்கள் அவளைக் கூட்டிக்கொண்டுபோய் உட்காரவைத்திருந்தார்கள்.

இச்சாமாசாரங்கள் இப்படிநிற்க, வெங்கம்மாளுக்கு வந்த ஆபத்தை ஊராரெல்லாம் தெரிந்துகொண்டார்கள். "ஐயோ பாவம்! என்ன இம்மாதிரி சனி அவர்களைப்பிடித்து ஆட்டுகின்றான்" என்று நல்லவர்கள் சொன்னார்கள். "அவர்களுடைய கர்வத்துக்கு இதுகூட போதாது" என்று அவர்களுடைய பகையினர் பகரலுற்றார். தாயார் சத்திரத்திலிருக்கிறாள் என்று தெரிந்த உடன் விசாலாட்சி அவ்விடம் ஓடிவந்து அழுதாள்.

"அப்பொழுதே தனியாகப்போகவேண்டாம் என்று சொன்னேனே அம்மா! நீ கேட்கவில்லையே! அப்பாவுக்குத் தெரிந்தால் மிகவும் வருந்துவாரே" என்றாள் விசாலாட்சி.

"நான் என்ன செய்யக்கூடும். உங்களப்பா வந்துதான் என்னைக்கூட தப்பித்துவிடவேண்டும். ஒ தெய்வமே: என் பிராணனைத்தான் வாங்கிக்கொள்ளேன்; இம்மாதிரி ஏன் என்னைத்துன்பத்துக்கு ஆள் ஆக்குகின்றாய்!" என்று வேண்டினாள்.

அடுத்தவூருக்குப்போன இராமகிருஷ்ணய்யர், ஒருகாரியமும் முடியாமல் தன்கிராமத்துக்கே திரும்பி வந்துவிட்டார். தன் மனைவி செய்த முட்டாள்தனத்தையும், அதற்கு தகுந்தவாறு நடந்த சிட்சையையும் கேட்டு கோபமும் பரிதாபமும் மனதில் கலந்துபொங்க சத்திரத்திற்கு விரைந்து வந்தார். இவ்வாறன்றோ மனிதனைக் கஷ்டங்கள் சூழ்கின்றன. பொறுமையும் மன உறுதியும் இன்றி எவ்வளவுபேர் இக்கஷ்டங்களுக்கு இணங்கிவிடுகிறார்கள். ஒருவனுடைய உண்மையையும் பக்தியையும் கண்டறியும்பொருட்டு, கடவுள் அவனை எவ்வளவு ஆழ்ந்தவும், சகிக்கமுடியாதவுமான துன்பங்கள்நிறைந்துள்ள வழிகளில் பரிசோதிக்கின்றார். சொற்பகாலம் நிற்காநின்ற இக்கஷ்டங்களாகும் அலைகளைக்கடந்து, பேரின்பம்

என்கின்ற கரையைக் காண்கின்றவனன்றோ 'மனிதன்' என்னும் பெருமைப்பட்டத்திற்கு உரியவன். இராமகிருஷ்ணய்யருக்கு, ஒரு வேலை இரண்டு வேலைகளாயின. பாரியையை விடுவிப்பதும், வீட்டை ஏலத்தில் விடாமல் மானத்தை இரட்சித்துக்கொள்வதுமே. அங்கும் இங்கும் போனார்; ஒன்றும் தெரியாமல் தியங்கினார்; கடைசியாக சேவகனிடம்போய், "'டிப்டி கலெக்டர்' எங்கே யிருக்கிறார்?" என்று கேட்டார்.

"சுவாமீ, அதிகாலையில் வண்டியில் வந்த பொழுது அவருக்கு தூக்கமில்லை; இன்னும் தூங்குகிறார்" என்று விடைசெய்தான்.

இப்படியிருக்க, அக்கிராமத்திலுள்ள ஸ்திரீகளும், சிறுமிகளும், சத்திரத்தின் இரண்டாம் 'தொட்டியில்' போய் மஞ்சள் குங்குமம், வெற்றிலை பாக்கு, பழம் முதலியவற்றை கையில் ஏந்திக்கொண்டு வெளியே வந்தார்கள். வெங்கம்மாள் ஒரு பெண்ணைக்கூப்பிட்டு "என்னடி சமாசாரம்" என்று கேட்க, அவள் "'டிப்டிகலெக்டரின்' தாயார் தினந்தோறும் காலையில் இம்மாதிரி செய்வது வழக்கமாம். இவ்விடம்வந்தும் அவ்வழக்கத்தை விடவில்லை" என்றாள்.

"அவர் தாயார்கூட இவ்வளவு நல்லவளாய் இருக்கிறாளே! என்னை விட்டுவிடுவானோ! இல்லையோ?" என்று வெங்கம்மாள் சந்தேகித்தாள்.

இதற்குள் ஒரு சிறு பெண்வந்து, "எங்கள் பாட்டி மஞ்சள் குங்குமம் கொடுக்கிறார்கள். நீங்கள் கூட வந்து வாங்கிக்கொள்ளுங்கள்" என்று, விசாலாட்சியின் கையை பலாத்காரமாகப்பிடித்து இழுத்தாள்.

"இந்த சமயத்தில் எனக்கு என்னவேண்டியிருக்கின்றது." என்று விசாலாட்சி புலம்பினாள்.

"எங்கள் தலையெழுத்து நாங்கள் கஷ்டப்படுகிறோம். மஞ்சள் குங்குமம் வந்தால் வேண்டாம் என்று சொல்லாதே" என்று இராமகிருஷ்ணய்யரும், வெங்கம்மாளும், சொன்னார்கள்.

தந்தைசொல் மாறாதவளானதினால், விசாலாட்சியும் இரண்டாம் தொட்டிக்குச் சென்றாள்.

உள்ளே சென்றவர்களெல்லாம், மஞ்சள் குங்குமத்தை வாங்கிக்கொண்டு இரண்டு அல்லது மூன்று நிமிஷத்திற்குள் வந்துவிடுவார்கள். விசாலாட்சி உள்ளேசென்று ஐந்து நிமிஷமும் ஆயின; பத்து நிமிஷமுமாயின; அரைமணியுமாயிற்று. அவள் வரக்காணோம். 'என்ன சமாசாரம்' என்று தெரிந்துகொள்ள, இராமகிருஷ்ணய்யரும், வெங்கம்மாளும் இரண்டாம் 'தொட்டிக்கு' ஓடினார்கள். அங்கே தாங்கள் கண்களால்கண்ட காட்சி நம்பக்கூடாததாயிருந்தது. டிப்டி கலெக்டர் குரிச்சியின்மேல் உட்கார்ந்திருந்தார். அவர் மேல் விசாலாட்சி மூர்ச்சித்துக்கிடந்தாள்:

"ஐயோ, லட்சுமிகரசு, மூன்றுவருஷகாலமாய் காணாமல்போய், கடைசியாக வந்து சேர்ந்தாயோ!" என்று கூச்சலிட்டார், இராமகிருஷ்ணய்யர்.

அவர்களுடைய ஆனந்தத்தை அளவிட்டுரைப்பது எம்மாலியலாதகாரியம்.

எல். சிவசாம்பன்.

## உப்பு.

## III.

### சாதாரண உப்புடன் சம்பந்தப்பட்ட வேறுபலவித உப்புகள்.

1. பூமியின் மேற்புறத்திலும், சுரங்கங்களிலுமகப்படும் சாதாரணவுப்பு விசேஷமாய் வேறு பலவித உப்புகளுடன் கலந்தேயிருக்கிறது. அவ்வுப்புகளைப்பற்றி நாம் ஏதேனும் கொஞ்சமாவது தெரிந்துகொள்வதவசியம்.



பொதுவாய் எல்லா உப்புகளும் சமுத்ரத்தினின்றே உற்பத்தியாகின்றன. 'மேயோ' உப்புச்சுரங்கங்களில் சாதாரண உப்பு விதம் விதமான நிறமுள்ள கூறிமண்ணுடன் கலந்தகப்படுகிறது. இவ்விடத்திலகப்படுமுப்பு அசுத்தமானதாயிருந்தால் "மாக்னீஷியம் ஸல்பேட்" (Magnesium Sulphate) என்னும் ஒருவித உப்புடன் கலந்தகப்படுகிறதாம். சுத்தமானதாயிருந்தாலுமதிலும் "கால்ஷியம் குளோரயிட்" (Calcium Chloride) என்னுமுப்பு கலந்திருக்கிறதாம். "பிடுமென்" (Bituman) என்னுமோர் உப்புக்கூட சாதாரண உப்புடன் கலந்தகப்படுகிறது. ஸிந்து நதிக்கப்பால் கீழ்புறமாய் இப் "பிடுமென்" உப்புடன் ஏராளமாய்க்கலந்தகப்படுகிறதாம். "பர்மா" தேசத்தில் கிரஸின் எண்ணெய்கூட உப்புடன் கலந்தகப்படுகிறது. "பாகு" (Baku) என்னும்பட்டணத்திற்கருகாமையிலும் மண்ணெண்ணெய்யகப்படுமிடத்திலேயே சாதாரண உப்பு விசேஷித்தகப்படுகிறதாம் அமெரிக்காவில் உப்புடன்கூடநிலக்கரியகப்படுகிறது. ஜாவாத்தீவின் எரிமலை நாடுகளில், "நாப்தா," "பிட்ரோலியம்" இவையிரண்டும் உப்புடன் அகப்படுகிறதாம். மிடியன் (Midian) நாட்டில் ஏராளமாய் கந்தகம் உப்புடன்கூட அகப்படுகிறதாம்.

2. சீனதேசத்தில் உப்புடன்கூட பலவித எண்ணெய்கள் அகப்படுகின்றன. அத்தேசத்தின் சில பாகங்களில் உப்புடன் கூடவகப்படும் எண்ணெயினாலும் எண்ணெயாவியினாலும் சீனர்கள் வேறுசெலவில்லாமல் உப்பு நீரைக்காய்ச்சி ஏராளமான உப்பு செய்கிறார்களாம். உப்பு வேண்டி ஒரு கிணற்றை வெட்டினால் அதிலிருந்துவரும் மேற்சொல்லிய எண்ணெயாவி 300 பெரிய உப்புநீர்க்கொப்பறைகளில் உப்புக்காய்ச்சப்போதுமானதும் இன்னும் ஜாஸ்தியானதுமாயிருக்கிறதாம். வட இந்தியாவில் 'கலாபாக்' என்னுமூரில் படிக்காரம், வெடியுப்பு முதலியவை ஒரு காலத்திலுப்புடன்கூடவகப்பட்டனவாம். இப்பொழுது அவ்விடத்திலேயே நிலக்கரி கந்தகம் மண்ணெண்ணெய் மூன்றுமகப்படுகின்றனவாம். சாதாரண உப்புடன் கலந்தகப்படும் மற்றவுப்புகளுள் "ஜிப்ஸமே" முக்கியமானது வட அமெரிக்காவிலும் ஆப்கானிஸ்டானிலும் இந்த ஜிப்ஸத்திற்கும் சாதாரணவுப்பிற்கும் வித்தியாசம் தெரியவேதெரியாதாம்.

3. மேல் சொல்லியிருக்கிறபடி கரையிலகப்படும் காய்ந்த உப்புடன் கலந்தகப்படும் வஸ்துக்களெல்லாம் சமுத்திர நீரில் எப்பொழுதுமுள்ளவையேதவிர வேறில்லை. சமுத்திரவுப்பானாலும் காய்ச்சுப்பானாலும், எரியுப்பானாலும், மண்ணுப்பானாலும், பாறையுப்பாலும் சாதாரணவுப்புடன் மேற்சொல்லிய அசுத்தவுப்புகளெல்லாம் கலந்தேயிருக்கின்றன.

## உப்புசமுத்திரம்.

1. சமுத்திரத்தின் விஸ்தீரணத்தை இவ்வளவென்று நாம்யூகித்துச் சொல்லக்கூடுமேயல்லாமல், சரியாய்க்கணக்கிட்டுச் சொல்ல நம்மாலாகாது. "புரொபஸர் மோஸ்லே" யென்பவர், நீருக்குவெளியில் நமது கண்களுக்குப் புலப்படும் பூமியைப்பார்க்கிலும், சமுத்திம் சற்றேறக்குறைய 3-மடங்கு விஸ்தீர்ணமுள்ளதென்றும், 22½ப்பங்கு பரிமாணமுள்ளதென்றும், ஜலமட்டத்திற்குச் சரியாய்த்தரைமுழுவதையும் வெட்டிச் சமுத்திரத்திற்குள்நிரவிப்போட்டால், சமுத்திரத்தினாழம் 500-அடி யளவுதான் குறைந்துபோமென்றும் சொல்லியிருக்கிறார். இது சமுத்திரத்தின் பிரமாண்டமான விஸ்தீரணத்தைக் காண்பிக்கிறது. சமுத்திரத்தின் ஆழம் வெவ்வேறிடங்களில் வித்தியாசப்பட்டிருந்தாலும்சராசரி பார்க்குமிடத்தில் இரண்டுமைலளவுக்கு குறையாத ஆழம் சமுத்திரத்திற்குண்டென்பதை நிச்சயமாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஓரோரிடங்களில், சமுத்திரம் 5, 5½-மயிலாழமுள்ளதாயிருக்கிறதாம். சமுத்திரத்தின் பரிமாணம், அதாவது, கன அளவு 20-கோடி கனமயில்களென்று யூகித்திருக்கிறார்கள்.

2. ஆதிகாலத்தில் இப்பூலோகமானது அதிகமான உஷ்ணத்தினால் உருகிப்போய் இளகின ஒரு கட்டிபோலிருந்ததென்றும், அப்பொழுது நீர்முதலியவை யெல்லாம் ஆவியாய் எழும்பி மேகம்போல் பூமியைக்கவர்ந்துகொண்டனவென்றும், மறுபடியும் குளிர்ச்சியுண்டான பொழுது அவ்வாவி யெல்லாம் மழையாய்ப்பொழிந்து பூமிமுழுவதையும் நன்றாய்க் கழுவி அசுத்தங்களை யெல்லாம் ஒன்றாய்த்திரட்டிக் கரைத்துச் சேர்த்துக்கொண்டு சமுத்திரமாகி விட்டபடியால் இப்பொழுது நமக்குக்கரையிலகப்படும் சகலவித உப்புக்களும் சமுத்திரத்திலே கூட அகப்படுகின்றனவென்றும், வான சாஸ்திரிகளும் மற்றுமுள்ளபெரியோர்களும் நிதானித்திருக்கிறார்கள்.

3. முன்னொரு அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறபடி சாதாரண உப்பும் மற்ற உப்புக்களும் சமுத்தி

ரத்தில் மாத்திரமல்லாமல் கரையிலும் அகப்படுகின்றனவென்று அறிந்திருக்கிறோமே. ஆனால் இப்பொழுது சொல்லியிருப்பதில் சமுத்திரத்தினுடைய உப்பெல்லாம் கரையிலிருந்து வந்தனவென்று இருக்கிறதே. இந்தமாறுபாட்டிற்கு நியாயம் ஏதெனில், அப்போதைக்கப்போது கரை சமுத்திரத்திற்கும், சமுத்திரம் கரைக்கும் தன் தன்னடக்கமாகியிருக்கும் உப்புக்களைக்கொடுத்துவருகிறது. சமுத்திரமிடைவிடாமல் ஒருபுறத்தில் பூமியைவிழுங்கித்தான் பரவிக்கொண்டும், மற்றொருபாகத்தில் தரையை நீருக்கு வெளிப்படுத்திக்கொண்டுமிருக்கிறது. அவ்விதம் நீரினின்று வெளிப்படுமிடங்களில் ஏராளமான உப்பு பாறையாகவும் மண்ணாகவும் வேறுபலவிதங்களாகவும் படிந்துபோகிறது. இவ்வாறு சமுத்திரநீரிலிருந்தும் உப்புவேறுபட்டுப் போவதினால் நாளாவர்த்தியில் உப்புக்குறைந்து சமுத்திர நீர் சுத்தஜலமாகிறதில்லை. மேலேசொன்னபிரகாரம் உப்புக்குறைந்துபோவதுடன்சமுத்திரத்திற்குநாளாவர்த்தியில்வந்துசேரும் உப்பையும் கணக்குப்பார்த்தால் செலவிற்கும் வரவிற்கும் சரியாய்ப்போவது நிச்சயம். மழைபெய்துபேராறுகள் பெருகி, கரையிலகப்படும் உப்பையெல்லாம் கரைத்துத்திரும்பவும் சமுத்திரத்தில் சேர்த்துவிடுகிறது, சமுத்திரத்தின் விஸ்தீர்ணமும் அதின் உவர்ப்பும் ஆதிகாலம்முதலாய் ஒரேயளவாயிருக்கிறதேயல்லாமல வேறுபடவில்லை. இதற்கு மேலேசொல்லியகாரணங்கள் மாத்திரமல்லாமல் வேறுவித ருஜுக்களுமிருக்கின்றன. நீரின் தன்மைவேறுபட்டால் அதில் வசிக்கும் ஜந்துகளின் தன்மையும் வேறுபடுவது நிச்சயம். ஆனால் பூர்வீகத்தில் எவ்வித ஜந்துக்களிருந்தனவோ அவ்வித ஜந்துக்களே யிப்பொழுதுமிருக்கின்றனவென்று சாஸ்திரிகளனேகர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

4. சமுத்திரநீரின் கனம் சுத்த ஜலத்தின் கனத்தைக்காட்டிலும் 100-க்கு 27-பங்கு ஜாஸ்தியாயிருக்கிறது, ஓரோரிடங்களில் இந்தப்பிரமாணத்திற்கு ஜாஸ்தியும், கம்மியுமாய்க்கூடக் காணப்படுகிறது. முக்கியமாய்பெரிய நதிகளின் சங்கமம் எங்கேஜாஸ்தியாயிருக்கிறதோ அங்கே கனம் கம்மியாகவும் மற்றவிடங்களிலும் நடுச்சமுத்திரத்திலும்கனம் ஜாஸ்தியாயுமிருக்கிறது அதாவது சுத்த ஜலசம்மந்தம் ஜாஸ்தியான விடங்களில் சமுத்திரநீரில் உப்புக் கம்மியாயிருக்கிறது. எவ்வெவ்விடத்தில் சூரிய வெப்பத்தினால் நீர் ஆவியாய்ப்போய் விடுவது ஜாஸ்தியோ அவ்வவ்விடத்தில் உப்பு ஜாஸ்தியாகவிருக்கிறது. "செங்கடல்" என்னும் குடாக்கடலில் வெப்பம் ஜாஸ்தியும் சுத்தஜலசம்மந்தமாகாததுமானதால் அதில் உவற்பும் கனமும் மிகவும் ஜாஸ்தி. பனிக்கட்டிகளால் எப்பொழுதும் மூடப்பட்டிருக்கும் "அண்டார்டிக்" மகாசமுத்திரத்தின் ஜலம் மிகவும் இலேசானது.

5. இப்பார் முழுதும் சுற்றிக்கொண்டிருக்கும் இச்சமுத்திரத்தின் பலபாகங்களிலுமுள்ள நீரைப் பரிசோதித்துப்பார்த்த விடத்தில் அதில் சம்மந்தப்பட்டிருக்கும் உப்புக்களெல்லாம் எங்கும் ஒரேவிதமானவை யென்றும், அவ் வுப்புக்களெல்லாம் தங்களுக்குள் எவ்விடத்திலும் ஒன்றிற்கொன்று ஒரே பரிமாணமுள்ளவைகளென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக்காரண மேதெனில், ஆங்காங்கு வெவ்வேறு பேரிடப்பெற்றிருந்தாலும் சமுத்திரம் முழுவதும் ஒரே பிரவாகமென்பதே. "கடலுக்குக்கரையில்லை" என்னும் பழமொழி யதார்த்தமானது. எங்கும் ஒரே பிரவாகமாகப் பரவியிருப்பது மல்லாமல் ஒரே நிலையாயிராமல் பின் சொல்லுமாறு ஓரிடமிருந்தோரிடத்திற்கு எப்பொழுதும் ஓடி யுலாவிக்கொண்டிருப்பதினால் ஆங்காங்குள்ள சொற்பவித்தியாசங்களும் நிலையாய் நிற்பதில்லை.

6. மேற்சொல்லிய சமுத்திர பிரவாகத்தினோட்டத்திற்கு நான்கு காரணங்களிருக்கின்றன. 1. உவற்பின் கம்மி ஜாஸ்தி, 2. காற்று, 3. சீதோஷணம், 4. மேடுபள்ளம். கொடிய வெப்பமான பாகங்களில் சமுத்திர நீர் தினமொன்றுக்கு சுமார் அரையங்குலவாழம் குறைந்துபோகிறது. இவ்வாறு வற்ற வற்ற அப்பாகங்களில் மேலாக நிற்கும் நீரில் உப்பு ஜாஸ்தியாகி நீர் கனமாகி மேலேயுள்ள நீரெல்லாம் கீழே ஆழ்ந்துவிடுகிறது. உப்புக்கம்மியும் இலேசுமான கீழேயுள்ள நீர் மேலேவந்து விடுகிறது. இவ்வாறு ஒருவித வோட்டமுண்டாகிறது. மேலும் வெப்பம் கம்மியான பாகங்களில் நீர் அவ்வளவு வற்றிப்போகாமல் வெப்பமான பாகங்களிற்காட்டிலும் ஜாஸ்தியாயிருப்பதினால் அவ்விடங்களிலிருந்து பின்சொல்லிய விடங்களுக்கு நீர் ஓடிப்பாய்கிறது. பனுவர்க்கீழே போய்ச்சேரும் நீரும் கரை யோரங்களில் பேராறுகளின் சுத்த ஜலப்பிரவேசத்தினு லுப்புக்கம்மியாகி யிலேசான ஜலமுள்ள விடங்களுக்குள் பிரவேசித்து இலேசான நீரைத்தானிருந்த விடத்திற்குத்துறத்துகிறது. இவ்வாறு சமுத்திரத்தில் நாலாபக்கங்களிலும் எப்பொழுதும் நீரோட்டமிருந்துகொண்டேயிருக்கிறது. இன்னமும், அப்போதைக்கப்போதடிக்கும் பெருங்காற்றுக்களினாலும்



சுழற்காற்றுக்களினாலும் ஓரோரிடங்களில் பிரமாதமான நீரோட்டங்கள் உண்டாகின்றன. அலைகளினாலும் கொஞ்சம் நீரோட்டமுண்டாகிறது. இவையெல்லாமின்றி, சமுத்திறத்திற்குள்ளாக சுமார் 2000 மாரளவு ஆழத்திற்கப்பால், தென்மகா சமுத்திரத்தின் பக்கமிருந்து, வடமகாசமுத்திர முகமாய் சீதளமும் உப்பும் ஜாஸ்தியான நீரோட்டமொன்று இடைவிடாமலிருந்துகொண்டிருக்கிறது. இவ்வோட்டங்களினால்தான் சமுத்திரம் ஒருபாகத்திலோர்விதமாயும் மற்றொருபாகத்தில் வேறொருவிதமாயுமில்லாமல் எங்கும் நிரந்தரமாய் ஒரேயளவு உப்புள்ளதாயிருக்கிறது.

7. சமுத்திரத்தின் மேற்புறத்துஷ்ணம் பலவிடங்களில் பலவிதமாயிருக்கிறது. "பாஹ்ரன்ஹயிட்" உஷ்ண அளவுக்கருவியினால் பரிசோதித்ததில் இந்து மகாசமுத்திரம் 81°, ஏடன் குடாக்கடல் 77°, செங்கடல் 75°, சூயஸ்குடா 69°, மத்தியதரைக்கடல் 60°, இங்கிலீஷ் கால்வாய் 45°, (டிகிரீ) உஷ்ணமுள்ளவையென்றும் "டாக்டர் ராட்டன்" துரை கண்டுபிடித்திருக்கிறார். கொடிய வெப்பமான விடங்களில் சூரியவெப்பம் நீருக்குள் சுமார் 400 மாரளவு ஆழம் வரைக்கும் பிரவேசிக்கிறது. மத்தியதரைக்கடலில் 100 மாராழம்வரைக்குமே பிறவேசிக்கிறதாம். சமுத்திரத்தின் எந்தப்பாகத்திலானாலும் சரி, 500 மாராழத்தில் ஒரே ரீதியாய் 40 டிகிரியளவே உஷ்ணமிருக்கிறதாம். இவ்வாழத்திற்கும் கீழாக 2000 மாராழம் போனால் 27 டிகிரி உஷ்ணமாகவேயிருக்கிறது மன்னியில், அவ்விடம் முதல் கீழே தரைவரையில் அதே உஷ்ணமாக விருக்கிறதென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

8. இவ்வுலகத்தின் ஜீவசிருஷ்டிகளில் கடல் பிராணிகளும் கடற்செடிகளுமே முதல் முதலுண்டானவையென்று யூகிக்கிறார்கள். சமுத்திரத்தில் வசிக்கும் ஜீவப்பிராணிகளை நாலு வகுப்பாக வகுக்கலாம். (1.) 200 மாராழத்திற்குள் இருக்கின்றவை. (2.) 200 முதல் 1200 மாராழத்திற்கு ளிருக்கின்றவை. (3.) 2000 மாராழத்திற்குக் கீழிருக்கின்றவை (4.) கடலினடித்தரையின் மேலிருக்கின்றவை சமுத்திரத்தின் எல்லாப்பாகங்களிலு மேராளமாய் கடற்செடிகள் பயிராகின்றன வானாலும் 3000 மாராழத்திற்குக் கீழாகசெடிகள் பயிராகிறதில்லையாம்.

9. சமுத்திரத்தில் உப்பு இவ்வளவு ஜாஸ்தியாய் ஏனிருக்கவேண்டுமென்று ஆலோசிக்கு

மிடத்து, கடலைப்போன்ற கருணையை உடை
கடவுள், மனிதர்களாகிய நம்முடைய பல அ
கூலங்களை யுத்தேசித்துத்தான் அவ்வாறு கடலை
சிருஷ்டித்தாரென்று நாம் காணலாம். இவ்வுப்
முழுவதும் சமுத்திரத்திலில்லாமல் கரையிலிரு
தால் பூமிமுழுவதும் பாழாய்விடும். தேசங்
ளுடைய சீதோஷணங்களின் பிரதிகூலங்களை ய
கூலங்களாய் மாற்றக்கூடிய விவ்வுப்பினது சக்தி
யெடுத்துரைத்தால் ஒரு பெரிய இராமாயணமாகு
சுருக்கிச்சொன்னால், முதலில் மேலே ஓரிடத்தி
சொல்லியிருக்கிறபடி கடலின் நீரோட்டத்தின
உஷ்ணதேசத்தினருகாமைக்குக் குளிர்ந்த நீரும்
குளிர்ந்ததேசத்தி னருகாமைக்கு உஷ்ண நீரு
போய்ச்சேருவதினால் ஆங்காங்குள்ள கொடு
யான சீதோஷ்ணங்கள் குறைந்து மனிதர் வாச
செய்வதற் கனுகூலமாகிறது. சமுத்திரம் முழு
தும் சுத்த ஜலமாயிருந்தால் 'ஆர்டிக்' 'அண்டா
டிக்' பக்கங்களில் நீர் பனிக்கட்டியாயுறைந்துபோ
பூலோகத்தின் முக்கால் பாகம் பனிக்கட்டியா
சூழப்பட்டுப்போய்விடும். மேலும் சமுத்திரத்
னுப்பிற்கல்லாமல் மழை பொழியாது. சுத்த ஜல
தினின்று மெழும்பும் நீராவி புகையாய் நிற்குமே
தவிர ஒன்றாகச்சேர்ந்து மேகங்களாய்த்திரளாது
நீராவி மேகங்களாய்த்திரளுவதற்கு அதை யொன்
றாகச்சேர்க்கக்கூடிய பதார்த்தம் ஒன்று வேண்டும்
சமுத்திரத்தினின்றும் அலைகளின் வழியாய் உப்
நீர்துளிகளா யாகாயத்திலெழும்பிக் காற்றினாற்ப
வப்பெற்று ஆங்காங்கு எழும்பாநிற்கும் நீராவி
னுட்புகுந்து, உலர்ந்து, உப்பு சன்னங்களாகி, நீரா
வியை யொன்றுசேர்த்து மேகங்களை யுண்டுபண்ணு
கின்றன. உப்புநீரிலிருந்துண்டாவதைக் காட்டி
லும் சுத்தஜலத்திலிருந்து 2 மடங்கு ஜாஸ்தியாய்
நீராவி யெழும்புகிறது. ஆகையினால் கடல் முழு
வதும் சுத்த ஜலமாயிருந்தால் பூமி மழையில்லாமல்
நீராவியினால் மூடப்பட்டும், இராக்காலங்களின்
குளிர்ச்சியினால் அந்நீராவி முழுவதும் பனிக்கட்டி
யாயுறைந்துபோவதுபற்றி மனிதர் வசிக்கக்கூடாத
தாகவுமாகி பாழாகிவிடும்.

டி. ஸி. சேஷகிரிராஜய்யங்கார்.

## சம்பகமாலை

### அல்லது

## இளையராஜாவின் தீர்மானம்.

### அங்கம் IV.

---

ஆறும் களம்.

இடம்: அரண்மனையிலோர் அறை.

(ரின்மல் உட்கார்ந்திருக்கிறான்.)

**ரின்மல்.**—(தனக்குள்ளே) என்னுடைய முயற்சி முடிவுறுமென்று நான் எண்ணவில்லை. என்னுடைய எண்ணம் வெளிப்பட்டுவிட்டது. மீராவினுடைய சொற்களால் புரோகிதற்கும் சாதுவுக்கும் சம்சயம் உண்டாயிருக்கக்கூடும் ஆயினுமென்? இவர்களால் நமக்காகவேண்டுவதென்ன? இவ்வற்பர்களால் நமக்கென்ன தீங்கு நேரிடக்கூடும்? (சற்றே யோசித்து) ஆ! அப்படி நினைக்கலாகாது. புரோகிதர் மெத்த செல்வாக்குடையவர். மீராவுக்கும் அரண்மனையில் மெத்த செல்வாக்குண்டு. இச்சங்கதியை அவர்கள் சம்பகமாலைக்குச் சொல்லிவிட்டால் அவள் நம்புவளே. நான் என்செய்வது? ஜோடாவுடன் யோசிக்கவேண்டும்.

(ஜோடா பிரவேசிக்கிறான்.)

**ஜோடா.**—நமஸ்காரம் செய்கிறேன் பிதாவே!

**ரின்.**—சிரஞ்சீவியாயிருக்கக்கடவாய் ஜோடா! உன்னைத்தான் வரவழைக்கலாமென்றிருந்தேன். முக்கியமான சிலவற்றை நான் உனக்குச் சொல்லவேண்டும்.

**ஜோ.**—சொல்லும் பிதாவே!

**ரின்.**—ஜோடா! நேற்று நடந்த அமளியினால் நமக்குக் கெடுதி ஏதாவது நடக்குமென்று நினைக்கின்றாயா?

**ஜோ.**—என்ன கெடுதி நேரிடும்? ஒருவேளை மீரா சம்பகமாலையினிடம் சென்று நடந்தவைகளை விசேஷித்துச் சொல்லுவாள். அது தவிர வேறென்ன கெடுதி உண்டாகும்?

**ரின்.**—அவள் சொல்லாவிடினும் பைரங்கமாய் நடந்த சங்கதியாகையால் எவர்களேனும் சொல்லலாம். அவளுக்கு நம்மிடத்தில் யாது சம்சயம் உண்டாகுமோ?

**ஜோ.**—உண்டாகும் தடையில்லை. ஆனால் மிக சாமர்த்தியத்துடன் பேசி அவளுடைய சம்சயத்தைப் போக்கவேண்டும். அவ்வாறு செய்ய நம்மால் முடியாவிட்டாலும் நீர் அதற்காக சிந்திக்கவேண்டாம். அவள் என்ன செய்வாள்? சைந்நியமா? பொக்கிஷமா? அவளுடைய சுவாதீனத்தில் என்ன விருக்கின்றது? அவைகளை யெல்லாம் நான் வெகுஜாக்கிரதையாய் பத்திரப்படுத்தி யிருக்கின்றேன்.

**ரின்.**—நீ அவ்வாறு நினைக்கலாகாது ஜோடா! சாமந்த ராஜாக்களில் எவரேனும் அவளுக்குச் சகாயம் செய்யக்கூடும்.

**ஜோ.**—ஆம், ஆம், பிதாவே. சாமந்த ராஜாக்களில் எவர்கள் முன்வந்து காப்பாற்றாவிட்டாலும் ராஜதேவன் வந்து சகாயம் செய்வது நிச்சயம். அதைப்பற்றி முன்னரே உங்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றேனே.

**ரின்.**—செய்திருக்கிறாய், உண்மைதான்.

**சேவகன்.** - (நுழைந்து) மகாராணி தம்மை தரிசிக்கும்பொருட்டு வந்திருக்கின்றார்கள்.

**ரின்.**—(சற்றே யோசித்து) வரச்சொல் சேவகா!

**சம்பகமாலை.**—(பிரவேசித்து) நமஸ்காரம் பிதாவே!

**ரின்.**—சுகமாயிரு. எங்குவந்தாய்? என்ன விசேஷம்?

**சம்.**—பிதாவே! அண்ணா! நீங்களிருவரும் ஒருங்கேயிருக்கும் சமயத்தில் உங்களுடன் சம்பாஷிக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் வந்தேன்.

(ரின்மலும் ஜோடாவும் ஒருவன் முகத்தை மற்றவனைப் பார்க்கின்றார்கள்.)

**ரின்.**—என்ன விசேஷம்? எதுவாகிலும் பயப்படாமல் சொல்.

**சம்.**—பிதாவே! அண்ணா! உங்களைக்காட்டிலும் உற்ற பந்துக்கள் எனக்கில்லை. நீங்களிருவரும் நான் பூஜிக்கத்தகுந்த மேலான நிலைமையிலிருக்கின்றீர்கள். உங்களை யாராயினும் தூஷிக்கிறார்களென்று நான் கேட்டால் என் மனம் நோகின்றது. நானென்செய்வேன்?

**ரின்.**—எதற்காக எங்களைப் பிறர் தூஷிக்கவேண்டும். நாங்கள் என்ன கெட்டகாரியம் செய்தோம். தூஷிக்கிறவர்கள் யார்? உன் குடும்ப புரோகிதரும் மீராபாயும் தவிர வேறெவர்கள் எங்களை தூஷிக்கப்போகிறார்கள்? நீ அவர்களுக்கு அவ்வளவு சுதந்திரம் கொடுக்கின்றாய்.

**சம்.**—பிதாவே! நான் அவ்வாறான சுதந்திரமொன்றும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. அவர்கள் எனக்கு அடங்கியவர்களானாலும் அவர்களிருவரும் அரண்மனை வாசிகளில் முக்கியமானவர்கள். நியாயமாய் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நான் எப்படி பதில் சொல்லாம லிருக்கலாம். முக்கியமான ராஜ காரிய ஸ்தானங்களிலிருந்து 'சிசோதிய' க்ஷத்திரிய குலத்தவரை நீக்கி 'ராத்தோர்' குலத்தவரை வைத்திருக்கின்றீர்களாம்.

**ஜோ.**—சம்பகமாலே! இக்காரியம் நான் செய்தது. அதைப்பற்றி பிதாவின்மீது குற்றம் சுமற்ற வேண்டாம். அவ்வாறு செய்ததும் உன் க்ஷேமத்தைக் கருதியேயன்றி வேறல்ல? சிசோதய குலத்தவரை இதுகாறும் நான் முக்கியமான ஸ்தானங்களில் வைத்திருந்தேனானால் இவ்விராஜ்ஜியம் உன் குழந்தையினுடைய ராஜ்ஜியமாயிருந்திராது. இத்தேசத்தைவிட்டுப் போய்விட்டமையினாலேயே சோண்டா சத்தியவந்தனென்று நினைக்கவேண்டாம். பிரதேசத்திலிருந்துகொண்டே தகுந்த சமயம் எப்போது வாய்க்கப்போகிறதென்று மிக்க ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கின்றான். மீராவும், புரோகிதரும் அவனுடைய வேவுகாரர்களென்று நினைத்துக்கொள். உனக்கு நாங்கள் செய்யும் உபகாரத்தை நினையாது அவர்களுடைய பேச்சைக்கேட்டு இவ்வாறு எங்களை நிந்திப்பது சரியன்று. எங்களுடைய ராஜ்ஜியம்விட்டு தேசம்விட்டு உன்தேசத்தில் வந்திருக்கவேண்டியதென்ன? நாங்கள் செய்வதெல்லாம் உனக்கு உபகாரமென்று நீ நினையாத பக்ஷத்தில் நாங்கள் ஒரு நாள் கூட இங்கு நிற்கமாட்டோம். நீ யாரை வேண்டுமென்றாலும் நியமித்து ராஜ்ஜியபரிபாலனம் செய்துகொள்.

**சம்.**—கோபித்துக்கொள்ளவேண்டாமண்ணா! உலகத்தில் நிகழ்கின்ற சங்கதியை உங்களுக்குச் சொன்னேன். அபகீர்த்திக்கு இடங்கொடாமல் நீங்களிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கோரிக்கை. தகுந்த முகாந்திரங்களில்லாமல் நான் ஒன்றையும் நம்பமாட்டேன். ஆயினும் ஜனங்களுக்கு சம்சயம் உண்டாவதற்கு இடங்கொடுக்கவேண்டாம். சம்சயம் உண்டாகிவிட்டால் ராஜதேவன்போன்ற என்னுடைய மற்றப் பிள்ளைகள் சும்மாவிருக்கமாட்டார்கள். தேசம் என் குழந்தைக்குக் கிடைக்காமற் போய்விடும்.

**ரின்.**—புத்ரீ! சம்பகமாலே! நீ ஒன்றுக்கும் சிந்திக்கவேண்டாம். ஜோடா வேறு நீ வேறென்று நான் நினைத்திருப்பதாக நீ எண்ணுகிறாயோ? உன்குழந்தையையா நான் வஞ்சிப்பேனென்று எண்ணுகிறாய்?

**சம்.**—ஒருகாலும் நான் அவ்வாறு எண்ணமாட்டேன் பிதாவே!

**ரின்.**—மற்றென்ன? நீஎதற்கும் சிந்திக்கவேண்டாம். கலகக்காரருடைய போதனைக்குச் செவிகொடாதே.

(சம்பகமாலை போகிறாள்.)

**ஜோ.**—பிதாவே! இவ்வரண்மனையில் கலகக்காரர்கள் நிறைந்திருக்கிறார்கள். இன்னார் கலகம் செய்கிறார்களென்று கண்டுபிடிப்பதும் கஷ்டமாயிருக்கின்றது. நெடுநாள் சம்பகமாலைக்குச் சந்தேகம் உண்டாகாமல் போதித்து வைத்திருக்கவும் சாத்தியமில்லை. நாமிதற்கு வேறு யுக்தி செய்யவேண்டும்.

**ரின்.**—வேறுயுக்தி என்னவிருக்கிறது புத்திரா! பூனை எவ்வளவுகாலம் பதுங்கி சமயம் நோக்கினாலும் கடைசியில் பாய்ந்தே தீரவேண்டும். பாய்ந்தாலும் பக்குவமாய்ப் பாயவேண்டும். அதற்காக நீ சிந்திக்கவேண்டாம். நான் தகுந்தவழி கண்டுபிடிக்கின்றேன். நேரமாய் விட்டது நாம் போகலாம்.

(போகிறார்கள்.)

---

### அங்கம் IV.

ஏழாங்களம்.

---

இடம்.—ஊருக்குவெளியே ஏகாந்த ஸ்தலம்.

(ஜேண்டாவாக், சீசீ பிரவேசிக்கிறார்கள்.)

**சீசீ.**—(கஞ்சா புகையை இழுத்துக்கொண்டு) ஜேண்டாவாக்! நாம் புலியைக் கொல்லுகின்றோம்,

மானைக்கொல்லுகின்றோம், இன்னும் அனேக ஜீவப்பிராணிகளைக் கொல்லுகின்றோம். உலகத்தார் நம்மை தூஷிப்பதில்லை. மனிதனைக் கொன்றால்மாத்திரம் ஏன் பதைக்கின்றார்கள். அவர்களுடைய நடத்தை உனக்கு ஆச்சரியமாய்க் காணப்படவில்லையா?

**டேண்டாவாக்.**—எனக்கும் ஆச்சரியமாகத்தான் காணப்படுகிறது. மாமிசத்தின் பொருட்டு ஒருவன் ஒரு ஆட்டைக்கொன்றால், திரவியத்தின் பொருட்டு நாம் மனிதனைக் கொல்லுகின்றோம். கடைசியில் எல்லாம் அவரவர் வயிற்றின் கொடுமைக்காகவே. ஆட்டையும், மாட்டையும் கிழித்துச் சாப்பிட கடவுள் புலிக்குப் பல்லைக்கொடுத்திருந்தால், நமக்கு அவர் இவ்வாயுதத்தைக் கொடுத்திருக்கின்றார். அதை உபயோகப்படுத்திப் பிழைக்க நாமேன் பின்னடையவேண்டும்.

**கீசீ.**—நான் ஒருக்காலும் பின்னடையேன்; உன் சங்கதி?

**டேண்.**—நானுமப்படியே. நான் ஒருக்கால் இவ்வாளைத் தூக்கினேனேயானால் அதற்கிரையாமவர் சிறுவரேனும், பெரியரேனும், ராஜனேனும், பிராம்மணனேனும், அது அவர்கழுத்தில் விழாமல் நில்லாது.

**கீசீ.**—ஷபாஸ்! நீதான் எனக்குற்றதோழன் (முதுகில்தட்டி) நமக்கொரு நற்காலம் வரப்போகின்றது. ஒரு நொடிக்குள் நாமிருவரும் செல்வவான்களாய்விடலாம். இவ்வபாயமான தொழிலைவிட்டு சுகமாயிருக்கலாம். அதற்காகவே உன்சகாயத்தைத் தேடினேன்.

**டேண்.**—அது என்ன? சொல் கீசீ!

**கீசீ.**—நானிப்போது சொல்லமாட்டேன். கடைசியில் நீயே தெரிந்துகொள்ளுவாய். நான் சொல்லுமாறு செய்வதே அதுவரையிலும் உன் கடமையாயிருக்கட்டும். கொஞ்சதூரம் போய் யாராவது நம்மைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்களா பார். வந்திருந்தால் அழைத்துவா.

**டேண்.**—(இரண்டடி வைத்து) நான் போகவேண்டுவதில்லை கீசீ! யாரோ ஒரு ஸ்திரீ ஒருமூட்டையைத் தூக்கிக்கொண்டு அதோவருகிறாள்.

(பிரதா ஒருமூட்டையை எடுத்துக்கொண்டு பிரவேசிக்கிறாள்.)

**பிரதா.**—கீசீ! அங்கு இருக்கின்றாயா?

**கீசீ.**—(அவளை நெருங்கிப்போய்) இதோ இருக்கின்றேன். ராஜா வந்திருக்கின்றாரோ?

**பிரதா.**—ராஜா வரவில்லை. அவர் வரத்தகுந்த சமயம் வாய்க்கவில்லை. இதோ இந்த மூட்டையை உன்கையில் கொடுக்கச் சொன்னார். இந்தக் கடிதத்தையும் உன்கையில் கொடுக்கச்சொன்னார். அவருடைய கட்டளையை நீ இந்தக் கடிதத்தில் காணலாம். அதை நீ நிறைவேற்றியதற்குத் தகுந்த அத்தாக்ஷியுடன் நீ அதை மறுபடியும் அவர் கையில் திருப்பிக்கொடுக்கவேண்டும். நான் சொன்னதின்னதென்று அறிந்தாயா?

**கீசீ.**—தெரிந்துகொண்டேன். காரியத்தை முடித்து இன்றைக்குப் பதினைந்து நாளில் மகாராஜாவைக் கண்டுகொள்ளுகிறேனென்று அவருக்குச் சொல்லும்.

**பிரதா.**—நான் போகின்றேன். மூட்டையையும் கடிதத்தையும் ஜாக்கிரதையாய் பத்திரப்படுத்திக்கொள் கீசீ!

(பிரதா போகிறாள்.)

**கீசீ.**—டேண்டியாவாக்! இந்த மூட்டையைத் தூக்கிக்கொள். நாம் நம் குடிசைக்குப் போகலாம். இந்த மூட்டையை நீ செய்யவேண்டிய வகை இன்னதென்று உனக்குச் சொன்னேன். வா போகலாம்.

(இருவரும் செல்லுகிறார்கள்.)

எச். வெங்கோபராவ்

# சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாகவிருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

## காஞ்சீபுரம் ஜலாதாரம்.

காஞ்சீபுரம் மகாக்ஷேத்திரம் என்று எல்லாருக்கும் தெரியும். வடக்கே ஹிமயமுதல் தெற்கே கன்னியாகுமரிவரையில் பிரபலமாகப் பேர்பெ



ள்ளது. சென்ற 1891-ம்ஞூத்தில் எடுத்த ஜனசங்கைக்கணக்குப்படி 42,543 ஜனங்களடங்கிய முனிசிபல் பட்டணம். இந்த முனிசிபாலிடி முதல்முதல் 867-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஆகையால் இப்பொழுது 32-வருஷகாலமாக இங்கே முனிசிபல் துரைத்தனம் நடந்துவருகிறது. முனிசிபாலடியின் நோக்கமெல்லாம் நகர்சுத்தி, ஜனசௌக்கியம், ஆகிய இரண்டே. நகர்சுத்தி யென்பதில் நகர் சீர்திருத்தமும் சேர்ந்திருக்கிறது. ஜனசௌக்கியத்துக்கு இன்றிமையாதவை (1), சுத்தம், சுசி,(2) நல்லஜலம், சாக்கடைநீர் துர்க்கந்தம் வீசாது வெளியில்போக ஜலதாரை, நல்லவீதிகள் ரஸ்தாக்கள், இராக்காலத்தில் வெளிச்சம் முதலியவைகளாம். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகுமென்றார் ஆதலால் பிரதமவித்தியாபோதனையும் ஜனசௌக்கியத்துக்கு இன்றியமையாதவைகளில் ஒன்றாகும். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வதும் முனிசிபாலிடியாருடைய கடமையாம். மொத்தமாகச் சொல்லில் குடித்தனத்தலைவன், தலைவி குஞ்சு குழந்தைகளைக் காப்பாற்றி குடித்தன க்ஷேமத்துக்கு, வேண்டிய காரியங்களையெல்லாம் எப்படிப் பார்த்துவருகிறார்களோ, அப்படி முனிசிபாலிடியார் நகர் பொது க்ஷேமத்துக்கு வேண்டிய காரியங்களையெல்லாம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். வீட்டுவேலைக்காரி வீடுவிளக்கிச் சுத்தம்செய்து போனதும் குழந்தைகள் குப்பை கூளங்களைக் கொணர்ந்து கூடத்தில் நிறைத்து விளையாடினால் அந்தவீடு எப்படி அசுத்தம் நிறைந்திருக்குமோ, அப்படியே, முனிசிபாலிடியார் தெருக்களைக்கூட்டிச் சுத்தம்செய்ய நியமித்த தோட்டிகள் வந்து அவர்கள் வேலையைச் செய்துவிட்டுப் போனதும் வீட்டுக்காரர்கள் குப்பையையும் எச்சிலையையும் வாசலில் போட்டு அசுத்தம் செய்தால் அந்த ஊர் அசுத்தம் நிறைந்ததாகவே யிருக்கும். கட்டின வீட்டைக் குப்பையாகச்செய்யும் குழந்தைகளை வீட்டுக்குத் தலைவி எப்படி புத்திபோதித்தும் கண்டித்தும் அப்படிச்செய்யாவண்ணம் தடுக்க வேண்டியவளாயிருக்கிறாளோ, அப்படியே முனிசிபாலிடியாரும் நயபயத்தால் ஜனங்களுக்குப் புத்திபோதித்து ஊரை அவர்கள் அசுத்தி செய்யாதவண்ணம் கட்டுக்காவல்கள் ஏற்படுத்தித் தடுத்துவரக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இதனால் முனிசிபாலிடி யென்பது ஜனங்களுடைய சுகக்ஷேமத்தின்பொருட்டேற்படுத்தப்பட்ட ஸ்தாபனமன்றி வேறல்லவென்றும், அவர்கள் செய்யும் முயற்சி ஜனங்களுடைய உதவியும் சகாயமுமிருந்தாலன்றி பயன்படாதென்றும் ஸ்பஷ்டமாய் விளங்கும்.

ஜீவாதாரத்துக்கு முக்கியமாக வேண்டியவை நல்லகாற்று, நல்ல ஜலம், நல்ல உணவு. நகர் சுத்தமாயிருந்தாலொழிய உச்சுவாசிக்க நல்லகாற்று கிடைப்பது அருமையாதலால் நகர்சுத்தி மிகவும் முக்கியமாய் கவனிக்கவேண்டிய முதற்கடமை யாகிறது. மூச்சுவிட நல்ல காற்றுக்குப்பின் மிக முக்கியமாய் வேண்டியது குடிக்க நல்ல ஜலம். கெட்டகாற்றுக்குப்பின் ஜலகஷ்டம் மற்ற எல்லா கஷ்டங்களிலும் சகிக்கரிய பெருங்கஷ்டமென்று குடித்தனஞ்செய்து பழகிய எல்லாருக்கும் தெரியும். ஆகையால் இந்த ஜலகஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டியது முனிசிபாலிடியாரின் இரண்டாவது கடமையாகிறது. ஜலகஷ்டத்தை நிவர்த்தித்து நல்ல ஜலாதார மேற்படுத்துவது மிகவும் மேலானதர்மமாக ஹிந்துக்களால் ஆதிகாலந்தொட்டுப்பாராட்டி வரப்படுகிறது. தர்மஞ்செய்ய விரும்புகிறவர்கள் குளங்குட்டை கால்வாய் கிணறு முதலிய ஜலாதாரங்கள் ஏற்படுத்துவது நமக்குள் மிகவும் சகஜமாயிருந்திருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட ஜலாதார மேற்படுத்துவதில் காலத்துக்கேற்ற சீர்திருத்தங்களோடு அவ்வேலைகளைச் செய்தால் மிகவும் நலமாகவும் மேன்மையாகவுமிருக்கும். அப்படிக்கின்றி பழமை பாராட்டி காலத்துக்கொவ்வாத விதமாகப் பணத்தைச் செலவழித்துத் தர்மஞ்செய்தால் விழலுக்கிறைத்த நீர்போல் அது விளங்காது வீணாகிறது. இது சம்பந்தமாக யாவரும் மனதில் வைக்கவேண்டிய பொதுவான சில உண்மை வாக்குகளைச் சுருக்கமாக மேலே குறிப்பிட்டோம். இவைகளைப் பின்னால் பக்ஷவாதம்செய்ய விரும்புவோர் முன்னதாகக் கருத்திலிருத்திப் பின்னர் பேசுவார்களென்று நம்புகிறோம்.

காஞ்சீபுரம் மிகவும் மேலான க்ஷேத்திரமானாலும் ஜலாதாரவசதி இயற்கையாக அமையப்பெற்றதில்லையென்பது அவ்வூரையறிந்தோருக்கு நன்றாக விளங்கும். பூர்வந்தொட்டு இது அந்நகருக்கு ஓர் பெருங்குறையாகவே யிருந்துவந்தது என்பதும் இக்குறையை நிவர்த்திக்க ஹிந்து அரசர்கள் விசேஷ பிரயத்தனங்கள் செய்துவந்தார்களென்றும் அந்நகரின் சரித்திரத்தை ஆராய்வோருக்கு நன்றாய் விளங்கும்.

உதாரணமாக, சாலிவாஹன சகாப்தம் 1645-க்குச் சரியான கி. பி. 1792-ம் வருஷத்தில் காஞ்சீபுரத்தை யாண்ட **சித்தகோனிராஜா அல்லது பாபா**

**ஸாஹிப்** என்பவர் ராஜகால்வாய் வெட்டி பட்ட
ணத்திலுள்ள குளங்களுக்கும் கோனேரிக்குப்பம்
கிராமத்துக்கும் ஜலம் பாயும்படி விசேஷ செலவு
செய்து ஏற்பாடுசெய்தார். அக்கால்வாயிலிருந்து
'ஸர்வதீர்த்தம்' முதலிய குளங்களுக்குப்பாயும் சுரங்
கக்கால்வாயை இன்றைக்கும் பார்க்கலாம். காஞ்சீ
புரத்தில் நாம் தங்கியிருந்தபொழுது இருந்த வீட்
டின் வாசற்குரட்டில் இச்சுரங்கவாசல் ஒன்று தூர்
ந்து மூடப்பட்டிருந்ததைப் பார்த்தோம். பட்டணத்
தின் வேறிடங்களிலும் இக்கால்வாய் இன்றைக்கும்
காணக்கூடியதாக விருக்கிறது. இது வெட்டிவைத்
தவர் ஏற்படுத்திய சிலாசாஸனமும் இதற்குச் சாக்ஷி
யாகக் கிடைத்திருக்கிறது. அச்சாஸனத்தில் வெட்
டப்பட்டிருக்கும் சங்கதிகளை நாம் படித்தறிந்து
கொண்டோம். அதன் கருத்தைக் கீழே குறிப்பிடுகி
றோம் :—

"கலிமுற்றுமுன், சித்தகோனிராஜா கர்னாடகதேசங்
களுக்கு நாயப் திவானாகவும், ஸடத் அல்லாகான் பஹதூர்,
மகா மண்டலேசுரனாக ஆண்ட பாக்ஷா மகம்மது ஷா
ஆலிக்கு முக்கிய திவானாகவுமிருக்கையில், சாலிவாஹன
சகாப்தம் 1645 (கி. பி. 1792) சோபகிருதுவருஷம்
மிதுனமீ கிஷ்ணபக்ஷ ஸப்தமி சோமவாரத்தில் நிர்மிக்கப்
பட்ட சிலாசாஸனம் :—

"சித்தகோனிராஜா தர்மபரிபாலனம் செய்யும்பொ
ருட்டு முக்தி ஸ்தலமாகிய காஞ்சீபுரத்துக்கு வந்தார். அப்
பட்டணத்தின் ஜலாதாரநிமித்தம் அவரால் வெட்டப்பட்
டகால்வாய்களுக்கு சூரியசந்திரர்களுள்ளவரையில் நிலைத்தி
ருக்கும் அத்தாக்ஷி இதுவேயாகும். அம்பி ஊற்றுக்குக்
கிழக்கு, மேல் அம்பிக்குத் தெற்கு, குத்தேரம்பேடுக்கு
வடக்கு கோனேரிக்குப்பத்து ஊற்றுக்கு மேற்கு ஆகிய
இந்த இடத்தில் இக்கால்வாய்களின் முக்கிய ஊற்றுக்கண்
கள் இருக்கவேண்டியது.

"கால்வாயின் போக்கு:—அங்கிருந்து அம்பிக்குத்
தெற்காய், விஷாருக்கு வடக்காய், மாபிடிக்குக் கிழக்
காய் அக்கால்வாய் சென்று புத்தேரிக்குளத்துக்குப் பக்
கத்தில் சிறு காவேரிப்பாக்கம் எல்லையைத்தொட்டுக்கொ
ண்டு, பட்டணத்தின் மத்தியாகிய காமாக்ஷியம்மன்பேட்
டைக்குப்போய்ச் சேரவேண்டும். இக்கால்வாய் வழியாக
வரும் ஜலத்தில் 5-ல் மூன்றுபாகம் ஸர்வதீர்த்தம் முதல் ஸ்ரீ
வரதராஜஸ்வாமி கோயில் குளம்வரையிலுள்ள பட்டணத்
துக்குளங்களுக்கெல்லாம் பாயவேண்டும்; பாக்கி 5-ல் இர
ண்டுபாகம் கோனேரிக்குப்பம் கிராமத்துக்குப் பாயவேண்
டும். சூரியசந்திரர்களுள்ளவரையில் இந்நிதானங்கள் கவ
னித்து நிறைவேற்றப்படவேண்டும்."

இவ்வாறாக சுமார் 100-வருஷங்களுக்கு முன்
தொட்டு, இம்முக்கிய பட்டணத்தின் ஜலதார
விஷயமாய் அதை ஆண்டுவந்த அதிகாரிகள் அக்க
றையெடுத்துக்கொண்டு பெருமுயற்சி செய்துவந்
திருக்கிறார்களென்பது ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது.
காலக்கிரமத்தில் இக்கால்வாய்கள் மராமத்தின்றி
சீலமாகப்போய்விட்டன. குளங்களும் சரியான
மேற்பார்வையின்றி, காலாகாலத்தில் சுத்திசெய்யாம
லும் விடப்பட்ட காரணத்தால் ஜலம் கெட்டு பாசி
படிந்து துர்நாற்ற மெடுத்துப்போக நேரிட்டது.
மீனாக்ஷியம்மன் கோயில் ஸர்வதீர்த்தம் மட்டும்
கெடாமலிருக்கிறதாகக் கேள்வி. மற்றக்குளங்கள்
மனுஷர் பானம் பண்ணுவதற் குபயோகமற்றுக்
கெட்டுக் கிடக்கின்றன. இக்குளங்களின் தண்ணீ
ரைக் குடிப்பதினால் ஆனைக்கால் முதலிய பெரு
ரோகங்கள் உண்டாகி, ஜனங்களுக்குள் பரவிவருவ
தோடு, உத்ஸவ காலங்களில் ஜனக்கூட்டமுண்டா
கும்பொழுது, 'காலரா,' முதலிய கொடிய தொத்து
வியாதிகள் கண்டு தேசமெங்கும்பரவி பெருந்தீங்
கும், எண்ணிறந்த ஜீவநஷ்டமு முண்டுபண்ணு
கின்றன.

காஞ்சீபுரம் இங்கிலீஷ் ஆளுகைக்குள் பட்டு
1867-ம் வருஷத்தில் முனிசிபாலிடி ஏற்பட்டபின்
னும் இத்தீங்குகள் நேர்ந்துக்கொண்டேயிருந்தன.
சில வருஷங்களுக்கு முன் வரையில் காஞ்சீபுரத்
தில் உத்ஸவம் நேரிட்டால் அதன்பின் தொத்துவி
யாதிகளுண்டாகி நாடெங்கும் பரவுவது வழக்கமாக
வேயிருந்தது. இப்படிக் கொடிய தொத்துவியாதி
கள் உண்டாவதற்கும் பரவுவதற்கும் தண்ணீர் முக்
கியகாரணமாக விருக்கிறது. தூலூரீ கண்ட ஒரு
நபர் ஊருக்குள் வந்ததினால் எத்தனைபேருக்கு அந்த
வியாதி கண்டு எத்தனைபேர் இறந்தார்களென்று
சேலம் ஸானிடெரி இன்ஸ்பெக்டர், விவேகசிந்தா
மணியில் விளக்கமாய் எடுத்துக்காட்டி யெழுதியிருந்
தாரே. உண்மையான காரணத்தைக் கண்டு பிடித்
துப் பரிகாரம்செய்ய அவ்வியாதி நின்றது. இல்லா
விட்டால் இன்னும் எத்தனை உயிர்களைக் கொள்ளை
கொண்டுபோயிருக்கும்! இப்படி உண்மையான கார
ணத்தைக் கண்டுபிடிக்கப் பிரயாசப்படாமல் தப்பு
வழியில் பிரவேசித்து காசைக்கொடுத்துத் தேளைக்
கொட்டிக்கொள்வதுபோல், அம்மனுக்குப்பூசைப
டைக்கிறோமென்று, மூட ஜனங்கள் எத்தனைபெயர்
ராத்தூக்கமின்றி கண்விழித்துப் பொங்கல்சோற்றை
த்தின்று வியாதியை விலைக்குவாங்கிக்கொள்கிறார்
கள்! இப்படி மடிந்தவர்கள் எத்தனைபேர்! இக்கொ
டுமைக்கு நிவர்த்தி, வீடுவாசல்களைச் சுத்தமாகவைத்
துக்கொள்வதற்குப்பின், நல்லகுடி தண்ணீர்கிடைக்



கும்படி ஏற்பாடுசெய்வதாம். நமது ஜனங்கள் குடிக்
கும் ஜலமெடுக்கும் ஜலாதாரத்திலே குளிக்கவும்
குளித்து, துணிகளையும் கழுவுகிறவர்களாயிருப்ப
தால், இத்துர்வாடிக்கையினால் குடிதண்ணீர் கெட்
டுப்போகாதபடி யுக்திசெய்து ஜலாதார மேற்படுத்து
வது குறித்த நோக்கம் நிறைவேற மிகவும் முக்கிய
மான சாதனமாகப்படும். இதையெல்லாம் யோஜித்
தே நூதனமாய் ஜலாதார ஏற்பாடு செய்யத்தீர்மா
னித்தவர்கள் அவர்கள் வேலையை நடத்தினார்கள்.
அவர்கள் முயற்சியின் பலனாக, இப்பொழுது காஞ்சீ
புர க்ஷேத்திரம் அதன் ஸ்தலமகிமைக்கேற்க ஜலம
கிமையும் பெற்றிருக்கிறது. காஞ்சீபுரம் ஸ்தலவி
சேஷத்தால் தெய்வலோகத்துக் கொப்பிடத்தக்கதா
னால், அங்கு இப்பொழுது கிடைக்கும் குழாய் ஜலம்,
அதன் குணவிசேஷத்தால் தேவாமிர்தத்துக்கு ஒப்
பானதாகச் சொல்லத்தக்கதாயிருக்கிறது. இதை
அங்குள்ள வைதீகர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.
நாம் அங்கு தங்கியகாலத்தில் நாமிறங்கியிருந்த கிரக
த்தில் பிக்ஷைக்குவந்தருளிய சந்நியாசி ஒருவர்
குழாய்ஜலம் வைத்தபின் ஜீவபிராணிகளுக்கெல்
லாம் மெத்த சுகமுண்டாயிற்றென்றும், அது நல்ல
புண்ணியகாரியமென்றும், குழாய்ஜலத்தை அருந்து
வதால் ஆசாரக்குறைவு ஒன்று மில்லையென்றும்,
தாமே குழாய்ஜலம் அருந்துவதற்கு ஆக்ஷேபிப்ப
தில்லையென்றும், குழாய்ஜலம் குழாய்வழியாக வரு
வதால் ஆசாரத்துக்குப் விரோதாமென்று சொல்பவர்
கள், தெரியாமற் சொல்கிறார்களென்றும், ஆராய்ந்து
பார்க்கின், சாஸ்திரப்படி குழாய்ஜலத்துக்குத் தோ
ஷம்சொல்ல ஆதாரமில்லையென்றும் சொன்னார்.
பெரியோர்களும், விவேகிகளும், உண்மையான வை
தீகர்களும் உத்தமமென்று ஒப்புக்கொள்ளும் விஷ
யத்துக்குக் குற்றம் யார் சொல்லப்போகிறார்களெ
ன்று இதை வாசிப்போர் கேட்கலாம். மனுஷனு
டைய 'அவித்தை' அவனை இலகுவில் விடுகிறதில்லை.
"பேதமையென்பது மாதற்கணிகலம்" என்னும்
மூத்தோர்வாக்கியத்தைப் புரட்டி, மௌட்டியமே
மாதர்க்கணிகலமாகப் பாராட்டிவரும் நம்மவருள்
மௌட்டியம் செய்யும் காரியங்கள் இவ்வளவவ்வள
வல்ல. அக்காரியங்களால் விளையும் துன்பங்களும்
அற்பசொற்பமல்ல. நமக்குள் புருஷர் பெண்களை
மௌட்டியர்களாய் வைத்திருந்தால் தங்கள் மேலதி
காரம் அவர்களிடத்து எளிதில் செல்லுமென்று
நினைத்து நடந்துவந்தார்கள். "தன்வினை தன்னைச்
சுடும்" என்றபடி அதன் பழிபாவத்தை அவர்கள் இப்
பொழுது பூராவும் அனுபவிக்கிறார்கள். ஸ்திரீகள்
சுபாவமாக ஆளப்பிறந்தவர்கள். அவர்கள் அதிகாரத்தை
யைச்செலுத்த உபயோகிக்கும் சாதனங்கள், மனு
ஷன், உபயோகிக்கும் நிர்ப்பந்தமும், பயமும் அல்லா
மல், நேசபாசமென்கிற மிருதுவான பந்தங்களாம்.
இந்த பந்தங்கள் மேலுக்கு மிருதுவாகவும், பலமற்ற
வைகளாகவும் தோன்றினாலும், உபயோகிக்கும் வழி
யில் உபயோகித்தால் இவைகளின் கட்டை மீறிக்
கொண்டு போவது எப்படிப்பட்ட முரட்டு மனுஷ
னுக்கும் இலகுவான காரியமல்ல. இதனுண்மையை
எல்லாச்சாதியிலும் எல்லா வகுப்பிலும் நித்தியப்படி
குடித்தன வாழ்வில் ஊகித்துப் பார்ப்போர் எவரும்
காணலாம். புருஷன் பெண்களை மௌட்டியக் குழி
யிலிருத்தி தன்னதிகாரத்தைச்செலுத்தநினைத்தான்.
ஐயோ! பாவம், அவன் பின்நேரிடுவதை முன்புத்தி
கொண்டு கவனித்தானில்லை. பெரியகல்லைக் கோத்
துக் கழுத்தில்கட்டிக்கொண்டு, கல்லைக் குழியில்
போட்டால், என்னாகும்? கல் குழியில் விழுவது நிச்
சயம்; அதுபோலவே தன்னைப் போட்டவனையும்
குழியிலிழுத்துத்தள்ளுவது நிச்சயமே. முதல் விஷ
யத்தைக் கவனித்தவர்கள், இரண்டாம் விஷயத்தைக்
கவனிக்கவில்லை. ஆகவே, மௌட்டியக்குழியில்
அழுத்தப்பெற்ற ஹிந்துப்பெண்கள் அங்கிருந்து
வளர்ந்து தக்க பருவமடையவும், தாம் அங்கிருப்ப
தற்குக் காரணமான புருஷர்களையும், நேசபாசமாகிற
பந்தக்கயிற்றால் கட்டியிழுத்து தங்கள் நிலைமைக்
குச்சரியாகக் கீழ்ப்படுத்திக்கொள்கிறார்கள். இதன்
பயனாக இங்கிலீஷ்படித்துப் பரீக்ஷைகொடுத்தவர்க
ளும் சாஸ்திரங்கள்படித்து வைதிகஞானம்பெற்ற
விவேகிகளும், வெளியிலொருமாதிரியும் வீட்டிலொ
ருமாதிரியுமாக நடந்துகொண்டு புத்திவிர்த்தி, ஆத்ம
விர்த்திக்கு இடையூறான சிக்குமுக்கான ஸ்திதியில
கப்பட்டு விழிக்கப்பார்க்கிறோம். அனேகர் அந்த
ஸ்திதியிலிருந்து வழக்கப்பட்டுப்போனதால் அவர்
கள் நிலைமையின் கொடுமையை உணரும் அறிவழிந்
துபோகிறார்கள். அவர்கள் அறிவழிந்துபோவதால்
அவர்கள் நிலைமையின் பரிதாபத்தன்மை, பார்ப்
போர்க்கு மாறுவதில்லை.

இச்சிந்தனைகள் காஞ்சீபுரத்தில் நாம் கண்ட
காக்ஷியாலும், மற்றும் நமது நித்தியப்படி வாழ்க்கை
யில் காணும் காரியங்களிற்கு காரணங்களை ஆராயுங்
கால் மனதிற்படும் விஷயங்களாலும் அடிக்கடி
நமக்குண்டாகின்றன. அவற்றை இங்கு குறிப்பிடு
வது காரியத்துக்குக் காரணந்தேடும் வழியில் உப
யோகமாவதோடு, காரணங்கண்டவற்றை நிவர்த்
திக்க முயற்சிக்கும் வழியிலும் பயன்படுமென்று
கருதி மேலே வரையலானோம்.

காஞ்சீபுரம் குழாய் ஜலம் உவமானம்பற்றி தேவாமிர்தத்துக்கு ஒப்பிடத்தக்கதென்று சொன்னோம். "பால் ஆறாக ஓடினாலும் நாய்க்கு நக்கித்தான் குடிக்கவேண்டும்" என்று ஒரு பழமொழி சொல்லுவதுண்டு. காஞ்சீபுரத்தில் நல்ல தண்ணீர் ஏராளமாகக் கிடைக்கும்படியாக விருந்தும், அனேக குடும்பங்களில், அதை உபயோகிக்காது, புறக்கடையிலுள்ள, மல மூத்திரக்குழிகளின் ஜலம் வடிந்துகட்டிச்சேர்ந்து ஆபாசமான கிணற்றுத் தண்ணீரை உபயோகித்து வருவதைப்பார்க்க, மேற்படி பழமொழி ஞாபகத்துக்கு வருகிறது. நாய்க்கு உறுஞ்சிக்குடிக்கும் சக்தியில்லாமையால் எதையும் நக்கியே குடிக்கவேண்டியிருப்பதுபோல, இவர்களும் நூதனவிஷயங்களை யாராய்ந்து உண்மையறியும் சக்தியின்மையால் பழமையே பாராட்டி, புதுமையின் பலனையிழந்து வருந்துகிறார்கள். அவர்களின் அறியாமைநீங்க, நூதனமாய் ஸ்தாபித்துள்ள அந்த ஜலாதார ஏற்பாட்டைப்பற்றிய விவரங்களை யெடுத்தெழுதி விளங்கவைப்போம்.

செங்கற்பட்டு ஜில்லாவில் முக்கியமான நதி **பாலாறு**. அது மைசூர் நாட்டில் உற்பத்தியாகிறது. அங்கிருந்து வட ஆற்காடுஜில்லா வழியாகப்பாய்ந்து, 'பாய்னி' யென்னும் உபநதிசங்கமமானபின், காஞ்சீபுரத்திற்குச் சில மைல்கள் மேற்கே செங்கற்பட்டு ஜில்லாவிற்குள்பாய்கிறது. இந்நதியின் ஒரு கிளையாகிய **வேகவதி**யாறு காஞ்சீபுரத்தின் தெற்குப்புறமாக ஓடுகிறது. இந்த வேகவதியாற்றின் மத்தியிலிருந்துதான், காஞ்சீபுரத்திற்குள்வரும் 'குழாய் ஜலம் வருகிறது. இந்நதியைப்பார்த்தால் "பேர் கங்காபவானி, குடிக்கத்தண்ணீர் கிடையாது" என்கிற பழமொழி ஞாபகத்துக்குவரும். இது பேருக்கு ஆறானாலும், பார்வைக்கு மணற்காடே. வருஷத்தில் ஒரு நாள் இரண்டு நாள் அதிக மழைபொழிந்தால் இரண்டொரு அடி ஜலம் ஓடும், அப்புறம் வரண்டுபோம். இப்படி பல வருஷங்களிருக்கும். எப்பொழுதாவது ஒருவ்ருஷம், அதிகமழை பொழிந்தால், உயர்ந்தது 6-மாசம் வரையில் பிரவாகம் ஓடும். ஆனால் இப்படி நேரிடுவது எட்டுப் பத்து வருஷங்களுக்கு ஒரு முறை எப்பொழுதோ அபூர்வமாகக் காணக்கூடியதேயன்றி, வருஷக்கிரமத்தில் காணக்கூடியதில்லை. இந்த **வேகவதி** யாற்றைப் பற்றி ஸ்தலபுராணத்தில் ஒரு திவ்யமான கதை சொல்லப்படுகிறது. அதை மிகச்சுருக்கமாக இங்கு சொல்லிக்காட்டுவோம். ஒருகாலத்தில் பிர்ம்மாவும் சரஸ்வதியும் சல்லாபமாகவிருக்கையில், சரஸ்வதி பிர்ம்மாவைப்பார்த்து உண்மையாக உமது மனதுக்கு உகந்தவள்யார்? என்று வினவ, பிர்ம்மா, உண்மையை ஒளிக்கக்கூடாமல், ஸ்ரீலக்ஷ்மி தன் மனதுக்குமிகவும் உகந்தவளாயிருப்பதை வெளியிட்டார். இது சுபாவப்படி சரஸ்வதிக்குப் பிணக்கையுண்டுபண்ணிற்று. உடனே அவள் புருஷனிடம் கோபித்துக்கொண்டு வேறாகப் பிரிந்துபோய்விட்டாள். அவள் இப்படி பிணங்கிப் பிரிந்திருக்குங் காலத்தில், பிர்ம்மாவானவர், அசுவமேதயாகம் செய்யக்கருதி, காஞ்சியில் செய்தால் 100 - யாக பலன் கிடைக்குமென்று, அங்குவந்து யாகம்செய்யத் துவக்கினார். சரஸ்வதி இதையறிந்து அவர் யாகத்தைக்கெடுக்கும்பொருட்டு வருணனுடைய சகாயத்தால் சில பூதங்களைச் சேர்த்துக்கொண்டு, பெரிய வெள்ளமாகமாறி கரைபுரண்டுபோகும்படி வேகமாகவந்து காஞ்சியை யாகசாலையோடு அந்த வெள்ளத்தில் அடித்துக்கொண்டுபோகத் தீர்மானித்தாள். வெள்ளம் கரைபுரண்டு பட்டணத்தின் எல்லை மட்டும் வந்துவிடவே பிர்ம்மா பயந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை ஸ்தோத்திரம்செய்து யாகத்தைக் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டார்.

விஷ்ணுவானவர் உடனே விஷயங்களிருக்கும் நிலைமையை யறிந்துகொண்டு, சரஸ்வதி புருஷன் பேரிலுள்ள சீற்றத்தால் இப்படிச் செய்கிறாளென்றும், அவள் கோபத்தையாற்றுவதரிதென்றும் உணர்ந்து ஒரு உபாயம் செய்யக்கருதினார். சரஸ்வதியே வெள்ளமாக உருமாறிவருவதால், தான் நிர்வாணமாகக் குறுக்கே படுத்துக்கொண்டால் தன் கற்புக்குக் குறைவுவருமென்று தன்னைத் தீண்டாளென்கிற தைரியத்தினால், வெள்ளம் நகருக்குள் பிரவேசிக்கும்வழியில் குறுக்கே நிர்வாணமாகப்படுத்துக்கொண்டார். உடனே சரஸ்வதி அவரைத் தீண்டக்கூடாதென்று தடைபட்டுநின்று பட்டணத்துக்குத்தெற்காய் திரும்பிப்போய்விட்டாள். அப்படி திரும்பிப்போனதினால்தான், அதற்கு **வேகவதி**யென்கிற பேர்வந்தது. ஸ்ரீவிஷ்ணுவானவர் வெள்ளத்தைத் தடுத்தபொழுது சரஸ்வதி அவரிடத்தில் தன் கோபம்தணிய ஒரு வரம்கேட்டாள். அதாவது தான் வெள்ளமாகவந்தபடியால், கங்கைக்குப்பிறகு தென்னிந்தியாவில்தான் ஆறாகவந்த தீர்த்தம் மற்ற எல்லாநதிகளிலும் விசேஷமானதாகவும் அதில் ஸ்நானம் செய்தவர்கள் பாவங்கள் நிவாரணமாகவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். அப்படியே வரமளிக்க, **வேகவதி தீர்த்தம்**, இன்றுவரையில் மகா



புண்ணிய தீர்த்தமாக இவ்விந்தியாவெங்கும் பிரக்கியாதிபெற்று விளங்கிவருகிறது. பேர் "வேகவதி தீர்த்தம்" ஆற்றிலோ ஜலமில்லை, மணற்காடுதான். ஆனால் ஒரு விசேஷம். மேலே பார்வைக்கு மணற்காடாகவிருந்தாலும் கீழே நீரூற்றுகள் யதேஷ்டமாகவுண்டு. கொஞ்சதூரம் பள்ளம்பறித்தால் ஜலம் ஊறும். ஆற்று மத்தியில் அல்லது ஓரத்தில் ஒரு குளம்வெட்டி அதிலிருந்து கால்வாய்வெட்டிக் கொண்டுபோனால், வருஷமுன்னூற்றறுபதுநாளும், அக்கால்வாய்வழியாக ஜலம் ஓடிக்கொண்டேயிருக்கும். இப்படி அனேகம் கிராமங்களுக்கு நீர்ப்பாய்ச்சலேற்பட்டு சாகுபடி நடந்துவருகிறது. இந்தவிசேஷத்தையறிந்த இஞ்சினியர் இதைக் கொண்டு காஞ்சீபுரத்துக்கு முட்டாமல் நல்ல தண்ணீர் கிடைக்கும்படியாக ஜலாதாரமேற்படுத்தலாமென்று ஊகித்து யோசனைசெய்தார். அவர் யோசனைசெய்து காரியத்தில் கட்டிமுடித்த வேலையின்பயனாக காஞ்சீபுரத்தின் ஜலகஷ்டம் நீங்கி திவ்வியமான தீர்த்தம் குழாயைத்திருப்பினால், வீட்டுக்கு வீடு ஆகாச கங்கைபோல் விழும்படியாகவருகிறது. வெளிப்பார்வைக்கு இதன் அதிசயம் பூர்வத்தில் உண்டான அக்ஷயபாத்திரம்முதலான வரப்பிரஸாத விசேஷங்களையெல்லாம் தோற்கடிக்கும்போலிருக்கிறது. மணற்காடான ஒரு ஆற்றின் மத்தியிலிருந்து பட்டணத்திலுள்ள தெருக்கள்தோறும், வீடுகளிலும், வேண்டுவோர் வேண்டுமட்டும் எடுத்துக் கொண்டு போகும்படி திவ்யதீர்த்தம் குழாயைத் திருப்பினால் விழுந்துக்கொண்டிருக்கிறதென்றால், அக்ஷயபாத்திரத்தின் மகிமை இதைவிட என்ன பெரிது? இன்றைக்கு 500 - வருஷங்கழித்து ஒருவர், காஞ்சியின் ஸ்தலபுராணமெழுதினால், அவர் "பாண்டுரிஷி யொருவர்வந்து, பட்டணத்தின் ஸ்தல மகிமையைக்கண்டு, ஜலமில்லாக்குறையை நீக்கக்கருதித் தமது திவ்யமான தெய்வீக தண்டத்தால் ஆற்று மணலின் இருதயத்தில் குத்த பூர்வம் காஞ்சியையழிக்கவந்து, ஸ்ரீமன்நாராயணன் இடைப்பிரவேசத்தால் புண்ணிய தீர்த்தமாகமாறி, கலியின் கொடுமையால், மண்ணில்மறைந்திருந்த **வேகவதியம்மன்** ஜலக்கஷ்டத்தால் வருந்தும் ஜீவகோடிகளின்மேல் கருணைசுரந்து, தன் ஹிருதயகமலத்தினின்றும், அமிர்தபானம் செய்விப்பாள்போலும், என்றுங்குறையா நீர்சுரந்து, ஜீவன்களைக்காப்பாற்றியருளினாள். அது முதல் காஞ்சி க்ஷேத்திரத்தின்மகிமை பின்னும் பெருகி விளங்கிற்று" என்று எழுதுவாரானால், புராண ஐதீகவிதிகளின்படி அவர் ஐதீகம் எவ்வளவு உண்மையாகவிருக்கும் பாருங்கள்! காலக்கழிவால் ஐதீகவிசேஷம்பெறப்பாத்திரமான புண்ணியந்தரும் ஒரு பேருபகாரத்தை, அக்காலத்து மனுஷர்கள் அனாசாரமென்று விலக்குவது எவ்வளவு கொடுமை. ஆனால் இது உலகசரித்திரானுபவத்துக்கு ஒவ்வினதாகவேயிருக்கிறது. எங்கும், எக்காலத்தும், மௌட்டியத்தின் கொடுமையால் உண்மையையும், உபகாரத்தையும், அவ்வக்காலத்தவர் வெறுத்துப் பகைத்து விலக்கித் தீங்கிழைத்துவந்தது வழக்கமாகவேயிருக்கிறது. **காலிலியோ** என்னும் வானசாஸ்திரி உண்மையை உரைத்ததற்காக வதைத்துக் கொல்லப்பட்டார். **ஏசுகிறிஸ்து** சதத்துவோபதேசம் செய்ததற்காகச் சிலுவையிலடித்துக் கொடுமையாகக் கொல்லப்பட்டார். மகம்மது உண்மையுபதேசம் செய்தது அக்காலத்தார் மௌடீகத்துக்கு விரோதமாயிருந்ததுபற்றி ஊரைவிட்டோடிப் பிழைக்கும்படி தாக்கப்பட்டார். ஹிந்துமத சரித்திரத்திலும், புத்தர்காலம் முதல் கபீர்தாஸ் காலம்வரையில் இந்த விசேஷத்தைக்காணலாம். ஆகையால் மௌட்டியத்தின் போராட்டம் எப்போதுமேயிருந்துவந்திருக்கிறது. அதை நீக்க முயற்சிப்போர் எப்போதும் அவர் காலத்தவர்களால் வெறுக்கப்பட்டும் வருத்தப்பட்டுமிருக்கிறார்கள். கடைசியில் ஜெயிப்பது மட்டும் **உண்மையே**. "ஸத்தியமேவஜயதி." "தர்மமே ஜயம்." இந்த வாக்கியங்கள் வெகு ஆறுதல் அளிக்கத்தக்கவைகள். ஆகையால் பெரியவிஷயங்களைப் போல் சிறியவிஷயங்களிலும் இக்காலத்திலுழைக்க விரும்புகிறவர்கள் இவ்வுண்மையில் பூர்ணநம்பிக்கை வைத்து தற்காலம் சித்திக்கும் அவதூறு, அவமானம், ஏளனம் முதலியவைகளுக்குப் பின்வாங்காமல் இடசித்தத்தோடுழைக்கவேண்டும். பிரிடிஷ் அதிகாரத்தின் புண்ணியத்தால், இக்காலத்தில் நூதன வழிகளிலுழைப்பவர்கள் மேற்குறித்த மனோவாதைகளன்றி, தேகோபாதை செய்யத்தக்க கொடுமையெதற்கும் தப்பி துணிவோடும் தைரியத்தோடும் உழைக்கலாம். அடுத்தமுறை காஞ்சீபுரம் ஜலாதாரத்தின் உள்மர்மங்களை வெளியிட்டு விளங்கவைத்து எழுதுவோம்.

C. V. S.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## பொறாமை.

பிறர் சம்பத்தைக்கண்டு துக்கப்படுகிறவனும் பிறர் சந்தோஷப்பட்டால் தான் விசனப்பட்டு அவர் விசனப்பட்டால் தான் சந்தோஷப்படுகிறவனும் தன் துர்ப்பாக்கியத்துக்குத் தானே காரணமாகின்றான். இது அவன் விதி:

எப்படி ஒரு புதர் தீயினால் பற்றியெரிகின்றதோ அப்படியே பொறாமைக்காரன் மனசும் எரிந்துகொண்டேயிருக்கும். அவன் மனசு ஒருநாளும் சந்தோஷமாகவாவது சமாதானமாகவாவது இராது. இத்துர்க்குணம் சாதாரணமாய் மனிதனுக்கு சுபாவம். ஆனால் இதை முளையிலேயே அறிவு என்கிற கோடரியினால் நாசஞ்செய்து மேல் விருத்தியாகாமல் தடுக்கும்பட்சத்தில் நாம் விசனமென்கிறதையே அறியோம். சந்தோஷம் தனக்குத் தானே வரும். இதற்குத்திருஷ்டாந்தம்:—ஒருவன் தன்னயலான் பாக்கியத்தைக்கண்டு சகிக்கமாட்டாமல் ஓர் அரண்ணியத்தில் வசிப்போமென்று போனான். ஒரு மகாரிஷி இந்தப் பொறாமைக்காரனைக்கண்டு பச்சாதாபப்பட்டு ஒரு மந்திரசக்தியுடைய பாச்சிகை யவனுக்குக் கொடுத்தார். அதன் மகத்துவம் யாதெனில் அதை மூன்றுதடவை என்னென்ன கோரிக்கொண்டு போடுகிறானோ அதுகள் சம்பவிக்கும். ரிஷி "மூன்றுதடவையும் நீ இச்சிக்கிறது கிடைக்கும், ஆனால் உன்னயலானுக்கு உன்னைவிட இரண்டு மடங்குகிடைக்கும்" என்று சொன்னார். அவன் வீட்டுக்குப்போனதும் தான் பாச்சிகையை யுருட்டுவதினால் அயல் வீட்டுக்காரனுக் குண்டாகப்போகிற பாக்கியத்தை மறந்தவனாய் எனக்கு வீடுகளும், தானியமும், வெள்ளி, தங்கம், நகைகளும் விஸ்தாரமாய்க் கிடைக்கட்டும் என்று சொல்லி பாச்சிகையை முதல்தரம் உருட்டினான். அப்படியே கிடைத்தது. அண்டை வீட்டுக்காரனுக்கு அதனினுமிருமடங்கு கிடைத்தது. உடனே ஞாபகம்வந்து அயலானுக்குத் தீங்கு நினைத்தவனாய் எனக்கு ஒரு கண் குருடாகட்டும் என்றுசொல்லி இரண்டாந்தடவை உருட்டினான் உடனே அடுத்த வீட்டானுக்கு இரண்டு கண்களும் போய்விட்டன என் வீட்டிற் பாதி பூமிக்குள்ளமுழ்ந்திப் போகட்டுமென்றுச்சரித்து மூன்றாந்தரம் பாச்சிகையையுருட்டினான் பக்கத்துவீட்டுக்காரன் வீடு பூர்த்தியாக முழுகிப்போய்விட்டது. இப்படியாகவே இவன் தனிமையாக விருக்கக்கண்டு இவன் வேலைக்காரர்களெல்லாரும் ஒருங்குசேர்ந்து நன்றாய்ப்புடைத்துவிட்டு ஆஸ்தியாவற்றையு மெடுத்துக்கொண்டு ஒரு படவிலேறி யோடிவிட்டார்கள்: அப்போழ்தவன் "ஐயோ என் பொறாமையினாலல்லவா இப்படி நேரிட்டது. இந்த துர்க்குணத்தினால் நான் அயல் வீட்டார்களைக் கெடுக்காமலிருந்தபட்சத்தில் அவர்கள் எனக்கு ஆபத்துவந்த காலத்தில் ஒத்தாசை செய்திருப்பார்களே. ஒத்தாசையே செய்யாவிடினும் அவர்களிருக்கிறார்களென்கிற பயத்தினால் மற்றவர்கள் என்னை இப்படி இம்சிக்கத் துணியார்களல்லவா" என்று கூக்குரலிட்டுக் கதறினான். ஆனாலவனைக் காதுகொடுத்துக்கேட்பார் யாருமில்லை.

L. V. V. S.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, $5\frac{1}{2}$ அணா.
பழைய பிரதி, 6 „

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு „ 2-2.

KNOWLEDGE IS POWER
விவேக சிந்தாமணி
DIFFUSION OF KNOWLEDGE AGENCY
VIVEKA CHINTAMANI

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1899வரு நவம்பர்மீ [இலக்கம் 7.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION *7s. 6d.* NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. $5\frac{1}{2}$ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION *5s. 6d.* NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*; though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**தளமான காகிதப்பதிப்பு**:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 8 அணா.

**லேசானகாகிதப்பதிப்பு**:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணா. பழைய பிரதி 6 அணா.

**வருஷாரம்பத்திலே** (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

*The Editor regrets that owing to his illness and other causes that interfered with the regular course of work, last month, the present issue has to be hurried through the press to prevent unnecessary delay.*

1st November 1899.

## READINGS AT HOME.
### A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.
11-ம் நாள் படிப்பு.

பதினோராநாட் பகல், யாவரும் வந்துகூடிய பின், சுப்பலெக்ஷ்மி பின்வருமாறு படிக்கத் தொடங்கினாள்.

“இவ்வாறு, தமயந்தி தன் மணமகனோடும் மக்களோடும் இனிது சுகித்திருக்கும் காலத்தில், முன்னை வினைப்பயனை யார்க்கும் ஒழித்தற்கரிதாதலின் அக்கன்மானுசாரமாக, அநேக துன்பங்களை அனுபவிக்கலானாள். போதாத வேளைக்கு மித்திரரே சத்துருக்களாதல்போலத், தமயந்திக்கு அவள் ரூபமே தாபமாய் முடிந்தது. அவளது பேரழகைக் கேட்டு அவளை மணம்புரியக்கருதிய கலிபுருஷன், மந்தனென்னும் தன்பெயருக்கேற்றபடி, சுயம்வரமெல்லாம் முடிந்தபின் பரபரப்பாயோடிவருங்கால், அவளைத் தனக்கு முன்னமே நளமஹாராஜன் மணம்புரிந்ததைக் கேள்வியுற்று, மகாகோபாக்கிராந்தனாகி, நிரபராதிகளாயிருக்கும் அவள்மேலும் அவள் கணவன்மேலும் கடும்பகைகொண்டு, “இவளது சுகத்துக் கிடையூறுக இவளையும் இவள் புருஷனையும் வேறுபிரித்து அலைத்து வருத்துகின்றேன் பார். தேவர்களையும் முனிவர்களையும் பிடித்துப் படுத்துவிக்கும் பாட்டில் இவர்களோ எனக்கோர் இலக்ஷியம்?” என்று கொடியதோர் வஞ்சினம்கூறி அக்கருத்தை நிறைவேற்றுதற்குரிய சமயத்தை எதிர்நோக்கி யிருந்தனன். ஆயினும், தீயவர்களைக் கெடுத்தல்போல நல்லவர்களைக் கெடுத்தல் எத்தகையாருக்கும் சுலபத்தில் இயலாதாதலின், அறநெறியிற் பிறழாத அந்நளனைத் தன்வசப்படுத்தல் அக்கலிபுருஷனுக்கு நெடுநாள் சாத்தியமானதில்லை. அந்நளனது நாட்டில் எங்கு சென்றாலும், அந்தணர்கூடித் தேவர்கள் உவக்கச் செய்யும் வேள்விகளில் ஓதும் வேதகோஷ்டமும், வீடுகள்தோறும் கற்புடை மகளிர் கூட்டமும், வீதிகள்தோறும் கடவுளர் பொருட்டுச் செய்யும் திருவிழாக்களும், வனத்திற்கூடத் துறவிகள் கூட்டமுமாயிருத்தலின், அங்கு அடியெடுத்து வைக்கவும் ஒண்ணாது திகைத்து நின்றனன். யாவர் எப்போது அக்கிரமத்தொழில் எதனைச் செய்வார்களோ என்று அதுவே குறியாகப் பார்த்துக்கொண்டிருக்கும் அக்கலிபுருஷன் ஒருகால் வேதமுனிவர் யாவரும் ஒருங்குகூடி ஓரேகலத்திலிருந்து பருகுவதைக்கண்டு ‘கிடைத்தது சமயம்’ என்று அவர்களைக் கிட்டியதும், அந்தோ! அது வேதத்திற் கூறியபடி அந்தணர்க்குரியதாகிய சோமபானமாயிருத்தல் கண்டு மனஞ்சலித்துப் பின்வாங்கலானான். மேலும், அந்நளமஹாராஜன் நாள்தோறும் வேதியர்களுக்குப் பெருநிதியும் விளைநிலமும் திருநாடும் இன்னம் வேண்டுவன பிறவும் அவர் வெறுக்குப்படி கொடுக்குங்கால் பொழியும் தாரைநீராறு தடுத்தலின் அதனை நீந்திக்கடக்கமுடியாமல் வருந்தி இனி இந்நளனைப் பிடித்தற் கெவ்வாறியலுமோ அறியேனே யென்று விசாரம் கொண்டு ஆங்கோர் தான்றிமரத்திற் பதுங்கித் தக்கசமயத்தை எதிர்பார்த்திருந்தனன்.

அப்படியிருக்கையில், ஆனைக்கும் ‘அடி சறுக்கும்’ என்பதுபோல எத்தகையாருக்கும் ஒரு சமயமில்லாவிடில் ஒருசமயம் யாதேனும் பிழையுண்டாதல் இயற்கை யாதலின் கர்மநிஷ்டையில் சிறிதும் குறைவுசெய்யாத அந்நள மஹாராஜன் அந்தோ! கேடுவருமுன்னே மதிகெட்டுவருமென்பதற்கேற்ப, ஒருநாள் மாலைக்கடனைக் கழிக்கும் காலத்தில் கால்கழுவாது கழிக்க நேரிட்டது. அதுகண்டு பன்னிரண்டு வருஷமாகக் காத்துக்கொண்டிருந்த அக்கலிபுருஷன் உடனே அந்நளனை விரைந்துபோய்ப் பற்றிக்கொண்டனன்.”

சிவகாமி.—நல்லொழுக்கமும் தூய மனமும் தருமசிந்தையும் உள்ளவர்களைத் தீமைகள் சாராவென்னும் கொள்கை நாம்



ஒப்பத்தக்கதே. ஆயினும், உலகத்தில் அநுபவத்தில் அப்படிக்கில்லையே. தீயோர்கள் சுகித்துவாழவும் நல்லோர்கள் துக்கித்துத் துன்புறவும் பலமுறையும் காண்கின்றோமே. நம்மூர் இராமநாத தீக்ஷிதரைப்போல யோக்யர் ஒருவரும் இல்லை. அவரைப்போல தரித்திரமும் வியாதியும் துன்பமும் அனுபவிக்கிற பேர்களையும் வேறு காணோம். இவ்விபரீதத்துக்குக் காரணம் என்ன?

தாத்தா.—சிவகாமி கேட்ட கேள்வி எனக்கும் ஒக்கும். இந்தச் சந்தேகம் எனக்கு நெடுநாளாக இருந்து வருகிறது. இதற்குச் சமாதானம் திருப்திகரமாகச் சொல்வார் ஒருவரையும் காணேன். சிலர் நமக்குத் தெரியாத காரியங்களில் நாம் அதிகமாக என்ன ஏது என்று கிண்டிக்கிளறி வியவகரிப்பது சரியல்ல; எல்லாம் ஈசன் திருவிளையாட்டு என்று எண்ணியிருத்தல் வேண்டும்; என்று சிறுகுழந்தைகளை அவர்கள் கேள்விக்கு வகைசொல்ல முடியாதபோது ‘பேசாதிரு, சுவாமி மூக்கறுத்துப்போடுவார்’ என்று பயமுறுத்துதல்போலச் சொல்லுகிறார்கள். சிலர், ஈசனாவது தாசனாவது, இதெல்லாம் கற்பனை; நன்மையென்பதும் தீமையென்பதும் அதிர்ஷ்டமென்பதும் விதிப்பயனென்பதும் வீணான எண்ணங்கள். ஒருவர் அடையும் சுகதுக்கங்களுக்கு அவரவர் செய்யும் முயற்சியும் அவரவர்களுடைய யுத்தி புத்தி சாமர்த்தியங்களுமே காரணமாகும். அவிவேகம் காரணமாகத் துன்பமுண்டாகின்றது. விவேகம் காரணமாகச் சுகமுண்டாகின்றதென்கிறார்கள். இது பிரியாக்கணக்காயிருக்கிறது.

ருக்மணி.—ஏது, பெரிய வியவகாரத்தில் இழுத்துவிட்டீர்களே. ஆயினும் எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன். ஒருநாளும் சாஸ்திரம் பொய்யாகாது. அது என்றும் சுபாவதர்மத்தைச் சார்ந்தேயிருக்குமன்றி அதற்கெதிரிடையாகாது. நன்னடக்கையும் தூயமனமும் ஈஸ்வரபத்தியும் தருமசிந்தையும் உடையவர்களுக்கு யாதோர் தீங்கும் உண்டாகாது. ஆதலால் நாம் ஒருவரிடத்துப் ப்ரஸ்துதம் காணும் துன்பங்களுக்கும் கெடுதிகளுக்கும் அவரிடத்து இப்போது காணும் நற்குணங்களைக் காரணமாகச் சொல்லுதல் பொருந்தாது. நெருப்புக்குக் குளிர்ச்சியும் நீருக்கு வெம்மையும் இயற்கையில் உண்டாகத் தக்கவைகளோ? ஆதலின் நாம் நல்லோரிடத்தில் ப்ரஸ்துதம் காணும் தீமைக்குக் காணாத தீச்செயல்களையே காரணமாகக் கற்பித்தலன்றி அவரிடத்து இப்போது யாம் காணும் நற்குணங்களை ஒருகாரணமாகக் கற்பித்தல் கூடாது. அதிர்ஷ்டமென்பது இதுதான். நன்மையோ தீமையோ அடைதற்குப் பாத்தியமில்லாதவர்போலத்தோற்றுமவர்களுக்கு அந்நன்மை தீமைகள் அநுபவிக்கவருமாயின், அதையே அதிர்ஷ்டமென்பார்கள். வருந்தியுழைத்த ஒருவன் அவ்வுழைப்புக்குத்தக்க பலனை யடைதல் அதிர்ஷ்டமாகாது. வருந்தாது சோம்பியிருக்கும் ஒருவன் ஒரு பெரும்பயனை யடைவானாயின் அதனையே அதிர்ஷ்டமென்பார்கள். ஆதலால் அநேக வியதிரேகமான அனுபவங்களுக்கு அதிர்ஷ்ட கர்மத்தையே காரணமாகக் கற்பித்தல் வேண்டும். இன்றைக்குச் சுகாதாரமுறைகளை அநுஷ்டித்து வருபவன் ஒருவன் வியாதியினால் வருந்துவனாயின் அவன் அநுஷ்டிக்கும் திர்ஷ்டமாகிய சுகவழிகளை அவ்வியாதிக்குக் காரணமாகக் கற்பித்து, ஐயோ, இவன் வருந்துவது அநியாயம் என்னலாமோ? இதற்கு முன்னமே நம்மையறியாமல் அவன் செய்துள்ள சுகவிரோதமான அகிருத்தியங்கள் காரணமா

கவே அநுபவிக்கின்றானென்று எண்ண வேண்டும். நல்லோர்கள் இப்போது நல்லோராயிருத்தல் கண்டு எப்போதும் நல்லவர்தான் என்று மதித்தல் கூடாது. அவர் ஒருகாலத்தில் தீயவர்களாய்த் தீச்செயல்களைச்செய்ய அவை 'முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்' என்பது போல அப்போது பயனைக்கொடாமல் பிற்காலத்து அவர்கள் சரியை மாறிய போது பயனைத்தருகின்றன. அவ்வாறே தீயவர்களையும், இவர்கள் முக்காலத்தும் தீயவர்களே யென்றெண்ணக்கூடாது, இவர்கள் ஒருகாலத்தில் நல்லவர்களாய் நற்செய்கைகளைச் செய்திருத்தல்கூடும். அதனால் அச்செய்கைகளின் பயனாகிய நன்மைகளை அவர்களது சரியைமாறித் தீயவர்களான தற்காலத்து அனுபவிக்கின்றார்கள். நன்மை விதைத்தால் நன்மையே விளையும், தீமைவிதைத்தால் தீமையே விளையும்; விரையொன்று போடச் சுரையொன்று காய்க்குமா? ஆமணக்குப்போட ஆச்சா முளைக்குமா? ஒருபோதும் முளையாதல்லவா.

சிவகாமி.—அம்மா நீ சொல்லிய விஷயங்களெல்லாம் மெய்யே. இன்னம் ஒருசந்தேகம், அதையும் தெளிவிக்கவேண்டும். நல்லொழுக்கமென்பது கால் கழுவுதல் கைகழுவுதல் முதலிய புறச்செய்கைகளாலோ சித்திப்பது? மனத்தூய்மையுடையாருக்கு மற்றப் புறத்தொழில்களாற் பயனென்ன?

தாயார்.—புறச்செய்கை அகச்செய்கைகளுள் அகச்செய்கைகளே விசேஷமாயினும் புறச்செய்கைகளை முற்றிலும் பயனற்றவைகளாகத் தள்ளுதல் கூடாது. மனத்தின் தன்மையானது ஒருவருடைய நடத்தல் போதல் முதலிய புறச்செய்கைகளால் மாறும் என்பதற்கு அநேகதிர்ஷ்டாந்தங்கள் உள்ளன. நாள் தோறும் எண்ணிறந்த உயிர்களை வதைத்துத் துண்டமிட்டு விலைக்குவிற்கும் கசாப்புக்கடைக்காரனுக்கு ஜீவகாருண்யம் என்றால் தெரியுமோ? பிரயாணிகள் வருந்தே[illegible]ம் பதுங்கியிருந்து எதிர்பார்த்து வழிப்[illegible]க்கும் கள்வர்களுக்கு கள்ளாமையின் மேன்மை இன்னதென்று தெரியுமோ? நியாய சபையில் பொய்ச் சாக்ஷிசொல்லி வயிறுவளர்க்கும் புல்லர்களுக்கு சத்தியத்தின் பெருமையும் மேன்மையும் சற்றேனும் உள்ளத்தில் தெளியுமோ? மனமென்பது ஒருபளிங்குபோன்றது. நிர்மலமாகிய பளிங்குக்கல்லானது எந்தெந்தப்பொருள்களைச் சார்கின்றதோ அந்தந்தப்பொருளின் உருவையும் நிறத்தையும் கிரகித்து நிற்றல் போல மனமும் இந்திரியங்களின் வழியே எந்தெந்தக்கன்மங்களிற் பற்றி நிற்கின்றதோ அந்தந்தக்கன்மங்கட்குத் தக்க குணங்களையும் கிரகிக்கின்றது. எதனைச்செய்தாலென்ன எதனை உண்டாலென்ன மனமன்றோ தூய்மையாயிருத்தல் வேண்டுமென்று பேசுதல் குதர்க்கமேயன்றி நியாயமாகாது. மனமென்பது தேகத்தைவிட்டுத் தனித்து நிற்பதொன்றன்றாதலின் மனத்தூய்மைக்குப்புறத் தூய்மையும் மனோநிக்கிரகத்துக்குப் புறச்செய்கைகளும் இன்றியமையாச் சாதகங்களாகும். இனி விவரிக்கிற் பெருகுமாதலின் இதனுடன் நிறுத்துவோம்.

தாத்தா.—கதையையும் இதனுடன் நிறுத்துவோம். போது போயிற்று.

எஸ். முத்து ஐயர், பி. எ.

## * அநகாரிக எச். தர்மபாலா.

இந்தமாசம் சென்னையில் ஸ்ரீ தர்மபாலா என்பவர் வந்திருந்தது யாவரும் விசேஷமாகக் கவ

* இது அகாரிக என்பதின் எதிர்மறை. 'அகாரிக' என்றால் 'இல்லம்' 'அநகாரிக' என்றால் 'இல்ல மற்றோன்' அல்லது 'இல்லத்தை விட்டவன்' என்று அருத்தமாகும்.



னிக்கத்தக்கது. இவர் புத்தமதஸ்தர். பகவான் புத்தருடைய தர்மங்களைப் பரவச்செய்வதே சிலாக்கியம், சிரேஷ்டம் என்று கருதி அதற்காகத் தாய்தந்தையர், சகோதரர், வீடு வாசல் எல்லாவற்றையும் விட்டொழித்து, கேவலம், தேகபோஷணார்த்தம் கூட தன் விசாரம் என்பது இன்றி ஊருக்குழைத்து உபகாரம்செய்வதே மணியுமாகக் காலம்கழித்துவருகிறார். இவர் வயதில் முதிர்ந்தவரில்லாவிடினும் அனுபவத்திலும் பரோபகாரஞ்செய்வதிலும் மிகச்சிறந்தவர். இவருக்கு வயது 35-க்கு மேலில்லை. ஆனால் இந்த 35-வருஷகாலத்தில் இவர் ஜனங்களுக்காக உழைத்த உழைப்பு சாதாரணமாக வேறு எவரும் உழைத்திரார். இவர் ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஜபான், முதலாக எங்கும்சென்று பிரயாணம் செய்து பூப்பிரதக்ஷணம்செய்து வந்திருக்கிறார். இப்படிப்பட்டவருடைய உதாரணம் நமக்குள் எங்கும் பரவவேண்டியிருப்பதால், இவர் சரித்திரத்தைத் தெரிந்துகொள்வதில் எல்லாருக்கும் அவாவிருப்பதுபோல், அதைத் தெரிவிப்பதினால் பிரயோசனமு முண்டென்று அவரைப்பற்றிய பின்வரும் விவரங்களை, நாம் அவருடன் கலந்து பழகியறிந்ததைக்கொண்டு கீழே வெளியிடுகிறோம்:—

இவர் இலங்கைத்தீவில் கொழும்புப்பட்டணத்தில் பரம்பரையாய் புத்தமதானுசாரணராகிய கௌரவமுள்ள ஒரு குடும்பத்தில் பிறந்தவர். இவர் பிறந்தது 1865-ம் வருஷத்தில். இவருடைய தாய் தந்தையர் கொழும்புப்பட்டணத்தில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பிறந்த 9-குழந்தைகளில் இவரே ஜேஷ்டபுத்திரர். இக்குடும்பத்தில் பூர்வம் தொட்டு, குடும்பத்துக்கு ஒருவர் தம் வாழ்நாளை புத்தருக்கு அற்பணம்செய்து புத்த தர்மத்தைப் பாவச்செய்வதில் உழைத்துவருவது வழக்கம். இவ்வழக்கப்படி, தர்மபாலரின் சிறிய தகப்பனார் புத்தமத சந்நியாசியாகவிருந்தார். இவர் தலைமுறையில், இவரே குடும்பத்தைவிட்டு புத்தருக்குத் தன் வாழ்நாளை அற்பணம்செய்து புத்தர் மதத்தைப் பரவச்செய்வதே தன் கடமையாக உழைத்துவருகிறார். இங்கே, இவருக்கு இவ்வித எண்ணம் எப்படி உதித்தது என்பதைப்பற்றிச் சற்று விசாரிப்பது நலமாயிருக்கும்.

தர்மபாலரின் தாயார் அதிக தெய்வபக்தியுடையவர். பகவான் புத்தரிடத்தில் மிக்க விசுவாசம் உள்ளவர். புத்தருடைய உதாரணத்தை மெச்சிக்கொண்டாடுபவர்: தம் குழந்தைகள் புத்தமதஸ்தர்களாக மேலுக்கு மட்டு மிருப்பவர்களாயின்றி பகவான் புத்தருடைய அனந்தகுண கலியாணங்களையுணர்ந்து அவரைப்போல் ஏழைகளுக்கிரங்கி, எல்லா ஜந்துக்களிடத்தும் பூர்ண அன்புபாராட்டி, உலகத்திலுள்ள துன்பங்களை நீக்கும் வழியில் அவரை வழிபட்டு அவரைப்போல் நடந்துக்கொள்ளவேண்டுமென்னும் அவாவுடையவர். இவ்வெண்ணத்தோடு தம் குழந்தைகளுக்கு புத்தருடைய திவ்யசரித்திரத்திலிருந்து அனேகம் கதைகளும், உதாரணங்களும், தம் பிள்ளைகளின் இளமனதிற்படும்படி, மிகவும் அன்போடு அவர்களுக்குச் சொல்லிவருவார். அப்படிச்சொல்லிய கதைகளும் உதாரணங்களும் போதனைகளும் பச்சைமரத்தாணிபோற் சிறு பாலனாயிருந்த தர்மபாலா மனதிற்பதிந்தது. பதியவும் குடும்ப வழியிலுள்ள துன்பங்களையும் வருத்தங்களையும் பற்றிச் சிந்திக்கவும், அவைகளுக்குள்ளாகாது விலகியிருக்கவேண்டுமென்றெண்ணவும் நேரிட்டது. 7-வயதாகவும் பள்ளிக்கூடத்துக்குப்போய்வரத் துவக்கினார். முதலில் ஒரு கிறிஸ்தவப்பள்ளிக்கூடத்திலும் பிறகு கவர்ன்மெண்டு பாடசாலையிலும் படித்துவந்தார். கிறிஸ்தவர்பிராணிகளைக்கொன்று தின்பதால், கிறிஸ்துமதத்தில் இளம்பருவமுதல் வெறுப்பாகவேயிருந்தார். "மெட்ரிகுலேஷன்" வகுப்புவரையில் வாசித்துவந்தார். அவ்வகுப்பில் படித்துவருகையில் கிறிஸ்தவர் போதனையில் வெறுப்புற்று தகப்பனார் உத்தரவுக்கிசைந்து பள்ளிக்குப்போவதை நிறுத்திவிட்டார். அடு

த்த வருஷம் கர்னல் ஆல்காட், மாடம் ப்ளவாட்ஸ்கி இவர்களைச் சந்திக்கலானார். கர்னல் ஆல்காட் போதனையாலும் தூண்டுதலாலும் புத்தமத விஷயமாக அதிக சிரத்தையெடுத்துக்கொண்டு ஆராய்ச்சிசெய்தும், பத்திரிகைகளுக்கு எழுதியும், பிரசங்கித்தும் வந்தார். மாடம் ப்ளவாட்ஸ்கி தர்மபால் சமுசாரத்தில் வெறுப்புற்று பிரமசாரியாகவிருப்பதில் விருப்புற்றிருப்பதையறிந்து தூய்மையின் சிலாக்கியத்தைப் போதித்தார். கமலம்போல் அகம்புறமொக்கப் பரிசுத்தமாயிருந்தால், மகாத்மாக்களை நேரில் காணலாமென்றும் சொன்னார். மகாத்மாக்களைக் காணலாமென்னும் ஆசை உதிக்கவே, தர்மபால்விவாகமின்றி பிரமசாரியாகவிருந்து பொய்முதலிய தீமைகளை விலக்கி மிகப் பரிசுத்த ஹிருதயத்தோடு இருக்கவேண்டுமென்கிற அவாவுற்று அப்படியே நடந்துவந்தார். இப்படி சுத்த ஹிருதயத்தோடு பொதுநன்மைக்குழைத்துவந்ததில் அவருக்கு அதிக வலிமையும் மன உறுதியும் நன்மையில் நம்பிக்கையும் உண்டாயிற்று. தர்மபால் குழந்தைப்பருவமுதல் தேக திடமின்றி மெல்லிய சரீரமுடையவராயிருந்தார். ஹிருதய சுத்தத்தோடு பொது நன்மைக்குழைத்துவந்ததில் அவருடைய அற்பதிடத்திற்கு மிஞ்சிய ஊக்கமும், பலமும், தைரியமும் உண்டாகக்கண்டு, அப்படியே மென்மேலுமுழைத்துவரத் தீர்மானித்தார். பள்ளிக்கூடம் விட்டபின் ஒரு வருஷகாலம், இலங்கை வித்யா இலாகாத்தலைவர் ஆபீசில் ஒரு குமஸ்தாவாகவிருந்தார். சர்க்கார் ஊழியம்செய்வது தனக்கு விருப்பின்றியிருக்கக்கண்டு அவ்வேலையை ராஜிநாமா கொடுத்துவிட்டார். 1884-ம் வருஷத்தில் தியஸாபிகல் சங்கத்தைச் சேர்ந்து, "சந்தரேச" என்னும் சிங்களபாஷையில் பிரசுரிக்கப்பட்ட புத்தமத பத்திரிகையைப் பலப்படுத்தக்கருதி அதற்குவிடாது எழுதிவந்தார். இப்படி 4-வருஷகாலம் உழைத்துவந்தபின் 1891-ம் வருஷத்தில் புத்தகயாவுக்கு யாத்திரையாகப் புறப்பட்டார். தர்மபாலா என்னும்பெயர் அவருடைய இயற்கை நாமமில்லை. 1886-ம் வருஷத்தில் தம் உத்தியோகத்தை விட்ட பின், மதவிஷயமாகவே இனி உழைத்துவருவேனென்கிற தீர்மானம் செய்துகொண்டபொழுது பூண்ட மதப்பெயர். அப்பெயராலே அவர் எங்கும் பிரபலமாய் வழங்கிவரப்படுவதால், அதையே, அவர் பாலிய சரித்திரத்தை யுரைக்கும்பொழுதும் அவரைக்குறிக்க உபயோகித்துவந்தோம்.

புத்தகயாவென்பது பகவான் புத்தர் போதிமரத்தடியில் ஞானோதயம்பெற்ற இடம். அந்த போதிமரம் (அசுவதவிருக்ஷம்) இன்னும் அங்கிருக்கிறது. அதன்பக்கத்தில் ஒரு புத்தமதக் கோயிலும் இருக்கிறது. இந்தக்கோயில் அப்பொழுது சைவமத மஹந்து ஒருவருக்குட்பட்டதாகவிருந்தது. அவர் புத்தமதஸ்தர்களை அங்கு வரவொட்டாது தடுத்து தொந்தரவுசெய்துவந்தார். தர்மபாலா இது சகியாது, அக்கோயில் புத்தமதக் கோயிலானபடியால், புத்தமதஸ்தர்கள் அதிற்சென்று ஆராதனை செய்ய அருகரன்றி, பாத்தியமும் பெற்றுளார் என்று அப்பாத்தியதையை ஸ்தாபிக்குமாறு, ஜப்பான் தேசத்தார் அக்கோயிலுக்கென்று கொடுத்தனுப்பிய புத்தரது பிரதிமையொன்றை அங்கு ஸ்தாபிதம்செய்தார். மஹந்தினுடைய வேலைக்காரர்கள்வந்து பலாத்காரமாக அப்பிரதிமையைத் தூக்கிக்கொண்டுபோக, அவர்கள்பேரில் வழக்குத்தொடுத்து, அது ஹைகோர்ட்டுவரையில் சென்று கடைசியில், அக்கோயில் புத்தர்கோயில் என்றும், அதில் நிரந்தரமாகவிருந்து ஆராதனைசெய்ய புத்தமதஸ்தர்களுக்கே பாத்தியதையென்றும் தீர்ப்பாயிற்று. இது சம்பந்தமாக, பெங்கால் கவர்ன்மெண்டாரோடு விசேஷமாகப்போராடவேண்டி நேரிட்டது. அப்போராட்டத்துக்கெல்லாம் ஈடுகொடுத்துக் கடைசியில் காரியசித்திபெற்றதினால் இவருடைய பெயர் உலகமுழுவதும் விசேஷமாகப்பிரசித்திபெற்று விளங்கலாயிற்று. ஏற்கனவே இவர் புத்தமத விஷயத்தில் ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் உழைத்து



வந்ததினால், புத்தமத சம்பந்தமாக இவருடைய பெயர் உலகமுழுவதும் பிரசித்திபெற்று விளங்கியிருந்தது. இவர் 1891-ம் வருஷத்தில் ஸ்தாபித்த மஹாபோதிசங்கம், இன்றைக்கு உலகெங்கும்பிரசித்திபெற்று விளங்குகின்றது. 1892-ம் வருஷத்தில் இவர் துவக்கிய மஹா போதி சங்கத்துப் பத்திரிகை இன்றைக்கும் நடைபெற்று வருகிறது. 1893-ம் வருஷத்தில் சிகாகோவில் கூடிய மதப்பார்லிமெந்து சபைக்கு, அச்சபை விசாரணைக்கர்த்தர்கள் அழைத்ததை அங்கீகரித்துச்சென்று, அம்மகா சபையில் புத்தமதத்தைப்பற்றிப் பேசிப் பிரபலமான பேர்பெற்றார். சிலகாலம் அமெரிக்காவிலிருந்து புத்தமதத்தைப்பற்றிப் பிரசங்கங்கள்செய்து புத்ததர்மத்தை அங்கு பிரபலப்படுத்தியபின், ஆசியாகண்டத்தில் பலபாகங்களிலும் சீனதேசத்திலும், ஜப்பானிலும் பிரயாணம்செய்து வந்தார். இப்படி சுற்றுப்பிரயாணம்செய்து இந்தியாவுக்குத் திரும்பி வந்தபொழுது தான், ஜப்பான் தேசத்தார் கொடுத்த புத்தர்பிரதிமையை, புத்தகயாவிலுள்ள புத்தமதஸ்தர் கோயிலில் ஸ்தாபிதம் செய்யப்போக, மேலே விவரித்த புத்தகயா கேஸ் உண்டாக நேரிட்டது. அதன் முடிவு தர்மபாலாவின் கீர்த்தியை எவ்வளவு அதிகரிக்கச் செய்ததென்பதை முன்னமே சொல்லியுள்ளோம். இக்காலத்திலே அவர் 'அநகாரிக' ஆசிரமம்வகித்தார். புத்தகயா கேஸில் அவர் பட்ட அனுபவத்தில் உந்தபதவியிலிருப்பவர்களெல்லாம், நியாயம் அநியாயம் பாராது, வலியாரைச்சேர்ந்து எளியாரை வருத்துவதே எளிதாகப் பாவித்து நடந்துவந்ததை யுணர்ந்த அவர், உலகுக்குபகாரம் செய்துழைக்கவேண்டுமானால், உலகபந்தத்தைவிட்டறுக்கவேண்டுமென்று 'அநகாரிக' அதாவது இல்லப்பற்றுவிட்டு வசிக்கும் ஆசிரமம் மேற்கொண்டார். பிறகு 1896-ம் வருஷத்தில் மறுபடியும் மேற்கே யாத்திரை போகப்புறப்பட்டு, அந்த வருஷமும் அடுத்தவருஷமும் ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் அனேக இடங்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு, போன இடங்களிலெல்லாம் புத்தர் மதத்தைப் பரவச்செய்ய பிரயத்தனம்செய்துகொண்டுவந்தார். சென்றவருஷம் தம் சுதேசம்வந்து அங்கு புத்தமதப்பிரசங்கிகள் தயார்செய்வதற்கேற்ற 'காலேஜ்' ஒன்று ஸ்தாபிப்பதற்கு வேண்டிய முயற்சியெடுத்துக்கொண்டார். இப்பொழுது கல்கத்தாவிலிருந்து சென்னைக்குவந்து, இங்கு மஹாபோதி சங்கத்துக்குக் கிளைச்சபையொன்று ஏற்படுத்திவிட்டு, இலங்கைக்குப் போயிருக்கிறார்.

C. V. S.

## பாலர்களுக்குப் போதிக்கும் முறை.

(By C. Nagoji Rao, B.A., F. M. U, Inspector of Schools.)

குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் போதிக்கும் முறையானது பிசகாயிருந்தால் அவர்கள் மனப்பயிற்சிக்கு அதிக தீங்கு உண்டாகும். எப்படியென்றால் ஆலோசனையின்றி விடையளித்தல், பொருள்களை பரிசோதனை செய்யாமல் அவைகளைப்பற்றிப் பேசுதல், புத்தியைச் சரியாய் உபயோகிக்காமல் போகுதல், குருட்டுப் பாடம் பண்ணுதல், ஆகிய இந்த கெட்ட வழக்கங்களுக்கு இடமுண்டாய் அவைகளினின்று விட்டு விலகுவது கஷ்டமாயிருக்கும். அதற்காகவே சிறுவர்களின் பிரதம வித்தியாபிவிர்த்தி விஷயத்தில் உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் விசேஷ கவனத்தைச் செலுத்தவேண்டியது அவசியம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்கிறதில்லை. பிள்ளைகள் கற்றுக்கொள்ளவேண்டிய முறையானது கற்கும் விஷயத்தைவிட பதின்மடங்கு சிறந்தது. இவ்விஷயத்தை உபாத்தியாயர்களாவது பரீக்ஷாதிகாரிகளாவது வேண்டிய அளவு மதிக்காமல் இருப்பது துர்ப்பாக்கியமே.

மனப்பாடம் செய்துவைக்கவேண்டுமென்னும் ஓர் எண்ணந்தான் மேலிட்டு நிற்கிறதே தவிர, அதனுடன் வஸ்துக்களை உற்றுப்பார்த்து

அவைகளின் நிஜஸ்திதியை அறியும் சக்தியை விருத்திசெய்தல், புத்தியைக் கூர்மைப்படுத்தல் இவைகளைப்பற்றி தகுந்த அளவு ஜனங்கள் கவனிக்கிறதில்லை. எவ்விதமாயாவது சில விஷயங்களைக் கற்றுக்கொடுத்துவிட்டால் காரியம் சித்தியாயிற்றென்று திருப்தி அடைந்துவிடுகிறார்கள்.

நான் இயற்றியிருக்கும் தமிழ் முதல்பாட புத்தகத்தில் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டிய முறை முக்கியமாய் கவனிக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தைக் கற்றுக்கொடுப்பதில் குழந்தைகளுக்கு வீண் சிரமம் கொடுக்காமல் அவர்களால் என்ன செய்யக்கூடுமோ அவைகளைச் செய்வித்து அவர்கள் புத்தியை விருத்திசெய்யும் வழியைக் காட்டியிருக்கிறது.

நான் சொல்லிய முறையை அனுசரித்தால் பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேயே உற்சாகம் உண்டாகும். மேலும் வெகு சீக்கிரத்தில் வாசிப்புவரும். எப்படியென்றால் சித்திரத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே பிள்ளைகளுக்கு ஒருவித சந்தோஷமுண்டாகின்றது. பக்கத்தில் அச்சிட்டிருக்கும் சித்திரங்களின் பெயர்கள் எழுத்தில் காண்பித்திருக்கிறது என்று சொல்லும்பொழுது அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது அவர்களுக்குச் சிரமமாகத்தோன்றாது. ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒரே சப்தத்தில் ஆரம்பித்திருக்கிறதையும் அவைகளுக்குச் சரியாய் அச்சிட்டு இருக்கும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒரே எழுத்தில் ஆரம்பித்திருக்கிறது என்பதையும் பிள்ளைகளே அறிந்துகொள்ளுவார்கள். இதைக் காட்டுவதற்காகவே இவ்வெழுத்துக்கள் சிவப்பு இங்கியில் 12-ம் 13-ம் பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதுதான் கவனித்தறியும் சக்தி என்பதாம். மேலே சொல்லிய வாய்மொழியால் சொல்லப்பட்ட ஒவ்வொரு வார்த்தையின் முதல் சப்தமானது அச்சிட்டிருக்கும் வார்த்தைகளின் முதல் அக்ஷரமாகக் காண்பிக்கப்பட்டு இருக்கிறதென்பதை நாம் காட்டும்பொழுது அதைப் பிள்ளைகள் அறிந்து மறவாமல் இருப்பது ஞாபக சக்தியாம். எழுத்தட்டையில் குழித்திருக்கிற ஒவ்வொரு அக்ஷரத்தையும் குழந்தைகள் வாயினால் சொல்லிக்கொண்டு விளம்புவதினால் அந்த அக்ஷரத்திற்கும் அந்த அக்ஷரத்தின் சப்தத்திற்கும் உள்ள சம்பந்தம் அவர்கள் மனதில் நன்றாய்ப் பதிகிறது. பெரிய அட்டையிலிருந்து துண்டுகளைக் கத்தரித்து எடுத்து அக்ஷரங்களாகச்சேர்த்து அவைகளின் பெயரை குழந்தைகளைச்சொல்லச் சொல்வதினால் அந்த எழுத்திற்கும் சப்தத்திற்குமுள்ள சம்பந்தம் இன்னும் அதிகமாக உறுதியாகும்.

2-வது பாகம் கற்பிக்கும் விதம்.

16-ம் பக்கத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ளுக. சித்திரத்தைப் பார்த்தே "இறகு" என்று பெயர் தெரிந்துகொண்டு அதன் பக்கத்தில் அச்சிட்டிருக்கும் வார்த்தை "இறகு" என்று குழந்தைகள் அறியலாம். முதல் பாகத்தில் வாய்மொழி வார்த்தையில் சொல்லியதை அச்சில் அல்லது எழுத்தில் இருக்கும் முதல் அக்ஷரமாகக் காண்பித்திருக்கிறதென்பது ஏற்கனவே அவர்களுக்குத் தெரிந்திருக்கிறபடியினாலே, இப்பொழுது "இறகு" என்று வாய்மொழியால் உச்சரித்த முதல் சப்தமாகிய "இ" அச்சிலுள்ள வார்த்தையாகிய "இறகு" என்பதின் முதலெழுத்து "இ" என்பதேயாமென்று சொல்லி "இ" என்கிற சப்தத்தை "இ" என்கிற எழுத்தினால் காண்பித்திருக்கிறதென்பதை பிள்ளைகளைக்கொண்டே சொல்லச்சொல்லலாம்.

பிறகு சித்திரங்களைப்பார்த்தே "கிணறு" "விசிறி" என்று சொல்லுவார்கள். இந்த வார்த்தைகளின் முதல் சப்தங்களாகிய "கி" "வி" என்பவைகள் அச்சிட்டப்பட்டிருக்கும் வார்த்தைகளின் முதலெழுத்து என்று பிள்ளைகளிடமிருந்து வருவிக்கலாம். இதுவுந்தவிர



ஏற்கனவே, "க" "வ" இவ்விரண்டெழுத்துக்களும் அவைகளின் உச்சரிப்பும் முதல் பாகத்திலேயே கற்றிருப்பார்கள். அந்த "க" "வ" என்கிற எழுத்துக்களுக்கு எந்த அடையாளங்களைச் சேர்த்திருக்கிறதென்றும் அப்படிச் சேர்ப்பதினால் உச்சரிப்பில் என்ன மாறுபாடு ஆயிருக்கிறதென்றும் பிள்ளைகளைச்சொல்லச் செய்யலாம். மேலும் "ி" இந்த அடையாளமுள்ள துண்டையும் மற்ற மெய்யெழுத்துக்களையும் பெரிய அட்டையிலிருந்து கத்தரித்து எடுத்து ஒவ்வொரு மெய்யெழுத்தோடு "ி" இந்த அடையாளத்தை தக்கபடி சேர்த்துக்காட்டி, அவைகள் "சி" "தி" "மி" &c. ஆகிறது என்று வருவிக்கலாம். இவ்வாறுசெய்வதினால் கவனித்தறியும் சக்தியும் புத்தியும் விருத்தியாகின்றது.

மேற்சொல்லியதினால் என் முதல் பாட புத்தகத்தை எவ்வாறு உபயோகப்படுத்தலாமென்பதை நன்றாய் அறியலாம். மேற்படி முதல் பாடத்தின் சகலபாத்தியதையும் கோயமுத்தூர் காலேஜுக்குக் கொடுத்தாய்விட்டது. என் புஸ்தகத்தினால் பாலர் படிப்பு விருத்தியாகுமென்பதைத் தவிர வேறே கருத்து எனக்கு இல்லை.

ஸி. நாகோஜிராவ்.

# செல்வநூல்.

## 11. * குத்தகை.

நாம் முந்திய பாடத்தில் தனவிபாகம் எப்படி செய்யப்படவேண்டியது என்று பொதுவாக விசாரித்துப்பார்த்தோம். இப்போது அதே விஷயத்தைக் கொஞ்சம் விரித்து அறியமுயலுவோம்.

தனவிபாக ஸம்சிலேஷத்தில் (The equation of Distribution) ஸங்கவிதமான வொருபாகமாகிய குத்தகை (Rent), என்பதைப்பற்றி யிந்தப்பாடத்தில் விசதமாகப் பேசத் துவக்குவோம்.

* Rent.

குத்தகை யென்றால் க்ஷேத்திரத்தின் உபயோகத்திற்காக க்ஷேத்திரத்திற்கு உரித்தானவனுக்கு அதை யுபயோகிப்போர் கொடுக்கும் ஆச்வாஸம் (Remuneration) என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். இப்படியாகக் கொடுக்கப்படும் ஆச்வாஸம் திரவிய ரூபமாகவாயினும் தானியரூபமாகவாயினும் இருக்கலாம். இது க்ஷேத்திரத்தில் உள்ள ஸ்வாபாவிகமான பிரகிருதி சக்தியின் உபயோகத்திற்காகத்தானென்று நாம் முக்கியமாய் அறியவேண்டும். க்ஷேத்திரத்தின்பேரில் செய்யப்பட்டிருக்கும் மற்றும் பல செயற்கையான வளன்களுக்காகக் கொடுக்கப்படும் ஆச்வாஸம் குத்தகையாக மாட்டாது. இதைப்பற்றி மேல் விரிவாகக் கூறப்படும். பொதுவாக க்ஷேத்திரம் என்றால் தனம் எங்கெங்கே யுத்பத்தியாகிறதோ அதற்கெல்லாம் பெயராயினும் தான்யங்கள் விளைத்து சாகுபடிசெய்யும் பூமியையே க்ஷேத்திரத்திற்கெல்லாம் நிதர்சனமாகவைத்துக்கொண்டு வியவஹரிப்போம்.

முதல்முதல் குத்தகையென்பது எப்படியுண்டாகிறது என்று பார்ப்போம். இதுவிஷயம் வாகர் என்னும் செல்வநூலாளர் மிகவும் விசதமாகக் கூறியிருப்பதால் அவரது கொள்கையையும் விவரணத்தையும் அனுஸரித்தே பின்வருவது விளக்கப்படும்.

ஒரு ஜனஸங்காதம் வேறு ஜனஸங்காதங்களுக்கு அருகாமையிலில்லாமல் சில பூமிகளையுடைத்தாயிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அவைகள் நான்கு திட்டமான பூமிகளாகப் பிரிந்திருக்கின்றன என்றும் வைத்துக்கொள்வோம். ஒன்றில் ஒரு வருஷம் பாடுபட்டால் ஏகராவொன்றுக்கு 10-கண்டி தானியம் கிடைக்கட்டும். மற்றொன்றில் அதே பாட்டிற்கு 8-கண்டி தான் ஆதாயமாகும். மூன்றாவதில், 7, நான்காவதில் 6-கண்டி ஆதாயம் கிடைக்கும். அந்த ஜனஸங்காதத்திற்கு வருஷாந்தரத்திற்கு வேண்டியதெல்லாம் 10-கண்டி விளைச்சல் கொடுக்கும் பூமிபாகத்தின் ஏகதேசத்திலே விளையவைக்கலாமாயின், அப்

பூமியையுடையாருக்கு யாதொரு குத்தகையும் வாராது. சாகுபடிசெய்வதற்கு வேண்டிய பூமி அல்பமாகையால் பூமிக்குடையவர் தாம் தாம் முந்திக்கொள்ள கிராக்கிப்படுவதால் முதல் முதல் ஏதாவது சுவல்பம் குத்தகை கொடுக்க வேற்படினும் சீக்கிரம் மற்றவர்மேல் விழுந்து அதைக்குறைக்க முயலுவார்கள். ஆகவே முடிவில் குத்தகையென்பதே யில்லாமல் போய்விடும். ஆயினும் பயிர்செய்யப் பயிர்செய்யப் பூமியின் வளம் குன்றிப்போவதால் ஏதாவது கொஞ்சம் குத்தகையாவது அதைச் சீர்திருத்துவதற்காக விதிக்கப்படவே படும். இது மிகவும் அல்பமாகையால் பொதுவாகக் குத்தகையைப்பற்றிப் பேசும்போது இதை நாம் விட்டுவிட்டே பேசலாம்.

இப்போது ஜன சங்கையதிகரித்து 10-கண்டி விளைச்சல்கொடுக்கும் பூமிபோதாது தாழ்ந்த பூமிகளுக்கும் போகவேண்டி வந்தால் உடனே குத்தகை யென்பது வெளிப்படத்துவங்கும். அதிகப்பிரயாஸைப்பட்டு 10-கண்டி விளைச்சலிலேயே உழைப்பதில் அவ்வளவு பயனில்லை. நாம் முன்னொரு பாடத்தில் கூறியபடி பலநீமீலன விதி (The Law of Diminishing Returns) யின் பிரவர்த்தனையால் 8-கண்டி விளையும் பூமியைப்போல் அது அவ்வளவு லாபம் கொடுக்காது. ஆகவே சாகுபடி செய்வோர் மட்டமான பூமிகளைப் பயிர்செய்யத் துவங்குவார்கள். அப்படி மட்டமான பூமிகளுக்குப் போகவேண்டிய அவசியதை யுண்டாகவே, சாகுபடி செய்பவரில் சிலர் புதிதாகப் பயிர்செய்யவேண்டிய பூமிகளுக்குப்போய் ஸந்திக்தமானவிடத்தில் பாடுபடுவதைக் காட்டிலும் அனுபவத்திற்கு வந்திருக்கும் 10-கண்டி பூமியையே பயிர்செய்ய நிச்சயித்து அதை யுடையவருக்கு ஏதாவது கொஞ்சம் ஆச்வாஸம் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்துகொள்வார்கள். இப்படியாகக் கொடுக்கப்படும் ஆச்வாஸம் 2-கண்டிக்குமேல் போகாது. ஏனெனில் அப்படி 2 - கண்டிக்குமேல் கொடுக்கவேண்டிவந்தால் புதிதான பூமியைப் பயிர்செய்வதே அவர்களுக்கு நலமாகவிருக்குமாகையால் 8-கண்டி பூமிகளுக்குப் போய்விடுவார்கள். இப்படியே ஜனங்களின் பெருக்கம் மிகவே 8-கண்டி பூமிகளும் போதாமல் 7-கண்டிக்கு மிக்கு விளைச்சல் அணுகினால், இப்பூமிக்கு குத்தகை கிடைக்காது. 8-கண்டி பூமிகளுக்கு 1-கண்டிவரையில் குத்தகையுண்டு. 10-கண்டி பூமிக்கு 3-கண்டி வரையில் கிடைக்கும் இப்படியாக ஜனசங்கை பெருகப்பெருக, மட்டமான பூமிகள் சாகுபடிக்குக் கொண்டுவரப்படத்துவங்கவே பூமிகளின் குத்தகையும் அதிகரிக்கத்துவங்கும். ஆகவே குத்தகையின் நியமம் இன்னதென்று நாமிப்போது விசதமாகவுரைக்கலாம்.

(1.) ஒரு ஜனஸங்காதத்தின் உபயோகத்திற்காகச் சாகுபடிசெய்யப்படும் பூமிகளின் இயற்கையான வளத்தின் தாரதம்யத்தினால்தான் குத்தகை யென்பது ஏற்படுகிறது.

(2.) இப்படியாக வேற்படும் குத்தகை அந்தந்ததாரதம்யம் எவ்வளவு ஆகிறதோ அவ்வளவுக்குமேல் போகாது.

நாமிதுவரையில் பூமியின் தாரதம்யத்தைப் பற்றிப் பேசும் காலத்தில் அதினின்று பண்டங்கள் செலவாகுமிடத்திற்குக் கொண்டுபோக வேற்படும் சந்தா முதலியவைகளைக் கணக்கில் சேர்க்கவில்லை. ஆயினும் ஒரு பூமியானது வெகு தொலையில் சாகுபடி செய்யப்பட்டு அதன் விளைச்சல் கிராமத்தின் பிரயோசனத்திற்காகக் கொண்டுவரப்படின் அதன் குத்தகையைப்பற்றிப் பேசும்போது அவ்விளைச்சல்களை இடம்மாறல் செய்யக்கழியும் திரவியத்தையும் வைத்துக்கொண்டு தான் யோசித்தல் வேண்டும். எப்படியெனின், நாம் முற்கூறிய உதாரணத்திலே கொஞ்சம் தூரத்தில் 12-கண்டி விளைச்சல் கொடுக்கக்கூடிய சில பூமிகள் தென்பட்டனவென்று வைத்துக்கொள்வோம். அதினின்று பண்டங்களைக் கொண்டு வருவதற்கு 2-கண்டிக்குமேல் சந்தாவாகாமலிருந்தால் அதில் விளையும் விளைச்சல் அருகாமையில் 10-கண்டிக்குமேல் விளையும் விளைச்சலுக்குச் சமானமாகும். ஆகவே அதற்கு 10-கண்டிவிளையும் பூமிக்குக்கொடுக்கும் குத்தகையைக்காட்டிலும் அதிகம் கிடைக்கும். ஆனால் சந்தாவானது 4-கண்டிவரையில் போனால், அருகாமையில் 8-கண்டி பூமிக்குள்ள குத்தகைதான் கிடைக்குமே யொழிய வேறில்லை.



மேலும் இப்படியாகத் தொலையில் ஏராளமான பூமிகள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு, அதன் விளைச்சல் குடித்தனக்காரனுக்கு நஷ்டமில்லாமல், அதைப் பெறவேண்டிய ஜனஸங்காதத்திற்குக் கொண்டுவரப்படின், அதினுடைய சக்தியினால் பழைமையான வெகு பூமிகள் மட்டமாயிருப்பதினால் கைவிடப்பட்டு தரிசு விழுந்துபோவதுடன் சாகுபடி செய்யப்படும் பூமிகளுக்கும் குத்தகை குறைந்து போய்விடும். இப்படியாகக் குத்தகை தாழ்வடைவது நாமெல்லோரும் பலதடவைகளில் பார்க்கக்கூடிய விஷயம். நாம் முற்கூறிய உதாரணத்தில் 6-கண்டி விளையும் பூமிகள் வரையில் சாகுபடி பரவியிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இப்படியிருக்க ஒரு புதுதேசம் கண்டுபிடிக்கப்பட்டாவது அல்லது தூரத்தில் புதிதான ஆறு குளங்கள் வெட்டுவிப்பதினாலாவது 8-கண்டி பரிசிஷ்டமான விளைச்சல்கொடுக்கக்கூடிய பூமிகள் ஏராளமாகக்கிடைத்தால், 6-7-கண்டி விளையும் பூமிகளைக் கட்டிக்கொண்டு பாடுபடுவதைக் காட்டிலும் தூரத்திலிருக்கினும் இப்புது பூமிகளையே ஜனங்கள் சாகுபடிசெய்ய முயலுவார்கள். ஆகவே 6-7-கண்டி பூமிகள் கைவிடப்படும். ஒரே ஜனஸங்காதத்திற்கு வேண்டி சாகுபடி செய்யப்படும் பூமிகளில் கடைத்தரமான பூமியின் விளைச்சலுக்குமேல் உண்டாவதுதான் குத்தகையாகையால் இப்போது 10-கண்டி பூமிகள் 2-கண்டி குத்தகைதான் கொடுக்கும். இப்புதிய பூமிகள் தென்படுவதற்கு முன்னே அவைகள் 3-அல்லது 4-கண்டிகள் கொடுத்துக் கொண்டிருக்கலாம்.

ஆகவே ஜனஸங்கை பெருகப்பெருக குத்தகையதிகரிப்பது ஸாமானிய நியமம். ஏனெனில் அதன் வேண்டுதலுக்காகப் புதியதும் மட்டமுமான பூமியை விளைச்சலுக்குக்கொண்டுவரவேண்டிச் சேரும். ஆனால் இப்படிப் புதிதாகச்சேரும் பூமிகள் யாதுகாரணத்தினாலாகிலும் என்னமாய் எற்பட்டால் குத்தகை குறையும். ஆயினும் சீக்கிரம் ஜனஸங்கை பெருக மறுபடியும் முன்போலவே உயர்ந்துவிடும்.

நாம் முன்கூறியதை நன்றாக அறிந்துகொண்டால் பூமிகளின் விலைக்குக் காரணம் அவைகளின் குத்தகையே. ஆயினும் வருஷாந்தர குத்தகையைப்போல் இவ்வளவுபங்கு விலை யென்று ஏற்படுவது தேசத்தின் வளத்தைப்பற்றியதாயிருக்கிறது. எப்படியெனில், செல்வம் ஏராளமாயுள்ள தேசத்தில், ஈதிபாதைகள் இன்றி சட்டதிட்டங்கள் நேராகவிருக்கின் பூமிகளின் விலை 20-வருஷம் 30-வருஷம் குத்தகையளவாகவிருக்கும். அப்படிக்கில்லாவிடின் 4-5-வருஷம் குத்தகையளவுகூட கிடைப்பது அரிது.

முற்கூறிய குத்தகைநியமத்தை ஆராய்ந்து பார்க்கின், விளைச்சலின் விலையைக் குத்தகை கொஞ்சமேனும் மாற்றுகிறதில்லை யென்று ஏற்படும். ஏனெனில், ஒருஇடத்தில் செலவாகும் பண்டங்களுக்கெல்லாம் ஒரே விலைதானேற்படவேண்டியதாகையாலும், அங்கே விலைப்படும் பண்டங்கள் பலவிதமான வளமுள்ள பூமிகளினின்றும் கொண்டுவரப்பட்டிருக்கக் கூடுமாதலாலும் அவைகள் விளையும் பூமிகளுக்கு என்ன குத்தகை யேற்பட்டாலும் கடைத்தெருவில் விலைப்போகும் விலை ஒன்றேதான். ஆதலினால் குத்தகையால் பண்டங்களின் விலை மாறுபாட்டை யடைகிறதில்லை. ஆகையால் பூமிக்குரியவர்கள் தங்களுக்கு வரும் குத்தகையை வேண்டாமென்று சாகுபடிசெய்பவருக்கே விட்டுவிட்டால் பண்டம் வாங்குவோருக்கு விலை ஸஹாயம் கூடும் என்று நாம் எண்ணக்கூடாது. இப்படியாக ஏற்பட்ட லாபத்தை குடித்தனக்காரன் தன்

வாயில் போட்டுக்கொள்வான். அப்படிக் குடித்தனக்காரனும் மஹா தயையுடன் விலையைச் சகாயம்செய்து வியாபாரியிடம் விற்றால் வியாபாரி அந்த லாபத்லைதத் தான் பெறுவானே ஒழிய பண்டங்களைக் கடையில் பெறும் ஜனங்களுக்கு அதனால் உண்டாகும் பயன் கிடைக்காது. ஆகவே பூமிகள் சில ஜனங்களின் பாத்யத்திற்குட்பட்டிருப்பின் அவர்களுக்குத்தான் அவைகளின் தாரதம்யத்தால் ஏற்படும் குத்தகை அவசியமாகவே சேரவேண்டும். அவர்கள் தங்களுக்கு வேண்டாமென்று விட்டுவிட்டால் அவர்கள்பங்கை வேறொருவன் தன்வாயில் போட்டுக்கொண்டுபோவானே யொழிய பொதுவாக ஜனங்களுக்கு அது கிட்டாது. அப்படிச் செய்வதினால் விலை சகாயப்படாது.

மேற்கூறியவாறு குத்தகையின் நியமத்தை (Ricardo) ரிக்கார்டோ வென்னும் ஸ்காட்லாண்டு தேசத்துச் செல்வநூலாளர் நன்றாக விரித்துரைத்தார். இப்படியாகக் கூறப்பட்ட குத்தகை நியமம் வெகுவாகப் பல செல்வநூலாளர்களால் பூர்வபக்ஷஞ்செய்யப்பட்டது. இப்படியாக இதைப் பூர்வபக்ஷஞ்செய்து கண்டவர்களில் அமெரிக்காதேசத்துச் செல்வநூலாளர்களில் ஒருவராகிய கேரீ (Carey) என்பவர் ஒருவர். அவருரைப்பது என்னவெனில், குத்தகை யென்பதே கிடையாது. ரீக்கார்டோ குத்தகை யென்று காட்டியது, பூமியைச் சீர்திருத்தி நல்ல ஸ்திதிக்குக்கொண்டுவருவதற்காகச் செலவான பொருளின் உபயோகத்திற்காக வேற்படும் விருத்திதான். எப்படியெனில் நாமிப்போது எந்த பூமியையாவது விற்க முயன்றால் அதில் செலவானபொருள் கிடைக்கவேகிடைக்காது. அதினின்று கிடைக்கும் குத்தகையும் செலவான முதலுக்கு உரித்தான விருத்தியின் ஒரு பாகந்தான் ஆகும். ஆகையால் கேரீ சொல்வது என்னவென்றால் ரிக்கார்டோ குத்தகை யென்று காட்டினபாகம் மேற்கூறிய செலவின் வட்டியில் ஒருபாகந்தான்.

இதற்கு வாகர் சொல்லுகிறார். இப்படியாகச் சொல்வது சரியல்ல. குத்தகையாகவேற்படும் பாகம் பூமியின் சீர்திருத்தத்தில் ஏற்பட்டு செலவான முதலின் வட்டிக்குச் சமனாகவிருக்கிறது என்றால் ஒருவேளை குத்தகையென்பது வட்டிதானோவென்று பிரமை தோன்றலாம். அப்படிக்கின்றி குத்தகையென்று நாம் கூறுவதை விருத்தியின் ஒருபாகம்தான் என்று எப்படிச் சொல்வது? அப்படி விருத்தியின் ஒருபாகம்குத்தகையாயின் மற்றைபாகம் என்னவாயிற்று என்றன்றோ கேரீ யவர்களைக்கேட்கவேண்டும்? விருத்தியின் ஒரு பாகம் நாளாவட்டத்தில் அழிந்துபோமாயின் ஏன் முழுமையும் அழிந்துபோகமாட்டாது? இவ்வளவுதான் காலாவதியில் அழிந்துபோயிற்றென்றும் இவ்வளவு பாக்கி நிற்கிறது என்றும் எப்படிச் சொல்வது? ஆகையால் கேரீ யது பூர்வபக்ஷம் காரணத்தின் அதி வியாப்தியால் நசித்துப்போகவேண்டும். ரீக்கார்டோவின் குத்தகை நியமம் இதினால் கொஞ்சமேனும் நூனதையடைகிறதில்லை.

நாம் முற்கூறிய குத்தகைநியமம் (The Law of Rent) சிற்சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் பிரவர்த்திக்கிறது. முதல் நிபந்தனை யென்னவெனில் க்ஷேத்திரத்திற்குரியவரும் க்ஷேத்திரத்தை சாகுபடிசெய்பவரும் தங்கள் தங்கள் சொந்த பிரயோஜனத்தையே முன்னிட்டுக்கொண்டு மற்று யாதொருவிஷயத்தையும் கவனியாமல் ஒருவர்மேலொருவர்விழுந்து கிராக்கிப்படுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளவேண்டும். இப்படி நிர்தாக்ஷணியமாக சுயநயத்தைப்பாராட்டுவது எப்போதும் நடக்கும் விஷயமல்ல. ஆகவே ரீக்கார்டோவின் நியமத்தை நேராகப் பிரயோகிப்பதினால் ஒரு குறித்த பூமிக்கு இவ்வளவு குத்தகைதான் ஏற்படும் என்று வற்புறுத்திக்கூறுவது அஸாத்தியம். ஆயினும் மேற்கூறிய குத்தகைநியமம் உபயோகமற்றது என்று தள்ளப்படவும்கூடாது. ஏனெனில் எவ்வளவுக்கெவ்வளவு நிபந்தனைகளுக்கு உடன்பட்டு ஒருபூமியிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் குத்தகை ரீக்கார்டோவின்



நியமத்தை யனுசரித்து இருக்கும். சாஸ்திரம் பிரவர்த்திப்பதெல்லா மிப்படித்தான். முக்கியமான சில காரணங்களைக்கொண்டு ஒரு காரியமிப்படித்தானாகவேண்டும் என்று கூறுவது. ஆனால் நடவடிக்கையில் சிற்சில விஷயங்களில் காரணங்கள் நேராக பிரவர்த்திக்காமல் தடைபடுவதைத்தொட்டுக் கொஞ்சம் மேலுங் கீழுமாகக் காரியம் ஏற்படும். இதனால் காரிய காரண ஸம்பந்தத்தைக்குறிக்கும் நியமம் அடியோடு அஸம்பந்தமானது என்று சொல்வது தகாது.

ஜீ. கஸ்தூரி ஐயங்கார்.

---

## ஆத்திசூடி வாக்கியங்கள்.

ஔவையார் என்னும் அருந்தமிழ்ப் புலவர் பெருமாட்டி இயற்றிய ஆத்திசூடி என்னும் இச்சிறிய நூலானது நம்முள் சிறியார் பெரியார் எல்லாரும் அறிந்ததொன்று. இப்பொழுது நம்முள் மாத்திரமன்று. ஐரோப்பியர் முதலிய அன்னியர் தாமும் இந்நூலின் பெருமையை யறிந்து இதைக் கையாடி வருகின்றனர். இதனால் இகபரஞானங்கள் இரண்டும் பெறலாம். இது முக்கியமாக சிறுவருக்காக இயற்றப்பட்டதாகலின் மிக எளிய சொற்களால் சிறு வாக்கியங்களாக அமைக்கப்பட்டுள்ளது. அச்சிறு வாக்கியங்களை ஆராயப்புகுந்தால் அவற்றுள் அரிய பெரிய விஷயங்கள் அநேகம் புதைந்துகிடக்கின்றன.

“அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.”

என்று, ஆன்றோர் திருக்குறளுக்குச் செப்பியவாங்குச் செப்புதற்கு இவ்வாத்திசூடியும் தகுதியுடையது. இந்நூலின் பெருமை இத்தன்மைத்தென, அதன் வாக்கியங்களை தனித்தனி எடுத்து நாம் அறிந்தவரை விரிக்குங்கால் விளங்கும். இவ்வாக்கியங்களெல்லாம் சிறுவருக்குபதேசமாக ‘நீ இதைச் செய்,’ “நீ இதை விலக்கு” என்றதைப்போல விதி விலக்கு வாக்கியங்களாய் ஏவல் வினையால் முடிந்திருக்கின்றன. இதில் முதல் வாக்கியம்,

“அறஞ்செய விரும்பு.”

தருமத்தைச் செய்வதற்கு யாவரும் ஆசைகொள்ளவேண்டுமென்பது இதன் பொருள்.

இவ்வுலகத்தில் மனிதராய்ப் பிறந்த எல்லாரும் அடையவேண்டிய புருஷார்த்தங்கள் நான்கு என்பது யாவரும் அறிந்த விஷயமே. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவேயாம். இவ்வுலகில் நாம் எல்லாரும் கர்மவசத்தாலே, ஜன்மமெடுத்திருக்கின்றோம். முன்கர்ம கழிவுக்காக எடுத்த இச்சன்மத்திலே மேலும் கர்மங்கள் தேடிக்கொள்ளா வண்ணம் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். நமது செய்கைகளின் பயனையே பின் நாம் அநுபவிக்கின்றோமாதலால் இப்போது, நமக்கும் பிறர்க்கும் நற்கருமங்களாகிய அறங்களைச் செய்யின் பின் தீவினைப்பயன் பெறமாட்டோம். ஆதலால் அறஞ்செய்தல் முதலில் வலியுறுத்தப்பட்டது.

“நன்றி யொருவருக்குச் செய்தக்கானன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.”

என்றபடி அறஞ்செய்யின் அவ்வறம் இப்பொழுது மற்றவர்கட்கும் பின் நமக்கும் நன்மை விளைக்கும். ஆகவே குறைந்தது நம்முடைய நன்மைக்காகவேனும் அறஞ்செய்தல் வேண்டும்.

அறங்களாவன: சத்திரங்கட்டுவித்தல், கல்வி பயில்வோர்க்கு உணவளித்தல் முதலியன. பொதுவாகப் பிரிக்கும்போது இவை இல்லறம், துறவறம் என இரண்டுவகைப்படும். இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லப்படுகிற வழியிலே நின்று அதற்குத்துணையாகிய கற்புடை மனைவியோடும், செய்யப்படுவது என்பர் பரிமேலழகரும்.

“துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை.” [குறள்]
“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்
றைம் புலத்தா றோம்பல்தலை.”

என்று கூறியவாங்கு இவர்களெல்லோர்க்கும் உதவியாய் நின்று ஓம்புதலும் பிராணிகளிடத்து அருள் கொண்டிருத்தலும் இவர்கள் செய்யவேண்டிய தருமங்களாம். துறவறமாவது இல்லறத்தை நிரப்பி அதன் பின் இவ்வுலக இன்பங்களை யெல்லாம் வெறுத்துவிட்டுக் காட்டிற்சென்று “ஓரறிவுயிர்க்கு முறுதுயரோம்பி” மனத்தை ஐம்புலன்களின் வழியே போக்காது ஒருவழி நிறுத்தி ஆன்மரக்ஷணம் தேடிக்கொள்ளுவது. இப்படித் துறவறமானது இல்லறத்தை முற்றி மேற்செய்யப்படுவதென்றே யிருந்தும், துறவறமானது இல்லறத்துக்கு முற்றும் மாறுவது என்று கூறுவாரும் உளர். அஃது பொருந்தா

ததாம் - இல்லறம் துறவறமாகிய இரண்டற்கும் முடிவிற்பயனென்றேயாம். ஆதலின் துறவறமானது கைத்த மருந்துண்டு நோயைப்போக்கிக்கொள்ளுதலையும் இல்லறமாவது இனித்த மருந்துண்டு நோயை எளிதில் போக்கிக்கொள்ளுதலையும் ஒக்கும். இவ்வுலகத்தார் எளிதில் கைக்கொண்டு நடத்தக்கூடியது இல்லறமேயாகலின் பொதுவாக அதுவே அவர்கட்கு விதிக்கப்பட்டது.

பல வேறு காலங்களில் வெவ்வேறு தேசங்களில் சிற்சில அறங்கள் மற்றவற்றைவிட முக்கியமானவையாகக் கருதப்பட்டுவந்தன. உதாரணமாக நமது இந்தியா தேசத்தில் கோவில் கட்டுதலும், குளம் வெட்டுதலும, சாலைவைப்பதும், (இப்பொழுதுசோம்பேரிமடங்களாக நாம் சாக்ஷியத்திற் பார்க்கின்றனவும் நாட்டிற்கு மிகத்தீங்கு விளைப்பனவுமாகிய) சத்திரங்கட்டுதலும் முதலியன மிக முக்கியமானவையாகக்கருதப்பட்டுவந்தன. வேறு சில தேசங்களில் கல்வி வளர்த்தலும், கைத்தொழில் வளர்த்தலும், இல்லார்க்கு வேலைதந்துதவுதலும் ஆகிய இவை போன்றவை முக்கியமானவையாகக் கருதிக் கையாளப்பட்டுவந்தன.

இப்பொழுது நமது இந்தியாவிலும் கூட பல கனவான்கள் ஐரோப்பிய வழியைப் பின்பற்றி கல்வி வளர்த்தலையே பெருந்தர்மமாகக்கொண்டு அளவற்ற திரவிய முதவி கல்வியபிவிர்த்தி செய்துவருகின்றனர். உதாரணம் பலவுள. அவை யாவருமறிந்தவே. ஒருவனுக்குச் செய்யின் (உதவி பெற்றவனுக்கு) அவற்றின் பயன் இம்மையோடு போய்விடக்கூடிய மற்ற அறங்கள்போலாது எழுமையிலும் சென்றீவதாகிய கல்வியுதவுதல் எவ்வளவு பெரிய தர்மம் பாருங்கள்! அதைப்பற்றி நாம் விரித்தும் கூறவேண்டுமோ?

**இனி செய** என்னும் சொல்லைப்பற்றி ஆராய்ந்தால், அது அறத்தை நாம் செய்ய விரும்புதலேயல்லாமல் பிறரும் அதனையே செய்ய நாம் விரும்பவேண்டும் என்னும் பொருளைத் தருவது புலப்படும். "அறம் அல்லாதனவற்றை நாம் செய்தால்தானே நமக்குப் பாதகம்" என்று நினைத்து பிறரைத் தீக்கருமங்களில் போதித்து ஏவுகின்றவர்களும், பிறர் அறம் அல்லன செய்தால் அவற்றைப் பார்த்தும் அவர்களும் அறஞ்செய்யவேண்டுமென்று விரும்பி அவர்களைத் திருத்த முயலாது நமக்கென்ன என்று சும்மா யோகின்றவர்களுமாகிய சிலரை நோக்கி இங்ஙனம் கூறியதாகக்கொள்ளலாம்.

**இனி விரும்பு** என்னும் சொல் எவ்வளவு அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது பாருங்கள்! நம் சிற்றறிவுக்கு எட்டிய அளவு இதை யோசித்துப் பார்ப்போமானால் முகவுரையிற்கூறிய புகழ் இதற்கு முற்றும் உரித்தானதாகவே தோற்றுகின்றது. முதலில் மனத்தால் ஒன்றை விரும்பினோமானால் அவ்விருப்பமாத்திரத்திலே அதன் பயன் நம்மைவந்து பற்றுகின்றது என்று தர்மசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. மனத்தால் விரும்பிய பாவங்கட்கு எவ்வளவோ தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோலவே எதிர்மறை முகத்தால் மனத்தால் விரும்பிய நன்மைகட்கும் பயன் கூறப்பட்டிருக்கின்றது. இது பற்றியன்றோ பெரியாரும் "மற்றை, மாதரார் தம்மை என்றன் மனத்திலும் தீண்டேன்" என்றார். ஒருவன் மற்றவர்கட்கு நலம் செய்ய முடியாதாயினும், அவர்கட்கு நலம் செய்யவேண்டுமென்று விரும்பின மாத்திரத்திலேயே அவ்வறத்தின் பயனைப் பெறுவான் என்பது நூற்கொள்கையாகலின் "உன்னால் அறஞ்செய்ய இயலினும் இயலாவிடினும் நீ அறத்தைச்செய்ய விரும்புவாயாக" என்று குறிப்பிக்க **விரும்பு** எனக் கூறினார்.

இனி ஒருவன் அறம் செய்யுதற்கு மனத்தில் எப்பொழுதும் விருப்பங்கொண்டவனாகவேயிருந்தால் அவ்விருப்பமானது முற்றி அவன் செய்யும் காரியங்களையெல்லாம் நல்லனவாகத் திருத்துமன்றோ. அவன் ஏதோ ஒரு காரணத்தினால் ஒருவருக்குத் தீங்குவிளைக்கப் புகுங்காலும் அவனுடைய இயற்கையாகிய முன் நல்விருப்பத்தின் பயனே மேலிட்டு அச்செயலின் தீங்கை அழித்தாவது குறைத்தாவது விடுமென்பதிற்கு ஐயமில்லை. விருப்பம் இவ்விதத்திலும் பயன்படுதல் பற்றி **விரும்பு** என்று குறிப்பிட்டார்.

மேலும் அறஞ்செய்தலை ஒருகடமையாகவாவது, பிறர் புகழுக் கிச்சைவைத்தாவது, வசையை வெறுத்தாவது மற்று வேறெவ்வித சுயநன்மையை உத்தேசித்தாவது செய்தல் கூடாது. அவ்வறத்தின் பயன் கருதியே மிக விருப்பத்தோடு செய்யவேண்டுமென்பதும் குறிப்பிக்க **விரும்பு** என்றார்.

ஆகலின் நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற தருமத்தைச் செய்து கடவுள் அருளுக்குப் பாத்திரராக வாழ்வோமாக.

இதுவரையும் ஏதோ எனது புத்திக்கெட்டியவரையில் புலவர் பெருமாட்டியாகிய ஔவையாரின் அருமைத்திருவாக்கிய **அறஞ்செய விரும்பு** என்னும் வாக்கியத்தை யாவரும் கைக்கொண்டொழுகவேண்டும் என்பதைப்பற்றிச் சொல்லிவந்தேன். அதில் ஏதேனும் குற்றங் குறைகளிருப்பின் பெரியோர்கள் என் மீது கோபியாமல் இருப்பார்களாக, ஔவையார் அருளிச்செய்த அடுத்த வாக்கியம் **ஆறுவது சினம்** ஆகலின்.



**வி. மீனாக்ஷிசுந்தரம்.**

## சம்பீகமாலை

**அல்லது**

## இளையராஜாவின் தீர்மானம்.

**அங்கம் IV.**

எட்டாங் களம்.

**இடம் : மைவாரில் ஓர் அந்தப்புரத்து அறை.**

(புரோகிதனும், ராஜதேவனும் பிரவேசிக்கின்றார்கள்.)

**ராஜதேவன்.**—நீர் சொல்வதெல்லாம் உண்மை. புரோகிதரே! தகுந்த முகாந்திரமின்றி நான் என்ன செய்யக்கூடும். இராஜ்ஜியத்தில் பிரதான உத்தியோகங்களொவ்வொன்றிலும் ராணியின் பித்ருவர்க்க பந்துக்களும், மாத்ருவர்க்க பந்துக்களுமிருக்கின்றார்கள். தன் பிதாவினிடத்திலும் தமயனிடத்திலும் அதிக நம்பிக்கையிருப்பதும் சகஜம். ஆளுகை ரின்மலினிடத்திலிருக்கின்றமையால், அவர் தமக்கு நம்பிக்கையுள்ளவர்களை முக்கியமான ஸ்தானங்களில் வைத்திருக்கின்றார். அப்படி செய்திருத்தலினால் தேசத்துக்கு அபாயம் எப்படி நேரிடும்.?

**புரோகிதர்.**—மகாராஜா! உங்களுக்கு நம்பிக்கை பிறக்குமாறு சொல்ல என்னால் முடியவில்லை. மற்றவர்களிடத்தில் அவநம்பிக்கை உங்களுக்கு சீக்கிரம் உண்டாவதில்லை. ரின்மலினுடைய எண்ணம் நல்லதாக விருக்கும்பக்ஷத்தில் நாம் எதற்கும் பயப்படவேண்டுவதில்லை. அது தான் சற்றே—

**ராஜ.**—என்ன? அவர் சிங்காசனத்தின்மீது வீற்றிருந்ததை உத்தேசித்துச்சொல்லுகிறீரோ? அதினால் ஒருக்காலும் சிங்காதனத்தை அபகரிக்கும் எண்ணம் அவருக்குளதென்று கிரகிக்கலாகாது. நேற்று நெடுநேரம் அவர் என்னோடுபேசினார் ராஜ்ஜியகாரியங்களைச் சில சொன்னார். சோண்டாராஜன் பிறதேசம் போயினமைபற்றி வியசனப்பட்டார். அவருடைய நடத்தையில் சந்தேகக்குறிகள் ஒன்றையும் நான் காணவில்லை. மகாராணி என்றைக்கும்போலவே அவருடைய நற்குணம் விளங்கப்பேசினார்.

(மீரா பிரவேசிக்கிறாள்.)

தாய்! க்ஷேமமாயிருக்கின்றீராய்? உம்முடைய பிள்ளைகளாகிய நம் பிராதாக்கள் க்ஷேமமா?

**மீரா.**—எல்லோரும் க்ஷேமம் அப்பா. ஏன் அப்பா! நீ இத்தேசத்தையும் எங்களையும் மறந்துவிட்டாய்.

**ராஜதேவன்.**—மறக்கவில்லை அம்மணீ! ஏதேனும் விசேஷ முண்டா?

**மீரா.**—எல்லா விசேஷமும் புரோகிதர் சொல்லக்கேள். இப்புகழ்பெற்ற சூரியகுலத்தில் பிறந்து கடைசியில் நீங்களெல்லோரும் தேசத்தையிழந்து எங்கப் போகின்றீர்கள். அதுதான் விசேஷம் வேறென்ன!

**ராஜ.**—மீரா! புரோகிதரே! நீங்கள் என்னை யாது செய்யச் சொல்லுகின்றீர்கள்?

**மீரா.**—முன்னர் ரின்மலையும், அவருடைய பரிவாரத்தையும் தேசத்தைவிட்டு விலக்கிவிடு.

**ராஜ.**—அம்மா! தாய்! தகுந்த காரணமின்றி நான் அவரை ஊரைவிட்டுத் துறத்தலாமா. அவர் பலவிதமாய் நம் உறவைப்பெற்றிருக்கின்றார். ராணியின் தகப்பனார் கெட்டகாரியமொன்று செய்தாரென எனக்கு உண்மையான திருஷ்டாந்தம் கிடைக்கும்வரையிலும் நான் ஏதும் செய்யமாட்டேன். நான் செய்தாலும்-சோண்டாராஜன் என்னைப் பழிப்பான். உலகம் பழிக்கும். ஆபத்து வந்தகாலத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

**மீரா.**—ஆபத்து வந்தவிடத்து பிரயத்தனம் செய்வதோ ராஜபுத்திரனுக்கு அழகு? முன் யோசனை வேண்டாமா?

**ராஜ.**—வேண்டியதுதான். ஆயினும் தாய்! நீர் அதற்காக கவலைகொள்ளவேண்டாம். தகுந்தகாலத்தில் நான் ஏற்றதைச் செய்கின்றேன்.

**மீரா.**—(தனக்குள்ளே) நான் சொல்வதைக் கேட்கமாட்டான் இவன். வளர்த்தவளுடைய வாக்

கியத்தில் கௌரவம் உண்டாகாது. சாதுவை அனுப்புகின்றேன். (பிரகாசமாய்) ஆனால் உன்னிஷ்டமப்பா! போய்வருகிறேன்.

(போகிறான்.)

**புரோகிதர்.**—என்னவென்று நினைக்கின்றீர் மகாராஜா! இந்த தாயினுடைய புத்திகூர்மையை. மிகவும் அந்தரங்கமான விஷயங்களையும் வெகு சுலபமாய் அறிந்துவிடுகிறாள்.

**ராஜதேவன்.**—ஆம்! அது எனக்கும் தெரியும். ஸ்திரீகள் சூக்ஷ்மமாய் எக்காரியத்தையும் அறிந்துவிடுகிறார்கள் உண்மையே, அதற்குப் பின்னர் யுக்தியாய் நடத்தவேண்டிய காரியங்களைமாத்திரம் நடத்தமாட்டார்கள். மீரா அத்தன்மையுடையவள். அவள் சொல்லுமாறு நடந்தால் காரியம் பழுதாம்.

(ஙேண்டாவாக் ஓர் மூட்டையை எடுத்துக்கொண்டு பிரவேசிக்கிறான்: கடிதம் ஒன்றை ராஜதேவன்கையில் கொடுக்கிறான்.)

**ராஜதேவன்.**—(கடிதத்தை வாசித்துப்பார்த்து) சேவகா ரின்மல் மகாராஜா அனுப்பின உடையெங்கே?

**ஙேண்டாவாக்.**—(எடுத்துக்கொடுத்து) இதை தாங்கள் தரித்தபிறகு சரியாயிருக்கிறதா இல்லையாவென்று பார்த்துவந்து, ரின்மல் ராஜா தமக்குச் சொல்லவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார்.

**ராஜ.**—(ஆடையைப்பார்த்து) நிரம்ப நேர்த்தியாயிருக்கின்றது. நான் வெகு சந்தோஷமடைந்தேனென்று அவருக்குச்சொல் சேவகா. (புரோகிதரைநோக்கி) புரோகிதரே! மரியாதையாக நூதனவாடையை ஒருவரனுப்பினால் அதை உடனேதரிப்பது தானே ராஜபுத்திரனுடைய மரியாதை?

**புரோ.**—தடையின்றி. மகாராஜா!

**ராஜ.**—ஆனால் இப்போழ்தே தரிக்கின்றேன் (உடுத்திக்கொள்ளுகின்றான்.)

**புரோ.**—யார் இவ்வாசற்படியில் நோக்கினது?

**ராஜ.**—ஒருவேளை என்னைப்பார்ப்பதற்கு என்சேனாபதி வந்திருப்பார்.

**ஙேண்டாவாக்.**—இல்லை, திருடன்போல் தோன்றுகின்றது, எனக்கும் காணப்பட்டான், சுவாமி! நீங்கள் அவ்வாசற்படியில் பாருங்கள். நான் இவ்வாசற்படியிற் பார்க்கின்றேன்.

(புரோகிதரும், ஙேண்டாவாகும் போய்த்தேடுகிறார்கள். ஙேண்டாவாக் சென்றவாசற்படிமூலமாய் மெள்ள நுழைந்து கேசி ஒரே குத்தாய் ராஜதேவன் வயிற்றில்குத்தி ஈட்டியை விட்டு ஓடிப்போகிறான். ராஜதேவன் கூச்சலிட்டு ஈட்டியைப் பிடித்துக்கொண்டு கீழேவிழுந்துவிடுகிறான். புரோகிதர், ஙேண்டாவாக் முதலானோர் ஓடிவருகிறார்கள்.)

**புரோகிதர்.**—(தன் துடையின்மீது ராஜதேவனுடைய தலையைவைத்து காற்று வீசிக்கொண்டே) ஐயோ! ஐயோ! இது என்னவிபரீதம்! யார் செய்தகாரியம்! ஐயோ! ஒருவனுக்குக் கடுகளவு துன்பமேனும் செய்யா மன்னனாயிற்றே! எந்த சண்டாளன் செய்தான் இக்கொலையை?

**ஙேண்டியாவாக்.**—சுவாமீ! நாம் இங்கு அழுவதில் என்ன பிரயோஜனம் கிடைக்கும். ஈட்டி வயிற்றிலேயேயிருந்தால் ராஜா மிகவும் வருந்துவார். அதை யெடுத்துவிடுகிறேன் (ஈட்டியைப் பிடுங்கும்போது கையிற்கிடந்த மோதிரத்தையும் கழற்றிக்கொள்ளுகிறான்.) புரோகிதரே! நான் ஈட்டியைப் பிடுங்கிவிட்டேன். ராணி ராஜா முதலியவர்களுக்குச் சொல்லி உங்களுக்கு உதவி அனுப்புகின்றேன்.

(போகின்றான்.)

**சாது.**—(வேறுபுரமாய் நுழைந்து) என்ன ஆபத்து நேர்ந்தது புரோகிதரே ராஜனுக்கு?

**புரோ.**—எவனோ ஒரு சண்டாளன் ஈட்டியினால் குத்திவிட்டு ஓடிப்போய்விட்டான்.

**சாது.**—நான் அந்தப்புரத்துக்கு வெளியே குறிப்பாய் இருவர் சம்சயத்துக்கு ஏதுவான வார்த்தைகள் பேசிப்போகக் கண்டேன். அவர்கள்தான் இக்காரியத்தைச் செய்தனர்களோ?

**புரோ.**—ஓ! தெய்வமே! குத்தினவன் ரின்மலினிடமிருந்து உடைகொண்டுவந்தனது உடந்தையோ?

**சாது.**—ரின்மலா! உடையை அனுப்பினான்? தடையின்றி அவனனுப்பின கொலையாளிகளே இவர்கள். ஐயோ! சம்சயம் தோன்றினபோதே பிடித்துக்கொள்ளாமல் விட்டேனே?

**புரோ.**—(ராஜதேவன் முகத்தைப்பார்த்து) காரியம் கெட்டுப்போய்விட்டது. ராஜனுக்கு இன்னும்



குற்றுயிர் இருக்கிறாப்போல காண்கின்றது. வைத்தியனிடத்திற்குக் கொண்டுபோவோம்.

(தூக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள்.)

---

## அங்கம் IV.

### ஒன்பதாம் களம்.

---

இடம்:—ஓர் அறை.

(சம்பகமாலை, முகுல் பிரவேசிக்கிறார்கள்.)

**சம்பகமாலை.**—(தனக்குள்ளே) ஆ! என்ன கெதி வந்துவிட்டது? எம்மாதிரியாய் என் தகப்பனுக்கு நேரிட்டிருக்கும் பழிப்பை ஒழிக்கப் போகின்றேன். ராஜதேவன் அஜாதசத்ரு. அவனுக்கு எவர்கள் தீங்குசெய்வார்கள்? என் தகப்பன் அவனைக்கொல்ல யாதுகாரணமிருக்கின்றது? நான் ஒருக்காலும் அதை நம்பமாட்டேன். உடையைக்கொண்டுவந்து கொடுத்தவன் கொல்லவில்லையாம், எவ்வாறு என் தகப்பனுக்கு பழிப்புவராமல் காத்துக்கொள்வேன். இவ்வரண்மனையி லுள்ளோரெல்லாம் என் தகப்பனே கொலைசெய்தான் என்கிறார்கள். இத்தேசத்திலுள்ளோர் பெரும்பாலார் அவ்வாறு நினைத்தால் என் தேசத்துக்கு அபாயம். என் தகப்பனை இங்குவைத்திருக்கலாகாது. உண்மையாய் அவனே கொன்றிருந்தாலோ, தகப்பனாயினும், தமையனாயினும் அச்சண்டாளனை ஒழிக்கவேண்டியதே. யார் எனக்கு உண்மையைச் சொல்லப்போகின்றார்கள். எவ்வழிசெல்லுவேன்? மீரா சொல்வதையும், புரோகிதர் சொல்வதையும் எப்படி நம்புவேன். அவர்களிருவரும் எப்போதும் என் பந்துக்களிடத்தில் சம்சயமே வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். சாதுவையும் லால்பாயையும் நான் இதுகாறும் பார்க்கவில்லை. ஏது செய்கிறார்கள், எங்கேபோனார்கள். யார் யார் கொலையாளிகள். எவர்களைக் கொல்ல எதிர்பார்க்கிறார்கள். என் கெதியும் என் குழந்தை கெதியும் அவ்வாறேயாகுமோ? கொலையாளிகள் மறைந்திருக்கின்றார்களோ. குழந்தாய் முகுல்! நெருங்கிவா. (நாற்புறமும் பார்க்கிறாள்) என்பயம் எப்போது நீங்கும், யார் எனக்குபந்து? தகப்பனுடன் பேசவும், தமையனுடன் பேசவும் பயமாயிருக்கின்றது. சந்தனராஜன் ஒருவனே இச்சமயத்தில் உற்றதுணையாயிருந்து உதவிசெய்யத்தகுந்தவர். அவருக்கு 'ராக்கி' (காப்பு) அனுப்பியும் இன்னும் வரவில்லையே. அலக்ஷியமாயிருக்கின்றனரோ. ராக்கியைப்பெற்று ராஜபுத்திரவீரர்கள் அவ்வாறிருக்கமாட்டார்களே. என் துரதிருஷ்டம் இவ்வாறிருக்கின்றது. ஒரு க்ஷணம் ஒருயுகமாயிருக்கின்றது. என்ன செய்வேன். ஏகலிங்கா!

(ஒரு சேவகன் நுழைந்து புறவாசிகள் வந்திருக்கிறார்களென.)

**சம்பகமாலை.**—(தனக்குள்ளே) என்னத்திற்காக? என் குழந்தையின் ராஜ்ஜியம் முடிவுபெற்றதோ? (முக்காடிட்டுக்கொண்டு) சேவகா புறவாசிகளைவரச்சொல்.

(புறவாசிகள் வருகிறார்கள்.)

**புறவாசிகள்.**—சித்ஸ்ரீ மகாராஜாதிராஜ மகாராணா முகுலராணா அவர்களுக்கும், மகாராணி அவர்களுக்கும் வந்தனம்செய்து சொல்லிக்கொள்ளும் விண்ணப்பம். ராஜபுத்திர ராஜ்ஜியங்களுக்குத்திலகமாய் விளங்கும் இம்மைவாரில் பட்டப்பகலில் கொலை இதுவரையில் நடந்ததில்லை. சாமந்தராஜாக்களுக்குக் கிரீடம்போல் விளங்கி, அழகிலும், ஒழுக்கத்திலும், குணத்திலும் மேன்மைபெற்று, மகாவீரனென்று மதிக்கப்பட்டு எங்களால் தெய்வமென்று பூஜிக்கப்பட்ட ராஜதேவமகாராஜன் மகாராணாவின் தரிசனார்த்தமாய் ராஜதானிக்கு வந்திருக்கையில், இரக்கமின்றி மோசமான மரியாதை செய்து கொலைசெய்தது மானக்கேடானது.

**சம்.**—புறவாசிகாள்! இவ்விஷயத்தில் நான் மெத்த வியசனப்படுகிறேன். ராஜதேவனுடையகுணம் நான் அறியேனோ. எந்தபாபி செய்தனனோ அறியேன். உங்களுக்குத்தெரியுமா?

**புற.**—மகாராணி அவர்களுக்கு மனவருத்தமுண்டாகுமோவென்று பயப்படுகிறோம்.

**சம்.**—சொல்லுங்கள். வருத்தம் உண்டாகாது.

**புற.**—உமது பிதா ரின்மல்ராஜனே அக்காரியத்தை செய்திருக்கவேண்டுமென்பதற்கு எங்களுக்குப் போதுமான ஆதாரமிருக்கின்றன.

**சம்.**—கிருஷ்ண! கிருஷ்ண! ஏகலிங்கா! இதுவும் என் விதியா? புறவாசிகளே! உங்களுக்கு என்ன ஆதாரமிருக்கின்றதோ நானறியேன். நான் யோசித்தவளவில் என் தகப்பனார் அக்காரியத்தைசெய்தாரென்று நினைக்க யாதொரு

அத்தாட்சியும் தோன்றவில்லை. ராஜதேவன் மீது அவருக்கென்ன விரோதமா? அவர் ஏன் அக்காரியத்தைச்செய்வார்? புறவாசிகள்! என் தகப்பனார் அன்னியகுல க்ஷத்திரியரென்று நினைத்து அவர்மீது இக்குற்றத்தை சுமத்தப் போகிறீர்கள்?

**புற.**—மகாராணியவர்களே! நீங்களிவ்வாறு எங்களுடைய எண்ணத்தையறியாது பேசுவதைப்பற்றி சிந்திக்கின்றோம். பலபேச்சு என்னத்திற்கு? ரின்மல்ராஜன் ராஜதேவனைக்கொன்றதுமன்றி, மகாராணாவையும்கொன்று இச்சிங்காதனமேற முயற்சிசெய்கிறான். உம்முடைய புத்திரனின் க்ஷேமத்தை உத்தேசித்து தெளிவாய் உங்களுக்குச்சொன்னோமன்றி வேறல்ல. நாங்கள் யோசிப்பதெல்லாம் ராஜ்ஜியம் சிசோதய க்ஷத்திரியர்கையிலிருக்கவேண்டுமென்பது. அதற்குக் குறைநேரிடாமல் நாங்கள் பார்த்துக்கொள்வோம். உங்களுடைய புத்திரனின் க்ஷேமத்தை நீங்களே தேடவேண்டும்.

**சம்.**—ஆ! என்ன ஆச்சரியம்! புறவாசிகாள் நீங்கள் நிச்சயத்தைச்சொல்லுகிறீர்களா? என் தகப்பன் ராஜதேவனைக்கொன்றானா. என் புத்திரன் உயிரையும் எடுக்க முயல்கின்றானா? இஃது உண்மையா? எனக்கு உண்மை இன்னதென்றும், பொய் இன்னதென்றும் தெரியவில்லை. நீங்களெல்லோரும் பேசிக்கொண்டு என்னை மயக்கவந்தீர்களா? காப்பாற்றவந்தீர்களா? புறவாசிகாள்! (முகுலை எடுத்து ஒருவனுடைய கையில்கொடுத்து) இவன் உங்களுடைய மகாராணா. நீங்கள் பூஜித்து என்னுடைய பர்த்தாவின் கையினால் முடிசூட்டப்பட்டவன். இவனைக் கைவிடுவதில்லையென்று அன்றைக்கு உறுதிமொழி பகர்ந்தீர்கள். அது இன்றைக்கும் உறுதிமொழியே. மறக்கவேண்டாம். நான் தப்புசெய்தாலும், என் உறவினர் தப்புசெய்தாலும் உங்களால் அவன் விடப்படத்தக்கவனன்று. அவனைமாத்திரம் கைவிடாதீர்கள். உங்களுடைய க்ஷேமமே மகாராணாவினுடைய க்ஷேமம்; உங்களுடைய விசுவாசமே அவனுக்குச் சைந்நியம், கோட்டை, சிங்காஸனம் ஆகிய யாவும்; நீங்கள் பட்டணத்திலும் தேசத்திலும் உங்களுடைய சம்சயங்களை வெளிப்படுத்தி அமளி உண்டாக்காதீர்கள். இன்னும் நான்கு தினங்களில் உண்மையைக்கண்டுபிடித்து, பிதாவாயினும் பிராதாவாயினும் குற்றமுள்ளவனை தண்டித்து உங்களுடைய ராஜ்ஜியத்துக்கு அபாயம்நேரிடாமல் பார்க்கின்றேன். இது ஸ்ரீமத் ஏகலிங்கருடைய சாக்ஷியாய் சத்தியம். உங்கள் மகாராணாவைக் கைவிடுவதில்லையென்று மகாராணாவுக்கு எதிரேசொல்லுங்கள்.

**புற.**—(எல்லோரும்) சத்தியமாய்க் காப்பாற்றுகிறோம். மகாராணாவுக்குத் துரோகம்செய்வதில்லை. நாங்கள் போக விடையா?

**சம்.**—விடைதான், போங்கள்.

(போகிறார்கள்.)

**சம்.**—ஐயோ! சங்கரா! ஏகலிங்கா! என்னகஷ்டத்தை எனக்குத்தந்தாய், நான் என்னசெய்வேன்? உண்மையை எவ்வாறு கண்டுபிடிப்பேன்? எவ்வாறு தேசத்தைப்பாதுகாப்பேன்: எவ்வாறு என் குழந்தையைக்காப்பாற்றுவேன்: எவ்வாறு புறவாசிகளுக்கு நான் சொன்ன உறுதிமொழியை நிறைவேற்றுவேன்? சங்கரா! (கண்ணைமூடி) கிருபை கூராயோ.

(சாதுவும் லால்பாயும் பிரவேசிக்கிறார்கள்.)

**சாது.**—ஏனம்மாவிசேஷ சிந்தைபட்டுக்கொண்டிருக்கின்றீர்கள்?

**சம்.**—சாது! உம்மைத்தான் நம்பியிருக்கிறேன் நான். என்னை எப்படி நீர் காப்பாற்றப்போகிறீர்? ராஜதேவனைக்கொலைசெய்தவனைக் கண்டுபிடித்து சிக்ஷிக்காவிட்டால் என் தேசம் என்கைவிட்டு நழுவிவிடும் என்று புறவாசிகள் சொல்லுகிறார்கள். ராஜதேவனைக்கொன்றவன் என் பிள்ளையையும் கொன்றுவிடுவானென்கிறார்கள். இதற்கு என்ன ஆதாரம்? நீர் நம்புகிறீரா?

**சாது.**—புறவாசிகள் சொல்வதெல்லாம் உண்மை அம்மணீ! அதற்கு வேண்டிய ஆதாரம் என்னிடத்திலேயே உளது. அதை இதுகாறும் தேடிக் கண்டுபிடித்தேன்.

**சம்.**—அது என்னசொல்லும் சாது!

**சாது.**—(தம் போர்வையினின்று) ஒரு ஈட்டியையெடுத்து இதினாலேதான் ராஜதேவன் குத்தப்பட்டது.

**சம்.**—அப்புறம்?

**சாது.**—இதோ ராஜதேவனுடைய மோதிரம் கொன்றதற்கு அத்தாட்சியாக கொலையாளியால் அனுப்பப்பட்டது.



**சம்.**—யாருக்கு?

(நடுங்குகிறாள்.)

**சாது.**—(கடிதமொன்றையெடுத்து) இதோ பாருங்கள்.

**சம்.**—(நடுநடுங்கி) என்னால் கடிதமேனும் எடுக்கமுடியவில்லை. சற்றே வாசியும் சாது!

**சாது.**—(வாசிக்கிறான்.)

"இந்த கடிதம் கொண்டுவரும் ஸ்திரீ ஒரு உடைமூட்டையைக் கொடுப்பாள். அதை வாங்கிக்கொண்டு நான் சொன்னவாறு காரியத்தை முடித்துவிடு. முதலில் இராஜதேவனுடைய காரியம் முடிந்துபோகட்டும். பிற்பாடு மற்றவனுடைய சங்கதியைப்பற்றிப் பேசுகின்றேன். காரியம் முடித்ததற்கு அத்தாட்சிவேண்டும்."

**சம்.**—(கைப்பிசைந்துகொண்டு) யார் எழுதினது! கையெழுத்து?

**சாது.**—என்னமாய்ச் சொல்லுவேனம்மா! உமது தகப்பன்.

**சம்.**—ஆ! ஆ! என்னசொல்கின்றீர் சாது! கெட்டேன் கெட்டேன் (மூர்ச்சிக்கிறாள், லால்பாய் மூர்ச்சை தேற்றுகிறாள்.)

**லால்பாய்.**—அம்மா! எழுந்திருங்கள் கண்ணைத்திறவுங்கள்! (சற்றுபொறுத்து கண்ணைத்திறந்து) எங்கிருக்கிறேன் நான்?

**சாது.**—அம்மா! பயப்படவேண்டாம்.

**சம்.**—கையெழுத்தைக்காட்டும் சாது!

(காண்பிக்கப்பார்த்து.)

சண்டாளா! துரோகி! அறியாமல் தகப்பனாயிற்றேயென்று நம்பி மோசம்போனேனடா! பாபி! உன்னை நம்பியல்லவா உத்தமனாகிய சோண்டாவைத் துறந்தேன், (துக்கத்துடன்) புத்திமானான ராஜதேவனை இழந்தேன். ஐயோ! என் குழந்தையின் கெதியென்ன? நான் எப்படி என் குழந்தையை அவன் கண்ணில் காட்டாமற் காப்பாற்றுவேன் சாது. தப்பிப்பிழைக்க வழி யாது? எல்லா அதிகாரமும் அந்த சண்டாளன் கையிலிருக்கின்றது, நான் என்னசெய்வேன். எப்படி என் குழந்தையைக்காப்பாற்றுவேன். சாது! நீர்தான் தகப்பன் என் தகப்பன் துரோகியாய்விட்டான். என்ன செய்யலாம் சொல்லும், யார் சகாயம் செய்வார்கள்?

**சாது.**—சகாயம் செய்யத்தகுந்த மகான் குணசாலி ஒருவனே யுண்டு. அவன் சோண்டாராஜனே.

**சம்.**—நான் மகாபாபி, செய்நன்றி மறந்தவள், என் தகப்பனை அந்தப்புறத்தில் சேர்த்து அவன் தம்பியைக் கொல்லவைத்தேன், என்னைக்கண்டால் சோண்டா வெறுப்புறமாட்டானா? அவனைப்பார்க்க எனக்கு முகமுண்டோ சொல்லும்.

**சாது.**—அதற்காக நீர் பயப்படவேண்டாம். நானும் புரோகிதரும் செய்து முடிக்கின்றோம்.

**சம்.**—சாது! நீங்கள் செய்யும் இந்த உபகாரத்தை என்றென்றைக்கும் மறக்கமாட்டேன். அது இருக்கட்டும் சாது! உங்களுக்கு ஈட்டியும், கடிதமும் மோதிரமும் எப்படி கிடைத்தது?

**சாது.**—(லால்பாயைக்காட்டி) இவளால் கிடைத்தது. இவள்தான் உம்பிள்ளைக்கு பிராணனைத் தந்தவளென்று எண்ணிக்கொள்ளும். இவளுக்கல்லவோ உமது பிதா மகாபராதம் செய்தான்.

**சம்.**—கிருஷ்ண! கிருஷ்ண! சொல்லவேண்டாம் அதை.

**சாது.**—அவனுடைய சூதைக் கண்டுபிடிக்கவே லால்பாய் ரின்மலுடன் சிநேகம் பாராட்டிவருகிறாள்.

**சம்.**—நான் பல சற்குணமுள்ள என் அந்தப்புறவாசிகளை அலக்ஷியம்செய்தேன். அதினுடைய பலன் கிடைத்துவிட்டது. அவர்களுடைய மன்னிப்புப்பெறக் காலம் முன்னிருக்கின்றது. சாது! சாவகாசமில்லை. சீக்கிரத்தில் சோண்டாவினிடத்திற்குப் போம்.

(எல்லோரும் போகிறார்கள்.)

**எச். வெங்கோபராவ்**

SELECTION.

## உலகத்தில் ஜீவஜெந்துக்கள் பரவியிருக்கும் வகை. *

டாக்டர் ஜெ. ஆர். ஹெண்டர்ஸன் மேற்குறித்த விஷயமாய்ச் செய்த பிரசங்கத்தைச் சுருக்கி ம-ா-ா-ஸ்ரீ, கே. ஜி. வெங்கடசுப்பய்யர் அவர்கள் "மாதர்மனோரஞ்சினி" யென்னும் பத்திரிகையில் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

* Dr. J. R. Henderson on the Geographical distribution of animals.

"உலகத்தில் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு விதமான ஜெந்துக்கள் பரவியிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உதாரணமாக இந்துதேசத்தில் புலி, யானை முதலிய மிருகங்கள் இருக்கின்றன. இங்கிலாந்துசீமையில் அவைகள் இல்லவேயில்லை. ஆப்பிரிக்காகண்டத்தில், தீக்குருவியும், நீர்க்குதிரையும் இருக்கின்றன. அவை நமதுதேசத்திலில்லை. இதற்கு எதாவது காரணமுண்டா என்பதையும் உலகத்தினது கண்டங்களுள் எவ்விதமாய் ஜெந்துக்கள் பரவியிருக்கின்றன என்பதையும் சற்று யோசித்துப்பார்ப்போம்.

எல்லாதேசங்களிலும் எதாவது சில விதமான ஜெந்துக்கள் இருக்கின்றன. வருஷத்தில் ஒன்பது மாதம் பனிக்கட்டிகளால் மூடப்பட்ட குளிர்ந்த தேசங்களாகிய துருவத்திற்கடுத்த சீமைகளிற்கூட உயிருள்ள ஜெந்துக்கள் உண்டு. உயிர் வாழும் ஜெந்துக்களில் முக்கியமான சிலவற்றைப் பார்த்தால், அவைகளிற் சில உலகத்தில் பற்பல இடங்களில் பரவியிருக்கின்றன. மற்றுஞ் சிலவோ சிலவிடங்களில்தான் பரவியிருக்கின்றன. உதாரணமாக, மனிதன் சற்றேறக்குறைய உலகமுழுமையும் பரவியிருக்கிறான். எலியும் அப்படிதான். புலி இவ்விரண்டு ஜெந்துக்களைப்போலவ்வளவு அதிகமாயில்லாவிடினும், இந்தியா, பர்மா, மலேயா, சீனா முதலிய தேசங்களிலிருக்கிறது. சில மீன்கள் ஒரே ஒரு நதி அல்லது எரியில்தானிருக்கின்றன.

பெரும்பாலும், ஒரே ஜாதி ஜெந்து தொடர்ச்சியா யிருக்கும் தேசங்களில்தான் பரவியிருக்குமேயல்லாது, வெவ்வேறு மூலைகளிலிருக்காது. ஆனால் இந்த விதிக்கு விலக்கான மிருகங்கள் சில உண்டு. இவைகளுள் முக்கியமானது 'டேபிர்' (Tapir) என்றது. இது யானையைப்போன்ற ஓர் மிருகம். இது மலேயாவிலும் தென் அமெரிக்காவில் சில பாகங்களிலும் இருக்கின்றது. இடையே எங்கேயுமில்லாமல் இவ்வளவு தூரதேசங்களில் இது இருப்பதற்கு என்ன காரணம்?

அங்கங்கே இந்த மிருகங்கள் கடவுளால் முதலில் சிருஷ்டிக்கப்பட்டனவென்றும், இவைகளுக்கு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை யென்றும், சிலர் சொல்வார்கள். ஆனால் அது தப்பு. இவ்வுலகம்; மனிதன் முதலில் உண்டானதற்கு வெகு காலத்துக்கு முன்னாலேயே இருந்துகொண்டிருக்கிறது. மற்ற ஜெந்துக்களைக்குறித்து யோசிக்குங்கால் மனிதன் நேற்று வந்தவன் இந்த 'டேபிர்' என்னும் மிருகம் உலக முழுதும் வெகுகாலத்துக்கு முன் பரவியிருந்தது என்பதற்குவேண்டிய சாக்ஷிய மிருக்கிறது. தராசத்துக்களை வெட்டியெடுத்தால் அவைகளுக்குள் இதனுடைய எலும்புகள் அகப்படுகின்றன.

மிருகங்களும் ஜெந்துக்களும் அவையவைகள் தங்கள் வாசஸ்தலமாகிய குறிப்பிட்ட சில தேசங்களில்மாத்திரம் இருப்பானேன்? உதாரணமாய் புலி இங்கிலாந்து சீமையில் ஏன் இருக்கக்கூடாது? இதற்கு பொதுவாய் காரணம், எந்த தேசத்து சீதோஷ்ணஸ்திதி எந்த ஜெந்துவுக்கு பிடித்திருக்கிறதோ அந்த தேசத்தில்தான் அது வளரும் என்று சொல்வார்கள். இது அநேகமாய் சரிதான். ஆனால் புலி சீனதேசத்தில் ஏராளமாய் இருப்பானேன். ஏறக்குறைய அதே (latitude) ரேகையிலிருக்கும் இங்கிலாந்திலில்லாதிருப்பானேன். அதற்கு மற்றொரு காரணமுமுண்டு. மிருகங்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கு பரவாமலிருப்பதற்கு மலை, பாலைவனம், கடல் முதலிய தடைகளுண்டு. இக்காரணத்தால்தான் இந்தியாவில் புலி இருக்க, அருகாமையிலிருக்கும் இலங்கைத்தீவில் அது சுத்தமாயில்லை. இதே காரணத்தால்தான் ஆபிரிக்காவில் ஸஹாரா பாலைவனத்துக்கு தெற்கேயிருக்கும் மிருகஜாதிகளுக்கும், வடக்கேயிருப்பவைகளுக்கும் அதிகவித்தியாசமிருக்கிறது. சில ஜெந்துக்கள் எப்பேர்க்கொத்த தடைகளையும் தாண்டி பரவும் சக்தியுள்ளவைகளாயிருக்கின்றன. உதாரணமாய் மனிதன்மலை கடல் முதலியவைகளையெல்லாம் தாண்டும் சக்தியுடையவன். பறவைகளுமப்படியே. அநேக மிருகங்களுக்கு சமுத்திரத்தைக்கடக்க சக்தியில்லை. தவளைக்கு கடல்நீர் பொறுக்காது. ஆதலால்தான் அநேகம் தீபாந்தரங்களில் தவளையேயில்லை. தவிர மனிதனைப்போல மிருகங்கள் முதலான இதர ஜெந்துக்களுக்கு அந்தந்த தேசத்து சீதோஷ்ணஸ்திதிக்குத் தகுந்தபடி உடைகளைத் தரித்துக்கொள்ளவும் அதிக உஷ்ணத்தையும் அதிக சீதத்தையும் தாங்கவும் திறமையில்லை.

தீவுகளைக்குறித்துப் பேசுங்கால், அவைகளைக் குறித்து சில சமாசாரம் இங்கே சொல்வோம். உலகத்திலுள்ள தீவுகளையெல்லாம் பொதுவாய் இரண்டு பெரிய பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். அவையாவன, இயற்கையாயுண்டான தீபாந்தரங்களும் பூகம்பம் முதலிய காரணங்களால் மற்ற பூமியிலிருந்து பிரிக்கப்பட்டு தீவானவைகளுமாம். இவைகளைக் கடற்றீவுகள் (Oceanic islands) என்று சொல்லலாம். முதல்வகுப்புக்கு உதாரணமாய், லக்ஷத்தீவுகள், அந்தமான், நிகோபார் தீவுகளை யெடுத்துக் கொள்ளலாம். இவைகள் எண்ணிறந்த சிறு பூச்சிகளாகிய பவழப் பூச்சிகளால் அநேககோடி வருஷங்களாய் உண்டாக்கப்பட்டன. இன்னும் பவழப் பூச்சிகள் திடல்களுண்டாக்கிக்கொண்டிருக்கின்றன. இரண்டாவது வகுப்புக்கு உதாரணமாய் லங்கைத் தீவு, பிரித்தானியாதீவு முதலியவைகளை எடுத்துக் கொள்ளலாம். இவை ஒரு காலத்தில் மற்ற பூமியோடு சேர்ந்திருந்தவை. பூகம்பம் முதலிய காரணங்களால் அதினின்றும் பிரிக்கப்பட்டிருக்கவேண்டும். இதனால்தான் இந்த இரண்டாவது வகுப்புத் தீவுகளில் பெரிய மிருகங்கள் இருக்கின்றன. முதல் வகுப்புத் தீவுகளில் அவை யில்லை. மேற்சொன்னவைகளில் சிங்கம், புலி, கரடி முதலிய பெரிய மிருகங்களில்லவேயில்லை. தவளையுமில்லை. அது ஏனெனில் அவை மற்ற பூமிக்கு வெகு காலத்துக்குப்பின் உண்டானவை. ஆகையால் பெரிய மிருகங்கள் தாமாய் அவ்விடங்களிலுண்டாவதற்கு வேண்டிய காலமின்னு மாகவில்லை. அம்மிருகங்கள் மற்ற இடங்களிலிருந்து வருவதற்கு நடுவே சமுத்திர மிருக்கிறது.

இன்னும் பொதுவாய் ஒன்றிரண்டு விஷயத்தைக் குறித்து இங்கு சொல்லலாம். எலிகளில் இரண்டு விதமுண்டு: கறுப்பு எலி, வெள்ளை எலி. கறுப்பு எலியானது முதல் முதல் இந்தியாவிலிருந்துதான் மற்ற இடங்களுக்கு போயிற்று. ஐரோப்பா முதலான இடங்களில் அதிகமாய்ப்பரவியிருந்தது. வெள்ளை எலியோ சீனதேசத்தில் உண்டாய் மற்ற தேசங்களிற்குப் பரவியது. இப்போது சென்னை நகரத்தில் பார்த்தால் முக்கியமாய் வெள்ளை எலிதானிருக்கிறது. கறுப்பு எலியை வெள்ளையெலி துரத்திவிட்டது. கரப்பாம்பூச்சியிலும் இரண்டு வகை யுண்டு. கீழ்தேசத்துப் பூச்சி யொன்று, அமெரிக்கா தேசத்துப் பூச்சியொன்று. இப்போது சென்னையிலிருக்கும் பூச்சிகளெல்லாம் அமெரிக்கா தேசத்துப் பூச்சிகள்தானேயொழிய கிழக்கு சீமைப் பூச்சிகள் இல்லவேயில்லை. இது மிகவும் வியக்கத்தக்கது."



# சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது; பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாகவிருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

## காஞ்சீபுரம் ஜலாதாரம்.

### தண்ணீர்க்குழாய் தலைப்புவேலை.

காஞ்சீபுரத்தில் இப்பொழுது ஜலாதாரத்தின் பொருட்டு ஏற்படுத்தியிருக்குழ் தண்ணீர்க்குழாய் வேலையை உள்மர்மம் விளங்க இச்சஞ்சிகையில் எடுத்துரைக்க யத்தனிப்பேநம். குழாய்த்தண்ணீர் 'ஆசாரக்குறைவு' என்றும் 'அசுத்தம்' என்றும் சிலர் அதன் மர்மம் தெரியாது உரைக்கிறார்கள். மௌட்டியத்தால் மற்ற ஜனங்களும் அதை நம்புகிறார்கள். இதனால் விளையும் கெடுதி மிகுதியாதலால் அதை நீக்க வேண்டி தண்ணீர்குழாய் ஏற்பாட்டில், ஜலம் தீட்டுப்படாமலும் அழுக்குப்படாமலும் வரும்படியாக எவ்வளவு சாமர்த்தியமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை கூடுமானவரையில் விளக்கிக்காட்ட விரும்புகிறோம். காஞ்சீபுரத்தில் தண்ணீர்க்குழாய் முகப்பில் வேகவதியாற்றின் ஹிருதயகமலத்தினின்றும் சுரக்கும் தெள்ளமுதுபோலும் சுத்தஜலத்தை மனுஷன் கைபடாமலும், தீட்டு அசுத்தத்துக்கு இடமின்றியும் எப்படி குழாயில்பாயும்படி செய்திருக்கிறார்களென்பதை முதலில் இங்கு விளக்கிக்காட்டுவோம். வேகவதியாற்றின் கரையில் இந்த முகப்புவேலை ஏற்பட்டிருக்கிறது. ஆற்றங்கரையிலிருந்து 550-அடி தூரம் ஆற்றின் மையம்வரையில் 8-அடி அகலத்துக்கு ஆழமான வாய்க்காலொன்று வெட்டி அதன் அடியில் அரையடி உயரத்துக்கு 'கான்க்ரீட்' என்று சொல்லும் சுண்ணாம்பும் கல்லும் கட்டியாகும்படி கலந்த சாமான்கொட்டி கெட்டிசெய்து தளவரிசை போட்டு, அதன்மேல் 9-அங்குலம் குறுக்களவுள்ள கட்டியான கல்குழாய்கள் நாலுபத்தியாக 550-அடி நீளத்துக்கும் வைத்திருக்கிறார்கள். இந்தக்குழாய்கள் ஒன்றோடொன்று சேரும் சந்து கொஞ்சம் இடைவெளியுள்ளதாகவே யிருப்பதால், இந்த சந்துகள் வழியாகப் பக்கத்தில் ஊறும் ஊற்றுநீர் தாராளமாக குழாய்களுக்குள் சென்று அவைகளை நிறப்பும்படியாகவிருக்கிறது. இந்தக் குழாய்களைச் சுற்றியும் இவற்

றிற்குமேலே 6½-அடி உயரம் வரையிலும் கூழாங்கற்கள் கொட்டியிருக்கின்றன. இது குழாய்களில் மணல்புகுந்து அவைகளை அடைத்துக்கொள்ளாமலிருக்கும்படி செய்த உபாயம். இந்த 6½-அடிக்குமேல் ஆற்றின் மேல்மட்டம்வரையில் 11-அடி உயரத்துக்கு மணல்கொட்டி மூடி சமன் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே ஆற்றுமத்தியில் போய்ப்பார்த்தால் வெளிக்கு ஒன்றும் தோற்றாமல் எல்லாம் ஓரே மணற்காடாகவிருக்கிறது. (இதுவரையில் சொல்லிவந்த விவரங்களெல்லாம் 'Ground plan' என்று குறிப்பிட்டிருக்கும் படத்தைப்பார்க்க விளங்கும்.)

# CONJEEVERAM WATER SUPPLY SCHEME.

## PLAN OF INFILTRATION GALLERY.

## GROUND PLAN.




BED OF VAGAVATHI RIVER.

மேலே சொல்லியபடி ஆற்றுமத்தியில் கிழே நாலுபத்தியாக வைக்கப்பட்டிருக்கும் குழாய்களைச் சுற்றி ஊறும் ஊற்றுநீர் அக்குழாய்களின் வழியாக ஓடி கரையில் ஒரு மனிதன் இறங்கத்தக்கதாக 8-அடி நீளம் 3-அடி அகலமுள்ள பெருந்தொட்டி போன்ற கல்கட்டடமொன்றில் விழுகிறது. இதற்குப்பேர் இங்கிலீஷில் 'Manhole' என்று சொல்லுகிறார்கள். அதாவது மனிதனிறங்குவதற்கான துவாரம் என்பது அதற்கு அருத்தம். இந்த துவாரம் மனிதனிறங்கி அடியிலுள்ள மணல் முதலானவற்றை வாரியெடுப்பதற்காகவென்று ஏற்பட்டதால் இதற்கு அந்தப்பெயர் கிடைத்தது. குழாய்களின் வழியாக இதில் வந்துவிழும் தண்ணீர் இதில் தங்கி மண், மணல் ஏதாவதிருந்தால் அடியில் படிந்துபோகவிட்டு, இதற்கு 8-அடி தூரத்துக்கப்பால் கட்டியுள்ள ஒரு கிணற்றில் இரண்டையும் ஒன்றாக இணைக்கும் குழாய்வழியாகப் போய்விழுகிறது. இந்தக் கிணற்றுக்குமேல் கூரைகட்டி அதிலுள்ள ஜலத்தில் வெளியிலிருந்து சிறிதும் மஷ்டு சேராதபடி சுற்றி சுவரெடுத்து கதவுபோட்டு பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கிணற்றிலிருக்கும் ஜலம்தான் யந்திரங்கள் மூலமாகக் குழாயில் ஏற்றப்பட்டு பட்டணத்து வீதியிலுள்ள குழாய்களுக்குப் பாய்கின்றது.

(இன்னும் வரும்.)

C. V. S.

---

### நமது வீடுகளில் சுகாதாரவிதிப்படி கட்டப்படவேண்டிய கக்கூசின் மாதிரி.

---

(பேலம் முனிசிபாலிடி 'சிப் ஸானிடெரி இன்ஸ்பெக்டர்' ம-ள-ள-ஸ்ரீ இராமச்சந்திர ஐயர், சென்னை ஸானிடெரி கமிஷனர் மூலமாக அனுப்பியது.)

ஒவ்வொரு வீட்டிலும் அதில் வாசஞ்செய்யும் ஜனங்களிட உபயோகத்திற்காக ஒரு கக்கூஸ் ஏற்படுத்தவேண்டியது அத்தியாவசியகமானது. முக்கியமாய் வியாதிஸ்தர்கள், சிறுவர்கள், கோஷாபெண்டுகள் இவர்கள் மலபாதைக்கு ஒதுங்குவதற்கு ஒரு இடம் இருந்தே தீரவேண்டியது. இராத்திரிகாலங்களிலும் மழைக்காலங்களிலும் வீட்டிலுள்ளவர்கள் ஒதுங்குவதற்கு அதில் ஒரு கக்கூஸ் இல்லாவிட்டால் அது பெருத்த சவுக்கியக் குறைவாக நேரிடும். இப்போது நம்மவர்களிட வீடுகளில் எப்பேர்ப்பட்ட



கக்கூஸ்கள் இருந்துவருகிறதென்று யோசித்துப் பார்ப்போம். பெரும்பான்மை வீடுகளில் கொஞ்சம் காலிநிலத்தைச் சுற்றிலும் சுவர்போட்டு மறைவு செய்துகொண்டு அதைக்கக்கூசாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். இது பார்வைக்கு அசங்கியமாயிருப்பதுவுமல்லாமல் சௌக்கியக் குறைவானதாயுமிருக்கிறது. இதில் மலம் சரியாய் அப்புறப்படுத்தப்படுகிறதில்லை. தவிர மூத்திரமும் எப்போதும் பூமியிலேயே ஊறுகிறது. ஆகையால் சதா துர்க்கந்த நாற்றத்தை உண்டுபண்ணிக்கொண்டே யிருக்கும். தவிர வீட்டிலுள்ளவர்களில் யாருக்காவது 'கலரா' முதலான விஷநோய்கண்டு, அவனும் அதேயிடத்தில் மலபாதைக்கு ஒதுங்குவானேயாகில் வீட்டிலுள்ள மற்றவர்களும் அந்த கக்கூசுக்குப் போவதினால் ஒருவேளை அவனிட மலத்தை தங்களுக்கும் தெரியாமல் மிதித்துவிடுவார்களேயானால் அதிலிருக்கும் விஷப்பூச்சியினிட சம்பந்தத்தால் அப்பேர்ப்பட்ட வியாதியானது நாம் சாப்பிடும் உணவு, தண்ணீர், உடுக்கும் வஸ்திரம் இவைமூலமாய் பரவி அபாயத்தை உண்டுபண்ணத்தக்கதா யிருக்கிறது.

2. சில வீடுகளில் அங்கணக்குழிகள் இருக்கின்றன. இதில் மலமும் மூத்திரமும் மழைஜலமும் ஊறி அநேக கிருமிகளை உண்டுபண்ணிக்கொண்டும் கெட்ட நாற்றத்தை உண்டாக்கிக்கொண்டும் அவைகளுக்கு போக்கில்லாமையாலும், மண்ணோடு கலந்து வேறுபாட்டை அடையாமலும் பூமியிலேயே தங்கியிருப்பதினால் பக்கத்திலிருக்கும் ஜலாதாரங்களில் சிறுகச்சிறுக ஊற்றுக்கால் வழியாய் ஜலத்தோடு சம்மந்தப்படுகிறது. ஆகையால் அந்த ஜலத்தை உபயோகப்படுத்தினால் வியாதிகள் உண்டாகிறதென்பதற்கு சந்தேகமேயில்லை. ஆகையினால்தான் இந்தக் குழிகள் டவுனில் இருக்கக்கூடாதென்றும் இவை சவுக்கியத்துக்கு நேர் விரோதமாயிருப்பதால் அம்மாதிரி கக்கூசுகள் கட்டக்கூடாதென்றும் முனிஸிபல் சட்டத்தின் 221 - பிரிவை அனுசரித்து சொந்தக்காரர்கள் இவைகளை மண்போட்டு தூர்த்துவிடவேண்டியதென்றும் அடிக்கடி உத்தரவு செய்யப்படுகிறார்கள். இம்மாதிரி குழிகளை சமையலறைகளுக்கு பக்கத்திலும் கிணறுகளுக்கு பக்கத்திலும் நாம் காண்கிறோம்.

மேற்கண்ட காரணத்தினால் இவைகளும் சவுக்கியத்துக்கு குறைவு என்று ஏற்படுகிறது.

3. இதைவிட கொஞ்சம் சீர்திருத்தப்படலான கக்கூஸ்களையும் நாம் காணலாம். இவைகள் எப்படியிருக்கிறதென்றால் ஒரு உயர்ந்தமேடை, அதின்பேரில் மூடுகல் போடப்பட்டிருக்கிறது. அதில் விடப்பட்டிருக்கும் துளையின் வழியாய் ஜனங்கள் உள்புறமாயிருந்து மலபாதைக்கு ஒதுங்குகிறார்கள். வெளிப்புறத்தில் இதற்கு ஒரு சிறிய கதவுபோடப்பட்டிருக்கும். இதன்வழியாய் மலம் அப்புறப்படுத்தப்படுகிறது. இந்தவிதமான கக்கூஸ் செம்மையாய் சுத்தப்படுத்தப்படுகிறதில்லை யாகையாலும் மலமும் அன்றாடம் அப்புறப்படுத்தப்படாததினாலும் மூத்திரமும் மலமும் ஒன்றாய்ச்சேர ஒட்டாமலிருக்கும்படி யாதொரு ஏதுவும் செய்யப்படாததினாலும் இதுவும் சுகாதாரங்களை அனுசரித்த கக்கூசாக ஏற்படுகிறதில்லை. ஆனால் பின்சொன்ன இதை முனிசிபல்சட்டம் 217 பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஒருவாறு சீர்திருத்தலாம். மலம் வெறுந்தரையில் விழுந்து அதிலிருந்து சுரண்டி அப்புறப்படுத்தப்படுகிறதைவிட ஷை துவாரத்தின்கீழே அப்போதைக்கப்போது எடுத்து சுத்தம்செய்யத்தக்க இரும்பு அல்லது துத்துநாகத்தொட்டிகள் வைத்தால் மலத்தை யிதிலிருந்து சுலுபமாய் சுத்தப்படுத்தக்கூடியதாயிருக்கிறது. தவிர பார்வைக்கும் ஒன்றும் தெரியாது. ஷை தொட்டிகளை மேடையின் கீழிருந்து எடுத்து சுத்திசெய்து மறுபடியும் இருந்தவிடத்தில் வைக்க ஒரு கைபிடி அந்த தொட்டிகளுக்கு வேண்டியது. அவைகளை சுத்திசெய்யும்பொருட்டு கொண்டுபோகிறபொழுது இரும்புமூடிகளினால் நன்றாக மூடிக்கொண்டு போகவேண்டும். உள்ளும் வெளியிலும் அதற்கு தார் எண்ணெயை செம்மையாய் கொதுப்பித்து பூசிவிடவேண்டியது. மூத்திரமும் கழுவுநீரும் மலத்தோடு சம்மந்தப்படாமல் பிரத்தியேகமாய் தெருவு சாலகத்தில்போய் விழும்படியாக மேடைக்குமுன்புறத்தில் ஒருசிறியசாலகம் ஏற்படுத்தியிருக்கவேண்டியது. மூத்திரமானது சுண்ணாம்பு பூசியிருக்கும்தரையை உப்புப்படுத்திவிடுகிறபடியால் கக்கூஸ்முழுவதும் தரையும் 'சிமெண்டு' சுண்ணாம்பினால் கட்டப்பட்டு, தாரினால் பூசப்பட்டிருக்கவேண்டும். மழைகாலம் வேனிற்காலம் இவைகளின் அசவுக்கியம் ஒன்றும் உண்டாகாதபடி கக்கூசுக்கு மேற்கூரைபோட்டு காற்றுப்போக சிறுகண்களும் விடப்பட்டிருக்கவேண்டியது. கக்கூசே புழக்கடையில் ஒரு ஒதுக்கலான இடத்தில் கட்டப்படுமேதாகூட வீட்டிலுள்ளவர்கள் சுலுபமாய் அதற்கு போகக்கூடிய சமீபதூரத்திலிருக்கவேண்டியது. முக்கியமாய் சர்க்கார்தோட்டி சருகமாய்வந்து ஷை தொட்டியிலிருந்து மலத்தை அப்புறப்படுத்தி தொட்டியையும் தரையையும் தண்ணீரால் கழுவி சுத்தம்செய்

யத்தக்கவிதமாய் ஏற்பாடுகள் செய்திருக்கவேண்டியது. இதுதான் முக்கியமானது. ஒருவேளை ஒரு குடும்பத்தில் ஜனங்களின் சங்கை அதிகமாயிருந்தால் போதுமான இடமும் சக்தியுமிருக்கும்பட்சத்தில் மேற்சொன்னமாதிரியான மேடைகள் இரண்டு மூன்று கட்டி அதேமாதிரி அதின்பேரில் பாறைக்கல்பாவி துளைகளைவிட்டு அடியில் அந்தத்தொட்டிகளைவைக்கலாம். இதேவிதமாய் பெண்களுக்கும் பிரத்தியேகமாய் ஒரு இடம் அமைக்கலாம். மலமானது வீடுகளில் தங்கியிராமல் அடிக்கடி அப்புறப்படுத்தப்பட்டு வரவேண்டியதுதான் முக்கிய அம்சம். காலையில் ஜனங்கள் கக்கூஸ்களை உபயோகப்படுத்தின உடனே தான் சுத்தம்செய்யவேண்டியநேரம். கொஞ்சம் பணச்செலவுசெய்யக்கூடிய ஜனங்கள் ஒருதொட்டிக்குப்பதிலாய் இரண்டுதொட்டி செய்து வைத்தால் கக்கூஸ்தொட்டி ஒன்றை எடுத்துக்கொண்டுபோய் மலத்தை அப்புறப்படுத்தி சுத்தம்செய்து கொண்டுவருகிறவரையில் மற்றொன்று கக்கூசில் உபயோகத்துக்காக வைத்துவிட்டுப்போக சாதனமாயிருக்கும். ஜனங்களிட சவுக்கியத்தையும் க்ஷேமத்தையும் உத்தேசித்து சுகாதாரவிதிப்படி கக்கூஸ்களை ஜனங்கள் வீடுகளில் கட்டிக்கொண்டு வியாதியால் அவஸ்தைப்படாமல் தாருட்டியத்துடன் வாழ்ந்திருக்கவேண்டுமென்றும் சுகாதாரவிதிக்கு நேர் விரோதமான ஏற்பாட்டின்படி அவரவர்களிஷ்டப்படி கக்கூஸ்களை ஜனங்கள் கட்டிக்கொண்டால் அது அவர்களுக்கு சவுக்கியத்தைத்தராது என்கிற நல்ல எண்ணத்தை உத்தேசித்தும் அப்படி சரியானவிதிப்படி கட்டிக்கொள்ளுகிறார்களா என்று முனிஸிபல் சங்கத்தார் தாங்கள் திருப்திசெய்துகொள்ளவேண்டுமென்கிற எண்ணத்தை உத்தேசித்தே புதிதாய் கக்கூஸ் கட்டுகிற ஒவ்வொரு வீட்டுக்காரனும் அப்படி கட்டுமுன்பாக முனிசிபாலிடியிலிருந்து லைசென்ஸ் ஒன்று 213-வது பிரிவை அனுசரித்து பெறவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. நம்மிட க்ஷேமத்தை உத்தேசித்துத்தான் கவர்ன்மெண்டார் அவர்களால் ஷை உத்தரவுசெய்யப்பட்டது.

## அறிவைப்பரவச்செய்யும் ஏஜன்ஸி.

### ஊஞ்சலூர் உபகாரசங்கம்.

சென்ற ஜூலை மாசத்து **விவேகசிந்தாமணியில்** "அறிவைப்பரவச்செய்வதற்கான ஏற்பாடு" என்னும் தலைப்பின்கீழ் தமிழிலும் சுகாதார சம்பந்தமாய் "Village Sanitation in S. India" என்று இங்கிலீஷிலும் பிரசுரித்த விஷயத்தை, சுகாதார-விஷயமாய் ஏற்பட்ட கமிட்டியாரின் அங்கீகாரத்தோடு தனி 'ஸர்க்குலராக' அச்சிட்டு தமிழ் ஜில்லாக்களிலுள்ள ஜில்லாபோர்டு, தாலூகா போர்டு ப்ரெஸிடெண்டுகளுக்கும், முனிசிபல் சேர்மான்களுக்கும், ஸானிடெரி கமிஷனர் லெப்டினென்ட் கர்னல் டப்ளியூ. ஜி. கிங் அவர்கள், ஏற்கனவே அனுப்பியிருந்த 'ஸர்க்குலரை' யொட்டி, **விவேகசிந்தாமணியின்** மாதிரிகாபி ஒன்று சேர்த்து அனுப்பினோம். அப்படியே, வித்தியா இலாகாத்தலைவர் இது விஷயத்தில் அனுதாபம்கொண்டு, சுகாதார விஷயமான 'ஸர்க்குலர்கள்' வெளியிடும் பொழுது, அவை ஒவ்வொன்றிலும் போதுமான பிரதிகள் தமக்கு அனுப்பினால், தமிழ் ஜில்லாக்களிலுள்ள வித்தியா இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு அவற்றைத் தாம் அனுப்புவதாக அன்புகூர்ந்து தெரிவித்தபடி, அந்த ஸர்க்குலரில் போதுமான பிரதிகள் அவருக்கு அனுப்பிவைத்தோம். அவரும் அந்த ஸர்க்குலரை தமிழ் ஜில்லாக்களிலுள்ள எல்லா இன்ஸ்பெக்டர்களுக்கும், அஸிஸ்டெண்டு, ஸப்-அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்களுக்கும், இன்ஸ்பெக்ட்ரெஸ்களுக்கும் தம் ஆபீஸிலிருந்து அனுப்பிவைத்து அது சங்கதியை நமக்குத் தெரிவித்தார். இப்படி அனுப்பப்பட்ட 'ஸாக்குலர்' காபிகளில் ஒன்று கிடைக்கப்பெற்ற ஈரோட்டு ரேஞ்சு ஸப்-அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர், ம-ா-ா-ஸ்ரீ ஆர். சிவராமய்யர் அவர்கள், இது விஷயமாய், நாம் விவரித்தபடி, போர்டு ஸ்கூல் மாஸ்டர்களுக்கு சிரத்தையுண்டாகும்படி செய்யக்கருதுவதாகவும், முக்கியமான கிராமங்களில், நம் ஏற்பாட்டுப்படி, அறிவைப் பரவச்செய்வதற்கான "**உபகாரசங்கங்கள்**" ஏற்படுத்த முயற்சிக்க விரும்புவதாகவும் அவர்கள் க்ஷேமத்தைக்கோறி உழைக்க விரும்புவதாகவும், அவருடைய நல்லெண்ணத்தை நமக்குத்தெரிவித்தார். இப்பொழுது அவருடைய பிரயத்தனத்தால், ஈரோடு தாலூகா, **ஊஞ்சலூரில்** பல ஸ்கூல் உபாத்தியாயர்கள் சேர்ந்த மீட்டிங்கு ஒன்று கூடி, "ஊஞ்சலூர் உபகாரசங்கம்" என்று ஒருசபையேற்படுத்தியிருக்கிறார்கள். அம்மீட்டிங்கின் நடபடிக்கைகள் அச்சங்கத்தின் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ, ஸி. வி. மாணிக்கம் பிள்ளையவர்களால் நமக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றை யாவருமறிய கீழே பிரசுரிப்பதோடு, மற்றுமுள்ள வித்யா இலாகா உத்தியோகஸ்தர்களும், ஸானிடெரி இன்ஸ்பெக்டர்



கள், வாக்ஸினேஷன் ஆபீஸர்கள், இதுவிஷயத்தில் சிறிது சிரமமெடுத்துக்கொண்டு, அங்கங்கே யுபகார சங்கங்கள் ஏற்படுத்தமுயற்சிப்பார்களென்று, அவர்களை வணங்கிப்பணிந்து மிக வற்புறுத்திக்கேட்டுக் கொள்கிறோம். நமது ஜனங்கள் அறியாமையால் அனுபவிக்கும் துன்பங்களுக்கு அளவு சங்கையில்லை விவேகமின்மையால் அவர்கள் தாமே துன்பங்களுக்கு ஆளாவதன்றி அவர்கள் க்ஷேமத்தைக்கோரி உழைக்க விரும்புகிறவர்களுக்கும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப்போல் உழைக்கக் கடமைப்பட்டவர்களுக்கும், துன்பமிழைக்கிறார்கள். இதனால் எல்லாரும் மனம்வெறுத்துப்போக நேரிடுகிறது. ஊருக்குபகாரமாக உழைக்க விரும்புகிறவர்கள், இந்த ஜகசண்டிகளோடு நாமென்னசெய்கிறதென்று அதைரியப்பட்டு ஊக்கமிழந்துபோகிறார்கள். ஜனக்ஷேமத்தைப் பாதுகாத்துழைக்கக் கடமைப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், நல்லபடியாகச் செய்ய முடியாத காரியங்களை, எப்படியும் செய்து முடிக்கக் கடமைப்பட்டவர்களானபடியால் "பாம்புக்கு ராஜா மூங்கிற்றடி" என்கிற பழமொழியின் உண்மையை உணர்ந்து பலாத்காரமாகக் காரியத்தை முடித்துக் கொண்டுபோகிறார்கள்: இதனால் ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் பெரும் சங்கடங்களும், கஷ்டங்களும், நேரிடுகின்றன: இப்படி நேரிடும் சங்கடங்கள் பெரும்பான்மையும் நீக்கத்தக்கவையே. இவைக்குக் காரணம் அறியாமையாதலால் அதை நீக்க நாம் முயற்சிக்கவேண்டும். முயற்சிக்கும் வழியின்னதென்று காட்டினோம். அதை யங்கீகரித்தவர்கள் அவ்வழியை யனுசரித்து நடந்து உதாரணமும் காட்டிவருகிறார்கள். அவ்வுதாரணத்தை மேற்கொண்டுநடப்போர் பெரும்பான்மையாக முன்வரின் எடுத்தகாரியம் நடந்தேறி வருமென்பதிற் சந்தேகமில்லை. நம்மவர் இதில் முனைந்துழைக்க முன்வருவார்களோ? வருவார்களென்றே நம்பி பின்னும் அவர்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்கிறோம். ஊஞ்சலூரில் ஸப்-அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் சபாநாயகராகவிருக்க கூடிய மீட்டிங்கின் நடவடிக்கைகள் பின்வருமாறு.

### அறிவைப் பரவச்செய்வதற்காக ஏற்படுத்திய ஊஞ்சலூர் உபகார சங்கம்.

இந்த சங்கத்தை ஏற்படுத்துவதற்காக 1899-ம் ௵ அக்டோபர் ௴ 17௳ காலை 8-மணிக்கு ஊஞ்சலூரில் அடியில்கண்டிருக்கிறவர்கள் கூடி ஒரு மீட்டிங்கில்செய்த தீர்மானங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| I. | (1) | ம-ா-ா-ஸ்ரீ | R. சிவராமய்யர், | ஈரோடு ரேஞ்சு சப்-அசிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் அவர்கள். |
| | (2) | ,, | C. K. மாணிக்கம்பிள்ளை, | எட்மாஸ்டர், போர்டு ஸ்கூல், ஊஞ்சலூர். |
| | (3) | ,, | சின்னக்கவுண்டர், | ஸ்கூல் மாஸ்டர், வடக்கு புதுப்பாளையம். |
| | (4) | ,, | கருப்பண்ணபிள்ளை, | ,, கொளத்துப்பாளையம். |
| | (5) | ,, | ராமசாமிபிள்ளை, | ,, சருக்கம்பாளையம். |
| | (6) | ,, | செல்லக்குமாரகவுண்டர், | ,, பனப்பாளையம். |
| | (7) | ,, | ஆறுமுகம்பிள்ளை, | ,, கொள்ளுக்காட்டுவலசு. |
| | (8) | ,, | அருணாசலம்பிள்ளை, | ,, தட்டாம்பாளையம். |
| | (9) | ,, | சிதம்பரம்பிள்ளை, | ,, விள்ளியம்பாளையம். |
| | (10) | ,, | பழனியப்பபிள்ளை, | ,, தாமரப்பாளையம். |

#### தீர்மானங்கள்.

II. (1) அ. ப. ஏஜன்ஸி காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ C. V. சாமிநாதய்யர் அவர்கள் வித்தியாதலைவர் அவர்கள் மூலமாய் அறிவைப் பரவச்செய்வதற்கான ஏற்பாடுவிஷயமாய்அச்சிட்டு அனுப்பிய சர்க்குலரில் கண்டபடி **ஊஞ்சலூரில் ஒரு உபகாரசங்கம்** ஏற்படுத்தப்பட்டது.

(2) இச்சங்கத்திற்கு மேற்கண்ட உபாத்தியாயர்களும் இன்னும் இச்சங்கத்தில் சேரப் பிரியப்பட்டவர்களும் மெம்பர்களாக இருக்கவேண்டியது.

(3) இச்சங்கத்திற்கு தலைவராக ஊஞ்சலூர் போர்டு ஸ்கூல் எட்மாஸ்டரை நியமிக்கப்பட்டது.

(4) ஒவ்வொருவாரத்திலும் செவ்வாய்க்கிழமை பகல் 2-மணிக்கு இந்தசங்கம் கூடவேண்டியது.

(5) அ. ப. ஏஜன்ஸி சர்க்குலரில் கண்டிருக்கிறபிரகாரம் உபகாரசங்கத்து மெம்பர்களெல்லாரும் **உபகாரிகளாக** இருப்பவர்கள் அநுஷ்டிக்கவேண்டுமென்று குறித்தவிஷயங்களை தவறுமல் அவரவர்களால் இயன்றமட்டும் அநுஷ்டிக்கவேண்டியது.

**அதாவது.**

(a) அறிவின்பயனை அறிந்து அதை அடையப் பேரவாக்கொள்வது.

(b) தாமறிந்தமட்டில் அவ்வறிவை தம்மை சுற்றியுள்ளாரிடம் நல்லெண்ணத்துடன் பரவச் செய்வது.

(6) அ. ப. ஏஜென்ஸியால் பிரசுரம் செய்யப்பட்ட **விவேகசிந்தாமணி**யென்னும் மாதாந்தர பத்திரிகையிலும் மற்றும் அந்த ஏஜென்ஸியால் பொதுவாயும் ஆதாரவிஷயமாயும் பிரசுரம் செய்யப்பட்ட பத்திரிகையிலும் உள்ள விஷயங்களை படித்து செவ்வையாய் தெரிந்து கொண்டு பாடசாலை மாணுக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் போதிக்கவேண்டியது மெம்பர்களின் கடமை.

(7) வாரந்தோறும் மீட்டிங்கில் நடத்தும் விஷயங்களைப்பற்றி ம-ா-ா-ஸ்ரீ சப் - அசிஸ்டெண்டு இன்ஸ்பெக்டருக்கு ஒவ்வொருமாதமும் ஒரு சுருக்கமான ரிபோர்ட்டு செய்யவேண்டியது.

UNJALUR,
17—10—99.

(Signed) R. Siva Ramaiyar,
*Sub-Asst. Inspr. of Schools,*
*Erode Range.*

(இன்னம் 9 மெம்பர்களும் கையொப்பம் செய்திருக்கிறார்கள்.)

No. 1.

Submitted to the Secretary, Diffusion of Knowledge Agency, Triplicane, Madras, for information.

19th October 1899,
UNJALUR.

C. K. MANIKKUM PILLAI,
*Secretary, Assocn. of Helpers,*
*Unjalur.*

---

## அகமகிழ் பயிற்சி. *

எனதருமை அன்புள்ள சகோதரிகளே, இவ்வழகிய உலகில் நமக்குவேண்டிய சுகங்களை கருணைக் கடலாகிய ஜெகதீசன் ஏராளமாய் தந்திருந்தும் சிலவேளை நாம் ஏதோ வொருமனக்குறைக்கு உள்ளாகி துன்பப்படுகிறோம். இதை யொழிக்கும்படியாக நாம் ஒருசாதனம் செய்யவேண்டும். எப்போதும் சந்தோஷமாயிருக்கும்படியான பழக்கம் நம்மில் உண்டாகவேண்டும். சாதனையில்லாமல் ஒன்றையும் சாதிப்பது கூடாது. கண்விழித்து நாடகமுதலானது பார்த்து களிப்பதையும் சந்தோஷமென்பார்கள். நான் சொல்லவரும் சந்தோஷம் அப்படிக்கொத்தல்ல. துன்பத்திலும் நாம்பெற்றிருப்பதைக் கொண்டு சுகமனுபவிக்கும்படியான பழக்கம். இது தான் **அகமகிழ்பயிற்சி.**

நமக்குண்டாகும் துன்பங்களில் அநேகம் நாம் செய்துகொள்பவைகளே. அல்ப விஷயங்களுக்கெல்லாம் கோபத்திற்கும் குறைகளுக்கும் உள்ளாகிறோம். ஆழமறியாமல் காரியங்களில் தலையிட்

* தென் இந்தியா பிராம்ம சமாஜ மண்டபத்தில் 1899-ம் ஏப்ரல் 29உ சாயங்காலம் ஸ்ரீமதிகள் கூடியசபையில் சௌபாக்கியவதி மாணிக்கம்மாள், வாசித்த உபந்நியாசம்.



றோம். ஆகாப்பண்டங்களில் இச்சைவைத்து அனு
விக்கிறோம். இச்செய்கைகளால் நேரிடும் துன்பங்
ள் அநேகம், நமது செய்கைக்காரணமல்லாமல்
ராஜீக தெய்வீகமாய் வருபவை கொஞ்சம்.

நமது கெடுதிகள் எதினுல் விளைகின்றனவென்று
ண்ணிப்பார்க்கும்போது நாம்பெற்ற பேருகிய *இச்
ா சுதந்திரத்தை † துர்விநியோகம்செய்வதினுல்
ன்று வெளியாகும். எழுவகைத் தோற்றங்களில்
க்களாகிய நமக்கு இழிந்தனவாகிய விலங்கு பற
வமுதலியன தம்மைப்படைத்த கடவுளின் நியம
ங்களுக்கு கொஞ்சமாவது மாறுபடாமல் தத்தம்
சய்கைகளை சரிவர நடத்திவருகின்றன. தங்க
நக்கு ஏற்பட்ட விதிகளினின்று பிசகும்படியான
தந்திரம் அவைகளுக்கு இல்லை. ஆகையால் அவற்
ன் சுகம் கெடுவதற்கு மார்க்கமில்லை. பட்சி முதலி
வற்றை கவனித்துப்பாருங்கள். அவைகள் தத்தம்
படைகளுடன் கூடிக்குலாவுவதையும் அவைகள்
ம்மினத்தை நீடூழியாய் இருக்கும்படிசெய்யும் கரு
த்தை ஏற்பட்ட கிரமத்திற்கு கொஞ்சமாவது மாறு
டாமல் நடக்கிறதை பார்ப்பீர்களானுல் ஆச்சரியப்
டாம லிருக்கமாட்டீர்கள். அவைகளுக்கு நேர்ந்த
வேகக்குறைவிற்குத் தக்கபடி இச்சாசுதந்திரமும்
றைந்திருக்கிறது. அவைகள் நம்மைப்போல பயிர்
சய்து உணவைப் பெறவேண்டிய அவசியமில்லை.
ருத்தன் செயலின் அழகைப் பாருங்கள். விவேகக்
றைவு இருப்பதால் உணவிற்கு பிரயாசைப்பட
வண்டியதில்லாமலே பட்சிகள் விருட்சங்களில்
ண்டாம் கனிமுதலியவற்றால் தினம்விருந்துண்டு
ளிக்கின்றன. காக்கை முதலியவை முட்டையிட்டு
ஞ்சுபொறிக்குங்காலம் சமீபித்தபோது ஆணும்
பண்ணுமாக கூடுகட்டுவதற்கு சாமக்கிரியைகளை
தடுவதில் படும்பாட்டையும், பிறகு தம்குஞ்சுக
நக்கு இரைதேடி அவைகளின் பவழம்போன்ற
ாயில் புகட்டி உண்பிக்கும்படி தமக்குவேண்டிய
ரையை எங்கும் இலேசில் கிடைக்கும்படி செய்
ருக்கும் அழகியசெய்கையையும் கவனியுங்கள். பசு
தலிய மிருகங்கள் சூல்படவேண்டியகாலந்தவிர
ற்றகாலத்தில் அவ்விச்சையற்றிருந்து அவைக
நக்கு நியமித்த வேலையை செய்துவருவதினுல்
வைகளுக்கு நோய் நொடிகள் மட்டாயிருக்கின்
ன. ஊண் உறக்கம் முதலியவற்றில் மனுஷனும்
ருகங்களுக் கொப்பானவனுனுலும் பகுத்தறிவு
வனுக்குண்டாயிருப்பதினுல் கருத்தன் நியமணங்

களை தெரிந்துகொண்டு நடக்கவேண்டியவனுய் இருக்கிறுன். தெரிந்து நடந்து சுகப்படவும், தெரிந்துகொண்டு நடக்காவிட்டால் துன்பத்திற்கு உள்ளாகும் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டான். இச்சுதந்திரத்தின் மேன்மையைக் கவனிக்காதவராய் துர்விநியோகம் செய்து துக்கங்களை பெருக்கிக் கொள்ளுகிறோம். நமக்குள்ள சுதந்திரத்தை எவ்வளவுக்கு கையாடலாம் எங்குவிடவேண்டும் என்று நமது பகுத்தறிவால் சுலப பிரயாசையினுல் தெரிந்து கொள்ளக் கூடியவர்களாயிருந்தும், சோம்பலுக்கு உள்ளாகி சித்தம்போனவாறு பிரவர்த்திக்கிறோம். கடினப்பிரசவங்களுக்கு நாம் பலமுறை ஆளாகிறோம். மருந்தும் கையுமாய் இருக்கவேண்டி வருகிறது. உண்டாகும் சந்ததிகள் நோய்நொடியற்று செழித்திருப்பதில்லை. பகுத்தறிவை கூர்மையாக்கிக்கொண்டு * சித்தசுவாதீனத்தைக் கைக்கொள்வோமாகில் நமக்கு நேரிடக்கூடும் துன்பங்களில் பெரும்பாகம் ஒழிந்து விடும். நாம் துன்பப்படும்போது நம்மையுமறியாமல் "கர்மம்" கர்மமென்று சொல்லுகிறோம். ஆம், நாம் முற்பகல் செய்தது பிற்பகல்விளைந்ததைத் † நிதரிசனமாய்க் கண்டோம். ஆகையால் நமக்குகிடைத்த இச்சாசுதந்திரத்தை வெகுசாக்கிரதையாய் கையாட வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் சுதந்தரமில்லாதவர்களென்கிறதும் பொய்யல்ல. மனுஷன் செய்யக்கூடாததை செய்வதற்கு சுதந்திரமில்லையேயொழிய, இவன் செய்யக்கூடியதில் சர்வசுதந்திரம் பெற்றிருக்கிறுன். அன்றியில் அச்சுதந்திரத்தை அத்துமீறி அநுசரித்தால் கேடுவருவது நிச்சயம்.

துன்பங்களால் பயனில்லாமற்போகவில்லை. நாம் செய்யும் துர்க்காரியங்களின் பயனுக துன்பங்கள் உண்டாகாமற்போனுல் கடவுளின் நியமனங்களை (சட்டங்கள்) நாம் நிறைவேற்றுவது எப்படி? அவரது ஆஞ்ஞைமுடிவுபெறவேண்டும், அதைக்கடக்க வல்லவர் ஒருவருமில்லை.

ஈசனுடைய நியமனங்களை கடக்குந்தோறும் நமக்கு துன்பம் உண்டாகிறது. அதுநமக்கு நன்மை செய்யும்படி ஏற்பட்ட எச்சரிப்பு, இந்த எச்சரிப்பு நமக்கு அவசியம்வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு கிடைத்திருக்கும் பெரும்பாக்கியங்களெல்லாம் அவலமாய்ப் போய்விடும். நெருப்பிற்கு சுடுந்தன்மையுண்டல்லவா. அச்சுடுகையைத் தெரிவிப்பதுநமது

* இஷ்டப்படுகிற விதம் செய்யும் சுதந்திரம்.
† அக்கிரமமாய் செலவழித்தல்.

* மனதை அடக்கி ஆளுதல்.
† திருஷ்டாந்தமாய்.

பரிசம். சுடுந்தன்மையை பரிசம் தெரிவிக்காமற் போனால் ஒவ்வொரு குழந்தையும் நிமிஷந்தோறும் தீய்க்கு இரையாகவேண்டிவரும். இந்த ஒரு திருஷ்டாந்தத்தைப்போல் எதிலும் பார்த்துக்கொள்ளலாம். இயற்கையின் நியமனத்தை நாம் கடக்கும் போதெல்லாம் நமக்கேதோவொருநோய் உண்டாகி எச்சரிக்காமற்போனால் நன்மைக்கென்று ஏற்பட்டவைகளே நமக்கு பாதகமாய் முடியும். காருண்ணியக் கடவுள் நம்முடைய க்ஷேமத்திற்காகவே நோயையுண்டுபண்ணி யிருக்கிறார். அவைகளின் பிரயோசனம் உடனுக்குடன் நமக்கு தெரிகிறதில்லை. பின்னிட்டுதெரியவரும். கொப்புங் கிளையுமாய் செழித்திருக்கும் மரத்தை யொருவன் வெட்டுவதை கண்டபோது இன்னதற்காக வெட்டுகிறானென்று நமக்குத் தோன்றுகிறதில்லை. அம்மரத்தினின்று பிறகு சுந்தரமான பெட்டியோ பேழையோ உண்டாகிறது. அதைக்கண்டபோது சந்தோஷமடைகிறோ மல்லவா? இதுபோல துக்கங்கள் நம்மைவாட்டி மனதில் சிறுகச்சிறுக ஏறியிருந்த அசுத்தமெல்லாம் போக்கி நற்குணங்களை நம்மில் வெளியாகும்படி செய்தபோது துக்கங்கள் நமக்கு பாக்கியமாக விருந்ததாக அறிவோம்.

கற்பிற்கு அரசியான சீதாப்பிராட்டிற்கு நேர்ந்த துன்பங்களினாலல்லவா அக்குணமணிக்கு என்று மழியாப் புகழுடம்பு உண்டாயிற்று. போகபாக்கியங்களை அனுபவித்து காலங்கழித்து மாண்டுபோனவர்களுடைய சங்கையை யாரால் சொல்லி முடியும். இவர்களில் உத்தமர்களாயிருந்த சிலரைப்பற்றி மாத்திரம் நாம் தெரிந்துகொள்வதற்கு மார்க்கமுண்டாயிருக்கிறது. இச்சிலருடைய சரித்திரத்தை கவனமாய்ப் படித்துப்பார்ப்போமானால் இவர்கள் யாவரும் துன்பத்திற்கு உள்ளானவர்களாகவே யிருக்கிறார்கள். ஒவ்வொருநெறியைக் கைக்கொண்டவர்களாய் அந்நெறியை சாதிக்கும் விஷயத்தில் தாங்கள் பட்ட அல்லல்கள் கொஞ்சமல்ல. கற்பெனும் தன்னுயிரினும் சிறந்த ஆபரணத்தைக்காக்கும்பொருட்டு சீதாப்பிராட்டி பட்டபாட்டை ஆலோசிப்போமானால் நாம் இல்லற தருமத்தை நடத்துங்காலத்தில் நமக்குண்டாகும் கஷ்டங்களை துன்பமென்று சொல்ல வாய்கூசும்.

அதுர்ஷ்டவசத்தால் நமக்குக் கிடைத்திருக்கும் துரைத்தனத்தாலும் நாம் அடைந்திருக்கும் கல்விப்பயிற்சினாலும் சித்த சுவாதீனத்தைமாத்திரம் கைக்கொண்டு நடப்போமானால், கூடியவரையில் நம்வாழ்நாளை இனியதாக்கிக்கொண்டு இகபரசுகங்களையடைய யாதொரு தடையுமிராது. மனுஷப் பிரயத்னத்தையும் கடந்து நமக்கு துன்பங்கள்வருங் காலத்திலும் மற்றெந்தகாலத்திலும் அகமகிழ்பயிற்சி எப்படி செய்யவேண்டுமென்பதை சீதாபிராட்டியின் சரித்திரத்தைக்கொண்டே தெரிந்துகொள்ளலாம்.

அந்தம்மணி தனது ஆபத்துகால ஆரம்பமுதல் தான் நடந்துகொண்ட திவ்விய சரித்திரத்தை வெகு சுருக்கமாக நினைவுகூர்வோம்.

கைகேசியின் சூழலால் தன் நாயகன் காட்டுக்குப்போகும்படி நேர்ந்தபோது நாயகனுக்கு அரசு போய்விட்டதே தனக்கு போகபாக்கியங்கள் இல்லையே என்கிறதாய் கொஞ்சமாவது துக்கிக்கவில்லை. ஆனால் எதற்காகத் துக்கப்பட்டார்களென்றால் தன்னை மாமனார்வீட்டில் சவுக்கியமாயிருக்கும்படியாயும் தான்மாத்திரம் காட்டுக்குப்போவதாயும் தன் நாயகர் சொன்னசொல் தன் காதில் நாராசம்போல் துளைத்துச்செல்ல இப்படியும் சொன்னாரல்லவாவென்று விம்மி விம்மி அழுதார். உடனே நாயகரைப்பார்த்து தேவரீர் என்னவார்த்தை சொன்னீர்கள். சக்கிரவர்த்தி தங்களை காட்டுக்குப்போம்படி கட்டளையிட்டால் அடியாளுக்கு வேறேகட்டளை வேண்டுமோ. பர்த்தா அனுபவிப்பதை மனைவியும் அவருடன் அனுபவிக்கிறவளன்றோ? ஆகையால் தங்களைவிட்டு பிரிந்திருக்க கொஞ்சங்கூட சகியேன். தங்களுடன் இருப்பதே எனக்கு சுவர்க்கம். தங்களுடைய தோழமையினால் காட்டிலுள்ள தர்ப்பை மூங்கில் முதலியவை இலவம்பஞ்சு மான்தோல் முதலியவைபோல் மிருதுவாகும். தேவரீருடன் புல்லின்மேல்படுத்தபோதிலும் பஞ்சணைமேல் படுப்பது போலாம். தேவரீருக்கு கிடைக்கும் உணவு கனியானாலும் கிழங்கானாலும் மற்றெதுவானாலும் எனக்கு மதுவே அமிர்தம்போலாம். தாயையாயினும், தந்தையையாயினும், நம்மில்லத்தையாயினும், அங்கனுபவித்த சுகங்களையாயினும், கருதி சோகங்கொண்டு தங்களை மனநோவும்படி செய்யேன் என்று பலவாறாகச்சொல்லியும் தன்னை உடன்கொண்டு செல்ல இராமருக்கு இஷ்டமில்லையென்று தெரிந்து, தான் சீக்கிரம் உள்ளேபோய் மரவுரியொன்றை அணிந்து இராமரது கையைப்பற்றி நின்றார்கள். காட்டில் இவர்கள் எப்படி காலங்கழித்தனர்?

* பஞ்சவடிதீரத்தில் கோதாவரிநதியோரம் அழகானசோலையில் இலட்சுமணர்கட்டிய ஓர் † பர்ணசாலையில் இராமரும் சீதையும் இருந்துகொண்டு இலட்சுமணர் காலையில் கனி கிழங்கு முதலியவற்றைக்கொண்டுவர சீதாபிராட்டி நதியில் ஸ்நானம் செய்துவிட்டு கிடைத்த பண்டங்களை சமையல் செய்து, பர்த்தாவுக்கும் மைத்துனருக்கும் அன்னம் படைத்து தானும் உண்டு சந்தோஷமாக நாயகருடன் விளையாடிக்கொண்டிருப்பார். அச்சோலையில் நதியோரத்தில் இருவரும் உலாவிக்கொண்டிருக்கும் போது அவர்களைக்கண்டு ஒதுங்கும் அன்னத்தின் நடையைக்கண்டு இராமர் சீதையினுடைய நடையையும்பார்த்து அவர் சிரிப்பதும், ஆண்யானை நதியில் நீர் அருந்தி திரும்பிப்போம்போது அதனது பெருமித நடையைப்பார்த்து தன்னுடன் கைகோர்த்துதிரியும் இராஜயானையாகிய இராமருக்கு சமானம் யாரிருக்கிறாரென்று செறுக்குற்று சீதாபிராட்டி நகைப்பதும் உண்டு. அழகான இறகுகளைவிரித்து ஆடும் மயில்களையும், மான்களையும், பூங்கொம்புகளையும், மலைவீழருவிகளையும், இன்னும் இச்சிறுவிடத்தில் சொல்லக்கூடாத அளவிறந்த அற்புதக்காட்சிகளையுங்கண்டு ஒருவருக்கொருவர் காட்டிக்கொண்டு அகமகிழ்வார்கள். மாலையில் சூரியன் அஸ்தமிக்கும் போது தாமரைகள் குவிவது இயற்கை. இவர்களது கைகளாகிய தாமரைகளும் பகவதாராதனைநிமித்தம் தம்சிரமேற்குவியும். இவ்வாறாக தங்களைச் சூழ்ந்துள்ளதைக்கண்டு களிக்கும் இவ்வுத்தமபிறவிகளுக்கு, தங்கள் நாட்டைவிட்டதினாலாவது, அரசிழந்ததினாலாவது யாதொரு துன்பமுமில்லை. அரசு செய்வதினால் ராஜாவுக்கு அதிக மனக்கவலையுண்டு. இராமருக்கு இவ்விடத்திலே யாதொரு கவலையுமில்லாமல் இருவரும் சுகமாகவிருந்தார்கள்.

* ஐந்து ஆலமரமுள்ள கரை.

† இலைகளால் அமைத்த வீடு.



இவ்வித சுகத்தைக்கெடுக்க பாவி இராவணன் வந்தான். பிந்தி நடந்ததை இங்குநான் சொல்ல வேண்டியதில்லை. நான் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு சம்பந்தப்படும்வரையில் பேசவேண்டியவளாய் இருக்கிறேன். ஆகையால் நான் இங்கு குறிக்கவேண்டியது என்னவென்றால், நம்வீடுகளில் அற்பவிஷயங்களாகிய துணி மணிக்கு எவ்வளவு சண்டை, கோபதாபம், மனக்கடுப்பு, இவற்றால் சுகமிழந்து எல்லாம்போய்விட்டதுபோல் மூலையில் படுப்பது எவ்வளவுபாருங்கள்.

அரசு இழந்து காட்டிற்குவந்த தன்னுடைய நாயகருடன் தானும் மரவுரி தரித்துக்கொண்டு காட்டில் வசிக்கும்போது அங்கு பெற்றதைக்கொண்டு அவர்கள் எவ்வளவு சந்தோஷமுடையவர்களாயிருந்தார்கள். அவர்களுக்குக்கிடைத்த உணவாதிகளையுண்டு தம்மைச்சூழ்ந்து எப்பக்கத்திலுமுள்ள ஈசனது அற்புதச் செய்கைகளைக்கண்டு அகமகிழும் சாதனையால் ஆநந்தமடைந்திருந்தார்கள்.

தமக்குக் கிடைத்ததைக்கொண்டு சுகிக்க அறியாத ஜனங்களுக்கு எல்லாப் பாக்கியங்களும் நிறைவாயிருந்தாலும் நித்திய தரித்திரர்களே. பெற்றதைக்கொண்டு அகமகிழ்பவர்களுக்கு சக்கிரவர்த்திகளும் ஈடாகார் என்று சிறிது பழக்கத்தினால் சுவானுபவமாய் நாமேயறியலாம் என்கிற உண்மையை சீதாபிராட்டியின் சரித்திரம் சாட்சி பகர்கிறது.

இன்னொரு சிறந்தகுணத்தை நமது சீதாபிராட்டியினிடத்திலிருந்து நாம் கற்கவேண்டியவர்களாயிருக்கிறோம். தான் இலங்கையில் சிறைபட்டிருந்த ஏகாந்த நிலையிலும்,

ராஜியம் உன்தம்பி பரதனுள நீ காட்டுக்குப்போவென்று கைகேசிசொன்ன காலத்தில் சற்றாகிலும் மனம்வாடாமல், முன்னினும்மூன்றுமடங்கு மலர்ந்த இராமருடைய * முகாரவிந்தத்தை நினைத்து நினைத்து, சீதாபிராட்டி இவ்வளவு பெருமையான சுபாவம் அவரைத்தவிர மற்ற யாரிடத்திலுண்டு. இப்படிப்பட்ட பிராணநாதனை பிரிந்துவிட்டோமே யென்று துக்கித்தார்கள்.

இங்குள்ள அழகைப்பாருங்கள். சீதாபிராட்டி இராமருடைய பெருந்தன்மையைக்கண்டு மகிழ்ந்தது இவ்வளவு அவ்வளவல்ல. அவளுக்கு தன் நாயகர்மீதிருந்த அன்பினால் இராஜ்யம்போனது லட்சியமாகவேயில்லை, தனது நாயகருக்கு அரசுபோக தன்னுடைய சுகங்களெல்லாம் போய்விட்டதே என்கிற தன் † சுயநலவாஞ்சையை முன்னிட்டு துக்கிக்காமல், அவரது குணாதிசயத்தை நினைத்து நினைத்தல்லவோ துன்பப்பட்டார்கள். உத்தமர்களுடைய குணத்தை இங்கு நிதரிசனமாகக் காண்கிறோம்.

குணமுள்ள பதார்த்தங்கள் நமக்கிருந்து நம்மைவிட்டு நழுவினாலும், அவைகளில்லாமலிருந்தாலும் வருந்துவதினால் நமக்கு அதிக நன்மையுண்டு. குணவழகின்மேல் நமது நாட்டம் எப்பொழுது செல்கிறதோ அப்போதே, மனத்தூய்மை நம்மில் உண்டாவதற்கு வழியுண்டாம். குணவழகை நாடாமல் அல்ப விஷயங்களில் நமது நாட்டம் சென்றுகொண்டிருந்தால் மனத்தூய்மையுண்டாகாது. துக்கம்

* முகமாகிய தாமரை.

† தன் சொந்த சுகத்தின் பொருட்டான ஆசை.

EXTRACTS FROM AN ARTICLE ON THE ADVANTAGE OF HEALTH.

Divisions of the subject :—

1. Health is the most important of the good things mankind can obtain.

2. The reasons why men do not in practice follow the methods of securing health: (a). Because they do not know them; (b) or if they know them, yet either through want of perception, or from an idea that the ways are new, and such as their forefathers did not trouble themselves about, they do not attach importance to them. (c). Some look upon it from a fatalistic or providential point of view. They argue that nothing will happen independent of the will of God, or that Fate cannot be frustrated. Whatever truth there may be in these propositions, yet it must be folly not to make use of the sense with which God has endowed us. We cannot get anything without making some exertion to obtain it, or why should men labour on their plantations, at their business or at their learning?

3. A reference to the peoples who have advanced in civilisation through the practice of sanitation, and the exercise of the bodily powers; especially the Greeks and Romans.

4. Rules of Sanitation were known to the people of India in former times. (The writer refers to the rules laid down in the Manu Dharma Shastra, and the punishments for disobedience to the rules.)

5. The reasons why the Rules of Sanitation of the Dharma Shastras have been without result. (The writer propounds the view that the rules came to be thought to be closely connected with religious observances, and that the mischief said to result from non-observance of them was thought to be a mischief to a man solely in reference to his religion and caste practices). However it be viewed, he says, the observance of sanitary practices as enjoined in the Shastras, instead of advancing has gradually fallen into disuse.

6. The former condition of England in this matter and the present improvement.

In enlarging upon this, the writer points out the extent to which the death rate in England has been reduced from 50 per 1,000 to 15 in the last 50 years, and the lavish expenditure of the English to secure proper sanitation in their towns and villages; and states his belief that the death rate in India, which may now be regarded as about 30 per 1,000, may be reduced with proper measures to 15.

(June number, p. 51.)

Among the many causes which obstruct the spread of Sanitary Regulations, the principal one is the poverty of India. Still, want of health causes great loss of money. Suppose in a small village people think about having a cart to carry off every day the rubbish and dirt that lies scattered about, and finding it will cost 10 rupees a month, give up the idea; and suppose that in the following rains the earth gets soaked, and the air becomes impure through the putrefaction of the matter piled up and lying about, leading to intermittent fever and cholera, and other disorders. Many die, and the wealthy people are in great terror, and money is expended in whitewashing, fumigations, &c., &c. All these causes a very great outlay, not to speak of the great loss of life following the neglect of proper precautions. So there is no doubt that close and stingy people are led into double the expense it would otherwise cost them, through their declining on the score of poverty to lay out money on sanitation. Still what can be done by people of limited means? Those who should exert themselves in the matter are the Government, the educated, and the rich. The Government should come forward for the welfare of their subjects, and assist them with funds and guidance; the rich should assist with a certain expenditure of money; while the educated should make known the useful facts they learn.

It will take considerable time to bring sanitary rules into practice, for the mischief resulting from impure practices is not understood by the ordinary run of people who are without scientific knowledge. Ignorant people should be first spoken to with reference to the bearing of the matter on their own welfare, and afterwards little by little on the mischief and nuisance to others of insanitary practices. It is of no use to visit ignorant people all at once with anger or punishment. Punishment may be introduced after sanitary progress has been made and sanitation is so far understood that transgression of the rules comes to be confined only to a few.

To carry out the work energetic and persevering persons should be appointed who thoroughly understand the purpose of the Government and the conditions of the people.

Diseases are all about us, and we have to guard our bodies as if we were a fort undergoing a siege, or an irrigating reservoir in the dam of which the smallest rift might lead to a breach of the reservoir and the disappearance of its contents, to be followed by the ruin of the crops dependent on it. Illustrations such as this should be kindly and sympathetically given to the ignorant, and the spread of sanitary knowledge forwarded.

(*To be continued.*)

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவின் விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2.




அறிவைப்பரவச் செய்வதற்கான

மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1900ஆ ஜனவரிமீ [இலக்கம் 9.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace and in the case of regular half-yearly subscribers 3 weeks' time is allowed for the prepayment of subscription, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a *Volume*, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசான காகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவருமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6 மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## கோகினூர் வயிரத்தின் வரலாறு.

உலகத்தில் சாதாரணமாக இரத்தினங்களை எண்ணுங்காலையிலும், வச்சிரம், வைடூரியம், மாணிக்கம், மரகதம், இந்திரநீலம், கோமேதகம், புஷ்பராகம், பவளம், முத்து என்று வச்சிரத்தையே முதலில்வைத் தெண்ணுதலினால் அது எல்லா இரத்தினங்களிலும் உயர்ந்ததென்பது எளிதில் விளங்கும்.

இம்மணி எல்லாப் பொருள்களிலும் உறுதியானது. அதனாலேயே அதற்கு வச்சிரம் என்று பெயரிடப்பட்டது. வச்சிரத்தினால் மற்ற மணிகள் எல்லாவற்றையும் துளைக்கலாம் வச்சிரத்தை வெட்ட வச்சிரமே வேண்டும்.

வயிரங்களில் சில மல்லிகைபோல வெண்ணிறமாகவும், சில கொன்றைப் பூப்போலப் பொன்னிறமாகவும், சில உற்பலம்போல நீலநிறமாயும், சில வாழைமடல்போலச் செந்நிறமாகவும், வேறுசில கருநிறமாகவும் இவ்வாறு பற்பல தேசங்களில் பற்பல நிறமாக இருக்கும் என்று நூல்களில் சொல்லப்படுகின்றது. அன்றியும் இவ்விரத்தினம் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரஜாதியென்று நான்கு ஜாதியாகப் பிரிக்கப்படுமென்றும், பிராமணஜாதி வயிரம் படிகம்போலவும், க்ஷத்திரியஜாதி வயிரம் முயலிரத்தம்போலவும், வைசியஜாதி வாழைப்பூப் போலவும், சூத்திரஜாதி சாணையிற்பிடித்துச் சொலிக்கும் கத்திபோலவும் இருக்குமென்றும், இம்மணியைக் காந்திபேதம், காகபாதம், தாரகம், புள்ளி, ரேகையென்னும் ஐவகைக் குற்றங்களையும் நீக்கி, மதிக்கவொண்ணா விலையுள்ளதாய், இலேசாய், மிக ஒளியுள்ளதாய், தெளிவுள்ளதாய் ஆராய்ந்து அணிபவர்களுக்கு, சத்துரு நிக்கிரகமும், சம்பத் சமர்த்தியும், அரோகதேகமும், ஆயுள்விருத்தியும் உண்டாமென்றும் நம் நூல்களில் சொல்லியிருக்கின்றது.

வைரங்கள் முற்காலத்தில் இந்துதேசத்தில் கோல்கொண்டாக் கனிகளில் விசேஷமாக எடுக்கப்பட்டன. தற்காலத்தில் போர்னியோவிலும், பிரஜீலிலும், தென்னாப்பிரிக்காவில் கிரிக்குவாலாண்டு, டிரான்ஸ்வால் என்னும் நாடுகளிலும் மிகுதியாக எடுக்கப்படுகின்றன. கனியிலிருந்து எடுக்கப்படும்போது வயிரம் ஒளியற்ற கூழாங்கல்லைப்போலிருக்கும் சாணை பிடித்தபின் அதிக காந்திபெறும்.

வைரக்கற்கள் சாதாரணமாக மிகச் சிறியவைகளாக விருக்கும். பெரிய வைரங்கள் அகப்படுவது மிகவும் அருமை. வடிவிற்சிறந்த பெரிய வைரங்கள் அவற்றின் அருமையினாலும், மதிப்பினாலும் முதல்தரமான சித்திரங்களைப்போல லோகப்பிரசித்தபானவை. இவ்வாறு லோகப்பிரசித்தமான வைரங்கள் உலகில் ஏழெட்டுக்குமேல் இல்லை. அவற்றிற்கு அத்யுத்கிருஷ்டமென்று பெயர். அத்யுத்கிருஷ்டமாவது நூறுகாரெட்டு அல்லது 75-மஞ்சாடி எடைக்கு மேற்பட்டது. இவற்றில் மிகப்பெரியது போர்த்துகல் தேசத் தரசனிடத்திலுள்ளது. அது 1680-காரெட்டு எடையுள்ளது. அதன் மதிப்பு 224-கோடி ரூபாய். ருஷிய சக்கிரவர்த்தியின் செங்கோலிலிருக்கும் வயிரம் 779 - காரெட்டெடையும் நாலுகோடி ரூபாய் மதிப்பும் உள்ளதென்று சொல்லுகிறார்கள். மற்ற வைரங்கள் எல்லாம் இவற்றில் மிகவும் எடை குறைந்தவைகளே. பிட்வைரம் என்று பேர்பெற்றதும் அதிக ஜொலிப்புள்ளதுமான ஒரு வைரம் கோல்கொண்டாக் கனிகளில் எடுக்கப்பட்டது. அதைச் சென்னபட்டணம் கவர்னராயிருந்த பிட் என்பவர் முதலில் வாங்கினார். அது இப்போது ஜர்மானிய சக்கிரவர்த்தியின் வசத்தில் இருக்கின்றது. அது 138-காரெட்டு எடையும் 48 - லக்ஷம் ரூபாய் மதிப்பும் உள்ளது.

இவ்வத்யுத்கிர்ஷ்டமென்று பெயர் பெற்ற வைரங்கள் எல்லாவற்றினும் இப்போதுள்ள நிலைமையில் உருவில் சிறியதாயினும் ஒளியிலும், அழகிலும் உலகில் ஒப்பற்றதென்று சிலாகிக்கப்பெற்றது நமது மாக்ஷிமைதங்கிய மஹாரா



ணியவர்கள் அணிந்துவருவதாகிய கோஹினூர் என்னும் வைரம்தான். இதன் விருத்தாந்தத் தை எமக்குத் தெரிந்தவளவில் இங்கு சிறிது விவரிப்போம். இக்கோஹினூரானது இந்தி யாவில் உற்பத்தியான வைரம் என்பதொன்று தவிர இன்ன காலத்தில் இன்ன இடத்தில் எடுக் கப்பட்டதென்று விசதமாக விளங்கவில்லை. இந்துக்கள் சொல்லுகிறபடி இம்மணி அநேக காலம் கடந்தது. இது பாண்டவர்களால் அணியப்பட்டதென்றும், மூவாயிரம் வருஷத் துக்கு முன் அங்கதேசாதிபதியாகிய காமன் என்பவனிடத்தில் இருந்ததென்றும் பலவாறு சொல்லுகிறார்கள். அவற்றைப் பழங்கதைக ளாகத்தள்ளிச் சரித்திரவாயிலாகப் பார்க்கு மிடத்து, இது பதினாறும் நூற்றாண்டில் கோல கொண்டா இராஜ்யத்தில் கிருஷ்ணாநதி தீரத் தில் கொல்லூர்க்கனியில் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இது கோலகொண்டா அர சர்களின் வசத்தில் நெடுநாள் இருந்து வந்தது. பின்பு 17 - வது நூற்றாண்டில் ஷாஜிஹான் மொகலாயசக்கரவர்த்தியாக டில்லி நகரில் ஆண்டுவருகையில் அவன் மகன் ஔரங்கசீப் என்பவன் தக்ஷிணகண்டத்துக்கு இராஜப்பிர திநிதியாக நியமிக்கப்பட்டு அரசு செலுத்திவந் தனன். அக்காலத்தில் கோலகொண்டா இராஜ யத்தில் அப்துல்லா என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குப் பிரதானமந்திரியும் சேனாபதியுமாக மியர்ஜும்லா என்றொருவனிருந் தான். இவன் பாரசீகதேசத்தான். மிக்க சௌரிய சாமர்த்தியங்களுள்ளவன். இவன் தன் உத்யோகத்தினால் அனேக திரவியங்க ளைச் சம்பாதித்ததன்றியும் பெரிய இரத்தின வியாபாரியாயும் பெரும் பொருளைச் சம்பா தித்துவந்தான். இவையன்றி இந்துமதகாதக னாக அவர்களுடைய கோயில்களைக் கொள்ளை யிட்டு விக்கிரகங்களை உடைத்து அளவற்ற பொருள்களையும் சம்பாதித்தான். பின்பு இவன் தன் அரசனோடு பகைத்து இராஜத்துரோகி யாகி, அவனை முற்றிலும் கெடுக்க எண்ணி மூர்க்கரை மூர்க்கர் உகப்பரென்ற முதுமொ ழிப்படித் தன்போலும் இந்துமத வைரியாகிய ஔரங்கசீபோடு சேர்ந்துகொண்டு தன் அரச னுக்குப் பகைவிளைத்தனன். அப்போது சக் கரவர்த்தியாகிய ஷாஜிஹான் தன் வேண்டு கோளுக்கெளிதில் இளங்கும்வண்ணம் தான் தன் அரசனிடத்துக் கவர்ந்ததாகிய இக்கோ ஹினூர் வைரத்தை அவனுக்கு வெகுமதியா கக் கொடுத்து இன்னமும் அதுபோன்ற வை ரங்கள் அனேகம் கோலகொண்டா ராஜனிடத் தில் உள்ளனவென்று ஆசைகாட்டி அவனைத் தூண்டிவிட்டான். இவ்வாறு இவ்வைரம் ஷா ஜிஹானுக்குக் கிடைத்தது. அப்போது இது 900-காரெட்டெடையுள்ளதாயிருந்தது.

ஷாஜிஹான் தான் பெற்ற வைரத்தை வெட்டிக் கடைந்து வேலைசெய்யும்பொருட்டு ஒரு இரத்தினவியாபாரியின் வழியாக அதனை வெனிஸ் நகரத்தானாகிய ஹார்டன்ஸியோ போர்ஜிஸ் என்னும் வைரவேலைக்காரனிடம் ஒப்பிக்க அவன் சாமர்த்தியக்குறைவினாலே, குரங்கின்கையில் கொடுத்த பூமாலையைப் போல, ஐயோ! அவ்வொப்பில்லாத உயர்ந்த இரத்தினத்தைக் கண்டபடி வெட்டிச் சிதைத்து முன்னளவில் நான்கிலொன்றாகக் குறைத்த தன்றியும் ஒளியும் தெளிவுமில்லாத பருக்கைக்கல்லைப்போல ஆக்கிவிட்டனன்! ஷாஜிஹானுக்கு அதைப் பார்த்தபோது வயிறும் குடலும் மண்டி எரிந்து அந்த வைர வியாபாரிமேல் கடுங்கோபம்கொண்டு அவனுக்குப் பதினாயிரம் வராகன் தண்டம் விதித்தான். என்னசெய்தென்ன, போன பருமன் வரக்கூடுமோ?

பின்பு ஷாஜிஹான் அவ்வயிரத்தை ஒருவாறு செவ்வைப்படுத்தித் தன்னால் இயற்றுவிக்கப்பட்ட லோகசிலாகிதமான மயூர சிம்ஹாசனத்துக்கு அம்மணியை ஓர் கண்ணாகப் பதித்துவைத்தனன். அது இந்நிலைமையில் நெடுங்காலம் மொகல் சக்கரவர்த்திகளிடத்திலிருந்தது.

பின்பு 1739-ம் வருஷம் மகம்மதுஷா என்பவன் டில்லியில் அரசு புரிந்துவந்தகாலத்தில் பாரசீக

ராஜனாகிய நாதர்ஷா என்பவன் இந்தியாவின் மேல் படையெடுத்துவந்து சக்கரவர்த்தியின் சைனியத்தைத் தோற்கடித்து டில்லி நகரைப் பிடித்து அந்நகர்க்குடிகளை ஆயிரக்கணக்காச் சித்திரவதைசெய்வித்து வீதியெங்கும் இரத்த வெள்ளம் எடுத்தோடப் பிணங்களை மலைமலையாகக் குவித்துக் கோரமாகக் கொள்ளை கொள்ள நேரிட்டது. அப்போது பாவம்! ஒன்றும் செய்ய வலியில்லாமல் பேருக்குமாத்திரம் சக்கரவர்த்திப் பெரும்பட்டம் தாங்கியிருந்த அம்மஹம்மதுஷா தன் அரண்மனையில் உள்ள பொருள்கள் யாவையும் துடைத்துக்கொடுத்து அக்கொடியோனைச் சமாதானப்படுத்திச் சிநேகம் செய்துகொண்டனன். அக்காலையில் தன் உயிரினும் அருமையாக மதித்திருந்த இக்கோகிநூரையாவது காப்பாற்றவெண்ணி அதைப் பெட்டி பேழைகளில் வைத்தால் நாதர்ஷாவுக்கு எட்டிவிடுமென்று பயந்து தன் தலைக்குட்டையில் முடிந்து ஒளித்துவைத்தான். ஐயோ அப்படியும் அதைக்காக்க முடியவில்லை. அவன் இரகஸியமாக ஒளித்துவைத்ததை யாரோ பதிவிருந்து பார்த்து நாதர்ஷாவோடு சொல்லிவிட்டனர். நாதர்ஷா அவனோடும் சமாதானமாய்விட்டபடியால் இனிச் சச்சரவுப்படுதல் சரியன்றென்றெண்ணி அம்மணியைக் கிரகிக்கப் பின் வருமாறு ஓர் யுக்திசெய்தான். மகமத்ஷாவைத் தன்னோடும் விருந்துண்ண அழைத்து இருவரும் உண்டு மகிழ்ந்திருக்கையில் மகமத்ஷாவை நோக்கித் தம்பி நானும் நீயும் நம்முடைய சிநேகமும் விசுவாசமும் நிலைத்து நிற்கும்படித் தலைப்பா மாற்றிக்கொள்ளவேண்டும் என்றான். என்னபண்ணுவான் மகமத்ஷா. தலைப்பா மாற்றிக்கொள்வதென்றால் மகமதீயர்களுக்குள்ளே மேலான கௌரவம். அக்கௌரவத்தை வேண்டாமென்று எப்படிச் சொல்லுவது. சொன்னாலும் நாதர்ஷா கேளான். ஆதலால் ஒன்றும் சொல்லாமல் பாகையோடு வயிரத்தையும் இழக்கவேண்டிவந்தது. இதற்கு ஒளிமலையென்று பொருள்படும் கோஹிநூர் என்னும் பெயர் இந்நாதர்ஷாவால் இடப்பட்டது.

பின்பு அந்நாதர்ஷா கொலையுண்டிறக்க இவ்விரத்தினம் அப்கான்தேச ராஜனாகிய அகமத்ஷா அப்தாலி என்பவன் வசமாகி அவன் சந்ததியாரிடத்தில் 1813-ம் ௵ வரையில் இருந்தது. அக்காலத்தில் காபூல் அரசனாகிய ஷாசூஜா என்பவன் தன் தம்பியினால் அரசிழந்து ராஜ்யப்ரஷ்டனாகி லாஹோர் ராஜாவாகிய ரஞ்சிதசிங்கைச் சரண்புகலாயினான். ரஞ்சிதசிங்கும் இந்த வைரத்தை அவனிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்னும் எண்ணத்தினாலேயே முக்கியமாய் அவனை அடைக்கலமாக ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தது. ஷாசூஜாவின் மனைவியாகிய ஷா பீகம் என்பவளும் தன்கணவனை அவனுக்குப் பரமவிரோதியும் பீஷாவார் அரசனுமாகிய பட்டிக்கானென்பவனிடம் காட்டிக்கொடாமல் காப்பாற்றுவாயாயின் அவ்விரத்தினத்தை உனக்குப் பரிசாகக் கொடுப்பேனென்று லாகோர் மன்னனுக்கு வாக்களித்திருந்தனள். அப்படியிருந்தும் ஷாசூஜா லாஹோரில் சௌக்கியமாகவந்து சேர்ந்ததும் அவ்வயிரத்தைக் கொடுக்க இஷ்டமில்லாதவனாய்ப் பல சாக்குப்போக்குகள்சொல்லி ரஞ்சிதசிங்கைத் தட்டிவிடப்பார்த்தான். 'கொட்டாதகண்டன் விடாதகண்டன்' கதைபோல ரஞ்சிதசிங்கு விடுகிறதாயில்லை. அதனால் முடிவில் ஷாசூஜா ஓர் யுக்திசெய்து ரஞ்சிதசிங்கின் விருப்பத்துக்கிணங்குவதுபோலப் பாவனைசெய்து அக்கோகிநூரைப்போல உருவமைந்துள்ள போலி வயிரம் ஒன்றைக் கொடுத்து ஏமாற்றிவிட்டான். ரஞ்சிதசிங்கும் அச்சூதை அறியாமல் சந்தோஷித்து அதனைத் தன் ரத்நவியாபாரிக்குக் காட்ட அவன் இது ஒன்றுக்கும் ஆகா உடைசற் பளிங்கு என்று அரசன் ஏமாந்துபோனதை அவனுக்குத் தெரிவித்தான். அரசனும் கோபங்கொண்டு உடனே ஷாசூஜாவின் அரண்மனையை வளைந்து உட்புகுந்து மேலோடுகீழ் எங்கும் தேடிக் கடைசியில் ஒரு சாம்பற்குப்பையில் புதைத்துவைத்திருக்கக் கண்டெடுத்துக்கொண்டு சென்றனன்.



அதுமுதலாக அவ்வயிரம் ரஞ்சிதசிங்கின் வசத்தில் இருந்தது. ரஞ்சித் அதைத் தன் வாகுவலயத்தில் பதித்து அணிந்துவந்தான். அவன் இறந்துபோனபின் சீக்கர்களுக்கும் அங்கிலேயருக்கும் யுத்தமுண்டாகி அங்கிலேயர் சீக்கர்களைச் செயித்து அவரது ராச்சியத்தைக் கட்டிக்கொண்டபோது இவ்வயிரம் அங்கிலேயருக்கு உரியதாயிற்று. கம்பெனியார் அதை அங்கிலேய மஹாராணியாகிய விக்டோரியா அவர்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிட்டனர். இவ்வாறு இவ்வயிரம் நம்மகாராணியவர்களுக்கு வெற்றி முறைப்படியேயன்றி டில்லி சக்கரவர்த்திகளின் ஸ்தானத்தை வகித்திருக்கும் தன்மையினாலும் சுதந்தரமாயிற்று.

இவ்வயிரம் நம் ராணியின் வசத்தில் சேர்ந்தபின்பு சாணைபிடித்துக் கடைந்து செப்பனிடப்பட்டது. அம்ஸ்டர்டாம் நகரத்தில் காஸ்டர் என்னும் பேர்போன வைரவேலைக்காரனால் அதற்காகவே அமைக்கப்பட்டு நீராவி யந்திரத்தினால் திரிக்கப்பட்ட ஓர் கருவியினால் நாளொன்றுக்குப் பன்னிரண்டுமணி வீதம் 48-நாள் வேலைசெய்து முடிக்கப்பட்டது இதனால் இம்மணியின் பருமன் முன்னையிலும் குறைந்துபோயிற்றாயினும் அதற்கு முன்னொன்றுமில்லாத அற்புதமான காந்தியும் தெளிவும் உண்டாகியது. இவ்வயிரம் இப்போது ரோஜா புஷ்பரூபமாக வெட்டப்பட்டு 102-காரெட்டு கனமுள்ளதாய் இருக்கின்றது. இது 1851, 1862-ம் வருஷங்களில் இங்கிலாந்தில் கூட்டப்பட்ட பல பொருட்காட்சி விநோதத்தில் வைத்துக் காட்டப்பட்டது. இவ்வுத்தமவைரத்தைப் பூண்டுவரும் அரசி இன்னம் நெடுங்காலம் சத்ருநிக்ரகமும், சம்பத்சமர்த்தியும், அரோகதேகமும் ஆயுள்விருத்தியும் பெற்று அரசுபுரிந்து வருவாராக.

எஸ். முத்து ஐயர், பி. ஏ.

## சஞ்சோக்தை சுயம்வரம்

### அல்லது

## ப்ரித்விராஜா சரித்திரம்.

### XVI. சிறையிற் சிந்தனை.

அன்று சாயங்காலம் ராஜ குடும்பத்துக்கு வந்துற்ற கவலைகள்போல காரிருள்வந்து பூமியைக்கவர்ந்துகொண்டது. பொழுது செல்லச் செல்லக் காரிருள் நீங்கிக் கிழக்கு வெளுத்தது. மறுநாட் காலைப்பொழுதும் விடிந்தது. சோலை வனங்களெல்லாம் பொழுது விடிய மலர்ந்து விளங்கின. தடாகங்களிலுள்ள தாமரைகளும் அப்படியே மலர்ந்தன. பறவைகள் கூட்டைவிட்டோடிக் கூவிக்கொண்டு பறந்தன. மிருகங்கள் சப்திக்க ஆரம்பித்தன. நகரில் சங்கும் முரசும் ஒலித்தன. அவ்வொலிகளைக்கேட்டு நகரமாக்கள் தூக்கம்விட்டெழுந்து அவரவர் வீடுகளை யலங்கரிக்கத் துவக்கினார்கள். நகரில் வந்திறங்கியிருந்த ராஜசைனியங்களும், பரிவாரங்களும், மல்லர், குறவர், கூத்தாடிகள் முதலான ஜனக்கூட்டங்களும், துயில்நீங்கி தேனீக்கூட்டங்கள்போல் ஆடியோடி ஆர்ப்பரிக்கத் தலைப்பட்டார்கள். ஏராளமான ஜனம் நிறைந்த அந்நகர் மறுபடியும் தேனீக்கூண்டுபோல் ஹும்மென்ற சப்தம் நிறைய மூலமூலவென்று ஜனங்கள் மொய்த்துக்கொண்டிருக்கக் காணப்பட்டது.

"புலர்ந்தனகங்குற்போதும் பொழிதருபனியுஞ்சேர,
மலர்ந்தனவனமுங்கண்ணும் வயங்கினதிசையுமூரும்
மலர்ந்தனதடமுங்காவும் ஆர்த்தனபுள்ளும்மாவும்
கலந்தனகுருகும்பேடும் கலித்தனமுரசுஞ்சங்கும்."

"மங்கலமுழவம்விம்ம மன்னுபல்லியங்களார்ப்ப
சங்கினமுழங்க வெல்லாத்தானையும்பரந்துசூழ
எங்கணுநெருங்கிவைகு மிராசமண்டலங்களோடும்"

விளங்கியது ஜயசந்தராசன் தலைநகர். இப்படியெங்கும் ஆர்ப்பும் களிப்பும் நிறைந்த அத்தொல்லைமாநகரின்கண் திருநுதலுக்குத்

திலகம்போலும் விளங்கிய அரண்மனையில் நாம் முந்தியநாள் அந்திப்பொழுதில் விட்டுப் பிரிந்த அரசனும் இராணியும் அவர்கள் பெறலரும்புத்திரியும் என்னமாக விருக்கிறார்களோ இன்னும் அறியேம். அவர்கள் மனக்கிலேசம் எப்படியாயிற்றோ அறிகிலேம். வெளியிலுள்ள ஆர்ப்பும் களிப்பும் வேடிக்கையும் விநோதமும் அரண்மனையினுட் செல்லச்செல்ல அமர்ந்து குறைந்து காண்பது ஒன்று மட்டும் தெரிகிறது. அந்தப்புறத்தை யடுத்துளோர் முகம் மந்தமாகவே யிருப்பது சந்தேகத்துக்கிடமாக விருக்கிறது. ஆயினும் உள்ளதை இருந்து காண்போம்.

* * * *

அரசன் கொலுமண்டபம்சேரக் காலமாய் விட்டது. அரசர்களெல்லாம் சுயம்வரத்துக்கேற்ற நாளையறிய ஆவல்கொண்டு சபைக்குச் செல்பவர்களாயிருக்கிறார்கள். அரசன் அந்தப்புறம்சென்று ராணியைக்கண்டு குழந்தை மனதைச்சரிப்படுத்தினையோவென்று விசாரிக்க, ராணியின் முகம் வாடி வதங்கித் தொங்கியதைக்கண்டான். காணவும் சாந்தமிழந்தான்; கோபம் பொங்கியெழுந்தது; கண்கள் சிவந்தன; உதடுகள் துடித்தன; நெற்றிகள் வியர்த்தன. "என்மனோரதம் இச்சிறுமியின் பிடிவாதத்தாலோ சிதைவுறப்பார்ப்பேன்! அவள் மனோதிடனையறிவேன்!" என்று மனதுள் எண்ணிக்கொண்டு, உடனே சஞ்சோக்தையை யழைத்துவரத் தாதியர்களுக்குத்தரவிட்டான். அவர்களும் உடனேயோடி அப்பெண்ணரசை யழைத்துவந்து நின்றார்கள். உச்சிவெயிலிற் கொய்த ரோஜாமலர்போல் அவள் வாடிவதங்கி உருவழிந்து தன்முன் நிற்பதைக்கண்டான். கண்டதும் பரிதாபமூளக் கோபம் தணிந்தது. கண்கள் சாந்தமடைந்தன. மறுக்ஷணம் அவள்மனதை யறியவேண்டிக் கேள்விகேட்க வாயெடுத்தான். மறைந்த கோபம் திரும்பிவந்து மூண்டுகொண்டது. உடனே முகமும் விழியும் சிவக்கலாயிற்று. "பெண்ணே உன் மனதெப்படி யிருக்கிறது. நேற்று நான் கேட்டகேள்விக்கு இப்பொழுது முடிவான விடைபகர்வாய்" என்று கேட்டான். சஞ்சோக்தை மனம் நடுங்கியது; உடல் ஒடுங்கியது. அச்சமும் துக்கமும் வெட்கமும் பாதிக்கப் பிரமித்துப் பதில் சொல்லமாட்டாது நின்றாள்.

"குழந்தாய் கேட்ட கேள்விக்கு விடையளிப்பாய். நேரமாகிறது!" என்று அரசன் தோளில் தடவிக்கேட்கவும் பிரமைநீங்கிப் பிரக்ஞைவரப்பெற்றாள். பெற்றும் பதில் சொல்ல நாவெழவில்லை. அரசன் பதிலுரைக்கவேண்டிப் பின்னும் வற்புறுத்திக்கேட்க, "பிதாவே, என்பிராணனை விட்டொழிவேன். தங்கள் மனதிற்கு விரோதம்செய்யத் துணிகிலேன். ஆயினும் இவ்வொருவிஷயத்தில்மட்டும் என்னை மிக நிர்ப்பந்திக்காதிருக்கப் பிரார்த்திக்கிறேன்" என்று குரல்நடுங்கப் பதிலுரைத்தாள்.

"குழந்தாய்! உன் பிடிவாதத்தை விட்டிலாய்! எனக்கு நேரிடும் அவமானத்தை யறிந்திலாய். சுயம்வரத்துக்கு எப்பொழுது நாள் குறிக்க, சொல்லிடுவாய்." என்று அரசன் மறுபடியும் வற்புறுத்திக் கேட்டான்.

"பிதாவே! என் மனதிற்கிசையாத மன்னனுக்கு மாலையிட்டுச் சுயம்வரம் கோறுதலினும் அக்கினிக்கிரையாகச் சுயதகனம் கோறுதல் எனக்கு எளிதும் இனிதுமாம். வேறு நானுரைப்பதொன்றில்லை" என்று வாய்மூடித் தலைகுனிந்திருந்தாள்.

"ஆ! பெண்ணே! அப்படியா நீ நினைத்தாய்! அதிலும் உன் துணிவைக் காண்பேன்" என்று பக்கத்திருந்த காவலரைப்பார்த்து இச்சிறுமியை இக்ஷணமுதல் கன்னியாமாடத்திலிருத்திக் கடுங்காவல் செய்வீர். அவள் மனதுக்குகந்த தாதிகளை விலக்கி, அவள் காவலுக்காக வேறு தாதிகளை யனுப்புவேன்" என்று ஆறத்தீரயோசித் தமர்ந்த தொனியில் உறுதியான ஆக்கினைசெய்தான். அடுத்த க்ஷணம் சஞ்சோக்தை தன் மனதுக்கினிய



தோழியர்கள் தாதியர்களைவிட்டுப் பிரிந்து வேறு தாதியர்கள் நடுவே தன் கன்யாமாடமே காராக்கிரகமாக மாறியதைக் கண்டாள்.

* * * *

சஞ்சோக்தை தனக்கினிய தோழிமார்களும் தாதிகளும் தன்னைவிட்டுப் பிரிக்கப்பட்டு வேறு தாதிகளும் தோழிகளும் தன்னைச்சூழ்ந்திருக்கத் தன் கன்யாமாடமே தனக்குச் சிறைச்சாலையாக ஆனதைப்பற்றி முதலில்மிக வெதும்பிவருந்தினாள். தாதிகள் தனக்குச் செய்யவந்த சைத்யோபசாரங்களை வெறுத்தாள். தன் உயிரைத் திரணமாக எண்ணி 'இந்தப்பிராணனை வைத்துக்கொண்டு வருந்துவதிலும் இதைவிட்டொழித்து வீடு பெறுவேன்' என்று அடிக்கடி அவள் சபதம் செய்துகொண்டதைக்கேட்டு தாதிகளும் தோழிகளும் மிகப்பயந்தார்கள். விசனமும் வருத்தமும் ஒரு பக்கம், வைராக்கியம் ஒரு பக்கமாக அவள் உள்ளத்தையும் உடலையும் வதக்கியெடுத்தன. கன்யாமாடத்தில் சந்தோஷம் ஒழிந்தது. சஞ்சோக்தைக்கு அன்ன ஆகாரம் கிடையாது. தூக்கமும் விட்டொழிந்தது. அவள் தேகம் தீயிலிட்ட தாமரைபோல்வாடி வதங்கிக்கருகியது. இப்படிப்பட்ட நிலைமையில் அவள் வெகுநாளைக்கிருப்பது அசாத்தியமென்று தாதிகளுணர்ந்து ராணி ரூபசுந்தரிக்கு உள்ளதை உடனே அறிவித்தார்கள். அவளும் மனமிரங்கித் தன்னிடமிருந்த தாதிகளிலிருவரைத் தெரிந்தெடுத்துச் சஞ்சோக்தைக்கு இதமறிந்து பணிவிடைசெய்து அவளைப்பாதுகாத்து வரும்படி கட்டளையிட்டனுப்பினாள். அவர்களிருவரில் ஒருத்தி ப்ரித்விராஜா அரண்மனையின் அந்தப்புறத்தில் சேடிப்பெண்ணாயிருந்து அங்கு நேர்ந்த சில அசந்தர்ப்ப சம்பவங்களால் அவ்வரண்மனையைவிட்டு, ராணி ரூபசுந்தரியினிடம்வந்து தாதியாக அமர்ந்திருந்தாள். இதுகாறும் அவளைக் கன்யாமாடத்திற்கனுப்புவதுசிதமன்றென்று ராணி ரூபசுந்தரி தன்னிடத்தே அவளிருக்கும்படி வைத்திருந்தாள். இப்பொழுது தன் மகள் மிகவும் சோகமுற்று அவளுயிருக்குத் தீங்குநேரிடக்கூடிய ஸ்திதியிலிருப்பதால் அவளை யனுப்பினால் ஆறுதல்சொல்வாளென்று மனதிற்கருதி அந்தச்சேடிப் பெண்ணை தனக்கு மிகவும் நம்பிக்கையுள்ள ஒரு தாதியோடும் சஞ்சோக்தைக்குச் சைத்யோபசாரம் செய்யும்படி கட்டளையிட்டனுப்பினாள். ஸ்திரீகளின் யுக்தி சாமர்த்தியத்தை ஊகித்துணரவல்லார் யார்? ஆயினும் ராணி ரூபசுந்தரி என்னயுக்திசெய்து அனுப்பினாளோ அது என்னமாக முடிகிறதோ பொறுத்துப் பார்ப்போம்.

இப்படி தாயார் அனுப்பிய இரண்டு தாதிகளும்வந்து பார்த்தபொழுது சஞ்சோக்தை வேருடன்பிடுங்கி வெயிலிலெறிந்திட்ட நீலோத்பலம்போல வாடிவதங்கிக் கறுத்துச் சோர்ந்து கண்பஞ்சடைந்து கிடந்தாள். வந்தவர்கள் அவளிருப்பைக்கண்டு மிக அஞ்சினார்கள். அங்குள்ளவர்களில் எவர் கிட்டநெருங்கினும் அவள் சீறிவிழுந்து சினங்கொண்டு வெதும்பினளால், அவர்கள் அனைவரையும் அவ்வறையினின்றும் அப்புறம் சென்றிருக்கும்படிச் செய்து, சாளரங்களைத் திறந்துவைத்து நல்ல காற்றுலாவும்படி வேண்டிய ஏற்பாடு செய்தாள். கிட்டநெருங்கி உற்றுப்பார்க்கவும் அவள் பிரக்ஞையற்றுப் படுத்திருப்பதை யுணர்ந்து, விளாமிச்ச வேரால்செய்த விசிறியில் தண்ணீர் தெளித்து உதறிவிட்டு அதனால் அவள் முகத்தில் குளிர்ந்த காற்றுப்படும்படி மெதுவாய் விசிறினாள். சற்று விசிரவும், முகம் சுளுங்கி வேதனைநிறைந்து விளங்கிய தோற்றம் சிறிது மாறி சுளுக்கம் நீங்கி முகத்திலுள்ள நரம்புகள் தளர்ந்து சாந்தமும் அமைதியுமான சாயல் தோன்றியதைக்கண்ணுற்று மனங்களித்தாள். இன்னமும் அவளைத் தொட்டுக்கலைக்காமற்றானே குளிர்ந்த தண்ணீரில் நனைத்துதறிய விளாமிச்சவேர் விசிரியால் விசிரிக்கொண்டிருந்தாள். பின்னும் சிறிதுகாலம் இப்படி விசிரிக்கொண்டிருக்கவும் ஒருக்களித்துப்படுத்திருந்த சஞ்சோக்தை படுக்கையில் புரண்டு நீண்டிழுத்த பெருமூச்சுகள் இரண்டு ஒன்ற

டுத்தொன்றாய் விடுவதைக்கண்டு விசாரம் நீங்கினவளாய், பக்கத்திருந்த தன் தோழியை நோக்கி "பார்த்தையா, அம்மா, அவள் மனதில் எவ்வளவு பாரம் ஏறியிருந்தது தெரிகிறதா? அவள் இளமனம் இவ்வளவு கவலையைத் தாங்கவல்லதோ? பூவைக்கசக்கிப் பிழிந்தெடுப்பதுபோல், வீணாய் அவளைப்போட்டு வாட்டுகிறார்கள்! அவள் முகக்குறிப்பாலும், விட்ட பெருமூச்சுகளாலும், அவள் மனத்திலுள்ள பாரம் நீங்கிவருவது நன்றாகத்தெரிகிறது. கொஞ்சநேரம் அயர்ந்து நித்திரை செய்தால் மிகத் தெளிந் தெழுந்திருப்பாள். அப்பொழுது கொஞ்சம் ஆகாரம் கொடுத்துத் தேற்றினால் களைதீரும். அவள் நித்திரை செய்து எழுந்திருக்குங்கால் அவள் மனதை வருத்திய ஞாபகங்கள் ஒன்றும் அவளுக்கு வாராதபடி மாற்ற நீ வீணையையெடுத்து மீட்டி மனதுக்கினியவும் சமயத்திற் குரியவுமான பண்கள் சிலவற்றைப்பாடிக்கொண்டிருப்பாய். பாட்டில் கெட்டிக்காரியென்று நீ பேர்வாங்கினவளாயிற்றே. ப்ரித்விராஜா அரண்மனையில் உனக்கு மிஞ்சினவர் யாருமில்லையாமே! உன் சமர்த்தையெல்லாம் இப்பொழுது இங்கே காட்டு பார்ப்போம்" என்று தாழ்ந்த குரலில் சஞ்சோக்தை யெழுந்துவிடப்போகிறாளென்று அமர்ந்து சொன்னாள். இதுகேட்ட மற்றவளும் இவ்வருமைச் செல்வத்தைத் தேற்றுவிக்க நான் என்னதான் செய்வதரிது. நான் செய்யும் யத்தனங்கள் பலிக்க என் அம்மன் சாரதாதேவி வீணையிலிருந்து அருள்புரிவாளாகவென்று வேண்டிக்கொண்டு சாளரவாயிலிலுட்கார்ந்துகொண்டு வீணையையெடுத்து மீட்டிப் பல பல பண்களையெடுத்து மிகவும் இனிமையாய்ப் பாடத்துவக்கினாள்.

தோகை மாமயிறூதைப்புறமுதற்
போகவோசை பயிற்றுறுபட்களும்
பாகுவா மொழிப்பாவையர்கற்பன
வாகயாழ்முதலாயவு மீட்டினாள்.

அவள் காதுக்கினிதாய் மனதுருகப்பாடிய பண்களை இப்படி கவிகூறியசெய்யுளில் பொதுவாக எடுத்துக்கூறலாமேயன்றி மற்றப்படி விவரமா யெடுத்துரைக்கச் சிறிதும் எமக்குச் சாமர்த்தியமில்லை. இப்படி அவள் தேவாமிர்தம் போலும் பொழிந்த கான ஓசை சஞ்சோக்தை காதிற் புகவும் அவள் தூங்கிக்கொண்டே புன்நகைசெய்து முகமலர்ந்ததைக் காண, கிட்டவிருந்த தாதி, அப்பண்கள் அவள் காதுக்கினிமையூட்டுவதன்றி மனதுக்கும் ஹிதமாகவேயுள்ளன வென்பதையுணர்ந்து மகிழ்ந்தாள். உடனே அவள் தன் தோழியைப்பார்த்து "சகீ! உனது பண்கள் நம் தேவிக்கு இனிமை யூட்டுவதன்றி இதமாகவுமிருக்கின்றன, நீ கெட்டிக்காரிதான்; இன்னும் நன்றாகப்பாடு!" என்று மிருதுவசனமாகச் சொன்னாள். மற்றவளும் தன் பிரயத்தனம் பலிதமாவதைக்கேட்டுச் சந்தோஷித்து உற்சாகமேலீட்டால் வரவர மேலுமேலும் மிக இனிமையாகவும் இரசமாகவும் பாடிக்கொண்டு சென்றாள். கடைசியில் அவள் அனலிலிட்ட மெழுகுபோல் மனதுருகப் பின்வரும் பாட்டை மிகவுமினிய ராகத்தில் பாடத் துவக்கினாள்:

"இன்னுமெத்தனைநாட்செல்லும் ஏழையேன்
இடர்க்கடல் விடுத்தேற
மின்னும்வேற்படைமிளிர்தருங் கைத்தல வித்தகப்
பெருமானே."

. . . . .

"ஈறிலாதநின்னருள்பெற எனக்கினுமெத்தனைநாட்
செல்லும்
மாறிலாதவர்மனத்தொளிர்சோதியே மயில்மிசை
வரும்வாழ்வே."

. . . . .

இப்பாட்டுகளைக் கேட்கவும் சஞ்சோக்தை முகம் மலர்ந்து தளர்ந்து பாடினவள் இராகம்போனபடி அவள் மனமும் சென்று இரக்கம் நிறைந்து உள்ளமுருகியது அவள் முகத்தில் விளங்கியது. முதற்பாட்டைக் கேட்டவுடனே அது தன் மனதிற்சென்று பதிந்ததை முகக்குறியால்காட்டிய சஞ்சோக்தை இரண்டாவது பாட்டுப்பாடி முடியுமுன் முழுப்பிரக்ஞையும்வந்து கண்விழித்து இப்படி இனிமையாகப் பாடுவது யாரென்றுபார்க்கத் திரும்பினாள்.



கண்விழித்துத்திரும்பவும், தன் அறையில் வேறுயாவருமின்றி இருதாதிகள் மட்டுமிருக்கவும் அவர்களில் ஒருவள் கிட்டவிருந்து விசிறவும் மற்றவள் எட்டியிருந்து இனியகுரலில் பாடவும் கண்ட சஞ்சோக்தை மனங்குளிர்ந்து "அம்மா நீ நன்றாகப்பாடுகிறாய்; நீ பாடிய பாட்டுகள் என் மனதுக்கு மிகவும் இதமாயிருக்கின்றன. கூடப் பாடவேண்டுமென்று விருப்பமாகவிருக்கிறது. இப்படி கிட்டவந்து உட்கார்ந்துகொள்" என்றுசொன்னாள். உடனே கிட்டவிருந்த தாதி "தாயே! உடல் மிக நலிந்திருக்கிறது. களைதீரக்கொஞ்சம் பால்பருகிப்பாடினால் திடனாயிருக்கும். இந்தா இதையருந்து" என்று பொற்கிண்ணத்தில் பாலும் சிறிது பக்ஷணமும்கொடுக்க அதை வாங்கி ஆவலோடருந்திச் சிறிது இளைப்பாறினதும் மற்றொருவளோடு தானும் வீணையையெடுத்துமீட்டி இனியராகமிட்டு இரக்கம் நிறைந்தொழுகப் பின்வரும் பாடலை இருவருமாகப்பாடினார்கள்:—

பாவியேனின்னுமெத்தனை நாட்செல்லும் [1]பருவரல்
விடுத்துய்ய
கூவியேயன்பர்க்கருள்தரும்வள்ளலே குணப்பெருங்
குன்றேயென்
ஞவியேயென்னையாள்குருவடிவமே ஆனந்தப்பெரு
வாழ்வே
[2]வாவி[3]யேர்தரும்தணிகைமாமலைமிசைமன்னிய
[4]வருட்டேனே.

"ஆ! சகீ! என் மனதுக்கு இப்பாட்டு எவ்வளவு இதமாயிருக்கின்றது. புண்பட்ட என் மனதிற்குப் பரிமளதைலமிட்டதுபோல விருக்கிறது. அதை இன்னுமொருதரம் பாடுவோம்:" என்று மறுபடியும் அதை இனிய இராகத்தோடு உடலுருக மனங்கவிய மிக விரங்கிப்பாடினாள்.

பாடிமுடிந்ததும், "சகீ! ஆபத்காலத்திற்கு அடைக்கலமாக வந்துதவினாய். உன்னிடத்து என்னை யறியாது என் மனம் கவிந்து செல்லுகின்றது. இங்கு உன் கடமையென்ன சொல். நீ யெனக்கு இதமாயிருப்பது உன்னை யனுப்பியவர் மனதுக்குகப்பாமோ சொல்! நீ யென்னை ஆற்றித் தேற்றவந்தாயானால், என்னை வருத்த நியமிக்கப்பட்டவர்களெல்லாம் எங்கே சொல். என் மனம் தபிக்கிறது! என் சிறை நீங்கிற்றோ? என்னை யடுத்திருந்தவர்களெல்லாம் எங்கே?" என்று ஆவலாய்க் கேட்டாள்.

"அம்மா, உனக்கு இதமாயிருக்கவேண்டுமென்றே உங்கள் தாயார் எங்களிருவரையும் இங்கு அனுப்பினார்கள். நீங்கள் மனோதைரியத்தை விடாதிருந்தால் உங்களுக்கு ஒரு குறையும் நேரிடாது. எல்லாம் காலப்பலன். உண்மையானகாதற்கு உற்றிடும் இடர்கள் எத்தனையோ உள. அவைகளினிமித்தம் அதைரியப்பட்டு தங்களைப்போலும் மங்கையர்க்கரசிகள் மனமுடைந்துபோவது சரியன்று. எல்லாவற்றிற்கும் மனோதைரியம் வேண்டும். அது ஒன்றிருந்தால் கைகூடாதகாரியம் ஒன்றுமில்லை. தாங்கள் தைரியத்தைக் கைவிடாதிருக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றாள்.

"தோழீ! நீ யென்னிடத்து வைத்துள்ள அனுதாபத்திற்காக நான் உனக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் என் காரியம் கைகூடுவதெப்படி? என்னை யிவர்கள் நிர்ப்பந்திக்காதுவிட்டால் அதுவேபோதும். காளிக்குப்பலிகொடுப்பதுபோல் காதலில்லாப்புருஷனை மாலையிட்டு ஜீவபலிகொடுக்கச் சொல்கிறார்களே அதுதான் எனக்குச் சகிக்கவில்லை. இந்தத் துன்பத்திலிருந்து நான் எப்படி தப்பித்துக்கொள்வேன். என் பிராணனைக்கொடுத்தே தப்பித்துக்கொள்ளவேண்டும். நீ என்னிடத்து அநுதாபம்வைத்தது உண்மையானால் இந்தக் காரியத்திற்கு இடர் செய்யாதிருப்பாய். இதுவே நீ எனக்குச் செய்யத்தக்க பேருதவி!" என்றாள்.

சஞ்சோக்தை யிப்படிச்சொல்லவும் அவள் தோழி முகத்தில் விசனக்குறி நிரம்ப: "அம்மணீ! நீங்கள் இவ்வளவுதூரம் அதைரியப்பட்டு மனமுழல்வது எனக்கும் பெருவருத்

[1] வருத்தம். [2] குளம். [3] அழகிய. [4] அருள்+தேனே.

தமாக விருக்கிறது. எதற்கும் மனோதைரியம் வேண்டும். ஆபத்துக்காலத்தில் அதை யிழந்தால் நடுக்கடலில் திசைகாட்டுங்கருவியை யிழந்த மாலுமிபோலாவோம். திசைதப்பின மாலுமி திசை காட்டுங்கருவி யென்னத்திற்கென்று அதை யெறிந்துவிட்டால் அவனுக்குப் பின் என்னகெதி நேரும். இதை மனதில் உன்னி நீங்கள் மனோதைரியத்தைக் கைவிடாதிருக்கவேண்டும். உயிருள்ளமட்டும் ஆசையுண்டு. உயிரை விட்டுவிடத் தீர்மானித்தால் அப்புறம் என்ன விருக்கிறது. உயிரை வாங்குவது எளிது, காப்பது கஷ்டம். நீங்கள் இப்படி மனோதிடமிழந்திருந்தால் ஒரு காரியமுமாகாது. ஆகையால் மனதைத்தேற்றிக் கொள்ளுங்கள். நான் தங்களுக்கு வழிசொல்கிறேன். நான் ப்ரித்விராஜாவின் அந்தப்புறத்திலிருந்து பழகினவள். அவருடைய குணவிசேஷங்களெல்லாம் எனக்குத் தெரியும். ஏகாம்பரிமாதா உங்களுக்கு அருள்புரிவாள். பாரத்தை யவள்மேல் போட்டுவிட்டு நீங்கள் மனோதைரியத்தைக் கைவிடாது திடனாயிருங்கள். இந்தப்புறாக்கூண்டிலுள்ள புறாக்கள் எவ்வளவு சந்தோஷமாக நிச்சிந்தையாய்க் கூடிக்குலாவி உறவாடுகின்றன பாருங்கள்" என்று அவளைத் தனியாக அழைத்துக் கொண்டுபோனாள். சஞ்சோக்தையும் அவளுடைய செல்வாக்குக்கு ஈடுபட்டவளாய் அவள் இட்டுக்கொண்டுபோனபடி தன் உடலை மட்டுமன்றி மனதையும் அவளிஷ்டப்படியே போகவிட்டாள்.

அந்தச் சேடிப்பெண்ணும் சஞ்சோக்தை தனக்கு ஈடுபட்டுவருவதை யுணர்ந்து, மெல்ல மெல்ல அவள் மனதிலுள்ள ஏக்கத்தைப் போக்கி அவள் மனோரதம் நிறைவேறலாகாதா என்கிற ஆசையையுண்டுபண்ண யத்தனித்தாள்.

இருவரும் தனித்துச் சிலநேரம் புறாக்களைப்பார்த்துக்கொண்டு பேசியிருந்தபின் சஞ்சோக்தை அவள் பக்கத்திருந்த தோழியை நெருங்கி "அம்மா நீ ப்ரித்விராஜாவின் குணவிசேஷங்களை யறிவாயென்று சொன்னாயே. அவரைப்பற்றி யுனக்குத்தெரிந்ததைச் சொல்: கேட்க விருப்பமாயிருக்கின்றது" என்றாள்.

கூடவிருந்தவள் "அம்மணீ, அந்த விஷயமாகப்பேச இது சமயமன்று. ஆனால் உன்னை யறியாது உன் மனதைக் கொள்ளைகொண்ட வீரன் உன் மனதையறிந்தால் நெடுங்காலம் உன்னை யிப்படித்தவிக்கவிட்டிரான் என்பது மட்டும் நிச்சயம். இதை நான் திண்ணமாய் அறிவேன்" என்று சொன்னாள்.

"அப்படியா! ஆனால் அவருக்கு என் மனது இப்படியிருக்கிறதென்று இன்னும் தெரியாதோ? ஆம்! என்னமாகத்தெரியும். அவர் வந்தபொழுதுரோசத்தால் செய்த சாகசத்தில் என் ஞாபகம் எங்கேயிருக்கப்போகிறது. எனக்கும் அவர்செய்த சாகசச்செய்கையைக் கேட்டபின்தானே அவரிடத்து அடங்காக்காதல் உண்டாயிற்று. என்மனதையும் என் நிலையையும் அவருக்கு நான் எப்படித்தெரிவிப்பேன்! ஆ! ஏகலிங்கா!" என்று பெருமூச்சுவிட்டாள் சஞ்சோக்தை.

அதைக்கேட்டிருந்த அவள் பாங்கி: "அம்மா, அதைரியப்படாதே: பொறுத்துக்கொள்; போகப்போக நாம் இதைப்பற்றி யோசனை செய்யலாம். இப்பொழுது நமது சிந்தனை இவ்வழியிற்செல்கிறதென்பதை இங்குள்ளவர் எவரேனுமறிந்துகொண்டால் காரியம் கெட்டுப்போகும். ஆகையால் இதைப்பற்றி நாம் செய்யும்யோசனை கமுக்கமாகவேயிருக்கட்டும். இந்த விஷயத்தில் தாங்கள் மிகச்சாக்கிரதையாக விருக்கவேண்டும். இப்பொழுது தங்கள் தாயார் தங்களுடைய தேகஸ்திதியைக்கேட்டதுமுதல் மிகச்சிந்தனைப்பட்டுக்கொண்டிருக்கிறார். அவருக்கு ஆறுதல் செய்திசொல்லியனுப்புவோம் வாருங்கள்." என்று அழைத்துக் கொண்டுபோனாள்.

இந்தச்சம்பாஷணை நடந்ததுமுதல் சஞ்சோக்தைக்கும் இவளுக்குமுள்ள பரஸ்பரநேசமும் விசுவாசமும் முற்றி இருவருக்கும் நம்பிக்கை யதிகமாகவுண்டாகி வளர்ந்துவந்தது. இதுமுதல் சஞ்சோக்தைக்கு இவளொருத்தியே இஷ்டமுள்ளவளானாள். மற்றவர்கள் கிட்டவந்தாலும் வெறுக்கத் தலைப்பட்டாள். இப்படியிருவருக்கும் அந்நியோந்நியம் முற்றவே அவர்கள் கூடிக்கலந்துபேசசமயங்களும் அதிகரித்தன. அவர்கள் இருவரும் சதா பேசிக்கொண்டிருந்தமையாலும் அரசன் விதித்த சிறையிருப்பில் அவளுக்கு வேறுசகாயமில்லாமையாலும் இவர்கள் பேச்சுவார்த்தைகளை மற்றவர்கள் முதலில் உற்றுக்கேட்டு உளவறிய முயற்சித்ததுபோல், பிந்தி யேதும் பிரயத்தனம் செய்யாதொழிந்தனர்கள். இப்படி பிறர்க்குச்சமுசயமொழிந்துபோகவும், மாடப்புறா, மணிப்புறாக்களையும், தொம்பர், குறவர், மல்லர் முதலான கூத்தாடிகள் வேடிக்கையாடிகளையும் பற்றி இவர்கள் அடிக்கடி பேசிவந்த பேச்சுகள், இடையிடையே குரல்தாழத் தலைசாயப் பரமரகசியங்களாக மாறிவந்தன. என்னபேச்சுப் பேசினார்களோ என்ன இரகசியம் சொல்லிக்கொண்டார்களோ யாவரும் அறிய வழியில்லை. எல்லாரையும்விட இவர்கள் நடவடிக்கைகளை உற்று நோக்கிவந்த நமக்கு இவர்கள் ஏதோ சிந்தனைகொண்டு பெரிய மந்திராலோசனை செய்துவருகிறார்களென்பதொன்றுமட்டும் ஊகமாய்ப்பட்டது. மற்றப்படி துப்புத்துறவு ஒன்றும் தெரியவில்லை. "ஸ்திரீபுத்தி: ப்ரளயாந்த:" என்று சம்ஸ்கிருதத்தில் ஒரு வசனமுண்டு: அதாவது ஸ்திரீகளுடைய யோசனையானது பிரமாதம் விளைக்கும் என்று அருத்தம். இவர்கள் செய்தயோசனை என்ன பிரமாதம் விளைக்குமோ. ஏதோ பின்னால்தான் தெரிந்துகொள்ளவேண்டும்.

C. V. S.

ஓம் தத்சத்.

## இமாலய அத்வைத ஆச்சிரமம்.

ஹிமாலயத்தில் மாயாவதீ யென்னும் ஸ்தலத்தில் ஏற்பட்டிருக்கும் "அத்வைத ஆச்சிரமத்"தைப்பற்றி நமக்கு வந்த விளம்பரப் பத்திரத்தை யாவருமறியக் கீழே மொழிபெயர்த்துப் பிரசுரிக்கிறோம் :—

இந்த ஜகம் யாரிடத்திலிருக்கின்றதோ, ஜகத்தினுள்ளே எவனிருக்கின்றானோ, ஜகத்ரூபமாயிருப்பவன் எவனோ, யாரிடத்தில் ஆத்மாவானது இருக்கின்றதோ, ஆத்மாவுக்குள்ளே எவனிருக்கின்றானோ, ஜீவர்களில் ஆத்மாவாயிருப்பவன் எவனோ, அவனை அறிவதும், நம்முடன் ஜகத்தை அபேதமாக அறிவதுந்தான் பயத்தையெல்லாம் போக்கி துன்பத்தை தொலைத்து முடிவில்லாத மோக்ஷத்தைக் கொடுக்கும். எங்கே அன்பின் ஆதிக்கமும் ஒழுக்கத்தின் விர்த்தியும் இருக்கின்றதோ அங்கே எல்லா ஜீவர்களின் ஏகத்வமாகிய அழியாத சத்தியத்தைக் காண்பதும் அறிவதும் அநுபவிப்பதுமாயிருக்கிறது. ஆஸ்ரயம் துக்கம், அநாஸாயம் ஆனந்தம், அந்த அத்வைத ஞானந்தான் ஜீவர்கட்கு சுதந்தரத்தையே கொடுத்து அவர்களுடைய பந்தத்தையும் அதைச்சார்ந்த அஞ்ஞானங்களையும் போக்கி அனுபவிக்கவும் இயற்றவும் நமக்குத் தைரியத்தைத்தந்து கடைசியாக மோக்ஷத்தைக் கொடுப்பது.

இதுவரையும் த்வைதபாவமாகிய பலஹீனத்தின் சம்பந்தமில்லாமல் இந்த மகத்தான சத்தியத்தைப் போதிப்பது சாத்தியமாக இருக்கவில்லை. சர்வ ஜனங்கட்கும் பிரயோசனகரமாக இந்த ஞானம் ஏன் வழங்கிவரவில்லை என்பதற்கு இதுவே காரணம் என்பதை நாம் கண்டிருக்கிறோம்.

இந்த ஒன்றான சத்தியத்தை ஜனங்களின் நிலைமையை உயர்த்தி எல்லா மனிதர்களையும் சமப்படுத்தி சர்வ சாதாரணமாய் உபதேசிப்ப

தற்காக (இந்த ஞானம் முதலிலே சலனமடைந்த ஸ்தானமாகிய) இமாலயத்தின் உச்சியிலே அத்வைதாச்சிரமத்தை நாங்கள் ஸ்தாபித்திருக்கிறோம். இந்த சுவாமி விவேகாநந்தர் பூரணமாக சம்மதித்து நடத்திவருகின்றார்.

பலவிதமான அஞ்ஞானங்களிலும் பலவீனத்தைத் தரத்தக்க தோஷங்களிலும் இருந்து அத்வைத ஞானம் நீங்கியிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. பரிசுத்தமும் களங்கமற்றதுமாகிய அத்வைத ஞானமே அங்கே கற்பிக்கப்பட்டும் பயிற்சிசெய்யப்பட்டும் வருகிறது.

இந்த ஆச்சிரமமானது, இதர மத சித்தாந்தங்களோடு முற்று மனுதபித்தாலும், முக்கியமாக அத்வைதத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த ஆச்சிரம சம்பந்தமான வேலை விசேஷமாக போதனுவழியையனுசரித்ததாக விருக்கும். அநுபவமுள்ள உபதேசிகளை உலகத்தில் அனுப்புவதும் கிரந்தங்களை பிரசித்தம்செய்வதும் முக்கிய சாதனங்களாக உபயோகிக்கப்படும். ஆகையினாலே இந்திய ஐரோப்பிய பெண்களையும் ஆண்களையும் முறையே கீழ்த்தேசங்களிலும் மேற்கிலும் அத்வைதவேலையைச் செய்வதற்காக பயிற்றுவிக்கும் வேலை நடந்துகொண்டிருக்கின்றது.

அத்வைதத்தில் உயர்ந்த பதவி உண்டாகும் என்று நம்பி பரமாத்மாவோடு கலந்து மற்றவர்களையும் அவ்வாறு கலப்பதில் உதவி செய்ய விரும்புகின்ற ஸ்திரீகளும் புருஷர்களும் தங்கள் தங்களது சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி ஏற்ற விதமாக இந்த ஆச்சிரமத்தின் உத்தேசத்தை நிறைவேற்றுதலில் உதவிசெய்யும் பொருட்டு இந்த ஆச்சிரமத்தில் சேரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(Mrs.) C. E. Sevier (ஸி. இ. ஸெவியர்.)
J. H. Sevier (ஜெ. எச். ஸெவியர்.)
Swarupananda (ஸ்வரூபாநந்தா.)

இன்னும் மற்றவிவரங்களும் ஆச்ரமவிதிகளும் ஹிமாலயத்தில் குமாயுன் டிஸ்திரிக்ட்டிலிருக்கும் மாயாவதி ஸ்தானத்தில் ஏற்பட்டுள்ள அத்வைத ஆச்ரமத்துக் காரியதரிசிக்கு எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

## சிறுவர்க்கான 'கிண்டர்கார்டன்' பாட்டுகள். *

(ராவ்பஹதூர் ஸி. நாகோஜிராவ் அவர்கள் அனுப்பியவை.)

### 1. இராகம் - நாட்டை - தாளம்—ஆதி.

பல்லவி.

பூமாலை கட்டவாருங்கள் - தோழிகளே (பூமாலை)

அனுபல்லவி.

சீமான்கள் யாவரும் - சிந்தை மகிழும்படி (பூமாலை)

சரணங்கள்.

1. நூலை யோர் ஊசியில் - நுழைத்தே நாடிக்கண்டு
பாலைகள் நாம் நல்ல - பாட்டுக்கள் பாடிக்கொண்டு (பூமாலை)

* These songs suitable for Primary Schools have been sent to us by Rau Bahadur C. Nagoji Rau, Inspector of Schools, Southern Circle, for publication in the *Vivaka Chintamani.*—Ed. V. C.



2. மல்லிகை சண்பக - மாலதி சம்பங்கி
முல்லை மருக்கொழுந்து - முறையே சேர்த்துத்தங்கி (பூமாலை)
3. தாவணி பாவாடை - தரித்து நகை பூண்டு
எல்லோருங்கூடி யோர் - இடத்திலிருந்து வேண்டு (பூமாலை)

### 2. இராகம் - பைரவி - தாளம்—சாப்பு.

பல்லவி.

பொம்மையை இப்போது காணேனே நான்
என்ன செய்வேன் - பொம்மையை இப்போது காணேனே.

அனுபல்லவி.

அம்மைக்குத் தெரிந்தாக்கால் - அடிப்பாள் வருவீரே
ஆரேனும் எடுத்திருந்தா - லதைத் தருவீரே. (பொம்மை)

சரணங்கள்.

1. வீட்டிலிருந்து மிக - விரும்பிக் கொணர்ந்தேனே
விளையாட்டில் காணுமல் - போனதை உணர்ந்தேனே (பொம்மை)
2. ஆ - ஆ - அது வெகு - அழகுள்ளதாச்சுதே
ஐயோ வென்கைதப்பி - யெங்கேயோ போச்சுதே (பொம்மை)
3. எங்கெங்கும் தேடிப்பார்த்தேன் - இல்லை என்செய்வேனுன்
இனி எங்கெ* போவேனுன் - யாரிடம் கேட்பேனுன் (பொம்மை)

* 'எங்கே' யென்பது குறுகியது.

### 3. இராகம் - பைரவி - தாளம்—ஆதி.

பல்லவி.

கண்டபடித் திரியவேண்டாம் - தோழர்களே கண்டோருடன் சேரவேண்டாம்.

அனுபல்லவி.

தெண்டனிட்டேன் நீங்களிப்பால் - திரும்பிவாருங்கள்
இனி கண்டபடித் திரியவேண்டாம்.

சரணங்கள்.

1. காலத்தை வீணுகக்கழிப்பது நியாயமோ
காலியாய்த் திரிவது - கனத்த வுபாயமோ (கண்டபடி)
2. பாடத்தைக் கருத்துடன் - படியாமலே நீங்கள்
பரிஹஸித்தே பிறரைப் - பழிக்கலாமோ போங்கள் (கண்டபடி)

3. பெரியோர்கள் சொல்வதைப் பிரியமாய்த் தரிப்பீரே
பேதைத்தனமில்லாமல் - பெருமையாயிருப்பீரே (கண்டபடி)

---

4. இராகம் - சங்கராபரணம் - தாளம்—சாப்பு.

பல்லவி.

தோழர்காள் வாருங்கள் - ஊர்கோலம்பார்க்க. (தோழர்)

அனுபல்லவி.

சூழவே மகிழ்ந்து நாம் - எல்லோரும் கூடுவோம
சொகுசாகவே சங்கீதம் - தனைப்பாடுவோம். (தோழர்)

சரணங்கள்.

1. பட்டப்பகலைப்போல - பளிச்சென்று நிலவெறிக்க
பார்க்கத் தெவிட்டாத - பாணங் கண்ணைப்பறிக்க
சட்டமாயானையுடன் - சவாரிப்பறி யார்க்க
சகலரும் கூடிச்செல்லும் - சந்தோஷந்தனை பார்க்க (தோழர்)

2. பக்கத்தில் தீவட்டி - பலர் கொண்டுபோஷிக்க
பற்பல வாத்தியங்கள் - பலதிக்கிலுங்கோஷிக்க
தக்கபரிஜனங்கள் - தங்கித்தங்கி நடக்க
தாம்பூலபுஷ்பாதிகள் - தரித்துத் துன்பங்கடக்க (தோழர்)

3. கணக்கில்லாத ஜனங்கள் - கண்டுமிகக்களிக்க
காட்சிக்கினிய பல்லக்கைச் - சுமப்போர் நெளிக்க
மணப்பெண்ணும் - மாப்பிள்ளையு - மகிழச்சியுடனேபார்க்க
மகிமை யாய் ப்போவதை - மனம்பூரித்தேநோக்க (தோழர்)

4. பண்டு பரிஹாஸமாய் - பல்லக்கின் பின்னே நல்ல
பாவையரனைவரும் - பலபல வார்த்தை சொல்ல
வண்டிகள் விதம் விதம் - வரிசையாகச்செல்ல
வருகின்ற அழகான - வைபவம் பார்க்க மெல்ல (தோழர்)

---

5. இராகம் சங்கராபரணம் - தாளம்—சாப்பு.

பல்லவி.

யானை போகிறதை நீ வந்து பார் - ஆடி ஆடிக்கொண்டு
யானை போகிறதை நீ வந்துபார்.



அனுபல்லவி.

யானைபோகிறது பார் - இரண்டுமணி யோசையும்
யாவரும் கேட்டிட-இத்தெருமத்தியில். (யானை)

சரணங்கள்.

1. எதிரில் இருப்பதெல்லாம் - இலேசாகவே கண்டு
ஈகொசு மொய்யாமல் - இருசெவி யாட்டிக்கொண்டு (யானை)

2. பூமி யதிராமல் பதியவே கால்வைத்து
பொறுமையாய் பாகனைப் - பொருந்தவே மேல்வைத்து (யானை)

3. கறுத்த உடம்புடனே - பருத்த கொம்பதைவாயில்
கவ்விக்கொண்டதோ - வென்று கருதும்படிக்கின்று (யானை)

---

## சம்பகமாலை

அல்லது

## இளையராஜாவின் தீர்மானம்.

### அங்கம் V.

---

### மூன்றும் களம்.

---

இடம்:—கோட்டை வாசற்படி.

(சோண்டா குதிரைப்பட்டாளங்களுடன் பிரவேசிக்கின்றான்.)

(கோட்டை வாசற்படி காவற்காரரும் பிரவேசிக்கின்றார்கள்.)

**காவற்காரர்கள்.**—சிப்பாய்காள்! நீங்கள் ஆர்! கோட்டைக்குள் விடமாட்டோம் உங்களை; இவ்விருட்டில் எங்கிருந்து வருகிறீர்கள் நீங்கள்? கொள்ளைக்காரரா?

**சோண்டா.**—காவற்காரர்காள்! நாங்கள் கொள்ளைக்காரர்கள் அன்று. இச்சித்தூருக்கு அருகாமையிலுள்ள தலைவர்கள் கோதண்டாவில் மகாராணா விருந்து செய்கிறாரென்று கேள்விப்பட்டு ஆங்கு சென்று விருந்துண்டோம். மகாராணா ஆங்கிருந்து புறப்பட நேரமாயினமையால் அவருக்குச்சகாயமாய் தொடர்ந்துவந்தோம்.

**காவற்காரரில் ஒருவன்.**—(மற்றவனை நோக்கி) அண்ணா! கோட்டைக்குள் விடலாமா இவர்களை?

**மற்றவன்.**—தம்பி! விடலாம், விடு.

(கதவைத்திறக்க சோண்டா பிரவேசிக்கின்றான். உடனே பின்னால் இன்னும் சில சைந்நியம் வருகின்றது.)

**மூற்காவற்காரன்.**—அண்ணா! மோசம்போனோம்! விடாதே! அவர்களை விடாதே! இதோ பெருத்த சைந்நியம் வந்துகொண்டிருக்கின்றது. சத்துருக்கள்! சத்துருக்கள்! ஓடிப்போய் சமரசிங்குக்குச்சொல்; காரியம் கெட்டுப்போயிற்று.

(மற்றவன் ஓடுகின்றான் சோண்டாவின் சைந்நியம் கலந்துகொண்டது.)

(சமரசிங்கு பிரவேசிக்கிறான்.)

**சமரசிங்கு.**—எவனடா இக்கோட்டையில் திருட்டாட்டமாய் பிரவேசித்தது? இப்போதே உன்னை நாசம்செய்துப்போடுகிறேன் (எதிரே விரைவாய்வருகிறான்.)

**சோ.**—(கத்தியை உருவிக்கொண்டு) அஹீரர்களே! உங்களுடைய மகாராணாவுக்காக சண்டை போடுங்கள்! உங்களுடைய தலைவனாயிருக்கும் சோண்டாவாகிய நான் என்னுடைய பிராணனை மகாராணாவுக்காகக் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேன்! கத்தியை உருவுங்கள், என்னைத் தொடருங்கள், இவர்களை வெட்டுங்கள், குத்துங்கள்.

(அஹீரர் கத்தியை உருவி வெட்டுகிறார்கள்.)

**சமர.**—(கத்தியை ஓங்கிக்கொண்டுவந்து) எவனடா நீ? மோசம்! மோசம்! எந்த மகாராணாவுக்

காகவடா நீ வந்தாய்! ஊரைவிட்டுப் போன உனக்கென்னடா இங்குவேலை? பிராத்ருத் துரோகி! ராணி உன்னை தேசத்தை விட்டுத் துறத்தினாள். நான் உன்னை பூலோகத்தை விட்டுத்துறத்தி யமலோகத்தில் உன் தம்பி ராஜதேவனிடம் சேர்ப்பிக்கிறேன். மகாராணாவின் தேசத்தை மோசமாய்க் கைப்பற்றவாவந்தாய்!

இதோ இந்த கத்தியை ஏற்றுக்கொள்.

(ஓங்கி அடிக்கின்றான்.)

**சோ.**—(தப்புவித்துக்கொண்டு) அடே! சுவாமித் துரோகி! உன்னை யமலோகம் அனுப்பவே வந்தேனிப்போது! (வெட்டிக்கீழேதள்ளுகிறான்.)

**ஙேகாவில்லி.**—(பிரவேசித்து) காவற்காரரை எல்லாம் கொன்றுவிட்டோம் மகாராஜ்! வேறு என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்.

**சோ.**—என் சினேகிதர்களே! என்னைத்தொடர்ந்து வாருங்கள். ராத்தோர் குலத்தான் ஒவ்வொருவனுடைய தலையும் பூமியில் விழும்வரையிலும் நாம் இளைப்பாரலாகாது. வாருங்கள்! வாருங்கள்! (கத்தியைத்தூக்கி சலாம் செய்து) ஏகலிங்க கீ ஜேய்! மகாராணா முகுல்ஜீ கீ ஜேய்!

**மற்றவர்கள்.**—(அவ்வாறே சொல்லிவிட்டு) சோண்டா மகாராஜ கீ ஜேய்! (போகிறார்கள்.)

---

## அங்கம் V.

---

### நான்காம் களம்.

---

இடம்:— அந்தப்புரம்.

(ரின்மலும் லால்பாயும் பிரவேசிக்கிறார்கள்.)

**ரின்மல்.**—(அபினிமயக்கத்துடன் லால்பாயின் துடையில் தலையைச்சாய்த்துக்கொண்டு) என் கண்ணே! என்கரும்பே! என் அன்னமே! நாளுக்குநாள் நீ இனிமையிலதிகமாகிறாய்! எவ்வளவுக்கெவ்வளவு நீ என்னை வெறுக்கின்றாயோ அவ்வளவுக்கவ்வளவு உன்முகமென்ன (மோவாய்க்கட்டையைப்பிடிக்க, கையைப் பிடித்து உதறுகிறாள்) உன்கண்களென்ன! அன்றைக்கு நீ பூமியினின்று கஷ்டப்பட்டுப் பிடுங்கவேண்டிய கரும்பாயிருந்தாய்! இன்றைக்கோ நீ ஆலையிற்பிழிந்தெடுத்த ரசமாக விளங்குகின்றாய். நீ இன்றைக்கு அவ்வளவு மதுரமாயிருக்கின்றாய், நீ இன்றைக்குக்கொடுத்த பானம் என்னை ஆகாசத்தில் கிளப்புகின்றது. உன் துடையில் உரங்க எனக்கு உத்தரவுகொடுக்கின்றாயா கண்மணீ!

(லால்பாய் தலையைத் திருப்பிக்கொள்ளுகிறாள்.)

**ரின்.**—என்ன? என்கண்மணீ! இன்னும் எனக்கு பதில் சொல்லவில்லை, தலையை ஏன் திருப்பிக்கொள்ளுகிறாய். உனக்கு இஷ்டமில்லையா?

**லால்பாய்.**—உமதிஷ்டப்படி செய்யுங்கள் மகாராஜ்.

(ரின்மல் மயக்கமாய்த் தூங்குகிறான். வெளியே யுத்த ஓசை.)

**லால்.**—(உற்றுக்கேட்டு) என்ன ஓசை! யுத்தம் போல் தோன்றுகின்றது. சோண்டாராஜன் வந்துவிட்டானோ? இதோ துபாக்கி சத்தம் கேட்கின்றது, வில் நாண் ஓசைப்படுகின்றது (சற்றுயோசித்து) தடையில்லை சோண்டா ராஜன்வந்துவிட்டான். (ரின்மல் முகத்தைப் பார்த்து) அவன் அபினி மயக்கத்தில் மூழ்கியிருக்கின்றான். வெளியில் நடக்கின்ற அமளி ஒன்றும் இவனுக்குக்கேளாது. இதுதான் நல்ல சமயம். இவன் தப்புவித்துக்கொண்டு ஓடிப்போவான். அதுகூடாது என்னை பலாத்காரமாய் கட்டியணைத்த இந்த இரண்டு கரங்களும் என் கண்ணெதிரே அறுந்துவிழவேண்டும். என்னசெய்யலாம்? (சற்றுயோசித்து) என்னைகட்டியணைத்து தன் காமத்துக்கிரையாக்கின இப்புயங்களைக்கட்டி நான் இவனை யமனுக்கிரையாக்குகின்றேன். நன்றாய்த்தூங்குகின்றான். இவனுக்கு ஒன்றும் தெரியாது. (மெள்ள அவன் தலையின்கீழிருந்த தன் துடைகளைக்கழற்றிக்கொண்டு அவன் தலைகுட்டையை அவிழ்த்து அவன்கைகளை தலையணைக்குச்சேர்த்துக்கட்டிவிட்டு எழுந்துநின்று) அடே! சண்டாளா! துரோகி! உனக்கு ஏகலிங்கரும் சோண்டாராஜனும், தகுந்த பலன் கொடுக்கிறார்கள் இரு, என்கையினாலேயே இவனுடைய பிராணனை போக்கும்படியான் பாக்கியம் கொடுத்தாயே ஏகலிங்கா! நினது கருணையே கருணை! (கைகூப்புகிறாள்) ஏது காலடி ஓசை? யாரோவருகிறார்கள். இங்கு இருக்கலாகாது (போகிறாள்).

(துபாக்கியுடன் சோண்டாவும் சில வீரர்களும் பிரவேசிக்கிறார்கள்.)



**ரின்.**—(சத்தத்தைகேட்டு) என் கண்மணீ! எங்கே போனாய்! (என்று கையினால் தடவப்போகக் கட்டுண்டிருக்கின்றமையால் முடியவில்லை. பிரயாசைப்பட்டு கண்ணைத்திறக்கிறான்) என்ன கையெடுக்கக்கூடவில்லை (உடம்பைப்பார்த்துக்கொண்டு) யார் இப்படி கட்டிவிட்டார்கள்? ஓகோ! என்கண்மணீ! சரஸமா? எதற்காக என்னை இவ்வாறுகட்டினாய். உன்கரங்களால் கட்டினால் நன்றாயிருக்குமே. ஏன் மறைந்து என்னைப்பார்த்து சிறித்துக்கொண்டிருக்கின்றாய். எதிரேவந்து உன் இனியமுகத்தைக் காண்பிக்கலாகாதா?

**சோ.**—அடே! சண்டாளா! துரோகி! எளிய கற்புள்ள ஸ்த்ரீயை பலாத்காரம்செய்த பிரஷ்டா! என் முகத்தைப்பாரடா!

**ரின்.**—(திகைத்து எழுந்துநிற்க முயற்சிசெய்து) கண்மணீ! மோசஞ்செய்தாயா? சத்துருக்கள் மத்தியிலா இருக்கின்றேன் (விடுவித்துக்கொள்ளப் பார்க்கிறான்) அடா நீங்கள் இவ்விராத்திரியில் அந்தப்புறத்தில் நுழைந்து வீரகோஷம் செய்கிறீர்கள் (பக்கத்திலிருந்த சொம்பு ஒன்றை தூக்கிக்கொள்ளுகின்றான்) நிராயுதனாயிருக்க என்னைத் தாக்குவது தர்ம்மமா உங்களுக்கு.

**சோ.**—நிரபராதியாயிருந்த ராஜதேவன் உடை உடுக்கிற சமயத்தில் குத்திக்கொன்ற பாபி உனக்கு தர்மம் இப்போது தோன்றிற்றா?

**ரின்.**—அடே! சோண்டா! குழந்தையினுடைய ராஜ்ஜியத்தை அபகரிக்க வந்தாயோடா?

**சோ.**—அபகரிக்கப் பிரயத்தினஞ்செய்தது இன்னாரென இந்த ஈட்டியும், இந்த மோதிரமும், இந்த உன் கடிதமும் காண்பிக்கின்றது.

**ரின்.**—ஐயோ! மோசமா?

**சோ.**—ஆர் செய்தது.

**ரின்.**—சரி! உன் புஜத்தில் பலமிருந்தால் பார். எனக்கு இந்த சொம்பே போதுமானது (சொம்பினால் சிலரை அடித்துக்கொல்லுகின்றான்.)

**சோ.**—(துபாக்கியை நீட்டி) இனிமேல் தாமதம் செய்யலாகாது (சுடுகிறான்.)

**ரின்.**—ஐயோ! ஜோடா! செத்தேன். ஓடிப்பிழை! (விழுகிறான்.)

**சோ.**—ஆய்விட்டது இவனுடைய காரியம். ஓடிப்போவான் ஜோடா: சினேகிதர்களே! வீரர்களே! வாருங்கள் என்னோடு.

(போகிறார்கள்.)

(சம்பகமாலை பிரவேசிக்கிறாள்.)

**சம்பகமாலை.**—(சவத்தைப்பார்த்து துக்கித்து) ஐயோ! தெய்வமே! என்னதுக்கம் தந்தாய் எனக்கு. என் பிதாவே! உனக்கென்ன தேசமில்லையா, திரவியமில்லையா, எதற்காக இத்தேசத்தின்மீது அபேக்ஷைகொண்டாய், எதற்காக நிர்த்தோஷியான ராஜதேவனைக் கொன்றாய். இந்தகெதி அடையவே உனக்கு இந்த புத்தி உண்டாயிற்று. ஐயோ! பாபி நான் என் கையால் நினது உயிரைப்போக்கினேன். எனைப் பெற்றெடுத்தாய் வளர்த்தாய். எனக்கிடங்கொடுத்த உன் வயிற்றைக்கிழித்தேன். உன் உயிரைப்போக்காமலே உன் துற்புத்தியை விலக்க பல முயற்சிகளும் செய்தேன். அவைகளெல்லாம் வீணாயின. கடைசியில் உன் துஷ்கர்மத்தின் பலனை அடைந்தாய்.

**புரோகிதர்.**—(பிரவேசித்து) அம்மணீ! விதியின் பயனை எவர் ஒழிக்கவல்லவர். ஹரி, ஹர, பிரம்மாதிகளாலும் முடியாது. அதற்காக ஏன் சிந்திக்கின்றீர். நடக்கவேண்டிய காரியத்தைப் பாரும்.

**சம்.**—ஜோடா என்ன கெதியானானோ அறியேன். அவனைத்துறத்திக்கொண்டு சோண்டா சென்றான். எனது பிதாவுக்கு உத்திரக்கிரியை செய்வோருமில்லை. புரோகிதரே நீரிருந்து கிரியைகளைச் செவ்வனே நடத்திவிடுங்கள்.

(எல்லோரும் போகிறார்கள்.)

---

### ஐந்தாம் களம்.

---

இடம்:—தர்பார்.

(மகாராணா முகுல், சோண்டா, புரோகிதர், சாது, பிரதான், சைந்நியாதிபதி, சாமந்தராஜாக்கள் பிரவேசிக்கின்றார்கள்.)

**பிரதான்.**—(எழுந்துநின்று) சித்ஸ்ரீ மகாராஜாதிராஜ் மகாராணா முகுல்சிங்ஜீ அவர்களுக்கு சம்ரக்ஷகரான மகாராணி சம்பகமாலாபாய் மகாராணாவின் விண்ணப்பமாக அவர்களுடைய

பிராதாக்களுக்கும், பந்துக்களுக்கும், ராஜாக்கள், படேல்கள் ஜலாசுகள், சௌஹனகள், பவார்கள், லூனுவத்துகள் முதலியவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: சகாப்தம் 1454-ல் மகாராணு முகுல்சிங்கு அவர்கள் சிங்காதனமேறினதுமுதல் மகாராணுவின் பாட்டனும் தமயனுமான ரின்மல், ஜோடா ஆகிய இருவரும் மகாராணுவிடமிருந்து மண்டோர் ராஜ்ஜியம்பெற்று, சாமந்தராஜாக்களில் தலைவர்களாக நியமிக்கப்பட்டும் தங்களுடைய கடமைகளைமறந்து, அஜாதசத்துருவென்று பெயரெடுத்த ராஜதேவனை மோசமாய்க் கொலைசெய்து மகாராணுவையும் கொலைசெய்ய யத்தனித்ததினுலே, மகாராணுவின் பிராதாவாகிய சோண்டா மகாராஜன் தம்முடைய சைந்நியத்துடன் வெகுசமர்த்தாய் எவர்களும் அறியாமல் கோட்டைக்குள் நுழைந்து ராஜத்துரோகியாகிய ரின்மலைக்கொன்று அவனுடைய பிள்ளையாகிய ஜோடாவைத்துறத்திக்கொண்டு போய் சண்டைசெய்யப்பார்க்க, ஜோடா ராஜயோகியாகிய ஹர்பாசங்கலாவினிடம் அடைக்கலம் பெற்றமையால், அவ்விராஜயோகிக்கு மரியாதையாகவும், கொலைகளில் நேரே ஜோடா கலவாதகாரணத்தை யோசித்தும், அவனுடைய பிராணனை மீற்றி அவனுடைய ராஜ்ஜியமாகிய மண்டோர், கோடவார் மாகாணங்களை மைவாருக்குச் சேர்த்திருக்கின்றார். சோண்டாராஜன் மகாராணுவுக்குச்செய்த உபகாரத்துக்குத் தகுதியான கைம்மாறில்லை, ஆயினும் மகாராணுவின் திருப்திக்காகவே சோண்டாராஜன் தாம் ஜயித்துச்சேர்த்த மண்டோர், கோடாவார் மாகாணங்களுக்கு அவரே பிரபுத்துவம் வசிக்கவேண்டுமென்பது மகாராணுவினுடைய வேண்டுகோள்.

**சோண்டா.**—(எழுந்து நின்று) மகாராணு! சபிகர்காள்! எனக்கு **இம்மைவாரில்** பிரதேசமிருக்கட்டும் இல்லாமற்போகட்டும், நான் இம்**மைவார்** மாகாணத்தை ஆளும் சூரியகுலபுத்திரனை மகாராணுவுக்கு அடங்கின பிரஜை. மகாராணுவின் சபையில் முதற்றர அந்தஸ்தையும், சாமந்தராஜாக்களுக்குக் கொடுக்கும் சாஸனங்களில் என்னுடைய சாலும்பிரா முத்திரையை மகாராணுவின் அங்கிதத்திற்கு முன்னிடும் சுதந்திரத்தையும் என் பிதா எனக்குக் கொடுத்திருக்கின்றார். எனக்கு அதுவேபோதுமான மரியாதை. ரின்மல் முதலிய 'ராத்தோர்' குலக்ஷத்திரியரை நாசம்செய்து மகாராணுவின் ராஜ்ஜியத்தை நிலைநிறுத்தினேனுனாலும் அது பெருத்த உபகாரமன்று. என்னுடைய கடமையைத்தான் நான் செய்தேன். என்னுடைய ராஜனுக்கும், என்னுடைய குலத்திற்கும், என்னுடைய தேசத்திற்கும், என் குலதெய்வமாகிற ஸ்ரீ எகலிங்கருக்கும், என் அருமைப்பிதாவாகிய லகாராணுவுக்கும் நான் செய்யவேண்டிய கடமையைச்செய்து முடித்தேன். முதல் முதலில் என் பிதாவின் முன்னர்செய்த பிரதிஞ்ஞையின்படி திரிகரணசுத்தியாய் இவ்விராஜ்ஜியத்தை என் தம்பி குழந்தையாகிய முகுல்சிங்கு மகாராணுவுக்குக் கொடுத்தேன். கொடுத்தது பெரிதல்ல. அவரிடமே நான் கொடுத்தது இருக்கவேண்டுமென்பது என் கோரிக்கை; அன்றியும் கொடுத்தது இருக்கும்படி காப்பாற்றுவது உத்தமமான ஈகையாளிகளின்குணம். நான் இந்த என் கடமையைச் செய்யாதிருந்தேனேயானுல் எனது கொடைக்குமுடிவு நேரிட்டிருக்குமன்றோ? பிதாவுக்குப் பின்னர் ஜேஷ்டப்பிராதா பிதாவென்று சாஸ்திரங்கள் விதிக்கின்றமையால் நான் அந்தஸ்தானத்தி லிருக்கின்றேன். எனது பிதா முகுல்சிங்குக்கு **இம்மைவார்** சிங்காசனம் கொடுத்தார். என்பங்குக்கு நானின்றைக்கு மண்டோர், கோடவார் சிங்காசனங்களைக் கொடுக்கப்போகின்றேன். புரோகிதரே! பட்டாபிஷேகச்சடங்குகள் நடக்கலாம். இத்தேசத்தை நிலைநிறுத்தின டேங்காவில்லி பீல்தலைவனை சபைக்கு வரவழையும்.

**புரோகிதர்.**—அப்படியே மகாராஜ்!

**மூதல்.**—அண்ணு! சோண்டாமகாராஜ்! இந்த தேசத்தையெல்லாம் கட்டி ஆள உரியவர் நீர்; நான் சிறுவன் என்றால் முடியாது. என் தலையில் வேறு இராஜ்ஜியங்களையும் கட்டிவிட்டீரே. நீர் இச்சிங்காசனத்தில் வீற்றிருந்தால் உமக்கு ஊழியம் செய்துகொண்டிருப்பதே எனக்கு இஷ்டமான தொழிலாகவிருக்கும்.

**சோ.**—குழந்தாய்! அப்படி யன்று. நீதான் இவ்விராஜ்ஜியபாரத்தை வகிக்கவேண்டும். நீ வகித்தாலும் ஒன்றே நான் வகித்தாலும் ஒன்றே. ராஜன் ராஜ்ஜியபரிபாலனம் செய்வது தன் சுகத்திற்காகவல்ல, அதைத் தன்னுடைய சொந்த சொத்தென்று நினைக்கலாகாது. அது தர்மத்தின் சொத்து. பிரஜைகளும் சரிதான், அரசனும் சரிதான் அதைக்காப்பாற்றவேண்டும். அது அவர்களுடைய கடமை. இதைச் செய்வதில் உனக்கு ஆபத்து நேரிட்டால் நானிருக்கின்றேன் உன்னைக்காப்பாற்ற. சோண்டாவென்று அழைக்கப்படுகிற இத்தேகமானது இப்பூமியில் உலவும் வரையிலும் நீ நிர்ப்பயமாய் ஆண்டுவரலாம்.

**டேங்காவில்லி.**—(பரிவாரத்துடன் பிரவேசித்து) வந்தனம் சித்ஸ்ரீ மகாராஜாதிராஜ் மகாராணு முகுல்சிங்குஜி அவர்களுக்கு, வந்தனம் சோண்டா மகாராஜாவுக்கு, வந்தனம் மற்றுமுள்ளோருக்கும்.

**சோ.**—டேங்காவில்லி! பீல் மித்திரர்களே! ஓகுணு ஓண்டிரீ பீல்தலைவர்களே! உட்காருங்கள்! (அவர்கள் உட்கார) பிரசித்திபெற்ற **பாப்பா** இச்சிங்காஸனமேறின நாள்முதல் இச்சூரியகுல அரசர்களுக்குச் சகாயம்செய்து அவர்களைச் சிங்காசனத்தில் ஸ்தாபிக்கும் இனிய தொழிலைச்செய்து வருகின்றீர்கள்! உங்களுடைய பேருதவியால் மகாராணுவுக்கு இச்சிங்காதனம் மறுபடியும் கிடைத்ததோடு மண்டோர், கோடாவார் மாகாணங்களும் கிடைத்தன. முன்னிருந்த சிங்காதனமல்லவிது உங்களுடைய முயற்சியினுல் மேன்மை பெற்றது. ஆகையால் ஓகுணுபீல் தலைவரே! உங்களுடைய வழக்கப்படி மகாராணுவின் நெற்றியில் டீகா (பட்டம்) கட்டி கையைப்பிடித்து சிங்காதனத்திலிடும். ஓண்டிரீபீல் தலைவரே! நீர் பன்னீர்தெளித்து அக்ஷதையை இடுங்கள்.

(புரோகிதர் ஓமம்செய்கிறார். பிராம்மணர்கள் பூரணகும்பங்களுடன் வருகிறார்கள். முகுல் இரண்டு பீல்தலைவர் பின்தொடர அக்கினிக்கு வலம்வந்து.)

**மூதல்.**—(கைகூப்பி) மகாதேவ ஸ்ரீ எகலிங்க கி ஜேய்! குலகுருஹாரித கி ஜேய்!

(டேங்காவில்லி அரசன்கையைப் பிடித்துக்கொண்டு போய் சிங்காசனத்தில் உட்காரவைத்து தன் கைகட்டைவிரலில்குத்தி அந்த ரத்தத்தினுல் நெற்றியில் பட்டம்கட்டுகிறான். மற்ற பீல்தலைவன் பனி நீர் தெளித்து அக்ஷதை யிடுகிறான்.)

**பிராம்மணர்கள்.**—சித்ஸ்ரீ மகாராஜாதிராஜ் மகாராணு முகுல்சிங்குஜி நீடூழிகாலம் வாழ்வாராக! சோண்டா மகாராஜா நீடூழிகாலம் வாழ்வாராக! இத்தேசம் சூரியகுலத்தில் நீடூழிகாலம் நிலைத்திருப்பதாக.

(சாமந்த ராஜாக்களெழுந்து தமது கத்திகளால் வந்தனம் செய்கின்றார்கள்.)

**பிரதான்.**—ராஜாக்களே! சாமந்தராஜர்களே! பிராம்மணர்களே! இன்றைக்கு மகாராணு எல்லோருக்கும் பட்டாபிஷேகம் கொண்டாட விருந்துசெய்யப்போகின்றார். சாயங்காலம் எல்லோருக்கும் உசிதமான மரியாதைசெய்யவிருக்கின்றார். எல்லோரும் தயவுசெய்து குறித்த ஸ்தானத்திற்குவந்து சேரவேண்டும். தர்பார்முடிந்தது.

(சாமந்தராஜாக்கள் பிராம்மணர்கள் போகிறார்கள்.)

**சேவகன்.**—(ஓடிவந்து) மகாராஜ் மகாராணி வந்துக்கொண்டிருக்கிறார். புரோகிதர், சாது, முதலியவர்களையும், தங்களையும் இங்கு இருக்கச் சொன்னார்.

**சோண்டா.**—அப்படியே இருக்கிறோம். மகாராணி வரலாம்.

(சம்பகமாலை மீரா, லால்பாய்களுடன் பிரவேசிக்கிறாள்.)
(சோண்டாவும், முகுலும் நமஸ்காரம் செய்கிறார்கள்.)

**சம்பகமாலை.**—சோண்டா! உன் முகத்தைப் பார்க்க எனக்கு மெத்த அவமானமாயிருக்கின்றது. உன் உண்மையான குணத்தை அறியாது உன்னை நிரம்ப கடுமையாய் நடத்தினேன். உன் சத்தியகுணத்தை சமுசயித்தேன். நான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் எனக்குத்தகுந்த சிக்ஷையாகமாட்டாது. அதமனுக்குப் புத்திரியாய்ப்பிறந்த நான் உன் மேலான குணத்தை அறிய எப்படி சாத்தியமாகும். நான் உனக்குச்செய்த அபாரதத்தை க்ஷமிக்கவேண்டும். இந்த ஜன்மத்தில் நான் கடுந்தொழில்கள் செய்தேன். நானும் அறியாமல் நான் செய்தவற்றில் ஏதாவது நன்மையிருக்கும்பக்ஷத்தில் அதினுடைய பலத்தினுல் பின்ஜன்மத்திலாயினும் நீ என்வயிற்றில் புத்திரனுகப் பிறப்பாயாக. உன்னைப்போன்ற புத்திரனைப்பெறும்பாக்கியம் எனக்கு முன்ஜன்மத்திலாயினும் கிடைக்குமோ? பாபியாகிய நான் பெறத்தகுந்த பிள்ளையா நீ. உன் தாயார் மகா புண்ணியவதி.

**சோ.**—அம்மா! கலங்கவேண்டாம் அதற்காக. நீர் ஓர் அபகாரமும் எனக்குச் செய்யவில்லை. எல்

லாம் காலத்தின் லக்ஷணமே; கர்மத்தின் பயனே.

**சம்.**—புரோகிதரே! மீராபாய்! உங்களுக்கு நான் என்ன செய்யப்போகிறேன். உங்களால்தான் இத்தேசம் நிலைத்தது.

**புரோகிதரும்-மீராபாயும்.**—சொல்லவேண்டாமம்மா. முகுல் எங்களுடைய பிள்ளையன்றோ. நீர் அவனைக்காப்பாற்றினதுபோல் நாங்களும்செய்தோம்.

**சம்.**—லால்பாய்! எல்லோருக்குச்செய்த அபகாரத்தையும் திருத்திக்கொள்ளலாம். உனக்கு என் தகப்பன்செய்த அபகாரத்தை மாற்றமுடியாது. ஏன்னால் உன் வாழ்வு நாசமாயிற்று. நானென்னசெய்வேனிதற்கு.

**லால்பாய்.**—சிந்திக்கவேண்டாமதற்கு; உலகத்தில் ஸ்திரீகளுடையகெதி அதுவாகவே இருக்கின்றது. நானிருக்குமளவும் உங்களுக்கு ஊழியம் செய்வதே எனக்குப் பிரியமான தொழில்.

**சம்.**—சாது! இவர்களெல்லோரும் எனது பந்துக்கள், ஊழியர்கள், எனக்கு உபகாரம்செய்தது உடன்பாடே; நீர் எனக்கு உபகாரம்செய்தது மெத்த ஆச்சரியம்.

**சாது.**—அம்மணீ! நான் பந்து அல்லவா உங்களுக்கு! பந்து அல்லாவிட்டால் (உள்ளேயிருந்து காப்பு ஒன்றை யெடுத்துக்காட்டி) எனக்கு நீங்கள் இந்த காப்பை அனுப்புவீரா?

**சம்பகமாலை.**—ஆ! சந்தன்! ஆ! சந்தன்! நீங்களா இது காறும் சாதுவாயிருந்து எனக்குச்சகாயம் செய்தீர். நீர் என்னை அலக்ஷியம்செய்தீரென்று எண்ணினேனே ஐயோ! என் கெதியிப்படியாய்விட்டது. சொல்லும் உங்களுடைய சரித்திரத்தை; கேட்க ஆவல் உண்டு.

**சாது.**—அப்படியே சொல்லுகின்றேன். பொழுதாய்விட்டது; விருந்தினர்கள் காத்திருப்பார்கள்; சீக்கிரமாய்ப் போகவேண்டும்.

(ஒரு சேவகன் ப்ரிதாவினுடைய கூந்தலைப்பிடித்திழுத்துக்கொண்டு வருகிறான். பிரதா கூக்குரலிடுகிறாள்).

**சேவகன்.**—மகாராஜ்! இதோகொண்டுவந்தேன், இந்தத்திருடியை உத்தரவுகொடுத்தால் ஒரே வெட்டாய் வெட்டிப்போடுகின்றேன்.

**சோண்டா.**—சேவகா! அவள் ஸ்திரீ அவளை ஒன்றும் செய்யாதே, அவளை விட்டுவிடு. அவள் மகாராணியின் வேலைக்காரி.

**சம்.**—புத்திரா! அவள் மகாதுரோகி. அவளுடைய முகத்தை இனி நான் பார்க்கமாட்டேன். உனக்கு அவள் மகாபராதம் செய்தாள். உன்னிஷ்டப்படி நீ அவளுக்குச் சிக்ஷைசெய்யலாம்.

**ப்ரிதா.**—(அழுதுகொண்டே) மகாராஜ்! நான் இங்குள்ள எல்லோருக்கும் தீங்குசெய்தேன். நான் செய்ததீங்குக்கு எனக்கு எவ்வளவு சிக்ஷையென்றாலும் ஏற்கும். (தலையைக்குனிந்து கழுத்தைக்காட்டுகின்றாள்.)

**சோண்டா.**—ப்ரிதா! ஸ்திரீயின் கழுத்திலிட்டு இந்த வாளின் மேன்மையைக்குறைக்கமாட்டேன். துணையற்றவர்கள், அதிலும் ஸ்திரீகளுடைய உயிரைவாங்குவதோ ஓர் மன்னனுக்கு அழகாகும். உன்னைக்கொல்லமாட்டேன் நான். நீ ரின்மனுக்குத்துணையாயிருந்து பலருக்குத்துன்பம்தேடினாய், ரின்மலின் கெதியானது உனக்கு உற்றபுத்தியை யூட்டியிருக்குமென்று நினைக்கின்றேன். ஆகிலும் நீ இந்த தேசத்தில் இருக்கக்கூடாது. சேவகா! இவளைக் கொண்டுபோய் இத்தேசத்தின் எல்லையைத் தாண்டி விட்டுவா.

**சேவகன்.**—அப்படியே மகாராஜ்!

**ப்ரிதா.**—(தனக்குள்ளே) என்னதயை! (பிரகாசமாய்) மகாராஜ்! புருஷனுடைய வலையிலகப்பட்டு உங்களுக்குத் தீங்குசெய்தேன் மன்னிக்கவேண்டும்.

(போகிறாள்.)

**சோண்டா.**—போகலாம் வாருங்கள்.

(போகிறார்கள்.)

முற்றிற்று.

**எச். வெங்கோபராவ்.**

## சென்னை "பிரிசிடென்சி காலேஜ் தமிழ்ச் சங்க" வருஷோற்சவம்.

சென்ற டிசம்பர்மீ 13உ புதன்கிழமையன்று மாலை $5\frac{1}{2}$-மணிக்கு "**பிரிசிடேன்சி காலேஜ் தமிழ்ச் சங்க**"த்தின் வருஷோற்சவமானது ஷை காலேஜின் சபாமண்டபத்திற் கொண்டாடப்பட்டது. அத்தருணத்தில் ம-௱-௱-ஶ்ரீ, T. ராமகிருஷ்ண பிள்ளையவர்கள் சபாநாயகராக வீற்றிருந்தனர்.



சங்கத்தின் காரியதரிசியாகிய ம-௱-௱-ஶ்ரீ, மீனாக்ஷி சுந்தரமுதலியார் சங்கத்தின் வரலாற்றைச் சபையாருக்கு அறிக்கையிட்டார்.

பின்னர் பண்டிதர் ம-௱-௱-ஶ்ரீ, ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் **மாணிக்கவாசகரைப்** பற்றித் தமிழில் இனியதொரு பிரசங்கம் * செய்தார். அப்பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:—

கிறிஸ்து இன்னார் என்பதும் அவர்செய்த அற்புதங்கள் இவை என்பதும், அவரைச்சார்ந்த அடியார்கள் இன்னார் என்பதும் முதலியவை இக்காலத்துப் பள்ளிப்பிள்ளைகட்கும் தெரியும். இம்மாணிக்கவாசகர் சைவசமயத்தைச் சார்ந்த ஆசாரியராக இருந்தும் அவர் இன்னார் என்பது முதலியவை அச்சைவர்களுள்ளும் பெரும்பாலார்க்குத் தெரியாதிருப்பது வியப்பாகவே இருக்கின்றது. அதற்குக் காரணம் அக்கிறிஸ்து மதானுசாரிகள் செய்வதுபோல நம்மவர்கள் பிரயாசை எடுத்துக்கொண்டு நூன்முகத்தானும் பிரசங்க முகத்தானும் பிறருக்குத் தெரியுமாறு செய்யாமையேதான் என்றெண்ணுகின்றேன்.

அவர் சரித்திரம் கூறும் நூல்கள் எல்லார்க்கும் தெரியத்தக்க வசன நடையாக இல்லாதிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இதனால் அந்நூல்களை இயற்றினார் மீது குற்றங்கூற வரவில்லை. அவர்கள் அந்நாள்தகுதிக்கேற்ப இயற்றிய அந்நூல்களை நாம் நம்நாள்தகுதிக்கேற்ப மாற்றிக்கொள்ளவேண்டுமென்றே சொல்லவந்தேன்.

அன்றியும் நூல்கள் வசனநடையில் ஏற்பட்டால் நமது பாஷையும் விருத்தியாகும். அன்னிய பாஷைகளும் அவ்வாறே விருத்தி யடைந்தன.

இம் **மாணிக்கவாசகர்** பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூரில் ஆமாத்தியப் பிராமண வம்சத்தில் **சம்புபாத சிருதரும்** அவர் பத்தினியாரும் செய்த தவப்பேற்றினால் அவர்களுக்குப் புதல்வராக அவதரித்துப் பதினாறு வயதுக்குள் சகல சாஸ்திரங்களிலும் வல்லவராக விளங்கினார்.

அதை **அரிமர்த்தன பாண்டியன்** கேட்டு அவரை அழைத்து அவருடைய கல்வித்திறம் கண்டு மகிழ்ந்து முதன் மந்திரியராக நியமித்தான். மந்திரித்தொழில் அதிக சிறப்பாய் நடத்திவந்த அவருக்கு ஆன்மவிசாரம் மேலிட்டது.

அரசனுத்தரவுப்படி குதிரைவாங்கி வருவதாக பெருந்திரவியம் எடுத்துக்கொண்டு **பெருந்துறை** நோக்கி வருபவர் வழியில் உண்டான நற்சகுனங்களைக்கண்டு தனக்கு அருள்புரியும் ஆசாரியர் கிடைப்பாரென்று சென்றார்.

**திருப்பெருந்துறையில்** ஆசாரியனுக்கிரகம் பெற்று தம்விருப்பத்தின்படி திரவியங்களை, திருப்பணியிற் செலவழித்துவிட்டு பாண்டியனிடம்வந்து குதிரை வருமென்று சொன்னார்........ ...எம்பெருமான் அவருக்காகக் காட்டிலுள்ள நரித்திரள்களைப் பரித்திரள்களாக்கிக்கொண்டுவந்து பாண்டியனிடம் கொடுத்துச்சென்றார். அவை மீண்டும் நரிகளேயாகி ஓடிவிட்டன. பாண்டியன் மந்திரியராகிய மாணிக்கவாசகரைப்பிடித்து வருத்தினான்.... வைகைபெருகியது........... வந்திக்காக பெருமான் கூலியாளாகிவந்து உடன்பட்டபடி கரையை அடைக்காமைக்காகப் பாண்டியன் கோபித்து அடித்த அடியை உலகெல்லாம் படும்படிசெய்து ஒரு கூடை மண்ணினாற் கரையை அடைத்து மறைந்துநின்று மாணிக்கவாசகரது தன்மையை மன்னவனுக்கு உணர்த்தினார். அரசன் அறிந்து, பணிந்து அழைக்கவும் இசையாது, மாணிக்கவாசகர் துறவுமேற்கொண்டு புறப்பட்டுத் **திருப்பெருந்துறையை** அடைந்து ஆசாரியரின் பிரிவுக்காக வருந்திப் பெருமான் கட்டளைப்படி இதரக்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு **தில்லையை** அடைந்து சிவயோகத்திருந்தார் ......வாதுக்குவந்த புத்தர்களை பெருமான் ஆஜ்ஞைப்படி வாதில்வென்றார் ............ஈழத்தரசன் பெண்ணின் ஊமைத்தன்மையைப் போக்கினார்.........பின் பெருமான்வந்து கேட்க **வாசகமும் கோவையும்** வகுத்தார். பெருமானால் அவற்றையடைந்த தீக்ஷிதர்கள் அவற்றுக்குப் பொருள்கேட்க 'பொருளாவார் சிவனே' என்று காட்டிச் சோதியுட் கலந்தார்.

இவர் இளமையில் தம்மிடம்வந்து கேட்பவர்க்கெல்லாம் வரையாது கல்வியை வழங்கினார். இவ்வாறே கல்வியுடையவர்கள் அதில் விருப்புடைய பிறருக்குதவவேண்டும்.

செல்வமுள்ளார் தெய்வசிந்தனை கொள்ளார். இவர் தமக்கு வந்த எல்லாவாழ்வும் பிரானருளே எனக்கொண்டார். உலகத்தோர் சுகம்வந்தபோது அது தங்கள் அதிர்ஷ்டம் என்றும், கஷ்டம் வந்த

* இப்பிரசங்கத்தை புத்தகரூபமாக வெளியிடக் கருதியிருக்கிறாரெனக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

'பாது பாழுந்தெய்வம் அதைச் செய்துவிட்டதென்
ும் சொல்லுவார்கள். இவர் சுகம் வந்தபோது
பெருமானருளென்ருர். கஷ்டம் வந்தபோது அது
ம் வினையின்பயனென்ருர்.

ஈஸ்வரவிசாரணை செய்வாராகி கற்று வல்லோர்
ருந்தோரும் கடவுளையும் நற்கதி யடையும் நெறி
யையும்பற்றிக் கடாவுவார் இது மற்றவர்களும்
ார்த்துப் பின்பற்றத்தக்கது.

உலகத்தார் தங்களுக்கு ஒன்றும் தெரியாவிட்டா
ும் பரிக்கலாகாப் பட்டங்களைத் தாங்களே தாங்
த்திரிவர்கள். இவரோ மகாதேவனளித்த மாணிக்
வாசகப் பட்டத்தையும் பிறரறியாவண்ணம்
றைத்தொழுகினர். இக்காலத்தும் கிளாட்ஸ்டன்
Gladstone) எர்பர்ட் ஸ்பென்சர் (Herbert
pencer) முதலினோர் தமது வல்லமைக்காகப் பிறர்
ளித்த பட்டங்களை, தாம்பெருதற்கு உரியரல்ல
ரன்று அப்பட்டங்களை அங்கீகரித்துக்கொள்ள
றுதலித்துவிட்டனர் என்பது யாவருமறிந்ததே.

இம் மாணிக்கவாசகருடைய பாட்டுகள் சொற்
வை பொருட் சுவைகளில் மிக இனியன. அவை
சவர்களால் வேதத்திற்கு ஸாம்ய முடையனவா
க் கருதப்படுகின்றன.*

மாணிக்கவாசகருக்காகப் பெருமானியற்றிய திரு
ிளையாடல்களை திருநாவுக்கரசர் தம் தேவாரத்திற்
றிக்கின்ருர். திருநாவுக்கரசும், திருஞானசம்பந்த
ம் ஒரே காலத்தவர்கள். திருஞானசம்பந்தர் காலம்
. பி. 610 எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.
கையால் இம் மாணிக்கவாசகர் 610 கி. பி. க்கு
ன்னிருந்திருக்கவேண்டும். சங்கத்தார் காலம்
. பி. 113 எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.
ங்கத்தார் நூலில் மாணிக்கவாசகரைப் பற்றிப்
ரஸ்தாபமில்லை. மாணிக்கவாசகர் கோவையில்
சிறைவான்" என்று தொடங்குகிற செய்யுளில்
ங்கத்தாரைக் குறிக்கின்ருர். ஆதலால் மாணிக்க
ாசகர் காலம் கி. பி. 113-க்குப் பின்னும் கி. பி.
0-க்கு முன்னும் இருக்கவேண்டும்.

பிரசங்கம் முடிந்தவுடனே ஸ்ரீலஸ்ரீ சதாவதா
ம் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் எழுந்து பின்வரு
மாறு கூறினர். மாணிக்கவாசகருக்கு மாணிக்க
வாசகர் என்று பெயர் இருக்கின்றதே யன்றி
மாணிக்கச் செய்யுளார் என்றில்லை. ஆதலால் பிர
சங்கியார் சொன்னபடி அவர் சரித்திரம் நடையாக
இருக்கவேண்டிய தவசியமே. இம் மாணிக்கவாச
கரது சரித்திரவிஷயமாகப் பிரசங்கித்த இப் பிரசங்
கியாரும் மாணிக்கவாசகரே (மாண் + இக்கு +
வாசகர் = மாட்சிமையுடைய இனிமையான வாச
கத்தை யுடையவர்).

பின் கிறிஸ்தியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
ம-ா-ா-ஸ்ரீ, கோபாலாசாரியவர்களும் பிரசங்
கத்தை சிலாகித்துப்பேசினர்.

பின் ம-ா-ா-ஸ்ரீ, ராமகிருஷ்ணபிள்ளை அவர்
கள் இங்கே தமிழ் சங்கமொன்றிருப்பதும், தமிழில்
பிரசங்கமும், சபையின்வரலாறு காரியதரிசியரால்
தமிழில் எழுதி வாசிக்கப்படுவதும் ஆகிய எல்லாம்
எனக்கு அதிக மகிழ்ச்சியையளித்தன. இந்தச்சங்
கத்தின் புத்தகசாலைக்கு நான் என்னல் இயன்ற
அளவு உதவிசெய்வேன் என்று கூறி,

"மாணிக்கவாசகரின் திருவாசகத்தை போப்
(Pope) துரையவர்கள் மொழிபெயர்த்திருக்கின்ருர்.
அது சீக்கிரத்தில் வெளிப்படும். அதை அசல்கிர
யத்துக்கே கொடுப்பார். இவையெல்லாம் எனது
நண்பரொருவர் எனக்குச்சொன்னர். அப்புத்தகத்
தை யாவரும் வாங்குவது நலம்." என்று சொல்லி
முடித்தார்.

காலேஜ் தமிழ்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, சீனிவா
சாசாரியார் அவர்கள் பிரசங்கியாருக்கும் சபாநாயக
ருக்கும் ஏனையோர்க்கும் வந்தனங் கூறினர்.

பின்னர் சபை கலைந்தது.

வி. மீனாக்ஷிசுந்தரம்.

* "மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின்
ண்டோர்கள், கனஞ்சடை யென்றுருவேற்றிக் கண்
டிக்கதுவரோ?" என்று ராய்பகதூர் சுந்தரம்பிள்ளை
ர்கள் தமது மனோன்மணீயத்துட் கூறியுள்ளாராக
ன், வேதத்தினும் திருவாசகமே சிறந்தது என்பது
வர் கொள்கையாகும்.

## சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறை
களை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்
டுவருவதினும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமா
வது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாக
விருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

## காஞ்சீபுரம் ஜலாதாரம்.

### பட்டணத்தில் தண்ணீர்க்குழாய்.

சென்ற சஞ்சிகையில் காஞ்சீபுரம் தண்ணீர்க்
குழாய் தலைப்புவேலையில் ஆற்றுமத்தியிலிருந்து



தண்ணீர் ஊறி வடிந்து கரையிலுள்ள கிணற்றில்
வந்து நிரம்புகிற விதத்தை விவரமாய்ச் சொல்லி
விளங்கவைத்தோம். தண்ணீர் இறைகேணி என்று
சொல்லத்தக்க 'ஸக்ஷன் வெல்' * அக்கிணற்றில்
வந்து விழுந்தபின் அதற்கடுத்துள்ள நீராவியந்திரங்
கள் வேலைசெய்வதால் அக்கிணற்றிலுள்ள தண்ணீர்
16-அங்குலம் குறுக்களவுள்ள இரும்புக்குழாய்கள்
வழியாக உறுஞ்சியிழுப்பதுபோல, யந்திரசக்தியால்
மேலிழுத்து இறைக்கப்படுகின்றது. இப்படி கிணற்
றிலுள்ள தண்ணீரைக் குழாய்கள் வழியாகப் பட்ட
ணத்திற்குள் செல்லும்படி இறைத்துவருவதில் அத்
தண்ணீர் சிறிதும் தீண்டப்படுகிறதில்லை. உண்மை
யில் அது கண்ணிலேபடுவதற்கில்லை. யந்திரங்கள் நிர்
மித்திருக்கும்கட்டடத்தின் முன்னறையில் நீராவி
யுண்டுபண்ணும் அடுப்புகளும் பின்னறையில்
இறைக்கும் யந்திரங்களுமாக வைக்கப்பட்டிருக்
கின்றன. முன்னறையிலுள்ள அடுப்பை மூட்டி
அதன்மேலிருக்கும் தொட்டியில் தண்ணீரை விட்
டால் அது கொதித்து நீராவியாகி, அந்நீராவி குழாய்
கள்வழியாக பின்னறையிலுள்ள யந்திரத்திற்குவந்து
அதில் புத்திநுட்பமாயமைத்துள்ள மிகவிநோத
மும் சூக்ஷ்மமுமான 'வால்வ்' † என்று சொல்லும்
நுழைவழிகள் வழியாகச்செல்வதில், யந்திரத்
திலுள்ள இரண்டு உருக்குத்தடிகளையும் அதன் நுனி
யில் அமைத்துள்ள 'பிஸ்டன்' ‡ என்னும் ஜலம்
நுழைய இடங்கொடாத இருப்புக்குழாய்களையும்
முன்னும்பின்னுமாக விடாது நகரச்செய்கிறது. இந்
தக்குழாய் இப்படி நகருவதினல் பீச்சாங்குழலைத்
தண்ணீரில் வைத்து இழுத்தால் எப்படி அது கீழி
ருந்து தண்ணீரை மேலிழுத்துக்கொண்டுவரு
கிறதோ அப்படியே இந்த யந்திரமானது வேலைசெய்
வதால் கிணற்றிலுள்ள தண்ணீர் மேலிழுக்கப்பட்டு
வருகிறது. பீச்சாங்குழலில் தண்ணீர் வந்தபிறகு
மேலிழுத்த கைப்பிடியை அழுத்தினல், தண்ணீர்
மறுபடியும் உள்வந்த துவாரத்தின்வழியே வேக
மாக வெளியிற்போய்விடுகிறது. இந்தயந்திரம் வேலை
செய்வதில் நமக்கு ஆகவேண்டிய வேலைக்குத் தக்க
படி அமைக்கப்பட்டிருக்கும் சூக்ஷ்ம ஏற்பாடு என்
னவெனில் கிணற்றிலிருந்து மேலிழுக்கப்பட்ட தண்
ணீரானது மறுபடியும் கிணற்றிற்குள் போகவொட்
டாமல் தடுத்து வேறுவழியாக பட்டணத்திற்குப்
போகும் குழாய்களில் செல்லும்படி அமைக்கப்பட்
டிருக்கிறது. இதெல்லாம் யந்திரத்திலமைத்துள்ள
சூக்ஷ்ம ஏற்பாடுகளால்தானே வேலைசெய்கிறதன்றி
மனுஷ சகாயம் சிறிதும் வேண்டியதில்லை. அங்கு
போய்ப்பார்த்தால் இந்த யந்திரம் வேலைசெய்யும்
வேடிக்கையான சூக்ஷ்ம ஏற்பாடு வெளிக்கு ஒன்றும்
தெரிகிறதில்லை. யந்திரத்தைப்பிரித்துப் பார்த்தால்
தான் தெரிகிறது. நாம் இந்த யந்திரங்கள் வேலை
செய்யும் விநோத ஏற்பாட்டைப்பார்க்க விரும்பி அங்
குசென்றபொழுது இவைகள் வேலைசெய்யும் முறை
யை விளங்கக்காட்டி வேண்டிய உதவிசெய்த மிஸ்
டர் ப்ரான்ஸிஸ் என்பவருக்கு நாம் நமது நன்றி
யறிதலை யாவருமறிய இங்கு தெரிவிக்க விரும்பு
கிருேம். இவர்தான் அந்த யந்திரங்கள் சரியாக
வேலைசெய்துவரும்படி பார்த்துவர நியமிக்கப்பட்ட
அதிகாரி. இவருடைய கடமையெல்லாம் யந்திரங்
கள் வேலைசெய்யும்பொழுது அவைகளின் பாகங்கள்
நன்ருக எண்ணெயிடப்பட்டு சல்லிசாக வேலை
செய்து வருகின்றனவாவென்று பார்க்கவேண்டி
யதே. யந்திரங்களுக்கு அற்பக்கோளாறு நேர்ந்த
விடத்தும் இவர் சரிப்படுத்தி அவைகளை நடத்த
வல்லவரே. இவருக்குக்கீழ் அடுப்பெரிக்க ஒரு
வேலைக்காரனும், யந்திரங்களுக்கு எண்ணெய்விட
அமைத்த கருவிகள் சரியாக வேலைசெய்கின்றனவா
வென்று பார்த்துவர ஒருவேலைக்காரனும் ஆக இரு
வர் இருக்கிருர்கள். இவர்கள் அடுப்பைமூட்டி யந்
திரம் வேலைசெய்து வருவதைப்பார்த்துவரவேண்டி
யவர்களேயன்றி மற்றப்படி தண்ணீரைத்தீண்டிச்
செய்யத்தக்கது ஒன்றுமில்லை. நாம் முன்னமே பல
முறையும் வற்புறுத்திக்கூறியபடி பட்டணத்தின்
ஜலாதாரத்திற்காகவரும் தண்ணீர் எவராலும் தீண்
டப்பட இடமின்றி அமைக்கப்பட்டிருக்கிறது.
இந்தக்குழாய்வேலைகள் செய்தமைத்திருப்பதில்
ஒரு நேர்த்தி யென்னவெனில், யந்திரத்திலாகட்
டும், தெருக்குழாய்களிலாகட்டும், வேறெங்குதான
கட்டும் வெளிவந்த தண்ணீரில் ஒரு சொட்டுக்
கூடத் திரும்பி அஃதிருந்த இடத்துக்குப்போவது
முற்றிலும் கூடாதகாரியம். கிணற்றைவிட்டு மேலி
ழுக்கப்பட்ட தண்ணீரில் ஒரு சொட்டு ஜலமான
லும் மறுபடியும் கிணற்றில் விழமாட்டாது. தெரு
விலுள்ள குழாய்களைத் திறந்தால் வெளிவந்த ஜலத்
தில் ஒரு சொட்டு ஜலமும் திரும்பி குழாய்க்குள்
போகும்படி செய்வது முடியாதகாரியம் இப்படி
யிருக்கையில் வெளியிலிருந்து தீட்டும் அசுத்தமும்
குழாய்த் தண்ணீரை என்னமாகச்சாரும்.

இந்தவேலை 1897-ம்வருஷத்தில் செய்துமுடிந்து
1898-ம்வருஷத்தில் தெருக்களுக்குக் குழாய்கள் வைக்
கும் வேலை நடந்தேறிவந்தது. வருஷப்பிரதி வரு

* Suction Well. † Valves. ‡ Piston.

ஷமும் தண்ணீர்க்குழாய்கள் பட்டணத்தில் அதிகமாக வைக்கப்பட்டுவருகின்றன. இவ்வேலைசெய்வதற்காகப் போட்ட மதிப்பு 2-லக்ஷத்து-57-ஆயிரம் ரூபாய். இத்தொகையில் 1898-ம்வருஷம் டிசம்பர்மீ 31உ வரையில் செலவான தொகை ரூபாய் 2,49,957 அதாவது 43-ரூபாய் குறைய $2\frac{1}{2}$-லக்ஷம். இதற்கு உபயோகித்த குழாய்களில் மிகப்பெரிது 16-அங்குலம் குறுக்களவுள்ளது. இதுமட்டும் 7,015-அடி தூரத்துக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் குறைந்த அளவுள்ள குழாய்களும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. 1898-ம்வருஷம் டிசம்பர்மீ 31உ வரையில் வைக்கப்பட்ட குழாய்களின் விவரம் பின்வரும் கட்டடத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

| குழாய்களின் சுற்றளவு. | வைக்கப்பட்டிருக்கும் குழாய்களின் நீளம். |
|---|---|
| 16-அங்குலம். | 7,015 அடி. |
| 12 ,, | 4,818 ,, |
| 10 ,, | 984 ,, |
| 9 ,, | 4,986 ,, |
| 8 ,, | 4,420 ,, |
| 7 ,, | 903 ,, |
| 6 ,, | 2,572 ,, |
| 5 ,, | 12,222 ,, |
| 4 ,, | 4,128 ,, |
| 3 ,, | 42,352 ,, |
| $2\frac{1}{2}$ ,, | 1,2[illegible]2 ,, |
| 2 ,, | 1,701 ,, |

தலைப்புவேலைமட்டும் முடிந்தபின், யந்திரங்கள் வேலைசெய்துகொண்டிருந்தால்மட்டும் பட்டணத்திற்குத் தண்ணீர் வருவதாயிருந்தது. இப்பொழுது பட்டணமத்தியில் உயர்ந்த ஓர் இடத்தில் (Reservoir) என்று சொல்லும் பெரிய தண்ணீர்த்தொட்டியொன்று கட்டி முடிந்தபின் இராப்பகல் எப்பொழுது[illegible] யத்திறந்தாலும் தண்ணீர் வரும்படியாகவிருக்கிறது. 1899-ம்வருஷம் ஜூன்மீ நாம் காஞ்சீபுரத்திற்குச்சென்றபொழுது இத்தண்ணீர்க்குழாய்களைப் பற்றியுள்ள சில்லரைவிவரங்களையும் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி அவ்வூர் தண்ணீர்க்குழாய் ஓவர்ஸியர் ம-ா-ா-ஸ்ரீ, வி. இரங்காசாரியார் நமக்கு எழுதியனுப்பிய இதர விவரங்களையும் கீழே பிரசுரிக்கிறோம்.

சென்ற சஞ்சிகையில் பிரசுரித்த படங்களும் முனிசிபல் செக்ரிடெரியவர்கள் அனுமதியின்மேல் இவர் சுருக்கமாக எழுதிக்கொடுத்துதவியதிலிருந்தே செய்யப்பட்டன. அவர் எழுதிய விவரம்:—

காஞ்சீபுரம் தண்ணீர் குழாய்.

"தலைப்புவேலையிலுள்ள கிணற்றில் 1897-ம்வருஷம் மழைகாலத்தில் சுமார் 1[illegible]-அடி தண்ணீரும், 1898-ம்வருஷம் மழைகாலத்தில் 19-அடிதண்ணீரும் இருந்தது. வெயில்காலத்தில் 1897-ம்வருஷத்தில் 9-அடியும், 1898-ம்வருஷத்தில் $12\frac{1}{2}$-அடி தண்ணீரும் இருந்தது. இப்போது 12-அடி தண்ணீர் இருக்கிறது. டவுனில் தண்ணீர் தொட்டி கட்டுதற்குமுன்பு காலை 5-மணி முதல் இரா 7-மணிவரையில் 'இஞ்சின்' வேலைசெய்து ஒரு நாளைக்கு இரண்டுலட்சம் காலன் தண்ணீர் செலவாய்வந்தது. 1897-ம்வருஷம் கருட உச்சவகாலத்தில் ஒரு நாளைக்கு 5-முதல் 6-லட்சம் காலனும், 1898-ம்வருஷத்தில் 6-முதல் 7-லட்சம் 'காலன்'* தண்ணீரும் செலவாயிற்று. மேல்சொன்ன இரண்டு வருஷங்களிலும் இராத்திரி 7-மணிக்குமேல் தண்ணீர் 'சப்ளை' கிடையாது. இந்த வருஷத்தில் தொட்டி (Reservoir) கட்டியபிறகு காலை 5-மணி முதல் 11-மணிவரையிலும், மாலை 3-மணி முதல் இரா 7-மணி வரையிலும் இஞ்சின் வேலைசெய்து ஒரு நாளைக்கு சுமார் 3-லட்சம் காலன் தண்ணீர் இராப்பகலும் 'சப்ளை' செய்கிறது. இந்த வருஷம் கருட உச்சவத்தில் ஒரு நாளைக்கு 7-லட்சம் காலன் தண்ணீர் இராப்பகலும் சப்ளையாகிவந்தது. காஞ்சீபுரத்தில் சுமார் 124-தண்ணீர் பிடிக்கும் 'பவுன்டன்களும்' (Fountains) 12-தண்ணீர்த்தொட்டிகளும் இருக்கின்றன. இவைகளில் 6 'பவுன்டனும்' 11-தண்ணீர்த்தொட்டியும் தர்மத்திற்காக பெரியமனுஷர்களால் கட்டி முனிசிபாலிடிக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. கஞ்சிடவுன் ஸப்-ரிஜஸ்டாரும் முனிசிபல் சேர்மெனுமாய் இருக்கிற ம-ா-ா-ஸ்ரீ, எம். சுப்பிராயலுசெட்டியார் அவர்கள் உலகளந்தபெருமாள் கோயிலுக்குள் ஒரு குழாயும், பச்சைவண்ணர்கோ

* ஒரு காலன் = சுமார் $3\frac{1}{4}$-படி.



விலுக்குள் ஒருகுழாயும் தர்மத்திற்காக வெகு பிராமணருக்கு உபயோகப்படும்படி வைத்திருக்கிறார். இது தவிர 108-வீடுகளில் குழாய்கள் வைத்திருக்கின்றன. இவைகளில் 6 - வைஷ்ணவர்கள் வீட்டில் தான் குழாய் வைத்திருக்கிறது."

இந்த ஆறு வைஷ்ணவர்கள் வீட்டிலும் சிலர் குழாய்தண்ணீரை கைகால்லலம்பவும் ஸ்நானத்துக்கும்மட்டும் உபயோகித்துக்கொண்டு பானத்துக்கு புறக்கடையில் ஒரு பக்கம் போக்கிடமற்ற சாக்கடைநீரும் மறுபக்கம் மலக்குழியும் வெகுகாலமிருந்துவந்ததால் அவைகளின் கசுமாலம் மண்ணில் வெகுதூரம்வரையில் சுவர்ந்திறங்கி கிணற்றிலூறும் தண்ணீரில் கலந்துள்ள அக்கிணற்றுத் தண்ணீரையே விசேஷமாகக்கருதி சமையல்சாப்பாட்டுக்கும் பானத்துக்கு முபயோகித்துவருகிறார்கள்.

இவர்கள் வீட்டில் அடிக்கடி சுரத்தா லடிபட்டு வாடினவர்களும் ஆனைக்கால் ஆனைக்கையுள்ளவர்களும் இருக்கக் காண்பது அபூர்வமாகாது. ஆயினும் அறியாமை காரணமாக ஐயோ! அக்கெட்ட தண்ணீரையே **ஆசாரம்** என்றுசொல்லிக் குடித்துத் தங்கள் சொந்த சௌக்கியத்தைக் கெடுத்துக்கொள்வதன்றி நம் முன்னோர் கீர்த்தியையும் கெடுக்கிறார்கள். யாரும் இவர்கள்மீது வருந்துவதற்கிடமில்லை. நமது ஸ்திரீகளை நாம் மௌட்டியக்குழியில் கிடக்கவிட்டு வைத்தோமானால் அங்கிருந்து பழகிய அவர்கள் அவ்வாபாசக்குழியில் மற்றவர்களையு மிழுத்துப்போடுவது வியப்போ! அங்கிலேய மகாகவியாகிய டென்னிஸன் பிரபு "ஸ்திரீகளின் உயர்வு தாழ்வுக்கேற்றபடி யிருக்கும் 'புருஷர்களின் உயர்வு தாழ்வும்" என்று பாடினது பொய்யாமோ. கவிகள் வாக்கு தேவவாக்குக்குச் சமானமல்லவோ. பெண் பாலை மௌடியத்தில்விட்டு ஆண்பாலைமட்டும் அதிகமாகப் படிக்கவைத்து முன்னுக்குவரலாமென்று எண்ணும் நம்மவர்கள் முற்றும் மதிமோசம்போகாமல், இதுவரையில் பட்டதைக்கொண்டாவது புத்திவந்து பிழைப்பார்களானால் இந்தியாவுக்கு க்ஷேமமுண்டு. நம்மில் புத்திசாலிகளாயிருப்பவர்கள் இதை மனதில்வைத்துச் சிந்திக்கக்கடவர்கள்.

C. V. S.

## வெளியூர் உபகாரசங்கங்கள்.

நாம் "அறிவைப்பரவச்செய்யும் ஏற்பாடு" என்னும் தலைப்பின்கீழ் சுகாதாரவிஷயமாகவும் மற்றும் உபயோகமான விஷயங்கள் சம்பந்தமாகவும் நாட்டிலுள்ள ஜனங்களுக்கு அறிவைப் பரவச்செய்வதற்கனுகூலமாயிருக்குமென்று எடுத்துக் காட்டிய வழியை யனுசரித்து வித்யா இலாகாத்தலைவர், சம்மதத்தின்மேல் வித்யா அதிகாரிகள் ஆதரவில் அங்கங்கே **"உபகாரசங்கங்கள்"** ஏற்பட்டு வருகின்றன. இப்படி யேற்பட்டுவரும் சங்கங்களில் இதுவரையில் நமக்குத் தெரியவந்தமட்டும் பின்வருமிடங்களில் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களில் உபாத்தியாயர்கள்மட்டுமேயன்றி ஊரில் பிரமுகர்களாகவிருக்கும் மிராசுதார்கள், வியாபாரிகள் முதலானவர்களும் சேர்ந்து விவேகிகளுக்குரிய தம் கடமையைச்செலுத்த முன்வந்திருப்பதைக்காணச் சந்தோஷமுண்டாகின்றது. நமக்குவரும் ரிபோர்ட்டுகள் ஒவ்வொன்றையும் அப்படியே முழுவதும் பிரசுரிப்பது சாத்தியமன்றாயினும், வரும் விவரங்களைத்திரட்டி கமிட்டி மெம்பர்களுக்குத் தெரிவித்து வருகிறோம். "விவேகசிந்தாமணி" யில் சுகாதாரவிஷயமாய்வரும் விஷயங்களைச் சீமையில் **நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன்** சங்கத்துப் பத்திரிகையாகிய "இந்தியன் மாகஸின் அண்ட் ரிவியூ" என்னும் மாதாந்தரப்பத்திரிகையில், சென்னை ஹைகோர்ட் ஜட்ஜாகவிருந்து 17-வருஷங்கள்முன் பென்ஷன் பெற்றுக்கொண்டு நீங்கியவரும் மிக்க தமிழபிமானியுமாகிய கனம் மிஸ்டர் **எல். ஸி. இன்ஸ்** அவர்கள் இங்கிலீஷில் திரட்டி மொழி பெயர்த்துப் பிரசுரித்துவருகிறார். ஷை சங்கத்துக் காரியதரிசியாகிய **மிஸ் மானிங்** துரைசானி இதுவிஷயத்தில் மிக்க அக்கறையெடுத்துக்கொண்டு வருகிறாரென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அவருடைய தூண்டுதலாலே நாம் இச்சுகாதாரவிஷயத்தில் இவ்வளவு தூரம் முனைந்து முயற்சிக்க நேர்ந்தது.

இவ்விஷயத்தில் உடனுழைத்துஉபகாரம்செய்ய முன் வந்த **உபகாரிகளும், உபகாரசங்கத்து மெம்பர்களும்,** முன்னால் முனைந்து பின்னால் சலிப்புக்கொள்ளாது எப்பொழுதும் ஒரே நிதானமாகவும், ஒழுங்குதப்பாமலும் உறுதியாகநின்று உழைத்துவருவார்களென்று கோருகிறோம். உழைத்துவருவதோடு, அவர்கள் செய்யும் முயற்சிகளைப்பற்றி நமக்கு

எழுதித்தெரிவித்து வருவார்களென்றும் கோருகிறோம்.

ஈரோட்டு வித்யா இலாகா ரேஞ்சில் பின்வரும் இடங்களில் உபகார சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன:—

1. தாராபுரம் டவுன், 2. அலங்கியம், 3. உத்தமபாளையம், 4. சின்னதாராபுரம், 5. தென்னலை, 6. ஊஞ்சலூர், 7. வேலம்பாளையம், 8. அஞ்சூராம்பாளையம், 9. தாசர்பட்டி.

திருச்சிராப்பள்ளி ஜில்லா, உடையார்பாளையம் தாலூகா, காஞரைப்பாளையம் கிராமத்தில், ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறதாக, உடையார்பாளையம் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல்மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ, வி. கிஷ்ணய்யரவர்கள் நமக்குத் தெரிவித்திருக்கிறார்.

சீர்காழி தாலூகா இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ, எஸ். இராமச்சந்திரய்யர் அவர்களும் இது விஷயத்தில் உபகாரியாகவிருந்து ஒத்துழைப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அவருடைய ஸப்-ரேஞ்சில் சங்கங்கள் ஏற்பட்டிருக்கும் விஷயமாக நமக்கு இன்னும் எவ்வித ரிபோர்ட்டும் எட்டவில்லை. காஞ்சீபுரத்தில் அவ்வூர் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டரும், ஸானிடெரி இன்ஸ்பெக்டரும் ஏற்கனவே உபகாரிகளாகச் சேர்ந்துழைத்துவருகிறார்கள். அங்கும் ஒரு உபகாரசங்கம் ஏற்படுத்த முயற்சியெடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

சேலத்தில் அவ்வூர் ஸானிடெரி இன்ஸ்பெக்டர் இது விஷயத்தில் அதிக சிரத்தையெடுத்துக்கொண்டுழைப்பவரென்று நமக்குத்தெரியும். அவர் அங்குள்ளவர்களை யொன்றுகூட்டி அவ்விடத்தில் ஓர் உபகாரசங்கமேற்படுத்த முயற்சிப்பாரென்று எண்ணுகிறோம்.

இன்னும் இதுவிஷயத்தில் ஊருக்குபகாரமாய் உழைக்கவிரும்பும் புண்ணியவான்கள் அவர்கள் கருத்தை நமக்குத்தெரிவிப்பதோடு, அவர்கள் இது விஷயமாய் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளையும் அப்போதைக்கப்போது நமக்குத்தெரிவித்தால், நாம் மேலுள்ள கமிட்டியாருக்கும், பொதுவாய் மற்றப்படி இதிலுழைப்பவர்களுக்கும் தெரிவிக்க மெத்த அனுகூலமாகவிருக்கும்.

**உபகாரிகள்** எல்லாரும், **உபகாரசங்கத்துக் காரியதரிசிகளும் அவர்கள் ரிபோர்ட்டுகளை இந்த ஆபீஸ் விலாசத்துக்கு அனுப்பக் கோருகிறோம்.**

---

## நமது பார்வைக்குவந்த புஸ்தகங்கள்.

### தமிழிலிருந்து சில மொழிபெயர்ப்புகள்.

*(Studies and translations from Tamil by P. A.)*

---

இத்தலைப்பிட்ட சிறுபுத்தகமொன்று சென்னைச் **சித்தாந்த தீபிகை** யாபீசாரால் வெளியிடப்பட்டு, நமது பார்வைக்கு வந்தது. இதில் தமிழ்ப் பழைய காவியங்களிலிருந்து ஒவ்வோர் பாகம் எடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. நம்மாலும் பிறராலும் மிகப் பயிலப்பட்டு வருகின்றதாகிய அங்கிலேயபாஷையில் நமது மத கிரந்தங்களின் பொருளை மொழிபெயர்த்தல் எல்லாரும் படித்துத் தெரிந்துகொள்வதற் கேற்றதோர் சாதனமாகும். இவ்விதமாகச் சித்தாந்த தீபிகையார் சைவசித்தாந்தக் கருத்துகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகிற் குபகரிக்கப்புகுந்த முயற்சி மிகவும் புகழத்தக்கது. இப்புத்தகத்திலடங்கிய பாகங்களில் நமது தேசத்தார் சேர்த்துவைத்திருந்த அரிய பெரிய விஷயங்கள் அடங்கியிருத்தலால் அவற்றைப்பற்றி தனித்தனி சிறிது விரித்துரைத்தல் அவசியமாகாதென்று நினைக்கிறோம்.

முதலில் புறநானூறு 'அரசன் வாழ்த்து.' இது, முற்காலத்திய அரசருடைய, பெருந்தகைமை, பொறுமை, இகம்பர மிரண்டறிவினு முயர்ந்த தன்மை, 'பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுக்'கின்றதாகிய விருந்துபோற்றுந்தன்மை முதலிய குணங்கள் பலவற்றையும் அமைச்சர்களுடைய 'நாஅல்வேதநெறிதிரியினும், திரியா' நடுவுநிலைமை முதலிய குணங்களையும் நன்கு விளக்குவது. (2) 'கோயிற்றிருப்பதிகம்.' திருவாசகத்திலிருந்து எடுத்த இப்பாகத்தில் கடவுள் அடியவரின் உள்ளத்தையே கோயிலாக்கொண்டு தங்குவர் என்னுங் குறிப்புத் தோன்றும். இதில் எல்லாம் வல்ல இறைவனது கருணைத்திறமும், பாசபந்தப்பட்டு நிற்கும் உயிர்கள் யாவரும் அவரை யுணர்ந்து அக்கருணைக்குப் பாத்திரராகவேண்டுமென்பதும் பிறவும், மிக உருக்கமாகக் 'கருங்கல் மனமுங் கரைந்'துருகும்படி ஓதியிருக்கின்றது. (3) திருவாசகம் 'போற்றித்திருவகவல்.' இப்பெயரில், 'போற்றி' என்பதற்கு 'போற்று' என்னும் பகுதியோடு 'இ' என்னும் செயப்படு பொருள் விகுதிசேர்ந்து 'போற்றி'



என்றாகி 'வந்திக்கப்படுவது' என்று பொருள். ஆகவே துதிகள் அடங்கிய அகவல் ஆம். அவ்வண்ணமே இதில் பெரும்பாலும் அத்துதிகளே நிறைந்திருக்கின்றன. ஆனால் இதில் முதற்பாகம் ஓர் ஆன்மா கடவுளைச் சேரும்வரை, வழியில் அதற்கு நேரிடுபவற்றையெல்லாம் கூறுகின்றது. மொழிபெயர்ப்பிலும் இப்பாகத்தையே எடுத்தெழுதி யிருக்கின்றது. (4) தாயுமானசுவாமிகளியற்றிய ஆனந்தக்களிப்பு. இது ஆன்மா என்னும் ஓர் பெண் தன் தலைவனாகிய இறைவனைக் கூடியவிடத்து உளதாகிய ஆனந்தத்தின் மிகுதியைத் தன்தோழிக்கு எடுத்துரைக்கும் பாவனையாய்ச் செய்யப்பட்டது. இறைவனைச் சேர்த்தவுடனே, 'நான், எனது' என்னுமிரண்டையுந் துறந்து தன் தன்மையறிந்து, கடவுளுடன் தான் வேறு அவர்வேறு என்றில்லாமல் இரண்டறக்கலந்து ஆனந்தத்திருந்தனள். அந்த ஆனந்தத்தையும், கடவுளுடைய தன்மையையும், உடலின் அநித்தியத்தையும், மண், பெண், பொன் என்ற இம்மூன்றையும் விட்டுப் பிறப்பற்றுக் கடவுளை யறிதல்வேண்டும் என்பதையும் உற்றோர்க் கெடுத்துரைத்தாள். (6) இவராலேயே இயற்றப்பட்ட '**வண்ணம்.**' இதில் மானிடர்கள் மாதர்வலையிற்சிக்கி யுழன்று கடைசியில் அத்தீத்தொழிலின் பயனாக வரவர மதிசோர, உடம்புக்கு நரை, திரை, மூப்பு, பிணி என்பன முறையே வந்துசேரத் தம் வசமிழந்து பொறிகளும் ஒவ்வொன்றாய்க் கழிந்துவிடக் கடைசியில் சாக்காடுவந்துவிட்டதாக அப்போது எதுந் துணையின்றி யிருக்கிறார்கள் ஆதலின் மனமே! நீ இன்றவனை யிப்போதே யறிந்துய்யக்கடவாய் என்னுங் கருத்துக்கொண்டமைந்துள்ளது. (7) கடைசியில், அவரே யியற்றிய '**மலைவளரகாதலி.**' உயிர்களுக்குக் கனுக்கிரகிக்குந் தொழிலில் சுவாமியினுடைய அருட்சக்தியையே அம்மையென உருவகப்படுத்திக் கூறுவது. அதனையே, உலகங்களெல்லாம் உற்பத்தியாய் நிலைநிற்றற்குக் காரணமாகின்றமையால் 'உலகமாதா' என்று சொல்வர். அம்மாதாவின் துதியாக இப்பாகம் உள்ளது. அவ்வப் பாகங்களின் முகப்பில், அவ்வவற்றின் கருத்துக்களை யாங்கிலத்தில் எழுதியிருப்பதுமன்றி பின் அவ்வவற்றை உள்ளபடியே மொழிபெயர்த்து மிருக்கின்றது. அம்மொழிபெயர்ப்பு, சுருங்கச்சொல்லி விளங்கவைப்பதாகிய அந்தந்தத் தமிழ்ப்பாட்டுகளின் தன்மையையும் பொருணய முதலியனவற்றையும் விளக்கக்கூடியதாக விருக்கின்றது. இவ்வருமைப்பாகங்களை யெல்லாம் பொறுக்கியெடுத்து, அவைகளை, இப்புத்தகத்தில் மொழிபெயர்த்திருக்கின்ற வரிசையிலேயே, ஆராயுமிடத்து ஓர் உட்பொருள் தோற்றுகின்றது. முதலில் 'அரசன் வாழ்த்து' இவ்வுலகத்தில் லௌகிகவிஷயங்களில் ஆன்மாக்களுடைய இன்றியமையாக் கடமையைக் கூறிற்று. இரண்டாவது 'கோயிற்பதிகம்' அங்ஙனம் லௌகிகவிஷயத்தில் அரசனைவாழ்த்திய ஆன்மா தன் பரலோகவாழ்விற்கு வழிதேடவேண்டித் தன் மனதை இறைவனுடைய இல்லமாக்கி அவரை யறியவேண்டுமென்பதைக் கூறிற்று. பின் 'போற்றித் திருவகவல்' இவ்வுலகவாழ்வின் பின் அவ்வான்மா கடவுளை யடையும் வழியை விளக்கியது. பின் 'ஆனந்தக்களிப்பு' அப்படி வழிச்சென்று இறைவனைக்கூடிய ஆன்மாவின் ஆனந்தானுபவத்தை யுணர்த்தியது. பின் 'வண்ணம்' அவ்வான்மா தன் அநுபவத்தை யுதாரணமாக்கொண்டு பிற ஆன்மாக்கள் பிரபஞ்ச மயக்கத்தி லழுந்திவிடாதிருக்கும்வண்ணம் புத்தி கூறியது. கடைசியில் 'உமைதுதி' ஒவ்வொருவனும் தான் வளர்ந்து பருவமடைந்தபின் தனக்கு உளதாகும் பதவி முதலிய அனுபவங்களிலெல்லாம் தன் தாய்க்கு நன்றிசெலுத்தவேண்டியவாறுபோல இவ்வான்மாவும் தனக்கு உளதாய பந்தத்திலிருந்து தன்னை விடுவித்து இவ்வானந்தானுபவந் தந்தருளிய உலகமாதாவாகிய இறைவன தருட்சக்தியை வியந்து துதிக்கின்றது.

இத்தகைய அருமைப்பொருள்களடங்கிய இப்புத்தகம் நாம் மேலே கூறியவாறு, எல்லாருக்கும் பயன்படும்படி ஆங்கிலத்தில், தமிழிலிருந்து மொழிபெயர்த்து நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் விலையும் யாவரும் வாங்கிப் படிக்கக்கூடியதாக நான்கணாவாக மிகக் குறைவாய் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

---

### இந்தியன் பினல்கோட் சுருக்கம்.

---

லா கைட் சீரீஸ் (Law guide series) என்னும் பதிப்பில் நான்காவது புத்தகமாகிய இதில் ஒரு பிரதி நம்முன்னுளது. இது முதலில் 1895-ம் வருஷத்தில் ம-ா-ா-ஸ்ரீ, பி. என். விஜயரங்கம்பிள்ளையவர்களால் இங்கிலீஷில் செய்யப்பட்டது. இதை இப்போது ம-ா-ா-ஸ்ரீ, ஜி. அரங்கநாத முதலியாரவர்கள் தமிழில் மொழிபெயர்த்ததாகத் தெரிய வருகின்றது. 1860-ம் வருஷத்திய 45-வது ஆக்டாகிய இது நாளது தேதிவரை ஏற்பட்ட சீர்திருத்தங்க

ளோடு வினாவிடை ரூபமாய் எழுதப்பட்டுள்ளது. இடையிடையே விசேஷ அர்த்தங்களடங்கிய குறிப்புகளும், இந்தியா ஐகோர்ட்டு ரூலிங்க்ஸ் என்னும் ஏற்பாடுகளும் எழுதப்பட்டுள்ளன. இப்புத்தகத்தில் சென்ற 34-வருஷகாலமாய் வெவ்வேறு சட்ட பரீக்ஷைகளில் கொடுத்த கேள்விகளும், நீதியதிபர்களால் விசாரித்து தீர்மானிக்கப்பட்ட வியாச்சியங்களைச் சேர்ந்த கேள்விகளும், இன்னும் இந்தியாவிலுள்ள சமஸ்த ஐகோர்ட்டுரூலிங்கள் திருஷ்டாந்தங்கள் இவற்றைச் சார்ந்த கேள்விகளும் சேர்த்து அவற்றைப் பினல் கோட் செக்ஷன்களின் கிரமப்படி வரிசையாய் இலக்கமிட்டு எழுதப்பட்டுள்ளது. இவற்றின் விடைகளும்எல்லாம் அவ்வவ் வினாக்களின்கீழ்த் திருத்தமாயும் சாக்கிரதையாயும் எழுதப்பட்டுள்ளன. இதில் பினல்கோடைச் சார்ந்த எல்லா விஷயங்களும் அடங்கியுள்ளன.

ஒரு இராஜாங்கத்தில் எப்போது ஒரு விஷயம் சட்டமாக ஏற்பாடாய்விடுகிறதோ அன்றுமுதல் அத்தேசத்தாரெல்லாம் அதன்படி நடக்கவேண்டியவர்கள். அப்படி நடக்காவிட்டால் சட்டப்படி தண்டனைக்குரியராவர். ஒருவன் அப்படி சட்டமிருப்பதறியாமல் தப்பி நடந்தானாயினும், அவன் அறியாமை அவனை அக்குற்றத்திற்குரிய தண்டனையிலிருந்து தப்புவிக்காது. ஆகையால் அரசன்கீழ் வாழும் குடிகளில் ஒவ்வொருவரும் தாம் நடந்துகொள்ள வேண்டிய சட்டவிதிகளை யறிந்திருத்த லவசியம். ஆகவே அச்சட்டங்கள் கிராமாந்தரங்களில் உள்ள குடியானவர்கள் முதலிய சாமானியர்களும் படித்தறிந்துகொள்ளத்தக்கதாக அந்தந்த தேசத்து பாஷையிலிருத்த லவசியமாம். அவ்வாறே இத்தேசத்தில் கிராமங்களின் அதிகாரிகள், குடியானவர்கள் முதலிய யாவரும் எளிதிலறிந்துகொள்ளும் பொருட்டு இப்பினல்கோடானது தமிழில் வினாவிடை ரூபமாக மிக எளிய நடையில் எழுதப்பட்டது யாவருக்கும் மிக உபயோகமாகவிருக்கும். இத்தன்மையான புத்தகங்கள் தமிழில் இதுவரையில் இருந்ததில்லை. இதை மிக நன்றாக அச்சிட்டு, பைண்ட் செய்து 1-ரூபா 12-அணா ஆகிய மிக்க குறைந்த விலைக்கு விற்கிறார்கள். இது 'ஸ்டார் ஆப் இந்தியா' அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. இத்தகைய மிகப்பிரயோசனமுள்ள இப்புத்தகத்தை வெளியிட்டாருக்கு நம்மனோர் மிக நன்றி பாராட்டல் தகுதியாம்.

C. K. S.

## வித்யா விஷயமாகக்கூடிய இரண்டு சபைகள்.

### சில முக்கியமான சீர்திருத்தங்கள்.

இந்த வருஷம் டிசெம்பர்மீ வித்யா விஷயமாக இரண்டு சபைகள்கூடின. ஒன்று டிசெம்பர்மீ முதலில் 5, 6, 7-ந்தேதிகளிலும், மற்றொன்று மாசக்கடைசியில் 22, 23-ந்தேதிகளிலும் கூடிற்று. இவ்விரண்டில் முதலில் கூடியசபை மிகமுக்கியமானது. இச்சபை 5-வருஷத்திற்கொருதரம் வித்யா விஷயமான ஏற்பாடுகளைத் தீர ஆலோசித்துச் சீர்திருத்துவதற்காக வித்யா இலாகா பெரிய உத்தியோகஸ்தர்களும் மற்றுள்ள பெரியபாடசாலைகளின் பிரதிநிதிகளும் சேர்ந்து வித்தியா இலாகாத்தலைவர் ஆபீஸில் அவர் அக்கிராசனம் வகிக்க அவருடைய அதிகாரத்துக்குள்பட்டுக் கூடுவது. இச்சபையார் செய்யும் தீர்மானங்களும் சிபார்சுகளும் வித்யா இலாகாத் தலைவரால் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டு அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதும் அனுஷ்டானத்துக்கு வரக்கூடியவை. மற்றொரு சபை வருஷா வருஷம் சென்னை மியூஸியம் நாடகமாளிகையில் சென்னையிலும் வெளி ஜில்லாக்களிலுமுள்ள உபாத்தியாயர்களும் மற்றப்படி வித்யாவிஷயத்தில் சம்பந்தப்பட்டவர்களும் அக்கறையெடுத்துக் கொள்பவர்களும் சேர்ந்து கூடிவரும் மகாசபை. இச்சபை சென்னையிலுள்ள "டீச்சர்ஸ் கில்ட்" என்னும் உபாத்தியாயர்கள் சங்கத்தின் ஆதரவில் அவர்களுடைய முயற்சியால் வருஷாவருஷம் கூட்டப்பட்டு வருகிறதென்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். சென்ற இரண்டு வருஷங்களாக வித்யாசம்பந்தமான விஷயங்கள் விசேஷமாகக்கவனித்துப் பத்திரிகைகளிலும் சபைகளிலும் மிகப்பிரஸ்தாபித்துப் பேசப்பட்டுவந்தனவென்பது வித்யாவிஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்வோர் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி விசேஷமாகக்கவனித்துத் தர்க்கித்துவந்த விஷயங்கள் இந்தவருஷம் அதிகாரிகளால் கவனிக்கப்பட்டு வேண்டிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டதால் இந்த டிசெம்பர்மீ வித்யா விஷயம் சம்பந்தப்பட்டமட்டில் மிக முக்கியமானதாகக் கருதப்படவேண்டியிருக்கிறது. சென்ற வருஷம் வித்யா விஷயமாகக்கூடிய மகாசபையில் கவர்னர் அக்கிராசனம் வகித்து மூன்று முக்கிய விஷயங்களைப்பற்றிக் கவனிக்கவேண்டிய தவசியமென்று வற்புறுத்திப் பேசினது விவேகசிந்தாமணியை



வாசிப்போர் ஞாபகத்திலிருக்குமே. அம்மூன்று விஷயங்களில் யூனிவர்ஸிடி சங்கத்தார் இப்பொழுது பரீக்ஷித்துப் பட்டமளிப்பதைமட்டும் தொழிலாகக் கொண்டிருப்பதைவிட்டு, போதிக்குந் தொழிலையும் மேற்பூண்ட யூனிவர்ஸிடியொன்று ஏற்படுத்தும் விஷயம் மிகப்பெரிதும் இலகுவில் காரியசாத்தியமானதுமாக இல்லாதது பற்றி அதையொழித்து மற்ற இரு விஷயங்களையும்பற்றித் தீரவிசாரித்து வேண்டிய சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள். இந்த வருஷம் இதற்குமுன் வருஷங்களில் பிரஸ்தாபித்துப் பேசப்பட்டுவந்த அனேக விஷயங்கள் டிசெம்பர்மீ முதலில் வித்யா இலாகாத் தலைவர் ஆபீஸில் கூடிய வித்யா அதிகாரிகள் சபையில் யோசித்து வேண்டிய சீர்திருத்தங்கள் செய்யத் தீர்மானிக்கலானபடியால் மியூஸியத்தில் கூடிய மகாசபையார் இவைகளைப் பற்றி விசேஷமாக ஏதும் சிபார்சுசெய்ய இடமின்றிப்போய்விட்டது. இப்பொழுது நூதனமாக நியமிக்கப்பட்ட வித்யா இலாகாத் தலைவர் கனம். மிஸ்டர் ஜி. எச். ஸ்டூவர்ட் அவர்கள், "டீச்சர்ஸ் கில்ட்" சங்கத்துக்கும் ப்ரெஸிடெண்டாக விருந்தவராதலால் அவர் இரு சபைகளிலும் அக்கிராசனம் வகித்துப் பேச நேரிட்டது. நுங்கம்பாக்கத்தில் அதிகாரிகள் கூடிச்செய்த தீர்மானங்கள் வெளியாகியிருக்கின்றன. அவைகளினால் வித்யாசம்பந்தமாக அனேகம்முக்கியமான சுகிர்தமாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றனவென்பது விசதமாகிறது. அம்முக்கிய மாறுதல்கள் ஊர்ஜிதத்துக்குவர கவர்ன்மெண்டார் அங்கீகாரம் ஒன்று தேவையாயிருப்பது வாஸ்தவமானாலும் காலக்கிரமத்தில் அவர்கள் அங்கீகாரம் கிடைக்குமென்பது திண்ணம். ஆகையால் அம்மாறுதல்களையும் மற்றப்படி வித்யாவிஷயமாகப் பிரஸ்தாபத்துக்குவந்த இதர விஷயங்களையும் இங்கு சுருக்கமாகத் தொகுத்துக்கூற விரும்புகிறோம்.

முதலாவது வித்யா அதிகாரிகள் கூடியசபையில் செய்யப்பட்ட தீர்மானங்களில் மிகமுக்கியமானது, ப்ரைமெரி, லோயர் செகண்டெரி வகுப்புகளில் பிள்ளைகளுக்குப் போதிக்கும் விஷயங்கள், இப்பொழுதைப்போல் ஆங்கிலேயபாஷை மூலமாகவின்றி அவரவர் சுதேசபாஷைமூலமாகப் போதிக்கப்படவேண்டுமென்பதே. இது மிகவும் முக்கியமான ஒரு சீர்திருத்தம். பிள்ளைகளுக்கு வித்யாப்பியாசம் செய்வது அவர்கள் மனோவிர்த்தியின் பொருட்டு. முதலில் சிறுவர்களுக்கு உண்டாக வேண்டியது விஷயஞானம்; விஷயஞானத்துக்குப் பிறகே பாஷாஞானம் உபயோகப்படும். இப்பொழுதுள்ள வழக்கப்படி, விஷயஞானம் சுத்தமாக இல்லாத சிறுவர்களுக்கு அவர்கள் அறியாத அந்நிய பாஷையில் விஷயஞானமுண்டாக்கக்கற்பிப்பதில், கிளிப்பிள்ளைகளுக்குப் பேசக்கற்பித்ததுபோல், அவர்கள் மனதிற்பதியாத வார்த்தைகளையும் வாக்கியங்களையும் நெட்டுருப்போட்டு, அவைகளை ஒருபாஷையில்சொல்லி அதற்குச் சரியான வார்த்தைகள் அல்லது வாக்கியங்களை மற்றொரு பாஷையிலும் சொல்லக்கற்றுக்கொள்கிறார்கள். இதனால் பிள்ளைகளுக்கு விஷயஞானம் சிறிதும் உண்டாவதில்லை. அந்நிய பாஷையாகிய ஆங்கிலேயபாஷையைக் கற்பதில் அவர்கள் மனோபலமெல்லாவற்றையும் உபயோகிக்கவேண்டியிருப்பதால், சுயபாஷையிலும் பயிற்சியின்றி விஷயஞானம் என்பது சுத்தமாக இல்லாதவர்களாகிறார்கள். இது விஷயம் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களாக விருப்பவர்களுக்கு விசதமாகப் பட்டிருக்குமென்பது வாஸ்தவமானாலும் தம் பிள்ளைகள் படிக்கும் வகுப்பின் எண்ணைக்கொண்டும் அவர்கள் பரீக்ஷைக்குப் போவதைக்கொண்டுமே தங்கள் பிள்ளைகளின் வித்யாபிவிர்த்தியை மதிக்கும் பெற்றோர்கள் தங்கள் குலக்கொழுந்துகளான சிறுவர்கள் பள்ளிக்குப் போய்ப் பெரிய மூடமதிகளாவதை உணர்ந்திரார்களென்று எண்ணுகிறோம். அவர்கள் உணர்ந்திருந்தால், இந்தப் பெருங்குறை முன்னமே தீர்ந்துபோயிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. அவர்களுக்கு மனதிற்பட ஒரு உதாரணம் எடுத்துக்காட்டுவோம். இதையெழுதுபவர் லோயர்செகண்டரி பரீக்ஷைக்குப்போன பிள்ளைகள் பரீக்ஷையில் கேட்டகேள்விகளுக்கு மறுமொழி பகர்ந்ததை ஆராய்ந்து மதிப்பிட்டுவர வேண்டிய தம் கடமையைச் செலுத்திவருகையில் சில மாணாக்கர்கள் தமிழில் கொடுத்திருந்த விடைகள் அனேகந்தடவைகளில் அவர் பரிதாபத்தைக்கிளப்புவதாக விருந்தன. தமிழில் கேட்கப்பட்ட கேள்விகள் ஒன்றில், "ஒரு + கால்" என்பதைச் சந்திசேர்த்தெழுதி அதற்கு இலக்கணவிதியும் கூறும்படி கேட்டிருந்தது. மற்றப்படி புத்திகூர்மையுள்ளவனாகத் தோற்றிய ஒரு பையன் இந்தக்கேள்விக்கு விடை பகர்ந்திருந்தது விநோதமாகவிருந்தது. அவன் எழுதியிருந்த விடை இது:— ஒரு + கால் = ஒரேகால். அதாவது அவனுக்கிருந்த இரண்டு கால்களில் ஒன்று குழந்தையாயிருக்கையில் ஒடிந்து விழுந்துபோயிருக்கும், ஆகையால் பாக்கியுள்ள கால் ஒரேகால்—என்று அதிக யுக்தி யாலோசனைசெய்து எழுதி யிருந்தான். அந்

## சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

### அதிக ஆசை.

எவன் தனக்கு இனிமேல் ஆதாயம் வரப் போகிறதென்று நம்பிக்கொண்டு தற்காலத்தி லுண்டாயிருக்கிறதை அலட்சியஞ் செய் கிருனே அவனைப்போல் பைத்தியக்காரனும் துர்ப்பாக்கியனுமில்லை. அதிகாசை விசனத் தை யுண்டாக்குமென்றும் அதிகாசைக் காரர்களினிச்சைகள் ஒருபோதும் பலிக்கா தென்றும் நாம் நன்ருயறியவேண்டும்.

ஒரு மந்திரக்காரன் கிரகஸ்தனொருவன் வீட் டுக்குவந்து நான் வெள்ளியைத் தங்கமாக்குவே னென்ருன். அவன் வார்த்தையின் நிசத்தை யறிவதற்காக கிரகஸ்தன் அவனிடம் ஒரு வெள்ளி நாணயத்தைக் கொடுத்தான். மாந்தி ரீகன் தான் மந்திரஞ்செபிக்கவேண்டுமென்று குடியில்லாதவொரு பாழ்வீட்டுக்குட் புகுந்து கொஞ்சநேரத்துக்கெல்லாம் அந்த வெள்ளி நாணயத்தை ஒளித்து வைத்துக்கொண்டு தன் வசமிருந்தவொரு தங்கநாணயத்தை கிர கஸ்தனிடம் கொண்டுவந்து கொடுத்தான். கிர கஸ்தன் மிகவும் ஆச்சரிய மடைந்து மந்திரவா தியினுடைய பொய்மந்திரத்தை நம்பினவனுய் அதிக விசுவாசத்துடன் தன் குடும்பசகிதமாய் அவனைப் பூசித்து ஐயா என்பேரில் கிருபை கூர்ந்து என் வீட்டிலிருக்கும் வெள்ளி நாண யங்களையும் வெள்ளி ஆபரணங்களையும் தங்க மாக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டான். மந்திரக்காரன் அப்படியாளுல் எனக்கு ஒரு குடித்தனமில்லாத வீடு கொடுக் கவேண்டும்; நான் இராவெல்லாம் விழித்துக் கொண்டு மந்திரம் செபிக்கவேண்டுமென்ருன். கிரகஸ்தனும் தங்கள் ஆஞ்ஞைப்பிரகாரம் சித் தம் செய்கிறேனென்றுசொல்லி மனிதரில் லாத ஒரு வீட்டுக்குள் மந்திரக்காரனை யழைத் துக்கொண்டுபோய் அங்கே அவனிடம் தன் னுடைய வெள்ளி யாபரணங்கள் முதலிய எல்லாவற்றையும் ஒப்புவித்து பூஜாதிரவியங் களுங்கொடுத்து தான் வெளியே புறப்பட்டு வந்துவிட்டான். மாந்திரீகன் அந்த சனங்களை மோசம்செய்யும்பொருட்டு ஒவ்வொரு நிமிஷ மும் ஹா ஹு வென்றுபேரிரைச்சல்போட்டுக் கொண்டு மணியடித்தவண்ணமா யிருந்தான். வீட்டுக்காரர்கள் இவைகளைச் செவியுற்று திருப் தியடைந்து படுத்து நித்திரைபோனுர்கள். மந் திரக்காரனும் சூரியோதயத்திற்கு கொஞ்சம் முன்னதாகவே எல்லா ஆபரணங்களையும் கட் டிக்கொண்டு சவாரிவிட்டுவிட்டான். பொழு துவிடியவே கிரகஸ்தனும் அவனைச்சேர்ந் தவர்களும் நடந்த சங்கதியறிந்து நிஷ்பிரயோ சனமாய் விசனப்பட்டுக்கொண்டும் மந்திரக்கா ரன் மோசஞ்செய்தானே யென்று அழுது கொண்டு மிருந்தார்கள். இந்த திருஷ்டாந்தத் தின் நீதி யென்னவெனில் துராலோசனையை நம்புகிறவன் நிச்சயமாய் மோசமடைவான். அதிகாசைக்காரன் தான் ஆசைப்படும் வஸ்து வை அடையாமற்போவது மாத்திரமல்லாமல் தன்னிடமிருக்கும் வஸ்துவைக்கூடப் போக் கடித்துக்கொள்ளுகிருன்.

L. V. V. S.

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, $5\frac{1}{2}$ அணு.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவிலை விவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2.




அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1900ஞு பிப்ரவரிமீ [இலக்கம் 10.

### Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy $7\frac{1}{2}$ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7s. 6d. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. $5\frac{1}{2}$ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5s. 6d. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a Volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

### விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

**தளமான காகிதப்பதிப்பு:**—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி $7\frac{1}{2}$ அணு. பழைய பிரதி 8 அணு.

**லேசானகாகிதப்பதிப்பு:**—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி $5\frac{1}{2}$ அணு. பழைய பிரதி 6 அணு.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவருமல் கட்டினுல் வருஷசந்தாவில் 8 அணுவும், 6-மாச சந்தாவில் 4 அணுவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

எப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது எப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்திஞல் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

READINGS AT HOME.

A GLIMPSE INTO THE FUTURE.

## தமயந்தி.

13-ம் நாள் படிப்பு.

பதின்மூன்றாம்நாள், ருக்மணி அம்மாளும் பெண்களும் கைலாசத்தாத்தாவும் போஜனம் முடித்துக்கொண்டு வழக்கம்போலக் கதை கேட்பதற்குவந்து கூடினதும், சுப்பலக்ஷ்மி ன்வருமாறு படிக்கத்தொடங்கினாள்.

"இவ்வாறு, அரசிழந்து கான்புகின்ற நளமஹாராஜா, தனக்கு நேர்ந்த பெருவிபத்தினால், மனஞ்சலித்து வருந்தினானோ வென்னில், இல்லை. அவன் மலர்முகமானது, முன்னம் ராஜசபையில் அரசர்கள் முகமெல்லாம் வாடத் தமயந்தி கையால் மணமாலை சூட்டப்பெற்ற அன்றையினும், அதிகமாக ஒளிவிளங்கியது. மேலோர்கள், செல்வம்வந்தபோது தலைதெரியாமல் தாண்டிக்குதியார்கள்; வறுமை வந்தபோதும் மனம்சலித்து வருந்தமாட்டார்கள். என்றும் ஒரே தன்மையில் இருப்பார்களன்றோ? ஆதலின் அரசன் தான் இழந்த அரசை ஒருபொருளா மதியாமல் ஊக்கத்தோடும் தன் மனைவியின் அந்தப்புரத்துக்குச் சென்றான். தமயந்தி, அரசன் கவரிமுதலிய ராஜசின்னங்கள் இன்றி ஏகாங்கியாக வருதலை நோக்கி, யாது சம்பவித்ததோவென்று துணுக்கமடைந்து, அரசனை எதிரேற்று வணங்கிநிற்றலும், அரசன் நடந்த விவரங்கள் எல்லாவற்றையும் புண்ணுள் வேலை நுழைத்தாற்போல அவள் மனமகலங்கி வருந்தும்படிக் கூறினான். கூறலும், பெண்புத்தி பேதைமையுடையதாதலின், அரசனுக்கு நேர்ந்த பெருவிபத்தை நினைந்து தமயந்தி பெருமூச்செறிந்து வாய்விட்டுக்கதறிக் கண்ணீர் சொரிந்து அழுதுவருந்திப், பின்பு விதியின் பயனென்று விவேகத்தினால் சிறிது மனம் தேறினாள். அரசனும் அவளைநோக்கி, "நங்காய், வந்தது வந்துவிட்டது; இனிவருந்திப் பயனில்லை. இந்நகரத்தில் நாம் இனிமேல் இருத்தல் முறையன்று; நீ என்னோடும் அலைந்து திரிதற்குத் தகுதியுடையாயல்லை. ஆதலின் நம்மருமைமக்கள் இருவரோடும் நீ சென்று உன் தந்தை நகரில் இருப்பாயாக. கடவுளருளால் காலம் விடிந்து அரசாக்ஷியைத்திரும்ப அடைவேனாயின், அப்போது நீங்கள் என்னை வந்து சேரலாம்" என்றான். அச்சொல் கற்பிற்சிறந்த தமயந்தியின் காதில் காய்ச்சிய நாராசத்தைச் செருகினதுபோல வீழ்தலும், மிகவும் வருந்தி, "என் பிராணநாதனே, நீர் நகரைவிட்டுக் கொடியகானிற்சென்று திரிந்து வருந்திப் பாறற்கற்கள்மேல் படுத்துத் துயில, நான் என் தந்தை நகரை அடைந்து விந்தையான ஹம்சதூளிகா மஞ்சத்தில் படுத்துத் துயிலவோ! ஆ ஆ இதனினும்! கற்புடை மகளிர்க்கு உயாந்த புண்ணியம் வேறில்லைத்தான்!" என்றனள். அதுகேட்ட அரசர்பிரான், "நீ அறியாமற் சொல்லுகிறாய். தளிரினும் மெல்லிய உன்னுடைய பாதங்கள் முள்ளிலும் கூரிய கற்கள் உறுத்தக் காட்டில் நடந்து கன்றிவருந்தக்கண்டால் என்னுயிர் எவ்வாறு பிழைக்கும்? அன்றியும், நம்குழந்தைகள் என்னைவிட்டுப் பிரிந்திருப்பினும் உன்னைவிட்டு எவ்வாறு பிரிந்திருப்பார்கள்? மக்களின் அருமை பெற்றவர்களுக்கன்றோ தெரியும்? உலகில் எவ்வகைப்பட்ட அருமையான பொருள்களைப்பெற்றாலும் பெறலாம். விரிகடலமுதமும் மேலை ஞாலமும், யானைமுதலிய சேனைகளும் மணிக்குவையல்களும் பெறுதல் பொருளன்றே. அரியமக்களைப் பெறுதலே அருமையானதென்று பெரியோர்கள் சொல்லுவார்களே" என்றனன். தமயந்தி, "ஆனால் நாமிருவரும் நம்மக்களோடும் என் தந்தை நகரிற்சென்றிருக்கலாகாதோ?" என்ன, அரசன், "நங்காய், செல்வரிடத்தில் சென்று நம் குறைகளைச்சொல்லி யாசித்து அவர்கள் கொடுத்த தொன்றைப்பெற்று, உயிர் சுமந்திருத்தல் ஒருவருக்கு ஆற்றலையும் மானத்தையும் அறிவையும் கல்வியையும் மாற்றிவிடுமே. மேலும், யுத்தத்தில் அஞ்சி ஓடினவர்களும், பந்துக்கள் துன்பமடையத்தாம் சுகித்து வாழ்பவரும், வேட்டகத்தில் சென்று உண்டுகொண்டிருப்பாரும், ஆகிய இம்மூவகையாரும், மனிதர்க்குள்ளே பதருக்குச்சமானமானவரென்று பெரியோர்கள் சொல்லுவார்களே" என்றனன்." அதுகேட்டுத் தமயந்தி, "தேவரீர் திருவுள்ளம் இப்படியாகுமானால், நம் குழந்தைகளைமட்டும் என் தந்தை நகருக்குச்செல்ல உத்தரவு செய்யுங்கள். நான் தம்மைவிட்டுப் பிரியேன்" என்றனள். நளனும் தேர்ப்பாகனை அழைத்து அவ்வாறே உத்தரவு செய்தனன்.



குழந்தைகளைப் பிரிந்தபோது, ஆகா! அவர்கள் பட்ட துயருக்கு அளவுமுண்டோ? தங்களைவிட்டுப் பிரிவாற்றாமையால் அழுது விம்மிய குழந்தைகளைத் தமயந்தி, அவர்கள் தேகமுழுதும் தன் முலைப்பாலால் நனையப் பலகால் முத்தமிட்டுத். தழுவிக்கொண்டு கண்ணீரால் அவர்களைக் குளிப்பாட்டினாள். அப்போது பாகன் அரசனையும் அரசியையும் நீங்கள் விசனப்படவேண்டாமென்று ஆறுதல் சொல்லித் தேறச்செய்து உடலைவிட்டு உயிரைப் பிரித்ததுபோலக் குழந்தைகளைத் தேர்மேலேற்றிக்கொண்டு போயினான். இன்பமும் துன்பமும் சமானமாகக்கருதும் இயல்பினையுடைய நளமகாராஜன்கூட. மக்கட்பிரிவினால் வருந்தித்தளருவனாயின் மகப்பிரிவைவிட வலியதோர் துயரம் உலகில் சொல்லுதற்குண்டோ.?"

**சிவகாமி.**—ஏகச்சக்ராதிபதியாய் உலகனைத்தும் ஆண்ட சக்கிரவர்த்திக்கு மனைவி மக்களைவிட்டுப் பிரிந்து வருந்தும்படியான பெருந்துயரம் நேர்ந்ததே! நாம் எவ்வளவு? நமக்குண்டாகும் கஷ்டங்களைப்பற்றிச் சொல்ல நமக்கு வாயென்னுள்ளது?

**தாத்தா.**—தமயந்தியின் அருங்குணங்கள் இப்போதன்றோ புடமிட்ட பொன்னைப்போல் விளங்குகின்றது? "நீர் கானிற் சென்று பாறக்கல்லில் படுத்துத்துயில நான் என் தந்தைவீட்டில் ஹம்சதூளிகா மஞ்சத்தில் படுத்துத்துயிலவோ? கற்புடையாருக்கு இதைவிட மேலான புண்ணியம்யாது?" என்று சொல்லிய ஒரு வார்த்தையினாலே அவளுடைய பாதிவிர்த்தியமும் பதிபக்தியும் எவ்வளவு விளங்குகின்றது? கணவன் சுகிக்கும்போது தாமும் சுகித்திருத்தலும் அவன் வருந்தும்போது தாமும் வருந்தியிருத்தலுமன்றோ கற்புடையாளர்களுக்கு லக்ஷணம். அப்படிக்கன்றி புருஷன் பரதேசம்சென்று காட்டிலும் மலையிலும் பொருள் நிமித்தம் திரிந்துவருந்தத் தாங்கள் அவன் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருள்களையெல்லாம் த்வம்சம் பண்ணி உண்டுடுத்துக்கொண்டு குலாவிக் கவலையற்றிருப்பது கற்பின் நெறியாகுமோ? எத்தனைபெண்கள் அப்படிச்செய்து கணவனுக்குக் கவலையும் துயரமும் பெருக்குகிறார்கள்? திருஷ்டாந்தத்துக்கு வேறேபோவானேன்? நம்மூர் ஒற்றைத்தெருவிற் சுப்பிரமணியன் அகமுடையாளைப் பார்க்கிறதுதானே. அண்ணன் கொட்டை நூற்பது தம்பி அரைநாண்கயிற்றுக்குச்சரி! அவன் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறது இவளுக்கு இரவிக்கைத் துண்டுக்குக்கூடப் போதாது; அவ்வளவு மேனாம்புக்காரியாயிருக்கிறாள். இவ்விதமாகப் புருஷன் சுகதுக்கங்களை அறியாமல் கொஞ்சம் இளிச்சவாயனாய் அகப்பட்டுவிட்டால் அவன் கண்ணில் துரும்பையிட்டு ஆட்டிவைக்கும் பெண்பெண்டாட்டிகளாலேதானே பெரியோர்கள் பெண்களை அவமதிக்கிறார்கள்.

"சேய் கொண்டாருங்கமலச் செம்மலுடனேயரவப்
பாய் கொண்டானும் பணியும் பட்டைச் சுரத்தானே
நோய் கொண்டாலுங் கொளலாம் நூறுவயதாமளவும்
பேய் கொண்டாலும் கொளலாம் பெண்கொள்ளலாகாதே." என்றும்

"நிட்டையிலே யிருந்து மனத்துறவடைந்த பெரியோர்கள் நிமலன்ருளைக்
கிட்டையிலே தொடுத்து முத்திபெறுமளவும் பெரிய சுகங்கிடைக்கும் காம
வெட்டையிலே மதிமயங்கச் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித்தாலி
கட்டையிலே தொடுத்து நடுக்கட்டையிலே கிடத்துமட்டும் கவலைதானே" என்றும்

இல்லறத்தை இகழ்ந்திருக்கிருர்கள்.

சிவகாமி.—அவர்களுக்குத்தான் வேலையென்ன, ஆரோ ஆயிரத்துக்கொருத்தர் அப்படியிருந்தால் எல்லாரும் அப்படித்தானே? இவர்கள் பெரியோர்கள் என்கிற பெயரே ஒழிய ஒருவிஷயமும் இருபுறமும் புரட்டி ஆலோசிக்கிறதில்லை.

தாத்தா.—நலமும் இளப்பமும் எல்லாரும் தான் சொல்லுவார்கள். நற்குணமுள்ளவர்களையும் சிலாகித்திருக்கிருர்கள். சுப்பிரமணியன் அகமுடையாளைச் சொல்வது போலவே மேலைத்தெருவு சீதாராமன் அகமுடையாளையும் தான் சொல்லுகிருர்கள். அவளைப் பதிவிரதா சிரோமணியென்று கொண்டாடாத பேர் இல்லை. போனவருஷம் சீதாராமன் உடம்பு சொஸ்தமில்லாமல் இருந்தபோது இராவாப்பகலாக் கட்டிக்காத்து ஔஷதமோ பத்தியமோ அவனுக்கு இதமானபடிச் செய்து கொடுத்துச் சாவித்ரி தன் புருஷனை நமன்வாயிலிருந்து மீட்டதுபோலே அவள்தானே அவன் பிராணனை மீட்டாள்! அதையும்தான் எல்லாரும் சொல்லிக்கொள்ளுகிருர்கள். நிற்கக், குழந்தைகளைவிட்டுப்பிரிதல் மக்கட் பிரிவினும் வலியதுயராம் ஒன்றுமில்லையென்று சொல்லும்படி அவ்வளவு கஷ்டமாயிருக்க நம்தேசத்தில் வெள்ளைக்காரர்கள் இரண்டு மூன்று வயதிலேயே பெண் பிள்ளைகளைச் சீமைக்கனுப்பிவிட்டு எப்படியிருக்கிருர்களோ அறியேன்! அவர்கள் சாகசம் சாகசம்தான்.

ருக்குமணி.—அப்படிச் சொல்லாதேயும்; அவர்கள் சாகசத்தினுல் அனுப்பிவிட்டிருக்கிருர்களென்றெண்ணவேண்டாம். அவர்களுடைய குழந்தைகள் இவ்வுஷ்ணதேசத்தில் சரிவர வளருகிறதில்லை. ஆதலினுல் அவர்கள் வேறு நிவிர்த்தியில்லாமல் வருத்தத்தோடும் அனுப்புகிருர்களேயன்றி வேறில்லை. அவர்கள் குழந்தைகளைவிட்டுப் பிரியும்போது அழுது வருந்துவதைப்பார்த்தாலல்லவோ தெரியும்.

தாத்தா.—யசோதைப் பிராட்டியார் பகவான் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி குழந்தையாக விளையாடும்படி எவ்வளவு வருந்தித் தவஞ் செய்தாள்? குழந்தைகளுடைய விளையாட்டுக்களைக் காணக் கொடுத்துவைத்த கண்களே கண்கள். அவர்களுடைய அமிர்தம்போன்ற இனிய மழலைச் சொற்களைக்கேட்கப்பெற்ற செவிகளே செவிகள். அவர்களுடைய உடம்பைக் கட்டியணைத்துத் தழுவப்பெற்ற உடற்கின்பத்துக்கு ஒப்பு வேறுமுண்டோ? அதனுல்தான் எந்தச் செல்வத்தைப்பெற்றாலும் பெறலாம், மக்கட்செல்வத்தைப் பெறுவது மிகவும் அருமையானது என்ருர் பெரியாரும்.

ருக்மணி.—ஆமாம் உள்ளதுதான்; அப்படியிருந்தும் எவ்வளவுபேர் தேடிவைத்தும் அனுபவித்தறியாத லோபிகள்போல மக்கட் செல்வத்தைப் பெற்றும் அதன் பயனை மௌட்டியத்தினுல் இழக்கிருர்கள். பிள்ளைகளை வளர்க்கும் விஷயத்திலும் அவர்களை நடத்தும் விஷயத்திலும்



பெற்றோர்கள் எவ்வளவோ அறியாமையைக் காட்டுகிருர்கள்.

நமக்குள் தாய்மார்களுக்குத்தான் குழந்தைகளைப்பயிற்றும் விவரமே தெரியாதே. உடம்பிளைக்காமல் வேளா வேளையில் உண்டி முதலியவற்றைக்கொடுத்துப் பாதுகாப்பது ஒன்றுதான் அவர்கள் கடமை. மற்றப்படிப் பிள்ளைகளின் மனப்பயிற்சி, அறப்பயிற்சி யென்னும் வழிக்கே அவர்கள் போகிறதில்லை. தந்தையர்களில்கூட அநேகர் இவ்விஷயங்களில் தக்கபடித் தம் கருத்தைச் செலுத்துகிறதில்லை.

சிலர் பிள்ளைகளுக்கு அளவற்ற சுதந்திரம் கொடுத்து அவர்கள் தம்மைத்திட்டவும் அடிக்கவும் இடங்கொடுத்து 'செல்வம்' சிரிப்பாணி' என்ற வசனத்துக்கேற்ப அவர்களை முற்றிலும் கெடுத்து விடுகிருர்கள். இதனுல் பிள்ளைகள் அதிகத் துடுக்கும் அதிகப்பிரசங்கமும் அடைந்து பெரியோர் சிறியோர் என்னும் வரன்முறையின்றி 'தாய்க்கடங்காதது ஊருக்கடங்காது, ஊருக்கடங்காதது ஒருவர்க்கும் அடங்காது' என்று அடக்கவணக்கம் மட்டு மரியாதை ஒன்றும் இன்றிக்கெட்டுப்போகிருர்கள். வேறு சிலர் பிள்ளைகளுக்கு எள்ளளவும் சுவாதந்திரியம் கொடாமல் அவர்கள் தம்முன்னிற்கவும் அஞ்சியோடி ஒளிக்கும்படிக் கடுகடுவென்று நெருப்பும் நெடியுமாய் நிற்கிருர்கள்! இதனுல் அப்பிள்ளைகள் ஊக்கமும் உற்சாகமும் இழந்து வெயில் காணுத நிழலில் வளரும் பயிர்போல மனேசங்கோசமடைந்து பெற்ருேரிடத்தில் வரவர வெறுப்பும் விகற்பமும் அடைகிருர்கள். ஆதலால் அதிகச்செல்வமும் கெடுதியே. அதிகக் கண்டிப்பும் கெடுதியே. மென்மையான பட்டுறையிற் செருகியிருக்கும் வெட்டுக்கத்திபோல மேலுக்கு மிக்க இதமாயும் உள்ளே கண்டிப்புள்ளவர்களாயும் இருத்தல்வேண்டும். பிள்ளைகளுக்குக் கெடுதியற்ற காரியங்களில் வேண்டியமட்டும் சுதந்திரம் கொடுத்துக் கெடுதியான காரியங்களில் மிகவும் கண்டிப்பாயிருத்தல்வேண்டும். அவர்கள் தங்களைச் சுற்றிச் சூழ்ந்து கொஞ்சிக்குலாவி நேசம்பாராட்டி விளையாடி மகிழ அவர்களுக்கு இனிய கதைகளைச் சொல்லி விநோதமாக அறிவூட்டி அவர்களோடு தாமும் சமானமாக விளையாடி மகிழும் பாக்கியமே பாக்கியம். இதுவே இல்லறத்துக்குச் சிலாக்கியம். இதுவே பெற்ருேர்கள் கொள்ளத்தகும் வேதவாக்கியம். இப்படிப் பிள்ளைகளுக்கு இடம் கொடுத்தவிடத்திலே அவர்கள் தங்களிடத்தில் கொள்ளவேண்டிய பயபக்தியை விட்டுவிடவேண்டுமென்பதில்லை; பெற்ருேர்கள் சொல்லைக்கடந்து அவர்களின் இஷ்டத்துக்கு மாருக நடந்தால் அவசியம் அவர்கள் கோபத்துக்குள்ளாகித் தண்டனைக்குப் பாத்திரமாகவேண்டிவரும் என்னும் பயம் அப்பிள்ளைகளின் மனத்தில் குடிகொண்டிருக்கவேண்டியது. இது விஷயமாக இன்னம் விவரித்தாற் பெருகும், போதுபோயிற்று. கதையை இத்துடன் நிறுத்துவோம்.

எஸ். முத்து ஐயர், பி. எ.

## கடல்நுரை ஜந்து. *

நான் ஒருதடவை பங்களூரில் ம-ா-ா-ஸ்ரீ V. P மாதவராயர் அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தேன். அங்கேயும் இன்னும் மற்ற பெரியமனுஷியர்கள் சிலர் வீடுகளிலும் வெகு நேர்த்தியான கையெழுத்துப்படங்கள் சில பார்த்திருக்கிறேன். இவைகள் அனேக வர்ணங்கள் உபயோகப்படுத்தி எழுதப்பட்டவைகளல்ல. ஒரே ஒரு வர்ணமே உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. ஆனுல் அந்த வர்ணத்தை சில இடங்களில் மெல்லிதாகவும், சில இடங்களில் கனமாகவும் உபயோகப்படுத்தியிருந்தது. இந்த வர்ணத்தின் மாதிரி, வெகு கொஞ்சம் சிகப்புக்கலந்த நல்ல கறுப்பு மசிபோலிருக்கும். இந்த வர்ணத்தினுல் எழுதபபட்ட படங்கள் வெகு ஜாஸ்தி விலையுள்ளவைகள். ஏனென்

* *Sepia officinalis.* Common name—Cuttlefish.

ரால் இந்த வர்ணம் அகப்படுவது எளிதல்ல. இந்த வர்ணம் ஸமுத்திரத்தில் வசிக்கும் ஒரு ஜந்துவின் உடம்பிற்குள்ளிருக்கிற சிறு பையிலிருந்து எடுக்கப்படுகிறது. இது நாம் ஸாதாரணமாகப் பார்க்கிற ஜந்துவில்லை. இந்த ஜந்துவின் உடம்புக்குள்ளிருக்கும், நம் தேகத்தினுள் உள்ள எலும்புக்கூடுபோல் கெட்டியான பாகம்தான் கடையில் வெகு ஸாதாரணமாக கடல்நுரை (படம் 2.) யென்று விற்கப்படுகிறது. இதைக் கற்பலகைகள் உபயோகப்படுத்துகிற சிறுபிள்ளைகள் தங்கள் பலகைகளைத் தேய்த்து சுத்தம்செய்ய எப்பொழுதும் தங்கள் சட்டை 'ஜேபில்' வைத்துக்கொண்டிருப்பார்கள். பள்ளிக்கூடங்களில் கணக்கு முதலியது எழுதி தெரிவிக்கவேண்டியதற்கு உபயோகப்படுத்துகிற, முக்காலிமேல் தூக்கி வைத்திருக்கிற கறுமை பூசிய பெரும் பலகைகளையும் இக்கடல்நுரை போட்டுத் தேய்த்தே சுத்தம்செய்கிறார்கள். காதில் குடைச்சல் உண்டானால் இக்கடல்நுரையில் பாலாக இருக்கும் பாகத்தில் சிறிது கிள்ளிப்போட்டு நல்லெண்ணெயில் காய்ச்சி காதில் விட்டுக் கொள்ளுவார்கள்.




கடல்நுரை ஜந்து.

2.



கடல்நுரை.

இக்கடல்நுரையின் ஒருபக்கம் எலும்புபோல் உறுதியாகவும் மற்றொருபக்கம் மிருதுவாகவும் இருக்கும். மிருதுவாயிருக்கும் பக்கத்தை உற்றுப்பார்த்தால் வரிசைவரிசையாக் கோடுகள் தெரியும். இளம்பருவமான ஒரு ஜந்துவின் இவ்வெலும்புக்கும் முதிர்பருவமான ஜந்துவின் எலும்புக்கும் வித்தியாஸம் எலும்பின் பிரமாணத்தினால் மாத்திரமல்ல, இதின் உள்பக்கத்திலுள்ள மேற்சொன்ன மிருதுவான வஸ்துவின் அடுக்குகளின் எண்ணின் ஜாஸ்தி குறைவினால் கூட அறிந்துகொள்ளலாம். இம்மிருதுவான வஸ்து குணத்தில் சீமைச்சுண்ணாம்புக்கு ஒப்புள்ளது. ஜந்துவின் முதிர்வயதிற்குத் தக்கபடி இது அடுக்கடுக்காய் ஜாஸ்தியாகிக்கொண்டு வரும்.

கடல்நுரையின் ஒரு நுனியில் ஒரு முள்ளு இருக்கும். இந்த நுனி இருக்கும் பக்கம் ஜந்துவின் தலைப்பக்கம். இந்தப்பக்கத்தில் இஜ்ஜந்துவுக்கு பத்து (10) கைகள் உண்டு. இவை மெலிந்து நீண்டு இருக்கும். இப்பத்துக்கைகளுள் இரண்டு மாத்திரம் மற்றவைகளைக்காட்டிலும் வெகு அதிகமாக நீண்டிருக்கும். ஒவ்வொரு கையின் நுனியிலும் உருஞ்சும் வாய்கள் அநேகம் இருக்கின்றன (படம்—3. அடையாளம்)

இந்த ஜந்து மழைநாட்களில் விசேஷமாக நிலத்தில் ஊர்ந்துவரும் "பாம்புக்குத் தண்ணீர் கொண்டுபோகிறது" என்று பெயர் வழங்கும் நத்தையின் சாதியைச் சேர்ந்தது. படத்தில் காட்டியிருக்கிறபடி இதற்கு இரண்டு பெரியகண்களுள்ளது. கைகளின் நுனியில் உள்ள உருஞ்சும்வாய்களைத்தவிர வேறு தனியாக வாய் கிடையாது. இந்த உருஞ்சும்வாய்கள் வழியாக அநேக சிறுபூச்சிகளை கடல்நீருடன் உருஞ்சிக்கொண்டு சாப்பிடும். இதின் அபானத்துவாரம் (anus) தலைப்பக்கத்திலேயே இருக்கிறது. (A. அடையாளம்) இதன் தேகத்தில் சிகப்பான இரத்தம் ஓடுகிறது. இதன் இருதயம் கவனித்துப்பார்த்தால் வெகு வேடிக்கையாகவிருக்கும். இது சுவாசிக்கிறது மீன்களைப்போல. இதன் உடம்பினுள் படத்தில் (1. I. S.) அடையாளமிட்டிருக்கிற இடத்தில் ஒரு பை இருக்கிறது. இந்தப்பை ஜந்துவின் அபானவாயில் வழியாகவே திறக்கிறது. இப்



பையில்தான் நான் முன்சொன்ன வர்ணம் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது. ஒரு முதிர்ந்த கடல்நுரை ஜந்துவினிடமுள்ள இந்தப்பையில் ஒரு (tea spoon) சின்ன உத்தரணி அல்லது கரண்டிக்கு ஜாஸ்தியாக இந்த வர்ணம் இருக்கும்.

இந்த ஜந்துவின் இயற்கை வழக்கங்களில் இரண்டு விஷயங்கள் மிகவும் ஆச்சரியப்படத்தக்கவைகள்.

(1) இந்த ஜந்துவுக்கு உள்ள 10-கைகளில் இரண்டு வெகு நீண்டவைகள் என்று சொன்னேனல்லவா? இந்த இரண்டு கைகளும் மற்றக் கைகள்போலவே அநேக உருஞ்சுவாய்களை உடைத்தானவைகள். ஆனால் இவைகளுக்கு சாப்பிடுகிறதைக்காட்டிலும் அதிகமான செய்கை ஒன்று உண்டு - அதாவது தன்னினப்பெருக்கு. தன்னினப்பெருக்கு விஷயமாக இரண்டு - அதாவது ஆண்பெண் ஜந்துக்கள் கூடிப்பிரிந்தால் அவைகளுக்குத் தங்கள் தேஹ அவயவங்களில் யாதொரு லோபமும் நேரிடுகிறதில்லை. நம் கண்ணுக்கே தெரியாத நீரிலுள்ள வெகுவெகு சிறு ஜந்துவான (amœba) அமீபா வகுப்பில் இரண்டு சேர்ந்தால் மறுபடி உடனே பிரிகிறதில்லை. இரண்டும் ஒன்றாகவே ஒருமித்து ஒரே ஜீவன்போல் சற்றுகாலம் வாழ்ந்து பிறகு இரண்டாகப் பிரிகிறது உண்டு. இப்படி ஒருமித்துப் பிரிகிறதினால் இந்த ஜந்துக்களுக்கு தன்னினத்தைப் பெருகச்செய்யும் சக்தி வருகிறதென்று தெரிகிறது. அமீபாவைக்குறித்து இன்னொருதடவை சொல்லுவேன். இந்த கடல்நுரை ஜந்துவின் ஆண்பெண் கலந்தால் அமீபாவைப்போல் முழுவதினும் இரண்டும் ஒருமித்துப்போகிறதுமில்லை. சேர்ந்ததுபோல் பிரிந்து வருகிறதுமில்லை. சேருகிறதிலும் ஒன்றுடன் ஒன்று தேஹமுழுவதும் ஒன்றுபட்டு நெருங்குகிறதில்லை. ஆணும் பெண்ணும் ஒன்றுடன் மற்றொன்று இந்த நீண்ட கைகளை நீட்டிச்சுழற்றி உருஞ்சும் உருப்புகளால் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளவே இந்தக் கைகள் ஒட்டிகொண்டு விடுகின்றன. பிறகு பிரிக்க சாத்தியமில்லை. ஆகையால் இவைகள் பிரியும்போது ஆணின் நீண்ட கையின் நுனியானது அறுந்துபோகிறது. இந்த பாகம் பெண்ணின் கையுடன் ஒருமித்துப்போகிறது. இந்த ஒருமித்த இடம் கொஞ்சகாலம் தரித்து பெருத்து ஒரு கோவைப்பழம்போலாகிறது. இப்படி ஆகும் தருணத்தில் அந்தச் சிறுதலையணைபோன்ற வீக்கத்தினுள் கர்ப்பம் முற்றி முட்டைகள் நிரம்பி விடுகின்றன. பிறகு பெண்ணும் இந்தத் தன் கைநுனியை நழுவவிடுகிறது. நழுவவிடப்பட்ட கர்ப்பம் கடலில் மிதந்துபோய்க்கொண்டு வெடித்து தன்னுள்ளுள்ள சிற்றினங்களை வெளிப்படுத்துகின்றது

(2) இதுதவிர மற்றொரு வெகு விநோதமான வாடிக்கை இந்த ஜந்துவினுடமுள்ளது. கடலில் வாழும் ஸகல ஜந்துக்களுக்கும் வைரிகளுள்ளன. ஒன்றை ஒன்று தின்று பசிதீர்த்தே காலம் தள்ளவேண்டியிருக்கிறதல்லாது நிலத்தில் நாய், பூனை, கிளி முதலியவைகளுக்கு நாமிடுவதுபோல் மீனுக்கும் நண்டுக்கும் கூப்பிட்டிடுகிறவர்கள் யார்?

தன்னை எந்த சமயத்தில் தன் விரோதி பிடித்து விழுங்கிவிடுமோ என்று ஸதா பயமுள்ள இந்த நீர் ஜந்துக்கள் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எத்தனையோ சாதன ஏற்பாடுகளுடன் அமைந்திருக்கின்றன. இந்த ஏற்பாடுகளுள் கடல்நுரை-ஜந்துவிற்கமைந்துள்ள ஏற்பாடானது வெகுயுக்தியுடனுள்ளதாக இருக்கிறது. I-அடையாளமுள்ள படத்தில் I. S. என்று காட்டியிருக்கிற பையைக்குறித்து முன்னமே சொன்னேன். இதில் கறுப்பானமை ஒன்று இருக்கிறதல்லவா? கடல்நுரை ஜந்து தன் வைரி ஸமீபத்தில் வருகிறதா இல்லையாவென்று பார்த்தறிந்துகொள்ள நேர்த்தியான கண்கள் இரண்டுண்டாகையால் ஸாதாரணமாக வைரியைக்கண்டு ஓடிப்போகிறது சுலபமே. ஒருக்கால் தன்னை அறியாமல்

வைரி சமீபித்துவிட்டால் உடனே இந்தஜந்து தன் பையிலிருக்கும் மையை வெளியில் தன் வைரி இருக்கும் பக்கமாகப் பீச்சிவிடுகிறது. இந்த மை தண்ணீரில் கலந்து தனனைச்சுற்றி ஒரு பெரிய மேகம் கவர்ந்துகொண்டதுபோல் இந்த ஜந்துவை மறைத்துவிடுகிறது. இந்த மறைவால் காப்பாற்றப்பட்ட கடல் நுரை-ஜந்து உடனே கடலில் ஓடி யொளிந்துவிடுகிறது.

சென்னையிலுள்ளவர்கள் கடற்கரையில் மீன்பிடிக்கிறவர்களிடம் சொன்னால் சுலபமாக இந்த ஜந்துவைத் தருவித்து நேரில் பார்க்கலாம். மற்றும் கடற்கரை யூர்களில் உள்ளவர்களும் நேரில் பார்க்கலாம். நேரில் பார்த்தால், ஐயோ! இதுவரையில் இந்த விநோதமான ஜந்துவைப் பார்க்கவில்லையே என்று வருத்தப்படுவீர்கள்.

N. S.

THE STREET OF BY-AND-BYE.

(ADAPTED).

## 'பின் செய்வோம்' என்னும் பேதை நெறி.

நேரிசை வெண்பா.

1. பின்செய்வோம் என்னுமொரு பேதைநெறிக் கேகாதீர்!
என்செய்யும் என்பதனை எண்ணிடுவீர் ;—பொன்செய்பூண்
மைந்தர்காள், ஆங்கணடி வைத்தார்க்கு மற்றில்லைச்
சிந்தையுறு சீர்நிலைக்கட் சேர்வு.

ஏகாதீர்=போகாதீர்கள், ஆங்கண் அவ்விடம், சீர்நிலை=உயர்ந்தநிலைமை.

2. கூடிக் கெடுக்கும் குணமுடையார் கொள்கைபோல்,
வேடிக்கை யாவிருக்கும் மேவுநெறி;—நாடியதில்
மெள்ளவரு தென்றற்கால் மெய்குளிர வீசினும்,
கள்ளமுடைத் தென்றகன்மின் கண்டு.

கொள்கை=குணம், தென்றற்கால்=தென்றற்காற்று, அகல்மின்=விலகுங்கள்.

3 எத்தனைபேர் யான்காண ஏதத்தின் நீங்கி அறம்
உய்த்தநெறி செல்ல உகந்தபேர் !—புத்தி
வகைமோசம் ஆக மடியின்வலைப் பட்டுத்
தகைவுண் டதிற்கிடந்தார் தாம்!

ஏதம்=தீயொழுக்கம், அறம் உய்த்தநெறி=நல்லொழுக்கம்.

உகந்தபேர்=விரும்பினபேர், மடி=சோம்பல், தகைவுண்டல்=தளர்தல்.

4. கல்விமுக மேடேறிக் கடக்கக் கருதினால்,
ஒல்வகையால் ஓர் சிறுவன் ஊக்கமொடும் ;—செல்வனவன்



புந்தியொளி ஒல்கிப் புரிந்ததனைச் சாராதென் ?
அந்தநெறிக் கண்ணிருந்தான் ஆங்கு!

ஒல்வகை=பொருந்தும்வகை, ஒல்கி=குறைந்து, புரிந்தது=விரும்பியது.

5. எண்ணினன் ஓர்வணிகன் "எண்ணியவா றென் கருமம்
நண்ணுதலால் நன்னிதியம் நல்கூர்ந்தோர்—உண்ணச்
சொரிந்திடுவேன்." என்னத் ; துயர்துடையா தந்தோ!
இருந்தனனே அந்நெறிக்கண் எய்த்து.

6. "அந்தோ! நின் தம்பி அயர்ந்தான் அவன்பிழையைச்
சிந்தியேல், மன்னி." எனச்செப்பினேன்—"இந்தாநான்
மன்னிப்பேன் மாயும்முன்." என்றான் மடிந்திட்டான்,
அந்நெறிக்கட் டீராமுன் ஆங்கு!

7 வீணேநாள் எல்லாம் விழலுக் கிறைத்தயர்ந்த
மாணாதான் தன்மனத்தை வாங்கிப்பின்—சேணார்
பரநெறியில் நன்கு பதிக்க நினைந்தும்
ஒருவிலனே அந்நெறிக்கண் உற்று.

வழலுக்கிறைத்தல்=பயனில்லாமற் போக்குதல், மாணாதான்=பெருமையில்லாதவன்,
ஒருவிலன்=நீங்கினனில்லை.

8. கண்டீரோ மைந்தர்காள்! காட்டும் இவர்க் குற்றகதி,
கொண்டீர்நீர் அந்நெறியின் குத்திரத்தை,—அண்டாது
தப்புவீர் மூப்புவந்து சாருமுன், சார்ந்தக்கால்
எப்பொழுதும் உய்விலையே ஈங்கு.

குத்திரம்=வஞ்சனை, உய்வு=பிழைப்பு.

எஸ். முத்து ஐயர்.

## காந்திமதி.

I.

அதிகாரம்—1.

சூரியன் கீழ்த்திசையில் உதயமாயினன். அவன் வரவைத் தெரிவிப்பதற்காகக் குயில்களும் கிளிகளும் தங்கள் தங்கள் சிங்காரமான வாய் திறந்து கூவிக்கொண்டிருந்தன. தென்றலும் மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, சண்பகம் முதலிய புட்பங்கள் விரிவதினால் வெளிப்படும் கந்தத்தைச் சுமந்து எங்கும் உலாவியது.

பகலவன் வரவர ஆகாயத்தில் மேனோக்கிச் செல்லவே விந்தய பர்வதத்தின் பள்ளத்தாக்கிலுள்ள தன்னந்தனியாக அமைக்கப்பட்ட ஒரு பர்னகசாலை பனியினின்றும் உன்னதமாக வெளிப்பட்டது. இவ்வாசிரமத்தின் கூரை நாணலினால் வேயப்பட்டு நாலாபக்கமும் வைத்து வளர்க்கப்பட்டு வருகிற பூஞ்செடி

களின் கொடிகளினால் தழுவப்பட்டிருந்தது. இக்குடசம் வைக்கப்பட்டிருந்த சுத்தத்தைக் கவனிக்கும் பக்ஷத்தில், சச்சிதாநந்தஸ்வரூபியான சாம்பசிவனைத் தனியாய்ப் பணிந்து புகழ்வதற்கு உலகத்தைத் துறந்துவந்த ஓர் மகரிஷியின் வாசஸ்தலமென்றே துணியற்பாலது. இம்மகரிஷியின் இல்லத்தின் வாசலினின்று நாலாபக்கமும்பார்த்தால் சித்திரக்குள்ளரைப்போல் சின்னஞ் சிறியனவாகத் தோன்றுகின்ற பெரிய பசிய மரங்களடர்ந்த உன்னதமான பர்வதங்கள் சூழ்ந்திருந்தன. கீழ்த்திசையை நோக்கிக் கட்டப்பட்டுள்ள இக்குடிசைக்குத் தென்புறத்தில் ஒரு அருவி காக்கையினும் கருத்த மேனியையுடைய மணற் பூமியின்மேல், பக்கத்தினின்ற குன்றினின்றும் தப்பினேன் பிழைத்தேனென்று குதித்தோடியது.

இவ்விதமாக பர்வதத்தின் மத்தியில் நிர்மாணிக்கப்பட்ட இவ்வாசிரமத்தின் கூடத்தின் வடக்குச் சுவர்ப்பக்கமாய் ஒரு பெரியலிங்கமும், செம்பினாற் செய்தவோர் விக்கிரகமும் வைக்கப்பட்டிருந்தன. பக்கத்தில் தூபக்காலிலிருந்து வாசனைப்புகை கிளம்பி அக்கூடமுழுவதும் சூழ்ந்து மனோகரப்படுத்திற்று. ஒரு செப்புத் தாம்பாளத்தில் இரண்டு கதலியும் ஒரு தேங்காயும் ஒரு புளியங்கொட்டைப் பிரமாணமுள்ள சூடமும்வைக்கப்பட்டிருந்தது. தர்ப்பையினால் வேயப்பட்டுள்ளதோர் தட்டில் பலவிதமான புஷ்பங்கள் நிறைந்திருந்தன. இக்கூடத்தில் இப்பூஜை சாமான்களின் பக்கத்தில் யாரோ ஒரு பெரியவர் சப்பளங்கொட்டின காலும் இரண்டு முழந்தாள்களின் மேற்படிந்த கைகளும், மூடிய கண்களுமுடையராய் நிஷ்டையிலிருந்தனர். இவருக்குத் தெற்கே பத்தடி தூரத்தில் அக்கூடத்தின் முற்றத்தில் ஒரு வில்வமரம் வளர்க்கப்பட்டு வந்தது. அம்மரத்தின் பக்கத்தில் அதில் சார்ந்து ஒருவர் இவ்விருடியைப்போல் கால்களை மடக்கி உட்கார்ந்திருந்தார். ஆனால் கூப்பியுள்ள கைகளின் விரற்களிலமைந்தவடுக்களினாலும் இடுப்பில் கட்டிய கத்தியினாலும் மேலே தரித்துள்ள கவசத்தினாலும் இவர் உலகத்தைத்துறந்த இருடியல்ல, போர்க்களத்தில் புகழ் சம்பாதிக்க முயலும் யுத்தவீரனென்றே துணியவேண்டியிருந்தது.

இவன் பார்வைக்கு மிக்க கம்பீரமான புருஷன் காளமேகம்போற் கருத்த புருவங்களுக்குக்கீழ் வாசஞ்செய்யும் கண்களினின்று, தைரியமும் காருண்ணியமும் பிரகாசித்தன. அவ்வீரன் முகத்தின் மத்தியில் அமைந்துள்ள நீண்டுவளைந்த நாசியினால் அதிதீவிரமாய் விஷயங்களையறிந்துகொள்ளும் சக்தியுள்ளவனாகத் தோன்றினன்.

உருண்டு திரண்டு வழூமூண்டுள்ள கணைக்கால்களைக்கொண்டு சரீரத்தின் மற்ற பாகங்களின் பலத்தையும் வீரத்தையும் ஊகித்துக் கொள்ளக்கூடியதாக விருந்தது. எல்லா அவயவங்களைக்காட்டிலும் நயனங்கள் விசதமாக இப்புருஷன் ஒரு நாள் பாராளும் கண்ணியத்தை யடைவானெனப் பறைசாற்றின.

அக்கூடத்தில் இவ்விருவரையும் தவிர்த்து வேறொருவருமில்லை. 'இடை இடையே கூசிக்கும் பக்ஷிகளின் துவனியைத்தவிர வேறொரு சப்தமின்றி அவ்வாசிரமமுழுவதும் அமரிக்கையாயிருந்தது. ஆனால் திடீரென அவ்விருடி நிஷ்டையினின்றும் விழித்து பக்கத்திலிருந்த மணியை இடது கையால் பற்றியெடுத்து அடித்துக்கொண்டே வலது கரத்தால் ஒரு வில்வதளத்தை யெடுத்து தன் முன்னிருந்த சாம்பசிவாம்சம் ஆவாஹனம் செய்யப்பட்ட சாலிக்கிராமத்தின்பேரில் அருச்சித்தார். அக்காலத்தில் வெகுகாலமாக என்ணெயென்பது கண்டிராமல் ஒன்றுசேர்த்து தலையின் முன்னே முடியப்பட்டுள்ள குடுமியையுடைய ஒருவன் அவர் எதிரே வாய்புதைத்துக் கைகட்டி நின்றான். அவனைப் பார்க்குமளவில் அம்மகரிஷியின் சிஷ்யனைப்போல் தோன்றினான்.



இப்படி பக்தி விசுவாசத்துடன் எதிர் நின்றவனைப்பார்த்து இருஷி "போதாயனா, இராஜஸ்திரீகள் இன்னும் வரவில்லையா? தீபாராதனைக் காலமாய்விட்டதே" யென, அதற்குச் சீடன், மகாபயத்துடன் "இதோ வருகிறார்கள்" என்றுசொல்லி வாய் மூடுமுன்னமே மூன்று ஸ்திரீகள் இருஷியின் எதிரே தோன்றினர். அவர்களில் ஒருவர் தன் அரையிலுடுத்திய காஷாயப்புடைவையினாலும், யாக்கையை அழகுபடுத்துவதற்குத் தன் பதிவிரதா தர்மத்தைத்தவிர வேறு ஆபரணமுடையவளாயிராமையினாலும் அம்மகரிஷியின் பத்நியென்றே நன்கு விளங்கிற்று. ஆனால் மற்ற இருவரும் தங்கள் விசால நயனத்தினாலும் சந்திரபிம்பம்வெட்கி மறையும்படியான காந்தியையுடைய முகமும் தாமரைப்புட்பங்களையொத்த முன்னங்கைகளும், பாதங்களுந்தவிர மற்றெங்கும் கவர்ந்துள்ள பீதாம்பரத்தினாலும் இராஜஸ்திரீகளென்று வாய்திறவாது தெரிவித்தனர். முகச்சாயலினால் அவ்விருவரும் தாயும் மகளுமெனத் தோன்றிற்று. தாய்க்கு சுமார் முப்பது வயதிருக்கும். மகளுக்குப் பதினான்குக்குள்ளாகவே மதிக்கலாம். இச்சிறுமியின் அழகை முழுதும் வர்ணிக்க சக்தியிலம். ஆனால் பிரம்மன் தான் சிருஷ்டித்தொழிலைக் கற்றவுடன் பரீக்ஷார்த்தமாகவும் கைதேறவேண்டியதற்காகவும் இரம்பை முதலிய தேவகன்னிகைகளைச் சிருஷ்டித்துப் பிறகு தன் சிருஷ்டித்தொழிலின் முழுவல்லமையை இவ்வுலகிலுள்ளவர்களுக்குக் காட்டவேண்டுமென்றே இச்சிறுமியையும் சிருஷ்டித்தனன் என்கிற தேவரகசியம்மாத்திரம் நமக்குத்தெரியும்.

இவ்வளவு ரூபலாவண்ணியமமைந்த அணங்கையும் அவள் அன்னையையும் நோக்கி மகரிஷி "வாருங்கள், தீபாராதனைக்காலம் இது தான். தெரிசியுங்கள்" என்று சொல்லிக்கொண்டே தாம்பாளத்திலிருந்த சூடத்தையெடுத்து சமீபத்தில் எரிந்துகொண்டிருந்த தீபத்தில் கொளுத்தி ஆராதனைசெய்தார். அப்பொழுது இராஜஸ்திரீகள் வாய்திறவாது கன்னத்தில் இருகரத்தாலடித்துக்கொண்டனர். ஆனால் வில்வமரத்தண்டை இருந்தவர் மாத்திரம் "ஹா ஹா" என்று சொல்லிக்கொண்டு கபோலத்தில் போட்டுக்கொண்டனர். இச்சப்தம் கேட்கவே இராஜஸ்திரீகளில் சிறுமி, இச்சப்தம் எங்கேயிருந்து வருகிறதென்று பார்ப்பதுபோல் திரும்பி வில்வமரத்தண்டையுள்ள புருஷனை நோக்கினள். தீபாராதனையில் கவனமுள்ளவர்போலிருந்த அவ்வீரனும் அப்பொற்றொடியை நோக்கினன். அத்தருணத்தில் இஃதொன்றுமறியாத இருடி, அம்மங்கையை விளித்து "இதோ இத்தாம்பாளத்திலிருக்கிற தீர்த்தத்தை நிர்மாலிகைப் புட்பங்களோடு எடுத்துக்கொண்டுபோய் வில்வமரத்தடியில் கொட்டிவிட்டுவா" எனச்செப்பினர். இவ்விராஜகன்னிகையும் ஆசிரியன் ஆக்ஞையை நிறைவேற்றுவதில் மிகவும் ஆசக்தியுடையவளாய் மிக்க சந்தோஷத்துடன் அவைகளை யெடுத்துக்கொண்டுபோய் வில்வமரத்தடியில் கொட்டும்பொழுது (அகஸ்மாத்தாகவோ அல்லது வேணுமென்றோ அது நமக்குத்தெரியவராது) ஒரு புட்பம் அதன் பக்கத்தில் வீற்றிருந்த வீரன்பேரில் விழுந்தது. இவ்விஷயத்தை யறிந்த அத்தாமரை முகத்தினள் இருடியின் உத்தரவு நிறைவேறினவுடனே தாம்பாளத்தை இருந்தவிடத்தில் வைத்து மிகவும் பக்தியுடன் அப்பெரியவர்முன்னிற்க, அவர் இராஜஸ்திரீகளில் பெரியவளைப்பார்த்து "சுலோசனா, நீ யாதொன்றுக்குமஞ்சவேண்டாம் இவ்விபூதியை யெடுத்துக்கொண்டுபோய் அரசன் சரீரத்தில் பூசினால், சுரம் நீங்கிவிடும். ஆதியில் பாண்டியநாட்டில் சமணவரசன் விபூதியினால் சுகமடையவில்லையா? நானும் வருவேன், பிரதோஷம் நான்குதினமிருப்பதால் கூடவில்லை" என்றுசொல்லி சிறுமியை நோக்கி "காந்திமதி, உன்புத்திக்கும், கல்விக்கும், அழகிற்கும் இயைந்தபடி ஒரு புருஷனை ஈசுவரகடாக்ஷத்தினால் கூடிய சீக்கிரத்திலடைவாய்; நம்மு

டைய ஆசிரமத்திலிருந்து மான் ஒன்றைப்பிடித்துக்கொண்டுபோனுயே அதைச்சுகமாக வளர்த்துவா" என்றுரைத்தனர். காஷாயாம்பர்தரியாயிருந்த அவ்விருடியின் பத்னி தன் கணவனை நோக்கி "உதித்து பத்துநாழிகையாய்விட்டதால் போஜனத்திற்கு அகத்திற்கு அழைத்துக்கொண்டுபோகிறேன்" என, அதற்கு அவர் "அப்படியே செய், இதோ நானும் வருகிறேன்" என்று பகர்ந்து வீரனை ஆக்வயித்து "வீரசேனு ! இங்கேதானேயிரு, இராஜஸ்திரீகளை அழைத்துக்கொண்டுபோய் விட்டுவிட்டுவருகிறேன், நாமிருவரும் போஜனத்திற்குப்போகலாம்" என்று இராஜஸ்திரீகளோடு தானும் புறப்பட்டார்.

---

அதிகாரம்—2.

ஆச்ரமமுழுவதும் நிசப்தத்திலாழ்ந்திருந்தது. அவ்விடத்தில் வீரசேனன் மாத்திரமிருந்தனன். அவனும் ஆழ்ந்தசிந்தையிலமிழ்ந்தவனுயினன். ஆச்ரமவாயிலில் மேய்ந்துகொண்டிருந்த மான்கள் துள்ளிக்குதிக்கிற சப்தந்தவிர வேறுயாதொரு சப்தமுங்கேட்கவில்லை.

இருஷியும் இருஷிபத்நியும் முன்னே வழிகாட்ட பின்னே சுலோசனையும் கடைசியாக காந்திமதியும் ஆச்ரமத்தைவிட்டு போஜனத்திற்காக வெளியேபோயினரென்று சொன்னேமல்லவா ? அப்போது காந்திமதி அக்கூடத்தைவிட்டு அகலுந் தருணத்தில் சங்கம் போன்ற தன் கழுத்தைத்திருப்பி வீரனைப் பார்த்ததுபோல் தோன்றிற்று. அத்தருணம் முதல் வீரனும் வாய்பேசாதுயோசனையில் சிக்கினவனுயினன்.

அரைநாழிகை கழிந்தது. வீரன் பேசலுற்ருன் :—

"அகஸ்மாத்தாயிருக்கக்கூடுமா ? புஷ்பம் விழுந்தது—இச்செந்தாமரைப்புஷ்பம்? ஒருக்காலுமிராது. அதை யெடுத்து நழுவவிட்ட விரற்களைப்பார்த்தேன். அவள் தாமரை முகம் மலர்ந்திருந்ததே; புன்னகையும் அதரங்களினின்று ஜனித்ததே ; கண்களின் கருப்பு விழிகளும் நான் எங்கே எங்கே யென்று சுழன்று பார்த்தனவே; அகஸ்மாத்தாயிருக்கக்கூடுமா ? ஆச்ரமத்தை விட்டு நீங்கும்போது திரும்பிப்பார்த்ததும் அகஸ்மாத்தா ? நயனங்களின் இமைகள் வாவாவென அழைத்தன போலிருந்தனவே ; ஆஹா, செவ்வானத்தின் வழியாய் ஊடுருவிச்சென்று வருகிற மலைவாய்ச் சூரியன் கிரணங்களைப்போல் செம்பட்டினின்றும் தனித்து வெளிப்பட்ட விரற்களினின்றும் அம்மாதின் சரீராகிருதியையும் இலக்ஷணத்தையும் நானறிவேன். என்ன சௌந்தரியம்! என்ன ரூபம்! நமக்குக் கிட்டாத பொருளே ! இதுவரையிலும் என்னை அவள் நயனத்தினுல் சிற்சில சமயங்களில் நோக்கியிருக்கின்றனளே யொழிய வாய்திறந்து பேசியவளல்லள். புஷ்பம் விழுந்ததும் அகஸ்மாத்தா ? காந்திமதி, காந்திமதி, காந்திமதி, ருசிகரமான நாமம். ஓ செந்தாமரைப்பூ, என்ன பாக்கியம் செய்தாய் ? உன்னிலும் அதிக ரூபமுள்ள கைகளின் ஸ்பரிசத்தையடைய என்ன தபஸ் செய்தாய் ? காந்திமதி உன்னைத் தூதனுப்பினளோ ? உன்னைக் காந்திமதியைப் பார்ப்பது போல் சதாபார்ப்பேன், 'என் கவசத்திலிரு.' (என்று சொல்லி அப்புஷ்பத்தைத் தன் மார் போடணைத்து முத்தமிட்டு ஹிருதயத்தின் சமீபத்தில் கவசத்தினோ பாகத்திலிருத்தினன்.)

காந்திமதீ, திருவையொப்பாய்! கொம்பே! தீஞ்சொல்லாய்! பாவாய்! தொடியே! தேனே! அமிர்தே ! இனியவுயிரே ! சீரடி யொல்கி சிலம்பொலியப் பூநிலத்துலவும்பொழுதும் அந்நிலத்திலன்றி என் மனமாகிய மலர்மேலேநடப்பாய்.

"நினது திங்கள் மதித்த முகத்திலுள்ளன வாளோ ! கயலோ ! கூற்ருே ! வேலோ ! போதோ ! வண்டிருப்பினும் இடைமுறியும் இயல்பினளே ! நினை எத்துவேன் ! நான் கடல் போல் மறுகி நையும்படி மறைந்து நீங்குதல் நினக்குக் குணமாமோ !"—



எனப் பலவிதமாக வருந்தும்போது "சங்கரா சம்போ" வெனச்சத்தம் கேட்க இருஷி வருகிருரெனவறிந்த வீரன் முன்போல் வாய் பேசாதிருந்தனன்.

---

II.

அதிகாரம்—3.

நம் சரித்திரத்தின் காலம் கி. பி. பதினும் நூற்றுண்டு. அப்பொழுது இந்துஸ்தானத்தை அரசாண்டுவந்த ஆக்பர்மகா சக்ரவர்த்தி சகல தேசத்தரசர்களையும் தன் வசப்படுத்திமிகப் பராக்கிரமத்துடன் அரசாண்டுவந்த விஜயநகரத்தின் மஹாராஜனுகிய கிருஷ்ணதேவராயனைத் தோற்கடித்து அவன் மகள் காந்திமதியைத் தான் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்கிற எண்ணத்துடன் சகல பரிவாரங்களோடும் படையெடுத்துவந்து விஜயநகரத்தின் கோட்டை வாயிலின் முன்பாக கூடாரமடித்து பத்துநாள் அகோரமான யுத்தம் செய்தனன். இவ்யுத்தத்தில் ஆக்பர் சேனுவீரர்களிலனேகர் மடிந்தபொழுதிலும் துருக்க சக்ரவர்த்தியின் ஊக்கத்தினுலும் தைரியத்தினுலும், சண்டை முடிவிற்கு வராமல் நீடித்துக்கொண்டுவந்தது.

இவ்விதமாக சண்டைசெய்து கிருஷ்ணதேவன் இராஜ்ஜியத்தை அபகரித்துக்கொள்ள வேண்டுமென்பது ஆக்பரின் கருத்தல்ல. ஆக்பர் அரசாண்டுவந்த காலத்தில், அவன் தகப்பன் ஹுமாயூன் காலத்திலேயே சேனையைச் சேர்ந்து சேவகம் செய்துவந்த ஆப்கன் ஜாதியார் அடக்கக்கூடாத வேட்டைநாய்களைப் போல் இரத்தவெறிகொண்டு சமயம்வாய்க்குமானுல் ஹுமாயூனைத் தள்ளிவிட்டதைப் போல சக்ரவர்த்தியையும் சிம்மாசனத்தினின்றும் நீக்கித் தங்கள் இனத்தாருக்குப் பட்டங்கட்டவேண்டுமென்கிற துர் எண்ணங்கொண்டவர்களாயிருந்தனர். மொகலாயர்களிலநேகர்கூட ஆக்பரைப்புகழவில்லை. ஏனெனில் ஆக்பர் எம்மதத்திலும் சார்புற்றவனுய் ஒரு மதத்திலும் நிரந்தரப்பற்றில்லாதவனுயிருந்தனன். மகம்மதின் மதத்தை நிலைநாட்ட வேண்டுமென்று எண்ணங்கொண்ட மகம்மதியப் பிரபுக்கள் யாவரும் ஆக்பரைத் தங்கள் மனதிலேயே வெறுக்கலாயினர். இவ்வித வேட்டைநாய்களையும் காட்டுப்புலிகளையும் சுபாவத்தில் திருப்திசெய்வது அசாத்தியமென வறிந்த துருக்க சக்ரவர்த்தி, சிங்கம்போல, சௌரியமும், கண்ணியமும், நன்றியறிதலும், சத்தியம் பிறழாமையுமுள்ள இராஜபுத்திரர்களை வென்று அவர்களில் அநேகருக்குத் தன் சைன்னியத்தில் தளகர்த்தர் உத்தியோகம் கொடுத்தும் தானும் இராஜபுத்திரர்களுடைய குமாரத்திகளை விவாகஞ்செய்துகொண்டும் பரஸ்பர அந்நியோன்னியத்தை உண்டுபண்ணி மொகலாயர்களையும் ஆப்கன் ஜாதியாரையும் அவர்கள் துர் எண்ணங்கள் நிறைவேறவிடாது தடுப்பதே இராஜ்ஜியத்திற்குப் பலம் எனத் தீர்மானஞ் செய்தனன். இவ்வெண்ணத்துடன் தான் இப்பொழுது விஜயநகரத்தை ஜெயிக்க முயன்றதும்.

தன் சைன்னியங்கள் யுத்தத்தில் கரைந்து போகவே ஆக்ராவுக்குச் செய்தியனுப்பி இன்னம் பதினுயிரம் காலாட்படைதருவித்தனன். அத்தருணத்தில் திடீரென இந்து சக்ரவர்த்திக்கு சுரம்கண்டு அதிகரிக்க, கிருஷ்ணதேவன் சிற்றரசர்கள் சக்ரவர்த்தி சுரத்தினின்றும் சொஸ்தப்பட்டு வருமளவும் சண்டை நிறுத்தி வைக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் மூன்று திங்களுக்குச் சமாதானம் செய்தனர். ஆக்பரும் தற்காலத்துக்குச் சமாதானம் செய்வதில் மனமுள்ளவனுயிருந்தனன். ஏனெனில் தன் சைன்னியங்கள் மடிந்துபோனதோடுகூட தன் சேனுதிபதிகளில் சிலர்க்கு தக்ஷிணச்சக்கரவர்த்தியைப் பிடிக்கும் சுரம் கண்டு அவதிப்பட்டார்கள். அப்படிச் சமாதானம் செய்ய மனமுள்ளவனுயிருந்தபொழுதிலும் ஆக்பர் தன் சைன்னியங்களை வடக்கேயனுப்ப இஷ்டமில்லாமல் விஜயநகரத்திலேயே நிறுத்தி வைத்தான்.

இவ்விதமாகச் சமாதானம் செய்யப்பட்டதென்ற சேதிகேட்கும்போது, கிருஷ்ணராயன் சுரத்தினுல் அவஸ்தைமேலுற்றுப் படுக்கையில் சதாபுரண்டு ஆராட்டப்பட்டுக்கொண்டிருந்தனன். சுபாவமாகவே ஸ்படிகம்போல் பிரகாசிக்கின்ற இரண்டு நயனங்களும் சுரவேகத்தினுலும் கோபத்தினுலும் முன்னரிலும் பதின்மடங்கு அதிகமாய், வாரி யொதுக்கப்படாது முன்வந்து புரண்டுகிடக்கும் மயிர்க்கால்களினிடையே கிரணங்கள் வீசி ஜ்வலித்தன. ஒழுங்கின்றிப் பரந்திருக்கும் நீண்ட அடர்ந்த மீசைகள் சுரத்தினுல் காய்ந்துவரண்டு வெடிப்புக்கண்டிருக்கும் மேலுதடைக் கவர்ந்திருந்தன. யாதொன்றினுலும் மூடப்படாதிருந்த இருபுயங்களும் ஒருவாறு இளைத்திருந்தபொழுதிலும் அபரிமிதமான பலத்தை சூசிப்பித்தன.

சுரம்வாய்ப்பட்ட இச்சக்ரவர்த்தியின் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த வீரன் வயதில் சுமார் ஐம்பது இருக்கலாம். ஆனுலும் முப்பது வயதுதானுடைய கிருஷ்ணராயனுக்குச் சமபலமுடையவனெனத் தோன்றிற்று. அவன் உருண்டமுகத்தின் மத்தியில் செங்குத்தாய் வளர்ந்து கெம்பீரத்தோடு பிரகாசிக்கும் நாசிகள் அமைச்சன் புத்திதீட்சண்ணியத்தைக் காட்டின. அவன் கண்களின் ஊக்கத்தினுல் குடிகளையும் சத்துருக்களையும் வாய்பேசாது கண்ணோக்கினுலேயே அடக்கி யாளத்தக்க வீரியமுடையவனெனத் தெரியவந்தது.

இவ்விருவரும் இருந்த மண்டபம் பாதி வைத்தியசாலையைப்போலவும் பாதி வீரர்களின் இருப்பிடம்போலவும் தோன்றிற்று. அரசன் தலைமாட்டில் ஒரு 'பீரோ'வினுள் பலவிதமான ஔஷதங்களும், மாத்திரைக்கற்களும் இருந்தன. அதுவும் தவிர அம்மண்டபம் முழுவதும் ஒருவிதமான சுகந்த மருந்து வாசனையடித்துக்கொண்டிருந்தது. ஏனெனில் துற்காற்றுகள் அனுகாவண்ணம் வைத்தியர்கள் அவ்வறைக்கு அவ்விதம் வாசனை கட்டியிருந்தனர். அரசன் வலது பக்கத்தில் ஒரு பருத்த பட்டாக்கத்தி உறையின் உள் நின்று, புத்தினின்று பாம்பு சீறுவதுபோல், பிரகாசித்தது. இடது பக்கத்துச் சுவரில் கேடயமும் பல ஈட்டிகளும் தொங்கிக்கொண்டிருந்தன. சக்ரவர்த்தியின் கால்மாட்டில் கட்டிலின் பேரிலேயே ஒரு கதை வைக்கப்பட்டிருந்தது. அதுதான் கிருஷ்ணராயன் உயிர் ஆயுதம்: அதை விட்டு தூக்கத்திலேயும் பிரிவதில்லை.

இவ்வறையின் வெளிப்பக்கத்தில் இரண்டு மூன்று அரண்மனை உத்தியோகஸ்தர்கள் அரசனுக்குச் சுரம் அதிகரிப்பதைக்கண்டு வருத்தப்பட்டு மனம் நொந்துகொண்டு நின்றனர். இவ்வியாகூலம் இவர்களை மட்டுமல்ல விஜயநகரத்திலுள்ள குடிகள் யாவர்க்கும் பரவிப்பிடித்தது.

"கௌதமர் இன்னம் வரவில்லையா? திம்மா" என அரசன் வெகுநேரம் பேசாமலிருந்து திடீரெனவினவ,

மந்திரி.—"அவரை இட்டுக்கொண்டு வருவதற்காகத்தான் நம்மரண்மனைப் பொற்றெடிகள் போயிருக்கின்றார்கள்."

அரசன்.—ஆகா! விந்தய பர்வதத்திற்கா? அது ஆக்பர் இராஜ்ஜியமே, துருக்கராயின் வாய்ப்பட்டால்.

மந்திரி.—தாங்கள் பயப்படவேண்டாம். ஆக்பர் பிரயாணம் செய்யும்படி உத்தரவு கொடுத்திருக்கின்றனன். அதினுற்றான்.

அரசன்.—அப்படியா! பேஷ், துருக்கனானுலும் வீரன்; சத்தியவந்தன். யுத்தகாலத்திலும் உத்தரவு கொடுத்தனனோ?

மந்திரி.—அரச, மூன்று மாதத்திற்குச் சமாதானம் செய்திருக்கின்றார்களே?

அரசன்.—சமாதானம்! தெரியுமே! நம் வீரர்கள் ஸ்திரீகளுக்குச் சமானம். வீரமில்லாதவர்கள்; சமாதானமேன்? ஆஹா! இக்கதையைச் சுழட்டி ஆக்பர் தண்டைப்பிளக்கும் நாள் எந்நாளோ?



என்று சொல்லிக்கொண்டே பக்கத்தில் கிடந்த கதையை எடுத்துத் தன் தலைக்குமேல் சுழற்ற,

மந்திரி.—"சக்ரவர்த்தி, என்ன, பைத்தியமோ?" என்று சொல்லி யரசனைப் படுக்கையில் விழுத்தினன். திம்மராயன், அரசனைப் பாலியத்திலேயே யவன் தகப்பன் விட்டுவிட்டு இறந்துபோக, தன் மகனைப்போல் பாவித்து வளர்த்து வந்ததினுல், அரசன்மேல் மிகுந்த விசுவாசமுள்ளவன். மகாராஜனும் திம்மனைப் பிதாவைப்போல் மதித்து அவனிடத்தில் பயபக்தியுடையவனு யிருந்தனன். இப்படிக் கோபாவேசத்தினுல் கதையையெடுத்துச் சுழற்றித் தன் சுரத்தை யிராஜன் அதிகரித்துக்கொள்வான் என்ற பயம் ஜாஸ்தி திம்மனுக்கு.

அரசன்.—"பைத்தியமா? எனக்குத்தான் பைத்தியம், அவர்களுக்கும் பைத்தியமோ? அம்மைசூர்ராஜனுக்கு, அம்மதுரையான், நாய் பிடிக்கிக்கேரளத்தான், இவர்களுக்கென்ன? பைத்தியமில்லை, பெண்தன்மை. நான் அசௌக்கியமா யிருந்தாலென்ன? ஏன் சண்டை செய்யக்கூடாது! கிருஷ்ணராயன் சாவு பாதக்கண்டத்தை மிலேச்சனுக்குத் தத்தம்செய்து விடுவதோ? அவர்கள் ஏன் ஒன்று சேர்ந்து சேனுதிபதி யொருவனைத் தெரிந்தெடுத்துக்கொண்டு சண்டைசெய்யக்கூடாது?"

மந்திரி.—மகாராஜ், அப்படியேதான் நடக்கும் போலிருக்கிறது,—தங்களுக்கிஷ்ட மிருந்தால்.

அரசன்.—"ஆஹா, அப்படியா? எனக்குச் சொல்லாமல் எல்லா விஷயங்களும் நடக்கின்றனபோல் தோன்றுகின்றன. சமாதானமானதும், அவர்கள் சேனுதிபதி தெரிந்து எடுக்கப்போவதும், ஒரு விஷயமும் எனக்குச் சொல்லவில்லையே! நல்லதிருக்கட்டும். யார் தளகர்த்தன் ஆகலாம் திம்மா?" மகாராஜன் இம்மாற்றங்களைப் பகன்றபொழுது, கண்கள் சிவந்தன, மீசை படபடத்தது; கைகள் பக்கத்திலுள்ள கதையை நாடின.

மந்திரி.—சௌரியத்தையும், கண்ணியத்தையும் பார்த்தால், விசுவநாதநாயக்கன் ஆகலாம்.

அரசன்.—மதுரையானு? பாண்டியகுலத்து மூலைகளாகிய இளவரசர்களின் வேர்பிடுங்கிய கோடரிக்காம்பா? யோக்கியன்தான்! ஆக்பர் சௌந்தரியமான பெண்கள் தருகிறதாகச்சொன்னுல் மகம்மதியனுய்விடுவான். அவன்தான் யோக்கியன். இன்னம்?

மந்திரி.—அல்லது இராமச்சந்திரவர்மன், வரலாம்.

அரசன்.—வானராசாரம் நிறைந்த கேரளத்தரசன் சேனுதிபதியா? நாலுமொந்தை சாராயம் வாங்கிக்கொடுக்கிறதுதானே? சேனுதிபதித்துவத்தைக்காட்டிலும் அதை அதிகமாக விரும்புவான்.

மந்திரி.—ஏன் மைசூர் ராஜன் ஆகலாம்.

அரசன்.—ஜயசிங்கனு? அவன் திருடனே. மகா கபடன். நான் பேசும்பொழுதெல்லாம் உதட்டைமடித்துக்கொள்வான். இருந்தாலும் வீரன்.

மந்திரி.—கடைசியாகக் கர்னுடகதேசத்தரசன் தான்.

அரசன்.—"ஒருவேளையாகலாம். ஆனுல் எனக்கு ஒருசந்தேகம். அவன் தன் சரீரத்தைத்தானே தூக்கமுடியுமோ?"

என்று இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது, வெளியேநின்ற உத்தியோகஸ்தர்களில் ஒருவர் வந்து, சக்ரவர்த்திக்கு வந்தனம்செய்து, திம்மராயனை நோக்கி, "ஐய, உம்மை யுடனே பார்க்கவேண்டுமென்று யாரோ ஒருவர் சொல்லுகிறுர். அவர் நிற்கின்றனர்." எனத் திம்மராயன் அரசனிடத்தில் உத்தரவு பெருமலும் வாயைத்திறவாமலும் தத்க்ஷணமே வெளியேபுறப்பட்டுப் போயினன்.

K. V. S.

## சிறுவர்க்கான 'கிண்டர்கார்டன்' பாட்டுகள்.

(ராவ்பஹதூர் ஸி. நாகோஜிராவ் அவர்கள் அனுப்பியவை.)

### 6. இராகம் - ஸ்ரீராகம் - தாளம்—சாப்பு.

பல்லவி.

ஆலயம் போய்வருவோம் - தோழர்களே - ஆலயம்போய் வருவோம்.

அனுபல்லவி.

வேலை யெதுவிருந்தாலும் அதைமறந்தே
விருப்பமதாகவே மிகமகிழ்ச்சிறந்தே (ஆலயம்போய் வருவோம்)

சரணங்கள்.

1. சாயங்காலமானதால் - சாந்தமுடன்சேர்ந்து
சந்தோஷம்பெருகிட - தளர்ச்சியெல்லாம்தீர்ந்து (ஆலயம்)
2. நல்லசமயம்லோக - நாதனைநாம்வணங்க
நன்மையுண்டாகும்படி - நல்லோரைநாமிணங்க (ஆலயம்)
3. குழந்தைகளானதால் - கூட்டம்கலையாமலே
கூடிக்குலாவிக்கொஞ்சிக் - கொண்டேயலையாமலே (ஆலயம்)

---

### 7. இராகம் - ஸ்ரீராகம் - தாளம்—சாப்பு.

பல்லவி.

குருவைவணங்கவேண்டும் - பாலர்களே - குருவைவணங்கவேண்டும்.

அனுபல்லவி.

குருவைவணங்கினல் குறைவொன்றுமில்லையென்று
கூடிச்சிரசில்கையைக் கூப்பித்தொழுதுநின்று (குருவைவணங்கவேண்டும்)

சரணங்கள்.

1. பட்சத்துடனே நல்ல படிப்புமதனுக்கொத்த
பழக்கமும் பண்ணுவித்து பாராட்டும் பரிசுத்த (குருவை)
2. நம்மைமேன்மைப்படுத்த நல்ல கதைகள் கூறி
நல்வழிகாட்டிடுவோர் நயந்து நாம் மனந்தேறி (குருவை)
3. கஷ்டங்கள் தீருமே, இஷ்டங்கள் சேருமே
கனவிலும் மறவாமல் கருத்தாய் நாம் யாருமே (குருவை)

---



### 8. இராகம் கல்லியாணி - தாளம்—சாப்பு.

பல்லவி.

புஸ்தகம் இதோபாரும்-இனுங்கிடைத்த புஸ்தகம் இதோபாரும்.

அனுபல்லவி.

புஸ்தகம் இதோபாரும்-புகழ் பெறவேவந்த
புண்ணியவானாலே - புதிதாய் யெனக்குத்தந்த (புஸ்தகம்)

சரணங்கள்.

1. பார்க்கப்பளீரென்று - பகட்டாகவே யிருந்து
படிக்கப்பிரியமும் - பயனுமிகப்பொருந்து (புஸ்தகம்)
2. உள்ளே பலபடங்களுடையதாகி மெல்ல
ஊக்கத்தை மேன்மேலும் - உண்டுபண்ணும் நல்ல (புஸ்தகம்)
3. காதுக்கினிமையான - கதைகள் அனேகமுண்டு
கண்ணுக்குமழகிது - காதலுடன் கொண்டு (புஸ்தகம்)

---

### 9. இராகம் யமுனகல்லியாணி - தாளம்—ரூபகம்.

பல்லவி.

தீபாவளிக்கு மாப்பிள்ளை வந்தார் சீராய், சீராய், சீராய் தந்தார்
தீபாவளிக்கு மாப்பிள்ளை வந்தார்.

அனுபல்லவி.

கோபாவேசம் தன்னை விடுத்து
கொஞ்சும் பதங்கள் மெல்லதொடுத்து குலவி, குலவி, குலவி யுடுத்து (தீபாவளி)

சரணங்கள்.

1. பட்டுடைகள் மேலே பிரித்து
பகட்டுச்சரிகை தெரியத்தரித்து பார்க்க, பார்க்க, பார்க்கச்சிரித்து (தீபாவளி)
2. தோன்றும் பெரியோர் தம்மைப்பணிந்து
ஜோடிக்கடுக்கன் காதிலணிந்து-துலங்க, துலங்க, துலங்கத்துணிந்து (தீபாவளி)
3. வாணவகைகள் - வாங்கித்துய்ய
மாமன்வீட்டில் ஸ்நானம்செய்ய - மகிழ்ந்து, மகிழ்ந்து, மகிழ்ந்துவைய்ய (தீபாவளி)

---

### 10. இராகம் - நாதநாமக்கிரியை - தாளம்—சாப்பு.

பல்லவி.

நாய்வாலையாட்டுதுபார் - வளர்ப்போனைக்கண்டு - நாய்வாலையாட்டுதுபார்.

அனுபல்லவி.

பாய்வதும் ஓடுவதும் பதைப்பதுஞ் செய்து நாடி
பட்சத்துடனே தன் பல்லைக்காட்டி யோடி (நாய்வாலையாட்டுதுபார்)

சரணங்கள்.

1. விருப்பமாய் கிட்ட வந்து - வெகுநேரம் தான் விழுந்து
வேடிக்கையாய்க்குலைத்து - விளையாடிப்புரண்டெழுந்து (நாய்வாலை)
2. எழுந்து எழுந்து பின்பு - இருகாலால் நின்று நின்று
எட்டிப்பிடிப்பதுபோல் எஜமான்மேல் சென்று சென்று (நாய்வாலை)
3. சந்தோஷமாகவே தன் தலையை ஆட்டி ஆட்டி
தந்திரமாய்க் கௌவித் தன்னுக்கை நீட்டி நீட்டி (நாய்வாலை)

---

11. இராகம் - நாதநாமக்கிரியை - தாளம்—சாப்பு.

பல்லவி.

எண்ணெய்தேய்ப்பது ஓர் விநோதம் - விநோதம் - பார்க்க விநோதம்
எண்ணெய் தேய்ப்பது ஓர் விநோதம்.

அனுபல்லவி.

கிண்ணம்தன்னில் வார்த்து வைத்து - ஒருகெடுதிவாராமலேகரண்டியில்சேர்த்து
மண்ணிற்சிந்தாமலே பார்த்து-அதை மகிழ்ந்து தலையின்மேல் வைத்துடனூர்த்து (எ)

சரணங்கள்.

1. ஒருகையோ முன்னுக்குப்போக மற்றை
ஒருகையோ பின்னுக்கு ஓழிவின்றியேக
சரசரவெனுமொலி தழைக்க அப்போது
தாடைகளிரண்டிலும் வழிந்துடன் செழிக்க (எண்ணெய்)
2. கண்கள் இரண்டிலும் புகுந்து (மிக்க)
கரிக்கத்தாளாமலே கசக்கமிடுத்து
புண்களைப்போலவே சிவக்க (கொஞ்சம்)
புண்ணீர்பெருகியும் அவனுள்ளமுவக்க (எண்ணெய்)
3. துள்ளத்துள்ளத்தலையில் தாளம் (போடும்)
தொனியோ தடதடெனவழங்குதேமேளம்
மெல்ல மெல்ல இறங்குமிந்த (தைல)
மினுக்கோ உடம்பினில் விளங்குதே முந்த (எண்ணெய்)



## தென்னிந்தியா பிரம்மசமாஜம்.

### மாதர்கள் சபை.

தென்னிந்தியா பிரம்மசமாஜத்தின் 35-வது வருஷோற்சவம் 1900-ம் ஞு ஜனவரி மீ 5உ சாயங்காலம் கொண்டாடப்பட்டது. அப்பொழுது இந்த சமாஜமந்திரத்தில் ஒழுங்காய்க் கூடிவரும் மாதர்கள் சபைபோல வருஷோற்சவம் கொண்டாடுவதற்காக மாதர்கள்மட்டும் ஓர் சபை கூடினார்கள். அதற்கு சமாஜத்தைச் சேர்ந்தவர்கள்மட்டுமென்றி இதர மாதர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். இப்படி அழைக்கப்பட்டு வந்தவர்களில் சென்னைவாசிகளன்றி மைசூர், தென் கன்னடம், வட இந்தியா முதலான இடங்களிலிருந்தும் சிலர் வந்திருந்தார்களென்று தெரியவருகிறது. கிறிஸ்தவசீமாட்டிகளும் பலர் வந்திருந்தார்கள். இவர்கள் வருஷோற்சவம் கொண்டாடின வைபவம் நமக்கு அனுப்பப்பட்ட ஒரு ரிபோர்ட்டில் பின்வருமாறு வரையப்பட்டிருக்கிறது:—

"பிடில், தம்பூர் வாத்தியக்கருவிகளைக்கொண்டு, தமக்கென்று பிரத்தியேகமாயும், மாதர்களுக்கு மறைவாயும் ஏற்பாடான இடத்தினின்று சிறந்த பாடகர்கள் திவ்வியமான கீதங்களைப்பாடி விஜயம் செய்த ஸ்ரீமதிகளை ஆநந்தபரவசமாகும்படி செய்தபிறகு, ஈசுவர ஆராதனை இராயபகதூர் வீரேசலிங்கம் பந்துலு அவர்களின் மனைவியார் தெலுங்கில் நடத்தினார். தமது தீங்குரலால் அங்கு வந்திருந்த இரண்டு மாது சிரோமணிகள் திவ்வியமான கீதங்களைப் பாடினர். பிறகு தெலுங்கிலும், தமிழிலும் உபந்நியாசங்கள் வாசிக்கப்பட்டன. பின்பு, அவர்களிலொருவர் எழுந்து இவ்வாறு ஸ்திரீகள் அடிக்கடி கூடுவதினாலுண்டாகும் நன்மைகளைப்பற்றியும், சாதாரணமாய் தமது சகோதரிகள் அழுந்தியிருக்கும் அஞ்ஞானநிலைமை போய், சிறந்த கல்விப்பயிற்சி, நல்லொழுக்கம், சிறந்த பக்தி முதலியவற்றை அவர்கள் அடைந்தால் மாத்திரம் அவர்கள் யாவரும் உலகத்திற்கு சுபுத்திரர், சுபுத்திரிகளை உண்டாக்கும் தாய்மார்களாவார்கள், ஆரியநாடு மறுபடி சீரும் சிறப்பும் அடையும். இல்லாவிட்டால் தேசம் க்ஷேமப்படுவது கூடாமையென்கிறதாய் வெகு சாதுரியமாயும், விநயமாயும் வாசாலகமாய் தெலுங்கில் பிரசங்கித்தார்.

"சுதேச மாதர்கள் ஐரோப்பிய மாதுசிரோமணிகளுக்கொப்ப பிரசங்கம் முதலியவை செய்யு நாளெந்நாளோவென்று ஏங்கியிருந்தவர்கள் இனியேக்கம் கொள்வதற்கு அவசியமில்லை. நற்காலம் பிறந்ததற்கு இன்றைய காட்சியே ஓர் சுபசகுனம் என்று கேட்டு ஆநந்திக்கும்படி இம்மாதுசிரோமணிகளின் கூட்டம் நடந்தேறியது. முடிவில் புஷ்பம், தாம்பூலம், பழம் ஆகிய வழங்கி தம்மில் ஒருவராலேயே பனிநீரும் தெளிக்கப்பெற்றபின்னர் கூட்டம் கலைந்தது."

இச்சமாஜத்து மெம்பர்களில் ஒருவரான சௌ. மீனாக்ஷியம்மாள் முன்னொரு மாதர்சபையில் கார்த்திகைதீபம் ஏற்றுவதின் உட்கருத்தைப்பற்றி விசாரித்தெழுதி வாசித்த உபந்நியாசத்தை இச்சஞ்சிகையில் பிரசுரித்திருக்கிறோம்.

## கார்த்திகை தீபம்.

(ஒரு மாது செய்த ஹிதோபதேசம்.)

"நமதரியநாட்டில் தொன்றுதொட்டு நடக்கும் அநேக காரியங்களின் பொருள் இன்னதென்று தெரியாமலே நம்மில் பலர் அவைகளை அநுசரித்து வருகிறார்கள். பழக்கவாசனையின் பேரில் பலர் செய்வதைப்பார்த்து மற்றவர்களும் செய்கிறார்களேயன்றி, செய்யுங்கருமத்தை, ஏன் செய்யவேண்டும் என்கிறகேள்வி நம்மில் பிறப்பது அரிது. நெடுங்காலமாக, தேசத்தில் அநுசரிக்கப்படுவது சரியானதாகவே யிருக்குமென்கிற நம்பிக்கை, நம்மில் அமைந்துகிடக்கிறது. பெரியோர்களால் ஏற்பட்டதும், நாளதுவரை நடைபெற்று வருவதுமானவை நன்மை உண்டாக்கத்தக்கவாகவே யிருக்கலாம். ஆனால் அவைகளைப்பற்றி விசாரித்து அவைகளில் அடங்கிய பொருளைத் தெரிந்துகொள்ளாதிருப்பது, நமது குற்றமேயன்றி, அவைகளைப்பற்றி நாம் விசாரிக்கக் கூடாதென்கிற எண்ணத்துடன், அக்காரியங்களை முதியோர் செய்திருப்பார்களென்று தோன்றவில்லை. நாளதுவரை நடந்துவரும் ஒவ்வொரு காரியத்தைப்பற்றியும், நாம் விசாரித்து, ஒவ்வொன்றின் அந்தரங்கப்பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிறதே, பெரியோர் உத்தேசியமாய் இருக்கவேண்டும்." என்பதை ஸ்தாபிக்க சௌ. மீனாக்ஷியம்மாள், தென்னிந்தியா பிரம்ம சமாஜ மண்டபத்தில் வழக்கமாய்க் கூடிவரும் மாதர்கள்

சபையில் "கார்த்திகைதீபம்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு ஒரு உபந்நியாசம் எழுதி வாசித்தார். அவ்வுபந்நியாசம், ஹிந்துமாதர்கள் விவேகிகளாகி அறிவாராய்ச்சியுடன் நடந்துவந்தால் நமக்குள்ளிருக்கும் கெட்ட வழக்கங்கள் எவ்வளவு நீங்கிச் சீர்படுமென்பதை விளக்குவதால் அதைக் கீழே பிரசுரிக்கிறோம். அந்த அம்மணி சொல்கிறாள்: "ஒவ்வொன்றைப்பற்றி விசாரித்துத் தெளியவேண்டுமென்கிற இச்சை என்னுள் சிலகாலமாய்த் தோன்றியிருப்பதினால் கார்த்திகை தீபத்தின் வரலாற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள பிரயாசைப்பட்டேன். நன்குணர்ந்த ஓர் பெரியவரைக் கேட்டேன். அவர் நீ இது 'விஷ்யமாய் கண்டதும் கேட்டதுமாகிய யாவற்றையும் சொல்வாயானால் பொருள் சொல்வேன், என்றார்.

"கார்த்திகைதீபத்தினன்று பக்தர்கள் நாள் முழுவதும் உபவாசமிருந்து, சாயரட்சை ஸ்நான முதலானவைசெய்து சுத்திசெய்யப்பட்ட வீட்டின் முற்றத்தில் மாவிளக்கேற்றி, கர்ப்பூர ஆர்த்திசெய்து திருவண்ணமலை யிருக்கும் திக்குநோக்கி நமஸ்காரம் செய்கிறார்கள். அனேகர், வீட்டில் செய்யாமல் அருகிலுள்ள ஆலயங்களுக்குப்போய் மாவிளக்கேற்றி தீபதரிசனம் செய்துவந்தபிறகு சாப்பிடுவார்கள். கோயில்களில் சொக்கப்பனை கொளுத்துவார்கள். கோபுரத்தின்மேல் அகண்டவிளக்கேற்றுவதுமுண்டு," என்றேன்.

ஆம், இவைகளைப்பற்றி உனக்கு என்ன தெரியவேண்டுமென்று அப்பெரியவர் கேட்டார். இச்செய்கைகள் என்ன பொருளைக் கொண்டிருக்கின்றன, தயைசெய்து சொல்லக் கோறுகிறேனென்றேன். அதின்பேரில் திருவண்ணமலை யிருக்கும் திக்குநோக்கி பார்க்கிறார்களென்றாயே, அம்மலையைப்பற்றி யாராவது, ஏதாவது, எப்போதாவது, உனக்குச்சொல்ல கேட்டதுண்டா, என்றார்.

ஆம், சுவாமி, அக்கினிமலையாய் ஒருக்கால் தோன்றினதாகவும் பிரம்மாவும், விஷ்ணுவும் முறையே அவரது முடியையும் அடியையும், காணப் பிரயாசைப்பட்டும் அவ்விருவருடைய முயற்சி வீணாய்ப் போனதாகவும், பிரம்மாமாத்திரம், காணாதமுடியைக் கண்டதாய்ப் பொய்சொன்னதால், பிரம்மாவுக்கு கோயிலில்லாமல் சாபம் கிடைத்ததென்று சொல்லக் கேட்டேனென்றும், சொன்னேன். ஆம் நீ சொன்னது அனேகமாய் அனுபவத்தையும் புராணத்தையும் ஒட்டியிருக்கிறது. உனக்கு உற்றுணர்ச்சியிருக்கிறதென்று வெளியாகிறது; ஆகையால் அதின் சகாயத்தைக்கொண்டே, நீ இன்னும் சற்று ஆழ்ந்து யோசிப்பையானால், நீ கண்டதும் கேட்டதுமாகிய ஒவ்வொன்றிற்கும் பொருள் உனக்கே வெளியாகும். இச்செய்கைகளிலும் புராணசங்கதியிலும், கவனிக்கத்தக்கதாகிய சிறந்த பொருள்கள் என்ன விருக்கலாம் என்கிற நோக்கத்துடன் ஆலோசனை செய் என்றார்.

அவர் அப்படிச் சொன்னபோது சற்றுநேரம் எனக்கு ஒன்றும் தோன்றாதிருந்தது. பிறகு உபவாசம், ஸ்நானம், மாவிளக்கு, தீபதரிசனம், ஆகிய இவ்வமிசங்களைப்பற்றி யோசனைபிறந்தது.

உபவாசத்தால் சிலமுறை அஜீரண முதலியவை நீங்கி தேகம் நன்னிலைக்கு வரக்கூடும். மெலிந்த தேகிகளுக்கு உபவாசத்தால் தீங்கு நேரிடலாம். "நாளுநங்கிழமையும் நலிந்தோர்க்கில்லை" என்றதனால் அவர்களுக்கு உபவாசமில்லையென்று ஏற்படும். "லங்கணம் பரம அவுஷதம்" என்பதினால் வலுத்த தேகிகளுக்கே சமயோசிதமாய் கையாடுவதினால், உபவாசம் நன்மைபயக்குமென்று தோன்றினது.

ஸ்நானம்—தேகசவுக்கியத்திற்கு முக்கியமான அனுகூலங்களில் ஸ்நானம் ஒன்றென்று சுகாதார விளக்கத்தில் நான் படித்திருப்பதோடு அனுபவசித்தமாயும் கண்டிருக்கிறேனாதலால் அது நல்லதென்றே தெளிந்தேன். தீபம் இருளை நீக்கி வீடுகளுக்கு சிறந்த அலங்காரத்தை உண்டுபண்ணுவதால் அது நல்லதென்றே வெளியாயிற்று. சுத்த அரிசியை ஊரவைத்து மாவாகத்திரித்து குவியலிட்டு நடுவில் சிறுபள்ளங்கோலி, நெய்வார்த்து வர்த்தியிட்டு விளக்கேற்றுவதின் இரகசியம் எனக்குத் தெரியவில்லையென்று சொன்னேன். பிறகு 'திருவண்ணமலைச் சரித்திரத்தில் நீ ஏதேனும் சிறந்த பொருளைக் கண்டாயா என்றார்.

சிறிதுநேரம் யோசித்தபிறகு என்னுள் இந் யோசனைகள் பிறந்தன.

பரம்பொருளின் ஆதியும் அந்தமும், பிரம்ம விஷ்ணு வென்கிறவர்களே காணமற்போனால் ம றெவர்தான் தெரிந்துகொள்ளக்கூடும். எந்த வித திலும் முடிவில்லாதவனென்று இச்சரிதையா தெரியவருகிறது. மேலும் தான் காணாததைக்கண்ட தாய் சொன்ன பொய்க்காக பிரம்மாவுக்கு எங்கு கோயிலில்லாமற் போயிற்றல்லவா? பொய்கெ டது என்று தெரிந்தேன் என்றேன். ஆ, நன்றாக



சொன்னாய், கார்த்திகை தீபத்தில் உள்ள இரகசியத்தை வெகுவாய்த் தெரிந்துகொண்டாய். இவ்வாறு நாம் காண்பதும் கேட்பதுமான விஷயங்களைப்பற்றி பொறுமையாய் சிந்திக்கத் தலைப்படுவோமானால், அவைகளிலுள்ள பொருள் நமக்கு தெரியாமற்போகாது. அறிவாளிகளைக்கொண்டு விசாரிப்பதினால் மறைவாய்க்கிடக்கும் சில பாகங்களுக்கு பொருள் விளங்கும் என்று சொல்லிவிட்டு, பிறகு ஒவ்வொரு பாகத்தைப்பற்றி, எனக்கு நன்றாய்ப் படும்படி விரிவாக எடுத்துரைத்தார். நான் தெரிந்துகொண்டதில் எனக்கு ஞாபகமிருப்பதை, இங்கு உங்களுக்கு தெரிவிக்க ஆவல்கொண்டவளாயிருக்கிறேன்.

"ஐயமிடுமி னறநெறியைக் கைப்பிடிமி
னிவ்வளவேனும் மன்னமிட்டுண்மின்—தெய்வ
மொருவனேயாமென்றுணரவல்லீரே
லருவினைக ளைந்துமறும்."

இச்செய்யுளில் நமது ஔவைபிராட்டியார் தெய்வம் ஒருவனே என்றார் அல்லவா? உலகத்தில் யாவருக்கும் இவ்வித பாவம் கிடையாது, பல தெய்வங்களுண்டென்பது அவர்களது கருத்து. ஒன்றென்று கொண்டவர்கள் தெளிந்தவர்கள், மற்றவர்களுக்கு அப்படிகொள்வது பிரயாசை என்று நமது பாட்டியார் தெரிந்தவராதலால் "ஒருவனே யென்று உணரவல்லீரேல்" என்றார். மனத்தேர்ச்சியுடையோர்க்கே அப்பாவனை பொருந்தும். சாமானியர் கொண்டிருக்கும் பல தெய்வங்களில், பிரம்மா, விஷ்ணு, சிவம் ஆகிய திருமூர்த்திகள் மேம்பட்டவர்களாதலால் சைவசமயத்தோர் தங்கள் தெய்வம் என்ற சிவத்தை உயர்வாகவைத்து மற்றிருவரையும் அவருக்குத் தாழ்வென்றும், விஷ்ணுவை உயர்வாக வைத்து மற்றிருவரையும் அவருக்குத் தாழ்வென்று வைஷ்ணவர்கள் சொல்வதும் வழக்கம். ஒரு பொருளுக்கு பல நாமம் அமைத்து ஒரு பெயரை உயர்த்தியும் மற்றப்பெயரை அதற்குத் தாழ்வாகவும் சொல்வதினால் பொருள் வேறுபடாதென்று சற்றுயோசிப்போருக்கு எளிதில் புலப்படும். திருவண்ணமலையைப்பற்றி ஸ்தலபுராணத்தில் சிவத்தை யுயர்த்திப் பேசியிருக்கிறது. சிவம் என்று இந்த அவசரத்தில் சொல்லப்படும் பரம்பொருள் அகண்டமானது.

நம்மைச்சுற்றிலும் மேலும் கீழும் எங்கும் பரந்திருக்கும் ஆகாசமென்ற வெறுவெளிக்கு நமது பாவனாசக்தியைக் கொண்டு அடிமுடி எங்குண்டென்று பார்ப்போமானால் ஆதி அந்தம் ஏற்படாது. இப்பெருவெளியை உடலாகக்கொண்டிருக்கும் ஞானஸ்வரூபியாகிய பரம்பொருளுக்கு ஆதியந்தமில்லை என்கிற உண்மையை அறிவிக்கும்பொருட்டு பிரம்ம விஷ்ணுக்களாலும் அடிமுடி தெரியப்படாதது என்று புராணத்தில் காட்டியிருக்கிறது. தன்னால்தான் அறியப்படுமேயன்றி மற்றவர்களால் அவரதுபெருமையைக் காண்பது அசாத்தியம்.

பொய், கொலை, களவு, கள், குருநிந்தை என்னும் பஞ்சமாபாதகங்களில் பொய்யை பிரம்மா சொன்னதினால் தருமசுவரூபியாகிய கடவுள், பிரமனுக்கு கோயிலில்லாமற் செய்துவிட்டாரென்றால் மற்ற மானிடர்கள் பொய் சொல்வதினால் வருங் கதியை அவரவர் கணித்துக்கொள்ளவேண்டுமென்றும், பொய் சொல்வதாகிய இழுக்கை, ஒவ்வொருவரும் விடவேண்டுமென்பது புராணத்தின் கருத்து. உலகத்தில் உண்மை யின்னதென்று கண்டுபிடிப்பதற்குத்தான் ஞானிகள் பெரும்பாடு படுகிறார்கள். இதற்கு இடையூறாக உலகத்தில் பொய் பெருகுமானால், உண்மை வெளியாகாது, துன்பம் அதிகரிக்குமாகையால் பொய் பேசுவதை ஒவ்வொருவரும் ஒழிக்கவேண்டும். பொய் பேசப்படாதென்கிற நெறி ஒன்றை ஒவ்வொருவரும் கைக்கொள்வார்களானால், மற்றெல்லா பாதகங்களும் ஒழிந்துபோம். ஒழிக்க வேண்டிய பாபகிருத்தியங்களைவிட்டு உலகத்தில் உள்ளநாள் உள்ளமட்டும் நாம் நடத்தும் இல்லற விவகாரங்களில் தருமங்களை தப்பாமலும், எங்குமிருப்பதால் நம்முள்ளத்திலும் சாட்சியாயிருக்கும் பரமவள்ளலினது அங்கீகாரம் பெறுவதே நமது கடமையென்று சீராக நடந்துவருவோமேயானால், நமதுள்ளம் தூய்மையடையும், அன்பு உண்டாகும், அறிவு ஒளிவடையும். இப்பொருளை உணர்த்துவதற்கு மாவிளக்கு. மாவின் வெண்மை மனத்தூய்மை. அதில் பெய்யும் நெய், அன்பு. எறியும் வர்த்தி, அறிவின் விளக்கம். ஆகிய இம்மூன்றும் நம்மில் உண்டாம்போது எங்கும் ஜெகத்சனை பிரகாசமாய் அறிவோம். கடவுள் ஜோதி சொரூபியென்று விளக்குவது சொக்கப்பனை. குன்றுமேலிட்ட விளக்கு நன்றாய்த் தெரிவதுபோல மனத்தூய்மை அன்பு முதலியவற்றை அடைந்தவர்களுக்கு மேலான சுயம்பிரகாசரூபியாகிய கடவுள் நன்றாய்த் தெரியவருமென்னும் கருத்தைக்காட்டுவது கோபுரத்தின்மேல் வைக்கும் தீபம்.

உபவாசம்—ஒருவேளை சாப்பாட்டை குறைப்பது அல்லது முற்றும் விட்டிருப்பதனால் மிகுந்த நன்மை யுண்டாகாது. ஒருக்கால் கெடுதி உண்டா

னாலும் உண்டாகலாம். கடந்த கார்த்திகை தீபத்தையொட்டியே ஓர் வாலிப மங்கைக்கு மரணம் உண்டானதாய் தெரியவருகிறது. அதின் உண்மையை விசாரித்ததில், பட்டணத்தில் வாழ்க்கையடைந்த அம்மாது கார்த்திகை தீபத்திற்கு சிலநாள் முந்தி திருசிரபுரத்திலுள்ள தன் தாய்வீடு போம்படி நேர்ந்தது. கார்த்திகை தீபத்தினன்று தாய்வீட்டார் யாவரும் உபவாசமிருந்து அன்று சாயங்காலம் சுவாமி தரிசனத்திற்காக தாயுமானவர் மலையேறினார்கள். அவர்களுடன் தானும் வெறும்வயிற்றுடன் மலையேறி இறங்கிவந்து பலகாரம் தின்று உறங்கப்போன சற்றுநேரத்திற்கெல்லாம் குளிருண்டாய் தாயை எழுப்ப ஈரத்தலையுடனும் மலைக்குவந்தாயே அதினால் குளிர் வந்ததுபோலும், படுத்துறங்கு எல்லாம் சரியாய்விடும் என்றாளாம். அம்மாதுக்கோ அன்றிரவு முழுதும் குளிரின் பாதை விடிந்தும் நீங்காமல் அன்று பகல் முழுதும் வெயிலில் குளிர்காய்ந்தும், அன்று சாயங்காலமுதல் சுரம் துவக்கி நாலைந்து நாள்வரை, மவுடீக தாய்தந்தையர் தகுந்த வயித்தியரைத் தேடாமலிருந்து விஷம் முத்தினபிறகு, ஏதோ சிகிச்சை செய்ய கைகூடாமல் மங்கை மாண்டனளாம். இவ்வித கெடுதிக்கு மூலமாயிருப்பதல்ல உபவாசம்.

அகங்காரம், லோபம், காமம், பகை, போசனப்பிரியம், கோபம், சோம்பல் ஆகிய துர்க்குணங்கள் நம்மில் வளரவொட்டாமல் அடக்கவேண்டுமென்பது உபவாசத்தின் கருத்து. இவ்வுண்மையறியாது மேற்சொன்னபடி தேகத்திற்கு தீங்கை விளைவிக்கும் காரியமாவது அல்லது வழக்க வுணவை மாற்றி பல ஆகாரங்களை சாப்பிடுவதனாலாவது உபவாசத்தின் பயன் நிறைவேறாது. மேற்குறித்த பாதகங்களுக்கு நம்மில் கொஞ்சமிடம் கொடுத்தோமோ, அவைகள் நம்மை அடிமையாக்கி, தீராத்துன்பங்களுக்கு உள்ளாக்குமாதலால், அவற்றை சாக்கிரதையாய் ஒழிக்கவேண்டுமென்பது உபவாசத்தின் கருத்து.

ஸ்நானம்—சுத்த ஜலத்தினால் தேகத்தைக் கழுவினால் சரீரத்திலுள்ள அழுக்கு எப்படி போமோ அதுபோல் ஆத்துமா ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியம். உள்ளத்தில் குடிகொண்டிருக்கிற வள்ளலினது மங்களகுணங்களாகிய கடலில் முழுகியிருக்கவேண்டுமென்பது ஸ்நானத்தின் கருத்து.

தீபதரிசனம்—ஞானஸ்வரூபனாகிய கடவுளை நமது அறிவினால் தெரியவேண்டுமேயன்றி மற்றெதினாலும் காணக்கூடாதென்கிற உண்மையை விளக்கும்பொருட்டு, கடைசியில் தீபதரிசனம் செய்யவேண்டுமென்கிறார் பெரியோர். எல்லாம் அறிவின் சகாயத்தால் ஆகவேண்டியிருப்பதினால் அதனை விசேஷமாய்ப் பெற பிரயாசைப்படவேண்டும்.

இத்தன்மையான உயர்ந்த கருத்துகளைக் கொண்டிருக்கிறது கார்த்திகைதீபம்.

இதைப்போல் நம் நாட்டில் வழங்கிவரும் விரதங்களைப்பற்றி அது நேருந்தோறும் விசாரணைப் புருஷர்களைக்கொண்டு அவற்றின் உட்கருத்துகளைத் தெரிந்து நலமடையவேண்டும்.

“சொல்லிற் பதர் களைந்து சொன்முடிவு காணாதார்
நெல்லிற் பதர்போல் நிற்பார் பராபரமே.”

எதை நாம் படித்தபோதிலும் கேட்டபோதிலும் அதிலுள்ள சாராம்சத்தை விசாரித்து தெளிந்து நன்மை யடையும்பொருட்டு நமக்கு ஈசன் அருள் புரிவாராக.

## சுகாதார விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாகவிருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.

### திருக்கழுக்குன்றம்:

#### ஸ்தலவிசேஷமும் சுகாதார நிலைமையும்.

**ஸ்தலவிசேஷம்.**—திருக்கழுக்குன்றம் என்பது செங்கற்பட்டுக்குத் தென்கிழக்கே 9-மைல் தூரத்திலுள்ள ஒரு ஸ்தலம். செங்கற்பட்டிற்கும் சதுரங்கபட்டணத்திற்கும் மத்தியிலுள்ளது. இதற்கு வடகிழக்கே சுமார் 9-மைல் தூரத்தில் கடற்கரையோரத்திலிருக்கிறது பேர்போன மாவலிபுரம் அல்லது மஹாபலிபுரம் என்னும் ஸ்தலம். சென்னபட்டணத்தருகிலுள்ள ஊர்களில் திருக்கழுக்குன்றம் சௌக்கியத்திற்கு வசதியான ஸ்தலம். ஆனால் அது க்ஷேத்திர விசேஷத்திற்காகவே பேர்போனது. இவ்விடத்தின் சீதோஷ்ண ஸ்திதி கானல் காற்றடிக்கும் கோடைமாதங்கள் தவிர மற்றக்காலங்களில் சௌக்கியத்திற்கேற்றதாகச் சொல்லப்ப



டுகிறது. இவ்விடத்தில் சுற்றுப்புறங்களில் எங்கும் குன்றுகளிருப்பதாலும் கடற்கரைக்குக் கொஞ்சம் தூரமாக மேட்டுப்பாங்கான பூமியிலிருப்பதாலும் இங்குள்ள வாயு கடலோரமான சென்னைமுதலிய சமபூமிகளிலிருப்பதுபோல விசேஷமாக நீராவி கலந்ததாகவின்றி உலர்ந்த காற்றாகவேயிருக்கிறது. இப்படியிருப்பதினால் இந்தக்காற்று தேகத்துக்கு சௌக்கியமாயிருப்பதன்றி காசம் முதலான ரணமுள்ள வியாதிகள் சொஸ்தமாவதற்கு மிக அனுகூலமாகவிருக்கிறது. பூமியும் அதற்கேற்றபடியே அமைந்திருக்கிறது. ஊர் அக்கிரஹாரத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் ஊரையடுத்து இரண்டு குன்றுகளிருக்கின்றன. தெற்கேயிருப்பதற்கு காக்கைமலையென்றும் வடக்கேயிருப்பதற்கு கழுகுமலையென்றும் பேர் வழங்குவதுடன் அதற்கு ஸ்தலபுராணத்திலிருந்து கதைகளும் சொல்லுகிறார்கள். கழுகுமலையென்பது முதல் யுகத்தில் ஒரு இருஷிக்கு இரண்டு கழுகுகள் பிறந்ததாகவும், அவை முன் ஜன்மத்தில் செய்த பாபத்தால் கழுகுரூபமாகப் பிறக்கநேரிட்டதால், அதற்கு நிவாரணம் தேட வழிகேட்க இங்கேயுள்ள மலையின்மேலிருக்கும் வேதகிரீசுவரர் ஆலயத்தைப் பிரதக்ஷணம்செய்து அவரிடத்து பக்திவைத்துத் தபசுசெய்துவந்தால் முத்திகிடைக்குமென்று சொன்னதாகவும், அவர்கள் அப்படியேயிருந்து முத்திப்பெற்றார்களென்றும், இவ்வாறே ஒவ்வொரு யுகத்திலும் ஒரு காரணம்பற்றி மனுஷ ஜன்மம் எடுக்கவேண்டியவர்கள் அல்லது எடுத்தவர்கள் கழுகுரூபமடைந்து மலையிலிருந்து தபசுசெய்து முத்திப்பெற்றதாகவும் சொல்லப்படுகிறது. இந்தக்கலியுகத்தில் இரண்டு பிராமணப்பிள்ளைகள் மலைமேலிருந்து தபசுசெய்து கடவுள் பிரசன்னரானகாலத்தில் ஒன்றை நினைத்து ஒன்று வரம்கேட்டதால் அவர்கள் வஞ்சனையை யுணர்ந்த ஈசுவரன், வஞ்சனையாகாதென்று சொல்லி, அதற்கு தண்டனையாக அவர்கள் கழுகுகளாகப் போகக்கடவது என்று சபித்தாராம். அவர்கள் அச்சாபம் நீங்க இன்னும் கழுகுகளாகவிருந்து உச்சிநேரத்தில் மலைக்குவந்து தரிசனம்செய்து ஆகாரமுண்டு போவதாகச் சொல்லுகிறார்கள். கழுகாகச் சபிக்கப்பட்ட பிராமணர்கள் தங்கள் பாபம் நீங்கவேண்டுமென்று பிரார்த்திக்க அப்படியே அவர்கள் பாபங்களெல்லாம் நீங்கி காக்கையுருக்கொண்டு பறந்துபோகச்செய்தார் என்றும் அக்காக்கை யோடி உட்கார்ந்தமலை காக்கைமலையென்று வழங்கப்பட்டு வருகிறதென்றும் சொல்கிறார்கள்.

புராணக்கதைகள் எப்படியாயினும் இன்றைக்கும் மலைமேல் கழுகுகள்வந்து உச்சிநேரத்தில் பண்டாரம் பூஜைசெய்து படைக்கும் ஆகாரத்தையுண்டு போகிறது வழக்கமாக நடந்துவருகிறது. இங்கேயுள்ள வேதகிரீசுவரர் இருக்கும் மலை சமுத்திர மட்டத்திற்குமேல் சுமார் 500-அடி உயரமுள்ளது. இது அணை கோலியதுபோல் தெற்கு வடக்காக சுமார் முக்கால் அல்லது ஒருமைல் தூரத்துக்கு ஓடிகிறது. இம்மலை வரிசையில் தெற்குக் கோடியிலுள்ள குன்றின்மேல்தான் வேதகிரீசுவரர் ஆலயமிருக்கிறது. ஈசுவரன் நாலுவேதங்களையும் நாலு குன்றுகளாகச் செய்து அவற்றின்மேல் தாம் வீற்றிருந்ததாகச்சொல்கிறார்கள். மலையின்மேலுள்ள லிங்கம் ‘சுயம்பு’ அதாவது தானாகவுண்டானது என்கிறார்கள். லிங்கமிருக்கும் அறையின் சுவர்களில் பிர்ம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய திருமூர்த்திகள் விக்கிரகம் வெட்டப்பட்டு அவர்களுக்கும் ஆராதனை நடந்துவருகிறது. இக்கோயிலில் குருக்கள் சைவரும், மற்றப்படி திருமஞ்சனத்துக்கு தீர்த்தம் கொண்டுவருதல் முதலான உபகாரியங்கள் செய்கிறவர்கள் வைஷ்ணவர்களாகவுமிருக்கிறார்கள். சிறிது இந்த மலையில் அயமும் கந்தகமும் கலந்திருக்கிறதாகத் தெரியவருகிறது. மலைமேல் சிறந்த மூலிகைகள் இருக்கின்றன, வெள்ளைச் சாரைப்பாம்பு இருக்கிறதென்றும் இவை காரணமாக மலையடிவாரத்தைச் சுற்றிவந்தால் சுரம், காசம், தலைநோய் முதலான வியாதிகள் சொஸ்தமாகின்றனவென்றும் சொல்லுகிறார்கள்.

இம்மலைக்குத் தெற்கே, சற்றுக் கிழக்குபுறமாக ஒரு பெரியகுளம் இருக்கிறது. இதில் சோழன், பாண்டியன், முதலான பூர்வீக ஹிந்து அரசர்கள் ஸ்நானம்செய்து அதனால் குஷ்டம் முதலிய வியாதிகள் நீங்கப்பெற்றதால் இந்த ஸ்தலத்தின் மகிமையைக்கொண்டாடி விசேஷ பூமிகள் கோயிலுக்கு மானியம்விட்டு தானதர்மங்கள் விசேஷமாக ஏற்படுத்தினார்களென்று தெரியவருகிறது, இந்த ஊரில் மூன்று விசேஷங்கள் இந்த ஸ்தல மகிமைக்குரியவையாக நேரிடுகின்றனவென்று சொல்லப்படுகிறது. முதலாவது, பிரதிதினம் மலையின்மேல் கழுகுகள்வந்து ஆகாரம் அருந்திப்போவது.

இரண்டாவது, குளத்திலிருந்து 7-அல்லது 12-வருஷத்திற்கு ஒரு தரம் சங்கம் பிறக்கிறதென்று சொல்லுகிறார்கள். பூர்வத்தில் இப்படி சங்கம்பிறக்குங்காலத்தில் குளத்தில் இரைச்சலுண்டாகி ஜலம் பொங்கினதுண்டென்று சொல்லுகிறார்கள். இக்கா

லத்தில் அச்சின்னங்களுண்டானதைக் கண்டவர்கள் ஒருவருமில்லையெனத் தெரிகிறது.

மூன்றுவது, மலையிலுள்ள கோபுரத்தில் 12-வருஷத்திற்கு ஒரு தரம் இடி விழுவதாகவும் அது 'இந்திரன்பூஜை' யென்று கொண்டாடப்படுவதாகவும் தெரிகிறது, இதைப்பற்றி விசாரித்ததில் உண்மையை உள்ளதுள்ளவாறு கண்டறிந்து நிர்ணயிப்பது கஷ்டமாயிருக்கிறது. இவைகளில் பெரும்பான்மை ஐதிகமாக ஏற்பட்டுள்ளவையென்றும் ஊகித்தாராய்ந்தால் உட்கருத்து விளங்கலாமென்றும் தோன்றுகிறது. அவ்விசாரணைசெய்வதற்கு வேண்டிய சாதக சாதனனுகூலங்கள் இல்லாவிடத்து கேட்டதையறிந்தமட்டும் கோதுநீக்கிக் குறித்திடுவதே உசிதமென்று இவ்விஷயங்களை இங்கு வரைந்துளோம்.

### சுகாதார நிலைமை.

இனி ஊரின் நிலைமையை உள்ளவாறு கவனிப்போம். இந்த ஊரில் சுமார் 700 வீடுகளிருக்கும். ஜனத்தொகை 2,500 என்றுரைக்கலாம். தினம் க்ஷேத்திர யாத்திரை நிமித்தம் வந்துபோகிறவர்கள் சுமார் 30, 40-பேர்களிருக்கலாம். இரண்டுவருஷங்களாக இது **லோகல்பண்டு, யூனியனாக** ஏற்படுத்தப்பட்டு நடந்துவருகிறது. யூனியனேற்பட்டதால் ஊர்சுத்திக்கனுகூலமுண்டென்று நினைக்கவேண்டும். ஆனால் இருக்கும் ஸ்திதியைப்பார்த்தால் **யூனியன்** ஏற்பட்டதால் உண்டாகவேண்டிய பயன்கள் ஒன்றும் விசேஷமாகப்புலப்படவில்லை. அக்கிரகாரமத்தியில் ஒரு குளமிருக்கிறது. அது ஜலம்கெட்டு நாற்றமெடுத்து துர்க்கந்தம் வீசுகிறது. அக்குளக்கரையிலேயே போலீஸ் ஸ்டேஷனிருந்தும் இராப்பகலாக ஊரிலுள்ளவர்களும், வந்தவர்களும் (வந்தவர்களை விட ஊரிலுள்ளவர்களை விசேஷமாகச்சொல்லவேண்டும்) வெளிக்கிருந்து அதில் மானம்பார்க்காமல் கால் கழுவுகிறார்கள். ஸ்திரீகளும் கூட இக்குளத்தைப் பகல்நேரத்தில் கால் கழுவ உபயோகிக்கிறார்கள். இதனால் இந்த ஆபாசம் செய்கிறவர்களுக்கும் சுற்றிலுமுள்ளவர்களுக்கும் மானம், லஜ்ஜை கெட்டுப்போய், ஜனங்களுடைய நல்லொழுக்கத்துக்குப் பெருந்தீங்குவிளைக்க ஆஸ்பதமாகிறது. இக்கெடுதியை யூனியன் அதிகாரிகளாவது போலீஸாராவது சிறிதும் உணர்ந்ததாகத் தோற்றவில்லை. இதற்கும் கிழக்கேயுள்ள பெரியகுளத்திலோ, ஜனங்கள் ஸ்நானம் செய்வதுமட்டுமன்றி அழுக்குத் துணிகளையும் தோய்க்கிறார்கள். வீட்டுக்காகாமலிருந்த தீட்டு ஸ்திரீகளும் அவர்கள் புடைவைகளை அதிலேயே தோய்த்துக்கழுவி ஸ்நானம்செய்கிறார்கள். வடபுறமாயிருக்கும் மூலையில் ஆடுமாடுகளையும் விட்டடித்துக்குளிப்பாட்டுகிறார்கள். வெளிக்குப் போய் வந்தவர்கள் அதிலேயே குண்டிகழுவுவதும் அதிசயமல்லவென்று தெரிகிறது. இவ்வளவு அக்கிரமங்கள் நடந்து ஆபாஸம் செய்யப்பட்டுவரும் குளத்துஜலத்தை அனேகர் பானத்துக்கு முபயோகிக்கிறார்கள். மலையின் பூசாரமுதலிய குணவிசேஷத்தால் மழைபொழியுங்கால் அதிலிருந்து வந்துவிழும் ஜலம், அதில் கரைந்துள்ள அயம் காரணமாகவும் வேறுசில குணவிசேஷங்களாலும் புண்ணையாற்றும் குணமுள்ளதாகவிருக்கிறது வாஸ்தவமெனப் புலப்படுகிறது. ஆனால் அந்தக்குளத்து ஜலத்தை இப்படி அசங்கியப்படுத்திவருவது மிகவும் பொறுக்கரிதாகவிருக்கிறது. குளத்து ஜலத்தைக்கெடுப்பதன்றி குளத்துக்கு ஜலம் வருமிடங்களையும் ஊரிலுள்ளவர்களும் பைராகிகளும் ஆபாசம்செய்து கெடுக்கிறார்கள். கட்டுக்காபந்து சிறிதுமில்லையென்பது எங்குபார்த்தாலும் ஸ்பஷ்டமாக விளங்குகிறது. குளத்துப்படிக்கட்டுகளிலும் ஆபாசம்செய்து கிடக்கக்காண்பது அரிதல்ல. ஊருமுழுவதுக்குமன்றி ஏராளமாக வந்துபோகும் பிரயாணிகளுக்கும் உகந்த ஜலாதாரமாகவிருக்கும் நல்ல குளத்தை இப்படி ஆபாசம்செய்து கெடுப்பதைப் பார்க்கச் சகியாமல் யூனியன் சேர்மானுடன் இதைப்பற்றிப் பேச அவர் ஜனங்கள்மீது குற்றங்கூறினார்: ஜனங்கள்மனதை யறிவோமென்று, அவர் யூனியன் மெம்பர்களும், மற்றப்பிரமுகர்களும் அடங்கிய சபையொன்று கூட்டியதில், இதுவிஷயத்தைப்பற்றி விஸ்தாரம்பேசிப் பிரசங்கித்ததில், அவர்களெல்லாரும், சிறிதுநேரம் ஆக்ஷேப சமாதானம் நடந்தபின், பெரியகுளத்தில் ஸ்நானம்செய்வதொன்றுக்குமட்டு



மன்றி, மற்றப்படி துணி துவைத்தல், பாத்திரங்கள் தேய்த்தல் மாடுகள் குதிரைகளிறங்கி நீர் குடித்தல் முதலிய சகல ஆபாசங்களும் நடவாதபடி உடனே தடுக்கவேண்டியதவசியமென்று சம்மதித்தார்கள். இந்த ஏற்பாடு உடனே செய்யவேண்டியதவசியமாயிருப்பதால், இதைப்பற்றி யூனியன் அதிகாரிகள் சிறிதும் காலதாமசம் செய்யார்களென்று நம்புகிறோம். இஃதன்றி மலையடிவாரத்திலும், மற்றப்படி குளக்கரையிலும், மழைநீர் குளத்திற்குள் பாயக்கூடிய மற்ற எல்லா இடங்களிலும் ஜனங்கள் ஆபாசம்செய்வதை உடனே தடுக்கவேண்டும். போலீசார் ஆபாசம்செய்வதைத்தடுப்பது தங்கள் கடமையல்லவென்று நினைத்து நடப்பவர்கள்போல் காட்டுகிறார்கள். இல்லாவிட்டால் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள குளத்திலே அவ்வளவு ஆபாசம் நடக்கப்பார்ப்பது கூடாமையாகவிருக்கும். ஊர் ஜனங்கள் அறியாமற்செய்யும் பிசகுகளைப்பொறுத்து அவர்களுக்குப் புத்திபுகட்டித் திருத்தவேண்டியது வாஸ்தவமானாலும் அறிந்தும் கோணல்வழியிலே போகிறவர்களைக் கட்டாயம்தண்டித்துப் புத்திபுகட்டவேண்டியது அவசியமாகவிருக்கிறது. இந்த ஊர் **யூனியன்** ஒற்றுமையின்றி இரண்டுபட்டுக் கிடக்கிறதாகத் தோற்றுகிறது. "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கெளிது" என்று சொல்லுகிறபழமொழிப்படி இவர்கள் உட்சண்டையில் பொதுநலம் கெட்டுப்போய், வந்தவர்களன்றி இருப்பவர்களும்கூட கண்ட இடத்தில் கண்டபடி ஆபாசம்செய்து ஊரைக்கெடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். இது விஷயத்தில் யூனியனிருக்கும் தற்கால ஸ்திதியில் உள்ள குறைகளுக்கு விமோசனம்தேடுவது முற்றும் ஆகாதகாரியமாகத்தோற்றுவதால், மேலதிகாரிகள் இதுவிஷயத்தில் சிறிது கவலைசெலுத்தி இவ்வூர் சௌக்கியத்தை மட்டுமன்றி இங்கு வந்துபோகும் ஏராளமான பிரயாணிகள் சௌக்கியத்தையும் கருதி, உடனே இந்த ஸ்தலத்தின் சுகாதாரநிலைமை இப்பொழுதுள்ளபடி விட்டுக் கெட்டுப்போகாதபடி, வேண்டிய ஏற்பாடுகள்செய்து காப்பாற்றுவார்களென்று கோருகிறோம்.

C. V. S.

## ADDITION TO THE COMMITTEE FOR THE DIFFUSION OF SANITARY KNOWLEDGE.

We are glad to announce that Mr. J. H. Stone, M.A., Inspector of Schools, has consented to be a Member of the Committee for the Diffusion of Sanitary Knowledge, and that Mr. L. C. Innes and Miss Manning have accepted with pleasure the position of Corresponding Members in England.

மேல்பிரிவு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஜெ. எச். ஸ்டோன் துரையவர்கள், சுகாதார விஷயமாக ஏற்பட்டிருக்கும் கமிட்டியில் ஒரு மெம்பராகவிருக்க இசைந்திருப்பதைத் தெரிவிக்கச் சந்தோஷப்படுகிறோம். மிஸ்டர் எல். ஸி. இன்ஸ் துரையவர்களும், மிஸ் மானிங் துரைசானியவர்களும் இக்கமிட்டிக்கு இங்கிலாந்தில் 'கரெஸ்பாண்டிங் மெம்பர்களாக' விருந்துதவ உவந்தேற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

## Popular Tracts on Sanitation and Health. Issued under the auspices of the Committee for the Diffusion of Sanitary Knowledge.

| | |
|---|---|
| No. 1. | சுகாதார விஷயம். |
| On the Use of Health, 32 pp. | 1. சுகத்தின் பயன்: 32-பக்கம் கொண்டது |
| (in Tamil.) | |
| Price of single copy $1\frac{1}{4}$ annas | விலை பிரதி ஒன்றுக்கு $1\frac{1}{4}$-அணு |
| 100 copies at a time for Rs. 5. | 100-க்கு ரூ. 5. |

An English summary of the Tract written by Mr. L. C. Innes and published in the Indian Magazine and Review is reprinted for the information of English friends and Sympathisers.

## Report of Work done by the Associations of Helpers.

### வெளியூர் உபகாரசங்கங்கள் உழைத்துவரும் விவரம்.

| Name of the Association. உபகாரசங்கத்தின் பெயர். | Meetings held. மீட்டிங்கு கூடின — Place. இடம். | Meetings held. — Dates. தேதிகள். | Number present. ஆஜரானவர்கள் தொகை. — Teachers. உபாத்தியாயர்கள். | Number present. — Others. இதரர்கள். | Subjects chosen for reading or lecture. உபந்நியாசம் செய்ய அல்லது வாசிக்க எடுத்துக்கொண்ட விஷயங்கள். | Readers or lecturers. யாரால் உபந்நியாசம் செய்யப்பட்டது. | Nature of Other Proceedings & Remarks. இதர நடவடிக்கைகளும் ஷராவும். |
|---|---|---|---|---|---|---|---|
| தாராபுரம் தாலுகா அலங்கியம் உபகாரசங்கம். | அலங்கியம் S. R. மகம்மடன் ஸ்கூல். | 1899-ம் ௵ டிசெம்பர் ௴ 7<br>14<br>21<br>28 | 4<br>3<br>5<br>6 | 24<br>11<br>3<br>7 | நவம்பர் ௴ விவேகசிந்தாமணியில் அகமகிழ்பயிற்சி.<br>ஷை சஞ்சிகை 211, 212 பக்கங்கள்.<br>சென்ற ஆகஸ்டு மாசத்து வி. சி. யில் செல்வநூல்.<br>அ. ப. ஏஜன்ஸியாரால் பிரசுரிக்கப்பட்ட சுகத்தின் பயன் 1-முதல் 9-பக்கம் படித்து விளக்கப்பட்டது. | போ. ஸ். ஹெட் மாஸ்டர்.<br>ஷை<br>2nd Master.<br>Hd. Master. | ஈரோடு ரேஞ்சு ம-ா-ா-ஸ்ரீ சப்-அ. இன்ஸ்பெக்டர் அவர்களுடைய 2-12-99 தேதியிட்ட 2207 நெ. லெட்டரை 7௨ மெம்பர்களுக்கு படித்துக் காட்டப்பட்டது.<br>அலங்கியம், டிசம் 28௳. D. Narasinga Rao, Hd. Master, S. R. M. School and Secy. Assocn. of Helper. |
| தாராபுரம் ஸானிடேரி அஸ்ஸோஸியேஷன். | | 1899-ம் ௵ டிசெம்பர் ௴ 2<br>9<br>16<br>23 | 10<br>12<br>14<br>9 | | விவேகசிந்தாமணியில், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பிரசுரிக்கப்பட்ட சுகாதாரவிஷயமான விவரங்கள் படித்து விளக்கப்பட்டன. | K. R. Ramanatha Sastri. D. S. Ranganatha Rao Subbarayer. D. V. V. Krishna Iyer, J. D. V. Anantanarayanan. | Instruction was given to the pupils of the 3rd and 4th Standards on the advantages of cleanliness of person and clothes and some other sanitary principles.<br>K. R. Ramanatha Sastri, Secy.<br>Dharapuram, 18—1—1900. |
| ஈரோடு தாலுகா சிவகிரி உபகாரசங்கம். | சிவகிரி போர்ட் பாடசாலை. | 1899-ம் ௵ டிசெம்பர் ௴ 22 | 5 | | 'சுகத்தின் பயன்' என்னும் புத்தகத்தில் சொல்லியிருக்கிறதைப்பற்றிச் சொல்லப்பட்டது. | பழனியப்ப வாத்தியார். | இந்த சங்கத்தில் 10-கிராமங்களின் உபாத்தியாயர்கள் மெம்பர்களாகவிருக்கிறார்கள். *<br>V. G. Thimmappa Row, Secy. Associations of Helpers. |

* சிவகிரி உபகாரசங்கத்தின் காரியதரிசியாகவிருக்கும் அவ்வூர் போர்டு ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ, வி. ஜீ. திம்மப்ப ராவ் நமக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் 27-10-99 தேதி முதல் பிரதி



வெள்ளிக்கிழமையும் கூட்டம்கூடி உபந்நியாசம் நடந்துவருகிறதென்றும் அதில் 22-12-99-ல் கூடிய கூட்டத்தின் நடவடிக்கையைமட்டும் ரிபோர்ட் செய்திருக்கிறதாகவும் எழுதியிருக்கிறார். அந்த ரிபோர்ட்டிலடங்கிய விவரங்களை மேலுள்ள விவரத்தில் சேர்த்திருக்கிறோம். இனி வெளியிலுள்ள உபகாரசங்கத்தார் யாவரும் மேலே வரைந்து காட்டிய கட்டடத்தில் குறித்தபடி விவரம் காட்டி ரிபோர்ட்டனுப்புவார்களென்று கோருகிறோம். அச்சங்கத்தில் சேர்ந்துள்ள மெம்பர்களின் விவரம் காட்டியபின் அவர் கடைசியில் பின்வருமாறு எழுதுகிறார்:—"உபகாரசங்கம் கூடி உபந்நியாசம் செய்துவருகிறதில் தனித்தனி படித்துப்பார்த்து அறிந்துகொள்கிற அறிவைப்பார்க்கிலும் மிக்க அறிவைப் பரவச்செய்கிறதாகவிருக்கிறது." இப்படி உபகாரசங்கத்து மெம்பர்கள் ஒவ்வொருவரும் அவரவர்கள் கிராமத்தில் கூட்டங்கூடி இதர ஜனங்களையும் கூடியவரையில் சேர்த்து ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகவிருந்து நடத்திவந்தால், நாளடைவில் அதிக பிரயோசனமுண்டாகும். இதை உபகாரிகள் எல்லாரும் மனதில் வைத்து ஊக்கமுடன் உழைத்து வருவார்களென்று கோருகிறோம். "

---

### Manliness.

## ஆண்மைத்தனம்.

ஆண்மைத்தனமென்பது பொதுவாய் உலகில் தைரியத்தைக்குறித்துச் சொல்வது வழக்கம். ஆனால் தற்காலத்தில் ஆண்மைத்தனம் என்பதற்கு வேறே வியாக்கியானங்கள் ஏற்பட்டுவிட்டன. இக்காலத்தில் வயிறு வளர்ப்பதே ஆண்மைத்தனமாகப் போய்விட்டது. பிறரை வஞ்சகம்செய்தோ, பொய்சொல்லியோ, திருடியோ, அல்லது எவ்வித அற்பத் தொழில்களைச்செய்தோ காசு சம்பாதித்து விஷய சுகங்களை அனுபவிக்கவேண்டுமென்பதே அனேகருடைய கொள்கையாக ஏற்பட்டுவிட்டது. எப்போதும் சரியான வழியில் செல்வம் சம்பாதித்து வயிறு வளர்ப்பவரைப் பற்றி எமக்கு ஒரு ஆக்ஷேபணையும் கிடையாது. ஆனால் வயிறுவளர்ப்பதற்காகவே இந்த ஜன்மம் எடுத்திருப்பதாக எண்ணுவது பிசகு என்பது எமது அபிப்பிராயம். மனிதன் பசியைமட்டும் அடக்குவதற்கு ஜாஸ்தியாய் சிரமப்பட்டு உழைக்கவேண்டியதில்லை. வீண்ஜம்பம்செய்வதிலும், குடிப்பதிலும், சூதாடுவதிலும், தேவடியாளுக்கு அடிமையாயிருப்பதிலும் ஒருவருக்கொருவர் போட்டிபோட ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படி அநேகர் செய்வதினால் நல்வழியில் நடக்கும் ஏழைகள் திண்டாடும்படி வந்துசேருகிறது. பெரிய உத்தியோகங்களிலிருப்பவர்கள் அநேகர் தாங்களே ஈஸ்வரனென்றும் தாங்கள் எவ்வித அக்கிரமமும் செய்யலாமென்றும் செய்துவருகிறார்கள். நம் முன்னோர்கள் இருந்த விதத்தையும் இப்பொழுது ஜனங்கள் நடக்கும் விதத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அநேகதாரதம்யங்கள் இருக்கின்றன. முன்னோர்கள் தர்மங்கள் செய்வதில் சலியாதவர்களாயும், நல்லகாரியங்களில் பிரவிர்த்தியுள்ளவர்களாயும், தெய்வபக்தியுள்ளவர்களாயுமிருந்தார்கள். தற்காலத்தில் தெய்வபக்தி அநேகருக்குத்தெரியாமல் பக்தி செய்பவர்களைப் பரிகாசம்செய்துவருகிறார்கள். தில்லானாவும், டோமிரியும், இந்திரசபாமெட்டுகளும் அதிகரிக்கின்றன. சிலர் ரெயினால்டு (Reynold) முதலியவர்கள் எழுதிய புஸ்தகங்களை வாசிப்பதுதான் தங்கள் ஜன்மகிருதார்த்தமென்று நினைக்கிறார்கள். ஈஸ்வரன் எங்கே இருக்கிறான் என்று வாதம் செய்ய ஆரம்பிக்கிறார்கள் வேறு சிலர். ஈஸ்வரனது கிருபையில்லாவிட்டால் அரை நிமிஷம்கூட நாம் இவ்வுலகின்கண் இருக்கமுடியாது என்ற சங்கதியை இம்மூடர்கள் அறியார்கள்போலும். நாம் விடும் மூச்சும், நம்முடைய உயிரும் ஈஸ்வரனது கிருபையால் உண்டானதே அல்லது நம்

முடைய இஷ்டப்படிக்கல்ல. நாம் உண்ணும் உணவும் இன்னும் நாம் அடையும் அநேக சௌக்கியங்களும் அவரது அருளால் தான் என்பதற்கு யாதொரு சந்தேகமு மில்லை. இப்படியிருக்க அநேகர் இதையறியாமல் நான் செய்துவிட்டேன் நான் அப்படிச் செய்யாவிட்டால் எல்லாம் கெட்டேபோயிருக்குமென்று அகங்காரம் பிடித்து உளருகிறார்கள். ஈஸ்வரனால் இந்த மானிடதேகம் எதற்காகக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற சங்கதியைத் தீர யோசித்து வெகுபேர்காரியம் செய்கிறதில்லை. தேவடியாள் வீட்டுக்குப்போகிற பிரபுக்களில் அநேகர் ஏன் என்னை ஸ்வாமி தேவடியாள் வீட்டுக்குப்போகச்சொன்னாரென்றும், கிருஷ்ணன் கோபிகாஸ்திரீகளிடம் லீலை செய்யவில்லையா, நாங்கள் ஏன் பரஸ்திரீகமனம் செய்யக்கூடாதென்றும் வாதிக்கிறார்கள். குடிகாரர்கள் ஸ்வாமி ஏன் என்னைக்குடிக்கச்சொன்னார் என்று உளறிக்கொண்டு குடித்து சாக்கடையில் புறளுகிறார்கள். தாங்கள் ஏதாவது நல்லகாரியங்களைச்செய்து அதனால் தங்களுக்கு நன்மை உண்டானால் நான் செய்துவிட்டேன் என்று சொல்லுப இம்மூடர்கள் தாங்கள் கெடுதல் காரியங்களைச்செய்ததெல்லாம் ஈஸ்வரனால் என்று பிதற்றுவது என்ன அநியாயம். கோபிஸ்திரீகள் பக்தி இவர்களுக்குண்டா! இம்மானிடதேகம் கேவலம் மிருகத்தைப் போல் தின்றுவிட்டு உறங்குவதற்காக மட்டும் கொடுக்கப்படவில்லை என்று இவர்கள் அறியவில்லை. அறிவு என்பது எப்பொழுது மனிதனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அறிவினால் அவன் நன்மை இது என்று பகுத்தறிந்து ஈஸ்வரனிடத்தில் பக்திபாராட்டுவது தன் கடமை என்று நினைக்கவேண்டாமா? இக்காலத்தில் குழந்தைப்பருவமுதல் தாய் தகப்பன்களே குழந்தைகளைக் கெடுத்து வருகிறார்கள். குழந்தைகளை பயமுறுத்துவதும், கெட்டவார்த்தைகளை அப்பியாசித்துக்கொடுக்கிறதும் தவிர தெய்வம், பக்தி முதலிய விஷயங்களைப்பற்றி கவனிக்காமலிருந்து வீண்போது போக்கவும் பழக்குகிறார்கள். தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் என்ற பழமொழிப்படி இக்குழந்தைகள் வயசில் விருத்தியடைய அடைய நல்லகாரியங்கள் ஒன்றும் செய்யத் தெரியாமல் அலைகின்றன. குழந்தைகள் பையன்களாகிறபோது அவர்கள் தாய்தந்தையர் தங்கள் பையன்களை, "அப்பா, நீ சந்தியாவந்தனம் பண்ணினால் பண்ணு, விட்டால்விடு; எப்படியாவது பள்ளிக்கூடபரீட்சையில் தேறுவதற்கு வழிபார்" என்கிறார்கள். இவர்கள் பரீட்சைக்கு வாசிக்கக்கூடாது என்பது எமது எண்ணமல்ல. ஆனால் பள்ளிக்கூட வாசிப்புக்கும்சந்தியாவந்தனத்துக்கும் என்ன சம்பந்தம்! ஏன் சந்தியாவந்தனத்தை விட்டு விட்டு பள்ளிக்கூடபடிப்பை மட்டும் கவனிக்கவேண்டுமோ? பார்க்கப்போனால் பள்ளிக்கூடத்தில் மதபோதனையில்லாமையால் வீட்டில் மதாப்பியாசம் இருக்கவேண்டியது அவசியமாகவிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் பையன்கள் தங்களைத்தானே பழக்கத்தால் கெடுத்துக்கொள்ளுகிறதுமுண்டு. படிப்புமுடிந்து இவர்கள் வேலைக்கு வந்தால் அநேகர் நாஸ்திகராய்ப்போய் விடுகிறார்கள். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் தன்னாலியன்றமட்டும் நல்வழியில் தனம் சம்பாதித்து, சக்தியற்றவர்களுக்கு உதவி செய்து, தெய்வபக்தி மிகவும்வைத்து ஜகதீஸ்வரனுடையகிருபையால் அவரிடத்திலே சரணாகதி அடையவேண்டுவதுதான் ஆண்மைத்தனம் என்று எணணி அவ்விதமாய் நடப்பானாக.

கா. வி. மகாதேவசர்மா.

## கோலப்புத்தகம்.

இப்பெயர்கொண்ட புத்தகமொன்று நூதனமாகப்பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதிலடங்கிய கோலங்கள் ஸ்ரீமதி பள்ளிக்கொண்டை ஸ்ரீரங்காச்சியாரம்மாள் அவர்களால் சேகரிக்கப்பட்டு ஸ்ரீமான் பட்டு விஜயரத்நம்பிள்ளையவர்களால் அச்சிட்டுப் புஸ்தக



ரூபமாகப் பதிப்பிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. நமக்குள் கல்வியறிவு பரவிவருவதினால் ஹிந்து மாதர்களும் அவ்வறிவை யடையவேண்டுமென்கிற சிந்தையுதித்து வருகிறது. இச்சிந்தையுதித்து வருவது காரணமாக, மாதர்கள் விவேகம்பெற்று முன்னுக்குவருவதற்கானவழிகள்பல, பலரால் பல சந்தர்ப்பங்களுக்கேற்ப அனுசரிக்கப்பட்டு வருகின்றன. இவைகளில் பெண்பாடசாலைகள் ஏற்படுத்தி நடத்தி வருவது ஒன்று; ஹிந்துமாதர்கள் ஒன்றுகூடி விவேகாவிர்த்திக்குக்காரணமான கூட்டங்கள் கூடி ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக விருந்து புத்திவிர்த்தி செய்து வருவது மற்றொன்று, இதற்குதாரணமாக தென்னிந்தியா பிரம்மசமாஜ மந்திரத்தில் மாதர்கள் சபைகூடி மாதர்களிலே ஒருவர் பிரசங்கம் செய்து வருகிறதையும், ஆசாரச் சீர்திருத்தசபையார் ஆதரவில் மாதந்தோறும் ஹிந்துமாதர்கள் அபிவிர்த்தியை நாடிச்செய்துவரும் உபந்நியாச ஏற்பாட்டையும் எடுத்துச்சொல்லலாம். கதாகாலக்ஷேபங்கள் நடப்பதும் இதற்கு ஓர் உதாரணமே. புஸ்தகங்கள் பத்திரிகைகள் விர்த்தியாகிவர அவைகளைப்படித்து மாதர்கள் விர்த்தியடைவது பின்னுமோர்வழி. இவைகளையன்றி இன்னுமோர்வழியிருக்கிறது. அஃதென்னவெனில், கற்றுத்தேறியமாதர்கள் தாங்கள் தீரக்கற்ற வித்தையைப்பலருக்குமுபயோகப்படும்படி பரவச்செய்துழைத்து வருவதேயாம். கற்றுத்தேறியனுபவம் நிறைந்தமாதர்கள் தங்கள் சகோதிரிகளின் புத்திவிர்த்திக்காக உழைத்துவர எத்தனையோ வழிகளிருக்கின்றன. பம்பாயில் கனம் ஜஸ்டிரானடேயவர்களுடைய பத்தினியாரைப்போல் சபைகூட்டி உபந்நியாசம் செய்துழைப்பது ஒன்று. வங்காளத்தில் சில மாதர்கள் செய்துவருவதுபோல் பெண்களுக்குபயோகமான பத்திரிகைகள் பிரசுரித்து வருவதும், புஸ்தகங்கள் எழுதிப்பிரசுரிப்பதும் ஒன்று. பாடசாலைகளில் சிறுவர் சிறுமிகளுக்குக், கைதேர்ந்தமுறையை யனுசரித்துக் கல்விபோதிப்பது மற்றொன்று இப்படி நாலாவிதத்திலும் நமது மாதர்களேமுயற்சி செய்து உழைத்துவரத்தகுந்தவர்களாகி அப்படியே உழைத்துவரத் துணிவும் கொள்வார்களானால் நமது தேசம் வெகுசீக்கிரத்தில் முன்னுக்குவரும். இப்படி மாதர்கள் கூட்டுழைப்பின்றிப் புருஷர்கள்மட்டும் படித்தவர்களாகி தன்னந்தனியாகத்தேச நன்மைக்குழைத்து வருவதினால் நாம் இலகுவில் முன்னுக்கு வரலாமென்று நினைப்பது வீண் நினைப்பே, பெண்பாலரை மௌட்டியர்களாக விட்டு, ஆண்பாலாரைமட்டும் படிக்கவைத்து வரும் தற்காலத்து "சோற்றுப்படிப்பு" தேசக்ஷேம விர்த்திக்கு ஏற்றதன்று. ஆகையால் நம்மில் விவேகிகளான மாதர்கள் 'தம்பாடுண்டு தாமுண்டு' என்று தம்குடித்தனக்காரியம் ஒன்றிலேயே கண் பஞ்சடைந்து கிடப்பதைவிட்டு பொதுவாக நாலுபேருக்கு நலந்தரும் விஷயங்களில் முயற்சி யெடுத்துக்கொள்வதைக்காணுந்தோறும் நாம் நல்லகாலம் வருவதைக் குறிக்கும் சுபசகுனம் காண்பதுபோல் களித்துக் கொண்டாடவேண்டியவர்களாக விருக்கிறோம். இந்நோக்கத்தைக்கொண்டே கோலாட்ட உற்சவம் கொண்டாடிய மாதர்கள் முயற்சியை மெச்சிக் கொண்டாடிக் குறிப்பிட்டோம்; தென்னிந்தியாபிரம்மசமாஜ வருஷோற்சவ காலத்தில் கூடியமாதர்சபையில் பேசிய மாதுசிரோமணியின் பிரசங்கத்தை, அதைப்பற்றி நமக்கு எழுதியவர் மெச்சிக் கொண்டாடிக் குறித்திருப்பதும் இந்நோக்கங்கொண்டே. இப்பொழுது நம்முன்னிருக்கும் கோலப்புஸ்தகத்தையும் இந்நோக்கங்கொண்டே நாம் மிக மெச்சிக் கொண்டாடுகிறோம். இதிலடங்கிய கோலங்கள் அனேகமாய் ஹிந்துமாதர்களி லநேகருக்கும் தெரிந்ததாகவே யிருக்கும்; இருந்தாலும், இவைகளை ஒன்றுசேர்த்து ஒழுங்குபடுத்திப் பிரசுரித்தால் சிறுமிகளும் அறியாதவர்களும் அறிந்துகொள்ள உபயோகமாக விருக்குமென்கிற எண்ணம் தோன்றி, தானறிந்தது நாலுபேருக்குப் பயன்படச் செய்யவேண்டுமென்கிற பொது நோக்கங்கொண்டு அக்கோலங்களைச் சேர்த்து ஒழுங்குபடுத்திப் பிரசுரிப்பதற்கு வேண்டிய சிரமம் வகித்துழைத்த மாதுசிரோமணியின் உதாரணத்தை மிக மெச்சிக்கொண்டாடுகிறோம். இந்த அம்மாளுடைய நன்முயற்சி நிறைவேற உதவிபுரிந்த ஸ்ரீமான் விஜயரத்நம் பிள்ளையவர்களின் முயற்சியும் நன்குபாராட்டத் தக்கதே. இந்த அம்மணிக்கு ஆதரவாயிருந்து அனுதாபத்தோடுதவிசெய்த இவருடைய கணவர், பிதா இவர்களுக்கும் இவருடைய இம்முயற்சி பெருமை விளைப்பதேயாம். ஸ்ரீமதி பள்ளிக்கொண்டை ஸ்ரீரங்காய்ச்சியாரின் தகப்பனார் மைசூர் இராஜ்ஜியத்தில் உயர்ந்த உத்தியோகத்திலிருக்கும் ஒரு புத்திமானென்று அறிகிறோம். இப்புஸ்தகம் ஒரு ஹிந்துமாதுவினால் வெளியிடப்பட்ட விசேஷத்தைக் கொண்டாடி இதில் சில பிரதிகளை நமது மாதர்களது புத்தியபிவிர்த்தியில் சிரத்தை யெடுத்துக்கொள்ளும் அபிமானிகளான சில அங்கிலேய துரைசாணிகளுக்கும் வித்யா இலாகா உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்பி வைத்தோம். அவர்களெல்லாரும் அதைப்பற்றி

மிக மெச்சிக்கொண்டாடி யெழுதி யிருப்பதோடு சிறுமிகள் கைபழகக் கற்றுக்கொள்வதற்கு இது நல்ல சாதனமாகுமென்று சொல்லி அப்புஸ்தகம் அதிகமாய் வியாபித்துப் பரவிவர உதவுவதாகவும் எழுதியிருக்கிறார்கள். ஹிந்து மாது ஒருவர் இங்கிலாந்தில் தமக்கு மிக்க நேசமான துரைசானி யொருவருக்கு இதை யனுப்ப, அவர் அதை அவருடைய சிநேகிதைகளான இதர சீமாட்டிகளுக்குக்காட்டி அதைப்பற்றி யெல்லாரும் மிக மகிழ்ந்து விசேஷமாகக் கொண்டாடியதாகவும், இவ்வளவு அழகிய கோலங்கள் போட்டு ஹிந்து மாதர்கள் தங்கள் வீட்டை யலங்கரிக்கிற வழக்கத்தைப்பற்றி மிக மெச்சிக் கொண்டதாகவும் சொல்லி யெழுதியிருக்கிறார்.

இதைப்பற்றி இவ்வளவுதூரம் சிலாக்கியமாகப் பேசியபிறகு இதிலுள்ள குறைகள் சிலவற்றை யெடுத்துரைப்பின் அதைக் குற்றமாகப் பாராட்டாது இதன் உபயோகத்தை அதிகமாகச் செய்யவேண்டுமென்கிற நல்லெண்ணத்தினாலேயே சொல்கிறோமென்பதை யாம் சொல்லாமலே யறிந்துகொள்வார்கள். இப்பொழுதிருக்கிறபடி இக்கோலங்கள் போடும்வகை யின்னதென்று சிறுவர்களுக்கும், அறியாதவர்களுக்கும் விளங்குவது கூடாமையாகவிருக்கிறது. இக்குறையை நிவர்த்திக்க கிண்டர்கார்டன் முறையை யனுசரித்து இக்கோலங்களைப் போடும் வகை இப்படி யென்றும் இவ்விதமான கோடுகள் அல்லது புள்ளிகள் இவ்விதமாகப் போட்டு இவ்விதமாக இணைக்கவேண்டுமென்று அச்செழுத்தில் கற்பனையும் சேர்த்துப் பிரசுரித்தால் சிறுவர்களுக்கு மிக்க பிரயோசனமுள்ளதாக விருக்கும். கோலங்களையும் நேர்கோடு, வளைவுகோடுகள் இவைகளின் கஷ்டத்திற்குத் தகுந்தபடி இலகுவானவற்றை முன்னும் வரவரக் கஷ்டமானதும் அதிகசிக்கலானதுமாக கோலங்களை கிரமவரிசையில் அவைகளுக்குப்பின்னும் வரும்படி மாற்றி ஒழுங்குபடுத்துவது உசிதமாயிருக்கும். ஏற்கனவே இப்புஸ்தகத்தின் முதற் பதிப்பு அனேகமாய்ச் செலவாய்விட்டதென்று நாம் கேள்விப்படுவதால், இரண்டாம் பதிப்பில் கிண்டர்கார்டன் முறையறிந்தவர்களுதவியைக்கொண்டு நாம் மேலே குறித்துக்காட்டிய சீர்திருத்தங்களைச்செய்து இதன் உபயோகத்தை விர்த்தி செய்வார்களென்று நம்புகிறோம். இதன் விலை அணா நாலே.

## விசேஷக்குறிப்புகள்.

**தென்னாபிரிகா யுத்தம்.**

தென்னாபிரிகாவில் 'ட்ரான்ஸ்வால்' என்றும் 'ஆரஞ்சு ப்ரீஸ்டேட்' என்றும் இரண்டு குடியரசு நாடுகளிருக்கின்றன. இந்நாடுகளிலும் தென்னாபிரிகாவிலுள்ள பிரிடிஷ் அதிகாரத்துக்குள்பட்ட குடியேற்றநாடுகளிலும் குடியேறியுள்ளவர் 'டச்சுக்காரர்கள்'. இவர்களுடைய சரித்திரத்தை பூர்வம் தொட்டு விசாரித்தெழுதிற் பெரிதாகவளரும். மேலே குறித்த 'ட்ரான்ஸ்வால்' தேசத்தில் இங்கிலீஷ்முதலாளிகள் பலர் அங்குள்ள வைரச்சுரங்கங்களைக் குத்தகையெடுத்து வேலை செய்து வருகிறார்கள். இவர்களுக்கு 'ஔட்லாண்டர்கள்', அதாவது அந்நியர்கள் என்று அத்தேசத்தில் பேர்வழங்குகிறது. 'ட்ரான்ஸ்வால்' குடிகளுக்கு **போவர்கள்** என்று பேர். இவ்விருதரத்தாருக்கு முண்டான சச்சரவு காரணமாக பிரிடிஷ் கவர்ன்மெண்டார் அதுவிஷயத்தில் பிரவேசிக்க, ஆங்கிலேய நாட்டு குடியேற்ற நாடுகளின் மந்திரியாகிய மிஸ்டர் சேம்பர்லேனுக்கும் டிரான்ஸ்வால் நாட்டுத்தலைவரான ப்ரெஸிடெண்ட் க்ரூகருக்கும் விவாதமுண்டாகிக் கடைசியில் அது அக்டோபர்மீ 11உ யுத்தாரம்பத்தில் வந்து முடிந்தது. 'ட்ரான்ஸ்வால்' குடிகள் 'ஆரஞ்சு ப்ரீஸ்டேட்' குடிகளோடு சிநேகக் கட்டுப்பாடுசெய்துகொண்டு இருவருமாக ப்ரிடிஷ் அதிகாரத்திற்குள்பட்ட நாடுகளில் புகுந்து அவர்கள் சைனியங்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். பிரிடிஷ் சைனியங்கள் இங்கிலாந்திலிருந்தும், ஆஸ்ட்ரேலியா, கனடா முதலிய குடியேற்ற நாடுகளிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் ஏராளமாகச்சென்று இன்னும் அங்கு சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஜெனரல் **ஊயிட்**, **லேடிஸ்மித்** என்னுமிடத்தில் அடைபட்டு **போவர்**களால் முற்றுகை யிடப்பட்டிருக்கிறார். **கிம்பர்லி**, **மேப்கிங்**, என்னுமிடங்களிலும் பிரிடிஷ் சைனியங்கள் அடைபட்டுக் கிடக்கின்றன. இவர்களை விடுவிப்பதற்காக அனுப்பிய சைனிய உதவி இவர்களை விடுவிக்கச்செய்த முயற்சி உத்தேசித்ததுபோல் எளிதில் பலிக்கவில்லையால், இப்பொழுது இன்னும் அதிக படைகளையனுப்பி, இந்தியாவில் முக்கிய சேனாதிபதியாக விருந்த லார்ட் ராபர்ட்ஸ் அவர்களை முக்கிய சேனாதிபதியாக நியமித்தனுப்பி அவருக்கு வட ஆபிரிக்காவில் யுத்தம் செய்து கீர்த்திபெற்ற லார்ட் கிட்சனரைப் பிரதம ஆபீஸராக நியமித்து **போவர்**களுக்குப் புத்திபுகட்டும்படியனுப்பியிருக்கிறார்கள். **போவர்கள்**, வியவசாயம் செய்து ஜீவனம் செய்யும் குடிகள். ஆனால் சுவதந்தரத்தை எல்லாவற்றையும் விட மேலாக மதிப்பவர்கள். இவர்கள் வெகு பிடிவாதமாகச் சண்டை போட்டுவருவது எல்லாருக்கும் அதிசயத்தை யுண்டுபண்ணுகிறது. இதுவரையில் நடந்துவந்த நாலுமாச யுத்தத்தில் இருதரத்திலும் தோற்புக் கெலிப்புகளிருந்தாலும்,



மொத்தத்தில் இதுவரையில் **போவர்கள்** கையே மேலானதாக விருந்ததென்று சொல்வதற்கிடமாயிருக்கிறது. ஆனைக்கும் பூனைக்கும் சண்டைநேர்ந்தால், ஆனை அசாக்கிரதையாயிருக்கும் தருணம்பார்த்து பூனை அதன்மேல் விழுந்து பிராண்டிக்கடித்துப் பெருஞ்சேதம் செய்யுமானால் அதைப்பார்த்து ஆச்சரியப்படாதவர்கள் உண்டோ? அதுபோலவே இங்கிலாந்தின் ஒரு மாகாணத்து ஜனத்தொகைக்கு அதிகப்படாத **போவர்கள்** லோகசக்ராதிபத்தியம் நடத்திவரும் ஆங்கிலேயர்மேல்விழுந்து சேதம்செய்துவருவதைப்பார்த்து எல்லாரும் ஆச்சரியப்படுகிறார்கள். இதில் இருபக்கத்திலும் ஏராளமான உயிர்ச்சேதம் நேர்ந்துவருவது மிகவும் விசனிக்கத்தக்கதாயினும் யுத்தமென்று கிளம்பினபின் ஆளுக்கொரு கைபாராமல் நிறுத்தார்களாதலால் இச்சண்டை சீக்கிரத்தில் முடிவுக்குவர ஈசன் அருள்புரிவாரென்று பிரார்த்திக்கிறோம்.

*வித்தியாதன சட்டம்.*

ஜனவரிமீ 26உ யன்று கூடிய சென்னை சட்டநிரூபண சபையில் கனம்பொருந்திய ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார் 9-வருஷத்துக்கு முன் கொண்டுவந்த வித்தியாதன மசோதா ஆலோசனையிலெடுத்துக்கொண்டு சட்டமாகப் பாஸ்செய்யப்பட்டது. இதனால் ஒருவன் தான் கற்ற வித்தை மூலமாகச் சம்பாதிக்கும் தனம் அவனுடைய சொந்த சொத்தேயன்றி, குடும்பப்பொதுவிலுள்ள ஐவேஜைக்கொண்டாவது வேறு எவ்வித உதவி ஒத்தாசையைக்கொண்டாவது அவன் படித்து முன்னுக்குவந்தான் என்கிற காரணத்தினால் அவன் சம்பாத்தியம் அவனுடைய அவிபக்தகுடும்பத்திற் சேர்ந்தவர்களுக்கு எவ்வித பாத்தியமுமுள்ளதாகாது என்று ஸ்பஷ்டமாகச் சட்டம் நிர்ணயிக்கப்படலாயிற்று. இது சாதகமான சட்டமென்று சிலரும் பாதகமான சட்டமென்று பலரும் சொல்லுகிறார்கள். சட்டம் ஆலோசனையிலிருக்கும் வரையில் தூங்கினவர்கள் இப்பொழுது அது சட்டமாக அங்கீகரிக்கப்பட்டபின் அது கவர்னர் ஜெனரல் அங்கீகாரம் பெறுதபடி தடுக்க முயற்சிக்கிறார்கள். இவர்கள் முயற்சி எந்தமட்டும் பலிக்குமோ அறியோம். எப்படியிருந்தாலும் தங்களுக்குண்டாகும் சாதகபாதகங்களைச்சொல்லி முறையிட்டுக்கொள்வது நல்லதேயாகும்.

## சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

### "நன்றிமறத்தல் நன்றன்று."

ஒரு சம்முசாரி மிகவும் பிரயாசைப்பட்டு கொஞ்சம் தனம் சம்பாதித்து தான், கிழவனானபிறகு தன்னுடைய ஆஸ்தியை பிள்ளைக்குக்கொடுத்தான். அவன் நல்லஸ்திதிக்கு வந்ததும் வீடு தோட்டம் பாத்திரம் பண்டங்கள் முதலியவை வாங்கிக்கொண்டும் வேலைக்காரர்கள் நியமித்துக்கொண்டும் இப்படியாகத்தன் பெருந்தன்மையை வெளிக்காட்டினான். ஆனால் அவன் தகப்பனை ஒரு குடிசையிலேயேயிருத்தி உடைந்த மண் பாண்டங்களில் உண்ணச்செய்வதும் அவைகளை அவனைக் கொண்டே கழுவச்செய்வதுமாயிருந்தான். கிழவன் பேரன் மகாபுத்திமான் அவன் தன் பாட்டன்படும் அவஸ்தையைப்பார்த்து மிகவும் விசனமடைந்து கிழவனைப்பார்த்து நீ இன்னம் உடைந்த ஓட்டிலேயே தின்று நீயே கழுவிக்கொள்ளவேண்டுமா என் ஆலோசனையைக் கேள் அவைகளை நன்றாய் உடைத்துவிடு உன் விசனம் தீர்ந்துபோம் என்றான் அதெப்படி குழந்தாய்? நான் அப்படிச்செய்தால் உன் தகப்பனுக்கு மீண்டும் கோபம் அதிகப்பட்டு என்கதி முன்னைப்பார்க்கிலும் கெடுதலாகும் என்று பாட்டன் பதிலுரைத்தான் பேரன் நான் சொல்வதைக்கேள் உனக்கு நன்மையே உண்டாகுமென்று வற்புறுத்திக் கூறினதால் கிழவன் ஒரு நாள் தன் பிள்ளையும் பேரனும் இருக்கையிலேயே சாப்பிட்டானதும் பாண்டங்களை கழுவுகிற பாவனையாய் அவைகளையுடைத்துவிட்டான் பேரன் உடனே ஒரு தடி

யை எடுத்துக்கொண்டு பாட்டனை அடிக்கப் போகிறதுபோல் தடியை ஓங்கிக்கொண்டு கிட்டப்போனான் அவன் தகப்பன் என்னடா நீ பயித்தியக்காரனா என்றுகேட்க பையன் நான் சரியாய்த்தான் செய்கிறேன் இவைகளை இவன் உடைத்துவிட்டால் பிறகு நீ கிழவனாகும்போது நான் உனக்குச்சோறுபோட உடைந்த ஓடு எங்கிருந்து சம்பாதிப்பேன்? அதனால் தான் உன் தகப்பனைத் தண்டிக்கப்போகிறேன் என்று சொன்னான் அவன் தகப்பனுக்கு இந்தவார்த்தைகளின் தாத்பரியம் உடனே தெரிந்ததனால் கிழவனை வீட்டுக்குள் உபசரித்து அழைத்துக்கொண்டு அவனுக்கு குற்றேவல்செய்ய வேலைக்காரர்கள் நியமித்து அதுமுதல் அவனை மரியாதையாய் நடத்திவந்தான்.

L. V. V. S.

# HEALTH KNOWLEDGE FOR THE PEOPLE.

(*From the Indian Magazine & Review for January* 1900.)

(Translated from the *Viveka Chintamani Magazine*, by L. C. Innes, Esq.)

## The Food we Eat

At the close of what we wrote as to the advantage of health when enquiring about the causes of disease, we said that food might be one of them. How should disease arise from food? Looking into this matter carefully, we can understand that disease may arise to some from deficient food. To some from excess in eating, to others from bad cooking of food, and to others again from food that has gone bad. So we will consider what is the purpose of eating, and in what condition food ought to be.

How small is the seed of the Banyan tree (Sacred Fig Tree), and how large is the tree that through watering springs from the earth in which the seed is planted. Do the tree, the leaf the flower and the fruit arise from the seed alone? No. That tree comes from the food it has gathered from the earth, the water, and the air.

In the same way how small is a child when born. Afterwards it gradually increases and becomes a large frame. From being at first only about nine pounds weight, in old age it attains a large body weighing about one hundred and fifty pounds. See how this comes to pass. It is all through the food we eat. Therefore we must understand that the advantage of food in the first instance is to nourish the body. If one rises in the morning and walks out a couple of miles and back, what change is there in him as compared with what he was before the walk? First there will be a certain amount of fatigue apparent. This every one knows by experience. If the man weighs himself before going out, on his return he will find he has lost about two pounds in weight. There will be some other changes besides. If this is the case when walking, how is it when labouring? You have seen a blacksmith working with his hammer. And there are many persons employed in manual labour who exert their bodies in the way that he does. The changes that are brought about in their bodies are great.

We must consider the air we breathe. The air which we breathe out is very different from that which we inhale. It appears to be much more heated, moister and heavier. If we enclose the air we breathe in a little thin phial and weigh it, we shall find it heavier than ordinary air so enclosed in a phial. Moreover, if we put well-strained lime water in a phial and shake it up well, there will be no change in the appearance of the air by the contact of the air with the lime water. But if we breathe into it and shake it up, the lime water, which before was clear becomes now opaque and white, and is heavier than what it was before. The reason of this is that the carbonic acid gas of the air we breathe out has mingled with the lime. By this we know that the air we breathe contains carbonic acid gas.

(*To be continued.*)





லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 „

சந்தாவிவரம்.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு „ 2-2.

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1900வரு மார்ச்சுமீ [இலக்கம் 11.


## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7*s.* 6*d.* NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People:—

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s.* 6*d.* NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a Volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு:—அத்தியக்ஷர்கள், மீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறுமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6 மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷம் முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

## TO OUR SUBSCRIBERS.

☞ The Agency regrets that owing to the continued ill-health of the Editor and his consequent absence from Madras it has not been found possible to issue the numbers of the *Viveka Chintamani*, punctually on the 1st of the month as usual. The February No. was published only on the 10th of that month and the March number has been delayed so long as the 6th April. None regrets the irregularity more than the Editor but these delays were unavoidable under the circumstances.

## நமது சந்தாதாரர்களுக்கு.

பத்திராசிரியர் சிலகாலம் தொடர்ந்து தேக அசௌக்கியமாயிருந்ததுபற்றி சென்னையைவிட்டு வெளியில்போக நேரிட்டதால் 2-மாதமாக விவேக சிந்தாமணியை வழக்கம்போல் அந்தந்த மாதம் முதல்தேதியில் பிரசுரித்துவருவது கூடாமையாகப் போனதைப்பற்றி வருத்தப்படுகிறோம். பிப்ரவரி மீ த்துச் சஞ்சிகை அந்தமீ 10உ-யில்தான் வெளியாயிற்று. மார்ச்சுமாசத்துச் சஞ்சிகை ஏப்பிரல்மீ 6உ-வரையில் தவக்கப்பட்டுப் போய்விட்டது. இப்படி தாமதமாய் வருவதைப்பற்றி பத்திராசிரியரே மிக வருந்துகிறார். ஆயினும் நேர்ந்த சந்தர்ப்பங்களில் இவ்வித காலதாமதம் தடுக்க முடியாததாயிற்று.

**அ. ப. ஏஜன்ஸி.**

# சஞ்சோக்தை சுயம்வரம்

### அல்லது

# ப்ரித்விராஜா சரித்திரம்.

## XVII. துணிகரமான தீர்மானம்.

சஞ்சோக்தைக்கு அவள் சிறையிருப்பில் புதிய பாங்கியொருத்தி கிடைத்தபின் சிறையின் கொடுமை அவ்வளவாகப் படவில்லை. அவள் பாங்கி ப்ரித்விராஜாவின் குணவிசேஷங்களையும் அவன் வீரச்செய்கைகளையும், அவன் தன் எதிரிகளையெல்லாம் வென்று தான் மணம்வைத்த ராஜகன்னிகைகளை மணம்புரிந்து வந்த வைபவங்களையும் சொல்லச் சொல்லக் கேட்டானந்திப்பதிலும அதன்மேல் தன்னைப்பற்றிச் சிந்தனையாக விருப்பதிலும் அவளுக்குப் பொழுதுபோவது தெரியாமல் காலம் கழிந்துவந்தது. ஒருநாள் சஞ்சோக்தையும் பாங்கியும் சாளரவழியாக சிங்காரவனத்தில் பறக்கும் கிளிகளையும் புறாக்களையும் பார்த்துச் சிந்தனையோடு கலந்த சல்லாப வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கையில், குறமாதொருத்தி தெருவழியே குறம் பாடிக் கொண்டுபோனது அவர்கள் காதில்விழுந்தது. உடனே உற்றுக்கேட்க,

"உறிகொள்வீர் தாம்புகொள்வீர் ஊஞ்சல்கயிறு கொள்வீர்
கொக்குபிச்சுகொள்வீர் கோரோசனையுண்டைகொள் வீர்
குழந்தைகள்விளையாடக் கிலுகிலுப்பைகொள்வீரோ
பச்சைமணிகொள்வீரோ பருஞ்சிலங்கைகொள்வீ ரோ
நரைபோய் இளமைவர நல்லமருந்துண்டைகொள் வீர்
வாழாதபெண்களுக்கு வாழமருந்துண்டைகொள்வீர்
சேராதபெண்களுக்கு சேர மருந்துண்டைகொள் வீர்"

என்று பாடியது அவர்கள் காதில் விழுந்தது. பாங்கி சஞ்சோக்தையைப்பார்த்து "இவள் நல்ல குறத்தி, இவளால் ஆகாதது ஒன்றுமில்லை போலிருக்கிற"தென்று சொல்லிச் சிரித்தாள். இவர்கள் இப்படி சிரித்துக்கொண்டிருக்கையில் குறத்தியின் குரல் கிட்ட நெருங்கி முன்னிலும் நன்றாகக் கேட்டது:—

"கைபார்ப்பேன் குறியுரைப்பேன் காரியங்களுள் ளபடி
கூடைமுறங்கட்டுவேன் குறிகள்மிகவுரைப்பேன்
பச்சைபொட்டுகுத்தலையோ பைங்கொடிமாதர்க ளே!"

என்று அவள் நீட்டிப்பாடியதைக் கேட்ட பாங்கி 'சகி, இது தான் சமயம்! குறிகேட்டுக் காரியங்களைத் தெரிந்துகொள்ள குறத்தி தெய்வீகமாகவந்தாள். அழைத்துவரச் சொல்லுகிறேன் உத்தரவளி." என்று வேண்டினள். சஞ்சோக்தை "என்னடி பாங்கி, நீ என்னை எகத்தாளம் செய்யவேண்டும்! நான் இருக்கிற இருப்புக்கு எனக்குக் குறிகேட்கவும் வேண்டுமோ" என்று நொந்துகொண்டு பதிலுரைத்தாள். அவள் பாங்கி "அப்படியல்ல அம்மா; பிச்சைக்குறம் சொன்னால் பொய்யாது பலிக்கும் என்பார்கள். அவள்வந்து கைபார்த்தால் மனதிலுள்ள குறைதீரும். ஆகையால் அவளை வரவழைக்க உத்தரவாகவேண்டும்". என்று பின்னும் கேட்டுக்கொண்டாள். "ஆனால் சரி" யென்று சஞ்சோக்தை சம்மதித்து அவளைக்காணவேண்டி சிங்காரவனத்திலுள்ள தனிமண்டபம் ஒன்று வந்தடைந்தாள். வந்தடையவும் உடனே அங்கு குறத்தியும் வந்துசேர்ந்தாள். சிறிது நேரம் வார்த்தைகளாடின பின் கைபார்த்துக் குறிசொல்லக்கேட்கக் குறத்தி சஞ்சோக்தையின் இடது கையைப் பிடித்துப்பார்த்துக் கண்ணில் ஒத்திக்கொண்டு சிரித்தாள். பிறகு அவள் கண்ட கேட்ட விஷயங்களை எல்லாம் சாமர்த்தியமாகக் குறிசொல்பவள்போல பாட்டாக இசைத்துக் குறம்பாடத் தலைப்பட்டாள். மன்னன் சினங்கொண்டிருக்கிறானென்றும், அவள் சிறையிருக்க நேரிட்டிருக்கிறதென்றும் இன்னுமிப்படி யவள் அறிந்தவைகளை யெல்லாம் ஒன்றாக இசைத்து குறம் பாடிவந்தாள். இப்படித் தெரிந்தவற்றையே சொல்லி வருவதைக் கேட்டு சஞ்சோக்தை சிரித்திருக்க, அவள் பாங்கி, வரப்போவதைப்பற்றிக் குறிசொல்லக் கேட்டாள். கேட்கவும் அக்குறத்தி, சஞ்சோக்தையின் இடக்கரத்தைப்பிடித்துப் பார்த்துக் கண்ணில் ஒத்திக்கொண்டு 'கண்மலரோ பொன்மலரோ கைத்தலங்கள்' என்று குறம் பாட ஆரம்பித்தாள் :—

"டில்லியம்வரம்பெறுவாய் மைந்தர்களைப் பெறு வாய்
மனமகிழ நவைனிப்போ வருவானடி பெண்ணே.

பின்னும் சற்றேகையைப்பார்த்து பின்வருமாறு குறம் பாடத்தலைப்பட்டாள்.

"வாள் விஜயன் மேலாசை தோணுதடியுனக்கு
கூரானவிழியாளே கொம்பனையே கேளாய்
கூடுவது ஆசைமனம் தோணுதடியுனக்கு
பார்த்தேனடி உன்கையி லக்ஷணங்களிப்போ
பவனி முழுதாளுஜய சந்தன்மகளாரே
தகதகெண கைவளையல் கைபிடிக்க நாணும்
தயவுள்ள புருஷனிப்போ வருவானடி பெண்ணே"

குறத்தியிப்படி குறம்பாடவும் சஞ்சோக்தை முகநாணி 'போதும் போதும்' என்று கையையிழுத்துக்கொண்டு புஞ்சிரிப்பு முகத்தோடு தன் பாங்கியைப்பார்த்து நகைத்தாள். பாங்கியும் நகைத்துக்கொண்டு 'பிச்சைக்குறம் பொய்யாது அம்மா, நீங்கள் வேணுமென்றால் பாருங்கள்' என்று விடையளிக்க, குறத்தி "என்குறிகள் ஒருபோதும்பொய்யாது அம்மா, வேணுமானால் நானேயிருந்து கூட்டிவைக்கிறேன் பாருங்கள்" என்றாள். பாங்கி குறத்தியை வாயமர்த்தி தாழ்ந்தகுரலில் "உன் குறம் பலிக்கவேணும்; அப்பொழுது பார்க்கவேணும" என்றாள். குறத்தியும் சரியென்று உடன்பட்டு அப்பாங்கியின் கருத்துக்கிசைந்தவளானாள். ஆகவும், அவளை அங்கு இருத்தி அவளுக்குப் பரிசுகள் கொண்டு வருவதாகச் சொல்லி சஞ்சோக்தையுடன் உப்பரிகைக்குச் சென்றாள். சென்ற சில நேரம் கழித்து பாங்கி குறத்திக்குப் பரிசாகப் பட்டுப்பட்டாடைகளும் ஹாரங்களும் கொணர்ந்தீந்து அவளிடத்திலிருந்து அனேக சரங்கள் பச்சைமணி சங்குமணிகள் வாங்கிக்கொண்டு அன்றைக் கெட்டாநாள் அவ்விடத்திலே அவளை வந்து காணும்படி குறத்திக்குச் சொல்லி திட்டம் செய்துவிட்டுப் போய்விட்டாள். குறத்திவந்து குறம் சொல்லிப்போன நாள் முதல் சஞ்சோக்தையும் அவள் பாங்கியும் மனது சாந்தப்பட்டு அதிக ஊக்கத்தோடு பச்சைமணி சங்குமணிகள் கோர்ப்பதில் வேலையாகவிருக்கக்காணப்பட்டார்கள். ஒருநாள், இரண்டு நாள், ஆய்விட்டது. மூன்று, நான்கு, ஐந்து நாள்களும் கழிந்துவிட்டன. ஆறும்நாள் பொழுதுவிடிந்தது. சஞ்சோக்தை பச்சைமணிகளைக் கொண்டு அழகான கண்டசரம் பாதசரங்கள் செய்தனள். இப்படிச் செய்துமுடித்த கண்

டசரத்தை அவள் அருமையாய் வளர்த்து வந்த கிளியின் கழுத்திலிட்டு அழகு பார்த்தாள். பார்த்து ஆனந்தித்தாள்; அழுதாள்; மறுபடியும் சிரித்தாள். அக்கிளியைக் கையிலெடுத்துக்கொஞ்சினாள். அதைத் தடவிக் கொடுத்தாள். முகத்தோடணைத்து முத்தமிட்டுக்கொண்டாள். "என் உடன்பிறப்பென்றுன்னை வளர்த்தேன். இப்பொழுதுன்னைவிட்டு நான் வேறு யாரை நம்புவேன். நீயே கதி" யென்று மறுபடியும் அதை ஆசையோடணைத்து முத்தமிட்டுக்கொண்டாள். ஆசைதீர முத்தமிட்டுக் கொஞ்சிக்குலாவியபின் அக்கிளியைக் கூண்டில்விட்டு பாக்கியாகவிருந்த பாதசரத்தைக் கோர்த்து முடிக்க முனைந்தாள். ஏழாம் நாளாய்விட்டது. பாதசரங்களிரண்டும் முடிந்துவிட்டன. எட்டாநாள் பொழுது விடிந்தது. அதிகாலையில் வழக்கம்போல் மாடப்புறு மணிப்புறுக்களுக்குத் தினைமுதலிய தானியங்கள் போட்டு வளர்க்க உப்பரிகையின் பக்கத்திருந்த மாடிக்குச்சென்றாள். சென்று தீனியிட்டுக்கொண்டிருக்கும் பொழுது அங்குள்ள மாடப்புறுக்களில் தான் அடிக்கடி யெடுத்துத் தடவிவளர்த்துவந்த செல்வப் புறுவைக் கூப்பிட்டழைத்தாள். அதுவும் சிறகைவிரித்து இறக்கைகளையடித்துக்கொண்டு அவள் தோளின்மேல் வந்து உட்கார்ந்தது. அதைக்கையிலெடுத்து இறக்கைகளைத்தழுவித் தலையையும் கழுத்தையும் தடவிக்கொடுத்து அதற்காகத் தான் செய்த பாதசரங்களை அதன் கால்களிலிட்டுப்பார்த்தாள். காலிலிட்ட பாதசரங்களோடு அம்மாடப்புறு கால்களைத் தூக்கித் தூக்கிவைத்து நிமிர்ந்து நடந்தது அதன் நடைக்குக் கம்பீரமான தோற்றத்தைக் கொடுத்தது. அதைக்கண்டு மனமகிழ்ந்து சிந்தாகுல நீங்கச் சிரித்தாள். பாங்கிவரவும் இருபக்ஷிகளையும் அவளுக்குக்காட்டி அன்பொழுகச் சிந்தைமகிழ ஆனந்தபரவசமாய் நின்றாள். பாங்கியும் பார்த்து மகிழ்ந்து "சகீ, உன் சாமர்த்தியமே சாமர்த்தியம்" என்று மூக்கில் விரலை வைத்து வியந்து "நளன்தோற்றான் உனக்குச் சந்தேகமில்லை" யென்றுசொல்லி நகைத்தாள். அன்றைக்கு முன்னிட்ட திட்டப்படி குறமாது குறிசொல்லவர, அவள் குறிசொல்லியதற்குப் பரிசாக இவ்விருபக்ஷிகளையும் கூட்டிலிட்டு அவள்கையில் கொடுத்து, இவை சேருமிடமறிந்து சேர்ப்பித்தால் உனக்கு உள்ளம்பூரிக்க உகந்தபரிசுகள் வேண்டியமட்டும் கிடைக்குமென்று சொல்லியனுப்பினாள். அனுப்பிவிட்டு மனதைத்திடப்படுத்திக்கொண்டு தெய்வத்தின்மேல் பாரத்தைப்போட்டு கௌரி விரதமெடுத்து அம்மன்பேரிலே சிந்தையாக விருந்தாள்.

ராணி ரூபசுந்தரி தன்மகள் சோகம்தீர்ந்து திடசித்தமும் தெய்வபக்தியுமுள்ளவளாயிருப்பதைக்கேட்டுச் சந்தோஷித்தாள். ஜயசந்தராஜன் மகளைக் கடுஞ்சிறையிலிருத்த உத்தரவிட்டது முதல் உள்ளுக்குள் மனம்புழுங்கி வருந்தினாலும் பிடித்தகாரியத்தில் மட்டும் தன்மகள் பிடிவாதத்துக்கு விட்டுக்கொடுப்பது தனக்கு கௌரவக்குறைவென்று கண்டு மனதை உறுதிப்படுத்தி வைத்துக்கொண்டிருந்தான். தன்னெதிரியும் தனக்கு மானபங்கம் வரச்செய்தவனுமான ப்ரித்விராஜா ஒருவனைத்தவிர தன் மகள் வேறு எந்த மன்னனை வரித்து மாலையிட்டாலும் இப்பொழுது அவனுக்குச் சம்மதமே. ப்ரித்விராஜா பேரைமட்டும் அவன் எதிரில் சொல்லக்கூடாது. இதையறிந்த ரூபசுந்தரி தன் மகளை யொருவழிக்குத்திருப்பிச் சுயம்வரத்தை முடித்துவைக்க யத்தனம் செய்வாளாயினள். முதலில் தானனுப்பிய தாதியையும் பாங்கியையும் கூப்பிட்டு விசாரித்தாள். தாதியால் ஒன்றும் சொல்லக்கூடவில்லை. பாங்கிமட்டும், சஞ்சோக்தை கௌரி விரதமெடுத்திருப்பதைக்கூறி, விரதத்துக்குக் குறைவு வாராதபடி விட்டுக்கொடுத்து சுயம்வரத்துக்குவந்த மன்னவர்களில் அவளுக்கு இஷ்டமானவரை விரும்பி வரித்து மாலையிட அனுமதிகொடுத்தால் அதற்கு இசையும்படிசெய்யலாமென்று தோன்றுவதாகச் சொன்னாள். பெண்மனம் வெ



ணறிவாளாகையால் ப்ரித்விராஜாவைப் பற்றிச் சுட்டிக்கேட்காமல் ஏதோ இதில் சூதிருக்கிறதென்று மட்டும் ஊகித்துக்கொண்டு எப்படியாகிலும் ஒரு வழியில் காரியமுடிந்தால் அதுவே பெரிதென்று நினைத்து அதற்குவேண்டிய ஏற்பாடு செய்யத் தீர்மானித்தாள்.

இவ்வாலோசனை நடந்தபின் இரண்டொரு நாள் கழித்து சஞ்சோக்தையும் பாங்கியும் வழக்கம்போல் பேசிக்கொண்டிருக்கையில் அவள் தாயார் சுயம்வரத்தை நடத்த வேண்டியதைப்பற்றிச் சொல்லிய வார்த்தை பிரஸ்தாபத்துக்கு வந்தது. சஞ்சோக்தை அது கேட்டுச் சற்று சினந்து, "பாங்கி, உன் செய்தி தெரியுமே எனக்கு, அதற்குள் கிண்டிவிட்டு கேளிக்கைபார்க்கக் கிளம்பிவிட்டாயா!" என்று நிஷ்டூரமான குரலில் சொன்னாள்.

"ஐயோ, அம்மா, ஏது நீ அப்படி நினைக்கிறையே! ராணி யென்னை வலுவில் கூப்பிட்டுக்கேட்டதின்மேல் நான் அதைப்பற்றிப் பேசினேனேயன்றி மற்றப்படி வாய்திறப்பேனா! என்னைப்பற்றி நீ வீண் சந்தேகம் கொள்ளாதே" யென்று சிந்தனைப்பட்ட குரலில் பதிலுரைத்தாள்.

"அது கிடக்கிறது; நீயும் நானும் சிந்தனைப்பட்டுக்கொள்ள இது எம்மாத்திரம். தலைக்கு மேல் கிடக்கிறது துன்பம். அதற்குள் வீணாக நொந்துகொண்டு மனோதிடனை இழக்கப்போகிறோம். அம்மாள் என்ன கேட்டார்? நீ என்ன சொன்னாய்? சொல், கேட்பேன்" என்றாள்.

"சுயம்வரத்தை நடத்திவிட்டால் நலமென்று ஆலோசனை கேட்டாள்; கௌரிவிரதமெடுத்திருப்பதற்குக் குறைவுவாராமல் வந்துள்ள மன்னவரில் இஷ்டமானவரை வரித்து மாலையிட அனுமதிகொடுத்தால் உன்னைச் சரிப்படுத்திக்கொண்டு வருவதாகச் சொன்னேன்."

"சகீ! நீ தைரியமாகச்சொல்லிவிட்டாய். எனக்கு இன்னும் அவ்வளவு தைரியம் பிறக்கவில்லையே," என்றாள் சஞ்சோக்தை.

"தோழீ, கோழைமனம் குடிகெடுக்கும். துணிந்த காரியத்தைப்பற்றிச் சந்தேகித்துப் பின்வாங்குவது துன்பமாகமுடியும். துணிகரமாய்ச்செய்த தீர்மானத்தைக் கைவிடாமல் தேவிமேல் பாரத்தைப்போட்டு திடசித்தத்தோடு இரு. காலம் வரும்போது எல்லாம் கூடிவரும். தீர்ந்து துணிந்தகாரியத்தைத் துணிகரமாகவேயிருந்து சாதித்துக்கொள்வதே சரி. ராஜபுத்திரியாகப் பிறந்தவர்களுக்கும் அதுவேயழகு." என்று திடம்சொல்லித் தேற்றினாள் பாங்கி.

சஞ்சோக்தையும் மனந்தேறி "எல்லாம் தேவியின் அருள். துணிந்த காரியத்தைத் துணிகரமாகவேயிருந்து சாதிப்பேன். இட்டாலும் பட்டாலும் இரண்டும் எனக்கு உகப்பே" என்றாள்.

C. V. S.

## காந்திமதி.

### அதிகாரம் 4.

உலகத்திலுள்ள சீனா, ஜப்பான், பர்மா, முதலிய தேசங்களைக்காட்டிலும், நீர்வளம், நிலவளம், மலைவளம் மிகுந்த, பூமாதேவியின் திருநெற்றியாகிய பரதக்கண்டத்திற்குத் திலகமாய் விளங்கும் தட்சிணதேசம், ஸ்ரீமத் சங்கரர், மத்வர், இராமானுஜர், முதலிய வைதிகாசார்யர்களும், அப்பர், சுந்தரர், மாணிக்கர், ஞானசம்பந்தர் முதலிய ஆகமாசாரியர்களும் திருவவதாரம் செய்தருளி பூமியினின்றும் பரச்சமயவேர்பிடுங்கி வைதிகமதத்தையருளிய திவ்யபூபாகமாயுள்ளது.

அப்பூபாகத்தையரசாண்டுவந்த நிருபனாகிய கிருஷ்ணராயன், அனாதிநிமலமுக்தபதியாகிய பரமசிவனையேயன்றி அறிவீனர்களாலே பதிகளெனத்திரித்துணரப்பட்ட பசுக்களைத் தெய்வமென்று கருதாத மெய்யறிவினையும்,

மாசை நீக்கும் பெருமையையுடையதென்று வேதத்தின் உட்பொருளாகிய உபநிடதங்களினுலே துணிந்து அறுதியிடப்பட்ட அருமருந்தாகிய விபூதிமேல்வைத்த பேரன்பைப் பரிபாலிக்குந் தன்மையையும் உடையவனுகிக் காருண்ணியமே மனமுவந்து குடிகொண்டவனுயுள்ளவன்.

இத்தகைய காருண்ணியமும் வீரமும் தெய்வபக்தியுமுடைய கிருஷ்ணராயன், புண்ணியபூமியாகிய தட்சிணத்தை மிலேச்சர்கள் படையெடுத்து வந்தார்கள் எனக் கேள்வியுற்றவுடனே, தனக்குக் கப்பம் கட்டிவரும் சேர, பாண்டிய, மைசூர், கேரள, கர்னுடக, இராஜர்களுக்கு நிருபம் எழுதி, அவரவர்கள் தங்கள் தங்கள் சைன்னியத்துடன் விஜயநகரம் வந்துசேர்ந்து சக்ரவர்த்தியுடன் கூடி துருக்கரை வேதபூமியினின்றும் துரத்துவதற்கு யத்தனம் பண்ணவேண்டுமென்று கடுமையான உத்தரவு பிறப்பித்தனன். அக்கட்டளைக்கு இயைந்தவாறே சிற்றரசர்கள் யாவரும் தங்கள் தங்கள் படையுடன் விஜயநகரம் வந்துசேர்ந்து துருக்கனுக்கு விரோதமாக கிருஷ்ணதேவன் துவஜத்தின் கீழ் நின்று வீரயுத்தம் செய்தார்கள்.

ஆனுல் பூமகள் நெற்றியிலுள்ள திலகத்தின் சிறந்த வாசனையைப்போல் எங்கும் தன் செல்வச்சிறப்பு வியாபிக்கப்பெற்ற சோழமண்டல நாட்டரசன் மாத்திரம் சக்ரவர்த்தியாகிய கிருஷ்ணதேவனுக்குக் கப்பம் கட்டினவன் அல்லன். பலமுறை படையெடுத்து வந்து ஜயிக்க முயன்றும், சோழதேசம் அவன் கைக்குள்ளாகவில்லை.

அத்தகைய வலிமை சோழநாட்டிற்கு உண்டானது அதின் தெய்வநதியாகிய காவிரியாற்ருல்தான். இளங்கோவடிகள் சொல்லியவாறு,

“கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளித்தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பிற் கருங்குரலேற்றொடு
சூன்முதிர்க்கொண்மூப் பெயல்வளஞ்சுரப்பக்
[illegible]ப்பிறந்த கொழும்பு[illegible]ாரமொடு
கடல்வளனெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப்புதுநீர்”

ஆகிய பொன்னெடுங்குன்றின்வீழ் அருவி,

விலகிவில்லுமிழ் வக்கதிர்மணிபலவரன்றி [தை
குலவு வெண்டிரைக் குரைகடலுடுத்தவிரிபார்மடந்
யலர்முலைத்தலைத்துயல் வருமாரமொத்துளது.

என்று சொல்லும்படியாக சகலவளப்பத்தையும் தரக்கூடிய நதி. அதனுற்ருன் செல்வச்செருக்கு அதிகரிக்கவே பலமும் வீரமும்புத்திநுட்பமும் சோழநாட்டரசர்களுக்குச் சுபாவத்திலே உண்டாயது.

“ஆக்பர் விஜயநகரத்தைத் தானே படையெடுத்துவந்து இருக்கிருன். நமக்கென்ன நாமென் நம் சத்துருவாகிய கிருஷ்ணராயனுக்கு சகாயம் பண்ணவேண்டும்” என்கிற சிந்தை சோழதேசத்தரசனுக்கு கிடையவே கிடையாது. கிருஷ்ணராயன் தனக்கு துருக்கன் படையெழுச்சியைப்பற்றித் தெரிவித்துத் தன் ஒத்தாசையை வேண்டும்பட்சத்தில் தன்னுலியன்றமட்டும் உதவிபுரிவதாகவே எண்ணியிருந்தனன். ஆனுலும் கிருஷ்ணராயன் சோழனுக்குக் கடிதம் எழுதவும் இல்லை. ஆள் அனுப்பவும் இல்லை. என்றுலும் சோழதேசத்தில், சைன்னியங்களை நடாத்தும் விஷயத்தில் மிகப் பிரபலமான கீர்த்திபெற்ற நம் வீரசேனன், தன் நிருபனுகிய சோழனிடத்தினின்றும் உத்தரவு பெருமலே மிலேச்சர்களைத் தக்ஷணத்தினின்றும் துரத்தவேண்டுமென்று எண்ணங்கொண்டு, ஒரு ஆயிரம் வீரர்களுக்கு அதிபதியாய் விஜயநகரத்தை வந்து சேர்ந்தனன்.

வீரசேனன் விஜயநகரத்தில் துருக்கர்பேரில் செய்த பலயுத்தங்களில் ஜயத்தையேயடைந்ததுமன்றி சைன்னியம் நடாத்துவதில் தனக்குள்ள சாமர்த்தியத்தை விசதமாகக் காட்டினதினுல், கிருஷ்ணதேவன் அவனைத் தன் சைன்னியங்களுக்கும் அதிபதியாக நியமித்தனன்.



இதையெல்லாம் பார்த்த திம்மராயன் சோழதேசத்தவர்களை முன்னரிலும் பதின்மடங்கதிகமாக வெறுக்க வாரம்பித்தனன். காவிரித்தண்ணீர் குடித்தவர்களை நம்பலாகாதென்றும், அவர்கள் கிருஷ்ணராயன் கைக்கத்திக்கு அஞ்சா வேட்டைநாய்களென்றும், அவர்களரசன் செருக்குற்றவேடுவன் என்றும் பலமுறை திம்மராயர் சோழர்களைவைததோடுகூட, வீரசேனனை சக்ரவர்த்திப்படைகட்கு சேனுதிபதியாய் நியமித்தலாலுண்டாகக்கூடிய இடையூறுகளைப்பற்றியும் தீங்குகளைப்பற்றியும் கிருஷ்ணராயனுக்குப் பலமுறை போதித்தனன். ஆனுலும், சக்கரவர்த்தி திம்மராயனுக்கு கொஞ்சம்கூட செவிகொடாது, சௌரியத்தை மெச்சா வீரன் வீரனல்லவெனப்பகர்ந்து முற்கூறியவாறு சைன்னியாதிகாரத்தை வீரசேனனுக்கே கொடுத்தனன். அக்காலந்தொட்டு அமைச்சன் சேனுதிபதியைக் கண்டபொழுதெல்லாம் உதட்டைக்கடிப்பதும் தனக்குள்ளே வைவதுமாயிருப்பான். பிரதானிக்கும் வீரசேனனுக்குமுள்ள பரஸ்பர அந்நியோந்நியம் இப்படியிருக்க, கூடாரத்தைவிட்டு வெளியேவந்தபொழுது திம்மராயர் தன் முன்னே வீரசேனனைப்பார்த்தனன் என்று சொல்லவே இச்சரித்திரம் வாசிப்போர் அமைச்சன் முகக்குறிகளையும் மனத்தோற்றங்களையும் எளிதில் ஊகித்துக்கொள்ளலாம். திம்மன் முகத்தில் உதித்த பொருமையின் குறிகள் யாவையும் வீரசேனன் நன்ருய் அறிந்தவன்; ஆனுலும் தான்வந்த காரியம் முடியவேண்டுமென்கிற எண்ணத்துடன் அமைச்சனுக்கு வந்தனம்செய்து தான் கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறதென்று பகர்ந்தனன்.

திம்மன்.—அப்படியா, நல்லது. சீக்கிரம்சொல்லும். சக்ரவர்த்தி அசௌக்கியமாயிருக்கிருர். நான் போகவேண்டும்.

வீரசேனன்.—நானும் சக்ரவர்த்தி விஷயமாய்த்தான் வந்திருக்கின்றேன். இப்பொழுது கிருஷ்ணராயரைப் பார்க்கலாமோ?

திம்.—முடியாது. சத்திரத்திற்குள் நுழைவதுபோல் நினைத்தபொழுதெல்லாம் அரசன் சமுகத்திற்பிரவேசிக்கலாகாதென்று தெரியாதோ?

வீரன்.—உம்முடைய ஸ்வபாவம் புதிதல்ல. நான் வந்தவிஷயம் இதுதான்: சோழதேசத்தினின்று என்னுடன் கூடவந்த என்னருமைத்தோழர்களில் ஒருவனுக்கு அதிக கடூரமான சுரங்கண்டு கிருஷ்ணதேவரைப்போல் மிகுந்த அவஸ்தைப்பட்ட சங்கதி ஆக்பர் கேள்வியுற்று தனக்கு வைத்தியம்செய்யும் ஒரு துருக்கனை சில அத்தாட்சிபத்திரங்களோடு என்னிடத்தில் அனுப்பினன். அத்துருக்க வைத்தியன் சுரத்தை அதிசீக்கிரத்தில் சொஸ்தப் படுத்தினதோடுகூட கிருஷ்ணதேவருக்கும் வைத்தியம் பார்ப்பதாக ஒப்புக்கொண்டனன். அதுவும் தவிர அவனைக் கிருஷ்ணதேவரை நேரில் போய்ப்பார்க்கும்படி ஆக்பர் உத்தரவு பண்ணினதாகவும் சொல்லுகின்றனன்.

திம்.—துருக்கவைத்தியனு? மருந்துகொடுக்கின்ருனே? அல்லது விஷம்கொடுக்கின்ருனே?

வீரன்.—பிரபு, நாம் பயப்படவேண்டாம். அவன் உயிரல்லவா பிணை.

திம்.—நன்ருய்ப்பேசினீர். கிருஷ்ணதேவன் உயிருக்கு இவன் மொட்டைத்தலையா பிணை? வெகுயோக்கியம்.

வீரசே.—ஆக்பர் சத்தியம் தவருதவன் என்பது தங்களுக்குத் தெரிந்தவிஷயமே. அச்சக்கரவர்த்தியினிடத்தினின்றும் இவ்வைத்தியன் சிபார்சு கடிதம் வாங்கிவந்திருக்கிருன். இன்னம் என்னவேண்டியது நமக்கு.

திம்.—நல்லது. இவ்விஷயத்தை ஆலோசித்துத்தான் செய்யவேண்டும். நீர் போய்விட்டுவாரும். என் எல்லாவற்றையும்

அரசனுக்குத் தெரிவித்துப் பதில் சொல்லுகிறேன்.

இப்பதிலைக்கேட்டமாத்திரத்தில் "சரிவருகிறேன்" எனச்சொல்லி யுத்தரவுபெற்றுக்கொண்டு வீரசேனன் தன்னிருப்பிடம் போயினன்.

---

## அதிகாரம் 5.

அர.—நீ சொல்லுவது நிரம்ப ஆச்சரியமாயிருக்கின்றது. சோழனா துருக்கனைப்பற்றிப் பேசினது?

தீம்.—ஆம், பிரபோ.

அர.—இச்சோழன் மகா சௌரியவான், யோக்கியன்; அல்லவா? திம்மா.

தீம்.—அது தங்களுக்கல்லவா தெரியும்.

அர.—வதந்தி எப்படி என்றல்லவா கேட்கின்றேன்?

தீம்.—(வெகுநேரம் மௌனமாயிருந்து) அப்படித்தான் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

அர.—எப்படி?

தீம்.—வீரனும், யோக்கியனும்.

அர.—அதற்குக்கொஞ்சங்கூடச்சந்தேகமில்லை. அவனை நான் தளகர்த்தனாக நேமித்த நாட்கொண்டு படைகள்யாவும் திருப்தியடைந்து அவனையே மெச்சுகின்றன. அவன் ஒரு நாய் வைத்திருக்கிறான். அது மிகுந்த புத்தி நுட்பமுள்ளது. அதை விட்டு அவன் ஒரு நாளும் பிரிவதில்லை. சோழதேசத்து ஜந்துக்களே மகா புத்திசாலிகள் போலும். அந்நாய் சௌக்கியமாயிருக்கிறதா?

தீம்.—(உதட்டைக்கடித்துக்கொண்டு). இராஜஇராஜ, நேற்றயதினம்கூடப்பார்த்தேன், அது தன் எஜமானனோடு கூட வந்திருந்தது. வீரசேனன் போகின்ற இடமெல்லாம் போகின்றது. சோழன் கௌதமர் ஆச்ரமத்திற்குப் போனபோது கூடத் தானும் போகவேண்டுமென்று பிடிவாதம் செய்ததாம். வீரசேனன் தான் வழியின் சுற்றை யோசித்து இங்கேயே விட்டுவிட்டுப் போயினனும்.

அர.—ஆசிரமத்திற்குப் போனானா? அங்கே இராஜஸ்திரீகள் போயிருக்கின்றார்களே? நல்லதிருக்கட்டும். ஆசிரமத்திலா இத்துருக்க வைத்தியனைப் பார்த்தான்?

வீரசேனன் ஆசிரமத்திற்குப் போனானென்று சொல்லவே அரசன் கோபங்கொண்டு பதறிப்பேசினதின் கருத்தை யறியமுடியாமல்,

தீம்.—மகாராஜ். அங்கேயில்லை. வீரசேனன் ஸ்நேகிதர்களில் ஒருவனுக்கு சுரம்காண அதை சுவஸ்தப்படுத்த ஆக்பர் தன் வைத்தியனை அனுப்பினானும்?

அர.—"ஓஹோ, நல்லது. நீ உடனே போய் அவ்வைத்தியனை இட்டுக்கொண்டுவா."

என்று அரசன் கட்டளையிட திம்மராயனும் அந்த க்ஷணமே புறப்பட்டுப் போயினன்.

திம்மராயர் வெளியேபோன அரை நாழிகைக்கெல்லாம் வீரசேனன் கூடாரத்திற்குள் நுழைந்து அரசன் முன்னின்றான். இவன் திம்மராயனை எதிரே சந்திக்கவில்லைபோற்றோற்றுகின்றது. சந்தித்திருந்தால் திம்மனும் கூடவந்திருப்பான்.

வந்தனம்செய்த வீரசேனனைப்பார்த்து

அர.—திம்மனைப்பார்க்கவில்லையோ?

வீர.—இராஜசேகர, இல்லையே.

அர.—நல்லது. நீ சோழதேசமல்லவா?

வீர.—ஆம், அரச. நான் பலமுறை தங்களுக்குச் சொல்லியிருப்பதுபோல் என் அரசன் சோழன்தான்.

அர.—நானல்லவா உனக்கரசன். நீ என் சேனாதிபதி அல்லவா?

வீர.—மகாராஜ, வாஸ்தவமே. ஆனாலும் எனக்குத் தாங்கள் யாதொருசம்பளமும் கொடுக்கவில்லை. கண்ணியத்திற்காகவே சேனாதிபதித்துவத்தை ஒப்புக்கொண்டேன். நான் ஒப்புக்கொண்ட வேலையில் குற்றங்குறைவிருக்கும்பட்சத்தில் மட்டுமே தங்களுக்கு நான் கட்டுப்பட்டவன். இதர விஷயங்களில் எனக்குச் சக்ரவர்த்தி சோழமகாராஜனே யொழிய வேறொருவருமில்லை.



அர.—பேஷ்! நல்லபட்டம். சக்ரவர்த்தி! நல்லபெயர். எவ்வளவு இராஜ்ஜியங்கள் கப்பம் கட்டுகின்றன! கிடக்கின்றது என்று விட்டுவிட்டேன். இல்லாவிடில் கப்பங்கட்ட அடித்திருப்பேன். என்னைத் தவிர தட்சிணதேசத்தில் சக்ரவர்த்திகளும் இருக்கின்றார்களோ?

இப்படி அரசன் பகட்டமாகப்பேசவே திடீரெனச் சோழன் வலது கை தன் இடுப்பினின்றும் தொங்கிக்கொண்டிருந்த கத்தியின்பேரில் படிய, சொல்லுகிறான்:—

மகாராஜாவே, தாங்கள் பல தடவை முற்றுகைபோட்டு பிடிக்க முடியாமற்போன விஷயத்தை யான் ஞாபகப்படுத்தினால் தங்களுக்கு இன்னம் கோபம் உண்டாகும். தஞ்சாவூர் உங்கள் படைக்கஞ்சினதல்ல. துருக்கனோடு சண்டைசெய்யும் விஷயத்தில் தங்களோடுசேர்ந்து சேனாதிபதியாய் சமாதானத்தோடு இருக்கின்ற நானே தாங்கள் சோழஇராஜ்ஜியத்தை எதிர்க்கும் பட்சத்தில் தங்களுக்கு நிரந்தரபகைவனாகி தங்களையே எதிர்ப்பேன்.

அர.—(இவ்வீரம் பொருந்திய வசனத்தைக் கிருஷ்ணராயன் கேட்கவே சந்தோஷமடைந்து) இவ்வளவு யோக்கியன் போல் பேசுகிற நீ வரம்புகடந்து நடக்கிறாய் அல்லவா?

வீர.—(அரசன் வசனங்களின் கருத்துப்புலப்படாது) நிருப, யான் ஒருக்காலும் அப்படிச்செய்யேன். அது சோழதேசத்தவர் குணமல்லவே.

அர.—நீ கௌதமர் ஆச்ரமத்திற்கு போனதில்லையா?

வீர.—(அரசன் இன்னவிஷயத்தைப் பற்றிப்பேசப்போகின்றான் எனவறிந்து வெட்கத்தோடு பயத்தையும் அடைந்தவன்போல் தலையைக் குனிந்து) ஆம் போயிருந்தேன்.

அர.—அங்கே நம்மரண்மனைப் பொற்றொடிகள் ஏற்கனவே போயிருந்த விஷயம் உனக்குத் தெரியுமல்லவா?

வீர.—தெரியும், மகராஜ், ஆனால்—

அர.—என்ன 'ஆனால்.'

வீர.—அரச,—

அர.—வாயைமூடு, நீ அதிகப்பிரசங்கி, உன் உயிரைமதிப்பாயே யானால் பத்திரம்.

வீர.—பிரபோ, என் உயிரை திரணத்திற்குச் சமானமாக மதிக்கின்றவன் யான் என்பது தங்களுக்குத் தெரிந்தவிஷயம்.

அர.—பிறன் சொத்தை அவன் உத்தரவில்லாமல் கிரகிக்க மனதில் நினைப்பதே தோஷமென்று உனக்குத்தெரியாதோ? க்ஷத்திரிய முறமை தவறாதே?

வீர.—அரச, யான் செய்வதெல்லாம் க்ஷத்திரிய தர்மத்திற்கு விரோதப்படாதே—இன்னம்—

அர.—நிறுத்து—போதும்—நீ சோழதேசத்தவனாயிருந்தாலும் நம்மனஸ்தாபத்திற்குக் காரணமானால் உன்னுயிர் உன்னுடையதல்லவென்பது உனக்குத் தெரிந்திருக்கட்டும்.

வீர.—அப்படித்தாங்கள்—

அர.—"நிறுத்து, என்று சொன்னேனே: முன்னில்லாதே, சீக்கிரம் போய் திம்மனை வைத்தியனோடு அனுப்பு" என்று அரசன்

கோபமாகச்சொல்லவே வீரசேனன் அரசனிருப்பிடத்தை விட்டு வெளியே ஏகினன்.

அந்தக்ஷணமே ஒரு வேலைக்காரன் உள்நுழைந்து அரசன் முன் கை கட்டி வாய்புதைத்து நின்று “இராஜாதி இராஜ, இராஜமார்த்தாண்ட, மதுரைராஜனும், கேரளப்பிரபுவும்வந்திருக்கின்றனர்” என, அரசன் “நல்லது, நாராயணா மெத்தையைச்சரியாய்ப்போடு,—சூ-என்ன வியர்வை-கொஞ்சம் வீபூதிகொண்டுவா-இட்டுக்கொண்டு சுத்தமாகத்தோன்றுவோம், தீர்த்தமும் கொண்டுவா” என, நாராயணன் நடுநடுங்கிச் சொல்லுகிறான்: “என்னாண்டவனே, சுரத்தில் தீர்த்தம் கொடுக்கவேண்டாமென்று உத்தரவு பண்ணியிருக்கின்றாரே” என, அரசன் “என்னடா அது, என்னைக் கொல்ல நினைத்திருக்கிறீர்களோ? நல்லதிருக்கட்டும்; வீபூதியைக்கொண்டுவா” என்றனன்.

---

## அதிகாரம் 6.

ஆசாரவாசலில் நின்ற வீரர்களில் ஒருவன் மதுரையையாண்டுவந்த விசுவநாத நாயக்கன். இவன் மிகவும் உயர்ந்து, இலட்சணக்குறைவு படாது மெலிந்த புருடன். அவனுக்கு வயது ஐம்பதிருக்கலாம். நெற்றியில் புலப்பட்ட மடிப்புகளினாலும் பார்ப்போர் பேரில் தைக்கும்படியான கடூரப்பார்வையினாலும் வஞ்சனையில் மகாசூரனெனத் தெரியவந்தது; ஒட்டின கன்னங்களும் அமர்ந்த உதடுகளும் இவன் பதட்டமாகப்பேசாமல் சகல செய்திகளையும் தன் மனதிலேயே வைத்து மறுகும் தன்மையனெனப்பகர்ந்தன. அவன் வலது தொடைப்பக்கத்தில் தொங்கும் கத்தியின் உரையின் குறுகியவகலத்தைப்பார்க்கின் வெகுபெயர்களை மடித்து இரத்தவாற்றில் நீந்திப்போய் சிம்மாசனத்தை அடைந்தவனெனத் தெரியவரும்.

இவன் பக்கத்தில் நின்ற நாற்பது வயதுள்ள வீரன் கேரளதேசத்தின் செங்கோலை நடாத்திவந்த இராமச்சந்திரவர்மன். பார்வைக்குக்குள்ளமாயும் சுறுசுறுப்பாயுமுள்ளவன். ஆனால் சிவந்த கண்கள் மட்டும் இவன் சுராபானம் செய்வதில் மிகப்பிரீதியுள்ளவனென வெளியிட்டன. சுபாவத்தில் தர்மசிந்தனையையுடையவனாயினும் பிறர்சொல்கேட்கும் தன்மை ஜாஸ்தியாதலால் தன் இராஜ்ஜியத்திலேயும் சத்புருஷனெனப் பெயரெடுப்பதில்லை.

இவ்விரண்டு வீரர்களும், அரசன் உள்ளே வரும்படி உத்தரவு அனுப்பவே, இராஜசமுகத்திற் பிரவேசித்தார்கள்.

**கிருஷ்ணராயன்.**—விசுவநாத், இராமச்சந்திர வர்ம வாருங்கள், வாருங்கள், இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

**இருவரும்.**—ஸ்ரீமகா இராஜாதி இராஜ் வந்தனம்.

**கிரு.**—வந்தனம், தாங்களிருவரும் சேர்ந்து வந்தது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது.

**இராமச்சந்.**—தங்கள் சரீரம் மிகவும் மெலிந்து போய்விட்டதே.

**கிரு.**—ஏதோ, தெய்வசங்கற்பம். நல்லது. நம் சைன்னியங்கள் நன்றாக சண்டைபோடுகின்றனவா? திருப்தியாக விருக்கின்றார்களா? தாங்கள் ஏதோ சம்பள பாக்கி வைத்திருந்ததாகக் கேள்விப்பட்டேன். அது கூடாது. திருப்தியடைந்தால் தான் அவர்கள் நன்றாய் யுத்தம் செய்வார்கள்.

**விசுவநாதன்.**—இல்லையே. முன்பே பட்டுவாடா செய்தாய்விட்டதே.

**கிருஷ்ணரா.**—சரி, பிமிலிப்பட்டணத்தின் அரணைப் பழுது பார்க்கவேண்டுமென்று கடிதம் எழுதியிருந்தீர்களே? அது ஆய்விட்டதா!

**விசு.**—பிரபோ, அது கோளத்தரசர் செய்யவேண்டிய வேலையன்றோ?

**கிருஷ்ணதே.**—பிரதான்ஜி!—ஓஹோ, வெளியேபோயிருக்கின்றார். நல்லதிருக்கட்டும். நான் கோளத்தரசருக்குக் கடிதம் எழுதச்சொல்லுகிறேன்.



**இரா.**—பிமலிப்பட்டணத்திற்கு ஆக்பர் சைந்நியம் போகாமல் வீரசேனன் தடுத்துவிட்ட சங்கதி தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

**கிருஷ்ண.**—ஆமாம். என்றாலும், மறுபடியும் ஆக்பர் அப்பட்டணம் போக முயலலாம்; கிருஷ்ணா நதியின் தென்புறத்திலுள்ள குன்றங்களில் நம் சைந்நியங்களில் சிலவற்றைக்காவல் வைக்கவேண்டியது. அப்புறத்தில் தான் அந்நதி ஆழமற்றிருக்கிறது. அதைச்சுலபமாகத் தாண்டி ஆக்பர் சைந்நியம் அப்புறம்போகக்கூடும்.

**விசு.**—வீரசேனர் ஏற்கனவே அங்கொரு சைந்நியம் போயிருக்கும்படியாகவும், இன்னம் ஒன்று ஜயபுரத்தின் பக்கத்திலுள்ள குன்றுகளையும் சூழ்ந்திருக்கும்படியாகவும் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

**இரா.**—மகா இராஜ, அது அவசியமான விஷயம். ஆக்பர் சைந்நியத்தில் பாதி ஜயபுரத்திற்குச் சமீபத்தில் ஜக்தல்பூரில் இருக்கின்றன. ஜக்தல்பூர் ஒரு பள்ளத்தாக்கு; வேண்டுமானால் திடீரென நம் சைந்நியங்கள் குன்றினுச்சியினின்று தாக்கினால் ஆக்பர் சைந்நியம் மடியவேண்டியதுதான்.

**கிரு.**—வீரசேனன் புத்திசாலி நல்லயோஜனை செய்தான். ஆனால் இப்பொழுது சண்டைசெய்யக்கூடாது. சமாதானம் செய்திருக்கிறீர்களாமே?

**விசு.**—அவ்விஷயத்தைப்பற்றித் தங்களோடு ஆலோசிக்கவேண்டுமென்று நாங்களிருவரும் வந்தபொழுது திம்மராயர் “சக்ரவர்த்தி அசௌக்கியமானதினால், நீங்கள் இப்பொழுது பார்க்கமுடியாது; ஆனாலும், சமாதானம் செய்து விடுங்கள், நான் உத்தரவுகொடுக்கின்றேன்” என்று செப்பினர், அதைக்கொண்டுதான் நாங்கள் உடன்படிக்கை செய்துவிட்டோம்.

**கிரு.**—உடன்படிக்கையா!!

**இரா.**—இல்லை. சமாதானம், மூன்றுமாதத்திற்கு.

**கிரு.**—சரிதான். அதுதானேகேட்டேன். நல்லது, விசுவநாத நாயக்கர், நீர்கொண்டுவந்த சைன்னியம் எவ்வளவு?

**விசு.**—பிரபோ, காலாட்படை ஐயாயிரம், குதிரைப்படை ஆயிரம், இவைகளில் சிகாகோல் யுத்தத்தில் இரண்டாயிரம் காலாட்படையும் ஐம்பது குதிரைப்படையும் மடிந்தன.

**இரா.**—என்னுடைய சைன்னியமும் அவ்வளவுதான். காலாட்படை மட்டும் ஒரு நூறு கூடக் கொண்டுவந்தேன். அவைகளில் அநேகம் முன்னமேமடிந்து போயிருக்கும். ஆனால் வீரசேனன் அவைகளின் ஒத்தாசைக்குத் தக்கசமயத்தில் வந்து காப்பாற்றினன்.

**கிரு.**—இச்சண்டையினால் நம் குடிகளுக்கு ஏதாவது துன்பமுண்டோ?.

**விசு.**—பிரபோ அது தான் இருக்கப்பட்ட வாச்சரியம்; ஆக்பர் துருக்கனாலும் நிரம்ப நல்லவன், தன் சைன்னியங்களுக்கு சத்துருக்களின் குடிகளைக் கொள்ளையடிக்கக்கூடாதென்றும் எவ்வித இம்சையும் செய்யக்கூடாதென்றும் கடுமையான உத்தரவு பிறப்பித்திருக்கிறானாம்.

**கிரு.**—யோக்கியன் தான்.—இச்சண்டையினால் நிரம்ப பண நஷ்டம்.

**இரா.**—அதினால் என்ன? குடிகளின் வரியைத் தூக்கினால் சரிப்பட்டுவிடும்.

**கிரு.**—ஆஹா, ஹா, ஹா—நல்லயோசனை—நல்லயோசனை—அரசர்கள் கண்டபடி தங்கள் இஷ்டப்பிரகாரம் செய்யும் சண்டைகளுக்குக் குடிகள் தான் பிணையோ? யோக்கியம். நம் அரசர்கள் கப்பம் ஜாஸ்தியாகக் கொடுக்கவேண்டியதாயி

ருக்குமேயொழிய குடிகளை வீணில் வதைக்கலாகாது.

இதைக்கேட்டவுடனே, சரீரத்தில் மின்சாரவோட்டம் ஓடினது போல் விசுவநாதன் சரீரம் நடுக்கம் எடுக்க இராமச்சந்திரனைப்பார்த்து உதட்டைக்கடித்தனன். இராமச்சந்திரனுக்கு இத்தகைய சூட்சும தந்தி வியாபாரங்கள் தெரியாததினால் "ஏன் என்னைப்பார்க்கிறீர், மதுரையாரே?" என்று தொப்பென பூசனிக்காயைப்போட்டு உடைப்பதுபோல். இரகசியத்தை வெளியிட்டனன்.

இராமச்சந்திரன் கேட்ட கேள்வி கிருஷ்ணராயர் காதில் படாததினால் "என்ன சொன்னீர்!" என்று வினவ, விசுவநாதன் 'ஒன்றுமில்லை நான்—" என்று முடிப்பதற்குள் திம்மராயர் உள்ளேபுகுந்து சக்ரவர்த்தியைப் பார்த்து "பிரபோ, இராஜாதி இராஜ, மன்னிக்கவேண்டும், இன்றையதினம்தான் சுரம்கொஞ்சம் மெள்ளமாக விட்டடித்தது. அதற்குள் இவ்வளவு பேச்சுப்பேசினால் உஷ்ணங்கொண்டு சுரத்தை விருத்திசெய்யாதா?" "விசுவநாதநாயக்கர்—உங்களுக்கு இப்பொழுதுதான் ஓழிந்ததோ?" எனக் கேட்போர் நடுங்கும்படி கருச்சிக்க, மதுரையானும், கேரளத்தானும், அரசனிடத்தினின்று உத்தரவு பெற்றுக்கொண்டு வெளியே புறப்பட்டனர்.

அப்பொழுது சூரியாஸ்தமனமானதினால் மிகவும் இரம்மியமான தென்றல் வீசிக்கொண்டிருந்தது. வானத்தில் மேற்குப்பக்கத்திலுள்ள மேகங்கள்யாவும் தக தகவென காய்ச்சி எடுத்த தங்க அந்தரவிமானங்களைப்போல் அங்குமிங்கும் உலாவின. பசும்புற்றரை யாவும் மஞ்சள் குளித்ததுபோல் முன்னரிலும் அதிகமாக நயனங்களுக்கு உத்சாகத்தை உண்டுபண்ணின. வீடுவந்துசேரும் ஆடுமாடுகளின் சப்தத்தோடு பட்சிகளின் கூச்சல்கள் கூடி மிருதுவான வீணாகானம்போற்றிரண்டு செவிக்கினிய அமிர்தத்தை ஊட்டுவித்தன. அவ்வேளையிற்றான் சிநேகிதர்கள் ஒருவர்களோடு ஒருவர்கூடிசேர்ந்து உலாத்துவது. அவ்வேளையிற்றான் கணவனும், மனைவியும் ஒருவரோடொருவர் உப்பரிகையின் மேனின்று காற்றுவாங்கிக்கொண்டு சல்லாபவார்த்தை பேசுவதும், அவ்வேளையிற்றான், அஞ்சாத நெஞ்சையுடைய சதியாலோசனை செய்யும் மானிடர்களும் ஒன்று கூடி குடிகெடுக்கும் எண்ணங்கள் எண்ணுவதும்.

ஆகையால் விசுவநாதநாயக்கன், தான் சொல்லவேண்டிய இரகசியங்களை யெல்லாம் கிருஷ்ணராயர் கூடாரத்திற்குநேரே யரை நாழிகைதூரத்திலுள்ள மைதானத்தில், இராமச்சந்திரவர்மனுக்குத் தெரிவிப்பதாகத் தீர்மானம்செய்திருந்தனன். ஆனால் கூடாரத்தின் வெளியே கொஞ்சதூரம், இருபுறமும் யுத்தவீரர்கள் பாராக்காத்துக்கொண்டிருந்ததினால் இருவரும் வாய்பேசாது நேரேசென்றனர். பாராவுத்தியோகஸ்தர்கள் தங்கள் துப்பாக்கியை உயரத்தூக்கி மதுரை யரசனுக்கும். கேரளநிருபனுக்கும் வந்தனம்செய்த விஷயமும், விசுவநாதநாயக்கன், இராமச்சந்திரவர்மனைப்பார்த்து "நாம் அம்மைதானத்தில் போய் காற்றுவாங்குவோம்" என்று சொன்ன செய்தியும், அதனால் அவர்களிருவருடன் வந்த சைன்னிய வுத்தியோகஸ்தர்களும் வந்தனம் செய்துவிட்டு தங்கள் தங்கள் இருப்பிடத்திற்குப்போன சமாசாரமும் நாம் சொல்லாமலே இதை வாசிப்போர் அறிந்துகொள்ளலாம்.

இருவரும் மைதானத்திற்கு வந்துசேர்ந்தார்கள். திடீரென,

விசுவநாதநாயக்கன்.—இராமச்சந்திரவர்மரே, கிருஷ்ணராயன்சொன்னதைக்கேட்டீரா?

இராமச்சந்திரன்.—என்ன, என்ன?

விசுவ.—உமக்கு எல்லாம் அலட்சியந்தான், நாளைக்குக் கொடுக்கும்போதல்லவோ தெரியும்.

இராம.—என்ன, சொல்லும், நான் கவனிக்கவில்லை.



விசுவ.—இராம்ஜீ, நல்லகவனம். கிருஷ்ணராயன் பேச்சோடுபேச்சாக, "நம் சிற்றரசர்கள் கப்பம் ஜாஸ்தியாகக்கொடுக்கும்படிசெய்வேன்" என்று சொன்னது உம்முடையகாதில் படவில்லையோ?

இராம.—ஆமாம், ஞாபகம்வந்தது. ஆனாலும் சிற்றரசர்கள் என்றும், கொடுக்கும்படி செய்வேனென்றும், கிருஷ்ணராயர் சொல்லவில்லையே?

விசுவ.—அப்படியாகில் நான்சொல்வது அபத்தமோ?

இராம.—மன்னிக்கவேண்டும். அப்பொழுது நான் வேறு ஞாபகமாகவிருந்துவிட்டேன்.

விசுவ.—கிருஷ்ணராயன் நல்ல திருடனே. சொல்லாதுபோல் சொல்லிவிட்டான்.

இராம.—அதினாற்றான் குடிகள் அவன்பேரில் மிகவும் பட்சமாக விருக்கின்றார்கள்.

விசுவ.—என்ன பட்சம்.

இராம.—ஏன். அரச, என் இராஜ்ஜியத்தில் குடிகள்யாவும் தங்கள் திருவிழா கொண்டாடும்பொழுதெல்லாம், "ஜயவிஜயீபவ, கிருஷ்ணராயருக்கு, ஜயவிஜயீபவ," என்று பிரார்த்திக்கின்றனர். அவர்களுக்கு நேரரசனாகிய என்னைப்பற்றிக் கவனிப்பதேயில்லை. நான் ஒருதடவையில், இராஜ்ஜியத்தில் வருமானம் மட்டுக்கட்டியிருப்பதைப்பார்த்து, உப்பு வியாபாரிகளின் வரிகளை விருத்திசெய்ய அவர்கள் தங்களுக்கு நஷ்டம் நேராதபடி உப்பின் கிரயத்தை அதிகப்படுத்தினர். இது எப்படியோ கிருஷ்ணராயனுக்குத் தெரிந்து அத்தகைய வரிகள் அந்நியாயமென்றும், குடிகளின் ஜீவாதாரமே லவணமாயிருக்க அதின்பேரில் எப்படி வரிபோடலாமெனக்கண்டித்து எனக்கு அர்ஜி எழுதினன். அவ்வர்ஜியை வெளியிட்டு வரியை நான் தள்ளவே குடிகள் வியாபாரிகள்யாவரும்ஒன்றுசேர்ந்து கிருஷ்ணராயன் தீர்க்காயுசுக்கு சொக்கப்பனை கொளுத்தினர்.

விசுவ.—உம்முடையபேரிற்றான் பிசகு இருக்கின்றது. அப்படி அர்ஜிகள் கிடைக்கும் பட்சத்தில் நீராகச்செய்ததுபோல் வரியைத்தள்ளிவிட்டால், பின்னால் யோஜித்து நம்மரசர் இப்படிப்பட்ட நல்விஷயத்தைப்புரிந்தனர் என பிரஜைகள் யாவும் உம்மை மெச்சிக்கொள்ளும். இப்படித்தான், நான் ஒருதடவை வண்டிவைத்திருப்பதற்கும் ஆடுமாடுகள் வைத்திருப்பதற்கும் வரிபோட அதற்கு கிருஷ்ணராயன் "நீர் சீக்கிரத்தில் பாதைகளில் நடப்பதற்கும் வரிபோடுவீரோ" வெனக் கேள்விகேட்டு ஒருகடிதம் எழுத அதைப் பார்த்த க்ஷணமே நானாகச்செய்ததாக வரியைத்தள்ளிப் பிரசுரஞ் செய்துவிட்டேன். இது எப்படியிருந்தபோதிலும், நம் இராஜ்ஜியகாரியங்களில் இப்படி யவன் தலையிட்டுக்கொள்ளலாமா?

இராம.—முன்னாளையில் நம் பிதாக்கள் கப்பம் மாத்திரம் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

விசுவ.—நம்மை யவன் அரசனாகமதிக்கவில்லை. ஏதோ சம்பளம் கொடுத்து தேசங்களைத் தன்னிஷ்டப்பிரகாரம் ஆண்டுவர நேமித்த ஆஸாமிகளாக நினைத்திருக்கின்றனன்.

இராம.—நமக்கென்றே இவன் தோன்றியிருக்கின்றனன். இதர இடங்களில் அப்படியில்லை.

விசுவ.—இதர இடங்களிலா? ஆக்பர் இராஜ்ஜியத்தில், சிற்றரசர்களும், நபாபுகளும் அவர்கள் 'அடித்தது கொள்ளைதான்.'

இராம.—அப்படியில்லையாம். ஆக்பர் நல்லவன் தானும் நல்ல தந்திரியாம்.

விசுவ.—அவன் எல்லாருக்கும் நல்லவன்.

இராம.—நாம் என் செய்வது? ஈசுவரசங்கல்பம்.

விசுவ.—என்னசெய்வது? தன்காரியத்தில் தானே முயற்சிசெய்யாதவனுக்குக் கடவுள் உதவிபுரியார்.

இதைக்கேட்டமாத்திரத்தில் இராமச்சந்திரவர்மன் ஏதோ ஆலோசித்துக்கொண்டிருந்தனன். அப்பொழுது, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு,

விசுவ.—ஒரு நல்லயோஜனையிருக்கின்றது.

இராம.—என்ன?

விசுவ.—இருந்தாலும் அதை உமக்குச் சொல்லக்கூடாது.

இராம.—எனக்கொளித்த இரகசியம் கூட உண்டா? சொல்லும்.

விசுவ.—நீர் ஒட்டைவாய்; நாமிருவரும் சேர்ந்து முயற்சியெடுத்தால்தான் அது முடியும்.

இராம.—சொல்லும் சமயம் வந்தால் நானும் உம்மைக்காட்டிலும் தந்திரிதான்.

விசுவ.—ஆக்பர் கிருஷ்ணராயனைக்காட்டிலும் நல்ல எஜமானன்.

இராம.—ஆமாம். அவன் பட்சத்தில் நாம் போனால் குடிகளே நம்மைத்தூறுவார்களே.

விசுவ.—சகோதரரே, நான் சொல்லுவதைக் காதுகொடுத்துக் கேட்கவேண்டும். நமக்கு இராஜ்ஜியம் வேண்டுமோனாலும் நம்மூதாதைகளைப்போல் அதிகாரத்துடன் அரசாளவேண்டுமோனாலும் அதற்கு ஒரேவழியிருக்கின்றது. அதைச்சொல்லட்டுமோ? நீர் பின்வாங்குவீர்.

இராம.—இல்லை சொல்லுங்கள் பிரபோ.

விசுவ.—எனக்குப் பிரபுப்பட்டம் வேண்டாம். நான் சொல்லுவதைக்கவனியும்: ஆக்பர் நமக்கு அதிபதியாகும்பட்சத்தில் நமக்குப் பூர்ணதிகாரம் வந்துவிட்டது; அவன் இராஜதானி டில்லி; அது வெகுகாதத்திற்கு அப்புறம் இருக்கின்ற பட்டணம். காலாகாலத்தில் கப்பத்தை யனுப்பிவிட்டோமேயானால் இங்கே தட்சிணத்தில் நாம் 'அடித்தது கொள்ளைதான்.' அங்கிருந்து நமக்கு உத்தரவு வருவதற்கே ஆறுமாதமாகும். நம்மிஷ்டப்பிரகாரம் சைந்நியத்தை பலப்படுத்தலாம்.

இரா.—ஆமாம், அது சரிதான். அக்காரியத்தை முடிப்பதெப்படி?

விசு.—கிருஷ்ணராயன் திடகாத்திரனாயிருக்கும்வரையில் நம்மெண்ணம் நிறைவேறாது.

இம்மாற்றங்களைக்கேட்டமாத்திரத்தில் இராமச்சந்திரவர்மருக்கு தேகம் வியர்த்தது, மயிர் சிலிர்ப்பெடுத்தது. தலை குனிந்து நின்றனர்.

விசு.—நல்லகாரியம். வாயினாற் சொன்னதிற்கு உமக்கு இவ்வளவு பயமானால் காரியத்தை முடிப்பதெப்படி? யுத்தகளத்தில் ஒரு நாழிகைக்கு நூறுகத் தலையைவெட்டிக்குமிக்கும் சாமர்த்தியமுள்ள நீர் இதற்கு அஞ்சலாமா.

இரா.—அதை நாமா செய்வது?

விசு.—அதற்கு நீர் பயப்படவேண்டாம், தக்க ஆசாமிகள் இருக்கின்றார்கள். என்னுடைய கூடாரத்திற்கு நேற்றுவந்த பக்கிரி தக்க வேலைக்காரன் அவனுக்கு இப்படிப்பட்ட விஷயம் ஜலம்பட்ட பாடுதான்.

இரா.—அதினால் நம்முடைய கீர்த்திக்கு ஹானி நேரிட்டால்?

விசு.—ஏன் நேரிடும். அவைகளை அவசரப்படாமல் செய்யவேண்டும். முதலில் கர்ணாடகதேசத்தரசனுக்கும் அவனுக்கும் மித்திரபேதம் செய்து,—

இரா.—ஆமாம், சாம, தான, பேத, தண்டம் இவைகளில் ஒன்றைப்பிரயோகம் செய்தால்தான் காரியம் முடியும்.

விசு.—கர்ணாடகத்தான்தான் அவனுக்கு மிக்க உதவி.



இரா.—போதும் அதோ யார் வருகிறது? கிருஷ்ணராயர் பட்டாளத்து சுபேதாரும் அவுல்தாரும்போல் தோன்றுகிறது.

விசு.—ஆமாம் நடையைப்பார்த்தால் அப்படித்தானிருக்கிறது; மறக்கவேண்டாம். வந்தனம், போய்விட்டுவருகிறேன்.

இவர்கள் ஒருவரையொருவர் வந்தனம் செய்து பிரிந்தனர். இராமச்சந்திரவர்மன் தெற்குமுகமாகவும், விசுவநாதநாயக்கர் வடக்குப்பக்கமாகவும் ஏகினர்.

இவர்களுடைய குணகுணங்களைப்பற்றி வருணிப்பதற்கு நமக்கு அவகாசமில்லை. இவர்கள் முதலில் ஹீனஸ்திதியிலிருந்து பிறகு மகா கம்பீரமான வஞ்சனையால் அரசர்களானதினால் பேசும்பொழுது ஒரு கம்பீரமும் பெருந்தன்மையும் இல்லை. இச்சரித்திரம் வாசிப்போர்களுக்கு நடந்ததை நடந்தபடியே சொல்லவேண்டுமென்கிற எண்ணத்துடன் அவர்களிருவரும் பேசும்பொழுது சொன்ன வார்த்தைகளையே உபயோகித்து இச்சம்பாஷணையை எழுதினோம்.

K. V. S.

## சிறுவர்க்கான 'கிண்டர்கார்டன்' பாட்டுகள்.

(ராவ்பஹதூர் ஸீ. நாகோஜிராவ் அவர்கள் அனுப்பியவை.)

12. இராகம் - ஆனந்த பைரவி - தாளம் ஆதி.

**பல்லவி.**

தோழா நீ வந்து பாரடா-பிள்ளைக்குச் சுவையன்னம் ஊட்டும் வகையைத்-தோழா

**அநுபல்லவி.**

கூழாய்ச்சோற்றினை குற்றமறப்பிசைந்து
கொஞ்சிக்கொஞ்சி மகிழ்ந்து கூவித்தாயூட்டுவதை (தோழா நீ)

**சரணங்கள்.**

1. இடுப்பினிலே மெல்ல எடுத்துவைத்துக்கொண்டு
வீமாற்றிடும்பல - இனியவார்த்தை சொல்வதை (தோழா நீ)

2. பறக்கும் பட்சிகளையும் பரிதவிக்கும் நாயையும்
பார் என்று காட்டிக்கொண்டு - பாராட்டிமழகினையும் (தோழா நீ)

3. பாலன்னம் வைத்த வெள்ளிப்பாத்திரம் தன்னையும்
பருவன் சுட்டிக்காட்டும் பாவனையனைத்தையும் (தோழா நீ)

---

13. இராகம் - ஆனந்தபைரவி - தாளம் ஆதி.

**பல்லவி.**

ஒளிந்து விளையாடுவோம் - தோழிகளே - ஒளிந்து விளையாடுவோம்

அனுபல்லவி.

ஒளிந்துவிளையாடினால் - உடம்பிற்கு நலமாமே
உழைத்தேயிதுசெய்தாலுற்றதுயர்போமே (ஒளிந்துவிளையாடுவோம்)

சரணங்கள்.

1. ஒருவரைத்திண்ணைமேலே - உட்காரச்செய்துவேறே
ஒருவர்கண்களையவர் உவந்துமூடச்செய்து (ஒளிந்துவிளையாடுவோம்)
2. மற்றோர்கள் எல்லாரும் மறைவில்மறைந்துகொண்டு
வருத்திளங்கெங்கும் அவர் வாடித்தேடலைக்கண்டு (ஒளிந்துவிளையாடுவோம்)
3. கண்களைவஸ்திரத்தாலே - கட்டிக்கொண்டேஒருத்தி
கவலையாகநம்மைக்காணச்செய்துவருத்தி (ஒளிந்துவிளையாடுவோம்)

14. இராகம் - தோடி - தாளம் ஆதி.

பல்லவி.

அம்மாநான்மறவேனே - ஆசையுடனென்னை ஆதரித்த - அம்மா நான் மறவேனே

அனுபல்லவி.

சும்மாசும்மாவந்து சுகமான்முத்தமிட்டு
தொட்டிலின்மீதிட்டுத்தட்டித்தாலாட்டியதை (அம்மா நான்

சரணங்கள்.

1. குழந்தையாயிருக்கையில்கொஞ்சி எடுப்பாயே
கொண்டாடிப்பசிதீரப் - பாலைக்கொடுப்பாயே
அழத்தொடங்கும்போது என்னருகினில் படுப்பாயே
அடியேனைக்காத்தருள - அனைத்தையும் விடுப்பாயே (அம்மா நான்
2. நடக்கவிடாமலே இடுப்பினில் வைப்பாயே
நடுங்கச்செய் துஷ்டரை நாடாதடிப்பாயே
தடக்கையாலேதடவித்தாயே என்றழைப்பாயே
தவறாதல்லும்பகலும் - தயவுடன் உழைப்பாயே (அம்மா நான்
3. நல்லகதைகள்சொல்லி - நற்புத்திதருவாயே
நான்படித்திடத்தினம் - நவின்றுவருவாயே
வல்லபிள்ளைகளுடன்வைத்துநீகளிப்பாயே
வாழ்வெனக்குண்டாக வரம்பல அளிப்பாயே (அம்மா நான்

---



15. இராகம் - தோடி - தாளம் ரூபகம்.

பல்லவி.

பாட்டுக்கேட்குதுகாண் - பள்ளிக்கூடத்தில் பாட்டுக்கேட்குதுகாண்

அனுபல்லவி.

வாட்டும்பெரிய வருத்தம்போக்கும்
மகிழ்ச்சிவ்ரை மனத்தியலாக்கும் (பாட்டுக்கேட்குது)

சரணங்கள்.

1. அழுகின்ற பிள்ளையின் அழுகையை ஓட்டும்
அரவமும்தலையை ஆனந்தித்தாட்டும்
ஆன்குலங்கள்[1] மகிழ்ந்து அன்பையேநாட்டும்
ஆதிபகவனைக்குறித்துக்-காட்டும் (பாட்டுக்கேட்குது)
2. தம்புருமத்தள தாளமுஞ்சேர்ந்து
சப்தம ஒன்றாகக்கலக்கநேர்ந்து
சங்கீதஸாஹித்தியத்தன்மைநீடும்
சங்கதிஸந்தர்ப்பம் தழைக்கப்பாடும் (பாட்டுக்கேட்குது)
3. பட்டமாமுந்தளிர்த்துப்பெருகப்
பரிந்துகேட்போர் மனமுமுருகப்
பயனிதென்று பகர்ந்தெல்லோரும்
பரவிப்போற்றும்படியே நேரும் (பாட்டுக்கேட்குது)

16. இராகம் - காம்போதி - தாளம் மிசைசாப்பு.

பல்லவி.

இடுப்பில்குழந்தையுடன் யாரோ ஒருபெண் - ஏகுகின்றதைப்பாராய்

அனுபல்லவி.

ஊடுப்பால் அலங்கரித்தும் ஒருகையினாலணைத்தும்
ஒருகையினாற்பிடித்தும் - ஒதுங்கிஒதுங்கிக்கொண்டு (இடுப்பில்)

சரணங்கள்.

1. ஜெல்ஜெல் என்றேயொலிக்கும் சிலம்புகாலில்தரித்து
திகைக்கும்படிமுன்றானை தெரியும்படிவிரித்து (இடுப்பில்)

1. ஆன்குலங்கள் : பசுவினங்கள்.

2. அடிக்கடிஉச்சிமோந்தும் - அன்புடன்முத்தமிட்டும்
ஆசையுடனே அதன் அருமைக்கன்னங்கள்தொட்டும் (இடுப்பில்)

3. அங்கமெல்லாம்நல்ல அணிகளைப்பூட்டியும்
அங்கங்கேதோன்றுகின்ற அதிசயம்காட்டியும் (இடுப்பில்)

17. இராகம் - காம்போதி - தாளம் மிசைசாப்பு.

பல்லவி.

தலைவாரிப்பின்னுவதைப்பாரும்-இங்கே தாய்தன்குழந்தைக்குசரசமதாக (தலைவாரி)

அனுபல்லவி.

நிலையாகநின்று எள்ளின் நெய்யைகையாலெடுத்து
நேயமுடன்தடவி நேராக அடுத்து (தலைவாரி)

சரணங்கள்

1. சிப்பினால் மயிரனைச்சீவிச் சிடுக்கைப்போக்கி
சீராய்மூன்றுகிளையாய்ச்செய்து மகிழ்வாக்கி (தலைவாரி)

2. புகழ்ந்ததின்கையிலோர் பொம்மையைநீட்டி
போயிவருகின்ற பொருள்களைக்காட்டி (தலைவாரி)

3. நல்லகதைகள்சொல்லி நன்மகிழ்வுறுத்தி
நயமாய்த்தலையை யசைக்காமலே நிறுத்தி (தலைவாரி)

## பரோடா ராஜ்யத்திற் பெண்கல்வி.

### மஹாராணி சிம்நாபாயி பிரசங்கம்.

இந்த ராஜ்யத்திற் பெண்களின் டிரெய்னிங் காலேஜ், ஜெனானாவகுப்புகள், பெண் பாடசாலைகள், ஆகிய இவைகளிற்தேறின பெண்களுக்கு வெகுமதி யளிக்கும் உற்சவம் நாளது வருஷம் ஜனவரிமீ 6-தேதி அவ்வூர் மேன்மைதங்கிய மகாராணியா ரவர்களால் நடத்தப்பட்டது. இவ்விஷயம் இந்தியாவின் சரித்திரத்திலேயே ஒரு விசேஷ சம்பவமாகக் கொள்ளத்தக்கது. ஏனெனில் சிறுவர்களும் மற்றும் பெரியவர்களுமாய்ச் சேர்ந்து சுமார் 1500-பெண்களுக்குமேல் கூடின ஒரு சபையில், சபாநாயகமாக வீற்றிருந்து, பள்ளிப்பெண்களுக்குப் படிப்பில் ஊக்கமும் உற்சாகமும் உண்டாகத்தக்கதாக அம்மகாராணியார் (வெளியேறி வரக்கூடாதவராகிய கோஷா ஸ்திரீயாயிருந்தும்) செய்த பிரசங்கமான[illegible] இந்தியாவிற்கே மதிப்பும் மேன்மையும் அளி[illegible] கத்தக்கதாயிருந்தது. அச்சபைகூடி [illegible] அப்பள்ளிக்கூடங்களின் லேடி சூபரின்டெண்டாகிய மிஸ். சொராப்ஜி அம்[illegible] ளவர்கள் பெண் பள்ளிச்சாலைகளின் விரு[illegible] யையும் மற்ற அம்சங்களையும் பு[illegible] 'ரிபோர்ட்டு' வாசித்தார்கள். அந்த ரிபோ[illegible] டினால் இப்போது பரோடாவில் 108-[illegible] பாடசாலைகளிருக்கின்றனவென்றும், [illegible] யில் மொத்தம் 9,151-பெண்கள் கற்று[illegible] கிறார்களென்றும், இதல்லாமல் ஆண்[illegible]



களின் பள்ளிக்கூடங்களில் 5,880 - பெண்கள் படிக்கிறார்களென்றும், கல்யாணஞ் செய்து கொண்டதனால் கல்விச்சாலைகளிற்சென்று கற்கமுடியாத பெண்களின் உபயோகத்திற்காக ஏற்பட்ட ஜெனானா வகுப்புகளில் 205-பெண்கள் வாசிக்கிறார்களென்றும், தெரியவருகின்றது. இவற்றையெல்லாம் இதற்கு முந்திய 25-வருஷங்களின் பாடசாலைகளின் நிலைமையோடொப்பிடுங்கால் பரோடாவில் பெண்கல்வி மிகவிறைவில் விருத்தியாகி வருகின்றதென்றே சொல்லவேண்டும். ஏனெனில் 1875-வருஷத்தில் அத்தேசத்தில் இருந்த இரண்டே பெண் பாடசாலைகளில் 22 - பெண்களே படித்தார்களெனத்தெரிய வருகிறது. பெண்களுக்குள் படிப்பும் வெளியேறும் சுதந்திரமும் சற்றுமில்லாத மகமதியப் பெண்களுக்காகவும் இப்பொழுது 5-பாடசாலைகளிருக்கின்றன. அவற்றில் 484-பெண்கள் படிக்கிறார்கள். முன்னுக்கிப்போது எவ்வளவு விருத்தி! மேற்கண்ட அறிக்கை வாசித்தாயின பிறகு மகாராணியார் அங்கு கூடியிருந்த பெண்களுக்கு ஊக்கமுண்டாகும்படி சில வார்த்தைகள் சொல்லிப் பிரசங்கத்தார் அவர்கள் பிரசங்கத்தின்றோம் :—

'என் அன்பான சகோதரிகளே! பெண்ணைக் கீழ் வருமாறு தமிழ்ப்படுத்துகளே!

இன்று இக்கூட்டமானது முற்றும் உங்கள் விஷயமாகவே கூடியதாகையினாலே இச்சந்தர்ப்பத்தைப்பற்றிச் சில வார்த்தைகளைத் தயவுசெய்து கேட்பீர்களாக. நாம் எல்லாரும் கொண்டாடும் பகவத்கீதையில் அறிவைவிட உயர்ந்த பொருள் வேறொன்றில்லை எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் படிப்பே அறிவின் தாயாகையினால் படிப்பின்றி யறிவையடைதல் முடியாது. மதம், பணம், எண்ணியதெய்தியின்புறுதல், மோட்சம் ஆகிய இவ்வெல்லாப்புருஷார்த்தங்களும் படிப்பினாலேயே அடையப்படுகின்றன. கல்வியின் அளவிடற்கரிய நிலையான நலங்களை எல்லார்க்கும் பரவச்செய்தற்குப் பல பல தலங்களில் முயற்சிகள் செய்யப்படுகின்றன. மேலும் இந்தியாவின் பல பாகங்களில் பெண்களுக்குக் கல்விபுகட்டும் செய்கைகளின் புகழ்ச்சியும் அடிக்கடி நமக்கெட்டுகின்றது. ஆனால் நமது இந்த ராஜ்யத்திற்போல் வேறெங்கேயும் இவ்வித சாதகங்கள் அமைந்திருக்கவில்லை என்று எனக்குத் தோற்றுகிறது. நமது மேன்மை தங்கிய மகாராஜாவைப்போல அத்தனை அன்போடும் தயாளத்தோடும் இவ்வளவு ஊக்கமும் உதவியும் அளிப்பவர்களைக்காண்பது மிக அரிதே. இவ்வாறு சொல்வது நான் அவருக்கு அன்பும் பணிவு முள்ள மனைவியானதினால் அவரைப்புகழவேண்டுமென்னுங் கடமையினாலட்டுமல்ல. ஆனால் இவ்வழியில் அவர் செய்யும் முயற்சிகளைக்காண எனக்குண்டான ஆனந்தமானது நான் இச்சந்தர்ப்பத்தில் அதைப்பற்றிப் பேசாமலிருக்க முடியாதபடி அவ்வளவு மிகுதியாக இருக்கின்றது. இவ்விடத்தில்,படித்தல், எழுதல், தைத்தல், சமைத்தல் முதலிய பல விஷயங்களில் கற்போருக்குச் செலவில்லாமல் பயிற்சி தரப்பட்டு வருகின்றதென்பது யாவருமறிவார்கள்; இது சம்பந்தத்தில், இங்கே வித்தியா இலாகா ஏற்பட்டிருப்பதுவானது, அதிலும் முக்கியமாய்ப் பெண்கல்வி சம்பந்தமாய் எற்பட்டிருப்பது, முழுவதும் அவர்களின் உபயோகத்திற்காகவே இருக்கின்றதென்பதை மறந்துவிடக்கூடாது. இந்த வித்தியா இலாகா ராஜாங்கத்திற்கு யாதொரு விசேஷலாபமும் தருவதில்லை. தன்னேரில்லாத் தயாளத்தோடு நமது மகாராஜா சுயநலம் பாராது பெண்கல்வியின் விஷயத்தில் தரும் ஊக்கமும் உதவியும் நீங்கள்மட்டுமல்ல உங்கட்குப்பின் தலைமுறைகளில் அவருடைய குடிகளாய் வரப்போகிறவர்களும் அவரிடத்தில் நன்றி பாராட்டவேண்டிய விஷயங்களென்பதை எல்லாரும் ஊன்றியுணர்ந்திருக்க வேண்டியது. ஏனென்றால், ஒரு விதைத்தானியத்திலிருந்து கணக்கற்ற கதிர்கள் விளைவதுபோலப் படித்த பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் நல்லனவாய் வளரவளர இவ்வித

மாகவே இச்சனசமூக முழுதும் கலையிலும் நிலையிலும் உயரும்வரை விருத்தியாய்க் கொண்டே போகும். எல்லாரும் வேண்டக்கூடிய இந்தவரமானது 'மகாராஜாவின் ஆதரணையின் பயனென்பதுண்மையே. ஆனால் அதற்குத்தக்க கருவிகளும் வழிகளும் அமைந்தால்மட்டுமே அவர்கருத்து நிறைவேறும். கைதேர்ந்த வேலைக்காரனுக்குவேண்டுவன தக்ககருவிகளே. இவையிருந்தால்மட்டுமே மற்றவர் அவனுடைய கைத்தேர்ச்சியின் பயனையறிந்தனுபவிக்கக்கூடும். லேடி சூபரின்டெண்டு மிஸ் சொராப்ஜி அவர்கள் தன் உடலையுமுயிரையு மிப்பெண்கல்வி விஷயத்திற்கேயொப்புவித்துழைப்பது அவர்கட்கு ஒரு பெரிய பெருமையே என்பதிற் சந்தேகமில்லை. அது எனக்கு அதிகதிருப்தியை விளைக்கிறது. அவர்களும் உயர்ந்த புகழ்ச்சிக்குரித்தானவர்களே. இப்போது நான் உங்களுக்குச் சொல்லும் புத்திமதியாவது, அருமையாக வாய்த்த இந்த நல்லசமயத்தில் உங்களால் எவ்வளவு நன்மையடையக்கூடுமோ அவவளவும் அடையும்படி வேண்டுவதேநான் எண்ணியது; சொல்வதைச்சொல்லும் கிளியைப்போல எல்லாவற்றையும் அறிவது மட்டுமல்ல; படிப்போடு அவசியமான இன்னும் சிலவற்றையும் அடையவேண்டும். வெறும் அறிவுமட்டும் போதாது. நித்திய வாழ்க்கையிலும் இப்படிப்பின் பயன் வெளிப்படுமாயின் அப்போதுதான் அது மதிக்கற்பாலது. வைரக்கல் வைத்துக் கட்டப்பட்டிருக்கும் பொன்கட்டிடத்திலிருந்து அது எடுபடுமாயின் அவ்வைரத்தின் அழகு முழுதும் பிரகாசிக்காததுபோல் பெண்களிற் கல்வியானது இன்சொலுங்கடமையும் இல்லாளினன்பும் இல்லாதவிடத்து அதன் ஒளியற்றுவிடும். இந்தக்குணங்களே படிப்பை யலங்கரிக்கின்றனவென்று சொல்லலாம். ஒருமரம் பழுத்திருந்தாற் பார்த்தற் கழகாயிருக்கின்றது. அதுபோல் ஒரு பெண் எவ்வளவு கல்வியும் பயிற்சியும் பெற்றிருக்கின்றாளோ அவ்வளவு, மற்றவருக்கு விருப்பும் சந்தோஷமும் விளைக்கிறாள். படித்தபெண்கள் மட்டும் நல்ல மனைவிகளாயும் தம் குழந்தைகளை நல்வழியில் வளர்க்கும் நல்ல தாய்மார்களாயும் தம் கடமைகளைச் செலுத்தமுயன்றால், யாவரும் பெண்கல்விக்கு விரோதமாக ஒருவார்த்தையும் சொல்லமாட்டார்கள். ஜனங்கள் கல்வியின் பயனிதுதானென்று தெரிந்துகொண்டு தாங்களே அதை வளர்ப்பவர்களாவார்களென்பதிற் சந்தேகமில்லை. ஐரோப்பியர் முதலிய மற்றதேசத்தார்களிற் பெண்களின் கல்வி இவ்வளவு விரைவா யதிகரித்தற்கு இதுவே உண்மையான அந்தரங்கம். மேற்கூறிய தேசத்தாருள், தம் வீட்டுக்கடமைகளிற் காட்டுந்திறமையாலும், தந்நாயகர்களுக்குச்செய்யுமுதவியாலும், மற்றவர்களாற்புகழ்ந்து துதிக்கப்பெற்ற படித்த நல்ல பெண்கள் பலரை நான் கண்டுங் கேட்டுமிருக்கின்றேன். இவ்விஷயங்களை நாம் நம்முள்ளுங்கொண்டிருக்க வேண்டியது. பண மிகுதியாய்ப்பெற்று நன்னிலைமையிலிருக்கிற பெண்களுக்கு ஓர் வார்த்தைசொல்கிறேன்:—அவர்கள் ஏற்கனவே அதிககாலசாவகாசம் பெற்றிருப்பதால் அவர்கள் தம் காலத்தைச் சோம்பேறித்தனமாய் வீண் செய்யாமல் நன்றாய்க்கழிக்க விரும்பினால், அவர்களுக்கு என் அனுபவத்தால் ஒன்று சொல்வேன். அதாவது படிப்பைப் போலப் பிரயோசனகரமானது வேறொன்றில்லை என்பதே. அது அவர்களுக்கு அதில் சிரத்தையுண்டாக்கி இன்பமும் அறிவும் ஊட்டுவதோடு அவர்களின் மனதையும் சுத்தப்படுத்துகிறது. அவர்கள் படித்தல், எழுதல், தைத்தல், சித்திரித்தல் முதலிய வேலைகளிற்றங்கள் காலத்தைச் செலுத்துவார்களென்று நான் நம்புகிறேன். படித்த பெண்களிற் சிலர் வீட்டுவேலைசெய்தல் தங்களுக்குக் குறைவென்று நினைக்கிறார்கள். இவர்களே ஆட்சேபத்திற்கிடமான பல வேலைகளைச்செய்கிறார்களே! நல்வழியை விலக்கி யொழுகுகின்றார்களே! இவர்கள் வெறுங் கர்வம் நிறைந்திருக்கின்றார்களே! இதனாற்றான் ஆண்பிள்ளைகள்



தங்கள் பெண்களுக்குக் கல்விபயிற்றுதலுக்கு ஆட்சேபிக்கிறார்கள். இதுவே பெண்கல்விக்குப் பெருந்தடையாயிருப்பது. ஆதலின் நீங்கள் இக்குழியில் வீழாமற் சாக்கிரதையாயிருக்க வேண்டும். பாருங்கள்! நம் இந்தியாவே முன்காலத்தில் சீதை திரௌபதிமுதலிய அழியாப் புகழ்பெற்ற பதிவிரதா சிரோமணிகளாலணியப்பெற்றிருக்கவில்லையா? இவ்விதமான ஒப்பற்ற இலக்கியங்கள் பிறதேசங்களில் அரியனவே. இவர்களெல்லாம் படித்திருக்கவில்லையா? நீங்களும் அவர்கள் போனவழியாகிய கடமை, நன்னடக்கை, உங்கள் நாயகர்மீதன்பு ஆகிய இவற்றைப் பின்பற்றி, அப்பெண்மணிகளோடு கழிந்த கீர்த்தியை உங்கள் வாழ்க்கையிலேயே மீட்கக்கருதி நடத்தல்வேண்டும். இதுதான் உங்கள் கல்வியின்பயனாக இருத்தல்வேண்டும். இதுவே உங்கள் சந்தோஷமாயிருக்கும். உங்கள் ஆயுண்முழுதும் இவ்விதமாக வாழவேண்டுமென்று மனத்துட்கொண்டிருப்பீர்களென்றால், மேன்மை தங்கிய மகாராஜா அவர்களின் முயற்சிகட்கும், என்வார்த்தைகட்கும் அதுவே மதிப்புத்தருவதாயிருக்கும். இந்த என் மொழிகளை முடிப்பதன்முன், எவருடைய தயாளத்துவத்தினாலே நீங்கள் இந்த ஒப்பற்ற வரத்தை யனுபவிக்கிறீர்களோ அந்த மகாராஜாவை வந்தனம் பண்ணி, அவருடைய எண்ணங்களை நிறைவேற்றி அவர்க்கு நீண்ட ஆயுளையும் சுகத்தையும் தரும்பொருட்டுக் கடவுளைக் கைதொழுவீர்களென்று நம்புகிறேன்.'

இந்தப் பிரசங்கத்திலிருந்து, நமது பரோடா மகாராணியாரின் பெருந்தன்மையும் மகோன்னத எண்ணங்களும் அவரும் அவர் நாயகராகிய மகாராஜாவவர்களும் தேச க்ஷேமத்திலும் பெண் கல்வியிலும் ஊக்கங்கொண்டுழைத்து வருகின்ற விடாமுயற்சியும் நன்குவிளங்குகின்றது. இவ்வாறே நம்மிந்தியாவிற் பிறபாகங்களிலுள்ள பெரியோர்களும் முழுமனதோடும் உழைத்தார்களானால் நமது தேசம் வெகு சீக்கிரம் விருத்தியடைந்துவிடுமென்பதில் யாது தடை?

C. K. S.

## பணத்தாசையற்ற பரமயோகிப் பண்டாரம்.

திருச்சினாப்பள்ளியைவிட்டு ஒரு வாலிபனும் அவனுடைய சிறிய மனைவியும் புறப்பட்டு வடக்கு நோக்கி அரியலூருக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

முன்பின் யோசிக்காமல் பகல் 20-நாழிகைக்கு வெகு அவசரமாகப் புறப்பட்டவர்களாகையா லிவர்கள் வழியிலிருந்த பயாபயங்களைப்பற்றி கொஞ்சமாவது முன்னமேயே கருதாதவர்கள்போலும் காணலானார்கள். ஏதோ அவசர காரியமாக சரேலென்று பிரயாணமானார்கள். சூரியாஸ்தமனமாகுங்காலம் நெருங்கவே இவர்களுக்கு தாங்களிருந்த பயங்கரமான நிலைமை வெளியாயிற்று. தாங்கள் அப்பொழுது நின்றவிடத்திருந்து தங்களை யிவர்கள் சுற்றிப்பார்த்துக்கொண்டபொழுது கண்களெட்டியமட்டும் ஒரே பொட்டலாகவும் நிர்மானுஷ்ய பிரதேசமாகவும் அவ்வழி காணப்பட்டது. ஆகா இவ்வளவு படபடப்பாய் நாம் புறப்பட்டுவிட்டோமே, வழியில் நம்மைத் திருடர்கள் வளைத்துக்கொள்வார்களே யானால் என் செய்வோம். திருடர்கள் நம்மை யிம்சிக்க்க காரணம் நம்மிட மிருக்கும் நகைகளே, இந்நகைகளை எவ்விடத்திலாவது பத்திரப்படுத்திவிட்டு நாம் பிரயாணஞ் செய்வோமேயானால் நமக்கு ஒருவித பயமுமில்லை. நாம் போகும் காரியமோ வெகு அவசரமான காரியம். நாளை 10-நாழிகைக்காவது அரியலூரிலில்லாவிட்டால் நாம் போவதால் ஓர்வித பிரயோஜனமுமில்லை. அவ்வாறங்கு இருக்க நாமிவ்விரவு வழித்தங்காமல் பிரயாணஞ்செய்தாற்றான் சாத்தியப்படும் என்று இவர்கள் பலவாறுயோசித்து எல்லாரையும் காப்பாற்ற ஈசன் ஒருவர் இருக்கின்றார் என்று தைரியப்படுத்திக் கொண்டு, என்னதான் தைரியப்படுத்திக் கொண்டபோதிலும் மனம் படபடக்க வழி நடக்கலானார்கள்.

அப்பொழுது இவர்கள் துக்கத்தைப்பார்க்க சகிக்காதவர்போலும் சூரியபகவான் முற்றிலும் மறைந்தார். நன்றாக இருள் மூடிக்கொண்டது. என் செய்வார்களிவ்விளைஞர்கள். ஒன்றும் தோன்றாமல் திகைத்து வழிப்பக்கத்திலிருந்த ஒரு பாறையின்மேல் கொஞ்சநேரம் உட்கார்ந்து கன்றைக்காணாத தலையீற்றுக்கிடாரிபோல் நான்கு பக்கங்களிலேயும் வெருண்டு பார்க்கலானார்கள். இவர்கள் மனதை ஒருவாறு தேற்றவந்த தேவாமிருதம் போல் ஓர் சிறு வெளிச்சம் கொஞ்சதூரத்தில் தெரியவந்தது. அத்திசையைநோக்கி இவர்கள் வெகு வேகமாக நடந்தார்கள்.

அவ்விடம் சேர்ந்ததும் தாங்கள் பட்ட துயரம் ஒருவாறு நீங்கிற்று என்று களிக்கலானார்கள்.

அவ்விடத்திலிவர்கள் கண்டகாட்சியென்ன?

தலை முதல் கால் கட்டைவிரல் வரையில் திருநீறு பூசி தலைமேல் சடையணிந்து வெகு சாந்த மூர்த்தியாக ஓர் தவசி நிஷ்டையிலுட்கார்ந்திருக்க இவர்கள் கண்டார்கள். இவர்கள் சாம்பவமூர்த்திபோல உட்காந்திருந்த அப்பண்டாரத்தின் திருவடிகளை வணங்கி "ஐயா! நாங்கள் வழிப்போக்கர்கள் அவசரமாக அரியலூர் போகின்றோம் கையில் நகை கொஞ்சமிருக்கின்றபடியால் பயமாகவிருக்கின்றது. திரும்பி வரும்பொழுது இந்நகை முடிப்பை வாங்கிக்கொள்ளுகின்றோம். அதுவரையில் இம்முடிப்பை வைத்திருந்து என்னைக்காப்பாற்றவேண்டும்."

தவசி. "நகையா! ஆகா அது கோமாம்சம் போல் பார்ப்பதற்கே வெகு அருவருப்பை உண்டாக்குகின்றது. நான் கையால் தொடக்கூடமாட்டேன். ஆனால் உங்களிருவர்களையும் பார்த்தால் என்மனம் இளகுகின்றது. வழியில் என்னசெய்வீர்கள். இவ்வளவு அவசரமாக வழிப்பிரயாண மிவ்வாறுசெய்யலாகுமா. போனது போகட்டும்; என் முன் 4-அடிதூரத்தில் ஓர் குழிதோண்டி அதில் இந்நகைகளை பத்திரப்படுத்திவிட்டு போய்வாருங்கள். அவைகளை நான் கையால் கூட தொடமாட்டேன்; நீங்கள் திரும்பி வரும்பொழுது எடுத்துப்போகலாம்" என்றார்.

இவர் இவ்வாறு சொன்னதும் 'எவ்வளவு, உக்கிரமான தவம்! எத்தன்மையான நிஷ்டை!' என்று ஆச்சரியப்பட்டு அச்சிறுவன் தவசி சொன்னபடி அவருடைய முன்னிலையில் ஓர் குழி தோண்டி அதில் நகைகளை பத்திரப்படுத்தி அடையாளமும் வைத்துவிட்டு பண்டாரத்துக்கு வெகு வணக்கமாக தண்டனிட்டு தன்னுடைய மனைவியையும் தண்டனிடச்செய்து தவசிகொடுத்த திருநீற்றை வழியில் பாதுகாக்கும் கவசமாக தங்கள் மேனிகளில் அணிந்துகொண்டு அவ்விருவர்களும் அரியலூர் சென்றார்கள். சரியான காலத்தில் அவ்வூர் சேர்ந்து தாங்கள் வந்தகாரியத்துக்கு அவர்கள் உதவிக்கொண்டபடியால் அதுவும் பண்டாரத்தின் ஆசீர்வாதத்தினுடைய மகிமை என்றும் எண்ணினார்கள்.

இரண்டொரு நாள் அரியலூரிலிருந்துவிட்டு இவர்கள் திரும்பி திருச்சிறாப்பள்ளிக்குவந்துகொண்டிருந்தார்கள். வழியில் பண்டாரத்தினிடம்சென்று தங்கள் நகைகளை அவர் முன்பாகத் தேடவே குழியில் ஒன்றுமில்லாமலிருக்கக்கண்டு மனவருத்தமடைந்து திகைத்தார்கள்.

புருஷன் "சுவாமி தங்கள் கட்டளைப்படி நகைகளை இக்குழியில் பத்திரப்படுத்தினேனே அவைகளை வேறு இடத்தில் வைத்திருக்கின்றீர்களா என்ன?"

தவசி "நீயார். உன்னை நான் கண்டதேயில்லையே. வீணாக ஓர் தவசியை யிவ்வாறு நிந்திக்கின்றாயே நீ வாழ்வாயா!"

என்ன செய்வானிந்த வெகுளி. இவ்வளவு கொடியவனித்தவசி என்று சந்தேகமிவனுக்குக் கொஞ்சமேனும் தோன்றாமல் தன்னைவிட அவர் யோக்கியர் என்று கருதி அவரை



நம்பி தனது நகையை யிழந்தான். என்னென்னவோ சொல்லிப்பார்த்தான், தவசி ஒன்றுக்கும் பயப்படவில்லை. ஒன்றும் தெரியாதவன்போலும் இவனைக் காணாதவன்போலும் பேசினான். இனி யிவனிடம் வாதாடுவதில் பிரயோஜனமில்லை என்று தீர்மானித்து ஒன்றும் தோன்றாதவனாய் அச்சிறுவன் திருச்சிறாப்பள்ளியை நோக்கித் திரும்பலானான்.

தவசி யிருந்த இடத்தைவிட்டு புறப்பட்டு 4-5-நாழிகைதூரம் நடந்துவந்ததும் பூவாளூர் என்ற கிராமத்தின் வழியாக பாதை சென்றுகொண்டிருந்தது. அங்கு இவன் வரும்பொழுது சூரியனஸ்தமயமானார். இரவை அவ்விடம்கழிக்க ஓர் தனிகன் மனை சென்று அவரை வணங்கி இரவில் தாமதிக்க அவரை யிடங்கேட்டான். அந்த கிருகஸ்தர் வெகு தயாளு; இச்சிறுவனையும் இவனுடைய மனைவியையும் பார்த்தபொழுதே ஏதோ யிவர்கள் தாளாத்துயரத்துடன் வந்தவர்கள் போல காணப்பட்டபடியால் இவர்களை அவர் வெகு அன்பாக உபசரித்து ஆதரவாகப்பேசி இவர்களை க்ஷேமம் விசாரித்தார். சிறுவன் தவசி பின்செய்த மோசத்தைத் தெரிவித்து அடக்கிக்கொள்ள முடியாமல் வாய்விட்டுக் கதறி அழுதான். இதைப்பார்த்து அத்தனிகனுக்கு ஏதோ இவனிடம் அதிக தயை உண்டாயிற்று. எப்படியாவது இவன் நகைகளை திரும்பி இவனிடம்வந்து சேரும்படி செய்ய வேண்டும் என்று தோன்றிவிட்டது. தனது வீட்டிலேயே நகைகள் திரும்பிக்கிடைக்கின்ற வரையில் தங்கியிருக்கும்படி இச்சிறுவனுக்கும் அவன் மனைவிக்கும் சொல்லிவிட்டு இவர்களுடைய நகைகள் திரும்பிவரும் வழியைப் பற்றி ஏற்பாடுசெய்யலானார்.

பூவாளூரில் வெகு புத்திசாலியான செட்டிச்சி ஒருவளுண்டு. அவளை இக்கிரகஸ்தர் வரவழைத்து அவளிடம் தவசிசெய்த மோசத்தைத் தெரிவித்து சிறுவனுக்கு உபகாரம் செய்ய வேண்டிக்கொண்டார். அச்செட்டிச்சியும் மறுநாள் சாயந்திரம் தான் அந்நகைகளை எப்படியாவது திரும்பி வாங்கிக்கொடுப்பதாகவும் அதற்காக தான் சொன்னபடி யெல்லாம் அச்சிறுவன் செய்யவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டாள். அவனும் அப்படியே செய்வதாய் வெகு ஸந்தோஷமாக ஒப்புக்கொண்டான்.

மறுநாள் காலை முதல் மாலை வரையில் அவ்வூர்முடிய யாசகஞ்செய்து அச்செட்டிப் பெண்பிள்ளை 5000-ரூபா விலைபொறும்படியான நகைகள் சேகரித்து தன் மேனி முழுமையும் சிங்காரித்துக்கொண்டு இச்சிறுவனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு தவசி யிருக்கும் இடத்துக்குப் பிரயாணமானாள். அவ்விடம் சேரும் முன் கூப்பிடுதூரத்தில் அச்சிறுவனைப் பதுங்கியிருக்கச்செய்து அவனிடம் சில ஏற்பாடுகளை ரகசியமாகத் தெரிவித்துவிட்டு தான் மட்டும் குன்றினமுகத்துடன் தவசிமுன்பாக சென்று நமஸ்காரம்செய்து வெகு வணக்கமாக நின்றாள்.

தவசி யோகக்ஷேமம் விசாரிக்கும்பொழுது தான் பட்டணம்போகின்றவர் என்றும் ஏதோ மனஸ்தாபத்தால் பூவாளூரைவிட்டு அப்படியே புறப்பட்டவர் என்றும் தனது நகைகளை பத்திரப்படுத்திவிட்டுச் சென்றாலொழிய திருடர்கள் தன்னைக் கொன்றுவிடுவார்கள் என்றும் விம்மியழுது நின்றாள்.

தவசி நமக்கு முன்னிலும் அதிகலாபம் கிடைத்தது என்று மனதில் வெகு சந்தோஷமடைந்து வெளியில் தான் பொருளாசையற்ற பரதேசி என்பதையும், இவ்வாறு ஆபத்திலிருப்பவர்களை பாதுகாக்கப்பட்டவன் என்பதையும் சொல்லி முன் அச்சிறுவனுக்கு திட்டமிட்ட பிரகாரம் நகைகளைக் கழற்றி தன் முன்னிலையில் பத்திரப்படுத்திவிட்டுப்போகலாம் என்றார். அவருடைய சொற்படி அச்செட்டிப்பெண்ணும் எல்லா நகைகளையும் கழற்றி மூக்கைச் சிந்துவதுபோல் சிந்தினாள். இதானது இவள் அச்சிறுவனிடம் செய்துகொண்டிருந்த சங்கே

தங்களில் ஒன்று. அவன் தான் பதுங்கியிருந்த இடத்தைவிட்டு புறப்பட்டு செட்டிப் பெண்பிள்ளை நகைகளை எல்லாம் ஒரு முடிப்பாகக் கட்டும்பொழுது அவ்விடம் வந்து சேர்ந்தான். இவனைக்கண்டதுந் தவசிக்கு நிர்ச்சீவனாயிற்று. எங்கு ஒருக்கால் இவன் தன்னைத்திட்டி தனது நிஜகுணத்தைப்பற்றி அப்பெண்பிள்ளை சந்தேகிக்கும்படி செய்துவிடுவானோ என்று தவசி நடுங்கினார். ஏன் நடுங்குவானேன் என்றாலோ தான் உத்தேசித்த செட்டிச்சி நகைகள் தனக்குகிட்டாமற்போய்விடுமோ என்றபயம் இத்தவசிக்குத் தோன்றிற்று. ஆனால் இச்சிறுவன் ஏற்கனவே செட்டிச்சியிடம் உபதேசம்பெற்று வந்தவனாகையால் தான் தவசியை ஒன்றும் சொல்லாமல் என்னுடைய நகைகள் எங்கே என்றான். இவ்வளவுதூரம் நமது மானத்தைக்காப்பாற்றினானே என்று தவசி சந்தோஷப்பட்டு வெகு ஆதரவாக எழுந்து தானுட்கார்ந்த இடத்தின்கீழ் தான்வைத்திருந்த ஓர் சிறுமுடிப்பை அவனிடம் எடுத்துக்கொடுத்தார். இவ்வாறு செய்வதால் செட்டிச்சிக்கு முற்றிலும் நம்பிக்கையுண்டாகும்: அவளுடைய 5000-ரூபாய் விலை மதிப்புள்ள நகைகளை தான் கைப்பற்றலாம், என்று செய்தபடி. இவ்விருவர்களும் சூதாய்வந்தது அப்பண்டாரத்துக்குத் தெரியாது. செட்டிச்சி முன் பின் கண்டறியாதவனிடம் பேசுகிறவள்போல அச்சிறுவனைப்பார்த்து "ஐயா தாங்கள் எவ்விடம் போகின்றீர்கள்" என்றாள். அதற்கு அவன் நான் பட்டணம்போகின்றேன்" என்றான்.

செட்டிச்சி "ஐயா! நான் கொடுத்த தொந்தரைக்கு என்னை மன்னியுங்கள். இவர் பட்டணம்போகின்றாராகையால் நானும் இவருடனே புறப்பட்டுப்போகின்றேன் வழியில் பயமில்லை. தாங்கள் இந்நகையை பாதுகாக்கவேண்டிய சிரமமில்லை" என்றுசொல்லி தன் முடிப்பை தவசி திட்டப்படி குழியில் பதித்துவைக்காமலே, தன் கையிலெடுத்துக்கொண்டு தவசிக்கோர் தண்டன் சமர்ப்பித்து அச்சிறுவனுடன் அவ்விடம் விட்டு பிரயாணமானாள். தவசி ஏங்கிநின்றான். புதிய ஆசை அதிகமாய் பழையலாபத்தையும் அடித்துக்கொண்டுபோயிற்றே என்று திகைத்தான். ஒருக்கால் இத்தவசி ஏதாவது பொருளாசைகொண்டு எதிர்ப்பான் என்று ஒருவாறு அஞ்சி அச்செட்டிப்பெண் தன்னுடைய ஆட்கள் 5-பெயர்களை ஒருவருக்கும் தெரியாமல் கூப்பிடுதூரத்தில் பதுங்கியிருக்கும்படியும் தான் ஓர்வித அடையாளங்காட்டினால் வரும்படிக்கும் திட்டஞ்செய்திருந்தாள். அவ்வாறு அவர்களுடைய உதவிவேண்ட இடமேயில்லை. தவசி நடுங்கிவிட்டார்.

சிறுவன் அச்செட்டிப்பெண்பிள்ளையுடன் பூவாளூர்சேர்ந்து தன்னையாதரித்து இவ்வளவு ஏற்பாடுகள் செய்த அந்த கிருகஸ்தரையும் அச்செட்டிச்சியையும் வணங்கி அவர்களிடம் விடைபெற்று தனது மனைவியுடன் திருச்சி சேர்ந்தான்.

சிவசிதம்பரம்.

## சிற்பசித்திர அற்புதக்காட்சி.

இவ்வருஷம் சென்ற பிப்ரவரிமாதத்தில் மேற்சொல்லிய காட்சியானது சென்னைச் சிற்பசித்திரச் சங்கத்தாரால் செனட் மாளிகையில் வெகு அலங்காரமாகக் காட்டப்பட்டது. இது இச்சங்கத்தாரால் காட்டப்பட்ட 17-வது காட்சி என்றறிகிறோம். இடையில் 5-வருஷந் தூங்கிவிட்டுச் சென்ற வருஷந்தானெழுந்து இவ்வருஷம் நடக்க ஆரம்பித்திருக்கின்றது. இவ்வருஷத்திய காட்சிப்பொருள் சென்ற வருஷத்தியவற்றைப்போல அவ்வளவு மிகுதியாகக் காணப்படாவிட்டாலும், நம் மதிப்பிற்குரியனவும் சிறந்தனவுமாகவே யிருந்தன. ஆனால் இவ்வருஷம் சிற்பப்பொருள்கள் மிகவும் கொஞ்சமாகவே யிருந்தன. மரத்தாற் செய்தனவும், கெட்டியாற் செய்தனவும், தந்தத்தாற் செய்தனவும், ஜமுக்காளங்களும், தாமிரத்திற் சித்திரித்தனவும், பித்தளையிற் செய்தனவும், இன்னும் தாமிரம், வெள்ளி, பித்தளை யிவற்றிற் கலந்து செய்தனவும், வெள்ளியிற் செய்த சுவாமியுருவங்களும், ஐரோப்பியர் சாப்பிடும் பாத்திரங்களும் முதலிய இவை யெல்லாங் கூடி ஒரு நூறு சாமான்களுக்குமேலில்லை என்றால், சென்ற வருஷத்தோடொப்பிடுங்கால் மிகச் சொற்பமென்றே சொல்லவேண்டும். இவற்றுள் வெகு பொருள்கள், அதிலும் மரத்தாலும் தந்தத்தாலும் செய்தவை கவனித்து மதிக்கத்தக்க வேலைப்பாடமைந்திருந்தன.

சித்திரப்படங்களை நோக்குங்கால் அவற்றுள் மூன்று நான்கு வகைகள் இருப்பதாகத் தோற்றுகிறது. அவையாவன:—(1) தனிக்கறுப்புப் பென்சிலால் வெள்ளைக் கடிதத்தில் எழுதப்பட்டன, (2) எண்ணெய் கூட்டிய வர்னங்களால் எழுதப்பட்டன, (3) நீர் கலந்த வர்னங்களால் எழுதப்பட்டன, (4) போடோகிராப் என்னும் புகைபடங்கள் என்பன. இதனுள் முதற் குறிக்கப்பட்ட பகுப்பில் 11-படங்களே யிருந்தன. அவற்றுள் 'ஒரு இந்துப்பெண்' 'சில பறவைகள்,' 'ஒரு கிழவன் முகம்,' என்பன கவனிக்கத்தக்கன. இரண்டாவது பகுப்பாகிய எண்ணெய்வர்னப் படங்களுள் 'மாப்பிள்ளை ஜாதியானொருவன்,' 'ஒரு பிச்சைக்காரன்,' 'ரெவரெண்டு சி. கூபர் துரை,' 'தயிர்க்காரன்,' 'ஒரு பறப்பெண்,' 'மாலைப்பிரார்த்தனை,' 'கொடைக்கானலிற் சூரியோதயம்,' 'நீலகிரி ஊலிக்கல் துருக்கத்தில் விடியற்காலம்', ஆடுமாடு முதலியவை மாலைக்காலத்தில் 'வீட்டிற்குத் திரும்பிப்போதல்,' 'தண்ணீரிறைத்துக் களைத்து நிற்கின்றாள்,' 'நிலவில் தேம்ஸ் நதியின் காட்சி,' 'மாலைமுற்றி யிரவானது,' 'கோயமுத்தூர்ப் பக்கத்தில் ஓர் புறம்,' பூவிற்பவள்,' 'கோயமுத்தூரில் அறுப்புக்காலம்' என்னும் படங்கள் குறிக்கத்தக்கன. இவை அவ்வப்பொருள்களையும் காலங்களையும், கூடுமானமட்டும் இயற்கைக்கு மாறாகாதவண்ணம் உள்ளபடியே விளக்குவனவாயிருந்தன. நல்ல படங்களின் தன்மை என்னவெனில், நாம் இயற்கைப்பொருள்களை நேரிற் கண்டாலெவ்வளவிருக்குமோ அதைவிட மிகுதியான உள்ளக்கிளர்ச்சியை யுண்டாக்கக்கூடியனவாயிருத்தலே என்கிறார்கள். இத்தகுதியைக்கொண்டு பரிசீக்குங்கால் மேற்சொல்லிய படங்களும் இன்னும் அங்கே வைத்திருந்த இவைபோன்ற பலபடங்களும், நேர்த்தியானவென்றும், நல்லனவென்றும், வெகு சாமர்த்தியத்தோடு தீட்டப்பட்டனவென்றும், சொல்லற்கு முற்றும் உரித்தானவென்றே காணப்படுகின்றன. இனி, மூன்றாவது பகுப்பாகிய நீர்வர்னப் படங்களுள் 'நீலகிரியின் காட்சிகள்,' 'சென்னை மவுன்ட்ரோட்,' 'உதகமண்டலத்தில் சூரியாஸ்தமனம்,' 'சென்னையில் நவம்பர் மாதத்திய ஓர் மாலைப்பொழுது,' 'ஒரு நல்ல பகற்பொழுதில் கூவமாற்றின் காட்சி,' 'தோடர்கள் என்னும் மலைச்சாதியாரின் வீடுகள்,' 'செம்படவர்கள்,' 'சிலமிருகங்கள்,' ஒரு கிணற்றில் நீரிறைப்பவர்களின் காட்சி' என்பன மிக அழகாகவும் புகழத்தக்கனவாகவும் இருந்தன.

இனி அந்த அழகுபொருந்திய செனட்மாளிகையை இரண்டு பெரிய திரைகளால் மூன்று அறைகளாகப்பிரித்து அத்திரைகளின் இருபக்கங்களிலும் படங்களைத் தொங்கவைத்திருந்த அழகும், மேலும் அவ்வறைகளைச் செடிகளாலும் கொடிகளாலும் மேலும் பலவித நாற்காலி, குரிச்சி, படங்கள்முதலிய பொருள்களாலும் அலங்கரித்திருந்த கோலமும், இவை வைக்கப்பட்டிருந்த வரிசையமைதியும், மிக அலங்காரமாகக் கண்ணுக்கமிர்த மூட்டும் இனிய காட்சியாயிருந்தது. இவ்வருஷத்திய காட்சி சென்ற வருஷத்தியதைப்போல் அவ்வளவு சிறந்ததாகவில்லாவிடினும் மொத்தத்தில் மிக நன்றாகவேயிருந்தது. இதைக்காட்டக் கருவியாயிருந்த சென்னைச் சிற்பசித்திரச் சங்கத்தாருக்கும், அதில் கவுரவ காரியதரிசியாகவிருந்து வெகு முயற்சியோடுழைத்த எட்கார் தர்ஸ்டன்துரை யவர்களுக்கும், இதற்குத் தத்தம் அரிய முயற்சியாற்செய்த அற்புத சிற்ப சித்திரப்பொருள்களை அனுப்பிவைத்த கனவான்கட்கும் நாம் இக்காட்சிக்காக நமது மனப்பூர்வமான வந்தனமளிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இங்கிலாந்து, பிரான்சு, இடலி முதலிய ஐரோப்பிய தேசங்களைப்போல நம்மிந்திய தேசமும் சிற்பசித்திரவேலைகளிற் சிறந்து விளங்கக்கூடிய தென்பதற்குச் சாட்சியமாக விளங்காநின்ற இச்சபையும் இக்காட்சியும் வாழ்ந்து வளரும்பொருட்டு ஈசன் கிருபைபுரியும்படி அவரிருபத மிறைஞ்சுகின்றோம்.

C. K. S.

## தமிழ் முதலிய சுயபாஷாபிவிர்த்தி.

தமிழ் என்னும் மொழிக்கு இனிமை என்று பொருள். அது திராவிடபாஷைகளில் ஒன்று. திராவிடம் என்பது திரா என்னும் பகுதியினின்றும்வந்தது. 'ஓடிவளைந்தது' என்பது அதன் பொருள். மகாநதிமுதல் கன்னியாகுமரிவரையில் உள்ள தேசத்திற்குத் திராவிடதேசமென்று பெயர். அதில் வழங்கும் பாஷைகள் தமிழ், தெலுங்குமுதலியன. அவற்றுள் தமிழ் மிகவிசேஷமானது. சமஸ்

கிருதத்திற்குப்போலவே இதற்கும் சிவபெருமானே ஆசிரியர் என்கின்றார்கள்.

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல் வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசை பரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇனா ரென்றாலிவ்
விருமொழியும் நிகரென்னு மிதற்கைய முளதேயோ."

என்று ஸ்ரீசிவஞானயோகிகள் கூறுகின்றார்கள்.

ஏனைத் தெலுங்குமுதலிய பாஷைகட்கு சமீப காலத்திலேயே இலக்கணம் ஏற்பட்டதென்பது யாவர்க்குந் தெரிந்தவிஷயமாதலின் தமிழ் ஏற்றமுடையதென்பதில் என்ன தடை? அதன் இலக்கணம் மிக அரியதன்மையுடையது. இத்தமிழின் கரைகாணல் யாவர்க்குமேயரிது.

"கடல் குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்,
தொடுகடலையுனக்குவமை சொல்லுவதும் புகழாமோ?"

என்று ஸ்ரீசுந்தரம்பிள்ளையவர்கள் தமிழின் பெருமையை நன்கினிதெடுத்தியம்பினார்கள்.

இத்தமிழ் ஆதியில் சிறிதும் சமஸ்கிருத சம்பந்தமின்றிச் சிறந்துவிளங்கியது. ஆரியர்கள் தக்ஷண தேசம் வருமுன்பே இதனகத்து அநேக நூல்கள் விளங்கியிருந்தன.

"சதுமறையாரிய வருமுன் சகமுழுதும் நினதாயின்,
முதுமொழிநீ யனாதியென மொழிகுவதும் வியப்பாமே"

என்றார் ஸ்ரீசுந்தரம்பிள்ளையவர்கள்.

இவ்வாறு யாவராலும் புகழ்ந்து கூறப்பட்ட தமிழ்முதலிய சுயபாஷைகளின் தற்காலநிலைமையை யோசிக்குங்கால் அவை மிகவும் க்ஷீணதசையை யடைந்திருக்கின்றனவென்பதை யாவரும் ஒப்புக்கொள்கின்றார்கள். இக்காலத்து பி. ஏ. (B. A.) முதலிய உயர்ந்தபட்டம்பெற்றவர்களுள் பலராலும் சுயபாஷையிலேயே (அதாவது இங்கிலீஷ் கலப்பில்லாமல்) பேசவாவது எழுதவாவது முடியாமலிருப்பது யாவருந் தெரிந்ததொரு விடயமே.

இங்கிலீஷ் கற்றலே இவ்வுலகத்து நன்மைகள் பலவும் அடைதற்கு ஏற்ற சாதனமாகலின் யாவரும் அதையே கற்பதற்கு முயற்சிக்கின்றார்கள். தகப்பன்மாரும் அதையேபடிக்கும்படி பிள்ளைகளை வற்புறுத்துகின்றார்கள். சுயபாஷையை ஆரம்பித்துச் சின்னாட்கெல்லாம் இங்கிலீஷையும் ஆரம்பித்துப் பின் சுயபாஷையைக்கைவிட்டு இங்கிலீஷே மிகவும் பயிலல் சுயபாஷையின் தற்கால நிலைமைக்குற்ற காரணமாகும்.

பங்காளம் பம்பாய்முதலிய சர்வகலா சாலையாரைப்போலல்லாது சென்னைச் சர்வகலாசாலையார் சுயபாஷைகளை அங்கீகரித்துக்கொண்டிருந்தும், அப்பங்காளம், பம்பாய்முதலிய விடங்களில் சுயபாஷைகள் எவ்வளவு விர்த்தியடைந்திருக்கின்றனவோ அவ்வளவு விர்த்தியும் இல்லையே இச்சென்னையில். அந்தோ!. சுயபாஷைகளை இந்த நிலைமையினின்றும் உயர்த்தினாலல்லது அது ஒரு பெருங்கேடாக முடியும் என்பது யாவராலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆகவே இதைச்செய்தற்கு பலவிடத்தும் சிலர் முயற்சிசெய்து வருகின்றார்கள். அவர்கள் அதன்பொருட்டு உண்மையாகவே உழைக்கின்றாராயினும் அது அவர்கள் முயற்சியாலே முடியும்படியான காரியமொன்றன்று. அதைமுடிக்க இராஜாங்கத்தாராலாவது அல்லது சர்வகலாசாலையாராலாவது இயலுமேயன்றி மற்றெவராலுமியலாது. இராஜாங்கத்தாராலும் சர்வகலாசாலையாராலுமே சுயபாஷைகள் அபிவிர்த்தியாகவேண்டுமென்று கூறியவுடனே இராஜாங்கத்தாராலும் சர்வகலாசாலையாராலும் சுயபாஷைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்க அவை க்ஷீணதிசையடையவேண்டிய நிமித்தமென்னையென ஒரு கேள்விபிறக்க இடனிருக்கின்றது. பாடசாலைகளில்கொடுக்கும் படிப்பு எவ்விதமென்பதைச் சற்று ஆராய்ந்து நோக்குங்கால் இக்கேள்விக்கு மறுமொழிகூறல் கடினமன்றென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றெனவிளங்கும். பாடசாலைகளில் கற்கும் மாணாக்கர்கள் இங்கிலீஷையும் சுயபாஷையையும் மேன்மேலாகப்படித்து சில பரீக்ஷைகளில் தேறுகிறார்களேயன்றி இங்கிலீஷிலாவது சுயபாஷையிலாவது ஆழ்ந்த கருத்து அவர்கட்குண்டாவதில்லை. கல்லூரிகளில் சுயபாஷைகளைக்கற்பிக்கும் உபாத்திமார்களில் பெரும்பாலாரது தகுதியின்மைக்கும் அஜாக்கிறதைக்கும் காரணம் இராஜாங்கத்தாரும் சர்வகலாசாலையாரும் வேண்டியவளவு அக்கறையெடுத்துக்கொள்ளாமையேயென்று கூறப்பட்டுளது.

இவ்வாறு க்ஷீணதசையை அடைந்திருக்கும் சுயபாஷைகளை விர்த்தியடையச்செய்யும் மார்க்கம் ஏதேனுமுண்டோ? உண்டேல் அஃது யாது? எனுங் கேள்விக்கு பலர் பலவிதமாக உத்தரம் பகருகின்றனர். கீழ் எடுத்துரைக்கும் மார்க்கமே சிறந்ததெனத் தோற்றுகின்றது. கீழ்தரப்படிப்பில்



பிள்ளைகள் ப்ரைமெரி பரீக்ஷை தேறும்வரை சுயபாஷையே கற்கவேண்டும். அதன் பின்னரே இங்கிலீஷ் துவக்கவேண்டும். அப்பொழுதும் பிள்ளைகட்கு அவ்விங்கிலீஷ் ஒரு பாஷையாகவும் சரித்திரம் பூகோளம் முதலியவையெல்லாம் சுயபாஷையிலும் கற்பிக்கப்படவேண்டும். "லோயர் செக்கண்டரி" பரீக்ஷை தேறும்வரை இவ்வாறிருத்தல் அவசியம்.

மேல்தரப்படிப்பு ஆரம்பித்தவுடனே (அதாவது 4-வது பாரம்முதல்) சரித்திரம் முதலியவை யெல்லாம் இங்கிலீஷில் கற்பிக்கப்படவேண்டும். ஆனால் சுயபாஷா பாடங்களை இப்போதிருப்பதினும் சற்றுயர்த்தல் வேண்டும். அப்பாஷைகளிலும் சிறிது மாறுபாடு செய்தல்வேண்டும் அதாவது இப்பொழுது சுயபாஷையில் ஏற்படுத்திய பாடப்புத்தகங்களில் ஒரு விஞைப்பத்திரிகையும் மொழிபெயர்ப்பு வியாசம் என ஒரு விஞைப்பத்திரிகையும் கொடுக்கின்றார்கள். இவையுடன் இங்கிலீஷில் எப்படி ஒரு இங்கிலீஷ் லாங்குவேஜ் (English Language) பத்திரிகை கொடுக்கின்றார்களோ அப்படியே சுயபாஷையிலும் ஒரு பத்திரிகை கொடுக்கவேண்டும். சுயபாஷையில் தேர்ச்சியடைதற்கு வேண்டிய மார்க்கையும் சிறிதுயர்த்தல்வேண்டும். வித்தியா இலாகாவில் மிகவுமனுபோகமுள்ள பல ஐரோப்பியர்கட்கும் சுதேசிகட்கும் இம்மார்க்கமே உடன்பாடாக இருக்கின்றது.

கீழ்தரப்படிப்பில் கூறிய மாறுபாடுகள் இப்பொழுது சிற்சில இடங்களில் நடந்திருக்கின்றன ஆகினும் இம்மாறுபாடுகள் எவ்விடத்தும் பரவவேண்டுமென்பதே எம்முடைய கோரிக்கை.

கீழ்தரப்படிப்பிலும் மேல்தரப்படிப்பிலும் இத்தகைய மாறுபாடுகளைச் செய்யின், பாஷையும் விர்த்தியாகி ஜனங்களும் உய்வார்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை.

ஏனெனில்

சுயபாஷைகள் விர்த்தியடைந்தாலன்றி சாதாரண ஜனங்கள் கல்வியிலும் கைத்தொழிலிலும் விர்த்தியடைய மாட்டார்களென்பது திண்ணம். பூர்வகாலம் முதற்கொண்டு தமிழ்முதலிய சுயபாஷைகளில் பயின்ற வித்துவான்கள் தம் தம் திறம் தோன்ற இயற்றியருளிய நூல்களை யெல்லாம் காவிய நடையிலேயே இசைத்துவிட்டார்கள் ஆகலின் அவை கற்றுவல்ல சிலர்க்கே பயன்படுவையாக விருக்கின்றன. பிற்காலத்தே சில பெரியோர்கள் தோன்றிச் சிலவற்றை வசனமாக எழுதி உபகரித்தார்கள். அப்படி வசனமாக எழுதி உபகரித்திருந்தாலும் அவற்றால் நம் நாட்டார் அடையக்கூடிய விசேஷித்த நன்மை ஒன்றுமில்லை. நம்மிடத்தே மறுமைக்குப் பயன்றரத்தக்க ஞானசாஸ்திராதிகளேயன்றி அர்த்த சாஸ்திரம், ரசாயனசாஸ்திரம், தேசசரித்திரம் முதலாக இம்மையில் பயன்றரத்தக்க நூல்கள் ஒன்றுமில்லை. சிறந்தவையாகிய சிந்தாமணி சிலப்பதிகாராதி ப்ராசீன காவியங்களும் இராமாயண பாரதாதி நவீனகாவியங்களும் உண்டு. அவற்றால் அக்காலத்திய நாகரீகாதிகள் ஒருவாறு விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அவற்றை அறிந்துகொள்ளுதலால் இக்காலத்தவர்களாகிய நம்முடைய வாழ்க்கைக்கு எத்துணைப் பயனுமிராது. பிற்காலத்திய இதிகாசாதிகள் தெரியவேண்டும். தேசச்சரித்திர ஞானமிருந்தால்தான் எவரும் நாகரீகமடைவதற்கு ஏதுவாகும். ஒரு ஜாதியார் க்ஷீணித்தற்கும் மற்றவர் விர்த்தியடைவதற்கும் காரணம் தெரிந்தால் நாம் நம்மிடத்தே அக்குற்றங்கள் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளலாம். பல வேறுதேசச் சரித்திரங்கள் தெரிந்தால்தான் நம்மிடத்துள்ள குணங்குற்றங்கள் நன்குணரப்படும். தேகதத்துவம் முதலிய மற்ற சாஸ்திரங்களும் அவ்வாறே நம்முடைய வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக இருக்கின்றன. அதற்கேற்றவை ஒன்றும் நம் தேசபாஷைகளில் ஏற்பட்டிருக்கும் நூல்களில் கிடையாது. அதனாலேதான் நம் தேசத்தார்கள் விவேக சூன்யர்களாக இருக்க நேர்ந்திருக்கின்றது.

இம்மைப்பயன்றரத்தக்க எல்லா நூல்களும் இங்கிலீஷில் இலங்குகின்றன. நம்மவர்களெல்லார்க்கும் அவைகளில் ஞானம் வருவதென்றால் இப்போது அதிக கஷ்டமாகவேயிருக்கின்றது. ஏனென்றால் சுயபாஷைகளில் அவைகளை விவரிக்கும் நூல்களில்லை. நம் தேசவாசிகளில் பலகோடி ஜனங்களுள் மிகச் சிலர்க்கே இங்கிலீஷ்ப் பயிற்சியுண்டு. ஜனத்தொகையில் பாதியளவிற்குக்குறையாமல் பெண்பாலார் இருப்பார்கள் என்பதில் தடையில்லை. அவர்களும் ஆண்பாலரில் பெரும்பாலரும் (முக்கால் பங்குக்கு மேலாகவே யிருக்கும்) தேசபாஷையிலேயன்றி இங்கிலீஷ் பாஷையில் பயிலும் தன்மையர்கள் அல்லவென்பது யாவரும் அறிவார்கள். இப்பெரும்பாலருக்கு உதவிபுரியவேண்டுமானால் இங்கிலீஷிலுள்ள அரியவைகளை தேசபாஷைகளில் மொழிபெயர்த்துதவவேண்டும் என்பதில் தடை என்ன?

அவர்கள் எல்லாரும் இங்கிலீஷ்பயின்று விவேகம் பெறுவதென்றால் அது இக்கற்பத்தில் காணக்கூடியதன்று. இங்கிலீஷ் கற்று விவேகம்பொருந்திய சிறுதொகையினர்கள் எப்போதும் அது கல்லாது அவிவேகம் பொருந்திய பெருந்தொகையினர்களோடு கலந்தே காலங்கழிக்கவேண்டியிருத்தலின் அவர்களையும் தங்களைப்போல் விவேகிகளாக ஆக்கிக்கொண்டால் ஒழிய நலம் அடையமுடியாதென்று கூறுவதில் யாது தடை? நம்மவர்கள் எல்லாரும் இங்கிலீஷ் நூல் உணர்ச்சி பெற்றிராவிடினும் அவ்வுணர்ச்சி இருந்தாலே யல்லாது அனுபவிக்கமுடியாத சௌகரியங்களை மட்டும்அடையப் பின்வாங்குவதில்லை. உதாரணமாக, கிரோசின் எண்ணெய் ஊற்றிவைக்கும் விளக்குப்போல நம்தேசத்து முன்தொட்டுவழங்கிவரும் விளக்கு அதிகவெளிச்சம் கொடாமையையும் அதன் விலைசரசத்தையும் கண்கூட்டாகக்கண்ட நமது தேசவாசிகளுள் எத்துணைப் பேர் சமையல் அறைகளுக்கும்கூட அக்கிரோசின் எண்ணெய் விளக்கேவைக்கத் தொடங்கிவிட்டார்கள் ஆயினும் இச்சௌகரியத்தையடைய விரும்பிய இவர்களுக்கு இவ்வெண்ணெயின் தன்மை முதலியன தெரியாமையால் எத்துணைக்கேடுகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆதலின் நம்மவர்களை விவேகிகளாக ஆக்கமுயலாது விட்டால் பெருங்கேடே விளையும் என்பது நிச்சயம். அவர்களை விவேகிகளாக ஆக்கவேண்டுமாயின் அதற்கேற்றவழி, அவர்கள் எல்லாரையும் இங்கிலீஷ்ப் பயிலச்செய்து முயலல் என்னும் அசாத்தியமார்க்கத்தை விட்டு அப்பாஷையிலுள்ள அரிய விஷயங்களை தேசபாஷைகளில் மொழிபெயர்த்துதவல் என்னும் சாத்தியமார்க்கத்தையே சார்ந்திருக்கின்றதென்பது வெள்ளிடைமலை யெனத் தெள்ளிதிற் புலப்படுகின்றது.

மொழிபெயர்த்துதவல் என்னும் இத்தொழிலானது மிகவும் கடினமானதொன்றென்பதற்கு சிறிதும் சந்தேகமில்லை. அதைச்செய்பவர்களுக்கு வழியில் தடைகள் பலவுள. ஆயினும் அவற்றிற்குப் பயந்து சோர்ந்துபோகாது தாங்கள் மேற்கொண்ட வேலையை நிறைவேற்றல்வேண்டும். இது செய்வதற்குமுன் செய்யவேண்டியதொன்றுளது. அது மிகமுக்கியமானது. என்னையெனில் எவ்விஷயத்தைப்பற்றிச் சுயபாஷைகளில் புதுப் புத்தகங்கள் பிரசுரிக்கப்படுகின்றனவோ அவ்விஷயத்தில் பொதுஜனங்கள் அவாக்கொள்ளும்படி அவர்கள் மனதைத் திருத்தல்வேண்டும். மேலும் பாஷாபிமானத்தையும் அவர்கட்கு ஊட்டவேண்டும். இவற்றை ஜனங்களுக்கு ஊட்டமுடியாவிடில் என்னசெய்யினும் ஒன்றும் பிரயோசனமாகாது. ஆதலாற்றான் ஒருவர் தமது அனுபோகத்தால் பின்வருமாறு கூறுகின்றார். சர்வகலாசாலையார் என்னசெய்தபோதிலும் சுயபாஷை விருத்தியாகமாட்டாது, பாஷாபிமானம் ஜனங்களிடத்து உதிக்கும்படி செய்தல்வேண்டும். **விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள்** போன்ற புத்தகங்களை வெளிப்படுத்தி ஜனங்கட்கு அவ்ஞானத்தைச்சிறிது சிறிதாக உண்டாக்க வேண்டுமேயன்றி திடீரென்று உண்டாக்கமுடியாது. இதுவும் ஏறக்குறைய உண்மையாகவே யிருக்கின்றது. இவ்வாறு ஜனங்களிடம் ஞானம் உண்டாகச் செய்யாவிடின் புத்தகங்கள் வெளியிடுவோர்கள் லாபமின்மையால் வெளியிடார்கள். இப்போது பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்தப்பட்டு பிள்ளைகளால் வாங்கப்படும் என்று நிச்சயமாக அறிந்தாலன்றி சுயபாஷையில் ஒருவரும் புத்தகம் வெளியிடுவதில்லை. முற்காலத்திருந்த அரசர்களும் தனவான்களும் வித்வான்களை ஆதரித்து அவர்கள் இயற்றும் காவியங்கட்கு பொன்னாலும் வெள்ளியாலும் அமைந்த பல நாணயங்களையும் பாண்டங்களையும் மற்றும் பல பூமிகளையும் பரிசாகக் கொடுத்துவந்தார்கள். இவ்வழக்கம் சிலநாட்களுக்கு நடந்தேறிவந்தது. நாராயணபாரதியார் தம் காலத்து இருந்த வித்வான்களை அரசர்களும் மற்றவர்களும் ஆதரித்தமாதிரியை தாம் இயற்றிய திருவேங்கட சதகத்துள் பின்வருகின்ற செய்யுளில் நன்கெடுத்து உரைத்திருக்கின்றார்கள்.

"கற்பனையலங்காரமாக் கோவைபாடினுங் கனவரிசை
யொருகச்சடம்
கலம்பகம்கூறிலொரு துப்பட்டிபிள்ளைக் கவிக்கென்னி
லொருசோமனும்
நற்பொருவுலாவென்னிருமாலை மடலுக்கு நாணயமதா
மொருபணம்
நல்வண்ணமென்னிலொரு சாப்பாடுமாலையெனில் நன்மை
தருதாம்பூலமாம்
அற்புதம்பெறு கவிகளென்னிற் பனாபனாவதிக வெகு
மானமாகும்
அப்படியுமாயிரத் தொருவனென்றுலெங்களருமை யெவ
ரறிவர்கண்டாய்
மற்பொருதமல்லனே முற்பொருதவீரனே மணவாள
நாராயணன்
மனதிலுரையலர்மேவு மங்கைமணவாளனே வரத
வெங்கடராயனே."

இக்காலத்து வித்வான்களை யாதரிப்பது இன்னும் குறைந்துவிட்டது, சிலர் வித்வான்கள் காவியங்கள் இயற்றிக்கொண்டுவந்தால் பரிசுகொடுக்கின்றார்கள். இவ்வாறு காவியங்கட்கு பரிசுகொடுப்பதைவிட்டு இக்காலத்துக்கு இன்றியமையாது வேண்டிய நூல்களை சுயபாஷையில்மிக எளியநடையில் எழுதிக்கொண்டுவருவார்க்கே பரிசுகொடுப்பாராயில் பாஷாபிவிர்த்தியாகும்.

இவ்வாறு கூறிய மாறுபாடுகள் பலவும் செய்யுழி, பாஷையும் அபிவிர்த்தியாகி ஜனங்களும் உய்வார்கள். இன்றேல் பாஷையும் நாமும் ஒருங்கே க்ஷீணித்து விடுவோமென்பது சரதம். சுயபாஷை யுயர்ந்து நாமும் உய்யுமாறு கடவுள் அருள் புரிவாராக.

வீ. மீனாக்ஷிசுந்தரம்.



# சுகாதார விஷயம்.

*உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதார முறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாக விருந்தது.—டாக்டர் டப்ளியூ. ஜி. கிங்.*

## திருக்கழுக்குன்றம் - ஓர் பூர்வீக ஆரோக்கிய ஸ்தலம்.

சென்ற பிப்ரவரி மாசத்துச் சஞ்சிகையில் திருக்கழுக்குன்றத்தின் ஸ்தல விசேஷத்தையும் அதன் சுகாதார நிலைமையையும்பற்றி விவரமாய் எழுதினோம். அதற்குப்பின் ஒரு மாசம் அங்கு தங்கியிருந்ததில் அது மிகவும் முக்கியமான ஆரோக்கியஸ்தலம் என்று நன்றாகத் தெரியவந்தது. ஸ்தலபுராணத்தில் சொல்லியிருக்கும் விவரங்களை செங்கற்பட்டு ஜில்லாவைப்பற்றி யெழுதிய மிஸ்டர் ஸி. எஸ். க்ரோல் துரை வீணை கட்டுக்கதைகளென்றும் அதனால் ஒன்றும் விவரம் விளங்கவில்லையென்றும் எழுதியிருக்கிறார். இவர் ஐரோப்பியராதலால் இவருக்கு விவரம் விளங்கவில்லைபோலும் ஊர் விசேஷத்தையும் ஸ்தலபுராணத்தில் சொல்லியிருப்பதையும் ஒப்பிட்டுப்பார்த்தால் இந்த வூர் பூர்வந்தொட்டு ஆரோக்கிய ஸ்தலமாகவே யேற்படுத்தப்பட்டதென்று நன்றாக விளங்குகின்றது. நாம் அங்கிருக்க நேரிட்ட ஒருமாசகாலத்தில் ஊர் விசேஷத்தை யுள்ளபடி யாராய்ந்தறிந்துகொண்டதோடு ஸ்தலபுராணத்தில் சொல்லியிருக்கும் விவரங்களையும் விசாரித் தறிந்துகொண்டோம். இரண்டையும் ஒத்துப்பார்க்கையில் தேகாரோக்கியத்துக்குரிய நியமங்களை அறியா ஜனங்கள் அனுஷ்டிக்கச்செய்யுமாறு ஸ்தலவிசேஷத்தையும், அனுஷ்டிக்கவேண்டிய முறைகளையும், புராணத்தில் விசேஷித்துரைத்து, போதித்த உண்மை புத்தியில் ஏறுமாறு அததற்கிசைந்த கதைகளையும்சேர்த்து வர்ணித்து வற்புறுத்தியிருக்கிறார்களென்று நன்றாகத் தெரியவந்தது. முற்காலத்தில் சுகாதாரவிஷயங்களைக் கவனிக்க இக்காலத்திலுள்ள யூனியன், முனிசிபாலிடி, லோகல்போர்டு முதலிய ஸ்தானங்களில்லாமையினாலும், தெய்வபயம் ஒன்றையேகொண்டு ஜனங்கள் இப்படி சுகவழிகளைநாடி நடக்கும்படி செய்யவேண்டியிருந்ததாலும் எல்லாவற்றையும் மதாசாரங்களாகச்செய்து மோக்ஷசாதனத்துக்கு அவைகளை யனுஷ்டித்தல் இன்றியமையாததாகச் செய்தார்கள். இக்காலத்தில் ஆரோக்கியஸ்தலம் ஏற்படுத்தினால் கோவில் கட்டுவதைப்பற்றிக் கடைசியிலதான் யோசிப்பார்கள். முற்காலத்தில் அப்படியில்லை. ஒரு ஊர் நிர்மிக்குமுன் அங்கே முதலில் கோயில் ஒன்று கட்டிவைப்பார்கள். எனெனில் "கோயிலில்லாவூரில் குடியிருக்கவேண்டாம்" என்று சொல்லியிருக்கவில்லை.

திருக்கழுக்குன்றத்தில் மலைமேல் சிவன் கோயிலும், கீழே அம்மன்கோயிலும், சங்குதீர்த்தம் என்கிற ஒரு பெரிய குளமும் இருக்கின்றன. அங்கே பிரார்த்தனைக்காக வருகிற ஜனங்கள் அதிகாலையில் அந்த சங்குதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து மலையைச் சுற்றி பிரதக்ஷணம்வந்து, அம்மன்கோயிலையும் சுற்றி வரவேண்டுமென்று நியமிக்கப்பட்டிருக்கிறது. சங்குதீர்த்தத்து ஜலத்தில் அயம் ஏராளமாகவிருக்கிறதென்று டாக்டர் ஸி. பி. ராமராவ் அவர்கள் உதவியால் பரிசோதனைசெய்து தெரியவந்திருக்கிறது. மலையிலுள்ள **சஞ்சீவிமிருத்திகை** யென்னும் மண்ணிலும் அயம் ஏராளமாகவிருக்கிறது. அயம் நிறைந்துள்ள தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, காலை, மாலை யிரண்டுவேளைகளிலும் 2½-மைல் சுற்றளவுள்ள மலைப்பிரதக்ஷிணம் செய்து, அயம் நிறைந்துள்ள மிருத்திகையையும் சந்திரகலை கூடிக்குறைவது போல் சிறுகச்சிறுக அதிகரித்துப் பின் அப்படியே குறைந்து உட்கொண்டுவருவது தேகாரோக்கியத்திற்கு மிக அனுகூலமான காரியங்களாம். சுத்தக்காற்றும், வெட்டை வெளியில் காலை மாலையில் தேகாப்பியாசம் செய்துவருவதும் அயம்நிறைந்த

தீர்த்தத்தில் ஸ்னானம்செய்து அயம்நிறைந்த மிருத்திகையை உட்கொண்டு வருவதும் ஆரோக்கியத்திற் கடுத்ததையென்று இக்காலத்துச் சாஸ்திரிகளும் ஒப்புக்கொள்வார்கள். இக்கிருத்தியங்களை மூடஜனங்கள் நம்பிக்கையோடு செய்து வரவேண்டி ஆரோக்கியமான ஸ்தலத்தில் மலைமேல் கோயில் கட்டி, சுவாமியின்மேல் பக்திவைத்து ரோகநிவாரணத்தை உத்தேசித்து மேற்சொல்லியபடி செய்து வந்தால் ரோகம் தீருமென்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்புராணத்தில் புராணரீதியாக கட்டுக்கதை கற்பனையோடு கூட்டி யலங்கரித்துச் சொல்லியிருக்கிறார்கள். மலையைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதை யுத்தேசித்து வேதமேகிரியாக அமைந்ததென்று சொல்லி அதற்கு வேதகிரியென்று பெயரிட்டார்கள். பிறகு ஒப்பனைகூடிவர குன்றின் பல பாகங்களை வேதத்தின் பலபாகங்களாகக் குறிப்பிட்டுக் கற்பனை கட்டினார்கள். குளத்துஜலம் கெட்டுப் போகாமலிருக்க அது மார்க்கண்டேயர் பூஜை செய்து சிரஞ்சீவிவரம்பெற்ற இடமென்றும் அவருக்குப் பூஜாபாத்திரம் இல்லாமாலிருந்தபொழுது பரமசிவன் அக்குளத்திலிருந்து சங்கு பிறப்பித்துக் கொடுத்தாரென்றும் கூறியுள்ளார்கள். இதனால் அந்த ஜலம் சஞ்சீவி குணமுள்ளதென்பதும் வற்புறுத்தப்பட்டது. அந்த தீர்த்தமும் க்ஷேத்திரமும் ரணங்களை யாற்றுந்தகைமையுடையதென்பதை வற்புறுத்திக்கூறி, இந்திரன் ரிஷிபத்தினியிடம் சென்ற தோஷத்துக்காக கௌதமர் இட்ட சாபத்தினால் உடம்பெல்லாம் புண்ணாகி ஆபாசப்பட்டிருக்கையில் இங்கு வந்திருந்து இந்த தீர்தத்தில் ஸ்நானம்செய்து ஸ்வாமியைப் பூஜைபண்ணிக்கொண்டிருந்ததால் உடம்பிலிருந்த புண்களெல்லாம் கண்களாகமாறி அனுகூலம் பெற்றானென்று புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் ஸ்தலத்தின் ஆரோக்கிய விசேஷமும், குணப்படக்கூடிய வியாதி விசேஷமும் வற்புறுத்திக் கூறப்பட்டது. பக்ஷிகளிரண்டு வந்துபோவதைப்பற்றிச் சொல்லப்படும் கதை சத்தியத்தின் விசேஷத்தை வற்புறுத்தி அசத்தியம் கூடாதென்று கண்டிக்க ஏற்படுத்தின கற்பனையாகும். ஈசுவரகடாக்ஷம்பெறும்படித் தபோமகிமைபெற்ற ரிஷிகளும் உள்ளதைமறைத்ததால் கழுகுகளாக மாற்றப்பட்டார்களென்பதை நிதரசனமாக ரூபிக்க ஏற்பட்டது கழுகுகள் வந்தபோகும் விஷயம். இவைகளின் உட்கருத்து நாம் குறிப்பிட்டபடியே யாயினும் இதை யறிந்துகொள்ளக் கூடாத மூடஜனங்கள் தெய்வத்துக்கஞ்சி நல்வழியில் நடக்கும்படி இதையெல்லாம் தெய்வீகமாகக் கற்பித்துச் சிலாகித்துப் பூஜை செய்துவருகிறார்கள். இது நியாயமானதே. ஆனால் ஆதியில் நிர்மித்தவர்கள் கருத்துக்கு விரோதமாக இக்காலத்துப் பிராமணர்கள் அக்குளத்தை ஆபாஸம் செய்துகெடுத்து வருவதுமன்றி அதை யப்படிச் செய்யாதபடி கட்டுக்காவல் ஏற்படுத்த முயற்சித்தால், அது மகிமைபெற்ற தீர்த்தமென்றும், அதை ஆபாசம்செய்துகொண்டிருந்தாலே நன்றாகவிருக்குமென்றும், இல்லாவிட்டால் ஜலம் புழுத்துப்போய்விடுமென்றும் வீண் புரளிகட்டிவிட்டு, அதிகாரிகள் அதில் பிரவேசிக்கவொட்டாமல் தடுத்துவருகிறது மிகவும் பொறுக்கரிய அநியாயமாக விருக்கிறது. ஆஷாடபூதிப் பிராமணர்களும் பண்டாரங்களும் சொல்லும் இப் பொய்க்கற்பனையைக் கேட்டு அதிகாரிகளும் அந்த திவ்யமான குளம் கெட்டு நாசமாய் போகவிட்டுப் பார்த்து வருவது அதிலும் பெரிய அநியாயம். பிரிடிஷ் கவர்ன்மெண்டார் மதவிஷயங்களில் பிரவேசிக்கிறதில்லை யென்கிற நியமம் வைத்திருப்பதை யுணர்ந்த நம்மவர்களி லனேகர் இப்படி, ஆஷடாபூதித்தனம்செய்து அதிகாரிகளை மிரட்டி அறியாமூடர்களைக்கிண்டிவிட்டு அக்கிரமம் செய்துவருவது கொடுமை, கொடுமை, மிகவும் கொடுமை. நாம் அங்கிருந்தகாலத்தில் இந்தக் குளத்து ஜலத்தை ஆபாசம்செய்து கெடுக்காதபடி மிகவும் சாதாரணமான சில கட்டுப்பாடுகள் செய்ய நாம் செய்யவேண்டிய பிரயத்தனம் பெரும்பிரயத்தனமாகிவிட்டது. கிராம அதிகாரிகள் ஒருவரைக்கேட்டால் ஒருவர்மேல் பழி போடுவதும், உருக்கமாய் ஒரு விஷயத்தையெடுத்துப்பேசினால் வெளிக்கொரு விதம் உள்ளுக்கு ஒரு விதமாகப் பேசி நடப்பதும் பெருவருத்தமுண்டு பண்ணுவதாயிற்று. கடைசியில் யூனியன்சேர்மான், வில்லேஜ் முனிசீப், கோயில் தர்மகர்த்தா வாகிய மூவரையும் ஒன்று கூட்டி இவர்களோடு ஆகவேண்டியகாரியங்களைப்பற்றி நாம் கலந்துபேசி தீர ஆலோசித்துச் சில தீர்மானங்கள் செய்தோம். இத்தீர்மானங்களை உடனே சேர்மான் அவர்களிடம்கொடுத்து யூனியன் பஞ்சாயத்தார் ஆலோசனைக்குக் கொண்டுவரச்சொல்லிக் கேட்டுக்கொண்டோம். இதில் அவர்கள் ஆலோசனைசெய்து ஆக்ஷேபசமாதானங்களெல்லாம் கேட்டபின் பின்வருகிறபடி நம் கருத்தையங்கீகரித்துத் தீர்மானங்கள் செய்தார்கள். இத் தீர்மானங்களில் உடனே அமுலுக்குக்கொண்டுவரக் கூடியவைகள் நாமிருக்கும்போதே அமுலுக்குவந்து சரியாய் நடந்தேறிவந்தன. அவை நடுவில் நின்று



போகாமல் நடந்தேறி வருமென்று நம்புகிறோம். இது விஷயத்தில் செங்கற்பட்டுத் தாசில்தார் அவர்கள் சிரத்தை யெடுத்துக்கொள்வதாகக் காட்டியது நம் முயற்சிக்கு வெகு அனுகூலமாக விருந்தது. செங்கற்பட்டு ஸப்-மாஜிஸ்திரேட்டவர்களும் இந் நடபடிக்கைகள் இடையே தடைப்பட்டு நின்றுபோகாதபடி பார்த்துவருவார்களானால் வெகுஜன உபகாரமாயிருக்கும். யூனியன் பஞ்சாயத்தார் சுகாதாரவிஷயங்களில் அக்கறையுள்ளோர் யாராகிலும் வந்தால் அவர்களுக் கினிதாகநடந்துகொண்டுபிறகு 'பழைய குருடி கதவைத்திறவடி" யென்கிற பழமொழிப் பிரகாரம், காரியங்கள் பழையவழியில் விழுந்துபோகவிட்டு வருவது அபூர்வமல்ல. இந்த ஊரிலும் இப்பொழுது ஏற்பட்ட நடவடிக்கைகள் நிலைத்திருப்பது கஷ்டமென்று ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள். ஊரில் விவேகிகளாக விருப்பவர்கள் அப்படி போகவிடாமல் காத்துவர முயற்சிக்க வேண்டும். அத்துடன் மேலதிகாரிகளான லோகல் போர்டாரும், தாசில்தார் ஸப்-மாஜிஸ்திரேட்டவர்களும் சீர்திருத்த வழியில் நடக்கவாரம்பித்தவர்கள் பின்வாங்கிப் பழையவழியில் விழாதபடி பாதுகாத்து வந்தாலன்றி கிராமங்களில் சுகாதாரவிஷயம் விர்த்தியடைய வழியில்லை. இவ்வூர் விஷயத்தில் நாமெடுத்துக்கொண்ட முயற்சி வீண்போகாதபடி காத்துவருவார்களென்று அவ்வூரிலுள்ள பிரமுகர்களையும், மேலதிகாரிகளையும் மிகவருந்திக் கோறிக்கொள்கிறோம். திருக்கழுகுன்றம் யூனியன் பஞ்சாயத்தார் இது விஷயமாகச் செய்த தீர்மானங்களைச் சேர்மான கொடுத்த நகலிலிருந்தெடுத்துக் கீழே பிரசுரிக்கிறோம்:—

1900ஆம் வருஷம் மார்ச்சு மீ 3உ சனிக்கிழமை பகல் 2-மணிக்கு திருக்கழுக்குன்றம் யூனியன்பஞ்சாயத்து ஆபீசில் கூடிய மீட்டிங்கின் ரோசிடிங்ஸ்.

. . . . . .

விஷயம்.

இப்போது இவ்விடம்வந்திருக்கிற விவேகசிந்தாமணி எடிடர் ம-ா-ா-ஸ்ரீ சுவாமிநாதய்யர் இந்த திருக்கழுக்குன்றம் சானிடேஷன் விஷயத்தில்செய்யவேண்டிய அவசியமான ஏற்பாடுகளைப்பற்றி அவரால் கொடுக்கப்பட்ட லிஷ்டையும் சென்ற பிப்ரவரிமாதம் விவேகசிந்தாமணியில் இந்த யூனியன் சம்மந்தமாய் எழுதிருக்கிற அசத்தையும் வாசிக்கப்பட்டது. அதில் கண்டபடி அவ்வம்சங்களை உடனே அமுலுக்குக்கொண்டு வருவது யுக்தமென்று எல்லா மெம்பர்களாலும் தீர்மானிக்கப்பட்டது.

(1) சங்குதீர்த்த குளக்கரை எப்போதும் சுத்தமாய் இருக்கவேண்டியது.

(2) வண்டிகள் குதிரைகள் குளக்கரையிலேயில்லாமல் கட்டுப்பாடு செய்யவேண்டியது.

(3) குளத்தின் படிக்கட்டுகளையும் பெருக்கி சுத்தம் செய்ய ஒரு கூலியிருக்கவேண்டியது. இதின் செலவை தர்மகர்த்தா அவர்கள் கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொள்ளுகிறார்.

(4) கட்டின துணியோடு ஸ்நானம்செய்யலாம், துவைக்கக்கூடாது. ஆனால் கட்டின துணியை குமுக்கிப் பிழிந்துபோவது குற்றமாகமாட்டாது.

(5) ஆடுமாடு குதிரை முதலானவைகளை குளத்தில் தண்ணீர் குடிக்கவிடக்கூடாது. கழுவவும் கூடாது. ஆனால் தண்ணீர் காட்டவரப்பட்டவர்கள் ஜலத்தில் ஆபாசம் சம்பவிக்காமல் காட்டிப்போவதாய் ஒப்புகொள்ளும்பக்ஷத்தில் அனுமதி கொடுக்கலாம்.

(6) சுவாமி மலைப்பக்கமாய் யாரும் ஆபாசம் செய்யாமல் தடுக்கவேண்டியது. இதற்கு வில்லேஜ் முன்சீபும் போலீசாரும் சகாயம் செய்யவேண்டியதைப்பற்றி கோறப்படவேணும்.

(7) குளத்திற்கு ஜலம்வரும் வரவு காலை துரஸ்து செய்து விடுகிறதாய் தர்மகர்த்தா அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் அந்த பிரதேசத்தில் யாரும் ஆபாசம் செய்யாமல் கவனிக்க வேண்டியது அகத்தியம்தான்.

(8) குளத்தில்விழும் சாக்கடைகால் ஜலம் குளத்தில் விழாமல் தடுக்கவேண்டியதைப் பற்றி தகுந்த ஏற்பாடு செய்யவேண்டியதைக்குறித்து தாலூகா போர்டுக்கு எழுதிக்கொள்ளவேண்டியது.

(9) அக்கிரார குளத்தை சீர்படுத்துவதோ அல்லது தூத்துவிட்டு அங்கு நந்தவனம் செய்துவிடுவதோ. அதைப்பற்றி தர்மகர்த்தா அவர்கள் யோசிப்பதாக ஒப்புகொண்டு இருக்கிறார். இதைப்பற்றி அவருக்கெழுதவேண்டியது அவசியமாய் இருக்கிறது.

C. V. S.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## கெடுவான் கேடுநினைப்பான்.

ஒருநாள் ஒரு கோழியானது குப்பைமேட்டின்மேல் உட்கார்ந்து கூவிக்கொண்டிருந்தது. அதைக்கேட்ட ஒரு நரியானது அருகிற் சென்று கோழியைப்பார்த்து "ஓ! கோழியே! உன்னுடைய முகம் எவ்வளவு அழகாக விருக்கின்றது, இவ்வளவழகுள்ள வேறொரு பக்ஷியை நான் பார்த்ததேயில்லை. உனது குரல்போல இனிமையான குரலை நான் எங்கும் கேட்டதேயில்லை. உன் தந்தையின் குரல்தான் இதற்குச் சமமென்று சொல்லத்தகும். ஆயினும் அது தன் கண்ணை மூடிக்கொண்டு கூவும்பொழுது மிகவும் இனிமையாக விருக்கும்" என்று சொல்லியது. இவ்வளவும் கேட்டுக்கொண்டிருந்த கோழியானது "நானுமப்படியேதான்" என்று சொல்லி சிறகை யடித்துக்கொண்டும் கண்ணை மூடிக்கொண்டும் முன் கூவியதைவிட இனிமையாகக் கூவியது. உடனே நரியானது கோழியிருந்த இடத்திற்கு ஓசைப்படாமல் மெல்லச்சென்று அதைக் கவ்விக்கொண்டு காட்டுப்புறமாய் ஓடியது. அப்பொழுது சில வேடர்கள் அதைப் பார்த்தார்கள்; பார்த்தவுடனே அதைப் பிடிக்கும்படி சில வேட்டைநாய்களை யேவ, அவைகளும் நரியைத் தொடர்ந்தன. நரியானது தன்னுடைய அந்தியகாலம் அணுகியதென்பதை அறிந்து பயப்பட்டபோதிலும் கோழியைமாத்திரம் விடவில்லை அப்பொழுது நரிவாயிலகப்பட்டிருந்த கோழி தான் தப்பித்துக்கொள்வதற்கு ஒருபாயங்கண்டுபிடித்து, நரியைநோக்கி "ஓ நரியே! உன்னைப் பிடிக்கவரும் வேட்டைநாய்களுக்கு கோழி என்னுடையது; நானதை விடமாட்டேன் என்றுசொல்" என்றது. நரியும் கோழியின் தந்திரத்தையறியாமல் அவ்வாறே சொல்லத் தன் வாயைத் திறந்தது. உடனே கோழியானது அதன் வாயினின்றுந் தப்பித்துக்கொண்டு ஒரு க்ஷணநேரத்தில் பக்கத்திலிருந்த ஒரு மரத்தின் மேல் பறந்துபோய் உட்கார்ந்துகொண்டது. இதைப்பார்த்த நரியானது தான் மோசம்போனமைக்கு வருந்தி அங்குநின்று தன் வாயைத் திட்டிக்கொண்டிருந்தது. ஏனென்றால் அது பேசாமலிருந்தால் கோழி யதனுள்ளேதான் இருக்கும்; பேசியதாலன்றோ கோழி தப்பித்துக்கொண்டது. இவ்வாறு நிற்கும் நரியைப்பார்த்து, கோழி நானும் எதிரியைக் காத்துக்கொண்டிருக்கவேண்டிய பொழுது தூங்கிக்கொண்டிருந்த எனது கண்களைத் திட்டவேண்டியதுதான் என்று சொல்லியது. இச்சமயத்தில் வேட்டைநாய்கள்வந்து நரியைப்பிடித்துச் சின்னபின்னமாக்கிக் கொன்றன. இப்படி அறிவீனர்கள் மௌனமாயிருக்கவேண்டிய காலத்துப்பேசியும் பேசவேண்டிய காலத்து மௌனமாயிருந்தும் தமக்கே தீமை விளைவித்துக்கொள்வார்கள்.

இச்சிறுகதையால் நாம் தலைப்பில் எடுத்துக்கொண்ட பழமொழி இனிது விளங்குகின்றது. எப்படியென்றால் நரியானது கோழிக்கு முதலில் கேடுநினைத்தது. அந்தக் கேடானது அதை நினைத்த அந்த நரிக்கே சிறிது பொழுதிற்கெல்லாம் நேர்ந்துவிட்டது. இதனால் அறியவேண்டுவதென்னவென்றால் நாம் ஒருவருக்கும் கேடு நினைத்தலாகாது; நினைத்தால் அக்கேடு நமக்கே விளையும்.

V. M.

OFFICE ✻ MA[DRAS] MAY 1900

லேசான காகிதப்பதிப்பு.
தனிப்பிரதி, 5½ அணா.
பழைய பிரதி, 6 ,,

சந்தாவின் விவரம.
ஒரு வருஷத்துக்கு ரூ. 4.
6 மாதத்துக்கு ,, 2-2.




அறிவைப்பரவச் செய்வதற்கான

மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

*The Publishing Agency reserves to itself the right of republishing separately matters that appear in the Viveka Chintamani.*

புத்தகம் 8.] 1900ஸ்ரீ ஏப்ரல்மீ [இலக்கம் 12.

## Terms of Subscription to the 'Viveka Chintamani.'

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.

Minimum Subscription Rs. 5 per annum.

Single Copy 7½ As.: Back Nos. 8 As. each.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 7*s*. 6*d*. NET PER ANNUM.

**Thin Paper Edition** for the People :—

SUBSCRN. PRICE : YEARLY RS. 4 ; HALF-YEARLY RS. 2-2.

SINGLE COPY, CURRENT NO. 5½ AS.; BACK NOS. 6 AS. EACH.

ENGLISH & FOREIGN SUBSCRIPTION 5*s*. 6*d*. NET PER ANNUM.

**If strictly Prepaid** at the commencement of the term, (*i. e.*, in May of each year) 8 As. discount, off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription, and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

Subscriptions cannot be closed in the middle of a Volume, though regular subscribers may elect to pay their subscriptions in half-yearly instalments. *All notices for discontinuance are to be given in the beginning of the new year, i. e., in April or May; for otherwise one should have to pay for the whole of the current volume.* Outstanding subscriptions are often realised by V. P. P. to prevent accumulation of arrears.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save vexatious delay and needless correspondence.

## விவேகசிந்தாமணி சந்தாவிவரம்.

தளமான காகிதப்பதிப்பு :— அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ. 5. தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

லேசானகாகிதப்பதிப்பு :— சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 4. 6-மாசத்துக்கு ரூ. 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழைய பிரதி 6 அணா.

வருஷாரம்பத்திலே (அதாவது மேமாசத்தில்) தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாச சந்தாவில் 4 அணாவும் தள்ளிக்கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாக்கணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி மற்றபடி சந்தாவை நிறுத்துதல் கூடாது.

☞ வருஷக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தாசெலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச்சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்ட தள்ளுபடி செய்துகொடுக்கப்படும்.

பத்திரிகையை வருஷமத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்தவிரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது ஏப்பிரல் அல்லது மே மாசத்திலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படிக்கின்றி மத்தியில் நிறுத்தினால் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும். சந்தாபாக்கிகள் V. P. P. மூலமாக வசூல்செய்யப்படும்.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி அதிக தாமதத்துக்கும் வீண் கடிதப்போக்குவரவுக்கும் இடமிராது.

# சஞ்சோக்தை சுயம்வரம்

## அல்லது

# ப்ரித்விராஜா சரித்திரம்.

## XVIII. உத்ஸவாரம்பம்.

இன்னிளவேனில்செல்ல விருங்கடற் சுவறவிண்டோய்
சென்னியங்குன்றமெல்லாந் திசைமுகமழற்றச்செங்கேழ்
பன்னிருசுடருமொன்ருய்ப்பகற்கதிர் பரப்பியாங்கு
மன்னுயிர்த்தொகைவெதும்பவந்ததுமுதியவேனில்.

என்றபடி இளவேனில் செல்ல முதுவேனில் வந்தது. உஷ்ணம் அதிகரித்தது. ஏரிகள் குளங்கள் நீர்வற்றியுலர்ந்தன. "மணல்கொதிப்ப வறல்கொதிப்ப வளிகொதிப்ப, எண்ணுவார் எண்கொதிப்ப நறுநீழலியைமனைவிட்டகலார்க்குங், கண்கொதிப்பக் கரங்கொதிப்பக்கால்கொதிப்பக் கற்பகஞ்சார், விண்கொதிப்ப" வேனில் முற்றி வெம்மையதிகரித்து விளங்கியது. இப்படிவெம்மையதிகரித்து எல்லாங்கொதிக்க வெயிலெறிக்கும் வேனிற்காலத்தில் சாயுங்காலவேளைவரவும் ஜனங்கள் அவரவா மனைகளைவிட்டு வெளியில் புறப்பட்டு இனிமையாயடிக்குந்தென்றலை யனுபவித்து இன்புற்றிருப்பார்கள். இப்படி எல்லா ஜனங்களும் இன்புற்றிருக்கும் இனியவேளையாகிய வசந்தகால சந்தியாவேளையில் ஜயசந்தராஜன் அவன் பத்தினி ரூபசுந்தரியோடும் உத்யானவனத்தில் உலாவிக்கொண்டிருந்தான். பூஞ்சோலையில் நடந்துலாவி நலமனுபவித்த அவர்கள் அங்கவ் அமைத்திருந்த கொடிவீட்டில் வந்துட்கார்ந்து அந்தரங்கமாய் வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள். ஏற்றசமயம் எப்போவாய்க்குமென்று பார்த்துக்கொண்டிருந்த ராணி ரூபசுந்தரி அரசன் மனங்குளிர்ந்து உல்லாசமாக விருப்பதையுணர்ந்து "குழந்தை சஞ்சோக்தையை நாம் மறந்தேவிட்டோமே எத்தனை நாளைக்கு இப்படித் துன்பமனுபவிப்பாள் குழந்தை" யென்று மிருதுவசனமாக அவள் விஷயத்தை யெடுத்துப்பிரஸ்தாபிக்கலானாள்.

அரசன் அதுகேட்டு மனந்திடுக்கிட்டு "ஐயோ, அவள் பொருட்டு நான் மனதில் படும் சங்கடத்தை யென்னென்று சொல்வேன். அவள் முரட்டுப் பிடிவாதத்தால் அவளன்றி அனைவரும் வருந்தச்செய்கிருள். என் செய்வேன் !"

"விரகமறியாக்குழந்தை: அவள் என் செய்வாள் ! ஆழமறியாது நாம் காலிட்டுக்கொண்டோம். இனி ஆகும் வழியென்ன ?" என்று இனிமையாய் விசாரித்தாள் ராணி.

"ஆகும் வழியென்ன ? தெய்வம் விட்டது தான்வழி. அந்த ப்ரித்விராஜாவை மாலையிட மட்டும் நான் ஒரு பொழுதும் சம்மதியேன். அவனையன்றி வேறு யாரை வரித்து மாலையிட்டாலும் எனக்குச்சம்மதமே" என்ருன் அரசன்.

"நீங்கள் சொல்லும் வார்த்தை அமர்ந்திருக்கும் நெருப்பை ஆகுதிசெய்து அணைக்கப்பார்ப்பதுபோலிருக்கிறது. அதனால் அணைந்தாலும் அணையும், இன்னும் அதிகமாய் சுவாலைவிட்டெரிந்தாலுமெரியும். அணைவதிலும் இன்னுமதிகமாய் எரிவதே நிச்சயமென்று நம்பலாம். இப்படிப்பட்ட பரீக்ஷைசெய்து பார்ப்பது சரியோ ? ஏற்கனவே குழந்தை சிறைதாங்காது மனமுடைந்து உடல் கருகி உயிர்பிழைத்திருப்பது அரிதாகிவிட்டது. இன்னுமிப்படிப் பரீக்ஷித்தால் ஒருக்கால் குழந்தையின் உயிர்க்கே அபாயம் வருமென்று அஞ்சுகிறேன்." என்று ஹிதமாய், இருக்கும் நிலைமையை யெடுத்துரைத்தாள் ராணி.

"அப்படியானல் என்ன செய்யச்சொல்கிருய் ?" என்று வினவினன் அரசன்.

"குழந்தையின் மனநிலையையறியவேண்டி விசாரித்தேன். சுயம்வரத்துக்கு வந்த மன்னர்களில் அவளுக்கிஷ்டமானவரை வரித்து மாலையிட அனுமதிகொடுத்தால் இணங்கிவரு



வாளென்று தோன்றுகிறது. நாம் ப்ரித்விராஜா கூடாதென்று தடுத்தால் அவள் முன்போல 'வரித்தால் அவனையே வரிப்பேன்' என்று பிடிவாதத்தில் விழலாம். ஆகையால் அதைச் சொல்லாமல் நாம் காரியத்தை நடத்திக்கொண்டு போவதே உத்தமமென்று தோன்றுகிறது. வந்திருக்கிற மன்னவரிலொருவரைத் தானே வரித்து மாலையிடப்போகிருள் ; அவன் தான் இங்கு இல்லையே, வந்தால் அகப்பட்டுக்கொள்ளமாட்டாஞ. அவனைப்பற்றிப் பேசி நாம் என் ஆறினதணலைப் பற்றவைக்கவேண்டும். தங்களுடைய மனதையறிந்துகொண்டு ஏற்பாடு செய்யலாமென்றிருக்கிறேன்." என்று விடைபகர்ந்தாள் ராணி

"ஆனல்சரி அப்படியேசெய்" என்று அரசன் வேறொன்றும் சொல்லத்தோன்ருது, இந்த வில்லங்கத்திலிருந்து எப்படியாவது தப்பித்தால் போதுமென்று பதில்சொன்னன்.

"குழந்தை கௌரிவிருதம் அனுஷ்டித்து வருகிருள். விருதத்துக்குப் பங்கம்வராமல் சுயம்வரத்துக்கு முகூர்த்த மேற்படுத்தவேண்டும். காலமறிந்து தெரிவிக்கிறேன். சீக்கிரத்தில் தானே சுயம்வரம் நடக்க உத்ஸவாரம்பம்செய்ய உத்தரவாகவேண்டும்" என்று கோறிக்கொண்டாள்.

மறுநாட் காலையில் ராணி ரூபசுந்தரி கன்னியாமாடத்துக்குச்சென்று குழந்தை சஞ்சோக்தையைக்கண்டு வாரியெடுத்து முத்தமிட்டு, உச்சிமுகர்ந்து, உடம்பெல்லாம் தடவிக்கொடுத்து கன்றைப்பிரிந்த ஆவைப்போல் தனக்குள்ள தாபமெல்லாம்தீர அவளைக்கொண்டாடி யோகக்ஷேமசமாசாரங்களை யெல்லாம் விசாரித்தாள்.

சஞ்சோகிதையும் தாயார் தன் சிறையிருப்புக்காலத்தில் அரசன் ஆக்கினைக்குப்பயந்து விலகியிருந்தாலும் தன்னிடத்தில் அவளுக்கு உண்மையான அனுதாபமிருப்பதுணர்ந்து உளமகிழ்ந்து இடங்கொண்டு தெய்வத்தின் மேல் பாரத்தைப்போட்டு பரமேசுவரியைத் தியானித்து அவளை தன் காரியம் நிறைவேறச் செய்யவேண்டுமென்று நம்பி, அவளைகதியாக அவள் பாதாரவிந்தமே சரணமென்று அவளெடுத்த விருதத்துக்குக் குறைவு வராமல் அனுஷ்டித்து வந்தாள். ராணி ரூபசுந்தரி சிறிதுநேரம் யோகக்ஷேமங்களைப்பற்றிப் பேசியிருந்து விருதம் சரியாக நடந்துவருகிறதாவென்று விசாரித்துவிட்டு, சுயம்வரத்துக்கு முகூர்த்தம் வைக்க உத்தரவுசெய்யலாமா ? விருதம் முடிக்க எத்தனை நாள் செல்லும் என்று கேட்டாள்.

அதற்குச் சஞ்சோக்தை, "அம்மா, நான் தேவியின்மேல் பாரத்தைப்போட்டு நோன்பு அனுஷ்டித்துவருகிறேன். தேவி கடாக்ஷம் செய்தால் குறிகாட்டுவாள். அது அறிந்து என் மனந்தேறிச் சஞ்சலம் நீங்கியதும சொல்லியனுப்புகிறேன். அதற்குமேல் ஒரு வாரத்துக்குள் முகூர்த்தம் வைப்பதில் எனக்கு ஆக்ஷேபமில்லை. சுயம்வர மண்டபத்தில் எனக்கு இஷ்டமான மன்னவரை வரித்து மாலையிடச் சுதந்திரமளித்திருக்கிறீர்களென்று நம் இக்காரியத்திற்கிசைந்துளேன் என்பதை நான் பின்னும் வற்புறுத்திக்கூறவேண்டுவதில்லை. என் மனோரத மீடேற தேவியருள் புரிவாளென்று நம்பி விருதமெடுத்திருக்கிறேன். உங்கள் ஆசீர்வாதத்தையும் கோறுகிறேன்." என்ருள்.

அனவும், ராணி ரூபசுந்தரி தன் மகளை வாயார வாழ்த்தி நினைத்தகாரியம் நிறைவேறும்படி மனதார ஆசீர்வதித்து இடர்ப்பட்டுநின்ற சுயம்வர மகோத்ஸவம் நடந்தேறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யக்கருதி, மகளை மனமகிழ்ந்திருக்கும்படி ஆதரவு சொல்லி, தானும உளமகிழ்ந்து அரசனை நாடிச் சென்ருள்.

அரசனைகண்டு சந்தோஷம் பொங்கச் சுயம்வரத்துக்கு ஏற்பாடுசெய்ய துரிதப்படவேண்டுமென்று தெரிவித்தாள். இன்னும் ஒரு பக்ஷத்திற்குள்ளே முகூர்த்தம்வைத்து

கொள்ளலாமாதலால் உடனே அது சங்கதியைப் பயிரங்கப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அரசனும் அதற்கிசைந்து மந்திரிபிரதானிகளை வரவழைத்து இடர்ப்பட்ட சுயம்வரம் இனிதுநடந்தேற வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படி கட்டளையிட்டான்.

உடனே, ஊமைகண்ட கனவுபோல் ஒன்றும் விளங்காது அமர்ந்திருந்த அம்மாநகரம் ஜே, ஜெயென்று ஜெயபேரிகைமுழங்க, பலவகை வாத்தியங்களும் கோஷிக்க எங்கும் மங்களகரமாகி இந்திரஜால மகேந்திரஜால வித்தையில்கப்பட்டதுபோல ஒரு நொடிப்பொழுதில் மாயமாய் மாறியது சஞ்சோக்தை சிறையிருக்க விதிக்கப்பெற்றாளென்ற செய்தி பரவியதும் அந்நகரம் சூரியனில்லாச் சோலைபோல் இருளாயிற்று; சந்திரனில்லாச் சாலைபோல் பழுதாயிற்று; "நட்டுவனில்லாத நாடகசாலையிது" என்றார்கள், சிலர்; "வித்வானில்லாத மேன்மக்கள் கூட்டமிது" என்றார் பலர்; ஆறில்லாவூர்போல் அரசனில்லாப்பட்டணம் போல், விளக்கில்லாக்கூடம்போல், வேந்தனில்லா நற்சபைபோல் அம்மாநகர் விளங்காது ஒளிமழுங்கியிருந்தது. இப்பொழுது எல்லாம் ஒரு நிமிஷத்தில் மாறிவிட்டது.

மன்னர்களெல்லாரும் மனங்களித்தார்கள். ஆடவரெல்லாம் அகமகிழ்ந்தார்கள். மாதர்களெல்லாம் மருள் நீங்கிற்றென்றார்கள். மறையோரெல்லாம் நம் மிடிதீர்ந்ததென்றார்கள். கூத்தாடிகளெல்லாம் குதூஹலப்பட்டாடினார்கள். வித்தையாடிகள் வியாகூலம் நீங்கினார்கள். தொம்பர் மறவர் குறவர்களெல்லாம் 'தாம் தோம்' என்று தமரமடித்துக் குதித்தார்கள். இன்னுமுள்ள மற்றவர்கள் அவரவர்களுக்கிசைந்தபடி சந்தோஷங்காட்டிக்கொண்டாடினார்கள். இத்தனை ஆரவாரங்களையுங் கேட்ட சஞ்சோக்தை இவையொன்றிலும் ஈடுபட்டவளாயின்றி ஏழாமுப்பரிகையின் மீதேறி விருதங்கள் எடுப்பதும், வெளியில் வந்து பார்ப்பதுமாயிருந்தாள். ஒரு நாளாயிற்று, இரண்டுநாளாயிற்று. மூன்றாம்நாளும் விழித்தகண் மூடாமல் விருதமிருந்தாள். கூடவிருந்தவர்கள் கன்னிமனம் உணரவில்லை. அவள் மனதிலுள்ள பாரத்தை அவள் பாங்கிபட்டுந்தானறிவாள். யாருமுணராமல் அவள் இரகசியமாய் நோன்பிருந்தாள். நாலாநாளில் நல்லசகுனமாச்சு; பூஜைகள் முடித்து அவள் புறம் போந்து பார்க்கையிலே, சாதாப்புறாவொன்று அங்கு சடுதியில் வந்திறங்கிற்று. வந்தபுறாவுக்கு வகைவகையாய்த் தீனிபோட்டாள். தீனிகள்போட்டுத் தண்ணீரும் வார்த்திட்டாள். அந்தப்புறாவை அவள் பிடித்து முத்தமிட்டாள். முத்தமிட்ட கன்னி முகமலர்ந்து மனமகிழ்ந்தாள். அதன் கால்களை ஆராய்ந்து அப்பக்ஷியைத் தன் கண்களில் ஒத்திக்கொண்டாள். இந்தக் குறிகண்டு அவள் மனதுமிகத் தேறலுற்றாள். உள்ளூர ராஜகன்னி உவகைமிகவும்கொண்டு உப்பரிகைவிட்டு உடனேகீழிறங்கிவந்தாள். தன் பாங்கியை யழைத்து பக்ஷிசகுனமாயிற்றென்றாள். தேவியனுக்கிரகம் தனக்குக்கிடைத்ததென்று, தாயார்க்குச் செய்தி தடையின்றி யனுப்பிவைத்தாள். ராணி ரூபசுந்தரி இச்செய்தி கேட்டு மனமகிழ்ந்து, இன்னும் ஒரு வாரத்தில் முகூர்த்தம் வைக்கவேண்டுமென்று ராஜாவுக்குத்தெரிவித்தாள்.

இப்பொழுது கன்யாகுப்ஜத்தில் எங்கும் சந்தோஷம் பரவியது; கிரகணம்விட்ட சந்திரனைப்போல் அம்மாநகர் பிரகாசித்து விளங்கியது. சந்திரனுக்குள்ள களங்கம்போல் இரண்டொருவர் மனதில்மட்டும் இத்தனை சந்தோஷத்தினடுவே சிறிது களங்கமிருப்பினும் அது குற்றமாகத் தோற்றாது, குணத்தையேயெடுத்துக்காட்டுவதா யிருந்தது.

இச்சமயம் அம்மாநகரில் நடந்த ஆட்டபாட்டங்கள், கூத்துக்குதிப்புகள், வித்தை விளையாட்டுகள் இவைகளை வர்ணிக்கப்புகின் இங்கு அசாத்தியமாகும். இராஜாக்களும் வீரர்களும் அஸ்திர சஸ்திர வித்தைகள் காட்டி



யானையேற்றம் குதிரையேற்றம் பழகினார்கள். பாட்டுகளும் கூத்துகளும், வேட்டை விளையாட்டுகளும் வேணவாய் நடந்தன. தெருவுகளில் தொம்பர்கள் ஒருபக்கம் கம்பம் நாட்டி ஆடினார்கள். குறவர்கள் ஒருபக்கம் குறம் சொல்லிப்பாடினார்கள். வித்வான்கள் ஒருபக்கம் வேஷம்போட்டாடினார்கள். இப்படிப் பலபேர் பல பட்டடையாக ஆடின ஆட்டபாட்டங்களையும் கூத்துக் குதிப்புகளையும் எடுத்துரைத்து வர்ணிப்பது நமக்கு இலகுவாகத் தோற்றவில்லை.

உத்ஸவகாலங்களில் ஜனங்கள் கும்பு கூடும் இடங்களிலெல்லாம் சேர்ந்து சாமான்ய ஜனங்களுக்குச் சந்தோஷம் புகட்டும் இந்த வித்தையாட்டிகள்,

உடுக்கையடிக்கிறதும் உருட்டிவிழிக்கிறதும்
நயனங்கள் உருளுவதும் லாடகவிபாடுவதும்
தமரமடிக்கிறதும் சக்கரங்கள்சுற்றுவதும்
கத்திசுழற்றுவதும் கிரணங்கள்போடுவதும்
பாலாசுழற்றுவதும் பாட்டுகள்பாடுவதும்
ஈட்டிசுழற்றுவதும் எக்களித்துப்பேசுவதும்,

பார்க்கவும் கேட்கவும் மிகவேடிக்கையாகவிருக்கும். இவர்கள் நடுத்தெருவில் கூத்தாடி, கண்டோர் மகிழ்ந்து கொடுத்ததை உகந்தேற்றுத் திருப்தி யடையவேண்டியவர்களா யிருந்தாலும், இவர்கள் ஆடும் வித்தைகளும் செய்யும் வேடிக்கை விநோதங்களும் இப்பொழுது ஆடம்பரமாய்வந்து கூடாரமடித்து 'சர்க்கஸ்' என்றும் 'பார்ஸ்' என்றும் வித்தைகள் வேடிக்கைகள் காட்டி யேராளமான திரவியம் சேகரித்துப்போகும் மேல்நாட்டு நாகரிகவித்தையாடிகள் காட்டுமவைகளுக்குத் தோற்றவையென்று சொல்லக்கூடாது. மினுக்குத்தளுக்குச்செய்து ஜனங்கள் மனதைக் கவர்ந்து பணம் பறிக்கமட்டும் இந்த வித்தையாடிகளுக்குத் தெரியாதேயன்றி சிறந்த வித்தைகளாடுவதற்கு வேண்டிய துணிச்சல், தைரியம், சாமர்த்தியம் இவைகளிற் சிறிதும் குறைந்தவர்களன்று. இவர்களில் கூத்துக்காட்டிக் குறம்பாடும் மாதர் சிலர், சஞ்சோக்தை வசிக்கும் கன்னியாமாடத்தின் வாசலில்வந்து உட்புக அனுமதிகேட்டார்கள். அப்பொழுது வாசற்காப்போர் காரணம் விசாரிக்க அவர்களிலொருத்தி,

"பாடமனமுண்டு பாட்டுஞ்சிலபாடவந்தோம்
பாட்டு சிலபாடியல்லோ பரிசுபெற இங்குவந்தோம்
கவியுஞ்சிலபாடி கனகம்பெறவேண்டிவந்தோம்
கூத்துசிலதாடி கொடுப்பதுவைவாங்கவந்தோம்"

என்று குறம்பாடுங் குரலில் அவர்க்குப் பதிலுரைத்தாள். இதைக் கேட்டிருந்த தாதியொருத்தி சஞ்சோக்தையிடம் ஓடி அம்மா வாசலில் குறமாதர் சிலர் பல வேஷம் போட்டுக்கொண்டு வித்தையாட வந்திருக்கிறார்கள். காவலர் உள்ளேவிடமாட்டோமென்கிறார்கள்; அவர்கள் அழகையும் வேஷத்தையும் நான் என்னென்று சொல்வேன்.

நெற்றிநிழல்காட்ட நீலவிழிசோதிமின்ன
குரலோசையானதுதான்கோகிலத்தைமாற்றடிக்கும்
பாடுங்குரலோசை பரமனுக்கேயொப்பிடலாம்.

என்று புகழ்ந்து மகிழ்ந்து கொண்டாடி அவர்களை உள்ளே யழைத்துவர உத்தரவு கேட்டாள். சஞ்சோக்தை யதுகேட்டு தன் பாங்கியின் முகத்தைக் குறிப்பாய்ப்பார்த்தாள்; பாங்கியும் அவளைப்பார்த்தாள். இவர்கள் நயனபாஷையைக் கிட்டவிருந்த தாதி யறிந்திலள். சஞ்சோக்தை, பாங்கி முகத்தைப்பார்த்துப் புன்சிரிப்போடு அக்குறமாதர்களைச் சிங்காரத்தோட்டத்திற்குள் அழைத்துவர அனுமதிகொடுத்தாள். உடனே அவளும் பாங்கியும் தாதிகள் புடைசூழ சிங்காரவனத்திலுள்ள மண்டபத்துக்கு வேடிக்கைபார்க்கவந்தார்கள். அன்றைக்கு அவ்விடத்தில் இரண்டுமணிநேரம் வெகு சந்தோஷமாகக் கழிந்தது. முதலில் குறமாதொருத்தி அங்கிருந்தவர் சிலருக்குக் கைபார்த்துக் குறி கூறினாள். இப்படிக் குறிகூறிக் குறம்பாடிவருகையில் அவர்கள் எஜமானிக்குவரும் யோகத்தையும், சந்தோஷத்தையும்பற்றிச் சொல்லி, அவள் மனோ

பிஷ்டம் நிறைவேறப்போவதை அடிக்கடி யெடுத்துச்சொல்லிக் குறம் பாடினாள். பிறகு சிலர் குறக்கூத்தாடினார்கள். அதில் குறமா தொருத்தியை, குறவன் வந்து பலாத்காரமாய்க் கொண்டுபோய்க் கலியாணம் செய்துகொண்டதை விசேஷ வைபவமாக மனதிற்பட விளையாடிக்காட்டினார்கள். பிறகு யுத்தம் நடக்கிறபாவனை காட்டி, யுத்தவீரர் சௌரிய பராக்கிரமத்தைக்காட்ட குறமாதொருத்தி கத்திக்கட்டி வித்தை யாடினாள்.

கொண்டாட்டமாடுவாள் குதிப்பாள்குலுக்கிநிற்பாள்
ஐந்தாறுகத்திஅவள்சுழற்றித்தானெறிந்து
தரையில்விழவொட்டாமல் தானேந்திவாங்கிடுவாள்
தேவிபராக்கென்று கைக்குப்போட்டிடுவாள்.

சற்றுநின்று, தோள்கொட்டி, ஆர்ப்பரித்துக், களைதீர்த்துக்கொண்டு, பின்னும் கத்தியெடுத்து முன்னிலும் விசேஷமாக ஆடத்துவக்கினாள்.

கத்தியெடுத்திடுவாள் கடுகச்சுழற்றிடுவாள்
பாலாசுழற்றிடுவாள் பந்துபோல்விட்டெறிவாள்
ஆகாசம்போனகத்தி அடியில்விழவொட்டாமல்
கீழேவிழவொட்டாமல் கிளிமொழியாள் ஏந்திநிற்க
தரையில்விழவொட்டாமல் தையலருமேந்திநிற்க
சக்கரம்போல்சுழற்றிடுவாள் தனியாகுமேபோட்டிடுவாள்
பம்பரம்போல்சுழற்றிடுவாள் பார்மேல்சுழன்றிடுவாள்
தேவிபராக்கென்று போடுவாள்பாகுதன்னை.

இப்படி அபூர்வமான வித்தை யாடிவருகையில் எல்லோர் கண்ணும் கருத்தும் வித்தை யாடிமேல் பதிந்திருக்க குறமாதிலொருத்தி சஞ்சோக்கையினிடம் நின்று வித்தை விசேஷத்தைப்பற்றிச் சொல்பவள்போல் இன்னும் என்னென்ன விஷயங்களையோ கூட்டிச்சொல்லிவந்தாள். சஞ்சோக்கையும் வித்தையின் மேற்கண்ணுயிருந்தாலும் கருத்துமட்டும் கிட்டநின்ற குறத்தி சொல்லும் வார்த்தைகளிற் செல்ல அவற்றால் உண்டான மனோசலனங்கள் முகத்தில் விளங்கக் கேட்டிருந்தாள்.

C. V. S.

## காந்திமதி.

### III.

### அதிகாரம்—7.

சம்பாஷணை. ஓர் பூஞ்சோலை.

கமலாம்பாள்.—சகி, நைடதமே மிகவும் நேர்த்தியான கிரந்தம் அதன் வாக்கின் நடை இலட்சணமாயிருக்கின்றது.

விசாலம்.—அதைச் செய்தவர் யாரென்றுனக்குத் தெரியுமா? அதிவீரராமபாண்டியனல்லவா?

கம.—பாண்டியனா? ஓரரசனுக்குக்கூட இவ்வளவு சொற்பொலிவு மேவிய கிரந்தம் செய்ய அவகாசமிருந்ததோ? அக்கிரந்தத்தின் நடையில் ஒரு கம்பீரமும் ஓட்டமும் பொருந்தியிருக்கின்றது. அப்பாண்டியர் அலங்காரத்தில் சமர்த்தர். அவர் வருணிப்பு யாவும் யாம் பாரா வஸ்துக்களைப் பார்வைக்குக் கொண்டுவந்துவிடத்தக்கன.

விசா.—அவர் சாமர்த்தியம் அலாதி. இல்லறத்திற்கிசைந்த விஷயங்களைப்பற்றி இயம்பும்போது ஏனைய கவிகளுக்கிராத ஒரு லளிதமும் சொற்பொலிவும் அவருக்குண்டு. பக்திமார்க்கமாய்ப் பாடல்கள் இசைக்கும்பொழுது கன்னெஞ்சையும் கரைக்கத்தகுந்த பதங்கள் பிரயோகிப்பார்.

கம.—பக்திமார்க்கமாயும் பாடல்கள் செய்திருக்கிறாரா?

விசா.—நீ யறிந்தது இவ்வளவுதானா? திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கருவைவெண்பா வந்தாதி முதலியன அவர் செய்தவை யல்லவா?

கம.—ஆமாம். அப்புத்தகங்களிலிருந்து நமது காந்திமதி பாடல்கள் பாடுவதைக் கேட்டிருக்கிறேன்.



விசா.—காந்திமதி நேற்றையதினம் பாடிய பாட்டைசொல்லு பார்ப்போம்.

கம.—(பாடுகிறாள்.)

சிந்தனையுனக்குத்தந்தேன் திருவடியெனக்குத் தந்தாய்
வந்தனையுனக்குத்தந்தேன் மலரடியெனக்குத் தந்தாய்
பைந்துணருனக்குத்தந்தேன் பரகதியெனக்குத் தந்தாய்
கந்தனைப்பயந்தநாதா கருவையிலிருக்குந்தேவே.

விசா.—இதல்லடி, இதல்ல.

கம.—ஆமாம். இதுதான் நமது காந்திமதி, இது பரிவர்த்தனை யலங்காரமென்று கூடச்சொல்லவில்லையா!

விசா.—அது சரிதான். இதற்கப்புறம் ஒன்று பாடினாளே அதைச்சொல்லு.

கம.—(பாடுகிறாள்.)

ஆதவன் மதிபாரனல் வெளிபுனல் கா[illegible] சனென்றெட்டுப்
பேதமாமுருவாயருவமாய் நிறைந்தபெற்றியா ஒற்ற நுன்னை
ஏதிலுணர்வேனுணருமாறருளா யிளநிலாப்பசுங் கொழுந்தணிந்த
சோதியே, கருவையொப்பனை களபத்துணை முலை தழுவுநாதனே

விசா.—நீ பாடுவதற்கும் காந்திமதி பாடுவதற்கும் எவ்வளவு வித்தியாசம். குட்டை குட்டையாக முடித்து விடுகிறாய்.

கம.—நீயொன்று பாடு பார்ப்போம்.

விசா.—நைடதத்திலிருந்தா?

கம.—ஆம்.

விசா.—(பாடுகிறாள்.)

அறுகான்முரலுநறுங்கூந்தற்றோகையொருத்தியவியுய்யப்
பெருவான்வரைகளனைத்து நெடுங்கடல்வாய்ப்பெய்த பெருங்கவிகள்
சிறுகானுயிர்க்குந்தமிழ்வரையை முந்நீரகத்திற்சேர்த்தியவே
அறுகாதலைத்தனக்குறைய மடவார் பலருமுய்வாரே.

கம.—ஆஹா இதைக் காந்திமதி பாடவேண்டும். வீணைகானம்போலிருக்கும். இப்பாட்டிற்குப் பதவுரை சொன்னதோடு கூடக் கருத்துரையும் எனக்குச்சொன்னாள்.

விசா.—கருத்துரையைச் சொல்லு.

கம.—சீதையின்பொருட்டு மலைகளைக் கடலிற்போட்ட குரங்குகள் பொதியமலையையும் கடலிற்போட்டிருக்குமேல் கணவரைப்பிரிந்த மாதர்கள் பலரும் உயிர் வாழ்ந்திருப்பார்கள். ஏனெனில் அம்மலையினின்று புறப்படும் தென்றல் அப்போது இடமகன்று உயிரிழக்குமென்றாள்.

விசா.—அப்படிச் சொல்லிவிட்டு, "அது உண்மைதான்.—ஆ—" என்று பெருமூச்சு விட்டதைக் கவனிக்கவில்லையா?

கம.—காந்திமதிதானே—ஆமாம். ஏனடி அப்படி!

விசா. அவளுக்குச் சுயம்வரகாலம் வந்தும் இன்னம் விவாகம் நடக்கவில்லையல்லவா, அதனாற்றான்.

கம.—ஆனால அவள் அப்படி யாரை நினைத்துச் சொல்லியிருக்கக்கூடும். எனக்குத் தெரிந்தமட்டும் அவள் ஆசை வைத்த அரசர்கள் யாவருமிலரே.

விசா.—ஒரு வாரத்திற்குமுன் நானவளுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தேன். அப்போது இங்கே வந்திருக்கக்கூடிய சகல அரசர்களையும் வருணித்து அவர்கள் பேரில் அவளுக்கு இச்சையிருக்கின்றதாவெனப் பரீட்சித்தேன். அவள் ஒவ்வொருவருக்கும் ஒரு குற்றம் கற்பித்தாள், எனக்கும் அவளாசை நாடிய மன்னன் யாவன் என நன்கு புலப்படவில்லை

கம.—அதை நாம் நன்றாக அறியவேண்டியது அத்யாவசியகம். அவன் சரியம் நாளுக்

குநாள் மெலிந்து சோர்வடைகின்றதே. காரணமோ தெரியவில்லை. மார்புபருத்து, இடை சிறுத்து கன்னங்கள் ஒட்டிப்போயு மிருக்கின்றதே. சரீரம் மெலிந்தாலும் வளர்பிறைச் சந்திரனைப்போல் காந்தியும் பொலிவும் அதிகரித்து விளங்குகின்றது. ஆதலால் அவளுக்கு வியாதியில்லை.

விசா.—பொறு இதோ பாடிக்கொண்டு வருகிறாள். அவள் மனதை யறியலாம். பேசாமலிரு.

சாந்திமதி.—(பாடிக்கொண்டு வருகிறாள்.)

சங்கரனே, கங்காதரனே, சம்போகங், காதரனே
சங்க, ரனே கங், காதரனே, சம், போகங், காதர
னே,
முத்திநெறியறியாத மூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள்மாறும்வண்ணம்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
அத்தனெனக்கருளியவாறூர்பெறுவாரச்சோவே.

விசாலம்.<br>கமலம். } வந்தனம், மாதே, வந்தனம்.

காந்திமதி.—வந்தனம், சகிகாள்.—என்ன எங்கும் மாவின் வாசனை மனோகரப்படுத்துகின்றதே. நட்டோர்காள், நீங்கள் கன்னெஞ்சரோ, அதோ தழுவுவதற்குக் கொம்பின்றிக் கீழே விழுந்து தவிக்கும் முல்லைக்கொடியைப் பார்த்திருந்தும் அதன் விசனத்தை நீக்காதிருக்கின்றீர்கள். ஆடவர்கள் கண்கள் தைத்தலினால் வாடிய மாதர்கள் முகத்தையொத்த தாமரைகள் யாவும் வண்டினங்கள் ஏறி மிதிப்பதினால் இடருறுவதைப் பார்க்கவில்லையோ? வீணையினிசையை யொத்த கண்டத்தினையும் சிவந்த நயனங்களையும் உடைய பெண்குயில்காள் கூவுதல் ஒழிமின். ஆண் குயில்கள் மனம் கல்லினாலும் கண்கள் அம்பினாலும் ஆக்கப்பட்டதென அறியீர்களோ? அன்றில் பட்சிகாள் இவ்விடத்தை யகல்மின். உங்கள் கதி மாதர்களுக்கு ஏக்கத்தையும் துன்பத்தையும் உண்டுபண்ணும்.

விசாலம்.—என்ன, காந்திமதி, திடீரென நம் பூங்காவனத்தை வருணிக்க வாரம்பித்தனை, காரணம் யாது?

காந்.—விசாலம், உண்மையிலேயே, இப்பட்சிகளையும், தாவுகோலின்றி வாடும் கொடியையும் பார்க்கும்போது ஸ்திரீகளாகிய நமக்கு மனமிரங்காதா? நாமும் புருஷர்களா?

கம.—அகத்திலுள்ளன முகத்திற் றெரியுமென்பது உண்மையேயாயின் நீ பகர்ந்தசொற்கள்யாவும் கண்ணாடிபோல் உன் மனஸ்திதியை வெளியிடுகின்றனபோல் தோன்றுகின்றது.

விசா.—உனக்கு விவாகப்பருவம் அணுகியதாதலின் இவ்வாறு மனம் நொந்து பகர்ந்தனை.

காந்.—சகிகாள், நீவிர் சதியாலோசனையில் வல்லீர். விவாகப்பருவம் அணுகின் என்னை.—அக்கடன் முடித்தல் எந்தை பொறுப்பன்றோ? யானதைக்குறித்து சிந்திப்பதின் பயன் யாது?

கம.—அவ்விஷயம் முடிப்பது உன் தந்தையதாயினும் உன் மனோரதத்திற்கு விரோதமாக அவர் ஏகார். க்ஷத்திரிய ஸ்திரீகளுக்கு விவாகமுறைமை ஸ்வயம்வரமே. ஆதலின் எப்புருஷனை வரிப்பதென நீ முன்னரே ஆலோசித்திருக்க வேண்டியதன்றோ? நம் சக்ரவர்த்திக்குக் கப்பங் கட்டிவரும் பற்பல தேயத்தவர்கள் படங்கள்யாவும் என்னிடத்திலுள. இன்னம் சுயேச்சையாய் நம் சக்ரவர்த்தியுடன் சம அந்தஸ்துகளவர்களாய்ச் செங்கோல்நடாத்திவரும் மன்னர்கள் உருவமும் நம்மாண்மனைச் சித்திரக்காரன் வரைந்திருக்கின்றனன். அவைகளை யுனக்குக் காண்பிக்கின்றேன். அப்



படங்களில் உனக்கு யாது மனதிற்கிசைந்ததென்ன செப்புவையாகில் நாங்கள் அவ்விஷயத்தை நிறைவேற்ற முயலுவதில் சித்தராயிருக்கின்றோம். உன்னைத் திருப்தி செய்வதற்கன்றி வேறே யாது செய்வதற்கு யாங்களிங்கு இருக்கின்றனம். தாய்க்கொளித்த சூலுளதோ? எங்களுக்கொளித்த இரகசியமுண்டோ? காந்திமதி, யாது சொல்லுகிறாய். உன் தேகமோ நாளுக்கு நாள் உருகுகின்றதே.

காந்.—ஓஹோ, கமலா, நீ மெத்தப்படித்தனை போலும்.

விசா.—கமலா, அப்படங்களைக் கொணர்வாயாகில் பொழுது போக்கலாம். யானும் பார்க்கவேண்டுமென்று ஆவலுற்றிருக்கின்றேன்.

கம.—இதோ வருகிறேன் (கொண்டுவரப் போக.)

காந்.—கமலம் சிற்சில சமயங்களில் முற்றக்கற்றவர்போல் பேசுகிறாள்.

விசா.—காந்திமதி, அவள் சொல்லுவது முழுதும் சரியே. அது எப்படியிருந்தாலும் நாம் அப்படங்களைப் பார்த்து வேடிக்கையாயிவ்வந்திப்பொழுதைக் கழிக்கலாம்.

கம.—(வர) விசாலம், ஓடிவா, ஓடிவா, இப்படங்கள் நழுவி விழுகின்றனவே. பிடி, பிடி.

விசா.—சரி, நானிப்படங்களைப் பார்க்கின்றேன். காந்திமதி, நீ வருணிப்பதில் மிகச் சமர்த்தி; எங்களுக்குப் பாடம் சொல்லும்பொழுதெல்லாம் நீ வருணிப்பதைக் கேட்டிருக்கிறேன். இப்படங்களை ஒவ்வொன்றாகத் தருகிறேன். நீ யவைகளைப் பற்றி எங்களுக்கு விசதமாகச்சொல்லு: இந்தா—இதோ—விசுவநாத நாயக்கன் படம்.

காந்.—நயனங்களைப் பார்! வஞ்சகன் போற்றோன்றுகின்றனன். முகத்தில் இராஜ தேஜஸ் கிடையாது. குரூபி—இதை எறி—வேண்டாம்.

விசா.—இது கர்னாடக தேசத்தரசன்.

காந்.—பிரமன் தன்னிடத்திலிருந்த சரக்கு யாவையும் செலவழித்துவிட்டான் போலிருக்கிறது. இவ்வளவு ஸ்தூல சரீரமும் இவ்வுலகத்திலிருக்கின்றதோ? கலங்கிய நீரில் தோன்றும் சூரியன்போல் அவன் மனம் முகத்தில் தெரியவில்லை.

விசா.—இதுதான் விஜயரகுநாத சோழன் படம்.

காந்.—ஓஹோ, இவரை நான் பார்த்திருக்கின்றேன். இவர் அதிக ரூபலாவண்ணிய முடையவர்., அதிக விருத்தாப்பியர்.

விசா.—நீ ஒருபொழுதும் பார்த்திருக்கமாட்டாய் அவர் இங்கே நம் இராஜ்ஜியத்திற்கு வந்ததேயில்லை. இப்படத்தைப் பார். இவனும் சோழன்தான். ஆனால் இராஜவம்சத்தைச்சேர்ந்தவன் அல்லன். நம் சைன்னியங்களுக்கு அதிபதி; இவன் பெயர் வீரசேனன்.

காந்.—(வெகுநேரம் உற்றுப்பார்த்து) போதும் எனக்குத் தலைவலிக்கின்றது. இப்படத்தை நான் வைத்திருக்கிறேன். பின்னர் இதைப்பற்றி யுனக்கு வருணிப்பேன். தென்றல் அதிகமாக வீசவீச எனக்கு சரீரம் ஜாஸ்தியாக உஷ்ணமாகின்றது. காரணமறிகிலேன். கமலா, இவ்வெண்பட்டையும் இப்புட்பமாலையையும் பன்னீரில் நனைத்துக்கொண்டுவா அதை மேலே போர்த்துக்கொள்வோம்.

விசா.—என்ன, காந்திமதி, இராஜாதிராஜாக்கள் படங்களிருக்க அவைகளை யெல்லாம் பாராது போதுமென்றாயே.

காந்.—அவர்கள் அரசர்களாயின் நமக்கென்ன?

கமலம்.—இல்லை, அவர்களுடைய படத்தையெல்லாம் கண்ணுறாது, நம் சக்ரவர்த்தி

யின்கீழ் குற்றேவல் செய்யும் இச்சோழன் படம் வந்ததட்சணமே நிறுத்திவிட்டாயே.

காந்.—கமலா, நீ வாயறியாது பேசுபவள். இவ்வீரன் குற்றேவல் செய்வதாக உனக்கெப்படித் தெரியும். அவன் கண்ணியத்திற்காகவே அவ்வுத்தியோகத்தை ஒப்புக்கொண்டதாக என் தந்தை திம்மராயரிடம் அடிக்கடி சொல்ல நான் கேட்டிருக்கிறேன். நீயொன்று மறியாது கண்டபடி பிதற்றல் தர்மமன்று.

விசா.—அது எப்படியிருந்தபோதிலும் இவன் சோழன்; நம் சக்ரவர்த்திக்கு அடங்காத தேசத்தவன்; இவ்வீரசேனன் அதிக இறுமாப்புப் பிடித்தவனும். ஒருவரையும் இலட்சியம் செய்வதில்லையாம். ஆனால் வேலையில் சமர்த்தனும். அமர்க்களத்தில் அவனுக்கு அமரர்களும் ஈடாகார்களாம். இவ்வளவு சாமர்த்தியமுள்ளவனுக்கு அடக்கமல்லவா இருக்க வேண்டும். அது இல்லை.

காந்.—விசாலம், நீயுமென்ன, இப்படி யாரம்பித்துவிட்டாய். சோழனாயிருப்பதும் அவன் குற்றமா. வீரனென நீயே பகர்கின்றனை. ஒருவரையும் இலட்சியம் பண்ணாமல் சத்தியத்திற்கு மட்டும் கீட்டுப்பட்டுப் பேசுதல் க்ஷத்திரிய வீரர்களின் ஸ்வபாவம். அது அவர்க்கு ஆபரணமாகுமே யொழிய ஒரு குணக்குறைவாகாது.

கம.—நீ இப்படி இப்புருஷனுக்குப் பர்வதைப் பார்த்தால்—

காந்.—போடியம்மா, இப்படியே பரிகாசம் செய்கின்றீர்கள். நான் திருவாசகம் வாசிக்கப்போகின்றேன்.

(போகின்றாள்.)

விசா.—கமலா, பார்த்தனையா காந்திமதி வலையில் அகப்பட்டனள். வீரசேனனைத்தான் அவள் வரிக்கின்றாள்.

கம.—இவ்வளவு ரூபத்திற்கும், இவ்வளவு படிப்பிற்கும் அவன் இயைந்த புருஷன்தான்.

விசா.—அவனுக்கென்னடி, மகாசூரன் கல்வியில் தேர்ந்தவனும்.

கம.—இவளுக்குத்தான் என்ன. இவள் படிப்புக்கென்குறைவு. சமஸ்கிருத பாஷையில் நாடகாந்தம் அறிந்தவள். தமிழில் தான் கேட்கவேண்டியதில்லை. அவள் அன்றையதினம் எழுதியிருந்த உபந்யாசத்தைப் பார்த்தனையா? எவ்வளவு நேர்த்தி.

விசா.—நாழிகையாய்விட்டது போவோம்வா.

(போகிறார்கள்.)

## அதிகாரம்—8.

நாம் இப்பொழுது காந்திமதியின் பூஞ்சோலையினின்றும் தட்சிண சக்ரவர்த்தியின் கூடாரத்திற்கு வந்துவிட்டோம். கிருஷ்ணராயர் வழக்கம்போலவே கட்டிலில் சாய்ந்தாற்போல் படுத்துக்கொண்டிருந்தார். அருகில் ஒரு ஆசனத்தில் அவர் பிரதானி திம்மராயர் கையில் ஒரு நிரூபத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். இவர்களுக்கு எதிரே ஒரு பொற் சிம்மாசனத்தில் யாரோ ஒருவர் மிகவும் கம்பீரத்துடன் வீற்றிருந்தனர். அவர் சரீரம் யாவும் பார்வைக்குப்புலப்படவில்லை. காற்றோட்டத்திற்காகவோ மற்றெவ்விஷயத்திற்காகவோ, மிகவும் ‘தொளதொளப்பான’ அங்கியினால் அவர் யாக்கையின் மேற்பாகம் முழுதும் மூடப்பட்டிருந்தது. இரண்டுபாதங்களும் கொஞ்சமேனும் வெளிக்குத்தெரியாமல், கோஷா ஸ்திரீகளைப்போல், பாதரட்சைக்குள் ஒளிந்து கொண்டன. முகத்தினின்றும் உற்பத்தியாகி கண்டத்தின் முன்பாக ஓடி கடிமார்புவரையிலும் எட்டி மிகக்கம்பீரமாய்த் தழைந்திராநின்ற தாடியினால் சாதாரணமாய்த் தெரியக்கூடிய கழுத்தின் முன்பாகமும், முகத்தின் ஏறக்குறைய அர்த்தபாகமும் மறைந்துபோயின. மேலுதடுகளின்மேல் கூறைபோட்டதுபோல் படர்ந்து வளர்ந்திருக்கும் மீசை, தன் செழிப்பினாலும் மிகவும் பயங்கரமாய் முறுக்கிட்டு காதளவோடி வளர்ந்திருப்பதினாலும் தன்பேரில் அப்புருஷருக்குள்ள பட்சத்தையும் விசுவாசத்தையும் தெரிவித்தது.

கண்டத்தின் பின்பாகமாவது பார்வைக்குப் புலப்பட்டதோவெனில் அதுவும் இல்லை. அப்புருஷர் சிரசைச்சுற்றி, விந்தயபர்வதத்தைப் போல் உன்னதமாயும் ஏற்றத்தாழ்ச்சியாயும் வளர்ந்து, பின்பக்கம் தோளளவு ஓடிப், பின்னர் கழுத்தைச்சுற்றி வந்து மார்பின் முன்னால் விரிந்து விழுந்த தலைப்பாகை, தெரியக்கூடிய பாகங்களையும் முற்றிலும் மூடினது. இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ள தண்டகாரண்ணியமென்னும் வனத்தைக்காட்டிலும் மிகவும் அடர்ந்த அத்தாடியின்மேனின்றும், ஏனையவர்களைத் தன் கனத்தால் நசுக்கித்தூள் பண்ணக்கூடிய அத்தலைப்பாகைக் கீழ்நின்றும் பளீர் பளீர் என்று ஒளிவீசி இரண்டு நயனங்களும் பிரகாசித்தன. கொஞ்சம் புலப்பட்ட நெற்றியினின்றும் அப்புருஷன் ஸ்வர்ணவர்ணமுள்ளவனெனத் தெரிந்தது. இடை இடையே மேனோக்கித் தாடியை யொழுங்கிட்டு மார்போடு மார்பாய் தடவிக்கொடுத்து போஷித்து வந்த வலதுகையின் விரற்களினின்றும் அவர் சரீராகிருதி ஒருவாறு ஊகிக்கலாயிற்று.

“ஆக்பர் சிபார்சு கடிதம் கொடுத்திருக்கிறாரா பிரதான்” எனச்சக்ரவர்த்தி கேட்க. திம்மராயரும் “பிரபோ, இதுதான், நான் வைத்திருப்பதுதான்” என்று சொல்லித் தன் கையிலிருந்த கடிதத்தை அரசன் கையிற்கொடுத்தனர். அக்கடிதத்தை விரித்து கிருஷ்ணராயர் வாசிக்க வாரம்பித்தார். அக்கடிதம் இந்துஸ்தானியில் எழுதப்பட்டிருந்தது. அப்பாஷையில் சக்ரவர்த்திக்கு மிகத் தேர்ச்சி; ஆயினும் இச்சரிதம் வாசிப்போர்களுக்கு ஒருவேளை அருக்குபாஷை தெரியாமலிருக்கக்கூடுமென நினைத்து நாம் இங்கு மொழிப்பெயர்த்து எழுதுகிறோம்.



### கடிதம்.

“அல்லாவின் தாடியின் கிருபையினால் (அரசன் நகைக்கின்றனன்) தட்சிணதேசம் முழுவதும் ஆண்டுவரும் நமது சகோதராராகிய கிருஷ்ணராயருக்கு நபிகளின் அருளும் முகம்மதின் கடாட்சமும் உண்டாவதாக.

“நம் சகோதரர் கொடுமையான சுரத்தினால் வருத்தப்படுவதாகத் தெரியவந்தது. அதைக் கேட்டு வருத்தமடைந்தேன். இருந்தபொழுதிலும் நம்மாலாவது ஒன்றுமில்லை. அல்லாவின் மனதின்பிரகாரம் யாவும் நடப்பது திண்ணமெனவே முகம்மதுவும் சொல்லியிருக்கின்றனர்.

“இக்கடிதம் கொண்டுவரும் கைபிட் அப்டல்லா வைத்தியத்தில் மகாநிபுணர். நமக்கு அவர்தான் அரண்மனைவைத்தியர். அவருடைய யோக்கியதையைப்பற்றியும் சாமர்த்தியத்தைப்பற்றியும் நாம் ஜாஸ்தியாக எழுத வேண்டியதில்லையென்று நம்புகிறோம். அவ்விஷயங்களை நம்சகோதரரே பரிட்சித்து அறிந்துகொள்ளலாம். கூடிய சீக்கிரத்தில் நம்சகோதரரை சுரத்தினின்றும் சுவஸ்தப்படுத்தும்படி அல்லாவைப் பிரார்த்திக்கும்

ஆக்பர்.”

இக்கடிதத்தை யரசன் புன்னகையுடன் வாசித்துவிட்டுப் பின்பு முன்னிருந்ததுபோல அதை மடித்துக்கொண்டே தன் பிரதானியைப்பார்த்து “திம்ம, ஆக்பர் கடிதத்தின் மரியாதையையும் கம்பீரத்தையும் பார்த்தீரா? இவ்வளவு பெருந்தன்மை துருஷ்கசக்ரவர்த்திக்கு இருப்பது உலகத்திற்கு ஓர் ஆச்சரியமாயிருக்கின்றது.”

திம்மராயா.—பிரபோ, இத்துருஷ்கசக்ரவர்த்தியின் பெருமையை என்னென்று சொல்வேன். இராச்சிய தந்திரத்தில் மகாநிபுணர். குடிகளுக்கு சிநேகர். சத்துருக்களுக்கு சிம்மம்; துஷ்டர்களுக்கு கண்டகன்; சிஷ்டர்களுக்கு பரிபாலகன்; தயை,

யின்கீழ் குற்றேவல் செய்யும் இச்சோழன் படம் வந்ததட்சணமே நிறுத்திவிட்டாயே.

காந்.—கமலா, நீ வாயறியாது பேசுபவள். இவ்வீரன் குற்றேவல் செய்வதாக உனக்கெப்படித் தெரியும். அவன் கண்ணியத்திற்காகவே அவ்வுத்தியோகத்தை ஒப்புக்கொண்டதாக என் தந்தை திம்மராயரிடம் அடிக்கடி சொல்ல நான் கேட்டிருக்கிறேன். நீயொன்றுமறியாது கண்டபடி பிதற்றல் தர்மமன்று.

விசா.—அது எப்படியிருந்தபோதிலும் இவன் சோழன்; நம் சக்ரவர்த்திக்கு அடங்காத தேசத்தவன்; இவ்வீரசேனன் அதிக இறுமாப்புப் பிடித்தவனும். ஒருவரையும் இலட்சியம் செய்வதில்லையாம். ஆனால் வேலையில் சமர்த்தனும். அமர்க்களத்தில் அவனுக்கு அமரர்களும் ஈடாகார்களாம். இவ்வளவு சாமர்த்தியமுள்ளவனுக்கு அடக்கமல்லவா இருக்கவேண்டும். அது இல்லை.

காந்.—விசாலம், நீயுமென்ன, இப்படி யாரம்பித்துவிட்டாய். சோழனாயிருப்பதும் அவன் குற்றமா. வீரனென நீயே பகர்கின்றனை. ஒருவரையும் இலட்சியம் பண்ணாமல் சத்தியத்திற்கு மட்டும் கீட்டுப்பட்டுப் பேசுதல் க்ஷத்திரிய வீரர்களின் ஸ்வபாவம். அது அவர்க்கு ஆபரணமாகுமேயொழிய ஒரு குணக்குறைவாகாது.

கம.—நீ இப்படி இப்புருஷனுக்குப் பரிவதைப் பார்த்தால்—

காந்.—போடியம்மா, இப்படியே பரிகாசம் செய்கின்றீர்கள். நான் திருவாசகம் வாசிக்கப்போகின்றேன்.

(போகின்றாள்.)

விசா.—கமலா, பார்த்தனையா காந்திமதி வலையில் அகப்பட்டனள். வீரசேனனைத்தான் அவள் வரிக்கின்றாள்.

கம.—இவ்வளவு ரூபத்திற்கும், இவ்வளவு படிப்பிற்கும் அவன் இயைந்த புருஷன்தான்.

விசா.—அவனுக்கென்னடி, மகாசூரன் கல்வியில் தேர்ந்தவனும்.

கம.—இவளுக்குத்தான் என்ன. இவள் படிப்புக் கென்குறைவு. சமஸ்கிருத பாஷையில் நாடகாந்தம் அறிந்தவள். தமிழில் தான் கேட்கவேண்டியதில்லை. அவள் அன்றையதினம் எழுதியிருந்த உபந்நியாசத்தைப் பார்த்தனையா? எவ்வளவு நேர்த்தி.

விசா.—நாழிகையாய்விட்டது போவோம்வா.

(போகிறார்கள்.)

### அதிகாரம்—8.

நாம் இப்பொழுது காந்திமதியின் பூஞ்சோலையினின்றும் தட்சிண சக்ரவர்த்தியின் கூடாரத்திற்கு வந்துவிட்டோம். கிருஷ்ணராயர் வழக்கம்போலவே கட்டிலில் சாய்ந்தாற்போல் படுத்துக்கொண்டிருந்தார். அருகில் ஒரு ஆசனத்தில் அவர் பிரதானி திம்மராயர் கையில் ஒரு நிருபத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். இவர்களுக்கு எதிரே ஒரு பொற்சிம்மாசனத்தில் யாரோ ஒருவர் மிகவும் கம்பீரத்துடன் வீற்றிருந்தனர். அவர் சரீரம் யாவும் பார்வைக்குப்புலப்படவில்லை. காற்றோட்டத்திற்காகவோ மற்றெவ்விஷயத்திற்காகவோ, மிகவும் 'தொளதொளப்பான' அங்கியினால் அவர் யாக்கையின் மேற்பாகம் முழுதும் மூடப்பட்டிருந்தது. இரண்டுபாதங்களும் கொஞ்சமேனும் வெளிக்குத்தெரியாமல், கோஷா ஸ்திரீகளைப்போல், பாதரட்சைக்குள் ஒளிந்துகொண்டன. முகத்தினின்றும் உற்பத்தியாகி கண்டத்தின் முன்பாக ஓடி நடுமார்புவரையிலும் எட்டி மிகக்கம்பீரமாய்த் தழைந்திராநின்ற தாடியினால் சாதாரணமாய்த் தெரியக்கூடிய கழுத்தின் முன்பாகமும், முகத்தின் ஏறக்குறைய அர்த்தபாகமும் மறைந்துபோயின. மேலுதடுகளின்மேல் கூறைபோட்டதுபோல படர்ந்து வளர்ந்திருக்கும் மீசை, தன் செழிப்பினாலும் மிகவும் பயங்கரமாய் முறுக்கிட்டு காதளவோடி வளைந்திருப்பதினாலும் தன்பேரில் அப்புருஷருக்குள்ள பட்சத்தையும் விசுவாசத்தையும் தெரிவித்தது.

கண்டத்தின் பின்பாகமாவது பார்வைக்குப் புலப்பட்டதோவெனில் அதுவும் இல்லை. அப்புருஷர் சிரசைச்சுற்றி, விந்தயபர்வதத்தைப்போல் உன்னதமாயும் ஏற்றத்தாழ்ச்சியாயும் வளர்ந்து, பின்பக்கம் தோளளவு ஓடிப், பின்னர் கழுத்தைச்சுற்றி வந்து மார்பின் முன்னால் விரிந்து விழுந்த தலைப்பாகை, தெரியக்கூடிய பாகங்களையும் முற்றிலும் மூடினது. இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ள தண்டகாரண்ணியமென்னும் வனத்தைக்காட்டிலும் மிகவும் அடர்ந்த அத்தாடியின்மேனின்றும், ஏனையவர்களைத் தன் கனத்தால் நசுக்கித்தூள் பண்ணக்கூடிய அத்தலைப்பாகைக் கீழ் நின்றும் பளீர் பளீர் என்று ஒளிவீசி இரண்டு நயனங்களும் பிரகாசித்தன. கொஞ்சம் புலப்பட்ட நெற்றியினின்றும் அப்புருஷன் ஸ்வர்ணவர்ணமுள்ளவனெனத் தெரிந்தது. இடை இடையே மேனோக்கித் தாடியையொழுங்கிட்டு மார்போடு மார்பாய் தடவிக்கொடுத்து போஷித்து வந்த வலதுகையின் விரற்களினின்றும் அவர் சரீராகிருதி ஒருவாறு ஊகிக்கலாயிற்று.

"ஆக்பர் சிபார்சு கடிதம் கொடுத்திருக்கிறார் பிரதான்" எனச்சக்ரவர்த்தி கேட்க, திம்மராயரும் "பிரபோ, இதுதான், நான் வைத்திருப்பதுதான்" என்று சொல்லித் தன் கையிலிருந்த கடிதத்தை அரசன் கையிற்கொடுத்தனர். அக்கடிதத்தை விரித்து கிருஷ்ணராயர் வாசிக்க வாரம்பித்தார். அக்கடிதம் இந்துஸ்தானியில் எழுதப்பட்டிருந்தது. அப்பாஷையில் சக்ரவர்த்திக்கு மிகத்தேர்ச்சி; ஆயினும் இச்சரிதம் வாசிப்போர்களுக்கு ஒருவேளை துருக்குபாஷை தெரியாமலிருக்கக்கூடுமென நினைத்து நாம் இங்கு மொழிப்பெயர்த்து எழுதுகிறோம்.



### கடிதம்.

"அல்லாவின் தாடியின் கிருபையினால் (அரசன் நகைக்கின்றனன்) தட்சிணதேசம் முழுவதும் ஆண்டுவரும் நமது சகோதரராகிய கிருஷ்ணராயருக்கு நபிகளின் அருளும் முகம்மதின் கடாட்சமும் உண்டாவதாக.

"நம் சகோதரர் கொடுமையான சுரத்தினால் வருத்தப்படுவதாகத் தெரியவந்தது. அதைக் கேட்டு வருத்தமடைந்தேன். இருந்தபொழுதிலும் நம்மாலாவது ஒன்றுமில்லை. அல்லாவின் மனதின்பிரகாரம் யாவும் நடப்பது திண்ணமெனவே முகம்மதுவும் சொல்லியிருக்கின்றனர்.

"இக்கடிதம் கொண்டுவரும் சையிட் அப்டல்லா வைத்தியத்தில் மகாநிபுணர். நமக்கு அவர்தான் அரண்மனைவைத்தியர். அவருடைய யோக்கியதையைப்பற்றியும் சாமர்த்தியத்தைப்பற்றியும் நாம் ஜாஸ்தியாக எழுதவேண்டியதில்லையென்று நம்புகிறோம். அவ்விஷயங்களை நம்சகோதரரே பரீட்சித்து அறிந்துகொள்ளலாம். கூடிய சீக்கிரத்தில் நம்சகோதரரை சுரத்தினின்றும் சுவஸ்தப்படுத்தும்படி அல்லாவைப் பிரார்த்திக்கும்

ஆக்பர்."

இக்கடிதத்தை யரசன் புன்னகையுடன் வாசித்துவிட்டுப் பின்பு முன்னிருந்ததுபோல அதை மடித்துக்கொண்டே தன் பிரதானியைப்பார்த்து "திம்ம, ஆக்பர் கடிதத்தின் மரியாதையையும் கம்பீரத்தையும் பார்த்தீரா? இவ்வளவு பெருந்தன்மை துருஷ்கசக்ரவர்த்திக்கு இருப்பது உலகத்திற்கு ஓர் ஆச்சரியமாயிருக்கின்றது."

திம்மராயர்.—பிரபோ, இத்துருஷ்கசக்ரவர்த்தியின் பெருமையை என்னென்று சொல்வேன். இராச்சிய தந்திரத்தில் மகாநிபுணர். குடிகளுக்கு சிநேகர். சத்துருக்களுக்கு சிம்மம்; துஷ்டர்களுக்கு கண்டகன்; சிஷ்டர்களுக்கு பரிபாலகன்; தயை,

தாட்சண்ணியம், ஜீவகாருண்ணியம், வீரம் யாவும் அவரிடத்தில் குடிகொண்டுள. சைன்னியம் நடாத்துவதில் சமானரகிதன். தேகபலாட்டியமும், கம்பீரமும் பார்ப்போருக்கு அச்சத்தை யுண்டுபண்ணத்தக்க நயன தீட்சண்ணியமுமுடையவர்.

கிருஷ்ணராயர்.—திம்ம, நீரவரைப்பார்த்திருக்கின்றீரோ.

திம்மராயர்.—இல்லை, அரச, அதை நாம் ஊகித்துக்கொள்ளக்கூடாதா? கண்ணாடி எப்படி முகத்தின் பிரதிபிம்பத்தை விளக்கிக் காட்டுகின்றதோ அப்படியே அரசர்களின் செங்கோன்மை, கொடுங்கோன்மை யாவும் பிரஜாவாக்கினால் தெரியவரும். ஆக்பர் புகழ்ச்சியே இந்துஸ்தானத்தவர் மனதிலும் வாக்கிலும் உள்ளது.

கிரு.—ஈவு இரக்கமின்றி கொள்ளையடிக்கும் டைமர் வம்சஸ்தவன் அல்லவா?

திம்ம.—இருந்தாலென்ன? கள்ளியின் வயிற்றில் அகில் பிறப்பதில்லையா?

கிருஷ்ண.—அதினாற்றான் நான் இத்துருக்க வைத்தியனையும் இப்பொழுது வைத்தியம் செய்யத்தீர்மானம் செய்யப்போகின்றேன்.

திம்ம.—பிரபோ! அதற்கும் இதற்கும் கொஞ்சங்கூட சம்பந்தம் இல்லை. ஒரு அரசன் தன் தேயத்தில் நல்லவனாக இருக்கக்கூடும். ஏனைய தேயத்தரசர்களுடன் பழகும்பொழுது சாம-தான-பேத-தண்டம் என்பதில் ஒரு தந்திரத்தைப் பிரயோகிக்கக்கூடும். பிரஜைகளை கண்ணுக்குக்கண்ணாகப் பார்த்துவந்த அநேக அரசர்கள் வஞ்சனையினால் யாற்றரசர்களை வென்று ஜயமடைந்ததை நான் கண்கூடாகப்பார்த்திருக்கின்றேன். ஆதலின் தாங்கள் தயவுசெய்து இத்துருஷ்கவைத்யனை மரியாதையாக நீக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கிருஷ்ண.—திம்ம! என்ன பிதற்றுகிறீர். அவ்வீரனுடைய நல்லெண்ணத்தை ஒருவிநாடியளவும் சந்தேகிப்பதே கண்ணியக்குறைவு அன்றோ. இத்தகைய பெருந்தன்மையரைப்பார்த்திலேன். அப்படியிருந்தபொழுதிலும் என்னுயிரல்லவா போகின்றது. நீரென்னத்திற்கு இவ்வளவு ஆத்திரப்படுகின்றீர். (இதைச்சொல்லிவிட்டு, திம்மர் என்ன மறுமொழி பகர்வாரென அறிந்தவர்போல், தலைகுனிந்து புன்னகை நகைத்தனர்.)

திம்ம.—அரச, இம்மாற்றம் பகர்வது அறிவுடையோர்க்கு அழகன்று என நான் பலதரம் தங்களுக்குச் செப்பியிருக்கின்றேன். தங்கள் உயிர் தங்களுடையதல்ல. விஜயநகரத்துப் பிரஜைகளது. தாங்கள் கண்டபடி தங்கள் உயிரை அபாயத்திற்கு உட்படுத்துவீர்களேயாகில் நான் என்னுயிரை இலட்சியம் செய்யாமல் தங்களை அப்படிச்செய்வதினின்றும் தடுப்பதற்கு சித்தனாயிருப்பேன். (இம்மாற்றம் பகன்றபொழுது திம்மராயர் கண்கள் படபடத்தன.)

கிருஷ்ண.—திம்ம! மன்னிக்கவேண்டும். நீ[illegible] சொல்லுகிறபடி செய்யத்துணிவேன் ஆயினும் இத்துருக்கவைத்தியனை நீக்குவது தர்மமன்று. நீங்களே இவனைப் பரீ[illegible]சித்தபிறகு வைத்துக்கொள்ளுவதற்கு[illegible] நீக்குவதற்கும் தீர்மானம் செய்வீர்.

திம்ம.—(முறுவலித்து) நல்லது! (துருக்க வைத்தியனைப் பார்த்து) சையிட் அ[illegible]டல்லா சாகிப்பு! உமக்கு நம் சக்ர[illegible]தியின் நோயைத்தீர்ப்பதற்கு தை[illegible] உளதோ?

சையிட்.—அமைச்ச, இதைக்காட்டி[illegible] மடங்கு அதிகமான குரூர வியா[illegible] யான் அல்லாவின் அருளால் தீர்[illegible]கின்றேன். இப்படித்தான் முன்[illegible] தடவை—



கிருஷ்ண.—ஆ. ஆ. போனேன், சிவ, சிவ (எனக்கத்தி, தலையணையில் சோகித்து விழுந்தனர்.)

திம்ம.—(கால்கள் தடதடக்க, மனம்பதறி) என்ன செய்வேன்! மயக்கம்போலிருக்கிறதே! நாராயணா, அரண்மனை வைத்தியரை அழைத்துவாபோ.

துருக்கவைத்தியர்.—அமைச்ச, தயவு செய்து கொஞ்சம் உத்தரவு கொடுக்கவேண்டும். கண்மூடிக் கண்திறப்பதற்குள் இம்மயக்கத்தை எவ்விடம் போக்குகின்றேன் என்பதைப்பாருங்கள். அதிகமாகப்பேசினதினால் களைப்புற்று விழுந்தனர். இன்னம் (தாதுவை பரீட்சித்துக்கொண்டே) சுரமும் வேகமாக வீசுகின்றது.

திம்ம.—நல்லது, மருந்துகொடும். அரைநாழிகைக்குள் இம்மயக்கத்தைத் தீர்க்கவேண்டும்.

சையிட்.—(இதைக் கேட்டவுடனே, தன் சட்டைகளின் கூட்டத்தில் புதைந்துகிடந்த ஒரு சீசாவை யெடுத்து வலது கையில் பிடித்துக்கொண்டு நெற்றியளவு தூக்கி “பிஸ்மல்லாஹீம், பிஸ்மல்லாஹீம், நபீம்தயேகரோ நபீம்தயேகரோ” என்ற மந்திரத்தை ஜபித்து இடது கரத்திலிருந்த, சிறு பாத்திரத்தில் அவ்வவுஷதத்தைப் பெய்து, திம்மராயரிடத்தில்கொடுத்து அரசனுக்கு ஊட்டும்படி செப்பினன்.)

திம்மராயரும் அப்படியே செய்தனர். பத்து விநாடி யாவரும் வாய்திறவாது இருந்தனர். உடனே அரசன் கண்விழித்து “ஆ, என்ன வியர்வை, பசிக்கின்றது, பால்” என, பக்கத்திலிருந்த பாத்திரத்திலிருந்து பாலைப்பெய்து அரசனுக்கு அமைச்சன் கொடுத்தனன்.

சையிட் அட்டல்லா அமைச்சனைப்பார்த்து இன்னம் ஒருதடவை அவுஷதம் அளித்தால் அரசனுக்கு சுரம் மட்டுக்கட்டுமென்றும், நித்திரை ஜாஸ்தியாக வருமென்றும் சொல்லி வற்புறுத்தி மறுபடியும் முன்போலவே மந்திரம் ஜபித்து வேறொரு மருந்தில் அரைசீசா அளவு கொடுத்தனன். அதை வாங்கி சாப்பிட்டதட்சணமே அரசன் நித்திரை வருவதாகச் சொல்லி படுக்கையில் சாய்ந்து தூங்க வாரம்பித்தனன்.

சையிட்.—திம்மரே! தயவுசெய்யவேண்டும். நான் போய்வருகிறேன். இனிமேல் கவலையில்லை. தூங்கி எழும்பொழுது வியாதி நீங்கி அரசன் விழிப்பார். அல்லாவின் அருள் வீண்போகாது.

திம்ம.—சையிட்! உம்மைப் பூராவாக நம்பி இக்காரியத்தில் இறங்கிவிட்டேன். ஏதாவது கெடுதி நேரிடும்பட்சத்தில் என்னுயிர்போவதுடன் உம்முடைய தலைக்கும் வந்துவிடும்.

சையிட்.—மகாராஜ அது நானறியேனோ? சக்ரவர்த்திகளுக்கு வைத்தியம்செய்து கூழைப்பாடியாயிருக்கின்றேன். இதோ அரைநாழிகைகழித்து வருகிறேன். உத்தரவுகொடுக்கவேண்டும் (போகின்றார்.)

இவ்வதிகாரத்தை முடிப்பதற்குமுன் ஒரு மாற்றம் பகரவேண்டியிருக்கின்றது. நமது புதுவைத்தியர் சையிட் அட்டல்லாவுக்கு தமிழ் தெரியவே தெரியாது. இருந்தபொழுதிலும் இச்சரிதம் வாசிப்போரின்பொருட்டு அவர் சம்பாஷணை முழுவதையும் இந்துஸ்தானியிலிருந்து மொழிபெயர்த்தனம். இனிமேலும் அப்படியே செய்வோம்.

K. V. S.

## SOME NOTED INDIANS OF MODERN TIMES.

# சில பேர்பெற்ற நவீன இந்தியர்கள் திருச்சாழல். *

1. துங்கமுற நமக்கின்று தொல்லறத்தால் இயன்றதொரு
அங்கிலய அரசாட்சி யதற்கிணைதான் என்னேடீ ?
பங்கமிலா அறப்பயனை மதைப்பயிர்க்குப் பரிந்தளிக்கும்
மங்குலுக்கு நிகராக வழுத்திடலாம் சாழலோ.

2. வாடுமிளம் பயிர்தனக்கு மழையென்ன வழுத்தலலால்
நாடியினம் எதைநிகரா நவின்றிடலாம் ? பகரேடீ ;
கூடும்நிழல் கொண்டு குறைந்த நறும்பயிர்க்குப்
பீடளிக்கும் வெய்யிலெனப் பேசலுமாம் சாழலோ.

3. நன்மழையால் வெயிலாலே நலம்பெற்ற இளம்பயிர்போல்
புன்மையற நாமடைந்த பொருவில்பயன்யாதேடீ ?
பன்மையுறும் பெரும்பயனைப் பகர்விசும்பின் உடுவெண்ணில்
தன்மையுற எண்ணிநாம் சாற்றலாம் சாழலோ.

4. ஆனாலும் அவற்றுள்ளே ஆய்ந்துசில நானறியத்
தேனார்நின் குளிர்மொழியால் திருநுதலாய் செப்பேடீ ;
கானாரும் கடலாழம் நரிவாலால் காண்பாரோ ?
யானோவிவ் வினவலுக்கு விடையிசைப்பேன் சாழலோ ?

5. நண்ணுதார் முடியிடறி நானிலமெல் லாம்கவித்த
தண்ணார் குடைக்கீழ்நாம் சார்ந்தபய னென்னேடீ ?
கண்ணு றறம் களித்துக் கால்குதித்துப் பாய்ந்ததால் ;
எண்ணாரும் இருங்கல்வி இலங்கியதால் சாழலோ.

6. அங்கிலய அரசாட்சி யதிற்கல்வி அறத்தாலே
துங்கமுறும் புகழ்படைத்தார் சிலர்தம்மைச் சொல்லேடீ ;
திங்களெழில் வளர்ச்சிபோற் செழுமனத்தின் நிகழ்வாலே
பங்கமிலாப் புகழ்படைத்தார் பலருளர்காண் சாழலோ.

7. இச்சையொடும் பெருநிதியம் இலக்கமிலாதெழிலாக
மெச்சுமறம் களிதூங்கச் செலவிடுத்தார் விளம்பேடீ ;
பச்சையப்ப னென்றும் ப்ரபுராம சாமி யென்றும்
இச்செகமெல் லாம்துதிக்கும் இவர்புகழைச் சாழலோ.

8. உற்றதொரு பெருங்கல்வித் திறத்தாலே யொண்புகழைப்
பெற்றவர்தம் பெரும்புகழைப் பிழையறநீ பேசேடீ ;
நற்றகையார் **கோபாலராவ் அரங்க நாத** மென்போர்
கற்றதொரு கலைக்களவு † கழறகிலேம் சாழலோ.

* சாழல்—ஓர் விளையாட்டு. † கழறகிலேம்—சொல்லத்திறமையில்லோம்.



9. சொல்லமைத்துப் பாவலர்கள் துதிக்கவிந்தக்கடலுலகில்
நல்லமைச்சின் திறம்படைத்தோர் யாவரவர் நவிலேடீ ;
வெல்லுமதி **மாதவராவ்** விதிபுகழ்ச் **சேஷயசாஸ்த்ரி**
எல்லையில்சீர்ச் **சேஷாத்ரி** யென்பர்பலர் சாழலோ.

10. நீதிசபைக் கணிகலனை நிகரில்புகழ் படைத்தோரை
ஏதமிலா வணங்கேநீ எனக்கறிய இயம்பேடீ ;
ஓதுமுத்து **சாமி அய்யர்** ஒண்புகழ்ச் **சுப்பிரமணிய**
**மேதகையோர்** இவர்பெருமை மேவினரார் ? சாழலோ.

11. பத்திரிகை யெனும்சுடராற் பல்லோர்க்கும் இருளகற்றிச்
* சித்திதரு பவர்தம்மில் சிறந்தோரைச் செப்பேடீ ;
மெய்த்த **சுப்ர மணியய்யர் வீரராக வாசிரியர்**
கத்துகட லுலகிவரைக் கழறிடும்காண் சாழலோ.

12. சட்டநிரு பணசபையில் தமதுமதி வலத்தாலே
நட்டபெரும் புகழ்க்குடையார் யாவரவர் ? நவிலேடீ ;
மட்டில்மதி நுண்மையினால் மற்றிவற்கு நிகரிலரென்
றட்டதிக்கும் புகழ்**பாஷ்யம் அய்யங்கார்** சாழலோ.

13. வல்லதொரு மாசபைக்கு நாயகமாமகிழ்ந்திருந்து
எல்லையறும் புகழ்படைத்தார் யாவரவர் ? இயம்பேடீ ;
சொல்லும் **அநந்த தாசார்லு** தூய **சங்கரநாயர்**
வெல்லும் **மஹா காங்கிரஸ்ஸில்** வீற்றிருந்தார் சாழலோ.

14. பூதவுடல் போலழியாப் புகழுடம்பைப் பெற்றோர்கள்
ஏதமில்தொல் மன்னர் இருங்குலத்தின் ருரேடீ ?
ஆதரவா மாமாகேள் அரியதொரு வண்மையினால்
**சேதுபதி** யின்று சிறந்தான்காண் சாழலோ.

15. பூவலயம் தனில்வேதம் புகலங்கம் கரைதெரிந்த
நாவலர்சி காமணியை நாடினைநீ நவிலேடீ ;
மாவோபாத்யாயரெனும் வளம்பெற்ற வசையறுசீர்
மேவு**மன்னர் துடிராஜு வேதியர்**காண் சாழலோ.

16. கண்டொடுதேன் கலந்தளித்த கணக்கின்மனத் தினிப்புதவும்
வண்டமிழின் பெரும்புலமை வாய்ந்தவரார் வழுத்தேடீ ;
கொண்டகுறு முனிபோலத் தமிழ்க்கடலைக் குடித்தமுதம்
விண்டுபொழி **மீனாக்ஷி சுந்தரம்**காண் சாழலோ.

17. எட்டரிய இசைநூலின் இனமுழுதும் தெரிந்தவரைக்
கட்டழிகிங் குடையாய்நீ கண்டெனக்குக் கழறேடீ ;
மட்டில்புகழ் பெறும்**வையை மாவைத்ய நாத**ரென்பார்
பட்டமசம் பாலொழுகப் பாடினர்காண் சாழலோ.

* சித்தி—அறிவு.

18. கவியமைசேர் பெருஞ்சிறப்புக் கலையின்வரம் பெவர்கண்டார்?
உவமையிலேர் மானேநீ யுணர்ந்தெனக்கிங் குரையேடீ;
அவிரொளிசெய் நிறத்தாலே ஆவியுரு வினுக்களிக்கும்
**ரவிவருமன்** தனைப்புகழும் ஞாலமெலாம் சாழலோ.

19. நிலமிகும் நங்காய்நம் தேசத்தே மகமதியர்
மேலுறுநன் னிலையடைந்தார் யாவரவர் விளம்பேடீ;
**சாலர்ஜங்** கென்னுமொரு தந்திரிதன் பெரும்புகழ்தான்
ஞாலமெலாம் நிமிர்ந்தோடி நலனுறுமே சாழலோ.

20. ஜாதிக்கா ரரிற்சிலரும் தமக்கிதுவே பிறப்பிடமா
மேதக்க உணர்ச்சியினால் விரும்புவர்க ளன்றேடீ;
ஓதக்கேள் குணத்தாலும் ஒப்பறுதம் வாக்காலும்
நாதிக்கும் பெரும்புகழ்சேர் **நார்டனவர்** சாழலோ.

21. இன்னமிந்தத் தென்தேசத் திலங்குசிறப் படைந்தார்கள்
புன்னவுள்ளார் பலரன்றோ பான்மொழிநீ பகரேடீ;
அன்னவரை ஆய்ந்துரைக்க அம்மானே நான் துணியேன்
சொன்னவற்றால் தெளிந்திடுக சூக்குமமாச் சாழலோ.

22. வங்காளம் பொம்பாய் வளமலியும் பிறவிடத்தும்
நங்காய் பலரின்னம் நவிலவுளார் அன்றேடீ;
இங்கா ரவர்பெருமை எடுத்துரைப்பா ரெனக்கந்தப்
பங்கேரு கன்*பலநாப் படைத்திலனே சாழலோ.

**எஸ். முத்து ஐயர்.**

SHORT STORY.

## சிவசங்கரன்.

அது ஒரு விசாலமான நீண்டபாதை. அதில் தாய், தகப்பன், குழந்தைகள் நால்வர், வெயிலாற் சோர்ந்து, தகப்பன் ஒரு பெண்ணையும், தாய் பிறந்து ஆறுமாத மாகாத ஒரு பச்சைக்குழந்தையையும் இடையில் தாங்கி, தலையில் ஓரோர் பெரியதுணி மூட்டைகளுடன், பின்னால் முறையே ஏழு, ஐந்து வயதுள்ள இரண்டு சிறுபிள்ளைகள் பின்தொடர்ந்து வர வழிநடந்து போய்க்கொண்டிருந்தார்கள். இச் சிறுபிள்ளைகளுடைய முகங்கள் பூர்ண சந்திரன் போல் நல்ல தேஜஸுள்ளதாகக் காணப்பட்டன. கருத்த விழிகளும் கூந்தலும் முகவிம்பத்தை அலங்கரித்தன. பார்வைக்கு இச்சிறுவர்கள் இராஜவம்ச புத்திரர்களைப்போல் தோன்றினார்கள்.

ஸ்திரீயோ, பிரசவியாதவள்போல் அதிக யவ்வனமாயும், சுபலக்ஷணங்களுடனும் காணப்பட்டாள். கையில் ஒரு பொன்னிறமான காப்பையும், காதில் கம்மலையும், கழுத்தில் திருமங்கல்லியத்தையும் தவிர விசேஷ நகை நட்டுகளை யணிந்துகொள்ளாதவளாயினும், இயற்கை யழகே அதிகரித்து வெகு சுந்தரமாகக் காணப்பட்டாள். இவள் இடையில் விளங்கிய வஸ்திரம்மட்டும் சுமார் 25-ரூபாய் வரையில் மதிக்கக்கூடியதா யிருந்தபடியால், அவள் சில்லரை நகைகளாகிய குருடு, புலாக்கு, நத்து பேசரி முதலிய பல நகைகளை அணிய வேண்டியசெலவுசெய்து வாங்கிக்கொடுக்கக்கூடிய திரவியஸ்தனை விவாகம் செய்துகொண்டிருந்தும், அவைகளைச் செய்தோ, வாங்கியோ அணிந்துக்கொள்ளாததை நோக்கில், அவைகள் தன் இயற்கையழகை யழிக்குமென்று கருதி நீக்கினளென்று கூறும்படி, அவளுடைய ஒயி

* உகம்=பாம்பு.



யான நடையும், கம்பீரமான பார்வையும், கன்னத்தில் குழிவிழுகிற நகைப்பும் காட்டின. தவிர

"அமிழிமைத்தனைகள் கண்ணுக்கணியெனவமைக்குமா போல்,
உமிழ்சுடர்க்கலன்கள்நங்கை யுருவினைமறைப்பதோரார்
அமிழ்தினைச்சுவைசெய்தென்னவழகினுக்கழகுசெய்தார்
இமிழ்திரைப்பரவைஞாலமேழமையுடைத்துமாதோ."

என்ற பாடலில், பிரமனானவர் ஸ்திரீ புருஷர்களுடைய கண்களுக்கு மேலிமை கீழிமை இரண்டும் அழகென்று நினைத்து, அவை பார்வையை மறைக்குமென்பதை நினையாமற் படைத்ததுபோல, வண்ணமாதர்கள் குற்றமற்ற ஒளிவீசுகின்ற மாணிக்கம் மரகதமுதலிய முழுமணிகள் இழைத்துச் சமைத்த நானாவித திவ்வியாபரணங்களைக்கொண்டு, அவை சிதையின் திருவுருவத்தை மறைக்குமென்பதை யோசியாமல், சுவையுடைய பொருள்கள் எல்லாவற்றிலும் மிக்க சுவையையுடைய தேவாமிர்தத்திற்கு இயல்பாயுள்ள அச்சுவை போதாதென்று, பால் பழம், சீனி, தேனென்னும் இவைகளினால் சுவை கற்பிப்பதுபோல ஜானகியின் இயற்கையழகுக்கு ஏற்றத்தை யுண்டாக்கவேண்டுமென்று, செயற்கையழகு செய்ததை - கடல்சூழ்ந்த உலகமானது அறியாமையுடையதென்று கம்பர் சொல்வதால், இவளதை யறிந்தோ, அறியாமலோ, தன் இயற்கையழகைக்கெடுக்கிற பல நகைகளை விலக்கி, அவர் வாய்ச்சொல்லையும் அபத்தமாக்கினளென்று எண்ணும்படியாகக் காணப்பட்டனள்.

இவள் கணவரை நோக்குங்கால் இவ்வுத்தமியை இரண்டாந்தாரமாக விவாகம் செய்துகொண்டவரென்று எண்ணும்படியாக சுமார் 55-வயதுள்ளவர் போல் விளங்கினார். இவர் நெற்றியில் அணிந்திருக்கிற விபூதியையும், கழுத்தில் விளங்கப்பெற்ற தங்கக் கட்டுகளிட்ட ருத்திராக்ஷமாலையையும், இடையிலுடுத்தியுள்ள பஞ்சகச்ச சோமனையும் பார்க்கும்போது, ஒரு சிவபக்தி சிரோமணி எனத்தகுந்தவாறு தோன்றினர். இவர் தன் தலையில் பெரிய மூட்டையையும், முதுகில் மாராப்பாகக்கட்டிய சிவபூஜைப் பெட்டியையும், இடுப்பில் சுமார் மூன்று வயதுள்ள பெண் குழந்தையையும் தாங்கிக்கொண்டு வழி நடப்பதை எண்ணும்பொழுது, சம்சாரத்திலடிபட்டவரென்றும், வெகு பொறுமையுள்ளவரென்றும் தோன்றிற்று. இவருடைய நடை, உடை, பேச்சு தொனி முதலியவைகளை நோக்கும்பொழுது, சைவக்குருக்கள் வம்சத்தைச் சேர்ந்த ஆசார சீலராகத் தோன்றினார்.

இவர்கள் தங்கள் ஸ்தலமாகிய, கொங்கேழு சிவக்ஷேத்திரங்களில் விசேஷித்த, திருக்குன்றூர் என்றும், திருச்செங்கோடு என்றும் நாமம் பூண்டுள்ள இப்பரதக்கண்டத்தில் எவ்விடத்திலும் காணப்படாததான அர்த்தநாரீஸ்வரர் என்ற சுவாமி சந்நிதியிலிருந்து பிரார்த்தனை செலுத்தும்பொருட்டு மைசூர் பிராந்தியத்திலுள்ள நஞ்சண்டகுடல், உடுப்பி, தலைக்காவேரி முதலிய புண்யஸ்தலங்களை நாடிப் போகிறார்கள். இவர்கள் இங்ஙனம் சென்ற காலம் சுமார் 48 - வருஷங்களுக்குமுந்தி யாதலால் ரயில் பாதைகளில்லை என்பதை யாம் சொல்லாமலே இதை வாசிப்போர்கள் அறிவார்கள். வழியில் திருடர்பயமோ அதிகம். மாட்டுவண்டியிலேறிச் சென்று பிரார்த்தனை செலுத்தவோ இவர்களுக்குப் பிரியமில்லை. பாதையோ சீர்திருத்தப்பட்டு வெகு காலமானது; காட்டாறு முதலிய மழைத்தண்ணீர்ப் போக்குக்கு பாதையில் பாலங்களின்றி, பாதைகளையடித்துக்கொண்டு போகாமலிருக்கும்படி பெருங் கற்களால் பாதையின் இருபுறத்திலும் அஸ்திபாரமட்டு மிடப்பட்டிருந்தது. அந்நீர்ப் போக்குகளுக்கு சமீபத்தில்மட்டும் சில நெருக்கமான சாலை மரங்கள் ஓங்கி வளர்ந்து, நடக்கப்பட்டவர்களுக்கு அவ்விடத்தில்மட்டும் பகலு மிரவும் வித்தியாசமின்றி யிருந்ததேயன்றி, பாதையானது நீள நெடுக சாலை மரங்களையுடையதல்ல. இந்த விடங்களே திருடர்களுக்குத் தகுதியானவிடம். பத்து, பன்னிரண்டு மைல்தூரத்திற்கு கிராமத்தையும் குடிதண்ணீர்க் கிணற்றையும் காண்பது கடினம். இவர்கள் பிரயாணம்செய்தது ஆசனூர் கணவாய் மார்க்கமாதலால் துஷ்ட மிருகங்களினுடைய உபத்திரம் விசேஷமாயிருந்தது.

இவர்கள் மைசூர் வரையில் பல இடங்களில் தங்கி அனேகநாள் நடந்து வடமேற்கு நோக்கிப் போகும்மார்க்கத்தில், ஒருநாள் நடக்க நடக்க வழி தொலையாமலும், தங்கத்தகுந்த வசதியான இடமகப்படாமலும், நடையினால் சோர்ந்து, வெயிலால் களைத்து, மெய்வாடி, நாவரண்டு, தத்தித் தடுமாறிச் செல்லும் அலங்கோலத்தைக்கண்ட

"வெய்யவன்சென்று மேவினன் பாற்கடல்,
செய்யதாமரைச் சேக்கைய வண்டினம்,
கொய்யகோடரத்தன்னின புட்குலம்,
பையவோதியர் பற்றின்ன காமனே,"

என்றபடி கதிரவன் கடலிலாழ்ந்தான். கொஞ்சநேரம் மஞ்சள் வெயிலும் பிறகு வரவர செவ்வானத்தினுடைய பிரகாசமும் தோன்றிப் பேரிருள் கவியவாரம்பித்தது.

நிர்மானுஷியமான இக்காட்டுப்பாதையில் பக்ஷிஜாதிகளும் காணப்படவில்லை. இனி தாமதிப்பதிலுபயோகமில்லையென்று சொல்லி, "சிவசங்கரா, சிவசங்கரா" என்று சதா வாயோயாமல் உச்சரித்துக்கொண்டே, சிவசங்கரபாரதி என்ற குருக்கள் வேகமாய் நடக்க குழந்தைகள் முதலிய சம்சாரமும் பின்தொடர்ந்தார்கள்.

பூனையானது தன்னைத் தழுவத்தெரியாத சக்தியற்ற குட்டியைத் தன் வாயினுற் கவ்விச்செல்வதுபோல, தம்மை ஆசிரயித்து வழிப்படத்தெரியாத சக்தியற்ற ஆத்மாவானது தன்னை யறிந்து ஆசிரயித்து வழிப்படச்செய்தும், குளவியானது அற்ப ஜெந்துவாகிய புழுவினைத் தன்னுருவாக்குவதுபோல் தமது திவ்விய சொரூபத்தை அது மருவப்பண்ணியும், அடைதற்கரிய அசாத்தியமான ஒப்பற்ற பேரின்பத்தை யளிக்கும் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள தாரதம்மியத்தை, வேதாகமங்களின் மூலமாக அறிந்தவரானதால், அவருடைய மூன்று சொரூபங்களில், ஒன்றின் நாமமாகிய தமது நாமத்தையே சதா ஜெபிப்பது அவர் கைக்கொண்டகோட்பாடு.

கொஞ்சதூரத்தில் பாதையின்மேல் ஒரு பெரிய சோலைபோலும் ஊர்போலும் காணவே பிறவிக்குருடன் கண்களை யடைந்தாலெப்படி சந்தோஷமடைவானே அவ்வாறு குதூகலமடைந்து இராத்தங்கிப் போகலாமென்று எண்ணி குழந்தைகளுக்கு தாயும் தகப்பனும் தைரியம் சொல்லிக்கொண்டே சென்றார்கள்.

சுக்லபக்ஷ சவுத்தியாதலால் இவர்கள் படும் அவஸ்தையை எட்டிப்பார்ப்பவன்போல் சந்திரன் ஆகாயத்தில் காணப்பட்டான். தகப்பன் இடையிலுள்ள பெண் குழந்தையும் பிறையைக்கண்டு "அம்புலிமானே ஆடியசித்தப்பா" என்று தகப்பன் தோள்மேல் தாளம் போட்டது. பாதையினிருபுறத்திலும் ரோஜா புஷ்பங்கள் மலர்ந்து பரிமளித்துக்கொண்டிருந்தன. "பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையருமை" என்றதை நிலைநாட்ட சில புஷ்பங்களைப்பரித்து குழந்தைகள் கையில் கொடுத்தாள்.

சோலையை நெருங்கவே தலை முண்டிதமான ஒரு விதவை வெள்ளை வஸ்திரத்துடன் எதிர்ப்பட்டாள். இவளைக்கண்டதும் நமது பாரதி ஒரு விஷயத்தில் சந்தோஷமடைந்து "யாரம்மா? இந்த ஊரில் பிராமணாள்" வீடு எத்தனையுண்டு? ஊர்ப்பெயரென்ன? என்றுகேட்க, அந்த ஸ்திரீ நகை முகத்துடன் சமீபத்தில்வந்து,

"இந்த ஊர்ப்பெயரை என்னவென்று சொல்லட்டும். அப்பெயர் சொன்னவாய்க்கு போஜனம் கூடக்கிட்டாதே. இந்த ஆகாசபட்டணத்தில புருஷர்களோ விருத்தியில்லை. அன்னிய ஜாதிக்காரர்கள் எவ்வளவுபேர் இருந்தாலும் பிராமணர்களாகிய நமக்குபயோகமென்ன! என்னவோ ஐந்தாறு வீடுகளிருக்கின்றன. கைம்பெண்டாட்டிக் கூட்டமாய் அன்றுகண்டு அடுப்புத்தேடி காலக்ஷேபம் செய்கிறோம். எங்கள் பிழைப்புமோர் பிழைப்பா?" என்று துக்கசாகரத்தி லாழ்ந்தவள்போல ஓர் போக்காய்ச்சொன்னாள்.

"சிவசங்கரா, எல்லாம் ஈசன்செயல், எப்படியிருந்தாலும் சகித்துக்கொண்டிருப்பதே மனிதனெடுத்த ஜென்மத்திற்கு அணியாகிய பொறுமை என்னப்படும்.

"சிவசங்கரா, எங்களுக்கு இன்று இரவு தங்க உங்கள் கிரகத்தில் சொற்ப இடம் கொடுப்பீர்களா? கைக்குழந்தைக்குமட்டும் கொஞ்சம் பசுவின்பால் கிடைக்குமா?" என்று பாரதி கேட்டார்,

"உலகத்தில் மனுஷர் இறக்கும்போது என்னத்தை தலையில் கட்டிக்கொண்டுபோகிறார்கள்? எட்டுநாள் வேண்டுமென்றாலும் சுகமாயிருங்கள். விசாலமான வீடு. இரவில் விளக்குவைக்கவும் வகையில்லாத குறைவால் மூலைக்குமூலை குவிந்திருப்பதை வாரி எடுக்கவும் முடிகிறதில்லை. பணமோ! காசோ!! என்று எண்ணவேண்டாம். பெருக்கான் மண்ணே! என்தமக்கை சுப்பி ஒருவளே புண்யசாலி. வெயிலைக்கண்டறியாள், அண்டை அயல்வீடு இவ்விதமென்று அறியாள். வந்தவர்களை வா, என்று அழையாள். இருந்தவிடத்தில் போட்டவலையில் தின்றுவிட்டு பெருமூச்சுவிட்டுக்கொண்டு கிடப்பாள். அவ்வளவு அகம்பாவமும், மரியாதையும், சொகுசுமுள்ளவளென்று எண்ணவேண்டாம். இரண்டு கண்ணுமில்லை! என் தங்கை சேஷியோ, அடுத்தவீடுபோயறியாள், வாயால் உளருவாளேயன்றி பிராணன் போனாலும் இருந்தவிடம்விட்டுப் பெயராள். வீட்டில் யார் நுழைந்து எதை எடுத்துக்கொண்டுபோனாலும், 'எழுந்தால் பொல்லாதவள் சேஷி' என்று சொல்வாளேயன்றி இடம்பெயராள். தர்மிஷ்டி என்றும், உத்தமி என்றும் நினைக்கவேண்டாம். காலிரண்டுமில்லை! இவர்களை வைத்துக்கொண்டு ஒரு விநாடியை ஒரு யுகமாகக்கழிக்கிறேன்" னென்று சொல்லிக்கொண்டே இவர்களைத்தன்வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோனாள். சுமார் ஏழரைமணி இருக்கலாம்.

நெருக்கமான மரங்களுக்கிடையில் பாதையின் பேரில் ஐந்தாறுவீடுகள் காணப்பட்டன. பெரிய பட்டணங்களில் உண்டாகக்கூடிய இரைச்சலைப்போல் சத்தமுண்டாய்க்கொண்டிருந்தது. இவர்கள் கண்களுக்குப் புலப்படுகிறவர்களெல்லாம் வெள்ளை வஸ்திரம் தரித்த பிராமண விதவைகளாகவே காணப்பட்டார்கள். ஒரு வீட்டிலாவது தீபமென்ற நாமதேயமே கிடையாது. இவர்களை யழைத்துக்கொண்டுபோன குள்ளி என்றவள், இவர்கள் தங்குவதற்கு ஒரு 'நடை' யல்லது ரேழியைக்கொடுத்து; ஜலம் மொண்டுவர ஒரு கால்வாயையும் காட்டினாள். குழந்தைக்கு பாலும் கொடுத்து வெகு உபசரணை செய்தாள். இவர்கள் தங்கின நடைக்கு இரண்டுபுறமும் கதவுகளிருந்தன. அந்நடையில் இவர்கள் சிக்கிமுக்கிக்கல்லால் நெருப்புண்டாக்கி, கையுடன் கொண்டுபோயிருந்த அகலில் எண்ணெய்விட்டு, தீபமேற்றி, அவல் முதலிய சிற்றுணவுகளைக் குழந்தைகளும் தாங்களுமாகத்தின்று, நீர் அருந்தி, குள்ளிகொடுத்த பாலை விளக்குச் சுவாலையில் காய்ச்சி, கைக்குழந்தைக்கும் புகட்டி, இரண்டு புறத்திலுமுள்ள கதவை மூடித் தாளிட்டு, குழந்தைகள் நித்திரை செய்தபிறகு, புருஷனும் மனைவியும் பகலில் நடந்து வந்த வரலாற்றைப்பற்றிபேசிக்கொண்டிருந்தார்கள்.

அந்த வீட்டிலுள்ள ஸ்திரீகளாகிய சுப்பி, குள்ளி, சேஷி என்ற மூன்று பெயரைத்தவிர அல்லு அசல் வீட்டுக்காரர்களாகிய ஏழெட்டு ஸ்திரீகளும் புதிதாய் வந்திருக்கிற பந்துக்களை விசாரிக்க வந்தவர்கள் போல் வந்து கூடினார்கள்.

குருடியாகிய சுப்பி.—குள்ளி, எனக்கு ரொம்ப பசியாய்விட்டது. ஆறுபேர் கொண்டுவந்தேனென்று சொன்னாயே. முந்திஒரு குழந்தையையாவது எடுத்து என் கிட்டப்போடேன்.

குள்ளி.—(மெதுவான தொனியுடன்) அதற்குள்ளே உனக்கென்ன வெட்டிக்கொண்டுபோகிறது. அவாள் தீபத்தைத்தான் நிறுத்தட்டுமே.

சேஷி.—குள்ளி, எனக்கு சற்றுநேரமானாலும் பாதகமில்லை. எனக்கு தனியாக ஒரு பிள்ளையைக் கொடுத்துவிட்டால் போதும்.

அசல்வீட்டு ஸ்திரீயொருவள்.– குள்ளி, எனக்கொன்று.

மற்றொருஸ்திரீ.—(குள்ளியைப்பார்த்து) அக்கா என்னை மறந்துவிடாதே.

வேறொருபெண்.—(குள்ளியைப்பார்த்து) அத்தே எனக்கு கைக்குழந்தையைக்கொடுத்தால் போதும்.

சேஷி.—குள்ளி, மணி பத்துக்குமேலாச்சே. இன்னமேன் அவர்கள் தீபத்தை நிறுத்தாமலிருக்கிறார்கள்.

குள்ளி.—(நடையண்டை வந்து) ஐயா, ரொம்பதேசகாலமாச்சே, தீபத்தை நிறுத்திவிட்டு, நடந்துவந்த சிரமந்தீர உறங்கலாகாதா?

இப்படி இவர்கள் பேசியதை செவிகொடுத்துக் கேட்ட புருஷனும் பெண்சாதியும் திகிலடைந்து, நடுக்கமுற்று, ஒருவருக்கொருவர் பேசவும் கூட நாவெழாமல், தீபத்தைத்தூண்டிக்கொடுத்து, மறுபடியும் எண்ணெய்வார்த்து, நமது சங்கரர் பனவோலையிலெழுதப்பட்ட பகவத்கீதையைக்கையிலெடுத்து ஒவ்வொரு சுலோகமாகப் படிக்கத்துவக்கினார். மனைவியும் நடுக்கமுற்று கணவன் முகத்தைப்பார்த்துக்கொண்டே, சிவசங்கரா, சிவசங்கரா வென்று உச்சரித்துக்கொண்டே யிருந்தனள்.

குள்ளி.—(உரத்தசத்தமாக) ஐயா உங்களைத்தான், ஏன் பேசவில்லை? தீபத்தை நிறுத்திவிடுங்களேன்.

பாரதி.—(வாய் உளறிக்கொண்டு) நல்லது தீபமில்லாவிட்டால் எனக்கு நித்திரை பிடிக்காது. இன்னும் கொஞ்சநேரமானபிறகு நிறுத்திவிடுகிறேன். சிவசங்கரா.

ஆபத்துக்காலத்தில் தெய்வத்தின்பேரில் பூர்ணமான நம்பிக்கை வருவது துர்லபம். நம்பி உறுதிப்பிடி பிடித்தவர்களுக்கு கடவுள் உடனே அருள் செய்கிறார். துரோபதி வஸ்திராபரண சமயத்தில் பரிபூரணமாய் கிருஷ்ணனை நம்பி, கண்ணையும் மூடி கைகளையும் மேலே தூக்கிவிட்டபடியால், கருணாநிதியான கடவுள் உடனே காத்தருளினர். அப்படியே நமது சிவசங்கரபாரதியும் இச்சமயத்தில் ஒரேபிடியாய் பகவானை நம்பி, பூஜைப்பெட்டியை எடுத்து,

முன்னால் வைத்துக்கொண்டு ஸ்தோத்திரம் பண்ணி மணியையடித்தார்.

அச்சப்தம் கேட்டவுடனே அடுத்தாற்போல் நெருங்கியிருந்த ஸ்திரீகளெல்லாம் சற்று தூரப் போய்விட்டனர்போல் காணப்பட்டார்கள்.

குருடி சுப்பி.—குள்ளி, இதென்னடி மோசமாயிருக்கிறது. வந்தவர்கள் நமது பசிக்கு உபயோகப் படார்கள்போல் தோற்றுதே.

சேஷி.—உன்பேரைச்சொன்னால் கைக்குவந்தது கூட வாய்க்குவராதே.

குள்ளி.—நான் என்ன செய்யட்டும். வந்தவன் ஒரு தீபமும்; பகவத்கீதை என்ற உத்க்ருஷ்டமான புஸ்தகமும் வைத்துக்கொண்டிருப்பதுடன், வாயில் என்னவோ சொல்லிக்கொண்டு மணியையுமடிக்கிறான். அந்த ஸ்திரீயும் குழந்தைகளும் சரியாய் அக்ஷரங்களமைக்கப்பட்டு பிரணவத்தோடு விளங்குகிற நாற்பத்திமுக்கோண சக்கரத்தைஸ்தாபிக்கப்பெற்ற சத்துகளை தனித்தனி யணிந்துகொண்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் நம் ஜென்மவிரோதிகளன்றோ? என்ன செய்யலாம். அவன் உச்சரிக்கிற மந்திரம் என் காதில் விழும்படியான சமீபத்தில் சென்றால், என் தேகத்தை ஊசியால் குத்துவதுபோல் வலியுண்டாகின்றதே.

பின்பு இந்த ஸ்திரீகளெல்லாம் யோசித்து தூர நின்றுக்கொண்டு கா. கூ. வென்று கூவி பயமுறுத்தினார்கள்.

பாரதியும் கீதையை மூன்று தடவை படித்து முடித்தார். மனைவியும் கணவரையே தெய்வமாகக் கருதி சிவசங்கரா என்று இலக்ஷம் உரு செய்து முடித்தாள். குழந்தைகளும் புரண்டு புரண்டு தூங்கி எழுந்தன. தீபத்தில் எண்ணெயும் வர்த்தியும் தீர்ந்தது. தீபமும் நின்றது.

இப்புண்யவான்களுடைய வருத்தத்தை நீக்க வேண்டி பறந்துவிழுந்து ஓடிவந்தவர்போல் கீழ்த்திசையில் உதயமானார் சூரியன்.

* * * * *

இவர்கள் பாதையின் ஓரத்திலுள்ள ஒரு பெரிய ஆலமரத்தடியில் இருக்கவும், தீபமேற்றப்பட்ட அகலானது அம்மரத்தினோர் பொந்தில் வைக்கப்பட்டிருக்கவும் கண்டார்கள்.

பாரதி முதலியவர்கள் பிரம்மானந்தமடைந்து ஸ்தலங்களை தரிசித்துக்கொண்டு செங்கோடுசேர்ந்தனர்.

T. C. V.

## சென்னை சர்வகலா சங்கத்தார் பட்டமளிக்கும் உற்சவம்.

### 1900.

இந்த உற்சவமானது மார்ச்சுமீ 28உ மாலையில் செனட்மாளிகையில் சென்னை யூனிவர்சிடி சங்கத்தின் சான்சலராகிய கனந்தங்கிய ஸர் ஆர்தர் ஹாவ்லக் அவர்கள் அக்கிராசனம் வகித்தமர்ந்திருக்க நடந்தேறியது. அந்தந்த பரீட்சைகளிற்றேர்ந் தெடுக்கப்பட்ட வித்தியார்த்திகட்குப் பட்டங்களளிக்கப்பட்டபின் ஆனரபில் மிஸ்டர் எப், ஏ. நிகல்சன் அவர்கள் கீழ்வருமாறு அவர்கட்குப் புத்திபோதனையாகப் பிரசங்கித்தார்கள். (அப்பிரசங்கத்தின் சாராம்சத்தைநமது விவேகசிந்தாமணி வாசிப்போருக்காகச் சுருக்கி எழுதுகிறோம்.)

"நீங்கள் எல்லாரும் இச்சர்வகலாச்சங்கத்தவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இன்று உங்கட்குச் சில உறுதிமொழிகளை உரைத்துக்களிக்க எனக்குச் சமயம் வாய்த்ததற்காக மிகச்சந்தோஷிக்கிறேன். நீங்கள் ஊக்கமும் விடாமுயற்சியுங்கொண்டுழைத்து வந்ததனால் உங்கள் குணம் பலப்பட்டிருக்கின்றது. உங்கள் மனதும் பழகி விசாலித்திருக்கின்றது. இடைவிடாத,

"முயற்சி திருவினையாக்கும்; முயற்றின்மை யின்மை புகுத்திவிடும்."

என்பதினுண்மையையும் முயற்சியொன்றிருப்பின் ஆகாததொன்றுமில்லை என்பதையும் அறிந்துகொண்டிருக்கிறீர்கள். இவ்விதமாகப் பழகிப் பலப்பட்டிருப்பதால் நீங்கள் உங்கள் சுயவிருத்தியைக் கவனிப்பது தகுதியே. ஆனால் அதுமட்டு மல்ல, நீங்கள் உலகத்தார்பொருட்டும் உண்மை கடைப்பிடித்தும், சுயநலம் பாராது அவர்களுடைய அபிவிர்த்திக்காக உழைக்கவேண்டுமென்றும் இச்சங்கத்தார் உங்களை ஆசீர்வதிக்கிறார்கள்.

மேலும் தங்கள் வருத்தங்களைக்கவனியாமல் சந்தோஷத்தோடு உழைத்தும் பல கஷ்டங்களையும்



பொறுமையுடன் அனுபவித்தும் நீங்கள் இந்தப்பட்டங்களைப்பெற்று அவற்றின் பயனையடைதற்குக்காரணபூதர்களாயிருந்த உங்கள் தகப்பன்மார் முதலினோர்களையும் நான் மறவாமல் அவர்கள் பக்கலும் நன்றி செலுத்துகின்றேன். "விக்டோரியா ஹோஸ்டல்" என்ற பிள்ளைகளின் உணவு வசதிக்கட்டிடம் இப்போது புதிதாய் ஆரம்பித்திருத்தலையும் நான் சந்தோஷத்தோடு குறிப்பிடுகின்றேன். இவ்விஷயம் 1882 - ம் வருஷத்தில் ரெவரெண்டு டாக்டர் மில்லர் அவர்கள் முதல்முதல் ஆரம்பித்தார்கள். இவைகள் பிள்ளைகளை நடை, படிப்பு, வாசஸ்தலம் முதலிய எல்லா விஷயங்களிலும் சீர்படுத்தி அவர்களை, ஒருவர்க்கொருவர் பாந்தவ்யமுடையவர்களாகச் செய்து அவர்கள் காலத்தையும் சந்தோஷமாகக்கழியச்செய்கின்றது. சென்ற வருஷத்தில் தங்கள் தங்கள் முயற்சிகளை நாட்டிற்குபகரித்து பெருமைபெற்ற சில பெரியோர்களின் பெயர்களை உங்களுக்காக இங்கே குறிக்க நினைத்தேன். ஆனால் அவகாசமில்லை. அன்றியும் அவர்களிற் பெரும்பான்மையினரை உங்களுக்கே தெரிந்திருக்கும். ஒருவர் இவ்விராஜதானியிலேயே உயர்ந்த நீதியதிபஸ்தானத்தை வகித்து அதை யலங்கரித்திருக்கிறார். மற்றொருவர் தனக்குச் சட்டங்களில் உள்ள உன்னத அறிவை இந்நாட்டின் சட்ட நிரூபணங்கட்குதவியிருக்கிறார். வேறொருவர் சில ஜில்லாக்களை வகித்து ஆண்டுவரலானார். வேறு சிலர் வித்தையில் உழைக்கிறார்கள். இப்பெரியோர்கட்கு நீங்கள் தரும் புகழ்ச்சியோடு அவர்கள் வழியைப்பின் பற்றி நடத்தலாகிய பெரும் புகழ்ச்சியையுந் தரவேண்டும். தன் வாழ்நாள் முழுதும் இத்தேசத்தவரின் கல்வியிலும் விருத்தியிலும் செலவழித்தவரும் இன்று எல். எல். டி. (L. L. D.) என்னும் பெரும் பட்டம் பெற்றவருமாகிய டாக்டர் மில்லர் அவர்களுடைய பேரைமாத்திரம் இங்கேகுறிக்கவேண்டுமென்றெண்ணுகிறேன். இனி நீங்கள் எந்தக் கடமைகளைச் செய்தலுக்காக இதுவரையும் பழக்கப்பட்டீர்களோ அக்கடமைகளைப்பற்றிச் சில சொல்லுகிறேன்! 'இதுவரையும்' என்று ஏன் சொன்னேனென்றால் உங்கள் பழக்கமானது இதனோடு பூரணமாகாமல் நீங்கள் பழகப்பழக அது எப்போதும் இனிச்செய்யவேண்டிய கடமைகளின் அவசியத்தையே காட்டி நிற்கின்றதாதலினால் உங்கள் வித்தையானது எவ்வளவு பூர்த்தியானதா யிருந்தபோதிலும் அது நீங்கள் வருங் காலத்திற் செய்யவேண்டிய கடமைகள் இன்னவை என்று காட்டி அவற்றைச் செய்வதில் உங்கட்குதவுவதைத் தவிர வேறொன்றும் செய்யாது, நீங்கள் உலகவாழ்க்கையிற் பிரவேசிக்கும் இப்போதுதான் உங்களுக்கு எண்ணமும் செயலும் வழிகளும் மிக முக்கியமா யிருத்தல்வேண்டும். 'ஒரு எண்ணத்திலிருந்து செயலுண்டாகும், செயலிலிருந்து வழக்கந் தோன்றும், வழக்கத்திலிருந்து குணம் விளையும், குணம் முடிவிற்கு வழிகாட்டும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இது நிற்க, நீங்களெல்லாரும் இப்போது கூறிய உறுதிமொழிப்படி அவரவர் சக்திக்குத் தக்கபடி ஜனங்களின் ஒற்றுமையையும் அபிவிருத்தியையுங் கோரி நடக்கவேண்டும். உங்கள் கீதையிலும் 'உன் காரியங்கள் உலகத்தாரின் க்ஷேமங்கருதியதாகவும் இருக்கவேண்டும். ஏனெனில் பெரியோர் எவ்வழி நடக்கிறாரோ அவ்வழியே உலகமுஞ்செல்லும். அவர் மேன்மையாக கொண்டதையே உலகமுங் கொண்டாடும்' என்று உரைக்கப்பட்டிருக்கின்றது. சாதாரணமனிதர்க்கே இது ஒவ்வுமென்றால் கற்றுத்தேர்ந்து விசாலித்த எண்ணங்களுடைய உங்கள் விஷயத்தில் அதிகமாக இருக்கவேண்டும். எவனுக்கு அதிகங் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அவனிடத்தில் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணத்திற்காகச் சில கடமைகள் குறிக்கின்றேன். ஏனென்றால் இவ்வித பொதுவிதிகள் செய்கைக்கு வழிகாட்டுவனவல்ல. விவசாயக்குறைவு அல்லது தேசத்தவரின் தரித்திரம் ஆகிய இது போன்ற விஷயங்களைத் திருத்தும் முயற்சியில் நம்மில் எவ்வளவுபேர் இது நம்மாலாகாதென்று பின் வாங்குகிறார்கள். ஏனென்றால் அவற்றின் பற்பல பகுதிகளைப்பிரித்து நோக்காது முழுமையும் நோக்கி அவற்றை இராசாங்கத்தார் பெரிய உபாயங்களாலும் சீர்திருத்தங்களாலும் நிவர்த்திக்கலாமே யன்றி நம்மாற் றனித்தனி ஒன்றும் செய்யமுடியாதென்று நினைக்கிறோம். ஆனால் உண்மையில் நாமெல்லாருந் தான் தனித்தனி அதற்கு உத்தரவாதிகளாகிறோம். நாம் நம்வாழ்க்கையை மற்றவர்களின் வாழ்க்கையோடு சமப்படுத்தி நம்முயற்சிகளின் பலனை மற்றவர்களினுபயோகத்திற் குதவவேண்டும். இவ்விதமாகத்தனித்தனி அவரவர்களாலானது சிறியதேனும் சுத்தம் சக்திக்கியன்ற அளவு செய்துமுடிப்பதினாலேயே பெரிய விஷயங்களெல்லாம் நிறைவேறுகின்றன. நீங்கள் ஒரு பெரிய ராஜ்ய நிர்வாகம் பெறலாம் அல்லது பெறாமலிருக்கலாம். அதன்மத்தியில் உங்கள் நகரம் அல்லது கிராமத்தின் விவகாரங்களிலுதவிபுரியலாம். ஹைகோர்ட்டின் நீதிஸ்

தானத்திலிருந்து நீங்கள் நீதிசெலுத்தும்படி உயர்ந்தாலும் உயராவிட்டாலும் உங்கள் சொந்த ஊரில் நேரிடும் வழக்குகளைத்தீர்த்து விரோதங்களைச் சமாதானப்படுத்தலாம். உங்கள் பக்கத்திருப்பவர்களுக்குள் நீதியும் சமாதானமும் நிலைக்கும்படி செய்யலாம். நீங்கள் வித்தியாபிவிர்த்திக்கு ஏற்ற பெரிய வழிகளைக் கண்டுபிடிக்காமலேயிருக்கலாம். ஆயினும் உங்கள் சொந்தகிராமத்தவரின் அறிவை விருத்தியாக்கலாம். கிராமப் பள்ளிக்கூடத் தினபிவிர்த்திக்கு உதவிபுரியலாம். பெண்கல்வியி னபிவிர்த்திக்குப் பெரியயோசனைகள் நீங்கள் சொல்லாவிட்டாலும் உங்கள் சொந்த வீட்டாருக்குப் புதிய எண்ணங்களும் அறிவும் புகட்டலாம். இதனாலேயே பல நன்மைகள் விளையும். நீங்கள் சுகாதாரவிஷயமாகப் பெரிய சீர்திருத்தங்கள் ஒன்றும் செய்யாமலிருந்தபோதிலும் உங்கள் கிராமக்கிணறு சுத்தமாயிருக்கிறதா என்றும் அதன் சுற்றுப்புறங்கள் சுககரமாயிருக்கின்றனவா என்றும் பார்த்துக்கொள்ளலாம். உங்கள் வீடு, பின்வாசல், கச்சேரி, வைத்தியசாலை முதலியன மற்றவர்கள் பார்த்துப்பழகும்படி பரிசுத்தமுடையனவாயிருக்கப் பார்க்கலாம். பெரிய புத்தகங்களெழுதிப் பேர்பெறாவிட்டாலும் நீங்கள் அயலாரின் உபயோகத்திற்காகச்சிறு துண்டுப்பத்திரிகைகள் எழுதி வெளியிடலாம். சுயபாஷையினபிவிர்த்திக்காகச் சபைசேர்த்துழைக்கலாம். நீங்கள் பத்திராசிரியராக வராவிட்டாலும் அங்கங்கே அறிவைப்பரவச்செய்து பொய், விபரீத ஞானம்முதலியவற்றைப் போக்கி உண்மை புகட்டலாம்.

இவ்விதமாகப் பல வழிகளில் உங்கள் சிறியபாகங்களை விர்த்தியாக்க முயலலாம். இப்படி நான் சொல்வதினால் உங்கட்குப் பெரிய எண்ணங்கள் வேண்டாமென்று நான் சொன்னதாக நினைக்கவேண்டாம். சிறிய ஆரம்பங்களிலிருந்துதான் பெருங் காரியங்கள் நிறைவேறுகின்றன என்பது உங்கள் மனதிலிருக்கவேண்டுமென்பதே நான் எண்ணியது. அளவற்ற நன்மைக்கேதுவாகிய இப்போதைய சேவிங்ஸ் பாங்கி என்னும் ஏற்பாடானது முன்னே ஓர் பாதிரி தன் கிராமத்தில் செய்த சிறு பிரயத்தனங்களிலிருந்து உண்டாயிற்று. இவ்விதமாகவே யூரோப்பாவில் பெரிய விவசாய பாங்கிகள், பலபேர் சேர்ந்த தொழில் முயற்சிகள், முதலிய பிரபலமான காரியங்கள் எல்லாம் முதலில் ஒன்றிரண்டுபேரின் சிறிய முயற்சிகளிலிருந்து ஜனித்தன. ஆகையால் சிறுவிஷயங்கள் நேரிடும்போது அவற்றை அலட்சியம்செய்யாமல் நன்றாக நம் சக்திக்கேற்றவாறு செய்துமுடிக்கப் பிரயத்தனப்படவேண்டும். எல்லாத் தொழில்கட்குந் தாயாகிய விவசாயத்தைக்குறித்துச் சில மொழி புகல நினைக்கின்றேன். நமது யூனிவர்சிடியானது மேற்கத்தியவற்றையும் பம்பாய் யூனிவர்சிடியையும் போலாது விவசாயத்திற்கென்று யாதொருபட்டமுமளிப்பதில்லை. ஆனால் மேற்பார்வைக்கு அது அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் வாழ்க்கை முழுவதும் தேசக்ஷேமத்திற்காக உழைக்கவேண்டுமென்று நேரேகருதப்படுகிறது. ஆதலின் தேசமுழுதும் விவசாயமே நிறைந்து ஜனங்களிற் பெரும்பாலார் விவசாயிகளாயுள்ள இத்தேசத்தில் இப்போது, அதுவும் கொடிய பஞ்சம் பரவி நம்மைப் பலவழியிலும் வருத்தும் இக்காலத்தில், நீங்கள் விவசாயத்தைப்பற்றிச் சிறிது நேரம்யோசிக்குமாறு நான் வேண்டுகிறது ஆச்சரியமல்ல. இவ்வாறு அடிக்கடி பஞ்சம் நேரிடுதலும் வீணிற்கா? அவையெல்லாம் கடவுளொருவர் நாமொவ்வொருவரும் தனித்தனி பஞ்சத்தையும் தரித்திரத்தையும் கொஞ்சமாவது குறைக்கக்கூடியதாக விவசாய அபிவிருத்திகள் செய்யமுடியாதா என்று எண்ணச்செய்கிறார் என்பதைப்புகட்டவில்லையா? இவ்விதமடிக்கடி நிகழும் கஷ்டத்திலிருந்து நாம் ஏதாவது நிலைத்த சுகத்தையடைய முடியாதா?

‘உழுவா ருலகத்தார்க்காணியஃதாற்றா,
தொழுவாரையெல்லாம் பொறுத்து’
‘பலகுடை நீழலுந்தங்குடைக்கீழ்க்காண்ப,
அலகுடை நீழலவர்’

என்ற குறளிற்கூறியாங்கு நம் நாட்டிற்கிடைக்கக்கூடிய நற்றொழிலிதுவே.

இராஜாங்கத்தின் பலமே விவசாயிகளைப்பொறுத்திருக்கிறது. ஆதலினால் அவர்களின் க்ஷேமத்தையும் அபிவிர்த்தியையும் பற்றி கவனித்தல் கற்றறிந்தோர்க்கின்றியமையாக் கடனாகும். இராஜாங்கத்தார் எவ்வளவு பிரயத்தனஞ்செய்தாலும் புத்தகங்கள் எவ்வளவு எழுதப்பட்டாலும் பிரசங்கங்கள் எவ்வளவு செய்யப்பட்டாலும் கற்றறிந்தோர் தனித்தும் ஒன்றுசேர்ந்தும் ஊக்கத்தோடு உடனிருந்து உழைத்தாலன்றி விவசாயவிர்த்திக்கு ஒன்றும் செய்யமுடியாது. மேற்கத்தியாருடைய உதாரணத்தைப்பார்த்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இங்கிலாந்தில் நிலங்கட்குடையவர்களாகி அவற்றை விருத்திசெய்யும் மிராசுதாரர்கள் பெரும்பான்மையும் யூனிவர்சிடிகளிற் கற்றுத்தேர்ந்தவர்களாயிருப்பார்கள். அவர்களனுமதியின்பேரில் அந்நிலங்களைச் சாகுபடிசெய்வோரும் வெகுசாய் அவ்விதமாகவே கற்றவர்களாயிருப்பார்கள். இராஜ்யவிவசாயச் சங்கத்தார் கட்டுரைப்படி இவர்கள் அறிவைப் பழக்கத்திற் செலுத்தி நடத்திவருகிறார்கள். மேலும் விவசாயத்திற் கற்றறிந்தோர் கருத்தைக்கவரக்கூடிய விஷயங்களும் பலவுள்ளன. நிலத்தின் சாராம்சம், எரு, விளைவு, வேண்டிய கருவிகள் முதலிய பல விஷயங்கள் இவர்கள் கவனித்தற்கேற்றவையா யிருக்கின்றன. இவ்விஷயத்திலும் நீங்களொவ்வொருவரும் வேறு பெரியவழிகளொன்றுங் காணாவிட்டாலும் தத்தம் அயற்பக்கங்களினபிவிர்த்திக்காகச் செய்யும் முயற்சி சிறிதேனும் இடைவிடாது செய்து மற்றவர்கட் குதாரணங்காட்டலாம். உங்கள் மற்றவேலைகள் எவ்வளவு மிகுதியாயிருந்தபோதிலும் நிலமும் அதன் பலனும் எப்போதும் உங்கள் கவனத்துக்கு வந்துகொண்டேயிருக்கின்றது. அன்றியும் உங்களிற் பலர்க்கு நிலமே உங்கள் வரும்படிக்கு முக்கிய ஆஸ்பதமாயும் அதுவே உங்கள் உழைப்பிற் கிடமாயும் இருக்கும். “இப்போதுள்ளவர்களையும் பின் சந்ததியாரையும் கவலையின்றி யிருக்கச்செய்யக்கூடியதாய், உழைத்தால் நல்விளைவுதரும் ஒரு சிறு நிலமும் ஒரு நல்ல சிறு வீடும் இருந்தால் அதுவே ஒருவன் அடையக்கூடியது. பெரிய லட்சாதிபதியாயிருப்பதிலும் நான் அதையே அடைய விரும்புவேன். அதுவே மிகக் கண்ணியமானவேலை என்பதென்கொள்கை. அதுதான் கடவுள் தரக்கூடிய பெரியவரம்” என்று ஜார்ஜ் இலியட் அவர்கள் ஓரிடத்திற் கூறியிருக்கிறார்கள். நம் நிலம் சிறியதாயிருப்பினும் நாம் உழைக்குமிடம் சிரமமாயிருப்பினும் இவ்விதமாகத்தான் கருதவேண்டும். நீங்கள் இப்போது நேரே நிலவிளைவைப்பார்ப்பதே. தொழிலாகப்போனாலும் அல்லது ரிவின்யூ, பாரெஸ்டு, வைத்தியம், சுகாதாரம் அல்லது வித்தை ஆகிய எந்தப்பிரிவில் வேலையாகப்போனாலும், நீங்கள் நிலத்திற்காகவும் அதைப் பயிரிடுவோருக்காகவும் செய்யவேண்டிய வேலை அதிகமுண்டு. விளைவை இரட்டிப்பாக்கல் முதலிய பெரியவிஷயங்களொன்றும் நீங்கள் கண்டுபிடித்துச் செய்யாவிட்டாலும் உழைத்து அதனால் விளைவின் பலனை அதிகமாக்கலாம். நீர்ப்பாய்ச்சல் நிலத்திற்கோர் பாதுகாப்பா? அப்படியாயின் உங்கள் சொந்த நிலங்களிலெல்லாம் ஒவ்வோர் கிணறுவெட்டுங்கள். உங்கள் அயலாருக்குச்சொல்லி அவர்களையும் அம்மாதிரிசெய்யச் செய்யுங்கள். கால்நடைப் பிராணிகட்கு உணவு இடம் முதலிய ஒன்றாயமையாதிருப்பின் உங்கள் சொந்த கால்நடைகளை முதலிற் கவனித்துக்கொண்டு மற்றவர்கட்கும் அவ்வாறே உபதேசியுங்கள். விளைவை அதிகரிக்கும் வழி ஏதாவது உங்கட்குத் தெரிந்திருந்தால் அதைப் பொறுமையுடன் உங்கள் நிலங்களிற் பரீட்சித்துப் பாருங்கள். பயிர்கள் நோய் முதலிய தீங்குகளால் அழிவுறுமாயின் அதை நன்றாய்க் கவனித்து அவற்றை அகற்றும் வழியைக் கண்டு பிடிக்கலாம். காடுகளும் மரங்களும் பழமரங்களும் குறைவாயிருக்கக்கண்டால் நீங்கள் ஏதாவது காலியிடத்தில் சில மரங்கள் வைக்கவாவது சிலவிடத்தை வேலியிட்டுச் சீர்படுத்தவாவது முடியுமா என்று நோக்கலாம். கிணறுவெட்டலும் மரம்வளர்த்தலும் இரண்டு பெரிய தர்மங்கள் என்று உங்கள் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இத்தாலியா தேசத்தில் ஒரு குழந்தை பிறந்ததானால் அதற்குச் சீதனமாகும்பொருட்டு அது பிறந்த உடனே சில பழமரங்களை வைத்தல் வழக்கமாயிருக்கின்றது. இவ்விதமாகவெல்லாம் நீங்கள் முயன்று உங்கள் சொந்த கிராமத்தையும் நகரத்தையும் விருத்திக்குக்கொண்டுவர முயலலாம். பயிரிடும் குடிகளின் க்ஷேமத்திற்கு ஏதாவது தடைகள் நேரிட்டு அவற்றைப்போக்க ஏதாவது வழிகள் உங்களுக்குத் தோன்றுமானால் அவற்றை நன்காராய்ந்து அவ்வழிகளை விளக்கமாய் அமைதியோடு எடுத்துக்காட்டுங்கள். உங்கள் அயலாரின் பிள்ளைகள் ஒழுங்கீனமாய்க் கற்பிக்கப்பட்டுத்திரிவார்களேயானால் கிராமப் பள்ளிக்கூடத்தைத் தக்கபடி சீராக்க முயலுங்கள். உங்கள் கிராமத்தார் கண்டபடி எல்லாம் வீண்செலவுசெய்து தரித்திரர்களாயும் தரகர் முதலியோரால் பலவழிகளில் ஏமாற்றப்பட்டும் இருப்பார்களேயானால் அதைக் கவனித்துப் பல தக்கவழிகளாலும் அவர்களுட் பொருள்சேரும்படி செய்யலாம்.

இனி உங்களில் ராஜாங்க உத்தியோகங்களிற் பிரவேசிக்கின்றவர்களுக்குச் சில மொழி புகல்கின்றேன். நீங்களிவ்வளவு கற்றதின் பயனாவது உங்கள் வேலைகளில் யூகத்தை யுபயோகித்து இராஜ்யபரிபாலன யந்திரத்தின் பல பாகங்களையும் சீராக்கிச் சம்பூரணமாக்க முயலுதலும் இப்போது சாதாரணமாய் வழங்கும் வழக்கங்களை ஆராயாது பின்பற்றாமல் அவற்றைக் கவனித்துச் சீர்படுத்துவதேதாவதிருந்தால் செய்வதுமேயாம். வேலைசெய்யும் வழிகளும் அவற்றின் மேற்பார்வையும் சரியாயிருக்கின்

ணவா என்ற கவனத்தோடு நில்லாமல் அடிப்பட ஆராய்ந்து அவற்றின் அர்த்தமின்னதென்பதையும் அவை இன்னதற்காக ஏற்பட்டவென்பதையும் தெரிந்துகொண்டு அவை அவ்வவ் விஷயங்கட்குபயோகமாகின்றனவா என்று பார்க்கவேண்டும். இல்லதவிடின் தக்கவாறு மாற்றமுடியுமா என்று நோக்கவேண்டும். உங்கள் வாழ்க்கையில் பெரும்பான்மையும் சிறுசிறு விஷயங்களும் கடமைகளுமே நிறைந்திருக்கும். யந்திரத்திற்கு எண்ணெயிடுவதுபோல சிறிதாகக்காணும் இவ்விஷயங்களைச் சரியாகவும் சாக்கிரதையாகவும் செய்து முடித்தலே வாழ்க்கையின் பயனும். நீங்கள்யாவர் மத்தியிலிருந்து வேலை செய்கிறீர்களோ அச்சனங்களின் நிலைமையில் நீங்கள் இருப்பதாக வைத்துக்கொண்டு அவர்களின் முறைப்பாடுகளையும் குறைகளையும் ஆகவேண்டுவனவற்றையும் அறிந்துகொள்ள முயலுங்கள். மற்றவர்கள் உங்களிடத் தெவ்வாறு நடந்துகொள்ள நினைக்கிறீர்களோ அவ்வாறே நீங்களும் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டும். அப்படிச்செய்வீர்களானால் உங்கள் வேலைகள் எப்போதும் நன்முடிவேபெறும். முடிவாக உங்கள் நடத்தையும் செய்கையும் எப்போதும் மிகமேன்மையானவையாகவே இருத்தல்வேண்டும். உங்கள் சக்திக்கெவ்வளவு கூடுமோ அவ்வளவு பெரிய ஸ்தானங்களையே அடையமுயலுங்கள். ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவருவதில் உங்களுக்குப் பக்கத்திருப்பவரையே மிக எளிதில் வழிப்படுத்தலாம் என்பதைமறக்கக்கூடாது. ஆனால் தக்கசெய்கைகளில்லாமல் வெறும் கனவுகாணும் எண்ணங்களில்மட்டும் அமிழ்ந்துபோக வேண்டாம். நாம் செய்யும் முயற்சிகளாலும் செய்துகாட்டும் உதாரணங்களாலுந்தான் சூழவுள்ளவர்கள் இணங்கிவழிப்படுகிறார்கள். உங்கள் காலம், முயற்சி, இன்பம், பொருள் நலம் முதலியவற்றைச் செலவிட்டுச் செய்யும் காரியங்கள்தான் உங்கள் சூழவுள்ளாரின் க்ஷேமாபிவிர்த்திக்குப் பெரும்பாலும் உபயோகமானவை."

இதுகாறும் நாம் மொழிபெயர்த்து வந்த பிரசங்கத்தினால் மிஸ்டர், எப். ஏ. நிகல்சன் அவர்களுடைய அனுபவமும் ஆழ்ந்த எண்ணங்களும் வெளியாவதன்றியும், தத்தம் படிப்பை முடித்து அப்போது தான் உலகவாழ்க்கையிற் புகும் மாணவர்கட்குத் தக்க புத்திமதிகள்தாமென்பதும் விளங்கும். அவர்கள் அன்றையதினம் பேசியது மிக நன்றாயிருந்தது. இவர்க்குமுன் இம்மாதிரிவருடந்தோறும் பிரசங்கிப்பவர்கள், வழக்கமாகத் தாம் தாம் எழுதிக்கொண்டு வந்ததைப்படிப்பார்கள். இவர் அவ்வளவையும் எல்லாருங் கேட்கும்படியாக உரத்த தொனியில் நன்றாய்ப் பிரசங்கித்தார். இவர்க்குமுன் இவ்விதம் (எழுதியதைப்படிக்காமல்) பிரசங்கித்தவர்கள் இருவர்கள் தான் என்று கேள்விப்பட்டோம். இவர் பிரசங்கத்தின் மொத்தக்கருத்து என்னவென்றால் நாம் செய்யுங்காரியம் சிறியதேனும் பெரியதேனும் திருந்தச்செய்யவேண்டும். சிறியதைச் சிறியதென்றிகழக்கூடாது. சிறியதையிகழ்ந்தால் சிறியதும் பெரியதும் இரண்டுங் கெடும் என்பதே. இவர் பிரசங்கம் மொத்தத்தில் இந்துக்களின் புத்திப்போக்குக்கு ஒத்திருந்தது. நம்மவர்கள் எப்போதும் திருப்தியையும் மனவமைதியையுமே பெரிதாகக் கருதுபவர்கள். 'செய்வன திருந்தச்செய்' என்பது ஔவையார் கூற்று.

C. K. S.

## மாலதீ மாதவம்.

பவபூதி என்று பெயருள்ள வடமொழிக்கவி மகாகவிகளில் ஒருவராக வடமொழியில் பரிசிரமப்பட்டிருக்கின்ற ஏனையோராலும். ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். காடு, மலை, வனம், வனாந்தரம், அருவிகள், சோலைகள் இவைகளை வெகு கம்பீரமாக வருணித்திருக்கின்ற மகாகவிகளுக்குள் பவபூதி வெகு மேலானவர். அவ்வாறே, தைரியம், கருணை, சோகம், காதல் முதலிய மானிட பாவங்களையும் அம்மகாகவி வெகு யதார்த்தமாக வருணித்திருக்கின்றனர். இவ்வளவு வருணனைகளும் அம்மகாகவி செய்த எந்த கிரந்தத்தில் அடங்கியிருக்கின்றதென்றால் அதற்கு மறுமொழி **மாலதீமாதவம்** என்ற நாடகத்தில் என்பதேயாம். இம்மாலதீ மாதவமென்பதோ, 10-அங்கங்களடங்கிய ஓர் பிரகரணம். 7-அங்கங்களுக்கு அதிகப்பட்ட நாடகத்தை வடமொழியில் பிரகரணமென்பார்கள். பவபூதி எழுதினார் என்ற பெருமையால் **மாலதீ மாதவம்** வடமொழியில் வாசிக்கப்பட்டு வருகின்றதேயன்றி மற்றப்படி அதன் கதையை யறிந்தவர்கள் வெகு குறைவாகவிருப்பார்கள். இவ்வண்ணம் நாம் சொல்லுவதெல்லாம் பள்ளிக்கூடத்தில்படிக்கும் சிறுவர்களின் பொருட்டே யல்லாது வித்துவான்களை உத்தேசித்தல்ல.



அச்சிறுவர்களுக்கு ஓர் பெரும் உதவியாகவும் பாமரஜனங்களும் எளிதில் படித்தறிந்து கொள்ளத் தக்கதாகவும் நமது தேசத்து வித்வசிகாமணியாகிய ம-ா-ா-ஸ்ரீ வெணுகோபால செட்டியாரவர்கள் உதவியால் பதிப்பிக்கப்பட்டு நமது அபிப்பிராயத்துக்கனுப்பப்பட்ட மாலதீமாதவகிரந்தம் திருச்சினாப்பள்ளி ஜோஸெப் காலேஜி ஸம்ஸ்கிருத வித்வான் ம-ா-ா-ஸ்ரீ சடகோபாசாரியாரால் மொழிபெயர்க்கப்பட்டு பிரசித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இச்சிறு புத்தகத்தைப்படித்து ஏனையோரும் எவ்வாறு இக்கதையை எளிதில் அறிந்து கொள்ளுவார்களோ அவ்வாறு பவபூதியைப்படித்தாலும் அவர்களறிந்து கொள்ளார்கள் என்றால் ம-ா-ா-ஸ்ரீ, வேணுகோபால் செட்டியாரவர்கள் நமது நாட்டுக்குச் செய்திருக்கும் பெரும் உதவி எல்லாருக்கும் ஒருவாறு வெளியாகும். இம்மகான் ம-ா-ா-ஸ்ரீ, சடகோபாசாரியாரியற்றிய இந்நாடகத்துக்கு ஆங்கிலேய பாஷையில் ஓர் முகவுரை எழுதியிருக்கின்றனர். இதனால் இம்மகாகவி வசித்தகாலம் இவருடைய குலம் கோத்திரம், தந்தைதாய் முதலிய உறமுறையார்களுடைய பெயர் விவரம் இவைகளெல்லாம் வெளியாகின்றன. மிகப்படித்தவராகையால் ம-ா-ா-ஸ்ரீ வேணுகோபால் செட்டியார், ஏதோ ஒன்று எழுதவேண்டும் என்ற எண்ணத்துடன் முகவுரை ஒன்றை வரையாமல் சரித்திரக்கண்ணாலும் சாஸ்திரக்கண்ணாலும் பரிசோதித்து வெகு அற்புதமான முகவுரை எழுதிமுடித்திருக்கின்றார். கதை 122 பக்கங்களில் அச்சிடப்பட்டிருந்தபோதிலும் அதனுடைய உற்பத்திகாலம், ரஸம், பாவம் முதலிய பிரதான அம்சங்களை ம-ா-ா-ஸ்ரீ செட்டியாரவர்கள் ஆங்கிலேய பாஷையில் தமக்குள்ள சொற்றிறமையால் வெகுமதுரமான நடையில் மிக்க அற்புதமாக எடுத்துக்காட்டியிருக்கின்றனர். இவ்வண்ணமே எல்லா வடமொழி மொழிபெயர்ப்புகளுக்கும் ஓர் முகவுரை ஏற்படுமாயின் வித்தியாபிவிருத்திக்கு எவ்வளவோ நலமுண்டு.

ம-ா-ா-ஸ்ரீ, வெங்கல் வேணுகோபால செட்டியார் ஸிவில் ஸெர்வீஸைச்சேர்ந்து இப்பொழுது இண்டிவனம் ஸப் - கலெக்டராகவிருக்கும் பெரிய பொறுப்புள்ள உத்தியோகத்தை வகித்துவருகிறார். இவர் உத்தியோக வியாபாரத்தில் இவருக்கு அவகாசம் கிடைப்பது மெத்த அருமையாக விருந்தபோதிலும், சுயபாஷையபிமானத்தாலும், அப்பாஷையை விர்த்திசெய்து ஜனங்களுக்கு அறிவையூட்ட அந்த இசைந்ததோர் கருவியாகச் செய்யவேண்டுமென்கிற அவாவினாலும் தனக்குள்ள பரிசிரமம் இடையூறுகளைப்பாராட்டாமல் இப்புஸ்தகத்தை நம் சிறுவர் சிறுமிகளும் ஸ்திரீகளும் படிப்பதற் குபயோகமாகும்படி மிகவும் எளிய நடையில் எழுதுவித்து அதற்குத் தாமே சிறந்ததோர் முகவுரையும் எழுதிப் பிரசுரிக்கலானார். இவர்போலவே கலெக்டர் முதலிய ஸ்தானத்திலிருக்கும் அங்கிலேய உத்தியோகஸ்தர்களிலும் சிலர் சுதேச பாஷாபிவிர்த்தியில் அதிக சிரத்தையெடுத்துக் கொண்டு அதற்காகச் செய்யப்படும் முயற்சியை ஆதரித்துவருவதை நாமறிவோம். இவர்களை விடத் தாழ்ந்த பதவிகளிலிருக்கும் நமது சுதேச உத்தியோகஸ்தர்களும் இது விஷயத்தில் வேண்டிய சிரத்தையெடுத்துக்கொண்டு தூண்டுதலளிப்பார்களானால் நம் சுயபாஷைக்கு விடியுங்காலம் வெகு சீக்கிரத்தில் உதிக்குமென்பதிற் சந்தேகமில்லை. அக்காலம் வருவதற்கனுகூலமாக மேலுள்ளோர் முன்னின்று நல் உதாரணம் காட்டிவருவது நல்லகாலத்திற்கடையாளமே.

## ஸ்ரீ பகவத்கீதார்த்த சங்கரஹம்.

இப்பெயர்கொண்ட புத்தகமொன்று நமது பார்வைக்கெட்டியது. நமது இந்து மதத்திலேயுள்ள முக்கியமான தத்துவசாஸ்திர நூல்களில் இப்பகவத்கீதையும் ஒன்று. இது இப்பொழுது நம்மால்மட்டுமல்ல அயல் நாட்டாராலும் எடுத்தாளப்பட்டு வியக்கப்பெற்றது. இப்புத்தகமானது வடமொழியறியாத நம்முட் பெரும்பாலார்க் குபயோகமாகும்படி ஒவ்வொரு வடமொழிச் சுலோகமும் அதற்கடுத்து தமிழெழுத்துக்களால் அமைக்கப்பெற்ற அச்சுலோக சப்தமும் அதன்பின் தமிழில் சுலோகத்தின் பொருளுமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அரிய விஷயங்கள் பல அடங்கியிருக்கும் இந்நூலை யாவரும் எளிதில் உணருமாறு இவ்வாறு எளிய நடையில் தமிழ்மொழி பெயர்ப்பைத் தந்தவர்கட்கு தமிழுலகம் உண்மையிலேயே மிக்க கடமைப்பட்டுள்ளது. இந்த வியாக்கியானம் ஸ்ரீமத் பரமஹம்ச ராசமச்சந்திரானந்த சரசுவதி சுவாமிகளால் எழுதப்பட்டது. இதனை ம-ா-ா-ஸ்ரீ அப்பாய் நாயுடு அவர்கள் நன்றாக சிறுரூபமாக அச்சிட்டிருக்கின்றார். பண்டிதமித்திர யந்திரசாலையில் பதிப்பிக்கப்

பட்டுள்ளது. இது சொக்காய்ப்பைக்குள் அடங்கக்கூடியதாக சிறிய ரூபமாக அமைக்கப்பட்டு மிக அழகாகக் கட்டடம் செய்யப்பட்டுள்ளது. அதன் விலையும் யாவரும் எளிதில் வாங்கி வாசிக்கும்படியாக பனிரண்டணாவாக குறைந்தவிலைக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

V. M.

# சுகாதார விஷயம்.

*உயிர்களைக் காப்பாற்றும்பொருட்டுச் சுகாதாரமுறைகளை யனுசரித்து அவற்றை யனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதிலும் மேலான புண்ணியமாவது, பரோபகாரமாவது இல்லையென்பது பூர்வீகர்களுடைய சித்தாந்தமாக விருந்தது.—டாக்டர் டப்ளியூ, ஜி. கிங்.*

## சுகாதாரக் குறிப்புகள்.

### சென்னையில் சுகாதாரம்.

ஏப்பிரல்மீ 26உ வியாழக்கிழமை பகலம் சென்னை முனிசிபல் ஆபீஸில் முனிசிபாலிடியின் 'ஹெல்த் டிபார்ட்மெண்டு', 'எஞ்சினியரிங் டிபார்ட்மெண்டு' களின் சிப்பந்திகள் சேர்ந்த கூட்டமொன்று கூடி "சென்னை ஸானிடெரி அஸ்ஸோஸியேஷன்" என்னும் சங்கமேற்படுத்தினார்கள். சென்னை ஹெல்த் ஆபீஸராகிய காப்டன் ஜெ. டப்ளியூ. கார்ன்வால் அவர்கள் அச்சமயம் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார். நூதனமாய் ஏற்பட்ட சபையின் நோக்கம் சுகாதார விஷயமாக அச்சபை மெம்பர்களின் அறிவை விர்த்திசெய்துகொள்ளும் பொருட்டு பத்திரிகைகள் வரவழைத்துப் படிப்பதும், பிரசங்கங்கள் செய்வதும், சுகாதார முறை சம்பந்தமான விஷயங்களைப்பற்றி கூட்டங் கூடித் தர்க்கங்கள் நடத்துவதுமாகிய வழிகளை யனுசரிப்பதாம். ஹெல்த், எஞ்சினியரிங் டிபார்ட்மெண்டுகளின் உத்யோகஸ்தர்களும், யோக்கியதாபத்திரம் பெற்ற வைத்தியர்களும் சுகாதார விர்த்தியில் அக்கறையுள்ள மற்றவர்களும் அச்சபையில் மெம்பர்களாகச்சேரலாம். இச்சபையின் நோக்கங்களையும், சுகாதார விர்த்தி விஷயத்தில் இச்சபையார் செய்வதற்கிருக்கும் உதவிகளையும் பற்றி 'ஹெல்த் ஆபீஸர்' சுருக்கமாகப்பேசி முடித்தபின், சென்னையில் சாக்கடைவேலை சூபரின்டெண்டெண்டாகவிருக்கும் ம-௱-௱-ஸ்ரீ, டி. எஸ் வெங்கடேசுவரய்யர் அவர்கள், நூதனமாகச் சென்னையில் முனிசிபாலிடியார் கட்டிவரும் சாக்கடைகளினால் இந்நகருக்குண்டாகக்கூடிய சுகவிர்த்தியை யெடுத்துக்காட்டி அவ்வேலைகள் நடத்தப்பட்டுவரும் விவரத்தையுமெடுத்து விளங்கவைத்து ஒரு ப்ரபந்தம் வாசித்தார். இச்சபைக்கு சென்னை முனிசிபல் ப்ரெஸிடெண்டு கர்னல் ஸர். ஜியார்ஜ் மூர் போஷகராகவும், ஹெல்த் ஆபீஸராகிய காப்டன் கார்ன்வால் ப்ரெஸிடெண்டாகவும், மிஸ்டர் ஸ்லோன், மஸ்டர் கே. டி. மாதியூ இவர்கள் வைஸ் ப்ரெஸிடெண்டுகளாகவும், ம-௱-௱-ஸ்ரீ கே. டி. சுப்பிரமணிய ஐயர் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

* * *

புதிதாக ஏற்பட்ட இந்த சபையார் சென்னையின் சுகாதார விர்த்தியை நாடியுழைக்க எவ்வளவோ இடமிருக்கிறது. சுகாதார சம்பந்தமாக உழைக்க ஏற்பட்ட சிப்பந்திகள் அவர்கள் தொழில் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அவர்கள் அறிவை விர்த்திசெய்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமே. இவர்கள் ஒன்றுகூடிக்கலந்துபேசி ஒருவருக்கொருவர் ஒத்தாசைசெய்துகொள்ள மார்க்கமிருக்கவேண்டியதும் அவசியமே. இவ்விருவிஷயங்களுக்கும் இச்சபையேற்பட்டது மிக முக்கியம். இவைகளுடன் ஜனங்களுக்கும் சுகாதார விர்த்தியில் அக்கறையுண்டாகச்செய்யவேண்டியது மிகவும் முக்கியமாகவிருக்கிறது. ஜனங்களுடைய உதவியின்றி ஊர்ச்சுகத்தை விர்த்திசெய்வது மிகவும் அசாத்தியமான வேலை. இதற்குத் திர்ஷ்டாந்தம் வேண்டுமாயின் இந்நகரிலேயதேஷ்டமாய்க் காணலாம்.

* * *

ஊர் சுத்திக்கு முதலவசியம் தெருக்களில் ஆபாசங்களின்றி சுத்தியாகவிருப்பது. சாக்கடைநீர் சரியாக வெளியிற்போகும்படி சாக்கடைகள் கட்டவேண்டியது முனிசிபாலிடியாருடைய கடமை. கட்டினசாக்கடைகளை துர்வினியோகப்படுத்திக் கெடுக்காமலிருக்கவேண்டியது ஜனங்களுடைய கடமை. தெருக்களில் அசுத்தம் இல்லாமலிருப்பதற்காக வீட்டுக் குப்பைகளைப்போட தெருக்களில் இரும்பினால்செய்த குப்பைத்தொட்டிகள் வைத்திருக்கிறார்கள். இந்தக் குப்பைத்தொட்டிகள் வைக்கப்பட்டதின் உத்தேசம் வேறு; இவை உபயோகிக்கப்பட்டுவரும் வகையும் அதனால் விளையும் பலனும் வேறு. "பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காக முடிந்தது" என்று அர்த்தபுஷ்டியுள்ள பழமொழியொன்று சொல்வதுண்டு. அதுபோலிருக்கிறது முனிசிபாலிடியார் குப்பைத்தொட்டிகள் ஏற்படுத்தியிருக்கும் வைபவம். குப்பைத்தொட்டி வைக்கப்பட்டது வீடுகூட்டின குப்பைகூளங்களைப் போடுவதற்காக: ஜனங்கள் குப்பைகளை தொட்டிக்குள் கொட்டாமல் தூர நின்று குப்பைத்தொட்டி இருக்கும் இடத்தைப்பார்த்து வீசி யெறிகிறார்கள் குப்பையையும் சாம்பலையும். இப்படிச் செய்வதால் எச்சிற்கலைகள் எங்குமிறைந்து குப்பைகள் வெகுதூரத்துக்குப்பரவி அந்தக் குப்பைத்தொட்டியைச் சுற்றி வெகு தூரத்துக்கு ஆபாஸம் அதிகமாகிறது. இது ஜனங்கள் அஜாக்கிரதையால் நேரிடும் சங்கடம். ஜனங்கள் குப்பைத்தொட்டி வைத்திருப்பதின் கருத்தையுணராமல் இப்படி மௌட்டியமாக நடந்துகொள்வது சுகாதார விர்த்திக்குக் குறைவாகவிருக்கிறதென்று சென்னை ஹெல்த் ஆபீஸரே அவருடைய ரிபோர்ட்டில் முறையிட்டெழுதியிருக்கிறார். ஆனால் குற்றமெல்லாம் ஜனங்களிடத்தில் மட்டும்தானென்று சொல்வதற்கில்லை. ஜனங்கள் தெரியாமல்செய்யும் குற்றத்தைவிட முனிசிபல் சிப்பந்திகள் தெரிந்து செய்யவிடும் குற்றங்கள் பல பொறுக்கரிதாகவிருக்கின்றன. இவைகளில் ஒன்று: வீட்டுக் கக்கூஸ்களில் வாரும் மலக்குப்பைகளை அதற்காக ஏற்பட்ட இரும்பினால்செய்த மூடுவண்டிகளில் கொட்டாமல் திறந்துகிடக்கும் குப்பைவண்டிகளில் கொட்டுவது பெரிய அநியாயம். இப்படி கொட்டுவது சட்டவிரோதம்தான். இதைத்தடுக்கச் சட்டமிருந்து என்ன பிரயோசனம்? அக்கிரமம் நடப்பதில் குறைவில்லை. இதிலும் பெரிய அநியாயம் என்னவென்றால், வீட்டுக் கக்கூஸ்களிலிருந்து வாரும் மலக்குப்பைகளை கூடை நிறையக்கொண்டுவந்து தெருவிலுள்ள குப்பைத்தொட்டிகளில் கொட்டிவிட்டுப்போய்விடுகிறார்கள். இந்த அநியாயம் அதிக பிரபலமாக நடந்துவருவதினால், வீடுகூட்டும் வேலைக்காரிகளும் குடித்தின ஸ்திரீகளும் குப்பைத்தொட்டியின்னண்டையிற்போக அஞ்சுகிறார்கள். முனிசிபாலிடியாருக் கெழுதிக்கொண்டால் நாங்கள் எங்களாலான முயற்சியெல்லாம் செய்கிறோம், செய்தும் இக்கொடிய வழக்கத்தை நிறுத்தலரிதாகவிருக்கிறது என்னசெய்யலாம் என்கிறார்கள்.

* * *

இதற்கு நிவர்த்திதேடுவோமென்று முயற்சிக்கப்புகுந்தால் எத்தனையோ வில்லங்கங்கள் நேரிடுகின்றன. முதலாவது வீட்டுக் கக்கூஸ்கள் வாரும் தோட்டிகள் இச்சென்னையில் இட்டது சட்டமாகவிருக்கிறது. இவர்களுடைய அக்கிரமம் சொல்லிமுடியாது. வீட்டுக் கக்கூஸ் சுத்தம் செய்யும் வேலைக்கும் முனிசிபாலிடியாருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லாமலிருக்கிறது. அக்கக்கூஸ்களில் குப்பைவாரும் தோட்டிகளின் மேல் முனிசிபாலிடியாருக்கும் எவ்வித அக்குத்தொக்குமில்லை. முனிசிபாலிடியாரிடம் முறையிட்டுக்கொண்டால் அக்கிரமம் செய்த தோட்டியைக் காட்டி, கோர்ட்டுக்கு வந்து சாக்ஷியும் சொன்னால் அவர்களை 'ப்ராஸிக்யூட்' செய்கிறோம் என்கிறார்கள். தோட்டிமேல் புகார்செய்து சாக்ஷிசொல்லகோர்ட்டுக்குப்போய்க் காத்துக்கொண்டிருக்கவேண்டிய கஷ்டத்தையும் ஒருவர் பொறுத்துக்கொள்ள இஷ்டப்பட்டிருப்பதாக வைத்துக்கொண்டாலும், மறுநாள் சாக்ஷிசொன்னவர் வீட்டுக் கக்கூஸ் நாற்றமெடுத்துப் போகிறது. அல்லது கோர்ட்டில் போட்ட அபராதத்துக்கீடாக வீட்டுக்கூலியை தோட்டி ஒட்டிக்கு இரட்டியாக உயர்த்திவிடுகிறான். கோர்ட்டில் தோட்டிக்கு ஒரு ரூபாய் அபராதம் விதித்தால் அவன் வீட்டுக்காரனுக்கு மாசம் அரை ரூபாய் சம்பளத்தையுயர்த்தி நித்திய தண்டம் இறுத்துவிடுகிறான். இந்தக்கஷ்டத்துக்கு நிவர்த்தியென்ன? சமீபகாலமட்டும் ஒன்றுமேயில்லாமலிருந்தது. முனிசிபாலிடியார் ஜனங்களைப்போலவே இவ்விஷயத்தில் ஏதும்செய்யச் சக்தியற்றவர்களாக விருந்தார்கள். இவர்கள் கஷ்டத்தைச் சொல்லி முறையிட்டுக்கொள்பவர்களுக்குக் கொடுக்கும் பதில் உற்றுநோக்குவார் பரிதாபத்தைக் கிளப்பத்தக்கதாயிருந்தாலும் கஷ்டப்படுவோருக்குத் திருப்தியைக்கொடுப்பதாகவில்லை.

* * *

விஷயங்கள் இந்த நிலைமையிலிருக்கையில் மூன்று மாதங்களுக்குமுன் அந்தரங்கநபர் ஒருவரது பெருமுயற்சியினால் இவ்வக்கிரமங்களுக்கு விமோசனம் உண்டாகக்கூடிய வழியேற்படலாயிற்று. ம-௱-௱-ஸ்ரீ, என். சேஷாத்ரிராஜு என்பவர், காளஹஸ்தி முதலிய பிராந்தியங்களிலிருந்து ஏனாதி ஜனங்களைக் கொண்டுவந்து தன்னுடைய மேற்பார்வையிலும் சம்பளத்திலும் அவர்களை வைத்துக்கொண்டு வீட்டுக் கக்கூஸ்களைச் சுத்திசெய்யும் வேலையை நடத்துவதற்காக சொந்தத்தில் ஒரு 'கன்ஸர்வென்ஸி ஏஜன்ஸி' ஏற்படுத்தியிருக்கிறார். இவர் இது விஷயத்தில் நுழைந்தேற்பாடு செய்தபின் பழைய தோட்டிகள் அக்கிரமம் சிறிது மட்டுக்கட்டியிருக்கிறது. இருந்

தாலும் நாம் சொன்ன அக்கிரமங்கள் இன்னுமடங்கவில்லை.

*　　*　　*　　*

இப்பொழுது முனிசிபல் உத்தியோகஸ்தர்களும் ஜனங்களும் சேர்ந்துழைத்தால் சுகாபிவிர்த்திக்கிடமுண்டாகுமென்று சொல்லும்படியாக விருக்கிறது. இப்படிப்பட்ட சமயத்தில் "சென்னை சானிடெரி அஸ்ஸோஸியேஷன்" என்ற சங்கமேற்பட்டது, நல்லதாயிற்று. இதன் பிரயோசனத்தை ஜனங்களனுபவிக்கவேண்டுமானல் ஜனங்களையும் இதில் சேரச்சொல்லி ஒத்துழைக்கவேண்டும். முனிசிபல் சிப்பந்திகள்மட்டும் பத்திரிகைகளை வாசித்து அறிவுவிர்த்தியடைவது போதாது. அவர்கள் அறிவு விர்த்தியடைவதோடு ஜனங்களுக்கு சுகாதாரவிஷயங்களில் அக்கறையுண்டுபண்ண உழைத்துவரவேண்டும். இந்த அபிப்பிராயத்தை யனுசரித்து இச்சங்கத்தார் உழைத்துவருவார்களானல் இவர்களால் எவ்வளவோ நன்மை விளையக்கூடும்.

C. V. S.

## விசேஷக் குறிப்புகள்.

**போவர் யுத்தம்.**

தென்னுபிரிகாவில் டிரான்ஸ்வால் குடியரசு நாட்டாரோடும், ஆரஞ்சு ப்ரீஸ்டேட் என்னும் அதை யடுத்தகுடியரசு நாட்டாரோடும் பிரிடிஷ் சைனியங்கள் யுத்தம் செய்யத்துவக்கி இந்த ஏப்பிரல்மீ 20உக்குச் சரியாக 6-மாதகாலமாகிறது. இந்த ஆறுமாதகாலத்தில் இருபக்கத்திலும் மாண்டு மடிந்தவர்கள் தொகை அனந்தம். செலவழிந்த பணமும் கொஞ்சமல்ல. இப்பொழுது, தென்னுப்பிரிகாவில் முக்கிய சேனதிபதியாக நியமிக்கப்பட்ட லார்ட் ராபர்ட்ஸ் அவர்கள் 'ஆரஞ்சு ப்ரீஸ்டேட்'டின் தலைநகராகிய 'ப்ளூம்பான்டேன்' என்னும் ஸ்தலத்தைக் கைப்பற்றியிருக்கிறார். இதனல் சண்டையேதும் முடிவுக்கு வருவதாகத் தோற்றவில்லை. இங்கிலீஷ்காரர்பக்ஷத்தில் நேர்ந்த உயிர்ச்சேதம் மிக அதிகம்; அப்படியே போவர்கள் பக்கத்திலும் சொல்லமுடியாத உயிர்ச்சேதம் நேர்ந்திருக்கிறது. தென்னுபிரிக்காவில் துக்கப்படாதவீடு இல்லையென்று ப்ரெஸிடெண்டு க்ரூகர் சொன்னர். யுத்தம் துவக்கி 6-மாதமாகியும் எவ்வளவோ பணச்சேதம் உயிர்ச்சேதம் நேர்ந்தும் இவ்யுத்தம் முடிவுக்குவராமல் இப்பொழுதுதான் ஆரம்பித்திருப்பதுபோல் காணப்பட்டால், இன்னம் எத்தனைகாலம் இந்த யுத்தம் நடந்துவருமோ, எத்தனை அருமையான உயிர்கள் சேதமாக விருக்கிறதோ, இன்னம் எத்தனை பணம் செலவழியவிருக்கிறதோ, நிச்சயமாய்ச் சொல்லக்கூடியவர் ஒருவருமில்லை. தென்னுபிரிகாவில் யுத்தமுனையில் மடிந்தவர்களில் சென்னைக் கவர்னர் லார்ட் வென்லாக் அவர்களுக்கு அந்தரங்ககாரியதரிசியாகவிருந்து எல்லாராலும் விரும்பப்பெற்ற மிஸ்டர் ஸி. எப். மக்கார்டி ஒருவர். இவர் இறந்ததைப்பற்றி வியசனித்து மாக்ஷிமைதங்கிய மஹாராணியவர்கள் வயதுசென்ற இவருடைய தாய் தந்தையர்களுக்கு ஆறுதல்கூறி ஒரு கடிதமெழுதுவித்திருக்கிறார். போவர்களால் முற்றுகை போடப்பட்டிருந்த மூன்று ஸ்தலங்களில் 'லேடிஸ்மித்' 'கிம்பர்லி' இவை யிரண்டும் சென்றமாதமே விடுவிக்கப்பட்டன. 'மேப்கிங்' என்னுமிடம் இன்னும் முற்றுகை நீங்காமலே யிருக்கிறது. இதனுள் அகப்பட்டிருக்கும் ப்ரிடிஷ் சைனியத்தின் தலைவரான கர்னல் பேடன்-பௌவல் வெகு தீரமாய் முற்றுகையைத் தாங்கிவருகிறார்.

**புதிய சட்டங்கள்.**

இந்த வருஷம் பிறந்தபின் சென்னையிற்கூடிய சட்ட நிருபணசபை மீட்டிங்குகளில் ஆலோசனைசெய்து பாஸ் செய்யப்பட்ட சட்டங்களில் மூன்று மிக முக்கியமானவை. ஒன்று-வித்யாதன சட்டம். இதனல் வித்தைகாரணமாக அவரவர் தேடின சம்பாத்தியம் அதாவது வித்யாதனம், அவரவர் சொந்த ஆஸ்தியாகுமென்றும் அவிபக்தகுடும்பமானலும் மற்றவர்களுக்கு அதில் பாத்தியமில்லையென்றும் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இதைச் சட்டமாகச்செய்வது கூடாதென்று ஆக்ஷேபித்து அனுப்பப்பட்ட மகஜர்களை கனம்பொருந்திய கவர்னர் நிரயோஜிப்பதாகவாக்களித்திருக்கிறார். லோகல் போர்டு சீர்திருத்த மசோதாவும் சட்டமாகப் பாஸ் செய்யப்பட்டது. இதனல் யூனியன் சேர்மான்களுக்கு அதிகாரம் ஜாஸ்தியாகக் கொடுக்கப்பட்டிருப்பதோடு, வீட்டுவரியும் அதிகமாக வுயர்த்தப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு ஆக்ஷேபமாக சட்ட நிருபணசபையிலுள்ள பிரதிநிதி மெம்பர்கள் செய்த எதிர்வாதங்களெல்லாம் பயன்படாதுபோயின. மூன்றாவது 'இரிகேஷன்ஸஸ்பில்' சட்டமாகப் பாஸ் செய்யப்பட்டது. இதனல் ஏரி, குளம், கால்வாய்



களிலிருந்து நேரப்பாயும் ஜலத்துக்குத் தண்ணீர்வரி வசூல்செய்வதுபோல, ஊற்று முதலான காரணங்களால் சர்க்கார் ஜலம் தடுக்கக்கூடாதபடி உபயோகப்பட்டால் அதற்கும் வரி விதிக்கப்படும் என்று சட்டம் நிர்ணயித்திருக்கிறார்கள். இதனல் ஜனங்களுக்குக் கஷ்டமும் கொடுமையும் அதிகமாக விளையுமென்று பிரதிநிதி மெம்பர்கள் விசேஷமாகச்சொல்லியும், கவர்ன்மெண்டு மெம்பர்கள், அவர்கள் கருத்து குடிகளுக்குக்கொடுமை புரியவேண்டுமென்பதல்லவென்றும், ஜனங்கள் அவர்கள் நோக்கமறியாது வீண்கட்டிகொண்டுவாதிக்கிறார்களென்றும், சில கேஸ்களில் சர்க்கார் வரி வசூல்செய்ய வழியின்றி நஷ்டத்துக்கு ஹேதுவாகவிருந்த குறையை நீக்க இம்மசோதா கொண்டுவரப்பட்டதேயன்றி, வேறு விதமாகக் குடிகளை வருத்துவதற்காகவில்லையென்றும் சமாதானம்சொல்லி இம்மசோதாவைச் சட்டமாகப் பாஸ் செய்துவிட்டார்கள். இதையும் கவர்னர் அங்கீகாரம் செய்யக்கூடாதென்று மனுச்செய்துகொண்டிருக்கிறார்கள். சட்ட நிருபணசபை மீட்டிங்கில் நடந்த தர்க்கத்திற்குப்பிறகு இப்பொழுது இதைச் சட்டமாகப் பாஸாகாமல் தடுக்கச்செய்யும் முயற்சி பலிக்குமென்பது மிகவும் சந்தேகமாகவிருக்கிறது. இருந்தாலும் குறையிருந்தால் அதை மனுப்பண்ணித் தெரிவித்துக்கொள்வதில் குற்றமில்லை.

**சென்னையில் வீட்டுவரி.**

சென்னையில் வீட்டுவரியை உயர்த்த உத்தேசித்து சென்னை முனிசிபல் ஆக்டை சீர்திருத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டார் முனிசிபாலிடிக்கு எழுதினதின்மேல், இப்பொழுதே வீட்டுவரி ஜாஸ்தியாகவிருக்கிறபடியால், இன்னும் இவ்வரியை உயர்த்துவது சரியல்லவென்று வீட்டுக்குடையவர்கள் பெருங்கூட்டங்கூடி கவர்ன்மெண்டுக்கு மனுச்செய்துகொண்டிருக்கிறார்கள்.

**மிஸ்டர் செஸ்டர் மரணம்.**

சென்னையில் பட்டணம் போலீஸ் கோர்ட்டில் முதல் மாஜிஸ்திரேட்டாயிருந்த மிஸ்டர் பெஞ்சாமின் ஹென்ரி செஸ்டர் அவர்கள் தேகசௌக்கியார்த்தம் மூன்று மாசத்துக்கு ப்ரிவிலீஜ் ரஜாவெடுத்துக்கொண்டு சீமைக்குப்போய்வர உத்தேசித்து ஏப்ரல்மீ 18உ சாயங்காலம் சென்னையைவிட்டு பம்பாய்க்குப் பிரயாணமாகச் சென்றார். நடுவில் ரயில் தப்பிப்போக அடுத்த ரயிலில் பம்பாய்க்குப் பிரயாணமானவர் வெள்ளிக்கிழமையன்று பம்பாய்க்கருகில் கலியான் என்னும் ஸ்டேஷனுக்கு சமீபத்தில் ரயில் வருகையில் ரயில்வண்டியிலேயிறந்துவிட்டார். உஷ்ணதிக்கம் தாங்காமல் இறந்துவிட்டார் என்று தெரிகிறது. இவருக்கு வயது 43. இப்படி அகாலமாகத் திடீரென்று இவர் மரணமடைந்ததைப்பற்றிச் சென்னையில் விசனித்துவருந்தாதார் ஒருவருமில்லை.

**மஹாராணியாரும் சென்னையும்.**

சென்ற மார்ச்சுமாச முதல்வாரத்தில் சென்னை பச்சையப்ப மண்டபத்தில், தென்னுபிரிகாவில் நடந்துவரும் யுத்தத்தில் சேதமுற்ற பிரிடிஷாருக்கு நம்மவர்கள் அனுதாபத்தைப் பயிரங்கமாகத் தெரிவிக்கவும், யுத்தத்தில் மடிந்தவர்கள் காயப்பட்டவர்கள் குடும்பத்தாருக் குதவிசெய்யச்சேர்த்துவரும் நிதிக்கு நன்கொடைகள் சேகரிப்பதற்காகவும் கூடிய ஷெரிப் மீட்டிங்கில், மேன்மை தங்கிய ப்ரின்ஸ் ஆப் ஆற்காட் அக்கிராசனத்தில் வீற்றிருக்க அவரும் ஜஸ்டிஸ் ஸர்எஸ். சுப்பிரமணி ஐய்யர், மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய ஐயர் முதலியவர்களும் ஹிந்து மகமதியர்களுக்குள்ள இராஜ விசுவாசத்தை வெளியிட்டு நேர்த்தியாகப் பேசினர்கள். இதன் ரிபோர்ட்டு சென்னை மெயில் பத்திரிகையில் பிரசுரமாக அதன் சொந்தக்காரரும் லண்டன் நிருபருமாகிய ஸர் சார்ல்ஸ் லாஸன் அவர்கள், இராஜவிசுவாசம் பூரித்துவிளங்கிய அம்மீட்டிங்கின் நடவடிக்கைகளைப்படிக்க மாக்ஷிமைதங்கிய மஹாராணியார் அவர்களுக்கு அதிக திருப்தியுண்டாகலாமென்று எண்ணி அப்பத்திரிகையின் பிரதியொன்றை மஹாராணியாரின் அந்தரங்ககாரியதரிசியாகிய ஸர். ஆர்தர். பிக். K. C. B. அவர்களுக்கு அனுப்பி ஒரு கடிதமும் எழுதினர். அதற்கு விடையாக மாக்ஷிமைதங்கிய மஹாராணியவர்கள் உத்தரவுப்படி அவர் அனுப்பிய பின்வரும் பதிலை ஸர் சார்ல்ஸ் லாஸன் அவர்கள் சென்னைக் கனுப்பியுள்ளார். அக்கடிதத்தின் மொழிபெயர்ப்பு பின் வருமாறு:—

வின்ஸர் அரண்மனை, 26-3-00.

பிரியமுள்ள ஸர் சார்ல்ஸ் லாஸன்,

நீரனுப்பிய மதராஸ் மெயில் பிரதியை மகாராணியின் முன்னிலையில் வைத்தேன். மகாராணியார் அதற்காக உமக்கு வந்தனம் செலுத்தும்படி சொல்லுகிறார்கள். தென்னுப்பிரிக்க யுத்தம் காரணமாக நஷ்டமடைந்து வருந்துவோர்களுக்காக அனுதாபப்படு

வதற்காகவும், சமீபத்திலுண்டான பிரிட்டிஷ் வெற்றிகளுக்காகத் தமது திருப்தியைத் தெரிவித்ததற்காகவும், மகாராணி-சக்கரவர்த்தினியாரிடத்தில் தமக்குள்ள பக்தி விஸ்வாஸத்தை வெளியிடுதற்காகவும் சென்னை வாசிகளாகிய மகம்மதிய கனவான்களும் இந்து கனவான்களும் ஒற்றுமையுடன் முன்வந்ததை யறிய மகாராணியார்க்குவெகு உற்சாகமும் சந்தோஷமும் உண்டாகின்றன.

இங்ஙனம்,
ஆர்தர் பீக்.

# சிறுவர்க்கான பக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

## பெற்றோர்கடமை.

ஒரு நலல மரத்துக்கு தண்ணீர் பாய்ச்சினால் அதுநிச்சயமாய்பலன்தரும். அதேமாதிரி ஒரு குழந்தைக்கு அது செய்யவேண்டிய காரியங்களை நன்றாய் கற்பித்தால் சுபமுண்டாகும்; இல்லாவிடில் ஒரு காரியமும் நிறைவேறாது.

தாய் தந்தையர்கள் குழந்தைகளுடைய சம்ரட்சகர்கள், பால சிட்சகர்கள். இவர்கள் அந்தக் குழந்தைகளுடைய தற்காலப் பிரயோசனத்தையும் இனிமேல் அடையவேண்டிய பிரயோசனத்தையும் உத்தேசித்து அவர்கள் கடவுளிடத்திலும் மனிதனிடத்திலும் நடந்துகொள்ளவேண்டிய கடமையும், மரியாதையும், பொதுவான ஞானமும், அவர்களுக்குக் கற்பிக்கவேண்டியது உசிதமாயிருக்கிறது. இந்த முக்கியமான கடமையில் அசாக்கிரதையாகவாவது அசட்டையாகவாவது இருந்தால் விபரீதம் விளையுமென்பதற்கு திருஷ்டாந்தம் வருமாறு:—

"மகா சமர்த்தனை ஒரு ராஜகுமாரன் தான் பிரபுத்தன்மை உடனே அடையவேணுமென்கிற ஆசையினால் தலைதெரியாதவனாய் காரிய நிர்வாகங்களில் தனக்கு மிகுந்த சாமர்த்தியமுண்டென்றெண்ணிக்கொண்டு, விவகார விசாரணைகளெல்லாம் தன்வசம் ஒப்பிவித்துவிட்டு தன் தகப்பனை ராஜன் வேலையைவிட்டு நீங்கவேண்டுவதுதான் உசிதம் என்று நிச்சயித்து, தாமதமாகாமலிருப்பதின்பொருட்டு தகப்பனைக்கொன்று ராஜ்ஜியத்தைக் கைப்பற்றவேண்டுமென்று உறுதிசெய்துகொண்டான்.

இந்த ராஜனுடைய மந்திரிக்கு ஒரு அழகான பெண்ணுண்டு; அவள் அதற்குமுன்னமேயே வயதுவந்தவளாகிலும் இன்னம் விவாகமாகவில்லை. அதனால் வெறுப்புற்று தவசிப்பெண்ணாய் தூரதேசத்துக்குப் போய்விடுவோமென்று நிச்சயம்செய்துவிட்டாள்.

இப்படியிருக்க ஒரு நாள் ராத்திரி ராஜனரண்மனையில் ஒருநாட்டியம் நடந்தது; ராத்திரி வெகுநேரம் ஆனபிற்பாடு அந்த நாட்டியம் ஆடிக்கொண்டிருந்த ஸ்திரீ தனக்கு வெகுமானம் ஒன்றும் கிடைக்காததனால் ஆட்டத்தை நிறுத்திவிடலாம் என்று தன் புருஷனோடு சொல்ல அவன் பின்வரும் வாக்கியத்தைச் சொன்னான்.

ஓ பெண்ணே ராத்திரியோ அனேகமாய் கழிந்துவிட்டது. இன்னம் கொஞ்சம் தான் பொழுது இருப்பது அந்தக்கொஞ்சம்பொழுதும் ஆடி பார்க்கவந்தவர்களைத் திருப்திசெய். இதுவரையில் ஆடினோம் ஒன்றும் கிடைக்கவில்லையென்பது நிஜமே. நமக்கு வெகுமானம் கிடைக்குமென்கிற ஆசையில்லாவிட்டாலும் விடியற்காலம் ஆகும் சமயம் ஆய்விட்டபடியால் அந்தக்கொஞ்சநேரமும் ஆடி சபையாரைத் திருப்திசெய்துவிடுவோம்.



ராஜகுமாரனும் மந்திரிகுமாரத்தியும் இந்த வாக்கியத்தைக்கேட்டதும் அதன் அர்த்தம் "பொறுமை எப்பொழுதும் நல்லது" பொறுத்தார் அரசாள்வார் பொங்கினார் காடுறைவார்" என்று அவர்கள் மனதுக்கு நன்றாய்ப் புலப்பட்டது. உடனே நர்த்தனம் ஆடின பெண்ணுக்கு இருவரும் தலைக்கு ஒரு முத்துஹாரம் வெகுமானம் செய்தார்கள்.

இதேசபையில் கொத்தவாலின் பிள்ளை மேற்சொன்ன வாக்கியத்தினர்த்தம் தெரியாதவனாய் தன் தகப்பனை கன்னத்திலே ஓரறை யறைந்தான். கொத்தவால் தன் பிள்ளையை தோள்மேல்வைத்துக்கொண்டு கூத்தாடினான். சபையார் இதைப்பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு, "ஏனடா இப்பொழுது தான் உன்னையடித்தவனை புஜத்தின்பேரில் வைத்துக் கூத்தாடுகிறாய்" என்று கேட்க, அதற்கு கொத்தவால் நான் அவன் நடந்துகொள்ள மாதிரி கற்பிக்காததனால் அவன் மௌட்டியனாய் விட்டான். ஆதலால் என்னைக் கொல்லாமல் இந்த மட்டோடும் விட்டானே இதுவே எனக்குப்பரம சந்தோஷம் என்று பதிலுரைத்தான்.

L. V. V. S.

# HEALTH KNOWLEDGE FOR THE PEOPLE.

(*From the Indian Magazine & Review for January* 1900.)

(Translated from the *Viveka Chintamani Magazine*, by L. C. Innes, Esq.)

## The Food we Eat.

(*Continued from page* 320.)

If people remain for a short time in a room in which ice has been stored, the heat proceeding from their body will cause the ice to melt a little; but there is no doubt if they stay a little longer, all the ice in that room will melt and turn to water. There is no need for the persons in the room to touch the ice. Without their touching the ice, the air of the room becomes heated by their breath, and the ice melts away. Thus we may understand that heat is always proceeding from our bodies.

If we go out at dawn in the season of heavy rain, and when the earth and atmosphere are thoroughly cooled, or when it has got very cool from the fall of dew, we may see our breath coming out like smoke. The explanation of this is that as soon as the steam in the air we breathe out comes in contact with the cool atmosphere without, it is changed into water drops, and there is produced the white colour resembling smoke. From this we learn that steam is unceasingly issuing from our bodies.

So we learn that by breathing alone, water, heat and carbonic acid gas are continually issuing from our bodies. Besides these from our perspiration, &c., &c., certain substances proceed from us. Well, this takes place while we are at rest. But when we are at work the expenditure is double the quantity. When we are walking, when we run, when we walk, and when we play, there is a greater amount of inspiration and expiration, and there is a corresponding decrease in the substance of our bodies.

How much power is required to raise our hand gently? We have observed with what difficulty a person who has been long prostrated with illness can raise his hand; and similarly, how much difficulty a man in ordinary health will have in raising and striking with a heavy blacksmith's hammer. So, if one does hard work for an hour he becomes tired, and finds it impossible to go on working. This is because, little by little, the power of the body is decreased by labour.

Now consider what the state of a man will be in a few days if, moment by moment, there is an exhaustion of the principal substances that nourish his flesh, blood, skin, bones, and sinew.

So the second use of the food we eat is supplying the losses continually taking place in our bodies. No one will deny that a man's body will grow lean if, when engaged in hard labour, he is without suitable food. By reason of there not being a supply of nourishment suitable to the expenditure that takes place in his body, not only will his flesh be wasted and his body grow lean, but his strength will be decreased. Thus it will be understood what the second use of food is that has been mentioned above.

Every creature that exists with life possesses the heat necessary for being moving about and working. Without this heat our bodies would become cold and paralysed in a moment. To prevent this, and to enable each one to keep up his heat and to perform his proper actions without relaxation of his powers, food is indispensable.

## Report of Work done by the Associations of Helpers.

### வெளியூர் உபகாரசங்கங்கள் உழைத்துவரும் விவரம்.

| Name of the Association. உபகாரசங்கத்தின் பெயர். | Meetings held. மீட்டிங்கு கூடின: Place. இடம். | Meetings held. மீட்டிங்கு கூடின: Dates. தேதிகள். | Number present. ஆஜரானவர்கள் தொகை: Teachers. உபாத்தியாயர்கள். | Number present. ஆஜரானவர்கள் தொகை: Others. இதரர். | Subjects chosen for reading or lecture. உபந்நியாசம் செய்ய அல்லது வாசிக்க எடுத்துக்கொண்ட விஷயங்கள். | Readers or lecturers. யாரால் உபந்நியாசம் செய்யப்பட்டது. | Nature of Other Proceedings & Remarks. இதரநடவடிக்கைகளும் ஷராவும். |
|---|---|---|---|---|---|---|---|
| ஈரோடு தாலுகா பெருந்துறை உபகாரசங்கம். | | 1900-ம் வருஷம் பிப்ரவரி 11 | 4 | ... | ஜலத்தின் சுத்தத்தைப்பற்றியும் அதின் இலக்ஷணமும். | போ. ஸ்கூல் ஹெட்மாஸ்டர் | [illegible] P. Sreenivasa Row, Hd. Master Secy. Association of helpers. |
| | | 18 | 5 | ... | ஜலம் கிடைக்கும் வகையும் அதின் உபயோகமும். | டி. | |
| | | [illegible] | 4 | ... | [illegible] கிணறு, ஜலங்கள் அசுத்தமாய்ப் போவதும், அவைகளை சுத்தமாய் வைக்கும் விதமும். | டி. | |
| Dharapuram Sanitary Association. | தாராபுரம் பா[illegible] | 1900-ம் வருஷம் [illegible] 20 | 12 | | செப்டெம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர்மீ'ங்களின் விவேகசிந்தாமணியிலுள்ள சுகாதாரவிஷயங்கள். | K. R. Ramanatha Sastri. | [illegible] K.R. Ramanatha Sastri, Secy. |
| | | 27 | 10 | ... | டி. | டி. | டி. |

மற்றவை பின் வரும்.